உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சேக்கிழார் சுவாமிகள் என்னும் அருண்மொழித்தேவர்

அருளிய

பெரிய புராணம் என்னும்

திருத்தொண்டர் புராணம்

(பன்னிரண்டாம் திருமுறை)

(ஐந்தாம் தொகுதி) 5/7

வம்பறா வரிவண்டுச் சருக்கம் - இரண்டாம் பாகம்




திருஞானசம்பந்தர்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சேக்கிழார் சுவாமிகள் என்னும் அருண்மொழித்தேவர்

அருளிய

பெரிய புராணம் என்னும்

திருத்தொண்டர் புராணம்

(பன்னிரண்டாம் திருமுறை)

(ஐந்தாம் தொகுதி) 5/7

(பாடல் எண்கள் : 2542 - 3154)

திருஞானமுண்டருளியது

வம்பறா வரிவண்டுச் சருக்கம்

(இரண்டாம் பாகம்)

கோவை - வழக்கறிஞர்

திரு. C.K. சுப்பிரமணிய முதலியார், B.A., அவர்கள்

தொகுத்தியற்றிய

உரையுடன்

பதிப்பாசிரியர்

டாக்டர் இராச. வசந்தகுமார்

நிறுவன வேந்தர்

கற்பகம் உயர்கல்விகலைக்கழகம்

(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)

பன்னிரு திருமுறை ஆய்வு மையம்


கற்பகம் உயர்கல்விகலைக்கழகம்


(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)

ஈச்சனாரி, கோவை - 21.

நூற்குறிப்பு

நூல் பெயர்	:	**பன்னிரண்டாம் திருமுறை** (ஐந்தாம் தொகுதி) 5/7
மூல நூலாசிரியர்	:	**சேக்கிழார் சுவாமிகள்**
உரை நூலாசிரியர்	:	**சிவக்கவிமணி C.K. சுப்பிரமணிய முதலியார்,** B.A.,
நூல் வகை	:	செய்யுள் மற்றும் உரைநூல்
வெளியீடு	:	பன்னிரு திருமுறை ஆய்வு மையம் கற்பகம் உயர்கல்விகலைக்கழகம் (நிகர்நிலைப் பல்கலைக்கழகம்) கோயம்புத்தூர்.
வெளியீட்டு எண்	:	63
வெளியிடும் நாள்	:	21 - 04 - 2018
பக்கங்கள்	:	992
பதிப்புரிமை	:	© க. மங்கையர்க்கரசி
தாள்	:	மேப்லித்தோ 80 gsm
அளவு	:	கிரவுன் 1/8
அச்சகம்	:	செஞ்சுடர் அச்சகம் கோ.வா.பாளையம், போத்தனூர், கோவை – 23. செல் : 98431 74238





திருநாரையூர்ப் பொள்ளாப் பிள்ளையார்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

பன்னிரண்டாம் திருமுறை (ஐந்தாம் தொகுதி) 5/7

பொருளடக்கம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

பன்னிரண்டாம் திருமுறை

(ஐந்தாம் தொகுதி) 5/7

வழிபாட்டுக் கருத்தரங்கம்
21.04.2018, 22.04.2018 - சனி, ஞாயிறு

விண்ணியல் விமானம் விரும்பிய பெருமான் வெங்குரு மேவியுள் வீற்றிருந் தாரை
நண்ணிய நூலன் ஞானசம் பந்தன் நவின்றஇவ் வாய்மொழி நலம்மிகு பத்தும்
பண்ணியல் பாகப் பத்திமை யாலே பாடியும் ஆடியும் பயிலவல் லோர்கள்
விண்ணவர் விமானங் கொடுவர ஏறி வியனுல காண்டுவீற் றிருப்பவர் தாமே.
- திருஞானசம்பந்தர்

பதிப்புரை

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன்அடி சேரா தார். - திருக்குறள் (10)

1. உயிரின் நோக்கம் / இலட்சியம் - வீடுபேறு, முத்தி, மோட்சம். (சொர்க்க நரகங்கள் அல்ல)

2. எடுத்துக்கொண்ட கொள்கைகள்

அ) எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும் மன்னியசீர்ச் சங்கரன் தாள் மறவாமை.

ஆ) யாதொரு தெய்வங் கொண்டீர்; அத்தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகர் தாம் வருவார் எனத் தெளிதலும்/ உறுதிபட நிற்றலும்.

இ) பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும், மாதொரு பாகர் மலர்த்தாள் மறப்பிலாமை.

ஈ) சிவத்தைத் தவிர மற்றொரு தெய்வத்தைக் கனவிலும் நினையாதிருத்தல்.

உ) “ஞாலம் நின்புகழே மிக வேண்டும் தென் ஆலவாயில் உறையும் எம் ஆதியே” என்று எந்நேரமும் சிவன் புகழையே பாடிக்கொண்டிருத்தல். நம் புகழைப் பாடவோ, பரப்பவோ முயற்சி செய்யாதிருத்தல்.

ஊ) தம்மைத் தாம் முற்றிலும் மறத்தல்.

3. வகுத்துக்கொண்ட நெறிகள்

1) சிவபூசை - விசேட தீக்கை பெற்றுத் தினமும் சூரிய உதயத்தில் ஆன்மார்த்த படிகலிங்க மூர்த்திக்கு ஆனைந்துத் திருமஞ்சனத்துடன் 1008 போற்றி மலர் வழிபாடு.

2) எழில் ஞானபூசை - திருமுறைகளையும், சாத்திரங்களையும் ஓதுதல், ஓதுவித்தல்.

3) சிவாலயத் திருப்பணிகள் - அன்றாட, வாராந்தர, மாதந்தர, வருடாந்தர பெருஞ்சாந்திப் பெருவிழாக்கள் நடத்த உதவி செய்தல் - நல்விழாப் பொலிவு காணுதல் - காண்பித்தல்.

அன்புடையீர் வணக்கம்.

4281 பாடல்களைக் கொண்ட பெரியபுராண தேவாமிர்தத்துக்கு 7 தொகுதிகளாக உரை வெளியிடத் திருவருள் கூட்ட 4 தொகுதிகள் நிறைவு பெற்றுள்ள நிலையில் இத்தொகுப்பு (5) இரண்டாம் காண்டம் வம்பறா வரிவண்டுச் சருக்கத்தின் இரண்டாம் பாகம் தொடர்கிறது. இச்சருக்கத்தின் இரண்டாம் பாகத்தின் நாயகரும் திருஞானசம்பந்தரே. பிள்ளைபாதி – புராணம்பாதி என்பதொரு தொன்மொழியும் உண்டு. தொகுதிகள் 4, 5 இரண்டும் ஆளுடையபிள்ளையார் புராணங்களாக அமைய, 6ஆம் தொகுதியில் வம்பறா வரிவண்டு சருக்கத்தில் இடம்பெற்றுள்ள ஏனைய நாயன்மார்களான ஏயர்கோன் கலிக்காமர், திருமூலர், தண்டியடிகள், மூர்க்கர், சோமாசிமாறர் ஆகியோரின் வரலாறுகள் இடம் பெறவுள்ளன.

செந்தமிழ் மாலை விகற்பச் செய்யுட்க ளான்மொழி மாற்றும்
வந்தசொற் சீர்மாலை மாற்றும் வழிமொழி எல்லா மடக்குச்
சந்தவி யமகம் ஏக பாதந் தமிழ்இருக் குக்குறள் சாத்தி
எந்தைக் கெழுகூற் றிருக்கை ஈரடி ஈரடி வைப்பு

நாலடி மேல்வைப்பு மேன்மை நடையின் முடுகுமி ராகம்
சால்வினில் சக்கரம் ஆதி விகற்பங்கள் சாற்றும் பதிக
மூல இலக்கிய மாகஎல்லாப் பொருள்களும் முற்ற
ஞாலத் துயர்காழி யாரைப் பாடினார் ஞானசம் பந்தர். *-திருத்தொண்டர் புராணம்*

எழுபது ஆண்டுகளாக விடுதலைக் காற்றைச் சுவாசித்துக் கொண்டிருக்கும் இத்தருணத்தில், சுமார் 183 ஆண்டுகளுக்கு முன்பு, பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின், பிரபல உறுப்பினரும், பிரிட்டிஷ் அரசாங்கத்தில் பல முக்கியப் பதவிகளை வகித்தவரும், 1834-ம் ஆண்டு பிரிட்டிஷ் அரசு அமைத்த சுப்ரீம் கவுன்சில் ஆஃப் இந்தியா என்ற அமைப்பின் முக்கிய உறுப்பினருமான மெக்காலே பிரபு நான்காண்டுகள் நமது நாட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டு ஆங்கிலேய அரசுக்கு எழுதியதைக் கீழே தந்துள்ளோம்.

LORD MACAULAY'S ADDRESS TO THE BRITISH PARLIAMENT ON 2 FEBRUARY, 1835



"I have travelled across the length and breadth of India and I have not seen one person who is a beggar, who is a thief. Such wealth I have seen in this country, such high moral values, people of such caliber, that I do not think we would ever conquer this country, unless we break the very backbone of this nation, which is her spiritual and cultural heritage, and, therefore, I propose that we replace her old and ancient education system, her culture, for if the Indians think that all that is foreign and English is good and greater than their own, they will lose their selfesteem, their native culture and they will become what we want them, a truly dominated nation."

இதன் தமிழாக்கம்

இந்தியாவுக்கான கல்விமுறையை உருவாக்கிய மெக்காலே 02.02.1835 ஆண்டு பிரிட்டீஷ் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை: நான் இந்தியாவை நீளவாக்கிலும், அகலவாக்கிலும் சுற்றிப்பார்த்தபோது அந்த நாட்டில் நான் ஒரு திருடனையோ, பிச்சைக்காரனையோ பார்க்கமுடியவில்லை. அளவற்ற செல்வத்தையும், மதிப்புமிக்க மக்களையும், தர்மங்களையும் பார்த்தேன்.

இப்படிப்பட்ட நாட்டை வெல்வதென்பது இயலாத காரியம். அந்த நாட்டின் முதுகெலும்பாக இருப்பது அதன் ஆன்மீகமும், கலாச்சாரப் பண்பாடுகளும் ஆகும். அந்த முதுகெலும்பை ஒடித்தால்தான் நாம் அதை ஆளமுடியும். அந்த ஆன்மீக, நாகரிக, கலாச்சார பண்பாடுகளை அழிக்க அதன் தொன்மையான-பழமையான பண்பாடான கல்வி முறைகளை மாற்றவேண்டும். ஆங்கிலம்தான் நல்லது என்ற வெளிநாட்டு மோகத்தை அவர்கள் மீது திணித்து 'இது அதைவிட உயர்ந்தது' என்ற மாயையை ஊட்ட ஆரம்பித்தால் அவர்கள் சுயமரியாதையை இழக்க ஆரம்பிப்பார்கள். அவர்களின் தொன்மையான பண்பாடான கலாச்சாரப் பண்புகளைவிட்டு வெளிவந்து நமக்கு அடிமையாகி விடுவார்கள். அப்படிப்பட்ட ஒரு கல்வி முறையைத் தயாரித்து அவர்கள் மீது திணித்தால் அது அடிமை நாடாகிவிடும்.

இந்தக் கொள்கைகளோடு மெக்காலே தயாரித்த கல்விமுறையில்தான் நமது கல்வித்துறைகள் இந்நாள் வரையிலும் செயல்பட்டு வருகின்றன. எப்படிப்பட்ட கீழ்த்தரமான நோக்கங்களோடு இவற்றையெல்லாம் நம்மீது திணித்து இந்த நாட்டை ஆண்டார்கள் என்று நினைக்கும்போது -இதைப்படிக்கும் போது ஒரு நாட்டுப்பற்று உள்ளவரால் அழாமல் இருக்கமுடியாது.

மின்னணு மாற்றியில் வந்த இந்தச் செய்தியைத் தாளாளர் பலரிடம் பகிர்ந்துகொண்டார். பலர் கண்களிலும் நீர் வந்தது. தாளாளரும் அழுதார். இது எப்படிப்பட்ட நாடு? நாம் எப்படிப்பட்ட பண்பாடான நாட்டில் பிறந்திருக்கிறோம்? இதற்கு எவ்வளவு புண்ணியம் செய்திருக்க வேண்டும்? 'என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து' என்று திருஞானசம்பந்தர் திருவலஞ்சுழிப் பதிகத்தில் பாடுகின்றார். நமது பழமையை, பெருமையை நாம் பறைசாற்ற வேண்டும்.

நாம் மிகவும் தொன்மையானவர்கள். பல்லாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட நாகரிகம் உடையவர்கள். 'திசையெட்டும் தோன்றுவதற்கு முன்னோ பின்னோ திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே'- திருநாவுக்கரசர். திருவாரூர் திசையெட்டும் தோன்றுவதற்கு முன்பே இருந்த ஊர். அந்த ஊர் இறைவனை வணங்கிய பெருமை பெற்றவர்கள் நம் தமிழக மூதாதையர்கள். சூரியன் எப்போது தோன்றினான்? திசைகளெட்டும் எப்போது தோன்றின என்று யாரால் சொல்லமுடியும்? நாம் பல சுனாமிகளைப் பார்த்தவர்கள். அந்தக் கடல்கோள்களால் கொள்ளப்பட்டவைதான் முதல் சங்கமும், இடைச்சங்கமும். சுமார் 2500 ஆண்டுகள் பழமையானது கடைச்சங்கம்;

அவ்வளவு பழமையானது நமது தொல்காப்பியம். அறம் பொருள் இன்பம் வீடு என்று வாழ்க்கைக்குத் தேவையான அத்தனையையும் இரண்டு அடிகளில் சொன்ன தமிழ் நூல் திருக்குறள். அந்நூலில் குறிப்பிட்டுள்ளபடி பண்பான கல்வியைத் தர வேண்டியது நமது தலையாய கடமை.

பேச்சுக்குப் பேச்சு, மொழிக்கு மொழித் தன்னைத் தமிழன் என்று சொல்லிக் கொண்டவர் தமிழ் ஞானசம்பந்தர். நாட்டுப்பற்றுக்கும், நகரப்பற்றுக்கும், மொழிப்பற்றுக்கும் ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்தவர். இலக்கணமாக வாழ்ந்து காட்டியவர் ஞானசம்பந்தர்.

ஒருவர், தான் பிறந்த ஊரையும், பேசும் மொழியையும் எக்காலத்தும் மறக்கக்கூடாது. அம்மொழி எல்லாவகையான உயர்வுகளையும் கொடுக்கும்; வைதாரையும் வாழ வைக்கும்; மாநிலம் முழுவதையும் ஆளும் பேற்றைக் கொடுக்கும்; அப்படிப்பட்ட தமிழையே ஆயுதமாகக் கொண்டு தான் பிறந்த ஊரை இப்படித்தான் என்று இல்லாமல் பல பதிகங்களில் பலவாறு பாடி மகிழ்கிறார்.

தான் பிறந்த ஊர் காழி என்றும் அதற்குப் பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பைநகர், காழி, கொச்சைவயம், கழுமலம் என்று பன்னிரண்டு பெயர்கள் உண்டு என்றும்,ஒவ்வொரு ஊழிக்காலத்திலும் அது அழியாமல் ஒரு பெயரோடு விளங்கியதென்றும் வரிசை மாறாமல் அந்தப் பெயர்களை உச்சரிக்க வேண்டுமென்றும், அந்த 12 பெயருக்கானக் காரணங்களையும் சுட்டுகின்றார். அதற்காகத் தமிழ் மொழியில் பல்வகையான இலக்கியங்களை - பாமாலைகளை உருவாக்கலாம் என்றும் நிலைநாட்டுகிறார். ஒவ்வொன்றுக்கும் பெயரிடுகிறார் - இசையமைக்கிறார். வேகமான இசையோடும் பாடச் செய்கிறார். வெறும் நெடிலாகவே பாடுவார். குறிலேயில்லாமல் ஒற்றெழுத்து இல்லாமல் ஓரெழுத்து ஒரு மொழியாகவே ஏராளமான செஞ்சொற்களை உபயோகிப்பார். உலகில் வேறு எந்த ஊருக்கும் 12 பெயர்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

நான்காம் தலயாத்திரையின் இறுதியில் திருநாவுக்கரசு சுவாமிகள் விடைபெற்றுச் சென்றபின் காழிப்பதியில் தங்கியிருந்த திருஞானசம்பந்தப் பெருமான்,

“நாலடிமேல் வைப்பு உட்பட ஆதி விகற்பங்கள் சாற்றும் பதிகமூல இலக்கியமாக எல்லாப் பொருள்களுமுற்ற ஞாலத்துயர் காழியாரைப் பாடினார்” என்று சேக்கிழார் சுவாமிகள் 2175வது பாடலில் இயம்புகின்றார்.

இந்தச் சூழ்நிலையில் திருஞானசம்பந்தர் பாடிய கீழ்க்கண்ட பதிகங்களை இசையோடு பாடி மகிழ்வதும், வழிபடுவதுவும் அவை எப்படி தமிழ்ச் சொல்லணியியலுக்கு மூல இலக்கியமாக விளங்குகின்றன என்பதையும் கடந்த அமர்விலும் ஆராய்ந்தோம்.

பதிகத்தின் பெயர்	காழிப்பெயர்	திருமுறை எண்	பண்	பதிக முதற்குறிப்பு
1 திருமொழி மாற்று 2 திருமாலை மாற்று	திருப்பிரமபுரம்	I III	வியாழக்குறிஞ்சி கௌசிகம்	காடது அணிகலம் யாமாமாநீ யாமாமா
3 வழிமொழித் திருவிராகம் 4 திருஏகபாதம்	திருப்பிரமபுரம்	III I	சாதாரி வியாழக்குறிஞ்சி	சுரர் உலகு நரர்கள் பிரமபுரத்துறைப் பெம்மான்
5 திருஈரடி 6 திருஇருக்குக்குறள்	திருப்பிரமபுரம்	III I	பழம்பஞ்சுரம் குறிஞ்சி	வரம் அதே கொளாஉரம் அரனை உள்குவீர்
7 திருஎழுகூற்றிருக்கை 8 திருஈரடிமேல்வைப்பு	திருப்பிரமபுரம் திருப்பூந்தராய்	I III	வியாழக்குறிஞ்சி காந்தார பஞ்சமம்	ஓர்உரு ஆயினை தக்கன் வேள்வி தகர்த்தவன் பூந்தராய்
9 திருநாலடி மேல்வைப்பு 10 திருவிராகம் 11 திருவிராகம்	திருப்புகலி திருப்புகலி திருப்புறவம்	III II III	காந்தார பஞ்சமம் இந்தளம் சாதாரி	இயல் இசை எனும் பொருளின் திறமாம் முன்னிய கலைப்பொருளும் பெண்ணியல் உருவினர்
12 திருவிராகம் 13 திருவிராகம் 14 திருச்சக்கரமாற்று	திருச்சண்பை நகர் திருக்கழுமலம் திருப்பிரமபுரம்	III I II	சாதாரி நட்டபாடை காந்தாரம்	எம்தமது சிந்தைபிரியாத பிறைஅணிபடர் சடைமுடி விளங்கிய சீர்ப்பிரமனூர்
15 திருமுக்கால் 16 திருத்தாளச்சதி 17 கூடற்சதுக்கம்	திருவெங்குரு திருக்கழுமலம்	III I III	சாதாரி வியாழக்குறிஞ்சி பழம்பஞ்சுரம்	விண்ணவர் தொழுதெழு வெங்குரு பந்தத்தால் வந்தெப்பால் பயின்று மண்ணது வுண்டரி மலரோன் காணா
18 திருக்கோமூத்திரி அந்தாதி	திருப்பிரமபுரம்	II	காந்தாரம்	பூமகனூர் புத்தேளுக்கு
19 திருப்பல்பெயர்ப்பத்து 20 வினாவுரை	திருப்பிரமபுரம் திருப்பூந்தராய்	I II	தக்கேசி இந்தளம்	எரியார் மழுவொன்றேந்தி செந்நெலங்கழனிப் பழனத்தயலே செழும்

இயற்கை எழில் பொருந்திய, இன்னின்ன சிறப்புகளை உடைய இன்னவூரில் இன்னதன்மைகளோடு இந்நிலையில் எழுந்தருளியிருக்கும் எம் தலைவராம் சிவபெருமானை இன்னவூரில் இன்னகுல கோத்திரத்தில் பிறந்து தன்னிகரில்லா இயல் இசைத் தமிழ்ப்பற்றுடன் விளங்கும் இன்னவன் ஆகிய திருஞானசம்பந்தனாகிய தான் இயற்றிய 10/11 பாடல்களைக் கொண்ட அப்பதிகத்தை, பாடுவோர், ஆடிப்பாடி பண்ணோடு பாடுவோர் பெறும்பயனை பதிகத்தின் நிறைவுப் பாடல்தோறும் **திருக்கடைக்காப்பு** என்று சொல்லப்படுகின்ற பாடலில் பாடி நிறைவு செய்வதைத் தம்

உயிர்மூச்சாகக் கொண்டிருந்தார். ஒவ்வொரு பதிகத்திலும் 7 ஆவது பாட்டு இராவணன் பாட்டு, எட்டாவது பாட்டு மாலயன் பாட்டு, ஒன்பதாவது பாட்டு சமண் பாட்டு என்ற பதிகப் பெருவழியைச் சிவபெருமானே வகுத்து 3 வயது பிள்ளையாரைக் கருவியாகக் கொண்டு நாமெல்லாம் உய்வதற்காகப் பாடவைத்தார். திருவருள் இல்லையெனில் மூன்று வயதுக் குழந்தையால் எப்படிப் பாடமுடியும்? "எனதுரை தனதுரையாக" என்று இலம்பையங் கோட்டூர் உட்பட பல பதிகளில் பாடிய பாடல்களே இதற்கு அகச்சான்றாகும். அவர் பாடிய மொத்த திருப்பதிகங்கள் முதல் திருமுறையில் 136, இரண்டாம் திருமுறையில் 122, மூன்றாம் திருமுறையில் 127 ஆக 385 பதிகங்கள். அவருடைய பாடல்களைப் பாடுவோர் வினை பற்றறும். துயர், பாவம், அல்லல் பழி அகலும். இன்பமும் செல்வமும் பெறுவர். விண்ணுலகமும், வீடுபேறும் பெறுவர் என்றெல்லாம் ஆணித்தரமாகக் கூறுகிறார். அவர் இயம்பிய பதிகப்பயன்களைக் கீழ்வருமாறு அட்டவணைப்படுத்துகிறோம்.

பதிகங்கள்

வ. எண்.	பதிகப்பயன்	முதல் திருமுறை	இரண்டாம் திருமுறை	மூன்றாம் திருமுறை	மொத்தம்
1.	வினைபற்றறுமே	17	13	15	45
2.	துயர், அல்லல், பிணி, துன்பம், அவலம், பழி, பாவம், நோய், கவலை நீங்குமே	28	28	32	88
3.	மண்ணுலக வாழ்வில் பொன், பொருள், இன்பம், புகழ் பெற்று நன்னெறி / நல்வாழ்க்கை பெறுவர்	39	22	14	75
4.	வானுலகம் பெற்று இமையவராக விளங்குவர்	27	36	24	87
5.	சிவகதி / வீடுபேறு பெறுவர்	17	17	16	50
6.	பலன் உரைக்காத பதிகங்கள்	4	4	12	20
7.	பிற கருத்துக்கள் பொதிந்த பதிகங்கள்	12	15	12	39

இந்நூலில் ஏதாவதொரு திருமுறையோ, ஒரு பதிகமோ, ஒரு பாட்டோ, ஓரடியோ, ஒரு சொற்றொடரோ, ஒரு சொல்லோ அல்லது ஒரு எழுத்தோ கூட ஒரு உயிரை ஆட்கொள்ளலாம். அந்த உயிர் நம்மில் ஒருவராகவும் இருக்கலாம். 'ஒருத்தனே உன்னை ஓலமிட்டலறி உலகெல்லாம் தேடியும் காணேன்' என்ற வாதவூரடிகளின் வாக்குப்படி பல்லூழிக்கால வெள்ளத்தில் இறையைத் தேடி அலையும் அடியார்களாகிய நாமெல்லாம் பதிகப்பயன்களை நுகர்ந்து உய்யும் பொருட்டுத் திருவருள் உந்த, மேலே கண்டவாறு படித்துணரும் பேறு பெற்றுள்ளோம்.

இவ்வுலக வாழ்வை மறந்து திருஞானசம்பந்தரோடு சிவத்தலத்திருப்பயணம் செய்ய அடியார்களுக்குத் திருவருள் கூட்டுவித்துள்ள நிலையில், திருஞானசம்பந்தரின் தலப்பதிகப் பெரு வழியைக் கீழ்க்கண்டவாறு பட்டியலிடுகிறோம். ஒவ்வொரு முறை தலப்பயணத்தையும் சீகாழியில் தொடங்கி சீகாழியிலேயே நிறைவு செய்வார். இப் பூவுலகில் யாருக்கும் இதுபோன்ற அரிய வாய்ப்புக் கிடைக்கவில்லை.

தல வரிசை	வழிபட்ட திருத்தலங்களின் பெயர்கள்	தலங்கள்	பதிகங்கள்	பெரியபுராண பாடல் எண்கள்	நிகழ்ந்த / நிகழ்த்திய அற்புதங்கள்	பிற செய்திகள்
முதல்தல வழிபாடு	பிரமபுரம் - திருகோலக்கா - வேணுபுரம்	1	3+1+2	1998 - 2003	ஐந்தெழுத்து எழுதப்பட்டு அம்மையால் ஓசை கொடுக்கப்பட்ட பொற்றாளம் பெறுதல்	
இரண்டாவது தல வழிபாடு	புகலி - திருநனிப்பள்ளி, தலைச்சங்காடு, திருவலம்புரம் (மேலப் பெரும்பள்ளம்), திருப்பல்லவனீச்சரம், திருச்சாய்க்காடு, திருவெண்காடு, திருமுல்லைவாயில், வெங்குரு	7	8+10+2	2010 - 2025	திருஞானசம்பந்தரின் தாயார் ஊரான திருநனிப்பள்ளியில் பாலை நிலம் - நெய்தலாகப் பாடுதல்	இறைவனைப் போற்றுவோர் மண்புகார் - 2020. திருநனிப்பள்ளி அந்தணர்களின் வேண்டுகோளை ஏற்று அப்பதிக்குச் செல்கிறார். அருளாளர்களை அழைத்து வரவேற்று உபசரிப்பதால் நன்மைகள் நடக்கும்.
மூன்றாவது தல வழிபாடு	தோணிபுரம், திருமகேந்திரப்பள்ளி, திருக்குருகாவூர், திருமுல்லைவாயில், கலிக்காமூர், பூந்தராய்	4	3+2+4	2027 - 2028		மூன்றாவது தலவழிபாடுகள் முடிந்து காழிக்கு வந்தபின் பிறவகுப்பைச் சார்ந்த திருநீலகண்ட யாழ்ப்பாணரும், மதங்கசூளா மணியாரும் பிள்ளையாரோடு சேர்ந்து அவருடைய பாடல்களை யாழிலமைத்து இசைக்கும் வாய்ப்பையும், அவரோடு திருத்தலவழிபாடு செய்யும் பேறும் பெற்றனர்.
நான்காவது தல வழிபாடு	சீரபுரம், தில்லை, திருவேட்களம், திருக்கழிப்பாலை, திருநெல்வாயில், எருக்கத்தம்புலியூர், திருமுதுகுன்றம், தூங்கானை மாடம், நெல் வாயில் அரத்துறை, மாறன்பாடி, திருநெல் வெண்ணெய், கீழப்பழுவூர், விசயமங்கை, வைகாவூர், புறம்பயம், சேய்ஞலூர், திருப்பனந்தாள், பந்தணைநல்லூர், வாழ்கொளிப்புத்தூர், ஓமாம்புலியூர், திருக்கடம்பூர், திருநாரையூர், திருக்கருப்பறியலூர் (தலை ஞாயிறு), புறவம்.	22	3+33+2 +11	2040 - 2153	முத்துச்சிவிகை, குடை, சின்னம் பெறுதல்	தில்லைத்திருவீதிகள் நான்குமே உயிர்களுக்கு மாதவப்பயன் தரவல்லன. அவை தொழத்தக்கன. தில்லையை உறைவிடமாகக் கொள்ளக்கூடாதென்று பிள்ளையார் திருவேட்களத்தில் தங்கினார். சிவனுக்குரிய நந்தவனங்களும் பணிதற்குரியன- 2051. சீவன்முத்தர்களுக்கு உரியது எப்போதும் எவ்விடத்தும் சிவானுபவம் ஒன்றேயாம்- 2087. நிவாநதிக் கரையின் மேலுள்ள எருக்கத்தம்புலியூர் போன்ற தலங்களுக்கு யாழ்ப்பாணர் வேண்டுகோளுக்கிணங்கி பிள்ளையார் செல்கிறார். சிவிகை முதலான உலக அனுபோகப் பண்டங்களைச் சிவனருளிய ஆணைவழியில்லாது சிவஞானியார் கைக்கொள்ளார். நான்காவது யாத்திரை முடிவில்

						சீகாழியில் அவரது உபநயனச் சடங்கில் மந்திரங்களுக்கெல்லாம் முதன்மையானது திருவைந்தெழுத்தே என்று நிலைநாட்டுகிறார். அப்பருடன் முதல் சந்திப்பு நிகழ்கிறது சிறப்புச் செய்யுட்களாகிய மொழிமாற்று, மாலைமாற்று போன்ற பதிகங்கள் பாடுகிறார்.
ஐந்தாவது தல வழிபாடு 5(1)	<u>சண்பைநகர்,</u> திருக்கண்ணார் கோவில், கடைமுடி, கீழைத்திருக்காட்டுப் பள்ளி, புள்ளிருக்குவேளூர், திருநின்றியூர், நீடூர், குறுக்கை, திருப்புன்கூர், திருப்பழமண்ணிப் படிக்கரை, திருஅன்னியூர், எதிர்கொள்பாடி, திருமணஞ்சேரி, திருத்துருத்தி, வேள்விக்குடி, திருக்கோடிக்கா, கஞ்சனூர், திருமாந்துறை, திருமங்கலக்குடி, திருவியலூர், திருந்துதேவன்குடி, இன்னம்பர், வடகுரங்காடுதுறை, பழனம், ஐயாறு, பெரும்புலியூர், நெய்த்தானம், மழபாடி, கானூர், அன்பிலாலந்துறை, திருமாந்துறை, (வடகரை), திருப்பாச்சிலாச் சிராமம், திருப்பைஞ்ஞீலி, ஈங்கோய்மலை, கொடிமாடச் செங்குன்றூர், திருநணா, கொடுமுடி, வெஞ்சமாக்கூடல், கருவூர் ஆநிலை, இரத்தினகிரி, பராய்த்துறை, திருக்கற்குடி, உறையூர், திருச்சி, ஆனைக்கா, திருப்பாற்றுறை, எறும்பியூர், நெடுங்களம்	48	2+ 43	2177 - 2850 2177 - 2247	கொல்லி மழவன் மகளுக்கு முயலகன் நோய்தீர்த்தல். திருச்செங்கோட்டில் சுர நோய் தீர்த்தல்	திருவேள்விக்குடியில் பகலில் திருமணக்கோலமும் இரவில் துருத்தியில் இருப்பதையும் சேர்த்துப்பாடுதல். சிவவேள்விகள் மக்களுக்கு இருமைக்கும் இன்பமளிப்பன - 2178. சிவன் எல்லாவுயிரிலும் நிறைந்தவன். ஆயினும் சிவஞானம் அன்றிவேறு நினையாத சிவஞானிகள் உள்ளத்தில் சிவன் வெளிப்பட நிறைந்து விளங்குவான். ஆதலின் அவர்களது வாக்குச் சிவனது வாக்காகி வெளிவரும் போதே குறித்தபயன் தந்துவெளிப்படும். பசுபோதகம் நிறைந்து நிற்கும் ஏனையோர் வாக்கு அவ்வாறு பயன் தராமைக்கும் இதுவே காரணம் - 2217. திருநீலகண்டம் என்பது இறைவரது திருவாணை நிகழ்வித்தொரு மந்திரம் - 2233 முயலக நோய் தீர்த்தல் முதலிய அருளியல் நிகழ்வுகளை நிகழ்த்தும் அருளாளர்களின் கைகால், உடம்பு முதலிய கருவிகள் நம்முடைய உறுப்புகளைப் போல இருந்தாலும் தன்மையால் வேறுபட்டவை. எல்லா வளமையும் வனப்பும் வாய்ந்த ஆன்மாவாகிய முயலை ஓடவிடாமல் எது நிறுத்துகிறதோ அதுவே முயலகன் ஆகும். ஆணவத்தை வலியிழக்கச் செய்ய பிள்ளையார் எழுதிய பதிகங்களில் இரண்டு முக்கியமானவை. ஒன்று நெடுங்களப் பதிகம். மற்றது திருநீலகண்டப் பதிகம்.

5(2)	மேலைத் திருக்காட்டுப் பள்ளி. ஆலம்பொழில். பூந்துருத்தி. கண்டியூர். சோற்றுத்துறை. வேதிக்குடி. வெண்ணியூர். சக்கரப்பள்ளி. புள்ளமங்கை. பாலைத்துறை. நல்லூர். கருகாவூர். அவளிவணல்லூர். பரிதிநியமம். ஆவூர். திருவலஞ்சுழி. சத்திமுற்றம். பட்டீச்சரம். ஆலங்குடி. அரித்துவாரமங்கலம். திருச்சேறை. நாலூர். குடவாயில். நறையூர் சித்தீச்சரம். தென்திருப்புத்தூர். திருஅரிசிற்கரைப்புத் தூர்.சிவபுரம். குடமூக்கு. திருக்குடந்தைக் காரோணம். திருநாகேச்சுவரம். திருவிடை மருதூர். தென்குரங்காடுதுறை. திருவாவடுதுறை. கோழம்பம். வைகல். கோனேரி ராசபுரம்.	37	45	2248 - 2331	பட்டீச்சரத்தில் முத்துப்பந்தர் பெறுதல். திருவாவடுதுறையில் பசும்பொன் ஆயிரங்கொண்ட பொற்கிழியைப்பெற்றுத் தந்தையாருக்கு வேள்வி செய்ய அளித்தல்	சிவனது திருவருட்பெருமைகளை அடியார்பால் கேட்டு வினாவுமாறாடுதல். அவனருளைப் பருகித் திளைக்கும் சிவஞானிகளின் பண்புகளில் ஒன்று -2250 / 51. ஞாயிறு மிதுன ஓரையு சேரும் காலம் கடுந்தீமை தன்றவேனில் மிகும்- 2282. சிவஞானிகள் பிறருக்குப் பொருள்தரவேண்டில் சிவனையன்றி வேறு ஒன்றையும் அறியாமையால் அப்பொருளையும் சிவனிடத்திலே வேண்டிப்பெறுவர்-2323. 24. சிவபெருமான் திருவருளால் வருமநிதி எடுக்க எடுக்கக் குறையாது. 2325 / 27. திருநாகேச்சுரத் திருப்பதிகத்தின் வினைக்கொள்கைகள் ஆராயப்பட வேண்டும்.

5(3)	தேரழுந்தூர், துருத்தி (குற்றாலம்), மூவலூர், மயிலாடுதுறை, திருச்செம்பொன்பள்ளி, விளநகர், பறியலூர் வீரட்டம், திருவேட்டக்குடி, திருத்தருமபுரம், நள்ளாறு, கோட்டாறு, சிக்கல் சாத்தமங்கை, நாகை, கீழ்வேளூர், செங்காட்டங்குடி, மருகல், புகலூர், புகலூர் வர்த்தமானீச்சரம், விற்குடி வீரட்டம், திருவாரூர், திருவாரூர் அரநெறி, வலிவலம், கோளிலி, திருப்பனையூர், இராமனதீச்சரம், புகலூர், திருஅம்பர் மாகாளம், திருஅம்பர் பெருந்திருக்கோவில், கடவூர் மயானம், கடவூர் வீரட்டம்.	31	39	2332 - 2433	திருத்தருமபுரத்தில் யாழ்மூரி பாடியது திருமருகலில் விடந்தீர்ந்தது	ஒரு கன்னிகை தாய் தந்தை நாயகனை மணக்க முன்னர் தீண்டுதல் தமது நாட்டு முன்னோர் மரபன்று 2372. அரசின் விடுத்தக கடி பாவனை. இப்பாவனை முதலிய [illegible] உதவுமா அத்தகைய [illegible] பல்லோர் நம நாட்டில் உள்ள 2372 மந்திரத்தாலும் மருந்தாலும் தீராதவிடத்து சிவனிடத்து [illegible] மதியுடையோர் செய்வதாக 2373 சாத்தமங்கையில் நீலநக்கர் உடன் சேர்கிறார் செங்காட்டங்குடியில் சிறுத்தொண்ட நாயனார் சந்தித்து பிள்ளையார் அருள் பெறுகிறார் புகலூரில் முருக நாயனார் மடத்துக்குச் சென்று அவருக்கு அருளாசி வழங்குகிறார் நாவரசருடன் இன்னாருடைய சந்திப்பு புகலூரில் நிகழ்கிறது திருக்கடவூரில் குங்கிலியக் கலயநாயனார் இல்லத்துக்கு அரசருடன் எழுந்தருளுகிறார் மக்கள் தமது நாள் முறை நிகழ்ச்சிகளிலும், மனமாற இறைவனை எண்ணித் தம்மை அவர்பால் ஒப்புவித்து விண்ணப்பித்தால் இறைவரே செல்லும் நல்வழி காட்டிச் செலுத்துவார் 2457 உமாதேவியாரோடு சிவபிரான் அளிக்க திருவருளின் பெருமை யாழில் அடங்காது. இசையால் தமிழ்பரவும். ஆனால் பயன் கொடுப்பது தமிழின் பொருளேயன்றி இசையன்று. 2344 மூன்றாவது முறையும் நாவரசரைப் புகலூர் முருக நாயனார் மடத்தில் சந்திக்கிறார். பிள்ளையார், அரசர், பாணர், நக்கர், சிறுத்தொண்டர் - ஐவரும் கலந்து உரையாடுகின்றனர்.
5(4)	ஆக்கூர் தான் தோன்றிமடம், திருமீயச்சூர், திருப்பாம்புரம், சிறுகுடி, வீழிமிழலை, பேணு பெருந்துறை, திலதைப்பதிமதிமுத்தம், வீழிமிழலை, திருவாஞ்சியம், தலையாலங்காடு, சாட்டியக்குடி, பெருவேளூர், திருவிளமர், கரவீரம், காரவாசல், தேவூர், நெல்லிக்கா, கைச்சின்னம், திருத்தெங்கூர், கொள்ளிக்காடு, கோட்டூர், வெண்துறை, சிற்றேமம், களர், தண்டலைநீள்நெறி, திருமறைக்காடு, திருவாய்மூர், அகத்தியான்பள்ளி, கோடிக்கரை குழகர், கடிக்குளம், இடும்பாவனம், உசாத்தானம், கொடுங்குன்றம்.	30	44	2434 - 2527	வீழிமிழலையில் பஞ்சம் போக்க படிக்காசு பெற்றது. மிழலை விண்ணிழி விமானத்தில் தோணி அப்பரைக் காட்டியது. திருமறைக்காட்டில் நாவரசருடன் இணைந்து பாடி திருக்கதவம் திறந்தது - அடைத்தது - கோளறு பதிகம் பாடியது.	உலகில் தோன்றும் பெரும்பஞ்சம், பெரும்பிணி, ஐம்பூதச்சீற்றங்கள் ஆகிய இவற்றால் சிவஞானிகள் துன்பப்பட மாட்டார்கள். என்றும் திருநீற்றுச் சார்பினோர்க்குத் தீங்குவாராது - 2462. அடியார்க்கு ஒரு நாளில் இரண்டு பொழுதும் உரிய நோக்கில் அளிக்கவேண்டும். நாடுமுழுவதும் வழுக்கி வீழ்ந்து மயங்கினும் நல்லோர் நெறி திறம்பார். அவ்வாறு நெறி திறம்பாத ஒரு சிலரால் நாடு முழுவதும் உரிய காலத்தில் நன்னெறிப்பட்டு உய்யும். தம்நாடு தீநெறியொழுகி வீழ்ந்த நிலை காணிற் கலங்கலும், அதனைத் தீர்த்து நாட்டினை நல்வழிப்படுத்த இடைவிடாது முயல்வதும் அருளுடைய நல்லாரியல்பு - 2502, 03. திருமறைக்காட்டில் மறைகள் பூசித்துத் திருக்காப்பிட்ட திருக்கதவினைத் தமிழ் மறையே திறக்கவல்லதாயிற்று. ஒரு பூட்டினைத் திறக்க வேண்டுமானால் பூட்டிய அத்திறவுகோலால் அல்லது அதுவே போன்றதொன்றினால் ஆவதன்றி இயலாது என்பதுண்மை 2478-79. இறைவர் தமிழ்மறைத் திருவாக்கின் பயன்துய்த்து நிற்பர் - 2480. கோளறு பதிகத்தினுள் "புத்தரோடமணை வாதிலழிவிக்குமண்ணல் திருநீறு செம்மைதிடமே" என்ற பின்னிகழ்ச்சியின் முற்குறிப்பாய் விளங்கும் உண்மை, சிவஞானம் முக்காலத்தையும் உணர்த்தும் என்பதைத் தெரிவிக்கிறது. தீக்கனாக்களும், துன்னிமித்தங்களும் பின்னர் வரும் கேட்டினை முன்காட்டும் குறிப்புகள். - 2531. புகலூரிலிருந்து - மறைக்காடுவரை ஞானசம்பந்தரும், நாவரசரும் இணைந்தே திருத்தலப் பயணம் செய்கின்றனர்.

5(5)	மதுரை. ஏடகம். பரங்குன்றம். ஆப்பனூர். புத்தூர். பூவணம். கானப்பேர். திருச்சுழி. குற்றாலம். குறும்பலா. திருநெல்வேலி. இராமேஸ்வரம். திருகோணமலை. திருக்கேதீச்சரம். திருவாடானை. புனவாயில். மணமேல்குடி. திருக்களர். பாதாளேச்சரம். கொள்ளம்புதூர். நள்ளாறு. தெளிச்சேரி. கடவூர். பூந்துருத்தி. ஐயாறு. நெய்த்தானம். பழனம். காழி (மற்றவை சேர்வது)	27	35 + II	2528 - 2850	மதுரையில் பாண்டியன் வெப்பு நோயைத் திருநீற்றுப் பதிகம் பாடித் தீர்த்தது. வாது செய்யத் திருவுள்ளம் கொண்டு. கனல். புனல் வாதங்களை நிகழ்த்தி. திருப்பாசுரம் பாடி பரசமயத்தை நிராகரித்து. சைவத்தை நிலைநாட்டியது. கொள்ளம்புதூரில் பதிகம் பாடி ஓடம் செலுத்தியது. தெளிச்சேரியில் புத்தர்களை வாதில் வென்றது.	மங்கையர்க்கரசியார். குலச்சிறையார் வேண்டுகோளை ஏற்று பிள்ளையார் மதுரைக்கு எழுந்தருளுகிறார். பெரியோர்கள் வருவது தெரிந்தபோது நகர்ப்புறத்துச் சென்று வணங்கி வரவேற்றல் நன்மரபு 2553. இறைவனது பதியினையும். கோயிலின் கோபுரத்தையும் கண்டவிடத்தே நின்று வணங்குதல் முறை 2559. இறைவனைக் காணப்பெற்றபோது கண்பெற்றபயன் இதுவே என்று கொள்ளுதல் வேண்டும் 2563. அன்புநிறைவுடையோர் கணக்குவரம்பின்றிப் பலமுறையும் வணங்குவர். எத்தனை முறை வணங்கினாலும் நிறைவுபெறார். 2564. ஆலவாயிறைவனைத் தமிழின் புலவராகக் கண்டு இறைஞ்சினார் பிள்ளையார் 2565. அரசுகளும். நம்பிகளும் அவ்வாறே கண்டு வணங்கினர். பெரியோர்கள் இறைவனைக் கும்பிடத் திருக்கோயிலுக்குட் செல்லும்போது அவர்களது வழிபாட்டுக்கு இடையூறாகக் குறுக்கிட்டு அவர்களை வணங்கலாகாது-2567. கணவனாரது முகம் புலர்தல் காணில் அதன் காரணம் வினவித் தீர்வு தேடுதல் மனைவியரின் கடமை - 2588-91. ஆதிமந்திரம் அஞ்செழுத்தே. அது எல்லா மந்திரங்களுக்கும் முதன்மையானது. அதை ஓதுவார்கள் நோக்கும் திசையிலும் மற்றை மந்திரங்களின் வலி வாராது. குடிகளை நீதி வழுவாது ஒழுகுவித்தல் அரசன் கடமை. பஞ்சபூதங்கள் சிவஞானிகள் சொல் கேட்கும் 2604. திருஞானசம்பந்தரென்னும் நாமமே நோய் தீர்க்கும் மந்திரம். பூந்துருத்தியில் அப்பருடன் நான்காவது சந்திப்பு. அப்பர்மடம். அப்பர் சம்பந்தரின் முத்துச் சிவிகையைத் தாங்குகிறார்.

ஆறாவது தல வழிபாடு	கொச்சை வயம், தில்லை, தினைநகர், திருமாணிகுழி, பாதிரிப்புலியூர், வடுகூர், திருவக்கரை, திருஇரும்பை மாகாளம், திருவரசிலி, திருவதிகை, திருவாமாத்தூர், திருக்கோயிலூர், அறையணி நல்லூர், திருவண்ணாமலை, திருவோத்தூர், திருமாகறல், குரங்கணில் முட்டம், கச்சித்திருவேகம்பம், கச்சி நெறிக்காரைக்காடு, திருவனேகதங்காவதம், கச்சிமேற்றளி, திருமாற்பேறு, திருவல்லம், இலம்பையங் கோட்டூர், திருவிற் கோலம், திருவூறல், பருப்பதம், இந்திரநீலப்பருப்பதம், காளத்தி, திருவொற்றியூர், திருமயிலை, திருவான்மியூர், கள்ளில், தக்கோலம், திருவாலங்காடு, திருப்பாசூர், திருவெண்பாக்கம், கயிலாயம், காரிக்கரை, கேதாரம், கோகர்ணம், திருவான்மியூர், இடைச்சுரம், திருக்கழுக்குன்றம், அச்சிறுப்பாக்கம், திருப்புறவார் பனங்காட்டூர், தில்லை, கழுமலம்	38	3+53+6	2858 - 3049	திருவோத்தூரில் ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கியது திருமயிலையில் எலும்பைப் பெண்ணாக்கியது	பிரமன் படைப்பின் வரும் அழகுகள் எல்லாம் அழியும் தன்மையுடைய பயன் சிவன் அருட்பயன் பெரிய அழகு என்றும் மாறாத பெருவாழ்க்கை 3007 பூதகணங்கள். பிரமன் விட்டுணுக்களால் தொழப்படும் தன்மை வாய்ந்தவைகள். தேவர்களுக்குப் பிறவியுண்டு. சிவபூதகணங்கள் முக்தான்மாக்கள். பிறவியற்றவை. தம்மை வழிபடுவோரை சிவன்பால் வழிபடுத்தி உய்யச்செய்யும் கருணையும், ஆற்றலையும் செய்யும். பனைகள் பிள்ளையார் அருள்பெற்ற காரணத்தால் தங்கள் காலங்கழிந்து, முடிவில் சிவமாயின.

பழமைக்கு கம வழிபாடு	சீகாழி - நல்லூர்ப் பெருமணம் - சோதியில் கலப்பு	1	1	3095 - 3154	தம் திருமணத்திற்கு வந்திருந்த அனைவருடனும் சிவசோதியில் கலந்தது.	"ஈனமாம் பிறவிதீர யாவரும் புகுக" என்று சிவனருள் வழியே பாவித்துக் திருக்கண்ணோக்கமும். அருளாணையும் நிகழ்த்தித் திருவைந்தெழுத்தையும் உபதேசித்ததால் அத்திருமணத்திற்கு வந்திருந்தோர் அனைவரும் முக்தித்தகுதியுடையவராகி சோதியிற் கலந்து முக்தியடைந்தனர் - 3146 மணச்சடங்குகள் ஆசாரியனால் சிவபெருமானது பாதங்களில் பொருந்தும் உள்ளத்தால் செய்யப்பட வேண்டும். மந்திர முறையினால் உய்த்த எரி வளர்த்தல் மணவேள்வியின் இன்றியமையாத சடங்காகும். மணமகளை மணமகன் கைப்பற்றி வெள்ளிய நெற்பொரியை வேள்வித்தீயில் ஆகுதியாக இட்டு ஏழுமுறை வேள்வித் தீயினை வலம்வரும்போது எரிவலமாக வரவேண்டுமென்று இறைவனை வேண்ட வேண்டும். 3138-39. மணவேள்விச்சடங்கு நிறைவேறி எரிவலம் வரும் வரை மணமகள் மணமகனுக்கு வலப்பக்கத்திருக்க வைத்தலும் அதன்பின் இடப்பக்கத்து இருத்தலும் மரபு. இடப்பாகம் பெண்மைக்குரிய பாகம். அதில் பற்றிய நோய் எளிதில் தீரும். 3135. மணநாளுக்கு முன்னாளில் மணமகன் கையில் காப்புநாணை உரிய சடங்குகளுடன் அணிதல் வழக்கு.

திருத்தொண்டர் புராணத்தின் 4/7 தொகுதி நூலின் 953-ஆம் பக்கத்தில் அத்தொகுதியில் சிவக்கவிமணி அவர்கள் குறிப்பிட்டிருந்த 204 பதிகங்களின் அட்டவணையை இணைத்திருந்தோம். தற்பொழுது 5/7 தொகுதியான இந்நூலில் சிவக்கவிமணி அவர்கள் எடுத்தாண்ட 82 பதிகங்களைக் கீழ்க்கண்டவாறு அட்டவணை இடுகிறோம்.

வ. எண்	தலம்	திருமுறை எண்	பதிக முதற் குறிப்பு	சிறப்புக் குறிப்புகள்	பக்க எண்
1.	திருவாலவாய் I	3	மங்கையர்க்கரசி	புறநீர்மை - பண் (பூபாள இராகம்)	64
2.	திருவாலவாய் II	1	நீலமாமிடற்றால	குறிஞ்சி - திருவிருக்குக்குறள்	70
3.	திருவாலவாய் III	3	செய்யனே	கௌசிகம்	111
4.	திருவாலவாய் IV	3	காட்டுமாவது	கௌசிகம்	158
5.	திருவாலவாய் V	3	வேத வேள்வியை	பழம்பஞ்சுரம், நாலடி மேல் வைப்பு	159
6.	திருக்கழுமலம்	2	பிரமனூர்	காந்தாரம், திருச்சக்கரமாற்று	178
7.	திருவாலவாய் VI	3	மானினேர்	கொல்லி	189
8.	திருவாலவாய் VII	2	மந்திரமாவது	காந்தாரம், திருநீற்றுப்பதிகம்	199
9.	திருநள்ளாறு	3	தளிரிள	சாதாரி, திருவிராகம்	220
10.	திருவாலவாய் VIII	3	வாழ்க அந்தணர்	கௌசிகம், திருப்பாசுரம்	274
11.	திருஏடகம்	3	வன்னியும்	கொல்லி	331
12.	திருவாலவாய் IX	3	வீடலால வாயிலாய்	கௌசிகம், திருவிராகம்	356
13.	திருவாலவாய் X	3	ஆலநீழலுகந்த	பழம்பஞ்சுரம், திருவியமகம்	365
14.	திருக்கழுமலம்	3	மண்ணினல்ல	கொல்லி	378
15.	திருப்பரங்குன்றம்	1	நீடலர் சோதி	குறிஞ்சி	385
16.	திருஆப்பனூர்	1	முற்றுஞ்சடை	குறிஞ்சி	387
17.	திருப்புத்தூர்	1	வெங்கள்	தக்கராகம்	388
18.	திருப்பூவணம்	1	அறையார்	தக்கேசி	390

72	திருமயிலை	2	மட்டிட்ட	சீகாமரம் (பூம்பாவைப்பாட்டு)	694
73.	திருவான்மியூர் I	2	கரையுலாம்	இந்தளம்	740
74.	திருவான்மியூர் II	3	விரையார்	கௌசிகம்	742
75.	திருவிடைச்சுரம்	1	வரிவளர்	குறிஞ்சி	745
76.	திருக்கழுக்குன்றம்	1	தோடுடையான்	குறிஞ்சி	749
77.	திருஅச்சிறுபாக்கம்	1	பொன்றிரண்	குறிஞ்சி	753
78.	திருப்புறவார் பனங்காட்டூர்	2	விண்ணமர்ந்தன	சீகாமரம்	756
79.	வேணுபுரம் (சீகாழி)	1	வண்டார் குழல்	நட்டபாடை	771
80.	காழி	2	நம்பொருள்	திருவிராகம், நட்டராகம்	772
81.	திருநல்லூர்ப் பெருமணம்	3	கல்லூர்ப் பெரு	அந்தாளிக் குறிஞ்சி	879
82.	நமச்சிவாயத் திருப்பதிகம் (பொது)	3	காதலாகி	கௌசிகம்	883

திருஞானசம்பந்தப் பிள்ளையார் பாடியனவாக நமக்குக் கிடைத்துள்ள பதிகங்கள் 385. அவற்றுள் 4/7 தொகுதி நூலில் 204 பதிகங்களையும், 5/7 தொகுதி நூலான இப்பதிப்பில் 82 பதிகங்களையும் சிவக்கவிமணி அவர்கள் எடுத்தாள்கிறார்கள். அவர் எடுத்தாளாத பதிகங்களாகக் கீழ்க்கண்ட 99 பதிகங்களைப் பட்டியலிடுகிறோம்.

வ. எண்	தலம்	திருமுறை எண், பதிக முதற் குறிப்பு			மொத்தப் பதிகங்கள்
		1	2	3	
1.	அனேகதங்காவதம்		நீடன் மேவு		1
2.	ஆனைக்கா			வானைக்காவில்	1
3.	ஆவூர்பசுபதீச்சரம்	புண்ணியர்			1
4.	ஐயாறு	கலையார் மதி பணிந்தவரரு			2
5.	கச்சியேகம்பம்			பாயுமால்	1
6.	கடைமுடி	அருத்தனை			1
7.	கழிப்பாலை		புனலாடிய		1
8.	கருக்குடி			நனவிலும்	1
9.	கலிக்காமூர்			மடல்வரை	1

10.	கா.பூ. பல்லவனீச்சரம்	அடையார் தம்			1
11.	கள்ளில்	முள்ளின்மேல்			1
12.	காட்டுப்பள்ளி	செய்யருகே			1
13.	காழி (பிரமபுரம்)	எரியார் மழு	எம்பிரானெ கறையணி	கனமுனம்மல இறையவன்	5
	காழி (வேணுபுரம்)		நிலவும்புன பூதத்தின்		2
	காழி (புகலி)	விதியாய்விளை ஆடலர வசை	உகலியாழ் முன்னிய உருவார்ந்த விடையதேறி	கண்ணுதலானும்	7
	காழி (வெங்குரு)	காலைநன்		விண்ணவர்	2
	காழி (தோணிபுரம்)	வண்டரங்க		சங்கமரு கரும்பமர்	3
	காழி (பூந்தராய்)		செந்நெலங்	பந்துசேர் மின்னனவெயிறு	3
	காழி (சிரபுரம்)	பல்லடைந்த வாருறுவன	அன்னமென்ன		3
	காழி (புறவம்)	எய்யாவென்		பெண்ணிய	2
	காழி (சண்பை) காழி (சீகாழி)	பங்கமேறு பூவார் கொன்றை அடலேறமரும் நல்லார்தீ உரவார்கலை	நல்லானை பண்ணினேர் நலங்கொண் விண்ணியங்கு பொங்குவெ பொடியிலங்கு	சந்தமார்	13
	காழி (கொச்சைவயம்)		நீலநன்மா அறையும்	திருந்துமா	3
	காழி (கழுமலம்)	பிறையணிபடர் அயிலுறு பந்தத்தால் சேவுயரும்	பூமகனூர்	மடல்மலி	6
14.	காளத்தி			வானவர்கள்	1
15.	கொடுங்குன்றம்	வானிற்பொலி			1
16.	கோட்டாறு		கருத்தடங்	வேதியன்விண்	2

17.	சிற்றேமம்			நிறைவெண்	1
18.	சோபுரம்	வெங்கணா			1
19.	தலைச்சங்காடு		நலச்சங்க		1
20.	தென்குடித்திட்டை			முன்னைநான்	1
21.	நல்லூர்	கொட்டும்பறை	பெண்ணமருந்		2
22.	நள்ளாறு	போகமார்த்த	ஏடுமலிகொ		2
23.	நாகைக்காரோணம்	புனையும்விரி	கூனல்திங்கட்		2
24.	பனந்தாள்			கண்பொலி	1
25.	பூவணம்			மாதர்மேனி	1
26.	மங்கலக்குடி		சீரினார்மணி		1
27.	மழபாடி			கலையார்	1
28.	வலஞ்சுழி		என்ன புண்ணியம்		1
29.	வலிதாயம்	பத்தரோடு			1
30.	வலிவலம்	ஒல்லையாறி			1
31.	வாழ்கொளிப்புத்தூர்		சாகையாயிரம்		1
32.	வீழிமிழலை	தடநில இரும்பொன் அலர்மகள் ஏரிசையும்		கேள்வியர் சீர்மருவு மட்டொளி பெண்மதி வேலினேர்தரு துன்றுகொன்றை புள்ளித்தோல்	11
33.	விடைவாய்			மறியார்	1
34.	வேற்காடு	ஒள்ளிதுள்			1
35.	கிளியன்னவூர்			தாற்சிறக்கும்	1
36.	பொது (சேத்திரக் கோவை)		ஆரூர்தில்லை		1
		36	31	32	99

உரையாசிரியர் சிவக்கவிமணி அவர்களுக்கு, நாயன்மார்களின் வரலாற்றை உரைக்கும்போது அவர்கள் அருளிய திருப்பதிகங்களையும் உரையுடன் சேர்த்துச் சொல்லவேண்டுமென்பது தணியாத தாகமாகும். 4/7, 5/7 தொகுதிகளில் 1256 பெரியபுராணத் திருப்பாடல்களுக்கு 286 பதிகங்களைத் தகுந்த குறிப்புகளுடன் பதிப்பித்துள்ளது மிகப் பெருஞ்சாதனையாகும். அவர் பதிப்பிக்காத 99 பதிகங்களை இப்பதிப்போடு சேர்க்க முயற்சி செய்தோம். 960 பக்கங்கள் வந்துவிட்ட நிலையில் இன்னும் 99 x 2 = 198 பக்கங்கள் சேர்த்தால் நூல் பெரியதாய்விடும். இப்பாகத்தையும் இரண்டாகப் பிரிக்கவேண்டும். ஒரு பதிகத்துக்கு 2/3 நாட்கள் இல்லாமல் நல்ல குறிப்புரை எழுத முடியவில்லை. எனவே குறைந்தது 200 நாட்கள் தேவை. ஆனால் கால தத்துவத்துக்குட்பட்டு மிகச் சாதாரண வாழ்க்கை நடத்தும் நமக்கு இறைவன் கொடுத்த காலகட்டம் 60 நாட்களாகும். அவற்றிலும் அச்சகத்தாருக்கு ஒரு மாதம் ஒதுக்கித்தர வேண்டியுள்ளது.

எனவே, இப்பதிப்பில் உரிய இடங்களில் 99 பதிகங்களையும், குறிப்புரைகளையும் இணைக்கத் திருவருள் கூட்டவில்லை. இந்த நூலின் அடுத்த பதிப்பைப் பதிப்பிக்கும் பேற்றைச் சிவபெருமான் யாருக்கு எந்தப் பிறவியில் கொடுக்கப்போகிறாரோ தெரியவில்லை. அப்பதிப்பில் இந்த 99 பதிகங்களையும் சேர்ப்பிக்கத் திருவருள் கூட்டட்டும் என்று பதிப்புரையை நிறைவுசெய்து இதுவரை பதிப்பித்து வெளிவந்துள்ள நமது பன்னிரு திருமுறை ஆய்வுமைய நூல்களை கீழ்க்கண்டவாறு பட்டியலிடுகிறோம்.

முதல் திருமுறை	டிசம்பர் 27, 28 - 2014
இரண்டாம் திருமுறை	பிப்ரவரி 21, 22 - 2015
மூன்றாம் திருமுறை	ஏப்ரல் 18, 19 - 2015
நான்காம் திருமுறை	ஜீன் 27, 28 - 2015
ஐந்தாம் திருமுறை	ஆகஸ்டு 29, 30 - 2015
ஆறாம் திருமுறை	அக்டோபர் 24, 25 - 2015
ஏழாந் திருமுறை	டிசம்பர் 26, 27 - 2015
எட்டாம் திருமுறை - I	பிப்ரவரி 27, 28 - 2016
எட்டாம் திருமுறை - II	ஏப்ரல் 23 - 2016
ஒன்பதாம் திருமுறை	ஏப்ரல் 24 - 2016
பத்தாம் திருமுறை - I	ஜீன் 26, 27 - 2016

பத்தாம் திருமுறை - II	ஆகஸ்ட் 27, 28 - 2016
பத்தாம் திருமுறை - III	அக்டோபர் 22, 23 - 2016
பதினொன்றாம் திருமுறை - I	டிசம்பர் 24, 25 - 2016
பதினொன்றாம் திருமுறை - II	பிப்ரவரி 18, 19 - 2017
பதினொன்றாம் திருமுறை - III	ஏப்ரல் 29, 30 - 2017
பதினொன்றாம் திருமுறை - IV	ஜூன் 24, 25 - 2017
பன்னிரண்டாம் திருமுறை (முதல் தொகுதி) 1/7	ஆகஸ்டு 26, 27 - 2017
பன்னிரண்டாம் திருமுறை (இரண்டாம் தொகுதி) 2/7	அக்டோபர் 28, 29 - 2017
பன்னிரண்டாம் திருமுறை (மூன்றாம் தொகுதி- முதல் பாகம்) 3(1)/7	டிசம்பர் 23 - 2017
பன்னிரண்டாம் திருமுறை (மூன்றாம் தொகுதி- இரண்டாம் பாகம்) 3(2)/7	டிசம்பர் 24 - 2017
பன்னிரண்டாம் திருமுறை (நான்காம் தொகுதி) 4/7	பிப்ரவரி 24, 25 - 2018

ஏழு தொகுதிகளாகப் பெரியபுராணத்தைப் பதிப்பிக்கத் திருவருள் கூட்டுவித்த நிலையில், 'சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் பதிப்பித்த நிறைவான உரை இருக்க, இன்னொரு உரை புதிதாக எழுத முயற்சிக்க வேண்டிய தேவையில்லை' என அடியார் பெருமக்கள் நினைத்ததற்கேற்ப, அப்பதிப்புரிமை பெற்றிருந்த சி.கே.எஸ். அவர்களின் குடும்பத்தினரை அணுகினோம். அவர்களும் மனமுவந்து ஒருமுறை மட்டும் பதிப்பிக்க அனுமதி அளித்தார்கள். அப்பதிப்புரிமையைக் கட்டிக் காத்து வரும், திரு. கண்ணாயிரம், திருமதி. மங்கையர்க்கரசி கண்ணாயிரம், திரு. சிவசுப்பிரமணியம் ஆகியோர்களுக்கும் மனமுவந்த நன்றிகளை உரித்தாக்குகின்றோம். அம்முறையில் ஐந்தாவது தொகுதியாக வெளியிடப்படும் இந்நூலை வெளியிட்டுக் கருத்தரங்கம் நடத்தத் திருவருள் கூட்டுவித்த நிலையில் கீழ்க்காண் அட்டவணைப்படி நிகழ்வுகள் நடைபெறும்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

பன்னிரண்டாம் திருமுறை

(ஐந்தாம் தொகுதி) 5/7

(வம்பறா வரிவண்டுச் சருக்கம் இரண்டாம் பாகம்

திருஞானசம்பந்தர் புராணம்)

வழிபாட்டுக் கருத்தரங்கம்

21.04.2018 – 22.04.2018 (சனி, ஞாயிறு)

நிகழ்ச்சி நிரல்

சொற்பொழிவாளர் நாள்/நேரம்	பாடல்கள்	பாடல் எண்ணிக்கை
பேராசிரியர் **ம.வே. பசுபதி** அவர்கள் 21.04.2018 சனி காலை 09.00 – 11.00	2542 - 2618	77
பேராசிரியர் **புரிசை நடராசன்** அவர்கள் 21.04.2018 சனி நண்பகல் 11.00 – 01.00	2619 - 2698	80
சிவத்திரு **சி. மதன்முரளி** அவர்கள் 21.04.2018 சனி பிற்பகல் 02.00 – 04.00	2699 - 2775	82
சிவத்திரு **குடவாசல் இராமமூர்த்தி** அவர்கள் 21.04.2018 சனி மாலை 04.00 – 06.00	2776 - 2854	79
சிவத்திரு **சு. குஞ்சிதபாதம்** அவர்கள் 22.04.2018 ஞாயிறு காலை 09.00 – 11.00	2855 - 2931	77
சிவத்திரு **சிவ. காந்தி** அவர்கள் 22.04.2018 ஞாயிறு நண்பகல் 11.00 – 01.00	2932 - 3006	75
சிவத்திரு **ப. குமரலிங்கம்** அவர்கள் 22.04.2018 ஞாயிறு பிற்பகல் 02.00 – 04.00	3007 - 3081	75
முதுமுனைவர் **ந.இரா. சென்னியப்பனார்** அவர்கள் 22.04.2018 ஞாயிறு மாலை 04.00 – 06.00	3081 - 3154	73
மொத்தம்	**2542 - 3154**	**613 பாடல்கள்**

இரண்டு திங்களுக்கு ஒருமுறை சுமார் பன்னூறு பாடல்கள் கொண்ட ஒரு திருமுறையை முறையாகப் படித்து, அச்சுப்பிழை பலமுறை பார்த்துக் கடின உழைப்பின் பயனாக நூலை வெளியிடும் முனைவர் ப. தமிழரசியைத் தலைவராகக் கொண்டு செயல்படும் தமிழ்த்துறையின் முனைவர் இரா. மதன்குமார், முனைவர் செ. ஆறுச்சாமி உள்ளிட்டோருக்கும், நூலாக்க ஒருங்கிணைப்புப் பணியில் செயலாற்றுகின்ற திரு. ப. வெள்ளிங்கிரி, கணினி நிபுணர்களான திரு.மு. மகேஷ், திரு. து. சசி அவர்களுக்கும், நூலைச் சிறப்பாக அச்சிட்டு வழங்கும் செஞ்சுடர் அச்சகத்தார்க்கும் மனமுவந்த நன்றிகள். அவர்கள் இம்மை, மறுமை, இன்பம் பெறுவார்களாக.

அனைவரும் வருக. சிவனருள் பெறுக.

நன்றி.

அன்பன்,

இராச. வசந்தகுமார்

நிறுவன வேந்தர்

கற்பகம் உயர்கல்விகலைக்கழகம்

(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)

இடம் : கோயமுத்தூர்

நாள் : 15.03.2018



உ
சிவமயம்

ஐந்தாம் தொகுதியின் முதற்பதிப்பின் முன்னுரை

1. நான்காம் பகுதியின் பின், சரியாய் 1 ஆண்டும் நான்கு மாதங்களும் கூடிய கால அளவில் இப்பகுதி வெளிவருதல் திருவருளின் துணையாலாகியது. புராணத்துள் எஞ்சிய பகுதிகளும் இவ்வளவின் விரைவில் வெளி வருவனவாகில் இன்னும் ஒன்றரை ஆண்டெல்லையில் உரை முழுதும் அச்சு நிறைவு காணலாம். அன்பர்கள் தரும் ஊக்கமும் உதவிகளும் திருவருளும் முன்னிற்க.

2. இப்பகுதியில் ஆளுடைய பிள்ளையார் புராணம் பிற்பகுதி முழுமையும் வெளிவருகின்றது. இது வம்பறு வரிவண்டுச் சருக்கத்தின் II பாகமாகும். அச் சருக்கத்தின் எஞ்சிய ஏனைய புராணங்கள் (வம்பறு வரிவண்டுச் சருக்கம் III பாகம்) VI பகுதியாகவும்,பெரியபுராணத்துள் அதன்மேல் உள்ள ஏழாவது ''வார்கொண்ட வனமுலையாள் சருக்கம்'' முதல் பதின்மூன்றாவது வெள்ளானைச் சருக்கம் வரை ஏழு சருக்கங்களும் VII பகுதியாகவும் வரவுள்ளன.

3. இப்பகுதி வெளியாகுமிடையில் இவ்வெளியீட்டுக்கு எல்லா வகைகளாலும் பேரூக்கமும், உதவியும் தந்தருளியிருந்த ஸ்ரீமத் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள் என்னும் முனிவர்பெருமான் சென்ற விரோதி ஆண்டு சித்திரைத் திங்கள் 10-ம் நாள் திருத்தில்லையில் இறைவன் திருவடி சார்ந்தனர். அந்நிகழ்ச்சி இவ்வெளியீட்டுக்குப் பெருத்த நட்டமாகும்; அதுபற்றி முன்னரே அறிவித்துள்ளேன். திருஞானசம்பந்த நாயனார் புராணத்துள் மூன்று பாகங்கள், விரும்பும் அன்பர்கள் இலகுவில் பெற்றுப் பயனடையும் பொருட்டுத் தனி வெளியீடுகளாகப் பதிக்கப்பட்டுள்ளன; அவை (1) திருப்பாசுர விளக்கம்; (2) பூம்பாவை; (3) ஆளுடைய பிள்ளையார் திருமணம் என்பவையாம். அவற்றுடன், வழிபாட்டுக்குதவும் பொருட்டு ஆளுடைய பிள்ளையார் துவாதச நாமார்ச்சனை என்னும் பன்னிரு பெயர்த் துதியும் தனியாக வெளியிடப்பட்டுள்ளது. அக்கருத்துடனே ஆளுடைய பிள்ளையார் 108 பெயர்த் துதியும், 1000 பெயர்த் துதியும் வெளியாக வேண்டும் என்னும் கருத்துடன் உரிய முயற்சிகளும் செய்து வருகின்றேன். சரிதச் சுருக்கமும் தனியாக வெளிவந்துள்ளது.

4. உரை எழுத்துப் பணி நிறைவு விழா சென்ற 13-7-48ல் சிதம்பரத்திற் கொண்டாடப்பட்டது பற்றி அன்பர்களுக்கு முன்னமேயே விரிவாக IV பகுதியில் அறிவித்துள்ளேன். இப்போது ஆளுடைய பிள்ளையார் புராண உரை அச்சு நிறைவு விழா நாளது வைகாசித் திங்கள் 19-ல் (1-6-1950) திருநல்லூர்ப் பெருமணம் என்னும் ஆச்சாபுரத்தில் பிள்ளையாரது திருநாட் சிறப்புடன் நடைபெற உள்ள செய்தியை அன்பர்களுக்கு மகிழ்வுடன் அறிவித்துக்கொள்கிறேன். திருவருளும் பெரியோர்களின் ஆசியும் அன்பர்களின் ஆதரவும் முன்னிற்க. ஆளுடைய பிள்ளையார் புராணத் தொடக்கம் முதற்சஞ்சிகை வெளியீடு 25-4-47ல், அவர் அவதரித்ததும் திருஞான முண்டருளி விளங்கியதுமாகிய சீகாழிப் பதியில், தருமபுர ஆதீனம் மகா சந்நிதானங்களின் அருளினால் நிகழ்ந்தது. இப்போது அப்புராணம் முழுமையும் அச்சு நிறைவாகிய வெளியீட்டு விழாவும் அவர்களது ஆசியின் வழியே அவர்களாதீனத்துக்குட்பட்ட ஆச்சாபுரப் பதியினில் கொண்டாடப்பெறுவது திருவருட் சம்மதமாகும்.

5. இப்பகுதி வெளிவரு மிடையில் காகிதமும் அச்சுச் செலவும் பிறவுமாகப் பல வகையாலும் முட்டுப்பாடுகள் நேர்ந்த போதெல்லாம் ''உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே, இடுக்கண் களைவதாம் நட்பு'' என்றபடி, உற்றிடத் துதவிகள் பலவும் மனமுவந்து செய்த என் ஆருயிர் நண்பர் கோவை - திரு. கா.ச. இரத்தின சபாபதி முதலியார் (C.S.R) அவர்களுக்கு என் கடப்பாடுடைய நன்றியைச் செலுத்துகின்றேன்.

6. இவ்வெளியீட்டில் முன்போலவே எல்லா வகையாலும் உதவி செய்த எல்லாப் பெருமக்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றேன்.

கோயமுத்தூர்
சேக்கிழார் நிலையம்
1—6—1950

அடியேன்
C.K. சுப்பிரமணிய முதலியார்
பதிப்பு-உரை-ஆசிரியன்.

௳

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஐந்தாம் தொகுதியின் இரண்டாம் பதிப்பின் முன்னுரை

ஆளுடைய பிள்ளையார் புராணம் பிற்பகுதிப் பாடல்களின் உரை திருத்தொண்டர் புராண உரை வரிசையில் ஐந்தாம் பகுதியாக உரையாசிரியர் அவர்களால் 1-6-1950-ல் ஆளுடைய பிள்ளையார் திருநாளன்று முதன்முறை வெளியிடப்பட்டது. அதன்பின் சரியாக இருபத்துமூன்றாண்டுகள் சென்று இவ்வைந்தாம் பகுதியின் இரண்டாம் பதிப்பை ஆளுடைய பிள்ளையாரின் திருநாளாகிய இன்று வெளியிடும் பேறு எனக்குக் கிட்டியுள்ளது. இது திருவருளின் துணையேயாகும்.

இடையிட்ட இந்த நெடுங்கால எல்லையில் உரைநூலின் முற்பகுதிகள் முற்றும் செலவாகிவிட்டன. விரும்பி வேண்டும் பல அன்பர்களின் ஆர்வங்கண்டு முற்றிலும் மாறிய கடுமையான பொருளாதாரச் சூழ்நிலையில் இந்த மறுபதிப்பு வேலையைத் தொடங்கி ஒவ்வொரு பகுதிகளாக வெளியிட்டு வருகின்றேன். அச்சுக்கூலி, காகிதவிலை, கட்டடக் கூலி போன்றவையும் ஏனைய பிற செலவுகளும் தொடர்ந்து அதிகரித்த வண்ணம் இப்பணியை மேன்மேலும் கடினமாக்கி வருகின்றன. சைவ உலகின் பேராதரவு பெருகின் இஃது எளிதாகும்.

இம்மறு பதிப்பு வேலையை ஆர்வத்துடன் ஏற்றுள்ள சைவத் திருவாளர் மு. நாராயணசாமி முதலியார் அவர்கள் இப்பகுதியையும் தமது முருகன் அச்சகத்தில் திருத்தமும் பொலிவும் பொருந்த அச்சிட்டு உதவியுள்ளார்கள். அவர்களுக்கு எனது கடப்பாடுடைய நன்றி உரித்தாகுக.

இவ்வுரை நூல் வரிசையின் ஏனைய பகுதிகளின் மறுபதிப்புக்களும் விரைந்து வெளிவரத் துணை செய்யும்படி திருவருளை வழுத்துகின்றேன்.

சேக்கிழார் நிலையம்
480, வைசியாள் வீதி, கோயம்புத்தூர் 641001
20—5—1973

க. மங்கையர்க்கரசி

ஐந்தாம் தொகுதியின் மூன்றாம் பதிப்பின் முன்னுரை

ஆளுடைய பிள்ளையார் புராணம் பிற்பகுதிப் பாடல்களின் உரை திருத்தொண்டர் புராண உரை வரிசையில் ஐந்தாம் பகுதியாக உரையாசிரியர் அவர்களால் 1-6-1950-ல் ஆளுடைய பிள்ளையார் திருநாளில் முதன்முறை வெளியிடப்பட்டது. தொடர்ந்து இரண்டாம் பதிப்பும், இந்த மூன்றும் பதிப்பும் வெளியிடும் புண்ணியம் எனக்குக் கிடைத்தது.

நாடு வரலாறு காணுத பொருளாதார நெருக்கடியில் உள்ளது. இஃது உலக நாடுகள் அனைத்தும் சந்தித்துள்ள நிலையேயாயினும் நம் நாட்டில் விலைவாசிகள் உயர்வு முன் எப்பொழுதும் இல்லாத ஒன்றாகும். அதனுல் அச்சிடவேண்டிய தாள்கள், கணினி இயக்கும் செலவு போன்றவை அதிகமாகிவிட்டன. முன்பதிப்புகளில் வந்த படங்களுக்கான பிளாக்குகளில் பல காலப்போக்கில் மிகவும் தேய்ந்து பழுதாகிவிட்டன. அவற்றைப் புதியனவாகப் பல தலங்களுக்கு நேரில் சென்று படம் எடுத்து வந்து கணினி வழி ஆயத்தம் செய்யவேண்டியதாயிற்று. சில இடங்களுக்கு நேரில் சென்றும் படம் எடுக்க இயலாத சூழ்நிலை.

தொடர்ந்து நிலவும் மின் தட்டுப்பாட்டால் கணினி மையம் நாளில் பெரும் பொழுது இயங்க இயலவில்லை. இத்துணை இடர்பாட்டிலும் மிகவும் பொலிவுடன் இப்பதிப்பு வெளிவர உதவியவர் சிவகாசி அசோக் கணினி மையம் உரிமையாளர் ஆவார். அவருக்கு என் கடப்பாடுடைய நன்றி.

இந்நூல் வரிசையின் ஏனைய பகுதிகளும் இவ்வாறே வனப்புடன் தொடர்ந்து வெளியாக திருவருள் துணை நிற்க வழுத்துகின்றேன்.

சேக்கிழார் நிலையம்
480, வைசியாள் வீதி, கோயம்புத்தூர் 641001
15—5—2010

க. மங்கையர்க்கரசி

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருத்தொண்டர் புராணம்

*வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.*

—திருஞானசம்பந்த நாயனார் புராணம் (1)

திருத்தொண்டர் புராண சாரம்

*காழிநகர்ச் சிவபாத விதயர் தந்த கவுணியர்கோ
னமுதுமையாள் கருதி யூட்டும்
ஏழிசையி னமுதுண்டு தாளம் வாங்கி யிலங்கியநித்
திலச்சிவிகை யிசைய வேறி
வாழுமுய லகனகற்றிப் பந்த ரேய்ந்து வளர்கிழிபெற்
றரவின்விட மருகற் றீர்த்து
வீழிநகர்க் காசெய்தி மறைக்கதவம் பிணித்து மீனவன்மே
னியின்வெப்பு விடுவித் தாரே.* (31)

*ஆரெரியிட் டெடுத்தவே டவைமுன் னேற்றி யாற்றிலிடு
மேடெதிர்போ யணைய வேற்றி
ஓரமண ரொழியாமே கழுவி லேற்றி யோதுதிருப்
பதிகத்தா லோட மேற்றிக்
காருதவு மிடிபுத்தன் றலையி லேற்றிக் காயாத
பனையின்முது கனிக ளேற்றி
ஈரமிலா வங்கமுயி ரெய்த வேற்றி யிலங்குபெரு
மணத்தரனை யெய்தி னாரே.* (32)

—ஸ்ரீ உமாபதி சிவாசாரியார்

ஐந்தாம் தொகுதியிலுள்ள படங்கள்

முற்சேர்க்கை -1

உ
சிவமயம்

திருஞான சம்பந்த நாயனூர் சரித ஆதரவுகள்

தேவார அகச்சான்றுகளும்
மற்றும் சைவத் தெய்வத் திருமுறைகளிலும் கல்வெட்டுக்களிலும்
கண்டவற்றுட் சிலவும்

1. நாயனூரது முன்னைநிலை

பிள்ளையார் பிறவியில் வாரா நிலையில் இறைவரை மறவா துட்கொண்டு அவனே தானுகச் சிவனது ஆனந்தத்தில் இருந்த ஓர் முத்தான்மா என்பது ஆசிரியர் பல இடங்களிலும் எடுத்துக்காட்டும் பொருளாகும். ''பண்டுதிரு வடி மறவாப் பான்மையோர்'' (1953); ''பவமற வென்னை முன்னு ளாண்டவப் பண்பு கூட, நவமலர்ப் பாதங் கூட்டும்'' (3142); ''உன் பாதமெய்ந் நீழல் சேரும் பருவமீ தென்று பாட'' (3143) என்பன முதலியவை சிந்திக்கத் தக்கன.

நாயனூர் தேவாரம்

2–ம் திருமுறை:— ''★ ★ ★ ......திருந்தடி
மறக்குமா றிலாதவென்னை மையல்செய்திம் மண்ணின்மேற்
பிறக்குமாறு காட்டினூய்; பிணிப்படு முடம்புவிட்
டிறக்குமாறு காட்டினூய்க் கிழுக்குகின்ற தென்னையே''
—துருத்தி - நட்டராகம் - 5

''பண்டு நான்செய்த பாவங்கள் தீர்ப்பார் பாம்புர நன்னகராரே''
— தக்கராகம் - பாம்புரம் - 10

'' .... இன்று நல்லூர்ப் பெருமணம்
புக்கிருந் தீரெமைப் போக்கரு ளீரே''
—அந்தாளிக் குறிஞ்சி – நல்லூர்ப் பெருமணம் – 8

2. ஞானப்பா லுண்டருளியதும், இறைவரைச் சுட்டிக் காட்டித் ''தோடுடைய செவியன்'' என்று பாடியதும்:—

நாயனூர் தேவாரம்

3–ம் திருமுறை:— ''போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்''
—கொல்லி – கழுமலம் – 2

குறிப்பு :— சீகாழிப் பதிகங்களிலெல்லாம் பிள்ளையார் தமக்கு ஞானப்பால் ஊட்டிய அம்மையாரது நினைவுகொண்டு அவரை இறைவர் உடனுகவே வைத்துப் பாடியருளும் உட்குறிப்பினையும் கண்டுகொள்க.

11-ம் திருமுறை :— ''★ ★ ★ உலகமூன் றுக்குங் களைக ணுகி
முதலில் கால மினி துவீற் றிருந்துழித்
தாதையொடு வந்த வேதியச் சிறுவன்

பட்டினத்துப் பிள்ளையார்:—

தளர்நடைப் பருவத்து வளர்பசி வருத்த
''அன்ன யோ!'' வென் றழைப்பமுன் னின்று
ஞான போனகத் தருளட்டிக் குழைத்த
ஆனத் திரளை யவன்வயி னருள
வந்தணன் முனிந்து, ''தந்தா ரியா?''ரென
அவனைக் காட்டுவ னப்ப! வானோர்
''தோஓ டுடைய செவியா'' னென்றும்
''பீஇ டுடைய பெம்மா'' னென்றும்
கையிற் சுட்டிக் காட்ட
ஐய!நீ வெளிப்பட் டருளினை யாங்கே''

—திருக்கழுமல மும்மணிக்கோவை - 1

குறிப்பு:— தளர்நடைப் பருவம்-மூவாண்டு; வளர்பசி-இதனைத் *''தொடர்ந்த பிரிவுணர்வு'' (1953) என்று உரை செய்தருளினர் ஆசிரியர்.* அருள்அட்டி - *''சிவஞானத் தின்னமுதங் குழைத்தருளி'' (1966);* முனிந்து தந்தா ரியாரென - *''யாரளித்த பாலடிசி லுண்டதுநீ எனவெகுளா'' (1970);* கையிற் சுட்டிக்காட்ட - *''உச்சியினி லெடுத்தருளு மொருதிருக்கை விரற்சுட்டி'' (1971);* தோஓடுடைய செவியன்-பீஇடுடைய பெம்மான்-*தேவாரக் குறிப்புக்கள் அளபெடைகள் செய்யு ணிறைத்தன. தேவாரம் சரித அகச்சான்றாகக் காட்டியருளினர் அடிகளார். புராணம் இதனை உட்கொண்டு அருளப்பட்டது காண்க.*

நம்பியாண்டார் நம்பிகள்:—

மேற்படி

''★ ★ ★ வேதத் தலைவனை மெல்விரலாற்
றேட்டியங் காத னிவனென்று தாதைக்குச் சூழ்விசும்பிற்
காட்டிய கன்று ...'' —ஆளுடைய பிள்ளையார் - திருவந்தாதி-*13*

''அளிவந்த கண்பிசைந் தேங்கலு மெங்க ளரன்று ணையாங்
கிளிவந்த சொல்லிபொற் கிண்ணத்தில் ஞான வமுதளித்த''

—ஆளுடைய பிள்ளையார் - திருவந்தாதி-*73*

''நற்கண்ணி யளவிறந்த ஞானத்தை யமிர்தாக்கிப்
பொற்கிண்ணத் தருள்புரிந்த போனகமுன் னுகர்ந்தனையே;
தோடணிகா தினனென்றுந் தொல்லமரர்க் கெஞ்ஞான்றுந்
தேடரிய பராபரனைச் செழுமறையி னகன்பொருளை
யந்திச்செம் மேனியனை யடையாளம் பலசொல்லி
யுந்தைக்குக் காணவர னுவனுமென் றுரைத்தனையே''

—ஆளு. பிள் - கலம்பகம் - 1

'' ★ ★ ★ பிரம புரத்தரற் கம்மென் குதலைச்செவ்வாய்
பைய மிழற்றும் பருவத்துப் பாடப் பருப்பதத்தின்
தைய லருள்பெற் றனனென்பர் .... ''

—திருத்தொண்டர் திருவந்தாதி - 33

''ஊழி முதல்வ னுவனென்று காட்ட வல்லான்''

—ஆளு. பிள் - திருத்தொகை -

குறிப்பு:— *பிள்ளையார் அவதரித்த பதி - குலம் - குடி முதலியவை அவருடைய தேவாரங்களில் பல இடத்தும் காணத் தக்கன.*

''கழுமல வூரர்க்கு'' —அரசு. தேவா.

கல்வெட்டு:—

1020 A.D. இராஜேந்திர சோழர் - 7வது ஆண்டு - தஞ்சை - நன்னிலம் - திருவிடைவாய் - கோயில் முன்வாயிற் சுவரில் உள்ளது; விடையபுரம் என்ற விதராச பயங்கரபுரத்து வியாபாரிகள் சொக்கக்கூத்தர், நாச்சியார், திருஞானம் பெற்ற பிள்ளையார்- பிரதிமைகளைத் தாபித்துப் பூசை நடத்த ஏற்பாடு செய்தது:—இத்தலத்தில்தான் பிள்ளையாரது பதிகங்களுள் முன் கிடைக்காத ''மறியார்கரத் தெந்தை'' என்ற பதிகம் சுவரில் கல்வெட்டுச் செதுக்கப்பட்டிருந்ததனைப் படியெடுத்து இப்போது பதிப்புக்களிற் சேர்க்கப்பட்டுள்ளது. இந்தக் கல்வெட்டு (*1020* A.D.) சேக்கிழார் பெருமான் காலத்துக்கு முந்தியது.

3. தாளம் பெற்றது - (திருக்கோலக்கா)

7-ந் திருமுறை:—
நம்பிகள் தேவாரம்

''நாளு மின்னிசை யாற்றமிழ் பரப்பும்
ஞான சம்பந் தனுக்குல கவர்முன்
றாளமீந்தவன் பாடலுக் கிரங்கும் தன்மை யாளனை.......''

—திருக்கோலக்கா - தக்கேசி - 8

11-ம் திருமுறை:—
நம்பியாண்டார்
நம்பிகள்

''உறுகின்ற வன்பினொ டொத்திய தாளமும்''
''★ ★ ★ கோலக்காவிற் கரநொடியாற்,
பண்ணார் தரப்பாடு சண்பையர் கோன்பாணி நொந்திடுமென்
றெண்ணா வெழுத்தஞ்சு மிட்ட செம்பொற் றாளங்க ளீய''

'' ★ ★ ★ போனகந் தாளான் பொன்சிவிகை
யருந்திட வொத்தமுத் தீசெய வேற வரனளித்த'' மேற்படி-40

''★ ★ ★ ......பெற்றது
குழகனைப் பாடிக் கோலக் காப்புக்(கு)
அழகுடைச் செம்பொற் றாள மவையே''

—ஆளு. பிள்-மும்மணிக்கோவை - 4

''தாளம் பிரியாத் தடக்கை யசைத்து'' மேற்படி-4

''செம்பொனணி நீடுகிற தாளம்'' — மேற்படி திருக்கலம்பகம் - 9

குறிப்பு:— திருக்கோலக்காவில் இறைவருக்குத் திருத்தாளமுடையார் - (*சத்த புரீசர்-வட மொழி*) என்றும், அப்பதிக்குத் திருத்தாளமுடையார் கோயில் என்றும், அம்மைக்கு ஓசைகொடுத்த நாயகி என்றும் பெயர்கள் வழங்குகின்றன.

4. முத்துச்சிவிகை பெற்றது

2-ம் திருமுறை— ''அரத்துறை யடிகடம் மருளே''

—பிள். தேவா-பியந்தைக்காந்தாரம்-நெல்வாயிலரத்துறை - 1

11-ந் திருமுறை:— நம்பியாண்டார் நம்பி

''.... ஞானசம் பந்தற்குச் சீர்மணிகள், பொருந்துஞ் சிவிகை
கொடுத்தனன் காண் .... அரத்துறை மேய வரும்பொருளே''

- ஆளு. பிள்-திருவந்தாதி-83

''.......... ஏறிற்,
றத்தியு மாவுந் தவிர வரத்துறை, முத்தின் சிவிகை
முன்னுட், பெற்றே'' - ஆளு. பிள்-மும். கோவை-4

'' ....விருத்தனைப் பாடி முத்தின் சிவிகை முன்னுட் பெற்ற
வத்தன் .... '' - மேற்படி-28

''.......நெல்வாயின், முத்தின் சிவிகை முதல்கொண்டும்......''

- ஆளு. பிள்-உலாமாலை-

''.....பைந்தரள நன்சிவிகை'' - ஆளு. பிள்-திருக்கலம்பகம்-9

''.......ஞாலத்து
முத்தின் சிவிகை யரன் கொடுப்ப முன்னின்று
தித்தித்த பாடல் செவிக்களித்தான்.......''

- மேற்படி-திருத்தொகை

5. முயலகனோய் தீர்த்தது—(திருப்பாச்சிலாச்சிராமம்)

1-ம் திருமுறை:— பிள்ளையார் தேவாரம்

''.....பாச்சிலாச் சிராமத் துறைகின்ற, மணிவளர் கண்டரோ
மங்கையை வாட மயல்செய்வ தோவிவர் மாண்பே''

—தக்கராகம்-(**பதிக முழுதும் மகுடம்**)

11-ம் திருமுறை:— நம்பியாண்டார் நம்பி

''★ ★ வள்ளல்
மழவன் சிறுமதலை வான்பெருநோய் தீர்த்த
குழகன் ......'' —ஆளு. பிள்-திருத்தொகை-

6. பனிநோய் தீர்த்தது—(திருக்கொடிமாடச் செங்குன்றூர்)

1-ம் திருமுறை:— பிள்ளையார்

'' ★ ★ ★ நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறுதிரு நீலகண்டம்''

—வியாழக் குறிஞ்சி-திருநீலகண்டம் (பதிக முழுதும் மகுடம்)

11-ம் திருமுறை:— நம்பியாண்டார் நம்பி

''மின்னார் குடுமி நெடுவெற் பகங்கொங்கில் வீழ்பனிநோய்
தன்னார் வழிகெட்டழிந்தமை சொல்லுவர் காணிறையே
மன்னார் பரிசனத் தோர்மேற் புகலு மெவர்க்குமிக்க
நன்ன வலர்பெரு மானரு காசனி நல்கிடவே''

—ஆளு. பிள்-திருவந்தாதி-86

"★ ★ ★ தாழ்பொழில்சூழ்
கொங்கிற் பனிநோய் பரிசனத்தைத் தீர்ப்பித்தும்..........."

— மேற்படி திருவுலா மாலை-

குறிப்பு:—புராணத்துள் இத்திருவாக்குக்களையே விரித்து ஆசிரியர் காட்டிப் போந்தருளியமை காண்க.

7. முத்துப் பந்தர் பெற்றது—(திருப்பட்டீச்சுரம்)

4-ம் திருமுறை:—
பிள்ளையார்

"எரி யூட்டியெழில் காட்டிநிழல் கூட்டுபொழில் சூழ்பழையை"

—சாதாரி-பட்டீச்சரம்-1

என்ற திருப்பதிகத்தின் சொல்லாற்றற் குறிப்புக் காண்க.

8. உலவாக்கிழி பெற்றது—(திருவாவடுதுறை)

3-ம் திருமுறை:—
பிள்ளையார்

"★ ★ ★ இதுவோ வெமை யாளுமா றீவ தொன்றெமக்
கில்லையேல்
அதுவோ வுன தின்னருள்........"

—காந்தார பஞ்சமம் - நாலடி மேல்வைப்பு -திரு
ஆவடுதுறை - (பதிக முழுதும் மகுடம்)

குறிப்பு:— இதற்கு "நீணிதி வேண்டினார்க் கீவ தொன்று மற்றிலே னுன்னடி யல்லதொன் றறியேன்" என்று "பொருள் வினவிய செந்தமிழ்" என் றுரைசெய் தருளினர் ஆசிரியர்.

4-ம் திருமுறை:—
அரசுகள் தேவாரம்

"காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமல வூரர்க் கம்பொன்
ஆயிரங் கொடுப்பர் போலு மாவடு துறைய னாரே"

—(திருநேரிசை)

11-ம் திருமுறை:—
நம்பியாண்டார் நம்பிகள்

"★ ★ ★ சோலைத்
திருவா வடுதுறையிற் செம்பொற் கிழியொன்
றருளாலே பெற்றருளு மையன் ...." —ஆளு. பிள்-திருத்தொகை-

"★ ★ ★ அத்தகுசீர்
மாயிரு ஞாலத்து மன்னு வடுதுறைபுக்
காயிரஞ் செம்பொ னதுகொண்டும்........." —மேற்படி - திருவுலா மாலை

"★ ★ ★ கொண்டது
பூவிடு மதுவிற் பொறிவண் டுழலும்
ஆவடு துறையிற் பொன்னா யிரமே" —மேற்படி-திருமும்மணிக்கோவை-4

"★ ★ ★ திரு வாவடு துறையிற் றிகழும்
எந்தையைப் பாட லிசைத்துத் **தொலையா நிதிய**மெய்தித்
தந்தையைத் தீத்தொழில் மூட்டிய கோன் ...."

—மேற்படி-திருவந்தாதி-85

(தீத்தொழில்-சிவ வேள்வி; தொலையாநிதியம்-உலவாக்கிழி.)

9. விடந் தீர்த்தது—(திருமருகல்)

2-ம் திருமுறை:—
பிள்ளையார் தேவாரம்

"★ ★ ★ மருகல்
உடையாய் தகுமோ விவளுண் மெலிவே" (1)

"..... மருகல், எந்தாய் தகுமோ விவளே சறவே" (2)

"..... மருகல் மகிழ்வா யிவளை
.... இறையார் வளைகொண் டெழில்வவ் வினையே........" (3)

"..... மருகல் மகிழ்வா யிவளை
மெலிநீர் மையளாக் கவும்வேண் டினையே" (4)

" ..... இவள்தன்
அணிநீ லவொண்கண் அயர்வாக் கினையே" (5)

"புலருந் தனையுந் துயிலாள் **புடைபோந்
தலரும் படுமோ அடியா ளிவளே**" (6)

"தொழுவா ளிவளைத் துயராக் கினையே" (7)

"..... இவளை, அலராக் கினையே" (8)

"..... இவளை, யயர்வாக் கினையே" (9)

"நெறியார் குழலி நிறைநீக் கினையே" (10)

—இந்தளம்-மருகல்

குறிப்பு:—"உடையானை யுடையானே! தகுமோ விந்த வொள்ளிழையாளுண் மெலிவென் றெடுத்துப் பாட" என்று இவற்றின் கருத்தினை எடுத்துக்காட்டி யருளினர் ஆசிரியர்.

11-ம் திருமுறை:—
நம்பியண்டார் நம்பிகள்

"வயலார் மருகற் பதிதன்னில் வாளர வாற்கடியுண்
டயலா விழுந்த வவனுக் கிரங்கி யறிவழிந்த
கயலார் கருங்கண்ணி தன்றுயர் தீர்த்த கருணை வெள்ளப்
புயலார் தருகையி னுனென்னத் தோன்றிடும் புண்ணியமே"

—ஆளு. பிள்-திருவந்தாதி-49

"........தீர்த்தது
தாதமர் மருகற் **சடையனைப்** பாடிப்
பேதுறு பெண்ணின் கணவனை விடமே"

—ஆளு. பிள்-மும். கோவை-4

"........வியலி யற்றிரு மருகலிற்கொடு விடமழித்தருள் போதன்"

—மேற்படி-கலம்பகம்-18

"........மாற்றி யிட்டது வல்விட வாதையே—" —மேற்படி-41

"........மருகல்விடந் தீர்த்தபிரான்........" —மேற்படி-திருத்தொகை-

10. படிக்காசு பெற்றது—(திருவீழிமிழலை)

1-ம் திருமுறை:—
பிள்ளையார் தேவாரம்

''அடியவர் குழுமிட வவனியி னிகழ்பவர்''
—வியாழக்குறிஞ்சி-வீழிமிழலை-9

3-ம் திருமுறை:—
பிள்ளையார் தேவாரம்

''........மற்றுமுள மன்னுயிர்களுக்
கெண்ணிழிவி லின்பநிகழ் வெய்த ....'' —சாதாரி-வீழி-3

''நண்ணிவரு நாவலர்க ளோடு நெறியும் வளர்க்கநிகழ்
கின்றபுகழ்சேர் ....'' —மேற்படி-மேற்படி-6

''........அடிக்கன்பர் துன்பிலரே'' —ஈரடி-வீழி-9

1-ம் திருமுறை:—

''வாசி தீரவே, காசு நல்குவீர், மாசின், மிழலையீர்,
ஏச லில்லையே'' (1)

''கறைகொள் காசினை-முறைமை நல்குமே'' (2)

''........மிழலையீர், கரக்கை தவிர்மினே'' (8)
—குறிஞ்சி-இருக்குக் குறள்-

''தெரிந்த வடியார்கள் சென்ற திசைதோறும்
விரும்பி யெதிர்கொள்வர் வீழி மிழலையே'' —குறிஞ்சி-1

7-ம் திருமுறை:—

''........பரிசினு லடிபோற்று பத்தர்கள்
பாடியாடப் பரிந்து நல்கினீர்'' (5)

''........ இருந்துநீர் தமிழோ டிசைகேட்கு
மிச்சையாற் காசுநல்கினீர் ....'' (8) —சீகாமரம்-வீழி-

9-ம் திருமுறை:—
சேத்தனுர்

''பாடலங் காரப் பரிசில்கா சருளிப் பழுத்தசெந் தமிழ்மலர் சூடி
நீடலங் காரத் தெம்பெரு மக்க ளெஞ்சுனு
ணிறைந்துநின் ருனை'' —திருவிசைப்பா-வீழி-

11-ம் திருமுறை:—
நம்பியாண்டார் நம்பிகள்

''பாடிய செந்தமி ழாற்பழங்காசு பரிசில்பெற்ற
நீடிய சீர்த்திரு ஞானசம் பந்த னிறைபுகழால்
நேடிய பூந்திரு நாவுக் கரசோ டெழின்மிழலைக்
கூடிய கூட்டத்தி னுலுள தாய்த்திக் குவலயமே''
—ஆளு. பிள். அந்தாதி-80

''........ அவனியிடர் முழுதுபோ யகல,
வயலணிதென் வீழிமிழ லையினிலவு காசின்மலி
மழைபொழியு மானகுண மதுரன் ....''
—ஆளு. பிள்-கலம்பகம்-24

''........வீழிமிழலைப் படிக்காசு கொண்டபிரான்''
—மேற்படி-திருத்தொகை-

11. மறைக்கதவம் அடைத்தது —(திருமறைக்காடு)

2-ம் திருமுறை:—
பிள்ளையார்

''........மறைக்காட் டுறைமைந்தா
இதுநன் கிறைவைத் தருள் செய்க வெனக்குன்
கதவந் திருக்காப்புக் கொளுங்கருத் தாலே'' —இந்தளம்-1

11-ம் திருமுறை:—

''அடைத்தது மாமறைக் காடர்தங் கோயிற் கதவினை''
—ஆளு. பிள் திருவந்தாதி-91

நம்பியாண்டார் நம்பிகள்

''........அடைத்தது
அரைசோ டிசையா வணிமறைக் காட்டுக்
குரைசேர் குடுமிக் கொழுமணிக்கோ யிற்கதவே......''
—மேற்படி-மும். கோவை-4

''........இருங்கதவந் தானடைத்தும் ....'' —மேற்படி-திருவுலா மாலை.

''........நித்திலங்கண்
மாடத் தொளிரு மறைக்காட் டிறைகதவைப்
பாடி யடைப்பித்த பண்புடை யான்.........'' —மேற்படி-திருத்தொகை-

12. பாண்டியன் சுரநோய் தீர்த்ததும் சுரவாதம் வென்றதும்

1. வாதம் நிகழும்: அதில் திருநீறே வெற்றி தரும்; சமணர் அழிவுபெறுவர்; என்றது.

2-ம் திருமுறை:—
பிள்ளையார்

''புத்தரொ டமணைவாதி லழிவிக்கு மண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல வவைநல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே'' —பொது-பியந்தைக் காந்தாரம்-10

குறிப்பு:—இது பாண்டி நாட்டுக்குப் புறப்படு முன்பே திருமறைக்காட்டில் பிள்ளையார் அருளியது.

2. பிள்ளையாரது திருமடத்தில் சமணர்கள் தீயிட்டதும், அவ்வெப்பு அரசனைச் சாரப் பிள்ளையார் அருளியதும்.

3-ம் திருமுறை:—
பிள்ளையார் தேவாரம்

''ஐய னேயஞ்ச லென்றருள் செய்யெனைப்
பொய்ய ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பைய வேசென்று பாண்டியற் காகவே'' *(1)*

''அமணர் கொளுவுஞ் சுடர்-தென்னன் பாண்டியற் காகவே''

என்று பதிக முழுதும் வரும் மகுடமும் காண்க.

''........ஆலவா யாதி யருளினல்
வெப்பந் தென்னவன் மேலுற மேதினிக்
கொப்ப ஞானசம் பந்த னுரை.......'' *(11)*

என்ற திருக்கடைக்காப்பும் காண்க.

—கௌசிகம்-ஆலவாய்

3. வாது செயத் திருவுள்ளங் கேட்டறிந்தது.

3-ம் திருமுறை:— ''காட்டு மாவுரி'' (பண்-கௌசிகம்) என்ற பதிக முழுமையும்;
''வேதவேள்வியை'' (பண்-பழம்பஞ்சுரம்)
என்ற பதிக முழுமையும்.

4. சுரவாதம் நிகழ்ந்ததும், அதில் பாண்டியன் சுரம் தீர்ந்ததும், அமணர் தோல்வியுற்றதும். (திருவாலவாய்)

2-ம் திருமுறை:—
பிள்ளையார்
''குண்டிகைக் கையர்க ளோடு (சாக்கியர் கூட்டமுங் கூடக்)
கண்டிகைப் பிப்பது நீறு'' (10)

''தேற்றித் தென்னனுட லுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள்......'' (11)

—காந்தாரம்-திருவாலவாய்-திருநீற்றுப் பதிகம்

11-ம் திருமுறை:—
நம்பியாண்டார் நம்பி
''காந்துங் கனலிற் குளிர்படுத் துக்கடற் கூடலின்வாய்
வேந்தின் றுயர்தவிர்த் தானை......''

—ஆளு. பிள்-திருவந்தாதி-71

''பத்திச் சிவமென்று பாண்டிமா தேவியொடுங்
கொற்றக் கதிர்வேற் குலச்சிறையுங் கொண்டாடும்
அற்றைப் பொழுதத் தமணரிடு வெந்தீயைப்
பற்றிச் சுடுகபோய்ப் பாண்டியனை யென்னவல்லான்''

—மேற்படி-திருத்தொகை—பண்-சாதாரி-திருநள்ளாறு-திருவிராகம்

5. அனல் வாதம் (திருவாலவாய்)

3-ம் திருமுறை:— ''........நள் ளாறர்த நாமமே
மிளிரிள வளரெரி யிடிலிவை பழுதிலை மெய்ம்மையே'' (1)
என்ற பதிக முழுமையும் மகுடமும்,

''கொற்றவ னெதிரிடை யெரியினி லிடவிவை கூறிய
சொற்றெரி யொருபதும்.......'' என்ற திருக்கடைக்காப்பும்

—பண்-சாதாரி-திருநள்ளாறு-திருவிராகம்

1-ம் திருமுறை:—
பிள்ளையார்
''........நள்ளா றுடைய நம்பெரு மானிது
வென்கொல் சொல்லாய்....
கூடல்ஆல வாயின்க ணமர்ந்தவாறே.......''

(பிள்ளையார்) பதிக முழுமையும் திருக்கடைக்காப்பும்.

—நட்டபாடை-திருநள்ளாறுந் திருவாலவாயும்

11-ம் திருமுறை:—
நம்பியாண்டார் நம்பிகள்
''........எரிவா யிடும்பதிகம்
ஆழி யுலகத் தழியாமற் காட்டினான்.....''

—ஆளு. பிள்-திருத்தொகை

6. புனல் வாதம் (திருவாலவாய்)

3-ம் திருமுறை:—
பிள்ளையார்

''தெற்றென்று தெய்வந்தெளி யார்கரைக் கோலை தெண்ணீர்ப்
பற்றின்றிப் பாங்கெதிர் விரவும் பண்புநோக்கில்
பெற்றொன் றுயர்த்த பெருமான் பெருமானுமன்றே'' *(11)*
—கௌசிகம் - திருப்பாசுரம் -

மேற்படி

''ஏடுசென் றணைதரு மேடகத் தொருவன்'' *(11)*
—பண் - கொல்லி - ஏடகம்

11-ம் திருமுறை:—
நம்பியாண்டார் நம்பிகள்

''... ...நிலவிய
வைகையாற் றேடிட்டு வானீ ரெதிரோட்டுஞ்
செய்கையான் மிக்க செயலுடையான்... ...''
—ஆளு. பிள் - திருத்தொகை -

''... ...நதிப் புனலினெதிர் பஃறி யுய்த்தன... ...''
—மேற்படி - திருக்கலம்பகம் - 34

''... ...கவிநீ ரெதிரோட மதித்தருள் செய்... ...'' —மேற்படி - 14

''நீரெதிர்ந்து சென்றிம் (நெருப்பிற் குளிர்படைத்தும்... ...)''
—மேற்படி - திருவுலாமாலை

7. வாதிற் றோற்ற சமணர் கழுவேறுதல்

2-ம் திருமுறை:—
பிள்ளையார்

''அமணை வாதி லழிவிக்கு மண்ணல் திருநீறு செம்மை திடமே''
—பொது - பியந்தைக் காந்தாரம் - 10

11-ம் திருமுறை:—
நம்பியாண்டார் நம்பிகள்

''......வளைபிரம் போர்கழு வாவுடலம்
விண்டினஞ் சூழக் கழுவின வாக்கிய வித்தகனே''
—ஆளு. பிள் - திருவந்தாதி - 6

''வலிகெழு குண்டர்க்கு வைகைக் கரையன்று வான்கொடுத்த
......கவுணியர் தீபன்'' —மேற்படி-12

''... ...வைகைக்
குழுவா யெதிர்ந்த வுறிகைப் பறிதலைக் குண்டர் தங்கள்
கழுவா வுடலங் கழுவின வாக்கிய கற்பகமே'' —மேற்படி-28

''... ...நீதிகெட்டார்
குலையக் கழுவின்குழுக் கண்டவன்.. ...'' —மேற்படி-81

''... ...வாதினில் வல்லமணைப் பண்ணைக்
கழுவினுதி வைத்து...'' —மேற்படி- 98

''... ...கண்டது, உறியொடு பீலி யொருகையிற் கொள்ளும்
பறிதலைச் சமணைப் பல்கழு மிசையே... ...''
—ஆளு. பிள் - மும். கோவை - 4

''... ...வைகையி லமணை வாதுசெய் தறுத்த
சைவ சிகாமணி... ...'' —மேற்படி 13

''... ...வைகை யமண்மலைந்தான்... ...'' —மேற்படி 29

''... ...சூழொளிய
கோதைவேற் றென்னன் கூடற் குலநகரில்
வாதி லமணர் வலிதொலையக்—காதலாற்
புண்கெழு செம்புனலா றோடப் பொருதவரை
வண்கழுவிற் றைத்த மறையோனை... ...''

''... ...எண்பெருங் குன்றத்தி
லன்றமணர் கூட்டத்தை யாசறுத்துப்—பொன்ற
வுரைகெழுவு செந்தமிழ்ப்பா வொன்றினுல் வென்றி
நிரைகழுமே லுய்த்தானை... ...'' —ஆளு.பிள் - திருவுலாமாலை

''... ...அருகந்தர் குலமொன்றி முழுதுங் கழுவிலேறக்
கறுத்தது... ...'' —மேற்படி-திருக்கலம்பகம் - 9

''புன்ந றுமுறுகு ரைச்சமணை நிரைகழு நிறுத்தியன...'' —மேற்படி-34

''... ...மன்னு குண்டரை வென்றது வாதையே'' —மேற்படி-41

''... ...பாழி யமணைக் கழுவேற்றினன்... ...'' —மேற்படி-திருத்தொகை-

குறிப்பு:—இவைபற்றி 2751-ம் பாட்டின்கீழ் உரைத்தனவும், 2759-ம் பாட்டின் கீழும் பிறண்டும் உரைத்தவையும் பார்க்க.

13. ஓடஞ் செலுத்தியது—(திருக்கொள்ளம்பூதூர்)

3-ம் திருமுறை:—
பிள்ளையார்

''... ...நம்பனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ, நல்கு மாரருள் நம்பனே'' (1)

''ஓடம் வந்தணை யுங்கொள்ளம் பூதூர்... ...'' (6)

''ஆறு வந்தணை யுங்கொள்ளம் பூதூர்... ... '' (7)

—ஈரடி மேல்வைப்பு - காந்தார பஞ்சமம்.

11-ம் திருமுறை:—
நம்பியாண்டார் நம்பிகள்

''மருவினிய,
கொள்ளம்பூ தூர்க்குழக ஞவா யதுகொடுப்ப
உள்ளமே கோலாக ஊன்றினன்... ...'' —ஆளு. பிள் - திருத்தொகை-

''நினைந்தது,அள்ளற் பழனக் கொள்ளம் பூதா,
ரிக்கரை யோட மக்கரைச் செலவே... ...'' —மேற்படி-மும்.கோவை-4

13-A. புத்தரை வாதில் வென்றது—(திருத்தெளிச்சேரி)

2-ம் திருமுறை:—
பிள்ளையார்

''... ...வெந்த லாகிய சாக்கிய ரோடு சமணர்கள்
தந்தி றத்தன நீக்குவித் தீரோர் சதிரரே''

—பண்-இந்தளம்-தெளிச்சேரி - 10

14. ஆண்பனை பெண்பனை யாக்கியது—(திருவோத்தூர்)

1-ம் திருமுறை:—
பிள்ளையார்

''குரும்பை யாண்பனை யீன்குலை யோத்தூர்''

—பழந் தக்கராகம்-11

11-ம் திருமுறை:—

''... ...ஆண்பனை பெண்பனை யாக்கி... ...''

—ஆளு.பிள்-திருவந்தாதி-39

நம்பியாண்டார் நம்பிகள்

''... ...பாடிற்,
றருமறை யோத்தூ ராண்பனை யதனைப்
பெருநிற மெய்தும் பெண்பனை யாகவே...''

—மேற்படி-திருமும். கோவை-4

''நீடுந், திருவோத்தூ ராண்பனையைப் பெண்பனை யாகென்னும்
பெருவார்த்தை தானுடைய பிள்ளை...''

—மேற்படி-திருந்தொகை

15. எலும்பு பெண்ணாக்கியது—(திருமயிலை)

2-ம் திருமுறை:—
பிள்ளையார்

''...அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்''*(1)*

—சீகாமரம் - திருமயிலை -

பதிகப் பாட்டுத்தோறும் ''காணாதே போதியோ பூம்பாவாய்'' என்று வரும் மகுடங்களின் வகை காண்க.

11-ம் திருமுறை:—
நம்பியாண்டார் நம்பிகள்

''...வெய்யவிடம்,
மேவி யிறந்தவயில் வேற்கண் மடமகளை
வாவென் றழைப்பித்திம் மண்ணுலகில் வாழ்வித்த
சீர்நின்ற செம்மைச் செயலுடையான்...''

—ஆளு.பிள்-திருத்தொகை-

16. திருமணத்தில் வந்தாருடன் சிவனைச் சேர்ந்தது

3-ம் திருமுறை:—
பிள்ளையார்

''...இன்று நல்லூர்ப் பெருமணம்
புக்கிருந் தீரெமைப் போக்கரு ளீரே'' *(8)*

—அந்தாளிக் குறிஞ்சி - நல்லூர்ப் பெருமணம்

இதனுள் பிள்ளையார் முத்தி விண்ணப்பம் செய்தருளியமை தெளியப்படும்.

11-ம் திருமுறை:—
நம்பியாண்டார் நம்பிகள்

''வாரங் கணைபொழிற் காழிக் கவுணியர் தீபனல்லூர்ச்
சீரங் கணைநற் பெருமணந் தன்னிற் சிவபுரத்து
வாரங் கணைகொங்கை மாதொடும் புக்குறும் போதுவந்தார்
ஆரங் கொழிந்தனர் பெற்றதல் லாலவ் வரும்பதமே''

—ஆளு.பிள் - திருவந்தாதி-60

''விடந்திகழ்க்கும் மரவல்குல் மென்கூந்தல் பெருமணத்தின்
வடந்திகழ்க்குங் கொங்கை புல்கிய மன்மதன்...''

—மேற்படி -சண்பை விருத்தம்-10

''...முத்தமிழ் நூலெல்லா முழுதுணர்ந்த பிள்ளையார்க்
கொத்த மணமிதுவென் றேதித் தமர்களெல்லாஞ்
சித்தங் களிப்பத் திருமணஞ்செய் காவணத்தே
யற்றைப் பொழுதத்துக் கண்டுடனே நிற்கப்
பெற்றவர்க ளோடும் பெருமணம் போய்ப் புக்குத்தன்
அத்த னடியே யடைந்தா னழகிதே''

—மேற்படி-திருத்தொகை-

குறிப்பு:— யாழ் மூரிப் பதிக வரலாறும், திருநீலநக்கர், திருமுருகர், சிறுத் தொண்டர், திருநீலகண்டப் பாணர் முதலியோர்க்குத் தோழமை யீந்தருளிய வரலாறும் முதலாயினவும் நம்பியாண்டார் நூல்களின் ஆதரவு பெறுகின்றன.

இப்புராணத்துக்கு வகை நூலாய் விளங்கியது நம்பியாண்டார் நம்பிகளது திருத்தொண்டர் திருவந்தாதியாகும். இதனுள்ளே ஆளுடைய பிள்ளையார் புராணத்துக்குப் பேராதரவாய் நிற்பன அவர்பால் வழிமொழி பெற்ற மேற்படி நம்பிகள் பிள்ளையார்மேற் பாடியருளிய திருவந்தாதி முதலிய நூல்களாகும். இவற்றை யெல்லாம் உட்கொண்டே ஆசிரியர் ''நங்க ளுதனும் நம்பியாண் டார்நம்பி, புந்தியாரப் புகன்ற வகையினுல், வந்தவாறு...'' என்று தொடக்கத்துப் போற்றி யருளினர் என்க.

முற்சேர்க்கை -2

உ

சிவமயம்

பிள்ளையார் சரித ஞானசாத்திர நுட்பங்களுட் சில

1. துரியங் கடந்தவித் தொண்டர்க்குச் சாக்கிரந்
துரியமாய் நின்றதென் றுந்தீபற
துறந்தா ரவர்களென் றுந்தீபற.

—திருவுந்தியார்

2. சுரந்த திருமுலைக்கே துய்யசிவ ஞானஞ்
சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச்—சுரந்த
தனமுடையா டென்பாண்டி மாதேவி தாழ்ந்த
மனமுடையா ளன்பிருந்தவாறு.

—திருக்களிற்றுப்படியார்-54

3. துரியங் கடந்தசுடர்த் தோகையுட னென்றும்
பிரியாதே நிற்கின்ற பெம்மான்—துரியத்தைச்
சாக்கிரத்தே செய்தருளித் தான்செய்யுந் தன்மைகளும்
ஆக்கியிடு மன்பர்க் கவன்.

—மேற்படி-69

4. ஓடஞ் சிவிகை யுலவாக் கிழியடைக்கப்
பாடல் பனைதாளம் பாலைநெய்தல்—ஏடெதிர்வெப்
பென்புக் குயிர்கொடுத்த லீங்கிவைதா மோங்குபுகழ்த்
தென்புகலி வேந்தன் செயல்.

—மேற்படி-70

5. ''... ...ஈசன தியல்பு பேசுதல் தவிர்க;
காழி மாநகர்க் கவுணியர் கடவுள்
ஞான மாகிய நற்பதி கங்கள்
எழுதுறு மன்பர்த மின்புறு மொழியாற்
களிறென வணைந்த கன்மனப் புத்தன்
முருட்டுச் சிரமொன் றுருட்டின ரன்றி
வாய்ந்த வாளொன் றேந்தின ரிலரே;
என்றது மீர்வாள் கொன்றதென் பதுபோல்
தனித்துணை யருளாற் றுணித்தன ரென்பர்... ...''

—சங்கற்ப நிராகரணம் - 7-2, ஈசுவர வவிகாரவாதி நிராகரணம்-21-29

6. ''தம்முதல் குருவுமாய்த் **தவத்தினி** லுணர்த்த... ...''

—சிவஞான போதம்-8சூ.

''ஈண்டு இவ்வான்மாக்களுக்கு முற்செய் தவத்தான்
ஞானநிகழுமென்றது...''

ஞானம் - சாதனமாகிய **ஞானம்** என்க.

> ''ஆளுடைய பிள்ளையார் முதலிய நாயன்மார்க்குத் தவமின்றியும் ஞானம் நிகழ்ந்ததாலோ? வென்னும் ஆசங்கையை நீக்குதற்கும், பாது முறையானன்றி முன்னைப் பிறவியிற் செய்த தவந்தானே அமையாதென்பது உணர்த்துதற்கும் முற்செய் தவம் என விசேடித்தார்.''
>
> —மாபாடியம்

★ ★ ★ ★

7. தீக்கை யென்னுஞ் சொற்குப் பொருள் மலத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுக்குமென்று ஆகமங்கள் கூறுதலானும்... ஆன்மா ஞானமொன்றானே வீடெய்தற் பாற்றென வரையறுத்துக் கூறுதலானும், தீக்கை மாத்திரத்தானே சிவப்பேறு கூடுமென்றல் பொருந்தாதென மறுக்க.

இனி, ஒளியானன்றி இரு ணீங்காதவாறு போல, ஆணவமும் ஞானத்தா னன்றித் தீக்கை மாத்திரத்தானே நீங்காதெனவும், அத்துவ சத்தியின் அத்துவாக்கண் நிரம்பியிருந்த சஞ்சித கன்ம மாத்திரையே நீங்குமெனவும், அதனானே ஞானத்திற்கு உரியவனாவனெனவுங் கொள்க...

> ''மேற் சரியை கிரியா யோகங்களைச் செய்துழி நன்னெறியாகிய ஞானத்தைக் காட்டி யல்லது மோக்ஷத்தைக் கொடாவாகலான்.''
>
> **—போதம்-8;1-ம் அதிகரணம்**

குறிப்பு:— இந்நுட்பங்களையெல்லாம் ஆளுடைய பிள்ளையார் தமது திருமணத்துள் வந்தார்க்கெல்லாம் ''எமைப் போக்கருளீரே'' என்று முத்தி விண்ணப்பமாகிய பாவனை - திருநோக்கம் முதலிய தீக்கை விசேடங்களையெல்லாம் செய்தும், சீபஞ்சாக்கரத் திருப்பதிகம் ஓதி ஞானத்தைக் கொடுத்தும், ''இம்மணத்தில் வந்தோர், ஈனமாம் பிறவி தீர யாவரும் புகுக'' (3146) என்று முத்தி வாயிலிற் புகும் வழியினைக் காட்டியும் அருளிய வரலாறுகளுள் வைத்துக் கண்டுகொள்க.

★ ★ ★ ★

8. ''...மன்ற பாண்டியன், கேட்பக் கிளந்த, மெய்ஞ்ஞா னத்தின்
ஆட்பா லவர்க்கரு ளென்பதை யறியே''

—இருபாஇருபஃது-2

வையை யாற்றின் கரையாகிய தீட்சா மண்டபத்தில், பாண்டியனாகிய இருவினை யொப்பும் மலபரிபாகமும் வந்த நன்மாணாக்கனுக்குப் பரம ஞானாசாரியராகிய ஆளுடைய பிள்ளையார், பாவனை-நோக்கம் -பரிசம் - முதலிய தீக்கைவிசேடங்களைச் செய்து, பரம ஞானோபதேசமாகிய மெய்ஞ்ஞானத்தைப் புகட்டியருளியது ''திருப்பாசுரம்'' என்ற அருளிப்பாடாகும் என்பது அருணந்தி சிவாசாரியரது விளக்கம்.இக்கருத்தையே ஆசிரியர் பெருமான் தமது திருப்பாசுர விரிவுரையில் விளக்கியருளினர் என்பது புராண உரையினுட் காட்டப்பட்டது. (திருப்பாசுர விளக்கவுரை பார்க்க).

முற்சேர்க்கை -3

உ

சிவமயம்

பெயர் விளக்கம்

எண்கள் - பாட்டு எண்கள்

அதிகை வீரட்டானம் - *2862*. நடுநாட்டுப் பதிகளுள் ஒன்று. அட்டவீரட்டா னங்களுள் ஒன்று; புரமெரித்த வீரம் நிகழ்ந்த பதி.

அநபாயன் - *2745*. II குலோத்துங்கச் சோழர்; பெரிய புராணம் பாடக் காரணமாயிருந்த அரசர்.

ஆப்பனூர் - *2783*. பாண்டி நாட்டுப் பதிகளுள் ஒன்று.

ஆளுடைய பிள்ளையார் - அந்தணர் வாழ்வு *2651*; அம்பொன் மலைக்கொடி முலைப்பால் குழைத்த ஞானத் தமுதுண்ட பிள்ளையார் *2916*; அருமறைவாழ் பூம்புகலியண்ணலார் *2629*; அன்பின் மெய்ம்மையுரு *2921*; ஆறு சூடினார் திருமகனார் *2972*; இன்னருட் பிள்ளையார் *2765*; உடைய பிள்ளையார் *2964*; உலகனைத்து மீன்றளித்த அம்மை திருமுலைப் பாலில் குழைத்த ஆரமுதுண்டார் *3065*; எண்ணில் பாக்கியப் பயனுயுள்ள பாலருவாயர் *2636*; கவுணியர் தங்காவலனார் *2892*; காழிநாடுடையவர் *2951*; காழியினில் வந்த கவுணியர்தம் போரேறு *2840*; சண்பைப் புரவலர் *2634*, *2644*; சண்பை முதல்வனார் *2623*; சண்பையர் பெருமான் *2552*; சண்பையார் வள்ளலார் *2584*; சண்பையாளி *2811*; சண்பையாளு மன்னர் *2887*; சண்பைவந்த வடலேறு *2810*; சிவக்கன்று *2569*; சூகரமு மன்னமுமாய்த் தேடினா ரிருவருக்கும் தெரிவரியார் திருமகனார் *2894*; செய்ய மேனியர் திருமகனார் *2605*; சைவ சிகாமணி *2918*; ஞாலமிருணீங்கவரும் புகலி வேந்தர் *2907*; ஞானத்தின் றிருவுரு *2626*; ஞானபோனகர் *2543*; ஞானப் புங்கவர் *2752*; ஞான மணிவிளக்கு *2550*; ஞானவா ரமிர்தமுண்டார் *2658*; தவநெறி வளர்க்க வந்தார் *3142*; தவவரசு *3104*; தனிப் பொருப்பின் மங்கை திருமுலைப்பா லுண்டருளும் வள்ளலார் *2848*; திருக்கழுமலத்தார் செல்வர் *2662*; திருக்கழுமலத்தார் வேந்தர் *2592*; தீதகற்ற வந்தருளும் திருஞான சம்பந்தர் *3151*; தெய்வ மலைமகள் குழைத்த ஞான முண்டவர் *2749*; தென்றமிழ் விளங்கவந்த திருக்கழுமலத்தான் *2708*; தேனக்க மலர்க் கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும், கானத்தின் எழு பிறப்பு *2626*; நாயகப் பிள்ளையார் *2622*; நான்மறையின் றனித்துணை *2626*; நீடிய ஞானம் பெற்றார் *2705*; நீற்றணி திகழ்ந்த மேனி நிறைமதிப் பிள்ளையார் *2711*; பரசமய கோளரி *2551*; *2802*; பரசமயங்கள் வீழ்த்தார் *3126*; பானறுங் குதலைச் செய்ய பவளவாய்ப் பிள்ளையார் *2700*; புகலிய ரிறைவர் *2564*; புண்ணியப் பிள்ளையார் *2760*; புண்ணிய விளைவு போல்வர் *3123*; பெரும்புகலிப் பெருந்தகையார் *2895*; பெறற்கரும்பே றுலகுய்யப் பெற்றருளும் பிள்ளையார் *2896*; மண்ணில் வளர் மதிக்கொழுந்து *2626*; மண்ணினுக் கிடுக்கண் டீர வந்தவர் *3119*; மண்ணெலா முய்ய வந்த வள்ளலார் *2760*; மன்றுளா ரளித்த ஞான வட்டில் வண்கையன் *2708*; மாதவத்தோர் பெருவாழ்வு *2771*; முத்தமிழ் விரகர் *2678*; மும்மைத்

தமிழின் வேந்தன் 2811; முற்ற மெய்ஞ்ஞானம் பெற்ற மூர்த்தியார் 3120; மைதிகழுந் திருமிடற்றார் அருள்பெற்ற வான்பொருள் 2771; மெய்ஞ்ஞானத் தெள்ளமுது 3141 வளர் வெண்டிங்கள் மேய வேணியர்பால் ஞானம் பெற்றவர் 2618; வேதபாரகன் 2811; வைதிக சூளாமணி 2771; வையக முய்ய வந்த வள்ளலார் 2635.

இடைச்சுரம்-3023. தொண்டை நாட்டுப் பதிகளுள் ஒன்று.

இந்திரநீல பர்ப்பதம்-2925. வட நாட்டுப் பதிகளுள் ஒன்று

இரும்பைமாகாளம்-2862. தொண்டை நாட்டுப் பதிகளுள் ஒன்று.

இலம்பையங்கோட்டூர்-2902. தொண்டை நாட்டுப் பதிகளுள் ஒன்று.

உண்ணமுலையாள்-2868. திருவண்ணாமலையில் அம்மை பெயர்.

ஏகாம்பரம் - 2843. காஞ்சிபுரம் திருக்கோயில். மாமரம் தலமரமாதலின் வந்த பெயர்.

கங்கை-2549. ஆறு.

கச்சிமேற்றளி-2899. கச்சிப் பல பதிகளுள் ஒன்று.

கச்சி அனேகதங்காவதம்-2898-கச்சிப் பல பதிகளுள் ஒன்று.

கண்டுமுட்டு-2582. புறச் சமயிகளைக் கண்டால் தீமை என்ற சமணர் கொள்கைக்கு வழங்கும் மரபுப் பெயர்.

கண்ணப்ப நாயனார்-2911. அறுபான்மும்மை நாயன்மார்களுள் ஒருவர்.

கண்ணன்-2740. கிருட்டிணன்.

கபாலீச்சரம்-2975. திருமயிலாப்பூர்த் திருக்கோயிலின் பெயர்.

கம்பர்-2857. திருஏகாம்பரத்தில் இறைவர் பெயர்.

கம்பவாணர்-2891. திருஏகாம்பரத்தின் இறைவர் பெயர்.

கன்னிநாடு-2760. பாண்டி நாடு.

கன்னிமாவனம்-2861. திருப்பாதிரிப்புலியூர்.

காஞ்சி-2883. காஞ்சிபுரம்.

காஞ்சி நெறிக்காரைக்காடு-2898. கச்சிப் பல பதிகளுள் ஒன்று.

காமக்கோட்டம்- 2896. காஞ்சிபுரத்தில் காமாட்சியம்மையார் தவஞ் செய்து அறம் வளர்க்கும் தனிக் கோயில்.

காரிகரை-2912. தொண்டை நாட்டுத் தலம்; வைப்புத் தலங்களுள் ஒன்று. காளத்திக்குச் செல்லும் வழியில் உள்ளது.

காலன்-2638. இயமன்.

காழி-2571. சீகாழி.

காளத்தி-2911. தொண்டை நாட்டுப் பெரும்பதியாகிய மலை.

காளன்-2918. திருக்காளத்தியில் இறைவரைப் பூசித்த பாம்பு.

கானம்பேர்-2784. பாண்டி நாட்டுப் பதிகளுள் ஒன்று.

குரங்கணின் முட்டம்-2882. தொண்டை நாட்டுப் பதிகளுள் ஒன்று.

குற்றாலம்-2784. பாண்டி நாட்டுப் பதிகளுள் ஒன்று.

குறும்பலா-2784. பாண்டி நாட்டுப் பதிகளுள் ஒன்று.

கேட்டுமுட்டு-2582. கேட்கத் தகாத புறச்சமய வார்த்தையைக் கேட்டால் வரும் தீமைபற்றிச் சமணர் கொள்கை குறிக்க வழங்கும் மாயுப் பெயர்.

குலச்சிறையார்-2543. நெடுமாறனின் மந்திரியார்.

கொள்ளம்பூதூர்-2796. சோழநாட்டுப் பதிகளுள் ஒன்று.

கோகரணம்-2925. துளுவநாட்டுப் பதி.

கௌரியர் தலைவன்-2611. பாண்டியர்.

சத்திர மண்டபம்-2810. திருத்தெளிச்சேரிக்கருகில் ஆளுடைய பிள்ளையார் அமர்ந்தருள, அவர் திருமுன்பு புத்த வாதம் நிகழ்ந்த இடம்.

சிவபாதவிருதயர்-2777. ஆளுடைய பிள்ளையாரின் தந்தையார்.

சிவபெருமான்-2638. பிறப்பு, இறப்பு இல்லா முழு முதற்கடவுள்.

சுழியல்-2784. பாண்டி நாட்டுப் பதிகளுள் ஒன்று.

சேது-2787. இராமேச்சுரத்தில் கடற்கரை.

ஞானமெய்ந்நெறி-3146. சிவநெறி.

தக்கோலம்-2903. தொண்டை நாட்டுப் பதிகளுள் ஒன்று.

தண்டகத் திருநாடு-2858. தொண்டை நாடு; தண்டகன் ஆண்டமையாற் போந்த பெயர்.

தமிழ்நாடு-2550. பாண்டிநாடு.

தலைச்சங்கப் புலவனார்-2565. சிவபெருமான்; சொக்கலிங்கப் பெருமான்.

திருஅச்சிறுபாக்கம்-3030. தொண்டை நாட்டுப் பதிகளுள் ஒன்று.

திருஅரசிலி-3032. தொண்டை நாட்டுப் பதி.

திருஅறையணிநல்லூர்-2867. நடுநாட்டுப் பதிகளுள் ஒன்று.

திருக்கழுக்குன்று-3027. தொண்டை நாட்டுப் பதிகளுள் ஒன்றாகிய மலை.

திருக்கழுமலம்-3043. சீகாழிப் பன்னிரு பெயர்களுள் கடைசிப் பெயர்.

திருக்களர்-2794. சோழ நாட்டுப் பதி.

திருக்கேதாரம்-2924. வடநாட்டுப் பதி.

திருக்கேதீச்சரம்-2788. ஈழநாட்டுப் பதி.

திருக்கோணமலை-2788. ஈழநாட்டுப் பதி.

திருக்கோவலூர்-2865. நடுநாட்டுப் பதி.

திருத்தினைநகர்-2860. நடுநாட்டுப் பதி.

திருத்தெளிச்சேரி-2802. சோழநாட்டுப் பதி.

திருநாவுக்கரசர்-2772. அறுபான் மும்மை நாயன்மார்களிலும், நால்வரிலும் ஒருவர்.

திருநீலநக்கர்-3051. அறுபான் மும்மை நாயன்மாரில் ஒருவர்.

திருநெறி-2757. சிவநெறி.

திருநெய்த்தானம்-2847. சோழநாட்டுப் பதி.

திருப்பழனம்-2847. சோழநாட்டுப் பதி; சத்தத் தானங்களுள் ஒன்று.

திருப்பரங்குன்று - 2782. பாண்டி நாட்டுப் பதிகளுள் ஒன்றாகிய சிறுகுன்று.

திருப்பருப்பதம்-2925. வடநாட்டுப் பதி.

திருப்பாசூர்-2910. தொண்டை நாட்டுப் பதி.

திருப்பாதிரிப்புலியூர்-2860. நடுநாட்டுப் பதி.

திருப்புத்தூர்-2783. பாண்டி நாட்டுப் பதி.

திருப்பூவணம்-2784. பாண்டி நாட்டுப் பதி.

திருமதுரை-2774. பாண்டி நாட்டுத் தலைநகரம்.

திருமயிலாபுரி-2931. தொண்டை நாட்டுப் பதி; திருமயிலை என வழங்கும்.

திருமாணிகுழி-2860. நடுநாட்டுப் பதி.

திருமாற்பேறு-2900. தொண்டை நாட்டுப் பதி.

திருமுருகர்-3051. நாயனார் பெயர்.

திருவக்கரை-2861. தொண்டை நாட்டுப் பதி.

திருவடுகூர்-2861. நடுநாட்டுப் பதி.

திருவலிதாயம்-2928. தொண்டை நாட்டுப் பதி.

திருவல்லம்-2901. தொண்டை நாட்டுப் பதி.

திருவாடானை-2789. பாண்டி நாட்டுப் பதி.

திருவாமாத்தூர்-2864. நடுநாட்டுப் பதி.

திருவாலவாய்-2559, 2774. மதுரைத் திருக்கோயில்.

திருவான்மியூர்-3018. தொண்டை நாட்டுப் பதி.

திருவியமகம்-2768, 2897. பிள்ளையாரது சந்தவிகற்பப் பதிகங்களுள் ஒருவகை.

திருவிராமேச்சுரம்-2785. பாண்டி நாட்டுப் பதி.

திருவிருக்குக்குறள்-2565, 2897. பிள்ளையாருடைய சந்த விகற்பப் பதிகங்களுள் ஒருவகை.

திருவிற்கோலம்-2903. தொண்டை நாட்டுப் பதி.

திருவூறல்-2903. தொண்டை நாட்டுப் பதி.

திருவெண்பாக்கம்-2911. தொண்டை நாட்டுப் பதி.

திருவேற்காடு-2927. தொண்டை நாட்டுப் பதி.

திருவொற்றியூர்-2926. தொண்டை நாட்டுப் பதி.

திருவோத்தூர்-2871. தொண்டை நாட்டுப் பதி.

தில்லைமூதூர்-2860. சிதம்பரம்.

தில்லைவாழந்தணர்-3042. தில்லை மறையவர் மூவாயிரவர்.

தென்றிசையிற் கயிலை - 2926. திருக்காளத்தி.

தோணிபுரம்-3051. சீகாழியின் ஐந்தாவது பெயர்.

நம்பாண்டார் நம்பி-3061. பிள்ளையாரது தேவியாரின் தந்தையார்.

நல்லூர்-3060. திருநல்லூர்ப் பெருமணம். பிள்ளையாரின் திருமணம் நிகழ்ந்த பதி. பிள்ளையார் அடியார்களுடன் சோதியிற் கலந்த இடம்.

நள்ளாறு-2680. சோழ நாட்டுப் பதி.

நாடுடைய நாயகர்-2799. திருநள்ளாற் றிறைவர்.

நீலகண்டப் பெரும்பாணனர்-2855. அறுபான்மும்மை நாயன்மார்களுள் ஒருவர்.

நெல்வேலி-2784. பாண்டிநாட்டுப் பதி.

பதினெண் புராணங்கள்-2739. மாபுராணங்கள்.

பழயனூர்த் திருவாலங்காடு-2905. தொண்டை நாட்டுப் பதி.

பாண்டி நாடு-2790.

பாதாளீச்சரம்-2794. சோழ நாட்டுப் பதி.

பாலி நதி-2900. தொண்டை நாட்டு ஆறு.

புத்த நந்தி-2803. சமய வாதம்.

புறவார் பனங்காட்டூர்-3033. தொண்டை நாட்டுப் பதி.

பூந்துருத்தி-2826. சோழ நாட்டுப் பதி.

பூம்பாவை-2942. மயிலாப்பூரில் பிள்ளையார், எலும்பு பெண்ணுக்கிய அம்மை பெயர்.

பொன்முகலி-2919. தொண்டை நாட்டில் காளத்திக்கருகில் வரும் ஆறு.

மங்கையர்க்கரசியார்-2543. பாண்டிமா தேவியார்.

மணமேற்குடி-2790. மந்திரியார் குலச்சிறையாரது பதி.

வைகையாறு-2697, 2709. பாண்டி நாட்டு நதி.

திருஞானசம்பந்த நாயனரின் தேவியார்: செம்பொன்செய் வாசிச் சூட்டுத் திருமணிப் புனைபூண் செல்வப், பைம்பொனின் மாலை வேய்ந்த பவளமென் கொடியொப்பார்.

முற்சேர்க்கை -4

உ

சிவமயம்

மேற்கோள் நூல் அகராதி

அற்புதத் திருவந்தாதி 2654, 2985, 3020.

அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ் 3038.

ஆகமங்கள் 2684.

ஆளுடைய அரசுகள் தேவாரம் 2549, 2586, 2600, 2619, 2642, 2646, 2654, 2688, 2709, 2719, 2721, 2722, 2724, 2728, 2734, 2737, 2740, 2741, 2743,2824, 2837, 2844, 2847, 2893, 2919, 2963, 2969, 2978, 2985, 3007, 3021, 3038, 3080, 3090, 3099, 3144.

ஆளுடைய நம்பிகள் தேவாரம் 2638, 2720, 2721, 2736, 2740, 2795, 2960, 2969, 3012, 3093.

ஆளுடைய பிள்ளையார் திருஅந்தாதி 2549, 2818, 2836, 3111, 3146.

ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை 2687.

ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக் கோவை 2708.

ஆளுடைய பிள்ளையார் தேவாரம் 2549, 2552, 2560, 2567, 2573, 2576, 2588, 2603, 2626, 2634, 2638, 2649,2650, 2652, 2660, 2662, 2684, 2693, 2720, 2721, 2726, 2737, 2740, 2745, 2747, 2753, 2756, 2757, 2759, 2764, 2772, 2774, 2777, 2787, 2806, 2823, 2878, 2888, 2912, 2924, 2951, 2963, 2969, 2974, 2989, 3040, 3043, 3048, 3071, 3097, 3133, 3145.

இருபா இருபஃது 2718, 2723.

உண்மை விளக்கம் 2598, 2724, 2737.

கண்ணப்ப தேவர் திருமறம் 2919.

கந்த புராணம் 2725, 2737, 2868, 2960.

கந்தரந்தாதி 2772.

கலம்பகம் 2684.

கழுமல மும்மணிக்கோவை 2721.

காஞ்சிப்புராணம் 2653, 2899.

குமரகுருபரர் - கந்தர் கலிவெண்பா 2684, 3037.

கோயில் நான்மணிமாலை 2634, 2759.

சங்கற்ப நிராகரணம் 2704, 2808.

சிலப்பதிகாரம் 2684, 2893, 2962.

சிவஞான சித்தியார் 2555, 2601, 2638, 2664, 2673, 2684, 2702, 2706, 2716, 2724, 2730, 2734, 2735, 2737, 2738, 2739, 2753, 2759, 2781, 2814, 2918, 2985, 3101, 3143.

சிவஞான போதம் 2548, 2567, 2600,2653, 2665, 2684, 2718, 2724, 2726, 2727, 2728, 2729, 2730, 3735, 2736, 2737, 2738, 2759, 2766, 2780, 2788, 2796, 2831, 2837, 2842, 2874, 2958, 2987, 2989, 3050, 3104, 3135, 3141, 3145, 3147.

சிவஞான பாடியம் 2717, 2735, 2737, 2738.

தொகுத்தவர்: K. **ஆறுமுக நாயனர்,** திருநாவுக்கரசு நாயனர் சைவ சித்தாந்தக் கழகம், திருத்துறையூர், (நடுநாடு).

முற்சேர்க்கை -5

சிவமயம்

அருஞ் சொற்றொட ரகராதி

(எண்கள் - பாட்டு எண்கள்)

முற்சேர்க்கை -6

உ
சிவமயம்

ஞான சாத்திரக் கருத்துக்கள்

துரியங் கடந்தசுடர்த் தோகையுட னென்றும்
பிரியாதே நிற்கின்ற பெம்மான்— துரியத்தைச்
சாக்கிரத்தே செய்தருளித் தான்செய்யுந் தன்மைகளும்
ஆக்கியிடு மன்பர்க் கவன். 69

பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதும்
காலனையன் றேவிக் கராங்கொண்ட—பாலன்
மரணந் தவிர்த்ததுவு மற்றவர்க்கு நந்தங்
கரணம்போ லல்லாமை காண். 12

ஓடஞ் சிவிகை யுலவாக் கிழியடைக்கப்
பாடல் பனைதாளம் பாலைநெய்தல்—ஏடெதிர்வெப்
பென்புக் குயிர்கொடுத்த லீங்கிவைதா மோங்குபுகழ்த்
தென்புகலி வேந்தன் செயல். 70

இன்றிச் சமயத்தி லல்லதுமற் றேழையுடன்
ஒன்றுசொலி மன்றத்து நின்றவரார்— இன்றிங்கே
அங்க முயிர்பெறவே பாடு மடியவரார்
எங்குமிலை கண்டா யிது. 65

—திருக்களிற்றுப்படியார்

முற்சேர்க்கை -7

உ
சிவமயம்

திருஞானசம்பந்த நாயனார் புராணத்தைப் பற்றிய சில குறிப்புக்கள்

திருவிடைவாய்:—இது சோழ நாட்டுப் பாடல் பெற்ற பதிகளுள் ஒன்று. தஞ்சைச் சில்லா நன்னிலந் தாலூகாவைச் சேர்ந்தது. திருவாரூருக்கும் நீடா மங்கலத்துக்கும் இடையில் உள்ள கொரடாச்சேரி என்ற ரயில் நிலையத்திலிருந்து தெற்கில் 2 நாழிகையளவில் உள்ள **பாண்டவாறு** என்னும் நதியின் கரையில் தென்புறமுள்ளது. பாண்டவாறு என்பது காவிரியின் பிரிவுகளாகிய கிளைகளுள் ஒன்று. இதற்கு ஆளுடைய பிள்ளையார் பதிகம் கிடைத்துள்ளது. இத்திருப்பதிகம் முன் அகப்படாததனால் முன் பதிப்புக்களில் சேர்க்கப்படவில்லை. அது முழுதும் அத்திருக்கோயில் சுவரில் கல்வெட்டுச் செதுக்கப்பட்டிருத்தலால் ஆராய்ச்சியாளர்கள் அதைக் கண்டுபிடித்து எடுத்து எழுதி வெளியிட்டபடி இப்போதுள்ள தேவாரப் பதிப்புக்களிற் சேர்க்கப்பட்டுள்ளது. "**பாதாளீச்சரமும் பாடி முன்னணைந்த பதி பிறவும்** பணிந்து போற்றி" *(2794)* என்றதனுள் **பதிபிறவும்** என்ற பகுதி இப்பதியினை உள்ளிட்டுக் குறிக்கலாம் என்று சில அன்பர்கள் கருதுகின்றார்கள். இப்பதிகம் "மறியார் கரத்தெந்தை" என்று தொடங்குகிறது. *11-ம்* திருமுறை க்ஷேத்திர வெண்பா-*(7)* "தென் விடைவாய்" என்றது இப்பதி.

கல்வெட்டுக்களிற் கண்ட சரித ஆராய்ச்சிக் குறிப்புக்கள்:—*(இவை வித்துவான் - திரு.*M. *இராஜமாணிக்கம் பிள்ளை,* M.O.L.,L.T., *அவர்கள் அன்புடன் அனுப்பிய குறிப்புக்களுட் கண்டவை.)* திருஞானசம்பந்த நாயனார் வரலாறு பற்றிய கல்வெட்டுக்கள் இல்லை; அவர்பெயரால் பிற்காலச் சோழர் காலத்தில் மடங்கள், தோட்டங்கள் முதலியவை வழங்கி வந்தன என்பதும், சில தானங்கள் விடப்பட்டன என்பதும் தெரியவருகின்றன. *(1)* சீகாழியில் "**ஆளுடைய பிள்ளையார்** திருமாளிகையில் **தமிழ் விரகர்** கண்டு, இக்கோயில் **திருக்கைக்கோட்டி**யில் எழுந்தருளியிருக்கிற முறைகள் திருக்காப்பு நீக்கி அழிவுள்ளன எழுந்தருளுவித்தும், திருமுறைகள் பூசித்தும் இருக்கைக்கு இவ்வூர் இறையிலியாக விட்ட நிலம்... ..." என்பது II-ம் குலோத்துங்கன் I-ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு*(381-1918);—(2)* அம்மன்னரது *10*-வது ஆட்சியாண்டு:—"திருஞானசம்பந்தருக்குப் **பால் போனகத்**திற்கு நிலம் விடப்பட்டது" *(374* of *1918);—(3)* அம் மன்னர் *12*-வது ஆட்சியாண்டு:— ஆளுடைய பிள்ளையார் கோயிலில் எழுந்தருளுவித்த மங்கையர்க்கரசி நாச்சியாருக்கு நிவேதனத்துக்கு வீரசோழ நல்லூரில் நிலம் விடப்பட்டது *(375* of *1918)* (**குறிப்பு:** இந்த இரண்டாம் குலோத்துங்கர் தாம் அநபாயர் என்ற மன்னர் என்றும், சேக்கிழார்பெருமான் காலத்தவர் என்றும் அறியப்படுபவர்);—*(4)* II இராஜாதிராஜன் - ஆட்சி *11*-வது ஆண்டு - ஆளுடைய பிள்ளையார் **கறியமுதுக்குப் பயறு** கொடுக்க நிலம் விடப்பட்டது *(379* of *1918);—(5)* III குலோத்துங்கர் - ஆட்சி - *6*-வது ஆண்டு - இராஜ விச்சாதரி என்பவள் ஆளுடைய பிள்ளையாரை (புதிதாக) எழுந்தருளச் செய்தாள் *(361* of *1918);—(6)* குரத்தி ஓட (திருஞான சம்பந்தர் புராணம் *638 = 2536)* குரத்தியர் - சமணப் பெண்துறவிகள்; இவர்களுக்குத் தனி மடம் உண்டு. I பராந்தகன் காலத்தில் விளாப்பாக்கத்தில் குரத்தியர் மடம் இருந்தது. அதன் தலைவியார் பத்தினிக் குரத்தியடிகள் என்பவர் *(53-1900)*; வெடிலில் இருந்த மடத்தில் *400* பேருக்கு மேற்பட்ட குரத்தியர் இருந்தனர் (S.S.I.III*-92);—*

(7) போதிமங்கை-பூதமங்கலம் - இவ்வூரில் கி.பி.450-ல் புத்ததத்தர் இந்த வேணுதாச விகாரத்தில் தங்கியிருந்து ''விநய விநித்சயம்'' என்னும் நூலை எழுதினார் (Prof. K. A. N. Sastrys' cholas - vol. I - p. 128);—(8) திருவோத்தூர் (ஆண்பனை பெண்பனை ஆக்கிய பதி);— இவ்வூரைச் சுற்றிப் பல சமணர் கிராமங்கள் இன்றும் இருக்கின்றன;—(9) ஏகம்பத்தில் திருப்பதி (புராணம் பாட்டு 998 & 2896) - அந்நாளில் ஏகம்பத்தில் காபாலிக மடம் இருந்தது என்ற உண்மையை மகேந்திர வர்மன் (A.D. 600—630) எழுதிய மத்தவிலாசப் பிரகசனம் என்னும் நூலைக்கொண்டு அறியலாம்.

இவற்றுற் பெறப்பட்ட தொகைப் பொருளாவன:— சேக்கிழார் பெருமானது காலத்திலேயும் அதனையடுத்தும் இந்நாயனாரது பெயர்களுள் திருஞான சம்பந்தர், ஆளுடைய பிள்ளையார், தமிழ் விரகர் முதலிய பல பெயர்கள் வழக்கத்தில் இருந்தன. இவருக்குத் தனிக் கோயில்கள் அமைக்கப்பட்டு அவற்றுள் சிறப்பாகிய வழிபாடுகள் நிகழ்ந்தன; பால் போனகம், பயறுடன் சமைத்த கறியமுது முதலியவை நிவேதிக்கப்பட்டன; இவர் கோயிலினுள் இவர்பால் தலையன்பு பூண்ட மங்கையர்க்கரசியம்மையாரையும் எழுந்தருளுவித்து வழிபட்டனர். இவரது திருமுறைகளும் வழிபடப்பட்டன.★ ★ ★

சமணப் பெண்துறவிகள் குரத்தியர் எனப்பட்டனர். அவர்கள் பெருங்கூட்டமாகத் தனி மடங்களில் இருந்தனர். ★ ★ ★ புத்தர், நாயனாரிடம் வாதுக்குப் போதிமங்கையில் வந்த காலத்துக்கு முன்பே புத்தர்களது வன்மைபெற்ற (விகாரம் எனப்படும்) கோயிலும் புத்தர் கூட்டமும் இருந்தன. ★ ★ ★ திருவோத்தூரிலும் அதனைச் சுற்றிலும் ஆண்பனை - பெண்பனையாக்கிய அற்புதம் நிகழ்வதற்குக் காரணராகவிருந்த சமணர் கூட்டம் வலிமை பெற்றிருந்தது. இன்றும் அங்குப் பல கிராமங்களில் சமணர் உள்ளனர். ★ ★ ★ காஞ்சிபுரத்தில் சைவர்கள் தங்கும் மடங்கள் பல இருந்தன. அவற்றுள் ஒன்றில் பிள்ளையார் தங்கினர்—என்னும் சில செய்திகளேயாம்.

முற்சேர்க்கை -8

உ
சிவமயம்

ஆளுடைய பிள்ளையார் புராண உரைப் பதிப்பு நிறைவு விழா

ஆச்சாபுரம்

இவ்விழா ஆச்சாபுரம் என்னும் திருநல்லூர்ப் பெருமணத்தில் *1—6—1950* (விக்ருதி ஆண்டு வைகாசிமீ 19-உ) வியாழக்கிழமையன்று சிறப்பாய் நடந்தேறியது. தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான அத் திருக்கோயிலில் மேற்படி ஆதீன மகாசந்நிதானங்களின் அருளாணையின் ஆதரவுப்படி இவ்விழா நிறைவெய்தியது. அதி காலையில் திருஞானசம்பந்தப் பிள்ளையாருக்கும் தேவியாருக்கும் மகாபிஷேகம் மகாலங்காரம் மகாதீபாராதனை நிகழ்ந்தன. அதுபோழ்து புராண உரைப் பிரதிகளை நாயனரது திருவடியிற் சார்த்தி வழிபாடு நிறைவாயிற்று. அதன்பின் பால சம்பந்தர் உற்சவமூர்த்தியைச் சிவிகையில் மகாலங்காரத்துடன் எழுந்தருளுவித்து யானை சாமரை முதலிய சகல விருதுகளுடன் திருவெண்ணீற்றுமையம்மை சந்நிதிக்கு எழுந்தருளுவித்து வழிபாடு நிகழ்ந்து எல்லாருக்கும் திருவெண்ணீறும் அருட்பிரசாதங்களும் வழங்கப்பட்டன. பின்பு சிவிகையில் திருஞான சம்பந்தப் பெருமாளுர் - திருநீலகண்ட யாழ்ப்பாணரும், திருமுருக நாயனரும், திருநீலநக்க நாயனரும் உடன் தொடர்ந்து வர, இரதத்தில் திருவீதி எழுந்தருளினர். புராண உரைச் சுவடிகளைத் திவ்யாலங்கிருதத்துடன், ஆதினகர்த்தர் அவர்கள் இதற்கென்று வரவழைத்திருந்த யானைமீது எழுந்தருளுவித்து மேற்படி திருமுறைகளைச், சேக்கிழார் மரபில்வந்த நல்லன்பர் ஒருவர் தாங்கிவரவும், பின்னர் இருந்து அன்பர் ஒருவர் சாமரையிரட்டி வரவுமாகத் திருவீதி வலம்வரும் ஆனந்தக் காட்சி நிகழ்ந்தது. அதுகாலம் முதுவேனிற் பருவமா யிருந்தும் அன்று முழுதும் சூரியன் தன்னுடைய கடுங்கதிர்களை வெளிக் காட்டாது மறைத்ததும் வானத்தில் மேகங்கள் சூழ்ந்து நுண்டுளி தூற்றி மந்தமாருதம் வீசிக் குளிர்ச்சி செய்ததுமாக இருந்த நிலைகள் தெய்வத் திருவருட் கடையாளமாய் விளங்கின. சிதம்பரம் தேவார ஆசிரியர் - திரு.எஸ்.இராமலிங்க ஓதுவார் அவர்களும், அண்ணுமலைப் பல்கலைக் கழக இசையாசிரியர் தேவாரம் - திரு.சுப்பிரமணிய முதலியார் அவர்களும், சீகாழிப் பாடசாலைகளின் மாணவ மாணவிகளும், கோயமுத்தூர்ச் சேக்கிழார் தேவாரப் பள்ளிக்கூட மாணவர்களுமாகச் சேர்ந்து பெருந்திரளாகக் கூடிய திருக்கூட்டம் சைவத் தெய்வத்திருமுறை முழக்கம் செய்து நகர்வலத்தினைச் சிறப்பித்தது. அங்கங்கும் திருவீதியில் உபசரிப்புக்கள் நிகழ்ந்தன. நகர்வலச் சிறப்பினை யாவரும் என்றும் கண்டு களிக்கும்படி சிதம்பரம். சி.ப.தேவாரபாடசாலை அதிபர் திரு.சின்னையா முதலியார் அவர்கள் படங்கள் (போட்டோ) எடுத்து உதவினர். சீகாழி சிதம்பரம் முதலிய பல பதிகளினின்றும் அடியவர்களும் பெரிய மிராசுதார்களும் திரளாகக் கூடிவந்து வழிபாட்டிலும் நகர்வலத்திலும் கலந்து சிறப்பித்தனர். வந்தவர்க்கெல்லாம் விழாவின் முன்னை நாளும், விழாவில் முப்போதும், பின்னுளும் உறையுள், உணவு முதலிய எல்லா வசதிகளையும் ஆச்சாபுரம் மிராசுதாரும், பஞ்சாயத்துத் தலைவரும், கூட்டுறவுச் சங்கத் தலைவரும், அட்வொகேட்டுமாகிய உயர் சைவத் திருவாளர் S.முருகேச முதலியார், B.A.,B.L., அவர்கள் மனமுவந்து செய்து உதவினார்கள். கோயிலில் நடைபெறும் சிறப்புக்களையும், நகர்வலத்தின் வைபவத்தையும், மாலையிற் பாராட்டற் கூட்ட அமைப்புக்களையும், ஆதீனச் சார்பில் வைத்தீசுவரான்

கோயில் கட்டளைவிசாரணை ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளும், ஆச்சாபுரம் கோயில்விசாரணை திருவைத்தியலிங்கம் பிள்ளை அவர்களும் நேரில் கண்காணித்து எவ்வித குறைவுமில்லாமல் இயற்றுவித்தனர். பாராட்டுக் கூட்டம் திருக்கோயிலின் முன், வடக்கே உள்ள ஸ்ரீ ஞானசம்பந்தர் மடத்திற்காக வகுக்கப்பட்ட இடத்தில் அமைத்த புதிய அலங்காரக் கொட்டகையில் மாலை 4½ மணிக்குத் தொடங்கிற்று. அங்கே ஸ்ரீ பாலசம்பந்தமூர்த்திகள் நாயன்மார் மூவருடன் வெளிப்பட எழுந்தருளியிருந்தனர். ஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமை தாங்கி முன்னுரை, அணிந்துரை, முடிப்புரைகளைச் சிறப்பாக வகுத்தருளினார். ஓதுவார் மூர்த்திகள் தேவார பாராயணம் செய்தனர். சீகாழிக் கல்விக் கழகத்தார் அச்சிட்ட வரவேற்புரையைச் சீகாழி மிராசுதாரும் அன்பருமாகிய திரு.சொ.சீனிவாச முதலியார் அவர்கள் வாசித்தனர். தருமையாதீனப் புலவர் ஆரணி வித்வான் - திரு.முத்து.சு.மாணிக்கவாசக முதலியார் அவர்கள் உரையாசிரியருக்கு வாழ்த்துப் பாமாலை நவமணிமாலையாகப் பாடி வாசித்தளித்தனர். சீகாழிப் பெருநிலக்கிழார் திரு. S. சீனிவாச முதலியார் அவர்களும்; திரு.துடிசைகிழார் - திரு. A. சிதம்பரனார் அவர்களும் சிதம்பரம் தேவார பாடசாலை அதிபர் திரு.சின்னையா முதலியார் அவர்களும் சிதம்பரம் பாடசாலைத் தேவார ஆசிரியர் ஸ்ரீமத். S. இராமலிங்க ஓதுவார் மூர்த்திகளும் உரையாசிரியரையும் உரை நயங்களையும் பற்றிப் பாராட்டிப் பேசினார்கள். உரையாசிரியர் உரை நிறைவுபற்றித் திருவருளால் தமக்குக் கிடைத்த பேற்றினைப் பற்றிப் பேசினர். தருமை ஆதீன மகா சந்நிதானங்களின் ஆசியும் திருவருட் பிரசாதங்களும் உரையாசிரியருக்குத் தம்பிரான் சுவாமிகளால் வழங்கப்பட்டன. இரவு 8 மணி அளவில் மங்கல வாழ்த்துடன் சபை நிறைவாயிற்று. அதன்மேல் திருக்கல்யாண விழாவும், நகர்வலமும் நிகழ்ந்தன. அதிகாலை 5 மணியளவில் மூன்று நாயன்மார்களுடன் திருஞான சம்பந்த நாயனார் திருமணக் கோலத்துடன் காதலியைக் கைப்பற்றிக் கொண்டு சிவச்சோதியுட் கலக்கும் அருட்காட்சி நிகழ்ந்ததனை அன்பர்கள் யாவரும் கண்டு தொழுது பெரும்பேறு பெற்றனர்.

திருவிழாவை ஆசிபூர்வமான ஆணை தந்து அருளிய தருமை ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானங்களுக்கும், உடனிருந்து நடத்திக்கொடுத்த ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளுக்கும், கட்டளை விசாரணை திரு.வைத்தியலிங்கம் பிள்ளை அவர்களுக்கும், வரவேற்புத் தலைவராக நின்று உபசரணை செய்த ஆச்சாபுரம் திரு. S. முருகேச முதலியார் B.A.,B.L., அவர்களுக்கும், படங்கள் எடுத்து உதவிய சிதம்பரம் தேவார பாடசாலை அதிபர் திரு.சின்னையா முதலியார் அவர்களுக்கும், தேவார ஆசிரியர் மாணவ மாணவிகளுக்கும், வாழ்த்துப் பாமாலையும் வரவேற்புரையும் பாராட்டுரைகளும் வழங்கிய எல்லாப் புலவர்களுக்கும், மற்றும் மன மொழி மெய்களால் இவ்விழா சிறப்புற நிகழச் செய்து ஊக்கமளித்த எல்லாப் பெருமக்களுக்கும் உரையாசிரியரால் வணக்கமும் நன்றியும் செலுத்தப்பட்டது.

இவ்வளவும் உண்ணின் றியக்கியருளிய இறைவர் திருவருளுக்கும் திருஞான சம்பந்த நாயனாரின் திருவடித் தாமரைகளுக்கும் எனது வணக்கத்தைச் செலுத்துகின்றேன். ஒன்றுக்கும் பற்றாத நாயினேனையும் தனது பேரருட் பெருந்தொண்டர் சரிதங்களின் உரை எழுதி வெளியிடவும் சிவபெருமான் தண்ணருள் சுரந்தருளினர். இப் பெரும்பணி தொடங்கி இப்போது 15 ஆண்டுகள் சென்றன. யாக்கை நிலையாமை என்ற நீதிநூற் பகுதி எப்போதும் நினைவில் வருகின்றது. ஆயினும் இப்புராணத்துள் எஞ்சிய பகுதிகளையும் விரைவில் அச்சியற்றவும் புராண உரையினை முழுதும்

கண்டு பெருவிழாச் செய்து வணங்கும் பெரும் பேற்றினைப் பெறவும் ஆயுளும் அறிவும் ஆற்றலும் அடியேனுக்கு அருளுவார் என்றே நம்பி இறைஞ்சி அவருடைய பொன்னார் திருவடிகளில் விண்ணப்பஞ் செய்கின்றேன்.

> "அருளா தொழிந்தா லடியேனை யஞ்சே லன்பா ராரிங்குப்
> பொருளா வென்னைப் புகுந்தாண்ட பொன்னே பொன்னம் பலக்கூத்தா"

> "நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ விதற்கு நாயகமே"

அடியார்க்கடியேன்,

C.K. சுப்பிரமணிய முதலியார்

பதிப்பு-உரையாசிரியன்

சேக்கிழார் நிலையம்
கோவை
1—6—1950

முற்சேர்க்கை -9

உ

சிவமயம்

ஆச்சாபுரத்தில்
பெரியபுராணத்துள் ஆளுடைய பிள்ளையார் புராண விரிவுரை அரங்கேற்று விழா

....

திருநின்ற செம்மைபெற்ற பன்னிரண்டாம் திருமுறையாகிய
பெரியபுராண விரிவுரையாளர் உயர்சைவத் திருவாளர்
சிவக்கவிமணி - கோயம்புத்தூர் C.K. சுப்பிரமணிய முதலியார், B.A. அவர்கட்கு
திருநல்லூர்ப் பெருமணம் என்னும் ஆச்சாபுரத்தினிடத்துப்
பெரியபுராண விரிவுரை அரங்கேற்றத்தில் அன்பால் அளித்த

வரவேற்பு உரை

சேக்கிழார் மரபிலுதித்த பெரியீர்!

உங்கள் வரவு நல்வரவாகுக; அன்பர்களாகிய நாங்கள் தாய்வரவை எதிர்பார்த்திருக்கும் பறவைப் பார்ப்பேபோல உமது வரவை எதிர்பார்த்திருக்கிறோம்.

சிவநேசச் செல்வரே!

தங்கள் பன்னிரண்டாம் திருமுறையின் விரிவுரையையும், ஆராய்ச்சியையும், நுட்பமான பொருள் விளக்கத்தையும் காணும்தோறும் எங்களுக்கு உண்டாகும் மகிழ்ச்சி தங்களைக் காணவேண்டும் என்னும் பற்றை உண்டாக்கியது. அதன் பயனை இப்பொழுது அடைந்ததனால் நாங்கள் மிகவும் மேன்மை பெற்றவர் ஆகின்றோம். ஆகையால் தங்களை மனமகிழ்வோடு வரவேற்கிறோம்.

ஆங்கில அறிஞரே!

தாங்கள் தமிழ்க்கல்வியோடு ஆங்கிலமும் கற்று வல்ல வழக்கறிஞராதலால் தங்கள் பெரியபுராண விரிவுரை பல வகையிலும் உலக இயல்போடு பொருந்தி விளங்குகின்றது. கண்டுகளித்த களிப்பால் தங்களை ஒருமுறை இருமுறை மும்முறையாக வரவேற்கின்றோம், வருக! வருக!! வருக!!!

தமிழ் கற்றறிந்த வித்தார கவிஞரே!

தமிழ்ப் புலவர்கள் நூலை விளக்கமாக விரித்து உரை செய்யவும் பேசவும் வல்லவர் வித்தார கவிஞர் என்பர். அதற்கு உதாரணமாகத் தாங்கள் விளங்குதல் கண்டு வியந்த நாங்கள் தங்களை **வித்தார கவிஞரே** என அழைக்கின்றோம். **வித்தார கவிஞரே** வருக!

சன்மார்க்கத் தலைவரே!

தங்கள் ஒழுக்கமும் சிவபெருமானிடத்தும் சிவனடியவர்களிடத்தும் பதிந்த தங்கள் உள்ளமும் உண்மை அன்பும் வாய்மையும் சிவத்தொண்டும் இன்சொல்லும் இன்முகமும் கண்டோர் வியக்கும் நிலையில் உள்ளன. தாங்கள் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் சிவஞானமும் பெற்றுத் தமிழ்நாட்டுத் தாயான காவிரி மணலைவிடப் பன்னாள் வாழ்ந்திருக்கும்படி அம்மையை இடப்பால் கொண்ட ஆனந்த நடராசரை வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,

சீர்காழி

1—6—50

காழிக் கல்விக் கழகத்தார்

முற்சேர்க்கை -10

II

கோவை - சிவக்கவிமணி - சைவத்திரு. C.K. சுப்பிரமணிய முதலியார், B.A., அவர்கட்கு

ஆச்சார்யாள்புரத்தில்

ஸ்ரீ ஞானசம்பந்தமூர்த்திகள் புராணவுரைப் பதிப்பு நிறைவு விழாவில்

அன்புமிக்கப் பாடிய

வாழ்த்துப் பாமாலை

உலகமெலா மின்போங்கி யிடர்நீங்கி யுயர்ந்துதிகழ்ந் துவக்க முன்னாட்
பலகவிக்கு மிலக்கணமாப் பாக்கியச்சேக் கிழாரருளும் பன்னி ரண்டா
யிலகருளின் வடிவான திருமுறைக்குப் பேருரையை யியற்றி நம்மை
மலகரும மாயைகடந் துலவருளி னுறையவைத்த வள்ளல் வாழ்க. (1)

சேக்கிழார் கோத்திரத்துச் செழுந்தமிழ்ப்பா வலனுமுற் சிறந்து நின்றோன்
சேக்கிழான் மலரடிக்கே சிந்தனையை யிடமாக்கித் திருவைப் பெற்றோன்
சேக்கிழா ரிவ்விருப தானூற்றாண் டினிலிருக்கச் சேயா வந்தே
சேக்கிழார் பெயருளநா ளெலாம்விளங்குங் கவிமணியாஞ் சிவனே வாழ்க. (2)

பெரியபுரா ணம்வடிவாற் பெரியபுரா ணம்மெனயாம் பேணிப் போற்றிப்
பிரியபுகன் றுவக்கவுரை பதினையாண் டாவெழுதிப் பிறங்கச் செய்து
கரியமல மறுவித்துக் கருணையுருப் பெருமான்சீர்க் கழலின் பேங்க
உரியபரம் பரைக்கொடையை யுலகுபெற வருள்வள்ளா லுவந்து வாழ்க. (3)

பண்டுதிருச் சிற்றம் பலப்புலவர் போதனையும் பாக்க ளைக்கற்
கண்டுநிக ராப்பாடுங்க கந்தசா மிப்புலவர் கருணை நோன்பும்
தொண்டுசிவ னடிக்காற்றுந் தமிழ்ச்சைவர் பழந்தவமும் தொடர்பு கொண்டுள்
வண்டுரியா தீதப்பே ரானந்த மொடுவடிவாய் வந்தாய் வாழ்க. (ச)

பாவலனே வாழ்கசிவ பத்திமையாய் வாழ்கதமிழ்ப் பண்பு மிக்க
நாவலனே வாழ்கவுல காவலனே வாழ்கபெயர் நாடத் தோற்றுஞ்
சேவலனே வாழ்கவுரை செய்வகையா லழைக்குமிடஞ் சென்று நோக்கும்
பூவலனே வாழ்கநினைப் போல்வாரார்? புலனடக்கும் புலவா வாழ்க. (5)

புவிநாடும் புகழ்வளர்ந்து புலவோர்சென் னெறிவிளக்கிப் புநித வாழ்வை
யவிநாடும் வானோர்க்கும் அரியதென வுலகவர்க்கிங் களித்த வள்ளால்
அவிநாசிக் கருணும்பா மலரடிக்குத் தமிழ்மாலை யணிந்த சீரா
கவிநாடும் பெயர்ச்சுப்ர மண்யனெனும் முதலோனே கவின்று வாழ்க. (6)

தில்லைநகர்ப் பொன்மன்றிற் பெரியபுரா ணத்திருநூல் செம்மை யோர்வார்
எல்லையிலா திருக்கவரங் கேற்றியதொல் பெருங்காட்சி யிந்நாள் யார்க்கும்
சொல்லைவெலக் கிடைக்குமுயர் தவப்பயனைச் சிவனருளாற் றொடர்ந்து வாய்க்க
நல்லைநின தரியபெருஞ் செயலன்றோ காரணம்? மெய்ஞ்ஞானி வாழ்க. (7)

ஆண்டுதொறும் பெருங்கோவைத் தமிழ்ச்சங்கத் தொழிலகத்தே ஆசான் பூணா
வேண்டுவகை புராணவர லாற்றுவிரி வுரையோடு மேவி யாற்றிப்
பூண்டுதிகழ் சைவத்தொண் டளவுகட ந்தியற்றுபெரும் புலவர் வாழ்க
தூண்டுவிழி திகைப்பிக்குங் கண்டிகைவெண் ணீற்றழகர் துலங்கி வாழ்க. (8)

வாழ்கவள நிறைகோவை வாழ்கசேக் கிழார்மரபு வாழ்க சைவர்
வாழ்கதொண்டை மண்டலவே ளாளர்முத லியர்குடிகள் வாழ்க தொல்நூல்
வாழ்ககவிக் கோன்கந்த சாமிநம்பி சுப்ரமண்ய வள்ளல் வாழ்க
வாழ்கபசு வீழ்கமழை வளம்பல்கி உலகமெலாம் வாழ்க வாழ்க. (9)

ஆச்சார்யார்கள்புரம்
1—6—1950

தருமபுர ஆதீனப் புலவர்,
காரைக்கூர் வித்துவான்
முத்து.சு.மாணிக்கவாசக முதலியார்
தலைமைத் தமிழாசிரியர், போர்டு உயர்பள்ளி,
ஆரணி (வடஆர்க்காடு).

III

''தினசரி''—5-6-1950

கோவை - சிவக்கவிமணி வக்கீல் - ஸ்ரீ.சி.கே.சுப்பிரமணிய முதலியார் இயற்றிய பெரியபுராணத்திலுள்ள திருஞானசம்பந்தர் புராணம் விரிவுரை அரங்கேற்று விழா, நேற்று ஆச்சாள்புரத்தில் தருமபுரம் ஆதீனத்திற்குச் சொந்தமான வேளூர் தேவஸ்தானம் விசாரணை கட்டளை ஸ்ரீ.சோமசுந்தரத் தம்பிரான் தலைமையில் நடைபெற்றது.

காலை 9 மணிக்கு ஸ்ரீ திருஞான சம்பந்தர் புராண விரிவுரையை யானையின் மீது நன்கு அலங்காரம் செய்து வைத்துச் சிதம்பரம், சீகாழி, திருவாரூர் ஆகிய இடங்களிலிருந்து வந்துள்ள பிரபல தேவார ஆசிரியர்கள், மாணவர்கள் தேவார பாராயணம் செய்ய நகர்வலம் வந்தது. சிவக்கவிமணி ஸ்ரீ. முதலியார் தாம் இயற்றிய பெரிய புராண விரிவுரை நுணுக்கங்களையும், திருவருட்டுணை என்பதைப்பற்றியும் விரிவாகப் பேசினார். அண்ணாமலை சர்வகலாசாலைத் தமிழ் விரிவுரையாளர் ஸ்ரீ.ஜி.சுப்ரமணியம் பிள்ளை ''ஞானக்கண்'' என்பதைப் பற்றிப் பேசினார். சீகாழி ஸ்ரீ.சீனிவாச முதலியார், துடிசை ஸ்ரீ.சிதம்பரனார், ஆரணி, தமிழ் பண்டிட் ஸ்ரீ.மாணிக்கவாசக முதலியார், சிதம்பரம் தேவார பாடசாலை அதிபர் ஸ்ரீ.சின்னையா முதலியார், ஸ்ரீ.இராமலிங்க ஓதுவார் மூர்த்தி ஆகியோர்கள் சிவக்கவிமணி ஸ்ரீ.சி.கே.சுப்ரமணிய முதலியாரின் திறமைகளைப் பாராட்டிப் பேசினார்கள்.

சீகாழி கல்விக் கழகத்தின் சார்பில் ஸ்ரீ.சொ.சீனிவாச முதலியார், சிவக்கவிமணிக்கு ஓர் வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்தார்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

பெரிய புராணம் என்னும்
திருத்தொண்டர் புராணம்
இரண்டாங் காண்டம்

ஆறாவது

வம்பறு வரிவண்டுச் சருக்கம் - II

திருஞானசம்பந்த நாயனார் புராணம் - II

திருச்சிற்றம்பலம்

வம்பறு வரிவண்டு மணநாற மலரு
மதுமலர்நற் கொன்றையா னடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்த னடியார்க்கு மடியேன்;
ஏயர்கோன் கலிக்காம னடியார்க்கு மடியேன்;
நம்பிரான் திருமூல னடியார்க்கு மடியேன்;
நாட்டமிகு தண்டிக்கு மூர்க்கர்க்கு மடியேன்;
அம்பரான் சோமாசி மாறனுக்கு மடியே;
னாரூர னாரூரி லம்மானுக் காளே.

திருச்சிற்றம்பலம்

திருத்தொண்டத்தொகை - (5)

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

28. திருஞானசம்பந்த நாயனார் புராணம்

(இரண்டாம் பாகம்)

தொடர்ச்சி

2542. அம்மொழி விளம்பி ஞோர்க்கு வேண்டுவ வடைய நல்கி
மெய்ம்மையில் விளங்கு காதல் விருப்புறு வெள்ள மோங்கத்
தம்மையு மறியா வண்ணங் கைமிக்குத் தழைத்துப் பொங்கி
விம்மிய மகிழ்ச்சி கூர மேவிய **சிறப்பின் மிக்கார்.** 644

2542. **(இ-ள்)** *அம்மொழி... நல்கி - அந்த மொழியைச் சொன்னவர்களுக்கு வேண்டு வனவற்றை நிரம்பக் கொடுத்து; மெய்ம்மையில்... ஓங்க - மெய்ம்மையிலே விளங்கும் பெரு விருப்பம் பொருந்திய காதலின் வெள்ளமானது மேலே பெருகி ஓங்கி ; தம்மையும்... கூர - தம்மையும் அறியாதபடி வரம்பு கடந்து பொங்கித்திரண்ட மகிழ்ச்சி பெருக; மேவிய சிறப்பின் மிக்கார் - இவ்வாறு பொருந்திய சிறப்பினுல் மிகுந்தவராயினர்.*

(வி-ரை) மிக்கார் - முன்பாட்டிற் போலவே ஈண்டும் மாதேவியாரும் அமைச்சனுரும் என்ற எழுவாய் வருவித்துக்கொள்க; உள்ளத்தில் மகிழ்வு பொங்க அதன் வயத்தினுள் அழுந்தித் தம்மையும் அறியா வண்ணம் நின்றுராதலின் இவ்விரண்டு செய்யுட்களினும் அவர்களைக் குறிக்கும் பெயர்களாகிய எழுவாய் மறைந்து நின்ற கவிநயம் காண்க.

மொழி விளம்பினேர்க்கு...நல்கி-இஃது உலக வழக்கிலும் நிகழ்வது காண்க; **வேண்டுவ** - அவர்கள் தம்பால் வேண்டுவன என்றும், தாம் வேண்டுவனவற்றை என்றும், அவர்கள் எக்குறைபாடும் இன்றி நிரம்பியிருக்க வேண்டுவனவற்றை எல்லாம் என்றும் உரைக்க நின்றது; ***அடைய***-நிரம்ப; அடையும்படி என்றலுமாம்; ஆளுடைய நம்பிகள் தமது நகருக்கு எழுந்தருளா நின்றுரென்று முன்னேயோடி அறிவிப்பப் "பொன்னுர் கிழியு மணிப்பூணுங் காசுந் தூசும் பொழிந்தளித்தார்" *(வெள்.சருக்.16)* என்னும் வரலாறும், அவ்வாறு வரும் பிறவும் இங்கு நினைவு கூரத்தக்கன.

மெய்ம்மையில் விளங்கு-உண்மைத் தன்மையில் விளங்குதலாவது சத்தாகிய சிவநெறியில் விளங்குதல்.

விருப்புறுகாதல் வெள்ளம் - என்க; **வெள்ளம்** - பெருக்கு என்ற பொருள் தந்து நின்றது.

தம்மையும் அறியாவண்ணம் கைமிக்குத் தழைத்துப் பொங்கி - தம்மையே மறக்கும் நிலை வரும்படி வரம்பு கடந்து ஓங்கி; **கைமிகுதல்** - வரம்பு கடந்து பெருகுதல்; கைகூடுதல் - என்புழிப்போலக் **கை** - என்பது வேறுபொருளின்றி மிகுதிப் பொருள் தந்து நிற்பதோர்

2543. மங்கையர்க் கரசி யார்பால் வந்தடி வணங்கி நின்ற
கொங்கலர் தெரிய லாராங் குலச்சிறை யாரை நோக்கி
''நங்கடம் பிரானு ராய ஞானபோ னகர்முன் பெய்தி
'யிங்கெழுந் தருள வுய்ந்தோ' மெனவெதிர் கொள்ளு''மென்றார். 645

முன்னெட்டுமொழி; **விம்முதல்** - வெளிப்படப் பெருகுதல்; **சிறப்பு** - சீர்பெறும் தன்மை; **மிக்கார்** - மிகுந்தாராயினர்; ஆக்கச் சொல் வருவிக்க. 644

2543. **(இ-ள்)** மங்கையர்க்கரசியார்பால்... நோக்கி - மங்கையர்க்கரசியம்மையார் தம்மிடம் வந்து அடிவணங்கி நின்ற மணமுடைய மாலையணிந்த குலச்சிறையாரை நோக்கி; நங்கள் தம்... என்றார் - நமது பெருமானாராகிய ஞான போனகரது திருமுன்பு சென்று சேர்ந்து 'இங்கு எழுந்தருளியதனால் நாங்கள் உய்திபெற்றோம்' என்று கூறி வரவேற்றுக்கொள்க என்று கூறினார்.

(வி-ரை) மங்கையர்க்கரசியார்பால் - அம்மையார் தம்மிடத்து;

அடிவணங்கி நின்ற - அரசியாராதலின் மந்திரியார் அடி வணங்கி நின்று கேட்டல் மரபு.

நங்கள் தம் பிரானுராய்-நங்கள்-அரசரையும் மந்திரியாரையும் உளப்படுத்திக் கூறிய உளப்பாட்டுத் தன்மைப் பன்மை; **பிரானுர் ஆய** - விண்ணப்பித்துக்கொண்டதனை ஏற்றருளித் தலைமையை மேற்கொண்ட என்று குறிக்க **ஆய** - என ஆக்கச் சொல்புணர்த்தியோதினார்; திருவவதாரத்தின் தன்மையாலே நமது பிரானுராய் வந்தவர் என்றலுமாம்; ''வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க... அழுத'' (1899) என்ற குறிப்பும்பட நின்றது.

''இங்குகெழுந்தருள உய்ந்தோம்'' என - இஃது எதிர்கொள்ளும் முறை பற்றி அம்மையார் தமது திருவுள்ளக் கருத்தைக் கூறியது; **எழுந்தருள** - எழுந்தருளப் பெற்றதனால்; எழுந்தருளுவதனால் எனக் காரணப் பொருளில் வந்த வினையெச்சம்.

உய்ந்தோம் - இறந்த காலம் உறுதியும் விரைவும் குறித்தது. **என** - என்ற கருத்துடன் நல்வரவு கூறி; இக்கருத்தையே அமைச்சர் பெருமானார் பின்னர்ப் பிள்ளையார் திருமுன்பு தமது முறையால் விரித்துக்கூறிய நிலை கண்டுகொள்க; இன்றெழுந்தருளப் பெற்றபே றிதனு லெற்றைக்குந் திருவரு ளுடையோம் நற்றமிழ் வேந்தனு **முய்ந்து** - மேன்மையும் படைத்தனம் (2557) என்ற அருமையான திருப்பாட்டின் கருத்துக்களை இங்கு வைத்துக் காண்க. 645

2544. **(இ-ள்)** அமைச்சனாரும் - மந்திரியாரும்; மன்றலம்... போந்து - மணம் பொருந்திய கூந்தலினையுடைய மங்கையர்க்கரசியம்மையாரை வணங்கிச்சென்று; வென்றி... என - வெற்றி வேலேந்திய மன்னவனுக்கும் இச்செயல் உறுதி பயப்பதாகும் என்று உட்கொண்டு; விரைந்து... போகி - பொன் வேலைப்பாடுகள் பொருந்திய விளங்கும் மாடங்களையுடைய மதுரையின் திருவீதிகளின் புறத்தில் விரைந்துசென்று; இன்தமிழ்... காலை

2544. மன்றலங் குழலி ஞரை வணங்கிப்போந் **தமைச்ச ஞரும்**
வென்றிவே **லரச ணுக்கு முறுதியே யெனவி** ரைந்து
பொன்றிகழ் மாட வீதி மதுரையின் புறத்துப் போகி
யின்றமிழ் மறைதந் தாரை **யெதிர்கொள வெய்துங் காலை.** 646

- இனிய தமிழினல் வேதங்களை அருளிச் செய்து தந்த பிள்ளையாரை எதிர் கொள்ளும் பொருட்டுச் சேர்கின்றபோது,

(வி-ரை) வணங்கிப் போந்து - அரசியாரது கட்டளையைப் பெற்றுக்கொண்டு அதனைச் செய்துமுடித்தற் பொருட்டு விடைபெற்றுக்கொள்ளும் வகையால் வணங்கிச் சென்றனர்; **போந்து** - அரண்மனையினின்றும் புறம்போந்து;

போந்து - விரைந்து போகி - எய்தும் - என்று கூட்டி முடிக்க. **வென்றிவேல் அரசனுக்கும் உறுதியே என** - அச்செயல் அரசியின் கட்டளையை நிறைவேற்றும் வகையாலே செய்தக்க தொன்ருவதன்றி, அரசனுக்கு உறுதிபயக்கத் தக்கதாதலின் அக்காரணத்தாலும் செய்தக்கதாம் என்பது என்னை? அரசனது நேர்முகமான ஆணைபெருது செல்கின்றாராதலின், அது தகுதியாகுமோ என்றெண்ண வந்து, அரசனுக்கு எவ்வாற்ருனும் உறுதிதேடுதல் அமைச்சர் கடனுகலான் அவ்வகையானும் இது செய்தக்க தொன்றெனத் துணிந்தனர் என்க.

பொன்திகழ் மாடவீதி மதுரையின் புறத்து-பொன்திகழ்மாடம் - பொன்னுற் செய்த அணிவகைகளை உடைய மாடங்கள்; இவை சிகரம் - பித்திகை முதலாயின; **மதுரையின் புறத்துப் போகி**-நகரின் புறத்துச் சென்று வரவேற்று எதிர்கொள்வது முறையாதலின் இவ்வாறு நகரினை நீங்கி வெளியே சென்றருளினர்; நகர்ப்புறத்தில் மதில்கள் சூழ்ந்த நகரம் தூரத்தே தோன்றக்கூடிய அளவு சென்றனர் என்பது "தகுவன விளம்பித் தலையளித் தருளுமப் பொழுதில், ஓங்கெயில் புடைசூழ் மதுரை தோன்றுதலும்" (2559) என மேல் உரைக்குமாற்ருல் அறியப்படும்.

இன் தமிழ் மறை தந்தார்-பிள்ளையார்; மறையின் பொருளை இனிய தமிழிலே தந்தருளியவர் என்பது. அத் தமிழ் மறையே பின்னர் உய்திதர நின்றமையால் இத்தன்மையாற் கூறினர்.

எதிர்கொள எய்தும் காலை - எழும் ஓசை கேட்டுக்—களிப்பினராஞர் (2552) என்பதுடன் முடிந்தது.

அமைச்சஞரும் எய்தும் காலைத் தாமும் நல்வரவேற்று நின்றார் - என இருவருடைய வரவேற்புச் செயல்களும் ஒன்ருக முடிவுபெற வைத்த நயமும் காண்க.

என நினைந்து—மறை சொற்ருரை—என்பனவும் பாடங்கள். 646

2545. **(இ-ள்)** அம்புயமலராள் போல்வார்- தாமரை மலரில் வீற்றிருப்பவள் போல்பவராகிய மங்கையர்க்கரசியம்மையார்; ஆலவாயமர்ந்தார் தம்மை... கூறி - திருவாலவாயுடைய பெருமானைத் தாம் சென்று கும்பிடவேண்டுமென்று அரசனுக்கும் கூறி,

2545. **அம்புய மலராள் போல்வா ''ராலவா யமர்ந்தார் தம்மைக்**
கும்பிட வேண்டு'' மென்று கொற்றவன் றனக்குங் கூறித்
தம்பரி சனங்கள் சூழத் தனித்தடையோடுஞ் சென்று
நம்பரை வணங்கித் **தாமு நல்வர வேற்று நின்றார்.** 647

தம் பரிசனங்கள்... சென்று - தம் பரிசனங்கள் சூழ்ந்துவரத் தனித்த காவலுடனே சென்று நம்பரை வணங்கி - திருவாலவாயுடைய பெருமானாரை வணங்கி; தாமும்... நின்றார் - தாமும் பிள்ளையாரை நல்வரவேற்கும் முகத்தால் நின்றனர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிவுகொண்டன.

(வி-ரை) அம்புயமலராள்*-துவாதசாந்தப் பெருவெளியில் 1000 இதழ்த் தாமரையின்மேல் வீற்றிருக்கும் உமையம்மையார். ''பங்கயச் செல்வி பாண்டிமாதேவி'' (தேவா). திருமகள் என்பாருமுண்டு.*

அம்புய மலராள் போல்வார் *- மங்கையர்க்கரசியார்; ஆலவாயமர்ந்தாரைக் கும்பிடுதலில் முதலில் நிற்பவர்உமையம்மையாராகிய கருத்தும் காண்க; ''கைலாய வாண! கௌரி நாயக! நின்னை வணங்கிப் பொன்னடி புகழ்ந்து, பெரும்பதம் பிழையா வரம்பல பெற்றோர், இமையா நெடுங்கண் ணுமையா ணங்கையும்'' (திருவிடை - மும் - கோ - 28-பட்டின 11-ம் திருமுறை); ''அண்ண லார்தமை யருச்சனை புரியவா தரித்தாள், பெண்ணி னல்லவ ளாகிய பெருந்தவக் கொழுந்து'' (1128) முதலியவை பார்க்க.*

''ஆலவாயமர்ந்தார் தம்மைக் கும்பிட வேண்டும்'' என்று கொற்றவன் றனக்கும் கூறி *- இறைவரைத் திருக்கோயிலிற் சென்று கும்பிடும் நிலையினை மாதேவியார் அரசனுக்கும் கூறிச் சென்றார்;* ***கொற்றவன் தனக்கும்*** *- மன உடன்பாடில்லாத அரசனுக் கும் என்று உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை. ''தாங்கள் - சைவவாய்மை ஒழுக்கத் தினின்ற தன்மை,பூங்கழற் செழியன் முன்பு புலப்படா வகை கொண் டுய்த்தார்'' (2502) என முன்னர்க் கூறிய கருத்துக் காண்க; அரசன் முன்பு புலப்படா வகை சைவ ஒழுக்கத் தினைக் கொண்டு உய்த்த அம்மையார் இங்குக் கொற்றவன்றனக்கும் கூறிக் கோயிலுக்குச் சென்றனர் என்பது முன் கூற்றொடு முரணாதோ? என்னின் முரணாது; ஆண்டு, முன் (2502)ல் உரைத்தவை பார்க்க; அந்நாளில் சமண்மிக்கு, அரசனும் அந்நெறிச் சார்பு தன்னை அறமென நினைந்து நிற்பச் சைவ வைதிக நன்னெறி திரிந்து மாறி நடந்தது என்ற மட்டில் நாட்டின் நிலை போந்ததே யன்றிச், சைவம் முற்றும் மறைந்துபோக வில்லை; ஆலவாயுடை யார் கோயில் பணிகளும் அந்நிலைக் கேற்றபடி நிகழ்ந்தனவேயன்றி மறைக்கப்படவில்லை; தொண்டர்களும் பலர் இருந்தனர்; வழிபாடுகளும்அருகியேனும் நிகழ்ந்து வந்தன; 2573 பார்க்க. தேவியார் திருக்கோயிலுக்குச் சென்று அவ்வப்போது வழிபடுதலையும் கோயிற் பணிகளையும் அரசன் முற்றும் மறுத்தானல்லன்; இவ்வாற்றாலெல்லாம் மாதேவியார் கொற்றவன் றனக்கும் கூறிச் சென்றமை முன் கூற்றோடு முரணாது அமையுமென்க; அற்றேல் அஃதாக, மாதேவியார் கூறிச் சென்றமையும், அதற்குக் கொற்றவன் மறுது இசைந்தமை யாதோ? எனின், அஃது அவன் மனநிலை; முன் விரித்தவாறு முற்றும் மாறியொழியாமையானும் திருவருட்டுணையானும் அமைவுடைத்தாயிற்றென்க. பின் சரித விளைவுகளும் கருதுக.*

வேறு

பிள்ளையார் மதுரையை அணைதல்

2546. திருநிலவு மணிமுத்தின் சிவிகையின்மேற் சேவித்து
வருநிலவு தருமதிபோல் வளரொளிவெண் குடைநிழற்றப்,
பெருகொளிய திருநீற்றுத் தொண்டர்குழாம் பெருகிவர
அருள்பெருக வருஞானத் தமுதுண்டா ரணைகின்றார் 648

தம் பரிசனங்கள் சூழத் தனித்தடையோடும் சென்று தம் பரிசனங்களாவார் - *மாதேவியார்க்குரிய அந்தப்புரத்துத் தனிப்பரிசனங்கள்; இவர்கள் பெருநற்பான்மை பெண்களாவார்.* ***தனித்தடை*** *- தனியாக அமைந்த திரை வீழ்த்த சிவிகையும் காவலாளர் முதலாயின அமைப்புக்கள்; 1758 பார்க்க. அரண்மனையின் புறத்தே செல்லும் போது அரச மாதேவிமார்கள் இவ்வாறு செல்வது முன்னாள் வழக்கு.* ***தடை****-காவல்; பிறரது நோக்கும் செயல் முதலியவை செல்லாவகை தடுக்கும் அமைப்புக்களாதலின் காவல் -* ***தடை*** *எனப்பட்டது; ''தடைபல புக்கபின்பு தனித் தடை நின்றதத்தன்'' (475)*

நம்பரை வணங்கி - திருவாலவாயுடைய இறைவரைக் கும்பிட்ட பின்னர்; அரசனுக்குச் சொல்லிப் போந்ததும் உண்மையே என்ற குறிப்பு: **வணங்குதல்** - பிள்ளையாரைத் தந்தருளியதன் பொருட்டு நன்றி; பின்னர் அரசனும் இக்கருத்தே பற்றித் துதித்தல் காண்க. *(765)*

நம்பரை - திருஞான சம்பந்தரை என்றுரைப்பாருமுண்டு. அது பொருந்தாமை யறிக.

தாமும் - மந்திரியார் வரவேற்றலுடன் தாமும் என உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை.

தனக்குக் கூறி—என்பதும் பாடம். *647*

2546. **(இ-ள்)** திருநிலவு... குடை நிழற்ற - சிவனது அருட் செல்வம் பொருந்திய அழகிய முத்துச் சிவிகையின் மேலே நின்று சேவித்துக்கொண்டு வருகின்ற நிலவு பொழியும் மதிபோல வளரும் ஒளியினை உடைய முத்து வெண்குடை நிழலைச் செய்யவும்; பெருகொளிய... வர - பெருகும் ஒளியினையுடைய திருநீற்றுத்தொண்டர் கூட்டம் பெருகிச் சூழ்ந்து வரவும்; அருள்பெருக... அணைகின்றார் - திரு அருள் பெருகும்படி வந்தவதரித்த சிவஞானத் தமுதுண்ட பிள்ளையார் மதுரையினை வந்தணைகின்றாராயினார்.

(வி-ரை) இப்பாட்டு ''மதுரைத் தொன்னகர் வந்தணைகின்றார்'' *(2528)* என்று முன்கூறி விடுத்த இடத்தின் தொடர்ச்சி; செய்யுள் யாப்பும் அஃதேயாகித் தொடர்புபட முன் நிறுத்திய கொச்சகக் கலிப்பாவினாலே மீண்டும் யாத்த நயமும் காண்க. இடைப்பட்ட எல்லாம் வேறாகி அறுசீர் விருத்தமாதலும் காண்க.

திருநிலவு - திரு - சிவனது அருட்பெருகும் திரு; சிவனருளால் வந்த திரு; **மணி** - அழகிய; மணியாகிய என்றலுமாம்.

2547. துந்துபிகண் முதலாய தூரியங்கள் கிளராமே
அந்தணரா மாதவர்க **ளாயிரமா மறையெடுப்ப,**
வந்தெழுமங் கலநாத மாதிரமுட் படமுழங்கச்
செந்தமிழ்மா ருதமெதிர்கொண் டெம்மருங்குஞ் சேவிப்ப, 649

சிவிகையின்மேற் சேவித்து வரும் மதிபோல் - குடைநிழற்ற - சிவிகையின் மேல் கவித்த முத்துக்குடை ஒரு மதிபோன்றிருந்தது; மதி அங்கு நிற்கும் இயைபு என்னை? எனின் மதியாதலின் மேனின்று சேவித்ததுபோல நின்றது என்பதாம்;குடைக்கு மதி மெய்பற்றி வந்த உவமம்; **சேவித்து வரும்** மதி என்றது தற்குறிப்பேற்றம்; மதிமுதல் வானவர் பிள்ளையாரைச் சேவித்து வரத்தக்கார் என்பதும் உட்குறிப்பு; *137 , 1395* வெள்-சருக்-*34* முதலியவை பார்க்க. ''சதுராணனனுஞ் சக்ராயுதனும், சந்த்ராதவரும் இந்த்ராதியரும், மதுரா புரிவா தறிவா மெனமேல் வரவந்தனன் வைதிக வாரணமே'' (தக்கயா); **மதி** - பாண்டியர் குல முதல்வன் என்பதும் குறிப்பு.

பெருகுஒளிய திருநீறு - இதுவரை ''பூதி சாதன விளக்கம் போற்றல் பெறுதொழிந்த'' நிலை மாறி, இனி அத்திருநீற்றின் ஒளி பாண்டிய நாட்டிற் பெருக நிகழ்வது குறிப்பு; ஏனைய ஒளிகள் யாவும் குறைந்தொழிய, அவ்வாறு குறைந்தழியாது நித்தமாய்ப் பெருகும் ஒளியாகிய திருநீறு என்ற கருத்தும் காண்க; ஞானம் பெருகும் ஒளி என்றலும் ஆம்.

பெருகிவர - அங்கங்கும் தொண்டர் கூட்டம் வந்து சார்ந்து பெருக. இனிப் பாண்டி நாட்டிற் பெருகி வரும்படி என்றலுமாம்.

வளரொளி வெண்குடை போல் நிழற்ற - அம்முத்தின் ஒளியே போலப் பெருகொளிய **திருநீற்றுத் தொண்டர் குழாம்**-புடை சூழ என்ற நயமும் காண்க; வெண்ணீற்றொளி போற்றி நின்று'' *(2114)* என்ற கருத்தைச் சிந்திக்க.

அருள்பெருக-அமுதுண்டார் - உலகில் சிவனருள் பெருகும்படி தாம் அமுதுண்டவர்; ஏனையோர் அமுதுண்டால் அஃது அவ்வவர்க்கே சில நலந் தந்தொழிய இவர் அமுதுண்டமை உலகில் யாவர்க்கும் சிவனருள் பெருகச் செய்தது; ''திருத்தோணி யமர்ந்த பிரானருள்பெருக'' ***(1923)***; ''தாவில்சரா சரங்களெல்லாஞ், சிவம் பெருக்கும் பிள்ளையார்'' ***(1924)***

வரும் - உலகில் வந்தவதரித்த; **அருள்பெருக வரும்** - சிவனருள் பெருகிப் பாண்டி நாட்டில் நிகழும் பொருட்டுவரும் என்ற குறிப்பும் காண்க.

வளர்ஞானத்தமுது—என்பதும் பாடம். *648*

2547. **(இ-ள்)** துந்துபிகள்... மறை எடுப்ப - துந்துபி முதலாகிய வாத்தியங்களின் ஓசை மேலெழாமல் அந்தணர்களாகிய மறை முனிவர்கள் அனந்தமாகிய வேதங்களை எடுத்தியம்பவும்; வந்தெழும்... முழங்க - வந்து எழுகின்ற மங்கல நாதங்கள் எல்லாத் திசைகளும் உட்பட முழங்கவும்; செந்தமிழ்... சேவிப்ப - செந்தமிழுடன் பொருந்தி வரும் தென்றற் காற்றும் எதிர்கொண்டு வரவேற்று எப்பக்கமும் சேவிப்பவும்,

2548. பண்ணியவஞ் சனைத்தவத்தாற் பஞ்சவனுட் டிடைப்பரந்த
எண்ணிலம ணெனும்பாவவிருஞ்சேனை யிரிந்தோட
மண்ணுலக மேயன்றி வானுலகுஞ் **செய்தபெரும்**
புண்ணியத்தின் படையெழுச்சி போலெய்தும் பொலிவெய்த. 650

(வி-ரை) தூரியங்கள் கிளராமே மறை எடுப்ப - தூரியங்கள் - மங்கலம் முழக்கும் பல வகைப் பெருவாத்தியங்கள்; **கிளராமே - ஓசை** மேலோங்காதபடி; உச்சத்தில் மறை முழக்குதலால் தூரியங்களின் ஓசை கீழ்ப்பட்டன என்பதாம்; **ஆயிரம் மாமறைகள்-ஆயிரம்**-மிகுதி குறித்தது; தூரியங்கள் கிளராமைக்குக் காரணம் காட்டியபடி; **எடுப்ப** - இனி அந்நாட்டில் எடுக்கும் பொருட்டு என்ற குறிப்பும் மறையொலியின் மிகுதிக் குறிப்புமாம்.

மங்கல நாதம் - மங்கல ஓசை முழக்கும் சங்கு, முரசம் முதலியவற்றின் நாதங்கள்; **மாதிரம்** - திக்குக்கள்; **உட்படுதல்** - நாதத்தின் பரப்பினால் திக்குக்களும் அகலும்படி விரிந்து செல்லுதல்;

செந்தமிழ்மாருதம் எம்மருங்கும் சேவிப்ப - செந்தமிழ் மாருதம் - செந்தமிழுடன் பொருந்தி வருகின்ற தென்றல்; தமிழுடன் பொருந்துதலாவது - செந்தமிழ் முனிவரது இருக்கையாகிய பொதிகையினின்றும் பிறந்து வருதல். "பிறந்ததெங்கள் பிரான் மலயத்திடை....மறம் பயின்றதெங் கோ**தமிழ் மாருதம்**" (313) என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க; தமிழ் மலையிற் பிறந்து தமிழ் நாட்டிற் பயின்று தமிழுடன் விரவிவருதலால் செந்தமிழ் ஞானசம்பந்தரைச் சேவிக்க வந்தது என்ற நயமும் காண்க; செந்தமிழ் ஞானத்தமிழைச் சேவித்தல் முறையாதலும் குறிப்பு.

எம்மருங்கும் - மாருதம் தென்றற் காற்றாகலின் தெற்கு நின்று வடக்கு நோக்கிப் பிள்ளையாரையும் உடன்வரும் நற்றவர் கூட்டத்தையும் எல்லாப் பக்கமும் சூழ்ந்து கொண்டு சேவித்தது. **மாருதம்** - பாண்டி நாட்டுக்குரித்தாதலும் குறிப்பு.

எதிர்கொண்டு - எதிர்வரவேற்றல் போல. **மாருதம் எதிர்கொண்டு சேவிப்ப** என்றது தற்குறிப்பேற்றம். **எதிர்கொள்ளுதல்**-வடக்கினின்றும் தெற்கு நோக்கி மதுரைக்கு வருவாரைத், தெற்கினின்றும் வடக்கு நோக்கிச் சென்று சூழும் நிலை உண்மையில் எதிர்கொண்டதாம் என்க. 649

2548. **(இ-ள்)** பண்ணிய... பரந்த - செய்த வஞ்சனை பொருந்திய தவம் முன்னிலையாகப் பாண்டிய நாட்டில் பரவிய; எண்ணில்... இரிந்தோட - எண்ணில்லாத சமணம் என்னும் பாவமாகிய பெரிய சேனை உடைந்து ஓடும்படியாக; மண்ணுலகமே யன்றி... செய்த - இந்நிலவுலகமேயல்லாமல் விண்ணுலகமும் கூடிச் செய்ததாகிய; பெரும்...பொலிவெய்த - பெரிய **புண்ணியமாகிய** படை எழுச்சி போலப் பொருந்திய பொலிவு உண்டாகவும்.

(வி-ரை) பண்ணியவஞ்சனைத்தவத்தாற்-பரந்த - பாண்டி நாட்டிற் சமணம் பரவுதற்குச் சமணர் செய்யும் வஞ்சச் சூழ்ச்சியாகிய போலித்தவம் ஒரு காரணமாயிற்று என்பது;

''கொல்லாமை மறைந்துறையு மமண்சமயங் குறுகுவார்'' (1302); ''தவமென்று பாயிடுக்கித் தலைபறித்து'' (1312); **வஞ்சனைத்தவ**மாவது உண்மையாயன்றிப் பிறரை வஞ்சித்தற் பொருட்டு தவவேடமும் செயலும் மேற்கொள்ளும் நிலை.

பரந்த பாவமெனும் இருஞ்சேனை இரிந்து ஓட - புண்ணியத்தின்படையெழுச்சி - பாவச் சேனையை ஓட்டப் புண்ணியப்படைஎழுந்து வரவேண்டுமென்ற நியதியினை உருவக முகத்தாற் குறித்தமை காண்க. ''அண்டர்நா டாள்வோநா மல்லற்படை வாராமே'' என்ற திருவாசகம், திருப்படை யெழுச்சிப் பகுதியின் கருத்துக்களை இங்கு வைத்துக் காண்க.

அமண் - பாவ இருஞ்சேனையை ஓடச்செய்ய மண்ணுலகும் வானுலகும் கூடிச் செய்த பெரும்புண்ணியத்தின் படைஎழுச்சி என்றதனுள் அமணர் செய்த பாவ வலிமை மண்ணுலகும் வானுலகும் செய்த பெரும் புண்ணிய ஈட்டத்தினாலன்றித் தொலைக்கலாகா அளவினது என்ற குறிப்புங் காண்க.

மண்ணும் விண்ணும் செய்த பெரும்புண்ணியமே திரண்டு பிள்ளையாரது வருகையின் எழுச்சியாகி வந்தது என்பதாம். இரண்டுலகினும் முற்செய் புண்ணியப் பயனாய்ப் பிள்ளையார் எழுந்தருளினர் என்பது கருத்து.

மண்ணுலகமேயன்றி வானுலகும் செய்த— ''வாழ்க வந்தணர் வானவரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீய தெல்லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே'' (திருப்பாசுரம்-1) என்று எழும் அருளாணையினால் மண்ணுலகமும் விண்ணுலகமும் தீமை நீங்கி யின்பவாழ்வு வாழ்வதற்கு இவ்வெழுச்சியே காரணமாய் நின்றமையால் மண்ணுலகோரும் விண்ணுலகோரும் செய்த புண்ணியப் பயனே இஃதென்றார்.

மண்ணும் விண்ணும் வாழ்வடைதல் பிள்ளையாரது அவ்வருளாணையினாலாவ தென்பது ''**உலக மின்புறச், சந்தவேள், விகண்முதல் சங்கரர்க்கு முன், வந்தவர்ச்சனை வழிபாடு** மன்ன'' (புரா 822) என்றும், ''வேள்வி நற்பயன் வீழ்புனலாவது, நாளு மர்ச்சனை நல்லுறுப் பாதலால், ஆளு மன்னனை வாழ்த்திய தர்ச்சனை, மூளு மற்றிவை **காக்கு முறைமையால்**'' (புரா 823) என்றும், ''ஆழ்க தீயதென் றோதிற் றயனெறி, வீழ்க வென்றது வேறெல்லா மரன் பெயர், சூழ்க வென்றது **தொல்லுயிர் யாவையும், வாழி யஞ்செழுத் தோதி வளர்கவே**'' (824) என்றும், ''சொன்ன **வையக முந்துயர் தீர்கவே**, யென்னு நீர்மை, **யிகபரத் திற்றுயர்**, மன்னி வாழுல **கத்தவர் மாற்றிட** முன்னர் ஞானசம்பந்தர் மொழிந்தனர்'' (புரா 825) என்றும், ''எங்களை வாழ முன்னா ளேடு வைகையினி லிட்டார்'' (1230) என்றும் அத்திருப் பாசுரத்தின் உள்ளுறையினை உலகங் கண்டுய்யும் பெருங்கருணையால் ஆசிரியர் விரிவுரையாற் கூறியருளிய வாற்றாலறிக.

பாவம் - ஓடச் செய்த புண்ணியத்தின் எழுச்சி - என்றது உயிர்கள் பல பிறவிகளில் செய்த முன்னைத் **தவத்தின்** புண்ணிய மேலீட்டினாலே தம் முதல்வனே குருவாய் எழுந்தருளி முன்னேவந்து ''இதுவரை ஐம்புலவேடர்க்குட்பட்டு வளர்ந்து அயர்ந்தனிர்; இறைவனது பேரருள் பெறுந் தகுதியுடையீர் நீவிர்; அவன் தன்மையிது; அவனை அடையும் நெறியிது; ''இனி இந்நெறியே சென்றங் கடைந்துய்ம்மின்'' என்றெல்லாம் காட்டியும் கூட்டியும் வாழ்விப்பன் என ஞானசாத்திரம் உபதேசிக்கும் (போதம் - 8 சூ.) உண்மைகளை இங்குக்

2549. துன்னுமுழு வுடற்றுகளாற் சூழுமுணர் வினிற்றுகளால்
அன்னெறியிற் செறிந்தடைந்த **வமணமாசு கழுவுதற்கு**
மன்னியொளிர் **வெண்மையினுற் றூய்மையினு**ல் வழுதியர்தங்
கன்னிநாட் டிடைக்**கங்கை யணைந்ததெனுங் கவின்காட்ட,** 651

கருதிக்காண்க; பிள்ளையார் எழுந்தருளும் இந்நிலைமையினை; ''வெப்புப் பிறவியாலே விடுபயல் வீடளித்த, **சம்பந்த மாமுனி**யென் றம்பிரான் - அம்புவிபோர், போற்றுந் திருவைய...வாதேவன் **பவனிவரக் கண்டு** வல்வினையேன், ஏறெரு பேத்துதல்கண் **டேத்தினேன்** - தாமென்னைப், பார்த்தான் பழயவினைப் பஞ்சமலக் கொத்தையெல்லா, நீத்தா னினைவுதேவ முக்தி மென் எத்தரிய, **தொண்ணூற் றறுவர்பயி ரெக்கிற் றுவக்கறுத்தான்,** கண்ணூற தேனமுதங் காட்டுமென் - **வெண்ணீறும்,** வேடமும் பூசையுமே மெய்யென்றுன் பொய்யென்றுன், மாமை பயர் வார்க்கை மனையுமே - நாடறிய, வஞ்செழுத்தினுள்ளீ றிவித்தா னஞ்செழுத்தை, நெஞ்சபூக்கி நேய மயலாக்கி...நிறைமேவி, வாழ்பவர்போன் மண்ணுமியபில் மன்னுமுரா மயப்பறித்துத், தாழ்வுநினையாது துகி ருனகற்றி... யாழ்விக்கு, மஞ்சு மகற்று மதுமுத்தி யென்றுமைக்கும், **வஞ்ச மணன் பாழி மருவாதே** - செஞ்சொல்புனை, யாதிமறை யோதி யதன்பயனொன் றும்மறியா, வேதியர்சொன் மெய்யென்று மேவாதே - ஆதியின் மேலுற்ற திருநீறுஞ் சிவாலயமு முள்ளத்துச், செற்ற புலயர்பாற் செல்லாதே - நற்றவஞ்சேர், வேடமுமன் பூசையருன் மெய்ஞ்ஞான மில்லாத, மூடருடன் கூடி முயங்காதே - நீ, வழித்துப் பிறப்ப தறியா தரனைப், பழித்துத் திரிபவரைப் பாராதே - விழித்தருளத், தந்தெம்மை யாண்ட ருளுஞ் **சம்பந்த மாமுனிவன்...**'' என்று நெஞ்சுவிடுதூதினுள் உமாபதி சிவாசாரியர் அருளிச் செய்த கருத்துக்களின் கண்கொண்டு கும்பிட இதன் உள்ளுறையும் உண்மைத்திறமும் தெற்றென விளங்கும். 650

2549. **(இ-ள்)** துன்னும்... துகளால் - நெருங்கிப் பொருந்தி முழுவுடலில் உள்ள அழுக்கினுலும், தீய சூழ்ச்சியை உடைய உணர்வின் மாசினுலும்; அல் நெறியில்... கழுவுதற்கு - நெறியல்லா நெறியில் முழுதும் சேர்ந்த சமணம் என்னும் அழுக்கினைக் கழுவிப் போக்கித் தூய்மையாக்குதற்காக; மன்னியொளிர்...தூய்மையினுல் - நிலைபெற்று விளங்கும் வெண்மையினுலும் தூய தன்மையினுலும்; கங்கை - கங்கை நதியே; வழுதியர்... இடை - பாண்டியரது கன்னி நாட்டிலே; அணைந்தது எனும் கவின் காட்ட - வந்து சேர்ந்தது போன்ற அழகினை எடுத்துக் காட்டவும்.

(வி-ரை) துன்னுமுழு உடல்துகள் - முழுஉடலும் துன்னும் துகள் என்க. இங்குத்துகள் என்றது அழுக்கு. இஃது உடல் கழுவா மையானும், ''வேர்வந்துற மாசூர்தர வெயினின்றுழலு''தல், அடுபாறை கிடத்தல், சுடுபாறை கிடத்தல், பல் துலக்காமை முதலிய சமணருடைய சமய வழக்கங்களானுமாவது; ''கழுவா வுடலம்'' (11-திருமுறை - ஆளு-அந்த-28).

சூழும் உணர்வினில் துகள் சூழ்தல் - வஞ்சகச் சூழ்ச்சி புரிதல். **சூழும் உணர்வு** - வஞ்சனைகளை எண்ணும் அறிவு.

அல்நெறியிற் செறிந்து - அல்நெறியாவது நெறியல்லாத அவநெறிதன்னைத் தவநெறியென்று கொண்டு பிடித்து ஒழுகுதலால்; **செறிந்து அடைந்த** - செறிதலால் போந்த; **அல்நெறியில் செறிதல்** - அவநெறியே கடைப்பிடித்து விடாது பற்றிப் பரப்புதல்; **அல்** - இருள் என்று கொண்டு, ஒளிக்குமாறாகிய இருள் நெறி என்றலும் குறிப்பு.

அமண்மாசு கழுவுதற்குக்—கங்கை அணைந்ததெனும்-மாசு கழுவ நீர் வேண்டுமாதலின், இங்கு அமண் சமயப் பரப்பை மாசு என்றுருவகித்ததற்கேற்ப அதனைப் போக்கும் பிள்ளையாரது வருகை எழுச்சியினைக் **கங்கை** என்றுருவகித்தார்; மிகப் பெரிய மாசு கழுவ மிகப் பெரிய நீர் வேண்டப்படும் என்ற குறிப்புமாம்.

வெண்மையினால் தூய்மையினால் கங்கை யணைந்தது எனும் - பிள்ளையாரது வருகை எழுச்சிக்கும் கங்கைக்கும் பொதுத்தன்மை இவை யிரண்டினும் உள்ள வெண்மையும் தூய்மையுமாம்; **வெண்மை** திருநீற்றினொளியாலும், தூய்மை அகத்தூய்மை - திருவைந்தெழுத்தாலும் ஆம்; ''மாசிலாத மணிதிகழ் மேனிமேற் பூசுநீறு போலுள்ளும் புனிதர்கள்''(141)

முழுவுடற்றுகளும் உணர்வினிற்றுகளும்-''வடிவுபோல் மனத்து மாசு துன்னிய வமணர்'' (2660) என்பது போல உண்மாசும் புறமாசும் குறித்தலால் அவற்றை முறையே புறந்தூய்தாக்கும் **வெண்மை**யாலும், அகந்தூய்தாக்கும் **தூய்மையினா**லும் நிறைந்த பொருள் எழுந்து போந்து வந்தது என்றதாம். ''உண்மாசு கழுவுவது நீறென்றே'' (திருவிளை - புரா - விருத் - பட).

வெண்மையினால் - தூய்மையினால் - கங்கை, அணைந்தது-கங்கை வெண்ணிற முடையது என்பது ''திங்களி னூறலொத்த, தாடிய நீறது கங்கையுந் தெண்ணீர் யமுனையுமே, கூடிய கோப்பொத்த தாலுமை பாகமெங் கொற்றவற்கே''(பொன்-அந்-90) என்ற கழறிற்றறிவார் நாயனார் திருவாக்கானுமறிக; கங்கையின் தூய்மையாவது எத்துணை நாட்கள் வைத்திருப்பினும் தனது தன்மை கெடாது காட்டும் நிலையானும், தன்னுட் பெய்த பொருள்களையும் மூழ்கிய உயிர்களையும் தூய்மைப்படுத்தும் தன்மையாலும் அறியப்படும்; இதன் நீரினைப் பரிட்சித்தறிந்த மேற்றிசைப் பௌதிகநூல் விஞ்ஞானிகள் இந்நீரினுள் ஒருவகை உயிர்ச்சத்து இருத்தலே அது கெடாதிருத்தற்குக் காரணமாமென்று ஆராய்ந்தறிகின்றனர்.

மன்னி ஒளிர் வெண்மை - திருநீற்றின் ஒளியாதலின் நிலைபெற்ற விளக்க முடைத்தென்றார்; **மன்னிஒளிர்** என்பதனைத் **தூய்மையு**டனும் கூட்டுக.

கன்னிநாட்டிடைக் கங்கை யணைதற்கியை பென்னையோ! எனின் **மாசுகழுவு தற்**குப் போந்த தென்பது குறித்தார். இவ்வாறு கங்கை முதலிய பெருந்தீர்த்தங்கள் ஒவ்வோரிடங்களில் ஒவ்வொரு நிமித்தம் பற்றி ஓரோர் காலங்களிற் போதுவதுண்டென்பது நூல் வழக்குக்களானும், அனுபவத்தாலும் அறியப்பட்டவுண்மை; ''பூ மருவுங் கங்கை முதற் புனிதமாம் பெருந்தீர்த்தம், மாமகந்தா னாடுதற்கு வந்து வழி படுங்கோயில்'' (2307) என்றும், ''தாவிமுதற் காவிரிநல் யமுனை கங்கை சரசுவதி பொற்றாமரைபுட் கரணி தெண்ணீர்க், கோவியொடு குமரி**வரு தீர்த்தஞ்** சூழ்ந்த குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே; (தேவா - தாண்) என்றும் வரும் திருவாக்குக்களும், தில்லைப் பரமானந்தக் கூபத்தினுள் ஐப்பசி முன்பக்க

2550. பானல்வயற் றமிழ்நாடு பழிநாடும் படிபரந்த
மானமிலா **வமணென்னும் வல்லிருள்போய் மாய்வதனுக்**
கானபெரு கொளிப்பரப்பா லண்டமெலாங் கொண்டதொரு
ஞானமணி விளக்கெழுந்து வருவதென நலம்படைப்ப. 652

நவமியில் கங்கை வருவதென்றும் அந்நாளில் எடுத்து வைத்த அத்தீர்த்த நீர் ஓராண்டு வரை கெடாதிருக்குமென்றும் உள்ள வழக்கும், திருக்குருகாவூரில் பாற்கிணறு என்னும் தீர்த்தத்தில் தை அமாவாசையில் கங்கை அணைவதென்னும் வழக்கும் அன்று அந்நீர் பால் நிறமாக ஆகும் அற்புதமும் முதலியவை இங்கு வைத்துக் கருதற்பாலன.

வழுதியர் - என்ற பெயராற் குறித்தது அஞ்ஞான்று வழுவியதனால் தீமை பெற்ற அரசன் மாசு கழுவித் தூயனாகவுள்ள குறிப்புப் பெற வைத்த சொன்னயம். 651

2550. **(இ-ள்)** பானல்... பரந்த - கருங்குவளை மலர்களையுடைய வயல்கள் சூழ்ந்த தமிழ் நாடானது பழியைச் சேரும்படி அங்குப் பரவிச் சூழ்ந்த; மானமிலா...மாய்வதனுக்கு - மானமில்லாத அமணர் என்னும் வலிய இருளானது கெட்டுப் போய் மாய்ந்தொழிவதற்காக; ஆனபெருகு... நலம்படைப்ப - ஆயின பெருகிய ஒளியின் பரப்பினாலே எல்லா அண்டங்களையும் தனது நிறைவினுள் அடக்கிக் கொண்டதாகிய; ஞானமணி.....படைப்ப - ஒப்பற்றதொரு ஞானமணிவிளக்கு எழுந்துவருவது போலும் நன்மையைச் செய்யவும்.

(வி-ரை) தமிழ்நாடு பழிநாடும்படி - தமிழ்நாடு தன் பெயருக்கேற்ப உய்தி தரும் தமிழினை நாடாது பழிபெறும் வினையை நாடும்படியாக என்றது குறிப்பு; **தமிழ்நாடும்** - என்று உயர்வுசிறப்பு உம்மை தந்து பாடங்கொள்வாருமுண்டு.

மானமிலா அமணென்னும் வல்லிருள் - மானம் - "எஞ்ஞான்றும் தந்நிலையிற் றாழாமையும் தெய்வத்தாற் றாழ்வு வந்துழி யுயிர்வாழாமையுமாம்" என்பர் ஆசிரியர் பரிமேலழகர்; "பண்ணிய வஞ்சனைத்தவ" முடையாராதலானும், அரசுகளது சரிதம், பிள்ளையாரது சரிதம் முதலிய வரலாறுகளால் அறியப்படுமாறு அரசன் பால் வஞ்சனை செய்து சித்திரித்துப் பொய் முதலியவை சூழ்தலானும், தம் நிலையாகிய கொல்லாமையை விடுத்துக் கொலை முதலிய மறங்களைச் செய்யத் துணியும் வரலாறுகளாலும், பிறவாற்றாலும் இவ்வமணர்கள் **மானமிலார்** என்று கூறப்பட்டனர்.

வல்லிருள் போய் மாய்வதனுக்கு - மாயை சாலவல்லவர்களாதலின் **வல்லிருள்** என்றார்.

மானம் - அளவு என்று கொண்டு, **மானமிலா** வல்லிருள் என்றலுமாம்.

இருள்போய் மாய்தலாவது - ஒளியின் முன் வலியிழந்து மறைந்து நிற்றல்; மாயாத இருள் (ஆணவமலம்) போலன்றி இது மாயும் இருள் என்றதாம்.

ஆன - ஆயின; ஆக்கமாவது திருவருள் வலிமையினால் அத்தன்மைத்தாதல்; "என் உளமே புகுந்த வதனால்" "திரு வால வாயர னிற்கவே" "வாது செயத்திருவுள்ளமே" வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே" என்பனவாதி திருவாக்குக்களும் வரலாறுகளும் காண்க.

பெருகு...ஞானமணி விளக்கு - ஒவ்வோர் அண்டப் பகுதியினும் ஒவ்வோர் இரவி - மதி - முதலாகிய ஒளிகள் புற இருளை நீக்க அமைந்து நிற்கவும், சிவனது சித்தாகிய ஞான

2551. புரசைவயக் கடகளிற்றுப் பூழியர்வண் டமிழ்நாட்டுத்
தரைசெய்தவப் பயன்விளங்கச் சைவநெறி தழைத்தோங்க
வுரைசெய்திருப் பேர்பலவு மூதுமணிச் **சின்னமெலாம்**
''பரசமய கோளரிவந் தா''னென்று பணிமாற, 653

வொளியொன்றே எல்லா அண்டங்களினும் பரந்து அகவிருள் துரந்து பொய்ந்நீக்கி மெய்யினைப் புலப்படுத்துவதாகலான் **அண்ட மெலாங்கொண்டது** என்றும், **ஒரு** என்றும், **ஞானவிளக்கு** என்றும் கூறினர்; **மணி விளக்கு** என்றது அந்தச் சிவசித்தாகிய ஞானம் கட் புலப்படாது நிறைந்து விளங்கவும், பிள்ளையாராகிய இந்த ஞானவிளக்குக் கட்புலப்படுவதாய் எழுதல் வருதல் முதலிய செயல்களுக்கிலக்காய் மனங் கவரும் அழகு பொருந்த வெளிப்படுதல் குறித்தது.

பெருகுஒளி - மேலும் மேலும் பெருகும் ஒளி.

நலம் படைப்ப-முன்னர்ப் **பொலிவெய்த** *(2548)* என்றும், **கவின் காட்ட** *(2549)* என்றும் கூறிய ஆசிரியர் இங்கு **நலம் படைப்ப** என்றார். முன் கூறிய பாவம் இரிதலும் மாசு கழுவுதலும் சாதன நெறிகளின் பின் முதலில் வரும் பயன்களாவும், இருள் போய் ஞானம் வருதல் முடிந்த பயனுகவும் உள்ள நிலை குறிக்க; இருணீக்கமும் ஞான விளக்கமுமே உடனிகழ்வனவாய் நிறைந்த பெருநலமாதல் காண்க. 652

2551. **(இ-ள்)** புரசை... பயன்விளங்க - கழுத்துக் கயிற்றையும் வெற்றியினையும் உடைய மதம்பொருந்திய யானைகளையுடைய பாண்டியர்களது தமிழ் நாட்டின் நிலம்செய்த தவத்தின் பயன் விளங்கவும்; சைவநெறி தழைத்தோங்க - சைவநெறி தழைத்தோங்கும் பொருட்டும்; உரைசெய்... பணிமாற - எடுத்துச் சொல்லும் திருப்பெயர்கள் பலவற்றையும் ஊதுகின்ற முத்துச் சின்னங்கள் யாவும் ''பரசமய கோளரி வந்தான்'' என்று பணிமாறவும்;

(வி-ரை) புரசை...பூழியர் - இதுவரை தாழ்வு பொருந்திய அரசு இனி வெற்றி பெற்றுயரவுள்ள நிலையின் குறிப்பு.

வண்தமிழ் - தமிழ் இகபரமாகிய எல்லாப் பயன்களும் தரும் குறிப்பு.

தரைசெய் தவப் பயன் - தரை - தரையில் உள்ளோர் - பாண்டி நாட்டார்; அந் நிலமகள் செய்த தவங் காரணமாக அதில் பிள்ளையார் எழுந்தருளித்தீண்டப் பெற்றது என்ற குறிப்புமாம்; ''தருமேவு மலைமகளுஞ் சலமகளு மறியாமற், திருமேனி முழுதுநில மகடீண்டித்திளைப்பெய்த'' *(திருவிளை - மண்சும - பட - 28)*; **பயன் விளங்க** - முன்னம் ஒடுங்கி யிருந்த பயன் இப்போது வெளிப்பட்டு விளக்கமடைய.

விளங்கச் சைவநெறி தழைத்தோங்க - விளங்கும்படி சைவம் தழைத்து ஓங்க என்றது சைவ நெறியினின்றும் தழைத்தலே தரையின்பயன் என்றபடி.

விளங்க - ஓங்க - வந்தான் - என்று பணிமாற எனக் கூட்டி உரைக்க.

உரை செய்திருப்பேர் பலவும் ஊதும் வாயினால் சொல்லத்தக்க பிள்ளையாரின் திருப்பெயர்கள் பலவற்றையும் எடுத்து உரைத்த ஒலியால் ஊதி உலகுக்கு அறிவிக்கும்; **உரை**

2550. பானல்வயற் றமிழ்நாடு பழிநாடும் படிபரந்த
மானமிலா **வமணென்னும் வல்லிருள்போய் மாய்வதனுக்**
கானபெரு கொளிப்பரப்பா லண்டமெலாங் கொண்டதொரு
ஞானமணி விளக்கெழுந்து வருவதென நலம்படைப்ப. 652

நவமியில் கங்கை வருவதென்றும் அந்நாளில் எடுத்து வைத்த அந்தீர்த்த நீர் பல்லாண்டளவு கெடாதிருக்குமென்றும் உள்ள வழக்கும், திருக்குருகாவூரில் பாற்கிணறு என்னும் தீர்த்தத்தில் தை அமாவாசையில் கங்கை அணைவதென்னும் வழக்கும் அன்று அந்நீர் பால் நிறமாக ஆகும் அற்புதமும் முதலியவை இங்கு வைத்துக் கருதற்பாலன.

வழுதியர் - என்ற பெயராற் குறித்தது அந்நான்று வழுதியாகிய நீறு பெற்ற அரசன் மாசு கழுவித் தூயனாகவுள்ள குறிப்புப் பெற வைத்த தொன்மையால். 651

2550. **(இ-ள்)** பானல்... பரந்த - கருங்குவளை மலர்களையுடைய வயல்கள் சூழ்ந்த தமிழ் நாடானது பழியைச் சேரும்படி அங்குப் பரவிச் சூழ்ந்த; மானமிலா...மாய்வதனுக்கு - மானமில்லாத அமணர் என்னும் வலிய இருளானது கெட்டுப் போய் மாய்ந்தொழிவதற்காக; ஆனபெருகு... நலம்படைப்ப - ஆயின பெருகிய ஒளியின் பரப்பினாலே எல்லா அண்டங்களையும் தனது நிறைவினுள் அடக்கிக் கொண்டதாகிய; ஞானமணி......படைப்ப - ஒப்பற்றதொரு ஞானமணிவிளக்கு எழுந்துவருவது போலும் நன்மையைச் செய்யவும்.

(வி-ரை) தமிழ்நாடு பழிநாடும்படி - தமிழ்நாடு தன் பெயருக்கேற்ப உய்தி தரும் தமிழினை நாடாது பழிபெறும் வினையை நாடும்படியாக என்றது குறிப்பு; **தமிழ்நாடும்** - என்று உயர்வுசிறப்பு உம்மை தந்து பாடங்கொள்வாருமுண்டு.

மானமிலா அமணென்னும் வல்லிருள் - மானம் - "எஞ்ஞான்றும் தந்நிலையிற் றாழாமையும் தெய்வத்தாற் றாழ்வு வந்துழி யுயிர்வாழாமையுமாம்" என்பர் ஆசிரியர் பரிமேலழகர்; "பண்ணிய வஞ்சனைத்தவ" முடையாராதலானும், அரசுகளது சரிதம், பிள்ளையாரது சரிதம் முதலிய வரலாறுகளால் அறியப்படுமாறு அரசன் பால் வஞ்சனை செய்து சித்திரித்துப் பொய் முதலியவை சூழ்தலானும், தம் நிலையாகிய கொல்லாமையை விடுத்துக் கொலை முதலிய மறங்களைச் செய்யத் துணியும் வரலாறுகளாலும், பிறவாற்றானும் இவ்வமணர்கள் **மானமிலார்** என்று கூறப்பட்டனர்.

வல்லிருள் போய் மாய்வதனுக்கு - மாயை சாலவல்லவர்களாதலின் **வல்லிருள்** என்றார்.

மானம் - அளவு என்று கொண்டு, **மானமிலா** வல்லிருள் என்றலுமாம்.

இருள்போய் மாய்தலாவது - ஒளியின் முன் வலியிழந்து மறைந்து நிற்றல்; மாயாத இருள் (ஆணவமலம்) போலன்றி இது மாயும் இருள் என்றதாம்.

ஆன - ஆயின; ஆக்கமாவது திருவருள் வலிமையினால் அத்தன்மைத்தாதல்; "என் உளமே புகுந்த வதனால்" "திரு வால வாயர னிற்கவே" "வாது செயத்திருவுள்ளமே" வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே" என்பனவாதி திருவாக்குக்களும் வரலாறுகளும் காண்க.

பெருகு...ஞானமணி விளக்கு - ஒவ்வோர் அண்டப் பகுதியினும் ஒவ்வோர் இரவி - மதி - முதலாகிய ஒளிகள் புற இருளை நீக்க அமைந்து நிற்கவும், சிவனது சித்தாகிய ஞான

2551. புரசைவயக் கடகளிற்றுப் பூழியர்வண் டமிழ்நாட்டுத்
தரைசெய்தவப் பயன்விளங்கச் சைவநெறி தழைத்தோங்க
வுரைசெய்திருப் பேர்பலவு மூதுமணிச் **சின்னமெலாம்**
''பரசமய கோளரிவந் தா''னென்று பணிமாற, 653

வொளியொன்றே எல்லா அண்டங்களினும் பரந்து அகவிருள் துரந்து பொய்ந்நீக்கி மெய்யினைப் புலப்படுத்துவதாகலான் **அண்ட மெலாங்கொண்டது** என்றும், **ஒரு** என்றும், **ஞானவிளக்கு** என்றும் கூறினர்; **மணி விளக்கு** என்றது அந்தச் சிவசித்தாகிய ஞானம் கட் புலப்படாது நிறைந்து விளங்கவும், பிள்ளையாராகிய இந்த ஞானவிளக்குக் கட்புலப்படுவதாய் எழுதல் வருதல் முதலிய செயல்களுக்கிலக்காய் மனங் கவரும் அழகு பொருந்த வெளிப்படுதல் குறித்தது.

பெருகுஒளி - மேலும் மேலும் பெருகும் ஒளி.

நலம் படைப்ப-முன்னர்ப் **பொலிவெய்த** *(2548)* என்றும், **கவின் காட்ட** *(2549)* என்றும் கூறிய ஆசிரியர் இங்கு **நலம் படைப்ப** என்றார். முன் கூறிய பாவம் இரிதலும் மாசு கழுவுதலும் சாதன நெறிகளின் பின் முதலில் வரும் பயன்களாவும், இருள் போய் ஞானம் வருதல் முடிந்த பயனுகவும் உள்ள நிலை குறிக்க; இருணீக்கமும் ஞான விளக்கமுமே உடனிகழ்வனவாய் நிறைந்த பெருநலமாதல் காண்க. 652

2551. **(இ-ள்)** புரசை... பயன்விளங்க - கழுத்துக் கயிற்றையும் வெற்றியினையும் உடைய மதம்பொருந்திய யானைகளையுடைய பாண்டியர்களது தமிழ் நாட்டின் நிலம்செய்த தவத்தின் பயன் விளங்கவும்; சைவநெறி தழைத்தோங்க - சைவநெறி தழைத்தோங்கும் பொருட்டும்; உரைசெய்... பணிமாற - எடுத்துச் சொல்லும் திருப்பெயர்கள் பலவற்றையும் ஊதுகின்ற முத்துச் சின்னங்கள் யாவும் ''பரசமய கோளரி வந்தான்'' என்று பணிமாறவும்;

(வி-ரை) புரசை...பூழியர் - இதுவரை தாழ்வு பொருந்திய அரசு இனி வெற்றி பெற்றுயரவுள்ள நிலையின் குறிப்பு.

வண்தமிழ் - தமிழ் இகபரமாகிய எல்லாப் பயன்களும் தரும் குறிப்பு.

தரைசெய் தவப் பயன் - தரை - தரையில் உள்ளோர் - பாண்டி நாட்டார்; அந் நிலமகள் செய்த தவங் காரணமாக அதில் பிள்ளையார் எழுந்தருளித்தீண்டப் பெற்றது என்ற குறிப்புமாம்; ''தருமேவு மலைமகளுஞ் சலமகளு மறியாமற், திருமேனி முழுதுநில மகடீண்டித்திளைப்பெய்த'' *(திருவிளை - மண்சும - பட - 28)*; **பயன் விளங்க** - முன்னம் ஒடுங்கி யிருந்த பயன் இப்போது வெளிப்பட்டு விளக்கமடைய.

விளங்கச் சைவநெறி தழைத்தோங்க - விளங்கும்படி சைவம் தழைத்து ஓங்க என்றது சைவ நெறியினின்றும் தழைத்தலே தரையின்பயன் என்றபடி.

விளங்க - ஓங்க - வந்தான் - என்று பணிமாற எனக் கூட்டி உரைக்க.

உரை செய்திருப்பேர் பலவும் ஊதும் வாயினல் சொல்லத்தக்க பிள்ளையாரின் திருப்பெயர்கள் பலவற்றையும் எடுத்து உரைத்த ஒலியால் ஊதி உலகுக்கு அறிவிக்கும்; **உரை**

வேறு

2552. இப்பரி சணையுஞ் சண்பையர் பெருமா
னெழுந்தரு ளும்பொழு திசைக்கும்
ஒப்பினித் திலப்பொற் றனிப்பெருங் காள
முலகுய்ய வொலித்தெழு மோசை
செப்பரும் பெருமைக் **குலச்சிறை யார்தஞ்**
செவிநிறை அமுதெனத் தேக்க
அப்பொழு தறிந்து தலத்தின்மேற் பணிந்தே
யளப்பருங் களிப்பின ராஞர். 654

செய் *- உரைக்கத் தக்க; பிள்ளையாரது திருப்பெயர்களை மக்கள் வாயார உரைசெய்து உய்யத்தருவன என்பது; "ஞானசம் பந்த ரென்னு நாமமந் திரமுஞ் சொல்லி" (2619).*

மணிச் சின்னமெலாம் *- சிவனருளிய முத்துக்களாலாகிய காளம், தாரை சின்னம் என்ற எல்லாம்;* ***மணி*** *- முத்தினைக் குறித்தது.*

சின்னம் - பொதுப் பெயராய் வந்தது; ***ஊதும்*** - *இவை பேர் பலவும் ஊதுகின்ற வகைகளை 2119—2120—2121 பாட்டுக்களிற் காண்க.*

பணிமாறுதல்-*ஊதுதல்;* சின்னங்கள் ஒலிசெய்தற்கு வழங்கும் மரபு வழக்கு.

பரசமய கோளரி வந்தான் - இனி இந்நாட்டிற் பிள்ளையார் திருவருள் வெற்றி செய்தருளும் நிகழ்வு பற்றி இத்தன்மையால் எடுத்துக்கூறி ஊதின.

புரசை - *யானைக் கழுத்துக் கயிறு;* ***வயம்*** - வெற்றி.

கடம் - மதம்; மதமுடைமை யானையின் சிறப்பு. *653*

2552. **(இ-ள்)** இப்பரிசு... எழுந்தருளும்பொழுது - இவ்வாறாகிய பரிசுகளுடன் அணைகின்ற சீகாழித் தலைவர் எழுந்தருளிவரும் அப்பொழுது; இசைக்கும்...ஓசை- இசைக்கின்ற ஒப்பில்லாத முத்துக்களாலாகிய அழகிய தனிப்பெருங்காளமானவை உலகமுய்ய எடுத்துச் சொல்லுதலால் எழுகின்ற ஓசையானது; செப்பரும்...தேக்க- சொல்லுதற்கரிதாகிய பெருமையுடைய குலச்சிறை நாயனாரின் திருச்செவிகளில் நிறையும் அமுதம் போலப் பெருகியிட; அப்பொழுது... ஆனார் - அப்பொழுதே அறிந்து நிலத்தின் மேல் மேனிபட வீழ்ந்து பணிந்து அளத்தற்கரிய மகிழ்ச்சியையுடையவராயினார்.

2547 முதல் 2552 வரையிலான ஆறு பாடல்களும் ஒரு பொருள்மேல் வந்து தொடர்ந்து ஒரு பொருள் கொண்டுரைக்க நின்றன.

(வி-ரை) இப்பரிசு - முன் ஐந்து பாட்டுக்களினும் கூறிய தன்மை பொருந்த; இப்பரிசு - அணையும் பெருமான் எழுந்தருளும் பொழுது என்க.

எழுந்தருளும் பொழுது - அவர் என்ற எழுவாய் வருவித்துக் கொள்க; **அணையும்** - அணைகின்ற என எச்சமாக உரைக்க.

ஒப்பில்...ஓசை - காளம் - எக்காளம் என்பர்; இதுமிக உரத்த ஓசையுடன் பிள்ளையாரது திருநாமத்தை எடுத்துக்கூறி "இவர் உலகுய்ய வந்தார்" என்ற பொருள்பட இசைப்பது: நெடுந்தூரத்துள்ளோரும் செவிப்புலப்படக் கேட்க உள்ளது; உருவத்தானும் பெரிது; ஆதலின் இதனை வேறு பிரித்துக் **தனிப் பெருங் காளம்** என்ற சிறப்படைமொழி தந்தோதினர்; முன் "**தனிக்காளம்** வையமேழுடன் மறைகளு நிறைதவத் தோரு, முய்ய ஞானசம்பந்தன் வந்தான்" *(2119)* என்றதற் கேற்ப ஈண்டும் **உலகுய்ய ஒலித்து எழும் ஓசை** என்றார்; **உலகுய்ய ஓசை எழுதலாவது** அதனைக்கேட்டு மக்கள் வந்தணைந்து உய்தி பெறுதல்.

செவிநிறை அமுதுஎன - பயன்பற்றி வந்த உவமை.

தேக்குதல் - நிறைதல்; **ஓசை - தேக்க** - என்க.

அப்பொழுது - அப்பொழுதே ஏகாரம் தொக்கது.

தலத்தின் மேற்பணிந்தே - கண்ணுற் காணாராயினும் ஓசை கேட்ட பொழுதே நினைவு பிள்ளையார்பாலும் திருக்கூட்டத்தின்பாலும் சென்று சேர அகக் கண்ணுற் கண்டு நிலத்தின் வீழ்ந்து வணங்கினார். "நெஞ்சினி னிறைந்த வார்வமுன் செல்லக் கண்டு" *(2553)* என்பது காண்க; கேட்ட பொழுதே அன்பு பெருகும் நிகழ்ச்சி யுண்டாதல் தலையன்பின்றிறம். தூரத்தே கண்டபோது வணங்குதல் மேற்பாட்டிற் கூறுவார். "வெற்றவே யடியா ரடிமிசை வீழும் **விருப்பினன்**" (தேவா) என்று இவரது விருப்பமாகிய திருவுள்ளநிலைபற்றிப் பிள்ளையார் திருவாக்காற் பாராட்டப்பட்டதும், இவர்தம் புராணத்துரைத்தனவும் பார்க்க.

அறிந்து அப்பொழுதே பணிந்து என்க.

இப்பரிசு - தூரியங்கள் கிளராமே மறைகள் எடுப்பவும்; தென்றல் எதிர்கொண்டு சேவிப்பவும் *(2547)*; அமண் பாவச்சேனை இரிந்தோட மண்ணும் விண்ணும் செய்த புண்ணியப் படை யெழுச்சி போலப் பொலியவும் *(2548)*; அமணவல்லிருள் போய் மாய்வதற்கு அண்டமெலாம் பரந்த கவின் காட்டவும் *(2549)*; அமணவல்லிருள் போய் மாய்வதற்கு அண்டமெலாம் பரந்த ஞானமணி விளக்கு எழுந்து வருவது எனும் **நலம் படைப்பவும்** *(2550)*; சைவம் ஓங்கப் பரசமய கோளரிவந்தான் என்று சின்னமெல்லாம் பணிமாறவும் *(2551)*; ஆக **இப்பரிசு** என்று இவ்வாறு பாட்டுக்களைத் தொடர்புபடுத்திக் கொள்க. இவ்வாறன்றிச் சேவிப்ப அணைகின்றார்; பொலிவெய்த அணைகின்றார்; கவின்காட்ட அணைகின்றார்; நலம்படைப்ப அணைகின்றார் என்று தனித்தனி முடித்தலும், சேவிப்ப - எய்த - காட்ட - படைப்ப - பணிமாற **அணைகின்றார்** என்று முன் பாட்டுடன் கூட்டி முடித்தலுமாம்.

அணையும் - அணைகின்றார் என முன் நிகழ்காலத்தாற் கூறினார்; பிள்ளையாரது அணைதலாகிய செயலின் பயன் அன்று மட்டுமன்றி முக்காலமுந் தோன்றுமியற்கை யுடையதாதலின் மீண்டும் நிகழ்காலத்துப் பொருணிலைமையுடைய **செய்யு**மென்னும் வாய்பாட்டினால் **அணையும்** என்றார்; "முந்நிலைக் காலமுந் தோன்று மியற்கை யெம்முறைச் சொல்லு **நிகழுங் காலத்து, மெய்ந்நிலைப் பொதுச்சொற்** கிளத்தல் வேண்டும்" (தொல்-சொல்-வினை 43) என்பதிலக்கணம்; இது முக்காலமுந் தோன்று மியல்பினை, இக்கருத்துப் பற்றியே பின்னர்க் குலச்சிறையாரது திருவாக்கில் விரித்தல் *(2557)* காண்க; அன்று

வேறு

2552. இப்பரி சணையுஞ் சண்பையர் பெருமா
னெழுந்தரு ளும்பொழு திசைக்கும்
ஒப்பினித் திலப்பொற் றனிப்பெருங் காள
முலகுய்ய வொலித்தெழு மோசை
செப்பரும் பெருமைக் **குலச்சிறை யார்தஞ்**
செவிநிறை அமுதெனத் தேக்க
அப்பொழு தறிந்து தலத்தின்மேற் பணிந்தே
யளப்பருங் களிப்பின ராஞர். 654

செய் - *உரைக்கத் தக்க; பிள்ளையாரது திருப்பெயர்களை மக்கள் பலரும் உரைசெய்து உய்யத்தருவன என்பது; "ஞானசம் பந்த ரென்று நாமமுந் திருமுன் சொல்ல" (2619).*

மணிச் சின்னமெலாம் - *சிவனருளிய முத்துக்களாலாகிய காளம், தாரை சின்னம் என்ற எல்லாம்;* ***மணி*** - *முத்தினைக் குறித்தது.*

சின்னம் - *பொதுப் பெயராய் வந்தது;* ***ஊதும்*** - *இவை பேர் பலவும் ஊதுகின்ற வகைகளை 2119—2120—2121 பாட்டுக்களிற் காண்க.*

பணிமாறுதல்-*ஊதுதல்; சின்னங்கள் ஒலிசெய்தற்கு வழங்கும் மரபு வழக்கு.*

பரசமய கோளரி வந்தான் - *இனி இந்நாட்டிற் பிள்ளையார் திருவருள் வெற்றி செய்தருளும் நிகழ்வு பற்றி இத்தன்மையால் எடுத்துக்கூறி ஊதின.*

புரசை - *யானைக் கழுத்துக் கயிறு;* ***வயம்*** - *வெற்றி.*

கடம் - *மதம்; மதமுடைமை யானையின் சிறப்பு.* *653*

2552. **(இ-ள்)** இப்பரிசு... எழுந்தருளும்பொழுது - இவ்வாறாகிய பரிசுகளுடன் அணைகின்ற சீகாழித் தலைவர் எழுந்தருளிவரும் அப்பொழுது; இசைக்கும்...ஓசை - இசைக்கின்ற ஒப்பில்லாத முத்துக்களாலாகிய அழகிய தனிப்பெருங்காளமானவை உலகமுய்ய எடுத்துச் சொல்லுதலால் எழுகின்ற ஓசையானது; செப்பரும்...தேக்க - சொல்லுதற்கரிதாகிய பெருமையுடைய குலச்சிறை நாயனாரின் திருச்செவிகளில் நிறையும் அமுதம் போலப் பெருகியிட; அப்பொழுது... ஆனார் - அப்பொழுதே அறிந்து நிலத்தின் மேல் மேனிபட வீழ்ந்து பணிந்து அளத்தற்கரிய மகிழ்ச்சியையுடையவராயினார்.

2547 முதல் 2552 வரையிலான ஆறு பாடல்களும் ஒரு பொருள்மேல் வந்து தொடர்ந்து ஒரு பொருள் கொண்டுரைக்க நின்றன.

(வி-ரை) இப்பரிசு - முன் ஐந்து பாட்டுக்களினும் கூறிய தன்மை பொருந்த; இப்பரிசு - அணையும் பெருமான் எழுந்தருளும் பொழுது என்க.

எழுந்தருளும் பொழுது - அவர் என்ற எழுவாய் வருவித்துக் கொள்க; **அணையும்** - அணைகின்ற என எச்சமாக உரைக்க.

ஒப்பில்...ஓசை - காளம் - எக்காளம் என்பர்; இதுமிக உரத்த ஓசையுடன் பிள்ளையாரது திருநாமத்தை எடுத்துக்கூறி "இவர் உலகுய்ய வந்தார்" என்ற பொருள்பட இசைப்பது; திருநகரத்துள்ளோர் செவிப்புலப்படக் கேட்க உள்ளது; உருவத்தானும் பெரிது; ஆதலின் இதனை வேறு பிரித்துத் **தனிப் பெருங் காளம்** என்ற சிறப்படைமொழி தந்தோதினர்; முன் "**தனிக்காளம்** வையமேழு மறைகளு நிறைதவத் தோரு, முய்ய ஞானசம்பந்தன் வந்தான்" (2119) என்றதற் கேற்ப ஈண்டும் **உலகுய்ய ஒலித்து எழும் ஓசை** என்றார்; **உலகுய்ய ஓசை எழுதலாவது** அதனைக்கேட்டு மக்கள் வந்தணைந்து உய்தி பெறுதல்.

செவிநிறை அமுதுஎன - பயன்பற்றி வந்த உவமை.

தேக்குதல் - நிறைதல்; **ஓசை - தேக்க** - என்க.

அப்பொழுது - அப்பொழுதே ஏகாரம் தொக்கது.

தலத்தின் மேற்பணிந்தே - கண்ணாற் காணாராயினும் ஓசை கேட்ட பொழுதே நினைவு பிள்ளையார்பாலும் திருக்கூட்டத்தின்பாலும் சென்று சேர அகக் கண்ணாற் கண்டு நிலத்தின் வீழ்ந்து வணங்கினார். "நெஞ்சினி னிறைந்த வார்வமுன் செல்லக் கண்டு" (2553) என்பது காண்க; கேட்ட பொழுதே அன்பு பெருகும் நிகழ்ச்சி யுண்டாதல் தலையன்பின்றிறம். தூரத்தே கண்ட போது வணங்குதல் மேற்பாட்டிற் கூறுவார். "வெற்றவே யடியா ரடிமிசை வீழும் **விருப்பினன்**" (தேவா) என்று இவரது விருப்பமாகிய திருவுள்ளநிலைபற்றிப் பிள்ளையார் திருவாக்காற் பாராட்டப்பட்டதும், இவர்தம் புராணத்துரைத்தனவும் பார்க்க.

அறிந்து அப்பொழுதே பணிந்து என்க.

இப்பரிசு - தூரியங்கள் கிளராமே மறைகள் எடுப்பவும்; தென்றல் எதிர்கொண்டு சேவிப்பவும் (2547); அமண் பாவச்சேனை இரிந்தோட மண்ணும் விண்ணும் செய்த புண்ணியப் படை யெழுச்சி போலப் பொலியவும் (2548); அமண்மாசு கழுவக் கங்கை அணைந்ததெனும் கவின் காட்டவும் (2549); அமணவல்லிருள் போய் மாய்வதற்கு அண்டமெலாம் பரந்த ஞானமணி விளக்கு எழுந்து வருவது எனும் **நலம் படைப்பவும்** (2550); சைவம் ஓங்கப் பரசமய கோளரிவந்தான் என்று சின்னமெல்லாம் பணிமாறவும் (2551); ஆக **இப்பரிசு** என்று இவ்வாறு பாட்டுக்களைத் தொடர்புபடுத்திக் கொள்க. இவ்வாறன்றிச் சேவிப்ப அணைகின்றார்; பொலிவெய்த அணைகின்றார்; கவின்காட்ட அணைகின்றார்; நலம்படைப்ப அணைகின்றார் என்று தனித்தனி முடித்தலும், சேவிப்ப - எய்த - காட்ட - படைப்ப - பணிமாற **அணைகின்றார்** என்று முன் பாட்டுடன் கூட்டி முடித்தலுமாம்.

அணையும் - அணைகின்றார் என முன் நிகழ்காலத்தாற் கூறினார்; பிள்ளையாரது அணைதலாகிய செயலின் பயன் அன்று மட்டுமன்றி முக்காலமுந் தோன்றுமியற்கை யுடையதாதலின் மீண்டும் நிகழ்காலத்துப் பொருணிலைமையுடைய **செய்யு**மென்னும் வாய்பாட்டினால் **அணையும்** என்றார்; "முந்நிலைக் காலமுந் தோன்று மியற்கை யெம்முறைச் சொல்லு **நிகழுங் காலத்து, மெய்ந்நிலைப் பொதுச்சொற்** கிளத்தல் வேண்டும்" (தொல்-சொல்-வினை 43) என்பதிலக்கணம்; இது முக்காலமுந் தோன்று மியல்பினை, இக்கருத்துப் பற்றியே பின்னர்க் குலச்சிறையாரது திருவாக்கில் விரித்தல் (2557) காண்க; அன்று

2553. அஞ்சலி குவித்த கரங்களுந் தலைமே
லணைந்திடக் **கடிதுசென் றணைவார்,**
நஞ்சணி கண்டர் தந்திரு மகனா
ருடன்வரு நற்றவக் கடலை
நெஞ்சினி னிறைந்த **வார்வமுன் செல்லக்**
கண்டுநீ ணிலத்திடைத் தாழ்ந்து
பஞ்சவர் பெருமான் **மந்திரித் தலைவர்**
பாங்குற வணைந்துமுன் பணிந்தார். 655

பிள்ளையாரது அணைதலை இன்றும் சைவம் நிகழ்வதற்குக் காரணமா யுள்ளது என்பது தேற்றம். 654

2553. **(இ-ள்)** *அஞ்சலி... அணைவார் - அஞ்சலியாகக் கூப்பிய கைகளும் தலையின் மேலே சேர விரைந்து சென்று அணைவாராகி; நஞ்சணி... கண்டர் - விடத்தை அணிந்த கண்டராகிய இறைவர் திருமகனாருடன் வரும் நல்ல தவமுடைய அடியார்களின் கடல் போன்ற திருக்கூட்டத்தை மனத்தில் நிறைந்த ஆசை முன்செல்ல அதனை நோக்கிக் கண்டுகொண்டாராதலின்; நீள் நிலத்திடை ... பணிந்தார் - நீண்ட நிலத்தின்மீது தம் திருமேனி பொருந்த விழுந்து பாண்டிய மன்னரின் மந்திரிகளுள் தலைவராகிய குலச்சிறையார் பாங்குறச் சென்று முன்னே பணிந்தனர்.*

(வி-ரை) அஞ்சலி... அணைவார் - *காளத்தின் ஓசை செவியில் நிறைய, உடனே நிலத்தின் மேற்பணிந்தார்; எழுந்தார்; கைகள் கூப்பின வண்ணமே தாமே தலைமேல் ஏறின; விரைவாக ஓசைவரும் திசை நோக்கி முன்னே அணைவாராயினர்; இவ்வாறாக;* **கரங்கள் தலைமேல் அணைந்திட** - *தம்முயற்சியின்றிக் கைகள் தாமே சிரமேற் கூப்பியபடியே ஏறின.*

மகனார் - அவர் அளித்த பால் உண்டமுறைமையால் **மகனார்** என்று உபசரிக்கப் பட்டவர். *1666*-லும் *1966*-லும் முன் பலவிடத்தும் உரைத்தவை பார்க்க.

மகனாருடன் வரும் நற்றவக்கடல் - பிள்ளையாருடன் வருதற்கு முன்னை நற்றவம் புரிந்த அடியவரின் கூட்டம். கடல் போன்ற பரப்புடையதனைக் கடல் என்றதுபசாரம்.

நெஞ்சினில்... ஆர்வம் - முன்செல்லக் கண்டு தாழ்ந்து பணிந்தார் - முன் பாட்டில் ஓசை செவி நிறையக் **கேட்டு** நிலமிசைத் தாழ்ந்து பணிந்தார்; இங்கு, அவ்வோசை வழி எதிர் நோக்கி நெஞ்சம் முன்னே சென்று கண்டு கொண்டமையால் **கண்டு** தாழ்ந்து பணிந்தார்; முன்னர்க் கேட்டுப் பணிந்தார்; இங்குக் கண்டு பணிந்தார். ஆயின் கண் கூடாகக் காண்பது பின்னரேயாயினும், இப்பொழுது ஆர்வம் முன் செல்ல மனத்தாற் கண்டு பணிந்தனர் என்பதாம்.

மந்திரித் தலைவர் - நிலத்திடைத் தாழ்ந்து பணிந்த நிலையேகிடந்தவர் பின்னர்ப் பிள்ளையார் திருக்கைகளாற் பற்றி எடுக்கவே எழுந்தனர். 2555 பார்க்க. இந்நிலை மந்திரித் தொழிலின் பேரறிவுடைய முயற்சி வகைகளுள் ஒன்றாமென்பார் **மந்திரித்தலைவர்** என்ற தன்மையாற் கூறினார். இது பின்னர்க் காட்டுதும்; (2555 பார்க்க.)ஆசிரியர் பெருமானும் மந்திரியாராதல் கருதுக.

2554. நிலமிசைப் பணிந்த குலச்சிறை யாரை
நீடிய பெருந்தவத் தொண்டர்
பலருமுன் **னணைந்து** வணங்கிமற் றவர்தாம்
படி**யினின் றெழாவகை கண்டு,**
மலர்மிசைப் புத்தேள் வழிபடும் புகலி
வைதிக சேகரர் பாதங்
குலவியங் கணைந்தார் தென்னவ னமைச்சர் 656
குலச்சிறை யாரெனக் கூற.

பாங்குற - தமிழ்நாடு பாங்கு பெறும் பொருட்டு; **பாங்குறப் பணிந்தார்** என்று கூட்டுக.

முன் - திருக் கூட்டத்தின் முன் அணிகள் சேர்வதற்கும் முன்பு. 655

2554. **(இ-ள்)** நிலமிசை... வணங்கி - நிலத்தின்மேல் வீழ்ந்து பணிந்த வண்ணமேயிருந்த குலச்சிறையாரை நீடும் பெரிய தவத்தினையுடைய தொண்டர்கள் பலரும் முன்பு வந்து அணைந்து வணங்கி; மற்று அவர் தாம்... கண்டு - மற்று அவர் தாம் நிலத்தினின்றும் மேல் எழாமல் இருந்த வகையினைக் கண்டு; மலர் மிசை... குலவி - பிரமதேவர் வழிபட்ட சீகாழியில் வந்த வைதிகத் தலைவராகிய பிள்ளையாருடைய பாதங்களை அடைந்து வணங்கி; "அங்கு... குலச்சிறையார்" எனக் கூற - "அங்குப் பாண்டியனின் அமைச்சனாராகிய குலச்சிறையார் அணைந்துள்ளார்" என்று சொல்ல,

(வி-ரை) நிலமிசைப் பணிந்த... ...கண்டு - குலச்சிறையார் திருக்கூட்டத்தை நோக்கி நிலமிசைப் பணிந்தபடியேயிருந்தனர்; பிள்ளையாரது திருக்கூட்டத்தினின்றும் தொண்டர்கள் பலர் முற்பட அவர்பால் அணைந்து வணங்கினர்; அப்போதும் அவர் தாம் நிலத்தினின்றும் எழாது இருந்தனர்; அதனை வந்த திருத்தொண்டர் கண்டு என்றபடியாம்.

மலர்மிசைப் புத்தேள் - தாமரையில் இருக்கும் பிரமதேவன்; **புத்தேள்** - தேவன்.

வைதிக சேகரர் - வைதிகநெறித் தலைவர்; **சேகரம்** - முடிபோல வைதிகர் தம்தலைமேற் கொள்ளத்தக்கவர் என்றபடி.

குலவி - அடைந்து தொழுது.

"அங்கணைந்தார்......குலச்சிறையார்" என - குலச்சிறையார் தூரத்தேவந்து அணைந்தனர் என்று; **அங்கு** - அவர் பணிந்தபடி நிலமிசைக் கிடந்த இடத்தைச் சுட்டியது.

தென்னவனமைச்சர் - முன்னரும் "பஞ்சவர் பெருமான் மந்திரித் தலைவர்" (2553) என்று கூறினார்; அரசாங்க மந்திரித்தலைவராதலின் அரசகாரியம் முற்றும் கடன் இவர்மேனின்றது; ஆதலின் அவர் அணைந்து பணிந்தமை அரசனும் அரச நாடும் முழுமையும் அணைந்து பணிந்ததுவேயாம் என்ற குறிப்புப்பெற ஈரிடத்தும் அமைச்சர் என்றொழியாது அரசனுடன் புணர்த்தி ஓதினார்.

2555. சிரபுரச் செல்வ ரவருரை கேட்டுத்
திருமுகத் தாமரை மலர்ந்து
விரவொளி முத்தின் சிவிகைநின் றிழிந்து
விரைந்துசென் றவர்தமை யணைந்து
கரகம லங்கள் பற்றியே யெடுப்பக்,
கைதொழு தவருமுன் னிற்ப,
வரமிகு தவத்தா லவரையே நோக்கி
வள்ளலார் **மதுரவாக் களிப்பார்,** 657

குலவி - *அமைச்சர் - குலவி என்று கூட்டிப் பாதம் பொருந்த அமைச்சர் அங்கு அணைந்தார் என்றுரைப்பாருமுண்டு.*

குலவியிங்கு—*என்பதும் பாடம்.* 656

2555. **(இ-ள்)** *சிரபுரச் செல்வர்... அணைந்து - சீகாழிச் செல்வராகிய பிள்ளையார் அவர்களுடைய சொற்களைக் கேட்டுத், திருமுகமாகிய தாமரை மலர்ந்து பொருந்திய ஒளியினை யுடைய முத்துச் சிவிகையினின்றும் இறங்கி விரைவுடன் சென்று அவரை அணைந்து; கரகமலங்கள்... எடுப்ப - கைகளாகிய தாமரைகளாற் பற்றியே மேல் எடுப்ப; அவரும் கைதொழுது முன் நிற்ப - அக் குலச்சிறையாரும் கைதொழுது திரு முன்பு நிற்க; வரமிகு... அளிப்பார் - வரமிகும் செவ்வியினின்ற அவரது தவங் காரணமாக அவரையே நோக்கி வள்ளலாராகிய பிள்ளையார் இனிய திருவாக்கினை அளிப்பாராகி.*

(வி-ரை) திருமுகத்தாமரை மலர்ந்து - *முகமிக மலர்ந்து; மலர்ந்து என்பதற்கேற்ப முகத்தைத்தாமரை என்று உருவகித்தார்.* **முகமலர்தல்** - *அகமலர்ச்சி காட்டும் குறிப்பாதலின் அகமும் மலர்ந்து என்பதும் உடன் கூறியதாயிற்று;* **முக மலர்தல்** *என்ற வழக்கும் காண்க; ஈண்டுக் கருணை கூர்ந்து என்க.*

சிவிகை நின்றிழிந்து விரைந்து சென்று அவர்தமை அணைந்து - *தாம் எழுந்தருளியிருக்கும் இடத்தில் வந்து வணங்க வேண்டிய அவர், நெடுந்தூரத்தே வணங்கியபடி கிடத்தலின் அவரிருக்குமிடந்தேடி வந்தணைந்தனர் குருநாதராகிய பிள்ளையார்; இது குலச்சிறையாரது வணக்கத்தின் அழுத்தத்தாற் போந்த பயன் என்க; திருமறைக்காட்டினின்று பாண்டி நாட்டினுக்கும் மதுரையம்பதிக்கும் பிள்ளையாரை வந்தணையப்பண்ணியது போலச், சிவிகையினின்றும் இழிந்து மந்திரியார் இருந்து வணங்கிக்கிடந்த இடத்துக்கும் எழுந்தருளியணையச் செய்தது அவர்களது திருத்தொண்டின் உறைப்பாகும்; அப்பூதி நாயனார் திருமனைக்கடையினில் அரசுகள் அவரைத் தேடிச் சென்றருளுமாறு செய்தது அவரது அழுந்திய நினைவேயாம் என்ற வரலாறும் இங்கு நினைவுகூர்தற்பாலது; "சூழு மாகிய பரசம யத்திடைத் தொண்டு, வாழு நீர்மையீ ருமைக்காண வந்தனம்" (2571) என்று பிள்ளையார் அருளுவதனையும் காண்க;* **விரைந்து சென்று** - *அவரை எடுத்து அருளும் கருணையின் விரைவு.*

கரகமலங்கள் பற்றியே எடுப்ப - கரகமலங்கள் - *கைகளாகிய தாமரைகள்;* **திருமுகத்தாமரை,"** *என்றதற்கேற்பக் கைகளையும் தாமரைகள் என்றார்; கரகமலங்களாற்*

பற்றியே என்க: ''இன்ன நட்பெருஞ் சிறப்பொடுந் திருக்கையா லெடுத்தார்'' *(2569)*; ''இருவரையுந் திருக்கையா லெடுத்தருளி'' *(2629)* என்று பின்னர் வருவனவும் காண்க; தலைச்சிறையாருடைய கரகமலங்களைப் பற்றி என்று இரட்டுற மொழிந்து கொள்ளவும் நின்றது.

எடுப்ப -''எழுக'' என்று திருவாக்கினலருளாது கைகளால் எடுத்தல் ''அவர்தாம் படியினின் றெழாவகை கண்டு'' தொண்டர்கள் அறிவித்தபடி தாமும் கண்டமையானும், எடுத்தாலன்றி எழார் என்று கண்டருளின மையானுமாம்;இது மந்திரியாரது திருத்தொண்டினது உறைப்பும், மந்திரத் தொழில் வன்மையுமாம்; என்னே? 'எழுக' என்ற சொல்லின் அருளளவினன்றிச் செயலினனும் மேல் எடுக்கப்பெறும் அருளைப் பெறும் துணை என்க. எங்கள் நாடு கீழே கிடக்கிறது; அதனை மேல் எடுத்தருளல்வேண்டுமென்று வாக்கினற் கூறுது தாம் வணங்கிச் செயலால் விண்ணப்பித்தனர் அமைச்சர் பெருமான்;அதற்கு அவ்வாறேயாகுக என்று பிள்ளையார் தமது வாக்கினற் கூறுது கைகளால் எடுத்த செயலால் அருள் புரிந்தனர்; **எனவே பாண்டியநாட்டினை ஈண்டு வினைப்பரசமயக் குழிநின்றும் மேல் எடுக்கும் அருட்செயல் அதன் மந்திரியாரை எடுத்த செயலானே ஈண்டே நிகழ்ந்துவிட்ட தென்க; பின்னர் நிகழ்பவை எல்லாம் இதன் தொடர்ச்சியாகிய சடங்குகளே என்பதாம்; எடுப்ப** என்பது''என்னையிப் பவத்திற் சேரா வகை**யெடுத்து**'' *(சித்தி-சுபக்-பாயி 2)* என்புழிப்போல பரசமயத் தீமை காத்து எடுத்த குறிப்புருவகப் பொருளும்பட நின்றது.

கைதொழுது அவரும் முன் நிற்ப - பிள்ளையார் கரகமலங்கள் பற்றி எடுப்ப எழுந்து அவர் திருமுன்பு தொழுத படியே நின்றனர். அவரது அருட் செயலினைப் பெற்ற வண்ணமே அருட்டிருவாக்கினையும் பெறுதலை வேண்டி என்க; அக்கருத்தினை அறிந்த வள்ளலாரும் அவ்வாறே தாம் முற்பட்டு மதுர வாக்களித்தல் மேற் கூறப்படுதல் காண்க.

வரமிகு தவத்தால்—வாக்களிப்பார் - வரம் பெறுதற்கு உரியதாய் மிகுந்து பக்குவ காலம் வந்த தவம் காரணமாக - வரம் தரும் வாக்களிக்கப் பெற்றுர் என்க. ''தமிழ் நாட்டுத் தரைசெய் தவப்பயன் விளங்க'' *(2551)* என்றதும், மேல் ''தம் பெருந்தவத்தின் பயனையார்க்கு'' *(2556)* ''நற்றவத்து மானியார்... **யானுமென் பதியுஞ் செய்த தவமென்கொல்''** *(2570)* என்பனவும் கருதுக; **வரமிகு தவ**மாவது வரம் பெறுதற் கணித்தாக மிகுதி பெற்ற தவம்.

வள்ளலார்—அளிப்பார் - வள்ளலாராதலின் அளிசெய்து தாமே முற்பட வாக்கருளினுர் என்பது.

அவ்வுரை—இவருரை—என்பனவும் பாடங்கள். 657

2556. **(இ-ள்)** ''செம்பியர் பெருமான்... ...வாலிதே'' என்ன - சோழ மன்னரின் திருமகளாராகிய மங்கையர்க்கரசி யம்மையாருக்கும் திருந்திய சிந்தையினையுடைய உமக்கும் நம் சிவபெருமானுடைய திருவருள் பெருகும் நன்மைதான் சிறந்துள்ளதே'' என்று சொல்ல; வம்பலர்... வணங்கி - மணமுடைய மாலையினை அணிந்த மந்திரியாரும் நிலமுறவணங்கி நின்று: தம்பெரும்... உரைக்கின்ருர் - தமது பெருந்தவத்தின் பயனே போன்ற பிள்ளையாருக்கு நிகழும் தன்மையாகிய நிலையினை எடுத்துச் சொல்கின்ருராகி,

2556. **''செம்பியர் பெருமான் றிருமக ளார்க்குந்**
திருந்திய சிந்தையீ ருமக்கும்
நம்பெரு மான்றன் றிருவருள் பெருகு
நன்மைதான் வாலிதே;'' யென்ன
வம்பல ரலங்கன் மந்திரி யாரு
மண்மிசைத் தாழ்ந்தடி வணங்கித்
தம்பெருந் தவத்தின் பயனனை யார்க்குத்
தன்மையா நிலையுரைக் கின்றார், 658

(வி-ரை) மகளார்க்கும் - உமக்கும் - திருவருள் பெருகும் நன்மை தான் வாலிதே - திருவருள் பெருகுதலால் வரும் நன்மை; வாலிதே - சிறந்து செல்கின்றதே.

செம்பியர் பெருமான் குலமகளார்க்கும் - மன்னிய சைவத் துறையின் வழி வந்தும், அதனின் மாறாது ஒழுகியும், அதனைப் பற்பல இடையூறுகளின் இடையிலேயும் விடாது பற்றியும், தம் நாட்டில் சைவத்தின் ஓங்க நினைந்து முயன்றும் வந்த பெருமை பற்றியும், அரசியாராக ஆணை தந்து இயக்கும் முதன்மையும் உரிமையும் பற்றியும் சோழரின் மகளார் என்ற தன்மையாற் கூறி முதற்கண் வைத்துக் கேட்டருளினர்; இங்குப் பெண்ணுக்கு முதன்மை தந்து விசாரிப்பது கருத்தென்று விசேடம் காண்பாருமுண்டு; அது பொருந்தாமை தேற்றம். ''மண்ணெலா நிகழ மன்னவன் மன்னு மணிமுடிச் சோழன்றன் மகளாம், பண்ணினேர் மொழியாள்'' என்றும், ''மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை'' என்றும் வரும் தேவாரக் கருத்துக்களும் காண்க; இத்திருப் பதிகத்தினுள் அம்மையாரை முதலிலும் அமைச்சனாரை அடுத்தும் வைத்துக் கூறிய வைப்புமுறையும் காண்க.

நம்பெருமான் என்று தம்மையும் உளப்படுத்திக் கூறியது கருத்தொன்றித்த திருத்தொண்டின் உரிமைபற்றி.

திருவருள் பெருகு நன்மைதான் வாலிதே - உயிர்களுக்கு வரும் இன்பமும் துன்பமும் இறைவர் செய்யும் அருளால் வந்து கூடுவன; அவ்வாறு இறைவர் கூட்டு விப்பதும் நன்மையின் பொருட்டேயாம் என்பது துணிபு; இங்கு **வாலிதே** - என்றது நன்கு செல்கின்றது - இன்பமாகச் செல்கின்றது - என்ற நிகழ்காலக் குறிப்பு; ஏகாரம் வினா; இது நலம் வினவும் வகையால் எழுந்தது; ஆயின், ''மானியார் தமக்கு மானக், குன்றென நின்ற மெய்ம்மைக் குலச்சிறை யார்த மக்கும், நன்றுதான் வினவக் கூறி'' (2510) என்றபடி திருமறைக்காட்டில் இவர்கள் வரவிட்ட அறிவுடை மாந்தர்பால் வினவிக் கேட்டறிந்து கொண்ட பிள்ளையார், இங்கு ''நன்மை தான் வாலிதே'' என்று மீண்டும் வினவிய தென்னையோ? எனின், முன்னர்க் கேட்டறிந்தது பிறர்பாற் கேள்வி; இங்குக் கண்டபோது நேரிற் கேட்பது கண்டறிவதாவதாம் மரபு. ஆதலின் வினவிய தென்க. இனி இவ்வாறு கொள்வதுடன், இரட்டுற மொழிந்து கொண்டு, மறைக்காட்டில் அவர்கள் பாலறிந்தபடி நாட்டின் தீங்கு பரவிய நிலையினுக்கு ''வருந்தற்க'' என அஞ்சல் அருளும் முகத்தால், முன்னர் நம் பெருமான் செய்த திருவருள் இனிப் பெருகும்; இன்று காணும் நன்மைதான் வாலிதேயாம்; என்று பிரித்துப், பிள்ளையாரது விளக்கம் பொருந்தக் கூறும் அமுத வாழ்த்தாக உரைத்தலுமாம்; இப்பொருளில் **பெருகும் -**

2557. **''சென்றகா லத்தின் பழுதிலாத் திறமு**
மினியெதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்றபே றிதனு
லெற்றைக்குந் திருவரு ளுடையேம்;
நன்றியி னெறியி லழுந்திய நாடு
நற்றமிழ் வேந்தனு முய்ந்து
வென்றிகொ டிருநீற் ருெளியினில் விளங்கு
மேன்மையும் படைத்தன'' மென்பார்; 659

இனிப் பெருக நிகழும் என வினைமுற்ருகக் கொள்க; ஏகாரம் - தேற்றம்; பிரிநிலையுமாம்.

மண்மிசைத் தாழ்ந்து - *பிள்ளையார் வினவுக்கு விடை கூறும் முகத்தால் வணங்கி.*

தம்பெருந் தவத்தின் பயன் அனையார் - பிள்ளையார்; **தம்** - *தம்மையும் அம்மையாரையும் அரசனையும் நாட்டினையும் உளப்படுத்திக் கூறியது;* **பெருந் தவத்தின் பயன் அனையார்** - *முன்னைப் பெருந்தவஞ் செய்திருந்தாலன்றி இப்பயன் கிடையா தென்பது.*

தன்மையாம்நிலை - *உள்ள நிலை;* **தன்மை** - *உண்மை. மேற் கூறுவது உபசாரமாம் முகமனுகிய இயல்பு அன்றி உள்ளபடி உணர்ந்து கூறும் உண்மை என்பது.*

செம்பியர் தலைவன்—*என்பதும் பாடம்.* *658*

2557. **(இ-ள்)** *சென்ற காலத்தின்...திருவருளுடையேம் - சென்ற காலத்திலே பழுதின்றி நின்ற திறமும், இனி எதிர்காலத்தில் வரும் சிறப்புடைய திறமும், இன்று தேவரீர் எழுந்தருளப்பெற்ற பெரும் பேற்றினுல் விளங்கும்; இதனுல் முக்காலத்திலும் திருவருளுடையேம்; நன்றியில்... படைத்தனம் என்பார் - நன்றியில்லாத (அமண்) நெறியிலே அழுந்திய இந்நாடும் நற்றமிழ் அரசனும் உய்திபெற்று வெற்றி கொள்ளும் திருநீற்றின் ஒளியினில் விளங்கும் மேன்மையினையும் பெற்ருேம் என்பாராகி,*

(வி-ரை) இது மிகச் சிறந்த ஆழ்ந்த கருத்துடன் அமைச்சுத் திறம் விளங்கும் பெருமையுடையதொரு திருப்பாட்டு. இருபத்தொன்றாம் நூற்றாண்டுச் சிவனடியார்கள் பலருக்கும் இப்பாடல் மனனம்.

சென்ற காலத்தின்... பெற்ற பேறு - திருவருள் - *என்றதனுல் சென்ற காலத்தையும்,* **வாலிதே** *என்றதனுல் நிகழ் காலத்தையும்,* **பெருகும் நன்மைதான்** *என்றதனுல் எதிர்காலத்தையும் குறித்து வினு நிகழ்ந்தமையால் மூன்று காலத்தும் நன்மையே என்று கூறி, அதற்குக் காரணம் நிகழ்காலத்திற் பெற்ற பேறேயாம் என்று முடித்தனர். இன்று எழுந்தருளும் இப்பேறு சென்ற காலத்தின் பழுதிலாத் திறமாகிய பெரும் தவத்தலான்றிக் கைகூடாததலின் கழிகாலத்தில் திருவருள் நன்கிருந்து அத்தவத்தை முற்றச் செய்தது; இனி இன்று எழுந்தருளும் இப்பேறு மேல்வருங்காலத்தில் பெருகும் நன்மையினைச் செய்யும் என்பது உறுதியாதலின் எதிர்காலச் சிறப்பு இப்பேற்றின் பயனுகக் கிடைக்கும் என்று கூறினுர்; எனவே சென்றகாலச் சிறப்பு இன்று பேறுதர, இது எதிர்காலச் சிறப்பினைக் காட்ட இவ்வாறு*

மூன்று காலமும் திருவருள் பெருகு நன்மையின் வாலிதாம் நிலைமையில் உள்ளோம் என்றார்; பெருமானது அருளின் நன்மையினைப் பிள்ளையார் வினவக், குலச்சிறையார் அதனைப் பிள்ளையாரது எழுந்தருளுதலின் மேற்சார்த்தி, இனித்த பெருமான் திருவருளின் நன்மையின் உருவாய் வந்துள்ளது என்று முடித்த நயமும் காண்க; இதனால் எல்லாம் திருவருள் உடையேம் என்று முடிவு கொள்க; இது பிள்ளையார் அம்மையாரையும் தம்மையும் குறித்து வினவியபடியால் **உடையேம்** என்றது அதற்கு விடையாக இருவரும் உடையோமாயினோம் என்று கொள்ள நின்றது.

நன்றியில்... படைத்தனம் - முன்பாட்டிற் கூறியபடி கேட்ட நலங்களுக்கு ஏற்ப இருவர் நலமும் பற்றி விடை கூறினும் அந்நலம் அரசனையும் நாட்டினையும் பற்றிய நலத்தை இன்றியமையாதாதலின் மேலும் கூறலுற்று, அந்தத் தமது கருத்தாகிய விண்ணப்பமாக இவ்வருகையின் பயனும் அதனையும் பெற்றனர் என உறுதியும் விளைவும் பற்றி இறந்த காலத்தாற் கூறிய நயமும் காண்க.

மேன்மையும் படைத்தனம் - பிள்ளையார் தம் இருவர் நன்மையினையே வினவினாராதலின், அதனோடு சார்த்தி விடை கூறிய நாட்டினலமும் அரசனலமும் தமது நலமேயாகிய மேன்மையேயாம் என வினவுக்கேற்ற விடையாகப் பொருத்திக் கூறிய திறமும் காண்க.

நன்றியில் நெறி - நன்மையற்ற சமண நெறி; தீ நெறி என்னாது நன்றியில் நெறி என்றது தீமையை வாயினாலுங் கூறாத மரபு.

நற்றமிழ் வேந்தன் - "தமிழ்நா டுற்ற தீங்கினுக் களவு தேற்றாச் சிந்தையில்" (2502) என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

வென்றிகொள் திருநீற்றின் ஒளி - திரு நீற்றுப் பதிகத்தால் வெற்றி வரும் வரலாற்றின் முற் குறிப்பு; "புத்தரொ டமணை வாதி லழிவிக்கு மண்ணல் திருநீறு செம்மை திடமே" (தேவா) என்ற திருவாக்கும் கருதுக.

அழுந்திய நாடும் வேந்தனும் ஒளியினில் விளங்கும் மேன்மை என்றதனால் முன்னர் இருளில்அழுந்திய தாழ்வு என்பதனைப் பெறவைத்த நயமும் காண்க.

நீற்றின் ஒளியினில்—என்பதும் பாடம். 659

2558. **(இ-ள்)** "இங்கெழுந்தருளும்... எழுந்தருளியது" எனத்தொழுது - இங்குத் தேவரீர் எழுந்தருளும் பெருமையினைக் கேட்டருளியவுடனே மங்கையர்க்கரசி யம்மையாரும் 'நம்முடைய வாழ்வு எழுந்தருளி வருகின்றது' என்று கூறி, 'அவ்விடத்து நீர் எதிர்கொண்டு சென்று திருவடிகளைப் பணிவீர் என்று அருளிச் செய்தார்' என்று விண்ணப்பஞ் செய்து வணங்கி; ஆர்வம்... அமைச்சர் - அன்பு பொங்கிய களிப்பினாலே மீளவும் பணிந்து அரசனின் அமைச்சராகிய குலச்சிறையார் துதித்தனர்.

இவ்வைந்து பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) இது பிள்ளையாரை எதிர்கொள்ளும்படி அம்மையார் அமைச்சரைக்

*2558. ''இங்கெழுந் தருளும் பெருமை கேட் டருளி
யெய்துதற் கரியபே றெய்தி
மங்கையர்க் கரசியாரு'நம் முடைய
வாழ்வெழுந் தருளிய'தென்றே
'யங்குநீ ரெதிர்சென் றடிபணிவீ' ரென்
றருள்செய்தா'' ரெனத்தொழு தார்வம்
பொங்கிய களிப்பான் மீளவும் பணிந்து
போற்றினூர் புரவல னமைச்சர். 660

கட்டளையிட்டு ஏவி யனுப்பிய திறத்தை உரைத்தது; அம்மையார் வாக்கினைப் பற்றியே முன்னிலைக் கூற்றாக அறிவித்த நயமும், இவ் வரவேற்பு அரசாங்க நிலையில் அமர்ந்து செய்யப்படுகின்ற தென்றறிவித்த நிலையும் காண்க.

எம்முடைய வாழ்வு எழுந்தருளியது-*வாழ்வு தருபவரை வாழ்வு என்று பண்பின் உருவமேயாக உருவகித்தார்; ''ஞானத்தின் திருவுருவை'' (2626) என்று மேல்வரும் பாட்டின் கருத்தினையும் ஓர்க;* **பிள்ளையாரை ஒரு மானிட உருவுடையராக இவர்கள் கருதவில்லை; திரு அருளின் உருவாக, தமது வாழ்வின் உருவமேயாக, ஞானத்தின் உருவமாக, என்றிவ்வாறே கண்டு கொண்டனர்; வாழ்வு** - *''இங்கெழுந்தருள உய்ந்தோம்'' என - 2543 என்ற கருத்தும் காண்க.*

அங்கு - *பிள்ளையார் எழுந்தருளி வரும் அவ்விடத்து முன் சென்று; எழுந்தருளும் வார்த்தை - கூற வந்தவர் மொழியைக் கேட்ட (2541) அப்போது எழுந்தருளிய அந்த இடத்தில் என்க.*

மீளவும் பணிந்து போற்றினூர் - *அம்மையாரது விண்ணப்பத்தைத் தெரிவித்ததன் பொருட்டு மீண்டும் பணிந்தனர்.* **அமைச்சர்** - *அமைச்சராதலின் என்பது குறிப்பு.* 660

2559. **(இ-ள்)** ஆங்கனம்... பொழுதில் - அவ்வாறு துதித்துத் திருவடியில் வீழ்ந்து பணிந்தவர்மேல் அளவில்லாத அருளைத் தரும் கருணை கூர்ந்த மொழிகளால் தக்கவற்றைச் சொல்லித் தலையளி செய்தருளும் அப்போது; ஓங்கு எயில்... தோன்றுதலும் - ஓங்கிய மதில்கள் பக்கங்களிற் சூழ்ந்த மதுரையம்பதி கட்புலப்படத் தோன்றுதலும் கண்டு; உயர்தவத் தொண்டரை... வினவ - உயரும் தவமுடைய தொண்டரைப் பார்த்து, இவ்விடத்து நம் இறைவர் எழுந்தருளுகின்ற திருவாலவாயானது மற்று எப்பக்கத்தில் உள்ளது?'' என்று கேட்க;

(வி-ரை) அடிபணிந்தவர்மேல் - *அடிபணிந்த குலச்சிறையாரும் அவரைத் தம் பொருட்டுச் சென்று அடிபணிவீரென்று ஏவிய அம்மையாரும் ஆகிய இருவர் மேலும் என்பது குறிப்பு.*

அளவிலா...தலையளித்தருளும் அப்பொழுதில் - *கருணையை உட்கொண்ட மொழிகளால் தலையளி செய்தபோதில்; அம்மையார் பணித்தபடி கூறிப் பணிந்த குலச்சிறையாருக்கு அதனை ஏற்று அருளிய மொழிகளாற் கூறிச் சிறப்பருளும் மரபு பற்றியது.*

2559. ஆங்கனம் போற்றி யடிபணிந் தவர்மே
லளவிலா வருள்புரி கருணை
தாங்கிய மொழியாற் றகுவன விளம்பித்
தலையளித் தருளுமப் பொழுதில்
ஓங்கெயில் புடைசூழ் மதுரைதோன் றுதலு
முயர்தவத் தொண்டரை நோக்கி
''ஈங்குநம் பெருமான் றிருவால வாய்மற்
றெம்மருங் கின'' தென வினவ. 661

அப்பொழுதில் - மதுரை தோன்றுதலும் - *குலச்சிறையார் முன் சென்று காட்டும் இடம், மதுரைமா நகரமும், மதிலும் கோயில் கோபுரங்களும் வானில் நீண்டு வருவார்க்குக் கண்ணுக்குத் தோன்றும் எல்லையின் அப்புறமாகிய தூரமுள்ள இடம் என்பது கருதத் தக்கது.*

உயர்தவத் தொண்டரை - *வந்து பணிந்த குலச்சிறையாரை; பொதுவாக எல்லா அடியார்களையும் என்றலுமாம்.*

நம்பெருமான் திருவாலவாய் மற்று எம்மருங்கினது? என வினவ - *நகரமும் பற்பல ஆலயங்களும் பற்பல கோயில்களுமாகச் சோலைகளினிடையே தோன்ற, அவற்றுள்ளே திருவாலவாய்க் கோயில் எது என்று வினவியபடி. மற்று இங்குத் தோன்றுவன யாவற்றுள் என்ற பொருள்பட நின்றது. ''திருக்காளத்தித் திருமலை யிம்மலைகளில் யாதென்று கேட்டார்'' (2917) என இவ்வாறே பின் வருவதுடன் ஒப்பு நோக்குக. 661*


2560. **(இ-ள்)** *அன்பராயவர்... காட்டி* - அவ்வாறு வினவப் பெற்ற அன்பராயவர் முன் பணிந்த சிறப்புடைய அடியாராகிய குலச்சிறையார் பிள்ளையாருடைய இணையார் திருவடிகளை வணங்கித் திருமுன்பு நின்று எடுத்த கைகளினாலே சுட்டிக்காட்டி; ''முருகலர்... திருவாலவாய் இது'' என்றார் - வாசம் விரிகின்ற சோலைகளாற் சூழப்பட்டு, மின்பொலியும் ஆகாயத்தை அளக்கும்படி நீண்ட கொடிகள் சூழ்ந்த பெரிய நீண்ட கோபுரங்கள் தோன்றுகின்ற இஃது, எலும்பின் அணிகளை அணிந்த சுந்தரேசுவரர் இனிதாக விரும்பி வீற்றிருக்கும் திருவாலவாயாம்'' என்று சொன்னார்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) அன்பராயவர் முன்பணிந்த சீரடியார் - குலச்சிறையார்; தொண்டர்களைப் பொதுவில் நோக்கிப் பிள்ளையார் வினவியதாகக் கொள்ளின், அவர்களுள்ளே அவர்களைப் பணிதலே பண்பாகவுடைய சிறப்புடையவராகிய குலச்சிறையார் விடை கூறினார் என்க.

அண்ணலாரடியிணை வணங்கி - வினவிய பிள்ளையாருக்கு விடைகூறும் மரபு.

முன்புநின்றெடுத்த கைகளாற் காட்டி பிள்ளையாரது பின்னே தொடர்ந்துவந்த குலச்சிறையார் இவ்வினவுக்கு விடை கூறுமாற்றால் முன்பு வந்து நின்று என்க; **எடுத்த** - மேலே தூக்கிச் சுட்டிக் காட்டிய; பிள்ளையார் கரகமலங்களாற் பற்றி எடுக்கப்பட்ட என்ற



திருஆலவாய்த் திருக்கோயில் (மேற்கு வாசல்) பாட்டு :- 2560

2560. அன்பரா யவர்முன் பணிந்தசீ ரடியா
ரண்ணலா ரடியிணை வணங்கி
முன்புநின் றெடுத்த கைகளாற் காட்டி
"முருகலர் சோலைகள் சூழ்ந்து
மின்பொலி விசும்பை யளக்குநீள் கொடிசூழ்
வியனெடுங் **கோபுரந் தோன்றும்**
என்பணி யணிவா ரினிதமர்ந் தருளும்
திருவால வாயிது" வென்றார். 662

குறிப்பும் காண்க; பாண்டி நாட்டைத் தாங்கி மேலெடுக்கத் துணையாய் நின்ற குறிப்புமாய் நின்றது காண்க.

முருகலர்... இது திருவாலவாய் - திருவாலவாய்த் திருக்கோயிலினைப் பண்பு தெரியப் போற்றியபடியும், அடையாளங்கூறிக் காட்டியபடியுமாம். மேல் "போற்றிக் காட்டி" (2561) என்பது காண்க. அதோ சோலைகள் நிலத்திற் சூழ்வன; அதோ அவற்றின் இடையே நீள் கொடிகள் வானிற் சூழ்வன; அதோ அவற்றினிடையே பெரிய நீண்ட கோபுரங்கள் தோன்றுவன; இஃதே எமது இறைவர் இனிதமர்ந்தருளும் ஆலவாய்க் கோயில் என்றபடி. **தோன்றும்-இது-திருவாலவாய்** என்க; ஆங்கு மேலே காணப்பட்ட கோபுரத்தால் காணப்படாத கோயிலினைக் கண்டு கொள்ளக் காட்டிய அளவை நிலையும் காண்க.

என்பணி யணிவார் - அணியலில்லாத என்பினை அணிந்ததுபோலத் தகுதியற்ற எனது பணியினையும் அணியாகப் பூண்டவர் என இரட்டுற மொழிந்து கொள்ளவைத்த ***(என்பு-அணி)*** நயமும் காண்க; முன்னைப் பொருளில் என்பாகிய அணி எனவும், பின்னையதில் ***என் - பணி*** எனது பணி எனவும் கொண்டு சிறப்பும்மை விரித்துக்கொள்க.

இனிதமர்ந்து அருளும் - தமது பணியினையும் ஏற்று அருள் புரிந்து பிள்ளையாரைத் தந்த சிறப்பும் உணர்த்தியபடி; "இன்னருட் பிள்ளை யாரைத் தந்தனையிறைவ" (2765) என்று பின்னர் மன்னர் போற்றும் கருத்துக் காண்க; ***அருளும்*** - முன்னும் இன்றும் பின்னரும் அருளும் என மூன்று காலமும் குறித்து நின்றது; "***இனிது அமர்ந்து*** என்ற கருத்தும் இது; இனியன வல்ல வற்றை யினிதாக நல்கு மிறைவன்" (பியந்தைக்காந்-பிள் -கொச்சைவயம்.5.)

விசும்பையளக்கும் - திருவாலவாய் - என்று கூட்டித் தேவருலகம் முதலிய புவனங்களின் நிலைகளை யெல்லாம் நிலையிட்டருளும் எல்லார்க்கும் முன்னே தோன்றி முளைத்த இறைவனார் எழுந்தருளும் கோயில் என்றும், தேவர் தம் பதங்களை எல்லாம் காவல்பெற வந்து வணங்கும் கோயில் என்றும் இதன் தொன்மையும் பெருமையும் தோன்றக் கூறியபடி என உரைத்தலுமாம்; இப்பொருளில் **விசும்பு** - விண்ணுலகம் என்க.

திருவாலவாயது—என்பதும் பாடம். *662*

2561. **(இ-ள்)** தொண்டர்தாம்... பணிந்து - பெருந்தொண்டராகிய குலச்சிறையார் தாமே இவ்வாறு போற்றிக் காட்டியிடக் கண்டு மலர்போன்ற இரண்டு கைகளையுஞ் சிரமேற் குவித்து

2561. தொண்டர்தாம் போற்றிக் காட்டிடக் கண்டு
துணைமலர்க் கரங்குவித் தருளி
**மண்டுபே ரன்பால் மண்மிசைப் பணிந்து
''மங்கையர்க் கரசி''யென் றெடுத்தே
''யெண்டிசை பரவு மாலவா யாவ
திதுவே'' யென் றிருவர்தம் பணியுங்
கொண்டமை சிறப்பித் தருளிநற் பதிகம்
பாடினார் குவலயம் போற்ற.** 663

நிறைந்த பேரன்பினாலே தரையின்மேல் வீழ்ந்து பணிந்து எழுந்து நின்று; மங்கையர்க்கரசி... ...சிறப்பித்தருளி - ''மங்கையர்க்கரசி'' என்று தொடங்கி எண்டிசையோரும் பரவுகின்ற திருவாலவாய் ஆவது இதுவே என்று மகுடம் பொருத்தி அம்மையாரும் அமைச்சனாருமாகிய இருவருடைய பணிகளையும் கொண்டதனைச் சிறப்பித்து அருளிச் செய்து; நற்பதிகம்... போற்ற - உலகம் போற்றும்படி நற்பதிகத்தினைப் பாடியருளினார்.

(வி-ரை) தொண்டர் தாம்-குலச்சிறையார் தாமே; **போற்றிக் காட்டிட** - முன் பாட்டிற் கூறியபடி அறிவித்த வகையினால் தாம் போற்றுதலும் பிள்ளையாருக்குக் காட்டுதலுமாகிய இரண்டனையும் ஒரு செயலினாற் செய்த திறம் காண்க; **காட்டிடக் கண்டு** - அடையாளங்களுடன் காட்ட அவற்றின் வழியே கண்டு; **மண்மிசைப் பணிந்து** - வரும் வழியிடைத் தெருவில் மண்மேல் திருமேனி பொருந்த வீழ்ந்து பணிந்து; கோபுரத்தைக் கண்டவுடனே அது தூலலிங்கமாகிய இறைவரது திருமேனியாதலின் அவ்விடத்தே வணங்குதல் வேண்டும் என்ற மரபொழுக்கம் குறித்தது; திருக்கோயிலினுள் நிலமுற வீழ்ந்து வணங்கக் கூசும் புல்லறிவாளர், பிள்ளையார் காட்டியருளிய இவ்வழியைக் கண்டேனும் திருந்துவார்களாக.

மங்கையர்க்கரசி என்று எடுத்தே - இது பதிகத் தொடக்கத்தினையும், **''ஆலவாயாவ திதுவே''** என்பது பதிகத்தின் ஒவ்வொரு பாட்டினிறுதியாக வரும் மகுடத்தையும், **''இருவர் தம்பணியும் கொண்டமை சிறப்பித்து''** என்பது பதிகக் குறிப்பாகிய கருத்தினையும் எடுத்துக் காட்டியபடியாம். என்றே எடுத்து என ஏகாரம் பிரித்துக் கூட்டுக.

குவலயம் போற்ற நற்பதிகம் பாடினார் - என்க; **குவலயம் போற்ற** - உலகம் இப்பதிகத்தினைப் போற்ற என்றும், இப்பதிகத்தினையே துணையாகக் கொண்டு இனிப் போற்றியுய்ய என்றும் உரைக்க நின்றது; **நற்பதிகம்** - (''வெள்ளை நீறணியும் கொற்றவன்'') நலங்களைப் பெறுவிக்கும் பதிகம்; ''அந்நலம் பெறுசீர்'' என்ற பாடல் காண்க; பதிகப்பாட்டுக் குறிப்புக்கள் பார்க்க; **குவலயம் போற்ற** - போற்றும்படி உட்கொண்டு. இடையிலே போற்றுதலில்லாத பாண்டிநாடு இனிப் போற்றிச் சிவநெறியில் ஓங்குக என்ற திருவுள்ளக் குறிப்புடன் என்றலுமாம்; கொண்டமை தெரிந்து குவலயம் போற்ற என்று கூட்டியுரைத்தலுமாம். ''பன்னலம் புணரும்'' ''சிவன்றிரு நீற்றினை வளர்க்கும்'' (பதிகம்) என்பன முதலியவை காண்க. **663**

திருவாலவாய் I

திருச்சிற்றம்பலம்

பண் - புறநீர்மை, மூன்றும் திருமுறை

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை வரிவளைக் கைமட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகனல் **வேதமும் பொருள்களு மருளி**
யங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த **வாலவா யாவது மிதுவே.** (1)

வெற்றவே யடியா ரடிமிசை வீழும் விருப்பினன் வெள்ளைநீ றணியுங்
கொற்றவன் றனக்கு மந்திரி யாய குலச்சிறை குலாவிநின் றேத்தும்
ஒற்றைவெள் விடைய னும்பரார் தலைவ **னுலகினி லியற்கையை யொழிந்திட்**
டற்றவர்க் கற்ற சிவனுறை கின்ற வாலவா யாவது மிதுவே. (2)

பன்னலம் புணரும் பாண்டிமா தேவி குலச்சிறை யெனுமிவர் பணியும்
மந்நலம் பெறுசீ ராலவா யீசன் றிருவடி யாங்கவை போற்றிக்
கன்னலம் பெரிய காழியுண் ஞான சம்பந்தன் செந்தமி ழிவைகொண்
டின்னலம் பாட வல்லவ ரிமையோ ரேத்தவீற் றிருப்பவ ரினிதே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:— *பாண்டிமா தேவியாரும் குலச்சிறையாரும் என்னும் இருவர் தம் பணியும் கொண்டு அருள்புரியும் இறைவர் அங்கயற் கண்ணியோடும் இனிது அமர்ந்தருளும் திரு ஆலவாயாவது மிதுவே.*

பதிகப் பாட்டுக் குறிப்பு:— *எடுத்த திருப்பாட்டினில் அம்மையாரைப் பாராட்டிய திறத்தினின் மேம்பாட்டை விரித்து அதனையே ஆதரவாக வைத்து அவர்தம் புராணத்துள் ஆசிரியர் விரிவுரை செய்து வரலாறு கூறும் திறம் காண்க. (மங்கையர்க்கரசியம்மையார் புராணம்-1) 1-3-5-7-9-பாட்டுக்களில் அம்மையார் பணியையும், 2-4-6-8-10 பாட்டுக்களில் குலச்சிறையார் பணியையும், 11-வது பாட்டாகிய திருக்கடைக் காப்பினில் இருவர் பணிகளையும் பாராட்டி அவர்கள் பணியும் அந்நலம் பெறுசீராலவாயீசன் என இறைவரைப் போற்றியமைந்த பதிகத் திருவாக்கின்றிறமும், அதன் பயனாகப் பாண்டிநாடும் தமிழ்நாடும் சைவமும் அன்று முதல் இன்றுவரையும் இனிமேலும் அடையும் பெருநலங்களையும் ஓர்க; இப்பதிகக் குறிப்புக்களையே பற்றிக் குலச்சிறை நாயனார் புராணத்தினுள் ஆசிரியர் அவர் வரலாறு விரித்தமையும் கருதுக;* ***இத்திருப்பதிகம் சைவத்திறம் உலகில் நின்று நிலவப் புத்துயிரளித்துக் காத்த பெருஞ் சிறப்புடைய பதிகங்களுள் ஒன்று.*** *பாண்டி நாட்டில் பிள்ளையார் எழுந்தருளிப் பாடிய அந்நாட்டுத் தலப்பதிகங்களுள் முதலாவது பதிகம் இது; பிள்ளையார் பதிகங்களின் பின்னரே போந்தன அரசுகளும் நம்பிகளும் அருளும் பதிகங்கள்.*

இப்பதிகம் புறநீர்மைப் பண்ணில் அமைந்த சிறப்பும் கருதத்தக்கது; புறநீர்மை பகற்பண்களுள் ஒன்றாகும்; இதற்கு இக்காலத்துக் கொள்ளும் இராகம் பூபாளம் என்பர். இது விடியற்காலம் ஞாயிறு உதிக்குமுன் உள்ள ஒரு முகூர்த்த வேளையில் (மூன்றே முக்கால் நாழிகை) பாடத்தக்க தென்பர்; இஃதே திருப்பள்ளி எழுச்சிக் குரிய

வேளையுமாம்; ''நீறணிந்தா ரகத்திருளும் நிறைகங்குற் புறத்திருளு, மாறவருந் திருப்பள்ளி யெழுச்சியினின்'' (1333) என்று இதன் இயல்பை ஆசிரியர் விரித்துக் காட்டியருளினர்; இது பற்றி ஆண்டுரைத்தவை பார்க்க; பாண்டி நாட்டிற் பழிநாடும்படி பரந்த அமண் என்னும் வல்லிருள் போய் மாய்ந்து விடியும் காலம் வந்தது என்ற குறிப்பும் தருவதாம். இதனுல் பிள்ளையார் எழுந்தருளிப் பாடிய நேரம் விடியற்காலமாம் என்பதும் குறிப்பு.

பதிகப் பாட்டுக் குறிப்பு:— வளவர்கோன் பாவை - சிறப்புப்பற்றிச் சோழனின் மகளார் என்ற நிலைமையால் முதலில் கூறிப் பாண்டிமா தேவி என்ற நிலையைப் பின் வைத்தார்; சிறப்பாவது வழிவழி சைவ நெறியிற் றிறம்பாமையும் அதன் ஏற்றத்தை மறவாது முயலுதலுமாம்; ''மன்னிய சைவத்துறையின் வழி வந்த குடிவளவர்'' (1900) என்றும், ''சிவன்றிரு நீற்றினை வளர்க்கும்'' (தேவா); ''தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை'' ''தங்கள் பொங்கொளிவெண் டிருநீறு பரப்பினுரை'' (மங்கை-புரா 1) என்றும் கூறும் கருத்துக்கள் காண்க. **மானி** - பெருமையுடைய அம்மையார்; காரண இடுகுறியாய் மங்கையர்க்கரசி யம்மையாரைக் குறிக்க வழங்குவது; **பங்கயச் செல்வி** - ஆயிரம் இதழ்த் தாமரையில் வீற்றிருக்கும் உமையம்மை போல்வார். 1718-1758-ல் உரைத்தவை பார்க்க; **அழலுருவன்** - தீயினுல், பின்னர் நிகழும் சுரவாதமும், அனல் வாதமும், வெல்லும் வரலாற்றுக் குறிப்பும், இனம் பற்றிப் புனல்வாத வரலாற்றுக் குறிப்பும் காண்க; **வேதமும் பொருள்களுமருளி**-வேதத்துக்குப் பொருளருளிய திருவிளையாடற் குறிப்பும் இனி வேத நூனெறியே யாக்கும் பயன் பற்றிய பகுதிகளின் குறிப்பும் கருதியது;—**(2) வெற்றவே**-வேறொரு பயனும் வேண்டாமலே; **வீழ்தல்** - அடியற்ற மரம் போல வீழும் நிலை குறிப்பு. **வெள்ளை நீறணியும் கொற்றவன்** - பிற்சரித விளைவுக்குறிப்பு; **உலகினில் இயற்கையை ஒழிந்திட்டு அற்றவர்க்கு அற்றசிவன்**-பாசப்பற்று முழுவதும் நீங்கியவர்க்குத் (அவ்வறுதலாகிய தொழிலாருக) தான் முழுவதும் வெளிப்பட்ட சிவன்- ''அறவே பெற்றூர் நின்னன்பர்'' (திருவா), ''உற்றவர் பெற்றவ மற்றவை முற்றும், அற்றவர்க் கற்றவன் அல்லவர்க் கல்லவன்'' (இருபாவிருபஃது 20),—**(4) அணங்கு** - கங்கை;—**(5) செய்ய தாமரை மேலன்னம்** - ''பங்கயச் செல்வி'' (1); **செய்ய** - முத்தித் திருவுக்கு முதல்வியாகிய என்றது குறிப்பு;—**(7) நீறும்** - திருநீற்றன்பினைப் பலவாற்ருலும் விளக்கம் பெறக் கூறுதல் காண்க; **பளிங்கின் பெருமலையுடனே - மரகதம் அடுத்தாற் போல்**-இறைவர் பளிங்கு மலை போலவும் அம்மை மரகதக்கொடி போலவும் உள்ளார்; மரகதக் கொடியுடன் விளங்குந், தெள்ளு பேரொளிப் பவளவெற்பென'' (1644);—**(8) நாவணங்கு இயல்பாம் அஞ்செழுத்து** - ஐந்தெழுத்து ஓதுதல் நாவிற்கு இயற்கையா லமைந்தது. ''நாவினுக் கருங்கல நமச்சிவாயவே'' ''நாப்பிணை தழுவிய'' ''நான் மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே'' என்பனவாதி திருவாக்குக்கள் காண்க; **நல் இயல்பாகும் கோவணம் பூதிசாதனம்** - கோவணமும் பூதியும் மணியும் நல் இயல்பாக உடலிற் பொருந்துவன;—**(9) மண்ணெலாம் - மன்னும்**-அக்காலம் சோழர் ஆட்சி பெருக நிகழ்ந்தமை காணத்தக்கது; ''உலகெலாங் காக்கின்ற பெருமான் காடவர் கோன் கழற்சிங்கன்'' (தேவா); ''அனபாயன் பொற்குடை நிழற் குளிர்வது'' (85); முதலியவை ஒப்பு நோக்கத்தக்கன; **மன்னும்** - மன்னுகின்ற; நிகழ்காலக் குறிப்பும் அருளாசிக் குறிப்பும்பட ஓதியது காண்க;— **(10) தன்**-இங்கு அண்டநாயகரைக் குறித்தது; அண்டநாயகரைத் தொண்டர் குலாவக் கண்டு குலச்சிறையார் அது கருதி யின்புறுகின்ருர் என்பது; **தன்**-குலச்சிறையாரைக் குறிப்பதாக

2562. பாடிய பதிகம் **பரவியே வந்து** பண்புடை யடியவ ரோடுந்
தேடுமா லயனுக் கரியவர் மகிழ்ந்த **திருவால வாய்மருங் கணைந்து**
நீடுயர் செல்வக் கோபுர மிறைஞ்சி நிறைபெரு விருப்புடன் புக்கு
மாடுசூழ் வலங்கொண் **டுடையவர் கோயின் மந்திரியாருடன் புகுந்தார்.** 664

உரைப்பாருமுண்டு; **குறியின்கண் நெறியிடை வாரா**-*அந்நெறியில் அவர் கொள்ளும் குறிப்பினில் அடங்காத;—(11)* **பணியும் அந்நலம் பெறுசீர்** - *இறைவர் இவ்விருவர் பணிகளையும் ஏற்றருளும் சிறப்பு; பணிகளும் வேண்டிய அந்நலங்களைப் பெறவுள்ள என்றலுமாம்;* **இன்னலம்**-*இனிய நன்மை பெறும்படி*

தலவிசேடம்— திருவாலவாய் - *பக்கம் 740 தொகுதி II பார்க்க.*

2562. (இ-ள்) *பாடிய...வந்து - அவ்வாறு பாடிய திருப்பதிகத்தாற் பரவியபடியே வந்து; பண்புடை...அணைந்து - அடிமைப் பண்பு பொருந்திய அடியவர்களோடும், தேடும் மாலுக்கும் அயனுக்கும் தெரிவரியராய் நின்ற இறைவனார் மகிழ்ந்தெழுந் தருளிய திருவாலவாய்த் திருக்கோயிலின் பக்கத்தே அணைந்து; நீடுயர்...புக்கு - நீண்டு உயர்ந்த செல்வத் திருக்கோபுரத்தைப் பணிந்து நிறையும் பெரு விருப்புடனே உள்ளே புகுந்து; மாடுசூழ் வலங்கொண்டு-பக்கத்திற் சூழும் திருமாளிகையினை வலமாகச் சூழ்ந்து வந்து; உடையவர்...புகுந்தார்-இறைவரது திருக்கோயிலினுள்ளே மந்திரியாராகிய குலச்சிறையாருடனே புகுந்தருளினார்.*

(வி-ரை) பாடியபதிகம் பரவியே வந்து - "பாடினார் குவலயம் போற்ற" *(2561)* என்று முன்கூறியபடி பாடிய திருப்பதிகத்தினைப் பாடிய வண்ணம்-பரவிய படியே; "*ஆலவா யாவது* மிதுவே" என்று பாடித் துதித்துக் கண்டு கொண்டபடி வந்து திருவாலவாயினை அணைந்தனர்; "*காளத்தி கண்டு கொண்டு, குளிர்வரு நதியூ டேகிக் குலவரைச் சாரல் சார்ந்தார்" (749)* என்ற நிலை கருதுக.

பண்புடை அடியவர் - "நற்றவக்கடல்" *(2559)*, உயர்தவத் தொண்டர்" *(2559)*; இவர்கள் பிள்ளையாருடன் வந்த திருத்தொண்டர்கள்; "பெருகொளிய திருநீற்றுத் தொண்டர்குழாம் பெருகிவர" *(2546)*. இவர்களே முன்னர்ப் பிள்ளையாரைப் பாண்டி நாட்டுக்கெழுந்தருளிச் சமணரை வென்று சைவம் விளங்க அருள வேண்டுமென்று போற்றினவர்கள் என்க. 2512— பார்க்க. இவையெல்லாம் குறிக்கப் "பண்புடை யடியார்" என்றார்; குலச்சிறையார் அரசாங்க நிலையில் எதிர்கொள்ளச் சென்றார்; தமிழ்நாட்டுப் பதிகள் எல்லாம் அமணர்களுடைய பலதிறப்பட்ட பாழிகளும் பள்ளிகளுமாகிச், சைவநெறியினிற் சித்தஞ் செல்லா நிலைமையில் நிகழ்ந்தும், அம்மையார் அமைச்சனா ரிருவர் தம் பாங்குமன்றிச் சைவ மங்கெய்தாதாகியும், போந்த தன்மைகளால் சைவத் தொண்டர்கள் பலர் பிள்ளையாரை எதிர் கொள்ளப் போதும் நிலையினரில ரென்பது குறிப்பு. முன் 2499—2500—2501-ல் உரைத்தவை பார்க்க; **அடியாரோடும் - அணைந்து** என்று கூட்டுக.

திருவாலவாய் - இங்குத் திருக்கோயிலைக் குறித்தது.

வேறு

2563. ஆளு மங்கண ராலவா யமர்ந்தினி திருந்த
காள கண்டரைக் கண்களின் பயன்பெறக் கண்டு
நீள வந்தெழு மன்பினுற் பணிந்தெழ நிறையார்
மீளவும்பல முறைநில முறவிழுந் தெழுவார்; 665

நீடுயர் செல்வக் கோபுரம் இறைஞ்சி - "நீள் கொடிசூழ் வியனெடுங் கோபுரந் தோன்றும்" (2560) என்றும், "மண்மிசைப் பணிந்து" (2561) என்றும் முன்னர் கூறினர். அங்குக் கொடி சூழ்ந்த கோபுரச் சிகரங்கள் தோன்றின. கோபுரத்தால் அறியப்பெற்ற திருக்கோயிலினையும் திருநகரத்தினையும் முன்னர்ப் பணிந்தனர்; இங்குக் கோயில் முழுதும் கோபுர முழுதும் காட்சிப்பட்டன. முறைப்படி கோபுரத்தை இறைஞ்சித் திருக்கோயிலினுள் புகுந்தனர்.

மாடு சூழ்புடை வலங் கொள்ளுதல் - இறைவர் எழுந்தருளியுள்ள நிலையின் பக்கத்திற் சூழ்ந்து உள்ளே அமைந்த திருமாளிகையினை வலமாக வந்து திருமுன்பு புகும் மரபு.

கோயில் - இறைவர் உள்ளே எழுந்தருளியுள்ள திருமுன்பு.

குறிப்பு - பாண்டி நாட்டில் அமணென்னும் வல்லிருள் சூழ்ந்தது; அதனை மாய்ப்பதற்கு ஞானமணி விளக்கு எழுந்து வந்தது; இஃது இரவு குறித்தது; இனிப் பிள்ளையார் எழுந்தருளும் பொழுது இசைக்கும் காளத்தின் ஒலி குலச்சிறையார் செவியின் அமுது எனத் தேக்கிற்று; அப்பொழுது அவ்விரவு போய்ப் புலரும் காலமாகிய புலரி - (வைகறை) அணுகியது; "அருணனிந் திரன்றிசை யணுகின னிருள்போ யகன்றது வுதயம்" (திருவா); அங்கு வரலாறு கூறும் ஆசிரியரது தெய்வத் திருவுள்ளத்தில் திருவருட் குறிப்பின்வழி அந்நேரங் காட்டும் புறநீர்மைப் பண்ணின் சந்தம் எழுந்ததாக அந்த யாப்பில் வரலாறு கூறத் தொடங்கிக் கூறி வந்தருளினர்; பிள்ளையாரைக் குலச்சிறையார் எதிர்கொண்டு பணிந்து அவரது திருவருள் பெற்றுப் போந்தபோது பிள்ளையார் திருவாலவாய்த் திருப்பதிகம் திருவருளால் இப்பண்ணிலும் சந்த யாப்பிலும் எழுந்தன; அதனை அருளியபடியே பிள்ளையாரும் தொண்டர்களுடன் அமைச்சரோடு திருவாலவாய்க் கோயிலை அணைந்தனர். பொழுதும் புலரி தீர்ந்து விடிந்தது; இவ்வரலாற்றின் இச்சந்தப்பாடல் யாப்பும் முடிந்தது; திருமுன்பு சென்று திருவாலவாயுடை யாரைக் கண்டதும் "நீல மாமிடற் றால வாயிலான், **பால தாயினர் ஞால மாள்வரே**" என்ற ஆணையின் அருளும் பிறந்தது; சமண இருளும் மாய்ந்து இறந்த தன்மையதாயிற்று; சைவமும் சிறந்தது; பிள்ளையாரது பதிகம் திருவருட் குறிப்பின் வழியே காலத்துக்கும் நிலைக்கும் ஏற்க உதித் தெழுந்ததாக, அதன் வழியே வந்த ஆசிரியரது திருவாக்கும் அருட்குறிப்புத்தர எழுந்ததாம் என்க. ***664***

2563. **(இ-ள்)** ஆளும்...கண்டு - ஆட்கொண்டருளும் அங்கணராகித் திரு வாலவாயில் விரும்பி இனிதாக எழுந்தருளியிருக்கும் திருநீலகண்டராகிய இறைவரைக் கண்கள் பெற்றதன் இனிய பயனைப் பெறும்படி கண்டு; நீள...நிறையார் - நீளுமாறு வந்து எழும் அன்பினாலே பணிந்தெழுந்தும் அமைதி பெறாராகி; மீளவும்...எழுவார் - மீண்டும் மீண்டும் பலமுறை திருமேனி நிலம் பொருந்த வீழ்ந்து எழுவாராகி,

2564. அங்க மெட்டினு மைந்தினு மளவின்றி வணங்கிப்
பொங்கு **காதலின்** மெய்ம்மயிர்ப் **புளகமும்** பொழியுஞ்
செங்க ணீர்தரு **மருவியுந் திகழ்திரு மேனி**
யெங்கு மாகிநின் றேத்தினார் புகலிய ரிறைவர். 666

(வி-ரை) ஆளும் அங்கணர்-இனி மன்னவனை ஆட்கொண்டு நின்றார் அங்கண்மையுடையார் என்றது குறிப்பு. இதுவரை ஆட்கொண்டு முன்செய் தீவினைப் பயன் தந்து மறக்கருணை செய்து அவன் அலமருதல் கண்ணுற்றருளியதாம்; இனி அவனுடைய வினைகள் ஒத்துத் துலையென நிற்றலாலே அங்கண்மை செய்து ஆளாக ஏற்றுக் கொண்டு நின்றார் நிலை; **அங்கணர்** என்ற குறிப்புமிது. **ஆளுமங்கணர் - கண்டு** என்று கூட்டி ஆட்கொளவந்த பிள்ளையார் கண்டு என்றலுமாம்.

ஆலவாயமர்ந்தினிதிருந்த காளகண்டர் - அரசனும் நாட்டவரும் முன் செய்த தீவினைகளாகிய விடத்தை அமுதமாக ஏற்றருளுபவர் என்பது குறிப்பு; "நீலமாமிடற் றாலவாயிலான்" என்ற தேவாரக் கருத்தை விளக்கியபடி.

பயன் பெறக்கண்டு - "கண்காள் காண்மின்களோ கடல் நஞ்சுண்ட கண்டன் றன்னை" (திருவங்கமாலை).

கண்களின் பயன் - கண் கிடைக்கப்பெற்ற பயன் - ஞானக்கண்ணால் எப்பொழுதும் காண்பவர் புறக்கண்ணும் பயன் பெறக்கண்டார் என்றும், இதுவரை கண் காணாது பயனிழந்த மதுரை மக்கள் இனிக்கண்டு பயன் பெறும்படி தாம் கண்டு என்றும் உரைக்க நின்றது; "இங்கெம்மைக் கண்விடுத்த" (2776).

பணிந்தெழ நிறையார் - மீளவும் பலமுறை - விழுந்தெழுவார் - அளவின்றி வணங்கி என்று மேல்வரும் பாட்டுடன் கூட்டியுரைத்துக்கொள்க. **நிறையார்** - நிறைவு (அமைதி - திருப்தி) பெருதவராகி; வணங்குதல் மூன்று - ஐந்து - ஏழு - ஒன்பது - பதினொன்று என முறைப்பட விதிக்கப்பட்டது. அவ்வாறு அளவுபட வணங்குதலில் மனம் அமையாது; அளவில்லாதபடி பலமுறையும் வீழ்ந்து வணங்கி எழுந்தனர் என்பதாம்; நிறையார் - விழுந்தெழுவார் - வணங்கி-நின்று-ஏத்தினார் என வரும்பாட்டுடன் முடிக்க.

நீளவந்து எழும் அன்பினால்-இவ்வாறு அளவுகடந்த நிலையில் வீழ்ந்தெழுந்து வணங்குதல் அளவுகடந்து பொங்கி எழும் அன்பினாலன்றி விளையாது என்பதாம். 665

2564. **(இ-ள்)** அங்க மெட்டினும்...வணங்கி - எட்டு அங்கத்தானும் ஐந்து அங்கத்தானும் அளவில்லாதபடி வணக்கங்கள் செய்து; பொங்கு...அருவியும் - உண்ணிறைந்து பொங்கி எழும் அன்பின் மிகுதியினாலே மெய்யின்கண் மயிர்க்கூச்செறி தலும், செங்கண்கள் பொழிகின்ற நீரின் அருவி போன்ற பெருக்கும்; திகழ்...... நின்று - திருநீற்றின் ஒளிவிளங்கும் திருமேனியில் முழுவதும் பொருந்தும்படி நின்று; புகலிய ரிறைவர் ஏத்தினார் - சீகாழித் தலைவராகிய பிள்ளையார் துதித்தருளினார்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

2565. **''நீல மாமிடற் றுலவா யா''னென** நிலவும்
மூல மாகிய திருவிருக் குக்குறண் மொழிந்து
சீல மாதவத் திருத்தொண்டர் தம்மொடுந் **திளைத்தார்**
சாலு மேன்மையிற் **றலைச்சங்கப் புலவனார் தம்முன்.** 667

(வி-ரை) அங்கமெட்டினும் ஐந்தினும் அளவின்றி வணங்கி - அட்டாங்க பஞ்சாங்கமாகச் செய்யும் வணக்கங்களை எண்ணில்லாதபடி செய்து; **அட்டாங்க வணக்கம்** - எட்டங்கங்களும் நிலந்தோய வணங்குதல்; ஐந்து அங்கங்கள் நிலம்படி வணங்குதல் பஞ்சாங்க நமக்காரம் எனப்படும்; இவை இன்னவென்று முன்னர்க் கூறப்பட்டன. ஆண்பாலார் இவையிரண்டும் செய்தல் வேண்டும்; பெண்பாலர் ஐந்தங்க வணக்கமே செய்தற்குரியர்.

மயிர்ப்புளகமும் கண்ணீரருவியும் திருமேனி எங்கும்ஆகி - திருமேனி முழுதும் மயிர்ப்புளகம் கொண்டது; கண்ணீர் அருவிபோலப் பெருகித் திருமேனி முழுதும் நனைந்தது; இவ்வாறாகிய நிலையடைந்து. ''உடம்பெல்லாங் கண்ணா யண்ணா வெள்ளந்தான் பாயாதால்'' (திருவா).

திகழ் திருமேனி-திகழ்தல் - பேர் அழகினாலும் திருநீற்றொளியினாலும் விளங்குதல்.

ஏத்தினார் - பலவகையாலும் தோத்திரம் செய்தனர்; பதிகத்தாலேத்துதல் மேற் கூறப்படும். 666

2565. **(இ-ள்)** நீல...மொழிந்து-''நீல மாமிடற் றால வாயிலான்'' என்று தொடங்கி நிலவுகின்ற மூலமாகிய திருஇருக்குக் குறட் பதிகத்தினை அருளிச்செய்து; சாலும்...தம்முன்-பொருந்திய மேன்மையினையுடைய தலைச்சங்கப் புலவனாராகிய சோமசுந்தரமூர்த்தியின் திருமுன்பு; சீல...திளைத்தார் - ஒழுக்கத்தான் மிகுந்த மாதவமுடைய திருத்தொண்டராகிய குலச்சிறையாருடனே கூடி அன்பினுள் அழுந்தி மகிழ்ந்தனர்.

(வி-ரை) ''நீலமாமிடற் றாலவாயான்'' என - இது பதிகத் தொடக்கம்; **நிலவுதல்** - நிலை பெறுதல்.

நிலவும் மூலமாகிய திருவிருக்குக் குறள் - இருக்குக்குறள் - பதிகப்பாட்டின் யாப்பு வகை; மூலம்-சிறிய அளவில் ஒடுங்கிப் பெரிதினைத் தோற்றுவிக்கும் தன்மையுடைய பொருள்; வித்தும் அங்குரமும்போல; மேல்வரும் நிகழ்ச்சிகளின் காரணமாக நின்ற திருவாக்குக்களை அடக்கிப் பின்னர்த் தோற்றுவிக்கும் நிலை குறிப்பு; யாப்பிலக்கணத்துள், அடி இருசீரளவிற்கொண்ட குறட்பாவே ஏனை எல்லாப் பாக்களுக்கும் பாவினங்கட்கும் தொடக்கமாம் என்ற சொல்வகைக் கருத்தும், அதுபோலவே முன் கூறிய பொருள் வகைக் கருத்தும் புலப்பட இவ்வாறு **மூலமாகிய** என்றார்; மேல் வரும் நிகழ்ச்சிகளின் குறிப்பினையே திருவுளத்துக் கொண்ட அருளால் இப்பதிகம் போந்ததென்பது ''ஆல வாயிலான் பால தாயினார் ஞால மாள்வரே'' என்று பின்னர்ப் பாண்டியன் சிவநெறி சாரும் நிலை குறித்ததனால் அறியப்படும். ''முடிவி லின்றமிழ் செடிக ணீக்குமே'' என்ற திருக்கடைக்காப்பும் காண்க. **மூலம்** - மூல இலக்கியம் என்றலுமாம்.

சாலு மேன்மையில் தலைச்சங்கப் புலவனார் தம்முன் - திளைத்தார் - என்க.

மேன்மையின் தலைச்சங்கப் புலவனார் - மேன்மையின் - மேன்மையையுடைய. இரண்டனுருபும் பொருளும் உடன்றொக்கன. மேன்மையில் திளைத்தார் என்று கூட்டி உரைத்தலுமாம். **சாலுதல்** - பொருந்துதல்; அமைதல்.

தலைச்சங்கப் புலவனார் தம்முன் - திருவாலவாயுடையாரைத் தமிழ்ச் சங்கப் புலவர் தலைவர் என்ற தன்மையைக் குறிப்பினாலே கண்டும், திருவுளத்துக் கொண்டும் வணங்கினார்; அரசுகளும் "சென்றணைந்து மதுரையினிற் றிருந்திய நூற்சங்கத்து, அன்றிருந்து தமிழாய்ந் தருளிய வங்கண" ராகவே (1668) கண்டு வழிபட்டதனையும் காண்க; ஆண்டுரைத்தவையும் இங்கு நினைவுகூர்க; "**தமிழ்நாடு பழி**நாடும் படிபரந்த மானமிலா வமணென்னும் வல்லிருள்போய் மாய்வதனுக்கு" (2550) என்று முன்கூறிய குறிப்புக்களும் கருதுக; **புலவனார்**-திருவாலவாயுடையார். பிள்ளையாரது தமிழருமையறியும் பெருமான் என்பதும் குறிப்பு. இவரைத் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள் என்பது முதலாகப் பழந்தமிழ் நூல்கள் பேசும்.

சீலமாதவத் திருத்தொண்டர் - குலச்சிறையார்; பிள்ளையாருடன் போந்த அனைத் 667
தொண்டர்கள் என்றலுமாம்.

திருவாலவாய் II

திருச்சிற்றம்பலம் — **திருவிருக்குக்குறள்—பண் - குறிஞ்சி**

நீல மாமிடற், **ருல வாயிலான், பால தாயினார், ஞால மாள்வரே.** (1)

அடிகளாலவாய்ப், படிகொள் சம்பந்தன், முடிவி லின்றமிழ், செடிகணீக்குமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—பாண்டி நாட்டில் உற்ற தீமைகளை நீக்கிப் பாண்டியனையும் அந்நாட்டினையும் வெண்ணீறு இடுவித்துச் சிவநெறியிற் புகுத்துதல் கருத்து.

பதிகப் பாட்டுக் குறிப்பு:—(1) நீலமாமிடற்று ஆலவாயிலான் - விடமுண்டு அமரர்களைக் காத்தமைபோல அமண் கழுவிப் பாண்டிநாட்டினைக் காப்பார்; **பால தாயினார்** - அவன் சார்பு இப்போதின்றி இனிப் பெற்றுச் சைவராவார்; **ஆயினார் - ஆள்வர்**-ஆக்கச்சொல், அவ்வாறாதல் வருங்காலம் என்பதனையும், ஆவான் அரசன் என்பதனையும் குறித்தது; "அகில காரணர் தாள்பணி வார்கடாம், அகில லோகமுமாளற் குரியர்" (139) என்ற கருத்தும் காண்க;—**(2) ஞாலம் - உலகங்கள்; ஏழுமாம்** - கலப்பினாலும் நிமித்த காரணராம் தன்மையாலும் இவ்வாறு கூறினார்; **சீலம்** - சரிதை—**(3) ஆலநீழலார்** - கல்லாலின் அடியில் இருப்பவர்; **பாலதாமின்**-உலகர்க்கும் அந்நாட்டவர்க்கும் அருளினால் உபதேசித்தது.—**(5) ஆடல்** - சார்விலா தாரை அடுகின்ற தன்மை; மாயப் பசுவை வதைத்த திருவிளையாடல் காண்க.—**ஆடல்** - வெற்றியுமாம்.—**(10) தேரமண் செற்ற வீரன்** - சரிதக் குறிப்பும் உடையது; **செற்ற** - துணிவுபற்றி இறந்தகாலத்தாற் கூறினார்;—**(11) செடிகள்** - நாட்டுக்கு அந்நாள் நேர்ந்த கேடும், இனி வரக்கூடியனவாகிய தீமைகளும் ஆம். திருஞானசம்பந்தரின் முடிவிலின்றமிழ் அவற்றை நீக்கும்.

2566. சேர்த்து மின்னிசைப் பதிகமுந் திருக்கடைக் காப்புச்
சாத்தி, நல்லிசைத் தண்டமிழ்ச் சொன்மலர் மாலை
போர்த்து மின்புறப் பாடி,வெண் பிறையணி சென்னி
மூர்த்தி யார்கழல் பரவியே திருமுன்றி லணைய 668

2566. **(இ-ள்)** *சேர்த்தும்...சாத்தி - சேர்க்கின்ற இனிய இசையினையுடைய பதிகத்தினையும் திருக்கடைக்காப்புச் சாத்தி நிறைவாக்கி; நல் இசை...பாடி-நல்ல இசையினையுடைய தண்ணிய தமிழ்ச்சொற்களாகிய மலர்மாலையினைப் போர்த்தும் இன்பம் பொருந்தப்பாடி; வெண்...அணைய-வெள்ளிய பிறையினை அணிந்த சென்னியினையுடைய இறைவருடைய திருவடிகளைப் பரவியே திருமுன்றிலினை வந்து அணையும் போது;*

(வி-ரை) சேர்த்தும் இன்னிசை - *கருதிய பயனைக் கூட்டும் இனிய இசை; இசைகள் குறித்த அவ்வப் பயன் தருதலை இசை நூல் வகுத்துக் கூறும்; ஏனைய இசைகள் போலொழியாது, பிள்ளையார் கூட்டிய பண்ணிசை உயர்ந்த பயன் தருதலின் சேர்த்தும்* **இன்னிசை** *என்று சிறப்பித்தார்.*

நல்லிசைத் தண்டமிழ்ச் சொன்மலர் மாலை போர்த்துமின்புறப் பாடி-*''நீலமா மிடற்று'' என்ற இப்பதிகமேயன்றி வேறு மொரு பதிகமும் பாடியருளினர் என்பது குறிப்பு; அப்பதிகம் இறந்துபட்டது போலும்!; ''முடிவி லின்றமிழ் செடிக ணீக்குமே'' என இப் பதிகப் பயன் கூறியபடி, பாண்டி நாட்டின்* **துன்ப நீக்கங்** *கருதி இப்பதிகத்தினையும், அதனின் வேறாய்* **இன்ப ஆக்கத்து***க்காக மற்றுமொரு பதிகமும் அருளுதல் இயைபுடைத் தென்க; இவ்வாறே பின்னர் ''வாது செயத் திருவுள்ளமே'' ''வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே'' என்று இரண்டு பயன் கருதி வெவ்வேறு இரண்டு பதிகங்கள் அருளியமை கருதுக; ''பரசமய நிராகரித்து நீறாக்கும்'' (1917) என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க;* **இன்புற** *- இன்பம் உறும் பொருட்டு என்ற கருத்தும் இது;* **போர்த்தும் - மாலை - பாடி** *- மீண்டும் மற்றும்* **ஒரு மாலை பாடி***; பதிகமும் போர்த்தும் என்ற உம்மைகளால் வேறு பதிகம் என்பது தெளியப்படும். இவ்வாறன்றி அப்பதிகத்தினையே மீண்டும் அனுசந்தித்துப் பாடினர் என்றுரைப்பாருமுண்டு.*

கழல் பரவியே *- முன் பதிகம் பொருளியல்பும் பயனும் கூறி ஆணைதரும் இயல்பில் அருளினார்; இப்பதிகம் அவ்வாறன்றி இறைவருடைய திருவடிகளைத் துதிக்கும் வகையானருளப்பட்ட தென்பது குறிப்புப் போலும்.*

அணைய - முன்பெய்த-என்ன - அணைந்தாராக - விழுந்தார்; எடுத்தார் - என முடித்துக் கொள்க. **668**

2567. **(இ-ள்)** *பிள்ளையார்...அப்பொழுது - முன்னர்ப் பிள்ளையார் திருக் கோயிலினுள்ளே எழுந்தருளிப் புகுந்த அப்பொழுது; வெள்ள நீர்...உள்ளணைந்திட - கங்கை தங்கும் சடையினையுடைய இறைவரைத் தொழுகின்ற ஆர்வத்தோடும் உள்ளே அணைந்திடலாலே; எதிர் செலாது...தெரிவையார்-அவர் எதிரிற் செல்லாது ஒரு பக்கத்தில் ஒதுங்கிய தெள்ளும் நீரிற் பொருந்திய கண்களையுடைய தெரிவையாராகிய அம்மையார்; சென்று முன்பு எய்த-(அவரது) திருமுன்பு சேர;*

2567. பிள்ளை யாரெழுந் தருளிமுன் புகுதுமப் பொழுது
வெள்ள நீர்பொதி வேணியார் தமைத்தொழும் விருப்பால்
உள்ள ணைந்திட வெதிர்செலா தொருமருங் கொதுங்குந்
தெள்ளு நீர்விழித் தெரிவையார் சென்றுமுன் பெய்த. 669

(வி-ரை) எதிர்செலா தொருமருங்கு ஒதுங்கும் - இஃது இப்பாட்டின் கருத்து நுட்பம்; மிகவும் மனங்கொள்ளத்தக்கது;—பிள்ளையாரையெதிர் கொள்ளும்படி தலைச்சிறையாரை ஏவினார் அம்மையார்; அவரும் அவ்வாறே எதிர்கொள்ள எய்தும் காலைத் தாமும் தமது நிலைக்கேற்றவாறு எதிர்கொள வேண்டுமென்று அம்மையார் எண்ணினார்; ஆலவாயமர்ந்தார் தம்மைக் கும்பிட வேண்டுமென்று கொற்றவன் றனக்கும் கூறித் திருவாலவாய் சென்று நம்பரை வணங்கிப் பிள்ளையார் வரவை எதிர்நோக்கி நல்வரவேற்று நின்றனர் (2545); பின்னர்ப் பிள்ளையாரும் திருவாலவாயினுள் எழுந்தருளினர்; ஆனால், அவரை நல்வரவேற்கும் பொருட்டே அங்கிருந்த அம்மையார் அப்போது அவர் முன்பு எதிர் செல்லாது ஒருபுறம் ஒதுங்கிக் கொண்டனர்; பிள்ளையாரும் ஆர்வத்தால் வேறெங்கும் நோக்காது நேரே உட் சென்று முறையினால் இறைவரை வணங்கிப் பாடி அருள்பெற்றுப் புறம்பு திருமுன்றிலில் எய்தினார்; அப்போது அம்மையார் அவர் திருமுன்பு எய்தினர் என்பதாம்.

முன்புகுதும் அப்பொழுது...உள்அணைந்திட - அணைந்திட - அணைந்திடலால்; பிள்ளையாரை நல்வரவேற்பதற்காக வந்த அம்மையார் அவர் உட்புகும்போது எதிர் செல்லாது ஒதுங்கிக் கொண்டதன் காரணம் கூறியபடி; என்னை? - உட்புகும் அப்பொழுது இறைவரைத் தொழும் பெருவிருப்பினால் செல்கின்றாராதலின் அப்பொழுது அதற்கிடையூறாய்க் குறுக்கிட்டு முன்னின்று வரவேற்பது தகுதியன்று; அன்றியும் திருக்கோயிலில் வழிபடச் செல்வோர் அதற்குப் புறம்பாகிய வேறொன்றினும் கவனம் செலுத்துதல் முறையன்றாதலின் அவரும் இவரைக் காணமாட்டார்; தமது வரவேற்பும் கருதிய பயன்தராது ஒழிந்து வீணாகும்; மேலும் மற்றொன்று - பிள்ளையார் உட்புகுந்து தம் பெருமானை வணங்குவர்; தம்பொருட்டு வேண்டி அவரது அருள்பெற்று மீள்குவர்; அவ்வாறு மீளும் பொழுது முன்சென்று வணங்கின் பிள்ளையாரருளேயன்றி அவ்வருட் பிரசாதத்தினையும் பெறத் தக்கது என்ற நிலையும் கருத்து.

தெள்ளுநீர் விழி-அன்புக் கண்ணீர் பெருகும் கண்கள்; இது தாயாந்தன்மை நிலையினால் எழுந்தது; "அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர், புன்கணீர் பூச றரும்" (குறள்); "சுரந்த திருமுலைக்கே துய்ய சிவஞானஞ் சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச் - **சுரந்த தனமுடையா** டென்பாண்டி மாதேவி தாழ்ந்த, மனமுடையா **ளன்பிருந்த வாறு**" (களிறு-54); "இல்லா **முலைப்பாலுங் கண்ணீரு** மேந்திழைபா, லல்லா யுளவாமால்" (போதம் 8 சூத்;) என்று வரும் திருவாக்குக்களும், "ஏந்திய இழைகளை யுடையாட்குக் குழவிமாட்டுளதாகிய அருவாகிய அன்பினைப் பிறரறியுமாறு வெளிப்படுத்தும் **அவ்வன்பினுருவாகிய முலைப்பாலுங் கண்ணீரும்** அவண் மாட்டுக் குழவியைக் காணுமுன் இல்லாவாய்ப், பின்னுளவாம்" "அவ்விரண்டும் அன்பின் வடிவே பிறவல்ல வென்பது, அன்பு நிகழ்தற்குரிய காரண முள்வழி வெளிப்பட்டு, அஃதில்வழி வெளிப்படாத ஒற்றுமை நோக்கிக் கண்டு கொள்க" என்று வரும் சிற்றுரையும் காண்க; இங்குக் கண்ணீர் மட்டும் கூறினா ரேனும் மேற்கூறிய நியாயத்தால் இனம்பற்றி முலைப்பாலும் கொள்க. இக்கருத்தைப் பற்றிப் பின்வந்த பெரியாராகிய சிவப்பிரகாச சுவாமிகளும்

2568. மருங்கின் மந்திரி யார்பிள்ளை யார்கழல் வணங்கிச்
''கருங்கு ழற்கற்றை மேற்குவி கைத்தளி ருடையார்
பருங்கை யானைவாழ் **வளவர்கோன் பாவையா**''ரென்னப்
பெருங்க ளிப்புடன் விரைந்தெதிர் பிள்ளையா ரணைந்தார். 670

''முன்னின் னிலைவிளம்பக், கொங்கை சுரந்தவருட் கோமகளோ'' *(நால்வர் நான்மணிமாலை)* என்று போற்றினர்.

தெரிவையார்-தெரிவை-பெண்களின் ஏழு பருவங்களுள் ஆறாவது; 25 வயது முதல் 31 வயது வரையும் உள்ள பருவம்; இஃது அப்பொழுது அம்மையாரது வயதைக் குறிக்கும் மொழி என்று கருத இடமுண்டு; பெண்பாற் பொதுப்பெயர் என்று கொள்ளினு மிழுக்கில்லை; இங்கு இப்பெயராற் கூறியது இத்துணைப் பயனும் படு பொருளும் தெரிந்து செயலாற்றும் தன்மையுடையார் என்ற குறிப்புத் தருதற்கு; ''மானியார் மனக் கருத்து முற்றியதென மதித்தே'' (2570) என மேற் கூறுதல் காண்க.

முன்பு எய்த - பிள்ளையார் திருமுன்பு செல்ல. 669

2568. **(இ-ள்)** மருங்கின்...வணங்கி-பக்கத்தே வந்த மந்திரியாராகிய குலச் சிறையார் பிள்ளையாருடைய திருவடிகளை வணங்கி நின்று; ''கருங்குழல்...பாவையார்'' என்ன - ''கரிய கூந்தலின் மேலே கூப்பிய கைத்தளிர்களை யுடைய அம்மையார் பரிய கையினையுடைய யானைகள் வாழும்வளச்சோழ மன்னரின் மகளார்'' என்று சொல்ல; பெரும்... அணைந்தார்-பெருமகிழ்ச்சியுடனே விரைந்து அவ்வம்மையார் எதிரே அவர் வந்து அணைந்தனராக;

(வி-ரை) மருங்கின்...வணங்கி - மருங்கின் மந்திரியார் - பிள்ளையாருடன் வந்த திருத் தொண்டர்களுள் பக்கத்தே வந்த குலச்சிறையார்.

பிள்ளையார் கழல் வணங்கி - மந்திரியார் - ''பாவையார்'' என்ன - என்று கூட்டுக. இஃது அம்மையாரைப் பிள்ளையாருக்கு மந்திரியார் அறிமுகப் படுத்திய முறை; இஃது இந்நாளின் புது நாகரீக முறைகளுள் ஒன்றாகக் கிடைத்ததாகக் கருதி மகிழ்ந்து கொள்வாருமுளர்; இங்குக் காணும் உயர்ந்த நிலையினைக் கண்டு யாவரும் பின்பற்றி நலம் பெறுவாராக; **வணங்கி** அறிவிக்கும் முறையும் காண்க.

''கருங்குழல்...பாவையார்'' என்ன-இஃது அமைச்சர் விண்ணப்பித்தது; **மேற்குவி கைத்தளி ருடையார்** - அதுபோழ்து அம்மையார் சிரமேற் கைகுவித்து நின்றனர் என்பதறியப்படும்; இதனை முன்பாட்டிற் கூறாது இங்கு அமைச்சர் வாக்கிற் கூறவைத்த கவிநயம் கண்டுகொள்க; **கற்றை** - தொகுதி; **கைத்தளிர்** - கைகளாகிய தளிர் என்க; திருவடிகளில் தளிர்களையிட்டு வணங்கிப் பழகிய கைகள் என்ற குறிப்பும் காண்க. பிள்ளையாரை வணங்கத் தளிர்களையும் மலர்களையும் கையிற் கொண்டிருந்தார் என்றதும் குறிப்பு.

பருங்கை யானை வாழ் வளவர் கோன் - யானை வாழும் வளத்தினையுடையார். யானைப் படையும் குறிப்பு.

2569. தென்ன வன்பெருந் தேவியார் **சிவக்கன்றின்** செய்ய
பொன்ன டிக்கம லங்களிற் பொருந்தமுன் விழுந்தார்;
மன்னு சண்பையர் வள்ளலார் மகிழ்சிறந் தளிக்கும் 671
இன்ன ருட்பெருஞ் சிறப்பொடுந் திருக்கையா லெடுத்தார்.

வளவர்கோன் பாவையார்-சோழனின் மகளார் என்றறிவித்த திறம் காண்க; இதுபற்றி முன் "வளவர்கோன் பாவை" (தேவா); "செம்பியர் பெருமான் குலமகளார்" (2556) என்ற இடங்களிலும், பிறாண்டு முரைத்தவை பார்க்க; பிள்ளையார் அருளிய தேவாரத்தைத் தானிருந்து கேட்ட நினைவிற் குறிப்பினை உட்கொண்டு அவரது திருவுள்ளத்திற் கேற்றவாறு அறிவித்த குறிப்புமாம்.

எதிர் - அம்மையார் முன்பு; பிள்ளையாரது முன்பு அம்மையார் சிரமேற் கை கூப்பி எய்தினர்; மந்திரியார் அறிவிக்கப் பிள்ளையாரும் விரைந்து அம்மையாரெதிர் அணைந்தனர். இவை அன்பின் திறம். 670

கைம்மலருடையார்—என்பதும் பாடம்.

2569. **(இ-ள்)** தென்னவன்...வீழ்ந்தார் - பாண்டியனின் பெருந்தேவியாராகிய மங்கையர்க்கரசி யம்மையார் சிவக்கன்றாகிய அவருடைய சிவந்த பொன் அடித் தாமரைகளிற் பொருந்தும்படி முன் வீழ்ந்து பணிந்தனர்; மன்னு...எடுத்தார்-நிலை பெற்ற சீகாழிப் பதியவர்களின் வள்ளலாராகிய பிள்ளையார் மகிழ்ச்சி கூர அளிக்கும் இன்னருளுடைய பெருஞ் சிறப்பினோடும் திருக்கைகளால் அவரை எடுத்தருளினர்.

இந்நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டுரைக்கநின்றன. பொருட்டொடர்புபற்றி 2568-ல் **அணைந்தார்** என்றதனை எச்சமாகக் கொண்டுரைத்து ஒரு முடிபு காட்டி உரைக்கப்பட்டது; வினை முற்றாகவே கொண்டு வேறு முடிபு கொள்ளினுமிழுக்கில்லை.

(வி-ரை) பெருந்தேவியார் - பட்டத்துக்குரிய தேவியார்; "பெருங் கோப்பெண்டு" முதலிய பெயர் வழக்குக்கள் காண்க.

சிவக்கன்று - ஆளுடைய பிள்ளையார்; **கன்று** - இளமையும் அருமையும் குறித்தது; புண்ணியக் கன்று" (1959).

பொன்னடிக் கமலங்களிற் பொருந்த முன் விழுந்தார் - நிலமுற விழுந்து வணங்கியபோது தமது தலை அவருடைய திருவடிகளிற் பொருந்தும்படி என்பது.

மகிழ் சிறந்து அளிக்கும் இன்னருட் பெருஞ் சிறப்பு - அருள் கொடுக்கும் சிறப்பாவது எழுக என்று அருளாசி புரிந்து செய்தல்; இறைவர்பாற்பெற்ற அருளை மகிழ்ந்து வழங்கும் சிறப்பு என்ற குறிப்புமாம்.

திருக்கையா லெடுத்தார் - முன்னர்க் குலச்சிறையாரையும் இவ்வாறே "கர கமலங்கள் பற்றியே எடுப்ப" என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

2570. ஞான போனக ரெதிர்தொழு **தெழுந்தநற் றவத்து**
மானி யார்மனக் கருத்துமுற் றியதென மதித்தே
பான லங்கண்க ணீர்மல்கப் பவளவாய் குழறி
"யானு மென்பதி யுஞ்செய்த தவமென்கொல்!"என்றார். 672

விழுந்தார்-எடுத்தார் - என்று இருவர் செயலும் ஒருங்கே இப்பாட்டாற் கூறியது கவிநலம்; அழுதார் பாலுண்டார் என்பது போல விழுந்தமையால் எடுக்கப் பெற்றார் என்று காரணக் குறிப்புப்பட நின்றது. முன் உரைத்தவை பார்க்க.

வீழ்ந்தார்—என்பதும் பாடம். 671

2570. **(இ-ள்)** ஞான போனகரெதிர்...மானியார் - பிள்ளையாரெதிரில் தொழு தெழுந்த நல்ல தவத்தையுடைய அம்மையார்; மனக்கருத்து முற்றியதென மதித்தே - தமது மனத்துட்கொண்ட கருத்தாகிய சைவத் தாபனமும் பாண்டி நாட்டின் மீட்சியும் முற்றுப் பெற்றன என்றே துணிபு கொண்டு; பானலங்கண்கள்...என்றார் - நீல மலர்போன்ற கண்களில் நீர் பொருந்தப் பவளம்போன்ற வாய் குழறி "யானும் எனது பதியும் தேவரீர் இங்கு எழுந்தருளும் இப்பேறு பெறுதற் பொருட்டு' முன் செய்த பெருந்தவம்தான் என்னை கொல்லோ!" என்று கூறினார்.

(வி-ரை) இது பிள்ளையார் தம் அடிபொருந்த வீழ்ந்த அம்மையாரை அருட் கையினாலெடுத் தருளியபின், அம்மையாரது மனஞ் சொற் செயல்களைக் கூறியபடி.

தொழு தெழுந்த - தொழுதபடியே. அடிபொருந்த வீழ்ந்தார் தொழுத வண்ணமே எழுந்தனர். **தொழுது** - தொழுதபடி.

நற்றவத்து மானியார் - நல்ல தவத்தையுடையா ராதலின் எனக் காரணக் குறிப்புப்பட வந்த அடைமொழி.

மனக்கருத்து முற்றியது எனவே மதித்து - என்க; எனவே என்று ஏகாரம் பிரித்துக் கூட்டுக. **மனக்கருத்து** - *2511*-ல் உரைக்கப்பட்டது. அமணர்களால் கட்டழிந்து சைவ ஒழுக்கம் குன்றிய நிலையினை ஆளுடைய பிள்ளையாரால் நீக்கித் திருநீற்று நெறி தழைக்கச் செய்வது.

முற்றியது எனவே - விரைவும் உறுதியும்பற்றி எதிர்காலத்து நிகழ்வதனை இறந்த காலத்தாற் கூறினார்.

கண்கணீர்மல்க - வாய்க்குழறி - இவை அன்பு மிகுதியால் உளதாகும் ஆனந்த மேலீட்டினால் நிகழ்வன.

யானும் என்பதியும் செய்ததவம் என்கொல்!-இஃது அம்மையார் பிள்ளையாரை நல் வரவேற்ற முறையில் கூறியது; **என்பதி** - எனது கணவர் - பாண்டியர்; **பதி** - என்பதற்கு-நகரம்-நகரமாந்தர் என்று உரைப்பாருமுண்டு; **பதி**யினையும் உடன் கூறியது இல்லறநிலை முறையும் பிள்ளையார் எழுந்தருளியதனால் அவர்க்கே மிக்க பயன் செய்யு நிலையும்பற்றி என்க.

2571. யாழின் மென்மொழி யார்மொழிந் தெதிர்கழல் வணங்கக்,
காழி வாழவந் தருளிய கவுணியர் பிரானுஞ்
''சூழு மாகிய பரசம யத்திடைத் தொண்டு
வாழு நீர்மையீர் உமைக்காண வந்தன'' மென்றார். 673

செய்த தவம் - தேவரீர் இங்கு எழுந்தருளும் இப்பேறு பெறுதற் பொருட்டு என்பது குறிப்பெச்சம்.

செய்த - இந்நாள் இது பெறுதற்குரிய பெருந் தவம் ஒன்றும் யாம் செய்திலேம்; பெருந்தவத்தாலன்றி இப்பேறு வாராது; ஆதலின் தவம் முன் செய்திருத்தல் வேண்டும் என்பார் **செய்த** - என முன்னை நிலைபற்றிக் கூறினார்.

தவம் என்கொல்!-யாங்களறிய வாராத அத்துணைப் பெரிது என்று அதிசயக் குறிப்புப்பட வந்த வினா; ''நன்னிலை **கன்னி நாட்டு நல்வினைப் பயத்**தாற் கோ[illegible]ர்'' (2503) என்றது இங்கு நினைவு கூர்தற் பாலது. 672

2571. **(இ-ள்)** யாழின்...வணங்க-யாழ்போன்ற இனிய மென்மொழியினையுடைய அம்மையார் இவ்வாறு சொல்லி மீண்டும் தம் திருவடிகளை வணங்க; காழி...... பிரானும் - சீகாழியவர் வாழ்வடையும்படி வந்தருளிய கவுணியர் தலைவரும் (அம் மொழிகேட்டு); சூழுமாகிய......வந்தனம்'' என்றார் - சுற்றும் பரவிய பரசமயச் சூழலினிடையே திருத்தொண்டின் நெறியில் விடாது வாழ்கின்ற நீர்மையுடையீர்களே! நுங்களை காணும் பொருட்டு வந்தனம் என்று அருளிச் செய்தனர்.

(வி-ரை) யாழின் மென் மொழியார் மொழிந்து - அம்மையார் கூறிய வரவேற்பு மொழி பிள்ளையார் திருச்செவிகளில் சார்ந்தபோது விளைத்த நிலைமையை இவ்வாறு அடைமொழியாற் சிறப்பித்துக் கூறினார்; ''யாழைப்பழித் தன்னமொழி மங்கை'' (திருமறைக்காடு - நம்பி. தேவா); ''பண்ணி னேர்மொழி யாளுமை'' (மேற்படி-திருநா-தேவா) என்றும் உமா தேவியாரின் அருண் மொழிகளைச் சிறப்பித் தாங்குப் பிள்ளையாரின் திருச்செவிகளில் அம்மையாரது விண்ணப்பமும் தாயின் இன் சொற்களின் தன்மையுடன் புகுந்தன என்பதாம். பிள்ளையார் கூறியருளிய விடையில் ''தொண்டு வாழு நீர்மையீர் உமைக்காண வந்தனம்'' என்றதும், ''பண்ணினேர் மொழியாள் பாண்டிமா தேவி'' என்ற பதிகமும் தாயைக் காண வரும் சேயின் தன்மையாகிய இக்குறிப்புத் தருவதாகும்.

எதிர் வணங்க - எதிர் வணக்கமாவது (அருள்மொழி பெறும் வகையால்) நல் வரவேற்பு மொழி மொழிந்த பின் மீண்டும் வணங்குதல். ''மீளவும் பணிந்து'' (2558) என்றது காண்க.

காழிவாழ வந்தருளிய - காழிப்பதி வாழ வந்த என்றலும் காழியில் உலகம் வாழ என்றலுமாம்.

சூழுமாகிய...நீர்மையீர் - **சூழும் ஆகிய** - சூழலாகிய; சுற்றுமுற்றும் எங்கும் சூழ்ந்துநின்ற; தமது சமயத்தினைப் பரப்புதலேயன்றிச் சூழ்ச்சிகளாலே சைவ சமயத்திற்குக்

2572. இன்ன வாறருள் செய்திடத் தொழுதடி வீழ்ந்தார்;
மன்னு மந்திரி யார்வரு திறமெலா மொழிய
அன்ன மென்னடை யார்தமக் கருள்செய்து போக்கித்
துன்னு மெய்த்தொண்டர் சூழவந் தருளுமப் பொழுது. 674

கேடு சூழ்கின்ற என்ற குறிப்புமாம்; சுழல் காற்றுப் போல எங்கும் சூழ்ந்து வளைத்து ஆழ்த்துகின்ற என்பதும் குறிப்பு.

பரசமயத்திடைத் தொண்டு வாழும் நீர்மை - தமது சைவநெறியே மிக்கு நிகழும் காலையிலேயும் திருத்தொண்டு நெறியில் நன்கொழுகி வாழ்தல் அரிதாவது மக்களின் வலிய மலபந்த நிலை; அதனோடு பரசமயச் சூழலின் இடையே திருத்தொண்டு நெறி வாழ்வது மிகவும் அரிது; மேலும் தாம் அந்நெறி வாழ்வதே யன்றி ஏனையோரும் வாழ்வடைய வேண்டும் என்று எண்ணிச் செயல் புரிவது மிக மிக அரிது என இதன் அருமை புலப்பட **வாழுநீர்மையீர்** என்றார். தவம் என்கொல் என்ற அம்மையாருக்கு முன்னைத் தவமின்றி நீர் இம்மையே செய்யும் பெருந்தவம் இஃது என்றருளிய குறிப்பும் காண்க. **நீர்மை**-அன்பின் உண்மைநிலை.

நீர்மையீர் உமை - நீர்மையீராதலின் உமைக்காண வந்தனம் என்று காரணக் குறிப்புப்பட ஓதியருளினார். நீர்மையீராகிய உமை என்க.

காண - இங்கு அவரது திருவுள்ளக் கருத்தினைத் திருவருளால் முற்றுவித்துக் காண-நிறைவெய்தக் காண- என்னும் பொருளில் வந்தது; நோயுள்ளாரை மருத்துவன் பார்க்க வருகிறான் என்று வழங்கும் வழக்குப்போலக் காண்க.

உமை-அம்மையாரையும் அமைச்சனாரையும் உளப்படுத்திய குறிப்புமாம். 673

2572. **(இ-ள்)** இன்னவாறு...அடிவீழ்ந்தார்-இவ்வாறு பிள்ளையார் அருளிச் செய்யவே அம்மையார் அவருடைய திருவடிகளில் விழுந்து வணங்கினார்; மன்னும்...மொழிய -நிலைபெற்ற மந்திரியாராகிய குலச்சிறையார் நாட்டின் சேர்ந்த (துன்பமாகிய) நிலைகளை எல்லாம் எடுத்துக்கூற; அன்ன...போக்கி - (அவற்றையெல்லாம் கேட்டு) அன்னம் போன்ற மெல்லிய நடையினையுடைய அம்மையாருக்கு அருளைப் புரிந்து விடை கொடுத்துப்பின்; துன்னும்...அப்பொழுது - நெருங்கிய மெய்த் தொண்டர்கள் சூழ்ந்துவர எழுந்தருளிவரும் அப்போது;

(வி-ரை) இன்னவாறு அருள் செய்திட - முன்பாட்டிற் கூறியபடி அருளைச் செய்ய; பிள்ளையார் கூறியவை உபசாரமாகிய இன்மொழிகள் மட்டிலமையாது அருளைத்தரும் நன்மொழிகள் என்றும், வாக்களவிலமையாது செயலளவில் அருளைச் செய்தன என்றும் கொள்க; என்னை? **தொண்டு வாழும் நீர்மையீர்!** - வாழும்-என்னும் நிகழ்கால எச்சம் **உமது திருத்தொண்டின் வாழ்வு எக்காலத்தும் இடையறாது நிகழ்வதாகும் தன்மையதாம் என ஆசி மொழிந்தாயிற்று; உமைக் காண வந்தனம்** என்றதனால் அத்தன்மை செய்தருள இறைவனருளால் எமது வருகை கூடிற்று என்று உறுதி மொழி தந்தருளியதாயிற்று; முன்னர் அடிகளிற் பொருந்த வீழ்ந்த தம்மை அருட் டிருக்கைகளால் எடுத்த **செயலி**னாலே தமது

2573. செல்வ மல்கிய **திருவால வாயினிற் பணிசெய்**
தல்கு தொண்டர்கள் பிள்ளையார் மருங்கணைந் திறைஞ்சி
"மல்கு காரம ணிருள்கெட வீங்குவந் தருள
எல்லை யிஃறவஞ் செய்தன" மெனவெடுத் திசைத்தார்; 675

மனக்கருத்து முற்றியதென மதித்த அம்மையாருக்கு இச்சொற்கள் அதனை உறுதிப்படுத்தும் அருள் **மொழி**களேயாயின என்க; வாக்கு முன்னும் செயல் பின்னும் நிகழும் இயல்பு மாறி இங்குச் செயல் முன்னும் வாக்குப் பின்னுமாக நிகழ்ந்தது அருளின் பரிசு காட்டுற்று என்க. இதனையே தொடர்ந்து மேலும் **அருள் செய்து** என்ற குறிப்பும் காண்க.

தொழுது அடி வீழ்ந்தார் - அருள்மொழி பெற்றதன் பொருட்டு மீளவும் பணிந்தார். ஆசாரியரிடம் திருநீறு பெறுவோர், பெறுமுன்னர் வணங்கிப் பெறுதலும் பெற்றபின் அணிந்துகொண்டு மீள வணங்குதலுமாகிய சைவ மரபு விதிகளும் காண்க.

வருதிற மெலாம் மந்திரியார் மொழிய - வருதிறமெலாம் - நாட்டிற் புகுந்து வந்த தன்மைகளை எல்லாம்; இவை சமண இருள் பரவி மன்னனும் அம்மாயத் தழுந்த நாடு முற்றும் சைவ நெறியிற் சித்தம் செல்லா நிலையில் நிகழ்கின்றமையும், இதுபற்றித் தாங்கள் பிள்ளையார்பால் விண்ணப்பம் போக்கியமையும் ஆகிய எல்லா வகைகளையும்; இவை 2498—2505 உரைக்கப்பட்டன; இவற்றை முன்னர்க் கூறுது அம்மையார் திருமுன்பு திருவாலவாயில் விரித்து விண்ணப்பித்த திறமும், அம்மையார் சொல்லாது அமைச்சனார் எடுத்துக்கூறும் திறமும் உயர்ந்த உலகநிலை மேம்பட்ட ஒழுக்கத்தினுக்கும் அரசாங்கமுறை ஒழுங்குகளுக்கும் சிறந்த உதாரணங்களாம்.

போக்கி - அம்மையாரை முன்னர் விடை கொடுத்து அரண்மனைக்குச் செல்ல விடுத்த நிலையின் நலத்தையும் உலகியல் ஒழுக்க நன்முறையினையும் காண்க. **அன்ன மென்னடையார்க்கு** - "செய்யதா மரைமே லன்னமே யனையார்" என்பது பிள்ளையாரது தேவாரம்.

துன்னு மெய்த்தொண்டர் - பிள்ளையாருடன் வந்த மெய்த்திருத்தொண்டர்கள். முன் உயர்தவத் தொண்டரை" (2559) என்ற குறிப்பும் காண்க.

எழுந்தருளும் - திருவாலவாயின் புறத்திரு முன்றிலில் எழுந்தருளிவரும். 674

2573. **(இ-ள்)** செல்வம்...இறைஞ்சி - செல்வம் பெருகிய திருவாலவாய்த் திருக்கோயிலின் கண்ணே திருப்பணிகள் செய்து வாழும் பெருகிய திருத்தொண்டர்கள் பிள்ளையாரின் பக்கத்தில் வந்து வணங்கி; "மல்கு...செய்தனம்" என - வந்து சேர்ந்த கரிய சமணராகிய இருள் கெட்டொழிய இங்குத் தேவரீர் (முழுமதி போல்) வந்தருளுதற்கு எல்லையில்லாத பெரிய தவஞ் செய்தோம் என்று; எடுத்து இசைத்தார் - எடுத்துத் துதித்தனராக,

(வி-ரை) செல்வம் - அருள் செல்வம். இஃது ஈண்டு இறைவர் தம்மை வந்தடைந்த எல்லாவுயிர்க்கு மெளியராய்ச் செய்தருளிய பலதிறப்பட்ட அருட்டிரு விளையாடல்களால் எளிதிலறியப்படும்.

2574. அத்திருத் தொண்டர் தங்களுக் கருண்முக மளித்து
மெய்த்த காதலி னவரொடும் புறத்தினின் மேவிச்
சித்த மின்புறு மமைச்சனார் திருமடங் காட்டப்
பத்தர் போற்றிடப் பரிசனத் தொடுமினி தமர்ந்தார். 676

பணிசெய்து அல்கு தொண்டர்கள் - அல்குதல் - தங்குதல்; மிகுதல் என்றலுமாம்; குறைதல் என்று கொண்டு மன ஊக்கங் குறைந்து நிற்றல் என்றலுமாம்; இவர்கள் திருக்கோயிற் பணிசெய்யும் திருத்தொண்டர்கள்; "இருவர்தம் பாங்கு மன்றிச் சைவமங் கெய்தா தாக" (2501) என்றதும், ஆண்டுரைத்தவையும் பார்க்க; மூர்த்தி நாயனார் புராண வரலாறும் அவ்வாறுள்ள பிறவும் நினைவு கூர்க; அரசியாரும் அமைச்சனாரும் வணங்கி விண்ணப்பித்த பின்னரும் அமைதிபெறாது பணி செய் தொண்டரும் அணுகவந்து வரவேற்று விண்ணப்பித்த முறையும் ஆர்வ மிகுதியும் காண்க.

மருங்கு அணைந்து-இதுவரை சிறிது தூரத்தே நின்றிருந்த இவர்கள் இப்போது அணுக வந்து.

இருள் கெட - வந்தருள் - இருள்கெட என்றதனால் முழுமதி போல என்று வருவிக்கப்பட்டது; "நிலத்திடை வானி னின்று நீளிரு ணீங்க வந்த, **கலைச்செழுந் திங்கள்** போலுங் கவுணியர்" (2649) என்று மன்னவன் காணும் நிலையினையும், "வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் **மதிக்கொழுந்தை**" (2626) என்று அம்மையாரும் அமைச்சனாருங் காணும் நிலையினையும் உரைப்பது காண்க; அடியார்களது சுழலார் துயர் வெயில்வெப்பம் நீக்கிக் குளிர்ச்சி தருதலின் மதியாகவே பின்னர் உருவகித்தார். அதுபற்றி ஈண்டும் முழுமதி என்று வருவிக்கப்பட்டது. இவ்வாறன்றி ஆதித்தன் போல என்று வருவித்துரைப்பர் ஆறுமுகத் தம்பிரானார்; அதன் பொருத்தம் ஆராயத் தக்கது; அரசனது முன்பு, முதலில் அமணர்கள் கண்டு சினந்து சூழ்ந்தபோது "**காலை எழுங் கதிரவனைப்** புடைசூழுங் கருமுகில் போல்" (2654) என்பது ஈண்டுக் கருதத்தக்கது; ஆனால் பகைவரைக் காயும் தன்மையால் ஆண்டு அவ்வாறு வேறு திறம்பட உருவகிக்கப்பட்டது என்க; அவ்விடத்தும் கதிரவன் என்று வாளா கூறினால் கடு வெயிற் காய்பவன் என்ன வருமாதலின், பிள்ளையார் தன்மையிடத்து அவ்வாறு கொள்ளல் தகுதியன்றென்று கருதுவார் போன்று ஆசிரியர் "**காலை எழுங் கதிரவனை**" என்று சிறப்பித்தமையும் கருதுக.—அடியார்க்குத் தண் நிழல்செய்யும் மதி போலவும் அல்லார்க்கு அழல் போலவும் உள்ளவன் இறைவன்; "அழல் தான்" "நிழல் தான்" (தேவா - பிள் - நெல்லிக்கா). அத்தன்மையே பிள்ளையார்பாலும் உளதாம். திரு. வ. சு. செ. அவர்கள் குறிப்பு.

எடுத்திசைத்தல் - வரவேற்கும் முறையாற் போற்றுதல். 675

2574. **(இ-ள்)** அத்திருத் தொண்டர்...அளித்து - அந்த திருத்தொண்டர்களுக்கு அருண் முகத்தோடு உத்தரவுகள் செய்து; மெய்த்த...மேவி - உண்மை பொருந்திய பெருவிருப்பத்தோடும் அவர்களுடனே திருக்கோயிலின் புறத்தே வந்து; சித்தம்...இனிதமர்ந்தார் - மனத்தில் இன்பம் பெருகிய அமைச்சராகிய குலச்சிறையார் பிள்ளையார் எழுந்தருளி யிருத்தற்குரிய திருமடத்தினைக் காட்ட அடியார்கள் சூழ்ந்து போற்றிடத் தம் பரிசனங்களுடனே இனிதாகப் பிள்ளையார் அங்கு அமர்ந்தருளினார்.

2575. **பரவு காதலிற் பாண்டிமா தேவியா ரருளால்**
விரவு நண்பொடு குலச்சிறை யார்விருந் தளிப்பச்
சிரபு ரத்துவந் தருளிய செல்வரங் கிருந்தார்;
இரவி மேற்கட லணைந்தன னெல்லிவந் தணைய; 677

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டு நின்றன.

(வி-ரை) அருள்முகம் - அருளிப்பாடாகிய நன்மொழி; இது வருவித்துரைக்கப்பட்டது; **அருள்முகம்** - அளியுடைய பார்வை என்றலுமாம்.

புறத்தினில் - திருவாலவாய்த் திருக்கோயிலின் புறத்தே.

சித்தம் இன்புறும் - மனத்துள் இன்பம் மிகப்பெற்ற; பலகாலம் எண்ணியிருந்த கருத்துமுற்றி நிறைவேறும் நிலை கண்டமையால் மனத்துள் இன்பமுற்றார்.

அமைச்சனார் திருமடங் காட்ட-இத்திருமடம் குலச்சிறையார் பிள்ளையாருக்காக அமைதி செய்த மடம்; இதன் வழக்காய் வழிவழி வந்து நிலவுவது இப்போது திருஞான சம்பந்தராதீனம் என வழங்கும் ஆதீனத்தின் திருமடம் என்ற வரலாறு கேட்கப்படுகின்றது; இத்திருமடம் தெற்காவணிமூலத் திருவீதியில் உள்ளது; பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தினுள் வாகீசர் போன்ற பெரியார் ஒருவர் தமது மடத்தினில் வருக என்று பிள்ளையாரைப் பரிசனங்களுடன் வேண்டி அழைத்துச் சென்றனர் என்று சொல்லப்பட்டுள்ளது; பெரும் பற்றப் புலியூர் நம்பி திருவிளையாடலுள் அது வாகீச சுவாமிமடம் என்ற பெயராற் சுட்டப்படுகின்றது; இவற்றின் பொருத்தம் ஆராயத் தக்கது; அரசியாரும் அமைச்சனாரும் செய்த விண்ணப்பத்தின்படி எழுந்தருளிய பிள்ளையாருக்கும் உடன் வந்தாருக்கும் அமைச்சனாரே திருமடம் முதலிய குறைவறுப்புக்கள் அமைத்தல்முறை; மேல்வரும் பாட்டில் "பாண்டிமா தேவியாரருளால் குலச்சிறையார் விருந்தளிப்ப" என்பது காண்க; அன்றியும், வாகீசர் என்பது திருநாவுக்கரசு சுவாமிகளைக் குறிப்பதாக, அவர் பெயரால் திருவாலவாயில் மடம் அமைவதற்கு இயைபில்லை; அரசுகள் இதன் பின்னரே இங்கு எழுந்தருளுதல் காண்க; முன்கூறிய திருவிளையாடற் புராண வரலாறுகள் வடமொழிப் புராணங்களைப் பின்பற்றி எழுந்தன போலும்!

பத்தர் போற்றிட - உடன்வந்த திருத்தொண்டர்களும், அந்நாட்டில் உள்ள ஏனைய அனைவரும். **பரிசனம்** - உடன் வந்தவர்கள். 676

2575. **(இ-ள்)** பரவு...அளிப்ப-போற்றும் பேரன்பினாலே மங்கையர்க்கரசி யம்மையாரது அருளினாலே பொருந்தும் அன்புடனே குலச்சிறையார் விருந்து அமைத்தளிப்ப; சிரபுரத்து......இருந்தார் - சீகாழியில் வந்தருளிய செல்வராகிய பிள்ளையார் அத்திருமடத்தில் எழுந்தருளியிருந்தனர்; இரவி...அணைய - சூரியன் மேல் கடலில் சேர்ந்தான்; அதன்மேல் இரவு வந்தணையவே,

(வி-ரை) பாண்டிமா தேவியார் அருளால் குலச்சிறையார் விருந் தளிப்ப-அரசியாரால் அழைக்கப்பட்டுப் பிள்ளையார் எழுந்தருளியபடியால் அவரை விருந்தளித்து உபசரித்தல்

அரசகுடும்பத்தின் கடமையாயிற்று; அரச குடும்பத்தின் இல்லறக் கடமைகள் யாவும் மனைக்கிழத்தியாராயும் வாழ்க்கைத் துணைவியாராயும் நின்ற அரசியாரின் மேனின்றன; இத்தன்மைகள் யாவும் குறிக்க **அரசியார் அருளால்** என்றார்; அமைச்சனார் தாமே விருந்தளித்து யாவையும் குறைவறுப்ப வல்லவ ராயினும், செயல்முறை யாவும் அவரே செய்தாராயினும், குலச்சிறையார் விருந்தளிப்ப என்றோழியாது **பாண்டிமா தேவியார் அருளால் விருந்தளிப்ப** என்றது இக்காரணம் பற்றியேயாம்; பாண்டிமா தேவியார் ஏவுதற் கருத்தாவும், குலச்சிறையார் இயற்றுதற் கருத்தாவுமாய் நின்றனர் என்க.

பாண்டிமா தேவியார் - குலச்சிறையார் - இங்கு அம்மையார் விருந்தோம்ப லாகிய இச்செயலைப் பாண்டியரின் மாதேவியா ராகிய நிலையில் இயற்றினர் என்பார் முன்னெல்லாம் சுட்டியபடி வளவர்கோன்-பாவையார்-மங்கையர்க்கரசியார்- மானியார் - தெரிவையார் என்றெல்லாம் கூறாது **பாண்டிமா தேவியார்** என்றார்; குலச்சிறையாரும் இச்செயலை அரசாங்க அமைச்சர் என்ற நிலையால் அன்றி மாதேவியாரின் ஏவலின்வழித் தமது தனி நிலையில் இயற்றினார் என்பார் முன் பலவிடத்தும் கூறியபடி மந்திரியார்—அமைச்சனார் என்ற தன்மையாற் கூறாது **குலச்சிறையார்** என்றார்; எனவே இவ்விருந்தோம்பல் முதலியவை அரசுகாரியமாகாது அரச குடும்பத்தின் இல்வாழ்க்கை நிலையின் கடமையாகிய இல்லறங்களுள் ஒன்றாய் இயற்றப்பெற்றது என்றறிவித்த கவிநயம் காண்க; Royal guest - State guest என்பனவாதி நவீன வழக்குக்கள் காண்க.

அருளால் - அன்பின் மேம்பட்ட நிலையின் எழும் செயல் என்பது குறிப்பு; விருந்தோம்பும் செயல்கள் இல்லக்கிழத்தியாருக்கு உரியன என்பதும், பெண் பாலாரின் சிறப்புக் கடமைகளுள் ஒன்றென்பதும் குறிப்பாலுணர்த்தப்பட்டன; "மத்தக் கரியுரி யோன்றில்லை யூரன் வாவெனலுந், தத்தைக்கிளவி முகத்தா மரைத்தழல் வேன்மிளிர்ந்து, முத்தம் பயக்குங் கழுநீர் விருந்தொடென் றுதமுன் னங், கித்தக் கருங்கு வளைச்செவ்வி யோடிக் கெழுமினவே" (திருக்கோவை-388) என்று மணிவாசகப் பெருமானார் இதன் இயல்பினைச் சுவைபடக் கூறியருளிய சிறப்புக் காண்க; அம்மையார் அரண்மனையினின்றவாறே இவையெல்லாம் திருந்த ஏவியமைத்தனர் என்பதாம்.

பரவு காதலின் - போற்றிப் பாராட்டும் அன்பின் மிகுதியினாலே.

விரவு நண்பு - காதலுடன் பொருந்திய நண்பு. இது விருந்தோம்புவாரிடத்தும் இயற்றுவோரிடத்தும் இன்றியமையாது வேண்டப் படுவன.

செல்வர்-அரச விருந்துக்கும் மேற்பட்ட அருட்செல்வம் உடையவர் என்பது குறிப்பு; **அங்கு** - அமைச்சனார் காட்டிய அத்திருமடத்தில்.

எல்லி - வந்தணைய - எல்லி - இரவு; **அணைய** - அணையும் போது; **அணைய - ஈண்டினர்** என மேல்வரும் பாட்டுடன் கூட்டி முடிக்க; **அணைய** - அணையும்படி. 677

2576. **(இ-ள்)** வெளிப்படை. பாண்டியரது பெருந்திரு நகரத்தின்கண் பெருமறைகளின் தலைவராகிய பிள்ளையார் குற்றமற்ற சிறப்புடைய அடியார்களுடனே பகலில் வரக்கண்ட, பேய்போன்று வரும் கரிய அமண் குண்டர்கள் கலக்கமடைந்து

2576. வழுதி மாநக ரதனிடை மாமறைத் தலைவர்
பழுதில் சீரடி யாருடன் பகல்வரக் கண்ட
கழுது போல்வருங் காரமண் குண்டர்கள் கலங்கி
இழுது மையிருட் கிருளென வீண்டின ரொருபால். 678

குழம்பாகிய மை போன்ற இருளுக்கும் மேம்பட்ட இருள்போல் ஒருபுறத்துக் கூடினர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டு உரைக்க நின்றன; மெல்லிவந்து அணையும்படி இரவி மேல்கடலணைந்தனன் என்று கூட்டி முன்பாட்டைத் தனி முடிபாக்கி யுரைப்பினு மிழுக்காகாது.

(வி-ரை) வழுதி மாநகர்-பாண்டியர்களது தலைநகராகிய மதுரை; **மாநகர்** - தலைநகர்.

பகல் வரக்கண்ட குண்டர்கள் - என்று கூட்டுக; **பகல்** - பகலில்; அரசன் அரண் சார்பினிருப்பவும் அஞ்சாது மறைவாயன்றி வெளிப்படையாக வர என்றதும் குறிப்பு; **பகல்** - ஞாயிறு என்று கொண்டு ஞாயிறுவரக் கண்ட என்றலுமாம். பிள்ளையாரும் அடியாரும் கூடிய கூட்டத்தில் விளக்கம் ஞாயிற்றினை ஒத்தது என்பதாம்.

அடியாருடன் வரப் பகல் கண்ட கழுதுபோல்-கலங்கி-என்று கூட்டி உரைத்தலுமொன்று; **கழுது**-பேய்; பேய்கள் இரவில் வெளியிற் சரித்து உலவும் தன்மையும் பகல் கண்டவுடன் கலங்கி ஓரிடத்து ஒதுங்குந் தன்மையுமுடையன; "வாது செய் சமணரும் சாக்கியப் பேய்கள்" (பிள் - தேவா - அச்சிறு பாக்கம்).

காரமண் குண்டர்கள் - **கார்**-கரிய நிறமுடைய; உடல் போலவே அகமும் கருமையுடையார் என்ற குறிப்புப்பெறக் **காரமண்** என்றார்; அகத்துக் கருமையாவது பொய், சினம், வஞ்சனை, பொறாமை முதலிய தீக்குணங்கள் நிறைதல்; **குண்டர்** - கீழ்மக்கள்; **இருட்கிருள்** - புற இருளும் அக இருளும் குறித்தது.

இழுது மை இருட்கு இருள் என - இழுது - குழம்பு; மையிழுது என்க. மைக் குழம்பு.

மைஇருட்டு இருளாம் என-மைக்குழம்பு போன்ற திணிந்த இருளுக்கும் மேம்பட்ட இருள்; **கு** என்ற நான்கனுருபு எல்லைப் பொருளில் வரும் ஐந்தனுருபின் பொருளில் வந்தது; "வண்ண நீடிய மைக்குழம் பாமென்று, நண்ணல் செய்யா நடுவிருள் யாமத்து" (455) "கருகு மையிரு ளின்கணங் கட்டுவிட், டுருகுகின்றது போன்றது" (454) என்ற கருத்துக்கள் காண்க.

இருளென-கரிய அமணரை இருளுக்கு உவமித்தார்; உருப்பற்றி வந்த உவமம். **இருளென ஒருபால் ஈண்டினர்** - பகல் வந்தபோது இருள் ஒருபுடை ஒதுங்குதல் இயல்பாதலின் வினைபற்றி வந்தவுவமமுமாம்; **கழுதுபோல்** என்றதும் இவ்வாறே உருவும், பிறரைப்பற்றி அலைத்தலாகிய வினையும் பற்றி வந்தவுவமம்; **கழுதுபோல் வரும்** என்றது இரவிற் பேய் போன்று என அவர்தம்மியல்பு பற்றியும், **இருளென ஒருபால் ஈண்டினர் என்று** பகலில் இருள் போன்று எனப் பிள்ளையார் முன் அவர் தம் நிலைபற்றியும் தெரிவிக்க இரண்டு வகையால் உவமை கூறினார்; "இருட் குழாஞ் செல்வது போல" (1349)-ல் உரைத்தவையும், "அல்லிருளன்னவர்" (1387) முதலியவையும் பார்க்க.

2577. அங்கண் மேவிய சமணர்கள் பிள்ளையா ரமர்ந்த
துங்க மாமடந் தன்னிடைத் தொண்டர்தங் குழாங்கள்
எங்கு மோதிய திருப்பதி கத்திசை யெடுத்த
பொங்கு பேரொலி செவிப்புலம் புக்கிடப் பொறாராய். 679

பகல்வரக் கண்ட இருளென ஒருபால் ஈண்டினர் - பகல் வந்தபோது இருள் செயலின்றி ஒருபுடை ஒதுங்கும் இயல்பும் குறித்தது.

ஒருபால் ஈண்டினர் - வஞ்சகச் சூழ்ச்சி புரிவார் வெளிப்படையானன்றி ஒரு புடை மறைவிடத்துக் கூடுதல் இயல்பாம் என்ற குறிப்பு.

இழுகு மெய்யிருட்கிருள் - என்று பாடங் கொள்வாரு முண்டு; இப் பொருட்கு, மெய்யிருட்கு இவர்களின் உடலின் இருளி (கருமை) னுக்கு; **இருள் இழுகும்** - பூத இருளும் பின்னடையும் என்றுரைக்க; **இழுகுதல்** - பின்னடைதல். 678

2577. **(இ-ள்)** *அங்கண் மேவிய சமணர்கள் - அவ்விடத்துப் பொருந்திய சமணர்கள்; பிள்ளையார்...புக்கிட-பிள்ளையார் எழுந்தருளிய பெருந்திரு மடத்தின் கண்ணே திருத்தொண்டர் கூட்டங்கள் எவ்விடத்தும் கூடிப்பெருக ஓதிய திருப் பதிகத்தின் இசை ஓங்கி மேலெழும் பேரொலியானது தங்கள் செவிப்புலங்களிற் புகுத; பொறாராய் - பொறுக்கலாற்றாதவர்களாகி,*

(வி-ரை) அங்கண்...மேவிய-முன்பாட்டிற் கூறியபடி கண்டு கலங்கி ஒருபால் ஈண்டிய.

துங்க மா மடம் - துங்கம் - உயர்வு; **மா** - சிறப்பு; **துங்கம், மா** என்பவை பொருளானும் அருளானும் பெருமை குறித்தன. ஒரு பொருட் பன்மொழி மிகப் பெரிய என்று மிகுதி குறித்ததென்றலுமாம். ''செல்வப் பெருமடம்'' (2507) என்பது காண்க. தக்கயாகப் பரணியிலும் இதனைப் **பெருமடம்** என்பதும் காண்க.

மடந்தன்னிடைக் குழாங்கள் எங்கும் ஓதிய-திருமடத்தின்கண் தொண்டர்கள் தனித்தனி குழாங்கூடியிருந்து மடம் எங்கணும் திருப்பதிகங்களை ஓதிக் கொண்டிருந்தனர் என்க. ''திரு ஆரூர்மருங்கெலாந், தெள்ளு மோசைத் திருப்பதிகங்கள் பைங்கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள்'' (93); ''சாரிகையின் பண்ணின் கிளவி மணி வாயும் பதிகச் செழுந்தேன் மொழியுமால்'' (1019); ''அண்டர் பெருமான் றிருப் பாட்டி னமுதம் பெருகச் செவிமடுக்குந், தொண்டர் வதன பங்கயமுந் துளித்த கண்ணீ ரரும்புமால்'' (1019); ''அண்டர் பெருமான் றிருப் பாட்டி னமுதம் பெருகச் செவிமடுக்குந், தொண்டர் வதன பங்கயமுந் துளித்த கண்ணீ ரரும்புமால்'' (1020) என்பனவாதி திருவாக்குக்களால் அந்நாளில் நாடு எங்கெங்கும் திருப்பதிகங்கள் பயிலப்பட்டு வந்தன என்பதறியப்படும்; கணநாத நாயனூர் திருமுறை யெழுதுவோர் வாசிப்போர்களைத் திருத்தொண்டின் வினை விளங்கிட வேண்டிய குறை யெலாமுடித்து மேவிடச் செய்தே தொண்டரை ஆக்கினர் (கணநாதர் புரா-3) என்பதறியப்படும். பிள்ளையாரது திருமண எழுச்சியில் ''தகைவிலா விருப்பின் மிக்க பதிகங்கள் விளம்பிச் சார்வார்'' களின் (3100) கூட்டம் கலந்து செல்வதும் காணப்படும்; இவ்வாறு காணும் முன்னை நாள் வழக்கு மாறி இந்நாளில் திருப்பதிகங்களைப் பயிலும் நன்மரபு மக்களுள் காண்ப தரிதாகி விட்டது இக்காலக் கொடுமை.

2578. ''மற்றிவ் வான்பழி மன்னவன் மாறனை யெய்திச்
சொற்று'' மென்றுதஞ் சூழ்ச்சியு மொருபடி துணிவார்
கொற்ற வன்கடைக் காவலர் முன்சென்று குறுகி
''வெற்றி வேலவற் கெங்களை விளம்புவீ'' ரென்றார். 680

எங்கும் ஓதிய-அப்பெருமடத்தின் பல பகுதிகளிலும் **இசை எடுத்தபொங்கு பேரொலி** - பலர் கூடி உச்ச சுரத்தில் பாடிய ஒலியின் பெருக்கு; **இசை எடுத்தல்** உரிய பண்களில் பாடுதலையும்; **பொங்குதல்** - அன்பு மிகுதியினையும்; **பேர் ஒலி** என்பது தொகுதியால் விளையும் பெருக்கினையும் குறித்தன.

செவிப்புலம் புக்கிட-ஒலியலைகள் தாம் கிளம்பின இடத்தினின்றும் காற்றை இடமாகக் கொண்டு பரம்பரையில் சென்று கேட்போர் செவியிந்திரியத்தில் தாக்கும் என்பது இலக்கணம். கண்ணிந்திரியம் சென்றியைந்து விடயத்தை யறியுமாறு போலன்றிச், செவி முதலிய ஏனையிந்திரியங்கள் ''கண்ணிந்திரியத்தை நோக்கச் சத்துவ குணத்தாற் குறைவுடைமையின், அவை தம்மிடம் வந்த விடயத்தை இயைந்துணர்தலே யன்றிச் சென்றியைந்து விடயத்தை அறியு மாறில்லை'' என்பது ஞான நூற்றுணிபு; நவீனருக்கும் செவியினைப் பற்றி இஃதே துணிபாம்; அவரும் புறத்தினின்றும் ஒலியலைகள் வந்து செவியில் உள்ள மத்தளம் போன்ற தசையினைத் தாக்கி அந்நரம்புகளை இயக்க ஒலியுணர்வு நிகழு மென்பர்; இவை யெல்லாம் குறிக்கச் **செவிப்புலம் புக்கிட** என்றார்; கண்போல வேண்டா விடத்து அடைத்துக் கொள்ளும் அமைப்பில்லாமையால் எல்லா ஓசை ஒலிகளும் செவிக்குள் புகுவன. தாம் வேண்டாது வெறுப்பினும் அவ்வொலி **புக்கிட** என்றதாம்.

பொறாராய் - அதனிடத்துப் பொறாமை கொண்டவராய்; ''நீற்று மேனிய ராயினர் மேலுற்ற, காற்றுக் கொள்ளவு நில்லா வமணர்'' (தேவா-ஆலவாய் - நாலடி மேல்வைப்பு 8) என்ற தன்மைகளும், கண்டுமுட்டு - கேட்டுமுட்டு என்ற தன்மைகளும் காண்க; **பொறாராய்** - இப்பதிகங்கள் சமண் சாக்கியங்களின் இழிபை எடுத்துரைத்து மக்களை உண்மைநெறி காட்டித் தேற்றுவனவாதலின், அவை தம் செவியினிற் கேட்கலாற்றாதவராயினர் என்பதும் குறிப்பு.

பொறாராய்த் துணிவார் - குறுகி - என்றார் - என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. 679

2578. **(இ-ள்)** ''மற்று......சொற்றும்'' என்று - ''மற்று இந்தப்பெரும் பழியினை மன்னவனாகிய பாண்டியனை யடைந்து சொல்வோம்'' என்று கொண்டு; தம் சூழ்ச்சியும்...துணிவார்-தமது சூழ்ச்சியினையும் ஒருபடியாகத் துணிவுகொள்வா ராகி; கொற்றவன்...குறுகி-அரசனது அரண்மனை வாயில் காப்போர்முன் போய்க் குறுகி; வெற்றி...விளம்புவீர்'' என்றார் - வெற்றியுடைய வேலேந்திய அரசனிடம் நாங்கள் வந்த செய்தியினை அறிவியுங்கள் என்று கூறினர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) இவ்வான்பழி - **வான்**-பெரிய என்ற பொருளில் வந்தது; **மற்று** - **இ** - அவர்கள் கருத்திற்கு மாறாகிய இஃது என்றார்; **பழி**-இவ்வொலி கேட்டதும், கண்டதும்

2579. வாயில் காவலர் மன்னவன் றனையெதிர் வணங்கி
''யாய மாகிவந் தடிகண்மா ரணைந்தன'' ரென்ன,
வேயி ஞனணை வாரென, வவருஞ்சென் றிசைத்தார்;
பாயி ஞலுடன் மூடுவார் பதைப்புடன் புக்கார். 681

தமக்குப் பழியாகவே கொண்டனர் என்பதாம்; **பழி** - தீங்கு; கேடு; ''தக்க தல்லதீங் கடுத்தது சாற்றுதற்கு'' (2580) என்றும், ''**கண்டு முட்டு** யாம்'' என்றும் கூறுவனகாண்க; **பதி** - என்று பாடங்கொண்டு **பதியின் மன்னவன்** என்பாருமுண்டு.

சொற்றும் என்று தம் சூழ்ச்சியும் ஒருபடி துணிவார் - கண்டதனையும் கேட்டதனையும் சொல்லுதலேயன்றி மேலும் வஞ்சனைச் செயல் சூழ்வதனையும் துணிந்து கொண்டனர். **சூழ்ச்சி** - வஞ்சநினைவு; **ஒருபடி** - ஒருசேர; **கடைக்காவலர்** - வாயில் காப்போர்; **குறுகி**-வஞ்சமும் சூழ்ச்சியும் துணிந்து தகுதியற்ற செயலிற் புகுகின்ற ராதலின் நிமிர்ந்து செல்ல மாட்டாது குறுக்கமாகிய நிலையிற் சென்றனர் என்ற குறிப்புமாம். ''அடிகண்மா ரெல்லாரு மாகுலமாய் மிகவழிந்து'' (1351) என்ற நிலை கருதுக; கவலையி னிலைகாட்ட உடற் குறுக்கத்தினைப் பாசாங்காக மேற்கொண்டனர் என்றலுமாம்.

''வெற்றி...விளம்புவீர்'' என்றார் - அரச சமூகத்திலும், பெரியோர் முன்பும் முன் அறிவிப்புச் செய்து விடை பெற்றபின் செல்லும் மரபு. இது முன்னுள் முதன் நமது நாட்டில் வழங்கியது; 2507 - 2509 பார்க்க. **வேலவற்கு - வேல்** - ஆயுதப் பொதுமையுணர்த்தி நின்றது; தடாதகைப் பிராட்டியார்பால் வேல் வளை செண்டு பெற்ற உக்கிரகுமார பாண்டியர் மரபில் வந்த என்ற குறிப்புமாம்; **எங்களை** - நாங்கள் வந்தணைந்ததனை. 680

2579. (இ-ள்) வாயில் காவலர்...என்ன - வாயில் காப்போர் சென்று அரசன் முன்பு வணங்கி ''அடிகண்மார்கள் எல்லாரும் கூட்டமாக வந்தணைந் துள்ளார்'' என்று அறிவிக்க; ஏயினுன் ''அணைவார்'' என - அவ்வடிகண் மாருடனே ஒத்த கருத்துடையானுகிய அரசன் அவர்கள் அணைவார்களாக'' என்று கூற; அவரும் சென்று இசைத்தார் - அவர்களும் புறத்துச்சென்று அடிகண்மார்களிடம் அதனைச் சொன்னுர்கள்; பாயினுல்...புக்கார் - பாயுடுக்கையினுல் உடலை மூடும் அச்சமண முனிவர்கள் பதைப்போடும் உள்ளே புகுந்தனர்.

(வி-ரை) என்ன;—என;— இசைத்தார்;—புக்கார்; என வாயில் காப்போர் அரசனிடம் அறிவித்த செயலும் அரசன் கூறியதும், அதனை அவர்கள் அடிகண்மாருக்கு அறிவித்ததும், அதன்படி அவர்கள் உள்ளே புகுந்ததும் ஆகிய நான்கு செயல்களையும் இவ்வொரு பாட்டிற் செறிவு பெறக் கூறினுர். அவை நிகழ்ந்த மிக்க விரைவும், மனக் கலக்கத்துடன் பதைத்து நின்ற நிலையும் உணர்த்துதற்கு. அம்மையாரும் குலச்சிறையாரும் விடுத்த பரிசனங்கள் திருமறைக்காட்டிற் சென்று பிள்ளையார்பால் சேர்ந்தறிவித்த நிலையினை முன் 2505-2509 வரை -5 பாட்டுக்களாற் கூறிய அமைதியினை ஈண்டு ஒப்பு நோக்குக. சைவ ஆக்கத்தின் பெருக்கமும், சமணத்தின் அழிவாகிய சுருக்கமும் குறிப்பிற் பெறவைத்த நயமும் காண்க.

ஆயமாகி - கூட்டமாகக் கூடி; **அடிகள்மார்** - சமண முனிவர்கள்; **கள்** - சிறப்பும், **மார்** பன்மையும் உணர்த்திய விகுதிகள்.

2580. புக்க போதவ ரழிவுறு மனத்திடைப் புலர்ச்சி
மிக்க தன்மையை வேந்தனுங் கண்டெதிர் வினவி
''ஒக்க நீர்திரண் டணைவதற் குற்றதென்?'' னென்னத்
''தக்க தல்லதீங் கடுத்தது சாற்றுதற்'' கென்றார்; 682

ஏயினன் ''அணைவார்'' என - ஏயினன் - *ஒத்தவன்; அடிகள்பால் ஒத்த கருத்துடையவன்;* ***ஏய்தல்*** *- ஒத்தல்; (மனம்) பொருந்துதல் என்றலுமாம்;* ***அணைவார்***- *அணைவாராக;* ***ஏயினன்*** *- இசைந்தவனைய் என்றலுமாம்;* ***ஏயினன்*** *- ஏவினன் என்றலுமாம்.*

சென்று *- வாயிற் புறத்து நின்ற அடிகண்மார்களிடம் போய்.*

பாயினால் உடல் மூடுதல் *- பாயுடுத்தல் அமண குருமார் வழக்கு.*

பதைப்புடன் புக்கார் - பதைப்பு - 2576*-ல் கூறிய மனக்கலக்கத்தாலும், பொறாமையை மறைத்து அதனை அரசனிடம் மிகுதிப்படுத்திக் காட்டும் சூழ்ச்சியாலும் நிகழ்ந்தது; இஃது உலகியல் வழக்கிலும் காணப்படும்.*

பாயினால் உடன் மூடுவார் பதைப்புடன் புக்கார் *- உடலைப் பாயினால் மூடுதல் போல உள்ளத்தில் மூண்டு வந்த கலக்கத்தையும் பொறாமை காரணமாக மூண்ட வஞ்சச் செயலையும் மேற்கொண்ட பதைப்பினால் மூடினர் என்ற குறிப்பும் காண்க.*

ஏயினரணைவா ரென*—என்பதும் பாடம்.* *681*

2580. **(இ-ள்)** புக்கபோது...கண்டு - அவ்வாறு அவர்கள் தன் முன்பு புகுந்தபோது அவர்களது அழிவுறும் மனத்தின்கண் வாட்டம் மிகுந்திருந்த தன்மையினை அரசனும் கண்டு; எதிர்வினவி...என்ன - அதனை முன் வினவி ''நீர் ஒக்கத்திரண்டு கூடி வந்து இங்கு அணைவதற்குப் பொருந்திய காரணம் யாது?'' என்று கேட்க; தக்கதல்ல...என்றார் - சொல்லத்தக்கதல்லாத தீமை நேர்ந்தது என்று சொன்னார்கள்.

(வி-ரை) அழிவுறும் மனத்திடைப் புலர்ச்சி மிக்க தன்மை-மனம் அழிவுறுதலாவது கவலையினாலும் கலக்கத்தாலும் மனமுடைதல்; **புலர்ச்சி** - வாட்டம்.

மனத்திடைப் புலர்ச்சி மிக்க தன்மையைக்கண்டு - மனம் வாடிய நிகழ்ச்சியை முகம் புலர்தல் முதலிய நியதமாகிய புற நிகழ்ச்சிகளால் அறிந்து; அனுமான அளவையாலறிந்து; ''அகத்தினழகு முகத்திற் றெரியும்'' என்பது பழமொழி. ''அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம், கடுத்தது காட்டும் முகம்'' (குறள்).

வேந்தனும் - ஒத்த மனப்பண்புடைய வேந்தனும் அப்பண்பினால் கண்டு என உம்மை எச்சவும்மை.

எதிர்...வினவி என்ன - காரணம் வினவும் தன்மையால்; புறக்குறிகளால் மன வாட்டத்தைக் கண்டனன்; அதன் காரணம் அறிய வேண்டினன்; அதனை அவர் அனைவர்பாலும் கண்டனன்; அஃதே அவர் அனைவரும் ஒப்பத் திரண்டணையவும் செய்தது என்றும் கண்டனன்;

2581. ''ஆவ தேனுமக் கடுத்தது கூறுவீ'' ரென்று
காவ லன்பரிந் துரைத்தலுங் காரமண் கையர்
''மாவ லாயுன்றன் **மதுரையிற் சைவவே தியர்தாம்**
மேவ லாலின்று கண்டுமுட் டியா'' மென்று விளம்ப, 683

அடிகண்மார் மனம் வாடியதென்னை என வினவுதல் மரபன்றாதலின் அவ்வாறு திரண்டணையச் செய்ததென்னை என வினவினன். ''கடிதணை வா னவர்க்குற்ற தென்கொல்என'' *(1351)*.

சாற்றுதற்குத் தக்கதல்ல தீங்கு அடுத்தது - என்க; ***அல்ல தீங்கு*** - அல்லலாகிய தீங்குகளின் தொகுதி; மரபு பற்றி அரசன் வினவியபடியே அவர்களும் அவ்வாறே அது வாயாற் சொல்லத்தகாததும் நீர் கேட்கத் தகாததுமாகிய தீங்கு அடுத்த காரணம் என்ற நயம் காண்க. மொழிமுறை பிறழ வைத்தது மனக்கலக்கம் காட்டற்கு என்க. இவ்வாறு மறைத்துக் கூறியது அரசனது ஆதரவை மிகுவித்தலும் கருத்து. மேல் ''பரிந்து'' என்பது காண்க. இரட்டுற மொழிதலால் **தக்க தல்லது ஈங்கு அடுத்தது** என்று பிரித்துரைத் தலுமாம்; இந்நகரில் வரத்தகாதது என்ற குறிப்புப் பட விடயத்தை ஒருவாறு உணர்த்திய நயமும் காண்க. இதனையே தொடர்ந்து அரசன் மேல் வினவுதலும் காண்க.

அடுத்தது-அடுத்ததனை என்று கொண்டு அதனைச் சாற்றுதற்கு அணைந்தோம் என்றனர் என்றலுமாம். *682*

2581. **(இ-ள்)** ஆவதேல்...உரைத்தலும் - அப்படியாயின் உமக்கு நேர்ந்த வதனை எடுத்துச் சொல்லுங்கள் என்று அரசன் பரிவுகொண்டு சொல்லுதலும்; காரமண் கையர்...விளம்ப - யானை வீரனாகிய அரசனே! உனது மதுரைமா நகரில் சைவ வேதியர்கள் வந்து பொருந்தியதனைக் கண்டமையாலே இன்று நாங்கள் **கண்டு முட்டு** ஆயினோம் என்று சொல்ல,

(வி-ரை) ஆவதேல்-நீர் கூறுமாறு அது சொல்லுதற்குத்தக்கதல்ல வாயின்;

நுமக்கு அடுத்தது கூறுவீர் - தீங்கு சொல்லத்தகாததாயின் அதனைச் சொல்லாது விடுத்து, அதனால் உமக்கு நேர்ந்த விளைவினைக்கூறி அது கொண்டு அதன் காரணத்தை உணரச் செய்யுங்கள்; **அடுத்தது** - விளைந்தது; நேரிட்டது; சொல்லுதற்கு அடாதது நேர்ந்ததாயின் அடுத்தது கூறுக; அடுக்குமாறு - பொருந்தும்படி சொல்லுங்கள் என்றலுமாம்.

பரிந்து உரைத்தலும்-அரசனது பரிவு தங்கள்பால் மிகும்படி சூழ்ச்சியுடன் வாட்டமாகிய முகக்குறியுடன் சென்றும், அவன் வினவியபோது சாற்றுதற்குத் தக்கதன்று என மறைபொருள்படக் கூறியும் நின்றமையால் அவ்வாறே அவன் பரிவு கொண்டு என்க; அவரது ''சூழ்ச்சியும் மொருபடி துணிவார்'' என உரைத்ததற் கேற்பப் பயன் பெற்றனர் என்று காட்டப் **பரிந்து** என்ற கவிநயம் காண்க.

''மாவலாய்...யாம்'' என்று - இது சமண அடிகண்மார் அரசன் கேட்ட செய்திக்கு விடை கூறிய நிலை; **மாவலாய்** என்று அரசனது படை வலிமையும் வீரமும் பற்றிக் கூறியது,

2582. என்று கூறலுங் "கேட்டுமுட்டியானு" மென் றியம்பி
"நன்று நல்லறம் புரிந்தவா நா" னென்று நகுவான்
கன்று முள்ளத்த னாகி"யக் கண்ணுத லடியார்
இன்று மாநக ரணைந்ததென்? னவர்கள்யா?" ரென்றான். 684

இத்துணை வலிய நினது ஆணையை அவமதித்துவந்த அவர்களைத் தண்டஞ் செய்தேனும் போக்குதல் வேண்டும் என்ற எண்ணம் தருதற்கு; இந்த உலகியலில் மக்கள் மனத்தத்துவ இயல்பினைத் தமக்கேற்றவாறு பயன் படுத்திக்கொள்ளும் முறைகளுள் ஒன்று. **உன்றன் மதுரை** *என்ற கருத்துமிது.* **மாவலாய்** - *குதிரைப் படையாய்; குதிரை ஏற்றம் வல்லவனே - என்றலுமாம்.*

மதுரையிற் சைவவேதியர் தாம் மேவலில் - *இதனால் அந்நாளில் மதுரையில் சைவ வேதியரையும், சிவநெறி மாதவர்களையும் காண்பதரிதாகும் நிலையினை அமணர் விளைத்து விட்டார்கள் என்பதும், அந்நிலையை அரசனது துணைகொண்டு காவலும் செய்து வந்தனர் என்பதும் அறியப்படும்.*

மேவலால் இன்று கண்டுமுட்டு யாம் - மேவலால் - *மேவக் கண்டதனால்;* **"கண்டு முட்டு"** - *காண்பதனால் வரும் தொடக்கு, "தீட்டு" என்பது; காலையில் சைவ வைதிகத் திருவேடத்தார்களைக் காண நேர்ந்தால் அதனைத் தீட்டாகக் கருதி அதனைப் போக்க நோன்பிருந்து கழுவாய் தேடிக் கொள்வது அமணர்கள் மரபு; இவ்வாறே சைவம் பற்றிய பேச்சுக் கேட்டலும்* **"கேட்டு முட்டு"** *எனப்பட்டு அஃது ஓர் இழிவு தொடக்காகக் கருதப்படும்; ஒருவரைத் தீண்டினால் இழிவு தொடக்கும் என்று கொள்ளும் தீண்டாமை என்னும் இந்நாள் வழக்கினைத்தானும் கடிந்து கொள்ளும் மாக்கள், காணாமை, கேளாமை என்ற இச்சமண வழக்குக்களைப்பற்றி என்ன சொல்வரோ?* **கண்டு முட்டு, கேட்டு முட்டு** *என்பன சமணர்களுள் வழங்கும் குறியீடாகிய பரிபாஷை வழக்கு; இவற்றினோடன்றிச் சைவர்களைச் சுட்டெரிக்கவும், மற்றும் கொலை புரியவும் சூழ்ந்த அவர்களது கொடுமை கொல்லாமை என்ற அறப்போர்வை போர்த்து அதனுள் மறைந்து நின்றது. இங்கு மேல்வரும் வரலாறும் அரசுகள், நமிநந்தியார் சரித வரலாறுகளும் காண்க; தமது சமயம் பரப்பும் நோக்கத்தால் அவர்கள் கொலைமுதலாகிய எக்குற்றமும் செய்யும் வன்னெஞ்சினராய் ஒழுகினர். சைவ சமயத்தையும் சைவ வைதிகர்களையும் அவர்கள் வெறுத்தனர்; ஊரில் இல்லாது செய்தனர்; கொலையும் சூழ்ந்தனர்; அவர்கள் ஊரில்வரக் காண்பதனை வெறுத்தனர்; சைவர்கள் தமக்குரிய மடத்தினுள் தமது சமயப் பாடல் பாடியதைக் கேட்கப் பொறாராயினர்; இந்நாளினும் கிறித்தவர் முதலிய புறச் சமயிகள் தமது சமயம் பரப்பச் செய்யும் பலவித முயற்சிகளையும் இங்கு ஒப்பிட்டு நினைவு கூர்க; இக்கொள்கைகள் ஆதியில் மிக நல்லன - இடைக்காலத்தில் இத்தீமைகள் புகுந்தன என்று இங்குப் பரிந்து இரங்குவாரு முண்டு; முன்னும் அன்றும் இன்றும் உள்ள இவர்கள் நிலைகள் ஒன்றே என்பது சரிதவாயிலான் அறியப்படும் உண்மை.* 683

2582. **(இ-ள்)** என்று கூறலும் - என்று இவ்வாறு அவர்கள் கூறலும்; கேட்டு முட்டு யானுமென்று இயம்பி - யானும் அதனைக் கேட்டமையால் கேட்டு முட்டு ஆயினேன் என்று சொல்லி; நன்று... நகுவான் - நான் நல்லறம் புரிந்தவாறு நன்றாயிருந்தது என்று இகழ்ந்து

2583. ''மாலை வெண்குடை வளவர்சோ ணுட்டுவண் புகலிச்
சூல பாணிபான் ஞானம்பெற் ருனென்று சுருதிப்
பால னன்பர்தங் குழாத்தொடும் பனிமுத்தின் சிவிகை
மேல ணைந்தன னெங்களை வாதினில் வெல்ல'', 685

சிரித்து; கன்றும் உள்ளத்தனுகி - கறுவுதல் கொண்ட மனத்துடனே; அக்கண்ணுதல்...என்றான் - அந்த நுதற்கண்ணுடைய சிவனது அவ்வடியார்கள் இன்று இந்தப் பெருநகரினை அணைந்த காரணம் தான் யாது? அவர்கள் யார்? என்றான்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

(வி-ரை) கேட்டு முட்டு யானும் என்று இயம்பி - அரசன் சமணச் சார்பாகிய மயக்கத்தினுள் தோய்ந்து அழுந்தியிருந்த நிலை குறிக்கப்பட்டது.

''நன்று நல்லறம் புரிந்தவா நான்'' என்று நகுவான் - நான் நல்லறம் புரிந்தவா நன்று என்க; சைவத்தையும் பிற சமயங்களையும் துரத்தி ஒழித்தலே நல்ல அற மெனக் கொண்டது அவர்களது சமயம்; **ஆ** - ஆறு; **நன்று** என்ற சொல்லும், **நகுதலாகிய** செயலும் இகழ்ச்சிக் குறிப்புப்பட நின்றன.

கன்றும் உள்ளத்தன்ஆகி-கன்றுதல்-கோபித்தல்; மனத்தினுட் கோபங்கொண்டு; தனது ஆணை வரம்பினை மதியாது வந்தனர் என்ற கோபம்; இப்பயனை விளைக்கவே அமணர் முன் கூறியவாறு காண்க; ''முந்தைய வுரையிற் கொண்ட பொறை முதலியவையும் விட்டுச் சிந்தையிற் செற்ற முன்னுந் தீக்குணந் தலைநின்றார்கள்'' *(2532)* என்றதற் கிலக்கிய மிங்குக் காண்க; இவ்வாறே அரசுகளது வரலாற்றினும் அடிகண்மார் பொய்ப்பிணி கொண்டு போய் நின் சமயமழித்தார் எனக்கேட்ட பல்லவனும் ''கனன்றான்'' *(1353)* ''மூண்டசினப் போர்மன்னன்'' *(1359)* ஆயினன் என்பது காண்க; மேலும் ''செயிர்த்து'' *(2584)* என்பதும் காண்க.

அக்கண்ணுதலடியார் இன்று இம்மாநகர் அணைந்ததென்? அவர்கள் யார்? என்றான் - அக்கண்ணுதல் என்றும் அவ்வடியார் என்றும் கூட்டிக் கொள்க; அகரச் சுட்டு சேய்மை குறிப்பதாம்; இங்கு மன்னன் கண்ணுதலையும், அவ்வடியார்களையும் அணுகலாற்றாது சேயனுக நினைந்து ஒழுகிய தன்மை குறித்தது; **இன்று** - இத்துணை நாட்களும் முன்னெல்லாம் வராது இன்று; **இம்மா நகர்**-எனது ஆணைவலியினுள் அடங்கிக் காவல் பெற்ற இத் தலைநகர்; **அணைந்தது என்** என்ன காரணம், எனக் காரணத்தை முன்னர் தெரிந்துகொள்ள விரும்பும் ஆர்வத்தால் அதனை யார் என்று கேட்பதன் முன் வினவினன். ***684***

2583. **(இ-ள்)** மாலை...என்று - (ஆத்தி) மாலையினையும் வெண் கொற்றக் குடையினையும் உடைய சோழர்களது வண்மையுடைய சீகாழியில் சூலபாணியாகிய சிவனிடத்தில் ஞானம் பெற்றா னென்று; சுருதிப்பாலன்...வெல்ல-மறைச்சிறுவன் அன்பர்களின் கூட்டத்தினேடும் குளிர்ந்த முத்துச் சிவிகையின் மேல் எங்களையும் வாதினில் வெல்ல அணைந்தனன்.

(வி-ரை) மாலை வெண்குடை வளவர் - மாலை - ஆத்தி மலர் மாலை; **மாலை** என்ற பொதுப் பெயர் வளவர் என்ற பெயர்க்கு அடைமொழியாய் இட நோக்கி இங்குச்

2584. என்று கூறுவா ரித்திற முன்புதா மறிந்த
தொன்று மங்கொழி யாவகை யுரைத்தலுந், தென்னன்
மன்ற லம்பொழிற் **சண்பையார் வள்ளலார் நாமஞ்**
சென்று தன்செவி நிறைத்தலுஞ் செயிர்த்து முன் சொல்வான். 686

சோழர்க்குரிய ஆத்திமாலையைக் குறித்து நின்றது.

வெண்குடை - *முடி மன்னர்க்குரிய சிறப்பான பாலங்களுள் ஒன்று.*

வளவர் சோணா(ட்)டு - *வளவர் நாடு என்றலே அமையுமாதலின் சோழ நாடு என்றதில்* **சோழ** *என்றது வாளாபெயராய் நின்றது; சோழநாடு* **சோணாடு** *என மருவியது; வளவர்நாடு பிறநாடுகளும் ஒவ்வொரு காலங்களில் உரிமையாயின. அது நீக்கக் கூறிய குறிப்புமாம்.*

சோணாட்டு - புகலி - ஞானம் பெற்றானென்று - வெல்ல - அணைந்தனன் - *அரசன் அவர்கள் அணைந்தது என்? அவர்கள் யாரென்று வினவியதற்கு மறுமொழியாக அவர்களின் தலைவரது நாடும், ஊரும், பேரும், தகுதியும், அணைந்த கருமமும் எடுத்துக் கூறியவாறு காண்க. அரசனது வினவுக்கு விடையாகக் கூறியவற்றை மட்டும் சிறப்பாக இப்பாட்டாற் கூறி, விடையல்லாது தாம் அறிந்தவற்றை யெல்லாம் தாமறிந்தபடி ஒன்றும் ஒழியாது எடுத்துச் சொல்லியவற்றைப் பொது வகையால் மேற்பாட்டிற் கூறும் கவிநயம் காண்க.*

சூலபாணி பால் ஞானம் பெற்றானென்று - வெல்ல - அணைந்தனன் - சூல பாணிபால் ஞானம் பெற்றான் - எல்லா ஞானங்களுக்கும் கர்த்தா ஆதிசூலபாணி என்பது வேதம். அக்குறிப்புப்பெறக் கூறியதாம்; **பெற்றானென்று**-பெற்றானென்று சொல்லிக் கொண்டு; பெற்றதனால் என்ற உண்மைக் குறிப்பும்பட நின்றது; **வெல்ல அணைந்தனன்** - அணைந்ததென்? என்ற வினவுக்கு **வெல்ல அணைந்தனன்** என்றனர்; **வெல்ல** - வெல்வதற்கென்று எண்ணி; வெல்வதற்காக என்று பிறசரிதக் குறிப்புப்பட நின்றமையும் காண்க. அவர்களை யறியாமலே அவர்கள் வாக்கில் உண்மைக் குறிப்பு நிகழ்ந்தது காண்க.

எங்களை - உனது ஆதரவு பெற்ற எங்களை என்பது உரைக் குறிப்பு; சிறப்பும்மை தொக்கது.

மேல் அணைந்தனன் - மேன்மை பெற என்பது குறிப்பு. 685

2584. **(இ-ள்)** என்று கூறுவார் - என்றிவ்வாறு கூறுவாராகி; இத்திறம்...உரைத்தலும் - இத்திறங்களை முன்பு தாம் அறிந்த செய்திகள் ஒன்றும் ஒழியா வகையினால் சொல்லவும்; தென்னன் - அரசன்; மன்றலம்...செயிர்த்து - வாசனை யுடைய அழகிய சோலைகள் சூழ்ந்த சீகாழியவர்களின் வள்ளலாரது திருப்பெயர் சென்று தன்னுடைய செவிகளை நிறைத்தலும் கோபித்து; முன் சொல்வான் - முற்படச் சொல்வானாகி

(வி-ரை) இத்திறம் - இத்தன்மையாகிய செய்திகள்; இவ்வாறாக என்றலுமாம்.

அறிந்த தொன்றும் அங்கு ஒழியா வகை உரைத்தலும் - அரசன் வினவியனவும், வினவாதனவும், ஆண்டைக்கு வேண்டுவனவும், வேண்டாதனவும், பொருந்துவனவும்,

பொருந்தாதனவும் என்ற பாகுபாடின்றித் தாம் அறிந்த காரணமொன்றனையே கொண்டு எல்லாம் கூறினர்; இஃது அவர்களது மனக்கலக்கத்தினையும் மீக்கொண்ட சினத்தினையும், பேராசையினையும் குறிப்பது.

நாமம் சென்று தன் செவி நிறைத்தலும் - "செவிப்புலம் புக்கிடப் பொருராய்" (2577) என்றதும் ஆண்டுரைத்தவையும் இவ்விடத்துக் கருதுக; **நிறைத்தலும்** - நிறைதலும் என்னாது பிறவினையாற் கூறியது அவனது விருப்பத்திற்கு மாறுபாடாயினும் அவர்கள் கூறியதனால் வலிந்து வந்து நிறைந்தது என்ற குறிப்பு; அவர்களைப் போலவே அரசனும் **செயிர்த்து** நிறையழிந்து கலக்க மடைந்தமை காண்க; மேல் "யாவது முரையாடாதே எண்ணத்திற் கவலை யோடும்" (2587) என்பதும் காண்க. செயிர்த்து - சினந்து.

செயிர்த்து முன் சொல்வான் - உரைப்ப என மேல்வரும் பாட்டுடன் கூட்டுக. **முன்** - முற்பட; பின் சொல்வன வேறு விதமாம் என்ற குறிப்புப்பட **முன்சொல்வான்** - என்றார். பின்சொல்வன, தீவினையின் விளைவாகச் சுரநோய் மூண்டபோது, இங்குச் சொல்வது போல ஒரு சார்பாகச் சொல்லாமல் ஐயப்பாடாகிய நிலை கொண்டு இருவர் பக்கமாகச் சொன்னமையும், "இந்நோ யகலுமே லறிவேன்" (2620); "வென்றவர் பக்கஞ் சேர்வன்" (2621) என்றும், "இருதிறத் தீருந்தீரும், கைதவம் பேச மாட்டேன்" (2647) என்றும், "நீங்கடேறிய தெய்வத் தன்மை யென்னிடைத் தெரிப்பீர்" (2657) என்றும் வருவன காண்க; அதன்பின் நோய் நீங்கச் சிவநெறியின் உறுதிபெற்று "மறைக்குல வள்ளலாரே, யிந்தவெப் படைய நீங்க வெனக்கருள் புரிவீர்" (2667); "ஞானசம் பந்தர் பாத நண்ணினு னுய்ந்தேன்" (2670) என அமணரை விட்டுச் சைவ நெறியிலே சார்பு பெற்று அவ்வொரு பக்கமாகச் சொல்வதும், அமணரை இகழ்ந்து முறை செய்வதும் காண்க. இக்குறிப்பெல்லாம் பெறுவிக்குமாறு இங்கு "**முன்** சொல்வான்" என்றார்.

வள்ளலார் நாமம் செவிநிறைத்தலும் செயிர்த்து - பின்னர் அரசன் சுர நோயுற்றபோது "வேணியர்பால் ஞானம், பெற்றவர் விரும்பி நோக்கிற் றீயவிப் பிணியே யன்றிப் பிறவியுந் தீரும்" என்று அம்மையாரும் அமைச்சனாரும் கூறிய போது பிள்ளையாரது திருநாமம் மந்திரமாகி அயர்வு அகன்று பேசும் வன்மை தந்தது (2619); இப்போது அஃதே செயிர்ப்பினை விளைத்ததென்னை? எனின், பித்தந் தலைக்கேறியபோது பாலுங் கைக்கும்;அது நீங்கும்போது இனிக்கும்;இப்பண்பில் வைத்துக் காண்க; **வினைதீரும் பக்குவம் வரும்வரை இறைவனருள் திரோதானசத்தியாய் உண்மை ஞானத்தை மறைத்துக் கன்மத்தை ஊட்டுவிக்கும்; பக்குவம் வரும்போது அஃதே அருட் சத்தியாய் இன்பந்தரும் என்பது ஞானநூற் றுணிவு**.

வள்ளலார் - வெறுத்துத் தீயவை செய்தபோதும் அருளினை மேற்கொண்டு நிற்கும் வள்ளன்மை குறித்தது. பிற்சரித விளைவுகள் காண்க.

அங்கொளியா—மன்றலார்—என்பனவும் பாடங்கள். 686

2585. **(இ-ள்)** மற்ற...உரைப்ப - மற்று அந்தப்பெரு வேதச் சிறுவன் அவ்வாறு இங்கு அணைந்தானாகில் செய் தொழிலாகப் பொருந்தியவற்றை யாது செய்வோம் என்று சொல்ல; செற்றம்...உரை செய்வார் - கோபம் மேலே பொங்கி எழும் மனமும் தொழிலும் உடைய

2585. "மற்ற மாமறை மைந்தனிம் மருங்கணைந் தானேல்
உற்ற செய்தொழில் யாதுசெய் கோ"மென வுரைப்பச்
செற்ற மீக்கொண்ட சிந்தையுஞ் செய்கையு முடையோர்
கொற்ற மன்னவன் மொழிக்கெதிர் குறித்துரை செய்வார். 687

அவ்வமணர் வெற்றியுடைய அரசனது மொழிகளுக்கு விடையாகக் குறித்து எதிர்த்துச் சொல்வார்களாகி,

(வி-ரை) மற்ற மாமறை மைந்தன் இம்மருங் கணைந்தானேல் - *நீவிர் கூறுகின்றபடி அணைந்துள்ளானாகில்;* **மற்ற** - *மாறுபாடுடைய என்ற குறிப்பு; சமணர் பகைமையினாற் பட்ட நிலையினராதலின் நோயுள்ளவன் பிதற்றுதல் போல இங்குப் பிள்ளையாரை ஒருமையிற் கூறுதலும், நோய் நீங்கியவனது உண்மைக் கூற்றுப் போலப் பின்னர் "மாமறைச் சிறுவர்" (2620), "சடையினருக் கன்பராமிவரும்" (2657), "வந்தெனை யுய்யக் கொண்ட மறைக்குல வள்ள லாரே" (2667) என்றும் கூறும் நிலைகளும் காண்க.*

உற்ற செய்தொழில் யாது செய்கோம்? - உற்ற - *பொருந்த முறைமையதாய்;* **யாது செய்கோம்** - *அரசன் முற்றும் தன் வசமிழந்து அமணர் வசப்பட்டு அவர் பணித்த வழியில் ஒழுகினான் என்பது; இவ்வாறே சைவநெறியிற் புகுந்த அரசுகளை என் செய்வது" (1353), "செய்வதினிச் சொல்லும்" (1360), "இனிக்கடி யுந்திற மெவ்வாறு" (1373); இனிச் செய்வதென்?" (1385) என்று அமண அடிகண்மாரைப் பன்முறையும் கேட்டு அவர் சொல்லியபடியே பல்லவ அரசனும் நிகழ்த்தியவை இங்கு நினைவு கூர்தற்பாலன. இவையும் பிறவும் அந்நாளில் சமண சமயம் எத்துணைப் பலம்பெற்று வேருன்றி அரசாளும் முடிமன்னர்களையும் தன் வசப்படுத்தி ஆட்டுவித்துச் சைவத்துக்குக் கேடு சூழ்ந்த தென்பதனை விளக்கும். இவை அந்நாளின் நாட்டு நடப்புச் சரித வரலாறுகளாலும் உறுதி பெறுகின்றன.*

செற்றம் மீக்கொண்ட சிந்தையும் செய்கையும் உடையோர் - *"சிந்தையிற் செற்ற முன்னுந் தீக்குணந் தலைநின்றார்கள்" (2533) என்றது காண்க.* **செய்கையும்** - *அச்சிந்தையோ டமைந்திடாது அதனைச் செயலிலும் நிறைவேற்றினார்கள் என்பது.*

எதிர் - விடையாக; **குறித்து** - தமது குறிப்பினையே கொண்டு. *687*

2586. **(இ-ள்)** வந்த ... சிந்தை யன்றி - வந்த அந்தணனை நாம் வலிமை செய்து போக்கும் எண்ண மன்றி; அச்சிறு மறையோன் ... ஏகும் என்று இசைத்தார் - அந்த மறைச்சிறுவன் தங்கும் மடத்தில் வெவ்விய தழல் சேரும்படி விஞ்சை மந்திரத் தொழில் விளைப்போமாயின், இந்த நல்ல நகரத்தினிடம் இராது வெளியே சென்று விடுவான் என்று சொன்னார்கள்.

இந்நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) வந்த அந்தணன் - நமது நகரத்திற்கு விருந்தினனாய் வந்த அதிதி என்பர் வடவர்; அரச ஆணை முறையில் வலிசெய்து போக்கல் முறையாகாதெனப் பின்னர்க் கூறுதற்குக்

2586. ''வந்த வந்தணன் றன்னைநாம் **வலிசெய்து போக்குஞ்**
சிந்தை யன்றியச் சிறுமறை யோனுறை மடத்தில்
வெந்த ழற்பட விஞ்சைமந் திரத்தொழில் விளைத்தால்
இந்த நன்னக ரிடத்திரா; னேகு''மென் றிசைத்தார். 688

காரணங் கூறுவார் போன்று **வந்த** என்று தொடங்கினர். இது தங்கள் தீத்தொழிலினை மறைப்பதற்குச் சமணர் செய்யும் சூழ்ச்சிகளுள் ஒன்று.

வலிசெய்து போக்கும் சிந்தையன்றி - வலிந்து போக்கும் சிந்தை நமக்கு வேண்டாம்; அது தகுதியன்று என்பது; பின்னர்த் தாம் கூறும் யோசனையாகிய விஞ்சையின் கொள்கை உண்மையில் அஃதேயாம்; அன்றியும், பின்னர் அவர்கள் தீயினையே பொதிந்து விட்ட செய்தியாகிய புறநிகழ்ச்சியும் அஃதேயாம். இவற்றையும், தமது உள்ளுறையினையும் மறைக்கத் தமக்கு அச்**சிந்தை**யில்லை என்றார்; இஃது மேலுமொரு சூழ்ச்சித் திறம்.

சிறு மறையோன் - மறைச் சிறுவன் என்னாது இவ்வாறு கூறியது இலேசுபடும் குறிப்புப்படக் கூறுதல். இஃது மேலுமொரு சூழ்ச்சி; தாம் செய்வது சிறுகாரியம் என்று அரசன் எண்ணச் செய்யும் சூழ்ச்சியாம்.

வெந்தழற்பட விஞ்சை மந்திரத் தொழில் விளைத்தால் - தழற்பட - தழல்போன்று காட்ட; இவ்வாறு விஞ்சை மந்திரத்தால் வரும் தழல், அணிமையில் தீ மூள்வது போலவே காட்டுதலின்றிப் பெருங்கேடு விளைக்காது என்பது அத்தொழிலினர் கண்டது; **விஞ்சை** - வித்தை; உண்மையல்லாத தொன்றை உண்மை போலக் கருத வைக்கும் இந்திரசாலம். மணிமாளிகை மேடை சதுரங்க சேனையுடனே, வந்ததோர் வாழ்வுமோ ரிந்திரசாலக் கோலம்'' (தாயுமானூர்). ''இந்திர ஞாலம் போலவந் தருளி, யெவ்வெவர் தன்மையுந் தன்வயிற் படுத்துத், தானேயாகிய தயாபரனெம்மிறை'' என்று மணிவாசகப் பெருமான் (திருவா) இதனை விளக்கியருளினர்.

மந்திரத் தொழில் - மந்திரத்தின் மூலம் செய்யும் தொழில் - கையானன்றி மந்திர செபத்தினுற் செய்தல்; இவ்வாறு மூன்றாகக் கூறியதும் மேலுமோர் சூழ்ச்சித் திறமாம். என்னை; விஞ்சையாகிய மந்திரத்தின் தொழில் என்ற பொருளும் பிறிதோர் வழியால் விஞ்சையும், அது பயன் றராதாயின் மந்திரமும், அஃதும் பயன்படாதாயின் தொழிலும் என உம்மைத் தொகையாக்கி உரைக்க நின்ற பொருளும் படக் கூறியது காண்க; மேல்நிகழ்ச்சியும் காண்க.

வெந்தழற்பட.... தொழில் - இவ்வாறாகிய மந்திர விஞ்சைத் தொழிலும் ஒன்று உண்டு. அதனை ஏவுதல் என வழங்குவர்; அவ்வுபாசனை கைவந்தோரது ஏவல் வழி நிற்கும் சிறு தெய்வங்களின் செயலாலாவது; இதனைச் ''சென்றுநாம் சிறுதெய்வஞ் சேர்வோ மல்லோம்'' (தாண்) என்று அரசுகள் காட்டி அருளினர். கந்தபுராணத்தினுள் அக்கினிமுகாசுரன் இவ்வாறு தன்னகர்க் காளியினை வீரவாகு தேவர்மேல்ஏவி விடுத்த சரிதமும் காண்க; ஆனல் அவை முதல்வன் மாட்டும் அடியார் மாட்டும் செல்ல மாட்டாமையும் ஆண்டே கண்டுகொள்க; இதன் உண்மை 2596-ல் ஆசிரியர் காட்டுதலும் காண்க. **வெந்தழற் பட**-பட என்பது யாம் அத் தீக்காரணமாக வாதம் மூண்டு பட்டொழிய

வேறு

2587. “**ஆவதொன் றிதுவே யாகி** லதனையே விரைந்து செய்யப்
போவ” தென் றவரைப் போக்கிப் **பொய்பொரு ளாகக் கொண்டான்**
யாவது முரையா டாதே யெண்ணத்திற் கவலை யோடும்
பூவணை யமளி புக்கான்; பொங்கெழிற் றேவி சேர்ந்தாள். 689

என்று பிற்சரித விளைவுக் குறிகுறியதாக அவர்வாக்கிலே போந்த திறமும் காண்க.

இந்த நன்னக ரிடத்திரான் ஏகும் - *தமது சார்பு நற்சார்பு என்றும், அவர்சார்பு அங்ஙனமல்லாத தொன்றாய் விலக்கப்படற் குரியது என்றும் குறிப்புப் பெற* **நன்னகர்** *என்றது மேலுமொரு சூழ்ச்சித்திறம்.* **இரான்** - *இரானாகி; முற்றெச்சம். முற்றாகவே கொள்ளினு மிழுக்கில்லை.*

மாநகரிடத்து—*என்பதும் பாடம்.* 688

2587. **(இ-ள்)** ஆவதொன்று... போக்கி - “செய்யலாவது ஒன்று இஃதேயானால் அதனையே விரைந்து செய்யப் போவீராக” என்று கூறி அவர்களைப் போகும்படி விடுத்து; பொய் பொருளாகக் கொண்டான் - பொய்யினைப் பொருள் என்று கொண்ட மன்னவன்; யாவதும்... புக்கான் - யாதும் யாவரிடமும் பேசாமல் மனத்தில் நிறைந்த கவலையினோடும் மலர்கள் பரப்பிய படுக்கையிற் சேர்ந்தனன்; பொங் கெழில் தேவி சேர்ந்தாள் - மிக்கெழுகின்ற எழிலையுடைய பாண்டிமா தேவியார் அங்குச் சேர்ந்தனர்.

(வி-ரை) ஆவது ஒன்று இதுவே ஆகில் - ஆவது - செய்யலாவது; செய்யத் தக்கது; **ஒன்று** - வேறு பலவன்றி ஒன்றேயாக; **இதுவே யாகில்** - இஃதேயன்றிப் பிறிதில்லையானால்; அரசன் கூறும் பொறுப்புவாய்ந்த நிலைகாண்க; விருந்தாக வந்தவனைப் போக்குதல் நீதிநூல் விலக்கு; அரசாங்க முறைக்கும் தவறு; குடியிருக்கும் மடத்தில் தீப்பட விளைத்தல் அரசாங்க முறைக்கும் தான் மேற்கொண்ட சமண சமய நூலுக்கும் விலக்கு; இவற்றையெல்லாம் உணர்ந்து அறிவினுட்கொண்ட அரசன் “செய்தக்க செய்யாமை யானுங் கெடும்” (குறள்) என்பது நீதியாதலின்,அக்குறிப்பினை உட்கொண்டு **செய்யலாவது ஒன்று** என்றான்; **ஒன்று** - இஃது ஒன்று தவிர வேறொன்றுமில்லை யெனும்படி ஒரேவழி - என்பது குறிப்பு; **இதுவே யாகில்** - ஏகாரம் பிரிநிலை; இதனை விட்டு வேறு வழியில்லையாயின்; முன்னரும் **உற்ற செய்தொழில்** என்ற குறிப்புக் காண்க.

அதனையே - ஏகாரம் தேற்றம்; **ஆகில் அதனையே** - அஃது ஆவதோ அன்றோ என முடிக்கும் பொறுப்புத் தன்னிடமாக மேற் கொள்ளாது அவ்வடிகளிடமே சார்த்தின அரச தந்திர முறையின் மேன்மை கருதுக.

போவது - போவீராக; போவது செய்க என்ற வியங்கோள் தொக்கு நின்றது.

இதனுடன் தொலைந்து முடிவிற் கழுவேறிக் கழிந்து போவது என்ற குறிப்பும் காண்க.

2588. மன்னவ னுரைப்ப தின்றி யிருக்கமா தேவி யார்தாம்
''என்னுயிர்க் குயிரா யுள்ள விறைவநீ யுற்ற தென்னே?
முன்னுள மகிழ்ச்சி யின்றி முகம்புலர்ந் திருந்தா;யின்று
பன்னிய வுள்ளத் தெய்தும் பருவர லருள்செ'' யென்றார். 690

போக்கி - *மன்னனிடத்து அவர்களுக்கு இருந்த மேன்மை நிலை இதனுடன் கழிந்து போவதாயிற்று என்ற பிற்சரித விளைவுக் குறிப்புக் காண்க. உயர் நிலையே யன்றி இத்தொழில் முடிவில் மன்னனுரையினாலே இவர்களுயிரும் போவதாகும் என்ற குறிப்பும் காண்க.*

பொய் பொருளாகக் கொண்டான் - *பொருளல்லாத பொய்யினைப் பொருளாக உட்கொண்டவன்;''பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும் மருள்'' (குறள்).* ***பொய் பொருள் - பொருள்*** - *மெய் என்று கொண்டு, ஒன்றனையே பொய்யும் மெய்யுமாம் என்ற சமணர் கொள்கையுடைய என்றலுமாம். அத்திநாத்தி- என்ற அவர்களது மந்திரம், உண்டுமாம்—இல்லையாம்; மெய்யும் பொய்யுமாம் என்ற குறிப்பினை உடையது.*

யாவதும் உரையாடாதே எண்ணத்திற் கவலையோடும் - *மனத்திற் கவலை மிக்க போது பிறரிடம் பேச்சு நிகழாது; இது மனத் தத்துவ இயல்பு;* ***கவலை*** - *இஃது இன்ன தென்பதனைப் பின்னர் 2589 - 2590 பாட்டுக்களில் அரசன் தன் வாக்கினாலே அறிவிக்கச் செய்யும் கவிநலமும் தகுதியும் காண்க.*

பூவணை அமளி - பூவணை - *அமளியிற் புதுப் பூக்கள் பரப்புதல் வழக்கு;* ***பூ*** - *மென்மை - அழகு என்றலுமாம்.* ***அமளி*** - *படுக்கை. ''போதா ரமளிக்கே' (திருவா - திருவெம்பாவை -2).*

பொங்கெழில் தேவி - பொங்கு - *மேன்மேலும் மிகுகின்ற; பிள்ளையார் வரப் பெற்றமையால் குறைநீங்கி அரசனும் உய்தி பெற்றுச் சைவமோங்கு நிலை கைவரப் பெற்றோம் என்ற உள் மகிழ்ச்சியினால் புறப்பொலிவும் மிகுவதாயிற்று என்பது குறிப்பு.*

தேவி - *பாண்டிமா தேவியாராகிய (2592- 2593) மங்கையர்க்கரசியார்.*

அமளி - புக்கான்; தேவிசேர்ந்தாள் - *என்றமையால் அஃது இரவுக்காலம் என்று குறிப்பித்த நயம் காண்க.*

எழிற்றேவி சார்ந்தும் - *உரையாடா திருந்தான் எனக் கவலை மிகுதி உணர்த்தியது காண்க.*

பொய்ம்மையைப் பொருளாக் கொண்டான்—புகுந்தனர் தேவியாரும்—*என்பனவும் பாடங்கள்.*
689

2588. **(இ-ள்)** மன்னவன்... மாதேவியார் தாம் - அரசன் இவ்வாறு சொல்லாடாது இருத்தல் கண்டு மாதேவியார்; ''என்னுயிர்க்குயிராயுள்ள...அருள் செய்'' என்றார் - ''எனது உயிர்க்குயிராக உள்ள என் நாயகரே! நீர் என்னேவுற்றீர்?; முன் உள்ள மகிழ்ச்சியில்லாமல் முகம் வாடியிருந்தீர்; இன்று இவ்வாறு எண்ணமிடும் உமது உள்ளத்திலே பொருந்திய வருத்தத்தினை உரைத்தருளும்'' என்று சொன்னார்.

(வி-ரை) உரைப்பதின்றி - சொல்லாது; வாய் பேசாமல்; **உயிர்க் குயிராயுள்ள இறைவன் நீ**—"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்" (குறள்); "கொண்டவட்குத் தெய்வங் கொழுநனே" முதலிய நீதிநூற் றுணிபுகள் காண்க; கொழுநன் பொருட்டே உலக வாழ்வைத் தாங்கி நிற்றலும், அவனுக்குக் கேடுவரின் வாழ்க்கை துறத்தலும் நமது நாட்டில் பண்டைப் பெரியோர் வகுத்தொழுகிய நல்ல முறை; பதுமகோமளை, சூரபதுமன் இறந்தானென்று கேட்டலும் உயிர்துறந்தனள்; கணவன் தம்மை மனைவி என்ற நிலையினை நீத்த தறிந்தவுடன் உடலின் தசை முதலியவற்றை உதறித் துறந்து நல்ல பேய் வடிவம் பெற்றனர் காரைக்காலம்மையார். இவை முதலிய இலக்கியங்கள் உணர்ந்து போற்றத் தக்கன; இங்கு இவ்வொழுக்கத்திற் றலைசிறந்து நின்ற மாதேவியார் கூறியது உபசாரமின்றி முழுதும் உண்மைமொழிகளேயாம்; இதுவே கற்பினது உயர்ந்த குறிக்கோளும் இலக்கணமுமாம்; உண்மையிவ் வாறாகவும் இங்குக் கணவனாகிய அரசன் சமணத்தில் இருப்ப அதற்கு மாறுபட்டு அவன் முன்பு புலப்படா வகை மனைவியாராகிய அரசியார் தாம் சைவத்திறத்தில் நின்றொழுகிப் பிள்ளையாரை வரவழைத்து விளைத்த செயல்கள் எல்லாம் "கற்பெனப் படுவது சொற்றிறம்பாமை" என்பனவாதி முன்னோர் கூறியவற்றோடு முரணுவனவே? என்னின், முரணா; என்னை? **சொல்**லாவன எல்லா உயிர்க்கும் உயிராகிய ஆன்ம நாயகராகிய இறைவன் பணித்த வேத சிவாகமங்களே; அவற்றின் வழி திறம்பாது நிற்றலே கற்பாம்; இங்கு மன்னன் மயக்க முற்றுத் திறம்பி நின்றபோது தாமும் அம்மயக்கத்திலே நிற்றல் கற்பாகாது இழுக்கேயாகும்; அவனை மயக்கந் தீர்த்து நன்னெறிப் படுத்தி ஆன்மலாபம் பெறச் செய்து "பெற்றிமையா லுா னென்றும் பிரியாத உலகெய்த" (1293) வழிதேடுதலே உயர்ந்த கற்புநெறியாம்; மன்னவனும் நாடும் நன்மை பெறவே தேவியார் முயன்றனராதலின் அஃது உயர்வாகிய கற்புநிலையேயாம். இக்கருத்துப் பற்றியே பிள்ளையாரை முதலில் வணங்கி வரவேற்றபோது அம்மையார் "யானு மென்பதியுஞ் செய்ததவ மென்கொல்" என்றார் என்பதும் கருதுக; இவைபற்றிக் காரைக்காலம்மையார் புராணத்தும், பிறண்டும் உரைத்தவை யெல்லாமும் கருதுக. அன்றியும் கணவன் பித்துக்கொண்டு தற்கேடு சூழ்ந்தால் மனைவி அவன் வழியே யமையாது பித்தம் தீர்த்து உய்வித்தல் கற்பன்றோ?

என்னோ உற்றது - உற்றது பொருந்திய தீமை; எவன் வினா வினைக்குறிப்பு; ஓகாரம் - அசை; **என் நோ** - என்று பிரித்து நோய் என்? என்றலுமாம்.

முன் உளமகிழ்ச்சியின்றி முகம் புலந்திருந்தாய் - முன் உள **மகிழ்ச்சி** - வழக்கம்போல் என்றுமுள்ள உள்ள மகிழ்ச்சி; இதனால் அரசன் - அரசியாரது இல்வாழ்க்கைத் திறம் அன்பினிறைந்ததாய் மிகு மகிழ்ச்சிக்கிருப்பிடமாய் இருந்ததென்பது புலப்படும்; சமய நிலையில் வேறுபட்ட அம்மையார் செயல்கள் எல்லாம் அரசன் மாட்டுக் கொண்ட அடிப்படையாகிய அன்பு காரணமாக எழுந்தனவே யாதலின் இந்நிலை கூடிற்றென்க. முன்கூறிய கற்பினியல்பு இதனாலாகியது.

உளம் மகிழ்ச்சியின்றி முகம் புலர்ந்து - முகவாட்டம் உண் மகிழ்ச்சியின்மையைக் காட்டிற்று என்பதாம்.

பன்னிய - வருத்தப்படப் பலபலவும் எண்ணமிட்ட. **பருவரல்** - வருத்தல்.

அருள்செய் - இரக்கம்பட விண்ணப்பிக்கும் முறை. 690

2589. தேவியார் தம்மை நோக்கித் தென்னவன் கூறு கின்றான்
''காவிநீள் கண்ணி னாய்!கேள் காவிரி நாட்டின் மன்னுந்
தாவில்சீர்க் கழும லத்தான் சங்கர னருள்பெற் றிங்கு
மேவின னடிகண் மாரை வாதினில் வெல்ல'' வென்று, 691

2589. **(இ-ள்)** தேவியார் தம்மை...கூறுகின்றான் - மாதேவியாரை நோக்கிப் பாண்டியன் சொல்வானாகி; காவிநீள்... என்று நீலோற்பலம் போன்ற நீண்ட கண்ணையுடையாய்! கேட்பாயாக! சோழரது காவிரி நாட்டின்கண்ணே நிலைபெற்ற குற்றமற்ற சிறப்பையுடைய சீகாழிப் பதியவன் சங்கரனுடைய அருளைப் பெற்று இங்கு அடிகண்மாரை வாதில் வெல்லும் பொருட்டு அணைந்தனன் என்று கூறி மேலும் சொல்வானாகி,

(வி-ரை) காவிநீள் கண்ணினாய்! கேள் - இவர்களது இல்லற நிலையின் வாழ்க்கை நலம் உணர்த்திற்று; ''காதல்...மானியே! என்று மேற்பாட்டிலும் வருதல் காண்க; **2558**ல் உரைத்தவை பார்க்க.

காவிரி நாடு - சோழநாடு:—அரச மரபுச் சிறப்புப் பற்றிச் சோழநாடு என்னாது ஆற்றுச் சிறப்புப் பற்றிக் **காவிரிநாடு** என்றது மாதேவியாரது மரபு பற்றி இந்த இழுக்குத் தொடர்புடையதென்று தொனியாலும் பொருள்படாதிருத்தற் பொருட்டு.

சங்கரன்...வெல்ல - அரசனது வாக்கில் அவனையுமறியாது சரித விளைவாகிய உண்மைக் குறிப்புப் போந்தமை காண்க; ''சூலபாணிபான் ஞானம் பெற்றானென்று'' என்று அடிகண்மார் கூறியதன் உடன்பாட்டையும், **அருள்** பெற்று என்ற வாய்மையும் காண்க.

கூறுகின்றான் - என்று - என்றான் - என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. **என்று**- என்று கூறி மேலும்.

வெல்லவென்று மேவினான் என்று இப்பாட்டினையே முடித்துக் கொள்ளுதலு மொன்று.

வெல்ல வேண்டி—என்பதும் பாடம். **691**

2590. **(இ-ள்)** வெண்பொடி... விரவினார் - வெண்பொடியாகிய திருநீற்றினைப் பூசும் தொண்டர்கள் அனேகர் வந்து பொருந்தினார்கள்; அவரை...அடிகண்மார்கள் - அவர்களை எல்லாம் கண்டதனால் அடிகண்மார்கள் கண்டுமுட்டு; யானும்... கேட்டுமுட்டு - அச்செய்தியினைக் கேட்டதனால் நானும் கேட்டுமுட்டு; காதல்...மானியே - என் காதலுக்குரியவளாய், வண்டுகள் தேனுண்ணும் பொருட்டு நெருங்கிச் சேர்ந்த மாலைசூடிய மானியே? இங்கு... இல்லை என்றான் - இங்குக் கூறிய தன்மை இஃதேயாம்; வேறு பரிசொன்றுமில்லை என்றான்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) வெண்பொடி - திருநீறு; இது சமணர் கூறும் மரபு. அவர் இதனை வெள்ளை நிறமுடையதொரு பொடி என்ற அளவில் கண்டு கொண்டாரன்றி, அது அணிபவரது மலத்தினை

2590. ''வெண்பொடி பூசுந் தொண்டர் விரவினு; ரவரை யெல்லாங்
கண்டுமுட் டடிகண் மார்கள்; கேட்டுமுட் டியானுங்; காதல்
வண்டுணத் துதைந்த கோதை மானியே! யிங்கு வந்த
பண்புமற் றிதுவே யாகும்; பரிசுவே றில்லை'' யென்றுன். 692

2591. மன்னவ னுரைப்பக் கேட்டு மங்கையர்க் கரசி யார்தாம்
''நின்னிலை யிதுவே யாகி னீடிய **தெய்வத் தன்மை
யன்னவர் வாது செய்தால் வென்றவர் பக்கஞ் சேர்ந்து
துன்னுவ துறுதி** யாகுஞ்; சுழிவுறேன் மன்ன!'' வென்றுர். 693

நீற்றும் தன்மையுடையது என்றும், அதனுல் அதற்கு நீறு என்ற பெயர் போந்தது என்றும் அறிந்தாரலர். ''பாச மறுப்பது நீறு'' (தேவா).

கண்டுமுட்டு - கேட்டுமுட்டு *- 2581-2582 பார்க்க. சமணரது மாயத்த பூந்தியதனுல் அவர்கள் சொல்லை அவ்வாறே நம்பிப் பின்பற்றினன்.*

காதல் - மானியே *- எனது காதலுக்குரியவளே! காதலியே!*

வந்த பண்பு *- மனக் கவலையும், அதனுல் முகம் புலர்தலும், மனவருத்தமும் பிறவும்;* ***''எண்ணத்திற் கவலை''*** *(2587) என்றதனை விளக்கியவாறு.*

பரிசு வேறில்லை - பரிசு *- தன்மை.* **692**

2591. **(இ-ள்)** வெளிப்படை. அரசன் அவ்வாறு சொல்லக்கேட்டு மங்கையர்க்கரசி யம்மையாரும் அரசனை நோக்கி ''அரசே உனது நிலை இவ்வாறேயானுல், அழிவு படாமல் நீடிய தெய்வத் தன்மை விளங்கும்படி அவர் வந்து வாதம் செய்தால் அதில் வென்றவருடைய பக்கத்திற் சேர்ந்து பொருந்துவதே உறுதியாகும்; வருந்தவேண்டா'' என்றனர்.

(வி-ரை) இஃது அரசனைக் கவலைப்படாதபடி தேற்றிய முறை; இதன்கண்ணும் உண்மை நிகழ்ச்சிக் குறிப்புப்பட வருதுல் காண்க.

நீடிய - அழிவுபடாத; **தெய்வத் தன்மை** - தெய்வத் தன்மை விளங்கும் நிலையில்; புலப்படும்படி.

வென்றவர் பக்கம் சேர்ந்து துன்னுவ துறுதியாகும் - அவரே வெல்வர் என்பது உறுதி; அவர் பக்கம் சேர்ந்து துன்னுவது உறுதி; **உறுதி** - உண்மையாய் - நிச்சயமாய் நிகழ்வது; **உறுதியாகும்** - அஃதே உறுதி பயக்கும் செயலாகும்; என்று வழிப்படுத்தும் போதனைக் குறிப்பும் காண்க. **சேர்ந்து** - என்றதனுல் இப்போது சேர்ந்துள்ள சமயம் வெற்றி பெறுவதில்லை என்பது குறிப்பு. **வென்றவர்** - வெல்பவர் என்ற பொருளில் வந்தது.

நீடிய தெய்வத் தன்மை - ''யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகியாங்கே, மாதொரு பாக னுர்தாம் வருவர்; மற் றத்தெய் வங்கள், வேதனைப் படுமிறக்கும் பிறக்குமேல் வினையுஞ் செய்யும்'' (சித்தி—2-25) என்றபடி பிற தெய்வங்களும் சிவனுணையால் நீதி செலுத்தவரினும், நீடியிராது அழிவெய்தி இறத்தல் பிறத்தல்களுக்கிடமா யலையும். ஆதலின்

2592. **சிந்தையிற் களிப்பு மிக்குத் ''திருக்கழு மலத்தார் வேந்தர்**
வந்தவா றெம்மை யாள'' வெனவரு மகிழ்ச்சி யோடுங்
கொந்தலர் குழலார் போதக், குலச்சிறை யாரங் கெய்த
விந்தநன் மாற்ற மெல்லா மவர்க்குரைத் திருந்த பின்னர், 694

அவ்வாறன்றி அழிவில்லாத தெய்வத் தன்மை என்க; ''தேறிய தெய்வத் தன்மை யென்னிடைத் தெரிப்பீர்'' (2657).

சுழிவுறுதல் *- மனம் வாடுதல்; கவலை கொண்டு அலமருதல்.*

சுழிவுறேல் *- வருத்தப்பட வேண்டா.* *693*

2592. **(இ-ள்)** *சிந்தையிற் களிப்பு... போத - மனத்தினுள் மிகவும் களிப்படைந்து ''சீகாழித் தலைவர் எம்மையாளும் பொருட்டு வந்த ஆறுதான் என்னே!'' என்று வரும் மகிழ்ச்சியினுடனே கொத்து விரியும் மலர்களை யணிந்த கூந்தலை யுடைய மங்கையர்க்கரசியம்மையார் போந்தபோது; குலச்சிறையார்...அங்கு எய்த - குலச்சிறையார் அவ்விடத்தே வந்துசேர; இந்த... பின்னர் - இந்த நல்ல வார்த்தைகளை யெல்லாம் அவரிடம் சொல்லிய பின்பு;*

(வி-ரை) திருக் கழுமலத்தார் வேந்தர்... *என்றது அம்மையார் மனத்திற் களிப்பு மிகுதற்குக் காரணமாய் எழுந்த கருத்து;* **வந்தவாறு** *- வந்த நிலை தான் எத்தகைய பெரும் பேறாக நாம் பெற நின்றதென ஆச்சரியக் குறிப்பு. இக்கருத்தே அமைச்சனார் மனத்தினுள்ளும் எழுந்தது; ஆதலின் அவர் இதனை விரித்துரைக்கு முகத்தால் ''பெற்றனம் பிள்ளை யாரிங் கணைந்திடப் பெறும் பேறு'' என்றனர். பிள்ளையார் வருகையைத் தமது பெரும் பேறாகவும், தம்மை ஆட்கொள்ளும் பொருட்டே அது நிகழ்ந்ததாகவும் பெரு மக்களிருவரும் கருதினர் என்பதாம்.*

போத *- அரசனிருந்த இடத்தினின்றும் வெளியே செல்ல.*

இந்த நன்மாற்ற மெல்லாம் *- அரசன் இருந்த நிலைகண்டு தாம் வினவியதற்கு அவன் கூறியதும் அதற்குத் தாம் மொழிந்ததும் ஆகிய செய்திகள்.* **மாற்றம்** *- அவை சொல்லளவில் நிகழந்தன வாதலின்* **மாற்றம்** *என்றார்;* **மாற்றம்** *- மாறுதல் என்று கொண்டு அரசனிடம் நிகழ்ந்த மாறுதலும் அதனை மாற்றத் தாம் கூறியவையும் என்றுரைத்தலுமாம். கொந்தலர்தற்கு மகிழ்ச்சி காரணம் என்றதும் குறிப்பு.*

அவர்க்குரைத்து இருந்த பின்னர் *- மந்திரியாருக்குச் சொல்லித் தமது இடத்தில் அமர்ந்த பின்பு; தமக்கும் அரசனுக்கும் உள் நிகழ்ந்தவற்றை அவர்க்குரைத்த தென்னையோ? எனின், சைவ ஆக்கத்தின் பொருட்டு இருவரும் செய்த பணியாதலின் மேல் ஆக வேண்டுவனவற்றை நாடி நலஞ்செய்தல் அமைச்சர் மேல் நிற்றலான் அவர் அறிந்திருத்தல் வேண்டும் என்னும் உலகியல் அரச தந்திர முறை பற்றியாம்;* **இருந்த** *- தமது ஆசனத்தில் அமர்ந்த,* *694*

2593. கொற்றவ னமைச்ச ருருங் கைதலைக் குவித்து நின்று
''பெற்றனம் பிள்ளை யாரிங் கணைந்திடப் பெறும்பே'' றென்பார்
''இற்றைநா ளீசனன்பர் தம்மைநா மிறைஞ்சப் பெற்றேம்;
மற்றினிச் சமணர் செய்யும் வஞ்சனை யறியோ'' மென்றார். 695

2593. **(இ-ள்)** கொற்றவன்... என்பார் - அரசனின் மந்திரியாரும் கைகளைத் தலைமேலே கூப்பி நின்று, ''பிள்ளையார் இங்கே அணைந்திருக்கப் பெறும் பேறுதான் பெற்றேம்'' என்று சொல்வாராகித் தொடர்ந்து; ''இற்றைநாள்... அறியோம்'' என்பார் - ''இன்று இறைவரின் அடியாரை நாம் கண்டு வணங்கும் பேறு பெற்றோம்; மற்று இனிச் சமணர் செய்யக்கூடிய வஞ்சனை எதுவோ அறியோம்'' என்று சொன்னார்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) ''பெற்றனம்... பேறு'' என்பார் - அரசியார் உரைத்ததனைப் போல உடன்பட்டுத் தாமும் அவ்வாறே மகிழ்வதாகக் கூறினார். இருவரிடத்தும் ஒரு தன்மையாகவே அக்கருத்தும் அதனால் மகிழ்ச்சியும் எழுந்தன; ஆனால் அமைச்சுத்திறம் வல்லவராதலின் அதனோடமையாது மேலும் எண்ணி மேல் விளைவினைக் கருதலளவையான் அறிந்து மேலேயும் கூறுவாராகி என்பது குறிக்க **என்பார்** என எச்சமாக்கி மேற் புகுகின்றார்; ''தெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாய்ச், சொல்லலும் வல்ல தமைச்சு'' (குறள்). அவ்வாறு தெரிந்தநிலை மேற்கூறுவார்; அம்மையார் கருத்தை உடன்பட்ட நிலை முன்னரும், தாம் தெரிந்தநிலை பின்னரும் கூறிய முறைகள் காண்க. **அணைந்திட** - அணைந்திடலால் என்றலுமாம்.

இற்றைநாள்... பெற்றேம் - இற்றை நாள் - முன்னர்ப் பலநாள் பெறாது ஏங்கி யிருந்தும் பெறாது பெற்ற நிலைக்குறிப்பு; **அன்பர்தம்மை** - சிவனடியார்களைப் பொதுவாகவும் பிள்ளையாரைச் சிறப்பாகவும் குறித்தது.

மற்று இனி - மற்று - வினைமாற்றின்கண் வந்தது; இது வரை தமது நிலையும் இனி அமணர் நிலையும் கூறினார்.

இனிச் செய்யும் வஞ்சனை - செய்யும் - செய்யக்கூடிய தென்று அறியும்; அவர்களியல்பினை அறிந்துள்ளாராதலின் இவ்வாறு முன்னறிவிப்பும் எச்சரிக்கையுமாகக் கூறினார்; **வஞ்சனை** வஞ்சச் செயல்; **அறியோம்** - வஞ்சச் சூழ்ச்சிச் செயல் செய்குவர் என்பது மட்டும் உறுதி; ஆனால் அஃது எத்தன்மைத்து என்று கூறவியலாது என்றதாம். மேல் அம்மையார் கூறுதலும் காண்க. 695

2594. **(இ-ள்)** மானியார் தாமும் அஞ்சி - அரச மாதேவியாரும் அஞ்சி; வஞ்சரிப் புலையர்...எண்ணி - வஞ்சகர்களேயாய் இவ்வாறு ஈனமான செயல்களையே செய்ய வல்லவர்; அதற்கு நாம் என்ன செய்வது என்று எண்ணமிட்டு; ஞானசம்பந்தர்... என்றார் - திருஞானசம்பந்தரிடம் நன்மையல்லாத செயல்களை இவர்கள் செய்து அதன் மூலம் கெடுதி வந்து சேருமாயின் நாமும் உயிர்துறப்போம் என்று கூறினார்.

2594. மானியார் தாமு மஞ்சி ''வஞ்சரிப் புலேயர் தாங்கள்
ஈனமே புரிய வல்லார்; செய்வதென் ''மென் றெண்ணி,
''ஞானசம் பந்தர் தம்பா னன்மையல் லாது செய்யும்
ஊனம்வந்த தடையி னுமு முயிர்துறந் தொழிவ'' தென்றார். 696

2595. இவர்நிலே யிதுவே யாக; விலங்குவேற் றென்ன னுன
அவனிலே யதுவா; மந்நா ளருகர்தந் நிலேயா தென்னில்
தவமறைந் தல்ல செய்வார் தங்கண்மந் திரத்தாற் செந்தீ
சிவநெறி வளர்க்க வந்தார் திருமடஞ் சேரச் செய்தார்; 697

(வி-ரை) இது மந்திரியார் கருதிக் கூறிய எச்சரிக்கையின் மேல்விளேவைப் பற்றி அம்மையார் சிந்தித் தறிந்து சொல்லியது.

வஞ்சர்...வல்லார் - செய்வதென்? மந்திரியார் - மற்றினி, அமணர் செய்யும் வஞ்சனே அறியோம் - என்றதனே உட்கொண்டு, அற்றன்று; அவர் செய்வது ஈனமே யாம் என்பதனே அறிவோம்; ஆனுல் அதற்குமாருக நாம் செய்யக்கிடந்த தென்னேயோ? என்று எண்ணமிட்ட அம்மையார் ,அவர் வஞ்சச் சூழ்ச்சியே புரிகுவர்; புரியினும் அதன் கேடு ஒன்றும் பிள்ளேயார்பாற் சாரவலியிலது; ஒரு வேளே அவ்வாறன்றி என மேற் கூறுகின்ருர். **(செய்வது) என்னும்** - எதுவோ என்றலுமாம்.

நன்மையல்லாது செய்யும் ஈனம் வந்தடையின் - அடையின் - வந்து அடையாது என்பதுறுதியே. ஆயினும் ஒரு வேளேவரின் என்ருர்; **நன்மையல்லாது** - தீமை சொல்லலாகா மரபு பற்றி இவ்வாறு கூறுவது பெரியோர்கள் வழக்கு. ஒழுக்கமுடையார்கட் கொல்லாவே தீய, வழுக்கியும் வாயாற் சொலல்'' (குறள்); பிள்ளேயார்பால் வேருென்று புகுமாயின் என வாக்காற் சொல்லவும் நடுங்கி அஞ்சியது அம்மையாரின் அன்பு நிறைந்த மனநிலே.

யாமும் உயிர் துறந் தொழிவது - ''செய்வதென்'' என்று எண்ணமிட்டு அம்மையார் துணிந்த முடிவு; தாம் உயிர் துறப்பதே அதற்கு முடிவு என்பது; **முயற்சியின்றி உயிர் தானுகவே நீங்கும் என்பதும் குறிப்பு; அம்மையார் தலேயன்புடையாராதல் காண்க.**

நன்மையல்லாத செய்ய—என்பதும் பாடம். 696

2595. **(இ-ள்)** இவர் நிலே இதுவே ஆக - இவர்களது நிலேமை இவ்வாறே யாகிநிற்க; இலங்கு... அதுவாம் - விளங்கும் வேலேந்திய பாண்டியனுகிய அவனிலே முன்கூறிய அஃதாம்; அந்நாள் - அற்றை நாளில்; அருகர்... என்னில் - அருகர்களின் நிலே யாதாம்? என்ருல்; தவமறைந்து... சேரச் செய்தார் - தவவேடத்துள் மறைந்து நின்று, அல்லாத தீச்செயல்களேச் செய்வார்களாகிய அவர்கள் தங்களது மந்திரத்தினுலே, சிவநெறி வளர்க்கத் திருவவதரித்து வந்த பிள்ளேயாரது திருமடத்திலே செந்தீயினேச் சேரும்படி செயல் செய்தனர்.

(வி-ரை) இப்பாட்டினுல் அரசியார் அமைச்சனுர் ஒரு திறமும், அரசன் ஒரு திறமும், அமணர் மற்ரெரு திறமுமாக மூவேறு திறத்தவரின் நிலேகள் மூவேறு திறம்பட நின்ற தன்மை கூறப்பட்டது; அவற்றுள், **இவர் நிலே யிதுவே-இவர்**-அரசியாரும் அமைச்சனுரும்; **நிலே**

வேறு

2596. **ஆதி மந்திர மஞ்செழுத் தோதுவார் நோக்கும்**
மாதி ரத்தினு மற்றைமந் திரவிதி வருமே!
பூதி சாதனர் மடத்திற்றாம் புனைந்தசா தனைகள்
சாதி யாவகை கண்டமண் குண்டர்க டளர்ந்தார். 698

இதுவே - இது *- முன் 2592 - 2593 பாட்டுக்களில் உரைக்கப்பட்டது;* ***இவர் - இது*** *என்று அண்மைச் சுட்டினாற் கூறியது இது இறுதியாகக் கூறிய அணிமைபற்றி; இவர்களே நமக்கு அணியார் என்ற குறிப்புமாம். முதலிற் கூறிய குறிப்புமது.*

இலங்குவேல் தென்னனான அவன்நிலை அதுவாம் *- இவர்களுக்கு அடுத்து முன் கூறியது அவன் நிலையாதலின் அதனை அடுத்துவைத் தோதினார். அவன் நிலை முன் 2587 — 2590ல் உரைக்கப்பட்டது.*

அருகர்தம் நிலை *- அஃது அவன் நிலைக்கு முன் 2586ல் உரைக்கப்பட்டது; அதனைத் ''தவம்மறைந்து அல்ல செய்வார்'' (2595) என்றார்.*

தங்கள்... செய்தார் *- அவர்கள் தமது நிலையே பற்றி அதற்கேற்ற செயலும் செய்தனர் என்பார்* ***செய்வார் - செய்தார்*** *என முடித்தார்.*

செந்தீ திருமடம் சேர என்க; **சேரச் செய்தார்** - ''சேர்க'' என்று மந்திரம் கணித்து ஏவினர்; சேர்தற் பொருட்டுத் தாம்குறித்த தொழில் - செயல் - செய்தனர். விஞ்சை மந்திரத் **தொழில் விளைத்தால்** *(2586).*

தங்கண் மந்திரத்தால் - தீயை ஏவல் கொள்ளும் சிவ மகா மந்திரங்களும் உண்டு; ஆயின் இவர்கள் அவ்வாற்றானன்றித் தங்கள் சமய மந்திரத்தினையே நம்பி அதனையே கொண்டு செயல் செய்ததனால் **தங்கள் மந்திரம்** என்றார். ''அமணர் கொளுவும் சுடர், பையவே சென்று பாண்டியற் காகவே'' என்று ஏவிய மகா மந்திரச் சார்பினில்லாத தங்கள் மந்திரம் என்பதும் குறிப்பு; மேல் வரும் பாட்டில் ''ஆதி மந்திர மஞ்செழுத் தோதுவார்'' (2596) என்ற குறிப்புமிது.

சிவநெறி வளர்க்க வந்தார் - பிள்ளையார்; **வந்தார்** - திருவவதரித்தவர்; அங்கு அந்நாட்டிற்கு வந்தவர் என்ற வரலாற்றுக் குறிப்புமாம். **வளர்க்க** என்றதனால் சிவநெறி எந்நாளும் அழியாததாதலின் முன்னைப்போல் நிகழ்விக்க என்ற அளவில் பொருள் கொள்க.

தவம் மறைந்து அல்ல செய்வார் - தவம் என்ற மேற்போர்வையினுள் மறைந்து கொண்டு அல்லாதவற்றையே செய்கின்றவர்கள்; **அல்ல** - அற மல்லாதவற்றை - பாவச் செயல்களை; அகர வீற்று பலவறிசொல். செயப்படு பொருளில் வரும் இரண்டனுருபு தொக்கது. ''கொல்லாமை மறைந்துறையும் அமண்சமயம்'' (1302) என்ற விடத்துரைத்தவை பார்க்க. 697

2596. **(இ-ள்)** ஆதி... வருமே - ஆதி மந்திரமாகிய திருவைந்தெழுத்தினை ஓதுகின்றவர்கள் பார்க்கின்ற திசையிற்றானும் மற்ற மந்திரங்களின் செயல்கள் சென்று சேருமே? (சேரா); பூதி... தளர்ந்தார் - திருநீற்றுச் சாதனம் பூண்ட பிள்ளையாரது திருமடத்தில் தாம்

2597. தளர்ந்து மற்றவர் தாஞ்**செய்த தீத்தொழில் சரியக்,**
கிளர்ந்த வச்சமுன் கெழுமிய கீழ்மையோர் கூடி
''விளங்கு நீண்முடி **வேந்தனீ தறியினம் மேன்மை**
யுளங்கொ ளா;னமர் விருத்தியு மொழிக்கு''மென் றுணர்வார். 699

புனைந்த சாதனைகள் ஏவியபடி குறித்த பயனைத் தாரா தொழிந்த வகையினைக் கண்டு அவ்வமணர்களாகிய கீழ்மக்கள் தளர்ச்சி யடைந்தனர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) ஆதிமந்திரம்...வருமே - இது கவிக்கூற்று. **ஆதி மந்திரம்** - ஆதியின் மந்திரம், ஆதியாகிய மந்திரம், ஆதிக் குகந்த மந்திரம், என்று பலவும் உரைக்க நின்றது.

நோக்கும் மாதிரம் - பார்க்கின்ற திசை; **மற்றை மந்திரம்** பயனல்லாத மற்ற என்றது குறிப்பு. மாதிரம் - திசை.

மற்றை மந்திர விதி வருமே - ஏகார வினு வராது என்று எதிர்மறை குறித்தது; **மந்திர விதி வருதலாவது** குறித்த பயன் தருதல்; **விதி** - குறித்த செயல் செய்தல்; வெட்டாத சக்கரம் பேசாத மந்திரம்'' என்ற கருத்துக் காண்க.

ஓதுவார் - ஓதுதல் - விதிப்படி எண்ணிக் கணித்தல்.

பூதிசாதனர்... புனைந்த சாதனைகள் - சாதனைகள் - சாதனம் - ஒரு பொருளைக் குறித்தபடி நிறைவேற்றும் கருவி; **சாதியாவகை** - தாம் கொண்ட கொள்கையை நிறைவேற்ற திருத்தல். **சாதியாவகை** சமணர்களது மந்திர உச்சாடனம் பலன் பெருமற் போயின தன்மையைக் கூறுது, அதனைக்கண்டு அமணர் தளர்ந்த தன்மை பற்றிக் கூறியது கவிநயம்.

புனைந்த சாதனைகள் - புனைந்த - உண்மையல்லாது தாம் கற்பித்த.

பூதிசாதனர் மடத்தில் - அவர் புனைந்த சாதனைக்கு மேற்பட்ட சாதனை கை வந்தவர்கள் என்பது குறிப்பு. பூதிசாதனராதலின் புனைந்த சாதனைகள் சாதியாவாயின என்று காரணங்கூறி விரித்துரைக்க நின்றது.

குண்டர்கள் - கொலையாகிய பாவச் செயல் செய்யும் கீழ்மக்கள் என்பது குறிப்பு.
698

2597. **(இ-ள்)** தளர்ந்து... சரிய - மற்று அவர்கள் தாம் செய்த அத் தீத் தொழில் பயன்தராது வீழக்கண்டு மனந்தளர்ந்து; கிளர்ந்த... கூடி - எழுந்த அச்சமானது முன்னே மிகுந்ததனுல் கீழ்மைத்தன்மையோர்களாகிய அந்த அமணர்கள் கூடி; விளங்கு... உணர்வார் - ''விளங்கும் நீண்ட முடி மன்னனுகிய பாண்டியன் இதனை அறிந்தானுயின் நமது மேம்பாட்டினில் இனி மனம் வைக்க மாட்டான்; நமது பிழைப்பு வழியினையும் ஒழித்து விடுவான்'' என்று உணர்வாராகி,

(வி-ரை) சரியத் - தளர்ந்து என்க; **தீத் தொழில்** - தீய தொழில்; இராப்பகற் பொழிதலால் தீயைச் சேரச் செய்த தொழில் என்றலுமாம். **சரிதல்** - பயன் தரா தொழில்கள்; **சரிய** - சரிய அதனைக் கண்டு;

விளங்கும் நீள்முடி வேந்தன் - இது காறும் நின்றது போலன்றி இனி விளக்கம் பெற நீளும் முடியினைச் சாரும் என்றது தொனிக்குறிப்பு. நீண்முடி விளங்கும் என்று கூட்டுதலுமாம்; **நீளுதல்** - நெல்வேலிச் செருவென்று வாகை பூழியர் வேம்பு என் புனைந்தமையாலும், **விளங்குதல்** - "திருநீற்றி னெறிவிளங்க வுரைசெய்பெரும் புகழ்விளக்கி" யதனாலும் காணப்படும் (நின்றசீர் நெடுமாறர் புரா 7-8 பார்க்க); புகழும் புண்ணியமும் பெருகும் நிலைக்குறிப்பு.

நம்மேன்மை உளம் கொளான் - நமது சமயம் மேன்மையுள்ள தென்று கருதமாட்டான். இதுவரை நாம் மேன்மையுடையோம் என்று உள்ளத்திற் கொண்டான். இனி அக்கருத்தினை உள்ளத்தில் வைக்காது அகற்றி விடுவான்; **நம் மேன்மை** - நம் சமயத்தில் உள்ளதாகக் கொண்ட மேன்மை; "இருதிறத் தீருந் தீரும்; கைதவம் பேசமாட்டேன்" (2647); "நீங்க டேறிய தெய்வத் தன்மை யென்னிடைத் தெரிப்பீர் " (2657); "வெந்தொழி லருகர் தோற்றீ ரென்னைவிட் டகல நீங்கும்" (2667); "வெப்புநோய் கவர்ந்தபோ தொன்றுமங் கொழித்திலீர்க ளென்னவா துமக்கு" (2674); "பொய்யினுல் மெய்யை யாக்கப் புகுந்தநீர் போமின்" (2690) என்பனவாதியாகப் பின் அரசன் கூறுவன காண்க. இதுவரை அரசன் இவர்களது மேன்மை உளங்கொண்டிருந்த நிலை 2580— 2591 பாட்டுக்களின் நிகழ்ச்சியாற் கண்டு கொள்க.

நமர் விருத்தியும் ஒழிக்கும் - "மெய்வ கைத்திற மறிந்திடின் வேந்தனும் வெகுண்டு, சைவ ளுகிநம் விருத்தியுந் தவிர்க்கும்" (1347) என்றிவ்வாறே உட்கொண்டு அரசுகளது சரிதத்தினுள் சமணர்கள் பல்லவ அரசன்பால் முறைப்பட்ட வஞ்ச நிகழ்ச்சியினையும் இங்கு நினைவு கூர்க. வேற்றுச் சமயத்தார் அரசர் சார்பினைப் பலதிறப்பட்ட சூழ்ச்சிகளாலும் பெற்று அதனுல் தத்தம் சமய நிலைகளைப் பரவச் செய்தலும், அதுகொண்டு தாம் சீவனோபாயமும் பொருளும் தேடிக் கொள்ள வழிசெய்து கொள்ளுதலும், பற்பல காலங்களிலும் இத்தமிழ் நாட்டிலும், பிற நாட்டினும் இன்றுவரை நிகழ்ந்துவரக் காண்கின்ற உண்மை; பௌத்தர் ஈழ நாட்டினும் பரவி அரசன் சார்பு கொண்டு பிழைத்துச் சைவ வாதம் செய்யத் தில்லைக்குவந்த வரலாறு திருவாதவூரர் சரிதத்துட் காணலாம்; ஈழ நாட்டின் இந்நாளிலும் அவர்களின் பரவுதல் காணவுள்ளது; இந் நாட்டிற் சமணம் புத்தம் இரண்டும் பரவித் தாம் தாம் பிழைப்புத்தேடி அதன் பொருட்டுச் சைவ விளக்கத்தைக் குறைத்து நிகழ்ந்தமை சமயாசாரியர்களின் வரலாறும் நாட்டுச்சரித நிகழ்ச்சிகளும் உண்மைப்படுத்தும்; கிறித்தவர், முகமதியர், முதலிய புற நாட்டுச் சமயங்களின் பரப்புதல்களும் இன்று வரை நம் நாட்டில் இவ்வாறே நிகழ்தலும் காணவுள்ளன; ஒருவனைத் தாழ்த்தி மற்றவன் பிழைத்தல் என்றது உலகியல் நிலையிலேயன்றிச் சமய நிலையிலும் காண்பது ஆணவத்திற் கட்டுண்ட மனிதனின் இயல்பாய் நின்றது; பல வகையாலும் நிகழும் உலகியற் போர்களுக்கும் இஃதே உள்ளுறை என்க; இவ்வுண்மையினை உணர்ந்து ஒழுகினுல் உலகம் கலகமின்றி நலம் பெற்று வாழ வழியுண்டாகும்; **விருத்தி** - சீவனோபாயம்; சீவிதம் - சர்வ மானியம் என்பர். **அமர்விருத்தி** - அமர்த்திய - நியமித்த - தொழில் என்றலுமாம்.

2598. ''மந்தி ரச்செயல் வாய்த்தில; **மற்றினிச் செய்யும்**
புந்தி யாவதிங் கிது''வெனப் பொதிதழல் கொடுபுக்
கந்தண் மாதவர் திருமடப் புறத்தய **லிருள்போல்**
வந்து தந்தொழில் புரிந்தனர் வஞ்சனை மனத்தோர். 700

உணர்வார் - *உணர்வாராகி;* **உணர்தல்** - *மனத்தில் துணிதல்.* **உணர்வார் - புரிந்தனர்** - *என மேல்வரும் பாட்டுடன் முடிக்க.* 699

2598. **(இ-ள்)** *மந்திரச் செயல்... இது என* -மந்திரத்தின் செய்கை குறித்த பயன் *தரவில்லை; மற்று இனிமேல் தெரிந்து செய்யும் ஆலோசனையாவது இஃதே யாகும் என்று துணிந்து; பொதிதழல் கொடுபுக்கு* - பொதியும் தழலினை எடுத்துக் கொண்டு புகுந்து; *அந்தண்... வந்து* - அழகிய தண்மையுடைய மாதவர்களாகிய சிவனடியார்கள் துயில்கின்ற திருமடத்தின் புறத்தின் பக்கத்தில்; *வஞ்சனை மனத்தோர்* - வஞ்சனை நிறைந்த மனத்தையுடைய அவ்வமணர்கள்; *இருள்போல் வந்து தம் தொழில்புரிந்தனர்* - இருள் போல் வந்து சேர்ந்து தமது மனங்கொண்ட தீத் தொழிலைச் செய்தனர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) ''மந்திரச் செயல்...இது'' என-சமணர் மனத்தினுள் எண்ணமிட்டுத் துணிந்த நிலை.

செய்யும் புந்தி ஆவது இங்கு இது - புந்தி - புத்தி தத்துவத்தின் றொழில்; **இது வென** - புத்தி தத்துவம் இது செயத்தக்கது என நிச்சயித்தும், இதனை நான் செய்வேன் என்று அகங்காரம் பல்கால் எழுந்திருந்தும், செயல்புரியும்; ''அந்தமனம் புத்தியுட ஞங்காரஞ் - சிந்தையிவை, பற்றியது நிச்சியித்துப் பல்கா லெழுந்திருந்தங், குற்றது சிந்திக்கு முணர்'' *(உண்மை விளக்கம்-16)* என்று அந்தக்கரணங்களின் தொழில்களாகிய இவற்றின் றன்மைகளை ஞான சாத்திரம் பேசுதல் காண்க.

இது என - இஃது என்று துணிந்து; அடியார்பால் வரும் தீமையாதலின் அதனை இன்னதென்று கூறாது அவர்கள் துணிந்து செய்த செயலாற் கருதவைத்த ஆசிரியரது மரபு காண்க; பின்னரும் **''பொதிதழல் கொடுபுக்குத் தந்தொழில் புரிந்தனர்''** என மறைவுபடக் கூறிய மரபும் காண்க; ''தான்முன் நினைத்த அப்பரிசே'' *(481);* ''பாதகனுந் தன்கருத்தே முற்றுவித்தான்'' *(647).*

பொதிதழல் - வெளிப்படாது மறைத்த தழல்; கூரையிற் பொதியும் தழல் என்றலுமாம்; அழலை உள்ளே வைத்துப் பின்னர்த் தானே வெளிப்படும் தீக்கந்தகம் (Phosphorus) போன்ற நெருப்புப் பொருள்கள் என்றலுமாம். சமணர் இத்தகைய கலை ஞானங்களில் வல்லவர் என்பர்; பின்னர், ''மருவு வித்தவத் தொழில்வெளிப் படுதலும்'' *(2599)* என்பதும் இக்குறிப்புத் தருவது.

அந்தண் மாதவர் - அழகிய தட்பமாவது - ''யான் பெற்ற வின்பம் பெறுக இவ்வையகம்'' *(திருமந்திரம்);* ''வையக முந்துயர் தீர்கவே'' *(தேவாரம்);* ''மகவெனப் பல்லுயி ரனைத்தையும் மொக்கப் பார்க்குஞ், செல்வக் கடவுட் டொண்டர்'' (திருவிடை மருதூர்

2599. **திரும டப்புறச் சுற்றினிற்** றீயபா தகத்தோர்
மருவு வித்தவத் தொழில்வெளிப் படுதலு மறுகிப்
பரிச னத்தவர் பதைப்பொடுஞ் சிதைத்தது நீக்கி
அருக ரித்திறம் புரிந்தமை தெளிந்துசென் றணைவார் 701

மும்மணிக்கோவை 7) முதலிய திருவாக்குக்களாலறியப்படும்; **மாதவர் - திருமடம்**-''மாதவர் துயிலும் இத்திருமடம்'' (2600); இத்திருமடம் அமைச்சனார் பிள்ளையார் தங்குதற்காக நிறுவுவித்தது (2574).

திருமடப்புறத்து அயல்-வந்து-காவல்பற்றித் திருமடத்தின் முன்பாயினும் உள்ளேயாயினும் புகுத இயலாதவர்களாகிப் புறத்தில் ஒரு பக்கமாகக் கரந்து வந்து; ''திருமடப் புறச் சுற்றினில்'' (2599); **வந்து** - தாம் இருந்து மந்திரத் தொழில் செய்த இடத்தினின்றும் வந்து.

தந்தொழில் புரிந்தனர் - தொழில் - ''தொழில் விளைத்தால்'' (2586) என்று கூறிய குறிப்புப்படியே செயலிற் செய்தனர்.

வஞ்சனை மனத்தோ ராதலின் புரிந்தனர் என்க; பிறரை வஞ்சித்துத் தாம் பிழைக்கும் வழி தேடுவோர் வஞ்சகர் எனப்படுவர். இங்கு அரசனை வஞ்சித்த செயலும் வந்த அந்தணர்களைத் தீத்தொழில் முயற்சியாலே வஞ்சித்து அச்சுறுத்தி நகரினை விட்டு நீங்கச் செய்தலும் உடைய மனதுடையவர்.

இருள் போல் - ஒளியை மறைத்தலால் **இருள்** என்றார். ''இருட்கிருளென'' (2576); இருட்குழாம்'' (1349) என இவர்களை இருளுக்கே உவமித்தல் கருதுக; ''ஞானத்தின், கண்ணை மறைத்த கடியதொழி லாணவம்'' (போற்றிப் பஃறொடை) ''இருண் மலநிலை'' என்றபடி வஞ்சத்தால் ஞானத்தை மறைத்துவிட முயன்றாராதலின் இவ்வாறு ஆசிரியர் ஆணை தந்தருளினர்; ஆணவம் - வஞ்சம் - முதலியன கருநிற முடையன வென்பது மரபு. 700

2599. **(இ-ள்)** திருமடப் புறச் சுற்றினில்...வெளிப்படுதலும் - திருமடத்தின் புறச்சுற்றிலே அந்தத் தீய பாதகர்களாகிய அமணர்கள் சேர்த்திய அந்தத் தீத் தொழில் வெளிப்படுதலும்; மறுகி...நீக்கி - பரிசனங்கள் கலங்கிச் சுழன்று பதைப்புடனே அதனைச் சிதைவு செய்து போக்கி; அருகர்... அணைவார் - சமணர்களே இவ்வாறு செய்தனர் என்று தெளிந்து போய் அணைவார்களாகி,

(வி-ரை) திருமடப் புறச் சுற்றினில் - திருமடத்தின் வெளிப் பக்கத்துச் சுற்றிலே; **சுற்று** சூழ்ந்த அமைப்பு.

மருவுவித்த - பிறவினையாற் கூறினார்; அமணர் நேரே கையினால் பொதிதழலாகக் கொண்டு பொருந்தச் செய்த; **தனது செயலாகத் தீக்கடவுள் சென்றாரல்லர்;** 2596 பார்க்க.

தொழில் வெளிப்படுதலும் - பொதிதழலாக மருவுவித்தாராயினும், அத்தழல் மூண்டு எரியத் தொடங்கி அவர் செய்த தொழிலை வெளிப்படுத்திற் றென்க.

மறுகுதல் - கலங்கி இங்குமங்குமாகச் சுழன்று ஓடிச் செயல் செய்தல்.

2600. கழும லப்பதிக் கவுணியர் கற்பகக் கன்றைத்
தொழுது நின்றமண் குண்டர்செய் தீங்கினைச் சொன்ன
பொழுது, **"மாதவர் துயிலுமித் திருமடப் புறம்பு
பழுது செய்வதோ! பாவிகா!!"** ளெனப் பரிந்தருளி, 702

பதைப்போடும் சிதைத்து அது நீக்கி - *சடுதியில் இரவில் வெளிப்படுதலாலும் பிள்ளையார்பால் கொண்ட அன்பின் மிகுதியினாலும் அவர்க்கு அடாத தென்ற பரிவினாலும் பதைத்தனர்;* ***சிதைத்து அது நீக்கி*** - *தீயை அவியச் செய்தலின், தீப் பற்றிய பகுதிகளைச் சிதைத்து நீக்குதல் சிறந்த உபாயமாம்.*

அருகர் இத்திறம் புரிந்தமை தெளிந்து - தெளிதல் - பல வகையாலும் நாடித் துணிந்து கோடல்; யாவர் செய்தா ரெனத் தெளிவாகத் தெரிந்தாலன்றிப் பிள்ளையாரிடம் செய்தி அறிவித்தல் பயனற்றதாகு மாதலின் தெளிந்தபின் சென்றனர்; தீ வெளிப்படலும் முதலில் செய்யத்தக்கது அது பரவாதபடி சிதைத்தல்; அடுத்துச் செய்யத்தக்கது அதனை யார் செய்தார் என்று தெளிந்து கோடல்; இனி மூன்றாவதாகச் செய்யத்தக்கது அதனை உடையவரிடம் அறிவித்தல். இப்பரிசனங்கள் அறிவுடையோராதலின் இவற்றை முறையே இயற்றினர்.

அருகர் புரிந்தமை - கருதலளவையாற் றெளிந்தனர் என்க.

சென்று - பிள்ளையார் எழுந்தருளியிருந்து துயில் கொள்ளும் இடத்திற்குச் சென்று.

அணைவார் - *அணைவாராகி; முற்றெச்சம்;* ***அணைவார் சொன்ன*** - என மேல்வரும் பாட்டுடன் கூட்டுக. *701*

2600. **(இ-ள்)** கழுமலப்பதி... சொன்ன பொழுது - சீகாழிப்பதியில் கவுணியர் குடியில் வந்த கற்பகக்கன்றாகிய பிள்ளையாரைத் தொழுது நின்று, அமணக் கீழ்மக்கள் செய்த தீங்கினைச் சொன்ன பொழுது; ''மாதவர்... பாவிகாள்!'' எனப்பரிந்தருளி - ''சிவனடியார்களாகிய மாதவர்கள் துயிலும் இந்தத் திருமடத்தின் புறப்பக்கத்தில் தீங்கு செய்வதோ! பாவிகளே'' என்று பரிவு கொண்டருளி,

(வி-ரை) கற்பகக் கன்று-கற்பகம் - வேண்டுவார் வேண்டுவதே யீயும் தெய்வத்தன்மையுடையதொரு மரம் என்பர்; அஃதுபசாரம்; இறைவனே கற்பகமாவார்; ''கற்பகமே யானுன்னை விடுவே னல்லேன்'' (தனித்தாண்-4); பிள்ளையாரைக் கற்பகக் கன்றென்றது அத்தன்மை பெற்றுடைய பிள்ளையாதலின் என்க. இங்கு, அமணர் - அரசன் - அம்மை - அமைச்சர் - அந்நாட்டு அன்பர்- அரனடியார் - முதலிய பல திறப்பட்டோருக்கு அவரவர் வேண்டிய செய்திக் கேற்ற பயனை அருளும் செயலினுள் பிள்ளையார் புகுந்தருள்கின்ற அவசர மாதலின் இத்தன்மையாற் கூறினார். மாறுபாடு கொண்ட அமணர்க்கும் அரசனுக்கும் அவ்வவர் வேண்டியது ஈதல் யாங்ஙன மென்னில்? அமணர் தீமை வேண்டினராகத் தீமையின் பயனைப் பெற்று முடிவில் அரசு தண்டனையினால் நிரய தண்டனையினின்றும் தப்பினர்; அரசன் அமணரின் தீமைக்கு உடன்பட்டு நின்றானாகத் தீய சுரம் பெற்றுத் திருநீற்றினால் நலமும் பெற்றனன் என்க.

2601. **''என்பொ ருட்டவர் செய்ததீங் காயினு மிறையோன்**
அன்ப ருக்கெய்து மோ?'' வென்று, பின்னையு மச்சம்
முன்பு றப்பின்பு முனிவுற முத்தமிழ் விரகர்
''மன்பு ரக்குமெய் முறைவழு'' வெனமனங் கொண்டார். 703

மாதவர்...பாவிகாள் - *இத் தீய செய்தி கேட்டவுடனே பிள்ளையாரது திருவுள்ளத்தில் முதலில் எழுந்த கருத்து அடியவர்பால் நேர்ந்த அபசாரம் பற்றியதேயாகும். அடியவர்பால் அபசாரப்பட்டது பெரும் பாவமாகும் என்பார்,* ***பாவிகாள்!*** *என்றார்.*

மாதவர் - *சிவனடியார்;* ***துயிலும்*** - *துயில் கொள்ளும்போது இரவில் தீக்கொளுவினர் என்ற காலக் குறிப்பு; மக்கள் குடியிருப்பு இடத்தில் தீவைத்தல் இற்றைநாள் அரசாட்சிக் குற்ற நீதிச் சட்டத்திலும் பெருந்தண்டனைக் குள்ளாக்கும் பெருங் குற்றமாம் என்பர் (Arson). அதன்மேலும் மக்கள் துயிலும்போது வீட்டிற்குத் தீவைத்தல் மிகப் பெருங் குற்றமாம். அதன்மேலும் மாதவர் துயிலும் போது தீவைத்தல் அதனினும் பெருங் குற்றமும் பாவமுமாம் என்ற குறிப்பெல்லாம் படக் கூறியது காண்க.* ***பாவிகள்***—*என்பதும் பாடம்.*

பரிந்தருளி-பரிவு-*இரக்கம்; இச்சமணர் அடியவர்களிடம் அபசாரப்பட்டுப் பெருங்கொடு நரகத்துக்காளாகும் உய்தியில்லாத குற்றம் 'செய்தனரே என்று முதலில் அவர்கள்பால் இரங்கியருளினர் பிள்ளையார்;* ***அருளி*** *என்ற குறிப்புமது; அவ்வுயிர்கள் படுந் துன்பங்கண்டுழி இரங்கன் மாத்திரையே சீவன் முத்தர் பல்லுயிரனைத்தையு மொக்கப் பார்க்குந் தன்மையாம் என்று 12-ம் சூத்திரத்தினுள் ஞான நூல் பேசுதல் காண்க. இதன் தன்மை பற்றி மேல்வரும் பாட்டிற் ''பின்னையும் அச்சம் முன்புறப் பின்பு முனிவுற'' (2601) என்றவிடத் துரைப்பனவையும் கருதுக.* 702

2601. **(இ-ள்)** ''என் பொருட்டு... எய்துமோ? என்று - இஃது என் பொருட்டாக அவர்கள் செய்த தீங்கு ஆயினும், இறைவரின் அடியார்களுக்குப் பொருந்துவதாகுமோ? என்று உட்கொண்டு; பின்னையும்...முனிவுற - மேலும் அச்சம் முன்னே வரப் பின்பு கோபமும் வர; முத்தமிழ்விரகர்... என மனங்கொண்டார் - முத்தமிழ் விரகராகிய பிள்ளையார் ''அரசன் காவல் புரியும் நீதி முறை வழுவிற்று'' என்று திருவுள்ளங் கொண்டாராய்;

(வி-ரை) ''என் பொருட்டு... எய்துமோ? என - இது சமணர்கள் செயலைப் பற்றிப் பிள்ளையார் மேலும் துணிந்தருளிய நிலையைக் கூறியபடி; **''என் பொருட்டு அவர் செய்த தீங்காயினும்''**—இத்தன்மையினை அமணர்கள் இவ்வடியார்களின் பொருட்டன்றி என் பொருட்டே செய்தனர் என்பதனை அறிவேன்; ஆதலின் அதனைப் பொருட் படுத்தாது அவர்களது அறியாமைக்கு இரங்கி விடுத்தலோ, தடுத்தலோ, தண்டம் செய்வித்தலோ இவை என்பாலதேயாம்; ஆயின் என்பாற் செய்த அபசாரத்தை நான் பொறுத்து விடினும் அடியாற்பாற் செய்த அபசாரம் அவ்வாறு விடுத்தற்கு எய்துமோ? (பொருந்துமோ?); பொருந்தாது எனத் திருவுள்ளங் கொண்டனர் பிள்ளையார்.

பின்னையும் அச்சம் முன்பு உறப் பின்பு முனிவு உற- பின்னையும் - மேலும்; பரிவு கொண்டதன் மேலும் என்பதாம்; பரிவு கொண்டது அமணரின் பொருட்டு; **அச்சங்**

கொண்டது அடியவர்களின் பொருட்டு? (**அச்சம்**-இது பற்றி மேற்பாட்டும் பதிகக்குறிப்பும் பார்க்க); **பின்னையும்** வந்தவை இரண்டு நிலைகள். அவை அச்சம், முனிவு என்பன. அவற்றுள் **முன்பு வந்தது அச்சம்**; பின்பு வந்தது **முனிவு** என்க; இவர்களால் ஏதப்படும் வகையில் அடியார் நின்றது பற்றியது அச்சம்; அடியவர்கள்பால் ஏதப்படுதலின் ஒறுத்துத் தூய்மைகள் செய்தலும், இனியும் அவர்கள் அவ்வாறு அபசாரப் படாமைக் காத்தலும் பற்றி **முனிவு** எழுந்தது; "தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் -தஞ்சொ லாற்றில் வந்திடா விடிலு றுத்தி வளாரினு லடித்துந் தீய, பந்தமு மிடுவ ரெல்லாம் பார்த்திடிற் **பரிவே** யாகும்; இந்த நீர் முறைமையன்றோ வீசனூர் **முனிவு** மென்றும்" (சித்தி -2-106). எனவே ஈண்டுப் பிள்ளையார் மேற்கொண்டது ஆணவக் குணமாகிய முனிவு அன்று எனவும், இறைமைக் குணமாகிய கருணையின் விளைவு எனவும் கண்டு கொள்க.

முத்தமிழ் விரகர் - பிள்ளையாரது தமிழின் மூலம் கோபமும் பிரசாதமும் இனி வர வுள்ளமையால் இங்கு இத்தன்மையாற் கூறினர்; சுடர், பையவே சென்று பாண்டியற் **காகவே**" "வெப்பந் தென்னவன் மேலுற மேதினிக், கொப்ப ஞான சம்பந்த **னுரை பத்தும்**" என்ற பதிகக் குறிப்புக்கள் காண்க.

மன்புரக்கு மெய் முறை வழுவென மனங்கொண்டார்-குடிகளுக்கும், தன் நாட்டில் வருவோர்க்கும், **தன்னாலும் தன்பரிசனத்**தாலும் கள்வர், பகைவர்களாலும் வேறுயிர்களாலும் வரக்கூடிய ஐந்து பயங்களையும் காத்து அறத்தைக் காவல் புரிவது அரசன் கடமை. இதன் தன்மை முன் (121) விளக்கப்பட்டது. ஈண்டு அமணரால் விளைந்த தீமைக்கு அரசனே பொறுப்பாளி என்பது அறநூலின் வழியும் துணியப்படும். **மன்** - அரசன்; **புரக்கும் முறை** - அரசன்நாடு காவல்புரியும் நீதிமுறை. **வழு** - வழுவியதனால் விளைந்தது; **மெய்ம்முறை** - வெறும் மேற்பார்வைக்காக அன்றி உண்மையாகச் செலுத்தும் நீதி; மாதவர் நோன்பும் மடவார் கற்புங் காவலன் காவ லின்றெனி னின்றாம்" என்பது (மணிமே); மூர்த்திநாயனார் புராணத்தினுள் வடுகக் கருநாடகர் மன்னன் சமண் சார்பினால் அடியாரை வன்மைசெய்துபட்ட வரலாற்றின் பகுதிகளும், ஆளுடைய அரசுகளின் வரலாற்றுப் பகுதிகளும், தண்டியடிகள் வரலாறும், பிறவும் ஈண்டு நினைவு கூர்தற்பாலன.

மன்புரக்கு மெய்முறை வழு - என மனங்கொண்டார் - ஈண்டு அமணர்களே இத்தீச்செயல் செய்தோர் என்றறிந்த பிள்ளையார் இத்தீங்குக்கு அமணர் முதற்காரணராயினும் அது வாராமற் காவல் புரியும் முறையில் அரசன் வழுவியது மேலும் துணைக் காரணமாம் என்று திருவுள்ளத்திற் துணிபு கொண்டனர்; இஃது அடியார்பால் செய்த அபசாரத்திற்குப் பொறுப்பு யாவர் என்று துணிந்தபடியாம்; **பரிவும் அச்சமும் முனிவும்** உற்ற நிலையில் ஏனை மக்கள் போலத் துளங்குதலின்றி நேர்மையில் மனம் வைத்துத் துணியும் பெரியோர் நிலையாம். இத்துணிபினால் இக்குற்றத்திற்காகச் செய்யப்படும் தண்டம் முதற்கண் அரசனையே சாரத் தக்கதென்பதை மேல்வரும் பாட்டிற் கூறுவார். **மனங் கொள்ளுதல்** - மனத்தினுள் ஆய்ந்து கொள்ளுதல். 703

2602. **(இ-ள்)** வெய்ய...முறையால் - (முன் சொன்ன காரணத்தால்) கொடுமையாகிய இந்தத் தீங்கு வேந்தன் மேலதேயாகும் என்ற விதி முறையினாலே; செய்யனே... பதிகம்- "செய்யனே! திருவாலவாய்" என்று தொடங்கும் திருப்பதிகத்தினை; "சைவர்... ஆக" எனப்

2602. **''வெய்ய தீங்கிது வேந்தன்மேற்''** றெனும்விதி முறையால்
''செய்ய னேதிரு வாலவா'' யெனும்திருப் பதிகஞ்
''சைவர் வாழ்மடத் தமணர்க ளிட்டதீத் தழல்போய்ப்
பைய வேசென்று பாண்டியற் கா'' கெனப் பணித்தார். 704

பணித்தார் - ''சிவனடியார்கள் வாழும் திருமடத்தில் அமணர்கள் கொளுவிய தீயானது மெல்லவே சென்று பாண்டியனுக்கு ஆகுக!'' என்று கட்டளையிட்டருளினார்.

இந்நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) ''வெய்ய தீங்கு இது வேந்தன் மேற்று'' எனும் விதி முறையால் - அரசனது நாடு காவல் முறையின் வழுவே இதற்குக் காரணம் என்ற துணிபின்மேல். அரசனும் அங்கமும் என்ற இரண்டில் அமைச்சுத்திறம் நேர்பட நிகழ்வது தெரிதலின், பாரிசேட அளவையால், இது வேந்தன் மேற்று எனத் துணிவது **விதி** எனப்பட்டது; மன்னர்க்கு மெய்ம் முறை வழு என மனங்கொண்டது அரசநீதி வழுவாதாயின் இது நிகழாது; அரசநீதி வழுவாமையும் தீங்கு நிகழாமையும் நியதமான காரண காரியமாகி வரும் உடனிகழ்ச்சிகள்; ஆதலின் தீங்கு நிகழக் காண்டலின் நீதி வழுவிற்று என முன் துணிவது எதிர்மறைக் கருதலளவையான் வரும் விதி; **மேற்று** - மேலது; பொறுப்பு அவன்மேல் நின்றது; **விதி** - உலகியல் நீதி; **முறை** - இறைவர் நியதி; விதியும் முறையும் என்க; பிள்ளையார் இவ்வாறு தமது சிவத்தன்மையால் உணர்ந்தாராயினும் உலகியல் நீதி விதியினும் வைத்துத் துணிபு கண்ட நேர்மை காண்க. அதனை விரித்து எடுத்துக் காட்டி அமணர் கொளுவிய தீயினை அரசனிடம் பையச் சென்று பாண்டியற்கு ஆக! எனப் பணிந்த அருளிப் பாட்டின் காரணத்தை உலகறிய வைத்த ஆசிரியரது தெய்வக் கவிமாண்பும், பிள்ளையார்பால் உலகம் அபசாரப்படாமற் காக்கும் கருணை மாண்பும் காண்க.

''செய்யனே திருவாலவாய்'' எனும் - இது பதிகத் தொடக்கம்.

''சைவர்... ஆக'' என - இது பதிகக் கருத்தும் குறிப்புமாம்; **தம் பொருட்டானன்றி அடியார்கள்பால் நேர்ந்த அபசாரத்தின் தீர்வே பிள்ளையார் திருவுள்ளங் கொண்டது என்பது** முன் இரண்டு பாட்டானும் உரைக்கப்பட்டது; அவை பரம்பரையாற்றானன்றி வந்து உருக்கொண்டு முடிவு பெற்ற ஆணையின் உருவம் ஈண்டு உரைக்கப்பட்டது; ஆதலின் கூறியது கூறலன்மையுணர்க; பதிகப் பாட்டுக் குறிப்புக்கள் பார்க்க.

இட்ட தீத்தழல் - இட்ட - விஞ்சை மந்திரத்தாலன்றிப் பொதிதழல் கொடுபுக்குக் கொளுவிய என்பதும் குறிப்பு; **தீத்தழல்** - தழல் ஐம்பூதங்களுள் ஒன்று; இறைவனது பெருந் திருமேனிகளுள் ஒன்று; உயிர்களின் நலங்கருதி இறைவர் தரும் தனுகரணபுவன போகங்களுட்படுவது; ஆயின் இங்கு அது தீமையின் பொருட்டுப் பயன்படுத்தப் பட்டதென்பார் **தீத்தழல்** என்றார்; **தீ** - தீமை என்ற பண்புப் பொருள்பட நின்றது; ஒரு பொருட் பன்மொழியாகக் கொண்டுரைப்பாரு முண்டு; மேலும் இதன் இயல்பினை மேல் சமணரது கனல்வாதப் பகுதியிற் கண்டுகொள்க; **அமணர்கள் இட்ட தீ** - ''அமணர் கொளுவும் சுடர்'' (பதிகம்).

''பையவே சென்று பாண்டியற்கு ஆக என'' - இது பதிகத்தினை மேற்கொண்டது; பதிக முதற்பாட்டும் பாட்டுக் குறிப்பும் பார்க்க.

போய் - சென்று - போய் இங்குத் திருமடத்தினின்றும் பாண்டியனிடம்; **சென்று** - அவன் உடலினுள்; **போதல்** - புறச் செலவும், **செல்லுதல்** - உட்புகுதலும் உணர்த்தின.

''தீத்தழல்போய் - சென்று ஆக'' - இது பிள்ளையார் தழலினை ஆணையிட்டது; ''நாடு மைம்பெரும் பூதமு நாட்டுவ'' (16) என்பது சிவபூத கணங்களின் வன்மை. **தீக்கடவுள் அடியார்களின் வழிநின்று ஏவல் கேட்டுப் பணி செய்தொழுகும் தேவர்களுள் ஒருவனேயாதலின் பணித்தார் என்றார்.**

ஆக என என்பது ஈற்றகரம் தொக்கு **ஆகென** என நின்றது; **பையவே**-என்றது முனிவிலும் பரிவிலும் எழுந்த கருணையின் தெளிவு; ஆக என்பது அருந் தண்டத்தினும் வைத்த அருளிப் பாட்டின் முதிர்ச்சி; Justice tempered with mercy என்பர் நவீனர்; **ஆக** - ஆக்கமுண்டாக என்ற ஆசிமொழி. இத்தண்டத்தினால் அரசனும் அவனால், அவன் நாடும், அதனால் சைவமும் ஆக்கம் பெறுக என்பது திருவுள்ளம்.

பணித்தல் - கட்டளையிடுதல்; இவ்வாறு பணிசெய் என்றருளினர்; வருணன் முன்பு மாதவஞ்செய்து அரசுகளைத் தலைமேல் ஏந்தினன். (1395); 'இந்திரன்மால் பிரம ரெழிலார் மிகுதேவரெலாம் வந்தெதிர்கொண்டு வெள்ளை யானையின்மீது ஆளுடைய நம்பிகளை அழைத்துச் செல்லும் பேறுபெற்றவர்'' (வெள்-சருக்33-34) ''பூவார் திசைமுக னிந்திரன் பூமிசை, மாவா முகலத்து மான்முதல் வானவர்;'' தேவாசிரியன் திருவாயிலில் அடியார்களின் சமயநோக்கி வாழ்வடைந்து நிற்கின்றனர் என்பது முன் (137) உரைக்கப்பட்டது; மணிவாசகப் பெருமான் கலைமகளை ஏவல் கொண்டருளிப் புத்தர்கள் நாவினின்று போக என்று பணித்த வரலாறும் காண்க. 704

திருவாலவாய் III

பண் - **கௌசிகம்**

திருச்சிற்றம்பலம்

செய்ய னேதிரு வாலவாய் மேவிய,
வைய னேயஞ்ச லென்றருள் செய்யெனைப்,
பொய்ய ராமம **ணர்கொளு வுஞ்சுடர்,**
பைய வேசென்று பாண்டியற் காகவே. (1)

அப்ப னாலவா யாதி யருளினால்
வெப்பந் தென்னவன் மேலுற மேதினிக்
கொப்ப ஞானசம் பந்த னுரைபத்துஞ்
செப்ப வல்லவர் தீதிலாச் செல்வரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக்குறிப்பு:—''அமணர் கொளுவும் சுடர் பையவே சென்று பாண்டியற் காக'' எனப் பணித்தது. (2602)

பதிகப் பாட்டுக் குறிப்பு:—குறிப்பு - பாட்டுத்தோறும், ''அஞ்சலென் றருள் செய்யெனை'' ''அமணர் கொளுவும் சுடர் - பாண்டியற்கு ஆகவே'' என்றருளுதல் காண்க; **கொளுவும் சுடர்**

என்றதனால் அமணர் பொதிதழல் கையினிற் கொண்டு கொணர்ந்தனர் என்பதும், அமணர் செயல் பாண்டியற்காகவே என்றமையால் இத்தீமை அரசன் முறை வழுவியதனால் விளைந்தமையாலே அரசன்மேற் சார்தல் நீதி என்று துணிந்தனர் என்பதும், **பையவே** என்றதனால் தீயுருவமாக அன்றி வெப்பு நோயின் உருவில் மெல்லப் பற்றுக என்று பணித்தனர் என்பதும், **ஆகவே** என்றமையால் இஃது அளிப்பாடு என்பதும், **கங்குலாரமண் கையரிடும்கனல்(7)** என்றதனால் அமணர் இரவிற் றீக்கொளுவினர் என்பதும், "**அஞ்சலென் றருள் செய்எனை**" என்றதனால் அடியார்க்கு ஏதம் வாராமற் காத்தற் பொருட்டுப் பாடியருளினர் என்பதும் முதலிய வரலாற்றுப் பகுதிகள் ஆதரவு பெறப் போந்தவாறு கண்டு கொள்க;—(1) **செய்யனே!** - எரிபோல் மேனியன் ஆதலின் எரியினின்று காக்க வல்லவன் என்றதும், **ஐயன்** - முதல்வனாதலிற் காக்குமுரிமை யுடையவன் என்றதும் குறிப்பு. **பையவே சென்று** - அருட்குறிப்பு: தீயின் உருவாயன்றி வெப்பு நோயின் உருவுடன் மெல்லப் போய்ப் பையச் செல்க; சுரமும் வேகமாய்ச் சென்று தாக்கினால் கெடுதி நேருமாதலின் கேடு வாராதபடி மெல்லச் செல்க என்றது; "பக்கமே சென்று" (3) "பங்கமில் தென்னன்" (7) என்பனவையும் இக்குறிப்பு; **ஆகவே - ஆக** - ஆசி மொழி; "அலமந்த போதாக அஞ்சேல்" (தேவா). ஏகாரம் பிரிநிலை; தேற்றமுமாம்; **பையவே சென்று** எனப் பணித்தமைபற்றி மேல் (2603-ல்) வருவதும் ஆண்டு உரைப்பவையும் பார்க்க;— **(2) சித்தனே** - எல்லாம் வல்ல சித்தரான திருவிளையாடற் குறிப்பு; சித்தராகிய தன்மையால் அவரே அமணர் கொளுவிய தீயினை வெப்பு நோயாக மாற்றவும், ஈண்டு நின்று ஆண்டுச் செலுத்தவும், உடலிற் புகுத்தவும் பிறவும் வல்லவர் என்பது குறிப்பு; **அஞ்சல்** - அச்சம்; அடியார் பொருட்டு எழுந்ததாதலின் "அஞ்சுவது யாதொன்றுமில்லை யஞ்ச வருவதுமில்லை" என்ற அடியாரின் வீரத் தன்மையுடன் முரணுமை யறிக; "அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ தஞ்சலறிவார் தொழில்" (குறள்); "வாளுலா மெரியு மஞ்சேன்... ஆளலா தவரைக் கண்டாலம்மநா மஞ்சு மாறே" என்பனவாதி கருத்துக்களும் காண்க; **பத்திமன்** - பத்தி சேரும் மன்னவன் என்ற குறிப்பு;—**(3) தக்கன் வேள்வி தகர்த்தருள் ஆல வாய்ச் சொக்கனே** - அதுபோல் சமணர் வஞ்சனைக் கொடுமையினையும் தகர்க்க வல்லவர் என்பது குறிப்பு; "நண்ணலார் புர மூன்றெரி"(5); செங்கண் வெள்விடையாய்;" (7); "தூர்த்தன் வீரம் தொலைத்தருள்" (8) என்பனவு மிக்குறிப்பு; **எக்கர்** - கொடியர்; **பக்கமே** - அவர் பக்கமேயாக; "தீத்திறத்தார் பக்கமே சேர்க" (சிலப்); நேராக எதிர் செல்லாது ஒரு புறமாய் ஒதுங்கி என்ற குறிப்புமாம்;—(4)

அட்டமூர்த்தியனே - தீயினைத் தன் அட்ட மூர்த்தத்தினுள் ஒன்றாகக் கொண்டவன்; மேல் கனல்வாத வரலாற்றினுள் "அட்ட மூர்த்தியைப் பொருளென வுடைமையா லமர்ந்து, பட்ட தீயிடைப் பச்சையாய் விளங்கியது" (2684) என்னும் கருத்தும் காண்க; **பட்டி** - பொது; **(5) எண்ணிலா** - சிவன் அடியார் பெருமையை உளங்கொளாத; **எண்** - எண்ணுதல்; தொழில் பெயர்; **எண்ணிலாத** - அனேகராகிய என்றலுமாம்; **பண் - இயற்றமிழ்** - தமிழ் என்றதனைப் பண்ணுடனும் கூட்டுக. இசையும் இயலும் கூறவே இனம்பற்றி நாடக மடக்கிய முத்தமிழும் கொள்ளப்படும்;—**(6) வஞ்சஞ் செய்து** - 2577 - 2586 - 2597 முதலியவை பார்க்க. **தஞ்சமென்று சரண் புகுந்தேன்** - "தாமென்று **மனந்தளராத் தகுதியரா யுலகத்துக், காமென்று சரண்புகுந்தார் தமைக்காக்குங் கருணையினன்,**" (பிரமபுரம் - தேவா) என்ற கருத்து;—**(7) வெள்விடையாய்** - மாயப் பசுவை வதைத்த திருவிளையாடற் குறிப்பு;—**(8) தூர்த்தன்** - தீயோன் - இராவணன்;

வேறு

2603. பாண்டிமா தேவியார் தமது பொற்பிற்,
பயிலுநெடு மங்கலநாண் பாது காத்தும்,
ஆண்டகையார் குலச்சிறையா ரன்பி னாலு,
மரசன்பா லபராத முறுத லாலும்,
மீண்டுசிவ நெறியடையும் விதியி னாலும்
வெண்ணீறு வெப்பகலப் புகலி வேந்தர்
தீண்டியிடப் பேறுடைய னாத லாலுந்
தீப்பிணியைப் ''பையவே செல்க'' வென்றார்; 705

ஆத்தன் - (ஆப்தன்) உற்றவன்; **ஏத்து** - (சிவனை) ஏத்துதல்;—**(9) தூ விலா - தூ** - தூய்மை;—**(11) வெப்பம்**- சுடர் வெப்பு நோயாக மாறி; வெப்பமாக; **மேதினிக் கொப்ப** - உலகத்துக்கு நலம் பொருந்த.

2603. **(இ-ள்)** பாண்டிமா தேவியார்... பாதுகாத்தும் - பாண்டிமா தேவியாரது அழகிய மிக்க நீண்ட திருமங்கல நாணைப் பாதுகாத்தல் வேண்டப் படுதலாலும்; ஆண்டகையார்... அன்பினாலும் - ஆண்டகைமையுடைய குலச்சிறையாரது அன்பினாலும்; அரசன்பால்... உறுதலாலும் - அரசனிடம் அபராதம் சேர்ந்ததனாலும்; மீண்டு... ஆதலாலும் - மீண்டும் சிவநெறியினை அடையும் விதியிருத்தலாலும், வெப்பு நோய் தீரும்படி அரசனது மேனியைத் தீண்டித் திருவெண்ணீற்றைச் சீகாழி மன்னர் இடும் பேறு அரசன் உடைமையாலும்; தீ...என்றார் - தீப்பிணியைப் ''பையவே செல்க'' என்று பணித்தனர்.

(வி-ரை) தீப்பிணியை... என்றார் - ''பையவே சென்று'' என்ற பதிகத்துக்குக் காரணம் விரித்துக் கூறியது இப்பாட்டு.

பாண்டிமா தேவியார்... பாதுகாத்தும் - அம்மையாரது திருமங்கலநாண் பாதுகாவல் பெறவேண்டி யிருத்தலின் அதன் பொருட்டு அரசனைத் தீயால் அழிவுபடாது காத்தல் வேண்டப்பட்ட தென்பதாம்; ''யானுமென் பதியுஞ் செய்த தவம்'' (2570) என்றது காண்க.

ஆண்டகையார்... அன்பினாலும் - குலச்சிறையார் அரசன்பாற் கொண்ட அன்பு நீடித்தல் ஒரு காரணம். ''நற்றமிழ் வேந்தனு முய்ந்து, வென்றிகொள் திருநீற் றொளியினில் விளங்கு மேன்மையும் படைத்தனம்'' (2557) என்றதனால் அவரன்பு தேற்றமாதல் காண்க.

அரசன்பால் அபராதம் உறுதலாலும் - அம்மையார்க்கும் அமைச்சனார்க்கும் அருளுதல் வேண்டப்படின் அரசனைத் தீப்பிணி வாராது வாளா விடுத்திருக்கலாமே? எனின், அற்றன்று; அரசனிடம் வந்த சிவாபராதத்திற்குக் கழுவாய் செய்து தூயனாக்க வேண்டிய கடப்பாடு பற்றி இவ்வாறருளினார் என்பதாம்.

மீண்டு... ஆதலாலும் - இவையிரண்டும் தொடர்புடைமை பற்றி ஒரு காரணமாகக் கொள்ளப்பட்டன; மீண்டு சிவநெறி யடைதல் விதி - இறைவர் நியதி - என்பதும், அதற்கு வாயிலாகிய சாதனம் அவன் தனது முன்னைத் தவத்தால் பெற்றுடையன் என்பதுமாம்;

வேறு

2604. திருந்தி சைப்பதி கத்தொடை **திருவால வாயின்**
மருந்தி னைச்சண்பை மன்னவர் புனைந்திட வருளால்
விரிந்த **வெந்தழல் வெம்மை**போய்த் தென்னனை மேவிப்
பெருந்த ழற்பொதி வெதுப்பெனப் பெயர்பெற்ற தன்றே. 706

''என்பதியும் செய்த தவமென்கொல்'' (2570) என்று அம்மையார் கூறியபடியது காண்க. **புகலி வேந்தர் தீண்டி வெண்ணீறு இட** *என்க;* **பேறு** *முன்னைத்தவம்.* **இடுதல்** *- பூசுதல்.*

தீப்பிணியை *- தீயாகிய பிணிப்பினை; ஈண்டுப்* **பிணி** *என்றது கட்டுவிப்பதாய வினை என்ற பொருள்பட நின்றது.* **பிணித்தல்** *- கட்டுதல். தமது அருளால் தீயின் உருவாய் வரும் பிணி - நோய் - என்றலுமாம்.*

குறிப்பு - *வரலாறு கருதலில் முன்னும் மேலும் தொடர்ந்து செல்லும் கலி நிலைத்துறைச் சந்த யாப்பினிடையில் இப்பாட்டுத் தனித்து எண்சீர் விருத்தமாகப் புகுந்து நிற்கின்றதனாலும், ஆசிரியரது சிறந்த பொருட்செறிவும் சொற்பண்பும் இன்மையாலும், பாதுகாத்தும், அன்பினாலும், உறுதலாலும், விதியினாலும், ஆதலாலும் என்பனவும் முடிபுகள் பொருந்தாமையாலும், குலச்சிறையார் அன்பினால் என்றது பொருந்தாமையாலும், தீயைச் செல்க என்றதன்றிப் பிணியைச் செல்க என்பது பதிகத்துச் சொல்லும் கருத்து மன்றுதலாலும், ''புத்தரொடமணை வாதி லழிவிக்கு மண்ணறிருநீறு செம்மை திடமே'' (தேவா) என முன்னர் அருளியமையாலும், ''வெண்ணீறு வேந்தனையு மிடுவித்து'' (2512) என்று தொண்டர்கள் செய்த விண்ணப்பத்தின்படி ஆக என்று முன்னரே ''அருள் புரிந்த''ன (2513) ராதலால் இப்பாட்டு வேண்டப்படாமையாலும், இஃதன்றியே வரலாறு இடையீடின்றித் தொடர்ந்து செல்வதாலும், பிறவாற்றாலும் இப்பாட்டுப் பிற்காலத்துப் புலவரால் நேர்ந்த இடைச் செருகலோ? என்பது எனது பணிவாகிய ஐயப்பாடு; அன்பர்கள் கூர்ந்து நோக்கித் தெளிந்து கொள்வார்களாக.* ★ *705*

2604. **(இ-ள்)** *சண்பை மன்னவர் - சீகாழி மன்னவராகிய பிள்ளையார்; திருவால வாயின் மருந்தினை - திருவாலவாயில் எழுந்தருளியுள்ள மருந்துருவமாகிய இறைவரை; திருந்து... புனைந்திட - திருந்தும் இசையினையுடைய திருப்பதிகம் புனைந்து போற்றி யருள; அருளால் - அவரது திருவருளாலே; விரிந்த... பெற்ற தன்றே - விரிந்து செலுத்திய வெவ்விய தீத்தொழில் முழுதினும் கூடிய வெம்மையின் தொகுதி சென்று பாண்டியனை அடைந்து பெரிய தீயின் பொதியாகிய வெப்பு நோய் எனப் பெயர் பெற்றது அப்பொழுதே.*

(வி-ரை) திருந்து இசைப்பதிகத் தொடை - திருந்து - பகைமை, செற்றம் முதலிய தீய கருத்துக்களானன்றி அரசனும் நாடும் திருந்த வேண்டுமென்ற ஒரே கருத்துடன் அருளிய; **திருந்து - தொடை** என்க; திருந்துதற்குக் காரணமாகிய தொடை; **இசை** - இன்னிசை; பதிகப்பண்.

★இதுபற்றி 'சேக்கிழார்' என்ற நூலில் பக்கம் 201 முதல் 224 வரை கூறியவையும், ஆண்டு இப்பாடல் பற்றிப் பக்கம் 217 - 218 உரைத்தவையும் பார்க்க.

மருந்தினைத் தொடை புனைந்திட - **மருந்து** என்றார், திருந்தவும் நோய் நீங்கவும் உதவ வேண்டுதலின்; மருந்தினைத் தொடை புனைதல் என்றது மருந்து அத்தொடையினுள் விளங்க என்ற குறிப்புத் தருவது; **தொடை** - உள் வைத்தல்.

அருளுதல் - இறைவரது திருவருளாதல்; "மற்றைத் தோற்ற மலபாகம் வரக் காத்தல் போகந் துய்ப்பித்தல் திரோதாயி நிறுத்த லாகும், போற்றவரும் அருள்; அருளேயன்றி மற்றுப் புகன்றவையும் அருளொழியப் புகலொ ணாதே" *(சிவப் 18)*; ஒருவற்கு நோய்வரச் செய்தல் அருளாமோ? எனின், உலகில் வரும் நோய்கள் யாவும் பலவாற்றாலும் உடலுட் புகுந்த கேடுகளை நீக்கும் பொருட்டே உடலியல்பின் அமைக்கும் இறைவரது அருளமைப்பேயாம் என்பது மருத்துவ நூற்றுணிபுமாம்; இங்கு உயிரின்கட் சேரும் பாவவினையையும் நோய் தந்து தீர்த்தல் இறைவரருளேயாம்; அரசுகளைச் சூலை தந்தாண்ட வரலாறும் "பண்டுபுரி நற்ற வந்துப் பழுதினள விறைவழுவுந் தொண்டரையா ளத்தொடங்குஞ் சூலைவே தனை தன்னைக், கண்டருநெற் றியரருளே" *(1314)* எனப்பட்டது இங்கு நினைவு கூர்தற்பாலது.

அருளால் - போய் - மேவி - என்று முடிக்க; "சுடர் - ஆக" எனப் பிள்ளையார் பணிக்கத் திருவருளால் போய் மேவிற்று என்பது, "அஞ்சல் என்று, அருள் செய்யெனை" என்று பிள்ளையார் விண்ணப்பிக்க அத்திருவாக்கினுள்ளே நின்று திருவருள் இயற்றுவித்தது என்பதாம்; பிள்ளையார் திருவாக்குப் பணிக்கத் தீ சென்ற தன்றே? எனின், ஆம். அஃதொக்கும்; ஆயின், பிள்ளையார் திருவாக்குச் சிவசத்தியினுள் நிறைந்து நிற்க, அச்சிவ சிற்சத்தி நிகழ்வித்ததென்பது ஞானநூற் றுணிபு; "ஆவ தென்முன்னு ணுவலர் பெருமான், பண்டொரு முதலை யுண்டமைந் தனைவர, வழைத்தன னென்றாய் பிழைப்பில ததூஉந், **'தந்திடல் வேண்டு'** மென்றன ரன்றே" *(சங்கற்ப நிராகரணம் -9-சிவசமவாதி நிராகரணம்)* இவ்வாறே பிறவும் காண்க.

விரிந்த வெந்தழல் வெம்மை போய் - **விரிந்த** - பலவாற்றாலும் புறத்திலே வெளிப்பட்டுத் தோன்றி விரிந்த; **வெம்மை போய்** - தழல் போகாமல் தழலின் வெம்மையே சென்றது; **தழல்** ஒன்றனைப் பற்றி நின்றல்லது தொழிற் படாதாதலின் இங்கு **வெம்மைக்குணம்** போய தெங்ஙனமெனில் தூலமாய் நின்ற தழல் சூக்கும நிலைபெற்றுச் சூக்கும ஆகாயம் பற்றுக்கோடாகச் சென்ற தென்க.

தென்னனை மேவிப் பெருந்தழற் பொதிவெதுப்பு எனப் பெயர் பெற்றது - **மேவி** - திருமடத்தின் இட்டுச் சிதைக்கப்பட்ட இடத்தினின்றும் பாண்டியன் உடலின் கட்பொருந்தி; **பெருந்தழற்பொதி வெதுப்பு** - தூலமாகிய பெரிய தழலின் பொதியாகிய வெப்பு; **பொதி** - மூட்டை; தொகுதி; **வெதுப்பு** - வெப்பு என மருவி வழங்கும்; **வெதுப்புதல்** - சுடுதல்; வெதுப்புதலாகிய தொழில் அதனைச் செய்யும் நோய்க்கு வந்தது; ஆகுபெயர்.

தழல் வெதுப்பு எனப் பெயர் பெற்றது - தழலே இவ்வுருவங்கொண்டு வந்ததேனும் இங்குத் **தழல்** என்ற தன்மையாலன்றி **வெதுப்பு** என்ற பெயரால் அறியப்பட்டது; நீர் வீழ்ச்சியில் உளதாகும் மின்சார சக்தியானது செப்புக் கம்பியினைப் பற்றுக்கோடாகக் கொண்டுசென்று அதற்கென்றமைந்த கண்ணாடிக் குப்பியினுள் வெளிப்படும்போது விளக்கு எனப் பெயர்பெறுவது போலக் காண்க. அரசனாணையானது நீதிமன்றத் தலைவர்பால்

2605. **செய்ய மேனியர் திருமக னாருறை** மடத்தில்
நையு முள்ளத்த ராயமண் கையர்தா நணுகிக்
கையி னாலெரி யிடவுடன் படுமெல்லி கரப்ப
வெய்ய வன்குண கடலிடை யெழுந்தனன் மீது. 707

வெளிப்படும்போது நீதி முறை என்றும், தண்டத்தலைவர்பால் விளங்கும்போது தண்டம் என்றும் பெயர்பெறுமா போலவும் காண்க. இவ்வாறு வருவன பிறவும் காண்க.

அன்றே - *அப்போதே; அருளாணை சென்று சேரும் விரைவு குறித்தது.*

சண்பை மன்னவர் - *மன்னவனை மறுத்துத்திருத்துதல் பிறிதொரு மன்னவனாலன்றி யியலாதென்ற இயல்புக் குறிப்பு.* ***706***

2605. **(இ-ள்)** *செய்ய... மடத்தில் - சிவந்த திருமேனியினையுடைய இறைவருடைய திருமகனாராகிய பிள்ளையார் எழுந்தருளிய திருமடத்தில்; நையும்... எரியிட - கவலையினால் வாடும் உள்ளத்தையுடையவர்களாக அமணராகிய கீழ்மக்கள் பக்கத்தில் வந்து கையினால் கொண்டுபோய்த் தீக்கொளுவ; உடன்படும் எல்லி கரப்ப - உடனிருந்து சம்மதித்த இராப்போது மறைய; வெய்யவன்... மீது - சூரியன் கீழ் கடலின்மீது வந்து எழுந்தனன்.*

(வி-ரை) செய்ய மேனியர் - *''எரிபோன் மேனிப்பிரான் றிறம்'' (தேவா). ''செய்யனே'' என்ற பதிகக் குறிப்புப்பட நின்றது.*

திருமகனார் - *அத்தனே, ஐயனே, அப்பன், என்ற பதிகக்குறிப்புக் காண்க;* ***மகனார்*** - *பாலூட்டியதனால் மகன்மை முறைமை கொண்டவர். இதுபற்றி முன் உரைத்தவை பார்க்க.*

நையும் உள்ளம் - நைதல் - *கவலையினால் இது கைகூடுமோ என்று வருந்துதல்.*

நணுகிக் கையினால் எரியிட - *விஞ்சை மந்திரத்தொழில் செய்த இடத்தினின்றும் பிள்ளையாரது திருமடத்தை அணுகி; மந்திரத்தொழில் வாய்த்திலதாயினமையாற் கையினாலே எரிகொண்டு கொளுவினர் என்ற சரிதக் கருத்து.*

உடன்படும் எல்லி - எல்லி - *இராப்பொழுது;* ***உடன்படும்*** - *தற்குறிப்பேற்ற அணி;* ***கரப்ப*** *என்றதும் அது; தீவினை செய்தலைக் கவனித்தும் உடன் வாளா விருந்தமையால்* ***உடன்படும்*** *என்றார்.*

வெய்யவன் - எழுந்தனன் - *குற்றஞ் செய்த அரசனை வெதுப்ப உள்ளவனாதலின்* ***வெய்யவன்*** *என்றார்.*

மீது எழுந்தனன் - *விண்ணின்மீது எழுந்தான்; இஃதும் தற்குறிப்பேற்றம்.* ***கடலிடை*** - *இடையினின்றும். இப்பாட்டினால் சமணர் எரிகொளுவிய இரவு போய்ப் பகல் வந்தமை கூறப்பட்டது. அம்மையார் கருத்துமுற்றி மேலெழுதல் குறிப்பு என மேல்வரும் பாட்டுக் காண்க.* ***707***

2606. இரவு பாதகர் செய்ததீங் கிரவிதன் மரபிற்
குரவ வோதியார் குலச்சிறை யாருடன் கேட்டுச்
''சிரபு ரப்பிள்ளை யாரையித் **தீயவர் நாட்டு**
வரவ ழைத்தநா மாய்வதே!'' எனமன மயங்கி, 708

2606. (இ-ள்) இரவு...கேட்டு - (முன்னைநாளின்) இரவிலே பாதகர்களாகிய அமணர்கள் செய்த தீங்கினைச் சூரிய மரபிலே வந்த குராமலரை யணிந்த கூந்தலையுடைய மங்கையர்க்கரசியம்மையார் குலச்சிறையாருடனே கேட்டு; ''சிரபுரப்பிள்ளையாரை... ... நாம்மாய்வதே'' என மனமயங்கி - ''சீகாழிப் பிள்ளையாரை இந்தத்தீயவர் நாட்டினிலே வரும்படி அழைத்த நாம் உயிர் துறந்து விடுவதே இதற்குத் தீர்வாகும்'' என்று மனம் மயங்கி;

(வி-ரை) இரவு - முன்னைநாள் இரவினில்; **செய்த தீங்கு** - செய்ததாகிய தீக்கொளுவிய செயல்; தீக் கொளுவினர் என்ற மட்டில் கேட்டனரேயன்றி அஃது உடனே சிதைக்கப்பட்டதனையும் தீமை ஒன்றும் நேராமையினையும் பின்னரே கேட்டகவுள்ளவர்; உலக நிலையில் செய்தியறிவிப்போர் இவ்வாறு அறிவிப்பது இயல்பு.

இரவிதன் மரபில் குரவ ஓதியார் - இரவி - சூரியன்; சூரிய மரபு - சோழ மரபு; இங்கு இத்தன்மையாற் கூறியது மதி விளங்கும் இராக்காலம் விளக்க மற்ற குற்றங்கள் நிகழ்வதற்கு இடமாகவும், ஞாயிறு விளங்கும் பகல், அவை புலப் படவும் நீக்கம் பெறவும் நிகழ்ச்சிகள் பெறும் கால மென்பதும், மதி மரபில் வந்த பாண்டியனது குற்றம் மறைய இரவிமரபில் வந்த அம்மையினால் தீர்வு பெற உள்ள தென்பதும் குறிப்பு; முன் பாட்டில் ''உடன்படு மெல்லிகரப்ப - வெய்யவன் மீது எழுந்தனன்'' (2605) என்ற குறிப்பைத் தொடர்ந்து கூறியபடி; ''தென்னர் குலப்பழி தீர்த்த தெய்வப் பாவை'' (மங்கை- புரா). **குரவம்** - குராமலர்; **ஓதி** - கூந்தல்.

குலச்சிறையாருடன் கேட்டு - செய்தியறிவித்தவர்கள் இவ்விருவருக்கும் அறி வித்தனர் என்க; உரிமைத் தேவியாராதலின் அம்மையாருக்கும், அரசாங்க முறைமை பற்றி அமைச்சனார்க்கும் முதல் அறிவிப்பு இன்றியமையாமை யுணர்க.

''சிரபுரப் பிள்ளையாரை...மாய்வதே'' என மனம் மயங்கி - இஃது அம்மை யாரும் அமைச்சனாரும் எண்ணிப் பதைத்த நிலை. தாம் அழைத்து வந்த பிள்ளையாருக்குத் தம்மை யறியாமலே தீங்கு இழைத்தற்குத் தாம் காரணர்களாய் நின்றமையால் அவ்வபராதத்திற்குத் தம் உயிர்மாய்ப்பதே தக்க தண்டமாம் என்று கொண்டனர்; தம் செயலால் பிள்ளையார்க்குத் தீங்கு நிகழக்கண்டு உயிர் வாழ்தலை விடச் சாதல் நன்றென்றலுமாம்; இவ்வாறு இவர்கள் முன்னரே (2594) துணிந்து கொண்டமையும் காண்க. **தீயவர்** - குணத்தாலும் தீக்கொளுவியதனாலும் தீயவர்.

மதி மயங்கி - என்ற பாடம் பொருத்த மன்று. *708*

2607. (இ-ள்) பெருகும்... பதைப்பவர் - மேன்மேற் பெருகுகின்ற அச்சத்துடனே அரிய தமதுயிர் பதைக்கும் அவ்விருவரும்; பின்பு... தெளிந்து - அதன் பின், திருமடத்தின்

2607. பெருகு மச்சமோ டாருயிர் பதைப்பவர் பின்பு
திரும டப்புற மருங்குதீ **தின்மையிற் றெளிந்து**
''கருமு ருட்டமண் கையர்செய் தீங்கிது கடைக்கால்
வருவ தெப்படி யா?''மென மனங்கொளும் பொழுது. 709

புறப்பக்கத்திலும் தீங்கு இல்லாமை கேட்டதனால் தெளிந்து; "கருமுருட்டு... வருவதெப்படியாம்?" என மனங் கொளும் பொழுது - "கரிய முரட்டு உடலுடைய அமணர்கள் செய்த இந்தத்தீங்கு இதன் வழித்தாய் விளைவது எவ்வாறாகுமோ?" என்று மனத்தில் எண்ணமிட்டபோது;

(வி-ரை) பெருகும் அச்சமோடு ஆருயிர் பதைப்பவர்-அச்சம் பெருகுதல்-அமணர் செய்த தீங்கினைக் கேட்டார்களன்றி அது சிதைக்கப்பட்டதனையும் தீதின்மையினையும் கேட்டாரலர்; பிள்ளையார் திருவார்த்தை கேட்டலும் முலை சுரந்த தலையன்பின் நிலையுடையவர் அம்மையாராதலின் இங்குத் தீங்கு கேட்டவுடன் அச்சம் பெருக உயிர் பதைத்தனர்; பிள்ளையார் திருமறைக்காடு சேர்ந்த நன்னிலை-கேட்ட அப்பொழுதே - சேண்படு புலத்தாரேனும் சென்றடி பணிந்தார் ஒத்தாராயினர் அம்மையாரும் அமைச்சனாரும் (2502—2504) என்றது காண்க. "நாம் மாய்வதே" எனும் துணிவு கொண்டாராதலின் அதன்படியே உயிர்பதைத்தனர். அடுத்தார்க்குத் தீயவை நேரக் கேட்டபோது உயிர்போகும் நிலை வருதல் தலையன்பின் திறம் என்க.

பின்பு...தெளிந்து - உயிர் பதைக்கு நிலை வந்த பின்னர்த் தீதில்லாத செய்தியைக் கேட்டனர்; அதனால் பதைப்பு நீங்கித் தெளிந்தனர். திருமடத்தில் அமணர் தீத்தொழில் செய்துவிட்டனர்; ஆனால் தீதில்லை எனக் கேட்ட செய்தியில் முற்பகுதி கேட்டவுடன் உயிர் பதைத்தலும், உடன் பிற்பகுதி கேட்டலும் தெளிதலும் நிகழ்ந்தன. ஒரு கணத்தில் முற்பகுதியில் ஒன்றும், பிற்பகுதியில் மற்று ஒன்றுமாக நிகழ்ந்த இரு வேறு மன நிகழ்ச்சிகளை இவ்வாறு பாகுபடுத்தி அறிவித்த தெய்வக் கவிநலம் காண்க. (Psychological sequence) இவ்விரண்டும் காலத்தால் இடையீடு பெறாமல் நிகழ்ந்ததனைப், **பதைப்பவர்** - பதைப்பவராய் (எதிர்கால முற்று எச்சப் பொருளில் வந்தது). **தெளிந்து** என்றதுடன் கூட்டி முடிக்க வைத்த கவிநலமும் காண்க.

திருமடப்புற மருங்கு - "திருமடப்புறத்தயல்" (2598); திருமடப் புறச்சுற்று (2599); புறச்சமயிகள் புறத்தின் மருங்கன்றி அணுகலார் என்ற குறிப்பினைக் காட்டிச் செல்லும் கவிநலம் காண்க.

தீதின்மை - தீத்தொழிலால் தீமை விளையாமை; தீதின்மை கேட்டலால் என்க.

கடைக்கால் வருவ தெப்படியாம்? - கடைக்கால் - ஒரு விடயத்தைத் தொடங்கும் நிலை - கட்டிடத்துக்கு அடிநிலை கோலுதல் போல - (அஸ்திவாரம் என்பர்); அடி நிலை எப்படியோ அதன்படியே மேல் கட்டிடமும் அகல நீள உயர முதலியவை அமையும். இங்கு அமணர் தீத்தொழிலில் அடி நிலை தொடங்கினார்களாதலின் அதன்மேல் கிளம்பும் பயன்களும் அதனை ஒட்டியே நிகழும்; அஃது எவ்வண்ணமோ என்றார்; **கடைக்கால்** - முடியும் வேளை என்பாரு முண்டு; அது பொருந்தாமையறிக.

2608. ''**அரச னுக்குவெப் படுத்த**''தென் றருகுகஞ் சுகிகள்
உரைசெ யப்பதைத் தொருதனித் தேவியார் புகுத
விரைவு மச்சமு மேற்கொளக் குலச்சிறை யாரும்
வரைசெய் பொற்புய மன்னவன் மருங்குவந் தணைந்தார். 710

மனங் கொள்ளுதல் - எண்ணமிடுதல். எண்ணமிடலாவது தீத்தொழில் கேட்டலும் உயிர் பதைத்தனர்; தீதின்மை கேட்டு அது தெளிந்தனர்; பின்னர்த் தீத்தொழில் அப்போது தீமை செய்யா தொழியினும், எக்கருமமும் பயன் தந்தே விடுமாதலின், பின்னர் என்ன பயனைத் தரும்படி எப்படி வந்து முடியுமோ என்றிவ்வாறு எண்ணுதல். 709

2608. **(இ-ள்)** ''அரசனுக்கு வெப்பு அடுத்தது'' என்று... பதைத்து - ''அரசனுக்கு வெப்புநோய் மேவிற்று'' என்று மெய் காவலராய் அருகில் உள்ள கஞ்சுகி மாக்கள் கூறப் பதைபதைத்து; ஒரு...புகுத - ஒப்பற்ற பெருந்தேவியார் (அரசன துறையுளில்) புகுத; விரைவும்... வந்து அணைந்தார் - விரைந்த செலவும் பயமும் பொருந்தக் குலச்சிறையாரும் மலை போன்ற அழகிய புயங்களையுடைய அரசன் பக்கத்தில் வந்து அணைந்தனர்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) வெப்பு - வெப்பு நோய்; **வெப்பு** - என்ற பண்பு அதனை யுடைய நோய்க்கு வந்தது பண்பாகு பெயர்; **அடுத்தது** - வந்து நேர்ந்தது; செய்வோர் செயலுக்குத் தக்கதே அடுக்குமாதலின் அவ்வாறு அடுத்தது என்ற குறிப்பும் காண்க.

அருகு கஞ்சுகிகள் - அரசனருகில் எப்போதும் இருந்து காவலும் ஏவலும் புரியு மாக்கள்; **கஞ்சுகிகள்** - சட்டையணிந்த சேவகர்; இந்நாளிலும் அரசாங்க உயர் நிலைகளில் ஆணையாளர் பக்கம் அதற்கென்று குறித்த அடையாளங்களை யுடைய சட்டைகளை அணிந்த காப்பாளர் - தூதுவர் - இருத்தல் காண்க. இங்குக் குறித்தவர்கள் அரசன் பக்கம் இருக்கும் காவல் மாக்கள். **அருகு** - பக்கம். **அருகு** - வெம்மையால் அருகிய என்றுரை கொள்வாரு முளர்; அது பொருந்தாமையறிக. **கஞ்சுகம்** - மெய்யுறை. கஞ்சுகி - மெய்க்காப்பாளர்.

உரை செய - தேவியாரிடமும், அமைச்சரிடமும் சொல்ல.

பதைத்து ஒருதனித் தேவியார் புகுத - பதைத்து - தம் நாயகருக்கு வெப்பு வந்தமையால் அவருடன் பாதியாக எண்ணப்படும் நாயகியாருக்குப் பதைப்பு உற்றது; **ஒரு தனி தேவி** என்ற குறிப்புமிது; **புகுத** - அரசன் இருந்த உறையுளில் புகுத.

விரைவும் அச்சமும் - தீர்வு தேடுதலில் விரைவும், சிவாபராத மாதலின் தீர்வு எவ்வாறு நேருமோ என்ற ஐயப்பாட்டினால் அச்சமும் உண்டாயின. 710

2609. **(இ-ள்)** வேந்தனுக்கு...வெம்மை - அரசனுக்கு உடல் நடுக்கம் வர வெதுப்புறும் நோயின் சூடு; காந்து...போந்து - எரிதலால் வெப்பத்தை வீசும் தழல் போல விரைவாக உடம்பெல்லாம் உள்ளடங்கப் புறத்திலும் பரவி; மாளிகை...உடல் திரங்க - அரண்மனை

2609. வேந்த னுக்குமெய் **விதிர்ப்புற** வெதுப்புறு வெம்மை
காந்து வெந்தழற் கதுமென **மெய்யெலாங் கவர்ந்து**
போந்து மாளிகைப் புறத்துநின் றூர்களும் புலர்ந்து
தீந்து போம்படி யெழுந்தது விழுந்துட றிரங்க. 711

உறையுளின் புறத்தே நின்றவர்களும் வாடித் தீந்து போகும்படி உடல் கொதிந்து உலர் போல் எழுந்தது.

(வி-ரை) *அரசனுக்கு உற்ற நோயின் வெப்ப மிகுதியின் தன்மையினையும் நோயின் விளைவினையும் உரைத்தது இப்பாட்டு.*

விதிர்ப்புறு வெம்மை - விதிர்த்தல் - *நோய் மிகுதியால் உடல் நடுக்கமுறுதல்.* **காந்து தழல்** - வெளியில் வீசும் சூடு; **கதுமென** - *விரைவாக. விரைவுக் குறிப்பு.*

மெய் எலாம் கவர்ந்து போந்து - வெப்பு *நோயின் வெம்மை அரசனது உடல் முழுதும் தன்னுட்படுத்தி மிக்குப்புறத்திலும் வீசி.*

மாளிகைப் புறத்து நின்றூர்களும் புலர்ந்து தீந்து போம்படி - மாளிகை - மாளிகையின் கண்; **புறத்து நின்றூர்கள்** - அரசனிருந்த மாளிகைப் பகுதியின் அடுத்துப் புறத்துக் காவல் நின்றவர்கள்; இவர்கள் **''அருகு கஞ்சுகி மாக்கள்''** ''உழைச் செல்வோர்'' முதலாயினோர்; **புலர்தல்** - வெப்பினுல் வாடுதல்; **தீந்து போதலா**வது வெப்பின் மிகுதி தாக்க மேனி கருகுதல்.

உடல் திரங்க - உடல் உலர்ந்து சுருங்க; வெம்மை - கவர்ந்து; உடல் திரங்க - எழுந்தது என முடிக்க; உடல் விழுந்து திரங்க என்க; உடல் விழுதலாவது தன் முயற்சி யொன்று மின்றி வீழ்ந்து கிடத்தல்

கனமென—என்பதும் பாடம். *711*

2610. **(இ-ள்)** உணர்வும்...ஒதுங்க - உணர்ச்சியும் உயிரும் ஒழிவதற்காக ஒரு பக்கமாய் ஒதுங்கி நிற்கவும்; அணையலுற்றவர்...அகல - பக்கத்தில் வரு பவர்கள் தூரமாகச் சென்று அகலவும்; புணர்...துகளாக - பொருந்தும் வாழை யிளங் குருத்தும் நீர்க்குளிரியும் பக்கத்திற் கொண்டுவரினும் வெப்பத்தாற் காய்ந்து சுருங்கி அவை நுண் பொடியாகவும்;

(வி-ரை) உணர்வும்...ஒதுங்க—**உணர்வு** - உணர்ச்சி. பிரக்ஞை - என்பது வடமொழி; **ஒழிவதற்கு** - ஒழிந்து போவதற்கு முன்னங்கமாய் ஆயத்தமாக - ஒழிவதன் பொருட்டு; **ஒருபுடை ஒதுங்குதல்** - உடல் முழுதும் இன்ன இடத்தில் உள்ளது என்று குறித்தற்கியலாதபடி எல்லா விடத்தும் வியாபித்து நின்ற உணர்வும் உயிரும் அவ்வாறன்றி உணர் வுள்ளது - உயிர் உள்ளது என்று ஒரு பக்கம் ஒதுங்கின; இஃது அவை முற்றும் ஒழிந்து போவதற்கு முடிவில் காணும்படி அடையாளம் போலக் காட்டின என்பது. **ஒழிவதற்கு** - ஒழிவதன் பொருட்டு.

2610. **உணர்வு மாவியு மொழிவதற் கொருபுடை யொதுங்க**
அணைய லுற்றவ ரருகுதூ ரத்திடை யகலப்
புணரி எங்கத லிக்குருத் தொடுதளிர் புடையே
கொணரி னுஞ்சுறுக் கொண்டவை நுண்டுக ளாக. 712

2611. **மருத்து நூலவர்** தங்கள்பல் கலைகளில் வகுத்த
திருத்த குந்தொழில் யாவையுஞ் செய்யவு மேன்மேல்
உருத்தெ ழுந்தவெப் புயிரையு முருக்குவ தாகக்
கருத்தொ ழிந்துரை மறந்தனன் கௌரியர் தலைவன். 713

அருகு அணைய லுற்றவர் என்க. ***தூரத்திடை அகல*** - பக்கத்தில் வந்து கண்டு காரியம் செய்ய வந்தவர்களும் இவ் வெப்பம் வீசுதலினால் சூடுண்டு பக்கத்தில் அணுக மாட்டாது தூரத்திற் போக.

புணர்...துகளாக - வைசூரி, கொடுஞ்சுரம், முதலிய மிக்க வெப்பு மேலேறும் நிலையுள்ள நோய்கள் வரின் அவரை வாழையிளங் குருத்திற் கிடப்பித்தல், நீர்க்குளிரி அருகில் வைத்தல் முதலியவை அவ்வெப்பு ஏறாமல் தடுக்கும் முறைகளாம்; இந்நாளில் பனிக்கட்டியை வைத்துக் கட்டுதல் முதலிய முறைகளும் காண்க. இங்கு வாழைக் குருத்து - குளிரி என்னும் இவை இதன் பொருட்டுக் கொணரப்பட்டவை; **கொணரினும் - சுருக்கொண்டு** - என்றது அவை கொண்டுவந்து உரியவாறு இட்டுப் பயன்படுத்து முன்னே சுருங்கிப் பொடியாயின என்றதாம்; **நுண்துகள் ஆக** - பொடி பட; குளிரியினை வெப்புத்தீரப் பயன்படுத்துதல் முன்னரும் *(319)* காண்க. **சுறுக்கொண்டு**- நாற்றங்கொண்டு என்க. **சுறு - மயிர்,** தோல் முதலியவை பொருங்கலில் வரும் தீ நாற்றம். *712.*

2611. **(இ-ள்)** மருத்து நூலவர்...செய்யவும் - மருத்து நூல் வல்லவர்கள் தங்களுடைய பல கலைகளிலும் வகுத்தோதப்பட்ட சிறந்த தக்க மருத்துவத் தொழில்கள் எல்லாவற்றையும் செய்திடவும்; மேன்மேல்...உருக்குவதாக-மேலும் மேலும் முடுகி எழுந்த வெப்பு நோய் உயிரையும் உருக்குவதாகியிட; கருத்தொழிந்து...தலைவன் - நினைவு ஒழிந்து பேச்சின்றிக் கிடந்தனன் பாண்டிய அரசன்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிவு கொண்டன.

(வி-ரை) மருத்து நூலவர்...செய்யவும் - தங்கள் பல்கலைகள் - நோய் வகையாலும், அவற்றை தீர்க்கும் வாய்களின் வகையாலும், அவை செயல் வகையாலும், பிறவாற்றாலும் மருத்துவ நூல்கள் பலகலைகளாகப் பிரியும்; "நோய் நாடி நோய்முதல் நாடி யதுதணிக்கும், வாய்நாடி வாய்ப்பச் செயல்" (குறள்). இவ்வாறு நாடும் பற்பல கலைகளினும் வல்லோர் அவற்றுள் வகுத்த இந்நோய்க்கு ஏற்றவற்றுள் மிகச் சிறந்தனவாகிய செயல்கள் எல்லாவற்றையும் செய்யவும்; **திரு** - சிறப்புடைய; **தகும்** - நோய்க்குத் தக்க; **தொழில்** - தீர்வுமுறை. **யாவையும்** - உம்மை முற்றும்மை; **செய்யவும்** - சிறப்பும்மை.

மேன்மேல் உருத்தெழுந்த வெப்பு உயிரையும் உருக்குவது ஆக - தீர்வு செய்தலிற்

2612. ஆன வன்பிணி நிகழ்வுழி யமணர்க ளெல்லாம்
மீன வன்செயல் கேட்டலும் வெய்துயிர்த் தழிந்து
''போன கங்குலிற் புகுந்ததின் விளைவுகொ?'' லென்பார்
மான முன்றெரி யாவகை மன்னன்மாட் டணைந்தார். 714

றவிராததன்றி, செய்த தீர்வின் அளவுக்கு மேன்மேல் முதிர ஓங்கிற்று; ஓங்கின அளவு உடலையேயன்றி உயிரையும் உருக்கிற்று என்பது. **உயிரை உருக்குதல்** - *உயிரின் வலி நிலை தீரும்படி குறைத்தல்.*

கருத்து ஒழிந்து - *தன்னுணர்ச்சி நீங்கி மரம்போற் கிடந்து;* **உரை மறந்தனன்** - *பேசும் ஆற்றல் நீங்கினன்;* **கௌரியர்** - *பாண்டியர்.*

கருத்தழிந்து—என்பதும் பாடம். **713**

2612. **(இ-ள்)** *ஆன வன்பிணி நிகழ்வுழி - இவ்வாறான வலிய நோய் மூண்டு நிகழும் போது; அமணர்கள் எல்லாம்...அழிந்து - சமணர்கள் எல்லாரும் அரசனது நிலைமையினைக் கேட்டலும் பெருமூச்சு விட்டு மனமுடைந்து வருந்தி; போன...என்பார் - ''சென்ற இரவிற் செய்த செயலினால் வந்த விளைவுதானோ இஃது?'' என்று ஐயுறுவோர்களாகி; மானம்...அணைந்தார் - தமக்கு நேர்ந்த அவமானம் முன் தெரியாதபடி மறைத்து அரசனிடம் வந்து அணைந்தனர்.*

(வி-ரை) ஆன - முன் கூறியபடி முடிவதாயின; **''ஆகவே''** என்ற ஆணை யருளின்படி வரலான என்ற குறிப்புமாம்; **வன்பிணி** - மருத்து நூலவரின் திருத்தகு தொழில்கள் எவ்வெவற்றாலும் குறையாது நின்று மேலும் முடுகிய வலிமை குறித்தது.

அமணர்கள் எல்லாம் - முன் இரவில் இருள் போலச் சென்று தந்தொழில் விளைத்த அவ்வமணர்க ளெல்லாரும்.

செயல் - நிலை என்ற பொருளில் வந்தது; **கேட்டலும் - அழிந்து - அணைந்தார்** - தேவியாரும் - குலச்சிறையாரும் அச் செய்தி கேட்டலும் அணைதலும் முன்னர் நிகழ்ந்தன; சமணர்பால் அவை கடையில் நிகழ்ந்தன; அவர்களது கரவாடும் வன்னெஞ்சின் நிலை குறித்தது.

வெய்துயிர்த்து அழிந்து - கேட்டலும் பதைத்தனர் தேவியார்; அஞ்சினர் அமைச்சனார்; அந்நிலைகள் மன்னனிடம் அவர்கள் கொண்ட அன்பினால் விளைந்தன; ஈண்டு அமணர் வெய்துயிர்த் தழிந்த நிலை தமது வஞ்சம் பலன் றராதொழிந்தமையாலும் தமது தீத்தொழில் வெளிப்பட்டுத் தமக்கே கேடு தருமென்ற அச்சத்தாலு மாயிற்று.

போன கங்குலிற் புகுந்ததின் விளைவுகொல்? - இது சமணரது ஐயப்பாடான மனநிலை; தாம் செய்தது தீமையாகிய பாவம் என்பதாம். அஃதே இவ்வாறாக விளையும் என்பதிலும், விளைக்க வல்லார் பிள்ளையார் என்பதிலும் நம்பிக்கை யில்லாதவர்களாதலால் ஐயப்பாடுற்று இவ்வாறு தமக்குள் ஐயங் கொண்டனர். ஆயின் இந்த ஐயப்பாடு நிகழ்ந்ததென்னை? எனின்,

வேறு

2613. மால்பெருக்குஞ் சமண்கையர் மருங்கு சூழ்ந்து
வழுதிநிலை கண்டழிந்து வந்த நோயின்
மூலநெறி யறியாதே தங்கள் தெய்வ
மொழிநவின்மந் திரங்கொண்டு முன்னும் பின்னும்
பீலிகொடு தைவருதற் கெடுத்த போது
பிடித்தபீ லிகள்பிரம்பி னோடுந் தீந்து
மேலெரியும் பொறிசிதறி வீழக் கண்டு
வெப்பினதி சயநோக்கி வெருவின் மிக்கார் 715

தமது செயலுக்கும் இவ்விளைவுக்கும் உள்ள விரைவாகிய தொடர்ச்சியும் ஒற்றுமையும் முதலிய சம்பந்தம் பற்றி என்க.

மானம் முன் தெரியா வகை - மானம் - மேன்மை; இங்கு அது தவறுபட வருதலால் உள்ள மனநிகழ்ச்சி என்ற பொருளில் வந்தது; அவமானம் - வெகுமானக் குறைவு என்புழிப்போல; **முன்தெரியா வகை** - வெளிப்படப் பிறர் அறிந்து கொள்ள முடியாதபடி புறத் தோற்றத்தினுள் மறைத்தது. **மானம்** - அவமானம் என்றலுமாம். 714

2613. **(இ-ள்)** மால் பெருக்கும்...அறியாதே - மயக்கத்தையே பெருகச் செய்யும் சமணராகிய கீழ் மக்கள் பக்கத்தில் வந்து சூழ்ந்து பாண்டியனது நோயின் முடுகிய நிலையினைக் கண்டு மனமழிவுற்று, அவனுக்கு நேர்ந்த நோயினது மூலத்தினை அறியாமலே; தங்கள் தெய்வம்... எடுத்தபோது - தங்கள் தெய்வத்தின் மொழியினை எடுத்துச் சொல்லும் மந்திரத்தினைச் சொல்லிக்கொண்டு மயிற் பீலியினால் முன்னும் பின்னுமாகத் தடவுதற்காக எடுத்தபோது; பிடித்த...கண்டு - கையிற் பிடித்த பீலிகள் அவற்றுடன் சேர்ந்த பிரம்பினோடும் தீந்து மேல் தீப்பற்றி எரிதலால் தீப்பொறிகள் சிதறி வீழக் கண்டு; வெப்பின்...மிக்கார் - வெப்பினது அதிசயத்தினை நோக்கி மிகவும் வெருண்டனர்.

(வி-ரை) இப்பாட்டும் மேல்வரும் பாட்டும் அமணர்கள் அரசனிடம் வந்து சூழ்ந்து செய்த கரவாகிய மந்திரத் தீர்வுச் செயல்களைக் கூறுதற்கெழுந்தன.

மால்பெருக்கும் சமண் கையர் - எழுவகைப் பதார்த்தங்களை அநேகாந்த வாதத்தாற் கூறிப் பொருளியல்பு இவற்றுள் ஒன்றாகச் சொல்லவும் படும்; சொல்லவும் படாது எனக்கூறும் சமயமாகலின் பொருள் துணிபு தெளிவுபெறாது மயக்கத்தைப் பெருகத்தரும் சமயமாயிற்று. தங்கள் சமயத்தின் மயக்கத்தினைப் பாண்டியனுள்ளத்திற் பெருக்கும் என்றலும் குறிப்பு.

வழுதி - பாண்டியன்; அமணர் சார்வினால் வழுவியது பற்றி வினை மூளப் பெற்றவன் என்ற குறிப்புப்பட இங்கு இப்பெயராற் கூறினார். **தி** - தொழிற்பெயர் விகுதியாதலும் காண்க.

வந்த நோயின் மூலநெறி அறியாதே - நோயினைத் தீர்க்க முற்படுவோர் அந் நோயினை அறிதலேயன்றி அது வந்த மூலத்தினையுமறிதல் வேண்டு மென்பது மருந்து நூற்றுணிபு; இங்கு இந்நோயின் மூல நெறியாவது தங்களுடைய கரவுச் செயலேயாம் என்பதனை அறியாமல்

2614. கருகியமா சுடையாக்கைத் தீயோர் தங்கள்
கைத்தூங்கு குண்டிகைநீர் தெளித்துக் "காவாய்
அருகனே! அருகனே!" யென்றென் றோதி
யடல்வழுதி மேற்றெளிக்க வந்நீர் பொங்கிப்
பெருகுமெரி தழல்சொரிந்த நெய்போ லாகிப்
போர்த்துமொரு தழலதன்மேற் பெய்தாற் போல
"ஒருவருமிங் கிருமருங்கு மிராது போ"மென்
றமணரைப்பார்த் துரைத்தரச னுணர்வு சோர்ந்தான். 716

என்க. முன்பாட்டிற் கூறியது ஐயப்பாடாகிய நிலையன்றித் தெளிந்த நிலையன்று என்பது காண்க; பொருணிச்சயம் தெளிதலன்றி அநேகாந்த வாதம் கூறுவோராதலின் நோயின் இயல்பினையும் அவ்வாறே தெரியாராயினர் என்ற குறிப்பும் மேல் **மால் பெருக்கும்** என்றதனாற் பெறப்பட்டது காண்க.

தங்கள் தெய்வமொழி நவில் மந்திரங்கொண்டு - தம் தெய்வத்தின் பெயராற் சொல்லப்படும் மந்திரத்தினை உச்சரித்துக் கொண்டு; தெய்வ மொழியினால் நவிலப் பெற்ற - மந்திரம் என்றலுமாம்; தம் தெய்வம் அருளிய என்றலுமாம். **மந்திரம்கொண்டு** - உச்சரித்துக் கொண்டு - உட்கொண்டு; ஆதரவாகக் கொண்டு என்றலுமாம்; மந்திரிப்போர் குறித்த தெய்வப்பெயர் பூண்ட மந்திரத்தைக் கணித்துக்கொண்டே செயல் புரிதல் மரபு.

முன்னும் பின்னும் பீலி கொடு தைவருதல் - இஃது அமணர் மந்திரத் தொழில் செய்யும் முறை; **பீலி** - மயிற்பீலிக் கற்றை. இதனை ஏந்திச் செல்லுதல் அமண குருமார் மரபு; அதனோடு பிரம்பினையும் ஏந்துவதுண்டு. முன்னும் பின்னுமாகப் பாண்டியன் உடலைத் தடவுவதற்காகப் பீலியை எடுத்தனர். அப்போதே அது தீந்து தீப்பற்றிப் பொறி சிதறியதனால் அம்முயற்சியினை விட்டனர் என்பது.

வெப்பின் அதிசயம் நோக்கி வெருவின் மிக்கார் - வெப்பு நோயின் வெப்ப மிகுதியால் விளைந்த அதிசயமாவது வெப்ப மிகுதியால் மயிற்பீலியும் தீந்து தீப்பொறி பரத்தல்; சுரநோய் இவ்வாறு பொருள்களைத் தீப்பற்றச் செய்தல் அதிசயமாயிற்று; **வெரு**-சடுதியில் நேர்ந்த மிக்க அச்சம். "வெருக் கொண்டாற் போலழுவர்" (1953).

வெருவன் மிக்கார்—என்பதும் பாடம். 715

2614. **(இ-ள்)** கருகிய...தெளிக்க - கருகிய அழுக்குடைய உடலையுடைய தீயோர்களாகிய அவ்வமணர் தமது கையில் தொங்குகின்ற குண்டிகையின் நீரினை மேலே தெளித்து "அருகனே! அருகனே! காப்பாயாக" என்று பல முறையும் ஓதி வலிமைபெற்ற பாண்டியன் மேல் தெளிக்க; அந்நீர்...போல - அந்த நீரானது பொங்கி முன்னமே பெருகி எரியும் தீயின் மேல் சொரிந்த நெய் போல ஆகி அதன் மேலும் ஒரு நெருப்பினை வாரித் தூவியது போல ஆக; "ஒருவரும்...சேர்ந்தான்"-"நீங்கள் ஒருவரும் இங்கு இருபுறமும் இராமல் அகன்று போங்கள்" என்று அரசன் அமணரைப் பார்த்துச் சொல்லி உணர்ச்சி சோர்ந்து அவசமாயினன்.

வேறு

2615. பாண்டிமா தேவி யாரும் பயமெய்தி யமைச்சர் பாரம்
பூண்டவர் தம்மை நோக்கிப் "புகலியில் வந்து நம்மை
யாண்டுகொண் டவர்பாற் கங்கு லமணர்தாஞ் செய்த தீங்கு
மூண்டவா **றினைய தாகி முடிந்ததோ?"** வென்று கூற. 717

(வி-ரை) கருகிய - *கரிய நிறமுடைய; வெப்பினாற் கருகிய என்ற குறிப்புமாம்.* **தீயோர்** - *அத் தீத் தொழில் செய்தவர் என்பதும் குறிப்பு.*

கைத்தூங்கு குண்டிகைநீர் தெளித்து - தெளிக்க - *உரியபடி மந்திரித்த நீர் நிறைந்த குண்டிகை சுமந்து செல்லுதல் சமண குருமார் வழக்கு; முன்னர்த் தெளித்துப் பின்னர் மந்திரஞ் சொல்லி மேலுந் தெளித்தல் மந்திரம் செய்யும் தொழில்முறை. ஆதலின் இருமுறை தெளித்துத் தெளிக்க என்றார். முன்னர்த் தெளித்த நீர் தழலின் மீது நெய் சொரிந்தது போலவும், பின்னர்த் தெளித்த நீர் அதன் மேலே பின்னும் தழலைத் தூவியது போலவும் இருந்த தென்றார்; முன்னரே அரசனுள்ளே பரவியது தீயேயாதலின் மீண்டும் தெளித்த நீரும் தழல்போல ஆயிற்று என்று இருவழியும் சமணர் செயலுக்குத் தீயினை உவமித்தார். "சந்தின் றழலைப் பனிநீ ரளவித் தடவுங் கொடியீர்" (321) என்றதும், பிறவுங் காண்க.*

போல - *போல்வதாயிடலால்.*

இப்பாட்டு ஐயப்பாடான பாட்டுக்களுள் ஒன்று; இதுபற்றி சேக்கிழார் நூலின் 218-ம் பக்கம் பார்க்க. 716

2615. **(இ-ள்)** *பாண்டிமா தேவியாரும்...நோக்கி - பாண்டிமா தேவியாராகிய மங்கையர்க்கரசி யம்மையாரும் அமைச்ச பாரத்தை மேற்கொண்ட குலச்சிறையாரை நோக்கி; "புகலியில்...முடிந்ததோ?" என்று கூற - சீகாழியில் அவதரித்து நம்மை ஆளாகக் கொண்ட பிள்ளையாரிடத்து இரவிலே அமணர்கள் செய்த தீங்குதானே இவ்வாறாக வந்து முடிந்ததோ?" என்று சொல்ல,*

(வி-ரை) பயமெய்தி - *தம் கணவர் கருத்தொழிந்து உரை மறந்து கிடந்த நிலையும், உணர்வும் உயிரும் ஒழிவதற்கு ஒருபுடை ஒதுங்கிய நிலையும், வெப்புக் குறையாது மேலும் எழுந்து உயிரையும் உருக்குவதாகிய நிலையும், இது சிவனடியார் பாற்செய்த அபசாரத்தினால் விளைந்த நிலையுங் கண்டு, மேல் எவ்வணம் முடிவதாகுமோ என்றஞ்சினர் அம்மையார்.*

அமைச்சர்பாரம்...நோக்கி* - *அமைச்சர் பாரம் பூண்டவர் தம்மை - *குலச்சிறையாரை; அமைச்சராதலின் அவரை நோக்கி என்க. அமைச்சுத் திறம் மூன்று காலமும் உணர்ந்து அரசுக்கு வரும் தீமைகளை எல்லாம் போக்கும் ஆற்றலும் கடமையு முடையதாதலின் அத்தன்மையோரே இங்கு வேண்டுவனவற்றை அறியவும், இயற்றவும் தக்கவர் என்பது கருத்து; அக்கடமை மிகப் பெரிதும் அரிதுமாகிய தொன்று என்பார்* **பாரம்** *என்றார்;* **பூண்டவர்** - *மேற் கொண்டவர். "தமக்கன்பு பட்டவர் பாரமும் பூண்பர்" (அரசுகள் - அரநெறி 2 இந்தளம்).*

2617. இருதிறத் தவரு மன்ன னெதிர்பணிந் ''திந்த வெப்பு
வருதிறம் புகலி வந்த வள்ளலார் மதுரை நண்ண
அருகர்கள் செய்த **தீய வனுசித மதனுல் வந்து**
பெருகிய; திதற்குத் தீர்வு பிள்ளையா ரருளே'' யென்று, 719

இவ்வாறு துணிந்தமை நோய்க்குக் காரணமாய் நின்ற பொருளே பின்னரும் உடலுட் சேர்ந்தால் நோயினை மிகச் செய்யும் என்ற மருத்து நூற்றுணிபும், உலக நூற்றுணிபும் பற்றி என்க. ஒப்பு முறை மருத்துவமென்று (Homeopathy) ஒன்று உளதேயெனின் அது வினை பற்றியனவற்றுக் கேலாமை யுணர்க.

தீர்க்கின் - அரசன்பால் தமது செல்வாக்கினுல் தாமே முந்திக்கொண்டு தீர்க்க முற்பட்டு முயல்வார்களென்று அறிந்து கூறியது அமைச்சுத்திறன்.

முதிர்வதே - மூண்டு பெருகும் நிலையடைவதே.

மதில்கள் மூன்றும் செற்றவரன்பர் - ஆண்டவனது தன்மை அடியார்களிடம் விளங்குமாதலின் அம்முறையால் இவ்வன்பரும் பகைவர்களைச்செற்று நீக்குவர் என்பது குறிக்க இத்தன்மையாற் கூறினுர். *718*

2617. **(இ-ள்)** இரு திறத்தவரும்...எதிர் பணிந்து - அம்மையாரும் அமைச்சரும் ஆகிய இரண்டு திறமுடையவர்களும் அரசனெதிரிற் பணிந்து; இந்த வெப்பு...பெருகியது - இந்த வெப்பு நோய் வரும் திறமாவது சீகாழிப் பதியில் வந்த வள்ளலாராகிய பிள்ளையார் மதுரையின்கண் வந்து பொருந்த அது கண்டு அமணர்கள் செய்த தீமையாகிய அநுசிதச் செயலால் விளைந்து பெருகியது; இதற்குத் தீர்வு பிள்ளையார் அருளே என்று - இதற்குத் தீர்வு செய்ய வல்லது பிள்ளையாரது அருளேயாம் என்று எடுத்துக் கூறி,

(வி-ரை) இருதிறத்தவர் - இத்திறத்தில் நின்ற இருவரும்; அம்மையாரும் அமைச்சனுரும்.

மன்னனெதிர் - மன்னவன் முன்பு - மன்னவன் கருத்தொழிந்து உரை மறந்து கிடந்தனனுதலின் *(2611)* மன்னவனைப் பணிந்து என்னுது **எதிர்** என்றுர். ஆயின் பணிதல் எற்றுக்கெனின் மரபுபற்றி என்க; அற்றேல் அஃதாக; கருத்தொழிந்து கிடந்தவன்பால் அறிவுறுத்தல் எவ்வாறு நிகழுமெனின், அது மேல்வரும் *(2619)* பாட்டில் கூறுவது காண்க.

இருதிறத்தவர் - அம்மையார் சைவத்திறம் பற்றியேயன்றிக், கணவன் என்ற தன்மையானும் ஈண்டு ஆவன செய்தற் கடப்பாடுடையராதலின், சைவத் திறமும் அமைச்சுரிமையும் பூண்டு அமைச்சரினும் திறமுடையார் என்று குறிக்க, இருவர் என்னுது இருதிறத்தவர் என்றுர்.

''இந்த வெப்பு...அருளே'' என்றதும் மேல் **''காயமும்...தீரும்''** என்பதும் இருதிறத்தவரும் மன்னனுக்கு உரைத்தவை.

2616. கொற்றவ னமைச்ச ரூராங் குலச்சிறை யாருந் தாழ்ந்து
"மற்றிதன் கொடுமை யிந்த வஞ்சகர் மதில்கண் மூன்றுஞ்
செற்றவ ரன்பர் தம்பாற் செய்ததீங் கரசன் பாங்கு
முற்றிய; திவர்க டீர்க்கின் முதிர்வதே யாவ" தென்பார். 718

புகலியில் வந்து - வருதல் - அவதரித்தல்; அங்கு நின்றும் இங்கு அருளாற் போந்து என்பதுமாம்; "இங்குநம் மில்லங்கள் தோறு மெழுந்தருளி" (திருவெம். திருவா.). **ஆண்டு கொண்டவர்** - ஆட்கொண்ட செயல் முற்றுப் பெற்ற தென்பார் இறந்த காலத்தாற் கூறினர்.

கங்குல்...முடிந்ததோ? - இஃது அம்மையார் கொண்ட ஐயப்பாடு; முன்னர்த் தீங்கிது கடைக்கால் வருவ தெப்படியாம்?" என்று ஐயங் கொண்டனர்; இங்கு அத்தீங்குதான் இனையதாகி முடிந்ததோ?" என்று மேலும் அதனையே தொடர்ந்து கொண்டனர்; **முடிந்ததோ?** - அத் தீங்கின் விளைவு இதனுடன் முடிந்ததோ? இன்னும் மேலும் விளையும் குறையுண்டோ?; **ஆகி** - "பாண்டியற்காகவே" என்றவிடத்துப் போல் ஆக்கத்திற் கேதுவாகி என்ற குறிப்பும்பட நின்றது; **இனைதல்** - வருந்துதல் என்ற குறிப்புமாம்.

மூண்டவாறு - தீ மூளும் தன்மை என்பதும் கருத்து.

717

அமணர்கள்—என்பதும் பாடம்.

2616. **(இ-ள்)** கொற்றவ னமைச்சனாராம்...தாழ்ந்து - அது கேட்டு அரசரின் அமைச்சராகிய குலச்சிறையாரும் அவரை வணங்கி; "மற்றிதன்....ஆவது" என்பார் - "மற்று இந்த நோயின் கொடுமையானது, மதில்களையுடைய மூன்று புரங்களையும் எரித்தவரின் அன்பரிடத்து இந்த வஞ்சகர்களாகிய அமணர்கள் செய்த தீங்கு அரசனிடத்து வந்து நிரம்பியது; இதனை இவ்வமணர்கள் தீர்க்க முயன்றால் அது மேலும் பெருகி முடுகுவதேயாகும்" என்று செல்வாராகி,

(வி-ரை) கொற்றவ னமைச்சனாராம் குலச்சிறையார் - அமைச்சுத் திறத்தின் நிலைபற்றி விடையளிக்கின்றார் என்று மேலும் கூறுதல் காண்க.

மற்றிதன் கொடுமை...முற்றியது - இஃது அம்மையார் வினவிய ஐயத்துக்கு அமைச்சனார் துணிந்து விடை கூறியது.

வஞ்சகர் - செய்த தீங்கு - அரசன் பாங்கு முற்றியது...முடிந்ததோ? என்ற வினவுக்கு இனி அரசன் பாங்கு வரக்கடவதொன்று மின்று - என்று கூறியபடி; **அரசன் பாங்கு முற்றிய** தென்றமையால், அமணர் பாங்கில் முற்றாது பெரிதும் பின்னர் வர எஞ்சியுள்ளது என்றதும் குறிப்பு. **செய்தது ஈங்கு** - என்று பிரித்து, **ஈங்கு** - பாண்டியனிடம் என்றலுமாம்.

இவர்கள் தீர்க்கின் முதிர்வதேயாவது - மேல் விளைவதாகிய வருங்கால நிகழ்ச்சியை அமைச்சுத் திறத்தால் ஓர்ந்து சொல்லியது; **தீர்க்கின்** - தீர்வு தேட முயன்றால்; அவர்கள் அவ்வாறு முயல்வது கருதலளவையால் தெரிந்தாராதலின் அதனால் தீராது மேலும் நோய் மிகச் செய்வதேயாகி முடியும் அதனை எடுத்துக் காட்டியபடி; மேல் *(2661)* உரைப்பது பார்க்க;

2619. மீனவன் செவியி னூடு **மெய்யுணர் வளிப்போர் கூற**
ஞானசம் பந்த ரென்னு நாமமந் திரமுஞ் செல்ல,
ஆனபோ தயர்வு தன்னை யகன்றிட, வமண ராகும்
மானமில் லவரைப் பார்த்து மாற்றமொன் றுரைக்கலுற்றான்; 721

''கழுவாவுடலம்'' (ஆளு - பிள் - திருவந்-28); **மனமாசு கழுவாமை** - *மனம் தூய்மை செய்யாது வஞ்சனை நிறைதல்.*

செய்யும் மாயம் - *தாம் செய்த வஞ்சத் தீச்செயலினையும், அதனால் இது விளைந்த தென்றதனையும் வெளிப்படுத்தாது ஒன்று மறியாதார் போன்று நடித்து நோய் தீர்க்க முயலும் வஞ்சம்;* **மாயம்** - *பாசாங்கு - மறைவு - என்ற பொருளில் வந்தது.*

வளர்ப்பதே - *தணிப்பதன்றி வளர்ப்பதனையே செய்யும்; ஏகாரம் பிரிநிலை. செய்யும் (ஆகும்) என்பது தொக்கு நின்றது.*

வளர் வெண்திங்கள் மேயவேணியர்பால் ஞானம் பெற்றவர் - *இறந்துபட நின்ற மதியினை வளர்வித்த இறைவன்பால் பெற்ற ஞானம் ஆதலின் அந் நிலையினின்ற அரசனையும் உய்விக்க வல்லது என்பது குறிப்பு;* **பால்ஞானம்** - *பாலின் வழிபெற்ற என்ற சரிதக் குறிப்பும் தர நின்றது.*

விரும்பி நோக்கப்...பிணிதீரும் - விரும்பி நோக்க - *''இருநோக் கிவளுண்கணுள்ள தொருநோக்கு, நோய்நோக்**கொன் றந்நோய் மருந்து''** (குறள்) என்புழிப் போலக் கொள்க; பாண்டியற்**காகவே** என்ற மறக்கருணை நோக்கால் வந்த நோய், விரும்பி நோக்கும் அறக்கருணை நோக்கினால் தீரும் என்பது.*

விரும்பி நோக்கிற் - பிறவியும் தீரும் *என்றது பார்த்த பார்வையால் மலநீக்கம் செய்து முத்தி சாதனம் தரும் பரமாசாரியராதல் குறிக்கப்பட்டது; ''சிரபுரத் தலைவர் தீண்டி - நீறு பூசப்பெற்று - முதல்வனையறியுந் தன்மை, துன்னினான்* **வினைக ளொத்துத்** *துலையென நிற்ற லாலே'' (2717) என்றும், ''மீனவற் குயிரை நல்கி மெய்ந்நெறி காட்டி'' (2757) என்றும் வரும் தீக்கைமுறைக் குறிப்புக்கள் காண்க ''மன்ற பாண்டியன் கேட்பக் கிளக்கு மெய்ஞ்ஞானம்'' (இருபா - 2) என்ற ஞானசாத்திரமும் காண்க.*

பிறவியும் தீரும் - *தீராத பிறவியும் என உம்மை சிறப்பும்மை; எச்சவும்மையுமாம். மேல் தீக்கையின் விளைவாகிய சரிதக் குறிப்பும் காண்க.*

விரைந்து நோக்க—*என்பதும் பாடம்.* 720

2619. **(இ-ள்)** *மீனவன்...கூற - பாண்டியனது காதிலே மெய்யுணர்வு அளிப்பவர்களாகிய அம்மையாரும் அமைச்சனாரும் முன் கூறியவாறு சொல்ல; ஞானசம்பந்தர் என்னும்...செல்ல - அதனுள் திருஞானசம்பந்தர் என்னும் திருப்பெயராகிய திருமந்திரமும் உடன் செல்ல; ஆன...அகன்றிட - அப்போது அயர்ச்சி தன்னை நீக்குதலால்; அமணராகும்...உரைக்கலுற்றான் - அமணர்கள் என்னும் மானமில்லாத மாக்களைப் பார்த்து ஒருசெய்தி சொல்லலாயினன்;*

2618. "காயமு மனமு மாசு கழுவுதல் செய்யார் செய்யும்
மாயமு மிந்த நோயை வளர்ப்பதே! வளர்வெண் டிங்கண்
மேயவே ணியர்பால் ஞானம் பெற்றவர் விரும்பி நோக்கிற்
றீயவிப் பிணியே யன்றிப் பிறவியுந் தீரு" மென்றார். 720

வருதிறம் - வந்து புகுந்த விதம்; **அதனால் வந்து** - அந்த காரணமாக, அதன் மூலமாக - விளைந்தது; இது நோயின் மூலமாம்; **பெருகுதல்** - மூளுதல்; பெருகிய தன்மைகள் முன் (2609 - 2610 - 2611) பாட்டுக்களில் உரைக்கப்பட்டன.

வள்ளலார் - வள்ளற்றன்மை. பாண்டி நாட்டவர்க்கு நன்மை பொருட்டுத் தாமே மதுரை நண்ணியருளியமையாலும், அமணர்கள் தீக்கொளுவிய போதும் செய்யாமையிற் றிறம்பி வேறு முனிவு கொள்ளாது, அரசனையும் நாட்டவரையும் ஆட்கொண்டு திருத்திய நன்மைக் கருணையே திருவுள்ளம் கொண்டு "பையவே சென்று....ஆகவே" என்று அருள் புரிந்தமையாலும், மேல்வருவனவற்றாலும் உணரப்படுதலை உட்கொண்டு கூறியது.

மதுரை நண்ண - ஆலவாயின் முதற் பெயர்; "மதுரைத் தொன்னகர் வந்தணைகின்றார்" (2528) என்றதனைத் தொடர்ந்து கூறியவாறு காண்க. "மதுரையின் புறத்து" (2544); "மதுரை தோன்றுதலும்" (2559); **மதுரை** என்ற பெயர் போந்த வரலாற்றில் அறியப்படுமாறு போல இங்குப் பிள்ளையாரால் புனிதமாக்கப்படும் நகரமாம் என்ற குறிப்பு.

தீய அநுசிதம் அதனால் - தீமையை வாக்கினாலும் சொல்லலாகா தென்ற மரபு பற்றிக் கூறியது; "இந்த அநுசிதம்" (785) **தீய** - தீயை உட்கொண்ட என்ற குறிப்பும் காண்க.

இதற்குத் தீர்வு பிள்ளையார் அருளே - முன்னர் **இதன் கொடுமை** என்றதனால் நோயினையும்; **தீய அநுசிதம்** என்றதனால் நோய் மூலத்தையும், கூறியவாறே, **தீர்வு** என்றதனால் "அது தணிக்கும் வா"யினையறிவித்தபடி; "வாய்ப்பச் செயல்" என்றதனை வரும் பாட்டுக்களிற் கூறுதல் காண்க. "நோய்நாடி நோய்முத னாடியது தீர்க்கும், வாய்நாடி வாய்ப்பச் செயல்" (குறள்); **என்று** - என்று சொல்லி; **என்று-என்றார்** எனமேல்வரும் பாட்டுடன் முடிக்க.

அருகர்கள்—எதிர்பணிந் தெய்த—இரவு செய்த அனுசிதம்—என்பனவும் பாடங்கள். 719

2618. **(இ-ள்)** காயமும்...வளர்ப்பதே - உடம்பிலும் மனத்தினும் பொருந்திய மாசு கழுவாத சமணர்கள் இனிச் செய்யும் மாயத்திறங்களும் இந்த நோயினை வளர்ப்பதேயன்றிக் குறைத்தல் செய்யா; வளர்வெண் திங்கள்...தீரும் என்றார் - வளரும் வெண்மதி பொருந்திய சடையினையுடைய இறைவர்பால் ஞானம்பெற்ற அப்பிள்ளையார் விரும்பி நோக்கினாராகில் தீய இந்தப் பிணியேயன்றிப் பிறவி நோயும் தீரும் என்று சொன்னார்கள்.

இந்நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) காயமும் மனமும் மாசு கழுவுதல் செய்யார் - அமணர்; **காயம் கழுவாமை** பிராணிகள் சாம் என்று உடல் குளியாதிருக்கும் சமணரது வழக்குக் குறித்தது;

2620. மன்னவ னவரை நோக்கி, ''மற்றிவர் செய்கை யெல்லாம்
இன்னவா றெய்து நோய்க்கே யேதுவா யின''வென் றெண்ணி,
''மன்னிய சைவ நீதி மாமறைச் சிறுவர் வந்தால்
அன்னவ ரருளா லிந்நோ யகலுமே லறிவே'' னென்றான்; 722

அம்மையார்-அமைச்சனார் (2584) கூறியதும் அத்திரு நாமமேயாம்; ஆயின் இங்கு அதனையே **மெய்யுணர் வளிப்போர்** கூறியவாற்றால் அது முன்னை நிலையினை மாற்றியது என்க; **ஒன்று** - ஒப்பற்றது என்றும், பலபடியாகச் செல்லாது இனி ஒரே படியாய்ச் செல்வது என்றும் கொள்ள நின்றது. 721

2620. **(இ-ள்)** ''மன்னவன்...'' எண்ணி - ''மற்று இவர்களுடைய செய்கைகள் எல்லாம் இப்படிப் பொருந்திய நோயினுக்கே காரணமாயிருந்தன'' என்று மனத்துட் கருதி; மன்னவன் அவரை நோக்கி - அரசன் அவர்களைப் பார்த்து; மன்னிய...என்றான் - ''நிலைபெற்ற சைவ நீதியின் பெருமறைச் சிறுவராகிய பிள்ளையார் இங்கு வந்தால் அவருடைய அருளினாலே இந்த நோய் நீங்குமாகில் அறிவேன்'' என்று கூறினானாகி,

(வி-ரை) அவரை நோக்கி..எண்ணி - ஈண்டு **நோக்கி** - என்றது கருத்தினுள் வைத்து ஊன்றி அளந்து என்ற அகநோக்கத்தினை உணர்த்தி நின்றது. முன்பாட்டில் **பார்த்து** என்றது புறப்பார்வை யாதலிற் கூறியது கூறலன்மை யுணர்க; மேல் **எண்ணி** என்றதும் காண்க; **எண்ணி** - துணிந்து; ''எண்ணித் துணிக கருமம்'' (குறள்); **மற்ற இவர்** என்றது மற்றிவர் என நின்றது. **எண்ணி** - அமணர்பால் வைத்த மதிப்புப்பற்றிச் சீர்தூக்கும் நிலையுமாம்.

இன்னவாறு எய்தும் நோய்க்கே ஏது - காரண காரிய முறைமையாலே செய்கையான் விளைந்தது இந்நோய் என்று வழியளவையான் அறிந்ததாம். ஏகாரம் இன்றியமையாத இயைபு குறித்தலின் பிரிநிலை.

மன்னிய...அறிவேன் - இஃது அரசன் எண்ணி மனத்துட்டுணிந்த முடிபினைப் புறத்திற் கூறியபடி; **அறிவேன்** - எனது துணிவு உண்மையோ அன்றோ என்று அறிவேன். முன் உடன்பாட்டுக் கருதலளவையால் துணிந்த உண்மையினை, மேலும் எதிர் மறைக் கருதலளவையால் நிச்சயிப்பேன் என்றதாம்; மற்றவர் செய்கையால் நோய் வந்தது என்பதனை அஃது அருளால் அகலுமாயின் முடிந்த முடிபாகத் துணிவேன் என்றது கருத்து.

மன்னிய சைவ நீதி - சமணம்போல் இடையில் வாராததும் இடையில் அழிவு பெறாததுமாகி நிலைபெற்ற என்பது மன்னன் மனத்துள் அப்போது எழுந்த உணர்வு பற்றிக் கூறியது.

மாமறைச் சிறுவர் - அன்னவரருளால் - ''மற்ற மாமறை மைந்தன்'' (2585) என்று முன் கூறியதனை ஈண்டு ஒப்பு நோக்குக.

''ஆணவத்தோ டத்துவித மானபடி'' என்றாற்போல முன் அமணர் வயமாய் நின்ற அரசனுக்கு அமணராகிய பொய்யுணர் வளிப்போர் தன்செவி நிறைக்கக் கூறியதும் வள்ளலார் நாமமேயாயினும் அது செயிர்ப்பு (கோபம்) விளையக் காரணமாய் மற்ற **மைந்தன்** என

(வி-ரை) செவியினூடு கூற - கருத்தொழிந்து உரை மறந்து கிடந்த நிலைமையிலிருந்தானாதலின் அவனது செவியின் பக்கத்துச் சென்று பொருந்தும்படி கூற வேண்டியதாயிற்று; இஃது ஆசாரியன் மந்திரோபதேசம் செய்யு முறைமையாம் என்பது ஆகமவிதிகளானுணரப்படும்; இக்குறிப்புப்பற்றியே மேல் "**நாமமந்திரமுஞ்** செல்ல" என்றார்; "அஞ்செழுத்தி னுமைந்தான் காண்" (தேவா) என்றபடி திருநாமந் தொகுத்தும் இறைவன் திருநாமமேயாம்.

மெய் உணர்வளிப்போர் - அம்மையாரும் அமைச்சனாரும். இதுவரையும் அரசன் செவியுறக் கூறிய ஏனையோர் அன்னரல்லாது தீயுணர்வே புகட்டி அவனைத் தீ நெறிக்கட் செலுத்தினர் என்பது குறிப்பு.

ஞான சம்பந்தர் என்னும் நாமமந்திரம் - ஞான சம்பந்தர் - என்பது ஒற்று நீக்க ஐந்தெழுத்தே யாதலின் மந்திரம் எனப்பட்டது; நாவுக்கரசு என்பதும் இவ்வாறே அப்பூதியாரை உய்வித்த நாம மந்திரமாயினமையும் காண்க; "தான் செய்யுந் தன்மைகளு மக்கியிந் மன்பர்க் கரன்" (களிற்றுப்படி); **மந்திரம்** - நினைப்போனைக் காப்பது என்பது பொருள்; அத்தொழிலைச் செய்யும் சொல்லுக்கு ஆகு பெயராய் வந்தது; இங்கு இத் திருநாமம் மந்திரமே யான தன்மை, "கருத்தொழிந்துரை மறந்து" (2611) கிடந்த அரசன் இம் மந்திரம் செவிவாயாக உட்புகுதலும் (ஆனபோது) அயர்வு தன்னை யகன்று, மேல், உண்மை நெறி நிற்கத்தலைப்பட்டு உரைக்கத் தொடங்குகின்ற தனாலறியப்படும்.

மந்திரமும் செல்ல - உம்மை - முன் (2618)ல் கூறிய செய்தி சொல்லியதனோடு மந்திரமும் உட்செல்ல என்று இறந்தது தழுவிய எச்சவும்மை. **செல்ல-அச்செய்தி** வாக்கியத்தினுடனே மந்திரமும் உட்புக என்க. **சொல்ல** - என்பது பாடமாயின் அதற்குத்தக உரைத்துக் கொள்க.

ஆனபோது அகன்றிட - அப்போதே அயர்ச்சி நீங்கிட; மந்திரசக்தி தொழிற் பட்டவுடன் பயன் தந்த விரைவு குறித்தது; போது தேற்றேகாரம் தொக்கது; மின்சார வேகம் (Electric Speed) என்பது முதலாகத் தாமறியளவையில் சடசத்தியின் வேகம் பற்றி வழங்குவர் நவீனர்; ஆனால் இது சிவசிற்சத்தியின் றொழிற்பாடாதலின் நினைவின் மாத்திரையின் பயன் விளைப்பதாம்.

அகன்றிட - அகன்றிடலான்; கருத்தொழிந் துரைமறந்த நிலையில் நோய் முற்றிக் கிடந்த அரசன், நோய் நீங்காத நிலையிலிருந்தேயும் கருதவும் உரைக்கவும் வல்லனாயினதன் காரணங் கூறியபடி

மான மில்லவர் - அமணர்; வஞ்சனையும் பொய்யும் நிறைந்தும் அது புறத்துத் தோன்றுவகை கரந்து ஒழுகுதலும், தமதுசெயல் பயன்றராமை கண்டும் திருந்தாது மேலும் அவ்வாறே செயல் செய்தலும் முதலாயின உடையவர்.

மாற்றம் ஒன்று - மாற்றம் - சொல்; "**வள்ளலார் நாமம்** சென்று தன் செவி நிறைத்தலும் செயிர்த்து"க் கூறிய (2584) முன்னை நிலையினின்று மாறுதல் பெற்ற என்ற குறிப்புப்பட இங்கு **மாற்றம்** என்றார். முன்அமணர் கூறியதும் பிள்ளையாரது **நாமம்** தான்; இங்கு

அழைக்க வருவரோ என்றும், சிவநிந்தை பேசுவோர் முதலிய''பிணக்கரைக் காணு கண்வாய் பேசாதப் பேய்களோடே'' என்றபடியுள்ள நிலையில் இங்கு வருவரோ என்றும், அவர்பால் அனுசிதம் செய்த இவர்கள் சூழலினுள் இங்கு வருவரோ என்றும் இன்னோரன்ன ஐயப்பாடுகளால் அழைத்து வருவதற்கு உபாயம் தேடவேண்டியதாம் என்பது அரசன் கருத்து; பின்னர், அழைத்த பின்னரும் பிள்ளையார் நேரே அங்கு அரசனிடம் எழுந்தருளிவாராது ஆலவாய்ப் பெருமானிடம் சென்று வேண்டித் திருவுள்ள மறிந்த பின்பே எழுந்தருளிய நிகழ்ச்சியும் கருதுக.

அழையும்-அழைத்து வாருங்கள் என்று ''ஞானம் பெற்றவர் விரும்பி நோக்கில் பிணியே யன்றிப் பிறவியும் தீரும்'' என்று உறுதி கூறிய மாதேவியாரையும் அமைச்சனாரையும் நோக்கிக் கூறியது.

அன்று அவர் உவகைபொங்கி - அன்றுவரை முன் பல காலமும் ஏங்கி அரசனையும் நாட்டினையும் சிவநெறிப்படுத்தும் கவலை கொண்டதனால் உவகையின்றியிருந்த அவர்கள், அன்று உவகை பெற்றனராதலின் அது திருவருள் பெற வருங்கால நன்மையினை நோக்கி மேன் மேலும் பொங்குவதாயிற்று.

ஆர்வத்தால்...காதல் வெள்ளத்தில் செல்வார் - உவகை பொங்கியதால் அது ஆர்வமாக விளைய, அது மேலும் முதிர்வதனால் **காதல்** வெள்ளமாயிற்று; **உவகை - ஆர்வம் - காதல்.** ஒன்றற்கொன்று மீதூரும் அன்பு நிலைகள்.

அணையை நூக்கிச் சென்ற நீர் வெள்ளம் போலும் காதல் வெள்ளம் - நூக்கு தல் - அழித்தல்; தகர்த்தல்; **அணை** - தன்னியல்பின் ஓடுகின்ற நீரினைத் தடுத்து நிறுத்தித் தேங்கும்படி செய்தல் போல, இங்கு அரசன் சைவ நெறியிற் பிறழ்ந்திருந்த செயல் இவர்களது இயல்பிற் செல்லும் சைவ ஒழுக்கத்தினைத் தடுத்து அதனைப் ''பூங்கழற் செழியன் முன்பு புலப்படா வகைகொண் டுய்க்கச்'' செய்தது (2502) என்றது குறிப்பு. இங்கு அரசன் நிலைமாறி விட்டமையாலும் ''அழையு'' மெனத் தானே ஆணைதந்தமையானும் அந்த **அணை** அழிவு பட்டது என்க.

நூக்கி - எனக்கூறியது இவர்களது அன்பின் முதிர்ச்சியால் நிகழ்ந்த செயல்களின் விளைவுகளாலே அத்தடை உடைபட்டமை குறித்தது.

காதல் வெள்ளம்-மிகுதிப்பாடு; **வெள்ளத்திற் செல்லுதல்** என்றது வெள்ளத்தின் வயமாய்ச் சென்றமை குறித்தது.

செல்வார் - செல்வாராகி; செல்வாராகிப் - பணிவாராகிச் - சார்ந்தார் என மேல்வரும் பாட்டுக்களுடன் முடிக்க. 723

2622. **(இ-ள்)** பாயுடை...நீங்க - பாயுடையினைக்கொண்ட அமணர்களாகிய பாதகர்கள் திருமடத்தின் பக்கத்திற் செய்த தீவினைச் செயலை நினைத்து உள்ளழியும் திருவுள்ளத்திற் பொருந்திய அந்தத்துன்பம் நீங்கும்படி; விருப்புறு...பணிவாராகி - விருப்பம் மிக்க விரைவினுடனே தம் நாயகராகிய பிள்ளையாரின் நல்ல திருவடிகளைப் பணிவார்களாய்;

2621. என்றுமுன் கூறிப் பின்னும் ''யானுற்ற பிணியைத் தீர்த்து
வென்றவர் பக்கஞ் சேர்வன்; விரகுண்டே லழையு'' மென்ன.
அன்றவ ருவகை பொங்கி யார்வத்தா **லணையை நூக்கிச்**
சென்றநீர் வெள்ளம் போலுங் காதல்வெள் ளத்திற் செல்வார்: 723

ஒருமையிற் கூறச்செய்தது; ஈண்டு அந் நாயனாரே வாயிலாக மெய்யுணர்வு அளிப்போர் தன்செவியினூடு கூறுதலின் அது மெய்யுணர்வே விளைத்து **மறைச் சிறுவர் - அன்னவர்** என்றும், **அருளால்** என்றும் பன்மையின் ஓதச் செய்தது; அந் நோயுடன் அமணர் சொல்லுக் கெல்லாம் அடிமைப் பட்டுக்கிடந்த அவனது மனமயக்கத்தை நீக்கி நல்லனவற்றை நாடியறியும் ஞானத்தையும் கொடுத்தது.

அகலுமேல் அறிவேன் - என்றது, அம்மையாரையும், குலச்சிறையாரையும் நோக்கிக் கூறியது; இஃது அவர்கள் **''ஞானம் பெற்றவர் விரும்பி நோக்கில் பிணியே யன்றிப் பிறவியும் தீரும்''** என்று தனது செவியினூடு கூறியதற்கு விடையாகவும், தான் மனத்துள் அமணர்களைப் பற்றி எண்ணிய கருத லளவைத் துணிபுக்கு முடிபு காட்டுவதாயும் அமைந்தது காண்க.

இந்நோயகலுமேல் - அவர் பிணி தீர்த்தலே யன்றிப் பிறவி தீர்க்கவும் வல்லர் என்பதனையும் அறிவேன் என்ற குறிப்புமாம்; **அகலுமேல்** - நீங்குமாயின். 722

மாமறைத் தலைவர்—என்பதும் பாடம்.

2621. **(இ-ள்)** என்று முன்கூறிப் பின்னும் - இவ்வாறு முன்னே சொல்லி மேலும்; யானுற்ற...என்ன - (தேவியாரையும் அமைச்சரையும் நோக்கி) நான் பொருந்திய இந்த நோயினைத் தீர்த்து வெற்றி கொள்பவர் பக்கத்துச் சேர்வேன்; உபாயம் இருந்தால் அழையுங்கள் என்று சொல்ல; அன்று அவர்...செல்வார் - அன்று அவர்கள் அணையை உடைத்துச்சென்ற வெள்ளம்போலப் பேரன்பு என்னும் வெள்ளத்தினுடன் செல்வாராகி;

(வி-ரை) என்று முன்கூறிப் பின்னும்...அழையும் என்ன - முன் கூறியது தனது உள்ளத்துணிபினை அம்மையார் அமைச்சனூர் கூறியதற்கு விடை கூறு முகத்தால் அறிவித்தது; மேற் **பின்னும் அழையும்** என்றது அவர்கட்கு உத்தரவு தந்து ஆணையிட்டது; அரசன் கருத்தொழிந் துரைமறந்து கிடந்த நிலையில் தீர்வு தேடுதற்கு அவனது ஆணையின்றியே செயல் செய்தல் அமைச்சர் கடனன்றோ? எனின்; முழுதும் உணர்ச்சி நீங்கிய நிலையன்றாதலானும், (2590) அமணர் சார்பு பற்றிக் கண்டுமுட்டு கேட்டுமுட்டு என்ற நிலையில் அரசன் நின்றமையானும் அது கடனாகாது என்க.

வென்றவர் பக்கம் சேர்வன் - என்றது இன்னமும் ஒரு படித்தான துணிவு பெறானாயும் அமணர் சார்பின் பற்றுவிடத் தொடங்கிய நிலையில் இருசார்பும் பற்றாது பொதுப்பட நின்ற மனநிலை குறித்தது.

விரகு உண்டேல் - மாமறைச் சிறுவரை அழைத்தற்கு உரிய உபாயம் உண்டானால்; **விரகு** - உபாயம்; வழி. **விரகு** - உபாயம் வேண்டப்படுவ தென்னையோ?, எனின், அரசர் செல்வத்தைப் பொருட்படுத்தி வரும் நிலையினரல்ல ராதலின் தான் சென்று கண்டு வேண்டாது

2623. மன்னவ னிடும்பை தீர **மற்றவன் பணிமேற் கொண்டே**
யன்னமென் னடையி ஞரு மணிமணிச் சிவிகை யேறி
மின்னிடை மடவார் சூழ வேற்படை யமைச்ச ஞரும்
முன்னணைந் தேகச் **சண்பை முதல்வஞர் மடத்தைச் சார்ந்தார்.** 725

இங்கு அவனுடைய உடம்பாடும் கூடிய தென்ற வேற்றுமை குறித்தற்கு இவ்வாறு பிரித்து வெவ்வேறு பாட்டுக்களிற் கூறினர்; **மற்று அவன் பணிமேற் கொண்டே** என்று மேலுங் கூறிய கருத்துமிது; **மற்று** - இதுகாறும் மாறுபட்டு நின்றவன் என்ற குறிப்புடன் நின்றது. சிறப்புப் பற்றித் தமது துயரந்தீர்தலை முன் வைத்தார்; **மேற்கொள்ளுதல்** - தாங்குதல்; மேலாக ஏற்றல்; மேலே புறப் பார்வையிற் காணும்படி தாங்குதல் என்ற குறிப்பும் தருவது காண்க; **ஏகாரம்** - பிரிநிலை; **பணியே மேற்கொண்டு** என்று பிரித்துக் கூட்டி யுரைத்தலுமாம்.

அவன் பணி - அவனதுஆணை; **பணி** - பணிந்து ஆணையிட்ட செயல்; "அழையும்" என்ற ஆணை(2621).

மடவார் சூழ - அமைச்சஞரும் முன் அணைந்து ஏகச் சிவிகை ஏறிச் சார்ந்தார்- என்க; சிவிகை ஏறிச்செல்லுதலும் மடவார் சூழச் செல்லுதலும், அந்நாள் உயர் குலத்தோரினும் வழங்கும் வழக்கு; இவை அரசியாரின் உயர்ந்த உலக நிலைக்கும் பொருந்துவன; இங்கு **மடவார்** என்றது படையேந்திய காவற் பெண்டிரும் ஏவற் பெண்டிராகிய தோழியருமாம்; அமைச்சஞர் **பரியேறிச்** சென்றமை மேற்பாட்டிற் காண்க.

வேற்படை அமைச்சஞர் - படை - அமைச்சர் நிலையில் அவர் தாங்கும் உடைவாள் முதலியவை; **படை** - படைஞர் என்றலுமாம்.

நடையினரும்-முன்னர்ப் பிள்ளையாரை எதிர் கொள்ளுதற்கு அமைச்சஞரைப் பணித்தமையே போல (2543) ஈண்டும் அவர் ஒருவரே பணி மேற்கொண்டு சென் றழைத்தல் சாலுமாயினும் அவ்வாறமையாது அன்புமேலீட்டினுல் அம்மையாரும் சென்றனர் என உம்மை எச்சப் பொருள் தந்து நின்றது.

நடையினரும்...சார்ந்தார் - அமைச்சஞர் முன் ஏகப், பின் மடவார் சூழச் சிவிகை ஏறிச் சார்ந்தார் என இம்முறையே சென்ருராயினும், நடையினரை முன்னர் வைத்துக் கூறிய அமைதி மனத்தின் விரைவினுல் அவர் முற்சென்றனர் என்ற குறிப்புப் பற்றியது.

மடத்தில்—என்பதும் பாடம். 725

2624. **(இ-ள்)** திருமடம் சாரச் சென்று - திருமடத்தினைச் சார அணுகிச் சென்ற பின்; சேயரிக் கண்ணினர்...என்ன - செவ்வரி படர்ந்த கண்களையுடைய அம்மையாரின் முன்னே இவர்ந்து வந்த குதிரையினின்றும் கீழே இறங்கி நின்ற அமைச்சஞர், "நாங்கள் வந்த தன்மையினைச் சீகாழிப் பிள்ளையார்பால் விண்ணப்பஞ் செய்வீர்களாக" என்று பரிசனத்தவர்களிடம் கூற; பரிசனத்தவரும்... உணர்த்துகின்ருர் அப் பரிசனங்களும் உள்ளே சென்று விண்ணப்பிக்க ஏற்ற செவ்வியினை அறிந்து சொல்வார்களாகி,

2622. பாயுடைப் பாத கத்தோர் திருமடப் பாங்கு செய்த
தீவினைத் தொழிலை நோக்கி யுள்ளழி திருவுள் ளத்தான்
மேயவத் **துயர நீங்க** விருப்புறு விரைவி னோடு
நாயகப் பிள்ளை யார்தந் நற்பதம் பணிவா ராகி. 724

(வி-ரை) பாயுடைப் பாதகத்தோர்-*பாயுடையினை உடைய பாதகர்கள்;* ***பாயுடை*** *- பாயாகிய உடை.*

பாங்கு *- பக்கத்தில்;* ***தீவினைத் தொழில்*** *- தீமையுடைய பாவச் செய்கை. தீயினுற் செய்த தொழில் என்ற குறிப்புமாம்.*

உள்ளழிதல் *- உள்ளுடைதல்; உள்ளமெல்லாம் நைதல்.*

உள்ளழி திருவுள்ளத்தால் மேய அத்துயரம் *- அமணரது தீச்செயல் மனத்தை வருத்த அது துயரம் விளைத்து அகம் புறமாகிய கருவிகளை யெல்லாம் துன்பமயமாக்கி யலைக்க நின்ற நிலை. "நாம் மாய்வதே" என மயங்கிப் (2606), பதைத்த (2608) நிலை முன் சொல்லப்பட்டது.*

துயரம் நீங்க விருப்புறு விரைவு *- தீச்செயலால் விளைந்த விளைவினை நீக்கத் தீர்வு அகப்படக் கண்டபோது அதனைப் பெறுதலின் நிகழும் மனவேகம். "உண்ணிறை விருப்பினோடும்" (826) என்றது கருதுக.*

நாயகப் பிள்ளையார் - நாயகன் *- நியமஞ் செய்து நடத்துபவன்; தலைவன்.*

நற்பதம் பணிவாராகி *- "இதற்குத் தீர்வு பிள்ளையாரருளே" (2617) என்று துணிந்தாராதலின், அவ்வருள் பெறுதல் அவர் பதம் பணிந்தாலன்றிப் பெற இயலாமையின், அச்செயலின் முற்பட்டுச் சென்ருர் என்பதாம்.* ***724***

2623. **(இ-ள்)** மன்னவன்...மேற்கொண்டே - அரசனது துன்பம் தீரும் பொருட்டு மற்று அவனது பணியினை மேற் கொண்டவர்களாகியே; அன்னமென் நடையினுரும் - அன்னம் போன்ற மெல்லிய நடையினையுடைய மங்கையர்க்கரசியாரும்; அணிமணி...ஏக - அழகிய மணிகளிழைத்த சிவிகையின் மேல் ஏறிக்கொண்டு, மின் போன்ற இடையினையுடைய காவற் பெண்கள் சூழ்ந்து வரவும், வேற்படையினையுடைய அமைச்சனுராகிய குலச்சிறையாரும் முன்பு அணைந்து செல்லவும்; (இவ்வண்ணமாகச்) சண்பை முதல்வனுர் மடத்தைச் சார்ந்தார் - சீகாழித் தலைவராகிய பிள்ளையாரது திருமடத்தைச் சார்ந்தனர்.

இவ்வைந்து பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிவுகொண் டுரைக்க நின்றன.

(வி-ரை) மன்னவன் இடும்பை தீர மற்று அவன் பணி மேற்கொண்டே- அத்துயரம் நீங்கப் - பணிவாராகி" (2622) என்று முன் உரைத்த ஆசிரியர், இங்கு "மன்னவ னிடும்பை தீர" என்றருளிய தென்னை? எனின்; முன் சொன்னமை தமது பொருட்டும், இங்குக் கூறியது மன்னவன் பொருட்டும் என இரு பொருளும் கருதிச் சென்றனர் என்க; இதற்கு முன் இவர்கள் செயல் யாவும் இவ்விரு பொருளுங் கருதிச் செய்தனவே யாயினும் (2557 -2570 - முதலியவை பார்க்க). அவை யெல்லாம் அரசனது மன வொற்றுமையியைபு இல்லாது தாமே செய்தன;

2625. ''**பாண்டிமா தேவி யாரும் பரிவுடை யமைச்ச ருரு**
மீண்டுவந் தணைந்தா''ரென்று விண்ணப்பஞ் செய்யச், சண்பை
யாண்டகை யாரு ''**மீண்ட வழையு**''மென் றருளிச் செய்ய,
மீண்டுபோந் தழைக்கப் புக்கார் **விரைவுறும் விருப்பி** னோடும். 727

2625. **(இ-ள்)** *பாண்டிமாதேவியாரும்...விண்ணப்பஞ் செய்ய-பாண்டிமா தேவியாராகிய அம்மையாரும், அன்புடைய அமைச்சனாராகிய குலச்சிறையாரும் மீண்டு வந்து அணைந்துள்ளார்கள் என்று விண்ணப்பம் செய்ய; சண்பை...அருளிச் செய்ய-அது கேட்ட சீகாழி ஆண்டகையாரும் ''அவர்களை உள்ளே இங்கு அழையுங்கள்'' என்று அருளிச் செய்யவே; மீண்டு போந்து அழைக்க - அப்பரிசனங்கள் மீண்டு சென்று அவ்வாறே அவர்களை வரும்படி அழைக்க; விரைவுறும் விருப்பினோடும் புக்கார் - விரைவுடைய விருப்பத்தினோடும் உள்ளே புகுந்தனர்.*

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) ''*பாண்டிமாதேவியாரும்...அணைந்தார்*'' என்று - இது பரிசனங்கள் பிள்ளையாரிடம் விண்ணப்பித்தது. மாதேவியாரை முன் வைத்துக் கூறியது சிறப்பும் அமைதியும் பற்றி; **பரிவுடை அமைச்சனார்** - இவர்கள் வந்த காரணம் மாதேவியாரைப் பொறுத்ததாம் என்றும், அதனை நிறைவாக்கும் வகையில் அவர்கள்பால் பரிவு காரணமாக அமைச்சனார் உடன் அணைந்தனர் என்றும் குறிப்புப் பெறக் கூறிய நயம் காண்க; அடைமொழியின்றித் தேவியாரையும்,

பரிவுடை என்று அமைச்சனாரையும் கூறியது இக்கருத்து; **பரிவு** - அரசர் காரியத்தினை நிறைவாக்க மேற்கொண்ட அன்பு.

மீண்டு வந்து அணைந்தார் - முன் வந்ததேயன்றி **மீண்டும்** என எச்சவும்மை தொக்கது; முன்னை நாள் வந்து அணைந்து வரவேற்றுத் திருமடமுங்காட்டி எழுந்தருளச் செய்தவர்கள் **மீண்டும்** வந்தனர். எனவே இதனுள் விரைவுக் குறிப்புப்பட்டதொரு விசிட்டச் செய்தி யுண்டென்பது பெறவைத்த நயம் காண்க; முன்னை நாள் வந்தணைந்தமை அமணர்களால் விளைந்த பொதுத் தீமைபற்றி நிகழ்ந்தது; இப்போது மீண்டும் வந்தணைந்தமை அதனுடன் அமணரால் முன்னிரவில் நேர்ந்த சிறப்புத் தீமையின் விளைவு பற்றி நிகழ்ந்தது என்ற தொடர்ச்சிக் குறிப்பும் காண்க; இரவின் நிகழ்ச்சியும் விளைவு குறித்த பிள்ளையாரது அருளாணையும் பரிசனங்கள் அறிவார்களாகலான் என்பது; இவ்வாறன்றி உம்மை விரிக்காமல் **மீண்டு வந்து** என்றே கொண்டு முன்வந்தவாறன்றி அமணர்களது தீமையினின்று அரசன் மீட்சிபெறும் நிலையால் அவனது உடன்பாடு கொண்டுவந்து என் றுரைத்தலுமாம். **மீண்டு**-மீண்டமையால் என்று காரணக்குறிப்புப்பட உரைத்துக்கொள்க.

ஆண்டகையாரும் - இனியன அல்லவற்றையும் இனிதாகக் கொண்டு நல்கும் அருட்டன்மையும் பேராற்றலும் ஆண்டகைமை எனப்படும்.

ஈண்ட - இங்கு வரும்படி; **ஈண்டுதல்** - அணிமையாதல்; விரைய என்றலுமாம். ''ஈண்டநீ வருவாயோலம்'' *(432)*.

2624. திருமடஞ் சாரச் சென்று, சேயரிக் கண்ணி ஞார்முன்
வருபரி யிழிந்து நின்ற வமைச்சனார், "வந்த பான்மை
சிரபுரப் பிள்ளை யார்க்கு விண்ணப்பஞ் செய்வீ" ரென்னப்,
பரிசனத் தவரும் புக்குப் **பதமறிந் துணர்த்து கின்றார்;** 726

(வி-ரை) சார - *அணிமையாக;* **சேயரிக் கண்ணினார்** - *மங்கையர்க்கரசியார்; செவ்வரி படர்ந்திருத்தல் மாதர் கண்ணழகியல்புகளுள் ஒன்று.*

முன்வரு பரியிழிந்து நின்ற - *அமைச்சனார் பரியின்மிசை ஏறி வந்தமை இங்குக் கூறினார்; அம்மையார் சிவிகை யேறிப் போந்த பின்னர்த் தாம் பரியேறி, முன்னர் வந்து அம்மையார் திருமடத்தினைச் சாருமுன் வந்து பரியினிழிந்து நின்றனர் என்ற படி அறிந்துகொள்க. இக்கருத்தினைப் புலப்படுத்தவே அம்மையார் "சிவிகை யேறி" என்ற முன் பாட்டில் இதனைக் கூறாது இப்பாட்டிற் கூறியது மென்க;* **இழிந்து நின்ற** *என்ற கருத்தும் அது காண்க.*

"வந்த...செய்வீர்" என்ன - இது *திருமடத்தின் வாயில் காப்போராகிய பரிசனங்களை நோக்கி அமைச்சனார் கூறியது; "பரிசனத்தவரை நோக்கி" என்பது மேற் கூறுதலின் உய்த்துணர வைத்தார்; சொற் சுருங்கக் கூறும் அழகும் அமைதியும் பற்றி; மேல்வரும் பாட்டினும் (அவரும்) "மீண்டு போந்து அழைக்க" என்ற விடத்தும் இவ்வாறே கூறுதல் காண்க.* இவை அமையத்துக் கேற்றபடி செயல் நிகழ்ந்த விரைவும் குறித்து நின்றன. முன் அறிவிப்புச் செய்ய விண்ணப்பித்து விடை பெற்று உட்செல்லுதல் அந்நாளிலும் பெரியோரிடத்தும், அரச சமூகத்தும், இவை போன்ற உயர் விடங்களிலும் வழக்கு என்பது முன்னரும் கூறப்பட்டது. *2507 - 2508 - 2509* முதலியவை பார்க்க.

பதம் அறிந்து-இன்முகச் செவ்வியினை அறிந்து; இஃது செய்தியறிவிக்கும் ஏவலாளர் தலைவரின் செவ்வி நோக்கி யறிவித்தல் வேண்டு மென்னும் தகுதி குறித்தது; "நகைமுகச் செவ்வி நோக்கி" *(2509)* என்று முன் கூறியதும் காண்க.

உணர்த்துகின்றார் - பிள்ளையார் - உணரும்படி கூறுவாராகி; முற்றெச்சம்; நிகழ்காலத்தாற் கூறியது காலவழுவமைதி; உணர்த்துகின்றாராகி - விண்ணப்பஞ் செய்ய என மேல்வரும் பாட்டுடன் முடிக்க.

விண்ணப்பஞ் செய்வீர் என்று கூறிய மரபு காண்க; மேலும் "விண்ணப்பஞ் செய்ய" என்றதும் காண்க. பிள்ளையாரது சந்நிதானத்தை இறைவரது திருமுன்பேயாகக் கருதிய நிலை காட்டப்பட்டது.

வந்த பான்மை - மாதேவியாராகிய அம்மையாரும் தாமும் வந்துள்ள தன்மையினை; **வந்த** என்பதில் எழுவாயும், **பான்மை** என்றதில் இரண்டனுருபும் தொக்கன. இவையும் விரைவுக் குறிப்பு. **செய்தி** என்னது **பான்மை** (தன்மை) என்று பண்பு குறித்துக் கூறினார்; குறிப்பினால் நிகழ்ச்சிகளை உணர்ந்து கூறும் அறிவுடைப் பரிசனங்கள் என்பது குறித்தற்கு.

வேறு

2626. **ஞானத்தின் றிருவுருவை, நான்மறையின் றனித்துணையை**
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்,
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்குங்
கானத்தி னெழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள். 728

மீண்டு போந்து அழைக்க - விண்ணப்பஞ் செய்ய - *இரண்டு செயலுக்குரிய பரிசனங்கள் என்ற எழுவாய் முன் பாட்டினின்றும் கூட்டுக.*

விண்ணப்பித்தல் *பிள்ளையார் திருமுன்பும்,* ***அழைத்தல்*** *அம்மையார் அமைச்சனார் திருமுன்பும் நிகழ்ந்தன.*

விரைவுறும் விருப்பினோடும் புக்கார்-*என்க; விருப்பத்தினுள் விரைவு முந்தியதென்பது குறிப்பு;* ***விரைவு***-*அமணர் செய்த தீச்செயலினுக்குத் தாம் மனமிக அழிந்த நிலையை விண்ணப்பிக்கவும், அத்தீச் செயலின் உட்படாத பிள்ளையாரது திருமேனி நலம் கண்டு மகிழவும் போந்தது; அதன் பின்னராக, அதுபற்றி வந்த மன்னவன் நோயினையும் தங்கள் இடும்பையினையும் விண்ணப்பிக்கவும் விரைவு உண்டாயது என்க. இஃது அவர்கள் பிள்ளையாரைக் கண்டு வீழ்ந்து நெடிதுயிர்த்து உரைகுழறிப் பிள்ளையாரது திருவடி பற்றிக் கிடந்த நிலை (2628) யினானும், பிள்ளையார் வினவியதற்குக் கூறிய விடை (2630 – 2631) யினானும் அறியப்படும்.*

மிக்கார் - புக்கார்-*மிக்கார்களாகிய அன்னமென் னடையினாரும் அமைச்சனாரும் திருமடத்தினுள்ளே பிள்ளையாரது திருமுன்பு புகுந்தனர்.* ***மிக்கார்*** *- வினைப் பெயர்;* ***புக்கார்*** *என்பதனை வினையெச்சமாக்கி மேல்வரும் பாட்டில்* ***கண்டார்கள்*** *என்றதனோடு முடித்தலுமாம்*
727

2626. **(இ-ள்)** ஞானத்தின் திருவுருவை - சிவஞானத்தினாலமைந்த திருவுருவத்தினையுடையவரை; நான் மறையின் தனித் துணையை - நான் மறைகளினது ஒப்பற்ற துணையாயினாரை; வானத்தின்... கொழுந்தை - வானத்தின் மேலேயன்றி மண்ணுலகத்தின்கண் வளர்மதியின் கொழுந்துபோல்வாரை; தேன்நக்க...எழு பிறப்பை - தேன் ஊறி வழிகின்ற கொன்றை மலரைச் சூடிய சிவந்த சடையினையுடைய சிவபெருமானின் சீர்களைத் தொடுத்தெடுத்திசைக்கின்ற கானத்தின் எழு பிறப்புக் கிடமாகிய பிள்ளையாரை; கண்களிப்பக் கண்டார்கள் - கண்கள் களிப்படையும்படி கண்டார்கள்.

(வி-ரை) அம்மையாரும் அமைச்சனாரும் ஆளுடைய பிள்ளையாரை அன்று கண்ட காட்சியினை அவர்கள் மனத்துட்கொண்ட அவ்வாறே எடுத்துக் காட்டுவது இத்திருப்பாட்டு. இவ்விருவரும் தனித் தனியும், ஒருங்கேயும், முன்னை நாளும் கண்டனர்; அவ்வாறு கண்டநிலை வேறு; இடையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளாலும் அவைபற்றி இவர்கள் மனத்தினுள் எழுந்த பலவேறு வகைப்பட்ட எண்ணங்களாலும் இங்குக் கண்ட நிலை வேறு என்பதனை விளக்கமுறக் கூறியபடி.

இனி, முன்கண்ட காட்சி பொதுக் காட்சியும், இங்குக் கண்டது சிறப்புக் காட்சியுமாம்; சிறப்பு, பொதுவினைத் தன்னுளடக்கி விரித்துக் காட்டுமாதலின் முன்னர் விரிக்காது ஈண்டு விரித்தார் என்க.

அன்றியும், இங்குக் கண்ட இந்நிலையே எழுந்தருளிப் பிள்ளையார் - திருவாலவாய்ப் பெருமானைக் கும்பிட்டு, அவரது திருவருட் குறிப்பு நோக்கம்பெற்று அரசனுக்குக் காட்சியருளியும் நோய் நீக்கியும் ஞானோபதேசம் செய்தும் ஆட்கொண்டருள் வாராதலானும், இந்நிலையே மதுரைமா நகரினுள்ள பலதிறப்பட்ட மக்களும் அமணர்களும் கண்டு தத்தமது தரத்திற் கேற்றவாறு பயன்பெறக் காட்சியருள்வா ராகலானும், இவ்வாறு இவர்கள் கண்டதுபற்றி விரித்தருளினூர் என்றலுமாம். ''எழுச்சியிற் காட்சிபெற்றார், நண்ணிய சமயம் வேறு நம்பினரெனினும் முன்பு, பண்ணிய தவங்க ளென்கொல் பஞ்சவன் றஞ்ச மேவிப், புண்ணிய மூர்த்தி வந்து மதுரையிற் புகுத வென்றார்'' (2642) என்றும், ''தென்ன னொடு வாழவந் தணைந்தார்'' (2700) என்றும், ''சிவிகைமேற் பிள்ளையார் தாம் வருமழ கென்னே யென்பார் வாழ்ந்தன கண்கள்'' (2701) என்றும், மேலும் வருவன காண்க.

அன்றியும், ஞானோபதேசத்தால் அரசனையும் நாட்டினரையும் உய்விக்கக் குரு மூர்த்தியாக எழுந்தருளும் எல்லையாதலின் இவ்வாறு கண்டார்கள் என்ற கருத்தும் காண்க. இவ்வாறே, பின்னரும், திருநல்லூர்ப் பெருமணத்தில் புண்ணியத் திருமணத்தின் வந்தார் யாவருக்கும் ஞான மெய்ச்சொல் உபதேசித்து முத்திப் பெரும்பேறு தந்தருள வந்தருளும் காட்சியினையும் விரித்துக் கூறுதல் காண்க. இங்குப் பிள்ளையார் ஞானதேசிகராய் எழுந்தருள்கின்றார் என்பது பாண்டியனாகிய சற்சீடனுக்கு, ''வினைகளொத்துத் துலையென நிற்ற லாலே'' ''ஆல வாயிலான் பால தாயினார் ஞால மாள்வரே'' (தேவா) என்பது முதலாகப் பாவனா தீக்கை, சட்சுஷீ தீக்கை, பரிச தீக்கை, வாசக தீக்கை முதலியன செய்து, வைகைக் கரையையே தீக்கை மண்டபமாக வைத்து, ''முன்னைவல் வினையு நீங்கி முதல்வனை யறியும் தன்மை'' தந்து திருவடியும் சூட்டும் வரலாறுகள் இங்குக் கருதத் தக்கன; இக்கருத்தே பற்றி ''மன்ற பாண்டியன், கேட்பக் கிளக்கு மெய்ஞ்ஞா னத்தின், ஆட்பா லவர்க்கரு ளென்பதை யறியே'' (இருபா விருபஃது-2) என்றார் ஞானநூ லுடையாரும். இவை ஞானோபதேசமாதல் மேல் ஆசிரியர் தாமே ஆண்டு விரித்தருளுமாற்றால் உணர்க. இதுவரை வரலாறு கூறிவந்த யாப்பினை மாற்றி, நாற்சீரடிக் கொச்சகக் கலிப்பாவினால் மேல் வரலாறு கூறத் தொடங்கும் ஆசிரியரது திருவுள்ளக் கருத்தும் கருதுக.

இனி, **ஞானத்தின் றிருவுரு** முதலாக **சீர்தொடுக்கும் கானத்தின் எழுபிறப்பு** என்றது வரை நான்கும் முறையே ஞானம், யோகம், கிரியை, சரியை என்னும் சைவ நன்னெறி நான்கனையும் குறிப்பினாலுணர்த்தி நிற்கும் வகையான் இந் நான்கு நெறிகளால் இறைவனையடையும் வழிகாட்டியருளும் மெய்க் குரவராகிப் பிள்ளையார் நின்ற நிலை குறித்தலும் காண்க.

இன்னும் இவ்வாறு பற்பல அரிய குறிப்புக்களும் பெறவைத்த இத்திருப் பாட்டினருமை அனுபவமுடைய தேசிகர்வாய்க் கேட்டறிந்து சிந்திக்கத் தக்கது.

ஞானத்தின் திருவுரு - சிவஞானத்தினாலமைந்த திருமேனியை உடையவர். உணர்வரிய மெய்ஞ்ஞானம்'' (1967) **தாமுணர்ந்த** தவமுதல்வராதலின் ஏனையோர் போலப் பசுபாச

ஞானங்களாலன்றிப் பதிஞானத்தானே திருவடியை எப்போதும் மறவாதுகண்டு கொண்டிருப்பவர் என்பது; அத்திருவடி நிறைவாகிய மெய்ஞ்ஞானத்தாலே பிள்ளையார் முற்று முணர்ந்த நிலையுடையார் என்பது முன்னர் "வேயுறு தோளி பங்கன்" என்ற பதிகக் கருத்தானும், அதனுட் **"புத்தரொ டமணை வாதி லழிவிக்கு மண்ண றிருநீறு செம்மை திடமே"** என்றதனாற் சிறப்பாகவும், மற்றும் பலவாற்றானும் விளக்கமாகவும் அறியக் கிடத்தல் காண்க; இவ்வாறு காலங்கடந்த முற்றுணர்வாகிய சிவமெய்ஞ்ஞானமே எல்லாவல்ல பேராற்றலுடையதாதலின் அது தம் வலிய இடர்களை யெல்லாம் நீக்கி யுய்விக்க வல்லதாம் என்பதும் குறிப்பாகக் கண்டனர் என்க. "உணர்வரிய, காலங்கள் செல்லாத காத லூனி னீக்கி, காலங்கண் மூன்றினையுங் கண்டு" (களிற்றுப்படி. 31). இக்கருத்தினைப் பின்னர் "ஒருநீ நவின்செ லாது நிற்குமோ வோலை யென்பார், நீடிய ஞானம் பெற்றார் நிறுத்தவும் வல்ல ரென்பார்" (2705) என்று பிள்ளையாரை இவ்வாறே காட்சிபெற்ற ஆலவாய் மக்களது வாக்கில் வைத்து ஆசிரியர் உணர்த்துதலும், "ஏகமாஞ் சிவமெய்ஞ்ஞான மிசைந்தவர்" (புரா 1237); "அலகின் மெய்ஞ் ஞானத் தெல்லை யடைவுறுங் குறியால்" (புரா-1243); "ஞானமெய்ந் நெறி தான்...நமச்சிவா யச்சொ லாமென்று...அருள்செய்து" (மேற்படி 1248) என்பன வற்புறுவுணர்த்துதலுமாம். "போதநிலை முடிந்தவழி" (மேற்படி 1253) என்று முடித்துக் காட்டுதலும் காண்க.

நான் மறையின் தனித் துணையை - சிவஞானத்தின் துணையானே மறை வழக்கினையும் சைவ நெறியினையும் சமணர் வஞ்சனையினின்றும் மீட்டு ஓங்கத் துணை செய்ததலை ஈண்டு இவர்கள் வேண்டியதாதலின், அதனை அடுத்து **நான்மறையின் றனித்துணை**யாகக் கண்டனர்; "வேத வேள்வியை நிந்தனை செய்துழல், ஆத மில்லி யமண்," "மறைவ ழக்கமிலாத மாபாவிகள்" "ஓதி யோத்தறி யாவமண்" "அழல தோம்பு மருமறை யோர்திறம் விழல தென்னு மருகர்" "நீற்று மேனிய ராயினர் மேலுற்ற, காற்றுக்கொள்ளவு நில்லாவமணர்" முதலாக வரும் திருவாக்குக்கள் காண்க. **தனி** - ஒப்பற்ற; தனிமுதலாகிய; துணை செய்வாரைத் ***துணை*** என்று உபசரித்தார்.

வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர் மதிக்கொழுந்தை - மிசையன்றி - மிசை உள்ள மதிபோலன்றி; அதற்குள்ள குறைபாடுகள் இன்றி என்பது குறிப்பு. மேல் **வளர்** என்ற குறிப்புமது; வான்மதியானது வளர்தல் குறைதல் உள்ளது-இஃது என்றும் வளர்வது; **அது** பௌதிக ஒளி தருவது-இது ஞான ஒளி தருவது என்பன முதலாகக் கண்டு கொள்க. **கொழுந்து** - இளமையும், இனி 16 கலையளவும் நிறைந்தது மாறுத நிறைவு பெறும் தன்மையும் குறிப்பு. மதிதரும் ஊன வொளி போலன்றி ஞானவொளியும் ஞானவெற்றியும் ஈண்டுக் கருதப்பட்டன. மேல் "நிலத்திடை வானினின்று நீளிரு ணீங்க வந்த கலைச்செழுந் திங்கள் போலுங் கவுணியர்" (2649) என்பதனுலும் காண்க. "தண்ணிறை கதிரே கலைவளர் மதியே" (1990) என்று தொடக்கத்திற் றெண்டர்களும் தோணிபுரத்தவர்களும் கண்டு துதித்ததும் இக்குறிப்பு.

தேன்நக்க...எழுபிறப்பை. தேன்நக்க - தேன் துளித்து விரிகின்ற; **நகுதல்** - விரித்தல் என்னும் பொருட்டு; அரும்பு விரியும் பருவம் நகைத்தல் போன்றிருத்தலின் இவ்வாறு கூறுதல் வழக்கு; இறைவரது திருமேனியில் அணியப் பெறுதலால் மகிழ்கின்ற என்பதும் குறிப்பு; **"முருகுயிர்க்க நகைக்கும் பதத்**தினுடன் பறித்த அலகின் மலர்கள்" (1023); நல்ல கமழ்முகை

யலரும் வேலைத், தெய்வ நாயகர்க்குச் சாத்தும் திருப்பள்ளித் தாமம்'' (559) என்றவை காண்க. திருமுடியிற் சாத்தும்போது தேன்பிலிற்ற மலர்கின்ற என்பது.

கொன்றை - சடையார்-சீர்-தொடுக்கும் கானம் - சடையார் சீர் என்றதனுல் சடை சிவபெருமானுக்கே யுரிய சிறப்படையாளமாதலும், **கொன்றையும்** அவ்வாறே குறித்தலானும், சிவபெருமானுடைய சிறப்புக்களையே யன்றிப் பிறிதொன்றும் பேசாத தொடையின் கானம் என்றவாறாயிற்று; ''மதுமலர் நற் **கொன்றையா** னடியலாற் பேணு'' ''கைச்சிறு மறியவன் கழலலாற் பேணுக் கருத்து'' (தேவாரம்) என்றற் றொடக்கத்த திருவாக்குக்கள் காண்க. **கொன்றை மலர்** - பிரணவத்தினைக் குறித்தலால் ''ஓமெனும் பதத்தில் வேத மாதியுற்பவிக்கு மாலவித்தினுதிக்கு மாபோல்'' என்றபடி பிள்ளையார் தொடுத்த கானம் வேதமே யாதல் குறிக்கப்பட்டது.

கானத்தின் எழுபிறப்பு - கானம் எழுவகைப்பட்ட சுரங்களிற் பிறந்து விரிவதாதலின் எழுபிறப்பு என்ருர். ''பாலையீரேழு கோத்த பண்'' என்பது முதலாக அறியப்படும் முதற் பண்களும், இவற்றின் **வழிப்பிறந்து** வருவனவாகிய பண்களின் பேதங்களும் அடக்கக் **கானத்தின் எழுபிறப்பு** என்ருர்; இவற்றை மேளகர்த்தா இராகங்கள் என்றும் சன்னிய ராகங்கள் என்றும் கூறுதல் நவீன வழக்கு; **கானம்** என்பது **காந்தர்வ வேதம்** என உபவேதங்கள் நான்கனுள் வைத்து எண்ணப்படும். இஃது எல்லாக் கடவுளர்க்கும் உவகை வரச்செய்யும் என்ப; சிவனை யல்லாத பிறதெய்வங்களையும், மக்களையும், ஏனையுயிர்களையும் பாடி வரும் பாட்டுக்களுக்குப் பயன்பட்டுத் தான் பயன் பெருது வருந்தித் தவங்கிடந்த **கானம்** என்ற தெய்வம் ஏழு பிறவியும் பிறந்து இறுதியில், **''கொன்றையா னடியலாற் பேணு''**-வெம்பிரானுராய திருஞானசம்பந்த நாயனுரது திருவாக்கினின்றும் போந்த திருப்பதிகங்களுட் பொருந்தி உறுதிபெற்ற தென்ற குறிப்பும் **கானத்தினெழு பிறப்பு** என்றதனுலும், **எழு** என்றதனுலும், **''கொன்றைச் செஞ்சடையார் சீர் தொடுக்கும்''** என்று உடம்பொடு புணர்த்தியோதிய குறிப்பினுலும், பெறப்படும்; **எழு** - இங்குத் தீவினை தீர்த்து எழுவிக்கும் என்ற குறிப்புமாம்; **சீரினையே** என்ற பிரிநிலை யேகாரம் தொக்கது.

தேனக்க மலர்க் கொன்றை என்றும் - **தேனக்க கானம்** - என்றும் இரட்டுற மொழிந்துகொள்க; **எழுபிறப்புக் கானத்தின்** - என்று மாற்றியுரைக்கவும் நின்றது.

கண்களிப்பக் கண்டார்கள் - கண்களிப்ப - களித்தல் - உயிரின் உணர்வு நிகழ்ச்சி, கண்ணுகிய புற இந்திரியமும் மனமும் ஆகிய இவற்றுடன் ஆன்மா இயைந்து கண்ட காட்சியினுல் உயிர் களிப்பையடைந்தது என்க; ''அவற்றி னுன் ஆன்மா ஒற்றித்துக் காணினல்லது அவை ஒன்றையும் விடயியலா ஆகலான், ஐயுணர்வுகள் ஆன்மாவா லுணரும்'' என்ற சிவஞானபோதம் 5-ம் சூத்திரக்கருத்துக் காண்க. ஈண்டுக் கண் என்ற பொறியின்வழி உயிரில் விளைந்த நிகழ்ச்சியாகிய களிப்பினைக் கண்ணின் நிகழ்ச்சியாக உபசரித்தார்.

இத்திருப்பாட்டின் தொகைக்குறிப்பாவது: ''செங்கண்விடையார் திருமலர்க்கை தீண்டப்பெற்ற சிறுவனுர், அங்கண் **மாயை யாக்கையின்மே லளவின்** றுயர்ந்த சிவமயமாய்ச்-சூழ்ந்தவொளியிற் றேன்றினுர்''(1260) என்று சேய்ஞலூர்ப் பிள்ளையாரைக் கண்டதுபோல யாவர்க்குந் தந்தைதா யெனுமவரிப் படியளித்தா, ராவதனு லாளுடைய

2627. கண்டபொழு **தமண்கொடியோர் செய்தகடுந் தொழினினைந்தே**
மண்டியகண் ணருவிநீர் பாயமலர்க் கைகுவித்துப்
புண்டரிகச் சேவடிக்கீழ்ப் பொருந்தநில முறவிழுந்தார்
கொண்டகுறிப் போடுநெடி துயிர்த்தழிந்த கொள்கையராய், 729

பிள்ளையாரும், தாவிறனிச் சிவஞான சம்பந்தருமாய்க் கலைஞானமு முணர்வரிய மெய்ஞ்ஞானமு முணர்ந்தாரையும், அச்சிவஞானத்தின் **திருவுருவே***யாகக் கண்டார்கள் என்றும்; அச்சிவஞானமே இறைவனருளிய மறைகளின் விளக்கத்துக்கு இடையூறு நேர்ந்தபோது அது வராமற் காக்கும்* **தனித்துணை** *யாவதென்றும், மண்ணில் வந்து பிறவி வெப்பந் தீர்த்துத் தண்ணிய ஞானவொளி செய்யும்* **மதிக்கொழுந்து** *போன்றார் இவரென்றும்; இவர் அவ்வாறு துணை செய்தருளுதல் சடையாருடைய சீர்களையே பாவும் திருவாக்குக்களால் ஆவதாதலின் அந்தக்* **கானத்தின் எழுபிறப்பு** *இத்திருவுருவமே என்றும் இவ்வாறு கருத்துட் கொண்டு களித்தனர் என்பதாம். இஃது அவர் நிலைக்கேற்றவாறு அருளும் திருவருட் குறிப்புணர்த்தக் கண்ட காட்சி என்க.*

ஞானத்தின்றிருவுரு - *ஞானத்தினாலமைந்த திருவுரு; மூன்றும் வேற்றுமை யுருபும் பொருளும் உடன்றொக்க வழிச், சாரியைகள் தொகாது வந்தன.*

உண்மையுணர்ந்து பிழம்புணரப்படாத பண்புகளுள் கண்ணீரும் முலைப் பாலும் போல் பிள்ளையாரது திருமேனியும் மெய்ஞ்ஞானத்தினாலமைந்தது என்பதாம். அருண் மெய்ஞ்ஞானம் பெற்றாருடைய மாயேயவுடலம் பகல் விளக்குப் போல அவ்வருண் ஞானத்துள் மறைந்து அதனுளடங்கித் தான் புலப்படாது நிற்குமாதலின் பிள்ளையார் திருமேனி ஞானத்தினாலமைந்ததேயாம். முன்னரும் "பேருணர்விற் பொலிகின்ற பிள்ளையார்" என்றதும் **728** *ஈண்டுணரற்பாற்று.*

2627. **(இ-ள்)** கண்டபொழுது...நினைந்தே - அவ்வாறு கண்டபோது அமணராகிய கொடியவர்கள் செய்த கொடிய தொழிலை நினைந்தே; மண்டிய கண் அருவி நீர்பாய - கண்களினின்றும் அருவிபோல மிகுந்த நீர் சொரிய; மலர்க்கை குவித்து - மலர் போன்ற கைகளைக் கூப்பி; புண்டரிக...விழுந்தார் - *(பிள்ளையாருடைய)* தாமரை மலர்போன்ற சிவந்த திருவடிகளின்கீழே பொருந்தும்படி நிலமுற வீழ்ந்து வணங்கினவர்களாய்; கொண்ட.... கொள்கையராய் - உட்கொண்ட குறிப்பினுடனே பெருமூச் செறிந்து மனமழிந்த *நிலையினர்களாய்;*

2627-வது பாட்டினைக் கொள்கையராய் - நிலமுற விழுந்தார் என்று கூட்டி முடித்து, ஏனை நான்கும் வேறு முடிபாகக் கூட்டி உரைப்பினுமிழுக்கில்லை.

(வி-ரை) கண்டபொழுது...நினைந்தே - கண்களிப்பக் கண்ட காட்சியானது இத்தகைய பிள்ளையார்பால் இத்தகைய கொடுந்தொழில் செய்து தீமை விளைத்தனரே என்ற எண்ணத்தை உடனே தோற்றுவித்தது; அது தோற்றவே காட்சியிற்பெற்ற களிப்பினை உடனே அடியோடு மாற்றியதன்றி அதனினும் பன்மடங்கு அதிகமாகிய கவலையினையும் வருத்தத்தினையும் கடல்போல விளைத்தது; இது குறிக்கவே கண்டதனால் விளைந்த களிப்பினை ஒருபாட்டானும்

2628. **உரைகுழறி மெய்ந்நடுங்கி** யொன்றுமறிந் திலராகித்
தரையின்மிசைப் **புரண்டயர்ந்து சரணகம லம்**பற்றிக்
கரையில்கவ **லைக்கடற்கோர் கரைபற்றி னார்போன்று**
விரைவுறுமெய் யன்பினால் விடாதொழிவார் தமைக்கண்டு, 730

அதனைத் தொடர்ந்து நிகழ்ந்த கவலையினை இரண்டு பாட்டுக்களானும் கூறிய கவிநயம் காண்க. **கண்டபொழுது - நினைந்தே** என்றதனாற் களிப்பக் கண்ட காட்சியே மேல் நினைவுக்குக் காரணமாயிற்று என்று குறித்தார்; **கொடியோர் செய்த கடுந்தொழில்** - செயல் செய்தாரும் கொடியார் அவர் செய்த செயலும் மாபெருங் கொடுமையுடையது என்றபடி.

கண்ணீர் பாய்தல் - கைகுவித்து நிலமுற வீழ்தல் - நெடிது உயிர்த்தல் - அழிதல் - இவை மனத்துள் நிகழ்ந்த வருத்தம் கவலை முதலிய மிகுந்த துன்பங்களின் மெய்ப்பாடுகள்.

கொண்ட குறிப்போடு - கொள்கையர் என்றவை இக்கருத்தை விளக்குவன. **குறிப்பு**-முன்கூறியபடி எழுந்த மனநிகழ்ச்சிகளின் தோற்றம்; **கொள்கை** - கொள்ளப்பட்ட செயலுக்காகி வந்தது.

மண்டிய - நீர் என்று கூட்டுக. **மண்டுதல்** - மிகுதல்.

அருவி போன்றதனை **அருவி** என்றதுபசாரம்.

மலர்க்கை - உவமத்தொகை; மலர்க்கை என்றதற்கேற்பப் **புண்டரிகச் சேவடி** என்றார்; திருவடியைத் தீண்டிப் பூண்டுகொள்ளும் தகுதியும் பண்பும் உடைய கைகள் என்றது குறிப்பு; **மலர்க்கை** - மலர்களை ஏந்திக் குவித்துத் தூவி வணங்கிப் பழகிய கைகள் என்ற குறிப்பும் காண்க. **பொருந்த** - என்ற குறிப்பும் காண்க.

729

அழிதல் - மனமுடைந்து நைதல்.

2628. **(இ-ள்)** உரை குழறி...அறிந்திலராகி - மொழி தடுமாறி உடல் நடுங்கி மனங் கலங்கியதனால் ஒன்றும் அறிந்திலர்களாகி; தரையின்...பற்றி - நிலத்தின் மேலே புரண்டு அயர்ச்சி அடைந்து பிள்ளையாரின் திருவடித் தாமரைகளைப் பற்றிக்கொண்டு; கரையில்...தமைக் கண்டு - எல்லையில்லாத கவலையாகிய கடலின் வீழ்ந்து அயர்வார்கள் அதினின்றும் ஏறுதற்கு உரியதொரு கரையினைப் பற்றிக் கொண்டவர்கள் போல விரைகின்ற மெய்யன்பு காரணமாக விடாமல் பற்றிக் கொண்டபடியே கிடந்த அவர்களைக் கண்டு,

(வி-ரை) உரைகுழறுதல் - மெய்ந்நடுங்குதல் - ஒன்றுமறிந்திலராதல் தரையிற் புரளுதல் - அயர்தல் - இவையும் முன்பாட்டிற் கூறிய மெய்ப்பாடுகளின் தொடர்பால் ஒன்றன்மேலொன்றாய்ப் பரம்பரையின் முதிர்ந்து புறத்து நிகழும் மெய்ப்பாடுகள்.

ஒன்றுமறிந்திலர் - முன்னர்க் கண்டவுடன் களிப்பு வந்தது; அதனைத் தொடர்ந்து மேல் நினைவு வந்ததனால் வருத்தம் வந்தது; இவை மாறி அவ்விரண்டு நிலையுமன்றி மனமழிதலால் ஒன்றுமறியா நிலை வந்தது.

2629. அருமறைவாழ் பூம்புகலி யண்ணலா ரடிபூண்ட
விருவரையுந் திருக்கையா லெடுத்தருளித் தேற்றிடவுந்
தெருமந்து தெளியாதார் தமைநோக்கிச் சிறப்பருளித்
'திருவுடையீ! ருங்கள்பாற் றீங்குளதோ?'' வெனவினவ, 731

தரையின்மிசைப் புரளுதலும் அயர்தலும் *மிக்க துன்பத்தால் நிகழ்வனவாம் என்பது உலகநிலை யனுபவங்களினும் காணலாம்.*

சரண கமலம் பற்றி *- முன் பாட்டில் மலர்க்கை என்றும்* ***புண்டரிகச் சேவடி*** *என்றும் கூறிய கருத்தையே தொடர்ந்து கூறிய நயம் காண்க.*

கரையில்...போன்று - கவலைக்கடல் *- கவலையாகிய கடல்; மிகுதிபற்றிக்* ***கடல்*** *என்றார்;* ***கவலைக்கடற்கு*** *- கடலைக் கடந்தேறுதற்கு;* ***கரைபற்றுதல்*** *- கரையினைத் தலைப்படுதலால் அதனை நெகிழவிடாது பற்றிக்கொள்ளுதல். ''பிறவிப் பெருங்கடனீந்துவர்'' என்றும், ''தாள் சேர்ந்தார்க் கல்லால் மனக்கவலை மாற்றலரிது'' என்றும் வரும் திருக்குறட் கருத்துக்களை நோக்குக.*

கரையில் கவலைக் கடலாவது *- பெருங் கவலைகளின் தொகுதி; இவை முன் 2593-2594ல் கூறிய அச்சங்களின் குறிப்பினாலும், மேல் 2630-2631ல் கூறுவன வற்றாலும் உணரப்படும்; தாம் தம் வாழ்வாக அழைக்க வந்த தெய்வமாகிய பிள்ளையார்பால் தம் கருத்துக்கு மாறாக அபசாரம் நிகழ்ந்துவிட்டமையும், அவர் அருளால் மன்னனையும் நாட்டினையும் உய்யச்செய்ய எண்ணியதற்கு மாறாக அடியார்பா லபசாரப்படுதலால் அரசன் தீப்பிணியான் மயங்கிக் கிடந்தமையும், நாடு பாவப்பயன்பெற நின்றமையும், பிறவுமாம்.*

கரைபற்றினார் போன்று - பயன்பற்றி வந்தவுவமம்.

விரைவுறும் மெய்அன்பு - விரைதல் - வேகமாகப் புறத்தோற்ற நிகழ்தல்; **விடாது ஒழிவார்** - பற்றுவிடாத நிலையினர்; **சரணம் பற்றியபடி**யே கிடந்தனர் என்க. **ஒழி** - துணிவுப்பொருள் விகுதி.

730

அறிந்திலர் தம்மை—என்பதும் பாடம்

2629. **(இ-ள்)** அருமறைவாழ் பூம்புகலி அண்ணலார் - அரிய மறைகள் வாழ்வடையும் அழகிய சீகாழியில் வந்தருளிய அண்ணலாராகிய பிள்ளையார்; அடி பூண்ட...தமைநோக்கி - தம்முடைய திருவடிகளைப்பற்றிப் பூண்டுகொண்டு கிடந்த அவ் விருவரையும் தமது திருக்கையினால் எடுத்தருளித் தேறுதல் செய்யவும் மனஞ் சுழன்று தெளிவடையாமல் கலங்கி நின்ற அவர்களை நோக்கியருளி; சிறப்பருளி...எனவினவ - சிறப்புச் செய்தருளித் ''திருவுடையவர்களே! உங்களிடம் ஏதேனும் தீங்கு வந்துள்ளதோ?'' என்று கேட்டருள,

(வி-ரை) அருமறைவாழ் - அண்ணலார் என்று கூட்டுக; மறைவழக்கிற்கு இழுக்கு வந்தபோது அதனை நீக்கி நிகழ்வித்தலின் மறைகள் வாழ்வடையும் என்றார்; மறைவாழவந்த அண்ணலார் என்க; ''வேதநெறி தழைத்தோங்க'' *(1899)* ''மறைவளர் திருவே'' *(1990)* முதலியவை காண்க. மறையோர்களை மறை யென்றுபசரித்ததாகக் கொண்டு அருமறையோர் வாழும் பூம்புகலி என்று கூட்டி உரைப்பினுமமையும்.

2630. ''வெஞ்சமணர் முன்செய்த வஞ்சனைக்கு மிகவழிந்தே
அஞ்சினேந்; திருமேனிக் கடாதென்றே யதுதீர்ந்தோம்;
வஞ்சகர்மற் றவர்செய்த தீத்தொழில்போய் மன்னவன்பால்
எஞ்சலிலாக் கொடுவெதுப்பா யெழாநின்ற'' தெனத்தொழுது, 732

அடிபூண்ட - *தம்முடைய திருவடிகளைப் பற்றிக்கொண்டு விடாதொழிந்த.*

திருக்கையா லெடுத்தருளி-*வாக்கினு லருளுதலன்றித் திருக்கைகளால் எடுத்தருளுதல் விரைவுக்குறிப்பு. முன் உரைத்தவையும் காண்க. (2555 - 2569 - பார்க்க.)*

அடிபூண்ட இருவரையும் - *முன்னர்த் திருநகர்ப்புறத்தும், திருவாலவாயுடையார் கோயில் திருமுன்றிலிலுமாக இவருள் ஒவ்வொருவரே அவருடைய இரண்டு திருவடிகளையும் பற்றிக் கிடந்து திருக்கையால் எடுத்தருளப்பெற்றனர்; ஈண்டு இருவரும் ஒருங்கே அத்திருவடிகளைப் பற்றினராக ஒரே காலத்து இருவரும் எடுத்தருளப்பெற்றனர் என்பது குறிப்பு.*

எடுத்தருளி - எடுத்தல் - *கவலைக் கடலினின்றும் மேலே எடுத்தாற்போன்று மேலே எடுத்து என்ற குறிப்புந் தந்து நின்றது; ''என்னையிப் பவத்திற் சேரா வகை யெடுத்து,'' இனித்தமுடைய எடுத்த பொற்பாதம்,'' ''எடுக்கு மாக்கதை'' என்பனவாதி யிடங்களிற்போல.*

தேற்றிடவும் தெருமந்து தெளியாதார் - தேற்றிடுதல் - *உண்மை தெருட்டுதலால் மனந்தேறச் செய்தல்.*

தெருமந்து - *மனம் சுழன்று; தெருமருதலால் என்று காரணக் குறிப்புப்பட நின்றது; பிள்ளையார் தேற்றிடவும் தெளியாமைக்குக் காரணங் குறித்தவாறு.*

சிறப்பருளி - *சிறப்புடைய அருட்கண்ணோக்கம் செய்தருளி;* ***சிறப்பு*** - *அவர் வேண்டிய உய்திபெறும் தன்மையைக் கண்பார்வையின் மூலம் தருதல்.*

திரு - *அருட்டிரு; திருவுடையீர்களாகிய உங்கள்பால்; ஏனையோர்பாற் சேறல் போல உங்களிடத்தும்; உங்கள் பாலினும் என்று சிறப்பும்மை தொக்கது.*

தீங்குளதோ? - *மெய்ப்பாடுகளினால் அறியவந்தபடி ஏதேனும் தீங்கு உளதோ என்க. இங்குத் தீமையே நலம் விளைவதன் தொடக்கமாதலின் நலம் கேட்கும் குறிப்புடன் நின்றது; ''தீங்குளவோ வெனவினவ'' (1321) என்றவிடத்துரைத்த குறிப்புக்களை ஈண்டு வைத்துக் காண்க.* ***731***

2630. **(இ-ள்)** வெஞ்சமணர்...அஞ்சினேம்-கொடிய சமணர்கள் முன்னே செய்த வஞ்சனைகளைப்பற்றி மிகவும் கலங்கி அச்சமடைந்தோம்; திருமேனிக்கு...அது தீர்ந்தோம்-திருமேனியினிடம் அவை ஒன்றும் தீங்குசெய்ய அடுக்காது என்று துணிந்து அவ்வச்சம் தீர்ந்தோம்; வஞ்சகர்...எனத் தொழுது - வஞ்சகர்களாகிய மற்று அவர்கள் செய்த தீத்தொழில்போய் அரசனிடம் அளவில்லாத கொடிய வெப்பு நோயாக எழுந்து நின்றது என்று சொல்லி வணங்கி,

2631. ''வெய்யதொழி லமண்குண்டர் விளைக்கவரும் வெதுப்பவர்தாஞ்
செய்யுமதி மாயைகளாற் றீராமைத் தீப்பிணியான்
மையலுறு மன்னவன்முன் மற்றவரை வென்றருளில்
உய்யுமெம துயிருமவ னுயிரு''மென வுரைத்தார்கள். 733

(வி-ரை) இப்பாட்டினாலும் மேல்வரும் பாட்டினாலும் அவர்கள் தம் மனத்துள் ஒன்றன்மேலொன்றாக நிகழ்ந்த நினைவுகளை அவ்வாறே எடுத்துக் கூறுகின்றார்கள்.

வெஞ்சமணர்...அஞ்சினோம் - இது தீத்தொழில் விளைத்த செய்தியினைக் கேட்டவுடன் முதலில் எழுந்த நினைவு.

முன்மிக அழிந்தோம் - என்க; **முன்** முதற்கண்.

திருமேனிக்கு...தீர்ந்தோம்-இஃது அவ்வாறெழுந்த அச்சத்திற்றீர்ந்த நிலையும் தீர்ந்த காரணத்தையும் கூறியபடி; திருமேனிக்கு வந்து பொருந்தாது என்று திண்ணமாயறிந்த நினைவுவர அச்சம் தீர்ந்தது; **அச்சமாவது** ஈண்டு அமணர் இட்ட தீயினால் பிள்ளையாரது திருமேனிக்கு ஏதேனும் ஊறு விளைந்திருக்குமோ என்றதாம். **அது** - அவ்வாறெழுந்த அச்சம்.

வஞ்சகர்...எழாநின்றது-இஃது அதன்மேல் அடுத்தபடியாகத் தாம் எதிர்பாராத விளைவாக அத்தீயானது மன்னனிடம் சேர்ந்த தன்மையினைத்தாம் அறிந்தபடி உரை செய்ததாம்; மேல்வரும் பாட்டிற் கூறும் விண்ணப்பத்திற்குத் தோற்றுவாய் செய்தபடியுமாம்.

தீத்தொழில் மன்னவன்பால் போய் - என்க.

தீத்தொழில் - தீயை மூட்டிக் கொளுவிய தொழில் எனவும், இரட்டுற மொழிதலால் தீயதொழிலெனவும் உரைக்க நின்றது.

மன்னவன்பால் போய் வெதுப்பாய் எழாநின்றது என்க. இங்கு வருமோ என்றஞ்சினோம்; இங்கு அவ்வாறு வருதற்கு அதற்கு வலிமையில்லை; ஆதலின் அங்கு மன்னவன்பால் காரண முறையினால் போய் எழுந்தது.

எஞ்சலிலாக் கொடுவெதுப்பு - எஞ்சுதலாவது குறைதல்; அஃதில்லாமையாவது கொடுமை ஒன்றானும் குறையாது - எல்லாம் ஒருங்கு சேர்தல்.

தொழில் - வெதுப்பாய் எழாநின்றது - தொழில் கருமமாகிய சூக்கும நிலை யடைந்து பின் வெதுப்பாய்த் தூலமாய் உருப்பட்டு எழுந்தது; **எழுந்தது** என்றதனால் சூக்குமநிலை நீங்கித் தூலமானமை குறிக்கப்பட்டது 732

2631. **(இ-ள்)** வெய்யதொழில்...வெதுப்பு - கொடுந்தொழில் செய்யும் அமணர்களாகிய கீழ்மக்கள் செய்தவற்றால் விளைந்த வெப்புநோய்; அவர்தாம்... தீராமை-அவர் தாமே செய்யும் மதிகொண்ட மாயத்தீர்வுத் தொழில்களாலே தீராத படியினாலே; தீப்பிணியால்...எனவுரைத்தார் - தீப்பிணியினாலே மயக்கமடைந்த மன்னவன் முன்பாக மற்றவர்களை வென்று அருளிச்செய்தால் எமது உயிரும் அம் மன்னவனது உயிரும் உய்தி பெறுவனவாகும் என்று சொன்னார்கள்.

இவ்வைந்து பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டுரைக்க நின்றன. பொருளின் தொடர்ச்சியும், செயலின் தொடர்ச்சியும், பிற அமைதிகளும் நோக்கி யிவ்வாறுரைக்கப்பட்டது.

(வி-ரை) வெய்யதொழில்...மன்னவன் - இஃது அவர்களது உள்ளத்தில் அடுத்து மூன்றாவதாக எழுந்த நிகழ்ச்சி.

அமண் குண்டர் விளைக்கவரும் வெதுப்பு* - *அவர் செய்யும்* - *மாயைகளால் தீராமை - அவர்கள் செயலால் விளைந்த நோய்க்கு அவர்களே தீர்வாகச் செய்யும் வஞ்சனை முயற்சிகளால் தீர்ந்திலதாக; **மாயைகள்** - இங்கு வஞ்சச் செயல்கள் என்ற பொருளில் வந்தது; **மதி** - மதியின் சூழ்ச்சியினாலே; ***தீராமை*** - தீராமையால்; ***தீராமை* - *மையலுறும்*** என்று கூட்டுக.

தீராமை மையலுறும் மன்னவன்முன்* - *அவரை வென்றருளில் உய்யும் - என்று ஒருதொடராக வைத்தோ தினுரேனும் - தீராமல் மன்னனை மையல் செய்துள்ளது; அவர்களை அவன் முன்பே வென்றருள வேண்டும் என்று இருபிரிவாக உரைத்தல் கருத்தாகக் கொள்க.

வெய்ய தொழில்...தீராமை-தீத்தொழில் செய்த அவர்களே தீர்வுத் தொழில் செய்வது போல முயல்கின்றா ரென்றும், அதனால் அந்நோய் தீராது பெரு மயக்கம் விளைக்க அரசன் அதனுள் மயங்கிக் கிடக்கின்றா னென்றும், அவர்களை அவன் காண வென்றருளாவிடில் அவனுயிர் சோரும் எங்கள் உயிரும் அதன் முன்பே சோரும் என்றும் அங்குற்ற நிலைமைகளையும் பின் செய்தக்க நிலைமைகளையும் எடுத்துரைத்து விண்ணப்பித்த நயம் கண்டுகொள்க.

அவர் தாம் செய்யு மதிமாயைகளாற் றீராமை* - *அவர் தாம் - செய்த அவர் தாமே; நோயின் காரணர்களாகிய அவர் உடனிருக்கும் செயல் நோயை நீங்கச் செய்திலது; காரணம் அவ்வாறு உடன் நிற்கக் காரியம் கெடாது என்ற நியாயப்படி என்பதாம்; இனித் ***தாம் செய்யும் மதி மாயைகளால் தீராமை*** என்றதற்கு இரட்டுற மொழிதலால் நோய் அவரால் விளைந்ததாயினும் விளைத்த அவரே தம் செயலின் விளைவை மாற்ற வலியிலராய் நின்றனர் என்ற குறிப்புப்பட உரைத்தலுமாம்; ''சுடர், பையவே சென்று பாண்டியற்காகவே'' என்று பணித்ததனால் அரசனுக்கு வெப்படுக்கப் பணித்த பிள்ளையாரே பின்னர்த் ''தேற்றித் தென்னனுடலுற்ற தீப்பிணியாயின தீரப்'' பாடல் சாற்றித் தீர்வும் வகுத்தருளுவர்; அதுபோல இவர்கள் தாம் செய்யும் மதிமாயைகளால் தமது செயலின் விளைவினை மாற்ற வலியிலார் என்ற குறிப்பும் காண்க.

தீப்பிணியால் - தீயபிணி-தீயினால் விளைந்த பிணி-தீயின் உருவாகிய வெப்பு- என்று பலவும் உரைக்க நின்றது.

மையால் - நோயின் கடுமையால் நேர்ந்த விளைவு; கருத்தொழிந்துரை மறந்து கிடந்தநிலை.

உய்யும் எமதுயிரும் அவனுயிரும் என - எமது உயிரைக் காத்தல் தேவரீரது முதற்பாரம்; அவற்றைக் காத்தற் பொருட்டு அவனுயிரைக் காத்தல் வேண்டும்; எமதுயிரும் அவனுயிரும் அவ்வாறு பிரிக்கப்படாது பிணைந்துள்ளன; என்பனவாதி குறிப்புக்கள் பெறக் கூறிய நயம் காண்க; மேலும் அவனுயிர்க்கு இடர் நேர வருமாயின் அதன்முன் எமதுயிர்க்கு இடர்வரும் என்பார் எமதுயிர் என்பதனை முன் வைத்துக் கூறினர்; எண்ணும்மை தந்து பிணைத்ததும்

வேறு

2632. என்றவ ருரைத்த போதி லெழில்கொள்பூம் புகலி வேந்தர்
''ஒன்றுநீ ரஞ்ச வேண்டா; வுணர்விலா வமணர் தம்மை
யின்றுநீ ருவகை யெய்த யாவருங் காண வாதில்
வென்றுமீ னவனை வெண்ணீ றணிவிப்பன் விதியா'' லென்றார். 734

இக்கருத்து; ஆயினும் இற்றை நிலையில் தேவரீரது திருவருட் செயலுக்கு உரியனவாம் தன்மையில் எங்கள் உயிர் அன்பினால் அணிமையான நிலையிலும், அவையுயிர் அவ்வாறன்றித் திருவருட் கயலாய்ச் சேய்மையான நிலையிலும் இருவேறு திறப்பட நிற்பன என்று குறித்தற்கு ''எங்கள் உயிர்கள் உய்யும்'' என்று ஒருங்கு சேர்த்துக் கூறாது, உய்யும் ''மாதுயிரும் அவனுயிரும்'' என்று வேறு பிரித்துக் கூறிய தெய்வக் கவி நயமும் காண்க; உய்யும் வகை பெறுதலில் இரண்டு மொன்றாய்ப் பிணைந்து வினையால் நன்றாகக் கூட்டுற்று நிற்பன என்பார் **உய்யும்** என ஒரு வினையால் முடிபும் காட்டினார்.

வென்றருளில் - வெல்லுதல் ஒரு செயல்; **அருளு**தல் அதன்மேற் செய்தக்க வேறொரு செயல்; **வெல்லு**தல் பாச நீக்கமும், **அருளு**தல் சிவப்பேறும் குறித்தன. இவையிரண்டும் நிகழ்ந்த தன்மைகளுள், **வெல்லுதல்** பின்னர்ச் சுரத்தினிலும் தீயினிலும் நீரினிலும் அரசன்முன் சமணரை வென்றதனாலும், **அருளுதல்** திருநீறு தந்து ஆட்கொண்டு சிவாகம மந்திரோபதேசமாகிய திருப்பாசுரத்தினை உபதேசித்த வகையாலும் அறியப்படும்; சரித நிகழ்ச்சிகளுட் கண்டுகொள்க.

வென்றருளில் உய்யும் - என்றதனால் அது செய்தருளாவிடில் உய்தி பெறாது அழிவுறுவோம் என்பது குறிப்பு.

மதியாண்மைகளால்—என்பதும் பாடம். 733

2632. **(இ-ள்)** வெளிப்படை. முன் பாட்டுக்களிற் கூறியபடி அவர்கள் சொன்ன போது அழகிய பூப்போன்ற புகலியின் தலைவராகிய பிள்ளையார் ''நீங்கள் ஒன்றும் அஞ்சவேண்டா; உணர்வில்லாத சமணர்களை இன்று நீவிர் மகிழ்ச்சியடையும்படி எல்லாரும் காணுமாறு வென்று பாண்டியனைத் திருநீறணியும்படி இறைவனாணையிலே செய்வேன்'' என்று கூறியருளினார்.

(வி-ரை) இப்பாட்டினால் அம்மையார் அமைச்சர் இவர்கள் கூறியதற்குப் பிள்ளையார் கூறியவிடை அறிவிக்கப்பட்டத.

எழில்கொள் என்பது பூவுக்கு அடைமொழி; **பூம்புகலி**-அழகிய சீகாழிப்பதி; எழிலில்லாத பூக்களும் உளவாதலின் அவற்றை நீக்க **எழில்கொள் பூ** என்றார்; பிறிதினியைபு நீக்கிய விசேடணம்; **பூ** - தாமரையைக் குறித்தது.

ஒன்றும் நீர் அஞ்ச வேண்டா என்றது அஞ்சி வந்தவர்க்கு அஞ்சற்க என்று முதலில் அபயம் கொடுத்தபடி.

வென்று...அணிவிப்பன் - வென்று அருளில் என முன்பாட்டிற் கூறியதற்கு அவ்விரண்டினையும் செய்வோம் என்றுறுதி கூறியபடி.

வேறு

2633. மொழிந்தருள வதுகேட்டு முன்னிறைஞ்சி முகமலர்வார்
''அழுந்துமிடர்க் கடலிடைநின் றடியோமை யெடுத்தருளச்
செழுந்தரளச் சிவிகையின்மேற் றென்னாடு செய்தவத்தால்
எழுந்தருளப் பேறுடையோ மென்பெறோ''மெனத் தொழலும் 735

விதியால் - விதியால் அணிவிப்பன் என்க. ***விதியால்*** - விதிப்படி; ஊழின் நியதிப்படி என்ற குறிப்புமாம். மேல் ''ஆவது மழிவு மெல்லாம் அவர் செயல்...திருவுள்ளம் அறிவேன்'' *(2634)* என்று கூறுதலானும், ஈண்டுத் திருவருளினைப் பற்றாது தாமே துணிந்து செய்வேன் என்று கூறுதலானும், முன்னர்ப் பிள்ளையார் கூறிய கருத்துக்கு மாறுபடுதலானும், பிறவாற்றானும் இங்குக் கூறும் விடை பிள்ளையாரது திருவுள்ளக் கிடைக்கு மாறாகக் காணப்படுகின்றது. செய்யுணடையாலும், முன்னரும் மேலும் கூறிச் செல்லும் யாப்பின் தொடர்ச்சி இடைப்பட்டு மாறுதலாலும் இப்பாட்டு ஐயப்பாட்டுக்கு இடம் தருகின்றது; மேலும் இவ்விரண்டு பாட்டுக்களையுமின்றியே சரிதத் தொடர்பு செம்மையாய் நிகழ்வதும் காணப்பெறும். மேல்வரும் *(2633)* பாட்டும் இவ்வாறே காண்க. (சேக்கிழார் 218-214 பக்கங்கள் பார்க்க).

ஒன்றும் - ஒன்றுக்கும் - ஒன்றினாலும்; **உணர்வு** - நல்லுணர்வு. *734*

2633. **(இ-ள்)** மொழிந்தருள - முன் கூறியவாறு பிள்ளையார் அருளிச் செய்ய; அதுகேட்டு... முகமலர்வார் - அதனைக் கேட்டுத் திருமுன்பு வணங்கி முகம் மிக மலர்ச்சி கொண்டவர்களாகி; ''அழுந்தும்...என்பெறோம்'' என - அழுந்திக் கிடந்த துன்பமாகிய கடலினின்றும் அடியேங்களை மேலே எடுத்தருளும் பொருட்டுச் செழிய முத்துச் சிவிகையின்மீது தென்னாடு செய்த பெருந்தவப் பயனாலே எழுந்தருளும் பெரும்பேறு பெற்றுடையோம்; (அதனால்) வேறு என்ன பேறுதான் பெற மாட்டோம் ''(எதுவும் பெற வல்லோம்)'' என்று கூறி வணங்கியதும்,

(வி-ரை) முன்பாட்டில் பிள்ளையார் அருளியனவாகக் கூறிய மொழிகளைக் கேட்டு அம்மையாரும் அமைச்சனாரும் அவற்றுக்கு விடைகூறும் பகுதியாக அமைந்தது இப்பாட்டு.

அது - முன்பாட்டில் மொழிந்தருளியது.

முகமலர்வார் - முகமலர்வாராகி; முற்றெச்சம்; முகமலர்ச்சி அகமலர்ச்சியினால் விளையும் மெய்ப்பாடாகி அதனைக் காட்டி நிற்றலால் அகமலர்ச்சியினை வேறு கூறாராயினர்.

இடர்க்கடலிடை நின்று...எடுத்தருள - ஏகதேச வுருவகம்; **அடியோமை** - அரசனையும் நாட்டவரையும் உள்ளடக்கிய உளப்பாட்டுத் தன்மைப் பன்மை; **எடுத்தல்** - துன்ப நீங்கியின்பமடைவித்து மேலோங்கச் செய்தல்.

தென்னாடு செய்தவத்தால்-தென்னவனாடு என்றது **தென்னாடு** என மருவிற்று; **செய்தவம்** - முன் செய்த தவம்.

வேறு

2634. ஆவது மழிவு மெல்லா மவர்செய!; லமண ராகும்
பாவகா ரிகளை நோக்கும் பழுதுட னீங்க வெல்லச்
சேவுயர் கொடியி னார்தந் திருவுள்ள மறிவே னென்று
பூவலர் பொழில்சூழ் சண்பைப் புரவலர் போதுகின்றார்; 736

பேறுடையோம் என்பெறோம்! - பேறுடையோமாதலின் வேறு என்னதான் பெறமாட்டோம்? என்றது எழுந்தருளும் பேறுதானே வேறு எல்லாப் பேறுங்களையும் தரவல்லது என்பது குறிப்பு; **என்பெறோம்** - எதிர் மறையும் வினாவும் வேறு எல்லாப் பேறும் எளிதில் பெறவல்லோம், எமக்கரியது ஒன்றுமில்லை என்று உடன்பாடும் உறுதியும் குறித்து நின்றன. 735

அவர் கேட்டு—என்பதும் பாடம்

2634. **(இ-ள்)** ஆவதும்...செயல் - ஆக்கமும் அழிவும் ஆகிய எல்லாம் "அவர்" என்று மறைகள் சுட்டிக் கூறும் இறைவரது செயலேயாகும்; அமணராகும்...வெல்ல - அமணர் என்னும் பாவஞ் செய்வோர்களைப் பார்க்கவும் பேசவும் மற்றும் செயல் செய்யவும் நேர்தலால் வரும் பழுது அச்செயல்களுடனே நீங்கவும், அவர்களை வென்றிடவும்; சேவுயர்...அறிவேன் என்று - இடபத்தை உயர்த்திய கொடியினையுடைய சிவபெருமானது திருவுள்ளக் குறிப்பினை அறிவேன் என்று கூறி; பூவலர்...போதுகின்றார் - பூக்கள் அலர்கின்ற சோலைகள் சூழ்ந்த சீகாழித் தலைவராகிய பிள்ளையார் செல்கின்றாராகி,

(வி-ரை) ஆவதும் அழிவும் - ஆக்கமும் கேடும் என அவ்வத் தொழில்களைக் குறித்த பெயர்களாய் நின்றன; வெல்லுதல் - **அழித்தல்**; அருளுதல் - **ஆகுதல்** என இவ்விரண்டும் முன்னர் (2631) அவர்களால் வேண்டப்பட்டமையால் அவையிரண்டும் அவரருளன்றி நிகழா என்பார் **எல்லாம் அவர் செயல்** என்றார்; ஆக்குதலும் அழித்தலும் என்னாது ஆவதும் அழிவும் என்றது அவர் செயலினாலே இவை தாமே விளைவன என்றபடி. **அவர்** - அவன் என்று மறைகளுட் பேசப்பெற்ற அவர் என உலகறி சுட்டு.

அவர் செயல் - ஆதலின் - திருவுள்ளம் அறிவேன் என்று காரணப் பொருள்படக் கொள்க.

பாவகாரிகள் - பாவத்தைச் செய்பவர்கள்; **காரி** - செய்பவன்; அதன் மேல் கள் விகுதி பெற்றது. **பாவகாரிகளை நோக்கும் பழுது உடன் நீங்க** - பாவிகளைப் பார்த்தலும் பழுது; **நோக்கும் பழுது** - நோக்குதலால் விளையும் தீமை; "பிரட்டரைக் காணுகண்; வாய்பேசாதப் பேய்களோடே" (திருவிசைப்பா); "வெண்ணீறணி கிலாதவரைக் **கண்டா** லம்ம நாமஞ்சுமாறே" (திருவா) என்பனவாதி திருவாக்குக்கள் நிற்கத், "தீயாரைக் காண்பதுவும் தீதே" என்று நீதி நூலும் பேசும்; "கண்டு முட்டு" என்னும் சமணர் கொள்கையும் இந்தக் கருத்துடையதாம்; பாவகாரிகளை நோக்குதல் பழுதாவது போல அவர்களால் நோக்கப்படுதலும் பழுது தருவதாம் என்பதும் அறிந்தோர் மரபு. அரசன் பாவகாரிகளை நோக்கும் (நோக்கியதால் விளைந்த) பழுது நீங்க என்றுரைத்தலுமாம்.

2635. வையக முய்ய வந்த வள்ளலார் மடத்தி னின்று
மெய்யணி நீற்றுத் தொண்டர் வெள்ளமுந் தாமும் போந்து
கையிணை தலையின் மீது குவியக்கண் மலர்ச்சி காட்டச்
செய்யவார் சடையார் மன்னுந் திருவால வாயுட் புக்கார். 737

உடன் நீங்க - நோக்கின் அப்பொழுதே அந்தப் பழுது ஊன்றாது கழிய; **உடன் நீங்குதல்** - தோன்றிய அவ்வளவே அழிவெய்துதல்; பார்த்தலால் வரும் விளைவுகளைப் பற்றி முன் ஆண்டாண்டும் உரைத்தவையும், இனியும் 2636-லும், பிறாண்டும் உரைப்பவையும் நினைவு கூர்க.

நீங்க வெல்ல - நீங்கவும் அவர்களை வெல்லவும்; எண்ணும்மைகள் தொக்கன; பாவகாரிகளை நோக்குதலும் அவர்களுடன் பேசி வாது செய்தலும் ஆகிய தீமை ஒன்று; அதன்மேல் தொடர்ந்து அவர்களை வெல்லுதலும் அழித்தலும் ஆகிய செயல் மற்றொன்று; இவற்றை முறையே, ''நோக்கி நான் வாதுசெயத் திருவுள்ளமே?'' என்ற பதிகத்தானும், ''வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே'' என்ற வேறுமொரு பதிகத்தானும் வேண்டிப் பாடித் திருவுள்ள மறிதல் காண்க.

சேவுயர் கொடியினார் - ''சாலவும், ஏதிலார் துண்ணென்ன மேல்விளங்கியேர் காட்டுங், கோதிலா **வேறுங்** கொடி'' (திருவா-தசாங்கம்-10); ''சேவுயருந் திண்கொடியான்'' (பிள். தேவா. கழுமலம் - மேகரா - 1) ''ஏதமில் வீர வெள்விடைக் கொடியும்'' (11-ம் திருமுறை. கோயினான்-4); பற்றலரை வெற்றி கொள்ளும் கொடி என்பது குறிக்க இத்தன்மையாற் கூறினார்.

திருவுள்ளம் அறிதல் - அறியும் வகை மேல் 2636 - 2637 - 2639 பாட்டுக்களிற் காண்க.

என்று - போதுகின்றார் - போந்து - புக்கார் - என்று மேல்வரும் பாட்டுடன் முடிக்க; **போதுகின்றார்** - போகின்றாராகி; முற்றெச்சம்.

அழிவதெல்லாம்—நீங்கிவெல்ல—என்ற பாடங்களுமுண்டு. 736

2635. **(இ-ள்)** வையகம்...வள்ளலார் - (அவ்வாறு செல்லும்) உலகம் உய்யும் பொருட்டே வந்தவரித்த அந்த வள்ளலார்; மடத்தினின்று...போந்து - திருமடத்தினின்றும் மெய்யிலே அணிந்து கொண்ட திருநீற்றின் பொலிவினையுடைய திருத்தொண்டர் கூட்டமும் தாமுமாகச் சென்று; கையிணை...காட்ட - இரண்டு கைகளும் தலையின்மீது குவியவும், கண்கள் மலர்ச்சியினைக் காட்டவும்; செய்ய...புக்கார் - சிவந்த சடையினையுடைய இறைவர் நிலைபெற எழுந்தருளியிருக்கும் திருவாலவாய்த் திருக்கோயிலினுள்ளே புகுந்தனர்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டுரைக்க நின்றன.

(வி-ரை) வள்ளலார் - முன் கூறிய அந்த வள்ளலார் என்று சுட்டு வருவிக்க.

வந்த வள்ளலார் - வந்த - அவதரித்து இவ்வுலகில் வந்த; பாண்டிநாட்டுக்கு வந்த என்ற குறிப்பும் கொள்க; பாண்டிநாட்டுக்கு வருதலால் வையக முய்தலாவது சைவம் தழைத்துத் தீயது ஆழ்ந்து எல்லாம் அரனுமமே சூழ்தலால் வரும்விளைவு;

2636. **''நோக்கிட விதியி லாரை நோக்கியான் வாது செய்யத்
தீக்கனன் மேனி யானே திருவுள்ள மே?''யென் றெண்ணில்
பாக்கியப் பயனு யுள்ள பாலரு வாயர் மெய்ம்மை**
நோக்கிவண் டமிழ்செய் மாலைப் பதிகந்தா னுவல லுற்ருர். 738

வள்ளன்மை-இவர்கள் விண்ணப்பத்திற்கிணங்கி, *அரசுகளது கருத்தையும் கடந்து தாமே திருவுளங்கொண்டு, தீய சமணர் நடுவுட்போந்த அருள்வளம்.*

மெய்அணி நீற்றுத்தொண்டர் வெள்ளம் - மெய் - *திருமேனி; நீறு அணி மெய்த்தொண்டர் என்று கூட்டியுரைக்கவும் நின்றது;* **வெள்ளம்**-*பெருங்கூட்டம்; திரள் நீர்ப்பெருக்குப்போலப் பெருகிச் செல்வது;* **வெள்ளம்** - *பேரெண் குறிக்கும் என்றலுமாம்.* ***மெய்யணி நீறு*** - *என்று கொண்டு நீற்றின் சிறப்பெல்லாம் கொள உரைத்தலுமாம்.*

கையிணை - குவியப் - புக்கார் - *கைகளைச் சிரமேற் கூப்பித் தொழுதவாறே புகுந்தனர்.* ***குவிய*** - *தாமே குவிய.*

கண்மலர்ச்சி காட்டுதல் *இறைவரது திருமுன் செல்லும் ஆனந்தக் குறிப்பு;* ***கண் மலர்ச்சி*** - *உள்ள மகிழ்ச்சியின் மெய்ப்பாடு.*

செய்யவார் சடையார் - *செய்ய சடையார் என்றும் பொற்சடைச் செய்யர் என்றும் கூட்டி உரைக்கவும் நின்றது; ''செய்யனே! திருவாலவாய் மேவிய, ஐயனே!'' என்று முன்கூறி யழைத்தருளிய குறிப்பும்பட நின்றமை காண்க.*

மடம் - *குலச்சிறையார் காட்டத் (2574) தாம் எழுந்தருளியிருந்து அமணர் புறம்பு செய்த தீச்செயல் அழிந்த திருமடம்.*

***மடத்தினின்று* - போந்து - உட்புக்கார்** *என்க.*

சடையார் மேவும்—*என்பதும் பாடம்.* 737

2636. **(இ-ள்)** *தீக்கனல் மேனியானே!* - *மிக்கு எரியும் தீப்போன்ற திரு மேனியினையுடைய இறைவரே!;* நோக்கிட....வாதுசெய்ய - நோக்குதற்கு விதியில்லாத அமணரை நோக்கி யான் வாது செய்வதற்து; திருவுள்ளமே என்று - தேவரீருக்குத் திருவுள்ளமோ? என்று; எண்ணில்...பாலருவாயர்-எண்ணில்லாத பாக்கியங்களின் பயன்போன்றுள்ள பாலருவாயராகிய பிள்ளையார்; மெய்ம்மை நோக்கி - உண்மைத் திறத்தை நோக்கி; வண்தமிழ்...நுவலலுற்ருர் - வண்மையுடைய தமிழால் இயன்ற மாலையாகிய திருப்பதிகத்தைப் பாடியருள்வாராகி,

(வி-ரை) நோக்கிட விதியிலாரை நோக்கி - முன் ''பாவகாரிகளை நோக்கும்'' *(2634)* என்றதும், ஆண்டுரைத்தவையும் காண்க. **விதி** - நூல்களின் விதி; நோக்குதற்கும் நோக்கப்படுவதற்கும் என இருபாலும் கொண்டுரைத்துக் கொள்க; அமணர்கள் பிள்ளையாரது அருள்நோக்கம் பெறுதற்கு அப்போது ஊழ் விதியுடையரல்லர் என்பதாம்; இப்பொருளில் **விதி** - ஊழ், நியதி என்று கொள்க.

நோக்கி - வாதுசெய்ய - திருவுள்ளமே - அமணரை நோக்குதலும் கூடாது; வாது செய்தலும் கூடாது; இரண்டும் சைவத்திறத்தில் விலக்கப்படும். தீயோரை நோக்குதலும் கூடாது என்ற விதியின் நுட்பம் முன் (2634) விளக்கப்பட்டது; நோக்குதலும் வாது செய்தலும் கூடாவெனின், இங்குப் பிள்ளையார் அவற்றைச் செய்ய முற்படுதல் தகுதியாமோ? எனின், கூறுதும்; "வாது செய்து மயங்கு மனத்தரா, யேது சொல்லுவீ ராகிலு மேழைகாள்! யாதோர் தேவ ரெனப்படு வார்க்கெலாம், மாதே வன்னலாற் றேவர்மற் றில்லையே" என்பது அரசுகளது ஆணை; ஏனைச் சமயங்களின் உண்மைகள் எல்லாம் சைவத்தில் ஒவ்வோர் அங்கமாயமைந்து அடங்குவன; ஆனால் சைவத்திறம் வேறெதனினும் அடங்காது; இவ்வாறு ஒவ்வோர் பகுதியாகிய சிலசில கொள்கைகளை மட்டில் கொண்ட சமயங்கள் தாந்தாம் முழு உண்மையும் கொண்டவை என்றகங்கரித்தெழுந்து உலக மாக்களை வஞ்சித்துப் பரசமயக் குழியில் வீழ்த்தக் கண்டபோது உலகம் ஏமாறுமல் உய்யும்பொருட்டு அவ்வவற்றின் உண்மை நிலைகளை இகலிலராய்த் திருவருள்வசமாய் நின்று வாது செய்து காட்டியருளுதல் உலகத்தை வழிப்படுத்தும் பெரியோர் கடமையாகும்; அன்றியும் நம்முடைய பெருஞ் செல்வங்களாகிய சைவக் கோயில்களையும், சைவக்கொள்கை நிலைகளையும், பிறசமயிகள் கவர்ந்து ஆக்கிரமித்த போது நமது உடைமையை மீட்டுப் பாதுகாவல் செய்வதும் நமது கடமையாகும். இங்குப் பிள்ளையார் நிகழ்த்தியவை இம்மட்டே அடங்குவன; புறச்சமயங்கள் தம்மளவில் நில்லாமல் மேலெழுந்து கவரத் தொடங்கியபோது அச்செயலினின்றும் உலகம் ஏமாறுது காவல் புரிதலே பிள்ளையாரும் அரசுகளும் (பழையாறை வடதளி) இயற்றிய அருட்செயல்களாம். சமயங்கள் எவற்றையும் அழித்தல் சைவத்திறம் அன்று; எல்லாச் சமயங்களும் உயிர்களின் பக்குவ பேதம்பற்றி வேண்டப்படுவனவே; இவைபற்றி முன் 1562-ல் உரைத்தவையும், பிறவும் பார்க்க. சைவத்தின் உண்மைச் சமரசமாவது பக்குவபேதம்பற்றிப் படிமுறையால் எல்லாவற்றையும் அவ்வந்நிலையில் அமைத்துக் காணுவதேயாம். இஃதன்றிச் சிலசில சொற்களும் கருத்துக்களும் ஒன்றுக வருதல் கொண்டே எல்லாம் ஒன்று என்று கூவிச் சமரசங் காணுதல் போலிச் சமரசமென்றொழிக. அவையெல்லாம் சைவவுண்மைகளை உள்ளபடி உணர்ந்த தேசிகர்பால் ஒழுங்குபட உபதேசம்பெறுமலும், அனுபவத்தில் ஒழுகாமலும் போந்த குறையால் நேர்ந்த போலியுரைகளென்க.

தீக்கனல் மேனியானே - தீக்கனல் - ஒரு பொருட் பலசொல் தன்மை மிகுதி குறித்தது; மிக்க தீ என்க. தீ ஒன்றே அடுதலும் செய்யும்; சுடுதலால் காத்தலும் செய்யும். தீ மிகின் உயிர்போம்; தீ இன்றுயினும் உயிர்போம்; எனவே, இங்கு அழித்தலும் காத்தலும் செய்யவல்ல திருமேனி கொண்டவர் என்பார் தீக்கனல் மேனி யென்றார் என்பதுமாம்; தீயினையும் எரிக்கும் தீப்போன்ற என்ற குறிப்புமாம். "நெருப்பையு மெரிக்கும்" (திருப்புகழ்); அமணர் இட்ட தீயினை மேம்பட்டு அதன் விளைவை பாறச் செய்வது என்பதுமாம். **கனல்** - கனல்கின்ற என்றலுமாம்.

"திருவுள்ளமே" என்று மெய்ம்மை நோக்கி - தேவரீருக்குத் திருவுள்ளந் தானே? என்று இறைவரது மெய்ம்மையுள்ளே தாம் "அவனே தானே யாகிய அந்நெறி, யேகனாகி நின்று நோக்கிக் கண்டு" என்க. அந்நிலையில் நின்றாரது உள்ளத்தில் உணரும்படி நல்குவன் இறைவன்; "சீர் அடியார் தங்கள் வழித் தொண்டை யுணரநல்கி" (341) முதலியவை பார்க்க; "அவனருளா லல்லது ஒன்றையும் செய்யா"ராகித் தம் வயமற்று அவனருளே கண்ணகக்

2637. கானிடை யாடு வாரைக் ''காட்டுமா வுரி''முன் பாடித்
தேனலர் கொன்றை யார்தந் திருவுள நோக்கிப்; பின்னும்
ஊனமில் ''வேத வேள்வி'' யென்றெடுத் துரையின் மாலை
மானமில் லமணர் தம்மை வாதில்வென் றழிக்கப் பாடி, 739

காணும் பெருமக்கள் சிவனது நிறைவினுள் அங்கு எல்லாங்காண வல்லவராவர்; இந்நிலை அவ்வாறு நில்லாத பிறர்க்கு விளங்குதலரிது; நிமித்தமறிதல், சிந்தனைச் சீட்டு இடுதல், குறிபார்த்தல், பூக்கேட்டல் முதலியனவாக இந்நாள் வழங்குவன பலவும் இதன் வழியே அவ்வவர் தரத்துக்கேற்ப வந்தவை என்க; பின்னர்ப் பிள்ளையார், திருமுறையினைத் தாமே நீற்று வண்கையால் மறி''க்கத் (2680) திருநள்ளாற்றுப் பதிகம் எழுதிய ஏடு வர, அதனுள்ளே திருவருள் வெளிப்பாட்டினைக் காணும் நிகழ்ச்சியும் இக்கருத்தை பற்றியது.

எண்ணில் பாக்கியப்பயன் - அளவில்லாத ஆன்மாக்கள் செய்த அளவில்லாத தவங்களாற்பெற்ற பாக்கியங்களுக்கெல்லாம் இவரைப் பெற்றதே பயன் என்க. இதனை எங்கள் பாக்கியப்பயனுப்பதி குன்றைவாழ் சேக்கிழான்'' என்று எமது பாக்கியப் பயனாகிய மாதவச் சிவஞான முனிவர், ஆசிரியர் சேக்கிழார் பெருந்தகையாருக்கு ஆக்கி எடுத்தாண்டு இதன் அரும்பொருளை விளக்கியருளியமை காண்க.

பாலறாவாயர் - அம்மையார் ஊட்டியருளிய ஞானப்பாலின் மணம் இடையறாது கமழ்ந்து ஞானவாக்குப் பிறந்து வரும் திருவாய் என்பதாம்; ஆதலின் அந்தச் சிவஞான வயத்தால் இறைவரது திருவுள்ளத்தை நோக்கிக் கண்டனர் என்பது குறிக்க இப்பெயரால் ஈண்டுக் கூறினார்; ''சுந்தரப் பொற் றோணிமிசை யிருந்தபிரா னுடனணைந்த துணைவி யாகும், பைந்தொடியா டிருமுலையின் **பாலறா மதுரமொழிப் பவளவாயர்**'' (1995) என இக்கருத்தை ஆசிரியர் முன்னர் விளக்கியருளியதனை நினைவு கூர்க. இப்பெயர்ச் சிறப்பையும் அருமையினையும் நோக்கியே பின்வந்த பெரியோர்கள் தம் மக்களுக்கு இப்பெயரை இட்டு வழங்கிப் பயன்பெறும் உலக வழக்கு உளதாயிற்று; ஆசிரியரது தம்பியார் ''பாலறாவாயர்'' என்ற பெயர் சூட்டப்பெற்ற வழக்கும் கருதுக.

வண்தமிழ் செய்மாலை வண்மையாவது அறத்தாற்றின் நின்று அருள்வழியே சென்று உயிர்க்குறுதி காட்டுதல்; அமணர்பால் ஈண்டுத், திருவருள் மறக்கருணையாய்ச் செல்லும் நியதியின் விளைவின் வெளிப்பாட்டுக்குக் காரணமாதல்பற்றி அவர் திறத்தும் வண்மையாயிற்றென்க.

நுவல லுற்றார் - உற்றாராகிப் பாடி என்று முற்றெச்சமாக்கி மேல்வரும் பாட்டுடன் முடிக்க. 738

2637. **(இ-ள்)** கானிடை...நோக்கி - கானகத்தில் நட்டம் ஆடுவாராகிய இறைவரைக் ''காட்டு மாவுரி'' என்று தொடங்கிப் பாடித் தேன் அலர்கின்ற கொன்றையணிந்த இறைவரது திருவுள்ளக் குறிப்பினைத் தெளிந்து கொண்டு; பின்னும்...மாலை - மேலும் ஊனத்தை இல்லையாகச் செய்யும் ''வேத வேள்வி'' என்று தொடங்கிச் சொற்பதிகத்தினை; மானமில்...பாடி - மானமில்லாத அமணர்களை வாதத்தில் வென்று அழிக்கவும் பாடி.

(வி-ரை) "காட்டுமாவுரி" முன்பாடி - "காட்டுமாவதுரி" என்று தொடங்கும் திருப்பதிகத்தை முன்னே பாடி; **கானிடையாடுவார்-கானில் ஆடுதல்** சங்காரத்தையும் புனருற்பவத்தையும் குறித்தலால் அமண் இருள் மாய்வதனையும் சைவம் மீளத் தழைவதனையும் குறித்தது.

முன்பாடி - முன் - திருமுன்பு; திருவுள்ள மறிதற் பொருட்டுப் பாடியருளிய பதிகங்களுள் முன்னர் இதனைப் பாடி என்றலுமாம். பதிகக் கருத்துப் பார்க்க.

முன்பாடித் திருவுள்ள நோக்கி - திருவுள்ளக் கருத்து வாது செய்தலேயாம் என்றறிந்ததனால் மேலும் அவ்வாறு செய்யும் வாதினில் கடைபோக வெல்லுதலும் வென்று, அழித்தலும் வர வேண்டுதலின் அவற்றுக்கும் திருவுள்ள முளதோ என்பது குறிப்பு. அதனை இரண்டாவது பதிகமாகிய "வேத வேள்வி" என்ற பதிகத்தில் வினவி யருளுகின்றார். முன்பதிகத்தில் "**வாதுசெயத்** திருவுள்ளமே" என்று திருவுள்ளம் வினவியருளிய பிள்ளையார், இப்பதிகத்தில் "**வாதில் வென்றழிக்கத்** திருவுள்ளமே" என்றதனால் "வாது செய்வதற்குத் திருவுள்ளம் உவந்து கொண்டருளினர் இறைவர்" என்று பிள்ளையார் தமது திருவுள்ளத்தில் உணர்ந்த பின்னரே, அதன் பின் வாதில் வென்றழிக்கத் திருவுள்ளம் வினவியருளினார் என்பதாம்; வாது செயத் திருவுள்ளம் பெறவில்லையாயின், மேல் வாதில் வென்றழிக்க வுள்ளமறிதல் பொருந்தாமை யறிக; ஆயின் பின்னர் வினவிய இத் திருவுள்ளத்தினை ஆம் என்று பிள்ளையார் உணர்ந்தமை எதனாற் பெறுது மெனின்? நோக்கும் பழுதுட னீங்க வெல்லச் சேவுயர் கொடியினானறன் றிருவுள்ள மறிவேன்" *(2634)* என்று உட்கொண்டு திருவாலவாயுட் புக்கு வணங்கி வினவிய பிள்ளையார், அவ்வாறு திருவுள்ளத் திசைவினைக் கொண்டாலன்றி அதனை மேற்கொண்டு சென்றிரா ராதலின் திருவுள்ளம் பெற்றனர் என்பது வழியளவையாற் றுணியப்படும்; இதனை மேல் "நாதர்த **மருண்முன் பெற்று நாடிய** மகிழ்ச்சி பொங்க—**விடைகொண்டு**"—*(2639)* என்று ஆசிரியர் விளக்குதல் காண்க. "கோனை விடைகொண்டு" என்ற பதிகமும் காண்க எனவே, பின்னர் நிகழும் சமய வாதமும், அதன் தொடர்பாக நிகழும் வெற்றியும், அமணர் அழிவும் சிவபெருமானது திருவுள்ளமாகிய ஆணையால் நிகழ்ந்தன என்பதும், ஈண்டுப் பிள்ளையார் செயல்கள் யாவும் "அவனே தானே யாகிய அந்நெறி, யேகனாகி யிறைபணி" நின்றமையால் சிவச் செயல்களேயாம் என்பதும், இவைபற்றிப் பிள்ளையாரது கருணைத்திறம் பற்றியும் சைவத் திறம் பற்றியும் பிறவாறும் செய்யப்படும் நவீன ஆராய்ச்சிகளாகிய விசாரங்கள் உண்மை நூலுணர்ச்சி யில்லாமையால் எழுந்த போலியுரைகளே யாமென்பதும் தெற்றென விளங்கும்; மேலும் அங்கங்கும் இவை விளக்கப்படும்.

காட்டுமா உரி முன்பாடிப் - பின்னும், வேத வேள்வி என்று பாடி - "காட்டு மாவ துரி"யினால் பரசமய நிராகரித்தலையும், "வேத வேள்வி"யினால் நீற்று நெறியினை ஆக்குதலையும் *(1917)* வேண்டித் திருவுள்ளம் அறிய எழுந்த நிலைக் குறிப்பும் காண்க. இவை இரண்டும் சிவஞான போதத்துப் 10-11ம் சூத்திரங்களின் கருத்தாக இறைவர் உயிர்களுக்குச் செய்யும் இருவேறு அருள் வகைகளாதலும் கண்டு கொள்க. இவையே பிள்ளையாரின் திருவவதாரத்தின் உள்ளுறைகளாமென்பது சிவபாதவிருதயருக்குத் தோணியப்பர் அருள் புரிந்த வகையால் தொடக்கத்தில் உணர்த்தப்பட்டது. இவை இரண்டும் வெவ்வேறு திறம்பற்றிய நிலைகளாதலின் தனித்தனி இரண்டு பதிகங்களால் வேண்டப்பட்டன.

2638. ''ஆலமே யமுத மாக வுண்டுவா னவர்க்க ளித்துக்;
காலனை மார்க்கண் டர்க்காக் காய்ந்தனை; **யடியேற் கின்று**
ஞாலநின் புகழே யாக வேண்டு;நான் மறைக ளேத்துஞ்
சீலமே! யால வாயிற் சிவபெரு மானே!'' யென்றார். 740

எனவே வெல்லுதலும் அழித்தலும் பிள்ளையாரது திருவுள்ளமாதலன்றி இறைவரது திருவுள்ளமாகி உயிர்களின் கன்மப் பயன்களை நுகரச் செய்யும் அழித்தற் றொழிலின் பகுதியாய் விளைவனவா மென்பதும் அறியப்படும்.

ஊனமில் *- ஊனத்தை இல்லையாகச் செய்யும் என்க;* ***ஊனம்*** *- அமணர்கள் சைவத்திறத்திற்கும் பிள்ளையார்க்கும் அடியார்க்கும் செய்த தீமைகள்.*

உரையின் மாலை *- திருப்பதிகம்; நாலடி மேல் வைப்பாகிய பாட்டினியல்பும், மேல் வைப்பாகிய பின் ஈரடியும் பதிகக் குறிக்கோளை உணர்த்திய தொடர்ந்த நிலையும் பற்றி மலரும் நாரும் போல வரும் இயல்புணர்த்த* ***மாலை*** *என்றுருவகித்தார்; ''பதித்த விப்பாடல்'' என்ற பதிகக் குறிப்பு காண்க.*

வென்றழிக்கப் பாடி *- ''வென்றழிக்க'' என்பது பதிகக் குறிப்பு; வாதுசெயத் திருவுள்ளம் இறைவர் கொண்டமை யுணர்ந்தாராதலின், வாது செய்யின், அதன் முடிபு வெற்றியாதல் வேண்டும்; அது வேண்டவே ஒட்டிச் செய்யப்படுவது வாதமாதலின் அதன் முடிபு தோல்வியுற்றோரது அழிவுபாடாதலும் வேண்டும்; இவை காரண காரிய முறையால் நிகழ்வனவாதலின் அவ்வளவும் செய்தலில் தமது மனம் செல்லாமையால் திருவுள்ளம் வினவினார் என்க. இதனால் அமணரை அழித்தல் பிள்ளையாரது திருவுள்ளக் கருத்தன்றென்பது நன்கு போதரும்.*

மானமில் அமணர் - மானம் *- பெருமை; அவமானம் எனவழங்கும்; ''மானம்'' (குறள்); தோல்வி பெற்றும் அதனுள் அமைந்து ஒழுகி நலம்பெற மாட்டாது, மேலும் மேலும் அகங்கரித்து எழுவதனால* ***மானமில்*** *என்றார்;* ***மானம்****-அளவு என்று கொண்டு தம் சமய அளவுட்படாது மிகைபடச் சென்றவர் என்றலுமாம்.* 739

2638. **(இ-ள்)** நான்மறைகளேத்தும்...சிவபெருமானே! - நான்கு வேதங்கள் போற்றுகின்ற சீலமானவரே! திருவாலவாயில் எழுந்தருளிய சிவபெருமானே!; ஆலமே...காய்ந்தனை- தேவரீர் விடத்தையே அமுதமாக உண்டு, தேவர்களுக்கருள் அளித்ததனோடு மார்க்கண்டனுக்காகக் காலனையும் உதைத்துருட்டினீர்!; அடியேற்கு இன்று ஞாலம் நின்புகழே ஆகவேண்டும்-இன்று அடியேனுக்கு இந்த நிலவுலகம் முழுதும் தேவரீரது புகழே ஆகப் பரவுதல் வேண்டும்; என்றார் - என்று விண்ணப்பித்தார்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) நான்மறைகள் ஏத்தும் சீலமே! என்றும், **ஆலவாயிற் சிவபெருமானே!** என்றும் இரண்டு தன்மைகளால் இறைவரை விளித்து, **ஆல மமுதாக உண்டு வானவர்க் களித்ததும், காலனை மார்க்கண்டர்க்காக் காய்ந்ததும்** என்ற இரண்டு அருளிப்பாடுகளைப் பற்றி போற்றினார்;

இவற்றினைக் கண்டு அடியேனும், **இன்று அடியேற்காக ஞாலம் நின்புகழே மிக வேண்டும்** என வேண்டிக் கொள்கின்றேன் என்றபடி.

சீலம் - என்றது மறைகளாற் போற்றப்படும் சொரூபம் என்னும் (இறைவரது) சிறப்பிலக்கணம். "சீலமோ வுலகம் போலத் தெரிப்பரிது" என்புழிச் சீலம் இப் பொருட்டாதல் காண்க. (சித்தி - 1-50); சங்கார காரணனுயுள்ள தனி முதல்வன்.

ஆலவாயிற் சிவபெருமான் - என்றது ஐந்தொழில் செய்வதற்கு உள்முகமாகி நிற்கும் தடத்தம் என்னும் (இறைவரது) பொதுவிலக்கணம்.

ஆலமே அமுதமாக உண்டு வானவர்க் களித்தல் - அறக்கருணை; **காலனைக் காய்தல்** - மறக்கருணை; ஈண்டு இரண்டும் செயத்தக்க தென்பது குறிப்பு.

ஆலமே யமுதமாக உண்டு - "ஆலத்தி னுலமிர் தாக்கிய கோன்" (திருக்கோவை) தடையாயிருந்த தத்துவங்களால் சுத்தி செய்து சிவானுபவத்துக்குத் துணையாகுமாறு செய்தல் குறிப்பு.

வானவர்க்களித்து - சிறப்பாய்ப் பாண்டி நாட்டவர்க்கும் பொதுவாகச் சைவ வுலகத்துக்கும் புரிதல் குறித்து நின்றது; வானவரை மயக்க எழுந்து வருத்திய விடத்தை ஒடுக்கித் தன் அளவில் அடக்கி வைத்தது போலப், பாண்டியனையும் பாண்டி நாட்டவரையும், அரனடியாரையும் மயக்கிப் பொய் மிகுத்து மறைவழக்கம் அருகிப் பூதிசாதன விளக்கம் போற்றல் பெறாது ஒழிய மேல் எழுந்து பரவிய சமண்கையர் சாக்கியர் தம் பொய்ந்நெறியினை மேலடராது ஒடுக்கித் தம் அளவில் நிறுத்தி என்ற குறிப்புப்படநின்றது.

மார்க்கண்டர்க்காக் காய்ந்து - மார்க்கண்டரை முன்னிலையாகக் கொண்டு காலனைக் காய்ந்த செயல்; அஃது அவர்களுக்கேயன்றி அடியவர்க்கெல்லா மாகியவாறு போல, ஈண்டு இதனை, "இன்று அடியேற்காக" வேண்டினும் இப்பயன் அடியார்க் கெல்லாமாகுதல் வேண்டும் என்பது குறிப்பு. "ஞால நின்புகழே மிக வேண்டும்" (தேவா) என்ற கருத்துக் காண்க. காலன் மார்க்கண்டரை அடர வந்தமைபோல ஈண்டுச் சமணரும் பிள்ளையார்பால் தீத்தொழில் செய்தமையும் கருதுக. "கன்றிய காலனைக் காலாற் கடிந்தா னடியவர்க்கா" (தேவா) மிருகண்டர் மகன் மார்க்கண்டர் என்பது வடமொழியியல்.

அடியேற்கின்று ஞாலம் நின்புகழேயாக வேண்டும் - "ஞால நின்புகழே மிக வேண்டும்" என்ற தேவாரக் கருத்துரைத்தபடி.

நான்மறைக ளேத்தும் சீலமே! - சிவமும் சத்தியுமாய் நின்று உயிர்களுக்கருளும் கருணையே சீலம் எனப்பட்டது. "பாதி மாதுட னய பரமனே!" (தேவா) என்ற பதிகக் கருத்து. இங்குச் சீலம் என்றது சிவனது இறைமைக் குணத்தை என்பது "நான்மறைக ளேத்தும்" என்ற விசேடணத்தால் அறிக; சீலமுடையாரைச் சீலம் என்றுபசரித்தார். "விடந்தனையுண்டு கண்டத்தே வைத்த பித்த நீசெய்த, சீலங் கண்டு" (நம்பி. புன்கூர்-தக்கேசி - 5) என்ற கருத்துக் காண்க. சமணர்கள் கொண்ட கொள்கையாகிய அறம்-சீலம் - இவை வேறு; இங்குக் கூறிய **சீலம்** வேறு; சொற்பெயர் ஒற்றுமை கருதியே இவை யிரண்டும் ஒன்றென மயங்கிக் கொண்டு ஆதி சமணர் இச் சீலத்தைப் பொருளாகக் கொண்டு வழிபாடு செய்தனர் என்றும்,

பிற்காலச்சமணர் அதனினின்றும் பிறழ்ந்ததனால் அந்நிலைமையைக் களையப் போந்தனர் என்றும், பலவாறும் மயங்க வைக்கும் திரிபாகிய விசேட ஆராய்ச்சிகள் கண்டு செய்வாருமுண்டு; அவை பொருந்தாமை முன்னர்க் காட்டப் பட்டது; பின்னுங் காண்க.

ஞாலம் நின்புகழே மிகவேண்டும் என்றதனால் அற்றை ஞான்று அரன்புகழ் ஞாலத்தில் மிகாது குன்றி நிகழ்ந்த தென்பது பெறப்படும்; ஆகவே அந்நிலைமையை நீக்கி அரன் புகழ் உலகு எங்கும் பரவச் செய்தலையே பிள்ளையார் வேண்டினர் என்பதும் பெறப்படும்; "மேதினிமேற் சமண்கையர் சாக்கியர்தம் பொய்ம்மிகுத்தே, ஆதியரு மறைவழக்க மருகியர னடியார்பாற், பூதிசா தனவிளக்கம் போற்றல்பெறா தொழியக்கண்டு" *(1916)* என்றது காண்க. "ஆழ்க தீயது எல்லா மரனாமமே, சூழ்க" *(பாசுரம்)* என்று இன்று முடிவில் வேண்டிய திருநோக்கும் கருதுக.

ஆலவாயிற் சிவபெருமானே! - எங்கும் நிறைந்து விளங்கும் அக்கருணை வெளிப்பட்டருளும் இடமாவது இஃது என்றதாம். "மண்ணகத்திலும் வானிலு மெங்குமாந், திண்ணகத் திருவால வாயாய்" *(கௌசிகம்-3)*.

***மார்க்கண்டிக்கா*—என்பதும் பாடம்.** 740

IV திருவாலவாய்

திருச்சிற்றம்பலம் **பண்-கௌசிகம்**

காட்டு மாவ துரித்துரி போர்த்துட
ஞட்ட மூன்றுடை யாயுரை செய்வனுன்
வேட்டு வேள்வி செயா**வமண் கையரை**
யோட்டி வாது செயத்திரு வுள்ளமே! (1)

செந்தெ ஞமுர லுந்திரு வாலவாய்
மைந்த னேயென்று வல்லம ஞசறச்
சந்த மார்**தமிழ் கேட்ட**மெய்ஞ் ஞானசம்
பந்தன் சொற்பக ரும்பழி நீங்கவே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:— கரியுரி போர்த்த கடவுளே! நோக்கிட விதியிலாத அமண்கையரை நோக்கி நான் ஒட்டி வாது செய்தல் தேவரீருக்குத் திருவுள்ளமே!என்று இறைவரது திருவுள்ளத்தின் அருட்குறிப்பினை வினவி யறிந்தது. "திருவுள்ள மறிவேன்" *(2634)*; திருவுள்ளமே" *(2636)*; "திருவுள நோக்கி" *(2637)*.

பதிகப் பாட்டுக் குறிப்பு:—*(1)* காட்டு மா - யாகத்தி லெழுந்து பகைகாட்டி வந்த யானை; காட்டானை என்பாருமுண்டு; **அது** - பகுதிப் பொருள் விகுதி; **உடல் போர்த்து** என்று கூட்டுக. **நாட்டம்** - கண்; **மூன்று** இங்குச் சிறப்பாகிய நெற்றிக் கண்ணைக் குறித்து நின்றது. மாவுரித்ததுவும் நெற்றிக்கண்ணுடைமையும் பகையை அழிக்கும் தன்மைக் குறிப்புப்பட நின்றன. **கண்** என்னாது **நாட்டம்** என்றதும், **உரித்து** என்றொழியாது உரி **உடல் போர்த்து** என்றதும், அந்த அழித்தலும் காவல் கருதி நிகழ்வது என்ற குறிப்புப்பட நின்றன. **உரை செய்வன்** - வினவுவேன்; **வேட்டு வேள்வி செய்யார்;** ஆதலின் என அடை மொழியால்

ஏதுக் கூறினர்;மேல் வருவனவும் இவ்வாறே; **ஓட்டி** - ஒட்டி என்பது முதல் நீண்டு வந்தது செய்யுள் விகாரம்; ''ஒட்டியே செய்வ தென்றார்'' (2695); வாது ஒன்றினின்றும் மேல் இரண்டும் மூன்றுமாக நீள்வதும் குறிப்பு; **நான் வாது செய** - என்று கூட்டுக; **திருவுள்ளமே** - ஏகாரம் வினு —*(2)* **ஈர்உரி** - ஈர்தலால் பெற்ற உரி; **உரி**-தோல்; உரித்தலாகிய பெயர் அதனுல் பெறப்படும் பொருளுக்காகி வந்தது ஆகுபெயர்; முன் பாட்டில் ''உரித்துரி'' என்றதும் காண்க; **பொய்த்த** - பொய்யாகிய; வஞ்சகமாகிய; **வன்தவம்** - வலிமையாவது மயிர் பறித்தல், சுடுபாறையிற் கிடத்தல் முதலாக உடலை வருத்துதல்; **வேடத்தார்** - வேட மாத்திரையாயொழிந்து உரிய ஒழுக்கமில்லாமை குறிப்பு; **சித்தர்** - பொய்த்தவத்தையே குறிக்கொண்ட சித்தத்தவர்; **அழித்தல்** - ஈண்டு அவர் தீமையைப் போக்குதல் என்ற கருத்துக்கொண்டது; மேல் ''அழிக்க'' (10) என்றதும் இக்கருத்து; மேல் ''கற்பழிக்க'' (3) என்றதும் காண்க.—*(3)* **மண் - வான் - எங்கும்** - நடு - மேல் - கீழ் என்ற மூவுலகங்களிலும்; **எங்கும்** - கீழுலகத்தைச் சொல்லாமற் குறிக்கும்; ''வானே நிலனே **பிறவே**'' - ''ஞாலமே விண்ணே **பிறவே**'' (திருவா); **திண்ணகம்** - செறிந்து பிரியா நிறைவுடைமை; **பெண்ணகம்** - பெண் துறவிய ரிடையில்; **தெண்ணர்** - நெஞ்சின் கொடுமையுடையோர்; **கற்பு** - கற்பித்த பொய்க் கொள்கைகளின் தொகுதி:—*(4)* **ஓத்து** - வேதம்; **நீதி** - சைவநீதி - ஒழுக்கம்; **ஆக** - விளங்க; ''நீதியும் வேத நீதி யாகியே நிகழ்ந்த தெங்கும்'' (2756); **நினைந்தருள் செய்திடுதல்** - நினைத்தல்;இறைவரது அருட்சங்கற்பம்.—*(5)* **ஆர்தல்** - நிறைதல்; **திருவுள்ளமே** - **செப்பாய்** என்று கூட்டுக; **செப்புதல்** - உணர்த்துதல்; **பைய** - கெட;—*(6)* **வீறு** - ஈண்டு உண்மை; **மோட்ட மண்** - முருடாகிய அமண்; **வேடர்** - வேடத்தையுடையவர்; **சீறுதல்** - கோபித்தல்; எவரையும் **சீறு**தல் செய்யலாகா தென்பது விதியாதலின் திருவுள்ளம் கேட்டருளினர்;—*(7)* **செண்டடித்தல்** - இலகுவில் வெற்றி கொள்ளுதல்; **உளற** கலக்க;—*(8)* **பாவர்** - பாவமுடையார்; **கரக்க** - மறையச் செய்ய; பிறவினை;—*(10)* **மீன்படுப்பார்** - மீன் பிடித்துண்பவர்;மீன்கள் நீரின் வெளிப்போந்ததும், அப்போது வேறெவரும் அவற்றைக் கொலை செய்யாமலே தாமே இறந்துபடுதலால் மீன் பிடித்தல் கொலையாகாதென்பது புத்த சாக்கியர்களது கொள்கை. அறம் பேசித்திரிந்து கொலை புரிதலால் பதிதர்; **அழிப்பர்** - அழிவு செய்குவோர்; சைவ விளக்கத்தை அழித்தவர்; ஆதலின் அவரை அழிக்க எனக் காரணப் பொருள்பட உடம்பொடு புணர்த்தி ஓதியருளினர்;—*(11)* **அமண் ஆசு** - அமணரால் நேர்ந்த குற்றம்; **ஆசுஅற** - ஆசு அறும்படி செய்ய; **தமிழ்** - தமிழினுல்; **கேட்ட** - வினவிய; பழிநீங்கப் பகரும்; ''வண்தமிழ் செய்மாலை'' (பதிகம் - கௌசிகம்-11).

V திருவாலவாய்

திருச்சிற்றம்பலம் — **பண் - பழம்பஞ்சுரம்— நாலடி மேல்வைப்பு**

வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி யமணொடு தேரரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
பாதி மாதுட னய பரமனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே. (1)

கூட லாலவாய்க் கோனை **விடைகொண்டு**
வாடன் மேனி யமணரை வாட்டிட
மாடக் காழிச்சம் பந்தன் **மதித்தவிப்**
பாடல் வல்லவர் **பாக்கிய வாளரே**. (11)

பதிகக் குறிப்பு:—நோக்கிட விதியிலாரை நோக்கியும் ஒட்டியும் வாது செயத் திருவுள்ளமே? என்று வினவி இறைவர் அதற்குத் திருவுளங்கொண்ட வாய்பாட்டுக் குறிப்பினால் உணர்ந்தனர் பிள்ளையார்; அற்றாயின் வாது செய்தால் அது வெற்றி பெற முடிதல் வேண்டும்; ஒட்டி வாது செய்தல் குறிப்பாதலின், அம்முடிவில் அத்தீயோர் அழிவுபடுதலும் உளதாகும்; இவையிரண்டனளவும் இவ்வாறு சென்று முடிதற்குத் திருவுள்ளமே என்று பின்னர் மேலும் வினவித் திருஅருட் குறிப்புணர்தல் இப்பதிகக் குறிப்பு; முன் பதிகத்துள் ''வாது செயத்திரு வுள்ளமே'' என்றதும், இங்கு ''வாதில் **வென்றழிக்கத்** திருவுள்ளமே'' என்பதும் காண்க. ''பரசமய நிராகரித்து நீறாக்கும்'' (1917) என்றவிடத்தும், பிறாண்டும் உரைத்தவை ஈண்டுச் சிந்திக்கத் தக்கன. தாம் வினவிய வண்ணமே திருவுள்ளக் குறிப்பினை உள் உணர்ச்சியிற் பிள்ளையார் உணரப்பெற்றவர் என்பது முன்னர்த் ''தமிழ்கோட'' (முன் பதிகம்) என்றும், இங்கு ''விடைகொண்டு - மதித்த'' (இப்பதிகம்-11) என்றும் வருவனவற்றால் துணியப்படும். **இவ்வாறு இறைவரால் உண்ணின்று உணர்த்தப்படும் பரிபக்குவமுடையவர் பிள்ளையார் என்பதும் கருத்து**.

பதிகப்பாட்டுக் குறிப்பு—*(1)* வேத...உழல் - ஆதமில்லி - வென்றழிக்கத் திருவுள்ளமறிதற்கெழுந்த காரணமுமுணர்த்தி நின்றன இவ்வினை மொழிகள்; **ஆதம்** - அறிவுடைமை; **ஆதமில்லி** - அறிவிலி; ''ஆதமிலி நாயேனை'' (திருவா) ***(2)* வைதிகம்** - வேதநெறி; **கைதவம்** - பொய்; **எய்தி** எய்தலாகாதவரை எய்தி; ''நோக்கிட விதியிலாரை'' *(2636)*; ''காணா கண்வாய் பேசாதப் பேய்களோடே'' (திருவிசைப்பா);—***(3)* வழக்கம்** - வழி வழங்குதல்; **முறிய** - உடைய; வெற்றிகொள்ள;—***(4)* அறுத்த** அறுதியிட்ட; வரையறுத்த; **அங்கம் ஆறு** - வேதாங்கம்; **கறுத்த** - வெறுத்த; **ஆழ்அமண்** பாவக்குழியில் ஆழ்ந்த அமணர்; **கையர்கள்** - கீழ்கள்; **செறுத்து** - மேற்கொள்ளலாகாத சினத்தைத் தாங்கி; **முறித்த** - தளிர்த்த; ''முறிமேனி'' - *(குறள்-1113)*; கொழுந்தாகிய. ''முறியே தளிரே'' (தொல்- பொ.642); **வாள்முறித்த** - ஒளி முகிழ்த்த;—***(5)* அருகர் திறங்களைச் சிந்த** - அமணர்களது கொள்கைகளைச் சிந்துவிக்க; **அழிக்க - முறிய** என வருபவற்றின் கருத்தினை விளக்கியவாறு காண்க; மேல் ''திறம்கழல்'' (7) என்பதும் இக்கருத்து. **சிந்த** - சிந்துவிக்க. பிறவினைப் பொருளில் வந்தது;— ***(6)* விளிமூட்டு சிந்தை** - இகழும் மனம்; **ஓட்டி** - ஒட்டி;—***(7)* விழலதென்னும்** - வீண் என்னும்; பழுது என்று சொல்லும்; **அது** - பகுதிப் பொருள் விகுதி;—***(8)* நீற்று...நில்லா அமணர்** - சமணர் சைவத்திறத்தின்மேல் வைத்த வெறுப்பினையும் பகைமையினையும் அளவுபட எடுத்துக் காட்டியபடி; திருநீற்று மேனியுடைய சிவனடியார்மேற் பொருந்திய காற்றுத் தானும் தம்மேல் அணையப்பெறாத வன்கண்மை பொருந்திய உள்ளம் உடையர் என்றது; **தேற்றி** - உண்மையை உலகமறியச் செய்து; **ஆற்ற** - மிகவும்;—***(9)* சீலம்** - பெருமை விளங்க;—***(10)* தென்ற** - அழிய; **கன்று** - பகைத்த;—***(11)* விடைகொண்டு - மதித்த** - அருட்குறிப்பினை உணர்ந்து வாதின் மேற்செல்லவிடைபெறும் உட்குறிப்புடன் விண்ணப்பித்த.

2639. **நாதர்தம் மருண்முன் பெற்று** நாடிய மகிழ்ச்சி பொங்கப்
போதுவார் பணிந்து போற்றி **விடைகொண்டு** புனித நீற்று
மேதகு கோலத் தோடும் விருப்புறு தொண்டர் சூழ
மூதெயிற் கபாட நீடு முதற்றிரு வாயில் சார்ந்தார். 741

2640. அம்மலர்க் **குழலி னூர்க்கு மமைச்சர்க்கு மருள வேண்டிச்**
செம்மணிப் பலகை முத்தின் **சிவிகைமேற் கொண்ட போதில்**
எம்மருங் கினிலுந் தொண்ட ரெடுத்தவார்ப் பெல்லை யின்றி
மும்மைநீ டுலக மெல்லா முழுதுட னிறைந்த தன்றே. 742

2639. **(இ-ள்)** *நாதர்...பெற்று* - இறைவரது திருவருட் குறிப்பினை முன்னே பெற்றுக்கொண்டு; *நாடிய...போற்றி* - நாடியிருந்த அருள் உணரப்பெற்றமையாற் பெற்ற மகிழ்ச்சி பொங்கும்படி போவாராகி வணங்கித் துதித்து;*விடைகொண்டு* - வாதினை மேற்கொண்டு செல்ல இறைவர்பால் அருள் விடை பெற்றுக்கொண்டு; *புனித நீற்றின்...சார்ந்தார்* - தூய திருநீற்றின் அணி விளங்கும் மேன்மையுடைய திருக்கோலப் பொலிவினுடனே அன்புடைய திருத்தொண்டர்கள் சூழ்ந்துவரப் பழமையாகிய மதிலின் நிலைவாயில் பொருந்திய முதற்றிருவாயிலினைச் சார்ந்தருளினர்.

(வி-ரை) அருள்முன் பெற்று - இறைவரது திருவருட் குறிப்பினைத் தமது திருவுள்ளத்தில் முன் உணரப்பெற்றவராகி.

நாடிய மகிழ்ச்சி - நாடிய பொருள் பெறப்பெற்றமையாற் போந்த மகிழ்ச்சி.

விடைகொண்டு - வாதத்தின் மேற்செல்லுதற்கு விடைபெறுதலே இப்பதிகக் குறிப்பாமென்பது "கோனை விடைகொண்டு...மதித்தவிப் பாடல்" என்ற திருப்பதிகத்தாலறிக; பதிகத்துட் **"கோன்"** என்றதும் அரசனுணையின்றி அடியவர்க்குச் செயலில்லை என்ற குறிப்புந்தந்து நின்றது. சொக்கநாதர் மதுரையின் அரசாட்சி யுடையவர் என்ற வரலாற்றுக்குறிப்புமாம்.

முதற்றிருவாயில் - கோயிலினுட் செல்லும்போது புகும் முதல் வாயில்; **கபாடம்** - கதவு. *741*

2640. **(இ-ள்)** *அம்மலர்க் குழலினூர்க்கும்... போதில்* - அந்த மலர்களையுடைய குழலையுடைய அம்மையாருக்கும் அமைச்சனாராகிய குலச்சிறையாருக்கும் அருள் புரிய வேண்டிச் சிவந்த மணிகள் பொருந்திய பலகையுடைய முத்துச் சிவிகையின்மேல் பிள்ளையார் எழுந்தருளியபோது; *எம்மருங்கினிலும்... ஆர்ப்பு* - எல்லாப் பக்கங்களினும் தொண்டர்கள் எடுத்திசைத்த ஆரவாரவோசை; *அன்றே* - அப்போதே; *எல்லையின்றி... நிறைந்தது* - அளவில்லாது பெருகி மூன்றாகிய நீண்டவுலகங்களில் எங்கும் நிறைந்தது.

(வி-ரை) அம்மலர்க் குழலினூர்க்கும் அமைச்சர்க்கும் - அகரம் தம்மிடம் புகலடைந்து அரசனை ஆட்கொண்டருளும்படி விண்ணப்பித்த அந்த என்று (2631) முன்னறிசுட்டு. **அவ்வமைச்சர்க்கும்** எனச்சுட்டு ஈண்டும் கூட்டுக. **அம்** - அழகிய என்றலுமாம்.

2641. பல்லிய நாதம் பொங்கப் படர்**திரு நீற்றின் சோதி**
நல்லொளி வட்ட மாகி நண்ணிமேல் வருவ தென்ன
வில்வளர் தரளக் கோவை வெண்குடை நிழற்ற, வெவ்வே
றெல்லையில் முத்தின் காளந் தாரைசங் கெங்கு மோத; 743

குழலினார்க்கும் அமைச்சர்க்கும் அருளவேண்டி - *அரசியையும் நாட்டினரையும் ஆட்கொண்டருளுதல் இவர்கள் பொருட்டேயாம் என்பது; இவர்களது விண்ணப்பமே இவ்வருளிப்பாட்டுக்குக் காரணமாதலும் கருதுக.*

செம்மணிப்பலகை - மணி - *அழகு என்றலுமாம்.*

மேற்கொள்ளுதல் - *மேலே எழுந்தருளி மேற்செல்ல ஒருப்படுதல்.*

மும்மை - *ஈண்டு எண் குறித்து நின்றது; "தமிழ் மும்மை" என்புழிப்போல.*

தொண்டர் - *பிள்ளையாருடன் போந்த திருக்கூட்டம்.* **742**

2641. **(இ-ள்)** *பல்லிய நாதம்பொங்க - பலவகைப்பட்ட இயங்களின் ஓசைமிக்கு எழுந்திசைக்க; படர்...நிழற்ற - எங்கும் படர்ந்து பெருகும் திருநீற்றின் சோதியானது நல்ல ஒளிவட்டமாக உருவெடுத்துப் பொருந்தி மேலே வருவது போல ஒளிபெருகும் முத்துக் கோவைகளையுடைய வெண்குடையானது மேலே நிழலைச் செய்ய; வெவ்வேறு...ஓத - வேறு வேறுக அளவில்லாத முத்துக் காளமும் தாரையும் சங்கங்களும் எங்கும் இசைக்க.*

(வி-ரை) பொங்க - நிழற்ற - ஓத(ச்) *செல்லும்* ***எழுச்சி*** *என, வரும் பாட்டுடன் முடிக்க.*

திருநீற்றின் சோதி - ஒளி வட்டமாக நண்ணி மேல் வருவ தென்ன வெண்குடை நிழற்ற என்றது மேலே கவிந்து நிழற்றும் வெள்ளிய முத்துக் குடையானது திருநீற்றின் பரந்த ஒளி ஒரு வட்டமாகப் பொருந்தி மேல் வருவது போல இருந்ததென்பது மெய்யும் உருவும் பற்றிவந்த உவமம். மதியைச் சூழ்ந்து பரி வேடம் ஒளி வட்டமாகப் பொருந்தும் காட்சி இங்கு நினைவு கூர்தற் பாலது; "சிவிகையின் மேற் சேவித்து வருநிலவு தருமதிபோல் வளரொளிவெண் குடைநிழற்ற" *(2546)* என்று முன் கூறிய கருத்தும், திருநீற்றுத் தொண்டர்குழாத்திற்கு நிலவின்கடலை உவமித்துத் "திரண்டபெருந் திருநீற்றுத் தொண்டர்குழா மிருதிறமுஞ் சேர்ந்த போதி, லிரண்டுநில வின்கடல்க ளொன்றாகி யணைந்தனபோ லிசைந்த வன்றே" *(1498)* என்றதும் ஆண்டுரைத்தவையும் இங்குக்கருதற் பாலன.

படர் திருநீற்றின் சோதி - படர் திருநீறு என்றும், **படர் சோதி** என்றும் ஈரிடத்தும் கூட்டுக.

வெண்குடை நிழற்ற - *அரச அடையாளமாகிய பத்து அங்கங்களுட் சிறப்புடைய ஒன்றாதலின் ஈண்டுக் குடையினை இவ்வாறு சிறந்த உவமானத்தாற் சிறப்பித்துக் கூறினார்.*

வெவ்வேறு - ஓத - என்க; தாளம், தாரை, சங்கு இவற்றின் ஓசைகள் வெவ்வேறாதல்

2642. கண்ணினுக் கணியா யுள்ளா ரெழுச்சியிற் காட்சி பெற்றார்
நண்ணிய சமயம் வேறு நம்பின ரெனினு முன்பு
''பண்ணிய தவங்க ளென்கொல் பஞ்சவன் றஞ்ச மேவிப்
புண்ணிய மூர்த்தி வந்து மதுரையிற் புகுத'' வென்றார். 744

காண்க. **முத்தின்** என்பதனைத் **தாரை** என்பதனுடனும் கூட்டுக. **ஓதுதல்** - புகழ்களை எடுத்து ஒலித்தல். **வில்வளர் தரளக்கோவை - வில்** - ஒளி; முத்துக்கள் கோத் தணிபெற அமைத்த.

நாதமோங்க—எங்குமொத்த—எங்குமூத—என்பனவும் பாடங்கள். *743*

2642. **(இ-ள்)** கண்ணினுக்கு...எனினும் - கண்ணினுக்குரிய அணியாக விளங்கும் பிள்ளையாரது திருவெழுச்சியின் காட்சியினைப் பெற்ற அந்நகர மாந்தர்கள் தாங்கள் சார்ந்த சமணமாகிய வேற்றுச் சமயத்தை நம்பினராயினும்; பஞ்சவன் தஞ்சம் மேவி - பாண்டியன் அடைக்கலம் புகும் பொருளாகப் பொருந்தி; புண்ணிய... புகுத - புண்ணிய வடிவினராகிய இவர் தாமே வந்து மதுரையிற் புகுவதற்கு; பண்ணிய தவங்கள் என்கொல்? - (இப்பாண்டியன்) முன்னே செய்த தவங்கள் தாம் எவையோ? என்றார் - என்று சொன்னார்கள்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) கண்ணினுக்கு அணியாய் உள்ளார் - கட்புலனுகர்ச்சிக்குப் பேரழகுடையராய் விளங்கும் பிள்ளையார்; செவி - கை முதலியவற்றுக்குப் போலக் கண்ணுக்கு அணிகலம் இடுவாரிலர்; ஏனையவற்றிற் சிறப்புடைய கண்ணுக்கணி யின்றியிருத்தல் சாலாமையின் சிறந்த அதற்குச் சிறந்த அணியே வேண்டும்; அச் சிறந்த அணியாவது பிள்ளையாரது அழகினைக் காண்டலே யாம் என்பது. ''நாவினுக் கருங்கல நமச்சி வாயவே'' (அரசு-தேவா); ''கண்ணுக் கணிகலங் கண்ணோட்டம்'' (குறள்) என்பனவாதி கருத்துக்கள் காண்க.

உள்ளார் எழுச்சி - உள்ளாரது எழுச்சி; ஆறும் வேற்றுமைத் தொகை.

எழுச்சியிற் காட்சி பெற்றார் - எழுச்சியினைக் கண்ணாரக் காணும் பேறுபெற்றவர்கள்.

வேறு சமயம் நண்ணினர் நம்பினர் **எனினும் - காட்சி பெற்றார் என்றார்** - என்று கூட்டுக. **நண்ணிய,** என்றதனால் முன்பு தொன்று தொட்டு வரும் தமது சமயமல்லாது புதிது புகுந்த சமயம் என்றும், **வேறு** - என்றதனால் அது புறச் சமயமென்றும், **நம்பினர் எனினும் - என்றார்** - என்றதனால் அதில்கொண்ட நம்பிக்கை புறத்தளவில் ஒழிய அதனை அடிப்படுத்தி உள்ளூற நின்ற முன்னைய வுண்மையுணர்வே மேம்பட்டு வெளிவந்தது என்றும் கூறியது கண்டு கொள்க.

எழுச்சியிற் காட்சி பெற்றார் - இவர்கள் நகரமாந்தர். சமணத்திற் புதிதாகப் புக்கவர்கள்; சமணக் குருமார் வேறு; அவர்களே கண்டு முட்டு முதலிய கொடியகொள்கை பற்றி நின்று வாதில் வென்றழிக்கப்பட்டவர் என்பதறிதல் வேண்டும்; அக்குருமார் வயப்பட்டு எழுச்சி காணாது சென்றோரும், அன்றிப் பொறாமை உணர்வின்மை, ஊழின்மை, அறியாமை, மடிமை முதலியவற்றால் காணாது ஒழிந்தோரும் நீங்க, ஏனையோர்களில் எழுச்சியின் காட்சிப் பேறு பெற்ற நகர மாந்தர்கள் என்பதாம்.

''முன்பு பண்ணிய...புகுத'' என்றார் - முன்பு - முற்பிறவிகளில்; ''பாடு முறை யானன்றி இவ்வொரு பிறவியிற் செய்த தவந்தானே அமையாதென்பது உணர்த்துதற்கு முற்செய்த தவம் என விசேடித்தார்'' என்று வரும் சிவஞான போதத் (8 சூத்.) கருத்துக்கள் காண்க. அன்றியும், இப்பிறவியில் அரசன் சமணரது மாயத்தழுந்தி அபசாரப்பட்டுக் கிடத்தலால், இப்பேறு கிடைத்தற்குரிய தவம் ஏதும் செய்திலனாதலின் இது முன்பு பண்ணிய தவங்களின் பயனாகப் பெற்றபேறென்றார்; **தவங்கள் - ஒரு வகையாலன்றிப் பல படியாகவும் தவங்கள் செய் திருந்தாலன்றி இது பெறுதல் அரிதாம் என்பது**.

என்கொல்? - எவையோ? யாம் அறியோம் என்றபடி. எதிர்மறை அனுமானத்தால் முன்னைத் தவங்களுண்டென்று நிச்சியித்துக் காண்பதன்றி அவை இன்னவென்பதறிகின்றிலம் என்றார் என்க.

பஞ்சவன் தஞ்சம் மேவி - பஞ்சவன் - பாண்டியன்; **தஞ்சம்** - அடைக்கலம் புகுமிடம்; **மேவி** - தாமாகமுன் வந்து; பஞ்சவனுக்கு அடைக்கலம் புகுமிடமாகத் தாமே வலிய எழுந்தருளி; நான்கனுருபு தொக்கது.

புண்ணிய மூர்த்தி - புண்ணியமே வடிவாக வுடையவர்.

மூர்த்தி - மூர்த்திமான் உண்ணிறைந்து இருத்தற்கிடம் மூர்த்தி எனப்படும்; ஆசனம் - மூர்த்தி - மூர்த்திமான் என்னும் சிவாகம மரபு காண்க.

வந்து - புகுத - அறியாது கிடக்கும் அரசன் முன்பு தாமே எழுந்தருளி வந்து புகுவதற்கு.

எழுச்சியிற் காட்சி பெற்றார் - தவங்கள் என்கொல் - என்றார் - காட்சி என்பது அகப்பொரு ணிகழ்ச்சிகளில் முதலில் நிகழ்வது; அதன் பின்பு ஐயம், தெளிதல், நயப்பு, உட்கோள், தெய்வத்தை மகிழ்தல் என்பன முறையே நிகழ்வன. அவற்றினியல்பு எல்லாம் அகப்பொரு ளிலக்கியமாகிய திருக்கோவையாருள்ளும், பொருளிலக்கணத்துள்ளும் விரிக்கப்படும். ஆண்டுக் கண்டு கொள்க. ஈண்டுப் பிள்ளையாரது எழுச்சியினால் இருபாலும் **காட்சி** என்ற நிகழ்ச்சியுட்படும் நல் ஊழ்பெற்றோர் பஞ்சவன் தஞ்சமாக வந்து இப்புண்ணிய மூர்த்தி தாமே நமது மதுரையிற்புகுந்து எங்களுக்குக் காட்சியருளி ஆட்கொள்ள வந்த பெருமையினைப் பெற நாங்கள் முன்னையிற் செய்த நல்ல புண்ணியம் தான் என்னே? எனப் பிறிதொரு பொருளும் குறிப்பிற் பெறப்படுதல் காண்க; ''இக் கெண்டையங் கண்ணியைக் கொண்டுதந்த, விளைவையல் லால்விய வேனய வேன்றெய்வ மிக்கனவே'' (திருக்கோவை-6); ''பிணியு மதற்கு மருந்தும் பிறழப் பிறழமின்னும், பணியும் புரைமருங் குற்பெருந்தோளி படைக்கண்களே'' (ஷை-5) முதலிய திருவாக்குக்களின் கருத்துக்கள் ஈண்டு வைத்துக் கருதத்தக்கன.

சமணர் கொளுவிய தீ பிள்ளையார்பால் அணுகாது, கொளுவுதற் கிசைந்த அவர்கள் அரசன்பாலே அணுகி அவர் ஆணையினால் தீப்பிணியாய் எழுந்ததுவும், அப்பிணியினைத் தீர்த்தற்கும் அவரருளே ஆணையாய் எழுந்து போதுவதும் என்றிவ்வொரு காட்சிகண்ட துணையானே, தாம் முன் கொண்டமையல் நீங்கினவர் இங்குக் கூறும் நகரமாந்தர்; இனி, இதன்மேல், பிள்ளையாரது ஆணையினால் மருவும் தீப்பிணி நோய் தீர்ந்து வழுதியு முழுதும் உய்ந்தமையும், அனல் வாதத்திற் பிள்ளையாரது அருளின் வெற்றிப்பாடும் கண்டு புனல்

2643. தென்னவன் றேவி யாருந் திருமணிச் சிவிகை மீது
பின்வர, வமைச்சர் முன்பு பெருந்தொண்டர் குழாத்துச் செல்லப்,
பொன்னணி மாட வீதி யூடெழுந் தருளிப் **புக்கார்**
கன்னிநா டுடையான் கோயில் காழிநா டுடைய பிள்ளை. 745

வாதத்தினை மேற்கொண்டு பிள்ளையார் எழுந்து போவதனைக் காணும் நகரமாந்தர்களாகிய மாதர் மைந்தர்கள், அக்காட்சித் துணையாக "நம் விழுமந்தீர்த்த ஞானசம்பந்த ரிந்த நாயனார் காணீர்" *(2700)*; "நாதனு மால வாயி னம்பனே காணும்" *(2702)*; "போற்றுவா ரெல்லாஞ் சைவ நெறியினைப் போற்றும்" *(2706)* என்பனவாதியாக மேலும் உண்மை யுணர்ந்து கூறும் உயர்தரம்காண்க; இவர்கள் முன் கூறியவர்களின் அடுத்த மேல்தரமாகிய பக்குவமுடையோர்; இனி, அதன் மேல் வைகைக் கரையாகிய தீட்சா மண்டபத்தில் பாண்டியனுக்குப் பெருங் குருவாகிய பிள்ளையார் திருப்பாசுரத்தால் ஞானோபதேசம் செய்து ஆட்கொண்டு திருநீறு அளித்தபோது புனல் வாதத்தின் வெற்றியும் கண்டு, தாமும் உய்ந்து, மற்றவன் மதுரை வாழ்வார், துன்னி நின்றார்க ளெல்லாந் தூயநீ றணிந்து கொண்டா ராகி" *(2755)* ஆட்கொள்ளப் பட்டவர் அதற்கடுத்த மேல்தரமாகிய பக்குவமுடைய நகர மாந்தர்; என்றிவ்வாறு பலதிறப்பட்ட பக்குவான்மாக்களுக்கும் எம் ஞான குருநாதர் அருளிச் செய்த பல திறப்பட்ட அருளின் வண்ணங்களைக் கண்டு கொள்க. **744**

2643. **(இ-ள்)** தென்னவன்... பின்வர - பாண்டியன் தேவியாராகிய அம்மையாரும் அழகிய மணிகளையுடைய சிவிகையினை மேல் கொண்டு தமது பின்னே வரவும்; அமைச்சர்... செல்ல - அமைச்சனாராகிய குலச்சிறையார் தமது முன்பு திருத்தொண்டர் கூட்டத்துடனே கலந்து செல்லவும்; பொன்னணி... எழுந்தருளி - இவ்வாறு பொன்னணிகளையுடைய மாடவீதியின் வழியாக எழுந்தருளிச் சென்று; காழி நாடுடைய பிள்ளை - சீகாழி நாட்டுத் தலைவராகிய பிள்ளையார்; கன்னி நாடுடையான் கோயில் புக்கார் - கன்னி நாட்டரசனாகிய பாண்டியனது அரண்மனையினுள்ளே புகுந்தனர்.

(வி-ரை) முன் பாட்டில் பிள்ளையார் திருவீதியில் எழுந்தருளி வரும் எழுச்சியின் சிறப்பினைக் கண்ட நகர மாந்தர் வாக்கில் வைத்துக் கூறினார்; இப்பாட்டில், அவ்வெழுச்சியினுடன் அம்மையாரும் அமைச்சனாருமுடன் கலந்து செல்லும் நிலையினைக் கூறுகின்றார்.

தென்னவன்... பின்வர - அமைச்சர் முன்புசெல்ல - அம்மையார் பிள்ளையாரது பின்பும், அமைச்சனார் முன் செல்லும் திருக்கூட்டத்துடன் முன்புமாகச் சென்றனர்; அம்மையார் காலவழக்குக்கும் அரசுமரபு வழக்குக்கும் ஏற்பச் சிவிகையிற் பின் சென்றனர்; அமைச்சர் முன்பு தாம் ஊர்ந்து வந்த குதிரையை விட்டுத் தொண்டர்களுடன் நடந்து சென்றனர் என்க; பின்பு வரும் அம்மையாரை முன் வைத்துக் கூறியது சிறப்புப்பற்றி; அமைச்சனார் பரியிலேறித் திருமடத்துக்கு வந்தமை "வருபரியிழிந்து" *(2624)* என்றதனாலறிக. பிள்ளையார் திருத்தொண்டர் கூட்டத்துடன் செல்லும்போது தாம் பரிமிசைச்சேறல் மரபன்றாதலின் அமைச்சனார் பெருந் தொண்டர்குழாத்துடன் கலந்து முன்பு நடந்து சென்றனர் என்பது; இதனை அவர் ஊர்ந்து வந்த பரியைப்பற்றிக் கூறாது விட்ட தன்மையாற் கருதி யறியவைத்த கவிநயமும் கண்டு கொள்க;

2644. **கொற்றவன்** றன்பான் முன்பு குலச்சிறை யார்வந் தெய்திப்
பொற்றட மதில்சூழ் **சண்பைப் புரவலர்** வரவு கூற,
முற்றுயர் சிறிது நீங்கி முழுமணி யணிப்பொற் பீடம்
மற்றவன் "**முடியின் பக்கத் திடு**"கென வல்ல னானன். 746

எஞ்ஞான்றும் தொண்டர் குழாத்தினை வணங்கி வழிபடும் நிலையினின்றவர் குலச்சிறையார் என்பது அவர்தம் புராணத்துட் கூறியவாற்றானறிக.

பிள்ளை - கோயில் - புக்கார் *- என்று கூட்டுக;* ***காழிநாடுடைய பிள்ளை - கன்னி நாடுடையான்*** *- என்றமையால் பிள்ளையாரும் அரசனும் ஒப்பத் தத்தம் நிலையில் நாடுகாவல் உடையோர் என்பது குறிக்கப்பட்டது; தடாதகைப் பிராட்டியார் ஆண்டதனால் கன்னிநாடு என்பது பாண்டியநாடு; அரசனும் பிள்ளையாரருளால் இனி சைவத்தலைமை பெறநின்றமை குறிப்பு: பின்னர்* ***"கொற்றவன் - சண்பைப் புரவலர்"*** *(2644) என்னும் குறிப்பும் காண்க.*

குழாத்துட் செல்ல—*என்பதும் பாடம்.* 745

2644. **(இ-ள்)** கொற்றவன்... கூற - அரசனிடத்து முன்னால் குலச்சிறையார் வந்து சேர்ந்து அழகிய பெரிய மதில் சூழ்ந்த சீகாழித் தலைவராகிய பிள்ளையாரது வருகையை அறிவிக்க; முன்துயர் சிறிது நீங்கி - முன் இருந்த துன்பம் சிறிது நீங்கப் பெற்று; மற்றவன் - மற்று அந்த அரசன்; முழு மணியணி பொற்பீடம் - முழுதும்மணிகளை அணியாகவுடைய பொற் பீடத்தை; முடியின் பக்கத்து இடுக என - தனது முடியின் பக்கத்தே இடுக என்று சொல்ல; வல்லன் ஆனான் - வலிமை பெற்றவனாயினான்.

(வி-ரை) கொற்றவன் - புரவலர் - முன் பாட்டின் குறிப்புப் பார்க்க.

முன்பு - பிள்ளையாரும் ஏனையோரும் வரும் முன்னர்; இவ்வாறு முன்பு வந்து அறிவிப்புச் செய்து வரவேற்கும் வகையில் ஒழுங்குபடுத்திப் பீடமிடச் செய்து வைத்தல் அரச காரிய ஒழுங்கு முறைகளுள் ஒன்று.

வரவுகூற முற்றுயர் சிறிது நீங்கி - நல்வரவு கேட்ட அத் துணையாலே முன் இருந்த துயர் சிறிது நீங்கப் பெற்றான் எனக் காரணப் பொருள்படக் **கூற - நீங்கி** என்றார்; **கூற** - கூறக் கேட்டதனால்; "**கூற - செல்ல - ஆனபோ தயர்வு தன்னையகன்றிட**" (2619) என்றது காண்க.

நீங்கி - நீங்கப் பெறுதலால்; **துயர் நீங்கியதனால்** நல்லறிவு சற்றே வர என்பதுமாம்.

முழுமணி அணிப் பொற்பீடம் - பிள்ளையார் எழுந்தருளுதற்கேற்ற நல்ல ஆசனம். பெரியோர் எழுந்தருளு முன்னமே அவர்க்குத் தக்க ஆசனமமைத்தல் இற்றை நாளினும் நாகரிக வழக்கு.

"முடியின் பக்கத் திடுக" என - பிள்ளையார் தன் முடிமிசை வீற்றிருக்கத் தக்கார் என்றுட்கொண்டு வழிபடும் முறையால் இவ்வாறு அரசன் கூறியது திருவருட் குறிப்பினால் எழுந்தது. உய்யும் காலம் அணிமையாதற் குறிப்பு; மேல் "செல்கதிக் கணிய னானன்" (2667)

என்பது காண்க.— "நல்லநெறி, யெய்துவதோர் காலந்தன் னன்பரைக்கண் டின்புறுதல், உய்யு நெறிசிறிதே யுண்டாக்கி" (போற்றிப்பஃறொடை) என்ற ஞானசாத்திரமுங் காண்க.

மற்றவன் - வேற்றுச் சமயத்துட்பட்டு நின்ற அவனும் என்க. உம்மை தொக்கது; "நண்ணிய சமயம் வேறு நம்பின ரெனினும்" (2642) என்று நகர மாந்தர்க் குரைத்த உண்மை அரசன்பாலும் பொருந்தியதாயிற்று என்பதாம்.

சிறிது நீங்கி - முழுதும் நீங்கி உய்யும் தன்மை மேல் "முழுதும் உய்ந்தான்" (2668) என்பதனுட் காண்க.

வல்லன் ஆனான் - திறம்பெற்றுவனாயினன்; ஆக்கச்சொல் அருமைப்பாடு குறித்தது. 746

2645. **(இ-ள்)** மந்திரியாரை... ஏவ - மேலும், எதிர் சென்றழைத்து வரும்படி அமைச்சனாரை அரசன் ஏவியிட; சிந்தையுள் மகிழ்ந்து போந்தார் - மனத்தினுள் மிக மகிழ்ச்சி கொண்டு அவரும் போந்தனர்; செயலையான்... கண்டு - அசோகினனாகிய அருகனது சமயத்தில் உள்ள அமணர்கள் பசிய கொத்துக்களாலாகிய வேப்ப மாலையை அணிந்த மார்பையுடைய பாண்டிய அரசனது தன்மையினைக் கண்டு; "இதுவோ...நாட்டுமாறு?" என்று - நமது ஒப்பற்ற சமயத்தினைப் பண்பினால் நாட்டும் வழியிதுவோ? என்று கூறி; பின்னும் - மேலும் சொல்வார்களாய்,

(வி-ரை) மந்திரியாரை... ஏவ- பின்னும் - பொற்பீடம் முடியின் பக்கத்திடுக என வேவியதனோ டமையாது மேலும்;

எதிர்கொள - முன் சென்று பிள்ளையாரை எதிர்கொண்டு அழைத்து வரும்படி; ஆசனத்தை முன்னே கற்பித்துப் பின் மூர்த்தியை அழைத்து அதில் எழுந்தருள வைத்துப் பூசிக்கும் முறை கருதுக.

பிள்ளையாரது வருகையைத் தானும் கேட்டுமுட்டு என்று வருந்தியும், திருமடத்தில் வெந்தழற்பட விஞ்சை மந்திரத்தொழில் விளைக்க அமணர்க்குடன்பட்டிருந்தும், (2587) கவலையோடு முகம்புலர்ந்து (2588) அவரை நகரினின்றும் வெளிப் போக்க எண்ணியது முன்னை நாளிரவில் அரசனது நிலை; இது "காரிட்ட ஆணவக் கருவறையி லறிவற்ற கண்ணிலாக் குழவி" என்றபடி மலத்தாற் கட்டுண்டு நன்மை தீமை யறியாது நன்றெல்லாந் தீதாயுந் தீதெல்லா நன்றாயும், கன்றிவரும்" உயிர்களின் நிலை; அவ்வான்மாக்கள்பால் இறைவரது திரோதான சத்தி பிறவி வெம்மைப் பிணியின் உருவில் போந்து தொழில் செய்யச் செய்ய அவ்வாணவ இருள் சிறிதுசிறிதாக நீங்கி நல்லறிவு படிப்படியாக வெளிப்பட்டு நற்றொழிலில் செலுத்தும் என்பது ஞான நூற்றுணிபு; ஈண்டு, "அமணர் கொளுவும் சுடர், பைய வேசென்று **பாண்டியற் காகவே**" என்ற அருளிப்பாடாகிய நோய் தொழிற்படவே, முன்னர் வெறுப்புக்கொண்டு வெளிப்போக்க எண்ணியது மாறிப், பிள்ளையாரது வருகையில் விருப்பம் உண்டாயிற்று; அவரது நாம மந்திரமும் கூறி, அவர் விரும்பி நோக்கிற், றீயவிப் பிணியே யன்றிப் பிறவியும் தீரும் என்றபோது அவர் வந்தால் அவரது அருளா லிந்நோ யகலுமேல் அறிவேன் என்று (2620) அவரை அழைத்து வர வுடன்பாடு விளைத்தது; அவர் வரவு கூற அவருக்குத் தன்

2645. மந்திரி யாரைப் பின்னு **மெதிர்செல மன்ன னேவச்**
சிந்தையுண் மகிழ்ந்து போந்தார்; செயலையான் சமயத் துள்ளோர்
பைந்துண ரலங்கன் மன்னன் பரிசுகண் "**டிதுவோ பண்பால்**
நந்தனிச் சமயந் தன்னை நாட்டுமா?" றென்று பின்னும். 747

முடியின் பக்கத்துப் பீடம் இடுக (2644) என்று கூறச்செய்தது; அதன் மேலும் எதிர் கொளும்படி அமைச்சரை ஏவச் செய்தது - (2645); முன்னர் அமணர் சொல்லு மெல்லாவற்றுக்கும் உடன்பட்டுநின்ற நிலை நீங்கிச் செய்தவப் பயன் வந்தெய்தும் செவ்வி முன் உறுதலாலே அமணர் கூற்றை மறுத்துக் "கைதவம் பேசமாட்டேன்" (2647) என்னவும், பிள்ளையார் எழுந்தருளியதனைக் காணப்பெற்றபோது கையெடுத் தெய்த நோக்கி முடியின் பாங்கர்த் தமனியப்பீடங் காட்டவும், "கெழுவுறு பதியாதென்று விருப்புடன் கேட்கவும்" (2651) ஆகும் நிலைகளையும் செய்தது; **அருள் பதியப் பதிய இருள் படிப்படியாக நீங்குதலும், நலம் அங்கங்கும் விளைதலும்** *இவ்வாறு பின் "தேனலர் கொன்றை யார்தந் திருநெறி நடந்ததன்றே" (2758) என்பது ஈறாக வரும் எல்லா நிகழ்ச்சிகளிலும் படிமுறையில் வைத்து அங்கங்கே ஆசிரியர் காட்டக் கண்டுகொள்க; 2667-2668-2670-2690-2716-2717- 2718-2755 முதலியவை பார்க்க.*

சிந்தையுண் மகிழ்ந்து - *இதுவரை அரசனது நலங்கருதித் தாமே செய்துவந்த அரசகாரியமாகிய பிள்ளையாரது வரவேற்பினை முன் அரசியார் ஏவல்வழி யமைந்து (2543) செய்ய நேர்ந்ததுபோல, இப்போது அரசனும் உடன்பட்டுப் பீடம் அமைக்கவும் எதிர் செல்லவும் ஏவியமையால் மகிழ்ந்தனர்.*

செயலையான் - *அருகன்;* **செயலை** - *அசோகமரம்; அசோகமரத்தின் கீழ் உள்ளவன் அருகக்கடவுள் என்பர். "செயலைத் தண்டளிர்" (முருகு).*

மன்னன் பரிசு - *இவ்வாறு பிள்ளையாரை வரச்செய்து உபசரிக்க ஒருப்பட்டு முற்பட்ட தன்மை.*

இதுவோ... நாட்டுமாறு - *இது அமணர் அரசனுக்குச் சொல்லியது; தீமை செய்தேனும் தம் சமய நிலையை நாட்டுவது என்ற அமணரது கொள்கைக் கேற்பக் கூறியது; மேலும் தொடர்ந்து மேல்வரும் பாட்டிற் கூறும் நிலையும் காண்க.* **இதுவோ** - *ஓகாரம் இஃது அன்று என எதிர்மறை குறித்தது.*

747

பின்னும் என்றார் - *என்று மேல்வரும் பாட்டுடன் முடிக்க.*

2646. **(இ-ள்)** *நின்...ஆகில்...அழைத்தனை - உனது அறநெறியாகிய சமயத்தை நீயே காத்தருள் செய்வாயானால்; அவரை இங்கே வரும்படி அழைத்தாய்; (அவ்வாறு அழைத்தாலும்); அவரும்...மொழிந்து - அவரும் நாங்களும் உனது முன்னே ஒருங்கு கூடி இந்நோயைத் தீர்க்கும்படி சொல்லி; மற்று...இசைவாய் என்றார் - மற்று அவரால் நோய் தீர்ந்தாலும் நாங்களும் தீர்த்தோம் என்று சொல்ல உடன் படுவாயாக என்று சொன்னார்கள்.*

இவ்விரண்டு பாட்டுக்களும் ஒரு முடிபு கொண்டன.

2646. **''நின்னற நெறியை நீயே காத்தருள் செய்தி யாகில்**
அன்னவர் தம்மை யிங்கே யழைத்தனை யவரும் யாமும்
முன்னுற **வொக்கத் தீர்க்க மொழிந்துமற் றவராற் நீர்ந்த**
தென்னினும் யாமுந் தீர்த்தோ மாகவு மிசைவா'' யென்றார். 748

(வி-ரை) நின் அறநெறியை நீயே காத்தருள் செய்தியாகில் - நின் அறநெறியை - என்று அச்சமயத்தை அரசனது உடைமையாகக் கூறியது அரசனைத் தமது செயலுக்கு உடன்படுத்துதற் கருத்து; **நந்தனிச்சமயம்** என முன்பாட்டில் அரசனையும் தம்முடன் உளப்படுத்திக் கூறியதும், தமது நெறியின் மேம்பாடு காட்டிக் கூறியதும் இக்கருத்து; ''தலைநெறியா கியசமயந் தன்னையழித் துன்னுடைய, நிலை நின்ற தொல்வரம்பி னெறியழித்த பொறியிலியை, அலைபுரிவாய்'' *(1354)* என்று பாடலிபுரத்தில் அமணர் பல்லவனுக்கும் இவ்வாறே உரைத்த கருத்தும் காண்க. இஃது அரசனே சமயக் காவலனுவான் என்ற பொதுவழியை அமணர் தமது நலங்கருதிப் பயன்படுத்திக்கொண்ட முறை. **செய்தியாகில் -** செய்வாயானல்;

நீயே காத்தருள் செய்தியாகில் என்றது சமயநெறி உனது உடைமை; உன் உடைமையைக் காத்தல் உனது கடமை; அரச கடமைகளிற் றிறம்பாது ஒழுக நீ மறுக்கமாட்டாய்; அற்றாகலின் - என்று அமணர் தமது தீய கருத்தைப் புகட்டுதற்கு முன்னுரை - பீடிகை - கூறியபடி. **செய்தியாகில் - இசைவாய்** என்று கூட்டுக.

அன்னவர் தம்மை இங்கே யழைத்தனை - சமயநிலையின்படி காணக்கூடாத அவரை - அழைக்கக்கூடாத அவரை - நகரைவிட்டுப் போக்குதற்குரிய அவரை - அவ்வாறே நீ அனுமதித்து உனது குரவர்களாகிய நாங்கள் முன் இரவு - ''தீத்தொழில் விளைத்த அவரை - என்று இவ்வாறு பல குறிப்புகளும்பெற **அன்னவர் தம்மை** என்று முன்னறிசுட்டிஞற் கூறினர்.

அழைத்தனை - அழைத்தல் அடாத செயலே; ஆயினும் சில காரணம்பற்றி அழைத்துவிட்டாய்; இருந்தபோதிலும் நமது சமயக் காவலின் பொருட்டு அவ்வடாத செயல்தீர, இனி மேற்கொள்ளத்தக்கது நாம் கூறுமாறு இசையும் இஃது என மேற் கூறுதற்குரிய காரணமும் அமைதியும் காட்டியபடி.

அவரும்...இசைவாய் - சமயக் கொள்கைக்கு மாறுபாடானதொரு அடாத செயலைச் செய்ய நேர்ந்தபோது மேலும் சமயநெறி வழுவாது அதனைத் தீர்க்கவல்ல தொரு உபாயம் கைக்கொள்ளத்தக்கது என்பது முறை; இவ்விடத்தில் அத்தகைய உபாயம் இஃதேயாம் என்று அரசனை இசைவுபடப் புகட்டியபடி; ''இக்கூற்றல் அக்காலச் சமணர் உண்மைச் சமணத்தின் செந்நெறியின்றும் வழுக்கி வீழ்ந்தவர் என்பது வெள்ளிடைமலையென விளங்குதல் காண்க'' என ஈண்டு விசேட ஆராய்ச்சி யுரை செய்வாருமுண்டு; இது தவருன ஆராய்ச்சிமுறை என்பதை முன்னர்ப் பல விடத்தும் எடுத்துக் காட்டிஞம்; ''கொல்லாமை மறைந்துறையும் அமண சமயம்'' *(1302)*; ''கொலையும் பொய்ம்மையு மிலமென்று கொடுந் தொழில் புரிவோர்'' *(1346)*; ''கொலைபுரியா நிலைகொண்டு பொய்யொழுகு மமண்குண்டர்'' *(1354)* முதலியவையும் பிறவும் காண்க. சமயத்திற்காகக் கொலை முதலியவும் செய்யத்தகும் என்னும் கொள்கை சமண சமயத்துக்கு மட்டுமேயன்றி, மற்றும் புறமும் அகமுமாகிய கூறுபாடுடைய பல சமயங்களினும்

2647. **பொய்தவ மாகக் கொண்ட** புன்றலைச் சமணர் கூறச்
செய்தவப் பயன்வந் தெய்துஞ் செவ்விமுன் னுறுத லாலே
"யெய்திய தெய்வச் சார்வா **லிருதிறத் தீருந் தீருங்;**
கைதவம் பேசமாட்டே;" னென்றுகை தவனுஞ் சொன்னான். 749

காணப்படும் என்பது அவ்வவற்றின் நூல்களாலும், சரித வரலாறுகளாலும் அறியப்படும் உண்மை; முற்காலமோ இடைக்காலமோ எதுவாயினும் சமண சமயம் இக்கொள்கையைக் கொண்டிருந்ததென்பது தேற்றம்; ஆதலின் முற்காலச் சமணம் வேறு அஃது உயர்ந்த நிலையினது என்றும், பிற்காலச் சமணம் அதனின்றும் வீழ்ந்துபட்டதென்றும், பிறவும் இங்குச் செய்யும் ஆராய்ச்சிகள் ஒரு சார்புபற்றி எழுந்த மயக்க உணர்வு காரணமாக வருவன என்க. *1344-1347*-பாட்டுக்களினும், "நினையாதொரு போது மிருந்தறியேன்" (பதிகப்பாட்டுக் குறிப்பு-III பக்கம்-87) என்றவிடத்தும், பிறாண்டும் உரைத்த சமயநிலை பற்றிய குறிப்புக்களும் ஈண்டு மனங்கொள்ளத்தக்கன; சைவத்திறத்தில் இதுபோன்று வருவனவற்றின் உள்ளுறையும், இதற்கும் சைவநிலைக்கும் உள்ள வேறுபாடும், தண்டியடிகணாயனார் புராணம் (7), கோட்புலி நாயனார் புராணம், எறிபத்த நாயனார் புராணம் முதலியவற்றுட் கண்டுகொள்க.

இசைவாய் என்றார் - இங்கு அமணர் இவ்வாறு பொய்ம்மையுள் இசையும்படி புகட்டியது சமயக்காவலை மேற்கொண்டதும், தமது விருத்தியினையுட் கொண்டதும் ஆம்.

அறநெறியை - இவ்வமணர் இப்பொய்ம்மையைத் தம் சமயக் கொள்கையாக மேற்கொண்டனர் என்பது குறிக்க இங்கு **அறநெறி** என்றார். முன்பாட்டிற் "செயலையான் சமயத்துள்ளோர்" (2645) என்றும், "தனிச்சமயம்" என்றும், மேல்வரும் பாட்டில் "பொய் தவமாகக் கொண்ட" (2647) என்றும் கூறுதல் இக்கருத்துடையன. **748**

2647. **(இ-ள்)** பொய்தவமாக... கூற - (மேற்கண்டவாறு) பொய்யைத் தவமாகக் கொண்ட புன்மை பொருந்திய தலையினையுடைய அமணர்கள் சொல்ல; செய்தவப் பயன்... உறுதலாலே - முன் செய்த தவத்தின் பயன் வந்து பயன்தரும் பக்குவம் முன்வந்து பொருந்துதலினாலே; எய்திய... சொன்னான் - சேர்ந்த உங்கள் தெய்வங்களின் சார்பினாலே இருபக்கத்தீர்களும் தீருங்கள்; நான் நடுநிலை கோடி வஞ்சகம் பேசமாட்டேன் என்று பாண்டியனும் சொன்னான்.

(வி-ரை) பொய்தவமாகக் கொண்ட - பொய்யினையே தவமாக மேற்கொண்ட; முன்பாட்டில் அமணர் கூறியதனை அனுவதித்துக் காட்டியபடி; 2690 பார்க்க. தலைமயிர் பறித்தலை ஒரு தவமாகக் கொண்டவர் என்பதும் குறிப்பு.

புன்தலை - புல்லிய - புன்மையுடைய - தலை; புன்மையாவது மயிர் பறித்தலாலும், பிராணிபடும் என்று கழுவாது விடுதலாலும் இழிவுபடுதல்.

செய்தவப்பயன்... உறுதல் - பாண்டியன் முன்னைப் பிறவியிற் செய்த தவப்பயன் பக்குவப்பட்டு வந்து கூடும் சமயம் வாய்த்தல்; இதுகாறும் சமணர்களுடன் கூடி அவர்களது தீமைகளுக்கு உடன்பட்டு நன்மையறியாது நின்ற அரசன் இப்போது அவர்கள் கூற்றை

2648. என்றவ னுரைப்பக் குண்ட ரெண்ணங்கெட் டிருந்த வெல்லைத்
தென்றமிழ் **நாடு செய்த செய்தவக் கொழுந்து போல்வார்**
வன்றனிப் பவன முன்னர் வாயிலு ளணைந்து மாடு
பொன்றிகழ் தரளப் பத்திச் சிவிகைநின் றிழிந்து புக்கார். 750

மாறுபட்டு அவர்தங்கொள்கைக்கு உடன்பட மறுத்து நடுநிலையினின்றும் பிறழமாட்டேன் என்றது.

கைதவம் பேசமாட்டேன் - என்று கூறவந்த நிலை முன்னைத் தவத்தாலாகியது என்பது; அற்றாயின் அந்த முன்னைத்தவம் இதுகாறும் அமணர்க்குடன் பட்டபோது கைகொடாது நின்றதென்னையோ? எனின், **முன்னைத் தவம் பக்குவப்பட்டு வந்து கூடும் காலத்தேதான் வெளிப்பட்டுப் பயன்படும் என்க.**

செவ்வி - தவப்பயன் வந்துகூடிப் பலிக்கும் பரிபக்குவ காலம்; பின்னர் *''வினைக ளொத்துத் துலையென நிற்றலாலே'' (2717).*

உறுதலாலே - என்று சொன்னான் - என்று கூட்டுக. முன்னைத் தவப்பயன் வரும் செவ்வி கூடியிராதாயின் முன்போலவே அமணரது மாயைக்குட்பட்டு நிற்பன் என்பதாம்.

எய்திய தெய்வச் சார்வால் - நீங்கள் தனித்தனியே பொருந்திய தெய்வங்களின் சார்பாகிய பலத்தினால்; அவ்வவரின் தெய்வ பலத்தினால். *''மருத்து நூலவர்... ...தொழில் யாவையும் செய்யவும் மேன்மேல், உருத்தெ ழுந்தவெப் புயிரையும் உருக்குவதா''* யிற்று (2611); ஆதலின், மருந்தினாலன்றி மணி மந்திரங்களாகிய தெய்வ பலத்தினாலேதான் தீரத்தக்கதென்று கண்டறிந்து கொண்ட அரசன் கூறியபடி.

இருதிறத்தீரும் தீரும் - இருபக்கத்தவரும் தனித்தனி தீருங்கள்; *''ஒக்கத் தீர்க்க மொழிந்து'' (2646)* என்று அமணர் கூறியதை மறுத்து, அரசன் இருவரையும் வெவ்வேறு பிரித்துத் தீருங்கள் என்றான்.

இதுபற்றியே அமணர் ''நாங்கள் - **ஒரு புடைவாம பாகம்,** முன்னம் மந்திரித்துத் தெய்வ முயற்சியாற் றீர்த்தும்'' என்று (2660) பின்னர்த் தமது தொழிலுக்கு இடத்தையும் காலத்தையும் வேறு பிரித்துக் கூறுவது காண்க.

கைதவன் - வஞ்சனை - நடுநிலை கோணிய பண்பு, அதுபற்றி வரும் மொழிக்கு ஆயிற்று; ஆகுபெயர்.

கைதவம் - பாண்டியர்களது மரபுப்பெயர்; **கைதவம் - கைதவன்** - சொற்பின் வருநிலை. **கைதவனும்** - முன்னரெல்லாம் அமணர்க்குடன்பட்டிருந்த அவனும் என உம்மை சிறப்பும்மை. **கைதவன்** - கைவந்த தவத்தையுடையவன் என்ற குறிப்புமாம். 749

2648. **(இ-ள்)** என்றவன்... எல்லை - என்று அரசன் சொல்ல அமணர்கள் தமது கருத்துச் சிதைந்து மனங் குன்றி இருந்த அளவில்; தென் தமிழ்... போல்வார் - தென்றமிழ் நாடாகிய பாண்டியநாடு முன்னர்ச் செய்த செய்தக்க தவத்தின் கொழுந்து போல்வாராகிய பிள்ளையார்; வன்தனி... புக்கார்- வலிய ஒப்பற்ற அரண்மனையின் முன்புள்ள வாயிலினுள்ளே சேர்ந்து

2649. குலச்சிறை யார்முன் பெய்தக், கொற்றவன் றேவி யாரும்
தலத்திடை யிழிந்து சென்றூர்; தண்டமிழ் நாட்டு மன்னன்
நிலத்திடை வானி னின்று நீளிரு ணீங்க வந்த
கலைச்செழுந் திங்கள் போலுங் கவுணியர் தம்மைக் கண்டான். 751

பக்கங்களில் பொன் பூண்டு விளங்கும் முத்துக்கள் நிரைத்த சிவிகையினின்றும் இறங்கி உள்ளே புகுந்தருளினர்.

(வி-ரை) எண்ணம் கெடுதலாவது கொண்ட கருத்து நிறைவேறாமையில் மனமுடைதல்.

எல்லை - நிலை; **இருந்த வேலை** என்பது பாடமாயின் இருந்தபோது என்றுரைத்துக் கொள்க.

செய்த செய்தவம் - சொல்லணி. **செய்தவம் -** செய்தற்கரிய நற்றவம்; "செய்தக்க" (குறள்) என்புழிப்போல; தவமென்ற பேரால் அதுவரை அமணர் செய்த செய்தக்கவல்லாத அவம்போலாது முன்னர்ச் செய்த செய்தக்க தவம் என்க.

கொழுந்து - பிள்ளையாரின் இளமை குறித்தது; இனிமேல் முற்றிய நன்மைகளைத் தரவுள்ள குறிப்பும் காண்க.

வன்தனிப் பவனம் - வன்மையாவது காவற்கட்டு; **பவனம் -** அரண்மனை.

வாயிலினுள் அணைந்து - சிவிகை நின்று - இழிந்து - வாயிலினுள்ளே வருமளவும் சிவிகையில் எழுந்தருளி வந்து அதன்பின் அரண்மனையினுள் அதினின்றிறங்கி வந்து என்ற முறை குறிக்க.

புக்கார் - அரண்மனையினுள்ளே அரசன் இருந்த இடத்துப் புகுந்தனர்.

மன்தனிப்பவனம்—என்பதும் பாடம். 750

2649. **(இ-ள்)** குலச்சிறையார்... எய்த - அரசனிடம் அறிவித்தபின் குலச்சிறையார் பிள்ளையாரது திருமுன்பு வந்துசேர; கொற்றவன்...சென்றூர் - அரசமா தேவியாரும் அரண்மனையினுள்ளே வந்து தமது சிவிகையினின்றும் இறங்கிச் சென்றனர்; தண் தமிழ் நாட்டு...கண்டான் - தண்மையுடைய தமிழ் நாட்டின் மன்னனாகிய பாண்டியன் வானத்தினின்றும் நீண்ட இருள் நீங்கும்படி நிலத்தினில் வந்த நிறைந்த கலைகளையுடைய செழித்த திங்களைப் போன்ற கவுணியர் பெருமானாகிய பிள்ளையாரைக் கண்டான்.

(வி-ரை) முன்பு எய்த - திருவாலவாயினின்றும் பிள்ளையார் போத, முன்பு பெருந் தொண்டர் குழாத்துச் சென்ற (2643) அமைச்சனார், அரண்மனையை அணுகியபோது அத்திருக்குழாத்தின் முன்பு நீங்கி, முன்னர் விரைவிற் சென்று அரண்மனையினுள் புக்கு அரசனுக்கு அறிவித்து, அவன் ஏவல்வழிப் பீடம் அமைத்து எதிர் சென்று அழைக்கும்படி மீண்டு, பிள்ளையார் முன்பு வந்து எய்தினர் என்க.

கொற்றவன் தேவியாரும் தலத்திடை இழிந்து - அரசனுக்கு முன் அறிவிப்பின் பொருட்டும், ஆசனம் அமைத்ததற்பின் அவன் ஏவல் வழி அவனுக்காக எதிர் சென்றழைத்தற்

பொருட்டுமாக அமைச்சனுர் திருக்குழாத்தினீங்கி முன் சென்றனர்; அரசியார்க்கு அத்தகைய அரசகாரிய மொன்று மின்மையின் பிள்ளையாரைப் பின்பற்றித் தொடர்ந்து தமது சிவிகையில் வந்தனர்; **இழிந்து** - தமது சிவிகையினின்றும் கீழே இறங்கி.(2643)

தண் தமிழ் நாட்டு மன்னன் - வெப்பு நோய் நீக்கிக் குளிரச்செய்ய வுள்ள தன்மைக் குறிப்புப்பற்றித் **தண் தமிழ்** - என்று தண்மையோடு புணர்த்தி ஓதினுர்; ''தமிழ்மாருதம்'' (313) என்ற குறிப்புமிது; தண்மையைப் பொதியமலைச்சார்பு பற்றி நாட்டொடு புணர்த்தித் **தமிழ்த் தண் நாட்டு** என்று கூட்டி உரைப்பினுமமையும். முன்னர்த் ''தென்றமிழ் நாடுசெய்த செய்தவம்''(2648) என்ற குறிப்புமிது; பிள்ளையாரது ஞானத்தமிழே இந்நலம் செய்வதாம் என்பார் இனம்பற்றி அறிவித்த குறிப்புமாம்; ''தமிழ் நாதன் ஞான சம்பந்தன்'' (ஆலவாய்-கொல்லி-11) என்ற பதிகம் காண்க.

நீள் இருள் நீங்க வானினின்று நிலத்திடை வந்த - என்க; **நீள் இருள்**; திணிந்த பிணிப்பாகிய அமண அக விருள்; **வான்** - இங்கு அறிவொளி வானம் (சிதாகாசம்) குறித்தது; வானினின்றபடியே இவ்விருணீக்குதல் சாலாமையின் நிலத்திடை வருதல் வேண்டப்பட்ட தென்பது குறிப்பு.

கலைச் செழும் திங்கள் போலும் - **கலை** - வளர்வும் குறைவும் படாத கலை; **செழுமை**யாவது நிரம்பியிருத்தல், ''வளர்மதிக் கொழுந்தை'' (2625).

திங்கள் போலும் - ஞான அமுதகலையோடும் குளிர்ச்சி செய்தலால் திங்களை உவமித்தார்; பய வுவமம். வெண்ணீற்றுப் பூச்சின் விளக்கத்தால் நிறம் பற்றி எழுந்த இரண்டு நிலவின் கடல்கள்'' (1498) என்றபடி உரு வுவமமுமாம். ''கலைவளர் மதியே'' (1990) என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க. பிள்ளையாரது ஆண்டெல்லை பதினுருக வரும் குறிப்பும் கொண்டது.

கண்டான் - முன்னை நாளிற் ''கண்டுமுட் டடிகண் மார்கள் கேட்டு முட்டியானும்'' (2590) என்ற அரசன், முற்செய் தவப்பயன் வந்தெய்தும் செவ்வியுற்றதனுல் இங்கு அந்நிலை மாறி விருப்பொடும் கண்டான்; அகப் பொருட்டுறைகளுள் காட்சி என முதற்கண் நிகழும் இயல்பெல்லாம் ஈண்டு வைத்துக் கண்டுகொள்க; ''நற்பெரும் பான்மைகூட்ட... விளங்கிழையவரைக் கண்டார்'' (285), ''பண்டை விதி கடைகூட்டப் பரவையாருங் கண்டார்'' (258); ''விதியாற் கண்ணுற்ருர்'' (ஏயர்கோன்-புரா.226) முதலியவையும், முன் காட்சிபெற்ருர்'' (2642) என்ற விடத்துரைத்தவையும் இங்கு வைத்துக் காண்க; ''திங்கள் போலும் கவுணியர்'' என உடம்பொடுபுணர்த்தி ஓதின குறிப்பினுல் வெப்பமிக்கார்பாலே திங்களின் வரவு பயன் செய்யுமாறு, பயன் கூர்தர விருப்புடன் கண்டான் என்பது பெறப்பட்டது.

நீளிருணீங்க நிலத்திடை வந்த திங்கள் - ''இருளிரண்டின் மாக்கள், சிந்தையுட் சார்ந்து நின்ற பொங்கிய விருளை - செங்கதிரவன் போல்நீக்கும்'' (10) என்ற கருத்துக்கள் இங்குவைத்துக் கருதத்தக்கன; முன்னர்ச் செங்கதிரவன் என்ற ஆசிரியர் இங்கு வெப்பு நீக்கமும் அமுத ஞானவொளியும் வேண்டப்படும் குறிப்புணர்த்தக் கலைச்செழுந் **திங்கள்** என்ற தகுதியும் கவிநயமும் காண்க.

2650. **கண்டவப் பொழுதே வேந்தன் கையெடுத் தெய்த நோக்கித்**
தண்டுணர் முடியின் பாங்கர்த் தமனியப் **பீடங் காட்ட**
வண்டமிழ் விரகர் மேவி யதன்மிசை யிருந்தார்; மாயை
கொண்டவல் லமண ரெல்லாங் **குறிப்பினு** ளச்சங் கொண்டார். 752

கண்டான் *- இக்காட்சியின் சிறப்பும் பயனும் நோக்கி இதனை விதந்தெடுத்துத் தனியாக ஓதியருளினார்; இதனால் விளைந்த மனநிகழ்ச்சியைப் புறச்செயலால் மேல் வரும் பாட்டிற் கூறுவதும் காண்க.* ***751***

2650. **(இ-ள்)** *கண்ட... நோக்கி - கண்ட அப்பொழுதே அரசன் கைகளை எடுத்துத் **தூக்கி** வழிபடும் பண்பு பொருந்தும்படி நோக்கி; தண்துணர்... காட்ட - குளிர்ந்த மலர்களையுடைய தனது முடியின் பக்கத்தில் இடப்பட்டிருந்த பீடத்தில் எழுந்தருளும்படி கைகளைக் காட்ட; வண்தமிழ்... இருந்தார் - வண்மையுடைய தமிழ் விரகராகிய பிள்ளையார் அதன்மேல் எழுந்தருளி அமர்ந்தருளினர்; மாயை...கொண்டார் - மாயங்களைக் கொண்ட வன்மையுடைய அமணர்கள் எல்லாரும் குறிப்பினுள்ளே பயங்கொண்டார்கள்.*

(வி-ரை) கண்ட அப்பொழுதே... நோக்கி - கண்ட *என்றது முன்னர் விருப்பொடு கண்ட காட்சி.*

கண்ட *- முன்பாட்டில் **''கண்டான்''** என்றபடி கண்ட; **அப்பொழுதே - நோக்கி** என்க; அக்காட்சியோடு உடனிகழ்ச்சியாய் நோக்கம் நிகழ்ந்தது; இங்கு நோக்கம் என்பது வழிபடும் பண்பு காட்டும் பார்வை குறித்தது; ''கண்ணிற்சொலிச்செவியிற்நோக்கு மிறைமாட்சி'' என்புழிப்போலக் கொள்க; **நோக்குதல்** - ஒரு குறிப்பினொடு பார்த்தல்; **எய்த** - வழிபடும் பண்பு பொருந்த; வரவேற்கும் தன்மை பொருந்த என்றலுமாம்.*

அப்பொழுதே கை எடுத்து - நோக்கி - பீடம் காட்ட *- கை எடுத்தலும், நோக்குதலும், பீடம் காட்டுதலும் ஒன்றன்பின் ஒன்றாய் எழும் மன நிகழ்ச்சிகளின் வழி நிகழினும் விரைவு பற்றி ஒருங்கே நிகழ்ந்தனவாகக் காணப்பட்டன என்பது; **கை எடுத்து** - நேரே எழுந்து கை கூப்பி வணங்கும் ஆற்றல் இல்லாது நோய் மிக்கிருந்தமையால் கைகூப்பி என்னாது **கை எடுத்து** என்றார்; **கை எடுத்தல்** வழிபட்ட நிலையுணர்த்தும் வகையால் கையை மேல் எடுத்தல்; **நோக்கி** என்றதும், **பீடம் காட்ட** என்றதும் இவ்வாறு அரசன் உட்பட்டுக் கிடந்த நோயினைக் கூடிய நிலையை உணர்த்துதல் காண்க; வெப்பு நோயின் கடுமையால் அரசன் முடியசையும் நிலையிற் கிடந்தான் என்பது ''துளங்கும்முடித் தென்னன் முன்னிவை'' (கொல்லி- ஆலவாய்-11) என்று அப்போது அங்கு அருளிய பிள்ளையாரது தேவார அகச் சான்றினால் அறியப்படும். **எய்த** - அணுக எய்தியபோது என்றலுமாம்.*

பீடம் காட்ட *- இப்பீடத்தி லமருங்கள் என்று கையினாற் காட்ட; சிவ பூசையில் இறைவரை எழுந்தருளுவிக்கும் முறையில் ஆவாகனம், தாபனம், சன்னி ரோதனம் முதலிய கிரியைகளின் பொருட்டுக் கையினால் உரிய முத்திரைகள் காட்டும் தன்மையும் ஈண்டுக் கருதத் தக்கன.*

தண்டுணர் முடியின் பாங்கர் - பீடம் *- ''முடியின் பக்கத் திடுக என''முன்னர் அரசன்*

2651. செழியனும் பிள்ளை யார்தந் **திருமேனி காணப் பெற்று**
விழியுற நோக்க லாலே வெம்மைநோய் சிறிது நீங்கி
யழிவுறு மனநேர் நிற்க வந்தணர் வாழ்வை நோக்கிக்
''கெழுவுறு பதியா'' தென்று **விருப்புடன்** கேட்ட போது, 753

கூற, அமைச்சனுர் அவ்வாறே இடுவித்த பீடம்; **தண் துணர் முடி** - வேப்பமலர்க் கொத்துக்களணிதல் பாண்டியர்க் குரியது; **துணர்** - இடம் நோக்கி வேப்ப மலர்க் கொத்துக் குறித்தது; கடுஞ்சுர நோய் கொண்டார் முடிப்பக்கம் வேப்பிலைக் கொத்துக்களை இட்டு வைக்கும் வழக்கின் குறிப்பும் ஈண்டுக் கொள்ளத் தக்கது; ''மருத்து நூலவர் தங்கள்பல் கலைகளின் வகுத்த, திருத்தகுந் தொழில் யாவையும் செய்யவும்'' (2611) என்றது காண்க. வெப்பு நீங்க இட்ட வேறு இலைகளுமாம்.

அதன்மிசை மேவி யிருந்தார் என்க; அணைந்து அதன் மேல் எழுந்தருளி அமர்ந்தருளினர்.

மாயை...கொண்டார் - மாயை - முன்கூறிய வஞ்சம் பொய் முதலியவற்றைக் குறித்து நின்றது; வன்மையாவது கன்மனம்; வன்கண்மை; எவ்வாற்ருலும் தமது சமயக் கொள்கையை விடாத வன்மை நிலை எனினுமாம்.

அச்சம் குறிப்பினுட் கொண்டார் - குறிப்பாவது மனத்துள் எழுந்த குறிப்பு. அச்சம் வெளிப்படாமல் உள்ளே கொண்டனர் என்க. ''அச்சம்மறைத்து'' (2653); ''பயத்தால் நெஞ்சு சோரவும் பீலிகை சோர்ந்திலர் நின்ருர்'' (2686); ''ஊறுடை நெஞ்சி லச்சம் வெளிப்பட ஒளிப்பார் போன்று'' (2715) முதலியவை காண்க; இனி, இவ்வாறன்றித், தென்னவன் கண்டு - நோக்கிக், காட்டிய குறிப்பினுலும், பிள்ளையார் எழுந்தருளிய குறிப்பினுலும், பீடத்தில் மேவியமர்ந்த குறிப்பினுலும் அச்சம் கொண்டனர் என்றலுமாம்; **குறிப்பினுள்** - முன்பொருளில் **உள்** - ஏழாம் வேற்றுமைப் பொருளும் பின்னையதில் மூன்ருவதன் பொருளும் கொண்ட தென்க. 752

2651. **(இ-ள்)** செழியனும்...நீங்கி - பாண்டியனும் பிள்ளையாரது திருமேனியைக் காணப் பெற்றவணுகி விழிபொருந்த நோக்கியதனுலே வெப்பு நோய் மேலும் சிறிது நீங்கப் பெற்று; அழிவுறு மனம் நேர்நிற்க - ஒருநிலை நில்லாது வசமிழப்பதும் சிறிது வசமுறுவதுமாகி நின்ற மனம் ஒரு வகையாய் நேரே நிற்கவும் பெற்று; அந்தணர்... கேட்டபோது - அந்தணர் வாழ்வாக வந்தவதரித்த பிள்ளையாரை நோக்கி ''வாழ்வு பொருந்துதலைப் பெற்ற பதியாவது யாது?'' என்று விருப்பத்துடனே கேட்டபோது;

(வி-ரை) செழியனும் - முன்னர்க் கண்டு முட்டு என்னும் அமணர் கொள்கையுட்பட்டு நின்ற செழியனும் என உம்மை சிறப்பு.

காணப்பெற்று - விழியுற நோக்கலாலே - முன்னர்க் கண்டான் (2649) என்றும், **''எய்த நோக்கி''** (2650) என்றும் வந்தவிடத்துரைத்தவை பார்க்க; இதனை மீண்டும் கூறியது அதன் விளைவாக **''வெம்மை நோய் நிறிது நீங்கி''**ய தன்மைச் சரிதத் தொடர்புணர்த்தற்கு என்க; இவ்வாறன்றிக் **காணப்பெறுதல்** அரசன்பாலும், **விழியுற நோக்கல்** பிள்ளையார்பாலும்

நிகழ்ந்தனவாகக் கொண்டு, அரசன் பிள்ளையாரைக் காணப்பெற்றனன்; அதனோடு பிள்ளையாரால் விழியுற நோக்கவும் பெற்றான் என்ற குறிப்புப்பட உரைத்தலுமாம்; இப்பொருளில் **நோக்கம்** அருள் நோக்க மென்னும் சாக்ஷு தீக்கை.

விழியுற - அரசன் கண்ட பார்வையோடு பிள்ளையாரது அருட் பார்வையும் பொருந்த.

நோக்கலாலே வெம்மை நோய் சிறிது நீங்கி - முன்னர் நாம் மந்திரமுஞ் செல்ல வானபோ தயர்வு தன்னை அகன்றிட - மறைச் சிறுவர் வந்தால், இந்நோய் அகலுமேல் அறிவேன் - வென்றவர் பக்கஞ் சேர்வன் என்று சொல்லும் தன்மை பெற்றான் (2620); அவர் வரவு கூற, மேலும் முற்றுயர் சிறிது நீங்கிப் பீடம் முடியின் பக்கத்திடுக என்னவும், மந்திரியாரை எதிர் செலவும் கூறவல்லனானான் (2644); அதன்மேற் கைதவர் பேசமாட்டேன் என்று கூற மனவன்மையும் பெற்றான் (2647); ஈண்டுப் பிள்ளையாரைக் காணப்பெற்று நோக்கவும் பெற்றபோது மேலும் வெம்மைநோய் சிறிது நீங்கி மனநேர் நிற்கப் பிள்ளையாரை விருப்புடன் "உமது பதியாது?" என்று கேட்கும் வலிமையும் பெற்றான்; என்றிவ்வாறு படிப்படியாய் நோய் நீக்கமும் அறிவு விளக்கமும் பரம குருநாதராகிய பிள்ளையார் சார்பினாற் பெற்றமையும், மேலும் இவ்வாறே பெற நிற்பவையும் கருதுக.

அழிவுறும் மனம் நேர் நிற்க - முன்னே நோயின் கடுமையால் அழிந்து வசமிழந்த மனம் நேராக நிற்க. "கருத்தழிந்துரை மறந்தனன்" (2612); சிறிது அளவு நீங்கலாலே அழிவுறும் மனம் என்றார்; "துளங்கும் முடித்தென்னன்" (தேவா) என்றது நோயின் கடுமை காட்டிற்று. **அழிவுறுமன்னோர்**— என்பதும் பாடம்.

அந்தணர் வாழ்வு - பிள்ளையார். **வாழ்வு** - வாழ்வு தருபவரை வாழ்வென்ற துபசாரம். **கெழுவு** - பொருந்துதல்.

கெழுவுறு பதியாது - கெழுவுதல் - உம்மால் வாழ்வு பெறுதல்; **பதியாது?** - உமது ஊர் எது என்றது புதியரை வரவேற்கும் முறையில் விருப்புடன் அவரோடு பேசத் தொடங்கும் மரபினில் இவ்வாறு வினவுதல் உலக வழக்கு. "வளவர் சோணாட்டு வண் புகலி" (2583); "தாவில்சீர்க்க கழுமலத்தான்" (2589) என்று கூறியவாற்றாற் பிள்ளையாரது பதியினை முன்னரே அறிந்த அரசன், பின்னரும் பிள்ளையாரை இவ்வாறு வினவுதல் மேற்கூறிய உலக மரபு வழக்குப் பற்றியது.

விருப்புடன் கேட்டபோது - அமணர் சார்பால் முன் வெறுப்பு நிலையில்அரசன் நின்றமை முன்கூறிய ஒருமைச் சுட்டுக்களாலும், மனநிகழ்ச்சி, புறநிகழ்ச்சிகளாலும் அறியப்படும்; "எங்குறைவீர்; நீர்தாம் யார் இயம்பும்" (1797) என்புழிப் போன்றவை வெறுப்பின் நிகழும் வினாக்கள்; ஈண்டு அவ்வாறன்றி முன்னை நிலைமாறி விருப்பின் நிகழ்ந்ததென்க.

கேட்டபோது - அருள் செய்தார் - என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. 753

2652. **(இ-ள்)** பொன்னி... என - காவிரி பாய்ந்து வளந் தருகின்ற சோழ நாட்டிலே நீர் நிறைந்த வயல்களையுடைய மருதநிலம் சூழ்ந்த அழியாத மதில் சுற்றிய திருக்கழுமலம் என்பது நாம் கருதும் ஊராகும் என்று; சிறந்த... திருப்பதிகம் - சிறப்புடைய பன்னிரெண்டு பெயர்களையும் பற்றிப் போற்றிய கருத்துடைய திருப்பதிகத்தினை; திருஞானசம்பந்தர் -

வேறு

2652. ''பொன்னிவளந் தருநாட்டுப் புனற்பழனப் புறம்பணைசூழ்
கன்னிமதிற் **கழுமலநாங் கருதுமூ**'' ரெனச்சிறந்த
பன்னிரெண்டு பெயர்பற்றும் பரவியசொற் றிருப்பதிகந்
தென்னவன்முன் பருள்செய்தார் திருஞான சம்பந்தர். 754

ஆளுடைய பிள்ளையார்; தென்னவன் முன்பு அருள் செய்தார் - பாண்டியன் முன்பு அருளிச் செய்தனர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) பொன்னி வளந்தரு நாடு - *சோழநாடு;* **புனற் பழனப் புறம்பணை சூழ்** - *நாட்டு வளமும், சிறப்பும், நிலமும், பிறவும் குறித்துக் கூறியபடி.*

கன்னிமதிற் கழுமலம் - *நகரச் சிறப்பு;* **பதியாது** *என்று வினவியவன் தமது நாடல்லாத பிறநாட்டரசனுதலின், ஆறும் நாடும் நிலமும் பிறவுமாகிய சிறப்புக்களுடன் எடுத்துக் கூறி யறிவுறுத்தல் முறையாதலின் வாளா* **பதி***யை மட்டில் கூறுது இத்துணையும் கூறிய தென்க.* **கன்னி** - *கட்டழியாத தன்மை.*

பன்னிரெண்டு... பதிகம் - *சீகாழியின் பன்னிரெண்டு திருப்பெயர்களையும் பற்றுகக்கொண்டு பரவிய சொன்மாலையாகிய திருப்பதிகம்;* **பற்றும்** - **பதிகம்** *என்றும்* **சொற்றிருப் பதிகம்** *என்றும் கூட்டுக;* **பற்றுதல்** - *பெயர்களையே பொருளாகக் கொள்ளுதல்.* **பரவிய** - *பெயர்களைத் துதித்த; ''கைதொழுது பாடு மூரே'' (3) ''நாம் புகழு மூரே'' (5) ''நாம் கருது மூரே'' (2-6-9) எனவரும் பதிகம் பார்க்க. ஒவ்வோர் பெயர்பற்றிய ஒவ்வோர் பாட்டும்* **நூல் - பனுவல்** *- எனப்பட்டன.*

பெயர்பற்றும் பரவிய - *''பெயரை நாளும், பரவியசீர்ப் பன்னிரண்டு நன்னூலா'' (12) என்ற பதிகத் திருக்கடைக் காப்பின் கருத்து; நாம் கருதும் பதியாகிய ஊரே அதனைப் போற்றினுல் உய்தி தரவல்லது என்று அரசனுக்குக் கூறியபடி.*

கழுமல நாம் கருது மூர் - *இது பதிகத்தின் மகுடமாய் உள்ள கருத்து; பதிகப் பாட்டுத்தோறும் வரும் முடிபு காண்க. பன்னிரண்டு பெயர்களுள் ஏனைப் பதினொன்றும் கூறி அவற்றை உள்ளிட்டு இதனோடு பன்னிரண்டு பெயர்களாய் நிகழும் ஊர் என்பதும்; கழுமலப் பெயரால் முடித்து மகுடமாக்கிக் கூறியது அது பன்னிரண்டனுள் இறுதி ஊழியில் பெற்ற பெயராதலாலும், ஈண்டுப் பாண்டியனை மலங்கழுவி உய்யக்கொண்டு நாட்டினரை உய்விக்கும் ஆசாரியராக எழுந்தருளியுள்ள குறிப்பினுலுமாம்; ''அமண்மாசு கழுவுதற்கு'' (2549) என்று எழுச்சியில் இக் கருத்தினைத் தொடக்கத்திலே காட்டியதனை நினைவு கூர்க.*

பன்னிரண்டு பெயர் பற்றும் பரவிய சொற்றிருப் பதிகம் - *''பிரமனூர் வேணுபுரம்'' என்று தொடங்கிப் பன்னிரண்டு பெயர்களையும் பாட்டுத்தோறும் உட்கொண்டு போற்றிய காந்தாரப்பண் - திருச்சக்கரமாற்று என்ற பதிகம்.* **பெயர் பெற்றுப் பரவிய** *என்பது பாடமாயின், ஒவ்வொரு பாட்டும் பன்னிரண்டு பெயர்களை உட்கொண்டும், பிரமனூர் முதல்*

கழுமலமீறாக அவ்வரிசையில் வரும் பெயர்களை முதலாகக் கொண்டும், அவ்வொன்றும் தனித்தனி முடிபு பெற்ற நன்னூலாகிய பனுவன் மாலையாகிய என்றுரைத்துக் கொள்க; **பெயர் பெறுதல**ாவது கொண்டு தொடங்கிய தலப் பெயரை அவ்வப் பாட்டின் பெயராகப் பெறுதல்; முதற்பாட்டுப் பிரமனூர்ப் பாட்டு; இரண்டாவது பாட்டு வேணுபுரப் பாட்டு; மூன்றாவது பாட்டுப் புகலிப் பாட்டு என்றிவ்வாறு கொள்க; இப்பெயர் முறைபற்றி **1912-ல்** உரைத்தவை இங்கு நினைவு கூரத் தக்கன. ''உள்ளிட்டங் காதியாய்'' (பதிகம் 1).

தென்னவன் முன்பு அருள் செய்தார் - பதி வினவிய அரசன் முன்பு அவனைத் தேற்றுதற் பொருட்டு அவனது அரண்மனையில் அருளப்பட்டது என்று பதிக வரலாறு கூறியபடி; **சீகாழிப்** பதிகமாயினும் மதுரையில் அருளப்பட்டது என்பதனை உளங்கொள வைத்து எடுத்துக் காட்டியது ஆசிரியரது அருட்கவிநலம்; இவ்வாறே பின்னர்த் தாதையார் சார்வினால் தோணியமர்ந்தாரைக் கண்டு போற்றிய ''மண்ணினல்ல'' என்ற பதிகம் மதுரையில் திருமடத்தில் லருளப்பட்டதென வரலாறு காட்டுவதும் காண்க.

திருஞான சம்பந்தர் - பிள்ளையாரது திருப்பெயர் முற்றும் கூறியருளியது திருக் கடைக் காப்பில் ''நாவினலம் புகழ்சீர் நான்மறையான் ஞானசம்பந்தன்'' என்றருளியதனைக் குறிக்கொள வைத்ததனோடு, பாண்டியனுக்குத் திருஞானத்தைப் புகட்டி ஆட்கொள்ள வந்த குறிப்புப் பெற வைத்ததுமாம். ***754***

திருக்கழுமலம்

திருச்சிற்றம்பலம் — திருச்சக்கரமாற்று - பண்- காந்தாரம்

பிரமனூர் வேணுபுரம் புகலி வெங்குருப் பெருநீர்த் தோணி
புரமன்னு பூந்தராய் பொன்னஞ் சிரபுரம் புறவஞ் சண்பை
அரன்மன்னு தண்காழி கொச்சைவய **முள்ளிட்டங் காதி யாய**
பரமனூர் **பன்னிரண்டாய் நின்றதிருக் கழுமலநாம் பரவு மூரே.** (1)

காவி மலர்புரையுங் கண்ணார் **கழுமலத்தின் பெயரை** நாளும்
பாவியசீர்ப் பன்னிரண்டு நன்னூலாப் பத்திமையாற் **பனுவன் மாலை**
நாவி னலம்புகழ்சீர் நான்மறையான் ஞானசம் பந்தன் சொன்ன
மேவி யிசைமொழிவார் விண்ணவரி லெண்ணுதலை விருப்பு ளாரே. (12)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—கெழுவுறு பதியாது என்று வினவிய அரசனுக்குப் பிரமபுரம் முதலிய 12 பெயர்களையுடைய திருக்கழுமலம் நாம் கருதும் ஊர் என்று விடை கூறியது. **குறிப்பு:** இப்பதிகத்துள் ஒவ்வொரு பாட்டும் தனித்தனி அவ்வொரே கருத்துக் கொண்ட **பனுவல்;** அது 12 பேர்களைக் காலக்கிரம வரிசையிற் போற்றியதனால் **மாலை**யாம்; அப்பன்னிரண்டு பெயர்களே அவ்வரிசையுள்ளே சுழன்று வருதலால் **சக்கரமாற்று** எனப்படும். ''பன்னிரண்டு நன்னூல்'' என்றதும் காண்க.

பதிகப்பாட்டுக் குறிப்பு:—(1) உள்ளிட்டு - சேர்த்து; **உள்ளிட்டுப் பன்னிரண்டாய் நின்ற**

2653. பிள்ளையார் செம்பொன்மணிப் பீடத்தி லிருந்தபொழு
துள்ளநிறை பொறாமையினா லுழையிருந்த காரமணர்
கொள்ளுமனத் **திடையச்ச மறைத்துமுகங் கோபத்தீத்**
துள்ளியெழு மெனக்கண்கள் சிவந்துபல சொல்லுவார்; 755

ஊர் - முன்சொன்ன பதினொரு பெயர்களுடன் கழுமலம் என்பது சேர்த்துப் பன்னிரண்டு பெயர்களுடையதாய் நின்ற ஊர் என்க; இப்பன்னிரண்டு பெயர்களும் அவ்வரிசையில் வருமாறு தனித் தனியே தொடக்கமாக வைத்தும், பன்னிரண்டு பெயர்களையும் ஒவ்வொரு பாட்டிலும் வைத்தும் போற்றுதலால் இப்பதிகம் பன்னிரண்டு பாட்டுக்களையுடையதாயிற்று; ''பெயரை நாளும் பரவிய சீர்ப்பன்னிரண்டு நன்னூலா'' என்பது காண்க; **ஆதியாயபரமன்** - ஊழிகடந்த முதல்வர்; சிவன்;—**(2) வெள்ளம்** - ஊழி; **ஓங்குதல்** - மிதத்தல்; **ஓங்குந் தோணிபுரம்** - ஓங்குதலால் இப்பெயர் பெற்றதென்பார் உடம்பொடு புணர்த்தி ஓதினார்; முன் பாட்டில் **பெருநீர்த் தோணிபுரம்** என்றதும் இக்கருத்து; **கோட்டாறு** - சீகாழியில் வரும் ஆறு; **செல்வம் காணிய** - செல்வங்காணும் பொருட்டு; **காணுதல்** - அனுபவிக்கப்பெறுதல்;—**(3) நீர்மேல் நின்ற மூதூர்** - மிதந்ததோணிபுரம்; **அமரர் பெருமாற்கின்பம் பகருமூர்** - இந்திரனுக்கு அபயம் கொடுத்துக்காத்த சரிதக்குறிப்பு;—**(4) தலைபண்டு ஆண்ட மூதூர்** - சிரபுரம்; வழிமொழித் திருவிராகம் முதலியவை பார்க்க;—**(5) தொல் நீரில் தோணிபுரம்** - பழைய ஊழிகளில் மிதந்ததனால் தோணிபுரமாகிய ஊர்; **இன் நீர** - இனிய நீர்மையுடைய; **இல் நீர** என்று கொண்டு இந்திரன் மறைந்து தங்கும் - இல்லாக - வீடாக - உதவிய வேணுவின் காரணமாகக் கொண்ட என்றலுமாம்; **சிலம்பனகர்** - சிரபுரம் ''சிலையான் மலிந்த சீர்ச்சிலம்பன் சிரபுர மேயவனே'' (பல் பெயர்ப் பத்து - தக்கேசி-7); **பொன்னீர** - அழகிய;—**(6) தாமரையான்** - பிரமன்; **தலைமுன் ஆண்ட அண்ணல் நகர்** - சிரபுரம்;—**(7) ஆராத்தராய்** - பூந்தராய்;—**(10) இன்னபெயர் பன்னிரண்டும்** - உடையவூர் என்க; ''பெயர் பற்றும்'' (2652);—**(11) நிச்சல்** - நித்தலும்; நித்தல் என்பது எதுகைநோக்கி நிச்சல் எனவந்தது; **நம்மேல் அச்சங்கள் தீர்த்தருளும் அம்மான்** - அரசனுக்கு அஞ்சல் அளித்தற் குறிப்பும் காண்க;—**(12) பரவிய** - பரவிய; **பாவுதல்** - பரப்புதல்.

2653. **(இ-ள்)** பிள்ளையார்...பொழுது - பிள்ளையார் அழகிய பொற்பீடத்தில் எழுந்தருளியிருந்த போது; உள்ளம்...அமணர் - மனத்துள் நிறைந்த பொறாமையினாலே பக்கத்திலிருந்த கரிய அமணர்கள்; கொள்ளும்... மறைத்து - மனத்தினுட்கொண்ட அச்சத்தை மறைத்து; முகம்...சிவந்து - முகத்தினில் கோபத்தீயானது துள்ளி எழுவது போலக் கண்கள் சிவந்து; பல சொல்லுவார் - பலவாறு சொல்வார்களாகி;

(வி-ரை) உள்ள நிறை பொறாமையினால் - அவருள்ளத்தில் முன்னர் அழுக்காறு மிக்கு நிறைந்திருந்தமை காரணமாக; ஈண்டுப் **பொறாமை**யாவது அறநெறியை முன் காட்டி வஞ்சனை பொய் முதலிய உபாயங்களால் சைவத்தை ஒடுக்கித் தாமே வாழவேண்டும் மென்ற மனநிலை குறித்தது; இஃது அழுக்காறு எனப்படும்; ''அழுக்காறவா வெகுளி யின்னாச்சொ னான்கும், இழுக்கா வியன்ற தறம்'' (குறள்) என்ற விடத்து அழுக்காறு என்பதற்கு ஆசிரியர் பரிமேலழகர் பிறராக்கம் பொறாமை என்றுரைத்தது காண்க.

பொறாமையினால் கண்கள் சிவந்து பல சொல்லுவார் - அழுக்காற்றினால் அவாவும், அது முற்றுப்பெறாதபோது வெகுளியும், அது பற்றிக் கடுஞ் சொல்லும் என இவை ஒன்றுபற்றி ஒன்றாக மேன்மேல் தொடர்ந்து வரும் என்று முன் திருவள்ளுவர் கூறியபடி கண்டு அமணர் பொறாமையினால் கண்சிவந்து பல சொல்வாராயினர் எனக்கண்டு கொள்க; பின்னும் இறுதியில் இப் "**பொறாமை காரணமேயாகத்**, தங்கள்வாய் சோர்ந்து தாமே தனிவாதில் அழிந்தோ மாகில், வெங்கழுவேற்று வானிவ் வேந்தனே யென்று சொன்னார்" (2696) என்பதும், "அழுக்காறெனவொரு பாவி திருச்செற்றுத், தீயுழி யுய்த்து விடும்" (குறள்) என்றபடி அஃதே அவர்களை அழிவின்கட் செலுத்துவதும் காண்க.

உள்ள நிறை - அழுக்காறு வந்தபோது அது வேறு எந்த நற்குணத்துக்கும் இடந்தராது தானே உள்ளத்தை முழுதும் கவர்ந்து கொள்ளும் என்பது.

உழையிருந்த காரமணர் - அரசனது நோய் கேட்டு வந்து அதனைத் தீர்ப்பதற்குச் சூழ்ந்து நின்ற அமண குருமார்; **கார்** என்றது புறக்கருமையும் அகக்கருமையும் குறித்தது; அழுக்காறு முதலிய தீக்குணங்கள் தாமதத்தினின்றும் போதுவன என்பதும், தாமதத்துக்கு நிறம் கருமையாகக் கூறப்படுவதும் காண்க; அழுக்காறு முதலிய நான்கனையும் இழுக்கென்று தள்ளாது கைக்கொண்டு ஒழுகுதலின் இவர்கள் புறத்துக் காட்டுமாறு அறவோராகாது மறவோரேயாவர் என்பதும் குறிப்பு. உழை - அண்மை; பக்கம்; இடம்; உடன்.

மனத்திடைக் கொள்ளும் அச்சம் - என்க. இரண்டனுருபும் அத்துச் சாரியையும் தொக்கன.

முகம்கோபத் தீத்துள்ளி எழும் எனக் கண்கள் சிவந்து பல சொல்லுவார் - முகத்தின் கண்ணே சினமாகிய தீ துள்ளி எழுவது போல; கோபத்தைத் தீயாகக் கூறுவது மரபு, தன்னை மேற்கொண்டாரைத் தான் உட்படுத்தி எரித்து விடுதல்பற்றி; எரித்தலாவது பலவாற்றாலும் உள்ளும் புறமும் குறைவித்தல்; "உள்ளங்கவர்ந்தெழுந் தோங்குசினம்" என்பது நீதிநூல்; தீக் கொழுந்து விட்டெழுதற் **கிடம் முகமாகவும்**, ஆங்குக் **கண் சிவ**த்தல் தீ யாகவும்; **பல சொல்லுதல்** தீத்துள்ளி **எழுதலாக**வும் உவமிக்கப்பட்டன; உருவும் வினையும் பற்றி எழுந்த தொடர் நிலையுவமம்; "எரி துள்ளினாலென வெகுண்டான்" (527); கதமிக் கெரிகதிர்" (சிவஞான போதம்-10-சூத்-வெண்) என்றதும், ஆண்டுரைத்தவையும் பார்க்க. "உளத்திடைக் கிளர்ந்தது சினத்தீ; நாட்டம் எரிகால்வ; புகை நண்ணுவன துண்டம்" (மூக்கு); (கந்தபு - உற் - அசுரே - மகேந் - செல் - 37)

பல - பொருந்தாதவையும் சொல்லத்தகாதவையும் என்பது குறிப்பு; இவை இன்ன என்று கூறாது **பல** என்றொழிந்தது மிக்குறிப்பும் உயர் கவி மரபுமாம்.

சொல்லுவார் - குரைத்தார்கள் எனவரும் பாட்டுடன் முடிக்க.

அனற்கண்கள்—என்பதும் பாடம். 755

2654. **(இ-ள்)** காலை...போல் - காலையில் இளங்கதிர் பரப்பி எழும் சூரியனைப் பக்கங்களிற் சூழும் கரியமுகிற் கூட்டம் போல; பீலிசேர்... சூழ்வார் - மயிற் பீலிகளை ஏந்திய சமணகையர் பிள்ளையாரைச் சூழ்வாராய்; ஏலவே... எண்ணி - பொருந்தும்படி வாதினால் வெல்வதற்கு

2654. **காலையெழுங் கதிரவனைப் புடைசூழுங் கருமுகில்போற்**
பீலிசேர் **சமண்கையர் பிள்ளையார் தமைச்சூழ்வார்**
ஏலவே வாதினுல் வெல்வதனுக் கெண்ணித்தாங்
கோலுநூ லெடுத்தோதித் தலைதிமிர்ப்பக் குரைத்தார்கள். 756

எண்ணங் கொண்டு; தாம்... குரைத்தார்கள் - தாம் பேணிய ஆருகத நூல்களிற் கண்ட பொருள்களை எடுத்துச் சொல்லித் தலைகள் திமிர்க்கும்படி குரைத்தார்கள்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) காலை...முகில்போல் - பிள்ளையார் தமைப் பீலி சேர்கையர் சூழ்வார் - பிள்ளையார் காலை எழும் **கதிரவனுக்**கும்; பீலிசேர்**கையர் கரு**முகிலினுக்கும் உவமிக்கப் பட்டனர்; உருப்பற்றி வந்த உவமம்; முகில் சூழ்தல் - மெய்யாற் சூழ்தலுக்கு வினைபற்றி வந்தது; **காலை எழும் கதிரவன்** என்றதனுல் செந்நிறம் போந்தவாறு காண்க; "காலையே போன்றிலங்கும் மேனி" (அற்-அந்.) என்ற அம்மையார் திருவாக்கும் காண்க.

காலை எழும் என்றதனுல் முன்னுள் இரவின் இருளை ஓட்டி எழும் கதிரவன் செயல்போல் முன்னே சூழ்ந்திருந்த அமணிருளைத் துரத்துதலும், கதிரவனைப் **புடை சூழும் கருமுகில்** என்றதனுல் முகில் அவன்முன் தன் செயல் வலிமைபெற்று நிற்க மாட்டாது உடைதல் போல ஈண்டு அமணர் உடைந்து மறைதலும் குறிப்பிற்பெற வைத்த பண்பு உவமை நயமும் காண்க.

பீலி சேர் சமண்கையர் - பீலி - அமணகுருமார் எப்போதும் கையிற் கொள்ளும் மயிற் பீலி; **கையர்** - கையினை உடையவர் என்றும், கீழ்மக்கள் என்றும் இரு பொருளும் பட உரைக்க நின்றது.

ஏலவே - காலமும், இடமும், பிறவும் பொருந்து மாற்ருல்; அவர் நோய் தீர்த்துத் தம்மேல் வெற்றி கொள்ளுமுன்பு என்ற குறிப்புமாம்.

வாதினுல் வெல்வதனுக்கு எண்ணி - நோய் நீக்க மாட்டாமையால் தாம் தோற்பதுவும் *(2612—2616)*, அவர் அதனுள் வெற்றி பெறவுள்ளமையும் அறிந்த அமணர், அதனைவிட்டு நூல் வாதத்தினுல் வெற்றி கொள்ள எண்ணி.

வாது - நூல் வாதம்; **வாதினுல்** - வாதப்பொருள் கருவியாக.

தாம் கோலும் நூல் - தாம் கைக்கொண்டு உய்த்த ஆருகத சமய நூல்; **கோலுதல்** - கற்பித்தல்; செய்தல் என்றலுமாம்; "வேருெரு சமயஞ் செய்தே" (தேவா)

தலை திமிர்ப்ப - தலை அசைத்து; இது வாதத்தின் குறி.

"**திமிர்த்தல்** - சொல்லின் வேகத்தால் நடுக்குற்று வருந்துதல்" என்பர் ஆறுமுகத் தம்பிரானுர்.

குரைத்தார்கள் - நாய் குரைத்தல் போல இழி சொறகளைப் பொருளின்றி உரக்கக் கூவினுர்கள். அவர்களது சொல்லிழிபு தோன்றக் கூறினுர்; இழி சொற்களாதலின் அவை

2655. பிள்ளையாரது கேளாப் "பேசுதிர்நும் பொருளெல்லை
யுள்ளவா" றென்றருள, வூத்தைவாய்ப் பறிதலையர்
துள்ளியெழுந் தனேகராய்ச் சூழ்ந்துபத றிக்கதற,
வொள்ளிழையா ரதுகண்டு பொருராகி யுண்ணடுங்கி, 757

இன்ன வெனக் கூறலுமாகா தென்பார் இவ்வாறு குறிப்பிற்பெறக் கூறிய கவிநலம் **காண்க;** *முன்னர்ப்* **பல சொல்லுவார்** *என்ற குறிப்பும் காண்க; முன் கதிரவன் என்றதற்கேற்ப "சூரியனைப் பார்த்து நாய் குரைத்தாற் போல" என்ற பழமொழி நிலைபடக் கூறிய நயமும் கண்டு கொள்க; நாய் சினந் தொலித்தலைக் குரைத்தல் என்பது பழவழக்கு; இஃது எடுத்த பொருளை விட்டு விலக்கி வேறு மொன்றிற் செலுத்த முயலுதல்; தோல்வியுறுவோர் கைக்கொள்ளும் உபாயங்களுள் ஒன்று; தமது பொறாமை சினம் முதலிய தீக்குண மிகுதிப்பாட்டால் பாண்டியன் கிடந்த அவதியின் காலமும் பிறவும் கூட நோக்காது அமணர் இவ்வாறு துணிந்தனர் என்க.*

சூழ்வார் - *சூழ்வாராகி; முற்றெச்சம் - பலவாறுயர்ச் சூழ்வாராகி என்றும் சூழ்ச்சி - உபாயம் - செய்வாராகி என்றும் உரைக்க நின்றது; வரும்பாட்டுப் பார்க்க. சூழ்வார் - ஓதிக் - குரைத்தார்கள் என்று கூட்டுக.* **756**

2655. **(இ-ள்)** *பிள்ளையார்... என்றருள - பிள்ளையார் அதனைக் கேட்டு "உங்கள் கொள்கையின் படிக்குள்ள பொருள் முடிபுகளை உள்ளபடி பேசுங்கள்" என்று அருளிச்செய்ய; ஊத்தைவாய்... கதற - ஊத்தைவாயினையும் பறித்த தலையினையுமுடைய அவ்வமணர் துள்ளி அநேகராக எழுந்து பிள்ளையாரைச் சூழ்ந்து பதறிக் கதறவே; ஒள் இழையார்... உள் நடுங்கி - ஒள்ளிய இழைகளை அணிந்த பாண்டிமா தேவியார் அதனைக் கண்டு பொறுக்கலாற்ருது உள்ளம் நடுக்கமுற்று,*

(வி-ரை) அது - *அமணர் தாம் கோலும் நூல் எடுத்தோதிக் குரைத்த அதனை;*

நும் பொருள் எல்லை உள்ளவாறு பேசுதிர் - உம்முடைய சமய நூல்களுள் உண்மைப் பொருளாகக் கூறும் முடிபுகளை உள்ளபடி இவ்வாறு குரைத்தெழாமல் ஒழுங்கு படப்பேசுங்கள் என்றதாம்.

பொருள் எல்லை - முடிந்த கொள்கைகள்; *அஃதாவது சமய வாதத்தின் ஒழுங்கு பட அறுதியிட்டுக் கூறும் முடிபு; "நீங்கள் செப்பிவரும் பொருள் நிலைமை தெரிக்க" (புரா-913); உங்கள் தலைவனும் பொருளும் உரைக்க" (மேற்படி - 914); "நாட்டுகின்ற முத்திதான் யாவது?" (மேற்படி- 916) என்றும், "புகன்மினும்* ***மிறையு நூலு*** *மத்தலைநின் ருரெய்துங்* ***கதியும்"*** *(திருவிளை - புரா - மண் சு-பட-101) என்ற படி வாதிக்கும் அச்சமயக் கொள்கையின்படி அவர் கூறும் கடவுள் இலக்கணமும், அளவைநூல் இலக்கணமும், அச்சமயத்தோர் கொள்கையின்படி அடையும் முத்தியிலக்கணமும் என்றிவற்றை அடைவுபட முடித்துக் கூறுதல்.*

உள்ளவாறு பேசுதிர் *- வாதத்தின் அமைவில் ஒழுங்குபடுத்தி உரையுங்கள்; இதனுல் அவர்கள் பொருமையும் சினமும் மேற்கொண்டு ஒழுங்கற்ற முறையில் பேசினுர்கள்*

என்றதாம்; ''பல சொல்லுவார்'' (2653) ''குரைத்தார்கள்'' (2654) என்று ஆசிரியர் கூறிய குறிப்புக் காண்க; **பல சொல்லுதல்** - ஒன்றாக ஒழுங்கிற் கூறாது பலவாறு கூறுதல்.

பேசுதிர் - சினந்த முறையிலன்றிப் பேசுக என்க; இதனால் வாதில் வெல்ல எண்ணி வாதத்திற் கறைகூவி முற்பட்டழைத்தோர் அமணர்கள் என்பதும், அதனை உடன்பட்டுப் பிள்ளையார் அவர்கள் மேற்கொண்டெழுந்த சமய வாதத்தினை ஏற்று ஒழுங்குபட்ட முறையில் அதனைத் தாமும் செய்ய உடன்பட்டு அழைத்தருளினர் என்பதும் பெறப்பட்டன.

ஊத்தை வாய் - பல் துலக்கிற் புழு முதலிய பிராணிகள் சாகும் என்று பற்றுலக்காத ஒழுக்கமுடையராதலால் ஊத்தை மிக்க வாய்; இதனால் வரும் துர்நாற்றத்தை மறைக்க அவர்கள் வாய்க்கு ஒரு மறைப்பு இட்டுக் கொள்ளுதலும் வழக்கென்பர்.

பறிதலையர் - தலை மயிரைப் பறித்த நிலையினர்; ஒருவர் சமண ஆசிரமம் புகும் போது அதனில் முதியோர் பலர் சூழ்ந்து ''இப்துக்-பிற்சுக்'' (இப்போது துக்கம்- பின்னால் சுகம்) என்ற மந்திரம் சொல்லிக் கொண்டு அவரது தலைமயிரைப் பறித்தல் அவர் சமய வழக்குக்களுள் ஒன்று என்பர்.

துள்ளி...கதற - துள்ளி எழுதலும், ஒழுங்குபெற ஒவ்வொருவராயன்றி அனேகராய் எழுதலும், சூழ்ந்து கொள்ளுதலும், பதறுதலும், முறை தவறிக் கதறுதலும் முதலியவை வாதமுறைக்கேற்காத செயல்கள்; பிள்ளையார் அருளியபடி நேரிய முறையில் வாதத்துட் புகாது இவ்வாறு பிழைபட நடந்து கொண்டதற்கு அமணர்களின் பொறாமையும் சினமும் காரணமாம்.

ஒள்ளிழையார்...உள்நடுங்கி - ஒள் இழையார் - ஒள் - ஒளி; அழகு. நேரிய நூன்முறையினையே கொண்டு ஒழுகுமவர் என்ற குறிப்பும் காண்க; ''ஆயிழையாய்'' (சிவஞானபோதம்- 7 சூத் - 3 அதி - வெண்பா) என்றவிடத்து ''நுணுகிய நூல்கள் ஆராய்வது'' ''இழை நூலாகலான் ஈண்டுச் சாத்திரத்தை யுணர்த்திற்று'' என்று மாதவச் சிவஞான முனிவர் உரை வகுத்தமை கருதுக; **பொறாராகி உள்நடுங்கி** - முன்னை இரவில் கரந்து தீத்தொழில் செய்த அவர்கள் இங்கு நேரிலும் முறைதவறி ஒழுகத்தலைப்பட்டாராதலின், அதனால் யாது விளையுமோ என்ற அச்சத்தால், காணப்பொறாத நிலையும் மன நடுக்கமும் விளைந்தன; அன்றியும், இது தாய்மைக்குணமாகிய கருணையின் விளைவுமாம்; இதனை மேல்வரும் பாட்டில் விரித்து ''இன் அருட் பிள்ளையாரிவர் திருமேனி எளியர் போலும் உவர் எண்ணிலார்கள்'' என்பதும் காண்க. அமணர்கள் மேலும் அடாத செயல்களைத் தமது கூட்டப் பெருக்கின் வலியினாலும் பொறாமை கொண்ட மூண்ட சினத்தாலும் செய்ய முற்படுவார்கள் என்ற கருத்து எழுந்தது; அதுகண்ட அமைச்சரும் அரசனும் இருக்கவும் அம்மையார் முற்பட்டுத் தடுத்தநிலை ''அச்சந் தாய்தலை யன்பின் முன்பு நிற்குமே'' (574) என்ற விடத்துரைத்த நிலையின் தன்மையாலறிக.

மூள்வார் என்ற குறிப்பும் அச்சங் காட்டியது. 757

2656. **(இ-ள்)** தென்னவன் றன்னை நோக்கி - பாண்டியனைப் பார்த்து; திருமேனி... இவர் - இனிய அருளையுடைய பிள்ளையாராகிய இவர் எளியராம் சிறுவர்; உவர் எண்ணிலார்கள் - மற்று அங்கு நிற்கும் உவர்களாகிய அமணர்கள் எண்ணிலாதவர்கள்; மன்ன...நல்கும் - அரசனே! உனது சுரநோயின் மயக்கத்தினை எங்கள் வள்ளலாராகிய பிள்ளையார் தீரும் வண்ணம்

வேறு

2656. தென்னவன் றன்னை நோக்கித் ''**திருமேனி யெளியர் போலும்**
இன்னருட் பிள்ளை யார்மற் றிவ;ருவ **ரெண்ணி லார்கள்;**
மன்ன!நின் மயக்க மெங்கள் வள்ளலார் தீர நல்கும்;
பின்னையிவ் வமணர் மூள்வார் வல்லரேற் பேச'' வென்றார். 758

அருள் செய்வார்; பின்னை... பேச என்றார் - அதன்பின் இவ்வமணர் வாது செய்ய வல்லவரானால் பேசுவாராக என்றார்.

(வி-ரை) இது *மங்கையர்க்கரசியார் மனநடுங்கி அரசனை நோக்கி அமணர்களது* தகாத *செயலை முறையிட்டுத் தவிர்ப்பார்போன்று கூறியது,* **தென்னவன்றன்னை நோக்கி** என்ற குறிப்புமிது.

மற்று இன்னருட் பிள்ளையார் திருமேனி யெளியர் போலும் என்க; பிள்ளையார் திருமேனி எளியர் = உவர் எண்ணிலார்கள் = வள்ளலார் நல்கும் = பின்னை அமணர் பேச *என்ற நான்கும் திருவுள்ளத்துட்கொண்டு அம்மையார் கூறியவற்றுள், முதற்கண் எழுந்தது பிள்ளையாரது திருமேனியின் எளிமையேயாம்! அஃதே தாய் தலையன்பின் தன்மை.*

மற்று ***இன்னருட் பிள்ளையார்*** *இவர்* ***திருமேனி எளியர் போலும்*** *- இனிய அருள் வன்மையுடையர் ஆயினும் திருமேனி இளையராதலின் எளியர்போலும் என்றபடி.*

போலும் *- அருளின் வலிமையால் மேனியும் எளியரல்லாதிருத்தலும் கூடும் என்ற ஐயப்பாடு குறித்தது.*

மற்று இவர் *- அதுவரை மன்னனுக்கு மற்றவராய் நின்று இப்போது மன்னனுக்கும் தமக்கும் அணியராயினர் என்ற குறிப்புப்படப் பிள்ளையாரை* ***இவர்*** *என்றார்.*

உவர் எண்ணிலார்கள் - உவர் *- உகரச்சுட்டுச் சேய்மைக்கும் அணிமைக்கும் இடைப்பட்ட நிலை குறிக்குமென்ப; ஈண்டு அமணர்கள் அப்போது அரசனுக்கு முற்றும் சேயாருமல்லராய், முற்றும் அணியாருமல்லராய் நின்ற நிலை குறித்தது.* ***எண்ணிலார்கள்*** *- அரசனது நலமேயன்றித் தந்நலத்தினையும் தாம் கொளுவிய தீயினை ஏவல் கொண்ட பிள்ளையாரது வெற்றிப்பாட்டினையும் எண்ணாதார் என்ற குறிப்புமாம். ''அறந்துறந்து தமக்குறுதி யறியாத புல்லறிவோர்'' (1360) என்ற கருத்துக் காண்க;* ***உவர்*** *- உவர்த்தலுக்கு - வெறுத்து ஒதுக்குதற்கு - உரியார்கள் என்ற குறிப்புப்படக் கூறியதுமாம்.*

எங்கள் வள்ளலார் நின்மயக்கம் தீர நல்கும் *என்க.* ***எங்கள்*** *அருமைப்பாடு குறித்த பன்மை; தம்மையும் அமைச்சரையும் உளப்படுத்தி முன் நிகழ்ச்சிக் குறிப்புப் பெற வந்த உளப்பாட்டுத் தன்மைப் பன்மை என்றலுமாம்;* ***மயக்கம்*** *- பொருளல்லவற்றைப் பொருளென்றுணர்ந்த மருளினுற் போந்த விளைவு; மயக்கம் அதன் விளைவாகிய நோய் முதலிய தீமைகளின் தொகுதிக்காயிற்று;* ***மயக்கம்*** *- ''கருத்தொழிந் துரைமறந்'' (2611) திருந்தநிலை சிறிதளவில் நீங்கியும் முற்று நீங்காத மயக்கநிலை.*

பின்னை *- முன்னே மயக்கம் தீர அவர் நல்கும்; அதன்பின்னே;* ***நல்கும்*** *- உறுதி குறித்தது.*

2657. மாறனு மவரை நோக்கி ''வருந்தனீ!'' யென்று, ''மற்று
வேறுவா தென்கொ? லென்மேல் வெப்பொழித் **தருகர் நீரும்**
ஆறணி சடையி னருக் **கன்பரா மிவரு** நீங்கள்
தேறிய **தெய்வத் தன்மை யென்னிடைத் தெரிப்பீ**'' ரென்றான். 759

மூள்வார் - பொறாமையும் சினமும் மூளப்பெற்றோர்; **வல்லரேல்** - வல்லரல்லா தொழிகுவர் என்பது குறிப்பு. **பேச** - பேசுக; அகரம் வியங்கோள் விகுதி. *758*

2657. **(இ-ள்)** மாறனும்... என்று - பாண்டியனும் மங்கையர்க்கரசியம்மையாரை நோக்கி ''நீ வருந்த வேண்டா'' என்று சொல்லி; மற்று... என்கொல் - பிற வேறுவாது என்ன வேண்டும்; அருகர் நீரும்... இவரும் - அருகர்களாகிய நீங்களும் கங்கையைத் தரித்த சடையினையுடையாருக்கு அன்பராகிய இவரும்; என்மேல் வெப்பு ஒழித்து - என்மேல் உள்ள இந்த வெப்புநோயை ஒழியச் செய்து; நீங்கள்... என்றான் - நீங்கள் **அவ்வவர் தெளிந்த தெய்வங்களின் உண்மைத் தன்மையை என்னிடத்தில் விளக்குவீராக** என்று சொன்னான்.

(வி-ரை) மாறனும்... என்றான் - ''மன்ன!'' *(2656)* என்று அரசன் என்னும் நிலையில் வைத்து அம்மையார் அஞ்சிக் கூறி முறைப்பாடு செய்து, மிகைபட நிகழ்ந்த அமணர்களது செயலை ஒழுங்குப்படுத்த வேண்டினாராதலின் அந்நிலையினை மேற்கொண்டே அரசன் முறைப்படுத்தி ஒழுங்குசெய்த நிலை கூறப்பட்டது. **மாறன்** - இதுவரை பற்றி நின்ற அமணர் சார்பினின்றும் மாறிச் சைவ நெறியில் வரவுள்ளவன் என்றதும் குறிப்பு.

வருந்தல் நீ - உண்ணடுங்கி முறைப்பட்ட அம்மையாரை அஞ்சல் என்றமைப்பது முதற்கடமையாதலின் இதனை முன்னே கூறினர்.

மற்று வேறு - வேறு வேறு; **மற்று** என்பது தன்னிடையன்றி வேறாகிய என்பதும், வேறு என்பது நோய் தீர்த்தலன்றிப் பிற என்பதும் குறித்தது.

என்மேல் - வெப்பு ஒழித்து - என்பது காண்க; **வாது** - சாதி யொருமை.

என்மேல் வெப்பு ஒழித்து - தெரிப்பீர் - வெப்பு ஒழியச் செய்தலால் தெரியச் செய்வீராக; **ஒழித்து** - ஒழியச் செய்தலால் எனக் காரணக் குறிப்புப்பட நின்றது.

அருகர் நீரும் - அன்பரா மிவரும் - இவர்களைத் தனித்தனி நோக்கிக் கூறியது;தேறிய - தெளிந்து கைக்கொண்ட.

தேறிய தெய்வத்தன்மை-''தேறிய தொண்டரை'' *(திருவிருத்தம்)*; தெய்வத்தின் உண்மைத் தன்மையை என இரண்டனுருபு விரிக்க.

தெரிப்பீர் - தெரியச் செய்வீர் - விளக்குவீர். இருதிறத்தவரையும் பிரித்துக் கூறியதனால் இருவரும் தனித்தனி தீர்த்து உண்மை காட்டுங்கள் என்றபடி; ''அவரும் யாமும் முன்னுற ஒக்கத் தீர்க்க மொழிந்து'' *(2646)* என்று அமணரது வஞ்ச மொழிக்கு ''இருதிறத் தீரும் தீரும்'' என முன் *(2647)* குறிப்பிற் கூறிய விடையினை இங்கு விளக்கி விரித்து முறைசெய்து

2658. ஞானவா ரமுத முண்டார் நற்றவத் திருவை நோக்கி
''**மானினேர் விழியி ஞய்கேள்!** மற்றெனைப் **பால னென்று**
நீநனி யஞ்ச வேண்டா; நிலையிலா வமணர்க் கென்றும்
யானெளி யேன லெ''னென் றெழுந்திருப் பதிகம்பாடி. 760

நியமித்தபடி; பிள்ளையார் விழியுற நோக்கலாலே வெம்மை நோய் சிறிது நீங்கியதனால் அரசன் இவ்வாறு அடைவுபடுத்தும் வன்மை பெற்றனன் என்க.

ஆறணி சடையினருக்கு அன்பராம் இவர் *- ''மைந்தன் அயர்ந்தனனெல்''* ***(2585)*** *என்றும், ''கழுமலத்தான் சங்கரனருள் பெற்று இங்கு மேவினன்'' (2589) என்றும் முன்கூறிய ஒருமைக் கூற்றுக்களுடன் இங்குக் கூறும் பன்மைகளையும் ஒப்பு நோக்குக; இது பிள்ளையாரது நாமமந்திரக் கேள்வியும், திருமேனிக் காட்சியும், திருநோக்கமும் பெற்ற திருவருட் பேற்றினால் முன்னைய நோயும் மயக்கமும் சிறிது நீங்கப் பெற்றமையாலாகியது.*

என்னிடை *- என்முன் எனவும் உரைக்க நின்றது.* ***759***

2658. ***(இ-ள்)*** *ஞான ஆர் அமுதம்...நோக்கி - ஞானமாகிய நிறைந்த அமுதத்தினை உண்டருளிய பிள்ளையார் நல்ல தவத்தையுடைய திருவாகிய அம்மையாரை நோக்கி; மானின் நேர்விழியினாய் கேள் - மானின் விழியினைப்போன்ற விழிகளையுடைய அம்மையே கேட்பாயாக!; மற்று எனை...வேண்டா - மற்று என்னைச் சிறுவன் என்று நீ மிகவும் அஞ்ச வேண்டா; 'நிலையிலா...அலேன்'...பாடி - ''நன்னிலையில்லாத அமணர்களுக்கு என்றும் யான் எளியேனல்லேன்'' என்ற கருத்துடன் எழுகின்ற திருப்பதிகத்தினைப் பாடியருளி,*

(வி-ரை) திரு - திருப்போல்வாரைத் **திரு** என்றது உபசாரம். **தவத்திரு** - தவமாவது **பாண்டி நாடும் அரசனும் சைவமும் ஓங்கும்படி செய்த தவம்.**

மானின் நேர்விழி - இது பதிகத் தொடக்கம்; பதிகச் சொல்லும் பொருளும் போற்றப்பட்டன; **மான்** - மானின் விழி குறித்தது ஆகுபெயர். இங்கு இத்தன்மையாற் கூறியது உண்ணடுங்கி உரைத்த நிலையும், அதனால்மருண்ட பார்வையும் கண்டது பற்றியாம்.

மற்று எனை - மற்று - அம்மையார் பிள்ளையாரைத் திருமேனி எளியர் போலும் என்று எண்ணிய நிலைகுறித்தது.

நிலையிலா அமணர் - நிலை - உண்மை நிலை; நிலையிலாராதலின் - அவர்க்கு எளியேனலேன் என்று காரணக்குறிப்புப்பட உடம்பொடு புணர்த்தி ஓதினார். **நிலை யில்லாமை** - தெளியா தொருபொருளே பொய்யு மெய்யுமா மென்னும் புரைநெறி என்ற குறிப்பும்பட நின்றது.

என்றும் - இன்று இங்குமட்டுமன்றி வேறு எங்கும் எப்பொழுதும்.

இப்பாட்டுப் பதிகக் கருத்துணர்த்திற்று. **இப்பதிகமொன்றே தனி ஒருவரை முன்னிலைப் படுத்திக் கூறிய அமைதியுடையது.**

திருவையொத்த — என்பதும் பாடம். 760

2659. பெற்றியா லருளிச் செய்த பிள்ளையார் தமக்கு முன்னஞ்
சுற்றுநின் றழைத்த லோவா வருகர்க்குந் தென்னர் கோமான்
''இற்றைநா ளென்னை யுற்ற பிணியைநீ **ரிகலித் தீருந்;**
தெற்றெனத் தீர்த்தார் வாதில் வென்றவ'' ரென்று செப்ப; 761

2659. **(இ-ள்)** பெற்றியால்... தமக்கும் - திருவருளைப்பற்றிய தன்மையினால் அவ்வாறு திருப்பதிகம் அருளிச்செய்த பிள்ளையாருக்கும்; முன்னம்... அருகர்க்கும் - தன் முன்பு சூழ்ந்து நின்று குரைத்தலை நீங்காத அமணர்களுக்கும் (ஒன்றுபோலவே); ''இற்றைநாள்...வென்றவர்'' என்று - இன்றைய நாளில் என்னை யடைந்த ''இவ்வெப்பு நோயினை நீர் இருவீரும்தனித்தனி வேறாகி இகல் வைத்து ஒட்டித் தீருங்கள்; தெளிவுபெறத் தீர்த்தவர்களே வாதில் வெற்றி பெற்றவராவர்'' என்று; தென்னர் கோமான் - பாண்டிய மன்னவன்; செப்ப - சொல்ல,

(வி-ரை) பெற்றி - சிவத்தன்மை; **அவனருளாலல்ல தொன்றையுஞ் செய்யாராய்த் திருவருள் வசத்தராய் நிற்பதனால் சிவச் செயலே தம் செயலாக நிகழும் தன்மை;** ''திருவாலவாயா னிற்கவே'' ''சொக்க னென்னு ளிருக்கவே'' என்ற பதிகம் காண்க.

பிள்ளையார் தமக்கும் அருகர்க்கும் - **செப்ப** என்க. **இகலி** - என்றதனால் ஒட்டித் தனித்தனி செய்க என்று வகுத்தவாறு காண்க.

இற்றை நாள் உற்ற - என்றும், **இற்றை நாளே** தீரும் என்றும் உரைக்க நின்றது.

தெற்றென - தெளிய - விளங்க; விரைய என்றலுமாம்.

தீர்ப்பவரே - என்று பிரிநிலை ஏகாரம் தொக்கது.

வென்றவர், ஆவர் என்று ஆக்கச் சொல் வருவிக்க; இப்பாட்டு அரசன் கூறிய முடிபு; முன்னர் (2657) **அருகர் நீரும், அன்பராம் இவரும் தெரிப்பீர்** என்று பொதுப்படத் தன்முன் செய்யும் வாதமாவது இஃது என்று கூறினான்;இங்கு அவ்வாதத்தின் முடிபு இது என்றும்கூறினான்;''வாதுசெயத் திருவுள்ளமே'' ''வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே'' என்ற இரண்டு பதிகங்களால் முறையே பெற்ற அருட் குறிப்பின் வழி நிகழ்ச்சிமுறை தொடங்கியவாறு கண்டுகொள்க.

சுற்றும் நின்று அழைத்தல் ஓவா - வேறு வாது என்னை? வெப்பொழித்துத் தெரிப்பீர் என்று அரசன் ஆணையிட்டும் ஒழியாது, அக்கிரமித்து வன்கண்ணராய்ப் பின்னரும் குரைத்துக் கொண்டிருந்த; **அழைத்தல்** - குரைத்தல் - கூவுதல். **761**

2660. **(இ-ள்)** மன்னவன் மாற்றம் கேட்டு - அரசனது மாற்றத்தினைக் கேட்டு; வடிவுபோல்... அமணர் - உடம்பினைப் போலவே மனதினும் மாசு பொருந்திய அமணர்கள்;தென்னர் தோன்றலை நோக்கி - பாண்டியனாகிய அரசர் பெருமானை நோக்கி; நாங்கள்... என்றார் - ''நாங்கள் உனது உடம்பில் ஒரு பக்கத்தில் இடப்பாகத்தின் வெப்பு நோயை முதலில் மந்திரித்துத் தெய்வ முயற்சியினாலே தீர்ப்போம்'' என்றனர்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

2660. மன்னவன் **மாற்றங் கேட்டு,** வடிவுபோன் மனத்து மாசு
துன்னிய வமணர் தென்னர் தோன்றலை நோக்கி ''நாங்கள்
உன்னுடம் பதனில் வெப்பை **யொருபுடை வாம பாகம்**
முன்னமந் திரித்துத் தெய்வ முயற்சியாற் றீர்த்து'' மென்றார். 762

(வி-ரை) மன்னவன் மாற்றம் - மாற்றம் *- சொல். இந்த முன் பாட்டிற் கண்டபடி வாதத்தின் முடிபு இஃது என்று மன்னவன் கூறிய பொருளுக்கு வந்தது;* ***மாற்றம்*** *- மாற்றங்களின் - சொற்களின் - துணிபு; இரட்டுற மொழிதலால்* ***மாற்றம்*** *- மாறிய நிலை என்று கொண்டுரைத்தலுமொன்று; மாறிய நிலையாவது, ''தென்னவன் றானு முன்செய் தீவினைப் பயத்தி னாலே, யந்நெறிச் சார்வு தன்னை யறமென நினைந்து நிற்ப'' (2498); தங்கண் மன்னனு மவர்கண் மாயத் தழுந்த'' (2510) என்ற நிலைமாறிப் (''செய்தவப் பயன்வந் தெய்துஞ் செவ்விமுன் உறுதலாலே'' (2647) முன்னைச் சார்புகொண்ட நிலை நீங்கிப்) பிணியைத் தீர்த்தவரே வாதில் வென்றவராவர் என்று முடிபு கூறியது; ''வணிகன்வாய் மாற்றங் கேட்டு'' (1764) என்ற காரைக்காலம்மையார் புராணமும் காண்க.*

வடிவுபோல் மனத்தும் மாசு துன்னிய அமணர் - வடிவு மாசு துன்னு*தலாவது உடல் கழுவாமையாலும், பல் துலக்காமை, மயிர் பறித்தல் முதலிய மரபினாலும், ''வேர்வந்துற மாசூர்தர வெயிலினின் றுழல்வாரும்'' (பிள்- தேவா- அண்ணாமலை- நட்டபாடை -10) என்றபடி வெயிலினிற்றல், சுடுபாறை கிடத்தல் முதலிய ஒழுக்கினாலும் உடலில் மாசு - புற அழுக்கு - மிகுதல்;* ***மனத்து மாசு துன்னுதல்*** *- உள்மாசு என்னும் வஞ்சம் - பொய் - கொலை முதலிய தீமைகள் மனத்தினுட் சார்ந்து பெருகுதல்; இங்குச் சரித நிகழ்ச்சியில் முன் கூறியபடி இவர்களது சொற்செயல்களினாலே இந்நிலை தெளியப்படும். பொறாராய் (2577); சூழ்ச்சி (2578); அழிவுறு மனத்திடைப் புலர்ச்சி(2579) செற்றமீக் கொண்ட சிந்தையும் செய்கையுமுடைமை (2585); உறை மடத்தில் விஞ்சைமந்திரத் தொழில் விளைக்கச் சூழ்தல் (2556); தீய செயலும் தீத்தொழிலும் (2596-2597); மானமிலாது பின்னருஞ் சூழ்தல் (2661); மன்னனுக்குப் பொய்ம்மையும் வஞ்சனையும் புகட்டுதல் (2645) முதலியவை காண்க; அமணர்களது மாசு துன்னிய மனத்துநிலை அரசுகள் புராண வரலாற்றினும், தேவாரங்களினும், தண்டியடிகள் - நமிநந்தியடிகள் புராணங்களினும், பிறண்டும் உணரப்படும்.*

மனத்தும் *- உம்மை - எண்ணும்மை.*

நாங்கள்... தீர்த்தும் *- இஃது அமணர் அரசனது முடிபினை ஏற்று வாதினை மேற்கொண்டு தாம் செயல் புரியப்புகுந்த நிலை குறித்தது;* ***உடம்பதனில் வெப்பை ஒருபுடை வாமபாகம்*** *- வெப்பு உடம்பினில் எங்கும் பரவியுள்ளதாக அதனில் ஒருபுடையாகிய இடது பாகத்தில் உள்ள நோயினை;* ***இகலித் தீரும்*** *(2659) என்ற ஆணையை ஏற்று இடப்பாகத்து நோயினை நாங்கள் தீர்க்கின்றோம் என மேற்கொண்டது.*

முன்னம் *- முதலில். பிள்ளையார் தஞ்செயல் புரிவதன்முன் எனத் தாங்கள் முந்திக் கொண்டது;* ***வாமபாகம்*** *- வாமபாகத்து நோய்க்கு ஆகிவந்தது;* ***வாமம்*** *இடப்பக்கம். வாமபாகத்தைத் தேர்ந்து கொண்டது உடற்கூற்றின்படி இடப்பாகம் பெண்பாகமானதால் ஆண் மக்களுக்கு அப்பகுதியில் பற்றிய நோய் வலிதின்றி எளிதில் தீர்த்தற்குரியது*

ஆதலானும், வலப்பாகம்ஆண்பாகமானதால் ஆண் மக்களுக்கு வலப்பாகத்திற் பற்றிய நோய் தீர்த்தல் எளிதன்றாதலானும் முயற்சியின் வலிய பகுதியைப் பிள்ளையாருக்கு விட்டு எளிய பகுதியை எடுத்துக் கொண்டனர்; இஃது அமணர் மருத்துநூல் முதலிய கலைஞானங்களின் வல்லமை கொண்டு துணிந்த வஞ்சச் செயல்களுள் ஒன்று என்க.

முன்னம் - *என முந்திக்கொண்டதென்னை எனின், "போன கங்குலிற் புகுந்ததின் விளைவுகொல்?" (2612) என்று அஞ்சிய அமணர் தமது தீத்தொழிலின் பயனை இவ்வாறு நோயாகப் பற்றச் செய்யும் பிள்ளையார் இகலி முற்பட்டு ஒரு பகுதியை நோய் தீர்ப்பாராயின் அது மற்றப் பகுதியின் நிலையை முடுகச் செய்துவிடுமென்று கொண்ட அச்சங் காரணம்; இவ்வுணர்ச்சி முன்னை அனுபவத்தாலும் கலைஞான அறிவினாலும் வந்தது என்க; "இருபுடை வெப்புங் கூடி யிடங்கொளா தென்னப் பொங்க" (2663) மேல் விளைதல் காண்க.*

மந்திரித்துத் தெய்வ முயற்சியால் - *"தேறிய தெய்வத் தன்மை என்னிடைத்தெரிப்பீர்" (2657) என்று இங்கு நோய் நீக்கம் வாயிலாக அவ்வத் தெய்வ உண்மை காட்டுவதாகலின் இவ்வாறு கூறினார்.* 762

VI திருவாலவாய்

திருச்சிற்றம்பலம் பண் - கொல்லி

மானி னேர்விழி மாத ராய்! வழு திக்கு மாபெருந் தேவி!கேள்
பானல் வாயொரு பால னீங்கிவ னென்று நீபரி வெய்திடேல்;
ஆனை மாமலை யாதியாய விடங்க ளிற்பல வல்லல்சேர்
ஈனர் கட்கெளி யேன லேன்றிரு வால வாயர னிற்கவே. (1)

எக்க ராம**மண் கைய ருக்கெளி யேன லேன்றிரு வாலவாய்ச்**
சொக்க னென்னு ளிருக்க வேதுளங் கும்மு டித்தென்னன் முன்னிவை
தக்க சீர்ப்புக லிக்கு மன்றமிழ் நாதன் ஞானசம் பந்தன்வாய்
ஒக்க வேயுரை செய்த பத்து முரைப்ப வர்க்கிட ரில்லையே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:— *பிள்ளையாரைச் சூழ்ந்து அமணர் அநேகராய்ப் பதறிக் கதறக் கண்டு, அம்மையார் உண்ணடுங்கிப் "பிள்ளையார் திருமேனி எளியர்; அமணர் எண்ணிலார்கள்" என்று அஞ்சி அரசனிடம் கூறியபோது, பிள்ளையார் அம்மையாரை நோக்கி விளித்து "என்னைப் பாலனென்று நீமிக அஞ்சவேண்டா; ஆலவாயரன் என்னுள் நிற்கவே இந்த ஈனர்கட்கு யான் எளியேன் அல்லேன்" என்று, (நோய்மிக்குத் தலை நடுங்கிய நிலையிற்கிடந்த) அரசன்முன் தேற்றியது;* **குறிப்பு - மக்களுள்ளே தனிப்பட்டவரை முன்னிலைப்படுத்திப் பிள்ளையார் கூறியருளிய பதிகம் இஃதொன்றேயாம்.**

பதிகப் பாட்டுக் குறிப்பு:—(1) மானின் (விழி) நேர் *விழி என்க;* **மான்** *- மானின் விழிக்கு வந்தது - ஆகுபெயர்; உள்நடுக்குற்று மருண்டதனால் மானின் மருண்ட பார்வை உவமையாயிற்று;* **பால்நல்** *- என்க;* **பானல் வாய்ஒரு பாலன்** *- இளமைப் பருவம்மட்டிற் குறித்தது; பாலறாவாயர் என்ற பெயர்க் குறிப்புமாம்;* **பரிவு** *- பயம் - அச்சம்;* **ஆனைமாமலை**

ஆதியாய இடங்கள் - மதுரையைச் சுற்றியுள்ள எண்பெருங் குன்றங்கள்; யானைமலை - பன்றிமலை - நாகமலை - பசுமலை முதலாயின. இவை ஒவ்வொன்றிலும் 1000 பேர்கள் சமண குருமார் பள்ளிகள் வகுத்து வாழ்ந்தனர். அவர் அங்குக் கிடந்த தங்கை கற்பாறைப் படுக்கை முதலிய அடையாளங்களை இன்றும் காணலாம். இவர்களை வாதா செய்து கழுவேறினவர்கள்; **பல அல்லல்** - சுடு பாறையிற் கிடத்தல் - மயிர் பறித்தல் முதலிய உடற்றுன்பப் போலித்தவங்கள்; **ஈனர்** - கீழ்மைக் குணமுடையோர்; **எளியேனலேன்... நிற்கவே** - நிற்றலால் எளியேனலேன்; "உளமே புகுந்த அதனால் - நல்லநல்ல அடியாரவர்க்கு" (தேவா)—**(2) ஆகமத் தொடு... அமைத்த** - ஆகமங்களென்றும் மந்திரங்களென்றும் கற்பித்துப் புனைந்து கொண்ட; **சங்கத பங்கமாய்** - பாகதத்தொடு வடமொழிச் சிதைவுகளால்; **பாகதம்** - பிராகிருதம்; **இரைத்துரைத்த** - வெற்றோசைபட உரைத்த; **உரைத்த ஆகதர்** - என்று கூட்டுக; **சனங்கள் வெட்குறு பக்கமாய்** - நல்ல மாந்தர் காணவும் வெள்குறும்படி ஒழுங்கினை யுடையராய்; (3) பாட்டுப் பார்க்க. **மாகதக்கரி** - மிக்கமதம் உடைய யானை; **மதம்** - மதத்தால் வரும் கோபம். **நின்றுண்பது** - சமணர் வழக்கு; **ஆகதர்** - சமணர்; ஆருகதம் என்பது ஆகதம் என வந்தது;— **(3) அத்தகுபொருள்...மொழிந்து** - பொருள் நிச்சயமானது உண்டும் இல்லையுமாம் என்பது சமணர் கொள்கை; இப்பொருள் கொண்டது "அத்திநாத்தி" என்னும் அவர்கள் மந்திரம். **வாதிலழிந்து... ஒடிந்து** - சமணரை வாதில் வெல்லும் சரித வரலாற்றுக் குறிப்பு; **நக்கம்** - நிர்வாணம் - உடையில்லாமை; **சித்திரர்** - புனைந்துரைப்போர்;—**(4) சந்து சேனன்** முதலியவை சமண குருமார் மேற்கொள்ளும் பெயர்கள்; **சேனர்** - பட்டப் பெயர்; அரசுகளுக்கு அமணர் "தங்களில்மே லாந்தரும சேனரெனும்பெயர் கொடுத்த"மை காண்க. **மந்திபோல்** - மெய்யும் வினையும் பற்றி எழுந்த உவமம்; முன் **மாகதக் கரிபோல்** (2) என்றதுமது; **ஆரியத்தொடு செந்தமிழ்ப் பயன் அறிகிலா அந்தகர்** - அமணர்கள் ஆரியமும் தமிழுமாகிய கலை வல்லவர்களாய்ப் பல சிறந்த நூல்களையும் இயற்றியுள்ளார்கள்; ஆயினும் அம்மொழிகளின் வேதங்களையும் ஞானநூல்களையும் ஓதியுணர்ந்தொழுகாது பேதித்து நின்றமையால் **பயனறிகிலர்** என்றார். "தென்றமிழப் பயனு யுள்ள திருத்தொண்டத் தொகை" (358); "வாயிருந்தமி ழேபடித் தாளுரு, வாயிரஞ் சமண்" (அரசு - தேவா - பழையாறை வடதளி); **அந்தகர்** - குருடர்; அறிவுக்கண் இழந்தோர். —**(5) கிளிவிருத்தம்** - எலிப்பாட்டு என்பன சமணர் செய்த சமயச் சிறு நூல்கள் என்பர்; **நரிவிருத்தம்** - சீவக சிந்தாமணி செய்த திருத்தக்கதேவரியற்றியது. மதுரைச்சங்கத்தில் அச்சிடப்பட்டுள்ளது. கிளிப்பாட்டு, எலிப்பாட்டு என்பனவும், நரிவிருத்தம் போல நிலையாமையை உணர்த்தக் கற்பித்துக் கொண்ட கதைகள். நரிவிருத்தக் கதை வடமொழிப் பஞ்ச தந்திர நூலிலும் சிறிது வேறுபாட்டோடு காணப்படுகின்றது. நரிவிருத்த முன்னுரையில் ஸ்ரீ ராகவையங்கார் விரித்துரைத்தவை பார்க்க. **பக்கம்** - நடுவுதீர்ந்து ஒருபக்கமாக. **அறங்காட்டி - மாடெலாங்கவர் கையர்** - அறமாகிய வேடங் காட்டிப் பொருள் கவரும் கீழ்கள். "விருத்தியும் கெடுக்கும்" (1347); கசிவு - அன்பு; **சேட்டை** - திருத்துறந்தோர்;—**(6) கனகநந்தி...மொழிகொளா - நந்தி** சமணருள்ளும் புத்தருள்ளும் குருமார் கொள்ளும் பட்டப்பெயர்; **கனக நந்தி** முதலாயின குருமார் பெயர்கள்; **மொழி** - பெயர்; **அனகன்** - அருகன்; **சினகர்** - சமணர்;—**(7) பந்தணம்** - கட்டு; **பரிவு** - ஆசை; **மந்தணம்** - இரகசியம் - மறைவு மொழி; **அந்தணம்... அருகந்தணம் - புத்தணம்** - அமணர் பரிபாஷையான உபசர்க்கங்கள்; **சிந்தணர்** - சமணர்;—**(8) சீலி** - ஒழுக்கு; **தீப்போலி** - தீயினைப் போன்ற உருவுடையவர் - சிவ பெருமான்; "செந்தீயின் உருவாளன்" "எரிபோன் மேனிப் பிரான்"—**(9) சாமவத்தையினுர்கள் போற் றலையைப் பறித்து** - சாகும்

2661. யாதுமொன் றறிகி லாதா **ரிருளென** வணையச் சென்று
வாதினில் மன்ன வன்றன் வாமபா கத்தைத் **தீர்ப்பார்**
மீதுதம் பீலி கொண்டு தடவிட **மேன்மேல் வெப்புத்**
தீதுறப் பொருது மன்னன் சிரபுரத் தவரைப் பார்த்தான். 763

அவத்தையிலுள்ளோர் தலை பறித்தல் நோய் முடுகிய நிலை; அது போல இவர்களும் மயிர் பறிக்கும் ஒழுக்குள்ளவர்; சரித விளைவுக் குறிப்புமாம். **பொடி** சுக்கு முதலியவை கூட்டிய பொடி தின்னும் சமண ஒழுக்குக் குறித்தது; ''சுக்குத் தின்னும்'' (தேவா); **வாய் சகதிக்கு நேராம் அவர்** - சகதி (சேறு) போல வாய் நாற்றமுள்ளவர்கள்;—**(10) இடுக்கு** - வஞ்சம்;— **(11) எக்கர்** - வஞ்சகர்; **துளங்கும் முடித்தென்னன் முன்னிவை - உரை செய்த** - வெப்புநோய் மிகுதியால் தலை நிலைநிற்கலாற்றாது நடுக்கமுற்றுக் கிடந்த பாண்டியன் முன்பு இப்பதிகம் பாடப்பட்டது என்ற சரித வரலாற்று அகச்சான்று.

2661. **(இ-ள்)** யாதும்... சென்று - ஏதேனும் உண்மைநிலை ஒரு சிறிதும் அறியும் ஆற்றலில்லாராகிய அமணர்கள் இருளைப்போல அரசனைக் கிட்டிச் சென்று; வாதினில்... தீர்ப்பார் - வாதத்தின் முற்பட்டு மன்னனுடைய இடப்பாகத்து நோயினைத் தீர்ப்பார்களாகி; மீது... தடவிட - அவன் உடம்பின்மேல் தமது மயிற்பீலிக் கற்றையைக் கொண்டு (மந்திரித்துத்)தடவ; வெப்பு மேன்மேல் தீதுற- வெப்புநோய் மேன் மேலும் அதிகரித்துத் தீமை செய்ததனால்; பொருது - ஆற்ற மாட்டாதவனாகி; மன்னன்... பார்த்தான் - அரசன் சீகாழித் தலைவரை வாதினில் தனது நோயினைத் தீர்க்க வேண்டுமென்ற குறிப்புடன் பார்த்தான்.

(வி-ரை) யாதுமொன்றும்அறிகிலாதார் - அமணர்; **யாதும்** என்பது அறியும் பொருளையும், **ஒன்றும்** என்பது அறியும் அளவையும் குறித்தன; **ஒன்றும்** - முற்றும்மை தொக்கது. ''யாது மொன்றுமென் பக்கலுண்டாகில்'' (410); **அறிகிலாதார் - கில்** - ஆற்றலுணர்த்தும் இடைநிலை; ''வெம்பவரு கிற்ப தன்று கூற்றம் நம்மேல்'' (தேவா - அரசு - தாண்); உண்மைநிலை யறிவும், அஃதில்லை யாயினும் அனுபவத்தாலறியும் ஆற்றலு மில்லாதாராதலின் இவ்வாறு இவ்வாதத்தில் துணிந்து முற்பட்டனர் என்பது குறிப்பு.

இருள் என - இருட் கூட்டம்போல்; உருப்பற்றிய உவமம்; ''இழுது மையிருட் கிருள் என'' (2576).

அணையச் சென்று - தாங்கள் நின்ற இடத்தினின்று பாண்டியனை அணுகச் சென்று.

மீது - பாண்டியனது உடலின்மேல்; **பீலி** - அமணகுருமார் எப்போதும் மயிற்பீலி கையிற்பிடித்தல் மரபு; **தம்பீலி கொண்டு** - தாம் கையிற் பிடித்த பீலியினாலே; **கொண்டு** - கருவிப் பொருளில் வந்த மூன்றாவதன் சொல்லுருபு.

பீலியினால் தடவுதல் - மந்திரிக்கும் முறையில் அவர்கள் செய்யும் கிரியை.

வெப்பு மேன்மேல் தீதுஉற - தடவத் தடவ முன்னைய வெப்பு மேலும் மேலும் தீயதாய்ப்—வெப்பு மிகுவதாய்ப்—பொருந்த - அதிகரிக்க; **தீது** - வெப்பம் - தீத் தன்மை.

பொருது - பொறுக்கமாட்டாதவனாகி;தாங்கலாற்றானாகி.

2662. தென்னவ னோக்கங் கண்டு திருக்கழு மலத்தார் செல்வர்
''அன்னவன் **வலப்பால் வெப்பை யாலவா யண்ண னீறே**
மன்னுமந் திரமு மாகி மருந்துமாய்த் தீர்ப்ப'' தென்று
பன்னிய மறைக ளேத்திப் பகர்திருப் பதிகம் பாடி. 764

பார்த்தான் - ''கண்ணிற் சொலி'' என்பது அரசிலக்கண மாதலின் ''இதில் **அமணர்** தோற்றனர்; இனி நீவிர் நும்பக்கத்து வாதத்தினை பெற்றுக்கொள்க'' என்ற குறிப்புப் பார்வையிற்றோன்ற; ''நோக்கம் கண்டு'' என மேற்கூறுதல் காண்க. வெப்பு மேன்மேல் தீதுறப்பொருத நிலையில் பேசமாட்டாது பார்த்தான் என்ற குறிப்புப்பட நின்றது. **763**

2662. **(இ-ள்)** தென்னவன் நோக்கம் கண்டு - பாண்டியனது நோக்கத்தினைக் **கண்டு;** திருக்கழுமலத்தார் செல்வர் - சீகாழியார்களுடைய செல்வராகிய பிள்ளையார்; ''அன்னவன்... தீர்ப்பது'' என்று - ''அவனுடைய வலப்பாகத்து வெப்புநோயினைத் திருவாலவாயில் இறைவனது திருநீறே நிலைபெற்ற மந்திரமும் மருந்துமாகித் தீர்ப்பதாகும்'' **என்ற** கருத்துட்கொண்டு; பன்னிய... பகர் - கூறிய வேதங்களின் கருத்தைப் போற்றி எடுத்துச் சொல்லுகின்ற; திருப்பதிகம் பாடி - ''மந்திரமாவது நீறு'' என்று தொடங்கும் திருப்பதிகத்தினைப் பாடியருளிச் செய்து,

(வி-ரை) நோக்கம் கண்டு - நோக்கமாவது ***''சிரபுரத்தவரைப் பார்த்தான்''*** *(2661)* என்று முன் பாட்டிற் கூறிய பார்வையின் உட்குறிப்பு.

தென்னவன் - அம்மையார் - அமைச்சனார் - பிள்ளையார் சார்பு பற்றிக் கூறுமிடங்களில் **தென்னவன்** *(2604 - 2652 - 2656)*, **செழியன்** *(2502-2631)*, **கொற்றவன்** *(2593)*, **மீனவன்** *(2619)* எனப் பெரும்பான்மை இக்கருத்துப்பட்ட பெயர்களாலும், அமணரது சார்பு பற்றிக் கூறும்போது **மன்னன்** *(2511 - 2534 - 2578 - 2579 - 2580 - 2585 - 2612 - 2620 - 2645)*, **கைதவன்** *(2647)* என்ற கருத்துப் பட்ட பெயராலும் கூறும் குறிப்புக் காண்க; அமணர் அரசனைப் பெரும்பான்மை **மன்னன்** என்ற ஒரே நிலைபற்றி உட்கொண்டு வசமாக்கி அவனுடைய அரசாணையைத் தம்வயமாகப் பயன்படுத்திச் சீவித்து வந்தனராதலின் அக்கருத்தே அவர்க்கு முன்னின்றது. அம்மையார், அமைச்சர், பிள்ளையார் இவர்க்கு அவ்வாறன்றி அவனுடைய நலங்களும் பிறநற்பண்புகளும் ஓங்க எண்ணிய கருத்து முற்பட நின்றது. இவர்கள் சார்பில் ''மன்புரக்கும் மெய்முறை'' *(2601)*, மன்னவனிடும்பை தீர'' *(2623)*, ''மன்னவன் முன் வென்றருளி'' *(2631)* என்று வருமிடங்களில் அவனது அரசாணை நிலை வழுவாமற் காக்கும் கருத்து முன் நிற்பதும் காண்க.

''அன்னவன்... தீர்ப்பது'' என்று - இது பதிகக் கருத்து. **ஆலவாய் அண்ணல் நீறே** - ''ஆலவாயான் றிருநீறே'' என்ற பதிக மகுடம் காண்க; ஏகாரம் தேற்றம்; பிரிநிலையுமாம்.

மன்னும் மந்திரமும் ஆகி - மன்னுதல் - அழிவுறாது - நிலை திரியாது - பொருந்துதல்; ''**மந்திர** மாவது நீறு'' என்ற பதிகத் தொடக்கம் அதன் கருத்தையும் உட்கோளையும் குறித்தது; நோய் தீர்த்தல் வழியாகத் தெய்வ உண்மை நிலை நாட்டுக *(2657)* என்று மன்னன் சொல்ல, அவ்வாதத்தினை ஏற்றுக்கொண்டு அமணர் ''மந்திரித்துத் தெய்வ முயற்சியால்'' என முந்திக்

2663. திருவளா் நீறு கொண்டு திருக்கையாற் றடவத் தென்னன்
பொருவரு **வெப்பு நீங்கிப் பொய்கையிற் குளிர்ந்த தப்பால்;**
மருவிய விடப்பான் மிக்க வழலெழ, மண்டு தீப்போல்
இருபுடை வெப்புங் கூடி யிடங்கொளா தென்னப் பொங்க, 765

கொண்டாரதலின், அவ்வாறே பிள்ளையாரும் ''மந்திர மாவது நீறு'' என மந்திரத்தை வைத்துத் தொடங்கினுர். அவ்வாறு தொடங்கினும் நோய் வினைகளின் தீர்வு மணி, மந்திரம், மருந்து என மூவகைப் படுதலின் அம் மூன்றும் கொண்டது இத்திருநீறு என்பது கருத்தென்று விளக்குவார் **ஆலவாய் அண்ணல்** நீறு என்று மணியினையும், **மருந்துமாய்** என்று மருந்தினையும் உடன் சேர்த்துக் கூறியருளினுர்.

அன்னவன் வலப்பால் வெப்பை அண்ணல் நீறே தீர்ப்பது - என்று கூட்டுக. இப்பதிகம்அரசனது உடலில் உற்ற வெப்பினைத் திருநீறு கருவியாக மந்திரித்துத் தீர்த்தலை உட்கொண்ட தென்பது ''தேற்றித் தென்னனுட லுற்ற தீப்பிணியாயின தீரச், சாற்றிய பாடல்கள் பத்தும்'' என்ற பதிகத் திருக்கடைக்காப்பின் அகச்சான்றினுலு மறியப்படும்; **''அண்ணல் நீரே - தீர்ப்பீர் என்று''** என்ற பாடமுமுண்டு; அது பிழையென் றொதுக்குக; புத்தரொ டமணை வாதி லழிவிக்கு மண்ணல் திருநீறு செம்மை திடமே'' என்று திருமறைக் காட்டில் அரசுகள் கேட்கப் பிள்ளையார் அருளிய ''வேயுறு தோளி''ப் பதிகத்தினுள் **திருநீற்றினையே இவ்வாதினில் வெற்றி தரும் பொருளாக முடித்து அருளியதை நினைவு கூர்க.**

பன்னிய மறைகள் ஏத்திப் பகர் - வேத சிரசாகிய உபநிடதங்களின் கருத்துக்களால் திருநீற்றினைப் போற்றியருளிய என்பது ''வேதத்திலுள்ளது நீறு'' என்பது முதலிய பதிகப் பகுதிகளால் விளங்கும்; பஸ்மஜாபாலம் முதலிய உபநிடதங்கள் திருநீற்றைப் பஸ்மம் - ரட்சை முதலாகிய வசனங்களாற் போற்றுதல் காண்க.

பதிகம் பாடித் - தடவ - என்று வரும்பாட்டுடன் முடிக்க; **பதிகம்பாடி** - பதிகத்து முதல் ஆறு திருப்பாட்டுக்களைப் பாடி என்பது கருதப்படும்; இவை வலப்பால் வெப்பைத் தீர்க்கவும், பதிகத்து ஏனைய *(7-11)* ஐந்து பாட்டுக்கள் பின்னர் இடப்பால் வெப்பைத் தீர்க்கவும் அருளப் பெற்றன என்பது, முதலாறு பாட்டுக்களில் திருவாலவாயான் றிருநீறே'' என்று போற்றி அதற்கேற்றவாறு தகர இகர மோனையும், மேல் ஐந்து பாட்டுக்களில் ''ஆலவாயான் றிருநீறு'' என்று போற்றி அதற்கேற்றவாறு அகரமோனையும் வர அமைத்தருளி இப்பதிகம் இரு கூருக நிற்கும் அமைதிகொண்டும் கருதப்படும்; இருபாகத்துக்கும் பதிகமொன்றேயாதலும், இடப் பாகத்துக்கும் ''நீறு காட்டிப் பெருமறை துதிக்குமாற்ருல் போற்றி'' *(2668)* என்பதும், சரித நிகழ்ச்சியும் ஈண்டுக் கருதத் தக்கன. 764

2663. **(இ-ள்)** திருவளர்... தடவ - திருவளரும் திருநீற்றினைக் கொண்டு பிள்ளையார் தமது திருக்கையினுலே அரசனது உடலில் தடவியிட; தென்னன்... அப்பால் - பாண்டியன் ஒப்பில்லாத வெப்பு நோயினின்றும் நீங்கியதனுல் அவ் வலப்பக்கம் தண்ணீர்ப் பொய்கைபோலக் குளிர்ந்தது; மருவிய... அழலெழ - பொருந்திய இடது பக்கம் மேலும் மிகுந்த அழலின்தன்மை எழுந்ததனுல்; மண்டு...பொங்க - செறிந்த தீயினைப்போல இருபக்கத்து வெப்பும் சேர்ந்து இடம்கொள்ள மாட்டாதென்று பொங்கவே,

(வி-ரை) திருவளர் நீறுகொண்டு திருக்கையால் தடவ - திருவளர் - திருவை வளர்க்கின்ற; **திரு -** சைவ மெய்த் திரு; திருவாகிய என்றலுமாம்; ஞானத் **திரு -** அருளாகிய திரு என்க; நீறு பராசத்தியின் உருவெனப் படுமாதலின்; "பராவணமாவது நீறு" (8) **என்றதும்,** "நீற்றுப் பதிகம் நிகழ்த்துங் காலை, மாற்றுப் பறையின் வாளா இருந்தார்" என்றதும் கருதுக. **கொண்டு -** மூன்றுவதன் சொல்லுருபு; **திருக்கையால் தடவ -** அமணர்கள் பீலி கொண்டு தடவியது போலன்றிப், பிள்ளையார் தமது திருக்கை அரசனது உடலிற் பொருந்தத் தீண்டித் தடவினர்; இது ஞான ஆசாரியனது பரிச தீக்கைப் பேற்றை அருளியபடியாகும்.

பொருவரு வெப்பு - அரசனது தீவினை காரணமாக அமணர் செயல் பற்றுக் கோடாகக் கொண்டு பிள்ளையாரது ஆணையின் வழியே போந்து தீயின் உருவை மாறி வெப்பாக **வந்து** பற்றியதாகலின் ஒப்பற்ற தென்றார்.

நீங்கிக் குளிர்ந்தது - நீங்கி - நீங்கினமையால்; **அப்பால் -** அந்தப் பக்கம்; **பால் -** பகுதி - பக்கம்.

பொய்கையின் - இன் - ஒப்புப் பொருளில் வந்த ஐந்தனுருபு; **பொய்கை -** தண்ணிய நீர்நிலை; "மூசு வண்டறை பொய்கையும் போன்றதே" என இக்கருத்தே கொண்டு நீற்றறை குளிர்ந்த நிலையினை அரசுகள் அருளியது காண்க.

மருவிய இடப்பால் மிக்க அழல் எழ - மருவிய - முன்னரே வெப்புப் பொருந்திய என்க; அப்பக்கம் அதன் மேலும் மிக்க வெப்பு எழுந்தமையால் என்பதாம்; **மருவிய** முன் அமணரது தீர்வுச் செயல் பொருந்திய என்ற குறிப்புமாம்; அவர்கள் அப்பக்கத்தில் முன் உள்ள வெப்பினைத் தீர்க்கமாட்டாமையே யன்றி, வலப்பால் வெப்பும் ஆங்குக் கூடி மிகுவதனைக் காக்கமாட்டாமையுமாகிய இருவகைத் தோல்வியும் பெற்றனர் என்பது குறிப்பு.

இருபுடை வெப்பும் கூடி இடங்கொளா தென்ன - இருபுடை வெப்பும் - முன் இடப் பக்கத்தில் இருந்த வெப்புடன் வலப்பக்கத்து வெப்பும்; **கூடி -** கூடியதனால். **இடம் கொளாது என -** இருபுடை வெப்பும் ஒரு பக்கத்தில் இருக்க இடமின்மை என்னும்படி; **இடம் -** இடத்தில் - என்று இரட்டுற மொழிதலுமாம்; **புடை -** பக்கம்.

பொங்குதல் - மேலும் அதிகரித்தல். பிள்ளையார் திருநீறு கொண்டு தடவும் பதிகப் பாட்டுத்தோறும் வலப்பாகத்தின் வெப்புப் படிப்படியாய் வந்து அளவு அதிகமாதல்.
765

2664. **(இ-ள்)** உறியுடை.... எய்தி - உறிதூக்கிய கையினை யுடையார்களும் பாயினை உடையாக வுடையார்களும் ஆகிய அமணர்கள் நடுக்கமடைந்து; செறி... தீய - செறிந்த மயிற்பீலிக்கற்றை தீந்துபோக; தென்னன்... கன்றி- அரசனது வெப்பு நோயின் சூடு தம்மைத் தாக்குதலாலே மாசுகொண்ட உடலும் மேலும் கருகி வெதும்பியவர்களாய்; அருகுவிட்டு ஏற நிற்பார் - அரசனது அருகினின்றும் அகன்று தூரச்சென்று நிற்பவர்களாகிய அவ்வமணர்; அறிவுடையாரை... நின்றார் - அறிவில்லாத நெறியின் நின்றவராயினும் அறிவுடையார்களைப் போன்றனர்.

இம் மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

2664. உறியுடைக் கையர் பாயி னுடுக்கையர் நடுக்க மெய்திச்
செறிமயிற் **பீலி தீயத்,** தென்னன்வெப் புறுதீத் தம்மை
யெறியமா **சுடலுங் கன்றி,** யருகுவிட் **டேற நிற்பார்**
அறிவுடைய யாரை யொத்தா ரறிவிலா நெறியி னின்ருர். 766

(வி-ரை) உறியுடைக்கையர் - உறி தூக்கிய கையினை யுடையவர்; கையில் சிறிய உறியில் குண்டிகை நீரைத் தூக்கி வருதல் அமணகுருமார் வழக்கு; **பாயுடுத்**தலும் அவ்வாறே அவர் வழக்குக்களுள் ஒன்று; **உடுக்கை** - உடை; **பாயின் உடுக்கை** - பாயாகிய உடை. **உடைக்கையர் - உடுக்கையர்** என் இருமுறையும் **கையர்** என்ற குறிப்பும்படக் கூறியது முன்பாட்டிற் கூறிய இருவகைத் தோல்வி குறித்தது; **கையர்** - கீழ் மக்கள் என்ற குறிப்பும்பட நின்றது; இவர்கள் இடப்பாகத்தில் நின்றவர்கள்.

மயிற் பீலி தீய - தம் கையில் கொண்டு அரசனுடலைத் தடவி நின்ற மயிற் பீலிக் கற்றை; **தீய** - கருக; வெப்பு மிகுதியின் சூடு தாங்கலாற்ருது மயிற் பீலி தீந்துபோக என்க.

தென்னன் வெப்புறு தீ - இவ்வொன்றே மயிற்பீலி தீவதற்கும், தம்மை எறிவதற்கும் காரணமாதலின் முன்னும் பின்னும் கூட்டி உரைக்கும்படி இடையில் வைக்கப்பட்டது.

எறிய மாசுடலும் கன்றி - எறிய - எறிதலால்; **கன்றுதல்** - கருகுதல் - வெதும்புதல்; **மாசுடலும் கன்றி** - இயற்கைக் கருமையுடன் செறிந்த செயற்கை மாசும் கூடிக் கருகிய உடல், வெப்புத் தீயினுல் மேலும் கருகிற்று என்க. **கன்றி** - கன்றுதலால்; **நடுக்கமெய்தி** - ''கண் திகைப்பிப்பது நீறு'' என்ற பதிகம் காண்க.

அருகு விட்டு ஏற நிற்பார் - அருகு - மந்திரித்து நோய் தீர்க்க அணுகச் சென்ற அணியதாகிய இடம்; **ஏற** அகல; தூரத்தே - சேய்மையில்.

நிற்பார் - நின்ருர் - ஒத்தார் - என்று கூட்டி முடிக்க.

அறிவுடையாரை ஒத்தார் - அறிவுடையாரல்லா ராயினும் அறிவுடையார் போன்றனர் என்பது; அறிவுடைமை போல்வதாவது அறிவுடையோர் போன்று செயல் செய்தல்; ஈண்டு மன்னவனை அணுகி அருகு நிற்றலை விட்டுச் சிறிது அகன்று நிற்றல்; ''அகலா தணுகாது தீக்காய்வார் போல்க, விகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்'' (குறள்) என்றபடி மிக நீங்குவதும் மிகச் செறிவதும் செய்யாது தீக்காய்வார் போல மன்னர்ச் சேர்ந்தொழுகுதல் அறிவுடையார் செயல்; அதுபோல இங்கு அமணர் மிக அருகில் நிற்பதை விட்டு மிக அகலாமல் சற்றுத் தூரத்தில் நின்ருராதலின் அறிவுடையாரை ஒத்தனர்; ''புததிதா னுடையை போல விருந்தனை'' (சித்தி-1-42)

அறிவிலா- நின்ருர் - ஆனுல் அச்செயலாற் பயன் கொள்ளமாட்டா தழிந்தனராதலின் **அறிவிலா நெறியில் நின்ருர்** என்ருர். **அறிவிலா நெறி** - அமண நெறி.

இங்கு இவ்வாறன்றி, இந்நோய் எம்மால் தீர்த்தற்கு அரிதென விவேகம் வந்து அகன்ற அறிவுடையோர் போல என்றுரைப்பர் ஆறுமுகத் தம்பிரானுர். நெருப்புச் சுடுமென்பதை யறிந்து விலகிக் கொண்டமையால் அறிவுடையாரை நிகர்த்தனர் என்பது இராமநாதச் செட்டியார் உரைக் குறிப்பு. பிள்ளையார் பெரியார்; அவரே தீர்க்கட்டும் என்று ஒதுங்கி நிற்பது

2665. பலர்தொழும் புகலி மன்ன ரொருபுடை வெப்பைப் பாற்ற
மலர்தலை யுலகின் மிக்கார் வந்ததி சயித்துச் சூழ
இலகுவேற் றென்னன் **மேனி வலமிட மெய்தி** நீடும்
உலகினிற் **றண்மை வெம்மை யொதுங்கினு லொத்த** தன்றே. 767

2666. மன்னவன் மொழிவா "னென்னே! **மதித்தவிக் கால மொன்றில்
வெந்நர கொருபா** லாகும்; **வீட்டின்ப மொருபா** லாகும்;
துன்னுநஞ் சொருபா லாகுஞ்; சுவையமு **தொருபா** லாகும்;
என்வடி **வொன்றி லுற்றே னிருதிறத் தியல்பு**" மென்பான். 768

அறிவுடைமையாதலின் அவ்வாறு செய்வார் போல; "கல்லா தவரு நனிநல்லர் கற்றார்முற், சொல்லாதிருக்கப் பெறின்" (குறள்) என்றதற்கேற்ப ஒதுங்கி வற நின்றனர் என்பது சதாசிவ செட்டியார் குறிப்பு.

அறிவிலா நெறியில் நின்றமையாவது அறியமாட்டாது தமது புரை நெறியினையே **பற்றிப்** பின்னரும் மூண்டு நின்ற தன்மை. **766**

2665. **(இ-ள்)** பலர்தொழும்... பாற்ற - பலராலும் தொழப்படும் சீகாழித் தலைவராகிய பிள்ளையார் அரசனது ஒரு பக்கத்து (வலப்பக்கத்து) வெப்பினைப் போக்க; மலர்தலை... சூழ-மலர்தலையுடைய உலகின் அறிவினுன் மிக்கோர்கள் அதிசயித்து வந்து சூழ; இலகு... எய்தி - விளங்கும் வேலேந்திய பாண்டியனது உடல் வலத்தின் வெப்பும் இடத்திற் பொருந்தியமையால்; நீடும்... அன்றே - நீண்ட உலகில் தட்பமும் வெப்பமும் ஒன்றுபட ஒதுங்கினுற்போல அப்பொழுது இருந்தது.

(வி-ரை) பலர் தொழும் - "பலர் புகழ் ஞாயிறு" (முருகு); **பாற்ற** - அழிக்க; **எய்தி** - எய்தியமையால்; வலம் - வலத்தின் வெப்பம்.

வலமிடம் - தண்மை வெம்மை ஒதுங்கினுல் ஒத்து - வலமும் இடமுமாகத் தண்மையும் வெப்பமும் வந்து முறையே ஒதுங்கியது போல.

மிக்கார் - அறிவின் மிக்கார் என வருவித்துரைக்க. 767

2666. **(இ-ள்)** மன்னவன் மொழிவான் - அரசன் சொல்வானுகி; "என்னே... காலமொன்றில் - என்ன அதிசயம்! குறிக்கொண்ட இவ்வொரே காலத்தில்; வெந்நரகு... ஆகும் - கொடிய நரகம் ஒரு பக்கத்தில் உளதாகும் - முத்தியின்பம் மற்றொரு பக்கத்தில் உளதாகும்; துன்னும்... அமுது ஒருபாலாகும் - மிக்க விடத்தின் நுகர்ச்சி ஒரு பக்கத்தில் உளது ஆகும் - சுவையமுதின் நுகர்ச்சி மற்ற ஒரு பக்கத்தில் உளதாகும்; என் வடிவு... என்பான் - என் உடல் ஒன்றனிடமாகவே இவ்வாறு மாறுபட்ட இருவேறு தன்மைகளினியல்பையும் அடையப் பெற்றேன் என்பானுகி;

(வி-ரை) மதித்த இக்காலம் ஒன்றில் - அனுபவமாகத் தெரிந்த இந்த ஒரே காலத்தில்; **ஒன்றிலே** - ஒன்றன் கண்ணேயே; தேற்றேகாரம்தொக்கது; இதனுல் அனுபவத்தின் காலம்

2667. ''வெந்தொழி லருகர்! தோற்றீ; ரென்னைவிட் டகல நீங்கும்;
வந்தெனை யுய்யக் கொண்ட மறைக்குல வள்ள லாரே!
இந்தவெப் படைய நீங்க வெனக்கருள் புரிவீ'' ரென்று
சிந்தையாற் றொழுது சொன்னான் செல்கதிக் கணிய னானன். 769

கூறப்பட்டது. **இன்பவீடு** என்க. ''பரனை நினைந் திம்மூன்றும் விட்டதே பேரின்ப வீடு.'' இதனால் அனுபவிக்கும் நிலை குறிக்கப்பட்டது.

துன்னும்...அமுது ஒருபால் ஆகும் - துன்னும் நஞ்சு - கொடுமை எல்லாம் கூடிச் செறிந்த நஞ்சின் நுகர்ச்சி; **சுவை அமுது** - நற்சுவைகளெல்லாம் செறிந்த அமுதநுகர்ச்சி; **நஞ்சு - அமுதம்** - என்பன அவ்வந் நுகர்ச்சிகளுக்காகி வத்தன. இதனால் அனுபவத் துன்ப வின்பங்கள் குறிக்கப்பட்டன.

பால் ஆகும் - என்ற நான்கிடத்தும் ஏழனுருபுவிரிக்க; **ஆகும்** - உளது. ஆகின்றது - நிகழ்கின்றது.

என் வடிவு ஒன்றில் - வடிவு - உடல் என்ற பொருளில் வந்தது; **ஒன்றில்** - ஒன்றனிலேயே; தேற்றறேகாரம் தொக்கது. ஒரு பொருளே மாறுபட்ட வெவ்வேறு இரண்டு இயல்புகள் பொருந்துதல் கூடாது; ஆனால் என் வடிவு ஒன்றே இங்ஙனம் மாறுபட்ட வெவ்வேறாகிய இயல்புகளைப் பொருந்தப் பெற்றேன் என்பது; **ஒன்றினால் உற்றேன்** என்று மூன்றனுருபு விரித்து இவ்வோருடம்பானே வெவ்வேறுடம்புகளால் பொருந்துவனவற்றைப் பெற்றேன் என்றலுமாம்; **இருதிறம்** - இருவேறு திறம்.

என்பான் - முற்றெச்சம்; என்பானாகி; **என்பான் - சொன்னான்** என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. 768

2667. **(இ-ள்)** வெந்தொழில்... நீங்கும் - வெவ்விய தொழிலையுடைய அமணர்களே! நீங்கள் தோற்றுவிட்டீர்கள்; என்னை விட்டு அகல நீங்குங்கள்; வந்து எனை... புரிவீர் என்று - இங்கு வந்து என்னை உய்யும்படி ஆட்கொண்டருளிய மறைக்குலத்து வந்த வள்ளலாரே! இந்த வெப்பு நோய் முழுதும் நீங்கும்படி எனக்கு அருள் புரிவீராக என்று; சிந்தையால்... அணியனானன் - மனத்தினாலே வணங்கி இவ்வாறு சொன்னான் செல்லத்தக்க நற்கதிக்கு அணியவனாகிய பாண்டியன்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) வெந்தொழில் - மயக்கம் செய்ததும், தீத் தொழில் செய்ததும், வஞ்சத்திலும் பொய்ம்மையிலும் புகுத்த முயன்றதும் ஆகிய வெவ்விய தொழில்கள். வெந்தொழிலுக்கு அருகர் (அணிமையர்) என்றதும் குறிப்பு.

தோற்றீர் - முன் 2664 -ல் கூறியபடி; நீக்காமை - காவாமை என்ற இருவகையாலும் தோல்வியடைந்து விட்டீர்கள் என வாதத்தின் முடிவு கூறியபடி; வெற்றி தோல்விகளின் தன்மை முன் 2659-ல் வகுத்தவாறே தோல்வியினை அரசன் நிச்சயித்தான் என்க.

2668. திருமுகங் கருணை காட்டத் திருக்கையா னீறு காட்டிப்
பெருமறை துதிக்கு மாற்றாற் பிள்ளையார் போற்றிப் பின்னும்
ஒருமுறை தடவ வங்க ணொழிந்துவெப் பகன்று பாக
மருவுதீப் பிணியு நீங்கி **வழுதியு முழுது முய்ந்தான்.** 770

என்னை விட்டகல நீங்கும் - *தோல்வியுற்றார்க்கு அரசன் இங்கு விதித்த தண்டம்;அறிவு கொண்டு தேறி இவ்வரச நீதியினுள் அமைந்து நீங்கி பிழைப்பார்களாயின் அழிவுறாது உயர்ந்திருப்பர் அவ்வமணர்; அங்ஙனம் செய்யாது மேலும் மேலும் வாதங்களில் ஒட்டித் தமது அழிவினைத் தாமே தேடிக்கொள்வது கண்டு கொள்க.*

வந்து - உய்யக்கொண்ட - வந்து - *நான் விரும்பி வேண்டுவனவை மாத்திரையே* ***யன்றி*** *வெறுத்தகற்ற எண்ணிய போதும் அருள் கொண்டு இங்கு வந்தருளி;* ***உய்யக்கொண்ட*** *- கொடிய வினைப் பயனை ஊட்டி ஒறுத்துக் கழிப்பித்து உய்யும்படி செய்தருளி ஆளாகக் கொண்ட;* ***வள்ளலாரே - வள்ளன்மையாவது*** *ஈண்டு அருட் பெருக்கும் அருட் செயலின் அளவின்மையுமாம்.* ***அடைய*** *- முழுதும்; ''கோயிலடைய விளக்கேற்றி'' (1879); தேவரீரைத் தஞ்சமாக அடைந்ததனால் என்றலுமாம்.*

சிந்தையாற்றொழுது *- நோய் மிகுதியால் எழுந்தும் கைகூப்பியும் உடம்பால் தொழுதற்கு வலியின்மையால் மனத்தாற்றொழுதபடியே.*

செல்கதிக்கு அணியன் ஆனான் - செல்கதி *- செல்லத் தக்க கதி; சிவநெறிப் பேறு;* ***அணியன்*** *- சமீபத்தவன்; மேற்கூறியபடி சொன்னானதலால் அணியன் ஆனான் என்றும் உரைக்க நின்ற நயம் காண்க; கதிக்கு அணியனாயினமை, ''செய்தவப் பயன்வந் தெய்தும் செவ்விமுன் உறுத லாலே'' (2647) என முன்னரும் குறிப்பிட்டமை காண்க; ஆண்டு அச் செவ்வி - பருவம் - மட்டும் வந்தது. இங்கு அஃது ஓரளவில் கை கூடிற்று என்று குறிக்க* ***அணியன்*** *என்றார்; முழுதும் கதிகூடப் பெற்றமை மேற்பாட்டிற் கூறுதல் காண்க.* ***செல்கதி*** *- ''செல்கதிப்பயன் காண்பவர்போற் சிந்தை கூர்தர'' (2045).* 769

2668. **(இ-ள்)** திருமுகம்... காட்டி - திருமுகப் பொலிவு உள்ளே நிறைந்த கருணையினைப் புறத்துக் காட்டியிடத் திருக்கையினால் திரு நீற்றினைக் காட்டி; பெருமறை... போற்றி - பெரிய மறைகள் துதிக்கும் வகையாலே பிள்ளையார் துதித்து; பின்னும் ஒருமுறை தடவ - பின்னரும் ஒருமுறை பாண்டியனுடம்பில் தடவியருள; வெப்பு அங்கண் ஒழிந்து அகன்று - வெப்புநோய் அப்பொழுதே நீங்கி உடம்பைவிட்டு முழுதும் அகன்றதனால்; பாகம்... நீங்கி - இடப் பாகத்தில் முன் பொருந்திய தீப் பிணியும் நீங்கிப் பாண்டியனும் முழுவதும் உய்தியடைந்தான்.

(வி-ரை) திருமுகம் கருணை காட்ட *- அருள் புரிவீர் என்று சிந்தையாற் றொழுது சொன்ன அரசனுக்கு அவன் வேண்டியவாறே தாம் ஈந்து அருளும் நிலையை மேற்கொண்ட திருவுள்ளக் கருணையைத் திருமுகப்பொலிவினாற் காட்டினார்.*

திருக்கையால் நீறு காட்டி *- முகம் கருணை காட்டிற்று.* ***கை*** *அக் கருணை - அருள் - வடிவான திருநீற்றினைக் காட்டிற்று என்ற குறிப்புக் காண்க.* ***அருள்வடிவு*** *- சிவ சத்தி; நீறு*

சிவசத்தியின் வடிவம்; **நீறு காட்டித் - தடவ** - என்று கூட்டுக. நீறுகொண்டு தடவ என்பது கருத்து; 2663 பார்க்க.

பெருமறை...போற்றி - "பன்னிய மறைகளேத்திப் பகர்திருப் பதிகம் பாடி" (2662) என்று வலப்பக்கத்து நோய் தீர்க்கப் பாடியவாறே அத்திருப்பதிகத்தை அக்கருத்துடன் திருநீற்றைப் போற்றிப் பாடி நிறைவாக்கி என்பதாம்.

பின்னும் ஒருமுறை தடவ - பின்னும் - முன்னர் வலப்பக்கத்தின் நோய் தீர்க்க ஒருமுறை தடவியதன்றிப் பின்னும் என்க; **தடவுதல்** - தீண்டிப் பூசுதல்; **கருணை காட்டுதல்** - பாவனையும், **போற்றுதல்** - மந்திரமும், **தடவுதல்** - கிரியையும் என மூன்றும் கண்டுகொள்க.

வெப்பு அங்கண் ஒழிந்து அகன்று - என்க; **அங்கண்** - இடமும் காலமும் குறித்தது; அங்கணின்றும் ஒழிந்து; **ஒழிந்து** - நீறு தடவிய இடப்பக்கத்தினின்றும் நீங்குதற்கும், **அகன்று** - உடம்பில் எங்குநில்லாது அடைய அகலுதலுக்கும் வந்தனவாதலின் கூறியது கூறலன்மையறிக; **அடைய நீங்க** என்று அரசன் முன் வேண்டியதனை (2667) வேண்டியவாறே அருளிய வகை காட்டியபடி.

பாகம் மருவு தீப்பிணியும் - வலப்பக்கத்து நின்றும் இடப்பாகத்தில் வந்து கூடியமிக்க வெப்பேயன்றி, முன்னர்ப்பொருந்தி அமணராற் றீர்க்கப்படாது நின்ற பிணியும் என உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை; இனிப் **பாகம்** - மலபரிபாகம் - நீங்கும் பக்குவம் - என்று கொண்டு, மலபரிபாகமும் இருவினை ஒப்பும் வரப்பெற்று, வல்வினையும் மூலமலமும் உடைய கொடிய பிறவிப் பிணியும் நீங்கி என்று உரைக்கும் குறிப்பும் காண்க. பின்னர்ச் "சிரபுரத் தலைவர் தீண்டிப், பொன்னவில் கொன்றை யார்தந் திருநீறு பூசப் பெற்று, முன்னைவல் வினையு நீங்கி முதல்வனையறியுந் தன்மை, துன்னினுன் வினைக ளொத்துத் துலையென நிற்ற லாலே" (2717) என்பதும், முன்னர்த், "தீயவிப் பிணியே யன்றிப் பிறவியுந் தீரு மென்றார்" (2618) என்றதும் ஈண்டுக் கருதத்தக்கன.

வழுதியும் முழுதும் உய்ந்தான் - வழுதி - முன்னர் வழுவிற்பட்டவன் என்ற குறிப்புப்பட இப்பெயராற் கூறிய நயம் காண்க. **முழுதும்** - நோயும் அதன் மூலமும் ஆகிய முழுவதும்; மூலநோயாகிய பிறவிப் பிணியும் என்றதும் குறிப்பு. "பிறவா மேன்மையுற்றனன்" (2669) என மேற்கூறுதற் காண்க.

அகன்று நீங்கி—அகன்றுபோக—என்பனவும் பாடங்கள். 770

VII திருவாலவாய்

திருச்சிற்றம்பலம் திருநீற்றுப்பதிகம் - பண் - காந்தாரம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் **திரு வாலவா யான்றிரு நீறே**. (1)

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு வுண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திரு வாலவா யான்றிரு நீறே. (2)

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு.
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திரு வாலவா யான்றிரு நீறே. (3)

காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திரு வாலவா யான்றிரு நீறே. (4)

பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு வந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவாலவா யான்றிரு நீறே. (5)

அருத்தம தாவது நீறு வவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திரு வாலவா யான்றிரு நீறே. (6)

எயிலது வட்டது நீறு விருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு.
அயிலைப் பொலிதரு சூலத் **தாலவா** யான்றிரு நீறே. (7)

இராவணன் மேலது நீறு வெண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி யாலவா யான்றிரு நீறே. (8)

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்க டங்கண் மெய்யது வெண்பொடி நீறு
ஏல வுடம்பிடர் தீர்க்கும் மின்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் மாலவா யான்றிரு நீறே. (9)

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத வினியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளா ரேத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்து மாலவா யான்றிரு நீறே. (10)

ஆற்ற லடல்விடை யேறு **மாலவா யான்றிரு நீற்றைப்**
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்னனுட லுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—*திருஆலவாயான்றிரு நீறே மந்திரமும் மருந்துமாகித் தென்னவனது தீப்பிணியாயின தீர்க்கும்: அது வேதங்களாற் போற்றப்பட்டது; என்று தேற்றித் தென்னனுட லுற்ற தீப்பிணி யாயின தீரச் சாற்றப்பட்டது. 2662-ம், பதிகம் திருக்கடைக்காப்பும் பார்க்க.*

பதிகப் பாட்டுக் குறிப்பு:—*(1) திருநீறே மந்திரமாவதும் மற்றும் கூறும் தன்மைகளும் உளதாவதுமாம்;* ***தந்திரம்*** *- ''மந்திரமுந் தந்திரமு மருந்துமாகித் தீராநோய் தீர்த்தருள'' (தாண்); பிணி நீக்கும் மூவகைச் சாதனங்களுள் ஒன்று;* ***செந்துவர் வாயுமை பங்கன்*** *- இறைவர் மீனுட்சிசுந்தரராய் வீற்றிருக்கும் தன்மை;* ***மந்திரம்*** *- சீபஞ்சாக்கர முதலாகிய எல்லா மந்திரமும்;* ***நீறு*** *- நீற்றப்படுவதனுல் நீறு எனப்படும்.* ***மந்திரம்*** *- வேதம்;* ***தந்திரம்****- சிவாகமங்கள் என்று கொண்டு இவற்றுள் விதித்தன வெல்லாம் என்றுரைத்தலுமாம்;—(2)* ***போதம்*** *- சிவஞானம் (2742);* ***வேதத்திலுள்ளது நீறு*** *- சிவபெருமானுக்குப் போலவே திருநீற்றுக்கும் வேதங்களுள் நமஸ்காரம் சொல்லப்பட்டுள்ளது; பஸ்மஜாபாலம், காலாக்கினி ருத்திரம் முதலிய உபநிடதங்கள் திருநீற்றைப்பற்றிப் பேசுவன. ''விபூதி யில்லாத நெற்றியைக் கொளுத்துக'' என்பது முதலாகிய வசனங்களால் வேதங்களும், ''திருவெண்ணீறணியாத திருவிலூரும்... அவையெல்லா மூரல்ல வடவி காடே'' (அரசுகள்-தாண்) என்பனவாதி வசனங்களால் தமிழ் வேதங்களும் போற்றும்;* ***வெந்துயர்*** *- கொடியதாகிய பிறவித் துன்பம்; சிறப்பும்மை விரிக்க; அதனை யுள்ளிட்ட எல்லாத் துன்பங்களும் என்க;* ***புன்மை*** *- உடற்புன்மையும் உயிர்ப்புன்மையாகிய ஆணவமலமும்; திருநீறு அணிதல் - தீயிற் குளித்தல் (ஆக்னேயஸ்நானம்) என்பர்; உயிர்களின் மலங்கழுவுதலால் இது* ***க்ஷாரம்*** *எனப் பெயர் பெறும்;* ***உண்மை*** *- உண்மை நூல்கள்;—(3)* ***முனிவர்*** *- இறைவரை இடையருது நினைப்பிற் கொள்வோர்;* ***சத்தியம்*** *- சத்து எனப்படும் அழிவில்லாத பொருள்; திருநீற்றினை மேல் எவ்விதமாகவும் அழிக்கலாற்ருமை காண்க;* ***சித்தி*** *- அணிமா முதலிய எட்டுச் சித்திகள் - 1711 உரை பார்க்க;—(4)* ***கவின்*** *- அழகு; முன்* ***சுந்தரமாவது*** *என்றது தனது அழகும், இங்குக்* ***கவினைத்தருவது*** *தான் சார்ந்தபொருளை அழகு செய்வதும் ஆம்;* ***மாணம்*** *- மாண்பு;* ***தகைவது*** *- தகைவு - அது;* ***தகை*** *- மேம்பாடு;* ***தகைவது*** *- நீங்காமற் கட்டுவது என்றலுமாம்;* ***மதி*** *- உலக அறிவு;* ***சேணம்*** *-* ***சேண்*** *- மேலுலகம்,* ***அம்*** *- அழகிய இன்பம்;—(5)* ***பெருந் தவத்தோர்*** *- முத்தியை விரும்பும் தவசிகள்;* ***ஆசை கெடுப்பது*** *- பற்றறுத்தலாகிய முத்தி சாதனம்;* ***அந்தம்*** *- இறுதி; எல்லாப் பொருள்களும் இறுதியில் நீருய் முடிவதனுல் அந்தம் என்ருர்;* ***தேசம்*** *- உலகோர்;உயர்ந்தோர்; ஆகுபெயர்;—(6)* ***அருத்தம்*** *- செல்வம்;* ***அவலம்*** *- துன்பம்;* ***பொருத்தம்*** *- நன்மைகள் எல்லாம் பொருந்துமிடம்; சாதனம்,* ***புண்ணியம்*** *- சிவபுண்ணியம்;* ***புண்ணியர்*** *- சிவபுண்ணிய முடையவர்; சிவபெருமான் என்றலுமாம், ''புண்ணியா வுன்னடிக்கே போதுகின்றேன்'' (தாண்);—(7)* ***எயில்*** *- மதில்; இங்கு மும்மதில்களையுடைய முப்புரம் குறித்தது;* ***அட்டது*** *- சுட்டது;* ***இருமை*** *- இம்மையும் மறுமையும் வரும் இன்பம்;*

துயில் - தூக்கம்; இறப்பு என்றலுமாம்; துயில் மறந்த நிலையாதலின், அதனைத் தடுப்பது சிவனை மறக்காமற் செய்வது என்பதாம்; **அயில்** - கூர்மை; ஐ - சாரியை;—**(8) இராவணன் மேலது** - இராவணன் சிறந்த சிவனடியானாதலால் அவன் பூசும் நீற்றினைப் பற்றிக் கூறினார். **பராவணம்** - பரை - சிவசத்தியின் வண்ணம் - திருநீறு சிவசத்தியின் வடிவம் என்பது நூற்றுணிபு; **பரா** - பராசத்தி - வடமொழி ஆகார ஈறு; ஸ்திரீலிங்கமாகிய ஆகார ஈற்றுப் பெண்பாற் சொல். தமிழில் பரை என வரும். "நீற்றுப் பதிக நிகழ்ந்துங் காலை, மாற்றுப் பரையின் வரலாறாகும்" (பாயிரம்)— **(9) மாலொடு அயன்** - சிறப்புப் பற்றி **ஒடு** உருபை மாலுடன் சேர்த்தினார்; திருநீறு இறைவரது வடிவாதலின் அரியயனால் அறியப்படாதென்றார்; **உடம்பிடர்** - உடம்பின் கண் வரும் இடர் என்றும், உடம்பாகிய (பிறவி) இடர் **என்றும்** உரைக்க நின்றது; **ஆல்** - விடம்; **ஆல்அமுது உண்ட** - ஆலத்தை அமுதாக உண்ட **என்க.** "ஆலத்தினாலமிர் தாக்கிய கோன்" (திருக்கோவை); "ஆலமே யமுத மாகவுண்டு" (2638)— **(10) குண்டிகைக் கையர்** - மந்திரித்த நீர்நிறைத்த சிறு கரகத்தை உறியில் தூக்கிக் கையில் ஏந்திச்செல்லும் சமணகுருமார் வழக்குக் குறித்தது; **கண் திகைப்பிப்பது** - காணமாட்டாது கண் திகைக்கும்படி செய்வது;திருநீற்றின் வலிமையினால் வலப்பாகத்து வெப்பு நீங்கியதும் இடப்பாகத்து வெப்பு நீங்கி வருவதும் கண்ட அமணர் நடுங்கிக் கண் திகைத்த வரலாறும் குறிப்பு; "உறியுடைக் கையர் பாயி னுடுக்கையர் நடுக்க மெய்தி"(2664); சரித அகச்சான்று; **எண்திசைப்பட்ட பொருளார்** - எட்டுத்திக்குக் காவலர்; இவர்கள் இந்திரன், தீக்கடவுள் முதலியோர்; **பொருளார்** - தலைவர்; **பொருள்** - தலைமை; **அண்டத்தவர்** - எல்லாப் புவனங்களிலும் உள்ள எல்லா வுயிர்களும். **அண்டம்** - புவனம்;—**(11) ஆற்றல்** - வல்லமை; **அடல்** - வெற்றி; "அரண் முரணேறு" (தேவா) அடைந்தாரைக் காக்கும் ஆற்றலும் அடையலரை அடும் வெற்றியும் என்க; **ஆலவாயான் திருநீற்றைப் போற்றி** - "ஆலவாயான் திருநீறே" என்று பாசுரம்தோறும் துதித்தமை காண்க; துதிக்கப் பட்டது திருநீறேயாயினும் அதுதனித்துப் போற்றப்படாமல், அதனையுடைய ஆலவாயானுடன் சேர்த்துப் போற்றப்பட்டதனால் அவனையும் போற்றியதாயிற்று; "நீறே தீர்ப்ப தென்று மறைக ளேத்திப் பகர்" (2662) "பெருமறை துதிக்கு மாற்றாற் பிள்ளையார் போற்றி" (2668) என்றும் சரிதவரலாறு பற்றி இருமுறை இதனை விளக்குதல் காண்க; **தேற்றி** - பெருமையை உலகறியச் செய்தல்; அம்மையாரையும் அமைச்சரையும் முன்னர்(2629) **தேற்றி**யவாறே என்ற குறிப்புமாம்; "நீங்கள் **தேறிய தெய்வத் தன்மை** யென்னிடைத் தெரிப்பீர் என்ற" (2657) அரசனையும் அவ்வாறே நோய் நீக்கிய வகையால் சிவபெருமானது திருநீறே பொருளாவது எனத் தெரிவித்து - தேற்றி - என்றலும் குறிப்பு; **தீப்பிணி** - தீயபிணி; தீயினால் விளைந்த பிணி என்ற சரிதக் குறிப்புமாம்; **பிணியாயின** - வலமிடமாகிய இருபக்கத்துப் பிணியும் தீர இவ்வொரு பதிகம் இருபகுதியாக அருளப்பட்டமையின் **பிணி ஆயின** என்று பன்மையாற் கூறினார்; **தீயும் பிணியும்** என்று உம்மைத் தொகையாக் கொண்டு, "வெந்தழல் வெம்மைபோய்ப் பெருந்தழற் பொதிவெதுப்பெனப் பெயர்பெற்ற"தாகிய அமணரிட்ட தீயின் விளைவும், அதன் மூலமாகிய மயக்கம்தரும் ஆணவமாகிய மூலநோய்ப் பிணியும் தீர என்றலுமாம்; "பிணியே யன்றிப் பிறவியும் தீரும்" (2618) "மயக்கம்" (2657) என்றவை காண்க. **பிணியாயின தீரச் சாற்றிய பாடல்கள்** - இப்பதிகம் பாண்டியன் சுரந்தீர்க்கப்பாடிய தென்ற வரலாற்றுக்குச் சிறந்த அகச்சான்று; **உடல் உற்ற** - பிள்ளையாரது ஆணையால் வந்துற்ற என்ற குறிப்பும் காண்க.

2669. கொற்றவன் றேவி யாருங் குலச்சிறை யாருந் **தீங்கு**
செற்றவர் செய்ய பாத தாமரை சென்னி சேர்த்துப்
''பெற்றனம் பெருமை; யின்று பிறந்தனம்; பிறவா மேன்மை
யுற்றனன் மன்ன'' னென்றே யுளங்களித் துவகை மிக்கார். 771

''மருவு தீப்பிணியும் நீங்கி வழுதியு முழுது முய்ந்தான்'' (2664); பதிகத்துள் ''மந்திரமாவது''(1) ''வெந்துயர் தீர்ப்பது'' (2), ''அவலமறுப்பது'' - ''வருத்தந் தணிப்பது'' (6); ''ஏலவுடம்பிடர் தீர்க்குமின் பந்தருவது நீறு'' (9) என்பன முதலியவையும் சரித வரலாற்றுக் குறிப்புப்பட நிற்பன காண்க; இப்பதிகப்பாட்டுக் குறிப்புக்கள் பல, க.சதாசிவச் செட்டியார் அவர்கள் உரைக் குறிப்புக்களைத் தழுவி எழுதப்பட்டன.

2669. **(இ-ள்)** கொற்றவன்...சேர்த்து - அரசனது மாதேவியாரும் குலச்சிறையாரும், தீங்கினை அழித்த பிள்ளையாருடைய சிவந்த திருவடித் தாமரைகளைத் தம் முடியிற்சேர்த்து வணங்கி; ''பெற்றனம்... மன்னன்'' என்றே - நாங்கள் பெருமை பெற்றோம்; இன்றை நாளே உறுதிபெறப் பிறந்தவர்களாயினோம்; அரசன் இனிப் பிறவியில்வாராத மேன்மையடைந்தனன் என்று கூறி; உளம்... மிக்கார் - உள்ளம் களிப்படைந்து மிகவும் மகிழ்ந்தனர்.

(வி-ரை) தீங்கு செற்றவர் - வெப்பு நோயாகிய தீங்கும், அதன் மூலமாகிய அமண் சார்வு என்னும் தீங்கும், அதன்மூலமாகிய அரசனது முன்செய் தீவினையாகிய தீங்கும், ஒருங்கே அழித்துப் போக்கியவர்.

பாத தாமரை சென்னி சேர்த்து - திருவடிமேல் முடிபொருந்த வீழ்ந்து வணங்கி.

பெருமை பெற்றனம் என்க; வினைமுற்று முன்வந்தது விரைவுக் குறிப்பு. **இன்று பெற்றனம் - இன்று பிறந்தனம்** என இன்று என்பதனை முன்னும் பின்னும் கூட்டி உரைக்க இடையில் வைத்தார்.

இன்று பிறத்தலாவது - பிறவிப்பயனை இன்றுதான் பெற்றோம் என்பது;''பேசாத நாளெல்லாம் பிறவா நாளே'' (தேவா) என்றபடி பிறவிப்பயனாகிய, அரசன் பணியும், அடியார் பணியும், அரன் பணியும் செய்ய இயலாமல் கழிந்த முன்னை வாழ்நாட்கள் பிறவா நாட்களாகிக் கழிந்தன என்பது கருத்து.

(யாங்கள்) பிறந்தனம் - மன்னன் பிறவா மேன்மை பெற்றனன் - என்ற கவி நயமும் காண்க. **பிறவா மேன்மை** - வீடுபேறு; **பிறந்தனம்** - ''நன்மையல்லாது செய்யும் ஊனம்வந்தடையின் யாமு முயிர்துறந் தொழிவ தென்றோர்'' (2594) என்றோராதலின் அவ்வாறேன்றும் வாராது மீளப் பிழைத்தவர்களானோம் என்ற கருத்தும் காண்க.

உளம் களித்து உவமை மிக்கார் - உளம் களித்தல் - உள்ள நிகழ்ச்சி; உவகை மிகுதல் அதனை வெளிப்படுத்தும் மெய்ப்பாடு பொருந்துதல். 771

2670. **(இ-ள்)** மீனவன் - பாண்டியன்; தன்மேல் உள்ள... அங்கை கூப்பி - தன்மேல் உள்ள வெப்பு முழுதும் உடனே தீர்ந்துபோக அதனால் உண்டாகிய பெரிய இன்பத்தையடைந்து தலையின்மேல் அங்கைகளைக் குவித்துக்கொண்டு; ''மானமொன்றில்லார்...

2670. மீனவன் றன்மே லுள்ள வெப்பெலா முடனே மாற,
ஆனபே ரின்ப மெய்தி யுச்சிமே லங்கை கூப்பி
''மானமொன் றில்லார் முன்பு **வன்பிணி நீங்க வந்த**
ஞானசம் பந்தர் பாத நண்ணிநா னுய்ந்தே'' னென்றான். 772

உய்ந்தேன்'' என்றான் - ''மானம் ஒன்றும் இல்லாத அமணர்கள் முன்னே வலிய நோய் நீங்கும்படி வந்தருளிய திருஞானசம்பந்தருடைய திருவடிகளைச் சேர்ந்து நான் உய்ந்தேன்'' என்று சொல்லித் துதித்தான்.

(வி-ரை) இது பிணி நீங்கியுய்ந்தபோது அரசன் நிலையும் செயலும் கூறிற்று அதுபோழ்து அம்மையார் நிலையும் அமைச்சர் நிலையும் முன்பாட்டிற் கூறினர்; அரசனது நலத்தினும் நாட்டின் நலதினும் கருத்துக்கொண்டு இறைவர்பால் வரங்கிடந்து அரும்பாடுபட்ட அவ்விருவரது மகிழ்ச்சி, நலம்பெற்ற அரசனது மகிழ்ச்சியினும் மிக்கு முற்பட்டதாதலின் அவை முன்னர்க் கூறப்பட்டன; நோயின்வாய்ப்பட்ட சேயினைவிட அதன் நலங்கண்டதாயின் மகிழ்ச்சி முற்படுவதை உலகியல்பிற் கண்டுகொள்க; **மீனவன் தன்மேலுள்ள வெப்பெலாம் மாற** - என்புழித் **தன்மேல்** என்றதுமிக்குறிப்புக் கொண்டது; தனது நலத்தைத் தான் பின்னரே அறிந்து மகிழ்ந்தான் என்பது.

வெப்பெலாம் - வலமிடம் வந்ததும், இடமிருந்ததுமாகிய எல்லாம்; அதன் மூல காரணமாகிய மயக்க வெப்பமும், அதன் காரணமாகிய முன்னை வல்வினை வெப்பமும் என்ற எல்லாம் என்க; தூல சூக்கும காரணம் என்ற மூன்றும் என்பது குறிப்பு; **முழுதும்** (2168); **உடனே** - ஒருங்கே; பிள்ளையார் பின்னும் ஒருமுறை திருநீற்றைப் போற்றித் திருக்கையாற் றடவிய உடனே. அக்கணமே என்பதுமாம்.

ஆன - மாறுதலால் உளதாயின; **பேரின்பம்** - பெரிய இன்பம்; **பேரின்பம் ஆன** என்று மாற்றிப் பேரின்பம் எனப்படும் வீடுபேறு என்ற குறிப்புமாம்; இனி நின்றசீர் நெடுமாறனாராக ஆகிச் சீவன்முத்த நிலை பெற்றுப் பிறவி நீங்கிப் பேரின்பம் அடையும் சரிதக்குறிப்புக் காண்க; இங்குப் பேரின்பம் போறலின் **பேரின்பம்** என்றார். என்னை? நோய் நீங்கவே இன்பானுபவமாதல் இல்லை; இன்ப அநுபவத்துக்கு நோய் தடை செய்வதாதலின் அதன் நீக்கம் இன்ப நுகர்ச்சிக்குத் துணை செய்தல் பற்றி நோய் நீங்கியதும் இன்பம் எய்தியதாக உபசரித்து வழங்கப்படும். இனி வைகைக் கரையில் மெய்ஞ்ஞானோபதேசம் பெற்றுப் பேரின்பம் பெறுவது நிச்சயமாதலின் அத்துணிவுபற்றிப் பேரின்பம் எய்தி என இறந்த காலத்தாற் கூறினர் எனினுமாம்.

விடய நுகர்ச்சியில் புத்தியின்கண் வந்தவற்றை அழுந்தியறியுந் தன்வேதனைக் காட்சியின்பமே சிற்றின்பம், அருண்ஞானத்தால் தன்வேதனைக் காட்சியில் சிவத்துவ விளக்கத்தை அழுந்தியறிதலே பேரின்பம் என்பது பாடியத்தும் விளக்கப் பட்டுள்ளது.

உச்சிமேல் அங்கை கூப்பி - முன்னர் நோய் மிகுதியினாலே மெய்ம்முயற்சியின் வலிமையின்மையாற் ''சிந்தையாற் றொழுதமை'' (2667) போலன்றிச் சிரமேற்கைகூப்பினான் என்பது கருத்து.

வேறு

2671. கந்து சீறு மாலி யானை மீன வன்க **ருத்துநேர்**
வந்து வாய்மை கூற, மற்று மாசு மேனி நீசர்தாம்
முந்தை மந்தி ரத்து விஞ்சை முற்று மெஞ்ச வஞ்சியே
சிந்தை செய்து கைவ ருந்தி றந்தெ ரிந்து கூறுவார், 773

மானம் ஒன்று இல்லார்-ஒன்று - ஒன்றும்-ஒரு சிறிதும்; முற்றும்மை தொக்கது; ***மானமில்லாமையாவது*** தீவினையஞ்சாமையாகிய தறுகண்மை; ***இல்லார்*** முன்பு - மானமிலா அமணர் காண அவர் ***முன்னே***; வாதினில் ஏற்று நின்ற அவர்கள் முன்பு என்பதாம்; ''உரிஞ்சாய வாழ்க்கையமண்... இருஞ்சாக்கியர்க ளெடுத்துரைப்ப'' (தேவா-மயிலை—10) என்புழிப்போல.

வன்பிணி - வல்வினைப் பயனுற்போந்து பற்றிய - வேறெவ்வாற்றானும் போக்க லரிதாகிய - நோய்; ***பிணி*** - பிணித்து உணர்வுசோர வீழ்த்திய நிலைக்குறிப்பு.

வந்த - தான் வேண்டாமலே கருணையினால் தாமே எத்துணைத் தடைகளையும் இடையூறுகளையும் பொருட்படுத்தாது எழுந்தருளி வந்த.

ஞானசம்பந்தர் - ஞான வெற்றிக் குறிப்புப்படக் கூறியது.

நண்ணி - உய்ந்தேன் - மானமில்லாரை விட்டு இவரை நண்ணுதலால் உய்தி பெற்றேன் என்பது.

வன்பிணி நீக்கவந்த—என்பதும் பாடம். 772

2671. **(இ-ள்)** கந்து... கூற - கட்டுத்தறியைச் சீறிவரும் மதமுடைய யானை போலப் பாண்டியன் கருத்து கட்டுநீங்கி நேர்பட வருதலால், உண்மை நிலையினைக் கூறவே; மற்று... நீசர் - மற்ற அழுக்குப் படிந்த உடலுடைய நீசர்களாகிய அமணர்கள்; தாம் முந்தை... அஞ்சியே - தாம் முற்படக் கைக்கொண்ட மந்திரத்தின் விஞ்சைகள் முழுதும் வலியிலவாகி ஒழியக்கண்டு அச்சம் பொருந்தி; சிந்தை... கூறுவார் - சிந்தித்துத் தாம் வெற்றியடையும் திறத்தினை எண்ணிச் சொல்வாராகி,

(வி-ரை) கருத்து நேர்வந்து மீனவன் வாய்மை கூற என்க. **வந்து** - வந்தமையால்; **வாய்மையாவது** பிள்ளையாருடைய திருவடிகளையடைந்து நான் உய்ந்தேன் என்றது (2670) **கருத்து நேர்வருதல்** - முன்னே பொருள் மாறுபட்டறிந்து கிடந்த மயக்கநீங்கி உண்மை நெறியில் நிற்றல்; முன்னர்க் கோணி நின்றது நேராகி, **நேர்மை** - திறம்புதலில்லாத உண்மை; **மால்** - பெரிய என்றலுமாம்.

கந்து சீறும் - மால்யானை - மீனவன் - இதுவரைக் கட்டுண்டிருந்த நிலையை முனிந்து விடுபட்ட அரசனது நிலையும் கொள்ளப்படும். இப்பொருளுக்கு **யானை** - யானை போன்ற என உவமவுருபு விரிக்க.

யானை மீனவன் - யானைப் படையையுடைய பாண்டியன் என்றலுமாம். **யானை போல** என்றது மெய்யும் வினையும் பற்றிவந்த உவமம். **கந்துசீறுதல்** - முன்தன்னைக் கட்டுப்படுத்தியிருந்த தறியினை முறித்து நீங்கித் தன் வயத்ததாகுதல்.

2672. ''சைவ மைந்தர் **சொல்லின் வென்றி** சந்த வின்சொன் **மாலை**யாற்
கைத வன்றன் **வெப்பொ ழிந்த தன்மை கண்ட றிந்தனம்;**
மெய்தெ ரிந்த தர்க்க வாதம் வெல்ல லாவ தன்று;வே
றெய்து தீயி னீரில் வெல்வ'' தென்று தம்மி லெண்ணினர். 774

மற்று - *மாறுபட்ட; உண்மை தெரிந்தும் நேர்மை திறம்பிய; நீர் என்றது இக்கருத்துக் கொண்டது.*

முந்தை மந்திரத்து விஞ்சை - *முன்னர்க் கைக்கொண்ட மந்திரமும் அதுவாயிலாகக் கொண்ட விஞ்சையும்; ''விஞ்சை மந்திரத் தொழில் விளைத்தால்'' (2586); ''தங்கண் மந்திரத்தாற் செந்தீ - திருமடஞ் சேரச்செய்தார்'' (2595).*

முற்றும் எஞ்ச - *முழுதும் செயலற்றுத் தவிர்ந்துபோக; ஒழிய;* ***எஞ்சுதல்*** - *குறைவுபட்டொழிதல்.*

கைவரும் திறம் - *வெற்றி கைகூடும் உபாயம்;* ***தேடுவார்*** - *என்பது பாடமாயின்,* ***தேடுதல்*** - *ஆராய்தல் என்க.*

வந்தவாய்மை—மற்ற—*என்பனவும் பாடங்கள்.* 773

2672. **(இ-ள்)** *சைவ மைந்தர் சொல்லின் வென்றி - சைவ மைந்தராகிய பிள்ளை யாரின் சொற்களின் வெற்றிப் பாட்டினை; சந்த... கண்டு - அவருடைய இனிய சொன் மாலைப் பதிகத்தினால் பாண்டியனது வெப்பு முழுதும் ஒழிந்து போயின தன்மையைக் கண்டதனால்; அறிந்தனம் - அறிந்தோம்; மெய்...அன்று - ஆதலால் உண்மை தெரிந்த தர்க்க வாதத்தில் நாம் வெற்றிபெறுவது இயல்வதன்று; இதனின் வேறாகிய எய்து...எண்ணினர் - பொருந்திய தீயினிலும் நீரினிலும் வெற்றிபெற முயல்வோமாக என்று தங்களுக்குள் எண்ணினார்கள்.*

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) மாலையால் வெப்பொழிந்த தன்மை கண்டு சொல்லின் வென்றி அறிந்தனம்-என்க. பதிகத்தினால் வெப்புத்தீர்ந்த செய்கை காட்சியளவையால் அறிந்தோம்; ஆதலின் அத்துணைகொண்டு பிள்ளையாரது சொல்லே வெற்றி பெறுவது என்பது தெளிய அறிந்தோம். மன்னன் என்னாது **கைதவன்** என்றது அரசன் தங்கள் சார்பை விட்டகன்றமை கண்டு தம் மனத்துள் எழுந்த மனக் கசப்பை உணர்த்திய குறிப்பு.

மெய் தெரிந்த தர்க்கவாதம் வெல்லலாவதன்று - உண்மை தெரியநின்ற தர்க்க மூலமாக நிகழும் வாதம் நம்மால் வெல்லத்தக்கதன்று; **மெய்** - சமய உண்மையும் தெய்வத் தன்மை நிலையும்; **தர்க்க வாதம்** - சொல்லினால் வாதித்து நிலைநாட்டுதல்.

வேறு எய்து தீயில் நீரில் வெல்வது - வேறு - இதனின் வேறாகிய உபாயமாகிய; வேறாக; **எய்து** - பொருந்தும் ஆற்றல் வரும்.

தீயில் நீரில் வெல்வதென்றது - தீயும் நீரும் சடப்பொருள்களானமையால் அவற்றின்

2673. பிள்ளையாரு "முங்கள் வாய்மை பேசு மின்க" ளென்றலுந்,
தள்ளு நீர்மை யார்கள் "வேறு தர்க்க வாதி னுத்தரங்
கொள்ளும் வென்றி யன்றியே **குறித்த கொள்கை யுண்மைதான்**
உள்ள வாறு கட்பு லத்தி லுய்ப்ப" தென்ன வொட்டினர். 775

சடசத்தியைத் தம் மந்திரங்களின் - அதிதெய்வங்களின் - சிற்சத்தியால் கட்டுப்படுத்தலாம் என்பது அவர் கொண்ட கருத்து; **தீயில் நீரில்** - தீ ஒன்றிலே வெற்றி பெறுவதில் ஐயப்பட்டார்களாதலின் நீரையும் அப்போதே உடன் எண்ணினர்; என்னை? முன்னர்ப் பிள்ளையார்மாட்டுத் தாம் விஞ்சை மந்திரத்தொழில் விளைத்து ஏவிய தீ ஏவியபடி செல்லாமை கண்டாராதலின் ஐயம் கொள்ள நேர்ந்தது. ஆயின் அவ்வாறு அறிந்த பின்னரும் தீயினை எண்ணவந்ததென்னையோ எனின், இங்குப் பிள்ளையார்மாட்டுச் செலுத்தப் பெறாது தம் அளவில் மந்திர சக்தியுள் சடசக்தி அடங்குதலைக் காட்டும் அளவுக்கு வேண்டப்படுதலால் அமையும் என்ற கருத்தாலும், முன்னர்த் தமது ஏவலுக்குள் அமையாது நின்ற தீ பிள்ளையார் பணித்தபடி அமைந்து வெப்பு என்ற உருவுடன் பாண்டியனை அடைந்தது என்ற உண்மை துணியப்பெறாமையாலும் என்க; "போன கங்குலிற் புகுந்ததின் விளைவுகொல்?" (2612) என்றது வினைப்பயனோ? என்ற ஐயப்பாடேயன்றிப் பிள்ளையாரது செயலென்ற துணிபின்மை காண்க; அவ்வாறு அறிந்தும் அறிவுபெற்றமையாது மேற்செல்லும் அமணரது மானமின்மை கண்டுகொள்க.

வெல்வது - வெற்றிபெற முயலத் தக்கது.

வெப்பொழித்த தன்மை கண்டறிந்தபின்—என்பதும் பாடம். 774

2673. **(இ-ள்)** பிள்ளையாரும்...என்றலும் - பிள்ளையாரும் அமணர்களை நோக்கி உங்கள் சமயவுண்மைகளைப்பேசுங்கள் என்று கூறலும், (அதுகேட்டு); தள்ளு நீர்மையார்கள் - தள்ளப்படும் தன்மையுடையவர்களாகிய அவ்வமணர்கள்; வேறு... அன்றியே - வேறு தர்க்க உருவமாகிய கடா விடைகளால் வரும் வெற்றியையன்றி; குறித்த... ஒட்டினர் - "அவ்வவர் குறிக்கொண்ட கொள்கைகளின் உண்மைத் தன்மை உள்ள படியினைக் கண்முன்னே நிறுத்திக் காட்டுதல் ஈண்டு செய்யத் தக்கது" என்று ஒட்டினார்கள்.

(வி-ரை) பிள்ளையாரும் உங்கள் வாய்மை பேசுமின்கள் என்றது - முன்னர் அமணர்கள் பிள்ளையாரைப்பலராய்ச் சூழ்ந்து சினந்து வாதினில் வெல்ல எண்ணித் தாம் கோலும் நூல் எடுத்தோதித் தலைதிமிர்ப்பக் குரைத்தார்கள் (2654); அப்போது "நும்பொருள் எல்லை உள்ளவாறு பேசுக" என்று பிள்ளையார் அருளினர் (2655); பிள்ளையார்பாற் கொண்ட பரிவினால் அவ்வாதம் நிகழாமல் அம்மையார் தடுத்து, "அரசனதுநோய் நீக்கியபின் இவ்வமணர் வல்லராகில் பேசுக" என்று குறுக்கிட்டுத் தடுக்க, அரசன் ஆணையின்படி நோய்தீர்த்தலையே இகலிய வாதமாகக்கொண்டு தெய்வத் தன்மையும் வெற்றியும் துணியப்பட்டன; ஆதலின், அவ்வாறு முன்பு தாமே அழைக்கவும் இடையில் தடுக்கப்பட்ட சமயநூல் வாதத்தினைத் தொடர்ந்து பேசுக என்று பிள்ளையார் அமணரை அழைத்தருளினர் என்க; அவர்களது சமயம் முழுதும் மெய்ச் சமயமாகிய சைவத்தின் முன் நிற்க மாட்டாமையை உலகுக்கறிவித்து உண்மை

நிலையை உபதேசிக்கும் பரம குரு நாதராதலின், உலகர் உண்மையறிந்து உய்திபெறும் பொருட்டு இவ்வாறு அழைத்தருளினர் என்க; சிலசில சிறு உண்மைகளையே கோட்பாடாகக் கொண்டு சிறு தெய்வங்களை வணங்கும் சிறுசமயங்கள், முழு உண்மைகளுணர்ந்து நிலைக்களமாய் முழு முதற் கடவுளும் சங்காரகாரணனுமாய் உள்ள சிவபெருமானையே கடவுளாகக் கொண்டதாய் விளங்கும் சைவ சமயத்தொடு மாறுபட்டு உலகை மயக்கினது அக்கால நிலை; அதனுல் பொய்ம் மிகுத்து மறைவழக்கமருகிப் பூதிசாதன விளக்கம் போற்றல்பெறுது சைவநெறி குன்றியது (1916) இதனை நீங்கிச் சமயங்களானவற்றின் தரங்களை உள்ளபடி அறிவித்து அளவுபடுத்தி நிறுவவேண்டியது ஞானசாரியரது கடமையாயிற்று. திருவருட் குறிப்பினை வினவி விடைபெற்ற பின்னரே பிள்ளையார் இதனை மேற்கொண்டனர்; 2636, 2637 பார்க்க. இக்காரணங்களால் அமணரை அவரது சமய உண்மை பேசுக என்று பிள்ளையார் அழைத்தனரேயன்றி இகலினுலன்று; "இகலில ரெனினும்" (2752); "இதுவாகுமதுவல்ல தெனும்பிணக்க தின்றி, நீதியினு ளிவையெல்லா மோரிடத்தே காண நின்றதியா தொருசமய மதுசமயம்" (சித்தி.8-13) என்றபடி உலகில் ஒன்றோடொன் றொவ்வாமல் உள்ள பற்பல சமயங்களின் கொள்கைகளையும் தன்னகத்தேகொண்டு அதனுல் ஒன்றோடும் மாறுகொள்ளாமல் அவ்வவற்றுக்கும் படிமுறை காட்டி நிற்பது சைவ சமயம்; ஆதலின் அஃது எச்சமயத்தினையும் வெறுப்பதோ மாறுகொள்வதோ அழிப்பதோ இல்லை; ஆயின் பரபக்க நிராகரணமும், சமயவாதமும், ஈண்டு வருவதுபோல் அழிவும் சைவத்துட் கேட்கப்படுதல் என்னையோ? எனின், தற்காப்பின் பொருட்டும் உண்மை தெரித்தற்பொருட்டுமாம் என்க. இங்குப் பிள்ளையார் சமணரைச் சமயநூல் வாதம் பேசுக என்றது சைவத்துக்கு இடையூறு விளைத்த அவர்களையும், அவருடைய பொய்களில் மயங்கிநின்ற உலகத்தையும் தேற்றி உண்மை தெளிவித்துஉய்யக் கொள்ளும் கருணையினுலேயாம் என்க; பின்னர் அமணர் கழுவேறி அழிந்த வரலாறு அரசன் நிகழ்த்திய அரச நீதி முறையின் பாற்படும். பிள்ளையார் ஈண்டுச் சமய வாதத்திற்கு அழைத்ததற்கும் அரசன் நீதிமுறை விதித்த அதற்கும் எவ்விதத் தொடர்புமில்லை; பிள்ளையார் அழைத்த சமயநூல் வாதத்தை மறுத்துக் காட்சி வாதத்தில் ஒட்டிப் புகுந்து, தோல்வியுற்றுற் கழுவேறுவேம் என்று இசைந்து, தம் செயலினுலும் வாக்கினுலும் தாமே தமக்கு அழிவைத் தேடிக்கொண்டதும், அரசன் நீதிமுறை செய்ததும் பின்னர் விரிக்கப்படும்; ஆண்டுக் கண்டுகொள்க; இங்கு மேற் கூறியவாறன்றி, "அவர்கள் எண்ணத்தை உணர்ந்த பிள்ளையாரும்" என்றுரைத்து அவ்வாறுணர்ந்தமையால் சமய வாதத்துக்கு அவர்களை அவர் நினைத்தபடியே பிள்ளையாரும் அழைத்தனர் என்றுரை கூறுவாருமுண்டு; அது பொருந்தாமை கண்டுகொள்க. அமணர்கள் சமயவாதம் வெல்லலாவதன்று; காட்சிவாதமே செய்யத்தக்கது என்று எண்ணியபோது பிள்ளையார் சமய உண்மைகள் பேசுக என்றது அவர் எண்ணத்துக்கு மாறுபட்டமையாலும் அது பொருந்தாமையறிக.

தள்ளும் நீர்மையார்கள் - சுரவாதத்தினை இகலிச் செய்து தோற்றமையாலும் முன்னர்ச் செய்த பொய் - வஞ்சம் இவற்றுலும் ஒதுக்கித் தள்ளத்தக்கவர்கள்; இதற்கு இவ்வாறன்றித் தள்ளப்படும் பொய் வஞ்சனை முதலிய குணங்களையுடையவர்கள் என்றுரைப்பாரு முண்டு. **தள்ளும்** - தர்க்கவாதத்தைத் தள்ளிய என்றலுமாம்.

வேறு...அன்றியே - **வேறு** - மேற்சொல்வதற்கு வேருக - தனியாக - என்க; கட்புலத்தில் உய்ப்பதே சமய வாய்மையை விளக்குவதாகும் என்பது கருத்து; **தர்க்கவாதின் உத்தரம்**

2674. என்று வாது கூற லும்மி ருந்த தென்னர் மன்னனுங்
"கன்றி யென்னு டம்பொ டுங்க வெப்பு நோய்க வர்ந்தபோ
தொன்று மங்கொ ழித்தி லீர்க; **ளென்ன வாது மக்**" கெனச்
சென்று பின்னு முன்னு நின்று சில்லி வாயர் சொல்லுவார், 776

கொள்ளும் வென்றி - வாதம்செய்து கடாவிடைகளால் சமய உண்மைகளை நிலைநாட்டும் வெற்றி; **அன்றியே** - அஃது இல்லாமலே; வேண்டாமலே.

குறித்த கொள்கை உண்மைதான் கட்புலத்தில் உய்ப்பது - கொள்கையின் உண்மையை வாதிப்பதாயின் காதினாற் கேட்பதன்றிக் கண்ணாற் காண இயலாது; அவ்வாறன்றிக் கண்ணாற் காணும்படி காட்டிச் செலுத்துதல் வேண்டப்படுவது; **குறித்த** - அவ்வவர் குறிக்கொண்ட; குறிக்கோளாகக் கொண்ட; **உள்ளவாறு** - யாவரும் ஒப்பும் முறையில்.

ஓட்டினர் - சூளுறவு சொன்னார்; பந்தயம் கூறினார்.

குறிப்பு:—இவர்கள் போலன்றிப் புத்தர் மந்திரவாதம் வேண்டாது சாத்திரவாதமே வேண்டி எதிர்த்தது குறிக்க; (புரா. 911=2811). 775

2674. **(இ-ள்)** என்று வாது கூறலும் - அமணர் முன்சொல்லியபடி ஒட்டி வாதத்தினைக் கூறுதலும்; இருந்த... உமக்கு என - நோய் நீங்கியிருந்த பாண்டியனும் அவர்களை நோக்கி "எனது உடம்பு முழுதும் வெதும்பி வெப்புநோய் என்னை முழுதும் உள்ளாக்கியபோது, அங்கு ஒரு சிறிதும் தவிர்க்ககில்லீராகித் தோல்வியுற்றீர்கள்; ஆதலின் இப்போது இனி, உமக்கு என்ன வாது இருக்கின்றது!" என்று சொல்ல; சென்று... சொல்லுவார் - அரசனுக்குப் பின்னும் முன்னுமாகச் சென்று அணுகி நின்று கொண்டு ஓட்டை வாயர்களாகிய அமணர்கள் சொல்வாராகி,

(வி-ரை) என்று - முன்பாட்டிற் கூறியபடி சொல்லி; **வாதுகூறல்** - வாதத்துக்கு அறைகூவுதல்.

இருந்த - முன்னர் வெப்பு நோயுடன் வலிகெட்டுக் கிடந்த நிலை நீங்கி எழுந்து அமர்ந்திருந்த; அவ்வாறு இருந்தமையால் - என - என்ற குறிப்புமாம்.

மன்னனும் - உம்மை சிறப்பு; **மன்னனும்... என** - பிள்ளையார் அமணர்களை உங்கள் வாய்மை பேசுமின்கள் என்று அருள, அதனைத் தொடர்ந்து அவர்கள் வாதத்தில் முற்பட்டனர்; ஆயினும் அரசன் அதனை உடம்படாது மறுத்து எனது நோயினை ஒழிக்கமாட்டாது தோல்வியுற்ற உங்களுக்கு இனி வாது செய்ய என்ன நிலையுள்ளது; ஒன்றுமில்லையே! என்று தடுத்துக் கூறியபடி; "நீங்கள் தேறிய தெய்வத்தன்மை என்னிடைத் தெரிப்பீர்" (2657) என்றும், "இகலித்தீரும்; தீர்த்தார்வாதில் வென்றவர்" (2659) என்றும் தான் அரசாணையிட, அதனை ஒட்டியே மந்திரவாதம் நிகழ, அதில் **தோற்றீர்** (2667) என அரசநீதி முடிபுகொள்ள, ஆணையும் நிகழ்ந்து விட்டமையால், ஒருமுறை தீர்வுபெற்ற நியாயத்தில் வாதத்துக்கிடமில்லை என்று அரசாங்க நீதிமுறையில் கூறியபடியாம்.

2675. ''என்ன வாது செய்வ'' தென்று ரைத்த தேவி ஞைவெனுச்
சொன்ன வாச கந்தொ டங்கி ''யேடு கொண்டு சூழ்ச்சியான்
மன்னு தம்பொ ருட்க ருத்தின் **வாய்மை தீட்டி மாட்டினுல்**
வெந்நெ ருப்பின் வேவு ருமை வெற்றி யாவ'' தென்றனர். 777

இனி, ''**குறித்த கொள்கை - கட்புலதிலுய்ப்பதென்ன ஒட்டுதல்**'' எதன் பொருட்டு? முன்னரே அவ்வாறு எனது நோயினைப் பற்றிக் கட்புலத்தில் உய்த்த போது உமது கொள்கை உண்மை நிலைபெறுதொழிந்தமை கண்டோமே என்றபடியுமாம்.

ஒடுங்க - ஒடுங்கும்படி. ''உணர்வும் ஆவியு மொழிவதற் கொருப்படு மொடுங்க'' (2610); **ஒன்றும்** - ஒரு சிறிதும்; ஒரு பக்கமும் என்றலுமாம்.

ஒழித்தல் - நோய் தவிர்த்தல் குறித்தது.

என்ன வாது? - வினு ஒன்றுமில்லை என எதிர்மறை குறித்தது.

சென்று பின்னும் முன்னும் நின்று - சென்று - வெப்புத் தீக்கதுவ அருகுவிட்டேற நின்றுர்க (2664)ளாதலின் அருகு சென்று; **பின்னும் முன்னும்** சூழ்ந்து கொண்டு.

சில்லிவாய் - ஓட்டைவாய்; உண்மைப்பொருள் தங்குதலின்றி ஒழுகிவிடும் - நழுவும் - வாய்.

சொல்லுவார் - முற்றெச்சம்; சொல்லுவார் - என்றனர் என வரும் பாட்டுடன் முடிக்க. 776

2675. **(இ-ள்)** என்ன... தொடங்கி - நீங்கள் செய்வதற்கு என்ன வாது உள்ளது என்று தோல்வியுற்ற உமக்கு வாதமொன்றுமில்லை என்ற குறிப்புப்படச் சொன்னதையே தம்மை என்ன வாது என்று வினுவினதாக எடுத்துக்கொண்டு முன் தாம் சொன்ன வாசகத்தினையே தொடர்ந்து கொண்டு; ''ஏடுகொண்டு...வெற்றி யாவது'' என்றனர் - ஏட்டினைக் கொண்டு அறிவாற் சூழ்ந்து நிலைபெறும் தத்தமது சமய உண்மைப் பொருட் கருதின் உண்மைகளை எழுதி மாட்டினுல் வெவ்விய நெருப்பின்கண் வேகா திருப்பதுவே வெற்றியாவது என்று கூறினர்.

இவ்விரண்டு பாக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) என்ன... எனு - என்ன வாது என்று வாதமில்லை எனக்கூறிய எதிர்மறை வினுவினையே, அறியா வினுவாக எடுத்துக்கொண்டு. பின்னரும் இவ்வாறே, ''நீங்கள் தோற்றிலீர்போலும்'' (2691) என்னுமிடத்து அரசன் நகையுட்கொண்டு செப்பிய இகழ்ச்சி மொழியைத் தேருர் (2692) சொன்ன சொல்லின் சொல்லே பயனுக்கொண்டு மேற்சொல்லி அமணர் வாது துணிதல் காண்க.

சொன்ன வாசகம் - தாங்கள் முன் ''கட்புலத்தில் உய்ப்பது'' என்ன ஒட்டிய வாசகம் (2673); கட்புலத்தில் உய்ப்பது இவ்வகையாய் என்பது தொடர்ந்து கூறியமை காண்க.

சூழ்ச்சி - அறிவாற் சூழ்ந்து தெரிந்துகொள்ளும் முடிவு;

2676. என்றபோது மன்ன னொன்றி யம்பு முன்பு பிள்ளையார்
"நன்று நீரு ரைத்த வாறு; நாடு தீயி லேடுதான்
வென்றி டிற்பொருட் கருத்து மெய்ம்மை யாவ தென்றிரேல்
வன்ற னிக்கை யானை மன்னன் முன்பு வம்மி" னென்றனர். 778

சூழ்ச்சியால் மன்னுதல் - அவ்வாறு சூழ்ந்து நிலைபெறுத்தல்; **சூழ்ச்சி** - இங்கு நற்பொருளில் வந்தது.

ஏடு கொண்டு தீட்டி - ஏடு - ஓலை; ஏட்டினை இடமாகக் கொண்டு எழுதி; **கொண்டு**- இடமாகக் கொண்டு அதன்கண் தீட்டி என்க; **தீட்டுதல்** - நன்கு எழுதுதல்.

மாட்டுதல் - தீயினுள் ஊடுருவ உய்த்தல்.

வேவுறுமை வெற்றியாவது - வேவாதிருத்தலே வெற்றியைக் கட்புலத்தில் காண உய்ப்பதாம் என்றபடி. 777

2676. **(இ-ள்)** என்றபோது... முன்பு - முன் கூறியவாறு அமணர்கள் சொல்லிய போது அதற்கு விடையாக அரசன் ஒன்று சொல்லுவதன் முன்பே; பிள்ளையார் - ஆளுடைய பிள்ளையார்; நன்று... ஆறு - நீர் சொல்லியவழி நன்று; நாடுதீயில்...என்றிரேல் - நாடும் தீயினில் ஏடுதான் வேவாமை காட்டி வென்றிடில் அதில் எழுதிய பொருட்கருத்து வாய்மையுள்ளதாகும் என்று சொல்வீர்களாகில்; வன்தனி... வம்மின் என்றனர் - வலிய ஒற்றைக் கையினையுடைய யானை மன்னன் முன்பு அவ்வாறே வாதம்செய்து முடிபுகொள்ள முன்வாருங்கள் என்றருளினர்.

(வி-ரை) மன்னன் ஒன்று இயல்புமுன்பு - பிள்ளையார் - என்றனர் - வாதம் விரும்பி அறைகூவினோர்களைஅதனைச் செய்யவிடாது தடுத்தல் நேர்மையன்றென்பதும்; அவ்வாறு செய்யின் வாதில் வெற்றிபெறமாட்டாமை குறிக்குமென்பதும், ஆனல் அரசன் அமணர்களது பொய்ம்மையை உணர்ந்து தீர்வும் முடித்து விட்டமையின் அவர்கள் கூறும் வாதத்திற்கு உடன்படமாட்டான் என்பதும், இம்மட்டோடு நிறுத்தாது சமயவாதம் அல்லது மந்திரவாதத்தில் அவர்கள் இசையும் வழியெல்லாம் காட்டி அவர்களது பொய்ம்மையை நிலையிட்டுக் காட்டினலன்றி மயக்கினின்றும் நீங்கி உலகம் உய்தலும் சைவத்திற்கு நேர்ந்த தீமை ஒழிதலும் திருநீறு ஓங்கலும் அமையா வென்பதும், இன்னபிறவும் திருவுள்ளம்கொண்டு அரசனிடம் அமணர்கள் கூறியதற்கு அரசன் விடைகூறுமுன்பு, பிள்ளையார் விடைகூறி அவர் கொள்கைப்படியே வாதிற்கு அவர்களை அழைத்தனர் என்க.

இயம்பு முன்பு - அரசன் முடிவு சொல்வதன் முன்பே குறுக்கிட்டு, அரசன் வேறு முடிவு கூறிவிட்டானயின் பின்னர்த் தாம் மறுத்துரைத்தல் உலகவியல்நிலை மரபு வழுவாமாதலின் முன்பு கூறினர் என்க.

நன்று - ஆம் என்று நாமும் உடன்பட்டோம் என்றபடி.

நாடு தீ - தெய்வத்தன்மையினுள் அடங்கும்படி நாடப்பட்ட தீ.

வேறு

2677\. அப்ப டிக்கெதி ரமணரு மணைந்துறு மளவில்
ஒப்பில் வண்புகழ்ச் சண்பையர் காவல ருரையாற்
செப்ப ருந்திறல் மன்னனுந் "**திருந்தவை முன்னர்**
வெப்பு றுந்தழ லமைக்"கென வினைஞரை விடுத்தான். 779

வென்றிடில் - *வேவாதிருத்தலால் வெற்றி காட்டுதல்.*

பொருட்கருத்து - *அவ்வேட்டில் எழுதிய பொருளின் கொள்கை.*

வன்தனிக்கை யானை மன்னன் - *"கந்து சீறுமால் யானை மன்னன்" (2671) என்று* ***அமணர்*** *கண்ட கருத்தையே தொடர்ந்து பிள்ளையாரும் கண்டனர் என்பது; தம்மைச் சீறி* ***விலகிய*** *நிலையில் அவர்களும், தம்பால் வந்தடைந்த நிலையில் இவரும் கூறியபடி;* ***தனிக்கை*** *- ஒன்றாகிய துதிக்கை.*

மன்னன் முன்பு - *அரசன் அவை காணும்படி;* ***மன்னன்*** *- அவன்(2677) அவைக்களம்*

வம்மின் - *வாதத்தினை மேற்கொண்டு அவ்வாறே முன்வாருங்கள்.* ***778***

2677\. **(இ-ள்)** அப்படிக்கு... அளவில் - அவ்வாறே எதிர் ஏற்று அமணர்களும் **முன்** வந்து பொருந்தும்போது; ஒப்பில்...உரையால் - ஒப்பற்ற வண்மையினையும் **புகழினையும்** உடைய சீகாழித் தலைவராகிய பிள்ளையாரது சொல்லினாலே; செப்பரும்... விடுத்தான் - சொல்லுதற்கரிய வலிமையுடைய மன்னனும் "திருந்தும் அரசசபையின் முன்னே வெப்புடைய தழலினை அமைக்க" என்று ஏவி அதற்குரிய ஏவலாட்களை விடுத்தனன்.

(வி-ரை) அப்படிக்கு... அளவில் - மேலும் அரசன் வேறு எவ்வாறேனும் சொல்லிவிடாமல் பிள்ளையார் சொல்வழியே போதுமென வமைந்து அமணர் முன் **வந்தனர்.**

ஒப்பில் வண்புகழ்... உரையால் - அரசன் மறுப்பவும் தாம் உடன்பட்டமையால் **ஒப்பில்** என்றார்; **வண்மை**யாவது அமணர்மாட்டும் உலகின் மாட்டும் வைத்த கருணையால் **வரையாது** அருள் வழங்குதல்; **புகழ்** - இவற்றான் வருவது; **சண்பையர் காவலருரையால்- மன்னனும் - வினைஞரை-விடுத்தான்** - பிள்ளையார் அவ்வாறு கூறிவிட்டமையால் முன்னர் மறுத்த அரசனும் இசைந்து தீயமைக்க ஏவினன். **மன்னனும்** - உமக்கு என்ன வாது உளது என்று மறுத்த அவனும் என இறந்தது தழுவிய எச்சவும்மை; சிறப்பும்மையுமாம்.

திருந்து அவை முன்னர் அமைக்க - திருந்து - தன்போலவே அன்று சைவவுண்மை தெரிந்து திருந்திய அவை; உலகம் கண்டு **திருந்து**தற்கு இடனாய் நிற்கும் அரசவை என்றலுமாம்; பெரும் பொருள்களை நிச்சயித்தல் அரசனது அவையின் முன் செய்யப்படுதல் வழக்கு; "மேய விவ்வுரை கொண்டு விரும்புமாம் - ஆய சீரநபாய **னரசவை**" *(8).*

வெப்புறும் தழல் - தழல் வெம்மையுடையதென்பது இயல்பு; ஆயினும் இங்கு வெப்புறும் என்றது ஈண்டுத் தெய்வவுண்மைவாதத்தினை நாட்டும் கருவியாக வருதலின் அதற்கேற்றபடி உண்மை கண்டவிடத்து அடங்கியும், காணாதவிடத்து அடங்காது தன்

2678. ஏய மாந்தரு மிந்தனங் குறைத்துட னடுக்கித்
தீய மைத்தலுஞ் சிகைவிடு புகையெழுந் தொழிந்து
காயும் **வெவ்வழற் கடவுளும் படரொளி காட்ட**
ஆயு முத்தமிழ் விரகரு மணையவந் தருளி. 780

தொழில்செய்து காட்டுதற்குரிய வெப்பம்பொருந்தியும் உள்ள தழல் என்ற குறிப்புத் தருதலால் இயைபின்மை நீக்குதலோடு பிறிதினியைபு நீக்கிய விசேடணமுமாம்; "காயும் வெவ்வழற் கடவுளும் படரொளி காட்ட" என மேற்கூறும் குறிப்பும் காண்க.

வினைஞர் - தீ அமைத்தற்குரிய தொழில் செய்வோர்;ஏவலாளர். 779

2678. **(இ-ள்)** ஏய... அமைத்தலும் - ஏவப் பெற்ற மாந்தர்களும் விறகைவெட்டி உடனே அடுக்கித் தீயினை அமைத்தலும்; சிகைவிடு... காட்ட - சிகைபோல விடும் புகையெழுந்து பின் அது மாறப்பெற்றுச் சுடுகின்ற வெவ்விய தீக்கடவுளும் படரும் ஒளியினைக் காட்ட; ஆயும்... வந்தருளி - உயர்ந்தோர் ஆய்கின்ற முத்தமிழ் விரகராகிய பிள்ளையாரும் அத்தீயினுக்கு அருகு அணையும்படி வந்தருளி,

(வி-ரை) ஏய - ஏவிய - ஏவப்பட்ட - எனச் செயப்பாட்டுவினைப் பொருளில் வந்தது.

உடன்குறைத்து அடுக்கி - உடன் ஏவிவிடுத்த உடனே; **குறைத்தல்** - துண்டங்களாக வெட்டித் தீக்கொளுவுதற் கேற்றதாக்குதல்; **அடுக்கி** - தீக்கொள்ளும்படி ஒழுங்குபடுத்தி வைத்து; **தீ அமைத்தலும்** - தீயைக் கொளுவிப் பற்றச் செய்தலும்.

சிகை விடு புகை ஒழிந்து எழுந்து - ஒளிகாட்ட - முன்னர்ப் புகைவிட்டு எழுதலும் பின்னர் ஒளிகாட்டி எழுதலுமாகிய தீப்பற்றி எரியும் இயல்பு குறிக்கப்பட்டது. **சிகை விடுபுகை** - சிகைபோல மேலே விடும்புகை; சிகைபோன்றதைச் சிகை என்ற துபசாரம்; கருமையாலும் அடி மிகுத்தும் தொகுத்தும் நுனித்தும் மேல் கொழுந்து போல் எழுதலாலும் சிகைபோன்றது எனப்பட்டது; **ஒளி காட்ட** - புகை நீங்கி ஒளி விடுதல்; தீப்பற்றிய தன்மையை ஒளியினால் காட்ட; ஒளியே எல்லாப் பொருள்களையும் காட்டுதல் இயல்பு; அதுபோல் இங்கு ஒளியானது தீப்பற்றிய நிலையினைக் காட்டிற்றென்ற நயமும் காண்க. **அழற்கடவுள்** - என்றதற்கேற்பச் சிகையும் ஒளியும் கூறினார். அக்கடவுளைத் தியானிக்கும் சுருதிமுறையும் இங்கு நினைவுகூர்தற்பாலது.

காயும் வெவ்வழற் கடவுள் - "வெப்புறுந் தழல்" என்றதற்கேற்ப ஈண்டும் இவ்வாறு கூறினார்; பிள்ளையாரால் திருநோக்கம் பாவனை பரிசம் என்ற தீக்கை முறைகளைப் பெற்றுத் திருநீறு பூசப்பெற்றவனாதலாலும், வினைகளொத்துச் செய்தவப் பயனெய்தும் செவ்வியுற்றவனாதலானும், அரசன் தூய உள்ளத்து எண்ணியாங்கே அழற்கடவுளும் வந்தனன் என்ற குறிப்பும் காணத்தக்கது.

ஆயுமுத்தமிழ் விரகர் - ஆயும் - உயர்ந்தோரால் ஆயப்படும்; பிள்ளையாரது ஞானத்தமிழின் பெருமை கூறியவாறு; தமிழ்த் திருமுறையினைத் தாமே ஆய்ந்து பின்னர் எரியினிலிடும் பதிகத்தினை எடுக்கும் நிலையும், "எரியினி லிடவிவை கூறிய, **சொற்றெரி**

2679. **''செங்க ணேற்றவ ரேபொரு'' ளென்றுதாந் தெரித்த**
பொங்கி சைத்திருப் பதிக நன்முறையினைப் போற்றி
''யெங்க ணாதனே பரம்பொரு'' ளெனத்தொழு தெடுத்தே
யங்கை யான்முடி மிசைக்கொண்டு காப்புநா ணவிழ்த்தார். 781

யொருபது மறிபவர்'' (சாதாரி - பதிகம்-11) என்று அதன் ஆபத்தாந் தன்மையைப் பிள்ளையாரே காட்டியருளும் நிலையும், மற்றும் பிள்ளையாரது தமிழே வெற்றிபெறும் நிலையும் குறிப்பிற் பெறவைத்து ஈண்டு இத்தன்மையாற் கூறினார்; ''அலைவில் செழுந் தமிழ்வழக்கே யயல்வழக்கின் றுறைவெல்ல'' (1922) என்றதும் இங்கு நினைவுகூர்க.

அணைய வந்தருளி *- அவையில் தழல் அமைத்த இடத்திற் சேரவந்தருளி.*

புகையொழிந் தெழுந்து—*என்பதும் பாடம்.* 780

2679. **(இ-ள்)** செங்கண்... போற்றி - சிவந்த கண்களைப் பொருந்திய இடபத்தையுடைய சிவபெருமானே உண்மைப் பொருளாவார் என்று உலகறிய உபதேசித்தருளிய பொங்கும் இசையுடன்கூடிய திருப்பதிகங்களை எழுதிய நல்ல திருமுறைச் சுவடியினைத் துதித்து; எங்கள் நாதனே... .... தொழுது - எங்கள் நாதராகிய சிவபெருமானே முழுமுதற் கடவுளாய் எல்லார்க்குமேலாகிய பரம்பொருளாவார் என்று தொழுது; எடுத்தே... அவிழ்த்தார் - அங்கையால் எடுத்துத் தமதுதிருமுடிமேற் கொண்டபின் அதனது காப்பாகிய கயிற்றினை அவிழ்த்தனர்.

இவ்விரண்டு பாக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) செங்கணேற்றவரே பொருள் என்று - பொருள் - உண்மைப் பொருள்; முழுமுதற்பொருள்; சிவபெருமானே பொருளாவார்; ஏனை எவையும் பொருளல்ல என்று துணிந்து அவரையன்றி வேறொருவரையும் துதியாமையை எடுத்துக்காட்டி உலகுக்கறிவுறுத்திய.

பொங்கு இசை - பண் - இசையமைதி - மிக்க; **இசை** - புகழ் என்றலுமாம். புகழ் பொங்குதலாவது பாடியருளிய அன்றுபோலவே என்றும் புதியதாயும் பயனுடையதாயுமிருத்தல்.

திருப்பதிக நன்முறை - பதிகங்கள் எழுதிய ஏடு; சுவடி **முறை** நூல். இங்குத் திருமுறை எனத் தேவாரத் தொகுதிக்கு வழங்கும் மரபுப்பெயராய் வந்தது; சைவத் தெய்வத் திருமுறைகள் பன்னிரண்டுமே **திருமுறை** என்ற பெயரால் வழங்கப்படுவது சைவ ஆன்றோர்களது மரபு வழக்கு. ஏனை நூல்களை இப்பெயரால் வழங்குதல் பிழை வழக்கும் மரபு வழுவுமாம். (பிள்ளையார் அருளிய திருப்பதிகங்களை அவ்வப்போது எழுதிக்கொண்டும் அந்த ஏட்டினைத் தாங்கிக்கொண்டும் வந்தவர் பிள்ளையாரின் நல்லம்மான் சம்பந்த சரணாலயர் என்பது வரலாறு. ''அருமுறைசொற்றிருப் பதிகம் எழுதுமன்பர்'' (புரா-908); இவரே அத்திருவாக்கினாலே ''புத்தநந்தி தலையில் இடிவீழ்க'' என்று பொருஉரை முன் விட்டவர். பின்னர்ப் பிள்ளையார் திருமுன்பு புத்தவாதம் வென்று புத்தரைச் சைவராக்கியவரும் இவரே. (பின் வரலாறு குறிக்க).

2680. சாற்று மெய்ப்பொரு டருந்திரு முறையினைத் தாமே
நீற்று வண்கையான் மறித்தலும் வந்துநேர்ந் துளதால்
நாற்ற டம்புயத் தண்ணலார் மருவுநள் ளாறு
போற்று மப்**பதிகம் "போக மார்த்தபூண் முலையாள்."** 782

முறையினைப் போற்றித் தொழுது - *சிவனையே பொருளாகக் கொண்டமையால் மறைபோல இஃதும் பதியின் தன்மைகொண்டு வணங்கத்தக்கதாயிற்று.*

காப்பு நாண் - *ஏட்டினைக் கட்டிய கயிறு.*

தாம்தெரிந்த—*என்பதும் பாடம்.* *781*

2680. **(இ-ள்)** *சாற்றும்... மறித்தலும்* - துதிக்கும் மெய்ப்பொருளினைத் தருகின்ற திருமுறையினைத் தாமே திருநீறு பொருந்திய வண்மையுடைய கையினால் மறித்து எடுத்தபோது; *நாற்றடம் புயத்து... அப்பதிகம்* - நான்கு பெரிய தோள்களையுடைய அண்ணலாராகிய இறைவர் எழுந்தருளிய திருநள்ளாற்றினைப் போற்றிய அந்தப் பதிகம்; *வந்து* - நேர்பட வந்து, அதனுள்; *"போகமார்த்த பூண்முலையாள்"* - "போக மார்த்த பூண்முலையாள்" என்று தொடங்கும் திருப்பாட்டு; *நேர்ந்து உளது* - நேர்ந்து உளதாயிற்று (ஆல்-அசை).

(வி-ரை) சாற்றும் மெய்ப்பொருள் தரும் - சாற்றும் - வேத முதலிய நூல்களாலும் பெரியோராலும் எடுத்துச் சொல்லப்படும்; இவ்வாறன்றிச் **சாற்றும் மெய்ப்பொருள் தரும்** - சொல்லால் சொல்லப்படும் மெய்ப்பொருளாகத்தரும் என்றலுமாம்; **பதிகம்** - மெய்ப்பொருளைக் குறிக்கும் சொல்வடிவம். அதனால் தரப்படுவது அச்சொல்லால் குறிக்கப்படும் மெய்ப்பொருள் என்றலுமாம்; "ஆதலின் அஃது ஈண்டு வாதத்தில் வேண்டிய பொருட் கருத்தின் வாய்மை" யினைத் தரும் என்பதாம்.

திருமுறை - முத்தித் திருவுக்கு ஏதுவாகிய உண்மைகளை உரைக்கும் நூல்; இப்பெயர் ஆளுடைய பிள்ளையார் தேவாரமுதல் திருத்தொண்டர் புராணமிறுதியாகக் கோவை செய்யப்பட்ட சைவத் தெய்வத் தமிழ் மறைகளுக்கே காரண விடுகுறியாக வழங்குதல் பெரியோர் மரபு; இங்கு இம்மரபினைப் பிள்ளையார் தேவாரத்திற் பொருந்தக் காட்டி இவ்வழக்குத் தொடங்கிக் காட்டியருளினர் ஆசிரியர்; இறைவன் பாடலே **திருமுறை** எனப்படுமென்பது "பாடுந் திருமுறை பார்ப்பதி" (திருமந்-திருவுரை-1067=4-5-23) என்ற திருமந்திரத்தானும் அறிக; இக்கருத்துப்பற்றியே தேவார முதல் திருப்புராண மிறுதியாகியவையும் இறைவர் வாக்கேயாதலால் அவையும் திருமுறை எனப்பட்டுப் பன்னிரு திருமுறைகள் என வகுக்கப்பட்டமை உமாபதி சிவாசாரியர் திருவாக்காலு மறியப்படும். இப்பெயரை ஏனைய பசுக்களின் பாடல்களுக்கு வழங்குதல் போலியேயாம்.

தாமே மறித்தலும் - தாமே - வேறொருவரையும் செய்யவிடாது தாமே; **மறித்தல்** - நூற்சுவடியைக் கையினால் குறுக்கிட்டுத் திறத்தல்; இதுபற்றியே திருமுறை, கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் முதலியவற்றுட் கயிறு சாத்திப் பார்க்கும் வழக்கு இன்றும் வழங்கி வருகின்றது; அவ்வாறு மறித்தெடுத்தபோது வரும்பாட்டு இறைவர் திருவுள்ளத்தைக்

2681. **அத்தி ருப்பதி கத்தினை யமர்ந்துகொண் டருளி**
மைத்த வெங்கடு மிடற்றுநள் ளாறரை வணங்கி
மெய்த்த நற்றிரு **வேட்டினைக்** கழற்றிமெய்ம் மகிழ்ந்து
கைத்த லத்திடைக் கொண்டனர் கவுணியர் தலைவர். 783

காட்டுமென்பது கொள்கை; ஈண்டுப் பிள்ளையாரது தேவாரத் திருமுறையில் வந்தெழுந்த பதிகம், எரியினில் வேவாது நின்று, சைவத்தின் உண்மை காட்டிப் பரசமய நிராகரணமும் சைவசமய விளக்கமும் பெறுவித்து உலகை உய்விக்கும் திறம் காண்க. மெய்கண்டதேவர் திரு அவதாரத்திற்கு முன் இவ்வாறே தம் குருவின் ஆணைப்படி அவர் தந்தையார் ஆளுடைய பிள்ளையாரது தேவாரத் திருமுறையினிற் கயிறு சார்த்தத் திருவெண்காட்டுப் பதிகம் "பேயடையா" என்ற பாடல் வரவே, அதன்படி பெற்றோர்கள் திருவெண்காட்டில் போய் வரங்கிடந்து பிள்ளைப்பேறு பெற்று, அதனாற் பரசமய நிராகரணமும் சைவத் தாபனமும் தரும் சிவஞான போதம் பெற்று, உலகம் ஈடேறக் காரணமாயின வரலாறு ஈண்டுச் சிந்திக்கத் தக்கது.

"போகமார்த்த பூண்முலையாள்" பதிகத் தொடக்கம்; **வந்து நேர்தல்** - உதயமாகுதல்; வெளிப்படுதல்.

நால்தடம்புயத்து அண்ணலார் - சிவபெருமான் - நாடுடை நாயகர்; தோள்வலி பற்றிக் கூறினர் வெற்றி குறித்தற்கு.

நள்ளாறு போற்றும் - இரண்டனுருபு விரிக்க. நள்ளாற்றின் அண்ணலாரைப் போற்றும் என்னுது "அண்ணலார் மருவு நள்ளாறு போற்றும்" என்றது "நம்பெருமான் மேயது நள்ளாறே" என்று தலத்தைப் போற்றிய வகையால் அமைந்த பதிக அமைப்புக் குறித்தது.

பதிகம் - போகமார்த்த பூண்முலையாள் - வந்து நேர்ந்துளது - என்றது அப் பதிகத்துளே இத்தொடக்கமுடைய முதற்பாட்டு எழுந்தது என்ற குறிப்பாம்; **பதிகம்** - பதிகத்தினுள்; ஏழனுருபு தொக்கது. "வனமுலை யிணையவை குலவலின்" என்று இதனைப் போற்றுவதும், அப்பதிகத்தினுள் இவ் வொருபாட்டே **முலை** என்ற சத்தத்துடன் நிற்பதும் காண்க. நேர்ந்த முதற்பாட்டின் அச்சொல்லே அருட்குறிப்பினை உணர்த்தியதாம் என்பது அதனைப் போற்றிய "தளிரிள வளரொளி"ப் பதிகத்தின் பதினொரு பாட்டினும் **முலை** குலவலின் - செறிதலின் - கலவலின் - துதைதலில் - புணர்தலின் - பயிறலின் - என்று அச்சொல்லையும் பொருளையுமே பாராட்டியும், மேல் அந்த ஏடு எரியில் பழுதிலாமைக்கு அஃதே காரணமாகக் காட்டியும் அருளுதலாற் பெறப்படும்; பிராட்டியின் முலையிணைகளே ஞானங்களாய் அமுதமாய் உயிர்களுக்குப் போகங்களைத் தருவன என்பதும் போந்த குறிப்பாம். ஒரு பாட்டுப் பதிகம் என வழங்குவதும் மரபு. அப்பதிக முழுமையும் அவ்வொரு திருவேட்டினில் பொறிக்கப் பட்டிருத்தலுமாம். "பதிகத்தினை யமர்ந்துகொண்டருளி - திருவேட்டினைக் கழற்றி" *(2681)*, "பதிகத்தின் நாதன்" *(2682)* என வருவனவும் கருதத்தக்கன; **பதிகம் - வந்து** (அதனுள்) **போகம் - முலையாள் - நேர்ந்து - அஃதுளது** என்று கூட்டிக்கொள்க. 782

2681. **(இ-ள்) அத்திருப்பதிகத்தினை அமர்ந்து கொண்டருளி** - அந்தத் திருப்பதிகத்தினை விரும்பி மேற்கொண்டருளி; மைத்த... வணங்கி - இருண்ட வெவ்விய விடம் பொருந்திய

2682. **''நன்மை யுய்க்குமெய்ப் பதிகத்தி னூத''** னென் றெடுத்தே
யென்னை யாளுடை யீசன்றன் நாமமே யென்றும்
மன்னு மெய்ப்பொரு ளாமெனக் காட்டிட வன்னி
தன்னி லா கெனத் **''தளிரிள வளரொளி''** பாடி. 784

கண்டத்தினையுடைய திருநள்ளாற் றிறைவரை வணங்கி; மெய்த்த...கழற்றி - உண்மை பொருந்திய நல்ல அத் திருஏட்டினைத் திருமுறைச் சுவடியினின்றும் கழற்றிவேறெடுத்து; மெய்ம்மகிழ்ந்து... தலைவர் - மெய் மகிழ்ந்து கைத்தலத்தினிற் கவுணியர் பெருமானாராகிய பிள்ளையார் வைத்துக்கொண் டருளினர்.

(வி-ரை) அமர்ந்து கொண்டருளி - அமர்தல் - விரும்புதல்; **கொண்டருளுதல்** திருவுள்ளத்தில் மேற்கொள்ளுதல்; மெய்யின் மேற்கொண்டு கையிற் கொள்ளுதல் மேற்கூறுதல் காண்க.

மைத்த - மைபோலக் கரிய; குறிப்புவினைப் பெயரெச்சம் **''பனித்தசடை''** (தேவா); ''விரைத்த கடுக்கையந் தொங்கல்'' (பேரூர்ப் புரா.) பரவிக் கேடுவிளைத்தவிடத்தை அடக்கிக் கொண்டதுபோலப், பரவிக் கேடு செய்யும் அமணிருளையும் அடக்கி ஒடுக்கிக் கொள்ள வேண்டுதல் குறிப்பு.

நள்ளாறர் - அத்திருப்பதிகத்திற் போற்றப்பட்ட நாதர்; ''மெய்ப்பதிகத்தின் நாத னென்று'' *(2682)* என்பது காண்க.

மெய்த்தநல் திருஏட்டினைக் கழற்றி - மெய்த்த - உண்மைப் பொருள் கொண்ட. **மெய்** - சத்து; அழிவில்லாமை; ஈண்டு எரியிடை அழிவில்லாமை குறிப்பு. **ஏட்டினைக் கழற்றி** - இவ்வாறு ஒரு ஏட்டினைச் சிதைவின்றிக் கழற்றி வேறு எடுத்தல் முன்னைநாள் ஓலைச்சுவடிகளின் அமைப்புக்கே யியல்வது; இற்றைநாளிற் சுவடிகளைச் சிதைவுபடுத்திக் கிழித்தல்லது ஒரு இதழை வேறெடுக்கவும் கோக்கவும் இயலாமையும் சிந்திக்க. இரண்டன் வேறுபாடும் ஏற்றிழிவுகளும் கருதுக.

மெய்ம்மகிழ்ந்து - உண்மகிழ்தல் முன் அமர்ந்து கொண்டருளி என்றதனாற் கூறப்பட்டது. **மெய்ம்மகிழ்ந்து கையிற் - கொள்ளுத**லால் உடல் பூரித்தமையின் மெய்ம்மகிழ்ந்து என்றார்; இது மெய்ப்பாடு.

கொண்டனர் - வைத்துக் கொண்டனர். இதனை முற்றெச்சமாக்கிக் கொண்டனராகிப் - **பாடித் (2682)-தீயினில்** இட்டார் *(2683)* என மேல்வரும் பாட்டுக்களுடன் முடித்துரைத்துக் கொள்ளலுமாம்.

கவுணியர் தலைவர் - மேல்வரும் **பாடி - இட்டார்** - என்ற வினையெச்ச முற்றுக்களுக்கும் இஃதே எழுவாயாதலின் அத்தொடர்புகாட்ட இறுதியில் வைத்தார். *783*

2682. **(இ-ள்)** நன்மை... எடுத்தே - நன்மையிற் செலுத்தும் மெய்யாகிய அத்திருப்பதிகத்திற் போற்றப்பட்ட நாதன் என்று மேல்எடுத்துக்கொண்டு; என்னை... நாமமே - என்னை ஆளாக உடைய இறைவரது நாமமே; என்றும்... காட்டிட - எப்பொழுதும் நிலைபெறும் மெய்ப்பொருளாம் என்று காட்டும்படி; வன்னிதன்னில் ஆகஎன - எரியினில்

வேவாது நிற்பதாக என்று; தளிரிள வளரொளி பாடி - "தளிரிள வளரொளி" என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடியருளி;

(வி-ரை) திருநள்ளாற்றுப் பதிகம் எழுதிய ஏட்டினைக் கைக்கொண்டருளி, **அதனில்** உதயமாகித் திருவருட்குறிப்பினை உணர்த்தி நின்ற "போகமார்த்த பூண்முலையாள்...அண்ணல் பரமேட்டி" என்ற கருத்தினை உட்கொண்டு அதனைத் திருவுளங் கொண்டு துதித்து **வணங்கி** எரியினிலிடும்போது பிள்ளையார் அருளிய "தளிரிள வளரொளி" என்ற பதிகத்தின் **குறிப்பும்** கருத்தும் உரைப்பது இத்திருப்பாட்டு.

நன்மை...எடுத்தே - "போகமார்த்த என்னும் பதிகத்துக்குரிய திருநள்ளாற்று **நாதர்** நன்மையைத்தருவார் என்று, கையிற் கொண்ட அவ்வேட்டை எடுத்து" என்பது இராமநா**தச்** செட்டியா ருரைக்குறிப்பு; இப்பொருளில் **நாதன் நன்மையுய்க்கும்** என்று கூட்டி **உய்க்கும்** என்பதனை வினைமுற்றாக்கி உரைத்தனர்.

என்னை ஆளுடை ஈசன்றன் நாமமே என்றும் மன்னும் மெய்ப்பொருளாம் - அவரே என்னை ஆளாக உடைய இறைவர்; அவர் நாமமே **மெய்ப்பொருள்**; அத் திருநாமமே இவ்வேட்டினில் எழுதியுள்ளது.

நன்மையுய்க்கும் - "நற்றிறமுறு" (11) என்ற பதிகம் காண்க.

மெய்ப்பொருளாம் எனக் காட்டிட வன்னிதன்னில் ஆக என - இவ்வாறு அந்நாமமே மெய்ப்பொருள் என்பதை "மன்னுதம் பொருட்கருத்தின் வாய்மை - தீயின் வேவுறாமையாற் காட்டுக" என்று ஒட்டிய அமணர்க்குக் காட்டவேண்டில் இது வன்னியில் வேவாதிருத்தல் வேண்டும்; அவ்வண்ணமே ஆக என்று கருதி ஆணையிட்டு; "நளிரிள வளரொளி மருவு**நள் ளாறர்தந் நாமமே - எரியிடிலிவைபழுதிலை - மெய்ம்மையே**" (1) என்று பதிகப் பாட்டுத்தோறும் நள்ளாறரது (பதிகத்து நாதன்) நாமமே எரியில் இட்டால் பழுதில்லையாம்; இது மெய்ம்மை; (சத்தியமாகலான்) நிலைபெற்ற சத்துப் பொருளாகலான் - என்று ஆணையிட்டு அருளுதல் காண்க.

பதிகத்து **நாதன்** - "நள்ளாறர்" (பதிகம்); **நாமமே** - "நள்ளாறர்த நாமமே" (பதிகம்); **என்றும் மன்னும் மெய்ப்பொருள்** - "மெய்ம்மையே" (பதிகம்); "மன்னும் தம்பொருட் கருத்து வாய்மை" (2675); **வன்னி தன்னிலாக** - "எரியினிலிடிலிவை பழுதிலை" (பதிகம்).

"தளிரிள வளர்ஒளி" பாடி - தளிரிள வளரொளி என்று தொடங்கும் பதிகத்தைப் பாடி; முதற் குறிப்பால் வந்த ஆகுபெயர்; இது சரித வரலாற்றின் இப்பதிகத்துக்குப் பேராதரவாகிய அகச்சான்று; பிள்ளையார் செய்த சமண வாதம் பற்றிப் பலபடப் பிறழ்வுணர்ச்சி கொண்டு ஆராயும் ஆராய்ச்சியாளர் இதனையும்மேல் இதுபற்றிக் கூறுவனவற்றையும் சிந்தித்துத் தம் தவறுகளை உணர்வார்களாக. பதிகக் குறிப்புக்கள் பார்க்க.

பாடித் - தீயினில் - இட்டார் - என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. பாடி இடுதல் என்னை? எனின்; "அஞ்செழுத் தோதினர் ஏறினர் தட்டில்" (544); "அண்ணலா ரஞ்செழுத் தோதிப், பாற்ற டம்புனற் பொய்கையின் மூழ்கினர் பணியால்" (1635) என்றமையும் ஆண்டுரைத்தவையும் கருதுக. ஒரு பெருவாதத்தில் ஒட்டிப் புகுகின்றாராதலின் புகும்போது

2683. செய்ய தாமரை யகவித ழினுமிகச் சிவந்த
கையி லேட்டினைக் கைதவன் **பேரவை காண**
வெய்ய தீயினில் வெற்றரை யவர்சிந்தை வேவ
வைய முய்ந்திட வந்தவர் மகிழ்ந்து**முன்னிட்டார்.** 785

சிவநாம மோதிப்புகுதல் உயர்ந்தோர் மரபும் முறையுமாம்; ஆயின் ஈண்டுத் திருவைந்தெழுத்தை ஓதாததென்னையோ? எனின், ''அஞ்செழுத்தி னுமத்தான்காண்'' என்றபடி சீபஞ்சாக்கரமும் சிவ **நாமமே**யாம். இங்குப் பிள்ளையார் போற்றிப் புகுந்தது நாமமேயாம் என்றது கண்டுகொள்க. சிவநாமம் பொதுவினிற் போற்றாது நள்ளாறர் நாமம் போற்றியது உதயமான நலம்பயக்கும் பதிகத்தினுதன் என்றதனாலும்அஃதே தம்மையாளுடைய ஈசன்றன் நாமமே என்றதனாலுமாம்.

இங்குச் ''சிவநாமமே என்றும் நிலையான மெய்ப்பொருளாகு மென்பதைச் சமணருக்குங் காட்டும்படி இவை அக்கினியி லிடப்படுமாயின் பழுது இல்லை; இது சத்தியமென்னுங் கருத்தையுடைய தளிரிள வளரொளி என்னும் பதிகத்தைப் பாடி வன்னியிற் புகுதுக என்று கூற'' என்பது இராமநாதச் செட்டியா ருரைக்குறிப்பு. இவ்வாறன்றி, **என்றெடுத்தும்** எனப் பாடங்கொண்டு, என்று எடுத்தும், - நாமமே என்று கூறியும் - பாடி என்று உரைகொள்வர் ஆறுமுகத் தம்பிரானுர். *784*

2683. **(இ-ள்)** செய்ய... ஏட்டினை - செந்தாமரை மலரின் அகவிதழினும் மிக்க சிவப்பு வாய்ந்த கையிற்கொண்ட அந்த ஏட்டினை; கைதவன் பேரவை காண- பாண்டியனது பெரிய அரசவை காணும்படி; வெற்றரையவர் சிந்தை வேவ- ஆடையில்லாத அரையினையுடைய அமணர்களின் மனங்கள் வெந்தழியும்படி; வையமும் உய்ந்திட வந்தவர் - உலகம் உய்யும்படி வந்தவராகிய. (கவுணியர் தலைவர்); வெய்ய தீயினில் - வெப்பமிக்க தீயினிடத்தில்; மகிழ்ந்து முன் இட்டார் - மகிழ்ச்சியுடனே முன்னர் இட்டருளினர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) செய்யதாமரை... சிவந்த - செய்யதாமரை - செந்தாமரை; செந்தாமரைப் புறவிதழும் சிவப்புநிற மிக்கன; அதன் அகவிதழ் அவற்றினும் மிகச் சிவப்புடையன.

மிகச்சிவந்த - பிள்ளையார்திருக்கைகள் அவ் வகவிதழினும் மிகச் சிவந்தன;என்று இவ்வாறு சிவப்பு ஒன்றற்கொன் றேற்றமாக் கூறியது உவமைநயம்;இங்கு நிறம் ஒன்றேபற்றிக் கூறினுரேனும் இனம்பற்றி மென்மைப் பண்பும் மெய்யும் உருவும்பற்றியும் உவமை பொருந்தக் கொள்க; சைவ மெய்த் திருவாகிய திரு நீற்றினை வழங்கிய நிலையினுல் பயன்பற்றியும் உவமங் குறிக் கொள்க.

கையில் - கையில் கொண்ட ''கைத்தலத்திடைக் கொண்டனர்.'' *(2681).*

கைதவன் பேரவை காண - ''திருந்தவை முன்னர் வெப்புறுந் தழலமைக்கென'' அரசன் ஏவினமையால் *(2677)* அந்தப் பேரவை முழுதும் காணும்படி என்க.

***தீயினில்* - இட்டார்** என்று கூட்டுக; **சிந்தை வேகலாவது** - தீ வாதில் **வரும்** தோல்வியினால் அவர்களது சிந்தை கரிந்தொழிய. **ஆகஎன** என்பது பாவனை; **பாடி - என்பது** மந்திரம்; **இட்டார்** என்பது கிரியை - என மூன்றும் கொள்க.

வையம் உய்ந்திட - உண்மைத் தெய்வத்தன்மையின் நிலை கண்டுணர்ந்து, உலகம் **உய்ய வந்தவர்** - அவதரித்தவர்; பாண்டிநாடுய்ய அதனால் உலகுய்ய அந்நாட்டில் எழுந்தருளி வந்தவர் என்ற குறிப்புமாம்.

மகிழ்ந்து - நள்ளாறர்தம் நாமமே; எரியில் பழுதுபடாது மெய்ம்மையிது **வென்று** காட்டி உலகுக்குப் **போகம்** கொடுக்கும் என்றுணர்ந்துகொண்டாராதலின் மகிழ்ந்தனர்; **அமணர்** இவ்வாறன்றிக் ''கவலையாம் உணர்வினால், நையுநெஞ்சினராகியே நடுங்கி நின்றிட்டார்'' **(2685)** என்பது காண்க; தெய்வத்தன்மையின்றிக் கற்பித்துப் புனைந்த பொய்யும் வஞ்சனையுமாதலின் அவர் நடுங்கினர் என்க.

முன் - அமணர் இடுவதற்கு முன்பு; பொருணிலையின் வாய்மை பெற்றுடையா ராதலின் மகிழ்தலும், அவரின் முன்னரே இடுதலும் ஆயிற்று. **785**

திருநள்ளாறு

திருச்சிற்றம்பலம் — திருவிராகம் - பண் சாதாரி

தளிரிள வளரொளி தனதெழி றருதிகழ் **மலைமகள்**
குளிரிள வளரொளி **வனமுலை யிணையவை குலவலின்**
நளிரிள வளரொளி மருவுநள் **ளாறர்தந் நாமமே**
மிளிரிள **வளரெரி யிடிலிவை பழுதிலை; மெய்ம்மையே.** (1)

சிற்றிடை யரிவைதன் **வனமுலை யிணையொடு செறிதரு**
நற்றிற முறுகழு மலநகர் ஞானசம் பந்தன
கொற்றவ னெதிரிடை யெரியினி லிடவிவை கூறிய
சொற்றெரி யொருபது மறிபவர் துயரிலர் தூயரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—வந்து நேர்ந்து கையிற்கொண்ட திருநள்ளாற்றுப் பதிகம் எழுதிய இத்திருவேடு திருநள்ளாறர்தம் நாமமே பாட்டுக்கள்தோறும் கொண்டுள்ளது; மலைமகள் வனமுலையிணையொடு குலவுதலால் எரியினில் இடில் இவை பழுதிலை. இது மெய்ப்பொருள். அரசன் எதிரில் இவ்வேட்டினை எரியினில் இட இதனைப் போற்றினேன் - என்பதாம்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:—(1) இளவளர் என்று நான்கடியினும் சொற் பொருட் பின் வருநிலையாய் வைத்தும் தளிர் - குளிர் - நளிர் எனக் குளிர்ச்சிபொருந்த வைத்தும் கூறியது ஏட்டினையிடும் எரியினைக் குளிர எண்ணிய திண்மையுணர்வு; நீற்றறையாகிய தீயினடுவுள் நின்ற அரசுகள் அதனை மதி - தென்றல் - பொய்கையாகிக் குளிர்ந்த திருவடிநீழலாக உணர்ந்த திண்மையினை இங்கு நினைவுகூர்க; **மலைமகள் - வனமுலை குலவலின் - ''நள்ளாறர் நாமம் -** போகமார்த்த பூண்**முலை**யாள் தன்னொடும் பொன்னகலம், பாகமார்த்த பைங்கண்

வெள்ளேற்றண்ணல் பரமேட்டி'' என்ற அப்பதிகத்தின் வந்துநேர்ந்த முதற்பாட்டின் பகுதியிற் றோன்றிய திருவருட் குறிப்பு. **குலவலின் - நாமமே - எரியிடில் - பழுதிலே** - என்றதன் கருத்தை ஆசிரியர் மேல்வரும் ''இட்ட ஏட்டினில்'' (2684)ல் விரித்தருளுமாற்றால் அறிக; **நளிர்** - குளிர்ச்சி; **மெய்ம்மையே** - அமணர் காட்ட வேண்டுமெனக் கூறிய **வாய்மை; நாமமே வாய்மை** என்றதாம். **பழுதிலே** என்பது மெய்ம்மை - சத்தியம் என்று ஆணை தந்ததாகக் கூறலுமாம். **முலை குலவலின் - நாமமே எரியிடில் பழுதிலே மெய்ம்மையே** என்பன பதிகம் எல்லாப் பாட்டுக்களிலும் அறுதிபெறக் கூறியருளப்படுதல் காண்க;—**(2) நாதம்** - அருவத் திருமேனிகள் நான்கனுள் ஒன்று; அவை சிவம் சத்தி நாதம் விந்து என்பன. **மீதமது** - மேம்பாடுடையது;—**(3) கலவல் - கலத்தல்; கூடுதல்; நட்டுறு** - நடுதல் பொருந்திய; **இட்டுறு** - இதற்கென்று வளர்க்கப்பட்ட;—**(4) மைச்சு - மைத்து** என்பதன் போலி; மை தீட்டிய; மை பொருந்திய; **நச்சு அணி** - நஞ்சு என்பது எதுகை நோக்கி வலிந்து நின்றது; **மெச்சு** - ஏத்திப் புகழும்;—**(5) குளிர் நண்ணிய** என்க. **நண்ணிய புனல் புகும்** - வெள்ளம் பரந்தபோது அப்புனல் தானே வயல்களுட் புகுதற்கிடமாகிய என்றலுமாம்;''வயல்புகுபொன்னி''; **விண்ணியல் எரி** - தேவர்களுள் ஒருவனாகிய தீக்கடவுள். ''காயும் வெவ்வழற் கடவுளும்'' (2678);—**(6) சூதுறு - சூதம்** - மா; மாங்கனி போன்ற; மெய்பற்றி வந்த உவமம்; **சூது** - சூதாடுவட்டு; **உறுதல்** - போலுதல்; உவமவுருபு உருவு பற்றிய உவமம் என்றலுமாம். **மீதுறுமெரி** - மேல்நோக்கி எரியும் இயல்புடைய தீ; மேம்பட்ட பொருளை வேவாமல் எடுத்துக்காட்டும் எரி என்ற குறிப்பும் காண்க;—**(7) நகுதலே** - இறைவர் சிரத்திற்றாங்கும் நகுசிரம்;—**(8) மன்னிய - வளர் ஒளி** - நிலைபெற்று வளரும் ஞானவொளி; **தன்னியல்** - (தசமுகன்) தன்னியல்பே - ஆணவ இயலே - மிக்க; தன் (இறைவரது) இயல்பினால் வேறு முயற்சியின்றி என்றலுமாம்; **மின்னியல்** - விளக்கம் செய்யும்;—**(9) கான்முக மயில்** - கானில் வாழும் மயில்; **கான்** - காடு; முல்லைநிலம். குறிஞ்சியு முல்லையுங் கலந்துள்ள திணையுமாம்; **மேன்முக எரி** - ''மீதுறு மெரி'' (6) என்ற கருத்து; மேன்மையைக் காட்டும் முகமுடைய என்ற குறிப்புமாம்;—**(10) அத்திரநயனி - அத்திரம்** - வேல்; வேல்போன்ற கண்ணையுடையவள்; **பொய் பெயரும்** - பொய்யைப் பெயர்விக்கும் - போக்கும். **இது சரித வரலாற்றுக் குறிப்புடைய அகச் சான்று;—(11) நற்றிறமுறு - சொல்** - ''நன்மையுய்க்கு மெய்ப்பதிகம்'' (2682); **கொற்றவ னெதிரிடை எரியினி லிடவிவை கூறிய** - பதிகம் அருளிய காலம் - இடம் - வரலாறு - குறிப்பு - கருத்து முதலிய சரித நிகழ்ச்சியெல்லாம் குறிக்கும் **அகச்சான்று.**

குறிப்பு:—இப்பதிகம் மதுரையில் அரசன் எதிரில் வேறு தலமாகிய திருநள்ளாற்றினைப் பாடிய பதிகம். முன்பிரமபுரத்தைப் பாடியதும் பின்னரும் பாடுவதும் போலவும் காண்க; ''நள்ளாறுடைய ஈசனே - ஆல வாயின்கண் வந்தமர்ந்த வாறென்கொல் சொல்லாய்'' என்ற கருத்துடன் பின்னர்த் திருநள்ளாற்றில் அருளும் வினாவுரை - திருநள்ளாறும் திருவாலவாயும் - என்ற (நட்டபாடை) பதிகத்தாலும் சரித வரலாற்றின் இப்பகுதி **அகச்சான்றுடன் உறுதி பெறுதல்** காண்க.

2684. இட்ட வேட்டினி லெழுதிய செந்தமிழ்ப் பதிகம்
மட்டு லாங்குழல் வனமுலை மலைமகள் பாகத்
தட்ட மூர்த்தியைப் பொருளென உடைமையா லமர்ந்து
பட்ட தீயிடைப் பச்சையாய் விளங்கிய தன்றே. 786

2684. **(இ-ள்)** இட்ட... பதிகம் - *மேற்கூறியவாறு பிள்ளையார் தமது கையினால்* **தீயிடை** *இட்ட ஏட்டிலே எழுதப்பட்ட திருநள்ளாற்றைப் போற்றும் செந்தமிழ்த் திருப்பதிகம்*; *மட்டுஉலாம்... உடைமையால் - மணம் வீசுகின்ற கூந்தலையும் அழகிய முலைகளையுமுடைய மலைமகளாராகிய உமையம்மையாரை ஒரு பாகத்திற் கொண்ட அட்ட மூர்த்தியாகிய சிவபெருமானையே பொருளாகக் கொண்டுள்ள தன்மையாலே; அமர்ந்து பட்ட* - பொருந்திக் *கிடந்த; தீயிடை... அன்றே - தீயினிடையே வேவாதிருந்ததனோடு பச்சையாயும்* அப்பொழுதே விளங்கிற்று.

(வி-ரை) பதிகக் குறிப்பைக் *காட்டி, அது திருவருட் குறிப்பின் பொருந்தியமையால் ஏடு வேவாமைக்குரிய காரணத்தை ஆசிரியர் எடுத்துபதேசித்தபடி.*

இட்ட ஏடு - *பிள்ளையார் தீயினில் இட்ட ஏடு.*

பதிகம் - அட்டமூர்த்தியைப் பொருளென உடைமையால் - பதிகம் - சொல்; **அட்டமூர்த்தி** *அதனாற் குறிக்கப்படும் பொருள்;*''பதிகத்தின் நாதன்''; ''ஈசன்றன் நாமமே'' *(2682)* என்றவையும் இக்கருத்து; பொருளினை உட்கொண்டமையாற் சொல்லும், அதனை மேற்கொண்டதனால் அஃது எழுதப்பட்ட ஏடும் அத்தன்மைப்பட்டு வேவாதிருந்தன என்பது.

அட்டமூர்த்தி - ''நிலனீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன், புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்'' (திருவா.தோணோ-5) மண் - நீர் - தீ - காற்று - வான் என்ற ஐம்பூதங்களும் ஞாயிறு - மதி- உயிர் என்ற மூன்றும் ஆக எட்டும் இறைவரது திருமேனி என்ப. *(''புலனாய மைந்தன்'' என்றதனால் ஏனைய ஏழும் அசித்து என்றபடி.)*

அட்டமூர்த்தியைப் பொருளென உடைமையால் - பச்சையாய் விளங்கியது - *என்றதென்னை?* எனின் கூறுதும்: முன்கூறியபடி எட்டு மூர்த்தங்களுள் எரி - தீ - யும் ஒன்று; மூர்த்தம் - மூர்த்தி - என்பது உடல்; அவ்வுடலுள் உயிராய் இருப்பவன் மூர்த்திமான்; உயிரையன்றி உடலுக்குச் செயலில்லை; உடல் தனித்தியங்காது; அரசன்முன் அமைத்த **எரி உடலும், அதனுள் இட்ட ஏடு அவ்வெரியுள்ளிட்ட எட்டினையும் உடலாக்கொண்ட மூர்த்திமானாகிய உயிர்.** ஆதலின் உடலினுள் உயிர் பொருந்தியவாறு இவ்வேடு அமர்ந்துபட்டுப் பச்சையாய் விளங்கியது. உடல் உயிரை அழிக்கமாட்டா தன்றே? ஆனால் ஏடு இடுவதன் முன்னரும் எரியாகிய உடல் அவ்வுயிரை இன்றி யமையாமல் உட்கொண்டிருந்ததன்றே? எனின், அஃதொக்கும். முன்னரும் அத்தீ உயிருடன்தானிருந்தது. இறைவனது நிறைவு யாண்டுமுள்ள தன்றே? ஆயின் பின்னர்ப் பதிகம் எழுதிய ஏடு, அத் தீயாகிய ஓருடம்பு அளவின் மட்டிலன்றி எட்டும் உடம்பாக உடைய மூர்த்தியை உட்கொண்டது. ஆதலின் சத்தாந் தன்மை மிகப்பெற்று எரியினில் வேவாமை மட்டுமன்றிப் பச்சையாயும் விளங்கிற்று என்க. இன்னும், அவ் வெட்டுமூர்த்தங்களுள் நீரும் ஒன்று, காற்றும்

ஒன்று; எனவே தீயும் நீரும் காற்றும் உடன்கொண்ட மூர்த்தமாகிய அட்டமூர்த்தத் தொகுதிப்பொருள் உட்புகுந்தது. அஃது ஊழித்தீயினையும் ஊழிநீரினையும் ஊழிக்காற்றினையும் உள்ளடக்கியது; அவ்வாறாயின் இத்தீயினை அவித்தல் வேண்டுமே எனின், அதனுள் தீயுமிருத்தலின் அவிந்திலது;இத்தீயினை அடக்கவல்லது அத் தீ; ''நெருப்பையு மெரிக்கும்'' (திருப்புகழ்); ஊழித்தீயை உள்ளடக்கிய தீயாகிய மூர்த்தம் இருக்கவே அங்கங்கும் தீயின் வடிவம் அளவுபடுத்தப்பட்டு நிகழ்வது அவ் வட்டமூர்த்தியின் செயல்; ''அங்கி மிகாமைவைத் தானுடல் வைத்தான்; எங்குமி காமைவைத் தானுல கேழையும், தங்கிமி காமைவைத் தான்றமிழ்ச் சாத்திரம், **பொங்கிமி காமைவைத் தான் பொருடானுமே**'' (பாயிரம்-87) என்று திருமூலர் 'திருமந்திரம் இதனை விளக்குதல் காண்க.

மலைமகள்பாகத்து அட்டமூர்த்தியைப் பொருள் என உடைமையால் - எரியினில் ஏடு இடவேண்டியகாலைப் ''போகமார்த்த பூண்முலையாள் தன்னொடும் பொன் அகலம் - பாகமார்த்த - பரமேட்டி'' (பதிகம்) என்ற பாட்டு எழுதிய ஏடு வந்து நேர்ந்தது; அதனை எரியிலிடில் பழுதிலை என்பது திருவருட்குறிப்பென அருள் வழியே உணர்ந்தனர் பிள்ளையார்; அதனால் அவ்வுணர்ச்சி கொண்டு ''முலையாள் பாகமார்த்த பரமேட்டி'' என்பதற்கு ''**மலைமகள் முலையிணையவை குலவலின் - எரியிடில் பழுதிலை** என்று உரைகூறிப் போற்றி உலகுக்குக் காட்டியருளினர்; அவ்வாறு பிள்ளையார் காட்டிய நியாயத்தினைப் பின்னும் விளக்கி **முலை குலவலின்** என்பதற்கு **முலைமலை மகள் பாகத் தட்டமூர்த்தியைப் பொருளென உடைமையால்** என்று விரித்துரை செய்து காட்டியருளினர் ஆசிரியர். மலைமகளும் இறைவரது திருமேனி என்பது.

போகமார்த்த பூண்முலையாள் - பரமேட்டி - (திருவருட் குறிப்பு); **மலைமகள் முலையிணை யவை குலவலின் நள்ளாறர் நாமமே** - (பிள்ளையார் அருளியது); **மலை மகள் பாகத் தட்டமூர்த்தியைப் பொருளென உடைமை** - (ஆசிரியர் உரை).

பதிகம் - தீயிடைப் பச்சையாய் விளங்கியது - பதிகம் எழுதிய ஏடு விளங்கியது என்பது கருத்து. இங்கு வாதத்தில் ஒட்டிய பொருளாவது தியினை ஏவல்கொண்டு சுடாதிருக்கப் பண்ணுதலன்று;அதனுள் இட்ட ஏடு பழுதிலாது நின்று உண்மை காட்டுதலேயாம்; தீயினை ஏவல்கொள்ளுந் தன்மை முன்னரே பிள்ளையார் ''**சுடர் - பையவே சென்று பாண்டியற் காகவே''** எனப் பணித்தமையாற் போந்து அறிய நின்றது; அதனை உட்கொண்டுபோலும் அமணர்களும் ''மன்னுதம் பொருட் கருத்தின் வாய்மை தீட்டி மாட்டினால், வெந்நெருப்பில் வேவுறாமை வெற்றி'' (2675) என்று ஒட்டினர்; அங்கித்தம் பனைவல்லார்க் கனல்சுடா தாகும்'' (சித்தி-10-5) என்றபடி தீயின் வேதனை தம்மாட்டுச் சாராது செய்தல் சில சாதனைகளால் ஆகும். இது சமணர் அறிந்த கலைகளுள் ஒன்று என்பது ''அதிசயமன்றிது முன்னை யமண் சமயச் சாதகத்தா, லிதுசெய்து பிழைத்திருந்தான்'' (1367) என்று பாடலிபுத்திர அமணர், நீற்றறையில் அரசுகள் பழுதுறாது பிழைத்திருந்தபோது பல்லவனுக்குச் சொன்னதனா லறியலாம்; எனவே அசேதனமாய் எரியுட்பட்டமாத்திரையிற் பழுதுபடுவதாய் உள்ள ஏடு வேவாமை அதனுள் எழுதிய பொருளின் வாய்மைத் தன்மையாகிய வலிமையாலாவது என்று காண்பது அவர் கருத்து; அதனால் அவ்வலிமை ஏட்டினிற் காணவேண்டுவதாயிற் றாதலின் தீச்சுடாது குளிர்ந்ததென்று தீயின் செயலாகக்கூறாது பதிகம் - ''அட்டமூர்த்தியைப் பொருளென

உடைமையின் தீயிடைப் பச்சையாய் விளங்கிய'' தென்று, பதிகப் பொருளின் **செயலாகக்** கூறினர் என்க.

ஆயின் ஈண்டுத் தீயிற் பழுதுபடாது நிற்கும் வாய்மையின் **வலிமையினை** அவ்வேட்டினில் எங்ஙனம் கண்டுகொண்டருளினர் எனின், பாட்டினைக் கண்டனர்; **அதனுள்** ''பூண்முலையாள் பாகமுடைய பரமேட்டி'' - என்ற சொற்றொடரைக் கண்டனர்; அதனுள் **அதன்** பொருளாகிய நள்ளாறனையும், அவன் அருள்முலையாளொடு கூலவலின் அட்டமூர்த்தமாகிய உடம்புடையான் என்பதனையுமே கண்டனர்; அவ்வேட்டினை அவ்வாறே கருதுதல் **(பாவனை);** அழுந்தியறிதல் (தியானம்); ஆணையிடுதல் (மந்திரம்) என்ற செயல்களை **அவ்வண்ணமாக்கினர்;** **''முலையொடு குலவலின்''** என்றது பாவனை; **நாமமே'' ''மெய்ம்மையே''** என்பன **தியானம்;** **''எரியிடிலிவை பழுதிலை''** என்பது ஆணையாகிய மந்திரம். என்னை ''நிறைமொழி **மாந்த** ராணையிற் கிளந்த, மறைமொழி தானே மந்திர மென்ப'' (தொல்). அவ்வேட்டினை **எடுத்து** இவ்வாறு பதிகப் பதினொரு பாட்டாலும் பதினொரு முறை தியானித்தும் **அபிமந்திரித்தும்** அருளுருவாக்கிக் கொண்டதனால் அவ்வேடு அத்தன்மையே பெற்றதென்க. ''**கண்டதொரு மந்திரத்தாற்** காட்டத்தி லங்கிவே, றுண்டல்போ **னின்றங் குளதாமாற்** - கண்டவுருத், தானதுவா யன்றுனன் **ருனது வாய்த் தோன்றுனே, தானது வாய்க் காணுந் தவர்க்கு**'' (12 - 3 - **அதி** - வெண்பா) என்று தாபரத்தின்கட் சிவவழிபாடு செய்க என விதிக்கும் சிவஞானபோத உண்மை ஈண்டுச் சிந்தித்துணரற்பாலது; இவ்வாற்றாற் சிவம் வெளிப்பட்டமையால் அவ்வேடு சிவனுருவாகிய எரியிடை **அமைந்துபட்ட**தென்க. மரத்தை மறைத்தது மாமத யானை... பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே'' (திருமந்- 8- பராவத்தை-23) என்றபடி இங்கு நள்ளாறர் நாமமேயாகிய பொருளியல்பே வெளிப்பட்டு, எழுத்தாகிய சொல்லும் ஏடும் தோற்றப்படாது நின்றன.

மட்டுஉலாம் குழல் - இயற்கையாகிய மணத்தையுடைய குழல்.

பட்ட தீயிடை என்று வேறு பிரித்து, வளர்க்கப்பட்ட என்றுரைப்பாருமுண்டு. **அன்றே** - அசையென் றுரைக்குவாருமுண்டு.

இனி, இப்பாட்டிற்கு மேற்கூறியவாறன்றி, ''எரி அட்டமூர்த்தங்களுள் ஒன்று. அவ்வெரி ஆண்டவனுருவம்; இவ்வுண்மையை அநுபூதியில் உணர்ந்து திருவருள் ஞானம் பெற்ற பெரியாரின் திருவாக்கைக் கொண்ட திருப்பதிகம் எங்ஙனம் அழிந்துபடும்?'' என்று கருத்துரை கொள்வாருமுண்டு; அருள்ஞானம் பெற்ற பெரியாரின் திருவாக்கு என்பது பிள்ளையாரது எல்லாப் பதிகங்களுக்கும் ஒக்கும்; அதனால் இப்பதிகத்திற்குச் சிறப்பியல்பு ஒன்றுமில்லை. ஈண்டு எரியில் பழுதில்லாதிருந்தது பிள்ளையார் திருவாக்கு என்பதனாலன்று; ''மலைமகள் முலையிணை குலவலின்'' - ''அட்டமூர்த்தியைப் பொருளென உடைமையால்'' - என்று பிள்ளையார்தாமும் ஆசிரியரும் உணர்த்தியருளினமை கொண்டும், இவ்வாற்றானும், பிறவாற்றானும் இக்கருத்துரை பொருந்தாமை கண்டுகொள்க.

இனி, ஈண்டு இத் திருப்பாட்டின் கீழ், விசேட ஆராய்ச்சியுரை எனப்பட்டுத், திரிபுணர்ச்சியானும், ஒருசார்புணர்ச்சியானும், உண்மை நூலின் நுட்பவுணர்சி பெருமையானும், வேண்டப்படாதனவும், சைவசித்தாந்தத்திற்கு முரண்பாடாயினவும், மயங்க

வைப்பனவுமாகிய பல பொருள்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அவை பொருத்த மற்ற ஆரவார நீர்மையவாகிய வெற்றுரைகளே என்று வேறு ஒதுக்கத்தக்கனவே யாயினும், சைவநூல்களின் உண்மைத் திறத்தின் அநுபவ மில்லாதாரை மயங்கவைக்குமாதலின் அவை பற்றி ஈண்டுச் சில கூறுதல் தகுதியாகும்; அவர் கூற்றுவன:— ''உயிர்களைத் திருஞானத்துடன் சம்பந்தப்படுத்தும் ஒருவர் குரு எனப்படுவர் - திருஞான சம்பந்தர் உலகுக்கு ஒரு பெருங் குருவாக வீற்றிருப்பவர். அவருக்குப் பல மொழிகளில் பல பெயர்கள் உண்டு. மொழியளவில் நிற்போர் அவரை வெவ்வேறு புருடராக உணர்கிறார்; உண்மைஞானங்கைவரப் பெற்றோர்க்கு அவர் ஒருவரே என்பது விளங்கும்.

திருஞான சம்பந்தரைச் சூழ்ந்து அவர்தம் ஏவல்வழி நிற்கும் குருமார் பலர் வீற்றிருக்கிறார்; உலகில் எங்கெங்கே திருவருள் நெறிமீது மாசு படிகிறதோ அங்கங்கே அம் மாசினைப் போக்கித் திருவருள் நெறியை விளங்கச் செய்யத் திருஞானசம்ப்ந்தர் போதருவர்; இல்லையேல் தம்மைச் சூழ்ந்துள்ள குருமாருள் ஒருவரை அனுப்புவர்'' - என்றும்,

''ஆண்டவன் ஒருவன்; அவன் அருள்நெறியும் ஒன்றே; அவ்வொன்று ஒவ்வொருபோது ஒவ்வொருவிதப் பெயர் பெறுவதாகிறது; **அப்பெயர்கள் பல சமயங்களாக ஆராய்ச்சி யில்லாதவர்களாற் கொள்ளப்படுகின்றன**; பலபட்ட பெயர்களை நீக்கிப் பொருளைப் பார்த்தால் ஒருமை புலப்படுமேயன்றிப் பன்மை புலப்படாது'' - என்றும்,

''திருஞானசம்பந்தர் வருகைக்குக் காரணமாயிருந்தது அந்நாளிற் சமணமென்று பெயர் பெற்றிருந்த திருவருள் நெறியில் சேர்ந்த மாறுபாடேயாகும்;ஆதிநாதராகிய விருஷபதேவர் கண்ட அருள்நெறி தோன்றியவாறே இயங்கியிருப்பின் திருஞான சம்பந்தர் வருகைக்கு இடம் நேர்ந்திராது'' - என்றும்,

''...ஆதிஜைனத்திடைச் சிறப்பாகத் திகம்பர ஜைனம் என்றும் சுவேதாம்பர ஜைனம் என்றும் இரண்டு பிரிவுகள் தோன்றின. திகம்பரம் இயற்கையை வெறுப்பது; பெண்ணை இழிவாகக் கருதுவது; பெண் பிறவிக்கு வீடுபேறில்லை; ஆண்பிறவி தாங்கிய பின்னரே வீடுபேறு எய்தும்... ...இவை ஆதிஜைனத்துடன் மாறுபட்டவை; இதற்கு உடன்படாதார் சுவேதாம்பரர்கள்;... திகம்பரர் இயற்கை நெறியினின்றும் வழுவினார்கள்; பெண்ணை இழிவாகக் கருதினார்கள்; பெண்ணை வெறுத்தல் பெருந்துறவு என்று கொண்டார்கள்; இவர்களால் இயற்கை நெறிக்கும் பெண்ணுலகுக்கும் பெருந்துன்பம் நேர்ந்தது... இஃது இறைநெறிக்குக் கேடு நேர்வதாகும்; இயற்கை இறையின் போர்வை அஃதாவது உடல்; அவ்வியற்கையை வெறுத்துத் துறப்பது இறையை வெறுத்துத் துறப்பதாகும். உலகினிலியற்கையை யொழிந்திட், டற்றவர்க் கற்ற சிவனுறை கின்ற வாலவா யாவது மிதுவே'' (திருஞான சம்பந்தர்)'' என்றும்,

''இயற்கையை உற்று நோக்கினால் அஃது ஆண் பெண் மயமாயிருத்தல் விளங்கும்... இயற்கை நெறிக்கும் பெண்ணுலக்குக்கும் இழுக்கு நேரும் இடங்களில் அருள்நெறி செவ்விய முறையில்இயங்காது... தென்னாட்டில் திகம்பரத்தால் இயற்கை நெறிக்கும் பெண்ணுலகுக்கும் இழிவு நேர்ந்தமையால் அவ்விழிவைப் போக்கவே திருஞான சம்பந்தர் தோன்றினார்; அவர் அருள்நெறியாகிய ஆதி ஜைனத்தை அழிக்கப்போந்தா ரென்பது ஆராய்ச்சியில்லாதார் கூற்று''

என்றும், ''திருஞான சம்பந்தரது திருவிரும்பூளைப் பதிகத்தில் சமண் சாக்கிய மாக்கியவாறே'' என்றதனால் சமண் சாக்கியம் ஆக்கியவன் சிவனே என்பது விளங்குகிறது; ...சமண் சாக்கியம் என்பன **அருள்நெறிக்கு வழங்கப்படும்** பல பெயர்களுள் சேர்ந்தவை. ஆகவே சிவனால் ஆக்கப்பட்ட சமண் சாக்கியம் ஒழிந்துபடத் திருஞான சம்பந்தர் முயல்வரோ?'' என்றும், ''சிவஞானம் சமணத்துக்கும் சைவத்துக்கும் பொதுவானது. சமணமும் சிவநெறி; சைவமும் சிவநெறி. சிவநெறி என்னும் அருள்நெறி ஒவ்வொருபோது ஒவ்வொரு பெயர் பெறுவது வழக்கம்'' என்றும்,... ''சிவாஹொந்தி'' (குந்தகுந்தோச்சாரியர் அஷ்டபாகும்); ''சிவசுகம'' (பூபால ஸ்தோத்திரம்); சிவகதியடையலாமே'' (சிந்தாமணி); ''சிவகதிநாயகன்'' (சிலப்பதிகாரம்); ''சிவகதியின் அமர்ந்திருந்தார்'' (மேருமந்தர புராணம்); ''மூவெயிலின் முரண்முருக்கி... நெருப்புமிழ் நெடுநோக்கினை... கொடுங் கூற்றைத் தாள்வலியின் விழ வுதைத்தனை; மூன்று கண்முனித் தலைவினை... நின்னுள்ளேநீ யொடுக்கினை... நின்னின்று நீ விரித்தனை;... ஆதி **பகவனை அருகனை**'' (திருக்கலம்பகம்) என்று சமண நூல்களுள் வருவன... என்றும்... இயற்கையானது ஆண்டவன் உடல்; ஆண்டவன் பெண்ணொடு கூடியுள்ள பெருந்தகை என்பது பொதுளவே திருஞான சம்பந்தர் திருப்பதிகங்கள் பாடியுள்ளார்... உலகில் பெண் ஆண் கூட்டுறவு என்னும் பேரறம், இயற்கை - இறையின் வழியது என்பது திருஞான சம்பந்தர் உள்ளக்கிடக்கை;... ''பொறியையம் புலத்தின் வேட்கைநோய் தீர்க்கும் மருந்து...'' என்றும் இவ்வாறு வருவன பலவாம்.

இவற்றின் பொருத்தங்களைச் சிறிது ஆராய்வாம்: (1)திருஞானசம்பந்தர் என்பது மூலகுரு - இறைவர் - என்ற காரணப்பெருள்பட மயங்கி யறியவைத்தது பிழை; (2) பின்னர் அப் பெயர்ச்சொல்லையே ஆளுடைய பிள்ளையார் பெயராக வைத்துப் பேசியது மயங்கவைத்தலாம்; (3) அருள்நெறிக்கு மாசு படியும்போதெல்லாம்அதனைப் போக்கத் திருஞான சம்பந்தர் வருவர் அல்லது அவரைச் சூழ்ந்துள்ள குருமாருள் ஒருவரை அனுப்புவர் என்றது சைவசமய உண்மையாகிய சித்தாந்தத்திற்கு முற்றும் மாறுகிய பெரும் பிழை; (4) அருள்நெறிக்கு மாசுபடியாது. அவ்வாறு மாசுபடிதல் சைவத்துள் இல்லை; திருஞான சம்பந்தர் என்பது ஆதி குருவாகிய ஞான இறைவர் என்று கொண்டால் அவருக்கு நம்போல்உலகில் வரும் அவதாரநிலை பேசுதல் சைவ சமயக் கோட்பாட்டுக்கு முற்றும் மாறுபாடு; வைணவ மரபில் அவ்வாறு பேசுதல் அமையும், அவர்கள் கடவுள் அவதாரம் என்னும் பிறப்பில் வருதல் அவர்தம் மரபுக் கொள்கையிற் பேசப்படுதலால்; ஏனைப் புத்தம் - கிறித்துவ முதலிய சமயங்களிலும் அஃதொக்கும்; சைவத்திற்கேலாமை யுணர்ந்துகொள்க; (5) **திருஞான சம்பந்தர்** என்ற பெயருக்கு உயிர்களைத் திரு ஞானத்துடன் சம்பந்தப்படுத்தும் ஒருவர் குரு எனப்பட்டுப் பெருங் குருவாவர் என்றது பிழை; இப் பெயர்ப்பொருளை ஆளுடைய பிள்ளையார் புராணம் விளக்குகின்றது. உலகத் தந்தை தாயர்கள் சிவஞானத்தை ஊட்ட உண்டருளியமையாலும், கலைஞான மெய்ஞ்ஞானங்களை முற்ற உணர்ந்தமையாலும் இப்பெயர் போந்ததென்பது; 1966-1967 பாட்டுக்கள் பார்க்க. இதற்கு மாறுகப் பொருள் கொள்ளுதல் பிழையும் மரபு வழூவுமாம்; அவ்வாறு கொள்ளற்கு இலக்கணமுமில்லை. ''எப்பொரு ளெச்சொலி னெவ்வா றுயர்ந்தோர் செப்பின ரப்படிச் செப்புதல் மரபே'' என்ப திலக்கணம்; (6) இறைவன் ஒருகாலத்து ஓரிடத்து வருவோனல்லன் - எஞ்ஞான்றும் எவ்விடத்தும் ஒவ்வொரு கணமும் உடனின்று உலகினைத் திருத்தி உயிர்களை மாசறுக்கின்றான் என்பது உண்மைநூற் றுணிபாம்;

(7) ஆண்டவன் ஒருவனே என்பதொக்கும்; ஆனுல் அவனருள்நெறியும் ஒன்றே என்பது சாலாது; அஃது குழறுபடையானதொரு மயக்கம்; ஆண்டவன் ஒருவனேயாயினும் உயிர்கள் பல. அவை பலப்பல பக்குவமுடையன; ஏன்? ஓரோருயிரும் ஓரோர் திறமும் பக்குவமு முடையதாம் என்னலாம்; அவ்வுயிர்களின் திறமும் பக்குவமும் நோக்கிப் பல திறப்படுவன இறைவனருளும் முறைகளும் நெறிகளுமாம்; அருணெறி முடிவில் வீடுபேருகிய ஒன்றையே கருதினும் உபாயங்களும் சாதனங்களும் மிகப் பலவாம்;அருணெறி ஒன்றே என்றும், அஃது ஒவ்வொருபோது ஒவ்வொருவிதப் பெயர் பெறுமென்றும், அப்பெயர்கள் பல சமயங்களாக ஆராய்ச்சியில்லாதவர்களால் கொள்ளப்படுகின்றன என்றும் இவ்வாறெல்லாம் பேசுதல் முழுக் குளறுபடையான மயக்கம். சமயங்கள் பலப்பல. அவை உயிர்களின் பக்குவபேதம் நோக்கி அவ்வவற்றை வழிப்படுத்த இறைவன் வகுத்தனவேயாம். ''சமய கோடிகள் எல்லாம்'' ''சைவ முதலாமளவில் சமயமும் வகுத்து'' என்பன பெரியார் திருவாக்கு. ஆதலின் சமயங்கள் எல்லாம் ஒன்று என்றும், புறத்தோற்றம் மட்டும் வேறுபடுவன என்றும் சொல்வன எல்லாம் பிழை. சைவம் எல்லாச் சமயங்களேயும் படிமுறையின் வகுத்துத்தன்னுள் அடக்குதலால் இதனுள் எல்லாச் சமயங்களும் அடங்கும்; இஃது ஒன்றினுமடங்காது. ஏனேச் சமயங்கள் தாமறிந்து சென்ற அளவில் ஒருசில உண்மைகளே மட்டும் காட்டுவன. சைவம் முழு உண்மையினேயும் காட்டும்; சமணமும், புத்தமும், இனியும் ''விரிவிலா அறிவிஞர்கள் வேருெரு சமயஞ் செய்தே, எரிவிஞற் சொன்ஞ ரேனும்'' அவையெல்லாமும் தன்னுள் அடங்குவது சைவம்; ஆனுல் அவை யெவையும் ஒவ்வோர் பகுதி மாத்திரையானன்றி முழுமையாகிய சைவமாகா; ''கண்ணிலார் பலர்குழீஇக் கொண்டு வேழ நின்றுழித்தலைப்பட்டுக் கையினுற் றைவந்து வேறுவேறு கூறு மதனிலக்கணங்க ளெல்லாங், கண்ணுள்ளா ெருவன்கண்டு கூறுமதனிலக்கணத்துள் ஏகதேசமாய்க்காணப்பட்ட டங்கு மாறுபோல, ஏனேச் சமய நூலார் தத்தஞ் சிற்றறிவுக்குப் புலனுயவாறு பற்றி அவ்வந்நூலகளிற் கூறும் பொருளியல்புக ளெல்லாம், முற்றுணர்வுடைய முதல்வனுற் செய்யப்பட்ட வேதாகமங்களிற் கூறும் பொருளியல்பின் ஏகதேசமாய் காணப்பட்டு அவற்றுளடங்கும்'' எனவும், ''நூலெனப்படுவன வெல்லாமொரு நிகரனவாதலின்றி, முதனூல், வழிநூல், சார்புநூல், பூருவபக்க நூலெனப் பல வேறு வகைப்பட்டு மேன்மேல் நூல்கள் நோக்கிக் கீழ்க்கீழ் நூல்கள் மென்மையுடையனவாம்;அவற்றுள் ஏனேச் சமய நூல்களெல்லாம் முதநூலாகிய வேதாகமப் பொருளே முழுவது முள்ளவா றுணரமாட்டாதார் அவற்றுட் சில பொருளேச் சமுத்திர கலச நியாம்பற்றி ஆண்டாண் டெடுத்துக்கொண்டு தத்தமறிவளவுக்கேற்பத் தொகுத்தும் விரித்துஞ் செய்த நூலாகலன், அவையெல்லாம் பூருவபக்க நூலெனப்படும்'' எனவும் சிவஞான சித்தியார் 8-13-14-பாட்டுக்களின்கீழ் மாதவச் சிவஞான முனிவர் கூறியவை ஈண்டுச்சிந்திக்கற்பாலன; (8) இனி, ஆதிநாதராகிய விருஷப தேவர் கண்டது மாசற்ற அருணெறி என்றும், அந்த ஆதிஜைனத்திடை சில மாசுகள் படிந்தன என்றும், அவை இயற்கையை வெறுத்துத் துறவு பூண்பதும், பெண்ணே இழிவாகக் கருதுவதும் என்றும் பலப்பல எழுதப்பட்டன; உண்மை அருணெறியாயின் அதனில் மாசு சேராது என்பது முன்னர்க் காட்டப்பட்டது; இயற்கைநெறி என்பது பொருளற்றதொரு சொற்ருெடர் வழக்காம். ''உலகினி லியற்கையை ஒழிந்திட்டற்றவர்க் கற்றசிவன்'' என்பதற்குக் கொண்ட பொருள் பிழை. உலகினிலியற்கையை ஒழிந்திட்ட டற்றவர் என்றது உலக பந்தங்களினின்று விடுபட்ட

மனமுடையோர் என்றும், **அற்றசிவன்** - அவர்க்கு அவ்வறுதலின்கண்ணே வெளிப்பட்டருளும் இறைவன் என்றும் பொருள்கொள்ளக்கிடந்து இவர்க்கு நேர்படாக உள்ள திருவாக்கு ஆகும். "யானெனதென் **றற்ற விடமே திருவடியாம்**" (குமர குருபரர்); (9) பெண் பிறவியைச் சமணர் இழித்தமையால் அதனை ஒழிக்கத் திருஞான சம்பந்தர் தோன்றினர் என்பது பொருத்தமற்ற மொழி; மகளிரிழிவு - துறவின் மேன்மை முதலியவை சைவத்திலும் பேசப்படும்; ஆண்பிறவியோ பெண் பிறவியோ இரண்டும், பிறவி என்ற அளவில் முத்திக் கிடையூறுவன; ஆண்உயிரென்றும் பெண்உயிரென்றும் வேற்றுமை உயிரினுள் இல்லை; பிறவிகளுள் ஒன்றனை உயர்த்தியும் ஒன்றனைத் தாழ்த்தியும் கூறுதலும் சைவமன்று; பெண்ணின்பெருமை பேணத் திருஞான சம்பந்தர் தோன்றியருளினர் என்பது பெரும் பிழையேயாம். பெண்ணேயாக ஆணேயாக அன்புநெறியினையே சைவம் போற்றி எடுத்தது; பெண்ணை உயர்த்திப் போற்றிய இடமுமுண்டு; தாழ்த்தி ஒதுக்கிய இடமுமுண்டு. இவ்வுயர்வு தாழ்வுகள் அன்பினைப் பற்றி எழுந்தனவேயன்றிப் பிறவியினிலை பற்றி எழுந்தனவல்ல; பிள்ளையாரது சமண வாதத்துக்கும் பெண் இழிவோ உயர்வோ என்ற இதற்கும்சம்பந்தமில்லை; சைவத்திற்குச் சமணர் சூழ்ந்து செய்த கேடுகளைப் போக்கித் திருநீற்றை ஓங்க ஆக்கித் தாபித்தலே இவ்வாதங்களின் கருத்தாதல் காண்க; (10) சமணத்தை அழிக்கத் திருஞான சம்பந்தராவது, அரசுகளாவது வேறு எந்தச்சைவ ஆசாரியாராவது முற்படவில்லை; சமணர் சைவத்துக்கச் செய்த சூழ்ச்சிகளையும் கேடுகளையும் ஒழித்துத் தற்காப்புமட்டிற் செய்தனர் என்க; (11) சமண் - சாக்கியம் முதலியவையும் இறைவனால் உயிர்களின் பக்குவ பேதம்பற்றி ஆக்கப்பட்டன; ஆதலின் அவற்றை அழிக்கப் பிள்ளையார் முற்படார் என்றனர்; பாம்பு - தேள் - புலி - தீ - முதலியவையும் இறைவரால் ஆக்கப்பட்டன என்ற காரணத்தால் அவற்றை எடுத்துக் குலவுவார் உண்டோ? அவற்றைக் காட்சிச்சாலையில் அவ்வவற்றளவில் வைத்து அமைவுபடுத்துதலே முறையாம். சமணம் இறைவனால் ஆக்கப்பட்டமையால் அஃதும் சைவமும் ஒன்றாகுமோ? பசுவும் பாம்பும் ஒக்க இறைவனால் படைக்கப்படினும் ஒன்றாகாதவாறு இவையும் கொள்ளப்படும்; (12) இவர்கள் சிவம் சிவகதி என்ற சத்தங்கள் சமண நூல்களுள் வருதல் காணப் பெருமுயற்சி செய்தெடுத்தனர்; இது பயனில் முயற்சி என்றொழிக. சிவம் - சிவகதி முதலியவற்றிற்கு அவர் கொள்ளும் பொருள் வேறு; சைவம் கொள்ளும் பொருள் வேறு. பொருளொற்றுமையின்றி வெறும் சொன்மாத்திரை கொண்டு மயங்குதல் முறையன்று; (13) வேத சிவாகமங்களிற் போற்றப்படும் சிவனையும் ஏனைக் கடவுளர் - சிறு தெய்வங்களையும் ஒன்றாகவைத் தெண்ணுதல் பெரும் பிழை; சைவத் தெய்வப் பரமாசாரியர்களை ஏனைச் சிறுசமயங்கள் - போலிச் சமயங்க - ளென்றிவற்றின் குருமார்களுடன் ஒன்றாக வைத்துப் பேசுதல் உய்தியில்லாத பெரும்பாவமும் சிவாபராதமுமாம்; "மூவரென்றேயெம் பிரானொடு மெண்ணிவிண் ணுண்டுமண் மேற், றேவரென் றேயிறு மாந்தென்னபாவந் திரிதவரே" (திருவாசகம்); "சிவனொடொக்குந் தெய்வந் தேடினு மில்லை, அவனொ டொப்பாரிங் கியாவரு மில்லை" (திருமந்திரம்); (14) சமயங்களைப் புறப்புறம் - புறம் - அகப்புறம் அகம் என நால்வகையாக வகுத்து அவற்றுள் ஆருகதம் என்னும் சமணம் சீவன் முதலாகப் பதார்த்தங்கள் ஏழு கொள்வதென்றும், இவ்வெழுவகைப் பதார்த்தங்களும் உண்டாம் - இல்லையாம் - உண்டுமில்லையாம் என்பனமுதலாக எழுவகையால் கூறப்படும் அனேகாந்த வாதத்தைக் கொண்டதென்றும், வேத சிவாகமமாதி உண்மை நூற்களை உடம்படாது மாறுபடுவதென்றும், கண்ட நம் பெரியோர் அஃதும், அதுபோன்ற பிறவும் உயிர்களை உண்மை காணமாட்டாது

2685. மைய னெஞ்சுடை யமணருந் தம்பொருள் வரைந்த
கையி லேட்டினைக் கதுவுசெந் தீயினி லிடுவார்
'உய்யு மோவிது?' வெனவுறுங் கவலையா முணர்வால்
நையு நெஞ்சின ராகியே நடுங்கிநின் றிட்டார். 787

மயக்காத வண்ணம் நியாயங் காட்டி மறுத்துப் பரபக்கம் கூறிச் சைவத்தின் உண்மையை நாட்டினர்; இதுபற்றியே ஆசிரியரும் "தெளியா தொருபொருளே பொய்யுமெய்யு மாமென்னும் புரை நெறியார்" என்று இதன் கருத்தினை வடித்துக் கூறியருளினர்; இவற்றையெல்லாம் விட்டுச் சைவத்தோடொப்ப ஆதிசமணம் மாசற்ற அருணெறியென்றும், பிறவாறும் மேற்கூறியபடியெல்லாம் பிதற்றிப் போலிச் சமரசம் காணமுயலும் உரையெல்லாம் பட்டப்பகலில் காக்கை வெளிதென்பது போன்ற வெளிற்றுரையேயாமென்று விடுக்க.

முன் அரசுகள் புராணம் 1560-ன் கீழும், பிறுண்டும் உரைத்தனவும், இனியும் ஆண்டாண்டுரைப்பனவும் கண்டுகொள்க.

இனி, முன்னர்ச் சுரந் தீர்த்ததற்கும், பின்னர் நீரில் வெல்வதற்கும் தனிப்பதிகங்களினால் அருள்மேற்கொண்டாங்குச் செய்யாது, இங்குத் திருமுறையினை மறித்தெடுத்து வந்த ஏட்டினைப் போற்றித் தீயில் இட்ட கருத்தென்னையோ? எனின்; அவ்வாறு செய்தருளவுற்ற திருவருட் குறிப்பு எம்மா லறியும் தரமன்று; "ஆட்பாலவர்க் கருளும் வண்ணமு மாதிமாண்பும், கேட்பான்புகி லளவில்லை கிளக்கவேண்டா" என்பது ஆணை; ஆயினும் ஒன்று கருத உள்ளதனை ஈண்டு அச்சத்துடன் குறிக்க நினைக்கின்றேன்; முன் செய்த சுரந்தீர்த்த செயல் சமயஉண்மை காட்ட ஒட்டிச் செய்த வாதமன்று; அரசன் நோயின் மிகுதியால் "நீங்கள் தேறிய தெய்வத் தன்மை யென்னிடைத் தெரிப்பீர்" (2657); இகலித் தீரும்" (2659) என்று கூறிய அளவிலன்றி அது பிள்ளையார் முற்பட்டுச் சமய வாதத்திற் றுணிந்த வாதமன்று; அது போலன்றிப்பிள்ளையார் "பேசுதிர் நும்பொருள் எல்லை" என்று வாதத்தில் அழைக்க, அமணர் வாய்மை ஏடு நெருப்பில் வேவுறாமை வெற்றியாகும்; அது கட்புலத்திலுய்ப்பது என்று ஒட்டினாராக, அதன்படி துணிந்து வாய்மை நிலை நாட்ட எழுந்தது இவ்வாதமாதலின் தாமாத் துணிந்து செய்தலின்றி இறைவரருட்குறிப்பினையே கைக்கொண்டு செய்தல் தகுமென்பது பிள்ளையாரது திருவுள்ளக்கிடைபோலும் என்பது கருதப்படுவதாம்; பின்னர்ப் புனல்வாத்தில், இவ்வாறு முன்னர்த் தீயினில் நிலைகண்ட வாய்மையினைப் பாண்டியனுக்குத் தேற்றி ஞானோபதேசம் செய்து ஆட்கொள்ளும் வகையாற் றிருப்பாசுரம் பாடப்பட்ட தென்பதும் கருதப்படும்.

எய்திய செந்தமிழ்ப் பதிகம்—*என்பதும் பாடம்.* 786

2685. **(இ-ள்)** *மையல்... இடுவார் - மயக்கத்தைக் கொண்ட மனமுடையவர்களாகிய அமணர்களும் தமது சமய உண்மைப் பொருளை எழுதிய தமது கையிற்கொண்ட ஏட்டினை வெப்ப மிக்குக் காய்கின்ற தீயிலே இடுவார்களாகி; "உய்யுமோ இது?"... உணர்வால் - இது தீயினில் வேவாது எஞ்சுமோஎன்று பொருந்திய கவலைகொண்ட வுணர்வினாலே; நையும்... இட்டார் - அழிகின்ற உள்ளத்தினை யுடையவர்களாகியே நடுங்கிநின்று தீயினிடை இட்டனர்.*

(வி-ரை) நடுங்கி நின்று இட்டார் *- பிள்ளையார் மகிழ்ந்து முன் இட்டார் (2683);*

2686. அஞ்சு முள்ளத்த ராகியு மறிவிலா வமணர்
வெஞ்சு டர்ப்பெருந் **தீயினில் விழுத்திய வேடு**
பஞ்சு தீயிடைப் பட்டது படக்கண்டு பயத்தால்
நெஞ்சு சோரவும் பீலிகை சோர்ந்திலர் நின்றார். 788

அதுபோலன்றி அமணர் திருவருள் வலிமை பெருமையினையும் நடுக்கமுடன் இட்டார்கள்.

மையல் - மயக்கம்; பொய்யை மெய்யாக்கிக்கொள்ளும் மாறுபாடு; இஃது அவர்க்குச் சமயக் கோட்பாடுபற்றிய இயல்பால் வந்தது; கவலை - கண்டு ஏடு உய்யுமோ - உய்திபெறுது தீர்ந்து சமயத்தை இழுக்கிவிடுமோ என்ற பயத்தால் அப்போது வந்த மனநிலை; **நையும் நெஞ்சம் - நைதல்**; கவலையால் நேரும் மன அழிவு; **நடுக்கம்** - அதனால் வரும் மெய்ப்பாடு.

தம்பொருள் - தமது சமய உண்மைப் பொருட் கருத்தின் வாய்மை (2675); **வரைந்த ஏடு** - கையில் ஏடு என்று தனித்தனிக் கூட்டுக.

கதுவுதல் - சுட்டு அழித்தல், அடுதல்; இங்குக் **கதுவு செந்தீ** எனவும், முன்னர்ப் பிள்ளையார் இட்டபோது **அமர்ந்துபட்ட தீ (2684) என்றும் கூறி**யவை சரிதவிளைவுக் குறிப்புப்பட வைத்த அமைதி காண்க.

நடுங்கி - தமது அச்சம் - கவலைகளை மறைத்தாராயினும் மனமழிவு மிகுதலின் மெய்ந்நடுக்கமாகிய புறச்செயல் வெளிப்பாடு பெற்றது என்க. 787

2686. **(இ-ள்)** அஞ்சும்... அமணர் - பயங்கொண்ட மனதை யுடையராயினும் அதனால் அறிவு பெறாத அமணர்கள்; வெஞ்சுடர்... ஏடு - வெவ்விய சுடரினையுடைய, தீயிலே வீழ்த்திய ஏடு; பஞ்சு... படக்கண்டு - தீயினிலே பஞ்சு வீழ்ந்தால் பட்டொழிவதுபோல ஒழிந்துபட்டது கண்டு; பயத்தால்... நின்றார் - பயத்தினாலே மனம் சோர்வடைந்த பின்னும் கையில் ஏந்திய மயிற்பீலிக் கற்றையைக் கைசோர விடாதவராகி நின்றனர்.

(வி-ரை) அஞ்சும்... அறிவிலா - தமது சமய உண்மைகளும் தம் புனைவுகளும் வெற்றி பெறா என்று கண்டு அஞ்சினார்கள்; ஆனால் அவ்வச்சத்தினின்று தெளியவேண்டிய அறிவினைப் பெறாதொழிந்தனர்.

விழுத்திய ஏடு - அச்சங் காரணமாக ஏட்டினை வீழும்படி செய்தனரேயன்றி ஒழுங்குபெறப் புகுதவிடமாட்டாத நிலை என்பது குறிப்பு.

பஞ்சு தீயிடைப்பட்டது பட - பட்டது - பட்டது போன்ற அழிந்த நிலை; **பட்டது** - பெயர்; ஆகுபெயராய்ப் பட்ட நிலையைக் குறித்தது; இரண்டனுருபு விரிக்க; **படுதல்** - பெறுதல்; அழிதல் என்றலுமாம்; இப்பொருட்குப் பட்டதுபோலப் பட என உவமவுருபு விரிக்க.

பயத்தால் நெஞ்சு சோர - ஏட்டினைத் தீயில் இடும் முன்னர் உய்யுமோ என்ற ஐயப்பாட்டின் கவலையினால் அச்சம் மட்டும் இருந்தது. இப்போது அவ்வேடு உய்யாது ஒழிந்தமை கண்டுகொண்டாராதலின் பயம் மிகுதியினால் மனம் சோர்ந்து பட்டது; **பயம்** -

2687. மான மன்னவ னவையின்முன் வளர்த்தசெந் தீயின்
ஞான முண்டவ ரிட்டவே **டிசைத்தநா ழிகையில்**
ஈன மின்மைகண் டியாவரும் வியப்புற வெடுத்தார்
பான்மை முன்னையிற் **பசுமையும் புதுமையும் பயப்ப.** 789

மிக்க அச்சம்; இது வேவுறாமை வெற்றியென்றும், வெந்துபட்டது வாய்மை யன்று என்றும் ஒட்டினாராதலின் தோல்வி வந்தமையும் அதனால் அரசனிடம் தொடர்பு பற்றிய பயன்களெல்லாவற்றின் இழப்பும், நிலையழிவும் நேர்வதனையும் எண்ணியதனால் உண்டாகியது; **பயம்** *- இதன் விளைவு என்றலுமாம்.*

நெஞ்சுசோரவும் பீலிகை சோர்ந்திலர் - பீலி *- சமயக்குறி; மனஞ்சோர்வுபடினும் தறுகண்மையால் அதனை மறைத்துப் பீலியைக் கைவிடாது நின்றார்; உண்மை கண்டபோதும் பொய்பட்ட தமது சமயக் கொள்கையை விடாது பற்றிக்கொண்டு என்றதும் குறிப்பு.* ***சோர்ந்திலர்*** *- சோர்ந்திலராகி முற்றெச்சம்; முற்றாக உரைப்பினுமிழுக்காது.*

நின்றார் *- தோல்வியை ஒப்பித் தாழாமலும் அகலாமலும் நின்றனர்.*

பஞ்சுதீயினில்—*என்பதும் பாடம்.* *788*

2687. **(இ-ள்)** மானமன்னவன்... ஏடு - ஞானபோனகராகிய பிள்ளையார், பெருமை யுடைய பாண்டியனது சபையின் முன் வளர்க்கப்பட்ட தீயிலே இட்ட ஏடு; இசைத்த ...கண்டு - குறிப்பிட்ட நாழிகையளவில் அழிவுபெறாமல் நின்றதனைக் கண்டு; பான்மை... பயப்ப - முன்னையினும் பசிய தன்மையும் புதிய தன்மையும் உளதாயிருக்க; யாவரும் வியப்புற எடுத்தார் - எல்லாரும் அதிசயிக்கும்படி தீயினின்றும் எடுத்தருளினார்.

(வி-ரை) மான மன்னவன் - மானம் - பெருமை; ஈண்டுக் கொள்கையின் பெருமைபெற்ற நிலை குறித்தது.

அவையின் முன் - அவையின் முன் வளர்த்த என்றும், அவையின்முன் இட்ட என்றும், அவையின் முன் எடுத்தார் என்றும் தனித் தனிக்கூட்டி யுரைத்ததுக் கொள்க.

தீயின் - தீயின் இட்ட என்றும், தீயினின்று எடுத்தார் என்றும் அவ்வாறே தனித் தனிக் கூட்டுக.

இசைத்த நாழிகை - இத்தனை நாழிகை வரை வேவாதிருத்தல் வேண்டுமென்று குறித்துக்கொண்ட காலஎல்லை. **ஈனமின்மை** - அழிவுறாமை.

பசுமைப் பான்மையும் புதுமைப்பான்மையும் என்க. முன்னையினும் பயத்தல் அதிகரித்தல் - மேம்படுதல். **பசுமை** - ஏட்டின்பாலும், **புதுமை** - அதில் எழுதிய பொருளின்பாலும் கொள்க. **பசுமை** - திண்மை;தீயிற்படும் ஏனைய பொருள்கள் போலன்றி வறட்சி நீங்கிப் பசுமை பெற்ற நிலை; இதனால் இதற்குப் **பச்சைப் பதிகம்** என்று பெயர் வழங்கும். ''தான் செய்த - **பச்சைப் பதிகத்** துடன்பதினாறாயிரம் பா, வித்துப் **பொருளை விளக்க**வல பெருமான்'' (ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை) என்ற நம்பியாண்டார் நம்பி

2688. எடுத்த வேட்டினை யவையின்முன் காட்டியம் முறையில்
அடுத்த வண்ணமே கோத்தலு மதிசயித் தரசன்
தொடுத்த பீலிமுன் றூக்கிய கையரை நோக்கிக்
"கடுத்து நீரிட்ட வேட்டினைக் காட்டுமி" னென்றான். 790

திருவாக்கும் காண்க. இதனுள் **பாவித்துப் பொருளை விளக்கவல** *என்ற கருத்து* **ஈண்டுச்** *சிந்திக்கத் தக்கது. "பச்சையாய் விளங்கிய தன்றே" (2684).*

புதுமை*யாவது அவ்வேட்டில் எழுதிய பொருள் முன்னர்ப் பொதுவகை***யால்** *இறைவனது பொதுவியல்பு கூறிய நிலையில் அறியப்பட்டது. இங்கு இவ்வரலாற்***றின்** *றொடர்பினால் சிறப்பாகவும் அவனது சிற்பியல்புபற்றிய நிலையிலும் அறிந்து* **வழிபடப்** *பெறுவது.*

பயப்ப *- பயனாகப் பெற;* **பயப்ப எடுத்தார்** *- என்க.* **வியப்பாவது** *- அழிவின்மை***யோடு** *முன்னையினும் பசுமையும் புதுமையும் பயப்ப விளைதல்.*

பான்மை *- பான்மையினால்;தெய்வத் தன்மையினால் என்றலுமாம்.* **789**

2688. **(இ-ள்)** எடுத்த... கோத்தலும் - *(அவ்வாறு தீயினின்றும்)* எடுத்த அவ்வேட்**டினை** *அரசனவையின்* முன்னே காட்டி, *(முன்பு கழற்றிய)* அம்முறையினாலே மீளப் பொருந்தும்படி சுவடியினுள் கோத்தலும்; *அரசன்* - பாண்டியன்; *அதிசயித்து* - அதிசயம் கொண்டு; தொடுத்த... *என்றான்* - *கற்றையாகக் கட்டிய மயிற்பீலியை ஏந்திய கைகளையுடைய அமணர்களைப்* **பார்த்துக்** கோபித்து நீர் தீயில் இட்ட ஏட்டினைக் காட்டுங்கள் என்று சொன்னான்.

(வி-ரை) எடுத்த ஏடு - தீயின்றும் வியப்புற எடுத்த ஏடு; விளக்கம் போற்றல்பெறாதிருந்த திருநீற்றின் றிறத்தினை மேல் எடுத்த என்ற குறிப்புமாம்; "எடுத்த பொற் பாதமும்" (தேவா); "எடுக்கு மாக்கதை" (புரா).

அவையின் முன் காட்டி - பேரவை காண இட்டாராதலின் **(2683)** அது பழுதின்றி எடுக்கப்பட்டமையும் அந்த அவையோர் காணும்படி காட்டி.

அம்முறையில் -கோத்தலும்-சுவடியினின்றும் கழற்றிய அவ்வண்ணமே ஏடுகள் முன் வரிசையிற் பொருந்தும்படிக் கோத்தல் வேண்டும் என்பது.

பீலிமுன் தூக்கிய - நெஞ்சு சோரவும் அச்சோர்வு புலப்படாது மறைத்துப் பீலி கை சோராது ஊக்கங்கொண்டார்போலத் தூக்கிப் பிடித்த என்க; **முன்** - விளக்கமாக; **தூக்குதல்** - பலருமறியும்படி உயர்த்துதல்.

கடுத்து - கோபித்து; **கடுத்து - இட்ட** என்று கூட்டுக. "முகங் கோபத்தீத் துள்ளியெழு மெனக்கண்கள் சிவந்து" **(2653)**; **கடுத்து - என்றான்** என்று கூட்டி, மன்னவன் செயலைப்பற்றிக் கூறுதலுமாம்; முன்னரே "என்னவா துமக்கு" **(2674)** என்று கூறியதும், அரசன் அதன்மேல் ஒன்றுரைக்குமுன் பிள்ளையார் தடுத்து மேற்கூறியருளியமையும் காண்க.

வேறு

2689. அருகர்தா மிட்ட வேடு வாங்கச்சென் றணையும் போதிற்
பெருகுதீக் கதுவ, வெந்து போந்தமை கண்ட மன்னன்,
தருபுனல் கொண்டு செந்தீத் தணிப்பித்தான்; **சமண ரங்குக்**
கருகிய சாம்ப ரோடுங் கரியலான் மற்றென் காண்பார்?; 791

காட்டுமின் - இகழ்ச்சிக் குறிப்புப்பட கூறியபடி; ''எய்திய நகையி னொடும்'' ***(2690)*** என்பது காண்க. ***கையர்*** - வஞ்சகர் என்றலுமாம். ***790***

2689. **(இ-ள்)** *அருகர்தாம்... கதுவ - அமணர்கள் தாங்கள் இட்ட ஏட்டினைத் தீயினின்றும் எடுக்கச் சென்று அணுகியபோது பெருகிய தீச் சுட்டமையாலே; வெந்து போந்தமை கண்ட மன்னன் - உடல் வெந்ததனுற் புடைபெயர்ந்து சென்றதனைக் கண்ட அரசன்; தரு...தணிப்பித்தான் - கொணரச் செய்து தரும் நீரினைக்கொண்டு சிவந்த தீயினைத் தணியச் செய்தான்; சமணர்... காண்பார் - சமணர்கள் அங்கே கருகிய சாம்பரும் கரியுமல்லாமல் வேறெதனைக் காண்பார்கள்?*

(வி-ரை) வாங்க - *மேல் எடுக்க;* **வாங்குதல்** - *இட்டதொன்றனை அம்முறையே மீள எடுத்தல் குறித்தது.*

கதுவ வெந்து - *கதுவுதலால் - வெந்தமையால் என இரண்டும் காரணப் பொருட்டாய வினையெச்சங்கள்;* **வெந்து** - *தீச்சுட்டதனுல் உடல் கருகிய நிலை குறித்தது.*

மன்னன்...தீ தணிப்பித்தான் - *நடுநிலைகோடாத மன்னனுயினமையால் அமணர்தோல்வியுற்றனராயினும் அவர் வருந்தாவண்ணம் தீயைத் தணிப்பித்தனன்; இது நீதிமுறையும் கருணையும் உடன்கொண்ட செயல்; தீ அமைத்த காரணமும் நிறைவெய்தி முற்றுப்பெற்றமையும் உட்குறிப்பு.*

சமணர்...என்காண்பார்? - *இது கவிக்கூற்று; வினு, வேறென்றுமில்லை என இன்மை குறித்தது;* **கருகிய சாம்பல்** - *தீப்பற்றிய பொருள்கள் தாமே முற்றும் எரிந்து அவியின் வெள்ளிய நீறுபட ஆகும்; இங்குப் புனல்கொண்டு அவித்தமையால் கருகிய சாம்பலாயின.* **கரி** - *தீப்பற்றி யெஞ்சிய விறகின் துண்டங்கள்.* **கருகிய** - *அமணர் இட்ட ஏடு தீயிடைப் பஞ்சுபோல வெந்துபோன என்ற குறிப்புமாம்;* **என்** - *தமது ஏட்டுத் துண்டமேனும், அல்லது வெற்றியின் அறிகுறியான எதுவேனும் என்க.* ***791***

2690. **(இ-ள்)** *செய்வது ஒன்று அறிகிலாதார் - மேற்செய்வது ஒன்றினையும் தெரியமாட்டாதவர்களாகிய அவ்வமணர்கள்; திகைப்பினுல்... மன்னன் - திகைப்பினுலே அங்குத் திரண்ட சாம்பலைக் கையினுலே பிசைந்தும் தூற்றியும் ஏட்டினைத் தேடிப் பார்ப்பதைக் கண்ட அரசன்; எய்திய நகையினுடும் - பொருந்திய புன்சிரிப்பினுடனே; ஏடு இன்னம்... என்றான் - ''எட்டினை இன்னும் அரித்தும் பாருங்கள்; பொய்ம்மை நெறியினைத் துணையாகக்கொண்டு அதனை மெய்ப் பொருளாக விளக்கப்புகுந்த நீங்கள் அகன்று செல்லுங்கள்'' என்று சொன்னுன்.*

2690. செய்வதொன் றறிகி லாதார் திகைப்பினற் றிரண்ட சாம்பல்
கையினற் பிசைந்து தூற்றிப் பார்ப்பது கண்ட மன்னன்
எய்திய நகையி னேடு"மேடின்ன மரித்துக் காணும்
பொய்யினன் மெய்யை யாக்கப் புகுந்தநீர் போமின்" என்றான்; 792

(வி-ரை) செய்வதொன் றறிகிலாதார் திகைப்பினல் பிசைந்து தூற்றிப் பார்ப்பது - செய்வது - மேற் செய்யப்படுவது; படுவிகுதி தொக்கு நின்ற பிறவினை. **ஒன்று** - ஒன்றினையும் - முற்றும்மையும் இரண்டனுருபும் தொக்கன; **திகைப்பு** - தமது நிலைக்கு அழிவு நேர்ந்து வேறு தீர்வு தெரியாதபோது உளதாகும் மனநிகழ்ச்சி.

கையினற் பிசைந்து தூற்றிப் பார்ப்பது - இஃது அமணர் ஏடு காண்பது கருதிச் செய்த செயலன்று; வேறு செயல் ஒன்றுந்தோன்றாது, அதனை எண்ணுகின்ற காலக்கழிவுக்குப் பிறர் காணச்செய்யும் பாவனையாம் என்க; தீர்வில்லாத கேடு வந்த போழ்து கைகளைப் **பிசைதல்** அவலக்குறிப்பாகிய மெய்ப்பாடுகளுள் ஒன்றாதலும் காண்க.

எய்திய நகை - இகழ்ச்சிக் குறிப்பாகிய புன்சிரிப்பு.

ஏடு இன்னம் அரித்துக் காணும் - சாம்பரைப் பிசைந்து தூற்றிப் பார்த்தலன்றி **அரித்தும்** காணுங்கள்; அவர்கள் செய்வது வீண்செயல் என்ற குறிப்புடன் கூறிய இகழ்ச்சி **மொழி. அரித்து** - அரித்தும்; உம்மை தொக்கது.

பொய்யினல் மெய்யை ஆக்கப் புகுந்த நீர் - பொய்யாகிய சமயக் கோட்பாடுகளைக் கருவியாக் கொண்டு உண்மைப்பொருளிது என்று முடிபு காண்பது துணிந்த நீர்; **மெய்ம்மை** - சமய வாதத்தில் சமய உண்மையை நிலைநாட்டி வெற்றி பெறுதல்.

போமின் - அகன்று சென்றுவிடுங்கள்; முன்னர் "என்னைவிட்டு அகல நீங்கும்" **(2667)** என்றது இடப்பாகத்தைத் தீர்க்க அணைய நின்ற இடத்தினின்று விலகி நிற்றலைக் **குறித்தது;** இங்குப் **போமின்** என்றது இந்த இடத்திலேனும் தனது சார்பிலேனும் நில்லாது முற்றும் நீங்குதலைக் குறித்தது.

என்றான் - என்று கூறி மேலும் சொல்வான் என்றதாம்.

பார்ப்பது கண்டு—என்பதும் பாடம். 792

2691. **(இ-ள்)** வெப்பெனும்... தோற்றீர் - வெப்பு நோயாகிய தீயினின்றும் நான் முன்னர்ப் பிள்ளையாரால் விடுதிபெற் றுய்ந்திட நீங்கள் வாதில் அழிந்து தோல்வியுற்றீர்கள்; ஆதலால் - ஆகையினாலே; அது ஆறாக... உய்ந்ததில்லை என்றால் -அதன் வழியாகவே தொடர்ந்து இப்பொழுது தீயில் இட்ட ஏடு நிலைபெறாமல் ஒழிந்துபட்டது என்றால்; துப்புரவு...என்றான் - வல்லமை மிக்கவர்களே! நீங்கள் தோற்கவில்லை போலும் என்று சொன்னான்.

இம்மூன்று பாக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

2691. ''வெப்பெனுந் தீயில் யான்முன் வீடுபெற் றுய்ய நீங்கள்
அப்பொழு தழிந்து தோற்றீ; ராதலா லதுவா ருக
இப்பொழு தெரியி லிட்ட வேடுய்ந்த தில்லை யென்றுற்
றுப்புர வுடையீர்! நீங்க டோற்றிலீர் போலு'' மென்றான். 793

(வி-ரை) வெப்பெனும் தீயில் யான்முன் வீடுபெற் றுய்ய - எரியில் இட்ட ஏடு உய்ந்ததில்லை - வெப்பாகிய தீயினின்றும் என்னையே விடுவித்துப் பிள்ளையார் எடுத்தனர்; அப்பொழுது அதனினும் தோற்றீர்; இப்பொழுது இத் தீயினுள் ஏடு தானும் வேவாமைக் காக்க வலியிலராகி நின்றீர்; ஒரு சிறு ஏட்டினையும் தீயில் வேவாது காக்க உங்களால் இயலவில்லை. **வீடு** - முத்தித்திரு என்ற குறிப்புமாம்.

தோற்றிலீர் போலும் - துப்புரவுடையீர் - இவையிரண்டும் இகழ்ச்சிக் குறிப்புப்பட நின்றன; தோற்றிலீர் போலும் என்ற இகழ்ச்சிக் குறிப்பு வினு தோற்றீர்கள் என உடன்பாடு குறித்தது. **துப்புரவு** - வல்லமை; ''துப்புர வில்லார் துணிபு துகளாக'' *(1968).*

ஆதலால் அது ஆருக - முன்னர் வெப்புத் தீயில் தோற்றமைபோல அஃதே வழியாக இப்பொழுதும்; அத்தீயின் வழியேயாக.

அது வேருக—என்பதும் பாடம். *793*

2692. **(இ-ள்)** தென்னவன்... தேரார் - பாண்டியன் இகழ்ச்சியாகிய புன்சிரிப்பை உட்கொண்டு சொல்லிய மாற்றங்களை மனத்துட் டெளிந்து மேற்கொள்ளாதவர்களாகி; சொன்னது... சொல்லுவார் - சொன்ன சொன்மாத்திரையே அதன் பொருள் என்று மேற்கொண்டு சொல்வார்களாய்; ''தொடர்ந்த... காண்பது'' என்றார் - ''தொடர்ந்த வாதமாக முன்பு இரண்டுமுறை செய்தோம்; மூன்று முறையில் ஒரு முறையேனும் வெற்றியடைவோம்; ஆதலின் உண்மைத் திறம் இனி ஒருமுறை காணத்தக்கது'' என்றார்கள்.

(வி-ரை) நகையுட்கொண்டு... தேரார் - நகையுட்கொள்ளுதல் - இகழ்ச்சிக் குறிப்புடன் கூறுதல்; **தேரார்** - அங்ஙனம் தெரியாதார்போலப் பாவனை காட்டி; அதன் புறப்பொருளையே பொருளாத் தொடர்ந்துகொண்டு என்பார் **சொன்னது பயனுக் கொண்டு** என்றார். **சொன்னது** - சொல்லின் பருப்பொருள்.

தொடர்ந்து வாது முன்னுற இருகாற் செய்தோம் - மேலும் தொடர்ச்சிபெறும் பொருட்டு ஒன்றற்கொன்று தொடர்பின்றியே முன்னர்த் தனித்தனி நிகழ்ந்த இரண்டு நிகழ்ச்சிகளையும் ஒன்றுபடுத்தித் **தொடர்ந்த வாது** என்றெடுத்துப் புனைந்து கொண்டது ஒரு வஞ்சனை; ''ஒன்று தவறின் மூன்று'', ''கங்கையும் மூன்று பிழை பொறுக்கும்'' என்பது முதலிய சாமானிய உலகவழக்கினையும் தம் பக்கமாக எடுத்து **முக்காலில்** என்று மேலும் ஒருவாதத்திற்குத் தோற்றுவாய் செய்து கொண்டது மற்றுமொரு சூழ்ச்சியாம்; ''சூழ்ச்சி முடிக்குந் தொழிலோர்'' *(1387)*; இவ்வாறு சூழ்தல் தீவினைப்பட்ட செயலாய் உலகநிலை மாக்களின் இயல்பாம். அதனினும் மேலாய் சமயப்பீடை மிகக்கொண்டவர்களாகி வன்கணுளர்களாகிய

2692. தென்னவ **னகையுட் கொண்டு** செப்பிய மாற்றந் தேரார்;
சொன்னது பயனுக் கொண்டு சொல்லுவார் ''தொடர்ந்த வாது
முன்னுற விருகாற் செய்தோ'', முக்காலி லொருகால் வெற்றி
யென்னினு முடையோ **மெய்ம்மை யினியொன்று காண்ப**'' தென்றார். 794

சமணர்களிடம் இது மேலும் கொடிய அடர்ந்த நிலையிற் காணப்படும்; மேல்வரும் **பாட்டுப்** *பார்க்க. அரசுகளை அமணர், தம் உரை ஒன்றன் பின் ஒன்றாய்ப் பலிக்காமை கண்ட* **பின்னும்** *ஒன்றன் மேலொன்றாய் நான்குமுறை மரணதண்டம் செய்வித்த கொடுமை அவர்* **சரிதத்துட்** *காண்க; இவர்கள் மேலும் மேலும் இவ்வாறு யாதாமொரு காரணங் காட்டி ஒட்டிக்கொண்டே முடிவின்றிச் செல்வார் என்பதும், அரசன் மறுப்பினும் பிள்ளையார் கருணையினால் அவர்களாகச் சலிக்குமளவும் இடந்தந்தருளுவர் என்பதும் அனுபவத்தாலும் நுண்ணறிவினாலும்* **உயர்ந்த** *அமைச்சர், பின்னர், ''வேறினிச் செய்யும் இவ்வாது ஒன்றினுந் தோற்றார் செய்வ தொட்டியே செய்வ'' தென்பதும் (2693-2695) காண்க; வாதம் செய்தால் இவ்வாறு ஒட்டிச்* **செய்யும்** *வழக்கும் அதன் முடிவில் அதன்படி தீர்வு நிகழ்த்துவதும் உண்மை. ''இந்தவூரி லிருக்கிலோ மென்றே யொட்டினார்... இந்த வழக்கை முடிப்பதென மொழிந்தார்'' (17)* **என்ற** *தண்டியடிகணாயனார் வரலாற்றினாலும் இவையறியப்படும்.*

முக்காலில் ஒருகால் வெற்றி யென்னினும் உடையோம் - உடையோம் **என்று** உறுதிபெறக் கூறியது வாதந் துணிவோர் இயல்பு. வெற்றி பெறுவது உறுதி; **அவ்வாறு** பெறினும் முன் இருமுறை தோற்றமை (2691) அரசன் குறிப்பிட்டபடி தோல்வித் தானமே மிகுதியாம்; ஆயினும் யாங்களும் மெய்ம்மை முழுமையல்லாவிடினும் ஒரு **பகுதியேனும்** உடையோமாகக் காண்பது பொருளாம் என்று தொடர்ந்து தமது நிலையை **ஏற்பித்தது** சூழ்ச்சியின் மற்றுமொரு நிலை; இது சிறிதாகக் காட்டி உள்நுழையும் சூழ்ச்சித் **திறன்.** **உடையோம் - மெய்ம்மை** என்று கூட்டினுமாம். **794**

2693. **(இ-ள்)** தோற்கவும்...கேட்டு - ஒருமுறைக் கிருமுறையும் தோற்கவும் **ஆசை** விடாத உண்மைத் துணிவிலா அமணர் இவ்வாறு சொல்லக் கேட்டு; இம்மாற்றம்... **பின்னும்** - அரசன் இந்த மாற்றம் என் ஆகக்கடவது? - இதனாற் கடவது ஒன்றுமில்லையே - **என்று** அரசன் மறுத்தபின்பும்; நீற்றணி... என்றலும் - திருநீற்றின் அழகு **விளங்கும்** திருமேனியினையுடைய நிறைந்த புகழினையுடைய சீகாழித் தலைவர் இனிச் செய்யும் **வேறு** வாது என்ன? என்று கேட்டலும்; மேற்கோள் ஏற்பார் - வாதத்தினை **மேற்கொள்வதனை** ஏற்றுக்கொள்பவராகி,

(வி-ரை) தோற்கவும் ஆசை நீங்கா - அனுபவத்தாலும் அறிவுபெறாத ஆணவமலத் திண்மையுடைய; **மாசை** என்று பிரித்து மாசினை உடைய தன் மதத்தை என்பாருமுண்டு.

துணிவு - உண்மையிற் றுணிந்து ஒழுகும் தன்மை.

மன்னவன் இம்மாற்றம் என்ஆவது என்று மறுத்த பின்னும் - இஃது ஒன்றும் பெறாத வெற்றுரை என்று அரசன் மறுத்த பின்னரும்; தீ வாதத்தின்முன்னரே ''என்ன வாது உமக்கு''

2693. **தோற்கவு மாசை நீங்காத் துணிவிலார்** சொல்லக் கேட்''டிம்
மாற்றமென் ஞுவ'' தென்று **மன்னவன் மறுத்த பின்னும்,**
நீற்றணி விளங்கு மேனி **நிறைபுகழ்ச் சண்பை மன்னர்**
''வேற்றுவா தினியென் செய்வ?'' தென்றலு மேற்கோளேற்பார், 795

(2674) என்ற அரசன் இங்கு அந்நிலையின் மேலும் ஒரு தோல்வி கண்டபோது முற்றிலும் மறுத்தனன் என்க.

பின்னும் - என்றலும் *- பிள்ளையாரது கருணைப்பெருக்கைக் காட்டிய குறிப்பு உம்மை சிறப்பு.*

நீற்றணி... மன்னர் - நீற்றணி விளங்குமேனி *- ''புத்தரொ டமணை வாதி லழிவிக்கு மண்ண றிருநீறு செம்மை திடமே'' (தேவா) என்று திருமறைக்காட்டில் முன்னரே ஆணை நிகழ்ந்ததற்கேற்ப ஈண்டுத் திருநீறே முதலில் வாதத்தில் வெற்றி கொண்டதாதலின் அவ்வெற்றிக் கோலம் மேலும் விளங்குவதாம் என்பது குறிப்பு. இக்கருத்தே பற்றிப் பின்னர் வைகைக்கரையில் ஏடிடுக என்று மன்னவன் பிள்ளையாரை நோக்கியபோது **''நீற்றணி திகழ்ந்த மேனி நிறைமதிப் பிள்ளையாரும்''** (2712) என இக்குறிப்பே கண்டு போற்றினன். ''நீற்று வண்கையான் மறித்தலும்'' (2680).*

நிறைபுகழ் *- தாமே வெற்றிகொண்டபோதும் தோல்வியுற்ற பதகர்மீது கருணை கொண்டமை புகழின் நிறைவாகும். '' உரைப்பா ருரைப்பவை யெல்லாம் இரப்பார்க்கொன், றீவார்மே னிற்கும் புகழ்'' (குறள்) என்ற கருத்து ஈண்டு வைத்துச் சிந்திக்கற்பாலது; அமணர் தோல்வியுற்ற பின்னும் இனி **வேற்று வாது என்?** என்று கேட்டதும், அஃதும் மன்னவன் மறுத்த பின்னும் கேட்டதும் புகழின்பாலதாம். ''இறைவன் பொருள்சேர் புகழ்'' என்றவிடத்து இறைமைக் குணங்கள் முற்றவுமுடைய இறைவன் புகழே புகழெனப்பட்டது என்ற தன்மையின் கருத்தும் ஈண்டுக் கருதுக. **நிறை புகழ்** - என்ற கருத்துமிது. புகழின் எல்லை என்றபடி.*

மன்னவன் மறுத்த பின்னும் - நிறைபுகழ்ச் சண்பை மன்னர் *- மாறனும் மன்னவன் - பிள்ளையாரும் மன்னவர் என ஒப்புக்கூறிய குறிப்பும், அதன் மேலும் இரப்பார்க்கொன் றீதலை மறுத்த அம்மன்னவனிலும், ஈந்த பிள்ளையார் புகழின் நிறைவுடையார் என ஏற்றம்பெறக் கூறிய குறிப்பும் காண்க. மன்னன் சொல்லுக்கு மாறுக உரைத்தலும் செய்தலும் வல்லவர் பிறிதொரு மன்னரேயாவர் என்றதும் குறிப்பு.*

சண்பை *- சீகாழியின் ஒன்பதாவது பெயர்.*

இனி வேற்று வாது செய்வது என் *- என்க; ''இனி ஒன்று காண்ப'' தென்று (2692) பொதுப்படக் கூறினர்களாதலின் அஃது என்ன? என்றார்.* **வேற்றுவாது** *- நீங்கள் மேற்கொள்ளும் வாதங்கள் முன்சொன்ன தன்மையில் தோல்வியுறுவனவேயன்றி* **வேற்று வாதம்** *என்ன உளது என்ற குறிப்பும் போதருதல் காண்க.*

மேற்கோள் ஏற்பார் - மேற்கோள் *- மேற்கொள்ளுதல் ஏற்றல் - துணிந்து முற்படுதல்; ஏற்றுக் கொள்ளுதல்;* **ஏற்பார் - என்றார்** *என வரும் பாட்டுடன் முடிக்க.* 795

2694. "நீடுமெய்ப் பொருளி னுண்மை நிலைபெறுந் தன்மை யெல்லாம்
ஏடுற வெழுதி மற்றவ் வேட்டினை யாமு நீரும்
ஓடுநீ ராற்றி லிட்டா லொழுகுதல் செய்யா தங்கு
நாடிமுன் றங்கு மேடு நற்பொருள் பரிப்ப" தென்றார் 796

2694. **(இ-ள்)** வெளிப்படை. நிலையாகிய மெய்ப்பொருளினது வாய்மையானது நிலைபெறும் தன்மையெல்லாம் தொகுத்து ஏட்டிற் பொருந்த எழுதி மற்ற அவ்வேடுகளை யாங்களும் நீரும் ஓடுகின்ற நீரினையுடைய ஆற்றில் இடுவோமாகில், நீர் நடையினை ஒத்தொழுகிச் சென்றுவிடாது, இட்ட அவ்விடத்தைப் பற்றி முன்னர்த் தங்கும் ஏடு எதுவோ அஃதே நல்ல பொருளைப் பெற்றுடையதாகும்" என்று கூறினார்கள்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) நீடு... ...எல்லாம் - நீடு நிலைபெறும் - எல்லாம் - என்ற அடைகள் முன் போலன்றி இவை முற்றிய உண்மைத் தன்மைகளின் தொகுதியாம் என்றும், இவை தோற்றுப் போகா என்றும் கூறிய குறிப்பு. **வேற்று வாது என்?** என்ற குறிப்பிற்கு விடையாகக் கூறிய குறிப்பும் காண்க; **ஏடுஉற** - உண்மைத் தன்மை ஏட்டினிற் பொருந்த.

ஓடு நீர் - விரைந்து செல்லும் நீரினையுடைய. **ஒழுகுதல்** - நீர் செல்லும் வேகத்துடன் ஒன்றுபட்டு ஒழுகுதல்; பள்ளந்தா றுறுபுனலினோடு கீழ்நோக்கிச் செல்லுதல்; **ஒழுகுதல் செய்யாது** - ஓடிவிடாது.

ஒழுகுதல் செய்யாது - முன் தங்கும் - அமணர்கள் காணக் கருதியது நீருடன் சென்றுவிடாது இட்ட இடத்திலேயே, நீரில் இட்ட கற்போலத், தங்கிவிடுமளவேயாம்; ஆயின் இனிப் பிள்ளையார், அவரும் உலகும் காணவரக் காட்டிய அருட்பெருமையாவது இட்ட அங்குத் தங்குமளவன்றி மேல் எதிர்த்துச் செல்லும் தன்மையாம்; ஏடு அங்குத் தங்கும் அளவே உண்மை விளக்கமாக அதனைக் கேட்ட நாட்டுமக்களும் கருதினார் என்பதும் காண்க. "ஓடுநீ ருடன்செ லாதுநிற்குமோ வோலை என்பார்" (2705) என்று மறுகிற் கண்ட மாதர் மைந்தர் கூறுதல் காண்க.

நற்பொருள் பரிப்பது - நன்மையாவது அழிவுறாமையும் நிலைபெறுதலும் காட்டி நன்மை பயத்தல். **பரித்தல்** - தாங்குதல்.

குறிப்பு:— முன்னர்த் தீயிற் செய்த வாதம் கீழ்நோக்குதலின்றி மேனோக்கியே எரியும் தீயில் உய்ந்திடில் அப்பொருளும் மேனோக்கமுடையது என்ற கருத்து. இங்கு நீரில் மேற்கொண்ட வாதம் நீர், மேலிருந்து கீழ்ச்செல்லு மியல்புடையதாதலின் அதனுடன் செல்லாது நிற்கும் தன்மையால் அப்பொருள், மேல்நோக்க மில்லவிடினும் கீழ்நோக்கமில்லாத அளவிலேனும் நிற்பதென்ற கருத்து; நோயை நீக்க இயலாது தோற்றபின்பு "தீயின் நீரில் வெல்வது என்று தம்மில் எண்ணி"ய அமணர் எண்ணிய இரண்டனுள் முதலில் தீயைப்பற்றி ஒட்டியதற்கு இஃதும் ஒரு குறிப்பாகும்.

அங்கு - நாடி - முன் - தங்கும் - என்றவை அவ்வாறு நிற்றலின் அருமையும் செயற்கரிய தன்மையும் குறித்தன.
796

2695. என்றமண் கையர் கூற வேறுசீர்ப் புகலி வேந்தர்
"நன்றது செய்வோ" மென்றங் கருள்செய, நணுக வந்து
வென்றிவே லமைச்ச ஞர்தாம் **"வேறினிச் செய்யு மிவ்வா**
தொன்றினுந் தோற்ருர் செய்வ தொட்டியே செய்வ" தென்ருர். 797

2695. **(இ-ள்)** *என்று அமண்கையர் கூற* - முன் கூறிய அவ்வாறு அமண்கையர்கள் சொல்ல; *ஏறுசீர்... அருள்செய* - மிக்கு ஏறுகின்ற சிறப்பையுடைய சீகாழித்தலைவர் "நன்று; அதன்படியே செய்வோம்" என்று அங்கு அருளிச் செய்ய; *நணுகவந்து... என்ருர்* - வெற்றியுடைய வேலேந்திய அமைச்சஞராகிய குலச்சிறையார்தாம் பக்கத்தில் வந்து "வேறு இனிச் செய்யப்புகும் இந்த வாதம் ஒன்றிலும் தோற்பவர்கள் அதன்மேற் செய்யவேண்டுவது இஃது என்று ஒட்டியே செய்தல் வேண்டும்" என்ருர்.

(வி-ரை) ஏறுசீர் - வேந்தர் என்க; முன்னர் இரண்டு முறையினும் வெற்றி பெற்ற சிறப்பு இனியும் இவ்வாதத்தின் வெற்றியாலும் மேல்ஏறி மிகுவதாகும் என்பது சிறப்பு. **சீர்** - வெற்றியின் சிறப்பு; **ஏறும்** - இனியும் மேன்மேல் மிகுவதாகும்; **வேந்தர்** - முன் **"மன்னர்"** (2693) என்பதற்கேற்ப அதனைத் தொடர்ந்து சொல்லிய ஈண்டும் கூறப்பட்டது காண்க.

நன்று அது செய்வோம் - நன்று - இசைவுகாட்டும் மொழி; **அது** - அதனையே - அதன்படியே; தேற்றேகாரம் தொக்கது.

அருள்செய - அருள் காரணமாகக் கூற.

அமைச்சஞர்தாம் நணுக வந்து - என்ருர் என்க; **நணுக** - "அகலா தணுகாது தீக்காய்வார் போல்க, விகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்" (குறள்) என்றபடி மன்னரை மிக அணுகாமலும் மிக அகலாமலும் நின்ற தூரத்தினின்றும் பக்கத்தில் வந்து; பிள்ளையார் பாலும் நெருங்காது தூரத்தில் நின்ற முறையினின்றும் அணுகவந்து என்றலுமாம்.

நணுக வந்து - இவ்வாறு ஒட்டியே செய்வது - என்ருர் - இவ்வாறு அமைச்சர் சொல்வதற்குரிய குறிப்பு முன் உரைக்கப்பட்டது. இவ்வாதத்திற்கும் அதன் முடிபினுல் அமணர் சார்பினுக்கும் எல்லைகண்டு முடிக்கவேண்டுமென்பது அரசாங்க நிலையிற் ரும் மேற்கொண்ட கடமையினுல் இவ்வாறு அமைச்சர் முன் வந்து கூறினுர் என்க. இதற்கும் பிள்ளையாரது திருவுளப் பாங்காகிய சொற்செயல்களுக்கும் எவ்விதத் தொடர்புமில்லாமை கண்டுகொள்க; **"வென்றிவேல் அமைச்சஞர்தாம்"** என்று அமைச்சுத் தன்மைபற்றிக் கூறியது மிக்கருத்து; "**கோற்ருெழில் திருத்தவல்ல** குலச்சிறையார்" (2747) என்றும் "மருப்புடைக் கழுக்கோல் செய்தார் **மந்திரியார்தாம்**" (2704) என்றும் பின்னர்க் கூறும் கருத்தும் காண்க.

வேறு...செய்வது - வேறு - முன்வாதங்கள் முடிந்த நிலையின் அமையாது இது வேருமென்று கருதி; **ஒன்றினும்** - "இனி ஒன்று காண்பது" (2692) என்று அமணர் கேட்டதில் **வாது ஒன்று** என்பதனை வற்புறுத்தியபடி; **ஒன்றினும்** - உம்மை, முன் இருமுறை தோற்றபடி இவ்வொன்றினும் என இறந்தது தழுவியது; **தோற்ருர் செய்வது** - தோற்றவர் அதன்மேற் செய்வது; உட்படும் தண்டம்; **ஒட்டி** (பந்தயம்) இகலிக் கூறி இசைந்து **ஒட்டுதல்** - பணையம்

2696. அங்கது கேட்டு நின்ற வமணரு மவர்மேற் சென்று
பொங்கிய வெகுளி கூரப் பொருமைகா ரணமே யாகத்
தங்கள்வாய் சோர்ந்து தாமே''தனிவாதி லழிந்தோ மாகில்
வெங்கழு வேற்று வானிவ் வேந்தனே'' என்று சொன்னார். 798

வைத்தல்போல ஒன்றனை இசைதல்; **ஒட்டியே** - ஒட்டியன்றிச் செய்யத்தகாது என ஏனையதனை விலக்குதலின் பிரிநிலை; தேற்றமுமாம். **செய்வது** - வாது செய்யக்கடவது. 797

2696. **(இ-ள்)** அங்கு... கூர - அங்கு அதனைக் கேட்டு நின்ற அமணர்களும் அவ்வமைச்சர் மேல் போயின பொங்கி எழுந்த சினம் மீக்கூர்தலால்; பொருமை... சோர்ந்து - பொருமை என்னும் தீக்குணம் மிக்க காரணத்தால் தங்களுடைய வாய் சோர்ந்ததனால்; தனி வாதில்... என்று - இவ்வொரு வாதத்திலும் தோற்றோமானால் இவ்வரசனை எங்களை வெவ்விய கழுவில் ஏற்றுவானவன் என்று; தாமே சொன்னார் - தாமே சொன்னார்கள்.

(வி-ரை) அவர்மேற் சென்று பொங்கிய வெகுளி - இவ்வாறு தம் சூழ்ச்சிகளுக்கு ஒரு முடிவான எல்லை வகுத்ததனை எண்ணி அவர்மேற் சினங் கொண்டார்கள்.

பொருமை காரணமேயாகத் தங்கள் வாய் சோர்ந்து - மேற்கூறும் வஞ்சினமாகிய ஒட்டுதலுக்குப் பொருமையே காரணமாயிற்றன்றி, வேறெவரும் அவரை அவ்வாறு செலுத்தினாரிலர்; **பொருமை** - சைவர்களது ஆக்கத்தைக் கண்டு பொறுக்க மாட்டாது அழுக்காறு படுதல்; ''அழுக்கா றுடையார்க் கதுசாலும் ஒன்னார், வழுக்கியும் கேடீன்பது''; ''அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத், தீயுழி யுய்த்து விடும்'' (குறள்) என்பன முதுமொழி யாதலின் ஈண்டுப் பொருமையினால் தங்கள் கேட்டினைத் தாமே தேடி வரவழைத்துக் கொண்டனர் என்பதாம். இங்ஙனமாகவும் சமணர் கழுவேறிய செயலின் காரணத்தை அமைச்சர் பாலதாகவோ, அரசன் பாலதாகவோ, அன்றிப்பிள்ளையார் பாலதாகவோ சுமத்திப் பழிசாற்றுதல் எத்துணைப் பெருந்தவறு! என்பதறியலாம். இவ்வாதம் ஒட்டிச் செய்வது என்று அமைச்சர் அறுதியிட்டனரே யன்றி இன்னபடி என்று வகுத்தரிலர். தண்டியடிகள்பால் ''நாங்கள் இவ்வூரிலிருக்கிலோம் என்று ஒட்டிய இவர்களின் சகோதர சமணர்கள் போலவே இவர்களும் தாமே ஒட்டினர் என்க.

தனி... வேந்தனே என்று சொன்னார் - தனி வாது - இனி ஒன்று என்று வேண்டிப் பெற்ற இவ்வோர் வாதம்; **தனி** - ஒப்பற்ற என்றலுமாம்; **வேந்தனே ஏற்றுவான்** - வேந்தன் எங்களை இவ்வாறு முறை செய்வானாகை; அதற்கு நாங்கள் இசைகின்றோம் என்று ஒட்டினார். இசைவு தங்கள் பாலதாகவும் அதனை இயற்றுதல் மட்டில் அரசன் பாலதாகவும் வைத்துக் கூறியது காண்க. **தாமே** - தம் பொறுப்பாகவே. 798

2697. **(இ-ள்)** மற்றவர்... மன்னன் - மற்ற அவ்வமணர்கள் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டதும் பொதிகைமலைக்கு அரசனான பாண்டியன்; செற்றத்தால்... என்று - நீங்கள் வெகுளி மிகுதியினால் இவ்வாறு சொல்லிவிட்டீர்கள்; உங்கள் செய்கைகளையும் மறந்து விட்டீர்கள் என்று கூறி; பற்றிய... கூற - உண்மைபற்றிய பொருளை உட்கொண்ட நுந்தம் ஓலைகளை ஓடும் நீரினையுடைய வைகையாற்றில் அழகு பொருந்த விடுவதற்குச் செல்லுங்கள் என்று சொல்ல,

2697. மற்றவர் சொன்ன வார்த்தை கேட்டலு மலய மன்னன்
''செற்றத்தா லுரைத்தீ; ருங்கள் செய்கையு மறந்தீ'' ரென்று,
''பற்றிய பொருளி னேடு படர்புனல் வைகை யாற்றிற்
பொற்புற விடுவ தற்குப் போதுவ'' தென்று கூற, 799

2698. பிள்ளையார் முன்னம் பைம்பொற் பீடத்தி னிழிந்து போந்து
தெள்ளுநீர்த் தரளப் பத்திச் **சிவிகைமே லெறிச் சென்றார்;**
வள்ளலா ரவர்தம் பின்பு மன்னன்**மா வேறிச் சென்றான்;**
உள்ளவா றுணர்கிலாதா ருணர்வு**மா லேறிச் சென்றார்.** 800

(வி-ரை) மலயமன்னன் - மலயம் - பொதிகை; இங்கு அந்த மலையினையுடைய பாண்டிய நாட்டைக் குறித்தது.

உங்கள் செய்கை - நீங்கள் முன்னே செய்த வஞ்சச் செயல்கள்; வஞ்சனை - பொய் - சூழ்ச்சி முதலிய தீமைகளில் மனமறிந்து நின்றமையால் அவற்றுள் உண்மை நிலை காண்பதெவ்வாறு என்றபடி; **செய்கை** - இவ்வாறு ஒட்டும் செயலால் மேல் விளைவு என்ன என்பதனை நினைக்க மறந்தீர் என்றலுமாம்.

பற்றிய பொருளின் ஏடு - செயல் ஏட்டினிடமாகவும், முடிவு அதனைப் பற்றிய எழுத்தின் பொருள்மேலதாகவும் நின்றமையால் பற்றிய பொருளின் ஏடு என்றார். **பற்றிய** - தொடர்ச்சியாற் பொருந்திய; பொருள் எழுத்தையும், எழுத்து ஏட்டினையுமாகப் பற்றிய.

போதுவது - பெயர். போதும் செயல் இனிச் செய்யக்கடவது என்றதாம்.

போதுக—என்பதும் பாடம். 799

2698. **(இ-ள்)** பிள்ளையார்... சிவிகைமேல் ஏறிச் சென்றார் - பிள்ளையார் பசும்பொன்னாலியன்ற பீடத்தினின்றும் முன்னம் இறங்கி வெளியிற் போந்து தெளிந்த நீர்மையுடைய முத்து வரிசைகளையுடைய சிவிகையின்மேல் ஏறிச் சென்றருளினர்; வள்ளலார்... மா ஏறிச் சென்றான் - வள்ளலாராகிய அவர் பின்பு அரசன் குதிரையின் மேல் ஏறிச் சென்றான்; உள்ளவாறு... மாலேறிச் சென்றார் - உண்மையினை உள்ளபடி உணர்ந்தொழுகும் ஆற்றலில்லாதவர்களாகிய அமணர்கள் தம் உணர்வினில் மயக்கத்தினை மேற்கொண்டு சென்றனர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) முன்னம் இழிந்து போந்து - ''இனி வேற்று வாதென்?'' என அழைத்தமையாலும், ''நன்றது செய்வோம்'' (2695) என்று ஏற்றருளியமையாலும் பிள்ளையார் தாமே முன்னர் எழுந்துபோந்தருளினர்.

பைம்பொற் பீடம் - பிள்ளையாருக்காக மன்னன் இடுவித்த பீடம். ''முழுமணியணிப் பொற்பீடம்'' (2644); ''தமனியப் பீடம்'' (2650).

தெள்ளும் நீர்த்தரளம் - நீர் - நீர்மை; **தெள்ளும்** - நூல்வல்லோர் தெளிந்து மேற்கொள்ளும். **பத்தி** - வரிசை.

2699. தென்னவன் வெப்புத் தீர்ந்து செழுமணிக் கோயி னீங்கிப்
பின்னுற வணைந்த போது **பிள்ளையார் பெருகுஞ் செல்வம்**
மன்னிய மதுரை மூதூர் மறுகில்வந் **தருளக் கண்டு**
துன்னிய மாதர் மைந்தர் தொழுதுவே றினைய சொன்னார். 801

மா ஏறி - குதிரையின்மேல் ஏறி.

உள்ளவாறு - உண்மைநிலை இருக்கும் வழியினை; இரண்டனுருபு தொக்கது.

உணர்வு மால் ஏறி - உணர்வு - அறிவு; ***மால் ஏறி*** - மயக்கம் மிக்கு; பொருளல்லாததைப் பொருள் என்றும், வெற்றிப்பாடல்லாததனை வெற்றிப்பாடு என்றும் கொண்டமையும், தோல்வி வரும் குணங்குறிகளை அன்னவென் றறியாமையும் கண்டு **மால்** - (மயக்கம்) **என்றார்.** ***உள்ளவா றறிகிலாதார்*** - என்றதுமிது.

மேல் ஏறிச் சென்றார் - மா ஏறிச் சென்றான் - மால் ஏறிச் சென்றார் - என மூவருக்கும் மூவகையான ஏற்றம் கூறியது அவ்வப் பொருட் குறிப்புப் பெற நின்ற சொல்லணி. ***800***

2699. **(இ-ள்)** தென்னவன்... போது - பாண்டியன் வெப்பு நோய் நீங்கிச் **செழிய** அழகிய அரண்மனையினின்றும் புறப்பட்டுத் தமது பின்னே பொருந்த அணைந்தபோது; பிள்ளையார்... கண்டு - பெருகுகின்ற செல்வம் நிலையாக நிறைந்த மதுரையாகிய பழம் **பதியின்** வீதியில் பிள்ளையார் எழுந்தருளி வருதலைக் கண்டு; துன்னிய... சொன்னார் - வந்து நெருங்கிய மாதர்களும் மைந்தர்களும் வணங்கித் தத்தமக்குத் தோன்றியவாறே வெவ்வேறு விதம்பட இத்தன்மையான மொழிகளைச் சொல்லலாயினர்.

(வி-ரை) செழுமணிக் கோயில் - அரசனுடைய அரண்மனை.

தென்னவன் - பின்னுற அணைந்த போது பிள்ளையார் வந்தருள - என்றது அரசன் பின்னும் பிள்ளையார் முன்னுமாகப் போந்த முறையும், அரசன் பின் அணைந்த பின்பு பிள்ளையார் வீதியில் புறப்பட்ட காலமுறையும் குறித்தபடி; **பின்னுற** - பின்பற்ற என்றதும் குறிப்பு. இவ்வாத முடிவில் பிள்ளையார் ஈந்தருளிய திருநீற்றினை முழுவதும் அணிந்து புனிதனாய் உய்ந்த வரலாறும் காண்க. (2755-2756).

பெருகும் செல்வம் மன்னிய மதுரை மூதூர் - அங்கயற்கண்ணம்மையாரது அருள் நோக்கமாகிய அரசசெல்வம் நிலைபெற்று நிறைந்த பழவூர். இத்தன்மை என்றும் நிலைபெற்றும் பெருகியும் நிகழ்வது இன்றும் கண்கூடு. "பண்டு மின்று மென்றுமுள்ள பொருள்" (திருப்பல்லாண்டு) என்ற தன்மை இம்மூதூருக்கும் பொருந்தும்.

வந்தருள - ஒருசொல்; வந்து அருள என்று பிரித்து வந்து நகர மாந்தர்க்குக் காட்சி தந்து அருள என்றலுமாம்; பின்னர் "மன்னனீ றணிந்தா னென்று மற்றவன் மதுரை வாழ்வார், துன்னிநின் றார்க ளெல்லாந் தூயநீ றணிந்து கொண்டார்" (2755) என்னும்படி நகர மாந்தரும் அருள்பெறும் குறிப்பு.

துன்னிய மாதர் மைந்தர் தொழுது - பிள்ளையார் பின் அரசனும் அரசியாரும் மந்திரியாரும் எழுச்சியாக ஒருபுறமும், அமணர் கூட்டம் எண்ணாயிரம் ஒரு பக்கமுமாக மிகப்

2700. ''மீனவன் கொண்ட வெப்பை நீக்கிநம் **விழுமந் தீர்த்த**
ஞானசம்பந்த ரிந்த நாயனுர் காணு'' மென்பார்
''பானறுங் குதலைச் செய்ய பவளவாய்ப் பிள்ளை யார்தாம்
மானசீர்த் **தென்ன ஞடு வாழவந் தணைந்தா**'' ரென்பார். 802

---

*பெரிய ஆரவாரமுடைய எழுச்சியானமையாலும், தெய்வத் தன்மை விளங்கிய வாதமும் அரசன் நோய் நீங்கினமையும் ஆகிய பெருங் செயல்கள் நகர முழுதும் பரவிவிட்டமையாலும் நகர மாந்தர் இவ்வெழுச்சியினையும், இதன் விளைவாகிய முடிவினையும் காணும் ஆர்வத்துடன் எழுந்துவந்து மறுகில் கூடினுர்கள்; அவருள் **மாதர்க**ளே முற்படும் இயல்பு காட்ட அவர்களை முன்வைத்தார். **தொழுது**-முன்னர் வேற்றுச் சமயம் நம்பின நிலையில் இருந்தாராதலின் தொழாதார் (2642) இப்போது அதனில் நம்பிக்கை நீங்கிச் சைவமாகிய முன்சார்பின்நம்பிக்கை கொண்டமையின் ஈண்டுத் **தொழுது** என்ருர்; இடைப்பட்ட சிறுகால அளவே நின்றமையால் சமண நம்பிக்கை விரைவில் நீங்கவும் சைவநிலை முன்பு நீண்டநாட்பொருந்தியதாதலின் விரைவிற் பற்றவும் ஏதுவாயிற்று; இதனை இவர் மேற் கூறுவனவற்ரு லறிக.*

__வேறு__ - தத்தமக்கேற்றவாறு வெவ்றேருக; __இனைய__ - மேல் 2706 வரை ஏழு பாட்டுக்களிற் கூறுமாறு. இவற்றையெல்லாம் தொடர்புபடுத்திக் காட்டுதலுமாம்.

__வந்தணைய__—என்பதும் பாடம். *801*

2700. **(இ-ள்)** *மீனவன்... காணும்மென்பார் - பாண்டியன் கொண்ட வெப்பு நோயினைத் தீர்த்து நமது வருத்தத்தைத் தீர்த்தருளிய திருஞானசம்பந்தர் இந்த நாயனுர் பாருங்கள் என்று சொல்வார்கள்; பால் நறும்... தாம் - பால் மணங் கமழும் குதலைச்சொல் எழும் பவளம்போன்ற வாயினையுடைய பிள்ளையார்தாம்; மானசீர்... என்பார் - பெருமையாய சிறப்பினையுடைய பாண்டியனது நாடு வாழும் பொருட்டு இங்கு வந்தணைந்தனர் என்று சொல்வார்கள்.*

(வி-ரை) கொண்ட வெப்பு - *தனது தீச்சார்பினுல் தானே தேடிக்கொண்ட என்ற குறிப்புக் காண்க. தீமைக் குடன்பாடு செய்து அதன் பயனுக வாங்கிக் கொண்ட என்று வாணிகக் குறிப்பும் காண்க.*

மீனவன் வெப்பு நீக்கி நம் விழுமம் தீர்த்த - *என்றது அரசனுக்கும் குடிகளுக்கும் உள்ள உரிமைப்பாடு குறித்தது.*

ஞானசம்பந்தர் இந்த நாயனுர் காணும் - *ஞானசம்பந்தர் என்ற பெயரால் அறியப்படுகின்றவர் இந்தத் தலைவர்தான் பார்த்துக்கொள்ளுங்கள் என்று அறிந்தவர் அறியாதாரைத் தேற்றியது; பெயர் அளவாற் கேட்டறிந்து திருவுருவத்தைக் காணுது நின்ருேர் பலராதலால் அவர்க்கு அறிவித்தபடி; பிள்ளையார் மதுரையில் அன்று முன்னை நாளே எழுந்தருளினர். அப்போது திருக்கோயிலுக்கு வந்தருளிய போதும் அங்குநின்றும் திருமடத்திற் கெழுந்தருளும்போது கண்டோர் சிலரே; பின்னர் அன்றிரவு அமணரது தீச்செயலால் நோய் மூள அதன்பொருட்டுத் திருக்கோயிலுக்குச் சென்று பின் அரண்மனைக்குள் புகுந்தருளியபோது கண்டோரும் மற்றும் சிலரே; அப்போது சமணசமயம் மூண்டு மாந்தரை மயக்கிநின்ற திண்ணிய இருள்நிலை யாதலின் மாந்தர் பலராகக் காண்பதும் பெரும்பொருளாகக் கருதுவதும்*

நிகழா; அன்று நோய் நீக்கிய நிலை பிள்ளையாரது அருளினால் திருநீற்றினால் நிகழ்ந்தது என்றும், அதன்மேல் அனலிற் பிள்ளையார் இட்ட ஏடு அழியாது நிலைபெற்றுச் சைவ உண்மை சாற்றியது என்றும், இவ்விரண்டினும் அமணர் ஒட்டிக்கொடுத் தோல்வியுற்றனர் என்றும், அரசன் அவர்களை ஒதுக்கிய பின்னும் மூன்றாவது ஒருமுறை இறுதியாக ஏட்டினை நீரில் இட்டு உண்மை காணவும் இதிலும் தோல்வியுறின் கழுவேறுதற்கும் ஒட்டிப்போக நகின்றனர் என்றும் நிகழ்ந்த இச்செய்திகள் நகரம் முழுதும் கடுவேனிலிற் கடுங்காற்றிற் பரவும் காட்டுத் தீப்போலப் பரவிவிட்டமையின் இவ்வெழுச்சிகாண மக்கள் பெருங்கூட்டமாகத் திரண்டு கூடிவிட்டனர்; இவர்கள் முன் கூறியவாறு பிள்ளையாரது பெயரும் திருவுருவமும் கண்ட சிலர் காணாத பலருக்கும் அவரையும் அவர் பெருமைகளையும் அவரால் வெல்லப்பட்ட அமணரின் இழிவையும் பிறவற்றையும் அறிவுறுத்தும் இயல்பின் எழுவன இங்குக் கூறும் மொழிகள். மேல் ஆறு பாட்டுக்களினும் வருவனவும் இவ்வாறே இந்நிகழ்ச்சிகளின் பலபல பகுதிகளை எடுத்து மக்கள் தத்தமக்குத் தோன்றிய கருத்துக்களை எடுத்துக் கூறும் தன்மையும் காண்க.

முன்னர்க் கண்டவர் சிலராதலினாலும், சமண சமயக் கோட்பாட்டுட்பட்டு நின்ற நிலை நீங்காமையானும் ''பண்ணிய தவங்கள் என்கொல் - புண்ணிய மூர்த்தி வந்து மதுரையிற் புகுத'' (2642) என்றமட்டில் அமைந்த நிலையினை ஒரு பாட்டிற் கூறிய ஆசிரியர், இங்கு மாதர், மைந்தர் பலரும் துன்னிய பெருந்திரளாகக் கூடிக் கண்டு சைவ வெற்றிப்பாடும் சமணரது இழிவும் அழிவும் அறிந்துகொண்ட நிலையிற் கூறுவன பலவாதலின் அத்திறம்பட ஏழு பாட்டுக்களிற் பலபடப் புகழ்ந்து கூறும் அமைதியும் கவித்திறமும் காண்க. கூறும் பொருளும் ஏற்றம்பெற அமைத்தருளுதலும் காண்க.

மானசீர் - பெருஞ் சிறப்பு; ''பாண்டி நாடே பழம்பதியாகவும்,'' தென்பாண்டி நாடே தெளி'' என்பனவாதி திருவாக்குக்களால் பேரருட்பெரியோர்களாற் போற்றப்படுதலும், இறைவர் எவ்வுயிர்க்கும் எளிவரும் பேரருளுடன் தேற்றம் பெற விளங்குதலுமாகிற சிறப்பு; பெருமக்களாற் போற்றப்படுதல் **மானம்** - பெருமை எனவும், இறைவர் எளிவரும் கருணை **சீர்** எனவும் கொள்க. ''நார்மன்னு சிந்தைப் பலநற்றுறை மாந்தர் போற்றும், பார்மன்னு தொன்மைப் புகழ்பூண்டது'' *(968)* என்று இத்தன்மை பற்றியே தொடக்கத்தில் ஆசிரியர் அறிவித்தருளியது காண்க.

தென்னன் நாடு - தென்னவனும் அவன் நாடும் என்ற குறிப்புமாம். **நாடு வாழ** - நாட்டினைக் கூறியது அவ்வாழ்வு தங்களுக்கு வருதலால் தாம் பெறும் நலம் பற்றி. வாழ்ந்தன கண்கள்'' *(2701)* என்பது முதலியவை காண்க. ''மணங் கண்டு வாழ்ந்தோ மென்பார்'' *(171)*; ''நல்லமங் கலங்கள் கூறி மனிதருந் தேவ ராவர் கண்ணிமை யாது வாழ்த்தி'' *(புரா - 1238)* முதலியவை காண்க.

வந்து - தாமே வந்தருளி; இத்தனைச் சீர்கேடுகளுக்குமிடையே கருணையினால் வந்தருளி என்றதும் குறிப்பு. **802**

2701. **(இ-ள்)** ''எரியிடை...அருகர்'' என்பார் - தீயிற் செய்த வாதத்தில் நமது அமண குருமார் தோற்றது இவர்க்கு என்று சொல்வார்கள்; புரிசடை...கண்டோம் என்பார் - புரிசடையினையுடைய சிவபெருமானது திருநீறே மெய்ப்பொருளாவது என்பதனைக் கண்ணாரக்

2701. ''எரியிடை வாதிற் றோற்ற திவர்க்குநம் மருக'' ரென்பார்;
''புரிசடை யண்ண லீறே பொருளெனக் கண்டோ'' மென்பார்;
''பெருகொளி முத்தின் பைம்பொற் சிவிகைமேற்பிள்ளை யார்தாம்
வருமழ கென்னே'' யென்பார்; **''வாழ்ந்தன கண்க''**ளென்பார்; 803

2702. ''ஏதமே விளைந்த திந்த வடிகண்மா ரியல்பா'' லென்பார்;
''நாதனு மால வாயி னம்பனே காணு'' மென்பார்;
''போதமா வதுவு முக்கட் புராணனை யறிவ'' தென்பார்;
''வேதமும் நீறு மாகி விடும்விடு மெங்கு'' மென்பார்; 804

கண்டோம் என்று சொல்வார்கள்; பெருகுஒளி... என்னே என்பார் - பெருகும் ஒளியினையுடைய முத்து நிரைத்த பசும்பொன்னுலியன்ற சிவிகையின் மேலே பிள்ளையார்தாம் வருகின்ற அழகுதான் என்னே! என்று சொல்வார்கள்; வாழ்ந்தன கண்கள் என்பார் - அக்காட்சியைக் கண்டு நமது கண்கள் வாழ்வடைந்தன என்று சொல்வார்கள்;

(வி-ரை) தோற்றது - தோல்வியுற்ற செயல் நிகழ்ந்தது. **இவர்க்கு**-இவரால் - குவ்வுருபு கருத்தாப்பொருளில் வரும் மூன்றனுருபாக வந்தது. பகைப்பொருளில் வந்த நான்கனுருபாகவே கொள்ளினும் அமையும்.

நம் அருகர் - இதுவரை மேம்பட்டு நமக்குக் குருமாராகி நின்றவர் என்ற உரிமை பற்றி **நம்** என்றூர்கள்.

நீறே பொருள் எனக் கண்டோம் - சுரவாதத்தால் நிச்சயமாகக் காட்டப்பட்ட உண்மையாதலின் இவ்வாறு கூறினூர். **பொருள்** - மெய்ப்பொருள்.

அழகு என்னே - என்னே - சொல்லவொண்ணுத அற்புதம் என்றபடி.

வாழ்ந்தன கண்கள் - வாழ்வாவது கண் பெற்ற பயன்பெறுதல்; ''மண்ணெலா முய்ய வந்த வள்ளலார் தம்மைக் கண்டு, கண்ணினுற் பயன்கொண்டார்கள் கன்னி நாட்டவர்க ளெல்லாம்'' (2760) என்று மேல் இக்கருத்தை முற்றுவித்தல் காண்க. ''கண்ணினுலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்'' உறுதிப்பொருள் இரண்டனு ளொன்றுமென்று காட்டும் பொருள் ஈண்டும் ஒக்கும் என்க; (**அவர்** - அடியார் எனக் கொள்ளலுமாம்). 803

2702. **(இ-ள்)** ஏதமே... இயல்பாலென்பார் - இவ்வமண குருமாரின் இயல்பினுலே தீமையே விளைந்தது என்று சொல்வார்கள்; நாதனும்... காணும் என்பார் - முழு முதற் கடவுளாவார் திருவாலவாயில் எழுந்தருளியுள்ள நம்பனே என்று கண்டு கொள்ளுங்கள் என்று சொல்வார்கள்; போதமாவதுவும்... அறிவது என்பார் - முக்கண்ணுடைய பழமையாகிய சிவபெருமானையறிவதுவே ஞானமாவது என்று சொல்வார்கள்; வேதமும்... எங்குமென்பார் - வேதமும் திருநீறுமே எங்கும் நிறைவுடையனவாகிப் பரவியிடும் என்று சொல்வார்கள்;

(வி-ரை) இயல்பால் - அவர் தத்தம் இயல்புக்கேற்றவாறு செய்த தொழில்களால்.

நாதன் - தெய்வத் தன்மையின் நிறைவுள்ள தலைவர்.

2703. ''அடிகண்மார் முகங்க ளெல்லா மழிந்தன பாரீ'' ரென்பார்
''கொடியவஞ் சனைக ளெல்லாங் குலைந்தன போலு'' மென்பார்;
''வடிகொள்வேன் மாறன் காதல் மாறின வண்ண'' மென்பார்;
''விடிவதாய் முடிந்த திந்த வெஞ்சம ணிருளு'' மென்பார்; 805

நம்பன் - நம்பி அடையத்தக்கவன் என்பது சொற்பொருள்; இது காரண இடுகுறியாய்ச் சிவபெருமானையே உணர்த்தும்; **நம்பி** - (நம்பப்படுபவன்) என்றது மிக்க நத்து. நம்பி **என்ற** திருப்பதிகம் (நம்பிகள்) பார்க்க. ஏனைச் சிறுதெய்வங்களை நம்பி அடைபவர்களும், அவற்றுற் சிறுசிறு பயன்கள் பெறுபவர்களும் உண்டு. ஆனால் ''மற்றத் தெய்வங்கள் வேதனைப் படுமிறக்கும் பிறக்குமேல் வினையும் செய்யும்; ஆதலா லிவையிலாதா னறிந்தருள் செய்வனன்றே'' (சித்தி); ஈண்டு அதுகாறுங் கைகொடுத்து அமணரைக் காத்துப் பயன் உதவிய அருகக் கடவுள் அவர்களை இப்போது நட்டாற்றில் விட்டுப்போவது கண்டு மாதர் மைந்தர்கள் இவ்வாறு கூறினர். ''ஏர்கொண்முக் குடையுந் தாமும் எழுந்துகை நாற்றிப் போக, வூருளோ ரோடிக் காணக் கண்டனம்'' (2535) என்று சமணர்களும் நகர மாந்தர்களும் முன்னர்க் கண்ட கனாத்திறமும் கருதுக.

புராணனை அறிவது - **போதமாவது** என்க. **போதம்** - முடிந்த ஞானம்; அனுபவ ஞானம். **புராணன்** - பழமைக்கெல்லாம் பழமையானவன். **அறிவதுவே** என்று பிரிநிலை ஏகாரம் விரிக்க.

நம்பனே நாதன் - அவனை அவ்வாறறிந்து ஒழுகுதலே போதம் என்றதாம். இஃது அனல் வாதத்தின் முடிவினுல் மக்கள் அறிந்துகொண்ட முடிபு.

எங்கும் வேதமும் நீறுமாகி விடும் விடும் - விடும் விடும் என்றது துணிவுப் பொருளில் வந்த அடுக்கு; **ஆகிவிடும் - விடும்** பகுதிப் பொருள் விகுதி; **வேதமாகி விடுதல்** - வேதநெறி தழைத்தோங்குதலையும், **நீறுமாகிவிடுதல்** - மிகுசைவத் துறை விளங்குதலையும் குறித்தன; **எங்கும்** - முன் அவை குன்றிச் சமணம் மிக்க இடங்களில் எல்லாம்; அது பற்றி முன் 2499-2500-ல் அமணர் நிறைந்த நிலையிற் கூறப்பட்டதும், பின் 2769-ல் வேதமும் நீறுமாகித் தூய்மையாக்கப்பட்ட நிலையிற் கூறப்படுவதும் காண்க. இவ்வாறு பின்வரும் நிகழ்ச்சியினைத் தம் நுண்ணறிவினுல் மதுரை நகர் மாதர் மைந்தர் முன்னறிந்து கூறும் திறம் கருதுக. இரண்டாவது **விடும்** என்றதற்கு அமணர் செய்த மயக்கம் நீங்கி **விடும்** என்றலுமாம்.

விரவிடுமெங்கும்—என்பதும் பாடம். 804

2703. **(இ-ள்)** அடிகண்மார்... பாரீர் என்பார் - சமண முனிவர்களின் முகங்களெல்லாம் வாடிவிட்டன பாருங்கள் என்று சொல்வார்கள்; கொடிய... போலுமென்பார் - கொடிய வஞ்சனையாற் கட்டிய மாயாசாலங்கள் எல்லாம் அழிந்துவிட்டன போலும் என்று சொல்வார்கள்; வடிகொள்... வண்ணமென்பார் - வடித்த வேலை ஏந்திய அரசன் (அடிகள்மேல் வைத்திருந்த) பற்று மாறிவிட்ட வண்ணந்தான் என்னே அதிசயம்! என்று சொல்வார்கள்; விடிவதாய்...இருளும் என்பார் - இந்தக் கொடிய சமணமாகிய இருளும் நீங்க இன்று புலர்ந்து விடிவதாய் முடிவதாயிற்று என்று சொல்வார்கள்;

2704. "நெருப்பினிற் றோற்றார் தாங்க ணீரில்வெல் வர்களோ? வென்பார்
"**இருப்புநெஞ் சுடையா** ரேனும் பிள்ளையார்க் கெதிரோ?"வென்பார்;
"**பருப்பொரு ளுணர்ந்தார் தாங்கள் படுவன பாரீ**"ரென்பார்;
"மருப்புடைக் கழுக்கோல் செய்தார் மந்திரி யார்தா" மென்பார்; 806

(வி-ரை) அடிகண்மார் முகங்களெல்லாம் அழிந்தன பாரீர் - மறுகில் கூடிய பெருந்திரட்கூட்டத்தில் மாதர் மைந்தர் ஒவ்வொரு நிலைபற்றிச் சிந்தித்துப் பலபடப் பேசுகின்றார்கள். முன்னர் முதலில் பிள்ளையாரது அழகிய அருள் பொதிந்த தோற்றம் கண்ட சிலர் அதுபற்றிக் கூறினர்; அதன்பின் சிற்சிலர் முன் நிகழ்ந்த இரண்டு வாதங்களையும் அவற்றின் முடிபுகளையும் பற்றிச் சிந்தித்துப் பேசினார்கள்; இங்கு வேறுசிலர் அமணரின் கொடிய வஞ்சனைகளையும் அவை அழிய, அவற்றுள்ளே சிக்குண்டு கிடந்த அரசன் காதல் மாறுபட்ட நிலையினையும் சமண்மாயம் அழியும் நிலையினையும் எண்ணி மகிழ்ந்து கூறினர்; இந்நிலைகள் இப்பாட்டாற் கூறப்பட்டன.

முகங்களழிந்தன - முகமழிதல் அகத்தின் வாடிய நிலை முகத்திற் றோன்றநின்ற குறிப்பு. முன்னர் இருமுறையும் தோல்வியுற்றமையும், வேந்தன் உண்மையறிந்து தங்கள் கட்டினின்றும் நீங்கியமையும், இனிவரும் வாதிலும் உண்மையானுதல் வஞ்சத்தானுதல் தாம் வெற்றியடையமாட்டாத நிலைமையும், அதன் பிறகு தாமும் (கழுவேறித்) தமது சமயமும் மாயவேண்டிய நிலைமையும் எண்ணி வாடினர்; **அழிந்தன** - அழிந்த நிலைமையின. **அழிந்தன** - இறந்தகாலம் பின்னர் வரும் அழிவு இப்போதே வந்துவிட்ட உறுதி காட்டிற்று.

வஞ்சனைகள் - பொய்யினாலும் வஞ்சனையினாலும் செய்த சூழ்ச்சி (செயல்)கள்; மாயசாலங்கள்; **குலைதல்** - நிலையழிதல். ஈண்டும் இறந்தகாலம் உறுதியும் விரைவும் குறித்தது.

மாறன் காதல் மாறின வண்ணம் - அரசன் அடிகள் மேல் வைத்த திண்ணிய காதல் இவ்வளவு விரைவில் முழுதும் மாறினவண்ணம்தான் என்ன அதிசயம் என்றது. **மாறன் - மாறின** - சொல்லணி. மாறினவனுதலின் அக்குறிப்புப்பட ஈண்டு **மாறன்** என்று கூறினார்; என்ன அதிசயம் என்பது இசையெச்சம்.

விடிவதாய்...இருளும் - இருள் - அதனையுடைய இரவுக்காயிற்று; ஆகுபெயர், சமணை இரவிருளாகக் கூறியது உருவகம்.

விடிவதாய் முடிந்தது - இருள் - விடிவது - முடிவது - இரவு இருள் நீங்கிப் பொழுது புலர்ந்தது; ஏனையிருள்போல அழிவின்றி ஒதுங்கி நிற்பதன்றி இவ்விருளின் செயல் அழிந்து முடிவதாயிற்று என்பார் **விடிவதா**யிற்று என் றெழியாது **இருள் முடிந்தது** என்றார். **விடிவதாய்** - விடியற்பொழுதாய் வர என்ற குறிப்புமாம். சூரியனாகிய பிள்ளையார் வர என்றது இடத்துக்கேற்ப வருவித்துரைத்துக்கொள்க; **முடிந்தது** என இறந்தகாலத்தாற் கூறியது விரைவில் நிகழும் உறுதிபற்றி. 805

2704. **(இ-ள்)** நெருப்பினில்... வெல்வர்களோ என்பார் - தீயினை ஒட்டிச் செய்த வாதத்தில் தோற்ற இவர்கள் நீரிற் செய்யும் இவ்வாதத்தில் வெற்றி பெறுவார்களோ? என்று

சொல்வார்கள்; இருப்பு... எதிரோ என்பார் - இந்த அமணர்கள் இரும்பு போன்ற **கடிய** நெஞ்சுடையவர்களாயினும் பிள்ளையார்க்கு எதிராய் நிற்க வல்லரோ என்று **சொல்வார்கள்;** பருப்பொருள்... பாரீர் என்பார் - நுண் பொருளல்லாத பருப்பொருளினை மட்டும் **உணர்ந்த** அவ்வளவில் அடங்கிய அமணர்பால் இருக்கும் முடிபினைப் பாருங்கள் என்று **சொல்வார்கள்;** மருப்புடை... மந்திரியார்தாம் - கொம்புகளைப் போலக் கூரிய நீண்ட கழு**மரங்களை** மந்திரியாராகிய குலச்சிறையார் செய்வித்துள்ளார் என்று சொல்வார்கள்;

(வி-ரை) முன் பாட்டுக்களிற் கூறிய கருத்துக்களன்றி, அமணர்களின் **பாலனவாக** எழுந்தனவாய் வேறு பலருடைய கூற்றாய் அமைந்தது இப்பாட்டு.

நெருப்பினில் தோற்றார் நீரில் வெல்வர்களோ நெருப்பும் ஒரு பூதம்; அது **போன்று** நீரும் ஒரு பூதம்; ஆதலின் ஒன்றிற் றோற்றார் மற்றொன்றில் வெல்வரோ **என்பது** தோற்றமுறையில் நீரைத் தன்பாற் றோற்றுவிக்கவும், ஒடுக்குமுறையில் அதனைத் **தன்னின்** ஒடுக்கவும் வல்லது தீ; ஆதலின் அதனில் தோல்வி நீரினில் தோல்வியை **உள்ளிட்டதாம்** என்க. இனி, வலிய நெருப்பினில் இவர்களை வென்று தோல்விபெறச் செய்த **பிள்ளையார்** அதனின், கீழதாய்க் குறைந்த வலிமையுடைய நீரினில் வெல்லாது **விடுவரோ?** வென்றேவிடுவர்;- ஆதலின் இவர்கள் வெல்வரோ என்று பிள்ளையாரைப் பற்றி **உரைப்பதும்** கருத்து; ஆனால் இப்பாட்டுக் கருத்துக்கள் முழுமையும் அமண அடிகளைப்பற்றியே **எழுதலின்** இவ்வாறு அவர் செயல்பற்றிக் கூறினர்.

இருப்பு நெஞ்சம் - இரும்பு போற் கடிய நெஞ்சம்; அன்பு கலவாத முழு வன்கண்மையுடைய மனம்; **இருப்பு நெஞ் சுடையார்** - அமண அடிகண்மார்;வஞ்சனை சித்திரித்துக் கொலையும் சூழத் துணிபவர்; **உடையரேனும்** - உம்மை சிறப்பு. **எதிரோ** - எதிர்த்து நிற்கும் ஆற்றலுடையராவரோ; எதிர்க்க வல்லவரோ? எதிர் அல்லர் என **வினு** எதிர்மறை குறித்தது.

பருப்பொருள் உணர்ந்தார் - பசு தர்மங்களாகிய அறங்களை விதிக்கும் நூல்களை மட்டும் கற்று, அவற்றின் நுண்பொருளாகிய உள்ளுறையை அறியாதார்; பாவ புண்ணியங்களை உணராதார். இலிங்க புராணத் திருக்குறுந்தொகையும், ''கங்கையாடிலென்'' என்பன முதலாக வரும் தனித் திருக்குறுந்தொகையும், பிறவும் பார்க்க; ''பூசுநீறு சாந்த மெனப் புனைந்த பிரானுக் கான பணி, யாசிலாநல் லறமாவதறிய வருமோ உமக்'' கென்று தண்டியடிகள் புராணத்துள் (6) இந்நுட்பம் விளக்கப்பட்டதும், பிறவும் காண்க. இவ்வாறன்றி நுண்பொருளாவது இயற்கையினூடு இரண்டறக் கலந்துள்ள இறையின் உண்மை என்றுரைப்பாரும் உண்டு; இயற்கை என்ற சொல்வழக்குப் பொருளற்ற தொன்றென்பது முன்னரே கூறப்பட்டது. ''அறியுமச்சமய நூலினளவினி லடங்கிச் சைவ, நெறியினிற் சித்தஞ் செல்லா நிலைமை'' (2501); ''அந்நூற் றன்மை யுன்னிய மாந்தர், இதுவே பொருளென் றதனிலை யறைதலின், வேற்றோர் பனுவ லேற்றோர்க் கிசையா, மாறுபாடு கூறுவரதனாற், புறச்சம யங்கள் சிறப்பில வாகி, அருளின் மாந்தரை வெருளுற மயக்கி, யலகைத் தேரின் நிலையிற் றீரும்'' (சங்கற்ப நிராகரணம் - பாயிரம்).

படுவன - அழிந்துபடும் நிலைகள்.

2705. ''ஏடுகள் வைகை தன்னி லிடுவதற் கணைந்தா'' ரென்பார்;
''ஓடுநீ ருடன்செ லாது நிற்குமோ வோலை'' யென்பார்;
''நீடிய ஞானம் பெற்றார் நிறுத்தவும் வல்ல'' ரென்பார்;
''நாடெலாங் காண விங்கு நண்ணுவர் காணீர்'' என்பார்; 807

மருப்புடைக் கழுக்கோல் - மருப்பு - *கொம்புகள்; குத்திக் கொல்லும்படி கூரிய மான்கொம்பு முதலாயின.* ***மருப்புடை*** - *மருப்பின் தன்மையை உடைய. அது போலக் கூரிய; மான்கொம்பினை நுனியிற் பதித்த என்பாருமுண்டு.*

கழுக்கோல் செய்தார் - *தோற்றால் கழுவேற்றுவான் இம்மன்னனே என்று ஒட்டினாராதலானும், தோற்பது நிச்சயமாதலானும், அதன்பின் ஒட்டியவாறே மன்னவன் ஆணையிடின் எண்ணாயிரவரையும் கழுவேற்ற அத்துணைக் கழுக்கள் வேண்டப்படுமாதலானும், முன் எச்சரிக்கையாக மந்திரியார் கழுக்களைச் செய்தனர் என்க; இவ்வாறன்றி இவ்வமணரைக் கழுவேற்றி யகற்றுதலில் முனைந்தனர் அமைச்சர் என்ற பொருள்படக் கூறுவன வெல்லாம் பிழை என்க.* *806*

இனி, நகரமாந்தருள் வேறுசிலர் இனி வரும் நிகழ்ச்சியினையும் அதன் விளைவையும் பற்றித் தங்கள் எண்ணங்களைச் செலுத்திப் பேசும் கூற்றாக அமைந்தது இப்பாட்டு.

2705. **(இ-ள்)** வெளிப்படை. ''ஏடுகளை வைகையாற்றில் விடுவதற்கு வந்தார்கள்'' என்று சிலர் கூறுவர்; ''அவ்வாறு விட்டால் அந்த ஓலைகள் ஓடுகின்ற ஆற்று நீருடன் செல்லாது விட்ட இடத்திலேயே நிற்குமோ'' என்று வேறு சிலர் கேட்பர்; ''நீடிய ஞானம் பெற்ற பிள்ளையார் அவ்வேடுகளை அவ்வாறு நிறுத்தவும் வல்லவர்'' என்று அவர்களுக்குச் சிலர் பதிலுரைப்பர்; ''பிள்ளையார் நாம் எல்லாரும் காணும்படி இப்போது இங்கு நேரில் வருவர் நீங்களே பாருங்கள்'' என்று சிலர் கூறுவர்.

(வி-ரை) ஏடுகள் - பிள்ளையாரும் சமண அடிகண்மாரும் தனித் தனி வேறாக இடுதலின் பன்மையாற் கூறினார்; ஏடு - இங்கு, ஓலை - இதழ் - என்ற பொருளில் வந்தது.

ஓடு நீருடன் செலாது நிற்குமோ ஓலை - தத்தம் ஏடுகளை வைகையில் இடச் செல்கின்றனர் என்று ஒருவர் கூற, அதைத் தொடர்ந்து இன்னொருவர் அவ்வாறு இடுதலில் நீருடன் செலாது தங்கிநிற்கும் ஏடு மெய்ப்பொருள் பரிப்பது என்றும் அஃதே வெற்றியாமென்றும், இதில் தோல்வியுற்றவர் கழுவிலேற்றி முறை செய்யபடுவர் என்றும் அறியப்படுதலின்,அவ்வாறு எந்த ஏடுதானுக - ஓலை என்பதன் இயல்பு நீரில் மிதப்பதும் அந்நீருடன் ஒழுகிச் செல்வதுமாகும்; ஆதலின் இவ்விருவர் ஏடுகள் எதுதான் ஓடுநீருடன் செல்லாது இட்ட இடத்தில் தங்கிநிற்க வல்லதாம் என்று ஐயுற்றுக் கூறினார்; இஃது இந்நாளிலும் உலகியற் பொருளியல்புபற்றிக் கூறும் பெரும்பான்மையோர் கூற்றாதல் காண்க.

நீடிய ஞானம் பெற்றார் நிறுத்தவும் வல்லர் - இது மேலும் ஒருவர் முன்கூறிய ஐயக் கூற்றினைத் தொடர்ந்து கொண்டு நீர் கூறியது ஒக்கும்; ஆனால் இங்கு அவ்வாறு ஓடுநீருடன் செலாது நிற்கும் எமது ஓலை என்று துணிந்து இசைந்த பிள்ளையாரது இயல்பினை நீர் அறிந்திலீர்;

அவர் ஏனையோர் பெறும் ஞானம் போலன்றி எப்பொருளும் என்றும் எங்கும் நீடிய ஞானம் பெற்றவர் என்பது முன்னர் இங்கு நிகழ்ந்த இரு நிகழ்ச்சிகளாலும், முன் வரலாற்றாலும் அறிந்தனம்; ஆதலின் அவர் அவ்வாறு தமது ஓலையை ஓடுநீருடனே சென்றுவிடாமல் நிறுத்தி வைக்கவும் வல்லவர் என்றார். சடப்பொருளின் இயல்புபற்றி உரைக்காது இங்கு ஞானத்தின் வலிமைபற்றி உரைக்கப்பட்டது. சித்துப் பொருளாகிய ஞானமே சடப்பொருளை இயக்குதலால் இவ்வாறு கூறினார். பிள்ளையாரது பல்வேறு அருளிப்பாடுகளாலும் இவ்வாறு ஐயங்கொண்டு அபசாரப்படும் இந்நாண் மாக்கள் இவ்வுண்மை கண்டு தெளிவார்களாக.

நிறுத்தவும் வல்லர் - இங்கு அமணர் சமய உண்மை காணக் கொண்டு ஒட்டிய நிலை, ஓலை நீருடன் செல்லாது இட்ட இடத்தில் நிற்பதேயாகும். அதனையே இங்கு இந்நகர மாந்தரும் வினவியும் விடுத்தும் பேசினர். ஆனால், இட்ட ஏடு அப்பால் போந்து நின்றுவிடாது ஓடும் நீரை எதிர்த்தும் செல்லவைத்தது பிள்ளையார் பெற்றருளிய அருண்ஞானத்தின் பெருமையாம் என்பதை இவ்விருதிறத்தவரும் அப்பொழுது அறிந்திலர்; எதிர்பார்த்தவருமல்லர். அவர் இட்ட ஏடு **''மருவுறு பிறவி யாற்றின் மாதவர் மனஞ்சென் றாற்போல் - எதிர்ந்து நீர் கிழித்துப் போகும்''** *(2744)* தன்மை பின் நிகழ்ச்சியின் அறிவிக்க அறிகுவர்; ஆண்டுக் கூறிய உவமையினால் அதன் காரணமும் இயல்பும் உணர்த்தியபடியும் காண்க. ஏனையோர் மனஞ் சொற் செயல்கள் பிறவி வழியே செல்ல, மாதவர் மன முதலாயின பிறவியை எதிர்ந்து செல்வனவாதலின் அத்தகைய பிள்ளையார் இட்ட ஏடும் நீரினையெதிர்ந்து சென்றது என விளக்கிய குறிப்பும் காண்க.

நாடெலாங் காண இங்கு நண்ணுவர் காணீர் - முன் கூறியவர் பிள்ளையார் தமது நீடிய ஞானத்தால் ஓலையை ஓடுநீருடன் செலாது நிறுத்த வல்லவர் என்றார். அதனைத் தொடர்ந்து மேலும் ஒருவர் அவ்வாறு நிறுத்தி வெற்றி பெற்றவராய் நாட்டவராகிய நாம் எல்லாம் காணும்படி சிறிது நேரத்தில் இங்கு வருவர்; அதை நீங்கள் பாருங்கள் என்றார். இங்கு நீடிய ஞானம் பெற்றாராகிய அவர் என்ற எழுவாய் வருவிக்க.

காண நண்ணுவர் - அவரது வெற்றியின் பின், இங்கு நாம் காணச் செல்லும் இவ்வமணர் ஒட்டியபடி மன்னவனால் முறை செய்யப்பெற்றுக் கழுவேற்றப்பட்டு ஒழிவர்; ஆதலின் அவர்கள் மீள இங்கு நண்ணுமாறில்லை; இவர் ஒருவரே நாடுகாண நண்ணுவர் என்ற குறிப்பும் காண்க. இருதிறத்தாருள் இவர் நண்ணுவர் என்றமையால் அவர் நண்ணுமை அருத்தாபத்தியளவையால் தானே போதருதல் காண்க.

நாடெலாங் காண - அவரையும் அவர் ஓலையினை நிறுத்திய வெற்றியையும் யாவரும் தேற்றமாய் உணரும்படி; ''நீரால் விளக்கிட்டமை நீணா டறியுமன்றே'' (தேவா); ''நாட்டா ரறிய'' *(1898)*.

காணீர் - இன்னும் சிறிதுபோதில் நீங்களே கண்ணுற் காணலாம் என்று உறுதிபட அவர் அறிந்துகொண்ட நிலை.

நண்ணுமா—என்பதும் பாடம்.

807

2706. ''தோற்றவர் கழுவி லேறத் துணிவதே யருக?'' ரென்பார்;
''ஆற்றிய வருளின் மேன்மைப் பிள்ளையார்க் கழகி!'' தென்பார்;
''நீற்றினுற் றென்னன் றீங்கு நீங்கிய வண்ணங் கண்டார்
போற்றுவா ரெல்லாஞ் சைவ நெறியினைப் போற்று'' மென்பார்; 808

2706. **(இ-ள்)** தோற்றவர்... அருகர் என்பார் - தோல்வியுற்றவர்கள் கழுவில் ஏற என்று அமணர்கள் துணியலாமா? என்று சொல்வார்கள்; ஆற்றிய... அழகிது என்பார் - செய்து காட்டிய அருளின் மேன்மையினையுடைய பிள்ளையாருக்கு இஃது அழகேயாகும் என்று சொல்வார்கள்; நீற்றினல்... போற்றுவார் - திருநீற்றினலே பாண்டியர் தீங்கினின்றும் நீங்கிய தன்மையைக் கண்டவர்கள் யாவரும் சைவத் திறத்தினைப் போற்றுவார்கள் (ஆதலால்); எல்லாம் சைவ நெறியினைப் போற்றும் என்பார் - எல்லாம் சைவ நெறியினையே போற்றுங்கள் என்று சொல்வார்கள்;

(வி-ரை) அருகர் ''தோற்றவர் கழுவில் ஏற''த் துணிவதே என்க. ஏகாரம் வினு. துணிந்திருக்கக் கூடாது என்று எதிர்மறை குறித்தது. ''தனிவாதில் அழிந்தோமாகில் வெங்கழுவேற்றுவானிவ் வேந்தனே'' (2696) என்று தோற்றவர் செய்வதனை ஒட்டியதனைக் குறித்து மாந்தர் இரங்கிக் கூறியது. **தோற்றவர்** - இவ்வா தொன்றினும் தோல்வியுறுபவர். முன்னமே தோல்வியுற்றவரா யிருந்தும் அதனுல் அறிவுருமல் இவ்வாறு துணிவதோ? என்றலுமாம்.

இப்பாட்டு இவ்வாதத்தின் முடிவாக அருகர் தோற்றுக் கழுவிலேற ஒட்டியதனையும், அதனையும் பிள்ளையார் ஏற்றுப் போந்தருளியதனையும், அதன் முடிவில் மாந்தர் செய்தக்கதனையும் எண்ணிய மற்றும் பல மாந்தர்களின் கூற்ருக அமைந்தது. பலபல மாந்தர் பலபலவாருகவும் எண்ணியவற்றுள் இது முடிந்த நிலை பற்றியதாதலின், தொடர்வின் முடிவில் கூறப்பட்ட அமைதி காண்க.

அருளின் ஆற்றிய மேன்மைப் பிள்ளையார்க்கு இஃது அழகு - என்க; **அருளின் ஆற்றிய மேன்மை** - இதுவரையும் செய்தருளிய செயல்கள் யாவும், இகல் - செற்றம் - முதலிய தீக்குணமொன்றும் பற்ருது, அருளினை மேற்கொண்டே செய்த மேம்பாடு; அமணர்கள் தமது திருமடத்தில் தீயினை நாடியிட்டபோதும் அவர்களை முனியாது அத்தீ, முறைவழுவிய அரசனிடம் பையவே சென்று ஆக என்று ஆசிபுரிந்து அவனை வினை அனுபவிக்கச் செய்து தீர்த்து ஆட்கொள்ளும் அருளும், வாதிற் புகுமுன் அதனை அஞ்சித் திருவருட் குறிப்பினை ஒருமுறைக் கிருமுறையும் வினவி யறிந்தபின்பே அரசவையுட் புகுந்த அருளும், ஆண்டும் அரசன் அமணர்க்கிடங்கொடாது மறுத்தகாலை அவனைத் தடுத்து அவர்களுக்கு வாதத்திற்கு இடந் தந்தருளிய அருளும், பிறவும் ஈண்டுக் கருதியே மாந்தர்கள் இவ்வாறு புகழ்ந்து **அருளின் ஆற்றிய மேன்மை** என்றனர்.

பிள்ளையார்க்கு இஃது அழகு - என்றது அவ்வாருயின், இங்குச் சமணர் தோற்பது நிச்சயமாதலறிந்தும் அவர்கள் கழுவேறநின்ற இவ்வாதத்தில் முற்படுவது அந்த அருளுடன் பொருந்துமோ? என்று வினுயினுர்க்கு அற்றன்று; இஃது அதற்கு மாறன்று; அழகேயாம்

2707. இன்னன விரண்டு பாலு மீண்டின ரெடுத்துச் சொல்ல,
மின்னொளி மணிப்பொற் காம்பின் வெண்குடை மீது போதப்
பன்மணிச் சிவிகை தன்மேற் **பஞ்சவ னாட்டு ளோர்க்கு
நன்னெறி காட்ட வந்தார் நான்மறை வாழ வந்தார்.** 809

என்று விடுத்தவாறு; அமணர்களை இவ்வாதத்தின் இடையில் இடங்கொடாது மறுத்தல் அழகன்று;அது சைவவுண்மையினை முற்றும் காட்டாததாதலின் அரசனையும் இவ்வாத்தில் இசைவித்தருளினர் பிள்ளையார்; கழுவேற ஒட்டி இசைந்தது அமணர் தாமே செய்துகொண்ட செயல்; பின்னர் அவ்வாறே அவர்களைக் கழுவேற்றி முறைசெய்வது அரசனது ஆணைச் செயல். இவ்விரண்டிலும் பிள்ளையார்க்கு எவ்விதத் தொடர்புமில்லை என்பனவாதி நியாயங்களை உட்கொண்டு இவ்வாறு அறிவுடை மாந்தர் இஃது இழுக்காவதென்றி அழகேயாம் என்று முடித்தனர். **அழகு** - அழகேயன்றிப் பிறிதில்லை என்று பிரிநிலை ஏகாரம் தொக்கது.

நீற்றினால் - போற்றுவார் - திருநீற்றின் உண்மைத் திறத்தினாலே அரசன் அமணர்களால் வந்த தீங்குகள் எல்லாவற்றினின்றும் நீங்கின உண்மையினைக் கண்டவர்கள் அவ்வண்ணங்களைப் பற்றி எடுத்துப் போற்றுவார்கள்; **எல்லாம்** என்பதனை முன் உரைத்தவாறன்றி ஈண்டுக் கூட்டி எல்லாத் தீங்கும் என்றும், எல்லா வண்ணமும் என்றும் உரைப்பினு மமையும்; **கண்டார்** - பிள்ளையாரது அருளின் மேன்மையும், இஃது அவர்க்கு இழுக்காதலன்றி அழகாமாறும் கண்டு போற்றுவர் என்பதும் குறிப்பு.

எல்லாம் சைவ நெறியினைப் போற்றும் - ஆதலால் எல்லா வகையாலும் முழு உண்மையும் உடைய சைவ நெறியினைப் போற்றுங்கள்; **சைவநெறி** - சைவநெறியின் வாய்மை; ஆதலால் என்பது சொல்லெச்சம்; எல்லாமுடைய சைவநெறி என்பது அந்நெறியிலடையப்படும் கடவுளாகிய சிவனது முழுமுதற்றன்மை. "இறைவனாவான் ஞான மெல்லா மெல்லா முதன்மையனுக் கிரகமெல்லா மியல்புடையா னியம்பு, மறைகளா கமங்களி னாலறிவெல் லாந்தோற்றும் மரபின் வழி வருவோர்க்கும் வாராதோர்க்கும், முறைமையினா லின்பத் துன்பங்கொ டுத்தலாலே முதன்மையெலா மறிந்து முயங் கிரண்டு போகத், திறமதனால் வினையறுக்குஞ் செய்தியாலே சேருமனுக் கிரகமெலாங் காணுதுநாஞ் சிவற்கே" (சித்தி - 8-17) என்ற கருத்துக் காண்க.

கண்டாற் போற்றுவார்—என்பது இராமநாதச் செட்டியார் கண்ட பாடம்.

மேன்மை பிள்ளையார்க்கு—என்பதும் பாடம். 808

2707. **(இ-ள்)** இன்னன... சொல்ல - இத்தகைய மொழிகளைப் பிள்ளையார் செல்லும் மறுகில் இருபக்கங்களிலும் நெருங்கிய மாந்தர்கள் எடுத்துச் சொல்ல;மின்னொளி... போத - மின்போன்ற ஒளியினையுடைய அழகிய பொற்காம்பினையுடைய வெண்குடை மேலே நிழற்ற; பன்மணிச் சிவிகைமீது - பல மணிகளையுடைய முத்துச்சிவிகையின் மேல் எழுந்தருளி; பஞ்சவன்... வந்தார் - பாண்டியனது நாட்டிலுள்ளவர்களுக்கு நன்னெறியினைக் காட்டும் பொருட்டு வந்தருளினர்; நான்கு மறைகளும் வாழும்பொருட்டு வந்தருளினர்.

2708. ''தென்றமிழ் விளங்க வந்த திருக்கழு மலத்தோன் வந்தான்;
மன்றுளா ரளித்த ஞான வட்டில்வண் கையன் வந்தான்;
வென்றுல குய்ய மீள வைகையில் வெல்வான் வந்தான்'';
என்றுபன் **மணிச்சின் னங்க** ளெண்டிசை நெருங்கி யேங்க, 810

(வி-ரை) இரண்டுபாலும் ஈண்டினர் - அத்தெருவின் இரு பக்கங்களிலும் நெருங்கிவந்த மாந்தர்; **இரண்டுபாலும்** - ''துன்னிய மாதர் மைந்தர்'' (2699) என்ற இருபாலாருமாக என்றலுமாம்.

எடுத்துச் சொல்ல - நிகழ்ச்சியின் ஒவ்வோர் பகுதிகளைப்பற்றி முன் கூறியவாறு எடுத்துப் பேச.

வெண்குடை - திருவரத்துறையீசர் அருளிய முத்துக்குடை. வெண்குடை அரச அடையாள அங்கங்களுள் ஒன்றாகும் குறிப்பும் ஈண்டுத் தருவது. சிவிகையும் அவரருளிய அக்குறிப்புத் தருவது.

பஞ்சவன் நாட்டுளோர்க்கு நன்னெறி காட்ட வந்தார் - ''கன்னிநாடு அமணர் தம்மாற் கட்டழிந்து'' (2511); ''நன்றியி னெறியி லழுந்திய நாடு'' (2557) என்று வருவனவாற்றால் அரசனை யுய்விக்கும்வகையால் நாடுய்யச் செய்யப் பிள்ளையார் போந்தருளினர் என்பதாம்.

சொல்ல - போத - வந்தார் - என்று வினைமுடிபு கொள்க.

நான்மறை வாழ வந்தார் - மறைகள் வாழும் பொருட்டு வந்தவராகிய - அவதரித்தவராகிய - பிள்ளையார் என்க. **வந்தார்** - வந்தவர்; பெயர்; வினை முற்றாகவே கொண்டும் பிள்ளையார் என்ற எழுவாய் வருவித்தும், காட்டவும் வந்தார்; அதனால் மறை வாழவும் வந்தார் என்றுரைப்பினு மமையும். ''மிக்கதிரு விளக்கிட்டார் விழுத்தொண்டு விளக்கிட்டார்'' (கலியர் புரா-11) என்புழிப்போல.

காட்ட - வாழ - காட்டும்பொருட்டு - வாழும்பொருட்டு என்க.

இன்னன - முன் 2699-ல் ''வேறு இனைய சொன்னார்'' என்று தொடங்கி **என்பார்** என இருபத்தைந்து வகையான கருத்துக்களை எடுத்துச் சொல்வார்களாகி, இவ்வாறு கூற - என்று இவ்வொன்பது பாட்டுக்களையும் தொடர்புபடுத்தி உரைத்துக் கொள்க. 809

2708. **(இ-ள்)** தென்தமிழ்...வந்தான் - அழகிய தமிழ் விளங்கும்படி வந்த திருக்கழுமலத் தோராகிய பிள்ளையார் எழுந்தருளினார்; மன்றுளார்...கையன் வந்தான் - அம்பலவாணர் அளித்தருளிய சிவஞானப்பால் நிறைந்த பொற் கிண்ணத்தையுடைய வண்மை பொருந்திய திருக்கரத்தையுடைய பிள்ளையார் எழுந்தருளினார்; வென்று... வெல்வான் வந்தான் - முன்னம் சுரவாதத்திலும் அனல்வாதத்திலும் வெற்றிபெற்று உலகுய்யும்படி மீள வைகையாற்றில் செய்யப்படும் இவ்வாதத்திலும் வெல்பவராகிய பிள்ளையார் எழுந்தருளினார்; என்று... ஏங்க - என்று இவ்வாறு பல அழகிய முத்துச் சின்னங்கள் எட்டுத் திசைகளிலும் நெருங்கி ஒலிக்கவும்,

2709. பன்மணி முரசஞ் சூழ்ந்த பல்லிய மியம்பப் **பின்னே**
தென்னவன் தேவி யாரு முடன்செலத், திரண்டு செல்லும்
புன்னெறி யமணர் வேறோர் புடைவரப் **புகலி வேந்தர்**
மன்னிய வைகை யாற்றின் கரைமிசை மருவ வந்தார். 811

(வி–ரை) தென்தமிழ் விளங்க வந்த - தென் - அழகு; **அழகாவது** என்றும் **அழியாத** இளமையோடிருத்தலும், மாறுத அழகினைச் செய்யும் ஞானமயமாகிச் சிவனடிச் சார்பு தருதலும் ஆம். "தென்றமிழ்ப் பயனு யுள்ள திருத்தொண்டத் தொகைமுன் பாட" (358); பிள்ளையார் இந்தச் சிவஞானத் தமிழ் பரவும்படியே அவதரித்தவராதல் "அவைதிகச்செழுந் தமிழ் வழக்கே யயல்வழக்கின் றுறைவெல்ல" (1922) என முதற்கண்ணே அருளப்பட்டது காண்க; "பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத், துறவியெனுந் தோற்றோணி கண்டீர்... சம்பந்தன், தன்மாலை ஞானத் தமிழ்" (ஆளு.பிள் - மும்மணிக்கோவை - 11)

அளித்த ஞான வட்டில் - அளித்த சிவஞானப் பாலைக்கொண்ட பொற்கிண்ணத்தை ஏந்திய; ஞானப் பாலினையுடைய வட்டிலை **ஞானவட்டில்** என்றார்.

தமிழ் விளங்க - என்றும், **ஞானவட்டில் வண்கை** - என்றும் கூறியது தமிழின் மூலம் ஞானத்தைப் பரப்பி அஞ்ஞான இருளாகிய சமணத்தை வென்றார்; மேலும் வெல்வார் என்றபடி.

வென்று - மீள வெல்வான் வந்தான் என்று அடுத்து எடுத்துக் கூறியபடி.

வென்று... வெல்வான் வந்தான் - முன்னே வென்றுவிட்டதனோடு மீளவும் வெல்வார் என்று சின்னங்கள் பின்வரும் வெற்றியை விளம்பின; **வெல்வான்** - வெல்லும் பொருட்டு என்றலுமாம்.

உலகுய்ய என்பதனை **உலகுய்ய வென்று** என்றும், **உலகுய்ய வெல்வான்** என்றும் ஈரிடத்தும் கூட்டுக. **உலகுய்ய** - இவ்வாதத்தினுல் பிள்ளையார்க்கு ஆக வேண்டிய நலமொன்றுமில்லை. உலகுய்ய - வந்தான் என்று கூட்டி உரைத்தலுமாம்.

பன்மணிச் சின்னங்கள் - அரத்துறைநாத ரருளிய முத்துச் சின்னம் - தாரை - காளம். இவையும் அரசாங்க அடையாளம். சிவனருளிய சிவிகையும் குடையும் சின்னமும் என்ற மூன்றும் உரியபடி இங்குத் தொழிற்பட்டதனை முறையே கூறியது காண்க.

ஏங்குதல் - மிக்க ஓசைபட எடுத்தியம்புதல்; மரபு வழக்கு.

ஏங்க - உடன்செல - புடைவர - வந்தார் - என வரும் பாட்டுடன் முடிக்க. 810

2709. **(இ-ள்)** பன்மணி... இயம்ப - பல அழகிய முரசங்களுடன் இணைந்த பல வகை வாத்தியங்கள் முழங்க; பின்னே... உடன் செல - தமது பின்பு அரசனும் மாதேவியாரும் சேர்ந்து வரவும்; திரண்டு... புடைவர - கூட்டமாகச் செல்லும் புன்மை நெறியில் நின்ற அமணர்கள் வேறு ஒரு பக்கத்தில் வரவும், (இவ்வாறு) புகலி வேந்தர்... மருவ வந்தார்.

சீகாழி வேந்தராகிய பிள்ளையார் நிலைபெற்ற வைகையாற்றின் கரையின்மேல் பொருந்தும்படி எழுந்தருளி வந்தார்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) பன்மணி முரசம் சூழ்ந்த பல்லிய மியம்ப - இவை அரசன் வரும் வீதி எழுச்சியைக் குறிக்க முழங்கி வரும் அரசனின் வாத்தியங்கள்; முன் கூறிய சின்னங்களினின்றும் வேறு பிரித்து அரசனையும் மாதேவியாரையும் சார முன்வைத் தோதியதும் இவை இயம்பப் பின்னே தென்னனும் தேவியாரும் வர என்றதும் இக்கருத்து.

பின்னே - பிள்ளையார் பின்பு; பணிகின்ற நிலையிற் பின்பற்றி என்ற குறிப்புமாம். வீதியில் ஒரு பக்கத்தில் பிள்ளையாரும் பரிசனங்களும் அரசனும் மாதேவியாருமாகவும், மற்றொரு பக்கத்தில் வேறு கூட்டமாய் அமணருமாகவும் போந்தனர்.

தென்னனும் தேவியாரும் உடன் செல - இருவரும் ஒருங்கு வர; அரண்மனையில் அரசனது நோய் நீங்கும் அளவும் மாதேவியாரும் மந்திரியாரும் அரசனது நேர் உடன் பாடின்றித் தாமே முற்பட்டு நின்று காரியஞ் செய்ய வேண்டியதாயிற்று. அதன்மேல் நிகழ்ந்தது அனல்வாதமும், இனி நடக்கவுள்ள புனல்வாதமும் அரசன் அவையினர் முன் நடைபெற்று அரசனது நேர் அரசகாரியமாயின. இவற்றுள் மாதேவியார் உடனிருத்தல் வேண்டப்படுவ தின்றாயினும், முன்னர் அரண்மனையில் அவையின் முன் அனல்வாதத்தில் உடனிருந்தமையும், ஈண்டு வைகைக் கரைக்கு உடன் வந்தமையும், அரச காரியங்கள் அரசனும் அரசியாரும் உடனிருந்து இயற்றும் முன்னைநாள் அரசாங்க வழக்கின் மரபு குறித்தது. இது முன்னைநாளின் கல்வெட்டுக்கள் பலவற்றாலும் அறியத் தக்கது. ★அவ்வாறு அரச காரியங்களில் உடனிருப்பவும் அரசன் சமணச் சார்புகொண் டொழுகிய முன்னை நாட்டொடங்கிச் சைவசமயம்பற்றிய அரச காரியங்களில் இருவரும் உடன் இல்லாது வேறாய் நின்றமையால், இங்கு அதனிலும் இருவரும் **உடனிருந்து செல்லுதலை** விதந்து கூறினார். **உடன்** - உடனாக; இணைந்து; ஒருசேர.

திரண்டு செல்லும் புன்னெறி யமணர் - அமணருள் அரசனவையில் நின்ற சிலரேயன்றிப் புறத்து நின்ற ஏனையோரும் திரண்டு எண்ணாயிரவர்களாகக் கூடியவர்கள் என்க.

வேறோர் புடை வர - வீதியில் பிள்ளையாருடன் பின்வரும் சைவத் திருக்கூட்டத்துடன் சேரகில்லாது **வேறு** ஒரு பக்கமாக அமணர் வர; அவ்வாறு சார்ந்துய்யும் விதியில்லாமையால் வேறோர் புடை வந்தனர்.

மன்னிய - புகழாலும் சிவச்சார்பு பெற்ற புண்ணியத்தாலும் நிலைபெற்ற; மீனாட்சியம்மையார் திருமணத்தில் குண்டோதரனுக்காக இறைவரது ஆணைப்படிக் கங்கையே வைகையாறாக வந்தது என்பது திருவிளையாடற் புராணத்தாலறியலாம். இதன் கரையில்

★ I பகுதி பக்கம் 133-மனுச் சரிதங் கண்ட கல்வெட்டு. வரிகள் 10-11. "திரிபுவன முழுதுடையா ளிவன் திரு வுளத்தருள் முழுதுடையாளென உடனிருப்பச் செம்பொன் வீரசிம்மாசனத்து" என வருதலும், பிறவும் காண்க.

2710. கார்கெழு பருவம் வாய்ப்பக் காமுறு மகளி ருள்ளஞ்
சீர்கெழு கணவன் றன்பால் விரைவுறச் செல்லு மாபோல்
நீர்கெழு பௌவ நோக்கி நிரைதிரை யிரைத்துச் செல்லும்
பார்கெழு புகழின் மிக்க பண்புடை வைகை யாறு. 812

இறைவர் மண்சுமந்த திருவிளையாடல் நிகழ்ந்தது. "அணியார் வைகைத் திருக்கோட்டி னின்றதோர் திறமுந் தோன்றும்" (தாண்-பூவணம்) என்று இதனைத் தமிழ்மறையும் போற்றியது.

கரைமிசை மருவ - கரையின் மேலே பொருந்தும்படி; மிசை மருவ - என்பது (ஓலை) மேற்சென்று பொருந்த என்ற குறிப்பும்பட நின்றது. 811

2710. **(இ-ள்)** கார்கெழு... செல்லுமாபோல் - கார்காலம் வந்தபோது விருப்பம்மிக்க மகளிரது மனம் சிறப்புடைய தம் கணவனிடம் விரைந்து செல்லுமாபோல; பார்கெழு...ஆறு - உலகில் புகழினுன் மிக்க பண்புடைய வைகையாறு; நீர்கெழு... செல்லும் - நீர் மிக்க கடலை நோக்கி வரிசையாகிய அலைகளினுல் ஆரவாரித்துச் செல்லும்.

(வி-ரை) இப்பாட்டு ஐயம். உவமை இந்த இடத்துக்கு ஏற்றதாகத் தோன்றுமையும், மகளிர் என்ற பன்மையும் கணவன் என்ற ஒருமையும் ஆக மயங்குதலும் உன்னுக; வைகை கடலுடன் சேராமையும் கருதுக. "கடல் ஒருவர்க்கு முதவாத வுவரியென, மடுத்தறியாப் புனல்வைகை" (வாதவூ.உப.பட.) என்ற திருவிளையாடற் புராணக் கருத்துக் காண்க. இப்பாட்டின் கருத்து "ஆற்றினீர் கடுகவோடும்" (2711) என்று மேற்பாட்டிற் கூறப்படுவதும் கருதுக.

கார்கெழு பருவம் - கார்காலம் - இதுவரை ஆற்றியிருந்த சிறப்புப்பற்றி மகளிர் என்று பன்மையிற் கூறினுர் என்றும், பன்மையாகவே கொள்ளினும் "ஏவல் இளையவர் தாய்வயிறு கரிப்ப" என்பதிற்போலத் தனித்தனிக் கணவன்பால் என்றலுமாம் என்றும், ஆறுகள் எல்லாம் கடல்நோக்கிச் செல்லும் பொதுவியல்புபற்றிக் கூறினுர் என்றும் இங்கு அமைதி காண்பாருமுண்டு. கற்பொடு பொருந்திக் கணவன்சொற் பிழையாது இல்லிருந்து நல்லறஞ் செய்தல் மகளிரது இயற்கை, முல்லையாதலின் அது முற்கூறப்பட்டது. எனவே **முல்லை** என்ற சொற்குப் பொருள் **இருத்த**லாயிற்று" (தொல்-பொருள் - அக -5-) நச்சினுர்க்கினியர் உரை; "காரு மாலையும் முல்லை" என்பது சூத்திரம்; (ஷை-6).

உள்ளங் கணவன்பால் விரைவுறச் செல்லுதல் - "பின்வரும் கூடலாகிய குறிஞ்சித் திணையொழுக்கம் நிகழும்பொருட்டு; புணர்தலின்றி இல்லறம் நிகழாமையின்" என்பர் நச்சினுர்க்கினியர்; **"விரவுற"** என்பதும் பாடம். மகளிர் உள்ளம் செல்வதற்கும் வைகை விரைந்து செல்வதற்கும் கார்ப்பருவம் ஒப்பக் காரணமாகும் குறிப்பும் காண்க.

நீர்கெழு பௌவம் நோக்கி - செல்லும் - "பள்ளந்தா ழுறுபுனலில் கீழ் மேலாக" (திருவா) என்றபடி கீழ்நோக்கிச் செல்லும் நீர் மிக்க விரைவுடன் செல்லுதல் குறிப்பு. **நோக்கிச் செல்லும்** - என்றதனுல் நோக்கமாகச் செல்லும் அளவேயன்றி அது கைகூடுவதில்லை என்ற குறிப்புப்போலும்.

2711. ஆற்றினீர் கடுக வோடு மருங்குற வரச னோக்கி,
**"நீற்றணி திகழ்ந்த மேனி நிறைமதிப் பிள்ளை யாரும்
வேற்றுரு வருகர் நீரும் விதித்தவே டிடுக"** வென்றான்;
"தோற்றவர் தோலா" ரென்று முன்னுறத் துணிந்திட்டார்கள். 813

நிரை - திரை - இரைத்து - நிரை - வரிசையாக; ***திரை*** - அலைகளினால்; ***இரைத்தல்*** - ஓசைமிகுதல்; ***நிரை திரை இரைத்தல்*** - காமுறு மகளிர் உள்ளம் விரைவும் அலைவும் பதைப்பும் பொருந்தும் பண்புக்கு உவமை.

செல்லுமாபோல் - செல்லும் - வினைபற்றிய உவமம். *812*

2711. **(இ-ள்)** ஆற்றின்நீர்... கடுக ஓடும் மருங்கு உற - (முன் கூறியவாறு பிள்ளையாரும் யாவரும்) ஆற்றில் நீர் வேகமாகச் செல்லும் இடத்தின் பக்கத்தைச் சேர; அரசன் நோக்கி - மன்னன் பிள்ளையாரையும் சமணர்களையும் பார்த்து; "நீற்றணி... இடுக" என்றான் - திருநீற்றின் அழகு விளங்கிய நிறைமதி போன்ற பிள்ளையாரும், அதனின்வேறாகிய உருவுடைய அருகர்களாகிய நீங்களும் இசைந்தபடி அவ்வவர் ஏடுகளை இடுங்கள் என்று சொன்னான், தோற்றவர்... துணிந்திட்டார்கள் - "முன் தோற்றவர்கள் பின்னும் தோலார்கள்" என்று உட்கொண்டு முந்திக்கொள்வதற்கு அருகர் துணிந்தனர்.

(வி-ரை) *ஆற்றின் நீர் கடுக ஓடும் மருங்கு உற* - பிள்ளையாரும் பிறரும் முன்பாட்டிற் கரைமிசை மருவ வந்தமை கூறினர். இங்குக் கரையைக் கடந்து மணல் வழி உட்சென்று ஆற்றில் நீர் வேகமாய் ஓடும் இடத்தின் பக்கம் சேர்ந்தமை கூறினர். ***ஆற்றின்*** - ஆற்றின் பரப்புக்குள்; **கடுக** - வேகமாக; **நீர் ஓடும் மருங்கு** - நீர் செல்லும் இடம்; ***உற*** - இருதிறத்தவரும் பொருந்த.

நீற்றணி திகழ்ந்த மேனி நிறைமதிப் பிள்ளையாரும் - திருநீற்றினாலே தான் உய்ந்தமையால்அதனால் நிறைந்த திருக்கோலமே நாயனாரது பெருந் திருக்கோலமாக அரசனைக் கவர்ந்தது என்பது குறிப்பு. ***நிறைமதி*** - முழுமதி; ***மதி*** - அறிவு - ஞானம் - என்று கொண்டு அருள்ஞான நிறைவுடைய என்றலுமாம். இங்கு இனிப்பாண்டியனுக்கு ஞானோபதேசம் செய்யப் புகுகின்றமையால் முழுஞானமுடையராய் ஆசாரியரிலக்கணம் முழுதும் பெற்றவர் என்ற குறிப்பும் பெற வைத்தார் என்க. **"*நீற்றணி விளங்கு மேனி*"** *(2693)* என்றதும் ஆண்டுக் கூறியனவும் பார்க்க.

நிறைமதி - மதி - இரட்டுற மொழிதலால் சந்திரன் என்ற பொருளில் "கலைவளர்மதியே" *(990)*; "மதிக்கொழுந்தை" *(2626)* என்றும், "நிலத்திடை வானி னின்று நீளிரு ணீங்க வந்த, கலைச்செழுந் திங்கள் போலும் கவுணியர்" *(2649)* என்றும் ஈண்டு அந்நிலையின் முழுமை குறிக்க **"*நிறைமதி*"** என்றும் கூறிய கவிநயமும் உட்குறிப்பும் கண்டுகொள்க. அமுதகலைகள் நிரம்பித் தூய்மை செய்து பிறவிவெப்பத்தை மாற்றத்தண்ணொளி பரப்பித் தண்மை தந்து அண்டமெல்லாம் பரந்து திருநீற்றினொளி தழைத்தலின் **மதி**யை உவமித்தார். ***நீற்றணி திகழ்ந்த*** என்றதனுடன் புணர்த்தி ஓதியது மிக்கருத்து; நீற்றணி திகழ்தலின் நிறைமதி போன்றனர் என்ற குறிப்பும் காண்க. "தோற்று மன்னுயிர் கட்கெலாந் தூய்மையே, சாற்று மின்பமுந் தண்மையுந்

2712. **படுபொரு ளின்றி நெல்லிற் பதடிபோ லுள்ளி லார்மெய்**
யடுபவர் பொருளை "யத்திநாத்தி" யென் றெழுதி யாற்றிற்
கடுகிய புனலைக் கண்டு மவாவினுற் கையி லேடு
விடுதலும் விரைந்து கொண்டு **வேலைமேற் படர்ந்த தன்றே.** 814

தந்துபோ, யாற்றவண்டமெ லாம்பரந் தண்ணல்வெண், ணீற்றின் பேரொளி போன்றது நீணிலா" (308) என்றும், "திருநீற்றுத் தொண்டர்குழா மிருந்திறமுஞ் சேர்ந்த போதி, விரண்டு நிலவின்கடல்க ளொன்றுகி" (1498) என்றும் கூறிய கருத்துக்கள் காண்க.

வேற்றுரு - நீற்றணி திகழ்தற்கு வேறாகிய உரு என்பது; வேறுபாடு உடையது என்றலுமாம்; வேறுபாடாவது "புரட்டரைக் காணு கண்வாய் பேசாதப் பேய்களோடே" (திருவிசைப்பா) என்றபடி காணத்தகாத நிலை; வேற்றுமை செய்யும் என்ற குறிப்புமாம். இவர்கள் உருவே பிள்ளையாரது அருள்பெறு முன் இதஞ் செய்யு முருவாக அரசன் மயங்கிய முன்னை நிலையும் இங்குக் கண்ட மாறுபாடும் கருதுக. இதன் காரணம் 2717-ல் கூறுதல் காண்க.

விதித்த - ஒட்டி யிசைவுபூண்ட; **விதித்தல்** - நியமித்துக்கொள்ளுதல்.

தோற்றவர் தோலார் - முன்னே தோற்றவர் மேலும் தோற்கமாட்டார். இஃது உலகியல் நிலையினைவைத்து எண்ணியது. துன்பவின்பங்கள் மாறிவரும் நிலையும். சோதிடநூற் றுணிபு நிலையும், பிறவும் மனத்துட் கொண்டனர். **என்று** - என்று கருதி.

முன்னுற - முந்திக் கொள்ள; **துணிந்திடல்** - ஒருசொல்.

இடு - பகுதிப்பொருள் விகுதி. **துணிந்திட்டார்கள்** - துணிந்தார்; இங்கு இவ்வாறன்றித் தம் கையிலிருக்கும் சமய நூல்களை யிட்டார்கள் என்று உரைத்தனர் முன் உரைகாரர். ஏடு எழுதியிடுதல் மேல்வரும் பாட்டிற் கூறப்படுதலின் அது பொருளன் றென்க.

திகழும்—என்பதும் பாடம். *813*

2712. **(இ-ள்)** படுபொருள் இன்றி - உள்ளே உண்மை தோன்றும் பொருள் இல்லாததால்; நெல்லிற் பதடிபோல் - நெற்பதர்போல; உள்ளிலார் - மெய்ம்மையாகிய உள்ளீடில்லாத அமணர்;மெய் அடுபவர் - மெய்ப்பொருளைப் பொய்ப் பொருள் என்று கூறுவோராய; பொருளை அத்தி நாத்தி என்று எழுதி - ஆருகத நூலுட் கூறும் பொருளின் தொகுதியை அத்தி நாத்தி என்று ஏட்டில் எழுதி; யாற்றில்...கண்டும் - ஆற்றில் விரைந்து ஓடும் நீரினைக் கண்டும்; கையில் ஏடு அவாவினுல் விடுதலும் - கையிற் கொண்ட ஏட்டினைப் பேராசையினுலே விடுதலும்; விரைந்து... அன்றே - அப்பொழுதே அதனைக்கொண்டு வேலையின் முகநோக்கி விரைந்து சென்றது.

(வி-ரை) படு பொருள் - உள்ளிருந்து தோன்றுதற் காதாரமாகிய உயிர்ப் பொருள்.

இன்றி - இல்லாமையால்; **பதடி** - பதர்.

உள் இலார் - உள் - உட்பொருள் - உண்மை.

மெய் அடுபவர் - உண்மையை மறுப்பவராகி; வினைமுற்றெச்சம்.

மெய் அடுபவர் அத்திநாத்தி என்றெழுதி -அத்தி - உள்ளது - உண்டு; **நாத்தி** - இல்லாதது - இல்லை; எனவே உள்ளது என்றதனைத் தாமே உடன்மறுத்துக் கூறுபவர் என்பதாம். **அத்தி நாத்தி** - அமணர்களது மூலமந்திரம்.

ஆற்றிற் கடுகிய புனல் - வேலைமேற் படர்ந்தது - இவ்விரண்டு கருத்துக்களையும் முன்பாட்டில் கூறியது காண்க.

கடுகிய - கடுகிச் சென்ற; விரைந்த. **கண்டும்** - பார்த்தும். உம்மை சிறப்பு. புனலையும் பார்த்தனர்; அது கடுகிச் சென்றதையும் பார்த்தனர்; அவ்வாறு கண்டும் அமைந்துவிடாது விடுத்தனர். முன்னர் எரியும் தீயைக் கண்டு இது நம் ஏட்டினை எரித்துவிடும் என்றறியாது இட்டுத் தோல்வியுற்றனர். அதுபோலவே இங்குப் புனலும் கடுகியது கண்டும், இஃது ஏட்டினை உடன்கொண்டு இழுத்துச் சென்றே விடும் என்றறியாது என உம்மையை இறந்தது தழுவிய எச்சவும்மையாக்கி உரைப்பினு மமையும்; இப்பொருளில் தீ எரிந்ததுபோலப் புனல் கடுகியது கண்டும் என்க.

அவாவினால் - அவா - தகாத ஆசை;பேராசை என்ப. ஆசை வெட்கமறியாது என்பது பழமொழி. ஒரு தோல்வி கண்டபோது அதுகொண் டமைந்துவிடாது மேலும் மேலும் தோல்வியைத் தேடிக்கொள்வதனால் நாணமில்லாது முயலுதல் அவாவினால் வருவது. இக்கருத்தேபற்றிப் பின்னர் ''நாணிலா வமணர் தம்மை நாட்டாற்றில் விட்டுப் போக'' *(2714)* என்பது காண்க.

கையில் ஏடு - கையிற் கொண்ட ஏடு; ஏட்டைப் புனலில் விடுதலும் என்று விரித்துக் கொள்க.

வேலைமேற் படர்ந்தது அன்றே - வேலைமேல் - வேலையை நோக்கி. **வேலை** - கடல்; **மேல்** - முகமாக.

வேலை - காரியம் என்று கொண்டு புனல் தன்னுட்பட்ட பொருள்களை ஈர்த்துச் செல்லும் இயல்புடையதாதலின் தன் வேலையைச் செய்தது என்ற நகைக் குறிப்புப்படக் கூறியதும் காண்க. இழுத்துச் சென்ற புனலைப் பற்றிய இக்கருத்தினையே தொடர்ந்து பின்னர் ''நட்டாற்றில் விட்டுப் போக'' என்று ஈர்த்துச் செல்லப்பட்ட ஏட்டினைப்பற்றி கூறுவது காண்க. **மெய்அடுபவர்** - உடல் வருத்தும் செயல்களைத் (சுடுபாறைக் கிடத்தல் - மயிர் பறித்தல்) தவமென்று செய்பவர் என்ற குறிப்புமாம்.

இனி, ஈண்டு, **உள்இலார்** - (முன் உற்ற தோல்வியால்) உள்ளம் அழிந்தவர் என்றும், **மெய் அடுபவர்** - உண்மையைக் கொல்பவர் என்றும், **கையில்ஏடு** - **கை** ஒழுக்கம் எனக் கொண்டு ஒழுக்க நிலையற்ற பொருள் கொண்ட ஏடு என்றும் குறிப்புக்கள் காண்பர் திரு.வ.சு.செ.அவர்கள்.

படர்ந்தது - படர்தல் - செல்லுதல்; அப்புனல் என்ற எழுவாய் அவாய் நிலையான் வந்தது. **அன்றே** - அதுபொழுதே. *814*

2713. ஆறுகொண் டோடு மேட்டைத் தொடர்ந்தெதி ரணைப்பார் போலத்
தேறுமெய் யுணர்வி லாதார் கரைமிசை யோடிச் சென்றார்
பாறுமப் பொருண்மேற் கொண்ட பட்டிகை யெட்டா தங்கு
நூறுவிற் கிடைக்கு முன்னே போனது நோக்கிக் காணார். 815

2713. **(இ-ள்)** ஆறு... போல - அவ்வாறு - அவ் - ஆறு - ஈர்த்துக்கொண்டு ஓடும் ஏட்டினைத் தொடர்ந்து போய் எதிரே ஓடாமல் அணைப்பவர்போல; தேறும்... சென்றார் - தெளியும் உண்மையறிவு இல்லாத அமணர் ஆற்றின் கரையின்மேல் ஓடிச் சென்றனர்; **பாறும்...பட்டிகை** - அந்த அழியும் பொருளை மேற்கொண்ட அவ்வேடு; எட்டாது - கிட்டாது; அங்கு... போனது - அங்குக் கீழ்நோக்கி நூறு விற்கிடை அளவு தூரத்தின் எல்லைக்குமேல் போய்விட்டது; நோக்கிக் காணார் - அவ்வெல்லையில் கண்ணால் பார்க்கவும் மாட்டாராயினர்.

(வி-ரை) ஏடு எதிர் அணைப்பார்போல - கரைமிசை ஓடிவந்தார் - ஆற்றுடன் ஓடிய ஏட்டினை எதிர்சென்று அணைத்துக்கொண்டு வருபவர்போலக் கரையின்மேல் வந்தார்கள். திகைப்பினால் தாம் செய்வ தின்னதென் றறியாது இவ்வாறு செய்தனர்.

தேறுமெய் உணர்விலாதார் - என்ற கருத்துமது. தேறித் தெளியத்தக்க உண்மையில் உணர்வு. தமது முன்னைய அறிவின்றியும் இதுவரை நிகழ்ந்த பலவற்றாலாயினும் உண்மை அறிந்து கொள்ள மாட்டாதார்களாகிய அமணர்.

பாறுதல் - அழிதல்; **அப்பொருள்** - அத்திநாத்தி என்ற மந்திரம். உண்மையின் முன் நிற்கலாற்றாமையின் அழியும் என்றார்.

மேற்கொண்ட - மேலே பொறிக்கப்பெற்ற - எழுதப்பட்ட. மாறுபொருள் மேற்கொண்டமையால் அது தோணியாக எட்டாது போனது.

பட்டிகை - ஓலை. "பட்டோலை தீட்டும் படிபோற்றி" (போற்றிப்பஃறொடை 38); **பட்டிகை** - தோணி என்று கொண்டு இங்கு ஏட்டைக் குறித்தது என்பாருமுண்டு.

நூறு விற்கிடை - **விற்கிடை** - ஓர் அளவை; வில் கிடக்கும் தூரம். **நூறு விற்கிடை** - சிறு பொருள்கள் கண்மறையும் தூரம்.

நூறு விற்கிடைக்கு முன்னே போனது நோக்கிக் காணார் - போனது - போயிற்றதலின் அதனைக் கூர்ந்து நோக்கியும் காணாதாராயினர்; **நோக்கி** - நோக்கியும்; சிறப்பும்மை விரி...

போனது - போயினமையால் அதனை; **நோக்கி** - கூர்ந்து பார்த்தும்.

விற்கிடக்கை—நோக்கிச் சென்றார்—என்பனவும் பாடங்கள்.

2714. **(இ-ள்)** காணவும்... ஏடு - காண்பதற்கும் கிடைக்காதபடி கடலின் முகம் நோக்கிச் செல்லும் அந்த ஏடு; நாணிலா... போக - நாணம் இல்லாத அமணர் நட்டாற்றிலே கைவிட்டு அகன்று போயிற்றாக; சேணிடை... மீண்டார் -(அவ்வமணர்) ஆகி, ஆற... சென்றார்களும், பலவாறும் சிதறுண்டார்களும், ஆணையில் தப்பமாட்டாது அஞ்சுவாராய் அவன் இடை... ...ந்தவர்களும் ...ர்கள்

2714. காணவு மெய்தா வண்ணங் கடலின்மேற் செல்லு மேடு
நாணிலா வமணர் தம்மை **நட்டாற்றில் விட்டுப் போகச்**
சேணிடைச் சென்றா நின்றார்; சிதறினார்; திகைத்தார்; **மன்னன்**
ஆணையின் வழுவ மாட்டா தஞ்சுவா ரணைய மீண்டார். 816

(வி-ரை) காணவும் எய்தாவண்ணம் - எதிர்சென்று அணைப்பார்போலக் கரையின்மேல் ஓடிய அமணருக்கு அவர்கள் கையில் அணைக்கக் கிட்டாததோடு, காணவும் என்று உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை.

கடலின் மேல் - கடலினை நோக்கி அதன் முகமாக. கடல் உள்ள திக்கு மட்டும் குறித்தது.

நாணிலா அமணர் - ''தோற்கவும் ஆசை நீங்கா'' (2693); ''அவாவினால்'' (2715) என்ற கருத்துக்களைத் தொடர்ந்து முடித்தவாறு; மும்முறையும் தோல்வியே பெற்று முடிந்தனர்; தந்நெஞ் சறியவே பொய்யும்வஞ்சமும் செய்ததனோடு ஒருமுறை தோல்வியுற்றமையால் அறிவு பெற்று நலம் தேடிக்கொள்ளாது மீளமீளத் தோற்று மானமுமிழந்தனர் என்றவை குறிப்பு.

நட்டாற்றில் விட்டுப் போக - ''நம்பினோரை நாட்டாற்றில் விடுதல்'' என்பது பொய்யராகிய கீழோராந் தன்மை குறிக்கும் பழமொழி. அதுபோல இவர்கள் நம்பிய பொய்ப்பொருள் பொதிந்த ஏடு, நம்பும் உண்மைப் பொருளின்மையால் நடு ஆற்றிலே விட்டு ஓடிவிட்டது; பழமொழியில் உருவகத்தால் வந்த **நட்டாறு** என்பது -(நடுஆறு) இங்கு உண்மை - உருவகம் இரண்டு பொருளிலும் பொருந்தியது என்று நகைச் சுவைபடக் கூறியது காண்க. நட்டாறு - நடுஆறு என்பது நட்டாறு என வந்தது புறனடையாற்கொள்க. ஆறுநடு என்பதாம். உண்மையில் ஆற்றின் நடுவில் அமணரை அவர்நம்பிய ஏடு கைவிட்டுச் சென்றது என்பதாம்.

சேணிடை.... திகைத்தார் - சேணிற்றல் - சிதறுதல் - திகைத்தல் - மிக நம்பி எதிர்பார்த்த நிலைக்கு முற்றும் மாறாய்ச் சடுதியில் நேர்ந்த பெருந்துன்பந் தரும் ஏமாற்றத்தால் வரும் நிகழ்ச்சிகள்; இதன் விளைவாக அவர்கள் ஒட்டியபடி அரசாணை தம்மைக் கழுவேற்றி அழிக்கும் என்ற எண்ணத்தால் இவை நிகழ்ந்தன; மேற்பாட்டில் ''வெருவுற்று நடுங்கித் தம்பால் ஈறுவந்தெய்திற் றென்றே'' (2715) என்பதனால் இவை, ஏடு கைவிட்டதனாலன்றி, அதன் விளைவுபற்றிய எண்ணத்தாலாயின என்க.

சேணிடை - சென்று நின்றார் - பெருந்தீங்கு விளையுமிடத்தினின்று நீங்கி நிற்பார் போல என்பது.

சிதறுதல் - தொடர்பின்றிப் பல பக்கமும் சிதறுண்டு ஓடுதல். **திகைத்தல்** ஒன்றும் தோன்றாது மனந்தடுமாறி நிற்றல். **நின்றார்** முதலிய மூன்றும் முற்றெச்சங்கள். **அஞ்சுவார்** - அச்சத்துடன் - அஞ்சுவாராய்.

அணைய - நீருடன் சென்ற ஏட்டினை அணைப்பார்போன்று கரைமிசை ஓடிய தூரத்தினின்று மன்னவனிருந்த இடத்தினை அணைய; **சார** - இனி அவன் செய்யும் ஆணையினையும், அதன்படி கழுத்தறி நிரையினையும், கழுவேறியபின் வரும்அவ்வவ் வினைப் போக நுகர்ச்சிகளையும் முறையில் **அணைய** என்ற குறிப்புமாம்.

2713. ஆறுகொண் டோடு மேட்டைத் **தொடர்ந்தெதி ரணைப்பார் போலத்**
தேறுமெய் யுணர்வி லாதார் கரைமிசை யோடிச் சென்றார்
பாறுமப் பொருண்மேற் கொண்ட பட்டிகை யெட்டா தங்கு
நூறுவிற் கிடைக்கு முன்னே போனது நோக்கிக் காணார். 815

2713. **(இ-ள்)** ஆறு... போல - அவ்வாறு - அவ் - ஆறு ஈர்த்துக்கொண்டு ஓடும் ஏட்டினைத் தொடர்ந்து போய் எதிரே ஓடாமல் அணைப்பவர்போல; தேறும்... சென்றார் - தெளியும் உண்மையறிவு இல்லாத அமணர் ஆற்றின் கரையின்மேல் ஓடிச் சென்றனர்; **பாறும்...பட்டிகை** - அந்த அழியும் பொருளை மேற்கொண்ட அவ்வேடு; எட்டாது - கிட்டாது; அங்கு... போனது - அங்குக் கீழ்நோக்கி நூறு விற்கிடை அளவு தூரத்தின் எல்லைக்குமேல் போய்விட்டது; நோக்கிக் காணார் - அவ்வெல்லையில் கண்ணால் பார்க்கவும் மாட்டாராயினர்.

(வி-ரை) ஏடு எதிர் அணைப்பார்போல - கரைமிசை ஓடிவந்தார் - ஆற்றுடன் ஓடிய ஏட்டினை எதிர்சென்று அணைத்துக்கொண்டு வருபவர்போலக் கரையின்மேல் வந்தார்கள். **திகைப்பினால்** தாம் செய்வ தின்னதென் றறியாது இவ்வாறு செய்தனர்.

தேறுமெய் உணர்விலாதார் - என்ற கருத்துமது. தேறித் தெளியத்தக்க உண்மையில் உணர்வு. தமது முன்னைய அறிவின்றியும் இதுவரை நிகழ்ந்த பலவற்றாலாயினும் உண்மை அறிந்து கொள்ள மாட்டாதார்களாகிய அமணர்.

பாறுதல் - அழிதல்; **அப்பொருள்** - அத்திநாத்தி என்ற மந்திரம். உண்மையின் முன் நிற்கலாற்றாமையின் **அழியும்** என்றார்.

மேற்கொண்ட - மேலே பொறிக்கப்பெற்ற - எழுதப்பட்ட. மாறுபொருள் மேற்கொண்டமையால் அது தோணியாக எட்டாது போனது.

பட்டிகை - ஓலை. ''பட்டோலை தீட்டும் படிபோற்றி'' (போற்றிப்பஃறொடை 38); **பட்டிகை** - தோணி என்று கொண்டு இங்கு ஏட்டைக் குறித்தது என்பாருமுண்டு.

நூறு விற்கிடை - விற்கிடை - ஓர் அளவை; வில் கிடக்கும் தூரம். **நூறு விற்கிடை** - சிறு பொருள்கள் கண்மறையும் தூரம்.

நூறு விற்கிடைக்கு முன்னே போனது நோக்கிக் காணார் - போனது - போயிற்றாதலின் அதனைக் கூர்ந்து நோக்கியும் காணாதாராயினர்; **நோக்கி** - நோக்கியும்; சிறப்பும்மை விரிக்க; **போனது** - போயினமையால் அதனை; **நோக்கி** - கூர்ந்து பார்த்தும்.

விற்கிடக்கை—நோக்கிச் சென்றார்—என்பனவும் பாடங்கள். 815

2714. **(இ-ள்)** காணவும்... ஏடு - காண்பதற்கும் கிடைக்காதபடி கடலின் முகமாக நோக்கிச் செல்லும் அந்த ஏடு; நாணிலா... போக - நாணம் இல்லாத அமணர்களை நட்டாற்றிலே கைவிட்டு அகன்று போயிற்றாக; சேணிடை.... மீண்டார் -(அவ்வமணர்) தூரத்தே சென்றார்களும், பலவாறும் சிதறுண்டார்களும், திகைப்படைந்தவர்களும் ஆகி, அரசனது ஆணையில் தப்பமாட்டாது அஞ்சுவாராய் அவன் பக்கத்தில் மீண்டுவந்து சேர்ந்தார்கள்.

2714. காணவு மெய்தா வண்ணங் கடலின்மேற் செல்லு மேடு
நாணிலா வமணர் தம்மை **நட்டாற்றில் விட்டுப் போகச்**
சேணிடைச் சென்றூ நின்ருர்; சிதறிஞர்; **திகைத்தார்; மன்னன்**
ஆணையின் வழுவ மாட்டா தஞ்சுவா ரணைய மீண்டார். 816

(வி-ரை) காணவும் எய்தாவண்ணம் - எதிர்சென்று அணைப்பார்போலக் கரையின்மேல் ஓடிய அமணருக்கு அவர்கள் கையில் அணைக்கக் கிட்டாததோடு, காணவும் என்று உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை.

கடலின் மேல் - கடலினை நோக்கி அதன் முகமாக. கடல் உள்ள திக்கு மட்டும் குறித்தது.

நாணிலா அமணர் - ''தோற்கவும் ஆசை நீங்கா'' (2693); ''அவாவினுல்'' (2715) என்ற கருத்துக்களைத் தொடர்ந்து முடித்தவாறு; மும்முறையும் தோல்வியே பெற்று முடிந்தனர்; தந்நெஞ் சறியவே பொய்யும்வஞ்சமும் செய்ததனேடு ஒருமுறை தோல்வியுற்றமையால் அறிவு பெற்று நலம் தேடிக்கொள்ளாது மீளமீளத் தோற்று மானமுமிழந்தனர் என்றவை குறிப்பு.

நட்டாற்றில் விட்டுப் போக - ''நம்பிஞேரை நாட்டாற்றில் விடுதல்'' என்பது பொய்யராகிய கீழோராந் தன்மை குறிக்கும் பழமொழி. அதுபோல இவர்கள் நம்பிய பொய்ப்பொருள் பொதிந்த ஏடு, நம்பும் உண்மைப் பொருளின்மையால் நடு ஆற்றிலே விட்டு ஓடிவிட்டது; பழமொழியில் உருவகத்தால் வந்த **நட்டாறு** என்பது -(நடுஆறு) இங்கு உண்மை - உருவகம் இரண்டு பொருளிலும் பொருந்தியது என்று நகைச் சுவைபடக் கூறியது காண்க. நட்டாறு - நடுஆறு என்பது நட்டாறு என வந்தது புறனடையாற்கொள்க. ஆறுநடு என்பதாம். உண்மையில் ஆற்றின் நடுவில் அமணரை அவர்நம்பிய ஏடு கைவிட்டுச் சென்றது என்பதாம்.

சேணிடை.... திகைத்தார் - சேணிற்றல் - சிதறுதல் - திகைத்தல் - மிக நம்பி எதிர்பார்த்த நிலைக்கு முற்றும் மாருய்ச் சடுதியில் நேர்ந்த பெருந்துன்பந் தரும் ஏமாற்றத்தால் வரும் நிகழ்ச்சிகள்; இதன் விளைவாக அவர்கள் ஒட்டியபடி அரசாணை தம்மைக் கழுவேற்றி அழிக்கும் என்ற எண்ணத்தால் இவை நிகழ்ந்தன; மேற்பாட்டில் ''வெருவுற்று நடுங்கித் தம்பால் ஈறுவந்தெய்திற் றென்றே'' (2715) என்பதனுல் இவை, ஏடு கைவிட்டதனுலன்றி, அதன் விளைவுபற்றிய எண்ணத்தாலாயின என்க.

சேணிடை - சென்று நின்ருர் - பெருந்தீங்கு விளையுமிடத்தினின்று நீங்கி நிற்பார் போல என்பது.

சிதறுதல் - தொடர்பின்றிப் பல பக்கமும் சிதறுண்டு ஓடுதல். **திகைத்தல்** ஒன்றும் தோன்ருது மனந்தடுமாறி நிற்றல். **நின்ருர்** முதலிய மூன்றும் முற்றெச்சங்கள். **அஞ்சுவார்** - அச்சத்துடன் - அஞ்சுவாராய்.

அணைய - நீருடன் சென்ற ஏட்டினை அணைப்பார்போன்று கரைமிசை ஓடிய தூரத்தினின்று மன்னவனிருந்த இடத்தினை அணைய; **சார** - இனி அவன் செய்யும் ஆணையினையும், அதன்படி கழுத்தறி நிரையினையும், கழுவேறியபின் வரும்அவ்வவ் வினைப் போக நுகர்ச்சிகளையும் முறையில் **அணைய** என்ற குறிப்புமாம்.

2715. வேறொரு செயலி லாதார் **வெருவுற்று நடுங்கித் தம்பால்**
ஈறுவந் தெய்திற் றென்றே மன்னவ னெதிர்வந் தெய்தி,
ஊறுடை நெஞ்சி **லச்சம் வெளிப்பட வொளிப்பார் போன்று**
"மாறுகொண் டவரு மிட்டால் வந்தது காணு" மென்றார். 817

மீண்டார் - தம் துன்முயற்சிகளினின்றும் இப்பிறவியில் மீட்சி பெற்றனர்; **அவற்றை** இனிச் செய்யமாட்டாராய் மீண்டனர் என்பதும் குறிப்பு. ***ஆணையின்*** - இன் நீக்கப் பொருளில் வந்த ஐந்தனுருபு. ***ஆணையினால்*** என்று மூன்றனுருபாகக் கொண்டு அரசனது ஆணை **தம்மை** விடாது பற்றும் என்ற காரணத்தால் சேண்சென்று விடாமலும் சிதறி ஓடாமலும் அணையமீண்டார் என்றலுமாம்.

ஆணையும் வழுவமாட்டா தஞ்சுவாரடைய—என்பதும் பாடம். ***816***

2715. **(இ-ள்)** வேறொரு... நடுங்கி - வேறு செயல் ஒன்றும் இல்லாதவர்களாகிய அமணர்கள் வெருக்கொண்டு நடுங்கி; தம்பால்... எய்தி - தமக்கு முடிவு வந்து விட்ட தென்றே துணிந்து அரசன் முன்பு வந்துசேர்ந்து; ஊறு உடை.... போன்று - புண்பட்ட தமது நெஞ்சில் பயம் வெளிப்பட்டு வர அதனை மறைப்பார்போல; மாறு... என்றார் - "மாறுகொண்ட பிள்ளையாரும் ஏட்டினை இட்டால் அதன் பின்னை வரும் முடிவினைக் காணுங்கள்" என்று சொன்னார்கள்.

(வி-ரை) வேறொரு செயல் இலாதார் - வேறு செயல் ஒன்றும் என்க; **செயல்** - செயத்தக்கது; செய்யக்கூடியது. முற்றும்மை தொக்கது.

வெருவுற்று - வெருவுதல் - சடுதியில் வரும் அபாயத் தோற்றத்தால் வரும் மனநிகழ்ச்சி. "வெருக்கொண்டாற் போலமுவர் குறிப்பயலாய்" (1953).

என்றே - ஏகாரம் தேற்றம். எனவே துணிந்து.

தம்பால் ஈறுவந்து எய்திற்று - தம்பால்-நான்கனுருபின் பொருளில் வந்தது; தமக்கு. **ஈறு** - முடிவுகாலம்; சாங்காலம்.

ஊறு உடை நெஞ்சில் அச்சம் வெளிப்பட - ஊறு - மூன்று முறையும் தோல்வியும், வாய் சோர்ந்து கழுவிலேற ஒட்டிய நிலையும், பற்றிய எண்ணம்; **உடை** - உடைய - ஈறு கெட்ட பெயரெச்சம்; ஈறு வரும் என்ற எண்ணத்தால் நெஞ்சம் கெட்டதனால் இங்குப் பெயரெச்சமும் ஈறு கெட்டது. **ஊறு உடை** - ஈறு வரும் என்ற எண்ணத்தால் - ஊற்றினால் - உடைந்த என்றலுமாம்.

ஒளிப்பார் போன்று - என்றார் - நெஞ்சினின்றும் வெளியே அச்சக்குறி காட்ட அதனை மறைப்பவர்போல் "மாறு... காணும்" என்றார். ஒளித்தலாவது தமக்கு வரும் முடிவுபற்றிய எண்ணத்தையும் அதன் விளைவாகிய மெய்ப்பாடுகளையும் புறத்தில் தோற்றாமல் இம்மொழிகளால் மறைத்தல்; இம்மொழிகளால் இன்னும் வாதம் முடியாதது போலவும் அதனால் முடிவு நிச்சயமில்லாதது போலவும் பேசுதல்.

2716. **மாசுசே** ரமண ரெல்லா **மதியினின் மயங்கிக் கூற**
ஆசிலா நெறியிற் சேர்ந்த வரசனு **மவரை விட்டுத்**
தேசுடைப் பிள்ளை யார்தந் **திருக்குறிப் பதனை நோக்கப்**
பாசுரம் பாட லுற்றார் பரசம யங்கள் பாற. 818

மாறு... வந்தது காணும் - **மாறுகொள்ளுதல்** - தங்களை எதிர்த்து நிற்றல். **இட்டால் வந்தது காணும்** - அவரும் ஏட்டினை நீரில் இட்டால் அஃதும் ஒருவேளை ஒட்டியபடி அங்கு நில்லாது நீரினோடு சென்றுவிடுமாகில் தோல்வி யிருபுறமுமாகு மாதலின் அதன் பின்பே நாங்கள் தோற்றமை நிச்சயிக்கவேண்டும் என்பது குறிப்பு. இதனால் தமது தோல்வியும் அழிவும் நிச்சயம் என்று மனத்துள் துணிந்து கொண்ட நிலையினையும், அதனால் நேர்ந்த மெய்ப்பாடுகளையும் மறைத்தமை காண்க. **காணும்** - அரசனையும் மந்திரியாரையும் நோக்கிச் சமணர் கூறியது. **காணும்** - செய்யுமென்னும் வாய்ப்பாட்டு முற்று முன்னிலை ஏவற் பன்மைக் கண்ணும் அருகி வருதல், "நீர் ஆக்கியவிக் கருவியினைத்தாரும்" (2348) என்றாற் போல்வனவற்றிற் காண்க. **மறைப்பார் போன்று** - மறைக்க முயன்றார்களேயன்றி மறைக்கக் கூடவில்லை என்பதும் குறிப்பு.

மாறுகொண்டீரும்... காண்டும் என்பது பாடமாயின் பிள்ளையாரை நோக்கி அருகர்கள் உரைத்ததாக உரைத்துக் கொள்க. *817*

2716. **(இ-ள்)** மாசு... கூற - அழுக்கு மிகுந்த அமணர்கள் எல்லாரும் (முன் கூறியபடி) மதிமயங்கிக் கூற; ஆசிலா... விட்டு - குற்றத்தை நீக்கும் நெறியில் சேர்ந்த அரசனும் அவ்வமணர்களை விட்டு; தேசுடை...நோக்க - (சிவஞான) ஒளியுடைய ஆளுடைய பிள்ளையாருடைய திருவுள்ளக் குறிப்பு யாதோ என்று தெரியும்படி அவரை நோக்க; பாசுரம்...பாற - பரசமயங்களால் நேர்ந்த மயக்கம் அழியும்படி திருப்பாசுரத்தினைப் பாடியருளலுற்றனர்.

(வி-ரை) மாசு சேர் - மாசு - அகத்தும் புறத்தும் மிகச் சேர்ந்த அழுக்கு. **உண்மாசு** - உண்மைஞான மின்மையானும், பொய் - வஞ்சனை முதலிய தீக் குணங்களுண்மை யானும் மிகுவதாயிற்று; **புறமாசு** - உடல் கழுவாமை வெயிலினிற்றல் முதலியனவாய் செய்தக்கவல்லாத புறச்செயல்கள் செய்தலானும் செய்தக்க புறச்செயல்களில்லாமையானும் மிகுவதாயிற்று; "துன்னுமுழு உடற்றுகளாற் சூழு**முணர்** வினிற்றுகளால், அன்னெறியிற் செறிந்தடைந்த வமண்மாசுகழுவுதற்கு" (2549) என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க. **சேர்** - மிகும். அவர் வழக்குக்களால் நாளும் மிகுவதாயிற்று என்பது.

மதியினில் மயங்கிக் கூற - மதிமயக்கம் காரணமாக அவ்வாறு கூற. **மதிமயக்கம்** - முன் இரண்டு பாட்டுக்களாலும் விரிக்கப்பட்டது; பிள்ளையார் இடும் ஏடு நீரினிலும் வெற்றிபெறும் என்பதனை மறுகினிற் கண்ட சாதாரண மாந்தரும் முன்னிகழ்ச்சிகளின் முடிவினால் உணர்ந்து கூறினர். 2704, 2705 பார்க்க. அவ்வாறிருப்பவும் கலைஞான முடைமையோடு முன் அனுபவத்தால் கண்கூடாகக் காண்பதும் பெற்ற அமணர் "இட்டால் வந்தது காணும்" என்று ஐயப்பாடு பெற அம்முடிவு இனிக் கண்டறியும் பொருளாகக் கூறியது அவர்கள் மதிமயங்கிய காரணத்தாலாயது என்று அரசன் உணர்ந்தான் என்பதாம்.

ஆசிலா நெறியிற் சேர்ந்த அரசனும் அவரை விட்டு - **ஆசுஇலா நெறி** - குற்றத்தை இல்லையாகச் செய்யும் நெறி; சிவநெறி. மாசுசேர் என்று அமணரைக் கூறியதற்கேற்ப அவரினின்றும் நீங்கி அரசன் சேர்ந்த இச் சிவநெறி அக்குற்றமே யன்றிப் பிறவியாகிய தீமையினையும் இல்லையாகச் செய்வதாம் என்று இவ்வாறுரைக்கப்பட்டது; அஃது ஆசுசேர் நெறியாதலின். இஃது அவ்வாறு குற்றமிலாத - குற்றமற்ற நெறி என்றுரைப்பினுமமையும். **சேர்ந்த** - என்றதனால் அந்நெறியினை விட்டு இந்நெறியிற் சேர்ந்த கொள்கைப்பற்றிய யுடைபெயர்ச்சி குறிக்கப்பட்டது.

அவரை விட்டு - "அறிவில்லாப் பிணங்களைநா மிணங்கிற் பிறப்பினிலு மிறப்பினிலும் பிணங்கிடுவர்; **விடுநீ**" (சித்தி-12-2); இதனோடு அமணரின் சார்பும் தொடர்பும் அறவே நீக்கப்படுதலின் முடிவாக இங்கு **அவரை விட்டு** என்றார்.

தேசு உடைப் பிள்ளையார் - **தேசு** - சிவஞானப் பேரொளி; "பேருணர்விற் பொலிகின்ற பிள்ளையார்" (1970); **தேசு** - திருநீற்றினொளியுமாம்.

மாசுசேர் அமணர் - **ஆசிலா நெறி** - **தேசுடைப் பிள்ளையார்** - புறச்சமயத் தீமையும், அதனைப் போக்கும் சாதனமாகிய நெறியும், அதனை விளைத்துத் தரும் ஆசிரியரும், அவர்க்கு உள்ளே துணை நின்று அருளும் சிவனருளும் கூறப்பட்ட நயம் காண்க. இவ்வாறு இங்குக் கூறியது இனி அரசன் ஞானோபதேசம் பெறும் பக்குவமுடையனாதல் குறிக்க என்க. மேல்வரும் இரண்டு பாட்டுக்களாலும் இக் கருத்தினை ஆசிரியர் விளக்குதல் காண்க.

திருக்குறிப்பு - திருவுள்ளக் குறிப்பு. **நோக்குதல்** - அதனை இன்னதென்றறியும் கருத்து விளங்க அவரைப் பார்த்தல்.

திருக்குறிப்பினை நோக்குதல் - "பிள்ளையாரும்... அருகர்நீரும் விதித்த ஏடு இடுக" (2711) என்று முன்னரே ஆணை தந்த அரசன் ஈண்டுப் பிள்ளையாரது திருக்குறிப்பினை நோக்கியதென்னையோ? எனின், முன்னர் "ஏடு இடுக" என்று ஆணை தந்தது இருதிறமும் ஒட்டி இசைந்த வாதத்தினை அவர் இசைந்தவாறே நிகழ்த்து விக்கும் முறையில் அரசன் என்ற நிலையில் நின்று செய்த செயல்; ஈண்டு அவ்வாதத்தினுள் அமணர் முந்திக்கொண்டு தமது தோல்வியை நிச்சயப்படுத்திவிட்டார் ஆதலான் அதன்மேல் பிள்ளையார் செயல் வேண்டப்படாமலே வாதத்தின் முடிவு கூறலாகும் என்ற நிலையினை அரசன் உளங்கொண்டனன்; ஆனால் "மாறுகொண்டவரு மிட்டால் வந்தது காணும்" (2724) என்று அமணர் கேட்டதனால் தனக்கு வேண்டாவிடினும் நடுநிலை நின்று அச்செயலிற் பிள்ளையாரது திருவுள்ளக் குறிப்பினைத் தெரிய வேண்டினன் அரசன். அற்றாயின் ஏடு நீரும் இடுக என்று கூறிவிடாமல் நோக்கியறிய முற்பட்டது யாது கருத்து எனின்? தீய அமணர்சார்பு விட்டுப் பரிபக்குவமடைந்த மாணவகன் என்ற நிலையினை அடைந்தமையால் ஆசாரியரது திருக்குறிப்பினை எதிர்நோக்கி விண்ணப்பித்தபடி என்க. இது "முன்னைவல் வினையு நீங்கி முதல்வனை யறியும் தன்மை துன்னினான் வினைக ளொத்துத் துலையென நிற்ற லாலே" (2717) என அரசனது நிலையினை யிருவினை ஒப்பும் மலபரிபாகமும் வந்த தன்மைபற்றி ஆசிரியர் அறிவிப்பது காண்க; அது பற்றியே அவனுக்குப் பிள்ளையார் ஞானோபதேசம் செய்தமையும் உணரப்படும்.

பாசுரம் - திருப்பதிகம்; ''வாழ்க அந்தணர்'' என்ற பதிகத்திற்குச் சிறப்புப் பெயர்.

பரசமயங்கள் பாற - பாறுதல் - அழிதல்; **இங்கு அழிதல் என்றது பரசமயங்களின் தீமைகளும் மயக்கமும் ஒழிந்து மறுக்கப்படுதலேயன்றிச் சமயங்கள் அழிதல் என்பதன்று.** இது முன்னரும் விளக்கப்பட்டது; மேலும் உரைக்கப்படும். *2718* முதல் *2741* வரை வரும் பாட்டுக்கள் காண்க.

பரசமயங்கள் என்று பொதுவாகக் கூறியதனுல் புறப்புறம், புறம், அகப்புறம் என்ற முக்கூற்று அறுவகைச் சமயங்களின் நிலைகளும் குறிக்கப்பட்டன. ''ஆறுவகைச் சமயத்தி னருந்தவரும்... புக்கதற்பின்'' *(3150)* எனப் பின்னர்க் கூறுதலின் அகச் சமயத்தார் தழீஇக் கொள்ளற்குரியார் என்க. சமணத்தை முன்னரே சுரவாதம் - கனல்வாதம் - புனல்வாதம் என்ற மூன்றுனும் வெற்றிகொண்டு சைவ மேன்மை நாட்டினர்; ஆயின் அற்றைநாட் சமணத்தின் பொய்ம்மை அற்புதச் செயல்கள் பற்றி நெருப்பினும் நீரினும் கொண்ட வெற்றியின் மூலம் காட்டப்பட்டதன்றி, அதன் கொள்கையின் கீழ்மைகள் மறுக்கப்படாது நின்றனவாதலின் அவற்றையும் ஏனைச் சமயங்களின் கொள்கைகளையும் மறுத்துச் சுத்தாத்துவித சைவ சித்தாந்தத்தின் உண்மைத் தன்மையினை நிலைநாட்ட வேண்டியதாயிற்று; இஃதே ஆளுடைய பிள்ளையாரது திருஅவதாரத்தின் தத்துவமாம். ''பரசமய நிராகரித்து நீறுக்கும் புனைமணிப்பூண் காதலன்'' *(1917)*; அற்புதச் செயல் நிகழ்ச்சியால் காட்டப்படும் வெற்றி வேறு; உயர்வு தாழ்வுகளை எடுத்துக் காட்டி நிலைநாட்டுதல் வேறு. இதனைப் பின்னர் ''எஞ்சலின் மந் திரவாத மன்றி யெம்மோ டெதிர்ந்து பொருட் பேசுவதற் கிசைவ தென்று'' போதிமங்கையில், அன்பரதுஅத் திரவாக்கால் தம் தலைவன் இடிவீழ்ந்து இறந்தது கண்டபின்னரும், புத்தர் கூறிச் சாத்திர வாதத்தினை மேற்கொண்டு வந்தமையா லறிந்து கொள்க.

பாசுரம் பாடலுற்றுர் பரசமயங்கள் பாற - எனவே முன் அருளிய பதிகங்களாலும் அருட்செயல்களாலும் பரசமயங்களின் கொள்கைகளின் தாழ்வான தன்மைகள் சாத்திர வாதம்பற்றி எடுத்துக் காட்டப்படாமல் எஞ்சிநின்றன என்பதும், அதனையே முன்வைத்து இத்திருப்பதிகம் அருளிச் செய்யப்பட்ட தென்பதும் போதருதல் காண்க. **திருக்குறிப்பு** என்றதும்; **பரபக்க நிராகரிப்பு** எனப்படும். சிவாகமங்களுள்ளும், சிவஞானசித்தியார் பரபக்கத்துள்ளும், சங்கற்பநிராகரணத்துள்ளும் இதன் விரிவெல்லாங் கண்டுகொள்க. இத்திருப்பதிகத்தால் இவ்வாறு பரபக்க மறுப்பு மட்டுமேயன்றிச் சைவவுண்மைத் திறத்தினை நாட்டுதலாகிய **சைவத் தாபன**மும் *(நீறுக்குதல்)* **உடன்** செய்தருளினர் பிள்ளையார் என்பதும் *(2718)* கண்டுகொள்க.

பரசமயங்கள் - ''இச்சமயங்களெல்லாம் **புறப்புறச் சமய**மும், **புறச்சமய**மும், **அகப்புறச் சமய**மும் ஆம். அவற்றுள் **புறப்புறச் சமயம்**: உலகாயதம், நால்வகைப் பௌத்தம், ஆருகதமென அறுவகைப்படும்; **புறச்சமயம்**: தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங்கியம்,யோகம், பாஞ்சராத்திரம் என அறுவகைப் படும்; **அகப்புறச் சமயம்**: பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கியவாத சைவம் என அறுவகைப்படும்; (**அகச்சமயம்** - பாடாணவாத சைவ முதற்சிவாத்துவித சைவ மீருக அறுவகைப்படும். அவை பாடாணவாத சைவம், பேதவாத சைவம், சிவசமவாத சைவம், சிவசங்கிராந்தவாத சைவம், ஈசுவர வவிகாரவாத சைவம், சிவாத்துவித சைவம் என்பன.) இவையெல்லாம் அகம் புறம் என்று இரண்டாய் அடங்குமாறும் ஓர்ந்துணர்க.

''ஈண்டுக் கூறிய சமயத்தாருள், உலகாயதர் முதல் ஆருகதரீறாகிய அறுவரும் **வேதஞ்** சிவாகம மிரண்டனையும் நிந்திக்கும் நாத்திகராயினும், **ஒரு நூலென்றும் பிரமாணமென்றும் கொண்டு ஒருநெறிக்கண்ணே நிற்றலான்** அவர் சமயம் **புறப்புறச்** சமயமென வேறுவைத் தெண்ணப்பட்டன;

''தார்க்கிகர் முதற் பாஞ்சராத்திரிகளீறாகிய அறுவரும், வேதம் பிரமாணமெனப் பொதுவகையாற் கொள்ளினும், அவருள் **தார்க்கிகர்** தன்னூற் பிராமாணியங் கொள்ளாமையானும், வேதப் பொருளோடு முரணிப் பொருட்டன்மை கோடலானும்; **மீமாஞ்சகர்** கருமகாண்டமாகிய வேதமாத்திரைக்கே பிரமாணங்கொண்டு ஞானகாண்டமாகிய உபநிடதங்களை இகழ்தலானும்; **ஏகான்ம வாதிகள்** ஞானகாண்ட மாத்திரைக்கே பிரமாணங்கொண்டு கருமகாண்டத்தை இகழ்தலானும்; **ஏனை மூவரும்** வேதவாக்கியங்களிற் றத்தம் மதத்திற்குப் பொருந்துவன மாத்திரையே எடுத்துக்கொண்டு ஏனையவற்றிக்குப் பிரமாணங் கொள்ளாமையானும், வேதப் புறமாகிய நூல்களைப் பிரமாணமெனக் கோடலானும்; இவ்**வறுவருஞ் சிவாகம நிந்தகராக**லானும் இவர் சமயம் **புறச்சமய**மென வேறுவைத் தெண்ணப்பட்டன;

''**பாசுபதர்** முதலிய **ஐவரும்**, வேதஞ் சிவாகம மிரண்டற்கும் பொது வகையாற் பிரமாணங் கொள்ளினும், அவ்விரண்டற்கும் புறமாகிய பாசுபத முதலிய நூல்கட்குச் சிறப்பு வகையாற் பிரமாணங் கோடலானும்; வேதம் சிவாகமமிரண்டினும் ஆகாவென விலக்கப்பட்டனவற்றை ஆசரித்தலானும்; **ஐக்கியவாத சைவர்** வேதஞ் சிவாகம மிண்டற்கும் சிறப்புவகையாற் பிரமாணங்கொண்டு, அவற்றில் விலக்கியன ஒழித்து விதித்தவழி ஒழுகுவாராயினும் **எல்லாப் பெருங்கேட்டிற்கும் மூலகாரணமாகிய ஆணவமலத்துண்மை** கொள்ளாமையானும், அதனுண்மை சாதிக்கும் சிவாகம வாக்கியங்களை இகழ்தலானும் அவ்வறுவகைச் சமயமும் **அகப்புறச் சமய**மென வேறுவைத் தெண்ணப்பட்டன;

''ஏனைப் **பாடாணவாத சைவர்** முதலிய அறுவரும் **பொருளுண்மையெல்லாஞ்** சித்தாந்த சைவரோ டொப்பக்கொள்ளும் **அந்தரங்க உரிமையுடைய** ராயினும், அவ்வப் பொருள்கட்குக் கூறுந் தன்னியல்பு பொதுவியல்பு மாத்திரையின் முரணுதலான் அவர் அவர் சமயம் **அகச்சமய**மென வேறுவைத் தெண்ணப்பட்டன.

''இவ்வாறு நால்வகைச் சமயங்கட்குஞ் சித்தாந்த சைவத்தோடுள தாகிய வேற்றுமைத் தாரதம்மியங் கண்டுகொள்க.

''**அகச்சமயமாறனுட் சிவாத்துவிதசைவ**மாவது நிமித்தகாரணத்துக்குப் பரிணாமங் கூறுவதாகலின்,அது நிமித்தகாரண பரிணாமவாதம் எனப்படும்; அங்ஙனங் கொண்ட சிவாத்துவித சைவர் கருத்துணராதார் சிவாத்துவிதசைவமாவது யாதோ எனவும், நிகழ்சிவாத் துவிதாந் தத்துக் குலவின ரளவளாவா'' என்றமையின், இறுதிக்கண் எடுத்தோதப்படும் சுத்தசைவம்போலு மெனவும் மயங்குவர். சுத்தசைவம் நுட்பப்பொருளுணராமை மாத்திரையேபற்றி வேறு வைக்கப்பட்டதன்றிக் கருத்துவகையாற் சித்தாந்த சைவத்தின் வேறன்மையிற் சுத்தசைவஞ் சித்தாந்த சைவத்துளடங்குமென்றுணர்க. அற்றாகலினன்றே ''நிலவுல காய தாதி நிகழ்சிவாத் துவிதாந் தத்துக், குலவின ரளவ ளாவாக் கொள்கைய தாகி''

என ஏனைச் சமயங்களை எடுத்தோதி விலக்கிச் சுத்தசைவத்தை அங்ஙனம் விலக்காதொழிந்ததுவுமென்க.

"இனி, இவ்வாறன்றிப் பாடாண வாதத்திற்கும் பேதவாதத்திற்குந் தம்முள் வேறுபாடு சிறிதாகலின் அவ்விரண்டனையும் ஒன்றாகவைத்தெண்ணிச் **சுத்த** சைவத்தையும் உடன் கூட்டி **அகச்சமய**மாறெனக் கோடலுமொன்று. இங்ஙனமாகலான் "மெய்தரு சைவ மாதி யிருமூன்றும்" என்றதூஉம் பாடாணவாத முதலிய அறுவகைச் சைவங்களையுமெனக் காண்க. பாசுபதர் முதலியோர் கலைக்குமேலுள்ள தத்துவங்களை உணராமையின், அவர் "வித்தையாதி யெய்து தத்துவங்க ளேய்வர்" எனக் கோடல் பொருந்தாமையறிக. ஐக்கியவாத சைவர் கலைக்குமேலுள்ள தத்துவங்களுண்டெனக் கொண்டாராயினும், மூலமலம் உண்டென்ப தறியாமையின் மூலமல நீங்கிய முத்தர்க்கன்றிச் சுத்த தத்துவ புவனங்களிலெய்துதல் கூடாமையின், அவர்க்கு முத்தித்தானம் மோகினிக்கு மேற் சுத்தவித்தைக்குக் கீழ் விஞ்ஞானகலர்க்குரிய தானமேயாமாகலின். ஏனைப் பாடாணவாத சைவர் முதலியோரே வித்தையாதி... தத்துவங்க ளேய்வர்" என்றறிக. "புறச்சமயத் தவர்க்கிருளாய் அகச்சமயத் தொளியாய்" என்புழியும் அகச்சமய மென்றது "ஏக னனேக னிருள்கரும மாயை யிரண்டு" என்னும் ஆறுபொருளுங் கொண்ட பாடாணவாத முதலிய அறுவகைச் சைவங்களையேயாமெனவும், புறச் சமயமென்றது அங்ஙனம் பொருளுண்மைகொள்ளாத ஏனை மூவகைப் புறச்சமயங்களையும் எனவும் உணர்ந்துகொள்க" — எனவரும் சிவஞானபோத அவையடக்கத்தின் - மாபாடியத்துள் மாதவச் சிவஞான முனிவருரையும் ஈண்டுச் சிந்திக்க.

பரசமயங்கள் பாற - பாறுதல் - நூல்வழியால் மறுக்கப்படுதல்; ஈண்டுச் **சமண சமயம்** அளவையால் மறுக்கப்படுதல்பற்றி ஒருசிறிது காண்போம். சமணசமய உண்மைகள் எனக் கொள்வன; அருகனை சீவனுய்க் கூறுதலும் நித்தியமான இயற்கைஞான முடையனென்றலும்; (ii) சீவன் சங்கோசவிகாச தன்மியாயிருப்பன் என்றலும்; (iii) பொருளின் தன்மையைப் பலபடக் கூறி அஸ்தி நாஸ்தி - உண்டு இல்லை என்றலும்; (iv) உலகம் ஒருவராற் படைக்கப்பட்டதன் றென்றலும் முதலாயின. (i) **அருகக் கடவு ளியல்பு**: பாவம் வராது அறத்தினின்றான் என்று அமணர்கள் கூறுதலின், பந்த முதலிய குற்றங்களினின்றும் விடப்பட்டு ஏனை முத்தர்போலச் சேர்க்கை ஞானமுடையனேயன்றி இயற்கையாலே அனந்த ஞான முதலியவை யுடையனன்று என்பது போதரும்; (ii) சீவன் சங்கோசவிகாச தன்மி - அஃதாவது எடுத்த உடலினளவு பரிணமிக்கும் தன்மையுடையனுதல்; யானையின் உடலிற் பெருத்தும் எறும்பினுடலிற் குறைந்தும் நிற்றல்வேண்டும்; ஒருடலில் ஓரவயவம் குறையில் அவ்வளவில் அச்சீவன் குறைதல் வேண்டும்; பரகாயம் புகும் யோகியின் உயிர் எண்வகைச் சித்திகளுள் பிராகாமிய சித்தியினுல் வேற்றுடம்பிற் புகும்போதுதான் புகும் அவ்வச்சரீரங்களின்அளவிற்கு விரிந்தும் சுருங்கியும் பரிணமித்தல் வேண்டும்; விளக்கு ஓரிடத்திலிருந்தபடியே வீடு முழுதும் பரவினுற்போல இவ்வாறு விரியும் எனின் அது விகாரமாதலின் உயிர் சடமாய் அநித்தியமுமாம்; ஆதலால் அவர் கொள்கை தவறு; (iii) **அஸ்தி நாஸ்தி...** ஒரு பொருள் உண்டுமாம் இல்லையுமாம்; ஒளியும் இருளும்போல ஒன்றற்கொன்று மாறுபாடாகிய உண்மையும் இன்மையுமாகிய தன்மைகள் ஒருகாலத்தில் ஒரு பொருளில் இருத்தல் இயலாது; இவ்வாறு கூறுதல் காட்சி விரோதம்; சூரியனுள்ள காலத்தில் அஃது இல்லை என்ற பொருள் தோன்றாமையும், பாம்புள்ள காலத்தில் பாம்பில்லை என்று பயமின்மையும் வேண்டும்; அதனுல் இல்லை என்றலும், உண்டில்லை என்றலும் பொருந்தாது... இன்னும் அவர் கூறும்

2717. தென்னவன் மாறன் றானுஞ் சிரபுரத் தலைவர் **தீண்டிப்**
பொன்னவில் கொன்றை யார்தந் **திருநீறு பூசப் பெற்று**
முன்னைவல் **வினையி னீங்கி முதல்வனை யறியுந் தன்மை**
துன்னினான் வினைக ளொத்துத் துலையென நிற்ற லாலே. 819

அனேகாந்தவாதத்தினுள்ளும் எழுபொருள் உளவென வகுத்துக்கூறுதலும் காண்க; (iv) **உலகம்** *நித்தியமாதலின் ஒருவனாற் படைக்கப்பட்டதன்று; இயல்பாயுள்ளதாலின் எனில்;* **யாது** *அவயவப் பகுப்புடையதாய்ப், பலவாய், அசேதனமாய்க் காணப்படும் அது அழியும்;* **அஃது** *ஒருவராற் படைக்கப்பட்ட காரியப் பொருளாம். உலகமும் அவ்வாறு அவன் அவள்* **அது** *என்ற அவயவப் பகுப்புடையது; தோன்றிநின்றழியும் தன்மையுடையது; அசேதனமாய்ப் பலவாயுள்ளது; ஆதலின் ஒரு முதல்வனாற் காரியப்படுத்தப்பட்டது.— என்றிவ்வாறு கண்டுகொள்க.* ***(குறிப்பு:*** *இவை பெரும்பாலும் ஸ்ரீமத் ஆறுமுகத் தம்பிரானார்* **உரையிற்** *கண்டவாறு தழுவி எழுதப்பட்டன).* ***818***

2717. (இ-ள்) தென்னவன் மாறன்தானும் - *அரசனாகிய பாண்டியன்தானும்;* *சிரபுரத்தலைவர்... பெற்று - சீகாழித் தலைவராகிய பிள்ளையாரால் தீண்டிப் பொன்போன்ற கொன்றையினைச் சூடிய சிவபெருமானது திருநீற்றைப் பூசப்பெற்றதனால்; வினைகள்... நிற்றலாலே - இருவினைகளும் ஒத்துப் பொருளைச் சமன்செய்து காட்டுந் துலாக் கோல்போல நிற்கப்பெற்றதனாலே; முன்னை... துன்னினான் - முன்னைக் கொடிய வினையினின்றும் நீங்கியவனாய் முதல்வனை அறியும் தன்மை பொருந்தினான்.*

(வி-ரை) தீண்டிப் பூசப் பெற்று - திருக்கையாற் றீண்டிப் பூசும் பேறு பெற்றதனால்; ''திருக்கையாற் றடவ'' *(2663);* இது பரிசதீக்கை என்ற குறிப்புப் பெறத் **தீண்டி** என்றெடுத்துக் கூறினார். **பெற்றுத் - துன்னினான்** - என்று முடிக்க. **பெற்று** - பெற்றதனால், வினையெச்சம் காரணப்பொருளில் வந்தது.

தானும் - உம்மை உயர்வு சிறப்பு.

திருநீறு பூசப்பெற்று - ''நீறு - ஈந்தார்'' *(2755)* எனப் பின்னர்க் கூறுவதனுடன் இதனை ஒப்புநோக்குக. அஃது தீக்கை முடிவில் பாதபங்கயமும் சூட்டி யருளும் நிலை. முன்னர்த் திருக்கையாற் றிருநீறு பூசியது தீக்கைக்கு உரியனாக்கும் நிலை.

முன்னை வல்வினையும் நீங்கி - முன்னை - வினை - ''முன்செய் தீவினைப் பயத்தினாலே'' *(2498)* என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க. இது முன்னுடம்பால் ஈட்டப்பட்டுப் புத்திதத்துவம் பற்றுக்கோடாக நின்று அனுபவத்துக்கு முகந்துகொண்ட பிராரத்த வினை. **வல்வினை** என்றது எதிர்விலக்கலாகாத வலிமையுடைமைபற்றி; விலக்கலாகாமையாவது சைவச் சார்பிற் பிறந்தும், அம்மையார் அமைச்சனார் முதலிய அன்பானிறைந்த சைவச்சார்பு படைத்தும், ''பாண்டி நாடே பழம் பதியாகவும்'' (திருவா) என்று போற்றப்படும் சைவப் பாண்டி நாட்டின் அரசாட்சியின் உரிமை பெற்றும் மதிமயங்கிச் சமண்சார்பு பற்றி ஒழுகியதன்றி சைவத்திற்குக் கேடு சூழவும் துணைநிற்கச் செய்த வலிமை.

வினைகள் ஒத்துத் துலை என நிற்றலாலே - முதல்வனை அறியுந் தன்மை துன்னினான் - என்று கூட்டுக. **துலை என - துலை** - தராசின் இரு தட்டினும் இடும் ஒத்த இரு பொருள்களுக்கு வந்தது; ஆகுபெயர். ஏனைப் பொருள் ஒன்றுமிடாத துலைத் தட்டுகள் எனினுமொக்கும்; **வினைகள்** - நல்வினை தீவினையாகிய இரண்டும். **வினைகள் ஒத்தல்** - இருவினையொப்பு எனப்படும் அஃதாவது நல்வினைப் பயனாகிய இன்பம் வருங்கால் அவ்வின்பத்து ளழுந்திவிடாமலும், தீவினைப் பயனாகிய துன்பம் வருங்கால் அத்துன்பத்துளழுந்திவிடாமலும் இரண்டனையும் ஒன்று போலவே இறைவனதாணையால் வந்தன என்று எண்ணி நுகரும் உயிரறிவின் பக்குவநிலை; ''அடுக்கி வரினுமழிவிலான்'' இடுக்கண் வருங்கா னகுக'' ''இன்பத்துளின்பம் விழையாதான்'' என்று பொய்யாமொழியார் உலகநிலையின் வைத்துக் கூறிய தன்மைகள் வேறு; இங்குக் கூறிய பக்குவநிலைவேறு. முன்னவை உலகில் துன்பங்கள் வந்துழி அவற்றாற் சோர்வுற்று மனமழிந்துவிடாதபடி மக்கள் மேற்கொள்ளும் முயற்சியாகிய சாதனங்கள்; இங்குக் குறித்தது வினைவயத்தானும் திருவருளாலும் உயிர் அடையும் பரிபக்குவநிலை. உணக்கிலாததோர் வித்து மேல்விளை யாமலென் வினையொத்தபின், கணக்கி லாத்திருக் கோல நீவந்து காட்டினாய்கழுக் குன்றிலே'' (திருவா) என்ற கருத்து.

முன்னை வல்வினையும் நீங்கி - என்றும், **வினைகளொத்துத் துலை என நிற்றல்** - என்றும், **முதல்வனை யறியும் தன்மை** - என்றும் கூறியவை மூன்று நிலைகள். இவை முறையே சத்திநிபாதம் என்றும், இருவினையொப்பு என்றும், மலபரிபாகத்தின் விளைவு என்றும் ஞானசாத்திரங்களுட் கூறப்படும். **முன்னை வல்வினை** என்றது சமண்புக் கிருந்தபோது செய்துகொண்ட தீவினை என்றலும் பொருந்தும். **வல்வினை** என்றது சரித நிகழ்ச்சிக் குறிப்பு. **சத்திநிபாதம்** என்பது பற்றி மாதவச் சிவஞான முனிவர் மாபாடியத்துட் கூறுமாறு காண்க (8-1); பக்குவமாதற்பொருட்டு மலத்திற்கு அனுகூலமாய் நின்று நடாத்திய திரோதானசத்தி, மலம் பரிபாகமெய்திய வழி, அக் **கருணை மற**மாகிய செய்கை மாறிக் கருணை யெனப்படும் முன்னைப் பராசத்தி ரூபமேயாய் ஆன்மாக்கள் மாட்டுப் பதிதலாகிய சத்திநிபாதமும், சோபானமுறையான் மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என நால்வகைப்பட்டு நிகழுமெனக் கொள்க; எனவே சத்திநிபாதத்துக்குக் காரணம் மலபரிபாகம் என்பதூஉம், அஃதும் அவ்வாறு பல்வேறு வகைப்பட்டு நிகழுமென்பதூஉம் பெறப்பட்டன.

''சத்திநிபாதம் என்னும் சொல்லியல்பு **சத்தியினது வீழ்ச்சி** என்றவாறு. **நி** என்பது **ஏற்றமாக** என்னும் பொருள் குறித்துநின்றதோ ரிடைச்சொல்; ஓரவைக்களத்தின் நடுவே ஒரு கல் வந்து வீழ்ந்தால் அவ்வீழ்ச்சி அவ்வவைக்களத் துள்ளாரை ஆண்டுநின்றும் அகல்விக்கும்; அதுபோலச் சத்திநிபாதம் நிகழ்ந்த மாத்திரையே அஃது அவ்வான்மாவை மனைவி மக்கள் முதலிய உலகத்துழனியின் அச்சநிகழ்ந்து அவ்வுலக வாழ்க்கையினின்று வெரீஇப் போந்து உண்மைக் குரவனை நாடிச் செல்லுமாறு செய்வித்தலின் அவ்வொப்புமை தோன்றச், சத்தி நிகழ்ச்சி என்னது சத்தி **வீழ்ச்சி** யென்றோதப்பட்டது.

''**மலபரிபாக**மாவது மலந் தனது (மறைத்தற்) சத்தி தேய்தற்குரிய துணைக் காரணங்க ளெல்லாவற்றோடும் கூடுதலேயாம்''; ஈண்டுத் துணைக்காரணங்கள் என்றவை சிவபுண்ணியங்களும் அவற்றான் வரும் தூயவுடம்பு முதலிய கருவிகளும் ஆம். இங்குச் சிவபுண்ணியப் பேறாகப் பிள்ளையாரது திருநோக்கம், பரிசம் முதலியவை நிகழ்ந்தமையால்

இத் துணைக்காரணங்களாகிய தூயவுடம்பு முதலியவற்றை அரசன் அடையப்பெற்றனன் என்பார் ''மாறன் றானுஞ் சிரபுத் தலைவர் தீண்டி...திருநீறு பூசப் பெற்று'' என்றதும் காண்க.

இருவினை ஒப்பு - ''இசைத்த, விருவினை யொப்பி லிறப்பி றவைத்தான், மருவுவனு ஞானத்தை வந்து'' (8 - 1 வெண்பா) என்றவிடத்து ''ஒருவனுக்குப் பந்த முறுத்துதற்கட் பொன்விலங்கும் இருப்பு விலங்கும்போலத் தம்முட் சமமாகச் சொல்லப்பட்ட புண்ணிய பாவங்க ளிரண்டுந், தம்மைப்போலக் கெடுதலில்லாத அத்தவங்களின் பயனாகிய பதமுத்திகளை அநுபவித்து வைகும் ஆண்டே தானே ஞானநெறியைத் தலைப் படுவன. அவை அங்ஙன நேராகாவிடின் மீள நிலத்தின்கண் வந்து பிறந்து **வினை யொப்பு நிகழ்ந்து குரவன் றிருவருள் பெற்று ஞானத்தைத் தலைப்படுவன்** என்க. ''......ஈண்டுக் கூறப்பட்ட இருவேறு புண்ணியங்களுள், **இசைத்துவரு** வினை களெல்லாம் பசுக்களை நோக்கிச் செய்யப்படுதலின் பசு புண்ணிய மெனவும், **இறப்பில் தவங்க** ளெல்லாம் சிவனையே நோக்கிச் செய்யப்படுதலின் சிவபுண்ணியம் எனவும் பெயர் பெறும்...'' இனி, இறப்பிறவத்தால் நிகழும் இருவினையொப்பாவது யாதெனிற் கூறுதும்: சஞ்சிதமாய் ஈட்டப்பட்டுக்கிடந்த இருவினைகளும் பக்குவமுறையானே பயனாய் வரும் வழி, நல்வினையுண் மிக்கதாகிய பரிமேத வேள்விப் புண்ணியமும், தீவினையுண் மிக்கதாகிய பிரமக்கொலைப்பாவமும் ஒருங்கே பக்குவமெய்திப் பயன்படுதற்கண் ஒத்தன வாயின், அவை தம்முள் ஒன்றனொன் றடிக்கப்பட்டுச் ★சுந்தோபசுந்த நியாயமாய்க் கெட்டொழியுமாகலின் அவை அவ்வாறு தம்முள் ஒத்தலே இருவினை யொப்பென்பர் ஒருசாரார். சஞ்சிதமாய்க் கிடந்த புண்ணியங்களும் பாவங்களும் மிகுதி குறைவின்றித் தம்முள் ஒத்தல் இருவினையொப்பென்பர் ஒருசாரார். மிக்க வினையிரண்டுந் தம்முளொத்துக் கெட்டனவாயினும் அவையொழித்தொழிந்த புண்ணிய பாவங்கள் தத்தம் பயனைத் தருதற் கிடையீடின்மையானும், இருவினைகண் முழுதுந் தம்முளொக்கு மாறில்லை; ஒக்குமெனினும் அதுபற்றி ஆணவமலம் நீங்குமாறின்மையான் விஞ்ஞானகலராவாரன்றி முத்தியெய்துதல் கூடாமையானும் இவ்வாறு பௌட்கரத்து ளெடுத்தோதி அவ்விரண்டனையும் மறுத்தலானும், ஈண்டோதிய இருவினையொப்புக்கு அவை பொருளல்லவென்றொழிக''.

''இனி இவ்வாறாக; வேறு பொருள்படுதற் கேலாமையானும், சிவப்பிரகாசத்தில் (பொது -2-30) ''எதிர்வினையு முடிவினை யுதவுபயனு னேராக'' என ஏனை வினைகள் போல ஆகாமிய வினையும் முடிவினையும் (பிராரத்தம்) ஒத்தல்வேண்டுமென்றோதுதலின் அஃதொத்தல் பிறிதோராற்றாற் பெறப்படாமையானும், **மலபரிபாகக் குறி, சத்திநிபாதக் குறி, சிவபுண்ணியக் குறி**களெல்லாம் ஆன்மவறிவின்கண் விளங்குமாறுபோல **இருவினையொப்புக் குறி**யும் தன்னறிவின்கண் விளங்குமாறில்லையாயின் அது முத்திக்கேதுவாதல் கூடாமையானும், **ஒன்றில் விருப்பும் ஒன்றில் வெறுப்புமாதலின்றிப் புண்ணியபாவ மிரண்டினும் அவற்றின் பயன்களினும் ஒப்ப உவர்ப்பு நிகழ்ந்துவிடுவோன தறிவின்கண் அவ்விருவினையும் அவ்வாறொப்ப நிகழ்தலே** ஈண்டு இருவினையொப் பென்றதற்குப் பொருளென நுண்ணுணர்வாற் கண்டுகொள்க.''

★சுந்தோபசுந்த நியாயமாவது; சுந்தன் உபசுந்தன் என்னும் அசுரரிருவரும் திலோத்தமை என்னும் பெண்பொருட்டாக ஒருவரையொருவர் கொன்றதுபோன்ற ஒரு நெறி.

வேறு

2718. **உ**லகியல் வேதநூ லொழுக்க மென்பதும்
நிலவுமெய்ந் நெறிசிவ நெறிய தென்பதும்
கலதிவா **யமணர்காண் கிலார்க ளாயினும்**
பலர்புகழ் **தென்னவ னறியும் பான்மையால்,** 820

''இனி, இருவினைகள் *(1)* பசு நல்வினை - தீவினை என்றுஞ் *(2)* சிவ நல்வினை - தீவினை என்றும் இருவேறு வகைப்படும். எனவே இருவினையொப்பும் அவ்வாறு ''பசு நல்வினை தீவினைகள் தம்மு ளொத்தலாகிய இருவினையொப்பென்றும், *(2)* சிவ நல்வினை தீவினைகள் தம்முளொத்தலாகிய இருவினையொப்பென்றும் இருவேறு வகைப்படுமென்பதூஉம் பெற்றும். சிவநல்வினை தீவினைகள் தம்முளொத்தலாவது சிவ நல்வினையும் தீவினைபோலத் தமது முதலுபகாரத்தை மறந்து பிறவிக்கேதுவாய்ப் பசுபோதம் முனைத்துச் செய்யப்படுவதொன்றெனத் தெளிந்து உவர்த்துவிடுவோனது அறிவின்கண் அவ்வாற்ருெப்ப நிகழ்வது. இவ்விருவகையிருவினையொப்புள், முன்னையது பக்குவத்தா னிகழும் பசுபுண்ணியத்தினும் நிகழ்வனவாயுளவெள மேற்கூறப்பட்ட அபுத்திபூர்வம் புத்திபூர்வமென்னும் பொதுச்சிவபுண்ணியத்தான் உண்டாவதாய், மலபரிபாகத்தைத் தோற்றுவிக்குமுகத்தானே மந்ததரமெனப்படும் முதற்சத்திநிபாதத்தில் நிகழும். பின்னையது, பலதிறப்படுவனவாகிய சத்திநிபாதத்தான்அவ்வாறே நால்வகைப்பட்ட முறையான் நிகழ்ந்து முடிவின்கண் ஞானத்திற் கேதுவாமென்றுணர்க.

''இனி, *(1)* ஞானத்திற்குக் காரணஞ் சரியை முதலியனவென்பதூஉம், *(2)* சரியை முதலியவற்றுக்குக் காரணம் மந்ததர முதலிய சத்திநிபாதமென்பதூஉம், யாண்டும் விளங்கிக் கிடந்தன. இவையெல்லாவற்றிற்கும் *(3)* மூலகாரணமெனப்பட்ட பக்குவமாவது தமக்குரிய சோபானமுறையானன்றி யறியமாட்டாததோ ரியல்புடைய ஆன்மாக்களுக்கு அம்முறையான் நிகழும்**அறியவல்லுதலே**யா மென்பது மேல் ஆண்டாண்டுக் கூறியவாறுபற்றி உணர்ந்துகொள்க. *(4)* அவ்வல்லுதற்குக் காரணங் கேவலக்கிடையினும் நீங்காது **உடனாய் நின்று** நோக்கிவரும் **முதல்வனது கருணைநோக்கத்தின் அடிப்பாடென** அறிக'' *(மாபாடியம் -8-1-பக்)* *819*

2718. **(இ-ள்)** உலகியல்... என்பதும் - உலகாசாரமாகிய நடை வேத நூலின் விதித்த ஒழுக்கமே என்பதனையும்; நிலவும்...நெறியது என்பதும் - அழியாது நிலவுகின்ற வீடுபேறடையும் உண்மைநெறி சிவநெறியேயாகு மென்பதனையும்; கலதி...ஆயினும் - கேடு பெறும் வாய்ப்பினையுடையாராகிய சமணர்கள் அறியமாட்டார்களாயினும்; பலர்புகழ்...பான்மையால் - பலராலும் புகழப்படும் பாண்டியன் அறியும் பான்மையினுலே,

(வி-ரை) உலகியல் வேதநூல் ஒழுக்கம் - வேதநெறி.

மெய்ந்நெறி சிவநெறியே - சைவநெறி; சிவாகமநெறி. **''வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க''** *(1899)*; **''சைவமுதல் வைதிகமுந் தழைத்தோங்க''** *(1920)* என்று இப்புராணத்தொடக்கத்திலும் பிள்ளையார் திருவவதாரத்தினும் குறிப்பித்த

இருபெரும்பொருள்களும் விளக்கமுற்று உலகுய்யவரும் இடம் இந்த ஆதலின் ஈண்டு **இத்திருப்பாசுரக் கருத்தாக** இவற்றை எடுத்துக் காட்டியருளியது ஆசிரியரது தெய்விகக் கவிநலம். **இறைவர் வேதங்களை உலகர்க்காக உணர்த்தியருளினார் எனவும், ஆகமங்களைச் சத்திநிபாதமுடைய பக்குவான்மாக்களுக்காக உணர்த்தியருளினார் எனவும் காண்பர்.**

கலதிவாய் அமணர் காண்கிலார்கள் - அமணர்கள் வைதிகநெறி ஒழுக்கின் வாராதவர்; **அதனால் அதனின் மேம்பட்ட சைவநெறியினும் வாரார்;** ஆதலின் அவற்றின் உண்மைத் திறத்தை உணராத புறச்சமயிகளாவர்; ஆதலின் இந்த இருநெறியினையும் உணர்த்த அருளப்பட்ட இத்திருப்பதிகம் அமணர்களுக்கு அறிவுறுத்துதற்கன்றி, முதல்வனையறியும் தன்மை துன்னிய பக்குவமுடைய தென்னவனை அறிவுறுத்தித் தேற்றுதற்கெழுந்த ஞானோபதேசமாம் என்பது; "மன்ற பாண்டியன் கேட்கக் கிளக்கும் மெய்ஞ்ஞானம்" (இருபா - 2) என்பது ஞானசாத்திரம்; "தென்னவ னறியும் பான்மையால்" என்பதும் காண்க.

அமணர் காண்கிலார்க ளாயினும் - தென்னவன் அறியும் பான்மையால் - வைகைக் கரையில் நின்று இத்திருப்பதிகம் அருளப்பட்டது;நீரில் உடன் ஓடாது நிற்கவல்லது மெய்ப்பொருள் என்று வாதத்தினை முற்பட்ட அமணர்முன்பு அரசனுக்கு மெய்ப்பொரு ளிதுவென்று காட்டி அறிவுறுத்துதற் கெழுந்தது; **அமணர்களும் முன்னின்றனர்; அருளிப்பாட்டினையும் கேட்டனர். ஆனால் பக்குமின்மையின் அவர்கள் அதன் உண்மையினைக் காணும் ஆற்றலிலர்;** ஆதலின் அரசன் அறியும் பான்மையாற் பிள்ளையாரருளினர் என்க. அமணர் தேற்றவும் தேறாத அபக்குவ நிலையுடைய ஈனர்களாதலின் (2742) பிள்ளையார் அவர்களைப் பொருட்படுத்தாது அரசனை அறிவுறுத்தியருளினர்; **பக்குவமில்லாதார்க்கு ஞான முணர்த்தற் பாலதன்று என்றும், உணர்த்தினும் அவர்கள் காணும் ஆற்றலிலர் என்றும்,** வரும் உண்மைகளும் உணர்த்தப்பட்டன.

கலதி - கேடு; **வாய்**; வாய்ப்பினையுடைய. **கலதி** - மூதேவி என்றுரைப்பாரும், கலகஞ் செய்யும் என்றுரைப்பாருமுண்டு; **காண்கிலார்** - காணும் வல்லமையில்லாதார்; அருக்கனேர் நிற்பினு மல்லிருளே காணார்க்கு" (போதம் 11-2) என்றபடி ஞாயிறு முன்னின்று ஒளி செய்யினும் குருடர் காணமாட்டாமைபோல; **கில்** - ஆற்றலுணர்த்தும் இடைச்சொல். தமது கேட்டினைத் தாமே தேடிச் செல்கின்றவாயினையுடைய என்றலுமாம்.

பலர் புகழ் - பலராலும் என்க. முற்றும்மை தொக்கது. **புகழ் - புகழப்படும்.** செயப்பாட்டுவினைவிகுதியும் தொக்கது. "பலர்புகழ் ஞாயிறு" (முருகு); **பலர் - உண்மை அறியும் பான்மையால் - பகர்ந்து** என வரும் பாட்டுடன் கூட்டுக. **பான்மை - பண்பு;** அறியும்படி என்க. **பான்மை** - நியதி - பக்குவம் - ஊழ் என்று கொண்டு அப்பான்மை பொருந்தியமையினாலே என்றலுமாம். *820*

2719. **(இ-ள்)** அலரும்...வள்ளலார் - பூக்கள் மலர்தலால் உளதாகும் மணம் சூழ்ந்த சோலைகளையுடைய சீகாழியில் அவதரித்த சிவஞானம் மலரும் திருவாக்கினையுடைய வள்ளலாராகிய பிள்ளையார்; உள்ளவண்ணம்...உய்ய - உண்மைப் பொருள் நிலையினைப் பலரும் அறிந்து உய்யும்படி ;பகர்ந்து வரைந்து - அருளிச்செய்து எழுதுவித்து; **நிலவுந்** திருவேடு - என்றும் அழியாத மெய்ப்பொருளினை உடைய அத்திருவேட்டினை; யாற்றில்-

வேறு

2719. அலரும் விரைசூழ் பொழிற்காழியு ளாதி ஞானம்
மலருந் திருவாக்குடை வள்ளலா **ருள்ள வண்ணம்**
பலரு முணர்ந்துய்யப் பகர்ந்து வரைந்தி யாற்றில்
நிலவுந் திருவேடு திருக்கையா னீட்டி யிட்டார். 821

வைகையாற்றிலே; திருக்கையால் நீட்டி இட்டார் - தமது திருக்கரத்தினிலே நீட்டி இட்டருளினர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) இப்பாட்டுச் சில பிரதிகளில் ''வெறியார் பொழில்'' என்ற (844 =2742) பாட்டின்கீழ்க் காணப்படுகின்றது; அதுவும் ஓரமைதியுடையதென்று தோன்றுகிறது; சரிதத் தொடர்பும் யாப்புத்தொடர்பும் பிறவும் கருதுக.

ஆதிஞானம் - ஆதியினது ஞானம்; **ஆதி** - சிவன்; ஆறும்வேற்றுமைத் தொகை. ஆதியினுல் அருளப்பெற்ற ஞானம் என மூன்றனுருபும் பயனும் உடன் தொக்கதொகையாகக் கொள்ளலுமாம்; ஆதியாகிய - எல்லா ஞானங்கட்கும் மேலாகிய -ஞானம் எனப் பண்புத்தொகையாக்கி யுரைப்பினு மமையும்.

ஆதிஞானம் மலரும் திருவாக்கு - மலர்தல் - வெளிப்பட்டு விரிதல். **வாக்கு** - வாக்கினின்று வரும் அருளிப்பாடு; ஆகுபெயர்.

அலரும் விரைசூழ் பொழிற்காழி - மலர்களினின்றும் அலரும்போது மணம் விரிந்து எங்கும் பரவுதல்போலப் பிள்ளையாரது வாக்கினின்றும் வெளிப்பட்டுச் சிவஞான மணம் உலகெங்கும் விரிந்து கமழும் என்ற குறிப்புப்படக் கூறிய கவிநயம் காண்க; இதனை இறைச்சிப்பொருள் என்க. ''நாயினே னிருந்து புலம்பினு லிரங்கி நலம்புரி பரமர்தங் கோயில், வாயினே ரரும்பு மணிமுருக் கலரவளரிளஞ் சோலைமாந் தளிர்செந், தீயினே ரரும்பும் பெரும்பற்றப் புலியூர்'' (கருவூர் - திருவிசைப்பா-3) என்புழிப்போலக் காண்க. **பொழில்** - உலகம் என்ற பொருட்குறிப்பும் தருவது காண்க. ''பொழிலேழுந் தாங்கி நின்ற''; ''ஏழ்பொழிலு மேழ்மலையு மாயினுன் காண்'' (தேவா).

வள்ளலார் - பகர்ந்து - வள்ளலாராதலின் எனக் காரணக் குறிப்புப்பட வோதினுர்.

உள்ளவண்ணம் - உள்ளவண்ணத்தை - மெய்ப்பொருள் நிலையினை; இரண்டனுருபு விரிக்க.

பலரும் உணர்ந்துய்ய - ''தென்னவ னறியும் பான்மை'' யால்(2718) பலரும் உணர்ந்துய்ய என்றது, ''மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்'' என்றபடி மன்னவன் வழிநிற்கும் உலகுயிர்கள் அவன் அறிந்த பான்மைகண்டு உணர்ந்து உய்ய. மன்னனொருவனை உய்வித்தால் அவன்வழியேபல்லுயிரும் உய்யும்; அவற்றை வேறு தனித்தனி உய்விக்க வேண்டா என்பது குறிப்பு. **பலரும்** - ''பலர்புகழ் தென்னவன்'' (2718)என்று குறித்த. அவன் வழி யவர்களாகிய

பலரும் என்க. ''அங்கு வைகைக்கரையினின்ற அமணரல்லா தேனையோரும் அவர்வழியாகிய உலகரும் பூதபரம்பரை பொலிய'' (1899).

உய்யப் பகர்ந்து - *பலரும் உய்க என்று திருவுள்ளஞ் சங்கற்பித்து. பாவித்து எடுத்துச் சொல்லி; ஆசாரியனது உபதேசத்தின் முன் அவனது சத்பாவனை இன்றியமையாது வேண்டப்படும். ''திகழும் வாக்கால் பாவனையால் மிருநூலால்'' (சிவப்-8).*

வரைந்து - *வரையச் செய்து; வரைவித்து. பிறவினைவிகுதி தொக்கது. ''வருமறைச்சொற் றிருப்பதிக மெழுதுமன்ப'' ராகிய (2806) சம்பந்த சரணாலயரால் எழுதுவித்து என்க.*

திருஏடு யாற்றில் - இட்டார் - *என்று கூட்டுக.* ***யாற்றில் நிலவும்*** *என்று சொற்கிடக்கை முறைபற்றியே கொண்டு, யாற்றோடு சென்றொழியாது எதிர்சென்று, அன்று முத லின்றளவும் இனிமேலும் என்றும், உயிர்களுக்கு உண்மை காட்டி நிலவும் என்றலுமாம்.*

நீட்டி - *நீளச் செல்லுமாறு பணித்து என்பதும் குறிப்பு. நீளுவித்து என்க.*

இட்டார் - இடுதல் - *சேர்த்துதல்.* ***821***

VIII திருவாலவாய்

திருச்சிற்றம்பலம் **திருப்பாசுரம் - பண் கௌசிகம்**

வாழ்க வந்தணர்; வானவ; ரானினம்;
வீழ்க தண்புனல்; வேந்தனு மோங்குக;
ஆழ்க தீய;தெல் லாமர னாமமே
சூழ்க; வையக முந்துயர் தீர்கவே. (1)

அரிய காட்சிய ராய்த்தம தங்கைசேர்
எரிய; ரேறுகந் தேறுவர்; கண்டமுங்
கரியர்; காடுறை வாழ்க்கைய; ராயினும்
பெரிய; ராரறி வாரவர் பெற்றியே? (2)

வெந்த சாம்பல் விரையெனப் பூசியே
தந்தை யாரொடு தாயிலர்; தம்மையே
சிந்தி யாவெழு வார்வினை தீர்ப்பரால்
எந்தை யாரவ ரெவ்வகை யார்கொலோ? (3)

ஆட்பால ரவர்க்கருளும் வண்ணமு மாதிமாண்பும்
கேட்பான் புகிலளை வில்லை: கிளக்க வேண்டா
கோட்பா லனவும் வினையுங் குறுகாமை யெந்தை
தாட்பால் வணங்கித் தலைநின்றிவை கேட்க தக்கார். (4)

ஏதுக்க ளாலு மெடுத்த மொழியாலு மிக்குச்
சோதிக்க வேண்டா; சுடர்விட்டுள னெங்கள் சோதி;
மாதுக்க நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின்;
சாதுக்கண் மிக்கீ ரிறையே வந்து சார்மின்களே. (5)

ஆடும் மெனவும் மருங்கூற்ற முதைத்து வேதம்
பாடும் மெனவும் **புகழல்லது** பாவ நீங்கக்
கேடும் பிறப்பும் மறுக்கும்மெனக் கேட்டீ ராகில்
நாடுந் திறத்தார்க் **கருளல்லது நாட்ட லாமே?** (6)

கடிசேர்ந்த போது மலரான கைக்கொண்டு நல்ல
படிசேர்ந்த பால்கொண்டங் காட்டிடத் தாதை பண்டு
முடிசேர்ந்த காலையற வெட்டிட முக்கண் மூர்த்தி
யடிசேர்ந்த வண்ண மறிவார்சொலக் கேட்டு மன்றே. (7)

வேத முதல்வன் முதலாக விளங்கி வையம்
ஏதப்படாமை யுலகத்தவ ரேத்தல் செய்யப்
பூத முதல்வன் முதலே முதலாப் பொலிந்த
''சூதன் ஒலிமாலை'' யென்றே கலிக்கோவை சொல்லே! (8)

பாராழி வட்டம் பகையா லலிந்தாட்ட வாடிப்
பேராழி யானதிடர் கண்டருள் செய்தல் பேணி
நீராழி விட்டேறி **நெஞ்சிடங் கொண்ட வர்க்குப்**
போராழி யீந்த புகழும் புகழுற்ற தன்றே. (9)

மாலா யவனும் மறைவல்ல நான்மு கனும்
பாலாய தேவர் பகரில்லமு தூட்டல் பேணிக்
காலாய முந்நீர் கடைந்தார்க் கரிதா யெழுந்த
ஆலால முண்டங் கமரர்க்கருள் செய்த தாமே. (10)

அற்றன்றி யந்தண் **மதுரைத்தொகை யாக்கி** னானும்
தெற்றென்று தெய்வந் தெளியார் கரைக்கோலை தெண்ணீர்ப்
பற்றின்றிப் பாங்கெதிர் விரவும் பண்பு நோக்கிற்
பெற்றொன் றுயர்த்த பெருமான் பெருமானு மன்றே. (11)

நல்லார்கள் சேர்புகலி ஞானசம் பந்த னல்ல
எல்லார்க ளும்பரவு மீசனை யேத்து பாடல்
பல்லார்க ளும்மதிக்கப் பாசுரஞ் சொன்ன பத்தும்
வல்லார்கள் வானொ ருலகாளவும் வல்ல ரன்றே. (12)

திருச்சிற்றம்பலம்

(10) **மறைவல்லவ -**

(11) **பாங்கெதிர்வினூரவும்** - பாங்கெதிர்**வினீரவும்** - என்பனவும் பாடங்கள்.

பதிகக் குறிப்பு :—பக்குவான்மாக்களுக்கு வேதநெறி சைவநெறிகளின் மெய்ப்பொருள் விளக்கமாகிய ஞானோபதேசம் செய்தது *(2618)* என ஆசிரியர் காட்டியருளுதல் காண்க.

குறிப்பு:—இத்திருப்பதிகம் பன்னிரண்டு திருப்பாட்டுக்களைக் கொண்டது; சிவாகமங்களின் ஞானபாத முடிபாய்ச் சிவஞானபோதத்துள் வடித்தெடுத்துக் காட்டப்படும் பன்னிரண்டு சூத்திரங்களின் கருத்துக்களையும் எடுத்துக்காட்டும் சிறப்பினை உடையது; பொது

[''**வாழ்க வந்தணர் வானவர்ஆனினம்**'']

2720. ''**அ**ந்தணர், தேவரா னினங்கள் வாழ்க'' வென்
றிந்தமெய்ம் மொழிப்பய னுலக மின்புறச்
சந்தவேள் விகண்முதற் சங்க ரர்க்குமுன்
வந்தவர்ச் சனைவழி பாடு மன்னவாம்; 822

சிறப்பு என்ற இருதன்மைகளைக் காட்ட முதன் மூன்று பாட்டுக்கள் ஒரு யாப்பும் சந்தமும் ஆகவும், ஏனையவை வேறு யாப்பும் சந்தமுமாகவும் இருபிரிவினதாயமைந்த சிறப்புடையது. ***இவ்வா றிரண்டியலின் அமைந்த திருப்பதிகம் இஃதொன்றேயாம். இவ்வியல்பினை இப்பதிகத்துக்கு மேல் 22 பாட்டுக்களிற் பேருரை செய்தருளிய ஆசிரியர் பெருமானும் இவ்விருவகை யாப்பினா லமைத்தருளுவதும் காண்க.*** *தெய்வத்தன்மையுடைய ஆசிரியர் பெருமானால் விதந்து உள்ளவண்ணம் மெய்ப்பொருண் முடிவு என்று பாராட்டப் பெற்றதோடு பேருரையும் விரித்துரைக்கப் பட்ட சிறப்புடையது. ''**திருப்பாசுரம்**'' என்ற தனிச் சிறப்புப்பெயர் பெற்ற திருப்பதிகம்; **பாசுரஞ்** சொன்ன பத்தும்'' (தேவாரம் -12); ''பாசுரம் பாட லூற்றூர்'' (2716); மெய்ப்பாசுரத்தை'' (2743) பரசமயங்கள் பாறவும் முதல்வனையறியும் தன்மையிற் சிவநெறி விளக்கமுமாகப் பரபக்கம் சுபக்கம் என்ற இருதன்மையில் விளங்குவது.* ***(1) பரசமய நிராகரித்து (2) நீறு ஆக்கும் காதலனைப் பெற (1917) வரங்கிடந்து பெற்ற சிவபாதவிருதயரின் வரம் ஒருங்கே நிறைவேறிய சிறப்பு இத்திருப்பதிகத்துக்குரியது;*** *இப்புராணமுடிபில் ''**எங்களை வாழ முன்னா ளேடு வைகையினி லிட்டார்**'' (3128 = 1230) என்று தமது ஒப்புயர்வற்ற அருளாசி மொழியாலே அன்று போலவே என்றும் உயிர்களை வாழ்விக்கும் சிறப்புடையதென்று ஆசிரியர்பெருமானால் நினைவுகொண்டு பின்னரும் விதந்தெடுத்தோதப்பட்ட சிறப்புடையது. இதனை ''மெய்ஞ்ஞானம்'' என்று போற்றினார் அருணந்தி சிவாசாரியார். இன்னும் இவ்வாறு* ***எண்ணுதற்குமரிய பற்பல சிறப்புக்களை கண்டுகொள்க.***

பதிகப் பாட்டுக் குறிப்பு:—*இத் திருப்பாட்டுக்களைத் தனித் தனி எடுத்துப்பொழிப்புரையும் கருத்துரையுமாக ஆசிரியர் உரைத்தருளிய 22 பாட்டுக்களும் மேல் உரை விரிக்கப்படுமாதலின் ஏனைப் பதிகங்களுக்குப் போல ஈண்டுப் பதிகக் குறிப்புத் தரப்படவில்லை.*

2720. **(இ-ள்)** அந்தணர்...பயன் - அந்தணர்களும் தேவர்களும் ஆனினங்களும் வாழ்க என்று கூறிய இந்த மெய்ம்மொழியின் பயனாவது; உலகம் இன்புற - உலகுயிர்கள் (துன்ப நீங்கி) இன்பமடையும் பொருட்டு; சந்த வேள்விகள் முதல் - சந்தத்துடன் கூடிய மந்திரங்களையுடைய சிவவேள்விகள் முதலாக; சங்கரர்க்கு - சிவபெருமானுக்கு; முன்வந்த...மன்னவாம் - முதன்மையாகச் சொல்லப்பட்ட அருச்சனைகளும் ஏனை வழிபாடுகளும் ஆகிய இவை நிலைபெறுதலாம். ''வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்'' என்ற பாசுரத்தின் முதற்பாட்டின் முதலடிக்கு இப்பாடல் மூலம் விளக்கம் தருகிறார் தெய்வச் சேக்கிழார்.

(வி-ரை) என்று இந்த மெய்ம்மொழி - ''வாழ்க வந்தணர் வானவர் ஆனினம்'' என்ற பதிகத்தின் முதற்பாதம். பதிகம் **மெய்ம்மொழி** எனப்பட்டது.

பயன் - மன்ன ஆம் என்று கூட்டுக. மன்னுதல் மொழியின் பயனும் என்க. மன்னுதல் பயன் என்பது கருத்து. மன்ன - நிலைபெற. மன்னுதல் - நிலைபெறுதல்.

உலகம் - உயிர்கள், இன்பத் துன்பங்களை அடைவன அவையேயாகலான்.

இன்புற - இன்பமடையும் பொருட்டு. **இன்புற - வழிபாடு மன்ன** என்க. உலக மின்புறும்பொருட்டுச் சிவனது வழிபாடு செய்யக்கடவது என்றபடி; **மன்னுதல்** - இடையறாது நிகழ்தல்.

சந்த வேள்விகள் முதல் - அர்ச்சனை - வழிபாடு - என்க. **சந்த வேள்வி** - சந்தசுகளுடன் கூடிய வேதங்களில் விதிக்கப்பட்டனவும், உரியசந்தசுடன் உச்சரிக்கப்படும் மந்திரங்களைக் கொண்டனவுமாகிய வேத வேள்விகள். "வேத வேள்வியை நிந்தனை செய்துழல், ஆத மில்லி யமணொடு தேரரை, வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே" என்று தொடக்கத்தில் இறைவர் திருவுள்ளக் குறிப்பு (அனுக்ஞை) பெற்றமை காண்க. **அர்ச்சனை வழிபாடு** - அர்ச்சனைகளும் ஏனை வழிபாடுகளும். இவை சிவாகமங்களின் விதிக்கப்பட்டன.

அந்தணர் - பரார்த்தமாகிய வேத வேள்விக்குரிய வைதிகர்களும் ஆகம வேள்விக்குரிய சிவ வேதியர்களும் அடங்க **அந்தணர்** என்றார். உலகமின்புற இவ்வேள்விகள் செய்யப்படுதலின் இவர்கள் முனிவர் - அந்தணர் - எனப்பெறுவர்கள். சிவபாதவிருதயர். நமிநந்தியார் - திருநீலநக்கர் முதலியோரும், புகழ்த்துணையார் முதலியோருமாம். "மறை முனிவர் மூழ்குதலும்" *(1958)*, "ஆதி மாமறை விதியினா லாறுசூழ்வேணி, நாத னுரைமுன் னுகவே புரியுநல் வேள்வி, தீது நீங்கநீர் செய்யவுந் திருக்கழு மலத்து, வேத வேதிய ரனைவருஞ் செய்யவும்"(2327); "கற்றாங் கெரியோம்பிக் கலியைவாராமே செற்றார்" (தேவா); "தில்லை யந்தணர்" *(359)* முதலியவற்றின் கருத்துக்கள் காண்க; இக்கருத்தினையே "**அந்தண** ரென்போ ரறவோர்மற் **றெவ்வுயிர்க்குஞ்** செந்தண்மை பூண்டொழுக லான்" (குறள்) என்றருளினார் திருவள்ளுவரும். ஈண்டும் "**உலகமின்புற**" என்றது காண்க. இக்கருத்துக்களை மனங்கொள்ளாது **அந்தணர்** என்பதனை வெறும் இடுகுறியளவான சாதிப் பெயராகக் கொண்டு பேரருள்ஞானப் பிழம்பாகிய பிள்ளையார்பாலும் பிணங்கி அபசாரப்படும் மாக்களும் உண்டு; அஃது அவர்தம் ஊழின் வலி என்க.

சங்கரர்க்கு முன் வந்த - சங்கரர் - சுகத்தைச் செய்பவர் என்பது பொருள். உலகம் இன்புறச் செய்யும் வேள்விக்கும் வழிபாட்டுக்கும் முதல்வராய்க் கருதிய இன்பத்தைச் செய்யவல்லவர் அவரேயாம் என்பார் இப்பெயராற் கூறினார். **முன்** - முதன்மையாக.

வேள்விகள் - சிவவேள்விகள்; சிறு தெய்வங்களைக் குறித்த வேள்விகளல்ல; சங்சரர்க்கு என்ற குறிப்புமிது; இங்கு இவை சமணர்க்கு முடையதென்று கூறும் சமண்சார்பு பற்றி வீழும் உரைகாரருமுண்டு; அஃது அபிமானம்பற்றிய வெற்றுரையென் றொழிக. சமணரை மறுக்கவந்த இவ்விடத்துப் பிள்ளையாரது மூலநூற் கருத்துக்கும் உரை அருளும் ஆசிரியர்பெருமான் கருத்துக்கும் ஒரு சிறிதும் பொருந்தாது தத்தமக்கு வேண்டியவாறே யுரைப்பான்புகும் உரைகாரர்களை இகழ்ந்தொதுக்கு தலேயன்றி வேறு என்னென்று சொல்வது? **சங்கரர்க்கு** முன் வந்த வேள்விகளைச் சமணரும் செய்வர் என்பது இவர் கருத்தோ? என்று விடுக்க.

822

ஆனினங்கள் - சண்டீசர் சரிதம் காண்க.

[**''வீழ்க தண்புனல் : வேந்தனும் ஓங்குக''**]

2721. **வேள்வி** நற்பயன் **''வீழ்புன''** லாவது
நாளு மர்ச்சனை நல்லுறுப் பாதலால்;
ஆளு ''மன்னனை வாழ்த்திய'' தர்ச்சனை
மூளு மற்றிவை காக்கு முறைமையால்; 823

2721. **(இ-ள்)** *வேள்வி...புனலாவது - நல்வேள்விகளின் பயன் மழை தவிராது பெய்தலாம் என்றருளியது; நாளும்...உறுப்பாதலால் - அது நாடோறும் அருச்சனைக்கு நல்ல உறுப்பாதலால்; ஆளும் மன்னனை வாழ்த்திய - உலகாளும் வேந்தனை ஓங்குக என்று வாழ்த்தியது; அர்ச்சனை... முறைமையால் - அர்ச்சனை முதலாக வரும் இவற்றைக் காக்கும் முறைமையினால்;*

(வி-ரை) வேள்விநற்பயன் ''வீழ்புனல்'' ஆவது - *''வீழ்க தண்புனல்'' என்ற பதிகப்பகுதிக் கருத்து வேள்விகளின் நல்ல பயன் மழை - புனல் - வீழ்வது ஆம் என்க. வீழ்புனல் வேள்வி நற்பயனாவது என்று வாழ்த்தியது என்னை? எனின் புனல் நாளும்சிவனது அருச்சனையின் நல்ல அங்கமாதலால் என்க.*

நற்பயன் - *வேள்விப் பயன் பலவாம். அவற்றுள் நல்லபயன் மழை பெய்தல் என்பார்* **நற்**பயன் *என்றார்;* **நல்** - *சிறப்புக்குறித்தது; ஏனைப் பயன்கள் நல்லவல்ல என்பதன்று. சங்கரர்க்குச் செய்யும் வேள்விகளின் பயன் எவையும் நல்லவையே ஆம்; ''தீது நீங்க'' (2327); அவற்றுள்ளே சிறந்த பயன் என்பது.*

நல்லுறுப்பு - நற்பயன் *என்றவாறு ஈண்டும் உறுப்புப் பலவற்றுள்ளும் சிறந்த உறுப்பாம் என்க; ஏனை அங்கங்களாவன - மலர் - புகை - ஒளி -அமுது - முதலாயின.*

புனல் அருச்சனை நல்உறுப்பு - *என்றது சிவனது வழிபாட்டில் நீர் இன்றியமையாச் சிறப்புடையது என்றபடி; ''புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு'' (திருமந்திரம்); ''பூவோடு நீர்சுமக்கும் நின்னடியார்'' (பிள்.தேவா); தூயகாவிரியி னன்னீர் கொண்டிருக் கோதி யாட்டி'' ''இட்டுக் கொள்வன பூவுள நீருள'' (அரசு. தேவா); ''அரிசிற்புனல் கொண்டுவந் தாட்டுகின்றான்'' (நம்பி - தேவா); ''போதும் பெறாவிடிற் பச்சிலையுண்டு புனலுண் டெங்கும்'' (11-ம் திருமுறை - கழுமல மும். கோவை); ''எங்கோமான் றனைவிடுவே னல்லேனென்* **றிராப்பகலும்,** *கொங்கார்பன் மலர்கொண்டு* **குளிர்புனல்கொண் டருச்சிப்பார்**'' *(புகழ்த்துணை -புரா-2); ''சிறப்பொடு பூசனை செல்லாதுவானம், வறக்குமேல் வானோர்க்கு மீண்டு'' (குறள்).*

அருச்சனை - *வழிபாட்டின் (திருவீழிமிழலை வரலாறும் ஏயர்கோனார் வரலாறும் காண்க.) திருமஞ்சனம் - அருக்கியம் - பாத்தியம் முதலியனவாகிய எல்லா அங்கங்களையும் குறிக்கும் பொதுமொழி.*

நாளும் - *சிவவழிபாடு ஒவ்வொரு நாளும் செய்தல்வேண்டும் - ஒவ்வொரு நாளிலும் உரியகாலங்களில் எல்லாம் செய்தல் வேண்டும்.*

வேள்வி நற்பயன் வீழ்புனல் ஆவது - *மழை வேள்விகளின் பயனாகவே வீழ்வது என்ற உண்மை வேத சிவாகமங்களின் கருத்து. ''மண்ணிற் பெருவேள்வி வளர்தீப் புகைநாளும்,*

விண்ணிற் புயல்காட்டும் **வீழிம் மிழலையே**'' (பிள்.தேவா. குறிஞ்சி-5); மங்குரேய் மாடச் சாலை மருங்கிறை யொதுங்கு மஞ்சும், அங்கவை பொழிந்த நீரு மாகுதிப் புகைப்பா னுறும்'' (836) முதலிய திருவாக்குக்களின் கருத்தும் தமிழ்ச்சுவையும் குறிப்பும் காண்க.

வேள்வியின் பயனாய் வருவது புனல் ஆகும்; அஃதே வேள்வியின் அங்கமுமாம் என்ற இரண்டும் குறித்தமை காண்க.

வீழ்க தண்புனல் - ''**வீழ்க**'' என்ற சொல் நன்மை தரும் அருள் ஆசியாய் வந்த சிறப்பு; மழையினைப்பற்றிய சிறப்புரிமையாம்.

ஆளும் மன்னனை வாழ்த்தியது - ''வேந்தனு மோங்குக'' என்ற பதிகத்தின் பகுதியின் கருத்தும் காரணமும் என்னை? எனில் இஃது என்க.

மூளும் - முதலாகத் தொடர்ந்து வரும் - பெருகி வரும்; **இவை** - முன் பாட்டிற் கூறிய வேள்விகள் முதலிய வழிபாடுகளைக் காத்தலால் அவை காரணமாய் நிற்கும் மழையும்.

காக்கும் முறைமையால் - காத்தற் கடமை பூண்டவன் அரசன் என்ற முறைமை குறிக்க; எறிபத்தநாயனர் புராணத்துள்ளும், புகழ்ச்சோழர் புராணத்துள்ளும் வருமாறு புகழ்ச்சோழர் இந்த அரச கடமையை நிறைவேற்றிய வரலாற்றினையும், இடங்கழியார் சரித வரலாற்றினையும் ஈண்டுக் கருதுக; மனுநீதிச் சோழர் சரிதமும் காண்க. இறைவரது வழிபாடு காக்கும் வகையால் மழைபெய்யப்பெற்று உலகங் காத்தல் அரசர் கடன் என்பது ''ஏத நன்னில மீரறு வேலி'' (3) என்றும், ''வையக முற்று மாமழை மறந்து வயலி னீரிலை மாநிலந்தருகோ, முய்யக் கொள்கமற் றெங்களை யென்ன வொளிகொள் வெண்முகிலாய்ப்பரந் தெங்கும், பெய்யு மாமழைப் பெருவெள்ளந்தவிர்த்துப், பெயர்த்தும் பன்னிரு வேலிகொண் டருளும், செய்கை'' (தக்கேசி - திருப்புன்கூர் - 2) என்றும் வரும் ஆளுடையநம்பிகளது திருவாக்கானும், ''இயல்புளிக் கோலோச்சு மன்னவனுட்ட, பெயலும் விளையுளுந் தொக்கு'' என்றும், ''முறை கோடி மன்னவன் செய்யி னுறைகோடி, யொல்லாது வானம் பெயல்'' என்றும் (குறள்) உடன்பாட்டினும் எதிர்மறையினும் வைத்துக்கூறும் பொய்யாமொழியார் கூற்றானும், பிறவாற்றானும் உணரப்படும். ''ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர், காவலன் காவா னெனின்'' (குறள்) என்றதும் இத்திருப்பாட்டின் முற்கூறிய கருத்துக்களை வற்புறுத்தும் ''அந்தணர் நூற்கு மறத்துக்கு மாதியாய், நின்றது மன்னவன் கோல்'', ''தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்,வானம் வழங்காதெனின்'' என்ற திருக்குறட் பாக்களும், பின்னதனை எடுத்து ''நேய புகழ்த் துணையார் நீராட்டுங் கைதளர்ந்துன், றூயமுடி மேல்வீழ்ந்தார் சோமேசா'' என்று மாதவச் சிவஞான முனிவர் தமது சோமேசர் முதுமொழி வெண்பாவிற்காட்டி யருளியமையும் ஈண்டுக் கருதத் தக்கன.

மன்னனை - வேந்தனை - அன்றி இக்காலத்துக் கொள்ளப்படும் நவீன விளைவுகளாகிய குடியரசு - முதலிய முறைகள் நம் ஆன்றோர்க்கு உடன்பாடில்லாதவை என்க. *823*

2722. **(இ-ள்)** ஆழ்க... என்றது - ஆழ்க தீயது என்று ஓதியருளியதன் பொருளாவது வேதாகமங்களுக்குப் புறமாயுள்ள நெறிகள் வலிமையற்றொழிக என்றதாம்; வேறு...என்றது - வேறுக எல்லாம் அரன் நாமமே சூழ்க என்று அருளியது; தொல்லுயிர்...வளர்கவே -

["ஆழ்க தீயது" எல்லாமர ஞமமே சூழ்க"]

2722. **"ஆழ்க தீய"**தென் றோதிற் றயனெறி
வீழ்க வென்றது; வே**"றெல்லா மரன்பெயர்**
சூழ்க" வென்றது தொல்லுயிர் யாவையும்
வாழி யஞ்செழுத் தோதி வளர்கவே. 824

தொன்றுதொட்டு வரும் உயிர்கள் எல்லாம் வாழ்வு தரும் திருவைந்தெழுத்தை ஓதி வளர்க என்னும் பொருட்டாம்.

(வி-ரை) ஆழ்க தீயது என்று ஓதிற்று அயனெறி வீழ்க என்றது - இஃது "ஆழ்க தீயது" என்ற பதிகப் பகுதியின் கருத்தை விளக்கிற்று; **தீயது** - தீமைபயக்கும் அயல் நெறிகளின் தொகுதியை; இவை வேதங்களை உட்படாத புறப்புறம், புறம் என்று வகுக்கப்படும்; இவை திருநீறு அக்கமணி யாகிய சாதனங்களை யுடன்படாமையால் **தீயது** என்றும் **ஆழ்க** என்றும் ஒதுக்கப்பட்டன. இவை இவ்வாறு பலவாயினும் அவற்றால் வரும் தீமை சிவநிந்தை சிவசாதன நிந்தை என்ற ஒன்றேயாதலானும்; இவை எல்லாம் ஒன்றுபோலவே முற்றும் மறுத்தொதுக்கப்படுவனவாதலானும் **தீயது** என ஒருமையாற்சுட்டிக் கூறினார்; இதனை அறிவுறுத்தவே "ஆழ்க தீயது என்றோதிற்று... வேறெல்லாமரன்பெயர் சூழ்க" என்றது எனப் பிரித்துக்காட்டி உரைவகுத்தருளினர் ஆசிரியர். இக்கருத்துக்களை அறியாது இந்நாளில் இத்திருப்பாட்டை ஓதுபவர்கள் "ஆழ்க தீயதெல்லாம்" என்று பிழையாகப் படிக்கின்றனர்; அது தவறு. **தீயது** ஆணவமல விளைவு மறைப்பு.

வேறு - அயனெறி வீழ்க என்ற கருத்துக்கு வேறாக என்க. முன் சொன்னது தீமையைப் போக்குதல்;மேற்சொல்வது அதன்பின் நன்மையை ஆக்குதல். இவையிரண்டும் பாசநீக்கமும் சிவப்பேறுமாக போதம் 10 -11 சூத்திரங்களிற்றனித்தனிக் கூறப்படும் இருவேறு நிலைகள்.

எல்லாம் - எல்லா வுயிர்களும்; சேதனப் பிரபஞ்சம் என்பர்; ஓதி வளர்தற்குரியவை அவையேயாதலின். "உயிர் யாவையும்" என்றது ஆசிரியர் காட்டும் பொருள்.

அரன் பெயர் - சிவனது திருநாமத்தை உட்கொண்ட ஸ்ரீபஞ்சாக்கரம் என்னும் திருவைந்தெழுத்து. "ஆலைப் படுகரும்பின் சாறு போல வண்ணிக்கு மைந்தெழுத்தின் நாமத் தான்காண்", "துஞ்சும்போது நின்னுமத்திருவெழுத்தஞ்சுந் தோன்ற வருளு மையாறரே" (தேவா).

சூழ்க - சூழ்தல் - அழுந்த எண்ணுதல்; "ஓதி வளர்க" என்றது ஆசிரியர் கண்ட பொருள்.

வாழி - வாழிய என்றது வாழி என நின்றது.

உயிர் - வளர்கவே - உயிர் வளர்தலாவது சிவத்தன்மை பெற்றுப் பொலிவடைதல்;கட்டுற்றுச் செத்தும் பிறந்தும் உழலாது கட்டு நீங்கிச் சிவத்தன்மையுள் நிறைவாகி நிலைபெறுதல். **வளர்க** - சூழ்க என்றதன் கருத்து.

வீழ்கவென்று வேறெல்லா மரன் பெயர்—என்பதும் பாடம். 824

[''**வையகமுந்துயர் தீர்கவே**'']

2723. **சொன்ன ''வையக முந்துயர் தீர்கவே''**
என்னு நீர்மை யிகபரத் திற்றுயர்
மன்னி வாழுல கத்தவர் மாற்றிட
முன்னர் **ஞானசம் பந்தர் மொழிந்தனர்.** 825

2723. **(இ-ள்)** சொன்ன... நீர்மை - சொல்லிய வையகமுந் துயர் தீர்கவே என்னும் அருள் ஆசியின் கருத்தாவது; இகபரத்தில்... மாற்றிட - இம்மையிலும் மறுமையிலும் நிலைத்து வாழும் உலகத்தவர்களாகிய உயிர்கள் துன்பநீங்கியிடவாகும்; முன்னர்... ...மொழிந்தனர் - இக்கருத்துக்கள் பட முதலில் திருஞான சம்பந்தர் மொழிந்தருளினர்.

(வி-ரை) ''சொன்ன வையக முந்துயர்தீர்கவே என்னும் நீர்மை'' - ''வையகமுந் துயர் தீர்கவே'' என்று பதிகத்துட் சொன்ன தன்மையின் கருத்து; **சொன்ன-** பதிகத்தினுட் சொல்லிய. **நீர்மை** - கருணைத்தன்மை.

துயர் - இகத்திலும் பரத்திலும் பிறவித் துன்பமேயன்றி நிரதிசய இன்பமில்லாத தன்மை. ''சுழலார் துயர்வெயிற் சுட்டிடும் போது'' (தேவா); இகமும் பரமும் இரண்டும் பிறவியிற் படுதலின் **துயர்** என்றார்.

துயர் மன்னி வாழ் உலகத்தவர் மாற்றிட - பிறவித் துன்பமே பொருந்தி வாழும் உயிர்கள், அதனை மாற்றிப் பிறவாத தன்மையுடைய சிவநெறி யடைந்திடும் பொருட்டு.

மொழிந்தனர் - துயர் தீர்க என்று ஆசி மொழிந்தருளினர்.

இகத்துத் துயர் - பிணி சாக்காடு முதலியவற்றாலும், **பரத்துத் துயர்** - அலகை முதலியவற்றாலும் காணப்படும்.

முன்னர் - தொடக்கத்தில்; ஞானோபதேசமாகிய இவ்வருளிப்பாட்டின் மங்கல வாழ்த்தாகிய இம் முதற்பாட்டில்.

ஞானசம்பந்தர் மொழிந்தனர் - முதற்பாட்டின் உரை முடிந்தமை எழுவாயும் பயனிலையுமாகப் பிள்ளையாரது திருப்பெயருடன் வினைமுற்றுத் தந்து முடித்துக் காட்டினர். இவ்வாறே ஏனைய திருப்பாட்டுக்களினும் கண்டுகொள்க. இப்பதிகம் **ஞானாசிரியராந்** தன்மையில் வரும் உபதேசம் என்று குறிக்க இப்பெயராற் கூறினார்.

திருப்பாசுரம் முதற்றிருப்பாட்டின் தொகைப்பொருள் - ஆசிரியர் காட்டி யருளியவாறு:—இத் திருப்பாசுரமாகிய மெய்ம்மொழிப் பயன் உலகுயிர் யாவையும் துன்ப நீங்கி இன்பவாழ்வடைதலேயாம்; அது சங்கரர்க்குச் சந்த கேள்விகள் முதல் அர்ச்சனை வழிபாடுகள் மன்னுதலாலன்றி நிகழாது;அவை மன்னுதலின் பொருட்டு, அந்தணர்களும் தேவர்களும் ஆனினங்களும் வாழ்க; அவ்வேள்வியர்ச்சனை வழிபாடுகளின் பயனாய் விளைந்து அவற்றிற்குரிய நல்லுறுப்பாகிய மழையும் வீழ்ந்து பெருகுக; அவற்றைக் காக்கும் மன்னவன் ஓங்குக;

அவற்றால் வரும் நலங்களை அடையவொட்டாது கேடுவிளைக்கும் அயனெறிகளின் **தீமை** ஆழ்ந்து அவை தத்தமக்குரிய நிலைகளில் அமைந்தொழிக; உயிர்கள் யாவும் **சிவனுமமோதி** வளர்க; இவ்வாறு உலகுயிர்கள் துயர் நீங்குக என்றதாம்.

தமக்கெனவன்றி உலகமின்புறும்படி வேள்வி அர்ச்சனை வழிபாடுகள் **சங்கரர்க்கு** இயற்றுவோர் **அந்தணர்**களாதலின் அவர்கள் முன்னும், அவ்வழிபாடுகளைச் **சிவனியதிப்படி** ஏற்றுச் செலுத்துவோர் **வானவ**ராதலின் அவர்கள் அதன் பின்னும், வேள்வி வழிபாட்டுக்குரிய சிறந்த கௌவியங்களையும் திருநீற்றினையும் அளித்தலால் **ஆனினம்** அதன் பின்னும், **வேள்வி** வழிபாட்டின் பயனாய் வந்து அவற்றிற்குரிய இன்றியமையாத உறுப்பாகிய நீரினையும் **உலக** சாதனங்களையும் தருதலால் (மழை) **தண்புனல்** அதன் பின்னும், இவ்வெல்லாவற்றையும் காத்தற்கடன் பூணுதலால் **வேந்தன்** அதன் பின்னும், கேட்டில் வீழாமை முதற்கண் வேண்டப்படுதலின **தீயது ஆழ்தல்** அதன் பின்னும், தீமை ஒழிந்தபோது இன்பம் பெறும் சாதனமாகிய **அரன்பெயர் சூழ்தல்** அதன் பின்னும், **துயர்தீர்த**லாகிய பயன் அதன்பின்னும் ஓதப்பட்ட வைப்புமுறை கண்டுகொள்க.

இப்பாட்டுப் பின்வரும் ஞானோபதேசத்துக்கு முதற்கண் வைக்கப்பட்ட மங்கல வாழ்த்து எனக் காண்க. திருக்கயிலாயபதி நேரே குருவாய் எழுந்தருளி ஞானவமுதூட்ட உண்டு எண்ணரிய சிவஞானமுணர்ந்த கயிலாய பரம்பரையில் வந்த முதல்வராகிய பிள்ளையாரே இங்கு ஞானாசாரியர்; வைகைக்கரையே தீட்சாமண்டபம்; பாண்டியனே பக்குவமுற்ற நன்மாணவகர்; உரைத்தறிவுறுத்திய பொருள் மெய்ஞ்ஞானம்; "ஞானத் திரளாய் நின்ற பெருமான் நல்ல அடியார் மேல், ஊனத் திரளை நீக்கு மதுவும் உண்மைப் பொருள்போலும்" (அண்ணாமலை - பிள் - தேவா); "மன்ற, பாண்டியன் கேட்பக் கிளக்குமெய்ஞ் ஞானத்தின்" (இருபாவிருபஃது-2); **"எல்லா மரனாமமே சூழ்க"** என்றதனால் வணக்கமும், **வாழ்க அந்தணர்** என்றதனால் வாழ்த்தும், அரனாமமே என்றதனால் சாதனமும் துயர் தீர்கவே என்றதனாற் பயனும், கூறிய திறமும்; **அரன்** என்றதனால் சங்கார காரணனாகிய முதல்வன் என்ற பதியுண்மையும் இலக்கணமும், **எல்லாம் சூழ்க - வையகமும் துயர் தீர்க** என்றதனால் பசுக்களின் உண்மையும் இலக்கணமும்; **தீயது துயர்** என்றதனால் பாசவுண்மையும் இலக்கணமும் கூறிய திறமும் என்றிவ்வாறு சிவாகம ஞானபாத முடிபுகள் எல்லாம் பொருந்தக் குறிப்பாலுணர்த்தியருளிய வகையினால் பொருளியல்புரைத்தலும் என்று இது மூவகை வாழ்த்தும் ஆதல் கண்டுகொள்க.

எல்லாம் - சூழ்க; வையகமும் துயர் தீர்க - சூழ்க - தீர்க - "கயவொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள், இயலு மிடம்பா லெங்குமென்ப" ஆதலின் மூவிடத்தினும் ஐம்பாலினுஞ் செல்வதாகிய இவ்வியங்கோள் பிள்ளையார் அருளிய அன்று நிகழ்காலத்திலே குறித்த அப்பயன் தந்ததுமன்றிப், பின்னர் எக்காலத்தும் சென்று அவ்வாறே அருட்பயன் தருவனவாம் என்று காட்டும் திறத்தால் ஆசிரியர் பின்னர், "எங்களை வாழ முன்னா ளேடுவை கையினி லிட்டார்" (புரா - 1230) என்று நினைவுகொள்ளக் கூறியருளுதலும் ஈண்டுக் கருதுக; மெய்த்திருவாக்காதலின் என்றும் எங்கும் ஒன்று போலவே பயன்றருமென்க.

இறைவர்பால் உணர்வரிய மெய்ஞ்ஞானம் பெற்ற ஞானாசாரியர் அருளியஞான உபதேசத்துக்கு அவ்விறைவரது "மெய்ம்மொழி" பெற்ற ஆசிரியர் சேக்கிழார் பெருமானும்

அவ்வாறே கயிலாய பரம்பரையில் வந்து உரைவகுத்தருளிய பெருமையும் தெய்வக் குறிப்பும் கண்டுகொள்க. *825*

(2720 - 2723) - இந்நான்கு பாட்டுக்களானும் ஆசிரியர்பெருமான் ''வாழ்க வந்தணர்'' என்ற திருப்பாசுர முதற் றிருப்பாட்டுக்கு உரை வகுத்தருளினர்; திருப்பாசுரப் பாட்டின் அடிகளைத் தனித்தனிப் பிரித்து அவை இன்ன கருத்துடையன என்று விளக்கி இவ்வாறு பிள்ளையார் மொழிந்தனர் என முடித்துக்காட்டியது உரைத் திறம். இவ்வாறு பாட்டுத்தோறும் கண்டுகொள்க. பாட்டின் உரை முடிகின்றநிலை குறிப்பதற்கு ஞானசம்பந்தர் மொழிந்தனர் *(2723)*; வாழ்த்தினர்...சண்பை ஆண்டகை யாரவர் *(2726)*; பூந்தராய்வேந்தர் அருளினர் *(2730)*; என்றனர் சண்பை காவலர் *(2732)*; சண்பை அரசர் அருளினர் *(2736)*; என்றனர் கொள்கை மேலோர் *(2737)*; என்றனர் பிள்ளையார்தாம் *(2738)*; என்றுரை செய்தனர்யாவும் ஓதாதுணர்ந்தார் *(2739)*; என்றனர் வேதவாயர் *(2740)*; வெங்குருவேந்தர் வைத்தார் *(2741)*; என்றனர் ஞானமுண்டார் *(2742)*; சண்பையர் வேந்தர் *(2743)* எனப் பன்னிரண்டு திருப்பாட்டுக்களுக்கும் பாட்டுக்கொன்ருகப் பன்னிரண்டு முடிபுகள் காட்டிப் பிள்ளையாரது திருப்பெயரைப் பன்னிரண்டு வகையாகக் கூறிப் போற்றிய திறமும் கண்டுகொள்க.

புறத்தேயொளிதரும் சூரியர்கள் பன்னிருவராதலின் அக்குறிப்புப்பட அக ஒளிதரும் ஞானசூரியராகிய பிள்ளையாரும் சிவஞான விளக்கம் செய்யும் ஈண்டுப் பன்னிரு வகையாற் போற்றப்பட்டனர் என்க. ★''மாக்கள் சிந்தையுட் சார்ந்து நின்ற, பொங்கிய விருளை யேனைப் புறவிருள் போக்கு கின்ற,செங்கதி ரவன்போ னீக்குந் திருத்தொண்டர்புராணம்(10); திக்கோயில்களினும் திருமடங்களினும் திருவெம்பாவை திருப்பொற்சுண்ணம் என்ற திருவாசகங்களை ஓதி வழிபடுங் காலத்துப் பாட்டுத்தோறும் மணிவாசகப் பெருமானைப் புகை ஒளி அமுதுகாட்டிப் பூசிக்கும் சைவமரபு வழக்கு இக்குறிப்பினைத் தருவது. அம்மரபு வழாமை ஆசிரியர் இங்குக் காட்டியருளிய திறமும் காண்க. ''நகுபா சுரமுத லுரைசெய்தலினு னவிலுரை யாசிரியன், நீடிய பரசமயக் குழி வீழ்ந்தவர் நீப்பப் போதனைசெய் நிலையாற் போத காசிரி யன்னிவை நிகழ்தொறு நிகழ்தோறும், ஆடிய ஞானத் திறனுற லான்ஞா ஞசிரியனு நீ'' (சப் - பரு - 9); ''புவியிற் பத்திசெய் மார்க்க மறிந்தவரார்...விமலாநீ யவதாரஞ் செய்யாவிடி னெனமேய'' (தால்-10) என்று இக்கருத்துக்களைக் காட்டி மகாவித்துவான்மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் சேக்கிழார் பிள்ளைத் தமிழிற் பாராட்டியமை காண்க.

---

*இப்பன்னிரு திருப்பெயர்களையும் ஆசிரியர் போற்றியவாறு தினமும்போற்றி அருச்சிப்பதற்கு எளிதாய் நினைவுகூர்தற் பொருட்டு யாக்கப்பட்ட **பன்னிரு பெயர்த்துதி என்னும் துவாதச நாமார்ச்சனைத் தோத்திரம்:—**

திருஞானசம்பந்த தேவே போற்றி;
அருளுறு சண்பை யாண்டகை போற்றி;
விளங்கிய பூந்தராய்வேந்தே போற்றி;
களங்கமில் சண்பைக் காவல போற்றி;
அரணுறு சண்பை அரசே போற்றி;
விரவிய கொள்கை மேலோய் போற்றி;
பெம்மா னிவனெனும் பிள்ளை போற்றி;
ஓதா துண்மைகளுணர்ந்தாய் போற்றி;
மெய்ம்மை சேர் வேத வாயாய் போற்றி;
வெம்மைதீர் வெங்குரு வேந்தேபோற்றி;
உமையருண் ஞான முண்டாய் போற்றி;
விமலமார் சண்பையர் வேந்த போற்றி;
எனுமுந் நான்கா மித்திருப் பெயர்த்துதி
தனைமன மொன்றி நாடொறுஞ் சாற்று
இம்மையி னின்பநன் கெய்தி (வோர்
மெய்ம்மைவீட்டின் பமுமேவுவர் திடமே.

("(1) அரிய காட்சிய ராய்த்; (2) தம தங்கைசேர் எரியர்;
(3) ஏறுகந் தேறுவர்; (4) கண்டமுங் கரியர். (5) காடுறை வாழ்க்கையர்...")

2724. **"அரிய காட்சிய"** ரென்பதவ் வாதியைத்
"தெரிய லாநிலை யாற்" றெரி யாரென,
உரிய வன்பினிற் காண்பவர்க் **குண்மையாம்**
பெரிய நல்லடை யாளங்கள் பேசினார்; 826

2724. **(இ-ள்)** *அவ்வாதியை "அரிய காட்சியர்" என்பது ஆதி தெரியலா* **நிலையால்** - *முன்பாட்டில் அரன் என்று கூறிய அந்த ஆதியைப் பாசஞான பசு ஞானங்களால்* தெரியப்படாத *நிலைமையுடைமை காரணமாக அரிய காட்சியர் என்று சொல்வது ஆம்;* தெரியார் **என** - *அவ்வாறு பாச பசு ஞானங்களால் தெரியமாட்டாதவர் என்று அறிந்து,* காண்பதற் **உரிய** *அன்பின்றிறத்தாலே காணும் பக்குவமுடைய அடியவர்களுக்கு; உ ண்மையாம்...* பேசினார் - *காண உள்ளனவாகும் நல்ல அடையாளங்களை அதன்மேல் எரியர் - ஏறுவர் -* **கரியர்** *வாழ்க்கையர் என்றிவ்வாறு எடுத்துக் கூறியருளினார்;*

(வி-ரை) *அரிய...என - "அரிய காட்சியராய்" என்ற பதிகப் பகுதியின்* **உரை** *விரித்தவாறு: காட்சிக்குரியர் என்னில் அதுபொரு ளென்னவரும்; "அறிபொரு* **ளசித்தாம்;** *அறியாத தின்றும்" என்றாற்போலக் (போதம் - சூ.6) காட்சிக்குரியராயின் அழிபொருளாம்.* *எவ்வாற்றானும் காட்சிப்படாரெனின் பயனின்றாம். ஆதலின்,* இவ்விருவகையுமன்றி *உள்பொருளாய்ப் பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் பார்ப்பரிதாய்ப் பதிஞான மொன்றானே காணப்படுவதாய் உள்ளது அந்த முதல்வனதியல்பு என்பார்* **காட்சியரியர்** *என்னாது* ***அரியகாட்சியர்*** *என்றார். பாசஞானத்தாற் காணப்படாமை காட்சி நான்கனுள் இந்திரியக் காட்சி,* *மானதக் காட்சி, தன்வேதனைக் காட்சி என்ற மூவகைக் காட்சியினாலறியமாட்டாமையும்,* *"வேத சாத்திர மிருதி புராண கலைஞானம் விரும்பசபை வைகரியா தித்திறங்கண் மேலாம்,* *நாதமுடி வானவெலாம் பாசஞானம்" என்றதனால் வேத முதலிய சாத்திரங்களானும்* *காணப்படாமையுமாம். இந்திரியங்களும் மன முதலியவையும் மாயாகாரியங்களாதலின்* *தமக்குக் கீழ்ப்பட்ட தத்துவப் பொருள்களைக் காட்டுதலன்றி மாயைக்கு அப்பாற்பட்ட* *இறைவனைக் காண்டற்குக் கருவியாகமாட்டா.*

இனி இவ்வாற்றானன்றி, அறிவைத் தடைசெய்து நின்ற மலசத்திகளை இயமநியம முதலிய அட்டாங்க யோக சமாதியான் **ஒருவாறு கெடுத்து** *ஓரிடத் தொரு காலத் திருந்தாங்கிருந்து மூவிடத்து முக்காலத்துப் பொருள்களையும் காண்கின்ற காட்சியாய் உயிரினோ டுணர்வு தெரிவது* **யோகக் காட்சி** *எனப்படும் நான்காவது காட்சியாம்; அதனாற் காண்பமெனின் இதனிலும் ஆன்மபோத முனைப்பு நிற்றலால் இத்தகைய காட்சிக்கும் அரியர் இறைவர் என்க.*

பின் என்னையோ இறைவன் காட்சிப்படும் நிலை? எனின், "ஊனக்கண் பாசமுணராப் பதியை, ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி" (சூ-9) என்ற சிவஞானபோதக் கருத்தினைப் "பாசஞா னத்தாலும் பசுஞா னத்தாலும் பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத்தாலே, நேசமொடும் உள்ளத்தே நாடி" (1), "கண்டசிவன்றனைக்காட்டி யுயிருங் காட்டிக் கண்ணாகிக் கரணங்கள் காணாமல்நிற்பன், கொண்டரனை யுளத்திற்கண் டடிகூடிற் பாசம் கூடாது" (5);

"உளத்தவானின்ற கலப் பாலே சோகமெனப் பாவிக்கத் தோன்றுவன்வே றின்றி" (7); "அருளின் வழிநின், றஞ்செழுத்தை விதிப்படி யுச்சரிக்க மதியருக்க னணையரவம் போற்றுன்று மான்மாவி லரனே" (8) என்பனவாதி திறங்களால் (8-சூத்) விரித்த சிவஞானசித்தியார்த் திருவிருத்தங்களும், "தொடர்வரும் அருளி னுலே தோன்றுமா காணு ராயின் உடையவ னடிசேர்ஞான முணர்தலின் றணேதலின்றே" (79) என்ற சிவப்பிரகாசமும் ஈண்டுக் கருதத்தக்கன.

ஈண்டுத் "திரியக் காண்டல், இரட்டுறக் காண்டல், தெளியக் காண்டல் எனக்காட்சி மூவகைப்படும். அவை மூன்றும் அதிபக்குவமுடையார்க்குக் கேட்டல் மாத்திரையானே ஒருங்கு நிகழும்; ஏனையோர்க்குச் சோபான முறையாற் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் என்னும் மூன்றுனும் முறையே நிகழ்வன ஆகலின் "ஆன்ம தரிசனத்ததைப் பயக்கும் **சிவரூபத்தின்**பின் ஆன்மசுத்தியைப் பயக்கும் **சிவதரிசனம்** ஒருதலையான் வேண்டப்படும்" என்றும், "பசுஞானத்தானும் பாசஞானத்தானும் அறியப்படாத முதல்வனை அம்**முதல்வனது ஞானக்கண்ணுனே** தன்னறிவின் கண்ணே ஆராய்ந்தறிக; அப்**பதிஞானத்தைப்** பெறுமாறு யாங்ஙனமெனின், நிலமுதல் நாதமீறாகிய பாசக்கூட்டம் (காரியப் பிரபஞ்சம்) நின்றுழி நில்லாது பரந்து திரிதற்கண் அதிவேகமுடைய பேய்த்தேரி னியல்பிற்றாய்க் கழிவதென்றறிந்து நீங்கவே, அப் பதிஞானம் பிறவித்துயராகிய வெப்பத்துக்குக் குளிர்ந்த நிழலாய் **வெளிப்பட்டு விளங்கும்**. அங்ஙனம் விளங்கிய ஞானத்தான் **ஞேயத்தைக் கண்ட** காட்சி சலியாமைப் பொருட்டு அப்பொருள் பயக்குந் திருவஞ்செழுத்து அவ்விதிப்படி அறிந்து கணிக்கப்படும்" என்றும் வரும் (9-சூ) மாபாடியமும் கருதுக.

இனி, இக்காட்சி யருமையாதலன்றி எளிமையாதற்கு "ஏகனுகி யிறைபணி நிற்ற"லும் (10) (அரன்) "காண வுள்ளத்தைக் கண்டு காட்டலும்" (11-சூ) வேண்டப்படு மென்பது ஞான சாத்திரம். மேலும் இவ்வியல்பெல்லாம் சிவாகம முதலிய ஞானசாத்திரங்களால் அனுபவமுள்ள தேசிகர்பால் அடுத்துக் கேட்டுணரத் தக்கன.

அவ் ஆதியை - அகரச் சுட்டு. முன்பாட்டில் "அரன்" என்று குறிக்கப்பட்ட அந்த என முன்னறிசுட்டு. **அரன்** - சங்காரகாரணன். அவனே ஆதி என்பது "அந்த மாதி" "சங்கார காரணனுயுள்ள முதலையே முதலாகவுடைத்து இவ்வுலகம்" என்று சிவஞானபோத முதற்சூத்திரத்துள் நாட்டப்பட்டது காண்க.

தெரியலா நிலையால் தெரியார் - தெரியலா நிலை - தெரிவிக்கமாட்டாத நிலைகள். இவை பிரம விட்டுணுக்கள் தெரியப்புக்க பசுபோத முற்பட்ட நிலைகளும், புத்தர், சமணர் முதலிய புறச்சமயத்தோர் காணமுயலு நிலைகளும், அத்தகைய பிறவுமாம். **தெரியார்** - தெரியப்படாதவர் எனச் செயப்பாட்டு வினையாகக் கொள்க.

என - என்று அறிந்தவர்களாகி.

உரிய அன்பினிற் காண்பவர்க்கு - நால்வகையுள் தீவிரதர சத்திநிபாதமும் மலபரிபாகமும் அடைதற்குரிய அன்பு முதிர்ந்து காணும் அடியவர்களுக்கு **அன்பினில்** -அன்பினுலே-அன்பு துணையாக; நான் காண்கின்றேன் என்பதின்றி அவன் காட்டுகின்றுன் என்ற அன்புநிலை காரணமாக; "ஆர்வமுன் பெருக வாரா அன்பினிற் கண்டு கொண்டே" (777) என்ற நிலை; அன்பினுள்ளே அரனை வெளிப்படக் காண்பவர்க்கு என ஏழனுருபாக வைத்து

உரைப்பினுமமையும். "உள்ளத்திற் றெளிகின்ற அன்பின் மெய்ம்மை யு நவினையு மவ்வன்பி னுள்ளே மன்னும், வெள்ளச் செஞ் சடைக் கற்றை நெற்றிச் செங்கண் விமலரையும்" (புரா - 1023).

"நல்லசிவ தன்மத்தால் நல்லசிவ யோகத்தால்
நல்லசிவ ஞானத்தால் **நானழிய** - வல்லதனுல்
ஆரேனு மன்புசெயி னங்கே தலைப்படுங்காண்
ஆரேனுங் காணு அரன்" —(களிறு-15)

என அரிய காட்சியராகிய அரன் காட்சிப்படும் நிலையினை ஞானசாத்திரம் கூறுதல் ஈண்டுச் சிந்திக்கத்தக்கது. "காட்டுவித்தா லாரொருவர் காணு தாரே" (தேவா); "அப்படியு மந்நிறமு மவ்வண்ணமும் அவனருளே கண்ணுகக் காணி னல்லால்" (தேவா); "அவனரு ளாலே யவன்ருள் வணங்கி" (திருவா) என்பனவாதி திருவாக்குக்கள் அக்காட்சி அவன் காட்டினுலன்றிக் காணற் கரிதாந்தன்மையை விளக்குவன. அவன் அவ்வாறு காட்டுதற்கு அன்பும் பக்குவமும் காரணமென்க. இவற்றினியல்புகளை முன் (2717) உரைத்தாம். அவனருளை நாடினர்க்கு அவனருட் சத்தியால் காட்சிப்படுவர் என்க.

உண்மையாம் பெரிய - நல் அடையாளங்கள் - இவை இத்திருப்பாட்டில் மேல் (1) ***அங்கைசேர் எரியர்*** என்றும், (2) ***ஏறுகந் தேறுவர்*** என்றும், (3) ***கண்டமுங் கரியர்*** என்றும், ***காடுறை வாழ்க்கையர்*** என்றும் கூறினவாம்.

உண்மை ஆம் - பெரிய நல் - உண்மை உள்ளன - அழிவில்லாதன என்பது; ***பெரிய*** - தற்பரமாகிய - தமக்குமேற் பரமில்லாத; எல்லாவற்றையும் தமக்குள் அடக்கிய. ***நல்*** - நற்பயன் தரும். இம்மூன் றடைமொழிகளாலும் சத்தாந் தன்மையும், முழுநிறைவாந் தன்மையும், பேரின்பமும் பேரருளும் உடையராந் தன்மையும் குறிக்கப்பட்டன.

அடையாளங்கள் - காட்சிப்படும் குறிகள். அடையாளங்கள் அவயவப் பகுப்புடைமை காட்டுதலால் ஏனையவைபோல முத்தொழிற்பட்டுக் கண்டமாய் அழியும் தன்மை வருமோ? என ஐயுறுமைப் பொருட்டு ***உண்மையாம் - பெரிய நல்*** என்று கூறினுர்.

அரிய காட்சியர் என்றது சிவனது சொரூப நிலையினையும், ***எரியர் - ஏறுவர் - கரியர் - வாழ்க்கையர்*** என்றவை அவருடைய தடத்த வடிவங்களையும் குறிப்பன. பாசஞானங்களுக்கு அரிய காட்சியராயினும், சிவஞானங்களின் காட்சிக்கு இத்திருமேனிகளாகக் காணப்படுவர் என்பதாம்.

அடையாளங்கள் - "பிரமபுர மேவினுர் தம்மை ***அடையாளங்க*** ளுடன்சாற்றி" (1974) என்ற இடத்திற்போலவே ஈண்டும் கூறிய அடையாளங்களின் ஒற்றுமை கண்டு கொள்க. ***ஏறுகந் தேறுவர் - காடுறை வாழ்க்கையர்*** என்பன முறையே ***விடையேறி, காடுடைய சுடலைப்பொடி பூசி*** எனக் கூறப்பட்டன.

அங்கைசேர் எரியர் - என்பது தோடுடைய செவியன் என்பதுபோலச் சிவனது ஓர் அங்கத்தினையும் அதனில் ஏற்ற பொருளினையும் குறிப்பதுவும், "சாற்றியிடு மங்கியிலே சங்காரம்" (உண்மை விளக்கம்) என்றபடி கையில் ஏந்திய எரி சங்காரத்தைக் குறித்தலால் அதன்பின் இறைவர் சத்தியுடன் கூடிநின்று புணருற்பவம் உளதாகும் அருளின் உண்முகமாக

(ஆயினும் பெரியர்)

2725. **''ஆயி னும்பெரி யா''** ரவ ரென்பது
மேய **வில்வியல் பேயன்றி**, விண்முதற்
பாய பூதங்கள் பல்லுயி ரண்டங்கள்
ஏயும் **யாவு மிவர்வடி** வென்றதாம்: 827

நிற்பதனை உணர்த்துதலின் **தோடு உடைய** என்ற கருத்தைக் குறிப்பதுவும், ''முத்தீ மருவாருங் குழலுமைபத் தினிவளர்ப்ப விடக்கரத்து வயங்க வேந்தி'' (பேரூர்ப் புராணம் - கடவுள் வாழ்த்து (2) என்றபடி எரி ஏந்துதல் உலகோம்பு நிலை குறிப்பதுவும் காண்க. **கண்டமுங் கரியர் - மதிசூடி** என்றது போல அமுதவடிவம் குறித்தலும் காண்க.

அரிய காட்சியர் - அடையாளங்கள் - இவை இவ்வாறு பதிவடிவாகிய சொரூப நிட்கள சகள நிலைகளை முன்னர் ஞானம் பெற்று இறைவனைத் தந்தைக்குக் காட்டும் இடத்தும், ஈண்டுப் பதியுண்மையினையும் பதி இலக்கணத்தையும் பாண்டியனுக்கு உபதேசிக்கும் இடத்தும் தொடக்கத்தில் பிள்ளையார் அருளியவாறு கண்டு, ஆசிரியர் சேக்கிழார் பெருமானும் தாமும் ஈண்டு எடுத்துக்காட்டியதன்றி இப் புராணத் தொடக்கத்தில் ''உலகெலாமுணர்ந்தோதற் கரியவன்'' என்றருளியமையும் கண்டுகொள்க. என்னை? ''உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்'' என்றது ''அரிய காட்சியர்'' என்ற சிவனது சொரூப நிலையினையும் - ''நிலவுலாவிய வேணியன் - சோதியன் - ஆடுவான் என்பன - எரியர் - ஏறுவர் - கரியர் - வாழ்க்கையர்'' என்பனவற்றுற் பெற்ற சிவனது தடத்தநிலையினையும் குறித்தவாறும் கண்டுகொள்க.

இனி, ''அகளமா யாரு மறிவரி தப்பொருள், சகளமாய் வந்ததென் றுந்தீபற'' (திருவுந்தி - 1); ''அகர வுயிர்போ லறிவாகி யெங்கு, நிகரிலிறைநிற்கு நிறைந்து'' (திருவருட்பயன் -2); ''அம்மையப்ப ரேயுலகுக் கம்மையப்ப ரென்றறிக'', ''அகளமய மாய்நின்ற வம்பலத்தெங் கூத்தன்'' (களிறு -1 - 4); ''அகர முதல வெழுத்தெல்லாம்'' (குறள்); உருமேனி தரித்துக் கொண்ட தென்றலும்... கருணையின் வடிவு காணே'' (சித்தி-1-54) என்பனவாதியாக வரும் திருவாக்குக்களின் கருத்துக்களும் ஈண்டுச் சிந்திக்கத்தக்கன. ஞான உபதேசமாதலின் அவை போலவே ஈண்டும் அகர முதலாகத் தொடங்கிய மரபுநிலையும் கண்டுகொள்க.

உரிய அன்பினிற் காண்பவர்க்கு - என்றதனால் அன்பும் உரிய பக்குவமுமுடையரே காண்பர் என்பதும், ஏனையோர் காணார் என்பதும் பெறப்பட்டன. ''அமணர் காண்கிலார்க ளாயினும், தென்னவனறியும் பான்மையால்'' (2718) என்றதும் காண்க; முன்னைத் தவநிறைவாகிய அன்பு காரணமாகவே பிள்ளையார் தாமும் கண்டு **பேசினார்** என்பார் அன்புசூழ் சண்பை யாண்டகையார்'' (2726) என மேல் இப்பாட்டின் விரிவுரை முடித்தருளியமை காண்க.

826

2725. **(இ-ள்)** அவர் ''ஆயினும் பெரியார்'' என்பது - அம்முதல்வர் முற்சொன்ன அடையாள நிலைகளை யுடையவராகக் காணப்படுபவராயினும் அக்காட்சியுள்ளே யடங் காத பெருமையுடையவர் என்று சொல்லப்படுமியல்பாவது: மேய இவ் இயல்பேயன்றி - மேற்கொண்டருளிய முன்சொன்ன ''எரிய'' ரா யிருத்தல் முதலாகிய இயல்புகளை யுடைமையே யல்லாமல்; விண்முதல்...என்றதாம் - விண்முதலாகப் பரந்த ஐம்பூதங்களும் பலவுயிர்களும்

அண்டங்களும் இன்னும் உளவாகிய யாவையும் இவர் பெருவடிவில் பொருந்துவன **என்று** கூறியபடியாம்;

(வி-ரை) "ஆயினும் பெரியார்" என்பது - இது திருப்பதிகம் 2-வது திருப்பாட்டில் "ஆயினும் பெரியார்" என்ற சொற்றொடர்ப் பகுதியின் பொருள் விரித்தபடி.

ஆயினும் - அகண்டாகாரசொரூபமா யிருப்பதன்றித் திருவுருக்கொண்டு வித்தையாடுபவன்போலக் கையிலே நெருப்பைத் தூக்குதலும், யானை குதிரை முதலிய **நல்ல** வாகனங்களிலேறாமல் மாட்டிலேறுதலும், சுடுகாட்டிலிருத்தலும், முதலிய **இவை** பரத்துவத்துக்கு இழுக்கன்றோ என ஐயம் நிகழுமாயினும், அடியார்க்கிரங்கிச் சகளீகரித்தலேயன்றி எங்கு நிறைவாகிய அகண்டாகார வடிவுமுடையவர் என்றதாம் **என்பது** இராமநாத செட்டியார் உரைக்குறிப்பு.

ஆயினும் - மேற்கூறியவாறு சொரூபமும் தடத்தமுமாகிய வடிவுகளுடையா ராயினும்.

மேய இவ்வியல்பு - முன்பாட்டிற்கூறிய இந்த என்க.

பெரியார்-அவற்றுள்ளுமடங்காது நீண்டு எங்கும் நிறைவாகியவர். இவ்வாறு ஆன்மாக்களை உய்யக்கொண்டருளும் பொருட்டு முன்கூறிய சொரூப தடத்த **நிலைகளை** மேற்கொண்டருளினும் அவ்வருளினைத் திளைக்கும் அன்பர்களது **கருத்தினுலும்** அளக்கலாகாதபடி நிற்பவர் என்பது **ஆயினும் பெரியார்** என்றதன் குறிப்பாகும். "கடலலைத்தே யாடுதற்குக் கைவந்து நின்றுங், கடலளக்க வாராதாற் போலப் - படியில், அருத்திசெய்த வன்பரைவந் தாண்டதுவு மெல்லாங், கருத்துக்குச் சேயனுய்க் காண்" (களிறு - **90**) **என்ற** ஞானநூற் கருத்து ஈண்டு உய்த்துணர்தற்பாலது.

பாய் - பரந்த; **விண்முதல்** - வான்முதல் நிலமீறாகிய ஐந்து; **விண்முதல்** என்றது தோற்றும் முறைபற்றிக் கூறியது.

விண்முதல் பாய பூதங்கள் ஐந்தும், **பல்லுயிர்** என்னும் உயிர்களும், **அண்டங்கள்**-சூரிய சந்திரர்களாகிய அண்டங்களின் தெய்வங்களிரண்டும் ஆக அட்டமூர்த்தமாய் நின்றநிலை குறித்தது. "நிலனீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப் பகலோன், புலனுய மைந்தனே டெண்வகையாய்ப் புணர்ந்து நின்றுன்" (திருவா). இவ்வாறன்றி **அண்டங்கள்** என்பதற்குச் சகல புவனங்களாகிய அண்டங்கள் என்பாருமுண்டு.

ஏயும் யாவும் - இவைகளேயன்றிப் பொருந்திய மற்று எல்லாப் பொருள்களும்.

இவர் வடிவு - இவரது பெருவடிவினுள் அடங்கி அமைவன; எல்லாவற்றுள்ளும் நிறைந்திருப்பர் என்றலுமாம். **பெருவடிவை** விசுவரூபம் என்பர். முருகப்பெருமான் இந்திரன் முதலிய தேவர்கள் காணக்காட்டும் பொருட்டு ஒருமுறையும் (திருவிளையாட்டுப் படலம்-88-90), சூரன் காணக்காட்டும் பொருட்டு ஒருமுறையும் (சூரன்வதை-422-427) மேற்கொண்டு காட்டியருளிய இப்**பெருவடிவத்**தினியல்பு கந்தபுராணத்தினுள் பேசப்பட்டது காண்க.

(ஆரறிவார் அவர் பெற்றியே)

2726. பின்பு **''மாரறி வாரவர் பெற்றியே''**
யென்ப **தியாருணர் வாலுஞ்சென் றெட்டொணு**
மன்பெ ருந்தன்மை யாரென வாழ்த்தினுர்
அன்பு **சூழ்சண்பை யாண்டகை** யாரவர். 828

''மண்ணளவு பாதலமெ லாஞ்சரண, மாதிரவ ரைப்புமிகு தோள்,
விண்ணளவெ லாமுடிகள், பேரொளியெ லாநயன, மெய்ந்நடுவெ லாம்
பண்ணளவு வேதமணி வா, யுணர்வெ லாஞ்செவிகள், பக்கமயன் மால்
எண்ணளவு சிந்தையுமை, யைந்தொழிலு நல்கியரு ளீச னுயிரே''

—*(கந்தபு - திருவிளை - பட- 89)*; இதனைத் ''தொல்லையொரு தனதுருவம்'' என்பர் (மேற்படி சூரன் வதை - 427); ''இருநிலனுய்த் தீயாகி... ...'' எனும் நின்ற திருத்தாண்டகமும், மறைகளுள்ளே இதயமாகிய திருவுருத்திரமும் இக்கருத்தையே விளக்குவன.

பெரியார் - முன் கூறிய இயல்பின் அடங்காது நீள்பவர். *827*

2726. **(இ-ள்)** பின்பும்... என்பது - மேலும் அவர் பெற்றியே ஆர் அறிவார்? என்று கூறும் தன்மையாவது; யாருணர்வாலும்... தன்மையார் என - யாவருடைய உணர்விஞலும் சென்று எட்டுதற்கியலாத நிலைபெற்ற பெரிய தன்மையினையுடையவர் அவர் என்று; அன்பு... ஆண்டகையாரவர் - அன்பு சூழ்ந்த சண்பை ஆண்டகையாராகிய அப் பிள்ளையார்; வாழ்த்தினுர் - வாழ்த்தியருளினுர்;

இம்மூன்று திருப்பாட்டுக்களானும் ''அரிய காட்சியர்'' என்று தொடங்கும் திருப்பாசுரத்தின் இரண்டாவது திருப்பாட்டுக்குப் பேருரை வகுத்தருளினுர் ஆசிரியர் பெருமான்.

(வி-ரை) ''ஆரறிவா ரவர் பெற்றியே'' என்பது பதிகப் பாட்டுப் பகுதி.

ஆரறிவார் - விஞ; வேறு... ...ஒருவரும்அறியகில்லார் என எதிர்மறை குறித்தது; **பெற்றி** - ''பெற்றி பிறர்க்கரிய பெம்மான்'' (திருவா) என்றபடி முன்கூறியபடி உரிய அன்பினிற் காண்பவர் காணும் சில அடையாளங்களானன்றி அவர் தன்மையை முழுதும் அறியவல்லவர் எவருமிலர் என்பதாம். முன், **அரிய காட்சியர்** என்ருர்; பின்னர் **எரியர்** முதலிய சில அடையாளங்களால் அறியப்படும் நிலை கூறினுர்; அவற்றுளடங்காது நிற்கும் பெருநிலையும் கூறினுர்; இவற்றுள் முடிந்துவிடுமோ அவர்நிலை? என்னில்; அன்று, யாவர்தான் அவர் பெற்றி முழுதும் அளந்தறிய வல்லவர் என விஞவினுல் உறுதிப்பட எவராலும் இயலாது என்று முடித்துக்காட்டியருளினுர். ''இவர் தன்மை யறிவாரார்'' என்று பாட்டுதோறும் வரும் திருப்பல்லவ னீச்சுரப் பதிகம் இங்கு நினைவு கூரத்தக்கது. **பெற்றி** - பெருமை; தன்மை; குணம்.

யார் - யாவர் என்றது யார் எனக் குறைந்து நின்றது.

உணர்வாலும் - சிறப்பும்மை.

சென்று எட்டொணு மன்பெருந் தன்மையார் - *''உலகெலாம் புணர்ந் தோதற் கரியவன்'';* ***மன்பெரும்*** - *ஒருபொருட் பலசொல் மிகுதி குறித்தன. மிகப் பெரிய என்க.* ***மன்*** - *நிலைத்த என்றலுமாம்.*

வாழ்த்தினார் - *இறைவரது தன்மையினை எடுத்துக் கூறும் வகையாய்ப் போற்றியருளினார்.*

அன்புசூழ் - *அன்பின் திறத்தால்இறைவரை இடைவிடாது துணிந்து நினைக்கும்;* ***சூழ்ந்தல்*** - *நினைத்தல். அன்பு* ***சூழ்ந்த****வராதலின் வாழ்த்தினார் எனக் காரணக் குறிப்புப்பட உடம்பொடு புணர்த்தி ஓதினார்.* ***உரிய அன்பினிற் காண்பவர்க்கு*** *என்றபடி அன்பு சூழவுள்ளவராதலின் என்றதும்குறிப்பு.*

ஆண்டகையார் அவர் - *ஆண்டகைமை இறைவரது சிவஞானத்தை முழுதும் பெற்று அதனுள் நிலைபெற்று நிற்கும் வீரத் தன்மை.* ***அவர்*** - *என்ற சுட்டும் அத்தேற்றப் பொருள்பட நின்றது. ''யாவ ராயினு மன்ப ரன்றி யறியொணுமுதல்'' (திருவா. சென்னிப்பத்து).*

ஆரறிவா ரவர்பெற்றி - *தாயுமானர் ''அறிஞருரை''யில் இதனை விதந்தெடுத்தாண்டமை காண்க.*

இம்மூன்று பாட்டுக்களின் தொகைப் பொருளாவது:— அரிய காட்சியர் என்ற இரண்டாம் திருப்பாட்டுப் பதியுண்மையும், பதியிலக்கணமும் வகுத்துக் காட்டிற்று என்பதாம். சொரூப தடத்த இலக்கணங்கள் பேசப்பட்டன. ***''அரிய காட்சியர்''*** *என்று இலக்கணம் கூறியவகையால், உள்பொருளுக்கன்றி இலக்கணம் கூறுதலின்மையால், பதிப்பொருளுண்மையும் உடன் கூறியபடி கண்டுகொள்க.* ***எரியர்*** *என்றது சங்காரத்தைக் குறித்தலின் அதனைச் செய்யும் சங்காரகாரணனுயுள்ள முதல்வனே உலகுக்கு முதல்வன் என்று கூறியதாம். (போதம்-1-சூத்) இனி,* ***''ஏறு உகந்தேறுவர்'', ''கண்டமும் கரியர்''*** *என்றமையால் அவ்விறைவனே திதி கர்த்தாவாதல் குறிக்கப்பட்டது. அளவிலாற்றலையும் பேரருளுடைமையையும்* ***கரியர் - வாழ்க்கையர்*** *என்பவை குறித்தன. ''அவையே தானே யாய்''(போதம் -2-சூத்) என்ற கருத்துப் ''பெரியார்'' என்றதனுற் பெறப்பட்டது.* ***ஈறுய்...****எட்டுத்திசை தானுய்,* ***வேறு*** *யுடனுனன்'' (தேவா.வீழி. பிள்ளையார்); ''ஒன்று நீயலலை யன்றி யொன்றில்லை; யாருனை யறியகிற் பாரே'' (திருவா); ''ஆரறிவா ரந்த வகளமு நிகளமும் ஆரறிவா ரெங்க ளண்ணல் பெருமையை'' (திருமந்திரம்);* ***அரிய காட்சியர்*** *- என்றதனை ''மறையினு லயனுன்... குறைவிலாவளவினுலுங் கூறொணு தாகி நின்ற இறைவனுர்'' என்றும்,* ***எரியர் - ஏறுவர் - கரியர் - வாழ்க்கையர்*** *என்றதனை ''அருளினுலாக மத்தே யறியலாஞ் சிவனை ஞானச் செய்தியாற் சிந்தை யுள்ளே, மருளெலா நீங்கக் கண்டு வாழலாம்'' என்றும் சித்தியாருள் பின்வரும் ஞானுசாரியர் விளக்குதல் காண்க.* ***828***

2727. **(இ-ள்)** வெந்த... என்பது - ''வெந்த சாம்பல் விரைஎனப் பூசியே'' என்று பதிகத்து மூன்றுந் திருப்பாட்டிற் கூறும் முதற்பாதப் பகுதியினில்; தமது...வெந்து அற - தமது அழிவில்லாத நித்தியமாகிய சிவவொளியல்லாத மற்ற ஒளிப்பொருள்களெல்லாம் சிருட்டிக் கிரமத்தில் தோன்றிச் சங்காரக் கிரமத்தில் வெந்து நீருகி ஒழிய; மற்று-வேருகிய; அப்பொடி - அந்தச் சாம்பலை; அணிசாந்தமா... சாற்றினுர் - இறைவர் அழகாகிய சந்தனமாக மேற்கொண்ட வண்ணத்தினையும் எடுத்துக் கூறினுர்.

["வெந்த சாம்பல் விரையெனப் பூசியே"]

2727. **"வெந்த சாம்பல் விரை"** யென் பதுதம
தந்த மில்லொளி யல்லா வொளியெலாம்
வந்து வெந்தற மற்றப் **பொடியணி**
சந்த மாக்கொண்ட வண்ணமுஞ் சாற்றினார். 829

(வி-ரை) *"வெந்த சாம்பல் விரை எனப் பூசியே"* என்பது பதிகப் பகுதி. இதனாற் சிவபெருமான், மாசங்காரத்தினிறுதியில் நீறாய்க் கிடந்த உலகத்தைத் தமது திருமேனியிற் றாங்கிநின்ற தன்மை பேசப்பட்டது. **வெந்த சாம்பல்** - வெந்ததனால் பெற்ற நீறு, ஆறு சென்ற வியர் என்புழிப்போல; **வெந்த** என்பது காரணப் பொருளில் வந்தது.

விரை - கலவைச் சாந்து; "சுண்ணவென் சந்தனச் சாந்து" (தேவா) "சாந்தமுந் திருநீறு" (திருவிசை). சிவதருமம் பல; அவற்றுள்ளே சிறந்தது பூசனையாம்; அப்பூசனையினுட் செய்யப்படும் உபசாரங்களுட் சிறந்தன ஐந்து அங்கங்கள். அவையாவன: அபிடேகம், **விரை**, விளக்கு, அருச்சனை, நிவேதனம் என்பன; அவற்றுள் **விரை**யாவது இலேபனமும் சுகந்தமுமென்று இருவகைப்படும்; அவற்றுள் இலேபனமாவது பனிநீரும் பச்சைக்கர்ப்பூரமுங் குங்குமப்பூவுங் கோரோசனையும் புழுகுங் கத்தூரியுங் கலந்த மலாக்காச் சந்தனத்தைத் திருமேனி முழுவதுஞ் செறிவாகச் சாத்துதலாம்; சுகந்தமாவது முல்லை, இருவாட்சி, பிச்சி(சாதி), மல்லிகை, பனிநீர், மருக்கொழுந்து, வெட்டிவேர் என்னும் ஏழினையுந் தொடுத்துத் திருவுருத் தெரியாவண்ணம் அலங்கரித்தலாம் எனவரும் ஆகம விதிகள் ஈண்டுக் கருதத்தக்கன.

"சிவதருமம் பல; வவற்றுட் சிறந்ததுபூ சனை;யதனுள்
அவமில்பல வுபசாரத் தைந்துசிறந் தனவவற்றைத்
தவமலியப் பதினாறு மண்டலந்தண் டாதியற்றிற்
கவலையறப் பயனிம்மைப் பிறப்பிடையே கைகூடும்" (28)

"ஆங்கவைதா மபிடேக **மரியவிரை** விளக்குமனுத்
தாங்குமருச் சனைநிவே தனமாகும்... ..." (29)

"... ...**விரையிரண்டாந் தளராத விலேபனமுந்**
தயங்குசுகந் **த**முமென்ன" (33)

"காசில்பனி நீர்பச்சை கருப்பூரங் குங்குமப்பூ
மாசறுரோ சனைபுழுகு மான்மதநா வியுங்கலந்த
வாசிகந்த மலாக்காச்சந் தனமிலே பனமதனைத்
தேசவிருந் திருமேனி முழுதுஞ்செறி தரக்கொட்டல்" (34)

எனவரும் பேரூர்ப்புராணம் (மருதவரைப் படலம்) காண்க.

விரை எனப் பூசியே - பூசியே என்பது உபசாரம். ***மாசங்காரத்துள் இறைவரை ஒழித்தொழிந்த எல்லாமும் நீறாக; அந்நீறு தங்குதற்கு வேறு இடமின்மையின் ஆண்டு அழியாது நிற்கும் இறைவர் திருமேனிமேற் கிடத்தலே பூசுதலென் றுபசரித்துக் கூறப்படும்.***

தமது அந்தம் இல் ஒளி - *தமக்கு அழிவில்லாமையால் தமது சிவவொளி* **அந்தமில் ஒளி** *எனப்பட்டது. தாம் எல்லாவற்றுக்கும் அந்தத்தைச் செய்யத் தமக்கு* **அந்தஞ் செய்ய** *வேறொருவருமில்லாதவர். ''அந்தமாதி'' (போதம் - 1)*

அல்லா ஒளி எலாம் வந்து வெந்து அற *ஈண்டு* ***அல்லா ஒளி*** *என்றது சிவனையல்லாத எல்லாப் பொருள்களின் ஒளி.* ***ஒளி*** - *ஒளியுடைப் பொருள் - சக்தி - என்ற பொருளில் வந்தது.* ***வந்து*** - *சிருட்டியின்கண்ணே பட்டுத் தோன்றி.* ***வெந்துஅற*** - *சங்கரிக்கப்பட்டு ஒழிய.*

மற்று அப்பொடி - *மற்ற அந்தச் சாம்பர்;* ***மற்று*** - *தாமல்லாத ஏனையவை.*

அணி சந்தம் - *அணியும் சாந்து;* ***கொண்ட*** - *ஏற்றுக்கொண்ட.*

வண்ணம் - *தன்மை; திருமேனி வண்ணம் என்றலுமாம்.*

தமது அந்தமில் ஒளி அல்லா ஒளி எல்லாம் - வெந்தற - *என்றதனால் இங்குக் கூறியது நிவர்த்திகலை முதலிய பஞ்சகலைகளுட்பட்ட ஐவகைச் சங்காரத்துள் இறுதிக் கண்ணதாகிய மாசங்காரத்தை;* ***அந்தமில் ஒளி*** - *சிவசத்தி;* ***அல்லா ஒளியெல்லாம்*** - *அவ்வச் சங்காரத்துட்பட்டு ஒடுங்கும் தத்துவ புவனங்களின் அதி தெய்வங்களும் அவற்றின் சத்திகளும்; மாசங்காரத்தில் ஐவகைக் கலைகளுள் இறுதிக்கண்ணதாகிய சாந்திய தீத கலையிலடங்கிய தத்துவ புவனங்களும் தெய்வங்களும்எல்லாம்சிவனது அந்தமில் ஒளியினுள் ஒடுங்குவனவாதலின்* ***எல்லாம்*** *என்றதனால் ஈண்டுக் கூறியது சுத்தமாயா புவனுந்தஞ் சங்கரிக்கும்சங்கார காரணனாகிய பரமசிவனை; அயன்மாலொடுங்கூடக் குணதத்துவத்தின் வைகிப் பிரகிருதி புவனுந்தஞ் சங்கரிக்கும் குணிருத்திரனை யன்றென உணர்க;... ...இவ்வேறுபா டுணர்த்தற்கன்றே பொதுப்படச் சங்கார காரணனையென் றொழியாது* ***சங்காரணனையுள்ள முதலையே*** *என விதந்தோதியதும் என்க என்ற சிவஞானபோத முதற்சூத்திர மாபாடிய உரை கருதுக.*

வந்து வெந்தற - *தோற்றப்பட்ட அம்முறையே சங்காரக்கிரமத்தில் ஒடுங்கி.*

பொடியணிதல் - *பொடிசாந்தமாகக் கொள்ளுதல் புனற்பவம் குறித்தது; மறு பயிர்க்குரிய விதைமுதலைக் கோட்டை செய்து சேமித்தல் போல மீளச் சிருட்டித்தற் பொருட்டுத் தாங்குதல் என்க.*

மேல்வரும் பாட்டில் ''அமைத்திங் கியாவையும் அங்கவை வீந்தபோ, திமைத்த சோதி யடக்கிப்பின் னீதலால்'' (2728) என்று இக்கருத்தை விரித்தல் காண்க. ''ஒடுங்கி மலத்துளதாம்'' என்ற சிவஞானபோத முதற் சூத்திரமுங் காண்க; ''வீந்த சுடலை விபூதி தரித்திருவர், கூர்ந்த தலைமாலை கொண்டவரார்'' என்ற இரட்டையர் திருவேகம்ப ரம்மானை இதனைப் போற்றுதல் காண்க; ''அவர்தமை விழியாற்றொல்லை நாளினீ ருக்கியும் புனைந்திடுந் தூயோன்'' என வரும் (ததீசியுத்தரப் படலம் - 13) கந்த புராணமும், ''எலும்புங் கபாலமு மேந்திலனாகில், எலும்புங் கபாலமு மிற்றுமண் ணுமே'' (2-தந்-371) என்ற திருமந்திரமும் காண்க. **829**

2728. **(இ-ள்)** தமக்கு... என்பதும் - மேல் அத்திருப்பாட்டில் இரண்டாம் பாதத்தில் தமக்குத் தந்தையாரொடு தாயிலர் என்பதன் கருத்தும்; இங்கு யாவையும்... அமைத்து - தமதொளியல்லா வொளிப்பொருள்க ளெல்லாவற்றையும் சங்கரித்த பின் தமக்குள்ளே

[''தந்தை யாரொடு தாயிலர்'']

2728. தமக்குத் **''தந்தையர் தாயிலர்''** என்பதும்
அமைத்திங் கியாவையு மாங்கவை வீந்தபோ
திமைத்த சோதி **யடக்கிப்பின் னீதலால்**
எமக்கு நாதர் பிறப்பில ரென்றதாம். 830

ஒடுக்கி;பின் ஈதலால் - பின்னரும் புனருற்பவத்தில் மீளவும் அவற்றை உளவாக்குதலால்; எமக்கு...என்றதாம் - எம் இறைவர் பிறப்பில்லாதவர் என்று கூறியபடியாம்.

(வி-ரை) தமக்குத் தந்தையார் தாயிலர் - ''தந்தையா ரொடு தாயிலர்'' என்ற பதிகப்பாட்டுப் பகுதி. **என்பதும்** - இது முன்சொன்ன கருத்தைத் தொடர்ந்து கொண்டு விரித்தலால் உம்மை இறந்தது தழுவியது.

இங்கு அமைத்து - என்க. இங்கு என்ற சுட்டு தம்மிடத் தொடுங்கியநிலையினின்றும் வருவிக்கும் சிருட்டிநிலை குறித்தது. ''இங்கு மங்கு மென்பதும்'' (திருவா).

யாவையும் - ஐந்து கலைகளினுட்பட்ட எல்லாப் புவனங்களும் புவனாதிபதிகளும். ''ஒளியெலாம்'' என முன்பாட்டிற் கூறியதைத் தொடர்ந்து கொண்டார்.

ஆங்கு - சிருட்டிமுறையில் தோற்றிய அவ்வாறே; **வீந்தபோது** - சங்கரிக்கப் பட்டபோது.

இமைத்த சோதி - வெளிப்பட்டு ஒடுங்கித் தொழிலற்றிருக்கும் சிவசக்தி; சங்காரஞ் செய்த தமது நெற்றிநாட்டத்தொரு சிறுபொறி என்ற குறிப்பும் தருவது.

அடக்கிப் பின் ஈதலால் - ஒடுங்கச்செய்து பின்னரும் புனருற்பவம் செய்வதால். ''ஒடுங்கி மலத்துளதாம்'' (சிவஞானபோதம் - 1 சூ); ''ஒடுங்குதற் கேதுவாய் நின்ற கடவுளினின்றும், சகசமலம் நீங்காமையால், அது நீங்குதற் பொருட்டு மீளத்தோன்றுவதாம்'' என ஆண்டு உலகின்மேல்வைத்துக் கூறியது உலகினைக் கொண்டு பதிப்பொருளுண்மையினை அறிவிக்கும் முறையால் என்க; இங்கு அவ்வாறு ஒடுக்கியும் மீளச் சிருட்டித்தும் இயற்றுபவர் மாசங்காரத்தைச் செய்யும் முதல்வராகிய சிவபெருமான் எனப் பதியுண்மையும் இலக்கணமும் நாட்டியவாறு. ''நீடுமெய்ப் பொருளினுண்மை நிலைபெறுந் தன்மை யெல்லாம், ஏடுற வெழுதி'' (2694) என்று சமணர் ஒட்டினூராதலின் இவ்வாறு மெய்ப்பொருள் கூறியதாம். ''ஒடுங்கிய சங்காரத்தின் அல்லது உற்பத்தியில்லை'' என்று சிவஞானபோதத்துள் விரித்தலும் காண்க.

அடக்குதல் - பிறந்து இளைத்தலால் இளைப்பாற்றும் பொருட்டுத் தம்முள் ஒடுக்குதல்.

பின் ஈதலால் - ''அந்தம் ஆதி'' என்ற முதற்சூத்திரக் கருத்து. ''சங்காரமே முதல்'' என்க.

எமக்கு நாதர் - ஆன்மாக்களாகிய எங்களுக்குத் தலைவர்.

("தம்மையே, சிந்தியா வெழுவார் வினைதீர்ப்பரால்")

2729. **"தம்மை யேசிந்தி யா"**வெனுந் தன்மைதான்
மெய்ம்மை யாகி விளங்கொளி தாமென
விம்மை யே**நினை வார்த்த மிருவினைப்**
பொய்ம்மை **வல்லிருள் போக்குவ** ரென்றதாம். 831

நாதர் பிறப்பிலர் - முன் **அந்தம்** - இறப்பு - இல்லாமை கூறினார்; ஈண்டுப் **பிறப்பு** - ஆதி - யில்லாமை கூறுகின்றார். "சராசரமாகிய எப்பொருளும் தன்னிடத்திற் றோன்றி யொடுங்கத் தானொன்றிற் றோன்றி யொடுங்காது நிற்றலிற் பிறப்பிறப்பிலர் என்றார்." **தந்தை தாய்** - என்பன தோன்றுமிடம் என்ற மாத்திரை குறித்து நின்றன. **830**

2729. **(இ-ள்)** தம்மையே... தன்மைதான் - "தம்மையே சிந்தியா எழுவார் **வினை** தீர்ப்பரால்" என்று கூறும் பதிகப்பாட்டின் பகுதியினது **தன்மையாவது;** மெய்ம்மையாகி...தாமென - **உண்மையாகி** விளங்கும் ஒளி தாமே என்று **கண்டு;** இம்மையே...போக்குவர் என்றதாம் - நினைவார்களது இருவினைகள் தொடர்வதற்குக் காரணமாகிய பொய்ம்மையை விளைத்துநிற்கும் மலவிருளை இம்மையே நீக்குவார் **என்றதாகும்.**

(வி-ரை) தம்மையே சிந்தியா எனும் தன்மை - "தம்மையே சிந்தியா எழுவார் வினைதீர்ப்பரால்" என்ற பதிகப் பாட்டுப் பகுதியினால் போந்த பதியின் இலக்கணமாவது என்க.

தம்மையே - ஏகாரம் பிரிநிலை. "இரண்டுற மனம் வையேல்" (பிள்ளை - தேவா); பொதுநீக்கித் தனைநினைய வல்லார்" (அரசு - தேவா) முதலியவை காண்க.

சிந்தியா எழுவார் - சிந்தியா - சிந்தித்து; சிந்தித்து எழுவார் என்க. "தொழு தெழுவாள்" (குறள்) என்புழிப்போலக் கொள்க; **எழுவார்**-பிறவிக் குழியினின்றும் மேல் **எழுவார்;** ஒடுங்கிக் கிடந்த கேவல நிலையினின்றும் உணர்த்துமுறைமைச் சகத்தில் வருதலே ஈண்டு எழுதல் எனப்பட்டது.

மெய்ம்மையாகி விளங்கொளிதாம் என இம்மையே நினைவார் - சிந்தியா எழுவார் என்ற பதிகத் தொடருக்குச் சிந்திக்கும் ஆறு இஃதென ஆசிரியர் காட்டியவாறு. இறைவரை அழிவில்லாத மெய்ம்மையாகி விளங்கும் பேரொளிப் பிழம்பாக இடையறாது அழுந்தியறிதல் சாதனம் என்க. "அரன் கழல் செலுமே" (8 - சூ) என்ற சிவஞானபோதச் சூத்திரக் கருத்துக்கள் ஈண்டுச் சிந்திக்கத்தக்கன. **சிந்தியா எழுவார்** என்ற தொடர் **சிந்தை நாடி** எனச் சிவஞானபோதத்தினுள் விளக்கப்பட்டதென்க.

மெய்ம்மையாகி விளங்கு ஒளிதாம் - மெய்ம்மை - அழிவில்லாது நித்தமாதல்.

விளங்குதல் - பரஞ்சோதியாயும், சுயஞ்சோதியாயும், அலகில் சோதியாயும் விளங்குதல். "சோதியே சுடரே சூழொளி விளக்கே" (திருவா); தமக்கு மேற்பட்ட சோதி யில்லாதபடி எல்லா ஒளிகளுக்கும் அப்பாற்பட்டு விளங்குதலின் பரஞ்சோதி எனவும், பிறிதொன்றனால் விளக்கமுறுதலன்றித் தானே விளக்கமுறுதலின் சுயஞ்சோதி யெனவும், அளவுபடாதிருத்தலின் அலகில் சோதி எனவும்படும்.

அவ்வாறு அகண்டமாய் நிற்றலால் **சோதியே** என்றும் இறைவரை நோக்கக் கண்டமாகவும் உலகத்து ஏனைய ஒளிகளை நோக்க அகண்டமாகவும் இருக்கும் சூரிய சந்திரர்களை ஒளித்து இயக்குதலின் சுடரே எனவும், கண்டமாகிய ஏனை ஒளிகளுக்குள்ளுமாய் நிற்றலின் சூழ் ஒளி விளக்கே எனவும் அங்ஙனம் கூறப்பட்டது. ''ஒளியா யொளியத ளொளியா யொளியத ளொளியுந் தணிதரு மொளியாகி'' (பேரூர்ப் புராணப் - நிருத்தப் படலம் 63); ''ஒளியி னொளியி லொளி யன்'' (நெஞ்சு விடு தூது 32).

இருவினைப் பொய்ம்மை வல்லிருள் - நல்வினை தீவினையாகிய வலிய இருள் என்றலுமாம்; இருவினையாகிய பொய்ம்மையும் வலிய ஆணவமாகிய இருளும் என்றும் உரைக்க நின்றது; ''இருள்சே ரிருவினையும் சேரா விறைவன், பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு'' (குறள்) என்ற கருத்துக் காண்க; இறைவன் பொருள் சேர் புகழ் புரிதலே ஈண்டு ''மெய்ம்மை யாகி விளங்கொளி தாமென, இம்மையே நினைவார்'' எனப்பட்டது; **பொய்ம்மை**யாவது நிலையாகவுள்ளதுபோலக் காணப்பட்டுச் சடுதியில் மறைந்துபோதல், அது காரியப்பிரபஞ்சத்தின் தன்மை. ''பொய்ம்மாயப் பெருங்கடல்'' என்பது இதுவே.

போக்குதல் - தியான உறைப்பினாலே இருவினை ஒப்பும் மலபரிபாகமும் வரச் செய்து பக்குவப்படுத்தி மலத்துன்பத்தினின்றும் நீக்குதல்; வலிகெடச் செய்தல். ''அவையே தானே **யாயிருவினையிற்**, போக்கு வரவு புரிய **ஆணையின்**, நீக்க மின்றி நிற்குமன்றே'' (2-சூத்) என்றதனால் விளக்கப்பட்ட பாசவுண்மையும் இயல்பும் சாதனமும் ஈண்டுக் கூறப்பட்டமை காண்க.

இருள் - இருள் மலம் எனப்படும் ஆணவம்; ''ஞானத்தின் கண்ணை மறைத்த கடியதொழி லாணவம்'' (போற்றிப் பஃறொடை 18-19) என்றது காண்க. **வல் இருள்** - வலிமையாவது ஏனைப் பொருள்களையும் மறைத்து, அவ்வாறு மறைக்கும் தானொரு பொருளுண்டென்பதனையும் அறியவொட்டாது தன்னையும் மறைத்துச் சகசமாய் உடன் நிற்றல். ஒருபொருளுங் காட்டா திருளுருவங் காட்டும், இருபொருளுங் காட்டா திது'' (திருவருட் பயன் 23).

பொய்ம்மை - பொருளல்லவற்றைப் பொருளெனக் கொள்ளும் மருள்.

இருவினை - இருள் - கன்மம், ஆணவம் என்ற இரண்டையுமே கூறினார். மும்மலங்களுள் **மாயை**யாவது - ''விடிவா மளவும் விளக்கனைய மாயை, வடிவாதி கன்மத்து வந்து'' (திருவருட் பயன் 30); ''கட்புலனாற் காணார்தங் கைக்கொடுத்த கோலேபோற், பொற்புடைய மாயைப் புணர்ப்பின்கண்-முற்பாற், றனுகரண மும்புவன முந்தந்து'' (**முற்பால்** - முதலுற்பவம் - மாபாடியம் - பக். 113) என்பனவாதியாக வருவனவற்றால் மயக்கத்தை நீக்க இறைவன்தரும் உபகாரமாதலும், மலம் என்றுபசரித்துப் பேசப்படுமென்பதும் அறிக. ''வினைப்போக மேயொரு தேகங்கண் டாய்வினை தானொழிந்தாற், றினைப்போ தளவுநில் லாது'' என்றபடி இருவினைப் பொய்ம்மை வல்லிருள் போக்கவே அதன்பொருட்டுத் தரப்பட்ட மாயைப் புணர்ப்பும் உடனொழியுமாதலின் அதனை வேறு எடுத்துக் கூறாராயினர்.

தம்மையே என்றதனால் ஒன்றேபதி எனப்பட்ட தனிப்பொருளாகிய பதி யுண்மையும் இலக்கணமும், **எழுவார்** - என்றதனால் அனேகமாகிய பசுக்களினிருப்பும் இலக்கணமும்,

[''எந்தை யாரவ ரெவ்வகை யார்கொலோ'']

2730. **''எந்தை யாரவ ரெவ்வகை யார்கொ''**லென்
றிந்த வாய்மைமற் றெப்பொருட் கூற்றினும்
முந்தை யோரையெக் கூற்றின் மொழிவதென்
றந்தண் **பூந்தராய் வேந்த** ரருளினர். 832

வினை - வல்இருள் - என்றதனால் பாசவுண்மையும் இலக்கணமும் பேசப்பட்டமை **காண்க.**

மெய்ம்மையாகி விளங்கொளி தாமெனச் சிந்தியா எழுவார் - என்றதனாற் சாதனமும், பொய்ம்மை வல்லிருள் போக்குவர் என்றதனால் பாசநீக்கமாகிய பயனும் குறிக்கப் பட்டமையும் கண்டுகொள்க. இங்ஙனம் சிவஞானபோதத்துட் கூறப்படும் இயல்பெல்லாம் உபதேசிக்கப்பட்டமையும் காண்க. ***831***

2730. **(இ-ள்)** எந்தையாரவர்...வாய்மை - ''எந்தையாரவ ரெவ்வகை யார் கொலோ'' என்ற பதிகப் பாட்டின்இறுதியடியிற் கூறிய உண்மையாவது;மற்று எப்பொருள்...மொழிவது என்று - வேறு எந்தப் பொருளைப் பற்றிய சொற்பகுதிகளினுள்ளும் **அநாதி முத்த சித்துருவராகிய சிவபெருமானையே எவ்வகை மொழிகளாலும் சொல்லப்படாது என்று;** அந்தண்...அருளினர் - அழகிய குளிர்ந்த பூந்தராய்த்தலைவராகிய பிள்ளையார் அருளிச்**செய்தனர்.**

2727 முதல் *2730* வரை இந்நான்கு திருப்பாட்டுக்களானும் ''வெந்த சாம்பல்'' **என்ற** மூன்றாவது திருப்பாட்டின் உரையினை விரித்தருளினர்.

(வி-ரை) எந்தையாரவர்...வாய்மை - ''எந்தை யாரவ ரெவ்வகை யார்கொலோ'' **என்ற** தேவாரப் பகுதியிற் கூறிய மெய்ப்பொருளாவது என்று விரித்துக் காட்டியபடி.

மற்று எப்பொருட் கூற்றினும் - இறைவரை யொழித்தொழிந்த வேறு எல்லாப் பொருளும் அவற்றைக் குறிக்கும் சொற்களினும். ''உரையின் வரையும் பொருளின் அளவுமென், றிருவகைப் பட்ட எல்லை'' *(11-ம் திருமுறை-கோயினான் மணிமாலை);* **மற்று**-வேறு; இறைவரின் வேறாகிய.

எந்தையாரவர் எவ்வகையார் கொலோ - ''ஒன்றலா வொன்றால்'' *(போதம் 1 - சூ. 3 - அதி)* என்ற வெண்பாவின் கீழ் மாபாடியத்தினுள், ''இலக்கணத்தால் வேறுபாடில்வழி இலக்கியம் பலவாதல் செல்லாதென்னும் கருத்தான் **ஒன்றலாவொன்று** என வரையறுத் தோதினர். **ஒன்றலா** என்பது உருவும் அருவுமாகிய இருகூற்றுப் (சேதனப்) பிரபஞ்சத்துள் ஒன்றல்லாத என்றவாறு. ஒன்றென்பது இலக்கணத்தான் வேறுபாடில்லது என்னும் பொருட்டு. 'எந்தை யாரவ ரெவ்வகை யார்கொலோ' என்றது மது'' என்று மாதவச் சிவஞான முனிவர் உரைவகுத்தது ஈண்டுக் கருதத் தக்கது. ஆண்டு உரு அரு என்றது தூல சூக்கும உடல் உடைய என்னும் பொருளில் வந்தது.

முந்தையோரை - எல்லாவற்றுக்கு முன்னாகியவரை; **எந்தை** என்ற மொழிப் பொருள் முன்னவர் - எல்லாவற்றையும் தம்முள் அடக்கிப் பின் ஈபவர் என விரித்தபடி. எந்தைதா

னின்ன னென்று மின்னதா மின்னதாகி, வந்திடா னென்றுஞ் சொல்ல வழக்கொடு மாற்ற மின்றே'' (சித்தியார் -1 - 44) என்றவிடத்து, அருவம் உருவம் அருவுருவ மென்னும் முக்கூற்றுள் இன்னனுவனென்று தான் அம் முக்கூற்றும்படும் விருத்தி பரிணுமம் விவர்த்தனமென்பவற்றுள் ஒன்றிற்படுவன் படாவென்றுதான் கூறுதற்கோ ராசங்கையு மில்லை; ஆசங்கை யின்மையில் அதற்கு மறுமொழியாகிய பரிகாரமுமில்லை என்றும், அநாதிமுத்த சித்துருவாகிய எந்தைக்கு தோற்றக்கேடுகளின்மையானும், அவையின்மையின் அளவைகட்கு வரம்புபடாமையானும், அவன் முக்கூற்று ளொருகூற்றினும் வைத்து மொழியப்படா னென்பார் ''எந்தைதான்...இன்னனென்று சொல்ல வழக்கொடு மாற்ற மின்றே'' என்றும், கட்டுவீடுக ளிலனுகலின் எவ்வாறுமா மென்பார், 'பந்தமும் வீடு மாய பதபதார்த் தங்க ளெல்லா மின்னதா மின்ன தாகி வந்திடா னென்றுஞ் சொல்ல வழக்கொடு மாற்றமின்றே' என்றுங், கூறினுர். ''எந்தை யாரவ ரெவ்வகை யார்கொலோ'' என்றருளிச் செய்த பாசுரமுமிது, என்றும்'' உரைவகுத்தமையும் காண்க.

எக்கூற்றின் மொழிவது - வினு எதிர்மறைப்பொருளில் வந்தது; ''எங்ஙனங் கூறுகேன்'' என்புழிப்போலக் கொள்க.

இனி, **எக்கூற்றின்** - எவ்வகைக் கூற்றினும் - சொல்லினும் - என்க. முற்றும்மை தொக்கது; **கூற்று** - சொல்; **எப்பொருட் கூற்றினும்** - சித்து - அசித்து ஆகிய எப்பொருளைக் குறிக்கும் சொல்லானும்; எப்பொருளைக் குறித்துக் கூறினும் அஃது எந்தையாரை மொழிவதாம் என்றுரைப்பாருமுண்டு. அஃதாமாறு; இந்திரன் மால் பிரமன் முதலிய தெய்வங்களைக் கூறினும் ''யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகி யாங்கே, மாதொரு பாக ஞர்தாம் வருவர்'' என்றபடி உண்ணின்று இயக்கும் தன்மையால் என்க. இனி இவ்வாறு எல்லாவற்றுள்ளும் நிறைந்து இயங்கும் முதன்மையானன்றி அங்காங்கி பாவத்தால் எல்லாம் தனக்குள் கூறுகளா யடங்கிநிற்கும் தன்மையாலுமாம் என்க. இத்தன்மையில் **கூற்றின்** என்பது-**கூறு**-பகுதி; பகுதியாகிய தன்மையால் என்று கொள்க. கூறுகளை மொழியும்போது அவற்றைத் தன் கூருக உடையவனே மொழியப்படுகின்றுன் என்பதாம்.

வெந்த சாம்பல் என்ற மூன்றும் பாசுரப் பொருள் விரித்த இந்நான்கு திருப் பாட்டுக்களின் தொகைப்பொருளாவது; மாசங்கார காரணனுகவும் சங்காரத்தில் தான் அழியாது நின்று எல்லாவற்றையும் தன்னுள் ஒடுக்கிப் பின் மீள வுதிப்பிக்கு முன்னவனுகவும், தன்னை நினைப்பார்தம் வினைப்பொய்ம்மையும் இருளும் போக்கு பவனுகவும் உள்ளவன் எம் முதல்வன்; அவனே எல்லாவற்றுள்ளும் நிறைந்து இயக்கும் தலைவன்; சராசரங்கள் யாவும் அவனது ஒரு கூற்றினுள் அடங்கும் என்பதாம்.

பூந்தராய் வேந்தர் அருளினுர் - என்பது மூன்ருவது பாசுரத்தின் பொருள் விரித்தமை நிறைவு எனக் காட்டியபடி. *832*

2731. **(இ-ள்)** ஆதி...நவிலுங்கால் - ஆளாகும் பான்மையுடைய அடியவர்களுக்கு முதல்வர் அருளுகின்ற திறங்களையும், நாதருடைய மாண்பினையும் கேட்கலாயின் அதற்கு விடை சொல்லும்போது; ஓதும் எல்லை...ஆதலின் சொல்லும் நிலைகள் அளவுபடாது விரிவனவாம்;

[ஆட்பாலவர்க் கருளும் வண்ணமும் ஆதி மாண்பும்
கேட்பான் புகிலளவ வில்லை கிளக்க வேண்டா'']

2731. ஆதி **''யாட்பா லவர்க்கரு ளுந்திறம்''**
நாதன் மாட்சிமை கேட்க நவிலுங்கால்
ஓது மெல்லை யுலப்பில வாதலின்
யாது மாராய்ச்சி யில்லையா மென்றதாம். 833

ஆதலின், யாதும்...என்றதாம் - எவ்வகையாலும் ஆராய்ச்சி செய்யும் தன்மை இல்லை **என்று** *அருளியபடியாம்;*

(வி-ரை) ஆதி - முதல்வன்; **ஆதி...இல்லையாம்** - என்றது ''ஆட் பா லவர்க் **கருளும்** வண்ணமு மாதி மாண்பும், கேட்பான் புகிலளவ வில்லை; கிளக்க வேண்டா'' என்ற **பாசுரப்** பகுதியின் கருத்தும் உரையும் விரித்தவாறு.

ஆட்பாலவர் - ஆளாகும் பான்மையுட் பட்டவர். **பால்** - பான்மை; பண்பு; **''உய்யுநெறி,** யெய்துவதோர் காலந்தன் னன்பரைக்கண் டின்புறுதல் உய்யுநெறி சிறிதே **யுண்டாக்கி''** (போற்றிப் பஃறொடை 100-102) என்றும், ''என்னைத்; தன்னடி யானென் றுணர்தலுந், **தன்னை** நானும் பிரானென் றறிந்ததே'' (தேவா) என்றும் வருவனவாதி திருவாக்குக்களா லுணரப்பட்டு நின்றபடி ஆளாந் தன்மைபெறும் பான்மை - அருள் - பக்குவம் - பெற்றவர்கள்.

அருளும் திறம் - நாதன் மாட்சிமை - திறமும் - மாட்சிமையும் என எண்ணும்மை விரிக்க. ''வண்ணமும் மாண்பும்'' (தேவா); **அருளும் திறம்** - ''அருளும் வண்ணம்'' **(பதிகம்); ஆதி** - முதல்வர்; **ஆதி மாண்பு** - ஆதியினது மாட்சிமை; ''நாதன் மாட்சிமை'' **(தேவா); அருளும் வண்ணம்** -''என்றுநீ யன்றுநான்'' என்றும்''அருளுடைய பரமென்றே **வன்றுதானே** யானுளன்'' என்றும் வருவனபோல, பசுவும் பதியும் உள்ள நாளே ஆதியாக, **அருளும்** தொடங்கியுள்ள பண்பு.

அருளும் திறம் - தன்மை; வண்ணம். அருளும் வண்ணமே அவனது மாட்சிமை - மாண்பு - என்பது.

கேட்க - நவிலுங்கால் - ''கேட்பான் புகில்'' அதற்கு விடை சொல்லும் போது. முதல்வனருட்சார்பின்றி ஒருவர் கேட்கவும் ஒருவர் தம்மியல்பால் விடை கூறவும் புகுந்தால்.

ஓதும் எல்லை உலப்பில - சொல்கின்ற அளவு சொல்லளவின் அடங்கி முடிவு பெறுது நீள்வன; **உலத்தல்** - முடிவு பெறுதல்.

யாதும் ஆராய்ச்சி யில்லையாம் - ஏதும் அத்தன்மையை ஆராய்ச்சி செய்தற்கிடையில்லை; ஆராய்ச்சி செய்தல் வேண்டா.

இவ்வுண்மைத் தன்மை ''மன்றபாண்டியன் கேட்பக் கிளக்கு மெய்ஞ்ஞானத்தின், ஆட்பா லவர்க்கென் பதையறியே'' என்று எடுத்துப் பேசப்பட்ட பெருமையுடையது. ஆன்மபோத உணர்ச்சிகொண்டு ஆராய்ச்சிசெய்யும் நவீன உலக மாக்கள் இதனை அறிந்து கடைப்பிடிப்பது நலந்தரும்.

**[''கோட்பா லனவும் வினையுங் குறுகாமை யெந்தை தாட்பால்
வணங்கித் தலைநின்றிவை கேட்க தக்கார்'']**

2732. அன்ன வாதலி ''ஞதியார் தாளடைந்
தின்ன கேட்கவே யேற்றகோட் பாலவும்
முன்னை வல்வினை யும்முடி வெய்துமத்
தன்மை யார்க்'' **கென்ற னர்சண்பை காவலர்.** 834

இனி உயிர்கள் ஒருமலத்தார், இருமலத்தார், மும்மலத்தார் என மூவகைப்படுவர்; இவர் முறையே **விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர்** எனப்படுவர். **விஞ்ஞான கலர்**க்குத் தன்மையில் உண்ணின்றுணர்த்துவர். **பிரளயாகலர்**க்கு முன்னிலையில் வந்து மான் மழு நாற்றோள் நீலகண்டம் முதலிய உருவங் காட்டி அருள் புரிவர். இவையிரண்டுந் தமது வடிவேயன்றிப் பிறிதொரு வடிவம் ஆதாரமாக நின்று செய்யாமையான் **நிராதார**மெனப்படும்; விஞ்ஞானகலர்க்கு ''மெய்ஞ்ஞானம் தானே விளையும்'' (உண்ணின் றுறுத்தருளி) எனவும், பிரளயாகலர்க்கு முன்கூறிய உறுப்புக்களுடன் கூடிய முத்தொழில் நடத்தும் தனதியற்கை வடிவே குரு வடிவாகக் காட்டி முன்னின்று உபதேசமுகத்தான் உணர்த்துவர். இது பற்றியே ஆளுடைய பிள்ளையாருக்குப் **பிரளயாகலர்க்குப்போல** உணர்த்தியருளினர் என்பர்; **சகலர்க்கு** முன் கூறிய தமது இயற்கை வடிவை யொழித்துப் பிறிதொரு மானுட வடிவ மாதாரமாக நின்று அவர் வடிவம்போலும் குரு வடிவாகிய மானுடப் போர்வையின் மறைந்து நின்று உபதேச முகத்தான் உணர்த்தி யாட்கொண்டருளுவர். ஆதலின் இது **சாதார**மெனப்படும். இனிச் சகலருள்ளும் இவ்வாறு ஆட்கொள்ளத் தாங்கும் குருவடிவம்அவ்வவர் தன்மைக் கேற்பப் பலதிறப்படும் என்பதை இப்புராணத்தினுள்ளும் ஞானசாத்திரத்துள்ளும் வைத்துக் கண்டுகொள்க. ''மெய்ஞ்ஞானந் தானே விளையும்விஞ் ஞானா கலர்க், கஞ்ஞான வச்சகலர்க் கக்குருவாய்- மெய்ஞ்ஞானம், பின்னுணர்த்து மன்றிப் பிரள யாகலருக்கு, முன்னுணர்த்துந் தான்குருவாய் முன்'' (போதம்-8-2) முதலியவை காண்க. இப்பாட்டு இக்கருத்துக்களை உட்கொண்டு விளங்க நிற்றலும் காண்க. எல்லா உயிர்கட்கும் ஒன்றுபோலவே அருளாமை காரணமாகப் பிணங்கும் மாக்கள் இவ்வுண்மை உணர்வாராக. *833*

2732. **(இ-ள்)** அன்ன ஆதலின் - உண்மைநிலை முன்பாட்டிற் கூறியவாறுதலின்; ஆதியார் தாள் அடைந்து - முதல்வருடைய திருத்தாள்களை அடைந்து; இன்ன கேட்கவே - இவ்வுண்மைகளைக் கேட்கலாயின்; அத்தன்மையார்க்கு - அத்தன்மை பெற்ற அடியார்க்கு; ஏற்றகோட் பாலவும்...முடிவெய்தும் - ஏற்ற மலமும் வாதனையும் ஆகிய பீடைகளும் பழைய வலிய வினைகளும் முடிவுபெறும்; என்றனர் சண்பை காவலர் - என்று சண்பை காவலராகிய பிள்ளையார் அருளிச் செய்தனர்.

இவ்விரண்டு பாட்டுக்களானும் ''ஆட்பாலவர்க்கு'' என்ற நான்காவது திருப் பாசுரத்திற்கு உரை விரித்தருளினர் ஆசிரியர்.

(வி-ரை) இத்திருப்பாட்டுக் ''கோட்பா லனவும் வினையுங் குறுகாமை யெந்தை, தாட்பால் வணங்கித் தலைநின்றிவை கேட்க தக்கார்'' என்ற பதிகப்பகுதியை விளக்கிக் கருத்துரைத்தது.

அன்ன ஆதலின் - அன்ன - அகரவீற்றுப் பலவறிசொல். உண்மை நிலைகளாகிய வண்ணமும் மாட்சிமையுமாகிய அவைகள் அத்தன்மையை உடையன. அகரம் முன் சொன்ன அந்த என முன்னறி சுட்டு. வண்ணமும் மாட்சிமையும் என்றிவை முன்பாட்டிலிருந்து வருவித்துக்கொள்க.

ஆதியார் தாள் அடைந்து இன்ன கேட்கவே - தாள் அடைந்து கேட்டலாவது திருவடி ஞானத்தால் உணரலுறுதல்; அதனியல்பாவது: —"ஐயா! வழியடியோம் வாழ்ந்தோங் காண்;... ...மடந்தை மணவாளா! நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின் உய்வார்க ளுய்யும் வகையெல்லாமுய்ந் தொழிந்தோம்; எய்யாமற் காப்பாயெமை" (திருவா.திருவெம்பாவை) என்றவாறு இறைவரது திருவருளை வழுத்தி நின்று "முதல்வரே! அடியேன் அறிவில்லாதேன்; தேவரீரது அருளினால் அடியேனை ஆட்கொண்டருளும் வகையினையும் அடைந்துய்யும் நெறியினையும் உணர வருளிச் செய்யும்" என்று கேட்கவே என்க; அடியார்களைப் பாடுக என்று திருவாரூர்ப் பெருமான் ஆளுடைய நம்பிகளை ஆணையிட்டருளியபோது, "இன்னவா றின்னபண்பென் றேத்துகே னதற்கி யானார்?; பன்னுபா மாலைபாடும் பரிசெனக் கருள்செய்யென்ன", அதற்கு, இறைவர் "அல்லறீர்ந் துலகுய்ய மறையளித்த திருவாக்கால், தில்லைவா ழந்தணர்தம் மடியார்க்கு மடியேனென், றெல்லையில்வண் புகழாரை யெடுத்திசைப்பா மொழி" யென்றார்(344 - 345) என்றும்; அவ்வாறே திருத்தொண்டர் புராணத்தைப் பாடியருளும்படி அநபாயச் சோழர் கேட்க அதற் குடன்பட்டுச் சென்ற ஆசிரியர் சேக்கிழார் பெருமான், தில்லையம்பலவாணர் திருமுன்பு பணிந்து கைத்தல முச்சிவைத் துளமுருகி நைந்துநின்று "அடிகளே! உனதடியர்சீ ரடியனே னுரைத்திட வடியெடுத் திடர் கெடத் தருவாயெனத் திருவருளை யெண்ணி யிறைஞ்சிக்" கேட்கவே, "திருவருளி னலசரீரிவாக் குலகெலா மெனவடி யெடுத் துரைசெய்த பேரொலி யிலகுசீ ரடியார் செவிப்புலத் தெங்குமாகி நிறைந்ததால்" (திருத்தொண்டர் புராண வரலாறு-20-21) என்றும் வரும் வரலாறுகள் இங்குச் சிந்திக்கத் தக்கன; அவ்வாறு கேட்கவே "ஆட்பா லவர்க் கருளும் வண்ணமும் (அருளிய) ஆதி மாண்பும்" நம்பிகளும் ஆசிரியர் பெருமானும் உணரப்பெற்றருளினர் என்ற உண்மைகளும் காண்க; இவற்றுக்கு அகச்சான்றாக "ஆரூர ஞரூரி லம்மானுக்காளே", "அன்னவனு மாரூர னடிமைகேட் டுவப்பார்" என்றும், "வெருளின் மெய்ம்மொழி வானிழல்கூறிய பொருள்" என்றும் வரும் திருவாக்குக்களும் இக்கருத்தை ஆசரிக்கை மரபில் வலியுறுத்தி விளக்குதல் காண்க.

இன்ன - ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் ஆதிமாண்புமாகிய இவை; அகர வீற்றுப் பலவறிசொல். **இகரம்** - அணிமைச்சுட்டு.

அன்ன - இன்ன - தாளடையாது தன்முனைப்பின் ஆராய்ச்சியால் வினவினார்க்கும் விடையிறுப்பார்க்கும் சொல் அளவுபடாது சேய்மைப்படுதல் குறிக்க **அன்ன** என்று சேய்மைச்சுட்டாற் கூறிய ஆசிரியர், அவ்வாறன்றித்தாளடைந்து கேட்கவே கோட்பாலனவும் வினையுங் குறுகாது முடிவெய்துதலின் இவை உணர்தல் அணியவாதல் குறிக்க அணிமைச்சுட்டாற் கூறிய தெய்வக் கவிநலமும் காண்க.

கேட்கவே - ஏகாரம் பிரிநிலை; முன்னர்க் **கேட்க** என்று (2731) வாளாகூறிய ஆசிரியர் ஈண்டுக் கேட்கவே என்றருளிய கருத்துமது, பதிகத்தினும் "கேட்பான் புகில்.. கிளக்க

[''ஏதுக்க ளாலு மெடுத்தமொழி யாலுமிக்குச் சோதிக்க வேண்டா'']

2733. மன்னு **''மேதுக்க ளா''**லெனும் வாய்மைதான்
தன்ன தொப்புவே றின்மையிற் சங்கரன்
இன்ன தன்மையை யேது வெடுத்துக்காட்
டன்ன வாற்ரு லளப்பில னென்றதாம். 835

வேண்டா'' என்றும், ''கேட்க தக்கார்'' என்றும் அருளியதன் பொருள் இவ்வாறு ஆசிரியர் காட்டியருளக் கண்டுகொள்க.

ஏற்ற கோட்பாலவும் முன்னை வல்வினையும் முடிவெய்தும் - ஏற்ற கோட்பால ஏற்ற - சகசமாய்ப் பொருந்திய; **கோட்பால - பால** - அகரவீற்றுப் பலவறிசொல். **கோள்**- பற்றிக்கொள்ளுதல். அநாதியே செம்பிற் களிம்புபோலச் சகசமாய் உயிர்களைப் பற்றிநிற்கும் மூல ஆணவமலமும் அதன் எச்சமாய்ப் பின்னிற்கும் வாசனைமலமும் என்க. **முன்னை வல்வினை** - பண்டைப் பழவினை;மூலகன்மம்; ''இருவினைப் பொய்ம்மை வல்லிருள் போக்குவர்'' (2729) என்றவிடத்துரைத்தவை பார்க்க. முன்னர்க் கூறியது சாதனவகையும், ஈண்டுக் கூறியது மூலமல வாதனையும் மூலகன்மமும் ஆகிய இவை ''முடிவெய்தி''ப் பற்றற வொழியும் பயன்வகையுமாதலின் கூறியது கூறலன்மையுணர்க.

ஆதியார் தாளடைந்து இன்ன கேட்க - என்றது திருவடி ஞானங் கைகாட்ட அதனுள் அடங்கிநின் றுணர்வதாகிய **நிட்டைகூடல்** என்னும் நான்காவது ஞான நிலை என்க.

ஏற்ற கோட்பால - முன்னை வல்வினை - இவற்றுக்கு, முன் கூறியவாறன்றி, (தொன்றுதொட்டனவாய்த் தம்மைவந் தடையும்) விரும்பத்தக்க நல்வினையும், பழமையான தீவினையும் என்றுரைத்தனர் முன்னுரைகாரர்கள்; அவை பொருந்தாமையறிக. **கோட்பால** என்பதற்குக் குற்றப்பகுதிகள் என்பது இராமநாதச் செட்டியார் குறிப்புரை; **கோட்பாலவும்**-கிரகங்களின்பாற் பட்டு விளையும் தோஷங்களும் என்றும், ஆண்டவன் தாளடைந்து கோளாலும் வினையாலும் விளையும் கெடுதல்கள் குறுகி இடர்ப்படுத்தாதவாறு முறையிடவேண்டுவது உயிர்களின் கடமை என்றபடி என்றுரைப்பாருமுண்டு; இவை ஈண்டைக் கேலாமையறிந்து கொள்க.

அத்தன்மையார்க்கு - கேட்கவே அவ்வாறு தாளடைந்து கேட்கும் தன்மை யார்க்கு.

இவ்விரண்டு பாட்டுகளின் தொகைப் பொருளாவது இறைவர் தம்மை அடைந்தவர்க்கருளும் திறங்கள் எல்லையில்லன; ஆதலின் அவை ஆராய்ச்சி செய்தற்குரியனவல்ல; அற்ருகவே அவர் திருவடிகளில் அடைவுகொண்டு கேட்க. அவ்வாறு கேட்பார்க்கு கோட்பாலனவும் முன்னை வல்வினையும் முடிவெய்தும் என்பதாம்.

சண்பை - சீகாழியின் ஒன்பதாவது பெயர். 834

2733. **(இ-ள்)** மன்னும் ''ஏதுக்களால்'' எனும் வாய்மைதான் - நிலைபெற்ற ஏதுக்களாலும் எடுத்தமொழி யாலுமிக்குச் சோதிக்க வேண்டா'' என்று அருளிய உண்மையாவது;தன்னது ஒப்புவேறு இன்மையின் - தனக்கு உதாரணமாகக் காட்டக்கூடிய பொருள் வேறொன்று

மில்லாமயால்; சங்கரன் இன்ன தன்மையை - சங்கரன் தனது முன்கூறிய வண்ணமு **மாண்பும்** உடைய தன்மையினை; ஏது எடுத்துக்காட்டு...அளப்பிலன் என்றதாம் - ஏதுக்களினாலும் நிறுத்தும் உதாரணங்களாலும் அவை போன்ற பிற அளவைகளாலும் அளக்கப்படாதவன் என்றருளியபடியாம்.

(வி-ரை) ஏதுக்களால் - எனும் - ''ஏதுக்களாலு மெடுத்தமொழி யாலுமிக்குச் சோதிக்க வேண்டா'' என்ற பகுதி; **வாய்மை** - அதனாற் குறிக்கப்படும் உண்மை. **வாய்மை - என்றதாம்** - என்று கூட்டுக.

தன்னது ஒப்பு வேறின்மையில் - தன்னது - தனக்கு. **அது** - ஆறனுருபு நான்கனுருபின் பொருளில் வந்த உருபுமயக்கம்; **ஒப்பு இன்மையின் - இன்** ஏதுப்பொருளில் **வந்தது.** ''தனக்குவமை இல்லாதான்'' (குறள்); ''ஒருவமனில்லி'' (தேவா); ''பெருமைக்கு நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றி, னருமைக்கு மொப்பின்மை யான்'' (**திருவருட்பயன் 2)** என்பனவாதி திருவாக்குக்கள் காண்க.

இன்மையின் - அளப்பிலன் - என்று கூட்டுக.

சங்கரன் இன்ன தன்மையை - அளப்பிலன் என்க. **சங்கரன்** - இன்பஞ் செய்பவன். ''இன்பஞ் செய்தலிற் சங்கர னெம்பிரான், இன்ப மாக்கலிற் சம்பு'' (காஞ்சிப் புரா); ''ஆட்பா லவர்க்கருளும் வண்ணமும் - மாண்பும்'' உயிர்களுக்கு இன்பஞ் செய்தற் பொருட்டேயாம் என்று குறிக்க இப்பெயராற் கூறினர்; இக்கருத்தை மேல்வரும் பாட்டிற் றொடர்ந்து கூறி விரித்தல் காண்க. **இன்ன தன்மை** - வண்ணமும் மாண்பும்; பண்பு ஒன்றாகலின் ஒருமையாற் கூறினர். முன்னரும் ''இன்ன கேட்க'' என்றது காண்க.

தன்மையை - தன்மையைப் பற்றி.

ஏது - எடுத்துக்காட்டு - அன்ன ஆற்றால் - எடுத்துக்காட்டு - கருதலளவையால் அறிதற்குரிய ஐந்து அங்கங்களுள் இவை இன்றியமையாதன; இவை கூறப்படவே ஏனையவும் அடங்கும். **எடுத்துக்காட்டு** - உதாரணம், பதிகத்தினுள் **''எடுத்த மொழி''** என்பதுமிது; உதாரணம் கூறுதற்கு ஒப்பாம் பொருள் வேறின்மையால் திருட்டாந்தம் என்ற அங்கம் குறைவுபடும்; படவே அவ்வளவையால் அளப்பு இலன் என்றபடி.

அன்ன ஆற்றால் - கருதலளவையின்பாற்பட்ட வகைகளெல்லாமும் கொள்க. சிவஞானசித்தியார் - அளவை - என்ற பகுதியில் இவை விரிக்கப்பட்டன. தருக்க நூலினுள்ளும் காண்க; உரையளவையான் அறிதல்பற்றிப் பதிகத்தின் ஏழாவது திருப்பாட்டினுள்ளும் அதன் விரிவுரையாகிய 2738-ம்பாட்டினும் கூறுதல் காண்க. காட்சியளவையா லளப்பின்மை பற்றி இரண்டாவது பாசுரத்தினும் அதன் விரியாகிய **2724-2726** பாட்டுக்களினும் கூறியமை காண்க.

அளப்பிலன் - அளப்பு - அளவுபடும் தன்மை. இது ''மிக்குச் சோதிக்க வேண்டா'' என்ற பதிகப் பகுதியிற் கூறியருளிய ஆணையாகிய முடிபுக்குக் காரணங் காட்டிய வகையாற் பொருள் விரித்தவாறு.

835

["சுடர்விட்டுள னெங்கள் சோதி"]

2734. **தோன்று** காட்சி **"சுடர்விட் டுள"**னென்ப
தான்ற வங்கிப் புறத்தொளி யாயன்பில்
ஊன்ற வுள்ளெழுஞ் சோதியாய் நின்றனன்;
ஏன்று காண்பார்க் கிதுபொரு ளென்றதாம். 836

2734. **(இ-ள்)** தோன்று...என்பது - "தோன்று காட்சி சுடர்விட்டுளன்" என்பதன் பொருளாவது; ஆன்ற வங்கிப் புறத்தொளியாய் - அமைந்த அக்கினியிற் புறவொளியாய்க் காணப்பட்டு; அன்பில்...நின்றனன் - அன்பின் உறைப்பினாலே அதனுள் அழுந்திக் காண உள்ளே எழுகின்ற சோதியாய் நின்றனன்; ஏன்று...என்றதாம் - அவன் ஒளிவழியே பொருந்திநின்று காண்பவர்களுக்கு இஃதே பொருள் என்று கூறியருளியபடியாம்.

(வி-ரை) தோன்று காட்சி - காட்சியிற் றோன்றும் என்க. "அரிய காட்சியர்" (2724) என்றும், "மெய்ம்மையாகி விளங்கொளி தாமென" (2729) என்றும் கூறியவாற்றாற் காட்சியில் பேரொளியாய்த் தோன்றுதல் பெறப்பட்டமையால் ஈண்டுச் "சுடர்விட்டுளன் எங்கள்சோதி" என்ற பதிகப்பகுதியில் அச்சோதியின் தன்மையும் அதுகாட்சியிற் றோன்றுமாறும் கூறப்பட்டன; ஆதலின் கூறியது கூறலன்மை கண்டுகொள்க.

சுடர்விட்டு உளன் - விடுதல் - தன்உள் அடங்கிவிடாது வெளியில் விரிந்து தோன்றுதல்.

என்பது - என்பதனுட்பட்ட பொருளாவது.

ஆன்ற அங்கிப் புறத்தொளியாய் - அன்பில் ஊன்ற உள்ளெழுஞ் சோதியாய் - புறத்தொளியாயும் உள்எழும் சோதியாயும் என உம்மை விரிக்க; **அங்கிப் புறத்தொளியாய்** - அங்கியின் கண்ணேபற்றி அதனை ஒளிதரச் செய்யும் ஒளிப்பொருளாய்; **அங்கி** - அக்கினி; நெருப்பு; ஐம்பூதங்களுள் ஒன்றாகவைத்து எண்ணப்படுவது. **அங்கி** என்றதனுள் சூரியனையும் சந்திரனையும் ஏனைப் புறவொளிப் பொருள்கள் எல்லாவற்றையும் அடக்கிக் கொள்க. என்னை? புறஒளி யெல்லாம் தீயின் கூறாவனவாதலின். அங்கியின் ஒளித்தன்மை பெற்ற அங்கிப் புறத்தொளிகள் எல்லாம் கொள்ளப்படுமென்க; புறவிருளும் அகவிருளும் என இருள் உலகில் இரண்டாதற்கேற்ப அவற்றைப் போக்கும் ஒளிகளும் இரண்டாவன; "இவ்வுலகத்து முன்னாட் டங்கிரு ளிரண்டின்" (பாயிரம்); "ஒருபொருளுங் காட்டா திருளுருவங், காட்டும், இருபொருளுங் காட்டா திது" என்பன காண்க. ஆனால் இவ்வொளிகள் தொகையால் இரண்டாயினும் வகையால் ஒன்றே என்பார் **"அங்கிப் புறத்தொளியாய் - உள்ளெழுஞ் சோதியாய்"** என்றார்; அங்கிப் புறத்தொளியாய் நின்றவன் இறைவனே என்பது "நீறாகி நீறுமிழு **நெருப்பு**மாகி"; "இருநிலனாய்த் தீயாகி நீருமாகி" என்பனவாதி திருவாக்குக்களால் அறியப்படும்; ஆனால் அவ்வாறு புறத்தொளியாய் நிற்குநிலையில் கண்டிதமாய், ஏகதேச விளக்கமுடையதாய், மிகுதல் குறைத லுடையதாய், ஒன்றனைப்பற்றி விளங்குவதாய்க் கண்ணாகிய புற இந்திரியத்தாற் காணப்படுவதாய் உள்ளதாம்; அவ்வொளியின் வெளித் தோற்றத்தினுள் அதனை ஒளிதரச் செய்யும் முதல்வன் மறைந்து அடங்கி நிற்பன். மற்றை **உள்ளொளி**யோ எனில் கண்ணாற் காணப்படாது எண்ணெய் - விறகு முதலிய பற்றுக்கோடு

வேண்டாது அன்பினில் மனத்துள் ஊன்றிக் காணக்காண்பது; புறவொளிபோல வேறுஒன்றனைப் பற்ருது தானே ஒளிதருவது; ஒன்றனுள் அடங்கிவிடாது தானே மேலே எழுவது; குறைவுபடாதது; அந் நிலையிற் புறத்துக்காணுது இருந்து உள் எழுவது என்றிவ்வாறு ஒற்றுமையும் வேற்றுமையும் உடன் காட்டுவார் **அங்கிப் புறத்தொளியாய்** என்றும், **அன்பினில் ஊன்ற உள்ளெழுஞ் சோதியாய்** என்றும் அடைமொழிகளால் விளக்கிக் கூறினர்.

நின்றனன் - முன் கூறியவாறு வெளிப்படும் நிலையின் வேறுபாடுகளே யன்றிப் பொருள் நிலைமையில் ஒன்றும் மாறுபாடின்று என்பதாம்.

ஆன்ற அங்கி - ஒன்றனைப் பற்றிப் பொருந்திநின்றே வெளிப்படும் தீ; **ஆன்ற** பொருந்திய.

ஏன்று காண்பார்க்கு - இவ்வாறு பகுத்து உணர்ந்து அறியப்பெறுவார்களுக்கு; **ஏன்று காண்பார்க் கிதுபொருள்** என்றமையால் அவ்வாறு காணுத ஏனையோர்க்கு இப்பொருள் காண இயலாதென்பதும் பெறப்படும். **ஏன்று காண்பார் - ஏலுதல்** - பொருந்துதல்; திருவருள் வயப்படுதல் என்க.

இது பொருள் - இது பொருளாம்; **பொருள்** - பெயர்ப் பயனிலே.

அன்பில் ஊன்ற - எழும் - அன்பு நிலைக்களமாக அழுந்தியறிய வெளிப்படும். ''உறவு கோனட் டுணர்வு கயிற்றினல், முறுக வாங்கிக் கடையமுன்னிற்குமே'' (தேவா) என்ற நிலே.

முன் கருதலளவையான் அளப்பிலன் ஆயினும் இவ்வாறு காண்பார்க்குக் காட்சியளவைக்குள் நின்று தோன்றுவன் என்றவாறு; ''மறையினு லயனுன் மாலான் மனத்தினுன் வாக்கான் மற்றுங் குறைவிலா வளவி னுலுங் கூறெரெணு தாகி நின்ற, இறைவனுர் கமல பாதம்'' (சித்தியார் - பாயிரம் -5) என்ற அருணந்தி சிவாசாரியார், அருளினு லாக மத்தே யறியலா **மளவினுலுந் தெருளலாஞ்** சிவனை **ஞானச் செய்தியாற் சிந்தை யுள்ளே, மருளெலா நீங்கக் கண்டு வாழலாம்**'' என்றருளிய கருத்தும் **இது**; ''முகத்துக் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள், அகத்துக் கண்கொண்டு பார்ப்பதே யானந்தம்'' (திருமந்திரம் 2944); ''கழல் மனத்துக், கொண்ட கருத்தி னகநோக்குங் குறிப்பே யன்றிப் புறநோக்குங், கண்ட வுணர்வு துறந்தார்போல்'' (தண்டியடிகள் புராணம் 1) முதலிய திருவாக்குக்களின் கருத்தும், ''அலகில் சோதியன்'' என்று முதற் பாட்டில் விளக்கமாய்க் காட்டியருளிய கருத்தும் காண்க. **உள் எழும் சோதி** - அகத்துட் டோன்றும் அளவில்லாது ஓங்கும் சிவ (ஞான) ஒளி; **எங்கள் சோதி**'' என்பது பதிகம். *836*

2735. **(இ-ள்)** மாதுக்க நீங்கல்...என்பது - ''மாதுக்க நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின்'' என்ற பதிகப் பகுதி; ஆதிச் சுடர்ச் சோதியை - மூலமாகிய சுடர்ச் சோதியினை (சிவபரஞ்சுடரினை); அன்பின்...வாழ்ந்து - அன்பினுலே ஆன்மாவிற் கண்டு அஞ்செழுத்தால் அகப்பூசை செய்து ஞானுசிரியரால் போதிக்கப்பட்ட திருவருள் வழித்தாகிய அகநோக்கத்திற் கண்டு கூடிய சிவயோகத்தால் இடையருமற் கூடிச் சிவஞான வாழ்க்கையில் வாழ்ந்து; பேதித்த...பேர்மின் என்றும் - அநாதியே தொடர்ந்து அறிவை மறைத்து வேறுபடுத்திய ஆணவத்தாலாகிய பிறவியில் வரும் நெறியினின்று நீங்குவீர்கள் என்றபடியாம்.

[''மாதுக்க நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின்'']

வேறு

2735. **''மாதுக்க நீங்க லுறுவீர் மனம்பற்று''** மென்ப
தாதிச் சுடர்ச்சோ தியையன்பி **னகத்துள் ளாக்க**
போதித்த நோக்குற் றொழியாமற் பொருந்தி வாழ்ந்து
பேதித்த பந்தப் **பிறப்பின்னெறி பேர்மி** னென்றும். 837

(வி-ரை) *''மாதுக்க நீங்க லுறுவீர் மனம் பற்றும்'' என்பது;''மாதுக்க நீங்க லுறுவீர் மனம் பற்றி வாழ்மின்'' என்ற பதிகப் பகுதியின் பொருளாவது.*

ஆதிச் சுடர்ச் சோதியை - ஆதியாகிய ''சுடர்விட்டுளன்'' ''எங்கள் சோதி'' என்று முன்பாட்டில் விரித்துக் காட்டிய அந்தச்சோதிப்பொருளை.

அகத்துள்ளாக்கி - மனத்துள் விளங்கியெழச் செய்து; **ஆக்குதல்** - அன்பில் ஊன்றுதலால் விளங்க எழுவித்தல்; மூளுவித்தல்; கோல்கொண்டு கடைந்து மூட்டு தல்போல; ''அகனமர்ந்த வன்பினரா யறுபகைசெற் றைம்புலனு மடக்கி ஞானப், புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத் துள்ளிருக்கும் புராணர்'' (பிள். தேவா) என்றருளியபடி ஆன்மாவிற் கண்டு அஞ்செழுத்தாற் பூசித்தலைக் குறித்தது; இஃது அந்தரியாக பூசை எனப்படும். ''அந்தரி யாகந்தன்னை முத்திசாதனமாயறைந் திடுவரதுதானு மான்மசுத்தி யாகும்'' (சித்தி-9) என்றதும் காண்க.''விறகிற் றீயினன்...முன்னிற்குமே'' (அரசு.தேவா) என்ற திருப்பாட்டும் சிந்திக்க.

போதித்த நோக்கு உற்று - ஞானாசாரியர் அனுபூதியில் வரும்படி காட்டியருளிய ஞானநாட்டக் காட்சியைப் பொருந்தி; **போதித்தல் - போதம்** - அனுபவ ஞானம்; **போதித்தல்** - அனுபவத்தில் வரச் செய்வித்தல்; ''நிச்சயப் பொருள் இதுவென்று உணர்த்துதல்'' (மாபாடியம் - சிறப்புப் பாயிரம்) என்பர் சிவஞான முனிவர். **நோக்கு** - அகக்கண்ணினருக்குக் காட்சிப் புலப்படும்நிலை. **உறுதல்** - வரப் பொருந்துதல்.

ஒழியாமற் பொருந்துதல் - அக்காட்சி இடையறாது கண்டுகொண்டு அதனோடு பொருந்தி நிற்றல்; சிவயோகத்தாற் கூடி நிற்றல்; ''மற்றோன் றறிந்திலரால்'' (1254); வேறுணரார்'' (1255).

வாழ்தல் - அந்நிலையின் பயனை விடாது அனுபவித்துக் கூடிநிற்றல்.

பேதித்த பந்தப் பிறப்பின் நெறி - மாதுக்கம் என்றதனை விளக்கியவாறு; **பேதித்தல்**- உயிர் சார்ந்து நிற்கவேண்டிய சார்புணர்ந்து சாரவொட்டாது தடுத்து நிற்றல். **பந்தம்** - மூலமலம்; **பந்தப் பிறப்பின் நெறி** - மலத்தினால் வரும்பிறவிவழி; **நெறி** என்றார் பிறவியில் இடையறாது செலுத்துதலின்.

பேர்மின் - அந்நெறியினின்று விலகிச் சிவநெறி சேர்தல். **''மனம் பற்றி வாழ்மின்''** என்ற பதிகக்கருத் துரைத்தவாறு; **வாழ்மின்** என்றது சிவச் சார்பு பெற்று வாழ்மின் என்றதாம்; அது பந்தப் பிறப்பின் நெறி பெயர்தலால் வருதலால் பிறப்பின் நெறி பெயர்தலே **வாழ்**வென்றார். என்னை? பந்தப் பிறப்பின் நெறிபெயரும் உயிர், சார்ந்ததன் வண்ணமாந் தன்மை யுடைமையானும் பந்தத்தைப் பெயர்ந்த வழிச் சிவனையன்றி வேறு சார்பு

இன்மையானும், சிவனையே சாருமாதலின் பந்தநெறி பொய்த்தலே **வாழ்வாம் என்க;** ''இவ்வான்மாத் தன்னையிந்திரியத்தின்வேறுவான்காணவே முதல்வனது சீபாதத்ததை **யணையும்''** ''ஊசல் கயிறற்றால்தாய் தரையேயாந் துணையால்'' என்ற உண்மை காண்க.

போதித்த நோக்கு ஞானகுரு அறிவிற் பொருந்தக் கொளுவிய உள்நோக்கம்; **உற்று** - அதனுள் அழுந்தி; **போதித்த** என்றதற்கு ஞானகுரு என்ற எழுவாய் அவாய்நிலையான் **வந்தது.** ''தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்த'' என்றது இக்கருத்தை விளக்கியது. **ஈண்டுச்** சகலான்மாக்களுக்குப் பிள்ளையார் ஞானஉபதேசம் செய்தருள்கின்றாராதலானும், **சகலர்க்குக்** குருவேடத்தினுள் மறைந்தே முதல்வன் அருளுவானாதலானும், இங்கு எழுவாய் **மறைந்து** நின்றது.

போதித்த நோக்கு உற்று ஒழியாமற் பொருந்தி வாழ்ந்து - ''ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி'' என்ற சிவஞானபோதம் ஒன்பதாஞ் சூத்திரம்இக் கருத்தையே விளக்குதல் **காண்க.**

போதித்த நோக்குறுதலும் (1), ஒழியாமற் பொருந்துதலும் (2), வாழ்தலும் (3) என்ற இம்மூன்றும் முன் கூறியபடி சிவஞானபோதம் ஒன்பதாஞ்சூத்திரத்தினுள் (1) அம்முதலை ஞானக்கண்ணாலே காண்க எனவும், (2) அசத்தாயுள்ள வன்னபேதங்களை அசத்தென்று **காண** உளதாய் நிற்பது ஞானசொரூபம் எனவும்,(3) இனி இவ்விடத்து ஸ்ரீபஞ்சாக்கரத்தை விதிப்படி உச்சரிக்க எனவும் முறையே மூன்றதிகரணங்களால் விரித்துப் போதிக்கப்பட்டமை **காண்க.** ''அண்டனை யான்மாவி லாய்ந்துணரப் - பண்டணைந்த, வூனத்தைத் தான்விடுமாறுத்தமனி லொண்கருட, சானத்திற் றீர்விடம் போற்றான்'' (9-2) என்றவிடத்து அச் சிவஞானத்தானே, ஆசாரியன் ''சிவோயம்'' எனத்தன்னுள்ளே பாவித்துச் ''சிவத்துவமசி'' என்றறிவுறுக்கும் மகாவாக்கியப் பொருளை நாடோறும் பயின்று,சிவோகம் எனப் பாவிப்பானாயின், **அந்தப்** பாவனைக்குள் விளங்கும் முதல்வனால் அநாதியே கூடிய பொதுவியல்பையும், அதற்கேதுவாகிய **மலமாயா கன்மங்களையும்** தான் விட்டு நீங்குமாறு, ஒள்ளிய கருட தியானத்தில் விளங்குங் கருடனால் அப்பாவகன்ம விடத்தைத் தீர்த்துக்கொள்ளுமாறு போலாமென்க'' (மாபாடியம்) எனவரும் உரையும் காண்க; அச்சூத்திரப் பிண்டப் பொழிப்புரைக்கும் வழிப் ''(1) பசுஞானத்தானும் பாசஞானத்தானும் அறியப்படாத முதல்வனை அம்முதல்வனது ஞானக்கண்ணானே தன் அறிவின்கண்ணே ஆராய்ந்தறிக (2); அப்பதிஞானத்தைப் பெறுமாறு யாங்ஙனமெனின் நிலமுதல் நாதமீறாகிய பாசக் கூட்டம் நின்றுழி நில்லாது பரந்து திரிதற்கண் அதிவேகமுடைய பேய்த் தேரினியல் பிற்றாய்க் கழிவதென் றறிந்து நீங்கவே, அப் பதிஞானம் **பிறவித் துயராகிய** வெப்பத்துக்குக் குளிர்ந்த நிழலாய் வெளிப்பட்டு விளங்கும்.(3) அங்ஙனம் விளங்கிய **ஞானத்தால் ஞேயத்தைக் கண்ட** காட்சி சலியாமைப் பொருட்டு **அப்பொருள்பயக்குந்** திருவஞ்செழுத்து **அவ்விதிப்படி** அறிந்து கணிக்கப்படும்'' என்றுரைத்ததும் இங்கு வைத்துக் காண்க.

ஒழியாமற் பொருந்தி வாழ்தல் - ''அஞ்செழுத்தா லுள்ள மரனுடைமை கண்டரனை, யஞ்செழுத்தாலர்ச்சித் **திதயத்தில்** - அஞ்செழுத்தாற் குண்டலியிற் செய்தோமங் கோதண்டஞ் சானிக்கில்,அண்டனாஞ் சேடனா மங்கு'' (9-3) என்று இதன் பொருள் விரிக்கப்பட்டதும் கருதுக. ஈண்டு, ''ஆரியனா மாசான்வந் தருளாற்றோனென்ற வடிஞான மான்மாவிற் றோன்றுந் தோன்றத், தூரியனாஞ் சிவன் றோன்றும்'' (சித்தி - 8-28); சங்கரனே, டொக்கவுறைந் திவரவனை

[''*சாதுக்கண் மிக்கீ ரிறையே வந்து சார்மின்களே*'']

வேறு

2736. **ஈண்டு ''சாதுக்க''** ளென்றெடுத் தோதிற்று
வேண்டும் வேட்கைய வெல்லாம் விமலர்தாள்
பூண்ட வன்பினிற் போற்றுவீர்! **''சார்மி''** னென்
ருண்ட **சண்பை யரச ரருளினுர்**. 838

யவனிவரை விடாதே யுடந்தையாய்ச் சிவன்ருேற்ற மொன்றுமே காண்பர்'' (ஷை-8-29); ''சோதிக்குட் சோதியாய்த் தோன்றிடுவன் காணே'' (ஷை-8-38) என்பனவாதியாக வரும் எட்டாஞ் சூத்திரத்துள் கேட்டல் சிந்தித்தல் முதலிய ஞான சாதனைகளையும், அவற்றைத் தொடர்ந்து ஒன்பதாஞ் சூத்திரத்துள் சாதிக்குமாறுணர்த்தும் வகைகளையும் ஈண்டுக் கருதுக. ''நினைந்திருக்க...நேர்பட வந்துள்ளே பொறுப்பரிய பேரன்பை யருளியதன் வழியே, புகுந்திடுவ னெங்குமிலாப் போதத்தைப் புரிந்தே'' (ஷை-9 -6), ''சோகமெனப் பாவிக்கத் தோன்றுவன் வேறின்றி'' *(ஷை-9-7)* என்பனவாதி உண்மை நூலின் றிருவாக்குக்கள் ஈண்டு உணர்ந்து சிந்திக்கத் தக்கன.

''மனம் பற்றும்'' என்ற பகுதியின் பொருள் சோகம்பாவனையின் தன்மையும் அது பிறவிநீக்கு முத்திசாதனமாமாறுங் கூறியதாமென்க. *837*

2736. **(இ-ள்)** ஈண்டு...ஓதிற்று - இங்குச் ''சாதுக்கள் மிக்கீர் இறையே வந்து சார்மின்களே'' என்று ஓதியருளியதனுல்; வேண்டும்...போற்றுவீர் - விரும்புகின்ற வேட்கைகளாகிய எல்லாம் இயல்பாகவே பாசங்களினீங்கிய இறைவர் திருவடிகளையே மேற்கொண்ட அன்பினுலே போற்றுகின்றவர்களே; சார்மின் - வந்து சாருங்கள் என்று சண்பைத் தலைவராகிய பிள்ளையார் அருளிச் செய்தனர்.

''மன்னும்'' என்பது முதல் இந்நான்கு திருப்பாட்டுக்களானும் ''ஏதுக்களாலும்'' என்ற ஐந்தாம் திருப்பாட்டின் விரிவுரை நான்கு பகுதிகளாக வைத்து விரித்தருளியவாறு.

(வி-ரை) ''சாதுக்கள்'' என்றெடுத்து ஓதிற்று - ''சாதுக்கள் மிக்கீரிறையே வந்து சார்மின்களே'' என்ருேதிய பதிகப் பகுதியின் பொருளாவது என்க.

வேண்டும்... ...போற்றுவீர் - சாதுக்களின் தன்மையும் சொற்பொருளும் கூறியது; தம்மை முழுதும் இறைவர்பாலிற் சார்த்தித் தமக்கென வொருசெயலு மில்லாதவர்.

வேண்டும் வேட்கைய எல்லாம் - பெறவேண்டிய விருப்பங்கள் சென்று உள்ள பொருள்கள் எவையும்.

பூண்ட அன்பினில் விமலர்தாள் போற்றுவீர் - என்க. பொருந்திய அன்பினுடன் இறைவர் திருவடிகளைப் போற்றுதலேயாம் என்று கொண்டு வாழ்வீர்காள். ''வேண்டத்தக்க தறிவோய்நீ வேண்ட முழுதுந் தருவோய்நீ, வேண்டு மயன்மாற் கரியோய்நீ வேண்டி என்னைப் பணிகொண்டாய் வேண்டி நீயா தருள்செய்தாய் யானு மதுவே வேண்டினல்லால், வேண்டும்

பரிசொன் றுண்டென்னி லதுவு முன்றன் விருப்பன்றே'' (திருவா); ''இன்றோ ரிடையூ றெனக்குண்டோ வெண்டோண் முக்க ணெம்மானே, நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோவிதற்கு நாயகமே'' (திருவாசகம்); ''கேடு மாக்கமுங் கெட்ட திருவினர்......ஓடுஞ் செம்பொனு மொக்கவே நோக்குவார், கூடுமன்பினிற் கும்பிட லேயன்றி, வீடும் வேண்டா விறலின் விளங்கினர்'' (143) என்பனவாதி திருவாக்குக்களில் இக் கருத்து விளக்கப்பெறுதல் காண்க; இனி, இவ்வாறன்றி ''இதுவோ வெமையாளு மாறீவ தொன்றெமக் கில்லையேல் அதுவோ வுனதின்னருள்'' (பிள். தேவா- திருவாவடுதுறை); ''பேச்சில ரொன்றைத் தரவிலராகி லிவரலா தில்லையோ பிரானார்'' (நம்பி தேவா - திருப்பாச்சில்) என்றவாறு வேண்டுமவற்றை யெல்லாம் இறைவர்தாள் போற்றியே பெறுவர் என்றுரைப்பினு மமையும்.

சார்மின் - சாதுக்களாகிய மிக்கீர்! (பெரியோர்களே!) விரைந்து சாருங்கள்; **இறையே**-விரைவில்.

இந்நான்கு பாட்டுக்களின் தொகைப்பொருளாவது, முன் ''ஆட்பாலவர்க்கு'' என்ற பாட்டில் ஆட்பாலவர்க்கு இறைவர் அருளும் திறங்களும் அம்முதல்வனது மாட்சிமையும் தற்போதத்துக்கொண்டு ஒருவர் கேட்க மற்றொருவர் சொல்ல அளவுபடாது. மலங்கள் சாராது இறைவர்தாளின் அடங்கிநின்று இவற்றைக் கேட்க என்றார்; இப்பாட்டினால் அவ்வாறு இறைவர்தாளின் அடங்கிக் கேட்டு உணர்வதெவ்வாறென விளங்க அருளியவாறு. முதல்வனே து - உதாரணங்களால் சோதிக்க வேண்டா - அவன் புறத்தொளியாய் நின்று புறப்பொருள்களை விளக்கியும், அன்பில் ஊன்றியவழி அகத்துஉள்ளே எழும் சோதியாய் நின்று விளக்கியும், எஞ்ஞான்றும் உதவுகின்றான்;அந்த அகத்துச் சோதியைக் குரு போதித்தபடி ஞானக்கண்ணாலே கண்டு இடையறாது பொருந்தி அவனேதானாக ஏகனாகிப் பணிசெய்து வாழ்ந்தால் பிறவிநெறி விலகி, எல்லாம் அவன் சார்பேயாகும்; அப்போது ''அவனே தானே யாகிய அந்நெறி, யேகனாகி யிறைபணி நிற்க, மலமாயை தன்னொடு வல்வினை யின்றே'' (போதம்-10) என்று ஞானநூலுள் உரைத்த நிலைபெற்றுப் பிறவிநெறி நீங்கிச் சிவநெறி வாழ்வு தலைப்பட்டு நிகழும் என்பதாம்.

இவ்வாறு அவர்தாளி னடங்கி அவனருளா லல்லது ஒன்றையுஞ் செய்யானாகவே அஞ்ஞான கன்மங்கள் பிரவேசியா:அப்போது அம்முதல்வனே இவனுள் நின்று எல்லாம் கண்டும் காட்டியும் செலுத்துவானாதலின் இவன் அவனது சீபாதங்களை யணைந்து நிலைபெறும் என்ற சிவஞானபோத (11-சூத்) உண்மையும் ஈண்டுப் போதருதல் காண்க. எனவே போதம் 8-9 சூத்திரங்களில் விரித்த சாதனமும், 10-11ல் விரித்த பயனும் இத் திருப்பாட்டால் உபதேசிக்கப்பட்ட திறங் கண்டுகொள்க. *838*

2737. **(இ-ள்)** ஆடும்...மூன்றும் - ''ஆடும் எனவும், அருங்கூற்ற முதைத்து வேதம் பாடும் எனவும்'' என்று பதிகப் பகுதி குறித்த பொருள்களாகிய ஆடும் என்றதும், அருங் கூற்றம் உதைத்து என்றதும்,வேதம் பாடும் என்றதும் ஆகிய மூன்றும்; நீடும் புகழோ... உணர்வீர் - புகழுக்காகவோ? அன்றி உயிர்களுடைய துன்பம் நீக்குதற்கோ என்று ஆராயும் உணர்வுடையீர்களே! உலகுக்கு...மேலோர் - இவைகளை ஈசர் செய்தது உலகின்மேல் வைத்த பெருங் கருணையின் திறம் என்று கொள்கையான் மேம்பாடு செய்வாராகிய பிள்ளையார் அருளிச் செய்தனர்.

(''**ஆடும் மெனவும், மருங்கூற்ற முதைத்து, வேதம்**
பாடும் மெனவும், புகழல்லது பாவ நீங்கக்
கேடும் பிறப்பும் **மறுக்கும்**மெனக் கேட்டி ராகில்
நாடுந் திறத்தார்க் **கருளல்லது நாட்ட லாமே.''**)

வேறு

கூற்றை உதைத்தது

வேதம்

2737. ''ஆடும்'' மெனவாந் திருப்பாட்டி னமைத்த மூன்றும்
நீடும் புகழோ? பிறர்துன்ப நீக்குதற்கோ?வென்று
தேடும் முணர்வீ ருலகுக்கிவை செய்த தீசர்
கூடுங் கருணைத்திற மென்றனர் **கொள்கை மேலோர்.** 839

(வி-ரை) ''ஆடும்'' எனவாம் திருப்பாட்டின் அமைத்த மூன்றும் - ஆடும் எனவாம் - ஆடும் என்று தொடங்கும்; முதற் குறிப்பு. **அமைத்த மூன்றும்** - ஆடும் எனவும் கூற்றம் உதைத்து எனவும், வேதம் பாடும் எனவும் கூறியருளிய மூன்று பொருள்களும்; **''உதைத்து வேதம் பாடும்''** என்பது உதைத்துப் பாடும் என ஒருபொருள்பற்றி உரைக்கநின்ற வினையெச்ச முடிபாகவும் காணப்படுதலின் அஃது அவ்வாறு பொருள் கொள்ளப்படாது உதைத்து எனவும், பாடும் எனவும் இரண்டாகப் பிரித்துப் பொருள்கொள்ளுதல் வேண்டுமென்று காட்டுவார் மூன்றும் எனச் செவ்வெண்டொகை விரித்து ஓதினர்.

புகழோ? பிறர் துன்ப நீக்குதற்கோ? என்று தேடும் உணர்வீர் - ''புகழல்லது பாவம் நீங்கக் கேடும் பிறப்பும் அறுக்கும் எனக் கேட்டீராகில்'' என்ற பதிகப் பகுதியின் பொருள் விரித்தபடி; **புகழ்** - புகழோ?; **அறுக்கும்** - அறுக்கும் வகையோ? என்று இரண்டிடத்தும் ஐயவினு ஓகாரம் தொக்கது; **புகழ்** - தன்பொருட்டாற் செய்வது; பாவம் நீங்கக் கேடும் பிறப்பும் அறுக்கும் வகையோ? என்றது பிற உயிர்களின்பொருட்டுச் செய்வது; **கேடு** - இறப்பு ; **கேடும் பிறப்பும்** - பிறவித் துன்பம். **தேடும்** - ஆராயும்; **உணர்வீர்** - பிறவிக்கஞ்சி வீடுபேறு காதலித்து ஆராயும் உணர்ச்சியுடையோர்களே!; விளிவேற்றுமை என்ற பெயர்.

இவை ஈசர் உலகுக்குச் செய்தது - என்க. **உலகுக்கு** - நான்கனுருபு கொடைப் பொருளில் வந்தது.

செய்தது - செய்த காரணம்; **கூடும் கருணைத் திறம் - கூடும்** - முன் இயைபாகிய வேறு காரணமின்றித் தன்னியல்பிற் பொருந்திய; பேரருளுடைமை. **திறம்** - தன்மை; பெருமை என்றலுமாம். வினைத்திறம் பற்றிக் கூடும் என்றலுமாம்.

கூடுங் கருணைத் திறம் - இக்கருத்தினைச் ''சொன்னவித் தொழில்க ளென்ன காரணந் தோற்ற வென்னின், முன்னவன் விளையாட் டென்று மொழிதலு மாமுயிர்க்கு, மன்னிய புத்தி முத்தி வழங்கவு மருளான் முன்னே, துன்னிய மலங்களெல்லாந் துடைப்பதும் சொல்ல லாகும்'' *(1-36)* என்று சித்தியாரிலும், ''ஏற்ற விவை யரனருளின் திருவிளையாட் டாக வியம்புவர்க, ளணுக்களிடர்க் கடனின்று மெடுத்தே, யூற்றமிக வருள்புரித லேதுவாக வுரைசெய்வ ரொடுக்கமிளைப் பொழித்தன் மற்றைத், தோற்றமல பாகம்வரக் காத்தல் போகந்

துய்ப்பித்த றிரோதாயி நிறுத்த லாகும், போற்றவரு மருளா நிலை யன்றி மற்றுப் புகன்றவையும் மருளொழியப் புகலொ ணாதே'' (1 - 18) என்று சிவப்பிரகாசத்தினும் இக் கருத்தை விளக்கியவாறு காண்க.

மூன்றும் - கூடும் கருணைத்திறம் ஆமாறு என்னை? எனிற் கூறுதும்: **(1) ஆடும் எனவும்** - ஆடுதல் ஐந்தொழிற் கூத்து. ஐந்தொழில் செய்தல் முதல்வனுக்கு இலக்கணம். **ஐந்தொழி**லாவன **தோற்றம் நிலை இறுதி மறைப்பு அருள்** என்பன. இவ்வைந் தொழிலும் தூலம் சூக்குமம் அதிசூக்குமம் என்று மூவகைப்படும். அவற்றுள் தூலமாகிய தோற்றமும் இறுதியும் பிரபஞ்சத்தின் தோற்றமும் ஒடுக்கமும் என்பது வெளிப்படை. **நிலை** - தோன்றிய பிரபஞ்சம் **ஒடுக்கம்** வருங்காறும் நிலைபெறுதல். **மறைப்பு; அருள்** என்பன ''பந்தமும் **வீடும்''** என்று உணர்க. தோன்றிய பொருள் சங்கரிக்கப்படும் வரை தானே நிலைபெறும்; **ஆதலின் நிலைத்** தொழில் முதல்வன் காரியமென்றதென்னை? எனின், காலத்து ஒருங்கு தோன்றிய பொருள் இரண்டனுள் ஒன்று நெடுங்காலம் நிற்றலும் ஒன்று சிறிதுகால நிற்றலுமாகிய நிலை வேறுபாடுள்ளமையின் இந்நிலை வேறுபாடு இதற்கேதுவாகிய வினைவேறு பாட்டானாயிற்று... அவ்விருவேறு வினையும் முதல்வனாணையானன்றி வாராமையான் நிலைத்தொழிலும் முதல்வனாற் செய்யப்படும் காரியமாதல் அறிக. இன்னும், தண்ணீர்க்குடம் நிலைபெறுதல் தாங்கிச் செல்வோனது முயற்சியின்றி அமையாதவாறுபோலத் தோன்றிய பிரபஞ்சம் ஒடுங்குங்காறும் நிலைபெறச் செய்வதும் ஆகிய முதல்வனது ஆணையாகிய சங்கற்பமேயாம்.

மறைப்பாவது; குடங்கையில் ஏந்திய தீயின் சூட்டினை நிகழவொட்டாது தனக்கு மாறாகிய மந்திரமுச்சரிக்குங்காறுந் தடுத்து நிற்குங் குளிகைபோல, முதல்வனைச் சிறப்பியல்பான் உணரும் மெய்யுணர்வு தோன்றுங்காறும் அவனது பெருங்கருணை உயிர்கள் மாட்டு ஒருங்கே நிகழாதவண்ணம் தடுத்து நிற்கும் அவ்வம் மலசத்தியின் வழிநின்று அவற்றை நடாத்துவதாகிய அவனது சங்கற்பமேயாம். ''பந்தமுமாய் வீடுமாயினருக்கு'' என்புழிப் பந்தம் என்றதும் அது.

இனிச் **சூக்கும ஐந்தொழி**லாவன, சங்கரித்த பின்னர் மேற்செய்யக்கடவனவாகிய தூல ஐந்தொழிற்கு யோக்கியமாம்படி கேவலத்தின்கண் நிகழ்த்துவனவாம். அதிசூக்குமமாகிய தோற்ற முதலியன ஐந்தும் அவ்வவ் விடய நுகர்ச்சிதோறும் கணந்தோறும் நிகழ்தல் கண்டுகொள்க (மாபாடியம்-2-சூ-1-அ).

''ஊன நடன மொருபா லொருபாலா ஞானநடந் தானடுவே நாடு'' (திருவருட்பயன் 93) என்றருளிய திருநடனமிரண்டனுள் இங்குக் கூறியது ஒன்று. ''மோனந்த மாமுனிவர் மும்மலத்தை மோசித்துத், தானந்த மாநடத்தே தங்கியிடு மானந்தம், மொண்டருந்தி நின்றாடல் காணுமருண் மூர்த்தியாக், கொண்ட திருவம்பலத்தான் கூத்து'' (உண்மை விளக்கம்-37;) ''எங்குந் திருநட்டம்''; ''சிற்பரஞ் சோதிச் சிவானந்தக் கூத்தனைச், சொற்பதமா மந்தச் சுந்தரக் கூத்தனைப், பொற்பதிக் கூத்தனைப் பொற்றில்லைக் கூத்தனை, யற்புதக் கூத்தனை யாரறி வாறே'' (திருமூலர் திருமந்திரம்-9 தந் -திருக்கூத்துத்தரிசனம்); ''அவர் முன் நம்மைக் கண்டவா றெதிரே நின்று காட்சிதந் தருளி'' (489); ''நின்**றயங்கி யாடலே** நினைப்பதே நியமமே'' (பிள் தேவா - ஆலவாய் - கௌசிகம் - 6) என்பனவாதி திருவாக்குக்களான் அறியப்படுகின்றபடி ஞானிகளுக்கு அருண்ஞானக் கண்ணாலே கண்டு திளைக்கும்படி கொடுத்து நிற்கும் ஞானநடனமாகிய அருட்கூத்து மற்றொரு வகையாம்.

''காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி'' எனவும், ''ஐயாநீ யாட்கொண்டருளும் விளையாட்டி, னுய்வார்க ளுய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்'' எனவும் வரும் திருவாசகத் திருவாக்குக்கள் இப்பாசுரக் கருத்தை விளக்கி நிற்றலும் காண்க.

இனி (2) **அருங்கூற்றம் உதைத்து** என்ற செயலும் உயிர்களின்மேல் வைத்த அருளால் ஆயது. மார்க்கண்டர்க்காகக் கூற்றுவனை உதைத்து உருட்டிப் பின் உயிரும் கொடுத்த சரிதம் எல்லாப் புராணங்களாலும் விளக்கமா யறியப்படுவதாம். ''மார்க் கண்டர்க் காக மறலிபட்ட பாட்டையுன்னிப், பார்க்கிலன்பர்க் கென்ன பயங்காண் பராபரமே'' (தாயுமானுர்); கால பாராயணக் குறுந்தொகையுள் அரசுகள் இயமன்றூ துவரைத் ''தமர் நிற்கிலுஞ், சுருக்கெனு தங்குப் பேர்மின்கண் மற்றுநீர், சுருக்கெனிற்சுட ரான்கழல் சூடுமே'' என ஆணையிட்டமையும் காண்க.

இனி(3) **வேதம் பாடும் எனவும்** - வேதாகமங்களை இறைவர் புனருற்பவமாகிய சிருட்டியில் அருளிச் செய்து உலகுயிர்கள் அறிந்து அவ்வழியொழுகி உய்யும் பொருட்டுப் பாடுகின்ருர் என்பது ஆன்ருேர் நூற்றுணிபு. ''வருங்கடன் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே'' (அரசு. தேவா); ''வேத முகந்திசை தோண்மிகு பன்மொழி கீதம்'' (பொன் - அந் - 19); ''ஓவா வோசை முழுதுநின் வாய்மொழி'' (திருஒற்றியூர் ஒருபாவொருபஃது -2); ''ஒப்பிலா மணிவாய் வேதம், பல்லிடை யெழுத்து நாவிற் பரமவா கமத்தின் பேதம், நல்லிதழ் மனுவின் விஞ்சை'' (கந்தபு - சூரன்வதை - 426).

உலகுக் கிவைசெய்த தீசர் கூடுங் கருணைத்திறம் - உலகம் கண்டு சிந்தித்து உணர்ந்து உய்யும்பொருட்டு ஐந்தொழிற் கூத்து ஆடுதலானும், மார்க்கண்டர்க்காகக் கூற்றினை உதைத்தது அவர்பொருட்டேயன்றி உலகோர் அதன் உண்மை உணர்ந்து தம்மை வந்தடைந்து சாவாமையும் பிறவாமையும் பெற்றுய்தற் பொருட்டாதலானும்,வேதம் பாடுதல் உலகோர் விதிவிலக்குக்களை அறிந்தொழுகவும் சிவநெறி நின்று உய்யவும் ஆதலானும் இவை உலகுக்குச் செய்தது **கருணைத் திறம்** என்ருர்.

பெருங்கருணைத் திறமாவது - ''முதல்வ னுவான் முற்றுணர் வுடைமையின் உலகத்துயிர்கள் படுந் துன்பமுழுவதும் உணர்ந்தோனுயும்; பேராற்றலுடைமையான், உயிர்களை யெல்லாம் ஒருங்கே வீடுபேறடைவிக்க வல்லனுயும்; **சிவன் சங்கரன்** முதலிய பெயர்களானு மறியப்படுவதாய், விருப்பு - வெறுப்பின்றி, எல்லா வுயிர்கண்மாட்டும் ஒப்பநிகழ்வதாய்த், தொடர்புபற்ருது, பிறர்துன்பங் கண்டுழி அதனை அக்கணமே நீக்குதற்கு விளையும் மனவெழுச்சியாகிய பெருங்கருணையுடைமையான், அவற்றை ஒருங்கே வீடுபேறடைவித்தற்கண் ஒருப்பாடு மிக்குடையனுயும் உள்ளான் என முதல்வன திலக்கணம் பேசப்படும். அங்ஙனமாகவும் உயிர்கள் யாவும் ஒருங்கே வீடுபேறடையாமற் றடுத்து நிற்பன உயிர்க்குற்றமாகிய மலசத்திகள் ஆதலின் உயிர்கள் முதல்வனைச் சிறப்பியல்பான் உணரும் மெய்யுணர்வு தோன்றுங்காறும் முதல்வன் தனது சங்கற்பத்தான் அவ்வம் மலசத்தியின் வழிநின்று அவற்றை நடாத்துதலும் மறைப்பு எனப்படும் அவனது கருணைத்திறமாதல் காண்க.

[''கடிசேர்ந்த போது மலரான கைக்கொண்டு நல்ல
படிசேர்ந்த **பால்கொண்டங் காட்டிடத் தாதை பண்டு**
முடிசேர்ந்த காலையற வெட்டிட முக்கண் மூர்த்தி
அடிசேர்ந்த வண்ண மறிவார்சொலக் கேட்டு மன்றே.'']

சண்டீசர் — ஆகமம்

2738. கருதுங் **''கடிசேர்ந்த''** வெனுந்திருப் பாட்டி லீசர்
மருவும் பெரும்**பூசை மறுத்தவர்க் கோறன் முத்தி**
தருதன்மைய தாதல் சண்டீசர்தஞ் செய்கை தக்கோர்
பெரிதுஞ்சொலக் கேட்டன மென்றனர் பிள்ளை யார்தாம். **840**

திருப்பாசுரத் திருப்பதிகம் முன்னைந்து திருப்பாட்டுக்களான் முப்பொருளுண்மையும், இலக்கணமும், சாதனமும்,பயனுமாக வரும் வேத சிவாகமங்களின் முடிபுகளை எடுத்துக் காட்டியருளியபடி, பின்னைந்து திருப்பாட்டுக்களான் அவ்வுண்மைகளை மாபுராணங்களின் உதாரணங்களால் எடுத்துக்காட்டியருளுகின்றார்; இவை பொதுவியல்பு - சிறப்பியல்புகளாக ஒருவாற்றான் வகுத்துரைக்க நின்றன என்ற நிலையினை, முன்னைந்து பாட்டுக்களுக்கு உரைவிரித்த நிலையும் யாப்பும் ஒருவகையானும், பின்னைந்து பாட்டுக்களுக்கு உரை நிலையிட்டமை வேறு வகையும் சந்தமுமாகிய வகையானும் ஆசிரியர் காட்டியருளிய தெய்வக் கவிநலம் காண்க. முற்பகுதிபோ லன்றிப் பின்னைந்து திருப்பாசுரப் பாட்டுக்களுக்கு ஓரோர் திருப்பாட்டால் கருத்துரைத்துச் செல்லும் நிலையும் கண்டுகொள்க. முதனூலாகிய திருப்பாசுரத்தைப் பிள்ளையார் இருவகை விருத்த யாப்பினால் யாத்தருளிய நிலையும், ஆசிரியரும் அவ்வாறே அவ்விருவகை விருத்தங்களாற் பொருள் விரித்த நிலையும் இக்குறிப்புத் தருவன.

2738. **(இ-ள்)** கருதும்...பாட்டில் - கருதுகின்ற ''கடிசேர்ந்த'' என்று தொடங்கும் திருப்பாசுரத்தின் ஏழாந் திருப்பாட்டில்; ஈசர்...தன்மையதாதல் -சிவபெருமான் விரும்பி ஏற்று வீற்றிருந்தருளும் பெரும்பூசையினைச் சிதைவு செய்தவர்களைக் கொல்லுதல், துற்செயலாவதன்றி முத்திதரும் தன்மையுடைய நல்ல செயலாதலை; சண்டீசர் தம்...சொலக்கேட்டனம் - சண்டீசர் தமது சரிதத்தினால் தக்கவர்களாகிய பெரியோர் சொல்லக் கேட்டோம்; என்றனர் பிள்ளையார்தாம் - என்று பிள்ளையார் தாம் அருளிச் செய்தனர்.

(வி-ரை) கருதும் **''கடிசேர்ந்த'' எனுந் திருப்பாட்டில்** - **''கடிசேர்ந்த''** என்று தொடங்கும் திருப்பாசுரம் ஏழாவது திருப்பாட்டின் கருத்தினை இப்பாட்டால் உரைக்கின்றவாறு.

ஈசர்... முத்திதரு தன்மையதாதல் - முதல்வரது பூசையினைத் தடுத்து இடையூறு விளைத்தாரைக் கொல்லுதல் மாபாதகங்க ளைந்தனுள் முதன்மைபெற்ற கொலைப் பாவமாகாது; பாவப் பயனாகிய நரகமும் கொடாது; ஆனால் அது பசுபுண்ணியங்களினும் மேலாகிய சிவபுண்ணியமேயாகி, அதன் பயனாகிய முத்திதரும் தன்மையுடையதாகும் நிலை; **ஆதல்**- ஆதலை - ஆகும் நிலையினை என்று இரண்டனுருபு விரிக்க; **ஆதல் - கேட்டனம்** என்று கூட்டுக; **கோறல்** - கொல்லுதல்; **கொல்** என்ற பகுதி முதனீண்டு, **தல்** - தொழிற்பெயர் விகுதிபெற்ற பெயர்.

சண்டீசர்தம் செய்கை - **செய்கை** - செய்கையினுல்; செய்கை காரணமாகக் காட்ட.

தக்கோர் பெரிதும் சொல - **தக்கோர்** - உண்மை அறிந்து சொல்லும் தகுதியுடையோர். தகுதியாவது திருவருள் அறிவிக்க அறிந்து கூறும் பக்குவமுடைமை; **அறிவார்** - என்பது பதிகம். **பெரிதும் சொல்லுத**லாவது விளக்கமாக எடுத்துக் காட்டுதல். சண்டீசர் சரிதம் பதிகப் பாட்டினில் எடுத்துக்காட்டியது காண்க. பதி புண்ணியங்களுக்கும் பசுபுண்ணியங்களுக்கும் வேறுபாடு காட்டப்பட்டது. இனிப் பதிபுண்ணியங்களும் சிவநல்வினை - தீவினை என இருவகைப்படும் இவற்றினியல்பெல்லாம் மாபாடியத்துள் (8 - 1) இருவினை ஒப்பு என்பதனைக் கூறுமிடத்து விரிக்கப்பட்டன. ஆண்டுக் கண்டுகொள்க.

தக்கோர் சொலக் கேட்டனம் - பிள்ளையார் காலத்துக்கு முன்பு வாழ்ந்த அறிவார் சொல்லியதனைத் திருமூலர் - மணிவாசகப் பெருமானுர் - நக்கீரர் முலியோர் திருவாக்குக்களால் அறிக; பிள்ளையாருடன் ஒருகாலத்து வாழ்ந்த அரசுகள் தேவாரமும் காண்க; இனி அவற்றை ஒட்டிப்பின்வந்த நம்பிகள் தேவாரத்தினும் திருவிசைப்பாத் திருப்பல்லாண்டினும், பதினொராந் திருமுறையினும் அவ்வாறே போற்றப்படுதல் காண்க. ஞானசாத்திரங்களாகிய திருக்களிற்றுப்படியார்(19) சிவஞானசித்தியார் (2-சூ) முதலியவற்றுள்ளும் இவ்வுண்மை போற்றப்படுதல் காண்க. திருமுறைகளுள் கண்டவை சண்டீச நாயனுர் புராணத்திறுதியில் தொகுக்கப்பட்டன. ஆண்டுக் கண்டுகொள்க.

கோறல் முத்தி தரும் தன்மையதாதல் - கொலைப்பாதகச் செயல் எவ்வாற்ருல் முத்திதரும் எனில் அன்பு காரணமாமென்க. இதன் இயல்பு சண்டீசர் புராணத்தினுள் 1264-ன் கீழ் ''அன்பு தந்த வடியார் செய்தனவே தவமாம்'' என்றவிடத்து உரைக்கப்பட்டது; ஆண்டுக் கண்டுகொள்க. ''பாதகமே சோறு பற்றினவா'' (திருவா); ''பாதகத்துக்கப் பரிசு வைத்தான்'' (பல்லா); ''பாதகமென்றும் பழியென்றும் பாராதே, தாதையை வேதியனைத் தாளிரண்டுஞ் - சேதிப்பக், கண்டீசர் தாமாம் பரிசளித்தார் கண்டாயே, தண்டீசர் தாஞ்செயலாற்ருன்'' (களிறு -1920).

''மண்ணைக் கல்லிற் பிராணிபடும், வருத்த வேண்டா'' என்று தந்நலங் கருதி இதோப தேசம் செய்த அமணர்க்குப் ''பிரானுக் கானபணி, யாசி லாநல் லறமாவ தறிய வருமோ வுமக்கென்று'' தண்டியடிகளுயனுர் விடையிறுத்த வரலாறும் இவ்வுண்மையை விளக்குதல் காண்க.

இதனுல் முன்கூறிய (1899)பயன்கள் மூன்றனுள் இரண்டாவதாகக் கூறப்பட்ட ''மிகுசைவத் துறைவிளங்கு''தல் பெறப்பட்டமை காண்க. *840*

2739. **(இ-ள்)** ''வேத முதல்வன்''...திருப்பாட்டினில் - ''வேத முதல்வன்'' என்று தொடங்கும் உண்மைத் திருப்பாட்டிலே; நேர் - நேர்பட வரும்பொருளாவது; ஆதி...பாதம் முதலாம் - பரம பிரமாணமான வேதத்தால் குறிக்கப்படும் முதற்கடவுள் உலகுயிர்கள் தத்தம் பிறவித்துன்பம் நீங்கவும், அறிந்து ஏத்தவும் திருக்கூத்தாடுகின்ற திருவடிகளையுடைய சிவபெருமானேயாம்; அவரே முதற் கடவுளாவர்; பதினெண் புராணங்கள் -(அவ்வுண்மையைத் தெளிய விளக்குவன) பதினெண்புராணங்களாம்; என்றே; ஓது - என்று

[''**வேத முதல்வன் முதலாக** விளங்கி வையம்
ஏதப் படாமை யுலகத்தவ ரேத்தல் செய்யப்
பூத முதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூதன் ஒலிமாலே யென்றே கலிக்கோவை சொல்லே'']

பதினெண் புராணங்கள் — புராணம்

2739. **''வேத முதல்வ''** னெனுமெய்த் திருப்பாட் டினினோர்
ஆதி யுலகோ ரிடர்நீங்கிட வேத்த ''வாடும்''
பாத முதலாம் **பதினெண் புராணங்க ளென்றே**
ஓதென் றுரைசெய்தனர் யாவு மோதா துணர்ந்தார். 841

துணிந்தே அவற்றை ஓதுவாயாக; என்றனர் யாவும் ஓதா துணர்ந்தார் - என்று கூறியருளினர் எல்லா ஞானங்களையும் ஓதாது உணர்ந்தவராகிய பிள்ளையார்.

(வி-ரை) வேத முதல்வன்... ...நேர் - வேத முதல்வன் என்று தொடங்கும் திருப்பாசுரத்தின் பொருளைக் கூறியபடி. **ஆதி** - முதல்வன்; **உலகோர் இடர் நீங்க ஏத்த ஆடும் பாதம்** - முன் ''ஆடும் எனவும்'' என்ற திருப்பாசுரத்தில் ''உலகுக்கிவை செய்தது ஈசர் கூடுங் கருணைத்திறம்'' (2737) என நாட்டப்பட்டமையின் அதனையே முடிந்த பொருளாக எடுத்து அனுவதித்துக்கொண்டு ஈண்டு உலகோர் இடர்நீங்கிடவும் ஏத்தவும் **ஆடும்** என்றருளினர். **ஆடும்** - என்பது (2737) முன்பாட்டின் குறிப்பு.

உலகோர் - ''உலகுக்கு'' (2737); **இடர் நீங்கிட ஏத்த** - துன்ப நீங்கவும் ஏத்தவும் என எண்ணும்மை விரிக்க. முன்பாட்டிற் கூறியவற்றுள் (2737- பாசுரம்-6) **''அருங்கூற்ற முதைத்த''**லால் துன்பநீங்குதலும், **''வேதம் பாடுத''**லால் ஏத்துதலும் பெறப்பட்டன என்பது குறிப்பு.

பாதம் - **''ஆடும்''** என்பதற்கேற்பப் **பாதம்** என்றார். **பாதம்** என்ப துபசாரம்; அருளே திருவடி என்க. **பாதம்** - பாதத்தையுடைய முதல்வன். **ஆடும்** என்பது **அருள் கூடும் கருணைத் திறம்** - என முன் (2737 - பாசுரம் - 6) கூறி முடித்தமையும் காண்க.

ஆதி, உலகோர் இடர் நீங்கிட ஏத்த ஆடும் பாத முதலாம் என்ற முடிபு வேதங்களுக்கும் மாபுராணங்களுக்கும் ஒக்குமென்பார் **நேர்** - என்றார். வேதம்பொதுநூலாதலின் எல்லாக் கடவுளரையும் முகமனல் எடுத்தியம்பினும் அவரையெல்லம் இயக்கும் முழுமுதல்வ னாகிய சிவபெருமானைத் திருவுருத்திரத்தினுள் இருதயத்தில் தலைமையாக வைத்துப் போற்றும். அதுபோலவே வேதங்களை உபப்பிருங்கணம் செய்யும் புராணங்கள் பதினெட்டும் தலைமைபற்றிப் பத்துப் புராணங்களுள் சிவனது முதன்மையினைப் போற்றி, ஏனை எட்டனுள் சிவனால் இயக்கப்பட்டுத் தந்தொழில் நடாத்தும் விட்டுணு - பிரமன் - அக்கினி - சூரியன் இவர்களை முகமனல் தலைவர்களாக எடுத்துக் கூறும். திருப்பாசுரமும் ''வேத முதல்வன் முதலாக விளங்கி - உலகத்தவர் ஏத்தல் செய்ய'' என்றும், ''பூத முதல்வன் முதலே முதலாப் பொலிந்த, சூதன் ஒலிமாலை'' என்றும் இக்கருத்தைக் கொண்ட தென்று காட்டுமுகத்தால்

ஆசிரியர் **வேத முதலாப்...பாட்டினில் நேர்** - என்று காட்டியருளினர். **புராணங்கள் நேர்** - (கூறும்) என்க.

உலகோர் இடர் நீங்கிட ஏத்த - நீங்கிடவும் ஏத்தவும். **இடர் நீங்கிட** - இடர் நீங்கும் பொருட்டு என்றலுமாம். ''ஏதப்படாமை உலகத்தவ ரேத்தல் செய்ய'' என்ற திருப்பாசுரப் பகுதியை விளங்கவைத்தவாறு.

என்றே ஓது - ஏகாரம் தேற்றம். **ஓது** - அவற்றை வெறும் கதைகள் என்று எண்ணிப் புறக்கணிக்காமல் ஓதுவாயாக என்று ஆணை தந்தருளினர் என்க.

புராணங்கள் நேர் என்றே ஓது - சொல்க என்றலுமாம். **''கலிக்கோவை''**-(பதிகம்) புகழ்மாலை. பதிகம் **கலி** விருத்தம். **கலி** நிலைத்துறையாதலும் குறிப்பு.

ஓதென் றுரைசெய்தனர் - ஓதாதுணர்ந்தார் - முரண் அணி. பிள்ளையார் இறைவர்பால் முன்னைத் தவத்தால் ஞானம் பெற்றனராதலின் இப்பிறப்பில் ஓதாதுணர்ந்தார் என்றவாறு; **உணர்ந்தார்** - என்ற குறிப்புமிது. **யாவும் உணர்ந்தார்** என்க. **தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார்** *(1967)*; ''அகில, தேவருக்கு முனிவருக்குந் தெரிவரிய பொருளாகுந், தாவிறனிச் சிவஞான சம்பந்தராயினர்'' *(1966)*; இவ்வாறன்றிப் **புராணங்கள் யாவும் நேர்** என்று கூட்டியுரைப்பினும் அமையும்.

பதினெண் புராணங்கள் - மச்சம் - கூர்மம் - வராகம் - வாமனம் - சிவமகா புராணம் - இலிங்கம் - பவிடியம் - காந்தம் - மார்க்கண்டேயம் - பிரமாண்டம் என்ற பத்தும் சிவபிரானை நேரே எடுத்துக் கூறுவன; விஷ்ணு புராணம் - பாகவதம் - கருடம் - நாரதீயம் என்ற நான்கும் விட்டுணுவைப்பற்றியும்,பிரமம் பதுமம் என்ற இரண்டும் பிரமனைப் பற்றியும், ஆக்கினேயம் அக்கினியைப்பற்றியும், பிரமகைவர்த்தம் சூரியனைப்பற்றியும் கூறுவன. இவை, அரசனாணையின் வழிநின்று மந்திரத்தலைவர் முதலியோர் செய்வனவற்றை அவ்வவர் செய்தனவாகக் கூறுதல்போல, அவர்களை இயக்கும் சிவச்செயலை முகமனால் அவ்வவர்மேற் கூறுவனவாகக் கொள்க.

என்றே ஓதென் றுரைசெய்தனர் - ''சூதன் ஒலிமாலை யென்றே கலிக் கோவை சொல்லே'' என்பது பதிகப் பகுதி. ''பண்டைநற் றவத்தாற்றோன்றிப்பரமனைப் பத்தி பண்ணும் தொண்டர்'' களாகிய சாமுசித்தர்களன்றி ''மார்க்கர் கண்டநூ**லோதி** வீடு காதலிப்பவர்'' களாகிய ஏனையோர் யாவர்க்கும் வேதங்களின் பொருளுணரப் புராணங்களை யோதுதல் இன்றியமையாததென்றதாம். **ஓது - ஓதி**க்காதலிப்பவர் (சித்தி - பாயி) என ஞானநூலும் விதித்தல் காண்க.

ஒருவன் நான்கு வேதங்களையும் நன்குணர்ந்தானேனும் புராணத்தை நன் குணரானேல், அவ்வேதங்கள் தம் அர்த்தங்களைப்பேதிப்பான் என்றஞ்சும் என்பர். அன்றியும் வேதம் 4- அங்கம் 6 -மீமாம்சை 1 - நியாயம் 1 - புராணங்கள் 1- தன்மநூல் 1 என்ற பதினுன்குடன், ஆயுள் வேதம், தனுர் வேதம், காந்தர்வ வேதம், சிற்பம் என்ற உபவேதம் நான்கும் கூட்டிப்பதினெட்டு வித்தைகளையும் உலகோர் படிமுறையால் ஓதியுய்யும் பொருட்டுச் சிவபெருமான் அருளிச் செய்து பிரமனைப் படைத்து அவற்றை அவனுக்கு உபதேசித்தருளினர் என்று வரலாறு கேட்கப்படுகின்றது. ''அட்டாதச வித்தைகளுக்கும் கர்த்தா சூலபாணி'' என்பது காண்க.

["பாராழி வட்டம் பகையா னலிந்தாட்ட வாடிப்
பேராழி யானதிடர் கண்டருள் செய்தல் பேணி
நீராழி விட்டேறி நெஞ்சிடங் கொண்ட வர்க்குப்
போராழி யீந்தபுக ழும்புக ழுற்ற தன்றே"]

2740. பாவுற்ற **"பாராழி வட்டத்"** திருப்பாட்டி னுண்மை
காவற் றொழிலானெனுங் கண்ணனுங் காவல் பெற்ற
தியாவர்க்கு மேலாய வீசனரு ளாழி பெற்று
மேவுற்ற சீருற்ற தென்றனர் **வேத வாயர்.** 842

திருப்பாசுரத்தினுள் "**பூதமுதல்வன்** முதலே முதலாக"; "உலகத்தவர் **ஏதப்படாமை**" என்றும், இப்பாட்டினுல் **உலகோர் இடர் நீங்கிட** என்றும் கூறிய வாற்றுல் முன் **(1899ல்)** கூறிய பயன் மூன்றனுள் இறுதிக்கண் நின்ற பயன் பெறுதற்குரியராகிய **"பூத பரம்பரை பொலிய"** என்ற பயன் பெறப்பட்டமை கண்டு கொள்க.

ஈண்டு **வேதம்** என்றது வேதாந்தத்தை எனவும், வேதாந்தம் சிவத்தின் **இயல்பை** நுண்மை வழியில் அறிவுறுத்தும், அதனைப் பருமை நெறியில் அறிவுறுத்துவன **புராணங்கள்** எனவும் புராணக் கதைகளை உள்ளவாறே கொள்ளாது வேதாந்த முறைப்படி **கொள்ளல்** வேண்டும் எனவும் விசேட ஆராய்ச்சி உரை கொள்வாருமுண்டு.

இனி, இதன்மேலும், பலர் பலப்பலவாறு புராணங்களைப் **பொய்** என்றும்புனைந்துரைகள்என்றும் இகழ்ந்து கூறித் தாமும் இடர்ப்பட்டு அபசாரப்படுவதுடன் உலகோரையும் இடர்ப்படுத்தி யொழிவர். தன்மைநிலையானும், உவமை உருவகம் **அருத்த** வாதம் முதலிய நிலைகளானும் நூல்களைப் பொருள்கொள்ளும் வகைகளை அனுபவம் **வல்ல** தேசிகர்பாற் கேட்டுப் பயின்று ஞானநூல்களை ஆளுதல்முறை. புராண சரித **வரலாறுகளை** உண்மை ஞானநூல்களினும் எடுத்தாண்ட முறைகளும் கவனிக்கற் பாலன. ***841***

2740. **(இ-ள்)** பாவுற்ற...உண்மை - திருப்பாசுரத்திற் பொருந்திய "பாராழி வட்டம்" என்று தொடங்கும் திருப்பாட்டின் உண்மையாவது; காவல்...பெற்றது- உலகங் காக்கும் தொழிலை மேற்கொண்டுள்ள விட்டுணுவும் அக் காவல் தொழில் கிடைக்கப்பெற்ற வரலாறுவது; யாவர்க்கும்...சீருற்றது - எல்லார்க்கும் முதல்வராகிய சிவபெருமானருளும் சக்கரமும் பெற்றுப் பொருந்திய சிறப்பைப் பெற்றபடியாம்; என்றனர் வேதவாயர் - என்று அருளினர் வேதங்களை வெளிப்படுக்கும் திருவாக்கினை யுடைய பிள்ளையார்.

(வி-ரை) பாவுற்ற... உண்மை - இத்திருப்பாட்டினுல் "பாராழி வட்டம்" என்று தொடங்கும் திருப்பாசுரம் ஒன்பதாம் திருப்பாட்டின் கருத்தினை எடுத்து உரைத்தபடி. **பாவுற்ற - பா** - திருப்பாசுரம். அதன் சிறப்புப்பற்றி இவ்வாறு கூறினர். "பாவெனப் படுவதுன் பாட்டு" என்றது காண்க; ***பா உற்ற*** - பாட்டின் நல்லிலக்கணம் முற்றும் பொருந்திய என்றலுமாம். பரம்பிய - எங்கும் பரந்த சிறப்புடைய என்ற குறிப்புமாம்.

காவற் றொழிலான்... ...பெற்றது - தொழிலான் எனும் - படைப்புக் காப்பு அழிப்பு என்ற முத்தொழில்களுள் காத்தல் என்ற தொழிலைச் செய்பவன் என்று சொல்லப்படும். உலகம்

அவ்வாறு முகமனுல் கூறினும் உண்மையில் அவன் செய்கிறதில்லை என்பார் **எனும்** என்ருர்.

கண்ணனும் காவல் பெற்றது - உண்ணின்றியக்குதலால் அவன் ஆணை வழியே நின்றும் அவன் தந்த சக்கரத்தின் துணை கொண்டும் செய்கின்ருன் என்ற தன்மையால் அவ்வா றுபசரிக்கப்படும் தன்மையும் வாய்த்தது என்று **கண்ணனும்** என்ற இழிவு சிறப்பும்மையின் குறிப்பு.

காவல் பெற்றது - காக்கும் தொழிலின் தன்மை அடையப்பெற்றது.

யாவர்க்கு மேலாய ஈசன் - முதல்வன் யாவர்க்கு மேலா மளவிலாச் சீருடையான்'' (திருவாசகம்); **சீருற்றது** அவன் அருளப்பெற்ற சீர் உற்றதன் துணை என்க. ''மூவிலை யொருதாட் சூல மேந்துதல், மூவரும் யானென மொழிந்த வாறே'' (திருவொற் - ஒருபா -6) ''மூவர்நின் சந்நிதி முத்தொழில் செய்ய வாளா மேவண்ணல்'' (திருவிளை. புரா) முதலியவையும் காண்க.

ஈசன் - ஈசத்துவமாகிய முதன்மைக்குண முடையவன்; ஏனையோர் எல்லாரையும் தன் ஆணைவழி நிற்கச் செய்பவன்.

அருள் ஆழி - அருளும் ஆழியும். அருளாவது அவனது காத்தற்ருெழில் இனிது செல்லும்படி சங்கற்பித்தல்; **''அருள் செய்தல் பேணி''** என்பது பதிகம். **ஆழி** - சக்கரம். **பாராழி வட்டம்** - என்றவிடத்து, வட்டஆழி சூழும் **பார்** என ஆழி - ஆணைச் சக்கரம் என்ற குறிப்பும் தந்துநிற்பது காண்க.

பெற்றது - பெற்ற வரலாறு; பெயர்.

சீருற்றது சீருற்றதனுல் காவல் பெற்றதாம் எனக் காரணப் பொருள்பட நின்றது.

கண்ணன் - கிருட்டிணன் என்ற ஓரவதாரத்தின் வந்த பெயர் விட்டுணு என்ற பொதுப்பொருளில் வந்தது. ''நீராழி விட்டேறி நெஞ்சிடங் கொண்டவர்'' (தனது உறைவிடமாகிய நீரினையுடைய கடலினை விட்டு ஏறிவந்து தன் நெஞ்சினை இறைவனுக்கு இடமாக வைத்துக்கொண்டு தியானித்த திருமால்) என்றது பதிகம். ''நாகப்பள்ளி கொள்வா னுள்ளத்தான்'' (அப்பர் - ஆரூர்); (திருமாலினுல்) தியானிக்கப்படுவன்; ''தியேயன்'' தியாதா - தியானிக்கின்றவன்; (மால்); ''நாராயண; பரோத் தியாதா'' என்பது வேதம்.

கண்ணன் (திருமால்) ஆழிபெற்ற வரலாறு மாபுராணங்களாற் பேசப்படும். திருப்பாசுரத்தில் விரிவாக அருளப்பட்டதனுல் ஆசிரியர் அதனைச் சுட்டிக் கூறிய மட்டில் அமைந்தனர்.

இந்திரன் ஒருகாலத்து அகந்தையொடுந் திருக்கயிலாயத்துக்குச் சென்ருன். சிவபெருமான் ஒரு பூதகணநாயக னுருவங்கொண்டு அவன் எதிரே வந்தனர். அவரை யறியாமையால் அகந்தையினுல் அவர்மேல் தனது வச்சிராயுதத்தை எறிந்தனன். அது துகளாயிற்று. சிவபெருமான் உருத்திர வடிவங்கொண்டு சினந்தவர்போற் காட்டினர். அவரது திருமேனியில் வியர்வை தோன்றிற்று. இந்திரன் கண்டு பயந்து வணங்கினுன். இறைவன் சினநீங்கி அவனுக்கு அருளி, விடுத்தனர். இறைவர் அப்போது தாங்கிய சினத்தினைக் கடலில் எறிந்தனர்.

அஃது ஒரு அசுரஉருக்கொண்டு வருணனால் வளர்க்கப்பட்டுச் சலந்தரன் என்ற பெயர்கொண்டு வளர்ந்தது; அச் சலந்தராசுரன் சிவன்பாற்றோன்றியவனாதலால் விட்டுணு பிரமன் முதலிய வேறெத்தேவரையும் மதியாது தானே அனேகம் அசுரர்கள் சூழ உலகிற் சுயாட்சிபுரிந்து வந்தனன். விட்டுணு அவனிடம் அனேக ஆண்டுகள் போர்புரிந்து தோல்வியுற்றனர். இந்திரனும் ஏனைத் தேவர்களும் பயந்து திருக்கயிலையிற் புகலடைந்தனர். அங்குச் சிவபிரானுடன் போர்செய்யும் பொருட்டுச் சலந்தரன் சேனைகள் சூழ அகந்தையுடன் கயிலைக்கு வந்தான். சிவபிரான் கிழமுனிவர் ஒருவராக அவன் முன்னே வந்து அவனை எங்குச் செல்கின்றாயென்று கேட்டனர். அவன் நான்சிவனுடன் போர் செய்யச் செல்கின்றேன் என்றான். அவர், உனக்கு அவ்வலிமை யிருக்குமாகில் இந்தச் சக்கரத்ததை எடுத்துத் தலையில் வைத்துக்கொள் என்று கூறித் தமது கால்விரலால் நிலத்தில் ஒரு சக்கரத்தைக்கீறினர். அவன் அதை மிக்க சிரமத்துடன் பேர்தெடுத்துத் தலையில் வைக்க அஃது அவனை இரு பிளவாக அறுத்துக் கொன்றது. அந்தச் சக்கரத்ததைப் பெறும்பொருட்டு அனேக காலம் திருமால் திருவீழிமிழலையில் தினம் ஆயிரம் தாமரைமலர் கொண்டு இறைவரை அருச்சித்துத் தவங்கிடந்தார். ஒருநாள் இறைவரது அருளினால் அவற்றுள் ஒருபூக் குறைய அவர் தமது கண்ணைத் தோண்டிச் சாத்தினர்; இறைவர் வெளிப்பட்டு அவருக்குச் சுதரிசனம் என்ற அச்சக்கரத்தை அருளினர். அதன் துணையினால் திருமால் தமது ஆணைச் சக்கரம் உலகில் செலுத்திக் காவற்றொழில் புரிந்து வருகின்றார். இது திருமால் ஆழி பெற்ற சரிதம். விரிவு காந்தம் முதலிய மாபுராணங்களுட் கண்டுகொள்க.

''தன்றவம் பெரிய சலந்தர னுடலந் தடிந்தசக் கரமெனக் கருளென்
றன்றரி வழிபட் டிழிச்சிய விமானத் திறையவன்''

(பிள். தேவா - புற நீர்மை - மிழலை - 9)

''நீற்றினை நிறையப் பூசி நித்தலா யிரம்பூக் கொண்டு
வேற்றுழி யொருநா ளொன்று குறையக்கண் ணிறைய விட்ட
வாற்றலுக் காழி நல்கி யவன்கொணர்ந் திழிச்சுங் கோயில்
வீற்றிருந் தளிப்பர் வீழி மிழலையுள் விகிர்த னாரே'' (நேரிசை - 8)

''சமரமிகு சலந்தரன்போர் வேண்டி னானைச்
சக்கரத்தாற் பிளப்பித்த சதுரர் போலும்'' (தாண்டகம் - 2)

''செருமேவு சலந்தரனைப் பிளந்தசுட ராழி
செங்கண்மலர் பங்கயமாச் சிறந்தானுக் கருளி'' (நம்பி கலயநல்-2)

''சலமுடைய சலந்தரன்ற னுடறடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கண் றருளியவா றென்னேடீ;
நலமுடைய நாரணன்ற னயனமிடந் தரனடிக்கீழ்
அலராக விடவாழி யருளினன்காண் சாழலோ'' (திருவா - சாழல்-18)

என்பனவாதி திருவாக்குக்களால் இச்சரிதம் வேத சம்மதமாகிய விளக்கமுடைய தென்பது பெறப்படும்.

[''மாலா யவனும் மறைவல்ல நான்மு கனும்
பாலாய தேவர் பகரில்லமு தூட்டல் பேணிக்
காலாய முந்நீர் கடைந்தார்க் கரிதா யெழுந்த
ஆலால முண்டங் கமரர்க்கருள் செய்த தாமே'']

2741. **''மாலா யவ''னென்ன** வருந்திருப் பாட்டின் மாலும்
தோலா மறைநான் முகனுந் தொடர்வா மமரர்
ஏலா வகைசுட்ட **நஞ்சுண் டிறவாமை காத்த**
மேலாங் கருணைத்திறம் வெங்குரு வேந்தர் வைத்தார். 843

இச்சரிதமும், மேல்வரும் பாட்டிற் கூறும் விடமுண்ட சரிதமும் - இவைபோல் வனவும் ''வேதமுதல்வன்'' என்ற திருப்பாட்டிற் கூறியருளியபடி பதினெண் புராணங்களும், ''வேத முதல்வன் முதலாக என்ற சிவபெருமானது முழுமுதற்றன்மையினை எடுத்துக்காட்டி வேதங்களுக்கு உபப்பிரம்மணங்களாதலை நிலைநாட்டுகின்றன. இங்கு **வேதவாயர்** - என்ற குறிப்புமிது. *842*

2741. **(இ-ள்)** மாலாயவன்... திருப்பாட்டில் - **''மாலாயவனும்''** என்று தொடங்கும் திருப்பாசுரப் பாட்டின்கண்; மாலும்...நஞ்சு - திருமாலும் வெற்றி பொருந்திய வேதங்களில் வல்ல பிரமனும் அவர்களைத் தொடர்வாகும் தேவர்களும் பொருந்த மாட்டாதபடி சுட்ட விடத்தினை; உண்டு...கருணைத் திறம் - தாம் உண்டு அவர்கள் சாவாதபடி காத்த மேலாகிய பெருங்கருணையின் வெற்றிப்பாட்டினை; வெங்குரு வேந்தர் வைத்தார் - சீகாழித் தலைவராகிய பிள்ளையார் அறிய வைத்தருளினர்.

(வி-ரை) பாட்டில் - கருணைத் திறம் - வைத்தார் - என்று கூட்டுக. **திறம்- வைத்தல்** - திறத்தினை அறியக் காட்டுதல்.

மேலாங் கருணைத்திறம் - திறம் - திறத்தினை - மேம்பாட்டினை; **மேலாம்** - பெரிதாகிய; பிறர் எவர்க்கும் அரிதாகிய; தலைமையாகிய. **பேரருளுடைமை** - இறைவரது எண் குணங்களுள் ஒன்று; இது முதன்மை குறிக்கும்.

தோலா மறை - தோலா - தோல்வியில்லாத; வேறெந்த நூலாலும் மறுக்க முடியாத; ''மறைவல்ல நான்முகனும்'' என்பது பதிகம்.

தொடர்வாம் அமரர் - தொடர்ந்த தேவர்; **தொடர்தல்** - (அவர்களுள்) அடங்கி அவராற் பயன் பெறுதல்.

அமரரும் - என்று எண்ணும்மை விரிக்க. இவர்கள் வருணன் - சூரியன் முதலியோர்.

மாலும் - மறை நான்முகனும் - அமரரும் ஏலா வகை சுட்ட - நஞ்சு உண்டு - காத்த என்றதனால் வேதங்களுள்ளும், அவற்றை உபப்பிரம்மணம் செய்யும் மாபுராணங்களுள்ளும் சிவனையேயன்றி மால் - பிரமன் முதலாகிய தேவர்களும் உடன் போற்றப்படினும், மால் முதலிய ஏனைத் தேவர்க்கெல்லாம் முதல்வன் சிவனேயாம் என்பது அவற்றின் கருத்து என

விடமுண்ட சரிதம் அவற்றுளெல்லாம் பேசப்பட்டதனால் விளங்கும் என்று **காண்க. இக்** குறிப்புப் பெறத் **தோலாமறை** என்றார். ''மறைவெல்ல'' (பதி).

ஏலாவகை - ஏலுதல் - பொருந்துதல்; பொறுத்தல்; தாங்கிக் கொள்ளுதல்.

சுட்ட - கருக்கிய; தீய வைத்த. **நஞ்சுண்டு** - உண்டதனால்.

இறவாமை - அன்று அந்த நஞ்சினால் சாவாதபடி. மற்றபடி அவர்கள் காலாந்தரத்தில் இறத்தற்குரியவர்களேயாம்.

சிவபெருமான் விடமுண்ட வரலாறு:— ஒரு காலத்தில் அமிர்தமுண்டு நீண்ட ஆயுள் பெறும்பொருட்டுத் தேவர்களும் அசுரர்களும் திருமாலைத் தலைவராகக் கொண்டு, மந்தர மலையை மத்தாக நாட்டி, வாசுகியைக் கயிறாகக் கொண்டு, திருப்பாற்கடலைக் கடைந்தனர். அப்பொழுது வருத்த மிகுதியால் வாசுகி விடத்தினைக் கக்கிற்று; அந்த நஞ்சு உறுத்துக் கொடியதாயெழுந்து பொங்கி அவர்களை மேனிகருகத் தீய்த்தது; அவர் ஓலமிட்டு ஓடிச் சிவபெருமானிடம் வேண்ட அவர் அவ்விடத்தினைச் சிறிதாக ஆக்கிக் கொணரும்படி ஆலாலசுந்தரரை ஏவினார். அவர் அவ்வாறே அதனைச் சிறிதளவிலாகத் திரட்டிக் கொணர அதனைச் சிவபெருமான் உண்டருளினார். தேவர்கள் வேண்டுதலின்படி அம்மையார் திருக் கரத்தினால் அதனை இறைவரது கழுத்தளவில் தடுத்து நிறுத்தியருளினார். இறைவரது எரிபோன்ற சிவந்த திருமேனியில் கண்டத்தில் அந்த நஞ்சு சிறிது கருமைகொண்டு விளங்கிப், பிறைசூடுதல் - கங்கை தாங்குதல் - போலச் சிவனது பெருங் கருணையின் வெற்றிப்பாட்டினையும் முழுமுதற் றன்மையினையும் மேம்பாடாக விளக்கிக் கொண்டு நிற்கிறது. இவ்வரலாறு மாபுராணங்களெல்லாவற்றினும் பேசப்பட்டுள்ளது. ''பொங்கி நின்றெழுந் தகட னஞ்சினைப், பங்கி யுண்டதோர் தெய்வமுண் டோசொலாய்'' (குறுந்); இவ்வாறு இறைவர் விடமுண்ட பின்னர்த் தேவர்களும் அசுரர்களும் பாற்கடலில் எழுந்த அமுதமுண்டு நீண்ட காலம் ஆயுள் பெற்று வாழ்ந்து காலாந்தரத்தில் தத்தம் காலவெல்லை கூடிய போது இறந்தும், மீளப் பிறந்தும் வருகின்றனர். ஆனால் எம் முதல்வராகிய சிவபிரான் ஏனையோரைச் சாகச்செய்யும் நஞ்சினை உண்டும் தாம் இறந்துபடாமல் நித்தியராக விளங்குகின்றார். இதனாலும் ''வேத முதல்வன் முதலாகி''ய தன்மை விளக்கப்பட்டமை காண்க.

வெங்குரு - சீகாழியின் நான்காவது பெயர்; அசுரர் வழிபட்டமையால் இப்பெயர் போந்ததென்பர். இறைவரது முழுமுதற் றன்மையைப் பிள்ளையார் இங்குப் புராணங்கள் மூலமாக எடுத்து உபதேசித்த குறிப்புப்பெற **வெங்குரு வேந்தர்** என்ற இவ்வாற்றாற் குறித்தார். **843**

2742. **(இ-ள்)** ஆன அற்றன்றி... பாட்டில் - பதிகம் நிறைவாயின ''அற்றன்றி யந்தண்'' என்று தொடங்கும் திருப்பாட்டின்கண்; கூடல்...தேற - நான்மாடக்கூடல் என்னும் மதுரையில் முச்சங்கங்களை நிறுவிய பாண்டியன் தேறவும்; தேறு... ஏடு - தெளிவு பெறாத கீழ்களாகிய சமணர்கள் வாதத்திற் கூறிய எல்லையில் முடிவு காணும்படி இட்ட ஏடு; எதிர்ந்து... அன்பு - நீரில் எதிர்த்து மேற்செல்லுமானால் அதனால் உறுதிபெறப்படும் உண்மைப் பொருளாவது ஈசனிடத்து அன்பேதான்; என்றனர் ஞானம் உண்டார் - என்று சிவஞானவமுதுண்டருளிய பிள்ளையார் கூறிய ருளினார்.

["அற்றன்றி யந்தண் **மதுரைத்தொகை** யாக்கி ஞனும்
தெற்றென்று **தெய்வந் தெளியார்கரைக் கோலே தெண்ணீர்ப்**
பற்றின்றிப் பாங்கெதிர் விரவும் பண்பு நோக்கிற்
பெற்றௌன் றுயர்த்த பெருமான் பெருமானு மன்றே!—11]

2742. **ஆன"வற் றன்றியந்தண்"** ணெனுந்திருப் பாட்டிற் **கூடன்**
மாநகர்ச் சங்கம் வைத்தவன் தேறத் தேரு
ஈனர்க எல்லேக் கிட்டவே டெதிர்ந்து செல்லில்
ஞானமீ சன்பாலன் பென்றனர் **ஞான முண்டார்.** 844

---

*(**வி-ரை**) **ஆன** - பதிகப் பகுதி நிறைவாயின. மேல்வரும் பாசுரம் திருக்கடைக்காப்பு ஆதலின் இஃதே பதிகநிறைவு என்க. "பாசுரஞ் சொன்ன பத்தும்" (12) என்பது காண்க. "பாடியவப் பதிகப்பாட் டான பத்தும் பாடனிரம் பியபின்னும்... நீடுதிருக் கடைக்காப்பி லரிது வேண்டி நின்றெடுக்க" (2480) என்றமையால் இந்நியமம் கண்டுகொள்க; **கருதும்** - என்றும் (2738); **பாவுற்ற** - என்றும் (2740) அவ்வப் பாட்டுக்களுக்கு ஏற்ற அடைமொழிகள் தந்தோதியமையும் காண்க.*

*"**அற்றன்றி அந்தண்" எனும்** - "அற்றன்றி யந்தண்" என்று தொடங்கும் பதினொராவது திருப்பாட்டு.*

***கூடல் மாநகர்ச் சங்கம் வைத்தவன்** - பாண்டியன். **சங்கம்** - தமிழ் முச்சங்கங்கள். **சங்கம் - "அந்தண் மதுரைத் தொகை"** என்பது பதிகம். இது பாண்டியர்களுக்குப் பொதுவாய்க் கூறும் அடைமொழி. இப் பாண்டியர் சங்கம் வைத்தவர் என்பதன்று; முன்னோருள் ஒருவர் செய்த சிறப்புச் செய்கை அம்மரபில் பின்வரும் எல்லோருக்கும் ஏற்றியுரைக்கும் நிலே காண்க. பாண்டியர்கள் தமிழ் முச்சங்கங்கள் நிறுவிய வரலாறு இறையனுரகப் பொருளுரையாலும் திருவிளையாடற் புராணத்தாலும் அறிக.*

***வைத்தவன் தேற(வும்) தேரு ஈனர் எல்லேக் கிட்ட ஏடு** - என்க. ஞானம் ஈசன்பால் அன்பே என்று இப்பாட்டின் உண்மையினே அரசன் தேறக் கூறியருளினுர்; **தேரு ஈனர்** - சமணர்கள்; சுரத்திலும் தீயிலுமாக ஒருமுறைக் கிருமுறையும் சிவபெருமானது உண்மை தெளிவிக்கப்படினும் தெளியாது பின்னும் நீரில் ஏடு எதிர்ந்து செல்லும் வாதம் வேண்டி ஓட்டினுர்களாதலின் இவ்வாறு கூறினுர்.*

***எல்லேக் கிட்ட** - வாதத்தின் முடிவாக - ஓட்டியது. இவ்வொரு "தனிவாதில் அழிந்தோமாகில்" இனியும் வேறு வேண்டோம்; எங்களே "வெங்கழு வேற்றுவானிவ் வேந்தனே" என்று வாதத்துக்கு எல்லே வகுத்தமை குறித்தது (26-6); **எல்லேக்கு** - எல்லேயாக; **இட்டது** - வகுத்தது; **ஏடு** - வாதத்தில் உண்மை காண இடும் ஏடு; இதனேக் **"கரைக்கோலே"** என்பது பதிகம். **கரைக்கு** - எல்லேக்கு.*

***எதிர்ந்து செல்லில்** - மேலிருந்து கீழ்நோக்கிச் செல்லும் நீரின் வேகத்துட்பட்டுக் கீழ்நோக்கிச் சென்றுவிடாது எதிர்ந்து மேலே சென்ருல்.*

விடமுண்ட சரிதம் அவற்றுளெல்லாம் பேசப்பட்டதனுல் விளங்கும் என்று காண்க. இக் குறிப்புப் பெறத் **தோலாமறை** என்ருர். "மறைவல்ல" - (பதி).

ஏலாவகை - ஏலுதல் - பொருந்துதல்; பொறுத்தல்; தாங்கிக் கொள்ளுதல்.

சுட்ட - கருக்கிய; தீய வைத்த. **நஞ்சுண்டு** - உண்டதனுல்.

இறவாமை - அன்று அந்த நஞ்சினுல் சாவாதபடி. மற்றபடி அவர்கள் காலாந்தரத்தில் இறத்தற்குரியவர்களேயாம்.

சிவபெருமான் விடமுண்ட வரலாறு:— ஒரு காலத்தில் அமிர்தமுண்டு நீண்ட ஆயுள் பெறும்பொருட்டுத் தேவர்களும் அசுரர்களும் திருமாலைத் தலைவராகக் கொண்டு, மந்தர மலையை மத்தாக நாட்டி, வாசுகியைக் கயிருகக் கொண்டு, திருப்பாற்கடலைக் கடைந்தனர். அப்பொழுது வருத்த மிகுதியால் வாசுகி விடத்தினைக் கக்கிற்று; அந்த நஞ்சு உறுத்துக் கொடியதாயெழுந்து பொங்கி அவர்களை மேனிகருகத் தீய்த்தது; அவர் ஓலமிட்டு ஓடிச் சிவபெருமானிடம் வேண்ட அவர் அவ்விடத்தினைச் சிறிதாக ஆக்கிக் கொணரும்படி ஆலாலசுந்தரரை ஏவினுர். அவர் அவ்வாறே அதனைச் சிறிதளவிலாகத் திரட்டிக் கொணர அதனைச் சிவபெருமான் உண்டருளினுர். தேவர்கள் வேண்டுதலின்படி அம்மையார் திருக் கரத்தினுல் அதனை இறைவரது கழுத்தளவில் தடுத்து நிறுத்தியருளினுர். இறைவரது எரிபோன்ற சிவந்த திருமேனியில் கண்டத்தில் அந்த நஞ்சு சிறிது கருமைகொண்டு விளங்கிப், பிறைசூடுதல் - கங்கை தாங்குதல் - போலச் சிவனது பெருங் கருணையின் வெற்றிப்பாட்டினையும் முழுமுதற் றன்மையினையும் மேம்பாடாக விளக்கிக் கொண்டு நிற்கிறது. இவ்வரலாறு மாபுராணங்களெல்லாவற்றினும் பேசப்பட்டுள்ளது. "பொங்கி நின்றெழுந் தகட னஞ்சினைப், பங்கி யுண்டதோர் தெய்வமுண் டோசொலாய்" (குறுந்); இவ்வாறு இறைவர் விடமுண்ட பின்னர்த் தேவர்களும் அசுரர்களும் பாற்கடலில் எழுந்த அமுதமுண்டு நீண்ட காலம் ஆயுள் பெற்று வாழ்ந்து காலாந்தரத்தில் தத்தம் காலவெல்லை கூடிய போது இறந்தும், மீளப் பிறந்தும் வருகின்றனர். ஆனுல் எம் முதல்வராகிய சிவபிரான் ஏனையோரைச் சாகச்செய்யும் நஞ்சினை உண்டும் தாம் இறந்துபடாமல் நித்தியராக விளங்குகின்ருர். இதனுனும் "வேத முதல்வன் முதலாகி"ய தன்மை விளக்கப்பட்டமை காண்க.

வெங்குரு - சீகாழியின் நான்காவது பெயர்; அசுரர் வழிபட்டமையால் இப்பெயர் போந்ததென்பர். இறைவரது முழுமுதற் றன்மையைப் பிள்ளையார் இங்குப் புராணங்கள் மூலமாக எடுத்து உபதேசித்த குறிப்புப்பெற **வெங்குரு வேந்தர்** என்ற இவ்வாற்ருற் குறித்தார். *843*

2742. **(இ-ள்)** ஆன அற்றன்றி... பாட்டில் - பதிகம் நிறைவாயின "அற்றன்றி யந்தண்" என்று தொடங்கும் திருப்பாட்டின்கண்; கூடல்...தேற - நான்மாடக்கூடல் என்னும் மதுரையில் முச்சங்கங்களை நிறுவிய பாண்டியன் தேறவும்; தேரு... ஏடு - தெளிவு பெருத கீழ்களாகிய சமணர்கள் வாதத்திற் கூறிய எல்லையில் முடிவு காணும்படி இட்ட ஏடு; எதிர்ந்து... அன்பு - நீரில் எதிர்த்து மேற்செல்லுமாஞல் அதனுல் உறுதிபெறப்படும் உண்மைப் பொருளாவது ஈசனிடத்து அன்பேதான்; என்றனர் ஞானம் உண்டார் - என்று சிவஞானவமுதுண்டருளிய பிள்ளையார் கூறிய ருளினுர்.

["அற்றன்றி யந்தண் **மதுரைத்தொகை** யாக்கி ஞனும்
தெற்றென்று **தெய்வந் தெளியார்கரைக் கோலே தெண்ணீர்ப்**
பற்றின்றிப் பாங்கெதிர் விரவும் பண்பு நோக்கிற்
பெற்றுரேன் றுயர்த்த பெருமான் பெருமானு மன்றே!—11]

2742. **ஆன"வற் றன்றியந்தண்"** ணெனுந்திருப் பாட்டிற் **கூடன்**
மாநகர்ச் சங்கம் வைத்தவன் தேறத் தேரு
ஈனர்க ளெல்லேக் கிட்டவே டெதிர்ந்து செல்லில்
ஞானமீ சன்பாலன் பென்றனர் **ஞான முண்டார்.** 844

(வி-ரை) ஆன - பதிகப் பகுதி நிறைவாயின. மேல்வரும் பாசுரம் திருக்கடைக்காப்பு ஆதலின் இஃதே பதிகநிறைவு என்க. "பாசுரஞ் சொன்ன பத்தும்" *(12)* என்பது காண்க. "பாடியவப் பதிகப்பாட் டான பத்தும் பாடனிரம் பியபின்னும்... நீடுதிருக் கடைக்காப்பி லரிது வேண்டி நின்றெடுக்க" *(2480)* என்றமையால் இந்நியமம் கண்டுகொள்க; **கருதும்** - என்றும் *(2738)*; **பாவுற்ற** - என்றும் *(2740)* அவ்வப் பாட்டுக்களுக்கு ஏற்ற அடைமொழிகள் தந்தோதியமையும் காண்க.

"அற்றன்றி அந்தண்" எனும் - "அற்றன்றி யந்தண்" என்று தொடங்கும் பதினெராவது திருப்பாட்டு.

கூடல் மாநகர்ச் சங்கம் வைத்தவன் - பாண்டியன். **சங்கம்** - தமிழ் முச்சங்கங்கள். **சங்கம் - "அந்தண் மதுரைத் தொகை"** என்பது பதிகம். இது பாண்டியர்களுக்குப் பொதுவாய்க் கூறும் அடைமொழி. இப் பாண்டியர் சங்கம் வைத்தவர் என்பதன்று; முன்னோருள் ஒருவர் செய்த சிறப்புச் செய்கை அம்மரபில் பின்வரும் எல்லோருக்கும் ஏற்றியுரைக்கும் நிலே காண்க. பாண்டியர்கள் தமிழ் முச்சங்கங்கள் நிறுவிய வரலாறு இறையனரகப் பொருளுரையாலும் திருவிளையாடற் புராணத்தாலும் அறிக.

வைத்தவன் தேற(வும்) தேரு ஈனர் எல்லேக் கிட்ட ஏடு - என்க. ஞானம் ஈசன்பால் அன்பே என்று இப்பாட்டின் உண்மையினே அரசன் தேறக் கூறியருளினுர்; **தேரு ஈனர்** - சமணர்கள்; சுரத்திலும் தீயிலுமாக ஒருமுறைக் கிருமுறையும் சிவபெருமானது உண்மை தெளிவிக்கப்படினும் தெளியாது பின்னும் நீரில் ஏடு எதிர்ந்து செல்லும் வாதம் வேண்டி ஒட்டினுர்களாதலின் இவ்வாறு கூறினுர்.

எல்லேக் கிட்ட - வாதத்தின் முடிவாக - ஒட்டியது. இவ்வொரு "தனிவாதில் அழிந்தோமாகில்" இனியும் வேறு வேண்டோம்; எங்களே "வெங்கழு வேற்றுவானிவ் வேந்தனே" என்று வாதத்துக்கு எல்லே வகுத்தமை குறித்தது *(26-6)*; **எல்லேக்கு** - எல்லேயாக; **இட்டது** - வகுத்தது; **ஏடு** - வாதத்தில் உண்மை காண இடும் ஏடு; இதனேக் **"கரைக்கோலே"** என்பது பதிகம். **கரைக்கு** - எல்லேக்கு.

எதிர்ந்து செல்லில் - மேலிருந்து கீழ்நோக்கிச் செல்லும் நீரின் வேகத்துட்பட்டுக் கீழ்நோக்கிச் சென்றுவிடாது எதிர்ந்து மேலே சென்றால்.

[''நல்லார்கள் சேர்புகலி ஞானச் பந்த னல்ல
எல்லார்க ளும்பரவு மீசனை யேத்து பாடல்
பல்லார்க ளும்மதிக்கப் பாசுரஞ் சொன்ன பத்தும்
வல்லார்கள் வானோ ருலகாளவும் வல்ல ரன்றே''—12]

2743. **வெறியார்** பொழிற் **சண்பையர் வேந்தர்மெய்ப்** பாசுரத்தைக்
குறியே றியவெல்லை யறிந்துகும் பிட்டே னல்லேன்
சிறியே னறிவுக்கவர் தந்திருப் பாதந் தந்த
நெறியே சிறிதியா னறிநீர்மைகும் பிட்டே னன்பால். 845

ஞானம் ஈசன்பால் அன்பு - *செல்லில் அதனால் காண நாட்டப்பெறும்* **உண்மையாவது** *சிவனிடத்துச் செல்லும் அன்பே உறுதிப்பொருளாவது. ''தெண்ணீர்ப் பற்றின்றிப் பாங்கெதிர் விரவும் பண்பு நோக்கில், பெற்றொன்றுயர்த்த பெருமான் பெருமானு மன்றே''* **என்ற** *பதிகக்கருத்து இஃது என்று காட்டியபடி. இப்பதிகப்பகுதி இச்சரித வரலாற்றுக்கு* **வலிய** *அகச்சான்றாய் விளங்குதல் காண்க.* **பெருமான் பெருமானு மன்றே** - *பெருமானே பெருமான் - தலைவர் - முதல்வர்; ஏனையோர் அல்லர்; ஆதலின்* **அவன்பா லன்புசெய்தல் கடன் என்ற பதிகக்குறிப்பை எடுத்துக் காட்டியவாறு கண்டுகொள்க.**

பாட்டில் - அன்பு - என்றனர் - *என்று கூட்டுக.*

ஞானம் ஈசன்பால் அன்பே என்றனர் ஞானமுண்டார் - *ஞானமுண்டவராதலின் சிவஞானமே பொருள்; (ஏனைய எல்லாம் அவஞானம்) என முடித்து அருளினார் என்று* **காரணக்** *குறிப்புப்பட ஞானமுண்டார் என இவ்வாற்றால் கூறினார்.*

என்ற அத் திருப்பாட்டில் - மாநகரத்துச் சங்கம் - வைத்தவன் தேற்ற - ஏடு நீரெதிர்ந்து - அன்பே என்றனர் - என இப்பாட்டின் அங்கங்கும் பாடபேதம் கொண்டு இப்பாட்டினை முன்பின் பாட்டுக்களாகிய ஐஞ்சீர்க் கலிநிலைத்துறையா யன்றி வேறு - அறுசீர்விருத்தம் - ஆக்கி உரைப்பன சில பதிப்புக்கள்; அப்பாடம் சொற்பொருள் **யாப்புப்** *பொருத்தங்களின்மையாலும், பிறவாற்றாலும் சிறவாமை கண்டுகொள்க.* ***844***

2743. **(இ-ள்)** *வெறியார்...பாசுரத்தை - மணங் கமழ்கின்ற சோலைசூழ்ந்த சீகாழி மன்னவராகிய பிள்ளையார் அருளிய மெய்ப்பொருள் விரித்த திருப்பாசுரத்தை; குறிஏறிய... அல்லேன் - அதன் அருட்குறிப்புச் செல்லும் அளவு அறிந்து போற்றினே னல்லேன்; (ஆயின் இதுகாறும் போற்றி உரைத்தவாறு என்னை? எனில்) சிறியேன்...அறிநீர்மை - சிறியவனாகிய எனது சிற்றறிவுக்கு அவர் தம் திருவடிகள் உணர்த்தியருளிய வழியே நின்று சிறிது அளவில் நான் அறிந்த தன்மை பற்றுக் கோடாகக் கொண்டு;அன்பால் கும்பிட்டேன் - (அறிவு காரணமாக அன்றி) அதன்பால் வைத்த அன்புகாரணமாகக் கும்பிட் டேத்தினேன்.*

(வி-ரை) *திருப்பாசுரப் பதிகத்தின் திருக்கடைக்காப்புப், பதிகத்தினை முடித்துக் காட்டிப் பயனும் அருள்வதுபோல அதனைச் சுட்டி எழுந்த இத்திருப்பாட்டும்* **ஆசிரியர்**

வேறு

2744. **திரு**வுடைப் பிள்ளை யார்தந் திருக்கையா லிட்ட **வேடு**
மருவுறும் **பிறவி யாற்றின் மாதவர் மனஞ்சென் றூற்போல்**
பொருபுனல் வைகை யாற்றி **லெதிர்ந்துநீர் கிழித்துப் போகும்**
இருநிலத் தோர்கட் கெல்லா **மிதுபொரு ளென்று காட்டி.** 846

அத்திருப்பதிகத்திற்கு வகுத்த பேருரைக்குத் திருக்கடைக்காப்பாக நின்று அதனை முடித்துக்காட்டி அதன் தாற்பரியமும் பயனும் அருளியவாறு கண்டுகொள்க.

வெறி - மணம். **வெறியார் பொழில்** - பொழிலின் மலர்கள்தாம் இருந்த பொழிலின் இடத்தின்கண் ணிருந்தபடியே மணம் எல்லாத் திக்குக்களினும் பரவச்செய்தல் போலப் பிள்ளையார் பதிகமும் சிவமணத்தை எங்கும் பரப்புவன என்பது குறிப்பு. **வெறியோர்** - என்பது பாடமாயின் வெறியும் அழகும் உடைய என்க.

குறி ஏறிய எல்லை - பிள்ளையாரது திருவுள்ளத்துட் கொண்ட குறிப்புச் சென்று பரவிநிற்கும் அளவாகிய எல்லாம். **குறி** - குறிப்பு; குறிக்கோள்; "உண்மைநின்ற பெருகுநிலைக் குறியாளர்" (தாண் - செங்காட்டங்குடி).

சிறியேன்...நெறியே - சிறியேன் - நெறி - யானும் சிறுமையுடையேன், எனது அறிவும் சிறிது; ஆதலின் பிள்ளையாரின் அருளுள்ளக் குறிப்புச் செல்லும் அளவு என் அறிவுசென் றெட்டாது. **நெறி** - அளவு.

அவர்தந் திருப்பாதம் தந்த நெறியே - சிறிது யான் அறிநீர்மை - என் சிறிய அறிவுதானும் தானே விளங்கிக்கொள்ளமாட்டாது அவரது திருவடிப் பற்றுகிய ஞானத்தால் என் அறிவுக்கேற்றபடி அறிந்த அளவு. திருவடி, முழுதும் உணர்த்து மாற்றலும் கருணையும் உடையதாயினும் என் அறிவாகிய கொள்கலம் சிறிதாதலின் அது கொள்ளும் சிறிய அளவுக்கேற்றபடி என்பார் **சிறிது யான் அறிநீர்மை** என்றார்.

கும்பிட்டேன் - திருப்பாசுரத்தின் கருத்தும் பொருளும் எடுத்துரைத்து அதனை வழிபட்டதாம் என்க.

அன்பால் - ஆற்றலேனும் அறிவேனும் ஞானமேனும் காரணமின்றி அன்பே காரணமாக என்க. **எல்லார் - பல்லார்** - (பதிகம்) புறச் சமயிகளையும் உள்ளிட்டது பதிகப் பெயர்.

மெய்ப் பாசுரம் - உண்மைப் பொருணிலைகாட்டும் பதிகம்.

குறிப்பு:— இச்செய்யுள் சில பிரதிகளில் இல்லை. *845*

2744. **(இ-ள்)** திருவுடை.... ஏடு - சைவ மெய்த்திருவையுடைய பிள்ளையார் தமது திருக்கையினால் இட்ட அவ்வேடு; மருவுறும்...போல் - பொருந்திவரும் பிறவியாகிய ஆற்றிலே மாதவர்களுடைய மனமானது எதிர்ந்து செல்லுமாறுபோல; பொருபுனல் வைகை ஆற்றில் - மிக்கு ஓடும் நீரினையுடைய வைகையாற்றிலே; இருநிலத்தோர்கட் கெல்லாம்...

காட்டி - பெரிய நிலவுலகின் வாழ்வார்கட்கெல்லாம் இதுவே உண்மைப் பொருள் உடையது என்று எடுத்துக்காட்டி; எதிர்ந்துநீர் கிழித்துப் போகும் - கீழ்நோக்கிச் செல்லும் நீரின் ஓட்டத்தினை எதிர்ந்து நீரினடுவுள் அதனைக் கிழித்துக் கொண்டு மேனோக்கிப் போவதாயிற்று.

(வி-ரை) திருவுடை - திரு - சைவ மெய்த்திரு; அருள்திரு; முத்தித்திரு. ஈண்டுத் திருப்பாசுரம் பாடி ஞானோபதேசம் செய்தவகையால் பரசமய நிராகரிப்பும் சைவத்தின் ஆக்கமும் செய்து சிவஞானத்தை அருளியமை குறிப்பு.

திருக்கையால் இட்ட ஏடு - "நிலவும் திருஏடு திருக்கையால் நீட்டி இட்டார்" (2719) என்று முன் கூறியபடி இட்ட; இடையில் திருப்பாசுர விரிவுரை கூறியருளியமையால் சரிதத் தொடர்ச்சி காட்ட முன் கூறியதனையே மீண்டுந் "திருக்கையால் இட்ட ஏடு" என்றருளினர்.

மருவுறும் பிறவி ஆறு - உயிர்களுக்குப் பிறவி ஒன்றன்பின் ஒன்றாக இடையறாது தொடர்பாய் வருதலின் பிறவி ஆறு என்று உருவகித்துக் கூறினர்; "பிறவாக அநாதி" என்று நூல்களுட் கூறும் மரபும் இது. **மருவுதல்** - இடையறாது தொடர்ந்து வினைக்கீடாக வந்து பொருந்துதல்.

பிறவி ஆற்றில் மாதவர் மனம் சென்றாற்போல் - மாதவர் - சரியையாதி சிவநெறி நிற்போர். சிவநெறி நிற்றல் தவமெனப்படும்; ஏனையவெல்லாம் இவற்றிற்கனு கூலமாய் நிற்கும் அளவே தவமென் றுபசரிக்கப்படும் அல்லாதன அல்லவாய் அவமெனப்படும். சிவநெறியே பிறவிவழிச் செல்லாது உயிர்களை மேலேறச் செய்யவல்லதாதல் குறிப்பு. வினையும் பயனும்பற்றி எழுந்த உவமம்.

மாதவர் மனம் பிறவி ஆற்றில் எதிர்த்துச் செல்லுதலாவது மாதவர்களது மனம் ஏனையோர் மனம்போலப் புலன்வழிச் சென்று பிறவி ஏறவிடாது, புலன்களைத் தம் ஏவல்வழி நிற்கச்செய்து பிறவியைக் கடக்கவல்லனவாதல். "தம்மையைந்து புலனும்பின் செல்லுந் தகையார்" (1207); இவ்வுவமம் மிகச் சிறந்த பொருளை விளக்குவது. இவ்வாறு உவமை காணுதல் ஆசிரியரது தெய்வக் கவி நலங்களுள் ஒன்று. "நிலைப்பட்ட மெய்யுணர்வு நேர்பட்ட போதில், அலைப்பட்ட வார்வமுதற் குற்றம்போலாயினர்" (634) என்றும், "நிலவியவிரு வினைவலையிடை நிலைசுழல்பவர் நெறிசேர், புலனுறுமன னிடைதடைசெய்த பொறிகளினளவுளவே" (734) என்றும் முன்கூறிய உவமைகளையும் ஆண்டுரைத்தன வற்றையும் காண்க. ஈண்டுக் கூறும் பொருட் கருத்தினை அவ்வுவமைகள் விளக்குவனவாம் என்பதும் கண்டுகொள்க.

இதுவே பொருள் என்க. பிரிநிலை ஏகாரம் தொக்கது. "நீடுமெய்ப் பொருளின் உண்மை நிலைபெறும் தன்மை எல்லாம்" எழுதுக என்று (2694) அமணர் கேட்டனராதலின் அந்த மெய்ப்பொருள், முப்பொருள் நிச்சயமாம் சிவஞானமாகிய அழியாத மெய்ப்பொருள் என்றலுமாம்.

2745. **''எம்பிரான் சிவனே யெல்லாப் பொருளு''**மென் றெழுது மேட்டிற்
றம்பிரா னருளால் **வேந்தன் றன்னைமுன் னோங்கப் பாட**
அம்புய மலராண் மார்ப **னனபாய னென்னுஞ் சீர்த்திச்**
செம்பியன் செங்கோ லென்னத் தென்னன்கூ னிமிர்ந்த தன்றே. 847

பொருள் என்று காட்டிப் போகும் - என்று கூட்டுக. சமணர் ஒட்டிய வகையால் எதிர்ந்து ஏகுதலினுல் காட்டிற்று. பிள்ளையார் ஈண்டு உபதேசமுகத்தால் திருப்பாசுரம் இதுபொருள் என்று கூறியருளியபடி அப்பாசுரம் வரைந்த ஏடும் மெய்ப்பொருள் காட்டிற்று என்ற நயமும் காண்க.

திருவுடைப் பிள்ளையார் தம் திருக்கையால் இட்ட ஏடு - பொருள்காட்டிப் போகும் பிள்ளையார் திருவுடையாராதலின் அவர் மெய்ப்பொருள் காட்டுதல் தகும்; ''பெம்மானிவனன்றே'' என்று சிவஞானம் ஊட்டப்பெற்ற அன்றே பொருள் காட்டினுராதலின் அஃதவர்க் கியல்பாம்; அவர் தம் திருக்கையால் இட்ட ஏடும் காட்டிச் செல்லும்; அவர் திருக்கையால் இடப்பெறுதலின் என்ற குறிப்பும் நயமும் காண்க. **பொருள்** - ''எம்பிரான் சிவனே எல்லாப் பொருள்களும் என்று'' (2745) இதனைத் தொடர்ந்து வரும்பாட்டில் விரித்துத் திருப்பாசுரப் பதிகக் கருத்துக் கூறுதல் காண்க.

இருநிலத்தோர்கட் கெல்லாம் காட்டி - **எல்லா நிலத்தோர்** கட்கும் என்றலுமாம். விண்மண் முதலிய எல்லாப் புவனத்தோர்க்கும்; முற்றும்மை தொக்கது. எல்லாம் என்றதனுல் அன்று கண்டாரேயன்றி இனி எதிர்காலத்து வருபவர்க்கு எல்லாம் என்றதுமாம்; **எல்லாம் இதுபொருள்** என்று கூட்டி உரைப்பினும் ஆம். மேல்வரும் பாட்டுப் பார்க்க.

எதிர்த்து நீர்—என்பதும் பாடம். ***846***

2745. **(இ-ள்)** எம்பிரான்...ஏட்டில் - எமது பெருமானுகிய சிவனே முழுமுதற் பொருள் ஆவான் என்று எழுதும் அந்த ஏட்டிலே; தம்பிரான்...பாட- தமது பெருமானது அருளாலே ''வேந்தனு மோங்குக'' என்று அரசனை ஓங்கும்படி பாடியருளியமையாலே; அம்புயமலராள்... என்ன - இலக்குமியை மார்பில் உடைய அனபாயன் என்னும் பெயருடைய சிறப்புப் பொருந்திய சோழ அரசனது செங்கோலினைப் போல்; தென்னன் கூன் அன்றே நிமிர்ந்தது - பாண்டியனது கூனும் அப்பொழுதே நிமிர்ந்தது.

(வி-ரை) எம்பிரான் சிவனே எல்லாப் பொருளும் என்று - இது சிவபெருமானது முழுமுதற் றன்மை குறித்தது; சட சித்தாகிய எல்லாப் பொருள்களுள்ளும் நிறைந்த சர்வவியாபி என்னும் எங்குநிறைவாம் தன்மை குறித்ததென்றலுமாம். ''எப்பொருளு மாக்குவா னீசனே'' (1969) என்னும் திருப்பாட்டின் கருத்தும் ஈண்டு வைத்துக் காணத்தக்கது. **எல்லாம்** - மெய்ப்பொருளின் முடிந்தமுடிபு என்க. ''ஞானத்திரளாய் நின்ற பெருமான் நல்ல வடியார்மேல், ஊனத் திரளை நீக்கு மதுவு முண்மைப் பொருள்போலும்'' (பிள்.தேவா - திருவண்ணமலை); இது திருப்பாசுரக் கருத்தாகிய முதல்வனது **''அருள்''**, ''மேலாங் கருணைத் திறம்'' (2737) என அப்பதிகத்தின் இருதயத்தில் வைத்துக்காட்டிய நிலைகுறித்தது.

ஏட்டில் - பாட - ஏடு - என்றது - இங்கு ஏட்டில் எழுதிய பதிகத்தில் என்ற பொருளில் வந்தது. ஏடு - அதனில் எழுதிய பதிகத்துக்காகியது ஆகுபெயர்.

வேந்தன்றன்னை முன் ஓங்கப்பாட - "வேந்தனும் ஓங்குக" என்றது பதிகம். **தன்னை முன் - பாட** - பதிகத்துள் **வேந்தனும்** என்றது பொதுப் பெயராய்ப் பின் வரும் மன்னர்கள் எல்லாரையும் குறிக்குமாயினும் அவ்வாறு குறிக்கும் மன்னர்களுள் முதலில் வருபவர் இவ்வரசனுதலின் அதன் பயன்பெற்றனன் என்பதாம். **முன்** என்ற குறிப்புமது. இனி **வேந்தனும்** என்ற சிறப்பும்மையால் இதுவரை சமண் சார்ந்து "முன்செய்த தீவினைப் பயத்தினுலே, அந்நெறிச் சார்வு தன்னை அறமென நினைந்து நின்ற" னுயினும் (2498) இப்போது பிள்ளையார் "தீண்டித் திருநீறு பூசப்பெற்று முன்னைவல் வினையு நீங்கி முதல்வனை அறியுந் தன்மை துன்னினுன் வினைக ளொத்துத் துலையென நிற்ற லாலே" (2717) என்ற நிலைபெற்று ஞானேபதேசமும் பெறுந்தகுதி பெற்றமையால் "ஆல வாயிலான், பாலதாயினுர் ஞால மாள்வரே" (தேவா) என்று தொடக்கத்திற் போந்த அருட் குறிப்பின்படி அந்நிலை பெற்ற இவ்வேந்தனும் குறிக்கப்படுதல் காண்க. **முன்** - முதற் பாசுரத்தில் என்றலுமாம்.

ஓங்க - ஓங்குக என்ற பதிகம் அரசனது உயிரைப் பற்றிய நன்மைகளும் சிறப்பும் குறிக்குமாயினும் சொல்லாற்றலால் உடலைப்பற்றிய நிமிர்ச்சியாகிய ஓங்குதலும் குறித்து அப்பயன் விளைத்தது; இது பிள்ளையாரது அருள்மெய்த் திருவாக்கின் சிறப்பு. "குரும்பை ஆண்பனை யீன்குலை யோத்தூர்" (தேவா) என்று "ஈனுக" என்று கட்டளையிடாமலே சிறப்பாக இயல்பு கூறியமாத்திரையான் அவ்வாக்குக்கேற்ப ஆண்பனைகள் பெண்பனைகளாக உடலமைப்பின் மாறுவதும், அவை காலாந்தரத்திற் சிவத்தைக்கூடி உயிர்ச்சிறப்பான் முத்தி பெறுவதும் ஆகிய வரலாறு இங்குக் கருதத்தக்கது. "வாய்மை குலவுதலால்"; "பெண்ணையாகி" (2878); "காலங்கள் கழித்துச் சிவமே கூடினவால்" (2881) என்ப காண்க. அன்ன பிறவும் கண்டுகொள்க.

அம்புய மலராள் மார்பன் - அம்புய மலராள் - இலக்குமி. அரசர்களைத் திருமாலின் கூறுகச் சொல்வதும், இலக்குமி திருமாலின் மார்பில் வாழ்கின்ருள் என்பதும் மரபு.

அனபாயன்...செம்பியன் - ஆசிரியர்பால் வேண்டி இப்புராணம் பாடுவித்த அரசர்பெருமான். இவருக்குக் குலோத்துங்கர், அபயன், திருநீற்றுச் சோழர் முதலிய பல பெயர்களுண்டு; ஆயினும் அனபாயர் என்ற பெயரையே ஆசிரியர் மிகவும் வழங்குகின்ருராதலின் அதுவே பெருவழக்கில் நிகழ்ந்திருந்தது என்பது கருதப்படும்.

செம்பியன் செங்கோ லென்னக் - கூன் - நிமிர்ந்தது - செங்கோல் நிமிர்ந்துள்ள தன்மைபோலக் கூனும் நேராக நிமிர்ந்த தன்மை பெற்றது. செங்கோல் நிமிர்தலாவது (கோட்டம்) கோணுதலின்றி நேர்செல்லுதல்; மெய்ப்பற்றி வந்த உவமம். செங்கோல் - அரசாட்சியைக் குறிக்கும்.

2746. **ஏடுநீ** ரெதிர்ந்து செல்லும் பொழுதிமை யோர்க ளெல்லாம்
நீடிய வாழ்த்திற் போற்றி நிமிர்ந்தபூ மாரி தூர்த்தார்;
ஆடியல் யானை **மன்ன னற்புத மெய்தி நின்றான்;**
பாடுசே **ரமண ரஞ்சிப் பதைப்புடன் பணிந்து நின்றார்.** 848

செங்கோல் - என்ன - நிமிர்ந்தது - என்ற உவமைக் குறிப்பினால், பிள்ளையார், வேந்தனு மோங்குக என்று அவ்வரசரை வாழ்த்தியருளியதுபோல் ஆசிரியரும், அரசனது ஆட்சியின் செம்மையை வாழ்த்திய குறிப்பும், தகுதியும், அமைதியும் கண்டு மகிழ்க. இப்புராணத்தினுள் அனபாயரை ஆசிரியர் கூறியருளிய பதினொரு இடங்களுள் இது சிறந்த இடமாம்.

கூன் நிமிர்ந்தது - ஈண்டுக் கூறியவாற்றால் அதுவரையும் பாண்டியரது உடலிற் கூன் இருந்ததென்றும், அதனால் அவர்க்குக் கூன்பாண்டியர் என்று பெயர் வழங்கியதென்றும், ஈண்டு இவ்வாறு அது நிமிர்ந்தபடியால் அவர் நின்றசீர்நெடுமாறர் ஆயினார் என்றும் சரிதம் அறிவித்த திறமும் தகுதியும் காண்க. **அன்றே** - அப்பொழுதே. *847*

2746. **(இ-ள்)** ஏடு... தூர்த்தார் - பிள்ளையார் இட்டஏடு வைகையாற்றின் நீரில் முன் கூறியபடி எதிர்ந்து செல்லும்போது தேவர்களெல்லாம் நீண்ட வாழ்த்து மொழிகளினாலே துதித்து மிக்க பூமழை பொழிந்து நிலத்தை மறைத்தனர்; ஆடியல்... நின்றான் - ஆடும் இயல்பையுடைய யானைப்படையினையுடைய அரசன் அற்புதமடைந்து நின்றான்; பாடு... நின்றார் - பாடு சேரநின்ற அமணர்கள் பயந்து பதைப்புடன் தலைகுனிந்து நின்றார்கள்.

(வி-ரை) இமையோர்கள் எல்லாம் - தூர்த்தார் - சிவனருள் வெளிப்பாடு நிகழும்போது தேவர்கள் போற்றுதலும் கற்பகப் புதுப்பூமாரி பெய்தலும் நிகழும்.

தூர்த்தல் - (பூவினால்) நிலத்தை மறைத்தல்; தூவுதல் என்றலுமாம். **நிமிர்ந்த** - மிகுந்த; நிறைந்த.

ஆடியல் யானை - யானை ஆடும் இயல்புடையது. **ஆடுதல்** - எப்போதும் அசைந்துகொண்டிருத்தல்; ஆடுதலும் இயலும் (அழகும்) உடைய என்றுரைப்பாரு முண்டு.

அற்புதம் - காணுந்தோறும் இன்னதென் றறியவாராது புதிது புதிதாய் விளையுந் தன்மை. ''அற்புதம் அறியேனே'' என்ற திருவாசகம் அற்புதப் பத்துக் காண்க.

பாடுசேர் - அழிவுசேர அணியாராகிய; **பாடு** - படுதல் - அழிதல்; தோல்வி என்றுரைப்பாருமுண்டு.

பதைப்பு - அச்சம். மேல் வரநின்ற அரச நீதியாகிய கொலைத்தண்டனை பெற உள்ள அச்சம். முதலிற் பிள்ளையார் அரசன்பால் வந்து அணிமணிப் பீடத்தமர்ந்தது கண்டபோதே

---

*இதுபற்றி சேக்கிழார் *180 - 184* பக்கங்களிலும், அனபாயர் பெருமை பற்றி அதனுள் *31*-ம் பக்கத்திலும் பிறண்டும் அனபாயரைப் பாராட்டிவைத்த இடங்களைப் பற்றி *180 - 183* பக்கங்களிலும் உரைத்தவை பார்க்க. *1213*-ம் திருப் பாட்டின் உரைத்தவையும் பார்க்க.

2747. **ஆற்றின்மேற்** செல்லு மேடு தொடர்ந்தெடுப் பதற்கு வேண்டிக்
காற்றென விசையிற் செல்லுங் கடும்பரி யேறிக் கொண்டு
கோற்றொழி றிருத்த வல்ல குலச்சிறை யார்பின் சென்றார்;
ஏற்றுயர் கொடியி னாரைப் பாடினா ரேடு தங்க. 849

''அமணரெல்லாங் குறிப்பினு ளச்சங் கொண்டார்'' (2650) என்றபடி தொடக்கத்திலே **அவர்** கொண்ட அச்சம் இறுதி காட்டப் பதைப்பாக விளங்கியது.

பணிந்து - தலைகவிழ்ந்து.

நின்றான் - நின்றார் - இருதிறத்தார்பாலும் இருவேறு நிலைகள் குறித்த **சொற்பின்** வருநிலை; ''ஏறிச் சென்றார்'' (2698) என்புழிப்போலக் காண்க.

நிறைந்தபூ—என்பதும் பாடம். **848**

2747. **(இ-ள்)** ஆற்றின்மேல்... எடுப்பதற்கு - ஆற்றிலே நீரினை எதிர்ந்து **மேனோக்கிச்** செல்கின்ற அந்த ஏட்டினைத் தொடர்ந்துபோய் எடுப்பதற்காக; காற்றென.. பின் **சென்றார்** - அரசாட்சியினைத் திருந்தச் செய்யவல்ல குலச்சிறையார் காற்றுப்போல விரைந்து **செல்லும்** வேகமுடைய குதிரையின் மேல் ஏறிக் கொண்டு அவ்வேட்டின் பின் **சென்றனர்; ஏற்றுயர்...** தங்க - (பிள்ளையார்) இடபக்கொடியினையுடைய இறைவரை அந்த ஏடு **மேற்செல்லாமல்** ஓரிடத்தில் தங்கிநிற்கும்படி பாடினார்.

(வி-ரை) மேற்செல்லுதல் - ஓடும் நீரினை எதிர்த்து மேலே போதல்.

ஆறு - சிவநெறியாகிய வழி என்று கொண்டு **ஆற்றின்** - சிவநெறியின்கண்ண தாகலின் என்றலுமாம்.

எடுப்பதற்கு வேண்டி - கையில் பற்றி எடுத்துக்கொண்டு வர விரும்பி.

காற்றென - விசையிற் செல்லும் - காற்றுப்போல; வினைபற்றிய உவமம்; **வாயுவேகம்** என்பர். **காற்றினுங் கடுக** - என்பதும் பாடம்.

கடும்பரி - கடிய வேகமுடைய குதிரை; **பரி** - அரச அங்கமாதல் போல அமைச்சர்க்குரிய குதிரை; ''வருபரி யிழிந்து'' (2624).

கோற்றொழில் - கோல் - அரசனது செங்கோல்; அதன் **தொழில்** - அரசாட்சி

கோற்றொழில் திருத்தவல்ல என்றது கோல் கோணியபோது செய்யும் சிறந்த முதற்கடமை. ''வல்ல தமைச்சு'' என்பது குறள். ''அறிகொன் றறியா னெனினு முறுதி, யுழையிருந்தான் கூறல் கடன்'' (குறள்) என்ற கருத்தினை ஈண்டு வைத்துக் காண்க. இக்கடமையின் மேம்பாட்டினை ஆசிரியர் தம் அரசனுக்கு உறுதிகூறித் திருத்திய அமைச்சுத் திறத்தினும் வைத்துக் காண்க.

2748. **ஏடகம்** பிள்ளை யார்தாம் "**வன்னி**"யென் றெடுத்துப் **பாடக்**
கூடிய நீரி லேடு குலச்சிறை யாருங் கூடிக்
காடிட மாக வாடுங் கண்ணுதல் கோயின் மாடு
நீடுநீர் நடுவுட் புக்கு **நின்றவே டெடுத்துக் கொண்டார்.** 850

பின் சென்றார் - ஏட்டினைப் பின்பற்றிச் சென்றனர்.

பாடினார் - பிள்ளையார் என்ற எழுவாய் அவாய்நிலையான் வந்தது. ***தங்கப் பாடினார்*** - தங்கும்பொருட்டு; தங்குக என்ற ஆணைக்குறிப்புடன் பாடினார். "எதிர்விரவும் பண்பு" (தேவா) என்று ஏடு எதிரேற நினைந்தருளிப் பாடியபடியால் அஃது ஏறாது தங்கும்படி பாடினாலன்றித் தங்காதாதலானும் அமைச்சனார் அதனை எட்டிப் பற்றிக்கொண்டு அரசன் முன்னர்க் காட்டவேண்டிய நிலைமையானும், தங்கும்படி நினைந்து பாடினார்; இஃது "ஏடுசென் றணைதரும்" என்ற பதிகக்குறிப்பின் வருணனையின் இலேசினாற் பெறப்படும். "குரும்பை யாண்பனை யீன்குலை யோத்தூர்" என்புழிப்போலக் காண்க. *849*

2748. **(இ-ள்)** பிள்ளையார்தாம் ஏடகம் வன்னி என்று எடுத்துப் பாட பிள்ளையார் திருவேடகத் திருப்பதிகத்தை "வன்னியு மத்தமும்" என்று தொடங்கிப் பாடியருளவும்; கூடிய...கூடி - ஆற்று நீரினுட் கூடி வந்த ஏட்டினிடம் குலச்சிறையாரும் சென்று பொருந்தி; காடிடமாக... புக்கு - பெரு மயானமே இடமாக ஆடுகின்ற கண்ணுதற் பெருமானது திருக்கோயிலின் பக்கத்தில் நிலைபெற்ற வைகையாற்றின் நடுவிலே புக்கு; நின்ற ஏடு எடுத்துக்கொண்டார் - மேல் ஏறாமல் நின்ற ஏட்டினை எடுத்துக் கொண்டனர்.


(வி-ரை) வன்னி என்று எடுத்து ஏடகம் பாட- என்க; **ஏடகம்** - திருஏடகத் திருப்பதிகத்துக்கு ஆகுபெயர். பதிகத்தை என சாரியையும் உருபும் தொக்கன.

வன்னி - பதிக முதற்குறிப்பு. **எடுத்தல்** - தொடங்குதல்.


நீரில் கூடிய - என்க; நீரில் கூடிய ஏடு குலச்சிறையாரும் கூடி - நீரி னடுவழி யாக எதிரேறி வந்த ஏட்டினைக் குலச்சிறையார் கரைவழியே குதிரைமீது வந்து பொருந்தி. **ஏடு** - ஏட்டின் இடமாக; இங்குக் **கூடி** என்பது, குலச்சிறையார் கரைவழியாலும் ஏடு நீர்வழியாலும் ஒத்த இடத்தைப் பொருந்துதல் குறித்தது. பின்னர் **நீர் நடுவுட் புக்கு** என்றது கரையினின்று நீரினுட் புகுதலைக் குறித்தலின் கூறியது கூறலன்மை யுணர்க.

நின்ற - "கரைக்கோலை தெண்ணீர்ப் பற்றின்றிப் பாங்கெதிர் விரவும்" என்று முன் ஆணையிட்டருளிய பிள்ளையார், இப்போது ஏடு தங்க ஆணைதந்து "ஏடுசென்று ஆணைதரும்" என்று அருளியமையால் மேல் எதிர்ந்து செல்லாமலும் நீரோடு உடன் ஓடாமலும் அணைந்துநின்ற என்க.

எடுத்துக்கொண்டார் - கையினால் எடுத்து மேற்கொண்டனர். அதனைத் தலையின்மிசை வைத்தலை மேற்கூறுவது காண்க. *850*



திருவேடகம் பாட்டு : 2718



திருப்பரங்குன்றம் பாட்டு :- 2782



திருவாப்பனூர் பாட்டு : 2783

திருஏடகம்

திருச்சிற்றம்பலம் பண் - கொல்லி

வன்னியும் மத்தமும் மதிபொதி சடையினன்
பொன்னிய றிருவடி புதுமல ரவைகொடு
மன்னிய மறையவர் வழிபட வடியவர்
இன்னிசை பாடல ரேடகத் தொருவனே. *(1)*

கோடுசந் தனமகில் கொண்டிழி வைகைநீர்
ஏடுசென் றணைதரு மேடகத் தொருவனை
நாடுதென் புகலியுண் ஞானசம் பந்தன
பாடல்பத் திவைவல்லார்க் கில்லையாம் பாவமே. *(11)*

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—வைகை நீரினை ஆணையால் எதிர்ந்து சென்ற ஏடு சென்று அணைந்து தங்கும் ஏடகம் என்பது. ''பாடினு ரேடு தங்க'' (2747) என ஆசிரியர் அறிவித்தமையும் ''ஏடுசென் றணைதரும் ஏடகம்'' என்ற பதிகத் திருக்கடைக் காப்பும் காண்க.

குறிப்பு:—இப்பதிகம் மதுரையில் வைகையாற்றின் கரையில் எழுந்தருளி யிருந்தபடியே பிள்ளையார் அருளி ஆணையிட்டது.

பதிகப் பாட்டுக் குறிப்பு :—(1) வன்னி - மரம். வன்னியின் இலை; மதி - எண்ணும்மை தொக்கது; வன்னியும் மத்தமும் முதலியவை மிகுதியும் மேற் பெய்தமையால் மதியினை வெளித்தோன்றுமல் பொதிந்த - மதியைப் பொதிந்த - மூடிய என்றலுமாம். **பொன் இயல்** - பொன்போன்ற ஒளியுடைய; இயல் உவமவுருபு; உரு வுவமம். ''பொன்னுர் திருவடிக்கு'' (தேவாரம்); **புதுமலர்** - நாட்போது; அன்றலர்ந்த மலர். **மன்னிய மறையவர்** - சிவ வேதியர்; **மன்னிய** - வழிவழி நிலை பெற்று நிகழ்ந்த. ''வழிவழியே திருத்தொண்டின், விரும்பியவர்ச் சனைகள் சிவ வேதியர்க்கே யுரியன'' (முப் - திரு - புரா - 2). **மறையவர் வழிபட அடியவர் பாடலர்** என்க. **பாடலர்** - பாடல் செய்வாராயினர்:—**(2) இடிபடும்** - இடிபடுத்தும். **இடி** - துன்பம்; தூள்படும் என்றலுமாம்.—**(3) சேடன்** - அறிவுப் பிழம்பானவன்; **கவலை நோய்** - கவலையும் அது காரணமாக வரும் நோயும்; கவலையாகிய நோய் என்றலுமாம்;—**(4) மாதவி** - குருக்கத்திக் கொடி;—**(5) நயனி** - கண்களையுடையவராகிய; **பெரியவன்** - ''ஆயினும் பெரியார்'' (திருப்பாசுரம்); **எரியவன்** - ''எரிபோன் மேனிப்பிரான்'' (திருஅங்கமாலை); ''எரியலா லுருவமில்லை'' (தேவா);—**(7) கெட** - கெடுதலினல்; **வெய்ய வன் பிணி** - உயிர்களை இருளிற் கட்டிய ஆணவம். **பிணி** - பிணிப்புச் செய்யும் பொருள்;—**(8) மடவரல்** - கங்கை நங்கை;—**(11) ஏடு சென்று அணைதரும்** - பதிகக் குறிப்பும் கருத்துமாகிய ஆணை.

தல விசேடம் :—திருஏடகம் - பாண்டிய நாட்டுப் பாடல்பெற்ற தலங்கள் பதினுன்கனுள் நான்காவது தலம்; வைகையாற்றின் வடகரையில் உள்ளது. ''வைகையின் வடகரை மருவிய ஏடகம்'' என்ற தேவாரம் காண்க. மதுரையினின்று வடமேற்கில் 7 நாழிகையளவில் உள்ளது. மதுரையின்றும் வைகையாற்றின் கரை வழியே மேல்நோக்கிக் குதிரையின்மேல் குலச்சிறையார் இவ்வளவும் அதிவேகமாகச் சென்று, பிள்ளையாரது ஆணையால்நீரினை எதிர்ந்து சென்று

2749. **தலைமிசை** வைத்துக் கொண்டு தாங்கரு மகிழ்ச்சி பொங்க
அலைபுனற் கரையி லேறி யாங்கினி தமர்ந்த **மேருச்**
சிலையுடை யவர்தாள் போற்றி மீண்டுசென் றணைவார் தெய்வ
மலைமகள் குழைத்த ஞான **முண்டவர் தம்பால் வந்தார்.** 851

---

*அங்குநின்ற திருப்பாசுர ஏட்டினை எடுத்த தலம். பிள்ளையாரது இத்தலப் பதிகம் மதுரையில் வைகைக் கரையில் அமணருடன் புனல்வாத நிகழ்ந்த இடத்தினின்றபடியே அருளப்பட்டது. பதிகம் ஏடகம் என்ற பெயராற் போற்றப்பட்டிருத்தலின் இத்தலம் முன்னமே அப்பெயராலேயே வழங்கப்பட்டிருத்தல்வேண்டு மென்றும், அதற்கேற்பத் திருவருளால் ஏடுசென்றணைந்த நிகழ்ச்சியினுல் அப்பெயரே மேலும் சிறப்புப்பெற்று நிகழ்வதாயிற்று என்றும் கருதப்படும். எவ்வாறுயினும் அத்தலக் கோயில் ஆண்டு முன்னமே இருந்த பழங்கோயில் என்பது "மன்னிய மறையவர் வழிபட" (2); "சேடனூர்" (3); "ஏழையோ டெழில் பெறுங் கோலமார்" (4); எனவரும் தேவாரங்களானும் "கண்ணுதல் கோயின் மாடு நீடுநீர் நடுவுட் புக்கு" (2748) என்றதனுனும் அறியப்படும்; "வன்னியு மத்தமும்" என்று தொடங்கிய பதிகத்துள் "வன்னியு மத்தமும்" (8) எனவும், "வன்னியும்" (10) எனவும் பின்னரும் விதந்து கூறுதலான் இத்தலம் "வன்னி"யின் சிறப்புடைய தென்பதாம். சுவாமி - **ஏடகநாதர்**; அம்மை - **உமாதேவியார், ஏலவார் குழலி**; "ஏலமார் தருகுழ லேழை"—(பதிகம் 4); தீர்த்தம் - **வைகை**; பதிகத்துட் போற்றப்பட்டது பதிகம் 1.*

இத்தலம் சோழவந்தான் நிலையத்தினின்றும் தென்மேற்கில் கற்சாலை வழி 2 .1/2 நாழிகையளவில் அடையத்தக்கது. வைகையாற்றின் இருகரையிலும் இங்கு நின்றும் மதுரைக்குச் செல்லத்தக்க கற்சாலை வழிகள் உண்டு.

2749. (இ-ள்) தலைமிசை வைத்துக்கொண்டு - எடுத்த அவ்வேட்டினைத் தமது தலையின்மேல் வைத்து ஏற்றுக்கொண்டு; தாங்கரும்...ஏறி - தாங்குதற்கரிய மிக்க மகிழ்ச்சி மேன்மேல் அதிகரிக்க அலைகளையுடைய நீர் நிறைந்த அவ்வாற்றின் கரையில் ஏறி; அங்கு...போற்றி - அங்கு இனிதாக விரும்பி வீற்றிருக்கும், மேருமலையினை வில்லாகவுடைய இறைவர் திருவடிகளைத் துதித்து; மீண்டு...வந்தார் - மீண்டு போய் மதுரையினைச் சேர்பவராகிப் பார்வதியம்மையார் குழைத்தூட்டிய சிவ ஞானவமுதத்தினை உண்டருளியவராகிய பிள்ளையார்பால் வந்து அணைந்தனர்.

(வி-ரை) தலைமிசை வைத்துக்கொண்டு - ஞானப் பெரும் பொருளாதலின் அதனைத் தமது உடலில் சிறந்த அங்கமாகிய தலையின்மேல் வைத்தனர்; **கொண்டு**- மேற்கொண்டு தாங்கி.

கரை - வடகரை. **அங்கு...சிலையுடையவர்** - அங்குத் திருக்கோயில்கொண் டெழுந்தருளிய சிவபெருமான். **மேருச் சிலையுடையவர்** என்பது புரமெரித்தமை போல இங்குப் பெறப்பட்ட ஞானவெற்றியின் முதல்வர் என்ற குறிப்பு.

அணைவார் - அணைவாராகி; **மீண்டு** - மதுரைக்குத் திரும்பி.

தெய்வ...உண்டவர் - ஈண்டும் அமணரை வென்ற ஞானவெற்றிக் குறிப்புப்பட இவ்வாறு **ஞானமுண்டார்** எனக் கூறினர். **தெய்வ-ஞானம்**-என்க; சிவஞானம்.

2750. மற்றவர் பிள்ளை யார்த மலரடி வணங்கிப் போற்றிக்
கொற்றவன் முதலா யுள்ளோர் காணமுன் கொணர்ந்த வேடு
பற்றிய கையி லேந்திப் பண்பினு லியார்க்குங் காட்ட
அற்றருள் பெற்ற தொண்ட "ரர"வொலி யெழுந்த தன்றே. 852

ஞானமுண்டவர் தம்பால் - *பிள்ளையார் எழுந்தருளியிருந்த வைகையாற்றின் கரையின்கண். 851*

2750. (இ-ள்) மற்றவர்...போற்றி - மற்று அக்குலச்சிறை நாயனுர் பிள்ளையாருடைய மலர்போன்ற திருவடிகளை வணங்கித் துதித்து; கொற்றவன்...காண-அரசர் முதலாகியுள்ளவர்கள் எல்லாரும் காணும்படியாக; முன்கொணர்ந்த...காட்ட - முற்படத்தாம் தலையில் வைத்துக் கொண்டு கொணர்ந்த ஏட்டினைப் பிடித்தகையில் ஏந்திப் பண்பினுலே எல்லாருக்கும் காட்டவே; அற்றருள்......அன்றே-இகபரப் பற்றுக்களை அறுத்தலால் திருவருளைப் பெற்ற திருத் தொண்டர்கள் செய்யும் "அரகர" என்ற ஒலிமுழக்கம் மிக்கு அப்பொழுதே எழுந்தது.

(வி-ரை) மற்று அவர் - மற்று - வினைமாற்றின்கண் வந்தது; முன் பாட்டில் **"அணைவார் வந்தார்"** என்ற அவர் அதன்மேல் செய்வனவற்றை வேறு கூறுதலின் வினைமாற்றுதல் காண்க. **அவர்** - குலச்சிறையார்; முன்னறிசுட்டு.

கொற்றவன் முதலாயுள்ளோர் காண - பிள்ளையார் தமது ஆணையால் நிகழ்த்திய செயலாதலின் அவர் காணவேண்டாது அரசன் முதலியோரே காண வேண்டியவர்; **காணக் - காட்ட** என்று கூட்டுக.

முதலாயுள்ளோர் -அரச னவையுள்ளோர்.

முன்கொணர்ந்த - முற்படத் தலைமிசை வைத்துக்கொண்டு கொணர்ந்த; (முன்பாட்டுப் பார்க்க).

ஏடு பற்றிய கையில் ஏந்தி - ஏட்டினைத் தலைமிசைக் கையில்பற்றி வைத்து வந்தமையால் அவ்வாறு பற்றிய கையினில் எடுத்து ஏந்தி.

பண்பினுல் யார்க்கும் - அவையிலிருந்தாரும் அமணரும் பிறரும் அவ்வவர்க் கேற்ற பண்பினுல் அறியும்படி காட்ட; **கொற்றவன் முதலாயுள்ளோர் காண** என்றது செய்தியினைக் கண்டு வாதத்தை முடிபு கூறவேண்டியவர் காண என்றபடி; இங்கு **யார்க்கும் காட்ட** என்றது ஏனையோர் யாவரும் காணக் காட்ட என்றபடி.

அற்றருள் பெற்ற தொண்டர் அரவொலி எழுந்தது அன்றே ஏடுகண்டோர் அரசனும் அவையினரும் பிறருமாயினும், அதனுள் திருவருள் வெளிப்பாட்டினைக் காணவல்லுநர் அருள்பெற்ற தொண்டர்களேயாதலின் அவர்கள் அரவொலி முழக்கினர். ஆயின் அந்த முழக்கும், முயற்சியானன்றித் தன் இயல்பிலே தானுக எழுந்தது என்பார் **எழுந்தது** என்ருர்; **அன்றே** - அப்பொழுதே.

2751. **மன்னவன்** மாறன் கண்டு மந்திரி யாரை நோக்கித்
''துன்னிய வாதி **லொட்டித் தோற்றவிச் சமணர் தாங்கள்**
முன்னமே பிள்ளை யார்பா லநுசித முற்றச் செய்தார்.
கொன்னுனைக் கழுவி லேற்றி முறைசெய்க'' வென்று கூற, 853

அற்று அருள் பெற்ற - அற்று *- இகபரப் பற்றுக்கள் யாவும் அறுதலான்-* ***அறுந்து;*** *அதனால் அருள்பெற்ற. ''அற்றவர்க் கற்ற சிவன்'' என்று இத்திருவாலவா* ***யீசனையே*** *தொடக்கத்திலே போற்றியதும் கருதுக.* ***தொண்டர்****-தொண்டர் முழக்குகின்ற.* ***852***

2751. (இ-ள்) *மன்னவன்...நோக்கி - அரசராகிய நின்றசீர்நெடுமாறனார்* ***முன்*** *சொன்னவாறு மந்திரியார் காட்டக் கண்டு அமைச்சரை நோக்கி; ''துன்னிய...செய்க''* ***என்று கூற*** *- ''பொருந்திய வாதத்தில் தாமே ஒட்டித் தோல்வியுற்ற இந்தச்சமணர்கள் அவ்வாறு* ***ஒட்டித்*** *தோல்வியுற்றமையால் தண்டத்திற்குரிய ராதலன்றியும், முன்னமே பிள்ளையாரிடத்தில் அனுசிதம் முற்றவும் செய்துள்ளார்கள்; ஆதலின் அவர்களைக் கழுவிலேற்றி நீதிமுறைப்படி தண்டஞ் செய்யும்'' என்று சொல்ல,*

(வி-ரை) மன்னவன் மாறன் கண்டு *- மன்னவன் என்ற குறிப்பு மேல்நீதி* ***முறை*** *செய்யவுள்ள நிலை குறித்தபடி.* ***மாறன்*** *- ''வடிகொள்வேள் மாறன் காதல் மாறின வண்ண மென்பார்'' (2703) என்றபடி பொய்யின் நீங்கி உண்மை கண்டு மாறுதலடைந்தவன்* ***என்பது*** *தொனி; கூன்பாண்டியனாய் அமணச்சார்பில் குனிந்து இருந்தவர் மாறி உண்மை* ***கண்டு*** *சைவச்சார்பில் நிமிர்ந்து நின்றசீர் நெடுமாற ராயினமையும் குறிப்பு.* ***கண்டு*** *- ''கொற்றவன் முதலாயுள்ளோர் காண'' (2750) அமைச்சனார் காட்டக் கண்டு.*

மந்திரியாரை நோக்கி - முறைசெய்க என்று கூற *- முன்னர் மாறனாரை மன்னவன்* ***என்று*** *கூறிய நிலைக்கேற்பக் குலச்சிறையாரை என்னாது* ***மந்திரியாரை*** *என்றார். அந்த அமைச்சு நிலையில் அரசரால் ஏவப்பட்ட நீதிமுறைவிதி என்பது.*

துன்னிய வாதில் ஒட்டித் தோற்ற - துன்னிய *- அமணர் தாமேவலிந்து மேலிட்டுக்கொண்ட. ''உள்ளவாறு கட்புலத்தில் உய்ப்பது'' (2673) என்றும், வெந்நெருப்பில் வேவுறாமை வெற்றியாவது'' (2674) என்றும், ''தொடர்ந்தவாது, முன்னுற விருகாற் செய்தோம் முக்காலி லொருகால் வெற்றி, என்னினு முடையோம்; மெய்ம்மை யினியொன்று காண்பது'' (2692) என்றும் வந்தனவற்றால், அமணர் மேன்மேலும் தாமே வலிந்து வாதினை அழைத்து மேற்கொண்டமை அறிக.* ***ஒட்டி*** *- ஒட்டுதல் வைத்து. ''தனிவாதி லழிந்தோ மாகில், வெங்கழு வேற்று வானிவ்* ***வேந்தனே****'' என்றது (2696).* ***தோற்ற*** *- தமது ஏடு நீருடனே செல்லவும் பிள்ளையார் இட்ட ஏடு எதிர்ந்து செல்லவும் கண்டமையால் தோல்வியுற்ற.*

தோற்ற *- வாதில் தோல்வியுற்றமையேயன்றியும் அரசன் கூறிய ஆணையாவது; தாமே ஒட்டியபடி அமணர் வாதில் தோல்வியுற்றதொரு காரணந்தானே அவரைக் கழுவிலேற்றி முறை செய்க என ஆணை தருதற்குப் போதியதாகும்; ஆனாலும், அவ்வாறு அதுகொண்டே ஆணையிடாமல் மற்றொரு நியாயமும் காண்கின்றேன் என்றபடி.*

முன்னமே...முற்றச்செய்தார் - அநுசிதம் - செய்யத்தகாத செயல்; அஃதாவது திருமடத்தில் வஞ்சனையினால் அரசனாகிய தன்னை ஏமாற்றித், தீக்கொளுவி அடியார்களை எரித்துக்கொல்ல முயன்றது. அதனைச் சொல்வது தானும் பிழை என்பார் "**அநுசிதம்**" என்றெழுந்தார். இவ்வநுசிதமும் கொலைத்தண்டம் பெறத் தகுதியுடையது என்றபடி.

கொன்னுனைக் கழுவில் ஏற்றி முறைசெய்க என்று கூற - மேற்கூறிய இசைவாகிய ஒட்டுதலினாலும் அநுசிதத்தாலும் கழுவேற்றப்படத் தக்காராதலின் அவ்வாறே நீதிமுறைத் தண்டம் நிறைவேற்றுக என்றபடி. இஃது அரசன் செய்த அரசநீதிச் சட்டமுறைத் தீர்ப்பு. வாதில் ஒட்டியதொரு காரணத்தாலே அரசன் இவ்வாறு தீர்த்தானல்லன். இசைவுபற்றியெழும் தண்டம் அவ்வளவின் எல்லையை முடிந்த கோடியாகக்கொண்டு வாதத்தின் அளவுக்கு ஏற்ற அளவே நீதிபதி குறைத்து முறை செய்யலாம் என்பது இந்நாளிற்போலவே முன்னாளிலும் வழக்கு ஆயின் இங்கு அரசன் அவ்வாறு அமணர் கழுவேற இசைவு தந்தாலும் வாதின் தோல்வி யளவுக் கேற்றவாறு, கழுக்கொலைத் தண்டத்தைத் தவிர்த்து, நாடுகடத்துதல் முதலாகிய எவையேனும் சிறிய அளவில் தண்டங்கள் விதித்திருக்கலாமே எனின், அவ்வாறு செய்யாமையை விளக்குதற்கென்றே காரணங்காட்ட மேற்வருங் கூற்று எழுந்தது. பிள்ளையார்பாற் செய்த அநுசிதமாகிய, மக்கள் குடியிருப்பு வீட்டுக்குத் தீ வைக்க முயன்றமையும், மக்களைத் தீயிட்டுக் கொல்ல முயன்றமையும், அவையும் எவ்விதக் காரணமும் பற்றாது செய்தமையும், சிவனடியார்பாற் செய்த அபசாரமாயினமையுமே கழுக்கொலைத் தண்டம் விதித்து முடித்ததன் காரணம் என விளக்கப்பட்டது.

கழுவில் ஏற்றி முறைசெய்க - இவ்வாறு கழுவேற்றிக் கொலைத்தண்டம் இயற்றுதல் முன்னாளில் வழக்கத்திலிருந்ததொரு தண்ட விசேடம். அன்றியும் தமது சமயச்சார்புக்கு இழுக்கு நேர்ந்தபோது கழுநாட்டி அதன்மேற் பாய்ந்து உயிர் மாய்த்துக் கொள்வது சமணர் சமய மரபுகளுள் ஒன்றென்பதும் அறியப்படும். "புத்தர்சமண் கழுக்கையர்" என்ற தேவாரம் இதனை உரைத்தமை காண்க. அதனாற்றான் இங்கு அமணர் அவ்வாறு ஒட்டினர் என்க; ஆதலின் அரசன் அவ்வாறே முறைசெய்க என்றதில் கருணையின்மை - வன்கண்மை முதலிய இழுக்கு ஒன்றுமில்லை; இந்நாளிலும் "நாகரிக" (ஆங்கில) நீதிச்சட்டத்தின்படி கொலைத் தண்டம் விதிக்கப்பட்ட ஒருவனைக் கழுத்தில் கயிறு சுருக்கிட்டுத் தொங்கவைத்துக் கொல்ல முறைசெய்வது தண்ட விசேடமாதல் காண்க. அதனை அன்றென விடுத்து மேனாட்டில் குற்றவாளியைப் படுக்கவைத்துக் கழுத்தைக் கனத்த வாள் விட்டு விரைந்து துண்டமாக்குதலும், நாற்காலியில் வைத்து மின்சாரத்தை உடலில் ஏவிக் கணத்தில் கொல்லுதலும் முதலிய தண்ட விசேடங்கள் ஒன்றன் மேல் ஒன்றாக எழுதல் காண்க. ஈட்டி (சனியன் என்பர்) கொண்டு குத்திக் கொல்லும் முறையும் காண்க. ஆதலின் இத் தண்டமுறை பற்றிப் பரிவு கொண்டது போன்று பகைகொண்டும் ஆராய்ச்சியிற் கிளம்புவோர் இவைகளை உளங்கொளக்கடவர்; அரசன் சமயச் சார்புபற்றி இவ்வாறு முறைசெய்தானல்லன் என்பதும், பிள்ளையார்க்கேனும் சைவர்க்கேனும், சைவ சமயச் சார்புகள் எவற்றுக்கேனும் இதனுள் பொறுப்பும் சம்பந்தமும் இல்லை என்பதும், அரச நீதிமுறை யொன்றே இங்கு இயற்றப்பட்ட தென்பதும் தெளிந்துகொள்க.

"கொலையில் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ், களைகட் டதனொடு நேர்" (குறள்) என்றதும், அங்குக் **கொடியாரா**வார் இன்னார் என்று கூறுகையில் "தீக்கொளுவுவார்,

நஞ்சிடுவார், கருவியிற் கொல்வார், கள்வர்...முதலாயினரை'' என்று விரித்துத் தீக்கொளுவுவாரை முதற்கண் வைத்து வகுத்தும், ''அரசன் கொடியாரைக் கொலையா னொறுத்துத் தக்கோரைக் காத்தல்'' என்று வகுத்தும் எழுதிய பரிமேலழகர் உரை ஈண்டுச் சிந்திக்கற்பாலது.

இங்கு வேறு வேறு பேசுவனவெல்லாம் பிழையென் றொதுக்கிவிடுக. ஆயிரக் கணக்கான மக்களைத் தீக்கொளுவிக் கொளுத்த முயன்று சூழ்ச்சி செய்த கொலை பாதகர்கள் எண்ணாயிரவர் கொலைத் தண்டத்திற் குள்ளாவதில் பரிவுகொள்ளத்தக்க நீதித் தவறு என்னவுள்ளது என்று விடுக்க.

இனி ஒருசார் நவீன ஆராய்ச்சியாளர் இக்கழுவேற்றிய அரசதண்டம் நிகழ்ந்ததே இல்லை என்று முடிக்கவும் துணிந்தனர்; அவர் கூற்றுக்கள் சிலரை மயங்கவைக்கு மாதலின் அவைபற்றி ஈண்டுச் சில பேசவேண்டியது அவசிய மாகின்றது. அவர் கூறுவனவற்றின் சுருக்கம்; (1) நம்பியாண்டார் நம்பிகளுக்கு முன் இந்நிகழ்ச்சி பற்றி நூல்களுள் ஒன்றும் காணப்படவில்லை; (2) பிள்ளையார் தேவாரங்களில் இதுபற்றிய அகச்சான்று இல்லை; (3) சீன யாத்திரிகர்கள் எழுதிய

தமிழ்நாட்டுக் குறிப்புக்களில் இச்செய்தி குறிப்பிடப்படவில்லை; (4) சமணர்களது நூல்களிலும் இதுபற்றிய சான்றில்லை; (5) பின்னேவந்த திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் முதலியவை இச்செய்தியைப் பலவாறு பெரிய புராணத்துட் கூறுவனவற்றுக்கு முரண்படக் கூறுகின்றன :— சமணர்கள் தாங்களே கழுவேறினார்களோ? அல்லது ஏற்றப்பட்டார்களோ? என்பதில் மாறுபாடு; அவர்களைக் கழுவேறாதவாறு பிள்ளையார் தடுத்தனர் என்று திருவிளையாடற் புராணம் கூறும்; பிள்ளையார் ''மிகையிலா வேந்தன் செய்கை விலக்கிடா திருந்தனர்'' (2752) என்பது இப்புராணம். இங்கு வைகைக் கரையில் இச்செய்தி நிகழ்ந்ததென்பதற்கு மாறாகத் திருவாலவாயுடையார் புராணத்தினுள் அது திருப்பூவணத்தில் நிகழ்ந்ததென்றும் பின்பு அது கழுவர் படைவீடு என வழங்கப்பட்டதென்றும் கூறப்பட்டது; (6) பிள்ளையாரது ஏனை அருட்செயல்கள் தமிழ்நாடெங்கும் கொண்டாடப்படுவன; இச்செய்தி பற்றிய விழாக்கள் பாண்டிநாட்டில் மட்டும் நடைபெறுகின்றன;(7) இச்செய்தி பிள்ளையார் கூறும் ''எல்லார்களும் ஏத்தும் ஈசன்'' ''எண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனி பேதம், நிரைசேரப் படைத்தவற்றி னுயிர்க்குயிரா யங்கங்கே நின்றான்'' என்பனவாதி திருவாக்குக்களாற் காட்டியருளப்படும் சிவன் பொதுக்கடவுள் என்ற கொள்கைக்கு இது மாறுபாடு;—முதலியன.

இவற்றைச் சிறிது ஆராய்வோம்: 1-2. பிள்ளையார் தேவாரங்களில் இச்செய்தி குறிக்கப்படாமை: ''புத்தரோ டமணை **வாதில் அழிவிக்கும்** அண்ண றிருநீறு செம்மை திடமே'' எனவரும் குறிப்பும், ''ஆதமில்லி யமணொடு தேரரை வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே'', ''அமண்கையரை, ஓட்டி வாது செயத்திரு வுள்ளமே'' என்று திருவுள்ள நோக்கிய குறிப்பும் ஒட்டிய வாதம் நிகழஉள்ள நிலைக்குச் சான்று பகர்கின்றன. ''**ஆனை மாமலை** யாதி யாய விடங்க ளிற்பல **வல்லல்சேர் ஈனர்கட்** கெளியேன லேன்றிரு வாலவாயர னிற்கவே'' என்ற தேவாரம் சமண்சார்புபற்றி நின்று சுரநோயுற்ற அரசன் முன்பு அமணர் பிள்ளையாரைச் சுற்றி நின்று துள்ளியெழுந்து அனேகராய்ச் சூழ்ந்து பதறிக் கதற அதுகண்டு அஞ்சிய அம்மையாரைப் பிள்ளையார் தெருட்டிய செய்கையினையும், ஆனைமலை முதலிய எண்குன்றத்திருந்த அமணர் ஈனர் அங்குக் கூடிக்குரைத்ததனையும், அவர் இனி **அல்லல் சேர**வுள்ளதனையும் எடுத்துரைத்தது;

அப்போது பாண்டியன்தலை நிலைநிற்கலாற்றாது நடுக்குற்ற நிலையில் நோய் மிக்கிருந்தா னென்பது ''துளங்கும் முடித் தென்னன்முன் இவை'' என்ற அப்பதிகத் திருக்கடைக்காப்புச் சான்று பகர்ந்து காட்டி நிற்கும்; ''பொய்ய ராமம ணர்கொளு வுஞ்சுடர், பைய வேசென்று பாண்டியற் காகவே'' என்ற தேவாரம் அமணர், பிள்ளையாரும் அடியவரும் இருந்த திருமடத்துத் தீநாடியிட்ட கொடும் பாவச் செய்கையினையும், பிள்ளையார் அருளாணையினால் அத்தீப் பாண்டியனிடம் சுரமாகச் சென்று பற்றுவதனையும் கூறுகின்றது; இனிச் சுரவாதம் நிகழ்ந்து அதனில் அமணர் தோல்வியுற்ற செய்திக்குத் திருநீற்றுப் பதிகம் ''**குண்டிகைக் கையர்க**ளோடு சாக்கியர் **கூட்டமும் கூடக் கண்டிகைப் பிப்பது** நீறு'' என்று சான்று பகர்கின்றது. இனி, அனலில் ஏடு இட்டுவேவாமை பெற்ற ஏடு மெய்ம்மை என்ற வாதம் நிகழ்ந்தமைக்கும் அதில் பிள்ளையார் இட்ட திருநள்ளாற்றுப் பதிகம் எழுதிய ஏடு (வேவாது) பழுதின்றிப் பச்சையாய் விளங்கிச் சமணர் தோல்வி யுற்றனர் என்பதற்கும் ''நள்ளாறர்தந், நாமமே மிளிரிள வளரெரி யிடிலிவை பழுதிலை மெய்ம்மையே'' ''கொற்றவ னெதிரிடை யெரியினி லிடவிவை கூறிய,சொற்றெரி ஒருபதும்'' எனவரும் திருநள்ளாற்றுப் பதிக ஏட்டினை வைத்து அரசன் எதிரில் திருநள்ளாறர் நாமம் எழுதிய ஏட்டினைப் பாடிய சாதாரித்திருவிராகப் பதிக முழுமையும் ஆகிய தேவார அகச்சான்று உறுதி கூறுகின்றது; ''நள்ளாறுடைய நம்பெருமான் - ஆல வாயின்க ணமர்ந்த வாறிது - என்கொல் சொல்லாய்'' என்ற பதிகமும் பார்க்க. இனிப், புனல்வாதம் நிகழ்ந்து வைகை யாற்றில் பிள்ளையார் இட்ட ஏடு எதிர் சென்றமையால் அமணர் தோல்வியுற்றுச் சிவனே பரம்பொருளாவார் என நாட்டப்பட்டமை திருப்பாசுரப் பதிகத்தால் ஐயமற விளக்கம் பெறுகின்றது. ''ஆழ்க தீயது; எல்லா மரனாமமே சூழ்க'' ''தெற்றென்று தெய்வந் தெளியார் கரைக்கோலை தெண்ணீர்ப், பற்றின்றிப் பாங்கெதிர் விரவும் பண்புநோக்கிற், பெற்றொன்றுயர்த்த பெருமான் பெருமானு மன்றே'' எனவரும் திருப்பாசுரப் பகுதிகளும் ''ஏடு சென் றணை தரு மேடகம்'' என்ற பதிகமும் இதற்குரிய அகச்சான்றுகளாதல் தெளிக. ''பருமதின் மதுரைமன் னவையெதிரே பதிகம தெழுதிலை யவையெதிரே, வருநதியிடைமிசை வருகரனே வசையொடு மலர்கெட வருகரனே'' என்ற திருவியமகமும் இதனை நாட்டியதுடன் இவ்வாதங்களில் எல்லாம் பிள்ளையாரே வெல்லவும் அமணர் தோற்கவும் நிகழ்ச்சிகள் கூடிய செய்தியும் விளங்குகின்றது.

இவ்வாற்றான் சமணர் கொலைமுயன்ற தீச்செயலும், அஃதே அரசனுக்கேறிக் கொடிய நோய்பற்றிய செயலும், அமணர் பிள்ளையாரைப் பொறாமையாற் சூழ்ந்து பதறிக் கதறிய செயலும், இவை காரணமாக ஒன்றன்பின் ஒன்றாய் மூன்று பெருவாதங்களும் அவற்றால் மூன்றுமுறை அமணர்க்குத் தோல்விகளும் நிகழ்ந்த செயலும், இவையெல்லாம் பிள்ளையார் தேவார அகச்சான்றுகளால் நாட்டப்பெறு கின்றன; பொய்யினான் மெய்ம்மையாக்கப் புகுந்து வஞ்சித்துத் தனது உரிமை உண்மைச் சமயத்தை மறக்கவும் இகழவும் இடையூறு செய்யவும் மயக்கம் செய்தும் தனக்கு இறந்துபடுமளவு தரும் நோய் விளைத்தும், உண்மை நின்ற பெருகுநிலைக் குறியாளரை அவமதித்து நிந்தித்துக் கொலையும் சூழ்ந்தும், சைவ உடைமைகளையும் உண்மை அறிவையும் ஆறலைத்துக் கவர்ந்தும், இத்துணையும் தமது சீவனோபாய முயற்சிகளின் ஆக்கங் கருதிச் செய்தது மன்றி, அதனோடு நில்லாமல், ஒட்டி வாதமும் செய்து தோல்வியும் பெற்றார்களாயின் அச்சமணர்களை அரசன் ஏற்றவாறு நீதிமுறைத் தண்டஞ் செய்வதில் என்ன குறை? பெருங்குற்றம் நடந்ததும், பெருவாதங்கள் நடந்தனவும் தேவாரங்களால் அறியப்படுதலின் அவற்றுக்குத் தக்க தீர்ப்பும் அரச தண்ட முறையும் நிகழ்ந்தமை எளிதில் கருதக் கிடக்கின்றன. சைவம் மீளத் தாபிக்கப்பட்டமையும் சமணம்

வலியிழந்தொழிந்தமையும் கண்கூடாகக் காண்கின்றோம். ஆகலின் அரச நீதிமுறையால் சமணர் அழிக்கப்பட்டனர் என்பது தேற்றமாய் விளங்குமன்றோ? பிள்ளையார் அமணர் கழுவேறிய செய்தி கூறாமைக்குக் காரணம் பல இருத்தல் கூடும். அரசநீதிமுறை பற்றியதாய் அஃது ஒழிந்து சமயச்சார்பு பற்றியதன்றாதலின் அவர் கூறும் நியதியில்லை என்க. அன்றியும் தேவாரங்கள் முழுமையும் நமக்குக் கிடைத்தில என்பதனையும் ஈண்டு நாம் மறந்துவிடலாகாது. (3) **சீன யாத்திரிகன் குறிப்பிடாமை** பற்றி இந்நிகழ்ச்சி நிகழவில்லை என்பது தவறு; அவ்வாறு முடிவுகொள்ளுதல் தவறான அளவைமுறை. வெதிரேகச் சொல் என்ற அன்மைபற்றி இன்மை கூறுதல் இன்றியமையாத நியதியாகிய பொருத்தமிருந்தாலன்றிக் கூடாது, சீதமின்மை பனியின்மை என்புழிப்போல; சீனயாத்திரிகன் கூறாதனவெல்லாம் நிகழாதன என்றல் பொருந்தாது; சீன யாத்திரிகன் ஆளுடைய பிள்ளையார் ஞானமுண்டமை முதலியனவாகத் தேவார அகச்சான்றுடன் கூடிய ஏனைய வெல்லாம் எழுதினானா? ஆளுடைய அரசுகளைச் சமணர் துன்புறுத்திக் கொலை சூழ்ந்த செயல்களையும் அதன்காரணமாகப் பல்லவன் மகேந்திரன் சமண் விட்டுச் சைவம் சார்ந்ததும் பாடலிபுத்திரத்துப் பாழிகளையும் பள்ளிகளையும் இடித்துக்குணபர வீச்சுரம் எடுப்பித்தமையும் அந்நாட்டுப் பிற விளக்கமாகிய உண்மைச் சரித நிகழ்ச்சிகளையும் எழுதினானா? சோழநாட்டில் திருவாரூரில் கமலாலயக் குளக்கரையைத் தூர்த்துக் கவர்ந்து மனைகளை ஆக்கியதோடு, தண்டியடிகள் நமிநந்தியார் முதலிய அடியார்களையும் சிவபெருமான தருளையும் இழித்துக் கூறிய சமணர்களையும், பழையாறை வடதளியிற் கோயிலை மறைத்துக் கவர்ந்து தமது பள்ளியாக்கிய சமணர்களையும், உண்மை கண்டு ஓடத் துரத்தித் தூய்மைகள் செய்த சோழ அரசரது செயல்களையும் நாட்டுச் சரித நிகழ்ச்சிகளையும் எழுதினானா? ''வாயி ருந்தமி ழேபடித் தாளுறா, வாயிரஞ் சமணும்மழி வாக்கினான்'' என்ற தேவார அகச்சான்று பற்றிய செய்தியைச் சீன யாத்திரிகன் எழுதினானா? இவ்வாறு யாத்திரிகன் எழுதாமைகொண்டு இவையெல்லாம் நிகழ்ந்தனவல்ல என்று முடிப்பது போலியாய் முடியுமன்றோ? வழிப்போக்கனாய் வந்த பிறநாட்டு அப்புறச்சமயத்தோன் தான் கண்டவற்றுட் சிலவும், கேட்டவற்றுட் சிலவுமாக, அவற்றுள்ளும் தான் கொண்டவற்றுட் சிலவுமாக இங்குமங்குமாகத் தானே குறித்துக்கொள்வானன்றி நாட்டு முழுச்சரிதமும் எழுதுவான் என்பது அறிவாளிகள் ஒப்பமுடியாத தொன்றாமென்றொழிக. (4) சமணர் நூல்களுள் இதற்காதரவில்லை என்னின், தம் தோல்விகளையும் அழிவுக்குரிய காரணங்களையும் தாமே எழுதி நிலைபெற விளம்பரப்படுத்திக்கொள்ளுதல் மனித இயற்கையன்று; இற்றை ஞான்று முடிவெய்தியவாகக் கருதப்படும் முதலாவது இரண்டாவது உலகப் பெரும்போர்களில் அவ்வத் திறத்தினர் அவ்வப்போது தமக்கு நேர்ந்த தோல்வி களையும் அழிவுகளையும் எவ்வெவ்வாற்றால் எழுதி வெளியாக்கினர் என்ற வரலாறுகளை அமைதிபெற நோக்கினால் இவ்வுண்மை எவர்க்கும் விளங்காமற் போகாது. (5) பின்வந்த திருவாலவாயுடையார் புராணம் முதலியவற்றுட் கூறப்படும் சரித மாறுபாடுகள் இச்செய்தியை ஐயப்படுத்துகின்றன என்பதும் போலியாராய்ச்சியாம்; இஃது ஆதரவுகளின் வன்மை மென்மையறிந்து முடிக்க அறியாத குறையேயென்க. வேதாகம புராணங்களுள் முன்னையவற்றோடு ஒத்த அளவே புராணங்கள் ஆதரவாம்; மாறுபட்ட வழி, மாறுபடும் பகுதிகளினளவு புராணங்கள் மென்மையுற்றுத் தள்ளப்படும்; பதிவாக்கியங்களாகிய முன்னையவே வலிமையுற்றுக் கொள்ளப்படும் என்பது நூலறி மரபு. பெரியபுராணம் வேதம்; அதனோடு மாறுபடும் தலபுராணங்கள் வலிமையுறுவன

அல்ல என்க. எனவே பெரிய புராண வாக்கே உறுதி என்று விடுக்க. இனி, இவர் காட்டும் மாறுபா டென்பனவும் மாறுபாடன்ரும்படி கண்டுகொள்ளத் தக்கன. என்னே? கழுவரிடை (கழுவேறிடை?) என்று வழங்கும் ஒரு கிராமம் வைகைக் கரையில் மதுரையின் கிழக்கில் ஒருநாழிகையளவில் இப்போதும் கேட்கப்படுகின்றது. பூவணப் புராணம் அங்கு இச்செய்தி நடைபெற்றதாகக் கூறுதல் இறைவரது அருள் எங்கும் வியாபகமாக விளையுந் தன்மைத்தாதலின் அவ்விளைவை யாண்டும் நிகழ்ச்சியிற் கூறியும் கொண்டாடியும் வருவது முறைதானே! முருகன் றிருவவதாரமும், வள்ளி கல்யாணமும், பார்வதி கல்யாணமும், இத்தகைய பிறவும் யாண்டும் கொண்டாடப் படுதல்போலக் கண்டுகொள்க. இனிக் கழுவேற்றிய செய்தி மதுரையிலோ அன்றி, அதன் அணிய வேறிடத்திலோ இன்ன இடத்தில் நிகழ்த்தப்பட்டதென்று பெரியபுராணத்துட் கூறப்படாமையும் காண்க. மேலும், இவ்விழாப் பாண்டி நாடு மட்டுமேயன்றி ஏனைச் சோழநாடு முதலியவற்றினும் கொண்டாடப்படுதலும் கண்டுகொள்க. சமணர்கள் கழுவேறினுர்களோ? அன்றி ஏற்றப்பட்டார்களோ? என்பதில் புராணங்களுள் மாறுபாடு காணவுள்ளது என்னின், இரண்டும் அமையும் என்க. என்னே? அரசன் ஆணையிட்டவழி அதனை நிறைவேற்றும் சிறைச்சாலை அதிகாரி முதலிய தண்டத் தலைவர்கள் கொலையாளியைத் ''தூக்குமேடைக்குப் போ'' என்ருல் அவன் அதற்குட்பட்டுச் சென்று மேடை ஏறுகின்ருன். அவன் ஏறினுனு? அல்லது ஏற்றப்பட்டானு? என்று சிந்திக்கில் இரண்டும் உண்மைதானே என்பது புலப்படும்; ''மதத்தி னின்மான மிக்கார் தாங்களே வலிய வேறி'' என்ற திருவிளையாடற் புராணமுடையார் ''சமணரைக் கழுவேற்றிய படலம்'' என்று பெயரிட்டமை காண்க. ''எல்லார்களும் ஏத்தும் ஈசன்'' என்ற கருத்துப் பற்றியும், உண்மைச் சமய சமரசம்பற்றியும் முன்னரே உரைக்கப்பட்டன; கண்டுகொள்க.

ஈண்டு, முன் எவரும் சொல்லாத பொய்ச்செய்தி யொன்றைப் பழிபடக் கற்பித்துரைத்தனர் என்று சைவாசாரியராகிய நம்பியாண்டார் நம்பிகள்பால் இல்லதுபுனைந் துரைத்த குற்றமும், ''அவரை நங்கள் நாத''ரென்று கொண்டு அவர் கூறிய பொய்யைப் பழிபடப் பரப்பினுர் என்று எம் தெய்வச் சேக்கிழார் பால் அறியாமைக் குற்றமும் சுமத்தி அலர்தூற்றும் இந்நவீன ஆராய்ச்சியாளர், சைவத்தோல் போர்த்த சமணரேயாவர் என்றஞ்சி விடுக்க. ''நேர்நின்று, காக்கை வெளிதென்பா ரென்சொலார், -தாய்க்கொலை, சால்புடைத் தென்பாரு முண்டு''— இனி, சமணர்கள் தமிழர்கள் - கொல்லாமையாகிய அறம்பூண்டவர்கள் - உயர்ந்த சமயநிலைக் கொள்கை பற்றியவர்கள் என்றும்—சைவர்கள் அவர்களைப் பகைத்துச் செய்த செயல்கள் தவறு - இவர்களுடைய அச்செயல்கள் சமயப் பூசல்பற்றியும், வடமொழியாளர் சூழ்ச்சிபற்றியும், சமய சமரச நோக்கின்றிக் குறுகிய மனப் பான்மைபற்றியும், சாதிப் பிணக்குப்பற்றியும், இன்னபிறவாறும் எழுந்தன என்றும் சில கோட்பாடுகளைச் சில காரணம்பற்றி முன்னரே மனத்துள்ளே துணிந்துகொண்டு, அக்கோட்டம்பற்றி மேலே கண்டவாறு (வேத சிவாகமங்களின் உண்மை), காணுது போலியாராய்ச்சிகளுட் புகுந்து சிவநிந்தை, சிவனடியார் நிந்தை புரிந்தும், பெரியோரைப் பழித்தும், தாமும் கெட்டு உலகையும் மயக்கிப் பழிக்கும் பாவத்துக்கும் ஆளாகியொழிகின்றனர் இந்நாளிற் சில புதிய ஆராய்ச்சியாளர்கள். திருவருள் அவர்களுக்கு நல்லறிவு தருவதாக. உலகர் இப்போலி ஆராய்ச்சிகளில் மயங்காது நம் முன்னேர் கண்ட உண்மைகளை அனுபவம் வல்ல தேசிகர்களை அடுத்து உணர்ந்து உய்வார்களாக.

2752. புகலியில் வந்த ஞான புங்கவ **ரதனைக் கேட்டும்**
இகலில ரெனினுஞ் சைவ ரிருந்துவாழ் மடத்திற் றீங்கு
தகவிலாச் சமணர் செய்த தன்மையாற் **சாலு** மென்றே
மிகையிலா வேந்தன் செய்கை விலக்கிடா திருந்த வேலை. 854

வாதில் ஒட்டித் தோற்ற *செய்தி 2692 முதல் 2744 வரை பாட்டுக்களிற் கூறப்பட்டது.*

முன்னமே பிள்ளையார்பால் அநுசிதம் முற்றச் செய்த *- செய்தி 2577 முதல் 2689 வரை பாட்டுக்களிற் கண்டுகொள்க.* ***முற்ற*** *- மிகவும்; முழுதும் என்றலுமாம்.*

ஏற்றி—ஏற்ற—*என்பனவும் பாடங்கள்.* ***853***

2752. (இ-ள்) *புகலியில்...கேட்டும் - சீகாழியில் வந்தருளிய ஞானபுங்கவராகிய பிள்ளையார் அவ்வாறு அரசன் ஆணையிட்டதனைக் கேட்டும்;* **இகல் இலர் எனினும்** *- அமணரிடத்துப் பகைமை யில்லாதவராயினும்; சைவர்...தன்மையால் - சைவ மாதவர்கள் இருந்து வாழ்வுதரும் திருமடத்திலே தீங்கினைச்செய்த சமணர்களது தகுதியற்ற தன்மையினாலே; சாலும் என்றே - இது பொருத்தமுடையதேயாகும் என்றுகொண்டு; மிகையிலா...வேலை - நீதிமுறையில் மிகைபடாத அரசரது ஆணைச் செய்தியை விலக்காமலிருந்தபோது;*

(வி-ரை) ***ஞானபுங்கவர்*** *- ஞானமும் தூய்மையும் உடையவர் - கொலைத் தண்டனையின்பாற்படும் இவ்வரசாணையை விலக்குதற்குரிய ஞானமும் அது செய்தற்குரிய மனத்தூய்மையுமுடையவராயினும் என்பது குறிப்பு.*

கேட்டும் இகல் இலர் எனினும் விலக்கிடாதிருந்த *- ஞானமும் மனத் தூய்மையுமுடையாரயின் இதனைக் கேட்டார் எவரும் இகல் இருந்தாலன்றி விலக்காதிரார் என்பது குறிப்பு.*

சைவர்...செய்த தன்மையாற் சாலும் *- இவ்வாறிருப்பவும் பிள்ளையார் அரசனை விலக்காமை அமணர் சிவனடியார்பாற் செய்த பெரிய அபசாரமும், அரசனது ஆணை நீதிவரம்பு கடவாமையுமேயாம் என்பது.*

இத்திருப்பாட்டினை ஊன்றிக் கருத்தறிந்தாராயின் இந்நிகழ்ச்சியிற் பிள்ளையாரின் பங்கு இத்துணையென ஒருசார்புபற்றிப் பிணங்கும் நவீன ஆராய்ச்சியாளரும் நன்கு தெளிந்து நலமடைகுவர். உண்மை நிலையினை இவ்வாறு எடுத்து நிறுவிக்காட்டியது ஆசிரியரது தெய்வக் கவிநலமும் அமைச்சியல் பற்றிய நல்லறிவின் திட்பமும் நுட்பமுங்கொண்ட திறமுமாம். இந்நாளிலும் நீதிமன்றங்களில் இவ்வாறு நீதிமுறையின்படி கொலைத்தண்டம் விதிக்கப்படுங்கால் யாவரும் விலக்கலாகாத நிலைமையும் கருதி உணர்ந்துகொள்க.

குறிப்பு :—*இப்பாடல் சில பிரதிகளில் இல்லை என்பாருமுளர். ஆயின் எனது பார்வையில் வந்து பரிசோதித்த பன்னிரண்டு ஏடுகளிலும் இப்பாடல் உண்டு; அவற்றின் விவரமும் பழமையும் பற்றி முதற்பாகம் முன்னுரை பார்க்க. திரு. வ. சு. செ. அவர்களும் தமது பிரதியில் இப்பாடல் உண்டு என்று எழுதுகின்றார்கள்* ***854***

2753. பண்புடை யமைச்ச ரும் பாருளோ ரறியு மாற்றால்
கண்புடை பட்டு நீண்ட கழுத்தறி நிரையி லேற்ற
நண்புடை **ஞான முண்டார் மடத்துத்தீ நாடி யிட்ட**
வெண்பெருங் குன்றத் தெண்ணா யிரவரு மேறி னார்கள். 855

2753. (இ-ள்) *பண்புடை....ஏற்ற - பண்புடைய அமைச்சனாரும் உலகத் துள்ளோர் அறியும்படியாகக் கணுக்களைப் பக்கங்களிற் றரித்திட்டுக் கூர்மையாய் நீண்ட கழுக்களில் வரிசையாக ஏற்றியிட; நண்புடை....ஏறினார்கள் - அன்புடைய ஞானமுண்டாராகிய பிள்ளையார் எழுந்தருளிய திருமடத்தில் தீயினைக்கொளுவ வேண்டுமென்றே சூழ்ச்சி செய்து கொளுவிய எட்டுப் பெருங் குன்றுகளினின்றும் வந்த எண்ணாயிரம் அமண குருமார்களும் ஏறினார்கள்.*

இம் மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) பண்புடை *- பண்பாவது கோற்றொழில் திருத்தி உலகங் காக்கவல்ல பண்பு (2747); அஃதாவது சிவாபராதமானது பொல்லாத பெருங் குற்றமாமென்றும், அதற்குத் தக்கன் தலைபோனதுபோல இஃதே தக்க தண்டனையாமென்றும், இஃதே அது செய்தார் நரகத் துன்பநீங்கி யுய்யும்வழி என்றும் அறிவிக்கும் பண்பு.*

பாருளோர் அறியுமாற்றால் *- உலகம் அரசநீதி வழியால் உண்மைகண்டு அறிந்து நன்னெறியொழுகி யுய்யும்படி. தண்டவகை பலவற்றுள்ளும் கொலைத் தண்டமொன் றொழித்தொழிந்த ஏனையவை அக்குற்றவாளியையும் நீதிமுறை காணும் உலகரையும் திருத்தும் கருத்துடையன. கொலைத் தண்டமோ, குற்றவாளி அரசாணையாற் கொல்லப்பட்டொழிதலின் பாருளோர் மட்டும் அறிந்து பயன்பெற நிகழ்வதென்பதாம்.* **அரசனாற் கொலைத்தண்டம் செய்விக்கப்பட்டோர்க்கும் இறைவனது நரக தண்டனையினீங்குதலாகிய மறுமைப் பயனுண்டென்க.**

> ''அரசனுஞ் செய்வ தீச னருள்வழி யரும்பா வங்கள்
> தரையுளோர் செய்யிற், றீய தண்டலின் வைத்துத் **தண்டத்**
> **துரைசெய்து தீர்ப்பன்; பின்பு சொல்வழி நடப்பர் தூயோர்;**
> **நிரயமுஞ் சேரா;** ரந்த நிரயமுன் னீர்மை யீதாம்'' —சித்தி - 2-32.

கண் புடைபட்டு *- பக்கங்களில் உள்ள கணுக்கள் தறிக்கப்பட்டு;* **புடை கண் பட்டு** *என்க.* **படுதல்** *- தறித்தல் குறித்தது.*

கழுத்தறி *- கழுமரம்;* **நிரை** *- எண்ணாயிரவர் ஏறும் வகையால் இடத்தின் நிலை பற்றி வரிசையாக அமைக்கப்பட்டிருந்தன என்பது.*

கண்புடை....நிரை *- இவற்றை இவ்வாத முடிவினை முன்பே நிச்சயித்து அமைச்சர் யாவருமறிய ஒழுங்குபடுத்தி அமைத்தனர் என்பது ''மருப்புடைக் கழுக்கோல் செய்தார் மந்திரி யார்தா மென்பார்'' (2704) என்று நகர மாந்தர் கண்டு கூறியவாற்றாலறியக் கிடக்கின்றது.*

2754. **தோற்**றவர் கழுவி லேறித் தோற்றிடத் தோற்றுந் தம்பம்
ஆற்றிடை யமண ரோலை யழிவினு லார்ந்த தம்பம்
வேற்றொரு தெய்வ மின்மை விளக்கிய பதாகைத் தம்பம்
போற்றுசீர்ப் பிள்ளை யார்தம் புகழ்ச்சயத் தம்ப மாகும். 856

ஏற்ற *- ஏற்றி முறை செய்யும்படி தண்டலாளர்களுக்கு ஆணையிட; இதுபற்றி முன்* ***2751-ன்*** *கீழ் உரைத்தவை பார்க்க.*

ஏற்ற - ஏறினார்கள் *- ஆணையிட்ட செயல் மந்திரியார் செயலாகவும், அவ்* ***வாணைப்படி*** *ஏறிய செயல் அமணர் செயலாகவும் நிகழ்தலின் இவற்றுள் மாறுபா டின்மையறிக.*

நண்புடை ஞானம் *- உயிர்களின்மேல் வைத்த அன்புநிறைந்த ஞானம். "****அன்பே*** *சிவமாவது" என்ற அருணெறியினின்றவர் பிள்ளையாராயினும் அவர்பால் இகல்கொண்டு பொறாமையினால் அமணர் பொல்லாங் கியற்றினர் என்பது இங்கு இவ்வடை மொழியின் குறிப்பு.*

நாடியிட்ட *- தீவைத்து ஒழித்தல் வேண்டுமென்ற கருத்துடனே முற்படச் சூழ்ந்து செய்த; நாடியிடுதலாகிய இது குற்றத்தின் முக்கிய அங்கம்.* With the Intention *என்பர் நவீனர். நாடுதல் - சூழ்தல்; சதியோசனை* (Conspiracy)

எண்பெருங் குன்றம் *- மதுரையினைச் சுற்றிச் சூழ்ந்து நிற்கும் ஆனைமலை முதலிய எட்டு மலைகள். இவற்றில் குன்றமொன்றுக்கு ஆயிரவராக அமண குருமார் பாழிகள் வகுத்து உறைந்தனர்; ஆதலின் "எண்பெருங் குன்றத் தெண்ணா யிரவர்" என்றார். இவர்களே (குருமார்களே) அரசாணையின்படியும் தமது சமயக் கோட்பாடு பற்றியும் கழுவேறியவர்கள்; இவர்கள் சார்புகொண்ட ஏனைச் சமணர் கூட்டமாகிய பொதுமக்கள் எவ்வாற்றானும் வருத்தம் செய்யப்படாமல் பின்னர்ச் சைவர்களாகி உய்ந்தனர் என்பது நாட்டு நடப்புச் சரித வரலாறு. "ஆனை மாமலையாதி யாய விடங்க ளிற்பல வல்லல்சேர், ஈனர்கட்கு" (தேவா) என்று பிள்ளையார் முன்பே அருளியது கருதத்தக்கது.★* ***855***

2754. (இ-ள்) தோற்றவர்...தோற்றுந் தம்பம் - (வாதிலே) தோல்வியுற்றவர் களாகிய அமணர் (எண்ணாயிரவரும்) முன்கூறியபடி கழுவிலேறியிட, அவ்வாறு யாவருங் கண்டறியும்படி காணப்பட்ட அத் தம்பங்கள்; ஆற்றிடை...ஆர்ந்த தம்பம்- ஆற்றினிடை அமணர்கள் இட்ட ஓலை அழிந்துபோயின காரணத்தால் நிறுத்திய தம்பங்களாம்; வேற்றொரு...பதாகைத் தம்பம் - (ஓலையழிந்த காரணத்தால் நிறுத்தப்பட்டன என்பது

★எண் பெருங்குன்றமாவன—

"பரங்குன் றொருவகம் பப்பாரம் பள்ளி
அருங்குன்றம் பேராந்தை யானை - யிருங்குன்றம்
என்றெட்டு வெற்பு மெடுத்தியம்ப வல்லார்க்குச்
சென்றெட்டு மோபிறவித் தீங்கு"

என்பதொரு பழம் பாடல் :—வ. சு. செ.

2794б

இறுதியாய்க் கண்ட புறக்காரணமாயினும் அவை அவ்வெற்றிப்பாட்டினைக் காட்டுவதோடமையாது) சிவனையன்றி வேறுமொரு கடவுள் இல்லை என்ற உண்மையினை உலகுக்கு விளக்கி நாட்டியுயர்த்திய கொடித்தம் பங்களாகவும் விளங்கின; போற்று சீர்...செயத்தம்பமாகும் - உலகம் போற்றும் சிறப்பினையுடைய பிள்ளையாரது புகழைக் காட்டிய செயத்தம்பங்களாகவும் நின்றன.

(வி-ரை) ஏறித் தோற்றிடத் தோற்றும் தம்பம் - முன்பாட்டிற் கூறியபடி பாருளோர் அறியும்படிப் பண்புடை அமைச்சனார் அச் சமணர்களைக் கழுநிரையில் ஏற்ற ஆணையிட அவ்வாறே எண்பெருங்குன்றத்து எண்ணாயிரவரும் ஏறினார்கள். அக்கழுவில் இறந்துபட்டு நின்றார்கள். அதைப் பாருளோர் கண்டபோது இன்னின்னபடி உண்மைகளையறிந்தகொண்டனர் என்பது இப்பாட்டு.

மன்னவன் ஆணையிட, மந்திரியார் கழு அமைத்து ஏற்றிட, அமணர் ஏறியிடத் தம்பங்களின் வரிசை தோற்றிற்று என்பது நிகழ்ச்சி. உலகர் கண்டனர்; பொருள் அறிந்தனர்; நல்வழி நடைபெற்றது. அங்ஙனங் கண்ட பொருளாவன, சமணரது ஓலை, ஒட்டியபடி இட்ட இடத்தில் நில்லாது ஆற்றொடு கீழ்நோக்கி ஓடிவிட்டபடியால்இத்தம்பங்கள் இவ்வாறு தோற்றின என்று கண்டார் சிலர்; மேலும் நுண்ணுணர்வுடையோர் அவ்வாறு ஓலை நீருடன் ஓடிவிடுதல் இயல்பாதலின் அதனால் வாதத்தில் தோல்வி மட்டும் காணப்பெறுமேயன்றித் தெய்வத்தன்மை காணப்பெறாது; அங்ஙனம் தோல்வியினைமட்டும் காட்டாது, இத்தம்பங்கள், மேல் பிள்ளையார் இட்ட ஏடு மேலே நிச்சென்றவாற்றால் இவ்வாறு தோற்றப்பட்டுச் சிவனே முதல்வன் ஏனைத் தெய்வங்கள் அவனை நோக்கத் தெய்வங்களாகா என்பதனை நாட்டின என்று கண்டனர்.

மேலும் ஊன்றிக்காணும் மிக நுட்பமுடையோர் அச்சிவனருள் வெளிப் பாட்டுக்குக் காரணரான ஞானசாரியராகிய பிள்ளையாரது புகழினை இத்தம்பங்கள் நாட்டின என்று கண்டனர் என்க. இவை இத்தம்பங்களைப் பாருளோர் கண்டறிந்து கொண்டபடியினை விளக்கியவாறு.

தோற்றவர் - தோற்றிட - தோற்றும் - சொற்பின் வருநிலை.

தோற்றவர் - கழுவில் ஏறித் - தோற்றிட - தோற்றும் - தோல்வியுற்றவர் அவ் வாறே அப் பாவப்பயனுடன் ஒழிந்துபடாது, அரசனால் தண்டிக்கப்பட்டு தூய்மை செய்யப்பட்டமையால் நிரயம்நீங்கி நன்மை பெறக் காரணமாகிய பிறவியிற் சேர மீளப் பிறத்தற்கும் ஈடேறுதற்கும் கருவியாக என்றதொரு குறிப்பும் காண்க. **தோற்றிட**-நற்பிறவிபெற; **அழிவினால் ஆர்ந்த** - என்ற குறிப்புமிது. **ஆர்தல்** - நிறைதல்; நிறுவப்பெறுதல்.

வேற்றொரு தெய்வம் இன்மை - சிவனையன்றி வேறு ஒரு முதற்கடவுள் இல்லை என்ற உண்மையினை. ''மற்றுமோர் தெய்வந் தன்னை உண்டென நினைந்து'' (திருவா) சிவனையன்றி என்பது அவாய்நிலையான் வந்தது.

பதாகை - வெற்றிக்கொடி; பதாகை கட்டி உயர்த்திய என்க. உயர்த்திய பதாகை யின் பொருள் சிவனையன்றி முதற்றெய்வம் வேறில்லை என்பது. அப்பதாகையை உயர்த்தித் தாங்கி நிற்பது பிள்ளையாரின் **புகழ்ச் செயத் தம்பம்** என்பது பின்வரும் கருத்தின் குறிப்பு.

புகழ் செய்த—என்பதும் பாடம். 856

2755. **தென்னவன் றனக்கு நீறு சிரபுரச் செல்வ ரீந்தார்;**
முன்னவன் பணிந்து கொண்டு முழுவது மணிந்து நின்றான்;
"மன்னனீ றணிந்தா னென்று மற்றவன் மதுரை வாழ்வார்
துன்னிநின் றார்க ளெல்லாந் தூயநீ றணிந்து கொண்டார். 857

2755. (இ-ள்) தென்னவன்......ஈந்தார் - பாண்டியனுக்குச் சீகாழிச் செல்வராகிய பிள்ளையார் திருநீறு ஈந்தருளினர்; முன்னவன்...நின்றான் - முன் அவன் வணங்கி அதனை ஏற்றுக்கொண்டு தன் உடம்பில் எங்கும் விதித்தவாறு அணிந்து நின்றனன்; மன்னன்...என்று - அரசன் திருநீற்றினை அணிந்தகொண்டனன் என்றதனால்; மற்றவன்....அணிந்துகொண்டார் - அவனது மதுரைமாநகரில் மற்று வாழ்வார்களாய் நெருங்கிநின்ற நகர மாந்தர்கள் எல்லாரும் தூய திருநீற்றினைத் தாமும் அணிந்து கொண்டனர்.

(வி-ரை) தென்னவன்...ஈந்தார் - உயர்ந்தவராகிய பிள்ளையார் தாழ்ந்தோராகிய மாணவருக்குச் செய்யும் கொடையாதலின் **ஈந்தார்** என்றனர். முன்னர்ச் சுர நீக்கும்பொருட்டு அரசனது மேனியைப் பிள்ளையார் தீண்டித் திருநீறு கொண்டு தடவினர்; அந்தநிலை வேறு; அரசன் சமண்சார்பில் நின்றான்; அன்றியும் தலைதுளங்கி நடுக்கமுற்றுக் கருத்தொழிந்து உரைமறந்து கிடந்தான்; ஆதலின்நேரே பிள்ளையார் திருநீறு ஈயவும் அரசன் வணங்கி வாங்கிப் பெறுதலும் அணிதலும் கூடாவாயின; அன்றியும் அந்தப் பக்குவமும் கூடவில்லை. ஆயின் பிள்ளையார் அவனது நிலைகண்டு தமது திருக்கையினாற் றீண்டித் தடவித் தூய்மையாக்கிப் பக்குவப்படுத்தும்படி நீறுபூசியருளினர். அதன் பயனால் (2717) திருப்பாசுரம் உபதேசிக்கப்பெற்று உண்மை யுணர்ந்தான்; உணர்ந்ததனால் இப்போது பிள்ளையார் திருநீறு ஈயவும் வணங்கிப் பெற்று முழுவது மணியவும் பெற்றான் என்க.

முன்னவன் - அரசன்; **முன்** - ஏனையோர்க்கு முன்பு என்றும்; **முன்** - திரு முன்பு என்றும் உரைக்க நின்றது.

முழுவதும் - தனது மேனி முழுதினும்; அவர் ஈந்தருளிய திருநீற்றினை முழுதும் (ஒருசிறிதும் புறம்போகாமல்) என்றலுமாம்.

மன்னன் நீறு அணிந்தான் என்று - "மன்ன னெவ்வழி மன்னுயி ரவ்வழி" மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்" (புறம் - 186) என்றபடி மன்னவன் சமண் சார்பு பற்றி நின்றபோது அவன் மாந்தரும் அச்சார்பு பற்றினர் (2498); அவர்கள், ஈண்டு அரசன் உண்மையுணர்ந்து நீறணிந்து சைவச்சார்பு பற்றினன் எனக் கண்டு அது காரணமாகத் தாமும் அவ்வாறே நீறு அணிந்துகொண்டனர் என்க.

மதுரை மற்று வாழ்வார் - இவர்கள் மதுரைமாநகரத்து வாழும் குடிமக்கள். அரசனைப் பின்பற்றிச் சமணத்துப் புகுந்து, இங்கு அரசன் சைவத்துக்கு மீளக்கண்டு தாமும்மீளச் சைவம் புக்கவர்கள். இவர்கள் வேறு; முன்னர் ஒட்டி வாது செய்து தோற்றுக் கழுவேறிய சமணர்கள் வேறு; அவர்கள் எண்பெருங் குன்றத் தெண்ணாயிரவர்கள் (குருமார்) எனப்பட்டமை காண்க. **மற்று வாழ்வார்** - என்றதுமிக் கருத்து.

2756. **பூ**திமெய்க் கணிந்து வேந்தன் புனிதனு யுய்ந்த போது
நீதியும் வேத நீதி யாகியே நிகழ்ந்த தெங்கும்;
மேதினி புனித மாக வெண்ணீற்றின் விரிந்த சோதி
மாதிரந் தூய்மை செய்ய வமணிருள் மாய்ந்த தன்றே. 858

வாழ்வார் *என்றதனுற் ருழ்வாராய்த் தொலைந்தழிந்த அமணர்போலல்லாது பிள்ளையாரருளால் வாழ்வுபெற நின்றவர்கள்.*

எல்லாம் *- ஒருவரும் எஞ்சாமல் எல்லா மாந்தர்களும் நீறணிந்து சைவ ராயினர்; உய்ந்தனர்; அரசுகள் சரிதத்தில் வரும் பல்லவனும், குடிகளும், திருத் தெளிச் சேரியில் பிள்ளையார்பால் வாது செய்து தோல்வியுற்றுப் பின் தெளிந்த புத்தரும்போல.*

தூய நீறு அணிந்துகொண்டார் - தூய *- தூய்தாக்கும் தன்மையுடைய என்றதனுல் அவர்களது பாவத்தைத் தூய்தாக்கிற்று என்பது குறிப்பு. அணிந்து கொண்டார் என்றமையால் முன்னர் அணியாமை தானே பெறப்படும். மதுரை மாந்தர் எல்லாம் சமண் பற்றி ஒழுகிநின்ற தன்மை ''இருவர்தம் பாங்கு மன்றிச் சைவமங் கெய்தாததாக'' (2501) என்றதனுலறிக.*

பணிந்து வாங்கி—மற்ற அம்மதுரை*—என்பனவும் பாடங்கள்.* *857*

2756. (இ-ள்) *பூதி...போது - பிள்ளையார் ஈந்தருளிய திருநீற்றினைத் தனது மெய்யினுக்கு மருந்தாக அணிந்துகொண்டு அரசன் தூயவனுகப்பெற்று உய்ந்த அப்பொழுது; நீதியும்...எங்கும் - அரச நீதிமுறையும் வேதங்களில் விதித்த நீதியேயாக நாடெங்கும் நிகழ்வதாயிற்று; மேதினி புனிதமாக - உலகம் தூய்மை பெற்றதாகும்படி; வெண்ணீற்றின்...செய்ய - திருவெண்ணீற்றினது விரிந்த பேரொளியானது திக்குக்களையெல்லாம் தூய்மை செய்தலால்; அமணிருள்மாய்ந்தது அன்றே - அப்பொழுதே உயிர்களைச் சூழ்ந்திருந்த சமணமாகிய இருள் மாய்ந்தது.*

(வி-ரை) பூதி *- விபூதி; சிறந்த செல்வம். ''****சிரபுரச் செல்வர்*** *ஈந்தார்'' (2758) என்றதற்கேற்பப் பூதி என்ருர். தானழியாது நிற்பதுடன் அழியாமையினையும் ஞானத்தையும் விளக்கவல்லது என்பது குறிப்பு.*

மெய்க்கு *- குவ்வுருபு ஏழனுருபின் பொருளில் வந்தது; மெய்யின்கண்; மெய்யாக - மெய்ம்மைத்தன்மை விளக்கும் பொருட்டு என்ற குறிப்புமாம்.*

அணிந்து *- கவசமாகவும் மருந்தாகவும் முழுதும் பூசி; ''நீற்றினை நிறையப் பூசி'' (தேவா); சமணத்திலிருந்து இறைவனருளிய சூலைநோயால் ஆட்கொள்ளப்பட்டு வந்தடைந்த தம் தம்பியார் மருணீக்கியாருக்குத் திலகவதியம்மையார் இவ்வாறே திருவஞ்செழுத்தை ஓதி உபதேசித்துத் திருநீறு அளிப்ப, அவர் பணிந்து ஏற்று உடலார அணிந்து உய்ந்த வரலாறு முழுதும் ஈண்டு ஒப்பிட்டு நினைவு கூர்தற்பாலது; திருவாளன் றிருநீறு திலகவதி யாரளிப்பப், பெருவாழ்வு வந்ததெனப் பெருந்தகையார் பணிந்தேற்றங், ****குருவார வணிந்து****'' (1332); ''****பூதிமெய்க் கணிந்து புனிதனுயுய்ந்த****'' என்ற குறிப்பும், ஈண்டுத் திருப்பாசுரம் ஞானேபதேசமாதலும் கருதுக;* ***அணிந்து*** *- அணிந்ததனுல்.*

புனிதனாய் - அணிந்துகொண்டமையாலே தூய்மை பெற்றவனாகி; "சுத்தம **தாவது நீறு**" (தேவா).

வேந்தன்...நிகழ்ந்ததெங்கும் - இங்குக் கூறிய வேதநீதி என்பது உலகியல் **அரசநீதி** ஒழுக்கத்தினை; "உலகியல் வேதநூ லொழுக்க மென்பதும்" (2718) என்றநிலை. **வேந்தன்** புனிதனாகியபோது உலகியல் ஒழுக்கமும் அவ்வாறே தூயதாக நிகழும்; அல்லுழி **நிகழாது** என்பது. வேதநூல்களுள் விதித்தன செய்தலும் விலக்கியன வொழிதலும் **அறமென்ற** பரிமேலழகருரை ஈண்டுக் கருதத்தக்கது; **ஆகியே** - ஏகாரம் பிரிநிலை; முன்னிருந்த **கோள்கள்** எல்லாம் நீங்கி என்பது.

மேதினி...தூய்மை செய்ய - "நிலவு மெய்ந்நெறி சிவநெறியே என்பதும்" (2718) **என்ற** நிலை, முன்கூறியது உலகியல் ஒழுக்கம்; ஈண்டுக் கூறியது உயிரினைப் பற்றிய நலம்.

புனிதமாகத் - தூய்மை செய்ய - என்று கூட்டுக; "தோற்று மன்னுயிர்கட் **கெலாந்** தூய்மையே, சாற்று மின்பமுந் தண்மையுந் தந்துபோ, யாற்ற வண்டமெல**லாம்** **பரந்** தண்ணல்வெண், ணீற்றின் பேரொளி போன்றது நீணிலா" (308) என்ற கருத்தை **ஈண்டு** வைத்துக்காண்க.

வெண்ணீற்றின் விரித்த சோதி - மதுரையின் எல்லா மக்களும் அரசனுக்குப் **பிள்ளையார்** திருநீறளிக்க அவன் அணிந்தது கண்டு எல்லவர்களும் அணிந்து கொண்டமையால் "**விரிந்த** சோதி" என்றார். "பூதி சாதன விளக்கம் போற்றல் பெறா தொழியக் கண்டு" (1916) **என்றபடி** விளக்கம் சுருங்கியிருந்த நிலையினின்றும் **விரிந்த** என்பதும் குறிப்பு. "விரிந்தனை குவிந்த**னை**" (பிள் - தேவா. புறம்பயம்).

அமணிருள் - அமணர்கள் கட்டிய பொய்ம்மைகளின் செயல் **இருள்** எனப் **பட்டது**. உண்மைஞானத்தினைக் காணவொட்டாது மறைவு செய்தலின் **இருள்** என்றார். **இருள்** போல்வதனை இருள் என்றதுபசாரம். **மாய்தல்** - வலிகெட் டொழிதல். "தமிழ்நாடு **பழிநாடும்** படிபரந்த, மானமிலா வமணென்னும்வல்லிருள்போய் மாய்வதனுக்கு" (2550) என்று **முன்** கூறியது காண்க. சோதிவருதல் இருள் மாய்தலுக்குக் காரணமாகும் இயல்பும் **குறித்தெழுந்த** உருவகம்.

அன்றே - அப்பொழுதே. மேல்வரும் பாட்டினும் இவ்வாறே கொள்க. மேல் **வரும்** பாட்டில் சைவத் திருநெறி நடந்தமை கூறுவர்.

உயர்ந்தபோது—என்பது பாடமாயின் சமணர்பாற் றாழ்ந்த நிலையினின்றும் உயர்ந்த என்றும், கூன் நிமிர்ந்துயர்ந்த என்றும் உரைத்துக்கொள்க. 858

2757. (இ-ள்) மீனவற்கு...காட்டி - பாண்டியனுக்கு உயிரைக் கொடுத்ததுமன்றி உண்மை நெறியினையும் காட்டி; மிக்க...கொண்ட - மிகுந்த கேடு விளைவிக்கும் சமணைப் போக்கி உலகெலாம் உய்யும்படி ஆட்கொண்டருளிய; ஞானசம்பந்தர்... ஓங்க - திருஞானசம்பந்தரது ஞானமெய்ந்நெறி உலகத்திலே பெருகி ஓங்குதலினாலே; தேனலர்...நடந்ததன்றே - வண்டுகள் ஒலித்தற்கிடமாகிய கொன்றை மாலையணிந்த சிவபெருமானது திருநெறி நடந்தது அப்பொழுதே.

2757. **மீனவற் குயிரை நல்கி** மெய்ந்நெறி **காட்டி மிக்க**
ஊனமாஞ் சமணை நீக்கி **யுலகெலா முய்யக் கொண்ட**
ஞானசம் பந்தர் வாய்மை ஞாலத்திற் பெருகி யோங்கத்
தேனவில் கொன்றை யார்தந் **திருநெறி நடந்த தன்றே.** 859

(வி-ரை) மீனவற்கு உயிரை நல்கி *உணர்வு மாவியு மொழிவதற் கொரு புடை யொதுங்கியும் (2610), கருத்தொழிந் துரைமறந்தும் (2611) முடிதுளங்கியும் உயிர் தரிக்கலாகாத நிலையில் இருந்த பாண்டியனுக்கு உயிர்கொடுத்து, அமண் சார்பாற் கேடுற்ற உயிரைத் தம்வசமாக்கி நோய்த்தண்டத்தாலும் தீக்கையாலும் தூய்மையாக்கி மீளப் புத்துயிராய்க் கொடுத்து என்ற குறிப்புமாம்.*

மெய்ந்நெறி காட்டி - சமணை நீக்கி - உய்யக்கொண்ட *- ''சார்புணர்ந்து சார்பு கெடஒழுகும்'' (குறள்) நிலையினைச் செய்து.*

மெய்ந்நெறி காட்டுதல் *- அருட்குறிப்புடன் திருப்பாசுர ஞானோபதேசத்தாலும் திருநீறு ஈந்தருளியமையாலுமாம்.*

மிக்க ஊனம் ஆம் *- மிகப் பெருங்கேடுகளை யெல்லாம் ஆக்கும். **ஆம்** - ஆகச் செய்யும் எனப் பிறவினைப்பொருளில் வந்தது. மிகப் பெருங்கேடாவன மறைக ணிந்தனையும், சிவ நிந்தனையும், அடியார் நிந்தனையுமாகிய சிவாபராதம்; இவை கழுவாயில்லாத சிவாபராதங்களாதலான் **மிக்க ஊனம்** என்றார்.*

உலகெலாம் உய்யக்கொண்ட *- அமணீக்கி மீனவற்கு உயிர்நல்கி நெறிகாட்டி யதனால் உலகெலாம் உய்வித்ததாயிற்று என்பது; அரசன் ஒருவனை நல்வழிப் படுத்தவே அவனால் உலகம் நன்னெறி நிறுத்தப்படுதலின் அச்செயலே உலகை உய்வித்த செயலாயிற்று என்க. **கொண்ட** - ஆட்கொண்ட.*

உலகெலாம் *- இறைவர் ஆசிரியர் பெருமானுக்கு முதலாகத் தந்த ''வெருளின் மெய்ம்மொழி'' யெனும் ஞானவாக்காகிய ஐந்தெழுத்து; இதனைத் திருஅருள் வெளிப்படும் அரிய பெரிய இடங்கள்தோறும் அமைப்பது ஆசிரியரது மரபு; **உலகெலா முய்ய**வுறுதியாம் பதிக முரைத்துமெய் யுணர்வறா வொருமையுடன்'' (ஏயர்கோன் - புரா - 88) என்று நம்பிகளது திருப்பாண்டிக்கொடுமுடி நமச்சிவாயத் திருப்பதிகத்தினைக் குறித்தருளியதும், ''அஞ்செழுத் தோதி ஏறினா **ருய்யவுல கெலாம்**'' (2114) என்று பிள்ளையார் முத்துச்சிவிகையில் ஏறியபோது அருளியதும், இவ்வாறே உள்ள பிறவும் ஈண்டு நினைவு கூர்க.*

ஞானசம்பந்தர் வாய்மை *- திருஅருள்ஞான முண்டருளியவராதலின் அந்த ஞான வாக்கினின்றும் போந்தது சிவனருளேயாகிய ஆணை என்பது குறிப்பு. ''எனதுரை தனதுரையாக'' (இலம்பையங்கோட்டூர் - தேவா) என்ப துண்மையாதலின் பிள்ளையாரருளிய வாய்மை சிவனருளிய நன்னெறியே என்பது பொருள். இதுபற்றியே ஈண்டு **ஞானசம்பந்தர்** என்ற பெயராற் கூறியருளினார். ஞானசம்பந்தர் வாய்மை - ஓங்கக் - கொன்றையார் திருநெறி நடந்தது - என்றதும் இங்கு வாய்மை என்பது சிவநெறி குறித்ததென விளக்குதல் காண்க. **வாய்மையும் திருநெறி**யும் ஒன்றென்பது கருத்து. **''சைவ வாய்மை''** (2498) என்று இவ்வரலாற்றுத்*

தொடக்கத்துக் கூறியதும் காண்க. வாய்மை - வாக்கின் செயலாகிய அருளிப்பாடு.

''மலைவில்லா ரருளப் பொல்லார்தாள் புனைவர்'' எனவே அவ்விருவரும் தம்முள் வேற்றுமையின்மை பெற்றும்'' என்று மாதவச் சிவஞான முனிவர் சிவஞானபோதம் மங்கல வாழ்த்து உரையில் உரைத்த கருத்துக் காண்க.

பெருகி ஓங்க - உயிர்களிடத்து வகையாலும் தொகையாலும் மிகுதல்.

வாய்மை - ஓங்கத் திருநெறி நடந்ததன்றே - ''எல்லா மரனாமமே சூழ்க; **வையக** முந்துயர் தீர்கவே'' என்ற வாய்மை ஞாலத்தில் திருநெறியினை நடை பெறச் செய்தது **என்க**.

தேனவில் கொன்றையார் - தேன் - நவில் - இறைவரது கொன்றையின் தேனை உண்டு தேன்கள் (வண்டுகள்) சிவஞானம் பெருகச் செவ்வழிப் பண்பாடும் என்ற குறிப்பினுற் சிவஞானவமுதுண்டு அதன் வயமேயாகி ஞானப்பாடல் பாடும் பிள்ளையார் தன்மையினை உணர்த்துதல் காண்க. **நவிலுதல்** - இங்குச் சொல்லுதல்; அறிவுறுத்துதல் என்ற பொருளில் வந்தது. ''செங்கழுநீர்த் தாதாடி மதுவுண்டு சிவந்த வண்டு, வேறாய வுருவாகிச் செவ்வழிநற் பண்பாடும்'' (மிழலை-மேகராகக் குறிஞ்சி) என்ற பிள்ளையார் திருவாக்கு இங்குக் கருதத்தக்கது. ''ஆனந்தத் தேன்சொரியும், குனிப்புடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ'' (திருவா); **கொன்றையார்** - பிரணவக் குறிப்பும் தருதல் காண்க.

திருநெறி நடந்ததன்றே - நடந்தது - நிகழ்ந்தது; வழக்கம் அருகியிருந்து திரிந்த நிலைமாறி நன்கு வழங்கத்தொடங்கிற்று.

> ''மன்னிய **சைவ வாய்மை** வைதிக வழக்க மாகு
> **நன்னெறி** திரிந்து மாறி **நவைநெறி நடந்த தன்றே**'' (2498)

என்று பாண்டிநாட்டு வரலாறு கூறித் தொடங்கிக்காட்டிய ஆசிரியர் ஈண்டு அவ் வரலாற்றினை நன்மை பெற முடித்துக்காட்டிய தெய்வக் கவிநலம் கண்டு களிக்க.

''பரசமய நிராகரித்து நீறு ஆக்கும்'' காதலனைப் பெறத் தவங்கிடந்து வழிபட்ட சிவபாதவிருதயருக்குத் தோணியப்பர் ஈந்த வரமாகிய பிள்ளையார் திருவவதாரம் செய்த பயன் (2498 முதல் 2757 வரை = 600 - 859) இந்த 259 பாட்டுக்களில் கூறப்பட்டது; இஃதே பிள்ளையாரது புராணத்துக்கும் திருத்தொண்டர் புராணத்துக்கும் உயிர்நிலையாகிய உள்ளுறை என்றலுமமையும்.

ஞானசம்பந்தர் வாய்மை பெருகி ஓங்கத் திருநெறி நடந்தவாற்றை வரும் பாட்டாற் கூறுகின்றார்.

உய்யவந்த—தேனலர்—தேனவிழ்—என்பனவும் பாடங்கள். 859

2758. (இ-ள்) மறையவர்...ஓங்க - வேதியர்கள் சிவ வேள்விகளைச் செய்யவும், (அது காரணமாகத்) தேவர்கள் மழையைப் பெய்விக்கவும், (அதுகாரணமாக) அரசன் நல்ல அறநெறியில் ஓங்கியிடவும், ஆக இவ்வாற்றான்; அவனி - உலகம்; இகத்தினிலே - இவ்வுலக வாழ்வாகிய இம்மைநிலையிலே; இன்பம் குறைவிலது - துய்க்கும் இன்பங்களில் எவ்வாற்றானும் குறைவிலாமலிருந்தது; எனினும் - அவ்வாறாயினும் (அது பிறவித்துன்பத்துக் கேதுவாதலின்றி); கூற்றை...அன்றே - அன்றே இயமனை உதைத்தவராகிய சிவபெருமானது திருநாமத்தைக்

2758. **மறையவர் வேள்வி செய்ய வானவர் மாரி நல்க**
இறைவனன் னெறியி னோங்க விகத்தினி லவனி யின்பங்
குறைவில தெனினுங், கூற்றை யுதைத்தவர் நாமங் கூறி
நிறைகடற் பிறவித் துன்ப நீங்கிடப் பெற்ற தன்றே. 860

கூறுதலால் நிறைந்த கடல்அலை போன்று மேலு மேலும் தொடர்ந்துவரும் பிறவியாகிய துன்பத்தினின்றும் நீங்கியிடவும் அன்றே பெற்றது (அவனி).

(வி-ரை) ஞானசம்பந்தரது வாய்மையினால் திருநெறி நடந்த வரலாறு இவ்வாறென்று முன்பாட்டிற் கூறிய பொருளை அனுவதித்துக் கூறியது இப்பாட்டு.

மறையவர் வேள்வி செய்ய - ''**வாழ்க வந்தணர்**'' என்றருளிய **வாய்மை**''யின் பயனாக உலகமின்புறச் சந்தவேள்விகள்-சிவவேள்விகளைச் - செய்ய; **வேள்வி** - சிவவேள்வி; ''சங்கரர்க்கு'' (2720).

வானவர் மாரி நல்க - ''**வாழ்க...வானவர்**'', ''**வீழ்க தண்புனல்**'' என்றரு ளிய ''**வாய்மை**''களின் பயனாக உலகமின்புறச் செய்யும் வேள்விகளினாலே ''வேள்வி நற்பயன் வீழ்புனலாவது'' (2720) என்றபடி வேள்விகளில் விளிக்கப்படும் இந்திரன் வருணன் முதலிய தேவர்கள் அவ்வம் மந்திரங்களால் வரும் சிவனது ஆணைப்படி நின்று முறைமையால் மழையைப் பருவந் தப்பாது பெய்விக்க; நல்குதல் சிவனாணையால் என்பது துணிபு; ஆணைவழி நல்குதலை வானவர் நல்க என்றதுபசாரம்.

இறைவன் நன்னெறியின் ஓங்க - இறைவன் - இங்கு அரசன் என்ற பொருள் தந்து நின்றது. இது ''**வேந்தனு மோங்குக**'' என்றருளிய ''**வாய்மை**''யின் பயனாக வந்தது. **நன்னெறி** - இறைவர் அருளிய வேத சிவாகமங்களின் விதித்த ஒழுக்கநெறி. **நெறியின் ஓங்குத**லாவது நெறியில் தானும்நின்று தன்கீழ் உலகத்தையும் அந்நெறியில் நிற்பித்தலால் உலகத்தை வளரச்செய்தல். **ஓங்க** என்பது ''**ஓங்குக**'' என்ற பதிகத்தின்படியே என்ற குறிப்புத்தர அச்சொல்லினாலே கூறினார். ''**வேள்வி**'' என்றது போல.

அவனி, இகத்தினில் இன்பங் குறைவிலது என்று கூட்டுக. உலகத்தின் இம்மையின்பம், மழையும் விளையுளுமாகிய இவற்றான் வருதலானும், இவற்றை அரசனது செங்கோல் நிலைபெறுத்துதலானும் இகத்தினில் இன்பம் குறைவில தாயிற்று. ''இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட, பெயலும் விளையுளும் தொக்கு'' (குறள்). ஈண்டு **இன்பம்** என்றது ஐம்புல வின்பங்களாகிய உலக வின்பங்களை.

இன்பங் குறைவில தெனினும் - பிறவித் துன்ப நீங்கிடப் பெற்றது - உலக இன்பங்கள் துய்ப்போர்க்குப் பற்றறாமையால் பிறவியறுதலில்லை என்பது நூல்களின் துணிபு. ''பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்'', ''பிறப்பறுக்க லுற்றார்க் குடம்புமிகை'', ''அடல்வேண்டு மைந்தன் புலத்தை; விடல்வேண்டும், வேண்டிய வெல்லா மொருங்கு'' (குறள்) என நீதிநூல் பேசும்; ''மோகமறுத்திடினும் முத்தி கொடுப்பதென, வாகமங்கள் சொன்ன வவர்'' (களிறு - 72); ''ஆசை நீத்தவர்க்கே வீடு தருவமென் றளவில் வேதஞ் சாற்றிய தலைவன்'' (திருவிளை. புரா - பாயி) எனப் பெருநூல்கள் துணிவன; உண்மை இவ்வாறாக இகத்தினில் இன்பம் குறைவிலா தாயினும்

2759. ''**அங்கயற் கண்ணி** தன்னோ டாலவா யமர்ந்த வண்ணல்
பங்கயச் செய்ய பாதம் பணிவ''னென் றெழுந்து சென்று,
பொங்கொளிச் சிவிகை யேறிப் **புகலியர் வேந்தர்** போந்தார்;
மங்கையர்க் கரசி யாரு மன்னனும் போற்றி வந்தார். 861

அதனால் பிறவி பெருகுதலின்றிப் பிறவித்துன்பம் நீங்கிப் பெற்றதென்பார் எனினும் **என்றார்.**

நாமங் கூறித் - துன்ப நீங்கிடப் பெற்றது - உலக இன்பந் துய்த்தலால் இவ்வாறு நூல்கள் விதித்தவாறு பிறவி பெருக்காமல் அத்துன்ப நீங்குதற்குக் காரணம் **திருநாமங் கூறுதல்** என்பதாம்; ......''ஐந்து புலன்களு மார வார்ந்து, மைந்தரு மொக்கலு மகிழ **மனமகிழ்ந்,** திவ்வகை யிருந்தோ **மாயினு**மவ்வகை, **மந்திரவெழுத் தைந்தும் வாயிடை மறவாது,** சிந்தை நின்வழிச் செலுத்தலி னந்த, **முத்தியு மிழந்தில;** முதல்வ! வத்திறம், **நின்னது பெருமை யன்றே!** வென்னெனின்?, வல்லானொருவன் கைம்முயன் றெறியினும், மாட்டா **வொருவன்** வாளா வெறியினு, நிலத்தின் வழாஅக் கல்லே போல, நலத்தின் வழா அர்**நின் னுமநவின் றோரே**'' (திருவிடை - மும் - கோ - 19) என்ற பட்டினத்தடிகளது கருத்து ஈண்டு விளக்கப்பட்டது காண்க.

கூற்றையுதைத்தவர் - இயமனை உதைத்த தன்மை காட்டிய இவரே பிறவித் துன்பமாகிய மரணத் துன்பத்தை நீக்கவல்லவர் என்பார் இவ்வாற்றாற் கூறினார்.

நாமங் கூறி-அரகர என முழக்கம் செய்தலும் தியானித்தலுமாம். ''**எல்லாம் அரனாமமே சூழ்க**'' என்ற ''**வாய்மை**''ப் பயன் இது.

கடல் - இங்குக் கடல் அலை குறித்து நின்று, அலைபோல மேன்மேல் தொடர்ந்து வருதல் குறித்தது.

அவனி, - துன்ப நீங்கிடப் பெற்றது - ''**வையகமுந் துயர் தீர்கவே**'' என்ற வாய்மை''யின் பயனுதல் காண்க. இவ்வாறு ஞானசம்பந்தர் பரமஞானாசாரிய ராதலின் அவர் சத்பாவனையால் எழுந்த ஞானவாய்மையாகிய அருள்வாழ்த்து அவ்வாறே பலித்து முழுதும் பயன் தந்தமை கண்டுகொள்க.

இன்பம் குறைவிலதெனினும் நாமம்கூறி அவனி பிறவித்துன்ப நீங்கிடப்பெற்ற தன்மை பிள்ளையாரது வாய்மையின் பலன் என்பதாம். பொருட்செல்வம் பூரியார் கண்ணுமுளதாதலின் அச்செல்வம் வந்தபோது தெய்வமும் சிறிது பேணாராய் நரகில் வீழ்வார் உலக மாக்கள்; ஆனால் ஈண்டு ஞானாசாரியரது நல்ல திருநோக்கம் பெற்ற பேற்றினால் மதுரை வாழ்வார் செல்வமும் பெற்று, அதனோடு நாமங்கூறிப் பிறவித் துன்ப நீங்கவும் பெற்றனர் என்க.

860

2759. (இ-ள்) ''அங்கயற்கண்ணி...பணிவன்'' என்று - அங்கயற்கண்ணியம்மையாருடனே திருவாலவாயில் விரும்பி வீற்றிருந்தருளிய பெருங்கருணையாளராகிய இறைவருடைய தாமரைபோன்ற திருவடிகளை வணங்குவேன் என்று; எழுந்து சென்று - வைகையாற்றின் கரையினின்றும் எழுந்துபோய்; பொங்கொளி...போந்தார் - மேன்மேற்

பொங்கும் ஒளியினையுடைய முத்துச் சிவிகையினை மேற்கொண்டு சீகாழி மன்னவர் போந்தருளினர்; மங்கையர்க்கரசியாரும்...வந்தார் - மங்கையர்க்கரசியம்மையாரும் நெடுமாறனாராகிய அரசரும் போற்றிக்கொண்டு அவர்பின் வந்தனர்.

(வி-ரை) ''அங்கயற்கண்ணி...பணிவன்'' என்று - இது பிள்ளையார் உட் கொண்டருளிக் கூறியது. அரசனிடம் வரும்முன் திருமடத்தினின்றும் நேரே திருவாலவாயினுட் சென்று பணிந்து ''காட்டுமா'', ''வேதவேள்வி'' என்ற பதிகங்களைப் பாடித் திருவருட் குறிப்பினைப் பெற்ற பின்பே போந்து சமணருடன் வாதம் செய்து முடித்தருளினாராதலானும், இவ்வாதங்கள் அவரருள்வழியே நின்று தம் செயல் அவர் செயலேயாக நிகழ்த்தப்பட்டனவாதலானும், இவை முடிந்த பின்பு அரசன் கோயிலுக்கேனும் திருமடத்துக்கேனும் வேறெங்கும் செல்லாது திருவாலவாயுட்சென்று அந்த இறைவரைப் பணிவேன் என்றுட்கொண்டனர். இஃதே ''தம்மை மறந்து நின்னை நினைப்பவர்'' (கோயினான்மணிமாலை) என்ற தன்மை பெற்ற பெரியோர் இயல்பு. ''மறக்குமா றிலாதவென்னை'' (தேவா) என்றபடி எப்பொழுதும் மறவாது பணிந்திருக்கும் நிலையினர் பிள்ளையார்; இவ்வாதத்தில், ''புத்தரொ டமணை வாதி லழிவிக்கு **மண்ணல்** திருநீறு செம்மை திடமே'' என்று முன் கூறியவாற்றானும், ''ஆற்ற லடல்விடை யேறு மாலவாயான்றிரு நீற்றைப், போற்றி...ஞானசம்பந்தன், தேற்றித் தென்னனுட லுற்ற தீப்பிணியா யினதீரச், சாற்றிய பாடல்கள்'' என்றும், ''மலைமகள் குளிரிள வளரொளி வனமுலை யிணையவை குலவலின்...எரியிடிலிவை பழுதிலை'' என்றும், ''மதுரைத் தொகையாக்கினும்... ...கரைக்கோலை தெண்ணீர்ப் பற்றின்றிப் பாங்கெதிர் விரவும் பண்பு நோக்கில்'' என்றும் கூறியவற்றாலும், ''நள்ளா றுடைய நம்பெரு மானிது வென்கொல் சொல்லாய்...ஆலவாயின்க ணமர்ந்த வாறே'' - (தென்னவர்கோன் முன்னமணர் செய்த வாதிற் றீயின்க ணிடுமேடு பச்சை யாக்கி, யென்னுள்ளத் துணையாகி யால வாயி லமர்ந்திருந்த வாறென்கொ லெந்தாய்) என்று பின்னர்க் கூறுமாற்றாலும் பிள்ளையார் எப்போதும் பணிந்தே நின்றனர் என்பதறியப்படும்; ஆயின் இங்குப் **''பாதம் பணிவனென் றெழுந்து''** என்றதென்னையோ? எனில்; ''ஞானத்தாலங்குச் சிந்திக்கும் படியிங்குச் சிந்தித்துப் போற்றிப் - புறம்பேயு மரன் கழல்கள் பூசிக்க'' (சித்தி - 9 - 11) என்றபடி பூசித்தலும், **தமது உள்ளத் துணையாகி உடனிருந்தியக்கிய இறைவரை நன்றியின் பொருட்டு நேரே பணிதலும், உலகர்க்கு வழி காட்டலும் கருத்தென்க.** அற்றாயின் வைகைக்கரையி னின்றவாறே பணிதலாகுமே? எனின், அற்றன்று; **அம்முதல்வன் யாங்கணும் வியாபகமாய் நிற்பினும் (திருவேடம், சிவாலயம் என்ற) இவ்விரண்டிடத்து மாத்திரையே தயிரின் நெய்போல விளங்கி நிலைபெற்று, அல்லுழி யெல்லாம் பாலி னெய்போல வெளிப்படாது நிற்றலான்''** (அவன் மற்றிவ்விடங்களிற் பிரகாசமாய் நின்றே அல்லாதவிடத்து அப்பிரகாசமாய் நிற்றலான்) என்ற சிவஞானபோதம் 12-வது சூத்திரச் சிற்றுரையும் வார்த்திகமும் கருதுக.

எழுந்து - வைகைக்கரையில் அமர்ந்துநின்ற இடத்தினின்றும் எழுந்து; **சென்று** - அவ்விடத்தினின்றும் முத்துச்சிவிகை யிருந்த இடம்வரையும் சென்று.

போந்தார் - திருவீதியினுள்ளே சிவிகையிற்மேற் சென்றருளினர்.

வேந்தர் - மன்னன் - ஈண்டு மன்னவன் மாறனுக்கு மன்னராய் விளங்கிய நிலை குறிக்க வேந்தர் என்றார்.

2760. எண்ணரும் பெருமைத் தொண்ட ரியாவரும் மகிழ்ச்சி யெய்திப்
புண்ணியப் பிள்ளை யாரைப் புகழ்ந்தடி போற்றிப் போத,
மண்ணெலா முய்ய வந்த வள்ளலார் தம்மைக் கண்டு
கண்ணினாற் பயன்கொண் டார்கள் கன்னிநாட் டவர்களெல்லாம். 862

மங்கையர்க்கரசியாரும் என அம்மையாரை முன்வைத்துக் கூறியது சிறப்புப் பற்றி. அருள் வெளிப்படு மிட''மாகும் நிலைபற்றி அங்கயற்கண்ணி தன்னோடு'' என அம்மையாரை முன்வைத்துக் கூறியவாறே ஈண்டும் கூறியது காண்க. மங்கையர்க்கரசி'' என்ற தேவாரத்தும் ''அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த வாலவா யாவது மிதுவே'' என்றநிலை குறிப்பித்தமையும் கருதுக.

அண்ணல்-பெருமையுடையோர். பெருமையாவது தம்மை அஞ்சலென்றருளி உடனாக இருந்து இயக்குவித்துத் தாம் விண்ணப்பித்தவாறே ஆட் கொண்ட தன்னோடு, அச்செயலொன்றானே அரசனையும் அவனுடன் அவனது நாடு முழுமையும் ஆட் கொண்ட திறம் தொடக்கத்து ''***அண்ணல்*** திருநீறு செம்மை'' (தேவாரம்) என்ற குறிப்புத்தர இவ்வாற்றாற் கூறினார்.

போற்றி - ஆளுடைய பிள்ளையாரைப் போற்றி.

அமர்ந்த வள்ளல்—என்பதும் பாடம். *861*

2760. (இ-ள்) எண்ணரும்...போத - எண்ணுதற்குமரிய பெருமையுடைய தொண்டர்கள் எல்லாரும் மகிழ்ச்சியடைந்து சிவபுண்ணியப் பிழம்பாகிய பிள்ளையாரைப் புகழ்ந்து அவருடைய திருவடிகளைத் துதித்துக்கொண்டு உடன் வர; கன்னி நாட்டவர்க ளெல்லாம் - பாண்டி நாட்டவர்கள் எல்லாரும், மண்ணெலாம்...கண்டு-உலகங்க ளெல்லாம் உய்யும் பொருட்டே திருவவதரித்த வள்ளலாராகிய பிள்ளையாரை நேரே காணப்பெற்றமையாலே; கண்ணினாற் பயன்கொண்டார்கள் - கண்கள் படைத்த பயனையடைந்தன ராயினார்கள்.

(வி-ரை) எண்ணரும் பெருமைத் தொண்டர் யாவரும்-எண்ணரும் பெருமை - அடியார்களுடைய பெருமைகள் நினைத்தற்குமரியன என்பது. ''தொண்டர்தம் பெருமையைச் சொல்லவு மரிதே'', ''தெரிவரும் பெருமைத் திருத்தொண்டர்'' **(6) யாவரும்** - பிள்ளையாரது திருக்கூட்டத்துடன் வந்தோரும், மதுரை ஆலவாயிற் பணிசெய்வோரும், அன்று உண்மைநிலை கண்டு பழையபடி நீறு அணிந்து கொண்ட மதுரை வாழ்வாராம் தொண்டர்களுமாகக் கூடிய எல்லாரும்.

மண்ணெலாம் உய்ய வந்த வள்ளலார் - ஆளுடைய பிள்ளையார்; பிறவிக்கு வித்தாகத் தமக்கென்று கருமப்பகுதி ஒன்றுமில்லாதவராய், உலகத்தை உய்வித்தற்கென்றே திருவவதரித்தவர் - பிள்ளையார். **வள்ளலார்** - வரையாது கொடுத்தவர் என்பது.

கண்ணினாற் பயன்கொள்ளுதலாவது கண்பெற்ற பேறாகிய உறுதிப்பயன் பெறுதல். முன்னர் வைகைக் கரைக்கு வாதின்பொருட்டுச் சென்றருளிய பிள்ளையாரைக் கண்ட மாந்தர் ''வாழ்ந்தன கண்கள்'' என்றநிலை வேறு; அஃது ஆண்டுப் புனல் வாதந் தொடங்குமுன் மதுரைவீதியில் பிள்ளையாரைக் கண்ட மாந்தர் பலரும் தத்தமக் கேற்றவாறாகப் பற்பலவாறு

2761. **ஆ**லவா யண்ணல் கோயி லங்கண்முன் றோன்றக் கண்டு
பாலரு வாயர் மிக்க பண்பினாற் றொழுது சென்று
மாலுநான் முகனும் போற்ற மன்னினார் கோயில் வாயில்
சீலமா தவத்தோர் முன்பு சிவிகைநின் றிழிந்து புக்கார். 863

பேச, அதனுள் அவரது அழகில் ஈடுண்ட ஒருசிலர் பேசிய நிலை. ஈண்டுக் கூறியது உண்மை கண்டபின் அவரது அருளில் தோய்ந்து ஆட்கொள்ளப்பட்டு நீறணிந்து உய்ந்துகொண்டோர்களின் நிலை. ஆதலின் கூறியது கூறலன்மையுணர்க. முன்னர்க் கண்ட பலருள் ஒருபகுதியினரே ''கண்கள் வாழ்ந்தன'' என்றவர்; எல்லவரும் கண்டு கண் பெற்ற பயன் பெற்றனர். **எல்லாம்** - என்ற கருத்துமிது.

புகழ்ந்துமுன்—புகழ்ந்துடன்—என்பனவும் பாடங்கள். 862

2761. (இ-ள்) ஆலவாய்...கண்டு - இறைவரது திருவாலவாய் என்னும் கோயில் அவ்விடத்தில் முன்பு தோன்றிடக் கண்டு; பாலரு வாயர்...சென்று - பிள்ளையார் மிகுந்த அடிமைப் பண்பினாலே தொழுது சென்று; மாலும்...புக்கார் - விட்டுணுவும் பிரமனும் துதிக்க நிலைபெற எழுந்தருளிய இறைவரது கோயிலின் திருவாயிலின் முன்பு சீலமுடைய அடியார்களின் முன்பு முத்துச் சிவிகையினின்றும் இறங்கி உள்ளே புகுந்தனர்.

(வி-ரை) அண்ணல்ஆலவாய்க் கோயில் என்க. ஆலவாய் என்பது கோயிலின் பெயர்.

அங்கண்முன் தோன்றக் கண்டு - வைகைக் கரையினின்றும் சிலதூரம் வந்த பின்பே ஆலவாய்க் கோயில் முன்னே கட்புலப்படும் ஆதலின் அவ்வாறு தோன்ற.

மிக்க பண்பாவது - உறைப்புடைய அடிமைத்திறம்.

மாலு நான்முகனும் போற்ற மன்னினார் - பிரமன் முதலிய தேவர்கள் வந்து துதித்த வரலாறுகள் தலபுராணத்துட் கண்டுகொள்க.

வாயில் - திருவாயிலின் அணித்தாகிய இடத்தில்.

சீல மாதவத்தோர் - சைவ சீலமுடைய அடியவர்கள். **மாதவம் - ஈண்டுச் சிவபூசையே தவமெனப்படும்.** 863

2762. (இ-ள்) தென்னவன் தானும்...அமைச்சனாரும்-பாண்டியனும் எங்கள் சோழ மன்னர் மகளாராகிய மங்கையர்க்கரசியாரும் உலகை நன்னெறிப்படுத்தும் மந்திரியாராகிய குலச்சிறை நாயனாரும்; ஞானசம்பந்தர்...உடன்புக - திருஞான சம்பந்தருடைய செம்மை தரும் பொற்பாதத் தாமரைகளைப் போற்றி எனத் துதித்துக்கொண்டு உடனே உட்புக; சண்பையர் தலைவர் - சீகாழியரவர்கள் தலைவராகிய பிள்ளையார்; புனிதர் கோயில்......வலங்கொண்டு - புனிதராகிய இறைவரது திருக்கோயிலினை முன் வலமாகச் சூழ்ந்து வந்து; உள்ளால் புக்கார் - உள்ளே புகுந்தருளினர்.

(வி-ரை) தென்னவன் தானும்...உடன்புக - முன்னர் மங்கையர்க்கரசி யாரும் மன்னனும்

2762. **தென்னவன் ருனு மெங்கள் செம்பியன் மகளார் தாமும்**
நன்னெறி **யமைச்ச ரூரு** ஞானசம் பந்தர் செய்ய
பொன்னடிக் கமலம் போற்றி யுடன்புகப் புனிதர் கோயில்
தன்னைமுன் வலங்கொண் டுள்ளாற் சண்பையர் தலைவர் புக்கார். 864

போற்றி வந்தார்'' (2759) என்றது வைகையாற்றினின்றும் போந்து திருவீதியில் வந்த செயல் குறித்தது; ஈண்டுக் கூறியது திருக்கோயிலினுள் புகும்போது பிள்ளையாருடனே கூடச் செல்லும்போது உள்ள நிகழ்ச்சியினை. இதனை இவ்வாறு வேறுபிரித்து விதந்து கூறியதென்னை? எனின், முன்னர்த் தொடக்கத்து அந்நாளின் முன்னுளில் அமைச்சர் மட்டும் உடன் வரவும் அம்மையார் முன்னமே சென்றிருப்பவும் ஆலயத்துட் சென்றருளிய பிள்ளையார், திருமடத்தினின்று அந்நாள் முற்பகல் அரசன் கோயிலுக்குப் போதுவார் இறைவர் திருவுள்ள மறிவேனென்று திருவாலவாயுட் புக்கார்'' (2635). அப்போது கவலைமீக் கொண்ட ''அம்மலர்க் குழலினுரும் அமைச்சரும்'' மட்டும் உடன் புகப் புக்கருளினர். அதுகாலை அரசன் அமணர் சூழ்ந்து நிற்ப உணர்வின்றி மிக்க சுரநோயுடன் கிடந்தனன்; திருவருள் கைவந்தமையால் ஈண்டு அதேநாளில் பிற்பகல் அரசன் உள்நோயும் புறநோயும் நீங்கி அமணர் சூழலும் நீங்கி உடன்வரவும், பன்னுள் அவன் ''முன்பு புலப்படா வகைகொண் டுய்த்த'' ''ஓங்கிய சைவவாய்மை ஒழுக்கத்தின் நின்ற'' சிவவழிபாட்டினை, அவ்வரசனும் உடன் வரவும், உலகம் நவைநெறி நீங்கித் திருநெறியிற் செல்லவும் கண்ட பெருமகிழ்ச்சியுடனே அம்மை யாரும் அமைச்சனுரும் உடன்வரவும், முன்னர்ப் பிள்ளையாரை அந்த மாநகரிடத் திராது அகல்விக்க அமணர் சூழ்ச்சியுட்பட்ட அரசன்ருனே அவருடன் கூடச்சென்று இறை வழிபாட்டினை நிகழ்விக்கவுமாகக் கண்ட இவ்வற்புதக் காட்சியினைத் தமது திருவுள்ளத்துக் கண்டு மகிழ்ந்த ஆசிரியர் அதனை நாமும் குறிக்கொள்ளும் வகை எடுத்துக் கூறியவாரும் என்க; **மன்னவன்ருனும்** என்ற குறிப்பும் இது.

எங்கள் செம்பியன் மகளார்தாமும் - எங்கள் - சைவம் பெருக்கிய உரிமைப் பாட்டின் சிறப்பு. அநபாயச் சோழரின் மந்திரியாரா யிருந்த நிலைமையில் அவர் விரும்பியபடி தாம் இப்புராணம் பாடியபடியால் அம்மரபின் உரிமையும், இராசராசச் சோழர் திருமுறைகளை வெளிப்படுத்திய நிலைமையின் அம்மரபின் உரிமையும், பிறவும் கருத்துட்கொண்டு கூறியவாரும். ''மங்கையர்க்குத் தனியரசி **யெங்கள் தெய்வம்**'' (மங்கையர்க்கரசியார் புராணம்) என்றும், ''**தங்கள்** பொங்கொளிவெண் டிருநீறு பரப்பினுரை'' என்றும் கூறும் கருத்துக்களை ஈண்டு வைத்துக் காண்க. **எங்கள் செம்பியன்** - ''மன்னிய சைவத் துறையின் வழிவந்த குடிவளவர்'' (1900) என்று இப்புராணத் தொடக்கத்துக் கூறிய குறிப்பும் காண்க.

மகளார் - அமைச்சனுர் - என்ற பன்மைக் குறிப்பும். **தென்னவன்ருனும்** என்ற ஒருமைக் குறிப்பும் முற்சரித நிகழ்வெல்லாங் குறித்துநின்றன.

ஞானசம்பந்தர் செய்ய பொன்னடிக் கமலம் போற்றி - போற்றி என்று துதித்துக்கொண்டு; திருக்கோயிலினுட் புகும்போதும் திருக்கோயிலினுள்ளும் சிவனையன்றி வேறு நினைவதும் துதிப்பதும் செய்யலாகாது என்பது விதி. ஈண்டு இவ்வாறு இம்மூன்று

2763. **கைகளுந் தலைமீ தேறக் கண்ணிலா னந்த வெள்ளம்**
மெய்யெலாம் பொழிய வேத முதல்வரைப் பணிந்து போற்றி,
"ஐயனே யடிய னேனை 'யஞ்ச'லென் றருள வல்ல,
மெய்யனே" யென்று "வீட லாலவாய்" விளம்ப லுற்றார். 865

பெருமக்களும் பிள்ளையாரைப் போற்றிப் புக்கதென்னை? எனின், அது தம் மிறைவரும் குலமுதல்வருமாகிய அவ்விறைவர் பிள்ளையாரைத் தந்தருளி யாட்கொண்ட நன்றிபற்றி எழுந்ததென்பது; மேல் (2765) விளக்கப் படுவது காண்க. ***செய்ய*** *- செம்மை - சிவத் தன்மை - தருந் தன்மையுடைய. சிவந்த என்றலுமாம்.* **ஆலயத்துள் ஆசாரியரை வழிபடுதல் வேண்டும்** *என்ற விதியுங் கொள்ளப்படும்.*

உள்ளால் *- உள்ளே இறைவர் திருமுன்பு.* ***ஆல்*** *- ஏழனுருபின் பொருளில் வந்தது.864*

2763. (இ-ள்) *கைகளும்...பொழிய - கைகள் இரண்டும் தலையின் மேல் ஏறிக் குவிந் திடவும் கண்கள் இரண்டினின்றும் ஆனந்தக் கண்ணீர்வெள்ளம் திருமேனி முழுவதும் பொழியவும்; வேத...போற்றி - வேத முதல்வராகிய இறைவரைப் பணிந்து துதித்து; ஐயனே...என்று - "ஐயனே! அடியேனையும் அஞ்சேல் என்று அருளிச் செய்து ஆட்கொள்ளவல்ல மெய்ப்பொருளாகியவரே!" என்று; "வீடலாலவாய்" விளம்பலுற்றார்- "வீடலாலவாய்" என்று தொடங்கும் திருப்பதிகத்தினை அருளிச் செய்யலுற்றனர்.*

(வி-ரை) கைகளும் தலைமீது ஏற - ஏற *- முயற்சியானன்றித் தாமே ஏறிக் குவிய; உம்மை கண்களினின்றும் வெள்ளம் பொழிய என எதிரது தழுவிற்று.*

மெய்யெலாம் கண்களின் வெள்ளம் பொழிய *- என்க. வெள்ளம் பெருகி உடல்முழுதும் நனைப்ப.*

வேத முதல்வர் *- வேத வேள்வியை நிந்தனைசெய் துழல்வோரை வென் றழிக்கத் திருவுள்ளம் வைத்தவராதலின் ஈண்டு "வேத முதல்வர்" என்ற பெயராற் கூறினார்.*

ஐயனே *- பெருமையுடையவரே - அண்ணலே.*

அடியனேனை அஞ்சலென் றருளவல்ல மெய்யனே! *- "ஐயனே! யஞ்சல் என் றருள்செய் எனை" (தேவா) என்று பதிகம் பாடியதற்கேற்ப அஞ்சல் அளித்து அருளியவர் என்பது குறிப்பு.* ***மெய்யன்*** *- சத்திய சொரூபமானவர் ஆதலின் அழிக்கவும் மறைக்கவும் கூடாதவர்.*

"ஐயனே... மெய்யனே" *- பதிகக் கருத்தும் குறிப்புமாம். மேற்பாட்டும் பதிகக் குறிப்பும் பார்க்க.*

வீடலாலவாய் *- இத்தொடக்கத்தையுடைய திருப்பதிகத்தினை.* *865*

IX திருவாலவாய்

திருச்சிற்றம்பலம் **திருவிராகம்** பண் - கௌசிகம்

வீட லால வாயிலாய் விழுமி யார்க ளின்கழல்
பாட லால வாயிலாய் பரவ நின்ற பண்பனே
காட லால வாயிலாய் கபாலி நீள்க டிம்மதிற்
கூட லால வாயிலாய் குலாய தென்ன கொள்கையே. (1)

பட்டி சைந்த வல்குலாள் பாவை யாளோர் பாகமா
வொட்டி சைந்த தன்றியு முச்சி யாளொ ருத்தியாக்
கொட்டி சைந்த வாடலாய் கூட லால வாயிலாய்
எட்டி சைந்த மூர்த்தியா யிருந்த வாறி தென்னையே. (2)

குற்ற நீகு ணங்கணீ கூட லால வாயிலாய்
சுற்ற நீபி ரானுநீ தொடர்ந்தி லங்கு சோதிநீ
கற்ற நூற்கருத்துநீ யருத்த மின்ப மென்றிவை
முற்று நீபு கழ்ந்துமுன் னுரைப்ப தென்மு கம்மனே. (3)

பொன்ற யங்கி லங்கொளிந் நலங்கு ளிர்ந்த புன்சடை
பின்ற யங்க வாடுவாய் பிஞ்ஞ காபி றப்பிலீ
கொன்றை யம்மு டியினாய் கூட லால வாயிலாய்
நின்ற யங்கி யாடலே நினைப்ப தேநி யமமே. (6)

போய நீர்வ ளங்கொளும் பொருபு னற் புகலியான்
பாய கேள்வி ஞானசம் பந்த னல்ல பண்பினால்
ஆய சொல்லின் மாலைகொண் டால வாயி லண்ணலைத்
தீய தீர வெண்ணு வார்கள் சிந்தை யாவர் தேவரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :— "மானிட ருய்யவேண்டி நின்றுநீ யாடல்செய்கை நினைப்பதே நியமமாகும்" என்பது பதிகக் கருத்து என ஆசிரியர் காட்டக் கண்டு கொள்க(2764).

பதிகப்பாட்டுக் குறிப்பு :—(1) வீடு-அல்-ஆலவாய்-இலாய்-கரிய விடத்தை யுடைய பாம்பினாற் காட்டப்பட்ட இடத்தை வீடாக - இருப்பாகக்-கொண்டவரே!; **—வீடல் - ஆல் - அ - வாயில் - ஆய் - விழுமியார்கள் - வீடல்** - விடுதலை - வீடு பேற்றின் பொருட்டு; **ஆல்** - கல்லால்; **அ - வாயில்** - அந்த இடத்தில் கல்லாலின் கீழ்; **ஆய்** - ஆய்ந்த; **விழுமியார்கள்** - சனகாதியர் முதலினோர்: எனவும் பொருள் கொள்வர்—(வ. சு. செ.) (வேறு பலவாறும் பொருள் கொள்வர்.) **பாடலால் - அ - வாயிலாய்** - பாடுதலினாலே அந்த வாக்கினிடம் விளங்குபவரே!; **காடு அ(ல்)லால் அவா இலாய்** - சுடுகாடேயன்றி வேறு இருப்பிடம் விரும்பாதவரே; **நீள் - கடி - கபாலி மதிற்கூடல் ஆலவாயிலாய்** - நீண்ட காவலையுடைய கபாலி மதில் சூழ்ந்த திருக்கூடலாலவாய்க் கோயிலினுள் எழுந்தருளிய இறைவரே!; **குலாயது என்ன கொள்கையே**

- இங்கு எம்முடன் உள்ளே விளங்க விரவி எழுந்தருளியிருந்து அருள்புரிந்து ஏன்றுகொண்ட தன்மைதான் என்னே ? (எம்மால் அதன் பெருமை உணர்ந்துரைக்கும் தரமன்று) ;—**(2)ஒட்டு இசைந்தது**-பிரித்தறி யலாகா வகையால் இணைந்தும் பிணைந்தும் கூடிநின்றது; ''அண்ண லிருப்ப தவளக் கரத்துளே, பெண்ணி னல்லாளும் பிரானக் கரத்துளே'' (திருமந்திரம்); ''உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி'' (திருவா); ''சத்திதான் சிவனை யீன்றுஞ் சிவஞ்சத்தி தன்னை யீன்றும்'' (சித்தி - 2-77); **ஒட்டு** - ஒட்டிட்ட பணிபினுருத்திர பல்கணத்தார்க்கு (பிள்-தேவா- மயிலை) ''உணரப்படுவாரோ டொட்டி வாழ்தி'' (அரசு); ''ஒட்டி உளமவனு கில்லான் - உளமவனு மாட்டாது'' (போதம் - 2) **ஒட்டுதல்** - பிரிப்பின்றிப் பொருந்துதல்; ஒட்டாக இசைந்தது என்க; குணமும் குணியும்போல. **உச்சியாள்** கங்கை; **ஒருத்தியா** - ஒருத்தியாகக் கொண்டு; **ஆக** என்றது, **ஆ** என ஈறு குறைந்து நின்றது; **கொட்டு இசைந்த ஆடல்** - தாள முதலிய இயங்களுக்கு இசைந்தபடி ஆடுதல்; ''இலயம்பட'' (தேவா). **கொட்டு** - பெயர்; நான்கனுருபு விரிக்க; **கொட்டு இசைந்த ஆடல்** - கொட்டியாடல் - திரிபுரமெரித்த ஞான்று ஆடிய ஆடல் ''திரிபுர மெரியத் தேவர் வேண்ட....இமையவ னுடிய கொடு கொட்டியாடல் (''சிலப் - 6-40) (வ. சு. செ.); **எட்டு இசைந்த மூர்த்தி** - நிலம் முதலிய அட்ட மூர்த்தமும் தனது திருமேனியாக வுடையவன்; ஈண்டு எரியில் ஏடு வேவாமை கருதிய குறிப்பு. **என்னே**-உணர்வுக்கும் வாக்கிற்கும் எட்டாமை குறிப்பு;—**(3) குற்ற நீ குணங்கள் நீ** - ''அவையே தானே யாயிரு வினையின்...ஆணையி னீக்க மின்றி நிற்பன்'' (போதம் -2) என்பார் இவ்வாறு கூறினர். இதன் விரிவு ஆண்டுக் காண்க. ''பந்தம் வீடு தரும் பரமன்'' (300) என்றவிடத் துரைத்தவையும் பார்க்க; ''பந்தமும் வீடு மாய பதபதார்த் தங்க ளல்லான்'' (சித்தி - 1 -44) கருதுக. சுற்றம் நீ...சோதி நீ - **சுற்றம்** - இறைவர் உலகெலாமாய் **அவையே**யாயிருக்கும் நிலையினையும்; **பிரான்** - அவற்றின் **வேறாய்த்** தானேயா யிருக்கும் நிலையினையும்; **தொடர்ந்திலங்கு சோதி**-அவற்றோடு **உடனாகி** நிற்கின்ற நிலையினையும் உணர்த்தின. **கற்றநூற் கருத்து** - வேத சிவாகமங்கள்; **அருத்தம் இன்பம்**- இருவினைக் கீடாக உயிர்கள் போகங்களை நுகரச்செய்யுந் தன்மை - சாதனங்கள்; **புகழ்ந்து...முகம்மனே** - இவ்வுண்மைகளை எப்போதும் மனத்துட்கொண்டு மறவாது ஒழுகி அன்பு செய்தலன்றி முகமனாக உரைத்தலிற் பயனில்லை - உரைக்கவும் படாதது; **(4) முதிரும் நீர்ச்சடை முடி முதல்வன் நீ - முதிரும்** - ''நில்லாத நீர் சடை மேல் நிற்பித்தானை'' (தேவா); ''பள்ளந் தாழ்உறு புனல்'' என்றபடி மேலிருந்து கீழ் வேகத்துடன் செல்லும் தன்மையை மாற்றிக் கீழ்நின்று மேனோக்கிச் செல்லும்படி தாங்கியவர் என வாதத்தின் இறுதியாய்ச் செய்த அருட்குறிப்பு. **முழங்கு அழல் ஏந்தி**- சுடுந்தன்மையுடைய தீயினை அவ்வாறல்லாது செய்த அனல்வாதத்தின் அருட்குறிப்பு; **மதுரன்** - இன்பவுருவினன் - இன்பஞ் செய்பவன்; **மணாளன்** - நடத்துபவன் - நாயகன்; **சதுரன்** - வெற்றிப்பாடுடையவன்; **சதுர்முகன் கபால மேந்து சம்பு** - மூவர்க்கு முதலாகிய முதல்வன் - சங்கார காரணனாகிய முதல்; **சம்பு**-சுகத்திற்கு இருப்பிடமானவன்; ''இன்ப மாக்கலிற் சம்பு''—(காஞ்சிப்புரா) —**(5) நீள்மதில்** - கபாலிமதில்; **பாலனாய தொண்டுசெய்து பண்டுமின்றும்...சீல மாய சிந்தை** - பிள்ளையாரது முன்னைநிலைத் தொண்டின் குறிப்பும் அதனையே தொடர்ந்து இங்குவந்து பணிசெய்து நிற்கும் குறிப்பும் உணர்த்தும் சிறந்த சரித அகச்சான்று; ''பண்டு திருவடி மறவாப் பான்மையோர்'' (1953); ''பவமற வென்னை முன்னா ளாண்டவப் பண்பு கூட'' (புரா - 1244); ''மறக்குமா றிலாத வென்னை'' (தேவா) முதலிய திருவாக்குக்கள் காண்க. **பாலனாய** - ''ஆளுடைய பிள்ளையார்''

2764. **"ஒன்றுவே றுணர்வு மில்லே னொழிவற நிறைந்த கோலம்**
மன்றினுன் மறைக ளேத்த மானுட ருய்ய வேண்டி
நின்றுநீ யாடல் செய்கை நினைப்பதே நியம மாகும்"
என்றுபூம் புகலி மன்ன ரின்றமிழ்ப் பதிகம் பாட, 866

(1966). —**(6) பின் தயங்க** - பின்புறம் அசைந்தாடி விளங்க; **நின் தயங்கி ஆடல்** - இங்குக் கூறும் ஆடல் சிவஞானிகள் கண்டு எப்போதும் கும்பிட்டுச் சிவானந்தத்திற் றேக்கிநிற்கும் திருக்கூத்து; உலகம் மீளப்படைத்தல் முதலாக அருளல் ஈறாக வரும் ஊழி எல்லையாக வுள்ள ஐந்தொழிற்கூத்தும், நித்தசங்காரம் என்பதாதியாகக் கூறப்படும் ஐந்தொழிற்கூத்து வேறு; இங்குக் குறித்த **தயங்கி யாடல்** வேறு. இவை வெவ்வேறு நிலையன. **தயங்கியாடல்** என்று சிவஞானிகள் கண்டு திளைத்திருக்க ஆடும் கூத்துத் "தம் முண்ணிறைந்தஞா னத்தெழு மாநந்த வொருபெருந் தனிக் கூத்து (2558), "வவ்விய மெய்யுணர்வின் கண் வருமானந்த கூத்து" (3570) என்று கூறப்பட்டு ஆளுடைய பிள்ளையாரும் திருமூல நாயனாரும் கண்டுணர்ந்து திளைத்த திருக்கூத்து; திருமூலர் திருமந்திரத்தினுள் திருக்கூத்துத் தரிசனம் (ஒன்பதாந் தந்திரம்) என்ற பகுதியில் "எங்குந் திருமேனி எங்குஞ் சிவசத்தி" (9-74) என்பதாதியாகச் சிவானந்தக்கூத்து, சுந்தரக்கூத்து, பொற்பதிக்கூத்து, பொற்றில்லைக்கூத்து, அற்புதக்கூத்து என்ற தலைப்புக்களிற் பேசப்படுவது; பின்னையது இரண்டாந் தந்திரத்தினுள் "சர்வ சிருட்டி" முதலாக (45) அநுக்கிரக மீறாக (114) வரும் திருமந்திரங்களுட் பேசப்படும்;—**(7) கீதம் வந்த வாய்மையாற் கிளர் தருக்கினார் - கீதம் வந்த வாய்மை** - அன்பு மேலீட்டினால் தம்மை மறந்து கீதங்கள் பாடிக்கொண்டிருத்தல். "என்புருகிப் பாடுகின்றிலை" (திருவா); "கீதத்தை மிகப்பாடும்" (தேவா); "பாட்டும் பாடிப் பரவித்திரிவார்" (தேவா - ஒற்றியூர்); பண்ணொன்ற விசைபாடும்" (தேவா) முதலியவை காண்க. "ஆடுவதும் பாடுவது மானந்த மாகநினைத், தேடுவது நின்னன்பர் செய்கை பராபரமே" என்றார் தாயுமானார்; தருக்காவது சிவனடிக் கீழும், சிவனடியார் திருக்கூட்டத்தின் உள்ளும் இருந்துவாழும் ஆனந்தத்தால் வருவது; "இறுமாந் திருப்பன் கொலோ வீசன் பல்கணத் தெண்ணப்பட்டுச், சிறுமா னேந்திதன் சேவடிக் கீழ்ச்சென்று" (தேவா); **ஆகுமே** - ஏகாரம்; ஆகாது என எதிர்மறைப் பொருட்டு;—**(8) கருத்திலா - மன்னனை** என்று கூட்டுக. **நிறை இலங்கு நெஞ்சு** - பிறிதொன்றனுக்கும் இடமின்றிப் (பொதுநீக்கி) இறைவனையே நினைக்கும் நெஞ்சு; —**(9) தீவணம்** - "எரிபோல்மேனி" (தேவா);—**(11) போய நீர்** - மிகுதியாய் வயலுள் புகும் நீர். **தீய - தீர** - தீயவை எல்லாம் தீரும்படி; **எண்ணுவார்** - எண்ணுவார்களை. **சிந்தை யார்வர்** என்பதும் பாடம்.

2764. (இ-ள்) ஒன்று...இல்லேன் - பற்றுகின்ற வேறு உணர்வு ஒன்றும் இல்லேனாகி; ஒழிவற...நியமமாகும் என்று - நீக்கமின்றி எங்கும் நிறைந்த அழகிய திருச்சிற்றம்பலத்தின் கண்ணே நான்கு வேதங்களும் போற்றும்படி மக்கள் உய்யும் பொருட்டு நீ அருட்கூத் தியற்றுவதை இடையறாது நினைப்பதுவே எனது நியமமாகும் என்ற கருத்துடன்; பூம்புகலி மன்னர்...பாட - அழகிய சீகாழியின் தலைவ ராகிய பிள்ளையார் இனிய தமிழ்ப்பதிகத்தினைப் பாடியருள;

(வி-ரை) திருவாலவாய்க் கோயிலினுட் புக்கு வணங்கிய இருவருட் பிள்ளையார் திருப்பதிகம் பாடித் துதித்த கருத்தினை இத்திருப்பாட்டிலும், அரசன் துதித்த கருத்தினை மேல்வரும் பாட்டினாலும் கூறும் திறம் காண்க; இவ்வாறே அவ்விரு திறத்தினரும்

2765. **தென்னவன் பணிந்து நின்று "திருவால வாயின் மேவும்
மன்னனே! யமணர் தங்கண் மாயையான் மயங்கி யாதும்
உன்னைநா னறிந்தி லேனை யுறுபிணி தீர்த்தாட் கொள்ள
இன்னருட் பிள்ளை யாரைத் தந்தனை யிறைவ!" வென்றான்.** 867

அங்குநின்றும் நீங்கித் திருமடத்தினும் மாளிகையினும் சென்று சேர்ந்தமை முறையே இவற்றின் மேல்வரும் இரண்டு பாட்டுக்களினும் கூறுதல் காண்க.

ஒன்று...நியமமாகும் - இது திருப்பதிகக் கருத்தும் குறிப்புமாம். இது திருப்பதிகத்தின் ஆறுவது பாட்டிற் கண்டருளிய ஆசிரியர் காட்டும் திறம். அத்திருப் பாட்டிற்கு ஆசிரியர் உரைவகுத்துக் காட்டியருளியவாறுமாம்.

வேறு உணர்வு ஒன்றும் இல்லேன் என்க; **வேறு** - உன்னையன்றி வேறு. உணர்வு **ஒன்றும்** - முற்றும்மை பிரித்துக் கூட்டுக. **ஒன்று உணர்வு** என்று கூட்டிப் பொருந்தும் பற்று என்றுரைக்கவும் நின்றது. "ஒன்றி யிருந்து நினைமின்கள்" (தேவா), மறக்குமா றிலாத வென்னை" (பிள். தேவா - திருத்துருத்தி). **இல்லேன்** - இல்லேனாகி; முற்றெச்சம்; **இல்லேன் - (ஆகி) நினைப்பதே** - என்று கூட்டுக.

ஒழிவற நிறைந்த - எங்கும் நிறைவாகிய; "பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூர ணானந்தமே" (தாயுமானார்); "ஒழிவற நிறைந்த யோகமே" (திருவாசகம்).

கோலமன்றில் - "அற்புதக் கோலநீடி...சிற்பர வியோமமாகும் திருச்சிற்றம் பலம்" (351). **கோலம்** - அருளுடன் கூடிய ஞான அழகு. **மன்று** - ஞான நிறைவு; மெய்ஞ்ஞானமே யான வம்பலம்" (2058).

மானுட ருய்யவேண்டி ஆடல் செய்கை - "நின் **தயங்கியாடல்**" என்ற பதிகப் பொருள்.

நினைப்பதே நியமமாகும் - நியமம் - நியதியாகிய கடன்; ஏகாரம் - பிரிநிலை; நீ செய்யும் பேரருளுக்கு அருள் ஆடலை நினைப்பதனைத் தவிர வேறு கைம்மாறு ஒன்று மின்று என்பது. ஈண்டுச் சமணர் வாதினில் இறைவர் செய்த பேரருளின் திறங்க ளெல்லாம் உட்கொண்டு கூறியருளினார். **நினைப்பதென் னியமமாகும்** என்று பாடங் கொள்வாருமுண்டு; "வேயுறு தோளி", "மானினேர்விழி" என்ற பதிகங்களினும், ஏனை, "மந்திரம்", "தளிரிள" "வாழ்க" என்றவற்றினும் உன்னையே முன்னிட்டு வைத்ததன்றி என் செயலாகக்கொண்டதொன்றுமில்லை என்றபடி. *866*

2765. (இ-ள்) தென்னவன் பணிந்து நின்று - பாண்டியன் பணிந்து எழுந்து நின்று; திருவாலவாயின்...அறிந்திலேனை - திருவாலவாயினுள் எழுந்தருளியுள்ள மன்னரே! அமணர்களுடைய வஞ்சனைக்குட்பட்டு மயங்கி, உனது அருட் பெருமையினை ஒருசிறிதும் அறியாது கிடந்த என்னை; உறுபிணி...இறைவ! என்றான் - இறைவரே! உற்ற நோயினைத் தீர்த்து ஆட்கொள்ள, இனிய அருளுருவமாகிய ஆளுடைய பிள்ளையாரை எனக்கு அளித்தருளினீர் என்று துதித்தனன்.

2766. **சீ**ருடைப் பிள்ளை யாருஞ் சிறப்புடை யடியா ரோடுங்
காரினிற் பொலிந்த கண்டத் திறைவர்தாள் வணங்கிக் **காதல்**
ஆரருள் பெற்றுப் போற்றி யங்குநின் றரிது நீங்கி
ஏரியன் மடத்தி னுள்ளா லினிதெழுந் தருளிப் புக்கார். 868

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) தென்னவன் பணிந்து நின்று - நின்று - என்றமையால் நிலமிசை வீழ்ந்து பணிந்து எழுந்து என்றுரைக்க.

மன்னனே - தங்கள் பாண்டியமரபின் குல முதல்வர் சோமசுந்தரக் கடவுள் ஆதலின் குலத்தைக் கேடுறுமற் காத்தவர் என்பது குறிப்பு.

மாயையால் மயங்கி - மாயை - வஞ்சனை என்னும் பொருளில் வந்தது. **ஆல்**- ஏதுப்பொருளில் வரும் ஐந்தனுருபின் பொருளது.

யாதும் - எவ்வளவேனும் - ஒருசிறிதும் என உம்மை - முற்றும்மை. மேல் **உன்னையான்** என வருதலின், **யானும்** என்ற பாடம் பிழை.

உறுபிணி - உறு - முன்செய் தீவினைப்பயனுல் வந்த தீயசார்பும், அதுகாரணமாக வந்த மயக்கமும், அதுகாரணமாக விளைந்த சுரநோயும் என்றிவ்வாறு பரம்பரையில் வந்துற்ற விளைவெல்லாம் கொள்ள நின்றது. **பிணி** - சுரநோயினையேயன்றி அதன் காரணமாய் நின்ற எல்லாம் கொள்க.

தீர்த்து ஆட்கொள்ள - ஆளல்லே னென்று வாளாகிடந்த என்னை அந்நிலை நீக்கி ஆளாக ஏன்றுகொள்ளும் பொருட்டு அதற்கு உரிய சாதனமாகிய ஞானகுருவாக; சிவஞானபோதம் எட்டாஞ் சூத்திரத்தின் கருத்து; **கொள்ள** - கொள்வதற்காக.

இன்னருட் பிள்ளையாரைத் தந்தனை - பிள்ளையாரைத் தந்தமையே தன் இறைவர் தனக்குச் செய்த பேரருள் என்றபடி. **இன்னருள்** - தனது தீச் செயல்களுக்காக முனிந்து விடாது, அருளினுலே நோய்தந்து, பின் நீக்கி, உபதேசமும் செய்து, நீறளித்து ஆட்கொண்ட அத்துணையும் எல்லாம் அருளே என்பது; கூட்டுவிப்பவன் நீயே என்றபடி. முன் பலமுறையும் என் முன்னோர்களுக்கு இவ்வாறு வந்த இடர்களை நீக்கிய ஆடல்களைப்போல, இன்று இவரைத் தந்து இடர்நீக்கி யாட்கொண்டனை என்பதும் குறிப்பு. **இறைவ** - எனது தலைவரே.

மாய்கையான்—என்பதும் பாடம். *867*

2766. (இ-ள்) சீருடை...வணங்கி - சீரினையுடைய பிள்ளையாரும் சிறப்புடைய அடியார்களுடனே மேகம்போன்று விளங்கும் கழுத்தையுடைய இறைவரின் திருவடிகளை வணங்கி; காதல்...போற்றி - அன்பினுல் நிறைந்த திருவருள் பெற்றுத்துதித்து; அங்குநின்று...புக்கார் - அங்குநின்றும் அரிதின் நீங்கி அழகிய இயலின் அமைந்த திருமடத்தின் உள்ளே இனிதாக எழுந்தருளி உள்ளே புகுந்தனர்.

2767. **நீடுசீர்த் தென்னர் கோனு நேரியன் பாவை யாரும்**
மாடுசென் றிறைஞ்சி நோக்கி மாளிகை தன்னிற் போகக்
கூடிய மகிழ்ச்சி பொங்கக் கும்பிடும் விருப்பி ளுலே
நாடியங் கிருந்து தங்க ளுதரைப் பாட லுற்ருர்; 869

---

*(வி-ரை) **சீருடை - சிறப்புடை** - வெற்றிகரமாகப் பிள்ளையாரின் புகழ் பெருகிய நிலையும், அதனுல் அடியார்களின் மேன்மை விளக்கும் நிலையும் குறித்தன. (வ.சு.செ.) **அடியாரோடும் - வணங்கி** - அடியார்களுடனே கூடி இறைவரை வணங்கப்பெறுதல் பெருமகிழ்ச்சி தரும் பேருகும்; "அன்பரொடு மரீஇ"(12 - சூத்); அடியாரோ டிருக்கலாமே" (சித்தி - பாயி).*

***அரிது நீங்குதலாவது** நீங்கலாற்ருது பரிவுடன் ஒருவாறு ஒருப்பட்டுப்பிரிதல்.*

***இனிது எழுந்தருளிப்புகலாவது** மடத்தினின்றும் அன்று காலையிற் புறப்படும்போது அரசன் மிக்க சுரத்துடன் கிடக்க, அமணர் வாதத்தினை எதிர்நோக்கி, அமணரை நோக்கி வாது செய்யவும் வாதில் வென்றழிக்கவும் இறைவரது திருவுள்ளக் கருத்து அறிந்த நிலைகள் எல்லாம் நீங்கி இனிது புகுதல்.*

***காரினிற் பொலிந்த கண்டம்** - விடத்தன்மை வாய்ந்த அமணர்களுடைய கொடுமைகளை யெல்லாம் வெளிவந்து கேடு விளைக்காவண்ணம் அடக்கிவைத்த அருணிலைக் குறிப்பு.*

***ஏரியல் மடம்** - "திருநீற்றுத் தொண்டர் குழாம் சாருமிடம் செங்கமலத் திரு மடம்" என இதன் அழகினைப் பின் (2775) விரித்தல் காண்க. சமணர் கொளுவிய தீயினை மாற்றுவித்த அழகுபொருந்திய என்ற குறிப்புமாம்.* *868*

2767. (இ-ள்) *நீடுசீர்...போக - நீடும் சிறப்பினையுடைய பாண்டிய அரசர் பெருமானும் சோழர் மகளாராகிய மங்கையர்க்கரசியாரும் பக்கத்திற் சென்று வணங்கிக் குறைவறுப்பார்களாய்ப் பார்வை செய்தபின் தமது மாளிகையினுள் போகவும்; கூடிய...லுற்ருர் - மிக்க மகிழ்ச்சி மேலும் அதிகரிக்க வழிபடும் விருப்பத்திஞலே நாட்டம்வைத்து அங்கு அமர்ந்தருளித் தம் இறைவரைப் பாடுவாராகி.*

*(வி-ரை) **நீடுசீர்த் தென்னர் கோன்** - கூன்பாண்டியரா யிருந்து நின்றசீர் நெடுமாறஞராயின தன்மைக் குறிப்பு. **சீர்**-திருத்தொண்டத் தொகையுள் வைத்துப் போற்றப்பட்ட பெருஞ்சிறப்பும் கொள்க. முன்பாட்டில் "சீருடைப் பிள்ளையார்", சிறப்புடை அடியார்" என்றமை காண்க.*

***நேரியன் பாவையார் - நேரியன்** - சோழன்.*

***மாடு சென்று இறைஞ்சி** - பிள்ளையாரது பக்கத்தில் சென்று அடிவீழ்ந்து வணங்கி; முன்னர்ப் "பணிந்துகொண்டு" (2755) என்றது ஆசிரியரிடம் மாணவன் நீறுபெறும் முறை.*

***நோக்கி** - பலவாறும் குறைவறுப் பேவுதற்பொருட்டுத் திருமடத்தினைச் சுற்றி முற்றும் பார்வையிட்டு. முன்னர் அம்மையார் தாமும் அமைச்சஞரும் அரசன் பணி மேற்கொண்டு அத்திருமடத்திற் போந்தனர் (2623); ஈண்டு அரசனும் அம்மையாரும் உடன்போந்தனர் என்பது குறிக்க.*

நேரியன் பாவையாரும் - பாண்டிமா தேவியாரும் என்னுது சோழர் மகளார் என இவ்வாற்குற் கூறியது சைவநெறியிற் பிறழாத சோழ மரபில் வந்தமையால் அரசனையும் பாண்டி நாட்டினையும் சைவத்தில் நிலைபெறுவித்தவர் என்று பிள்ளையார் ''வளவர்கோன் பாவை'' (தேவா) என முதற்கண் கூறிய குறிப்பு. **பாவையாரும்** - ''பாவை'' என்ற பதிக ஆட்சி போற்றப்பட்டது.

மாளிகை - அரச மாளிகை; **போக** - விடைபெற்றுச் செல்ல.

கும்பிடும் விருப்பினுலே நாடி அங்கிருந்து - பாடலுற்ருர் திருவாலவாய்த் திருக்கோயிலினுள் நேரே சென்று கும்பிட்டபின் ஆராமையால் மேலும் கும்பிட்டுக் கொண்டேயிருக்கும் மிக்க விருப்பத்தாலே திருமடத்தினின்றவாறே திருப்பதிகம் பாடி வழிபட்டனர் என்க. ''நீடு பூசனை நிரம்பியு மன்பிஞ னிரம்பார்'' (1837) என்றும், ''மீளமீள விவ்வண்ணம் வெண்பால் சொரிமஞ் சனமாட்ட'' (1241), ''பரவ மேன்மே லெழும்பரிவும்'' (1253) என்றும் வரும் நிலைகள் குறிக்க.

அங்கிருந்து - திருமடத்தின்கண் இருந்தபடியே.

கூடிய மகிழ்ச்சி பொங்க - கூடுதல் - சரித நிகழ்ச்சியிற் கண்டவாறு திரு அருள் வெளிப்பாடு பொருந்தப்பெறுதல். **மகிழ்ச்சி பொங்குதல்** - திருவியமகம் என்ற பதிகயாப்பமைதி, சந்த அமைதி, பொருளமைதி முதலியவைகளால் புலப்படுதல் கண்டுகொள்க.

திருவாலவாயினைப் பற்றிப் பிள்ளையார் அருளிய பதிகங்களுள் (1) மங்கையர்க்கரசி'' என்ற பதிகம் திருநகரினை அணுகும்வழியில் திருவாலவாய்த் திருக்கோயில் கட்புலப்படும்போது திருநகரின் புறத்தே அருளப்பட்டது; (2) நீலமாமிடற்று'' என்ற பதிகம் முதலில் இறைவரைக் கண்டு திருக்கோயிலில் திருமுன்பும், (3) ''காட்டுமா'', (4) ''வேத வேள்வி'' என்ற பதிகங்கள் சுரந்தீர்த்துச் சமணை வாது வென்றருளத் திருமடத்தினின்றும் அரச மாளிகைக்குப் புறப்படும்போது இறைவரது திருவுள்ள நோக்கித் திருக்கோயிலில் திருமுன்பும், (5) வீடலாலவாய்'' என்பது வாது வென்ற பின் திருக்கோயிலில் திருமுன்பும் அருளப்பட்டன; (6) ''மானினேர்விழி'', (7) ''மந்திரமாவது'' என்ற இவை சுரந்தீரு முன்னர் அரசனது மாளிகையில் அரசன் முன்பு அருளப் பட்டன; (8) வாழ்கவந்தணர்'' வைகையாற்றங்கரையில் அருளப்பெற்றது; (9) ''ஆலநீழல்'' இங்குக் கூறியபடி திருமடத்தில் அருளப்பட்டது.—இனி, மதுரையில் இருந்தபடி ஏனைப் பதிகளைப்பற்றி அருளிய பதிகங்கள் மூன்று; அவற்றுள் (10) ''தளிரிள வளரொளி'' என்ற திருநள்ளாற்றுப் பதிகம் அரசன்முன் அவன் மாளிகையில் கனல் வாதத்தின் முன், (11) ''போகமார்த்த'' என்ற பதிக ஏட்டினை முன்னிட்டு வைத்துப் பாடியருளப்பட்டது; சீகாழியைப் பற்றிய இரண்டனுள் (12) ''பிரமனூர்'' என்ற பதிகம் அரசன் மாளிகையில் சுரந்தீர்க்குமுன் ''உமது பதி யாது'' என்று அரசன் கேட்டதற்கு விடையாகவும், (13) ''மண்ணினல்ல'' என்ற பதிகம் தாதையார் திருமடத்திற்கு வரக்கண்டபோது அவர்சார்வு கண்டருளித் திருத்தோணியப்பரை நினைந்தும் பாடியருளப்பட்டன; **என்றிவ்வாறு பதிக வரலாறுகள் மனத்துள் வைத்து அடைவு எண்ணுதல் பயன் தருவதாகும்;** அது பற்றியே ஆசிரியர் அங்கங்கும் அடைவு வகுத்துக்காட்டியருளினர் என்க; திருவாலவாயினைப் பற்றிப் பிற பதிகளிலிருந்து பாடிய பதிகம் ''பாடகமெல்லடி'' என்ற திருநள்ளாற்றில் அருளப்பட்ட பதிகம்

2768. **திருவிய மகத்தி னுள்ளுந் திருநீல கண்டப் பாணர்க்**
கருளிய திறமும் போற்றி யவரொடு மளவ ளாவித்
தெருளுடைத் தொண்டர் சூழத் திருத்தொண்டி னுண்மை நோக்கி
இருள்கெட மண்ணில் வந்தா ரினிதமர்ந் திருந்தா ரன்றே. 870

(2800); ''வேயுறு தோளி'' என்ற திருப்பதிகம் பொதுப் பதிகமாகவைத் தெண்ணப்படினும் திருவாலவாயினைத் திருவுளத்துக் கருதிவைத்துத் திருமறைக்காட்டில் அருளப்பட்ட தொடர்பு கண்டு கொள்க.

பாடலுற்றார் *- பாடலுற்றாராகி - முற்றெச்சம். பாடலுற்றாராகிப் - போற்றி என வரும் பாட்டுடன் முடிக்க.*

இறைஞ்ச நோக்கி—மாளிகை தன்னிற் போக்கி—பரவலுற்றார்—*என்பனவும் பாடங்கள்.869*

2768. (இ-ள்) *திருவியமகத் தினுள்ளும்......அளவளாவி - திருநீலகண்ட யாழ்ப்பாணர்க்கு இறைவர் அருள்செய்த திறத்தினைத் திருவியமகத் திருப்பதிகத் தினுள்ளே வைத்துத் துதித்து அவருடனே அளவளாவியிருந்து; தெருளுடை.... நோக்கி - அறிவின் தெளிவு மிகுந்த திருத்தொண்டர்கள் பலரும் சூழ்ந்திருக்கத் திருத்தொண்டினது அழியாத உண்மைத் திறத்தினை நோக்கி மகிழ்ந்துகொண்டு; இருள்கெட...அன்றே - இருள் கெடும்படி மண்ணுலகில் வந்தவதரித்த பிள்ளையார் இனிதாக அங்கு விரும்பி வீற்றிருந்தருளினார் அந்நாளிலே.*

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண் டுரைக்கநின்றன.

(வி-ரை) திருஇயமகம் - இது பதிக யாப்புப்பற்றி வந்த பெயர். திருஇருக்குக் குறள் - என்பது போல; ''இருக்கையே'' - ''இருக்கையே'' என ஒரு சொல் - அல்லது சொற்றொடர் - மடித்து ஒவ்வோரடியிலும் இடையில் இருமுறை வரும்படி தொடுக்கப்பட்ட யாப்பு வகை. ஒவ்வோர் அடியினும் முதலில் ஒருசொல்- அல்லது சொற்றொடர் - அல்லது சொற்றொடர்கள் அவ்வாறு வரத்தொடுக்கும் யாப்பும் இயமகம் எனப்படும்; ''மடக்குச் சந்தவியமகம்'' (2174) என இதனை ஆசிரியர் குறித்தது காண்க.

திருஇயமகத்தினுள்ளும் - திருவியமகம் என்று யாப்புக் காரணமாகப் பெயர் பெற்று விளங்கும் ''ஆலநீழல்'' என்ற திருப்பதிகத்தினுள்ளும் என்க. **இயமகம்** அச்சந்தங்கொண்ட பதிகத்துக்கு வந்தது ஆகுபெயர்.

திருநீலகண்டப் பாணர்க்கருளிய திறம் போற்றி - ''தாரமுய்த்தது பாணர்க் கருளொடே'' என்று பதிகம் ஆறுவது திருப்பாட்டில் வரும் பகுதி குறித்தது; அருளிய திறமாவது, திருநீலகண்ட யாழ்ப்பாணர் திருஎருக்கத்தம்புலியூரினின்றும் சோழ நாட்டுப் பல பதிகளையும் வணங்கிப் போய்த் திருவாலவாய் பணியச் சென்று **கோயில் வாயிலினின்று** பாணிகள் யாழிலிட்டு வாசித்தனர்; அப்போது முதல்வர் தொண்டர்க் கருளியபடி அவர்கள் அவரைத் திருமுன்பு கொண்டு புகுதச் செய்தனர்; பாணர் அங்குத் திருமுன்பிருந்து பரிவினாற் பாடினர்; அதுகேட்ட இறைவர், ''பாணர் பாடுஞ் சந்தயாழ் தரையிற் சீதந் தாக்கில்வீக் கழியுமென்று, சுந்தரப் பலகை முன்னீரிடு'' மென்று தொண்டர்க்கருள அவர்களும் அவ்வாறே பலகையிட,

அதன் மேலிருந்து பாடினர் என்ற வரலாறு; இது பின்னர்த் திருநீலகண்ட யாழ்ப்பாணர் புராணத்து விரிக்கப்படுவது கண்டுகொள்க. அதன் பின்பு பாணனுர் திருவாரூர் சென்று வணங்கத் திருவருளால் வடதிசையில் வாயில் வேறு வகுப்பப் புகுந்து வணங்கினுர்; அதன் பின்பு சீகாழிக்கு வந்து பிள்ளையாரது அருள்பெற்று அவருடனே சேவித்து அணைந்தனர் என்பதும் ஆண்டுக் கண்டுகொள்க. ஈண்டு அருளிய திறம் என்றது திருஆலவாயில் அடியார்க்கருளிக் கோயிலினுள் உள்ளே திரு முன்பு வரச் செய்து பலகையிட்ட அருளின்றிறம்; திருவாரூர் வாயில் வேறு வடதிசையில் வகுத்துத் திருமுன்பு வரச் செய்த திறமும் குறிக்கும்; இத்திருப்பதிகம் அருளியபோது திருமடத்தில் யாழ்ப்பாணரும் உடனிருந்து யாழ் வாசிக்கப் பெற்றமையால் அவருக்கு முன்னர்க் கூடலிறைவர் அருளிய திறத்தினை நினைவுற்று ஈண்டு வைத்துப் பாராட்டியருளினர் என்க.

இனிப், பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணத்தினுள் விறகு விற்றது முதல் இசைவாது வென்றதுவரை நான்கு படலங்களினும் பேசப்படும் **பாண பத்திரனுர்** வேறு; இங்குக் குறித்த **திருநீலகண்டப் பாணர்** வேறு என்பது உணரத்தக்கது. அவர், இறைவர்பால் ''மதிமலி புரிசை'' என்ற திருமுகம் பெற்றுக் கழறிற்றறிவாரிடம் சென்று பெரும்பரிசில் பெற்றனராதலின் காலத்தால் மிகப் பிற்பட்டவராதல் கழறிற்றறிவார் புராணத்தினுள் 26—39 வரையில் உள்ள பாடல்களிலும், 94-வது பாட்டினும் ஆசிரியர் அருளியவாற்ருலும், திருவிளையாடற் புராணம் திருமுகங்கொடுத்த படலத்தானும் அறிந்துகொள்ளத்தக்கது. இவ்விருவர்பாலும் தனித்தனி இறைவர் செய்த அருளிப்பாடுகள் வெவ்வேறும்; அவை ஒன்றேயெனக்கொண்டு மயங்கித் தமது மயக்கத்தை ஆசிரியர்பெருமான் மேலேற்றி அவர்பால் அறியாமையைச் சுமத்தி அபசாரப்படும் மாக்களும் உண்டு; ஆராய்ச்சி என்ற பேரால் செய்யப்படும் தகுதியில்லாச் செயல்கள் பலவற்றுள் இஃதுமொன்றும் என விடுத்தொழிக. **தாரம்** - பண் பாடும் திறம் என்றுகொண் டுரைப்பினும், அரியபண்டம் என்று கொண்டு பொற்பலகை எனக்கொண் டுரைப்பினும், அஃதிவ்விருவர்க்கும் இறைவர் அருளுதலும் அமையுமாதலின் மாறுபாடோ மயக்கமோ கூடுதல் யாங்கனமென்க; யாழ்ப்பாணருக்குப் பலகையிட்ட வரலாற்றைப் பெயரொற்றுமைபற்றிப் பிறழ உணர்ந்த வடமொழியாளர் பாடியதை அவ்வாறே திருவிளையாடலுள் மொழிபெயர்த்தனர் என்பதும் அமையும்; பலகையிட்ட வரலாறு ஈரிடத்தும் வெவ்வேருய் வருவதும் கருதத் தக்கது. ஈண்டு யாழ்ப்பாணர்க்குப் பலகை தந்தருளியது யாழினைத் தரையில் வைப்பின் சீதந் தாக்குமென்று பலகையிட்டருளினர் என்பதாம். இக்கருத்தால் யாழ் தரையில் வைக்காது பலகையின் மேல் வைத்து வாசிக்கும் இயலும் மரபும் காண்க. பாண பத்திரனுர்க்கு இரவில் மழையில் தாமுங் கருவியும் நனைந்துவந்து, வாசிக்க இடர்ப் பட்டபோது அதனை மாற்ற இறைவர் அருளியது வரலாறு; **தாரம்** - பண் பாடும் திறம் எனக்கொண் டுரைப்பின் யாழ்ப்பாணர் திருவாலவாயிலிலும், திருவாரூரிலும் தமது மரபின் முறைபற்றிப் புறமுற்றத்திற் கோயில் வாயிலில் இருக்க அதனையாற்ருது திருமுன் வரச்செய்து பாட அருளிய தன்மை குறித்ததென்க. இனித், திருவிளையாடற் புராணம் புராணத்தின் பகுதியில் அமைவதாலும், திருத்தொண்டர் புராணம் திருமுறையாகிய வேதப் பகுதியில் அமைவதாலும் இவை ஒன்றெடொன்று மாறுபட்டபோது வலிமையுடையதென எடுக்கத்தக்கது வேதமேயாம் என்ற ஆதரவுகளின் ஏற்றத் தாழ்ச்சி முறையும் மனங்கொள்ளத் தக்கது என்பது முன்னரும் பலவிடத்து உரைக்கப்பட்டது. பிறவும் கண்டுகொள்க.

அவரொடும் அளவளாவி என்றதனுலும் பதிகத்துட் **பாணர்** என்றது யாழ்ப் பாணரைக் குறிக்கும் என்க.

தெருள் - உண்மையுணர்வாகிய அறிவு. ''முன்னின்ற தெருட்சி மருட்சியினுல் முதல்வன் கருணைக் கடன்மூழ் கினரே'' (1336); ''தெருளுமுணர் வில்லாத சிறுமையேன்'' (1798).

திருத்தொண்டின் உண்மை நோக்கி - திருத்தொண்டர்கள் முதல்வர்பாலும் திருவேடத்தார்பாலும் செய்யும் திருத்தொண்டுகளின் திறங்களையே பேசிக் கலந்து களிப்புறுவது இயல்பு. ''வாய்மை, சாலமிக்குயர் திருத் தொண்டினுண்மைத் திறந்தன்னையே தெளியநாடிக் காலமுய்த்தவர்களோ டளவளாவிக்கலந்தருளினர்'' (2421) எனவும், ''திருத்தொண்டர் பெருமையினை விரித்துரைத்தங், கொருப்படு சிந்தையினர்கள்'' (1509) எனவும் கூறிய பொருள்கள் ஈண்டுச் சிந்திக்கத்தக்கன; சிரிப்பார் களிப்பார், தேனிப்பார் திரண்டு திரண்டுன் திருவார்த்தை, விரிப்பார் கேட்பார் மெச்சுவார் வெவ்வே றிருந்துன் றிருநாமந், தரிப்பார் பொன்னம் பலத்தாடுந் தலைவா வென்பார்'' (திருவா-கோயின்மூத்த பதி - 9) என்ற கருத்துக் காண்க. ***திருத்தொண்டின் உண்மை*** - திருத்தொண்டின் றிறமும் இறைவர் ஆட்கொள்ளும் தன்மையும் எஞ்ஞான்றும் அழிவுபடாது நிலைத்த தன்மை; ஈண்டு ஆலவாய்ப் பெருமான், அமண் இருளினுள் அகப்பட்டு வருந்திக் கிடந்த அம்மை யார்க்கும் அமைச்சனுர்க்கும் அருளிய வரலாறுகளும் குறிப்பு. ***நோக்கி*** - அழுந்தி உளத்தில் உணர்ந்து களித்து.

இருள் கெட மண்ணில் வந்தார் - பிள்ளையார்; ''பரசமய நிராகரித்து நீறுக்குதல்'' ஈண்டு இருள் கெடுத்தல் எனப்பட்டது. ஆணவ இருள் போக்கிச் சிவஞான வொளி தருதலும் குறிப்பு.

அமர்தல் - விரும்பி எழுந்தருளியிருத்தல்; ***அன்றே*** - அந்நாளில்.870

X திருவாலவாய்

திருச்சிற்றம்பலம் | திருவியமகம் | பண் - பழம்பஞ்சுரம்

ஆல நீழ லுகந்த திருக்கையே யான பாட லுகந்த திருக்கையே
பாலி னேர்மொழி யாளொடு பங்கனே பாத மோதலர் சேர்புர பங்கனே
கோல நீறணி மேதகு பூதனே கோதி லார்மன மேவிய பூதனே
ஆல நஞ்சமு துண்ட களத்தனே யால வாயுறை யண்டர் களத்தனே. (1)

நக்க மேகுவர் நாடுமோ ரூருமே நாதன் மேனியின் மாசுண மூருமே
தக்க பூமனைச் சுற்றக் கருளொடே **தார முய்த்தது பாணற் கருளொடே**
மிக்க தென்னவன் றேவிக் கணியையே மெல்ல நல்கிய தொண்டர்க் கணியையே
அக்கி னாரமும துண்கல னோடுமே ஆல வாயர னுருமை யோடுமே. (6)

ஈன ஞானிக டம்மொடு விரகனே யேறு பல்பொருள் முத்தமிழ் விரகனே
ஆன காழியுண் ஞானசம் பந்தனே ஆல வாயினின் மேயசம் பந்தனே
ஆன வானவர் வாயினு ளத்தனே அன்ப ரானவர் வாயினு ளத்தனே
நானு ரைத்தன செந்தமிழ் பத்துமே வல்ல வர்க்கிவை நற்றமிழ்பத்துமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—இறைவர் செய்தருளிய திருவருட் பேற்றின் மகிழ்ச்சி மீக் கூரப் பாடியது *(2767).*

பதிகப் பாட்டுக் குறிப்பு :— *(உதாரணத்துக்காகச் சில குறிப்புக்கள் மட்டும் ஈண்டுத் தரப்படுவன. ஏனைய முற்றும் நற்றமிழ் வல்ல நல்லோர்பாற் கேட்டுணர்க.)*—*(1)* **இருக்கை** - *(1)* இருப்பிடம்; *(2)* இருக்கு (வேதம்); ஐ இரண்டனுருபு; **பங்கன்** - *(1)* பாகமுடையவன் *(2)* **புரபங்கன்** - புரத்தினைப் பங்கஞ் (சிதைவு) செய்தவன்; **ஓதலர்** - ஓதாதவர்; **பூதன்** - *(1)* திருவுடம்புடையவன்; *(2)* பூத கணங்கட் கிறைவன்; *(1)* **களத்தன்** - **களம்** - கழுத்து; கழுத்தினை உடையவன்; *(2)* அண்டர்கள் அத்தன்;—*(2)* **மாலையே** - *(1)* விட்டுணுவையே ஒரு பாதியாய் உடலிற் கொண்டது; *(2)* **மாலை** - அலர்மாலை; தார்; *(1)* **ஆகன்** - உடம்பினன்; *(2)* **மான் இடம் ஆகன்** - இடக்கையில் மானை உடையவன்; **ஆகன்**- ஆயினவன்; **ஆனையே** - *(1)* ஆன் ஐந்தினையே ஆடுவது; *(2)* ஆனையினையே உரி செய்தது; **வாயிலே** - *(1)* வாயினிடமாக வேதம் வெளிப்படுப்பவன்; *(2)* **ஆல வாயிலே** - ஆலவாய்க் கோயிலே ஊர்;—*(3)* **கத்தன்** *(1)* முழவு முதலிய பல ஓசைகளை உடையவன்; *(2)* தம் **அகத்தன்** - அகத்தில் விளங்குபவன்: விருப்பன்; இருப்பன்; *(1)* **அப்பன்** - அப்பு - நீர்;—*(4)* *(1)* **இருத்தி** - செல்வம்; *(2)* **இருத்தி**- இருக்கின்றாய்; *(1)* **மிகுகண்டனே** - சிறந்த கழுத்தினையுடையவனே; *(2)* **கண்டனே** புறச்சமய கண்டனஞ் செய்தவனே; **விழித்தி** - விழி செய்தாய்; **இழித்தி** - இழிவு செய்வாய்;—*(5)* இப்பாட்டில் முன்பாட்டுக்களிற்போல அடிதோறும், அடிகளின் பகுதிகளிலும் வெவ்வேறு பொருள்கள் பற்றி மடக்குவாரது சண்டீச நாயனார் சரிதம் ஒன்றேபற்றி மடக்குக்கள் வந்தமை காண்க. **நின்னுருவாகத் தடவியே** - ''மடுத்த கருணையாற் றடவி'' *(1259)* ''விடையார் திருமலர்க்கை தீண்டப்பெற்ற சிறுவனார் அங்கண்மாயை யாக்கையின்மே லளவின் றுயர்ந்த **சிவமயமாய்**...சூழ்ந்த வொளியிற் றோன்றினார்'' *(1260)* என்ற சரிதத்திற்கு ஆதரவு;—(6) நாடும் ஓர் ஊரும் நக்க உருவுடன் பலிக்கு ஏகுவர்; மாசுணம் (பாம்பு), ஊரும் (தவழும்). **தார முய்த்தது பாணற் கருளொடே** - இதனையே ''திருநீலகண்டப் பாணர்க்கருளிய திறமும் போற்றி'' என்று ஆசிரியர் வரலாறு காட்டிப் பொருள் விரித்தருளினர். **தாரம்** - இசை; **தாரம் உய்த்தது**- இசை பாட அருளியது; **தாரம்** - அரியபண்டம் என்று கொண்டு பொற் பலகையிட்ட செய்தி குறித்ததென்பது மமையும், ''கடற்பஃறாரத்த நாடு கிழவோயே'' (புறம்.30); **கணியை** - *(1)* கணிக்கப்படுபவன்; *(2)* **அணியை** - எளியையாக நெருங்கியிருப்பவன்; **தேவிக்கு அ(ண்)ணிய நல்கிய** - **அணி** - மங்களநாண் என்று கொண்டு மங்கையர்க்கரசிக்கு அவரது திருமங்கிலியத்தை விளங்கவைத்தவர் என்றலுமாம். *(1)* **ஓடும்** - ''ஓடே கலன்'' - உண்கலம் *(2)* **ஓடுமே**- ஓடும் மூன்றுருவதன் உருபு;—*(7)* *(1)* **குட்டியே பல் உகுத்தது** -தலையில் குட்டிப் பல் உதிரச்செய்தது (வீரம்); *(2)* **குட்டி** - இளநாகம்; **மெய்யன்** - *(1)* **மெய்**- உடம்பு. *(2)* **மெய்** - உண்மை; **காளம்** - *(1)* விடம்; *(2)* **கங்காளம்**-எலும்புக் கூடு; கங்காளராய்'' **வீணையே** - *(1)* **வீண்+ஐ** (இரண்டனுருபு); *(2)* **வீணை** - இயம்.—(8) இப்பாட்டு முழுமையும் 5-வது பாட்டிற்போல இராவணன் சரித வரலாறு ஒன்றேபற்றி மடக்குக்கள் வந்தமை கண்டுகொள்க;—*(9)* **மாலொடே** *(2)* **மால்** - மயக்கம் - அகந்தை; **இடக்கை** - *(1)* இடதுகை;—*(10)* **நல்கானையே** - நல்காதவனையே. **நல்குதல்** - அருள் கொடுத்தல்; ''நாடொறு நல்குவா னலன்'' (தேவா); *(2)* **கானையே** - **கான்** - காடு; தவஞ் செய்யச் சேருமிடம் என்க; **கானை** - திருக்கானப் பேர் - என்றலுமாம்—*(11)* **விரகன்** - *(1)* விரவாது முனிபவன்.

2769. பூழியன் மதுரை யுள்ளார் புறத்துளா ரமணர் சேரும்
பாழியு மருகர் மேவும் பள்ளியு மான வெல்லாங்
கீழுறப் பறித்துப் போக்கிக், கிளரொளித் தூய்மை செய்தே
வாழியப் பதிக ளெல்லா மங்கலம் பொலியச் செய்தார். 871

2769. (இ-ள்) *பூழியன்...புறத்துளார் - பாண்டியனது மதுரையிலுள்ளார்களும் மதுரையின் புறத்துப் பல இடங்களிலும் உள்ள மாந்தர்களும்; அமணர்...போக்கி - சமண் குருமார் தங்கிய பாழிகளும் அவர்தங் கடவுள் இடங்கொண்ட பள்ளிகளும் ஆகிய எல்லாவற்றையும் கீழ்நிலங் காண அகழ்ந்து போக்கி; கிளரொளித் தூய்மை செய்தே - ஒளிபெருகத் தூய்மைப்படுத்தி; வாழி...செய்தார் - வாழ்வுபெறும் அப் பதிகளெல்லாவற்றிலும் சிவத்துவமாகிய சின்னங்களை விளங்கச் செய்தனர்.*

(வி-ரை) பூழியன் - பாண்டியனது; ஆறனுருபு தொக்கது.

மதுரையுள்ளார் - புறத்துளார் - மதுரைமா நகரத்திலும், நகரத்துப் புறம்பு பாண்டிநாட்டிலும் உள்ள மாந்தர்கள்; பொலியச்செய்தார் என்ற வினையுடன் கூட்டி முடிக்க.

அமணர் சேரும் பாழி - அமணர் குருமார் தங்கும் மடங்கள். **அருகர்** மேவும் பள்ளி - அருகக் கடவுள் கோயில்; ''பள்ளியொடு பாழிகளும் கூடவிடித்துக் கொணர்ந்து குணபரவீச் சரமெடுத்தான்'' *(1411)*. **ஆன எல்லாம்** - ஆன - முன் இல்லாது இடையில் தோற்றலாயின.

கீழுறப் பறித்துப் போக்கி - அவர்கள் கட்டிய அடிமட்டம் கீழ் அளவு காணப் பறித்து அப்புறப்படுத்தி.

போக்குதல் - இருந்தவாறே வேறு பயன்படுத்திக்கொள்ளலாமே? எனின், பின் ஒருகால் இவை முன்னைநிலைமை பெற உதவவும் கூடுமாதலின் அவ்வாறு அக்கேட்டிற்குத் துணை புரியாவண்ணம் போக்குதல் வேண்டப்பட்டதென்க.

கீழுறப் பறித்தல் எற்றுக்கெனின், அவற்றின் தூய்மையற்ற தன்மை மீண்டும் முளை யாவண்ணம் வேரறக் களைதற்கென்க; இந்நாளினும் உருசியா நாட்டினர் முன்னிருந்த அரச குடும்பத்தைக் களைந்து குடித்தனியரசு நாட்டியபின் அவர்தம் முன்னைத் தொழுமிடங்களையெல் லாம் வேரற இடித்து மண்ணையும் அகழ்ந்து எறிந்து பின்னரே அவ்விடத்துத் தம் அரசாங்கக் கட்டிடங்களை அமைத்த சரித நிகழ்ச்சிகள் இம்மனப் பான்மையின் உறைப்பினை விளக்கும்.

கிளரொளித் தூய்மை செய்தே - ஒளி கிளரும் தூய்மையாக்கி; முன்னர் உண்மைவிளக்க மின்றி அஞ்ஞானஇருள் நிறைந்திருந்தமையால் அவ்விடத்தை உண்மை விளங்கும் இடங்களாக ஆக்கி; **ஏகாரம்** - தேற்றம்; செய்த பின்பே.

வாழி அப்பதிகள் - வாழி - வாழ்வு பொருந்திய.

மங்கலம் - சிவத்தன்மை காட்டும் குறிகள்; சைவ அடையாளங்கள்; சிவச் சின்னங்களா கிய இடபக்கொடி, சூலம், இடப இலச்சினை முதலியவை நாட்டுதலும், மெழுகுதலும் வெண்சு தை போக்குதலும் முதலாயின.

அருகன்—என்பதும் பாடம். *871*

2770. **மீனவன்** றேவி யாருங் குலச்சிறை யாரு மிக்க
ஞானசம் பந்தர் பாத நாடொறும் பணிந்து போற்ற
ஆனசண் பையர்கோ ரூரு மாலவா யமர்ந்தார் பாதம்
ஊனமர்ந் துருக வேத்தி யுளங்களித் துறையு நாளில், 872

2770. (இ-ள்) மீனவன்...போற்ற-பாண்டியரின் தேவியாராகிய மங்கையர்க் கரசியாரும் குலச்சிறை நாயனாரும் மிகுந்த சிவஞானசம்பந்த நாயனாருடைய திருவடிகளை நாடோறும் பணிந்து போற்றியிட; ஆன...ஏத்தி - ஆக்கமுடைய சீகாழியர் தலைவராகிய பிள்ளையாரும் திருவாலவாயில் விரும்பி வீற்றிருக்கும் இறைவருடைய திருவடிகளை ஊனெல்லாம் உருகும்படி துதித்துக்கொண்டு; உளம் களித்து உறையும் நாளில் - மனமிக மகிழ்ந்து அங்கு எழுந்தருளியிருக்கும் நாட்களிலே,

(வி -ரை) மீனவன் தேவியாரும் குலச்சிறையாரும் - போற்ற - சிறப்புப்பற்றி இவ்விருவரும் கூறப்பட்டனரேனும் இனம்பற்றி நெடுமாறனாரையும் உடன் கொள்க; **மீனவன் தேவி** என்று அறிவித்த குறிப்பும் காண்க. அரசனும் உட னிருந்து பிள்ளையாரை வழிபட்டமை *2782 - 2785 - 2791 - 2792 - 2793* முதலி யவற்றுற் காண்க.

தேவியாரும் குலச்சிறையாரும் ஞானசம்பந்தர் பாதம் போற்ற, அவரும் ஆலவாயமர்ந்தார் பாதம் ஏத்தி - பிள்ளையார் திருவடிகளை அவர்கள் தங்கட்குப் பற்றுக்கோடாகக்கொள்ளத், தாம் இறைவர் திருவடியைத் தமக்குப் பற்றுக் கோடாகக்கொண்டனர். அவர்கள் குருவழிபாட்டினால் முத்தி பெறப், பிள்ளையார் சிவலிங்கத்தால் முத்தி பெற்றவர் என்ற பாகுபாடு பின்னர்க் காண்க. தம்மை யிடமாக்கொண்டு இறைவரே அவர்களுக்கு அருள் செய்கின்றார் என்றது கருத்து. "பணி செய்து நாடொறும் பரவ" (பிள். தேவா).

ஆன - உயர்வாகிய. ஆக்கச்சொல் இயல்பு குறித்தது.

ஊன் அமர்ந்து உருக - ஊன் முழுமையும் உள்ளுருகும்படி.

உளங்கனிந்து—என்பதும் பாடம். 872

2771. (இ-ள்) சிவபாதவிருதயர்தாம் - சிவபாத இருதயர்; செய்தவத்தாற் பெற்றெடுத்த - முன்செய்த பெருந்தவப் பயனாகப் பெற்றெடுத்த; வைதிக... பொருளை - வைதிகர்களின் சிரமணியாகியவரை, மாதவத்தோர்களாகிய சிவஞானிகளின் பெரு வாழ்வு ஆகியவரை, விடம் விளங்குந் திருமிடற்றினையுடைய இறைவரது திருவருள் பெற்ற மெய்ப்பொருளாயினாரை; எய்திய...நினைத்தார் - தாம் இருந்த சீகாழிப் பதியிலே தங்கியிருந்த அந்நாட்களில் மிகவும் நினைந்தனர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி - ரை) செய்தவம் - முன்னைச் செய்த தவமும், இவ்வுலகிற் செய்த தோணியப்பர் வழிபாடாகிய தவமும்; இது "காதலனைப் பெறப் போற்றும் தவம் புரிந்தார்" (1917) என முன் கூறப்பட்டது காண்க.

வேறு

2771. **செய்தவத்தாற்** சிவபாத விருதயர் தாம் பெற்றெடுத்த
வைதிகசூ ளாமணியை மாதவத்தோர் பெருவாழ்வை
மைதிகழுந் திருமிடற்று ரருள்பெற்ற வான்பொருளை
எய்தியபூம் புகலியிலே யிருந்தநாண் மிகநினைந்தார். 873

2772. ''**ஆன**புகழ்த் திருநாவுக் கரசர்பா லவஞ்செய்த
மானமிலா **வமணருடன் வாதுசெய்து வெல்வதற்கும்**
மீனவன்ற நாடுய்ய **வெண்ணீறு பெருக்குதற்கும்**
போனவர்பாற் புகுந்தபடி யறிவ''னெனப் புறப்படுவார்; 874

பெற்றெடுத்த - *பெற்ற மகனாராகிய;* **எடுத்த** - *பகுதிப்பொருள் விகுதி.*

வைதிக சூளாமணியை - *என்றது வேதநெறி தழைக்கச்செய்தமையும்,* **மாதவத்தோர் பெருவாழ்வை** *என்றது மிகுசைவத் துறைவிளங்கச் செய்தமையும்,* **திருமிடற்றூர் அருள்பெற்ற வான்பொருளை** - *என்றது பூதபரம்பரை பொலியச் செய்தமையும் குறித்தன; சூளாமணி - வாழ்வு - வான்பொருள் - இவைபோன்றாரை என்பதாம். இவை தந்தையார் தம் அருமைப் பிள்ளையாரைப் பாராட்டிய முறையினையும் குறிப்பிலுணர்த்தியபடி காண்க.*

எய்திய - *தாம் மேவி இருந்த;* **இருந்த நாள்** - *பிள்ளையாரைப் பிரிந்திருந்த நாள்* **மிக நினைதலாவது** - *இடையறாது அஃதே நினைவாக இருத்தல்.* *873*

2772. (இ-ள்) *ஆனபுகழ்...வெல்வதற்கும் - ஆயின புகழினையுடைய திரு நாவுக்கரசரிடம் தவறு செய்த மானமில்லாத சமணர்களுடனே வாதம் செய்து அவர்களை வெற்றி கொள்வதற்கும்; மீனவன்றன்...பெருக்குதற்கும் - பாண்டிய னுடைய நாடு உய்யும்வண்ணம் திருநீற்றினைப் பெருக ஆக்குதற்கும்; போனவர் பாற்...புறப்படுவார் - சென்றருளிய பிள்ளையார்பால் நிகழ்ந்த வண்ணங்களை அறிவேன் என்று சிவபாதவிருதயர் புறப்படுவாராகி;*

(வி-ரை) ஆன புகழ் - *நல்லதாயின புகழ்;* **ஆன** - *சிறப்பாயின; சிவனருளாலாயின; திருத்தொண்டின்கண் உறைப்பாயின.* **புகழ்த்திருநாவுக்கரசர்** *நாவுக் கரசென்றுல கேழினுநின் னன்னும நயப்புற நண்ணுகவென்று'' (1339) என இறைவனருளால் ஏழுலகும் பரவிய பெரும்புகழ். ''அவர்பெருமை யங்கணர்தம் புவனத்தி லறியாதா ரியாருளரே'' (1707) என்றதும் காண்க.*

அவம் - *பெருந்தவறு; கெடுதி.* **அரசர்பால் அவஞ் செய்த** - *என்றதனால் பிள்ளையார்பால் மிகவும் செய்வார்கள் என்றது குறிப்பு. ''கலதி யமணர் கடுவினை செய், மாயை சால மிகவல்லா ரவர்மற் றென்னை முன்செய்த, தீய தொழிலும் பல'' (1551) என அப்பர் சுவாமிகள் கூறியருளியது காண்க.*

வாது செய்து வெல்வதற்கும் - நீறு பெருக்குதற்கும் - போனவர் - *இஃது அடியவர்பால் கேட்டறிந்த உரையளவையாலும், போயின பிள்ளையாரின் கருத்துக்கருத வளவையானும்*

2773. **துடியிடையா டன்னோடுந் தோணியில்வீற் றிருந்த பிரான்**
அடிவணங்கி யலர்சண்பை யதனின்றும் வழிக்கொண்டு
படியின்மிசை மிக்குளவாம் பரன்கோயில் பணிந்தேத்தி
வடிநெடுவேன் மீனவன்றன் வளநாடு வந்தணைந்தார். 875

சிவபாதஇருதயர் அறிந்தது. ''புத்தரொ டமணை வாதி லழிவிக்கு மண்ணல் திருநீறு செம்மை திடமே'' (கோளறு பதிகம் -10) என்ற பதிகத்தினையும் அவ்வரலாற்றினையும் உடனிருந்து கேட்டார் சொலக் கேட்டனராம் என்க. ''பரசமய நிராகரித்து நீறுஆக்கும்'' (1971) என்று தாம் வேண்டிப் பெற்ற வரங்கள் இரண்டுமே பிள்ளையாரது திருவவதாரக் கருத்தாவதும் காண்க. ''தெண்பூ , திகழுமலங்கற் பருளுமென் னுவமண் சேனையுபா திகழு மலங்கற் குரைத்தோ னலதில்லை தெய்வங்களே'' (கந்தரந்-9) என்றது இதே கருந்து.

நீறு பெருக்குதற்கும் - ''நீறு ஆக்கும்'' (1917); **பெருக்குதல்** - எங்கும் பரவி ஓங்கச் செய்தல். விளக்க மிகுவித்தல் என்றலுமாம்.

புகுந்தபடி - நிகழ்ச்சிகள் நேர்ந்த வண்ணங்களை; **படியினை** என இரண்ட னுருபு விரிக்க.

புறப்படுவார் - செல்வாராகித் துணிந்து; முற்றெச்சம். புறப்படுவாராயினர் என முற்றாக உரைகொள்ளுதல் பிழை; **அடி வணங்கி - வழிக்கொண்டு** (2772) என்று மேற்கூறுதலும் காண்க. எழுவாய் முன் பாட்டினின்றும் வருவிக்க.

பெருகுதற்கும்—என்ற பாடம் சிறப்பின்று. 874

2773. (இ-ள்) துடியிடையாள்...அடிவணங்கி - துடிபோன்ற இடுகிய இடையினையுடைய பெரியநாயகியாருடனே திருத்தோணியில் எழுந்தருளி யிருந்த பெருமானுடைய திருவடிகளை வணங்கி; அலர்சண்பை...வழிக்கொண்டு - அழகிய சீகாழியினின்றும் புறப்பட்டு வழிச் சென்று; படியின்மிசை...ஏத்தி - செல்லும் வழியிலே இந்நிலவுலகில் மேம்பட்டு விளங்கும் சிவபெருமான் திருக்கோயில்கள் பலவற்றையும் வணங்கித் துதித்துப் போய்; வடி...வந்தணைந்தார் - வடித்த கூர்மையுடைய நீண்ட வேல் ஏந்திய பாண்டியனது வளப்பமுடைய நாட்டின்கண் வந்தணைந்தனர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) துடி - உடுக்கை; மேலும் கீழும் பெருத்து இடையில் சிறுத்துள்ள தன்மையால் துடியை உவமையாகக் கூறுதல் மரபு ; **துடியிடை** - துடி போன்ற இடை; உவமத் தொகை. இடையிற்பற்றி ஒருநா இருதலை இயங்க விசையால் முழக்கப்படுதல் துடிதுடித்தல் போலாதலின் இப்பெயர் பெற்றது போலும். ''தமருகத் தரையிற் கையினிற் கட்டிய கயிற்றால், இருதலை யொருநா வியங்க'' (திருவி-கருவூர்-பூவணம் - 3).

துடியிடையாள்...அடிவணங்கி - அம்மையோடும் திருத்தோணியில் எழுந்தருளிய தோணியப்பரை வழிபடும் நியமமுடையா ராதலாலும் அவரருளால் பிள்ளையாரைப் பெற்றனராதலாலும் அவரை வணங்கி விடைபெற்று என்க.

2774. மாமறையோர் வளம்பதிக ளிடைத்தங்கி வழிச்செல்வார்
தேமருவு நறும்பைந்தார்த் தென்னவன்றன் திருமதுரை
தாமணைந்து **திருவால வாயமர்ந்த தனிநாதன்**
பூமருவுஞ் சேவடிக்கீழ்ப் புக்கார்வத் தொடும்பணிந்தார். 876

அலர் சண்பை -அலர்தல் *-அழகினல் மிளிர்தல்; ஒளி அலர்தல்;* **வழிக்கொள்ளுதல்** *- வழிச் செல்லுதல்.*

மிக்குளவாம் பரன் கோயில் *- சீகாழியினின்றும் புறப்பட்டவர் பாண்டி நாட்டினை அடையும் வரையும் சோழ நாடாதலின் அங்குள்ள சிவன்கோயில் எண்ணிறந்தவற்றுள்ளும்; ஏனைய நாடுகளினும் சோழநாட்டில் சிவத் தலங்கள் மிகுதி யாதல் காண்க.* **மிக்குளவாம்** *என்ற துமிக் கருத்து; ''செம்பொன் வார்கரை யெண்ணில் சிவாலயத், தெம்பிரானை யிறைஞ்சலின்'' (57); இங்குக் கூறியவை சோழ நாட்டுத்தலங்கள்.*

பணிந்தேத்தி *- சீகாழியினின்று மதுரைக்குச் செல்லும் சிவபாத இருதயர் நேரே அங்குச் சென்றுவிடாது இடையில் உள்ள கோயில்களை வணங்கிச் சென்றனர். இஃதே முறையும் பெரியோர் மரபுமாம்.*

வடி நெடுவேல் மீனவன் - வேல்வளை செண்டு கொடுத்தது - கடல் சுவற வேல் விட்டது முதலிய திருவிளையாடல்களின் தொடர்புடைய மரபின் உயர்வு குறிக்க **வேல் மீனவன்** என்ற தன்மையாற் கூறினர்.

பரன்கோயில் வலங்கொண்டு - என்பதும் பாடம். *875*

2774. (இ-ள்) *மாமறையோர்...வழிச் செல்வார் - பெருமையுடைய மறையவராகிய சிவபாதவிருதயர் வளம்பொருந்திய பாண்டி நாட்டுப் பதிகளில் தங்கிப் போவா ராகி; தேமருவு...அணைந்து - தேன் பொருந்திய வாசனையுடைய பசிய வேப்ப மாலையையுடைய பாண்டியனது தலைநகரமாகிய திருமதுரையினை அணைந்து; திரு வாலவாய்...பணிந்தார் - திருவாலவாயில் விரும்பி வீற்றிருந்தருளும் தனி முதல்வ ராகிய சொக்க நாதப் பெருமானுடைய பூமருவும் அழகிய சிவந்த திருவடிகளின் கீழ்ப் புகுந்து மிக்க ஆர்வத்தொடும் பணிந்தார்.*

(வி - ரை) மாமறையோர் - சிவபாத இருதயர், மறையோர் - பணிந்தனர் என்று கூட்டுக; இனி, இவ்வாறன்றி, மறையோர்களுடைய - பதிகளிடைத் தங்கி என்ற ஆறும்வேற்றுமைத் தொகையாகத் தொடர்புபடுத்தி உரைப்பினுமமையும்; என்னை? சோழ நாட்டின் எல்லையும் இடையில் மறவர் வைப்பும் நீங்கிப் பாண்டி நாட்டினுட் சென்றபின் மதுரை சேரும்வரை திருத்தலங்கள் மிகச் சிலவேயாம்; பிள்ளையார் சென்ற வழியில் திருக்கொடுங்குன்றமொன்றே இடையில் வணங்கி மதுரை சேர்ந்த வரலாறு முன் (2527) உரைத்தது காண்க. ஆதலிற் சிவபாத இருதயர் சென்ற வழியில் இடையில் மறையவர் பதிகளில் தங்கித் தங்கிச் சென்றனர் என்பதாம். ''சோழ நாட்டில் முன் பரன்கோயில் பணிந்தேத்தி'' என்ற ஆசிரியர் ஈண்டுப் பதிகளிடைத்தங்கி என்ற குறிப்பும் காண்க.

வழிச் செல்வார் - வழிப் போவாராய்ப் - புக்குப் பணிந்தார் - என்று கூட்டி முடிக்க.

தேமருவு நறும் பைந்தார் - பூழியரது வேப்பமாலையைக் குறித்தது; தேனு டைமை, நறுமை, பசுமை என்ற தன்மை வேம்புக்குரியன.

தாம் அணைந்து - பரிசனங்கள் முதலியோர் ஒருவருமுடனின்றித் தாமாக என்றதும் குறிப்பு.

தனி நாதன் - முதற் கடவுள்; ஒப்பற்ற என்றலுமாம். ''தனக்குவமை யில்லாதான்'' (குறள்); ஊழியில் எல்லாரையும் தம்முள் ஒடுக்கித் தாமொருவரே தனியாக இருப்பவர் என்ற குறிப்பும்ஆம்; அவர் தாமே அணைந்தார்க்கு அவ்வாறே இவரும் தனி நின்றருளினர் என்ற நயமும் காண்க. ''முளைத்தானை யெல்லார்க்கு முன்னே தோன்றி'' (தேவா.)

பூமருவும் சேவடி - தேவர் முனிவர் பரவித்தூவிய மலர்கள் இருக்கும் திருவடி.

புக்கு - மனம் வைத்து.

மாமறையோர் - பிள்ளையாரைப் பிரிந்து குறைந்தது இரண்டாண்டு அளவும் மிக நினைந்த சிவபாதவிருதயர் நேரே செல்லாது தோணியப்பரை வணங்கிச் சென்றதும், வழியில் மிக்குளவாம் பரன்கோயில் பணிந்து சென்றதும், பின்னர்த் திருமதுரையினை யணைந்தவுடன் பிள்ளையாரது திருமடத்தினைச் சென்றணையாது, நேரே திருவாலவாயமர்ந்த தனிநாதன் சேவடி புக்கு ஆர்வத்தொடும் பணிந்தமையும், அதன் பின்னரே திருமடத்தினைக் கேட்டறிந்து அங்குச் சென்றதும் கருது மளவில் அவர் பிள்ளையாரை மிக நினைந்து தீயராகிய அமணரிடையே அவருடைய நலங்களை அறியும் அவாவுடன் வந்தாராயினும், இறைவரை வழிபடும் ஆர்வமும் முறையுமே அதனின் மேலாய் முதற்கண் வைத்த சீல ஒழுக்கமுடையர் என்பது போதரும்; தமது இல்வாழ்க்கைக்கு மகவுவேண்டிய அவர் அதனின் மேலாய்ச் சைவ ஆக்கமே கருதித் தலைநின்று தவம் புரிந்தனர் என்று கூறிய வரலாறு ஈண்டு நினைவுகூர்தற்பாலது; மனைவி மக்கள் முதலிய உலகச் சார்புகளையே பற்றி அவையே பொருளென மயங்கி ஒழியும் எம்போன்ற உலக மாக்கள் இவ்வுண்மை இல்லறவொழுக்கத்தினைக் கருதிக் கண்டு ஒழுகுவோமாயின் நலந்தரும். பிள்ளையார்பாற் பொருள் வேண்டிப் பெற்ற தாதையர் அவர் பிரிவாற்றாது தொடர்ந்து வந்தாரேனும் ''ஆதி மாமறை விதியினு லாறுசூழ் வேணி, நாதனுரை முன்னுகவே புரியுநல் வேள்வி''கள் (2327) செய்வதன் பொருட்டுப் பிரிந்து சீகாழியிற் சென்றதனையும் ஈண்டு நினைவுகூர்க. இவ்வாறு வேதநெறி தழைத்தோங்கிய நல்லொழுக்கம் பற்றிய குறிப்பெல்லாம் பெறவைத்து ஈண்டு மாமறையோர் என்றவாற்றாற் கூறினர்.

புக்கு ஆர்வத்தொடும் பணிந்தார் - ஆர்வமாவது தாம் எண்ணித் தோணி யப்பர்பாற் றவங்கிடந்த பரசமய நிராகரிப்பும் நீற்றினை ஆக்குதலுமாகிய சைவப் பெருக்கத்தினை நிறைவேற்றத் தமக்குத் தந்த பெருங்கருணைத் திறத்தினை நினைந்து கொண்ட தன்மையாலாயது; ''இத்தனையும் எம்பரமோ வைய வையோ வெம் பெருமான் றிருக்கருணை யிருந்த வாறே'' (தேவா) என்ற எண்ணமே எஞ்ஞான்றும் தோன்ற வழிபடுதல் பெரியோ ரியல்பென்க; தோணியப்பர் தந்த வரம் ஈண்டு நிறைவேறத் தந்தமையால் அவரைப்போலவே திருஆலவாயமர்ந்த தனிநாதனைக் கண்டு பணிந்தனர் என்பது; பிள்ளையாரை மிகநினைந்து தாதையர், தோணியப்பரை வணங்கிப் புறப்பட்டு, அவரையே ஈண்டு மதுரையில் மனங்கொண்டு கண்டு பணிந்து, பின் பிள்ளையாரைக் காண்கின்றனர் என்ற திறமும்

2775. அங்கணரைப் பணிந்துபோந் தருகணைந்தார் தமைவினவ
"இங்கெம்மைக் கண்விடுத்த காழியா ரிளவேறு
தங்குமிடந் திருநீற்றுத் தொண்டர்குழாஞ் சாருமிடஞ்
செங்கமலத் திருமடமற் றிது"வென்றே தெரிந்துரைத்தார். 877

கண்டுகொள்க. "அங்கணரைப் பணிந்து போந்து (பின்) அருகணைந்தார் தமை வினவ" எனமேல் கூறுவது காண்க. இவ்வாறே பிள்ளையாரும் தாதையாரைக் கண்டவுடன் அவர் சார்விற் றிருத்தோணியப்பரைக் கண்டு "மண்ணினல்ல" என்ற பதிகம் ஆண்டுத் திருமடத் திருந்தபடியே அவரை வினவிப் பணிந்தமையும் காண்க. (2728). 876

2775. (இ-ள்) அங்கணரை...வினவ - அங்கணராகிய இறைவரைப் பணிந்து புறம் போந்து பக்கத்தில் வந்தணைந்த நகர மாந்தர்களாகிய அடியார்களை(ப் பிள்ளையாரது திருமடத்தினைப் பற்றி) வினவ; இங்கெம்மை...தங்குமிடம் - இங்கு(க் குருடரா யிருந்த) எம்மைக் கண்திறப்பித்து ஒளிநெறி காட்டிய சீகாழியவரின் இளஞ்சிங்கமாகிய பிள்ளையார் தங்கும் இடமாவது; திருநீற்று...இஃது என்றே தெரிந்துரைத்தார் - திருநீற்றுத் தொண்டர் கூட்டம் சாரும் இடமாய்ச், செந்தாமரை போன்ற திருமடம் மற்று இஃதேயாகும் என்று தெரிந்து சொன்னார்கள்.

(வி-ரை) அங்கணர் - அழகிய கருணைநோக்க முடையவர்; பணிந்து - முன் பாட்டிற் கூறியவாறு திருவடிக்கீழ்ப் புக்கு ஆர்வத்தோடும் பணிந்து.

போந்து - வினவ - திருக்கோயிலின் புறத்தே போந்து வினவினாராக; திருக் கோயிலினுள் சிவன் பேச்சன்றி வேறுபேச்சுப் பேசலாகாதென்பது விதியாதலின் அம்மரபு பற்றிப் புறம் போந்தபின் வினவினர்.

அருகு அணைந்தார்தமை - ஆங்குப் பக்கத்துச் சார்ந்து அணைந்தார்களாகிய தொண்டர்களை; அருகு - திருக்கோயிலினருகு; கோயிலின் அருகு என்றதனாலும் அவர்களை நோக்கிச் சிவபாதவிருதயர் பேசும் உரிமை எண்ணத்தக்க நிலையில் இருந்தமையாலும் அவர்கள் அடியார்கள் என்று கருதப்பட்டது; அல்லாரைக் காணலும் பேசலும் இணங்குதலும் தகாதென்றும் அவர்கள் அஞ்சத்தக்கவர் என்றும் பெரியோர் கொள்வர். "காணா கண்வாய் பேசாதப் பேய்மகளோடே" (திருவிசைப்பா). திருமுண்டந் தீட்டமாட்டாது அஞ்சுவா ரவரைக் கண்டா லம்மநா மஞ்சு மாறே" (திருவா).

இங்கெம்மைத் கண் விடுத்த - என்றமையால் அவர்கள் பாண்டி நாட்டவர் - மதுரை நகரத்தவர் என்றும், முன் அகக்கண் குருடாய் அமணிருளில் நின்று, பின் பிள்ளையாரருளியவாற்றால் ஞானம் விளங்கப்பெற்று அகக்கண் பெற்றவர் என்றும்கொள்ளப்படும். **கண்விடுத்தல்** - குருடாகிய கண் திறப்பித்தல்; பாண்டி நாட்டு மக்களது நன்றி பாராட்டுணர்ச்சி குறித்தது காண்க.

காழியார் இளவேறு - சீகாழிப்பதியவர்களின் இளஞ்சிங்கம் போன்ற தலைவர்; **ஏறு** - பொதுப்பெயர்; ஆண்சிங்கம் என்ற பொருளில் வந்தது; **காழியார்** - சீகாழி இறைவராகிய தோணியப்பர் எனக் கொண்டு அவரது சிவஞானமுண்டருளிய மதலையார் என்ற குறிப்புடனும் நின்றது.

2776. **செப்புதலு** மதுகேட்டுத் திருமடத்தைச் சென்றெய்த,
''**அப்பரெழுந் தருளினு**'' ரெனக்கண்டடோ ரடிவணங்கி
யொப்பில்புகழ்ப் பிள்ளையார் தமக்கோகை யுரைசெய்ய,
''எப்பொழுது வந்தருளிற்?'' றென்றெதிரே எழுந்தருள, 878

செங்கமலத் திருமடம்-திருமடத்தைத் தாமரைபோன்ற தென்றது ''தாமரை மிசைத் தனிமுதற் குழவியென்ன'' (1939) என்ற உவமையின் கருத்தைத் தொடர்ந்து கொண்டு கூறியபடி; ஆண்டுரைத்தவை பார்க்க. ''மலர்மகட்கு வண்டாமரைபோன் மலர்ந் தலகில் சீர்த்திரு வாரூர் விளங்குமால்'' (97) என் புழிப்போலச் சைவமெய்த் திருவையளிக்கும் பிள்ளையார் தங்குமிடமாதலின் திருமடத்தினைச் செங்கமலம் என்றார். செங்கமலத்தில் வாழும் இலக்குமிக்கு மிடமான திருமடம் என்றுரைத்தனர் முன் உரைகாரர்; அது பொருந்தாமை காண்க.

திருநீற்றுத் தொண்டர் குழாஞ் சாருமிடம் - தம் முன்னைச்சார்புகள் கெடத் தமது நற்சார்பு இஃதென உணர்ந்துகொண்டு திருநீற்றுத் தொண்டர்கள் கூட்டமாக வந்து சார்கின்ற இடமாமென்பது. திருநீற்றினை ஆக்கம் செய்த பிள்ளையாரது செயலால் 2501-ல் கூறியபடி முன்னையிருள் நீங்கித் திருநீற்றுத் தொண்டர் குழாம் பெருகப்பெருக வந்து சார்கின்றது என்று அவர்கள் கண்கூடாகக் கண்ட செய்தி யறிவிக்கப்பட்டவாறு.

''இது'' என்றே - இது என்ற அண்மைச்சுட்டினால் இத்திருமடம் திருவால வாய்த் திருக்கோயிலுக்கு அணிமையில் இருந்ததென்று கருத இடமுண்டு. **என்றே** - ஏகாரம் தேற்றம்.

தெரிந்து உரைத்தார் - தெரிதலாவது கண்விடுத்த தன்மை - செங்கமலமாந் தன்மை என்ற இவற்றின் சிறப்பைத் தாம் உணர்ந்து தக்கார்க்கு எடுத்து உரைக்கும் திறம். **தெரிந்து** - தெரிந்தமையால். 877

2776. (இ-ள்) செப்புதலும்...சென்றெய்த - முன் பாட்டிற் கூறியவாறு அவர்கள் சொல்லுதலும் அதனைக் கேட்டுச் சிவபாத இருதயர் திருமடத்திற் சென்று சேர; அப்பர்...அடிவணங்கி - அங்கு அவரைக் கண்டவர்கள் அவரை அடி வணங்கிப் போய்; ஒப்பில்...உரை செய்ய - ஒப்பற்ற புகழையுடைய பிள்ளையாருக்கு அந்த மகிழ்வாயின செய்தியைச் சொல்லவே; எப்பொழுது...எழுந்தருள - அவர் ''எப்பொழுது வந்தருளிற்று?'' என்று வினவிக்கொண்டு எதிரில் எழுந்தருளி வர;

(வி - ரை) அது கேட்டு - கேட்டதனாற் திருமடத்தினை அறிந்து.

''அப்பர் எழுந்தருளினார்'' எனக் கண்டோர் - பிள்ளையாரின் தாதையார் எழுந்தருளினார் என்று அங்கு அவரைக் கண்ட பரிசனங்கள். இது பரிசனங்கள் மனங் கொண்டது.

அடி வணங்கி - அவரைத் தொழுதுபோய் உட்சென்று; **எழுந்தருளக் கண்டோர் பிள்ளையார்க்கு அந்த ஓகையினை அடிவணங்கி உரை செய்ய** என்று கூட்டி உரைப்பினு மமையும். **ஓகை** - உவகை; மகிழ்ச்சிக்கிடமான செய்தி.

''எப்பொழுது வந்தருளிற்று?'' என்று - பிள்ளையார் இவ்வாறு கூறிக்கொண்டு; **எதிரே எழுந்தருள** - எதிர்கொண்டு வந்தருளவே; ''எப்பொழுது வந்தது?'' என்பது வரவேற்கும் மரபு.

2777. **சி**வபாத விருதயர்தா முன்றொழுது சென்றணையத்,
தவமான நெறியணையுந் **தாதையா ரெதிர்தொழுவார்**
அவர்சார்வு கண்டருளித், திருத்தோணி யமர்ந்தருளிப்
பவபாச மறுத்தவர்தம் பாதங்க ணினைவுற்றார். 879

''என்றுவந்தாய் யென்னு மெம்பெரு மான்றன் றிருக்குறிப்பே'' (தேவா). **ஒப்பில் புகழ்** - பிள்ளையாரது புகழ் ஒப்பற்ற சிறப்பினையுடையது.

எனக் கேட்டோர்—என்பதும் பாடம். *878*

2777. (இ-ள்) சிவபாதவிருதயர்...சென்றணைய - சிவபாதவிருதயர் தாம் அவர் முன்னே தொழுது சென்றருள; தவமான...எதிர்தொழுவார் - தவநெறியினில் அணையும் தாதையார் எதிரில் தாமும் தொழுவாராகிய பிள்ளையார்; அவர் சார்வு...நினைவுற்றார் - அவரைக் கண்டருளிய சார்பினாலே திருத்தோணியின்கண்ணே அமர்ந்தருளியிருந்து பவபாசங்களை அறுத்தவராகிய தோணியப்பருடைய திருப்பாதங்களை நினைவுற்றனர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி - ரை) முன் தொழுது - முன் - பிள்ளையார் திருமுன்பு; முதற்கண் - வேறு செய்வதற்கு முன் என்றலுமாம்.

தொழுது முன் சென்று என்று கூட்டினுமமையும்.

சென்று அணைய - திருமடத்தினுள் பிள்ளையாரை அணுகச் சென்று சார.

தவமான நெறி...எதிர் தொழுவார் - தவமான நெறி - வைதிக சைவ நெறி. முன் (2773 - 2774) பாட்டுக்களில் உரைத்தவை பார்க்க; தவநெறியின் கண்ணே எப்பொழுதும் வாழ்பவர்; **எதிர் தொழுதல்** - அவர் தொழத் தாமும் தொழுதல்; **தொழுவார்** - தொழுவாராகி; முற்றெச்சம். **தொழுவார் - கை குவித்தருளி** - என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. ''அன்பின் வந்தெதிர் கொண்டசீ ரடியா ரவர்களோ நம்பி யாரூரர் தாமோ, முன்பி றைஞ்சின ரியாவரென் றறியா முறைமையா லெதிர் வணங்கி மகிழ்ந்து'' (244) என்ற நிலை இங்குக் கருதற்பாலது. அங்கு இருபாலும் அடியார்கள் என்ற கருத்தால் ஒருசேர வணக்கம் உடனாக நிகழ்ந்தது. ''பரமனுக்காளா மன்பர் தத்தமிற் கூடி னார்கள் தலையினால் வணங்கு மாபோல்'' (72) என்ற நிலை; இனித், ''திருப்பாலமுத முண்டபோதே, யேழிசை வண் டமிழ்மாலை யிவனெம்மா னெனக்காட்டி யியம்ப வல்ல, காழிவரும் பெருந்தகை'' (1443)யைக் கண்டு வணங்க வருகின்ற அரசுகளும், ''வரை வில்லியார் வெஞ்சூலை மடுத்தருளி நேரே முன்னா, ளாண்டவர செழுந்தருளக் கேட்டருளி'' (1446) அவரைக் காண்டகைய பெருவிருப்புடன் எதிர்கொண்டு வந்த பிள்ளையாரும் சீகாழியில் திருமடத்தில் சந்தித்த இடத்துக் ''கண்ட கவுணியக் கன்றுங் கருத்திற் பரவுமெய்க் காதற், றொண்டர் திருவேட நேரே தோன்றிய தென்று தொழுதே...எதிர்வந் திறைஞ்ச'' (2169) என்ற நிலையும் இங்குக் கருதத்தக்கது; ஆண்டு இறைவர் ஆட்கொண்டருளிய பெருமை நினைந்ததும், திருவேடத்தின் பெருமைபற்றி நினைந்ததும், ஆகிய கருத்துக்களினால் பிள்ளையார் தொழுத நிலையும் அப்பர் இறைஞ்சிய நிலையும் நிகழ்ந்த நுட்பங்களை உய்த்துணர்ந்துகொள்க;

2778. இருந்தவத்தோ ரவர்முன்னே யிணைமலர்க்கை குவித்தருளி
''யருந்தவத்தீ! ரெனையறியாப் பருவத்தே யெடுத்தாண்ட
பெருந்தகையெம் பெருமாட்டி யுடனிருந்த தே?''யென்று
பொருந்துபுகழ்ப் புகலியின்மேற் றிருப்பதிகம் போற்றிசைத்தார்; 880

அன்றியும் அரசுகளைப் பிள்ளையார் தம் **''அப்பர்''** என அழைத்தருளி மேற்கொண்ட நிலையும் கருதுக. இனி, ஈண்டுச் சிவபாதவிருதயர் தம் திருமகனார் என்ற நிலையிற் காணவருகின்றனர்; அவ்வோகைச் செய்தி கேட்டுத் தாதையார் வருகின்றனர் என்ற கருத்துடன் எதிர்கொண்ட பிள்ளையார், ''எப்பொழுது வந்தருளிற்று'' என்று உரைத்து அழைக்க, அவர் பிள்ளையாரைத் தொழுதபோது, பிள்ளையார், அந்தத் தாதையாரது சார்புபற்றித் திருத்தோணியில் இருக்கும் தாதையாரையும் தாயாரையும் நினைந்து தொழுதனர்; தாதையார் தொழுதபோது உலகத் தாதையார் என்ற நிலையில் பிள்ளையார் தொழவில்லை. அவ்வாறு தொழுதிடுதல் எம்மனோராகிய உலகரது பாசநிலையா யொழிந்து ''பாசமற்று இலரா''கிய பிள்ளையார்போன்ற பெரியோர்நிலை யாகாது. பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின்ற எம்மனோர்க்குப் ''பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்'' என்றபடி உலகப் பொருள்களே காட்சிப்பட இறைவனை அவற்றுட் காணலரிது. ஆனால் பெரியோர் ''பரமே பார்த்திருப்பர் பதார்த் தங்கள் பாரார்''; ஆதலின் ''பரத்தின் மறைந்தது பார்முதற் பூதம்'' என்ற நிலையுடையார் என்ற நுட்பத்தினை ஈண்டுக் கண்டுகொள்க. **பவபாச மறுத்தவர்** - தொழுத தாதையாரை அவ்வாறே தாதையார் என்ற நிலையிற் காணாது அவர் சார்பில் தோணித் தாயாரையும் தந்தையாரையுமே நினைவுறச் செய்தது பவபாசமறுத்த நிலை என்க. இது ''மறக்குமாறிலாத என்னை'' (தேவா) என்ற நிலை. *879*

2778. (இ-ள்) இருந்தவத்தோரவர்...குவித்தருளி - பெருந்தவத்தை யுடையவராகிய அந்தச் சிவபாதவிருதயர் முன்னே இணையாகிய மலர்போன்ற இரண்டு கைகளையும் கூப்பியருளி; ''அருந்தவத்தீர்...இருந்ததே'' என்று - அரிய தவத்தையுடையவரே! என்னை அறியாப் பருவத்திலே எடுத்தாண்ட பெருந்தகை யாராகிய தோணியப்பர் எம் பெரியநாயகியாருடன் நன்கெழுந்தருளியிருந்ததே? என்ற கருத்துடன்; பொருந்து...இசைத்தார் - பொருந்தும் புகழினையுடைய சீகாழியின் மேல் திருப்பதிகத்தினாற் போற்றிசைப்பாராகி,

(வி-ரை) இருந்தவத்தோர் - சிவபாதவிருதயர்; ''செய்தவத்தால்'' (2770); ''தவமான நெறியிணையும் தாதையார்'' (2776) என்று பன்முறையும் அவரது தவம்பற்றியே விதந்து கூறியது அவரது சிவதவத்தின் பெருஞ்சிறப்புக் குறித்தது. இதுபற்றியே பிள்ளையாரும் ''அருந்தவத்தீர்!'' என ஈண்டு அவரை விளித்தருள்வதும் கருதுக; ''தாமென்று மனத்தளராத் தகுதியரா யுலகத்துக், காமென்று சரண்புகுந்தார் தமைக்காக்குங் கருணையினான்'' (பிள். தேவா - பிரமபுரம்) என்ற திருவாக்கு இவரது குறிப்புப் பெற நிற்பதும் காண்க; இவரது தவம் நிறைவெய்திய பயன் இப்போது ஈண்டு மதுரையிற் பெற்றமையால் இக்கருத்தால் இங்கு விதந்து பாராட்டியபடியாம். **இருந்தவத்தோர்** - பிள்ளையார் என்று கொண்டுரைப்பாருமுண்டு.

அவர் முன்னே இணைமலர்க் கைகுவித்தருளி - அவர் முன்னே - கை குவித்தது அவர் முன்பு ஆயினும் குறித்தது தோணியப்பரை என்பது குறிப்பு.

"எனையறியாப் பருவத்தே எடுத்தாண்ட பெருந்தகை யெம்பெருமாட்டி யுட னிருந்ததே?" - இது பதிகக் குறிப்பும் கருத்துமாம். "போதையார் பொற் கிண்ணத்தடிசில்" என்ற பதிகத்தின் இரண்டாவது பாட்டி னறியக்கிடக்கின்றது.

"போதையார் பொற்கிண்ணத் தடிசில்" (பதிகம்) - என்றதனுல் பொற் கிண்ணத்தில் ஞானமூட்டியதும், பிள்ளையாரது **அறியாப் பருவமாகிய** மூவாண்டு வயதும், ஞானவமு தூட்டி **எடுத்தாண்டமையும்**, **"பேதையா ளவளொடும் பெருந்தகையிருந்ததே"** (பதிகம்) என்றதனுல், "பெருந்தகையெம் பெருமாட்டி யுடனிருந்ததே" என்றதும் பெறப் படுதல் காண்க.

அறியாப் பருவம் - அறிவு நிரம்பாத இளங் குழவிப் பருவம்; இறைவரை அறிந்து வழிபடாத காலம் என்றலுமாம்; மறந்த காலம் என்ற குறிப்பும் காண்க. என்னை இன்னுர் என்று நான் அறியாத பருவம் என்றுரைக்கவும் நின்றது.

பெருந்தகை - யான் அறியாதிருந்தும் தாம் நினைந்து அறிந்து எடுத் தாண்டமை குறிக்கப் **"பெருந்தகை"** என்ருர்.

இருந்ததே - நலம் பெற இருந்ததே என்க; ஏகாரம் விஞ. "**வினவி** - அருள் செய்தார்" (2779) என மேல்வரும் பாட்டிற் கூறுதல் காண்க.

போற்றிசைத்தார் - இசைத்தாராய் - அருள்செய்தார் என மேல்வரும் பாட்டுடன் முடிக்க நின்றது; முற்றெச்சம். **புகலியின்மேற் றிருப்பதிகம் போற்றி இசைத்தார்**- பெருந்தகை எம்பெருமாட்டியுட னிருந்ததே எனத் தாதையார்பால் இறைவர் இறைவியாரது நலம் விஞவும் வகையால் பதிகம் அமைந்ததாயினும் புகலியைப் போற்றுதல் கருத்தென்பது. **போற்றிசைத்தல்** - ஒருசொல்லியல்பிற்று.

எம்பெருமாட்டி - பாலமுது ஊட்டிய நன்றி குறிக்க **எம்** என்ற உரிமைப் பாட்டுடன் கூறிஞர் - **பதிக முழுமையும் அம்மையைப் போற்றியதும் குறிப்பு**.

பொருந்து புகழ் - தன் மேன்மைகருதிப் புகழ் தானே வந்து பொருந்தும் என்க. ஏனைய புகழ்கள்போலப் பொருந்தாத என்பதின்றிப் பொருந்திய - பொருத்தமாகிய - புகழ் என்க.

புகலியின் மேல் - திருவாலவாயினின்றபடி சீகாழியாகிய அத்தலத்தைப் பாடியதென்ற வரலாறு குறிக்க இவ்வாறு எடுத்துக்காட்டினர். *880*

2779. (இ-ள்) "மண்ணினல்ல"...என்று எடுத்து - "மண்ணினல்ல" என்று தொடங்கி; மனத்தெழுந்த...பாய்ந்தொழுக - திருவுள்ளத்திலே எழுந்த பெரிய மகிழ்ச்சியோடு உள்ளே நிறைவாகிய ஆசைப் பெருக்கிஞலே கண்களிலிருந்து அருவி போலக் கண்ணீர் பாய்ந்து வழிய; அண்ணலார் தமை வினவி - தோணியப்பர் இனிதிருந்தமைபற்றித் தாதையாரை வினவி; தண்ணறும்...தமிழ் விரகர் - குளிர்ந்த மணமுடைய அழகிய செந்தாமரை மாலையினை அணிந்த தமிழ் விரகராகிய பிள்ளையார்; திருப்பதிகம் அருள்செய்தார் - திருப்பதிகத்தினை அருளிச்செய்தனர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டரைக்க நின்றன.

2779. "மண்ணினல்ல" வென்றெடுத்து மனத்தெழுந்த பெருமகிழ்ச்சி
யுண்ணிறைந்த காதலினற் கண்ணருவி பாய்ந்தொழுக
வண்ணலார் தமைவினவித் திருப்பதிக மருள்செய்தார்
தண்ணறும்பூஞ் செங்மலத் தாரணிந்த தமிழ்விரகர். 881

(வி-ரை) மண்ணினல்ல - பதிகத் தொடக்கம்.

மனத்தெழுந்த - காதல் - மனநிலை ; **கண் அருவி......ஒழுக** - மெய்யின் நிலை; மெய்ப்பாடு; **வினவி அருள் செய்தார்** - வாக்கின் நிலை என்று மூன்று கரணங்களின் நிலையும் கண்டுகொள்க.

அண்ணலார் - "பெருந்தகை" என்ற பதிகக் கருத்து.

செங்கமலத்தார் அணிந்த - தாமரை அந்தணர் மரபுக்குரிய அடையாள மாலை.

தமிழ் விரகர் - "**அருந் தமிழ்** ஞானசம்பந்தன **செந்தமிழ்**" *(பதிகம் - 1)* என்ற பதிகத் திருக்கடைக்காப்பின் குறிப்பு.

தண் - நறும் - பூ - செங்கமலம் - தாமரையின் தண்மை - மணம் - அழகு - நிறம் என்ற நான்கு தன்மைகளும் குறிப்பிடப்பெற்ற நயம் காண்க. *881*

திருக்கழுமலம்

திருச்சிற்றம்பலம் பண் - கொல்லி

மண்ணினல் லவண்ணம் வாழலாம்; வைகலும்
எண்ணினல் லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே. (1)

"போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லா"தெனத்
தாதையார் முனிவுறத், தானெனை யாண்டவன்,
காதையார் குழையினன், கழுமல வளநகர்ப்
பேதையா ளவளொடும் **பெருந்தகை** யிருந்ததே. (2)

கருந்தடந் தேன்மல்கு கழுமல வளநகர்ப்
பெருந்தடங் கொங்கையோ டிருந்தவெம் பிரான்றனை
யருந்தமிழ் ஞானசம் பந்தன **செந்தமிழ்**
விரும்புவா ரவர்கள்போய் விண்ணுல காள்வரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:— *முன் 2778-ல் ஆசிரியர் எடுத்துக்காட்டியபடி கண்டு கொள்க.*

பதிகப் பாட்டுக் குறிப்பு:-- *(1) பெண்ணினல்லாளொடும் பெருந்தகையிருந்ததே; அதனால் வாழலாம்; குறைவிலை; உறும் - என்க ;* **—(2) போதை** - *சிறிதலர்ந்த தாமரைமலரைப்*

2780. **தி**ருப்பதிகந் திருக்கடைக்காப் புச்சாத்திச் சிறப்பின்மிகு
விருப்பினு லவர்தமக்கு விருந்தளித்து மேவுநாள்
அருப்புறுமெய்க் காதல்புரி யடியவர்க டம்மோடும்
பொருப்புறுகைச் சிலையார்சேர் பதிபிறவுந் தொழப்போவார்; 882

போன்ற தன்மையினைக்கொண்ட; **ஆர்தல்** - தன்மை பொருந்துதல்; தாமரைப் போதுபோன்ற பொன் கிண்ணம் என்க. போது தேன் தருதல் குறிப்பு. **அடிசில்** - பாலமுது என்ற பொருளில் வந்தது; **பொல்லாதென - முனிவுற** - சரிதக் குறிப்பு. **இப்பாட்டுப் பிள்ளையாரது சரிதத்திற்கு அவர் திருவாக்கிற் பெறப்படும் சிறந்த அகச்சான்று;** ''யாரளித்த பாலடிசி லுண்டதுநீ யெனவெகுளா'' (1970). ஆண்டு **அடிசில்** என்பதும், **வெகுளா** என்பதும் பதிக ஆட்சி;—**(3) தொண்டு** - நெறியின் அணையும் வகையாற் செய்யும் தொழிலினாலே; — **(4) அயர்வு** - துன்பம்; **அசைவு** - கவலை; துதிசெய - இருந்ததேயாதலின் அசைவு ஒழி என்றபடி. **நியர்** - ஒளி. **பெயர் பல** - சிவநாமமாகிய சீபஞ்சாக்கரம் முதலாகிய மந்திரங்கள்; சீகாழியின் பல பல பெயர்கள் என்றலுமாம். —**(5) அடைவு** - அடைக்கலமாகிய இடம்; புகலிடம்; ''அடைவுதிருத்தாண்டகம்'';— (6) பெருந்தகை இருந்ததே யாதலின் மற்றொரு உற்ற பற்றுமில்லை; ''மற்றுப்பற் றெனக்கின்றி'' (தேவாரம்); **பெற்று எனையாளுடைய - பெறுதல்** - ஞானப் பாலுதவி மகவாகப் பெற்று;—**(7) குறைவு - அணைவதும்** - துன்பத்தை அனுபவித்தலும்; **கறை-** இருள்பொதி நிழல் என்ற பொருளில் வந்தது;—**(8) அரக்கனூர்**-பன்மை இகழ்ச்சிக்கண் வந்தது; **நீர்**-நீர்மை; அருள்;—**(9) நெடியவன்**-விட்டுணு;—**(10) ஆர்வுறும்**-மேலழகுபடும்; **தார்**-உறு- **தட்டுடை**-பாய் உடுக்கை;—**(11) தேன்** - வண்டினம்.

2780. (இ-ள்) திருப்பதிகம்...சாத்தி - திருப்பதிகத்தினைத் திருக்கடைக்காப்புச் சாத்தி முடித்தருளி, சிறப்பின்மிகு...மேவுநாள் - மிக்க சிறப்பினுடன் விருப்பத்தினாலே அத்தாதையார் தமக்கு விருந்தளித்துக் களித்துப் பொருந்தியிருக்கும் நாள்களிலே, அருப்புஉறு...போவார் - அரும்புபோலப் புதிதின் மலர்கின்ற உண்மையன்பு மிகுதியினால் திருத்தொண்டினை இடையறாது நினைந்து செய்யும் அடியவர்களோடும், மலையினையே வில்லாகக் கையில் ஏந்திய இறைவர் எழுந்தருளிய பிற பதிகளையும் சென்று தொழுவதன்பொருட்டுப் போவாராகி;

(வி-ரை) சிறப்பின் மிகு விருப்பாவது - ''அவர்சார்பு கண்டருளித் திருத்தோணி யமர்ந்தருளிப் பவபாச மறுத்தவர் தம் பாதங்கள் நினைவு'' நின்ற சிறப்பினால்வரும் பெருவிருப்பம்.

விருந்து - தாதையார் பழஞ்சுற்றமாய் ஒக்கல் எனப்படுவாராயினும் ஈண்டுத் திருத்தோணியமர்ந்தார் பாதங்களின் நினைவு கொள்ளும்தோறும் புதிது புதிதாய் வருவதொன்றாதலின் **விருந்**தென்றார். **விருந்து** - புதிதின் வருவோர்; அதிதிகள்; இங்கு விருந்தென்றது விருந்திற்குச்செய்யு முபசாரத்தினை; ''யாதுசெய் வேன்கொல் விருந்து'' (குறள்).

அருப்புறு மெய்க்காதல் - புரி - அருப்புறுதல் - அரும்புபோல அவ்வப்போது புதிதின்

2781. ஆலின்கீழ் நால்வர்க்கன் றறமுரைத்த வங்கணனை
நூலின்கட் பொருள்பாடி நூலறிவார்க் கீந்தானைக்
காலம்பெற் றினிதிறைஞ்சிக் கைதொழுது புறம்போந்தார்
சீலங்கொ டென்னவனுந் தேவியரு முடன்போத. 883

மலர்தல்; **உறு** *- உவமவுருபு;* **அரும்பு - அருப்பு** *- என எதுகை நோக்கி வலிந்து வந்தது.* **காதல்** *- அன்பின் செறிந்தவிளைவு; ஈண்டு அதனல் விளையும்செயல்களுக்காயிற்று.* **புரிதல்** *- இடைவிடாது நினைத்தலும் சொல்லுதலும் செய்தலுமாம்.*

அடியவர்கள் தம்மோடும் - அடியவர் *- அயரா அன்புசெய்யும் மெய்ஞ்ஞானிகள். ''அன்பரொடு மரீஇ'' (12 சூத் - சிவஞானபோதம்).*

கையுறு பொருப்புச் சிலையார் *என மாற்றுக.* **பொருப்பு** *- ஈண்டு மேருமலை;* **சிலை** *- வில்; ''சிலையது வெஞ்சிலையாக'' (தேவா)*

பிறபதியும்—*என்பதும் பாடம்.* 882

2781. (இ-ள்) *ஆலின்...அங்கணனை - கல்லாலமரத்தின் கீழே நான்கு முனிவர்களுக்கு அறங்களை உபதேசித்தருளிய அங்கணராகியவரை; நூலின்கண்...ஈந்தானை - தமிழ் நூல்களுள்ளே சிறந்த பொருளிலக்கணத்தைப் பாடி நூலறியும் சங்கப் புலவர்களுக்கு ஈந்தருளியவரை; காலம்பெற்று...கைதொழுது - உரிய காலம் சேரப் பெற்று இனிதாக வணங்கிக் கைதொழுது; சீலம்...போத - சீல வொழுக்கத்தினை மேற்கொண்ட பாண்டியனும் அவர் தேவியாரும் தம்முடன் கூடவர; புறம் போந்தார் - புறத்திலே போந்தருளினர் (பிள்ளையார்);*

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி – ரை) ஆலின்...அங்கணனை - ஆல் *- கல்லாலமரம்;* **நால்வர்** *- முனிவர் நால்வர்; அவராவார் சனகர் - சனந்தனர் - சனாதனர் - சனற்குமாரர்.*

அறம் *- அறமுதலிய நான்கனையுமுணர்த்தி நின்றது; ''அழிந்த சிந்தை யந்த ணாளர்க் கறம்பொரு ளின்பம்வீடு, மொழிந்த வாயான் முக்கணாதி மேயது முது குன்றே'' (பிள். தேவா - பழந்தக்க - 7); இவை வேதங்களில் மக்களுக்கு உறுதிப் பொருள்கள் என எடுத்தோதப்பட்டன.*

நூலின்கட் பொருள் பாடி - பொருள் *- பொருள் நூல்; ''செழும்பொருணூல் தருவானை'' (1671);* **நூலின்கண்** *- தமிழ் நூல்களில் சிறந்து பேசப்படும்; எழுத்துச் சொல் பொருள் யாப்பு என்ற நான்கனுள் சிறந்தது பொருள்; அஃது அகம்புறமென இருவகைப்படும்; அவற்றுட் சிறந்தது அகப்பொருள்; அதுதானும் ஞானயோக நுண் பொருள்-உலகவழக்குப் பொருள் என இரண்டு பொருளும் நுதலும் இயல்புடைத்து; அவற்றுட் சிறந்தது ஞானயோக நுண்பொருள்; என இவ்வெல்லாவகைப் பட்ட பொருணூல்களினும் சிறந்த ஞானயோகப் பொருணூல் பாடியளித்தனர் என்றதாம்; ''மெய்ம்மைப் பொருளாந் தமிழ்நூலின் விளங்கு வாய்மைச், செம்மைப் பொருளுந் தருவார்'' (974) என்று இதன் இயல்பை முன்னர் விரித்தருளியமை காண்க. இதுபற்றி வரும் இறையனாரகப்பொருளுரையும் (1), திருக்கோவையா (1) ருரையும் பார்க்க.* **பொருள் பாடி** *- ''இறையனாரகப் பொருள்'' என்னும் பொருளிலக்கணத்தைப் பாடி.*

வேறு

2782. **தேனிலவு பொழின்மதுரைப் புறத்துப் போந்த**
தென்னவனூர் தேவியா ரமைச்சர் சிந்தை
யூனெகிழும் படியழிந்தங் கொழுகு கண்ணீர்
பாய்ந்திழிய வுணர்வின்றி வீழக் கண்டே
"யானும்மைப் பிரியாத வண்ண மிந்நாட்
டிறைவர்பதி யெனைப்பலவும் பணிவீ" ரென்று
ஞானமுணர் வாரருள, வவரும் போத,
நம்பர்திருப் பரங்குன்றை நண்ணி னூரே. 884

நூலறிவார் - சங்கப் புலவர்களும் பாண்டியனும். அவர்க்கு இறைவர் பாடியீந்த வரலாறு இறையனாரகப்பொருள் முதற்சூத்திர உரையுட் காண்க. "நூலறிபுலவ" (முருகு.)

காலம் பெற்று - இறைஞ்சி வழிபட்டு விடைகொள்ளுதற்குரிய பூசைக்காலங் கிடைக்கப்பெற்று.

நூல்...பாடி - "படிக்குநூல்கள் சிவாகமம்" (சித்தி) என்றபடி ஈண்டுச் சரியையாதி உண்மைப்பொருள் காட்டும் சிவாகமங்களைப் பாடியருளி என்றும், இவற்றை மறையாதி உணர்ந்தார்க்கு ஈந்தருளினர் என்று கொள்வதுமாம்.

புறம் - மதுரைத் திருநகரின் புறம்; மேல்வரும் பாட்டுப் பார்க்க.

சீலம் கொள் - சைவவொழுக்கத்தினை மீள மேற்கொண்ட (அரசன்). 883

2782. (இ-ள்) தேன்...போந்த - தேன் பொருந்திய (மலர்கள் நிறைந்த) சோலைகள் சூழ்ந்த மதுரைமாநகரின் புறத்திலே போந்த; தென்னவனூர்...கண்டே - பாண்டியரும் தேவியாராகிய மங்கையர்க்கரசியாரும் அமைச்சராகிய குலச்சிறையாரும் தம் ஊன் உருகும்படி மனம் அழிந்து அங்கு வடியும் கண்ணீர் இடையறாது பெருகி வீழ உணர்வு மயங்கி வீழ்ந்ததனைக் கண்டே; யானும்மை...அருள - நான் உங்களைப் பிரியாதபடி இந்நாட்டில் இறைவர்பதிகள் ஏனைப் பலவற்றையும் வணங்குவீர்களாக என்று சிவஞான முணர்வாராகிய பிள்ளையார் அருளிச்செய்ய; அவரும் போத - அவ்வாறே அதற்கிசைந்து அவர்களும் உடன்செல்ல; நம்பர்...நண்ணினூரே - இறைவரது திருப்பரங்குன்றத்தினைச் சென்று சேர்ந்தருளினூர்.

(வி-ரை) தேன் நிலவு பொழில் - தேன் நிலவுதல் - பூக்களின் தேன் பிலிற்றுதல்; **தேன்**-வண்டுகள் என்றலுமாம்.

மதுரை புறத்துப் போந்த - முன் பாட்டிற் **புறம்** என்றதனை விரித்தவாறு; திருவாலவாய்க் கோயிலின் புறத்துநின்றும் நகரின் புறம்வரையும் உடன் சென்ற. **பெரியோர்களைக் குறைந்தது பதினூறடி யளவும் பின்சென்று விடைபெறுதலும், அவ்வளவும் முன்சென்று வரவேற்றலும் விதி.** ஈண்டு, அரசனூரும் தேவியாரும் அமைச்சனூரும் ஆர்வமிகுதியினூல் விடைகொள்ள நகரின் புறத்து வரையும் சென்றனர் என்க. குலச்சிறையார் நான்குநாழிகை யளவும் புறத்துச்

சென்று பிள்ளையாரை வரவேற்கும் வகையால் திருக்கூட்டத்தின் முன் நிலத்தின் வீழ்ந்து பணிந்து கிடந்த வரலாறும் காண்க (2553).

தென்னவனார் - தேவியார் - அமைச்சர் - அரசாங்கச் சார்புபற்றி இவர்கள் உடன் வந்து குறைவறுத்து வர அந்நாட்டில், இனிப் பல பதிகளிலும் எழுந்தருளு வாராதலால் அக்குறிப்புப்பட அரசாங்கச் சார்புபற்றி இம்மூவரையும் கூறினார்.

ஊன் நெகிழும்படி சிந்தை அழிந்து - என்க; **ஊன் நெகிழ்தல்** - உடம்பெல்லாம் உருகுதல்; **அழிந்து** - அழிதலால்; **அழிதல்** - நைந்து வருந்துதல்; ''ஊனெலா நின்றுருகப் புகுந்தாண்டான்'' (திருவா).

உணர்வின்றி - உணர்வு மயங்கி; **உணர்வின்றி வீழ** - பிள்ளையாரது பிரிவாற் றாமையினால் ஒன்றும் தோற்றாது மயங்கி வீழ; ''பிரிவாற்றா துடன்போத வொருப்படும் அவ்வளவு'' (2792).

யானும்மைப் பிரியாத வண்ணம் - பிள்ளையாரைப் பிரியலாற்றாது மயங்கி வீழ்ந்தார் அவர்களாக, நீர் என்னைப் பிரியாதவண்ணம் என அவர் மேல்வைத்துக் கூறாது அந்நிலையினைத் தம்பாலதாக வைத்து நான் பிரியாதபடி என்றிவ்வாறு கூறியது பெரியோர் இன்மொழி கூறும் தகுதி மரபுபற்றி; உலக வழக்கிலும் தக்கார்பால் இம்மரபில் உரை வழங்குதல் காண்க. I think I have made myself clear - முதலிய நவீனர் நாகரிக வழக்கும் காண்க. பதிபிறவும் தொழத் தாம் அவர்களைப் பிரிந்து செல்லப் போந்த குறிப்பும் உடன்கொண்ட மரபுமாம்.

எனைப் பலவும் - எனை - எத்துணையும்; மிகுதி குறித்தது; உம்மை முற்றும்மை. ஏனைய என்றலுமாம்.

பணிவீர் - என்னுடன் கூடவே போந்து பணிவீர் என்றதாம்.

ஞானமுணர்வார் - ஞானம் -''எண்ணரிய சிவஞானத் தின்னமுதம்'' (1966) ''தாவில் தனிச் சிவஞானம்'' (1967); **உணர்வார்** - உணரும் தன்மையுடையவர் என வினைப்பெயர்; ஞானமுணர்வாராதலின் இவ்வாறு பணித்தருளினர் என்பது குறிப்பு. அருளியதன் அருண்ஞானக் குறியாவது அவர்களது பிரிவாற்றாமையினை அகற்றியதும், பாண்டி நாட்டுப் பதிகளைத் தம்முடன் கூட வழிபடுமாறு பணித்து வழிகாட்டியருள்வதும், அதன்மூலம் பாண்டிநாடு முழுமையும் தாமே போந்தருளி ''வேதநூல் நெறியே யாக்கி வெண்ணீற்றின் சார்வினான் மிக்கு யர்ந்த கதியருளு வதும்'' (2790), பிறவுமாதல் கண்டுகொள்க.

அவரும் - தென்னவனார் முதலிய மூவர்களும்; **போத** - உடன் வர. 884

2783. (இ-ள்) ஆறு...போற்றி - கங்கையை(ச் சடையில்) அணிந்த இறைவரை அப்பதியிற் போற்றி; அணி...பாடி-அழகிய திருஆப்பனூரினைச் சார்ந்து வணங்கிப் பாடியருளி; நீறணிந்த...பாடி - திருநீறு தங்கி அழகு செய்யும் திருமேனியையுடைய செல்வராகிய இறைவருடைய பதிகள் பிறவற்றையும் சேர்ந்து நிலைபெற்ற திருப்பதிகங்களை நிகழும்படி பாடி; சேறணிந்த...செல்வர் - சேறு பொருந்திய வயல்கள் சூழ்ந்த சீகாழியில் வந்தவதரித்தருளும் செல்வராகிய பிள்ளையார்; செங்கண்...இருந்தாரன்றே - செங்கண்ணையுடைய இடபத்தை உடைய

2783. **ஆறணிந்தார்** தமைவணங்கி யங்குப் போற்றி
யணியாப்ப னூரணைந்து பணிந்து பாடி
நீறணிந்த செல்வர்பதி பிறவுஞ் சேர்ந்து
நிலவுதிருப் பதிகங்க ணிகழப் பாடிச்
சேறணிந்த வயற்பழனக் கழனிசூழ்ந்த
சிரபுரத்து வந்தருளுஞ் செல்வர் செங்கண்
ஏறணிந்த வெல்கொடியார் **திருப்புத் தூரை**
யினிதிறைஞ்சிச் சிலநாளங் கிருந்தா ரன்றே. 885

வெற்றி பொருந்திய கொடியினை உயர்த்திய இறைவரது திருப்புத்தூரினை இனிதாகச் சார்ந்து வணங்கிச் சில நாள்கள் அங்கு எழுந்தருளி யிருந்தனர்.

(வி - ரை) ஆறு - *கங்கையாறு; சடையில் என்பது இடநோக்கி வருவிக்கப் பட்டது.*

அங்குப் போற்றி - *இறைவர் எங்குமுள்ளாராதலின் எங்கெங்கும் போற்றும் நிலையில் அங்கும் போற்றி.*

அணி ஆப்பனூர் - *''அணியாப்ப னூரானை'' என்ற பதிகஆட்சி போற்றப்பட்டது. வைகையாற்றினது வடகரையின் அமைப்பாகிய அணியும், திருவாலவாயின் காட்சியினது அணியும், பிறவும் குறிப்பு.*

நீறு அணிந்த - *நீறு இங்குத் தங்கியதால் அழகினைப் பெற்ற.*

செல்வர் - *ஐசுவரியமுடையவர்; ஐசுவரியம் - ஈசுவரத் தன்மை.*

நிலவு திருப்பதிகங்கள் நிகழ - நிலவுதல் - *அழிவுறு திருத்தல்;* ***நிகழ*** - *வழங்குமாறு.*

சேறு அணிந்த - சேறு - *ஏனைய இடங்களில் அழுக்கென் றொதுக்கப்படினும் வயலில் உள்ளபோது அழகு தருவது; பயிர் விளைவுக்குக் காரணமாய் உலகு புரக்கும் தன்மைக்குக் காரணமாதல் குறிப்பு.*


வந்தருளும் செல்வர் - *''நீறணிந்த செல்வர்'' எனப்பட்ட இறைவரது தன்மை இவரும் பெற்றவர் என ஈண்டும் செல்வர் என்றார்.*

ஏறு அணிந்த - *ஏற்றினைக் கொடியில் அழகுபட வைத்த.*


வெல்கொடி - *எஞ்ஞான்றும் வெற்றியேயன்றிப் பிறிதில்லாதது.*

திருப்புத்தூரை...இருந்தார் - *திருப்புத்தூர் அந்நாளினும் அரசாங்கத் தொடர் புடைய பெரும்பட்டணமா யிருந்தமை சரிதங்களா லறியப்படும்; பாண்டி நாட்டுப் பெருந் தலங்களுள் ஒன்று; தலவிசேடம் பார்க்க.*


எய்தியிறைஞ்சிச் சிலநாள்—எய்தியிறைஞ்சிப் பாடி—*என்பனவும் பாடங்கள். 885*



திருப்புத்தூர்
பாட்டு :- 2783



திருப்பூவணம் திருக்கோயில்
பாட்டு :- 2784



திருக்கானப்பேர் திருக்கோயில் பாட்டு :- 2784

திருப்பரங்குன்றம்

திருச்சிற்றம்பலம் பண் - குறிஞ்சி - முதல் திருமுறை

நீடலர் சோதி வெண்பிறை யோடு நிறைகொன்றை
சூடல னந்திச் சுடரெரி யேந்திச் சுடுகானில்
ஆடல னஞ்சொ லணியிழை யாளை யொருபாகம்
பாடலன் மேய நன்னகர் போலும் பரங்குன்றே. (1)

மைத்தகு மேனி வாளரக் கன்றன் மகுடங்கள்
பத்தின திண்டோ ளிருபதுஞ் செற்றான் பரங்குன்றைச்
சித்தம தொன்றிச் செய்கழ லுன்னிச் சிவனென்று
நித்தலு மேத்தத் தொல்வினை நம்மேல் நில்லாவே. (8)

தடமலி பொய்கைச் சண்பைமன் ஞான சம்பந்தன்
படமலி நாக மரைக்கசைத் தான்றன் பரங்குன்றைத்
தொடைமலி பாடல் பத்தும்வல் லார்தந் துயர்போகி
விடமலி கண்ட னருள்பெருந் தன்மை மிக்கோரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—*சிவனதிடமாகிய பரங்குன்றத்தைச் சிவனென்று ஏத்துவோர்மேற் றொல்வினை நில்லா.*

பதிகப் பாட்டுக் குறிப்பு :—*(1)* **சூடலன்** - சூடலை உடையவன்; **ஆடலன்** - ஆடல் செய்பவன்; **பாகம் பாடலன்** - பாகம் வைத்துப் பாடல் புரிபவன். **பாட்டு** - மறை; வரும் பாட்டுப் பார்க்க; அதனுள் **தேன்மொழி** என்ற குறிப்புமிது;—*(2)* **தேன்மொழி** - தேன் போன்ற மொழியை யுடையவள் - உமையம்மையார்;—*(3)* **பாரிடம்** - பூத கணம்;—*(6)* **தொடை நவில்கின்ற** - தொடுத்த அளவாலே செயல் விளைகின்ற; **தொடை**- தொடுத்த செயல்; **நவிலுதல்** - செய்தல் என்ற பொருளில் வந்தது;—*(8)* **சித்தமதொன்றி...ஏத்த** - சிவனை வழிபடும் நிலையினையும் மந்திரத்தினையும் உபதேசித் தருளியபடி; 1 - 2 - 3 - 4 - 9 பாட்டுக்களில் அம்மையோடிருக்கும் நிலையினைப் போற்றி, அத்தன்மை குறிக்கும் மகா மந்திரத்தையும் அருளியவாறு காண்க; **தொல்வினை நில்லா** - என்றதனால் பழவினையே யன்றிப் பின்னர்த் தேடிக்கொள்ளப்படும் வினையும் **உடல்** முகந்துகொண்ட வினையும் ஒழியும் என்பது பெறப்படும். 10-வது பாட்டும் இக் கருத்தினை வற்புறுத்தியவாறு; பரங்குன்றத்தினைச் சிவனே என்று வழிபடுக என்றதாம். அப்பெருங்குன்றம் மெய்யும் உருவும் சிவ வடிவாய்த் திகழ்வதும் கருதுக. **நம்மேல் நில்லா** என்றதனால் ''இன்றே ரிடையூ றெனக்குண்டோ'' (திருவா) என்றபடி பழவினையும் உடலூழாய்க் கழிவ தன்றி உறுத்தல் செய்யா என்று எடுத்துக்காட்டியபடி;—*(9)* **மொய் ஒளி உந்தி** - மாலினுடைய அழகிய உந்தித் தாமரை. **உரவோன்** - பிரமன்;—*(10)* **மிண்டு** - வன்மை.

தலவிசேடம்:--திருப்பரங்குன்றம் - பாண்டி நாட்டின் பாடல்பெற்ற தலங்களுள் மூன்றுவது பதி; முருகப்பெருமானுடைய படைவீடுகள் எனப்படும் ஆறு சிறந்த பதிகளுள் முதலாவது; அப்பெருமான் சூரர்களை வதைத்தபின் இங்கு எழுந்தருளித் தெய்வயானையம்மையாரைத் திருமணம் செய்துகொண்டருளிய பெருமையுடைய பதி. அத்திருமணத்தில் சிவபெருமான் உமையம்மையாரோடும் எழுந்தருளி யிருந்து கொண்டு, தேவர்களுக்கும் வெளிப்படக் காட்சி கொடுத்த பெருமைபெற்ற பதி; இத்திருமணக் காட்சிபற்றிய விழா இன்றும் நடைபெறுகின்றது. ஆனல் கந்தமா புராணத்திற் கூறியபடி சூரசங்காரத்தினை அடுத்து நடைபெருது பல மாதங்கள்பின் நடைபெறுவது பிற்காலத்தாரால் நேர்ந்த வழக்குமாறுபாடு; அதனை மாற்றிப் புராணத்துள் விதித்த உரிய நாளில் செய்வது சிறந்த புண்ணியம்; ஆளுடைய நம்பிகள் திருவாலவாயினின்றும் எழுந்தருளித் தமிழ் மூவேந்தர்களுடனே வழிபட்டு அத்தன்மையின் சிறப்பினை ''முடியா லுலகாண்ட மூவேந்தர் முன்னே மொழிந்தாறுமோர் நான்குமோ ரொன்றினையும்'' (11) என்று தமது ''கோத்திட்டையும் கோவலும்'' என்ற பதிகத்தினுள் வைத்துப் பாராட்டியருளி, இறைவரது திருவடிக்கீழ் ஆட்செய்யும் அருமை நினைந்து ''அடிகே ளுமக்காட் செயவஞ் சுதுமே'' என்று பாடியருளிய பெருமை பெற்ற பதி; **பரங்குன்றம்** - என்பது கோத்திட்டை எனப் பெற்றது. பரன் எழுந்தருளியது எனவும் பரன் போன்றது எனவும் உரைக்க நின்றது. வைப்புத்தலம் என்றும் கூறுவர்; **திட்டை** - மேடு - குன்று; இங்குக்காணும் திருக்கோயில் ஏறக்குறைய 1200 ஆண்டுகளின் முன்னே மகேந்திரவர்மன் முதலாகிய பல்லவர்களது ஆட்சியில் மலையைக் குடைந்தெடுத்து நிறுவிய கற்குகைக் கோயில்களுள் ஒன்றும்; இறைவரது திருவுருவமும் முருகப்பெருமான் தெய்வயானை யம்மையை மணஞ் செய்யும் திருமணக் கோலமும் அணிதிகழ அமைந்துள்ளமை கண்டு கண்டு மகிழ்ந்து உய்யப்பெறுதல் சிறப்பு. தம்மை யடைந்து ''வேண்டினர் வேண்டியாங் கெய்தினர் வழிபட'' இகபர வாழ்வுகளையெல்லாம் அருளும் கலியுகக் கண்கண்ட தெய்வமாகிய முருகப் பெருமான், தமது திருமணக் கோலத்துடன் எழுந்தருளியிருந்து அனேகமாகிய மக்கட்கூட்டம் இல்வாழ்வுபெற் றின்பமடைந்திருக்க மணம்புணரும் பெருவாழ்வை நாடோறும் வகுத்துவைக்கும் பெருங்கருணை இன்றும் விளங்கக்காணும் பெருமையினுல் ''போகியா யிருந்து யிர்க்குப் போகத்தைப் புரிதல்'' (சித்தி -1 - 50) என்னும் ஞானசாத்திர உண்மையினைத் தெளியக் காட்டும்பதி. இறைவரும் அவ்வாறே விளங்கும் தன்மை பதிகம் 1-2-3 4-9 பாட்டுக்களிற் பாராட்டப்பட்ட தலம்.

சுவாமி - **பரங்கிரிநாதர்**; அம்மை - **ஆவுடை நாயகி**; தீர்த்தம் - **சரவணப் பொய்கை**; மலைமேல் - **காசி தீர்த்தம் - கந்த தீர்த்தம்**; பதிகம் - 2.

இது திருப்பரங்குன்றம் என்ற நிலையத்தினின்றும் 1/4 நாழிகையளவில் அடையத்தக்கது. மதுரையினின்றும் மேற்கில் கற்சாலைவழி 4 நாழிகையில் அடைவதற்குரிதாய மற்றும் எல்லா வசதிகளும் உள்ள தலம்.

திருஆப்பனூர்

திருச்சிற்றம்பலம் பண் - குறிஞ்சி

முற்றுஞ் சடைமுடிமேல் முதிரா விளம்பிறையன்
ஒற்றைப் படவரவ மதுகொண் டரைக்கணிந்தான்
செற்றமில் சீரானைத் திருவாப்ப னூரானைத்
பற்றும் மனமுடையார் வினைபற் றறுப்பாரே. (1)

அந்தண் புனல்வைகை யணியாப்ப னூர்மேய
சந்த மலர்க்கொன்றை சடைமே லுடையானை
நந்தி யடிபரவு நலஞான சம்பந்தன்
சந்த மிவைவல்லார் தடுமாற் றறுப்பாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:-- திருஆப்பனூர் இறைவரைப்பற்றி நினைந்தெழுவார் ***வினை பற்றறுப்பார்.*** பதிக மகுடமும் பயனும் பார்க்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு:-- *(1)* **ஒற்றை** - ஒன்று; **ஒற்றை - அரவம்** என்க. —*(2)* **குரவம்** - குராமலர்; கோட்டம் என்றலுமாம்; ''குராமலரோ டராமதியஞ் சடை மேற் கொண்டார்'' (தேவா); குரவங்கமழ்குழலம்மை என்ற தல அம்மை பெயர்க் குறிப்புமாம்;—*(3)* **குழலார் மனங்கொள்** - குழலாரை மனங் கொள்ளச் செய்யும்;**முன் பெரிதும் முனிந்து (பின்) உகந்தான்** என்க;—*(4)* **பிணியும்** - பிணித்தலைச் செய்யும்; **பிணி** - கட்டுதல்; **துணியும் உடை** - துணித்தலினால் பெற்ற உடை. ஈண்டுத் **துணி**த்தல் உரித்தல் என்ற பொருளில் வந்தது; **புனலும் அணிவானை** என்று பிரித்துக் கூட்டுக;—*(5)* **தகரம்** - மலர் முதலிய வாசனைப் பண்டங்கள்; **நகரமொரு மூன்றும்**-திரிபுரங்களாகிய அரண்கள்; **அகரம் முதலானை**- ''அகர முதல வெழுத்தெல்லாம்'' (குறள்); ''அகரம் முதலி னெழுத்தாகி நின்றாய்'' (நம்பி.தேவா - இந்தளம் - நெல்வாயிலரத்துறை - 7); எழுத்துக்களுக்கு அகரம் முதலாதல்போல உலகுக்கு முதல்வன்;—*(8)* **பருக்கும்**-பருகும் என்பது சந்த எதுகை நோக்கிப் பருக்கும் என் நின்றது. **பருகுதல்** - ஆர அனுபவித்தல்; ''ஈசனைத், தின்பன் கடிப்பன் றிருத்துவன் றானே'' (திருமந் - 9 - அணைந்தோர் தன்மை - 332); ''திளைத்துந் தேக்கியும் பருகியு முருகேன்'' (திருவா - செந்திலாப் பத்து-10);—*(9)* **எண்ணில் வினை** - எண் இல்லாத - அளவற்ற; **எண் - நில்**-எண்ணத்தினால் விளைகின்ற என்றுரைக்கவும் நின்றது;—*(10)* **செய்ய கலிங்கம்**-கல்லாடை; துவர் தோய்ந்த உடை. **கலிங்கம்** - ஆடை; **புரிந்த** - இடைவிடாது சொல்லிய - நினைந்த; ''இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார்'' (குறள்); **ஐயம்** - மயக்கம்; அறியாமையைச் செய்யும் ஆணவத்தின் செயல்; **பைய** - சிறிது சிறிதாகத் தமக்கியன்றவாறு; பையவேயும் என உம்மை தொக்கது;—*(11)* **அணி**-அழகிய புனலுடைய வைகையினால் அழகு செய்யப்பட்ட. **சந்தம்** - மலரின் மணம்; **நந்தி** - இறைவர். **சந்தமிவை** - சந்தம் அதனையுடைய பாடலுக்கு வந்தது. **தடுமாற்றறுப்பாரே** - பதிகப் பயனாகப் பதிகக் குறிப்பினையே கூறியபடி.

தலவிசேடம்:- திருஆப்பனூர் - பாண்டிநாட்டுத் தேவாரம் பெற்ற பதிகளுள் இரண்டாவது பதி. ''திருவாப்புடையார் கோயில்'' என வழங்குகின்றது. ஒரு பாண்டிய அரசனுக்காக இறைவர் ஆப்பினிடத்தில் வெளிப்பட்டருளிய காரணத்தால் இப்பெயர் பெற்றது; ''கன்றாப்பூர் நடுதறி'' என்பதுபோலக் காண்க. இங்கு நடராச மூர்த்தி - சிவகாமசுந்தரியம்மையார் திருவுருவங்கள் சிலா மூர்த்தமாயும் அமைந்துள்ளன. சுவாமி - **ஆப்பனூர்க்காரணர்;** அம்மை **குரவங்கமழ் குழலம்மை;** பதிகம் 1.

இது மதுரை நிலையத்தினின்று வடக்கில் கற்சாலையில் ஒருநாழிகையில் வைகையின் வடகரையில் உள்ளது; வைகைக்குப் பாலமுண்டு.

பதி பிறவும் - இவை **பழமுதிர்சோலை** - **திருவாதவூர்** முதலாயின என்பது கருதப்படும்.

திருப்புத்தூர்

பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

வெங்கள் விம்மு வெறியார் பொழிற்சோலை
திங்க ளோடு திளைக்குந் திருப்புத்தூர்க்
கங்கை தங்கு முடியா ரவர்போலும்
எங்க ளுச்சி யுறையு மிறையாரே. (1)

நல்ல கேள்வி ஞான சம்பந்தன்
செல்வர் சேட ருறையுந் திருப்புத்தூர்ச்
சொல்லல் பாடல் வல்லார் தமக்கென்றும்
அல்ல நீரு மவல மடையாவே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:— திருப்புத்தூர் உறைவார் எம் இறைவர்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:— *(1)* **வெம் கள்** - **வெம்மை** - விருப்பம்; **விம்மு** - மிக்க; **சோலை திங்களோடு திளைத்தல்** - என்றது சோலை சந்திரமண்டலத்தளவும் நீண்டு வளர்ந்து சந்திரனோடு அளாவுதல்; **அவர் போலும் இறையார்** - அவரே எம் இறைவர்; **போலும்** என்பது உடன்பாடுபற்றிய உறுதிப்பொருள் தந்தது; **—(2) வேனல் விம்மு வெறி** - வேனற் காலத்தில் பூக்கள் மிக்கலர்ந்து மணமிக்கன வாதல் குறித்தது; **தேன்** - ஒருவகைத் தேன்வண்டு; **ஊனம் இன்றி** - அடியார்மேல் ஊனத்தை இல்லையாகச் செய்து; நன்கு என்றலுமாம்; **ஏனமுள்ளும் எயிறும்** - முள்ளம் பன்றியின் முள்; வராகத்தின் கொம்பு;**—(3) தாங்கு திங்கள் தவழ்** - தாங்குதலினால் நிலைபெற்ற மதி தவழும் வலி பெற்ற; **கொன்றை** - தலமரமுமாதற் சிறப்பு;**— (4) ஊறல்** - சுரத்தல். **ஊறல் வாழ்க்கை** - இங்குக் கருணையே சுரக்கும் தன்மை குறித்தது. ''கரும்பி னூறல்கண் டாய்கலந் தார்க்கவன்'' (தேவா);**—(5) பசை விளங்கப் படித்தார்** - முன் 4-ம் பாட்டில் ''ஊறல் வாழ்க்கை யுடையார்'' என்ற கருத்து. **பசை** - ஒட்டுந் தன்மை. இங்குக் கருணை குறித்தது. பச்சை என்பது எதுகைநோக்கி இடை குறைந்தது எனக்கொண்டு அதற்கேற்ப உரைத்தலுமென்று. **படித்தல்** - பயிலுதல்; காட்டுதல்; **வசை விளங்கும் வடி** - **வசை** -

2784. பற்ருர்தம் புரங்கண்மலைச் சிலையாற் செற்ற
பரமஞர் திருப்புத்தூர் பணிந்து போந்து
புற்ருரும் பணிபூண்ட புனித ஞர்தம்
பூவணத்தைப் புக்கிறைஞ்சிப் புகழ்ந்து பாடிக்
கற்ருர்க டொழுதேத்துங் **கானப் பேருங்**
கைதொழுது தமிழ்பாடிச் **சுழியல்** போற்றிக்
குற்ருலங் குறும்பலாக் கும்பிட் டேத்திக்
கூற்றுதைத்தார் **நெல்வேலி** குறுகி ஞரே. 886

மன்மதனை எரித்த தன்மை வசை எனப்பட்டது; **வடி** *- கூரிய தன்மை குறித்தது; ஒரு கணப்போதில் எரித்த திறம்* **வடி** *எனப்பட்டது;* **வடி** *- அத்தன்மை கொண்ட கண்ணுக்கு வந்தது - ஆகுபெயர்;—(6)* **வெண்ணிறத்த புனல்** *- எனக் கூட்டுக; நீருக்கு நிறம் வெண்மை என்பது சாத்திரம். ''பொன்பார் புனல் வெண்மை - (உண்மை விளக்கம் - 5);* **தெண்ணிறத்த** *- தெளிந்த தன்மை;* **ஒண்ணிறத்த- ஒண்மை** *- ஞானம். இப்பாட்டில்* **நிறத்த** *- சொற்பின் வருநிலை;—(8)* **கருக்கம்***- கார்மேகம்.* **கமழ்தல்** *- செழிக்கத் தங்குதல் என்ற பொருளில் வந்தது. ''மஞ்சும் அங்கவை பொழிந்தநீரு மாகுதிப் புகைப்பா ஞறும்'' (834) என்றவிடத் துரைத்தவையும் பிறவும் அறிவிக்குமாறு.* **கமழும்***-ஆகுதிப்புகை மணக்கும் என்றலு மாம்;* **திருக்கொள் செம்மை விழவு***-இறைவரது திருவிழா* **திரு***-முத்தித்திரு.* **செம்மை***-நன்மை. ''கண்ணி ஞலவர்* **நல்விழாப்** *பொலிவுகண் டார்தல்'' (பிள்.தேவா.)* **இருக்கவல்ல** *- வீற்றிருக்கும் அருமைப்பாடு குறித்தது;—(9)* **பெருகி** *- கருணை மேன்மேற் பொங்கி;—(10)* **ஆறு** *- அங்கம்;* **நான்கு** *- வேதம்;* **அமர்தல்** *- விரும்புதல்; —(11)* **சேடர் செல்வர்** *- சேடராகிய செல்வர்;* **சேடர்** *- அறிவுடையோர்;* **சொல்லல்** *- சொல்லுதலும் பாடுதலும்; ''பிதற்ருய் பிறைசூடி தன்பேரிடமே'' (தேவா).*

தலவிசேடம்:—**திருப்புத்தூர்** - பாண்டி நாட்டுப் பாடல்பெற்ற பதிகளுள் 6-வது பதி. தலவிசேடம் - III - பக். 867 பார்க்க. இலக்குமி பூசித்த குறிப்புத் தோன்ற ஸ்ரீதளி எனப்படும். ''திருத்தளி'' (தேவா-தாண்); வயிரவர் பூசித்துச் சுவாமிக்கும் அம்மைக்குமிடையே (கந்தர்போல) கிழக்கு நோக்கி வீற்றிருக்கும் வரம்பெற்ற பதி.

2784. (இ-ள்) பற்ருர்தம்...போந்து-பகைவருடைய திரிபுரங்களை மலையாகிய வில்லிஞலே அழித்தருளிய பரமஞரது திருப்புத்தூரினைப் பணிந்து சென்று; புற்ருரும்...புகழ்ந்து பாடி - புற்றில்வாழும் பாம்புகளை அணிந்த புனிதராகிய இறைவரது திருப்பூவணத்தை அணைந்து வணங்கிப் புகழ்ந்து பாடியருளி; கற்ருர்கள்...தமிழ் பாடி - கற்றவர்கள் தொழுது போற்றுகின்ற திருக்கானப்பேர்ப் பதியினையும் தொழுது பதிகம் பாடி; சுழியல்...குறுகிஞரே- திருச்சுழியலைப் போற்றிப் பின்னர்க் குற்ருலத்தினையும் குறும்பலாவினையும் கும்பிட்டுத் துதித்துக் கூற்றுவனை உதைத்தருளிய இறைவரது திருநெல்வேலியினைச் சேர்ந்தருளிஞர்.

(வி-ரை) பற்ருர் - பகைவர் - அன்பில்லாதவர்.

மலைச்சிலையாற் செற்ற - என்றதுபசாரம். சிலை வளைத்தமைமட்டேயன்றி அதஞல் ஒரு செயலுமின்றி நகைப்பிஞலே எரித்தனர்.

புற்றுரும் பணி - பணி - அரவு; **புற்றுரும்** - என்பது பாம்பாகிய சாதியின் பொதுவியல்பேயன்றி இறைவர் அணிந்த அரவுகள் புற்றில் வாழ்வன என்பதன்று.

கற்றார்கள் தொழுதேத்தும் - ''கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை'' (திருவிசைப்பா); ''தம்மை மறந்து நின்னை நினைப்பவர்'' (கோயிலுன் மணிமாலை) என்ற தம்மை வரக் கற்றவர்.

குற்றாலம் - குறும்பலா - இவையிரண்டும் தனிப் பதிகங்கள் பெற்ற இரண்டு பதிகள்; ஒரு தலத்துள்ளனவாதலின் ஒன்றாகச் சேர்த்துக் கும்பிட்டேத்தி என்று ஒருவினையாற் கூட்டி உரைத்தார்; குற்றாலம் - கும்பிட்டும் குறும்பலா ஏத்தியும் என்று விரித்து நிரனிரையாகக் கூட்டி முடிப்பதுமாம்; தலவிசேடம் பார்க்க. **குற்றாலம்** என்பது கூத்தர் கோயில் எனக் குற்றாலத்தினுள் உள்ள தனித் தளி; **குறும்பலா** - அகத்திய முனிவரால் விட்டுணு உருவத்தைச் சிவனுருவாக ஆக்கப்பட்ட தலம். வரலாறு கந்தபுராணத்துட் காண்க. (திருக்குற்றாலப் படலம்).

சுழியல் போற்றி - என அடைமொழியின்றி வாளாகூறியது பதிகமிறந்துபட்ட நிலைக்குறிப்புப்போலும். 886

திருப்பூவணம்

திருச்சிற்றம்பலம் **பண் - தக்கேசி - 1ம் திருமுறை**

அறையார் புனலுமாம லரு மாடர வார்சடைமேல்
குறையார் மதியஞ் சூடி மாதோர் கூறுடை யானிடமாம்
முறையார் முடிசேர் தென்னர் சேரர் சோழர்கடாம் வணங்குந்
திறையா ரொளிசேர் செம்மை யோங்குந் தென்றிருப் பூவணமே. (1)

திண்ணார் புரிசை மாட மோங்குந் தென்றிருப் பூவணத்துப்
பெண்ணார் மேனி யெம்மி றையைப் பேரிய லின்றமிழால்
நண்ணா ருட்கக் காழி மல்கு ஞானசம் பந்தன்சொன்ன
பண்ணார் பாடல் பத்தும் வல்லார் பயில்வது வானிடையே (11)

பதிகக் குறிப்பு:—இறைவரது இடம் தென்றிருப்பூவணமே.

பதிகப் பாட்டுக் குறிப்பு:— *(2)* **அறை** - ஓசை - சத்தம்; **குறைஆர்** - குறைதல் பொருந்திய; **முறையார் முடிசேர்** - ''முடியா லுலகாண்ட மூவேந்தர்'' (தேவா-நம்பி); **தென்னர் சேரர் சோழர்கள் தாம்வணங்கும்** - தமிழ் மூவேந்தர்களுக்கும் பொதுவாகிய வணங்குமிடம் என்பது நாட்டு நடப்பினலும் அறியக்கிடக்கின்றது. 2-5-வது பாட்டுக்களும் பார்க்க; தலவிசேடம் பார்க்க; **திறைஆர் ஒளிசேர் செம்மை** - ஏனை ஒளிகள் எல்லாம் திறையளக்கும் - பணியும் - பேரொளியுடைய செவ்விதாம் தன்மை; **ஒளி** - ஞானவொளியினையும், **செம்மை** - சிவத்தன்மையினையுங் குறிப்பா லுணர்த்தின; **தென்** - அழகு; தெற்கு என்றலுமாம். **தென்றிருப் பூவணமே** - ஏகாரம் தேற்றம். **திரு** - தெய்வத் திருவுணர்த்தும் சிறப்பு; பாட்டுத் தோறும் இதுவே மகுடமாய் வருவது - இத்தலச் சிறப்புணர்த்துவது; தென் திருப்பூவணமே - இடமாம் என்று கூட்டுக;—(2) **மருவார்** - பொருந்தாதவர் - பகைவர்; **சாலி** - நெல்வகை; **ஆலை**- கரும்பாலை;

மன்னர் - மூவேந்தர்; **காத்தளித்த சேடர் - சேடர்** - அறிவுடையார்; மாதவர்; இவர்களைக் காப்பது அரசர் கடன் என்பது;—(3) **வைகை...வாரி சேர நின்ற**- வைகை அணிமையில் கடலை நோக்கிச் சேர உள்ள நிலையும் அவ்வணிமையில் அதன் வடகரையில் இப்பதி உள்ளமையும் குறிப்பு. **சேரநின்ற - சேர்தல்** - அடுத்தல்; **சேர-நின்ற**-என்றதனால் அணிமையில் நின்றதேயன்றிச் சேர்தலில்லை என்றது குறிக்கப்பட்டது. வைகை கடலொடு சேராது இராமநாதபுரம் சில்லாவின் கோடியில் ஓர் ஏரியின்கண் பாய்ந்து முடிந்துவிடுவதாம். ''கடல் ஒருவர்க்கு முதவாத வுவரியென, மடுத்தறியாப் புனல் வைகை'' (வாத-உப-பட) என்று இதனைச் சுவைபடக் கூறுவது திருவிளையாடற் புராணம்; வைகையின் கரையில் இந்நகரம் அழகுடன் அமைவதுபற்றி மேல் 4-8-9-ம் பாட்டுக்களும் ''அணியார் வைகைத் திருக்கோட்டி னின்றதோர் திறமும் தோன்றும்'' என்ற திருத்தாண்டகமும் பார்க்க;—(5) **வில்லி**-வில்லையுடையவன்; வில்லியாகிய - மகிழ்ந்தான் என்று கூட்டுக;—(6) **மறையோன் - என்று உலகர் ஏத்த நின்ற** என்க; **மறையோனாகிய பிரான்** - என்றலுமாம்; **நன்று தீதென்றென் றிலாத**-நன்மையென்றும் தீமை யென்றும் வரும் பாகுபாடு தன்னிடத்துப்பொருந்தாதவன்; ''குற்றநீ குணங்கணீ'' (தேவா); ''மெய்ம்மையும் பொய்ம்மையு மாயினார்க்கு'' (திருவா);—(7) **கைவாழ்...ஓவா** - அம்மை யின்பச் சாதனங்களேயன்றி உலகபோக இன்பங்களாலும் குறைவில்லாத செழுநகர் என்பது குறிப்பு;—(8) **கூட**- அழித்தலுடன் கூடவே; **கொள்கையினார்** - 1974 பார்க்க; **ஓங்கி - உயர்** என்று கூட்டுக; **ஓட நீர்** - ஓடத்தால் கலக்கும்படி செழித்து ஓடும் நீர்; **ஓடுநீர்**—என்பதும் பாடம்.— -(10) **புனலை நீத்தவர்** - உடல் கழுவாதவர்; ''கழுவாவுடலம்'' (11-ம் திருமுறை - ஆளு. பிள் - அந் - 28); **மாயம் வைத்த** - அவர் தம்முடைய கன்மங்களை அனுபவிக்கும் பொருட்டு மறைப்பினைக் கொடுத்த; **மாயம்** - ஈண்டு மறைப்பு என்ற பொருளில் வந்தது. **மாயம் வைத்தானாகியும் நின்மலன்** - என்க; ''நலமிலனண்ணார்க்கு - சலமிலன்'' (திருவருட்); ''சார்ந்தாரைக் காத்துஞ் சலமிலனாய்'' (சிவஞானபோதம்-10); ''சார்ந்தவர்க் கல்லா னலமிலன்'' (தேவா); **மலைபோல் மாளிகை - பரிசு** - மூவேந்தரும் வந்து வணங்கும் பரிசும், அந்நாள் உலகநிலை யுயர்வுடனும் விளங்கிய நகரின் பரிசும்; **புரிசை** - மதில்கள்; **மாடமோங்கும்** என மேல்வரும் பாட்டும் பார்க்க;—(11) **திண்ணார்**-அருகர் புத்தராதிப் புறவுரையாளர்கள். **உட்குதல்** - அஞ்சியொழிதல்.

தலவிசேடம்:— III பக்கம் 876 பார்க்க; அடியார் ஒருவர் சிறப்பாக நந்தவனம் வைத்து வழிபட்டமையால் இப்பெயரெய்தியதென்பர்.

திருக்கானப்பேர் (திருக்காளையார் கோயில்)

திருச்சிற்றம்பலம் பண் - கொல்லி - 3ம் திருமுறை

பிடியெலாம் பின்செலப் பெருங்கைமா மலர்தழீஇ
விடியலே தடமூழ்கி விதியினால் வழிபடுங்
கடியுலாம் பூம்பொழிற் கானப்பேரண்ணனின்
னடியலா லடைசர ணுடையரோ வடியரே. (1)

காட்டகத் தாடலான் கருதிய கானப்பேர்
கோட்டகத் திளவரால் குதிகொளுங் காழியான்

நாட்டகத் தோங்குசீர் ஞானசம் பந்தன
பாட்டகத் திவைவலார்க் கில்லையாம் பாவமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:— *கானப்பேர் அண்ணல் அடியே சரணுவது; அதனைக் கருதலும் தொழுதலுமே கருமம்; அதனை ஞானநீர் பெய்து மலரால் வழிபடுவோர் நன்மை பெறுவர்.*

பதிகப் பாட்டுக் குறிப்பு:— *(1)* தேவேந்திரனது ஐராவதம் என்னும் யானை சாப நீக்கத்தின் பொருட்டுத் தனது பிடியுடன் வழிபட்ட சரிதம் குறித்தது; தல விசேடம் பார்க்க; 7 -10 பாட்டுக்களும் பார்க்க. **விதி** - வழிபாட்டுக்காக உள்ள நூல் விதி; சாப நீக்கத்தின் பொருட்டு விதிக்கப்பட்ட விதி என்றலும் குறிப்பு. **சரண்** - *அபயம் புகுமிடம்;—(2)* **நுண் இடை - பேரல்குல்** -*முரண் அணி;—(3)* **காவி** - கருங்குவளை; **நாவி** - கத்தூரி; **உ(ள்)ளும்** - என்பன ஒடு என்ற மூன்றனுருபின் பொருளில் வந்தன. உம்மை எண்ணும்மைகள்; மேல்வரும் (4) பாட்டினும் இவ்வாறே கொள்க. **ஞானநீர்** - உரிய மந்திரம் கிரியைஞான பாவனைகளால் தூய்தாக்கப்பட்ட நீர்; அபிமந்திரித்த நீர் என்பது மரபு. நீரினை மந்திரித்துச் சாந்தும் மலரும் பெய்து இறைவனை ஆட்டுதல் குறித்தது. மேற்பாட்டில் வருவன பாத்தியம் அர்க்கியம் ஆசமனம் முதலாயின;—**(4) நிறையுடை** - அன்பின் நிறை வுடைய; நிறைவாவது வேறொன்றற்கும் இடந்தராமை; **முழவு - பலி - பாட்டு** - வழிபாட்டு அங்கங்கள்; **குறையுடையவர்** - தம்பாற் குறைந்தடைந்தவர்;—**(5) வண்ணமும்** - உம்மை தீதிலாராதலுடன் என இறந்தது தழுவிற்று;—**(6) கள்ளமே- உள்ளமே** - ஏகாரங்கள் தேற்றம்;—**(7) அலகிட** - திருவலகுப் பணி செய்ய; **ஞானமாமலர்** - செபித்துச் சாத்தும் பூ. **வாய்மை**, கொடை, பொறை, அன்பு முதலாகிய அட்டபுட்பம் என்றலுமாம்;—**(8) நாளுநாளுயர்வதோர் நன்மை** - ''பையப் பையப் பழுக்கு மருட்கனி'' என்றபடி பக்குவ முறையில் நாடோறும் வளரும் அருணலம்; **வளர்வதோர்** - வளருந் தன்மையேயன்றிக் குறைவுபடாத ஒப்பற்ற;—**(9) நிலை** - பணிதல்; **கலையினார்** - நூல்களாற் பேசப்படும்;—**(10) உறித்தலைச் சுரை** - உறியாகிய சுரை; **உச்சி** - தலையின் மயிர் என்று பொருள் தந்தது; **கறித்தல்** - உண்ணுதல்;—**(11) கோடு** - கரை; பாட்டகத்திவை - பாட்டுக்களுள் இவற்றை.

தலவிசேடம்:— திருக்கானப்பேர் - பாண்டிநாட்டுப் பாடல்பெற்ற பதிகளுள் 10-வது பதி. இது காளையார் கோயில் என விளக்கமாய் வழங்கப்படுவது. ஆளுடைய நம்பிகளும் சேரமான் பெருமாணாயனாரும் திருச்சுழியலில் வழிபட்டு எழுந்தருளியிருந்தபோது இறைவர் நம்பிகளுக்குக் ''கங்குலிடைக் கனவின்கட் காளையாந் திருவடிவாற், செங்கையிற் பொற்செண்டுந் திருமுடியிற் சுழியமுடன், எங்குமிலாத் திருவேடம் காட்டி''க் ''கானப்பேர் யாமிருப்பது எனக் கழறி'' அகல, நம்பிகள் உணர்ந்து ''தொண்டரடித் தொழலும்'' என்று தொடங்கும் திருப்பதிகத்தினைக், ''கண்டு தொழப் பெறுவதென்று கொலோ வடியேன் கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே'' எனப் பாடியருளிப் போந்து வணங்கிய பதியாதலின் இப்பெயரால் வழங்குவது; காட்டானையாகும்படி சபிக்கப்பெற்ற ஐராவதம் போந்து விதிப்படி வழிபட்டுச் சாப நீங்கப்பெற்ற பதியென்பது பிள்ளையாரது திருப்பதிகத்துப் போற்றப்பட்டது. நன்கு திருப்பணிகள் பலவும் செய்யப்பட்டு விளங்குகின்ற தலம்; அத் திருப்பணிகள்

காரணமாய், அவற்றைச் செய்த அன்பர் ''பத்தர் குணத்தினரா யெத்திசை யும்புகழ, மன்னியிருப்பவர்கள், வானி னிழிந்திடினு மண்டல நாயகராய் வாழ்வது நிச்சயமே'' என்று பயனருளிய நம்பிகளது திருவாக்கின் வாய்மையை உலகம் காணுமாறு நிலவுவதும் காண்க; ஐராவதம் ''விடியலே தடமூழ்கி விதியினுல் வழிபடும்'' என்ற பிள்ளையாரது திருவாக்கின் வாய்மை காண இன்றும் திருக்கோயிலின் தடாகத்தில் யானை மூழ்கிவரும் திறமும், தீர்த்தமும் **யானைமடு** என வழங்குவதும், ''கார்வயல் சூழ்'' என்ற நம்பிகளது திருவாக்கின் வாய்மையினுல் இன்றும் வயல்கள் கார்நெல் வகை சிறக்க உள்ள திறமும் காணப்பெறுவன.

சோமேசுவரர் - சௌந்தரநாயகியம்மை சந்நிதி I; **காளீசுவரர் - சொர்ண வல்லியம்மை** சந்நிதி II; **சுந்தரேசுவரர் - மீனுட்சியம்மை** சந்நிதி III என மூன்று சந்நிதிகள் திருக்கோயிலில் உள்ளன; தீர்த்தம் - **யானைமடு**; பதிகம் 2.

இது திருவாடானைக்கு மேற்கில் கற்சாலை வழி 21 நாழிகையிலும் தேவகோட்டை யிலிருந்து தென்மேற்கில் மட்சாலை வழி 15 நாழிகையிலும் உள்ளது; இவை பழைய வழிகள். இப்போது மானுமதுரை-திருச்சி இருப்புப்பாதையில் சிவகங்கை நிலையத்தினின்றும் 12 நாழிகையளவில் கற்சாலைவழி அடைவது சுருக்கம். அந்தப் பாதையில், நடராசபுரம் - நாட்டரசன்கோட்டை நிலையங்களினின்றும் இன்னும் அணிமையில் அடையலாம். ஆயின் வண்டிவசதிகள் குறைவு.

I திருக்குற்றுலம்

திருச்சிற்றம்பலம் பண் - குறிஞ்சி

வம்பார் குன்ற நீடுயர் சாரல் வளர்வேங்கைக்
கொம்பார் சோலைக் கோலவண் டியாழ்செய் குற்றுலம்
அம்பா னெய்யோ டாட லமர்ந்தா னலர்கொன்றை
நம்பான் மேய நன்னகர் போலு நமரங்காள்! (1)

மாட வீதி வருபுனற் காழி யார்மன்னன்
கோட லீன்று கொழுமுனை கூம்புங் குற்றுலம்
நாட வல்ல நற்றமிழ் ஞான சம்பந்தன்
பாடல் பத்தும் பாடநம் பாவம் பறையுமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:— நமரங்காள்! தண்சாரற் சோலைக் குற்றுலம் நம்பான் மேய நன்னகர் போலும்!

பதிகப் பாட்டுக் குறிப்பு:— (1) வம்பு - மணம்; **யாழ் செய்** - யாழ்போலப் பாடும்; **ஆடல்** - திருக்கூத்தின் குறிப்புமாம்; **நம்பான்** - இறைவன்; **நகர் போலும்** - நகர்தானே; **நமரங்காள்** - நம்மவரே! அடியீர்காள் - சிறுதொண்டீர் - பெரியீர்காள் - தொழுவீர்காள் என இப்பதிகம் அடியார்களை நோக்கி வினவிய அமைப்புடையது;—**(2) பொடிகள்** - திருநீறு - சுண்ணம் முதலான; சிறப்புப் பன்மையுமாம்; ''பொடிகள் பூசிப்பல தொண்டர் கூடிப்புலர் காலையே'' (செவ்வழி - திருத்திலதைப்பதி - 1); பின்செல்ல - விழாமல்கு என்று கூட்டுக; திருவாரூர் (குறிஞ்சி) அரசுகள் பதிகம் பார்க்க; **நாள்விழ** - நாட்கூற்றின் அமைப்பினைப்

பின்பற்றிய விழா. **நாள்** - *புதிது ஆகிய;—(3)* **செல்வம்**-*ஈண்டுச் செழிப்பு என்ற பொருளில் வந்தது;* **வில்லின்** - *வில்லினால்; ஒல்க எய்து என்க;—(4)* **பக்கம்** - *பக்கங்களில் கன்றுகள் புடைத்துத் தோன்றிப் பெருகும்;* **தூங்குதல்** - *தொங்குதல்;—(6)* **மைம்மா நீலம்-மைம்மா** *மிக்க கருமை குறித்தது;* **ஒப்புதல்** - *கடிதல்;—(8)* **அருவி புடைசூழ** - *பல முகங்களானும் அருவிகள் எப்பக்கங்களினும் சூழ்ந்து ஓடி வீழ;* **கூதன் மாரி நுண்துளி தூங்கும்** - *இது குற்றாலத்தின் பருவச் சிறப்பு; ஆனி - ஆடி மாதங்களின் சிறப்பு;* **மிறை** - *தண்டனை;—(9) குராமலரின் அரும்பு பாம்பின் பல்போலக் கூரியதாய் வளைந்து உட்டுளையுடையதாய் மெல்லிதாய் வெள்ளிதாய் உள்ள தன்மை குறித்தது; மெய்யும் உருவும்பற்றி வந்த வுவமம்; ''தூம்புடை வாலெயிறு'' (முருகு);* **குரவம்பாவை** - *உருவகத்தாற் குரா மலருக்கு வழங்கும் பெயர். குராமலர் விரிந்தபோது ஆடும் பாவைபோன்று காட்டும். ''வைக லாயிரம் பாவையை வளர்ப்போய்...குரவே'' (திருவாரூர் - மும்மணிக் கோவை - 16);—(10)* **செவ்வழி** - *பண்; ''சிவந்த வண்டு வேறாய வுருவாகிச் செவ்வழிநற் பண்பாடு மிழலை யாமே'' (தேவா);* **அருந்தண்** *- அரிய (தட்பம்) தண்ணளியுடையவன்; அந்தணன் என்பது போல;—(11)* **கோடல்** - *வெண் காந்தள்;* **கூம்புதல்** - *குவிதல்.* **குறிப்பு** - *இப்பதிகப் பாட்டுக்கள் குற்றாலவள நகரின் இயற்கை வளத்தின் அழகை அருமைபடத் தன்மையணியில் வைத்துக் காட்டுவன. இப்பதிகம் குற்றால* **நகரைப்** *பற்றியது. நகரின் புறத்திருந்து அருளப் பட்டது போலும்; ''நன்னகர் போலும்'' (பதிகம்). திருமுதுகுன்றம் - திருவிடை மருதூர் முதலிய பதிகளின் பதிகங்களும், அவற்றைப் பற்றி ஆசிரியர் எடுத்துக் காட்டுமாறும் (2079=2311) காண்க.*

குறும்பலா (குற்றாலம்)

திருச்சிற்றம்பலம் பண் - காந்தாரம்

திருந்த மதிசூடித் தெண்ணீர் சடைக்கரந்து தேவி பாகம்
பொருந்திப் பொருந்தாத வேடத்தாற் காடுறைதல் புரிந்த செல்வர்
இருந்த விடம்வினவி லேலங் கமழ்சோலை யினவண் டியாழ்செய்
குருந்த மணநாறுங் குன்றிடஞ்சூழ் தண்சாரற் குறும்ப லாவே. (1)

கொம்பார்பூஞ் சோலைக் குறும்பலா மேவிய கொல்லேற் றண்ணல்
நம்பா னடிபரவு நான்மறையான் ஞானசம் பந்தன் சொன்ன
இன்பாய பாட லிவைபத்தும் வல்லார் விரும்பிக் கேட்பார்
தம்பால தீவினைகள் போயகலு நல்வினைக ளளரா வன்றே. (11)


திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:— *இறைவரது இடம் குறும்பலாவே; இப்பதிகம் ''குறும்பலா'' மரம் உள்ள கோயிலைப் பற்றியது. ''**இடம்** போலும்'' பதிகம்.*


பதிகப் பாட்டுக் குறிப்பு:—*(1)* பொருந்தாத - *தேவிபாகத்தோடு பொருந்தாத;* **இன வண்டு** - *ஆண் பெண் வண்டுகள்; இனமாய் ஒத்துப்பாடும் என்றலுமாம்;* **யாழ் செய்தல்** - *யாழ் இசைபோலப் பாடுதல்;—(2)* **நாட்பலவும் சேர்மதியம்** - *கயநோய் முதிர்ந்து இறக்கும் நிலை வரும்வரை உள்ள நாட்கள் பலவும் கூடிய பருவத்துச் சந்திரன்;* **ஆட்பலவும்** - *ஆளாகக்கொள்ளும் பருவங்களும், அவ்வவர் பக்குவங்களும் வெவ்வேறாதல் குறிப்பு; ''***ஆட்பா**

லவர்க்கருளும் வண்ணமும்......அளவில்லை'' (பாசுரம்); **மந்தி** - பெண்குரங்கு; **கடுவன்** - ஆண்குரங்கு; மந்தி பலாக்கனியைத் தேர்ந்து போழ்ந்து சுளைகளை எடுத்துச் சுவைத்துக் கண்டு நல்லனவற்றைக் கடுவனுக்கு உண்ணத் தர அதனைக் கடுவன் உண்டு களித்திருக்கும் என இல்லறம் பற்றிய வாழ்க்கைக் குறிப்புப்படக் கூறிய சுவையும் தன்மையணிச் சுவையும் காண்க. ''மந்தி கடுவனுக் குணப்பழ நாடி மலைப்புறம்'' (தேவா); **குறும்பலா** என்ற தலமரத்தாற் போந்த சிறப்பும் உடன் கூறியபடி; இக்காட்சி இன்றும் காணவுள்ளது;—**(4) கண் திறக்க** - கண்போல மலர;—**(5) தலை** - தலையின் கண்; தலைநாண் மதியம் - பிறை - என்று கூட்டி யுரைத்தலுமாம்; **கதிர் விரிய** - வளர்ந்து வர; **அசும்பு** - ஊற்று;—**(6) கூற்று ஏர் சிதையக் கடிந்தார்** - மாள உதைப்பினும் பின் உயிர் கொடுத்தலின் ஏர் சிதையக் கடிந்தார் என்றார்; **ஏர் சிதை**தலாவது முன் செலுத்திய ''மடியா ஆணை''யாகிய வென்றி குறைதல்; **தேன்** - தேன்வண்டுகள்; வண்டுகள் இசை முரன்றுபாட அதனைக் கேட்ட குயில்கள் தாமும் அவ்விசை பயில்கின்றன. பாடல் வல்லானொருவன் பாடக்கேட்ட மற்றோர் இசைவல்லான் அதனாற் றூண்டப்பட்டுத் தானும் பாடுதலை மேற்கொள்ளுதல் போன்ற இயல்புக் குறிப்பு; **கேளா** - கேட்டு;—**(7) தொத்த** - கொத்தாகிய; **பிலயம்** - நீர்ப்பெருக்கு - (பிரளயம் - என்றது பிலயம் என மருவியது என்பர்). **மண் முழவம் ஓங்கி** - மண்ணிற் புடைத்தலால் முழவம் போல மிக்குச் சத்தித்து;—**(8) சாந்தமென நீறு அணிந்த** - ''சாந்தமுந் திருநீறு'' (திருவிசைப் - சாட்டிய - 2); **சைவர்** - சிவன்; **மத்தகத்தில் வேங்கைப்பூங் கொத்தை ஏந்தி வணங்குதல்** - கையில் மலர்கொண்டு வணங்கும் குறிப்பு; **வேங்கை** - இறை வழிபாட்டுக்குரிய மலர்களுள் ஒன்று; ''கொல்லை யிளவேங்கைக் கொத்திறுத்து... களிறேறு'' (ஈங் - எழுபது - 34);—**(9) குரவம் முறுவல் செய்யும்** - குராமலர் பூத்தல் பாவையர் புன்முறுவல் செய்தல்போல இருப்பது எனத் தற்குறிப்பேற்ற அணி; ''தளவு கண்டெதிர் சிரிப்பன தமக்குமுண் டென்று'' (1094); **மல்லிகையும் சண்பகமும் மலர்ந்து** - சண்பக மரத்தில் மல்லிகை படர இரண்டும் ஒருங்கே பூத்து; ''குருந்த மேறிக் கொடிவிடு மாதவி'' (தேவா);—**(10) முன் - பின்** - காலம் குறித்தன; **கூறுண்டு ஏறுதல்** - பல படப் பிதற்றி மீக்கூர்ந்து ஆரவாரித்தல்; **காடி** - புளித்த கஞ்சி; **தொடுதல்** - உண்ணுதல்; **நீடுயர்...செய்ய** - ''மந்தி, கானமுது வேயின் கண்ணேறித்-தானங், கிருந்துயரக் கைநீட்டும்'' (ஈங் - எழு - 68); **கைமறித்தல்** - கைகொட்டி மகிழ்தல்.


தலவிசேடம்:— திருக்குற்றாலம் - பாண்டி நாட்டுப் பாடல்பெற்ற பதிகளுள் பதின்மூன்றாவது தலம்; இங்குக் **கூத்தர் கோயில்** என்றது அழகிய பழங்கோயில்; இது தேவார திருவாசகப் பாடல்பெற்ற கோயில். குறும்பலா என்ற கோயில் அருவியினை அடுத்து வடகரையில் உள்ளது. அங்கு உள்ள தலமரம் குறும்பலாவாதலின் இக்கோயில் இப்பெயர் பெற்றது. பலாவின் பெயர் அஃது உள்ள ஆலயத்துக்கு வந்தது. குறும்பலா என்பது பலாவின் ஒருவகை. கூத்தர் கோயில் குறும்பலாவின் வடக்கில் நகரத்தினுள் சித்திர சபைக்குப் போகும் வழியில் உள்ளது; ''குற்றாலத் தமர்ந்துறையுங் **கூத்தா**வுன் குரைகழற்கே'' (திருவா-திருப்புலம்பல்) ''உயிர்கொண்டு போம் பொழுது, குற்றா லத்துறை **கூத்த**னல் லானமக் குற்றாரா ருளரோ?'' (திருவங்கமாலை); ''குற்றாலத் தமர்ந்துறையுங் **கூத்தன்** கண்டாய்'' (தாண்-கோடிகா - 3) முதலிய திருவாக்குக்கள் இத்திருக்கோயிலைப் பற்றியன; ஐம்பெருமன்றங்களுள் சித்திர சபை இதனைச் சேர்ந்தது; இக்கோயில் பழுதுபட்டுக் கவனிப்பாரின்றி இருத்தலும், குற்றாலம் செல்வோரும், அன்பர்கள் பலரும் இதனை யறியாமலே



குறும்பலா வீச்சுரர் திருக்கோயில் (குற்றாலம்) பாட்டு :- 2784



குழகர் திருக்கோயில் - குற்றாலம் பாட்டு :- 2784



நெல்லையப்பர் திருக்கோயில்
(திருநெல்வேலி) பாட்டு :- 2785

2785. புண்ணியனூர் **நெல்வேலி** பணிந்து **போற்றிப்**
புரிசடையார் **திருப்பதிகள் பிறவுஞ்** சென்று
நண்ணியினி தமர்ந்தங்கு நயந்து **பாடி,**
நற்றொண்ட ருடனூளும் போற்றிச் செல்வார்,
விண்ணவரைச் செற்றுகந்தா **னிலங்கை செற்ற**
மிக்கபெரும் பாதகத்தை நீக்க வேண்டித்
திண்ணியபொற் சிலைத்தடக்கை **யிராமன் செய்த**
திருவிரா மேச்சுரத்தைச் சென்று சேர்ந்தார். 887

---

*யிருத்தலும் வருந்தத் தக்கது. இப்பழந்திருக்கோயிலை இயன்ற அளவு திருப்பணி செய்து புதுக்கி அதன் பழமையை வெளிப்படுத்திப் பலரும் வழிபடும்படி வைப்பது பெரும் புண்ணியமாகும்; குறும்பலாக் கோயில் திருமுற்றம் என்னும் பெயருடைய வைணவத் தலமாயிருந்தது; அவ்வைணவர்கள் தம்மை அவ்வூரினுள் அணுகவும் ஒட்டாது தடுத்துச் சிவநிந்தையும் சிவனடியார் நிந்தையும் செய்து வலிசெய்தமையால், அகத்திய முனிவர் அவர்களது அகந்தையை அழிக்கும் பொருட்டு வைணவ அடியார் வேடத்துடன் சென்று கோயிலினுள் விஷ்ணுமூர்த்தி வடிவின் சிரத்தின்மேற் கைவைத்துச் சிவலிங்க வடிவாக்கினூர் என்பதைக் கந்த புராணம் திருக்குற்றாலப் படலத்துக் காண்க. அதுமுதல் அக்கோயில் சிவாலய மாகியது என்ப. (1) **கூத்தர் கோயில்** - சுவாமி - **கூத்தர்**; அம்மை - **சிவகாமியம்மை**; சபை - **சித்திர சபை**; தீர்த்தம் - **சித்திரா நதி**; பதிகம் - 2; **குறும்பலா** - சுவாமி - **குறும்பலா நாதர்**; அம்மை - **குழல்வாய் மொழியம்மை**; மரம்-**குறும்பலா**; பதிகம் - 1.*

இத்தலம் தென்காசிச் சந்திப்பு நிலையத்தினின்றும் மேற்கே செவ்விய கற்சாலை வழி மூன்று நாழிகையளவில் அடையத்தக்கது; வண்டி வசதிகளும் உணவு-உறையுள் வசதிகளும் உண்டு. இந்நாள் நாகரிக மக்கள் வேனிலை விளையாட்டாய் உலக இன்பங்கள் பற்றி வீணே கழிக்கும் வேனில் விடுமுறைக் கொண்டாட்ட இடமாகப் பெரும்பாலும் இதனை அறிந்து கொண்டாடுவர்.

2785. (இ-ள்) *புண்ணியனூர்...போற்றி - புண்ணியராகிய சிவபெருமானது திருநெல்வேலியினை வணங்கித் துதித்து; புரிசடையார்...பாடி-முறுக்கிய சடையினையுடைய இறையவருடைய திருப்பதிகள் பலவற்றையும் சென்று பொருந்தி, விரும்பி எழுந்தருளி அங்கங்கும் விரும்பிப் பாடி; நற்றொண்டருடன்... செல்வார் - நல்ல திருத் தொண்டர்களுடனே நாளும் துதித்துச் செல்வாராகிய பிள்ளையார்; விண்ணவரைச்...சேர்ந்தார் - தேவர்களை அழித்து மகிழ்ந்தானுகிய இராவணனது, இலங்கையினை அழித்த மிகுதியாகிய பெரும் பாதகத்தினைப் போக்கிக்கொள்ளும் பொருட்டு வலிய அழகிய வில்லை ஏந்திய பெரிய கைகளையுடைய இராமன் தாபித்த திருவிராமேச்சுரத்தைச் சென்று சேர்ந்தருளினூர்.*

(வி- ரை) புண்ணியனூர் *- புண்ணியங்களுக்கெல்லாம் இலக்காயுள்ளவர்; சிவ பெருமான்; ''புண்ணியா வுன்னடிக்கே'' (தேவா); அவனடியார்களும் சிவபுண்ணிய மேலீட்டினூல் சிவத்தன்மை பெறுதலால்* **புண்ணியர்** *எனப்பெறுவர். ''புண்ணியப் பொருளாயுள்ள பொருவில்சீ ருருவி னூனை'' (666) என்று கண்ணப்பரையும்; ''புண்ணிக்கன் றனையவர்தாம்'' (1960) என்று ஆளுடைய பிள்ளையாரையும் கூறியதனையும், ''புண்ணியர்*

போற்றிசைப்ப'' (திருவிசை) என்றமையும், பிறவும் பார்க்க.

இலங்கை செற்ற மிக்க பெரும் பாதகம் - *''**பெரும்பாதகம்**'' - 1673-ல் உரைத்தவை பார்க்க. இராவணனை வதைத்த ஒன்றுன் வந்ததன்றி, இலங்கை முழுதுமழித்தமையால் மிக்க பெரும்பாதக மாயிற்று என்பது.*

நீக்கவேண்டி - இராமன் செய்த திருவிராமேச்சுரம் - நீக்க - *நீக்கிக்கொள்ள இறைவர் நீக்குதற்காக வேண்டி என்றலுமாம்.*

வேண்டி - *வேண்டிக்கொண்டு; இராமனுல் தாபிக்கப் பெற்ற கோயிலாதலின் இராமேச்சுரம் எனப்படும் என்பார் இராமன் செய்த இராமேச்சுரம் என்று சொற்பொருள் விரித்தோதினுர். ஈண்டும், முன்னரும் (1673) இத்தன்மையாற் கூறியது பிள்ளையாரது இரண்டு பதிகங்களினும், அரசுகளது திருநேரிசையினும் இச்செய்தி பற்றியே அறிவுறுத்தப் பட்டமையை வற்புறுத்தி எடுத்துக்காட்டும் பொருட்டு.*

திண்ணிய பொற்சிலை - *சிவனது வில்லாதலின் திண்ணிய என்றுர்.* **பொன்** - *அழகு;* **பொற் சிலை** - *சிவனேந்திய மேரு போன்றதென்ற குறிப்புடனும் நின்றது.* *887*

திருநெல்வேலி

திருச்சிற்றம்பலம் பண் - சாதாரி

மருந்தவை மந்திர மறுமைநன் னெறியவை மற்றுமெல்லாம்
அருந்துயர் கெடுமவர் நாமமே சிந்தைசெய் நன்னெஞ்சமே
பொருந்துதண் புறவினிற் கொன்றைபொன் சொரிதரத் துன்றுபைம்பூஞ்
செருந்திசெம் பொன்மலர் திருநெல்வே லியுறை செல்வர்தாமே. (1)

பெருந்தண்மா மலர்மிசை யயனவ னனையவர் பேணுகல்வித்
திருந்துமா மறையவர் திருநெல்வே லியுறை செல்வர்தம்மைப்
பொருந்துநீர்த் தடமல்கு புகலியுண் ஞானசம் பந்தன்சொன்ன
அருந்தமிழ் மாலைகள் பாடியா டக்கெடு மருவினையே. (11)

பதிகக் குறிப்பு:— *நன்னெஞ்சமே! திருநெல்வேலியுறை செல்வர் தாமேயாகிய அவருடைய நாமங்களே சிந்தை செய்; அவையே மருந்தும் மறுமை நன்னெறியு மாவன; அவர் என்றுமோ ரியல்பினர் என நினைவரியவர்; ஆடல் பேணி (பேணுபவர்) என்றிவை முதலாயின தன்மைகளையுடையவர்.*

பதிகப் பாட்டுக் குறிப்பு:— (1)அவை - *முன்னறிசுட்டு; அவன் என்று மறைகளாற் சுட்டப்பட்ட இறைவருடைய நாமங்களாகிய அவை. அவையே மருந்தும் மறுமை நன்னெறியுமாவன; அவற்றைச் சிந்தை செய்தால் அருந்துயர் கெடும்; ''மருந்து வேண்டில் லிவை மந்திரங்கள்ளிவை......வேடங்களே'' (தேவா);* **நாமம்** - *நாமங்கள்; பால்பகா அஃறிணை.* **பொன்மலர்** - *பொன்போல மலர்கின்ற; செருந்திப் பூவின் நிறம் குறித்தது. கொன்றை பொன் சொரியச் செருந்தி செம்பொன் மலர்கின்ற ஒன்றற்கொன்று ஏற்றமான கொடை தருவனபோல என்ற குறிப்பும் காண்க;* **செல்வர்**-*இறைவர் - அழிவுபடாத முத்திச்செல்வ முடையவர்.*

ஐசுவரியம் என்ப;—(2) **ஓர் இயல்பினர்** - இன்ன இயல்புடையவர்; **செடிச்சியர்** - இழிந்த பெண்கள்; புராண வரலாறன்றி, ஆணவப் பிணிப்புடைய ஆன்மாக்களைக் குறிப்பிற் கூறியதுமாம்; **கேதகை** - தாழை;—(3) **சுலவுதல்** - சூழ வைத்தல்; **கிறி** - மாயம்;—(4) **பேணி** - பெயர்; பேணுபவர்; இகரம் உடைப்பொருள் விகுதி; விடையேறி, பிறைசூடி என்பனபோல்; **கொடிகள் மதியம் தீண்டி** - என்பது மாடங்களின் உயர்ச்சி குறித்தது;—(5) **ஆனில் நல் ஐந்து** - பஞ்சகவ்வியம் என்பர்;—(6) **வெடிதரு தலையினர்** - படுதலையினை ஏந்தியவர்; **வெடித்தல்** - சுடலையில் தீயால் பிளத்தல்; **வேனல்** - சினமுடைய;—(7) **வேள்வியைச் சாடிய சதுரனார்** - தக்கன் வேள்வியைச் சங்கரித்தவர் வீரபத்திரக் கடவுள்; அவர் செயல் அவரை அளித்து ஏவிய சிவபெருமானது வீரங்களுள் ஒன்றாகக் கூறுதல் மரபு; **சதுரம்** - வல்லமை; **கதிர்கொள்...புரிவினர்** - **கதிர்** - ஞானஒளி; **செம்மை** - சிவநெறி; **புகுதல்** - உண்ணின்று அருளுதலும், **புரிவு**-இடைவிடாது அருளுதலும் குறித்தன; **திக்கெலாம் புகழுறும் திருநெல்வேலி** - நகரச்சிறப்பும் பெருமையும் குறித்தது;—(8) **சிந்துபூந்துறை** - நதித்துறைச் சிறப்புப்பெயர்; இன்றும் வழங்குவது;—(9) **சங்கம்** - கூட்டம்; **திங்கள் நாள் விழா** - மாதந்தோறு நிகழும் பருவ விழாக்கள்; இவற்றின் சிறப்புகள் இன்றும் நிகழ்வன;—(10) **கவர்** - பிளப்பு; **கவருறு கொடி** - கொடிகள் இருபிளவாய் அமைந்த உரு; **திவர்** - ஒளி;—(11) **மாமறையவர்** - இந்நகரின் மறையவரின் சிறப்பு. 9-வது பாட்டும் பார்க்க. அந்நாளின் சிறப்பு; **நீர்த்தடம்** - நீர்ச்சிறப்பு; இன்றும் காணவுள்ளது.

தலவிசேடம் :— திருநெல்வேலி - பாண்டி நாட்டில் தேவாரப் பாடல்பெற்ற பதிகளுள் பதினான்காவது தலம். வேதசருமர் என்ற அன்பர் இறைவரது திருவமுதுக்காகக் கட்டியிருந்த நெல்லை வெள்ளங் கொள்ளாதபடி வேலியிட்டபடி இறைவர் காத்தமையால் இப்பெயர் பெற்றது; 'நெல்லுக்கு வேலியிட்ட நெல்லையப்பர்' என்று வழங்குவர். மூங்கிலடியில் இறைவர் முளைத்து வெளிப்பட்ட காரணத்தால் இது வேணுவனம் எனவும் பெயர்பெறும்; திருமால், பிரமதேவர், அகத்திய முனிவர் வழிபட்ட தலம்; தாருக வனத்துக்கு இறைவர் பிச்சைக்குச்சென்றருளிய வரலாறு இங்கு நிகழ்ந்ததென்பர். பதிகம் 2-வது பாட்டில் இக்குறிப்புப் போற்றப்படுகின்றது காண்க. பிட்சாடணர் திருவுருவம் முதற்சுற்றில் தாபித்து வழிபடப்பெறுகின்றது; ஐம்பெருஞ் சபைகளுள் இது தாமிரசபை; சுவாமி - நெல்லையப்பர்-வேணுநாதர்; இரண்டும் தனிச் சந்நிதிகள்; நெல்லையப்பர் கர்ப்பக்கிருகத்தினை அடுத்து அரங்கநாதர் வழிபட்டுப் பள்ளிகொண்டெழுந்தருளி யுள்ளார். அம்மையார் - காந்திமதியம்மை; தீர்த்தம் - தாமிரவருணி; துறை - சிந்துபூந்துறை; சிந்திய எலும்புகள் பூக்களாயின என்பது வரலாறு; சுவாமியம்மை யாலயங்கள் மிகப் பெரியனவாய் அழகிய அமைப்புடைய தனிக் கோயில்கள்; பதிகம்-1.

திருநெல்வேலி சந்திப்பு நிலையத்தினின்றும் மேற்கே கற்சாலைவழி இக்கோயில் 1.1/2 நாழிகையளவில் அடையத்தக்கது; நகரத்தினிடையே இருப்புப்பாதை செல்கின்றது. கோயிலுக்கு அணிமையில் மேல்புறம் திருநெல்வேலி டவுன் நிலையம் 1/2 நாழிகையளவில் உள்ளது.

திருப்பதிகள் பிறவும் - இவை திருப்புடைமருதூர் (திருப்பிடவூர்), திரு அகத்தீச்சுரம், திருச்சுழியல், திருவுத்ரகோசமங்கை முதலாயின என்பது கருதப்படும்.

2786. **செங்கண்மால் வழிபட்ட கோயி** னண்ணித்
திருமுன்பு தாழ்ந்தெழுந்த தென்ன னோடும்
மங்கையர்க்கு நாயகியார் தாமு மெய்ம்மை
மந்திரியா ருஞ்சூழ மணிநீள் வாயில்
பொங்கியெழும் விருப்பினு லுடனே புக்குப்
புடைவலங்கொண் டுள்ளணைவார் போற்றி செய்து
பங்கயச்செங் கைகுவித்துப் பணிந்து நின்று
பாடினார் **மன்னவனும் பரவி யேத்த.** 888

2786. (இ-ள்) *செங்கண்...நண்ணி* - சிவந்த கண்களையுடைய திருமால் (இராமாவதாரத்தில்) தாபித்து வழிபட்ட திருக்கோயிலைச் சேர்ந்து; *திருமுன்பு...அணைவார்* - அதன் திருமுன்பு வீழ்ந்து எழுந்து அரசனோடும் மங்கையர்க்கரசியாரும் உண்மை ஒழுக்கத்துள் நிற்கும் மந்திரியாராகிய குலச்சிறையாரும் தம்மைப் பின்பற்றிச் சூழ்ந்து வர; உடன் அவர்களுடனே அழகிய நீண்ட திருவாயிலினுள் மேன்மேல் எழும் விருப்பத்தினாலே புகுந்து உள்பக்கத்தில் வலமாக வந்து உள்ளே அணைவாராகி; *மன்னவனும் பரவி ஏத்த* - அரசனும் துதித்துப் போற்ற; *போற்றி செய்து...பாடினார்* - துதி செய்து தாமரைபோன்ற கைகளைக் கூப்பி வணங்கி நின்று பாடியருளினார்.

(வி-ரை) மால் - திருமால் இராமனாய் வந்த அவதாரங் குறித்தது.

வழிபட்ட - "மதியினால் **மால்**செய் கோயில்" (தேவா - அரசுகள்); **வழிபடுதல்**- தாபித்துப் பூசித்தல் என்ற பொருளில் வந்தது. "இராமன் செய்த" என முன் பாட்டிற் கூறியது காண்க.

முன்பு - திருக்கோயிலின் திருமுன்னர்.

தென்னனோடும் - சிறப்புப்பற்றி வேறுபிரித்துக் கூறினார்.

மெய்ம்மை - உண்மை ஒழுக்க நெறி.

உடனே - அரசன் - தேவியார் - மந்திரியார் இவர்களுடனே.

மன்னவனும் பரவி ஏத்த - இராமனது பெரும்பாதகத்தைத் தீர்த்ததுபோல, மன்னவன் தான் செய்த பெரும்பாதகமாகிய அமண் சார்புபற்றிச் செய்த சிவாபராதங்களினின்றும் காக்கவேண்டுமென்ற எண்ணத்தால் பரவி ஏத்த என்ற குறிப்புப்பெற ஈண்டு மன்னவன் பரவியதைத் தனி எடுத்து விதந்து கூறினார்.

பணிந்து போற்ற—என்பதும் பாடம். 888

I திருவிராமேச்சுரம்

திருச்சிற்றம்பலம் பண் - காந்தார பஞ்சமம்-3ம் திருமுறை

அலைவளர் தண்மதி யோடய லேயடக் கியுமை
முலைவளர் பாக முயங்கவல் லமுதல் வன்முனி

இலேவளர் தாழைகள் விம்முகா னலிரா மேச்சுரம்
தலேவளர் கோலநன் மாலேயன் ருனிருந் தாட்சியே. (1)

பகலவன் மீதியங் காமைக்காத் தபதி யோன்றனே
இகலழி வித்தவ னேத்துகோ யிலிரா மேச்சுரம்
புகலியுண் ஞானசம் பந்தன்சொன் னதமிழ் புந்தியால்
அகலிட மெங்குநின் றேத்தவல் லார்க்கில்லே யல்லலே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:--இராவணனைச் செற்று இலங்கையை அழித்த பழி போக இராமன் தாபித்து வழிபட்ட கோயில் திருவிராமேச்சுரத்தில் இறைவர் விளங்க ஆட்சி புரிந்து ஞானமு நன்பொருளுமாகி நின்று அருள் புரிகின்ருர்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:--*(1)* முனி - உமை முலேவளர் பாக முயங்கவல்ல முதல்வனுகியும் முனிவனுவான் என்க. **இலேவளர்** - செறிந்து நீண்ட இலேகள் நிறைந்த; **தாழைகள் விம்மு** - தாழை - நெய்தனிலக் கருப்பொருள்; இங்கு மிக்கிருத்தல் குறிப்பு. **தலேவளர் - மாலே** - ''தலேக்குத் தலேமாலே யணிந்ததென்னே'' (நம்பி); ''தலேமாலே தலேக்கணிந்து'' (அரசு); **தலே** - வீந்தாரது தலேகள்; **வளர்** - தமது தலேக்கு அத்தலேகளே மாலேயாக என இரட்டுற மொழிந்துகொள்ள **வளர்** என்ருர்; **ஆட்சி** - அரசு புரியுமிடம்; இராம**நாதர்** என்ற பெயர்க்குறிப்பு;—***(2)* தேவி** - இராமன் மனேவியாகிய சீதை; **தசமாமுகன்** - இராவணன்; **பொன்றுவித்த பழி - மிக்க பெரும்பாதகம்''** *(2785)* என்றவிடத் துரைத்தவை பார்க்க; **ஏ இயலும் சிலே அண்ணல்** - இராமன். **ஏ** - அம்பு; இங்கு அகத்தியர் தந்த பாசுபதத்தை குறித்தது; **சிலே** - வில்;—***(3)* வைதேகி** - சீதை; **மாயை** - மாய மானேக் காட்டி வஞ்சித்துக் கவர்ந்த வஞ்சனே. **கான்** - தசரதன் ஏவியபடி இராமன் வசித்திருந்த காடு; **காரரக்கன்** - இராவணன்; **ஈனமிலாப் புகழ் அண்ணல்** - இராமன். இராமனது நற்குணத்தின் சிறப்புக் கூறியபடி; இராவண வதமானது பழியைத் தரினும் வேறு இழிவற்ற செயலும் புகழுற்றதுமாம் என்ற குறிப்பும் காண்க; **ஞானம்** - சரியையாதி நன்னெறி நான்கனுள் முத்திக்கேதுவாய் இறுதியில் உள்ளது. ''நன்னெறியாகிய ஞானத்தைக் காட்டியல்லது மோட்சத்தைக் கொடாவாகலான்'' (சிவஞானபோதம்); **நன்பொருளும்** என உம்மை விரிக்க. **நன் பொருள்** - வீடுபேறு; **நன்மை** - நலம் தரும் இடம்;—-***(4)* உரை**-மேலோர் சொல்; வேத நீதியாகிய உரை என்றலும் ஆம். **உரை...வேட்கையான்**- இராவண னுடைய; ஆறனுருபு தொக்கது; **வேட்கையான் - தோள்** என்று கூட்டுக; **வில்லி** - வில்லேயுடையவன்; இராமன். **விரை மருவும் - இராமேச்சுரம்** என்க. விரையாவது சிவ மணம்;—***(5)* ஊறு** - உடைதல்; **உடை** - உடைய; ஈறுகுறைந்த பெயரெச்சம். பட்ட; **வீறு** - பழிப்பு; ஆணவச் செருக்கு; பேறு - **உடையான்** - இடமாகப்பெற்று விளங்குபவன். பேறு - வீடுபேறு என்றலுமாம்;—***(6)* அனே - வழி** என்று கூட்டுக; **இணேயிலி** - சிவபெருமான்; ''தனக்குவமை யில்லாதான்'' (குறள்); ''ஒன்றென்ப தொன்றேகாண் ஒன்றே பதி'' (போதம்); **என்றும்** - இராமன் கோயில் செய்யு முன்பும், செய்த அன்றும், பின்னர் இன்றும் என்க. ''பண்டு மின்று மென்றும்'' திருவிசைப்பா (திருப்பல்லாண்டு); **துணேயிலி**-தமக்குத் துணேயாக வேருருவரையும் இல்லாதவர்; முழுமுதல்வர்; பேராற்றல் முதலிய எண்குணங்களுடைமை குறிப்பு; —***(7)* சனி...திங்கள்** - கோள்கள் ஒன்பதும்; **சனி...செய்துகந்தான்** - இராவணன்

கோள்களைத் தன திச்சைவழி நிற்கப் பணித்து ஏவல்கொண்ட வரலாற்றுக்குறிப்பு; **முனிவது செய்து** - சினந்து; **தீயன** - தீயனவாக; **அண்ணல்** - இராமன்;—*(8-9)* **பெரு...ஏந்தினன்** - **பெருவரை** - கயிலைத் திருமலை; **அன்று எடுத்தேந்தினன்** - இராவணன்; **சாய்** - புகழ்; அதற்கு முன் வரத்தாற் பெற்ற பெருவலியினனாகித் திக்கெலாம் வென்று போந்த புகழ்; **கெட அருவரையாலடர்த்து**- அப்புகழ் கெடும்படி அந்த மலையின் கீழேபட்டு நசுங்கி அழும்படி வருத்தி; **அன்று நல்கி** - அடர்த்த அப்போதே அவன் பாடல்கேட் டிரங்கி வாளும் கொடுத்து; **ஒருவனுமே பலவாகி நின்றது-ஆகுதல்** - தனது சத்தியாகிய மாயையை விரித்து அதனால் உலகம் படைத்து அச் சத்தியை மீளத் தனக்குள் ஒடுக்குதல்; உலகப்பொருள் எல்லாவற்றினும் அவையேயாகிக் கலந்து என்றலுமாம். இதற்கு இறைவனே உயிர்களும் உலகமுமாகிறான் என்று புறச்சமயிகள் கொள்ளும் பொருள் அடாது; ''நிலனீர்...எண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்'' உல கேழெனத் திசை பத்தெனத் தானொருவனுமே, பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ'' *(15)* (திருவா);—*(10)* **மெய்யில்** - உண்மையில்லாத; உடம்பில் என்றலுமாம். **பற்று விட்டு** - ஏத்தி என்க;—*(11)* **பகலவன்** - ஞாயிறு; **பகலவன்...பதியோன்** - சூரியன் கடும்பகலாய்த் தன் நகரத்தின்மீது செல்லாது இராவணன் ஏவல்கொண்ட வரலாற்றுக் குறிப்பு. **பதியோனையும்** என்று சிறப்பும்மை தொக்கது. **இகல்** - போரில்; **புந்தியால்......ஏத்த** - நினைந்து எங்கேனுமிருந்து துதிப்பினும் இராமேச்சுரம் சென்று வழிபட்ட பயன்றரும் என்பது. **அல்லல்** - பழிபாவம்; பிறவியுமாம். இப்பதிகத்துள் இராமன் கதையின் பல பகுதிகளும் பேசப்பட்டு அச்சரிதத்தின் உண்மையினை உறுதிப்படுத்துகின்றன; அரசுகள் பதிகமும் காண்க.

தலவிசேடம்:—திருவிராமேச்சுரம் - பாண்டிநாட்டுப் பாடல்பெற்ற தலங்களுள் எட்டாவது தலம். இராவணனைக் கொன்று இலங்கையினையும் அரக்கர்களையும் அழித்த மிக்க பெரும்பாதகம் நீங்கும்பொருட்டு இராமனாற் றாபித்து வழிபடப் பெற்றமையால் இப்பெயர் பெற்றது; இராம சரித்திரப் பகுதிகளும் அப்பழி நீங்க இராமன் இங்குச் சிவலிங்கந்தாபித்து வழிபட்டமையும் தேவாரப் பதிகங்களுட் காணப்பெறும். தாபித்தற்காகச் சிவலிங்கம் கொண்டுவரக் காசிக்குச் சென்ற அனுமன் குறித்த நேரத்தினுள் வரத் தாமதித்தமையால் சீதையம்மை மணலாற் குவித்த இலிங்கத்தை இராமன் தாபித்துப் பூசித்தனன். இவரே இராமநாதர் என வழங்கப்படும் மூர்த்தியாவர். அதன்பின் அனுமன் கொணர்ந்த இலிங்கத்தை மூல மூர்த்திக்கு வடபுறம் தாபித்து விசுவலிங்கம் எனப் பெயரிட்டு அனுமன் வருந்தாமை அவருக்கு முதற்பூசை நிகழும்படி நியமம் இராமனாற் செய்யப்பட்டது என்ப. இப்பதி சோதிலிங்கத்தலம் 12-ல் ஒன்று; விட்டுணுமூர்த்தி தம்மைப் பிரிந்து, குணநிதி என்னும் பெயருடைய பாண்டியனிடம் வளர்ந்த இலக்குமியை மறையவராய் வந்து மணந்து இங்குச் சேதுமாதவர் என்ற பெயருடன் எழுந்தருளி யுள்ளார். அவரை வழிபடாதார் இராமலிங்கரது வழிபாட்டின் பயன் பெறார் என்பது சேது புராணம்; இப்பதியில் உள்ள எண்ணிறந்த தீர்த்தங்களின் வரலாறும் பெருமையும் பற்றிச் சேது புராணம் பார்க்க; இராவண வதத்தின் பொருட்டு இராமன் அணை கட்டி இலங்கையை அடைந்த இடமாதலின் இது சேதுக்கரை என வழங்கப்படும்; **சேது** - செய்கரை; சேதுவில் இராமனது தனுவின் நுனியாற் கீறித் தீர்த்தங் காணப்பட்டமையால் இது ''தனுக்கோடி'' என்று வழங்கப்படும் (**தனு** - வில்); **சேது** - கடற்கரைத் தீர்த்தம். நகரின் வடபுறம் கந்த மாதன மலை உள்ளது. அதில் இராமனது பாதம் தீட்டப்பட்டு விளங்குகின்றது; ''ஆயன் றமர ரழியா வகைசெய்தா, யாயன் றமர ரழியாமை - யாயன், றிருத்தி னன் செங்கண் விடையூர்வான் மேனி, திருத்தினன் சேதுக்கரை'' *(48)* என்ற

2787. **சேதுவின்கட் செங்கண்மால்** பூசை செய்த
சிவபெருமான் றனைப்பாடிப் பணிந்து போந்து,
காதலுட னந்நகரி லினிது மேவிக்
கண்ணுதலான் றிருத்தொண்ட ராணுர்க் கெல்லாங்
கோதில்புகழ்ப் பாண்டிமா தேவி யார்மெய்க்
குலச்சிறையார் குறைவறுத்துப் போற்றிச் செல்ல
நாதர்தமை நாடோறும் வணங்கி யேத்தி
நளிர்வேலைக் கரையினயந் திருந்தா ரன்றே. 889

11-ம் திருமுறை - பரணர் அருளிய சிவபெருமான் றிருவந்தாதியும் காணத் தக்கது. இராமன் கதை மச்சம் - கூர்மம் முதலிய மகாபுராணங்களினும் பேசப்படும். சுவாமி - ***இராமநாதர்;*** *அம்மை -* ***மலைவளர் காதலி;*** *பிள்ளையாரது பழம்பஞ்சுரப் பதிகம்-3 பார்க்க; (பர்வதவர்த்தனி என்பது வடமொழி); தீர்த்தம் -* ***அக்கினி தீர்த்தம் - இராமதீர்த்தம் - இலட்சுமணதீர்த்தம் - தனுக்கோடி*** *முதலியனவாய் எண்ணிறந்தன; பதிகம்-3.*

இதற்கு இராமேச்சுவரம் என்ற இருப்புப்பாதை நிலையம், நகரின் உள்ளே அமைந்துள்ளது. நிலையத்தினின்றும் கடற்கரையில் 1 நாழிகையளவில் கோயில் உள்ளது.

2787. (இ-ள்) சேதுவின்கண்...போந்து - சேதுவினிடமாகச், சிவந்த கண்களையுடைய திருமால் பூசித்த சிவபெருமானைப் பாடி வணங்கிப் புறம்போந்து; காதலுடன்...மேவி - விருப்பத்துடனே அத்திருநகரின்கண் இனிதாக அமர்ந்தெழுந்தருளியிருந்து; கண்ணுதலான்... போற்றிச் செல்ல - நுதலிற்கண்ணுடைய சிவபெருமான் றிருத்தொண்ட ராணுர்களுக்கெல்லாம் குற்றமற்ற புகழினையுடைய பாண்டிமா தேவியாராகிய மங்கையர்க்கரசி யம்மையாரும் உண்மைநெறி நிற்கும் குலச்சிறை நாயனுரும் குறைவின்றி வேண்டுவன எல்லாம் அளித்துப் பாதுகாத்துத் துதித்துவர; நாதர்தமை...ஏத்தி - இராமநாதராகிய இறைவரை நாடோறும் வணங்கித் துதித்துக்கொண்டு; நளிர்...அன்றே - குளிர்ந்த கடற்கரை நகரின்கண் விருப்புடன் (பிள்ளையார்) அப்பொழுது எழுந்தருளியிருந்தனர்.

(வி-ரை) சேது - அணையினை உடைய காரணமாக இராமேச்சுரத்துக்கு வழங்கும் பெயர். **சேது**-சேதுக்கரை என்றலுமாம். ''செங்கண்மால் சிலைபிடித்துச் சேனையோடும் சேதுபந் தனஞ்செய்து சென்று புக்கு'' (தேவா).

காதலுடன்...அந்நகரில் இனிது மேவி, நளிர்வேலைக் கரையின் நயந்திருந்தார் என்றது - மால் பூசித்துப் பழிநீங்கிய பதியாதலால், மன்னவன் பொருட்டு அங்குச் சில நாள்கள் தங்கியருளினர் என்பதாம்; தொண்டர்க்கு எல்லாம் பாண்டிமா தேவி யார் - குலச்சிறையார் குறைவறுத்துப் போற்றிச் செல்ல என்ற குறிப்புமிது.

கோதில் புகழ் - என்பதுபற்றி முன் உரைக்கப்பட்டது; கடைப்பிடிக்க.

குறைவறுத்தல் - உலகியலில் வேண்டிய உணவு உறையுள் முதலியன எல்லாம்

குறைவின்றிப் பெறுவித்து இனிதிருக்கச் செய்தல். **பாண்டிமாதேவியார்** - மாதேவி யாராதலின் இல்லறநெறியில் மன்னனைச் சார்ந்தோர்க்குக் குறைவறுத்தல் அம்மையார் கடனாயிற்று; குலச்சிறையார் மந்திரியாராதலின் மன்னவன் பணி செய்தல் அவர் கடனாயிற்று.

திருத்தொண்டரானார்க் கெல்லாம் - என்றது இங்குக் குறைவறுத்துப் போற்றப் பட்டவர் சிவபெருமான் தொண்டர்கள் என்ற நிலை குறிக்கப்பட்டது. இஃதே பதிபுண்ணியமாயும், இங்குப் பிள்ளையாருடன் நின்ற தன்மைக்கு ஏற்றதாயும் உள்ளமையின் என்க. அரசன் கடமையாகிய ஏனைய உலகரைப் பாதுகாக்கும் பசுபுண்ணியம் வேறாதலின் இவ்வாறு **தொண்டரானார்க்கு** என்று பிரித்துக் கூறினார். **ஆனார்** - பிள்ளையாரது திருவருளால் அந்நாட்டிற் சைவம் பெருக நீறிட்டுத் தொண்டராயினாரும் அடங்க என்ற குறிப்பும் தருவது. ''பரமனடியா ரானார்க ளெல்லா மெய்தி யுண்கவென'' (1524) என்றவிடத்துரைத்தவை பார்க்க.

நளிர்வேலைக்கரை - கடற்காற்றுக் குளிர்வீசும் கரை.

நயந்திருந்தார் - மன்னவன்பொருட் டந்நகரின் விரும்பி எழுந்தருளிய தன்றியும், ஈழநாட்டுத் தலங்களைப்பாடி அந்நாட்டினரையும் வழிப்படுத்தி உய்யச்செய்யும் கருணை நோக்கமும் காரணமாம் என்பது மேல்வரும் பாட்டின் குறிப்பாதல் காண்க. ஈழநாடும் பாண்டிநாடு போலவே புறச்சமயிகளாகிய புத்தர் சார்பினால் அலைப்புண்டு வருந்தியமை திருவாதவூரடிகள் வரலாற்றினாலும் அந்நாட்டுச் சரிதங்களாலும் அறியக்கிடத்தல் கருதுக. 889

II திருவிராமேச்சுரம் (சேது)

திருச்சிற்றம்பலம் பண் - பழம்பஞ்சுரம்


திரிதரு மாமணி நாக மாடத் திளைத்தொரு தீயழல்வாய்
நரிகதிக் கவெரி யேந்தி யாடு நலமே தெரிந்துணர்வார்
எரிகதிர் முத்த மிலங்கு கான லிராமேச் சுரமேய
விரிகதிர் வெண்பிறை சூடு சென்னி விமலர் செயுஞ்செயலே. (1)

தேவியை வவ்விய தென்னி லங்கை யரையன் றிறல்வாட்டி
எவியல் வெஞ்சிலை யண்ண னண்ணு மிராமேச் சுரத்தாரை
நாவியன் ஞானசம் பந்த னல்ல மொழியா னவின்றேத்தும்
பாவியன் மாலைவல் லாரவர் தம்வினை யாயின பற்றறுமே. (11)

திருச்சிற்றம்பலம்


பதிகக் குறிப்பு:— இறைவர் எல்லியில் எரியேந்தியாடும் நலமே தெரிந்துணர்வார்கள், அஃது இராமேச்சுரமேயாரது அருட்செயல் என்று வழிபடுவர்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:— *(1)* **கதிக்க** - ஓசைசெய்ய; **ஆடும் நலமே** - உயிர்களது உடற்பிணி நீங்கும் அருட்கூத்தின் நன்மையினையே; **எரிகதிர் முத்தம் இலங்கு கானல்**-முத்துக்கள் ஒளிவீசிக் கரை சாரும் நெய்தலங் கானல்; திருமறைக் காட்டினின்றும் தொடரும் இக் கடற்கரையில் முத்துக் குளிக்கும் துறைகளுள்ளமை




பாட்டு :- 2785

திருஞான சம்பந்த நாயனார், திருநெல்வேலியில் தங்கிய திருமடம்.
(இன்று தொண்டர்கள் நாயனார் கோயில் என்று வழங்குகின்றது.)



திருக்கோணீச்சுரர் திருக்கோயில், பாட்டு :- 2788
திருக்கோணமலை, ஈழநாடு.



திருக்கேதீச்சுரம் திருக்கோயில், ஈழநாடு. பாட்டு :- 2788

2788. அந்நகரி லமர்ந்தங்க ணினிது மேவி
யாழிபுடை சூழ்ந்தொலிக்கு மீழந் தன்னின்
மன்னுதிருக் கோணமலை மகிழ்ந்து செங்கண்
மழவிடையார் தமைப்போற்றி வணங்கிப் பாடிச்
சென்னிமதி புனைமாட மாதோட் டத்திற்
றிருக்கேதீச் சரத்தண்ணல் செய்ய பாதம்
உன்னிமிகப் பணிந்தேத்தி யன்ப ரோடு
முலவாத கிழிபெற்று ருவகை யுற்றார். 890

குறிப்பு; 1529-ம் பாட்டும் ஆண்டுரைத்தவையும் பார்க்க. ''துறைக்கொண்ட செம் பவள மிருளகற்றுஞ் சோதித் தொன்மயிலை'' (திருத்தொண்டத்தொகை - 8) என்று தொண்டைநாட்டுக் கடற்கானலைத் தமிழ் நாவலர் பெருமான் காட்டியருளும் கருத்தும் இங்குவைத்துக் காண்க. **விரிகதிர்** - இனிக் கதிர்விரிய நின்ற பிறை;—**(2) தெறி** - பாட்டுடன் வீணை முதலியவற்றைத் தடவுதல்; **எறிகிளர்** - வீசி மேலெறிந்து எழும்;—**(3) மலைவளர் காதலி** - தலஅம்மை பெயர்; தாயுமானார் பாடலில் இப்பெயர் பற்றிய பகுதி காண்க; **மயக்கா** - உயிர்களைத் தமது மறைப்பாகிய திரோதானசத்தியு ளகப்படுத்தி; **இலைவளர்** - நீண்ட இலைகள் மிகவுமுடைய தாழையின் இயல்பு குறித்தது; முன்பதிகம் (1) பார்க்க; **தலைவளர் கோலநன் மாலை**- முன்பதிகம் (1) பார்க்க;—**(4) மாதனம்** - பெருந்தனங்கள்; **தேதெரி** - தேசுடைய - ஒளியுடைய - எரி; **தேது** - தேசு; **ஏதமிலார்** - ஏதங்களை நீக்கவேண்டுபவர். **இலார்**- இல்லையாக விரும்புவோர்; **போது** - மாலைப்பொழுது;—**(5) ஏலநறும் - ஏலம்** - மணத்தின் பொதுமை குறித்தது. **ஏல(ப்) - பாடும்** என்று கூட்டுக;—**(6)** (கணை) **பிணை** - பிணைத்த; தொடுத்த; **இணைபிணை - பிணை** - மான்; **இணை** - ஒத்த இரண்டு; **இணைமலர்** - பொருந்திய மலர்; **அணைபிணை** - சேரப்பிணித்த; கட்டிய;—**(7) நீர்** - கங்கை. **ஊரினர் துஞ்சிருள்** சங்காரகாலம்; ''நடு நல் யாமம்'' (திருவிசைப்பா);—**(8) சுண்ண வெண் ணீறுபூசி** - ''பொற்சுண்ணமாக வெண்ணீற்றினைப் பூசி. சாந்தமென நீறணிந்த'' (தேவா); **பொன் திகழ்** - பொன்போல விளங்கும்; பொன்னுடன் விளங்கும் என்றலுமாம்; **குன்று** - கயிலை;—**(9) கோவலன்** - திருமால்; **மேவலன்** - பொருந்த வல்லவன்; **சே** - இடபம்; **வல** - வல்லமை யுடைய;—**(10) தட்டை** - தட்டுடை; **பிரட்டு** - பொய்; **சீவரம்** - துவருடை; **இன்**- (சோலை) இனிய; **இன்** - யாழ் என்று கூட்டியுரைப்பினு மமையும்;—**(11) தேவி** - சீதை; **ஏ இயல் வெஞ்சிலை அண்ணல்** - இராமன். முன்பதிகம் (2) பார்க்க.

குறிப்பு:—இப்பதிக முழுதும் எல்லி எரியேந்திக் காடிடமாக ஆடும் திறம் போற்றப்பட்டமையும், அம்மை யுடன்பாடக் கூடி யாடுகின்றமையும் கூறியருளிய குறிப்பினால் இஃது சேதுக் கரையில் அருளப்பட்டதென்று கருத இடமுண்டு. முன் பழிபோக்கிப் பின்னருள் செய்யும் குறிப்பும் கருதப்படும்.

2788. (இ-ள்) அந்நகரில்...மேவி - அத்திருநகரில் விரும்பி எழுந்தருளி அவ்விடத்தில் இனிதாகப் பொருந்தியிருந்தபடியே; ஆழி...பாடி - கடல் நாற்பக்கமும் சூழ்ந்து சத்திக்கும் தீவாகிய ஈழநாட்டில் நிலைபெற்ற திருக்கோணமலையில் மகிழ்ந்து வீற்றிருந்தருளும் செங்கண்ணையுடைய இளமையாகிய இடபத்தினை உடைய இறைவரைத் துதித்து வணங்கிப்

பாடியருளி; சென்னி...ஏத்தி - உச்சியில் சந்திரனைச் சூடும்படி உயர்ந்த மாடங்களையுடைய மாதோட்டத்தில் திருக்கே தீச்சரத்தில் எழுந்தருளிய இறைவரது செம்மையாகிய திருவடிகளை மிகவும் நினைந்து பணிந்து துதித்து; அன்பரோடும்...உற்றார் - இறைவர்பால் முன்னாள் உலவாக்கிழி பெற்ற பிள்ளையார் அன்பர்களுடனே கூடியிருந்து மகிழ்ச்சி பொருந்தினர்.

(வி - ரை) மேவி - மேவி அங்கிருந்தபடியே ஈழநாட்டுத் தலங்க ளிரண்டனையும் வணங்கிப் பதிகம் பாடியருளினர் என்பார் **மேவி** என்றார். மேல் **உன்னி** என்றதுமிது.

ஆழி புடைசூழ்ந் தொலிக்கும் ஈழம் - ஈழம் - ஈழநாடு; இப்போது இலங்கைத் தீவு எனப்படும்; தீவாதலின் ஆழிபுடை சூழ்ந்து ஒலிக்கும் என்றார். **புடை** - எல்லாப் பக்கங்களிலும்; எப்புடையினும் என முற்றும்மை தொக்கது.

திருக்கோணமலை - திரிகோணமலை எனப்படும்.

மாதோட்டம் - நகரம்; **திருக்கேதீச்சரம்** - கோயிலின் பெயர்; மாதோட்டம் - உள்நாடும், கேதீச்சரம் நகரமும் ஆம் என்பாருமுண்டு; ''மாதோட்ட நன்னகருள்...பாலாவியின் கரைமேல்...திருக்கேதீச்சரத்தான்'' (நம்பி தேவா).

அன்பரோடும் - உவகையுற்றார் - ''அன்பரொடு மரீஇ'' (12 - சூத் - போதம்); அன்பர்களுடன் கூடியிருத்தல் அணைந்தோர் தன்மை; அது முத்தி யின்பத்தின் மிக்க இன்பத்தினைத் தருதல் குறிக்க ***உவகையுற்றார்*** என்றார்.

உலவாத கிழிபெற்றார் - உலவாக்கிழி பெற்றாராகிய பிள்ளையார். **பெற்றார்** - வினைப்பெயர். ***உலவாத கிழிபெற்ற*** வரலாறு திருவாவடுதுறையில் பிள்ளையார் சிவயாகத்துக்குத் தந்தையாருக்காகப் பாடி 1000 பொன் கொண்டதாய் எடுக்க எடுக்கக் குறையாத பொற்கிழியை இறைவர்பாற் பெற்றனர் என்பதாம். முன் 2315 முதல் 2328 வரை உள்ள பாட்டுக்களில் விரித்துரைக்கப்பட்டது காண்க. உலவாக் கிழி பெற்றார்போன்று அன்பர் கூட்டத்தை விரும்பியடைந்து மகிழ்ந்தனர் என்ற குறிப்பும் பெற நின்றது காண்க. **உன்னி** - இவ்வாறே திருக்காளத்திமலையி லிருந்தபடியே வடக்கு நோக்கிப் பணிந்து வடநாட்டுப் பதிகளை நினைந்து பாடியருளுதலும் காண்க. வடக்கு நோக்கி மேலும் செல்லாமையின் காரணம் பின் (2924) உரைத்தல் காண்க. ஈண்டு இராமேச்சுரத்திலிருந்தபடியே ஈழநாட்டுப் பதிகளிரண்டனையும் பாடியருளியது இடையே கடல் குறுக்கிட்டுச் சூழ்ந்திருத்தலால் கடலைக் கடந்து செல்லலாகாது என்ற மறைவிதி காரணமாக என்பது கருதப்படும். ***ஆழிபுடை சூழ்ந்தொலிக்கும் ஈழம்*** என ஆசிரியர் அறிவித்ததும் இக்குறிப்பும் பெறுதற்கு. *890*

திருக்கோணமலை (திரிகோணமலை)

திருச்சிற்றம்பலம் பண் - புறநீர்மை-3ம் திருமுறை

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பு நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த வடிவினர் கொடியணி விடையார்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவு மளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோத நித்திலங் கொழிக்குங் கோணமா மலையமர்ந் தாரே. (1)

குற்றமி லாதார் குரைகடல் சூழ்ந்த கோணமா மலையமர்ந் தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான் கருத்துடை ஞானசம் பந்தன்
உற்றசெந் தமிழார் மாலையீ ரைந்து முரைப்பவர் கேட்பவ ருயர்ந்தோர்
சுற்றமு மாகித் தொல்வினை யடையார் தோன்றுவர் வானிடைப் பொலிந்தே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– *நிமலர் - மலைமகளோர் பாகமாப் புணர்ந்த வடிவினர் - கொடியணிவிடையர் என்றிவ்வாறு பலவும் போற்றப்படும் இறைவர், கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை யமர்ந்தாரே.*

பதிகப் பாட்டுக் குறிப்பு:– ***(1) நிரை*** - *வரிசை;* ***அலம்பும்*** - *இசைக்கும்;* ***சந்து-அகில்-மணி*** - *குறிஞ்சிக் கருப்பொருள்;* ***மணி*** - *நெய்தலினும் பெறப்படும்; இங்கு மலையும் கடலும் கலந்த நிலையாதல் குறிப்பு. நெய்தலும் குறிஞ்சியும் மயங்கிய திணைமயக்கம். 1118 பார்க்க. ''குரைகடல் சூழ்ந்த கோணமாமலை'' என்ற கருத்துடன் பதிகத்தின் மகுடமமைந்தபடியும் இத்தலம் கடலினுள் ஏறி விளங்கும் மலை, சந்து அகில் மணிவரன்றி என்றதனுல் ஆறுகளால் அலைத்துக் கொணரப்பட்டன என்ற குறிப்பும் காண்க;*—***(2) கொடிதெனக் கதறும் குரைகடல்*** - *இங்குக் கடல் அலைகள் மிகப்பெருகியவை; பரந்து செல்லும் வகையின்மையால் கரையின் கற்பாறையில் மோதி மிகச் சத்திப்பன;* ***நித்திலம்*** - *கடல்படு பொருள்;* ***குடிதனை...தோன்றும்*** - *முன்னை நாளினும் இந்நாளினும் பெரிய வாணிபத் துறை முகப் பட்டினமாதலால் வாணிபம் அரசியல் என்ற இருவகையாலும் குடிநெருக்கமுடைய பட்டினம் என்பது;*—***(3) பனித்த இளம்*** - ***கனித்த இளம்*** - *என்றவை அகரங்கெட்டுப் பனித்திளம் - கனித்திளம் என நின்றன. கனிந்த என்றது எதுகை நோக்கிக் கனித்த என நின்றது.* ***துவர்*** - *பவளம்.* ***மதில்மேல்*** - ***குனித்த*** *என்று கூட்டுக.* ***மதில்*** - *திரிபுர வாணரது அரணுடைய நகர்; மதில் அதனையுடைய நகருக்கு வந்தது;* ***தனித்த......நாகம்*** - *மேருமலையாகிய வில்லினுக்கு நாணகத் தொடுத்த ஆதிசேடனுகிய மாநாகம்.* ***வில்லார்*** - *வில்லினையுடையார்.* ***குனித்தது*** - *வளைத்த மாத்திரையேயன்றிச் செயற் படவில்லை என்பது குறிப்பு. மேருவைச் சிலையாக வளைத்து ஆக்கிக்கொண்ட வில்;*—***(4) பழித்து*** - *பழித்ததுபோல;* ***அவன் தேவி*** - *இரதி;* ***வேண்ட முன் கொடுத்த - முன்*** - *அவள் முன்னர்மட்டில் உருவாக; வரலாறு கந்தபுராணம் பார்க்க;* ***தரளம் - பொன் - இப்பி*** - *கடல்படு பொருள்கள்;*—***(5) தாயினும் நல்ல*** - *''பானினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப் பரிந்து'' (திருவா);* ***போற்றிசைப்பார் வாயினும் மனத்தும் மருவி****-இவ்விடங்களில் வெளிப்படப் பொருந்தி;* ***நோயிலும் தொழிலர்பால் பிணியு நீக்கி*** - *போற்றிசைப்பார்க்கு வினைவயத்தால் அனுபவிக்க வரக்கடவனவாய நோய் வந்துழியும் அத்தொழில் (போற்றும் தொழில்) உடையார்பால் அத்துன்பம் உறுத்தாது உடலூழாய்க் கழியும்படி நீக்கி;* ***நுழைதரு நூலினர்*** - *அவ்வழியே அறிவு புகட்டும் மறைகளை அருள்பவர்;* ***ஞாலம் கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த*** - *அத்தீவும், அதனுட் கோயிலும் அதன் சுனையும் ஆக எல்லாவற்றையும் கடல் சூழ்ந்த என அதன் அமைப்புக் கூறியவாறு; இவ்வாறு இப்பதிகத்துக் கூறிய இவையெல்லாம் பிள்ளையார் இராமேச்சுரத்தில்* ***மேவி*** *எழுந்தருளியபடியே தமது தெய்வ ஞானக்கண் ணுற் கண்டு தொழுதருளியவாறு காண்க.* ***கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த*** *- என்ற திருவாக்கின் வாய்மையின் பயன்போலும் இத்திருக்கோயில் பிற்காலத்துப் புறச்*

சமயிகளாகிய கிறித்துவ இடச்சுக்காரர்களால் அகழ்ந்து அழிக்கப்பட்டுக் கடலினுட் காணக்கிடக்கின்றது; ஆயினும் இந்நாளில் அத் திருக்கோயில் இருந்த இடத்திற்கே வழிபாடுகள் நடைபெறுகின்றமையும் கருதுக. ''வாயினும் மனத்தும் மருவிநின்றகலா மாண்பும்'' என்ற குறிப்பும் கருதுக. **சுனை** - மலையாதலின் குறிஞ்சிக்குறிய **சுனை** என்று கூறினர்; இத்தலத்தை அடுத்து வெந்நீர் ஊற்றுச் சுனைகள் ஏழு இருத்தல் இன்றும் காணப்பெறும் அதிசயங்களுள் ஒன்று;—(6,7) **திரிந்திடாவண்ணம்** - வரம்பு கடந்து செல்லாதபடி; **திரிதல்**-மாறுபடுதல். **அவற்கு**- மாணிக்கு; உதைத்திட்ட அக்கூற்றுவனுக்கு என்றலுமாம்; **விரிந்துயர்...பொழில்** - இப்பொழிகளினீட்டம் இன்றும் காண நிகழ்வதாம்;—**(8) எடுத்தவன்** - கயிலையினைப் பெயர்த்து எடுக்க முயன்ற இராவணன்; **ஆத்தம்** - ஆப்தம்; அன்பு. **விரலால் இழித்தவர்** - என்க. **இழித்தல்** - ஆற்றலழித்தல்;—**(9) அருவராது** - வெறுக்காமல்; (10) **துன்றுமொண்...உலவும்** - முன் 6-7 பாட்டுக்கள் பார்க்க.

தலவிசேடம்:— திருக்கோணமலை - ஈழநாட்டுத் தலம். இது ''திருக்கணு மலை'' என மருவி வழங்கப்படும். மாமேருவின் சிகரங்களை அசைக்காமற் காக்கவும் அசைக்கவும் முறையே சேடனும் வாயுவும் தம்முள் இகலிட்டுச் செய்த வாதத்தில் வாயுவின் பலத்தினுல் மேருச்சிகரங்களுள் மூன்று பெயர்ந்து சென்று வீழ்ந்தன என்பதும், அவையே திருக்காளத்தி, திருச்சிராப்பள்ளி, திருக்கோணமலை என்ற மூன்றுவன என்பதும், ஆதலின் இவை தட்சிண கைலாயம் எனப்பெறுவன என்பதும் வரலாறு. இந்திரன் பூசித்த தலமாமென்ப. **கோணம்** - வளைவு; **கூரிய நுனி** - முனை; சிகரத்தைக் குறித்தது. ஆளுடைய பிள்ளையாரும் நம்பிகளும் இராமேச்சுரத் தினின்றபடியே இதனையும் திருக்கேதீச்சரத்தினையும் பாடியருளிய வரலாறு புராணத்துக் காண்க. சிலகாலத்துக்கு முன் அந்நிய நாட்டினர் படையெடுப்பில் இந்நகரைக் கைப்பற்றிய இடச்சுக்காரர்கள் புறச்சமயிகளாதலின் இத்திருக்கோயில் முழுமையும் அடிகாணத் தகர்த்துக் கடலுள் வீழ்த்தி இந்நகரைத் தம் படைகள் தண்டு தங்குமிடமாக்கிக் கொண்டனர்; இதில் இருந்த சோமாஸ்கந்தர் - சந்திரசேகரர் முதலிய அரிய பெரிய மூர்த்திகளை மட்டும் அவர் கையிற் படாதபடி அந்நாளில் அன்பர்கள் எடுத்துக் காத்து, அடுத்து 10 நாழிகை அளவில் உள்ள **தம்பலகம்** என்ற ஊரில் போற்றி வைத்துள்ளார்கள்; உலக அதிசயங்களுள் ஒன்றுகிய ''வெந்நீர்க் கிணறுகள் ஏழு'' (Seven Hot Wells) இதன் அணிமையில் உள்ளன. இவ்வேழும் ஒரே இடத்தில் உள்ளனவாயினும் வெவ்வேறு அளவுபட்ட வெப்ப நிலை யுள்ளன. இவை இராவணன் குளித்துத் தன் தாயின் கடனுற்ற உண்டாக்கினன் என்று கூறுப. இந்நகர் இப்போதும் தண்டு தங்குமிடமாக (Contonment) இருக்கிறது. ஆனுல் திங்கள் - வெள்ளிக்கிழமைகளில் வழிபாடு நடைபெறுகிறது. அந்நாட்களில் அன்பர்கள் அதிகாரிகள் உத்தரவின்றியே சென்று வணங்கி வரலாம். ஏனை நாட்களில் அதிகாரிகள் உத்தரவு பெற்றுச் செல்ல வேண்டும். சுவாமி - **கோணேசுரர்**; அம்மை - **மாதுமையாள்**; பதிகம் - 1.

இத்தலம் இலங்கைத் தீவில் யாழ்ப்பாணத்துக்குத் தென்கிழக்கில் கீழ் கடற் கரையில் உள்ளது. இலங்கை இருப்புப்பாதை (Ceylon Goverment Railway) திருக்கோணமலை நிலயத்தினின்றும் 60 நாழிகையளவில் நல்ல கற்சாலைவழி அடையத்தக்கது. மோட்டார் வசதி உண்டு.

திருக்கேதீச்சரம்

திருச்சிற்றம்பலம் பண் - நட்டராகம்

விருது குன்றமா மேருவி ஞணார வாவன லெரியம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின் றுறைபதி யெந்நாளுங்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ் பொழிலணி மாதோட்டங்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக் கடுவினை யடையாவே. (1)

மாடெ லாமண முரசெனக் கடலின தொலிகவர் மாதோட்டத்
தாட லேறுடை யண்ணல்கே தீச்சரத் தடிகளை யணிகாழி
நாடு ளார்க்கிறை ஞானசம் பந்தன்சொ னவின்றெழு பாமாலைப்
பாட லாயின பாடுமின் பத்தர்கள் பரகதி பெறலாமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– சிவபெருமான் உறைகின்ற பதியாகிய மாதோட்டத்துள் திருக்கேதீச்சரத்தைக் கைதொழ வினைகள் கெடும்; மேல் வினைகள் அடையா.

பதிகப் பாட்டுக் குறிப்பு:– (1) விருது - வெற்றிச் சின்னம்; **பற்றி** - விரும்பி வெளிப்பட எழுந்தருளி; **ஊர் - மாதோட்டம்** - என்க; **கேதீச்சரம்** - கோயிலின் பெயர்;—**(2) ஈடம்** - இடம் என்பது முதல் நீண்டு வந்தது; **கேடிலாத** - இத்திரு வாக்கின் வாய்மையால் இடையில் மண்மேடிட்டு முற்றும் மறைந்திருந்த இத்தலம் சிலகால முன்பு அகழ்ந்தெடுக்கப்பட்டு மீளவும் புதுக்கித் தாபித்து வழிபடப்பெறுகின்றது;—**(3) ஆதரித்து** - விரும்பி அணிந்து; **அகம்** - வீடு; மனம் என்ற குறிப்புமாம்; ''பழங்குடி றொறுமெழுந் தருளிய'' (திருவா); **பிச்சைக்கு உண்ணலாவதோர் இச்சை** - ''பசுபோதக் கவளமிடக் களித்துண்டு'' (திருவிளை. புரா);—**(4) பொடி** - திருநீறு; **நூல்** - முப்புரி நூல்; பூணூல்; **நூல்** - மறைகளாகமம் என்ற குறிப்புமாம்; ''ஞானநன் குடையவர்'' எனவரும் பாட்டிற் கூறுதலும் காண்க; —**(6) பேழை** - பெருமை; **மாழை** - மாவடு; அழகு என்றலுமாம். **பொருள்** - சிவ பூசை யுட்கொண்ட சிவாகமம். 1127 பார்க்க. **குடிவாழ்க்கை - மாதோட்டக் - கேதீச்சரம் - பிரியார்** என்று கூட்டிமுடிக்க. **குடிவாழ்க்கை** - என்ற துபசாரம்; வெளிப்பட நிலைபெற்று எழுந்தருளுதல் என்ற பொருளில் வந்தது;—**(8) முத்து - மணி**- மலைபடு பொருள்கள்;—**(9) இடத்து எழுந்து ஓடி** - எதிர் நிரனிறை; **எழுந்தோடுதல்** - மேலேழுந்து பறத்தல்; **மா - பூகம் - கதலி** - மருதச் சார்பு; இங்கு நெய்தலும் குறிஞ்சியும் மருதமும் மயங்கிய ஒழுக்கம்; திணை மயக்கம்;—**(10) ஆதர்**- கீழ்கள்; **ஏழைமை** - சிறு புன்சொல்; **பாலாவி** - ஆறு; நம்பிகள் தேவாரமும் பார்க்க;—**(11) மணமுரசு என** - இங்கு மேல் கடலாதலின் சிறு முழக்கமேயுள்ள குறிப்பு. இவ்வாறன்றிக் ''கொடிதெனக் கதறுங் குரைகடல்'' (திருகோணமலை - 2) எனக் கீழ்க்கடலைக் கூறிய திறமும் கருதுக. **மணமுரசென** - இறைவர் அம்மையுட னிருந்து அடியார்க்குச் சிவமங்கலம் பொலிய அருள்வது குறிக்கக் கூறிய மங்கலக் குறிப்புமாம். **பரகதி பெறலாமே** என்று பயன் கூறியதும் காண்க.

தலவிசேடம்:— திருக்கேதீச்சரம்-ஈழநாட்டுத் தலம். **கேதீச்சுரம்** - கோயிலின் பெயர்; **மாதோட்டம்**-நகரின் பெயர். மாதோட்டக் கேதீச்சரம் என்பது பதிகம். நம்பிகள் பதிகமும்

2789. அப்பதியைத் தொழுதுவட திசைமேற் செல்வார்
அங்கையன றரித்தபிரா னமருங் கோயில்
புக்கிறைஞ்சிப் பலபதியுந் தொழுது போற்றிப்
புணரிபொரு தலைகரைவா யொழியப் போந்தே
செப்பரிய புகழ்த்**திருவா டானை சேர்ந்து**
செந்தமிழ்மா லைகள் சாத்திச், சிவஞர் மன்னும்
ஒப்பரிய **புனவாயில் போற்றி செய்து**
வணங்கினு ருலகுய்ய ஞான முண்டார். 891

---

*பார்க்க (சாத்தமங்கை அயவந்தி என்பதுபோல); இத்தலம் பாலாவி என்ற ஆற்றின் கரையில் இருந்ததாகப் பதிகம் கூறுகின்றது. ''பாலாவியின் கரைமேல்'' (நம்பிகள்-பதிகம்); தட்சிண கைலாச மான்மியத்தில் திருக்கேதீசுரமகிமை கூறப்பட்டுள்ளது; ஆதிசேடன் மாமேருவினின்றும் பறித்த சிகரங்களுள் ஒன்றனை இத்தலத்திற் ருபித்தனன் என்றும், துவட்டா என்னும் முனிவன் இங்கு வந்து தவஞ் செய்து பேறு பெற்றதனுல் இந்நகர் மகா துவட்டாபுரம் என்று பெயர் பெற்ற தென்றும் அதிற்சொல்லப்பட்டுள்ளது. மகாதுவட்டாபுரம் என்பது மாதோட்ட'' வென்று மருவி வழங்குவது போலும்; ஆறு - நகரம் - கோயில் எல்லாம் காலாந்தரத்தில் சிதைவுற்று அழிந்து மண்மேடிட்டுப் போயின; இப்பால் சிலகால முன்பு அன்பர்களால் அடையாளங் கண்டு கோயில் புதுக்கி மூலலிங்கமுங் கண்டு தாபித்து வழிபடப்பட்டு வருகின்றது. இங்குள்ள நீர்நிலைகளில் முதலைகள் மிகவுமுண்டு. சுவாமி - **கேதீசுவரர்**; அம்மை - **கௌரியம்மை**; தீர்த்தம் - **பாலாவி**; பதிகம்-2.*

இஃது இலங்கை கவர்ண்மெண்டு இருப்புப்பாதையில் தலைமன்ஞரினின்றும் 20 நாழிகையளவில் உள்ள கோட்டைமன்ஞர் நிலையத்தினின்றும் மேற்கில் கற்சாலைவழி 6. 1/2 நாழிகையளவில் அடையத்தக்கது. இரயில் நிலையத்திலிருந்து மாட்டு வண்டிகள் கிடைக்கும். மன்ஞர் பட்டினத்தில் (Motor) மோட்டார் வண்டி உண்டு. திருக்கேதீச்சரம் இரயில் நிலையத்தினின்று இரண்டு நாழிகை யளவிலும் அடையலாம்.

2789. (இ-ள்) *அப்பதியை...செல்வார் - அந்தப் பதியினைத் தொழுது (அங்கு நின்றும் நீங்கிப்) பின்பு வடதிசையின்மேற் செல்வாராகி; அங்கையனல்...இறைஞ்சி- அழகிய கையில் அனலை ஏந்திய இறைவர் விரும்பி வீற்றிருக்கும் கோயிலினுள்ளே புகுந்து வணங்கி; பல பதியும் தொழுது போற்றி - பல பதிகளையும் வணங்கிச் சென்று; புணரி...போந்தே - கடல் அலைகள் புரண்டுவரும் அவ்வெல்லைகள் பிற்படக் கடந்து சென்று; செப்பரிய...சாத்தி - சொல்லுதற்கரிய புகழையுடைய திருவாடானைப் பதியினைச் சேர்ந்து செந்தமிழ் மாலைகளைச் சாத்தி; சிவஞர்...உண்டார் - உலக முய்தற்பொருட்டுச் சிவஞானமுண்டருளிய பிள்ளையார் ஒப்பற்ற திருப்புன வாயிலினைத் துதித்து வணங்கியருளினுர்.*

(வி-ரை) அப்பதி-*முன்பாட்டில் ''உன்னிமிகப் பணிந்தேத்தி'' என்ற திருக்கே தீச்சரமாகிய பதி என அகரம் முன்னறிசுட்டு.* **பதியைத்** *தொழுது - என்றது இங்கு நின்றவாறே தலத்தை நோக்கித் தொழுதார் என்ற குறிப்புத் தருவது.*

கோயில் - திருவிராமேச்சுரம். முன்னதனைத் **தொழுது** என்றதனால் இருந்தவாறே மனத்தாற்றொழுது என்பதும், இங்குப் **புக்கிறைஞ்சி** என்றதனால் நேரே சென்று மெய்யுற வணங்கி என்பதும் குறிப்பிற் பெறவைத்த நயம் கண்டுகொள்க. **இறைஞ்சி**-செல்வாராகி விடைபெற்றுக்கொள்ளும் பொருட்டு வணங்கி.

புணரி பொருது அலைகரைவாய் ஒழிய - கடற்கரை எல்லைகள் நீங்க; **ஒழிய** - பிற்பட.

செப்பரிய புகழ் - பெயர்த்தற்கரிய முனிசாபமும் நீங்கவருளியமையும், பிறவுமாம்; தலவிசேடம் பார்க்க.

செந்தமிழ் மாலைகள் - பதிகம் ஒன்றே இப்போது உள்ளது; பல பதிகங்களிருந்து ஏனையவை சிதலரித்துதொழிந்தன போலும். பதிகத்துப் பாடல் ஒவ்வொன்றும் தனித்தனி ஒவ்வோர் மாலையாம் என்ற மரபுபற்றி இப்பதிகப் பாடல்களை **மாலைகள்** என்றார் என்றலுமாம். ''செந்தமிழ்'' (11) என்ற பதிகக் குறிப்பும் கருதுக.

ஒப்பரிய -''பழம்பதி'' என்பது முதலிய சிறப்புக்களாலும், மூர்த்திவிசேடச் சிறப்பாலும், பாண்டிநாட்டின் 14 பதிகளும் இங்கு ஒருங்கே வழிபட உள்ள சிறப்பாலும், பிறவாற்றாலும் **ஒப்பரிய** என்றார். தலவிசேடம் பார்க்க.

பலபதி - இவை உப்பூர் - திருவெற்றியூர் (வைப்புத் தலம்) முதலாயின என்பது கருதப்படும். 891

திருவாடானை

திருச்சிற்றம்பலம் பண் - நட்டராகம்

மாதோர் கூறுகந் தேற தேறிய, வாதி யானுறை யாடானை
போதி னாற்புனைந் தேத்து வார்தமை, வாதி யாவினை மாயுமே. (1)

வீடி னார்மலி வேங்க டத்துநின், றாட லானுறை யாடானை
நாடி ஞானசம் பந்தன் செந்தமிழ், பாட நோய்பிணி பாறுமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– ஆதியானுறையும் திருவாடானையைப் போற்றுவாரை வினைவாதியா; அவர்களுடைய பழவினைகளும் நோயும் பிணியும் மாயும்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **போது** - நாண்மலர்;—(2) **வீடும்** - நீங்கும்;—(3) **நோய் மங்கும்** என்க; **பிணி** - நோயின் மூலமாகிய பிணிப்பு;—(4) **தொழ எண்ணுவார்** - தொழ எண்ணுதலே பயன் தரும்; 8-வது பாட்டும் பார்க்க;—(5) **கொய்**-பறிக்கும்; **கை** - கையிற்கொண்ட;—(6) **முன்செய்த ஊனம்** - பழவினை; **உள்ள** - உள்ளவை - அகரவீற்றுப் பலவறிசொல்;—(7) **ஆடானைப் பதியை வலங் கொள்வார்** - என்க;—(9) **அறையும்** - ஒலிக்கும்; **பறையும்** - நீங்கும்;—(11) **வேங்கடம்** - சுடுகின்ற சுடலை; (**வெங்கடம்**—என்பதும் பாடம்.) **நோய்பிணி**-நோயும் அதன் மூலமாகிய பிணியும்; **பிணிப்பு** - ஆணவம்.

குறிப்பு:—இப்பதிகம் மலர்தூவி இத்திருநகரைத் தொழவே வினைமாயும் என்ற கருத்துக் கொண்டு தலத்தினைப் பாடியது ''ஆரூரைப் பத்தி மலர்தூவ'' (குறிஞ்சி); ''மலர்தூவி

முதுகுன்றை'' (மேற்படி) என்ற பதிகங்கள் போலக் காண்க. ஆதலின் இது தலத்தின் புறத்து அருளப்பட்டதென்று கருத இடமுண்டு. அவ்வாறாயின் ''செந்தமிழ் மாலைகள் சாத்தி'' (2789) என்ற குறிப்புக்கேற்ப மற்றும் பதிகமும் இருத்தல் கூடுமென்பது ஆராயத் தக்கது.

தலவிசேடம்:– **திருவாடானை** - *பாண்டிநாட்டுப் பாடல்பெற்ற பதிகளுள் ஒன்பதாவது தலம். ''ஆட்டுத்தலையும் யானையுடலு மாக'' என்று சபிக்கப்பெற்ற பிருகு முனிவர் அவ்வுருவத்துடனே வந்து பூசித்துச் சாப நீங்கப்பெற்ற தலமாதலின் இப்பெயர் பெற்றது. தூர்வாச முனிவர் தம்மிடம் வந்தபோது வந்தனை செய்யாமையால் அவர் அவ்வாறு பிருகு முனிவரைச் சபித்தனர் என்பது வரலாறு.* **அஜகஜபுரம்**'' *என்று இதனை வடமொழியில் மொழிபெயர்த்துக்கொண்டு வழங்குவர் (அஜம் - ஆடு; கஜம் - ஆனை). இவ்வுருவம் கோயிலில் வைத்து வழிபடப் பெறுகின்றது. நீலமணியைச் சிவலிங்கமாய்த் தாபித்துச் சூரியன் வழிபட்டமையால் சுவாமிக்கு* **ஆதிரத்தினேசுவரர்** *என்று பெயர் வழங்கும். சுவாமி -* **ஆடானை நாதர்** *(அஜகஜேஸ்வரர்); அம்மை -* **அம்பாயிரவல்லி**; *தீர்த்தம் -* **சூரிய தீர்த்தம்**; *பதிகம்-1.*

இது சிவகங்கை நிலையத்தினின்றும் திருக்கானப்பேர் வழி கிழக்கில் கற்சாலை வழி 35 நாழிகையளவில் அடையத்தக்கது; மோட்டார் பஸ் வசதி உண்டு. காரைக்குடி நிலையத்தினின்று 38 நாழிகையளவிலும் அடையலாம்.

திருப்புனவாயில்

திருச்சிற்றம்பலம் **பண் - காந்தார பஞ்சமம்**

மின்னியல் செஞ்சடை வெண்பிறை யன்விரி நூலினன்
பன்னிய நான்மறை பாடியா டிப்பல வூர்கள்போய்
அன்னமன் னந்நடை யாளொ டும்மம ரும்மிடம்
புன்னைநன் மாமலர் பொன்னுதிர்க் கும்புன வாயிலே. (1)

பொற்றொடி யாளுமை பங்கன்மே வும்புன வாயிலைக்
கற்றவர் தாந்தொழு தேத்தநின் றகடற் காழியான்
நற்றமிழ் ஞானசம் பந்தன்சொன் னதமிழ் நன்மையால்
அற்றமில் பாடல்பத் தேத்தவல் லாரருள் சேர்வரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– *செஞ்சடை வெண்பிறையான் முதலியனவாகப் பல தன்மைகளாலும் போற்றப்படும் இறைவர் அம்மையுடன் விரும்பி வீற்றிருக்கும் இடம் புன்னை சூழும் புனவாயிலே.*

பதிகப் பாட்டுக் குறிப்பு:– ***(1) விரிநூலினன்*** - *அறிவும் ஞானமும் விரிந்து விளங்குதற்கு ஏதுவாகிய வேத சிவாகமங்களை அருளியவன்; மார்பில் விரியும் பூணூல் பூண்டவன் என்றலுமாம்;* **பன்னிய** - *பலவாறும் எடுத்துச் சொல்லிய; தாம் பன்னிய தம்மைப் பன்னிய என இருவகையும் கொள்ள நின்றது;* **போய்...அமரும்** - *பலவூர்கள் திரிந்து பின் தமது* **பழம்பதி***யாகிய இங்கு அமரும் என்ற குறிப்பும்பட நின்றது; 2-வது பாட்டும் பார்க்க.*

புன்னைகள்-நெய்தற் கருப்பொருள். **புன்னை** - இங்குத் தலமரமாதலும் காண்க;—**(2) விண்டவர்** - பகைவர்; **கண்டல்** - தாழை; —**(3) பாரிடம்** - பூதகணம்;—**(5) மதமத்தம்** - ஊமத்தை; **மெலிதரு** - சாபத்தால் கலை குறைந்தடைந்த;—**(6) கனல் வாயது** - வடித்த கூரிய வாயினை உடையது; எரியுமிழ்வதுபோல் அழிக்கும் என்றலுமாம்; **சீருறு செல்வம்** - அழியாச் சிறப்பும் ஆனந்தமுமுடைய முத்தித் திரு; **சிவலோகன்** என்ற குறிப்புமிது;—**(7) பொருந்தலர்**-பகைவர்; பொருந்ாதவர்; அடையாதவர்;—**(9) திருவளர்தாமரை**- ''திருவளர் தாமரை'' (திருக்கோவை -1); ''திருவமர் தாமரை'' (திருவிருத்தம் - நல்லூர் - 10); **நரல்** - சத்திக்கின்ற; சங்குகள் இயல்பாகிய நாதந் தரும் தன்மை குறித்தது;—**(10) போதி...எனப் பெயராயினூர்** - புத்தர்; பெயர்க்காரணம் குறித்தது; **வேதன்** - வேதங்களைச் சொன்னவன்; வேதங்களாற் சொல்லப்பட்டவன்; உயிர்களின் மலத்தை வேதிப்பவன் என்ற குறிப்புமாம்; **வினைவீடும்** என்ற குறிப்புமிது;—**(11) கற்றவர்** - மனமிறக்கக் கற்றவர். ''கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை'' (திருவிசை); தம்மை மறந்து அரனை நினைக்கக் கற்றவர்; **அற்றமில்** - குற்றங்களை இல்லையாகச் செய்யும். தமிழாகிய பாடல் என இயையும்.

தலவிசேடம்:– திருப்புனவாயில் - பாண்டிநாட்டுப் பாடல் பெற்ற பதிகள் பதினுன்கனுள் ஏழாவது தலம். **பழம்பதி** - (விருத்தபுரி) என வழங்கப்படும் பெருமையுடையது. நம்பிகள் தேவாரத்துள் ''பத்தர்தாம் பலர் பாடிநின் ருடும்பழம்பதி'' எனப் போற்றியருளியமை காண்க. பாண்டிநாட்டு ஏனைப் பதின்மூன்று பழம் பதிகளின் மூர்த்திகளும் ஒருங்கே இங்கெழுந்தருளியுள்ளார்கள். அம் மூர்த்திகளுக்குத் தனித்தனிக் கோயில்களும் கண்டு அவ்வப்பெயரும் தீட்டித் திருப் பணி செய்து வழிபட அமைத்தல் சாலச் சிறந்த சிவதருமமாகும். ''பாண்டி நாடே பழம்பதி யாகவும்'' என்றது திருவாசகக் குறிப்பு. ''பொத்தி லாந்தைகள் பாட்டருப் புனவாயிலே'' (நம்பி) என்றபடி ஆந்தைகளின் கூவுதலும், ''கார்க்கோழிபோய்ப் புற்றேறிக் கூகூ வெனவழைக்கும் புனவாயிலே'' என்றபடி கோழிகள் புற்றேறிக் கூவுதலும், அப்பதிகத்திற் கூறும் வேடுவர் பூசலும், கற்குன்றுந், தூறுங், கடுவெளியும், கடற்கானமும், கள்ளிநீள் கவடும், பூசற்றுடியும் முதலாகிய பொருள்களும் ஒழுக்கமும் இன்றும் காணப்பெற்று எந்தம் பெருமக்களது திருவாக்கின் வாய்மையைக் காட்டி நிற்பன. மூலலிங்க மூர்த்தியும் ஆவுடையாரும் மிகப் பெரிய அளவுள்ளன; இவற்றுக்குப் பரிவட்டம் சாத்தும் நிலைபற்றி ''மூன்று முழமும் ஒரு சுற்று (சிவலிங்கத்துக்கு); முப்பது முழமும் ஒரு சுற்று (ஆவுடையாருக்கு)'' என்று பழமொழியாய் வழங்கும். விமானமும் பெரிதாய் மிகச் சிறந்த அழகிய அமைப்புடையது. இப்போது திருப்பணியிலும் பழைய அமைதி சிதைவுருது அவ்வாறே அமைக்கப் பெற்றிருக்கும் சிறப்பும் காணத்தக்கது; பாண்டி நாட்டுப் பதிகளுள் மிகக் கடினமான வழிகளால் சிரமப்பட்டு அடையத்தக்க பதியாய் விளங்குதல் இதன் வழிபாடு ஒன்றுலே பாண்டி நாட்டு எல்லாப் பதிகளையும் வழிபட்ட பயன்பெற உள்ள பரிசு போலும். இலக்குமியும் பிரமனும் பூசித்த தலமென்பது தீர்த்தங்களால் அறியப்படும். சுவாமி - **பழம்பதி நாதர்**; அம்மை - **கருணைநாயகி**; மரம் - **புன்னை; கொன்றையுமாம்** (பிள்ளையார் பதிகம்-8); தீர்த்தம்- **இலக்குமி தீர்த்தம்; பிரம தீர்த்தம்.** ''புண்டரீ கம்மலர்ப் பொய்கை சூழ்ந்தபுன வாயில்'' (பிள்ளையார் பதிகம்-2; தாமரை இவ்விருவர்க்கு முரித்தாதல் காண்க); பதிகம் 2.

2790. பதிநிலவு பாண்டிநா டதனின் முக்கட்
பரமனுர் மகிழ்விடங்கள் பலவும் போற்றி,
விதிநிலவு வேதநூ னெறியே யாக்கி
வெண்ணீற்றின் சார்வினுன் மிக்கு யர்ந்த
கதியருளிக், காழிநகர் வாழ வந்தார்
கண்ணுதலான் றிருத்தொண்டர் பலருஞ் சூழ,
மதிநிலவு குலவேந்தன் போற்றிச் செல்ல,
மந்திரியார் பதி**மணமேற் குடியில் வந்தார்.** 892

இஃது அறந்தாங்கி நிலையத்தினின்றும் தென்கிழக்கே கற்சாலைவழி 7 நாழிகையளவில் ஆவுடையார் கோயில் என வழங்கும் திருப்பெருந்துறையினின்றும் தெற்கே மட்சாலைவழி மீமிசல் வழியாய் 14 நாழிகையளவில் அடையத்தக்கது; தேவகோட்டை ரோட் நிலையத்தினின்றும் கற்சாலைவழி 6 நாழிகையளவில் தேவகோட்டையை அடைந்து அங்கு நின்றும் தென்கிழக்கில் அனுமந்தக்குடி வழியில் கற்சாலை மட்சாலை வழியாய் 12 நாழிகையளவிலும் அடையலாம்.

2790. (இ-ள்) பதிநிலவு...போற்றி - பதிகள் பலவும் விளங்குகின்ற பாண்டி நாட்டிலே மூன்று கண்களையுடைய இறைவராகிய சிவபெருமான் மகிழ்ந்து எழுந்தருளிய இடங்கள் பலவற்றையும் துதித்து; விதிநிலவு...யாக்கி - விதிகள் பலவும் விளங்க உரைக்கின்ற வேதநூல்களின் நெறியினையே எங்கும் எவரும் பின்பற்றச் செய்து; வெண்ணீற்றின்...கதியருளி - வெள்ளிய திருநீற்றின் சார்பு பெற்றமையாலே மிகவும் உயர்ந்த கதியினை யாவரும் பெற அருள்புரிந்து; காழி நகர்...வந்தார் - சீகாழிப்பதி வாழ அதனிடை வந்து அவதரித்த பிள்ளையார் சிவ பெருமான் றிருத்தொண்டர்கள் பலரும் சூழ்ந்து வரவும் சந்திரகுல மரபில் வந்த பாண்டியன் போற்றி உடன் வரவும் சென்று மந்திரியாரது பதியாகிய திருமண மேற்குடியில் வந்தணைந்தருளினர்.

(வி - ரை) பதிநிலவு - பல பெரு நகரங்களும் விளங்கும். இறைவரும் அம்மையாருமே அரசராக இருந்து அரசியற்றிய பெருமை வாய்ந்த என்ற குறிப்புமாம். இப்பொருட்குப் பரமபதியே பதியாக (அரசராக) நிலவும் என்க.

பரமனுர் மகிழ்விடங்கள் பலவும் - இவை **ஓரியூர்** (வைப்புத் தலம்) முதலானவை என்பது கருதப்படும். திருப்புனவாயிலினின்றும் கடற்கரை யோரமாகவே சாதாரணமானதொரு மட்சாலைவழி வடகிழக்காய் மணமேற்குடி சேர்ந்து, அதன் மேலும் கடற்கரையோரமாகவே வடக்கு நோக்கி அம்மணி சத்திரம், சேதுபாவா சத்திரம், இராஜாமடம், அதிவீரராமன் பட்டினம் வழியாய் மன்னுர்குடி வரை செல்கின்றது. இவ்வழியாய் வடக்கிலுள்ள நாடுகளினின்றும் இராமேசுரம் வரும் யாத்திரிகர்கள் வந்து சென்றுகொண்டிருந்தார்கள். இவ்வழியே பிள்ளையாரும் பாண்டி நாட்டினின்றும் சோழ நாட்டுக்கு மீண்டும் எழுந்தருளினுர் என்பது சரித ஆராய்ச்சிகளாற் கருதப்படும்.

விதிநிலவு...ஆக்கி - விதி நிலவுதல் - ''தருமம் செய்க'' ''சத்தியம் சொல்க'' என்பன போன்ற விதிவாக்கியங்கள் விளங்குதல்; **வேதநூல்** - வேதங்களும் அவற்றின் வழிவந்த

நூல்களும்; **நெறியே ஆக்குத**லாவது அவ்வொழுக்கத்தில் யாவரும் ஒழுகும்படி **நியமித்து** ஆக்கம் செய்தல். இது வேத வேள்வியை நிந்தனை செய்துழல் வோரும் **வைதிகத்தின்** யொழுகாதவரும் ஆகிய புறச்சமயிகளால் நேர்ந்த இடையூறுகளைப் போக்கியமை**யாலும்,** வேதநெறியினை வற்புறுத்திக் காட்டியமை யாலும் ஆயிற்று.

வெண்ணீற்றின்...கதி - **இது சிவாகம நெறி; சைவநெறி; மிக உயர்ந்த கதியாவது சிவநெறியேயாம். அதற்குரிய சிறந்த சார்பாவது திருவெண்ணீறேயாம்;** சிவநெறியும் திருநீறும் பிரிக்கப்படாத இணைப்புடையன என்பது ''கண்ணுதலான் றிருநீற்றுச் சார்வினோர்க்குங் கவலைவரு மோவென்று கருத்திற் கொண்டார்'' (2460); தம்பெருமான் சாத்துந் திருநீற்றுச் சார்புடைய, வெம்பெருமான்'' (649) முதலியவாற்றானும், வேதங்களானும், **திருநீற்றுப்** பதிகத்தானும் பெறப்படும் உண்மை.

வேதநூல் நெறியே ஆக்கி...நீற்றின்...கதியருளி - ''பரசமய நிராகரித்து நீறு ஆக்கும்'' (1917) என்றும், ''வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க'' (1899) என்றும் போந்த கருத்துக்கள் ஈண்டு நிறைவேற்றப்பெற்ற நிலையும் கண்டு கொள்க; மதுரையில் தொடங்கிய இச்செயல்களிரண்டும் ஈண்டு நாடு முழுதும் நிகழச் செய்து முற்றுப்பெற்றதனால் இவ்வாறு முடித்துக்காட்டிய திறமும் கண்டு கொள்க. 2782-ல் முன் உரைத்தவையும் பார்க்க.

தொண்டர் பலருஞ் சூழ - ''கணங்களாய் வரினுந் தமியராய் வரினு மடியவர் தங்களைக் கண்டாற், குணங்கொடு பரவுங் குலச்சிறை'' (ஆலவாய்-புறநீர்மை) என்பது முதலாகப், பிள்ளையார், தொடக்கத்திலே காட்டியருளியபடி தொண்டர்களைப் பணிவதில் மிக்க அன்புபூண்ட குலச்சிறையாரது பதியினுக்குத் தொண்டர் பலருடன் செல்கின்றமை குறிப்பு.

மதிநிலவு குலவேந்தன் - பாண்டியன், பாண்டியர்கள் சந்திரகுலத்தில் வந்தவர்கள் என்றும், சோழர்கள் சூரியகுலத்தில் வந்தவர்கள் என்றும் வரலாறு கூறப்படும்; சூரியனால் சந்திரன் ஒளிபெற்று விளங்கும். **போற்றிச் சொல்ல** - சூரிய குலத்து வந்த மங்கையர்க்கரசியம்மையராலும், அவராணை பெற்ற மெய்ம்மை மந்திரியா ராலுமேதான் உண்மை விளக்கமும் உய்தியும் பெற்றதென்பது கருதினான்போல இங்குப் ''**போற்றிச் செல்ல**'' என்றார். மதியுடைய அரசுக்கும் அமைச்சுக்கும் உள்ள ஒற்றுமை நலமுங் குறித்தபடி. **மதிநிலவு** என்ற குறிப்புமிது.

மணமேற்குடி - தலவிசேடம் (குலச்சிறை நாயனார் புராணம்) III(II) - பக். 29 பார்க்க. இதன் வடக்கில் அணிமையில் உள்ள வெள்ளாறு அந்நாட் பாண்டி நாட்டெல்லை என்பர். **892**

2791. (இ-ள்) அந்நகரில்...சேர்ந்து - அத் திருநகரில் இனிதாக விரும்பி எழுந்தருளுவாராகிப் பக்கத்தில் சூழ்ந்துள்ள பதிகளில் நீடிய இறைவருடைய திருக் கோயில்களைச் சென்று வணங்கிப் பொருந்திய திருத்தொண்டர்களுடனே மீண்டு வந்து சேர்ந்து; மன்னவனும்...போற்ற - அரசனும், மங்கையர்க்கரசியம்மையாரும், கொல்லுலையில் வடித்த கூர்மையுடைய வேலேந்திய குலச்சிறையாரும் சேர்ந்து தமது சத்திக்கும் வீரக்கழலணிந்த திருவடிகளைப்பணிந்து ஏவல் செய்து போற்ற; சிரபுரத்துச் செல்வர்-சீகாழிச் செல்வராகிய

2791. **அந்நகரி லினிதமர்வா ரருகு சூழ்ந்த**
பதிகளினீ டங்கணர்தங் கோயி ருழ்ந்து
மன்னுதிருத் தொண்டருடன் மீண்டு சேர்ந்து
மன்னவனு மங்கையருக் கரசி யாருங்
கொன்னவில்வேற் குலச்சிறையார் தாமுங் கூடிக்
குரைகழல்கள் பணிந்துகுறை கொண்டு போற்றச்
சென்னிவளர் மதியணிந்தார் பாதம் போற்றிச்
சிரபுரத்துச் செல்வரினி திருந்த நாளில்; 893

பிள்ளையார்; சென்னிவளர்...போற்றி - தலையில் வளரும் பிறையை அணிந்த இறைவரது திருவடிகளைத் தாம் போற்றி; இனிதிருந்த நாளில் - இனிதாக எழுந்தருளியிருந்த நாள்களில்,

(வி-ரை) அந்நகர் - மணமேற்குடி.

அருகு சூழ்ந்த பதிகள் - ஆவுடையார் கோயில் என்னும் **திருப்பெருந்துறை** முதலாகிய தலங்கள் என்பதும் கருதப்படும். **நீடு அங்கணர்** என்ற குறிப்புப் பழமைப் பொருள்பட நிற்பதும் காண்க.

குரை கழல் - கழல் - அதனை அணிந்த திருவடிக்கு வந்தது. குரை - சத்திக்கின்ற.

குறைகொண்டு போற்ற - ஏவல்களை மேற்கொண்டு துதித்து நிற்க; **போற்ற** பேண என்றலுமாம்.

போற்றப்...போற்றி - அவர்கள் தமது கழல்களைப் போற்றத் தாம் இறைவரது பாதங்களைப் போற்றியிருந்தார் என்ற கவிநலமும் காண்க.

மீண்டு சேர்ந்து - திருமணமேற்குடியி னின்றபடியே கோயில் சென்று சார்ந்து மீண்டும் அங்குச் சேர்ந்து.

நாளில் - திருவுள்ளமாகப் பெற்று - என மேல்வரும் பாட்டுடன் இயைத்து முடிக்க. 893

2792. (இ-ள்) பொங்குபுனல்...பெற்று - பொங்கும் நீர்ப்பெருக்கினையுடைய காவிரி பாயும் நாடாகிய சோழ நாட்டில் மீண்டும் போவதற்குத் திருவுள்ளங் கொள்ளப் பெற்று; மங்கையருக்கரசியாரும்...நோக்கி - மங்கையர்க்கரசி யம்மையாரும் பாண்டிய வரசரும் மந்திரியாரும்கூட அவர்தம் திருவடிகளைப் பிரிதலாற்றுதவர்களாய் உடனே போதுதற்கு மனம் துணியும் அந்நிலையினை நோக்கி; இங்கு...என்று - இங்கு நான் சொல்வதனைக் கேட்டு அதன்படி ஒழுக இசைந்தீர்களேயானல் இறைவரது சிவநெறியினைப் பாதுகாத்துக்கொண்டு இருப்பீர்களாக என்று கூறி,

(வி - ரை) பொருபுனல் - செழித்து அலைத்து மேன்மேல் வரும் நீர்; **காவிரி நாடு** - சோழ நாடு.

மீண்டு போதுதற்குத் திருவுள்ளமாகப் பெற்று - திரும்பிப்போக மனங்கொண்டு;

2792. **பொங்குபுனற் காவிரிநா டதனின் மீண்டு**
போதுதற்குத் திருவுள்ள மாகப் பெற்று
மங்கையருக் கரசியார் தாமுந் தென்னர்
மன்னவனு மந்திரியார் தாமுங் கூட
அங்கவர்தந் திருப்பாதம் பிரிய லாற்ரு
துடன்போக வொருப்படுமவ் வளவு நோக்கி
''இங்குநான் மொழிந்ததனுக் கிசைந்தீ ராகி
லீசர்சிவ நெறிபோற்றி யிருப்பீ'' ரென்று, 894

பெற்று - திருவருட் குறிப்புத் தரப்பெற்று என்ற குறிப்புடன் நின்றது. **போற்றும்**-என்பது பாடமாயின், திருவுள்ளமாகவே முன்சொன்னவாறு தம்மைப் போற்றும் மங்கையர்க்கரசியாரும் எனத் தொடர்ந்து பொருள்கொள்க.

பெற்று - நோக்கி - என்று - அருளிச்செய்த பின்பு - என்று மேல்வரும் பாட்டுடன் இயைத்துக்கொள்க.

ஒருப்படுதல் - இசைதல்; ***அங்கு - உடன் போக*** என்க. ***அங்கு*** - அக் காவிரி நாட்டில்.

கூட - பிள்ளையாரைச் சூழும் அடியார் கூட்டத்துடன் கூட.

அவ்வளவு - அந்த நிலையினை; ***அவ்வளவாவது*** தங்களுடைய நாட்டினையும் அரசாங்கத்தையும் விட்டுப் பிள்ளையாரைப் பின்பற்றிச் சென்று வாழ்தலே உறுதிப் பயனும் என்று முடித்து அவ்வாறே கூடச் சென்றுவிடத் துணியும் அந்த அன்பு முற்றிய நிலை. ''முன்ன மவனுடைய நாமங் கேட்டாள்...தலைப்பட்டா ணங்கை தலைவன் ருளே'' (தாண்) என்ற திருவாக்கின் கருத்தாகிய நிலையினை ஈண்டு வைத்துக் காண்க; சேரமான் பெருமாணயனர் அழைக்கச் சேரநாட்டுக்கு எழுந்தருளி அவருடனே பலநாள் தங்கிய நம்பிகள் மீளத் திருவாரூருக்கு எழுந்தருள வழிக்கொள்ளும்போது, பெருமாள் ''பிரிவாற்ருர் பின்செல்வார்'' (157); ''உமது பிரிவாற்றேன் என்செய்கேன் யானென்ன'' (158) உரை செய்வதும், அதற்கு நம்பிகள் ''ஒன்றுநீர் வருந்தாதே யுமதுபதியின்கணிருந், தன்றினுர் முனைமுருக்கி யரசாள்வீர்'' என மொழிந்து தேற்றியவழி, அருட்சேரர் ''பாரோடு விசும்பாட்சி யெனக்குமது பாதமலர்'' (159) எனக் கூறுவதும் (கழறிற். புரா) ஆகிய வரலாறுகள் இங்குச் சிந்திக்கத்தக்கன. ''மண்ணுள்வான் மதித்துமிரேன்'' - ''போகம் வேண்டி வேண்டிலேன் புரந்தராதி யின்பமும்'' (திருவா) என்பன முதலாகிய திருவாக்குக்களிற் குறித்த அன்பு நிலைகளையும் காண்க.

இங்கு நான் மொழிந்ததனுக் கிசைந்தீராகில் - தமது மொழியினையே அவர்கள் மருதவண்ணம் ஆணையாகக் கூறியபடி. ***இங்கு*** - இவ்விடத்து; இந்நிலையில்.

ஈசர் சிவநெறி போற்றியிருப்பீர் - சிவநெறி போற்றியிருத்தலே அரசாட்சியின் கடமையும், அன்பு நெறியும், தமது திருவுள்ளத்துக் கிசைந்ததுமாம் என்றபடி. **போற்றுதல்** - காப்பாற்றுதல். முன்போல மயங்கி நெகிழவிடாது கைப்பிடியாகக் கொண்டு போற்றுவீர் என்ற குறிப்பும் காண்க. **இருப்பீர்** - இருப்பீராக என விதித்தற் பொருளில் வந்த முன்னிலை வினைமுற்று.

894

2793. **சாலமிகத்** தளர்வாரைத் தளரா வண்ணந்
தகுவனமற் றவர்க்கருளிச் செய்த பின்பு,
மேலவர்தம் **பணிமறுக்க வவரு மஞ்சி**
மீள்வதனுக் கிசைந்துதிரு வடியில் வீழ்ந்து
ஞாலமுய்ய வந்தருளும் பிள்ளை யாரைப்
பிரியாத நண்பினொடுந் தொழுது நின்றார்;
ஆலவிட முண்டவரை யடிகள் போற்றி
யந்நாட்டை யகன்றுமீண் டணையச் செல்வார்; 895

2793. (இ-ள்) *சாலமிக...பின்பு - பிரிவாற்றாது மிக அதிகமாகத் தளர்வார்களாகிய அவர்களைத் தளராதபடி தகுந்த மொழிகளை அவர்களுக்குச் சொல்லியருளிய பின்பு; மேலவர்தம்...நின்றார் - மேன்மையுடைய அவரது ஏவலை மறுக்க அஞ்சி, அவர்தம்மைப் பிரிந்து சோணாட்டில் மீண்டு செல்வதனுக்கு இசைந்து, விடைபெற்றுக் கொள்ளும் வகையால் அவருடைய திருவடிகளில் வீழ்ந்து, உலக முய்தற்பொருட்டே வந்தவதரித்த அப்பிள்ளையாரைப் பிரியாத நண்புடனே தொழுது நின்றார்கள்; ஆலவிடம்...செல்வார் - (அவரும் விடை கொண்டு) ஆலகால விடத்தை அமுது செய்தருளிய இறைவரைத் துதித்து, அந்நாட்டினை நீங்கித் தமது நாட்டில் மீண்டு அணையச் செல்வாராகி;*

(வி -ரை) தளர்வார் - *பிரிவாற்றாமையால் பிள்ளையாரை நீங்கி இங்குத் தங்கவும் மாட்டாது, அவராணையால் உடன் செல்லவும் மாட்டாது தளர்வார்.*

தளராவண்ணம் தகுவன - *ஆறுதல் மொழியும் கடமைகளாகிய வேதநெறியும் ஆகிய தக்க மொழிகள்.*

மீள்வதனுக்கு - *பிள்ளையார் சோழநாட்டுக்கு மீளும் செயலுக்கு, உடன் செலாது தாம் மீளுதற்கு என்றலுமாம்.*

தொழுது நின்றார் - *விடைபெறும் நிலையில் நின்றனர்.*


ஆலவிடம் உண்டவரை அடிகள் போற்றி - *விடைபெற்றுச்செல்லும் நிலையினால் பிள்ளையார் இறைவரை வணங்கி.* **போற்ற** - *என்பது பாடமாயின் சோணாட்டு ஏனைப் பதிகளிலும் சென்று போற்றும்பொருட்டு என்க.*

மீண்டு அணைய - *சோழநாட்டில் மீளச் சேர.*


செல்வார் - சென்று - போற்றிப் - பாடிப் - போற்றி அணைந்தார் *என மேல் வரும் பாட்டுடன் முடிக்க.*

ஞாலமுய்ய வந்தருளும் - *உலகமுய்ந்து நன்னெறி சேரும்படி பரசமயங்களை நிராகரித்து நீற்று நெறியினை ஆக்கஞ் செய்யப் பாண்டிநாட்டுக்கு எழுந்தருளி வரும் என்ற குறிப்புடனும் நின்றது; 1553-ம் பிறவும் பார்க்க.*


பிரியாத நண்பு - *உள்ளத்தால் என்றும் பிரியலாற்றாத அன்பின் பெருக்கு.*



திருவாடானை ஆதி ரத்தினேசுவரர் திருக்கோயில் பாட்டு :- 2789



திருப்புனவாயில் திருக்கோயில் பாட்டு :- 2789



திருப்பாதாளீச்சுரம் பாட்டு :- 2794

2794. **பொன்னிவளந்** தருநாடு புகுந்து மிக்க
பொருவில்சீர்த் திருத்தொண்டர் குழாத்தி னோடும்
பன்னகப்பூ ணணிந்தவர்தங் கோயி றோறும்
பத்தருடன் பதியுள்ளோர் போற்றச் சென்று,
கன்னிமதிற் **றிருக்களரும்** போற்றிக் கண்டங்
கறையணிந்தார் **பாதாளீச் சுரமும்** பாடி
முன்னணைந்த பதிபிறவும் பணிந்து போற்றி
முள்ளிவாய்க் கரையணைந்தார் முந்நூன் மார்பர். 896

பிரியாத அன்பினோடும்—என்பதும் பாடம். *895*

2794. (இ-ள்) பொன்னி...புகுந்து - காவிரி வளஞ்செய்யும் சோழ நாட்டிலே புகுந்து; மிக்க...சென்று - மிகுந்த ஒப்பற்ற சிறப்புக்களையுடைய திருத்தொண்டர் கூட்டத்துடனே பாம்புகளைப் பூணுக அணிந்த இறைவரது திருக்கோயில்கள் தோறும் அன்பர்களுடனே அவ்வப்பதியி லுள்ளோர்களும் எதிர் கொண்டு போற்றச் சென்று; கன்னிமதில்...பாடி - பகைவரால் கட்டழிக்கப்படாத மதிலின் சிறப்புடைய திருக்களர் என்ற பதியினையும் துதித்துப் பின்பு, கழுத்தில் விடமணிந்த இறைவரது பாதாளீச்சுரத்தினையும் பாடிப் பணிந்து; முன் அணைந்த...மார்பர் - முன்னே வழிபட்டுச் சென்ற பிற பதிகளையும் வணங்கித் துதித்து முந்நூலணிந்த மார்பினையுடைய பிள்ளையார் முள்ளிவாய்க்கரையினை அணைந்தருளினர்.

இந்நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி - ரை) பொன்னி வளந்தரு நாடு புக்கு - சோழ நாட்டினுள்ளே புகுந்து. திருமணமேற்குடியின் வடக்கில் 4 நாழிகை அளவில் உள்ள வெள்ளாற்றினைக் கடந்தால் சோழநாட்டினுள் அடையலாம். வெள்ளாறு அக்காலத்தில் பாண்டி நாட்டுக்கும் சோழநாட்டுக்கும் எல்லையாக இருந்ததென்பது நாட்டுச் சரிதத்தால் அறியப்படும். இந்நாளில் மணமேற்குடி சோழநாட்டில் தஞ்சாவூர் சில்லாவைச் சார்ந்ததாகியுள்ளது.

பொருவில் சீர் - ஒப்பற்ற சிறப்பாவது பிள்ளையாருட னணைந்த சிறப்பும், அது காரணமாகப் பின்னர்ச் சிவனுலகம் பெற்று முத்தி பெறநிற்கும் சிறப்புமாம்.

கோயில்தோறும் - இவை சோழநாட்டின் தெற்கெல்லையணிமையில் உள்ளன. இவை திருவுசாத்தானம் முதலாயின என்ப.

கன்னிமதில் திருக்களர் - இப்பதியில் திருமதில் விசேடச் சிறப்புடையதென்ற குறிப்புப்பெற வைத்ததாம்; தேவாரம் பார்க்க. ''நீண்ட மாவய லீண்டு மாமதில்'' (தேவா).

பாதாளீச்சரம் - பாம்பணிப் பாதாள் - பாமணிப் பாதாள் என வழங்கும்; இராமேச்சுரத்தினின்றும் கடலோரமாக வரும் தனிப் பாதை இதனணிமையில் தெற்கில் 1 1/2 நாழிகையளவில் உள்ள மன்னார்குடி வரையும் நேரே வந்து சேர்கின்றது.

முன்அணைந்த பதி பிறவும் - வழியிற் கிடைத்தமையால் முன் அணைந்தவை தாமே என விட்டு மேற்செல்லாமல், அவற்றையும் மீளச் சென்று வணங்கினர் என்க; இது முறையும்

மரபுமாம். இவை திருப்பூவனூர், திருவெண்ணியூர், திருஇரும்பூளை முதலாயின என்பது கருதப்படும்.

முள்ளிவாய்க்கரை - இஃது இப்போது ஓடம்போக்கியாறு எனவும், முள்ளியாறு எனவும் வழங்கும்; காவிரிக் கிளைநதி. கடுவாய்க்கரை, பழமண்ணிப்படிக்கரை முதலியவை காண்க. இப்பெயர் நதியின் கரையில் அமைந்த ஊர்ப்பெயராதலும் கூடும். இவ்வாற்றின் வடகரையில் அணிமையில் உள்ளது திருக்கொள்ளம்பூதூர்.

முன்னணைந்து—என்பதும் பாடம். 896

திருக்களர்

திருச்சிற்றம்பலம் பண் - சீகாமரம்

நீரு ளார்கயல் வாவி சூழ்பொழி னீண்ட மாவய லீண்டு மாமதில்
தேரினூர் மறுகில் விழாமல்கு திருக்களருள்
ஊரு ளாரிடு பிச்சை பேணு மொருவ னேயொளிர் செஞ்ச டைம்மதி
ஆரநின் றவனே யடைந்தார்க் கருளாயே. (1)

இந்து வந்தெழு மாட வீதி யெழில்கொள்கா ழிந்நகர்க் கவுணியன்
செந்து நேர்மொழியா ரவர்சேருந் திருக்களருள்
அந்தி யன்னதொர் மேனி யானை யமரர் தம்பெரு மானை ஞானசம்
பந்தன் சொல்லிவை பத்தும் பாடத் தவமாமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– பொழிலும் வயலும் **மதிலும்** மறுகும் மாடமும் விழாவு மாக மல்கச் சிறந்த திருக்களருள் பிச்சை பேணுமொருவன் என்பது முதலாகப் போற்றப்படும் இறைவரே ***அடைந்தார்க்கருளீரே.***

பதிகப் பாட்டுக் குறிப்பு:– ***(1) ஈண்டு மாமதில்*** - ''கனகமதில்'' *(2473);* வாவியும் பொழிலும் வயலும் மதிலும் மறுகும் தேரும் விழாவும் கூட்டி எல்லாச் சிறப்பும் உடன் கூறிய நயம் காண்க; **தேர் விழா** - பிள்ளையார் எழுந்தருளியது வேனிற்காலம் என்ற குறிப்புத் தருவதாம். ''நளிர்வேலைக் கரையினயந் திருந்தாரன்றே'' (2787) என்றது மிக்குறிப்பு. **ஊருளார்** - உயிர்கள்; ***பிச்சை*** - பசுபோதம்; ***ஆர்தல்*** - நிறைதல். ***அடைந்தார்க்கருளாயே*** - பதிகக் கருத்தாகிய மகுடம்; ''இடர்களையாய் நெடுங்கள மேயவனே'' என்புழிப்போல;—***(2) தாளினூர்***-சிவத்தவ முயற்சியுடையார்; **தவம்** - சிவபூசை;—***(3) சேடர்*** - அறிவுடையவர்;—***(4) அன்பு*** - அருள்;—***(7) தாங்கும் மால்வரை*** - வில்லாகக் குனித்து ஏந்திய;—***(11) செந்து நேர் மொழி - செந்து*** - பெரும் பண்களுள் ஒன்று; பண்ணினேர் மொழியாளுமை'' (தேவா) . **நேர்** - உவம உருபு; **அந்தி** - செவ்வான ஒளி - அந்திப்பொழுது அதனிற் காணும் செவ்வொளிக் காயிற்று. **தீ** என்பது குறுகித் **தி** என நின்றதென்றுகொண்டு, ***அம்தி*** - அழகிய தீப்போன்ற என்றலுமாம். தீயினுக்கு அழகாவது நிறத்தால் ஒப்பாயினும் தன்மையால் மாறுபட்டு எரித்தலின்றி அருளுடைத்தாதல். ''எரிபோல் மேனிப் பிரான்.''

தலவிசேடம்:—திருக்களர் - சோழநாட்டில் காவிரித் தென்கரை 105-வது பதி; இது பாரிசாத வனம் என்றும் சொல்லப்படும். துர்வாசருக்கு இறைவர் வெளிப்பட்டுத் திருக்கூத்துக் காட்சியருளிய பதி. இங்குள்ள நடராசர் அவருக்குக் காட்சியருளிய மூர்த்தி; பராசரர் - காளவர் முதலிய முனிவர்கள் வழிபட்ட பதி. சுப்பிரமணியர் சந்நிதி சிறப்பு. சுவாமி - **களர்முலை நாதர்**; அம்மை - **இளங்கொம் பன்னாள்**; தீர்த்தம் - **தூர்வாச தீர்த்தம்**; மரம் - **பாரிசாதம்**; பதிகம் 1.

இது திருத்துறைப்பூண்டி நிலயத்தினின்றும் மேற்கே மட்சாலைவழிக் களப்பாள் போகும் பாதையில் 4 நாழிகையளவில் முத்துப்பேட்டைப்பாதை சந்திப்பினின்றும் வடக்கே மட்சாலைவழி 1 1/2 நாழிகையளவில் அடையத்தக்கது.

திருப்பாதாளேச்சுரம்

திருச்சிற்றம்பலம் பண் - வியாழக்குறிஞ்சி.

மின்னியல் செஞ்சடைமேல் விளங்கும்மதி மத்தமொடு நல்ல
பொன்னியல் கொன்றையினான் புனல்சூடிப் பொற்பமரும்
அன்ன மனநடையா ளொருபாகத் தமர்ந்தருளி நாளும்
பன்னிய பாடலினா னுறைகோயில் பாதாளே. (1)

பன்மலர் வைகுபொழில் புடைசூழ்ந்த பாதாளைச் சேரப்
பொன்னியன் மாடமல்கு புகலிந்நகர் மன்னன்
தன்னொளி மிக்குயர்ந்த தமிழ்ஞான சம்பந்தன் சொன்ன
இன்னிசை பத்தும்வல்லா ரெழில்வானத் திருப்பாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- மின்னியல் செஞ்சடைமேல் மதிமத்தமொடு பொன்னியல் கொன்றையினான், வெள்ளைத் தோடமர் காதினல்ல குழையான் என்பன முதலாகப் பலவாற்றானும் அறியப்படும் இறைவன் உறைகோயில் பாதாளே.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) மின்னியல் - மின் போன்ற **இயல்** - உவம உருபு; ''மின்வண்ண மெவ்வண்ணம்...வீழ்சடை'' (பொன்வ. அந்-1); **பாடல்** - மறை; 2-4-7-8-9-10 பார்க்க;—**(2) நீடலர்** - மாலைபோல நீண்டு அலர்கின்ற; **நிரம்பா மதி** - பிறை; **சுடுநீறு** - சுட்டதால் - சங்காரத்தில் அழித்தலால் - விளையும் நீறு; **வெள்ளைத் தோடு** சங்குத் தோடு; **தோடமர் காதினல்ல குழையான்** - ஒரு காதில் தோடும் ஒரு காதில் குழையும் உடையான்;— **(3) சாமம் போக** - இரவில்; **தூமொழி**-மொழியவராகிய அம்மை;—**(4) செறுவில் - பங்கயம் நின்றலர்தல்** - நீர்வளமும் நிலவளமும் காட்டும்;—**(5) தேய்பிறை** - தேய்ந்து வந்தடைந்த பிறை; —**(9 தமது ஆள்வினை** - தமது உயிர் முயற்சி;—**(10) காலையில் உண்பவர்** - கண்தான் கழுவாமுன் ஓடிக் காலையில் கலவைக்கஞ்சியை உண்ணும் புத்தர்;—**(11) தன்னொளி** - சிவவொளி; சிவஞான விளக்கம்.

தல விசேடம்:- திருப்பாதாளீச்சுரம் - காவிரித் தென்கரைத் தேவாரப் பாடல் பெற்ற 104-வது பதி; ''பாமணி'' - ''பாம்பணி'' என வழங்கப்படுகின்றது; ''பாதாளே'' என்பது

2795. மலைவளர்சந் தனமகிலுந் தேக்கு முந்தி
மலர்ப்பிறங்கல் வண்டிரைப்பச் சுமந்து பொங்கி
யலைபெருகி யாளியங்கா வண்ண மாறு
பெருகுதலா லத்துறையி லணையு மோடம்
நிலைபுரியு மோடக்கோ னிலையி லாமை
நீர்வாழ்நர் கரையின்க ணிறுத்திப் போகக்
கலைபயிலுங் கவுணியர்கோ னதனைக் கண்டக்
கரையின்க ணெழுந்தருளி நின்ற காலை, 897

---

*பதிகத்துட் கண்ட பெயர். பாதாள உலகத்தினின்றும் ஆதிசேடனது தம்பியாகிய தனஞ்சயன் என்னும் அரவு பிலத்தின் வழியே வந்து பூசித்துப் பேறுபெற்ற பதியாதலின் அத்தொடர்புபற்றிப் பாதாள் எனப்பட்டது என்ப. ''சர்ப்ப புரம்'' என்று மொழிபெயர்த்து வடமொழியில் வழங்குதல் காண்க. சுவாமி - **சர்ப்பரேசர்;** அம்மை - **அமுதநாயகி;** பதிகம்1.*

இது மன்னார்குடி நிலையத்தினின்றும் வடமேற்கே மட்சாலை வழி 1 1/2 நாழிகை யளவில் அடையத்தக்கது; திருப்பூவனூரின்றும் மன்னார்குடிக் கற்சாலை வழி 9 நாழிகையளவில் பாமணியாற்றின் வடகரை மட்சாலைவழி வடகிழக்கே 1 1/2 நாழிகையில் அடைவது மற்றொரு வழி.

2795. (இ-ள்) மலைவளர்...அலைபெருகி - மலையில் வளர்கின்ற சந்தனம், அகில், தேக்கு முதலிய மரங்களை உந்தி அலைத்துக்கொண்டு மலைபோன்ற மலர்க் குவியல்களை வண்டுகள் சத்திக்கச் சுமந்து பெருகி அலைகள் மிகுந்து; **ஆள்...பெருகுதலால்** - ஆள்கள் இயங்காதபடி ஆறு பெருகி வருதலால்; **அத்துறையில்...நிலையிலாமை** - அந்தத் துறையில் அணையும் ஓடத்தை நீரின் நிலைகண்டு செலுத்தும் ஓடக்கோல் நிலைக்கமாட்டாமையால்; **நீர்வாழ்நர்...போக** - நீர்வாழ் சாதிகளாகிய மக்கள் கரையினிடத்தே நிறுத்திச் சென்றுவிடவே; **கலைபயிலும்...காலை** - கலைகள் பயிலும் கவுணியர் தலைவராகிய பிள்ளையார் அதனைப் பார்த்து அந்தக் கரையின் கண்ணே எழுந்தருளி நின்றபோது;

(வி-ரை) மலைவளர் - சந்து - அகில் - தேக்கு - இவை குறிஞ்சிக் கருப்பொருள்கள்; மலையில் விளைவன. இந்த ஆறு மலையினின்றும் பெருகி வருதலையும், நீர் வெள்ளத்தின் மிகுதியினையும் குறிக்க இவற்றை **உந்தி** என்றார். **மலை**- ஆற்றின் தொடக்கம்; **மலர்ப் பிறங்கல்** - குறிஞ்சியின் மலைகளிலும் மருத நாட்டின் வருமுன் இடையில் முல்லைக் காட்டினும் உள்ள பூக்களின் ஈட்டம்; இதனால் ஆறு வரும் வழியும் குறித்தபடி.

உந்தி - சுமந்து - தேக்கு முதலியவை கனத்த பண்டங்களாதலின் அவற்றை **உந்தி** என்றும், மலர்ப்பிறங்கல் இலகுவாதலின் **சுமந்து** என்றும் கூறிய கவிநயமும் காண்க.

பொங்கி - இடையில் வரும் நீர்களும் கூடுதல் குறித்தது.

ஆறு - இச்சரிதங் காரணமாக இப்போது ஓடம் போக்கி என வழங்கப்படுகிறது.

ஆள் இயங்காவண்ணம் - பெருகுதல் - இயங்கா - என்றதனால் ஊடே நடக்க இயலாமையே யன்றி ஓடத்தால் இயக்கப்பட்டு ஊடே செலுத்த இயலாமையும் குறித்தது.

2796. **தேவர்பிரா னமர்ந்ததிருக் கொள்ளம் பூதூ**
ரெதிர்தோன்றத் திருவுள்ளம் பணியச் சென்று
மேவுதலா லோடங்கள் விடுவா ரின்றி
யொழிந்திடவு மிக்கதோர் விரைவாற் சண்பைக்
காவலனு ரோடத்தின் கட்ட விழ்த்துக்
கண்ணுதலான் **றிருத்தொண்டர் தம்மை யேற்றி**
நாவலமே கோலாக வதன்மே னின்று
நம்பர்தமைக் "கொட்ட"மென நவின்று பாட, 898

நிலைபுரியும் ஓடக் கோல் நிலையிலாமை - நிலைபுரிதல் - *நீரின் ஆழமும், வேகமும், செல்லும் திசையும், துறையும், பிறவும் கண்டு ஊன்றி ஓடத்தை ஒழுங்குபடச் செலுத்துதல்.* ***நிலை*** *- இவை ஓடம் போக்கும் கலைக்கு வேண்டு வனவாகிய பகுதியெல்லாம் குறித்தது.* ***நிலைபுரியும் ஓடக்கோல்*** *- இவை எல்லாவற்றையும் செய்தற்குக்* ***கோல்*** *ஒன்றே துணையாக உள்ளது என்றபடி; வாளின் போர் வெற்றிக்கு வாளும் வில்லின் போருக்கு வில்லும் போல, நீர்ப்பெருக்கில் ஆற்றில் ஓடம்போக்கும் நீர்பொரும் போர்க்கு ஓடக்கோலே படையாம் என்பது.*

நிலையிலாமை *- ஓடக்கோல் நீரின் அடிப்புறத்துத் தரையில் ஊன்றுதல் பெருதாயின் ஓடத்தை எவ்வாற்ருனும் உந்துதல் இயலாமை குறித்தது.*

நீர் வாழ்நர் *- நீரில் ஓடம் போக்கி அதனுல் வரும் ஊதியங்கொண்டு வாழும் அத்துறை மாக்கள்.*

நிறுத்தி *- ஓடத்தை வெள்ளங் கொண்டுசெல்லாமல் கரையிற் றறிகளில் அணைத்துக்கட்டி;* ***"கட்டவிழ்த்து"*** *(2796) என மேற்கூறுதல் காண்க.*

கலைபயிலும் *- கலைகளாற் பயிலப் பெறும் புகழினையுடைய; "கலை மலிந்த சீர் நம்பி" (தேவா).*

அக்கரையின் *- அந்த ஆற்றின் தென்கரை; அகரம்,* ***"முள்ளிவாய்க் கரை யணைந்தார்"*** *(2796) என்று முன்கூறிய அந்த என முன்னறிசுட்டு.*

எத்துறையும்—நிலையிலாமல்*—என்பனவும் பாடங்கள்.* *897*

2796. (இ-ள்) தேவர்பிரான்...தோன்ற - தேவர்பெருமானது திருக்கொள்ளம் பூதூர் எதிரிலே தோன்ற அதனைக் கண்டு; **திருவுள்ளம் பணியச் சென்று மேவுதலால்** - அதன்கட் சென்று பணிவதற்குத் திருவுள்ளம் பொருந்துதலினுலே; **ஓடங்கள்...ஒழிந்திடவும்** - ஓடங்களைச் செலுத்துவோர்கள் அங்கில்லாமல் போகவும்; **மிக்கதோர்...கட்டவிழ்ந்து** - மிகுந்ததொரு வேகத்தினுலே சீகாழித் தலைவராகிய பிள்ளையார் ஓடத்தினைக் கட்டியிருந்த கயிற்றினைக் கட்டு அவிழ்த்து; **கண்ணுதலான் ...ஏற்றி** - நெற்றிக்கண்ணராகிய இறைவரின் திருத்தொண்டர்களை அவ்வோடத்தின் மேல் ஏறச்செய்து; **நாவலமே...பாட** - தமது நாவின் வல்லமையே கோலாகக் கொண்டு அவ்வோடத்தின்மேல் நின்று நம்பரைக் **"கொட்டமே"** என்று தொடங்கும் பதிகத்தைப் பாட,

(வி - ரை) எதிர் தோன்ற - எதிர்க்கரையில் கட்புலப்பட.

சென்று பணியத் திருவுள்ளம் மேவுதலால் - என்க. ஒரு திருக்கோயில் கண்ணுக்குத் தோன்றியவுடன் அங்குச் சென்று அதனைப் பணியும்படி உள்ளங் கொள்ளுதல் முன்னைத் தவத்தானாகிய மனநிலை பக்குவமுடையார்க்கே நிகழ்வதாம். ''காவேரித்தென்கரைபோய்ச்... கோயில்பல சென்றிறைஞ்சி''க் கண்டியூர்பணிந்த (கழறிற். புரா - 130) நம்பிகளும் கழறிற்றறிவார் நாயனாரும் ''வடகரையிற் றிருவையா றெதிர்தோன்ற மலர்க்கரங்க ளுடலுருக வுள்ளுருக வுச்சியின்மேற் குவித்தருளிக் கடல் பரந்ததெனப் பெருகுங் காவிரியைக் கடந்தேறித், **தொடர் வுடைய திருவடியைத்** தொழுவதற்கு நினைவுற்றார்'' (மேற்படி- 131) ''திரு ஐயா றிறைஞ்ச மனமுருகி நையா நின்ற திவ்வாறு கடந்து பணிவோ நாமென்ன'' (மேற்படி 131)என்று வரும் மனநிலைகளும், ''நாணனே தோன்றுங் குன்றி னண்ணுவே மென்ன''த் (745) திண்ணனார்க்கு நிகழ்ந்த மனநிலையும் ஆகியவற்றின் பரிபக்குவநிலைகளின் உள்ளுறை ஈண்டுச் சிந்திக்கத் தக்கன; இம் மூன்றிடங்களினும் உலக ஆறுகள் இறைவரைச் சாரும் ஆர்வத்தின்படிச் சார வொட்டாது குறுக்கிடுதலும் அன்பினாறேவென்று இறைவர் சார்பு நிகழ்தலும் ''பாதம்பணிந் தன்பினாறு நெறியாச் செலவுரியார்'' (கழறி. புரா - 133) என்று இதன் உள்ளுறை விளக்கப்படுலும் காண்க;- –இவ்வாறு சிவாலயத்திலும் திருவேடத்திலும் கண்டபோதே அன்பும் ஆர்வமும் மிகுதல் பக்குவம்பற்றி நிகழுமென்பதும், அவையே பக்குவத்தின் அறிகுறியாமென்பதும், ''நல்வினைக்கண், எல்லா வுலகு மெடுப்புண்டெடுப்புண்டு, செல்காலம் பின்னரகஞ் சேராமே-நல்ல நெறி, **எய்துவதோர் காலந்தன் னன்பரைக்கண் டின்புறுதல்**, உய்யு நெறிசிறிதே யுண்டாக்கி'' என்ற போற்றிப் பஃறொடை (55-56) யானு மறிக.

ஒழிந்திடவும் மிக்கதோர் விரைவால் - உம்மை சிறப்பும்மை. **இடையூறுகள் பெருகி வரும்போது மேலும் ஆர்வம் மிகுதல் பக்குவத்தின் விளைவு.**

ஓடத்தின் கட்டு - நீர்ப்பெருக்கு ஈர்த்துச் செல்லாது ஓடத்தினைக் கரையிலே தறியில் அணைத்துக் கட்டுதல் வழக்கு.

நாவலமே கோலாக - கோல் - ஊன்றி ஓடத்தைச் செலுத்தும் ஓடக்கோல்; நாவலம் - நாவின் வல்லமையாகிய சத்தி; (**நா** - கோலாக, **வல்லமை** - அக்கோலை ஊன்றி இயக்கும் சத்தியாக.)

அதன்மேல் நின்று - அவ்வோடத்தின் மேலே தாமும் ஏறி நின்று. இரட்டுற மொழிதலால் அவ்வல்லமையினை மேல் கொண்டு என்ற குறிப்புமாம்.

நம்பர் - எக்காலத்தும் நம்பியடைதற்குரியராய்க் கைவிடாது உள்ளே நின் றுதவுபவர். மேற்பாட்டிலும் **நம்பரவர்** (2797) என்ற கருத்துமிது. **''நம்பனை உள்க''** என்று தொடங்கி **''நல்குமாறருள் நம்பனே!''** என்று மகுடஞ் சூட்டிப் பதிகம் அருளிய பிள்ளையாரது திருவுளத்தின் குறிப்பினை எடுத்துக்காட்டி வற்புறுத்தியபடி. ''சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனாதல்'' (சிவஞானபோதம் - 10-2-வெண்) என்றபடி **எவ்விடத்தும் கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பதாம்.**

கொட்டம் - ''கொட்டமே கமழும்'' என்று தொடங்கும் பதிகத்தின் முதற் குறிப்பு.

2797. உம்பருய்ய நஞ்சுண்டா ரருளா லோடம்
"**செலச்செல்ல வுந்து**"தலா லூடு சென்று
செம்பொனேர் சடையார்தங் கொள்ளம் பூதூர்
தனைச்சேர வக்கரையிற் சேர்ந்த பின்பு.
நம்பரவர் தமைவணங்க ஞான முண்ட
பிள்ளையார் நற்றொண்ட ருடனி ழிந்து
வம்பலரு நறுங்கொன்றை நயந்தார் கோயில்
வாயிலின்முன் மகிழ்ச்சியோடு வந்து சார்ந்தார். 899

நவின்று பாட - நம்பரை நவின்று கொட்டம் எனப் பதிகம் பாட என்க; பொருளும் சொல்லும் குறித்தபடியாம். *898*

2797. (இ-ள்) உம்பருய்ய...உந்துதலால் - தேவர்கள் உய்யும்படி விடத்தினை உண்டருளிய இறைவரது திருவருளினாலே அவ்வோடம் செலச்செல்லும்படி உந்தப் படுதலினாலே; **ஊடு சென்று...பின்பு** - செம்பொன்னை ஒத்த சடையினையுடைய இறைவரது திருக்கொள்ளம்பூதூரினைச் சேரும்படி அக்கரையிலே சேர்ந்த பின்பு; **நம்பரவர்...இழிந்து** - நம்பராகிய இறைவரை வணங்குதற்கு ஞானமுண்டருளிய பிள்ளையார் நல்ல திருத்தொண்டர்களுடனே ஓடத்தினின்றும் கீழே இறங்கிச் சென்று; **வம்பலரும்...சார்ந்தார்** - வாசனை வீசுகின்ற நறிய கொன்றையினை விரும்பியணிந்த இறைவரது திருக்கோயிற் றிருவாயிலின் முன் மகிழ்ச்சியுடனே வந்து சார்ந்தருளினர்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) உம்பருய்ய நஞ்சுண்டார் - தம்மை அபயமாக அடைந்த அமரர் சாவாதபடி காத்துச், சாதலைச் செய்யும் விடத்தின் தன்மையை மாற்றிப் பிழைப்பிக்கும் சத்தியாக்கியது போலக், கீழ்நோக்கி ஈர்த்துச் செல்லும் நீரின் சத்தியை மாற்றிய நிலைக் குறிப்பு.

செலச் செல்லவுந்துதலால் - செல்லுதற்குச் செல்லும்படி உந்துதலினாலே. ஓடம் நீரினை ஊடு கீறித் தானே செல்லாதாதலின் அவ்வாறு அது செல்லும்படி உந்த; வெளிப்பார்வைக்கு ஓடம் ஈண்டுத் தானே செல்வதுபோலத் தோன்றினும் அதனை வெளித் தோற்றாமல் உள்நின்று உந்திச் சென்றது திருவருட் சத்தியாம் என்பதாம்.

ஊடு - நீரினைக் குறுக்கிட்டு ஊடுருவிக்கொண்டு.

சேர - சேரும்படியாக; சேரும்பொருட்டு.

அக்கரையில் - பிள்ளையார் அணைந்து நின்ற இந்தத் தென்கரையினின்றும், இறைவர் கோயில் நின்ற அந்த வடகரையின்கண்.

வம்பலரும் - வம்பு - வாசனை; ஈண்டுப் பிள்ளையார் எழுந்தருளியது வேனிற் காலமாகக் கருதப்படுதல் முன் உரைக்கப்பட்டது. திருக்களர் - பதிகப்பாட்டு; கொன்றை மிகுதியாகப் பூத்தல் இளவேனிற் காலத்திலாம். ''சித்திரையிற் சதயமாம் திருநாளில்'' திருவடியடைந்த

அரசுகள் ''கொன்றைமாலை கொண்டடியே ஞனிட்டு'' (தாண்) என்றதும் காண்க. கார்க் கொன்றை'' கார் நறுங்கொன்றை என்பன முதலாக வருவனவற்றுள் **கார்** என்பது கார் காலத்தைக் குறியாது கார்க்குரிய முல்லை நிலத்தை ஆகுபெயராய் உணர்த்தியது; கொன்றை, முல்லைக் கருப்பொருள். முல்லைக்குக் காலம் கார்காலமாம். **வாசனை** என்ற பொருளில் **நறும்** என்றது மிகுதி குறித்தது என்க.

கொன்றை நயந்தார் - ''கொன்றைசேர் சடையான்'' (11); ''கொன்றை பொன் சொரியும்'' (5) என்ற பதிகக் குறிப்பு.

தமை வணங்கி—என்பதும் பாடம். 899

திருக்கொள்ளம்பூதூர் - ஈரடிமேல்வைப்பு

திருச்சிற்றம்பலம் பண் - காந்தார பஞ்சமம்.


கொட்ட மேகம ழுங்கொள்ளம் பூதூர்
நட்ட மாடிய நம்பனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறரு ணம்பனே. (1)

கொன்றை சேர்சடை யான்கொள்ளம் பூதூர்
நன்று காழியுண் ஞானசம் பந்தன்
இன்றுசொன் மாலைகொண் டேத்தவல் லார்போய்
என்றும் வானவ ரோடிருப்பாரே. (11)


திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– நம்பனை உள்கச் செல்லவுந்துக என்று சிந்தையார் தொழ நம்பனே அருள் நல்குமாறு! என்று திருவருளைப் போற்றியது.


பதிகப் பாட்டுக் குறிப்பு:– (1) கொட்டம் - வாசனைப் பண்டம்; **நம்பனே அருள் நல்குமாறு** - என்க. **நல்குமாறு** - நல்கும் வழி இது. **ஆறு** - ஆற்றின் கண்; **செல்ல** - ஓடம் செல்ல என்ற குறிப்புமாம்;—**(3) விலையிலாட்கொண்ட விகிர்தன்**- உயிர்களை அநாதியே ஆளாகக் கொண்டுடைய தலைவன், ''தொடர்வுடைய திருவடியைத் தொழுவதற்கு'' (கழறி. புரா - 131) என்று இக்குறிப்பினை ஆசிரியர் விளக்குதல் காண்க; நம்பிகளைத் தடுத்தாட்கொண்ட வரலாறும் கருதுக;—**(4) கண் மலரும்** - கண்போல மலர்தற்கிடமாகிய;—**(5) பொன்**- பொன்போன்ற பூந்துகளும், இதழ்களும்;—**(6) ஓடம் வந்தணையும்** - சரித வரலாற்று விண்ணப்பக் குறிப்பு; விண்ணப்பமாகக் கேளாது இயல்பு குறித்த தன்மையணியில் வைத்துக் கூறியநிலை காண்க. ''குரும்பை யாண்பனை யீன்குலை ஓத்தூர்'' முதலியவை கருதுக. மேற்பாட்டில் ''ஆறுவந் தணையும்'' என்றதும் இக்குறிப்பு. பதிக முழுதும் பொதுவாகவும் இவை சிறப்பாகவும் சரித வரலாற்றின் அகச்சான்றுகளாதலும் காண்க;—**(9) பருவரால் உகளும்** - நீர்ப்பெருக்குக் குறித்தது; ''நீரகக் கழனி'' (10); ''கோட்டகக் கழனி'' (2) என்பனவுமிக்குறிப்பு.



திருக்களர் பாட்டு :- 2794



திருநள்ளாறு பாட்டு :- 2800



திருக்கொள்ளம்பூதூர் பாட்டு :- 2798

*2798. நீணிலைக்கோ புரமதனை யிறைஞ்சிப் புக்கு
நிகரிலாத் தொண்டருட னெருங்கச் சென்று
வாணிலவு கோயிலினை வலங்கொண் டெய்தி
மதிச்சடையார் திருமுன்பு வணங்கி நின்று
"தாணுவே! யாற்றின்க ணோட முய்க்குந்
தன்மையா லருடந்த தலைவா! நாகப்
பூணினாய்! களிற்றுரிவை போர்த்த முக்கட்
புனிதனே!" யெனப்பணிந்து போற்றி செய்தார் 900

குறிப்புக்கள்:—(1) *இப்பதிகம் திருக்கொள்ளம்பூதூர் இறைவரை ஆற்றின் இடையே உய்த்த தோணியின் இருந்தபடி பாடியருளியது; மேற்பாட்டில் (2798)* ***போற்றி செய்தார்*** *என்றதனாற் கருதப்படும் பதிகம் கிடைத்திலது.*

(2) *ஈரடி மேல்வைப்பு என்றது பதிக யாப்பமைதி குறித்த பெயர், பதிகம் ஈரடியாலமைந்த தாழிசை விருத்தத்தின்மேல் மகுடவைப்பாக* ***வைத்த*** *"செல்ல வுந்துக......நம்பனே" என்ற இரண்டடிகளை உடையது. இவ்வாறு மேல்வைப்பாக வருவன இங்குப்போல ஒன்றேபட வருவனவும், திருப்பூந்தராய் ஈரடிமேல் வைப்புப் பதிகத்திற்போல வேறுபட வருவனவும் உண்டு. திருவாவடுதுறைப் பதிகக் குறிப்பிற் கூறியவை பார்க்க (2323).*

தலவிசேடம்:—திருக்கொள்ளம்பூதூர் *- காவிரித் தென்கரையில் பாடல் பெற்ற தலங்களுள் 113-வது பதி; வில்வவனம் என்று கூறுப.* ***திருக்களம்பூர்*** *என்று வழங்குவது; ஆளுடைய பிள்ளையார் ஆற்றின் வெள்ளத்துள் பதிகம் பாடி ஓடம் செலுத்திவந்து வழிபட்ட தலம். வரலாறு புராணத்துள் முன் உரைக்கப்பட்டது. இவ்வரலாறு பதிகத்து 6 - 7 பாட்டுக்களினும் குறிக்கப்பட்டுள்ளது. அழகிய திருப்பணி முற்றிப் பெருஞ் சாந்தியும் அணிமையில் நிகழ்ந்துள்ளது. பிள்ளையார் ஓடம் செலுத்தியதுபற்றிய விழா ஆண்டுதோறும் கொண்டாடப்பெறுகின்றது. சுவாமி -* ***வில்வ வனநாதர்;*** *அம்மை -* ***சௌந்தர நாயகி;*** *மரம் -* ***வில்வம்;*** *பதிகம் 1.*

இது கொரடாச்சேரி நிலையத்தினின்றும் வடக்கில் கற்சாலை வழி 5 1/2 நாழிகை யளவில் உள்ள செல்லூரை அடைந்து அங்குநின்றும் மேற்கே 1 நாழிகையளவில் அடையத்தக்கது.

2798. (இ-ள்) வெளிப்படை. நீண்ட நிலைகளையுடைய திருக்கோபுரத்தினை வணங்கித் திருவாயிலினுட் புகுந்து, ஒப்பற்ற திருத்தொண்டர்களுடன் கூட நெருங்கிப்போய், ஒளி பொருந்திய திருக்கோயிலினை வலங்கொண்டு சேர்ந்து, பிறையினைச் சூடிய சடையினையுடைய பெருமான் திருமுன்பு வணங்கி நின்று "தாணுவே! ஆற்றினிடையே ஓடத்தினைச் செலுத்தித் தந்தருளிய தன்மையினாலே அருள் தந்த தலைவரே! நாகங்களைப் பூணுகவுடையவரே! யானையினது உரிவையினைப் போர்த்த முக்கட் புனிதரே!" என்று பணிந்து துதித்தருளினார்.

(வி - ரை) பதிகம் பாடி ஆற்றின் ஓடத்தினைச் செலுத்திக் கோயிலைச்சேர்ந்த பின்பு பிள்ளையார் அங்கு வழிபட்ட சிறப்புக் கூறுவது இத்திருப்பாட்டு.

2799. **போற்றி**சைத்துப் புறம்போந்தங் குறையு நாளிற்
பூழியன்முன் புன்சமயத் **தமணர் தம்மோ**
டேற்றபெரு வாதின்க ணெரியின் வேவாப்
பதிகமுடை இறையவரை யிறைஞ்ச வேண்டி,
ஆற்றவுமங் கருள்பெற்றுப் போந்து முன்ன
மணைந்தபதி களுமிறைஞ்சி யன்பர் சூழ
நாற்றிசையும் பரவு**திரு நள்ளா றெய்தி**
நாடுடைநா யகர்கோயி னண்ணி னாரே. 901

தாணு - தாங்குபவர்; ''வயிரத் தூணே'' (தேவா); நிலைபெற்றவர் என்றலுமாம்.

தலைவா - சார்வாக அடைந்தாரைக் காக்கும் தன்மை தலைவர்க்குரியது. ''விலையி லாட்கொண்ட விகிர்தனே'' (பதிகம் -3).

நாகப்பூண் - களிற்றுரிவை - பெரிய இடையூற்றையும் விலக்கி ஒழித்தலும், தீமையினையே நன்மையாக்குதலுமாகிய ஆற்றல்களைக் குறித்தன. ''ஆடல் பேணிய அடிகள்'' (பதிகம் - 6).

களிறுரித்தல் முதலிய வீரச் செயல்கள் கருணைப் பெருக்காற் செய்யப்பட்டன வாதலின் இறைவரது தூய தன்மைக்குப் பங்கமில்லாமை கூறுவார் **போர்த்த முக்கட் புனிதனே** என்றார்.

போற்றி செய்தார் - ஆற்றினிடையே தோன்றாத்துணையாய் நின்ற அற்புத ராதலால் இவ்வாறு நினைந்து நினைந்து கோயிலில் திருமுன்பு போற்றி செய்தனர். கடலினிடையே பதிகம் பாடிக் கல்லே மிதப்பாக மிதந்து கரையேறிப் போந்த அரசுகள் திருப்பாதிரிப் புலியூரில் புகுந்து இறைவரது திருமுன் ''ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாகி'' என்றெடுத்துத் ''தோன்றாத் துணையா யிருந்தனன் றன்னடி யோங்களுக்கே'' எனப் போற்றிய நிலை ஈண்டுக் கருதத்தக்கது.

போற்றி செய்தார் - திருமுன் போற்றிய இப்பதிகம் கிடைத்திலது!

பரவிப் போற்றல்—என்பதும் பாடம். 900

2799. (இ-ள்) போற்றிசைத்து...நாளில் - போற்றி செய்து புறத்திற் போந்து அப்பதியினில் தங்கியருளிய நாளிலே; பூழியன்முன்...வேண்டி - பாண்டியனது முன்னிலையில் புல்லிய சமயத்தவராகிய அமணர்களுடனே மேற்கொண்ட பெரிய வாதத்திலே தீயினிடை வேவாது இருந்து வெற்றி தந்தருளிய திருப்பதிகத்தின் நாயகராகிய திருநள்ளாற்றின் இறைவரைச் சென்று வணங்கவேண்டி; ஆற்றவும்... போந்து - அப்பதியில் இறைவர்பால் மிக வேண்டி அருள்விடைபெற்றுப் போந்தருளி; முன்னம்...இறைஞ்சி - வழியிடையே முன்னர்ச் சென்று வணங்கிய பதிகளையும் மீண்டும் வணங்கிக்கொண்டு; அன்பர் சூழ...நண்ணினாரே - அன்பர் கூட்டம் சூழ்ந்துவரச் சென்று நாற்றிசையும் போற்றிசெய்யும் திருநள்ளாற்றினை அடைந்து நாடுடை நாயகரது திருக்கோயிலினைச் சேர்ந்தருளினார் (பிள்ளையார்).

(வி-ரை) போற்றிசைத்து - திருப்பதிகம் பாடித் துதித்து.

2800. நீடுதிருத் தொண்டர்புடை சூழ வங்கண்
நித்திலயா னத்திடைநின் றிழிந்து சென்று
பீடுடைய திருவாயில் பணிந்து புக்குப்
பிறையணிந்த சென்னியார் மன்னுங் கோயில்
மாடுவலங் கொண்டுள்ளால் மகிழ்ந்து புக்கு
மலர்க்கரங்கள் குவித்திறைஞ்சி வள்ள லாரைப்
"பாடகமெல் லடி"யெடுத்துப் பாடி நின்று
பரவினார் கண்ணருவி பரந்து பாய. 902

அங்கு உறையும் நாளில் - சில நாள்கள் அத்திருப்பதியில் (திருக்கொள்ளம்பூதூரில்) பிள்ளையார் எழுந்தருளியிருந்தனர் என்பது.

பூழியன் முன்... இறைவர் - பச்சைப் பதிகம் என்ற "போகமார்த்த பூண்முலை யாள்" என்று திருநள்ளாற்றுப் பதிகத்தாற் போற்றப்படும் தலைவராகிய நாயகர்; நள்ளாற்றிறைவ ரருளின வரலாறு பற்றி 2672 முதல் 2690 வரை பாட்டுக்கள் பார்க்க.

அங்கு - திருக்கொள்ளம்பூதூர் இறைவரிடம்.

ஆற்றவும் அருள் பெறுதலாவது - பிரியலாற்றா நிலைமையால் மிக வேண்டி அரிதில் விடைபெறுதல். இங்குத் தங்கியதும் இறைவர் ஈண்டு ஆற்றில் ஓடம் உந்தித் தம்மை வந்து வழிபட அருளிய கருணையின் நன்றிபற்றி. இனி, அங்குத் திருநள்ளாற்றிற் செல்ல எண்ணுவது அதுவேபோல, முன்னர் ஆலவாயில் எரியினிடை வேவாது காட்டித் தம்மை அருளிய திறத்தின் நன்றிபற்றி. ஆதலின் இரண்டும் நன்றியாகிய ஒருகருத்தே பற்றி எழுதலின் இங்குநின்று நீங்க ஆற்றவும் வேண்டி அருள்பெற்றனர்.

இறைஞ்ச வேண்டி - காவலனார் பெருங்கருணை, அரசன் முன் அமணர் வாதினில் வெல்லக் கைதந்த நன்றியின் பொருட்டு மீளச் சென்று வணங்கவேண்டி.

முன் அணைந்த பதிகளும் இறைஞ்சி - இவை திருக்கொள்ளம்பூதூருக்கும் திருநள்ளாற்றுக்கும் இடையே பிள்ளையார் செல்லும் வழியில் உள்ளவை; இவை திருக்குடவாயில், திருவாஞ்சியம், திருவம்பர், திருப்புகலூர் முதலாயின என்பது கருதப்படும்.

நாற்றிசையும் பரவும் - கலி தொடர்வுற்ற மாக்கள் பலரும் எத்திசையினின்றும் போந்து வரங்கிடந்து கலிநீங்கப் பெறுதல் இன்றும் காணவுள்ள தன்மைக் குறிப்பு; திருப்புள்ளிருக்குவேளூர் ஸ்ரீ வைத்தியநாதர் கோயில்போல.

நாடுடை நாயகர் - இப்பதியின் சுவாமி பெயர். எல்லா நாடுகளிலும் வழிபாடு விளங்கும் நாயகர். சோழ நாட்டினிற்போலப், பாண்டிநாட்டினும் விளங்கி அமணரது அனல்வாததின்கட் போந்து அருளிய குறிப்பும் தருவது. *901*

2800. (இ-ள்) நீடு...சென்று - நீடுகின்ற திருத்தொண்டர்கள் பக்கத்திற் சூழ்ந்துவர அவ்விடத்து முத்துச்சிவிகையினின்றும் இறங்கிப் போய்; ***பீடுடைய...புக்கு*** - பெருமை

பொருந்திய திருவாயிலினைப் பணிந்து உள்ளே புகுந்து; **பிறையணிந்த ......புக்கு** - பிறையினைச் சூடிய சென்னியையுடைய இறைவர் நிலைபெற்று வீற்றிருக்கும் திருக்கோயிலின் உட்பக்கங்களில் வலமாக வந்து மகிழ்ச்சியுடனே உள்ளே புகுந்து; **மலர்க்கரங்கள் குவித்திறைஞ்சி** - மலர்போன்ற கைகளைக் கூப்பி வணங்கி; **வள்ளலாரை...பாய** - வள்ளலாராகிய இறைவரைப் ''பாடக மெல்லடி'' என்று தொடங்கும் பதிகத்தைப் பாடியருளி நின்று கண்களினின்றும் கண்ணீர் அருவி பெருகத் துதித்தருளினர்.

(வி - ரை) இத்திருப்பாட்டுப் பிள்ளையார் திருநள்ளாற் றிறைவரை வழிபட்ட சிறப்புக் கூறியது; 2798 போலக் காண்க. திருவாலவாயினில் அரச சபைமுன் உண்முகமாகவே போந்தருளி யிருந்து துணைசெய்த பேரருட்டிறத்தினையே நினைந்த ஆராமையால் செய்த வழிபாடாதலின் இத்துணைச் சிறப்பும் விரித்தபடி; பதிகம் பார்க்க.

பாடக மெல்லடி - பதிக முதற்குறிப்பு.

பரவுதல் - ஆலவாயின் கண் வந்தமர்ந்தருளிய அருட்பெருக்கினை ஒவ்வொரு திருப்பாட்டினும் மகுடமாகவே வைத்துப் போற்றுதல். பரவியவாறு விரிக்கப்படுதல் காண்க.

பாடக மெல்லடி - ''போகமார்த்த பூண்முலையாள்'' என முதற்பதிகத்திற் றொடங்கிப் போற்றிய வகையே, அத்திருப்பதிகம் வரைந்த ஏட்டினை முன்வைத்து மதுரையில் அரசன் முன்னர் அருளிய அத்திருப்பதிகத்திலும் ''தளிரிள வளரொளி யுமை'' என்று தொடங்கியும், மீண்டும் இங்கும் அவ்வாறே ''பாடக மெல்லடிப் பாவை'' என்று தொடங்கியும் இவ்வாறு மூன்றுமுறையும் ஒன்றுபோலவே அருளிய குறிப்பு இங்கு இறைவரது அருள்சத்தியாரது வெளிப்பாடு குறித்தது; ''முலையிணையவை குலவலின்...இவை பழுதிலை'' என்று காரணக் குறிபட அருளியதும் கருதுக.

வள்ளலாரை - சோணாட்டினின்று அமணர், வாதத்தினுள் பாண்டி நாட்டில் தாமே வெளிப்பட்டு வந்தருளிய வள்ளன்மை குறிப்பு; அமணகளை நீக்கிச் சைவ விளக்கம் கண்டு பாண்டி நாட்டினின்றும் சோணாட்டுக்கு மீண்டருளிய பிள்ளையார், சோணாட்டில் அதுபற்றி நினைந்து சென்று தொழுத பதி இதுவேயாம். ''நள்ளா றுடைய நம்பெருமான்! ஆலவாயின்கண் அமர்ந்தவாறு இது என்கொல்?'' என்ற பதிகம் ஆளுடைய பிள்ளையாரது திருவுள்ளக் குறிப்பினை விளக்குகின்றது; அதனை விரித்து மேல்வரும் பாட்டில் ஆசிரியர் விளக்குதல் காண்க. ''அன்புடையானை'' (தேவா - 11). *902*

III - திருநள்ளாறும் திருவாலவாயும் (வினவுரை)

திருச்சிற்றம்பலம் பண் - நட்டபாடை.

பாடக மெல்லடிப் பாவை யோடும் படுபிணக் காடிடம் பற்றி நின்று
நாடக மாடுநள் ளாறுடைய நம்பெரு மானிது வென்கொல் சொல்லாய்?
சூடக முன்கை மடந்தை மார்க டுணைவரொ டுந்தொழு தேத்தி வாழ்த்த
ஆடக மாட நெருங்கு கூட லாலவா யின்க ணமர்ந்த வாறே! (1)

அன்புடை யானை யரனைக் கூட லாலவாய் மேவிய தென்கொ? லென்று
நன்பொனை நாதனை நள்ளாற் றானை நயம்பெறப் போற்றி நலங்கு லாவும்

பொன்புடை சூழ்தரு மாடக் காழிப் பூசுரன் ஞானசம் பந்தன் சொன்ன
இன்புடைப் பாடல்கள் பத்தும் வல்லாரி மையவ ரேத்த விருப்பா் தாமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– *2801-ல் ஆசிரியர் காட்டியருளுதல் காண்க.*

பதிகப் பாட்டுக் குறிப்பு:– *(1) பாடகம்* - *காலணி;* ***சூடகம்*** - *கைவளையணி;* **துணைவர்** - *கணவர் - நாயகர்;* ***ஆடகம்*** - *பொன்;* ***ஆடகமாடம்*** - *பொன் அணிந்த மேனிலை மாடங்கள்;*—***(2) நங்கள்*** - *நங்களை; நம்மை; நாங்கள் என்றலுமாம்;*—***(3) புண்ணியவாணர்*** - *உலக இன்ப ஏதுவாகிய புண்ணியம் புரிந்தோர்;* ***மாதவர்***- *சிவபுண்ணியமாகிய பூசை புரிந்தோர்;* **தவம்** - *சிவபூசை;* ***அண்ணலின் பாடல்*** - *இறைவனது தன்மை பாடும் பாடல் - கீதம் முதலாயின;* ***எடுக்கும்*** - *மேலோங்கப் பாடும்;—(4) பூவின்கண் வாசம் போலவும், புனலில் பொற்பும் போலவும், சாந்தின் நாற்றம் போலவும், நாவினில் பாடல் போலவும் பிரிப்பின்றி உயிர்களுடன் கலந்து நின்ற - நம்பெருமான் என்றது குறிப்பு. வாசமும், பொற்பும், நாற்றமும், பாடலும் உடைய நள்ளாறு எனக் கூட்டியுரைத்தலுமாம். இப்பொருளில் புனலிற் பொற்பாவது நீர்ச் சிறப்பாலாவது; தேவர் முதலாயினோர் வந்து திருவாலவாயிறைவரை வழிபடுதல் குறிப்பு; புராண வரலாறுகள் பார்க்க;*—***(5) மாலையும்...பாட்டும்*** - *இவை பூசைக்குறிய அங்கங்கள்;* ***நம்பும் பெருமை*** - *நம்பி வந்து உலகம் வழிபடும் பெருமை.* ***நால் அம்புதங்களால்*** - *என்க. நான் மாடக்கூடலான திருவிளையாடல் குறித்தது;*—***(6) போகமும் புண்ணியர் நின்னை மனத்துவைத்து நண்ணும் புணர்வு பூண்ட ஆக முடையவர்*** - *போகங்களை நுகரும் போதும் அவற்றில் மூழ்கி மனமழிந்துபடாது உம்மையே மனத்துள் மறவாது வைத்து அவற்றுள் உடலளவாய்ச் சார்ந்து நிற்கும் பெரியோர்;*—***(7) பூவண மேனி இளையவர்*** - *பூவின் வண்ணம் போன்ற மேனியினையுடைய பெண்கள்;* ***ஆவண வீதி*** - *கடைவீதி;*—***(8) புலன்களை... செய்யும்*** - *பொறிவழி வரும் ஐம்புலவின்பங்களை நீக்கி உள்ளத்தை அந்தக் கரணங்களுள் புந்தியின் வழிச்செலுத்தி உண்முகமான தியானத்தில் உறைத்து நிற்கும்;* ***அலங்கல் நல்லார்*** - *பெண்கள்;*—***(9) மணியொலி சங்கொலியோடு*** - *இவை நித்தியத்திலும்,* ***மாமுரசின்றெலி*** - *இது நைமித்திகமாகிய திருவிழாச் சிறப்புக்களினும் நிகழ்வன. இவ்வேறுபாடு குறிக்க* ***ஓடு*** *உருபு கொடுத்துப் பிரித்தோதினர். இவ்விருவகை ஒலிகளும்* ***என்றும் ஓவாது*** *என்றது ஆண்டு முழுதினும் எல்லா மாதங்களினும் திருஆலவாயில் திருவிழா நிகழ்தல் ஒழியாதிருக்கும் தன்மை குறித்தது; மேல்வரும்பாட்டுப் பார்க்க.* The city of festivals *என்பர் நவீனர்;*—***(10) நடுக்குற*** - *அமணருடன் அனல்வாத நிகழ்ச்சிக் குறிப்பு. ''****நடுங்கி****'' நின்றிட்டார் (2685) என்றது காண்க.* ***எடுக்கும் விழ*** - *நிமித்தம் பற்றிச் செய்யப்படும் விழா; நைமித்திகம் என்ப.* ***நன்னாள் விழா*** - *நிமித்தம் பற்றுது செய்யப்படுவன; நித்தம் என்ப.* ***பலி - இன்பு*** - *பலியும், விழாவின் அங்கமான மகிழ்வுதரும் ஏனை அங்கங்களும்.* ***பலி*** - *விழாவின் இன்றியமையாத பகுதி. ''****பலி****விழாப் பாடல்செய் பங்குனி உத்திர நாள்'' (மயிலை - தேவா);* ***எத்திசையும் அடுக்கும் பெருமை*** *விழாக் கண்டு சேவிக்க நாற்றிசையினின்றும் மக்கள் போதருதல் இன்றும் காணத்தகும் சிறப்பு;*—***(11) அன்புடையானை...போற்றி நலங்குலவும்*** - *பதிகக் கருத்தும் குறிப்புமாம்; அரனை நள்ளாற்றானைக் கூடல் - மேவியதென்கொலென்று - போற்றி என்று கூட்டுக. நள்ளாறுடைய நம்பெருமான்! கூடல் ஆலவாயின்கணமர்ந்தவாறு இது என்கொல் சொல்லாய் என இப்பதிக ஏனைப் பாட்டுக்களைக் கூட்டி முடிக்க.*

2801. "**தென்னவர்**கோன் முன்னமணர் செய்த **வாதிற்**
றீயின்க ணிடுமேடு பச்சை யாக்கி
யென்னுள்ளத் துணையாகி யால வாயி
லமர்ந்திருந்த வாறென்கொ லெந்தா!" யென்று
பன்னுதமிழ்த் தொடைசாத்திப் பரவிப் போந்து
பண்பினிய தொண்டருட னங்கு வைகி,
மன்னுபுகழ்ப் பதிபிறவும் வணங்கச் சண்பை
வள்ளலார் நள்ளாறு வணங்கிச் செல்வார்; 903

தலவிசேடம்:– முன்னர் III பக் - 551 பார்க்க. சுவாமி பெயர் **நாடுடை நாயகர்** என்பது பதிகம் 2-வது பாட்டில் காண்க. அதனை ஆசிரியர் 2799-ல் வைத்துக் காட்டியருளினர்.

2801. (இ-ள்) தென்னவர்கோன்...என்று - பாண்டியவரசன் முன்பு அமணர்கள் செய்த வாதத்திலே நெருப்பினிடை இடும் ஏட்டைப் பச்சையாகச் செய்தும், எனது உள்ளத்தினுள் துணையாகியும் திருவாலவாயிலின்கண் வெளிப்பட வந்தெழுந்தருளி விரும்பியிருந்தவாறுதான் என்ன அதிசயம்! எந்தையே! என்று நயம்பெறப் போற்றி நலங்குலாவி; **பன்னு...வைகி** - பன்முறையும் எடுத்துக் கூறும் தமிழ்த் தொடையாகிய திருப்பதிகத்தினைச் சாத்தித் துதித்துப் புறம்போந்தருளி அடிமைப் பண்பினால் இனிமை தருகின்ற திருத்தொண்டர்களுடனே கூடி அத்திருப்பதியில் தங்கியருளி; **மன்னு புகழ்...செல்வார்** - நிலைபெற்ற புகழினையுடைய பதிகள் பிறவற்றையும் வணங்கும் பொருட்டுச் சீகாழி வள்ளலாராகிய பிள்ளையார் திருநள்ளாற்றினை வணங்கி விடைகொண்டு செல்வாராகி;

(வி - ரை) "தென்னவர் கோன்......எந்தாய்!" என்று - இது பிள்ளையாரது திருவுள்ளக் கருத்தாகிய பதிகக் குறிப்பு. பதிகமும் பதிகப் பாட்டுக் குறிப்பும் பார்க்க.

பச்சை ஆக்கி - உள்ளத்துணை ஆகி - பச்சை ஆக்கி - "நள்ளாறர்தந் நாமமே - எரியினிலிடிலிவை பழுதிலை மெய்ம்மையே" என்ற திருப்பதிக வாக்கின் மெய்ம்மையின் உள்ளே நின்று எரியில் அவ்வேடு வேவாது பச்சையாக விளங்க ஆக்கியது திருநள்ளாறரது அருளேயாம் என்றபடி. தற்போதமின்றிச் சிவனருளிய வழி நின்றநிலை. **துணையாகி** - ஆக்கச்சொல் இயல்பு குறித்தது.

எந்தாய் - "ஆளுடைய பிள்ளையாராய்" (1966) என்றபடி மகன்மை முறை குறித்தது.

பன்னுதல் - பலவாறும் பாராட்டிப் பேசுதல்; பதிகம் பார்க்க.

இனிய பண்புத் தொண்டர் - உடனுறைவின் பயன் தந்து இனிமை தரும் தன்மையுடையவர்கள் தொண்டர்கள்; "அன்பரொடு மரீஇ" (12-சூ. போதம்).

வணங்கி - விடைகொண்டு நீங்கி மேற்செல்லும் வகையினால் வணங்கி.

நள்ளாறு வணங்கி - என்றதனால் பதியின் புறத்துச் சென்று பதியினை நோக்கி வணங்கி என்பதாம்.

செல்வார் - சேர்ந்து - செல்லும்போது என மேற்பாட்டுடன் முடிக்க. 903

2802. **சீர்நிலவு திருத்தெளிச்சே ரியினைச் சேர்ந்து**
சிவபெருமான் றனைப்பரவிச் செல்லும்போது
சார்வறியாச் சாக்கியர்தம் போதி மங்கை
சார்தலுமற் றதுவறிந்த சைவ ரெல்லாம்
ஆர்கலியின் கிளர்ச்சியெனச் சங்கு தாரை
யளவிறந்த பல்லியங்கண் முழக்கி யார்த்துப்
பார்குலவு தனிக்காளஞ் சின்ன மெல்லாம்
''பரசமய கோளரிவந் தா''னென் றூத. 904

2802. (இ-ள்) *சீர்நிலவு...போது* - சிறப்புக்கள் நிலவியுள்ள திருத்தெளிச் சேரியினைச் சேர்ந்து சிவபெருமானைத் துதித்து மேலே செல்லும்போது; சார்வறியா ***...சார்தலும்*** - நற்சார்புணராத சாக்கியர்கள் தங்கும் போதிமங்கை என்ற ஊர் அணியதாக வருதலும்; ***மற்றது...ஊத*** - மற்றச் செய்தியை அறிந்த சைவர்கள் எல்லாரும், கடல் கிளர்ந்ததுபோலச் சங்கு-தாரை முதலிய அளவில்லாத பல இயங்களையும் முழக்கி ஒலித்து உலகு விளங்கும்படி எக்காளங்கள் திருச்சின்னங்கள் எல்லாவற்றையும் ''பரசமய கோளரி வந்தான்'' என்று ஊத;

(வி – ரை) சீர்நிலவு திருத்தெளிச்சேரி - சீர்நிலவுதலாவது சமண வாதமும் நிராகரிப்பும் அதன் மூலம் சைவ ஆக்கமும் திருவாலவாயில் நிகழ்ந்த சிறப்புப் போலப், புத்த வாதமும் நிராகரிப்பும் திருநீற்றின் ஆக்கமும் அடுத்து நிகழ்தற்கு அணிமை காட்டிய சிறப்பினால் நிலைபெறுதல்.

செல்லும் என்றது மேலே செல்லுதல் குறித்தது.

சார்வு அறியா - சார்வாவது தாம் சார்தற்குரிய நற்சார்பு குறித்து நின்றது. ''சார்புணர்ந்து சார்பு கெட'' (குறள்).

போதிமங்கை - இது புத்தர்கள் நிறைந்த ஊராயிருந்தது. இப்போது சிவதலங்களுள் ஒன்றாயிருக்கின்றது. இது திருத்தெளிச்சேரியினின்றும் வடக்கில் காரைக்கால் - தரங்கம்பாடிக் கற்சாலையில் ஒரு நாழிகையளவில் உள்ளது.

சார்தலும் - சென்று வழியிற் சேரக் கிடைத்தலும்.

சைவர் - சிவசம்பந்த ஒழுக்கத்துள்ளே திளைத்து வாழ்பவர் என்றது குறிப்பு.

ஆர்கலியின் கிளர்ச்சி - கடல் பொங்கியெழும் முழக்கம்; ***ஆர்கலி*** - கடல்.

சங்கு தாரை அளவிறந்த பல்லியம் - முதலாகிய எண்ணிறந்த பல இயங்கள்; ***அளவிறந்த*** என்றது தொகைப் பெருக்கினையும், ***பல்*** என்றது வகையின் பன்மையினையும் குறித்தன.

சைவர் எல்லாம் - முழக்கி ஆர்த்து - சின்னம் எல்லாவற்றையும் ஊத என்று முடிக்க.

முழக்குதல் - ஒலித்தல்; ***ஊதுதல்*** - பொருள் புலப்பட ஒலித்து மொழிதல்; ஆதலின் வேறுபிரித்துக் கூறினர்.

தனிக்காளம் - சின்னம் - எல்லாம் - இவை இறைவரால் அருளப்பட்ட முத்துக்காளம்,

2803. புல்லறிவிற் சாக்கியர்க ளறிந்தார் கூடிப்
புகலியர்தம் புரவலஞர் புகுந்து தங்கள்
எல்லேயினி லெழுந்தருளும் பொழுது தொண்ட
ரெடுத்தவார்ப் பொலியாலு மெதிர்முன் சென்று
மல்கியெழுந் திருச்சின்ன வொலிக ளாலு
மனங்கொண்ட பொருமையினுன் மருண்டு தங்கள்
கல்வியினின் மேம்பட்ட புத்த நந்தி
முதலான தேரர்க்குங் கனன்று சொன்ஞர். 905

திருச்சின்னம் என்பவை. **காளம்** - எக்காளம்; **சின்னம்** - திருச்சின்னம் என்பர்; **எல்லாம்** - பலவும் ஒன்றுபோலவே.

பரசமய கோளரி - கோளரி - சிங்கம். கோளரி என்றதஞல் பரசமயமாகிய மதயானேகளுக்கு என்று உரைகொள்க; ஏகதேச உருவகம். முன்னர்ச் சமணரை வெற்றி கொண்டதும், இனி இங்குப் புத்தரை வென்ெறுழிக்க நின்றதுமாகிய நிலேகள் குறித்தது. கொள்கைகளே நிலேயழிப்பவர் என்பது குறிப்பு.

சைவர் எல்லாம் - முழக்கி ஆர்த்து - ஊத - இவ்வாறு சைவர்கள் புறச்சமயத் தவரை மனம் புண்ணுக்கவும் அன்றி வாதுக்கிழுக்கவும் கூடிய செயல்களேச் செய்தல் தகுதியாமோ? எனின், அற்றன்று; அவ்வாறு செய்யும் எண்ணம் சைவர்க்கு இல்லே என்க; புல்லியோர் மேலோர்போலக் கிளம்பும் காலேயில் அவர்களது மீக்கூர்ந்த அக்கிரமமாகிய செயல்களே அழித்து உலகரை அறிவுறுத்தி அவர்களே அவ்வவர்க்கேற்ற நிலேயில் நிறுத்துதல் உலக நிலேபேற்றுக்கு உற்ற செயலாம்; சைவத்துக்குப் புத்த சமணர்களால் விளேந்த தீச்செயல்கள் பல. அவற்றை நீக்கிச் சைவ ஆக்கத்தினேத் தேடுதல் சைவர்க்கு உற்ற செயலேயன்றித் தகாதென்று சொல்லுதல் யாங்ஙனம்? இனித் தமது ஆற்றல் உணராதாரிடத்தில் அதனே வேண்டும்போது வற்புறுத்துதலும் தக்கதே என்பர் புலவாணர்; மேலும்,எவர்க்கும் பொதுவாகிய ஊர்வழியே செல்வோர்க்குத் தமதிச்சைவழிக் குற்றமற்றவைகளேச் சொல்லுதலுக்கும் தம் இச்சைவழி செல்லுதலுக்கும் உரிமையுண்டு; இதனேயே இந்நாளில் சுதந்திரம் என்பர். இனி, இவ்வுரிமை பாராட்டுமுகத்தால் இந்நாள் ''நாகரிக'' உலகில் எத்தனே கோரச் செயல்கள் நிகழ்கின்றன என்பதைக் கண்டுகொண்டுமிருப்போர் இவ்வாறு சமயச்சார்பு வருங்கால்மட்டும் பிணங்கி விஞவுதல் என்ன சால்பு என்பதும் சிந்திக்க. ஈண்டுச் சைவர் செய்த முழக்கம் நலமறியாப் புத்தரைத் தெருட்டி நல்வழிப்படுத்தும் உண்மைநூல் விதித்த நோக்கம் கொண்டது. இங்குப் பயனும் அவ்வாறே விளேவதனேயும் கருதுக. புத்தர்கள் நற்சார்புணர்ந்து உய்யும்படி திருவருள் விளேவாமிது என்பதும் கருதத்தக்கது. *904*

2803. (இ-ள்) புல்லறிவில்...கூடி - புன்மையான அறிவுடைய சாக்கியர்களுள் அறிந்தவர்கள் சேர்ந்து; **புகலியர்தம்...மருண்டு** - சீகாழியவர்கள் காவலராகிய பிள்ளேயார் தமது ஊரின் எல்லேயில் புகுந்து எழுந்தருளும்பொழுது திருத்தொண்டர்கள் எடுத்த சிவவொலிகளின் முழக்கத்தாலும், அவர்களின் எதிரே முன் னணியில் சென்று திரண்டு எழுந்து ஒலிக்கும் திருச்சின்னம் எக்காளம் என்ற இவற்றின் ஒலிகளாலும் தம் மனத்துள் மேற்கொண்ட

பொருமையினுலே மருட்சியடைந்து; **தங்கள்...சொன்ஞர்** - தங்கள் சமயக் கல்வியினின் மேம்பட்ட புத்தநந்தி முதலாகிய புத்தர்களுக்கும் அச்செய்தியைக் கோபமுடனே சொன்ஞர்கள்.

இம் மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி - ரை) புல்லறிவிற் சாக்கியர்கள் - முன் ''சார்வறியாச் சாக்கியர்'' (2802) என்ருர். அவர்கள் கொள்கைப்படி அறிவுதானும் கணபங்கமாயொழியு மாதலின் அக்குறிப்பும் பெற இவ்வாறு கூறியதும் கருதுக.

அறிந்தார் - பிள்ளையாரது எழுச்சியின் நிலையில் முன்கூறிய முழக்கங்களையும் பொருளையும் அறிந்தவர்.

எதிர்முன் சென்று - பிள்ளையார் எதிரே முன் அணியிற் சென்று; **எதிர்** என்றது சின்னம் காளம் முதலியவை ஒலிப்போர் தலைவர்க்குப் புறகு காட்டாது எதிர்முகமாக நின்று முழக்கும் மரபு குறித்தது; **எதிர்** - அவ்வாறு அறிந்தார் எதிரில் என்றுரைப்பாருமுண்டு.

திருச்சின்ன ஒலிகள் - திருச்சின்னம் எக்காளம் இவற்றில் பொருள் தரும் மொழிகளே தனித்தனி ஒலிக்கப்படுதலின் **ஒலிகள்** என்ருர்; ஏனை இயங்களின் ஒலி அவ்வாறன்றிப் பொருளற்ற ஒலியாய்ச் சேர முழக்கப்படுதலின் அவற்றை ஒன்ருகத் திரட்டி **ஆர்ப்பு ஒலியாலும்** என ஒருமையிற் கூறினுர். இது சாதியொருமை என்றலுமாம்.

மனங்கொண்ட பொருமையினுல் மருண்டு - **மனங்கொண்ட** - மனத்துள் எழுந்த. **மருண்டு** - மயக்கமடைந்து; **பொருமை** - அழுக்காறு; ''அழுக்காறெனவொரு பாவி திருச்செற்றுத், தீயுழி யுய்த்து விடும்'' (குறள்) என்ற பாட்டின் படிப்பினையைக் கருதுக. **மருளுதல்** - ஒன்றைப் பிறிதொன்ருக மயங்குதல்; ''பொருளல்லவற்றைப் பொருளென் றுணரும், மருள்'' (குறள்).

தங்கள் கல்வி - தமது சமயக் கோட்பாடுகளின் கல்வி.

புத்தநந்தி - புத்தருட் சிறந்தோர் - துறந்தோர் - புனையும் பெயர் மரபு. ''புத்த நந்தியும்...முதலதாகிய பெயர்கொளா'' (தேவா-பண் - கொல்லி).

கனன்று சொன்ஞர் - சினமீக்கூர்தலினுல் அமைதியாக நினைந்து உண்மை யுணரமாட்டாதவராயினர் என்பது குறிப்பு. ''உள்ளங் கவர்ந்தெழுந் தோங்குசினம்'' மேல் ''வெகுண்டு சொன்ஞன்'' என்பதும் காண்க. 905

திருத்தெளிச்சேரி

திருச்சிற்றம்பலம் பண் - இந்தளம்.

பூவ லர்ந்தன கொண்டுமுப் போதும்ம் பொற்கழல்
தேவர் வந்து வணங்கு மிகுதெளிச் சேரியீர்
மேவ ருந்தொழி லாளொடு கேழற்பின் வேடனும்
பாவ கங்கொடு நின்றது போலுநும் பான்மையே. (1)

திக்கு லாம்பொழில் சூழ்தெளிச் சேரியெஞ் செல்வனை
மிக்க காழியுண் ஞானசம் பந்தன் விளம்பிய

தக்க பாடல்கள் பத்தும்வல் லார்க டடமுடித்
தொக்க வானவர் சூழ விருப்பர் சொல்லிலே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– இறைவர் அம்மையுடன் வேடராய்ப் பன்றிப்பின் சென்றதும், எங்கும் பலிக்கு நடப்பதும், கங்கை சூடியதும் முதலிய பெருமைகளைத் துதித்தது.

பதிகப் பாட்டுக் குறிப்பு:– *(1)* தேவர் வந்து வணங்கும் - *2-10*-வது பாட்டுக்களும் பார்க்க. தேவர்களும் முனிவர்களும் வந்து வழிபடும் சிறப்புடைய தலம். **மேவருந் தொழிலாள்** - உமையம்மையார்; அருந்தொழிலாவது இறைவருடன் குண குணியாகக் கலந்திருந்து அருட்சத்தியாய் உலகுயிர்களைக் காத்தல்; தல அம்மை பெயர் **சத்தியம்மை** - என்பது; **வேடனும் பாவகம்** - வேடராகிய வேடம். அருச்சுனன் பொருட்டு வேடனாகச் சென்ற அருஞ்செயல் குறித்தது. ''கிராத வேடமொடு கிஞ்சுக வாயவள், விராவு கொங்கை நற்றடம் படிந்தும்'' (திருவா);—**(2) பத்திக்காக** என்க; **விளைத்தல்** - சரியையாதிகளால் பெருக்குதல். **ஐந்து பாணமும்** - ''மலர் நீலங் கொல்லும்'' என்ற தன்மையுடைய நீலமலர்ப் பாணத்தை உள்ளிட்ட ஐந்து பாணங்களையும் என முற்றும்மை. எங்ஙனம் - ஐந்தும் எய்தும் அவற்றூற் படாது அவனையும் காய்ந்தது எவ்வாறு? என்பது;—**(3) அம்படுத்த - அடுத்த** - போன்ற; உவமவுருபு. **கூர்மையோடு கூடிய அம்பு என்க;—(4) கடல் முத்தம் கரைப் பெய்யும்** - இந்நகர் கடற்கரை ஊர் என்பது. **வைப்பிட மின்றியே**- வைக்கத்தக்க இடம் வேறின்றி; ''சேவடிகள் இரண்டும் வைப்பிட மின்றியே'' (திருவா);—**(5) வெளவவே** - வெளவும் பொருட்டு;—**(6) கையிற் காய்ந்ததே எங்ஙனம்** - படையொன்றுமின்றி என்பது குறிப்பு;—**(7) கோடு** - கொம்புகள்; கிளைகள்; **சேடு** - சிறப்பு; **தோடு** - மலரிதழ்;—**(8) வித்தகப் படை** - மந்திரப் படைகள்;—**(9) கால்** - காற்று; **காலெடுத்த** - காற்றின் வேகத்தால் மேலே கிளப்பப்பட்டு உந்திய;—**(10) மறையோர்** - வேத விதிப்படி பூசிப்போர்; **தவத்தவர்** - ஆகமப்படி சிவபூசை புரிவோர்; **செந்து** - பண்; **வெந்தல்** - மனத்தீமையுடையோர்; வெயினிற்றல் - பாறைக் கிடத்தல் முதலியவாற்றுல் வெந்த - காய்ந்த - உடலுடையோர்; சமண புத்தர்கள். **தந் திறம் நீக்குவித்தீர் ஓர் சதிரரே** - சமணரை வென்றதும் அணிமையில் புத்தரை வெல்ல நிற்பதுமாகிய சரித நிகழ்ச்சிகளின் அகச்சான்று. **சதிரர்** - சதுரப்பாடு உடையவர் ''சதிராலே சார்வானே'' (திருவா);—**(11) தடமுடித் தொக்க வானவர்** - முடிசூடிய தேவ அரசன் முதலாயினோர்.

தலவிசேடம்:– திருத்தெளிச்சேரி - காவிரித் தென்கரையிற் பாடல் பெற்ற பதிகளுள் *50*-வது பதி. கோயிற்பத்து என வழங்கப்படும். மேற்குப் பார்த்த சந்நிதி; பங்குனி மாதத்தில் சூரியபூசை நிகழ்வது; தேவர் முனிவர் வந்து வழிபடும் சிறப்பு பதிகத்துக் காண்க. இதன் அணிமையில் உள்ள போதிமங்கை என்னும் புத்தரது ஊரின் பக்கம் அவர்கள் ஆளுடைய பிள்ளையாரின் திருக்கூட்டம் செல்வதைத் தடுத்தபோது சம்பந்த சரணுலயர் ''புத்தர் சமண்கழுக் கையர்'' என்ற பதிகம் ஓதின அளவில் அவர்கள் தலைவனுன புத்தநந்தி தலையில் இடி விழுந்து இறந்தான். பின்னர்ச் சாரிபுத்தனைத் தலைவனுகக் கொண்டு சமய வாதத்தினை ஏற்று வந்த புத்தர்களை அடுத்துள்ள சத்திர மண்டபத்தில் பிள்ளையார் திருமுன்பு சம்பந்த சரணுலயர் வாதில் வென்று அவர்களைச் சைவர்களாக ஆக்கி உய்வித்தனர். சுவாமி - **பார்ப்பதீச்சுரர்;** அம்மை - **சத்தியம்மை;** ''மேவருந் தொழிலாள்'' என்பது பதிகம்; பதிகம் *1*.

2804. மற்றவர்கள் வெவ்வுரையும் பிள்ளை யார்முன்
வருசின்னப் பெருகொலியு மன்னுந் தொண்டர்
பொற்புடைய வார்ப்பொலியுஞ் **செவியி னூடு**
புடைத்தநா ராசமெனப் புக்க போது
செற்றமிகு முள்ளத்துப் புத்த நந்தி
செயிர்த்தெழுந்து தேரர்குழாஞ் சூழச் சென்று
"வெற்றிபுனை சின்னங்கள் வாதி லெம்மை
வென்றன்றோ பிடிப்ப"தென வெகுண்டு சொன்னான். 906

இது இப்போது காரைக்கோயில் பத்து, எனப்பட்டுப் புரையாறு ரோட் என்ற நிலையத்தினின்றும் வடமேற்கில் ஒரு நாழிகை யளவில் உள்ளது; காரைக்காலில் மாம்பழ ஈசுவரர் கோயில் உள்ள தெருவில் ஒரு கோடியில் உள்ளது.

2804. (இ-ள்) மற்றவர்கள்...புக்கபோது - மற்று அவர்களுடைய கொடிய சொல்லும், அப்பொழுதே பிள்ளையார் முன்பு வருகின்ற திருச்சின்னங்களின் பெருகிய ஒலியும் நிலைபெற்ற திருத்தொண்டர்களுடைய அழகிய ஆர்தலினால் உண்டாகும் ஒலியும்கூடி ஒருசேர வந்து தனது காதினுள் காய்ச்சி அடித்த இரும்புச் சலாகைபோலப் புகுந்தபோது; செற்றமிகும்...சென்று - கோபம் மிகும் உள்ளத்தினை உடைய புத்தநந்தி மேலும் மிகச்சினந்து எழுந்து புத்தர் கூட்டம் தன்னைச் சூழ்ந்து வர அத்திருக்கூட்டத்தினிடையே போய்; வெற்றிபுனை...சொன்னான் - "வெற்றிக் கறிகுறியாக முழக்கப்படும் சின்னங்கள் எம்மை வாதத்தில் வென்ற பின்னரன்றோ பிடித்தல் வேண்டும்" என்று கடுமையாகக் கோபித்துச் சொன்னான்.

(வி-ரை) மற்றவர்கள் - மற்று - முன் கூறிய "சாக்கியர்க ளறிந்தார்" (2803) என்ற குறிப்பில் வந்தது; தம் தலைவனாகிய அந்தப் புத்தநந்திக்கு ஆக்கந்தேடாது, இவர்களது ஏவுதலினால் சிறிது நேரத்தில் இறந்துபாடாகிய அழிவு தேடித்தருகின்றாராதலின் மற்றவர்கள் - ஆத்தரல்லாதவர் - என்ற குறிப்பும்படக் கூறினார்.

உரையும் - பெருகொலியும் - ஆர்ப்பொலியும் - (ஒருசேரப்) **புக்கபோது** - என்று கூட்டுக. **உரை** - சாக்கியர் கனன்று சொல்லிய உரை; மேல்வரு மிரண்டும் ஒருசார்பின ஆதலின் **ஒலி** என்ற சத்தத்தாற் கூறினார்.

பொற்புடைய ஆர்ப்பு ஒலி - பிள்ளையார் திருநாமங்களையும், சிவநாமங்களையும் முழக்கியும் பிள்ளையாரின் புகழ்களை எடுத்துக் கூறி முழக்கியும் வருதலால் **பொற்புடைய** என்றார்; **பொற்பு** - மொழியாற் குறிக்கப்படும் பொருளின் செம்மை.

செவியினூடு புடைத்த நாராசமெனப் புக்கபோது - வெவ்வுரையால் செவியினூடு துன்பம் புகவும், இவ்வொலிகள் அத்துன்பினை மேலும் கொடுந்துன்பம் விளைக்கவும் இவ்வாறு ஒருங்கே இருவகையாய் நிகழ்ந்த துன்பினைக் கூறுவார் நாராசமென வாளா கூறாது **புடைத்த நாராச**மென இருவகைத் துன்ப ஏதுக் கூறி உவமித்தார்; வினைபற்றி வந்த உவமம். **புடைத்தல்** - காய்ச்சி அடித்தல்; மிக்க வெப்பமும் கூர்மையுமாய்த் துன்பத்துக்கு இரண்டு காரணங்

2805. **புத்தரினம் புடைசூழப் புத்த நந்தி**
பொருவின்ஞா னப்புனிதர் திருமுன் பூதும்
மெய்த்தவிறற் சின்னங்கள் விலக்குங் காலை
வெகுண்டெழுந்த திருத்தொண்டர் வெறுத்து நோக்கி
"இத்தகைய செயற்கிவரைத் தடிதல் செய்யா
திதுபொறுக்கிற் றங்கணிலை யேற்ப"ரென்று
முத்துநிரைச் சிவிகையின்மேன் மணியை வந்து
முறைபணிந்து புகுந்தபடி மொழிந்து நின்றூர். 907

கண்டபடி; "எறிவேல் பாய்ந்த, புண்ணிலாம் பெரும்புழையிற் கனனுழைந்தா லெனச்செவியிற் புகுத லோடும்" எனக் கம்பன் இக்கருத்தைப் பற்றிய இவ்வுவமத்தையே மேற்கொண்டு விரித்தல் காண்க. "நெருப்பு நுனையுறீஇச் சுடுநா ராசஞ், செவிசெறித் தாங்கு" - (பெருங்கதை - க. 47 - 237 - 238)

செற்றமிகும் உள்ளம் - செயிர்த்தெழுந்து வெகுண்டு *சொன்னுன் - என்று மும்முறையும் விரித்தல் மூண்டெழுந்த நிலை குறித்தது.* **செற்றமிகுதல்** *அவனது உள்ளத்தின் இயல்பாகிய நிலையினையும், செயிர்த்தெழுதல் உரையாலும் ஒலிகளின் கேள்வியாலும் சினம் உள்ளத்தில் விளைந்த நிலையினையும்; வெகுண்டு சொல்லுதல் அம்மூட்சி பிறர்பாற் சென்ற நிலையினையும் குறித்தன ஆதலின் கூறியது கூறலன்மை யுணர்க.*

சென்று *- பிள்ளையாரின் திருக்கூட்டத்தின் முன்னணியில் வரும் திருச்சின்ன மொலிப்போரும் திருத்தொண்டர்களும் ஆகிய இவர்பாற் சென்று.*

வெற்றி...பிடிப்பது என *- எம்மோடு வாதில் வெற்றிபெறு நிலையில் பிடிக்கலாகாது என விலக்கினன் - முழக்கத்தைத் தடுத்தான் என்பது; மேற்பாட்டில்* **விலக்குங் காலை"** *(2805) என்பது காண்க.*

வென்றன்றே பிடிப்பது *- வென்றல்லாமல் பிடிக்கத் தகாது என்பது எச்சம்; ஓகாரம் எதிர்மறை.*

வெற்றிபுனை சின்னங்கள் *- "பரசமய கோளரி" என்று புறச்சமயங்களை வென்ற வெற்றியைக் கூறும் சின்னங்கள்.*

எம்மை வென்றன்றே *- அமணரை முக்காலும் வென்றது பரசமயங்களை யெல்லாம் வென்றதாம்; அவ்வாறு கொள்ளாது புறச்சமயி ஒவ்வொருவனும் தன்னைத் தனித் தனி வெல்லல் வேண்டுமென்று ஆர்த்தல் மதியீனம் என்பார்* **புல்லறிவிற்** *சாக்கியர்* **சார்வறியாச்** *சாக்கியர்கள் என்றூர்.* *906*

2805. (இ-ள்) *புத்தரினம்...காலை - புத்தர் கூட்டம் தன்னைச் சூழ்ந்து வரப் புத்த நந்தி ஒப்பற்ற ஞானத்தினை உடைய தூய பிள்ளையாரது திருமுன்பு ஊதப்பெற்ற உண்மைத்திறம் பெற்ற திருச்சின்னங்களை விலக்கிய பொழுது; வெகுண்டெழுந்த...நோக்கி - சினந்து எழுந்த திருத்தொண்டர்கள் அவனுடைய செய்கையினை வெறுத்துப்பார்த்து; இத்தகைய...என்று - இவ்வாறு செய்யும் கொடுஞ் செயலுக்கு இவர்களைத் தண்டிக்காமல் இதனைப்*

2806. "**வருமிடத்தி லழகிதா நமக்கு வாதில்**
மற்றிவர்தம் பொருணிலைமை மருத வண்ணம்
பொருமிடத்தி லறிகின்றோம் புத்த நந்தி
பொய்ம்மேற்கோ" ளெனப்புகலி வேந்தர் கூற
வருமுறைசொற் றிருப்பதிக மெழுது மன்ப
ராளுடைய பிள்ளையார் திருவாக் காலே
"**உருமிடித்து விழப்புத்த னுத்த மாங்க**
முருண்டுவீழ்" கெனப்பொரு வுரைமுன் விட்டார். 908

பொறுத்துக்கொண்டு செல்வோமானால் தங்கள் நிலையினையே மேலுங்கொண்டெழுவார்கள் என்று உட்கொண்டு; முத்து...நின்றார் - முத்துக்களின் வரிசைபட உள்ள சிவிகையின்மேல் எழுந்தருளிய மணியாகிய பிள்ளையாரிடம் வந்து அவரை முறையினாற் றொழுது நேர்ந்த வண்ணங்களைச் சொல்லி நின்றார்கள்.

(வி-ரை) பொருவில் ஞானப் புனிதர் - பொருவில் ஞானமாவது சிவஞானம் (1967); **புனிதர்** - இகலும் பற்றுமின்றிக் கருணையே உருவமானவர்; இதுவே அகத்தூய்மைக் கியல்பாதலின். **புனிதம்** - அகத்தூய்மை குறித்தது; முன்னர் நிகழ்ந்த சமண வாதமும், இனிவரும் புத்தவாத முதலியனவும் புறச் சமயிகள்பாற் கொண்ட இகல்பற்றியேனும், சைவர்கள்பால் வைத்த விருப்புப்பற்றியேனும் உள்ளனவல்ல என்பதும், உண்மைநிலை காட்டி உலகை உய்விக்கும் பொருட்டேயாம் என்பதும் உணர்த்தியவாறு.

ஊதும் - ஊதப்படும்; செயப்பாட்டுவினை செய்வினையாய் நின்றது.

மெய்த்த விறற் சின்னங்கள் - மெய்யனாகிய இறைவன் தந்தவை என்றும், போலியாகிய பொய்ப் புகழ்களைக் கூறாது பொருவில் ஞானத் தலைவரது உண்மைப் பொருள்சேர் புகழ் பற்றிய திறங்களையே கூறுபவை என்றும் உரைக்க நின்றது; கூறும் பொருள்களின் உண்மைத் திறமும், உடையாரது திறமும் கருவியின் மேல் ஏற்றப்பட்டன; **விறல்** - இவை ஊதப்பட்ட செயலாலே இனி அடுத்த நிலையில் இடி வீழ்ந்து இவற்றைத் தடுத்தவன் தலையிழக்க நேரும் நெறிபிறழாத வலிமை குறித்தது.

இத்தகைய...என்று - சைவத் திறம் எப்போதும் பொறுமையும் கருணையுமே மேற்கொண்டதொன் றென்பதும், ஆயின் அதன் நிலை புறச்சமயிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுத் தடையுண்டபோது அவ்விடையூற்றினைத் தண்டமூலம் விலக்க முற்படுவதில் பின்வாங்காத வீரமுடையதொன் றென்பதும் குறித்தது.

தங்கள் நிலை ஏற்பர் - நீதி நெறியில் தம்மளவில்நின் றமைவுபடாது மீச்சென்று உண்மைக்கு மாறான செயல்களைத்தாம் நினைந்த நினைந்தவாறே ஆக்கிரமித்துச் செய்து செல்வர்.

புகுந்தபடி - நிகழ்ந்தனவற்றை நிகழ்ந்தவாறே. **புகுந்த** - தமது செல்லுகையில் இடையே தடையாக வந்து புகுந்த என்றலுமாம். 907

2806. **(இ-ள்)** வருமிடத்தில் அழகு இதுஆம் - வருகின்ற இடத்திலே இது மாறுகோளாவதன்றி நமக்கு அழகேயாம்; மற்றிவர்தம்...கூற - மாறுகொண்ட இவர்களது பொருள்

நிச்சயம் மறுக்க முடியாதபடி, பொருகின்ற இடத்தில் புத்தநந்தியின் பொய்யினை மேற்கொண்டு வரும் கொள்கையின் நிலையினை உள்ளபடி காட்டுவோம் என்று புகலி காவலராகிய பிள்ளையார் சொல்ல; அருமுறை...விட்டார் - அரிய திருமுறைகளாகிய சொற்றிருப்பதிகங்களை எழுதும் நியதியுடைய அன்பர் ஆளுடைய பிள்ளையாரது திருவாக்கின் ஆணையாலே ''புத்தநந்தியினது தலையானது இடி வீழ்தலினால் உருண்டு வீழக் கடவது'' என்று பொறுக்க மாட்டாத சொல்லை முன்னே சொல்லி விட்டனர்.

(வி-ரை) வருமிடத்தில் நமக்கு இது அழகாம் - என்க. **அழகு** - வெகுளலும் வெறுத்தலுமின்றி அழகிதாகக் கொள்ளத்தக்கதொன் றென்றதாம்; **வருமிடம்** - நாம் சென்று தேடாது, செல்லும் வழியிலே. இடையிட்ட இது, திருவருளால் வந்ததென்பதும், திருவருள் எவ்வழியானும் செலுத்துவனவெல்லாம் நன்மையே என்பதும் குறிப்பு. **அழகு** - நியதியின் அமைதி.

மற்று இவர்தம் பொருள் நிலைமை - மாறுபட்டு எழுந்து கூறும் இவர்கொள்ளும் பொருள் நிச்சயத்தின் தன்மை.

மருத வண்ணம் - அவர்கள் தாமும் வேறு மாறுபட்டுப் பேசும் பேச்சின்றி ஒப்பும்படி; ''வாதமா றென்றின்றித் தோற்றான் புத்தன்'' (2822); மேலும் நமது திறங்களை மறுத்து எழாதவண்ணம் என்றலுமாம்.

பொய் மேற்கொள் - பொருள் நிலைமை - மருதவண்ணம் அறிகின்றோம் - என்று கூட்டுக.

அறிகின்றோம் - காண்கின்றோம் - அவர்கள் கொண்ட பொருள் நிச்சயம் பொருளன்றாம்படியினை வெளிப்படுத்துமாறு கண்டு காட்டுகின்றோம் என்றதாம்.

அருமுறைசொல் திருப்பதிகம் எழுதும் அன்பர் - அரிய முறையாகிப் பிள்ளையார் சொல்லும் திருப்பதிகங்களை அவ்வப்போதே உடனிருந்து எழுதிக்கொண்டும் அத்திருமுறைச் சுவடியினை ஏந்திக்கொண்டும் வரும் அன்பர். இவர் சம்பந்த சரணாலயர் எனப் பெயர் பூண்டவர் என்றும் இவர் பிள்ளையாரின் நல்லம்மானவர் என்றும் கூறுவர். இவ்வாறு பிள்ளையார் பதிகங்கள் அவ்வப்போது உடனிருந்து எழுதிவரப்பட்டன என்பதும், அத்திருமுறை பிள்ளையாருடனே எழுந்தருளச்செய்து உடன் கொண்டு வரப்பெற்றன என்பதும், முன் ''திருப்பதிக நன்முறையினை'' (2679) என்றவிடத்து குறிக்கப்பட்டன. **வருமுறை** என்று பாடங்கொள்ளின் அருளின்வழி வரும் என்க.

பிள்ளையார் திருவாக்காலே - உரை முன் விட்டார் - திருவாக்கினையே ஆணையாகக் கொண்டு படையாக முன் விடுத்தனர். **விட்டார்** - அம்பு விடுதல்போல என்க. **உரை** - உரையாகிய ''அத்திரம்'' என்பதாம்; **பொறா உரை** - புத்தர் கூறிய சைவ நிந்தையும் அடியார் நிந்தையும் மறைகணிந்தனையும் பொறுக்கலாற் றாமையாலே அவ்வாறு வெவ்விய உரை விடுத்தனர் என்பது. கருணை கொண்ட அன்பர் கொடியவுரை விடுத்தற்குப் புத்தர் செய்த சிவாபசாரமே காரணம் என்றபடி.

உத்தமாங்கம் - உடம்பில் உயர்ந்த அங்கமாகிய தலை.

2807. ஏறுயர்த்தார் சைவநெறி யாணை யுய்க்க,
வெதிர்விலக்கு **மிடையூற்றை யெறிந்து நீக்கும்**
மாறில்வலி மந்திரமா மசனி போல
வாய்மையுரைத் **திருத்தொண்டர் வாக்கி னாலே**
வேறுமொழிப் போரேற்பான் வந்த புத்தன்
மேனியையுந் தலையினையும் வெவ்வே றாகக்
கூறுபட நூறியிடப் புத்தர் கூட்டங்
குலைந்தோடி விழுந்துவெருக் கொண்ட தன்றே. 909

பிள்ளையார் திருவாக்கு - இது ''புத்தர் சமண்கழுக் கையர்'' (பஞ்சாக்கரப் பதிகம்-10) என்ற திருப்பாட்டு என்ப. அதனுள் ''வித்தக **நீறணிவார் வினைப் பகைக், கத்திர மாவன** வஞ்செ ழுத்துமே'' என்ற பகுதி - அத்திரத்தை அடக்கி நிற்றல் காண்க. ''அத்திரவாக் கதனால்'' *(2808)*

''உரும் இடித்து விழ - உத்தமாங்கம் உருண்டு வீழ்க'' என - **உரும்** - இடி; **விழ வீழ்க** - விழுதலினால் தலை அறுபட்டுக் கீழே விழுக. சிவாபராதமானது இவ்வாறு தண்டித்துத் தூய்மை செய்யற்பாலதென்பது வீரபத்திரக் கடவுள் தக்கயாக சங்காரநிகழ்ச்சிகளுள் சிவநிந்தை செய்த தக்கனது தலை அறுபட்ட வரலாற்றானும், அதனைத் ''தூய்மைகள் செய்தவா'' (திருவா - தோணோ - 11) என்று மணிவாசகப் பெருமானார் போற்றியருளியதனானும் காண்க. சிவனுக்குச் சாத்தும் பூவைச் சிதறிய பிழைக்காக யானையையும், அதனை விலக்காத குற்றத்துக்காகப் பாகர் ஐவரையும் கொன்றுநின்ற எறிபத்தரை, அன்பர் என்று கண்டபோது ''அன்பராங் குணத்தின் மிக்கார், பிழைபடி னன்றிக் கொல்லார், பிழைத்ததுண் டென்றுட் கொண்டு'' (587) புகழ்ச்சோழர் போற்றிச் செயல் செய்தமையும் இங்குக் கருதத்தக்கது. சமயநீதியேனும், உலக நீதியேனும் அல்லது வேறெந்த நீதியேனும் ஒன்றும் பற்றாது மண்ணாசையாகிய பேயினாற் கோட்பட்டுக் கோடிக்கணக்கான மக்களையும், பிறவுயிர்களையும் கொல்லும் **''நாகரிக''**! உலகத்தை வாழ்வாக எண்ணும் மாக்கள் இவ்வுண்மைகளைத் தெளிந்து இவ்வரலாறுகள் பற்றித் தாம் செய்யும், சிவநிந்தை முதலிய பிதற்றல்களை விட்டு உய்திபெற முயல்வார்களாயின், நலம் தரும்.

அருமறைச்சொல்—என்பதும் பாடம். *908*

2807. (இ-ள்) ஏறுயர்த்தார்...உய்க்க - இடபத்தை உயர்த்த இறைவரது சைவ நெறியின் வந்த திருவாணையினைச் செலுத்தியிட; **எதிர்விலக்கும்...போல** - சிவபூசையில் எதிர்ப்பட்டு அப்பூசையினை விலக்கவரும் இடையூற்றினை அழித்து நீக்குகின்ற தடுக்கலாகாத வலிமையுடைய சிவாத்திரமாகிய இடியினைப்போல; வாய்மை... வாக்கினாலே - வாய்மையுரையினை உட்கொண்டெழுந்த திருத் தொண்டர் வாக்கினாலே; வேறுமொழி...நூறியிட - வேறுபட்ட மொழிகளாற் செய்யும் போரினை மேற்கொண்டு வந்த புத்தநந்தியின் உடம்பையும் தலையையும் வெவ்வேறுபட இருகூறாக்கிச் சிதைவு படுத்த; புத்தர் கூட்டம்...அன்றே - அப்போதே புத்தர்களது கூட்டம் சடுதியிற் பயந்து ஓடித் திடுக்கிட்டு நடுங்கியது.

(வி-ரை) சைவ நெறி ஆணை - இகல் முதலானவற்றாலன்றிச் சைவநெறியின் விதிப்படி இட்ட ஆணை; **உய்த்தல்** - செலுத்துதல்; முன்பாட்டிற் கூறியவை நினைவு கூர்க.

எதிர் விலக்கும் இடையூறு - சிவபூசை செய்யவொட்டாது மேலும் நடுவும் கீழுமாகிய மூவுலகங்களினின்றும் மூன்று வகையாலும் வரக்கடவனவாகிய இடையூறுகளை. ''நல்ல காரியத்துக்கு நானூறு இடைஞ்சல்'' என்ற பழமொழிப்படிச் சிவபூசைக்குப் பற்பலவாற்றனும் இடையூறுகள் வருதல் இவ்வுலகிற் கண்கூடாகக் காணப்படும் உண்மை. ''பேரின்ப முத்தியிப் பூமியி லிருந்துகாண, வெத்தனை விகா தம்வரு மென்றுசுகர் சென்றநெறி'' (தாயுமா).

எறிந்து நீக்கும் - எறிதல் - எதிர்த் தழிவுபடுத்தல்.

மந்திரமாம் அசனி - சிவாத்திர மகா மந்திரமாகிய இடியேறு; **மாறில் வலி** - என்றார் எஞ்ஞான்றும் எவ்வாற்றானும் பிழைபடாத வலிமையுடைமை காட்டுதற்கு. சிவாத்திர வலிமை பற்றிக் கந்தபுராணம் - பாரதம் - இராமாயணம் முதலியவற்றின் வரலாறுகளும் பார்க்க.

எதிர் விலக்கும் - மந்திரமாம் அசனிபோல - ஆகமங்களில் வகுத்த சிவபூசை முறையில் மேல்-நடு கீழ் என்ற மூன்று பக்கங்களினின்றும் பூசைக்கு இடையூறாய் வரும் விக்கினங்களை இடியேறுபோலத் தவறாது விலக்கும் அத்திரமந்திரத்தாலே போக்கிப் பூசை தொடங்குக என்ற விதி இங்கு உவமிக்கப்பட்டது. **மாறில்வலி மந்திரம்** - சிவாத்திர மந்திரம். இதற்குரிய பாவனை கிரியை மந்திரங்களை அனுபவம்வல்ல தேசிகர்பால் கேட்டுணர்க. **அசனி** - இடியேறு.

வாய்மையுரைத் திருத்தொண்டர் வாக்கினாலே-வாய்மையுரை - பிள்ளையார் திருவாக்காகிய ''அத்திரமாவன'' என்ற தேவாரம். **திருத்தொண்டர் வாக்கு** - அதனை உள்ளிட்டுக் கூறி ''உருமிடித்து உத்தமாங்கம் உருண்டு வீழ்க'' என அன்பர் கூறியது.

வேறு மொழிப்போர் - மாறுபட்ட மொழிகளால் தொடங்கிய போர். **வேறு மொழி** - உண்மைக்கும் தகுதிக்கும் வேறுபட்ட மொழி என்க. **போர் ஏற்பான்** - போர் ஏற்கும் பொருட்டு; மொழிகளாற் போர் செய்ய. **வந்த** - வலிந்து தானே வந்த.

கூறுபட நூறியிட - தலை வேறு - உடல் வேறாக இரு கூறாகும்படி சிதைக்க; **நூறியிட** - சிதைக்க; ''**உருண்டு** வீழ்க'' என்று ஆணை தந்தாராதலின் தலைவேறாகக் கூறுபட்டு வீழ்ந்தது.

வெருக்கொண்டது - திடுக்கிட்டு நடுங்கி. **அன்றே** - அப்பொழுதே.

உரும் இடித்து - உருண்டு வீழ்க - இடி வீழ்தலால், உடலிற் கண் முதலிய அங்கங்கள் சிதைந்து வீழ்தலும், உடல் அறுபட்டுப் பிளத்தலும், உடல் எரிதலும் முதலிய பலவும் நிகழ்வன. ஈண்டுத் தலை கூறுபட்டு வீழ்ந்தது என்க.

மாறுவலி—வாய்மையுணர்—என்பனவும் பாடங்கள். *909*

2808. (இ-ள்) மற்றவர் கணிலைமையையும் - மற்று அந்தப் புத்தர்களது நிலைமை யினையும்; புத்தநந்தி...அறுத்ததுவும் - வாக்கினாற் போர் செய்ய மேற்கொண்டு வந்த புத்தநந்தியின் தலையும் உடம்பும் வேறாக அறுபட்டு விழும்படி அத்திர வாக்கினாலே அன்பர் அறுத்த செயலினையும்; கண்ட....விண்ணப்பஞ் செய - பார்த்த சிவனடியார்கள் எல்லாம் அவ்வெற்றியைத் தரும் பிள்ளையாருக்குச் சென்று விண்ணப்பிக்க; எதிர்ந்த...ஓதுகென - எதிர்ப்பட்ட இடையூறு நீங்கும்படி பொருந்திய இறைவரது அருள் விதியே அஃதாகும்; ஆதலால் சிவனை வழுத்தி அர! அர! என்று எல்லாரும் சிவநாமமோதி முழக்கம் செய்க என்று பிள்ளையார் கூறியருள எல்லாம் அர என்றோதினர்; அவ்வொலி வானுற்றதன்றே -

*2808. **ம**ற்றவர்க ணிலைமையையும் புத்தநந்தி
வாக்கின்போ ரேற்றவன்றன் றலையு மெய்யும்
அற்றுவிழ **வத்திரவாக்** கதனு லன்பர்
அறுத்ததுவுங் கண்டவர ணடியா ரெல்லாம்
வெற்றிதரும் பிள்ளையார் தமக்குச் சென்று
விண்ணப்பஞ் செய,**"வெதிர்ந்த விலக்கு நீங்க
வுற்றவிதி யதுவேயா; மர!வென் றெல்லா
மோது"**கென, வவ்வொலிவா னுற்ற தன்றே. 910

அவ்வாணையின்படி அவர்கள் முழக்கிய சிவநாம ஒலி வானத்திற் சென்று பொருந்திற்று அப்பொழுதே.

(வி-ரை) மற்று அவர்கள் - மாறுபட்டு வந்த அப்புத்தர்.

வாக்கின் போர் ஏற்றவனுகிய புத்தநந்தி என்க. **வாக்கின் போர்** - வேறு, படை முதலியவற்ருலன்றி வாக்கினுற் செய்யும் வாதமாகிய போர்.

அன்பர் அத்திர வாக்கதனுல் - அறுத்ததுவும் என்க. **அத்திர வாக்கு - அத்திரமாவன"** என்ற பதிக மந்திரம். வாக்கதனுல் அறுத்தலாவது வாக்கில் கூறப்பட்ட சிவனது அத்திரமாகிய மந்திரமே படையாகக்கொண்டு. "காழி மாநகர்க் கவுணியர் கடவுள், ஞான மாகிய நற்பதி கங்கள், எழுதுறு மன்பர்தம் மின்புறு மொழியாற் களிறென வந்த கன்மனப் புத்தன், முருட்டுச் சிரமொன் றுருட்டின ரன்றி, வாய்ந்த வாளொன் றேந்தின ரிலரே" (சங்கற்பநிராகரணம்) என்றதும் கருதுக,

பிள்ளையார் தமக்குச் சென்று விண்ணப்பஞ் செய - அன்பர் வாக்கினுல் இடி வீழ்ந்து புத்தநந்தி தலையறுபட்ட இடம், பிள்ளையாரது எழுச்சியின் முன்னணி; ஆண்டு ஊதிச் செல்லும் மெய்த்தவிறற் சின்னங்களையே முன்வந்து புத்தநந்தி விலக்கினுனதலின் (2805); பிள்ளையார் எழுந்தருளி வரும் சிவிகை, எழுச்சியின் பின்னணியில் நின்றதாதலின் இங்குநின்றும் அவ்விடத்துக்குச் சென்று விண்ணப்பித்தனர். "புத்தன் கூறும் பொய்ம்மேற்கோளின் பொருணிலைமையினைப் பொருமிடத்தி லறிகின்ருேம்" (2806) என்று பிள்ளையார் அருளினுரன்றி வேறு கூறிற்றிலர். ஆதலின் அன்பர் அத்திரவாக்கினுல் இடி வீழ்ந்து புத்தன் பட்ட செயல் தொண்டர்கள் சென்று அவர்க்கு விண்ணப்பிக்க நின்றது.

"எதிர்ந்த......ஓதுக" என - "புத்தன் மொழியினைப் பொருமிடத்தி லறிகின்ருேம்" என்ற பிள்ளையார், தாமும் எண்ணுத வகையாலே இடி வீழ்ந்து புத்தனிறந்ததனைக் கேட்டபோது இது சிவச்செயலால் உற்ற விதியே என்று கொண்டு சிவனை வழுத்துக என்றருளினுர்.

எதிர்ந்த விலக்கு - செல்லும் இடைவழியில் தானே வந்து எதிர்ந்து மேற் செல்கையை விலக்கிய இடையூறு; **விலக்கு** - முன் செல்கையை விலக்கும் செயல். **உற்ற விதி** - "நினையாது முன்வந்து நின்று" பொருந்திய சிவன் விதியாகிய நியதி.

விலக்கு நீங்க உற்ற விதி அதுவேயாம் - மேற்கூறியபடி இவ்விடத்துச் சிவாகமங்களில் விதிக்கப்பட்ட நியதியும் அதுவே என்ற குறிப்புமாம்.

2809. **அஞ்சியகன் றோடியவப் புத்த ரெல்லா**
மதிசயித்து மீண்டுமுட னணைந்து கூடி,
"வஞ்சனையோ? விதுதான்மற் றவர்தஞ் சைவ,
வாய்மையோ?" வெனமருண்டு மனத்திற் கொள்வார்
"எஞ்சலின்மந் திரவாத மன்றி யெம்மோ
டெதிர்ந்துபொருள் பேசுவதற் கிசைவ" தென்று
தஞ்செயலின் மிக்குள்ள சாரி புத்தன்
றன்னையே முன்கொண்டு பின்னுஞ் சார்ந்தார். 911

அர என்று எல்லாம் ஓதுக - *சிவனருள் வெளிப்பட்டபோதெல்லாம் சிவநாமங் கூறி முழக்கி வாழ்த்துதல் சைவ மரபு.*

அவ்வொலி - *அவ்வாறு ஆணைப்படி ஓதப்பட்ட அரநாம முழக்கமாகிய ஒலி; எல்லாம் அரவொன்றோதினர் என்பது இசையெச்சம்.*

வான் உற்றது - *அலை ஒலிப் பரம்பரையால் ஆகாயம் நிறைய எழுந்து சென்றது.*

இதுவேயாம்*—என்பதும் பாடம்.* *910*

2809. (இ-ள்) *அஞ்சி...கூடி - பயந்து அவ்விடத்தினின்றும் நீங்கி ஓடிய அந்தப் புத்தர்கள் எல்லாரும் அதிசயமடைந்து மீளவும் தம்முள் வந்தணைந்து ஒன்றுகூடி; வஞ்சனையோ...மருண்டு - அந்நிகழ்ச்சிதான் வஞ்சனையால் விளைந்ததோ? அன்றி மற்று அவர்களுடைய சைவ சமயத்தின் உண்மைத் திறத்தினால் விளைந்ததோ? என்று மன மருட்சியடைந்து; மனத்திற் கொள்வார் - மனத்தினாலே எண்ணினார்களாகி; எஞ்சலின்...என்று - "குறைவில்லாத மந்திரவாதத்தாலன்றி - மந்திரவாதத்தினிற் செல்லாது எங்களோடு எதிர்த்து உண்மைப்பொருளிது என்று பொருணிச்சியம் பேசி வாதம் செய்வதற்கு இசைவீர்களாக" என்று சொல்லி, தம் செயலின்...சார்ந்தார் - தமது சமயநிலைச் செயலில் மிக வன்மையுடைய சாரிபுத்தன் என்பவனையே தலைவனாக முன் வைத்துக்கொண்டு பின்னும் வந்து சார்ந்தார்கள்.*

(வி-ரை) அதிசயித்து - *"அதிசயம் கண்டாமே" (திருவா) என்றபடி நேரிற் கண்டார்களாதலின் இனைத்தென் றறியாவகை அதிசயித்தார்கள்.*

வஞ்சனையோ?...வாய்மையோ?...என மருண்டு - *இந்நிகழ்ச்சி இந்த இரண்டனுள் ஒரு காரணத்தால் நிகழ்ந்திருத்தல் வேண்டும்; அவற்றுள் இன்னதென்று துணியமாட்டாமையின் மருண்டனர். இரண்டனுள் எவ்வகையாயினும் இது மந்திர வாதத்தின்பாற் பட்டதேயன்றி வேறில்லை எனக் கொண்டு, அவ்வாறு மந்திர வாதம் செய்யாது பொருள் பேசி நிச்சயிக்கும் வாக்கின் வாதம் வேண்டுவோம் என நிச்சயித்து அதனை வேண்டினர் என்க.* ***இசைவது*** - *இசை வீராக என்று சொல்லி.*

தஞ்செயல் - *தம் சமயநூல் அறிவும் தொழிலும்.* ***ஓடி அவப்புத்தர் - அவம்*** - *தவமல்லாதது - என்று பிரித்துரைக்கவும் நின்றது; (வ. சு. செ.)*

2810. அத்தன்மை கேட்டருளிச் சண்பை வந்த
வடலேறு திருவுள்ளத் **"தழகி" தென்று**
மெத்தமகிழ்ச் சியினேடும் விரைந்து சென்று,
வெண்டரளச் சிவிகையினின் றிழிந்து, வேருேர்
சத்திரமண் டபத்தின்மிசை யேறி, நீடு
சைவருட னெழுந்தருளி யிருந்து, "சாரும்
புத்தர்களை யழைக்க!"வெனத், திருமுன் னின்ருர்
புகலிகா வலரேவல் போற்றிச் சென்ருர். 912

உடன் அணைந்து கூடி என்றதனல் முன் சிதறுண்டமை பெறப்படும்.

சாரிபுத்தன் - புத்தநந்தி இறந்தபின்னர் அப் புத்தர் தம் தலைவனுகக் கொண்ட புத்தனுடைய பெயர்.

முன்கொண்டு பின்னும் - முன்வரினும் பின்னடையவே - தோல்வியுறவே - செல்கின்ருர் என்பது குறிப்பு.

எஞ்சலில் - எஞ்சுதல் - கெடுதல்; குறைதல், பொய்யாத - குறிதவருத - மந்திரவாதம்.

மந்திரவாதமன்றி - இப்போது நேரிற் கண்டது பிழையாத மந்திரவாதம்; முன்னர்ச் சமணர் பட்டதாகக் கேட்டதும் அவ்வாறே; ஆதலின் அதனைத் தவிர்த்துச் சமயவாதமாகிய வாக்கின் வாதத்தை ஏற்றனர்; அதனில் தம்மினு மிக்காரிலர் என்னும் துணிபினுல் என்க. 911

2810. (இ-ள்) அத்தன்மை...சென்று - அத்தன்மையைக் கேட்டருளிச் சீகாழியி லவதரித்த வலிமையுடைய சிங்கம்போன்ற பிள்ளையார் திருவுள்ளத்தில் இது அழகு என்று கொண்டு மிக மகிழ்ச்சியோடும் விரைவாகச் சென்று; **வெண்...இழிந்து** - வெள்ளிய முத்துச் சிவிகையினின்றும் இறங்கி; **வேறு..ஏறி** - பிறிது ஒரு சத்திரத்தின் மண்டபத்தின்கண் ஏறி; **நீடு...இருந்து** - நீடிய சைவர்களுடனே அமர்ந்து எழுந்தருளி வீற்றிருந்துகொண்டு; **சாரும்...என** - முன் சொன்னபடி எதிர்ந்து பொருள் பேசச்சார்கின்ற புத்தர்களை அழையுங்கள் என்று கூற; **திருமுன்...சென்ருர்** - திருமுன்பு நின்ற தொண்டர்கள் சீகாழித் தலைவரது ஏவலினைப் போற்றி அவ்வாறு அழைத்தற்குச் சென்றனர்.

(வி-ரை) அத்தன்மை - அஞ்சி உடைந்து ஓடிய புத்தர்கள் மீண்டு சாரிபுத்தனைத் தலைமைகொண்டு சமய வாதத்தினை மேற்கொண்டு வந்த தன்மை.

அடல் ஏறு - மதங்கொண்ட யானைபோன்ற புறச்சமயிகளை வெல்லும் தன்மை பற்றிச் சிங்க ஏறு என்று உருவகித்தார்; **ஏறு** - ஆண்மைப் பொதுப் பெயராகக் கொள்ளினுமாம்.

"அழகிது" என்று - "அழகிதாம்" (2806) என முன் கூறியதற்கேற்ப மேற்கொண்டவாறு.

சத்திர மண்டபம் - வழியில் கண்டதொரு சத்திரத்தின் உள்ள மண்டபம்; வடக்கிருந்து கடற்கரையோரமாகத் தெற்கு இராமேச்சுரம் நோக்கிவரும் அவ்வழியில் யாத்திரிகர்கள் தங்குதற்குரிய பல சத்திரங்கள் முன்னுளிலிருந்தன. இந்நாளில் இருப்புப் பாதை வழிப்

2811. **சென்றவர்க டேரர்குழா மணைந்து** "நீங்கள்
செப்பிவரும் பொருணிலைமை தெரிக்க வெங்கள்
வென்றிமழ விளங்களிறு சண்பை யாளி
வேதபா ரகன்மும்மைத் தமிழின் வேந்தன்
நன்றுமகிழ்ந் தழைக்கின்ரு; னீண்ட நீரும்
நண்ணு"மெனக் கூறுதலு நன்மை சாராத்
தன்றகைமைப் புத்தருடன் சாரி புத்தன்
சத்திரமண் டபமுன்பு சார வந்தான். 913

பயணமாயினபின் அவை காவலற்றழிந்தன. இங்குப் பிள்ளையார் எழுந்தருளியிருந்து அவர் முன்பு புத்தவாதம் நிகழ்த்தச் செய்து, சைவத்தாபனம் செய்தருளிய சத்திரம் இடம் ஒன்றுமட்டில் கர்னபரம்பரை நினைவுகொண்டு காட்டப்படுகிறது.

சிவிகையினின் றிழிந்து - மண்டபத்தின்மிசை ஏறி - இழிந்து - ஏறி - என்று கவிநயம்படக் கூறினர். **ஏறி** - வெற்றிக் குறிப்புப்பட நின்றது. "ஊக்கமுடையா னொடுக்கம் பொருதகர், தாக்கற்குப் பேருந் தகைத்து" (குறள்) என்ற குறிப்பும் காண்க.

சத்திரமண்டபத்தின்மிசை ஏறி - இருந்து - அழைக்க என - வாதம் நிகழ்த்திப் பேச ஏற்ற இடமும், பிற வாய்ப்புக்களும் கண்டு செயல் செய்யும் வகை. 912

2811. (இ-ள்) சென்றவர்கள்...அணைந்து - முன் கூறியவாறு பிள்ளையாரது ஏவல் வழிச் சென்ற அவர்கள் புத்தர் கூட்டத்தை அடைந்து; **நீங்கள்...நண்ணுமெனக் கூறுதலும்** - நீங்கள் சொல்லிவருகின்ற பொருளின் உண்மை நிலையினைத் தெரிக்கும்படி எங்களுடைய வெற்றியுடைய இளங்களிறும், சண்பையாளியும், வேதத் தலைவரும், முத்தமிழரசரும் ஆகிய பிள்ளையார் நன்கு மகிழ்ந்து அழைக்கின்றார்; "பொருந்தும்படி நீங்களும் வாருங்கள்" என்று சொல்லுதலும்; (அது கேட்டு) **நன்மை சாரா...சார வந்தான்** - நன்மை நெறியினை (இதுவரை) சாராத தன்னுடைய தன்மையினையே கொண்ட புத்தர்களுடனே கூடிச் சாரிபுத்தன் சத்திர மண்டபத்தின் முன்னே சாரவந்தனன்.

(வி-ரை) செப்பி வரும் பொருள் நிலைமை - "எதிர்ந்து பொருள் பேசுவதற் கிசைவது" என்று சொல்லி வாதத்தினை மேற்கொண்டு வரும் உங்கள் சமய உண்மையாகிய பொருளின் நிலைமை - தன்மை; **தெரிக்க** - தெரிவிக்க; சொல்ல,

வென்றி...வேந்தன் - வென்றி என்றதனால் இவ்வாதத்தில் வெற்றி எங்களுடையது என்றும், **மழஇளங்களிறு** என்றதனால் அவ்வெற்றி இன்பந் தருவதாம் என்றும், **சண்பை ஆளி** - சமயப் பிணக்குடைய மதயானைகளை வெல்லும் தகுதியுடையவர் எம் தலைவர் என்றும், **வேதபாரகன்** என்றதனால் நீங்கள் உடன்படாது நிந்தனை செய்துழலும் வேத ஒழுக்கங்களையே தாங்கிய மேம்பாடுடையவர் என்றும், **மும்மைத் தமிழின் வேந்தன்** - அவ் வேதவுண்மைகளையே முத்தமிழில் நாட்டி உங்களை வெல்பவர் என்றும் குறிப்பித்தவாறு கண்டுகொள்க.

2812. **அங்கணைந்து** மண்டபத்துப் புத்த ரோடும்
பிள்ளையா ரருகணைய நின்ற போதில்,
எங்குநிகழ் திருச்சின்னந் தடுத்த புத்த
னிருஞ்சிரத்தைப் பொடியாக்கு மெதிரி லன்பர்
பொங்குபுகழ்ப் புகலிகா வலர்தம் பாதம்
போற்றியரு ளாற்சாரி புத்தன் றன்னை
"**யுங்கடலை வனும்பொருளு** முரைக்க!" வென்ன,
வுற்றவா தினைமேற்கொண் டுரைசெய் கின்றான், 914

நன்று மகிழ்ந் தழைக்கின்றான் - *நீங்கள் மனங் கொள்வதுபோலப் பொறாமை, இகல், அச்சம் முதலியவாற்றானன்றி மிக்க மகிழ்ச்சியுடன் உங்களை வரவழைக்கின்றான் என்பது; இதனால் நீங்களும் நன்மை பெற உள்ளீர்கள் என்பது குறிப்பு (2823).*

ஈண்ட....நண்ணும் - ***ஈண்ட*** - *என்பது விரைவுப் பொருள் தருவதோரிடைச் சொல்; ''ஈண்ட நீ வருவாயோலம்''; இதுவரையும் புறச் சமயிகளாகச் சேய்மையில் ஒதுங்கி நின்ற நீங்கள், இங்கு, இனி, இதன் இறுதியில் அணியார்களாகப் பொருந்தச் சேருங்கள் (2823-2824) என்பதும் குறிப்பு.*

நன்மை சாராப் புத்தருடன் - சாரவந்தான் - நன்மை சாரா - *இதுவரை நற்சார்பு இல்லாத; **சார**-இனி நற்சார்பு பொருந்த (2824) என்பது குறிப்பு. **சாரார் சாரிபுத்தன்** சொல்லணி.*

வேதபாலகன்—*என்பதுவும் பாடம்.* ***913***

2812. **(இ-ள்)** *அங்கு அணைந்து...போதில் - அவ்விடத்தில் அணைந்து சாரி புத்தன் மண்டபத்திலே புத்தர்களுடனே கூடிப் பிள்ளையாரருகில் அணைய நின்ற போதிலே; எங்கு நிகழ்...அன்பர் - எவ்விடத்தும் ஆணை செலுத்துகின்ற திருச்சின்னத்தைத் தடுத்த புத்தநந்தியின் பெரிய தலையினை அழிவுசெய்த ஒப்பற்ற அன்பராகிய சம்பந்த சரணாலயர்; பொங்கு...போற்றி - மேன்மேல் பெருகும் புகழினையுடைய சீகாழித் தலைவராகிய பிள்ளையாரது திருவடிகளைத் துதித்து; அருளால் - அவர் அருள் பெற்று (வாதத்திற் புகுவாராகி); சாரிபுத்தன்...என்ன - சாரிபுத்தன் தன்னை நோக்கி ''உங்கள் தலைவனாகிய கடவுளையும் அவன் கூறும் பொருளாகிய முத்தியினையும் இன்னபடி எனப் பேசுவாயாக'' என்று கூற; உற்ற...உரை செய்கின்றான் - பொருந்திய சமய வாதத்தினை மேற்கொண்டு சொல்கின்றவனாகி;*

(வி - ரை) ***அங்கு அணைந்து*** - *சத்திர மண்டபத்தின்கண் சார்ந்து.*

அருகணைய நின்ற - *வாதம் செய்யத் தக்கபடி அருகு சாரநின்ற. **அணைய**-இனி முடிவில் அவர்பால் திருநீறு பெற்று அன்பர்களாக என்ற குறிப்பும் தருவது.*

எங்கு நிகழ் - *எவ்விடத்தும் எக்காலத்தும் தடையின்றி ஆணை நிகழத்தக்க; சிவனதாணையினை உட்கொண்டு, ''ஆணை நமதே'' என்று தமது கட்டளையினையிட வல்ல பிள்ளையாரது தடுக்கலாகாப் புகழ் பரவுவதாதலினாலும், முழுமுதல்வராகிய சிவனாற்றரப்பட்ட தாதலினாலும் எங்கும் நிகழுந்தன்மை பெற்றது என்க.*

தலைவன் - கடவுள்

2813. **கற்பங்க** ளனைத்தினிலும் பிறந்து வீந்து
கதிமா றுங் **கணபங்க வியல்பு** தன்னிற்
பொற்புடைய **தானமே தவமே** தன்மை
புரிந்தநிலை **யோகமே** பொருந்தச் செய்ய
வுற்பவிக்கு மொழிவின்றி யுரைத்த ஞானத்
தொழியாத பேரின்ப முத்தி பெற்றான்
பற்பலரும் பிழைத்துய்ய வறமுன் சொன்ன
பான்மையான் **யாங்கடொழும் பரம**" னென்றான். 915

சிரத்தைப் பொடியாக்கும் அன்பர் - பொடியாக்குதல் - *அழித்தல்; வேறு படுத்துதல் என்ற பொருளில் வந்தது. பொடியாக்கியது இறைவரருளினை உட்கொண்ட பிள்ளையாரது அத்திரவாக்கேயாயினும் அச்செயல் அதனைக் கூறிச் செலுத்திய அன்பர் செயலாகக் கூறியது உபசாரம்.*

பாதம் போற்றி அருளால் - *பிள்ளையார் தாமே நேரில் சமய வாதம் செய்தல் மரபன்றாதலின் அவரருளாணை பெற்று அவர் திருமுன்பு அன்பர் தொடங்கிச் செய்தனர் என்க.*

தலைவனும் பொருளும் உரைக்க - *சமய வாதத்தில் பேசி வெற்றிதோல்வி காண உள்ளனவற்றுட் சிறந்த பகுதிகள் இவ்விரண்டுமேயாம். அவை: அவ்வவர் கூறும் கடவுளிலக்கணம், முத்தியிலக்கணம் என்பவை.* ***பொருள்*** - *முடிபாய்க் கூறும் உறுதிப் பொருள்; இவ்வாறு சமய வாதத்தினையும் பொருணிச்சயத்தினையும் அளவறுத்து அமைதிப்படத் துணியமாட்டாது சமய நிந்தையே சமய வாதமாமெனப் புறங்கூறிப் போலிச் சமரசம் பேசும் இந்நாள் மாக்கள் இதனைக் குறிக் கொண்டொழுகுதல் நலந்தருமென்க.*

உற்ற வாதினை மேற்கொண்டு - *தானே தேடி முனைந்துகொண்டமையால் வந்து பொருந்திய அவ்வாதத்தினை ஏற்றுக்கொண்டு - தொடர்ந்துகொண்டு.*

உரை செய்கின்றானாகி - *என்றான் என மேற்பாட்டுடன் முடிக்க.* ***உரை செய்கின்றான்*** - *முற்றெச்சம்.* ***914***

2813. (இ-ள்) *கற்பங்க ளனைத்தினிலும்...தன்னில் - அளவிறந்தனவாகிய எல்லாக் கற்பங்களினும் அளவிறந்த யோனிகளிற் பிறந்தும் இறந்தும் அக்கதியினின்றும் மாறி வீடு பெறுகின்ற கணபங்க இயல்பு என்ற கொள்கை கூறும் புத்த சமயத்தில்; பொற்புடைய...செய்ய - அழகுடைய தானம் - தவம் - பண்பு மிகுந்த யோகம் என்னும் இவைகளைத் தான் பொருந்தும்படி செய்யவே; உற்பவிக்கும்... ஞானத்து - அதனாலுண்டாகும் நீங்குதலில்லாத நிலையினாற் சொன்ன ஞானத்தால்; ஒழியாத...பெற்றான் - கெடாத பேரின்பந் தரும் கந்தவீடு பெற்றவன்; பற்பலரும்...பான்மையான் - பலப்பலரும் பிறவித் துன்பத்தினின்றும் நீங்கி உய்யும் பொருட்டு அறங்களை முன்னே சொன்ன அருளுடையவன்; யாங்கள் தொழும் பரமன் என்றான் - அவனே நாங்கள் தொழுகின்ற கடவுளாவான் என்று சொன்னான்.*

(வி-ரை) கற்பகங்கள் அனைத்தினிலும்-கற்பங்கள் எல்லாவற்றிலும் **கற்பம்-காலக்** கூறுபாட்டின் பேரளவு; 432 கோடி ஆண்டுகள் கொண்டது.

பிறந்து வீந்து - பிறந்தும் இறந்தும்; **வீதல்** - இறத்தல்.

கதி-பிறப்பு வகை; பதவி என்பாருமுண்டு. தாம் செய்த நல்வினை தீவினைகட் கேற்றபடி மக்கட்கதி - தேவகதி - பிரமகதி - நரககதி - விலங்குகதி - பேய்க்கதி - என்ற ஆறனுள் ஒன்றை அடையும் நிலை.

கணபங்க இயல்பு - கணபங்கம் என்னும் கொள்கை கூறும் பௌத்த சமயம்.

கற்பங்கள்...இயல்பு தன்னில் - எல்லாக் கற்பங்களிலும் உயிர்கள் உய்தற் பொருட்டுப் பிறந்தும் இறந்தும் கதிமாறும் கணபங்கம் என்னும் நியாயம் கூறும் பௌத்த சமயக் கொள்கையின்படி.

பொற்புடைய...செய்ய - **பொற்புடைய** என்றதனைப் பின்வரும் தவம் முதலியவற்றோடும் கூட்டுக; ஏகாரங்கள் எண்ணிடைச் சொற்கள். **தன்மை புரி** - பிறதொடர்பு எல்லாம் நீங்கிப் பொருந்தும் தன்மைகொண்ட.

பொருந்தச் செய்ய - தானம் முதலாகக் கூறப்படும் பத்து நற்குண நற்செயல்களில் ஈடுபட்டுச் செய்தலான்.

செய்ய உற்பவிக்கும் - செய்தலால் தோன்றும்; உண்டாகும். **உற்பவம்-பவம்**-பிறப்பு-தோற்றம்; **உத்** - உபசர்க்கம்.

ஒழியாத பேரின்ப முத்தி - கெடுதலில்லாத பெரிய இன்பம் உடைய முத்தி.

முத்தி பெற்றான் - பான்மையான் - (அவன்) பரமன் - என்க.

அறம் - தர்மோபதேசம்; **அறம் சொன்ன பான்மை** - புத்த சரிதம் பார்க்க.

இப்பாட்டால் ''உங்கள் தலைவனும் - பொருளும் உரைக்க'' என்று வினவிய இரண்டனுள் எங்கள் தலைவன் இவன் என்று தமது கொள்கையின்படி கடவுளிலக்கணம் பற்றிய விடை கூறினான்.

முன் கூறிய கொள்கைகளின் விவரமாவன:—கணபங்கமாவது - கணந்தோறும் அழிகை; (**கணம்** - க்ஷணம்.) **கண**மாவது - நூறுதாமரை இதழ்களை அடுக்கி ஊசியினாற் குத்த அவற்றுள் எட்டு இதழ்கள் அறும் கால அளவு.

கற்பங்களனைத்தினிலும் பிறந்து வீந்து கதிமாறும் - இது புத்த சரிதம் குறித்தது. புத்தன் தன் தாயின் வலது மருங்குலாற் பிறந்து பின் ஆறுநாளின்பின் அவளை உயிர் துறப்பித்து, இவ்வாறு தோன்றுவன். அதன்பின் பல உயிர்களும் பிழைத் துய்யும் பொருட்டு அளவில்லாத எல்லாக் கற்பங்களிலும் அளவிறந்த யோனிகளிலும் புகுந்து பிறந்தும் இறந்தும் பிற உயிர்கட்கு உறுதி செய்து மேல் அக்கதி மாறி வீடு அடைவன் என்பதாம்.

கணபங்க இயல்பு - ஒரு கணத்தில் ஞானமும் ஞேயமுமாகிய பொருள்கள் தீப சந்தானம்

பொருள்- முத்தி

2814. **என்றுரைத்த** சாரிபுத்த னெதிர்வந் தேற்ற
விருந்தவத்துப் பெருந்தன்மை யன்பர் தாமும்
"நன்றுமது தலைவன்முன் பெற்ருு னென்று
நாட்டுகின்ற **முத்திதான் யாவ**" தென்ருர்;
"நின்ற**வுரு வேதனையே குறிப்புச் செய்கை**
நேர்நின்ற **ஞான**மென நிகழ்ந்த வைந்தும்
ஒன்றியகந் தத்தவிவே முத்தி" யென்ன
வுரைசெய்தான் பிடகத்தி னுணர்வு மிக்கான். 916

போலக் கெட்டு வருதலேயன்றிக் கெட்டுக் குறைந்து வருதலும், கெட்டு ஒழிந்து நிற்பதும், கெட்டுக்கெட்டு வருவதுமென நான்கு வகையாய்க் கேடடையும் என்ற கொள்கை.

பொற்புடை....செய்ய - முன் சொன்னபடி பிறந்த புத்தன் அளவில்லாத நல்ல தானம் முதலிய சீலங்களுடையவனும் யோகியாயுமிருக்க.

ஒழிவின்றி உரைத்த ஞானம் - திரிலட்சண பாவனை என்னும் ஞானம். அஃதாவது சர்வந் துக்கந்துக்கம்; சர்வம் நித்தியம் நித்தியம்; சர்வஞ் சூனியஞ்சூனியம் என்னும் பாவனை.

ஞானத்து - ஞானத்தினுல்; **ஞானத்து (ஒழியாத பேரின்ப) முத்தி பெற்ருன்**- ஞானம் பெற்றமையால் குற்ற நீங்கிப் பஞ்சகந்த அழிவாகிய முத்தியடைந்தான்.

பற்பலரும்......அறம் முன்சொன்ன பான்மையான் - முத்தி பெறுமுன் தவங் காரணமாகத் தோன்றிய ஞானத்தால் முற்றும் உணர்ந்து பிறர் உய்ய அறஞ் சொன்னுன்.

பரமன் - ஆதிபுத்தருடன் புத்தர் இருபத்து நால்வர்: இறுதியில் நின்றவன் கௌதம புத்தன். இங்குக் கூறியவன் ஆதிபுத்தன்.

இங்குக் கூறிவற்ருல் துக்கம் - துக்கோற்பத்தி - துக்க நிவாரணம் - துக்க நிவாரண மார்க்கம் எனச் சத்திய சதுட்டயம் என்று பௌத்தர் கூறும் நான்கும் குறிப்பிற் பெறப்பட்டமை கண்டுகொள்க.

915

தவமே நன்மை—என்பதும் பாடம்

2814. (இ-ள்) என்றுரைத்த...தாமும் - இவ்வாறு தன் தலைவன் தன்மை பற்றி விடை கூறிய சாரிபுத்தன் முன்பு வாதத்தினை ஏற்றுநின்ற பெரிய தவத்தினையும் பெருந்தன்மையினையுமுடைய அன்பரும்; நன்றுமது...என்ருர் - உம் தலைவன்தான் அடைந்தான் என்று உங்கள் சமயம் நிச்சயிக்கின்ற முத்தியினியல்புதான் யாது? என்று கேட்டார்; நின்ற உரு...உரை செய்தான் - நின்ற உரு - வேதனை - குறிப்பு - செய்கை - நேரே நின்ற ஞானம் என நிகழும் ஐந்தும் கூடிய (பஞ்ச) கந்தத்தின் அழிவே முத்தியாவதென்று சொன்னுன்; பிடகத்தின் உணர்வு மிக்கான் - திரிபிடகத்தின் அறிவு மிகுந்தவனுகிய சாரிபுத்தன்.

இம் மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி - ரை) எதிர் வந்து ஏற்ற - முன் (2812) கூறியபடி வாதத்தினை ஏற்று முன்வந்து வாதந் தொடங்கிய; **ஏற்றல்** - மேற்கொள்ளுதல்.

இருந்தவத்துப் பெருந்தன்மை அன்பர் - ''எதிரில் அன்பர்'' (2812) சம்பந்த சரணுலயர்; இத்தன்மையாற் கூறினுர், இகல், பொருமை, சினம் முதலிய தீக்குணங் காரணமாக இவ்வாதத்தினை ஏற்ருரலர் என்பது குறித்தற்கு.

உமது தலைவன்தான் நன்று பெற்ருனென்று நாட்டுகின்ற முத்திதான் யாவது - ''முத்தி பெற்ருன்'' (2813) என முன் கூறினமையால் அதனையே தொடர்ந்து கொண்டு இரண்டாவது விளுவைத் தொடுக்கின்ருர். **நன்று - பெற்ருன்** என்க; ''ஒழியாத பேரின்பம்'' (2813) என்றதனைக் குறித்தது. **நன்று நாட்டுகின்ற** - என்று கூட்டி உரைத்தலுமொன்று.

ஐந்தும் ஒன்றிய கந்தத்து அவிவே முத்தி - ஐந்து கந்தங்களும் அழிவதுவே முத்தியின் இலக்கணம் என்பது பௌத்த நூன்முடிபு.

நின்ற உரு...ஐந்தும் - புத்தர் பஞ்சஸ்கந்தம் என்னும் கந்தமைந்தாவன: உரு - வேதனை - குறிப்பு - செய்கை - ஞானம் என்பன. அறிவுள்ள பிராணிகள் இந்த ஐந்தும் சேரும் கூட்டத்தாலுண்டாவன என்பதும், இவ்வைந்தன் அழிவே முத்தி என்பதும் பௌத்தர் கொள்கை. **(1) உருவக்கந்தம்** - உருவங்களுக்கெல்லாம் காரணமாகிய பொருளை உணர்த்துவது; **(2) வேதனைக் கந்தம்** - இந்திரியங்களுக்கும் புலன்களுக்கும் உள்ள பொருத்தத்தின் உளதாகும் உணர்வு; **(3) குறிக் கந்தம்** - (இதனை சமஞ்ஞா ஸ்கந்தம் என்பர்) மெய் வாய் முதலிய ஐந்தும் மனமும் கூடிய ஆறு இந்திரியங்களினுல் வரும் அறுவகை யுணர்விஞு லுளதாகும் பொது - சிறப்பு என்ற இருவகையானும் பொருள்களைப் பெயர்க்குறியிட்டறிதற் கருவியாகிய ஞானம்; **(4) செய்கைக் கந்தம்** - (இதனை சமஸ்காரக்கந்தம் என்பர்) மனம்வாக்குக் காயம் என்னும் முக்கரணங்களால் வரும் தொழில் வேறுபாட்டால் அவற்றுக்கு உளதாகும் பக்குவம்; **(5) ஞானக் கந்தம்** - (விஞ்ஞானம் என்பர்) துயில்வோனுடைய உணர்வானது, செய்கையும் நுகர்வுமின்றிச் சான்று மாத்திரையாய் நிற்பதுபோல அறிவுடையார்களுக்குள் நின்று அவ்வறிவுக் காரணமாய் நிற்கும் அறிவுச் சத்தி; ''உணர்வெனப்படுவ துறங்குவோ ருணர்விற், புரிவின் ருகிப் புலன்கொளா ததுவே'' (மணிமேகலை - 30 - 82 - 83); இவ்வைந்தும் 28 - 18 - 6 - 52 - 89 ஆகிய தத்துவங்களை உட்கொண்டன.

''எட்டிவை யுருவ மூன்று வேதனை யாறு ஞானம், ஒட்டிய குறிப்போ ராறு செய்கையு மிருப தாகக், கட்டிய பஞ்ச கந்தங் கணத்தினிற் பங்கமாகுந், தொட்ட நாற்பத்து மூன்றுஞ் சுகதநூற் றுணிவு தானே'' என்பது பௌத்த நூல். இவற்றின் விளக்கமாவது: ''**உருவம்** எட்டு - அவை பூதவுரு நாலு; உபாதானவுரு நாலு; அவை வருமாறு: பிருதிவி, அப்பு, தேயு, வாயுவெனு நாலும் பூதவுரு; வலி, கந்தம், இரதம், வன்னமெனு நாலும் உபாதானவுரு; ஆக - (8); **வேதனை**-மூன்று; அவை: குசலா வேதனை (சுகஅறிவு), அகுசலா வேதனை (துக்கஅறிவு), குசலா குசலா வேதனை (சுகதுக்க அறிவு) ஆக-(3); **குறிப்பு** - ஆறு-சோத்திரம் துவக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம் (மெய், வாய், கண், மூக்கு, செவி), மனம்; ஆக-(6); **பாவனை** - இருபது; தீக்குணம் 10 - நற்குணம் 10; தீக்குணங்களாவன: பொய் சொல்லல், கோட்சொல்லல், கோபித்துச் சொல்லல், பயனில சொல்லல் என வாக்கின் குணம் 4; களவுக்குப் போகுதல், வறிதே தொழில் செய்தல், கொலை

செய்தல் எனக் காயத்தின் குணம் 3; கொலை நினைத்தல், காமப்பற்று, ஆசை என மனத்தின் குணம் 3; ஆக - 10; நற்குணங்களாவன: மெய்யுரை, நல்வார்த்தை, இனியவை கூறல், பயன்படு சொல் எனவாக்கின் குணம்4; பள்ளி வலம் வரல், தவம் புரிதல், தானஞ் செய்தல் எனக் காயத்தின் குணம் 3; அருள் நினைவு, ஆசையறுத்தல், தவப் பற்று என மனத்தின் குணம் 3; ஆக - 10; ஆகப் பாவனை 20; இவை மனத்தானும் வாக்கானும் காயத்தானும் வருவன. **விஞ்ஞானம்** - ஆறு; அவை: சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், சித்தம் ஆக 6; ஆகப் பஞ்சகந்த போதம் - 43 கண்டுகொள்க. ''இவ்வித மைந்துஞ்சந் தானத் தெழுந்தழிகை, பந்த மெனவேநீ பார்'' - பரமத திமிரபானு.

''ஓங்கிய வுருவ மோடும் வேதனை குறிப்பி னேடுந், தாங்குபா வனைவிஞ்ஞானந் தாமிவை யைந்துங் கூடிப், பாங்கினுற் சந்தா னத்திற் கெடுவது பந்த துக்கம்; ஆங்கவை பொன்றக்கேடா யழிவது முத்தி யின்பம்'' (சிவஞான சித்தியார் - பரபக்கம் - சௌத்திராந்திகன் மதம் 30) என்றும்; ''மேவிய கருவிற் சேருமுருவம்வே தனைகு றிப்புப், பாவனை யுடன்விஞ் ஞானம் பஞ்சகந் தங்கள் கூடி, யோவில்பல் லுணர்வுண் டாகி யொழிவது பிறவித் துன்ப, மாவது பொன்றக் கேடா யொழிவது முத்தி யென்றுன்'' (திருவாத. புரா-484 = பத். வாதில் சருக்-50) என்றும் வருவனவும், பிறவும் காண்க; சௌத்திராந்தகன் முதலிய நால்வகைப் புத்தர்களின் சமயக் கொள்கை விவரங்களும், அவற்றின் மறுப்புக்களும் சிவஞான சித்தியார் பரபக்கத்துள் விவரிக்கப்பட்டன; அவற்றைக் கற்றுணர்தல் ஈண்டு வரும் பௌத்த வாதத்தை நன்குணர்தற் குதவிசெய்யும்; கடைப்பிடிக்க. புத்தசரித்திரம், புத்ததருமம், புத்தசங்கம் என்பவை பற்றி மணிமேகலைப் பதிப்பில் மகாமகோபாத்தியாயர் - திரு - உ.வே.சாமிநாதய்யர் அவர்கள் விரிவாயப் பௌத்த நூல்களையும் அவைபற்றி மேனுட்டுப் புலவாணர் எழுதியவைகளையும் ஆய்ந்து தொகுத்து எழுதியுள்ளவையும் பார்க்க.

பிடகம் - பௌத்தர்களின் சமயநூல்; ஆதிபுத்தனுடன் இருபத்துநான்கு புத்தர்கள் மரபி லுபதேசக்கிரமத்தாற் சொல்லப்பட்ட நூல். அவை வினய பிடகம், சூத்திர பிடகம், அவிதன்ம பிடகம் என மூவகைப்படும். இவை திரிபிடகம்-பிடகத் திரயம் எனவும் வழங்கப்படும். **பிடகம்** - கூடை. புத்தம்-தருமம்-சங்கம் என்பன முத்திற மணி என்பது பௌத்த வழக்கு. புத்தம் சரணங்கச்சாமி - தருமம் சரணங்கச்சாமி - சங்கம் சரணங்கச்சாமி (நமோ புத்தாய; நமோ தர்மாய; நமஸ்ஸங்காய என்பது மந்திரம்.) என்னும் மும்மணியைக் கூடைபோன்று தாங்குதலால் இது பிடகம் எனப்படும் என்பர். இந்நூல்களைக் கூடையில் சேமித்துத் தாங்குதலால் போந்த பெயர் என்றும் கூறுவர்.

உணர்வு - அறிவு; பயிற்சியால் வரும் ஞானம்.

இப்பாட்டினுல் உருவம் முதலியனவாய்க் கூறப்படும் ஐந்து கந்தங்களும் பொன்றிக் கெட்டழிதலே முத்தி என்று சாரிபுத்தன் தனது சமயக் கொள்கையிற் கூறுமாறு விடையிறுத்த முத்தியினிலக்கணம் கூறப்பட்டது. *916*

2815. (இ-ள்) ஆங்கவன்றன்...நோக்கி - அப்போது அந்தச் சாரிபுத்தன் விடையாகக் கூறிய மொழியைக் கேட்ட அன்பராகிய சம்பந்த சரணுலயர் அவன் கூறிய மொழியினைத் தாம் அநுவதித்துக்கொண்டு அவனைப் பார்த்து; தாங்கிய... கெட்டனவேல் - அவன் (புத்தன்) முன் தாங்கியிருந்த ஞானம் முதலாகிய ஐந்து கந்தங்களும் தாம் ஒருங்கே அழிந்து கெட்டனவானுல்;

2815. **ஆங்கவன்ற** னுரைத்தமொழி கேட்ட வன்ப
ரதனையநு வாதஞ்செய் தவனை நோக்கித்
"தாங்கியஞா னத்துடனுங் கந்த மைந்துந்
தாம்வீந்து கெட்டனவேற் **றலைவன் 'றானும்**
ஈங்குள'னென் றவனுக்கு விடய மாக
யாவையுமுன் னியற்றுதற்கு விகார மேசெய்
தோங்குவடி வமைத்துவிழ வெடுக்கும் பூசை
கொள்வாரா? ருரைக்க!"வென, வுரைக்க லுற்றான், 917

தலைவன்தானும் ஈங்கு உளன் என்று - தலைவன்தானே இங்கு வீற்றிருக்கின்றான் என்று கொண்டு; அவனுக்கு...இயற்றுதற்கு - அவன் கொள்ளும்படி எல்லாவற்றையும் செய்வதற்காக; விகாரமே செய்து...உரைக்க என - விகாரம் என்னும் கோயில் எடுப்பித்து அதனுள் அவனது பெரிய வடிவத்தையும் அமைத்து விழாச் செய்யும் பூசையினை ஏற்றுக்கொள்பவர் யாவர்? சொல்க! என்று வினவ; உரைக்கலுற்றான் - அவன் சொல்லத் தொடங்கியவனாய்;

(வி-ரை) அநுவாதம் செய்தலாவது - ஒருவன் கூறிய பொருளை மறுக்கும் பொருட்டு "நீ இவ்வாறு கூறினை" என்று எடுத்துக் கூறி, மேலே வாதிப்பது; இங்குத் "**தாங்கிய......கெட்டன**" என்பது அநுவாதம்; நீ இவ்வாறு சொல்வையாயின் என மேலே செல்வது. **அநுவாதம்** என்பது வேறொன்று கூறற் பொருட்டு அதனை எடுத்து மொழிந்து கொள்ளுதல்; **அநு** - வழி; **வாதம்** - மொழிதல்; அநுவாதம் எனினும் வழி மொழிதல் எனினு மொக்கும்.

தலைவன் தானும் ஈங்கு உளன் என்று-அத்தலைவன்தானே ஈண்டு முன் இருக்கின்றான் என்று உட்கொண்டு - எண்ணம் வைத்து.

அவனுக்கு விடயமாக - அவன் அறிவுக்கு விடயமாகப் பெற்று ஏற்றுக் கொள்ளும்படி - ஏற்குமாறு.

யாவையும் இங்கு இயற்றுதற்கு - யாவையும் - ஊட்டுதல் - பூச்சூட்டுதல் - கேட்பித்தல் முதலிய உபசாரமாகிய எல்லாவற்றையும், இங்கு - இவ்வுலகத்தில் - செய்தற்பொருட்டு.

விகாரமே செய்து - விகாரம் - புத்தர் கோயில்களின் பெயர் வழக்கு. இவ்வா றறிகிலாது இதற்கு வேற்றுமை - மனோவிகாரமான பாவனை - எனப் பொருள் கொண்டனர் முன் உரைகாரர்கள்.

ஓங்கு வடிவு - புத்தர் கோயில்களில் அவர் வடிவத்தை உட்கார்ந்தநிலை-நின்ற நிலை-படுத்தநிலை முதலிய பல நிலைகளிலும் பெருத்த வடிவங்களாகப் பலபடியும் அமைத்தல் வழக்கம். இவை இலங்கையில் உள்ள புத்த விகாரங்களிற் சிறக்கக் காணலாம். வட இந்தியாவில் புத்த கோயில்களிலும் குகைகளிலுமுண்டு.

ஓங்குதல் - பெரிதாய் அமைதல்.

விகாரம் செய்தல் - வடிவமைத்தல் - விழாவெடுத்தல் - பூசைபுரிதல்- இவை புத்தர் இவ்வுலகத்தில் இங்கே இருந்து பூசை கொள்கின்றார் என்ற எண்ணத்தாற் செய்யப்படுவன என்பதாம்.

2816. "**கந்தமாம் வினையுடம்பு நீங்கி யெங்கோன்**
கலந்துளன்முத் தியி"லென்றா; னென்னக், "காணும்
இந்திரியங் கண் முதலாங் கரணந் தானு
மில்லையே லவனுணர்ச்சி யில்லை" யென்றார்;
"முந்தையறி விலஞகி யுறங்கி னானை
நிந்தித்து மொழிந்துடன்மீ தாடி னார்க்கு
வந்தவினைப் பயன்போல வழிபட் டார்க்கும்
வருமன்றோ நன்மை"யென மறுத்துச் சொன்னான். 918

கெட்டனவேல் - பூசை கொள்வாரார்? - பூசை புலப்பட விடயமாவதற்கு உணர்வு வேண்டும்; உணர்வு உண்டாதற்கு ஐந்து கந்தங்களின் சேர்க்கை வேண்டும்; முத்தியில் ஐந்து கந்தங்களும் அவிந்தழிகின்றன என்பாயாதலின் உன் தலைவனுக்கு அந்நிலையில் உணர்வும், பூசை விடயமாவதும் இல்லை. எனவே நீ "அவன் இங்கிருக்கின்றான்" என்று எடுக்கும் பூசை புலப்பட ஏற்றுக்கொள்பவர் யார்? என்றவாறு. 917

2816. (இ-ள்) கந்தமாம்...என்றான் - இருவினை காரணமான பஞ்சகந்த வுடம்பு கெட எம் தலைவன் முத்தியிற் சேர்ந்திருக்கின்றான் (அதனால் கோயிலும் வடிவும் விழாவும் பூசையும் எடுத்தல் பொருந்தும்) என்று கூறினான்; **என்ன** - அவ்வாறு கூறவே; காணும்...இல்லை என்றார் - (அவ்வாறு முத்தியிற் சேர்ந்ததும் உன் இறைவனுக்கு) விடயங்களை உணரும் கருவிகளாகிய கண் முதலிய கரணங்கள் இல்லாதொழிந்தால் அவனுக்கு உணர்வு உதித்தல் இல்லையாகும் என்று மறுத்தருளினார்; முந்தை...போல - முற்பட்ட உணர்வுகெட்டு உறங்குகின்றவனை நிந்தனைசெய்து அவனுடம்பின் மீது மிதித்தாடின வொருவனுக்கு அதனால் தீவினைப்பயன் வருதல்போல; வழிபட்டார்க்கும்...மறுத்துச் சொன்னான் - ஐந்து கந்தமுங் கெட்டு முத்தியடைந்த எம் முதல்வனை வழிபாடு செய்தவர்களுக்கும் அந் நல்வினைப்பயன் வருமன்றோ? என்று சாரி புத்தன் மறுத்துக் கூறினான்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி - ரை) கந்தமாம்...என்றான்-இருவினை காரணமான கந்தவுடம்பு கெட முத்தியில் என் தலைவன் சேர்ந்திருக்கின்றான் (அதனால் விழா எடுத்துப் பூசை செய்தல் பொருந்தும்) என்று சாரிபுத்தன் மறுமொழி கூறினான்; **என்ன** - என்று கூற.

"காணும் இந்திரியம்... இல்லை" என்றார் - முத்தியிற் சேர்ந்த தலைவனுக்குக் காணுதற்குரிய கண் முதலிய கரணங்கள் இல்லையாதலின் உணர்வுதித்தலுமில்லையாம் என்று அவன் விடையினை மேலும் அன்பர் மறுத்தவாறு.

"முந்தை அறிவிலஞகி......நன்மை" என - அறிவுணர்தலின்றி உறங்குகின்ற ஒருவனை மற்றொருவன் நிந்தித்து மிதிப்பானாயின் முன்னவன் அதனை உணராவிடினும் அத் தீவினைப் பயன் பின்னவனுக்கு வரும்; அதுபோல முதல்வன் முத்தியில் இதனை உணராவிடினும் அவனைப் பூசை முதலியன செய்தலின் பயன் அது செய்தாருக்கு வரும் என்றது. இஃது அன்பருடைய அத் தடையுரையினை மறுத்துப் புத்தன்மேலும் கூறிய விடையாம்; **முந்தையறிவு** - ஆலய

2817. **சொன்னவுரை கேட்டருளி யன்பர் தாமுந்'**
'தொடர்ந்தவழி பாடுபல கொள்கின் றானுக்
கன்னவற்றி னுடன்பாடு மெதிர்வு மில்லை
யானபோ தவன்பெறுத லில்லை'' யென்றார்;
முன்னவற்றி னுடன்பாடு மெதிர்வு மின்றி
முறுகுதுயி லுற்றானை முனிந்து கொன்றால்
இன்னுயிர்போய்க் கொலையாகி முடிந்த தன்றே?
விப்படியா லெம்மிறைவற் கெய்து மென்றான். 919

விஞ்ஞானம் பிரவிருத்தி விஞ்ஞானம் என்னும் இரண்டனுள் முன்னதன் காரணமாக வரும் நனவுணர்வாகிய முன்அறிவு.

நிந்தித்து மொழிந்து உடல்மீது ஆடினார்க்கு - *வைதலும் மிதித்தலும் செய்தோர்க்கு.* ***வினைப்பயன்*** - *அத் தீவினைப்பயன்.*

வினைப்பயன் வருதல்போல - நன்மையும் வருமன்றே *என்க;* ***நன்மை*** - *நல்வினைப்பயன்; தீவினைப்பயன் வருதல் கண்கூடாகப் பெறக் காண்டலின் அதனை உவமானமாக்கிக் காணாத நல்வினைப் பயனைப் பெறுவித்தான். இஃது அவன் எடுத்துக் காட்டிய உவமை; வினைபற்றி வந்தது.* *918*

2817. (இ-ள்) *சொன்னவுரை...என்றார் - முன் கூறியவாறு சொன்ன சாரிபுத்தனது மறுமொழியைக் கேட்டருளி அன்பராகிய சம்பந்த சரணாலயரும், ''நீ தொடர்ந்த வழிபாட்டினை ஏற்றுக்கொள்கின்ற உன் தலைவனுக்கு (உணர்ந்து கோடற்குரிய கருவிகளில்லாமையால்) அவற்றில் விருப்பும் வெறுப்பும் இல்லை; அவ்வாறாயினபோது அவன் அவ் வழிபாட்டினை ஏற்றுக்கொள்ளுதலுமில்லை'' என்று கூறியருளினார்; ''முன்னவற்றில்..முடிந்ததன்றே?'' - தன் முன்புள்ள விடயங்களில் விருப்பும் வெறுப்புமின்றி முறுகிய துயிலினைப் பொருந்திய ஒருவனைக் கோபித்து ஒருவன் கொன்றால் அவ்வாறு கொல்லப்பட்டவனுக்கு உயிர் போவதும் கொன்றவனுக்குக் கொலைப்பாதகமும் வந்து கொலைப்பழி மூண்டுவந்து முடிந்ததல்லவா?; இப்படியால்...என்றான் - இவ்வாறே எமது இறைவனுக்கும் எம் வழிபாடு சென்று பொருந்தும் என்று கூறினான்.*

(வி-ரை) தொடர்ந்த...பெறுதல் இல்லை - *முன் அறிவின்றி உறங்கினவனை நிந்தித்து மிதித்த ஒருவனுக்கு வரும் வினைப்பயன் போல வழிபட்டார்க்கும் வரும் என்று கூறிய புத்தன் மொழியை மறுத்து, வழிபாட்டினை உடன்பாடாதல் அல்லது வெறுப்பாதல் வரும் உணர்வினுடன் அவன் கைக்கொண்டாலன்றிப் பயன்றருதல் சாலாது. உன் இறைவன் பஞ்சகந்தமும் அவிந்தநிலையாகிய முத்தியில் நின்றானெனப் படுதலால் அவன் வழிபாட்டினைக் கைக்கொள்ளுமாறில்லை; அதனால் பயன்றருமாறுமில்லை என்று அன்பர் கூறியபடி.*

முன்னவற்றில்...எய்தும் - *இது புத்தன் அதற்குமேலும் தொடர்ந்து கூறிய மறுமொழி. பயன் வருதலுக்கு உடன்பாடும் எதிர்வும் ஆகிய உணர்வுடைய மனநிலை வேண்டற்பாலதன்று; முன் உணர்வின்றி உறங்கினவனுக்குப் புறநிகழ்ச்சிகளில் உடன்பாடும் எதிர்வுமில்லை; ஆனால்*

2818. "இப்படியா லெய்து'மென விசைத்து நீயிங்
 கெடுத்துக்காட் டியதுயிலு மியல்பி ளுன்போன்
மெய்ப்படிய கரணங்க ளுயிர்தா மிங்கு
 வேண்டுதியா னும்மிறைவற்; கான போது
செப்பியவக் கந்தத்தின் விளைவின் ருகித்
 திரிவில்லா முத்தியிற்சென் றிலனு மாஞன்;
அப்படியக் கந்தத்து ளறிவுங் கெட்டா
 லம்முத்தி யுடனின்ப மணையா" தென்ருர். 920

அவனைக்கொன்ற ஒருவனுக்குக் கொலைப்பாவம் வரும். அதுபோல எம் இறைவன் எமது வழிபாட்டில் உடன்பாடும் எதிர்வுமிலனுயினும் வழிபாட்டின் பயனும் எமக்கு வரும் என்றபடி.

உடன்பாடு - விரும்புதல்; **எதிர்வு** - வெறுத்தல். இவ்விரண்டும் உணர்வாகிய மனநிலைகள். **முறுகு துயில்** - மிக்க துயில். 919

2818. (இ-ள்) இப்படியால்...போல் - இவ்வாருக வழிபாட்டின் பயன்றருதல் எம் தலைவன்பாலும் பொருந்தும் என்று நீ இங்கு உதாரணமாக எடுத்துக்காட்டிய (உடன்பாடும் எதிர்வுமாகிய உணர்வின்றி) உறங்குகின்றவனது தன்மைபோல; மெய்ப்படிய...இறைவற்கு - உடம்பில் உள்ள கரணங்களும் உயிரும் ஈண்டு இச்செயலுக்கு-வழிபாடு கொண்டு பயன்படும் நிலைமைக்கு-உன் இறைவனுக்கு உளவாக வேண்டுகின்ருயன்ரே?; ஆனபோது... சென்றிலனுமாஞன் - அவ்வாறு உடலும்கரணமும் உயிரும் அவன் வழிபாடுகொள்ளும் நிலையில் கொண்டவனுயினபோது சொல்லப்பட்ட அவ்வைந்து கந்தத்தின் விளைவு இல்லாதொழியவே, கெடுதலில்லாத முத்தியிற் சேர்ந்தவ னல்லாதவனும் ஆகின்ருன்; அப்படி...என்ருர் - அவ்வாறு அந்தக் கந்தத்தின் அறிவும் கெடுமேயாஞல் அந்த முத்தியுடன் இன்பம் சேராது என்று கூறிஞர்.

(வி-ரை) இஃது சாரிபுத்தன் மேற்பாட்டிற் கூறிய உதாரணங் காட்டிய உறங்கிஞேன் கொலைப்பயன் என்ற தன்மையினை விரித்துக்காட்டி, அஃது அவன் கொண்ட இறைவனது தன்மைக்குப் பொருந்தாதவண்ணம் அன்பர் காட்டியவாறு.

துயிலும் இயல்பிஞன்போல்... இறைவற்கு - உறங்கிஞன் கொலைப்பயன் போல என்றபோது கொலையிஞற் பிரிக்கப்பட்ட உயிரும், அதுநின்ற உடலும், கொலைவாதனையேற்ற உட்காரணங்களும் வேண்டப்படுவனவன்ரே? அதுபோல வழிபாட்டின் பயன்வருதற்கும் உனது இறைவனுக்கு உயிரும் உடலும் கரணமும் அம் முத்திநிலையில் உண்டென நீ கொள்ளவேண்டி வரும் என்றபடி.

ஆனபோது - வழிபாட்டின் பயன் வருதற்பொருட்டு அவ்வாறு உயிர் உடல் கரணங்கள் உள்ளனவாகக் கொள்ளலாயினபோது.

செப்பிய...ஆஞன் - அவ்வாருயினபோது கந்தங்களின் முடிந்தநிலை இல்லையாகும்; அதஞல் கெடுதலில்லாத முத்தியில் அவன் சென்றதும் இல்லையாகும் என்க. **விளைவு** -

முதிர்ந்த-முடிந்த-நிலையாகிய அவிவு என்ற பொருளில் வந்தது. **ஆகி** - ஆகியதனால். காரணப்பொருளில் வந்த வினையெச்சம். **திரிவு இல்லா முத்தி** - கந்தங்களின் சேட்டையினாற் கேடு அடைதல் இல்லாத முத்தியின் தன்மை. ''**ஒழியாத**'' *(2813)*; வழிபாட்டுப் பயன் வரவேண்டுமானால் முதல்வனுக்கு உடல் உயிர் கரணம் இவைகள் வேண்டும்; அவன் கெடாத முத்தியிற் செல்லுதல் வேண்டில் அவை முன்னமே கெட்டொழிதல் வேண்டும் என அவனது கொள்கையில்வரும் முரண்பாடும், அவன் மேற்காட்டிய எடுத்துக்காட்டு அவனது கொள்கையுடன் பொருந்தாமையும் எடுத்து முடித்துக்காட்டியபடியாம்.

அப்படி...அணையாது - இது மேற்காட்டிய வகையானன்றி மேலுமொரு வகையால் அவனது முத்தியியல்பினை மறுத்தவாறு. முத்தியாவது பேரின்பமுடையது என்று ''ஒழியாத பேரின்ப முத்தி பெற்றான்'' *(2813)* என்றாய்; இன்பமடைதற்கு அறிவு உள்ளதாதல் வேண்டும்; அறிவு உள்ளதாதற்குக் கந்தங்களின் செயற்பாடுவேண்டும். ஆனால் நீ சொல்வதுபோலக் கந்தத்துடனே அறிவும்கெட்டு முத்தியிற்போனானாகில் அந்த முத்தியில் பேரின்பமடைதற்கு ஏதுவில்லையே என்று முரண்பாடு காட்டப்பட்டவாறு கண்டுகொள்க. **முத்தியுடன் - அணையாது** - முத்தியுள் இன்பம் சாராது - கூடாது; அஃது இன்பமில்லா முத்தியாய்ப் பாழ் ஆகும் என்றபடி. ஞானமே ஆன்மா எனவும், அது நீரோட்டம்போலச் சந்தானமாய்க் கணந்தோறும் தோன்றியழியும் எனவும், அவ்வாறு தோன்றியழியுங்கால் வரும் வாசனை பற்றுதலான் அறிவு நிகழும்; அவ்வாசனை அழிவதே முத்தி என்பது பௌத்த சமயக் கொள்கை; ஞானங்கூடக் கெடுதல் முத்தி என்பாருமுளர். இதனை உட்கொண்டே அன்பர் மேற்கூறியவாறு கந்தமும் அறிவும் கெட்டபோது பெறப்படுவதாகக் கூறப்பட்ட முத்தியில் இன்பம் அணைவதில்லை என்றார். ''ஐந்துகந்தஞ் சந்தானத் தழிதல் பந்த துக்க, மறக்கெடுகைமுத்தியின்ப மென்றறைந்தாய் கந்த, மைந்துமழிந் தான்முத்தி யணைபவர் யாரென்ன வணைபவர் வேறில்லை யென்றா யார்க்கு முத்தியின்ப, மைந்தினுணர் வினுக்கென்னி னழியாத வுணர்வுண்டாகவே யவ்விடத்து முருவாதி கந்த, மைந்துமுள வாமதுவும் பந்தமாகி யரந்தைதரு முத்தியின்ப மறிந்திலைகா ணீயே'' *(சித்தியார் - பரபக்கம் - 133)* எனவும்;

அழிந்திடி னைந்து கந்த முத்தியென் றுரைத்தா யைந்து, மழிந்திடின் முத்தி பெற்றா ராரென வினவும் போதி, வழிந்திடு மைந்தி னுண்டா முணர்வென வுரைக்கி லைந்து, மழிந்தன விலையா முத்தி யாவது மில்லை யென்றார்'' *(திருவாத. புரா - 464)* எனவும் வருவன இக்கருத்தை விளக்குதல் காண்க.*

★இதுபற்றி தட்சிணாத்திய கலாநிதி மகாமகோபத்தியாயர் Dr. உ.வே. சாமிநாதய்யர் அவர்கள் பதித்த மணி மேகலைப் பதிப்பில் (பக்கம்-55 56) புத்த தருமம் என்ற பகுதியிற் கீழ்க்கண்டபடி வருவன இங்குக் கருதத் தக்கன. - ...oldenburg - Page 278 ஸம்யுக்த நிகாயம் என்ற பௌத்த நூலில் வத்ஸகோத்திரன் என்ற ஒரு துறவி கௌதம புத்தரிடம் சென்று ''ஆன்மாவென்று ஒன்று உளதோ?'' என்று கேட்டபொழுது புத்தர் மௌன முற்றிருந்தனரென்றும், ஆனால் அங்ஙனம் ஒன்று இல்லையோ என்று பின்னும் அவன் வினவிய பொழுது அதற்கும் புத்தர் ஒன்றும் பேசாமலே இருந்தனரென்றும் கூறியிருக்கிறார். கோசலதேசத் தரசனாகிய ப்ரஸேநஜித் என்பவன் ஸாகேத நகரத்திற்கும் ஸ்ரீரவஸ்தி நகரத்திற்கும் நடுவிற் போய்க் கொண்டிருக்கையில் க்ஷேமை என்கிற ஒரு பிக்ஷுணியைச் சந்தித்துப்

நூல்வரு வகை

2819. **அவ்வுரைகேட் டெதிர்மாற்ற மறைவ தின்றி**
யிணைந்துளனம் முத்தியெனு மதுவும் பாழாங்
கவ்வையினின் றவனையெதிர் நோக்கி ஞானக்
கடலமுத மனையவர்தங் காத லன்பர்
"பொய்வகையே முத்தியினிற் போனுன் முன்பே
பொருள்களெல்லா முணர்ந்துரைத்துப் போனு னென்றுய்;
எவ்வகையா லவனெல்லா முணர்ந்த தீதும்
இல்லதுரைப் பாயெனினு மேற்போ" மென்றுர். 921

குறிப்பு:— ஞானமுடைய ஆன்மா இல்லையாயின் முத்தியில் இன்பமும் பயனும் இல்லை என்பது முன் கூறிய வாதத்தின் குறிப்பாகும். *920*

2819. (இ-ள்) அவ்வுரை கேட்டு...கவ்வையி னின்றவனை - அன்பர் சொன்ன அந்த மொழியைக் கேட்டு அதற்கு எதிராக ஒன்றும் சொல்வதற்கில்லாமல், அந்த முத்தியில் தலைவன் சேர்ந்துள்ளான் என்று சொல்லப்பட்டதும் பாழாய் முடிந்த சிறுமையுடன் வருத்தத்தோடு நின்ற சாரிபுத்தனை; எதிர்நோக்கி-மீளவும் பார்த்து; ஞானக்கடல்... அன்பர் - ஞானமாகிய கடலில் கடைந்தெடுத்த அமுதம்போன்ற பிள்ளையாரின் காதலன்பராகிய சம்பந்த சரணுலயர்; பொய்வகையே...ஏற்போம் என்றுர் - கந்தங்கள் அவிந்து பொய்யாய் முடிந்த வழியே முத்தியினிற் சேர்ந்தவனுகிய உனது தலைவன் அதற்கு முன்னமே எல்லாப் பொருள்களையும் உணர்ந்து உலகுய்ய அறமுரைத்துப் போயினுன் என்று சொன்னுய்; அவன் அவ்வாறு எல்லாவற்றையும் எவ்வகையால் முழுதொருங்கு உணர்ந்தான்? இதுவும் இல்லதாகவே முடிந்தது; இதற்கு மறுமொழி பொருந்தக் கூறுவாயாயினும் அதனை யாம் ஏற்றுக்கொள்வோம் என்றருளிச் செய்தார்.

(வி-ரை) எதிர் மாற்றம் - மறுமொழி.

பணிந்து அவளிடத்தில் பௌத்த தருமத்தைப்பற்றித் தான் ஐயுற்ற பொருளைப் பின்வரும் வினு - விடைகளால் தெளிந்து கொண்டனனென்று மேற்கூறிய ஸம்யுக்த நிகாயத்தாலேயே தெரிகின்றது. ***அரசன்:***—"பகவதி! ததாகதன் இறந்த பின்னரும் உளனே?" **க்ஷேமை:** "அரசர் தலைவ! ததாகதன் இறந்த பின்னரும் இருப்பதாக ஆசாரிய புத்தன் சொல்லவில்லை"; ***அரசன்:*** "பகவதி! ஆனுல் இறந்த பின்பு ததாகதன் இல்லையோ?"; **க்ஷேமை:** "அரச சிங்கமே! ததாகதன் இறந்தபின்னர் இல்லை என்பதையுங்கூட ஆசாரிய புத்தன் சொல்லவில்லை"; ***அரசன்:*** "பகவதி! அங்ஙனமாயின், ததாகதன் இறந்தபின்னர் உளனுமாம், இலனுமாம் என்னலாமோ?"; "பகவதி! ததாகதன் இறந்தபின்னர் உளனுமல்லன், இலனுமல்லன் என்றும் கூறலாமோ?"—இவ்வினுக்களுக்கும் முன்போலவே அந்தப் பிக்ஷுணி "இவற்றைப்பற்றி ஆசாரிய புத்தன் சொல்லவில்லை" என்றனள். இவ்வினு விடைகளுங்கூட நிர்வாணமென்பது சூன்யாவஸ்தையென்றும், ஆன்மாவென்று ஒன்றில்லையென்றும் கௌதம புத்தர் வற்புறுத்திக் கூறினுரென்று காட்டவில்லை"—**குறிப்பு:— பகவதி** என்பது பௌத்தருட் பெண் துறவிகளாகிச் சங்கத்தைச் சார்ந்த பிட்சுணிகளுக்கு வழங்கும் கௌரவ மரபுப் பெயர்; **ததாகதன்** - கௌதமருக்கு வழங்கும் பெயர்களுள் ஒன்று.

அணைந்துளன்...பாழாம் கவ்வையின் - பாழ்முத்தியாய் முடிந்ததே என்ற வருத்தத்துள். **கவ்வை** - சிறுமையடைந்ததனுல் நேர்ந்த வருத்தம்; **பாழாம் கவ்வை** என்க. பாழாயிற்றென்று முடிந்தமையால் நேர்ந்த வருத்தம்.

ஞானக் கடலமுதம் அனையவர் - பிள்ளையார். பயன்பற்றி வந்த உவமம். **ஞானக் கடல்** - உருவகம்.

பொய்வகையே முத்தியினிற் போனுன் - கந்தமைந்தும் கெட்டு முடிந்தபோது ஆன்மா என்பது ஒன்று இல்லை என்பதவன் கொள்கையாதலா லிவ்வாறு கூறினுர்; **பொய்வகை** - கந்தங்கள் கெட்டுப் பொய்யாய் முடிந்த வழி. **பொய்வகையே முத்தியினிற் போதலாவது** - பொய்யாய் அழிந்த நிலையே முத்தியாம் என்று கொள்க.

எவ்வகையால் அவன் எல்லாம் உணர்ந்தது; ஈதும் இல்லது - முத்தியிற் போமுன் அவன் எல்லாமுணர்ந்தது என்ற வகைதான் யாது? கணவிஞ்ஞானமுடைய அவன் கணத்திற்ருேன்றி அழியும் பொருள்களை முழுது ஒருங்குணர்தல் எவ்வகையால் என்றபடி.

"சிலபொருளை யறிந்தவற்றின் றிறத்தே யொட்டிச்
சிந்திப்ப னெப்பொருளுமென்னிற் சென்று
பலபொருளா யொன்றுபல பேதமாகிப்,
பயின்றுவரு மாதலாற் பார்க்கு மாறென்
னுலகுதனி லொருபொருளங் குணரும் போதி
னுற்றுணர்த லாராய்த றெளித லுண்டாய்
நிலவுமத னுலுணர்வு பன்மை முன்பி
னின்றிடா தென்பையெல்லா நினைப்ப தெங்கே?" 96

"முத்திநிலங் கண்டறங்கள் மொழிந்தா னுயின்
முதன்முழுதும் பொன்றிப்பின் மொழிந்த வண்ண
மொத்திடுந்தே னெய்கூட்டி யுண்டிறந்தோ னெருவ
னுலகினில்வந் திதுதீதென் றுரைத்தா லொக்குஞ்
செத்ததுபின் னென் றுரைக்கிற் கதியிற் செல்லாத்
தேரனுரை நீர்பெருகிச் சென்ரு ருகு
மத்தினள வறியாதிக் கரையோர் தம்மை
யக்கரைக்கே செல்லவிடு மாசை யாமே" 97

எனவரும் சிவஞான சித்தியார்த் (பரபக்கம்) திருவிருத்தங்கள் இக்கருத்தை விளக்குவன. **ஈதும் இல்லது** - முத்தி பாழாயினது போல உரைத்ததும் இல்லை என்றபடி. உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை.

உரைப்பாயெனினும் - தக்க ஏதுக்களாற் பொருந்த உரைத்தல் இயலாது என்பது குறிப்பு.

இப்பாட்டால் புத்தன் அறநூல் உரைத்தானென்ற நிலைபற்றி வேறுமொரு வகையால் வாதம் எடுத்தவாறு.

அமுதமுண்டவர்—என்பதும் பாடம். *921*

2820. "**உ**ணர்வுபொதுச் சிறப்பென்ன விரண்டின் முன்ன
துளவான மரப்பொதுமை யுணர்த லேனைப்
புணர்சிறப்பு மரங்களில்வைத் தின்ன தென்ற
லிப்படியால் வரம்பில்லாப் பொருள்க ளெல்லாங்
கொணரும்விற கினைக்குவைசெய் திடினும் வேறு
குறைத்தவற்றைத் தனித்தனியே யிடினும் வெந்தீத்
துணர்கதுவிச் சுடவல்ல வாறு போலத்
தொகுத்தும்விரித் துந்தெரிக்குந் தொல்லோ"னென்றான். 922

2820. (இ-ள்) உணர்வு...இரண்டில் - உணர்வானது பொதுவும் சிறப்பும் என்று இரண்டு வகைப்படும் அவற்றுள்; **முன்னது...உணர்தல்** - முன்னையதாகிய பொது வுணர்வானது ஒரு வனத்தில் உள்ளனவற்றை மரவகை என்று பொதுவாக வுணர்வது; **ஏனை...என்றல்** - மற்றைய சிறப்பு உணர்வாவது அவ்வனத்தினுள்ள மரங்களை இன்னவை இன்னவை என்று பிரித்து உணர்வது; **இப்படியால்...எல்லாம்** - இவ்வாறே எல்லாப் பொருள்களினுணர்வும் ஆம்; **கொணரும்...போல**- கொண்டுவரும் விறகுகளைக் கூட்டிக் குவித்துத் தீயிட்டாலும், அவ்வாறன்றி வெவ்வேறாக வெட்டித் தனித்தனியே தீயிட்டாலும் வெம்மையுடைய தீயின் கொழுந்து அதனைச் சுட்டு நாசமாக்க வல்லவாறுபோல்; **தொகுத்தும்...என்றான்** - தொகையாகக் கூட்டியும், தனித்தனியாக விரித்தும் பழையோனாகிய எம் இறைவன் தெரிவிப்பன் என்று கூறினான்.

(வி - ரை) தொகுத்தும் விரித்துந் தெரிக்கும் தொல்லோன் - உணர்வுநிகழும் கந்தங்கள் அவிந்து முத்தியிற் போகுமுன்னரே எல்லாப் பொருளும் முழு தொருங்குணர்ந்து நூல் உரைத்தல் எவ்வாறென்றும், ஞானம் கணபங்கமாதலின் எல்லாம் உணர்ந்த தெவ்வாறென்றும் கேட்ட வினாவுக்குச் சாரிபுத்தன் விடை கூறியபடி.

இப்படியால் வரம்பில்லாப் பொருள்கள் எல்லாம் - ஒரு வனத்தில் உள்ள மரங்களைப் பிரித்துக் கூறாது தொகுதியாக வைத்துக் காடு என்றல் பொது உணர்வு; மரங்களைத் தனித்தனியாகக் காட்டித் தேக்கு - வேங்கை - சந்தனம் - மந்தாரம் என்று கூறி உணர்தல் சிறப்பு உணர்வு. இவ்வாறுதான் எல்லாப் பொருள்களையும் உணரும் உணர்வென்றது - என்றான்.

விறகினைக் குவைசெய்திடினும் தனித்தனியே இடினும் வெந்தீ சுட வல்லவாறு போல - இஃது அவன் எடுத்துக்காட்டிய வுவமை. தீ உணர்வுக்கு உவமிக்கப்பட்டது. தீ விறகுக் குவியலின் இடினும் சுட்டெரிக்கின்றது; தனித்தனி யிடினும் எரிக்கின்றது. அதுபோல உணர்வு எல்லாப் பொருள்களையும் தொகுதியாய்ப் பொதுவாயும் கண்டு கூறும்; தனித்தனியாய்ச் சிறப்பாயும் கண்டு கூறும். இதுபோல் முதல்வன் பொருள்கள் எல்லாம் தொகுத்தும் விரித்தும் உணர்ந்ததும் உரைத்ததும் ஆம் என்று சாரிபுத்தன் எடுத்துக்காட்டியவாறு.

வரம்பில்லாப் பொருள்கள் எல்லாம் இப்படியால் - "பொருள் எல்லாம்" (2819) என முன்பாட்டிற் கேட்ட அதனை விளக்கினான். **ஆல்** - ஆசை.

இடினும் - இடினும் தீ சுடவல்லது என்க. தீ **இடுதல்** - கொளுவுதல்; **தீத்துணர் கதுவி** - தீயின் கொழுந்து முடுகி எழுந்து பற்றி.

2821. எடுத்துரைத்த புத்தனெதி ரியம்பு மன்ப
"ரெரியுணர்வுக் கெடுத்துக்காட் டாகச் சொன்னாய்;
அடுத்தவுணர் வுருவுடைய தன்று சொன்ன
வனல்வடிவிற் றுமதுவு மறிதி; நுங்கோன்
றெருடுத்தநிகழ் காலமே யன்றி யேனைத்
தொடர்ந்தவிரு காலமுந்தொக் கறியு மாகிற்
கடுத்தவெரி நிகழ்காலத் திட்ட தல்லாற்
காணாத காலத்துக் கதுவா" தென்றார். 923

தொல்லோன் - பழமையானவன்; தலைவன். *தொன்மை* - எல்லாவற்றையும் உணருந் தன்மைக் குறிப்பு.

உணர்த்தல்—என்பதும் பாடம். 922

2821. (இ-ள்) எடுத்துரைத்த...அன்பர் - முன் கூறியவாறு எடுத்துக்காட்டி மறுமொழி கூறிய சாரிபுத்தனெதிரில் வாதம் கூறும் அன்பராகிய சம்பந்த சரணாலயர்; **எரி...அறிதி** - தீயின் செயலை உணர்வின் செயலுக்கு உதாரணமாகச் சொன்னாய்; ஆனால் பொருள்களை அடுத்துநின்ற உணர்வு உருவுடையதன்று. அதற்கு எடுத்துக் காட்டாக நீ சொன்ன எரியோ ஒரு வடிவுடையது. அதையும் அறிவாயாக; **நும் கோன்...அறியுமாகில்** - உனது தலைவன் தொடுக்கப்பட்ட நிகழ்காலமே யல்லாது மற்றும் அதனை முன்னும் பின்னுமாகத் தொடர்ந்த இறந்தகாலம் எதிர்காலம் என்று இரு காலத்தையும் தொகுத்து ஒருங்கே அறிவானானால்; **கடுத்த...கதுவாது என்றார்** - அவன் அவ்வாறு உணரும் (முக்காலமுமுணரும்) உணர்வுக்கு எடுத்துக்காட்டாக நீ மொழிந்த பொருளாகிய எரிக்கும் தீயானது நிகழ்காலத்தில் இட்டபோது சுடுதலோயன்றிக் காணாத ஏனை இரண்டு காலத்தும் சுடாதாகும் என்றார்.

(வி - ரை) அனல் வடிவிற்று...எரி நிகழ்காலத் தல்லாற் கதுவாது - எரியினை உணர்வுக்கு எடுத்துக்காட்டாகக் காட்டியதற்கு இரண்டு நிலைகளால் மறுப்புக் கூறியவாறு.

அடுத்த உணர்வு உரு உடையதன்று - எரி வடிவிற்று உணர்வு உருவம்பற்றிய தன்று; தீ வடிவம்பற்றிப் புலனாவது. உருவுடைய பொருள் மற்றும் அத்தன்மைத்தாகிய பொருள்களைப் பற்றும் நிலையினுக்கு உருவுடைய தன்றாகிய பொருள் மற்றும் பொருள்களைப் பற்றுதற்கு உவமித்தல் பொருந்தாதென்பது. இஃது இடவகையாற் பொருத்தமின்மை காட்டியபடி; முற்றும் உணர்தல் கூடாமை என்றவாறு.

உணர்வு நிகழ்காலமேயன்றி ஏனை இருகாலமும் அறியுமாகில் - அனல் நிகழ் காலத்து மட்டும் கதுவி ஏனை இருகாலத்தும் கதுவாது - என்றதனால் உவமை காலவகையாலும் பொருந்தாமை காட்டியபடி.

தொடுத்த...அகில்-தொடுத்த-பஞ்சகந்த விளைவுபற்றிய உணர்வு தொட்ட; **தொடர்ந்த** - முன்னும் பின்னுமாகத் தொடர்ச்சியுடைய; **இருகாலம்** - இறப்பும் எதிர்வுமாகிய இரண்டுகாலங்கள்; **தொக்கு அறிதல்** - "தொகுத்தும் விரித்தும் தெரிக்கும்" (2820) என முன்பாட்டிற் கூறியபடி மூன்று காலமும் ஒருங்கு உணர்தல் கூடாமை என்றபடி.

2822. "ஆதலினு லுன்னிறைவன் பொருள்க ளெல்லா
மறிந்ததுநும் முத்திபோ லாயிற் றன்றே;
ஏதமா மிவ்வறிவா லுரைத்த நூலும்"
என்றவனுக் கேற்குமா றருளிச் செய்ய,
வாதமா ருென்றின்றித் தோற்ருன் புத்தன்;
மற்றவனை வென்றருளிப் புகலி மன்னர்
பாததா மரைபணிந்தா ரன்பர்; தங்கள்
பான்மையழி புத்தர்களும் பணிந்து வீழ்ந்தார். 924

அறியுமாகில் - அறியுமென்பது அவன் பக்கமாதலின் தாம் உடம்படாது ஆகில் என்ருர்; **ஆகில்-கதுவாது** என்றது உவமேயம். மூன்றுகாலமு நிகழக் கூறப்பட்ட உவமானம் அவ்வாற்ரு லமையமாட்டாது ஒரு காலத்துக்கே உரியதாம் என்றபடி.

இட்டதல்லால் - இட்டபோது கதுவுதலல்லாமல்.

காணுத காலம் - இறப்பும் எதிர்ப்புமாகிய இரண்டும் காணப்படாதவை; நிகழ்வொன்றே காணப்படும் என்பது.

காட்டாகச் சொன்னுல்—என்பதும் பாடம். 923

2822. (இ-ள்) ஆதலினுல்...அன்றே - முன் கூறியபடி எடுத்துக்காட்டிய பொருள் செல்லாது நீ மேற்கொண்ட பொருள் வீழ்ந்துபட்ட தாதலினுலே, உன் தலைவன் எல்லாப் பொருள்களையும் முழுதொருங்குணர்ந்த செய்தியும் நீ கூறிய முத்தியிலக்கணம் பாழாக முடிந்தவாறு போல இதுவும் பாழாய் ஒழிந்தது; இவ்வறிவால் உரைத்த நூலும் ஏதமாம்-இத்தகைய நிரம்பாத அறிவினுலே அவன் உரைத்த உனது பிடக நூலும் குற்றமாம்; என்று...அருளிச்செய்ய - என்று வாத மேற்றுவந்த அந்தச் சாரிபுத்தனுக்கு ஏற்கும் வகையாலே உண்மை உணர்த்தியருள; வாதம்...புத்தன் - மேலே செய்யும் வாதம் ஒன்றுமில்லாமல் சாரிபுத்தன் தேல்வியுற்றனன்; மற்றவனை...அன்பர் - அன்பராகிய சம்பந்த சரணுலயர் மாறுபட்ட அவனை இவ்வாறு வென்று அருளிச் சீகாழி வேந்தராகிய பிள்ளையாரின் திருவடித் தாமரைகளைப் பணிந்தார்; தங்கள்...வீழ்ந்தார் - தங்களுடைய சமயத்தன்மை அழிந்த புத்தர்களும் (பிள்ளையாரது திருவடிகளிற்) பணிந்து வீழ்ந்தார்கள்.

(வி-ரை) ஆதலினுல் - உன் இறைவன் உன் சமயக் கொள்கைப்படி முழுதொருங்குணர்ந்த நிலை அளவை வகையால் நிறுவப்படா தொழிந்து மறுக்கப்பட்டது ஆதலினுலே.

உன் இறைவன்...முத்திபோல் ஆயிற்று-அறிந்தான் என்ற தன்மையும், முத்தி பாழாய் ஒழிந்தவாறே பாழாயிற்று; **போல் ஆயிற்று** - போலப் பாழ் எனப்பட்டு ஒழிந்ததாயிற்று; "முத்தியெனு மதுவும் பாழாம்" (2819) என்று முத்திநிலை பாழாயின தன்மை முன் முடிக்கப்பட்டதாதலின் அதனை உவமை காட்டி அது போல் என்ருர்.

2823. புந்தியினு லவருரைத்த **பொருளின் றன்மை**
பொருளன்றும் படியன்பர் பொருந்தக் கூற;
மந்தவுணர் வுடையவரை நோக்கிச் "சைவ
மல்லாது மற்றொன்று மில்லை" யென்றே
அந்தமில்சீர் மறைகளா கமங்க ளேனை
யலகில்கலைப் பொருளுணர்ந்தா ரருளிச் செய்யச்,
சிந்தையினி லது**தெளிந்து புத்தர் சண்டைத்**
திருமறையோர் சேவடிக்கீழ்ச் சென்று தாழ்ந்தார். 925

இவ்வறிவால் உரைத்த நூலும் ஏதமாம் - நூல் - *பிடகம்; அறிவு முற்றொருங் குணர்வின்றி முடிந்ததால் இவ்வறிவுகொண்டு உரைத்த நூலும் குறைபாடுடையது என்பது சொல்லாமலே அமையும்; தானே போதரும் என்று முடித்தபடி. முன் (2819) வினவிய இரண்டு தன்மைகளும் சாரிபுத்தனுக்குத் தோல்வியாய் ஒழிதலை முடித்துக் காட்டியவாறு;* ***குற்றமாவன*** *- நால்வகைப் பவுத்தர் மத மறுதலைபற்றிச் சிவஞான சித்தியார் (பரபக்கம்) பார்க்க.*

ஏற்கும் ஆறு அருளிச் செய்ய-*பவுத்த நூலுட் கூறப்படும் ஏனையவும் இவ்வாறே அவலமாய் ஒழிவன என்றும், சைவ உண்மைகள் வேத சிவாகமங்களுட் கூறப்படுவனவே உண்மைநெறி காட்டுவன என்றும் பொதுப்படக் கூறித் தெளிவுறுத்த; மேல்வரும் பாட்டுப் பார்க்க. சிறப்பு வகையால் ஆட்கொண்டு தீக்கை செய்து உபதேசித்த நிலை அதன்மேல் வரும் பாட்டிற் கூறுதல் காண்க.*

வென்றருளி *- வாதத்தில் வென்று.* ***அருளி*** *- அவன் வலிந்து வந்து சினந்து வாதத்தினை முற்பட்டு அறைகூவி அழைத்தானாயினும், தாம் இகலினாலன்றி அருட்டன்மையால் வெற்றிகொண்டனர் என்பதாம்.*

பணிந்தார் *- "புகலி காவலர்தம் பாதம் போற்றி அருளாற்" (2812) றொடங்கி அதன் துணையால் வென்றாராதலின் வெற்றிகொண்டபின் அதன் பொருட்டுப் "புகலி மன்னர் பாததாமரை பணிந்தார்" என்க. ஈரிடத்தும்* ***புகலி காவலர் - புகலி மன்னர்*** *என்ற தன்மையாற் கூறியது இக்குறிப்பு.*

பான்மை *- தாங்கள் மேற்கொண்ட சமயப் பண்பு; சமய நிலை.*

பணிந்து வீழ்ந்தார் *- தமது தோல்வியினைக் கண்டு ஒப்புக்கொண்டும், சைவர்களது வெற்றியினையும் உண்மையினையுங் கண்டும் பணிந்தனர்.* ***924***

2823. (இ-ள்) *புந்தியினால்...கூற - புத்தியினையே பற்றுக்கோடாகக் கொண்டு அந்தப் புத்தர்கள் கூறிய பொருள்களின் தன்மைகள் உண்மைப்பொருள்க ளல்லவாகி முடியும் படியினை அன்பராகிய சம்பந்த சரணாலயர் பொருந்தும்படி எடுத்துச் சொல்ல; மந்தவுணர்வுடையவரை... என்றே - மந்தமாகிய உணர்வு உடைய அந்தப் புத்தர்களைப் பார்த்துச் சைவத்திறமேயல்லாது மற்றொன்றும் இல்லையாம் என்றே; அந்தமில்... அருளிச் செய்ய - அழிவில்லாத சிறப்பையுடைய வேதங்களையும்,ஆகமங்களையும், அவற்றின் வழிவரும் ஏனைய அளவற்ற கலைப் பொருள்களையும்*

உணர்ந்த பிள்ளையார் அருளிச் செய்ய; சிந்தையினில்...தாழ்ந்தார் - மனத்தில் அவ்வுண்மைகளைத் தெளிந்து கொண்டு புத்தர்கள் சீகாழியில் வந்த திருமறையவராகிய பிள்ளையாரின் செம்மையாகிய திருவடிகளில் சென்று வணங்கினார்கள்.

(வி-ரை) பொருளின் றன்மை - *(1)* தலைவன் தன்மையும், அவன் நாட்டிய உறுதிப்பொருள் என்னும் முத்தியின் தன்மையும்; *(2)* தலைவன் முற்றுமொருங் குணர்ந்த தன்மையும், அவன் உரைத்த நூலின் தன்மையும் என்ற இவற்றின் கொள்கை; ''உங்கடலை வனும்பொருளும் உரைக்க'' *(2812)* எனவும், ''பொய் வகையே முத்தியினிற் போனான் முன்பே பொருளெல்லாம் உணர்ந்துரைத்துப் போனான்-என்றாய்; எவ்வகையா லவனெல்லா முணர்ந்தது?'' *(2819)* என இந்த இரண்டு பொருள்களைப்பற்றியே வாதம் தொடங்கி நிகழ்த்தப்பட்டது.

பொருளன்றாம்படி காட்ட - அவனது தலைவனும் பொருளும் முன் *2813-2814- 2816*-லும், அவை பொருளல்லவாம்படி *2815-2816-2817-2818* பாட்டுக்களிலும் காட்டப்பட்டன. தலைவனது உணர்வின் தன்மையும் நூலின் தன்மையும் 2820-லும் அது பொருளன்றாம்படி 2821-லும் காட்டப்பட்டன.

பொருளன்றாம்படி - உண்மைப்பொரு ளாகாத நிலை. **படி**-தன்மை-நிலை. **படி யினை** - இரண்டனுருபு தொக்கது.

புந்தியினால் - புத்தர் கொள்கைப்படி புத்தி தத்துவமே முடிந்த நிலையாதலின் புத்தி தத்துவத்தையே பற்றுக்கோடாகக் கொண்டு.

சைவமல்லாது மற்றொன்றுமில்லை - சைவம் - சிவச்சார்புடைய சமயம்; சிவத்தின் சம்பந்தம். எல்லாப் பொருள்களும் கொள்கைகளும் சைவத்தின் அங்கங்களாக அதனுள்வந் தடங்குவன என்பது. **சைவம்** - சைவத்திற் கூறப்படும் தலைவனும், முத்தியும், நூலும் இவையே பொருள் என்பார் ''**அந்தமில்...உணர்ந்தார்**'' என்றார்.

அல்லாது ஒன்றுமில்லை - எதிர்மறைகள் உறுதி குறித்தன. அடங்காத பொருளும் சமயங்களுமில்லை. இதனை மேல்வரும் பாட்டில் ''நின்றனவுஞ் சரிப்பனவுஞ் சைவமேயாம் நிலைமை'' *(2824)* என்று மேலும் விரிப்பது காண்க.

இல்லை - இன்மை - உண்மைப்பொருள் பெறாத தன்மை. ''சைவ சமயமே சமயம்'',''சைவத்தின் மேற்சமயம் வேறில்லை'' என்ற கருத்துக்கள் இதனால் சமய நிச்சயம் பண்ணிக் காட்டியபடி.

அந்தமில்சீர்...உணர்ந்தார் - ஆளுடைய பிள்ளையார்; **கலைப் பொருள்** - வேத சிவாகமங்களின் வழிவரும் கலைஞான நூல்களின் பொருள். **உணர்ந்தார்**-முழுமையாகிய சிவஞானத்தை ஓதாதுணர்ந்தார்; ''முன்னிய கலைப்பொருளு மூவுலகில் வாழ்வும், பன்னிய வொருத்தர்'' (பிள். தேவா - இந்தளம் - புகலி -1); **அந்தமில் சீர்** - முதல்வன் போலவே அவனருளிய வேத சிவாகமங்களும் அழிவில்லாதன என்பது.

2824. **அன்றவர்க்குக்** காழியர்கோன் கருணை நோக்க
மணைதலினு லறிவின்மை யகன்று நீங்கி
முன்றொழுது விழுந்தெழுந்து சைவ ராஞர்;
முகைமலர்மா ரியின்வெள்ளம் பொழிந்த தெங்கும்;
நின்றனவுஞ் சரிப்பனவுஞ் சைவ மேயாம்
நிலைமையவர்க் கருள்செய்து, சண்பை வேந்தர்
சென்றுசிவ ஞர்பதிகள் பணிய வேண்டித்
திருக்கடவூ ரதன்மருங்கு சேர வந்தார். 926

அருளிச் செய்ய - *புத்தன் கூறிய பொருள் பொருளன்றும்படியினை வாத முகத்தால் அன்பர் காட்டப் பின்னர்ப் பொருளாவது இது என்ற பிள்ளையார் முடித்துக் கூறி அவர்களை வழிப்படுத்தியவாறு.*

சேவடிக்கீழ்ச் சென்று தாழ்ந்தார்-*வழிப்படுத்திய அருளிப்பாட்டினை ஏற்றுத் தாழ்ந்து வணங்கினர்.* **தாழ்தல்**-*விரும்புதல் என்றலுமாம். அவ்வாறு உண்மைப் பொருளில் நேர்ந்து தாழ்ந்தாராதலின் அவர்பால் அருளேக்கம் வைத்துப் பாச நீக்கித்தீக்கைபுரிந்து உபதேசித்துப் பிள்ளையார் அவர்களைச் சைவராக்கி உய்யச் செய்த நிலை மேல்வரும் பாட்டிற் கூறப்படும்.* ***925***

2824. (இ-ள்) *அன்று...அணைதலினுல் - அன்று அப்புத்தர்களுக்குச் சீகாழித் தலைவராகிய பரமாசாரியரது அருட்பார்வை அணைந்தபடியினுலே; அறிவின்மை அகன்று நீங்கி - அறிவைமறைக்கும் தன்மையுடைய பாசவீட்டம் தம்மைவிட்டு நீங்கியமையால்; (அப்புத்தர்கள்) முன்...ஆஞர் - பிள்ளையார் திருமுன்பு தொழுது நிலமுற விழுந்து எழுந்து (அவரால் திருநீறு தரப்பெற்று அணிந்து) சைவர்களாயினர்; முகைமலர்...எங்கும்-தேவ மலர் மழை எங்கும் பொழிந்தது; நின்றனவும்... அருள் செய்து - நின்றன என்றும் வந்தியங்குவன என்றும் கூறப்படும் எல்லா உயிர்வகைகளும் சைவமேயாகும் என்ற நிலைமையினை அப் புத்தர்கள் அறிந்துய் யும்படி அருளிச் செய்து; சண்பை வேந்தர்...வந்தார் - சீகாழித்தலைவராகிய பிள்ளையார் சிவபெருமான் எழுந்தருளிய பதிகளைச் சென்று பணியும்பொருட்டுத் திருக்கடவூரின் பக்கத்திற் சேரும்படி எழுந்தருளி வந்தனர்.*

(வி-ரை) அன்று - கருணை நோக்கம் - அணைதலினுல் - *முன்னர்ப் புல்லறிவினராய்ப் பெருமைகொண்டு கனன்று வலிந்த முறையில், திருச்சின்னம் ஊதித் தெருவிற் செல்வதைத் தடைசெய்தனர் (2804); பின்னர் வாக்கின் போர் ஏற்று எதிர்ந்து வந்தனர் (2809); இவ்வாறு மந்த உணர்வுடையவர்கள் இப்போது புண்ணியப் பேருகிய பக்குவம் வரப் பிள்ளையாரது கருணை நோக்கம் எய்தப் பெற்றனர்; அதனுல் என்க.* **அன்று** - *அப்பொழுது.* **கருணை நோக்கம்** - *பக்குவம் வரும் நிலையில் ஆசாரியன் செய்யும் தீக்கைகளுள் ஒன்று. சாட்சுஷி தீக்கை என்பர். ''பார்த்த பார்வையா லிரும்புண்ட நீரெனப் பருகும் தீர்த்தன்'' (திருவிளை. திருவாத-47); ''வாஞேன் பவனி வரக்கண்டு வல்வினையேன், ஏஞேரு மேத்துதல்கண் டேத்தினேன் - ருனென்னைப், பார்த்தான் பழையவினைப் பஞ்சமலக் கொத்தை யெல்லா, நீத்தான் நினைவுவே ருக்கினுன்'' (நெஞ்சுவிடு தூது - 89-90).*

அறிவின்மை அகன்று நீங்கி - ''சேவடிக்கீழ்ச் சென்று தாழ்ந்தார்க''ளாதலின் பக்குவநிலை வரப்பெற்றபோது ஆசாரியரது அருட்பார்வை அணையப்பெற்றனர்; பெறவே, முன்னிருந்த "மந்த வுணர்வு'' (2823) நீங்கப்பெற்று அறிவின்மையாகிய ஆணவமலப் பிணிப்பும் சிறிது நீங்கலாயிற்று என்பார் **அறிவின்மை அகன்று** என்றார். **அறிவின்மை** - அறிவை மறைக்கும் ஆணவமலச் செயல்.

முன் தொழுது விழுந்து எழுந்து - சம்பந்த சரணாலயர் வாதத்தில் தெருட்டிய வகையால் தமது பொருள் பொருளன்றாம்படி கண்டு தமது பான்மை அழிந்தனர்; அதன்பின் சைவம் அல்லாது மற்றொன்றுமில்லை என்ற பொது உபதேச மொழியாற் றெளிவுபெற்றுத் தாழ்ந்தனர்; அதனால் அருட்பார்வை பெற்றனர்; அதனால் அறியாமை நீங்கித் தொழுது வீழ்ந்தனர்; அதனால் தீக்கையும் நீறும் பெற்றுச் சைவராயினர் என்று இவ்வாறு படிமுறையால் உய்திபெறும் வகை கண்டுகொள்க; பெயர்த்து மவனுக்கே பிச்சியானாள்...அன்னையையு மத்தனையு மன்றே நீத்தாள்...தலைப்பட்டாள் நங்கை தலைவன் றாளே'' (தேவா) என்றவாறு உண்மை காண்க.

சைவரானார் - திருநீறு தரப்பெற்று என்பது அவாய்நிலை. ''பரசமய நிராகரித்து நீறு ஆக்கும்'' (1917) என்றதும், பிறவும் நினைவுகூர்க. திருநீற்று நெறியே சைவநெறி என்பதும் கருதுக. பௌத்தநெறி விட்டுச் சைவராயினார் என்றமையாலே இதனை வேறு கூறிற்றிலர்; சிறப்புப்பற்றிச் சைவராயினமை கூறி விடுத்தனர். ''விதிநிலவு வேதநூ னெறியே யாக்கி **வெண்ணீற்றின் சார்வினான் மிக்குயர்ந்த கதியருளி**'' (2790) என்றது கருதுக.

நின்றனவுஞ் சரிப்பனவுஞ் சைவமேயாம் நிலைமை - முன்பாட்டிற் கூறிய உண்மைப்பொருளை விரித்து உடன்பாட்டு வகையால் உபதேசித்தருளியது. இதனாற் சைவத்தின் பொருணிச்சயம் கூறியபடி.

நின்றனவும் சரிப்பனவும் - நின்றன - எண்ணிறந்த உயிர்களின் தொகையாகி நின்றன. இவை பசுக்கூட்டம். **சரிப்பன** - இவை இறைவனது படைப்புத் தொழிலிற் பட்டுப் பிறவிகொண்டு பாசநீக்கம் பெறும் வழியில் ஈடுபடுத்தப்பட்ட உயிர்த்தொகை. இவை யிரண்டாலும் ''ஆருயிர்த் தொகை - வான்திகழ் தளை'' என இரண்டு பொருளும் பெறுவிக்கப்பட்டன.

நின்றனவும் சரிப்பனவும் சைவமேயாம் என்றதனால் உயிர்கட்கெல்லாம் அருள் வைத்துப் படைப்பு முதல் அருளுதல் வரை ஐந்தொழிலும் செய்யும் ஆன்றதோர் தொல்பதியும், அவனது சைவநெறித் திறமும் பெறுவிக்கப்பட்டன. **நிற்பன** என்னாது **நின்றன** என்ற கருத்தும் இது. இங்கு இவ்வாறன்றி **நின்றன** என்பதற்கு நிற்பன என்ற பொருளே கொண்டு அதற்கேற்ப அசரம் சரம் எனப் பொருள் கொள்வாருமுண்டு. ''தாவில் சராசரங்களெல்லாம் சிவம்பெருக்கும் பிள்ளையார்'' (1924) என்ற கருத்தினையும், திருவோத்தூரில் பனைகள் சிவப்பேற்றினை அடையும் நிலையினையும் இங்குவைத்துக் காண்பர். **சைவம்** - முன் பாட்டிற் **சைவம்** என்றது கொள்கையினை; இங்குச் **சைவம்** என்றது பொருளாகிய சிவப் பேற்றினை.

தலைமை - நிலைபேறுந் தன்மை; மாறுபாடின்றி நிறுவப்பெறுதல்; ஒழியாத பேரின்பம்.

சென்று சிவனார் பதிகள் பணியவேண்டி - சென்று - பிள்ளையார் திருநள்ளாறு பணிந்து பதி பிறவும் வணங்கச் செல்லும் வழியில் போதிமங்கையில் இப்புத்தர்களது தடைநிகழ, அதில்

வேறு

2825. **அந்**நகரி லடியார்க ளெதிர்கொள்ளப் புக்கருளிக்
கொன்னவிலுங் **கூற்றுதைத்தார் குரைகழல்கள்** பணிந்தேத்தி
மன்னியமர்ந் துறையுநாள், ''வாகீச மாமுனிவர்
எந்நகரி லெழுந்தருளிற்'' றென்றடியார் தமைவினவ, 927

அவர்கள் தோல்வியுற்றுச் சைவர்களாகியுய்ய, அதன்பின் அத்தடை நீங்கியபடியால் தமது வழிச்செலவை மீண்டும் தொடங்கிப் பிள்ளையார் சென்று என்க. **பணிய வேண்டி** - முன் கொண்டு வழிபட்ட கருத்தினையே தொடர்ந்து விரும்பி என்க.

முகை மலர்மாரியின் வெள்ளம் எங்கும் பொழிந்தது - திருவருள் வெளிப்பாட்டின் நிகழும் தெய்வப் பூமாரி; திருவருள் வெளிப்பாடாவது பிள்ளையார் அவதரித்த கருத்து நிறைவேறப்பெறுதல். அஃது பரசமய நிராகரிப்பும் நீற்றின் ஆக்கமுமாம். *926*

2825. (இ-ள்) அந்நகரில்...புக்கருளி - அந்தத் திருப்பதியினில் அடியவர்கள் தம்மை எதிர்கொண்டு அழைக்க நகரத்தின் உள்ளே (பிள்ளையார்)புகுந்தருளி; கொன்னவிலும்...நாள் - உயிர் பிரிக்க வரும்கூற்றுவனை உதைத்தருளிய இறைவரின் சத்திக்கின்ற வீரக்கழலை யணிந்த திருவடிகளைப் பணிந்து துதித்து அங்குப் பொருந்தி விரும்பி வீற்றிருக்கும் நாளிலே; வாகீச மாமுனிவர்...வினவ - வாகீசத் திருமுனிவராகிய திருநாவுக்கரசு நாயனார் எந்தத் திருநகரில் எழுந்தருளியிருந்தது என்று அடியார்களைக் கேட்க;

(வி-ரை) கொல் நவிலும் கூற்றுதைத்தார் - கொல் - கொலை; முதனிலைத் தொழில்பெயர்; கொலையினைக் கூறும்; இரண்டனுருபு விரிக்க; ''வீடுநாளணுகிற் றென்று மெய்கொள்வான் வந்த காலன்'' (தேவா) மார்க்கண்டரது உயிரை வவ்வுதற் பொருட்டுக் கொல்லுதலைக் கூறிவந்த கூற்றுவனை உதைத்த என்றது தலசரிதம் பற்றிய குறிப்பு. குங்குலியக்கலய நாயனார் புராணமும், தலத் தேவாரங்களும் பார்க்க. **கூற்று** - உடலையும் உயிரையும் வேறுபடுத்திக் கூறு செய்பவன். **கூறு** - பகுதி. காரணக் குறிப்புப்பெற இப்பெயராற் கூறினார்(2432).

மன்னியமர்ந்துறையு நாள் - இத்திருநகரில் முன்முறை திருநாவுக்கரசர் பெருமானும் ஆளுடையபிள்ளையாரும் ஒருங்கு எழுந்தருளிக் குங்குலியக்கலய நாயனார் திருமடத்தில் திருவமுது செய்து அமர்ந்தருளியிருந்த வரலாறு இங்கு நினைவு கூர்தற்பாலது. 862-863-ம், 1512-ம், 2431-2433-ம் பார்க்க. இந்நினைவுகள் எல்லாம் பெற **மன்னி** என்றும், **அமர்ந்து** என்றும் கூறினார். **அமர்தல்** - விரும்புதல்.

உறையு நாள்...வினவ-முன்முறையில் இருவரும் உடனிருந்த நினைவினாலும் திருமறைக் காட்டில் அவரைத் தடுத்து நிறுத்தித் தாம் பிரிந்து சென்ற நினைவினாலும் (1554—2516) காணும் காதல் வர இவ்வாறு இங்கு வினவுதல் நிகழ்ந்த தென்க.

வாகீச மாமுனிவர்-வாகீசர்(1555) ''**வாகீசர்** மருதவண்ணம் வணங்கியருள் செய்து விடைகொடுத்து மன்னுங், காதலினு லருமையுறக் கலந்து நீங்கி'' (2516) என்ற வரலாற்று முறையாற் பிரிந்து சென்ற முன்றொடர்ச்சியின் நினைவு கூர்தற் பொருட்டு இங்கு **வாகீசர்** என்ற இப்பெயராற் கூறிய நயம் கண்டுகொள்க. **மாமுனிவர்** - ''வருஞானத் தவமுனிவர் வாகீசர்''

2826. அங்கவரு மடிபோற்றி யாண்டவர செழுந்தருளிப்
பொங்குபுனற் பூந்துருத்தி நகரின்கட் போற்றிசைத்துத்
தங்குதிருத் தொண்டுசெயு மகிழ்ச்சியினுற் சார்ந்தருளி
யெங்குநிகழ்ந் திடவிருந்த படியெல்லா மியம்பினர். 928

(1266); ''பரமுனிவன்'' (1694) என்றவையும் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

முனிவர் - எழுந்தருளிற்று - இறைவரையும், அத்தன்மை சார்ந்த பெரியோரையும் கூறும் மரபு வழக்கு.

அடியார்தமை வினவ - பலதிறத்தினுலும் பல நாட்டினின்றும் அடியார்கள் அவ்வப்போது திருக்கூட்டத்திற் சார்ந்தமையானும், திருக்கடவூரின் அடியார் முன்னர்த் தாம் வாகீசமுனிவரைப் பிரிந்து சென்றருளிய திருமறைக்காட்டின் அணியராந் தன்மையாலும், அடியார்களுக்கு இத்தகைய பெரியார்களின் நிகழ்ச்சிகள் பற்றியே அறிவும் செயலும் தொடர்பும் செல்லுதல் முன்னைநாளின் இயல்பாதலாலும் அடியார்களை வினவியருளினர். **அடியார்** - தம் திருக்கூட்டத்திலிருந்தாரும், திருக்கடவூரிலிருந்தாரும் ஆகியவர்களுள் அறிந்தார். *927*

2826. (இ-ள்) அங்கு அவரும் அடிபோற்றி - அங்கு அவ்வடியவர்களும் பிள்ளையார் திருவடிகளைத் துதித்து நின்று; ஆண்டவரசு...படி எல்லாம் - அரசுகள் பொங்குகின்ற நீர்வளமுடைய காவிரி சூழ்ந்த திருப்பூந் துருத்தியில் எழுந்தருளி இறைவரைத் துதித்துத் தங்கித் திருத்தொண்டு செய்யும் விருப்பத்தினுல் அங்குச் சேர்ந்தருளி எங்கும் தமது பண்பு நிகழும்படியாகத் தங்கியிருந்தபடியினை எல்லாம்; இயம்பினர் - சொன்னர்கள்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) ஆண்ட அரசு எழுந்தருளி... இருந்தபடி எல்லாம்-அரசுகள் புராணம் பார்க்க. **எழுந்தருளி** - தமது யாத்திரையில் போந்தருளி; **அங்கு** - அந்நகரில் தங்கித் திருமடம் சமைத்துப் பலநாள் எழுந்தருளியிருக்கும். ''**தங்கித் திருத் தொண்டு செய்வார்...**திருமடமங்கொன்று செய்தார்'' *(1654)*.

தொண்டு செயும் மகிழ்ச்சி - அந்நகரிலே தங்குதல் உடல் நலம், நீர்வளம் முதலிய வேறு எக்காரணங்களாலுமன்றித் திருத்தொண்டு செய்து தங்குதலிற் கண்ட மகிழ்ச்சியே என்பதாம். ''அங்குறையுந் தன்மை வேண்டி'' *(1654)*.

எங்கு நிகழ்ந்திட இருந்த - அரசுகள் அங்குத் தங்கிய நலம் எங்கும் பெருகி நிகழ்ந்திட. நலம் உலகம் போற்ற. யாவரும் அறியும்படி.

இருந்தபடி எல்லாம் - படி - நிலை; தன்மை. **எல்லாம்** - முன் அரசுகள் புராணத்துள் இதுபற்றி விரித்த நிலைமைகளை எல்லாம். முன் வரலாறுகளை ஆண்டு விரித்துக் கூறியருளியமையால் இங்கு எங்கு நிகழ்ந்திட இருந்த என்று சுருக்கிச் சுட்டிய மட்டிலமைத்தார். *928*

2827. அப்பரிசங் கவர்மொழிய **வாண்டவர சினைக்காணும்**
ஒப்பரிய பெருவிருப்பு மிக்கோங்க வொளிபெருகு
மைப்பொருவு கறைக்கண்டர் கழல்வணங்கி யருள்பெற்றுச்
செப்பரிய புகழ்ப்புகலிப் பிள்ளையார் செல்கின்றார், 929

2827. (இ-ள்) *அப்பரிசு அங்கு அவர் மொழிய - அத்தன்மைகளை அவ்வடியார்கள் கூற; ஆண்ட அரசினை...ஓங்க-ஆளுடைய அரசுகளைக் காணவேண்டுமென் கின்ற ஒப்பற்ற பெருவிருப்பம் மிகுந்து மேன்மேலும் பெருக; ஒளிபெருகு.. அருள் பெற்று- அருளொளி பெருகும் மேகம்போன்ற கரிய கண்டத்தையுடைய இறைவரது திருவடிகளை வணங்கி அருள்விடை பெற்றுக்கொண்டு; செப்பரிய... செல்கின்றார் - சொல்லுதற்கரிய புகழினையுடைய சீகாழிப் பிள்ளையார் செல்கின்றாராகி;*

(வி-ரை) அப்பரிசு - *''எழுந்தருளி...இருந்தபடி எல்லாம்'' (2827) என முன்பாட்டிற் கூறியவை. இவை திருப்பழையாறை வடதளியில் சமணர் தூரறுத்து இறைவர் கோயிலை விளக்கங் கண்டதும், திருப்பைஞ்ஞீலியினருகில் இறைவர் அருளாற் றந்த பொதி சோறும் நீரும் உண்டதும் தொண்டை நன்னாட்டுப் பதிகளை வணங்கிக் கயிலை காணச் சென்றதும், அங்கு நின்று மீண்டு திருவையாற்றிற் கயிலைக் காட்சி கண்டதும், அதன்பின் சோழநாட்டுப் பதிகளை வணங்கித் திருப்பூந்துருத்தியிற் சார்ந்து அங்குறையுந்தன்மை வேண்டித் திருமடம் செய்து எழுந்தருளியிருந்ததும் முதலாயின. இவை (1555 முதல் 1655 வரை) அவர்தம் புராணத்துள் விரிக்கப்பட்டன. இவையனைத்தும் பெறவைத்து* ***இருந்தபடி எல்லாம்*** *என்ற தெய்வக் கவிநலம் கண்டுகொள்க. இப்பெருமக்கள் இருவரும் திருமறைக்காட்டிற் பிரிந்தபின் நிகழ்ந்த அரசுகள் சரித வரலாற்றினை ஈண்டுத் தொகுத்துப் பிள்ளையார்பால் குறித்துரைத்த ஆசிரியர், பிள்ளையாரது சரித வரலாற்றை அரசுகள் பாலும் இவ்வாறே, ''புகுந்ததெல்லாந், தூக்கின் றமிழ் விரகர் சொல்லிறந்த ஞானமறை, தேக்குந் திருவாயாற் செப்பியருள் செய்தார்'' (2839) என்றுகூறி யமைவுபடுத்திய கவிநலமும் கண்டுகொள்க. இப்பெருமக்கள் இருவரும் பிரிந்தகாலையில் ஆளுடைய அரசுகள் தம்முடன் வருதலை மறுத்துத் தவிர்த்துப் பிள்ளையார் சென்றருளினாராதலின் மீண்டு வந்து அரசுகளைக் கூடியபோது இடைப்பட்ட சரித நிகழ்ச்சிகள் இவ்வாறு ஒன்றுபட் டறியப்படவேண்டிய நிலையினையும் கண்டுகொள்க. அரசுகள் புராணத்தினுள்ளும் இவ்வமைதி ஏற்ற பெற்றி விளங்குதல் காண்க.*

ஆண்டவரசினைக் காணும்...மிக்கோங்க *- உடன் வரமுயன்றவரை மறுத்துத் தாம்மட்டும் சென்றாராதலானும், தந்தையன்பு பூண்டு தாம் அமணர்பாற் சேறலை அஞ்சினாராதலானும் காணும் அவா மிக்கதென்பது.*

ஒளிபெருகு...கண்டர் - கறை ஒளிபெருகு*தலாவது - அழிவு செய்யும் விடம் என்ற தன்மை காட்டாது ஆக்கம் தரும் அளியின் தன்மை காட்டி அன்றுமுத லின்று வரை அடைந்தாரை உய்வித்து நிற்றல்; ''கருங்கதிர் விரிக்குமேனிக் காமரு குழவி''(665).*

கழல் வணங்கி அருள் பெற்று *- விடைகொள்ளும் பொருட்டாலும், அரசுகளைக் காணும் பேற்றினை இனிது கூட்டுவித்தருளும் பொருட்டாலும்* ***வணங்கி*** *என்க.*

2828. **பூவிரியுந் தடஞ்சோலை புடைபரப்பப் புனல்பரக்குங்**
காவிரியின் றென்கரைபோய்க் கண்ணுதலார் மகிழ்ந்தவிடம்
மேவியினி தமர்ந்திறைஞ்சி விருப்புறுமெய்த் தொண்டரொடு
நாவரச ருழைச்சண்பை நகரரசர் நண்ணுவார்; 930

***செல்கின்றார் - பிள்ளையார் - நண்ணுவார்(2828) - வந்தருளும்** (2829)*-என்று மேல்வரும் பாட்டுக்களுடன் முடிக்க. *929*

2828. (இ-ள்) பூவிரியும்...போய் - மலர்கள் விரிகின்ற பெரிய சோலைகள் பக்கங்களிற் பரந்து நிகழும்படி நீர் பரவி ஓடுகின்ற காவிரியினது தென்கரையின் வழியாகச் சென்று; கண்ணுதலார்...இறைஞ்சி - நுதற்கண்ணுடைய இறைவர் மகிழ்ந்து எழுந்தருளிய பதிகளை அடைந்து இனிதாக விரும்பி வணங்கிக்கொண்டு போய்; விருப்புறும்...நண்ணுவார் - விருப்பம் பொருந்திய உண்மையடியார்களுடனே திருநாவுக்கரசரிடம் சீகாழிக்கரசராகிய பிள்ளையார் நண்ணுவாராகி;

(வி-ரை) புடை பரப்ப - பக்கங்களில் எல்லாம் பரந்து விளங்கிச் செழிக்கும்படி; **பரக்கும்**-பரவி ஓடுகின்ற. காவிரியின் இரு கரையிலும் சோலைகள் செழித்தலை இன்றும் காணலாம். காவிரியில் நீர் பெருகும்போது அந்நீர் மேல் உயர்ந்து இருகரையின் சோலைகளுட்பரந்து சென்று அவற்றைச் செழிப்பித்தல் காண்க.

தென்கரை போய்....இடம் - இறைஞ்சி - திருக்கடவூர் காவிரித் தென்கரையில் உள்ள பதி; அங்குநின்றும் அதுபோலவே தென்கரையில் உள்ள பதியாகிய திருப்பூந்துருத்தியினைச் சென்றடைவாராய்ப் பிள்ளையார், தென்கரையில்உள்ள பிற பதிகளை வணங்கி மேற்குநோக்கிச் செல்கின்றார் என்க.

மேவி - அமர்ந்து - இறைஞ்சி - பதிகளிற் சேர்ந்து வழிபடும் நிலைகள்.

விருப்புறு மெய்த்தொண்டர் - பிள்ளையாருடன் வந்தாரும் அங்கங்கு வந்து கூடுவோரும்.

நாவரசர்-நகரரசர்-சொல்லணி; இருவரும் ஒப்பாந் தன்மையும் குறித்தபடி. **உழை** - பக்கம், ஏழனுருபு. பெருமக்கள் இருவரும் முன் கூடிப்பிரிந்த இதனிடையில் ஒப்பப் பரசமய நிராகரித்த வரலாற்றுக் குறிப்பும் காண்க. *930*

2829. (இ-ள்) அந்தணர் சூளாமணியார்... வந்தருளும் - மறையவர்களின் சிகாமணியாராகிய பிள்ளையார் திருப்பூந்துருத்திக்கு அணிமையாக வந்தருளுகின்ற; பெருவார்த்தை...கேட்டருளி - பெருவார்த்தையினை வாகீசமாமுனிவர் கேட்டருளி; நந்தமை...என்று - ''நம்மையாளுடைய பிள்ளையாரை நாம் எதிர் கொண்டு சென்று வணங்குவது நாம் முன் பிறவிகளிற் செய்த நல்வினையின் பயனாகப் பெறத்தக்கதாம்'' என்று கொண்டு; முக மலர அக மலர்வார் - முக மலர்ச்சி கொள்ள மனமலர்வாராய்;

(வி-ரை) பிள்ளையாரும், சண்பைநக ரரசரும் ஆகிய **அந்தணர்** சூளாமணியார் என்க.

2829. **அந்தணர்சூ ளாமணியார் பூந்துருத்திக் கணித்தாக**
வந்தருளும் **பெருவார்த்தை வாகீசர்** கேட்டருளி
"நந்தமையா ளுடையவரை நாமெதிர்சென் றிறைஞ்சுவது
முந்தைவினைப் பய"னென்று முகமலர வகமலர்வார்; 931

சூளாமணி - முடிமணி, ***சிரோ ரத்தினம்*** என்க. சூடா என்ற வடசொல் சூளா எனத் திரிந்துநின்றது.

பெருவார்த்தை - மிக்க நன்மைதரும் சொல். அன்பர் சொல்லக் கேட்டாராதலின் ***வார்த்தை*** என்முர். ***வார்த்தை*** - ஈண்டு அதனுற் குறிக்கப்படும் வந்தருளும் செயலுக்காயிற்று.

"நந்தமை...பயன்" - **இது** நாவரசர் திருமனத்தெழுந்த கருத்து. பிள்ளையார் தாமே எழுந்தருளி வந்தருளும்பேறு கிடைக்கப்பெற்றது முன்னர்ப் பல பிறவிகளிலும் செய்த சிவநல்வினைகளின் பயனுலன்றிக் கிடைத்தலரிதென்பது. சிவனை நோக்கிச் செய்யும் நல்வினையின் பயனுலே அடியார் கூட்டமும் குருவருளும் இவ்வாறே பெறலாகும் என்பது சிவாகமங்களிற் கண்ட உண்மை. முன்னர் "ஆக்கிய நல்வினைப் பேறென் றன்பர் குழாத்தொடு மெய்தி" (2167) என்ற இடத்தும் "கும்பிட்ட பயன்காண் பார்போல் மெய்வேடம் பெருமானைக் கண்டு வீழ்ந்தார் (2920) என்ற இடத்தும் ஆளுடைய பிள்ளையார் திருவுள்ளத்தும் இக்கருத்தே நிகழ்வதனை ஆசிரியர் எடுத்துக்காட்டுதல் காண்க. அடியார்களைக் காணுந்தோறும் இக்கருத்து எழும் பக்குவம் நிகழப்பெறுதல் உய்யும் வகையாம். "விண்டொழிந்தன...வல்வினை" (தேவா).

நந்தமை ஆளுடையவரை - பிள்ளையாரை அரசுகள் தம்மை ஆட்கொண்டு அடிமை கொள்ளும் முதல்வராகவே கருதினுர் என்பது பின்னர் அவரது சிவிகை தாங்கப்பெற்ற மகிழ்ச்சியினுலும், "ஒப்பரிய தவஞ் செய்தே னுதலினு லும்மடிக, ளிப்பொழுது தாங்கி வரப் பெற்றுய்ந்தேன் யான்" (2833) என்று கூறியருளுவ தனுலும் தெற்றென அறியப்படும்.

நாம் எதிர்சென் றிறைஞ்சுவது - அவர் இப்பதியினுள் எழுந்தருளும்வரை தாழாது முன்பே எதிர்கொண்டு போய் வணங்குதல் வேண்டுமென்பது.

முந்தை வினை - முந்தை-முன் பிறவிகளிலும், இப்பிறவியில் இன்றைக்கு முன்னும் செய்த; ***வினை*** - சிவநல்வினை. ***என்று*** - என்று கருதித் துணிந்து.

முகமலர அகமலர்வார் - அகமலர்ச்சியே முகமலர்ச்சியை விளைக்கும். விரைவு பற்றி முகமலர்ச்சியை முன் வைத்தார்; ***மலர*** - மலரும்படி; விரைவினுல் இரண்டும் உடனுக நிகழ்ந்தன என்பதும் குறிப்பு.

அகமலர்வார் - அகமலர்வாராகி; முற்றெச்சம். அகமலர்வார்-வந்தணைந்தார் என வரும்பாட்டுடன் முடிந்தது. *931*

2830. (இ-ள்) எதிர் சென்று...தொழுது - எதிர் சென்று வணங்குவேன் என்று திருவுள்ளத்தில் மேன்மேல் எழுகின்ற பெருவிருப்பத்தினுலே கங்கையாறு தங்குதற்கிடமாகிய சடைமுடியினை உடையவராகிய சிவபெருமான் நல்ல திருவடிகளைத் தொழுது; அந்தப்

2830. "**எதிர்சென்று** பணிவ"னென வெழுகின்ற பெருவிருப்பால்
நதிதங்கு சடைமுடியார் **நற்பதங்க டொழுதந்தப்**
பதிநின்றும் புறப்பட்டுப் பரசமயஞ் சிதைத்தவர்பான்
முதிர்கின்ற பெருந்தவத்தோர் **முன்னெய்த வந்தணைந்தார்.** 932

பதிநின்றும்...வந்தணைந்தார் - அந்தப் பதியினின்று புறப்பட்டுச் சென்று பரசமயங்களின் கேட்டினைச் சிதைத்த பிள்ளையாரிடத்து முதிர்கின்ற பெருந் தவத்தோர்களாகிய அடியார்களின் முன் வந்து பொருந்த அணைந்தருளினர்.

இந்நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபுகொண் டுரைக்க நின்றன.

(வி-ரை) "எதிர்சென்று பணிவன்" என-எதிர் சென்று இறைஞ்சுவது முந்தை வினைப்பயன் என்று உட்கொண்டாராதலின் அவ்வாறே செயலின் நிறைவேற்றுவன் என்று.

நதி...தொழுது - பிள்ளையாரை எதிர்சென் றிறைஞ்சுதற்கு இறைவரது திருவருளின் துணை வேண்டுதலின் அது பெறும்பொருட்டுத் தொழுது. இவ்வாறே பிள்ளையாரும் அரசுகளைக் காண்பதற்குக் "கறைக்கண்டர் கழல்வணங்கி அருள்பெற்று"ப் (2827) போந்தமை காண்க.

"தொழுதெழுந்தப்பதி" என்பதும் பாடம்.

அந்தப்பதிநின்றும் புறப்பட்டு - அரசுகள் பிள்ளையாரை எதிர்கொண்டு இறைஞ்சிய இடம் பூந்துருத்தி நகரின் புறத்தை நீங்கிச் சிறிது தூரமுள்ளதோரிடம் என்பது முன்னர் உரைக்கப்பட்டது. "பதியின் புறம்பணையில் வந்தணைந்தார்" (1657)என்றதும், ஆண்டுரைத்தவையும் காண்க. - தொகுதி III பக். 855 பார்க்க.

பரசமயஞ் சிதைத்தவர் - தம்மைப் பிரிந்து சென்றபின் நிகழ்ந்த சரித வரலாற்று நினைவுபட இக்குறிப்பாற் கூறினர்.

முதிர்கின்ற பெருந்தவத்தோர் - பிள்ளையாருடன் வரும் "மெய்த்தொண்டர்களின்" கூட்டம் (2828) "நஞ்சணி கண்டர் தந்திரு மகனு **ருடன்வரு நற்றவ**க் கடலை" (2554); "**முதிர்கின்ற**" என்றதும் இக்கருத்து. **முதிர்த**லாவது தவம் பிள்ளையாரது சார்வினால் முதிர்ந்து விளைந்து நல்லூர்ப் பெருமணத்தில் சிவத்தினைச்சாரும் பக்குவம் நிறைதலுக்கேதுவாதல். இதற்கு இவ்வாறன்றி அரசுகளைக் குறிப்பதாக உரைத்தனர் முன் உரைகாரர். **முதிர்கின்ற** என்ற கருத்தும், பிறவும் அதற்குப் பொருந்தாமை அறிக. **தவத்தோருடைய முன்** என ஆறனுருபு விரிக்க; அடியார்முன் என்ற கருத்து மேல்வரலாற்றில் விளங்கக் காண்க.

வந்தணைந்தார் - "வாகீசர்" என்ற எழுவாய் முன்பாட்டினின்றது. 932

2831. (இ-ள்) திருச்சின்னம்... நெருக்கினிடை - முத்துத் திருச்சின்னம் ஊதக் கேட்டவர்களாகிய நாற்றிசையினின்றும் போந்த அன்பர்கள் பெருகுகின்ற ஆசையினாலே பிள்ளையாரைச் சூழ்ந்துகொண்டு வரும் நெருக்கத்தினிடையே; அவர் காணு......

2831. திருச்சின்னம் பணிமாறக் கேட்டநாற் றிசையுள்ளோர்
பெருக்கின்ற வார்வத்தாற் பிள்ளையார் தமைச்சூழ்ந்த
நெருக்கினிடை யவர்காணு வகைநிலத்துப் பணிந்துள்ளம்
உருக்கியெழு மனம்பொங்கத் **தொண்டர்குழாத் துடனணைந்தார்.** 933

பணிந்து-பிள்ளையார் காணுத வகையினிலே நிலமுறப் பணிந்து; உள்ளம்...உடனணைந்தார் - உள்ளத்தை உருக்கி எழுகின்ற மனம் ஓங்கத் திருத் தொண்டர் கூட்டத்துடனே அணைந்தனர்.

(வி-ரை) திருச்சின்னம் பணிமாற - திருச்சின்னம் பிள்ளையாருடைய புகழ்களை எடுத்து ஊத; **பணி மாறுதல்** - ஊதுதல்; மரபு வழக்கு.

நாற்றிசையுள்ளோர் - சூழ்ந்த - நெருக்கினிடை - என்க. திருச்சின்னங்கள் பிள்ளையார் புகழ்களைப் பலவாறும் எடுத்துக்கூறி ஊதின; அவ்வொலியினைக் கேட்டு அதனுல் ஈர்க்கப்பட்டுப் பலரும் பல திசைகளினின்றும் வந்து கூடிப் பிள்ளையாரைக் கண்ணுரக் கண்டு மகிழ்ந்து நெருங்கிச் சூழ்ந்துகொள்ளுதல் இயல்பு.

அவர் காணு வகை - அந்நெருக்கத்தினிடையே அரசுகள் போதுவதனையும் நிலமுறப் பணிவதனையும் பிள்ளையார் காண இயலாத வகையில். அவர்-பிள்ளையார். கண்டனராகில் நிலமுறப் பணியவும், அவர் தமது திருவடி தாங்கிச் சிவிகை பொறுக்கவும் இசையாராதலின் காணுவகை பணிந்தனர் என்க.

உள்ளம்...பொங்க - மனம் உள்ளத்தை உருக்கி அன்பினுல் மேலேழுந்தது; **பொங்குதல்** - மன எழுச்சி மேற்செல்லுதல்.

தொண்டர் குழாம் - பிள்ளையாருடன் வந்த திருக்கூட்டம். ''முதிர்கின்ற பெருந்தவத்தோர்'' *(2830).*

உடன் அணைந்தார் - ''அன்பரோடு மரீஇ'' *(போதம் - 12 - சூத்)* என்ற கருத்துக் காண்க.

இச்செய்யுள் சில பிரதிகளில் இல்லை. *933*

2832. (இ-ள்) *வந்து அணைந்த...வந்தார் - (முன் கூறியவாறு) வந்து தொண்டர் கூட்டத்தினுள்ளே அணைந்த வாகீசப் பெருமான் வண்மையுடைய சீகாழிப்பதியை வாழ்விக்கும் வேந்தராகிய பிள்ளையாரது அழகிய முத்துமணிகளாலாகிய சிவிகையினைத் தாங்கும் பெருமக்களுடனே கூடித் தாமும் தாங்கி மனமிக மகிழ்ச்சி பொருந்த வந்தருளினர்; திருஞான சம்பந்தர்...புகல்கின்றூர் - திருஞான சம்பந்த நாயனுர் தமது புந்தியின்கண் வேருெரு உணர்ச்சி நிகழ்ந்ததனுல் முன் சொல்வாராய்;*

(வி-ரை) வந்து அணைந்த - முன் *(2829 - 2830 - 2831)* கூறியவாறு உள்ள கருத்தும் செயலுமாக வந்து அடியார் கூட்டத்துள் அணைந்த.

வாகீசர் - முன் *(2825)* பிள்ளையார் வினவிய பெயர்க்குறிப்பு.

2832. வந்தணைந்த **வாகீசர்** வண்புகலி வாழ்வேந்தர்
சந்தமணிச் சிவிகையினைத் தாங்குவா ருடன்றாங்கிச்
சிந்தைகளிப் புறவந்தார்; திருஞான சம்பந்தர்
புந்தியினில் வேறொன்று நிகழ்ந்திடமுன் புகல்கின்றார்; 934

புகலி வாழ் - புகலி வாழும்படி வரும்; ''வளர்காழிப் பதிவாழ'' *(1623).*

சிவிகையினைத் தாங்குவார் என்றும், **சிவிகையினைத் தாங்கி** என்றும் கூட்டுக; **சிவிகை தாங்குவார்** - ''சிவிகை பொறுப்பார்''; **சந்தமணிச் சிவிகையினைத் தாங்குவாருடன் தாங்கி** - என விதந்து கூறியது (பிற்காலப் புலவர் பேசியவாறு) ''அறத்தா றிதுவென வேண்டா'' என்ற பொய்யாமொழியின் உண்மையினையும் மறுக்குந் திறனுடைமை தேற்றப்படக் காட்டுதற்கென்க; **மணி**-இடநோக்கி முத்து என்க.

சிந்தை களிப்புற வந்தார் - சிவிகை தாங்குதல் இழிவு என ஏனையோர் எண்ணுமாறின்றி இது கிடைத்தற்கரிய தவப்பயனும் பேறென்றெண்ணியபடியால் சிந்தை மகிழ்ந்தனர்.

திருஞான சம்பந்தர்...நிகழ்ந்திட - திருஞான சம்பந்தராதலின் நிகழ எனக் காரணக் குறிப்புப்படக் கூறியவாறு. மேல்வரும் இரண்டு பாட்டுக்களிலும் திருநாவுக்கரசர்'', ''செவ்வாறுமொழி நாவர்'' என்பனவும் இவ்வாறே காணத் தக்கன. எந்தம் பெருமக்களின் திருநாம முழுதும் சிறப்புப் பெறவைத்த குறிப்புமிது.

வேறொன்று நிகழ்ந்திட - ''நாவரச ருழைச்சண்பை, நகரரசர் நண்ணுவார்'' *(2828)* என்றபடி அப்பரைச் சென்றுகாண உள்ள நிலையன்றித் தாம் அங்கு நண்ணுது அவர் தாமே வந்து நின்ற நிலையின் அருட்குறிப்பினுல், தமது செலவு நேர்செல்லாது தடைப்படுமாறு எழுகின்றதோருள்ள நிகழ்ச்சி. ''செவ்விய திருவுள் ளத்தோர் தடுமாற்றஞ் சேர நோக்கி'' *(1815)* என்புழிப்போலக் கொள்க; **வேறு ஒன்று** - திருவுள்ளக்கிடை நேர்செலாது விலக்கத்தக்க வேறு; **வேறு** என்ற குறிப்புமிது.

முன் - வாகீசர் அறிதற்கு முன்; மெய்த்தொண்டர்க்கு முன் என்றலுமாம்.

புகல்கின்றாராகி - என்றருள் செய்ய - என வரும்பாட்டுடன் கூட்டி முடிக்க. **புகல்கின்றார்** - முற்றெச்சம்.

திருமுத்தின் சிவிகையினைத் தாங்கியே.....களிப்புற வருவார்—என்பதும் பாடம். *934*

2833. (இ-ள்) அப்பர்தாம்...அருள் செய்ய - அப்பர்பெருமான் இப்பொழுது எங்குப் பொருந்த எழுந்தருளினுர்? என்று வினவி அருளிச்செய்ய; செப்பரிய... செப்புவார் - சொல்லுதற்கரிய புகழினையுடைய திருநாவுக்கரசுகள் விடை சொல்வாராகி; ஒப்பரிய...என்றார் - ஒப்பற்ற தவத்தினை முன்னே செய்தேனுதலின் (அதன் பயனுக) இப்பொழுது உம் திருவடிகளைத் தாங்கி வரும் பெரும்பேறு கைவரப் பெற்று உய்ந்தேன் யான் என்றருளிச் செய்தனர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

2833. "**அப்பர்தா** மெங்குற்று ரிப்பொழு?"தென் றருள்செய்யச்
செப்பரிய புகழ்த்**திருநா வுக்கரசர் செப்புவார்**
"ஒப்பரிய தவஞ்செய்தே னுதலினு லும்மடிகள்
இப்பொழுது தாங்கிவரப் பெற்றுய்ந்தேன் யா"னென்ருர். 935

(வி-ரை) அப்பர்தாம்...அருள் செய்ய - தாம் சென்று காண நினைந்த பதியின் திருமடத்தினுள் அப்பொழுது அவர் இல்லை என்ற தோற்றம் ஞானநாட்டத்தில் விளைந்ததாதலின் **இப்பொழுது** எங்குற்ருர் என்றருளினர். **அப்பர்**-முதலிற் கண்டபோது தாமே அழைத்த பெயர்.

இப்பொழுது எங்குற்ருர் - எனற்பாலது எங்குற்ருர் இப்பொழுது - என மொழி வைப்புமுறை நிலை மாறியது புந்தியினில் வேருென்று நிகழ்ந்ததன் காரணத்தாலாகிய விளைவு. ஆயின் வேருென்று நிகழ்ந்ததனுல் அப்பர் தாம் சென்று காண நினைந்த இடத்தினில்லாமை கண்டனரேயன்றி, அவர் இங்கே சிவிகை தாங்கி வருதலைக் கண்டிலர். அதனுலே எங்குற்ருர் இப்பொழுது? என வினவியருள வேண்டியதாயிற்று. இஃதென்னையோ? எனின், தாம் நிலத்திற் பணிவதும், சிவிகை தாங்கப்பெற்று வருவதும் பிள்ளையார் காணு வகை நிகழ்தல் வேண்டுமென்று அப்பர் பெருமான் திருவுள்ளங் கொண்டனராதலின் இவை அவர் காணுவகையே நிகழ்ந்தன; இஃது அப்பர்பெருமானது "திருத்தொண்டினுறைப்"பின் வலிமை என்க.

செப்பரிய புகழ்த் திருநாவுக்கரசர் - செப்புவார் - செப்பரிய - செப்புவார்- சொற்பின் வருநிலை; செப்பிய இப்பொருளினுலும் அவர் புகழ் செப்பரியதாயிற்று என்பது; செப்பும் பொருளின் சிறப்பேயன்றி அதனைக் கூறும் சொல்லின் வளமும் வாய்க்கப்பெற்றவர் என்க. பிள்ளையார் திருவடிகளை மனம் மொழி மெய் என்ற மூன்றுனும் நேரே தாங்குதல் ஒப்பற்ற பெருந்தவப் பயன் என்ற உண்மையினை **ஆதலினுல்** எனக் காரணகாரிய முறை புலப்பட வைத்துக் கூறிய வகையினுல் சிவஞான போதம் 2-8-9-11-12 சூத்திரங்களிற் போந்த உண்மைகளையெல்லாம் ஒருங்கே பெறத் தேற்றிய திறம் **செப்பறிய புகழ்** எனப்பட்டது.

யான் உய்ந்தேன் - என்க. வினைமுற்று முன்வந்தது விரைவுக் குறிப்பு. அடி சேர்தலே முத்தியாமென்பது ஞானநூன் முடிபாதலின் ஈண்டுத் திருவடிகள் தாங்கி வருதலினையே உய்தி என்ருர்.

ஆதலினும் மிணையடிகள்—என்பதும் பாடம். 935

2834. (இ-ள்) அவ்வார்த்தை...இழிந்தருளி - அவ்வாறு கூறியருளிய அப்பர் பெருமானது அத்திருமொழிகளைக் கேட்டு அஞ்சிப் பிள்ளையார் சிவிகையினின்றும் கீழே இறங்கியருளி; இவ்வாறு...இறைஞ்சுதலும் - இப்படித் தேவரீர் செய்தருளினுல் என்னுவது? என்று பதைப்புடன் கூடி வணங்குதலும்; செவ்வாறு...இறைஞ்சினுர் - செம்மையே மொழியும் திருநாவினையுடைய அரசுகள் "திருஞான சம்பந்தருக்கு வேறெவ்வாறு செய்தல் தக்கதாகும்" என்று வணங்கினுர்.

(வி-ரை) அஞ்சி - இழிந்தருளி - அச்சமாவது அப்பர் எனத் தாம் கொண்ட பெரியார்

*2834. அவ்வார்த்தை கேட்டஞ்சி யவனியின்மே லிழிந்தருளி
"யிவ்வாறு செய்தருளிற் றென்ஞு?"மென் றிறைஞ்சுதலுஞ்
செவ்வாறு மொழிநாவர் "**திருஞான சம்பந்தர்க்**
கெவ்வாறு செயத்தகுவ?" தென்றெதிரே யிறைஞ்சினுர். 936

சிவிகை தாங்கத் தாம் ஊர்ந்துவந்தது பிழை என்றதனுல் ஆயது. பெரியார்பாற் பணிகொள்ளுதல் பிழை என்பதாம்.

இழிந்தருளி - அவர் சிவிகை தாங்கச் சிவிகையில் எழுந்தருளியிருத்தல் தகாதாதலின். **இழிந்தருளுதல்** - பெரியார்முன் சிறியராயடைந்து என்ற குறிப்பும் தருவது. "இழிந்தே" (1662).

இவ்வாறு...என்னும் - செய்தக்கதல்லாத இச்செயலே இவ்வாறு தேவரீர் செய்யின் அதன் பயன் என்னுகி விளைவது என்று பதைத்துக் கூறியது. "**செய்தக்க வல்ல செயக் கெடும்**" (குறள்) என அச்செயலைக் கொண்டனர் பிள்ளையார்.

செவ்வாறு மொழிநாவர் - முன் பாட்டில் உரைத்தவை பார்க்க.

"**திருஞானசம்பந்தர்க் கெவ்வாறு செயத்தகுவது?**" - சிவஞானம் கிட்டப் பெற்றபோது அதனை அடிசார்ந்து வணங்குதலன்றி வேறென்ன செய்தக்கது என்றபடி; அச்செயலினையே "**செய்தக்க செய்யாமை யானும் கெடும்**" (குறள்) எனக் கொண்டருளினர். ஒரே செயலினை இவ்வாறு வேறு வேருகக் கொண்டருளியது அவ்வவரும் **தாழ்வெனும் தன்மையோடு சைவமாஞ் சமயஞ் சார்ந்த நிலை குறித்தது**. அவ்வவர் கொண்ட நிலையின்படி இருவர் திறமும் முரண்படாமை அறிந்துகொள்க.

இறைஞ்சினுர் - அவர் வணங்காமுன் வணங்கினுர் (1662).

எதிரே இறைஞ்சுதலும்—என்பதும் பாடம். 936

2835. (இ-ள்) சூழ்ந்து...அதுகண்டு - சுற்றி நெருங்கிப் பக்கத்தில் அணையும் மெய்த்தொண்டர்களெல்லாம் அதனைக் கண்டு; தாழ்ந்து...களிப்பினராய் - தாழ்ந்து நிலம் பொருந்த வணங்கி எழுந்து கைகளைத் தலையின்மேற் கூப்பி வாழ்வடைந்து மனமகிழ்ச்சியுடையவராகி; மற்றிவரை...ஆர்த்தார் - மற்று இப் பெருமக்கள் இருவரையும் வணங்கும் பேறு நாம் பெற்ருேமாதலின் நாம் ஆழ்ந்திருக்கும் பிறவிக்கடலின்றும் ஈடேறியுய்யப் பெற்ருேம்" என்று கூறி அண்டங்கள் எல்லாம் பொருந்தும்படி ஆரவாரித்தனர்.

(வி-ரை) சூழ்ந்துமிடைந்து அருகணையும் தொண்டர் எலாம் - "நாற்றிசை யோர் - சூழ்ந்த நெருக்கினிடை" (2831) என்றபடி கூடியவரும், அரசுகளும் பிள்ளையாரும் இவ்வாறு கூடிய செயலைக் கண்ட திருக்கூட்டத்தினரும்.

வணங்கி - பெருமக்களிருவரையும் வணங்கி.

வாழ்ந்து - பெருவாழ்வு பெற்று.

2835. சூழ்ந்துமிடைந் தருகணையுந் தொண்டரெல்லா மதுகண்டு
தாழ்ந்துநில முறவணங்கி யெழுந்துதலைக் கைகுவித்து
வாழ்ந்துமனக் களிப்பினராய் "மற்றிவரை வணங்கப்பெற்
ருழ்ந்தபிறப் புய்ந்தோ"மென் றண்டமெலா முறவார்த்தார். 937

2836. திருஞான சம்பந்தர் திருநாவுக் கரசர்தமைப்
பெருகார்வத் தொடுமணைந்து தழீஇக்கொள்ளப் பிள்ளையார்
மருவாரு மலரடிகள் வணங்கியுடன் வந்தணைந்தார்
பொருவாரும் புனற்சடையார் மகிழ்ந்ததிருப் பூந்துருத்தி. 938

ஆழ்ந்த பிறப்பு *- தாம் ஆழ்ந்து கிடந்த பிறவி;* ***பிறப்பு*** *- பிறவியினின்றும்.*

ஆர்த்தல் *-மகிழ்ச்சி மிக்கதனுல் உய்ந்தோமென்று பலவாறும் ஆரவாரித்தல்.*

எழுந்துதம—எழுந்தங்கை தலை*—என்பனவும் பாடங்கள்.* *937*

2836. (இ-ள்) *திருஞான சம்பந்தர்...தழீஇக்கொள்ள - திருஞான சம்பந்தர் மேன் மேற் பெருகும் ஆசையுடனே திருநாவுக்கரசர்தம்மை அணைந்து தழுவிக்கொள்ள; பிள்ளையார்...வணங்கியுடன் - அரசுகள் பிள்ளையாரின் மணமுடைய மலர்போன்ற திருவடிகளை வணங்கி உடன்வர; பொருவாரும்...பூந்துருத்தி - அலைகள் மோதுகின்ற கங்கை நீரைச் சடையில் வைத்த இறைவர் மகிழ்ந்த திருப்பூந்துருத்தியினில்; வந்து அணைந்தார் - பிள்ளையார் வந்து அணைந்தனர்.*

(வி-ரை) திருஞான சம்பந்தர் பெருகார்வத்தோடு மணைந்து தம்மைத் தழீஇக்கொள்ளத் திருநாவுக்கரசர் அவருடைய மருவாரு மலரடிகளை வணங்கி யுடன் வரப் பிள்ளையார் பூந்துருத்தி வந்தணைந்தார் எனக்கொண்டு கூட்டிப் பொருள் செய்யப்பட்டது. அவருடைய மலரடிகள் என்புழியும், வணங்கி யுடன்வர என்புழியும், ஆறனுருபேற்ற சுட்டுப்பொருளும் வினையெச்சச் சொல்லும் அவாய் நிலையான் வந்தன.

இனித் திருநாவுக்கரசர் வணங்கி, உடன், பிள்ளையாருடன் பூந்துருத்தி வந்தணைந்தார் என்றும், வந்தணைந்தார் என்பதுமுதல் *(2836)*, முன்னிறைஞ்சி - இறைஞ்சினுர் என்பதற்கும் *(2834)*, மகிழ்ந்தங்கிருந்தார் *(2838)* என்பதற்கும் அவ்விருவரும் என எழுவாய் வருவித்தும் முடித்தனர் திரு. சொக்கலிங்கம் செட்டியார்.

திருஞான சம்பந்தர் - திருநாவுக்கரசர் - இப் பெருமக்களிருவர் திருப்பெயர்களையும் இவ்வாறு மந்திரமாகக் கொண்டு கணிக்கவேண்டிய இவ்வகையில் முன் தனித்தனிக் *(2833-2834)* கூறிய ஆசிரியர், ஈண்டு இருவரும் கூடிய இடத்தில் சேர்த்துவைத்துக் காட்டிய கவிநலமும் உள்ளுறையும் கண்டுகொள்க. உள்ளுறையாவது அன்று இப்பெருமக்கள் முன் கூறியவாறு கூடிய கூட்டத்தின் அருட் பொலிவினை நேரே கண்ட தொண்டரெல்லாம் "மற்றிவரை வணங்கப்பெற் ருழ்ந்தபிறப் புய்ந்தோம்" என்று ஆர்த்ததுபோலவே, பின்வரும் என்போன்ற சிற்றடியாரும் கண்டுகொண்டு கணித்து உய்திபெற வைத்தலாம். "கூடிய கூட்டத்தி னுலுள தாய்த்திக் குவலயமே" (ஆளு - திருவந் - *80*) என்ற நம்பியாண்டார் நம்பிகள் கருத்துக் காண்க.

*2837. அன்பர்குழாத் தொடுஞ்செல்வா ரானேற்ருர் மகிழ்கோயில்
முன்பணித்தா கச்சென்று, **கோபுரத்தை முன்னிறைஞ்சித்,**
துன்பமிலாத் திருத்தொண்ட ருடன்றெழுது, புக்கருளி
என்புருக வலங்கொண்டு பணிந்தேத்தி யிறைஞ்சினர். 939

பெருகார்வத்தொடு மணைந்து தழீஇக் கொள்ள - பன்னுட் பிரிந்தபின் காண வேண்டுமென்று கருதிவந்த ஆர்வமும், ஈண்டு இவ்வாறு எதிர்பாராத இடத்தில் எதிர்பாராத வகையால் கண்டுகொண்ட ஆர்வமும் குறிக்கப் ''**பெருகார்வம்**'' என்றார். **தழீஇ** - தழுவி. **தழுவிக் கொள்ளுதல்** - ஒப்பார் இருவரிடை அன்பு மிக்கபோது உளதாகும் மெய்ப்பாடு. நம்பியாரூரர் இரண்டாவது முறை தாமே கழறிற்றறிவாரை நினைந்து மலைநாட்டுக் கெழுந்தருளக் கண்டபோது ''சேரர்பெருமா னெதிர்சென்று தலைநாட் கமலப் போதனைய சரணம் பணியத் தாவில்பல கலைநாட் டமுத வாரூரர் தாமுந்தொழுது கலந்தனரால்'' (வெள்ளா. சருக் - 19); ''சிந்தை மகிழும் சேரலனர் திருவா ரூர ரெனுமிவர்க, டந்த மணிமே னிகள்வேரு மெனினு மொன்ருந் தன்மையராய், முந்த வெழுங்கா தலிற்றெழுது முயங்கி'' (மேற்படி 20) என்னும் கருத்துக்களை ஈண்டு வைத்துக் கொள்க.

பிள்ளையாருடைய - அடிகள் என்க. தழீஇக்கொண்ட அப்பிள்ளையார் என்று சுட்டுவருவிக்க. **வணங்க** என்பது பாடபேதமாயின் அரசுகள் என்ற எழுவாய் வருவிக்க.

மருவாரும் மலரடிகள் - இறைவருடைய திருவடிகள் என்றும் உரைக்க நின்றது; **மருவாரும் - மலர் அடி** என்றது நிறம், மென்மை, உரு முதலியவற்றால் மட்டுமன்றி மணஞ் செய்தலாகிய குணத்தாலும் ஒப்புமை கூறும் குறிப்பு.

பூந்துருத்தி அணைந்தார்-என்க; பயணிலை முன்வந்தது ஆர்வத்தின் விரைவுக் குறிப்பு.

பூந்துருத்தி வந்தணைந்தார் - வந்து - என்றமையாலும் அரசுகள் சென்று சிவிகை தாங்கிய நிகழ்ச்சி நிகழ்ந்த இடம் நகரினுக்குப் புறமாகிய இடம் என்பது பெறப்படும். ''அந்தப் பதிநின்றும் புறப்பட்டு'' (2830) என முன் உரைத்ததனை இங்கு நினைவுகூர்க. தொகுதி III-பக் 855. ''**புறம்பணை**'' என்றவிடத் துரைத்தவை பார்க்க.

உடன் - இருவரும் உடனாக. **உடன் அணைந்தார்** - ''அன்பரொடு மரீஇ...ஆல யந்தொழும்'' என்ற சிவஞான போதம் 12-ம் சூத்திரக் கருத்துத் தருவது. ''கோபுரத்தை முன்னிறைஞ்சி'' (2837). *938*

2837. (இ-ள்) அன்பர் குழாத்தோடும் செல்வார் - திருத்தொண்டர்களது திருக் கூட்டத்துடனே செல்வாராகிய பிள்ளையார்; ஆனேற்ருர்...இறைஞ்சி - இடப ஏற்றினையுடைய இறைவர் மகிழ்ந்தெழுந்தருளியிருக்கும் திருக்கோயில் முன்பு அருகாகச் சென்று திருக்கோபுரத்தை முன்னர்த் தொழுது; துன்பமிலா...புக்கருளி- துன்பமில்லாத திருத்தொண்டர்களுடன் தொழுதுகொண்டபடியே உட்புகுந்தருளி; என்புருக...இறைஞ்சினர் - எலும்பும் உருகும்படி கோயிலினுள் வலமாக வந்து பணிந்து துதித்து வணங்கினர்.

(வி-ரை) சென்று - முன் இறைஞ்சி - தொழுது-புக்கருளி- வலங் கொண்டு

*2838. **பொய்யிலியா ரைப்பணிந்து** போற்றியே புறத்தணைவார்;
செய்யசடை யார்கோயிற் றிருவாயின் முன்னுக
மையறுசீர்த் தொண்டர்குழாம் வந்துபுடை சூழ,வுல
குய்யவரு வார்தாங்க ளுடன்மகிழ்ந்தங் கினிதிருந்தார். 940

- இறைஞ்சினார் - *வழிபாட்டு முறைகளை இவ்வாறு தனித்தனி வகுத்தோதியது ஆர்வ மிகுதியினை உணர்த்தற்கு.*

திருக்கோயில் முன்பு - முன்பு - என்றது திருக்கோயிலின் முன்னர் - நேரே - என்று இடத்தையும், **முன் இறைஞ்சி - முன்** - என்றது வழிபாட்டு முறையிற் காலத்தால் முன்னர் என்று காலத்தையும் குறித்தன.

கோபுரத்தை இறைஞ்சுதல் - தூலலிங்கமாதலின் கோபுரம் கட்புலப்படு மெல்லையிலே வணங்குதல் வேண்டுமென்பது விதி.

துன்பமிலாத் திருத்தொண்டர் - துன்பமிலா - ''இன்பமே யெந்நாளுந் துன்ப மில்லை'' (தேவா); ''பன்னெடுங் கால மழைதான் மறுக்கினும்....முக்கட், பொன் னெடுங்குன்றமொன் றுண்டுகண் டீரிப் புகலிடத்தே'' (தேவா); ''வானந் துளங்கி லென்......உத்தமர்க்கே'' (தேவா); ''கண்ணுதலான் றிருநீற்றுச் சார்வினோர்க்கும் கவலைவருமோ'' (2460); ''ஈரவன்பினர் யாதுங்குறைவிலார்'' (144); ''தனக் குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லால், மனக்கவலை மாற்ற லரிது'' (குறள்) என்பன முதலியவை காண்க. துன்பத்தை-மலவாதனையை-இல்லையாகத் துணை செய்யும் தொண்டர் என்று கொண்டு 12-ம் சூத்திரக் கருத்துப்பட உரைத்தலுமாம். இக்கருத்தினையே தொடர்ந்து ''மையறுசீர்த் தொண்டர் குழாம்'' (2838) என மேலும் கூறுதல் காண்க.

தொழுது புக்கருளி - தொழுது - தொழுதபடியே.

தொழுது புக்கு - தொழுதலும் புகுதலும் உடனிகழ; ''தொழுதெழுவாள்'' (குறள்).

என்புருக வலங்கொண்டு - என்புருகுதல் -இறைவர் செய்யும் பேருபகாரத்தை எண்ணுந்தோறும் மேன்மேற் பெருகும் ஆர்வத்தாலாவது.

இறைஞ்சினார் - இவ்வணக்கம் திருக்கோயிலினுள் உட்புறம் நிகழ்ந்தது. இறைவர் திருமுன் நிகழ்ந்த வணக்கம் மேல்வரும் பாட்டிலுரைக்கப்படுதல் காண்க; பிள்ளையார் புறத்து நின்றாங்கு இறைஞ்சுதற்காக இடப தேவர்கள் விலகி எழுந்தருளியுள்ளார்கள் என்றதொரு வரலாறும், இக்கோயிலில் அம்மூர்த்திகள் விலகியுள்ள நிலைபற்றி வழங்கப்படுகின்றது. தலவிசேடம் பார்க்க. 939

2838. (இ-ள்) பொய்யிலியார்...அணைவார் - பொய்யிலியப்பரை வணங்கித் துதித்துப் பின்பு புறத் திருமுற்றத்தில் அணைவாராகிய பிள்ளையார்; செய்ய சடையார்...சூழ - சிவந்த சடையினையுடைய இறைவரது திருக்கோயிற் றிருவாயின் முன்பு குற்றமறும் சிறப்புடைய தொண்டர் கூட்டம் வந்து தம்மைச் சுற்றிச் சூழ்ந்து வர; உலகுய்ய...... இருந்தார்-உலக முய்யும்

2839. **வாக்கின் றனிமன்னர் வண்புகலி வேந்தர் தமைப்**
போக்கும் வரவும் வினவப், புகுந்ததெல்லாந்
தூக்கின் றமிழ்விரகர் சொல்லிறந்த ஞானமறை
தேக்குந் திருவாயாற் செப்பி யருள்செய்தார். 941

பொருட்டு வரும் நாயன்மார் களிருவரும் அடியார்கள் சூழ அவர்களுடன் மகிழ்ந்து அங்கு இனிதாக விரும்பி எழுந்தருளி யிருந்தனர்.

(வி-ரை) பொய்யிலியார் - திருப்பூந்துருத்தியில் வீற்றிருக்கும் இறைவரது பெயர்; "பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டே னானே'' *(தாண்)*.

புறத்து - புறத்திருமுன்றிலின்கண்; **திருவாயில் முன்னாக** - என்றது காண்க. இத்திருவாயில் கோயிலினுட்புறம் உள்ள திருவாயில்.

அங்கு-கோயிலினுள்ளே திருமுன்றிலின் வாயில்முன் ஒரு தனியிடத்து. மேல் வரும் 5 பாட்டுக்களினும் கூறப்பெறும் நிகழ்ச்சிகள் நிகழ்ந்த இடம் திருமுற்றம் என்பது குறிக்கப்பட்டது காண்க. இவற்றின் பின்னரே பிள்ளையார் அரசுகளது திருமடத்திற் புகுந்தருளினர் என்பது *(2844-ல்)* மேற்கூறப்படுதலும் காண்க.

வருவார் தங்களுடன் - என்று பாடங்கொண்டு - வருவாராகிய அடியார்கள் என்றுரைத்தலுமாம். *940*

2839. (இ-ள்) வாக்கின்...வினவ-வாக்கிற்கு ஒப்பற்ற அரசராகிய அரசுகள் வளப்ப முடைய சீகாழி அரசரை அவர் பாண்டி நாட்டுக்குச் சென்றருளியதும் அங்குநின்று மீண்டருளியதும் ஆகிய வரலாறுகளை வினவ; புகுந்ததெல்லாம் - அங்கு நிகழ்ந்த வரலாறுகளின் தொகுதியினை முழுதும்; தூக்கின்...அருள்செய்தார்-தமிழ்ப் பாட்டின் தலைவராகிய பிள்ளையார் சொல்லுதற்கரிய ஞானமறைகளைத் தேக்குகின்ற தமது திருவாக்கினாற் சொல்லியருளினார்.

(வி-ரை) மன்னர் - வேந்தர் - இருவரும் திருவருட் பெருக்கினால் ஒப்பாந் தன்மை குறித்தது. **தனி வாக்கின் மன்னர்** என்றலுமாம்.

போக்கும் - வரவும். போக்கு - பாண்டி நாட்டுக்கு எழுந்தருளிச் செல்லுதல்; **வரவு** - அங்குநின்று மீண்டருளுதல். **போக்கும் வரவும்**-போயினநாள்முதல் மீண்ட இந்நாள்வரை நிகழ்ந்த எல்லா நிகழ்ச்சிகளின் தொகுதி. இக்கருத்தே பற்றிப் **புகுந்ததெல்லாம்** என்றார். **புகுந்தது எல்லா(மு)ம்** என ஒருமையிற் கூறினார். **போக்கு**-பரசமய நிராகரிப்பாகிய அழிவும், **வரவு** - திருநீற்றின் ஆக்கமாகிய பெருக்கமும் என்றும், **புகுந்தது எலாம்** - இடையே புகுந்த வாத முதலிய நிகழ்ச்சிகளின் தொகுதி என்றும் குறிக்கொள நின்ற திறமும் காண்க. ''வாதில் வென்றதுவும்...திருநீறு வளர்த்ததுவும்'' *(1664)* என்றது காண்க.

தூக்கின் தமிழ் விரகர் - தூக்கு - செய்யுள். முதன்மைபற்றி முத்தமிழினுள் இயற்றமிழினை விதந்தோதினார். **தூக்கு** - எடுப்பு-பெருமை என்றலுமாம். இசைப் பொதுமை என்றலுமாம். ''இன்னிசையாற் றமிழ்பரப்பும் ஞானசம் பந்தன்'' (நம்பி. தேவா).

வேறு

2840. **காழியினில் வந்த கவுணியர்தம் போரேற்றை**
ஆழிமிசைக் கன்மிதப்பில் வந்தா ரடிவணங்கி
"வாழிதிருத் தொண்டென்னும் வான்பயிர்தா னோங்குதற்குச்
சூழும் பெருவேலி யானீ" ரெனத்தொழுதார். 942

சொல்லிறந்த ஞானமறை தேக்கும் திருவாய் - ***சொல்லிறந்த ஞானம்***-சொல்லுணர்ச்சியைக் கடந்த ஞானம்; மெய்ப்பொருளை அனுபவமாக அறியுஞ் சிவஞானம். எண்ணரிய சிவஞானத் தின்னமுதம்'' (1966); **ஞானமறை தேக்குதல்** - ஞானத்தைப் புலப்படுத்தும் சொல் நிறைதல்; **தேக்குதல்** - நிரம்பி மேல் வருதல்; **தேக்கும்** - தடையுண்ட நீர் நிரம்பி வழிதல்போல நிரம்பி வருதல் என்ற பொருள் தரும் குறிப்புருவகம்.

தூக்கினால் - தேக்கும் என்று கூட்டியுரைக்கவும் நின்றது.

சொல்லிறந்த ஞான மறை தேக்கும் திருவாயால் செப்பி - சொல்லரிய ஞானத்தை மறையினால் வெளியிட வல்லவராதலின் அத்திருவாக்கினால் அது போலவே சொல்லரிய சிவனருட்டுணையாற் பெற்ற அருணிகழ்ச்சிகளைச் சொன்னார் என்பது குறிப்பு. 941

2840. (இ-ள்) *காழியினில்...அடிவணங்கி* - சீகாழியில் வந்து அவதரித்த கவுணியர் குலத்தவருடைய போரேறு போன்ற பிள்ளையாரைக் கடலின்மேலே கல்லே மிதவையாகக் கொண்டு வந்தருளிய அரசுகள் அடிபணிந்து; *வாழி...எனத் தொழுதார்* - வாழ்வு தரும் திருத்தொண்டு என்னும் பெரிய பயிர் ஓங்கி வளர்ந்து பயன்றரச் செய்தற்கு உரியதாகச் சூழும் பெருவேலிபோல நீர் ஆயினீர் என்று கூறித் தொழுதனர்.

(வி-ரை) *காழியினில் வந்த - கன்மிதப்பில் வந்தார்* - முன் பாட்டில் மன்னர் - வேந்தர் என்ற தலைமைபற்றிய ஒப்புமை பெறக் கூறிய ஆசிரியர், இப்பாட்டில் வந்தருளிய தன்மைபற்றிய ஒப்புமைபெறக் கூறிய கவிநலம் கண்டுகொள்க. அரசுகள் வந்த கன்மிதப்புப் போலவே காழியும் தோணியாய் மிதக்கும் தன்மைக் குறிப்புப்படக் கூறியபடியாம்.

போரேறு - ஏறுபோல்வாரை ஏறு என்றதுபசாரம்; **போரேறு** என்ற இத் தன்மையாற் கூறியது வாதஞ் செய்து வென்றருளிய தன்மையும், ஈண்டு அவ்வரலாறு பற்றிக் கூறும் நிலையும் குறித்தற்கு.

ஆழிமிசைக் கன்மிதப்பில் வந்தார் - ''ஆழிமிசைக் கன்மிதப்பி லணைந்த பிரான்'' என இச்சொல்லும் பொருளும் உமாபதிசிவம் எடுத்தாண்டு பாராட்டினர்.

வாழி - வாழ்வாகவுள்ள; வாழ்வைத் தருகின்ற.

திருத்தொண்டென்னும்...வேலியானீர் - வினைபற்றி வந்த தொடருவமம்; **தொண்டு** - பயிர். ***பிள்ளையார்*** - பெருவேலி; உவம உருபு தொக்கது. ***ஆனீர்*** - ஆக்கச்சொல் உவமஉருபுப் பொருளில் வந்தது. ''ஆள்வாரிலி மாடாவேனோ'' (திருவாசகம்).

2841. பிள்ளையார் தாமுமவர் முன்றொழுது **பேரன்பின்**
வெள்ள மனையபுகழ் மானியார் மேன்மையையும்
கொள்ளும் பெருமைக் குலச்சிறையார் தொண்டினையும்
உள்ளபரி செல்லா மொழிந்தங் குவந்திருந்தார். 943

பயிர் ஓங்குதற்குச் சூழும் பெருவேலியானீர் ''ஏரினு நன்றா லெருவிடுதல் கட்டபின், நீரினு நன்றதன் காப்பு'' (குறள்) என்று பயிர் ஓங்குதற்கு வேண்டப்பட்ட உழவு - எருவிடல் - களைகட்டல் - நீர் பாய்ச்சல் - காத்தல் என்ற ஐந்தனுள் ஏனை நான்கற்கு மேலாகிச் சிறப்புப்பற்றி இறுதியில் வைக்கப்பட்ட வேலியாகிய காவலை உவமித்தார் - உவமேயத்தினும் அச்சிறப்பினை யாப்புறுத்தற்கு.

வான்பயிர்-சிவவானில் சேரும் சிவபுண்ணியமாகிய பயிர் என்பதும் குறிப்பு; வானோர்க் குயர்ந்த உலகம்'' (குறள்).

பெருவேலி - தொண்டாகிய பெரும் பயிருக்கு ஏற்றவாறு பொருந்தும் பெரியவேலி. **சூழும்** - சுற்றி வளைத்த என்றும், சூழ்ந்து - எண்ணி - அமைத்த என்றும் உரைக்க நின்றது. *942*

2841. (இ-ள்) பிள்ளையார்...தொழுது - பிள்ளையாரும் அவர் முன்னே தொழுது; பேரன்பின்...மேன்மையையும் - பெரிய அன்பின் வெள்ளம்போன்ற புகழினையுடைய மங்கையர்க்கரசியம்மையாரது மேம்பாட்டினையும்; கொள்ளும்... தொண்டினையும் - கொள்ளும் பெருமையினையுடைய குலச்சிறை நாயனாரது திருத்தொண்டினது சிறப்பினையும்; உள்ள பரிசெல்லாம் மொழிந்து - உள்ள தன்மையெல்லாம் சொல்லியருளி; அங்கு உவந்திருந்தார் - அத்தன்மையில் மகிழ்ந் தருளினர்.

(வி-ரை) தொழுது - பெரியோர்களது வினவுக்கு விடைகூறப் புகும் பொழுது தொழுது தொடங்குதல் உயர்ந்தோர் மரபு; 2377 -2556 முதலியவை பார்க்க. இனிக் கூறப்புகும் அருட்பொருளின் சிறப்பு நோக்கித் தொழுது தொடங்கியருளினார் என்றலுமாம்.

பேரன்பின் வெள்ளம் - மிகுதிபற்றி அன்பை வெள்ளம் என்றார். **மானியார்** - மங்கையர்க்கரசியம்மையார்; மேன்மை - சிவநெறியிற் கொண்ட அன்பின் மேம்பட்ட நலங்கள்; அரசியார் என்ற குறிப்புமாம். இவற்றை ''முன்நின் நிலை விளம்பக் கொங்கை சுரந்தவருட் கோமகள்'' என்று போற்றினார் சிவப்பிரகாசர்.

கொள்ளும் பெருமை - என்ஞான்றும் மேற்கொண்டொழுகும் பெருமைப் பண்புகள்; **தொண்டு** - அடிமைத் திறம்.

மேன்மை - தொண்டு-இவற்றின் திறங்களைப் பிள்ளையாரது திருவாலவாய்த் (புறநீர்மை) திருப்பதிகத்திற் கண்டுகொள்க.

உள்ள பரிசு எல்லாம் - உள்ளவாறு காணும் தன்மைகள் யாவையும். இவை என்றும் நிலைத்த உண்மையினியல்புகள். முன்னர்ப் ''**புகுந்ததெல்லாம்**'' *(2839)* என்றது நிகழ்ச்சிகள். அவற்றைச் செப்பியருளி வரலாற்றினைத் தொகுத்து முடித்தபின், இவ்வாறு அம்மையாரது

2842. **தென்னற் குயிரோடு நீறளித்துச்** செங்கமலத்
தன்ன மனையார்க்கு மமைச்சர்க்கு **மன்பருளித்**
துன்னுநெறி **வைதிகத்தின் தூநெறியே யாக்குதலான்**
மன்னுபுகழ் வாகீசர் **கேட்டு மனமகிழ்ந்தார்.** 944

பண்பும் அமைச்சனரது பண்பும் உரைத்தருளியது அடிமைத் திறத்திற்றிளைக்கும் அரசுகள் அறிந்து களிக்கும்பொருட்டு; இவ்வாறு அவர்களது அடிமைத்திறங் கேட்ட அளவே அரசுகள் அங்குச் சென்று தமிழ்நாடு காண்பதற்கு வாகீசர் மனங்கொண்டார் என்று முன்னர் ''உரைத்தருள...தமிழ்நாடு காண்பதற்கு மனங்கொண்டார்'' (1665) எனவும், ''போக்கும் வரவும் கேட்டபோது உவந்தார்'' (1664) எனவும் கூறியவை இங்கு நினைவு கூர்தற்பாலன. அவ்விருவர் பணியினைப் பற்றியே ''இவர் பணியு, மந்நலம் பெறுசீராலவா யீசன்'' (தேவா) என்று பிள்ளையார் இறைவரைச் சிறப்பித்தமை காண்க.

அங்கு *- மொழிந்த அத் தன்மையின்கண்; அவ்விடத்து என்றுரைப்பாரு முண்டு.* *943*

2842. (இ-ள்) *தென்னற்கு...நீறளித்து-பாண்டியருக்கு உயிருடனே திருநீற்றினை அளித்தருளியும்; செங்கமலத்து...அன்பருளி - செங்கமலத்திலிருக்கும் அன்னம் போன்ற மங்கையர்க்கரசியாருக்கும் அமைச்சனுருக்கும் அன்பினை அளித்தருளியும்; துன்னுநெறி...ஆக்குதலால் - தூய வைதிகச் சைவநெறியே பொருந்தும் நெறியாக ஆக்கியளித்தமையாலே; மன்னுபுகழ்...மகிழ்ந்தார் - நிலை பெற்ற புகழினையுடைய அரசுகள் கேட்டு மனம் மிக மகிழ்ந்தார்.*

(வி-ரை) உயிரோடு நீறு அளித்து *- வெப்பு நோயினுல் உயிர்போகும் நிலையிலிருந்த பாண்டியனுக்கு நோய்நீக்கி உயிரைக் கொடுத்ததன்றி அதனோடு திருநீற்று நெறியினைச் சாரும் பேற்றினையும் அளியுடன் தந்து; திருநீற்றின் மூலம் (திருநீற்றுப் பதிகம் அருளி நீறு சாத்தி) உயிர் அளித்து என்பதும் குறிப்பு. ''நீறிடா நெற்றி பாழ்'' என்றும், ''திருவெண்ணீ றணியாத திருவி லூரும்...அடவி காடே'' (தேவா) என்றும், ''நீறணியாத நெற்றியினைச் சுடு'' (வேதம்) என்றும் கூறுபவாகலின் அவ்வாறு ஒழியாது நீற்றினுல் உண்மை உயிர்வாழ்க்கை பெறுபவனுக ஆக்கி என்ற குறிப்பும் காண்க. சமண் சார்பாற் சிவாபராதப்பட்டு வீழ்ந்து கிடந்த உயிரை மேல் எடுத்துப் புனிதமாக்கி அளித்து என்ற குறிப்புமாம்.*

செங்கமலத்து அன்னம் அனையார் *- மங்கையர்க்கரசியம்மையார்;* ***அன்னம்*** *-அன்னம் போன்றவர் என்க; நடைபற்றிய உவமம். ''செய்ய தாமரைமே லன்னமே யனைய சேயிழை'' என்ற தேவாரப் பகுதி ஆசிரிய வசனமாக எடுத்தாளப்பட்டது. ''பங்கயச் செல்வி'' என்று பிள்ளையாரால் போற்றப்படும் நிலையுள்ள அம்மையாரை ஈண்டுப், பிறவியுட்படும் இலக்குமிக்கு உவமிப்பதாகக் கூறுவார் பொருள் பொருந்தாதென்க.*

அன்பு அருளுதலாவது *-தமது இன்னருளினை அளித்தல்; அவர்கள் வேண்டிய வாறே சமணீக்கமும் சைவ ஆக்கமும் செய்தருளுதல்.*

வைதிகத்தின் தூநெறி *- வைதிக சைவநெறி. ''வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்*

2843. **சொல்லின்** பெருவேந்தர் தொண்டைவள நாடெய்தி
மல்கு புகழ்க்**காஞ்சி யேகாம் பரமன்னுஞ்**
செல்வர் கழல்பணிந்து சென்றதெல்லாஞ் செப்புதலும்
புல்குநூன் மார்பரும்போய்ப் போற்ற மனம்புரிந்தார். 945

துறைவிளங்க'' என்றபடி வேதத்திற் காட்டிய நெறிகள் பலவற்றுள்ளும் தூய்மை செய்வது சைவநெறியே யாதலின் **தூநெறி** என்றார்.

தூநெறியே துன்னுநெறி ஆக்குதலால் என்க. முன்னிருந்த ஏனையவை துன்னாத - பொருந்தாத - நெறி என்பதாம். ஆக்குதலால் மன்னு புகழினை என்று கூட்டியுரைத்தலுமாம்.

வாகீசர் கேட்டு மனமகிழ்ந்தார் - சைவநெறியின் ஆக்கப்பாட்டிலே உலகுயிர்கள் ஓங்கி வாழ்தல் கண்டு மகிழ்வது வாகீசப் பெருமானின் மனநிலை, ''தேவர் திருவடிநீறெனைப் பூசு''; ''திருநாம மஞ்செழுத்துஞ் செப்பாராகில் தீவண்ணர் திறமொருகாற் பேசாராகில் அருநோய்கள் கெடவெண்ணீ றணியாராகில்''; ''நமச்சிவாயஞ் சொல்ல வல்லோ நாவால்''; ''விடிவதுமே வெண்ணீற்றை மெய்யிற்பூசி'' (தேவா) என்பனவாதி அவருடைய எண்ணிறந்த திருவாக்குக்களால் இவ்வுண்மை இனிது விளங்கும். திலகவதியம்மையார் திருநீற்றை யஞ்செழுத்திதோதிக் கொடுக்கப்பெற்றமையால் அத் துணைகொண்டே தாம் கரை யேறியமை திருவுள்ளத்தில் எப்போதும் கொண்டு மகிழ்ந்தனர் அரசுகள். ''சாம்பலைப் பூசித் தரையிற் கிடந்துநின் றாள்பரவி, யேம்பலிப் பார்கட் கிரங்கு கண்டாய்'' என்று அடியார்கள்பொருட்டு வேண்டுதலும், ''துஞ்சும் போதுநின் னாமத் திருவெழுத், தஞ்சுந் தோன்றவருளும்''என்று வேண்டுதலும் பிறவும் சிவசாதனப் பொலிவொழுக்கமாகிய சைவநெறி விளக்கத்தில் அரசுகள் கொண்ட ஆர்வத்தைக் காட்டுவன. இவ்வாறு **மகிழ்தல்** - விருப்பு வெறுப்புக்களாகும் ஆணவமலச் சார்பாகிய காரணத்தாலன்று; பல்லுயி ரனைத்தையும் ஒக்கப் பார்க்கும் செல்வக் கடவுட் டொண்டரா (திருவிடை - மு. கோ-7)கிய அரசுகள், உயிர்கள் படும் துன்பம் கண்டுழி அதற்குப் பரிதல்மாத்திரையே இங்கு மேற்கொண்ட மகிழ்ச்சியாம் என்க. சிவஞான மாபாடியம் 12 - சூத் - 2 அதி-பார்க்க. ''கள்ளத் தலைவர் துயர்கருதித் தங்கருணை, வெள்ளத் தலைவர்மிக'' (திருவருட் பயன்). ***944***

2843. (இ-ள்) தொண்டைவள நாடெய்தி...சென்றதெல்லாம்-திருத்தொண்டை வளநாட்டினைச்சேர்ந்து மிகுந்தபுகழினையுடைய காஞ்சிபுரத்தில் திருஏகாம்பரத்தில் நிலைபெற வீற்றிருக்கும் செல்வராகிய திருவேகம்பர் திருவடிகளைப் பணிந்து சென்று வந்த வரலாறுகள் எல்லாவற்றையும்; சொல்லின் பெருவேந்தர்-வாக்கிற் பெரிய அரசராகிய அரசுகள்; செப்புதலும் - சொல்லியருளுதலும் (அதுகேட்டு); புல்கு...மனம் புரிந்தார் - பொருந்திய நூலையுடைய மார்பராகிய பிள்ளையாரும் அங்குச்சென்று துதிக்கத் திருவுள்ளங்கொண்டருளினர்.

(வி-ரை) சொல்லின் பெருவேந்தர் - ''வாக்கின் றனிமன்னர்'' *(2839)* சொல்லின் பெருவேந்த ராதலின் அவர் செப்புதலும், அது பிள்ளையாரை அத் தொண்டை நாட்டு யாத்திரையில் உடனே மனம் வைக்கச் செய்தது என்பது குறிப்பு.

காஞ்சி - நகர்ப் பெயர். **தொண்டை வளநாடு** - நாட்டு வளமும், **மன்னு புகழ்** - நகரின் பெருமையும் குறித்தவாறு. இவை முன் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்துட்

2844. அங்கணரைப் போற்றியெழுந் தாண்ட **வரசமர்ந்த**
பொங்கு **திருமடத்திற் புக்கங் கினிதமர்ந்து**,
திங்கட் பகவணியுஞ் சென்னியார் சேவடிக்கீழ்த்
தங்கு மனத்தோடு தாம்பரவிச் செல்லுநாள்; 946

பேசப்பட்டமையால் இங்குச் சில அடைமொழிகளால் இவ்வாறு சுட்டிக் கூறினர்; விரிவு ஆண்டுக் காண்க. **வளநாடு** - நாட்டின் பெரும் பகுதிக்கு முன்னை நாளில் வழங்கிய மரபுப் பெயருமாம். (கல்வெட்டுக்கள் பார்க்க.)

ஏகாம்பரம் - ஏகம்பத் திருக்கோயிலின் பெயர். ஆம்பரம் - மா. மாமரத்தின் கீழ் இறைவர் வெளிப்பட்டருளுகின்றமையால் இப்பெயர் பெற்றது.

செல்வர் - உலக முதலாக உயிரில்லாதவற்றையெல்லாம் தம் உடைமை யாகவும் உயிர்களையெல்லாம் அடிமையாகவும் உடையவராதலின் செல்வர் எனப் பட்டார். ''செல்வன் கழலேத்தும் செல்வம்''; ''செல்வ மல்கிய செல்வர்'' முதலியவை காண்க. முத்தியாகிய பெருஞ்செல்வத்தை யுடையவர் என்றலுமாம்.

சென்றது எலாம் - தொண்டைநாட்டு யாத்திரையினை முடித்துத் திருக்கயிலை சென்று இங்கு மீண்டருளியிருக்கும் வரையில் உள்ள வரலாறுகளை எல்லாம்.

செப்புதலும் - கேட்டருளியதனால் - உடன் மனங்கொண்டனர்; இவ்வாறே முன்னர்த் திருவாரூர் நிகழ் செல்வத்தினை வாகீசர் சொல்லக் கேட்டலும் பிள்ளையார் அங்குச் சென்றருளத் துணிந்ததையும் இங்கு நினைவுகூர்க. ஆரூரும் காஞ்சியுமாகிய இரண்டும் பிருதுவித் தலங்களாதலும், அதனால் இரண்டும் ஒப்ப அருளவா முளைத்தற்கிடமாதற் றகுதியுடையனவாதலும் கண்டுகொள்க. இரண்டும் ஒப்ப ஆளுடைய நம்பிகள் கண்பெற்ற பதிகளாவதும் இங்கு நினைவுகூர்தற்பாலது.

போற்றித் திறம் புரிந்தார்—என்பதும் பாடம். 945

2844. (இ-ள்) *அங்கணரை...அமர்ந்து* - (பிள்ளையார்) இறைவரைத் துதித்து எழுந்து ஆளுடைய அரசுகள் விரும்பி எழுந்தருளிய அன்பு பொங்கும் திருமடத்திற்சென்று சேர்ந்து அவ்விடத்திலே இனிதாக விரும்பி வீற்றிருந்தருளி; திங்கள்......செல்லுநாள் - திங்களின் பிளவுபோன்ற பிறையினைச் சூடிய தலையினையுடைய இறைவரது சேவடியின் கீழே தங்கும் திருவுள்ளத்துடனே தாமும் துதித்து எழுந்தருளியிருந்த காலத்திலே;

(வி-ரை) அங்கணரைப் போற்றி எழுந்து - கோயிலின் திரு முற்றத்தில் அமர்ந்து இருபாலும் அடியார் செய்திகளை வினவி மகிழ்ந்திருந்த இடத்தினின்றும், இறைவரைப் போற்றி எழுந்தனர்; **போற்றுதல்** - அடியார்க் கருளிய தன்மைகளை வினவி மகிழ்ந்த நிலையில் இறைவரது திருவருளைப் பாராட்டும் முகத்தானும், திருக்கோயிலினின்றும் புறப்படும்பொழுது விடைகொள்ளும் முகத்தானும் துதித்தலாம். இப்பொருள்களைத், திருமடத்திற் செல்லாது திருக்கோயிற்புறத் திருமுற்றத்தில் வினவிப் பேசி மகிழ்தல் என்னை? எனின், அதற்குரிய இடம் அதுவேயாதலானும், அங்கு ஆண்டவரருளும் அடியார் செய்கையின் பெருமையுமன்றி வேறு

பேசலாகாது என்பவாதலானும் என்க. முன்னர்த் திருக்கோயிலின் வழிபடச் செல்லுங்கால் வேறு சிந்தித்தலும் வேறு பேசலுமாகாது என்பதும் கருதுக.

ஆண்ட அரசமர்ந்த பொங்கு திருமடத்திற் புக்கு - இது அரசுகள் அங்குறையுந் தன்மையினைத் திருவுள்ளங் கொண்டு தாம் செய்து அமைத்த திருமடம். இது பற்றி அவர்தம் புராணத்துள் *(1653 - 1654)* உரைத்தவையும், தொகுதி III- பக். 832-ல் உரைத்தவையும் பார்க்க. **பொங்குதல்** - அருள் பெருகுதல்.

திங்கட் பகவு - பிறை; **பகவு** - பிளந்ததனுற் பெறப்படுவது. **பகு** - பகுதி.

சென்னியார் சேவடிக்கீழ்த் தங்கு மனத்தோடு தாம்பரவி - ''திருவடிக்கீழ்நா மிருப்பதே'' (தேவா) என்ற கருத்துடன் பல பதிகங்கள் அருளித் தொண்டு செய்து அரசுகள் அங்கு உறைதலை விரும்பித் திருமடமும் செய்து அமர்ந்தாராதலின், பிள்ளையார் தாமும் அத்தன்மையே பற்றித் திருவுள்ளத்தமைத்துப் போற்றி எழுந் தருளி யிருந்தனர்.

திங்கட் கொழுந்தணியும்—என்பதும் பாடம். *946*

திருப்பூந்துருத்தி - பிள்ளையார் அருளிய பதிகங்கள் கிடைத்தில!

தலவிசேடம்:—திருப்பூந்துருத்தி - காவிரியின் தென்கரை 11-வது பதி. இந்திரன், காசிபர், சோழ அரசன் முதலியவர்கள் வழிபட்ட தலம்; திருவையாறுள்ளிட்ட ''ஏழு தலங்க''ளுள் (சத்தத் தானம்) ஒன்று. ஆளுடைய பிள்ளையார் புறத்திலிருந்து உட்புகும்போது நேரே கண்டு கும்பிடும்படி இடபதேவர்கள் வழி விலகிக் காட்டினர் என்பர். அரசுகள் இங்கு உறையும் தன்மைவேண்டித் திருமடம் செய்து அமர்ந்தருளிய செய்தியும், ஆளுடைய பிள்ளையார் இங்கு எழுந்தருளும் பொழுது அரசுகள் எதிர்கொண்டு சென்று அவரது சிவிகை தாங்கி வந்த செய்தியும், பின்பு இருவரும் அரசுகளது திருமடத்தில் தங்கியமர்ந்திருந்த செய்தியும், பிறவும் முன்னர் அவ்வவர் புராணங்களுள் விரிக்கப்பட்டன. சுவாமி பெயர் **பொய்யிலி நாதர்;** புட்பவன நாதர் என்று கூறுவது வடமொழி வழக்கு; **பொய்யிலி- ஆதிபுராணன்-செல்வன்** முதலிய பெயர்கள் அரசுகள் பதிகங்களுட் காணப்படும். அம்மையார் - **அழகார்ந்த நாயகி;** பதிகம் 2.

இது தஞ்சாவூர் நிலையத்தினின்றும் வடக்கே கற்சாலைவழி 5 நாழிகையளவில் உள்ள திருக்கண்டியூரினின்றும் மேற்கே மட்சாலைவழி 2 நாழிகையளவில் உள்ளது.

2845. (இ-ள்) வாகீசமாமுனிவர்...பொங்க - வாகீசப்பெருமுனிவராகிய அரசுகளுக்கு நிலைபெற்ற திருவாலவாயில் எழுந்தருளிய பாம்பினை அரையிற் கட்டிய இறைவர் திருவடிகளை வணங்குதற்காகப் போகவேண்டும் என்னும் பெரிய விருப்பம் மேன்மேல் வரவும்; புகலியின்மேல்...ஏற்றெழுவார் - பிள்ளையார் சீகாழியின்கண் சென்று சேரும் பெருகிய காதலை மேற்கொண்டும் எழுவாராகி;

(வி-ரை) முனிவர்(பால்) - பெருவிருப்புப் பொங்க என்க; **பொங்கவும் - ஏற்றும் -** என்று ஈரிடத்தும் எண்ணும்மைகள் விரிக்க; இவ்வாறன்றி **பொங்க** என்ற வினை எச்சம் **எழுவார்**

2845. **வாகீச மாமுனிவர்** மன்னுதிரு வாலவாய்
நாக மரைக்கசைத்த நம்பர் கழல்வணங்கப்
போகும் பெருவிருப்புப் பொங்கப் புகலியின்மேல்
ஏகும் பெருங்காதல் பிள்ளையா ரேற்றெழுவார், 947

என்ற பிற வினைமுதல் வினைகொண்டு முடிந்தது என்றலுமாம். ''அருளிய - புனைவர்'' (போதம் - கடவுள் வாழ்த்து) என்புழிப்போலக் கொள்க.

பெருவிருப்பு - பெருங்காதல் - என இருவர்பாலும் பேரன்பின் திறம் வெளிப்பட்டது என்பது.

பெருவிருப்பு - முன்னரே பிள்ளையாருடன் திருவாலவாய் செல்ல அரசுகள் மனங்கொண்ட நிலையினைப் பிள்ளையார் ஆணைதந்து மறுத்தனராதலின், அவ் விருப்பம் அரசுகளது திருவுள்ளத்தில் ஊன்றி மேலெழ நின்றது. இங்கு அம்மையார் - அமைச்சனார் - அரசனார் திறங்களையும் பாண்டிநாட்டிற் றிருநீறு வளர்த்த நிலையினையும் பிள்ளையார் திருவாக்காற் சொல்லக்கேட்ட மகிழ்ச்சி அவ்வார்வத்தை மேலும் பெருக்கிற்று என்பார் **பெருவிருப்பு** என்றார். இவ்விருப்பின்படி அரசுகள் பாண்டிநாடு சென்ற வரலாறுகள் அவர்தம் புராணத்துட் கூறப்பட்டன.

பெருங் காதல் - தோணியில் எழுந்தருளிய தம் அம்மையப்பரிடம் பிள்ளையார் பலநாட் பிரிவின்பின் செல்ல எண்ணியபடியால் அதனைப் பெருங் **காதல்** என்றார்.

மன்னு திருவாலவாய் - நம்பர் - ''என்றலையி னுச்சியென்றுந் தாபித் திருந் தானை''; ''வேதியா......என்றென், றோதியே மலர்கடூவி''; ''நறுமலர் நீருங் கொண்டு நாடொறு மேத்தி வாழ்த்திச் செறிவன சித்தம் வைத்து'' என்பனவாதி திருவாக்குக்களால் அறியப்படுகின்றபடி அரசுகள் நிலைபெற ஆன்மார்த்த நாயகராகப் பூசித்து மனங்கொண்ட திருவாலவா யிறைவர் என்பது குறிப்பு.

ஆலவாய் - நாக மரைக்கசைத்த நம்பர் - நாக மரைக்கசைத்தும் மேனி முழுதும் நாகம் பூண்டும் சித்தராய் வந்து தாம் அணிந்த பாம்பினை நகரத்தின் எல்லை காட்டும்படி ஏவியருளிய குறிப்பும்பெறக் கூறியபடி.

ஏற்று எழுவார் - மேற்கொண் டெழுவாராய். **ஏகினார்** என வரும் பாட்டுடன் முடிக்க. **எழுவார்** - முற்றெச்சம். **எழுதல்** - திருவுள்ளங்கொண்டு புறப்படுதல். 947

2846. (இ-ள்) பூந்துருத்தி...புறத்தணைந்து - திருப்பூந்துருத்தியில் பொருந்தி வீற்றிருந்தருளும் இறைவரைத் திருக்கோயிலினுள் புகுந்து வணங்கிப் போந்து திருவாயிற்புறத்திலே சேர்ந்து; நாவினுக்கு...விடைகொண்டருளி - திருநாவுக்கரசரது திருவுள்ளம் மகிழ்ச்சி பொருந்த அவர்பால் விடைபெற்றுக் கொண்டருளி; ஏந்தலார்......ஏகினார் - பெருமையுடையவராகிய பிள்ளையார் அளவில்லாத திருத்தொண்டர்களோடும் சென்றருளினார்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபுகொண் டுரைக்கநின்றன.

2846. **பூந்துருத்தி** மேவும் புனிதர்தமைப் புக்கிறைஞ்சிப்
போந்து திருவாயிற் புறத்தணைந்து **நாவினுக்கு**
வேந்தர் திருவுள்ள மேவவிடை கொண்டருளி
யேந்தலா ரெண்ணிறந்த தொண்டருட னேகினர். 948

(வி-ரை) புக்கு - திருக்கோயிலுள்ளே புகுந்து; திருக்கோயிலினுள் என வருவிக்க.

நாவினுக்கு வேந்தர் திருவுள்ளமேவ விடைகொண்டருளி - திருவுள்ள மேவ விடைகொண்டு என்றது பிள்ளையார் முன்னர்ப் பாண்டிநாட்டுக்குச் சென்றருளிய போது அவர் உடன் வருதலை மறுத்து, அவர் தம்மைப் புனனாட்டிலெழுந்தருளி யிருப்பீர் என்ற ஆணையிட்டருள, அரசுகள் பிள்ளையாரை மறுக்கமாட்டாது அரிதாங் கருத்தினேர்ந்தார் என்றும், அவ்வாறு சென்றருளிய பிள்ளையார்பால் விடைகொண்டு வாகீசர் இருந்தனர் என்றும், அந்நிலையில் அவருக்கு விடை கொடுத்துப் பிள்ளையார் நீங்கியருளினர் என்றும் முன்னர்க் கண்டோம். ஆதலின் ஈண்டு அவ்வாறன்றி அவரது திருவுள்ளம் பொருந்த மனமார்ந்த விடை அவர்பாற் கொண்டருளினர் என்பதாம். விடைகொண்டு பிரிந்து செல்லினும் அவரது திருவுள்ளம் தம்பாலகலாது பொருந்த என்ற குறிப்பும் காண்க. இப் பெருமக்களிருவரும் இந்நிலவுலகில் சந்தித்தல் இஃது இறுதி முறையாதலும் குறிப்பு.

ஏந்தலார் - பெருமையுடையோர்; பிள்ளையார். முன் கூறியபடி அரசுகளை நிற்கப் பணித்து ஆணையிட்டுச் சென்ற பிள்ளையார், மீண்டு அவர்பால் தாமே எழுந்தருளித் தாம் அவ்வாறு பிரிந்து சென்றதுமுதல் அதுவரை நிகழ்ச்சிகளை அருளிச்செய்து அவரை மகிழ்வித்து அவரது திருவுள்ள மேவ விடைகொண்டன ராதலின் அளப்பரிய அப்பெருமை குறிக்க **ஏந்தலார்** என்றார். அரசுகளால் சிவிகை தாங்கி ஏந்திவரப் பெற்றவர் என்ற குறிப்புமாம்; ''அப்பரே'' என அவரைப் போற்ற அவரும் ''பிள்ளாய்!'' என்று விளிக்க உள்ள பிள்ளையார் என்ற நிலையினால் ஏந்தப்பெற்றவர் என்ற குறிப்பும் காண்க. *948*

2847. (இ-ள்) மாடு...இழிந்து - அருகில் உள்ள காவிரியில் இறங்கிச் சென்று; வட கரையில்... பரவிப்போய் - ஆற்றின் வடகரையிலே நிலைபெற்றுள்ள திருநெய்த் தானப்பதியினையும், திருவையாற்றினையும் சென்று சேர்ந்து பணிந்து பெருமையுள்ள தமிழ் மாலைகளையும் கட்டளையிட்டுத் துதித்துச்சென்று; ஆடல்...அணைந்தார் - ஐந்தொழிற் கூத்தினைச் செய்யும் இறைவரது திருப்பழனத்தினைச் சென்று அணைந்தனர்.

(வி-ரை) மாடுபுனற் பொன்னி - காவிரியின் தென்கரையில் ஆற்றுக்கு மிக அருகில் திருப்பூந்துருத்தி உள்ளமையால் **மாடு** என்றார். **மாடு** - மிக அணிமை - பக்கம்.

இழிந்து - ஆற்றில் இறங்கி நடந்து வழிக்கொள்ளும் முறை குறித்தது.

நீடு - ''நிலமல்கிய புகழின்மிகு'' என்பது தேவாரம்.

வடகரையில்... இறைஞ்சி - திருநெய்த்தானம், திருவையாறு என்ற இரண்டு பதிகளும் காவிரியின் வடகரையில் அணிமையில் உள்ளன. பிள்ளையார் ஆற்றைக் கடந்தவுடன்

2847. **மாடுபுனற் பொன்னி யிழிந்து வடகரையில்**
நீடுதிரு நெய்த்தான மையாறு நேர்ந்திறைஞ்சிப்
பாடுதமிழ் மாலைகளுஞ் சாத்திப் பரவிப்போய்
ஆடல் புரிந்தார் திருப்பழனஞ் சென்றணைந்தார். 949

எதிர்க்கரையில் உள்ள திருநெய்த்தானத்தை வணங்கிப் பின் அந்தக் கரைவழியே சென்று கிழக்கில் அணிமையில் உள்ள திருவையாற்றினை வணங்கினர் என்ற வழிவகை காட்டிய வைப்புமுறையும் காண்க. காவிரிக் கரையில் பதிகள் இருமருங்கும் உள்ளனவாதலால் வழிபடுவோர் இருகரையும் கலந்தே சென்று வழிபட்டுச் செல்வது நியமம் என்பதை முன்னர் அரசுகள் புராணத்தும் காண்க. "பொன்னி யிருகரையும் சார்ந்து" (1455). **நேர்ந்து** - நேர்படச் சென்று சேர்ந்து. "நேர்படநின் றறைகூவும் திருப்பதிகம்" (1680). இவை ஒரு முறையில் வழிபட உள்ளன என்ற குறிப்பும் காண்க. இவை முன் இறைஞ்சிய பதிகளாயினும் பின்னரும் வழியில் நேர்பட்டமையால் இறைஞ்சி என்ற குறிப்புமாம்.

பாடு தமிழ்மாலை - பாடு - பெருமை; பாடுகின்ற - அன்பர்கள் பயின்று பாடி உய்தி பெறுகின்ற என்றலுமாம். "பேசற்கினிய பாடல்" (11) என்ற தேவாரக் குறிப்பு. **பாடு மாலை** - என்றது கையின் பணியாலாகும் மாலையன்றி வாக்கின் பணியாகிய மாலை என்பது.

ஆடல்-ஐந்தொழிற் பெருங்கூத்து; "ஆடினு ரொருவர்போலும்" (நேரிசை); "ஆடி நின்றாய்" (திருவிருத்தம்). **ஆடல்**-அடுதல்-அழித்தல்-வெல்லுதல் என்று கொண்டு, அடைந்தாரது வினைகளை அறுக்கின்றவர்; சங்கார காரணர் என்றுரைக்கவும் நின்றது. "பாதந் தொழுவார் பாவந் தீர்ப்பார் பழன நகராரே" (1) என்ற பிள்ளையாரது தேவாரக்குறிப்புக் காண்க. இத்தலத் திருப்பதிகத்தினுள் "காலனை... ...புறந்தாளா லெண்ணு துதைத்த" (2), "பேயுறை மயான மிடமா வுடையார்" (3), மயானத்தி லிரவிற்பூதம் பாடவாடி" (4), "மதின்மூன் றெரித்த கொல்லே றுடையண்ணல்" (5), "நஞ்சார் சுடலைப் பொடிநீ றணிந்த நம்பான்" (8), "பொடியா டகலமுடையார்" (9) என நிரந்து இக்கருத்தே பற்றிப் பிள்ளையார் அருளுதலும், "பாவமே தீரநின்றார்" (2), "பண்டையென் வினைக டீர்ப்பார்" (3), "பாற்றினர் வினைகளெல்லாம்" (8) (நேரிசை), "உறுநோய் சிறுபிணிக டீர்ப்பார் தாமே" (2) (தாண்) என்று அரசுகள் அருளுதலும் ஈண்டு கருதத்தக்கன.

(திருப்பூந்துருத்தி) **திருநெய்த்தானம், ஐயாறு, திருப்பழனம்**-இவை இவ்வாறு ஒரே முறையில் சேர்ந்து வழிபட உள்ளன (ஏழு பதிகளுட் சேர்ந்தன) என்பது "பூந்துருத்தி நெய்த்தான மேயார் தாமே, அடைவே புனல்சூழை யாற்றார் தாமே" (பழனம்-தாண்டகம்) என்ற திருவாக்கானுமறிக. இக்குறிப்புப்பட இவற்றை இவ் வொருபாட்டில் சேரவைத்துக் கூறிய தெய்வ வருட்குறிப்பும் காண்க. 949

திருநெய்த்தானம்: 2203 பாட்டின் கீழ்ப் பார்க்க.

III திருவையாறு

(இங்குப் பிள்ளையார் முன்முறை எழுந்தருளிய போதுஅருளிய இரண்டு பதிகங்கள் 2199 - 2201 பாட்டுக்களின் கீழ்த் தரப்பட்டன; கண்டுகொள்க.)

திருச்சிற்றம்பலம் **திருவிராகம்** பண் - இந்தளம்

திருத்திகழ் மலைச்சிறுமி யோடுமிகு தேசர்
உருத்திக ழெயிற்கயிலை வெற்பிலுறை தற்கே
விருப்புடைய வற்புத ரிருக்குமிட மோரார்
மருத்திகழ் பொழிற்குலவு வண்டிருவை யாறே. (1)

வாசமலி யும்பொழில்கொள் வண்டிருவை யாற்றுள்
ஈசனை யெழிற்புகலி மன்னவன்மெய்ஞ் ஞானப்
பூசுர னுரைத்ததமிழ் பத்துமிவை வல்லார்
நேசமலி பத்தரவர் நின்மல னடிக்கே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– இறைவரது இடம் திருவையாறே.

பதிகப்பாட்டுக் குறிப்பு:– (1) திருவையாறே அற்புதர் இருக்கும் இடம் என்று கூட்டுக. **தேசர்-தேசு**-ஒளி;—(2) இந்திரன் பூசித்தது தலவிசேடம்;**—(3) குடமுழ நந்தீசன்''** என்றபடி நந்தி முழவிரட்ட அதற்கேற்றவாறு நடஞ் செய்கின்ற பெருமான் என்பதும், இப்பதியில் நந்திதேவர் அருள் பெற்றனர் என்பதும் குறிப்பு; **—(4) வடம்** - வடவாலமரம்; **எண்ணிலா** - அளவில்லாத; **பொன்னி மண்ணின்மிசை வந்தணவு** - இமயத்தினின்றும் அகத்தியரது குண்டிகையில் காவிரி வந்த வரலாறு கந்தபுராணத்துட் காண்க;**—(5) நடமாடி** - ஆடுபவர். **ஆடி** - பெயர்;**—(6) பாதமுதல்**-பாதமுதலாகப் பல அங்கங்களிலும்;**—(7) சுளிவு** வருத்தம்; புலத்தல் - வெறுத்தல் என்றலுமாம். **பின்னொரு தவம்** - தாமும் வேறொரு தவம்; யோகம்:– **அங்கே என்னசதி** - உமை தவங்கண்ட நிலை;— **(8) துரக்க** - வலியுடைய;**—(9) பருத்து** - பருந்து என்பது பருத்து என வந்தது செய்யுள் விகாரம்; **பருந்து** - இங்குப் பறவைக்குப் பொதுப் பெயராய் அன்னம் என்ற பொருள் தந்து நின்றது;**—(10) மாக்கம்** - மாகம் என்பது எதுகை நோக்கி ஒற்று மிக்கு வந்தது. **மாகம்** - விண்.

2848. (இ-ள்) செங்கண்...இறைஞ்சி - சிவந்த கண்ணையுடைய விடையினைக் கொண்ட இறைவரது திருப்பழனத்தைச் சேர்ந்து வணங்கி; பொங்கிய... போய் - மேலோங்கிய காதலினால் முன்னர்த் துதித்த பதிகள் பிறவற்றிலும் சென்று சேர்ந்து தங்கிப் போய்; தனிப் பொருப்பின்...வள்ளலார் - ஒப்பற்ற பொன்மலை வல்லியாகிய அம்மையாரது திருமுலைப்பாலுண்டருளும் வள்ளலாராகிய பிள்ளையார்; சண்பை நகர் சார்ந்தார் - சீகாழித் திருநகரைச் சார எழுந்தருளினார்.

(வி-ரை) திருப்பழனம் - இப்பதியும் திருநெய்த்தானம், திருஐயாறுபோல பிள்ளையார் இரண்டாம் முறை இறைஞ்சிய பதியாம்; பிள்ளையார் இப்போது சென்றருளிய வழியினைக்

2848. **செங்கண் விடையார் திருப்பழனஞ் சேர்ந்திறைஞ்சிப்**
பொங்கிய காதலின்முன் போற்றும் பதிபிறவுந்
தங்கிப்போய்ச் சண்பைநகர் சார்ந்தார் தனிப்பொருப்பின்
மங்கை திருமுலைப்பா லுண்டருளும் வள்ளலார். 950

காட்டுதற்பொருட்டும், திருப்பூந்துருத்தியுள்ளிட்ட ஏழு தலங்களுள் வரும் சிறப்புப் பற்றியும், இவற்றை எடுத்துக் கூறி, ஏனையவற்றை ''**முன் போற்றும் பதி பிறவும் தங்கி**'' என்று சேர்த்துக் கூறியருளினர்.

பொங்கிய காதலின் என்றது **முன் போற்றும்** என்றும் **பொங்கிய காதலிற் றங்கி** என்றும் ஈரிடத்தும் கூட்டி உரைக்க நின்றது. **முன்** - முன் முறையில். **முன் முறையிற் போற்றியது** 2203 முதலிய பாட்டுக்களிற் காண்க. **பொங்கிய காதலிற் றங்கி** என்றதனல் முன்முறை சென்று போற்றியிருப்பினும் பின்னர் நேர்பட்ட போது அன்பு மேலும் ஓங்கிற்று என்பதாம். திருக்கோயில் வழிபாட்டின் பெருமையும் இன்றியமையாமையும் எடுத்துக்காட்டியருளியபடி.

பதிபிறவும் - இவை வடகுரங்காடுதுறை - திருப்புள்ளிருக்குவேளூர் - திருக்குடந்தை - திருப்பனந்தாள் முதலாயின என்பது கருதப்படும். இவையே குடந்தை வரையிலும் கிழக்கே வரும் சாலைவழி வந்து, அங்குநின்றும் பிரிந்து வடகிழக்குச் சீகாழியை நோக்கிச் செல்லும் பழைய சாலைவழியில் உள்ளன.

தனிப் பொருப்பின் மங்கை - உமையம்மையார்; தனிப் பொருப்பு - பொன் மலை.

சார்ந்தார் - சண்பையின் புறத்துச் சார எழுந்தருளினர். 950

திருப்பழனம் - தலவிசேடம் தொகுதி III - பக்கம் 468 பார்க்க.

தேவாரமும் குறிப்புக்களும் 2197-ம் பாட்டின்கீழ்க் காண்க.

2849. (இ-ள்) தென்னாட்டு...கேட்டு-தென்னாடு என்னும் பாண்டி நாட்டில் சமணமாகிய குற்றங்களை அழித்துத் திருநீற்றினை அந்நாடு முழுதும் அணியும்படி செய்தருளிய பிள்ளையார் வந்து அணைகின்ற வார்த்தையினைக் கேட்டு; எந்நாள்...மறையோர் - எந்நாளில் அவரைப் பணியப் பெறுவோம் என்ற ஆர்வங்கொண்டு எழுந்த பெருமறையவர்கள்; முன்னாக...எதிர்கொண்டார் - அவர் முன்சென்று வேதங்கள் முழங்க எதிர்கொண்டார்கள்.

(வி-ரை) தென்னாடு - பாண்டி நாடு. **நாட்டு** - நாட்டின்கண்; **மாசு** - குற்றம்.

அமண்மாசறுத்து - பரசமய நிராகரிப்பினால் தூய்மையாக்கி.

திருநீறே...போற்றுவித்தார் - ஏகாரம் தேற்றம்; பிரிநிலையுமாம். போற்று வித்தல் - யாவரும் போற்றியணியும்படி செய்தல்.

''எந்நாள் பணிவ''தென - பிள்ளையார் பிரிந்து சென்றருளி (பல காலங்கள்) இரண்டாண்டுகளின் மேலாயினமையானும், முன்னர்ச் சீகாழி மறையவர்கள் திருவீழிமிழலையிற் சென்று அழைத்தபோது திருவருள் வினவிப் பின்னர் வருவதாக அவர்களைப்

2849. தென்னுட் டமண்மா சறுத்துத் திருநீறே
அந்நாடு போற்றுவித்தார் வந்தணையும் வார்த்தைகேட்
"டெந்நாள் பணிவ?"தென வேற்றெழுந்த மாமறையோர்
முன்னுக வேத முழங்க வெதிர்கொண்டார். 951

2850. **போத நீடுமா மறையவ ரெதிர்கொளப் புகலிகா வலருந்தம்**
சீத முத்தணிச் சிவிகைநின் றிழிந்தெதிர் செல்பவர் திருத்தோணி
நாதர்கோயின் முன்றோன்றிட நகைமலர்க் கரங்குவித் திறைஞ்சிப்போய்
ஓத நீரின்மே லோங்குகோ யிலின்மணிக் கோபுரஞ் சென்றுற்றார். 952

போக்கியமையானும் மறையோர் எக்காலத்திற் பிள்ளையாரை இங்குக் கண்டு பணியப் பெறுவோமென்று மிகவும் மேல்எழுந்த ஆர்வங் கொண்டிருந்தனர் என்க.

முன்னுக - பிள்ளையாரின் முன்புசெல்ல; **வேதம் முழங்க**-வேதங்களை முழக்கிக் கொண்டு; "ஆரணங்கள் மதுரவொலி யெழுந்து பொங்க" *(2156)* என முன்னர் முத்துச்சிவிகை பெற்றபின் மீண்டருளியபோது வேத முழக்கி எதிர்கொண்டவாறே இப்போது அவரது அவதார உள்ளுறையினை நிறைவாக்கி வெற்றியுடன் சீகாழிக்குத் திரும்பும்போதும் வேத முழக்கி எதிர்கொண்டனர் என்க. இது சீகாழிக்குப் புறநகரில் நகர்க்குத் தென்புறம் திருத்தோணிபுரக் கோயில் கட்புலப்படாத அளவு தூரத்தில் *(2850)* நிகழ்ந்ததென்க. அத்துணை தூரமளவு வந்து மறையவர்கள் எதிர்கொண்டமை அவர்களது ஆர்வமிகுதியினைக் காட்டுவது; குலச்சிறையார் பிள்ளையாரை எதிர்கொண்ட நிலையினையும் இங்கு நினைவுகூர்க.

அமணுசறுத்து—வேத மொழிந்தங்கு—என்பனவும் பாடங்கள். *951*

2850. (இ-ள்) போத...எதிர்கொள - ஞானமிக்க பெரிய வேதியர்கள் தம்மை எதிர்கொள்ள வர; புகலி...செல்பவர் - சீகாழித் தலைவராகிய பிள்ளையாரும் குளிர்ந்த முத்துக்களாலியன்ற சிவிகையினின்றும் இறங்கி அவர்களெதிரே செல்பவராய்; திருத்தோணி..போய் - (அப்போது) இறைவர் திருத்தோணியில் எழுந்தருளிய திருக்கோயில் முன்னுல் தோற்றப்படப் புதிதலர்ந்த தாமரை போன்ற கைகளைக் கூப்பி வணங்கிச் சென்று; ஓத நீரின்...உற்றார் - ஊழி வெள்ளத்தில் மேலே மிதந்த அத்திருக்கோயிலினது அழகிய கோபுரத்தைச் சென்று சேர்ந்தருளினர்.

(வி-ரை) போதம் - ஞானம்; இறையறிவு. மறையின் உள்ளுறையாவது சிவனையறிவிக்கும் தன்மை.

எதிர்கொள - எதிர் செல்பவர் - மாமறையவர் தம்மை எதிர்கொண்டுவரத் தாமும் அதனை ஏற்றுச் சிவிகையினின்றுமிழிந்து சென்றருள்பவர்.

செல்பவர் - கோயில் தோன்றிட இறைஞ்சி - "கொன்றையா னடியலாற் பேணு" நிலைமையினர் பிள்ளையாராதலின் மாமறையவர் வர எதிர் ஏற்றுச் சென்றவர் கோயில் தோன்றிட **இறைஞ்சினர்** என்பதாம். திருவாலவாயில் திருமடத்தினில் தாதையாரை எதிரே கண்ட பிள்ளையார் தோணியிற் றாதைதாள் மனங்கொள வணங்கினுர் என்றதும், சீகாழியில் ஆளுடைய அரசுகளை எதிரேற்றுக் கண்டபோது தொண்டர் "திருவேட நேரே தோன்றிய தென்று

2851. அங்க மாநிலத் தெட்டுற வணங்கிப்புக் கஞ்சலி முடியேறப்
பொங்கு காதலிற்புடைவலங் கொண்டுமுன் பணிந்துபோற்றெடுத்தோதித்
துங்க நீள்பெருந் தோணியாங் கோயிலை யருளினுற் றெழுதேறி,
மங்கை யோடுடன் வீற்றிருந் தருளினுர் மலர்க்கழல் பணிவுற்ருர். 953

தொழு''தனர் என்றதும் ஈண்டு நினைவுகூர்தற்பாலன. ஆலயமும் திருவேடமுமே அரனெனக் கண்டு தொழுதற்பாலன என்பது ஞானசாத்திரம்.

சீதமுத்து - குளிர்ந்த ஒளிவீசும் முத்துக்கள்.

நாதர் திருத்தோணிக் கோயில் - என்க. திருத்தோணிச் சிகரக்கோயில் நீண்ட தூரத்திற் கட்புலப்பட விளங்குதல் குறிக்கக் கூறியவாறு.

நகைமலர் - ***நகைத்தல்*** என்பது புதிதின் அலர்தலைக் குறிக்கக்கூறும் மரபு வழக்கு. ''***நகைக்கும் பதத்தில்***'' *(1023).*

ஓத நீர் - ஊழிவெள்ளம் என்ற பொருளில் வந்தது.

நீரின்மேல் ஓங்கு கோயில் - தோணியாக மிதந்த கோயில். வரும் பாட்டில் ''தோணியாங் கோயில்'' என்பது காண்க. 952

2851. (இ-ள்) அங்கம்...புக்கு - நிலத்தில் எட்டு அங்கங்களும் பொருந்த வணங்கித் திருக்கோயினுள்ளே புகுந்து; அஞ்சலி...வலங்கொண்டு-கைகள் அஞ்சலியாகக் கூப்பியவண்ணம் திருமுடியின்மேல் ஏற மிகுந்து மேன்மேல் எழுகின்ற காதலுடன் திருக்கோயிலினைச் சூழ்ந்து வலங்கொண்டு; முன்... ஓதி - திருமுன்னர்ப் பணிந்து துதி செய்து; துங்க நீள்...ஏறி-பெரிய நீண்ட பெருந் திருத்தோணியாகிய திருக்கோயிலை அருளினுலே தொழுது மலையின்மேலேறி; மங்கையோடு... பணிவுற்ருர் - அம்மையோடும் உடனுக எழுந்தருளிய இறைவரின் மலர்போன்ற பாதங்களை வணங்கியருளினுராய்;

(வி-ரை) *மாநிலத்து அங்கம் எட்டுஉற வணங்கி*-என்க. அட்டாங்க வணக்கம் என்பர்.

அஞ்சலி - கூப்பிய கை; ***ஏற*** - கைகள் தாமே ஏற.

பொங்கு காதல் - இங்குநின்றும் அருள்விடை பெற்றுப் போந்ததுமுதல் *(2179)* பாண்டிநாட்டில் சமணர்-புத்தர்களை வென்று பரசமய நிராகரித்துத் திருநீற்றினை ஆக்கித் திரும்பி வந்த இதுவரை பல நாடுகளிலும் பல நிலைகளிலும் உடனிருந்து கைதந்து காத்தருளிய நிலையினை நினைத்தமையால் மேன்மேற் பொங்கிய காதல்.

துங்கநீள் பெருந் தோணியாம் கோயில் - ***துங்கம்*** - பெருமை; ***நீளுதல்*** - ஊழி வெள்ளந்தோறும் மேல் ஓங்கிச்சென்று மிதத்தலால் நீளும் தன்மை; ***தோணியாம்*** - தோணிபோலாகிய; ஆக்கச்சொல் உவமப்பொருளில் வந்தது.

மங்கையோடு உடன் - ***உடன்*** - உடனுகி; பிரிப்பின்றி ஒன்ருகி.

2852. **முற்று மெய்யெலாம் புளகங்கண் முகிழ்த்தெழ முந்துகண் களிகூரப்,
பற்றுமுள்ளமுள் ளலைத்தெழு மானந்தம் பொழிதரப் பணிந்தேத்தி,
"உற்றுமை சேர்வ" தெனுந்திரு வியமக முவகையா லெடுத்தேத்தி,
"வெற்றி யாகமீ னவனவை யெதிர்நதி மிசைவரு கர"னென்பார்,** 954

ஏறி - தோணியின் விமானம் மேலுயர்ந்து ***மலை*** என வழங்கப்படுமாதலால் ஏறி என்றார். "மாதிநெடும் ***வரை***யென வீற்றிருந்தான்" (பஞ்சமம் - பிரம புரம்-11). *953*

2852. (இ-ள்) *முற்றும்...பணிந்தேத்தி* - முழுமையாகிய திருமேனியெங்கும் மயிர்ப்புளகங்கள் செறிய முகிழ்த்து உளவாகவும், முந்துறக் காணும் கண்கள் மிக்க களிப்படையவும், அதனாற் பற்றிக்கொண்ட திருவுள்ளத்தின்கண் உள்ளே அலையச் செய்து இடங்கொள்ளாது மேலேழும் ஆனந்தம் பொங்கிப் பொழியவும், வணங்கித் துதித்து; *உற்றுமை...ஏத்தி* - உற்றுமை சேர்வது என்று தொடங்கும் திருவியமகத் திருப்பதிகத்தினை மகிழ்ச்சியினாலே எடுத்துப் போற்றி; *வெற்றியாக...கரன் என்பார்* - வெற்றி ஆகும்படி பாண்டியனது சபையின்கண்ணும், நீரெதிர்த்துச் செல்ல வைகை ஆற்றின்கண்ணும் வரும் திருவருட் செய்கையுடையர் என்று போற்றுவாராகி;

(வி-ரை) முற்று மெய் எலாம் - எலாம் - என்றது செறிவையும், ***முற்றும்*** என்றது நிறைவையும் உணர்த்தின.

முந்து கண்-கண்டு தொழுதல் வேண்டுமென்ற ஆர்வங்கொண்ட மனத்தினும் முன்னர்க் கண்ட என்பது குறிப்பு. ***முகந்துகண்***-என்பது பாடமாயின் கண்களால்முகந்து என்க.

பற்றும் உள்ளம் - காணுவிடத்தும் எப்போதும் மறவாது பற்றிக் கிடக்கும் திருவுள்ளம்; ***கண் களிகூரப் பற்றும் உள்ளம்*** என்று உள்ளம் என்று தொடர்ந்து கொண்டு அதன் மூலம் அறிந்து பற்றும் என்றலுமாம்.

உள் அலைத்து எழும் ஆனந்தம் பொழிதர - மனத்தின் உள்ளிடம் முழுதும் பற்றி நிறைந்தெழுதலினால் இடங்கொள மாட்டாது அலைத்தலைச் செய்தலினால் அந்த ஆனந்தமே மேலே கண்வழி நீராகப் பொழிவதுபோல வழிய என்பது.

உற்றுமை சேர்வது எனும் - இது பதிகத் தொடக்கங் குறித்தது.

உவகையால் எடுத்தோதி - இத் திருவியமகப் பதிகம் மடக்கு என்னும் சொல்லணியும் பொருளணியும் விரவ யாக்கப்பட்டு இறைவர் புகழ்களை ஒரு பாட்டு ஒரு தொடர்பான பொருள் கொள்ளாது பலபலவாறும் பாராட்டும் தன்மையில் போற்றல் செய்தலின் இதனை உவகை மீக்கூர்தலால் விளையும் விளைவு என்றார்.

வெற்றியாக...கரன் என்பார் - இது பதிகத் திருக்கடைக்காப்பிற் கண்ட பதிகக் குறிப்பாகிய திருவுள்ளக்கிடையை ஆசிரியர் எடுத்து விளக்கிக் காட்டியபடி.

அவைமிசை எனவும், ***எதிர் நதிமிசை*** எனவும் தனித்தனிக் கூட்டுக. சுரவாதத்திலும் அனல்வாதத்திலும் அரச மாளிகையில் அரசனுடைய சபையின் கண்ணும், புனல்வாதத்தில் ஓடும்

2853. **சீரின் மல்கிய திருப்பதி கத்தினிற் றிருக்கடைக் காப்பேற்றி
வாரின் மல்கிய வனமுலை யாளுடன் மன்னினுர் தமைப்போற்றி
யாரு மின்னருள் பெற்றுமீண் டணைபவ ரங்கையாற் றெழுதேத்தி
யேரின்மல்கிய கோயின்முன் பணிந்துபோந் திறைஞ்சினர்மணிவாயில்;** 955

நீரினில் ஏடு எதிர்சென்ற நிலையில் நதிமிசையும் வந்து திருவருட் செயல் நிகழ்ந்தமை கருத்து.

***கரன்** - (அருள்) செய்பவர். **க்ரு** - பகுதி; செய்தல். **கரன்** - அருளாகிய கையையுடையவன் என்ற கொண்டு "அருடரு கைகொடுத் தேற்றும்" என்ற கருத்துப்பட உரைத்தலுமாம்.* *954*

2853. (இ-ள்) *சீரின்...ஏற்றி - சிறப்பினுல் நிறைந்த திருப்பதிகத்தினில் திருக்கடைக்காப்புச் சேர்த்து; வாரின்...போற்றி-வாருடன் பொருந்திய அழகிய தனங்களையுடைய பெரியநாயகியம்மையாருடனே நிலைபெற்று எழுந்தருளிய தோணியப்பரைப் போற்றி செய்து; ஆரும்...ஏத்தி-நிறைந்த இனிய திருவருளைப் பெற்று மீண்டு அணைபவராகி அங்கைகள் கூப்பித் தொழுது துதித்து; ஏரின்... மணிவாயில் - அழகினுல் நிறைந்த திருக்கோயிலை முன்னுலே பணிந்துசென்று அழகிய திருவாயிலினை வணங்கியருளினர்.*

(வி – ரை) *சீர்* - *இறைவர் விடாது தொடர்ந்து செய்த பேரருளைத் துதித்துத் திளைத்த சிறப்பு.*

திருக்கடைக்காப்பு - *முன்கூறிய கருத்தினையுடைய பாட்டு.*

போற்றி - *அத்திருப்பதிகத்தினுற் றுதித்து.*

ஏரின் மன்னிய கோயில் - *திருத்தோணியினை உட்கொண்ட பிரமபுரீசர் திருக்கோயில்;* ***மணிவாயில்*** - *அக்கோயிலின் முன்வாயில்;* ***மணி*** - *வாயிலிற் கட்டிய மணிகள் என்றலும், பதித்த மணிகள் என்றலும் ஆம்.* *955*

2854. (இ-ள்) *தந்தையாரும்...அணைந்திட - அங்குத் தந்தையாராகிய சிவபாத விருதயரும் வந்து பணிந்து உடன் அணைந்திட; சண்பையார்...போய் - சீகாழிப் பதியவர்களின் ஒப்பற்ற ஏறு போன்ற பிள்ளையார் பழமையாகிய மதிலுடன் கூடிய திருவாயிலினைத் தொழுது போய்; முகை...சென்று-முகைத்த மலர்களை அணிந்த கூந்தலையுடைய பெண்கள் அன்புடனே வாழ்த்துகின்ற உரைகள் இருபக்கமும் திரண்டெழ அழகிய திருவீதியினிடையே சென்று; காதலித்தவர்க்கு...சார்ந்தார் - அன்புடன் வந்தவர்களுக்கு அருள்செய்து தமது திருமாளிகையின் திருமுன்கடையினிற் சார்ந்தருளினுர்.*

இந்நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு பொருண்மேனின்று ஒருமுடிபு கொண்டுரைக்க நின்றன.

(வி-ரை) தாதையாரும் ...அணைந்திட - *பிள்ளையார் திருக் கோயிலை வழிபட்டுப் புறத்திற் சாரும் நிலையில் தாதையார் சிவபாத விருதயர் தாமும் பணிந்து அங்கு உடன் வந்தணைந்தனர் என்பதாம்.*

ஏறு - *சிங்கஏறு; ஏறு போல்பவரை ஏறு என்றதுபசாரம்.*

2854. **தாதை யாருமங் குடன்பணிந் தணைந்திடச் சண்பையார் தனியேறு
மூதெ யிற்றிரு வாயிலைத் தொழுதுபோய் முகைமலர்க் குழலார்கள்
ஆத ரித்துவாழ்த் துரையிரு மருங்கெழ வணிமறு கிடைச்சென்று
காத லித்தவர்க் கருள்செய்து தந்திரு மாளிகைக் கடைசார்ந்தார்.** 956

மூதெயில் திருவாயில் - இது திருமதிலுடன் கூடிய புறத்திருவாயில். இது கோயிலின் மேலைத் திருவாயில் என்பது கருதப்படும்.

முகைமலர்க் குழலார்கள்......மருங்கெழ - பரசமய நிராகரிப்பும் திருநீற்றின் விளக்கமாகிய ஆக்கமும் கண்ட பேரருட் செய்கையை நிறைவாக்கிப் பிள்ளையார் மீண்டருளக் கண்ட பெண்கள் வீதியின் இருமருங்கும் நின்று மங்கலமொழிகளால் அவரை வாழ்த்தினார்கள். பிள்ளையாரது திருவவதாரத்தின்போது சீகாழிப் பதியவர் அனைவரும் தத்தமக்கு மங்கலம் நேர்ந்ததென்ற உணர்ச்சி பொருந்தப் பெற்றனர். முன்னர்ப் பிள்ளையார் அருண்ஞான அமுதுண்டு திருமாளிகைக்கு எழுந்தருளிய காலையிலும் முத்துச் சிவிகை பெற்று அந்த யாத்திரையினின்று மீண்டெழுந்தருளிய போதும் இவ்வாறே ''மாடுநிறை மடவார்கள் மங்கலமா மொழிகளால் வாழ்த்தினர்'' (1993) எனவும், ''தெய்வமறைக் கற்பின் மாதர் மங்கலவாழ்த் திசையிரண்டு மருங்கு மல்''கின (2158) என்றும் கூறிய நிகழ்ச்சிகளும் ஈண்டு நினைவுகூர்தற்பாலன. பிள்ளையாரது இளமை கருதியும் மாதர் தத்தம் இளங்குமரர்க் கிசைக்குமாபோல் மங்கல வாழ்த்திசைத்தல் இயல்பாகும். **முகைமலர்க் குழலார்கள்** - மங்கல மாதர்கள். **ஆதரித்தல்** - அன்பினுற் சூழ்தல்; ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலையும் காண்க (11-ம் திருமுறை).

அணிமறுகு - பிள்ளையாரது திருமாளிகையிருந்த திருவீதி. இது திருக்கோயிலின் மேற்கில் அடுத்துப் பின்புறமுள்ள திருவீதி என்றுகொண்டு வழங்கப்படுகின்றது. **மாளிகை** - இஃதிருந்த இடம் அத்திருவீதியின் கீழைக்கோடியில் உள்ளதென்று கூறுகின்றனர்.

காதலித்தவர் - முன் கூறியபடி மங்கல வாழ்த்திசைத்த பெண்களும், அன்புடன் கண்டு களிக்கக்கூடிய ஏனை மக்களும் ஆம்.

அருள் செய்தல் - அருண்முகமளித்து விடைகொடுத்தல்.

திருமாளிகைக்கடை - திருமாளிகையின் முன்கடை - முன்வாயில்.

அங்கணைத்துடன் பணிந்திட—என்பதும் பாடம். 956

குறிப்பு - முன் யாத்திரையில் சிவிகை பெற்றுத் திரும்பியபோது கூறியது போலவே ஈண்டும் இத்திருப்பாட்டுக்களால் வழிபாட்டு நிலையினை எல்லாம் விரித்துக் கூறியது அவ்வவ் யாத்திரையின் நிகழ்ந்த அருட்பெருமையினை எண்ணித் திளைத்துத் தமது இறைவரை ''இத்தனையு மெம்பரமோ வைய வையோ வெம்பெருமான் றிருக்கருணை யிருந்த வாறே'' (தேவா) என்றவாறு நன்றியுடன் போற்றி மகிழ்ந்த நிலை குறித்தற்கு. மறையவர் எதிர்கொண்ட நிலைகளை விரித்தல் பலநாட் பிரிந்த அவர்களது ஆர்வமிகுதி குறித்தற்கு.

திருக்கழுமலம்

திருச்சிற்றம்பலம் திருவியமகம் பண்: பழம்பஞ்சுரம்

உற்றுமை சேர்வது மெய்யினையே யுணர்வது நின்னருண் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே கனல்விழி காய்வது காமனையே
யற்ற மறைப்பது முன்பணியே யமரர்கள் செய்வது முன்பணியே
பெற்று முகந்தது கந்தனையே பிரம புரத்தையு கந்தனையே. (1)

பருமதின் மதுரைமன் னவையெதிரே பதிகம தெழுதிலை யவையெதிரே
வருநதி யிடைமிசை வருகரனே வசையொடு மலர்கெட வருகரனே
கருதலி லிசைமுர றருமருளே கழுமல மமரிறை தருமருளே
மருவிய தமிழ்விர கனமொழியே வல்லவர் தம்மிடர் திடமொழியே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– *திருக்கடைக்காப்பில் பிள்ளையார் அருளியபடி ஆசிரியர் முன் (2852) காட்டக் கண்டுகொள்க.*

பதிகப் பாட்டுக் குறிப்பு:– (1) நின் அருள் மெய் - நினது அருளாகிய வாய்மையினையே; **உணர்வது** - நான் மறவாது உணர்ந்து கொண்டிருப்பது; **கற்றவர் காய்வது காமனையே** - மனமிறக்கக் கற்றுணர்ந்த பெரியோர்களால் வெறுத்துவிடப்பட்டது பசுத்துவம் பொருந்திய வீடாகிய உடம்பு முதலிய பிரபஞ்சமே; **கா** - பசுத்துவம்; மனை வீடு-உடம்பு - பிரபஞ்சம்; **அற்றம்** - நிர்வாணம்; அதனை முன்பணி மறைப்பதாவது - முன்னூல் தொங்கவிடப்பட்ட ஐந்தலைப் பாம்பின் படம்; **பணி** - பாம்பு; இங்கு அதன் படத்துக்கு வந்தது;—**(2) சலந்தரன்** - அசுரன்; **சலம் தரன்** - நீரைச் சடையில் தரித்தவன்; **கைச் சிலை** - கையில் ஏந்திய வில்; **கைச்சிலை** - நீ வெறுக்கவில்லை;—**(3) தோடினன்** - தோட்டினை உடையவன்; **கடிது ஓடினன்; அம்பு தைத்தனன்; வினை அது அரித்தனனே; உரைப்பொருள்** - உரையின் பொருளானவன்;—**(4) மாசுணம்** - பாம்பு; **மாசு(ண்)ணமே - உடல் பூசுவர்** என்க; **மேன்மதியே** - மேலாகிய அறிவைப் புகட்டி; **மத்தம்** - ஊமத்தம். **மத்தம்** - உன்மத்தம்;—**(5) மாதவன்** - திருமால்; **மாதவன்** - யோகு பயில்கின்றவன்; **பகடு** - யானை; **அரைசு எய்தினனே** - தலைமை தாங்கினன்; **துயர்க்கு - ஒரு - நஞ்சு - இவனே நஞ்சு** - அழிவு செய்யும் பொருள். **துயர்க்கு நஞ்சு** - துன்பத்தை அழிப்பது. **நஞ்சு** - நஞ்சுபோல்பவன்;—**(6) புகை தங்கு அழலே கையது** என்க. தம் **கழலே தொழுவது; அடையேமின்** - மேகங்களின் அடையும் மின்னல்; **அம் சடையே மின் நிகர்கின்றது**; மேலே உதாரணமாகச் சிலமட்டும் குறிப்பிடப் பட்டன;—(7-11) கற்றறி புலவாணர்பாற் கேட்டு அறியக்கடவன ;—(12) இப்பாட்டுப் பதிகக் கருத்தும் குறிப்பும் உணர்த்துவது; **பதிகம் அது எழுது இலை அவை**-பதிகம் எழுதிய ஏடு; இலை-ஓலை; **எதிர்வருகரனே** - எதிரிட்டுச் செல்லும்படி துணைசெய்த அருட்கைகளை யுடையவனே; **வசை**-(புறச் சமயிகள் கூறும்) வசைச் சொல்; **அலர்**-பழிச்சொல்; **அருகு - அரனே - அருகு** - அருகர் குலத்தை; **அரனே** - அரித்தவன்; அழித்தவன். **கருதலில்** - கேட்போரது கருத்தை அழிக்கத்தக்க; **இசை முரல்** - இசைக்குரியோரும், **தருமர்** - தரும சீலரும் ஆகிய அந்தணர்; **உள் - ஏ** - வாழ்கின்ற இடமாகிய (உள் - இருப்பிடமாகிய). **தரும் அருளே மருவும்**-என்க. 1-12 பாட்டுக்களின் குறிப்புக்கள் வித்துவான் - காஞ்சிபுரம் - சபாபதி முதலியார் பதிப்பிற் கண்டவை. **கருதல் இல் இசை தரும் மருளே** - என்பதற்குப் பகுத்து அறியும் அறிவில்லாத

2855. நறவ மார்பொழிற் புகலியி னண்ணிய திருஞான சம்பந்தர்,
விறலி யாருட **னீலகண் டப்பெரும் பாணர்க்கு மிகநல்கி**
யுறையு ளாமவர் மாளிகை செலவிடுத், துள்ளணை தரும்போதில்
அறலி னோர்குழ லார்மணி விளக்கெடுத் தெதிர்கொள வணைவுற்றார். 957

இசையைத் தரும் வண்டுகள் மருள் பாடுதற்கிடமாகிய என்றுரைத்தலும் ஆம். **மருள்** - குறிஞ்சிப் பண் வகையுள் ஒன்று. ''வண்டு மருள் பாடும்.''

2855. (இ-ள்) நறவம்ஆர்...திருஞான சம்பந்தர் - தேன் பொருந்திய பூக்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த சீகாழியில் சேர்ந்தருளிய திருஞான சம்பந்தப் பிள்ளையார்; விறலியாருடன்...செலவிடுத்து-பாடினியாருடனே திருநீலகண்டப் பெரும் பாணனுர்க்கு மிகவும் அருண்முகம் அளித்து அவர்தம் இருக்கையாகிய திரு மாளிகையின்கண் போகும்படி விடைதந்து விடுத்து; உள் அணைதரும் போதில்... அணைவுற்றார் - தமது திருமாளிகையினுள்ளே எழுந்தருளும்போது கருமணல் போன்ற கூந்தலையுடைய பெண்கள் அழகிய விளக்குக்களை ஏந்தி எதிர்கொள்ள உள் அணைந்தனர்.

(வி-ரை) புகலியில் நண்ணிய - சீகாழிப் பதியினில் சேர்தலையே குறித்து மீண்டு இவ்வளவும் போந்தெழுந்தருளினாராதலின் அது முற்றியநிலை குறிப்பார் **புகலியில் நண்ணிய** என்றார். ''புகலியின்மே லேகும் பெருங்காதல்'' *(2845)*.

விறலியாருடன்...செல விடுத்து - தம்முடன் இதுவரை தொடர்ந்து வந்த இவரிருவரையும் அவர்களது உறையுளாகிய திருமாளிகையிற் செல்ல விடுத்துப் பின்னரே தாம் தமது திருமாளிகையினுள் எழுந்தருளினார் என்க. இதுவே உலகியல் முறை. ''**காதலித்தவர்க் கருள்செய்து**'' என முன்பாட்டிற் கூறியது காண்க. அஃது அங்குத் திருமாளிகை வரை எதிர்கொண்டும் வாழ்த்தியும் வந்து கண்களித்த ஏனையோரைக் குறித்தது. அவரையெல்லாம் செல்ல விடுத்தபின் இறுதியாக இவ்விருவரையும் அருளியது இவர்பால் அன்பு மிகுதியுடைமை குறித்தது. அதன்மேலும் அவர்கள் அங்கு இருத்தலாம் நிலைமை சாலாமையின் அவர்க்காக முன் அமைத்திருந்த உறையுளாகிய திருமாளிகையுட் செல்ல விடுத்தலே சால்பும் தகுதியுமாம். இங்குப் பாணனுர் தமது திருமாளிகையில் வரலாகாதென்று பிள்ளையார் அவரைச் செலவிடுத்தனர் என்றெல்லாம் பலவாறு தத்தமக் கேற்றவாறு பிதற்றுவோரும் உண்டு. அவை எல்லாம் ஒழுக்கம் வழக்கு நேர்மை முதலிய உண்மைநிலைக ளெவற்றையு மறியாதார் கூற்றுமென் றெதுக்கற்பாலன. 2029 - 2030 பாட்டுக்களும், 2035-ல் உரைத்தவையும் இங்கு நினைவு கூர்தற்பாலன.

அறலின் நேர் குழலார்......எதிர்கொள - பெண்கள் விளக்கெடுத்து எதிர் கொள்வது மரபு. **அறல்** - கருமணல்; அதன் ஒழுக்கும் குறிப்பது. உருபற்றிய உவமை.

அணைவுற்றார் - உள் எழுந்தருளுவாராயினர். 957

2856. (இ-ள்) அங்கணைந்து...வணங்கிட-அவ்விடத்தில் அணைந்து அரிய வேதியர் குலத்து வந்த தாயாராகிய பகவதியார் எதிர்வந்து அடி வணங்க; தாமும்...... தொழுவாராய் - தாமும் தூய நீண்ட பெரிய திருத்தோணியில் எழுந்தருளிய தாயாராகிய பெரியநாயகியார்

2856. அங்க ணைந்தரு **மறைக்குலத் தாயர்வந் தடிவணங் கிடத்தாமுந்**
துங்க நீள்பெருந் தோணியிற் றுயர்தாண் மனங்கொளத்தொழுவாராய்த்
தங்கு காதலி னங்கமர்ந் தருளுநாட் டம்பிரான் கழல்போற்றிப்
பொங்கு மின்னிசைத் திருப்பதி கம்பல பாடினர் புகழ்ந்தேத்தி. 958

திருவடிகளை மனத்திற்கொண்டு எதிர் தொழுவாராகி; தங்கு...நாள்-அங்குத் தங்கும் ஆசையினாலே விரும்பி எழுந்தருளியிருந்த நாட்களிலே; தம்பிரான்...புகழ்ந்தேத்தி - தமது பெருமானுடைய திருவடிகளைத் துதித்து மேன்மேற் பொங்கும் இன்னிசையுடன் கூடிய பல திருப்பதிகங்களையும் புகழ்ந்து ஏத்திப் பாடியருளினார்.

(வி-ரை) அங்கணைந்து...வணங்கிட-*பிள்ளையார் திருமாளிகையினுள் அணைவுற அங்குப் பெண்கள் விளக்கேந்தி எதிர்கொள்ள மறைக்குலத் தாயாராகிய பகவதியார் அவ்விடத்து வந்து அணைந்து அடி வணங்கினர்; தாயார் திருமாளிகையினெல்லை கடந்து வந்து வரவேற்றல் மரபன்றாதலின்* ***அங்கணைந்து - வந்து*** *என்றார். இவ்வாறே முன்னர்க் கோயிலின் வழிபாட்டினிறுதியில் திருவாயில் பணிந்த நிலையில் ''தாதையாரும் அங்கு உடன்பணிந் தணைந்திட'' (2854) என்றது காண்க.*

மறைக்குலத் தாயர் *- தோணியிற் றுயரை வேறுபிரித்துக் காட்டலின்* ***மறைக்குலம்*** *என்றது பிறிதினியைபு நீக்கிய விசேடணம்; முன் ''மறைவியார்'' (1940) என்ற கருத்தும் காண்க.*

தாயர் - அடி வணங்கிட *- சிவஞானவமுதுண்டமையின் சிவத்துவம் விளங்கப் பெற்றமையால் பிள்ளையாரைத் தாயர் அடிவணங்குதல் அமைவுடைத் தேயா மென்க. தீக்கை முறையில் இவ்வமைதி நிலவுதல் காண்க. பிள்ளையார் ஞான குருவாதலின் யாவராலும் வணங்கப்படத் தக்கவராதலும் காண்க.*

தாமும்...தொழுவாராய் *- பிள்ளையாரைத் தாயர் வணங்குதல் தகுமென்று மேல் அமைதிப்படுத்திய அந்த நியாயமே, பிள்ளையார் அவரை எதிர்வணங்கத் தகாதென்பதனையும் அமைவுபடுத்தும். ஆதலின் தாயர் தம்மை அடிவணங்கக் கண்ட பிள்ளையார் அவரது சார்புபற்றித் தமது ஞான அம்மையாராகித் தோணியில் வீற்றிருந்த பெரியநாயகியம்மையாரை நினைந்துகொண்டு எதிர் தொழுதருளினர் என்க. திருவாலவாயில் தந்தையார் வணங்கக் கண்டபோதும் இவ்வாறே எதிர் தொழுவார் - அவர் சார்வு கண்டருளித் திருத்தோணி வீற்றிருந்தார் பாதங்கள் நினைவுற்றார் என்றது காண்க (2778).*

தங்கு காதல் *- சிலகாலம் அப்பதியினிலே தங்கும் பெருவிருப்பம்.*

திருப்பதிகம் பல *- இவை இன்னவென்று கருதக்கூடவில்லை.*

வணங்கிடத் தாழ்ந்து—தமிழ்ப் பதிகம்—*என்பனவும் பாடங்கள்.* *958*

2857. (இ-ள்) *நீல மாவிடம்...பணிந்து - கரிய பெரிய விடத்தினைத் திருக்கழுத்தில் அடக்கிய நிமலராகிய தோணியப்பரை நேரே சென்று கும்பிடுதற்கு உரிய காலங்களில் எல்லாம் சென்று வணங்கி; உடன் கலந்த...உறைபவர் - உடன் கலந்தவர்களாகிய அன்பர்களோடுங் கூடிப்*

2857. நீல மாவிடந் திருமிடற் றடக்கிய நிமலரை நேரெய்துங்
கால மானவை யனைத்தினும் பணிந்துடன் கலந்தவன் பர்களோடுஞ்
சால நாள்களங் **குறைபவர் தையலா டழுவிடக் குழைகம்பர்**
கோல மார்தரக் கும்பிடு மாசைகொண் டெழுங்குறிப் பினரானார். 959

பல நாள்கள் அந்தச் சீகாழிப் பதியிலே தங்கியருளுபவராகிய பிள்ளையார்; தையலாள... குறிப்பினரானார் - காமாட்சி அம்மையார் தழுவியிடத் திருமேனி குழைந்து காட்டிய, திருவேகம்ப நாதருடைய, திருக்கோலத்தைச் சென்று நிறைவுபெறக் கும்பிடவேண்டுமென்னும் ஆசை மேற் கொண்டு எழுகின்ற திருவுள்ளக் குறிப்பினைக் கொண்டவரானார்.

(வி-ரை) நேரெய்தும் காலமானவை யனைத்திலும்-நேரே சென்று வழிபடுதற்குரிய காலங்கள் என்று சிவாகமங்களுள் விதித்த பூசைக் காலங்களிலெல்லாம். இவற்றின் விரிவு சிவாகமங்களுட் காண்க. இவை திருப்பள்ளி எழுச்சி முதலாகத் திருவத்த யாமம் ஈறாக வருவன. "திருப்பள்ளி யெழுச்சி'' (1333); ''காலை'' (560); உச்சம் போதால்'' (தேவா); ''மயங்கு மாலை'' (3456 - ஏயர்கோ. பு - 302); ''திருவத்த யாமம்'' (3456 - மேற்படி 304). **காலமானவை** - ஆக்கச்சொல் விதித்தவாற்றால் உரியவையாதல் குறித்தது; **காலமானவை அனைத்தினும்** - பூசைக்குரிய எல்லாக் காலங்களிலும் நேர்பட்டுக் கும்பிடவேண்டுமென்பது விதி. இஃது இந்நாளில் அன்பான் மிக்க ஒருசிலர்க்கே இயல்வதாகக் காணப்படுகின்றது. காலமெல்லாந் துதித்திறைஞ்சி'' (2062); இவ்வாறிருப்பவும் ஒருநாளில் ஒரு காலந்தானும் சென்று ஆலய வழிபாடு செய்யாது வீணே நாள்போக்கிக் கேடுபடும் வாழ்க்கை காண மலிந்தது இந்நாளுலகத்தின் கொடுமை!

உடன் கலந்த அன்பர்களோடும் - உறைபவர் - ''அன்பரோடு மரீஇ'' (12 - சூத்) என்று ஞானநூல் ஞானிகளாகிய சீவன்முத்த ரியல்பு வகுத்தது. உடன் **கலத்த**லாவது தம்மைப்போலவே அயரா அன்புசெய்யும் மெய்ஞ்ஞானிகளாதல் என்றதாம்; ''பத்தியினான் மறவாதேத்தி முதல்வனது சீபாதத்தையணைந்த சீவன் முத்தர்'' என்பது அவர்களியல்பு. உலகத்துயிர்கள் உய்யுநெறி காட்டும் வகையால் பிள்ளையார் இவ்வாறொழுகிக் காட்டினர் என்க. அல்லாதார் ''அஞ்ஞானத்தை யுணர்த்துவாராகலான்'' என்றும், ''சிவபத்த ரல்லாதார் அவ்வாறன்றி (இலக்கு வாய்த்தபோது மட்டும் அஞ்ஞானத்துக் கேதுவாகும் மும்மலங்கள் போலன்றி) இலக்கு வாயாதவழியும் வாய்க்குமாறு செய்துகொண்டு பலவகை யுபாயங்களானுந் தம்மோடொப்ப விபரீத வுணர்வைச் செலுத்தியே விடுவராகலான் அம்மலங்களினுங் கொடியராகிய இவரை அவற்றினு மஞ்சிவிட் டொழிதலே அறிவுடைமைக்குச் சால்பு'' (சிற்றுரை) என்றும் உரைப்பது காண்க. **உடன் கலந்த** என்பது அன்பர் செயல் குறிக்கவும்.அவர்களோடு என்றது பிள்ளையார் செயல் குறிக்கவும். **உடன் - ஒடு** என இரண்டு உருபுகள் வந்தன. ''கூடவே கும்பிடும் செய்கைநேர் நின்று'' (2421); ஒருப்படுசிந் தையினார்க ளுடனுறைவின் பயன்பெற்றார்'' (1509) என்பன முதலியவை காண்க.

அங்கு - சீகாழித் திருப்பதியினில்.

தையலாள் தழுவிடக் குழைகம்பர் - அம்மையார் தவஞ்செய்து இறைவரைத் தழுவிக்கொண்ட வரலாறு திருவேகம்பத்துக்குச் சிறப்பாயுரியதுபற்றி இத் தன்மையாற் கூறினார்; 1140 - 1141 - 1142 - 1143 பாட்டுக்கள் பார்க்க. **கம்பர்** - திருவேகம்ப நாதரது; ''கம்ப னெம்மான்''

2858. "தண்ட கத்திரு நாட்டினைச் சார்ந்துவந் தெம்பிரான் மகிழ்கோயில்
கண்டு போற்றிநாம் பணிவ"தென் றன்பருக் கருள்செய்வார் காலம்பெற்
றண்ட ருக்கறி வரும்பெருந் **தோணியி லிருந்தவ ரருள்பெற்றுத்**
தொண்டர் சூழ்ந்துடன் புறப்படத், தொடர்ந்தெழுந் தாதையார்க் குரைசெய்வார். 960

---

*(தேவா). **கம்பரது குழைகோலம்** என்று கூட்டுக. ஆறனுருபு விரிக்க. நிற்பவுஞ் சரிப்பவுமான யோனிகளெல்லாம் உயிரும் யாக்கையு முருகி ஒன்ருகி ஏத்தியுய்ந்திட உதவுவது இத்திருக்கோலமாதலின் அதனைக் காட்டிச் சிறப்பித்தபடி (1142 பார்க்க).*

__ஆர்தர - ஆர__ - ஆர்வ நிறைய; "கண்ணாரக் கண்டுமென் கையாரக் கூப்பியும், எண்ணார வெண்ணத்தா லெண்ணியும்" (அற். அந் - 85) என்று அம்மையார் இதனைக் காட்டியருளினர். __ஆர்தரக் கும்பிடும் ஆசை__ - கும்பிடுதலே உறுதிப்பயனுதலின் அதனின் ஆசைகொள்ளுதல் வேண்டுமெனக் காட்டியபடி.

__கோலம் - ஆர்தரக் கும்பிடும்__ - இக்கோலத்தைக் காணவே "கண் பெற்றவாறே" என நம்பிகள் ஏத்தித் திளைப்பது காண்க. __ஆசை__-"உன்றன் முகவொளி நோக்கி முறுவ னகைகாண, அத்தா சால ஆசைப்பட்டேன்" (திருவா-ஆசைப்-6) என்ற ஆசையெல்லாமறுத்த வாதவூர் அடிகளும் பலப்பலவாறு ஆசைகொண்டு அருளியபடி காண்க.

__ஆசை கொண்டெழும் குறிப்பினர்__-அரசுகள் செப்பியருளிய தன்மை (1666 - 2893)யினுல் இவ்வாசை மிக்கு ஊன்றி எழுந்ததென்க. __குறிப்பு__ - திருவுள்ளங் குறிக்கொண்ட நிலை. 959

2858. (இ-ள்) *தண்டகத் திருநாட்டினை...அருள் செய்வார் - "தண்டகத் திருநாடு" என்னப்படும் தொண்டை நாட்டினைச் சார்ந்து சென்று நமது பெருமான் மகிழ்ந்து வீற்றிருந்தருளும் திருக்கோயில்களைக் கண்டு துதித்து நாம் வணங்குவோம் என்று அன்பர்களுக்கு அருளிச் செய்வாராய்; காலம் பெற்று...அருள் பெற்று - உரிய காலத்தில் நேர்பட்டுத் தேவர்களுக்கும் அறிவரிதாகிய பெருந் திருத்தோணியில் வீற்றிருந்தருளும் இறைவர்பால் அருள்விடை பெற்று; தொண்டர் சூழ்ந்து உடன் புறப்பட - திருத்தொண்டர்கள் தம்முடனே சூழ்ந்துவரப் புறப்பட; தொடர்ந்து......உரை செய்வார் - தாமும் உடன் வரும்பொருட்டுத் தொடர்ந்து எழுந்த தாதையாருக்கு உரை செய்வாராய்,*

(வி-ரை) தண்டகத் திருநாடு *- திருத்தொண்டை நாடு;* **தண்டகன்** *என்னும் அரசன் ஆண்டமையால் தண்டகநாடென்று பேர் வழங்கலாயிற்று. இவ்வாறே இந்நாடு அவ்வக்காலத்து ஆட்சி புரிந்த அரசர் பெயரால் துண்டீரன் ஆண்டமையால் துண்டீர நாடு என்றும், தொண்டைமான் ஆண்டமையால் தொண்டை நாடென்றும் வழங்கப்படும் என்ப. "அண்டரும் புகழ்துண் டீர னுண்டுதுண் டீரநா டாய்த், தண்டகன் பின்ன ராண்டு தண்டக நாடாய்ப் பின்னர்த், தொண்டைமா னுண்டு தொண்டை நாடெனத் துலங்கிற் றன்றே, பண்டயன் படைப்புத் தொட்டுப் பயிலுமித் தொண்டை நாடு" என்ற விநாயக புராணம் காண்க.*

"தண்டகத் திருநாட்டினை...பணிவது" - என்று *- இது பிள்ளையார் அடியார்களுக்கு அருளியது. தொண்டை நாட்டிற் சென்று கோயில்களைப் பணிவோம் என்றதாம்.* **பணிவது -** *பணிந்து செல்வது எமது கருத்து என்றபடி; எமது கருத்து என்பது குறிப்பெச்சம்.*

2859. **"அப்பர்! நீரினி யிங்கொழிந் தருமறை யங்கிவேட் டன்போடுந்
துப்பு நேர்சடை யார்தமைப் பரவியே தொழுதிரு"** மெனச்சொல்லி
மெய்ப்பெருந்தொண்டர்மீள்பவர் தமக்கெலாம் விடைகொடுத்தருளிப்போய்
ஒப்பிலாதவர் தமை வழியிடைப் பணிந்துருகு மன்பொடு செல்வார்; 961

அண்டருக் கறிவரும் பெரும் தோணி - தோணியே பிரணவமாம். பிரணவப் பொருள் தேவருமறிவரிது என்பது குறிப்பு. தேவர்களுட் பெரிய பிரமதேவன் பிரணவப் பொருளறியாமையால் முருகப் பெருமானுல் குட்டுப்பட்டுச் சிறைப் படுத்தப்பட்ட கந்தபுராண வரலாறு இங்கு நினைவுகூர்தற்பாலது.

தோணியிலிருந்தவர் அருள் பெற்று - தொண்டைநாடு செல்வதற்கு அருள் விடைபெற்று.

தொடர்ந்து எழும் - தம்முடன் தொடர்ந்து வருதற்கு ஒருப்பட்டு எழுந்து போந்த.

உரை செய்வார் - முற்றெச்சம். உரை செய்வாராகி-எனச் சொல்லி என்று மேல்வரும் பாட்டுடன் கூட்டி முடித்துக்கொள்க.

சார்ந்து நந் தம்பிரான்—என்பதும் பாடம். *960*

2859. (இ-ள்) அப்பர் எனச் சொல்லி-''அப்பரே! நீர் இனி எம்முடன் வருதலை ஒழிந்து இங்கு அருமறை விதிப்படி தீ வளர்த்து வேள்வி செய்து கொண்டு அன்புடனே பவளம்போன்ற சடையினையுடைய இறைவரைத் துதித்துத் தங்கியிருப்பீராக!'' என்று சொல்லி; மெய்ப் பெருந்தொண்டர்...கொடுத்தருளிப் போய் - பெரிய மெய்த் தொண்டர்களுள் தம்முடன் வாராது மீண்டு தங்குபவர்க் கெல்லாம் விடை கொடுத்தருளிச் சென்று; ஒப்பிலாதவர் தமை...செல்வார் - தமக்கு ஒப்பற்றவராகிய இறைவரை வழியிடையே வணங்கிக்கொண்டு உருகும் அன்புடனே மேற்செல்வாராகி,

(வி-ரை) அப்பர்!...எனச் சொல்லி - இது சிவபாதவிருதயருக்குப் பிள்ளையார் சொல்லி, அவர் தம்முடன் தொடர்ந்து செல்லுதலை மறுத்து விடுத்தது; தாதையாரின் மூப்புக் காரணமாகவும், உயிர்பற்றிய இறைவரது சார்பும் அடியார் சார்புமேயன்றி உடல்பற்றிய சார்புகளின் தொடர்ச்சியில் விருப்பமின்மை காரணமாகவும் பிள்ளையார் இவ்வாறு மறுத்து விடுத்தனர்போலும்!; முன் யாத்திரையில் தந்தையார் தம்முடன் வர இசைந்தமைபற்றி (2179) பார்க்க. தம்முடன் தமிழ்நாடு செல்வதற்கு அமைந்த அரசுகளை ''அப்பர்! இந்தப் புனனாட்டி லெழுந்தருளி யிருப்பீர்!'' என்று (2515) பிள்ளையார் தவிர்த்தருளியதும் ஈண்டு நினைவு கூர்தற்பாலது. ஆனல் அங்கு அரசுகளைப் பிள்ளையார் மறுத்தருளியது வேறு காரணம்பற்றி; அந்நிலைபற்றி ஆண்டுரைத்தவை பார்க்க. ''அருமறை அங்கி வேட்டும்-சடையாரைத் தொழுதும் இரும்'' என்று தாதையார் செய்ய நின்ற உயரிய இரண்டு கடன்களையும் பிள்ளையார் சுட்டி அருளியதும், சீகாழிப் பதியவர்க்கு வேள்வியின்பொருட்டே பிள்ளையார் முன்னர் உலவாக்கிழியாக ஆயிரம் பொன் திருவாவடுதுறை யிறைவரிடம் பெற்றளித்தமையும் இங்கு நினைவு கூர்தற் பாலன.

மீள்பவர் - தம்முடன் செல்லாது அங்குத் தங்கும்படி விடைபெற்று மீள்பவர்கள்.

2860. **செல்வ மல்கிய தில்லைமூ தூரினிற் றிருநடம் பணிந்தேத்திப்,**
பல்பெருந்தொண்ட ரெதிர்கொளப் பரமர்தந் **திருத்தினை நகர்பாடி,**
யல்கு தொண்டர்க ளம்முடன் **றிருமாணி குழியினை யணைந்தேத்தி**
மல்கு வார்சடை யார்**திருப் பாதிரிப் புலியூரை வந்துற்றார்.** 962

ஒப்பிலாதவர் - சிவபெருமான். ''உவமனில்லி'' (தேவா); ''தனக்குவமை யில்லாதான்'' (குறள்).

வழியிடை - சீகாழியினின்று தில்லைக்குச் செல்லும் வழியிடையில் உள்ள பதிகளில், ''ஆடுவா ருறைபதி நடுவுகண் டனபோற்றி'' (2043). இவ்வழி சீகாழியினின்றும் மேற்கே 8 நாழிகையளவு சென்று கொள்ளிடத்தைக் கடந்து வடக்கில் திருநாரையூர் குமராட்சி வழியாய்த் தில்லை சேர்வது என்பதும், **வழியிடைப் பணிந்து** என்றது திருநாரையூர் முதலிய பதிகள் என்பதும் கருதப்படும். இவ்வழியே ஆளுடைய அரசுகள் தில்லையினின்றும் பிள்ளையாரைக் காணச் சீகாழிக்கு எழுந்தருளிய வழி என்பது முன் (1444) உரைக்கப்பட்டது. இது முன்னுளில் வழங்கிய பழைய வழி என்பர். *961*

2860. (இ-ள்) *செல்வம்...ஏத்தி - செல்வம் நிறைந்த தில்லையாகிய தொல் பெரும்பதியினில் இறைவரது திருக்கூத்தினைப் பணிந்து துதித்து; பல்பெரும்... ...பாடி - பெரிய தொண்டர்கள் பலரும் எதிர்கொள்ளச் சென்று இறைவரது திருத்தினை நகரினை இறைஞ்சிப் பாடிப் போய்; அங்கு...அணைந்தேத்தி - நிலை பெற்ற திருத்தொண்டர்களுடனே திருமாணிகுழியினை அணைந்து துதித்து; மல்கு... வந்துற்றார்-செறிந்து பொருந்திய நீண்ட சடையினையுடைய இறைவரது திருப்பாதிரிப்புலியூரினை வந்து சேர்ந்தனர்.*

இன்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டுரைக்க நின்றன.

(வி-ரை) செல்வ மல்கிய தில்லை மூதூர் - ''செல்வ நெடுமாடம்'' (பிள்-கோயில்-குறிஞ்சி); ''உலகுக் கெல்லாம் திருவுடை யந்தணர்'' (அரசு - திருவிருத்).

திருநடம் பணிந்தேத்தி-இது பிள்ளையார் தில்லையிற் பணிந்து வழிபட்ட இரண்டாவது முறை. முன்முறையில் வழிபாடு விரித்தோதினுராதலினுலும், முன்னர்த்தில்லை வணங்க எண்ணியே சென்றருளியதுபோலன்றி, இப்போது தொண்டை நாடு சென்று கும்பிடக் கருதிச் செல்லும் வழியிடை வணங்குகின்ற ராதலினுலும் சுருங்கக் கூறினுர். முன்முறை வழிபாட்டு நிலை 2041 - 2081 வரை பாட்டுக்களிலும், மூன்ரும் முறை வழிபட்ட நிலை பின்னர் 3033 - 1135 முதல் 3042 - 1144 வரை உள்ள பாட்டுக்களிலும் காண்க.

திருத் தினைநகர்-திருமாணிகுழி - திருப்பாதிரிப்புலியூர் - இவை திருத் தில்லையினின்றும் வடக்கு நோக்கித் தொண்டை நாட்டுக்குச் செல்லும் வழியிடை உள்ளன. இவை நடுநாட்டுப் பதிகள். இவ்வாறு தொண்டைநாடு சென்று கும்பிடக் கருதி வழிக்கொண்ட பிள்ளையார் வழி இடையே நடுநாட்டினில் உள்ள பதிகளையும் வணங்கிச் செல்கின்ற நிலை இது முதற் பத்துப்பாட்டுக்களாற் கூறியருளுகின்றுர் (2860 - 2871); வழியிடை நேர்பட்ட வழிபாட்டினைச் சுருக்கிக் கூறிச் செல்லும் நயமும் காண்க. தொண்டைநாட்டுப் பதிகளாகிய திருவக்கரை -

திருஇரும்பை மாகாளம் - என்னும் இரண்டும் இடையில் நேர்பட்டமையால் வழியில் வணங்கப்பெற்றன. 962

திருத்தினை நகர் - பிள்ளையா ரருளிய தேவாரப் பதிகம் கிடைத்திலது!

திருமாணிகுழி

திருச்சிற்றம்பலம் பண் - சாதாரி

பொன்னியல் பொருப்பரையன் மங்கையொரு பங்கர்புன றங்குசடைமேல்
வன்னியொடு மத்தமலர் வைத்தவிறல் வித்தகர் மகிழ்ந்துறைவிடங்
கன்னியிள வாளைகுதி கொள்ளவிள வள்ளைபட ரள்ளல்வயல்வாய்
மன்னியிள மேதிகள்ப டிந்துமனை சேருதவி மாணிகுழியே. (1)

நித்தநிய மத்தொழில னாகிநெடு மால்குறள னாகிமிகவுஞ்
சித்தம தொருக்கிவழி பாடுசெய நின்றசிவ லோகனிடமாம்
கொத்தலர் மலர்பொழிலி னீடுகுல மஞ்ஞைநட மாடலதுகண்
டொத்தவரி வண்டுக ளுலாவியிசை பாடுதவி மாணிகுழியே. (4)

உந்திவரு தண்கெடில மோடுபுனல் சூழுதவி மாணிகுழிமேல்
அந்திமதி சூடியவெம் மானையடி சேருமணி காழிநகரான
சந்தநிறை செந்தமிழ்தெ ரிந்துணரு ஞானசம்பந்தனதுசொன்
முந்தியிசை செய்துமொழி வார்களுடை யார்கணெறி வானநிலனே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– பொருப்பரையன் மங்கையொரு பங்கர், நெடுமால் குறளனாகி வழிபாடு செயநின்ற சிவலோகன் என்பனவாதி தன்மைகளாலறியப்பெற்ற இறைவரது இடம் திருமாணிகுழியே.

பதிகப் பாட்டுக் குறிப்பு:– *(1)* வித்தகர்-அறிவுருவானவர். **வித்தகர் உறை விடம் மாணிகுழியே** என்க; **கன்னி...மனை சேருதவி**-என்பது நிலஇயல்பு சிறப்பித் துரைத்தபடி; தன்மையணி. **தவி** - பதி - ஊர்;—***(2)* வசி** - வசப்படுத்தும் சாகசச் செயல்; **பழனமிக்கு - வேலை புடைசூழ் உலகினீடு** - மருதமும் நெய்தலு மயங்கிய திணை மயக்கமும் நிலமும்;—*(4)* தலப் பெயர் போந்த வரலாறும் சரிதமும் கூறியபடி; **நெடுமால் குறளனாகி** - நீண்டவன் குறுகி வாமனனாகி; **வழிபாடு செய** - வாமனனாய்ப் பூசிக்க. **மாணி**-பிரமசாரி; **குழி** - இடம்; பதி; தலம். பின்னிரண்டடிகள் நாட்டுவள முணர்த்தின;—*(5)* பின்னிரண்டடிகள் நகர்வளம் உணர்த்தின;—***(6)* மாணி** - பிரமசாரியாகிய மார்க்கண்டேயர். பின்னிரண்டடிகள் ஆற்றுவள முணர்த்தின;—***(7)* எண் பெரிய** - அளவிறந்த; எண்ணுதலால் - தவத்தினுல் - பெரிய;—***(10)* முட்டைகள்** - கீழோர்; பயனற்றவர்கள். **தாழை** - தென்னை; **இளநீர் - முதியவாளை** - முரண் அணி;—***(11)* வானநிலன்** - வானமாகிய உலகம் பண்புத்தொகை. வானமும் நிலமும் என்று உம்மைத்தொகையாக்கினு மமையும்.

தலவிசேடம்:– திருமாணிகுழி - நடுநாட்டில் 17-வது பதி. தலப்பெயர்க் காரணமாகிய வரலாறு பதிகம் 4-வது பாட்டில் போற்றப்பட்டது. சுவாமி - **மாணிக்கவரதர்**; அம்மை - **மாணிக்கவல்லி**; பதிகம் 1.

2861. **கன்னி** மாவனங் காப்பென விருந்தவர் கழலிணை பணிந்தங்கு
"முன்ன மாமுடக் கான்முயற் கருள்செய்த" வண்ணமு மொழிந்தேத்தி
மன்னு வார்பொழிற் **றிருவடு கூரினை வந்தெய்தி வணங்கிப்போய்ப்**
பின்னு வார்சடை யார்**திரு வக்கரை** பிள்ளையா ரணைவுற்றார். 963

இது திருப்பாதிரிப்புலியூரினின்றும் கற்சாலைவழி மேற்கே 5 நாழிகையளவில் நின்றும் தெற்கில் 1/2 நாழிகையளவில் கெடிலநதியின் தென்கரையில் உள்ளது.

2861. (இ-ள்) *கன்னி...பணிந்து - பெரிய கன்னிவனத்தைத் தமது காவலிடமாகக் கொண்டு எழுந்தருளிய இறைவருடைய இரண்டு திருவடிகளையும் பணிந்து; அங்கு......ஏத்தி அப்பதியிலே முன்னாளில் முடங்கிய காலோடு முயலாகச் சபிக்கப்பெற்ற மங்கண முனிவர் சாபநீக்கம் பெற அருளிச்செய்த தன்மையினையும் பதிகத்தில் மொழிந்து துதித்தருளிச் சென்று; மன்னு...வணங்கிப் போய் - நீண்ட சோலைகள் பொருந்திய திருவடுகூரினைச் சென்று வணங்கிப் போய்; பின்னு...அணைவுற்றார் - பிள்ளையார் பின்னுகின்ற நீண்ட சடையினையுடைய இறைவரது திருவக்கரை என்ற பதியினை அணைந்தனர்.*

(வி-ரை) கன்னி மாவனம் - *அம்மையார் தவஞ் செய்து அருள் பெற்ற இடமாதலின் இது கன்னிவனம் என்ற இப்பெயர் பெற்றது. இதுபோலவே காமாட்சியம்மையார் தவஞ் செய்த பதியினை "அம்பிகா வனமாந் திருவனம்" (1136) என்றது காண்க.*

காப்பு - *காவல் புரியும் இடம். "காப்புத் திருத்தாண்டகம்"; "கயிலாயமுங் கண்ணுதலான் றன்னுடைய காப்புக்களே" (தேவா).*

முன்னம்...வண்ணமும் மொழிந்து - *பிள்ளையார் பதிகம் "முன்ன நின்ற முடக் கான் முயற்கருள் செய்து" (1) என்றது காண்க. பதிகப் பாட்டுக் குறிப்பும் தல விசேடமும் பார்க்க.*

திருவடுகூர்-திருவக்கரை - *இவை பிள்ளையார் தொண்டை நாடு-காஞ்சிபுரம்- செல்லும் வழியிடை உள்ளன; அவர் சென்றருளிய வழியையும் குறிப்பன.* **வக்கரை** - *தொண்டைநாட்டுப் பாடல் பெற்ற பதிகளுள் ஒன்று. இது திருவடுகூரின் வடக்கில் உள்ளது. தில்லை முதலாக முன் கூறியனவும் இப்பாட்டிற் கூறியனவும், இனிவரும் பாட்டுக்களிற் கூறுவனவும் வழியிடை வரிசைபெற அமைந்தமை காண்க.* *963*

திருப்பாதிரிப்புலியூர்

திருச்சிற்றம்பலம் பண் - செவ்வழி

முன்ன நின்ற முடக்கான் முயற்கருள் செய்துநீள்
புன்னை நின்று கமழ்பா திரிப்புலி யூருளான்
தன்னை நின்று வணங்குந் தனைத்தவ மில்லிகள்
பின்னை நின்ற பிணியாக்கை யைப்பெறு வார்களே. (1)

அந்த ணல்லா ரகன் காழியுண் ஞானசம்
பந்த னல்லார் பயில்பா திரிப்புலி யூர்தனுட்
சந்த மாலைத் தமிழ்பத் திவைதரித் தார்கண்மேல்
வந்து தீயவ் வடையாமை யால்வினை மாயுமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– திருப்பாதிரிப்புலியூர் இறைவரை வணங்கும் தவமில்லா தவர் பிறவியிற் புகுவர்; அவரை வணங்கவே வினைமெலிந்து அணுகாது; நுணுகும்; மேல் வந்து தீயவை அடையாமையால் முன்வினை மாயும்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:– *(1)* முன்ன நின்ற - முன்வந்து பூசித்த; **முடக்கால் முயல்** - முடங்கு காலுடன் முயலாகச் சபிக்கப்பெற்ற மங்கண முனிவன்; **அருள் செய்து**-சாப நீங்கச் செய்து. **புன்னை** - நெய்தற்கருப்பொருள். **வணங்கும் தனைத் தவமில்லிகள்** - வணங்குதற்கு ஓரளவேனும் தவமில்லாதவர்கள். **தனை** - அளவு; **பின்னை நின்ற பிணியாக்கையைப் பெறுவார்கள்** - மேல் எடுக்கவுள்ள பிறவியிற் பட்டுச் சுழல்வார்; **பிணி யாக்கை** - உயிரைக் கட்டுறுத்தும் உடல்; பிணியும் யாக்கையும் என்றலுமாம். ''பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின்றுரே'' (தேவா). முயற்கருளியதுபோலத் தன்னை வணங்குவோ ரெவருக்கும் உடல் வரும் குற்றநீங்க அருளுவர் என்பது குறிப்பு;—**(2) கொள்ளி நக்க பகுவாய பேய்** - எரி கொள்ளி போன்று தீயினை உமிழும் திறந்த வாயினையுடைய பேய்கள்; ''சுழலு மழல்விழிக் கொள்ளிவாய்ப் பேய்'' (அம்மை மூத்த திருப்பதிகம்-7); **முள்ளிலவம்** - இலவின் வகை;—**(3) மருள் இல் நல்லார்** - மயக்கமில்லாத நல்லோர்; **வெறி** - விளையாட்டு (தவங்காண் படலம் - கந்தபுராணம் பார்க்க);—**(4) போது** - மலர்; **புகை** - தூபம்; **போதிலுலே** - உரிய காலங்களிலே. **போது** - பொழுது; காலம். **நாலும்** - நாலுதல்; தொங்குதல். **நாலும் அவலம்** - நான்காகிய துன்பம் என்றலு மாம்;—**(5) நல்லார்** - பெண்கள்; ''மைப்பூசு மொண்கண் மடநல்லார்'' (பிள் - மயிலை); **நாகம்-அரையார்த்தவன்**-என்க. **போகம்**-சிவபோகம்;—**(6) மதியம்... முத்தம் திகழ்** - புதிய முத்துக்கள் வெண்மணற் பரப்பில் விளங்குதல் மதியைச் சூழ்ந்த கதிர்போல உள்ளது. **புது முத்து** - மதி; **மணற் பரப்பு** - மதிசூழ்ந்த கதிர். **குதியுங் கொள்வர் விதியும் செய்வர்** - **குதி** - ஆனந்தக் கூத்து; ''இன்பமே எந்நாளும் துன்ப மில்லை'' (தேவா). **விதியும் செய்தலாவது - வினைப் பயனையும் மாற்றித் தாம் எண்ணியபடி வேறு வகுத்தல்;—(8) ஊக்கம்** - ''வீக்க மெழுந்து இம்மலை பெயர்ப்பேன்'' என்னும் முயற்சி. **வினை மெலிந்து-அணுகா-நுணுகும்** - வினை வலிகுன்றி மெலிந்துபடும்; ஆதலின் தாக்காது; தேய்ந்து செல்லும்; **அணுகுதல்**-வலிதாய்ப் பற்றுதல். **நோக்குதல்**-சிவானுபவத்தில் வழுவாது ஊன்றி நிற்றல்; **நுணுகும்** - மெலிவடையும்; ''இறைபணி நிற்குந் தத்துவ ஞானிக்குப் பயிற்சி வயத்தான் ஒரோவழி நாடுமுளம் (உயிருணர்வு) உண்டாதலும் உண்மையின், அதுபற்றிப் பிராரத்த **வினை**யும், அதற்கு வாயிலாகிய உடம்பு முதலிய **மாயை**யும் மங்கிப்போய் வாசனை மாத்திரையாய் மெலிதாய் வந்து மூளுமாயினும், அம்மூட்சிபற்றி ஒருதலையானிகழ்வதாகிய ஆகாமிய**வினை** மேலைக்கு வித்தாய் நிலைபெற்று முறுகுதலின்றித் தனக்கு வாயிலாகிய **மாயை**த்தோடு கெட்டொழியும்'' என்று 10-ம் சூத்திரம் ''இறைபணி வழுவாது நிற்க'' என்ற இரண்டாமதிகரணம் ''இங்குளி வாங்கும் கலம்போல'' என்னும் உதாரண வெண்பாவின் சிற்றுரையும் இங்குக் கருதத்தக்கது; அரசுகள் தேவாரக் குறிப்புக்களும் காண்க;—**(9) தன்னந்தாள் உற்று** - தமது சிறு முயற்சிகளால்; **தவ** - பெரிய; —**(11) வந்து தீயவ் வடையாமையால்** - மேல் ஆகாமியவினை வந்து ஏருமையால். **வினை** - முன்வினை; **மாய்தல்** - 8-ம் பாட்டில் காண்க.

தலவிசேடம்:—திருப்பாதிரிப்புலியூர் - தொகுதி III பக். 282 பார்க்க.

திருவடுகூர்

திருச்சிற்றம்பலம் பண் - குறிஞ்சி

சுடுகூ ரெரிமாலை யணிவர் சுடர்வேலர்,
கொடுகூர் மழுவாளொன் றுடையார் விடையூர்வர்
கடுகூர் பசிகாமங் கவலை பிணியில்லார்
வடுகூர் புனல்சூழ்ந்த வடுகூ ரடிகளே. (1)

படிநோன் பவையாவர் பழியில் புகழான
கடிநா ணிகழ்சோலை கமழும் வடுகூரைப்
படியா னசிந்தை மொழியார் சம்பந்தன்
அடிஞா னம்வல்லா ரடிசேர் வார்களே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– வடுகூரில் ஆடும் அடிகளாகிய முதல்வர் சுடுகூ ரெரிமாலை யணிவர் என்பது முதலிய தன்மைகளா லறியப்படுபவர்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:– *(1)* **சுடுகூ ரெரிமாலை** - எரியில் வெந்த எலும்பு மாலை. **எரி**-எரியில் வெந்த எலும்புக்காகி வந்தது. **கொடு**-கொடிய; **வேல்**-ஆயுதப் பொது; சூலம் குறித்தது. **கடுகூர்** - கடிதாய் மிகுகின்ற; **பசி.....இல்லார்** - பிறவியில் வாராதவர்;—**(2) ஏலும்** - பொருந்தும்; ஊழித் தீயில்எல்லாவற்றையும் நீறுக்கும்; அழிதலால் வந்து பொருந்தும்; அப்போதும் அழியாது நிற்கும் தமக்கன்றிப் பிறர்க்கு ஏலாத; **ஆலுதல்** - அசைதல்;—**(3) ஏடு** - இதழ்களை யுடைய;—**(4) துவர்** - பவள நிறம்; பவளம். **புரிசை** - மாட உறுப்பு; மதில். **கவர**-அழிய; **பவரும்** - விளங்கும்;—**(5) பணி ஆர்** - திருப்பணிகள் செய்கின்ற;—**(8) நெடுநீர்** - கங்கை. **குழல்** - ஊதுகுழல்கள்;—**(9) சந்தம்** - மணம்; **கந்தம் - ஒளி** புகழ்;—**(10) மால் அடிவீழ - நான்முகன் உணர்கில்லா**-இருவரும் ஒன்றுபோலவே அடியுமுடியும் அறிகில்லா ராயினும் மால் அறிகில்லேனென்று உணர்ந்து அடிவீழ்ந்தனர்; பிரமன் அங்ஙனமன்றி உணரானுயினும் உணர்ந்தேனென்று பொய்ம்மொழிந்தானென்ற வரலாற்றுக் குறிப்புப்பட அருளியபடி. **மால்விடை**-திருமாலாகிய விடை; பெரிய விடை. **(11) சம்பந்தன் அடிஞானம்**- சம்பந்தனுற் சொல்லப்பட்ட திருவடி ஞானத்தை.

தலவிசேடம்:—**திருவடுகூர்** - நடுநாட்டில் பாடல் பெற்றனவற்றுள் 16-வது பதி. வடு பூசித்த பதி என்பது தலப் பெயர்க்காரணம்; **வடு** - வைரவரைக் குறித்தது. இப்போது ஆண்டார் கோயில் என வழங்கப்படும். சுவாமி **வடுகூர் நாதர்**; வடுகூரடிகள் என்பது பதிகம். அம்மை - **வடுவகிர்க்கண்ணியம்மை**; பதிகம் 1.

இது கண்டமங்கலம் என்று வழங்கும் சின்னபாபு சமுத்திரம் நிலையத்தி னின்றும் மட்சாலை வழி மேற்கே இரண்டு நாழிகையளவில் அடையத்தக்கது; திருத்துறை யூரினின்றும் மட்சாலை வழி வடகிழக்கில் ஒரு நாழிகை யளவிலும் அடையலாம்.

2862. (இ-ள்) வக்கரை...அமருநாள் - திருவக்கரையில் வீற்றிருந்தருளிய இறைவரை வணங்கி அப்பதியினில் விரும்பி எழுந்தருளியிருந்த நாட்களிலே; அருளாலே ......மீண்டு - திருவருட் குறிப்பினுலே செவ்வானம் போன்ற சடையினையுடைய இறைவரது

2862. **வக்க** ரைப்பெரு மான்றனே வணங்கியங் **கம**ருநா ளருளாலே
செக்கர் மேனியா **ரிரும்பைமா காளமுஞ் சென்றுதாழ்ந் துடன்மீண்டு**
மிக்க சீர்வள **ரதிகைவீ ரட்டமு** மேவுவார் தம்முன்பு
தொக்க மெய்த்திருத் தொண்டர்வந் தெதிர்கொளத் தொழுதெழுந்தணேவுற்றூர். 964

திருவிரும்பைமாகாளத்தையும் போய் வணங்கி உடனே திரும்பி; மிக்க...அணேவுற்றூர் - மிகுந்த சிறப்புக்களே வளரச் செய்கின்ற திருவதிகை வீரட்டானத்தைச் சென்று சேர்பவராகிய பிள்ளேயார் தம்முன்னர்க் கூடிய உண்மைத் திருத்தொண்டர்கள் வந்து எதிர்கொளத் தொழுது எழுந்து அங்குச் சேரலுற்றனர்.

(வி-ரை) வக்கரை - அமருநாள் - என்றதனுல் அப்பதியினிற் சில நாட்கள் தங்கியருளினூர்கள் என்பதும், **இரும்பை மாகாளமும்...உடன் மீண்டு** - என்றதனுல் அங்கு வழிபட்டு உடனே மீண்டருளினூர் என்பதும் எச்சவும்மையினுல் இடையில் திருவரசிலியை வணங்கியதுடன் என்பதும் கருத நின்றன. இவையிரண்டும் தொண்டை நாட்டுப் பதிகள். இவையே தொண்டைநாட்டில் பிள்ளேயார் முதலில் ''கண்டு போற்றிப் பணிந்த'' *(2858)* பதிகளாம்; ஆனுல் இவற்றினின்றும் காஞ்சிபுரம் சென்று சேர்வதற்கு இடையில் திருவதிகை - திருக்கோவலூர் - திருவண்ணுமலே முதலிய பதிகள் உள்ளபடியால் அவற்றை வணங்கிச் சென்றமை மேல் உரைக்கப்படுவது காண்க. ''**அதிகை வீரட்டமும் மேவுவார்**'' என்று மேல் தொடங்கிக் கூறுவது மிக்கருத்து.

தொழுதெழுந்து-எதிர்கொண்ட தொண்டர் குழாத்தைத் தொழுது என்றும், வீரட்டமாகிய திருத்தலத்தைத் தூரத்தே தொழுது என்றும் உரைக்க நின்றது.

அணேவுற்றூர் - திருவதிகை நகரின்கண் சேர்ந்து திருக்கோயிலேச் சாரவும் சென்று அணேவாராயினர். *964*

திருவக்கரை

திருச்சிற்றம்பலம் பண் - பஞ்சமம்

கறையணி மாமிடற்றுன் கரி காடரங் காவுடையான்
பிறையணி கொன்றையினு ெனொரு பாகமும் பெண்ணமர்ந்தான்
மறையவன் றன்றலேயிற் பலி கொள்பவன் வக்கரையில்
உறைபவ னெங்கள்பிரா னெலி யார்கழ லுள்குதுமே. (1)

தண்புன லும்மரவுஞ் சடை மேலுடை யான்பிறைதோய்
வண்பொழில் சூழ்ந்தழகா ரிறை வன்னுறை வக்கரையைச்
சண்பையர் தந்தலேவன் றமிழ் ஞானசம் பந்தன்சொன்ன
பண்புனே பாடல்வல்லா ரவர் தம்விணே பற்றறுமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– இறைவன் உறையும் வக்கரையே. வெண்தலேயிற் பலிகொண்டுழல் உத்தமனுகிய அவன் கழல் உள்குதும்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:– ***(1) கரிகாடு*** - சுடுகாடு;—***(2)சந்திரசேகரன்*** - இப்பதியில் இறைவரது பெயர்;—***(3)வளைத்தான்*** - வில் வளைத்ததேயன்றி அம்பு எய்யப்படவில்லை என்பது குறிப்பு; இறைஞ்சியவுடன் மூவெயிலும் அனலாய் விழ வில் வளைத்தான் – அருள் செய்யும் விரைவு குறித்தது. ''கடைதூங்கு மணியைக் கை யாலமரர், நாவா யசைத்த வொலியொலி மாறிய தில்லையப்பாற், றீயாயெரிந்து பொடியாய்க் கழிந்த திரிபுரமே'' (அரசு);—***(4) வெண்பொடி*** - திருநீறு;—***(5) தலைமகன்*** - தலைவன்;—***(6) மதி*** - மதியும்; உம்மை விரிக்க;—***(7) கான் அணவும்*** - கானில் வாழும்; இருக்கும். **தேன் அணவும்** - தேன் வண்டு பொருந்தும். **வான் அணவும்** - வானத்தை அளாவும். **ஊன் அணவும் தலை** - ஊன் கமழும்;—***(8) அருள் போற்றலும்*** - அருளையிரந்து துதித்தலும் - சாமகான மிசைத்தலும்; **நன்கு** - நாளும் வாளுமீந்த வரம்;—***(9) காதலி*** - இரதி; **சேமமே** - கணவனைப் பெறுவாய். **வாமனன்** - மால்;—***(10) பிண்டியர்*** - சமணர்; **தேடிய தேவர்** - இவர் ஆதரித்த புத்தனும் அருகனும்.

தலவிசேடம்:– திருவக்கரை-தொண்டைநாட்டின் பாடல்பெற்ற 320-வது பதி. வக்கிராசுரன் பூசித்த பதி யென்பது பதியின் பெயர்க் காரணம். இவ்வசுரன் வாழ்ந்த இடமென்றற்குப் பல அறிகுறிகள் இன்றும் நோக்கிற் காணப்படும்; மூல இலிங்கமூர்த்தி முகலிங்கம். முதல் யுகத்திலிருந்து ஒவ்வோர் யுக முடிவில் ஒவ்வோர் முகமாய்த் தோன்றலின் இப்போது மூன்று முகங்களுடன் உள்ளதென்றும், இனி நான்காவதாகிய இந்த யுகத்தின் முடிவில் மற்றொரு முகம் தோன்றுமென்றும் சொல்வர். வக்கிரனை வதைத்த பழி போகும்படி காளி பூசித்த பதி என்றும் சொல்வர். காளி கோயில் தனியாய் விளக்கமாய் உள்ளது; மூலலிங்கம் முகலிங்கமாகிய உருவத் திருமேனி தாங்கி நிற்றலின் சிவமூர்த்தம் இருபத்தைந்தனுள் ஒன்றாகிய **சந்திரசேகரர்** என்ற பெயராற் போற்றப்படுவர்; சுவாமி பெயர் பதிகத்தில் 3-வது பாட்டிற் காண்க. சுவாமி - **சந்திரசேகரர்**; அம்மை - **வடிவாம்பிகை**; பதிகம் 1.

இது புதுச்சேரி நிலையத்தினின்றும் வடமேற்கில் கற்சாலையில் 11 நாழிகையளவில் உள்ள வானூரினின்றும் மேற்கே மட்சாலைவழி 2 நாழிகையளவில் உள்ளது; (2) முண்டியம்பாக்கம் நிலையத்தினின்றும் கிழக்கே 1 நாழிகையில் கற்சாலை வழி திருப்புறவார் பனங்காட்டூரை யடைந்து கிழக்கில் மட்சாலைவழி 8 நாழிகையளவில் கூனிச்சம்பட்டையும் அதனின்று வடக்கே 1 நாழிகையில் கொடுக்கூரையும் அடைந்து அங்கு நின்றும் கிழக்கே 1/2 நாழிகையளவில் வராக நதியின் வடகரையில் அடைய உள்ளது. இது மற்றொரு வழி புதுச்சேரிச் சாலையில் இடையே திருவரசிலியும் திருஇரும்பைமாகாளமும் உள்ளன.

திருவிரும்பைமாகாளம்

திருச்சிற்றம்பலம் பண் - செவ்வழி.

மண்டுகங் கைசடை யிற்கரந் தும்மதி சூடிமான்
கொண்டகை யாற்புர மூன்றெரித் தகுழ கன்னிடம்
எண்டிசை யும்புகழ் போய்விளங் கும்மிரும் பைதனுள்
வண்டுகீ தம்முரல் பொழில்சுலாய் நின்றமா காளமே. (1)

எந்தைபெம் மானிட மெழில்கொள்சோ லையிரும் பைதனுள்
மந்த மாயபொழில் சூழ்ந்தழ காருமா காளத்தில்

அந்தமில் லாவன லாடுவா னையணி ஞானசம்
பந்தன் சொன்னதமிழ் பாடவல் லார்பழி போகுமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- இறைவனது இடம் இரும்பைதனுள் மாகாளமே.

பதிகப் பாட்டுக் குறிப்பு:—(1) மான் கொண்ட கை - மானேந்திய கை; **மான்** - மான்போன்ற அம்மை என்று கொண்டு அம்மையினது கை என்றலுமாம்; விற்ருங் கியகரம் வேனெடுங் கண்ணி வியன்கரமே'' (அரசு); **போய்** - பரவி; இசையாற் றிசைபோயது'' (சிந்தா). **இரும்பை** - நகரின் பெயர்; **மாகாளம்** - கோயிலின் பெயர்; **சுலாவுதல்** - விளங்குதல்; சுற்றுதலுமாம்;—**(2) வேதவித்து** - வேதங்களிற் கூறப்படுவது; வேதங்களை அறிந்தோன் என்றலுமாம்; ''ஓதாதே வேத முணர்ந்தாய்'' (தேவா); **கோதுவித்தல்** - குற்றம் தீர்த்தல் - போக்குதல்; **நீறெழ** - வெந்து சாம்பலாக; **ஏதவித்து** - ஏதங்களின் காரணம்; **மாதவத்தோர்** - ஆகமவிதிப்படி சிவனை வழிபடுவோர்;—**(3) கந்தம்** - மணம்;—**(4) மஞ்சில்** - மேகமண்டலத்தினுள்;—**(5) குறை வெண்மதி** - பிறை; **மதி** - மதி சூடிய;—**(6) பறைவது** - தீர்வது;—**(8) நட்டத்தோடு - ஆடுவான்** -நட்டம் - ''கூடிய விலயம் சதிபிழையாமை'' ஆடும் கூத்து. **வட்டம் சூழ்ந்து** - வலம் வந்து;—**(9) அட்ட** - மார்க்கண்டேயருயிரை வவ்விய; **மட்டு** - தேன்; மணம் என்றலுமாம்.

தலவிசேடம்:—**திருவிரும்பைமாகாளம்** - தொண்டை நாட்டின் 32-வது (கடைசி) பதி. இரும்பைப் பதியில் உள்ள மாகாளம் என்னும் கோயில்; மகாகாளர் பூசித்த காரணத்தால் மாகாளம் எனப்படும். சுவாமி - **மாகாளேசுவரர்**; அம்மை - **குயின்மொழி நாயகி**; பதிகம் 1.

இது புதுச்சேரி நிலையத்தினின்றும் வடகிழக்கே மட்சாலைவழி 8 நாழிகையளவில் அடையத் தக்கது. (இங்கு நின்றும் வடமேற்கில் மட்சாலைவழி 2 நாழிகையளவில் உள்ளது திருவரசிலி.)

திருவரசிலி

திருச்சிற்றம்பலம் பண்-பியந்தைக் காந்தாரம்

பாடல் வண்டறை கொன்றை பான்மதி பாய்புனற் கங்கை
கோடல் கூவிள மாலை மத்தமுஞ் செஞ்சடைக் குலாவி
வாடல் வெண்டலை மாலை மருவிட வல்லியந் தோண்மேல்
ஆடன் மாசுண மசைத்த வடிகளுக் கிடமர சிலியே. (1)

அல்லி நீள்வயல் சூழ்ந்த வரசிலி யடிகளைக் காழி
நல்ல ஞானசம் பந்த னற்றமிழ் பத்திவை நாளுஞ்
சொல்ல வல்லவர் தம்மைச் சூழ்ந்தம ரர்தொழு தேத்த
வல்ல வானுல கெய்தி வைகலு மகிழ்ந்திருப் பாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- ஆடல் மாசுண மசைத்தார் என்பது முதலான தன்மைகளாற் போற்றப்படும் இறைவராகிய அடிகளுக்கிடம் அரசிலியே.

2863. ஆதி தேவரங் கமர்ந்தவீ ரட்டானஞ் சென்றணை பவர்முன்னே
பூதம் பாடநின் ருடுவார் திருநடம் புலப்படும் படிகாட்ட
வேத பாரகர் பணிந்துமெய் யுணர்வுட னுருகிய விருப்போடும்
கோதி லாவிசை குலவு''குண் டைக்குறட் பூத''மென் றெடுத்தோதி; 965

பதிகப் பாட்டுக் குறிப்பு:– *(1) வண்டு பாடலறை* என்க; ***வல்லியம்*** - புலி; புலித்தோல் குறித்தது;—***(2) தேன்அவன்*** - தேன்போன்ற இனிமையுடையவன்; ***நல்...சுடர்*** - முழு - ஞானவொளி;—***(3) கதம் மிக*** - ஆரவாரிக்க; ***கதம்*** - கோபம்; கோபம் போல்வதனைக் கோபம் என்றார்; ஒப்புமைபற்றி; ''கதமிக் கெரிகதிரின் முன்னிருள்போல்'' (போதம் - 10 - சூத்); ''எரி துள்ளினுலென'' (527); ***சங்கையாய்த் திரியாமே*** - திரியாதவாறு; ''அனுசயப்பட் டதுவிது வென் ஞுதே'' (தேவா); ''இரண்டாட்டாது'' (தேவா);—***(4) மெய்*** - உடம்பு;—***(5) அஞ்சும்*** - உவமவுருபு;—***(6) பரிய மாசுணம்*** - வாசுகி என்னும் மாநாகம்;—***(9) குறியமாண்***-வாமனன்; ***மாண்*** - பிரமசாரி;—***(10) குருளை*** - இளமை; ***குருளை எய்திய மடவார்*** - இளம் பருவமடைந்த பெண்கள்; ***திரளை*** - சோற்றுருண்டை; கவளம். ***பொருள்*** - சத்து; உண்மைப் பொருள். ***வணங்கும் அருளை நல்கும்*** - வணங்கும்படி அருள் செய்யும்; ''அவனரு ளாலே அவன்றாள் வணங்கி'' (திருவா).

தலவிசேடம்:—*திருவரசிலி* - தொண்டைநாட்டின் 31-வது பதி. இஃது ஒழிந்தியாப்பட்டு என வழங்கப்படுகின்றது. அரசமரத்தை இல்லாக-இருப் பிடமாகக்-கொண்டு இறைவர் வீற்றிருக்கும் இடம் என்பது பெயர்க்காரணம். ***அடிகளுக்கு இடம்*** அரசிலி என்ற பதிகம் இப்பொருள் தருவது. அரசமரம் கோயிலுக்கு எதிரில் உள்ளது. முதல் வழிபாடு அதற்கு நடைபெறுகின்றது. வாமதேவ முனிவர் வழிபட்ட பதி. சுவாமி - ***அரசிலி நாதர்***; அம்மை - ***பெரிய நாயகி***; தீர்த்தம் - ***அரசடித் தீர்த்தம்***; மரம் - ***அரசு***; பதிகம் 1.

இது புதுச்சேரி நிலையத்தினின்றும் வடகிழக்கில் மட்சாலையில் 8 நாழிகையளவில் உள்ள இரும்பை மாகாளத்தினின்றும் வடமேற்கே மட்சாலைவழி 2 நாழிகை யளவில் அடையத் தக்கது.

2863. (இ-ள்) ஆதி...அணைபவர் முன்னே - ஆதிதேவராகிய சிவபெருமான் அத்திருநகரினுள் விரும்பி வீற்றிருந்தருளிய திருவீரட்டானத்தினைச் சென்று அணைபவராகிய பிள்ளையார் முன்பு; பூதம்... காட்ட - பூதகணங்கள் பாடநின்றாடும் இறைவர் தமது திருநடனத்தினைக் கட்புலப்படும்படி காட்டவே; வேத பாரகர்... விருப்போடும்-வேதம் வல்ல பிள்ளையார் வணங்கி மெய்யுணர்வினுடனே மனமுருகிய விருப்பத்தினோடு; கோதிலா... எடுத்தேத்தி - குற்றமில்லாத இசையுடன் கூடிய ''குண்டைக் குறட்பூதம்'' என்று தொடங்கித் துதித்து;

(வி-ரை) *அங்கு* - அத்திருவதிகை நகரின்கண்.

வீரட்டானம் - திருக்கோயிலின் பெயர்.

அணைபவர் - முன்னே - நடம் - காட்ட - என்க. ***நடம் காட்ட*** - பிள்ளையார் திருக்கோயிலுட் சென்று காண்பதன் முன்னே அங்கணையும் வழியிடையே காணும் படி காட்ட;

2864. பரவி யேத்திய திருப்பதி கத்திசை பாடினுர், பணிந்தங்கு
விரவு மன்பொடு மகிழ்ந்தினி துறைபவர், விமலரை வணங்கிப்போய்,
அரவ நீர்ச்சடை யங்கணர் தாமகிழ்ந்துறைதிரு வாமாத்தூர்
சிரபு ரத்துவந் தருளிய திருமறைச் சிறுவர்சென் றணைவுற்ருர். 966

''எதிர்காட்சி கொடுத்தருள'' (258); ''சென்றவர் காணு முன்னே யங்கணர் கருணை கூர்ந்த வருட்டிரு நோக்க மெய்த'' (753) முதலியவை காண்க.

முன்னே நடம் புலப்படும்படி காட்டினுர் - என்பது ''ஆடும் வீரட்டானத்தே'' என்ற பதிகத்தின் மகுடத்தானும் கருதப்படும். ''வீரட்டானத்தே'' என்றதனுல் அத்திருக்கோயிலுக்குப் புறத்தே இப்பதிகம் போற்றப்பட்டதென்பதும், ''ஆடும்'' என்றதனுல் நடம் கண்ட காட்சி என்பதும் தெரிக்கப்படுதல் காண்க; இவ்வாறு முன்பே காட்டக் கண்டது பிள்ளையாரது திருவடி மறவாத உறைப்பினுல் ஆயது என்க. **முன்னே** - முன்பு என்றும், அவர் வந்து காண்பதற்கு முன் என்றும் உரைக்க நின்றது.

வேத பாரகர் - பாரம் - கரை; கர் - அடைந்தவர்; வேதத்தின் கரையை அடைந்தவர்.

மெய்யுணர்வுடன் - ஆடற் காட்சி கண்டு திளைத்து நின்ற மெய் உணர்வு மாருது.

குண்டைக் குறட்பூதம் - சில பூதகணங்கள்; இது பதிகத் தொடக்கம். ''கோடி கோடி குறட்சிறு பூதங்கள், பாடி யாடும் பரப்பது பாங்கெலாம் (16).

கோதிலாவிசை - ஆடல் கண்டு காட்டும் வகையால் கோது (மலம்) நீக்கும் தன்மை வாய்ந்த என்பதும் குறிப்பு.

வேதபாலகர் - மெய்யுருகியவன்புறு-எடுத்தேத்தி-என்பனவும் பாடங்கள். 965

2864. (இ-ள்) பரவி...பாடினுர் - போற்றித் துதித்த திருப்பதிகத்தின் இசையினைப் பாடியருளினுராகி; பணிந்தங்கு...உறைபவர் - வணங்கி அத் திருப்பதியில் பொருந்திய அன்புடனே மகிழ்ந்து இனிதாகத் தங்குபவராகிய; சிரபுரத்து...சிறுவர் - சீகாழியில்வந் தவதரித்தருளிய திருமறைக்குலத்துப் பிள்ளையார்; அரவு... திருவாமாத்தூர் - பாம்பும் நீரும் தாங்கிய சடையினையுடைய அங்கணராகிய இறைவர் மிக்க மகிழ்ச்சியுடன் எழுந்தருளிய திருவாமாத்தூரினை; சென்று அணைவுற்ருர்-போய் அணைந்தருளினர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) பாடினுராகி - உறைபவராகிய - மறைச்சிறுவர் என்று விரித்துக் கூட்டி முடிக்க; **பாடினுர்** - பாடினுராகி; முற்றெச்சம்.

அங்கு...உறைபவர் - திருவதிகை நகரில் சில நாள்கள் அன்புடன் தங்கியருளினுர் என்பது. அரவம் - ஓசையினையுடைய என்றலுமாம்.

அங்கணர் - பசுக்களுக்கு அருள் புரிந்தவர் என்ற தல வரலாற்றுச் சிறப்புக் குறிப்பு. **சிறுவர்** - உருவமும் பருவமும் குறித்தது 966

திருவதிகை வீரட்டானம்

திருச்சிற்றம்பலம் பண் - குறிஞ்சி

குண்டைக் குறட்பூதங் குழும வனலேந்திக்
கெண்டைப் பிறழ்தெண்ணீர்க் கெடில வடபக்கம்
வண்டு மருள்பாட வளர்பொன் விரிகொன்றை
விண்ட தொடையலா **னாடும்வீரட் டானத்தே.** (1)

எண்ணா ரெயிலெய்தா னிறைவ னனலேந்தி
மண்ணார் முழவதிர முதிரா மதிசூடிப்
பண்ணார் மறைபாடிப் பரம னதிகையுள்
விண்ணோர் பரவநின் றாடும்வீரட் டானத்தே. (4)

ஞாழல் கமழ்காழி யுண்ஞான சம்பந்தன்
வேழம் பொருதண்ணீ ரதிகைவீரட் டானத்துச்
சூழுங் கழலானைச் சொன்ன தமிழ்மாலை
வாழுந் துணையாக நினைவார் வினையிலரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– பூதம் பாடநின் றாடுவார் திருநடம் புலப்படும்படி முன்னே காட்டக் கண்டு ''ஆடும் வீரட்டானத்தே'' என்று பாடியது.

பதிகப் பாட்டுக் குறிப்பு:– ***(1) குண்டை***-குறுகித் தடித்த; **குண்டைக் குறள்** - மிகக் குறிய. **குழுமுதல்**-கூட்டமாதல்; பூதங்கள் முன் வருதலால் அவற்றை முதலிற் கூறினார். **மருள்**-குறிஞ்சிப் பாடல் வகையுள் ஒன்று; **பொன் விரி** - பொன் போல விரிகின்ற;—***(2) அலைத்தல்*** - கீழ்ப்படுத்துதல்; உவமப் பொருளில் கூறும் மரபு; **கரும்பின்** - **இன்** உவம உருபு. இனிய என்றலுமாம்;—***(3) ஆடல்* - *நாகம்* - *அசைத்தாட*** - தன்னியல்பின் ஆடும் நாகம் நடனத்தால் அசைக்கப்பட்டு மேலும் மிகஆட; **படுதம்** - கூத்து வகை;—***(4) எண்ணார்*** - எண்ணாத பகைவர்; திரிபுரவாணர். **எயில் எய்தான்**-எரித்தான்; இத்தலத்தில் நிகழ்ந்த வீரம்; —***(5) திருநின்று***- செம்மைதர நின்று; **ஒருகை-எரி ஏந்திய** என்க; **விரியும் புனல்** - முன் ''ஆயிரமா முகத்தினோடு வானிற் றோன்றும்'' கங்கை; சடையுட் பனிபோலச் சுருங்கிப் பின் நிலத்தில் வந்து விரியும் என்பதும் குறிப்பு;—***(8) வரை (யால்) அடர்த்து*** - என்று கூட்டுக;—***(9) நிமிர்ந்தான்***-கீழுமேலும் அறியாவண்ணம் நீண்டவன். **வெடியார்**- வெடித்த தன்மை பொருந்திய; **தலை** - கபாலம் - மண்டை ஓடு;—***(10) சுரை ஓடேந்தித் திரிதலும்-உடைவிட்டுழலுதலும்***-அமண குருமார் வழக்குக்கள்;—***(11) ஞாழல்*** - புலிநகக் கொன்றை; **வேழம் பொரு தெண்ணீர்** - யானையினையும் அலைக்கும் அளவிலும் கதியிலும் வரும் நீர்; பொருதல்-அலைத்தல்; **வேழம்** - நாணல் என்றலுமாம். இது கெடிலத்தின் தன்மை நவிற்சி; **வாழுந் துணை** - வாழச் செய்யும் துணை.

தலவிசேடம்:– திருவதிகை வீரட்டானம் - தொகுதி I-பக். 462 பார்க்க.

2865. சென்ற ணைந்துசிந் தையின்மகிழ் விருப்பொடு திகழ்திரு வாமாத்தூர்ப்
பொன்ற யங்குபூங் கொன்றையும் வன்னியும் புனைந்தவ ரடிபோற்றிக்
"**குன்ற வார்சிலை**" யெனுந்திருப் பதிகமெய் குலவிய விசைபாடி
நன்று மின்புறப் பணிந்துசெல் வார்**திருக் கோவலூர் நகர்சேர்ந்தார்.** 967

2865. (இ-ள்) சென்று அணைந்து...அடிபோற்றி - சென்று அணைந்து மனத்துள் மகிழ்ச்சிகொண்ட விருப்பத்துடனே, விளங்கும் திருஆமாத்தூரின்கண் பொன் போல விளங்கும் அழகிய கொன்றையினையும் வன்னியினையும் சூடி யெழுந்தருளிய இறைவர் திருவடிகளைத் துதித்து; "குன்றவார் சிலை"...சேர்ந்தார்- குன்றவார்சிலை என்று தொடங்கும் திருப்பதிகத்தினை மெய்ம்மை விளங்கும் இசையுடனே பாடி மிகவும் இன்பம் பொருந்த வணங்கிச் செல்பவராகிய பிள்ளையார் திருக்கோவலூர் நகரினைச் சேர்ந்தருளினர்.

(வி-ரை) பொன் தயங்கு - தயங்கு - உவமவுருபு.

பூ - அழகிய; **கொன்றைப் பூவும்** என்று கூட்டியுரைப்பினு மமையும்.

வன்னி - இத் தலமரமாதலும் குறிப்பு.

குன்றவார் சிலை எனும் - குன்றவார் சிலை என்று தொடங்கும்.

மெய்குலவிய இசை - தன்மை நவிற்சியிற் பல உண்மைகளும் புலப்படும் இயலும் இசையும் பொருந்த; பதிகப் பாட்டுக் குறிப்புப் பார்க்க.

நன்றுமின்புற - மிகவும் இன்பம் பொருந்த. **நன்றும்** - மிகுதிப்பொருள் குறித்து நின்றது; நன்மை பயக்கும் என்ற குறிப்புமாம். இக்குறிப்பில் தீமையும் அழிவும் தரக்கூடிய ஏனைய இன்பங்கள் போலன்றி நன்மையே தரும் இன்பம் உயிர்களுக்குப் பொருந்தும்படி என்க.

செல்வார்-சேர்ந்தார்-என்று கூட்டுக. **செல்வார்**-செல்வாராகிய பிள்ளையார் வினைப்பெயர்.

திருக்கோவலூர் நகர் - நடுநாட்டின் ஒரு பகுதியாகிய முனைப்பாடி நாட்டின் உட்பிரிவுகளுள் ஒன்றாகிய சேதிநாட்டின் அரசர் வாழும் தலைநகருமாதலின் அக்குறிப்புப் பெற **நகர்** என்று கூறினார்; **திரு** - என்றதனால் அஃது இறைவரது பதியாதலும் குறிப்பித்தபடி. மெய்ப்பொருணயனார் புராணத்தினுள் "சேதிநன் னாட்டு நீடு திருக்கோவலூர்" (467) என்றதன்கீழ் உரைத்தவை பார்க்க; (I-பக். 578-579). கடைச்சங்கத்துப் புலவர் பெருமான் கபிலரால் பாடப்பட்ட வனும் கடையெழு வள்ளல்களுள் ஒருவனுமாகிய மலயமான் திருமுடிக்காரி என்னும் அரசன் மலையமானாட்டிற் பெண்ணையாற்றின் கரையிற் **திருக்கோவலூரைத் தலைநகராகக்** கொண்டு அரசாண்டான் எனவரும் பத்துப் பாட்டுப் பழைய வரலாறும் காண்க.

குலவிய இசை-இப்பதிகப் பண்ணாகிய சீகாமரப் பண்ணின் சிறப்பும் குறிப்ப தென்பர்.

திருஆமாத்தூர்

திருச்சிற்றம்பலம் பண்-சீகாமரம்

குன்ற வார்சிலை நாண ராவரி வாளி கூரெரி காற்றின் மும்மதில்
வென்றவா றெங்ஙனே விடையேறும் வேதியனே
தென்ற லார்மணி மாட மாளிகை சூளி கைக்கெதிர் நீண்ட பெண்ணைமேல்
அன்றில் வந்தணையு மாமாத்தூ ரம்மானே. (1)

வாடல் வெண்டலை மாலை யார்த்தும யங்கி ருள்ளெரி யேந்தி மாநட
மாடன் மேயதென்னென் ருமாத்தூ ரம்மானைக்
கோட லுகை மரும்பு பைம்பொழிற் கொச்சை யாரிறை ஞான சம்பந்தன்
பாடல்பத் தும்வல்லார் பரலோகஞ் சேர்வாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– *ஆமாத்தூ ரம்மானே! நீ மும்மதில் வென்றவா றெங்ஙனே? கார்விடம் வெருவ வுண்டுகந்த வருளென்? என்றிவ்வாறு அவருடைய அருளிப்பாடுகள் பலவற்றையும் வினவிக் கேட்டுத் திளைத்தது.*

பதிகப் பாட்டுக் குறிப்பு:– ***(1) குன்ற வார்சிலை...எங்ஙனே*** - சிலையும் வாளியும் இத்தன்மையனவாக, வென்றவாறு எங்ஙனம் கூடிற்று? என்பது; சிலையும் வாளியும் வெற்றி தரும் நிலையில் அமைந்தில என்பது; **குன்ற வார்சிலை** - கல்லாதலின் வில்லாக வளைக்கலாகாது என்பது. **குன்ற** - என்பது குறைவுபட என்ற தொனியும் தரநின்றது; அரி - எரி - காற்று மூன்று கூருக அமைந்த அம்பு வலியிலது என்பது; இப்படைகளானன்றி உனது இச்சையினுலே வென்றனை என்பது துதியின் குறிப்பு. இவ்வாறே பின் வருவனவெல்லாம் கண்டுகொள்க. **பெண்ணை** - பனை; **தென்றலார்...அணையும்** - நகரத்தின் இயற்கை வருணனை - தன்மை நவிற்சி; இவ்வாறே மேல் வருவனவும் கண்டுகொள்க;—**(2) வெருவ** - வெருவும்படி; பம்பை-நதி; திருக்கோவலூரின் கிழக்கே அணிமையில் பெண்ணையாற்றினின்றும் பிரியும் ஆறு;—**(3) கேழல் மறுப்பு** - பன்றியின் கோடு; ''ஏன முளைக்கொம்பு'' (தேவா). மருப்பும் - அரவும் - கொன்றையும் - ஆமையு(ஓடு)ம் என்றிவற்றை; உம்மைகள் விரிக்க; **வாள் வரி ஆமை** - ஒளி பொருந்திய வரிகளையுடைய ஆமை முதுகோடு;—(4) பெண்ணைப் பாகம்வைத்து யோகமிருத்தல் என்னை என்பது; **ஏல** பொருந்த;—***(5) தொண்டர் உண்டியால் வருந்த விரங்காததென்?*** - தொண்டர்கள் விரதம்பூண் டிளைத்தல் நோக்கிக் கூறுதல்; **வாண் முகம்** - முகம்போல் விளங்கும்;—***(6) ''சோதியே சுடரே''*** (திருவா); **நன்னெறி நீதி** - ஞானநெறியின் முறைமை; ''நன்னெறியாகிய ஞானத்தைக் காட்டி'' என்றதும் காண்க; —***(7) மான்***- மான் போன்றவர்; **ஊட** - கங்கையா ளிருந்தமையால் ஊடல் கொள்ள; **பங்கயம்...அதிர்க்கும்** - உருவகம்; நாடகச் சுவைபடக் கூறியவாறு; **விண் முழவு அங்கையால் அதிர்க்கும்-விண்** - முழவோன்; **அங்கை** - ஒலியலைகள்; **முழவு**- ஒலி; **அதிர்த்தல்** - முழுக்குதல்;—***(8) நின்றடர்த்திடும்...வென்று*** - ஐம்புலனும் வென்று என்று இறைவர்பாற் கூறுதல் உபசாரம்; ''பொறிவாயி லைந்தவித்தான்'' (குறள்);—***(9) நிமிர்கின்ற வெற்றிமை தையலாளொடும் ஐயமேற் றுகத்தல்*** - பொருந்தா தென்பது;—***(10) அலர்தூற்ற - பேணநின்ற பான்மை என்?*** - ஒருகாலத்தே ஒரு வகையார் ஏசவும் ஒருவர் பேசவும் நிற்றல் ஒன்றோடொன்று ஒவ்வாத இருதன்மைகள் என்பது.

2866. **கோவ னீடிய வீரட்ட** மமர்ந்தவர் குரைகழல் பணிந்தேத்தி
ஆவி னைந்துகந் தாடுவா **ரறையணி நல்லூரை யணைந்தேத்திப்**
பாவ லர்ந்தசெந் தமிழ்கொடு **பரவுவார் பரவுசீ ரடியார்கள்**
மேவு மன்புறு மேன்மையாந் தன்மையை விளங்கிட வருள்செய்தார். 968

---

11 திருவாமாத்தூர்

திருச்சிற்றம்பலம் பண் - சீகாமரம்

துன்னம்பெய் கோவணமுந் தோலு முடையாடை
பின்னஞ் சடைமேலோர் பிள்ளை மதிசூடி
யன்னஞ்சேர் தண்கான லாமாத்தூ ரம்மான்றன்
பொன்னங் **கழல்பரவாப் பொக்கமும் பொக்கமே.** (1)

ஆட லரவசைத்த வாமாத்தூ ரம்மானைக்
கோட லிரும்புறவிற் கொச்சை வயத்தலைவன்
நாடற் கரியசீர் ஞானசம் பந்தன்றன்
பாட லிவைவல்லார்க் கில்லையாம் பாவமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– திருவாமாத்தூர் இறைவரது கழல் பரவாப் பொக்கமும் பொக்கமே; அவரைக் காணாத கண் முதலியவை தத்தம் பயன் பெறாதவையே; அவரடியவர் சார்பேயன்றி வேறு சார்பு இல்லோம்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:– பொக்கம் - பொய்; ''பொக்க மிக்கவர் பூவும்'' (தேவா);—**(2) பேயர்**-பித்தர்; பேய் கோட்பட்டவர்;—**(3) தேம்பல்** - மெலிந்து வருந்துதலுடைய; **சாம்பல்** - திருநீறு; **சாம்பலகலத்தார்** - நீறு பூசிய மார்பினையுடைய அடியவர்;—**(4) ஆணாகம்**-ஆண் பாகமாகிய உடம்பு - மார்பு என்றலுமாம்;—**(5) வேடநெறி** - திருவேடமே மெய்ப்பொருள் என்றுகொண் டொழுகுதல்;—**(7) வேறாக நில்லாத** - பிரியாது உடனாய் நிற்கின்ற;—**(9) புள்** - கருடக் கொடி; **அள்ளல்**-சேறு.

தலவிசேடம்:– **திருஆமாத்தூர்** - தொகுதி III-பக். 314 பார்க்க.

2866. (இ-ள்) கோவல் நீடிய...ஏத்தி-திருக்கோவலூரின்கண் திருவீரட்டக் கோயிலில் விரும்பி எழுந்தருளிய இறைவரின் சத்திக்கின்ற கழலணிந்த திருவடிகளை வணங்கித் துதித்து; ஆவின் ஐந்து...பரவுவார் - ஆனைந்தும் விரும்பியாடி யருள்வாராகிய இறைவரது திருவறையணிநல்லூரைச் சென்று அணைந்து துதித்துப்பாட்டுக்களாக மலர்ந்த தமிழ்ப் பதிகத்தினாற் போற்றுவாராகிய பிள்ளையார்; பரவுசீர்...அருள் செய்தார் - இறைவருடைய புகழ்களையே பரவிவாழும் சிறப்புடைய அடியார்களது பொருந்திய அன்பினால் உளதாகும் மேம்பாடாகிய தன்மையினை உலகம் அறிந்துய்யும்படி அருளிச் செய்தார்.

(வி-ரை) கோவல் நீடிய வீரட்டம் - கோவல் - ஊர்ப் பெயர்; **வீரட்டம்** - கோயிலின் பெயர். இறைவரது வீரங்கள் எட்டனுள் அந்தகாசுர வதம் நிகழ்ந்த பதி. ''அந்தகன் கோவல்''.

ஆவின் ஐந்து - பஞ்சகவ்வியம் எனப்படுவன ஐந்தும் இறைவர் விரும்பியாடும் திருமஞ்சனப் பொருள். **ஆன் பெற்ற அஞ்சு** *(916)* என்றவிடத் துரைத்தவை பார்க்க.

அறையணிநல்லூரை யணைந்து - பெண்ணையாற்றின் தென்கரையில் திருக்கோவலூரும் அதற் கெதிர்ப்புறம் வடகரையில் மலையின் மேல் திருவறையணி நல்லூரும் உள்ளன. மெய்ப்பொருணாயனார் புராணப் படம் பார்க்க. **மலைமிசை வலங்கொள்வார்** - என மேல்வரும் பாட்டிற் கூறுதல் காண்க.

பரவு சீரடியார்கள்......மேன்மையாம் தன்மை - பதிக மகுடமும் கருத்தும் காண்க. ''அறையணி நல்லூ ரங்கையாற் றொழுவார்களே - பீடினுற் பெரியோர்கள் - வீடினு லுயர்ந்தார்கள்'' என்பன முதலாக வருவன பதிகக் கருத்தாக எடுத்துக் காட்டப்பட்டவாறு.

விளங்கிட - உலகம் விளங்க அறிய. *968*

திருக்கோவலூர்

திருச்சிற்றம்பலம் திருவிராகம் பண் - நட்டராகம்

படைகொள் கூற்றம் வந்துமெய்ப் பாசம் விட்ட போதின்கண்
இடைகொள் வாரெ மக்கிலை யெழுக போது நெஞ்சமே
குடைகொள் வேந்தன் மூதாதை குழகன் கோவ லூர்தனுள்
விடைய தேறுங் கொடியினுன் வீரட் டானஞ் சேர்துமே. (1)

கழியொ டுலவு கானல்சூழ் காழி ஞான சம்பந்தன்
பழிக டீரச் சொன்னசொற் பாவ நாச மாதலால்
அழிவி லீர்கொண் டேத்துமி னந்தண் கோவ லூர்தனில்
விழிகொள் பூதப் படையினுன் வீரட் டானஞ் சேர்துமே. (11)

பதிகக் குறிப்பு:—யாக்கை நிலையாமையினையும், நரை, திரை, மூப்புப், பிணி, சாக்காடு என்றிவை வந்து துன்புறுத்தும் நிலைகளையும் உலக முயற்சிகளில் மக்கள் பட்டுழலும் இழிபுகளையும் எடுத்து வற்புறுத்தி அவை தீரும் வழியாவது திருக்கோவலூரைச் சார்ந்து வழிபடுதலேயாம் என்று உபதேசித்தது. ''பழிக டீரச் சொன்னசொற் பரவநாச மாதலால்'' என்ற பதிகத் திருக்கடைக்காப்புக் காண்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு:—*(1)* காலன் உயிர்கொள்ள வருதல் உறுதி. அப்போது காலகாலரும், அந்தகாசுரனை வதைத்தவரும் ஆகிய வீரட்டரைத் தவிர வேறு துணையில்லை என்று உபதேசித்தது; 2-3-ம் பாட்டுக்கள் உலக முயற்சிகளின் இழிபும், 4 முதல் 8 வரை பாட்டுக்கள் பிணிகளின் துன்பமும் முதலியவற்றை எடுத்துக்காட்டி அவற்றினின்றும் நீங்கும் வழியை உபதேசித்தன; திருக்கடைக் காப்புப் பார்க்க. அதனுள் **பழிகள்** உடல்பற்றிய உலக வாதனைகளையும், பாவம் உயிரைப் பற்றிய மலவாதனைகளையும் குறித்தன. **மெய்ப் பாசம்** - உறுதி தவிராத காலபாசம். உடலைப் பிரிக்கும் பாசம் என்றலுமாம். **இடைகொள்வார்** - கூற்றனுக்கும் பாசம் பிணிக்கும் உயிருக்கும் இடையில் நின்று தடுக்கவல்லார்; **வேந்தன்**-உலகம் காவல் புரியும் மன்னரின் பொதுமை உணர்த்தியது போலும். ''குடைகொள் வேந்தன்'' - இது திருக்கோவலூர்ப் புராணத்திற் கூறப்பட்ட தெய்விகராஜனைக் குறிக்கலாம். இவன் முற்பிறப்பில்

பருவதராஜனு யிருந்தவன். இவன் வரலாற்றைத் தலபுராணத்திற் பரக்கக் காணலாம் (வ. சு. செ.);—**(2) கரவலாளர்** - செல்வத்தை வைத்திருந்தும் ஈயாது கரக்கும் உலோபிகள். **இரவல்** - இரத்தல் செய்யற்க; அல்லீற்று எதிர்மறை வியங்கோள். **நெஞ்சமே இரவல்** என்றது இரத்தலே மனத்தினும் கொள்ளாதே என்றதாம். **ஆழி** - வாழி என்பது ஆழி என நின்றது. ''துயரயாழி'' (5), ''குறிகொளாழி'' (10) என்பனவுமிக் கருத்து. **யாழ் செய்** - யாழ்போலப் பண் பாடும்;—**(3) அள்ளற்சேறு** - ஒருபொருட் பன்மொழி-மிகுதி குறித்தது. கொள்ள-ஆன்மாக்கள் உட்கொண்டு உய்யும் பொருட்டு; —**(4) பனைகள் உலவு** - இந்நாட்டுப் பக்கம் பனைகள் மிகுதியு முண்டு; **வினையை வென்ற வேடம்**-சிவவேடம். **வேடம்** - வெல்லுதற்குத் துணையாய் நின்ற. ''தன்னுணர வேண்டித் தனதுருவைத் தான்கொடுத்துத் தன்னுணரத் தன்னு ளிருத்தலால்'' (போதம்-12-3-வெண்பா);—**(5) உளங்கொள் போகம்** - மனம் கொள்ளத் தக்கதாய் விதிக்கப்பட்ட சிவபோகம்;—**உய்த்திடார்** - உய்த்திடாராகி; **வளம்...வயல்கள்** - பெண்ணையாற்றின் நீர்ப்பெருக்கின் வளம் குறித்தது; **விளங்கு**-மறைப்பொருளாய் விளங்கும். ''ஓங்குகோ வணப் பெருமை'' (515) என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க;—**(6) ஆடு** - குறியாடு; **வீடுகாட்டு நெறி** - சைவநெறி. ''மிகுசைவத் துறை'' (1899);—**(7) விரைகொள் சீர்** - திருநீற்றுப் பதிகம் பார்க்க;—**(8) போது** - அலரும் பருவமுள்ள அரும்பு; **போது** அலர்தற்கு உரிய காலம் என்றலுமாம்;—**(9) நீறுபட்ட** - நீறுபடிந்த;—**(10) குறிகொள்** - குறிக்கொள்வாயாக. **அவத்தம்** - பிழை; அபத்தம் என்பது வடமொழி; பயனற்றது என்றலுமாம்;—**(11) கானல்** - மணற்காடு; **பழிகள் தீரச் சொன்ன சொல் பாவநாசம்** - பதிகப் பயன்; **அழிவு** - பிறப்பு இறப்பாகிய துன்பம்.

தலவிசேடம்:- **திருக்கோவலூர்**-I - 467-ம் பாட்டின் கீழும் மெய்ப்பொருணயனார் புராணத் திறுதியிலும், III-பக். 317-லும் உரைத்தவை பார்க்க. இப்பதி மேலூர் கீழூர் என இரண்டு பகுதியாயுள்ளது.மேலூரே திருக்கோவலூர் என வழங்கப்படுகின்றது. கோயில் கீழூரில் உள்ளது; அம்மை கோயில் தனியாயுள்ளது. மேலூரில் திரிவிக்ரமப் பெருமாள் என்னும் விட்டுணு கோயில் உள்ளது.

திருஅறையணிநல்லூர்

திருச்சிற்றம்பலம் **பண்-காந்தாரம்**

பீடி னாற்பெரி யோர்களும் பேதை மைகெடத் தீதிலா
வீடி னாலுயர்ந் தார்களும் வீடி லாரிள வெண்மதி
சூடி னார்மறை பாடினார் சுடலை நீறணிந் தாரழல்
ஆடி னாரறை யணிநல்லூ ரங்கை யாற்றொழு வார்களே. (1)

கழியு லாங்கடற் கானல்சூழ் கழு மலமமர் தொல்பதிப்
பழியி லாமறை ஞானசம் பந்த னல்லதோர் பண்பினார்
மொழியி னாலறை யணிநல்லூர் முக்கண் மூர்த்திதன் றாடொழக்
கெழுவி னாரவர் தம்மொடுங் கேடில் வாழ்பதி பெறுவரே. (11)

பதிகக் குறிப்பு:- இறைவருடைய புகழ்களைப் பரவும் அடியார்களது அன்புறு மேன்மையாந் தன்மை விளங்கிட அருள்செய்தது; 2866-ல் ஆசிரியர் காட்டியருளிய படி கண்டுகொள்க.

2867. **சீரின்** மன்னிய பதிகமுன் பாடியத் திருவறை யணிநல்லூர்
வாரின் மல்கிய கொங்கையாள் பங்கர்தம் **மலைமிசை வலங்கொள்வார்**
பாரின் மல்கிய தொண்டர்க ளிமையவர் நாடொறும் பணிந்தேத்தும்
காரின் மல்கிய **சோலையண் ணாமலை யன்பர்காட் டிடக்கண்டார்.** 969

பதிகப் பாட்டுக் குறிப்பு:—(1) பீடு - பெருமை; ''மேன்மையாந் தன்மை'' *(2866)*; **பேதைமை** - அறியாமை; ஆணவ மறைப்பு. **தீதிலா வீடினால்** - வீடு பெறுந் தன்மையால். **வீடிலார்** - இறப்பிலாதவர்; இறைவன். தொழுவார்களே - பெரியோர்களும், உயர்ந்தார்களும் ஆவர் என்று கூட்டுக. 3-வது பாட்டினையும் இவ்வாறே கூட்டுக;—**(2) கால் உற**-கால் வளைத்து;—**(3) பின்பினால்** - பின்புறம்; பின்னுதலினால்; **மூவர்** - அயனரியரன் என்ற குணமூர்த்திகள்; **அன்பினால்** ''அன்புறு மேன்மை'' (2866);—**(4) பரவுவார்**-''பரவு சீர்'' (2866);—**(5) பாயினாய்**-பாய்ந்து உதைத்தாய்;—**(6) உரை** - முன்னையது துதி; பின்னையது புகழ் என்ற பொருளில் வந்தன;—**(7) வீரம் ஆகிய**-வீரம் செய்ய எண்ணிய; இங்குக் குறித்தது யானையுரித்த வீரம்; **வாரம்**-அன்பு;—**(9) தேறி யின்புறில்-நோயிலார் - தீதிலார்; பின் செலார்** - என்று கூட்டுக. **அலங்காரமாம்** - தவமாம். ''செய்தனவே தவமாக்கும்'' (திருவா); ''ஞானநிட்டை யுடையோர்க்கு நன்மையொடு தீமையிலை'' (சித்தி - 8-32) **சைவனார்** - சிவனார்; ''ஐயாறதனிற் சைவனாகியும்'' (திருவா);—**(10) வாக்கியம்**-வேதநூல் விதிகள்; **குறையுடையீரேல்** - குறைந்தடைந்தீராகில்; குறைசொல்லிப் புகலடைந்தால்.

தலவிசேடம்:—**திருவறையணி நல்லூர்**-நடுநாட்டில் பாடல்பெற்ற பதிகளுள் 12-வது பதி; தம் வனவாசத்தின்போது பாண்டவர்கள் கண்ட ஐந்து அறைகளால் அலங்கரிக்கப்பட்ட நல்லூர் என்ற காரணத்தால் இப்பெயர் பெற்றது; அறைகண்டநல்லூர் எனவும் வழங்குவது; இக்கோயில் திருக்கோவலூருக்கு எதிரில் பெண்ணையாற்றின் வடகரையில் மலைமேல் உள்ளது; மேற்குப்பார்த்த சந்நிதி; *சுவாமி-**அறையணிநாதர்**; அம்மை-**அருணையகி**; தீர்த்தம்-**பெண்ணையாறு**; பதிகம் 1.

இது விழுப்புரம் - காட்பாடிக் கிளையில் திருக்கோவலூர் நிலையத்தினின்றும் வடக்கே ¼ நாழிகையளவில் பெண்ணையாற்றின் வடகரையில் உள்ளது.

2867. (இ-ள்) சீரின்...பாடி - சிறப்பினால் நிலைபெற்ற திருப்பதிகத்தினைப் பாடி; அத்திருவறையணிநல்லூர்...வலங்கொள்வார் - அந்தத் திருவறையணிநல்லூரில் வாரணிந்த கொங்கையினையுடைய அம்மை பங்கராகிய இறைவரது திருமலையின் மேல் வலம் வருபவராகிய பிள்ளையார்; பாரின்...அண்ணாமலை - இந்த உலகில் மிகுந்த தொண்டர்களும் தேவர்களும் நாள்தோறும் பணிந்து துதிக்கின்ற மேகங்கள் தவழ்தற்கிடமாகிய சோலைகள் சூழ்ந்த திருவண்ணாமலையினை; அன்பர் காட்டிடக் கண்டார் - அன்பர்கள் காட்டியிடக் கண்டருளினர்.

(வி-ரை) மலைமிசை வலங்கொள்வார் - திருவறையணிநல்லூர் திருக்கோயில் மலையின்மேல் இருத்தலால் மலையின்மேல் வலங்கொண்டருளினர்; **வலங்கொள்வார்** - வினைப்பெயர். **வலங்கொள்வார் - கண்டார்** - என்று கூட்டுக.

★இம்மலையின் மேலிருந்து பார்த்தால் திருவண்ணாமலைச் சிகரம் தரிசிக்கலாம்; 2867 பார்க்க.

வேறு

2868. அண்ணா மலையங் கமரர்பிரான் வடிவு போன்று தோன்றுதலுங்
கண்ணாற் பருகிக் கைதொழுது கலந்து போற்றுங் காதலினால்
"உண்ணா முலை"யா ளெனும்பதிகம் பாடித் தொண்ட ருடன்போந்து
தெண்ணீர் முடியார் **திருவண்ணா மலையைச் சென்று சேர்வுற்றார்.** 970

தொண்டர்கள் இமையவர்-எண்ணும்மை விரிக்க. ***பாரின் மல்கிய*** என்றதனை இரண்டிடத்திலும் கூட்டுக. பாரிடந்தும் விண்பறந்தும் பெருந் தேவர்களாகிய அரியும் அயனும் காணமாட்டாது இளைத்து நிற்க, இறைவர் அவர்கள் கண்டு வழி பட இலிங்கவடிவுடன் அங்கு முளைத்து நிற்றலின் அவ்விருவரும் அவருள்ளிட்ட ஏனைத்தேவர்களும் வந்து இங்கே பாரின் மல்கி நாடோறும் வழிபட்டு நிற்கின்றனர் என்பது. தேவரறியாத தேவதேவர் மானிட ருய்யவேண்டி இங்கு முளைத்தெழுந்து காண எளியராய் நிற்றலின் பாரின் மல்கிய தொண்டர்களும் நாடொறும் அத்தேவருடன் தாமும் பணிந்தேத்துகின்றனர் என்பது; இக்கருத்தை "உரக ரருந்தவ ருவண நெடுங்கொடியோர், பரவி நெருங்கலி லுலகநி றைந்தவர் பணியு மிடங்கிடையா, தரகர வென்பது கடலின் முழக்கிய தருணை வளம்பதியே" என்று சுவை படப் போற்றினர் அருணாசல புராணக்காரர்.

காரின் மல்கிய சோலை - சோலைகளின் வளத்தினால் மேகங்கள் வந்து தவழ்கின்றன என்றும், மேகமண்டலம் வரையும் சோலைகள் செழித்துயர்ந்து வளர்ந்து நின்றன என்றும் உரைக்கநின்றது. ***காரின்***-கார்போல நிழல் செய்து என்றலுமாம்.

அன்பர் காட்டிடக் கண்டார் - இவ்வாறு இறைவரது தன்மை கூறிச் சுட்டிக் காட்டுதலே அன்பர் செய்கை என்க. இவ்வாறு முன்னர்ப் பிள்ளையார் திருநனிப் பள்ளி, திருவாலவாய் கண்டருளியதுவும், இனித் திருக்காளத்தி காண்பதுவும் கண்டுகொள்க. 969

2868. (இ-ள்) அண்ணாமலை...தோன்றுதலும்-திருவண்ணாமலை அவ்விடத்தினின்று காணும் காட்சி தேவதேவராகிய சிவபெருமானது திருவடிவம்போலத் தோன்றுதலும்; கண்ணாற் பருகி...பாடி - கண்களால் ஆரக்கண்டு பருகுதல்போல நுகர்ந்து கைகளாற் றொழுது கலந்து, போற்றுகின்ற பெருவிருப்பினாலே "உண்ணாமுலை யுமையாள்" என்று தொடங்கும் திருப்பதிகத்தினைப் பாடியருளி; தொண்டருடன் போந்து...சேர்வுற்றார்-தொண்டர்களுடனே போய்த் தெளிந்த நீரினைத் தலையிற் சூடியவராகிய இறைவரது திருவண்ணாமலையினைச் சென்று சேர்ந்தருளினர்.

(வி-ரை) அண்ணாமலை...தோன்றுதலும் - அரியும் அயனும் காணாவண்ணம் வானமும் நிலமுங் கடந்த பேரொளியுடைய அழற்றூணாகி நின்ற இறைவர் அத்திருவடிவத்தினையே இம்மண்ணுலகத்தவர்கள் காணும் வண்ணம் இம்மலையாகக் குறுகிய வடிவமாகக் கொண்டருளினர் என்பது வரலாறாதலின் அங்குநின்றும் கண்டபோது பிள்ளையாருக்கு அம்மலை இறைவரது வடிவேபோலக் காட்சிப் பட்டது என்றார்; ஏனையுலகத்தவர் மண்ணும் கல்லும் குவிந்ததொரு குவியலாகக் காண்பர்; ஆனால் ஞானிகள் இம்மலை தன்மையால் இறைவரேயாகக்

காண்பர். பிள்ளையாரோ, அதனைத் தன்மையால் மட்டுமன்றி வடிவத்தாலும் இறைவர் எனக் கண்டருளினர். ''தழலாய், மலர்ந்த பேரொளி மீமிசை சுருங்கியே வந்தோர், விலங்கலாகிய துலகெலாம் பரவியே வியப்ப'' (கந்த - அடிமுடிதேடு படலம்-94).

அங்குத் தோன்றுதலாவது-திருவண்ணுமலையைச் சுற்றி வலம்வரும் பேறு பெற்ற அன்பர்கள் இந்நாளிலும் அதன் காட்சியைப் பல பகுதிகளில் மாதொரு பாகர் - உமாமகேசுவரர்-சோமாஸ் கந்தர் என்று பலவாறு இறைவரது திருவடிவமாகக் காண்பர்; திருவறையணிநல்லூர் மலையினின்றும் காண்போர்க்கு அது சிவபெருமானது இலிங்கத்திருமேனிபோன்று விளங்கும் நிலை காணப்படுதல்.

கண்ணுற் பருகி-காட்சி வாயிலாக நுகர்ந்து பெற்ற ஆரா இன்பம் வாயின்வழி உண்டு பெற்ற இன்பம்போலத் தேக்கி. ''இரண்டு கண்ணுலு மம்பொற் புற்றி னிடை யெழுந்த, செழுந்தண் பவளச் சிவக்கொழுந்தி னருளைப் பருகித் திளைக்கின்ருர்'' (ஏயர்-311); ''பருகாவின் னமுதத்தைக் கண்களாற் பருகுதற்கு'' (மேற்படி-308); ''என்பொன் மணியை யிறைவனை யீசனைத், தின்பன் கடிப்பன் றிருத்துவன்'' (திருமந்-9-32); ''கரும்புந் தேனும் கலந்ததோர் காயத்தி, லரும்புங் கந்தமு மாகிய வானந்தம்'' (மேற்படி 328).

கலந்து - இங்குநின்று கண்ட காட்சியில் அங்குச் சென்ருற்போலவே மன வொருமைப்பாடு பெற்று; கண்களின் செயலும் கைகளின் செயலும் முன் கூறினுர்; இவற்றின் மூலம் கண்டு இயக்கிய மனம் இவற்ருேடு அமையாது முழுதும் அங்குக் கலந்தது என மனத்தின் ெருழில் இதனுற் கூறப்பட்டது.

போற்றும் காதலினுற் - பாடி - கண்ணும் கையும் மனமும் தொழிற்பட, வாக்கின் ெருழிலும் பயனும் பெறக் காட்டும் பெருவிருப்பத்தினுலே பதிகம் பாடினுர் என்பது.

உண்ணுமுலையா ளெனும் - ''உண்ணுமுலை உமையாள்'' என்று தொடங்கும்.

தெள் நீர் - நீர்ப் பெருக்கினைச் சடையிற்றேக்கிச் சிறிதாக விடுதலிற் றெளிந்ததுபோலும் என்பது குறிப்பு; தெளிவிக்கும் நீர் என்று பிறவினையாக்கி உரைத்தலுமாம்; தெளிவித்தலாவது தோய்ந்தாரது மலத்தைக் கழுவித் தூய்மை செய்தலால் அறியாமை போக்கி அறிவு விளங்கச் செய்தல்; **தெள்ளுதல்** - தெறித்தல் - இடப்பெயர்ச்சி செய்தல் என்று கொண்டு துன்பநீக்கும் நீர் என்றலுமாம்; ''உள்ளத் துறுதுய ரொன்ெருழியா துள்ளவெல்லாந், தெள்ளுங் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ (திருவா). இப்பொருளில் பகீரதனுக்காக இறைவர் கங்கையைத் தாங்கி விடுத்த வரலாற்றுக் குறிப்பும் காண்க.

தெண்ணீர் முடியார் - மலை - நீர்கொண்ட மேகமண்டலத்தைச் சிகரங்கள் பொருந்தும் என உயர்ச்சிபற்றிய குறிப்பும் காண்க. **நீர்** - நீர் பொருந்திய மேக மண்டலம். **ஆர்தல்** - பொருந்துதல். **முடி** - சிகரம்; உச்சி. ''மண்ணுர்ந்தன அருவித் திரள்'' என்றும், ''விடுகொம் பொடுதீண்டித் தூமா மழை...துளிசிதற'' என்றும், மழை தவழும் பொழில்'' என்று மிவ்வாறுவரும் பதிகமும் இக்குறிப்புத்தருவது காண்க. 970

I திருவண்ணுமலை

திருச்சிற்றம்பலம் பண் - நட்டபாடை

உண்ணுமுலை யுமையாளொடு முடஞுகிய வொருவன்
பெண்ணுகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணுர்ந்தன வருவித்திரண் மழலைம்முழ வதிரு
மண்ணுமலை தொழுவார்வினை வழுவாவண மறுமே. (1)

வெம்புந்திய கதிரோனொளி விலகும்விரி சாரல்
அம்புந்திமூ வெயிலெய்தவ னண்ணுமலை யதனைக்
கொம்புந்துவ குயிலாலுவ குளிர்காழியுண் ஞான
சம்பந்தன தமிழ்வல்லவ ரடிபேணுத றவமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- பெருமான்மலை அண்ணுமலையினைத் தொழுவார்களுடைய வினைமுழுதும் அறும் என்று மலையினைத் தூரத்தே கண்டு போற்றியது.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- ***(1) உண்ணுமுலை உமையாள்*** -முருகப்பெருமானும் வாய்வைத்து உண்ணுத முலை; பரம் அபரம் எனும் ஞானங்களிரண்டுமே உருவாகக் கூறுதல் மரபு; ஒருவணுயிருந்து உலகுக்கருளும் நினைவுகொள்ளச், சிவமும் சத்தியு முடனுகிய உருக்கொண்டு, பின் அருள்தரச் சத்தி வேருகி வரும் நிலைகள் குறிப்பு. **பெண் ஆகிய** - சத்தி வேருகிய; அருவிகள் திரண்டு சலசல ஓசையுடன் தரையில் வீழ்வன மழலை முழவுபோலச் சத்திக்கின்றன. **முழவுபோல அதிரும்** என்று உவம உருபு விரிக்க; **அதிர்தல்** - சத்தித்தல்; **வழுவா வண்ணம்** - ''ஒன்றொழியா வண்ணமெல்லாம்'' (திருவா); உறுதியாக என்றலுமாம்; —**(2) தேமாங்கனி...சிதற** - ஆண் குரங்குகள் கொம்புகளைக் கீழ் இழுத்துத், தொங்கும் மாங்கனியைக், கொள்வதால் பின்னர் அக்கொம்புகள் மேலேசென்று மேகங்களைக் கீற அவற்றினின்று நீர்ச் சிறுதுளிகள் சிதறி வீழ; ''மலர்பறிப்பத் தாழவிடு கொம்புதைப்ப'' (தேவா); **தேமா** - மாவின் சிறந்த ஒருவகை; **தேம்**- இனிமையுடைய; **தூமாமழை** - மேகத்தாற் றூய நீராவியாய்க் கொள்ளப்பட்டதாதல் குறிப்பு; **தீண்டி** - தீண்டுதலால்; **துறுவல்** - செறிவு; சோலைகளின் திரட்சி. **ஆமா**-காட்டுப்பசு;—***(3) மயில்*** - குறிஞ்சிக் கருப்பொருள். **கழை** - மூங்கில்; கழை முத்தங்களைச் சூல்கொண்டு முற்றி மணிகளைத் தரை நிறையச் சொரியும்; **சூலி-சூல்** கொண்டு; **ஆலி**-நீர்த்துளி; **புகழ் தொழுவாரனவே**-என்று கூட்டுக;—***(5) முரவம் படும்***-முரசு (பறை) போல ஒலிக்கும்;—***(7) கரிகாலன...எரியாடிய***- ஊழிச் சுடலை; **காலனவும் கொள்வனவும் ஆகிய கழுகு**-என்க; கழுகு- நரி-முதலியன இருத்தல் ஈமத்தின் பொதுவியல்பு;—***(8) ஒளிறு*** - விளங்கும்; **ஒளிறு அதள்**-என்க; **ஒளிறூ** - முதலிய நீட்டல்கள் செய்யுள் இசை நிரப்புதற்கண் வந்தன;—***(9) கடல்வண்ணன்-புகழோன்*** ஏனைத் தேவர்களை நோக்க இவர்களது பெருமையும் இத்தலவரலாறும் குறித்தன; **அளவா** - அளத்தலாகாத; **அழலாகிய அண்ணல்** - தல வரலாறு;—***(10) வெயில் நின்றுழல்வார்*** - சமண குருமாரின் வழக்குக்களுள் ஒன்றுபற்றிக் கூறியது; **சீவரம்** - புத்தர்களது மஞ்சட் போர்வை; **ஆரம்பர்** - வீண் ஆரவாரஞ் செய்வோர்;—***(11) வெம்பு*** - வெப்பு என்பது மெலிந்து வந்தது. **ஒளி விலகும்** -

2869. **அங்க ணணைவார் பணிந்தெழுந்து போற்றி செய்தம் மலைமீது**
தங்கு விருப்பில் வீற்றிருந்தார் தாட்டா மரைக டம்முடிமேற்
பொங்கு மார்வத் தொடும்புனைந்து புளக மலர்ந்த திருமேனி
யெங்கு மாகிக் கண்பொழியு **மின்ப வருவி பெருக்கினர்.** 971

உட்புகமாட்டாது விலகிச் செல்லும்; **உந்துவனவாகிய குயில்** என்க; **ஆலுவ** - அசைவன; தாம் உந்திய கொம்புகளுடன் தாமும் அசைவன.

தலவிசேடம்:– திருவண்ணுமலை - III- பக். 700 பார்க்க.

2869. (இ-ள்) அங்கண்...போற்றி செய்து-அங்கு (அண்ணுமலையின்கண்) அணை பவராகிய பிள்ளையார் நிலமுற வணங்கி எழுந்து துதித்து; அம்மலைமீது...தாள் தாமரைகள் - அந்த மலையின்மேல் தங்கும் விருப்பினுடன் எழுந்தருளியுள்ள இறைவருடைய திருவடிகளாகிய தாமரைகளை; தம் முடிமேல்...புனைந்து - தமது திருமுடியின் மேலே மேன்மேல் எழுகின்ற ஆசையினுடன் சூடிக்கொண்டு; புளகம்...எங்குமாகி - திருமேனி முழுதும் மயிர்ப்புளகம் வரக்கொண்டு; கண்...பெருக்கினர் - கண்களிற் பொழிகின்ற ஆனந்தக்கண்ணீரை அருவிபோலப் பெருக்கினர்.

(வி - ரை) பணிந்தெழுந்து - மலையினைச் சேர்ந்தவுடன் அதனடியில் நிலமுறப் பணிந்து எழுந்து.

அம்மலைமீது...வீற்றிருந்தார் - திருஅண்ணுமலை நாதர் அருணசலேசுவரர்; **தங்கு விருப்பில் வீற்றிருத்த**லாவது என்றும் நீங்காது வெளிப்பட எழுந்தருளியிருத்தல்.

தாள் தாமரைகள்-முடிமேல்-புனைந்து - திருவடிகளில் தலைசாய்த்து நிலமுற வணங்கி; அடித்தாமரை மலரைத் தலையிற் சூடி என்ற நயமும் காண்க. தாமரை அந்தணர்க்குரிய மாலையாதலும் குறிப்பு. மலையை வணங்கி மேற்சென்று இறைவரை வணங்கினர் என்க.

புளகம்...ஆகி. புளகம் - மயிர்க்கூச்செறிதல்; இம்மெய்ப்பாடு உடல்முழுதும் உளதாதல் அன்புநிறைவின் குறி.

கண் பொழியும் இன்ப அருவி - ஆனந்தக்கண்ணீர் அருவிபோலக் கண்களில் பெருக வருதல் பேரின்ப அன்பின் மிகுதியினல் உளதாவது; மிகுதியும் இடையருத தன்மையும் பற்றி **அருவி** என்றர். உபசாரம். 971

2870. (இ-ள்) ஆதிமூர்த்தி...அமரும் நாள் - ஆதிமுதல்வராகிய திரு அண்ணுமலையாருடைய திருவடிகளை வணங்கி அத்திருப்பதியில் இனிதாக விரும்பி எழுந்தருளி யிருக்கும் நாள்களில்; பூதநாதரவர் தம்மை...போற்றிசைத்து - பூதங்களுக்கு நாயகராகிய அவரைப் ''பூவார் மலர்'' என்று தொடங்கும் திருப்பதிகத்தினுற் போற்றித் துதித்து; காதலால்...வைகி - ஆசையினுல் அந்தத் திருமலையின்கண் சில நாட்கள் தங்கியருளி; வேத கீதர்...விருப்புறுவார்- வேதகீதராகிய இறைவருடைய திருப்பதிகள் பிறவற்றையும் சென்று பணியும் விருப்பத்தை மேற்கொள்வாராகி.

2870. ஆதி மூர்த்தி கழல்வணங்கி யங்க ணினிதி னமருநாட்
பூத நாத ரவர்தம்மைப் "பூவார் மல"ராற் போற்றிசைத்துக்,
காத லாலத் திருமலையிற் சிலநாள் வைகிக் கமழ்கொன்றை
வேத கீதர் திருப்பதிகள் பிறவும் பணியும் விருப்புறுவார்; 972

(வி-ரை) ஆதி மூர்த்தி - எல்லார்க்கு முதல்வராகிய சிவபெருமான்; அநாதியாயுள்ளவராதலின் ஆதிமூர்த்தி என்றார்.

பூதநாதர்-சிவ பூதகணங்களின் இறைவர். **பூதம்** - உயிர்கள் என்றுகொண்டு உயிர்களுக்கெல்லாம் உயிர்க்குயிராகிய நாயகர் என்றலுமாம்.

பூவார் மலரால் - பூவார் மலர் என்று தொடங்கும் பதிகத்தால்; இரட்டுற மொழிதலால் அழகிய மலர்களாலே என்றுரைக்கவும் நின்ற நயம் காண்க; "தீந் தமிழின் றொடைமாலைத் திருப்பதிகச் '**சொன்மாலை**' பாடினார்" (1476); "இதற் கொன்' றுண்டால்" (1815) என்பன போலக் காண்க.

காதலாலத் திருமலையிற் சிலநாள் வைகி - தொண்டைநாடு சென்று அங்குக் கோயில்களைப் பணிய எண்ணி வழிக்கொண்ட பிள்ளையார் இடையிற் கண்ட பதிகளில் வணங்கிச் செல்லுதல் மரபேயன்றிச் சில நாள்கள் தங்கிவிடுதல் கூடாமையின் இங்குச் சிலநாள்கள் வைகிய செயல் **காதலா**லாகியது என்பதாம். "தங்கு பிறப்பே வீட்டினுக்கு மேலாம் பெருமை சாதித்தார்" (1577); "பணிந்து பரவிப் பணிசெய்தார்" (1578) என்ற அரசுகளது வரலாறும், திருவாதவூரடிகள் இங்குப் பலநாட் டங்கியிருந்த வரலாறும் இங்கு நினைவுகூர்தற்பாலன. தலப் பெருமை சிந்திக்க.

வேதகீதர் - வேதமாகிய கீதத்தைச் சொன்னவர் என்றும், அதனாற் பேசப்படும் பொருளாவார் என்றும் உரைக்க நின்றது. வேதம் சுரங்களின் நிறைவு கொண்டமையால் கீதம் எனப்பட்டது.

பதிகள் பிறவும்-தொண்டைநாடும், அதனுட் கச்சி நகரும் சாருமுன் இடைப்பட்ட பதிகள்.

பணிய விரும்புவார்—என்பதும் பாடம். 972

2871. (இ-ள்) மங்கை பாகர்...போந்து - அம்மையை ஒரு பங்கிலுடைய இறைவரது திருவருளினாலே வணங்கி விடைபெற்றுச் சென்று; வடதிசையில்... பணிந்து - வடதிசையில் சிவந்த கண்ணுடைய விடையினையுடையவராகிய இறைவருடைய பதிகள் பலவற்றையும் வணங்கிப் போய்; புகலிச் செம்மலார்... கடந்து - சீகாழித் தலைவராகிய பிள்ளையார் பெரிய மலைகளையும் காடுகள் பலவற்றையும் கடந்து; தொண்டைத் திருநாட்டில்...சேர்வுற்றார் - திருத்தொண்டை நன்னாட்டிலே சந்திரனைத் தலையிற் சூடிய இறைவர் இனிதாக விரும்பி எழுந்தருளியிருக்கும் திருவோத்தூரைச் சேர்ந்தருளினர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி - ரை) திருவருளால் வணங்கிப் போந்து - திருவருள் விடைபெற்றுப் போய்; மேல்

2871. மங்கை பாகர் திருவருளால் வணங்கிப் போந்து **வடதிசையிற்**
செங்கண் **விடையார் பதிபலவும் பணிந்து**, புகலிச் செம்மலார்
துங்க **வரைகள் கான்பலவுங் கடந்து**, தொண்டைத் திருநாட்டிற்
றிங்கண் முடியா ரினிதமருந் **திருவோத் தூரைச்** சேர்வுற்றார். 973

தொண்டைநாட்டில் நடைபெற உள்ள அற்புத அருட்செயல்கள் நிகழ்தற் பொருட்டுச் செலவு நேர்தலால் **அருளால் வணங்கி** என்றார்.

வடதிசையில்-பதி பலவும் பணிந்து-திருவண்ணாமலையினின்றும் தொண்டை நாட்டிற் சார்ந்து காஞ்சிபுரம் சேர்தல் பிள்ளையாரது திருவுள்ளக் குறிப்பாதலின் அங்குநின்றும் வடதிசையிற் செல்வார் இடையிற் கண்ட பதி பலவும் பணிந்து சென்றனர் என்பது.

வடதிசையில்-வடகிழக்கு நோக்கிச் செல்கின்றாராதலின் வடக்கில் என்னாது வடதிசையில் என்றார்; ஆயினும் அங்குநின்று செல்லும் சாலைத் தொடக்கத்தில் நெடுந்தூரம் போளூர் வரை வடக்கு நோக்கியே சென்றபின்னரே ஆரணி வழியாய் வடகிழக்கில் செல்கின்றமையும் குறிக்க.

பதி பலவும் - இவை திருத்தெள்ளாறு, திருவெண்குன்றம், புரிசைநாட்டுப் புரிசை முதலாயின என்பது கருதப்படும்.

துங்க வரைகள் கான் பலவும் கடந்து - இவை செஞ்சிமலை, நெடுங்குன்றம், சவ்வாது மலைத்தொடர்பாய்ச் சிதறிய குன்றுகள் முதலாயினவும், நடுநாடும் தொண்டைநாடும் சந்திப்பான நிலப் பரப்பாகிய இடத்தில் உள்ள காடும் மலையும் கலந்து பரந்தவைகளும் ஆம். பல்குன்றம், இளங்காடு, திண்டிவனம், புலிவனம், புறவார் பனங்காட்டூர் முதலிய காரணக் குறிப்புடன் வரும் ஊர்ப்பெயர்களையும் கருதுக. **துங்க வரை** - பெரிய மலைகள். இவைகள் பலவற்றை இடமாகக் கொண்டு முன்னாளில் அரசர் தம் கோட்டைகளை அமைத்து நாடு காவல் புரிந்த நிலை நாட்டுச் சரிதங்களால் அறியப்படும். *973*

II திருவண்ணாமலை

திருச்சிற்றம்பலம் பண் - தக்கேசி

பூவார் மலர்கொண் டடியார் தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்க ளெரித்த வன்று மூவர்க் கருள் செய்தார்
தூமா மழைநின் றதிர வெருவித் தொறுவின் னிரையோடும்
ஆமாம் பிணைவந் தணையுஞ் சார லண்ணா மலையாரே. (1)

ஞானத் திரளாய் நின்ற பெருமா **னல்ல வடியார்மேல்**
ஊனத் திரளை நீக்கு மதுவு முண்மைப் பொருள்போலும்
ஏனத் திரளோ டினமான் கரடி யிழியு மிரவின்கண்
ஆனைத் திரள்வந் தணையுஞ் சார லண்ணா மலையாரே. (2)

அல்லா டரவ மியங்குஞ் சார லண்ணா மலையாரை
நல்லார் பரவப் படுவான் காழி ஞான சம்பந்தன்

[ஆண்பனை பெண் பனையாக்கிய அற்புதம்]

2872. **தேவர் முனிவர்க் கோத்தளித்தார் திருவோத் தூரிற்** றிருத்தொண்டர்
தாவில் சண்பைத் தமிழ்விரகர் தாமங் கணையக் களிசிறந்து
மேவுங் கதலி தோரணங்கள் விளக்கு நிரைத்து நிறைகுடமும்
பூவும் பொரியுஞ் சுண்ணமுமுன் கொண்டு போற்றியெதிர்கொண்டார். 974

சொல்லான் மலிந்த பாட லான பத்து மிவைகற்று
வல்லா ரெல்லாம் வானோர் வணங்க மன்னி வாழ்வாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– குறிஞ்சித்திணை பற்றிய நிலைகள் பலவும் தமிழ்நலம் பெறச் சுவைபட எடுத்துக் கூறி இத்தகைய திருவண்ணமலையில் எழுந்தருளிய இறைவர் அடியாரும் வானோரும் வழிபட விளக்கமாக இருந்து அடியார்க்கருளி நன்மை தரும் பெருமை உண்மைப்பொருள் என்றதாம்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:– *(1)* பூ - அழகு; மண்ணுலகத்தவரும் விண்ணவரும் கூடி வணங்குதல்பற்றி முன் உரைத்தவை பார்க்க; **மூவார்** - கேடில்லா வரம் பெற்ற அசுரர்; **மூவர்** - முப்புரங்களில் வாழ்ந்த மூவர். **தொறு** - பசுக் கூட்டம்; மழை - மேகம்; **ஆமாம்பிணை வெருவித் தொறுவின் நிரையோடும் அணையும்** என்க; **வெருவி** - அஞ்சி; அச்சத்தால் தன் இனமல்லாவிடினும் ஒருசார் ஒப்புமை பற்றிப் பசுக் கூட்டத்துடன் காட்டுப்பசுவும் வரும் என்பது; பின்னிரண்டடிகள் குறிஞ்சியியல் புணர்த்தின. மேல் வருவன பலவும் இவ்வாறே காண்க; இவை தமிழ் இலக்கணம் பற்றியனவாதலால் **சொல்லான் மலிந்த *(11)*** என்பதும் காண்க. **(சொல்**-தமிழியல்);—***(2)* அடக்கும் அதுவும் நன்மைப்பொருள்**-அன்று தேவர்க் கருளியதன்றி இன்று காண்பார்க்கும் அருள் புலப்பட நின்று நலம் செய்தல் குறிப்பு; ***—(3)*** **உண்மைப் பொருள்** - மெய்க்கண்ட ஞானநூல்களின் முடிந்த உண்மை இதுவேயாகும்; **ஊனத் திரள்** - மலம்; **ஏனத்திரள் - இனமான் ஆனைத்திரள்** - இச்சாதிகள் இனமாய்த் திரளாகக் கூடிவரும் இயல்புடையன. இவை குறிஞ்சிக் கருப்பொருள்கள்; இவை மலைச்சாரலில் ஒருங்கு வாழும் வாழ்க்கைத் தன்மைபற்றிய குறிப்பு;***—(4)* இழைத்த** - நல்உடை புனைந்த;***—(5)* பருவிக்-குவித்த** என்க; **பருவி** - அரித்து;***—(6)* குழல் ஊத - மேதி - திரளும்** - இஃது இசையின் சத்தியாலாவது; ஆனாயர் புராணம் பார்க்க; பார்ப்பவர்க்கு உலகியலில் கண்கூடாகக் காண்பது;–-***(7)* வரும் மேல்வினை** - ஆகாமியம்; **பந்தித்திருந்த பாவம்** - பழவினை;***—(8)* நிறம்** - புகழ்;–-***(9)* ஆடிப்பாடி யளக்கும்** - விலை கூறுவார் செய்யும் வாணிபத்திறம்; இன்றும் வாணிபப் பலதுறைகளிலும் காணவுள்ளது;***—(10)* பிட்டர்**-பிரட்டர்; கீழ்கள். **சமணே**- உடையின்றி; **நின்றுண்ணும்** - சமண குருமார் வழக்கு; **அட்டம்-அணையும்**-அட்டமாக; குறுக்காக. 725 பார்க்க;***—(11)* அல்**-இரவு; **சொல்லான் மலிந்த** - தமிழியல் நிறைந்த.

2872. (இ-ள்) தேவர்...திருத்தொண்டர் - தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் வேதங்களை ஓதுவித்து அருளிச் செய்த இறைவரது திருவோத்தூரிலே வாழும் திருத்தொண்டர்கள்; தாவில்...அணைய - குற்றமில்லாத சீகாழியில் வந்த தமிழ் விரகராகிய பிள்ளையார் தாம் அங்கு

2873. சண்பை வேந்தர் தண்டரளச் **சிவிகை நின்று மிழிந்தருளி**
நண்பின் மிக்க சீரடியார் சூழ நம்பர் கோபுரஞ்சூழ்
விண்பின் னாக முன்னோங்கும் வியன்பொற் புரிசை வலங்கொண்டு
பண்பி னீடிப் பணிந்தெழுந்து பரமர் கோயி லுள்ளடைந்தார். 975

அணையவே; களிசிறந்து...எதிர்கொண்டார் - மிக மகிழ்ந்து பொருந்திய வாழைகளையும் தோரணங்களையும் விளக்குக்களையும் வரிசைபெற நாட்டிப், பூரண கும்பங்களையும் பூவும் பொரியும் சுண்ணமும் என்ற இவற்றையும் முன்னே ஏந்திக்கொண்டு துதிசெய்து எதிர்கொண்டார்கள்.

(வி - ரை) தேவர்...திருவோத்தூரில் -திருவோத்தூர் என்ற பெயர்க் காரணக் குறிப்புப்பட வந்த விசேடணம். **ஓத்து** - வேதம். தலவிசேடம் பார்க்க.

களிசிறந்து...எதிர்கொண்டார் - இஃது அவர்களது அன்பின் பெருமையினை விளக்குவதாம்; **நிரைத்து** - வரிசைபெற நிறுவி. **நிரை**-வரிசை. **விளக்கு நிரைத்தலாவது** - விளக்குக்களைத் தோரணம்போல வரிசைபெற ஏற்றுதல்; **முன்கொண்டு** - முன்னால் ஏந்திக்கொண்டு; **பூ-பொரி-சுண்ணம்** -இவற்றைத் தூவி எதிர்கொள்ளுதல்; மங்கலம் செய்யும் மரபு. **பொரி** - நெற்பொரி. **போற்றி** - வாழ்த்திசைத்து. இவ்வாறு சென்ற தலங்கள்தோறும் எதிர்கொண்ட பெருமை தொண்டை நாட்டுக்குச் சிறப்புரிமை.

முனிவர்க்கோத்தளித்த—என்பதும் பாடம். *974*

2873. (இ-ள்) சண்பை...இழிந்தருளி - சீகாழித் தலைவராகிய பிள்ளையார் குளிர்ந்த முத்துச் சிவிகையினின்றும் இறங்கியருளி; நண்பின்...சூழ - அன்பு மிகுந்த சிறப்புடைய அடியார்கள் தம்மைச் சூழ்ந்துவர; நம்பர்...வலங்கொண்டு - இறைவரது கோபுரத்தைச் சூழ்ந்து ஆகாயமும் கீழ்ப்படும் வண்ணம் முன்னே உயர்ந்து விளங்கும் பெரிய அழகிய திருமதிலைச் சுற்றி வலமாக வந்து; பண்பின்...அடைந்தார் - வணங்கவேண்டிய தன்மை பெருகிப் பணிந்து எழுந்து இறைவரது திருக்கோயிலினுள்ளே அடைந்தருளினர்.

(வி-ரை) சிவிகை நின்று மிழிந்தருளி - என்றது எதிர்கொண்ட அடியார்களது அன்பினை அங்கீகரித்துக்கொள்ளும் நிலை.

கோபுரம் சூழ் விண்பின்னாக முன் ஓங்கும் - கோபுரத்தைச் சூழ்ந்த உயர்ந்த மதில் முன்னால் ஓங்கி நின்றது; அஃது ஆகாயத்தையும் கீழ்ப்படுத்தி ஓங்கியது.

புரிசை வலங்கொள்ளுதல் - மதிலைச் சூழ்ந்து புறத்தே வலம் வருதல்.

பண்பின் நீடுதல் - வணக்கத்திற்குரிய இடம் காலம் முறை முதலிய எல்லாத் தன்மைகளாலும் மிகுதல். *975*

2874. (இ-ள்) வாரணத்தின்...அணைந்திறைஞ்சி - யானையின் உரியைப் போர்த்த வல்லமையுடையாரும், உமையம்மையாரின் மணவாளனும், வேதங்களினுட் பொருளாய் நின்றவரும் ஆகிய இறைவரது திருமுன்பு சேர்ந்து வணங்கி; நாரணற்கும்...காரணத்தின் வரும்

2874. **வார ணத்தி னுரிபோர்த்த மைந்த ருமையாண் மணவாளர்**
ஆர ணத்தி னுட்பொருளாய் நின்ருர் தம்மு னணைந்திறைஞ்சி
நார ணற்கும் பிரமற்கும் நண்ணற் கரிய கழல்போற்றுங்
கார ணத்தின் வருமின்பக் கண்ணீர் பொழியக் கைதொழுதார். 976

- திருமாலுக்கும் பிரமதேவர்க்கும் சேர்தற்கரிய திருவடிகளைத் துதிக்கின்றதனுல் வருகின்ற; இன்பக் கண்ணீர் பொழியக் கைதொழுதார் - இன்பமாகிய ஆனந்தக் கண்ணீர் பொழியக் கைகூப்பித் தொழு தருளினர்.

(வி-ரை) உரிபோர்த்த மைந்தர்-மைந்தர்-வல்லாளர். **மைந்து**-வல்லமை; இது சங்கார காரணராந் தன்மையினையும், **உமையாள் மணவாளர்** என்றது சிருட்டி காரணராந் தன்மையினையும், **ஆரணத்தின் உட்பொருளாய் நின்ருர்** என்றது சிருட்டியில் வரும் உயிர்களுக்கு அவ்வவற்றின் நிறத்துக்கேற்ப ஞானங் கொடுத்து அறியாமை நீக்கி உய்வதற்கு அருள்புரியும் தன்மையினையும் உணர்த்தின.

ஆரணத்தின் உட்பொருளாய் நின்ருர் - உருத்திரபசுபதி நாயனுர் புராணத்தினுரைத்தவை பார்க்க. வேதம் எவ்வெப் பக்குவமுடைய எல்லாவுயிர்க்கும் பொதுநூலாதலின் எல்லாக் கடவுளரைப்பற்றியும் எடுத்தோதிச் சிவனை உள்ளிடத்தில் வைத்துக் கூர்ந்துநோக்கி யறியுமாறு வைத்துக் கூறும் என்ற குறிப்புப்பெற வைப்பார் **ஆரணத்தின் பொருளாய்** என்னுது **உட்பொருளாய்** என்ருர்; தேவர் முனிவர்க்கு வேதம் ஓதுவித்த பதியாதலும் குறிப்பு.

ஆரணத்தி னுட்பொருளாய் நின்ருர்-சங்காரமும் சிருட்டியும் பெற வைத்தமையின் ஐந்தொழிலும் பெறுவித்தபடியாம். ''**கூத்தீர்**'' என்ற பதிகக் குறிப்புக் காண்க. அவ்வாறு வரும் உயிர்களுக்கேற்றவாறு இறைவர் மறைஞான முணர்த்த உணர்ந்து அவை வழிபட்டு உய்தி பெறுகின்றன என்றது ''பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி, யேத்தா தாரிலை யெண்ணுங்கால்'' எனும் பதிகத்தாற் பெறப்படுதலும் காண்க. இனி இப்பதியில் நிகழவுள்ள அற்புத அருட்செயலின்கண், அமணர் இழித்துரைத்த மாசறுத்து அறிவுறுத்தியருளிய சங்காரநிலைக் குறிப்பும் (2876 - 2880), ஆண்பனைகள் குறும்பையினை அருளிய புனருற்பவநிலைக் குறிப்பும் (2881), பனைகளுக்கும் பாசநீக்கமும் சிவப்பெறும் அருளிச் சைவத்தின் உட்பொருளாகிய சிவனருட் குறிப்பும் (2879 - 2881) மறையாகிய திருப்பதிகத்தின் வாய்மையினுல் விளைதல் காணவுள்ள குறிப்பும் இம்மூன்று தன்மைகளாற் பெறவைத்த நலமும் கண்டுகொள்க. ''போக்கு வரவு புரிய'' (2-ம் சூத். போதம்) என்றவிடத்து மாபாடியத்தில் உரைத்தவை இங்கு நினைவுகூர்தற்பாலன. ''பந்தம்வீடு தரும் பரமன்'' (300) என்றவிடத்துரைத்தவையும் பார்க்க. ''அந்தமாதி'' (1), ''போக்கு வரவு'' (2) என்னும் கருத்துக் கேற்ப ஈண்டும் ''வார ணத்துரி போர்த்த மைந்தனுர்'' எனச் சங்காரக் குறிப்பை முற்கூறியதும் கருதத் தக்கது. **நின்ருர்**-நிலைபெற்றவர்; (நின்ற திருத்தாண்டகம்).

கழல்போற்றும் காரணத்தின் வரும் இன்பக் கண்ணீர் - மாயாகாரியங்களின் தொடர்ச்சிபற்றியே மக்களுக்கு உலகிற் பெரும்பான்மை இன்பக்கண்ணீர் வரும்; அவ்வாறல்லாது இங்கு இறைவர் கழல்போற்றும் தொடர்புபற்றி வந்தது என்று வேறு பிரித்துக் கூறியபடி, அரியயனுக்கும் எட்டுதற்கரிய கழல் போற்றக் கிடைத்த எளிமையும் அருமையும்

2875. **தொழுது** விழுந்து பணிந்தெழுந்து சொன்மா லைகளாற் றுதிசெய்து
முழுது மாளு ரருள்பெற்றுப் போந்து வைகி முதல்வர்தமைப்
பொழுது தோறும் புக்கிறைஞ்சிப் போற்றி செய்தங் **கமர்வார்முன்**
அழுது வணங்கி யொருதொண்ட ரமணர் திறத்தொன் றறிவிப்பார்; 977

பற்றிக் கண்ணீர் வந்ததென்க. ''வழுத்தியுங் காணு மலரடி யிணைகள், வழுத்துதற் கெளிதாய்'' (திருவா - போற்றித் திருவகவல்); துன்பினாலும் கண்ணீர் வருமாதலின் அதனை நீக்க ***இன்பக்*** *கண்ணீர் என்றார்.* ***976***

2875. (இ-ள்) தொழுது...போந்து வைகி - முன் கூறியவாறு கைகள் கூப்பித் தொழுது நிலமுற விழுந்து வணங்கி எழுந்து திருப்பதிகங்களாற் றுதித்து எல்லாமாய் நின்ற இறைவரது திருவருள் பெற்றுப் புறம்போந்து எழுந்தருளியிருந்து; முதல்வர்தமை...அமர்வார் முன் - முதல்வரைக் காலங்கள்தோறும் புகுந்து வணங்கித் துதித்து அங்கே விரும்பி யிருப்பவராகிய பிள்ளையார் திரு முன்பு; அழுது... அறிவிப்பார் - தொண்டர் ஒருவர் அழுது வணங்கி நின்று அமணர்களது தன்மைபற்றி ஒரு செய்தியை அறிவிப்பாராய்;

(வி - ரை) தொழுது - முன்பாட்டிற் கூறியபடி கைதொழுது.

தொழுது...துதிசெய்து - வினையெச்சங்கள் வழிபாட்டின் பகுதிகளைத் தனித்தனி எடுத்துக்காட்டும் நயம் கண்டுகொள்க.

சொன்மாலைகளாற் றுதிசெய்து - இப்பதிகங்கள் கிடைத்தில.

அமர்வார் - விரும்பி வீற்றிருப்பவராகிய பிள்ளையார்.

அழுது - சமணர் இழித்துரைக்கும் சிவநிந்தையைக் கேட்கமாட்டாத துயரத்தால் அழுது; ஆனந்தபாஷ்யம் என்று உரைப்பாருமுண்டு.

அமணர் திறத்து ஒன்று - அமணரது தீய தன்மையினால் நிகழ்ந்ததொரு செய்தி. **திறத்து** - திறத்தால் நிகழ்ந்த.

அறிவிப்பார்-அறிவிப்பாராகி-முற்றெச்சம். **அறிவிப்பார் - புகல** என மேல் வரும் பாட்டுடன் முடிக்க.

அருள் பெற்று வைகி வணங்கி—என்பதும் பாடம். **977**

2876. (இ-ள்) அங்கை...காயாதாகக் கண்டு - அங்கையிலே நெருப்பினை ஏந்திய இறைவருக்காக அடியேன் பயிரிட்டு உளவாக்கிய பனைகள் எல்லாம் மேக மண்டலம் பொருந்த நீண்டு வளர்ந்தும் ஆண்பனைகளாகிக் காய்க்காதனவாதலைக் கண்டு; அமணர்... இழித்துரைத்தார்-அமணர்கள் ''இங்கு நீவிர் வைத்து உண்டாக்கும் பனைகள் காய்ப்பதற்கு உபாயம் உண்டோ?'' என்று மிகவும் எள்ளி நகைத்து இழிவுபடப் பேசுகின்றார்கள்; 'அருளவேண்டும்' எனப்புகல-தேவரீர் அவ்விழிவைப் போக்கப் பனைகள் காய்க்கும்படி அருள்புரிய வேண்டும் என்று சொல்ல;

2876. "**அங்கை யனலேற் றவர்க்கடியே ளுக்கும் பனைக ளானவெலாம்**
மங்கு லுறநீண் டாண்பனையாய்க் காயா தாகக் கண்டமணர்
'இங்கு நீரிட் டாக்குவன காய்த்தற் கடைவுண் டோ?'வென்று
பொங்கு நகைசெய் திழித்துரைத்தா, ரருள வேண்டு"மெனப்புகல, 978

(வி-ரை) அங்கை அனல் ஏற்றவர்-சிவபெருமான். **அங்கை**-அகங்கை என்பது அங்கை என வந்தது. "அகமுனர்ச் செவிகை வரினிடை யன கெடும்" (நன்னூல்); அழகிய கை என்றலுமாம். "அழலாட வங்கை சிவந்ததோ? வங்கை, யழகா லழல்சிவந்த வாறோ? - கழலாடப், பேயாடு கானிற் பிறங்க வனலேந்தித், தீயாடு வாயிதனைச் செப்பு" (அற். அந்-98) என்ற அம்மை திருவாக்கு ஈண்டுச் சிந்திக்கத் தக்கது. அனலைக் கையில் ஏற்றுக்கொண்டிருப்பவ ராதலின் அழல் போன்ற அமணரது சுடுசொல்லினையும் பொறுக்கின்றார் என்ற குறிப்புப்பட இவ்வாற்றாற் கூறினார்.

ஆக்கும் பனைகள் ஆனவெல்லாம்-ஆக்குதல் - பயிரிட்டு வளர்த்து உண்டாக்குதல். **ஆன**-முளைத்து உரிய வயதாயினவை. முன்னமே விளைந்த சிவபுண்ணியப் பேற்றினால் சிவத்தை அடையப் பக்குவமாயின என்றலுமாம்.

காயாதாகக் கண்டு - காய்க்கும் தன்மை யில்லையாதலைக் கண்டு; **எல்லாம் காயாதாக** - பால்பகா அஃறிணையாதலின் ஒருமைவினை கொண்டது. **காயாவாக**- என்ற பாடமுமுண்டு.

மங்குலுற நீண்டு - வளர்ச்சி பெற்று என்பது காய்க்கும் பருவத்துக்கு மேற்பட்ட நிலை குறித்து நின்றது.

'இங்கு...உண்டோ' என்று - இஃது அமணர் கூறிய இகழ்ச்சி மொழி. **நீர் இட்டு ஆக்குவன**-நீர் மிக முயன்று உண்டாக்கிய இவை. **நீர்**-முன்னிலைபடுத்திக் கூறியபடி கூறியது.

நீரிட்டும்-தண்ணீர் ஊற்றியும் என்று கூறிய இகழ்வுக் குறிப்புமாம். "இட்ட ஞான்றிட்டதே" என்றபடி தண்ணீர் ஊற்றிக் காக்கவேண்டாத பனைகளை அவ்வாறு காத்தும் என்று இழிவுக் குறிப்புமாம். **அடைவு**-பொருத்தம்; உபாயம்; ஏது.

பொங்கு நகைசெய்து-மிகவும் எள்ளி நகைத்து.

அருள வேண்டும் - இவ் விழிமொழி தீரும்படி பனைகள் காய்க்குமாறு அருள் புரியவேண்டும். 978

2877. (இ-ள்) பரமனார்தம்...பரிவெய்தி-இறைவரது திருத்தொண்டரது அடிமைத் திறத்தை நோக்கித் (பிள்ளையார்) திருவுள்ளத்தே இரக்கம் கொண்டு; விரவு... புக்கருளி-பொருந்திய பெருவிருப்பினோடு விரைந்து சென்று இறைவரது திருக்கோயிலில் புகுந்தருளி; அரவு மதியும்... அடிவணங்கி- பாம்பினையும் சந்திரனையும் பகைதீரும்படி தலையிற்சூடிய இறைவரை அடி வீழ்ந்து வணங்கி; இரவு போற்றி...எடுத்தருளி - திருவருளை இரந்து துதித்துப் 'பூத்தேர்ந் தாயன' என்னும் திருப்பதிகத்தினைப் பண்ணிசையினாற் பெருகும்படி தொடங்கிப் பாடியருளி.

2877. பரம ஞூர்தந் திருத்தொண்டர் பண்பு நோக்கிப் பரிவெய்தி
விரவு காத லொடும் விரைந்து விமலர் கோயில் புக்கருளி
அரவு மதியும் பகைதீர வணிந்தார் தம்மை யடிவணங்கி
யிரவு போற்றித் திருப்பதிக மிசையிற் பெருக வெடுத்தருளி, 979

(வி-ரை) பரமனூர்தம் திருத்தொண்டர் பண்புநோக்கிப் பரிவெய்தி- பண்பு-அடிமைத்திறத்தின் உயர்வு; **நோக்குதல்** - கருத்துட் கொள்ளுதல்; **பரிவு** - இரக்கம்; **பண்பாவன** - இறைவன் பூசைக்காக உரிய நிலையான பொருள் சேர்க்க எண்ணிப் பணிகளை ஆக்குதலும், காத்தலும்; அவை காயாத தன்மை கண்டு வருந்துதலும்; புறச்சமயிகள் சிவத் திருத்தொண்டினை இகழ்ந்து கூறுவனவற்றைப் பொறுமையும்; ஆசாரியர் அருளினுல் அவ்விகழ்ச்சி நீங்கிச் சைவத்திறம் போற்றப்படுதலைக் காணும் ஆவலும் முதலாயின; ''பனை விதைத்தவன் பனை எடான்'' என்ற பழமொழிப்படி பனை பயன்றர நீண்டகாலம் செல்லுமாதலின் பனை விதைத்தவர் அதன் பயனைப் பெறும்வரை உயிர் வாழ்ந்திருத்தல் அரிது. அவ்வாறன்றி இத்தொண்டர் இந் நீண்டகாலம் வாழ்ந்திருந்த மிகழூப்புடையார் என்பதும், **அழுது வணங்கி அறிவித்தமையால்** சைவத்திறம் விளங்குதலில் மிகவுறைப்புடையார் என்பதும் பெறப்பட்டமை காண்க.

விரவு காதலொடும் - காதல் பெரிய அன்பரது மனவருத்தத்தை நீக்குதலேயன்றிச் சைவ உண்மை நாட்டி விளங்கச் செய்வதிலும் கொண்ட பெருவிருப்பம்; *(2879 - 2880 பார்க்க.)*

விரைந்து விமலர் கோயில் புக்கருளி - விரைவு காதல்மிகுதி குறித்தது.

அரவுமதியும் பகைதீர அணிந்தார் - பகையுடைய உயிர்ப்பொரு ளிரண்டனையும் பகை தீர்த்து உடன் வாழவைத்தார் என்ற தன்மையாற் கூறினுர், இக்குறிப்புடன் பிள்ளையார் வணங்கினுர் என்பதும், அவ்வாறே இனி விளையும் தன்மையால் இழித்துரைத்த அமணர் இகல் நீங்கி வாழ்வர் என்பதும் குறிப்பாலுணர்த்தற்கு. அன்றியும், ''இதுவாகு மதுவல்ல வெனும்பிணக்க தின்றி, நீதியினு லிவை யெல்லா மோரிடத்தே காண நிற்ப''தாகிய சைவத்தின் உயர்ந்த நிலையினையும் காட்டுவதும் குறிப்பு; ''ஏத்தாதாரிலே யெண்ணுங்கால்'' என்ற பதிகக் குறிப்பும் காண்க. பகை தீர்த்தல் போல இங்குப் பனையில் ஆண் பெண் என்ற வேறுபாடு தீர என்பதும் குறிப்பு.

இரவு போற்றி - திருவருளை இரந்து வேண்டி; ஈவ தொன்றெமக் கில்லையே லதுவோ வுன தின்னருள்'' (பிள். தேவா - திருவாவடுதுறை) என்ற கருத்தும் ஆண்டுரைத்தவையும் இங்கு நினைவுகூர்க. இவ்வாறன்றி **இரவு போற்றி** - இரவினிற் றுதித்து என்றுரைத்தனர் முன்னுரைகாரர். இத்திருவருணிகழ்ச்சி இரவினில் நிகழ்ந்தது என்று கொள்வர்; குண்டையூர் நென்மலையைப் பூதங்கள் இரவிற் கவர்ந்து திருவாரூரில் சேர்த்தது போல. அருளவேண்டுமென்று வேண்டிய அன்பருக்கு ''**அருள் நல்குமே**'' *(4-5-6-7)* என்ற பதிகக் கருத்துக் காண்க.

இசையிற் பெருக-இசை-பதிகப் பண் குறித்தது; **இசை** - இறைவரது புகழ் என்று கொண்டு புகழினுற் பெருக எடுத்து என்றலுமாம். **பெருகுதலாவது** பதிகம் அருளிய இவ்வொரு

2878. விரும்பு மேன்மைத் **திருக்கடைக்காப் பதனில் விமல ரருளாலே**
"குரும் பையாண் பனையீனு" மென்னும் வாய்மை குலவுதலால்
நெருங்கு மேற்றுப் பனையெல்லா நிறைந்த **குலைக ளாய்க்குரும்பை**
யரும்பு பெண்ணை யாகியிடக் கண்டோ ரெல்லா மதிசயித்தார். 980

செயலினாலே அன்பர் கருத்து முடித்துக் கொடுத்ததே யன்றிச் சைவத் திறம் பெருக நிகழ்ந்து அமணர்களும் அறிவுறுத்தப் பட்டதும் பனைகளுக்கும் முத்தியளித்தமையும். **இசை** - பிள்ளையார் புகழ் என்றலுமாம். *979*

2878. (இ-ள்) விரும்பும்...குலவுதலால் - மேன்மை விரும்புகின்ற திருக் கடைக்காப்பிலே இறைவரது திருவருளினாலே "குரும்பைகளை ஆண்பனைகள் ஈனும்" என்னும் வாய்மையானது பொருந்தி விளங்குதலாலே; நெருங்கும்... ஆகியிட - நெருங்கிய அந்த ஆண் பனைகள் எல்லாம் நிறைந்த குலைகளையுடையனவாகிக் குரும்பை பொருந்தும் பெண்பனைகளாக மாறிடவே; கண்டோர் எல்லாம் அதிசயித்தார் - கண்டவர் எல்லாரும் அதிசயப்பட்டார்கள்.

இந்நான்கு பாட்டுக்களும் ஒருமுடிபுகொண் டுரைக்க நின்றன.

(வி-ரை) மேன்மை விரும்பும் என்க; முன் **இசையிற் பெருக** *(2877)* என்றவிடத் துரைத்தவாறு வரும் மேன்மைகளை எல்லாம் விரும்பி யருளி வைத்த; திருக்கடைக்காப்பில் பதிகப் பயன் கூறும் மரபு குறித்தது; "சொல் **விரும்புவார்** வினைவீடே" என்ற பதிகம் காண்க.

விமலர் அருளாலே 'குரும்பை யாண்பனை யீனும்' என்னும் வாய்மை குலவுதலால்-"குரும்பை யாண்பனை யீனும்" என்பது பதிகம். அது தவறுதலில்லாத- பொய்யாத - வாய்மை எனப்பட்டது; அவ் வாய்மைத் தன்மை அருளாலே அத் திருவாக்கிற் குலவிய காரணத்தால் என்பதாம்; "**போதியோ** என்னும் அன்ன மெய்த்திரு வாக்கெனு மமுதம்" *(2986)* என்பதும், "மெய்த்தன்மை விளங்கு திருச்செவி" *(2876)* என்றதும் பிறவும் பார்க்க.

குரும்பை யாண்பனை ஈனும் என்னும் - "குரும்பை யாண்பனை யீன்குலை யோத்தூர்" என்பது பதிகம்; ஆண்பனை குரும்பைக்குலை யீன் ஒத்தூர் என்றதாம்.

ஏற்றுப் பனை - ஆண்பனை; **பெண்ணை** - பெண்பனை.

ஏற்றுப் பனைகள் குரும்பை யரும்பு பெண்ணையாகியிட-தாவரங்களிலும் வரும் மலட்டுத் தன்மை முதலிய குறைபாடுகளை மாற்றுதற்கு மருத்துவ முறைகளை உழவு நூலார் சிலர் காண்கின்றார்கள்; ஆயின் இங்கு அச்செயல் திருவருட் பதிகத் தினாலே உடனே பயன் விளைத்தது அற்புதமென்க; **அதிசயித்தார்**-அதிசயத்தைக் கட்புலப்படக் கண்டதுவேயன்றி அதன் காரணம் திருப்பதிகமே என்பதனையும் கண்டனர். *980*

திருவோத்தூர்

திருச்சிற்றம்பலம் பண் - பழந்தக்க ராகம்

பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி
யேத்தா தாரிலை யெண்ணுங்கால்
ஓத்தூர் மேய வொளிமழு வாளங்கைக்
கூத்தீ ரும்ம குணங்களே. (1)

தாதார் கொன்றை தயங்கு முடியுடை
நாதா வென்று நலம்புகழ்ந்
தோதா தாருள ரோதிரு வோத்தூர்
ஆதீ ரேயரு **ணல்குமே.** (7)

குரும்பை யாண்பனை யீன்குலை யோத்தூர்
அரும்பு கொன்றை யடிகளைப்
பெரும்பு கலியுண் ஞானசம் பந்தன்சொல்
விரும்பு வார்வினை வீடே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– *''அடியேன் இறைவர்க்காக ஆக்கும் பனைகளானவெல்லாம் காயாவாகக் கண்டு அமணர் இழித்துரைத்தார்; ''**அருள வேண்டும்**'' என்று இரந்த அடியவர்க்காக அவர் கருத்து முற்றும்படி ''அருள் நல்குமே'' என இரந்து போற்றியது (2878 - 2879).*

பதிகப் பாட்டுக் குறிப்பு:– ***(1) பூத்தேர்ந்தாயன கொண்டு*** - உரிய நல்ல பூக்களைத் தேர்ந்து காலமிடங்களுக்கும் விதிக்கும் பொருந்தும்படி பெறலாயினவற்றைக் கொண்டு; **ஏத்தாதாரிலை எண்ணுங்கால்** - அவ்வவர் பக்குவத்துக்கேற்றவாறு திருவடியைப் போற்றுதவர்களில்லை என்னும் இவ்வுண்மை சிந்தித்து ஆராய்வோர்க்குப் புலப்படும். மேல் ''**ஓதாதா ருளரோ**?'' (7) என்றதுமிக் கருத்து. ஏத்தாதாரில்லை ஆதலின் அது கண்டு நானும் ஏத்துகின்றேன் என்பது குறிப்பு. ''நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன் நினையா தொருபோது மிருந்தறியேன்'' (திருவதிகை-2) என்ற அரசுகளது திருவாக்கும் அத் திருப்பாட்டுக் குறிப்பும் (III-பக்.178) பார்க்க. ''நின்வயின் மறைத்தோ யல்லை; யுன்னை, மாயாய் மன்னினை நீயே வாழி, ...நண்ணியு மிடையொன்றின் மறைந்தோ யல்லை, யிடை யிட்டு நின்னை மறைப் பதுமில்லை, மறைப்பினு மதுவு நீயே யாகி நின்றதோர் நிலையே,.. ....மனமருண்டு, புன்மையி னினைத்துப் புலன்வழி படரினு, நின்வயி னினைந்தே மாகுத னின்வயி, னினைக்குமா நினைக்கப் பெறுத லனைத்தொன்று, நீயே யருளுதல் வேண்டும்'' (கோயினுன் மணிமாலை-32) என்ற பட்டினத்தடிகளது திருவாக்கு ஈண்டுச் சிந்திக்கத் தக்கது; **உம்ம குணங்களே** - இவ்வாறு யாவையும் உட்பட நிற்றல் உம்முடைய அருட்டன்மைகளாம்; குணங்களை ஏத்தாதாரில்லை என்க; **கூத்தீர்** - ஐந்தொழி லருட்கூத்தினை உடையீர்;—***(2) இடையீர் போக இளமுலை*** - ''ஈர்க்கிடை போகா விளமுலை மாதர்'' *(திருவா-போற்றித் திருவகவல்-34)* **ஓர் புடை** - ஒருபாகம்; **இளமுலையாள்** - இத்தலத்தின் அம்மை பெயர்;—***(3) உள்வேர்... கொள்வீர்*** - வேர் நிலத்தின்கீழ் உள்ளே சென்று நுண்ணிதாய் வேண்டும் பொருள் கொள்வதுபோல உண்ணின்று அறிவீர்; **உள்வேர்** - உட் புழுக்கம் -

உள்வேர்வை என்று பலவாறு முரைப்பாருமுண்டு;--**(4) தோட்டீர்** - தோடுடையீர்; **அடியார்...நல்குமே** - பதிகக்குறிப்பு; மேல் 5-6-7 பாட்டுக்களிலும் இவ்வாறே காண்க;—**(6) மிக்கார்**-அன்பினால் மிகுந்தவர்; **உட்குதல்** - நாணுதல்; அஞ்சுதல் என்றலுமாம்; **நக்கீர்**-நக்க உருவினர்;—**(7) ஓதாதாருளரோ** - ''ஏத்தா தாரிலை'' (1) என்ற கருத்து; **ஆதீர்** - ஆதியீர்; முதல்வர். **ஆதல்** - வெளிப்படுதல் என்று கொண்டு வெளிப்பட வீற்றிருப்பீர் என்றலுமாம்;—**(8) என்றான் இம்மலை? என்ற**-இம்மலை இங்கு என்னைத் தடை செய்வதுதான் என்னை? இதனைப் பெயர்ப்பன் என்று மிக்கெழுந்த; **''ஒன்றார்...ஓத்தூர்'' என்றார்** - மதில் எய்தவனது பதி இஃது என்று துதிப்பவர்; **ஒன்றார்** - பகைவர்;—(9) ஒன்றாய் எரியாய் மிக (அது கண்டு) உமை நேடியே திசையெலாம் சென்றார் போலும்; ஆனால் நீர் திருவோத்தூர் நின்றீரே; வழிபட்டு இதனை அறிந்திலர் என்பது;—**(10) காரமண்...சொல்லவை தேறன்மின்**-அமணரின் இழித்துரைகளைப் பொருளெனக் கொள்ளாதீர் என்ற இச்சரித வரலாற்றுக் குறிப்பும் காண்க; **கழல் சேர்மின்**-அவன் முப்புரமும் ஓரம்பால் நின்றபடியே எய்தவனாதலின் அமணர்களின் இழிப்புரையை இமைப்பளவில் புகழுரையாக மாற்றுவன் என்பது; அடுத்து மேல்வரும் பாட்டின் வாய்மையால் பனைகள் குரும்பை யீனக் கண்டு முன் இகழ்ந்த அமணர் புகழ்வதாவதும் கருதுக;—**(11) குரும்பை யாண்பனை யீன்குலை** - இது இப்பதிகக் குறிப்புப்பட நின்ற வாய்மை; இஃது அருளால் வந்து குலாவுதலால் ''எனதுரை தனதுரையாக'' (பிள் - இலம்பையங் கோட்டூர்) என்றபடி இறைவரது ஆணையேயாக உடன் அவ்வாறே பலனளித்தது என்க. **வீடே** - நீங்குதலேயாம்; **வீடு** - விடு - பகுதி; விடுதல் - நீங்குதல்.

குறிப்பு:– பதிகம் முழுமையும் அடியார் பரவும் பண்பும் அவர்க்கு இறைவர் அருளும் பண்புமாக இச்சரித வரலாற்றுக் குறிப்புடன் விளங்குதலும், அருளை யிரத்தலும், சரித வரலாறு புலப்படுத்தலுமாய் மிளிர்தல் கண்டுகொள்க. பதிகப் பாட்டுக்கள் செய்யுள் யாப்பினில் அடிகள் அளவொத்திராமல் நான்கு சீரும் மூன்று சீருமாய் மாறி வருதல் இறைவர் செய்யும் அருளும் உயிர்கள் மாட்டு அவ்வவர் பக்குவத்திற்கேற்ப நிற்றற் குறிப்புத் தருதலும் காண்க. இன்னும் இத்திருப்பதிகம் பற்பல அருமைப்பாடுகளுடன் விளங்குதல் அறிந்தார்பாற் கேட்டுணர்க. மேல் 2874 - 2875-ல் கூறிய இறைவரியல் பற்றிய தன்மைகளின் உள்ளுறையும் கருதுக.

தலவிசேடம்:– திருவோத்தூர் - தொண்டை நாட்டில் 8-வது பதி; **ஓத்து** - வேதம்; ஓதப்பட்டு வழிவழி வருவது. தேவர்களுக்கும் இறைவர் வேதங்களை ஓதுவித்தருளின பதி என்றும், வேதங்களுக்கு இறைவர் திருக்கூத்துக் காட்சியளித்த பதி என்றும் இப்பதியின் பெயர் போந்த காரணங் கூறுவர். ''தேவர் முனிவர்க் கோத்தளித்தார் திருவோத்தூர்'' (2872) என்ற புராணமும், ''ஓத்தூர் மேய வொளிமழுவா ளங்கைக் கூத்தீர்'' என்ற பதிகமும் இக்குறிப்புக்கள் தருவன. இறைவர்க்கு இத்தலத்தில் பனம்பழம் நிவேதனமாம். அவர் பொருட்டுத் தொண்டர் ஒருவர் ஆக்கின பனைகள் எல்லாம் ஆண்பனையாய்க் காயாதாகக் கண்ட அமணர் இழித்துரைக்க, அதனை அன்பர் ஆளுடைய பிள்ளையாருக்கு விண்ணப்பிக்க, அவர் இறைவரை வேண்டி அவற்றைப் பெண்பனை யாக்கியமையும் பிள்ளையாரது திருவாக்கிற் பிறந்த புண்ணியப் பேற்றினாலே காலாந்தரத்தில் அப்பனைகள் முத்தி பெற்றமையும் ஆகிய வரலாறுகள் மேற்புராணத்துட் காண்க. இவ்வரலாற்றுக் குறியாக இத்திருக் கோயிலினுள் பனை பிரதிட்டிக்கப்

*2879. சீரின் மன்னுந் திருக்கடைக்காப் பேற்றிச், சிவனு ரருள்பெற்றுப்
பாரி னீடு மாண்பனைமுன் காய்த்துப் பழுக்கும் பண்பினுல்
நேரு மன்பர் தங்கருத்து நேரே முடித்துக் கொடுத்தருளி
ஆரு முவகைத் திருத்தொண்டர் போற்ற **வங்க ணினிதமர்ந்தார்**. 981

பட்டுப் பூசிக்கப் பெறுகின்றது. சுவாமி - **வேதநாதர்**; அம்மை-**இளமுலை நாயகி** அம்மை பெயர் பதிகத்துக் (2) காண்க; தீர்த்தம் - **சேயாறு;** பதிகம் 1.

இது காஞ்சிபுரத்துக்குத் தென்மேற்கே கற்சாலைவழி 18 நாழிகையளவில் அடையத் தக்கது; மோட்டார் பஸ் வசதியுண்டு. அச்சிறுபாக்கம் நிலையத்தினின்றும் வடமேற்கே மட்சாலை வழி 18 நாழிகையளவிலும், திருமாகறலினின்றும் தென்மேற்கே மட்சாலைவழி 15 நாழிகையளவிலும் அடையலாம்.

2879. (இ-ள்) சீரின்...ஏற்றி - சிறப்பினுல் நிலைபெற்ற திருக்கடைக்காப்புச் சேர்த்துப் பதிகத்தினை நிறைவாக்கி; சிவனுர்...கொடுத்தருளி - சிவபெருமானுடைய திருவருள் பெற்று உலகத்தில் நீடிய ஆண்பனைகள் முன்னே காய்த்துப் பழுக்கும் தன்மை வர விரும்பும் அன்பருடைய கருத்தினை நேர்பட முடித்துக் கொடுத்தருளி; ஆரும்... அமர்ந்தார்-நிறைந்த மகிழ்ச்சியையுடைய திருத்தொண்டர் துதிக்க அத் திருநகரின் கண் இனிதாக விரும்பி வீற்றிருந்தருளினுர்.

(வி-ரை) சீரின் மன்னும் திருக்கடைக்காப்பேற்றி - சீரின் மன்னுதலாவது விமலரருளாலே **குரும்பை ஆண்பனையீன்குலை ஓத்தூர்** என்னும் வாய்மை குலவுதல்; திருக்கடைக்காப்பு ஏற்றுதல் - பாட்டு நிரப்பிப் பதிக நிறைவாக்குதல். வாய்மை குலாவ அருளித் திருக்கடைக்காப்பு ஏற்றுவதன் முன்னே அதன் பயனுக ஏற்றுப் பனைகள் எல்லாம் குரும்பை அரும்பு பெண்ணையாகியிட எல்லாரும் கண்டு அதிசயித்தனர் என்று விரைந்து பயன் தந்தருளிய சிறப்புக் குறிப்பு.

சிவனுர் அருள் பெற்று முடித்துக் கொடுத்தருளி என்க.

பண்பினுல் - பண்பு வரச் செய்தமையாலே; **நேரும்** - அதனை விரும்பும்.

முன் காய்த்துப் பழுக்கும் பண்பினுல் - முன் - பதிகம் திருக்கடைக் காப்பு ஏற்றி நிறைவாக்கு முன். அத்தொண்டர்களின் முன்னே - கண் காண - என்றலுமாம். கால முறையால் முன் காய்த்துப் பின் பழுக்கும் என்ற குறிப்புமாம். **முன்னர்க்** குரும்பையே காணப்பட்டன; ஆயின் அவை பின்னர்க் காலத்தில் முதிர்வுபெற்றுக் காயாகிப் பின் பழுக்கும் என்ற தன்மை இன்றியமையாத நியதியாதலின் என்பதும் குறிப்பு. **பழுக்கும்** - தலச்சிறப்பாகிய நிவேதனத்துக்குரிய தன்மையும் அதனை எண்ணி அன்பர் பனைகளை ஆக்கிய தன்மையும் குறிப்பு.

நேரும் அன்பர்தங் கருத்து நேரே முடித்து - **நேர்தல்** - விரும்புதல்; **நேரே** - அவர் நேரிற் காண; நேர்பட; விரைவாக என்றலுமாம்.

ஆரும் உவகைத் திருத்தொண்டர் - பனைகளை ஆக்கி விண்ணப்பித்த அத் திருத் தொண்டர்;

2880. **தென்னாட் டமண்மா சறுத்தார்தஞ் செய்கை கண்டு திகைத்தமணர்**
அந்நாட் டதனை விட்டகல்வார் **சிலர்தங் கையிற் குண்டிகைகள்**
"என்னா வனமற் றிவை"யென்று தகர்ப்பார்; "இறைவ னேறுயர்த்த
பொன்னார் மேனிப் புரிசடையா னன்றே!" யென்று போற்றினார். 982

பயன் கண்ட ஏனைத் திருத்தொண்டர்களுமாம்; **ஆரும் உவகை** - கருத்து முற்றக் கண்டதனால் நிறையும் மகிழ்ச்சி.

பாரினீடும் - நீண்ட வயதுடைய; புகழால் எந்நாளும் இறவாமல் நீடிய என்ற குறிப்புமாம்; 2881 பார்க்க.

மெய்ம்மைத் திருக்கடைக்காப்பு—பனைமுன்னம் - அப்பனைமுன்—என்பனவும் பாடங்கள். *981*

2880. (இ-ள்) தென்னாட் டமண்மா சறுத்தார்தம்...அகல்வார் - தென்னாடாகிய பாண்டி நாட்டிலே அமணாலாகிய குற்றத்தை நீக்கிய பிள்ளையாரது இந்தச் செய்கையைக் கண்டு திகைப்படைந்து சமணர்கள் அந்நாட்டினை விட்டு நீங்கிப் போவார்களாகி; சிலர்...தகர்ப்பார் - சிலர் தமது கையில் ஏந்திய தமது சமயச்சார்பாகிய நீர்க் குண்டிகைகளை "இவை என்ன பயன் தருவன?" என்று உடைத்தெறிவார்களாகி; "இறைவன்...அன்றே" என்று போற்றினார் - **"முழுமுதற் கடவுளாவார் இடபத்தை யுயர்த்தியவரும் பொன்போன்ற திருமேனியை உடையவரும் புரித்த சடையினையுடையவருமாகிய சிவபெருமானேயாவர்" என்று கூறித் துதித்தனர்.**

(வி-ரை) செய்கை-வாக்கின் வாய்மையால் ஆண்பனைகளை உடனே பெண் பனைகளாக்கிய செய்கை. **கண்டு** - அன்பர்கள் முன்னே கண்டு போற்றினார்கள்; அது தெரிந்தபின் அமணரும் கண்டார்களாதலின் இவரது நிகழ்ச்சி பிற்கூறப் பட்டது. இவ்வாறன்றித் திருமயிலையில் நிகழவுள்ள அருட்செயலை நன்றியில் சமயத்திலுள்ளோரும் உடன் கண்ட வரலாறு பின்னர்க் காணப்படும்.

திகைத்தல் - அச்சத்தால் செய்வதறியாது மயங்கி நிற்கும் மெய்ப்பாடு.

அந்நாட்டதனை-அவ்வூரை; **விட்டகல்வார்** - தென்னாட்டில் அமணர் கழுவேற வந்ததுபோல நேர்ந்துவிடுமோ என்றஞ்சி அவ்வூரை அகன்று நீங்குவார். **நீங்குவார்-தகர்ப்பார்-போற்றினார்**-என்க. நீங்குவார் பலர். அவருட் சிலர் தம் சமயத்தின் உண்மையற்ற பொய்ந் நிலையினை உணர்ந்து தம் குண்டிகைகளைத் தகர்த்துச் சிவனைப் போற்றினார்; அவ்வாறு செய்யலாற்றாத பிறர் அகன்று நீங்கிப் போயினர். **அகல்வாரும், தகர்ப்பாருமாயினர்; தகர்ப்பார் போற்றினார்** என்க.

மற்று இவை என் ஆவன-மற்று-உண்மைக்குப் புறம்பு என்பது குறிப்பு. **என் ஆவன** - என்ன பயன் தருவன; ஒருபயனுமற்றன என்பது.

இறைவன் - முழுமுதல்வன்; **அன்றே** - தேற்றமும் பிரிநிலையுமாய் உறுதிப் பொருள் தந்து நின்றது. **புரிசடையான் நன்றே** - என்று பிரித்துரைப்பதுமாம்.

அமணாசறுத்தார்—என்பதும் பாடம். *982*

2881. **பிள்ளை யார்தந் திருவாக்கிற் பிறத்த லாலத் தாலமு,முன்**
புள்ள பாசம் விட்டகல, வொழியாப் பிறவி தனையொழித்துக்
கொள்ளு நீர்மைக் காலங்கள் கழித்துச் சிவமே கூடினவால்;
வள்ள லார்மற் றவரருளின் வாய்மை கூறின் வரம்பென்னும்? 983

2881. (இ-ள்) *பிள்ளையார்தம்...அத்தாலமும்* - பிள்ளையாரது மெய்த் திருவாக்கிலே சொல்லப்பட்டு வந்து பிறந்த காரணத்தாலே அந்தப் பனைகளும்; *முன்புள்ள...அகல*- பனையாய்ப் பிறப்பதற்குரித்தாய் முன்னே உள்ள வினை விட்டு நீங்க; *ஒழியா...ஒழித்து*-ஒழியாது தொடர்ந்து வருகின்ற பிறவிப் பிணி நீங்கப் பெற்று; *கொள்ளும்...கழித்து* - உடம்பு இருத்தற் கேதுவாகிய பிராரத்தவினை கொள்ளும் கால அளவு கழித்துப் பின்பு; **சிவமே கூடின** - சிவப் பேற்றை அடைந்தன; *வள்ளலார்...என்னும்?*-வள்ளலாராகிய பிள்ளையாருடைய அருளினது மெய்த்தன்மையினை எடுத்துக் கூறுதல் வரம்புட்படுமோ? (படாது).

(வி-ரை) திருவாக்கிற் பிறத்தலாவது திருவாக்கினால் அருளுடன் சொல்லப்படுதல்; ஆண்பனை குரும்பைக் குலையீன் என்ற அருளின் ஆணையே உபதேசமாய் வருதல். தாலம்- பனை மரம்.

முன்புள்ள பாசம் விட்டகல - சஞ்சிதவினை நீங்கி; இஃது இனி வரும் பிறவிகளுக்கேதுவாய் நிற்பது. "பார்த்த பார்வையா லிரும்புண்ட நீரெனப் பருகும் தீர்த்தன்" (திருவிளை-புரா-வாதவூ-உப-பட-47); சஞ்சித வினை எரி சேர்ந்த வித்துப்போலச் சாம்பராகிவிடவும் மூலமலம் வலிமையற்றொழியவும், இனி விளைய உள்ள பிறவிகள் இல்லையாயின என்பார் "**ஒழியாப் பிறவி தனையொழித்து**" என்றார்.

கொள்ளு நீர்மைக் காலங்கள் கழித்து - பிராரத்தவினை அனுபவித்தன்றிக் கழியாவாதலின் முகந்துகொண்ட வினை உள்ளளவும் உடம்பு நிற்கும் அவ்வெல்லை வரும் அளவு நீங்க என்பது; அவ்வாறு பிரார்த்த வினை அனுபவித்துக் கழித்தற்கு ஆசாரியன் திருவாக்குத் துணை செய்தது. **ஆண்பனைக் குலை குரும்பையின** என்ற ஆணையினால் அவ்வுடல் கொண்ட வினை அனுபவிக்கப்பட்டுக் கழிய அருளியமை காண்க.

சிவமே கூடின - சிவப்பேற்றை யடைந்தன. மேல்வரும் ஆகாமிய வினை ஏறாதபடி செய்தருளியதும் ஆணவம் வலியிழந்ததும் அத்திருவாக்கின் அருள் பதிந்தமையாலாகியது என்பதும் காண்க.

வள்ளலார்-தற்பயன் குறியாது வரம்பின்றி யருள் கொடுப்பவர். **வள்ளலார்**- இறைவர் என்றலுமாம்.

அவரருளின் வாய்மை - கன்ம பலத்தினாலே **ஓரறிவுயிராய்ப் பிறந்த தாவரங்களாகிய அத்தனை பனைமரங்களுக்கும் அருள் தீக்கை செய்து கன்மம் புசிக்கச் செய்தும், ஆணவ மூலமலம் வலியறச் செய்தும், இறைவருக்குப் பழந் தருதலாகிய சிவபுண்ணியப்பேற்றைப் பெறச்செய்தும் காலாந்தரத்தில் இவ்வொரு பிறவியிலேயே சிவத்தைப் பெற அருளியது வாக்கினது அருளின் வாய்மையும் அவரது அருளின் வள்ளன்மையுமாம்.** உமாபதி சிவாசாரியர் முள்ளிச் செடிக்கும் பெற்றான் சாம்பானுக்கும் முத்தி கொடுத்தருளிய நிலைகள்

2882. **அங்க ணமரர் பெருமானைப் பணிந்து போந்தா டரவினுடன்**
பொங்கு கங்கை முடிக்கணிந்தார் மகிழும் பதிகள் பலபோற்றி,
மங்கை பாக ரமர்ந்தருளும் வயன்மா கறலை வணங்கிப்போய்க்
கொங்கு மலர்நீர்க் குரங்கணின்முட் டத்தைச் சென்று குறுகினார். 984

ஈண்டுச் சிந்திக்கத் தக்கன. திருவாதவூரருக்கு இறைவர் உபதேசித்த வரலாறும் பொருளும் (திருவிளையாடற் புராணம்-திருவாதவூரர் புராணம்) ஈண்டுக் கருதத் தக்கன.

வரம்பு என்னும்? - அளவு என்னை? கூறும் வரம்பின்று என்றபடி. இவ்வரலாற்றினை மனங்கொண் டுணர்ந்தால் பின்னர்த் திருமணத்தில் வந்தோர்க்கெல்லாம் கொள்ளைகொள்ள வீடுதவும் பிள்ளையாரது வள்ளற்றன்மையின் நிலை எளிதில் விளங்கும் என்க.

பிறத்தலாலே தாலமும்—என்பதும் பாடம். *983*

2882. (இ-ள்) அங்கண்...போந்து - அங்குத் தேவதேவராகிய இறைவரைப் பணிந்து சென்று; ஆடரவினுடன்...போற்றி-ஆடும் பாம்பினுடன் பொங்கியெழும் கங்கையினைத் திருமுடியில் அணிந்த இறைவர் மகிழ்ந்து வீற்றிருக்கும் பதிகள் பல வற்றையும் சென்று துதித்து; மங்கை பாகர்...போய் - உமைபங்கராகிய இறைவர் மகிழ்ந்து வீற்றிருந்தருளும் வயல்கள் சூழ்ந்த திருமாகறலைப் போற்றிச் சென்று; கொங்கு...குறுகினார்-மணம் பொருந்திய மலர்களையுடைய நீர் சூழ்ந்த திருக்குரங் கணின் முட்டத்தினருகு சென்று சார்ந்தருளினர்.

(வி-ரை) பதிகள் பல - இவை புரிசைநாட்டுப் புரிசை, திருவன்பார்த்தான் பனங்காட்டூர், வில்வலம் முதலாயின என்பது கருதப்படும்.

வயல்மாகறல் - ''விங்கு விளைகழனி'' (1), ''மடைகொள் புனலோடு வயல்'' (11) என்று பதிகத் தொடக்கத்தும் இறுதியிலும் சிறப்புப்பற்றி வரும் குறிப்புப் படக் காட்டியவாறு; இவ்வயலின் சிறப்பு இன்றும் காணவுள்ளது.

கொங்கு மலர் நீர் - (முட்டம் என்னும்) காக்கை வழிபட்டு மூக்கினாற் கீறிய **காக்கைமடு** கோயிலைச் சுற்றியுள்ள நீர்ச்சிறப்பும் தலவிசேடமும் குறிப்புப் பெற இவ்வாற்றாற் கூறினார். **கொங்கு**-வாசம்; மணம். தலவிசேடம் பார்க்க. ''கழுநீர் கொழுநீர்'' என்ற பதிகமும் பார்க்க.

குறுகினார் - அணிமையிற் சென்றருளினர். *984*

திருமாகறல்

திருச்சிற்றம்பலம் திருவிராகம் பண் - சாதாரி

விங்குவிளை கழனிமிகு கடைசியர்கள் பாடல்விளை யாடலரவம்
மங்குலொடு நீள்கொடிகண் மாடமலி நீடுபொழின் மாகறலுளான்
கொங்குவிரி கொன்றையொடு கங்கைவளர் திங்களணி செஞ்சடையினான்
செங்கண்விடை யண்ணலடி சேர்பவர்க டீவினைக டீருமுடனே. (1)

கடைகொணெடு மாடமிக வோங்குகமழ் வீதிமலி காழியவர்கோன்
அடையும்வகை யாற்பரவி யரனையடி கூடுசம் பந்தனுரையால்

மடைகொள்புன லோடுவயல் கூடுபொழில் மாகறலு ளானடியையே
யுடையதமிழ் பத்துமுணர் வாரவர்க டொல்வினைக ளொல்குமுடனே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– செஞ்சடையினுன் - செங்கண்விடை யண்ணல் - என்பன முதலிய தன்மைகளாற் போற்றப்படும் மாகறலுளாராகிய இறைவரது அடிசேர்பவர்கள் தீவினைகள் உடனே தீரும். பதிக முழுதும் வினைத்தீர்வுக் குறிப்புக் காண்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு:– ***(1) விங்கு*** - மஞ்சள் என்பர்; ***மங்குலொடு நீள்***- மேகம்வரை நீண்ட; அரவம்மிகு கழனியும்; கொடிகள்மலி மாடமும் நீடுபொழிலும் உடைய மாகறல் என்க;–***(2) இலையின்மலி*** - இலைவடிவுள்ள;—***(3) துந்துபிகள்*** முதலாயின காலையொடு மாலையிலும் முழக்கி வழிபாடு செய்து என்பதாம்; ***பாலை அன*** - பாலைப்போன்ற வெண்மை நிறமுடைய;–***(4) இங்கு*** - தங்கும்; ''இங்கு சுவையின்னமிர்தம்'' (சிந்தா);—***(5) துஞ்சு நறு நீலம்*** - இரவில் இதழ் விரியாத நீலமலர்; **இருள் நீங்க** - இரவுபோய் விடிய; **ஒளி தோன்றும்** - பகலில் மலர்ந்து தனது நிறம் விளங்கும்;—***(6) படிமம்*** - உருவம்; **ஒல்க** - சுருங்க;—***(7) வெய்ய வினை நெறிகள் செல*** - பிராரத்தம் அனுபவித்துக் கழிய; வந் **தணையும் மேல் வினைகள்** - ஆகாமியம்; **கையகரி** - கையினையுடைய யானை; ***கால்வரை***-நடைமலை;—***(8) மாசுபடு செய்கை*** - குற்றம் நீக்கும் செய்கை; **படுதல்**-அழிதல்;—***(9) தாமரைகள்*** - முதலிய நீர்ப்பூக்கள் கூறப்பட்டன; இப்பதி சேயாற்றின் கரையில் நீர்ச்செழிப்புடன் விளங்குதல் குறிக்கும்; வயலும், பொழிலும் கூறியதும் காண்க;—***(10) கழல்களின் மேலுணர்வு - முடியின் மேலுணர்வு*** எனத் தனித்தனிக் கூட்டுக; ***உணர்வு*** - உணர்தலை; ***காமுறவு*** - விரும்புதல்; **மாலும்** அலரானும் கழலும் முடியும் என நிரனிசை;—***(11) அடையும்...அடிகூடு சம்பந்தன்*** - பிள்ளையாரது திருத்தொண்டின் நிறம்; பிள்ளையாரை முருகப்பெருமா னவதாரம் என்போர் இதனைக் குறிக்கொள்வாராக; ***அடியையே உடைய தமிழ்*** - அடிசேர்பவர்கள்; அடியை ஏத்த; அடியையே ஏத்தி; அடியாரை; அடி சேர்பவரை என்பனவாகத் திருவடித் தொண்டேபற்றி வரும் பதிகக் குறிப்பும் கருத்துமாம். சுவாமி பெயரும் காண்க.

தலவிசேடம்:– திருமாகறல் - தொண்டைநாட்டின் 7-வது பதி. இந்திரன் வழிபட்ட தலம்; சிவலிங்கத் திருமேனி உடும்பின் வண்ணமாகிய சுயம்பு மூர்த்தி; இராசேந்திர சோழனுக்கு இறைவர் பொன்னுடும்பாகக் காட்சி கொடுத்து, அவன் துரத்தியபோது ஓடிப் புற்றில் ஒளித்து வெளிப்பட்டனர் என்பது வரலாறு. மக்கட் பேறு வேண்டுவோர் அங்கப் பிரதட்சணம் செய்வது தலவிசேடம். சுவாமி - **அடைக் கலங்காத்த நாதர்; அகத்தீசுரர்;** அம்மை - **புவன நாயகி;** விநாயகர் - **பொய்யா விநாயகர்;** தீர்த்தம் - **சேயாறு - அக்கினி தீர்த்தம்;** பதிகம் 1.

இது காஞ்சிபுரத்திலிருந்து தென்கிழக்கில் கற்சாலை வழி 10 நாழிகையளவில் சேயாற்றின் வடகரையில் உள்ளது. வழியில் வேகவதி யாற்றையும், பாலாற்றையும் கடக்க வேண்டும்; மோட்டார் பஸ் வசதி உண்டு. குரங்கணின்முட்டத்தினின்றும் தென்கிழக்கில் மட்சாலை வழி 6 நாழிகையளவிலும் அடையத்தக்கது.

2883. **ஆதி** முதல்வர் குரங்கணின்முட்டத்தை யணைந்து பணிந்தேத்தி,
நீதி வாழுந் திருத்தொண்டர் போற்ற நிகரில் சண்பையினில்
வேத மோடு சைவநெறி விளங்க வந்த கவுணியனார்
மாதொர் பாகர் தாமன்னு மதில்சூழ் காஞ்சி மருங்கணைந்தார். 985

2883. (இ-ள்) ஆதிமுதல்வர்...ஏத்தி-ஆதிமுதல்வராகிய இறைவரது திருக்குரங்கணின் முட்டத்தைச் சேர்ந்து வணங்கித் துதித்து; நீதி...போற்ற - சைவ நீதி நெறியினில் வழுவாத ஒழுக்கமுடைய திருத்தொண்டர்கள் போற்றச்சென்று; நிகரில்...... கவுணியனார் - ஒப்பற்ற சீகாழிப்பதியிலே வேதநெறியுடனே சைவ நெறி விளங்கும்படி திருவவதாரம் செய்த கவுணியனாராகிய பிள்ளையார்; மாதொர் பாகர்...அணைந்தார் - அம்மைபாகமுடைய ஏகம்பவாணர் நிலை பெற எழுந்தருளியுள்ள மதில் சூழ்ந்த காஞ்சிப் பதியின் பக்கத்தே அணைந்தருளினர்.

(வி-ரை) அணைந்து பணிந்து ஏத்தி - பதியின் அருகே அணைந்தமை இப்பாட்டிற் கூறிய ஆசிரியர், பதியினுள் புக்குத் திருக்கோயிலை அணைந்தமையும் அங்கு இறைவரை வணங்கித் துதித்தமையும் மேல்வரும் பாட்டுக்களிற் கூறுகின்றார்.

நீதி வாழ்தலாவது-சைவ விதியாகிய ஒழுக்கத்தினின்றும் பிறழாது வாழ்தல்.

போற்ற - போற்ற அங்குநின்றும் அகன்று சென்று; **போற்ற - வந்த** என்று கூட்டி முடித்தலுமொன்று.

வேதமோடு சைவநெறி விளங்க வந்த - ''வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க'' *(1899)* என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

மாதொர்பாகர் தாம் மன்னும் - காஞ்சியாகிய இப்பதியில் அம்மை பூசித்துத் தழுவி வரம் பெற்ற வரலாற்றுக் குறிப்புப்படக் கூறியவாறு. ''தழுவ வெளிப்பட்ட கள்ளக் கம்பனை'' (நம்பி. தேவா); ''தழுவிக் கொண்டனள்'' *(1140)* முதலியவை காண்க.


மதில்சூழ் காஞ்சி - முத்தி தருவனவாகிய ஏழு பெரும்பதிகளுள் ஒன்றாதலும் சோழ மன்னர்களின் தலைநகராதலும் குறிப்பு. திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம் பார்க்க. ''தெய்வப் பதியென்று வைய முழுதும் தொழுதேத்தும் மதில்சூழ் காஞ்சி'' *(1581)* என்றது காண்க.

நீதி வழுவா—என்பதும் பாடம். *985*


திருக்குரங்கணின் முட்டம்

திருச்சிற்றம்பலம் பண் - தக்கராகம்


விழுநீர் மழுவாட் படையண்ணல் விளங்குங்
கழுநீர் குவளை மலரக் கயல்பாயுங்
கொழுநீர் வயல்சூழ்ந்த குரங்கணின் முட்டந்
தொழுநீர் மையர்தீ துறுதுன்ப மிலரே. (1)



திருவோத்தூர் பாட்டு :- 2878



குரங்கணில்முட்டம் பாட்டு :- 2883



கச்சித்திருநெறிக்காரைக்காடு பாட்டு :- 2898

கல்லார் மதிற்காழியுண் ஞானசம் பந்தன்
கொல்லார் மழுவேந்தி குரங்கணின் முட்டஞ்
சொல்லார் தமிழ்மாலை செவிக்கினி தாக
வல்லார்க் கெளிதாம் பிறவாவகை வீடே. (11)

பதிகக் குறிப்பு:– குரங்கணின் முட்டம் தொழுவார் வினை நீங்கும்.

பதிகப் பாட்டுக்குறிப்பு:– *(1)* விழுநீர் மழுவாட் படை - விழுநீர் - ஆகாயத்தினின் றும் இறைவரது சடையிற் பொருந்திச் சிறிதாக விழும் கங்கை. நீரும் மழுவும் வாட்படையும் உடைய; **விழுநீர்** - விழுத்தும் எனப் பிறவினையாகக் கொண்டும் **நீர்**- நீர்மை என்று கொண்டும் அழித்தற் றொழிற்றன்மையுடைய மழு என்றலுமாம்; படைகளானன்றி நினைப்பின் மாத்திரையானே (அழிவு) வீழ்த்தற்றொழில் நிகழ்வதாம் என்ற குறிப்புப்பட **விழும்** என்றார் என்றலுமாம்; ''நினையாதார் புரமெரிய நினைந்த'', ''சூலமும் தண்டுஞ் **சுமந்தது**ண்டு'' (ஏவப்பெருமல் சுமந்தது) (தேவா); **''கழுநீர்..கொழுநீர்''** - ''கொங்குமலர் நீர்'' *(2882)* என்று ஆசிரியர் இதனை எடுத்துக் காட்டியருளினர்; 2-3வது பாட்டுக்களும் பார்க்க; **தீதுறு** - தீமையால் வரும்; ஊழால் வருவனவும் துன்பஞ் செய்யாது உடலூழாய்க் கழியப் பெறுவர் என்பது;—***(2)*** **கடை** - இடை - அயலே; அருகே; ஏழனுருபு; **மென்குளத் தோங்கிய... புனல்**- இது கோயிலைச் சுற்றியுள்ள காக்கைமடுவின் குறிப்பு; **மென் - குளம்** - மெல்லிய சிறிய பொய்கை; **குடையார்** - குடைதல் - நீராடல் - பொருந்திய;—***(3)* ஏலம்** - வாசனைப் பொது; கொன்றை முதலிய மலர்களின் மணங் குறித்தது; ஒரு பாகம் சடையினுடன் விரவிய அம்மையாரது கூந்தலின் மலர்ச்சாந்தினது மணம் என்றலுமாம்;—***(4)* வாடாவிரி** - வாடுதலின்றி எப்போதும் விரிந்துள்ள; **கொன்றையான்** - என்க. **நலபாலன...செய்த** - நன்மையான பக்குவம் நோக்கித் துன்பங்கூடாதபடி - சேராதபடி - செய்த அம்மானது; **கூடாதன**-இனி மலச்சார்வு கூடா வகைகள். **ஆடா-ஆடுதல்**-திளைத்துத் தொழுதல் என்ற பொருளில் வந்தது. கைதொழு தாடா வருவேன்'' (தேவா- ஐயாறு -அரசுகள்); —***(5)* இறை** - முன்கை; எல்வளை யிறையூரும்மே'' (கலி - 7); தலத்தின் அம்மை பெயர்க் குறிப்பு. **கீறிய** - தோல் உரித்த; **குறையார்** - குறைவுடன் வந்தடைந்த;—***(6)* நினைந்தே** - நினைந்ததன் பயனாலே; **நினைந்தே ஒழிந்தோம்** என்று கூட்டுக; **பலவும் பயனுள்ளன**-பதமுத்திகளும் - தேவபோகம் முதலியனவும் பயனாகக் கொண்ட செயல்கள்; **பற்றும்** - மலச் சார்புகளால் வருவன; **கலவம்** - தோகை; கலாபம் என்பர் வடவர்; இது ஆண்மயிலுக் குரியது என்றது குறிக்கப் **பேடையோடு** எனப் பேடைக்கு அடைமொழியின்றிக் கூறிய நயம் காண்க; **நிலவும்** - நீங்காது நிலைபெற இடங்கொண்டு வீற்றிருக்கும்;—***(7)* மாடார்** - பொன் போன்ற; **மாடு** - பொன்; **ஆர்** - உவமவுருபு. **கொன்றை** - இறைவர் பக்கமும், **தோடார் குழை** - அம்மைகலந்த பக்கமும் குறித்தன; 4-வது பாட்டும் பார்க்க; ''தோடுடையா னொருகாதிற் றூய குழை தாழ'' (தேவா); **கூடார்** - பகைவர்; **ஆடாரரவம்** - ஆடும் தன்மையுடைய அரவு; **அமர்வான் எம் இறைவன்** என்க; எம் இறைவன் என்பது இசையெச்சம்;—***(8)* உய்யா வகை** - தப்பாத வகையால்; **கொய்** - அரும்புகள்; **காண்டல்** - முனைத்தல்; அடர்த்தல்;—***(9)* அசைந்து** - இளைத்து;—***(10)* குழு** - கற்றையாகிய;— ***(11)* கல்லார்** - கற்களாலியன்ற; **கொல்** - ''விழுநீர்'' (1); **ஏந்தி** - ஏந்தியவரது; **ஏந்தி** - பெயர்.

வேறு

2884. நீடு காஞ்சி வாணரு நிலவு மெய்ம்மை யன்பரும்
மாடு சண்பை வள்ளலார் வந்த ணைந்த வோகையாற்
கூடு கின்ற வின்பநேர் குலவு **வீதி கோலினர்**
காடு கொண்ட பூகம் வாழை காமர் தோர ணங்களால். 986

தலவிசேடம்:– திருக்குரங்கணின்முட்டம் - தொண்டைநாட்டில் 6-வது பதி. குரங்கும் (வாலி) அணிலும் முட்டமும் (காகம்) வழிபட்ட பதி என்பது தலப் பெயர்க் காரணம். வாலி பூசித்தமையால் சுவாமி வாலீசுவரர் எனப் பெயர் பெறுதல் காண்க. கோயிலைச் சுற்றியுள்ள பொய்கை காக்கை மூக்கினுற் கீறியுண்டாக்கிய காரணத்தாற் காக்கை மடு எனப் பெயர் வழங்குதல் காக்கை பூசித்ததைக் காட்டும் அறிகுறியாம்; இம்மூன்றினுருவங்களும் கோயில்வாயிலில் தீட்டித் தாபித்து வழிபடப்பட்டு வருகின்றன; பூசித்த பிராணிகளின் பேரால் அவ்வத் தலங்கள் வழங்கப்படுதலைச் சீகாளத்தி திருவானைக்கா முதலிய தலப் பெயர்களாலறிக. சுவாமி - **வாலீசுவரர்;** அம்மை - **இறையார்வளையம்மை;** அம்மை பெயர் பதிகம் 5-வது பாட்டிற் காண்க.

இது காஞ்சிபுரத்தினின்றும் தெற்கில் மட்சாலை வழி 6 நாழிகையளவில் அடையத்தக்கது.

2884. (இ-ள்) நீடு...அன்பரும் - பெருமையால் நீடிய காஞ்சிபுர நகரத்தில் வாழும் மாந்தர்களும் மெய்ம்மை நெறியினிலைபெற்ற திருத்தொண்டர்களும்; மாடு... இன்பம் - நகரின் அணிமையில் சீகாழி வள்ளலாராகிய பிள்ளையார் வந்து அணைந்த மகிழ்ச்சியினுலே பொருந்திய இன்பம் காரணமாக; காடுகொண்ட....தோரணங்களால்-காடுபோலச் செறிந்த கமுகுகளும் வாழைகளும் அழகிய தோரணங்களும் ஆகிய இவற்றுலே; நேர்குலாவு...கோலினர் - நேராக விளங்கிய வீதிகளை அலங்கரித்தனர்.

(வி-ரை) நீடுகாஞ்சி - "என்று முள்ளது காஞ்சி" (1130) என்பது முதலிய சிறப்புக்களை இங்கு நினைவுகூர்க.

காஞ்சி வாணர் - காஞ்சியில் வாழும் மாந்தர்கள்; இவர்கள் நகர மாந்தர்; இவர்கள் வேருகவும் தொண்டர்கள் வேருகவும் கணிக்கப்படுதல் மரபு. **மெய்ம்மையன்பரும்** என்று பின்னர்க் கூறுதல் காண்க; 1583 - 1555—2008 முதலியவையும் மேல்வரும் பாட்டுக்களும் பார்க்க.

மெய்ம்மை நிலவும் - என்க; **மெய்ம்மை** - மெய்ந்நெறி குறித்தது; **மெய்ம்மை-** இறைவரது கூத்தாம் தன்மை; சிவநெறி. **மாடு** - நகர்ப்பக்கம்; **மாடு** - ஞானச் செல்வமாகிய என்ற குறிப்புமாம்; **ஓகை** - உவகை; **இன்பம்** - இன்பத்தால்; **கோலுதல்** - வரிசைப்பட அலங்கரித்தல்; **காடு** மிகுதி குறித்தது; தோரண முதலியவற்றுற் கோலினர் என்க.

குறிப்பு:—அன்பர்களின் ஆர்வமிகுதி குறிக்க இதுவரை கூறிவந்த யாப்பினை மாற்றி, ஏற்ற சந்தத்தில் அமைத்துத் தொடங்கும் கவிநலம் கருதுக. *986*

2885. **கொடிநிரைத்த வீதியிற் கோலவேதி கைப்புறங்**
கடிகொண்மாலை மொய்த்தபந்தர் கந்தநீர்த் தசும்புடன்
மடிவில்பொன் விளக்கெடுத்து மாதர்மைந்தர் மல்குவார்
படிவிளக்கு மன்பரும் பரந்தபண்பி லீண்டுவார். 987

2885. (இ-ள்) கொடிநிரைத்த...புறம் - கொடிகளை வரிசைபெறக் கட்டிய வீதியில் அழகிய திண்ணையின் பக்கத்தே; கடிகொள்...விளக்கெடுத்து - மணமுடைய மலர்மாலைகளை நெருங்கிக் கட்டிய பந்தரில் வாசனைநீர் நிறைந்த நிறை குடங்களுடன் கெடுதலில்லாத பொன் விளக்குக்களை ஏந்திக்கொண்டு; மாதர் மைந்தர் மல்குவார் - பெண்களும் ஆண்மக்களும் நிறைந்து கூடுவார்களும்; படிவிளக்கும்...ஈண்டுவார் - பூமி விளக்கம் செய்யும் அன்பர்களும் பரவிய தன்மையில் வந்து நெருங்குவார்களுமாகி;

(வி-ரை) நிரைத்தல் - வரிசைபெறக் கட்டி; பலவகைக் கொடிகளையும் பல பக்கங்களிலும் வரிசைபெற அமைத்தல் இந்நாளிலும் வழங்கும் அணி வகையாவதும் காண்க.

வேதிகை - திண்ணை. **வேதிகைப்புறம் - பந்தர்** - வீதியில் திண்ணைகளும் அதன் புறம்பு பந்தரும் அமைவன. இத்திண்ணைகள் சுதை முதலியன இட்டு அணி செய்வனவும் நிறைகுடம் முதலிய மங்கலப் பொருள்களை நிரைபெற அமைக்க வுதவுவனவுமாம்.

மாலை மொய்த்த பந்தர் - பந்தர்களிலே பூமாலைகளை நிறையக் கட்டுதல் அணிவகை. **கடிகொள் மாலை** - வாசனைப் பூக்களாலாகிய மாலைகள்; மாலை மொய்த்தல் அணி வகையேயன்றி வாசனை செய்யவும் உதவும். இந்நாளில் காகிதம் துணி முதலியவற்றாலாகிய போலிமாலைகளை அணிந்து மகிழ்தல் அறிவுடையோர் எள்ளத் தக்கனவும் பயனில்லாதனவுமாகிய போலி வழக்கங்களென்க.

கந்தநீர்த் தசும்பு - வாசனைப் பண்டம் பெய்த நீர் நிறைந்த குடங்கள்; நிறை குடங்கள். **தசும்பு** - குடம்.

மடிவில் பொன் விளக்கு எடுத்து - மடிவில் - கெடாத - அவியாத; **பொன்** - அழகு என்றலுமாம். **எடுத்து** - ஏந்தி; **விளக்கேந்தி மாதர் வருதல்** - மங்கலஞ்செய் வழக்குக்களுள் ஒன்று.

மாதர் மைந்தர் - நாயகி நாயகர்களாக இணைந்து.

படிவிளக்கும் அன்பர் - உலகில் அன்பு நெறியை விளக்கி மக்களை உய்விக்கும் அன்பர்கள்; திருத்தொண்டர்கள்.

ஈண்டுவார் - விம்மவே - போய் வணங்கினர் என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. **ஈண்டுவார்** - முற்றெச்சம்.

பரந்த பண்பில் - அங்கங்கும் பரவி நிறைந்த தன்மையில். 987

2886. (இ-ள்) கோதை மாதர்...விம்மவே - மாலையணிந்த பெண்களுடைய ஆடலோசையும், குலாவும் தொண்டர்களது பாடலொலியும், வேதகீதங்களின் நாதமும் கூடி

2886. **கோதைமாத ராடலுங் குலாவுதொண்டர் பாடலும்**
வேதகீத நாதமும் மிக்கெழுந்து விம்மவே
காதனீடு காஞ்சிவாணர் கம்பலைத் தெழுந்துபோய்
மூதெயிற் புறம்புசென் றணைந்துமுன் வணங்கினர். 988

மிக மேலெழுந்து கிளர்ச்சி பெற; காதல்நீடு...போய் - பெருவிருப்பினாலே மிக்க காஞ்சி வாழும் மாந்தர்கள் ஆரவாரித்து ஒலிசெய்து எழுந்து சென்று; மூதெயில்...வணங்கினர் - பழைமையாகிய மதிலின் புறத்திலே சென்று கூடி முன்பு வணங்கினர்கள்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி - ரை) மாதர் ஆடல் - எதிர்கொள்ளும் மங்கலங்களுள் ஒருவகை; **தொண்டர் பாடல்** - சைவத்துறையும், வேதகீத நாதம் - வேதநெறியும் கூடிய விளக்கம் காட்டியன.

கம்பலைத்து - மகிழ்ச்சி மிக்க ஆரவாரத்தின் ஒலிசெய்து. கம்பலை - முழக்கம். **முன்கூறிய ஆடல்** - பாடல்-கீதம் என்பவை பொருள் குறித்த ஒலிகளாதலின் வேறு பிரித்து முன்னர்க் கூறப்பட்டன.

மூதெயில் - பழநகராதல் குறிப்பு. நகரின் **மதிற்புறம்பு** வணங்குதல் எதிர் கொள்ளும் முறை.

முன் வணங்கினர் - முன் - திருக்கூட்டத்தின் முன்பு. 988

2887. (இ-ள்) *சண்பையாளும்...சார்தலும் - சீகாழித் தலைவராகிய பிள்ளையார் திருமுன்பு அத்திருத்தொண்டர்கள் வந்து சார்ந்தபோது; பண்பு...கண்டு - அடிமைப் பண்பினால் மிக்கு முத்துச் சிவிகையினின்றும் பிள்ளையார் இறங்கி வணங்கும் தன்மையினைக் கண்டு; எண்பெருக்கு...சொல்மண்பரக்க - எண்ணைப் பெருக்குகின்ற பெருந் தொண்டர்கள் தொழுது ஆர்த்துத் துதித்த அர ஒலி உலகிற் பரவ; வீழ்ந்தெழுந்து...ஆர்த்தனர் - நிலமுற விழுந்து எழுந்து வானமளாவ ஆரவாரித்தனர்.*

(வி-ரை) சண்பை...சார்தலும் - முன் கூறியபடி வணங்கித் திருக்கூட்டத்தைக் கடந்து சீகாழித் தலைவரது சிவிகையின் முன்பு அத்திருத்தொண்டர் வந்த வுடனே; **சார்தலும்** - சார்பாவது பிள்ளையாரது திருவடி எனச் சார்தலும் என்பதும் குறிப்பு.

பண்பு நீடி - இழிந்து - இறைஞ்சு - பான்மை - பண்பு - அடிமைத் திறம்; தொண்டர் கூட்டமும் திருவேடமும் அரனெனவே கண்டு தொழற்பாலன என்ற அடிமைத் திறம். **இழிந்து** - இறங்கி; **இறைஞ்சி** - வணங்கி.

கண்டு - அத்திறத்தினின்று ஒழுகிப் பிள்ளையார் காட்டக்கண்டு.

எண் பெருக்கும் - எண் - எண்ணம். **பெருக்குதலாவது** - இவ்வாறு அடிமைப் பண்பினில் உலகம் எண்ணி உய்யும் தன்மையினை வளரச் செய்தல்.

மிக்க - பெருமையினால் மிகுந்த; அளவிறந்த என்றலுமாம்.

2887. சண்பையாளு மன்னர்முன்பு **தொண்டர்வந்து** சார்தலும்
பண்புநீடி யானமுன் பிழிந்திறைஞ்சு பான்மைகண்
டெண்பெ ருக்கு மிக்கதொண்ட ரஞ்சலித் தெடுத்தசொன்
மண்ப ரக்க வீழ்ந்தெழுந்து வானமுட்ட ஆர்த்தனர். 989

2888. **சேணு** யர்ந்த வாயினீடு சீர்கொள் சண்பை மன்னனார்
வாணி லாவு நீற்றணி விளங்கிட மனத்தினிற்
பூணுமன்பர் தம்முடன் புகுந்திடப் புறத்துளோர்
காணு மாசை யிற்குவித்த கைந்நிரை யெடுத்தனர். 990

தொண்டர் - பிள்ளையாருடன் வந்த திருக்கூட்டத்தவர்களும் எதிர்கொண்டு வந்து வணங்கிய காஞ்சிபுரத் தொண்டர்களும்.

அஞ்சலித்து எடுத்த சொல் - அடிமைத்திறத்தின் விளைவாகிய அன்பினைக் கண்டு தாம் வணங்கி முழக்கிய அரனும முழக்காகிய ஒலி. **சொல்** - என்றார் அரனுமமே சொல்லத் தக்கதென்பது குறிக்க. ''எல்லா மரனுமமே சூழ்க'' (தேவா); **மண் பரக்க** - உலகிற் பரவ.

வானமுட்ட ஆர்த்தல் - ஆரவாரிப்பின் ஓசையும் அரவென்னும் சொல்லின் எழுந்த மிக்க ஒலியும் ஆகாயமளாவ; **மண்பரக்க வீழ்ந்து** - சொல்லொலி மண்ணவர் செவிப் புலங்களில் விழ்ந்து என்றும், **எழுந்து** -மேல் விண்ணில் எழுந்து என்றும் உரைத்தலுமாம்.

நீட ஐயன்முன்—எழுந்த சொல்—என்பனவும் பாடங்கள். *989*

2888. (இ-ள்) நீடு சீர்கொள் சண்பை மன்னனார் - நீடிய சிறப்புடைய சீகாழித் தலைவராகிய பிள்ளையார்; வாணிலாவு...தம்முடன் - ஒளிபொருந்திய திருநீற்றுக் கோலம் திருமேனியில் விளங்கிட மனத்துள்ளே சிவன்பாலன்பே பூணுகக் கொண்ட அடியவர்களுடனே; சேணுயர்ந்த வாயில் - வானளவுயர்ந்த நகரத்து மதிற்புற வாயினுள்ளே; புகுந்திட - புகுந்தபோது; புறத்துள்ளோர்...எடுத்தனர் - இவ்வளவில் நகர்ப்புறத்தினின்றும் வந்து கூடிய மக்கள் பிள்ளையாரைக் காணும் ஆசையினாலே வரிசையாகக் கைகளைத் தலைமேற் கூப்பினர்.

(வி-ரை) சேணுயர்ந்த வாயில் - இது புறத்திருமதில் வாயில். கோயில் வாயில் பின் *(2891)* வருதல் காண்க; இம்மதிற்றிருவாயிலின் சிறப்பினை ''ஆங்கு வள ரெயிலினுடன் விளங்கும் வாயி லப்பதியில் வாழ்பெரியோ ருள்ளம் போல, வோங்குநிலைத் தன்மையவாய்...தீங்குநெறி யடையாத தடையுமாகி...'' *(1165)* என்று முன் எடுத்துக் கூறியதை நினைவுகூர்க; **சேணுயர்ந்த** என்ற குறிப்புமிது; **சேண்**-சேணில்; வானில். **வாயில்**-வாயிலின் கண்; ஏழனுருபு விரிக்க. **வாயிலில் புகுந்திட** என்க.

நீற்றணி மேனி மேல் விளங்கிட மனத்தினில் அன்பு பூணுகவுடையவர் என்க. ''மாசிலாத மணிதிகழ் மேனிமேற், பூசு நீறுபோலுள்ளும் புனிதர்கள்'' *(141)*; இவர்கள் பிள்ளையாரை எதிர்கொள்ள வந்த காஞ்சி வாழும் திருத்தொண்டர்கள்; இவர்களே பிள்ளையாரை உடனாக நகரின் உள்ளே அழைத்துச் சென்றவர்கள் என்பது.

2889. **வியனெடுந் தெருவினூடு மிக்கதொண்ட ரார்ப்பெழக்,**
கயனெடுங்கண் மாதருங் காதனீடு மாந்தரும்
புயல்பொழிந்த தாமெனப் பூவினோடு பொற்சுணம்
இயலுமாறு வாழ்த்தெடுத் திருமருங்கும் வீசினார். 991

புறத்துளோர்-காணுமாசையில் - புறத்துளோர் - தொண்டர் கூட்டத்தின் புறத்தே நின்றவர்களும் நகர்ப்புறத்தினின்றும் வந்து கூடியவர்களும்.

காணுமாசையில் - பிள்ளையார் சிவிகையினின்றிழிந்து தொண்டர் கூட்டத்தினுள் அவர்கள் சூழச் சென்றருள்கின்றாராதலின் இவர்கள் அருகில் நெருங்கிக் காண மாட்டாது அந்த ஆசையினாற் கைகளைக் கூப்பி வணங்கினர் என்பதாம். **நிரை குவித்த கை எடுத்தனர்** - வரிசைபெறக் கைகளை மேலே கூப்பி வணங்கினர்; **எடுத்தல்** - மேற்கூப்புதல். **பூணும் அன்பர்** - அன்பினையே பூணாகக் கொண்டவர்.

மனத்தினாற் பூணும் அன்பர் - என்று பாடங்கொண்டு மனங் காரணமாகப் பொருந்தும் மெய்யன்பினையுடைய அடியார்கள் என்றும், மனத்திற் பொருந்திய என்றும் உரைத்தனர் முன் உரைகாரர்கள்.

வான்நீடு—விளக்கிட—என்பனவும் பாடங்கள் *990*

2889. (இ-ள்) வியனெடும்...எழ - இடம் அகன்ற நீண்ட தெருவினிடையே திரண்ட தொண்டர்களின் முழக்கம் எழ; கயனெடுங் கண்...மாந்தரும்-கயல்மீன் போன்ற நீண்ட கண்களையுடைய பெண்களும் காதலால் மிக்க மாந்தர்களும்; புயல்...வீசினார்-மேகம் மழை பெய்ததுபோலப் பூக்களோடு பொற்சுண்ணப் பொடியினை ஏற்றவாறு வாழ்த்துக் கூறி இரண்டு பக்கங்களிலும் வீசினார்கள்.

(வி - ரை) மாதரும்...மாந்தரும் - இவர்கள், பிள்ளையார், நகரினுள் புகுந்து கம்பவாணர் திருக்கோயிலுக்குச் செல்லுமிடையில் தெருவில் இருபுறமும் வீடுகளினின்று வாழ்த்திப் பூவும் சுண்ணமும் தூவினவர்கள். முன் **''மாதர் மைந்தர் மல்குவார்''** *(2885)* எனப்பெற்றவர்கள் விளக்கு முதலிய மங்கலங்களுடன் மதிற் புறத்துச் சென்று பிள்ளையாரை எதிர்கொண்டவர்கள்.

மாதரும் காதனீடு மாந்தரும் - சதிபதிகளாக இணைந்து வாழ்த்தியும் பூத்தூவியும் தெருவின் இருபுறமும் இருந்தனர் என்பது; **காதனீடு** என்ற குறிப்புமிது. இஃது இல்லற நிலையின் நிகழ்வதென்க. திருப்புக்கொளியூரவிநாசியில் ஆளுடைய நம்பிகளை மறையவனும் மனைவியும் உடன் வந்து வணங்கும் நிகழ்ச்சி காண்க; இவ்வாறன்றி இவ்விருவகையினரும் அங்கங்குத் தனித்தனி வாழ்த்தினர் - பூவும் சுண்ணமும் தூவினர் என்று கொள்ளுதலுமாம்.

புயல் பொழிந்ததாமென - வினைபற்றி வந்த உவமம். மழைபோலச் செறிவும் மென்மையும் தண்மையும் பொருந்த இடையறாது பொழிதல் குறிப்பு.

இயலுமாறு - பிள்ளையாரது மேன்மைக்கேற்குமாறு என்றும், அவ்வவர் திறத்துக் கியன்றவாறு என்றும் உரைக்கநின்றது.

திருவேகம்ப வழிபாடு

2890. **இன்ன வண்ண மியாவரு மின்ப மெய்த வெய்துவார்**
பின்னு வார்சடைமுடிப் **பிரான்ம கிழ்ந்த கோயில்கள்**
முன்னுறப் பணிந்துபோய் மொய்வரைத் திருமகள்
மன்னுபூ சனைமகிழ்ந்த மன்னர்கோயின் முன்னினுர். 992

பூவும் பொற்சுண்ணமும் கலந்து வீசுதல் மங்கலம் செய்யும் செயல்களுள் வருவன. "புரிந்த பூவொடு பொற்சுணங்கமுமி'' (பெருங்கதை - 2 - 39 - 46).

இருமருங்கும் - தெருவின் இருபக்கங்களினின்றும். *991*

2890. (இ-ள்) இன்னவண்ணம்...எய்துவார்-மேற்கூறியவாறு இப்படி எல்லாரும் இன்பம் அடையச் சேர்வாராகிய பிள்ளையார்; பின்னுவார்...போய் - புரிந்த நீண்ட சடைமுடியினை உடைய இறைவர் மகிழ்ந்த பல கோயில்களைச் செல்லும் வழி இடையே முன்னுகப் பணிந்து சென்று; வரைத் திருமகள்...முன்னினுர் - மலையரசன் திருமகளாராகிய உமையம்மையாரது நிலைபெற்ற பூசனையை என்றும் மகிழ்ந்து கொண்டு எழுந்தருளிய திருவேகம்பராகிய இறைவருடைய திருக்கோயிலின் முன் அணைந்தருளினர்.

(வி-ரை) இன்ன வண்ணம் - முன் ஆறு திருப்பாட்டுக்களிற் கூறியபடி *(2884-2889)*; **யாவரும்** - காஞ்சிவாணரும் திருத்தொண்டர்களும்.

இன்பமெய்த - ''வாழ்த்துவதும் வானவர்க டாம்வாழ்வான்'' (திருவா) என்றபடி பிள்ளையாருக்கு மங்கலஞ் செய்து எதிர்கொண்ட சிறப்பினுல் அவ்வவர்கள் தாங்களின்பமடைய.

எய்துவார் - எய்துவாராகிய பிள்ளையார்; **எய்துவார் - போய் - முன்னினுர்** என்று கூட்டுக.

கோயில்கள் முன்னுறப் பணிந்து போய்-காஞ்சிமாநக ரெல்லையுள் எண்ணில்லாத (கோடி) சிவாலயங்கள் உள்ளன என்பது முன் உரைக்கப்பட்டது; ''இறைவர் தாமகிழ்ந் தருளிய பதிகளெண் ணிறந்தவத் திருநக ரெல்லை'' *(1153)* என்றதும், ஆண்டுரைத்தவையும் பார்க்க. இங்குக் கூறிய **கோயில்கள்** நகரத் தென்மதிற்புறத்தினின்றும் உள்ளே ஏகம்பர் திருக்கோயிலை நோக்கி வரும் வழியினிடையே உள்ளவை; இவை கச்சபேசம் முதலாயின என்பது கருதப்படும்.

முன்னுறப் பணிந்து - போய் - திருவேகம்பத்தை நோக்கி வரும் பிள்ளையார் இடையிற் கண்ட இறைவர் கோயில்களையும் வணங்கிச் செல்லவேண்டியது முறையாதலின் அதன்படி முன்னுக அவற்றை இறைஞ்சி.

மொய்வரைத் திருமகள் மன்னுபூசனை மகிழ்ந்த-மலையரசன் மகளாராய் உமையம்மையார் போந்து வந்து காஞ்சி மாவடியில் இறைவரை நிலைபெறப் பூசித்து அறம் வளர்த்து வீற்றிருக்கும் வரலாறு முன் திருக்குறிப்புத்தொண்ட நாயனுர் புராணத்துள் விரித்தவாறு காண்க *(1127-1148)*; **மொய்வரைத் திருமகள் - வரை**-மலையரசனைக் குறித்தது; வரை அரசனை **வரை** என்றதுபசாரம். ''பொருப்பில் வேந்தன்'' *(1131)*; **மன்னு பூசனை** - ''மாறிலாதவிப் பூசனை

2891. **கம்ப வாணர் கோயில்வாயில் கண்டுகை குவித்தெடுத்
தும்ப ரோங்கு கோபுரத்தின் முன்னிறைஞ்சி யுள்ளணைந்
தம்பொன் மாளி கைப்புறத்தி லன்ப ரோடு சூழவந்
திம்பர் ஞால முய்யவந்த பிள்ளையா ரிறைஞ்சுவார்;** 993

யென்றுமன்ன வெம்பிரான் மகிழ்ந்துகொண் டருளி'' (1146) என்று அம்மை வேண்ட இறைவர் ''விரும்பு பூசனை மேவி வீற்றிருந்'' தருளினர் (1147) என்றது காண்க.

முன்னினார் *- முன்னாக - அணித்தாகச் சென்றருளினார்.* *992*

2891. (இ-ள்) *கம்பவாணர்...எடுத்து - ஏகம்பவாணராகிய இறைவரது திருக்கோயில் வாயிலினைக் கண்டு கைகளைக் கூப்பித் தலையின்மேல் தூக்கி வணங்கி; உம்பர்...இறைஞ்சி - வானத்தின்மேல் ஓங்கும் திருக்கோபுரத்தின் முன்னே பணிந்து; உள் அணைந்து...வந்து - திருக்கோயிலினுள்ளே சேர்ந்து அழகிய பொன் மாளிகையின் புறச்சுற்றிலே அன்பர்களுடனே சூழ்ந்து வலம் வந்து; இம்பர்...இறைஞ்சுவார் - இந்நிலவுலகம் உய்யும்படி திருவவதரித்த பிள்ளையார் வணங்குவாராகி,*

(வி – ரை) உம்பரோங்கு கோபுரம் - திருவேகம்பர் கோயிலின் தெற்குத் திருக்கோபுரம். இக்கோபுரம் மிகப் பெரியதாயும் உயரமாயும் உள்ளதுபற்றிய சிறப்புக் கூறப்பட்டது. **உம்பர்**-ஆகாயம்; ஏழனுருபு தொக்கது.

பொன்மாளிகை - ஏகம்பத் திருக்கோயிலின் திருமதிலின் உட்புறம் இறைவரது இருக்கையினையும் மாமரத்தையும் சுற்றி உள்ள கோயிலின் பகுதி.

மாளிகைப் புறம் - புறமதிலினை அடுத்து உள்ளே பெரிய சுற்று; **பொன் மாளிகை**-திருத்தில்லையினைப் போல இங்கும் திருக்கோயிலினுள் பல பகுதிகள் பொன்னால் வேயப்பெற்றிருந்தன என்பது அறியப்படும்.

இம்பர் ஞாலம் - இந்நிலவுலகம்; **ஞாலம் உய்ய வந்தமை** - முன் உரைக்கப் பட்டது *(1916 - 1924).*

இறைஞ்சுவார் - இறைஞ்சுவாராகித் - தாழ்ந்தார் - என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. இவ்வாறிறைஞ்சும் இடம் இறைவரது திருமுன்பு என்பது ''கம்பரை வந் தெதிர்வணங்கும்'' என மேல்வரும் பாட்டிற் காண்க. *993*

2892. (இ-ள்) செம்பொன்மலைக் கொடி...காவலனார் - செவ்விய பொன் மலையரசனுக்கு மகளாராகிய கொடிபோன்ற காமாட்சியம்மையார் தழுவியிடக் குழைந்து காட்டியருளிய திருமேனியினை உடைய திரு ஏகாம்பரநாதரைத் திரு முன்பு வந்து எதிரே வணங்கும் கவுணியர் பெருமானாராகிய பிள்ளையார்; பம்பு...புளகம் வர-ததும்பும் துளிகளாகப் பெருகி அருவிபோலக் கண்ணீர் பாய்ந்தொழுகத் திருமேனியில் மயிர்ப்புளக முண்டாக; தம்பெருகு...தாழ்ந்தார் - தமது திரு மனத்தினிறைந்து பெருகுகின்ற பெருவிருப்பம் உந்த நிலத்தின்மேல் வீழ்ந்து வணங்கியவராகி,

வேறு

2892. **செம்பொன்மலைக் கொடிதழுவக் குழைந்தருளுந் திருமேனிக்**
கம்பரைவந் தெதிர்வணங்குங் கவுணியர்தங் காவலனார்
பம்புதுளிக் கண்ணருவி பாய்ந்துமயிர்ப் புளகம்வரத்
தம்பெருகு மனக்காத றள்ளநில மிசைத்தாழ்ந்தார். 994

(வி-ரை) செம்பொன் மலை - செம்பொன் - மிக்குயர்ந்த பொன்; **பொன்மலை**-மேரு. **மலை** - இங்கு மலையரசன் என்ற பொருளில் வந்தது. **மலைக் கொடி**-மலையரசன் மகளாராகிய கொடிபோன்ற உமையம்மையார். முன் ''மொய் வரைத் திருமகள்'' *(2890)* என்றதும் காண்க. ''பொருப்பில் வேந்தன்'' *(1131)*.

கொடி தழுவக் குழைந்தருளும் திருமேனிக் கம்பர்-கொளுகொம்பைப் பற்றிப் படரும் கொடிபோல இறைவரை அம்மை தழுவிக்கொண்டனர் என்றதும் குறிப்பு. இவ்வரலாறுபற்றித் திருக்குறிப்பு - புராணம் *(1110—1143)* பார்க்க. விரிவு காஞ்சிப் புராணத்துட் காண்க. இத்தலத்தின் அம்மையின் சிறப்புப் பற்றி அம்மையை முன்வைத்தோதினார்.

கண்ணருவி பாய்ந்து-கண்ணீர் அருவிபோலப் பெருகி வழிந்து. பம்புதுளி - ததும்பும் நீர்த்துளி.

மயிர்ப்புளகம் - மயிர்க் கூச்செறிதல்; மயிர்கள் நேராக நிற்றல். இஃது அன்பு மிகுதி, அச்சம் முதலியவற்றால் நிகழும் மெய்ப்பாடுகளுள் ஒன்று. இங்கு அன்புப் பெருக்கினாலாயது. **மயிர்ப்புளகமெழ** என்ற பாடமாயின் இக்கருத்து மிக விளங்கும்.

பெருமனக் காதல் தள்ள நிலமிசைத் தாழ்ந்தார் - தள்ளத் - தாழ்ந்தார் - காதல் என்ற பொருள் உள்ளிருந்து உந்தித் தள்ளுதலால் நிலத்தின் வீழ்ந்ததுபோல வீழ்ந்தனர். **தள்ள** - என்பது குறிப்புருவகம்; தமது வசமிழந்து தாழ்ந்தனர் என்பதாம். *994*

2893. (இ-ள்) பலமுறையும் பணிந்து எழுந்து - பலமுறைகளும் பணிந்து நிலமுற வீழ்ந்து வணங்கி எழுந்து; பங்கயச் செங்கை முகிழ்ப்ப - தாமரைபோன்ற கைகள் குவிய; மலரும் முகம் அளித்த - மலர்கின்ற திருமுகத்திற் றோன்றிய; மணிவாயான் - அழகிய ஒளிவிளங்கும் வாக்கினாலே; மறையான்...எடுத்தருளி - ''மறையான்'' என்று உலகம் உய்யும்பொருட்டுத் தொடங்கியருளி; உருகிய அன்பு என்பு உருக்க-மனமுருகிய அன்பு எலும்பினையும் உருக்குவதாக; நிலவும்... நிகழ- பொருந்திய பண்ணும் முதற்றாளமும் கூட நிரம்பிய தன்மையில் உளவாக,

(வி-ரை) பலமுறையும் பணிந்தெழுந்து - மூன்றுமுறை, ஐந்து முறை முதலாகப் பதினொன்று வரை விதித்த முறையின் மிக்கு அளவிடலங்காத படி **பலமுறையும்** என்பது காதலின் மிகுதி விதி கடந்து செலுத்தும் நிலை குறித்தது.

செங்கைப் பங்கயம் முகிழ்ப்ப மலரும் முகம் அளித்த - பங்கயம் என்றதற்கேற்ப **முகிழ்ப்ப** என்றார். **முகிழ்த்தல்**-முகைபோலக் கூப்புதல்; கைகளைப் பங்கய மென்றது உருவும் திருவும் பற்றிய ஒப்புமை கருதி வந்தது. ''பங்கயத்தின் செவ்வி பழித்து வனப்போங்கும் செங்கை'' *(2070)* என முன் கூறியதும், பிறவும் காண்க. **பங்கயம்** என்பதனை **முகம்** என்றதுடனும்

2893. பலமுறையும் பணிந்தெழுந்து பங்கயச்செங் கைமுகிழ்ப்ப
மலருமுக மளித்ததிரு மணிவாயான் "மறையா"னென்
றுலகுய்ய வெடுத்தருளி யுருகியவன் பென்புருக்க
நிலவுமிசை முதற்றாள நிரம்பியநீர் மையினிகழ, 995

2894. **பாடி**னார்; பணிவுற்றார்; பரிவுறுமா னந்தக்கூத்
தாடினா ரகங்குழைந்தா; ரஞ்சலிதஞ் சென்னியின்மேற்
சூடினார்; மெய்ம்முகிழ்த்தார்; சூகரமு மன்னமுமாய்த்
தேடினா ரிருவருக்குந் தெரிவரியார் திருமகனார்; 996

கூட்டுக. கையும் முகமும் ஆகிய தாமரைகளிரண்டனுள் ஒன்று குவிய ஒன்று மலர என்ற நயமும் அம்மையின் மதியொளியாற் கைத்தாமரை முகிழ்ப்பக் கம்பரின் கதிரொளியால் முகத்தாமரை மலர்ந்ததென்ற குறிப்புப்பட வந்த கவிநயமும் காண்க. இறைவராகிய ஞாயிற்றின் முன் தாமரைகள் ஒன்று முகையாக ஒன்று மலர வரும் என்ற ஞானசாத்திர உண்மைக் குறிப்புத் தொனிக்கக் கூறியபடியும் காண்க; "முந்திரவி எதிர்முளரி யலர்வுறுமொன் றலர்வான் முகையாமொன் றென்றுலரு முறையினுமே" (சிவப்17).

முகம் அளித்த திருவாயான் - *முகத்திற் றோன்றிய திருவாக்கினாலே. மலரு முகத்தைக் கொடுத்த திருவாயின் திருக்குறிப்புடையவன் என்றலுமாம்; "என்று வந்தாயென்னு மெம்பெரு மான்றன் றிருக்குறிப்பே" "கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்"; "சிரித்த முகங்கண்ட கண்கொண்டு" (தேவா) முதலியவை காண்க. இறைவரது மணிவாயின் முறுவல் மலருமுகத்தை அளித்ததென்பது. "மணிவாயால்-எடுத்தருளி" என்று கூட்டியும் "வாயான் (வாயினை உடையவன்) மறையான் என்று" என்றும் உரைக்க நின்றது.*

நிலவுமிசை - *பதிகப் பண்ணாகிய இந்தளம்;* **முதற்றாளம்** - *ஆதி தாளம் என வழங்குவர்;* **நிரம்பிய நீர்மை**-*"குறையாநிலை மும்மைப்படி கூடுங்கிழ மையினால்" (221) என்றவிடத்து உரைத்தவாறு உரிய தகுதிகள் எல்லாம் நிரம்பிய தன்மை; ஆண்டுரைத்தவை பார்க்க; அங்கு நேர்ந்ததும் இந்தளப் பண்ணுதலும் கருதுக.* 995

2894. (இ-ள்) *பாடினார்-பாடியருளினர்; பணிவுற்றார்-பணிந்தருளினர்; பரிவுறும்... ஆடினார்-அன்பினால் நிறைந்த ஆனந்தக் கூத்து ஆடியருளினர்; அகங் குழைந்தார்-மனங் குழைந்து உருகினார்; அஞ்சலி...சூடினார் - கைகளைக் குவித்த அஞ்சலியினைத் தலைமேற்கொண்டனர்; மெய்ம்முகிழ்த்தார் - உடம்பெல்லாம் மயிர்ப்புளகம் வரப்பெற்றருளினர்; சூகரமும்... திருமகனார்-பன்றியும் அன்னமுமாக உருவெடுத்து முறையே அடியு முடியும் தேடியவர்களாகிய இருபெருந் தேவருக்கும் தெரிவரியராய் நிமிர்ந்த இறைவர் திரு மகனாராகிய பிள்ளையார் (இத்தன்மையராய்);*

(வி-ரை) *வழிபாட்டின் உளவாகிய மெய்ப்பாட்டின் "ஆடினார்" - பணிவுற்றார்" முதலாகப் பகுதிகள் பலவற்றையும் தனித்தனி வினைமுற்றுக்களால் உணர்த்தியது இத்திருப்பாட்டின் கவிநலமாம்.*

2895. மருவியவே ழிசைபொழிய மனம்பொழியும் பேரன்பாற்
பெருகியகண் மழைபொழியப் பெரும்புகலிப் பெருந்தகையார்
உருகியவன் புள்ளலைப்ப வுமைதழுவக் குழைந்தவரைப்
பருகியமெய் யுணர்விளுெடும் பரவியே புறத்தணைந்தார். 997

பரிவுறும் ஆனந்தக் கூத்து-அன்பு மிக்க காரணத்தினுல் உளதாகும் ஆனந்தக் கூத்து. "மெய்விரவு பேரன்பு மிகுதியினு லாடுதலு மவ்வியல்பிற் பாடுதலு மாய் நிகழ்வார்" (1055).

மெய்ம்முகிழ்த்தார்—திருமேனி முழுதும் மயிர்ப்புளகம் கொண்டனர்.

சூகரம்-பன்றி. **தேடினு ரிருவருக்கும்** - தேடினுர் வினைப்பெயர்; தேடினவர்களாகிய இருவர்; அயனும் மாலும். இப்பாட்டில் ஏனையவாகிய பாடினுர் முதலியவை வினைமுற்றுக்கள். **தேடினுர்** என்பதொன்றுமே பெயர். இவ்வாறு கூறுதல் ஆசிரியரது சிறப்பாகிய கவிநலங்களுள் ஒன்று; முன் கூறியவை பார்க்க.

திருமகனுர் - உபசாரம்; பால் தர உண்டு ஞானம் பெற்றமையால் மகன்மை முறை பூண்டு "ஆளுடைய பிள்ளையா"ராயினவர் (1967). 996

2895. (இ-ள்) மருவிய ஏழிசை பொழிய - பொருந்திய ஏழிசைகளையும் (வாக்குப்) பொழிய; மனம் பொழியும் பேரன்பால் - மனத்தினின்றும் மீக்கூர்ந்து ஊக்கும் பேரன்பினுலே; கண் பெருகிய மழை பொழிய - கண்கள் ஊற்றெடுத்துப் பெருகிய; கண்ணீர் மழையினைப் பொழிய; பெரும்புகலிப் பெருந்தகையார் - பெருமை தங்கிய சீகாழியில் வந்தருளிய பெருந்தகையாராகிய பிள்ளையார்; உருகிய அன்பு உள்அலைப்ப-மனமுருகுதற்குக் காரணமாகிய அன்பு உள்ளத்தை அலையச் செய்ய; உமைதழுவக்.......பரவியே - உமையம்மையார் தழுவத் திருமேனி குழைந்து காட்டிய ஏகம்பவாணரைத் துதித்தே; பருகிய... புறத்தணைந்தார் -அனுபவித்த மெய்யுணர்ச்சியினேுடும் போற்றி செய்து கோயிலின் புறத்தில் அணைந்தருளினர்.

இவ்வைந்து பாட்டுக்களும் பொருட்டொடர்பும் சொற்றொடர்பும் நோக்கி ஒரு முடிபுகொண் டுரைக்கநிற்றலின் அவ்வாறுரைக்கப்பட்டன.

2891 - 2892 பாட்டுக்கள் ஒருமுடிபும், 2893 - 2894 பாட்டுக்கள் ஒருமுடிபும் 2895 தனி முடிபாகவும் உரைப்பினும் இழுக்கில்லை.

(வி-ரை) மருவிய ஏழிசை பொழிய-வாக்கு ஏழிசை நிலவும் திருப்பதிகத்தினைப் பொழிய; "மணிவாயால்" (2893) என்றதனுல் வாக்கு என்பது வருவிக்க. **பொழிதல்**-ஈறின்றி எழுந்து வருதல்.

மனம்பொழியும் பேரன்பாற் பெருகிய மழை கண் பொழிய-என்க. மனத்தை யிடமாகக் கொண்டு அன்பு மேன்மேல் பொங்கி எழுந்தது. அது கண்ணீர் மழை பெருகக் காரணமாயிற்று. கண்ணீர் அன்பு காரணமாக வருவதாதலின் காணலாகாத அன்பினைக் கண்ணீர் காட்டிவிடும் என்ப. "அன்பிற்கு முண்டோ அடைக்குந் தாழார்வலர், புன்கணீர் பூச றரும்" (குறள்). முன் "**பம்புதுளிக் கண்ணருவி பாய**" (2892) என்றது ஏகம்பவாணரைக் கண்டவுடன்

நிகழ்ந்தது; இங்குக் கூறியது பதிகம் பாடியருளிய பின் அவ்வனுபவ வுணர்ச்சிமேலீட்டினுல் உளதாயது.

வாக்கு இசைபொழிய - மனம் அன்புபொழிய - கண் மழைபொழிய - என மனம் வாக்குக் காயம் என்ற மூன்றுனும் ஒத்த நிகழ்ச்சி கூறப்பட்டது. **பொழிய**- சொற்பொருட்பின் வருநிலே.

உருகிய அன்பு உள் அலேப்ப-முன்னும். ''உருகிய அன்பு என்புருக்க'' (2893) என்றது காண்க. கண்ணருவி பெய்தல் இரண்டு நிலேயினும் கூறியதுபோலவே அதற்குக் காரணமாய் நின்று அடங்காது மனத்தின் உள்ளே நிகழ்ந்து உருக்கிக் கொண்டிருந்த அன்பின் செயலே ஈரிடத்தும் கூறினர்.

உருகிய அன்பு உள்ளலேப்ப உமை தழுவ - என்று கொண்டு அன்பினுலே அம்மை தழுவ என்று கூட்டி உரைக்கவும் நின்றது.

தழுவக் குழைந்தவரைப் பருகிய மெய்யுணர்வு-''மலேக்கொடி தழுவக் குழைந் தருளும்'' (2892) என முன்னரும் கூறிய கருத்துக் கண்ணீருக்கும் அன்புக்கும் கூறிய குறிப்பாம். அம்மை தழுவ அதனுல் சராசரமான உயிர்களனேத்து முயிரும் யாக்கையு முருகி யொன்ருகி...ஏத்தின (1142) என்ற தன்மையால் வழிபாட்டுநிலே இவ்வாறு அன்புப் பெருக்கத்தால் உருகும் தன்மை நிகழ்வதாம் என்று குறிக்க அவ்வரலாறு பற்றியே ஈரிடத்திலும் கூறுதல் காண்க; **பருகிய** - பருகுதல் போன்ற ஆர்வ நிகழ்ச்சி. **பருகிய** - என்பது குறிப்புருவகம். **உணர்விஞெடும் பரவியே** - பரவிக் கொண்டவாரே.

புறத்து - திருக்கோயிலின் புறத்தில். 997

I கச்சித் திருவேகம்பம்

திருச்சிற்றம்பலம் பண் - இந்தளம்

மறையானே மாசிலாப் புன்சடை மல்குவெண்
பிறையானைப் பெண்ணெடா ஞகிய பெம்மானே
யிறையானே யேர்கொள்கச் சித்திரு வேகம்பத்
துறைவானே யல்லதுள் காதென துள்ளமே. (1)

அந்தண்பூங் கச்சியே கம்பனே யம்மானேக்
கந்தண்பூங் காழியூ ரன்கலிக் கோவையாற்
சந்தமே பாடவல் லதமிழ் ஞானசம்
பந்தன்சொற் பாடியா டக்கெடும் பாவமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– கம்பைக் கரையேர்கொள் கச்சித் திருவேகம்பம் உடையானே யல்ல துள்காதெனதுள்ளமே (1 - 5 - 3); அவனேச் சேராதா ரின்பமா யந்நெறி சேராரே.

பதிகப் பாட்டுக் குறிப்பு:– (1) பெண்ணெ டாஞகிய பெம்மான்-உமை தழுவிய திருமேனிக் குறிப்பு. ''இளங்கொம் பஞளோ டிணேந்தும் பிணேந்தும்'' (தேவா); **அல்ல**

துள்காது-எதிர்மறையாற் கூறினுர் பிறரிடைச் செல்லாமை வற்புறுத்தற் பொருட்டு; 5-வது பாட்டும் பார்க்க. ''கைச்சிறு மறியவன் கழலலாற் பேணுக் கருத்துடை ஞானசம்பந்தன்'' (குறிஞ்சி-அச்சிறுபாக்கம்); ''கொன்றையா னடியலாற் பேணு'' (திருத்தொண்டத் தொகை);—**(2) கண்டனேயே நச்சி**-என்க; ஏகாரம் பிரிநிலே;—**(3)சேராதார் இன்பமாய நெறி சேரார்** - எதிர்மறை உறுதிப் பொருள் குறித்தது; ''சேராதார் நன்னெறிக்கட் சேராதாரே'' (தாண்டகம்);—**(4) மின்தேய்க்கும் முகில்கள்** - முகில்கள் ஒன்ருேடொன்று கூடுதலால் மின் உளதாம் என்ற கலேஞானக் கருத்து; **சென்று ஏய்க்கும் - ஏய்தல்** - பொருந்துதல்;—**(5) கடை**-முன்கடை; **மூன்றும்**-மனம் வாக்குக் காயம்; **கம்பை**-ஆறு; இவ்வாற்றின் கரையில் அம்மை மாவின் மூலத்தில் தவஞ்செய்ய இறைவர் வெளிப்பட்டருளினர் என்ற வரலாறு குறித்தது (1139-1140);—**(6) தம் கெழுவாளோர் - இமை யார்** - தம்மை வணங்குவோர் இமையவராகிய வானவர்கள். **கெழுவுதல்** - பற்றிக் கொள்ளுதல்; ''வாய்தல் பற்றித், துன்றிநின் ருர்தொல்லே வானவ ரீட்டம்'' (அரசு); **உச்சி-உமையாள் வழுவாமே** - உமையாள் தம் திருவடியில் முடிசாய்த்து வழுவாது வணங்க; **உச்சி - கங்கை வழுவாமே** - தம் உச்சியிற் கங்கை நீங்காது;—**(7) மறைகள் வேதம் விரித்தோதுவார்கண்ணுளார்** - மறைகளாகிய வேதங்களே ஓதுவார்களிடத் திருப்பவர்; **கழலின் வெல்வார்-காலனே - நண்ணுவார்** - காலினுல் வெற்றி கொள்வாராகி இயமனிடம் வருபவர்; **கழல்** - காலணி மணிவடம்; வீரக்கழல்; ''கள்ளவினே, வென்று பிறப்பறுக்கச் சாத்தியவீ ரக்கழலும்'' (போற்றிப் பஃறொடை). **ஆடுகின்ற அலங்காரம்** - திருக்கூத்தின் அதிசயம்; அழகிய உள்ளுறை. **கரிகாலன்** - கரிய காலன். **கரிகாலன்** என்ற பெயருடைய அரசன்; கச்சி நகரங்கண்ட அரசனேயும் குறிப்பாலுணர்த்தி அவன் அன்பிற்கிரங்கி வெளிப்பட்டு எய்துபவர் என்ற வரலாறு குறிப்பதாக உரைத்தலுமொன்று (1162=பார்க்க) இப்பொருளில் **கழலின் வெல்வார்**-என்பதனேத் தனி முடிபாக வைத்து வினேப் பகையைக் கழலாலே வெல்பவர் என்று வேருக உரைத்துக்கொள்க;— **(8)மேவுவார் என் றலேமேலார்** - திரு ஏகம்பரைப் பொருந்திய அடியவர்கள் என் தலேவர்கள். **தலேமேலார்** - என்னுல் வணங்கப்படும் தகுதியுடையோர்; **மறையோதிய வாயான்** - ''மாகம்ப மறையோது மிறையானே மதிட்கச்சி, யேகம்ப மேயானே'' (அரசு. தேவா-கச்சி);—**(9) நாகம்...பெண்**-பூணும், ஏறலும், தாரும், பெண்ணும் உடையவராய் என்க; ''பாந்தள் பூணுரம்'' என்ற திருவிசைப்பா (கருவூர்-சாட்டியக்குடி) இங்கு நினேவு கூர்தற்பாலது. **இருவர்**-அயனும் அரியும்; **மாகம்பம்** - பெரிய அழற்றூணுகிய நிலே;—**(10) வாதியா** - வாதியாமே;—**(11) கந்தண்பூம்-கம்**-மேகம்; மேகம் சூழ்தலின் குளிர்ந்த அழகிய சோலே சூழ்ந்த. **கலிக்கோவை**-பதிகம்; ''கலிக்கோவை சொல்லே'' (திருப்பாசுரம்-8).

தலவிசேடம்:- திருக்கச்சியேகம்பம்-திருக்குறிப்புத்தொண்ட நாயனுர் புராணத் திறுதியிற் பார்க்க. தொகுதி II - பக்கம் 997 பார்க்க.

2896. (இ-ள்) புறத்தணேந்த...போந்து - தம்முடனே கூடத் திருக்கோயிற் புறத்திலே வந்தணேந்த திருத்தொண்டர்களுடனே சென்று; அமைந்த திருமடத்தில்... வந்து எய்தி-தாம் எழுந்தருளும் பேறுபெற அதற்கென்று அமைந்த திருமடத்தின் கண்ணே, பெறுதற்கரிய பேருகிய சிவஞானத்தினே உலகமுய்தற்பொருட்டுப் பெற்று அவ்வாறே உலகுக்கு அருளும் பிள்ளேயார் இறைவரை மறப்பிலாத பெருவிருப்பத்துடனே வந்து, சேர்ந்து; மகிழ்ந்துறைவார்-மகிழ்ச்சியுடன் தங்கியருள்பவர்; அறப் பெரும்...இறைஞ்சினுர் -

2896. புறத்தணைந்த தொண்டருடன் போந்தமைந்த திருமடத்திற்
பெறற்கரும்பே றுலகுய்யப் பெற்றருளும் பிள்ளையார்
மறப்பரிய காதலுடன் வந்தெய்தி மகிழ்ந்துறைவார்
அறப்பெருஞ்செல் வக்காமக் கோட்டமணைந் திறைஞ்சினார். 998

அறங்களெல்லாவற்றையும் வளர்த்த உமை அம்மையார் எழுந்தருளியிருக்கும் பெரிய செல்வம் பொருந்திய திருக்காமக் கோட்டத்தினை அணைந்து வணங்கியருளினார்.

(வி-ரை) புறத்தணைந்த தொண்டருடன் - *தாம் பரவிப் புறத்தணைந்தது போலவே வழிபட்டுப் புறத்து அணைந்த என்க.*

அமைந்த - *பிள்ளையார் எழுந்தருளுதற்கு ஏற்ற தகுதியுடன் அமைந்த. அமைத்த என்னாது* **அமைந்த** *என்றது அத்திருமடம் அவ்வாறுள்ள தகுதியுடன் முன்னமே அமைந்துள்ளது என்றதாம். ''நீடு வாழ்திருப் பாடியு மனேகம்'' (1159) என்றும், சுடர்மனக் குகையு ளேகம்பத், தோமொழிப் பொருளை யடக்கியா னந்த முறுநர்வா ழிடம்பல வுளவால்'' (காஞ்சிப் புராணம் - திருநகர - 109) என்றும் வருவன காண்க.*

பெறற்கரும் பேறு - *ஏனை எவரும் பெறுதற்கரியதாகிய சிவஞானப் பேறு;* **உலகுய்யப் பெற்றவர்**-*இப்பேற்றினைத் தமக்கெனவன்றி உலகமுய்தற்பொருட்டே பெற்றவர்.* **அருளும்** - *பெற்றவாறே உலகுக் கருள்செய்யும்.*

மறப்பரிய காதல் - *மறத்தற் கருமையாவது எஞ்ஞான்றும் அகலவிடாது மனத்திற் கொண்டிருத்தல். ''மறக்குமா றிலாத'' அன்பு. பருகிய மெய்யுணர்வி னொடும் புறத்தே அணைந்து திருமடத்தில் உறைபவர் அவ்வுணர்வினை மறவாதே கொண்டருளினர் என்க.*

உறைவார் - இறைஞ்சினார் - *திருமடத்தில் மகிழ்ந் துறைகின்ற நாளில் - அணைந்து இறைஞ்சி யருளினார்.*

அறப் பெருஞ்செல்வக் காமக்கோட்டமணைந்து இறைஞ்சினார்-அறம்- *அம்மையார் இறைவர்பால் வரம் பெற்று இங்கு எழுந்தருளியிருந்து அறங்களெல்லாவற்றையும் வளர்த்து உயிர்களைப் புரந்தருள்கின்றார் என்பது முன் விரிக்கப் பட்டது (1146-1148).* **பெருஞ் செல்வ***மாவது எல்லாவுயிர்களின் மேலும் பூண்ட கருணைச் செல்வம். சிவபெருமான் கோயிலையன்றி இவ்வாறு எந்தம் பரமாசாரியர்கள் தனியாகச் சத்தியாராலயத்தையேனும் வேறு கணபதி முருகன் முதலிய சிவபேத சத்திபேத மூர்த்திகளின் தனி ஆலயங்களையேனும் சென்று வணங்குதல் வேறெங்கும் பேசப்படாமை கருதுக. இது திருக்காமக் கோட்டத்துக்குரிய சிறப்பு.* **உலகுய்யப் பேறு பெற்ற***வர் பிள்ளையாராதலின் உலகுய்ய எழுந்தருளியுள்ள அறப் பெருஞ்செல்வியினைச் சென்று இறைஞ்சினார் என்பது குறிப்பு. ஆளுடைய நம்பிகளும் இவ்வாறே வணங்கும் வரலாறும், அங்கு ''ஊனில்வள ருயிர்க்கெல்லா மொழியாத கருணையினா, லானதிரு வறம்புரக்கும் அம்மை திருக்கோயில்'' (ஏயர்கோன்-284) என்பதும் ஈண்டு நினைவுகூர்தற்பாலன.* *998*

2897. **திருவே**கம் பத்தமர்ந்த செழுஞ்சுடரைச் சேவடியில்
ஒருபோதுந் தப்பாதே யுள்ளுருகிப் பணிகின்றார்
மருவுதிரு வியமகமும் வளரிருக்குக் குறண்மற்றும்
பெருகுமிசைத் திருப்பதிகத் தொடைபுனைந்தார் பிள்ளையார். 999

2897. (இ-ள்) திருவேகம்பத் தமர்ந்த...பணிகின்றார் - திருவேகம்பத்தில் விரும்பி எழுந்தருளியுள்ள செழுமை பொருந்திய ஞானச்சுடராகிய இறைவரைத் திருவடியின் கீழ் வழிபாட்டுக்குரிய காலங்களில் ஒருபொழுதும் தவறாமல் மனமுருகிப் பணிகின்றவராகி; மருவு திருவியமகமும்...பிள்ளையார் - பிள்ளையார் அணி பொருந்திய திருவியமகமும் பொருளால் வளர்கின்ற திருவிருக்குக் குறளும் இன்னும் வேறு பெருகுகின்ற இசையினையுடைய திருப்பதிக மாலையினையும் இறைவருக்குச் சாத்தியருளினர்.

(வி-ரை) திருவேகம்பம் - கம்பரது கச்சித் திருக்கோயில்.

செழுஞ்சுடர் - ஞானச்சுடர் விளக்கு; **சேவடியிற் - பணிகின்றார்-பிள்ளையார்- புனைந்தார்** என்று முடிக்க. **பணிகின்றார்** - முற்றெச்சம்.

ஒருபோதும் - வழிபாட்டுக்குரிய பூசைக் காலங்கள் எல்லாவற்றிலும்; ''கால மெல்லாம்'' *(2056)*.

மருவு திருவியமகமும் மருவுதல்-மடக்கு என்னும் சொல்லணி பொருந்துதல்; **வளர் இருக்குக் குறள்** - வளர்தலாவது சுருங்கிய சொல்லில் வளர்கின்ற பொருட் செறிவு நிற்றல்; **இயமகம்** - பாட்டின் அணிவகையும், **இருக்குக் குறள்** - பாட்டின் யாப்பு வகையுமாம். குறள்போன் றமைந்த இருசீர்அடி அளவாதலின் அப்பெயர் பெற்றது.

மற்றும் பெருகுமிசைத் திருப்பதிகத் தொடை - எண்உம்மை விரிக்க; **இசை**- பண்வகை; பெருமை-புகழ் என்று கொண்டு இசை பெருகும் என்றலுமாம்.

தொடை - மாலை. சொல்லும் பொருளும் பயின்று வரத் தொடுப்பதாதலின் தொடை எனப்படும்; **பதிகத் தொடை**-என்றதனால் ஒரு பதிகம் என்றுரைக்கப்பட்டது; பதிகங்கள் என்றலுமாம். ஆனால் இப்போது கிடைத்துள்ளது ''வெந்த வெண்பொடி'' என்ற பதிகமொன்றேயாம்!

திருவேகாம்பரத்தமர்ந்த—ஒருபொழுதும்—என்பனவும் பாடங்கள். 999

II திருக்கச்சியேகம்பம்

திருச்சிற்றம்பலம் | திருவியமகம் | பண் பழம்பஞ்சுரம்

பாயு மால்விடை மேலொரு பாகனே பாவை தன்னுரு மேலொரு பாகனே
தூய வானவர் வேதத்து வனியே சோதி மாலெரி வேதத் துவனியே
யாயு நன்பொரு ளுண்பொரு ளாதியே யால நீழ லரும்பொரு ளாதியே
காய வின்மதன் பட்டது கம்பமே கண்ணு தற்பர மற்கிடங் கம்பமே. (1)

கந்த மார்பொழில் சூழ்தரு கம்பமே காதல் செய்பவர் தீர்த்திடு கம்பமே
புந்தி செய்து விரும்பிப் புகலியே பூசு ரன்றன் விரும்பிப் புகலியே
யந்த மில்பொரு ளாயின கொண்டுமே யண்ண லின்பொரு ளாயின கொண்டுமே
பந்த னின்னியல் பாடிய பத்துமே பாட வல்லவ ராயின பத்துமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– இறைவருடைய புகழ்களைப் பலவாற்ருனும் சந்தம் படத் துதித்தது.

பதிகப் பாட்டுக் குறிப்பு:– *(1) (1)* **பாகம்** *-(பாகு) செலுத்துபவன்.* **பாகம்;** *பங்குடையவன்:—(2)***வேதத்-துவனி** *- வேதவொலி.* **துவனி** *- ஒலி;* **வேதத்து - வ(ன்)னியே** *- வேத விதிப்படி வளர்க்கப்படும் எரி;—(3)* **ஆதியே - ஆதி** *- முதல்;* **நுண் பொருள்** *- பிரணவம்;* **ஆதியே** *- உள்ளவரே.* **ஆதல்***-உளதாதல்:—(4)* **கம்பமே** *அழிவு.* **கம்பம்***-திருவேகம்பம்.* **குறிப்பு:**—*உதாரணத்தின் பொருட்டுச் சில மட்டும் ஈண்டுத் தரப்பட்டன. இப்பதிக முழுதும் சிறந்த இலக்கியமாகவும் ஞான நூலாகவும் கற்று வல்ல பெரியார்களிடம் பாடமாகக்கேட் டுணரத்தக்கது. முன் திருவாலவாய்த் திருவியமகம் - திருக்கழுமலத் திருவிராகம் என்ற பதிகங்களின் கீழுரைத்தவையும் பார்க்க*—**(11)** *(1)***கம்பமே** *- திருவேகம்பம்.* **கம்பம்** *- பிறவியால் வரும் பயம் - துன்பம் - நடுக்கம். (2)* **புகலியே** *- சொல்லுக;* **விரும்பு இப்புகலியே-புகலி** *- சீகாழி. (3)* **பொருள்** *- உள்ளுறை;* **அண்ணலின் பொருள்** *அருண் ஞானம். (4)* **பத்து** *- திருப்பாட்டுக்கள் பத்து;* **பத்து** *- அன்பரியல்பு. பத்துடையீ ரீசன் பழவடியீர்'' (திருவா).*

III திருக்கச்சி ஏகம்பம்

திருச்சிற்றம்பலம் திருவிருக்குக்குறள் பண்-கொல்லி

கருவார் கச்சித், திருவே கம்பத், தொருவா வென்ன, மருவா வினையே. (1)

கொச்சை வேந்தன், கச்சிக் கம்பன், மெச்சுஞ் சொல்லை, நச்சும் புகழே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– திருவேகம்பத்தை ஏத்த வினைகள் நலியா.

பதிகப் பாட்டுக் குறிப்பு:– *(1)* **கருவார் கச்சி** *- இறைவர் இதனை, முன்னே அயனைப் படைத்து, அவனுக்கு வேதமோதுவித்து, இதைப் பார்த்து உலகு படைப்பாயாக என்றருளி வைத்தனர் என்ற வரலாற்றுக் குறிப்பு. ''ஆதிநாண் முக்கணெம்மா னயன்றனைப் படைத்து வேத, மோதுவித் தருளி னேக்கி யுலகெலாம் படை யென் றேவும், போதிது பார்த்திவ் வாறு படையெனப் புகன்று வைத்தா, னீதெனலாகுங் காஞ்சி'' என்ற காஞ்சிப் புராணம் (திருநகரப் படலம்-3) பார்க்க. ''மங்கையோர் பங்கன் படைத்ததே யன்றி மலரயன் படைத்ததன் றதுவே'' என்பது கந்தபுராணம் (திருநகரப் படலம்-80). ''நாயகனூர் நான்முகற்குப் படைக்க நல்கும், அதிலயோ னிகளெல்லா மமைத்து வைத்த வரும்பெரும்பண் டாரநிலை யனைய வாகும்'' (1170) என்றதும் இக்குறிப்புத் தருவதாம். இப்பொருளெல்லாம்* **கருவார்** *கச்சி என்பதனுள் வைத்துக் கண்டுகொள்க.* **கரு***-கருப்பம்; ''கடையுகத்திற் றனிவெள்ளம் பலவிரிக்கும் கருப்பம்போல்'' (1955) என்ற குறிப்பும், இனி பிருதிவித் தலமாதலின் சிருட்டிக்கு முதலாதற் குறிப்பும் காண்க.*

என்ன - என்று சொல்ல - துதிக்க;—**(2) மதியார்** - மதி தவழும் மாடங்களும் சோலைகளும் உடைய. **நதி** - கம்பையாறு. **விதி** - ஆகம விதி. **விதி** - நல்லூழின் வரும் பக்குவம் என்றலுமாம். **பதி** - சிவத் தன்மை;—**(3) கலி** - ''கலிக்கச்சி'' (தேவா). பலவகை முழக்குக்கள் (1195 பார்க்க) **பலி** - பசுபோதப் பலி; பலி விழா என்றலுமாம்;—**(4) கச்சிப்புரம்** - காஞ்சிபுரம்; **பரவா** - பரவி;—**(5) படமார்** - பளிங்கு மாளிகைகளது நிழலின் நிறைவு (1170); படம் கொடிப்படங்கள் என்றலுமாம்;—**(9) அனலன்** - தீத்தூணைய் நின்றவன்;—**(10) பறியாத் தேரர்** - தலைமயிர் பறிக்கும் சமணரும் அவ்வாறு; பறியாத் தேரரும் சொல்லும் என்க. **நெறியில்** -நெறியில்லாத; —**(11) சொல்லை நச்சும் புகழே** - சொல்லைப் புகழ் விரும்பி வரும்.

மற்றும் பெருகுமிசைத் திருப்பதிகம் =*(2897)*.

IV திருக்கச்சியேகம்பம்

திருச்சிற்றம்பலம் பண் – மேகராகக் குறிஞ்சி

வெந்தவெண் பொடிப்பூசு மார்பின் விரிநூ லொருபாற் பொருந்தக்
கந்தமல்கு குழலியொடுங் கடிபொழிற் கச்சி தன்னுள்
அந்தமில் குணத்தா ரவர்போற்ற வணங்கினோ டாடல்புரி
எந்தை மேவிய வேகம்பந் தொழுதேத்த விடர்கெடுமே. (1)

ஏரினார் பொழில்சூழ்ந்த கச்சி யேகம்ப மேயவனைக்
காரினார் மணிமாட மோங்கு கழுமல நன்னகருட்
பாரினார் தமிழ்ஞான சம்பந்தன் பரவிய பத்தும் வல்லார்
சீரினார் புகழோங்கி விண்ணவ ரோடுஞ் சேர்பவரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– திருவேகம்ப மேத்த இடர் கெடும்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:– (1) வெந்த வெண்பொடி - திருநீறு; *(3)*; **கந்த மல்கு குழலி - கந்தம்** - இயற்கை மணம். ''ஏலவார் குழலா ளுமை'' (நம்பி); **அந்தமில் குணத்தா ரவர் போற்ற** -1159 பார்க்க. **அணங்கினொ டாடல்புரி ஏகம்பம் - ஆடல்** - அருட்கூத்து. **ஏத்த இடர் கெடுமே** - பதிகத்தின் மகுடம்;—**(2) குருந்தும்...பொழில்** - இஃது இறைவர் பூசனைக்காகும் நந்தவனம்; 240 பார்க்க; —**(3) வண்ண வெண்பொடி** - திருநீறு. ''காண வினியது நீறு கவினைத் தருவது நீறு'' (தேவா);—**(4) சுடலை வெண்ணீ றணிந்து** - இதனை 1 - 3-லும், ஈண்டும் கூறியது புனருற்பவத்தின் பொருட்டு இறைவராடும் நிலைக்குறிப்பு. ஆடல்புரி (1) என்றதுமிக் குறிப்பு;– –**(9) கரவில் வண்கையினார்கள்** - தொண்டை நாட்டவரின் ஈகைச் சிறப்பு. **கரவு** - ஈயாது ஒளித்தல்.

2898. (இ-ள்) நீடுதிரு... அடிபாடி - நீடுநின்ற பொழில்கள் சூழ்ந்த திருக்கச்சி நெறிக்காரைக்காடு என்னும் திருக்கோயிலைச் சென்று வணங்கிச் சூடும் பிறையாகிய கண்ணியினையுடைய இறைவரது துணையாகிய மலர்போன்ற திருவடிகளைப் பாடி; ஆடுமவர்...

2898. **நீடுதிருப் பொழிற்காஞ்சி நெறிக்காரைக் காடிறைஞ்சிச்**
சூடுமதிக் கண்ணியார் துணை மலர்ச்சே வடிபாடி
ஆடுமவ ரினிதமரு மனேகதங்கா வதம்பரவி
மாடுதிருத் தானங்கள் பணிந்தேத்தி வைகுநாள்; 1000

பரவி - அருட்கூத்தியற்றும் இறைவர் இனிதாக எழுந்தருளியுள்ள திருக்கச்சி மனேகதங் காவதத்தினைத் துதித்து; மாடு... வைகு நாள் - பக்கத்தில் உள்ள இறைவர் திருக்கோயில்களையும் பணிந்து துதித்து எழுந்தருளி யிருக்கும் நாளில்;

(வி-ரை) நீடு திருப்பொழில் - **நீடுதல்** - *நிலைபெற்றிருத்தல்;* **திருக்காஞ்சி** *நெறிக்காரைக்காடு என்று கூட்டுக.*

சூடுமதிக் கண்ணியார் - *''வளர்மதிக் கண்ணியி ஞனே'' (தேவா); மதியாகிய* **கண்ணி** *என்பது பிறை சூடுதல் தலையில் மாலை சூடுதல்போன் றிருந்தது என்பதாம்.*

துணை - *இரண்டு ; அன்பர்க்குத் துணையாகிய என்ற குறிப்பும்பட நின்றது.*

ஆடுமவர் - **ஆடுதல்** - *ஐந்தொழிற் றிருக்கூத் தியற்றுபவர்.*

மாடு திருத்தானங்கள் - *''இறைவர் தாமகிழ்ந் தருளிய பதிக ளெண்ணி றந்தன வத்திரு நகரெல்லை'' (1153) என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க. இவை வரும் வழியில் முன்னர்ப் (2890) பணிந்த கோயில்களல்லாது அத் திருநகரில் உள்ளவை.* **மாடு** *- பக்கம்; செல்வம் என்றலுமாம்;எண்ணிறந்த சிவத்தானங்களுடைமை கச்சிமா நகரின் சிறப்புச் செல்வமாம். இவற்றின் பிள்ளையார் பதிகங்கள் கிடைத்தில!* *1000*

திருக்கச்சிநெறிக் காரைக்காடு

திருச்சிற்றம்பலம் பண் - பஞ்சமம

வாரணவு முலைமங்கை பங்கினரா யங்கையினிற்
போரணவு மழுவொன்றங் கேந்திவெண் பொடியணிவர்
காரணவு மணிமாடங் கடைநவின்ற கலிக்கச்சி
நீரணவு மலர்ப்பொய்கை நெறிக்காரைக் காட்டாரே. (1)

கண்ணுருங் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டுறையும்
பெண்ணுருந் திருமேனிப் பெருமான தடிவாழ்த்தித்
தண்ணுரும் பொழிற்காழித் தமிழ்ஞான சம்பந்தன்
பண்ணுருந் தமிழ்வல்லார் பரலோகத் திருப்பாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– வெண்பொடி யணிவர், மானினுரியதளர் என்றின்ன பல தன்மைகளா லறிந்து போற்றப்படுபவர் கச்சி நெறிக்காரைக் காட்டாராகிய இறைவர்.

பதிகப் பாட்டுக் குறிப்பு: – (1) அணவு - பொருந்தும்; சொற்பொருட் பின் வருநிலை. **கடை நவின்ற** - சிறந்து விளங்கும்; **நவிலுதல்** - எடுத்துக்காட்டுதல் என்ற பொருளில் வந்தது:

பொய்கை - இத்தலத்துச் சிறப்பாய் விளங்கும் இந்திர தீர்த்தம்; 2-ம் பாட்டுப் பார்க்க;—**(2) அதள்** - தோல்; **அதளர்** - தோலுடையர்; —**(3) கொடியிடை** - கொடி போன்ற இடையினை உடைய உமையம்மையார் ; **கொடி யதன்மேல் ஏறு அணிந்தார்** - இடபக் கொடி ஏற்றார்;—**(4) பிறைநவின்ற** - பிறை விளங்கிய; **மறை நவின்ற** - மறைகளைச் சொல்லிய; **சிறை** - சிறகு; **நிறை நவின்ற** - நிறைந்த;—**(5) குன்றாத** - வளையாத; **ஒன்றாதார்** - பகைவர்; **நின்றார்** - போர் செய்யாது நின்றவாறே யிருந்தவர்;—**(6) மலை வில்லின்** என்க;—**(7) எற்று** - மோதுதல்; தொழிற்பெயர்;—**(8) ஆழ்கிடங்கும்... நீண்மறுகு** - இக்கருத்தை ஆசிரியர் விரித்துரைத்தல் காண்க(1163);—**(9) ஊண்...கொள்வர்** - நஞ்சு ஊணுயினும், பலி கொள்வர் என்றது பலி ஏற்பது உணவுப் பொருட்டன்று என்றதாம்;—**(10) வரை ஆகம்** - மலைபோன்ற திருவுடம்பு;—**(11) கண் ஆரும்** - அழகிய.

தலவிசேடம்:—**திருக்கச்சிநெறிக் காரைக்காடு** - தொண்டை நாட்டில் 5-வது பதி; இது கச்சிமாநகரத்தின் கீழ்க்கோடியிலிருப்பதால் கச்சி என்றதனுடன் சேர்த்துச் சொல்லப்படும். காரைமரம் அடர்ந்த காட்டிலிருப்பதாலும் அங்குச் சேர்ந்தவர்க்குச் சித்தி தருதலாலும் இப்பெயர் பெற்றது. இதற்குச் சத்தியவிரதத் தானம் என்றும் பெயருண்டு. ''சத்திய விரதங் காரைத் தருவனஞ் செறித லாலே, சித்திசேர்ந் தவர்க்கு நல்குந் திருநெறிக் காரைக் கடென், றித்திருப் பெயரி னோங்கு மென்பர்'' என்பது காஞ்சிப் புராணம். ஏனை வரலாறுகளைத் திருநெறிக்கரை - படலத்துட் பார்க்க. பிரம கற்பத்தில் ஆறுவது மன்வந்தரத்தில் **சிவி** என்ற இந்திரன் வாழ்க்கையில் வெறுப்புற்று இருவினையொப்பு வாய்ந்ததனால் தன் குருவாகிய வியாழனுடைய உபதேசப்படி இங்கு வந்து வழிபட்டு வீடுபேறு பெற்றனன். அதனால் இஃது இந்திர புரமென்றும், தீர்த்தம் இந்திர தீர்த்தம் என்றும் பெயர் பெற்றன. மதிக்கும் தாரைக்கும் பிறந்த புதன் இங்கு வழிபட்டுக் கிரகநிலை பெற்றனன். இங்குத் தன்வார நாளில் முழுகி வழிபட்டோர்க்கு வீடுபேறும் வேண்டும் வரங்களும் தரும்படி இறைவரை வேண்டி அவ்வாறே வரமும் பெற்றனன். இத்தீர்த்தத்தில் புதன்கிழமையில் நீர்முழ்கி வழிபடுதல் சிறந்ததாம். இஃது இந்நாளில் திருக்காலீசுவரன் கோயில் என வழங்கப் படுகின்றது. சுவாமி - **சத்தியவிரதீசர் - காரைத் திருநாதர்**; அம்மை - **காமாட்சியம்மை**; தீர்த்தம் - **சத்தியவிரத தீர்த்தம் - இந்திர தீர்த்தம்**; மரம் - **காரை**; பதிகம் 1 .

இது காஞ்சிபுரத்தில் ஆடிசன்பேட்டைக் கடைத்தெருவிலிருந்து வடகிழக்காக ஒரு நாழிகையளவில் வேப்பங் குளத்தின் வடகிழக்கில் உள்ளது.

திருஅனேகதங்காவதம்

இதற்குப் பிள்ளையார் பதிகம் கிடைத்திலது!

தலவிசேடம்:- திருஅனேகதங்காவதம் - தொண்டைநாட்டின் 4-வது பதி. அனேகதம் - யானை; விநாயகக் கடவுள் பூசித்த பதியாதலின் இப்பெயர் பெற்றது; வடநாட்டுப் பதியாகிய திருஅனேகதங்காவதம் என்பதனோடு மயங்காமைப் பொருட்டு இது திருக்கச்சி அனேகதங்காவதம் என்று வழங்கப்படும். இங்குக் குபேரன் முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்றனர். விநாயகர் காஞ்சியை யடைந்து இங்குத் தம்பெயர் பெற அனேகமேச்சுரர் என்ற பெயரால் இலிங்கந் தாபித்து வழிபட்டுத் தம்மை உன்னினார் செயல்களை முடிக்கவும்,

*2899. எண்டிசையும் போற்றிசைக்குந் **திருப்பதிமற் றதன்புறத்துத்**
தொண்டருட னினிதேகித் தொல்லைவிட முண்டிருண்ட
கண்டர்மகிழ் **மேற்றளியு முதலான கலந்தேத்தி**
மண்டுபெருங் காதலினால் வணங்கிமீண் டினிதிருந்தார். 1001

உன்னலார் செயல்களை ஊறு செய்யவும் வரம் பெற்றதுடன் இறைவர் அருளியபடி. இரணியபுரத்தின் அசுரரை வென்று அவர்களது கருவுள்ளே அவர்கள் சத்தியாகிய வல்லபையை வாங்கி மணந்து வீற்றிருந்தருளும் வரலாறுபற்றிக் காஞ்சிப் புராணம் அனேகதங்காவதப் படலம் பார்க்க. சுவாமி - **அனேகதங்காவதேசர்;** அம்மை - **காமாட்சியம்மை;** பதிகம் 1.

இது கச்சியில் திருவேகம்பத்தின் தென்மேற்கில் புத்தேரித் தெருவுக்கு மேற்கே ½ நாழிகையளவில் வயல்வெளியில் உள்ளது.

2899. (இ-ள்) எண்திசையும்... இனிதேகி - எட்டுத் திசைகளிலுள்ளோர்களும் போற்றுகின்ற திருத்தலமாகிய காஞ்சிபுரத்தின் புறத்திலே திருத்தொண்டர்களுடன் கூடி இனிது சென்று; தொல்லை... கலந்தேத்தி - முன்னாளில் விடத்தினை உண்டு அதனாற் கருமை பெற்ற கண்டத்தையுடைய இறைவர் மகிழ்ந்து வீற்றிக்கும் திருமேற்றளி முதலாகிய பதிகளைக் கலந்து சென்று துதித்து; மண்டு... வணங்கி - செறிந்த பெரிய காதலினாலே வணங்கி; மீண்டு இனிது இருந்தார் - திருக்கச்சி நகரின்கண் மீண்டு இனிதாக எழுந்தருளி அமர்ந்திருந்தருளினர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) எண்திசையும் போற்றிசைக்கும் திருப்பதி - காஞ்சிபுரம்; **அதன்புறத்து** - காஞ்சியின் புறத்தில் மேற்கில் உள்ளதாதலின் மேற்றளி எனப்படும் என்ப.

அண்டத் தலைவர்களான உருத்திரர் நூற்றுவர்களுள் சீகண்டர் முதலிய உலகு காவலர் எண்மர்கள் பூசித்த தலங்கள் 118 உள்ளன; அவற்றுள் **மேற்றளி** என்பதொன்றும் என்பது காஞ்சிப் புராணம் திருமேற்றளிப் படலம் (4).

தொல்லை - உண்டு - என்று கூட்டுக. முன்னாளில் உண்டருளி; **தொல்லை** - துன்பம் என்று கொண்டு துன்பம் செய்யும் விடம் என்று கூட்டி உரைத்தலுமாம்.

மேற்றளியு முதலான கலந்தேத்தி - கலந்து - பல தளிகளையும் கூடிச் சார்ந்து; அமரீசத்தின் தெற்கிலும், கச்சிக்காரோணத்தின் மேல்பாலும் இந்த நூற்றுப்பதினெட்டுத் தளிகளும் உள்ளனவாக, அவற்றுள் ஒன்று திருமேற்றளியாதலின், இதனை வணங்கியேத்திய பிள்ளையார் மற்றும் அவைகளையும் கலந்தேத்தினர் என்பதாம். **முதலான** - என்ற கருத்துமிது.

ஏத்தி - பிள்ளையாரது பதிகம் கிடைத்திலது!

மீண்டு - கச்சிநகரில் மீண்டு; **இனிது இருந்தார்** - இனிதாகத் தங்கி எழுந்தருளி யிருந்தார்.

இனிதேத்தி - என்பதும் பாடம் *1001*

பிறபதிகளை வணங்குதல்

2900. அப்பதியில் விருப்பினொடு மங்கணரைப் பணிந்தமர்வார்
செப்பரிய புகழ்ப்பாலித் **திருநதியின் றென்கரைபோய்**
மைப்பொலியுங் கண்டர்திரு மாற்பேறு மகிழ்ந்திறைஞ்சி
முப்புரஞ் செற் றவர்தம்மை மொழிமாலை சாத்தினார். 1002


தலவிசேடம்:- திருமேற்றளி - தொண்டைநாட்டு 2-வது பதி; இதனைக் கச்சிமேற்றளி எனவும் காஞ்சிமேற்றளி எனவும் வழங்குவர்; **திருமேற்றளி** என்பதே ஆசிரியர் கண்ட வழக்கு (2899); இவ்வாறன்றித் திருஅனேகதங்காவதம், திருநெறிக் காரைக்காடு என்பவை கச்சிப் பெயருடன் கூட்டியே பதிகங்களுள் வழங்கப்பட்டது காண்க. சிவசாரூபம் பெறும் பொருட்டு விட்டுணுமூர்த்தி இங்கு வழிபட்டு ஆளுடைய பிள்ளையார் எழுந்தருளிப் பாடியருளிய பதிகத்தை கேட்ட பலத்தினால் சிவன் அருளின் வழி அதனை அடைந்தனர் என்பது காஞ்சிப் புராண வரலாறு (திருமேற்றளிப் படலம்). பதிகத்தைக் கேட்டு உருகி விட்டுணுமூர்த்தி சிவலிங்க உருவமாகி "**ஓதஉருகீசுரர்**" என்ற பெயருடன் இங்கு எழுந்தருளியுள்ளார்; இஃது ஒரு சந்நிதி; தலநாயகரது சந்நிதி வேறாக மற்றொரு சந்நிதியாக உள்ளது; இக்கோயிலுக்கு நேர் கிழக்கில் ஆளுடைய பிள்ளையாரும், பாடல் கேட்ட முத்தீசமூர்த்தியும் எழுந்தருளியுள்ளார்; ஆளுடைய பிள்ளையாரது சம்பந்தம் பற்றிக் காஞ்சியின் இப்பகுதி பிள்ளையார்பாளையம் என வழங்கப்படும். (குறிப்பு : பிள்ளையார் திருமேற்றளியின் வழிபட்டுப் பாடியது அவர் புராணம் 1001 பாட்டிலும் அவர் பாடலைக் கேட்டுத் திருமால் உருகிச் சிவசாரூபம் அடைந்தது காஞ்சிப் புராணம் 1002-வது திருவிருத்தத்திலும் வருவது ஒருசிறந்த பொருத்தமாதல் காணத்தக்கது.) சுவாமி - **திருமேற்றளிநாதர்** ; அம்மை - **காமாட்சியம்மையார்;** பதிகம் 2.

இது திருவேகம்பத்திற்குத் தென்மேற்கில் கற்சாலை வழி ஒரு நாழிகை யளவில் அடையத்தக்கது.

2900. (இ-ள்) அப்பதியில்... அமர்வார் - அந்தக் காஞ்சிப் பதியிலே மிக்க விருப்பத்துடனே இறைவரை வணங்கிக்கொண்டு விரும்பி எழுந்தருளியிருப்பவராகிய பிள்ளையார்; செப்பரிய... போய் - சொல்லுதற்கரிய புகழுடன் கூடிய பாலியாற்றின் தென்கரையின் வழியே சென்று; மைப்பொலியும்... இறைஞ்சி - விடம் விளங்கும் கண்டத்தையுடைய இறைவர் எழுந்தருளியுள்ள திருமாற்பேற்றை மகிழ்ச்சியுடன் வணங்கி; முப்புரம்... சாத்தினார் - திரிபுரங்களை எரித்த அவ்விறைவரைச் சொன்மாலையாகிய திருப்பதிகம் அணிவித்தருளினார்.

(வி-ரை) அப்பதி - மீண்டு இனி தமர்ந்த திருக்கச்சி நகர்; **அமர்வார்** - அமர்வாராகிய பிள்ளையார்.


அங்கணர் - காமாட்சியம்மையைப் பாகம்வைத் தமரும் குறிப்பு. "ஊனில்வளருயிர்க் கெல்லா மொழியாத கருணையினா, லானதிருவறம்பு ரக்குமம்மை" யாராதலின் அத்தன்மையினை இறைவர்மேற் சார்த்திய குறிப்பு. நம்பிகளுக்குக் கண் அருளுவதும் குறிப்பு.



திருமாற்பேறு பாட்டு :- 2900



திருவல்லம் பாட்டு :- 2901



திருஇலம்பையங்கோட்டூர் பாட்டு :- 2902

செப்பரிய புகழ்ப் பாலித் திருநதி - பாலிநதியின் புகழும் பெருமையும் பற்றி முன் உரைத்தவை பார்க்க *(1098 - 1099-1100).*

மைப்பொலியுங் கண்டர் - இப்பதியில் சுவாமி பெயர் **மணிகண்டீசர்** என்பது குறிப்பு.

1002

I திருமாற்பேறு

திருச்சிற்றம்பலம் பண் - பழந்தக்கராகம்

ஊறி யார்தரு நஞ்சினை யுண்டுமை, நீறு சேர்திரு மேனியர்,
சேறு சேர்வயற் றென்றிரு மாற்பேற்றின், மாறி **லாமணி கண்டரே.** (1)

மன்னி **மாலொடு** சோமன் பணிசெயும், மன்னு மாற்பேற் றடிகளை,
மன்னு காழியுண் ஞானசம் பந்தன்சொல், பன்ன வேவினை பாறுமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- திருமால் வழிபட்ட திருமாற்பேற்றின் மணிகண்டரே! உம்மை மேலையார்கள் விரும்புவர்; அடியார்கள் விரும்புவர்; வானவர் ஏத்துவர்; உம்மைப் பரவாதாரில்லை; உம்மைப் பரவுவார் வினை பாறும்; அருள் நல்குவீர்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- ஊறியார் தரும் - ஊறி - செறிந்து; கேடு நிறைந்து; **மணிகண்டர்** - இத்தலச் சுவாமி பெயர்; ''மையார் நஞ்சுண்டு'' *(3)*; ''நீலமார் கண்ட'' *(4)*;—**(2) அடியார்கள் அடைவாராம்** என்று எழுவாய் தொக்கு நின்றது;—**(3) பை** - நச்சுப்பை;—**(4) மேலையார்கள்** - ஞானத்தால் மேம்பட்ட பெரியோர்கள்;—**(5) ஏறவே** - தாங்கள் வாழவே;— **(6-7) அரையானே** - அரசரே; —**(8) ஒல்கிடக் கெடுத்தவன் - ஒல்குதல்** - வலி குறைதல்;கெடுதல்;—**(9) ஒருவரால்** - ஒருவராலும்; முற்றும்மை தொக்கது. **பாறும்** - கெடும்; அழியும்;—**(10) கொள்ளெலும்** - பொருளாகக் கொள்ளற்க; கொள்ளேல் என்பது ஈற்றயல் குறுகிக் கொள்ளெல் என நின்றது;—**(11) மாலோடு சோமன் பணி செய** - மாலும் சோமனும் வழிபட்டமை தல வரலாற்று விசேடம்; மால் வழிபட்டுப் பகைவரை வெல்லச் சக்கரம் பெற்றனர் என்ற வரலாற்றை முன் ''மாலி ஞர்வழி பாடுசெய் மாற் பேறு'' *(4)* என்ற பாட்டிலும் கூறப்பட்டது. அரசுகளது திருக்குறுந்தொகையும், தலவிசேடமும் பார்க்க.

II திருமாற்பேறு

திருச்சிற்றம்பலம் பண்- வியாழக்குறிஞ்சி

குருந்தவன் குருகவன் கூர்மை யவன்
பெருந்தகை பெண்ணவ ஞனு மவன்
கருந்தட மலர்க்கண்ணி காதல் செய்யு
மருந்தவன் வளநகர் மாற் பேறே. (1)

அந்தமின் ஞானசம் பந்தனல்ல
செந்திசை பாடல்செய் மாற்பேற்றைச்
சந்தமின் றமிழ்கள்கொண் டேத்தவல்லார்
எந்தைதன் கழலடி யெய்துவரே. (11)

திருச்சிற்றம்பலம்

திருவல்லம்

2901. திருமாற்பே றுடையவர்தந் திருவருள்பெற் றெழுந்தருளிக்
கருமாலுங் கருமாவாய்க் காண்பரிய கழருங்கி
வருமாற்றன் மழவிடையார் **திருவல்லம் வணங்கி**த்தம்
பெருமாற்குத் திருப்பதிகப் பெரும்பிணைய லணிவித்தார். 1003

பதிகக் குறிப்பு:—இறைவர் எழுந்தருளிய வளநகர் மாற்பேறே.

பதிகப் பாட்டுக் குறிப்பு:—(1) குருந்து - குருகு - கூர்மை - இளமையும், முளையும், அதன் உள்ளீடாகிய உயிர்ச் சத்தும். **பெருந்தகை - பெண் - ஆண்** - அவ்விளமையைத் தோற்றுவித்தற் காரணமான பெண்ணும் ஆணும். **கூர்மை - பெருந்தகை** - ''சிறுமையொடு பெருமையுமாம் பேராளன்'' (தேவா); **மருந்து** - பிறவி நோய் தீர்ப்பவனுதல் குறிப்பு;**—(2) பாறு** - கழுகு; **மாறிலி** - பெயர்; ஒப்பில்லாதவர்;**—(5) துறை - தொழில்** - உயிர் முயற்சிகள் செல்லும் துறைகளும் செயல்களும். **அவன்**- பற்றுக்கோடாகி இயக்குபவன்;**—(8) மாதி** - பெரியவன்.

தலவிசேடம்:– **திருமாற்பேறு** - தொகுதி III பக்கம் 722 பார்க்க.

2901. (இ-ள்) திருமாற்பேறு உடையவர்தம்... எழுந்தருளி - திருமாற்பேறுடைய இறைவரது திருவருள் விடைபெற்று அங்குநின்றும் எழுந்தருளிச் சென்று; கருமாலும்... வணங்கி - கரிய நிறமுடைய விட்டுணுவும் தாம் பன்றியுருவெடுத்துக் காண இயலாத திருவடிகளைச் சுமந்து வரும் வலிமை பெற்றுள்ள இளமையுடைய இடபத்தினையுடைய இறைவரது திருவல்லம் என்னும் பதியினை வணங்கி; தம்பெருமாற்கு... ...அணிவித்தார் - தம் பெருமானுக்குத் திருப்பதிகமாகிய பெரிய மாலையினை அணிவித் தருளினர்.

(வி-ரை) திருவருள் பெற்று - திருவருள் விடை பெற்று.

கருமாலும்... மழவிடையார் - கருமா - பன்றி; **பன்றியுருவெடுத்துத் தேடிய போது இறைவருடைய கழல்கள் திருமாலுக்குக் காண்பரிதாயின. ஆனால் அத்திருமால் விடையாயினபோது காண்பது மட்டுமேயன்றித் தாங்கிவரு மாற்றலும் வந்தது என்பதாம். ஆணவம் முற்பட்டபோது வெளிப்படாத இறைவர் அடிமைத்திறத்தின் முன் வெளிப்படுவர் என்பது குறிப்பு; கருமாலும் ஆற்றல் பெற்ற மழவிடை** என்று கூட்டிப் பொருள் கொள்க; உம்மை உயர்வுசிறப்பு. **கருமாலும்... கழருங்கி** - இவ்வடி முற்றுமோனை.

திருவல்லம் வணங்கி - முதலிற் பதியினை வணங்கி; ''திருவல்லம் கண்டு சென்று'' (11) என்ற பதிகக் குறிப்பும் காண்க.

பெரும் பிணையல் அணிவித்தார் - பிணையல் - மாலை; பிணைத்தலால் வருவது பிணையல்; பிணையல் என்றதற்கேற்ப அணிவித்தார் என்றார்.

மருவாற்றல்—என்பதும் பாடம். *1003*

திருவல்லம்

திருச்சிற்றம்பலம் பண் - வியாழக்குறிஞ்சி

எரித்தவன்முப்புரமெரியின்மூழ்கத்,தரித்தவன்கங்கையைத்தாழ்சடைமேல்,
விரித்தவன் வேதங்கள் வேறுவேறு, தெரித்தவ னுறைவிடந் திருவல்லமே. (1)

கற்றவர் திருவல்லங் கண்டுசென்று,நற்றமிழ் ஞானசம் பந்தன்சொன்ன,
குற்றமில் செந்தமிழ் கூறவல்லார்,பற்றுவ ரீசன்பொற் பாதங்களே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– முப்புரமெரித்தவன் - விரித்தவன் - வேதங்கள் வேறு வேறு தெரித்தவன் - உலகுக்குத் தாயவன் - பெய்தவன் பெருமழை உலகமுய்யச் செய்தவன் - சார்ந்தவர்க் கின்பங்க டழைக்கும் வண்ண நேர்ந்தவன் - பெரியவன் - என்றின்னோரன்ன தன்மைகளா லறியப்படுகின்ற **இறைவ ருறைவிடம் திருவல்லமே.**

பதிகப் பாட்டுக் குறிப்பு: *(1)* **எரித்தவன் - தரித்தவன் - விரித்தவன்** - பயனிலைகள் முன்வந்தமை திருவருளின் விரைவுக் குறிப்பு. திருமாற்பேற்றைக் கும்பிட்டு இங்குப் போந்தருளிய பிள்ளையார் அத்திருப்பதியின் ''குருந்தவன்'' என்ற பதிகப் பண் - கட்டளை - சந்தமாதிய அமைப்புக்களுடன் இங்குப் பதிகம் அருளிய நயம் காண்க. **கண்டு சென்று** *(11)* என்றமையால் இப்பதிகம் பதியின் புறத்தே அருளிய தென்பது கருதப்படும். **''திருவல்லம் வணங்கி''** *(2901)* என்று ஆசிரியர் இதனைக் குறிப்பாலுணர்த்துதலும் காண்க. **வேறுவேறு தெரித்தவன்** - அவ்வவர் பக்குவத்துக் கேற்ப வெவ்வேறாகச் சமயங்களையும் சமய நூல்களையும் வேதங்களினின்றே விரிக்குமாறு தெரிவித்தவன்; இது சைவத்தின் சிறப்பாகிய கருத்து;—**(2) தாயவன்** - தாய் போன்றவன்; உலகங்களைத் தனது சத்தியாகிய மாயையினின்று தோற்றுவிப்பவன்; **எல்லாம் ஆயவன்** - ''அவையே (தானே)யாய்'' என்றது சிவஞானபோதம் 2-ம் சூத்திரம்; **சேயவன்** - விளங்காதவன்; **—(3) போதகம்** - யானை;—**(4) கொய்தவன் மலரடி...வணங்க வைத்து** - தம்மடியவரை வானவர் வணங்கவைப்பன்; **திருமகள்** - அடியவரைத் திருமகள் சார்ந்து பணி கேட்பள் என்பது. **பெய்தவன்... செய்தவன்** - மழையாய்ப் பெய்து உலகம் காப்பவன்;—**(5) தேர்ந்தவர் தேடுவார் தேடச் செய்தே - ''நிகழ்ந்தவர் நேடுவார் நேடச் செய்தே''** *(8)* - அன்புடன் தன்னைத் தேடுகின்றவர்க்குப் பின்னும் அறிவும் ஆசையும் கொடுத்துத் தன்னைப் பற்றச் செய்பவர்; **(6-7) மாமுனி** - மார்க்கண்டேயர்;—**(9) காணவொண்ணுத் தெரியவன்** - காணலாகாத தோற்றமுடையவன்: **தெரி** - தோற்றம்;—**(10) அன்றிய** - பகை பூண்ட;—**(11) கற்றவர் திருவல்லங் கண்டு சென்று - கற்றவர்** - அடிமைத்திறங்கற்ற பெரியோர். மறைகளைக் கற்றுத் துறைபோகியவர்; பதிக முதற்பாட்டுப் பார்க்க. ''கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை'' (திருவிசை); **கண்டு சென்று - சொன்ன** - கண்டு வழிபட்டுச் சென்றபின் பதியை எண்ணியருளிய என்பது குறிப்பு.

தலவிசேடம்:- திருவல்லம் - தொண்டை நாட்டின் 10-வது பதி. திருவலம் என்று வழங்குகின்றது. ''தீக்காலி'' என்ற அவுணன் வழிபட்டுப் பேறுபெற்ற பதி என்ற காரணத்தால் இது ''தீக்காலி வல்லம்'' எனவும் வழங்கப்படும்; (''தீக்காலி'' தனியாய் அடுத்து வடபுறம் உள்ளது) நவக்கோள்கள் இங்குப் பூசித்துப் பேறு பெற்றன என்பதும் வரலாறு. சுவாமி -

திருஇலம் பையங் கோட்டூர்

2902. அங்குள்ள பிறபதியி **னரிக்கரியார் கழல்வணங்கிப்**
பொங்குபுனற் பாலியாற்றின் புடையில்வட பாலிறைவர்
எங்குமுறை பதிபணிவா **ரிலம்பையங்கோட் டூரிறைஞ்சிச்**
செங்கண்விடை யுகைத்தவரைத் திருப்பதிகம் பாடினார். 1004

வல்லநாதர்; அம்மை - **வல்லாம்பிகை;** கோயில் தென்பாலாற்றின் வடகரையில் - பொன்னையாறு - நிவாநதிக் கரையில் அழகாக அமைந்துள்ளது; தீர்த்தம் - **பாலாறு;** பதிகம் 1.

இது காட்டுப்பாடிக்கும் அரக்கோணத்துக்கு மிடையில் உள்ள திருவல்லம் என்ற நிலையத்தினின்றும் வடகிழக்கே கற்சாலை வழி 1/2 நாழிகையளவில் அடையத்தக்கது.

2902. (இ-ள்) அங்குள்ள... வணங்கி - அவ்விடையின் உள்ள பிற பதிகளிலே திருமாலுக்கு மறிவரிய இறைவருடைய திருவடிகளை வணங்கிமேற்சென்று; பொங்கு புனல்...... பணிவார் - பொங்கும் நீர்ப்பெருக்கினையுடைய பாலியாற்றின் அருகாக வடபுறத்திலே இறைவர் எங்கும் எழுந்தருளிய பதிகளை வணங்குவராகி; இலம்பையங் கோட்டூர்... பாடினார் - திருவிலம்பையங் கோட்டூரினை வணங்கிச் சிவந்த கண்களையுடைய இடபத்தை ஊர்தியாகச் செலுத்திய இறைவரைத் திருப்பதிகம் பாடித் துதித்தருளினர்.

(வி-ரை) அங்கு உள்ள பிற பதிகள்-அங்கு - அவ்வருகாமையில்-அணிமையில்; இவை திருக்கரபுரம், விரிஞ்சிபுரம், மகாதேவமலை, தீக்காலி (சீக்காலி), வள்ளிமலை முதலாயின என்பது கருதப்படும்.

பொங்குபுனல் பாலியாற்றின் புடையில் வடபால் - பொங்குபுனல் - பெரும்பாலும் மேலே நீர்ஓட்டமின்றி ஊற்றின் மூலங்கால்களில் பொங்கி வரும் நீருடைய; இதுபற்றி முன் (1099) உரைத்தவை பார்க்க. **புடையில் வடபால்**- காவிரியிற் போல ஆற்றின் கரையினையே சார்ந்து செல்லாது ஆற்றின் வடபக்கம் நாட்டினுள்ளாகப் பலவிடத்தும்.

உகைத்தல் - செலுத்துதல். ''பெருந்துறைப் பெருந்தோணி பற்றி யுகைத்தலும்'' (திருவா); ''ஏறுகந் தேறிய நிமலன்'' (1-2-7) என்ற பதிகக்குறிப்பு.

பிற பதிகள்—உயர்ந்தவரை—என்பனவும் பாடங்கள். *1004*

திருஇலம்பையங் கோட்டூர்

திருச்சிற்றம்பலம் பண்- குறிஞ்சி

மலையினார் பருப்பதந் துருத்திமாற் பேறு மாசிலாச் சீர்மறைக் காடுநெய்த் தானம்
நிலையினா **னெனதுரை தனதுரை யாக** நீறணிந்தேறுகந் தேறிய நிமலன்.
கலையினார் மடப்பிணை துணை யொடுந் துயிலக்கானலம் பெடைபுல்கிக் கணமயிலாலும்
இலையினார் பைம்பொழி லிலம்பையங் கோட்டூ ரிருக்கையாப் பேணியென் னெழில்
கொள்வதியல்பே. (1)

கந்தனை மலிகனை கடலொலி யோதங் கானலங் கழிவளா கழுமல மென்னும்
நந்தியா ருறைபதி நான்மறை நாவ னற்றமிழ்க் கின்றுணை ஞானசம் பந்தன்
எந்தையார் வளநக ரிலம்பையங் கோட்டூ ரிசையொடு கூடிய பத்தும் வல்லார்போய்
வெந்துயர் கெடுகிட விண்ணவரோடு வீடுபே றின்மையின் வீடெளி தாமே. (11)

திருச்சிற்றம்பலம்


பதிகக் குறிப்பு:– *சீபருப்பதம் முதலிய பதிகளில் நிலையினுன், பாலன்- விருத்தன் - பசுபதி, நீருளான் - தீயுளான், அந்தரத்துள்ளான், நினைப்பவர் மனத்துளான் என்றின்னோரன்ன தன்மைகளாற் போற்றப்படும்இறைவன் எனதுரை தனதுரை யாகக் கொண்டு இலம்பையங் கோட்டூர் இருக்கையாப் பேணி என் எழில்கொள்வதியல்பே.*

குறிப்பு:– இத்திருப்பதிகம் சைவத்திறத்தின் சிறந்த பல உண்மைகளை எடுத்துக் காட்டி நிற்கும் சிறப்பு வாய்ந்தது; இறைவரது எங்குநிறைந்த தன்மை; பிள்ளையாரது உரையினையே தமது உரையாக இறைவர் கொண்டு வெளிப்படுத்தும் தன்மை (பிள்ளையார் வாக்கு இறைவர் வாக்கே); பிள்ளையார் நற்றமிழ்க் கின்றுணையாதல்- அன்புடை யடியாரை இறைவர் பசுபோத மிழக்கச் செய்து தாமாந்தன்மை செய்தல்; முதலியவை கருதுக.


பதிகப் பாட்டுக் குறிப்பு:- *(1) மலையினுர் பருப்பதம்*- சீபற்பதம். ***கலைமடப்பிணை*** - பெண்மான்; **துணை** - ஆண்மான். ***கணமயில்*** - மயிற் கூட்டம். எழில் கொள்வது இயல்பு- வசீகரித்துத் தம்வயமாக்குதல் அவர் தன்மை;—**(2) குவளை- மதிமுகத் துலவுதல்** - முகத்தில் குவளை போன்ற கண்கள் பிறழ்தல்;—***(3) காலன்***-காலை உடையவன்; காலத்தைச் செலுத்துபவன் (காலம் - கால தத்துவம்);—***(4) சிலம்ப***-எதிர்ஒலி செய்ய; ***கலை***- கலைமான்;—***(6) அடியவர்க்கு- உண்பிலான்***-பலி திரிதல் தம்பொருட்டன்றி அடியவர்க் கருளும்பொருட்டேயாம். ''அடியார் இரந்துண்டு தன்னடி யெட்டச் செய்தானே'' (திருமந்);— ***(9) கிளர் மழை தாங்கினுன்***-''குன்றமேந்திக் குளிர்மழை காத்தவன்'' (திருவாய்மொழி); திருமால்; **உளமழை**-உள்ளத்தினின்று மழைபோல் வெளிப்படும்; ***உளம் அழை***- உள்ளத்துள் நின்று அழைப்பவன்- (Inner.voice) உள்ளத்தினுள்ளே நின்ற ***கத்தாம்***'' (தாண் - கருகாவூர்) **கத்து**-இடித்துக் கூறுதல் என்றலுமாம். (வ.சு.செ.);— ***(11) நந்தியார்***-இறைவர்; **நான்மறை நாவன்** மறையவர் குலம் குறித்தது; மறையினையே தம் வாக்கினுற் றமிழ் பாடுவர் என்றதும் குறிப்பு; ''நற்றமிழ்க் கின்றுணை'' என உடனருளிய கருத்துமிது. ''வண்டமிழ்செய் தவநிரம்ப'' (1921) என்றவிடத்துரைத்தவை பார்க்க.

தலவிசேடம்– *திருவிலம்பையங் கோட்டூர்*-தொண்டை நாட்டின் 13-வது பதி. இஃது அரம்பை முதலியோர் வழிபட்டுப் பேறுபெற்ற பதி. அரம்பையங் கோட்டூர் என்று அக்காரணத்தால் போந்த பெயர் மருவி இலம்பையங் கோட்டூர் என வழங்கலாயிற்று. சுவாமி-***சந்திர சேகரர்***; அம்மை-***கோடேந்துமுலையம்மை***; பதிகம் 1. அம்மை பெயருடன் சேர்த்துக் கோட்டூர் என்று வழங்கியதுபோலும்.


இது கடம்பத்துார் நிலையத்தினின்றும் தெற்கே மட்சாலை வழி 7 நாழிகையில் அடையத்தக்கது. இவ்வழியில் திருவிற்கோலம் என்னும் கூவம் 5 நாழிகையளவில் உள்ளது.



திருவூறல் (தக்கோலம்) பாட்டு :- 2903



திருவிற்கோலம் (கூவம்) பாட்டு :- 2904



திருவாலங்காடு பாட்டு :- 2908

திருவிற் கோலம்

2903. திருத்தொண்டர் பலர்சூழத் **திருவிற்கோலமும்பணிந்து**
பொருட்பதிகத் தொடைமாலை புரமெரித்த படிபாடி
அருட்புகலி யாண்டகையார் தக்கோல மணைந்தருளி
விருப்பினுடன் **றிருவூறன் மேவினுர் தமைப்பணிந்தார்.** 1005

வழி கடினம்; இடையில் கூவம் ஏரியில் தண்ணீர் இல்லாத காலத்தில் குறுக்கே ஏரி வழியாய்ச் சென்றால் ஒருநாழிகையளவில் அடையலாம்.

குறிப்பு:—இவ்வூர் இப்போது கிறித்தவர்களால் மிகவும் குடியேறப் பெற்றுள்ளது. அருச்சகர் முதலியவர் கூவத்தினின்று வந்துதான் வழிபாடு நடைபெற வேண்டும். அரிய திருப்பதிகத்தினால் அரிய பண்ணில் மிக அரிய பொருள்கள் காட்டிப் பிள்ளையார் போற்றிய இப்பதியை நாட்டுக்கோட்டை நகரத்தார் பலர் முயற்சியால் திருப்பணி செய்து 1948-ல் குடமுழுக்கு விழா நடந்தேறியது.

2903. (இ-ள்) திருத்தொண்டர்...பாடி - திருத்தொண்டர்கள் பலரும் தம்மைச் சூழ்ந்து வரச் சென்று திருவிற்கோலப் பதியினையும் பணிந்து மெய்ப்பொருள்காட்டும் திருப்பதிகத் தொடைமாலையினை இறைவர் திரிபுரமெரித்த நிலைபற்றித் துதித்துப் பாடியருளி; அருட்புகலி ஆண்டகையார்...பணிந்தார்-அருளினையுடைய சீகாழி ஆண்டகையார் தக்கோலப் பதியினை அணைந்து விருப்பினுடனே அங்குத் திருவூறலிற் கோயில் கொண்டு பொருந்தி யெழுந்தருளிய இறைவரை வணங்கி யருளினுர்.

(வி-ரை) திருவிற்கோலம்-இது கூவம் என வழங்கப்படுகின்றது.

பொருட் பதிகத் தொடைமாலை - பொருள் - உண்மைப் பொருள். **பொருட் பதிகம்**-உண்மைப் பொருள் காட்டுதலை உட்கிடையாகக் கொண்ட பதிகம். இப்பதிகத்தின் உட்கிடையாவது **புரமெரித்தபடி**யினைப் பாடுதலாம். முப்புரமெரித்தல்-உயிர்களுக்கு மும்மலஞ் சிதைத்தல் என்பர் திருமூல தேவர்.

புரமெரித்தபடி பாடி-படி-நிலைமையினை- படியினை-இரண்டனுருபு விரிக்க. **புரமெரித்தல்**-பதிகக் குறிப்பும் தலவிசேடமும் பார்க்க.

தக்கோலம்-பதியின் பெயர்; வழக்கில் உள்ளது.

திருவூறல்-இறைவர் திருக்கோயில் கொண்ட இடம்.

விருப்பினுடன் திருவூறல் மேவினுர்- திருவூறலின்கண் எப்பொழுதும் விளங்கப் பொருந்தியருளும் இறைவர்; இங்குக் கங்காதரேசுவார் கோயிலைச் சுற்றிலும் எப்போதும் நீரூற்றுப் பெருகி ஓட இறைவர் மகிழ்ந்து எழுந்தருளும் நிலை குறித்தது. ''அமர்ந்த பிரான்'' (பதிகம் 7) என்ற குறிப்பு; தலவிசேடம் பார்க்க. **ஆண்டகையார்-விருப்பினுடன்- பணிந்தார்**- என்ற பிள்ளையார்பால் கூட்டி உரைக்கவும் நின்றது கவிநயம். *1005*

திருவிற்கோலம் (கூவம் - கூகம்)

திருச்சிற்றம்பலம் பண்- காந்தாரபஞ்சமம்

உருவினா ருமையொடு மொன்றி நின்றதோர்
திருவினான் வளர்சடைத் திங்கள் கங்கையான்
வெருவிவா னவர்தொழ வெகுண்டு நோக்கிய
செருவினா னுறைவிடந் திருவிற் கோலமே. (1)

சிற்றிடை யுமையொரு பங்க னங்கையில்
உற்றதோ ரெரியின னொருச ரத்தினால்
வெற்றிகொ ளவுணர்கள் **புரங்கள் வெந்தறச்**
செற்றவ னுறைவிடந் திருவிற் கோலமே. (2)

கோடல்வெண் பிறையனைக் **கூக மேவிய**
சேடன செழுமதிற் றிருவிற் கோலத்தை
நாடவல் லதமிழ் ஞானசம் பந்தன்
பாடல்வல் லார்களுக் கில்லை பாவமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– உமையொரு பங்கன்- ஒரு சரத்தினால் அவுணர்கள் புரங்கள் வெந்தறச் செற்றவன் - செருவினான்- உறைவிடம் திருவிற்கோலமே.

பதிகப் பாட்டுக் குறிப்பு:– *(1)* **உருவினார்**- உருவத்தால் நிறைந்த; **செருவினான்**- போர்க் கோலத்துடன் நிற்பவர்; இத்தலப் பெயர்க் குறிப்பும் தல வரலாற்றுக் குறிப்பும் காண்க. 2-3-6-7-9-வது பாட்டுக்களும் பிறவும் பார்க்க;—*(2)* **வெற்றி கொள்** - அதுவரை வெற்றிகொண்டிருந்த;—*(3)* **அதிசயன்**-இன்னதென் றறியவாராத பெருந்தன்மைகளை யுடையவர்; **ஐயன்**-பெரியவர்; தலவிசேடம் பார்க்க;—*(4)* **விதைத்தவன்**-வித்தை புகட்டியவன்; விதை-பகுதி; உளதாதற் பொருட்டு வித்திடுதல்; முனிவர்க்கு அறம் முதலியவற்றை உளவாக்கியவன்; —*(5)* **மூவர்**-அயன்,அரி,அரன்; **கூகம்** - பதியின் பெயர்; **விற்கோலம்**-கோயிலின் பெயர்; ''கூக மேவிய திருவிற் கோலத்தை'' (11) என்பது காண்க. **கூகம்** என்பது **கூவம்** என மருவி வழங்குவது;—*(7-8)* **சிரித்தவன்**-அருள்நகை; நாளும் வாளுங் கொடுக்கும் நகை;—*(9)* **ஆற்றலால் உருத்தெரியலன்** - தமது தற்போத முனைப்பினால் தேடி யறியவொண்ணாதவர்;—*(10)* **சீர்மையில்**- சிறப்பில்லாத; **நீர்மை** - உண்மை.

தலவிசேடம்:– **திருவிற்கோலம்**-தொண்டை நாட்டின் 14-வது திருப்பதி; இது **கூவம்** என வழங்கப்படுகின்றது. **கூகம்** என்பது **கூவம்** என மருவிற்று; கூகம் பதியின் பெயரும், விற்கோலம் திருக்கோயிலின் பெயருமாக அறியப்படும். பதிகத்துள் ''கூக மேவிய- திருவிற் கோலத்தை'' என்பது காண்க. திரிபுர சங்கார காலத்தில் இங்கு இறைவர் வில்லையேந்திய கோலத்துடன் வீற்றிருந் தருளியமையால் திருப்பதி விற்கோலம் எனப் பெயர் பெற்றது; அதுபோழ்து தேரின் கூவரம் (ஏர்க்கால்) சிதைந்தமையால் **கூவம்** எனலாயிற்று என்பது புராணம்; சுவாமி யம்மையாரின் பெயர்கள் பதிகப் பாட்டுக்களும் (2-3-6-7-9) புரமெரித்த

திருவூறல்

2904. **தொழுது**பல முறைபோற்றிச் **சுரர்குருவுக் கிளையமுனி**
வழுவிறவம் புரிந்தேத்த மன்னினூர் தமைமலர்ந்த
பழுதில்செழுந் தமிழ்மாலைப் பதிகவிசை புனைந்தருளி
முழுதுமளித் தவரருளாற் போந்தனர்முத் தமிழ்விரகர். 1006

வரலாறுபற்றி எழுந்த நிலையும் கருதுக; சுவாமி தீண்டாத் திருமேனி; அதிக மழை, மழையின்மை, போர் முதலிய செய்திகளின் நிகழ்ச்சிகள் அவ்வப்போது சுவாமியின் திருமேனியிற் காணப்படும் நிறத்தினின்றும் அறியப்படும். இதனைப் பதிகத்துள் ''ஐயனல் லதிசயன்'' என்று குறிப்பிடப்பட்டமை காண்க. சுவாமி-**திரிபுராந்தகேசுவரர்**; அம்மை-**திரிபுராந்த நாயகி**; பதிகம் 1. ஐயனும் அம்மையும் கூடியே திரிபுரமெரித்தருளினர் என்பது இருவர் பெயர்களாலும் பதிகம் 1-2-3 பாட்டுக்களாலும் அறிக.

இது கடம்பத்துூர் நிலையத்தினின்றும் தெற்கில் மட்சாலை வழி 5 நாழிகையளவில் அடையத் தக்கது. இதன் தென்மேற்கில் 2 நாழிகையளவில் திருவிலம் பையங்கோட்டூர் உள்ளது.

2904. (இ-ள்) தொழுது பலமுறை போற்றி - வணங்கிப் பலமுறையும் துதித்து; சுரர் குருவுக்கு... தமை- தேவ குருவாகிய வியாழனுடைய தம்பி சம்வர்த்த முனிவர் குற்றமில்லாத தவம்செய்து போற்றியிட எழுந்தருளியிருந்த இறைவரை; மலர்ந்த... புனைந்தருளி- அன்பினால் மலர்ந்த பழுதில்லாத செழுமையுடைய தமிழ்மாலையாகிய திருப்பதிக இசையினைச் சாத்தியருளி; முழுதும்... தமிழ் விரகர்- எல்லாவற்றையும் படைத்த இறைவரது திருவருள்விடை பெற்றுச் சென்றனர் முத்தமிழ் விரகராகிய பிள்ளையார்.

(வி -ரை) சுரர் குருவுக்கு இளைய முனி - வியாழனுக்குத் தம்பியாகிய சம்வர்த்த முனி. **சுரர்குரு** - வியாழன்.

வழுவில் தவம் புரிந்து ஏத்த மன்னினூர் - சம்வர்த்த முனிவர் இங்குத் தவம் புரிந்து வழிபட்டனர் என்பது தல வரலாறு.

மலர்ந்த - அன்பினால் மனத்தினின்றும் வெளிப்பட்ட, **மாலை** என்பதற்கேற்ப **மலர்ந்த** என்றார்.

இசை புனைதலாவது - இசையுடன் கூடிய பதிகத்தை அருளித் துதித்தல்.

முழுதுமளித்தவர் - உலகெலாம் படைத்தவர்; இது மாசங்காரத்தில் எல்லாவற்றையும் தம்முள் ஒடுக்கிப் புனருற்பவத்தில் மீள உளதாக்கும் முதல்வனாதல் குறித்தது. **அளித்தவர்** - காத்தவர் என்றலுமாம்; எல்லா வரங்களையும் வீடுபேற்றையும் அருள்பவர் என்றலும் பொருந்தும். **அளித்தல்**-அளியோடுங் கொடுத்தல்.

போந்தனர் - மேற்சென் றருளினர். *1006*

திருவூறல் (தக்கோலம்)

திருச்சிற்றம்பலம் பண்- வியாழக்குறிஞ்சி

மாறிலவு ணரரணம் மவை மாயவோர் வெங்கணையா லன்று
நீறெழ வெய்தவெங்க ணிமலனிடம் வினவிற்
றேறலிரும் பொழிலுந் திகழ் செங்கயல் பாய்வயலுஞ் சூழ்ந்த
ஊறல மர்ந்தபிரா னொலி யார்கழ லுள்குதுமே. (1)

கோடலி ரும்புறவிற் கொடி மாடக் கொச்சையர்மன் மெச்ச
வோடு புனல் சடைமேற் கரந்தான் றிருவூறல்
நாடல ரும்புகழான் மிகு ஞானசம் பந்தன்சொன்ன நல்ல
பாடல்கள் பத்தும் வல்லார் பரலோகத் திருப்பாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– இறைவரது இடமாகிய திருவூறலை யுள்குதுமே. பதிக மகுடம் பார்க்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு:– *(1)* ***அரணம்*** *-மதிலையுடைய கோட்டை.* **ஒலியார் கழல்** *-சிலம்பொலிக்கும் கழலணிந்த திருவடி; இடம் வினவில் அது திருவூறல். அதனில் அமர்ந்த இறைவனது திருவடியையே உள்குதும் - நினைப்போம்.* ***அமர்தல்*** *- விரும்பி வீற்றிருத்தல். இதனை ''விருப்பினொடுந் திருவூறல் மேவினார்'' (2903) என்றருளினர் ஆசிரியர்;– –(2)* ***நீலம் நயனமொத்து அலரும்*** *-நீலமலர்கள் கண் போல மலர்தற்கிடமாகிய;—(3)* ***அழகார் - திருவூறல்*** *என்று கூட்டுக.* **ஊனம்** *- ஆணவமலம்;— (5-6-7) சண்டீசர் சரிதம் குறித்தது.* ***தாழும்*** *-விரும்பும்-மகிழும். கோயிலாகத் தாழ்ந்தீரே'' (தலைச்சங்கை - தேவா);—(8)* **கறுத்த** *- சினந்த;* ***மறுக்குறும்*** *-அஞ்சிய;—(10)* ***பொன்னியல்*** *-துவர் நிறமுடைய.* ***புளித்தட்டை*** *- அமணர்களின் கவள வுணவு வகை; உடை குறித்தது எனிலுமாம்.* ***''தென்''னென*** *- ஒலிக்குறிப்பு.* ***அழகார்-திருவூறல்*** *என்க; மூன்றுவது பாட்டுப் பார்க்க;—(11)* ***மிக்க ஓடுபுனல் சடைமேற்கரந்தான்*** *- இத்தலத்தின் நீர்ப்பெருக்குக் குறிப்பு.*

தலவிசேடம்:– திருவூறல் *(தக்கோலம்)* - தொண்டை நாட்டின் 12-வது பதி. இது *தக்கோலம் என்ற ஊர்ப்பெயரால் விளக்கமாக அறியப்பட்டு* வழங்கப் படுகின்றது. ***ஊறல்*** *-இறைவர் எழுந்தருளியுள்ள தானத்தின் பெயர்; சுவாமியின்* திருவடியினின்றும் நீர் *பெருகிவருவதால் இப்பெயர் பெற்றது. சுவாமி பெயர்* **சலநாதேசுவரர்** என வழங்குவதும் *காண்க.* தேவ குருவாகிய வியாழனுடைய *தம்பி சம்வர்த்த* முனிவர் தவம் புரிந்து வழிபட்ட *வரலாறுபற்றி* ஆசிரியர் *சேக்கிழார் தமது புராணத்துள் (2904) போற்றியமை காண்க.* இத்திருக்கோயில் குசஸ்தல ஆறு என்னும் *பழைய பாலாற்றின்* (விருத்தக்ஷீர நதி என *வடமொழியாக்கி* யுரைப்பர்) கரையில் *அமைந்துள்ளது.* இதனை *அடுத்து* மதிலோரத்தில் கிழக்கே *உள்ள கங்காதரர் சந்நிதி மேற்குப் பிரகாரத்தில்* இடபத்தின் வாயில் *எப்போதும்* நீர் *பெருகிவருவது தலப் பெருமையைக் கண்கூடாகக் காட்டுவதாம்;* பதிகம்11-வது பாட்டுப் *பார்க்க. சுவாமி -* **உமாபதீசுரர்;** *அம்மை -* **உமையம்மை;** *பதிகம் 1.*

இது தக்கோலம் என்னும் நிலையத்தினின்றும் வடகிழக்கே மட்சாலை வழி 4 நாழிகையளவில் அடையத் தக்கது.

திருவாலங்காடு

2905. குன்றநெடுஞ் சிலையாளர் குலவியபல் பதிபிறவும்
நின்றவிருப் புடனிறைஞ்சி, நீடுதிருத் தொண்டருடன்
பொன்றயங்கு மணிமாடப் பூந்தராய்ப் புரவலனார்
சென்றணைந்தார் **பழயனூர்த் திருவாலங் காட்டருகு.** 1007

2905. (இ-ள்) குன்ற நெடுஞ் சிலையாளர்...இறைஞ்சி - பொன்மலையினை வில்லாக வுடைய இறைவனார் விளங்க எழுந்தருளிய பல பிற பதிகளையும் நிலையான விருப்பத்துடனே சென்று வணங்கி; நீடு திருத்தொண்டருடன்...திருவாலங் காட்டருகு-பொன் விளங்கும் அழகிய மாடங்களையுடைய சீகாழித் தலைவராகிய பிள்ளையார் அன்பு நீடிய பெருந் தொண்டர்களுடனே பழயனூர்த் திருவாலங் காட்டின் அணிமையிற் சென்று அணைந்தருளினர்.

(வி-ரை) குன்றம் - மேருமலை; **சிலை**-வில்; திரிபுர சங்கார காலத்தில் மேருமலையினையே வில்லாக வளைத்து இறைவர் ஏந்தினர் என்பது வரலாறு.

பல்பதி பிறவும்-இவை திருவூறலினின்றும் திருவாலங்காட்டுக்குச் செல்லும் வழியில் இடையில் உள்ளனவும் அணிமையில் உள்ளனவுமாம்; இவை மணவூர், திருஎவ்வளூர் முதலாயின என்பது கருதப்படும்.

திருநீடு தொண்டர் - திரு-சிவன்பாலும் அடியார்பாலும் கொண்ட பேரன்பின் சிறப்பு; **நீடுதல்**-இடையறாது பெருகுதல்.

பொன் தயங்குதல்-பொன்னால் அழகு செய்யப்பட்டு விளங்குதல்.

பழயனூர்த் திருவாலங்காடு - இவையிரண்டும் இணைத்தே வழங்கப்படும். தேவாரப் பதிகங்களும் தலவரலாறும் பார்க்க. **அருகு** - அணிமையில்.

அருகு சென்றணைந்தார் - என்க. வினைமுற்று முன் வந்தது. ஆர்வ மிகுதியால் நேர்ந்த விரைவுக் குறிப்பு. பிற்சரித நிகழ்ச்சி கருதுக. *1007*

2906. (இ-ள்) ''இம்மையிலே... திருவாலங்காடாம்'' என்று- இப்பிறவியிலே நில வுலகத்தவர்கள் எல்லாரும் நேரே காணும்படி, ஏழுலகங்களிலுள்ளாரும் துதிக்கும்படி, எம்மை யாட்கொண்டருளும் அம்மையாராகிய காரைக்கா லம்மையார் தமது திருத்தலையினாலே நடந்துசென்றடைந்து போற்றியிருக்கின்ற அம்மையப்பர் எழுந்தருளிய பதி இத்திருவாலங்காடாகும்'' என்று உட்கொண்டு; தம்மை... அஞ்சி - தம்மை ஆளுடைய இறைவரது பழைமைபொருந்திய அவ்வூரினைக் காலால் மிதித்து உட்செல்வதற்குப் பயந்து; சண்பை வரும்... சென்று- சீகாழியில் வந்தருளிய தலைவருட் சிறந்தவராகிய பிள்ளையார் அப்பதியினருகு சாரப் போய்; செம்மை நெறி... பள்ளி சேர்ந்தார் - செம்மை நெறியினின்று சிறிதும் வழுவாத தூய ஒழுக்க முடையவர்கள் வாழ்கின்ற அத்திருப்பதியின் பக்கத்தில் ஒரு செழிய நகரின்கண் அன்று இரவிலே தங்கிப் பள்ளி கொண்டருளினர்.

வேறு

2906. "இம்மையிலே **புவியுள்ளோர் யாருங் காண,**
வேழுலகும் போற்றிசைப்ப, **வெம்மை யாளும்**
அம்மைதிருத் தலையாலே நடந்து போற்றும்
அம்மையப்பர் திருவாலங் காடா" மென்று
தம்மையுடை யவர் **மூதூர்மிதிக்க வஞ்சிச்,**
சண்பைவருஞ் சிகாமணியார் **சாரச் சென்று,**
செம்மைநெறி வழுவாத பதியின் மாடோர்
செழும்பதியி னன்றிரவு பள்ளி சேர்ந்தார். 1008

(வி-ரை) இம்மை- இப்பிறப்பு. ***யாருங் காண ஏழுலகும் போற்றிசைப்ப தலையாலே நடந்து***-அம்மை புராணம் பார்க்க *(1778-1779).*

எம்மை ஆளும் அம்மை-*காரைக்காலம்மையார்.* இறைவர் **"*அம்மை*"** என *அழைத்தருளப்பெற்ற தன்மையால் எம்மை ஆளும் தன்மையுடையார்.*

அம்மையப்பர்-*அம்மை, அப்பாவென்று வழிபட்டவர் என்றும், உமை யம்மையுடன் கூடிய அப்பர் என்றும் உரைக்க நின்றது.*

திருவாலங்காடாம் என்று - *இஃது அத்திருவாலங்காடு ஆகும் பதி என்று நினைந்து; மிதியாமைக்குக் காரணங் கூறியபடி. அம்மை தலையால் நடந்து போற்றும் பதியைக் காலால் மிதித்தல் தகாதென்பது. அரசுகள் கைத்தொண்டு செய்த திருஅதிகைப் பதியை மிதிக்க அஞ்சி ஆரூர் நம்பிகள் அப்பதியின் புறத்துச் சித்தவட மடத்தில் துயின்றருள இறைவர் திருவடி சூட்டிய வரலாறு இங்கு நினைவு கூர்தற் பாலது. 229-ம் ஆண்டுரைத்தவையும் பார்க்க.*

சிகாமணியார் - *சைவத் தலைவர். தலைவராதலின் சைவத்திறம் இத்தன்மைத்து என்று ஒழுகிக் காட்டியருளினர் என்பது குறிப்பு.*

சார-*அப்பதியினை அணுக; அருகில்.*

செம்மை நெறி வழுவாத செழும் பதி - செம்மை நெறி - மெய்ம்மை நெறி- பதியினரது நெறி வழுவாத தன்மை பதியின்மேல் ஏற்றப்பட்டது. "மெய்ம்மை நிலை வழுவாத மேன்மை நெறி விழுக்குடிமைச், செம்மையினுர்" *(1606)* என இக்கருத்தை முன்னரே விளக்கியருளினு ராதலின் இங்குச் சுருக்கிக் கூறினுர். மெய்ம்மை நிலையும் முன் விரிக்கப்பட்டது; கண்டுகொள்க. மெய்ம்மையே செம்மை-சத்து-எனப்படும். **செம்மை** - சிவத்தன்மை; மேல்வரும் பாட்டும் பதிகமும் பார்க்க.

மாடோர் செழும்பதி - பக்கத்தில் உள்ள ஓர் ஊர்; **செழும் பதி**-பிள்ளையார் தங்கியருளியமையாலும், அங்குத் திருவாலங்காட் டிறைவர் எழுந்தருளப் பெற்றுத் திருப்பதிகமும் பாடப்பெற்றமையாலும் செழிப்புப்பெற்ற பதி என்பது குறிப்பு. இப்பதி யாது என்று தெரியக்கூடவில்லை. *1008*

2907. **மாலையிடை** யாமத்துப் பள்ளி கொள்ளும்
மறையவனூர் தம்முன்பு கனவி லேவந்
தாலவனத் தமர்ந்தருளு மப்பர் "**நம்மை**
யயர்த்தனையோ பாடுதற்"கென் றருளிச் செய்ய
ஞாலமிரு ணீங்கவரும் புகலி வேந்தர்
நடுவிருள்யா மத்தினிடைத் தொழுது ணர்ந்து,
வேலைவிட முண்டவர்தங் கருணை போற்றி
மெய்யுருகித் திருப்பதிகம் விளம்ப லுற்றார்; 1009

2907. (இ-ள்) மாலையிடை யாமத்து... கனவிலே வந்து-மாலைப்பொழுது முற்றிய நடுயாமத்திலே பள்ளிகொண்டருளுகின்ற வேதியராகிய பிள்ளையாரது கனவிலே எழுந்தருளி வெளிப்பட்டு; ஆலவனத்து... அருளிச் செய்ய-திருவாலங் காட்டில் விரும்பி எழுந்தருளும் அப்பனார் "நம்மைப் பாடுதற்கு மறந்தாயோ?" என்று அருளிச் செய்யவே; ஞாலம்...உணர்ந்து - உலகம் இருணீங்கி யுய்யும் பொருட்டு அவதரித்த சீகாழித் தலைவராகிய பிள்ளையார் நள்ளிருள் யாமத்திலே தொழுதுகொண்டபடியே துயிலுணர்ந்து எழுந்து; வேலைவிடம்... விளம்பலுற்றார்- கடலில் வந்த நஞ்சினை அமுது செய்தருளிய இறைவரது திருக்கருணையினைப் போற்றி மெய்யுருகித் திருப்பதிகம் பாடலாயினராகி;

(வி-ரை) மாலையிடை யாமம்-பகலின் இடையாமமு முளதாதலின் **மாலையிடை** யென்று பிரித்தோதினார். பிறிதினியைபு நீக்கிய விசேடணம். மாலை கழிந்த இடையாமம். **இடை**-முன்னை நாளுக்கும் பின்னை நாளுக்கும் இடை. **யாமம்**- நள்ளிரவு; "கூதிர் யாம மென்மனார் புலவர்" (தொல்-பொரு-81-6).

ஆலவனத் தமர்ந்தருளு மப்பர்-"ஆலங்காட் டப்பர்" (புராண வரலாறு-5) "அம்மையப்பர்" (2906); ஆலங்காட் டிறைவர் திருப்பெயர் இவ்வாறு அப்பர் என வழங்கப்படுவது; "அவிநாசி யப்பா" முதலியவை காண்க.

"நம்மை அயர்த்தனையோ பாடுதற்கு" என்று-அயர்த்தல்-மறத்தல்; "ஒரு நாள் அருளாலே அயர்த்துண்ணப் புகுகின்றார்", "எறியா தயர்த்தேன்" (சாக்கியர் புராணம்-15); "அயர்த்தவாறே" (தேவா). திருவாலங்காட்டின் இறைவரை மறவாது வந்தடைந்தாராதலானும், அங்கு அம்மை தலையால் நடந்து எய்தித் திருவடிக்கீழ் என்றும் இருக்கின்ற நிலையினை மறவாது மனத்துட்கொண்டே பள்ளிகொள்கின்றா ராதலானும், என்றும் திருவடி மறவாப்பான்மை யோராதலானும், **அயர்த்தனையோ?** என்றொழியாது **பாடுதற்கு** என்று அடுத்துக் கூறியருளினார். மறவா நிலையேயாயினும் பாடுதல் மட்டும் மறந்தது என்றதாம்; என்னை? பதியினைக் கண்ட உடன் வணங்கிப்பாடும் நிலையினர் அது செய்யாது திருமனத்துட்கொண்ட நிலையோ டமைந்தனர். நகருள் மிதித்து அடையாமையும் மனங்கொண்டருளிப் பள்ளிகொண்டனர். இனிப்பாடுதல் தான் எப்பொழுது? என்று நினைவித்தருளிய படியாம்; இதனையே "வழுவிப் போய் நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப்பாரும்" என்று பதிகத்துப் போற்றியருளினர்.

2908. **''துஞ்சவரு வா''**ரென்றே யெடுத்த வோசைச்
சுருதிமுறை வழுவாமற் றொடுத்த பாடல்
எஞ்சலிலா வகைமுறையே **பழைய னூரா
ரியம்புமொழி காத்தகதை** சிறப்பித் தேத்தி
''**யஞ்சனமா கரியுரித்தா ரருளா**'' மென்றே
யருளும்வகை திருக்கடைக்காப் பமையச் சாத்திப்
பஞ்சுரமாம் பழையதிறங் கிழமை கொள்ளப்
பாடினார் பாரெல்லாம் முய்ய வந்தார். 1010

ஞாலமிருள் நீங்க வரும்-இருள்-*சிவனருட் டிறத்தினை மறந்து அறியாமையுட் கிடந்து பரசமயக்கோட்பட்ட உலகும் அவ்வறியாமையாகிய இருள் நீங்கிச் சிவனருள் அறியும் அறிவு பெற்று உய்யும்படி அவதரித்த,* **இருள் நீங்க** *வரும் அவர்* **நடு இருளிடைத் தொழுது உணர்ந்து** *என்ற நயமும் காண்க.*

நடு இருள் யாமத்தினிடைத் தொழுது உணர்ந்து - நள்ளிரவு - *இறைவர் கனவில் அருளிய காலம்; ''துஞ்ச வருவாரும்''; ''பகலு மிரவுஞ்சேர் பண்பினாரும்'' என்ற பதிகக் குறிப்புக்கள் காண்க.* **தொழுது உணர்ந்து**- *தொழுதுகொண்ட படியே துயிலுணர்ந்து; ''தொழுவிப்பாரும்''என்பது பதிகம்;* **உணர்ந்து**- *துயிலுணர்ந்து; கனவு நீங்கி விழிப்பு நிலையில் வந்து. ''தொழுதெழுவாள்'' (குறள்).*

வேலை விடமுண்டவர்தங் கருணை போற்றி - *அமரர் வேண்ட நஞ்சமுண்ட கருணையாளர். இங்கு அதனின் மேலாய் வேண்டாமலே வந்து பணிகொண்டமையால் அக் கருணைப்பெருக்கினைப் போற்றினார் என்க.*

மெய்யுருகுதல் - *இறைவர் தமது கருணை மிகுதியால் வலியவந்து ஆட்கொள்ளும் திறத்தினை எண்ணியெண்ணி மனமுருக அதனால் மெய்யும் உருகுதல்.*

விளம்பலுற்றார் - *விளம்பலுற்றாராகி; முற்றெச்சம். விளம்பலுற்றாராகிப்- பாடினார்- என மேல்வரும் பாட்டுடன் முடிக்க.*

நடுவிடையாமத்தினிடை-—*என்பதும் பாடம்.* *1009*

2908. (இ-ள்) ''துஞ்ச வருவார்'' ... பாடல்-''துஞ்ச வருவாரும்'' என்றே தொடங்கிய, ஓசையுடைய வேதத்தின் முறை தவறாதபடி பாடிய பாடலில்; எஞ்சலிலா வகை... ஏத்தி - குறைவில்லாத வகையினாலே நீதிமுறையின் வழி பழையனூர் வேளாளர்கள் தாங்கள் சொல்லிய சொல்லைத் தவறாது காத்து அருள்பெற்ற சரிதத்தைச் சிறப்பாகப் பாராட்டிப் போற்றி; அஞ்சனமா கரி உரித்தார்... அமையச் சாத்தி-''கரிய யானையை உரித்த இறைவரது திருவருளேயாகும் இஃது'' என்று அவர் அருள்புரியும் தன்மையைத் திருக்கடைக்காப்பில் பொருந்தவைத்து; பஞ்சுரமாம்... வந்தார் - குறிஞ்சியாழ்ப் பண்ணமைதித் திறமும் கிழமையும் பொருந்தப் பாடியருளினார் உலகமெல்லாம் உய்யும்பொருட்டு அவதரித்த பிள்ளையார்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிவு கொண்டன.

(வி-ரை) ''துஞ்ச வருவா'' ரென்றே எடுத்த-''துஞ்ச வருவாரும்'' என்றே தொடங்கிய. இது பதிகத் தொடக்கம். **என்றே**-ஏகாரம். துயிலுணர்ந்த பிள்ளையார் அதனையே கொண்டு ''துஞ்ச வருவார்'' எனத் தொடங்கிய நிலை குறித்தது; **எடுத்த**-தொடங்கிய.

ஓசைச் சுருதிமுறை வழுவாமல் தொடுத்த பாடல் - ஓசையையே கொண்டு கேள்வியால் வழிவழி வரும் வேதம்போல அம்முறையில் இப்பதிகமும் நடுயாமத்தில் முதலில் இறைவர் கேட்க அருளுதலும், பின்னர் அணைந்த திருத்தொண்டர் கேட்க மீண்டும் அகமலரப் பாடி அவர்களைக் கேட்பித்து அவ்வழிவழி வருதலும் கருதுக; **சுருதி முறை** - தெய்வத் திருமுறையாகிய தமிழ் வேதமாக என்றலும் குறிப்பு.

எஞ்சலிலா வகைமுறையே...மொழிகாத்த கதை-இக்கதை முன் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்துள் ''நற்றிறம் புரி'' *(1080)* என்ற பாடலிற் குறிக்கப்பட்டதும், சரிதச் சுருக்கம் ஆண்டு உரைக்கப்பட்டதும் *(II-1403-1404)* காண்க. **எஞ்சலில்லா வகை**-ஒருவரும் எஞ்சாது; குறையாது; ஒருவரொழியாமே எழுபது பேரும் என்க; குறைவு நேராதவண்ணம். **முறை**-நீதிமுறை. **பழயனூரார்** - பழயனூர் வேளாளர்; நீதிமன்றத்திருந்து வணிகனுயிர்க்குத் தீங்கு வராது என்று உறுதி கூறித், தீங்கு வரின் எங்கள் எல்லாருடைய உயிரும் அதற்கீடாக உள்ளது என்று தேற்றியவர்கள்; **பழயனூரார்** - இவ்வாறு ஊரார்-நாட்டாண்மையார்-முதலிய தன்மைகளால்-போரூரார்-மணவூரார்-மாங்காட்டார்-என்பன போன்ற வழக்குக்கள் தொண்டை மண்டலம் 24 கோட்டங்களில் இன்றும் வழக்கி லுள்ளது அந்நாட்டின் சிறப்பு. ஆசிரியரும் அந்நாட்டினராதல் காண்க.

இயம்பு மொழி காத்த-தாம் வாக்கினுற் சொல்லிய உறுதிமொழியை நிறைவேற்றக் கேட்பதற்கு அவ்வணிக னிறந்துபடினும், சொல்தவறுமல் மெய்ம்மையைப் பாதுகாத்த.

சிறப்பித்து ஏத்தி - இக்கதை நிகழ்ச்சி வெறும் உலகியல் நீதியாயொழியாது அவர்களுக்கு இறைவரது ''திருஅடியின் கீழ் மெய்ப்பேறு பெற'' அருளியமையால் அது பிள்ளையாரது மெய்த்திருவாக்கில் சிறப்பித்து ஏத்தத் தக்கதாயிற்று என்பது; அஞ்சும் பழயனூர் ஆலங்காட்டெம் அடிகளே'' என்று இறைவரது சார்புபற்றி எண்ணத்தக்கதாயினமை காண்க.

பஞ்சுரமாம் பழைய திறங் கிழமைகொள்ள-பஞ்சுரம்-குறிஞ்சி யாழ்த் திறன் வகைகளுள் ஒன்று. **திறம் - கிழமை** என்பன இசைப் பாகுபாடுகள்; முன் (221-பாட்டின் கீழ் பக்கம் 250-251) உரைத்தவை பார்க்க. **திறம்**-யாழ்வகையும் யாழ்த்திறன் வகையும் என்ற இசைநூல் வகுப்புக் காண்க. **குறிஞ்சி யாழ்** - குறிஞ்சித் திணை(ஒழுக்கத்து)க்கு உரியது. இங்கு நடு யாமமாகிய அத் திணைக்குரிய முதற் பொருளும், இறைவர் கனவில் வெளிப்பட்டு அருளுதலாகிய கூடல் என்னும் குறிஞ்சியின் உரிப்பொருளும் பொருந்தக் காண்க. இப்பதிகம் நடுயாமத்தில் அருளப்பட்டதென்பதும் காண்க; **பஞ்சுரம்** - பழம்பஞ்சுரம்(பிங்கலம்); **பழைய திறம்**-குறிஞ்சி யாழிற் பயின்றுவரும் திறம் என்றது போலும்.

குறிப்பு:—ஈண்டு இப்பதிகத்துக்குத் தக்கராகம் பண்ணுக வகுத்துள்ளார்கள்; தக்கராகம் பாலையாழ்த் திறன்களுள் ஒன்று; பாலைக்கு நண்பகல் பொழுதாகிய முதற்பொருளாகலானும் பிரிவொழுக்கம்-உரிப்பொருளாகலானும் இப்பாகுபாடு ஆராய்ச்சிக் குரியதாம்; ஆயின் கனவின் வந்து அருளிய இறைவர் துயிலுணர்த்தலும் பிரிவும் ஒழுக்கமும் இடையாமமும் நண்பகல்

போலவே பகலுமிரவும் கூடும் நடுவணதாகிய பொழுதாகலானும் இவைபற்றிப் பாலை யாழும் பொருந்தக்கூறல் அமைவுபடும் போலும்; அன்றியும், நிலம் என்ற முதற் பொருள் பற்றிக் கான்(திருவாலங்காடு) மேல்வரும் ''வெற்புங் கானும் தொக்கபெரு வன்புலக் கானத்தின்'' (2612) தொடர்புடையதாய் முல்லையுங் குறிஞ்சியு மடுத்த இடமாகிப் பாலைத் திணைக்குரித்தாகக் கூறலும் அமைவுபோலும். இவையும் ஈண்டுக் கருதத் தக்கன; பதிகத்துட் பாலைக்குரிய குறிப்புக்களும் பார்க்க (2-4-5) ''கலந்து பலியிடுவேனெங்குங் காணேன், சலப்பாடே யினியொருநாட் காண்பே ணுகில்'' என்று கனவிழந்துரைத்தற் றுறையிற் பிரிவொழுக்க நிலை கருதப்படுமாறும் காண்க.

*இங்கு இவ்வாறன்றிப், **பஞ்சுரமாம் பழையதிறம்**-பல்லுயிருந் துயர் நீங்கப் பாடியருளிய பண்ணமைந்த திருப்பதிக விசையாலாய பழமை பொருந்திய பயனை; **கிழமை கொள்ள**-(சமண் பாட்டில் புத்தர் சமணர்கட்கு) முரிமை பொருந்தும்படி- என்றுரைத்து, ''திரிவாரும், கேழல் வினைபோகக் கேட்பிப்பாரும்'' என்னும் சமண்பாட்டால் அச் சமண் புத்தர்கட்குத் திருப்பதிக விசையைப் போக்குமென்பதும் போதருதலின், ஈண்டிந்நூலாசிரியர் அத்திருப்பதிகப் பொருளை விரித்துக் கூறியருளினர் என்று விளக்கமுங் காட்டினர் ஆறுமுகத் தம்பிரானுர்;''பண்ணமைந்த திருப்பதிகவிசையாலாகிய பழமை பொருந்திய பயனை உரிமையாகப் பொருந்த'' என்பது சூ.சுப்பராய நாயகரவர்களது பொழிப்புரை. இவற்றின் பொருத்தங்க ளாராயத்தக்கன . 1010*

திருவாலங்காடு

திருச்சிற்றம்பலம் பண்-தக்கராகம்

துஞ்ச வருவாருந் தொழுவிப் பாரும் வழுவிப்போய்
நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப் பாரு முனைநட்பாய்
வஞ்சப் படுத்தொருத்தி வாணாள் கொள்ளும் வகைகேட்
டஞ்சும் பழையனூ ராலங் காட்டெம் மடிகளே. (1)

கேடும் பிறவியு மாக்கி னுருங் கேடிலா
வீடு மாநெறி விளம்பி னுரெம் விகிர்தனர்
காடுஞ் சுடலையும் கைக்கொண் டெல்லிற் கணப்பேயோ
டாடும் பழையனூ ராலங் காட்டெம் மடிகளே. (2)

சாந்தங் கமழ்மறுகிற் சண்பை ஞான சம்பந்த
னுந்தண் பழையனூ ராலங் காட்டெம் மடிகளை
வேந்த னருளாலே விரித்த பாட லிவைவல்லார்
சேர்ந்த விடமெல்லாந் தீர்த்த மாகச் சேர்வாரே. (11)

திருச்சிற்றம்பலம்


பதிகக் குறிப்பு:– *ஆசிரியர் (2908) விரித்துக் காட்டியருளியவாறு கண்டு கொள்க.*

பதிகப் பாட்டுக் குறிப்பு:– *(1) **துஞ்ச வருவார்** - துயிலும்போது கனவில் வருவார்; **தொழுவிப்பார்**-வேண்டிப் பணி கொள்வார்; **வழுவிப்போய்... நினைவிப்பார்**-முன்னமே துதித்து பாட மறந்தமையை மனத்துள் வந்து நினைவுபடுத்திப் பணி கொள்வர்; '' நானேது மறியாமே யென்னுள் வந்து நல்லனவுந் தீயனவுங் காட்டா நின்றாய்'' (தாண்); இவையும் மேல்*


"வேந்த னருளாலே விரித்த பாடலிவை'' (11) என்பதும் சரித வரலாற்றின் சிறந்த அகச்சான்றுதல் காண்க; **முன்னைநட்பாய்...அஞ்சும் பழையனூர்**- ''பழையனூரார் இயம்புமொழி காத்த கதை'' (2908) என்றது; பழையனூரும் திருவாலங்காடும் அடுத்துள்ளன. இரண்டும் சேர்த்து ஒரு பதியாகப் போற்றப்பட்டன;—**(2) கேடு**-இறப்பு; **ஆக்குதல்**- உயிர்களுக்குப் பிறவி கொடுத்து மலம் போக்குதல்; **கேடிலா...விளம்பினூர்**- பிறவி தருதல் வீடுபேறடையச் செய்தற்கு என்பது; **விளம்பினூர்**-வேதாகம மாகியவற்றால் அறிவுறுத்தினூர்; **காடும்...ஆடும்**-அம்மை மூத்த திருப்பதிகங்கள் பார்க்க;—**(3) கொந்தண்**-கொந்து தண் என்பது **கொந்தண்** என நின்றது; **அரவிற்றேன்றிக் கோடல் பூத்து-கோடல்**-காந்தள்; காந்தட்பூ பாம்பின் படம் போல விரியும் என்ப. காந்தள் பாந்தள் காட்ட'' - ''கோட லரவீனும்'';—**(4) பால்வெண்**-பால்போன்ற வெண்மையுடைய; **காலன்உயிர் செற்ற காலன்**-சொற்பின் வருநிலை; **காலன்**- பின்னையது காலினை உடையவன்; காலத்தின் கடவுள் என்றலுமாம்; **கருத்தனூர்** என்ற கருத்துமது. **மஞ்ஞை**-மயில்; குறிஞ்சிக் கருப்பொருள்;—(5) **முல்லை- குருந்தம்**-முல்லைக் கருப்பொருள். **தேன்**-வண்டு வகை;—**(7) நுணங்கு மறை**-நுண்ணிய பொருள் கூறும் மறை; **சிறுத்தொண்டர்**-வேளாளர்; ''பழையனூர்ச் சிறுத்தொண்டர்''(1080) தொண்டர் முன் சிறியராயடைபவர் என்பது சொற்பொருள் (சிறுத்.புரா-15 பார்க்க); **அணங்குதல்**-அருள் தருதல்;—**(8) பிணை**-பெட்டைமான்; **சிறுமறி**-மான்கன்று; **கலை**-ஆண் மான். இவை பெருங் கூட்டமாய் வாழ்ந்துவரு மியல்பு குறித்தது. **மான்**- முல்லைக் கருப்பொருள்;—**(9) பரிந்தார்**-பாடல் கேட்டு இரங்கி யருள்கொடுத்தார்;—**(10) பகலு மிரவுஞ்சேர் பண்பினூர்-பகல்**-ஒளி: **இரவு**-இருள். ஒளிக்கு மிருளுக்கு மொன்றே யிடம்''(கொடிக்கவி); **பகல்**-இன்பம்; **இரவு**- துன்பம் என்றலுமாம். ''சோதியு மாயிரு ளாயினூர்க்குத் துன்பமுமா யின்ப மாயி னூருக்கு''(திருவாசகம்); **நண்பு**-அடிமைத்திறமாகிய அன்பு;—**(11) போழம்**-மாறுபடும் சொல்; புத்த மந்திரம். **வேழம் வருமளவும்**-மிதுன ராசியிற் சூரியன் உள்ள அளவும்; **வெயிலே துற்றி**-வெயிலினின்றும்; சமண குருமார் வழக்குக்களுள் ஒன்று; **கேழல் வினை போக - கேழல்**-ஒப்பற்ற; வினைகளும் போக; எல்லார்க்கு மிறைவராதலின் அவ்வவர்களுக்கும் வினைப்பயன் கொடுத்துக் கழிப்பிப்பர். **வாழ்வர்**-வாழ்வுடையவர்;—**(12) வேந்த னருளாலே விரித்த பாடல் இவை** - நம்மைப் பாடுதற்கு மறந்தனையோ என்று அருளியபடி பாடிய என்ற சரிதச் சான்று. **வேந்தன்**-இறைவர் பாட ஆணையிட்டா ராதலின் **வேந்தன்** என்றூர். **சேர்ந்தவிடமெல்லாந் தீர்த்தமாக-தீர்த்தம்**-தூய்மை செய்வது; சென்றூடு தீர்த்தங்க ளானூர்தாமே'' என்ற இப்பதியின் திருத்தாண்டகக் கருத்தும் காண்க.

தலவிசேடம்:— திருவாலங்காடு - மூவர் பதிகங்களும் அம்மையாரது மூத்த பதிகங்களும் பெற்ற தனிச் சிறப்புடைய பதி; தலவிசேடம் III தொகுதி - முதற்பாகம் - பக். 750 பார்க்க.


2909. (இ-ள்) நீடும்...போற்றி-எக்காலமும் நீடும் இசையினையுடைய திருப்பதிகத்தினைப் பாடித் துதித்த பின்பு; நெடுங் கங்குல்...அணைந்த போது- நீண்ட இரவு இருள் நீங்கி விடிந்தகாலையில் பக்கத்தில் திருத்தொண்டர் கூட்டம் வந்து அணைந்தபோது; மாலையினில்...அருளிச் செய்து-மாலை முதிர்ந்த இரவிலே திருவாலங்காட்டில் நிலைபெறப் பொருந்தி ஆடுகின்ற இறைவர் எழுந்தருளி அருளிச் செய்தபடியினை யெல்லாம் அவர்களுக்குச் சொல்லியருளி; அகமலரப் பாடி ஏத்தி- அத்திருப்பதிகத்தினை மீளவும் மனமகிழப் பாடித்



திருப்பாசூர் பாட்டு :- 2910



திருக்கேதாரம் பாட்டு :- 2924



திருக்கோகரணம் பாட்டு :- 2925

2909. **நீடு**மிசைத் திருப்பதிகம் பாடிப் போற்றி
நெடுங்கங்கு லிருணீங்கி நிகழ்ந்த காலை
மாடுதிருத் தொண்டர்குழா மணைந்த போது
மாலையினிற் றிருவால வனத்து மன்னி
ஆடுமவ ரருள்செய்த படியை யெல்லா
மருளிச்செய் தகமலரப் பாடி யேத்திச்,
சேடர்பயி **றிருப்பதியைத் தொழுது** போந்து
திருப்பாசூ ரதன்மருங்கு செல்ல லுற்றார். 1011

துதித்துப் பின்பு; சேடர்பயில்...... போந்து-பெருமையுடையோர்கள் வாழ்கின்ற அந்தத் திருப்பதியினைத் தொழுது மேலே சென்று; திருப்பாசூர்...செல்லலுற்றார்-திருப்பாசூர் நகரின் அருகு செல்வாராகி;

(வி-ரை) நீடும்...பாடிப் போற்றி-நீடுதல்-எக்காலத்தும் விளங்குதல்; **இசை**-புகழ் என்றலுமாம்; **பாடிப் போற்றி**-முன் கூறியவாறு பாடி முடித்துத் துதித்து.

நெடுங் கங்குல் இருள் நீங்கி நிகழ்ந்தகாலை-இறைவர் இடையாமத்து வந்தா ராதலின் பின் உள்ள நேரம் **நெடுங் கங்குல்** எனப்பட்டது. அன்றியும் நல்ல கனவு கண்ட பின்னும், இறைவரைப் பாடியருளிய பின்னும் சிவ சிந்தையுடன் நினைத்திருத்தலன்றிப் பள்ளி கொள்ளலாகாது என்பது மரபாதலானும், தலைவர் கனவில் வெளிப்பட்டுவந் தருளிச்செய்த அருட்டிறங்களை எண்ணிய மிக்க ஆராமையானும் பள்ளி கொள்ளாமையால் கங்குல் நீண்டது என்ற குறிப்புமாம்; **இருள்**-நடுயாம இருளும் புலரி இருளும்; **நிகழ்ந்தகாலை**-வைகுறு விடியற்காலை.

மாடு...அணைந்தபோது-பிள்ளையாரின் திருவடி தொழுவதற்குத் திருத்தொண்டர் அணைந்தனர் என்க.

மாலையினில்-மாலை முதிர்ந்த இரவில்; "மாலையிடை யாமத்து"(2907); பகல் இரவு என்ற நாட்கூறிரண்டில் பகலைக் காலை என்றும் இரவை மாலை என்றும் கூறும் வழக்கமுண்மையின் இங்கு **மாலை** என்பது இரவு என்ற பொருளில் வந்த தென்றலுமாம்.

திருவாலவனத்து மன்னி ஆடுமவர்-ஐம்பெரு மன்றுகளுள் ஒன்றாய் இரத்தினசபை எனப்பெறுவதாய்ச் சிவபெருமான் நித்தியமான ஊர்த்துவ தாண்டவம் செய்தருளும் சிறப்புரிமையுடையதா யிருத்தல் குறிக்க இவ்வாறு கூறினார்.

ஆடுமவ ரருள்செய்தபடியை எல்லாம் அருளிச் செய்து-"அருளுடையார் அளித்தருளும்,செவ்வியபே ரருள்விளம்புந் திறமன்றென் றுரைசெய்யார்"(1743) என்ற அம்மையார் புராணக் கருத்தோடு இது மாறுபடாதோ? எனின், படாது; என்னை? அம்மையார்க்கு நிகழ்ந்த அருள் அவர் மட்டில் அமைந்ததொன்று; இங்குப் பிள்ளையாரை நினைப்பித்துப் பாடுவித்த அருள் அவர்க்கேயன்றி உலகமறிந்துய்யும் அருளுபதேசமொழிகள் வெளிப்படுவதற்காம். ஆதலின் அதனை உலகறியச் செய்ய வேண்டியது தகுதி என்பது.

திருப்பாசூர்

2910. **திருப்பாசூ ரணைந்**தருளி யங்கு மற்றச்
செழும்பதியோ ரெதிர்கொள்ளச் சென்று புக்குப்
பொருப்பரையன் மடப்பாவை யிடப்பா கத்துப்
புராதனர்**வே யிடங்கொண்ட** புனிதர் கோயில்
விருப்பினுடன் வலங்கொண்டு புக்குத் தாழ்ந்து
வீழ்ந்தெழுந்து மேனியெலா முகிழ்ப்ப நின்றே
அருட்கருணைத் திருவாள ஞமஞ் "சிந்தை
யிடையா" ரென் றிசைப்பதிக மருளிச் செய்தார். 1012

அகமலரப் பாடி ஏத்தி-அத் திருப்பதிகத்தினையே அவர்களும் உலகமும் அறிந்துய்யும் பொருட்டு மகிழ்ந்து பாடித் துதித்து.

சேடர் பயில்-சேடர்-பெருமையுடையோர்; பெருமையாவது"மெய்ம்மை நெறி வழுவாத விழுக்குடிமைச் செம்மை"; ***சேடர்***-அறிவுடையோர் என்றலுமாம்.

திருப்பதியைத் தொழுது-உட்புகாமையின் புறத்திருந்தபடியே பதியைத் தொழுது.

தொழுது போற்றி—என்பதும் பாடம். *1011*

2910. (இ-ள்) திருப்பாசூர்...புக்கு-திருப்பாசூரினைச் சேர்ந்தருளி அங்கு அந்தச் செழும்பதியவர்கள் வந்து எதிர்கொள்ள நகரினுள்ளே சென்று புகுந்து; பொருப்பரையன்... புக்கு-மலையரசனது மகளாராகிய உமையம்மையாரை இடப் பாகத்திலே வைத்த புராதனரும் மூங்கிலை யிடமாகக் கொண் டெழுந்தருளியுள்ள புனிதருமாகிய இறைவரது திருக்கோயிலினுள் விருப்பத்துடனே வலமாகச் சுற்றி வந்து உள்ளே புகுந்து; தாழ்ந்து...நின்றே-இறைவரது திருமுன்பு வணங்கி நிலமுற விழுந்து எழுந்து திருமேனி முழுதும் மயிர்ப்புளகம் உண்டாக நின்றே; அருட் கருணை... அருளிச் செய்தார்-அருட் கருணையாகிய திருவினை உடைய இறைவரது திருநாமத்தைச் "சிந்தை யிடையார்" என்று தொடங்கி இசையுடன் கூடிய திருப்பதிகத்தினை அருளிச் செய்தனர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) திருப்பாசூர் அணைந்தருளி-திருப்பாசூர் மருங்கு சென்ற(2909) பிள்ளையார் அந்நகரிற் சேர்ந்து.

புராதனர்-"முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளா" யுள்ளவர்.

வேய் இடங்கொண்ட புனிதர்-வேய்-மூங்கில்; சுவாமி இப்பதியில் மூங்கி லடியில் முளைத்து எழுந்தருளியுள்ளார் என்பது தலவிசேடமாதலின் அதுபற்றிக் கூறியருளினர். ***பாசு***-மூங்கில். அதுபற்றிப் பாசூர் என்ற ஊர்ப்பெயரும் போந்ததென்பர்.

முகிழ்த்தல்-மயிர்ப்புளகம் கொள்ளுதல்.

அருட்கருணைத் திருவாளன்-அருட்கருணை-ஒருபொருட் பன்மொழி; மிகுதி குறித்தது; **திரு**-அருட்டிரு; அழியாத முத்தித்திரு என்றலுமாம்.

நாமம் ''சிந்தை யிடையார்'' என்று-சிந்தையிடையார்-தலையின்மிசையார்-செஞ்சொல்லார்-என்மனத்துள்ளார்-மைந்தர்-மணாளர்-முதலியனவாகப் பதிகத்துக் கூறப்படுவன எல்லாம் அவருடைய திருநாமங்களேயாகி, அவற்றை எடுத்துச் சொல்லிப் போற்றியது பதிகக் குறிப்பு என்றவாறாயிற்று.

இசைப் பதிகம்-இசையுடன் கூடிய பதிகம் **இசை**-புகழ் என்றலுமாம்; இசைப்பா என்புழிப்போல. 1012

திருப்பாசூர்

திருச்சிற்றம்பலம் பண்-காந்தாரம்

சிந்தை யிடையார் தலையின் மிசையார் செஞ்சொல்லார்
வந்து மாலை வைகும் போழ்தென் மனத்துள்ளார்
மைந்தர் மணாளர் என்ன மகிழ்வா ரூர்போலும்
பைந்தண் மாதவிச் சோலை சூழ்ந்த பாசூரே (1)

ஞான முணர்வான் காழி ஞான சம்பந்தன்
தேனும் வண்டு மின்னிசை பாடுந் திருப்பாசூர்க்
கானம் முறைவார் கழல்சேர் பாட லிவைவல்லார்
ஊன மிலரா யும்பர் வானத் துறைவாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- அருட்கருணைத் திருவாள னுமஞ் ''சிந்தை யிடையார்'' என்பது முதலியனவாகப் போற்றியது என 2910-ல் ஆசிரியர் காட்டியருளினார்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) சிந்தை இடையார்-சிந்தையினை இடமாகக் கொண்டுள்ளவர். இடையார்-மிசையார்-சொல்லார்-முதலியனவாக இப்பதிக பாட்டுக்கள்தோறும் வருவனவெல்லாம் இறைவரின் பேரருட்டன்மைகளைப் பற்றி எடுத்துக் கூறும் வகையால் அடியார்கள் சொல்லிப் பரவு நாமங்களாம் என்றவாறு; **சிந்தையிடையார்...தலையின்மிசையார்**- ''சிந்தையி னுள்ளுமென் சென்னியி னுஞ்சேர, வந்தவர் வாழ்க'' (திருவுந்தி - 45); **மாலை வைகும்போது** - பள்ளிகொள்ளும்போதும்; சிறப்பும்மை தொக்கது. **மாலை** - துன்பத்துக்குக் குறியீடாகக் கொண்டு; துன்பம் வந்தபோதும் என்றலுமாம். **என் மனத்துள்ளார்** - மறவாநிலை குறித்தது. திருவாலங்காட்டி லருளிய நினைவுக் குறிப்புமாம்;—**(2) பேரும் பொழுது- பெயரும் பொழுது** - இன்ப துன்பங்களாகிய நிலை குறித்தது. **பேர்தல்**-உள்ளங் கிளர்ச்சியுற்று மகிழ்தல்; **பெயர்தல்**-அந்நிலை மாறுதல்; ''இடரினும் தளரினும்'' (திருவாவடுதுறை) என்ற பதிகக் கருத்துக் காண்க. **ஆர்தல்** - உள்ளம் அமைவுபடுதல்; **தனை**-அளவு குறிப்பது; **பாரின் மிசையார்** - உலகத்துள் ளார்களது;—**(3) கையால்...கசிவார்கள்** - வழிபடுநிலை; **மெய்யார் குறை**-உடம்பு வருதற்கேதுவாகிய குறை-பழவினை. **நெய்யாடுதல்**-இங்குத் திருமஞ்சனம் என்ற பொருளில் வந்தது;

திருக்காளத்தி

2911. **மன்னு**திருப் பதிகவிசை பாடிப் போற்றி,
வணங்கிப்போந் தப்பதியில் வைகி, மாடு
பிஞ்ஞகர்தம் **வெண்பாக்க** முதலா யுள்ள
பிறபதிகள் பணிந்தணைவார் **பெருகு மன்பால்**
முன்னிறைந்த திருவாய்மஞ் சனநீ ராட்டும்
முதல்வேடர் கண்ணப்ப நாய னாரை
யுன்னியொளிர் காளத்தி மலைவ ணங்க
வுற்றபெரு வேட்கையுட னுவந்து சென்றார். 1013

அஞ்சு-ஆனைந்து; ***நாகம்***-நாகம் போன்ற தோற்றம்; ***ஈனும்*** - காட்டும்;—***(4) பொங்குதல் ஆடுதல்*** - இரண்டு தன்மைகளும் அரவு - புனல் இரண்டற்குமுரியன. ***புனல்***-கங்கை; ***புனல் ஆடுத***லாவது அசைந்திழிந்து ஓடுதல்; ஆடுதலுமாம். ***பைங்கான்*** - பசிய காம்பு. ***கான்*** - காடுமாம்;—***(5) சேடச் செல்வர்*** - ஞானிகள்; ***கானின்றதிர***-ஒரு காலால் நின்றாடுதலால் உலக மசைவுகொள்ள. ''கழலொலி யோசைச் சிலம்பொலிப்பக் காலுயர் வட்டணை யிட்டுநட்டம்'' (அம்மை. மூத்த. பதிகம் நட்டபாடை-7); ***மால்***- இறைவன்பால் வைத்த ஆசை மயக்கம்; ''பித்துப் பத்தரினத்தாய்ப் பரனுணர்வி னாலுணரும், மெய்த்தவர்'' (போதம்); ''மருளார் மனத்தோ ருன்மத்தன்'' (திருவா - பிரார்-3); ***மையல்*** - உலக மயக்கம்; இஃது ஆணவத்தாலாவது;—***(7) கண்ணினயலே கண் ஒன்று*** - நெற்றியில் உள்ள அனற்கண்;—***(9) நகுவாய்*** - விரிந்த வாயினையுடைய; இதழ் விரிந்த. ***ஓரார்*** - ஓராராகி; ஓர்ந்து. ***ஓவார்*** - ஒழியார். ***செகுவாய்*** - செகுத்தல்; இறந்துபடல்; இறத்தலால் வாய்த்த. ***பல்*** - ***உகு*** என்க;—***(10) தூய வெயில்*** - பொருள்களைத் தூய்மை செய்வது சூரியன் கதிர்கள் என்பது. ***வெய்ய*** - வெவ்வியன-கொடியன வாகிய-சொற்களை; அகரவீற்றுப் பலவறிசொல். இரண்டனுருபு தொக்கது. ***காவல்***-காவலுடைய மும்மதில்; ஆகுபெயர். ***பாவைக் குரவம்***-பாவை போன்ற உருவுடைய குராமலர்; ''குரவம்பாவை'' (பிள். தேவா - குற்றாலம் - குறிஞ்சி);—***(11) தேன்*** - வண்டு வகை.

தலவிசேடம்:— திருப்பாசூர் - III - தொகுதி : 1 - பக். 746 பார்க்க.

2911. (இ-ள்) மன்னு...வைகி-நிலைபெற்ற இசையுடைய திருப்பதிகத்தினைப் பாடித் துதித்து வணங்கிச் சென்று அந்தத் திருப்பதியில் தங்கியிருந்து; மாடு... பணிந்தணைவார் - பக்கத்தில் இறைவர் எழுந்தருளிய திருவெண்பாக்கம் முதலாகிய பிற பதிகளையும் பணிந்து சேர்வாராகி; பெருகும்...உன்னி - பெருகும் அன்பினால் முன்னே திருவாய் நிறைந்த நீரினாலே இறைவரைத் திருமஞ்சன நீராட்டும் முதல்வராகிய வேடர் கண்ணப்ப நாயனாரை நினைந்து; ஒளிர்...சென்றார் - விளங்கும் திருக்காளத்தி மலையை வணங்குதற்குப் பொருந்திய பெரிய விருப்பத்துடனே மகிழ்ந்து சென்றருளினார்.

(வி - ரை) அப்பதி-திருப்பாசூர். **மாடு...பிற பதிகள்-மாடு**-பக்கத்தில்.

வெண்பாக்கம் முதலாயுள்ள பதிகள் - இவை திருக்கள்ளில் முதலாயின என்பது கருதப்படும். பின்னர்ப் பிள்ளையார் திருக்காளத்தியினின்றும் மீண்டு எழுந்தருளித்

திருவேற்காட்டிற் சென்றருளுவதை ''முன்னணைந்த பதி பிறவும் கடந்து போற்றி'' (2927) என்பதும், திருக்கள்ளில் அவ்வழியிடையில் உள்ள தென்பதும் கருதுக.

வெண்பாக்கம்-இது திருவுளம்பூதூர் என வழங்குகிறது. திரு ''**உளோம் போகி புரம்**'' என்பது அப்பதியின் பெயராகக் கல்வெட்டுக்களிற் காணப்படுகின்றது. இப்பெயர் ஆளுடைய நம்பிகளுக்கு இங்கு இறைவர் ''ஊன்றுவதோர் கோலருளி **யுளோம் போகீர்** என்''றருளிய சரிதத்திற்குச் சான்றாக உள்ளதாகும்; இத்தலம் இப்பொழுது பூண்டி ஏரியின் உள் அகப்பட்டு நீரினுள் மூழ்கியுள்ளது. இங்கு இருந்த மூர்த்திகளை எடுத்து வேறிடத்தில் அமைத்து வைத்துள்ளார்கள். கோயில் நீரினுள்ளே கிடக்கின்றது! இப்பதிக்கு ஆளுடைய பிள்ளையார் பதிகம் கிடைத்திலது! ஆசிரியர் காலத்திலே அது கிடையாதொழிந்தமையால் இப்பதியைப் பற்றி ''வெண்பாக்க முதலாயுள்ள பிறபதிகள்'' என்றும், ''பணிந்தணை வார்'' என்றும் இலேசாகப் போக்கிற் சுட்டிச் செல்லும் கருத்துநயம் கண்டுகொள்க. முன்னரும் ''பல்பதியு நெடுங்கிரியும் படர்வனமும் சென்றடைவார்'' (1608) என்றது காண்க.

பெருகுமன்பால்...முதல் வேடர் - என்ற அளவும் திருக்கண்ணப்ப தேவருக்குச் சிறப்பு அடைமொழிகள்; **கண்ணப்ப நாயனார்** என்று திருப்பெயர் முழுதும் ஆரக் கூறியருளிய திறமும் காண்க; இவை பிள்ளையார் திருவுள்ளத்தில் எழுந்த கருத்தினைக் காட்டுவதாம். ''வாய்கலச மாகவழி பாடுசெயும்'' என்று எடுத்த பதிகப் பகுதியால் இக்கருத்தினைப் பிள்ளையார் முதன்மையாக உள்ளத்துக் கொண்டருளினர் என்பது விளங்கும்; **முதல் வேடர்** - ''வேடன்'' என்ற பதிகமும், ''**மஞ்சன நீராட்டும்**- வழிபாடு செயும்'' என்ற பகுதியும் விரிக்கப்பட்டன; **பெருகு மன்பால் - நீராட்டும்**-என்று கூட்டுக; இரட்டுற மொழிதலால், இதனைப் பிள்ளை யார்பாற் சார்த்திப், **பெருகுமன்பால்-உன்னி** என்றுரைக்கவும் நின்றது; **முன்**-முன்னுளில். **திருவாய் நிறைந்த**-என்க. **நிறைந்த**-என்பது பொன்முகலி நீரினுடன் ''புண்ணியக் கங்கை நீரிற் புனிதமாந் திருவாய் நீரும்'' கூடி நிறைந்த என்ற குறிப்புடன் நின்றது.

கண்ணப்ப நாயனுரை உன்னிக்-காளத்திமலை வணங்க - காளத்தி மலையினை வணங்க எழுந்த ஆசை இறைவரை வணங்குதற்கன்றிக் கண்ணப்ப நாயனுரை வணங்கவே முதற்கண் எழுந்தது. இறைவர் வணக்கம் அதனைப் பெறுவிக்கும் சாதன வகையால் மட்டும் அமைவதாம் என்பது பிள்ளையார் திருவுள்ளமாகக் கூறிய நுட்பமும் சிறந்த உண்மையும் கண்டுகொள்க. பின்னர்க் ''கும்பிட்ட பயன் காண்பார்போல் மெய்வேடர் பெருமானைக் கண்டு வீழ்ந்தார்'' (2920) என்று இக்கருத்தே விரிக்கப்படுதலும் கண்டுகொள்க.

முன்னிறைந்த...உன்னி - என்ற அளவும் விரித்தது ஈண்டுக் கண்ணப்ப நாயனுரை ஆசிரியர் தாமும் ஒருமுறை வணங்கிக்கொண்டு உலகரையும் அவ்வழிகாட்டி உய்விக்கும் கருணைக் கவிநயமாம். கண்ணப்ப நாயனாரை அரசுகள் புராணத்துள் துதிக்க நேர்ந்தபின் (1611) இதுவரை இடையீடு நீண்டமையான் வந்த ஆராமைக் குறிப்பும் காண்க.

உவந்து சென்றூர் - பிள்ளையார் செல்லும் அந்நிலத்து வழி அந்த அன்பு மீக்கூர்ந்து செல்வார்க்கன்றி உவப்புடன் செல்லலாகாதபடி கடுமையானது என்பது குறிப்பு. இதனை மேல்வரும் பாட்டில் ''**பெரு வன்புலக் கான்**'' என விரிப்பது காண்க.

2912. **மி**க்கபெருங் காதலுடன் றொண்டர் சூழ
மென்புனனாட் டினையகன்று வெற்புங் கானுந்
தொக்கபெரு வன்புலக்கா னடைந்து போகிச்
சூலகபா லக்கரத்துச் சுடரு மேனி
முக்கண்முதற் றலைவனிட மாகி யுள்ள
முகினெருங்கு **காரிகரை முன்னர்ச் சென்று**
புக்கிறைஞ்சிப் போற்றிசைத்தப் பதியில் வைகிப்
பூதியரோ டுடன்மகிழ்ந்தார் புகலி வேந்தர். 1014

2912. (இ-ள்) மிக்க பெரும்...அகன்று - மிகுந்த பெரிய விருப்பத்துடன் திருத்தொண்டர்கள் சூழ்ந்துவரச் சென்று மெல்லிதாய்ப் பாயும் நீர்வளமுடைய பாலியாற்றின் வடகரையில் உள்ள அந்நாட்டின் பகுதியை நீங்கி; வெற்புங் கானும் ...போகி - மலையும் கானமுமாகச் சேர்ந்து நெருங்கிய பெருகிய வலிய நிலம் பரந்த காட்டிடங்களை அடைந்து சென்று சூல கபாலக் கரத்து...சென்று - சூலமும் கபாலமும் கையிலேந்தி ஒளி விளங்கும் திருமேனியினையும் மூன்று கண்களையு முடைய முழு முதல்வராகிய இறைவரது இடமாகி முகில்சூழ்ந்துள்ள திருக்காரிகரையினை முன்னர்ச் சென்று; புக்கிறைஞ்சி...வேந்தர் - திருக்கோயிலுள்ளே புகுந்து இறைவரை வணங்கித் துதித்து அந்தப் பதியில் தங்கித் திருநீற்றுத் தொண்டர்களுடன்கூடி மகிழ்ந்திருந்தனர் சீகாழித் தலைவராகிய பிள்ளையார்.

(வி-ரை) காதலுடன்...வன்புலக் கான் அடைந்து போகி - வன்மை யுடைய புலமுள்ள வெற்பும் கானமுமாயுள்ள நிலத்திற் செல்வதற்குக் காதல் காரணமாயிற்று என்பது. "பிணையுங் கலையும்வன் பேய்த்தே ரினைப்பெரு நீர்நசை யால், அணையு முரம்பு நிரம்பிய வத்தமு மையமெய்யே, யிணையு மளவுமில் லாவிறையோனுறை தில்லைத்தண்பூம், பணையுந் தடமுமன் றேநின்னே டேகி னெம் பைந்தொடிக்கே" (திருக்கோ-202-ஆதரங்கூறல்) என்ற திருக்கோவையார்க் கருத்து ஈண்டு நினைவு கூர்தற்பாலது. **மென்புனல் நாட்டினை அகன்று வன்புலக் கானடைந்து** - என்று காட்டிய கருத்துமிது.

மென்புனல் நாட்டினை யகன்று - புனல் மெல்லியதாய் ஓடி வளஞ் செய்யும் நாட்டின் பகுதி. **நாடு**-இங்குத் தொண்டை நாட்டின் ஒரு பகுதி என்ற பொருளில் வந்தது. **மென்புனல்** - புனல் கடுவேகமாய் ஓடாது இடையறாது மென்மையுடன் ஊறிப் பாயும் என்றதாம்; இது பாலாறு நீர்வளஞ் செய்யுமியல்பு. நிலமேல் நீர் ஓட்டமில்லாது மேல் மணற்பரப்பு நிலத்தின்கீழ் ஊற்றம் ஓடித் தோண்டு கால்களின் வழி இடையறாது ஊற்றமிக்கு வளஞ் செய்யும் தன்மை. இதுபற்றி முன் (1099) உரைத்தவை ஈண்டு நினைவு கூர்தற்பாலன. தொண்டைநாடு குறிஞ்சி முதலிய ஐவகைத் திணைகட்குமுரிய நிலங்களும் உளதாதல் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்துள் விரிக்கப்பட்டது கண்டுகொள்க. இவ் வைவகை நிலங்களும் அந்நாட்டின் ஒவ்வோர் பகுதிகளாகி அவ்வத் திணைகளின் தனி நாடுகள் போல விளங்குதலின் இங்கு **மென்புனனாட்டினை** என்றது மருத நிலங்கொண்ட அந் நாட்டின் பகுதி என்க. இக்கருத்தறியாது **மென்புனனாடு** காவிரிநாடு என்றே கொண்டு, அஃதீண்டு கொள்ளுதற்கியைபின்மையால் **மென்புனனாட்டின் கன்று** என்று பாடங்கொண்டு காவிரிநாடு ஈன்ற பிள்ளையார் என உரை

கண்டனர் முன் உரைகாரர்; இப்பாட்டில் மேல் புகலிவேந்தர் என்ற எழுவாய் ஈற்றில் வருவதும் நோக்கிற்றிலர்.

வெற்புங் கானும் தொக்க பெரு வன்புலக் கான் - இது முல்லையுங் குறிஞ்சியும் கலந்து மயங்கிய பகுதி என்பது இங்கு நாட்டின் பகுதியின் அமைப்பை உற்று நோக்குவோர்க்கு இனிது விளங்கும். தனி வெற்புமல்லாது தனிக் கானுமல்லாது இரண்டும் கூடிய கடுங்கானற் பகுதியாகிய நிலத்தின்றன்மை இன்றும் காணப்பெறும்; மருத நிலத்தைக் கடந்து முல்லையுங் குறிஞ்சியு மயங்கிய நிலத்திற் புகுகின்றார் என்பது காண்க. உண்மைச் சரித இயல் கூறும் ஆசிரியரது கவி மாண்பு இங்குக் கண்டு களிக்கற் பாலது; **முகினெருங்கு காரிகரை** என்ற நாட்டுச் சிறப்பும் உடன் காண்க.

சூல கபாலக் கரத்து...காரிகரை - முன்னர்ச் ''செல்கதிமுன் னளிப்பவர்தந் திருக்காரிகரை''(1608) என்றதும், ஆண்டுரைத்தவையும் பார்க்க. **சூலம்**-''மருள் பொழிமும் மலஞ்சிதைக்கும் வடிச்சூலம்'' (சிறுத். புரா - 35); **கபாலம்** - பலிப் பாத்திரம்; இதனை ஏந்துதல் அடியவர்கள் ஆன்மபோதப் பலியை இட அதனைஏற்று அவர்களைத் தம்மடி பெற அருளுதல் குறித்தது; ''இரந்துண்டு தன்னடி யெட்டச் செய்தானே'' (திருமூலர் திருமந்திரம்) **''செல்கதிமுன் அளிப்பவர்''** என்று முன் கூறியதனை விரித்துக் காட்டியவாறு; ''பம்புசடைத் திருமுனிவர் கபாலக் கையர் பலவேடச் சைவர்'' (2916) எனக் கூறுதலால் அந்நாட்டின் பகுதியில் இத்தகைய வேடமுடையவர் பலர் தாந்தாங் கண்டவாறு வழிபட நின்ற இறைவர் என்று குறிக்கச் சூலமும் கபாலமும் கொண்ட இத்தன்மையாற் கூறிய குறிப்பும் காண்க. **சுடரும் மேனி**-''எரிபோன் மேனிப் பிரான்''; ''எரியலா லுருவமில்லை''; ''பொன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மேனி'' என்பவாகலின் **சுடரும் மேனி** என்றார். **சுடர்** - திசைவிளக்கும் ஞானச்சுடர்; ''இறைவன்றன் னொளியான ஞானசம் பந்தன்'' (தேவா), ''அண்டமெலாங் கொண்டதொரு ஞானமணி விளக்கு'' *(2550)*.

முக்கண் முதற் றலைவன்-சிறப்படையாளமாகிய மூன்று கண்ணுடைமை சிவ பெருமானது முழுமுதற்றன்மை குறிப்பது என்றபடி. ''முக்கண னென்பது முத்தி வேள்வியிற், றொக்க தென்னிடை யென்பதோர் கருத்தே'' (11-ம் திருமுறை- திருவொற் - ஒருபா -6) என்பது பட்டினத்து அடிகளார் திருவாக்கு. **முதற்றலைவன்** - முதலாகிய தலைவன்; அண்டத் தலைவர் என்போ ரெல்லாருக்கும் முதல்வன் என்றலுமாம்.

திருக்காரிகரை - தலவிசேடம் III - தொகுதி 1 - பக்கம் 751 பார்க்க

பூதியர் - திருநீற்றுத் தொண்டர் கூட்டம். **பூதி** - அனுபூதி; ''சிவானுபவம் சுவானுபூதிகமாம்'' என்ற சிவானந்தானுபவத்தில் எப்போதும் திளைக்கின்றவர்கள் என்றலுமாம். முன் கூறியவாறு பலதிறப்பட்ட அடியர் கூட்டமும் கொள்ள இவ்வாறு **பூதியர்** என்ற பொதுவிலக்கணத்தாற் கூறினர். **பூதியர்** என்றது பிள்ளையாருடன் வந்தார்களும் அப்பதியி லிருந்தார்களுமாகிய பலதிறத்து அடியவர்கள்; ''அறுவகை விளங்குஞ் சைவத் தளவிலா விரதஞ்சாரு, நெறிவழி நின்ற வேட நீடிய தவத்தினரும்'' (3101) பிள்ளையாரது திருமண எழுச்சியினுடன் கூடிச் சென்று திருப்பெருமணத்திற் பெருகிய சிவச் சோதியுட் கலந்தனர் (3150)

2913. இறைவர்திருக் காரிகரை யிறைஞ்சி யப்பா
லெண்ணில்பெரு வரைகளிரு மருங்கு மெங்கும்
நிறையருவி நிரைபலவாய் மணியும் பொன்னும்
நிறைதுவலை புடைசிதறி நிகழ்ப வாகி
அறைகழல்வா னவர்க்கிறைவன் குலிச வேற்று
லற்றசிறை பெற்றவன்மே லெழுவ தற்குச்
சிறகடித்துப் பறக்கமுயன் றுயர்ந்த போலுஞ்
சிலைநிலத்தி லெழுந்தருளிச் செல்லா நின்றார்; 1015

என்பதறியப்படும். இஃதும் கயிலைச் சார்பாதலின் அவரெல்லாம் குழுமிக் காண வுள்ளார் என்பதும் குறிப்பு. *1014*

2913. (இ-ள்) இறைவர்...அப்பால் - இறைவரது திருக்காரிகரையினை வணங்கி மேற்சென்று; எண்ணில் பெரு...நிகழ்பவாகி - அளவற்ற பெரிய மலைகள் இருபக்கங்களிலும் எங்கும் நீர் நிறைந்த அருவிகள் பல வரிசைகளாகிய மணிகளையும் பொன்னையும் நிறைந்த நீர்த்துளிகளைப் பக்கங்களில் சிதறி நிரம்ப நிகழ்வனவாகி; அறைகழல்... சிலை நிலத்தில் - சத்திக்கின்ற கழலையணிந்த தேவ அரசனாகிய இந்திரனது வச்சிரப் படை தாக்குதலினால் அறுபட்ட சிறகுகளைப் பெற்று அவன்மேலே போருக்கு எழுதற்காகச் சிறகுகளை அடித்துப் பறக்க முயன்று உயர்ந்தனபோலும் காட்சிதரும் மலை சூழ்ந்த நாட்டின் பகுதியிலே; எழுந்தருளிச் செல்லா நின்றார்-எழுந்தருளிச் செல்கின்றாராகி;

(வி-ரை) பெருவரைக ளிருமருங்கும்-பிள்ளையார் சென்ற வழி இருபுறமும் பெருமலைகளுக் கிடைப்பட்ட மலைக்கணவாய்ப் பாதை என்பது.

நிறை அருவி...நிகழ்பவாகி - நிறைந்து நீர்த்திவலை சிதறி ஓடும் அருவிகள் உள்ளன; அவை வரிசையாக வுள்ளன - அவ்வரிசைகளும் பல உள்ளன என்க; **வரைகளில் அருவி நிரை பல நிகழ்பவாகி** என்க. **நிறைபுடை சிதறி நிகழ்தலாவது** அருவிகள் மலையில் வீழும் வேகத்தால் துவலையாகச் சிதறி நுரைபோல் ஓடுதல்; இது நீர்வீழ்ச்சிகளில் காணப்படும் காட்சி.

வரைகள் இருமருங்கும் அருவி சிதறி-நிகழ்ப ஆகிப்-பறக்க முயன்று-உயர்ந்த போலும்-சிலை நிலம் என்று முடித்துக்கொள்க.

அறை கழல்...உயர்ந்த போலும்-முன்னொரு காலத்தில் இந்திரன் மலைகளை வச்சிரத்தாற் சிறகரிந்தான்; அதற்கு முன்பு அவை சிறகு பெற்றுப் பறக்கும் தன்மை வாய்ந்திருந்தன என்பது புராண வரலாறு; அவ்வாறு சிறகிழந்து வீழ்ந்து கிடந்த மலைகள் ஈண்டு இப்போது மீளச் சிறகுபெற்றுப் பழிதீர்க்கும் பொருட்டு இந்திரன்மேல் படை எழுவதற்காகப் பறக்க முயல்வனவாகி உயர்ந்தன போலக் காண்பன என்பது கருத்து; தற்குறிப்பேற்ற அணி; உயர்ந்த வரைகளின் இருமருங்கிலும் சிதறப் பெருகும் அருவிகளே சிறகாக உருவகம் செய்யப்பட்டன என்பது சிறகு விரித்து மேலுயர்ந்த நிலை பறக்க முயலும் நிலை காட்டிற்று. பறவைகள் பறக்க முயலும் தொடக்கம் இருபுறமும் சிறகு விரித்து அடித்து உடல் மட்டும் மேலுயர்ந்து முயலும் இயல்பும் காண்க. மிக உயர்ந்த நிலையில் தன்மையணி நயமும் கண்டுகொள்க.

2914. **மாதவர்க** ளெருங்குழாம் பரந்து செல்ல
மணிமுத்தின் பரிச்சின்னம் வரம்பின் ருகப்
பூதிநிறை கடலணைவ தென்னச் சண்பைப்
புரவலனு ரெழுந்தருளும் பொழுது சின்னத்
தீதிலொலி பலமுறையும் பொங்கி யெங்குந்
"திருஞான சம்பந்தன் வந்தா" னென்னும்
நாதநிறை செவியனவாய் மாக்க ளெல்லாம்
நலமருவு நினைவொன்ருய் மருங்கு நண்ண; 1016

குலிச ஏற்ருல். குலிசம்-வச்சிராயுதம்; இந்திரனது படை. **ஏறு**-தாக்குதல்; ஈண்டு அரிதல் என்ற பொருளில் வந்தது. **வானவர்க் கிறைவன்**-இந்திரன். **மேல் எழுதல்** - தாக்குதற்கு மேற்செல்லுதல்.

உயர்ந்த-உயர்ந்தன; **உயர்தல்** என்று பறவைகட்கும் மலைகளுக்கும் பொருந்தக் கூறிய சிலேடை நயமும் காண்க. இந்நிலப் பகுதியினை நேரிற் காண்பார்க்கு இவ்வணிநலம் இனிது விளங்கும். **சிலை நிலம்** - மலைப்பாங்கான நாட்டின் பகுதி.

மணி-பொன்-அருவிகளால் அடித்து வரப்படும் மலைபடு பண்டங்கள். **சிதறி**- வரைவின்றி உலகுக் குபகாரமாக ஈதல் என்றது குறிப்பு. ''கொள்ளிடம்பொன் செழுமணிக டிரைக்கரத்தால் முகந்துதர'' *(1041)*; ஈண்டு மலைவளங் கூறியபடியும் காண்க. ''கரிப்பரு மருப்பின் முத்துங் கழைவிளை செழுநீர் முத்தும், பொருப்பினின் மணியும் வேடர் பொழிதரு மழையே யன்றி'' *(663)*, ''மலைபடு மணியும் பொன்னும் *(679)* முதலியனவாகத் திருக்கண்ணப்ப தேவர் புராணத்தினுள் வருபவை இந்நாட்டின் பகுதியைப் பற்றியனவாதல் ஈண்டு நினைவு கூர்தற் பாலன. பொன் முகலியாறு என்ற பெயருங் காரணமும் காண்க.

அற்ற சிறை பெற்று- ஈண்டுத் திருக்காளத்தியை அடுத்துத் தவங் கிடந்தமை யாற் பெற்றனபோல் என்ற நயமும் காண்க. *1015*

2914. (இ-ள்) மாதவர்கள்...செல்ல - திருத்தொண்டர்கள் நெருங்கும் கூட்டம் பரவிச் செல்ல; மணிமுத்தின்...வரம்பின்ருக-அழகிய முத்துச் சின்னங்கள் இசைக்கும் ஓசை எல்லையில்லாமல் எழ; பூதிநிறை...பொழுது - திருநீறு நிறைந்த கடல் அணைவதுபோலச் சீகாழித் தலைவனுர் எழுந்தருளி வரும்போது; சின்னத் தீதிலொலி...செவியினவாய்-திருச் சின்னங்களின் குற்றமில் ஒலியானது பல முறையாலும் மேன்மேல் அதிகரித்து எங்கும் ''திருஞான சம்பந்தன் வந்தான்'' என்று எழும் நாதம் நிறைந்த காதுகளை உடையனவாயினமையால்; மாக்களெல்லாம்... நண்ண- ஐயறிவுடைய விலங்குச்சாதிக ளெல்லாம் (தம்மியல்பாகிய தீமையின்றி) நன்மை பொருந்தும் நினைவு ஒன்றனையே கொண்டு பக்கங்களில் வந்து பொருந்த;

(வி - ரை) மாதவர்கள் - ''பூதியர்'' என்றவிடத் துரைத்தவை பார்க்க. **தவம்** - சிவவேடம் - சிவபூசை சிவனினைவு முதலியனவேயாம்.

மணிமுத்தின் பரிச்சின்னம் - முத்துச் சின்னங்கள். **பரிச்சின்னம்** - இறைவர் - பெரியோர் - அரசர் முதலிய தலைவர்க்குரிய சின்னங்கள்; ஈண்டு அவற்றின் தொகுதியாகி யெழுந்த ஓசை குறித்தது.

பூதி நிறை கடல்-''திரண்ட பெருந் திருநீற்றுத் தொண்டர்குழா மிருதிறமுஞ் சேர்ந்த போதி, லிரண்டுநில வின்கடல்க ளொன்ருகி யணைந்தனபோல்'' *(1498)* என்ற கருத்துக் காண்க. இங்குத் திருநீற்றுக் கடல் என்ருர், பரப்பும் ஓசையும் பற்றி; நீற்ரெளி யானிறை தூய்மையாற், புரந்த வைந்தெழுத் தோசை பொலி தலாற், பரந்த வாயிரம் பாற்கடல் போன்றது'' *(138)* என்று இதன் உவமவுள் ளுறை முன்னர் விரிக்கப்பட்டது.

தீதில் ஒலி - பிள்ளையாரது திருநாம மந்திர முழக்கம் தீமையை யில்லையாகச் செய்யும் தன்மைபற்றித் தீதில் என்ருர். ''நாமமந் திரமுஞ் செல்ல, வானபோ தயர்வு தன்னை யகன்றிட'' *(2619)* என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

''திருஞான சம்பந்தன் வந்தான்'' என்று - இது சின்னங்கள் இயம்பும் மரபு. *2119-2120-2121-2551* முதலிய பாட்டுக்கள் பார்க்க.

''நாதநிறை செவியினவாய் - செவியினவாய் - செவியினவாதலின் என்று வினையெச்சம் காரணப் பொருளில் வந்தது.

மாக்கள் எல்லாம் - மாக்கள் - ''ஐயறிவினவே மாக்க ளென்ப'', ''மாவு மாக்களு மையறி வினவே'' (தொல் - பொ - மரபியல் - *32*); **எல்லாம்** - மயிலும் பாம்பும், மானும் புலியும், ஒன்றற்கொன்று பகைமையாயுள்ளனவும், மக்களைக் கொன்று தின்னும் புலி முதலியவையும் அடங்க **எல்லாம்** என்ருர்.

நலமருவு நினைவு ஒன்ருய்-பிள்ளையாரது திருநாம ஒலியாகிய நன்மை மலியும் நாதம் ஒன்றே, அவ்வாறு வேறுபடும் எல்லாவகை மாக்களுள்ளும் செவிமூலம் நிறைதலினுல், தம் இயல்பாயுள்ள பகைமை நீங்கி இந்த நலமே மிகுந்ததனுல் அந்நினைவு ஒன்றே கொண்டன. இவ்விளைவின் தத்துவம் பற்றி ஆனுய நாயனுர் புராணத்துள் விரிக்கப்பட்டது; கடைப்பிடிக்க. ''நலிவாரு மெலிவாரு முணர் வொன்ருய் நயத்தலினுல்'' *(959)* என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க. ஆண்டு அத்தன்மை விளைத்தது சிவனுமமாகிய திருவைந்தெழுத்து; ''உள்ளுறை யஞ் செழுத்தாக'' *(954)*; அதுபோல ஈண்டு விளைத்தது பிள்ளையாரது நாம மந்திரமே என்பதும் கருதுக.

1016

2915. (இ-ள்) கானவர்தம்...கானும்-வேடர் குலத்தை உலகம் போற்றும்படி அதனில்வந் தவதரித்த கண்ணப்ப நாயனுரது திருப்பாதங்களிலணிந்த செருப்புத் தோயும்படி பெரிய வரிவில் வேட்டையாடும் காடுகளும்; வானமறை...தூறும்- வானத்தை மறைக்கும்படி நீண்ட பெரிய மரச்சோலைகளும் தூறுகளும்; ஏனை...தானமும்-தேவர்களும் வணங்கித் துதிக்க வரும் பெருமையுடையனவாகிய அளவில்லாத ஏனைய தானங்களும்; மற்றவை கடந்து-அவற்றை யெல்லாம் கடந்து சென்று; திருக்காளத்தி...சண்பை வேந்தர் - திருக்காளத்தி மலையினை அணுகச் சீகாழித் தலைவராகிய பிள்ளையார் எழுந்தருளினுர்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டுரைக்க நின்றன.

2915. **கானவர்** தங் குலமுலகு போற்ற வந்த
கண்ணப்பர் திருப்பாதச் செருப்புத் தோய
மானவரிச் சிலை**வேட்டை யாடுங் கானும்,**
வானமறை நிலைபெரிய மரமுந் தூறும்,
ஏனையிமை யோர் தாமு மிறைஞ்சி யேத்தி
யெய்தவரும் பெருமையவா **மெண்ணி லாத**
தானமுமற் றவைகடந்து திருக்கா ளத்தி
சாரவெழுந் தருளினார் சண்பை வேந்தர். 1017

(வி-ரை) கானவர்தம் குலமுலகு போற்ற - "கானவர் **குலம் விளங்க**" *(662);* "வேடன்" என்று பிள்ளையார் திருவாக்கினுற் பதிகத்துள்ளும், "வேடனார்" என்று திருவாசகத்துள்ளும், பிறுண்டும் பெரியோர் போற்றும் பெருமை காண்க. **உலகு** - உயர்ந்தோர்.

திருப்பாதச் செருப்பு - "செருப்புற்ற சீரடி" *(தோணோ-3)* என்று திருவாசகத்திற் போற்றும் அருமைப்பாடு தோன்றக் கூறியபடி.

மான வரிச்சிலை வேட்டை. மானம் - பெருமை; **வரி** - வரிந்து நரம்பு முதலியன கட்டிய; **சிலை** - வில். இதுபற்றி முன் "தேனலர் கொன்றை யார்தந் திருச் சிலை" *(681)* என்று கூறிய கருத்துக்கள் இங்கு நினைவு கூர்தற்பாலன. **சிலை வேட்டையாடும் கான்** - கண்ணப்ப நாயனார் புராணம் *717 - 740 — 791 - 792 - 810* முதலியவை பார்க்க.

வானமறை நிலைபெரிய மரமும் தூறும் - "பெரிய தேக்கி னப்புறம் சென்று னீண்ட குன்று" *(743);* "நெருங்குபைந் தருக்குலங்க ணீடுகாடு" *(722).* **மரமும்** - மரமடர்ந்த இடங்களும்; **தூறும்** - தூறுகளுள்ள இடங்களும்.

இமையோர்......பெருமையவாம் எண்ணிலாத தானம்-இவை தேவர்களும் வந்து போற்றும் சிவத்தானங்களும், முனிவர் - ஞானிகளின் ஆச்சிரமங்களுமாம்; *1088-1090*-ம் பிறவும் பார்க்க. **ஏனை தானமும்** - என்று கூட்டுக. **சார** - அருகாக.

வான் மறைய—என்பதும் பாடம். *1017*

2916. (இ-ள்) *அம்பொன்மலைக் கொடி...என்று-அழகிய பொன்மலையரசன் மகளாராகிய கொடி போன்ற உமையம்மையாரது திருமுலைப்பாலில் குழைத்த ஞான அமுதத்தினை உண்டருளிய பிள்ளையார் வந்தணைகின்றார் என்று எண்ணி; செம்பொன்மலை...ஈண்டி - செம்பொன் மலையாகிய மேருமலையினை வில்லாகவுடைய இறைவரது திருக்காளத்தியிற் சேர்ந்த திருத்தொண்டர் கூட்டம் நெருங்க அடைந்து; பம்புசடை...உடன் விரும்பி - நெருங்கிய சடையினையுடைய திரு முனிவர்களும், கபால மேந்தும் காபாலியராகிய சைவர்களும், மற்றும் இவ்வாறு மாவிரதம் முதலிய பலபல வேடங்களையுடைய சைவர்களும், வேடர் குலத்தவர்களும், மற்றும் மேலாகிய தவம் புரிவோர்களும் அந்தப் பதியில் உள்ளவர்களுடன் கூடி மகிழ்ந்து; எதிர்கொள்ள உழைச் சென்றுற்றார் - எதிர்கொள்ளப் பக்கத்தில் சென்று சேர்ந்தனர்.*

2916. "அம்பொன்மலைக் கொடிமுலைப்பால் குழைத்த ஞானத்
தமுதுண்ட பிள்ளையா ரணைந்தா" ரென்று
செம்பொன்மலை வில்லியார் திருக்கா ளத்தி
சேர்ந்ததிருத் தொண்டர்குழா மடைய வீண்டிப்
பம்புசடைத் திருமுனிவர் கபாலக் கையர்
பலவேடச் சைவர்குல வேடர் மற்றும்
உம்பர்தவம் புரிவாரப் பதியி லுள்ளோ
ருடன்விரும்பி யெதிர்கொள்ள வுழைச்சென் றுற்றார். 1018

(வி-ரை) பொன்மலைக் கொடி - பார்வதியம்மையார். **பொன்மலை**-இமய மலை அரசன்; **கொடி** - கொடிபோன்ற பெண்; அரசன் மகள். **பொன்மலை** - ஈண்டு இமயமலை. "பொன்மலைப் புலிவென் றோங்க" (552) என்றது காண்க.

"அம்பொன்மலை......அணைந்தார்" என்று - அணைந்தனர் என்று உட்கொண்டு; என்று எதிர்கொள்ள வுற்றார் - என்க; பிள்ளையார் அணைந்த பெருமைக் கேற்ப எதிர்கொள்ளு முறைமையில் உற்றனர்.

திருக்காளத்தி சேர்ந்த திருத்தொண்டர் கூட்டம்-திருமுனிவர்-கபாலக் கையர்-சைவர் குலவேடர் - தவம்புரிவோர் - இவர்கள் திருக்காளத்தியில் தவநெறி சார்ந்த பல சார்விலுமுள்ள சைவப் பகுதியினரும் பிறரும். **அப்பதியி லுள்ளோர்** - தொண்டர் கூட்டத்துச் சேராத நகர மாந்தர். **குலவேடர்** - வேடர் குலத்தவர்; கண்ணப்ப நாயனாரின் மரபு உடையவர்கள் அத்தொடர்புபற்றி அங்கு வந்து சேர்ந்தோர்.

குல வேடர் - வேடர் குலத்தோர்; இவ்வாறன்றிக் குலமரபு பற்றியே சைவ வேடங்களைத் தாங்கியவர்கள் என்றலுமாம்; இது மகர குண்டலம் முதலியவை ஆதி சைவருட் டீக்கையுடையோர்க் காகுதல்போல வருவன என்றலுமாம்.

உம்பர் தவம் புரிவார் - உம்பர் - மேலாகிய; மேலாகிய தவமாவது சிவபூஜை முதலாகிய சைவத் தவம். **உம்பர்** - மேன்மையான; **உம்பர்** - தேவர்கள் என்று கொண்டு, தேவர்களாவர் இங்கு வந்து மனிதர்களாய்த் தவம் புரிவோர் என்றுரைத் தலுமாம். "இமையவ ரரம்பையர் பிறந்து, மாறில் வேடரு மாதரு மாகவே வணங்கும்" (1090) என்றது காண்க.

தொண்டர் குழாம், ஈண்டி, முனிவர் முதலியோருடன் விரும்பி - என்று கூட்டுக.

உழைச் சென்று - மலையடியின் புறத்துப் பிள்ளையார் வரும் இடத்தின் பக்கத்திற் போய்.
1018

2917. (இ-ள்)திசையனைத்தும்...போது-எல்லாத் திசைகளிலும் திருநீற்றினொளி பரவ இவ்வுலகிலே சிவலோகம் அணைந்ததென்று சொல்லும்படி சென்றபொழுது; மிசை விளங்கும்...வணங்கி-மேலே விளங்குகின்ற அழகிய முத்துச் சிவிகையினின்றும் இறங்கி வேதபாரகராகிய பிள்ளையார் வணங்கி; மிக்க...நிறைப்ப - (எதிர் கொண்ட) மிகுந்த அசைவில்லாத பெரிய திருத்தொண்டர் கூட்டம் தொழுது துதித்து "அர! அர!"என்ற பேரொலியினால் அண்ட முழுதும் நிறையச் செய்ய; அன்பால்...கேட்டார் - புகழினால் எங்கும்

2917. **திசையனைத்து நீற்றிஞெளி தழைப்ப மண்மேற்**
சிவலோக மணைந்ததெனச் சென்ற போது
மிசைவிளங்கு மணிமுத்தின் சிவிகை நின்றும்
வேதபா ரகரிழிந்து வணங்கி மிக்க
அசைவில்பெருந் தொண்டர்குழாந் தொழுது போற்றி
''அர''வெனுமோ சையினண்ட நிறைப்ப வன்பால்
இசைவிளங்குந் தமிழ்விரகர் **''திருக்கா ளத்தித்**
திருமலையிம் மலைகளில்யா'' தென்று கேட்டார். 1019

விளங்கும் தமிழ் விரகராகிய அப்பிள்ளையார் அவர்களை நோக்கித் ''திருக்காளத்தித் திருமலை இங்குத் தோன்றும் மலைகளுள்ளே யாது? என்று அன்பினுல் வினவியருளினர்.

(வி-ரை) தழைப்ப-தழைத்ததனுல்; தழைப்பச் சிவலோக மணைந்ததென என்க. சிவலோகமெனக் காண்பதற்குக் காரணங் காட்டியவாறு; திருநீற்றுத் தொண்டர் குழாம் பல வேடச் சைவருடன் கூடிச்சென்ற நிலை மண்மேற் சிவலோகம் அணைந்ததுபோன்ற காட்சியளித்தது. **மண்மேல்** - நிலவுலகத்தில். தத்துவங் கடந்த நிலையில் உள்ள சிவலோகம் தத்துவங்களுள் அடியில் நின்ற மண்ணின் மேலே என்றபடி.

மிசை விளங்கும் - சிவிகை - என்க; அத் திருக்கூட்டத்தின் மேல் நிலத்தில் விளங்குகின்ற சிவிகை.

வேதபாரக ரிழிந்து - பாரகர்-வேதங்களின் கரையை அடைந்தவர். **பாரம்** - கரை; **பாரகர்** - அதனை அடைந்தவர்.

அசைவில் - அசைதல் - தொண்டு நெறியினின்றும் பிறழ்தல்; அஞ்சுதல்.

ஓசையின் அண்ட நிறைத்தலாவது - ஓசை அண்டமெங்கும் பரவச் செய்தல். ஒருபுறம் எழுந்த ஓசையானது ஒலியலைகளின் மூலம் வானிற் பரவி உலகெங்கும் கேட்கத்தக்க நிலையையுடையதாகின்றதென்பது இப்போது பரந்து நிலவி வழங்கும் **''வானொலி''** (wireless-radio) யமைப்பினுல் நன்குணரக்கிடக்கின்ற உண்மை. அண்டங்களில் அரனெறி பயிலாதாரும் கேட்க நிறைத்தலான் ஒலி என்னுது **ஓசை** என்றூர். அரனெறி வாராத மாக்கள் அரவொலியினை வெற்று ஓசை என்ற நிலையிலே உணர்குவாராதல் குறிப்பு. பல ஒலிகள் செறிதலின் பொருள் மயங்க ஓசைத்தன்மையாய தென்பதுமாம்.

இசை விளங்கும் - இசை - புகழ்; **இசை** - பண்ணிசை என்று கொண்டு இசை யாவும் தமது வாக்கில் விளங்கவுள்ள என்றலுமாம்.

தமிழ் விரகர் - வேதபாரகர்; தமிழ்விரகர் இழிந்து, தொண்டர் குழாம் நிறைப்பக் - கேட்டார் என்று முடிக்க. **இத்திருமலைகளில் திருக்காளத்தி மலை யாது**- என்க.

இத்திருமலைகளில் - இங்கே எதிரில் தொடர்ச்சியாகத் தோன்றும் பல சிகரங்களையுடைய பல மலைகளுள்ளே. **இத்திருமலை**-இகரமாகிய அணிமைச்சுட்டு அவர் திருக்காளத்தியினருகில் அணைந்து நின்றனர் என்பதுணர்த்திற்று. மேல் ''தோன்றும் இந்தமலை'' (2918) என்பது காண்க.

2918. **வந்த**ணைந்த மாதவத்தோர் வணங்கித் தாழ்ந்து,
"மறைவாழ்வே! சைவசிகா மணியே! **தோன்றும்**
இந்தமலை காளனோ டத்தி தம்மி
லிகலிவழி பாடுசெய விறைவர் மேவும்
அந்தமில்சீர்க் காளத்தி மலையா" மென்ன,
வவனிமேற் பணிந்தெழுந்தஞ் சலிமேற் கொண்டு,
சிந்தைகளி மகிழ்ச்சிவரத் **திருவி ராகம்**
"வானவர்க டானவ"ரென் றெடுத்துச் செல்வார். 1020

இவ்வாறே முன்னர் மதுரை தோன்றுதலும் பிள்ளையார் "திருவால வாய்மற் றெம்மருங்கின" தென வினவி யருளியதும் (2559) நினைவுகூர்க.

வேதபாலகர்—என்று பாடங் கொள்வாருமுண்டு. *1019*

2918. (இ-ள்) வந்தணைந்த...தாழ்த்து - எதிர்கொண்டு வந்து அணைந்தவர்களாகிய திருத்தொண்டர்கள் பிள்ளையாரை வணங்கித் தாழ்ந்து நின்று; மறை வாழ்வே!...என்ன - வேதங்களின் வாழ்வாகியவரே! சைவத் தலைவர்களுட் சிறந்தவரே! எதிரே தோன்றுகின்ற இந்தத் திருமலைதான் முன்னை நாளில் காளன் என்னும் பாம்பும் யானையும் தம்முள் மாறுகொண்டு தம்மைப் பூசை செய்யும்படி இறைவனார் எழுந்தருளியுள்ள கெடுதலில்லாத சிறப்பினையுடைய திருக்காளத்தி மலையாகும் என்று சொல்ல; அவனிமேல்...மகிழ்ச்சி வர - நிலத்தின்மேலே வீழ்ந்து வணங்கிஎழுந்து கைகளைச் சிரமேற் குவித்து மனத்துள் மிகுந்த மகிழ்ச்சி வருதலாலே; திருவிராகம்...செல்வார் - "வானவர்கள் தானவர்கள்" என்று தொடங்கும் திருப்பதிகத்தைத் திருவிராக அமைப்பினில் பாடியபடி மேற்செல்வாராகி;

(வி-ரை) வந்தணைந்த மாதவத்தோர் - வந்து - எதிர்கொள்ள வந்து; **மாதவத்தோர்** - திருத்தொண்டர்கள்.

மறைவாழ்வே! சைவ சிகாமணியே!-வேதநெறி தழைத்தோங்கவும் சைவ நெறி விளங்கவும் அவதரித்து அவ்விருநிலைகளையும் முற்ற நிலையிட்டருளினாராதலின் இவ்வாறு போற்றி விடைகூறத் தொடங்கினர் - பெரியார்களிடம் விடை கூறுமுன் இவ்வாறு பெருமைபட விளித்துப் பின் கூறுதல் மரபு.

காளனோடு...வழிபாடு செய - காளன் - காளம் - பாம்பு. பாம்பும் யானையும் தம்முள் இகலிப் பூசை செய்த வரலாறு தலபுராணத்துட் காண்க; **இகலுதல்** - ஒன்றோடொன்று போரிட்டு மேற்செல்லுதல்; தலவிசேடம் (II- பக். 436) பார்க்க. **காளனோ டத்தி தம்மில் இகலி வழிபட்ட செயலை உவந்தேற்று இறைவர் எழுந்தருளியிருக்கும் நிலை சிவகோசரியாரும் கண்ணப்ப நாயனாரும் இகலி வழிபட்ட சரிதக் குறிப்புத் தருவது காண்க.** இனம்பற்றி சீ என்ற சிலந்தி வழிபட்ட சரிதமும் உடன் கொள்க.

அவனிமேற் பணிந்தெழுந்து அஞ்சலி மேற்கொண்டு சிந்தைகளி மகிழ்ச்சி வர-சிவன் றிருமலையினைக் கண்டவுடனே வீழ்ந்து வணங்குதல் பெரியோர் மரபு.

2919. திருந்தியவின் **னிசை வகுப்புத் திருக்கண் ணப்பர்**
திருத்தொண்டு சிறப்பித்துத் திகழப் பாடிப்
பொருந்துபெருந் தவர்கூட்டம் போற்ற வந்து
பொன்முகலிக் கரையணைந்து தொழுது போகி,
யருந்தவர்க ளெம்மருங்கு மிடைந்து செல்ல
வாளுடைய பிள்ளையா ரயன்**மா றேடும்**
மருந்துவெளி யேயிருந்த திருக்கா ளத்தி
மலையடிவா ரஞ்சார வந்து தாழ்ந்தார். 1021

களி மகிழ்ச்சி - பெருமகிழ்ச்சி; ஒருபொருட் பன்மொழி மிகுதி குறித்தது. **வர**- வருதலால். திருவிராகத்திற் பதிகம் எடுத்ததற்குக் காரணங் கூறியபடி; வினையெச்சம் காரணப் பொருளில் வந்தது.

திருவிராகம்-முடுகிய சந்தத்துடன் வருவது திருவிராகம் என்ப. ''நடையின் முடுகு மிராகம்'' (2175); சந்தம் மகிழ்ச்சிக்குறி காட்டுதல் குறிப்பு. இது தாள அமைப்பு; பண் அமைதி மேல் வரும்பாட்டிற் கூறுவார்.

செல்வார் - பாடி - வந்து - போகி வந்து-என மேல் வரும்பாட்டுடன் கூட்டி முடிக்க. **செல்வார்** - செல்வாராகி; முற்றெச்சம்.

வானவர்கள் தானவர்கள் - இது பதிகத் தொடக்கம்.

திருவிராகம் - எடுத்து - திருவிராகத் தாள அமைப்பில் தொடங்கினர் என்க. **எடுத்துச் செல்வார்** - இப்பதிகத்தால் மலையினைத் துதித்துக்கொண்டபடியே பிள்ளையார் அதனை நோக்கி நடந்தருளிய நிலை குறித்தது. *1020*

2919. (இ-ள்)திருந்திய...பாடி - திருந்திய இனிய பண்ணமைதியின் வகுப்பினுலே திருக்கண்ணப்ப தேவரது திருத்தொண்டினைச் சிறப்பித்து விளங்கும்படி பாடியருளி; பொருந்தும்...போகி - பொருந்திய பெரிய திருத்தொண்டர் கூட்டம் சூழ்ந்து துதிக்க எழுந்தருளி வந்து பொன்முகலியாற்றின் கரையினை அணைந்து தொழுது போய்; அருந்தவர்கள்...செல்ல - அருந்தவர்களாகிய திருத்தொண்டர்கள் எல்லாப் பக்கமும் நெருங்கிச் செல்ல; ஆளுடைய பிள்ளையார்..தாழ்ந்தார் - ஆளுடைய பிள்ளையார் பிரம விட்டுணுக்கள் தேடிக் காணமுடியாத மருந்தாகிய இறைவர் வெளிப்பட எழுந்தருளியிருந்த திருக்காளத்தி மலையின் அடிவாரத்தினை அணுக வந்து நிலமுறத் தாழ்ந்து வணங்கினர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) திருந்திய இன்னிசை வகுப்பு - முன் பாட்டில் தாள அமைப்புக் கூறி, இப்பாட்டினுல் பண்ணமைப்புப்பற்றிக் கூறியவாறு. **இன்னிசை**-இங்குச் சாதாரிப் பண்ணினையும், **வகுப்பு** - அதன் கட்டளைபேதத்தினையும் குறிப்பன.

திருக்கண்ணப்பர்......பாடி - பதிகம் ''வேயனைய'' என்ற நான்காவது திருப்பாட்டினுள், ''வாய் கலசமாக...ஈசனடி கூடுகா ளத்திமலையே'' என்ற பின்னிரண்டடிகளிற் காணும் பகுதி.

திருக்கண்ணப்பர் திருத்தொண்டு - **திரு**- என்ற அடை மொழிகள் கண்ணப்ப நாயனாரது அளவிடற்கரிய பெருமையினையும், **சிறப்பித்து- திகழ**-என்பவை பிள்ளையார் அதனை எடுத்துக்காட்டியருளிய பதிகத்தின் பெருமையினையும் விளக்கின.

திருக்கண்ணப்பர்-''திருக்கண்ணப்பன் செய்தவத் திறத்து'' என்று தொடங்கிச் ''சிவகதி பெற்றனன் றிருக்கண் ணப்பனே'' என்று முடித்துக்காட்டிய நக்கீரரது திருக்கண்ணப்பதேவர் திருமறம் என்ற 11-ம் திருமுறைத் திருநூலினை நினைவுபடுத்திக் காட்டியவாறு. சங்க காலத்தவராகிய நக்கீரருக்குப்பின், முதலாகத் திருக்கண்ணப்ப தேவரது திருத்தொண்டினை எடுத்துப் போற்றிக் காட்டியருளியது பிள்ளையாரது இத்திருவாக்கு என்ற தொடர்பு காட்டுதற்கு இவ்வாற்றாற் கூறியது போலும்; (திருமறம் அருளிய கல்லாடனார் சங்க காலத்தவரோ என்பது ஐயப்பாடு); திருமுருகாற்றுப்படை முதலியனவெல்லாம் சங்கப் புலவராகிய நக்கீரர் வாக்கல்ல என்று ஆராய்ச்சி செய்யும் நவீனப் புலவருமுண்டு. அவருரைப்பனவெல்லாம் தொன்றுதொட்டு வந்த பெரும்புலவ ருரைக்கு மாறுபட்டவை என்றொழிதுக்குக.

திருத்தொண்டு - வாய் கலசமாக வழிபாடுசெயும் என்ற பகுதி **தொண்டு** எனவும், அதன்வழி ''மலராகு நயனம் காய்கணையி னாலிடந் தீசனடி கூடுதல்'' என்ற பகுதி அதனுள்ளே தலைசிறந்த **திருத்**தொண்டு எனவும் குறிப்பித்தவாறு. **சிறப்பித்து-திகழ**-என்றவையும் இக்கருத்து. **திகழ**-நாயனாரது சரித சாரம் இஃது என விளங்க.

பெருந்தவர் கூட்டம் - அருந்தவர்கள்-பிள்ளையாருடன் வந்தோர்களும், முன் (2916) கூறியபடி எதிர்கொள்ள வந்து கூடிய பலதிறத்தினரும் ஆகிய திருத் தொண்டர்கள்.

தேடு மருந்து வெளியே இருந்த - மலை-சிறந்த மருந்துப் பண்டங்கள் மலையில் உள்ளன என்பர். அவற்றுள் சிறந்தவை தேடியலையாமல் வெளியே எளிதில் கிடைப்பது அரிது. ஆனால் இங்கு அவ்வாறு அரிய மருந்து வெளியே இருந்தது என்றபடி. **மருந்து** - தீராதநோயாகிய பிறவிப்பிணி தீர்க்கு மருந்தாகிய இறைவர். ''மருந்தாய்ப் பிணிதீர்க்கு மாறு கண்டேன்'', ''மருந்து மாவன'', ''மருந்தவை'' ''மருந்து வேண்டில் லிவை'', ''மந்திரமுந் தந்திரமு மருந்து மாகி'' (தேவா) முதலிய திருவாக்குக்கள் காண்க. மருந்து போல்வாரை மருந்தென்றார்; வெளியே எளிதிற் காண இருந்தும் உரியவாறு கண்டுகொள்ள மாட்டாத அறியாமையுடையார் அயனும் மாலும் என்பார் **தேடும்** என்றார்; இலிங்க புராணத் திருக்குறுந்தொகைத் திருப்பதிகம் பார்க்க; **வெளியே** - ஞான அறிவாகிய வெளியிலே எளிதிற் காண.

மருந்து வெளியே இருந்த - மருந்தாகிய இறைவரது கண்ணில் கண்ட புண்ணுக்கு மலையில் மருந்து தேடிப் பிழிந்த மலை என்றும், அதற்குரிய கைகண்ட மருந்தாகிய தமது கண் தம்மிடத்து இலகுவிற் காண இருந்தும் முன்னர் அஃதறியாது மலையிற் பல மருந்து தேடிப் பின் கண்ட மலை என்றும் நாயனாரது சரிதக் குறிப்புக்கள் பட நிற்றலும் காண்க. **வெளியே** - மலையில் வெளிப்பட்டு முளைத்தெழுந்து என்ற பொருளும் காண்க.

அடிவாரம் சார - அடிவாரம் - மலையின் அடி. **வாரம்** - அன்பு என்றுகொண்டு மலையின் அடியினைத் தமது மீக்கூர்ந்த அன்பு முன்னே சாரத் தாம் பின்பு வந்து என்ற குறிப்புப்பட நிற்பதும் காண்க. ''நாணனு மன்பு முன்பு நளிர்வரை யேறத் தாமும்...ஏறி'' (752).

2920. **தாழ்ந்தெழுந்து திருமலையைத் தொழுது கொண்டே**
தடஞ்சிலா தலசோபா னத்தா லேறி
வாழ்ந்திமையோர் குழாநெருங்கு மணிநீள் வாயின்
மருங்கிறைஞ்சி யுள்புகுந்து வளர்பொற் கோயில்
சூழ்ந்துவலங் கொண்டிறைவர் **திருமுன் பெய்தித்**
தொழுதுதலை மேற்கொண்ட செங்கை போற்றி
வீழ்ந்தெழுவார் **கும்பிட்ட பயன்காண் பார்போல்**
மெய்வேடர் பெருமானைக் கண்டு வீழ்ந்தார். 1022

தாழ்ந்தார் - மலையினடியில் நிலம் பொருந்த வீழ்ந்து வணங்கினுர்; மலையினைக் கண்டபோதே அவனிமேற் பணிதலும் (2918), அடிவாரத்தில் வீழ்ந்து வணங்குதலும், மேலே திருமலையைத் தொழுதுகொண்டே செல்லுதலும் (2920) ஆகிய இவை கைலாயமே யாகிய அம்மலையினையும், அதனில் வெளிப்பட்ட இறைவரையும் அவரை உள்ளே நிலைபெறக் கொண்டு நிற்கும் நாயனுரையும் வழிபடும் முறையையும் மரபையும் குறித்தன. **தாழ்தல்** - விரும்புதலுமாம்; விரைந்த விருப்பத்துடன் வணங்கினுர் என்க. *1021*

2920. (இ-ள்) தாழ்ந்தெழுந்து...ஏறி - வணங்கி மேல் எழுந்து காளத்தித் திருமலையினைத் தொழுதுகொண்டபடியே பெரிய மலைப்படிகளின் வழியே ஏறிச்சென்று; வாழ்ந்து...உள்புகுந்து - வாழ்வடைந்து வானவர்களின் கூட்டம் நெருங்கியுள்ள மணிகளையுடைய நீண்ட திருவாயிலின் பக்கத்தே முன்பு வணங்கித் திருக்கோயிலினுள்ளே புகுந்து; வளர் பொற்கோயில் சூழ்ந்து வலங்கொண்டு - அதனைச் சுற்றி வலமாகச் சூழ்ந்து வந்து; இறைவர் திருமுன்பெய்தி... வீழ்ந்தெழுவார் - இறைவரது திருமுன்னர்ச் சார்ந்து தொழுது தலையின்மேலே கூப்பிய சிவந்த திருக்கைகளுடனே துதித்து நிலமுற விழுந்து வணங்கி எழுவாராகி; கும்பிட்ட பயன்...வீழ்ந்தார் - அவ்வாறு இறைவரைக் கும்பிட்டதனுலாகிய பயனே இஃது எனக் காண்பவர்போல மெய்ம்மையாகிய வேடர்பெருமானும் திருக்கண்ணப்ப நாயனுரைக் கண்டு அவருடைய திருவடிகளில் வீழ்ந்தருளினுர்.

(வி-ரை) தாழ்ந்தெழுந்து.....வீழ்ந்தெழுவார் - இது திருமலையை ஏறி இறைவரை வணங்கும் நிலையினைக் கூறியவகையால் வழிபாட்டு முறையினையும் உணர்த்தி நின்றது.

தாழ்ந்தெழுந்து - எழுந்து என்றதனுல் நிலமுற வீழ்ந்தமை குறிக்கப்பட்டது.

திருமலையை - திருமலை என அடைமொழியின்றிக் கூறியது இது திருக்கயிலை என்று குறிப்பிப்பது; ''திருமலைச் சருக்கம்.''

தொழுதுகொண்டே- ஏறி - ''காளத்தி கண்டுகொண்டு'' (749) என்றது காண்க. தொழுதபடியே ஏறுதலாவது மலையினில் இறைவரை நினைந்தபடியே ஏறிச் செல்லுதல். அம்மையார் கயிலைத் திருமலையின்மேலே தலையினுல் நடந்தேறிய வரலாறு இங்கு நினைவுகூர்தற்பாலது. மரபு காட்டி உலகரை வழிப்படுத்தும் நிலையில் பிள்ளையார் ஏறிச் சென்றருளினர்.

சிலாதல சோபானம் - மலையினை ஏறும் படிகளின் வழி. இதனை முன்னர்ப் ''பேணுதத் துவங்க ளென்னும் பெருகுசோ பானம்'' (752) என்றது காண்க. **சோபானம்** - படிவழி.

வாழ்ந்திமையோர் குழாம் நெருங்கு மணிநீள்வாயில் - இறைவரது திருமலையில் கோயில் வாயிலிற் காத்துக் கிடத்தலால் இமையோர் வாழ்ந்தனர் என்றது இமையவர்கள் பலரும் தத்தம் பதங்களையும் அமரலோக போகங்களையும் வேண்டிப் புண்ணிய வேள்விகளைச் செய்து அவ்வப் பதங்களை அனுபவிப்புழி நேர்ந்த துன்பங்களை நீக்கக் கயிலையை யடைந்து இறைவரது முன்கடைத் திருவாயில் காத்துப் பன்னாள் வரங்கிடந்து அவ்விடையூறுகள் நீங்கப்பெற்றனர் என்பது கந்தபுராண முதலிய மாபுராணங்களால் அறியக்கிடக்கும் உண்மை. ''வாய்தல் பற்றித் துன்றிநின்றார் **தொல்லை** வானவ ரீட்டம்'' (திருவிருத்) முதலிய மறைத் திருவாக்குக்கள் காண்க. **வாழ்ந்து - நெருங்கு - வாயில்** - நல்வாழ்விழந்த தத்தமது உலகங்களினின்றும் வந்து இங்கு நெருங்கி வாழ்வினைப் பெற்று என்பதாம்; **நெருங்கு - வாயில்** - நந்திபெருமான் உத்தரவின்றி உட்செல்ல மாட்டாதவராகி வாயிலின் நெருங்கினர் என்பதும் குறிப்பு. இவர்கள் புறத்தே நிற்பத் தொண்டர்கள் எப்போதும் வணங்கவும், தொண்டு செய்யவும், உட்புகும் உரிமையுடையோர் என்பது **உள்புகுந்து** என்பதனாற் பெறப்படும். ''தொண்டர்கள்பின் னும்பர்குழா மல்குதிருக் காளத்தி மாமலை''(1608) என முன்னரும் இக்குறிப்புப்படக் கூறியது காண்க.

வளர்பொற் கோயில் - திருமாளிகை என்பர்; **சூழ்ந்து**-கோயிலின் திருமதிலின் உள்ளே வலமாக மாளிகையைச் சுற்றி.

வீழ்ந்தெழுவார்–வீழ்ந்தார் - இறைவரது திருமுன் வணங்கி எழும் வழிபாடு கண்ணப்பர் திருமுன்பு முற்றுப்பெற்றது என்பது குறிக்கத், திருமுன்பு **வீழ்ந்தெழுவாராகி** என முற்றெச்சமாக வைத்து, அவ்வினையெச்சம் வேடர்பெருமான் முன்பு **வீழ்ந்தார்** என்ற வினைமுற்றுப் பெற வைத்தோதினார். இறைவரது வழிபாடு அடியார் வணக்கத்தை யின்றியமையாது உடன்கொண்டு முற்றுப்பெறற்பால தென்பதாம். பிள்ளையாரது திருமயிலைத் திருப்பதிகத்துள் இவ்வுண்மை விளக்கப்படும்; கண்டுகொள்க. இது சிவஞான போதப் பன்னிரண்டாஞ் சூத்திரத்தில் விளக்கிய உண்மையுமாம்.

கும்பிட்ட பயன் காண்பார்போல்-நூல்களுக்குப் பயன்காண்பதுபோல இறை நூல்களாற் பெறப்படும் பேருகிய இறைவரைப் பெறுதல் என்பதற்குக் கண்ணப்பரின் வணக்கமாகிய ஒருபயன் கண்டார். இறைவரை யடையும் வீடுபேற்றுக்குச் சாதனமாகியவை சரியை முதலிய நான்குமாம். இனி இவற்றாற் பெறப்பட்ட இறைவரைப் பெறுதல்தானும் தானே சாத்தியமாய் முடிதலன்றி ஒரு சாதனமாயமைந்து அடியவர்பாற் கூட்டுவிக்கும் என்பதுமோ ருண்மையாதல் பெறவைத்த நயம் காண்க. ''சீரடியார், குலம்பணி கொள்ள வெனைக்கொடுத் தோன்'' (திருக்கோவை) என்பது முதலிய திருவாக்குக்கள் காண்க. இது பயனுக்குப் பயன் கூறியவாறென்க. **போல்** - உவம உருபு அஃதேயாம் என்ற பொருளில் வந்தது. ''விளைத்தவன் புமிழ்வார் போல'' (772); ''பாசப் பழிமுதல் பறிப்பார் போல'' (460) என்பன முதலியவையும், ஆண்டு உரைத்தவையும் பார்க்க. **பயன்** பற்றித் தோன்றிச் சிறப்பு நிலைக்களமாகிய உவமமென்பர்; **காணுதல்** - ஈண்டனுபவிக்கப்பெறுதல் என்னும் பொருள் தந்து நின்றது. இக்கருத்து மிக அரிதாய்ச் சிந்தித்து அனுபவிக்கத் தக்கதொன்று.

2921. **உள்ளத்திற் றெளிகின்ற வன்பின் மெய்ம்மை**
யுருவினையு மவ்வன்பி னுள்ளே மன்னும்
வெள்ளச்செஞ் சடைக்கற்றை நெற்றிச் செங்கண்
விமலரையு முடன்கண்ட விருப்பம் பொங்கிப்
பள்ளத்தி லிழிபுனல்போற் பரந்து செல்லப்
பைம்பொன்மலை வல்லிபரிந் தளித்த செம்பொன்
வள்ளத்தில் ஞானவா ரமுத முண்டார்
மகிழ்ந்தெழுந்து பலமுறையும் வணங்கு கின்றார்; 1023

மெய்வேடர் பெருமான் - மெய் - மெய்யே உருவாகிய. **மெய்** - சத்து - இறைவரது தன்மை; அஃதே அன்புருவம். அன்பே சிவமாம் என்பர் திருமூலர். இக்கருத்தினையே மேல்வரும்பாட்டில் விரித்தருளுதல் காண்க.

வீழ்ந்தார் - வேறுஒருவரால் உந்தப்பட்டுத் தம்வயமிழந்து வீழ்தல்போல என்பது குறிப்பு. "தம்பெருகு மனக்காதல் தள்ளநில மிசைவீழ்ந்தார்" (2892) என்று முன் இதன் நிலையினை விரித்தது காண்க.

தடஞ்சிலைச் சோபான நிலை தன்னுலேறி—என்பதும் பாடம். 1022

2921. (இ-ள்) உள்ளத்தில்...உருவினையும்-உள்ளத்தில் தெளியக் கொள்கின்ற அன்பினுடைய மெய்ம்மையாகிய உருவத்தினையும்; அவ்வன்பினுள்ளே... விமலரையும்- அந்த அன்பினுள்ளே நிலைபெற வீற்றிருக்கும் கங்கை தங்கிய சிவந்த சடைக்கற்றையினையும் நெற்றியிலே சிவந்த நெருப்புக் கண்ணையுமுடைய விமலராகிய இறைவரையும்; உடன்...பொங்கி-ஒருசேர (ஓரிடத்தே) உடனாகக் கண்ட தனாலாகிய விருப்பமும் மேன்மேலதிகரித்து; பள்ளத்தில்...செல்ல - மேலிடத்தினின்றும் பள்ளத்தில் இழிந்து விரைந்து செல்லும் நீர்போலப் பரந்து விரைந்து செல்ல; பைம்பொன்மலை வல்லி...அமுதமுண்டார் - பசும் பொன்மலையரசன் மகளாராகிய கொடிபோன்ற உமையம்மையார் அருளுடன் அளித்த செம்பொற் கிண்ணத்தில் ஞானநிறை அமுதத்தினை உண்டருளிய பிள்ளையார்; மகிழ்ந்து...வணங்குகின்றார் - மகிழ்ந்து மேலே எழுந்து பலமுறையும் வணங்குகின்றவராய்;

(வி-ரை) உள்ளத்தில் தெளிகின்ற அன்பின் மெய்ம்மை உரு - என்பது தன்னையும் மறந்து இறைவரையேயன்றி வேறொன்றனை உள்ளத்திற் றெளியக் கொள்ளாத கண்ணப்ப தேவருடைய திருவுருவத்தைக் குறித்தது.

உள்ளத்தில் தெளிகின்ற - அன்பின் - உரு - "தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட் டகல நீங்கிப் பொங்கிய வொளியி னீழற் பொருவிலன் புருவ மானார்" (753) என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க. முன்னர் அங்கு இதன் தன்மைகளெல்லாம் விரித்து எடுத்துக் கூறினமையின் இங்கு இவ்வாறு கூறிய அளவிலமைந்தனர். **தெளிகின்ற** - தெளிதலாற் பெறப்படுகின்ற; "தெள்ளத் தேறித் தெளிந்துதித் திப்பதோர், உள்ளத் தேற லமுத வொளிவெளி" (தனித் திருக்குறுந்தொகை). **தெளிதல்** - ஞானவகை நான்கனுள் மூன்றாவது. அவ்வாறு தெளிந்த

அன்பின் உருவமேயாதல் நிட்டை கூடல் எனப்படும்; **தெளிகின்ற** - கலங்கலில்லாது தெளியும் என்ற குறிப்புமாம்.

அன்பின் மெய்ம்மை உரு - ''பொய்யாய செல்வத்தே புக்கழுந்தி நாடோறு, மெய்யாக் கருதிக் கிடந்தேனை'' (திருவா) என்றபடி பொய்யாகிய உயிர்ப்பொருள் - உயிரில் பொருள் எனப் பலவற்றிலும் சென்று பலபடியாகிய பொய்யுருவங் கொள்ளும் அன்பு, ஈண்டு உள்ளத்தில் தெளிந்த மெய்ப்பொருளினிடத்தே அமைந்து மெய்ம்மை உருவு கொண்டது. **மெய்ம்மை** - பிரிதினியைபு நீக்கிய விசேடணம்.

அவ்வன்பினுள்ளே மன்னும்...விமலரை - இறைவர் நிலைபெறத் தங்கி நிற்குமிடம் அன்பேயாகும்: அன்பா னினைவாரது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து செல்லும் அருளுடையவர் இறைவர் என்பது, ''ஆரொருவ ருள்குவா ருள்ளத் துள்ளே யவ்வுருவாய் நிற்கின்ற வருளும் தோன்றும்'' என்ற அரசுகளது திருவாக்கா லறியப்படும் உண்மை. அக்கருத்து இங்குவைத்துக் காணத்தக்கது. **மன்னும்** - நிலைபெற வீற்றிருந்தருளும்; ஏனையிடங்களில் அந்நினைவுள்ள அளவுமே சிலபோது வீற்றிருப்பார். இங்குத் தெளிகின்ற அன்பின் மெய்ம்மையே உருவாயின இடத்தில் மறப்பின்மையால் நிலைபெற வீற்றிருப்பர் என்பதாம்.

வெள்ளச் செஞ்சடைக் கற்றை நெற்றிச் செங்கண் விமலர் - **வெள்ளம்** - நீர்மை - பேரருளுடைமையினையும்; **செஞ்சடைக் கற்றை** - பேர்ஒளியினையும்; **நெற்றிக்கண்** - ஞான நிறைவினையும்; **விமலர்** - இயல்பாகவே பாசங்களி னீங்கிய நிலையினையும் உணர்த்தியன. இவை இறைவரின் எண்குணங்களுட் சிறந்தவை.

அவ்வன்பினுள்ளே மன்னும் - விமலர் - என்றது அன்புடையார்மாட்டு விளங்கினும் கோட்டமில்லாமை குறித்தது. ''சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க் கல்லா னலமிலன்'' (தேவா); ''சார்ந்தாரைக் காத்தும் சலமிலன்'' (போதம்).

இனி, அன்பின் மெய்ம்மை உருவினையும்-அவ்வன்பினுள்ளே மன்னும்- விமலரையும் உடன் கண்ட - என்பதற்கு அன்பின் உருவமாகிய பிழம்பு கண்ணிந்திரியத்துக்குப் புலனாவதன்று; கண்ணீர் முதலிய மெய்ப்பாடுகளால் அஃதுண்மை கருதலளவையாற் றெளியப்படுவதோ ரியல்புடையது; ஈண்டு அவ்வன்பின் பிழம்பு தெளிவு காட்சிக்குப் புலனாக மெய்ம்மையுருவாகி நிற்கின்றதென்பார் **''உள்ளத்தில்...உருவினையும்''** என்றும்; கட்புலனுக்கு விடயமாகாத அவ்வன்பினுள்ளே மன்னும் விமலரும் அவ்வன்பின் பிழம்பு காட்சிப்பட விளங்கி நிற்பதற்கேற்பத் தாமும் அவ்வன்பீனும் அருட் பிழம்பாகக் கட்பொறிக்குப் புலப்பட விளக்கமுற்று நின்றருளினர் என்பார், ''அவ்வன்பினுள்ளே மன்னும்...விமலரையும் உடன் கண்ட விருப்பம்'' என்றும் கூறியருளினர்.*

உடன் கண்ட விருப்பம் பொங்கி-இறைவர் திருமுன்பு வீழ்ந்தெழுந்தபோது அங்கு இறைவர் ஒருவரையே கண்டார்; **மெய்வேடர் பெருமானைக் கண்டபோது** அவ்விறைவரை

---

*இவை ஸ்ரீமத் முத்துக்குமாரத் தம்பிரானர் அருளிய குறிப்பு; திரு. பண்டித மணி - மகாமகோபாத்யாய - மு. கதிரேசன் செட்டியார் கரந்தைக் கட்டுரையில் எழுதியுள்ள கருத்துக்களும் ஈண்டு காணத்தக்கன.

2922. பங்கயக்கண் ணருவிநீர் பாய நின்று
பரவுமிசைத் திருப்பதிகம் பாடி நின்று
தங்குபெருங் களிகாதல் தகைந்து தட்பத்
தம்பெருமான் கழல்போற்றுந் தன்மை நீட
அங்கரிதிற் புறம்போந்தங் கயன்மால் போற்ற
வரியார் தந் **திருமலைக்கீ ழணைந்தி றைஞ்சிப்**
பொங்குதிருத் தொண்டர்மடங் காட்ட வங்குப்
புக்கருளி **யினிதமர்ந்தார் புகலி வேந்தர்.** 1024

அகப்படுத்தும் அன்பின் உருவத்தையும், அவ்வன்பின் உள்ளே மன்னும் இறைவரையும் ஆக இருவரையுங் கண்டார்; ஆதலின் இங்கு விருப்பம் மேலும் பொங்கி எழுந்தது. அங்குக் கும்பிட்டார்; இங்குக் கும்பிட்ட பயன் கண்டார். ஆதலின் அங்கு வீழ்ந்தெழுவாராகி அவ்வணக்கம் நிறைவுபெறுது இங்கு வீழ்ந்தாராய் வணக்கத்தினை முற்றுப்பெற நிறைவுபடுத்தியருளினார்.

பள்ளத்தில் இழிபுனல்போல் - மேட்டு நிலத்தினின்றும் பள்ளத்தில் வரும் போது நீர் மிக்க வேகத்தால் பாய்ந்தோடும்; அதுபோல விருப்பம் இங்கு விரைந்து சென்று பரவியது. "பள்ளந்தா ழுறுபுனலிற் கீழ்மே லாகப் பதைத்துருகு மவர்" (திருவா).

மகிழ்ந்தெழுந்து பலமுறையும் வணங்குகின்றார் - அட்டாங்க பஞ்சாங்கமாக 3 முதல் 11 வரை முறையாலே விதித்தபடி செய்யப்படும் வணக்கம் நிறைந்த பின்னரும் அளவுகடந்து பல முறையும் வணங்குகின்றமைக்குக் காரணம் அன்பின் பெருக்கு எனப் "பள்ளந்தா ழுறுபுனல்போல்" என்று உவமைமுகத்தால் முன்விளக்கினார்; பின்னரும் வணங்கியநிலை முடிவு பெறுமையின் வணங்குகின்றாராகி என எச்சப் பொருள்பட வைத்தும், "போற்றும் தன்மை நீட", "அரிதிற் புறம் போந்து" என்றும் தொடர்ந்து கூறி, அவை மேற்பாட்டுடன் முடிக்க வைத்தருளினார். *1023*

வணங்கி நின்றார்— என்ற பாடமுமுண்டு.

2922. (இ-ள்) பங்கயக் கண்...நின்று - தாமரை போன்ற கண்களினின்றும் கண்ணீர் வழிந்தோட நின்று துதிக்கும் பண்ணமைந்த திருப்பதிகத்தைப் பாடி ஆனந்தக் கூத்தாடி நின்று; தங்கு பெரும்...தட்ப-தமது மனத்துள்ளே தங்கிக் கிடக்கும் பெரிய களிப்பும் காதலும் வலிந்து தம்மை அங்கே தடைப்படுத்தி நிறுத்த (அதனால்); தம் பெருமான்...நீட - தம் பெருமானுடைய திருவடிகளைப் போற்றி நிற்கின்ற தன்மை நீடித்ததனாலே; அங்கு அரிதில்...இறைஞ்சி - அங்குநின்றும் அரிதாகப் புறத்திலே போந்து அங்கு அயனும் மாலும் போற்றுதற்கரிய இறைவரது காளத்தித் திருமலையின் அடியில் வந்து அணைந்து வணங்கிப் போய்; பொங்கு...வேந்தர் - பெருகிய திருத்தொண்டர்கள் திருமடத்தினைக் காட்டச் சென்று புகுந்தருளிய புகலி வேந்தராகிய பிள்ளையார் இனிதாக அங்கு விரும்பி எழுந்தருளினார்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) பரவும் இசைத் திருப்பதிகம் - இப்பதிகம் கிடைத்திலது!

2923. **யா**வர்களு மறிவரிய விறைவன் றன்னை
யேழுலகு முடையானை யெண்ணி லாத
தேவர்கடம் பெருமானைத் திருக்கா ளத்தி
மலையின்மிசை வீற்றிருந்த செய்ய தேனைப்
பூவலரும் பொழில்புடைசூழ் சண்பை யாளும்
புரவலனார் காலங்க டோறும் புக்குப்
பாமலர் கொண் டடி போற்றிப் பருகி யார்ந்து
பண்பினிய திருப்பதியிற் பயிலு நாளில்; 1025

தங்கு... நீட-தங்கு பெரும்-முன்னமே உண்ணிறைந்த பெரிய; "உண்ணிறைந் தெழுந்ததேனும்" (759); ***களிகாதல்***- களிப்பும் காதலும்; ***தகைந்து***-வலிந்து; ***தட்ப***-தடுப்ப என்றது தட்ப என நின்றது. ***தடுத்தல்***-நெடுநேரமாகியும் அவ்விடம் விட்டுப் பெயராதபடி நிறுத்துதல்; "நெடிதுபோ துயிர்த்து நின்று" (755) "இவர் தமைப் பிரிய வொண்ணுது" (761) என்ற நிலைகள் ஈண்டு நினைவு கூர்தற்பாலன.

அரிதிற் புறம்போந்து - நீங்கமாட்டாத நிலையில் நீங்கிப் புறத்துப் போய்; ***புறம்***-திருக்கோயிலின் புறம்.

திருமலைக் கீழ் அணைந்து இறைஞ்சி-திருமலையைத் தாழ்ந்தெழுந்து தொழுது கொண்டே ஏறி(2920)னாராதலின் அவ்வாறே இறங்கி அடிவாரத்தில் இறைஞ்சினார் என்க. முன்போலவே இங்கும் திருமலை என்றதும் குறிக்க.

மடம் காட்ட-இத்திருமடம் மலையின்கீழே அடிவாரத்தில் உள்ள பழய திருமடங்களுள் ஒன்றுதல் வேண்டும்; இன்னதென்று வழக்கிலேனும் இப்போது அறியப்பெறவில்லை!

அமர்தல்-விரும்பியிருத்தல் என்ற குறிப்புடன் நின்றது; "அமரரா லமரப் படுவானை"(நம்பி-அதிகை). *1024*

2923. (இ-ள்) யாவர்களும்... இறைவன்றன்னை-யாவராலு மறிதற்கரியவராகிய இறைவரை; ஏழுலகும் உடையானை- ஏழுலகங்களையும் தமது உடைமைப் பொருளாக வுடையவரை; எண்ணிலாத... பெருமானை-அளவில்லாத தேவர்கள் தலைவரை; திருக்காளத்தி... தேனை-திருக்காளத்தி மலையின் மேல்வீற்றிருந்தருளும் செம்மையாகிய தேனாகி உள்ளவரை; பூவலரும்...ஆர்ந்து-பூக்கள் மலர்தற்கிடமாகிய சோலைகள் பக்கத்திற் சூழ்ந்த சீகாழியின் தலைவராகிய பிள்ளையார் உரிய காலங்கள் தோறும் சென்று திருக்கோயிலினுள்ளே புகுந்து பதிகப் பாட்டுக்களாகிய மலர்களினாலே திருவடிகளை அருச்சனை புரிந்து துதித்துப் பருகி நிறைவாக அனுபவித்து; பண்பினிய... நாளில்-செம்மையாகிய பண்புகளா லினிமைதருகின்ற அத்திருப்பதியிலே பயின்று வீற்றிருந்தருளும் நாள்களிலே,

(வி-ரை) *யாவர்களும் அறிவரிய இறைவன்* - இறைவன்,தெள்ளி "யுணருமவர் தாங்க ளுளராக வென்றும், புணருவா னில்லாப் பொருள்" ஆதலால் **தற்போத நிலை முடிந்**தார்க்கன்றி அல்லாதார் யாவர்களும் அறிவரியான் என்றலே பொருந்துவதாம். "தம்மை யுணர்ந்து

தமையுடைய தன்னுணர்வார்'' என்பவாகலின் ஞானநாட்டம் பெற்றபின் பிரிப்பின்றி அருட்கண்ணுற் காண்பர் ஞானியர்; ''அருளாகி நின்ற தவரன்றி யாவரறிவார்'' என்றலும் காண்க.

"அடைபவர் சிவமே யாகு மதுவன்றித் தோன்று மென்ற
கடனதென் னென்னின் **முன்னங் கண்டிடார் தம்மைப் பின்னுந்**
தொடர்வரு மருளி னுலுந் தோன்றுமா காணு ராயின்
உடையவனடிசேர் ஞான முணர்தலின் றடைத லின்றே"—(சிவப்பிர)

"சிவார்க்க சத்திதீதித்யாஸமாத்ததீ க்ருதசித த்ருசா
சிவம் சக்த்யா திஸ்ஸார்த்தம் பச்ய யாத்மா கதாவிருதி:

"ஆன்மா சிவசூரியனது சத்தியாகிய ஒளியால் ஆற்றலுடையதாகச்செய்யப்
பட்ட ஞானக்கண்ணுல் சத்தி முதலியவற்றேடு கூடச்சிவனைக் காண்கின்றது"

என்பது ஆகமம்.(இவை ஸ்ரீமத்-முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள் அருளிய குறிப்பு).

ஏழுலகும் உடையானை-எல்லா வுலகங்களையும் உயிர்களையும் அநாதியே தமது உடைமைப் பொருள்களாக உடையவன் ''எல்லாமுன் னுடைமையே எல்லாமுன்னடிமையே'' என்ற கருத்து. **ஏழுலகு**-மேல் கீழ் நடு உலகுகள் இவற்றை உடைமையாவது தனது மாயை என்னும் சத்தியினின்றும் தோற்றுவித்தும் பின் இறுதியில்அவற்றை மாயையில் ஒடுக்கி மாயையைத் தன்னுள் ஒடுக்குதலால் தன் பொருளாக உடைமை; இரட்டுற மொழிதலால் **ஏழுலகு**-எழுபிறப்புக்களுள் வரும் எவ்வகை உயிர்களும் என்றுகொண்டு உடைமையாவது அடிமையாகக் கொண்டு இயக்கி நடத்துதல் என்று உயிர்கள் மாட்டு வைத்து உரைத்துக்கொள்க.

எண்ணிலாத... ...பெருமானை - 33 கோடி என்ற எண்ணிருப்பினும் மேலும் பசு நல்வினைகள் செய்து தேவராகும் உயிர்கள் அனந்தமிருத்தலின் எண்ணிலாத என்றார். **தேவர்கள் தம் பெருமான்**-தேவதேவன்; ஏனை யுயிர்களுக்கேயன்றித் தேவர்க்கும் தலைவன் என்பதாம்.

திருக்காளத்தி...தேனை-''இம்மலைப் **பெருந்தேன்** சூழ்ந்து'' (750) என்றதும், ஆண்டுரைத்தவையும் பார்க்க.

காலங்கள்-வழிபாட்டுக்குரிய காலங்கள் திருப்பள்ளியெழுச்சி முதலாகத் திருவத்தயாமம் ஈறுகச் சிவாகமங்களில் விதிக்கப்பட்டன; ஒன்று முதலாக ஆறு காலங்கள் வரை வழங்குவன; சிறுபான்மை அவற்றின் மிகுதலும், குறைதலுமுண்டு.

பருகி ஆர்ந்து-பருகுதலாவது மொண்டு விழுங்குதல்போல நுகர்தல். **ஆர்தல்**-நிறைதல். ''பருகாவின் னமுதத்தைக் கண்களாற் பருகுதற்கு'' (ஏயர்.புரா-308); ''தின்பன் கடிப்பன் றிருத்துவன் றனே'' (திருமந்); ''பருகியு மாரேன்; விழுங்கியு மொல்ல கில்லேன்'' (திருவா-அண்டப்-166-167).

பண்பினிய-பண்பு-செம்மைப் பண்பு; சிவந்தரும் பண்பினுலினிய.

செய்யகோனை—என்பதும் பாடம்.

2924. அங்கண்வட **திசைமேலுங் குடக்கின் மேலு**
மருந்தமிழின் வழக்கங்கு நிகழா தாகத்
திங்கள்புனை முடியார்தந் தானந் தோறுஞ்
சென்றுதமி ழிசைபாடுஞ் செய்கை போல
மங்கையுடன் வானவர்கள் போற்றி சைப்ப
வீற்றிருந்தார் **வடகயிலை** வணங்கிப் பாடிச்
செங்கமல மலர்வாவித் **திருக்கே தாரந்**
தொழுதுதிருப் பதிகவிசை திருந்தப் பாடி, 1026

2924. (இ-ள்) *அங்கண்...நிகழாதாக*-அவ்விடத்து வடக்கிலும் மேற்கிலும் உள்ள நாடுகளில் அரிய தமிழின் வழக்கு அங்கு நிகழாமையினாலே; *திங்கள்புனை......போல*-சந்திரனைச் சூடிய முடியினையுடைய இறைவரின் ஏனை எல்லாப் பதிகள் தோறும் சென்று சென்று திருப்பதிகத் தமிழிசை பாடும் செயல்போல; *மங்கையுடன்...வணங்கிப் பாடி*-தேவர்கள் வணங்கித் துதிக்கும்படி உமையம்மையாரோடு வீற்றிருந்தருளும் இறைவரது வடகயிலைத் திருமலையினை இங்கு நின்றபடியே வணங்கித் திருப்பதிகம் பாடியருளி; *செங்கமல மலர்...திருந்தப் பாடி*- செந்தாமரைப் பூக்கள் மலர்தற்கிடமாகிய பொய்கைகளையுடைய திருக்கேதாரத்தினையும் தொழுது திருப்பதிகத்தை இசையுடன் திகழும்படி பாடி;

(வி-ரை) அங்கண் வடதிசை மேலும் குடக்கின் மேலும்-அங்கண்- அவ்விடத்தின். **திசை**-மேலும் திசையில் உள்ள நாடுகளிலும்; **குடக்கு**-மேற்கு; **குடக்கின் மேலும்**-மேற்றிசை நாடுகளிலும், **வடதிசை**-இங்கு இமய எல்லை வரையிலும், **குடதிசை**-குடகடல் எல்லை வரையிலும் உள்ள நாடு என்ற பொருளில் வந்தன.

அருந்தமிழின் வழக்கங்கு நிகழாதாக-திருக்காளத்தியின் வடக்கும் மேற்கும் உள்ள தேசங்கள் தமிழ் வழங்கு நிலங்களன்றாகிச், சிறப்பற்ற பல மொழிகளே பரவிய நாடுகளாதலால்; ஆயின் அந்நாடுகளின் வாழ்வோரை உய்விக்கும் நிலையின்றாமோ? எனவும், சிவனருட் பரப்பு அங்கு நிகழாதாகுமோ? எனவும்,தமிழ்நில மக்களின் அளவு மட்டுமோ பிள்ளையாரது கருணை செல்லுமளவு? எனவும், வேற்று மொழிகள் வழங்கு நிலங்களாயினும் அம்மொழியின் வன்மையும் அதன் மூலம் அம்மொழியாளரை உய்வித்தலும் பிள்ளையார்பாற் கூடிலதோ? எனவும் பற்பலவாறும் ஈண்டு வினவுவாருமுளர்; அற்றன்று. பின் என்னையோ கருத்து? எனின் ''அசைவில்செழுந் தமிழ்வழக்கே யயல்வழக்கின் றுறைவெல்ல'' *(1922)*; ''வண்டமிழ்செய்தவ நிரம்ப'' *(1921)*; ''திசையனைத்தின் பெருமையெலாந் தென்றிசையே வென்றேற'' *(1922)* என்று முன்னர்க் கூறியவை இங்கு நினைவு கூர்தற்பாலன. எல்லாத் திசைகளின் பெருமைகளையும் வென்றேறிய தென்றிசையிலே, எல்லா மொழி வழக்குக்களையும் வென்ற தமிழ் மொழியிலே விளங்க வைத்தால் அவ்வெல்லாத் திசைகளுக்கும் மொழிகளுக்கும் பயன்படுமாறாயிற்று. பக்குவ முறையின் நிலைகளையும் மறைகளையும் வகுத்து இறைவனருளுமாறே உரிய வகையால் ஈண்டுக்கொண்டு ஏனையோர் யாவரும் பயன்படுத்திக் கொள்ளத் தக்கார்கள் என்பது. தென் றிசையின் தகுதிபற்றி 40-46 பாட்டுக்களும், முன் உரைத்தவையும் பார்க்க.

அற்றாயின், இங்கு நின்றபடியே அத்திசையின் தலங்களை வணங்கிப் பாடியருளிய தென்னை? எனின், இப் பாவனைகளும் திருவாக்குக்களும் வணக்கங்களும் ஒளியும் ஒலியும் ஆகிய நுண்ணிய அலைகளின்வழி அங்கங்கும் சார்ந்து திருவருள் விளக்கம் செய்து அங்கங்குள்ளார்களும் படிமுறையானே பயன்பெறக் காரணமாய் விளையும் கருணைச் செயல் என்க. பிள்ளையார் திருவ வதாரத்தினும், அரசுகள் இறைவரது திருவடியில் ஞானவடிவேயாகி நண்ணியபோதும் உலகம் பெற்ற இன்ப விளைவுகள் இங்கு நினைவுகூர்தற் பாலன, 1926-1927-1930=1623 முதலியவை பார்க்க.

திங்கள்புனை...போல - தானங்கள்தோறும் நேரே சென்று சென்று வணங்கிப் பாடும் வழக்கம் போலவே இங்கு நின்றபடியே மனத்துள்ளே கண்டு வணங்கிப் பாடியருளினர்; "சமாதியான் மலங்கள் வாட்டிப், பொருந்திய தேசகால வியல்பகல் பொருள்க ளெல்லாம், இருந்துணர் கின்ற ஞான மியோகநற் காண்ட லாமே" (சித்தி-அளவை-13) என்றதனால் ஞானயோகக் காட்சியினால் ஒரிடத்து இருந்தவாறே, ஏனையோர்க்குள்ள காலமும் இடமுமாகிய எல்லைகளின் அளவுகடந்து எல்லாம் நேரே கண்டு அறியும் நிலை கூடும் என்பது அறியப்படும் "எனதுள் நன்று மொளியான்-நாடிய தமிழ்க்கிளவி" (தேவா) "எந்தையடி வந்தணுகு சந்தமொடு" (தேவா-11) என்ற கருத்தும் காண்க. **போல** - பயனும் வினையும் பற்றி உவமம் விரித்துக்கொள்க. ஒன்றியிருந்து நினைமின்க ளுந்தமக் கூனமில்லை" (தேவா) என்றது மிக் கருத்தினைப் பெறவைத்து ஏனையோர்க்கும் புலப்பட உபதேசித்ததாம்; ஈண்டு ஞானயோகக் காட்சியால் இங்கு நின்றவாறே அவ்வத் தானங்களையும் பிள்ளையார் நேரே கண்டு அப்பதிகங்களை அருளினர் என்பது அவ்வப் பதிகங்களால் அறிந்து கொள்க. அரசுகளும் இங்குப் பணிந்த குறிப்பினால் வடகயிலையை நினைந்து சென்றமையும் காண்க. மனவசீகரப் பயிற்சியால் நெடுந்தூர முள்ள பொருள்களையும் நிகழ்ச்சிகளையும் காணும் நிலைகள் ஈண்டுக் கருதத் தக்கன.

வானவர்கள் போற்றிசைப்ப - வடகயிலை - என்பது அங்குத் தேவர்களது வழிபாடு மட்டும் நிகழ்வதேயன்றி மனிதர்கள் எண்ணி வணங்குவதல்லாமல் நேரே சென்று வணங்கும் நிலையில்லை என்றருளியபடி. "கயிலை மால்வரை யாவது காசினி மருங்கு, பயிலு மானுடப் பான்மையோ ரடைவதற் கெளிதோ?" (1630) என்றதும், திருமலைச் சிறப்பிலும் (11-22), அரசு களுக்குத் திருவையாற்றிற் கயிலைக் காட்சியருளிய இடத்தும் (1640-1644) உரைத்தவையும் ஈண்டு நினைவு கூர்தற்பாலன.

வடகயிலை - திருக்காளத்தியாகிய தென்றிசைக் கயிலை மனிதர்களும் தேவர்களும் உடன் வழிபடவுள்ளது. இங்குத் தேவர் வந்து வணங்குதல் "கடவுண்மால் வரையி னுச்சி யதிர்தரு மோசை யைந்தும்" (750); "வான்மிசை யரம்பையர் கருங்குழற் சுரும்பு" (1089)என்பனவற்றாலு மறியலாம். வடகயிலை அவ்வாறன்றி வானவர்கள் மட்டும் நேரே போற்றிசைப்ப உள்ளதென்ற குறிப்புத் தர **வடகயிலை** என்று பிறிதினியைபு நீக்கிய அடைமொழி தந்து பிரித்துணர்த்தினர்.

மங்கை - உமையம்மையார்; "மங்கை தெரிய வுருவில் வைத்து கந்த" (தேவா-கயிலை).

செங்கமல மலர்வாவி - "கெண்டை பாயச் சுனைநீல மொட்டலரும்", "நீர்க் கோட்டு" (தேவா) என்ற பதிகக் குறிப்புக் காண்க.

திருந்த - பதிகப் பாட்டுக்களிற் கண்டவாறு வழிபாடுகள் பலவற்றாலும் முயன்று மக்கள்

திருந்தி வீடுபெறும்படி. ''உலகாண்டு வீடுகதி பெறுவார்களே'' (11) என்று பதிகப் பயன் அருளியதும், 2 முதல் 7 வரை பாட்டுக்களில் வழிபடும் நிலைகளை உரைத்தருளியவையும், சிறப்பாய் முதற் பாட்டில் உரைத்தவையும் கருதுக. **பண் செவ்வழி** என்ற குறிப்பும் காண்க. ''செவ்வழிநற் பண்பாடும்'' (தேவாரம்).

தமிழ் பாடலுறும்—என்பதும் பாடம். *1026*

I திருக்கயிலாயம் (திருநொடித்தான்மலை)

திருச்சிற்றம்பலம் பண்-தக்கேசி

பொடிகொ ளுருவர் புலியி னதளர் புரிநூ றிகழ்மார்பிற்
கடிகொள் கொன்றை கலந்த நீற்றர் கறைசேர் கண்டத்தர்
இடிய குரலா லிரியு மடங்க ளுடங்கு முனைச்சாரற்
கடிய விடைமேற் கொடியொன் றுடையார் கயிலை மலையாரே. (1)

போரார் கடலிற் புனல்சூழ் காழிப் புகழார் சம்பந்தன்
காரார் மேகங் குடிகொள் சாரற் கயிலை மலையார்மேற்
றேரா துரைத்த செஞ்சொன் மாலை செப்பு மடியார்மேல்
வாரா பிணிகள் வானோ ருலகின் மருவு மனத்தாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– பொடி கொளுருவர், மங்கை தெரிய வுருவில் வைத்து கந்த தேவர் பெருமானார், நஞ்சமுண்ட முதல்வர், ஒன்றும் பலவுமாய வேடத்தொருவர் என்றின்ன பல தன்மைகளா லறியப்படும் இறைவர் கயிலைமலையாரே.

பதிகப் பாட்டுக் குறிப்பு:– *(1)* **பொடி**-திருநீறு; **பொடிகொள் உருவர்**- பொடி மூடிய தழல்போலும் உருவினையுடையார்; **கொன்றை கலந்த நீற்றர்-கறை சேர் கண்டத்தர்**- பொன்மை-வெண்மை-கருமை மூன்றும் தோன்ற நின்றதுமார்பின் இடம்; **மடங்கல்**- ஆளி-சிங்கம்; **இடிய**-இடிபோல முழங்கும்; **கடிய**-கடிதாக நடந்து இடிக்கும். ''நடக்கிற் படிநடுங்கும்...உருமேறே!'' (அற்.அந்-100) என்ற அம்மை திருவாக்குக் காண்க. **மேற் கொடி**-மேலே பொறித்த; **ஒன்று**-ஒப்பற்றது;—*(2)* **மங்கை...உகந்த** - ''மங்கையுடன்... ...வீற்றிருந்தார்''(2924); **கிளி**- கிளிமொழி. **சேர்**-உவமவுருபு; **தெரிய** - விளங்கும்படி; **பரிய களிற்றை அரவு விழுங்கி மழுங்க இருள் கூர்ந்த-கயிலைமலை**-என்று கூட்டுக; **அரவு**-பெரு மலைப்பாம்பு; மலைப்பாம்புகள் யானைகளையும் விழுங்கும் தன்மையுடையன; இவை யானைகளைச் சுற்றிப் பிணித்து எலும்புகளை நொறுக்கிக் கொன்று விழுங்குவன என்பது பிராணிகளின் சரித நூலோர் கண்டவுண்மை; ''குஞ்சரங் கோளிழைக்கும் பாம்பு'' (திருக்கோவை-21); இனி **விழுங்கி** என்பதற்கு விடத்தினால் அவியச் செய்து என்றலுமாம். **மழுங்க**-கிடக்க; **இருள் கூர்ந்த-மலை**-மரங்களின் செறிவினாலடர்ந்த இருள் மிகுந்த மலை. **கரிய - செய்ய** - முரண் அணி;– –*(3)* **மா** - யானை; **விளைவர்** - உலகம் மீளச் சிருட்டிப்படுதற்குக் காரணமானவர்; (**இறைவர்** - என்பதும் பாடம்); **திரங்கல்**-சுருங்குதல். **திரங்கல்** விளைப்பது திரை (நரை-திரை); **திரங்கல் முகவன்**-தோல் சுருங்கிய முகமுடைய குரங்கு;– *(4)* **முந்நீர் சூழ்ந்த நஞ்சம் - முந்நீர்**-கடல்;

சூழ்ந்த-சுழற்றப்படலால் விளங்க; இங்கு மந்தரத்தாற் கடையப்பட்டமை குறித்தது; **சூழ்ந்த** -பரவி எழுந்த என்றலுமாம்; **நீர் உருவம் நீர்**- நீர்மை-அழகு; **கல்லறை**-கற்குகை; மலை முழை. **உழுவை**-புலி;—(5) **தென்றி**-இனம் பிரிந்து; **தென்றி... ...சேர்**-"இனத்திடைப் பிரிந்த செங்கணேறென வெருக்கொண் டெய்தி" (820); இனம்பிரிந்த யானை திகைத்துச் சாரல் நெறிஓடிக் கன்றும் பிடியும் அடிவாரம் சேர் என்றது கழல் சேர்வார் நன்று நினைந்து நாடி நன்னெறி வழியே ஓடி உரியாருடன் கூடித் திரண்டு திருஅடியின் வாரம் சேர்வார் என்று முன் இரண்டடிகளிற் கூறிய பொருளை உள்ளுறைக் குறிப்பாலுணர்த்தும் இறைச்சிப் பொருள் பயப்பது காண்க. **நாடற்குரியார்**-அன்பர். **நாடற்குரியார்**-இறைவர் என்று கொண்டு ஒருவர்-உரியார் என முடித்தலுமொன்று; முன் பொருளில் அடிவாரஞ் சேர் என்றதனை கழல் சேர்வார்க்கும், கரிக்கும் கூட்டுக. தாயினேரிரங்கும்" (கருவூர்-கோயில்-3) என்ற திருவிசைப்பாவுள்ளும் இவ்வாறு இறைச்சிப் பொருள் வருவது காண்க;—**(6)போதார்** - சிருட்டியின் தொடக்கத்தும் ஒடுக்கத்தினிறுதியிலும் அவ்வக் காலத்து மலர்ந்து குவியும் போதுபோல என்க. **பனிமல்கு கயிலைமலை** என்று கூட்டுக. மூதார்- மூத்தோர்-முனிவர். **உடனாய்**-உடனமர்ந்து; ஒரு கணத்திலே-ஒரு செயலாலே; **அறம் நான்கு**-அற முதலிய நான்கும்;—**(8) பகழியால்-சிலைமேல்-எரி -தொடுத்தார்**-என்று கூட்டுக. **எரி**-தீக்கடவுளை நுனியாக உடைய அம்பு; ஆகு பெயர். **இடிய**-நொறுங்க; இப்பாட்டு இறைவர் வீரங்களைக் குறித்தது;—(9) **இருவர்**-அயனு மாலும்— **(10) விருது**-வீண்மொழி-ஆரவாரம்; **பொருது**-வாதித்து;—**(11) போரார்**-அலைப்புண்பதனைப் போர் என்றுபசரித்தார். இந்நாட்காணும் மூண்ட கடற்போரினையும் குறிப்பாலுணர்த்தி நின்றது. "கடன் மீதிலே ஆணை செலவே நினைவர்" என்பர் தாயுமானார்; **மேகங்குடிகொள் சாரல்**-நீர்த்தலை மியச் சாரலாதலின் சாரல்களில் எப்போதும் மேகங்கள் நிறைந்துள்ளன என்பது; **தேரா துரைத்த**-நேரே சென்று காணாது இருந்த நிலையே உரைத்த என்றது குறிப்பு. இனித் தேரா-துரைத்த செஞ்சொன்மாலை எனக் கூட்டித், **தேரா**-தேர்ந்து; **துரைத்த**- உயர்வுடையதாகச் செய்த என்றுரைப்பதுமாம்; **துரை**-உயர்வு; "என்னுடைய, துறைமாண்ட வாபாடி" (திருவா). ஆயின் இது வலிந்து பொருள்கோடலாம்.

II திருக்கயிலாயம் *(திருநொடித்தான்மலை)*

திருச்சிற்றம்பலம்

திருவிராகம் — பண்-சாதாரி

வாளவரி கோளபுலி கீளதுரி தாளின்மிசை நாளுமகிழ்வர்
ஆளுமவர் வேளநகர் போளயில கோளகளி ருளிவரவிற்
றேளமரர் தாளமதர் கூளியெழ மீளிமிளிர் தூளிவளர்பொற்
காளமுகின் மூளுமிருள் கீளவிரி தாளகயி லாயமலையே. (1)

அந்தண்வரை வந்தபுன றந்ததிரை சந்தனமொ டுந்தியகிலுங்
கந்தமலர் கொந்திணெடு மந்திபல சிந்துகயி லாயமலைமேல்
எந்தையடி வந்தணுகு சந்தமொடு செந்தமிழி சைந்தபுகலிப்
பந்தனுரை சிந்தைசெய வந்தவினை நைந்துபர லோகமெளிதே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:— ஆளுமவர், அற்றவர்க ணற்றுணைவன், எங்களிறை என்பன முதலாகப் பேசப்படும் இறைவரது இடம் கயிலாயமலையே.

பதிகப் பாட்டுக் குறிப்பு:– ***(1)வாளவரி கோளபுலி***-வாள்போன்ற வரிகளை யுடைய பற்றிக்கொள்ளும் தன்மையுடைய புலி; **புல்லி** என்பது புலி என்றாயிற்று. **புல்லுதல்**-பற்றுதல். **உரிதாள்**-உரித்த தோல்: **வேள** - விரும்பிய; **நகர்** - கயிலாய மலையே எனக் கூட்டுக; **காளமுகில் மூளுமிருள்**-''காரார் மேகங் குடிகொள்'' (முன் பதிகம் 11); **இருள் கீள**-இருள் போகும்படி; **விரிதாள** - விரியும் ஒளியுடைய அடிகொண்ட;—**(2) அற்றவர்**-பற்றற்றவர்கள்; **கற்றவர்கள்**-அனுபூதிமான்கள்; —**(3) சங்கை** - மயக்கம்; **சங்கை**-தொகுதி என்றலுமாம்;– **(4) பிடியது ஒருமழு**-பிடித்துப் பற்றியது ஒரு மழு;—(5) எரி அங்கையில் மூண்டு எழ; **நடம்**-கூத்து; **தரும்**-ஆடும்; **இடம் - மலையே** என்க;—**(8) களிறின் பொருப் புடை**-களிறுகள் நிறைந்த மலையின். **ஒருத்தி**-உமையம்மை. **வெருக்குற வெருட் டலும்** - அஞ்சுவித்து அசைக்க. **தருக்கு இற**-செருக்கு ஒழிய. **தருக்கு**-எருத்து (தோள்);– **(9) புனல்**-கங்கை; **பரிசை - பரிசு**-தன்மை; **புரிவினவர்**-அருளுடையவர். **புரிவுதரும்**-அறிய வரும்; **கரியவன்** - மால்; **மறை புரியவன்** - அயன்;— **(10) வண்டர்**-கீழோர்;—**(11) அடி வந்தணுகு**-பாடியருளிய திருக்காளத்தி யினின்று இங்கு ஆகாய ஒலியலைகளின் மூலம் வந்து சேரும்; காளத்தியிலிருந்து பாடிய வரலாற்றின் அகச்சான்று.

குறிப்பு:– இப்பதிகம் முடுகிய சந்தமுடன் வழியெதுகை யாப்பின் அமைந்தது; பொருள் முற்ற அனுபவமுடைய தமிழறிந்த பெரியோர்பால் கேட்டுணரத் தக்கது. மேல் சில குறிப்புக்களே தரப்பட்டுள்ளன.

தலவிசேடம்:– திருக்கயிலாயம்- தொகுதி III - பக். 804 பார்க்க.

திருக்கேதாரம்

திருச்சிற்றம்பலம் பண்-செவ்வழி

தொண்டரஞ் சுகளி றும்மடக் கிச்சுரும் பார்மலர்
இண்டைகட் டிவழி பாடுசெய் யும்மிட மென்பரால்
வண்டுபா டமயி லாலமான் கன்றுதுள் ளவ்வரிக்
கெண்டைபா யச்சுனை நீலமொட் டலருங்கே தாரமே. (1)

வாய்ந்தசெந் நெல்விளை கழனிமல் கும்வயற் காழியான்
ஏய்ந்த நீர்க் கோட்டிமை யோருறை கின்றகே தாரத்தை
ஆய்ந்து சொன் னவருந் தமிழ்கள்பத் தும்மிசை வல்லவர்
வேந்த ராகியுல காண்டு வீடுகதி பெறுவரே. (11)


திருச்சிற்றம்பலம்

பதிகக்குறிப்பு:– தொண்டர்கள், விண்ணோர், முனிகள், குதிரைம்முகத்தார், ஒருகாலர்கள், ஊழியுணரும் யோகிகள் முதலிய பலதிறப்பட்ட வகையினரும் வந்து வழிபட இறைவர் திருவருள் செய்யவுள்ள இடம் திருக்கேதாரமே.

பதிகப் பாட்டுக் குறிப்பு:– (1) அஞ்சு களிறும்-அஞ்சு-ஐந்தாகிய மதயானை போன்ற புலன்கள்; முற்றும்மை. இண்டை கட்டும் பணிவிடையின்போது புலன்களைப் புற விடயங்களிற் போகவிடாது சிவ சிந்தனையோடு இருத்தல் வேண்டுமென்பது விதி; ''அன்பு நாரா வஞ்செழுத்து

நெஞ்சு தொடுக்க வலர்தொடுத்தே, யென்புள் ளுருகு மடியார்'' (ஏயர்.புரா-226); அடக்கி-இண்டை கட்டி என்க. அடக்கி வழிபாடு செய்யும் என்று கூட்டியுரைப்பினு மமையும்; **வண்டு...நீல மொட்டலரும்**-கேதாரத்தின் உயர்ச்சியின் நீர்வளம் குறித்தது; ''ஏய்ந்த நீர்க் கோட்டு'' (11) என்பதும், ''மலர்வாவி'' (2924) என்றதும் காண்க;—**(2) பதினெட்டு**- மா புராணங்கள்; **ஆறு**-வேதாகமங்கள்;—**(3) புரோதாயம்**-நீராடலின் ஒரு விசேடம்; ''நீராண்ட புரோதாய மாடப்பெற்றேம்'' (அரசுகள்) III-பக். 120-பார்க்க);– **(4) குதிரைம்முகத்தார் - ஒருகாலர்கள்**-இயக்கர்களின் வகையினராகிய தேவச் சாதியினர்; **ஒருகாலர்** - ஒருகாலுடையவர்கள் ''கொம்பைப் பிடித் தொருக்காலர்க ளிருக்கான்மலர் தூவி'' (நம்பி-கேதா-3) என்று நம்பிகளும் இப்பதிப்பதிகத்தில் அருளுதல் காண்க. **பயில்வ** - பயில்வனவற்றை; அகரவீற்றுப் பலவறிசொல்;– **(5) ஊழியூழி யுணர்வார்கள்** - ஊழிபலவும் அறியும் உணர்வுடைய சிவயோகிகள்; ''தப்பிலா மன்றிற் றனிக்கூத்துக் கண்டபின், ஒப்பிலெழு பதுகோடியுகமிருந்தேனே'' (திருமூலர் திருமந்-பாயி-74); **உழுவார்கள் போல கிளைக்க** - வினை பற்றிவந்த உவமம். **கேழல்**-பன்றி; **தேரிய**-தேரும் பொருட்டு; தேடுதற்கு. **பூழ்தி**-புழுதி பட; **கிளைக்க**-தோண்ட. பன்றிகள் இரையாகிய கிழங்கு முதலியவற்றைத் தேடி நிலத்தைக் கிளைத்தல் புலத்தைப் புழுதிபட உழவர் உழுதல் போன்றது என்க;– **(6) நீறு...சேரும்**-விரதிகளின் செயல்கள் நிலத்துண்ணல், தியானத்துடன் மலையில் சேர்தல் முதலாயின;– **(7) அடக்கி-நின்றார்**-என்று கூட்டுக; அடக்கி - **ஓதி** என்று கூட்டினுமாம்; **உடைந்த... சினமாமுகம் செய்யும்**- உடைந்த-விரிந்து வீசும்-காற்றினால் வேங்கைமரங்கள் அசைய அவற்றின் பூக்கள் கல்லறைகளின்மேல் விழுந்து கிடப்பதை வேறு புலி எனக் கருதி வேங்கை சின முகஞ் செய்யும் (புறநானூறு பார்க்க); **கல்லறை**-முழைகளும் கல் முற்றங்களும்; —**(8) கிரமமாக** - இசை ஒழுங்குபட; வேதம் ஓதும் கிரமம்போல என்றலுமாம். பதம்-கிரமம்-சடை-முதலியன வேதம் ஓதும் முறை மரபுப் பெயர்கள்;—**(9) நின்றார்**-சிவபெருமான்; **அலமந்தவர்**-அயனரியிருவர்; அவர் தாழ்ந்து தந்தம்முடிசாய வணங்க; யானை மண்டையைப் பீறிச் சிங்கம் குருதியுண்ண, அவ்வியானைக் கோட்டினின்று முத்துதிர்வன; முத்துப் பிறக்குமிடங்களுள் யானைக்கோடும் ஒன்று; ''பருக்கை யானை மத்தகத் தரிக்குலத் துகிர்ப்புகந்,நெருக்கி வாய நித்திலந் நிரக்குநீள் பொருப்பன்''(பிள்-நட்டரா-திருவாரூர்-1) என்று இக்கருத்தைப் பற்றியே முன்அருளியது காண்க. **கீழ்ந்து**-பீறி; போழ்ந்து; பிளந்து;– **(10) மீன்கவர்வார்**-புத்தர்; **மாசுடம்பினர்**-அமணர்; ''கழுவா வுடலம்'' (நம்பியாண்டார்); **அடுக்க நின்ற அறவுரைகள்-அடுத்தல்**-பொருந்துதல்; அமணர்களது அறவுரை அடாதன; அவ்வாறன்றி அடுப்பனவாகிய அறவுரை; இவை வேத விதிதமானவை. ஆங்குக் **கேட்டவர்**-என்பது சனகாதியர்களையும் குறிப்பாலுணர்த்தி நின்றது; அவர்களுக்கு ஞானோபதேசம் புரிந்த இடம் கயிலைச்சாரல் என்பதும் கருதுக. **நின்ற**-மோனநிலை நின்ற;—**(11) நீர்க்கோட்டு**-பனி மலியும் உச்சியினை உடைய; **ஆய்ந்து சொன்ன**-நேரில் கண்ணுற் காணாது மனத்தாற்கண்டு பாடிய சரிதம்பற்றிய அகச்சான்று.


தலவிசேடம்:– திருக்கேதாரம்-வடநாட்டுத் தலங்களுள் நான்காவது தலம். பிருங்கி முனிவர் தம்மை வழிபட எண்ணியபோது அவருக்காக அம்மையார் சிவ பெருமானை நோக்கி விரதங் கிடந்து பூசித்து இடப்பாகம் பெற்ற பதி; அம்மை வரங்கிடந்த கேதாரகௌரி விரதம் மிகத் தேற்றமாயறியப்பட்டுப் பலராலும் இன்றும் நோற்கப்படுவதும் மிக்க பயன்றருவதுமாம்;



திருப்பருப்பதம் பாட்டு :- 2925



திருஇந்திரநீலபருப்பதம் பாட்டு :- 2925



திருவலிதாயம் பாட்டு :- 2928

2925. கூற்றுதைத்தார் மகிழ்ந்தகோ கரணம் பாடிக்
குலவுதிருப் பருப்பதத்தின் கொள்கை பாடி
ஏற்றின்மிசை வருவாரிந் திரன்ற னீல
பருப்பதமும் பாடிமற் றிறைவர் தானம்
போற்றியசொன் மலர் மாலே பிறவும் பாடிப்
புகலியர்தம் பெருந்தகையார் புனித மாகும்
நீற்றினணி கோலத்துத் தொண்டர் சூழ
நெடிதுமகிழ்ந் தப்பதியி னிலவு கின்ருர்: 1027

இத்தலத்தில் ஓராண்டில் ஆறுமாதம் தேவர் பூசை; ஆறுமாதம் மனிதர் பூசை; இயக்கர் முதலிய பலவகைத் தேவச் சாதியார்களும் தேவர் முனிவர் முதலியோர்களும் தொண்டர்களும் வழிபடும் வகைகள் பிள்ளையார் பதிகத்தினுள்ளும் நம்பிகள் பதிகத்தினுள்ளும் விரிக்கப்படுதல் காண்க. தேவபூசை தொடங்கும் காலமாகிய ஐப்பசிப் பூரணை அணுகிய உடன் அருச்சகர் இறைவர் திருமேனியில் வெண்ணெய்க் காப்பிட்டு மலேயினின்று கீழிறங்கி வந்துவிடுவர்; பின்னர் வரும்தேவ பூசையாகும் ஆறுமாதங்களும் தலம் பனியினல் மூடப்பட்டிருக்கும்; தலச் சிறப்புக்கள் சிவரகசியப் பேரிதிகாசத்தில் விரித்துக் கூறப்பட்டுள்ளன; ஆண்டுக் கண்டுகொள்க. பிள்ளையாரும் நம்பிகளும் இத்தலத்தைத் திருக்காளத்தியி னின்றபடியே பாடியருளினர். சுவாமி-**கேதார நாதர்**; அம்மை- **கேதாரகௌரியம்மை**; பதிகம் 2.

இங்குச் செல்லும் வழி மிகக் கடினம்; இன்னும் செவ்வனே உணரப் பட்டிலது. ஆளுடைய அரசுகள் புராணமும் பார்க்க.

கௌரிகுண்டினின்றும் பீமகுண்டா-ராமபாடல முதலியவற்றின் வழி போக வேண்டுமென்பர்; அரித்து வாரத்தினின்றும் 200 நாழிகையளவில் இமயமலேச் சரிவில் உள்ளதென்பர்; இருடிகேசம் (ரிஷிகேஷ்) நிலேயத்தின்றும் 146 நாழிகையளவிலும் அடையலாகும் என்பர்.

2925. (இ-ள்) கூற்றுதைத்தார் மகிழ்ந்த கோகரணம் பாடி-கூற்றுவனே உதைத்தருளிய இறைவர் மகிழ்ந்து வீற்றிருக்கும் திருக்கோகரணத்தினேயும் பாடியருளி; குலவு... கொள்கைபாடி - விளங்கும் திருப்பருப்பதத்தின் சிறப்பினேப் பாடி; ஏற்றின்...பருப்பதமும் பாடி - இடபத்தின்மேல் எழுந்தருளி வரும் இறைவரது திருஇந்திரநீல பருப்பதத்தினேயும் பாடி; மற்று...பிறவும் பாடி-மற்றும் இறைவருடைய திருத்தானங்களேயும் போற்றிய திருப்பதிகள் பிறவற்றையும் பாடி யருளி;புகலியர்தம்...நிலவுகின்ருர்-சீகாழிப் பதியவர்களின் தலேவராகிய பிள்ளேயார் தூயதாகும் திருநீற்றின் விளக்கம் மிக்க கோலமுடைய திருத்தொண்டர்கள் சூழ்ந்து வர மிகவும் மகிழ்ந்து அந்தப் பதியிலே தங்கியருள்கின்ருராகி,

(வி-ரை) கோகரணம் பாடி-பதிகம் ''கோகரணமே'' என்று பதியினேப் பற்றியது என்பது குறிப்பு.

பருப்பதத்தின் கொள்கை-இப்பதியின் தன்மைகளேயும் வழிமொழிகளேயும் பற்றிய

பதிகக் குறிப்புப்பெறக் **கொள்கை** என்றார்; நம்பிகள் பதிகமும், 1614-ல் தலவிசேடமும் (III)- பக். 760) பார்க்க.

மற்றிருவர் தானம் போற்றிய சொன்மலர் மாலை பிறவும் பாடி-இவை இன்னவென் றறியக்கூடவில்லை; வடநாட்டில் உள்ள வாரணாசி முதலிய பதிகளையும் குடக்கில் உள்ள ஏனைப் பதிகளையும் பாடிய பதிகங்கள் போலும்; இவை கிடைத்தில!

நீற்றினணி கோலத்துத் தொண்டர்- "திசையனைத்து நீற்றினொளி தழைப்ப" (2917); இவர்களைப்பற்றி முன் (2916) உரைத்தவை பார்க்க. **புனிதமாகும்- ஆகும்**-செய்யும்; ஆக்கும் எனப் பிறவினைப் பொருளில் வந்தது.

நெடிது-மிகவும்; நீண்டகாலம் என்றலுமாம்.

நிலவுகின்றார் நிலவுதல்-தங்கியிருத்தல். ஆளுடைய அரசுகளும் இம்மலையிற் றிருப்பணியாயின செய்து தங்கியருளினார் (1612) என்பதும் இங்கு நினைவுகூர்க. **நிலவுகின்றாராய்ப் போற்றி-உன்னி-மீள்வார்-போந்தார்** - என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. **நிலவுகின்றார்**-முற்றெச்சம்.

பாடி மகிழ்ந்திறைவர் தானம்—என்பதும் பாடம் 1027

திருக்கோகரணம்

திருச்சிற்றம்பலம் திருவிராகம் பண்-சாதாரி, 3-ம் திருமுறை

என்றுமரி யானயல வர்கியலி சைப்பொருள்க ளாகியெனதுள்
நன்றுமொளி யானொளிசி றந்தபொன்மு டிக்கடவு ணண்ணுமிடமாம்
ஒன்றியம னத்தடியர் கூடியிமை யோர்பரவு நீடரவமார்
குன்றுகணெ ருங்கிவிரி தண்டலைமி டைந்துவளர் கோகரணமே. (1)

கோடலர வீனும்விரி சாரன்மு னெருங்கிவளர் கோகரணமே
ஈடமினி தாகவுறை வானடிகள் பேணியணி காழிநகரான்
நாடியத மிழ்க்கிளவி யின்னிசைசெய் ஞானசம் பந்தன்மொழிகள்
பாடவல பத்தரவ ரெத்திசையு மாள்வர்பர லோகமெளிதே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– எனதுள் நன்றும் ஒளியான் - ஒளி சிறந்த பொன்முடிக் கடவுளாகிய சிவன் நண்ணுமிடம் கோகரணமே.

பதிகப் பாட்டுக் குறிப்பு:– (1) அயலவர்க்கு என்றும் அரியான் என்க. அரியான்-அறிதற்கரியவன். **இயலிசை...ஒளியான்** - இயலு மிசையுமாகிய தமிழின் வரும் பொருள்களாகி என்னுள்ளே நின்று நன்கு காட்டியருளும் ஞானவொளி யானவன்; **ஒளி...கடவுள்**-பேரொளிப் பிழம்பாகிய திருமேனியுடையவர்; பேரொளியாகக் கோடிசூரியப் பிரகாசமுடையவராகத் தியானித்தல்வேண்டுமென்பது சிவாகமங்களின் விதி. "ஓவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி" (முருகு); **நீடரவமார் குன்றுக ணெருங்கிவிரி**

தண்டலைமிடைந்துவளர்-நாட்டுச் சிறப்பினை உள்ளபடி தன்மையணியிற் கூறியருளியது; மேல்வரும் பாட்டுக்களும் பார்க்க;- **(2) மாதருட ஞடவர்கள்...தூஉய்** - காசியிற்போலவே இப்பதியிலும் யாவராயினும் அன்பர்கள் தாமே இறைவரைத் தீண்டி வழிபட உள்ள நிலை காண்க;- **(3) சமயங்களை வகுத்தவன்**-உயிர்கள் அவ்வவற்றின் பக்குவபேதங்கட்கேற்ப உணர்ந்து வரும்படி பலவேறு சமயங்களையும் இறைவரே வகுத்தருளினர் என்பது; இவை புறச்சமய முதலிய எல்லாம். மேல் ஆறு சமயங்கள்(6) என்றது அகச்சமயங்கள்; ''கடவுள், பாலரை யுணர்த்து மேலவர் போலக்,கேட்போ ரளவைக் கோட்படு பொருளால், அருளிய கலைக ளலகில வாலவை, பலபல சமயப் பான்மைத் தன்றே, அஃதால், அந்நூற் றன்மை யுன்னிய மாந்தர், இதுவே பொருளென் றதனிலை யறைதலின், வேற்றோர் பனுவ லேற்றோர்க்கிசையா, மாறுபடு கூறுவ ரதனாற், புறச்சம யங்கள் சிறப்பில வாகி, அருளில் மாந்தரை வெருளுற மயக்கி,யலகைத் தேரி னிலையிற்றீரும், ஈங்கிவை நிற்க நீங்காச் சமயம்,மூவிரு தகுதி மேவிய தாமும், ஒன்றேடொன்று சென்றுறு நிலையில், ஆறு மாறா வீறுடைத்து'' (சங்கற்.நிரா-பாயி) எனவரும் உமாபதி சிவாசாரியார் திருவாக்கும், பிறவும் காண்க; **துறைத்துறை... சாரன்மலி** - குன்றுகள் நெருங்கிய அந்நாட்டு நீர்வளம். **மதகைக் குறைத்தல்**-மதகுகளுட் புகாவாறு பெருகுதல்;—**(4) இலை...படை**-திரிசூலம்; **அலைத்தலை தொகுத்த புனல்**-பெருகி வந்ததனைச் சிறுகவைத்த கங்கை. ''பரந்தெழுந்த புனற்கங்கை பனிபோலாக'' (தேவா); **தொகுத்தல்**-சுருக்குதல்; **அரிகள்... விளையாடி நிகழ்**- சிங்கம்- யானை - காட்டுப்பன்றி - பிடிகள்- இவை, இடத்தின் தெய்வத் தன்மையாற் பகைமையின்றிக் கூடி விளையாடுவன என்க; ''பெரு நலங்கிளர் நாடு மெண்ணில''(1616) என்றது இந்நாட்டினை உள்ளிட்டது;—**(5) படைத்தலை... நல்கு**-அந்நாட்டுக் குடிச் சிறப்பு; வேடர்களும் மறவர்களும் வழிபட உள்ள சிறப்பு. கண்ணப்ப நாயனுர்- திருக்குறிப்புத்தொண்ட நாயனுர் புராணங்கள் பார்க்க. **பழிதீர நல்கும்**-கொலைவேடர் மறவர் முதலிய அவர்களுக்கும் வரங்கொடுத் துய்யச்செய்யும்;—**(6) ஆறு சமயங்களும்... ...கூறும்**-இங்கு அகச்சமயத்தவர்கள் பலரும் கூடி வழிபடும் சிறப்பு; -**(7) நல்ல......அருளும்**- பெண்களின் வழிபாட்டுச் சிறப்பும், கொடுநோய்களும் தீர்த்து அஞ்சல் தரும் சிறப்பும்; **புகல்**-அபயம்;- **ஆகமம் மிக**-இங்குச் சிவாகம விதிப்படி சிறந்த வழிபாடு நடத்தல் குறிப்பு; இன்றும் காணத்தக்கது; **(8) புரைத்தலை... புகைசெய்**-மறைமுனிவர் வேள்விச் சிறப்பு; **புரை**-குற்றம்; **தலை**-குற்றங்களின் மூலம்; காரணம்;—**(9) வில்லிமை**-வில்வித்தைத் திறம்; **அரக்கன்**-இராவணன்; **உயிர் செற்றவன்**- இராமன்; **வேதமுதலோன்**-பிரமன்; **எல்லையில்...புலர்த்தி வளர்**-கடலும் மலையும் புணர்ந்த நாட்டுவளங் கூறியது; ''நெய்தலுங் குறிஞ்சியும் புணர்நிலம்'' (1118); இஃது இந்நாட்டின் இயல்;- **(10) பாசமதறுத்தவன்... மன்னன்**- அருச்சுனன்; **கூச... நல்க** - வேடனாய் வந்து அருச்சுனற் கருளிய வரலாறு; **பாசமதறுத்த**-''வஞ்சமனத் தஞ்சொடுக்கி வைகலுநற் பூசனையால், நஞ்சமுது செய்தருளு நம்பியென வேநினையும்,பஞ்சவரிற் பார்த்தனுக்கு''(கோளிலி-தேவா); —**(11) ஈடம்**-இடம்; எதுகையின் பொருட்டு முதனீண்டது. **நாடிய**-நேரே சென்று கண்ணுற் காணாது மனத்தாற் கண்டு கூறிய. காளத்தியிலிருந்தபடி பாடியருளிய சரித வரலாற்றின் அகச்சான்று. **திசை-ஆள்வர் பரலோக மெளிது**-திருக்கேதாரம்(11) பார்க்க.

தலவிசேடம்:- திருக்கோகரணம்-இஃதொன்றே துளுவநாட்டில் உள்ளதலம். ஆளுடைய பிள்ளையாராலும் ஆளுடைய அரசுகளாலும் பாடப்பெற்றது; மேல் கடற்கரையில் உள்ளது

பெருஞ் சிறப்பு. அதுபற்றிக் ''கடல் வட்டமும்''(9) எனப் பிள்ளையரும், ''மாகடல் சூழ்'' என்று அரசுகளும் அருளியமை பதிகங்களுட் காண்க. கடல்வளமே யன்றி நாட்டு நீர்வளமும் மலைவளமும், காட்சிவளமும் என நானில வளங்களும் மயங்க உள்ளது சிறப்பு; பிள்ளையார் பதிகம் காண்க. அரசுகள் கயிலை சென்றருளிய வழியில் நடந்து கடந்தருளிய நாடுகளுள் இப்பதியினை உள்ளிட்டது துளுவநாடும் ஒன்றாமென்பது ''பெருந லங்கிளர் நாடு மெண்ணில பிற்பட''(1616)என்றதனுற் கருத உள்ளது இங்குச் செல்கின்றபோது இப்பதியின் திருத்தாண்டகப் பதிகத்தை ''மாகடல் சூழ் கோகரண மன்னி னானே'' என்று பாடியருளினர் என்பதும் கருதப்படும். தனது இலங்கையில் தாபிக்கும் பொருட்டு இலிங்கமூர்த்தியை இராவணன் சிவபெருமானிடம் பெற்றுக் கொணர்ந்தான் என்றும், தேவர்களது வேண்டுகோளின்படி விநாயகக் கடவுள் அதனை வாங்கிக் கீழே ஊன்றவைத்தருளிவிட்டனர் என்றும், பின்னர் இராவணன் அதனைப் பெயர்த்தெடுத்துப் போக எண்ணிக், கயிலை பெயர்த்தசைத்த தனது முழு வன்மையினையும் கொண்டு எடுக்க முயன்றும் இயலாது இறைவர் வேரூன்றியிருந்தனர் என்றும், அப்போது அத்திருமேனி பசுவின் காதுபோன்று உள்வளைந்து(**கோ**-பசு; **கர்ணம்**- காது) குழைந்தமையால் இப்பதிக்குக் கோகர்ணம் எனவும் இறைவருக்கு மகாபலேசுவரர் எனவும் பெயர்கள் போந்தன என்றும் தலவரலாறுகள் கேட்கப்படுவன சுவாமியின் திருவுருவம் சிறிய அளவில் முந்திரிவிதை போன்ற திருவடிவுடையது. இங்குச் சிவாகமங்களின்படி வழிபாடுகள் நடைபெறுதலாகிய சிறப்பும் அன்பர்கள் யாவரும் நேரே இறைவரது திருமேனியைத் தீண்டி வழிபடவுள்ள சிறப்பும் பிள்ளையாரது பதிகத்துப் போற்றப்பட்டன; ''மாதரொடு மடவார்கள் வந்தடி யிறைஞ்சிநிறை மாமலர்கடூஉய்'' (2);''ஆறுசமயங்களும் விரும்பியபடி பேணியர னுகமமிகக் கூறுமணம்'' (6); சுவாமி-**மகாபலேசுவரர்**; அம்மை-**கோகரண நாயகி**; கோயிலும் ஊரும்-**மகாபலேசுவரம்** எனப்பெறுவன; பதிகம் 2.

இது (M.S.M.Ry.) அரக்கோணம், ரேணுகுண்டா, குண்டக்கல், கடக், ஹுப்ளி சந்திப்பு (Junction)க்களின் வழியாய் லோண்டா சந்திப்புச் சேர்ந்து, அங்குநின்றும் வடக்கிற் செல்லும் புனு இருப்புப்பாதையில் **வார்த்தார்** என்ற நிலையத்தினின்றும் மேற்கில் கற்சாலை வழி 32 நாழிகையளவில் பல நிலைகளில் இடையீடிட்டு அடையத்தக்கது; மோட்டார் பஸ் வசதி உண்டு; கடற்கரையில் உள்ள பதி; (2) ஜோலார்பேட்டை, பௌரிங்பேட்டை, பெங்களூர், பிரூர்(Birur), ஹரிஹர் சந்திப்புக்களின் வழி ஹுப்ளி சேர்ந்து பின்னர் முன்போலவே சென்று மேற்செல்வது மற்றொரு வழி. இவ்வழியில் இருப்புப்பாதைப் பயணம் சிறிது குறைவதாம். ஹுப்பிளி யிலிருந்தும் மோட்டார்பஸ் மூலம் 100 மைலிலும் அடையலாம்.

திருப்பருப்பதம்

திருச்சிற்றம்பலம் — பண்-வியாழக்குறிஞ்சி 1-ம் திருமுறை

சுடுமணி யுமிழ்நாகஞ் சூழ்தர வரைக்கசைத்தான்
இடுமணி யெழிலானை யேறல னெருதேறி
விடமணி மிடறுடையான் மேவிய நெடுங்கோட்டுப்
படுமணி விடுசுடரார் பருப்பதம் பரவுதுமே. (1)

வெண்செநெல் விளைகழனி விழவொலி கழுமலத்தான்
பண்செலப் பலபாட லிசைமுரல் பருப்பதத்தை
நன்சொலி னுற்பரவு ஞானசம் பந்தனல்ல
ஒண்சொலி **னிவைமாலை யுருவெணத் தவமாமே**. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—நாகம் அரைக்கசைத்தான், எருதேறி, விடமணி மிடறுடையான், புலித்தோலுடையான் என்றின்ன தன்மைகளா லறியப்படும் இறைவன் எழுந்தருளியுள்ள நெடுங்கோட்டுப் பருப்பதம் பரவுதுமே.

பதிகப் பாட்டுக் குறிப்பு:—(1) **சுடுநாகம்-மணியுமிழ் நாகம்** என்று தனித் தனிக் கூட்டுக; **இடுமணி**-யானைகளின் பக்கங்களில் இடும் இரட்டை மணிகள். ''படுமணி யிரட்டு மருங்கில்'' (முருகு); **யானை ஏறலன் எருதேறி** - ''கடகரியும் பரிமாவுந் தேருமுகந் தேறாதே, இடபமுகந் தேறிய வாறு'' (திருவா); ''அயிரா வணமேறா தானே றேறி'' (தேவா); **ஏறி**-பெயர்; **ஏறியவர். நெடுங்கோட்டுப்- பருப்பதம். நெடுங்கோடு**-நீண்ட உயரமாகிய மலை. மலையின் மேலே 40 நாழிகையளவு ஏறிச்சென்று சேரவேண்டிய நிலை குறித்தது. **நெடுங்கோட்டுப் படுமணி**-மலைபடு மணிகளாகிய முத்து அரதனம் முதலியவை என்றலும் அமையும்;—***(2)*** **திரைய**-திரையுண்டாக; **திரை**-தோலின் சுருங்குதல். **உள்கும்**- நினைக்கும்; **உள்கும்**-தமக்குள் வரும் நாள்களை எண்ணலுறும்; **தோற்றம்**- யோனி பேதம்;—***(3)*** **துனி**-நோய்; **தோன்றி**-பிறவியில் வந்து; **ஓர்...ஆதல்**-ஓர்ந்து செய்யும் நல்வினையினால் வரும் பயனைப் பெறவேண்டுமானால்; **இரண்டுற மனம் வையேல்**-இரண்டாவதாக ஒன்று உண்டு என்று எண்ணுதீர்கள்;''ஒன்றியிருந்து நினைமின்கள்'' (தேவா) என்ற கருத்து என்றலுமாம்;—***(5)*** **துறை பல சுனை**- பெருமலை யாதலின் பல சுனைகளையும் பிற நீர்நிலைகளையும் உடையது; **வானவர் மகிழ்ந்தேத்த**-வானமளாவ வுயர்ந்த பெருமலை யாதலின் இங்கும் தேவ பூசை பேசப்படும்; திருநந்தி தேவர் வரம்பெற்று இம்மலையுருவாய் இறைவரைத் தாங்கி நிற்பதால் வானவர் ஏத்த என்றலுமாம்; **பறைபடு**-பறைபோல முழங்கும்;—***(6)*** **சீர்கெழு...மனம் வையேல்**-மூன்றாம் பாட்டுப் பார்க்க;—***(7)*** **புகை**-தூபம்; **விரை**-சாந்தமும் சுகந்த மலர்களும்;''விரையிரண்டாந் தளராத விலேபனமுந் தயங்குசுகந் தமுமென்ன'' (பேரூர்ப் புராணம்-மருதவரை-32); **கமலம்**-தாமரை; மறையவர்க்குரிய திருவடையாள மாலை; இறைவர் மறையவர் என்ற குறிப்பு. தாமரை சிவபெருமானது அருச்சனைக்குச் சிறப்பாய்க் கொள்ளப்படும்;– ***(8)*** **நெடுஞ் கிணறு**-நினைப்புக்கள் பலவும் பலதுறையும் ஆழ்ந்து செல்வதாலும் இறைக்க இறைக்க மேலும் ஊறுவதாலும் கிணறு எனப்பட்டது; ''ஆழ முகந்த வென்னை.'' **மனத்தினை... அடையாமை - வலித்து**-வற்புறுத்தி உலகச் சார்பினின்றும் இறைவன்பால் திருப்பி;—***(9)*** **அடையாமல்- பரவுதுமே** என்று முடிக்க;—***(10)*** **சடம் கொண்ட**-ஞானமின்றிப் பருப்பொருள் கொண்ட; **சடம்**-சித் அல்லாதது; **மடங்கொண்ட விரும்பியர்**-அறியாமையால் பொய் பலவும் விருப்பம் கொண்டவர்கள்; **பேய்த்தேர்ப் பின்...செல்வார்**-பேய்த்தேர்ப் பின்-(குறித்து) நீர்பெறப் போதலாகிய வீண்செயல் போல; **செல்வார்**-செல்பவர்களே; விளி வேற்றுமை. **போதுமின்**-அதனைவிட்டு இங்குப்போதுங்கள்; **படம்**-உரிவை;– ***(11)*** **வெண் செந்நெல் -** நெல்லின் சிறந்தவகை; **இசைமுரல்**-தேவகானங்களும் தேன்வண்டுகளி னிசைகளும்.

உரு எண-குறித்த பொருளை உருவெளிப்படும்படி அழுந்தி அறிய; **தவம்** - சிவபூசை - தவப்பயன்.

தலவிசேடம்:– திருப்பருப்பதம்-இது வடநாட்டுப் பதிகளுள் 1-வது பதி; ஸ்ரீபர்வதம், ஸ்ரீசைலம், மல்லிகார்ச்சுனம் என வழங்கும். அர்ச்சுனம்-**மருது**; மருது-தலை-இடை-புடை என மூன்ருமென்றும் அவற்றுள் இது தலைமருது (மல்லிகார்ச்சுனம்) என்றும் கூறுவர். ஏனையிரண்டாவன திருவிடைமருதூரும் (சோழ நாடு), திருப்புடைமருதூரும் (பாண்டிநாடு) ஆம் என்பர். திருப்புடை மருதூரே திருப்பிடவூர். தேவார வைப்புத்தலமாம் என்பர். சிலாத முனிவர் திருமகனுராகிய திருநந்திதேவர் இறைவரைத் தாங்கி நிற்பதற்காக வரங்கிடந்து தவமியற்றி மலையுருவம் பெற்று நிற்கும் தலமென்பது கந்தபுராணம்.

''பருப்ப தப்பெயர்ச் சிலாதனற் பாலகன் பரமன்
இருப்ப வோர்வரை யாவனென் றருந்தவ மியற்றிப்
பொருப்ப தாகியே யீசனை முடியின்மேற் புனைந்த
திருப்ப ருப்பதத் **தற்புதம் யாவையுந்** தெரிந்தான்''

(கந்தபு-வழிநடைப்ப-5); இதன் அளவிறந்த மேன்மைகளைச் சிவரகசியப் பேரிதி காசத்தினுட் காண்க. இதனைச் சென்று சேரும் வழியின் அருமைபற்றிச் ''செல்லலுற வரியசிவன் சீபற்பத மலையே'' என்று நம்பிகள் பதிகத்துள் விதந்து பாராட்டியருளினர். ''பைங்கண்வெள் ளேறதேறி'' என்ற அரசுகள் திருவாக்குப் புராண வரலாறு குறித்தது. நந்திபெருமான் தவஞ்செய்து வரம்பெற்ற வரலாற்றினதுண்மையினை ''நந்தியால்'' என்ற இதனை அடுத்த பெரு நகரத்தின் பெயர்தானும் விளக்கிநிற்கும். சுவாமி-**பருப்பத நாயகர்**; அம்மை-**பருப்பத நாயகி**; பதிகம் 2.

இது கர்னூல் சில்லாவைச் சேர்ந்த **நந்தியால்** (Ry) நிலையத்தினின்றும் வடகிழக்கில் 60 நாழிகையளவில் அடையத்தக்கது; அதனில் ஏறக்குறைய 40 நாழிகை யளவும் மலையேற்றமாகிய வழி. இடையிடை இளைப்பாறும் இடங்களும் வசதிகளும் உண்டு.

திருஇந்திரநீலபருப்பதம்

திருச்சிற்றம்பலம் — பண்-இந்தளம் 2-ம் திருமுறை

குலவு பாரிடம் போற்ற வீற்றிருந், திலகு மான்மழு வேந்து மங்கையன்,
நிலவு மிந்திர நீல பர்ப்பதத், துலவி னுனடி யுள்க நல்குமே (1)

கந்த மார்பொழில் சூழ்ந்த காழியான், **இந்தி ரன்ரெழு நீல பர்ப்பதத்**
தந்த மில்லியை யேத்து ஞானசம், பந்தன் பாடல்கொண் டோதி வாழ்மினே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– இறைவர் இந்திரநீல பர்ப்பதத்துள் எழுந்தருளியுள்ளார். அவருடைய திருவடிகளை உள்க அவர் நன்மை நல்குவர். அவரை ஏத்தியுய்மின்.

2926. தென்றிசையிற் கயிலையெனுந் திருக்கா ளத்தி
போற்றியினி தமர்கின்றூர் திரைசூழ் வேலை
ஒன்றுதிரு வொற்றியூ ருறைவார் தம்மை
யிறைஞ்சுவது திருவுள்ளத் துன்னி யங்கண்
இன்றமிழின் விரகரருள் பெற்று மீள்வா
"ரெந்தையா ரிணையடியென் மனத்த" வென்று
பொன்றரளங் கொழித்திழிபொன் முகலி கூடப்
புனைந்ததிருப் பதிகவிசை போற்றிப் போந்தார். 1028

பதிகப் பாட்டுக் குறிப்பு:– *(1)* **குலவு**-சூழ்ந்து பரவும். **நல்கும்**-நலங்களைத் தரும் உலவினுன் தன் அடியை உள்கும் பேற்றினை அடியவர்க்கு நல்கும் என்றலுமாம்; —*(3)* **ஏத்துவார் நம்பன்**-ஏத்துவார்க்கு நம்பன் (**நம்பன்**-நம்பி அடையத் தக்கவன்; அடையப்படுவன்);—*(4)* குணமதாக வாழ்த்துவோம்; அதனுல் வினை நாசமாம்; நன்மை வரும் பாச நீக்கமும் சிவப்பேறும் பெறுதற்குரிய சாதனங் கூறியபடி;—*(6)* **எண்ணிலார்** நினையாதார்;—*(9)* **பாவியாது எழுவாரை**-எண்ணுது செல்பவர்களை; **கோவியா**-கோபித்து;—*(10)* **எட்டனை**-எள்ளளவும்;

இழிவு சிறப்பும்மை தொக்கது;—*(11)* **இந்திரன் தொழும் நீல பர்ப்பதம்**-தல வரலாறும் பெயர்க்காரணமும் கூறியபடி

தலவிசேடம்:– திருஇந்திரநீல பருப்பதம்-வடநாட்டில் இரண்டாவது பதி. இந்திரன் பூசித்த காரணத்தால் இப்பெயர் பெற்றது; மேகங்கள் மேலே கவிந்து சூழ்ந்திருப்பதால் நீலபர்ப்பதம் எனப்பெற்றது போலும். இக்காரணம் பற்றிக் கோயம்புத்தூர்ச் சில்லாவை அடுத்து "நீலகிரி" என்றொரு பெயர்சிறந்த மலையிருப்பதும் காண்க. இந்திரன் பூசித்தமை பதிகத்துத் திருக்கடைக்காப்பினுட் காண்க. சுவாமி-**நீலாசலநாதர்**; அம்மை-**நீலாம்பிகை**; பதிகம் *1.*

இது நார்க்கட்டியகன்ஜ்-பிக்னதொரி (B.N.W.Ry) இருப்புப்பாதையில் பிக்னதொரி நிலையத்தினின்றும் *130* நாழிகையளவில் உள்ளது. பாதை கடினம்.

மற்று இறைவர் தானம்:—

இதனுல் குடக்கில் (மேல்கடற்றிசை) உள்ள கோடீச்சுரமும், வடக்கில் உள்ள விசுவேசம் (காசி), சோமேசம், பீமேசம் முதலாகிய சோதிலங்கப் பதிகளும், பிரயாகை,மதுரை,(மாத்ரா), காஞ்சி, அவந்திகை முதலிய முத்தித் தலங்களும், பிறவும் கருதப்படும். இவற்றின் பதிகங்கள் கிடைத்தில! **"போற்றிய சொன்மலர் மாலை பிறவும் பாடி"** என்றதனுல் பிள்ளையார் திருப்பதிகங்கள் பாடியருளினர் என்பது விளங்கும்.

2926. (இ-ள்) தென்றிசையில்... அமர்கின்றூர்-தெற்குத் திசையில் உள்ள திருக்கயிலை என்று சொல்லப்படும் திருக்காளத்தியினைத் துதித்து இனிதாகஅங்கு விரும்பி எழுந்தருள்பவராய்; திரைசூழ்...மீள்பவர்-அலைகள் சூழ்ந்த கடலின் கரை சார்ந்த திருவொற்றியூரின் கண்ணே எழுந்தருளும் இறைவரைச் சென்று வணங்கும் நிலையினைத் திருவுள்ளத்தே நினைந்தருளி அங்குநின்றும் இனிய தமிழின் விரகராகிய பிள்ளையார் இறைவரது

திருவருள் பெற்று மீண்டு மேற்செல்வாராகி; எந்தையார்...போந்தார்-''எந்தையார் இணையடி என்மனத் துள்ளவே'' என்ற கருத்துடன், பொன்னுமுத்தும் கொழித்து ஓடிவரும் பொன்முகலி யாற்றியுனேங்கூடப் பொருந்தக் கூறிய திருப்பதிகவிசையினுற் போற்றி மேலே சென்றருளினர்.

இந்நான்கு திருப்பாட்டுக்களும் ஒருமுடிபுகொண்டுரைக்கநின்றன.

(வி-ரை) திரைசூழ்...உன்னி-திருவெண்பாக்கம் முதலிய பதிகளை வணங்கி யணைந்தபோது, **கண்ணப்ப நாயனுரை உன்னி**க் காளத்தியை அணையும் வேட்கை (2911)யுடன் எழுந்தருளினர்; அதுபோலவே இங்குத் திருக்காளத்தி நின்றும் திருவொற்றியூருறைவாரை இறைஞ்ச உன்னி எழுந்தனர்; அங்கு நோக்கிச் செல்வார் வழியிடைப்பட்ட பதிகளையும் வணங்கிச் சென்றருளுவர்; தண்டக நாட்டில் இறைவர் கோயில்கள் கண்டு போற்றி வருதல் (2857) கருத்துட்கொண்டு பிள்ளையார் சீகாழியினின்றும் எழுந்தருளினுராதலின் அந்நாட்டின் சிறந்த பதியாகிய ஒற்றியூரினை நினைந்தனர் என்க. இது, பின்னர்த் திருமயிலையின் அற்புத நிகழ்ச்சி தொடர்ந்து உளதாகும் பொருட்டு இவைரருளால் பிள்ளையாரது திருவுள்ளத்தில் எழுந்ததுமாம் என்க.

அங்கண்-மீள்வார்-அங்குநின்று மீண்டு எழுந்தருளி வருகின்றவராகிய பிள்ளையார். மீளுதல்-சென்ற வழியே திரும்புதல்.

அருள் பெற்று-இறைவர்பால் விடைபெற்று.

''எந்தையா ரிணையடி என்மனத் துள்ள'' என்று-இது திருமலையினின்றும் மீண்டருளிப் புறப்படும் போது இறைவரது திருவடியினைத் தமது திருமனத்துட்கொண்டு துதித்து மேல் எழுந்தருளிச் செல்லும் நிலை; பதிகக் குறிப்பு. **மனத்த**-மனத்தில் உள்ளன; அகரவீற்றுப் பன்மைப்பெயர். **என்று**-என்று பதிகத்தாற்றுதித்து. ''எந்தையார்...மனத்துள்ளவே'' பதிக முதற்பாட்டின் ஈற்றடி. இவ்வாறே முன்னர்த் திருவாரூரினின்றும் புறப்படும்போது ''அவன தாரூர் தொழுதுய்யலாம்; மனமே மறவாது தொழுக'' என்று பாடிப் புறப்பட்டமையும் காண்க (2416). கச்சி யினின்றும் ''அவனென் னெண்ணத்தானே'' என்று அரசுகள் அருளிப் புறப்பட்டதும் (1593) கருதுக.

பொன்முகலி கூடப் புனைந்த திருப்பதிகம்-பதிகத்துள் ''முகலியின் கரையினிற்-காளத்தி'' என்று முகலி ஆற்றினையும் சேர்த்தே மலையினைத் துதித்ததை எடுத்துக் காட்டியபடி.

போந்தார்-மேலே சென்றருளினுர். *1028*

III திருக்காளத்தி

திருச்சிற்றம்பலம் பண்-கொல்லி 3-ம் திருமுறை

சந்தமா ரகிலொடு சாதிதேக் கம்மரம்
உந்துமா முகலியின் கரையினி லுமையொடும்
மந்தமார் பொழில்வளர் மல்குவண் **காளத்தி**
எந்தையா ரிணையடி யென்மனத் துள்ளவே. (1)

அட்டமா சித்திக ளணைதரு காளத்தி
வட்டவார் சடையனை வயலணி காழியான்
சிட்டநான் மறைவல ஞானசம் பந்தன்சொல்
இட்டமாப் பாடுவார்க் கில்லையாம் பாவமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– *காளத்தியினின்றும் நீங்கிச் சென்றாலும் எந்தையார் இணையடி என் மனத்து நீங்காதுள்ளன என்று துதித்து விடைபெற்றுச் சென்றது.*

பதிகப் பாட்டுக் குறிப்பு:– *(1)* சந்தம்-மணம்; **ஆர்**-சந்தனம். சந்தம் என்றதனை அகிலொடுங் கூட்டுக; **சந்தம்**-சந்தனம், **ஆர்**-பொருந்திய என்றுமாம். **தேக்கு** - இதனை, "பெரிய தேக்கி னப்புறஞ் சென்றால் நீண்ட குன்றினுக் கயலேயோடுங் குளிர்ந்த பொன்முகலி" *(743)* என்று மலையினை மறைக்கும் அளவு வளமுடையனவாகிச் செறிந்தன என்று கூறியதனை நினைவுகூர்க; **சாதி**-உயர்வு குறித்தது. **உந்துதல்**- பெருவெள்ளத்தில் அலைத்து வருதல்; **உமை**-ஞானப் பூங்கோதையம்மை. இம்மலை திருக்கயிலையே என்ற குறிப்புப்பெற இப்பதிகத்துள் இப்பெயராற் போற்றியருளினர். **உமையொடும் எந்தையார்** - "வரையென மாதினொடும் வீற்றிருந்தான்" என்று திருத்தோணியைப் போற்றியவாறு நினைந்து (தென்)கயிலாயப் பதியாகிய இவ்விறைவரே அங்கு வந்து ஞானவமுது அளித்த **எந்தையார்** என்றதும் குறிப்பு. **மனத்து உள்ளவே**-கண்ணுற் காணும் இந்நிலையினின்று நீங்கினும் மனத்துள் நீங்காதுள்ளன என்றது. இக்குறிப்பு இப்பதிகம் விடைகொண்டு புறப்படும்போது அருளியதென்பதற்கு அகச்சான்று;—**(2) சாலமா பீலி**-மயிற்பீலியின் மிகுதி; மயில் குறிஞ்சிக் கருப்பொருள்; மயில்கள் வாழுமிடங்களில் ஆயிரக்கணக்காகக் காணப்படுவன. **காலம்**-வெள்ள காலம்; பருவம் பொய்யாது வருதலும் குறிப்பு; உரிய காலம் என்பதுமாம். **நினையுமா நினைவதே**-அவரை நினைவதே நினைவு எனப்படும். **ஆ**-ஆறு; ஈறு குறைந்து நின்றது;—**(3) வீங்கு**-மேன்மேற் பெருகும்:– **(10) வாங்கிடும்**-போக்கும்;—**(11) அட்டமா சித்திகள் அணைதரு**-தலவிசேடக் குறிப்பு. **சிட்டம்**-நல் ஒழுக்க விதி.

தலவிசேடம்:– திருக்காளத்தி – கண்ணப்ப நாயனர் புராணத்திறுதியில் உரைக்கப்பட்டது.

2927. (இ-ள்) மன்னுபுகழ்...போந்து-நிலைபெற்ற புகழையுடைய திருத்தொண்டர் கூட்டத்தோடும் கூடி வேதங்களின் நெறி வாழும்படி அவதரித்த பிள்ளையாரும் மலைகளையும், காடுகளையும், முன்னர்ச் சென்று வணங்கிய பதிகளையும்,பிறவற்றையும் கடந்து சென்று; முதல்வனார்...போற்றி-இறைவர் எழுந்தருளிய பதிகள் பலவற்றையும் வணங்கித் துதித்துப் போய்; பன்மணிகள்...வட்கரையில் நீடு-பல மணிகளையும் பொன்னையும் ஈர்த்துக்கொண்டும் அகில் சந்தனம் முதலிய மரங்களை மோதி அலைத்தும் ஓடுகின்ற பாலியாற்றின் வடகரையில் நிலைபெற்ற; சென்னிமதி... செல்வர்-தலையிலே மதியை அணிந்த இறைவரது திருவேற்காட்டினைத் திருப்பெருகு சிவஞானவமுதுண்ட செல்வராகிய பிள்ளையார் சென்றணைந்தருளினர்.

(வி-ரை) மலையும்... ...கடந்து - மலையுங் காடுகளுமாகப் பரந்த அந்நாட்டின் பகுதியிலே

2927. மன்னுபுகழ்த் திருத்தொண்டர் குழாத்தி னேடு
மறைவாழ வந்தவர்தா மலேயுங் கானும்
முன்னணேந்த பதிபிறவுங் கடந்து போந்து
முதல்வஞ ருறைபதிகள் பலவும் போற்றிப்
பன்மணிகள் பொன்வரன்றி யகிலுஞ் சந்தும்
பொருதலேக்கும் **பாலிவட கரையி னீடு**
சென்னிமதி யணிந்தவர் **தந்திருவேற் காடு**
சென்றணேந்தார் திருஞான முண்ட செல்வர். 1029

முன்னர் வந்தருளிய (பதிகள்முதலியவற்றின்) வழியே திரும்பச் சென்று. பிள்ளேயார் அங்குநின்றும் மீண்டருளிய வழியினேக் கூறியபடி; 2912 முதல் 2915 வரை பாட்டுக்களில் உரைத்தவை பார்க்க.

பதிகள் பலவும் போற்றி-*முன் அணேந்தவையும் பிறவுமாகிய நகரங்களுள் இறைவஞர் விளங்க எழுந்தருளிய பதிகள் பலவற்றிலும் வணங்கித் துதித்து; இவை திருக்காரிகரை, திருக்கள்ளில், திருநின்றவூர்? (பூசார் நாயஞர் பதி), வடதிருமுல்லே வாயில் முதலாயின என்பது கருதப்படும். அவற்றுள் திருநின்றவூருக்குப் பதிகம் இல்லே. ஆனுல் பூசலார் நாயஞர் மனக்கோயில் அமைத்த காலம் ''காடவர் கோமான் கச்சிக் கற்றளி யெடுத்து முற்ற, மாடெலாஞ் சிவனுக் காகப் பெருஞ்செல்வம் வகுத்தல் செய்த'' காலமாகும்; திருநின்றவூரில் பூசலார் நாயஞர் காலத்துக்கு முன் சிவபெருமான் கோயில் இருந்ததோ என்பது ஐயப்பாடு என்றும், அதுபற்றியே பூசலார், ''கங்கை, மடுப்பொதி வேணி யையர் மகிழ்ந்துறைவதற்கோர் கோயில் எடுப்பது மனத்துட் கொண்டார்'' (பூசல்-புரா-4) என்றும், அக் காடவர்கோமான் கி.பி.685-720 வரை ஆண்ட இராஜசிம்மன் என்றும், பூசலார் நிகழ்ச்சியின் பின்னரே திருநின்றவூரில் அந்நினேவின் பொருட்டுச் சிவாலயம் ஒன்று நியமிக்கப்பட்டது என்றும், ஆதலின் பிள்ளேயார் இங்குப் போற்றியிருத்தல் இயலாதென்றும் ஈண்டுச் சரித ஆராய்ச்சியாளர் கொள்வர்.*

பொன்வரன்றி - பொருது அலேக்கும் - *மணியும் பொன்னும் கனமுள்ள பண்டங்களாதலின் நீரின் அடியில் மணலோடு ஈர்த்துச் செல்லுதலும், அகிலும் சந்தும் ஆழாது மேல்மிதக்கும் பெரும் கண்டங்களாதலின் நீரின் வேகத்தால் மோதப்பட்டு அலேத்துச் செல்லுதலும் ஆகிய இயல்புகள்* ***வரன்றி-பொருது-அலேக்கும்*** *என்றவாற்ருல் கூறிய கவிநயம் காண்க.*

பாலி-*இது பழைய பாலாறு என்றும், கூவம்ஆறு என்றும் வழங்கப்படும்.*

நீடு-திருவேற்காடு-*என்று கூட்டுக.* ***நீடுதல்***-*பழமையாய் நிலேபெறுதல் தலவிசேடம் பார்க்க.*

திருஞானம்-*சிவஞானமாதலின் திரு என்ற அடைமொழி பற்றியே குறித்தனர், திருவிற் சிறந்தது சிவமேயாதலின்.* ***ஞானம்***-*ஞான அமுது.* *1029*

2928. **திருவேற்கா** டமர்ந்தசெழுஞ் சுடர்பொற் கோயில்
சென்றணைந்து பணிந்துதிருப் பதிகம் **பாடி,**
வருவேற்று மனத்தவுணர் புரங்கள் செற்ருர்
வலிதாயம் வந்தெய்தி வணங்கிப் போற்றி
உருவேற்ரு ரமர்ந்துறையு மோத வேலை
யொற்றியூர் கைதொழச்சென் றுற்ற போது
பெருவேட்கை தருவாழ்வு பெற்ற தொண்டர்
பெரும்பதியோ ரெதிர்கொள்ளப் பேணி வந்தார். 1030

2928. (இ-ள்) திருவேற்காடு...பாடி-திருவேற்காட்டிலே விரும்பி வீற்றிருந்தருளும் செழுஞ்சுடராகிய இறைவரது அழகிய திருக்கோயிலின்கண்ணே சென்று சேர்ந்து வணங்கித் திருப்பதிகம் பாடியருளி; வருவேற்று மனத்து அவுணர்...போற்றி -எதிர்த்து வரும் வேறுபட்ட மனமுடைய பகைவராகிய அவுணர்களுடைய முப்புரங்களையும் எரித்த இறைவரது திருவலிதாயத்தில் வந்து சேர்ந்து வணங்கித் துதித்து; உரு ஏற்ருர்...போது-உருவுடைய இடப ஏற்றினை உடைய இறைவர் விரும்பி வீற்றிருந்தருளும் குளிர்ந்த கடற்கரையில் உள்ள திருவொற்றியூரைத் தொழுவதற்குச் சென்றபோது; பெருவேட்கை...பேணி வந்தார்-மிக்க பெரிய விருப்பந் தருகின்ற வாழ்வு பெற்ற தொண்டர்களும், அந்தப் பதியிலுள்ளவர்களும் பிள்ளையாரை எதிர்கொள்ளும் பொருட்டு அன்புடனே வந்தார்கள்.

(வி-ரை) செழுஞ்சுடர்-''சோதியே **சுடரே** சூழொளி விளக்கே'' (திருவா) என்றபடி ஒளியுருவமாகி உள்ளே உயிரறிவை விளங்கவைக்கும் சுடர். **செழுமை** யாவது உயிர்க்குச் செழுமைதரு மியல்பு.

வரு-வேற்று மனத்து-அவுணர்-வருதல்-தீமை பூண்டு வேத சிவாகம விதிகளுக்கு மாறுபட்டு வருதல். **வேற்று மனம்**-மாறுபட்டுப் பகைமைபூண்ட மனம்; **அவுணர்** - திரிபுராசுரர்கள்.

ஓதவேலை-ஓதம்-குளிர்ச்சியுடைய; வேலை-வேலைக்கரையில் உள்ள.

பாடி-போற்றி-சென்றுற்றபோது-வினையெச்சங்களுக்குச் செல்வர் என்ற வினைமுதல் முன் பாட்டினின்றும் வருவிக்க.

செல்வர்-பாடிப் போற்றிச் சென்றபோது தொண்டர்-பதியோர் பேணி வந்தார்-என்று,வினையெச்சங்கள் பிறவினைமுதல் வினைகொண்டு முடிந்தன.

பேணி-பேணுதலாவது அன்புபூண்டு செய்கை செய்தல். **பெருவேட்கை தருவாழ்வு பெற்ற தொண்டரும் பதியோரும்** என்க. எண்ணும்மைகள் தொக்கன. **வாழ்வு பெற்ற தொண்டர்-வாழ்வு பெற்ற**-என்றதனை இரண்டிடத்தும் கூட்டுக. பிள்ளையாரை எதிர்கொள்ளும் வேட்கை தருதல் முன்னைத் தவத்தினுல் வரும் வாழ்வு என்பது. *1030*

2929. (இ-ள்) மிக்க...பாடி-பெருகிய திருத்தொண்டர்கள் தொழுதுகொண்டு வந்தணையவே பிள்ளையார் தாமும் எதிர்தொழுது சிவிகையினின்றும் இறங்கி ''விடையவன்''

2929. மிக்கதிருத் தொண்டர்தொழு தணையத் தாமும்
தொழுதிழிந்து ''விடையவ''னென் றெடுத்துப் பாடி
மைக்குலவு கண்டத்தார் மகிழுங் கோயில்
மன்னுதிருக் கோபுரத்து வந்து தாழ்ந்து
தக்கதிருக் கடைக்காப்புச் சாற்றித் தேவர்
தம்பெருமான் திருவாயி லூடு சென்று
புக்கருளி வலங்கொண்டு புனிதர் முன்பு
போற்றெடுத்துப் படியின்மேற் பொருந்த வீழ்ந்தார். 1031

என்று தொடங்கும் பதிகத்தினைப் பாடியருளி; மைக்குலவு... தாழ்ந்து-அவ்வாறு பாடிக்கொண் டருளியபடியே விடம் விளங்கும் கழுத்தினையுடைய இறைவர் மகிழ்ந்து வீற்றிருக்கும் திருக்கோயிலின் முன் உள்ள நிலைபெற்ற திருக்கோபுரத்தின் முன்னே வந்து நிலமுற வணங்கி; தக்க...சாற்றி-தகுந்த திருக்கடைக்காப்பினையும் சொல்லியருளி; தேவர்தம் பெருமான்...வீழ்ந்தார் -தேவதேவரது கோயில் திருவாயிலின் வழியே சென்று உள்ளே புகுந்தருளி வலமாகச் சுற்றி வந்து தூயவராகிய இறைவர் திருமுன்பு துதித்து நிலம்பொருந்த வீழ்ந்து வணங்கினர்.

(வி-ரை) தொழுது அணைய-தொழுதிழிந்து-தொழுது -தொழுதுகொண்டு; உடனிகழ்ச்சி குறித்தது;''தொழுதெழுவாள்'' (குறள்) என்புழிப்போல;தொழுவதின் ஆர்வமும் விரைவும் குறித்தது.

''விடையவன்'' என்று எடுத்துப் பாடி-''விடையவன்'' என்பது பதிகத் தொடக்கம்; **எடுத்தல்**-தொடங்குதல்; இப்பதிகம் பதியின் புறத்தே தொண்டர்கள் தம்மை எதிர்கொள்ளக் கண்டபோது பிள்ளையார் அருளியது. **''உறையும் இடம் ஒற்றியூரே''** என்ற பதிகத்தின் மகுடமும், ''உறை **ஒற்றியூரைச் சொன்ன**'' என்ற திருக்கடைக்காப்பும் இதற்கு அகச்சான்றாகும். திருவாரூரில் தொண்டர்கள் எதிர்கொண்டபோதும் இவ்வாறே ''வந்தி றைஞ்சுமெய்த் தொண்டர்தங் குழாத்தெதிர் வணங்கிச்...சண்பையர் தலைவர்'', ''அந்த மாயுல காதியாம் பதிகமங் கெடுத்தே'', எந்தை தானெனை யேன்று கொளுங்கொலென் றிசைத்தார்'' (2405) என்றதும், பிறவும் காண்க. இரண்டு பதிகளிலும் இறைவர் புற்றிடங்கொண் டெழுந்தருளி யுள்ளமையும், பின்னர்வரும் ஆளுடைய நம்பிகளது வரலாறுகளும் இங்கு நினைவு கொள்ளற்பாலன.

திருக்கோபுரத்து...சாற்றி - பதியின் புறத்தே எதிர்கொள்ள வந்த தொண்டர்களைத் தொழுது தொடங்கிய பதிகத்தினை அருளிக்கொண்டவாறே திருவீதி கடந்து போந்து திருக்கோபுரத்தின் முன் திருக்கடைக்காப்புச் சாற்றிப் பதிக நிறைவாக்கியருளினர். இச்சிறப்பு இத்திருப்பதிக்கும் திருப்பதிகத்துக்கும் உரியது.

புனிதர் முன்பு போற்றெடுத்து - இங்குப் பாடியருளிய ''சொற்றிகழும் திருப் பதிகம்'' (2930) கிடைத்திலது!

படியின்மேல் பொருந்த-நிலத்தில் திருமேனி பொருந்தும்படி. **வீழ்ந்தார்**- விதிப்படி அட்டாங்கமாக வணங்கினர்; ''செல்வர்'' என்ற எழுவாய் முன் (2927) பாட்டினின்றும் வருவிக்க.

1031

திருவொற்றியூர்

திருச்சிற்றம்பலம் பண் - பஞ்சமம் 3-ம் திருமுறை

விடையவன் விண்ணுமண்ணுந் தொழ நின்றவன் வெண்மழுவாட்
படையவன் பாய்புலித்தோ லுடைகோவணம் பலகரந்தைச்
சடையவன் சாமவேதன் சசி தங்கிய சங்கவெண்டோ
டுடையவ **னூனமில்லி யுறை யும்மிட மொற்றியூரே.** (1)


ஒண்பிறை மல்குசென்னி **யிறை வன்னுறை யொற்றியூரைச்**
சண்பையர் தந்தலைவன் தமிழ் ஞானசம் பந்தன்சொன்ன
பண்பினை பாடல்பத்தும் பர விப்பணிந் தேத்தவல்லார்
விண்பினை மேலுலகம் விருப் பெய்துவர் வீடெளிதே. (11)

திருச்சிற்றம்பலம்


பதிகக் குறிப்பு:- விடையவன்- சங்கவெண்டோ டுடையவன் என்பன முதலாகிய பெருமைகளா லறியப்படும் இறைவர் நீங்காது "உறையும் இடம் ஒற்றியூரே" யாகும்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- *(1)* சாமவேதன் - சாமவேத விருப்புடையவர்; **சசி** - கடல்; **சசி தங்கிய சங்கவெண்தோடு** - கடற்சங்கினுலாய தோடு; "சங்கக் குழையார் செவியா" (தேவா); **ஊனமில்லி** - குறைபாடு எதுவுமில்லாதவர்;—***(2)* பாணி செய்ய** - தாளமிட; **பறைக் கண்** - பறைபோல் அகன்ற கண்; "பறை போல் விழிகட்பேய்" (அம்மை) —***(3)* விளிதரும்**-உருவ நாசமுடைய; அழிவுடைய;—***(4)* பறைத்து** - அழித்து; **உரவுநீர்** - ஆறு;—***(5)* விலகினர்** - வேதநெறி - சைவநெறிகளினின்றும் தவறியவர்களது; **விதியா லருள்செய்து** - கன்மபலனை அனுபவிக்கச் செய்தலால் தீர்த்தருளி; **அலகினல் வீசி** - திருவலகு பணி மாறி;—**(6) கமை** - பொறுமை - பேர்அருள் (க்ஷமை - வடமொழி); **சுமை** - கற்றைச் சடை; **அமை** - மூங்கில்; **ஒடு** - போல - உவம உருபு; அம்மையாரது தோளுக்கு உவமம். **இலங்க** - இலங்க விளங்கும்;—**(7) நன்றியால்** - இறைவர் உயிர்கள்பாற் செய்யாமற் செய்த உதவிக்கு நன்றி மறவாது; வரையே சிலையா - ஆரழலம் பொன்றினல் - மும்மதிலும் எய்த பெம்மான் - பொன்றினர் வார்சுடலைப் பொடிநீ றணிந்து - உலகுக் கொரு நன்மையாலே - உறையும்மிடம் - என்று கொண்டு கூட்டி உரைத்துக்கொள்க ;—**(8) பெற்றி** - தோன்றும் தன்மை; **சுற்றியான்** - உடை யுடுத்தவன்; **சுத்தி சூலம்** - சுத்தியும் சூலமும்; **சுத்தி** - இப்பிவடிவாகத் தலையோட்டா லமைந்த திருநீற்றுக்கலம்; "சுத்திய பொக்கணம் - (திருக்கோவை-292); சுத்தி தரித்துறை யுஞ்சோதி" - (பிள். தேவா - எருக்கத்தம் புலியூர் -10); **சூலம் - கண்ணுதல் மேல் விளங்க** - சூலம் நெற்றியின்மேல் உயர விளங்க; **ஒற்றியான்** - அழுத்தினவர் ;—**(9) திரு** - அழகு; **தெரிவு** - உயிருணர்வு;—**10 ஆகம செல்வனர்** - சிவாகமங்களை வகுத்தவர்; ஆகமநெறி நின்று அடையப்படும் வீட்டுச் செல்வமுடையவர். **கூகையம் மாக்கள்** - கூகை இரவிற் றிரிதல் போல் இருளாகிய அறியாமையிலே திளைத்தாடுகின்றவர்கள். **மாக்கள்** - என்ற குறிப்புமிது; **ஓகை** - மகிழ்ச்சி.


தலவிசேடம்:- திருவொற்றியூர் - தொகுதி III - பக்கம் 741 பார்க்க.



திருவேற்காடு வேதபுரீச்சுரர் திருக்கோவில் பாட்டு :- 2928



திருவொற்றியூர்த் திருக்கோயில் பாட்டு :- 2930



திருமயிலாப்பூர் கபாலீச்சுரர் திருக்கோயில் பாட்டு :- 2975

*2930. **பொற்றிரள்கள் போற்புரிந்த சடையார் தம்பாற்**
பொங்கியெழுங் காதன்மிகப் பொழிந்து விம்மிப்
பற்றியெழு மயிர்ப்புளக மெங்கு மாகிப்
பரந்திழியுங் கண்ணருவி பாய நின்று
சொற்றிகழுந் திருப்பதிகம் பாடி யேத்தித்
தொழுதுபுறத் தணைந்தருளித் தொண்ட ரோடும்
ஒற்றிநகர் காதலித்தங் கினிது றைந்தா
ருலகுய்ய உலவாத ஞான முண்டார். 1032

2930. (இ-ள்) பொற்றிரள்கள்... விம்மி - பொன்னினது திரட்சிகள் போல முறுக்கிய சடையினை உடைய இறைவர்பால் பொங்கி மேல் எழுகின்ற பெருவிருப்பம் மிகவும் மேலோங்கி விம்மி; பற்றி எழும்... நின்று - திருமேனியைப் பற்றி மேல் எழுகின்ற மயிர்ப்புளகம் திருமேனியெங்கும் நிரம்பப் பரந்து வழியும் கண்ணீர்ப் பெருக்குப் பாய்ந்தொழுக நின்று; சொல் திகழும்... ஏத்தி - சொற்பொருள் மிக விளங்கும் திருப்பதிகத்தினைப் பாடித் துதித்து; தொழுது... ஞானம் உண்டார் - தொழுது புறத்திலே அணைந்தருளித் திருத்தொண்டர்களுடனே கூடி உலக முய்தற்பொருட்டுக் கெடுதலில்லாத சிவஞானவமுத முண்டருளிய பிள்ளையார் திருவொற்றியூரினை விரும்பி அங்கே இனிதாக எழுந்தருளியிருந்தனர்.

(வி-ரை) பொற்றிரள்கள்போற் புரிந்த - பொன்னின் றிரள்கள் போலப் புரியாகிய - முறுக்கி நின்ற. **புரிதல்** - முறுக்குதல், ''பொன்றிரண் டன்ன புரி சடை புரள'' - (பிள். தேவா - அச்சிறுபாக்).

எங்கும் ஆகி - திருமேனி முற்றும் பரவி. **சொற்றிகழுந் திருப்பதிகம்** - இப் பதிகம் கிடைத்திலது! இஃது இறைவர் திருமுன்பு பாடியருளியது.

ஒற்றிநகர் காதலித்து அங்கு இனிது உறைந்தார்-மேல்வரும் திருமயிலைப் பூம்பாவை பற்றிய அற்புத நிகழ்ச்சியின் பொருட்டு உண்மலர்ந்த திருவருட் குறிப்பினாலே அந்நகரின்கட் காதலும், அதனால் அங்கு இனிதுறைதலும் எழுந்தன என்க; **உலகுய்ய உலவாத ஞானமுண்டார்** - என்றது மிக்குறிப்பு.

உலகுய்ய உலவாத ஞானம் உண்டார் - ஞானப் பாடலினாலே அழியாமை செய்யும் திறமும் மேல் திருமயிலை நிகழச்சியிற் காண்க. அத்திருப்பதிகத்தின் குறிப்புக் கூறும் வகையால் ஆசிரியர் அது ''மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன்'' - உண்மையினைத் (உறுதிப் பொருளை) தெருட்டிச் சைவத்தாபனம் செய்யும் நிலை பற்றியது என எடுத்துக் காட்டுதலும் காண்க. **உலவாத** - அரவினால் உலந்த பெண் உலந்தே ஒழியாது பின்னர் உயிர்பெற்றமையும், அழியாத நிலைமை பெற்றுச் சிவத்தை மேவினமையும் காட்டும் குறிப்புடன் நின்றது.

1032

ஞானம் பெற்றார்—என்பதும் பாடம்

வேறு

2931. இன்ன தன்மையிற் பிள்ளையா ரிருந்தன; ரிப்பாற்
பன்னு தொல்புகழ்த் **திருமயி லாபுரிப் பதியின்**
மன்னு சீர்ப்பெரு **வணிகர்தந் தோன்றலார் திறத்து**
முன்ன மெய்திய தொன்றினை **நிகழ்ந்தவா மொழிவாம்.** 1033

2931. (இ-ள்) இன்ன... இருந்தனர் - இவ்வாறாகிய தன்மையிலே பிள்ளையார் எழுந்தருளி யிருந்தனர்; இப்பால்... பதியின் - இவ்விடத்துப் புகழ்ந்து பேசப்பட்ட பழைமையாகிய புகழினையுடைய திருமயிலாபுரிப் பதியில்; மன்னுசீர்... திறத்து - நிலைபெற்ற சிறப்பினையுடைய பெருவணிகர் குடியில் வந்த பெருமையினையுடையவரது திறத்திலே; முன்னம்... மொழிவாம் - முன்னே பொருந்தியதொரு வரலாற்றினை நிகழந்தபடி சொல்லப் புகுகின்றோம்.

(வி-ரை) இன்ன... இருந்தனர் - இதுவரையும் பிள்ளையார் பாலினமைந்து கூறிவந்த வரலாற்றினை முடித்துக் காட்டியபடி.

இப்பால் - இனி, இங்குநின்றும் சரிதங்கேட்போரது நினைவினைத் திருமயிலை வரலாறு தொடங்கும் வகையால் அங்குச் செலுத்தி உடன்கொண்டு போவார் ஆசிரியர் **இப்பால்** என்று பிரித்துக் கூறி எடுத்துக்கொண்டார்; அஃது தொண்டைநாட்டினைப் பற்றியதாதலானும், படிப்போரது நினைவு இங்கும் அகலாது செல்வதாலும் ''இப்பால்'' என அணிமைச் சுட்டினாற் கூறினார். ''இந்நிலை யிவனிங் கெய்தி யிருந்தன னிப்பானீடும்'' *(1755)*; ''இவ்வகை யிவர்களங்க ணிருந்தனராக விப்பால்'' *(2497)* என்பன முதலியவை காண்க.

பன்னு தொல்புகழ் - அம்மை மயிலுருவுடன் பூசித்த பழஞ் சரிதப் புகழும், அன்ன பிறவும் ஆகும்.

பெரு வணிகர்தம் தோன்றலார் - வணிகர்மரபிற் பெரும்பிரிவு மூன்றனுள் பெருவணிகர் என்னும் மரபில் வந்தவர்; ''குடிமுதல் வணிகர்'' *(405)*; ''பெருவணிகர் குடிதுவன்றி'' *(1717)* என்றவையும் ஆண்டுரைத்தவையும் பார்க்க (I - 498; III - பக். 818). பெரிய வாணிகத்துறை நின்றவர் எனப் பொதுவகையா லுரைப்பாருமுண்டு. **தோன்றலார்** - அம் மரபில் வந்தவர்; தோன்றியவர்.

வணிகர்தந் தோன்றலார் திறத்து முன்னம் எய்தியது - வணிகரது அன்பின் திறமே பின் விளையும் வரலாற்று நிகழ்ச்சிக்குக் காரணமாயினமையின் இவ்வாறு கூறினார்; **முன்னம்** - பிள்ளையார் திருவொற்றியூர் சார்வதன் முன்.

ஒன்று - ஒரு வரலாறு; பிள்ளையார் சார்பினாலே முன்னம் பல இடங்களிலும் பலப்பல வரலாறுகள் நிகழ்ந்தனவாக இங்கு மயிலையில் வணிகர் திறத்து நிகழ்ந்த ஒன்று.

நிகழ்ந்தவா - ஆறு என்பது ஈறுகெட்டு **ஆ** என நின்றது. நிகழ்ந்த ஆறே - படியாக - என்க.

2932. அருநி தித்திறம் பெருக்குதற் கருங்கலம் பலவும்
பொருக டற்செலப் போக்கியப் பொருட்குவை நிரம்ப
வரும ரக்கல மனைப்படப் பணைக்கரை நிரைக்கும்
இருநி திப்பெருஞ் செல்வத்தி னெல்லையில் வளத்தார். 1034

மொழிவாம் - இனிச் சொல்லத் தொடங்கும் வரலாற்றின் பெருமையுட் கேட்போர் மனம்பதிய இவ்வாறு கூறுதல் ஆசிரியர் மரபு. ''மொழிவே னுய்ந்தேன்'' *(173)*; ''நிகழந்ததனை மொழிகின்றேன்'' *(1952)* முதலியவை காண்க.

திறத்து - சார்பு பற்றியதாக என்றலுமாம்.

சீர்ப்புகழ் வணிகர் —என்பதும் பாடம். *1033*

2932. (இ-ள்) அருநிதித் திறம்... போக்கி - அரிய நிதிகளின் வகைகளைப் பெருகச் செய்தற்காக அரிய மரக்கலங்கள் பலவற்றையும் அலைபொரும் கடலின்மேற் சென்று நிகழும்படி வாணிபத்துறையினிற் செலுத்தி; அப் பொருட்குவை... நிரைக்கும் - அவ்வாணிபத்தால் ஈட்டிய பொருட்கூட்டங்கள் நிரம்பத் தம் மனையின்கண் சேரும்படி கொணரும் மரக்கலங்களின் குவைகள் வரிசைபெறக் குவிக்கும் பெரிய நிதி முதலிய பெருஞ் செல்வங்களின் எல்லையற்ற வளங்களையுடையவராய்;

(வி-ரை) நிதித் திறம் - நிதிகளும் வாணிபத்தில் நிதியாக்கும் பண்டங்களும்; அயல் நாட்டின் பண்டங்கள் இங்கு வந்து வாணிபத்தின் மூலம் நிதியாக்கப்படுவனவும் நிதியேயாம். **நிதிகள்**-பொன்-வெள்ளி-மணிகள் முதலியன; இங்குநின்று ஏற்றிச் செல்லும் நிதிகளும் ஆம் *(1749)*.

அருங்கலம் - நீண்டதூரம் பெருங்கடலில் போய் வருதற்கேற்றவாறு அரிதின் அமைக்கப்பட்டவை.

பொருகடல்-பேர்அலைகளும் மற்றும் அபாயங்களும் நிறைந்ததாதலின் பொருகடல் எனப்பட்டது. அவற்றுடன் பொருது வெற்றிபெற்றாலன்றிக் கடல் கடந்து குறித்த நாட்டிற் சேறலும் மீளுதலும் இயலா. இந்நாளில் கடலே போர்க்களமாக நிற்பதும் குறிக்க.

அப்பொருட் குவை - நிரம்ப வரும் மரக்கலம் - அகரச்சுட்டு நினைந்த அந்த எனும் பொருடந்தது; **வரும்** - கொணரும்; **அம்மரக்கலம்** - என அகரச்சுட்டு ஈண்டும் சேர்க்க; பொருந்துவ பண்டங் கொண்டுசென்ற அவையே நிதித் திறங்களைக் கொண்டுவரும். நிதிகளையேயன்றி இங்கு வாணிபத்துக்குரிய அயல்நாட்டுப் பண்டங்களையும் கொண்டுவருதலின் **நிதித்திறம்** என்றும், **பொருட்குவை** என்றும் கூறினர்.

பணைக்கரை மனைப்பட - நிரைக்கும் - என்க. **பணை** - பெரிய; **கரை** - கடற் கரையில். **நிரைத்தல்** - கடற்கரையில் வரிசைபெற அமைத்தல்; இஃது சுங்கம் முதலிய அரசாங்க அமைதிகளினுட்பட்டுக் கண்காணிக்கப்படுதற் பொருட்டு வேண்டப்படும். இவ்வமைதிகளின் முன்னைநாள் நிலைகளைப் பட்டினப்பாலை முதலிய பழந்தமிழ் நூல்களுட் காண்க.

சிவநேசர்

2933. **தம்மை யுள்ளவா றறிந்தபின் சங்கரற் கடிமை**
மெய்ம்மை யேசெயும் விருப்புடன் மிக்கதோ ரன்பாற்
பொய்ம்மை நீக்கி மெய்ப் பொருளிது வெனக்கொளு முள்ளச்
செம்மை யேபுரி மனத்தினுர் சிவநேச ரென்பார். 1035

மனைப்பட - கரையினின்றும் மனையிற் கொண்டு சேர்த்தற்காக. மனையிற் சேர்க்கும் அளவும் கரையின் வரிசைபட வைத்தல் குறிப்பு. மரக்கலப் பண்டம் **மனைப்பட** என்றதனுல் மனையும் அதற்கேற்றபடி மிகப்பெரிய அளவு கொண்டதென்பதும் குறிப்பித்தபடி. **எல்லையில் வளத்தார்** - என்றதுமிக் குறிப்பு.

இருநிதிப் பெருஞ் செல்வம் - இருநிதி - முன்கூறிய எவ்வகை நிதித் திறங்களும். **பெருஞ் செல்வம்** - அவற்றுடன் மனை - விளை நிலம் - முதலியனவும். ''தேடிய மாடு நீடு செல்வமும்''(470).

எல்லையில் வளத்தார் - வளம் - நிதி, செல்வம், நாணயம், பொறுப்பு முதலிய எல்லாவற்றுலும் வரும் உலக அனுபவ நிலைகளின் தொகுதி; **எல்லையில்** - அளவில்லாத. **வளத்தார்** - வளத்தை உடையவராகி; எச்சம்; **வளத்தார் - சிவநேச ரென்பார்** - என மேல்வரும் பாட்டுடன் முடிக்க

மனைப்படப் படிக்கவர் நிரப்பும்— என்பதும் பாடம். *1034*

2933. (இ-ள்) தம்மை உள்ளவாறு அறிந்தபின் - தம்மை உள்ளபடியே அறிந்து கொண்டமையாலே அதன்பின்; சங்கரற்கு... அன்பால் - சங்கரராகிய சிவபெருமானிடத்தில் அடிமைத்திறத்தை மெய்ந்நெறி பிறழாது செய்யும் விருப்பத்துடன் கூடிய அன்பினுலே; பொய்ம்மை... மனத்தினுர் - பொய்யினைக் கடிந்து மெய்ப்பொருளிஃதேயாம் என்று தெளிந்துகொண்ட உள்ளத்தின்கண்ணே செம்மைநெறியினையே இடைவிடாது எண்ணிக்கொண் டொழுகும் மனத்தினை உடையவர்; சிவநேசர் என்பார் - சிவநேசர் என்று சொல்லப்படுபவர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டுரைக்க நின்றன. இவற்றுள்ளே முன்பாட்டினுலே உலகியற் சிறப்பினைக்கூறி, மேற்பாட்டினுல் அன்பியற் சிறப்பினைக் கூறும் திறம் காண்க.

(வி-ரை) தம்மை...செயும் - உள்ளவாறு அறிதலாவது இறைவராகிய பதி முழுமுதல்வர் என்றும், உயிர்களாகிய பசுக்கள் எல்லாம் அவருக்கு அடிமைகள் என்றும், அடிமைசெய்து பாசங்களினீங்கி வீடுபேறடைவதே உயிர்கள் அடையும் உறுதிப் பொருளாவது என்றும், அதன்பொருட்டே மானிடப் பிறவியும் புவன போகங்களும் தரப்பட்டன வென்றும் ஞானநூல்களுள் உரைக்கப்பட்ட உண்மைகளை ஆரவார நீர்மையிலன்றி உள்ளபடி உணர்ந்து அவ்வழியிலே ஒருகாலும் வழுவாது ஒழுகும் வகையால் அரனுக்கு அடிமை செய்கின்ற என்பதாம்.

2934. கற்றை வார்சடை முடியினு **ரடியவர் கலப்பில்**
உற்ற செய்கையி லொழிவின்றி **யுருகிய மனமும்**
பற்றி லாநெறிப் **பரசம யங்களைப் பாற்றுஞ்**
செற்ற மேவிய சீலமு முடையராய்த் திகழ்வார். 1036

சங்கரன் - இன்பஞ் செய்பவன்; இப்பெயராற் கூறினர், உள்ளவாறறிந்தவர்கள் யாவரும் பிறவி துன்பமுடையதென்றுணர்வார்களாதலின் அதனை நீக்கி இன்பஞ் செய்வோனை அடைவது இயல்பாமென்ற குறிப்புத் தருவதற்கு. இவ்வாறே "அளவில் செல்வத்து வளமையி னமைந்தார்... ...அடிமைத் திறத்தின் மிக்கவ" ராகிய முதல் வணிகர்பெருமானார் இயற்பகையாரும் "முன்கொடுக்கு **மியல்பி** னின்றவர்" என்றது (405) காண்க.

விருப்புடன் மிக்கதோர் அன்பால் - **அன்பு** - அடிமைசெய்தற்கு வேண்டப்படும் இன்றியமையாத அடிப்படை; **விருப்பு** - அது செய்தற்கண் சேரும் மன எழுச்சி.

பொய்ம்மை நீக்கி மெய்ப்பொருளிது எனக்கொளும் உள்ளச் செம்மையே புரி - **பொய்ம்மை** - உலகப் பற்றாகிய நிலைகளின் மயக்கம்; "பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும் மருள்" (குறள்).

மெய்ப்பொருள் இது - இறைவன் பற்றாகிய நிலைகளின் சார்பு. "சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின்" (குறள்).

இது எனக்கொளும் உள்ளச் செம்மையே புரி - முன் கூறிய துணிபை உள்ளத்தில் முடிவாகத் துணிந்து கொண்டமையால் மேற்கொண்ட சைவ நன்னெறியின் ஒழுக்கத்திலே இடைவிடாது நினைந்து நின்ற.

சிவநேசர் என்பார் - **"விருப்புடன்...மனத்தினர்"** என்றது சிவநேசர் என்ற பெயர் அவருக்குக் காரண இடுகுறியாயமைந்த நிலையை விளக்கியவாறு. **என்பார்** - எனப்படுபவர்; படு விகுதிதொக்கு வந்தது, "இல்வாழ்வா னென்பான்" (குறள்) என்புழிப்போல.

தம்மை... ...செய்யும் என்றது காரணமும், **"விருப்புடன்... ...புரி"** என்றது அதன் விளைவாகிய காரியமும் ஆம். **சிவநேசர்** -பெருவணிகர் தோன்றலாரின் பெயர்.

விருப்பினின்—நீக்கிய—என்பனவும் பாடங்கள். *1035*

2934. (இ-ள்) கற்றை...மனமும் - கற்றையாகிய நீண்ட சடையினையுடைய முடியவரது அடியார்களுடன் கூடிய கூட்டத்துடன் பொருந்திய செய்கையில் இடைவிடாது உருகிய மனத்தினையும்; பற்றிலா... சீலமும் - சிவபெருமானிடத்தில் அன்பு இல்லாத நெறிகளையுடைய பரசமயங்களை நீக்கும் செற்றம் பொருந்திய நல்லொழுக்கத்தினையும்; உடையராய்த் திகழ்வார் - கொண்டுடையவராகி விளங்குவாராய்,

(வி-ரை) அடியவர் கலப்பில் உற்ற செய்கையில் - அடியார் கூட்டத்திற் பொருந்தும் தன்மையில். **செய்கை** - இங்குத் தன்மை என்ற பொருளில் நிகழ்ச்சி என்றலுமாம்.

ஒழிவின்றி உருகிய மனம் - அடியார் கூட்டத்தை விரும்பி மனமுருகும் தன்மை இடைவிடாது பெற்ற நிலை. ''நல்லநெறி, யெய்துவதோர்காலந்தன்னன் பரைக்கண் டின்புறுதல், உய்யு நெறிசிறிதே உண்டாக்கி'' (போற்றிப் பஃறொடை - 56). சிவநேசரது திருமனம் அவர் பெயருக்கேற்ப இடையறாது அடியவர்க் கூட்டத்தையே நாடி உருகி நின்றது என்க. ''ஒருப்படுசிந் தையினார்களுடனுறைவின் பயன்பெற்றார்'' (1509) என்றும் ''சாலமிக் குயர்திருத் தொண்டினுண் மைத்திறந் தன்னையே தெளியநாடிக், காலமுய்த் தவர்களோ டளவளாவிக் கலந் தருளினார் காழிநாடர்''(2421) என்றும் போந்த உண்மைகளை இங்கு நினைவுகூர்க.

பற்றிலா... ...சீலம் - அது முன்கூறிய மனநிலை காரணமாய் விளையும் ஒழுக்கம். கற்புடைய நாயகிக்குத் தன் நாயகனிடம் அன்பில்லாதார் மாட்டும், நாயகனைப் பழித்து ஒழுகும் பகைவர்மாட்டும் தான் செற்றம் கொண்டு அவர்களை அணுகவிடாது வெறுத்து ஒதுக்குதலே கற்பொழுக்கமாவது போலச், சிவனிடத்தும் அடியாரிடத்தும் அன்புபூண்டொழுகும் அடியவர் சிவனிடத் தன்பில்லாதவர்களை வெறுத்தொதுக்கிக் கடிவதுவே அன்புடைமைக் கிலக்கணமாம்; ''ஈசனுக் கன்பில்லார்......அறிவில்லாப் பிணங்களைநா மிணங்கிற் பிறப்பினினு மிறப்பினினும் பிணங்கிடுவர் **விடுநீ**'' (சித்தி - 12 - 2) என்று இதன் உண்மை நிலையினை ஞானநூல் விதித்தமை காண்க. ''மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ், சிறப்பில்லார் தந்திறத்துச்சேர்வை - யறப்பித்துப், பத்த ரினத்தாய்'' (போதம் - 12-2) என்ற முதனூலுங் காண்க.

பற்று இலா நெறி - பற்று - இறையன்பும் அடியார் நேயமும்; **நெறி**-நெறிகளைக் கூறுகின்ற; **பாற்றுதல்** - தீமையைஅகற்றுதல் - அழித்தல்; **செற்றம் - செறுதல்** - அழித்தல்; பகுதி; பரசமயங்களால் விளையும் தீமைகளை ஒழிக்கும் குணமாதலின் செற்றம் என்றார்; தீமையைப் போக்குதல் நலஞ்செய்தலாதலின் சீலம் என்றார்; விலக்கத்தக்க செற்றம் ஈண்டு மேற்கொள்ளத்தக்க ஒழுக்கமாயினமை காண்க. அடியவர்பால் அன்பும், அல்லாதார்பால் வெறுப்பும் உடைமை சிவநேசரது உள்ளப் பண்பு என்று அவரது உயிரின் உயர்ந்த பக்குவநிலை கூறியவாறு.

பரசமயங்களைப் பாற்றும் செற்றம் - சமண சாக்கியப் பரசமயங்கள் அந்நாளில் இந்நாட்டிலும் தம்மளவில் நில்லாது மிகைபடப் பெருகி உண்மைச் சைவ நெறிக்குப் பலவாறும் ஊறு செய்தனவாதலின் அவற்றை அவ்வவ் அளவில் நிறுத்துதற்கு அவற்றின் மிகைபட்ட நிலைகளைப் பாற்றுதல் வேண்டப்பட்டது. இஃது உலகநலம் பற்றியும், தற்காப்புப் பற்றியும் இன்றியமையாது வேண்டப்படுவதாம். சோழ பாண்டிய நடுநாடுகள் போல இந்நாட்டினும் பரசமயங்களின் மிகைகள் பின்னர்ப் பூம்பாவைத் திருப்பதிகத்தில் சமண்பாட்டிற் பிள்ளையார் குறிப்பதுவும் ஆசிரியர் அதன் கருத்தை விரிப்பதும் ஆகிய நிகழ்ச்சிகளால் அறியப்படுவன. சமய ஞானமும் சமயப் பற்றும் என்பன ஒருசிறிதுமின்றிச் சமயம் எப்படி அழிந்தாலும் எமக்காவதென்ன என்று உள்ள மனப்பான்மையுள்ள இந்நாள் மாக்கள் இதுபோன்ற மனநிலைகளை உணரவல்லரல்லர் என்க. சண்டீசர் புராணத்தின் உள்ளுறையுங் காண்க. 1036

2935. (இ-ள்) ஆன நாள் செல - அவ்வாறாயின நாள்கள் பல கழிய; அருமறை...இழித்தழித்ததுவும் - அரிய வேதியராய்க் கவுணியர் குலத் தலைவராகிய பிள்ளையார் சிவஞான அமுதுண்டருளியதனையும் உலகமுய்தற் பொருட்டுப் புறச் சமயங்களாகிய கொடிய

2935. ஆன நாள்செல வருமறைக் கவுணியர் பெருமான்
ஞான போனக நுகர்ந்தது நானில முய்ய
ஏனை வெஞ்சம**ண் சாக்கிய மிழித்தழித் ததுவும்**
ஊன மில்புக **ழடியர்பாற் கேட்டுவந் துளராய்,** 1037

சமண் சாக்கியச் சமயங்களின் கீழ்நிலையை விளக்கி இழித்து எடுத்துக் காட்டும் வகையாலே அவை அடைந்திருந்த முதன்மையை ஒழித்ததனையும்; ஊனமில்...உவந்துளராய் - குற்றமில்லாத புகழினையுடைய அடியார்கள் வந்து சொல்லக் கேட்டு மகிழ்ந்தனராகி;

(வி-ரை) ஆன நாள் செல - ஆன - முன்பாட்டிற் கூறியவாறு மனமும் சீலமும்ஆகி விளங்கலாயின நாள் பல கழிய. **ஆன** - இந்நாட்களே சிறந்தனவாயின என்பதும் குறிப்பு. "பேசாத நாளெல்லாம் பிறவா நாளே'' என்றபடி கழியாது, பிறந்த சிறந்த நாட்களாயின; **நாள்** - காலம் என்ற பொதுமை குறித்தது.

நானிலமுய்ய......இழித்தழித்ததுவும் - பிள்ளையார் பரசமய நிராகரிப்புச் செய்தருளியது உலகமுய்யச் செய்ததேயன்றி இகல் முதலிய மாறுகோளால் அன்று ; இகலில ரெனினும்'' *(2752)* என்று இதனை முன் குறித்தது காண்க; சைவத்திற்காணும் பரசமய நிராகரணத்தின் உள்ளுறை இஃது என்பதாம்.

இழித்து அழித்ததுவும் - இழித்தலினாலே அழித்தது. **இழித்த**லாவது அப் பரசமயங்களின் இழிவ நிலையினை வெளிப்படக் காட்டுதல்; இவை பிள்ளையாரது பதிகங்களில் 10-வது பாட்டாகிய சமண்பாட்டிற் றேற்றிய பொருள்கள்; இவையே அக்காலத்தில் சிவநேசர் கேட்ட செய்தி. சமணரை வாதில் வென்றழித்தலும் புத்தவாத வெற்றியும் பின்னர்ப் பல ஆண்டுகளின் பின் அவை நிகழ்ந்தபோது கேட்கும் செய்தி மேல் *(2948—2950)* உரைப்பது காண்க. இங்குக் குறித்தவை ''புத்தரோடு பொறியில் சமணும் புறங்கூற நெறிநில்லா, வொத்த சொல்ல'' (நட்டபாடை - பிரமபுரம் -*10*) என்பன முதலிய பதிகப் பகுதிகள்.

ஊனமில் புகழ் அடியர்பாற் கேட்டு - அடியார்கள் கூடியபோது பேசுவன சிவன் பெருமைகளும் அடியார்களின் பெருமைகளுமேயன்றி, நம்போலியர் போன்று அழியுந் தன்மையான வெற்றுரைகளல்ல என்பதாம். **ஊனமில் புகழ்** - இதனாலே அவர் புகழ் ஊனமில்லாததாயிற்று.

கேட்டு உவந்துளராய் -அக்கேள்வியே சிவநேசருக்கு மிக மகிழ்ச்சி தருவன ஆயின.

ஊனமில் புகழ் - மேற்கூறியவாறன்றி, இதனை ஞானபோனக நுகர்ந்ததும் , இழித்தழித்ததுமாகிய பிள்ளையாருடைய குற்றமற்ற புகழ்களை என்று கூட்டி உரைத்தலுமாம். **புகழ் - கேட்டு** என்க. *1037*

2936. (இ-ள்) செல்வ மல்கிய...உணர்வால் - *அருண்ஞானச் செல்வம் நிறைந்த சீகாழித் தலைவராகிய பிள்ளையாரின் திருவடிகளில் அளவில்லாத ஒப்பற்ற பெருவிருப்புடன் இடையறாத அன்புபூண்ட வுணர்ச்சியினாலே; அல்லும்...ஆனார் - இரவும் பகலும் இடைவிடாது*

2936. செல்வ மல்கிய சிரபுரத் தலைவர் சே வடிக்கீழ்
எல்லை யில்லதோர் காதலி னிடையரு வுணர்வால்
அல்லு நண்பக லும்புரிந் **தவரருட் டிறமே**
சொல்ல வுஞ்செயல் கேட்கவுந் தொழிலின ராஞர். 1038

2937. **நி**கழு மாங்கவர் நிதிப்பெருங் கிழவனின் மேலாய்த்
திகழு நீடிய திருவினிற் சிறந்துள ராகிப்
புகழு மேன்மையி **லுலகினிற் பொலிந்துளா ரெனினும்**
மகவி லாமையின் மகிழ்மனை வாழ்க்கையின் மருண்டு; 1039

நினைந்துகொண்டு அவரது அருளின் தன்மைகளையே தாம் வாக்கினுற் புகழ்ந்து பாராட்டுதலும் அருட்செயல்களை அன்பர்களிடம் கேட்பதுமாகிய இவையே தமது வாழ்க்கைக்குரிய தொழில்களாக மேற்கொண்டவராயினர்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபுகொண் டுரைக்க நின்றன; முன் ஒரு பாட்டைத் தனிமுடிபாக கொண்டுரைத்து, ஏனை யிரண்டனையும் ஒரு முடிபாக்கியுரைக்கினு மிழுக்கில்லை. பொருட்டொடர்பும் சொன்முடிபும் பற்றி இவ்வாறுரைக்கப்பட்டது.

(வி-ரை) இப்பாட்டினுல் முன் கூறியபடி கேட்டு வந்துள்ளமை காரணமாகச் சிவநேசர் மேற்கொண்டொழுகிய ஒழுக்கநிலை கூறப்பட்டது.

காதலின் இடையரு உணர்வால் - இடையருது கொண்ட பெருவிருப்பு மேற்கொண்ட வுணர்ச்சியினுலே; **காதலின் - உணர்வு** என்க.

உணர்வால் - சொல்லவும் - கேட்கவுமாகவுள்ள தொழிலினர் - உணர்வு காரணமாகச் சொல்லுதலும் கேட்டலுமாகிய தொழில்களே அவர்பானிகழ்ந்தன என்பது, பிள்ளையார் அருட்டிறங்களைத் தாம் பன்னிப் பன்னிப் புகழ்ந்து சொல்லுதலும், அவர் அருட்செயல்களை அடியார்கள்பாற் கேட்டலுமே தமது தொழிலாக.

அல்லும் நண்பகலும் புரிந்து - இரவும் பகலும் இடைவிடாது நினைந்து.

செயல் கேட்கவும் - செயல்களையே அடியர்பால் கேட்க. *1038*

2937. (இ-ள்) நிகழும்...சிறந்துளராகி – முன் கூறியவாறு நிகழ்கின்ற அச்சிவநேசர். பெரிய நிதிபதியாகிய குபேரனிலும் மேம்பட்டு விளங்கும் நீடிய செல்வத்தாற் சிறந்துள்ளவராகி; புகழும்... எனினும் - புகழ்ச்சி பொருந்திய மேன்மையோடும் உலகத்தில் விளங்கியிருந்தன ரென்றாலும்; மகவு...மருண்டு - மகிழ்ச்சியுடைய இல்வாழ்க்கைத் திறத்தில் மக்கட்பேறு பெறுமையினுலே மருட்சியடைந்து மயங்கி;

(வி-ரை) ஆங்கு நிகழும் அவர் என்க. **ஆங்கு** - முன்கூறிய அவ்வாறு; **நிகழ்தல்** - செல்லுதல்; ஒழுகுதல்.

நிதிப்பெருங் கிழவனின் மேலாய் - கிழவனின் - கிழவனைப் பார்க்கிலும்.

2938. **அரிய நீர்மையி லருந்தவம் புரிந்தர னடியார்க்**
குரிய வர்ச்சனை யுலப்பில செய்தவந் நலத்தாற்
கரிய வாங்குழன் மனைவியார் வயிறெனுங் கமலத்
துரிய பூமக ளெனவொரு பெண்கொடி யுதித்தாள். 1040

இன்-உறழ்வுப்பொருளில் வந்த ஐந்தனுருபு. **பெருநிதிக் கிழவன்** - குபேரன். **கிழமை** - உரிமை.

மேலாய்த் திகழும் நீடிய திரு - அவரது செல்வத்தின் சிறப்பினைக் குறித்தது. அச்சிறப்பாவது அடியார் பூசைக்கு ஆகும் தன்மையும், பின்னர்ச் சிவநேசர் அளிக்கும் பாங்கினால் (2947 -2951) பிள்ளையாருக்குரியதாகும் தன்மையும். இச்சிறப்புக்கள் குபேரனது பெருநிதிக்கு இல்லை என்பது குறிப்பு. **நீடிய** - என்பதுமக்குறிப்பு. **நீடுதல்**-ஏனைய பொருள்போல அழிதலின்றி அடியார்க்குதவும் பெருமையால் நிலைபெற்றிருத்தல்.

திருவினிற் சிறந்தல் - ''இருநிதிப் பெருஞ் செல்வத்தின் - வளம் (2932)'' என முன் உரைக்கப்பட்ட நிலை. **புகழும் மேன்மை** - யாவரும் புகழ வரும் மேம்பாடு.

எனினும் - மனைவாழ்க்கையின் மருண்டு - எனினும் - மனைவாழ்க்கை செல்வத்தின் வளத்தாற் சிறக்கும் என்றெண்ணுவர் உலகர்; ஆயினும் அவ்வாழ்க்கை மகப்பேறில்லாதபோது சிறவாது என்று மயங்கி. செல்வம் உலகியற் பொலிவுதரினும் மனைவாழ்க்கையிற் பொலிவு தருவது மகப்பேறே என்பார் **எனினும்** என்றார். ''மங்கலமென்ப மனைமாட்சி மற்றத, னன்கல நன்மக்கட் பேறு'' (குறள்) என்ற கருத்து ஈண்டு வைத்து நோக்கற்பாலது. ''பிள்ளைப்பே றின்மையினால்'' (875); ''மனையறத்திலின் பமுறு மகப்பெறுவான் விரும்புவார்'' (1917) என்றவற்றில் உரைத்தவை பார்க்க.

மருண்டு - மருட்சியாவது மக்கட்பே றின்மையால் மனைவாழ்க்கை மகிழ்ச்சியின்றியும் மங்கலமின்றியும் நிகழ்வதால் வரும் மனச் சோர்வு.

மருண்டு - புரிந்து - செய்த - என வரும் பாட்டுடன் கூட்டி முடிவுகொள்க.

திகழ நீடிய - என்பதும் பாடம். *1039*

2938. (இ-ள்) அரிய...புரிந்து - அருமையாகிய தன்மையோடு அருந்தவம் செய்து; அரன் அடியார்க்கு...நலத்தால் - சிவனடியார்களுக்குரிய அளவற்ற அருச்சனைகளைச் செய்துவந்த அந்த நன்மை காரணத்தால்; கரிய...கமலத்து - அவர் கரிய சிறந்த கூந்தலையுடைய அவர் மனைவியாரது வயிறு என்கின்ற தாமரையினிடமாக; உரிய...உதித்தாள் - உரிமை பொருந்திய பூமகள்போல ஒரு கொடிபோன்ற பெண் உதித்தனள்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) அருந்தவம் அரிய நீர்மையிற் புரிந்து-புரிந்த தவமும் அரியது; அதனைப் புரிந்த தன்மையும் அரியது என்க. இங்குத் **தவம்** என்பது சிவ பெருமானை நோக்கி மகப்பேறு வேண்டி வரங்கிடந்து செய்யும் வழிபாடுகள்; பராய்க்கட னெறி னிற்பார்... ... விழாவெடுத்த பின்றை''

2939. **நல்ல நாள்**பெற வோரையி னலமிக வுதிப்பப்
பல்பெ ருங்கிளை யுடன்பெரு வணிகர்பார் முழுதும்
எல்லை யிற்றன முகந்துகொண் டியாவரு முவப்ப
மல்ல லாவண மறுகிடைப் பொழிந்துள மகிழ்ந்தார். 1041

(659 = 660) என்றும்வருமகவு பெறற்பொருட்டு மனத்தருளால் ***வழுத்தினர்'' (875) என்றும், ''காதலனைப் பெறப்போற்றுந் தவம்புரிந்தார்'' (1917) என்றும் வந்தவை காண்க. இவை அரனை நோக்கிச் செய்யப்பட்டன. விட்டுணுவுக்கும் மகப்பேறு தந்தது சிவ பெருமானை நோக்கிச் செய்த தவமே என்ற வரலாறும் கருதுக.*

அரன்...செய்த *- ஈண்டு* ***அருச்சனை****யாவது அடியார்களை அமுதூட்டியும் அவர்களுக்கு வேண்டுவன குறிப்பறிந்து கொடுத்தும் வழிபடுதல்.*

தவம் புரிந்து - செய்த - அந்நலத்தால் *- அரன் பூசையும் அடியார் பணியும் என்றிரண்டுமே பெறத்தக்க உறுதியாவன என்பது வேத உள்ளுறையாம்; அவையே மண்ணினிற் பிறந்தார் பெறும் பயனுவன. இம்மை மறுமை வீடு என்ற பயன்களையும் தரவல்லன; இவையன்றி வேறில்லை எனச் சூளுறவு கூறி எடுத்துக் காட்டுவது மேல்வரும் இப்பாவையின் வரலாறுகும்; ஆதலின் அவ்விளைவுக் கேற்றவாறு வரும் இம்மகவு அவ்விரண்டன் காரணமாகவே வருதல் தகுதியாதல் காண்க.*

அடியார்க்குரிய அருச்சனை *- இவை இளையான்குடி மாறநாயனுர் - குங்குலியக் கலய நாயனுர் - அப்பூதி நாயனுர் முதலியோர் சரிதங்களுள் விரிக்கப்படுதல் காண்க.*

உலப்பில *- அளவுபடாதவற்றை; அகரவீற்றுப் பலவறி சொல்; இரண்டனுருபு விரிக்க.*

அந்நலத்தால் - அகரம் *- முன்னறிசுட்டு; பண்டறிசுட்டு என்றலுமாம்.*

வயிறெனும் கமலத்துப் - பூமகளெனக் - கொடி *- மனைவியார் வயிறு கமலமாகவும், அதில் வரும் பெண்கொடி அப்பூவின் மகளாகவும் உருவகம் செய்தார். பூம்பாவை எனவரும் பெயர்த்தகுதியைக் காட்டுதல் கருத்து. 2942 பார்க்க.*

உரிய *- பூவினுக்கு உரிமையுடைய;* ***கொடி*** *- கொடி போன்றவள்.* *1040*

2939. (இ-ள்) *நல்ல...உதிப்ப -நல்லநாள் பெறவும், அந்நாளில் ஓரையின் நலமும் மிகப் பெறவும், அவ்வாறு பிறக்க; பல்பெருங் கிளையுடன்...உவப்ப - பல பெரிய சுற்றத்தார்களோடும் பெருவணிகராகிய சிவநேசர் அளவற்ற செல்வங்களை முகந்தெடுத்துக் கொண்டு உலக முழுதும் எல்லாரும் மகிழும்படி; மல்லல்... பொழிந்து - செழிப்புடைய கடைவீதியில் பொழிந்து; உளம் மகிழ்ந்தார் - மனமகிழ்ந்தனர்.*

(வி-ரை) நல்ல... ...உதிப்ப *- முன் கூறியபடி உளதாகிய பெண்கொடி நல்ல நாளும் நல்ல ஓரையும் வாய்க்கப்பெற்றுப் பிறக்க;* ***உதிப்ப*** *- முன் பாட்டில்* ***உதித்தாள்*** *என்றபடிவந்த*

2940. **ஆறு சூடிய முடியினு ரடியவர்க் கன்பால்**
ஈறி லாத**பூ சனைகளியா வையுமிகச் செய்து**
மாறி லா**மறை யவர்க்கு** வேண் டினவெலா **மளித்துப்**
பேறு மற்றிது வெனும்படி பெருங்களி சிறந்தார். 1042

பெண் இவ்வாருகிய நன்னுளில் நல்வேளையில் பிறக்க என்றபடி; **ஓரை** – வேளை; ''பேணியநல் ஓரை எழ'' (1920) என்றதன் உரை பார்க்க.

பெருங்கிளையுடன் - பெருவணிகர் - தனம் முகந்துகொண்டு - அப்பெரு வணிகரேயன்றி அவர் பெருங் கிளைஞரும் மகிழ்ந்து தாமும் தனம் முகந்து பொழிந்தனர் என்க. **பெருங் கிளைஞர்** - பெரு வளமுடைய சுற்றத்தார். இவரே இவ்வாறு தாமும் தனம் பொழியவல்லார்.

பெருவணிகர் - வணிகருட் சிவநேசர் சார்ந்த உட்பிரிவாகிய மரபு. ''சீர்ப் பெருவணிகர்'' (2931).

தனம் முகந்துகொண்டு - முகத்தலளவையாற் கூறியதுகொண்டு, பொழிந்த தனங்களினது அளவுமிகுதியும் தனத்தை எண்ணிக்கொள்வது போலன்றி எண்ணிக்கையில்லாது முகந்து பொழிந்த நிலையும் குறிக்கப்பட்டன. **பார் முழுதும்-யாவரும் உவப்ப** - என்று கூட்டுக. கடல்வாணிபமாதலின் எல்லாத் திசையினரு முவப்பக் காரணமாயிற்று.

ஆவண மறுகிடைத் தனம் யாவருமுவப்பப் பொழிந்தார் என்றது - இவர் கடல்மிசைக் கலம் பலவும் போக்கி அப்பொருட்குவை மனைப்பட மரக்கலம் கரை நிரைக்கும் வளத்தார் (2932) என்றதனுல் கடற்றுறைமுகக் கரையில் ஆவணமறுகில் அமைந்த அகன்மனையினையுடையார் என்பது பெறப்படும். ஆதலின் இங்கு மீக்கூர்ந்த மகிழ்ச்சியினுல் தனங்களை முகந்துகொண்டு யாவரும் உவப்ப அந்த ஆவணமறுகில் மழைபோலப் பொழிந்தனர் என்க. **பொழிந்து** - இன்னுருக்கு என்று குறியாமல் யாவரும் கொள்ளும்படி மழைபோலப் பொழிந்து; ''அனைவருக்கு நவமணிக ளுந்துகிலு மம்பொனுஞ் சிந்தி யள்ளியு முகந்துவீசி'' (56) என்ற திருத்தொண்டர் புராண வரலாறு இங்குச் சிந்திக்கற்பாலது. மேல், ''அடியவர்க்குச் - செய்து...மறையவர்க்கு - அளித்து'' என்பவை இன்னுர்க்கு இவை என்று குறித்துச் செய்வனவற்றைக் கூறுதல் காண்க. இந்நாளினும் பெரு மகிழ்வுகளில் வீதியிற் காசு இரைத்தல் நிகழ்வது காண்க.

ஓரையு நலமிக—என்பதும் பாடம் *1041*

2940. (இ-ள்) ஆறு...செய்து - கங்கையைத் தரித்த சடையினையுடைய சிவ பெருமான் அடியார்களுக்கு அன்பு மிகுதியினுலே எல்லையில்லாத பூசைகள் எல்லாவற்றையும் மிகவும் செய்தும்; மாறிலா...அளித்து - ஒப்பற்ற வேதியர்களுக்கு அவர்கள் வேண்டியவற்றை யெல்லாம் அளித்தும்; பேறு...களிசிறந்தார்– இஃதே பெரும் பேருகும் என்று கூறும்படி பெருமகிழ்ச்சியினிற் சிறந்தனர்.

(வி-ரை) அடியவர்க்குப் பூசனைகள் யாவையும் மிகச் செய்து - அடியார்க்கு அருச்சனை புரிந்த அந்நலத்தாற் பெற்ற பேருதலின் அந்நன்றிக்கு அவர்க்கு முதலிற் பூசனைகள் முற்றச்

2941. **சூத** நல்வினை மங்கலத் தொழின்முறை தொடங்கி
வேத நீதியின் விதியுளி வழாவகை விரித்த
சாத கத்தொடு சடங்குகள் தசதினம் செல்லக்
காதன் மேவிய சிறப்பினிற் கடிவிழா வயர்ந்தார். 1043

செய்தனர் என்க. பெருமகிழ்ச்சிக் குறியாகக் காசு பொழிந்த பின்னர், முதலில் குறித்து வழிபட நின்றார் அடியவர்களேயாம் என்ற தகுதியும் காண்க; **பூசனை யாவையும்** - முன் (2938) கூறியவை பார்க்க. **மிக** மேன்மேலும் மிகும்படி. அடியவரை முன்கூறியது சிறப்புப்பற்றி.

மறையவர்க்கு - வேண்டின எல்லாம் அளித்தல்-வேதியர்க்கு அவர் வேண்டும் பொருள்களை எல்லாம் தானம் செய்தல். **மறையவர்க்கு வேண்டியன அளித்து** என்றதனால் முன்கூறிய அடியவர்கள் வீடும் வேண்டா விறலினராதலும், அது பற்றி அவர்கட்கு பூசை மாத்திரம் விதிப்படி செய்தாராதலும் குறிக்கப்பட்டன.

பேறு மற்று இது - பெண்மகப் பெற்றதே பெரும் பேறு என்னும் கருத்துப் படும்படி; உண்மை இஃதே பெரும்பேறாகப் பின்னர் விளையும் வரலாறு குறிக்க. அடியார் பூசை செய்தலும் மறையவர்க்களித்தலும் ஆகிய இவை செய்யப் பெற்றதே பெரும் பேறு என்று சொல்லும்படி என்றலுமாம்.

களிசிறத்தல் - மகிழ்ச்சியில் மீக்கூர்தல். இங்குக் கூறியவை முன்பாட்டிற் கூறிய கொடையினுஞ் சிறப்பும் பெரும் பயனுமுடையவை என்பார், முன் **மகிழ்ந்தார்''** (2939) என்றவர் ஈண்டுப் **''பெருங்களி சிறந்தார்''** என்றார். அன்றியும் முன் குறித்தது அவரது உலகியல் தொடர்பு பற்றியது; ஈண்டுக் கூறியவை அவரது உயிரின் உயர்ந்த தொடர்பு பற்றியன.

மற்றிதுவே யெனும் பெருமகிழ்—என்பதும் பாடம். 1042

2941. (இ-ள்) சூத நல்வினை... தொடங்கி - பிள்ளை பெற்றவுடன் செய்யப்படும் நற்சடங்குகளை முறையாகச் செய்யத் தொடங்கி; வேத...சடங்குகள் - வைதிக நியமப்படி விதித்தவற்றின்கண் வழுவாதபடி விரித்துக் கூறப்பட்ட சாதகன்ம முதலாக வரும் சடங்குகள்; தசதினம் செல்ல - மகவு பிறந்தபின் பத்து நாட்களிலும் செய்ய; காதல்...விழா அயர்ந்தார் - பெருவிருப்பம் பொருந்திய சிறப்பினாலே அழகிய மங்கல விழா நிகழ்த்தினர்.

(வி-ரை) சூத நல்வினை - பிரசவம் என்பது வடமொழி வழக்கு.

மங்கலத் தொழின்முறை - மகப் பிறந்த பின்னர்த் தொடங்கிப் பத்து நாட்களும் செய்யத்தக்கனவாய் விதித்த செயல்கள். ''சூதநிகழ் மங்கல வினைத்துழனி'' (1933) என்றவிடத் துரைத்தவை பார்க்க.

வேத நீதியின் விதியுளி-வேதங்களின் நியமித்த விதிகளின் முறைமை. இவை கற்ப சூத்திரங்களுட் காணப்படுவன. **விதியுளி** - வேள்வி என்றலுமாம். (1928)

சாதகம் - ''சாதக முறைப்பல சடங்கு'' (1933). பிறந்த நாளும் ஓரையும் பற்றிய கோள்களின் நிலைகளைக் கொண்டு சோதிட நூல்வழிச் செய்யும் குறிப்புச் **சாதகம்** என வழங்கப்படும்; பல

பூம்பாவை

2942. **யாவ** ரும்பெரு மகிழ்ச்சியா லின்புறப் பயந்த
பாவை நல்லுறுப் பணிகிளர் பண்பெலா நோக்கி
பூவி னுளென வருதலிற் பூம்பாவை யென்றே
மேவு நாமமும் விளம்பினர் புவியின்மேல் விளங்க. 1044

பிறவியாகிய பயணத்தி னுட்பட்டுச் சென்று கொண்டிருக்கும் இவ்வுயிருக்கு இப்பிறவியுள் நிகழ்வனவற்றைக் காட்டுவது என்பது பொருள் போலும். சாதகம் செப தான வோமங்கள் பிறந்த உடன் செய்யப் படுவன.

தசதினம் - ''மறை தொடர்ந்த நடைநூலின், மேயவிதி யையிரு தினத்தினும் விளைத்தார்'' (1938); முதல் மூன்று வருணத்தாருக்கும் இவ்வினைகள் பத்து நாட்கள் விதிக்கப்படுவன. **தினம்** - தினத்தின் கண்ணும்; ஏழனுருபு விரிக்க.

சடங்குகள் - செல்ல - செல்லுதல் - செலுத்தப்படுதல்; செய்தல். ஆறு நாளில் விக்கின சாந்தி, ஒன்பதாநாளில் பலி, பத்தாநாளில் அன்னதானம் முதலியன.

கடிவிழா - அயர்ந்தார் - கடி - மங்கலம். ''அருங்கடி மணம்வந் தெய்த'' *(169);* **விழா அயர்தல்** - விழாக் கொண்டாடுதல்.

சாதகத் தொழில் — என்பதும் பாடம். *1043*

2942. (இ-ள்) யாவரும்...பயந்த - எல்லாரும் முன்கூறியபடி மீக்கூர்ந்த பெரு மகிழ்ச்சியினாலே இன்பம் பொருந்தப் பெற்றெடுத்த; பாவை...நோக்கி - பாவை போன்ற அந்தப் பெண்ணினது அழகு விளங்கும் பண்புகளை யெல்லாம் நோக்கி; பூவினுளென...விளங்க - அவை பூமகளின் பண்புகள்போல வருதலினாலே அப்பெண்ணுக்குப் பூம்பாவை என்றே பொருந்தும் பெயரினை உலகத்தில் மேலாக விளங்கும்படி கூறி இட்டனர்.

(வி-ரை) யாவரும்... இன்புற - முன் கூறியபடி யாவரும் மகிழ்ந்து இன்புறும்படி; அன்றேயடமையாது இனி மேலும் இவ்வரலாற்றின் பயன் பெற்று ஒழுகி இன்புறும்படி என்ற குறிப்பும் காண்க. **பயந்த** – பெற்றெடுத்த.

பாவை-பாவை போன்றாரைப் பாவை என்றதுபசாரம்; ''எழுது பாவை நல்லார்'' (குறுந்). அழகிய கொல்லிப்பாவையும், சிவநேசரது கண்மணிப்பாவையும் போன்றார் என்றலுமாம்.

நல்உறுப்பு அணிகிளர் பண்பு எ(ல்)லாம் நோக்கி – நல்ல உறுப்புக்களில் அழகு விளங்கும் தன்மைகளை எல்லாம் உற்று நோக்கி; **நோக்கி** - கூர்ந்து கருதி; **அணி - பண்பு** - அழகும் குணமும்; **நல்லுறுப்பு** - கண், முகம் முதலியன. இவற்றைச் சாமுத்திரிகா லட்சணம் என்பது வடமொழி வழக்கு.

பூவினுள் என வருதலில் - பூவினுள் - திருமகள் - இலக்குமி. **என** - போல; உவம உருபு; என்று சொல்லும்படி. **என வருதலில்** - என்னும்படி தோன்றியதனாலே. **வருதலில்** - சொல்லும் நிலை பெறுதலினால் என்றலுமாம்.

ஓராண்டு - தளர்நடை

2943. **தி**ங்க டோறுமுன் செய்யுமத் திருவளர் சிறப்பின்
மங்க லம்புரி நல்வினை மாட்சியிற் பெருக
அங்கண் மாநக ரமைத்திட, **வாண்டெதி ரணைந்து**
தங்கு பேரொளிச் சீறடி **தளர்நடை** பயில; 1045

மேவு நாமமும் விளம்பினர் - மகவுக்குப் பெயர் இடும் காரணம் பல வழங்கப் படுவன. அவற்றுள் இங்குக் கையாண்ட வழக்கு நல்உறுப்புக்களைப் பற்றித் திருமகள் போன்ற உடலமைப்புக் காரணமாக வந்தது. ''கையி லேந்தற் கருமையா லுரிமைப் பேரும் திண்ணனென் றியம்பு மென்ன'' (666) என்று கண்ணப்ப நாயனுருக்கு உடலின் திண்ணிய கனம்பற்றிப் பெயரிட்டமையும், பரவையாருக்கு ''மதியணி புனித னன்னுள்'' பற்றி அந்நாமம் மங்கல அணியாற் சாற்றியதும் (278) பிறவும் நினைவு கூர்க.

பூம்பாவை என்றே மேவு நாமமும் - ஏகாரம் தேற்றம். **மேவும்**-பொருத்த முடைய. **பூம்பாவை**-''பூப்பெயர் முன்னின மென்மையுந் தோன்றும்'' என்ப திலக்கணமாதலானும் பூப்பாவை என்று வல்லொற்று வரின் இவளின் மெல்லிய பண்புக்கு மேவாதாதலானும் **பூம்பாவை** என்றுர்; **மேவும்** என்ற கருத்துமிது; பின்னர்ப் பிள்ளையாரது அருட்டிருவாக்கில் மேவும் என்ற குறிப்புமாம்.

புவியின்மேல் விளங்க - மேல் - மேலாக. மேன்மை பெற்று - என்ற பின் வரலாற்றுக் குறிப்பும் காண்க. **விளங்க** - விளங்கும்படி. **மேல் - மேலும்** - பின்னரும் என்று கொண்டு, இப்போது பெயர் விளம்பியதன்றிப் பின் வரலாற்றில் இவ்வுடல் சாம்பராகி மீள உதிக்கநின்றபோதும், மேலும் பிள்ளையாரது திருவாக்கில் இப்பெயரே விளம்பப்பெற்ற நிலைக்குறிப்பாக உரைப்பதுமாம்; ஏனையோர்க்கு இட்ட பெயர்கள் உடலுடன் உயிர் நிற்கும்வரை வழங்கி உயிர் பிரிந்தபின் நீக்கப்பட்டுப் பிணம் எனப்படும்; ''பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டு'' (திருமந்திரம்); ஆயின் இவருக்கு அவ்வாறன்றி எலும்பும் சாம்பருமாகிக் குடத்தினுள் அமைந்தபோதும் அப்பெயரே மேவியது என்ற குறிப்புமாம். பின்னர் வரும் உயர்பண்புகளின் குறிப்புமாம்.

பூவினுளெனத் தகுதலில் — என்பதும் பாடம், *1044*

2943. (இ-ள்) திங்கள் தோறும்...அமைத்திட - மாதந்தோறும் முன் செய் யப்படும் அந்தச் செல்வம் வளரும் மங்கலங்களாகிய சடங்குகளும் ஏனை நல்வினைகளும் மாண்பு பொருந்தப் பெருகும்படி அங்குப் பெரிய நகரத்தினர்கள் அமைவு படுத்தியிட; ஆண்டெதி ரணைந்து... பயில - ஓராண்டு நிறைந்து தங்கும் பேரொளி யினையுடைய சிற்றடிகள் தளர்நடை பயில;

(வி-ரை) திங்கள்தோறும் செய்யும்...நல்வினை - ஆண்டு நிறைவின் முன் மாதந்தோறும் செய்யப்படும் சடங்குகள். இவை மாதந்தோறும் பிறந்த நாளிற் (இரட்சா பந்தனம்) காப்பிடுதல் - முதல் மாதத்திற் றெட்டிலேற்றுதல், (உபநிட்கர மணம்,) ஏழாமாதத்தில் அன்னப்பிராசனம் முதலாயின என்பர். **திருவளர் - மங்கலம் புரி - நல்வினை** - வேத விதிகளுள் விதித்த

ஏழு ஆண்டு

2944. **தளரு மின்னினங் குர**மெனத், **தமனியக் கொடி**யின்
வளரி ளந்தளிர்க் கிளையென, **மணிகிள ரொளியி**யின்
அளவி லஞ்சுடர்க் கொழுந்தென,வணைவுறும் பருவத்
திளவ னப்பிணை யனையவர்க் **கேழியாண் டெய்த.** 1046

இச்சடங்குகள் செல்வம், ஆயுள், வீரியம் முதலிய நற்பண்புகளை வளர்க்கும் பயன் தருவன எனப்படுவன. **நல்வினை** - வேள்வி - அமுது அளித்தல் முதலிய சடங்குகள்; உற்றவர்களால் அப்போது அக்குழவியின் உலக நலங்களின் வளர்ச்சி கருதிச் செய்யப்பட்டனவாயினும், உண்மையில் இறுதியில் மங்கலங்களுக்கெல்லாம் மேலாகிய சிவ நன்மங்கலத்தைப் பிள்ளையாரது அருளினால் சாரச் செய்தன என்பது **மங்கலம் புரி** என்றதன் குறிப்பு. ''தேனமர் கோதையுஞ் சிவத்தை மேவினாள்''*(3015)* என்பது காண்க.

ஆண்டெதிர் அணைந்து - மாதந்தோறும் செய்யும் சடங்குகள் நிரம்பிப் பிறந்த ஆண்டினை அடுத்த ஆண்டு கூடி.

தளர்நடை பயில - இப்பருவம் ஓராண்டு நிறைவில் நிகழ்வது; *1948* பார்க்க. பிள்ளைத் தமிழ் நூல்களுட் சிறப்பித்துக் கூறும் பருவங்களுள் முதலேழு பருவங்களும் இங்குப் பெறவைத்து இவ்வொருபாட்டிற் கூறியமைத்த கவிநலம் கண்டு கொள்க. இவற்றி னியல்பெல்லாம் இருபாலார்க்கும் பொதுவாதலானும் இவை முன்னர் விரிக்கப்பட்மையானும் இவ்வாறு சுருங்கச் சுட்டிக் கூறியமைத்தார். மேல்விளையும் மூன்று பருவங்கள் பெண்பாற்குச் சிறப்பாயுரியன வாதலின் மேல் விரித்துக் கூறுதல் காண்க. இவை கூடிய பருவமுறை நிரம்பக் கூறுவன என்பார் ஒருமுடிபாக்கி உரைத்த நயமும் கண்டுகொள்க. *1045*

2944. (இ-ள்) தளரும்...அங்குரமென - துவள்கின்ற மின்னலின் முளை போலவும்; தமனியக் கொடியென... கிளையென- பொன்னாலாகியதோர் கொடியினது வளர்கின்ற இளந் தளிரினது கிளைபோலவும்; மணிகிளர்...கொழுந்தென - இரத்தின மணிகளினின்றும் கிளர்கின்ற ஒளியினது அளவுட்படாத அழகிய சுடர்க்கொழுந்து போலவும்; அணைவுறும் பருவத்து - சார்கின்ற பருவங்களிலே; இள அ(ன்)னப்பிணை யனையவர்க்கு ஏழ்யாண்டு எய்த - இளவன்னப்பேடை போலும் அவருக்கு ஏழு ஆண்டுகளின் பருவம் பொருந்த,

(வி - ரை) தளரும் - தளர்தல் ஈண்டு ஒசிந்து வளைந் தசைதல் என்னும் பொருளில் வந்தது.

அங்குரம் - முளை; **மின்னின் அங்குரம்** - பின்னர் முழுமையாகும் மின்னற் கொடி; **என** - உவம உருபு.

தமனியம் - பொன்; **தமனியக் கொடியின்...கிளையென** - பொற்கொடியின் இளந்தளிர்க் கிளை என்றது முற்கூறிய மின்னின் அங்குரத்தினின்று தளிர்க்கும் கொடியின் கிளை எனத் தொடர்ந்துகொள்க.

மணி - செம்மணி. **மணியின்......கொழுந்தென** - முன்கூறிய பொற்கொடிக் கிளையின்மேல் விளங்கும் மணிக்கொழுந்து என மேலும் தொடர்ந்துகொள்க.

கழல் அம்மனை பந்து

2945. **அழகின் முன்னிளம் பதமென,** வணிவிளக் கென்ன,
விழவு கொண்டெழும் **பேதைய ருடன்விளை யாட்டிற்**
கழலொ டம்மனை கந்துக மென்றுமற் றினைய
மழலை மென்கிளிக் குலமென மனையிடை யாடி, 1047

மின் - பொன் - மணி - மூன்றும் ஒளிப்பொருள்களாதலும், ஒன்றற்கொன்று தண்ணிய கதிர்களால் ஏற்றமாய் அனுபவிக்கலாந் தன்மையனவாதலும் கண்டு கொள்க.

அங்குரம் - இளந்தளிர் - கொழுந்து - மூன்றும் இளமையும் வளர்ச்சியும் குறிப்பனவாதலும் காண்க. **தளிர்** - என்றலே அமையுமாயினும் அதன் முன்பதமாகிய மிக்க இளமை குறிக்க **இளந்**தளிர் என்றார். **இள அனம்** - என மேற்கூறுவதும் இக்குறிப்பு. **280-ம்** ஆண்டுரைத்த நலங்களும் இங்கு நினைவு கூர்தற்பாலன.

இள அ(ன்)னப் பிணை - இளமையுடைய பெட்டையன்னம்; **அன்னம்** - என்றது செய்யுளோசையின்பங் கருதி **அனம்** என நின்றது. **பிணை** - பெட்டை; ''இளவன்னம் வீற்றிருக்கும்''(தேவா); இங்கு இவ்வாறன்றி **வனம்** - வனத்தில் வாழும், **இளம் பிணை** - இளைய பெண்மான் என்று கூட்டியுரைத்தனர் முன் உரைகாரர்கள்.

இள அனப்பிணை அனையவர்க்கு - முன்னர் அங்குரம் - கிளை - கொழுந்து என்பன அசைவுகள் சிறிதே காணும் பருவம்; ஈண்டு **ஏழியாண்டு எய்தும்** - பருவத்து அசைந்தாடி ஓடும் செயல்கள் மிகுமாதலின் இள அன்னம் என்றார்; ஆங்கிலருள்ளும் சிறு பெண் மகவுகளைப் பறவைகட்குவமிப்பது மரபு. *1046*

2945. (இ-ள்) அழகின்...விளக்கென்ன - அழகு என்றதொரு பொருளின் முதலிற் பெறப்படும் இளம்பத மென்னவும், அணிவிளக்கு என்னவும் கூறும்படி வளர்ந்து; விழவு...பேதையருடன் - விழாக் கொண்டு கூடி எழுகின்ற சிறுமியருடனே கூடி; விளையாட்டில்...ஆடி - விளையாடல் பயில்வதில் கழல் - அம்மானை - பந்து என்று இன்னவற்றை மழலை ததும்பும் நிலை மெல்லிய கிளிக்கூட்டங்கள் போலப் பாடி எழ மனையினுள்ளே ஆடி,

(வி-ரை) *அழகின் முன் இளம்பதமென* - அழகு என்ற பொருளின் இளம்பதத்தின் முற்கோலம். ''மொய்த்துவளர் பேரழகு மூத்தவடி வேயோ'' (178).

விழவு - சிறுமியர் விளையாட்டுக்களில் விழாக்கள் போலக் கொண்டாடும் ஆடல்கள்.

பேதையர் - வயதினுல் ஒத்த சிறுமியர்; **பேதை** - ஏழுவயதளவில் உள்ள பெண் பருவம்.

கழலோ டம்மனை கந்துகம் என்று - கழல் - அம்மனை - கந்துகம் (பந்து) இவை கொண்டு ஆடுதல் சிறுமியர் விளையாடல் வகைகள்; ''முத்தழலோர் மனைகடொறு மிறைவனது தன்மை பாடிக், கருந்தடங்கண் ணார்கழல்பந் தம்மானைப் பாட்டயருங் கழுமலமே'' (பிள் - மேகரா - கழுமலம்) என்ற பிள்ளையார் திருவாக்கு இவ்வாடல்களின் இயல்புகளை நன்கு தெரிக்கின்றது.

சிற்றில்-சிறுசோறு ஊசல்

2946. **பொற்றெரு டிச்சிறு மகளிரா யத்தொடும் புணர்ந்து**
சிற்றின் முற்றவு மிழைத்துட னடுந்தொழிற் சிறுசோ
றுற்ற வுண்டிகள் பயின்றொளி **மணியூச லாடி**
மற்று மின்புறு வண்டலாட் டயர்வுடன் வளர. 1048

இவற்றில் இறைவரைப் பாடும் பாடல்கள் பாடி ஆடுதல் ஓர் இன்றியமையாத கூறு; **கழல்** - கழற்சிக்காய்; இவை இந்நாளில் முற்றும் மறந்து கைவிடப்பட் டொழிந்து வேறு பொருளற்ற புன்மைச் சிற்றாடல்கள் புகுந்துகொண்டமை வருந்தத் தக்கது. 281-ம் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

மற்று இனைய - இவை தோணோக்கம், பூவல்லி, உந்தி முதலியவைபோலும்; இவைபற்றித் திருவாசகத்துட் காண்க.

மழலை மென்கிளிக் குலமென - முன்னர் இளவன்னத்தைப்போல என்றனர்; ஈண்டுப் பேசுந் தன்மைபற்றிக் கிளியை உவமித்தமை குறிக்க **மழலை** என்ற அடை மொழியும், இளமை குறிக்க **மென்(மை)** என்ற அடைமொழியும் புணர்த்தி ஓதினார். ஈண்டுக் கூறும் விளையாடல்களுக்குப் பாடல் இன்றியமையாததென்பதும் குறிப்பு. **குலம்** - கூட்டம். கிளிகள் கூட்டமாய் வாழும் இயல்புடைமை காண்க.

மனையிடை - இங்குக் கூறும் ஆடல்கள் இப்பருவத்தே மனையினுள் நின்று ஆடுவன; மனையின் புறத்துச் சென்றாடுவனவற்றை வரும் பாட்டிற் கூறுவது காண்க. *1047*

2946. (இ-ள்) பொற்றொடி....இழைத்து - பொன்னாலாகிய தொடிகளை யணிந்த சிறு பெண்களின் கூட்டத்துடன் சேர்ந்து சிற்றில்களை முற்றக் கட்டியும்; உடன்... பயின்று - அதனுடனே சமைக்கும் தொழிலிலே சிறுசோற்றுடன் பொருந்திய உண்டிகளமைத்தலும் உண்ணுதலுமாகிய செயல்களிற் பயின்றும்; ஒளி......ஆடி - ஒளி யுடைய மணிகள் கட்டிய ஊசல் ஆடியும்; மற்றும்...வளர - இன்னும் இவ்வாறாகிய இன்பம் பொருந்தும் வண்டல் பயிலும் ஆடல்களைப் பயின்றும் வளர,

(வி-ரை) சிற்றில்... ...ஆடி - சிற்றிற் பருவமும், ஊசற் பருவமும் கூறியபடி.

அடுந்தொழிற் சிறுசோறு உற்ற வுண்டிகள் பயின்று - மணற்சிறுசோ றடுதல் சிற்றிலிழைக்கும் ஆடலுடன் கூடி நிகழ்வதாகும்; **உண்டிகள்** - என்றதனால் சிறு சோறு ஒன்றுமட்டில் அமையாது உரிய உணவு வகைகளும் கொள்ளப்படும். இவை சிறுமியர் தாமிழைத்த சிற்றிலினுள் மணலால் சோறும் உண்டிகளும் அட்டதாகவும், அதனை ஆயமும் விருந்தும் உண்ண அளித்தூட்டுவதாகவும் பாவனை செய்யும் நிகழ்ச்சிகள். இவை பெண்பாலார்க்குரிய இல்வாழ்க்கை கடமைகள் இயல்பிலே சிறு பருவத்தினின்றே சிறுமியரிடம் தோன்றி வளரும் தன்மைகளைக் குறிப்பன. முன் 66-ம் பாட்டும், பிறவும் நினைவுகூர்க. இவையும் அம்மானையும் நீராடலும் பெண்பாற் பிள்ளைத் தமிழுக்கே சிறப்பா

2947. தந்தை யாருமத் தளிரிளங் கொம்பனு **டகைமை**
இந்த வையகத் தின்மையா லின்புறு களிப்பு
வந்த சிந்தையின் மகிழ்ந்து,''மற்றி**வண் மணம் பெறுவான்**
அந்த மில்லென தருநிதிக் குரிய''னென் றறைந்தார். 1049

யுரியவைகளாகக் கூறும் மரபும் கருதுக. வளர்ச்சி கூறு முகத்தானே இவை நிகழும் பருவத்தையும் ஆசிரியர் முன்(2944) குறித்தருளியதும் காண்க.

ஒளி மணி ஊசல் ஆடி - பெற்றோர் இவர்களுக்கு அமைக்கும் அழகிய மணிகள் பூண்ட ஊசல்.

மற்றும் இன்புறு வண்டல் ஆட்டு அயர்வு - இவை தெருவிற் புழுதிபடிய ஆடுதல் ஓடுதல் வகையாய ஆடல்களும், நீராடலும், பிறவுமாம். ''வண்டல்பயில் வனவெல்லாம்''(1721) என்றதும், பிறவும் பார்க்க. **ஆட்டயர்வு** - ஆடுதல்; ஆடும் செயல்.

இன்புற—என்பதும் பாடம். *1048*

2947. (இ-ள்) தந்தையாரும் - தந்தையாகிய சிவநேசரும்; அத்தளிர்... ...இன்மையால் - அந்தத் தளிர்த்த இளங்கொம்பு போன்ற பெண்ணினுக்கு ஒத்த பண்பு இந்த உலகத்தில் வேறொருவருக்கும் இல்லையாதலாலே; இன்புறு... மகிழ்ந்து - இன்பத்துடன் கூடிய களிப்புப் பொங்கிய மனத்தினிலே மகிழ்ச்சி யடைந்து; மற்று......என்று அறைந்தார் - பேருகிய இவளை மணஞ் செய்யப் பெறும் மணமகனே என்னுடைய முடிவில்லாத அரிய செல்வங்களுக்கெல்லா முரிமை யுடையோ னுவான் என்று அறிவித்தார்.

இவ்வைந்து பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) கொம்பனுள் தகைமை - கொம்பு போன்ற தன்மை பண்புகளின் தொகுதியின் ஒப்பு.

இந்த வையகத்துத் தகைமை இன்மையால் - இத்தன்மை போன்றதொன்று - ஒப்பாகியதொன்று - இவ்வுலகத்தில் இல்லாமையாலே; கண்ணப்ப னொப்பதோரன் பின்மை கண்டபின்'' (திருவா - கோத்).

இன்புறு களிப்பு வந்த சிந்தையின் மகிழ்ந்து - மகவின் நற்பண்புகளின் மேம்பாடு காண இன்பமும், அதனுற் களிப்பும், அதனை மேலும் எண்ணித் துணிதலால் மகிழ்வும் வந்தன என்க. **மகிழ்ந்து** - மகிழ்ந்ததனுல்; பின்னர் **அறைந்தார்** என்றதற்குக் காரணங் காட்டியவாறு.

''மற்று இவள் மணம்...உரியன்'' என்று - இணையில்லாத நற்பண்புகளுக்குத் துணையாக அதற்கேற்றபடி இணையில்லாத செல்வம் தருதலே தக்கதாம் என்பது கருத்து. **அந்தமில் எனது அருநிதி** என்ற குறிப்புமது. மகட்கொடையின் அளவில்லாத தனங் கொடுத்தல் வணிகருள் வழக்குமாம் என்பது ''மகட்கொடையின் மகிழ்சிறக்கும் வரம்பிறனங் கொடுத்ததற்பின்'' (1729) என்றவாற்றுனு மறிக. **எனது நிதிக்கு உரியன் - நிதிக்கு** - நிதி முழுமைக்கும் என்று முற்றும்மை

2948. **ஆ**ய நாள்களி லமண்பயில் பாண்டிநா டதனைத்
தூய ஞானமுண் டருளிய தோன்றலா ரணைந்து
மாய வல்லமண் கையரை வாதில்வென் றதுவும்,
மேய வெப்பிடர் மீனவன் மேலொழித் ததுவும், 1050

தொக்கது. சிவநேசருக்கு இப் பூம்பாவையார் ஒரே மகவாதலும் ஓர் குறிப்பு. ''தங்கள்குடிக் கொருபுதல்வி யாதலினால்'' (1728) எனவரும் அம்மையார் புராண வரலாறு ஈண்டுச் சிந்திக்கற்பாலது. ஆண்டுத் தனதத்தனார் போலவே சிவநேசரும் **பெருங்குடி** வணிகராதலும் கருதுக.

மற்று இவள் - முன் கூறியபடி இந்த வையகத்தில் ஒப்புவே றில்லாத் தகைமையுடைய இவள் என்க. **மற்று** - வேறாகிய என்பது. இனி, இவள் மணம்பெறுவான் உலகில் ஒருவனுமல்லனும்; மற்று எல்லா உயிர்களுக்கு முயிர் நாயகனாகிய சிவனேயாம். ''தேனமர் கோதையுஞ் சிவத்தை மேவினாள்''(3015) என்றபடி பிற உயிர்களின் வேறாகிய சிவனே என்ற குறிப்புமாம்; இனி இவள் இவ்வுலகத்தினுள் மணத்தால் நாயகனையடையும் நிலையன்றிப் பின்னர்ப் பிள்ளையார் சடையவர் கருணை காண்வர வுற்பவித்தபின், அந்நிலையில் சிவமணம் பெறுவாள் என்ற குறிப்புத்தரவும் நின்றது. அவரே எல்லாவற்றையும் உடைமையாக உடையவர் என்பது.

அறைந்தார் - யாவருமறியப் பறைசாற்றியதுபோல வெளிப்பட மொழிந்தனர் என்பது **அறை** - என்றதன் றொனி.

தளரிளங்—என்பதும் பாடம். *1049*

2948. (இ-ள்) ஆய நாள்களில் - முன்கூறிய அவ்வாறாகிய நிகழ்ச்சிகள் நிகழ்ந்த காலத்தில்; அமண் பயில்...அணைந்து - சமணர்கள் மிக்கிருந்த பாண்டி நாட்டினைத் தூய ஞானபோனக முண்டருளிய பிள்ளையார் சென்றணைந்து; மாய... ...வென்றதும் - வஞ்சனையில் வல்ல அமணர்களாகிய கீழ்மக்களை வாதில் வென்றதுவும்; மேய வெப்பு...ஒழித்ததுவும் - வந்து பொருந்திய வெப்பு நோயின் துன்பத்தினைப் பாண்டியனது உடலினின்றும் நீக்கியதுவும்;

(வி-ரை) ஆய நாள்களில் - முன் கூறியவாறு சிவநேசர் தம் மகளாரது இன்னலங்களின் மகிழ்ந்து நிகழ்வனவாகிய நாள்களில். **ஆய நாள்களில் - இசைப்ப** -(2950) என்று கூட்டுக; **ஆய நாள்களில் - அணைந்து** - என்று பிள்ளையாருடைய நிகழ்ச்சிகளுடன் கூட்டி முடித்தலுமாம்.

அமண் பயில் பாண்டி நாடு - அமண் பயில் - அமணர் பயிலும்; அமணர்கள் மிக்கு விரவிய; **அமண் பயில்** - சமண சமயத்திறத்தினை மேற்கொண்டு நிகழ்ந்த - அமணிற் பயில் - என்றுரைத்தலுமாம்.

மாய... ...வென்றதும்–மாயம் - வஞ்சனை. ''மாயை சால மிகவல்லார்'' *(1552)*; ''அமண்கையர் வஞ்சனைக்கோ ரவதி யில்லை''*(2514)*.

வாதில் வென்றதுவும் - ஈண்டு வென்றது என்றது அமணர் ஏவியும் கொளுவியும் செலுத்திய தீயினைத் தம்பாற்பற்றாது செய்ததனோடு அதனையே அரசன்பாற் பையச் சென்று

2949. **நெருப்பி லஞ்சினுர் தங்களை நீரிலொட் டியபின்**
மருப்பு நீள்கழுக் கோலின்மற் **றவர்களே றியதும்**
விருப்பி னுற்றிரு நீறுமீ னவற்களித் தருளிப்
பொருப்பு வில்லியார் சாதனம் போற்றுவித் ததுவும், 1051

ஆகும்படி செய்த செயல் குறித்தது; வாதத்தில் இறுதியாகக் கொண்ட வெற்றியளவும் மேல் தனித்தனி விரித்தல் காண்க; வென்றதுவும் என்பது பொதுமைப் பொருளிலும், ஏனையவை அதன் விவரணங்கள் என்ற பொருளிலும் கொள்ளினுமமையும்.

மேய - வள்ளலார் ''பையவே சென்று பாண்டியர்க்காகவே'' என்று அருளிய திருவாக்கின்படி வந்து பொருந்திய; பிள்ளையாருறை ''மடத்தில், வெந்த ழற்பட விஞ்சைமந் திரத்தொழில் விளைத்தால்'' (2586) என்று கூறிய அமணரது வஞ்சனைக்கு அதனையே விரைந்துசெய்யப் போவது''(2587) என்று இசைவுதந்த தீவினையின் பயனுகவும், அமணெடு பயின்ற தீவினைப் பயனுகவும் வந்து மேவிய என்ற குறிப்புமாம்.

வெப்பு இடர் - இடர் - துன்பம்; வெப்பாகிய இடர்; வெப்பினுல் வந்த இடர் என்றலுமாம்; வெப்பும் அஃதிறுதியாக முன்னர்ப் போந்த இடர்களும் என் றுரைக்கவும் நின்றது; ''வழுதியு முழுதும் உய்ந்தான்'' (2668).

மீனவன் மேல் ஒழித்ததுவும் - மேல் - மேனின்றும்; ஐந்தனுருபு விரிக்க. வென்றதுவும் - ஒழித்ததுவும் - ஏறியதும் (2949–2950) - போற்றுவித்ததுவும் - இன்னவாறெலாம் அறிந்துளார் (2949–2950) என்று மேல்வரும் பாட்டுக்களுடன் முடிக்க. 1050

2949. (இ-ள்) நெருப்பில்...ஒட்டியபின் - நெருப்பின் வாதத்திற் ருேற்று அஞ்சிய அவ்வமணர்களை நீரின் வாதத்தினில் ஒட்டி வென்றதன் பின்; மருப்பு...ஏறியதும் - கூரிய கொம்பு போன்ற நீண்ட கழுமரங்களில் மற்று அவ்வமணர்கள் ஏறியதுவும்; விருப்பினுல்... போற்றுவித்ததுவும்-விருப்பத்தினுலே திருநீற்றினைப் பாண்டியனுக்கு அளித்தருளி, அதன்மூலம் மலைவில்லையுடைய சிவபெருமானது திருநீற்றுச் சாதனத்தைப் போற்றுவித்ததுவும்;

(வி-ரை) நெருப்பில் அஞ்சினுர் தங்களை - நெருப்பில் - நெருப்பினை இடமாகக்கொண்டு செய்த வாதத்தில். நெருப்பு - அதில் செய்த வாதத்துக்கு வந்தது ஆகுபெயர். பின்னர் **நீரில்** என்றது மிவ்வாறே.

அஞ்சினுர் - அஞ்சிப் புகுந்து தோற்ற சமணரை. ''நையு நெஞ்சின ராகியே நடுங்கிநின் றிட்டார்'' (2685); ''நடுக்குற நின்றநள் ளாறுடைய நம்பெருமான்'' (தேவா - நட்டபாடை - 10).

அஞ்சினுர் - என்றதனுல் அஞ்சிப் புகுந்து பின் தோற்றமையால் மேலும் அஞ்சியவர்களாகிய என்பதும் பெறவைத்த நயமும் காண்க.

நீரில் ஒட்டியபின் - புனல் வாதத்தை ஒட்டியியற்றி அவர்களை வெற்றிகொண்ட பின். ஒட்டிய வரலாறு முன்னர்ப் பார்க்க (2693-2697); **ஒட்டியபின்** - என்றதனுல் அவர்களை வெற்றிகொண்ட செயலைக் குறிப்பாற் பெறவைத்தார்.

2950. **இன்ன வாறெலா மறிந்துளா ரெய்தியங் கிசைப்பச்,
சொன்ன வர்க்கெலா மிருநிதி தூசுட னளித்து,
மன்னு பூந்தராய் வள்ளலார் தமைத்திசை நோக்கிச்,
சென்னி மேற்கரங் குவித்துவீழ்ந் தெழுந்துசெந் நின்று,** 1052

விருப்பினுல் - தமது மகிழ்ச்சியினுலே; பாண்டியனுக்குத் திருப்பாசுரப் பதிகத்தினுல் ஞானுபதேசஞ் செய்து திருநீறு தந்தமை இங்குக் கூறப்பட்ட செயல். **அளித்தருளி** என்ற குறிப்புமது; 2756 பார்க்க.

மருப்பு நீள் மருப்பு - கொம்பு; கொம்புபோலக் கூர்ந்து நீண்ட. "மருப் புடைக் கழுக்கோல்" (2704).

அவர்களேறியதும் - "எண்பெருங் குன்றத் தெண்ணுயிரவரு மேறினுர்கள்" (2753); ஆண்டுரைத்தவை பார்க்க. "மற்றவரை யேற்றியதும்" என்று கொள்ளும் பாடம் பிழை. **ஏற்றி** என்று பிள்ளையார்பாற் சார்த்திக் கூறும் வாக்குக்கள் உபசாரம் என்று கொள்க.

சாதனம் - திருநீறும், (உருத்திராக்கமும்), திருவைந்தெழுத்தும்.

போற்றுவித்தலாவது-யாவரும் கையேற்று ஆளும்படி செய்தல்; **போற்றுதல்** காத்தொழுகுதல். *1051*

2950. (இ-ள்) இன்னவாறெலாம்...இசைப்ப - இவ்வாருயினவற்றை எல்லாம் அவற்றை அறிந்தவர்கள் அங்குச் சேர்ந்து சொல்ல; சொன்னவர்க்கெல்லாம்... ...அளித்து - வந்து சொன்னவர்களுக்கெல்லாம் பெருநிதியங்களைத் துணிகளுடனே அளித்து; மன்னு பூந்தராய்...செந்நின்று - நிலைபெற்ற சீகாழியின் வள்ளலாராகிய பிள்ளையாரை அவரிருந்த திசையினைநோக்கித் தலையின்மேற் கைகளைக் கூப்பிக்கொண்டு நிலமுற விழுந்து வணங்கி எழுந்து நேர்நின்று;

(வி-ரை) இன்னவாறெலாம் - முன்னர் வென்றதுவும் என்பது முதலாக நிகழ்ந்தவா றெல்லாவற்றையும்.

அறிந்துளார் - நேரில் அறிந்தார்களும் கேட்டறிந்தார்களும். நம்பத்தக்க முறையிற் செய்தி சொல்வோர். கேட்கும் செய்தியை நம்பும் முறையினை அறிவித்தவாறு.

எய்தி அங்கு இசைப்ப - பிள்ளையார்பால் வைத்த இவரது அன்பு (2936) காரணமாகக் காணவும், அன்றி யாத்திரையாகவும் வரும் அடியார்கள்; அந்நாளில் அடியார்கள் கூடியபோது பேசுவன இத்தகைய நல்வார்த்தைகளேயாம் என்னு முண்மைவழக்குக் குறிக்க. **அங்கு** - திருமயிலையின்கண்.

சொன்னவர்க்கெலாம்...அளித்து - நல்வார்த்தை கொண்டு வருவோருக்கு இவ்வாறு துணியும் மணியும் அளித்தல் உண்மை மகிழ்ச்சிபெற்ற உள்ளநிலை காட்டுவதாம். புராண வரலாறு (56) பார்க்க. இவ்வழக்கு இந்நாளினும் ஏற்ற பெற்றி அருகி வழங்கக் காணலாம்.

2951. **சுற்ற** நீடிய கிளையெலாஞ் சூழ்ந்துடன் கேட்பக்
''கற்ற மாந்தர்வாழ் காழிநா டுடையவர்க் கடியேன்
பெற்றெ டுத்தபூம் பாவையும் பிறங்கிய நிதியும்
முற்று மென்னையுங் கொடுத்தனன் யா'' னென்று மொழிந்தார். 1053

திசை நோக்கி - கரங் குவித்து வீழ்ந்து - அவரிருந்த திசையினை நோக்கி அவரை மனத்துட்கொண்டு அவரை நேர் கண்டதுபோலவே வணங்கி; இத்திசை திருமயிலையினின்றும் தென்றிசையில் சீகாழிப்பதி யிருக்கும் திசையாம். எனவே சிவநேசர் தெற்குத் திசை நோக்கி வணங்கினர் என்பதாம். கிழக்கும் வடக்கும் நோக்கி வணங்குதல் வேண்டுமென்பது பொது விதி. இஃது அதனின் வேறாகிய சிறப்பு விதியானமைந்தது. இதற்குக் காரணமுங் காட்டியவாறு.

செந்நின்று - நேரே நிமிர்ந்து நின்று; வழிபாட்டில் உடல் நிற்கவேண்டிய நேர்நிலை; செம்மையுள் நின்று என்ற குறிப்புமாம். *1052*

2951. (இ-ள்) சுற்றம் நீடிய...கேட்ப - சுற்றத்தாரும் நீண்ட கிளைஞர்களும் கேட்கும்படி(உரத்த ஒலியிலே); ''கற்ற...யான்'' என்று மொழிந்தார் - கற்றவர்களாகிய மக்கள் வாழும் காழிநாடுடைய பிள்ளையாருக்கு அடியேன் பெற்றெடுத்த பூம்பாவையாரையும் விளக்கமுடைய என்னுடைய நிதிகளையும் முற்றவும் அடிமையாக என்னையும் யான் கொடுத்தனன் என்று மொழிந்தார்.

இந்நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) சுற்றம் நீடிய கிளை எலாம் கேட்ப - சுற்றத்தாரும் நீடிய கிளைஞரும் ஆகிய எல்லாரும் கேட்கும்படி உறுதி கூறும் பேரொலியினாலே; இன்பத் துன்பங்களுள் விடாது சுற்றிச் சூழ்தலால் **சுற்றம்** எனவும், ஒரு மரத்தினின்றும் வெவ்வேறாகக் கிளைக்கும் பல கிளைகள்போல வருதலிற் **கிளை** எனவும்படும்; வமிச விருட்சம் (Geneological tree) என்ற வழக்கும் காண்க. **எலாம்** - பலதிறப்பட்ட எல்லாரும் என்க.

சுற்ற நீடிய கிளை எலாங் கேட்ப - மொழிந்தது என்னையோ? எனின், இவர்பாற் பெண்ணை மணம்கொள்ள உரிமையுடையவர்கள் **சுற்றத்**தார்; ஆண்மகவு இன்றி இவர் ''குடிக்கு ஒருபுதல்வி யாதலினால்'' பெண்ணோடு நிதியும் பெற எதிர் பார்க்கும் நிலையினரும் அவருள் இருத்தல் கூடும்; ஆண்மக வில்லாமையால் இவரது அருநிதிக்குப்பின் உரிமைத் தாயத்தார்களாகிய **கிளைஞர்**களும் பலர்; ஆதலின் இவர்கள் கேட்ப ''இவர் என் உண்மைச் சுற்றமும் கிளையுமல்லர்; இவை பாசக் கூட்டமே'' 'உறவாவா ருருத்திரபல் கணத்தினோர்கள்' (தேவா);'சுற்றம் மாசிலா வீச னன்பர்' (திருவிளை. புரா) என்றபடி காழிநாடுடையவரே என் குருவும் சுற்றமும் ஆளுடைய நாயகருமாவர் என்று கண்டேன்; என் பெண்ணையும் நிதியையும் என்னையும் அவருக்கே கொடுத்தனன் என்று சுற்றமும் கிளையும் கேட்ப மொழிந்தனர். மொழிந்த பொருள் யாவரும் அறிய விளம்பப்பட்டதோடு அவர்களும் அறிவுறுத்தப்பட்டனர் என்க. **என்னையும்** (அடிமையாகக்) **கொடுத்தனன்** - என்பதாம்.

2952. **எல்லை யில்பெருங் களிப்பினா லிப்பரி சியம்பி**
முல்லை வெண்ணகை முகிழ்முலை யாருடன் முடியா
மல்கு செல்வத்தின் வளமையு மறையவர் புகலிச்
செல்வ ரேயுடை யாரெனுஞ் **சிந்தையான் மகிழ்ந்தார்.** 1054

முற்றும் என்னையும் - "அன்றே யென்றனாவிய முடலு முடைமை யெல்லாமும், குன்றே யனையா யென்னையாட் கொண்ட போதே கொண்டிலையோ?" (திருவா) என்ற நிலை காண்க. என் உயிர் உடல் பொருள் இவையும் இனிக் காழிநாடுடையவர் உரிமையாயினமையின் இனி இவற்றைப் பற்றியும் உடற் சுற்றமாகிய உங்களுக்கு ஒரு பற்றில்லை என்று சுற்றத்தார்க்குச் சொல்லியவாறு.

கற்ற மாந்தர் வாழ் காழி நாடு - "பாமருவுங் கலைப்புலவோர் பன்மலர்கள் கொண்டணிந்து பரிசினாலே, காமனைகள் பூரித்துக் களிகூர்ந்து நின்றேத்துங் கழுமலமே" (பிள் - மேகர 9); "கற்றவர்கள் பணிந்தேத்தும் கழுமலத்துள்" (ஷி-11)முதலாக வரும் பிள்ளையார் திருவாக்குக்கள் காண்க. **கற்ற** - சிவனையும் சிவனடியாரையும் வழிபடுதலே பிறவிப் பயனாகிய உறுதிப்பொருள் என்று கற்றுத் தெளிந்து அவ்வழி ஒழுகக் கற்ற. "கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன், நற்றா டொழாஅ ரெனின்" (குறள்).

காழி நாடு- காழிப்பதி; இவ்வாறு பெரியோர் வாழும் பதியை நாடென்று கூறுதல் மரபு.
1053

2952. (இ-ள்) எல்லையில்...இயம்பி - அளவுகடந்த களிப்பினாலே இவ்வாறு சொல்லி; முல்லை...வளமையும் - முல்லையரும்பு போன்ற கூரிய வெள்ளிய பல் வரிசையினையும் முகிழ்க்கும் முலையினையும் உடைய திருமகளாருடன் எல்லை யில்லாது நிரம்பிய செல்வத்தின் வளங்களையும்; மறையவர்...மகிழ்ந்தார்-வேதியர்களது சீகாழிப் பதியில் அவதரித்த செல்வராகிய பிள்ளையாரே உடையவர் என்று துணிந்துகொண்ட சிந்தையினாலே மகிழ்ச்சியடைந்தனர்.

(வி-ரை) எல்லையில்......இயம்பி - இப்பரிசு - முன் பாட்டிற் கூறியவாறு. **பெருங் களிப்பினால் இப்பரிசு - இயம்பி** - பெருங் களிப்பினாற் கவரப்பெற்றா லன்றி இவ்வாறியம்புதல் கூடாது என்பது; என்னை? "உவப்பதன்கண் குற்றமுந் தோன்றாக்கெடும்" என்றபடி மீக்கூர்ந்த மகிழ்ச்சியும் மீக்கூர்ந்த சினம்போலவே உள்ளத்தின் நிறையினைக் கவர்ந்து மேலெழுந்து இது தக்கது, இது தகாதது - இஃதியல்வது-இஃதியலாதது என்று நிறுத்தெண்ணுந் திறனை அழிக்கும்; ஈண்டுச் சிவநேசர் தமது மரபும் - தரமும் - பக்குவமும் - நியதியும், பிறவும் ஆகிய நிலைகள் பற்றிப் பிள்ளையார் இதனை ஏற்றருளுதற்கொண்ணுமோ என்பனவற்றை ஆய்ந்து சீர்தூக்கி நிறுத்து முடித்தாரல்லர் என்பது பின்னர் வரலாற்று விளைவிற் கண்டு கொள்க. அதனியல்பு கூறியவாறு. மேல் "அன்ப ரின்புறு மார்வத்தி னளித்தபாங் கல்லாற்...புகலிகா வலர்க்கிது புணரா, தென்பதுட் கொண்ட பான்மை" (2954) என்று இந்நியதியினை விளக்குதல் காண்க.

முல்லை......முலையார் - பூம்பாவையார்; **முல்லை** - முல்லையரும்பு குறித்தது; ஆகுபெயர்; **நகை** - ஆகுபெயராய்ப் பல்(வரிசையைக்)லைக் குறித்தது. **முகிழ் முலை - முகிழ்த்தல்** -

2953. **ஆற்று நாள்களி லணங்கனுர் கன்னிமா டத்தின்**
பாற்ற டம்பொழின் மருங்கினிற் பனிமலர் கொய்வான்
போற்று வார்குழற் சேடிய ருடன்புறம் போந்து
கோற்றெ டித்தளிர்க் கையினுல் முகைமலர் கொய்ய, 1055

தோன்றுதல்; கோங்கரும்புகளை உவமித்தல் மரபாதலின் அது பற்றி **முகிழ்** - என்றுர். முலைமுகிழ்த்தல் ஈண்டுப் பாவையாரது பருவங் குறித்தது; பற்களைக் குறித்ததும் அப்பருவங் குறிக்குமென்பர் மருத்துவ நூலோர்.

முலையாருடன் - வளமையும் - உடையார் - என்று முடிக்க. **உடையார்** - தமதாக் கொள்ளும் உரிமையாளர்.

சிந்தையால் மகிழ்ந்தார் - சிந்தை - சிந்திக்கப்பெற்ற நிலை. அவ்வெண்ணத்தையே பின்னர்ப் பலமுறையும் எண்ணி எண்ணி மகிழ்ந்தார். மொழிந்தமையே யன்றி எண்ணங்களே மகிழ்ச்சியை விளைவித்தன. ஒரோவழித் தோன்றி மறையும் மனநிலைகள் போலாது, நிலைத்த இம்மனநிலையின் தொடர்ச்சி குறித்தது. இதனுல் இவை எண்ணிய பாங்கே யமைந்தனவன்றிப் பின்னர் நிகழ்ச்சியின் முற்றிப் பொருந்துமாறு கண்டு மகிழும் பேறுபெறுவாரலர் என்று குறித்தமையும் காண்க. (சிந்தையால் எண்ணிய அளவினுல்).

வண்மையும்—என்பதும் பாடம். 1054

2953. (இ-ள்) ஆற்று...நாள்களில் - முன் கூறியவாறு சிவநேசர் செயலாற்றிவரும் நாட்களிலே; அணங்கனுர்...மலர் கொய்வான் - தெய்வப் பெண் போன்ற பூம்பாவையார் கன்னிமாடத்தில் பால் போன்ற தூயநீர் நிறைந்த தடத்தினருகில் பூச்சோலையின் பக்கத்தில் குளிர்ந்த பூக்கொய்யும் பொருட்டு; போற்று... ...புறம் போந்து-தம்மைப் போற்றும் நீண்ட கூந்தலையுடைய சேடிமார்களுடனே புறத்திற் போய்; கோற்றெடி...கொய்ய - திரண்ட வளையணிந்த தளிர் போன்ற கையினுல் முகைக்கும் பருவத்து மலர்களைக் கொய்யவே,

(வி-ரை) ஆற்று நாள்களில்-முன் கூறியபடி சிவநேசர் செயலாற்றி மகிழ்ந்திருந்த நாள்களிலே.

அணங்கனுர் - பூம்பாவையார்; **அணங்கு** - தெய்வப்பெண்.

கன்னிமாடம் - கன்னிகள் தோழியர்களுடன் இருப்பதற்காக அமைக்கப்படும் காவல்பெற்ற தனியிடங்கள் இவ்வாறு வழங்கப்படும்.

பாற்றடம் பொழில் மருங்கினில் - பாற்றடம் - பால்போன்ற தூய வெண்மையான நீரினையுடைய தடம். **மாடத்தின் - பால்** என்று கூட்டிப் **பால்** - ஏழனுருபாகக் கொண்டுரைப்பினுமமையும்; இப்பொருளில் **தடம் பொழில்** - பெரிய சோலை என்க. **பொழில் மருங்கு - பொழில்** - இங்குப் பூச்சோலை குறித்தது.

மலர் கொய்வான் - கொய்யும்பொருட்டு; வானீற்று வினையெச்சம் **புறம் போந்து** என்ற வினையெச்சத்துடன் முடிந்தது.

2954. **"அன்ப ரின்புறு மார்வத்தி னளித்தபாங் கல்லாற்**
பொன்பி றங்குநீர்ப் புகலிகா வலர்க்கிது புணரா"
தென்ப துட்கொண்ட பான்மையோ ரெயிற்றிளம் பணியாய்
முன்ப ணைந்தது போலவோர் முள்ளெயிற் றரவம். 1056

போற்றுசேடியர் - என்க; **போற்றுதல்** - பேணுதல்; காத்தல்.

முகைமலர்-விரியும் பருவமுடையதாய் முகையாகிய மலர். "முகைத்த மலரின் வாசம்போல்" (1218); **செவ்வி நாண்முகை** - என மேற்கூறுதல் காண்க (2955).

அரவம் (2954), எய்தி - விரல் - குறித்துக் - கவர்ந்தது (வாகி)(2955)-கவர்ந்து- உகுத்து அடங்க -விடம் அடர்ந்தெழ - நேரிழை - மயங்கி(2956)-வீழ்தரச் சேடியர் - தாங்கிப்-புகுந்திட - வணிகர்-நிலையழிந்து - கலங்கினர்-கலுழ்ந்தார்(2957) என்று இவ்வைந்து பாட்டுக்களையும் தொடர்ந்து முடிபு படுத்திக்கொள்க. 1055

2954. (இ-ள்) அன்பர்...அல்லால் - அன்பராகிய சிவநேசர் இன்பம் பொருந்தும் விருப்பத்தினாலே அளித்த அளவுமட்டிலல்லாமல்; பொன்...என்பது-பொன் விளங்கும் நீரினையுடைய சீகாழிப் பிள்ளையாருக்கு இது புணர்வுறாது என்பதனை; உட்கொண்ட பான்மை - உட்கொண்டுள்ள ஊழானதுவே; ஓர்...போல - ஒரு நச்சுப் பற்களையுடைய இளம் பாம்பாகி முன்பு வந்ததுபோல; ஓர்...அரவம் - முள் போன்ற பற்களையுடையதோர் பாம்பு;

(வி-ரை) அன்பர்...என்பது - அன்பராகிய சிவநேசர் மகிழ்ந்த விருப்பினால் மகளாரைக் கொடுத்தனர் என்ற அளவில் அமைவதன்றிப் பிள்ளையார் பால் இவ்வடைவு சென்று பொருந்தாது என்ற உண்மையினை. **என்பது** - என்பதனை; என்ற உண்மையினை.

உட்கொண்ட பான்மை - குறியாக்கொண்ட ஊழ் என்னும் நியதி. பான்மை - தெய்வம் - ஊழ் - நியதி என்பன ஒருபொருள் கொள்வன.

பான்மை...போல - அந்நியதியே ஓர் உருக்கொண்டு ஓர் இளம்பாம்பாக முன் வந்து சேர்ந்ததுபோல. **போல** - உருபு, வினையினால் அஃதேயாம் தன்மைக்குறிப்புடன் நின்றது; தற்குறிப்பேற்ற அணியை விளக்குவது; "இளைப் பஞ்சினன் போல" (2090); "பாசப் பழிமுதல் பறிப்பார்போல்" (460) என்புழிப்போல் ஆங்குரைத்தவை பார்க்க. **ஓர் - பணியாய்** - என்று கூட்டுக; **எயிற்று** - நச்சுத் தன்மை எயிற்றினிடைக் கொள்ளுதலால் அத்தன்மைபற்றிக் கூறினார்; **இளம்பணி** - மாதவிப்பூம் பந்தரிடை முல்லை மெல்லரும்பு கொய்யும் மெல்லியலாரின் முகிழ் மெல்விரல் கவரும் தகுதியின் **இளம்பணி** என்றார். இஃதாசிரியரின் அகங்குழைந்த கருணைப் பெருக்குக் குறித்தது.

முள் எயிற்று அரவம் - முள் எயிறு - முள்போன்று கூரியனவாகிய பற்கள்; **எயிறு** - பல்.

அளித்த பாங்கல்லால் - இது - புகலி காவலர்க்குப் - புணராது - என்க. **புணர்தல்** - பொருந்துதல். **பாங்கு** - அளவு - திருநாட்டியத்தான்குடியில் கோட்புலியார், வனப்பகை - சிங்கடி - என்ற தம் மகளிருவரையும் திருவாரூர் நம்பிகளுக்கு அளித்து அவர்களை ஏற்க

2955. **மௌவன் மாதவிப் பந்தரின் மறைந்துவந் தெய்திச்**
செவ்வி நாண்முகை கவர்பொழு தினின்மலர்ச் செங்கை
நவ்வி வாள்விழி நறுநுதற் செறிநெறி கூந்தற்
கொவ்வை வாயவண் முகிழ்விரல் கவர்ந்தது குறித்து; 1057

வேண்டுவதும், நம்பிகள் அவ்வளவே அவர்களைத் தம் மக்களெனக்கொண் டேற்பதும் ஆகிய வரலாறுகள் ஈண்டு வைத்துக் கருதத் தக்கன. **இன்புறும் ஆர்வத்தின் அளித்த பாங்கல்லால் -** அளித்தற்கு ஆர்வ மிகுதியே காரணமன்றி வேறொரு தொடர்புமின்றென்ற குறிப்பும். **இது புணராதெனும் பான்மை** என்ற குறிப்பும் கருதுக. முதல் வருணத்தோர் ஏனை மூன்று வருணங்களினும் மணஞ் செய்தல் கூடும் என்ற அறநூற்புறனடை விதியும் இவ்வெண்ணங்கள் முகிழ்க்க இடந்தந்த தென்றலுமாம். *1056*

2955. (இ-ள்) மௌவல்...எய்தி - மல்லிகை முல்லைக் கொடிகள் படர்ந்த பந்தரிலே மறைந்து வந்து சேர்ந்து; செவ்வி...பொழுதினிலே - பருவத்துப் புதிய முகைகளை (ப் பூம்பாவையார்) கொய்யும் பொழுதில்; நவ்வி...வாயவள் - மான் போன்ற கூரிய கண்களையும்,நறிய நுதலினையும், செறிவும் நெறிவுமுடைய கூந்தலினையும், கோவைக்கனி போன்ற வாயினையும் உடைய பூம்பாவையாரது; மலர்ச் செங்கை - மலர் போன்ற சிவந்த கையில்; முகிழ் விரல் கவர்ந்தது குறித்து - பூக்கொய்யக் கூட்டிக் கூப்பிய விரலினைக்குறித்துக் கடித்ததாகி;

(வி-ரை) மௌவல் மாதவிப் பந்தர் - மௌவல் - மல்லிகை; **மாதவி -** முல்லை; மல்லிகையும் முல்லையும் இணைந்த மணமுடையவையாதலின் ஒருசேரப் பந்தர்களில் ஏற்றிவைப்பது வழக்கு.

பந்தரின் மறைந்து வந்து எய்தி - அங்கு இருத்தற்கு வேறு பற்றுக்கோடும் இயைபுமின்றி மறைந்துவந்து புகுந்து.

செவ்வி நாண்முகை கவர் பொழுதினில் - பூம்பாவையார் என்ற எழுவாய் முன் 2954-ல் நின்றும் வருவிக்க. **செவ்வி** - அலரும் பருவம்; **நாண் முகை** - புதிய அரும்பு. செவ்வித்தாகிய நாள் என்க. **கவர்தல்** - பறித்தல்.

மலர்ச்செங்கை - முகிழ்விரல் - என்று கூட்டுக. கையின்கண் என்று ஏழனுருபு விரிக்க. முகையினைச் செங்கைவிரல் கவர்பொழுது அம் மலர்ச்செங்கை குறித்து அரவம் கவர்ந்தது என்ற கவிநலமும் காண்க. **செங்கை விரல்** என்பன அரவம் கவர்ந்து இடங்குறித்துக் காட்டியபடி. ''வாளராவொன்று...அங்கையில் றீண்டிற் றன்றே'' *(1806)* என்றது காண்க. **குறித்து** என்றதும் காண்க.

மௌவன் மாதவிப் பந்தரின் மறைந்துவந் தெய்தி - முகை கவர்பொழுது - விரல் குறித்துக் கவர்ந்தது - மணமலர்களுடைய செடிகொடிகளுள்ளும் கீழும் அவற்றின் மணங்குறித்துப் பாம்புகள் வருவனவாதலின், அவற்றை மக்கள் வாழிடங்களில் மிக அருகில்

வைக்கலாகா தென்றும் எச்சரிக்கையின்றி அவற்றினிடைச் சேரலாகாதென்றும் வழங்கும் வழக்கும் காண்க.

பொருந்தாது எனும் பான்மை ஓர் எயிற்றிளம் பணியாய் முன்பணைந்தது போலும் ஓர் முள் எயிற்றரவம் கவர்ந்தது - என முன்பாட்டின் கூட்டுக; இங்குத் திருவிளையாடற் புராணத்துட் பழியஞ்சிய படல வரலாற்று விளைவு நினைவுகூர்ந்து ஒப்பிட்டு கருதற்பாலது; "ஆற்றலே றுண்டகனை யருகொதுங்கும் பார்ப்பனியைக், காற்றல்வீழ்த் தெவ்வாறு கவர்ந்தேமப் படியிந்தச், சாற்றரா வாத்திற் றம்பறுத்துப் புறநின்ற, வீற்றவை வெருளவிடுத் திவனுவி கவர்கென்றான்" (செ 37)

மலர்ச் செங்கை - முன் கூறியவாறன்றி என்பதனையும் ஏனையவைபோல அடையாக்கியுரைப்பினு மிழுக்காகாது.

நவ்வி...வாயவள் - ஈண்டு, விழி - நுதல் - கூந்தல் - வாய் என்ற இவற்றினைச் சிறப்பித்து எடுத்துக் கூறியது, "கொம்பனுள் தகைமை, இந்த வையகத் தின்மை" (2948) என்று முன்கூறிய நலங்க ளெல்லாவற்றின் திரட்சியினையும் ஒருங்கு காட்டி அத்தகையாரைப்பற்றிச் சிவநேசர் கொள்ளநின்ற துயரப்பெருக்கின் அளவினைக் காட்டுதற்கு; இதனை "முகதரிசனம்" என்பது உலக வழக்கு. அன்றியும், இதுவரை கூறிவந்தது பாவையரின் சகலநிலையாகிய மாயைப் படைப்பின் நலங்கள்; இனிச் சடையவர் கருணை காண்வரப் பிள்ளையாரது அருளால் வரும் சுத்தநிலைப் படைப்பாகிய புனித அணிகலங்களை மேற்கூறுவார் (2993–3007); அதுகுறிக்க ஈண்டு இங்கு முடித்துக் காட்டியவாறுமாம். "தகைமை இந்த வையகத் தின்மை" (2947) என்றதும், பின்னர் "ஞாலமும் விசும்பு மெல்லாம், அற்புத மெய்தித் தோன்ற வழகினுக் கணியாய் நின்றாள்" (3006) என்பதும் குறிக்க.

நவ்வி - பெண்மான்; நவ்வியின் விழிக்கு வந்தது; ஆகுபெயர். **வாள்** - கூர்மை. ஒளி என்றலுமாம். **நறுநுதல்** - நறுமணமுடைமை உத்தம இலக்கணப் பெண்களின் அங்க இயல் என்பர். **செறிநெறி கூந்தல்** - அவ்வாறே கூந்தல் செறிந்து நெறிப்புடைத்தா யிருத்தலும் நல்லிலக்கணம் என்ப. **நெறி** - நெறிப்பு; அலைபோலச் சிறு வளைவுகளுடைமை. **கொவ்வை வாய் - கொவ்வை** - கோவை என்பது எதுகை நோக்கிக் **கொவ்வை** என வந்தது. **கொவ்வை** - ஈண்டுக் கனியைக் குறித்தது; ஆகுபெயர்

முகிழ் விரல் - முகிழ்த்தது - பூப்பறிக்கும்படி கூட்டிக் குவித்தது.

கவர்ந்தது - கடித்தது; அரவம் தீண்டிற்று; கவர்ந்தது என்பது மரபு வழக்கு.

குறித்தே—என்பதும் பாடம். *1057*

2956. (இ-ள்) நாலு...வேறு அடங்க - நச்சுப் பற்கள் நான்கும் எலும்பளவும் அழுந்தக் கடித்து நஞ்சினை உகுத்து மேலே எழும் படத்தினை விரித்துநின்று ஆடி வேறு இடத்தில் மறைந்து ஒடுங்கவே; நீல...தொடர்ந்து எழ - கரிய வெவ்விய விடம் அதனைத் தொடர்ந்து மேலே எழுந்ததனால்; மென்பூ...போன்று-மெல்லியதாகிய மலர்மாலையிடையில் தீப் பட்டதுபோல; நேரிழை - நேரிய இழைகளையணிந்த பூம்பாவையார்; உளம் மயங்கி - மனமயங்கி;

2956. **நாலு தந்தமு மென்புறக் கவர்ந்துநஞ் சுகுத்து**
மேலெ ழும்பணம் விரித்துநின் ருடிவே றடங்க
நீல வல்விடந் தொடர்ந்தெழ, நேரிழை மென்பூ
மாலை தீயிடைப் பட்டது போன்றுள மயங்கி, 1058

(வி-ரை) தந்தம் நாலும் - என்க. நாலு தந்தமாவன நச்சுப் பையைத் தலையிற் கொண்டுள்ள குழாய்போல உட்டுளையுடைய நான்கு கூரியபற்கள். ''கடுவோடொடுங்கிய தூம்புடை வாலெயிற்று'' (முருகு); நாலு தந்தமாவன; காளி - காளாத்திரி - யமன் - யமதூதன் என்பன.

என்பு உறக் கவர்ந்து - தசைநார்கள் - நரம்புகள் முதலிய மேலுள்ள தாதுக்கள் எல்லாந் தாண்டி உள்ளே எலும்பு வரையும் பொருந்த ஆழமாகக் கடித்து;விரல் எலும்புக்கு அடுத்து சுத்தரத்தக் குழாய்களிருத்தலின் விடம் அவற்றுள் உகுக்கப்பட்டமையால் இரத்த வேகத்துடன் சடுதியில் இரத்தாசயத் தாமரைக்குட் பாய்ந்து உடல் முழுதும் விடம் பரவும்படி போதிய ஆழத்திற் கடித்தது.

நஞ்சு உகுத்து - பற்களின் குழாய்போன்று உள்ள உட்டுளையின்மூலம் அவற்றி னடியில் உள்ள நச்சுப் பையினின்றும் நஞ்சினைக் கக்கி - இரத்தக் குழாயினுள் வீழ்த்துச் - செலுத்தி. *To Inject* என்பது நவீனர் கூற்று.

மேலெழும் பணம் விரித்துநின் ருடி - இவை பாம்புகளின் சினக்குறி என்ப. **பணம்** - பாம்பின் படம். **விரித்து** - ஏனைக் காலமெல்லாம் சுருங்கியிருத்தலும் சிறிது சினம் மூளுமாயின் உடனே தலைநிமிர்ந்து படம் விரித்தாடுவதுமாகு மியல்பினையும் உடையது **பாம்பு**; ஆதலின் **விரித்தாடி** என்றார். **படம் விரித்து ஆடுதல்** பாம்பு களினியல்பு.

வேறு அடங்க - வேறிடத்தில் மறைந்துகொள்ள; ஒடுங்க.

நீல வல்விடம் - **நீலம்** - கருமை. **தொடர்ந்து எழ** - எலும்பு உறக்கவர்ந்தமையால் உடனே சுத்த ரத்தத்துடன் கலந்து அதனுடன் தொடர்ந்து மேற்பரவ.

மென்பூ...போல - தொழிலும் பண்பும்பற்றி வந்த உவமம்; மெல்லிய பூமாலையினில் தீயினைப் புகவிட்டால் உடனே கருகி வாடுதல்போலத் துவண்டு.

நேரிழை உளம் மயங்கி - என்க. **மயங்குதல்** - உணர்வறுதலினால் ஒன்றுந் தோற்றாது கலங்கிச் சோர்தல். *1058.*

2957. (இ-ள்) தரையில் வீழ்தர - நிலத்தில் வீழ;சேடியர்...புகுந்திட - தாதியர்கள் திடுக்கிட்டு அஞ்சித் தாங்கிச் சென்று அவருக்கென்று அமைவு செய்யப் பட்ட கன்னிமாடத்தினுள்ளே கொண்டு புகுந்திட; வணிகர்...கலுழ்தார் - சிவநேசர் மொழியும் மனமும் நிலையழிந்து உறுதுன்பம் மேலிட அளவற்ற சுற்றத் தாரும் தாமும் முன் கலங்கி அழுதனர்.

2957. **தரையில் வீழ்தரச் சேடியர் வெருக்கொடு தாங்கி**
வரைசெய் மாடத்தி னுட்கொடு புகுந்திட வணிகர்
உரையு முள்ளமு நிலையழிந் துறுதுயர் பெருகக்
கரையில் சுற்றமுந் தாமுமுன் கலங்கினர்; கலுழ்ந்தார். 1059

2958. **விடந்தொ லைத்திடும் விஞ்சையிற் பெரியார் மேலோர்**
அடர்ந்த தீவிட மகற்றுதற் கணைந்துளா ரனேகர்
திடங்கொண் **மந்திரந் தியானபா வகநிலை முட்டி**
தொடர்ந்த செய்வினைத் தனித்தனித் தொழிலராய்ச் சூழ்வார், 1060

இவ்வைந்து பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டுரைக்க நின்றன.முன் மூன்றும் ஒருமுடிபாகவும் பின்னிரண்டும் வேறுமுடிபாகவும் உரைக்கினு மிழுக்கில்லை. பொருட் செயற் றொடர்ச்சியும் விரைவும்பற்றி இவ்வாறுரைக்கப் பட்டது.

(வி-ரை) வெருக்கொடு - சடுதியில் நிகழ்ந்த பேரச்சத்தால் திடுக்கிட்டு. **தாங்கி** - நிலத்தில் வீழாமல் கைகொடு தாங்கி.

வரைசெய் மாடம் - இவர்க ளிருத்தற்கென்று வரைவு செய்துவைத்த கன்னி மாடம். வரை செய் - **வரை** - மலை என்று கொண்டு மலை போன்ற என்பாருமுண்டு.

வணிகர் - சிவநேசர்; **கரை** - அளவு - எல்லை. **கரையில் சுற்றமும்** - "சுற்ற நீடிய கிளையெலாம்" (2951); முன் சிவநேசர் கூறிய (2952) வாற்றாற் சிதைவுறாது வாழ்வினும் தாழ்வினும் வரைவுபடாது சுற்றிச் சூழ்வோர் என்பது குறிப்பு.

நிலையழிந்து - நிலை தடுமாறி உரை குழறி உள்ளம் மயங்கி என்க. **கலுழ்தல்** - அழுதல். *1059.*

2958. (இ-ள்) விடம்...அனேகர் - விடத்தைத் தீர்த்திடும் வித்தையிற் கைவந்த பெரியோர்களாகிய மேலவர்கள் அனேகர்கள் பற்றிய கொடிய விடத்தினைப் போக்குதற்காகச் சேர்ந்தார்களாகி; திடங்கொள்...சூழ்வார் - வலிமையுடைய மந்திரமும் தியானமும் பாவனையும் முட்டி நிலையுமாய்த் தொடர்ந்த தீர்வுச் செயல்களைத் தனித்தனி செய்வாராய்ச் சூழ்ந்து,

(வி - ரை) விடந் தொலைத்திடும் விஞ்சை - விடத்தைத் தீர்க்கும் காருட வித்தை (2960); கருட மந்திரங் கைவருதலால் பாம்பின் விடத்தைத் தீர்க்கும் ஒரு வித்தை. **பெரியர்** - அனுபவம் வல்லோர்; **மேலோர்** - அவருள் தலைவர்.

திடங்கொள் மந்திரம் - தியானம் - பாவனை - நிலைமுட்டி - **திட**மாவது - உறுதியாய்ப் பயனளிக்கும் தன்மை. **மந்திரம்** - கருட மந்திரம்; **தியானம்** - மந்திரத்தினிற் குறிக்கப்பட்ட - மந்திரத்துக்கு அதிதெய்வமாகிய - மூர்த்தியை அழுந்தியறிதல்; "உருவெண" (தேவா); **பாவனை** - மாந்திரிகன் அம்மந்திரமூர்த்தியாகத் தன் ஆன்மாவைப் பாவித்தல்; **முட்டிநிலை** - விடவேகந் தலைக் கொண்டபோது அதனைத் தணித்தற் பொருட்டு மாந்திரிகன் தனது கைவிரல்களிற் பெருவிரலை விடுத்து எனை நான்கு விரல்களையும் முட்டியாக மடித்துக்கொண்டு உச்சிமுதல்

கடிவாயிறுதியாக விடந் தீண்டப்பட்டோ ருடலைத் தடவுதல். **முட்டி நிலை**- என்க. இவை நான்கும் தொடர்ந்து ஒன்ருய் வருதலால் **தொடர்ந்த செய்வினை** என்ருர்.

சூழ்வார் - செய்யவும் *(2959)* என்று மேல்வரும் பாட்டுடன் கூட்டி முடிக்க.

தனித்தனித் தொழிலராய் - அவ்வவரும் தாந்தாம் கற்ற எல்லை அளவும் செய்வார்களாகி.

பாவகம் - பாவனை. உயிர் தன்னைச் சிவமாகப் பாவிக்கச், சிவமாகும் நிலை சிவோகம்பாவனை எனப்படும்; அதற்கு எடுத்துக்காட்டாகத் தேற்றமாய்க் கூறப்படுவது இக் கருடபாவனையாம்; கருடோகம்பாவனை என்பர். கருட பாவனையாவது: ''ஆதிபௌதிக கருடன், ஆதிதைவிக கருடன், ஆதியான்மிக கருடன் எனக் கருடன் மூன்று வகைப்படும். இவ்வாறு பொருடோறுங் கண்டுகொள்க. ஈண்டு **ஆதி-அதி**-இடத்தில்; அவற்றுள் உலகத்துக் **காணப்படுங் கருடன் ஆதிபௌதிக கருடன்.** அதற்கு அதிதெய்வமாக மாந்திரிகன் உள்ளத்தில் அதுபோல்வைத்துக் கணிக்கப்படும் **மந்திரம் ஆதிதைவிக கருடன்**; அம் மந்திரத்தினிடமாக நின்று மாந்திரிகனுக்குப் பயன் கொடுப்பதாகிய **சிவசக்தி ஆதியான்மிக கருடன்** எனப்படும்; அவற்றுள், ஈண்டுக் ''காருட விஞ்ஞை'' என்றதிற் **கருடன்** என்றது கருடனுக் கதிதெய்வமாய் மாந்திரிகனுளத்திற் காணப்படும் மந்திர ரூபமாகிய ஆதிதைவிக கருடனை. அதனைப் **பாவித்தலாவது** நாடோறும் பயின்றுவந்த பயிற்சி விசேடத்தான் அம்மந்திர ரூபமே தானுக அநந்நிய பாவனை செய்து **தன்னறிவு அதன் வசமாம்படி உறைத்து நிற்றல்.** அங்ஙனம் நின்று அம்**மந்திரக் கண்கொண்டு பார்ப்பவே** அஃது அவ்விடவேகத்தை மாற்றுதல் ஒருதலையாகலின், அப்பாவனை ஈண்டைக்கு உவமையாயிற்று. இதனுனே, **கருடபாவனை சத்திய**மா மென்பதூஉம், அதனை அசத்தியமென்பார் மதம் போலியென்பதூஉந் தெற்றென உணர்ந்துகொள்க. புள்ளு, விலங்கு, மரம் முதலிய சராசரங்களுக்கெல்லாம் அதிதெய்வ மந்திரம் உளவென்பதூஉம், படிகம்போல அதுவதுவா மியல்புடைய ஆன்மா அவற்றுள் எவ்வெம் மந்திரங்களைக் கணிப்பினும் அவ்வம்மந்திர சொரூபியாவா னென்பதூஉஞ், சர்வஞ் ஞானேத்தர முதலியவற்றுட் காண்க'' (சிவஞான மாபாடியம் 9-சூ. 2-அதி).

சூழ்வார் - செய்யவும் *(2959)* - தீர்ந்திலதா(க) - வித்தகர்*(2960)* - இது விதி என்று ஓவும் வேலையில் - சுற்றமும் - விழுந்து - அழுதனர் - என இம்மூன்று பாட்டுக்களை முடித்துக்கொள்க. **தீர்ந்திலதால்** *(2959)* என்றதனை முற்ருக வைத்து முடித்துக்கொண்டு மேல்வரும் பாட்டை வேறு முடிபாக்கினு மிழுக்கில்லை.

செய்வினை - தீர்தொழில். மேல் **''திருந்து செய்வினை''** *(2959)* என்பார்.

தனித்தனித் தொழிலராய் - அவ்வவர் தத்தம் திறம் முழுதும் செலுத்திக் காண்பாராய்.

சூழ்வார் - சூழ்தல் - ஆழ எண்ணுதல். உடலைச் சுற்றி என்பதுமாம். *1060*

2959. (இ-ள்) மருந்தும்...செய்யவும் - (முன் கூறிய நான்கனேடும்) அளவில்லாத இணையில்லாத மருந்துகளையும் செய்யவும்; வலிந்து...பொங்கி - வலிமையாய்ப் பற்றிக்கொண்டு கொடிய விடம் ஏழு வேகமும் முறையாக மேலேறி; பெருந்தடங்கண்...பிறங்கி - பெரிய விசாலமாகிய கண்களையுடைய மெல்லிய கொடிபோன்ற பூம்பாவையாரது தலையினை

2959. **மருந்து மெண்ணிலா மாறில செய்யவும்** வலிந்து
பொருந்து வவ்விட **மேழுவே கமுமுறை பொங்கிப்**
பெருந்த டங்கண்மென் கொடியனுள் **தலைமிசைப் பிறங்கித்**
திருந்து செய்வினை யாவையுங் கடந்துதீர்ந் திலதால். 1061

மேற்கொண்டு விளங்க; திருந்து... தீர்ந்திலதால் - திருந்தும்படி செய்த தீர்வினைகள் எல்லாவற்யையும் கடந்து தீர்ந்திலதாகவே;

(வி-ரை) மருந்தும் - மந்திரம் பாவனைபற்றிய செய்வினைகளையன்றி மருந்தும் என உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை.

மாறில - பயன்றருதலில் தவறுமையின் இணையற்ற. **திடங்கொண்** மந்திரம் போலவே மருந்தும் மாறில என்றதாம். **வலிந்து** - கடந்து; வலிமை பெற்று.

பொருந்து - வந்து பொருந்திய; ''பான்மை''(2954) போலப் பொருந்திய என்பதும் குறிப்பு.

ஏழு வேகமும் - உம்மை முற்றும்மை. ''தலைக்கொண்ட வேழாம் வேகம்'' *(1809)* என்றதும், ஆண்டுரைத்தவையும் பார்க்க.

முறை பொங்கி - தலைமிசைப் பிறங்கி - முறை - ஒன்றன்மேல் ஒன்றாக; **தலை மிசை** - விடந் தலைக்கேறி மூளையைப் பற்றிப் பரவினால் தீர்வின்றென்பர்.

திருந்து செய்வினை - திருந்தும்படி செய்யும் தீர்தொழில் - மாற்று; திருத்தமாகச் செய்யும் என்றலுமாம்.

கடந்து - மேற்சென்று தன் வலிமையே மிக்கு.

தீர்ந்திலது - தீராததாகி; முற்றெச்சம். தீர்ந்திலதாய்க் குறிகளு மடைவிலவாக என வரும்பாட்டுடன் றொடர்ந்து முடிக்க. முற்றாகக்கொள்ளினு மிழுக்கில்லை. *1061*

2960. (இ-ள்) ஆவி...இலவாக - உயிர் உடம்பினுள் தங்குதற்குரிய பல குறிகளும் பொருந்துதல் இல்லையாக; மேவு...வேலையில் - வந்து பொருந்திய காருடவித்தை வல்லவர்களும் ''இது விதி'' என்று கைவிட்டொழியும் வேலையில்; உறு பெரும்... கடல்போல் - உற்ற பல சுற்றத்தார்களும் கடல்போல் அலறிப் பாவை மேல் விழுந்தழுதனர்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண் டுரைக்கின்றன.

(வி-ரை) ஆவி தங்கு பல் குறிகள் - இவை உயிர்ப்பு - வெப்பம் - அசைவு - முதலாயின; **அடைவு** - இருத்தல் - தங்குதல்; **ஆக** - ஆதலின்.

இது விதி-இது விதியின் விளைவு; ஊழான் வந்தது - மனித முயற்சியாற் பயனின்று - எனக் கைவிடும் நிலை.

2960. **ஆவி தங்குபல் குறிகளு மடைவில வாக**
மேவு காருட விஞ்சைவித் தக**"ரிது விதி"**யென்
றேவும் வேலையி லுறுபெருஞ் சுற்றமு மலறிப்
பாவை மேல்விழுந் தழுதனர் படரொலிக் கடல்போல். 1062

2961. சிந்தை வெந்துய ருறுசிவ நேசருந் **தெளிந்து**
வந்த செய்வினை யின்மையில் "வையகத் துள்ளோர்
இந்த வெவ்விட மொழிப்பவர்க் கீகுவன் கண்ட
அந்த மின்னிதிக் குவை" யெனப் பறையறை வித்தார். 1063

வித்தகர் *- கைவந்த புலவர்; முன் "பெரியார் மேலோர்" (2958) என்றமை காண்க.* Experts *என்பர் நவீனர்.*

ஓவும் வேலை - ஓவுதல் *- நீங்குதல் - ஒழிதல்; உயிர் போய்விட்டது என்று கைவிட்ட நேரம்; "ஓவு நாளுணர் வழியு நாளுயிர் போகு நாளுயர் பாடைமேல்" (தேவா - நம்பி); "போவார்க ளிதுநம்மாற் போக்கரிதா மெனப்புகன்று" (1319); குண்டர்களுங் கைவிட்டார்"(1320).*

பாவைமேல் விழுந்தழுதனர் *- இறந்தா ருடலின் மேல் விழுந்தழுதல் நெருங்கிய அன்புடையாரின் துயர மிகுதியின் செயலாகிய மெய்ப்பாடு. "மைந்தன் மீமிசை வீழ்ந்து மயங்கினுள்" (கந்தபு. பானு, வதை - 194).*

படர் ஒலிக்கடல்போல் *- பரப்பும், பேரொலியுடைமையும் உவமத்தின் பொதுத் தன்மைகள்; வினையும் மெய்யும்பற்றி வந்த உவமம்.*

விழுந்தழுதது *– என்பதும் பாடம்.* *1062*

2961. (இ-ள்) *சிந்தை...தெளிந்து - மனத்தினில் கொடிய துன்பம் பொருந்திப் பெற்ற சிவநேசரும் பின்னர்த் தெளிவுகொண்டு; வந்த...இன்மையில்-செய்யநின்ற தீர்தொழில்கள் வேறு எவையுமில்லாமையால்; "வையகத்துள்ளோர்...குவை" என - "உலகத்தில் உள்ளோர்களில் யாவராயினும் இந்தக் கொடிய விடத்தினை ஒழிப்பாராயின் அவருக்கு இங்குக் கண்ட (காணப்பட்ட) எல்லையில்லாத செல்வத் திரள் எல்லாம் கொடுப்பேன்" என்று; பறை அறைவித்தார் - எங்கும் யாவரும் அறியும்படி பறைசாற்றி அறிவித்தனர்.*

(வி-ரை) வெந்துயர் உறு *- "முன்னர் உரையு முள்ளமு நிலையழிந் துறுதுயர் பெருக" (2957) என்றது பாவையாரை விடந்தீண்டி யலமந்தமை தெரிந்த உடன் நிகழ்ந்த நிலை. இங்குக் கூறியது விஞ்சை வித்தகரும் "இது விதி" என்று கைவிட் டொழிந்து ஆவியுந் தீர்ந்தனெக் கண்டபோது நிகழ்ந்த நிலை.*

தெளிந்து *- துயரினுற் கவரப்பட்டு ஒன்றுந் தோன்றுதிருந்த நிலையினின்று தெளிந்து; மேற்செய்யலாவதனை ஆய்ந்து துணியும் நிலை பெற்று.*

2962. **முரசி யம்பிய மூன்றுநா ளகவையின்** முற்ற
அரசர் பாங்குளோ ருட்பட வவனிமே லுள்ள
கரையில் கல்வியோர் யாவரு **மணைந்துதங் காட்சிப்**
புரையில் செய்கையிற் றீர்ந்திடா தொழிந்திடப் போனார். 1064

வந்த செய்வினை - கைவந்த தீர்தொழில்; **வந்த** - மேற்கொள்ளத் தக்கதாய் வரப்பெற்ற; செய்வினை (2558-2959).

இன்மையில் - பறையறைவித்தார் - தாம் தெரிந்து அழைத்து வந்தோரும் தாமாக அறிந்து வந்தோரும் ஆகி முன் வந்த விஞ்ஞை வித்தகரொழிய, இனி யாரேனு முளராயின் வருக என்று ஊரவருக்கு அறிவித்தபடி.

ஈகுவன் அந்தமில் நிதிக்குவை - ''இவள் மணம்பெறுவான், அந்த மில்லென தருநிதிக் குரியன்'' என்றறைந்தார் (2947) எனவும், ''பிறங்கிய நிதியும் முற்று மெனையும் கொடுத்தனன்'' என மொழிந்தார்(2951) எனவும், முன்னர்க் கூறிய சிவநேசர், அவ்வாறு தாம் பிள்ளையாருக்காக்கிய நிதிக்குவை இங்கு''வெவ்விட மொழிப்பவர்க் கீகுவன்'' என்றது பொருந்துமா றென்னையோ? எனின், பொருந்தும்; என்னை? தாம் அன்பினால் அளித்த பாங்கினால் பிள்ளையாரது உடைமையாயின பூம்பாவையாரைக் காத்து அவர்பால் சேமமுறச் சேர்ப்பிக்கும் பொருட்டாதலின் அமையுமென்க.

ஈவனென்னுடைய—என்பதும் பாடம். 1063.

2962. (இ-ள்) முரசு...அகவையின் - முன் கூறியவாறு பறைசாற்றிய பின் மூன்று நாள் எல்லையளவில்; முற்ற...அணைந்து - அரச சபையிலுள்ளோர்கள் உட்பட உலகத்தில் உள்ள எல்லையில்லாத கல்வியுடையோர் யாவர்களும் முற்ற வந்தணைந்து; தம் காட்சி...போனார் - தாந்தம் உறுதியாய்க் கைகண்ட குற்றமற்ற தீர்தொழில்கள் எவற்றாலும் தீராதொழிந்தமையாற் போயினர்.

(வி-ரை) மூன்றுநா ளகவையில் - பறை சாற்றிய எல்லையின் அளவாகிய மூன்றுநாள் அளவின் கண். **அகவை** - ஏழனுருபு. ''ஆடித்திங்க ளகவையின்'' (சிலப்-உரைபெறுகட்-3). மூன்றுநா ளளவும் உடலின் தாதுக்கள் சிதைவுபடாது நிறுத்த வல்லதொரு அமைதி அக்காலத்தும் உள்ளது போலும்.

முற்ற - யாவரும் - என்று கூட்டுக; ஒருவருமொழியாமே எல்லாரும்.

அரசர் பாங்குளோர் - அரச சமுகப் புலவர். கலைத்துறைகள் எவற்றினும் வல்லோர்களை அரசர் கூவித் தேர்ந்து தக்கோரைத் தமது சமுகத்தில் வைத்து ஆதரித்து நாட்டுக்கு நலஞ் செய்வித்தல் முன்னைநாள் வழக்கு; இறையனாரகப் பொருள் வரலாறு, சங்க வரலாறு, திருவாதவூரடிகள் வரலாறு, திருத்தொண்டர் புராண வரலாறு முதலியவையும், முன்னை நாள் தமிழரசர் காலத்து நாட்டு நடப்புச் சரிதங்களும், கல்வெட்டுக்கள் முதலியவையும் காண்க. இங்குக் கூறிய அரசர் கச்சிமாநகரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட பல்லவர் மரபில் வந்த சிம்ம விட்டுணுவும் அவன் மகன் மகேந்திரவர்மனும் ஆவார்கள் என்பது கருதப்படும்.

2963. **சீரின்** மன்னிய சிவநேசர் கண்டுள மயங்கிக்
காரின் மல்கிய சோலைசூழ் கழுமலத் தலைவர்
சாரு மவ்வள வும்முட றழலிடை யடக்கிச்
சேர வென்பொடு சாம்பல்சே மிப்பது தெளிவார், 1065

அவனி மேலுள்ள கரையில் கல்வியோர் - அரசர் பாங்கு பெறாத உலகில் விளங்கிய பெருங் கலைவாணரும் பலருண்டாதலின் அவர்களும்.

காட்சிப் புரையில் செய்கை - காட்சியாவது ஈண்டுக் கைகண்ட பயனைத் தருவது என்ற பொருளில் வந்தது. **காட்சிச் - செய்கை** - பண்புத் தொகை. **புரையில் செய்கை** - குறைபாடில்லாத தீர்தொழில். காட்சியும் செய்கையும் என்று உம்மைத் தொகையாக்கி உரைப்பினுமமையும்; இப்பொருளில் காட்சியாவது பார்வையால் விடத்தைத் தீர்க்கும் கலையின் முறை; ''பார்த்த பார்வையா லிரும்புண்ட நீரெனப்பருகும் தீர்த்தன்'' (திருவிளை. புரா) என்று கூறப்படும் தீக்கைமுறை இதற்குமொக்கும்.

முரசியம்பலும்—என்பதும் பாடம். *1064*

2963. (இ-ள்) சீரின் ...மயங்கி - சிறப்பின் நிலை பெற்ற சிவநேசர் அதனைக் கண்டு உளம் மயங்கி; காரின்... அவ்வளவும் -மேகங்கள் தவழ்தற்கிடமாகிய சோலைகள் சூழும் சீகாழித் தலைவராகிய பிள்ளையார்சாரும் அந்நாள் அளவுவரையிலும்; உடல்... ... தெளிவார் -பாவையாரின் உடம்பினைத் தீயினிலிட்டு அடங்கச் செய்து அதனிற் சேரும் எலும்போடு சாம்பலைச் சேமித்து வைப்பது என்று தெளிவாராகி,

(வி-ரை) உளம் மயங்கி - தம் மகளார் விடந்தீண்டி யிறந்து பட்டமை பற்றியன்றி, ஈண்டு மயங்கியமை பிள்ளையாருக்குக் கொடுக்கப்பட்டமையால் அவர் வருமளவும் அவரது உடைமையாகத் தம்மிடம் வைக்கப்பட்ட பொருளைப் பாதுகாக்க வியலாமற்போயினமைபற்றி, இனி இன்னது செய்வதென்று தோன்றாது மயங்கினர் என்க. அஃது அன்னதாதல் மேல் **தெளிவார்** என்றதனுற் காணப்படும்

காரின் மல்கிய - மேகங்களால் நிறைந்த; மேகமண்டலமளவும் உயர்ந்த என்றலுமாம். இந்திரன் சீகாழியில் வைத்துயர்ந்த நந்தனவனத்தின் குறிப்புமாம்.

கழுமலம் - சீகாழியின் பன்னிரண்டாவது திருப்பெயர்.

கழுமலத் தலைவர் சாரும் அவ்வளவும் - சேமிப்பது - அவரது உடைமைப் பொருளாய்த் தம்பால் வைத்திருந்த பாவையாரின் உடலை அவ்வண்ணமே ஒப்புவித்தற்கியலாமையின் எந்த அளவில் அதனைச் சேமிக்க இயலுமோ அவ்வளவில் சேமித்து வைத்திருந்து அவர்பால் அவர் வரும்போது ஒப்புவித்தல் வேண்டும் என்பது சிவநேசர் கொண்ட கருத்து. அது தகுதியாமோ? எனின், அன்புமீதூர்ந்த நிலையிற் செய்யப்படுவன வெல்லாம் தகுதியே என்க. ''ஆறாத வானந்தத் தடியார் செய்த வனுசாரம் பொறுத்தருளி யவர்மே லென்றுஞ், சீறாத பெருமானை'' (தாண் - மாற்பேறு -5); பின்னர்ச் சரித விளைவின்பொருட் டு இந்நினைவினை இறைவர் உடனிருந்து சிவநேச

ருள்ளத்தில் நினைப்பித்தனர் என்றலுமாம். "நானேது மறியாமே யென்னுள் வந்து நல்லனவும் தீயனவுங் காட்டா நின்றாய்" (தேவா) என்பது முதலிய திருவாக்குக்கள் காண்க. "பத்தர் சொன்னவும் பன்னப் படுமவோ" என்றபடி இதன்மேல் இவற்றை ஆராய்ச்சி செய்தல் அமையாதாம். "கேட்பான் புகில் அளவில்லை கிளக்க வேண்டா" (தேவா - பாசுரம்) என்பது மறைமொழி ஆணை. **கழுமலம்** - பாவையாரைச் சிவஞ்சாரச் செய்வது குறிப்பு.

உடல் தழலிடை அடக்கி - என்பொடு - சாம்பல் - சேமிப்பது - ஐம்பூதச் சேர்க்கையாலாகிய உடல் தழலிடை எரிக்கப்பட்டபோது, அவை வெவ்வேறு பிரிந்து அவ்வப்பூத மூலங்களுள் சேர, எஞ்சிய எலும்புஞ் சாம்பலுமாகிய உருவத்தினுள் அடங்கி நிற்கும் என்பது குறிக்க **உடல் - அடக்கி** என்றார். "முடிவிலொரு பிடிசாம்பராய் வெந்து" (பட்டினத்தார்). உடலைத் தைலம் - ஏனை மருந்து நீர் - முதலியவற்றுள் இட்டுச் சேமிக்கும் முறைகளும் உண்டு; அவை நவீனர்களாலும் கையாளப்படுவன. தசரதனது உடம்பைத் தைலம் ஆட்டிச் சேமித்தமையும், தேள் - பாம்பு - முதலிய சில பிராணிகளின் உடலைத் திராவகத்துள் இட்டுச் சேமிக்கும் முறைகளும் காண்க. உடலினை உள்ளும் புறமும் மருந்துப் பண்டங்களாற் பொதிந்து நீண்ட காலம் சேமிப்பது முற்காலம் இஜிப்தியர்கள் கையாண்டதொரு முறை (Egyptian Mummies). ஆனால் அவையெல்லாம் சில காலம் நிற்பனவும், உடல் உருவ நிற்பினும் விடத்தன்மை கொண்டு கேடுறுவனவும் பிறவுமா யொழிதலன்றித் தூய்மைக்குப் பொருந்துவனவல்ல; தூலஉடல் முடிவில் எலும்பும் சாம்பலுமாய் நிற்பதும், பல்லாற்றுனும் எளிதாய் அவ்வாறு சேமித்தற்குரியதாவதும், தொன்றுதொட்டு நம் நாட்டின் முந்தையோர் கண்டு கையாண்டுவந்த முறைகளாம்;அன்றியும் ஊழிக் காலத்தில் தீயினுற் சங்கரிக்கப்பட்ட உலகம் சாம்பராகி ஒழிந்து ஒடுங்கி மீளவும் ஆண்டுநின்றும் தோன்றுகின்றது என்றது சைவ சித்தாந்த உண்மையாதலின் அதனைத் தமதுள்ளத்துள் வைத்துச் சிவநேசர் இவ்வாறு **தெளிந்தனர்** என்ற குறிப்பும் **அடக்கிச் - சாம்பல் சேமிப்பது தெளிவார்** - என்றமையாற் பெறப்படுதல் காண்க. **சிவநேசர்** என்ற பெயரால் இங்குக் கூறியமையும் இக்குறிப்பு. **சேர** - முழுமையும்கூட; உடலின் எல்லாப் பகுதிகளின் எஞ்சியவை எல்லாம் ஒன்றுசேர.

சாரும் அவ்வளவும் - தலைவர் அங்குச் சாருநாள் எப்போது கூடுமென்பது அறியவாராமையின் எந்நாளாயினும் அந்நாள் வரையும் என்பதாம். ஆதலின் எதுநாளாயினும் அதுவரை எல்லையின்றிச் சேமமாயுள்ளது சாம்பர் உருவமே என்பதும் தெளிந்தனர் என்க. மருத்துவ நூலவரும் குறித்த சிலகால எல்லை அளவே சத்திகொள்ளும் நெய், இலேகியம், சூரணம், எண்ணெய் முதலியவை போலாது, நீடித்து இருக்கவேண்டுவனவற்றைப் பசுமம் = நீறு = சுண்ணம் ஆக்கிவைத்தல் கருதுக.

தழலிடை அடக்கி - உடலை மண் - நீர் - முதலியவற்றுள் அடக்காமல் நெருப்பினுள் இட்டு அதனுள் ஒடுங்கும்படி அடக்கி. அப்பெரிய உடலுருவமே இச்சிறிய சாம்பரிடை நிற்கச் செய்தல் தீயின் செயலாதலின் **தழலிடை அடக்கி** என்றார். **அடக்கம் செய்தல்** என்பது இறந்த உடலைச் சேமித்தற்கு வரும் மரபு வழக்கு.

தெளிவார் - **புகப்பெய்து** - வைப்பார் - வைத்தனர் (ஆகி) - செய - என மேல் வரும் பாட்டுக்களுடன் முடிக்க. *1065*

2964. **"உடைய பிள்ளையார்க் கெனவிவ டனையுரைத் ததனுல்**
அடைவு துன்புறு வதற்கிலை யாநமக்" கென்றே
யிடரொ ழிந்தபின், னடக்கிய வென்பொடு சாம்பல்
புடைபெ ருத்தகும் பத்தினிற் புகப்பெய்து வைப்பார், 1066

2964. (இ-ள்) உடைய.. என்றே - ஆளுடைய பிள்ளையார்க்கு இவளை அளித்தேன் என்று சொல்லிவிட்டபடியால் இந்நிகழ்ச்சிபற்றி நமக்குத் துன்ப முறுவதற்கில்லையாம் என்று துணிந்தே; இடர் ஒழிந்தபின் - துன்ப நீங்கியபின்; அடக்கிய... ... வைப்பார் - தீயினில் எரித்த எலும்பினையும் சாம்பலையும் பக்க இடமகன்ற கும்பத்தினில் புக இட்டு வைப்பாராய்,

(வி-ரை) உடைய பிள்ளையார்க்கு ... என்றே - சிவநேசர் கொண்ட (2964) மயக்கம் நீங்கியது இன்ன வகை என்று கூறியபடி. **பிள்ளையார்க்கென உரைத்ததனுல்** - இவளைப் பிள்ளையார்க்குக் கொடுத்தேன் என்று சொல்லி விட்டமையால் இவள் அவரது உடைமைப் பொருளாயினமையாலே; மணச் சடங்கில் பெற்றேர் கன்னிகையைக் கொடுத்தோம் என்று கூறும் சடங்கும், அதனுல் அக்கன்னிகை மணமகனுக்கு உரிய உடைமைப் பொருளாய்விடுகின்ற நிலையும், அதன் பின்னர் அவளுடைய இன்பத் துன்ப முதலிய நிகழ்ச்சிகள் யாவும் மணமகனுடையவையே யாகின்ற நிலையும் ஈண்டு வைத்துக் கருதத் தக்கன; **உரைத்ததனுல் துன்புறுதல் நமக்கில்லை** என்று காரணக் குறிப்புப்படக் கூறியதும் காண்க. பெற்றேரது இசைவே மணமாம் என்ற துணிபு திலகவதியம்மையார் வரலாற்றுட் காண்க.

அடைவு - நேர்ந்த செயல்; அடைந்த நிகழ்ச்சி; அடைவின் பொருட்டு. **அடைவு** - முறைமை என்று கொண்டு துன்புறுதற்குரிய முறைமை நமக்கில்லை என்றுரைத்தலுமாம்.

நமக்கு - தமது மனைவியாரையும் சுற்றத்தாரையும் உளப்படுத்திக் கூறிய பன்மை. **என்றே** - என்று துணிந்தே; ஏகாரம் தேற்றம்.

உரைத்ததனுல்...இலையாம் நமக்கு-என்றது தம்மைப் பிள்ளையாரின் வேருய் எண்ணிய நிலையன்று. "இன்ரேரிடையூ றெனக்குண்டோ?". "நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானே விதற்கு நாயகமே" (திருவா) என்ற கருத்தினை இங்கு வைத்துக் காண்க. அவரதுடைமையினை இனி ஏற்றபெற்றி காவல் செய்து அவர்பால் ஒப்புவிப்பேன்; அஃதே எனது கடமை என்றபடி.

இடர் ஒழிந்தபின் - இங்கு **இடர்** என்றது இதுவரை பாவையாரைத் தம் மகளாராகக் கொண்ட நிலையில் தாம் அடைந்த "உறுதுயர்" (2957); "வெந்துயர்" (2961) முதலியவை.

அடக்கிய - தழலிடை அடக்கியதனுற் பெற்ற; **அடக்குதல்** - தீயினில் எரித்தலால் சேமித்தல்;இதன் கருத்து மேல் உரைக்கப்பட்டது.

புடை பெருத்த கும்பம் - வாய் சிறுத்துப் பக்கம் பெருத்த மட்குடம்.

புகப்பெய்து - எலும்பினையும் சாம்பலையும் குடத்தினுள் புகும்படி மென்மையாய் வைத்து. **பெய்து** - வைத்த மென்மை குறித்தது.

வைத்தார்—என்பதும் பாடம். 1066

2965. **கன்னி** மாடத்தின் முன்புபோற் காப்புற வமைத்துப்
பொன்னு முத்துமே லணிகலன் பூந்துகில் சூழ்ந்து
பன்னு தூவியின் பஞ்சணை விரைப்பள்ளி யதன்மேன்
மன்னு பொன்னரி மாலைக ளணிந்துவைத் தனரால். 1067

2965. (இ-ள்) கன்னிமாடத்தில்... அமைத்து - கன்னிமாடத்திலே முன் பாவையார் உயிருனிடனிருக்குநாளிற் போலவே காவல் பொருந்த (அக்குடத்தை) அமைய வைத்து; பொன்னும்... சூழ்ந்து - பொன்னும் முத்தும் மேல் அணிகலன்களும் அழகிய மெல்லிய துகிலும் சுற்றிப் புனைந்து; பன்னு...அணிந்து வைத்தனரால் - எடுத்துச் சொல்லப்பட்ட அன்னத்தின் தூவியினை அடைத்த பஞ்சணையாகிய வாசனை பெய்த பள்ளியின் வைத்து அதன்மேல் நிலைபெற்ற பொன்னரியாகிய கழுத்தணி வகைகளையும் அணிபெறக் கோலஞ்செய்து வைத்தாராகி,

(வி-ரை) இப்பாட்டினும் மேல்வரும் பாட்டினும் பாவையாரின் எலும்பையும் சாம்பலையும் பெய்துவைத்த குடத்தினை அப்பாவையாராகவே கொண்டு அணிந்து வைத்துச் சிவநேசர் புரிந்துவந்த உபசாரங்கள் கூறப்படுவன. என்னை? பாவையாரின் உடல் தீயிடை யடக்கிப்பெற்ற அந்நிலை அவரது சுருங்கிய உடலேயாம். உயிரோ தீயினாலும் வேறெதனாலும் அழிவுபெறாத அறிவுப் பொருள். அஃது அங்கு உள்ளதாகப் பாவிக்கப்பட வருவதொன்றென்பது உண்மை. "நன்மையாந் தன்மை, அந்த வென்பொடு தொடர்ச்சியாம்" (2984) எனப் பிள்ளையார் பின்னர்க் காட்டயாவராலும் அறியப்படுவதாம். ஆதலின் அவ்வாறு உடலையும் உயிரையும் ஒன்றுபடுத்திச் சிவநேசர் பாவித்தனர் என்க; அன்றியும் பிள்ளையாரது உடைமையாக எண்ணினாராதலின் அவர் பொருளைப் போற்றும் முறையாலும் உபசரித்து வந்தனர் என்பதுமாம்.

முன்புபோல் - முன்பு பூம்பாவையார் உயிருடன் இருந்தநாளிற் போலவே. காவல் செய்தமைத்தற்குக் காரணம் கூறியபடி.

பொன்னும்... சூழ்ந்து - இஃது அக்குடத்தினை அப் பாவையாரெனவே அலங்கரித்தல்; **சூழ்தல்** - சுற்றியணிதல்;எண்ணிச் செய்தல் என்றலுமாம்.

பன்னு தூவியின் பஞ்சணை - தூவி - அன்னத்தின் மெல்லிய சிறு இறகு; தூவி போன்ற நுண்ணிய பஞ்சடைத்த அணை; தூவியாலாகிய பஞ்சணை என்றலுமாம். **பன்னுதல்** - குற்றங் களைதல் என்ற குறிப்புமாம். **விரைப் பள்ளி** - வாசனைப் பண்டங்களால் மணமூட்டிய பள்ளி.

பள்ளி அதன்மேல் - குடத்தை வைத்த ஆதனம் கூறியபடி.

பொன்னரி மாலைகள் - கழுத்தணி வகைகள். இவை அவ்வாதனத்தின் மேலே கட்டிலின் மேற்கட்டி, விதானங்கள் முதலியவை அமைந்த அணிவகை. *1067*

2966. (இ-ள்) மாலை... சமைத்தே - மாலையும் சந்தனத்துடனே திருமஞ்சனமும் நாள்தோறும் விடாமல் பாற்சோறும் பகல்விளக்கும் என்றிவையும் இவைபோல் வனவற்றையும் பொருந்திய நன்மையினாலே தகுவனவாக நாள்கள் தோறும் அமைத்தே; ஏலுமா...நாளில் - பொருந்தும் வகை காட்டிச் செய்ய எல்லாரும் அதுகண்டு வியப்படையும் நாட்களிலே;

2966. **மாலை** சாந்தொடு மஞ்சன நாடொறும் வழாமைப்
பாலி னேர்தரு போனகம் பகல்விளக் கினைய
சாலு நன்மையிற் றகுவன நாடொறுஞ் சமைத்தே
ஏலு மாசெய யாவரும் வியப்பெய்து நாளில், 1068

(வி-ரை) மாலை சாந்தொடு மஞ்சனம் - இவை நாளும் புதிதாகச் செய்யப்படும் உபசாரம். **மஞ்சனம்** - சிவபூசையிற் பாவனபிடேகம் என்ற முறையின்படி அமைவதுபோலும். **சாலு நன்மையிற் றகுவன** - என்ற குறிப்புமிது.

பாலினேர்தரு போனகம் - பாலினுற் சமைக்கப்பட்ட சோறு; பாற்சோறு. ''பாற்சோ ருக்கி'' (தேவா); பாயசம் என்பது வழக்கு. **நேர்தரு**- அடப்பட்ட.

பகல் விளக்கு - இரவேயன்றிப் பகலிலும் இடும் விளக்கு. இஃது உபசார வகைகளுள் ஒன்று. விளக்கு வேண்டப்படாதபடி பகலவன் ஒளிவீசும் பகலிலும் எரிக்கப்படுதலால் உபசாரமெனப்படும். இது தெய்வ முன்னிலையிலும் பெரியோர் முன்பும் இயற்றப்படும் வழக்குண்மை காண்க.

சாலு நன்மையில் தகுவன - என்றதனுல் புகை (தூபம்) முதலாயினவுமாம்.

சமைத்தே - அமைவித்தே; **செய** - உபசரிக்க; **சமைத்தல்** இப்பண்டங்களை வழாது படுத்தலும், **செய்தல்** அவற்றினுல் உபசரித்தலும் குறித்தன.

நாடொறும் வழாமை என்றது இவற்றை அவ்வந் நாட்கள்தோறும் புதிதின் அமைத்தலையும், **நாடொறும் - செய** என்றது நாடோறும் உபசரித்தலையும் குறித்தமையால் கூறியது கூறலன்மையுணர்க.

யாவரும் வியப்பெய்த - இதன் உள்ளுறையறியாத உலகர் வியந்து பாராட்டிய மட்டில் அமைய என்க.

பல்விளக்கு—என்பதும் பாடம். *1068*

2967. (இ-ள்)சண்பை மன்னவர்... நல்வார்த்தை - சீகாழித் தலைவராகிய பிள்ளையார் திருவொற்றியூர் நகரிலே வந்து சார்ந்து பண்புபெற்ற நல்ல தொண்டர்களோடும் இறைவரைப் பணிந்து அங்கே எழுந்தருளியிருந்தார் என்ற நண்பு சிறந்த நல்வார்த்தையினை; அந்நற்பதி யுள்ளோர்... உரை செய்தார் - அந்த நற்பதியில் உள்ள அடியார்கள் வண்மையும் புகழும் உடைய பெருவணிகர் தோன்றலாராகிய சிவநேசரிடம் வந்து சொன்னுர்கள்.

இவ்வைந்து பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபுகொண் டுரைக்கநின்றன.

(வி-ரை) சண்பை மன்னவர் - பிள்ளையார். **சண்பை** - சீகாழியின் ஒன்பதாவது திருப்பெயர்.

பண்பு பெற்ற - **பண்**பாவது பிள்ளையாருடனிருத்தற்குரிய நற்பண்பு - சிவத் தன்மை; நல்லூழ் என்றலுமாம்.

2967. **சண்பை** மன்னவர்திருவொற்றி யூர்நகர் சார்ந்து
பண்பு பெற்றநற் றொண்டர்க ளுடன்பணிந் திருந்த
நண்பு மிக்கநல் வார்த்தையந் நற்பதி யுள்ளோர்
வண்பு கழ்ப்பெரு வணிகர்க்கு வந்துரை செய்தார். 1069

2968. **சொன்ன** வர்க்கெலாந் தூசொடு காசுபொன் னளித்தே
யின்ன தன்மைய ரெனவொணு மகிழ்சிறந் தெய்தச்
சென்னி வாழ்மதி யார்**திரு வொற்றியூ ரளவுந்**
துன்னு நீணடைக் காவணந் துகில்விதா னித்து, 1070

நண்புமிக்க நல்வார்த்தை - நண்பு - சிவநேசர்பாற் கொண்ட நண்பு; சிவநேசர்மேற் கொண்ட உரிமை என்றலுமாம்; **நல்வார்த்தை** - சுபசெய்தி. "பிள்ளையார் திருவார்த்தை" *(1442)* என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

நற்பதி - திருவொற்றியூர்; இறைவர் தேற்றமாய்ப் படம்பக்கம் இடம்கொண்டு எழுந்தருளியுள்ள சிறப்பு நன்மை எனப்பட்டது.

பதியுள்ளோர் வந்து வணிகர்க்கு உரைசெய்தார் - சிவநேசர் திறங்களை அடியார்கள் நன்கறிந்தாராதலின் அங்குநின்றும் திருமயிலையில் வந்து அவர்க்கு அறிவித்தனர்.

பெருவணிகர் - வணிகர் மரபின் உட்பிரிவாகிய குடி; முன்னரும் "பெருவணிகர்" *(2931 = 2939)* என்றமை காண்க.

பணிந்திருந்த நல்வார்த்தை - "ஒற்றிநகர் காதலித்தங் கினிதுறைந்தார்" *(2930)* என்று முன் கூறிவிடுத்த செய்தி. இதனைச் சரித வரலாற்றுத் தொடர்ச்சிபெற எடுத்துக்காட்டிய கவிநயமும் கண்டுகொள்க. *1069*

2968. (இ-ள்) சொன்னவர்க்கெலாம்...அளித்தே - முன்கூறிய நல் வார்த்தையினை வந்து சொன்னவர்களுக்கெல்லாம் சிவநேசர் தூசும் காசும் பொன்னும் அன்போடு கொடுத்தே; இன்ன...எய்த - இன்ன தன்மைதான் பெற்றார் என்று சொல்லமுடியாத மகிழ்ச்சி மேலோங்க; சென்னி... விதானித்து - தலையினில் வாழ்வுபெறும் மதியினைத் தாங்கிய சிவபெருமான் எழுந்தருளிய திருவொற்றியூர் அளவும் நெருங்கும் நீண்ட நடைக்காவணமிட்டுத் துகிலால் விதானமும் கட்டி,

(வி-ரை) சொன்னவர்க்கெலாம்... அளித்தே - "முன்னர்ச் சொன்னவர்க்கெலா மிருநிதி தூசுட னளித்து" *(2950)* என்றுரைத்தவை பார்க்க.

இன்ன... ...மகிழ் - இன்னபடி யென்று அளவுபடாத தன்மையிற் பெருகிய மகிழ்ச்சி. "இன்னபரி சானுனென் றறிந்திலன் வேந்தனும்" *(132)*.

திருவொற்றியூரளவும் - திருமயிலாபுரியினின்றும் திருவொற்றியூர் வரையும்; இது பத்து நாழிகையளவு கொண்ட தூரம்; இவரது அன்பு நீண்டுசெல்லும் தன்மை குறித்தது.

2969. **மகர** தோரணம் வண்குலைக் கமுகொடு கதலி
நிகரில் பல்கொடித் தாமங்க ளணிபெற நிரைத்து
நகர நீண்மறு கியாவையு நலம்புனை யணியாற்
புகரில் பொன்னுல கிழிந்ததா மெனப்பொலி வித்தார்; 1071

நடைக்காவணம் - துகில் விதானித்து - நடைப்பந்தலமைத்து அதனில் மேற்றுகில் விதானமும் கட்டி; **விதானம்** - மேற்கட்டி; இஃது அணிவகை யாவதன்றிப் பந்தரின் கீழ் வெயில் - காற்று - பனி முதலியவை தாக்காது நிழலாற்றும் பயனுமுடையது; பத்து நாழிகையளவும் நடைக் காவணமும் துகில் விதானமும் செய்தலும், அவ்வளவும் தோரணம் கமுது கதலி நாட்டி அணிசெய்தலும் சிவநேசர் பிள்ளையார்பாற் கொண்ட அழுந்திய அன்பின்றிறத்தினை விளக்குவன. இந்நாள் மக்கள் செய்யும் உபசார வகைகளுடன் இதனை ஒப்பிட்டுப் பார்க்க உண்மை விளங்கும். துணிக்கும் சோற்றுக்கும் உயிர்ப்பிச்சை வாங்கும் இந்நாளில் இதன் ஏற்றம் நன்கறியக் கிடக்கும்.

வாழ் மதிச் சென்னியார் - என்க; **வாழ்** - வந்தடைந்து வாழ்வுபெற்ற.

மகிழ்ச்சி வந்தெய்த—என்பதும் பாடம். *1070*

2969. (இ-ள்) மகர தோரணம்... நிரைத்து - மகர தோரணங்களும், வளப்ப மிக்க குலைக் கமுகுகளும், வாழைகளும், ஒப்பற்ற பல கொடிகளும் மாலைகளும் என்றிவற்றை அழகு பொருந்த வரிசையாக அமைத்து; நகர நீண்மறுகு... பொலிவித்தார் - நகர முழுமையும் உள்ள நீண்ட தெருவுகள் எல்லாவற்றையும் நலம் பொருந்தச் செய்த அலங்காரங்களினால் குற்றமில்லாத தேவலோகமே கீழிறங்கிய தாம் என்று சொல்லும்படி அழகு செய்தனராய்,

(வி-ரை) மகர தோரணம் – துணியில் மகரம் முதலியவையும் பூங்கொடிகளும் தீட்டித் தொங்கல்களையும் வைத்த தோரண வகை. **வண்குலைக் கமுகு-** எண்ணற்றனவாய்க் காய்களைக் கொண்ட குலைகளையுடைய; **வண்குலை** என்பதனைக் கதலியுடனும் கூட்டுக. **ஒடு** உருபும் இப்பொருட்டு.

தாமங்கள் -தோரணங்களினிடையே தொங்கவைப்பனவும் வேறு அங்கங்கும் கட்டுவனவும்.

கொடித் தாமங்கள் - கொடிகளும் மாலைகளும்; கொடிகள் படர்ந்தனபோல அணிந்த மாலைகள் என்றலுமாம்.

புகரில் பொன்னுலகு இழிந்ததாம் என - புகர் - குற்றம்; **பொன்னுலகு** தேவருலகம். **இழிந்ததாம்** - வந்திறங்கிய தாம்; இழிவுபட்டதாம் என்றதும் குறிப்பு.

நீண்மறுகு - நீண்ட பெரிய தெருவுகள்; தெருவுகள் வளைதலின்றி யகன்று நீண்டு இருத்தல் நகர அமைப்பின் சிறப்பு என்பர். ''மலிவிழா வீதி'' என்று இச்சிறப்பினைப் பிள்ளையார் அருளுதல் காண்க. இவ்வாறு சிவநேசர் நடைக் காவணம் அமைத்து அணி செய்த நிலை திருமயிலாபுரியினின்றும் திருவொற்றியூர் வரை தொடர்ந்து செல்லும் கடற்கரையோரப் பெருவழியேபோலும் என்பது கருதப்படும். ''விடுங்கலங்க ணெடுங் கடலு ணின்று தோன்றும்''

2970. இன்ன வாறணி செய்துபல் குறைவறுப் பேவி
"முன்ன மொற்றியூர் நகரிடை முத்தமிழ் விரகர்
பொன்ன டித்தலந் தலைமிசைப் புனைவ" னென் றெழுவார்
அந்த கர்ப்பெருந் தொண்டரு முடன்செல வணைந்தார். 1072

(தாண்டகம்) என்றும், "ஒல்லைதான் திரைமேறி யோத மீளும்" என்றும், "வடிவுடையமங்கையுந் தாமுமெல்லாம் வருவாரை யெதிர்கண்டோ மயிலாப்புள்ளே, செடிபடுவெண்டலையொன் றேந்திவந்து திருவொற்றி யூர்புக்கார்" என்றும், "ஊர்திரை வேலை யுலாவு முயர்மயிலை" (பிள். தேவா) என்றும், "துறைக்கொண்ட செம்பவளமிருளகற்றும் சோதித் தொன்மயிலை" (நம்பி) என்றும், "அருங்கலம் பலவும் பொருகடற் செலப்போக்கி" (2932) என்றும் வருவனவற்றாலும் பிறவாற்றாலும் திருமயிலையும் திருஒற்றியூரும் அந்நாளில் கலங்கள் போக்கும் துறைமுகங்களாக விளங்கியமையும், இவையிரண்டும் கடலோரம் அலை வீதிவழியில் மக்கள் செல்லும் தொடர்புடையவை என்றும் கருத இடமுண்டு. திருமயிலைக் கோயிலும் அந்நாளிற் கடற்கரையின் நின்ற தென்பது சரிதம்.

செய்வித்தார் - செய்வித்தாராகி - முற்றெச்சம். 1071

2970. (இ-ள்) இன்னவாறு... ஏவி - இவ்வாறெல்லாம் அலங்காரங்களைச் செய்து பலவகையாலும் குறைகளில்லாமற் செய்யும் ஏவலாட்களை ஏவி; முன்னம்... எழுவார் - முன்னர்ச் சென்று திருவொற்றியூர் நகரிலே முத்தமிழ் விரகராகிய பிள்ளையாருடைய பொன்னார்ந்த திருவடிகளை வணங்கித் தலைமேற் சூட்டிக்கொள்வேன் என்று எழுவாராகி; அந்நகர்... அணைந்தார் - அத் திருமயிலாபுரியில் வாழும் பெருந் தொண்டர்களும் தம்முடன் செல்லத் திருவொற்றியூரினை நோக்கிச் சென்றனர்.

இம்மூன்று பாட்டுகளுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) பல் குறைவறுப்பு ஏவி - குறைவறுப்பு - குறைவுகள் நேராதபடி முன்னரே நாடி வேண்டுவனவற்றைச் செய்தல்; **குறைவு - அறுத்தல்** - குறைகளெவையும் இல்லையாகச் செய்தல்; "பாண்டிமா தேவியார் மெய்க்குலச் சிறையார் குறைவறுத்துப் போற்றிச் செல்ல" (2787); "அத்தனிமுதற் றொண்டர் தாமே யாவையுங் குறைவறுத்திட" (2420).

முன்னம் - பிள்ளையார் இங்கெழுந்தருளு முன்னரே; செய்தி கேட்டதும் முதல் வேலையாக.

அடித்தலம் தலைமிசைப் புனைவன் - திருஅடிகளில் முடி பொருந்த வணங்குவேன்; அவ்வாற்றால் அடிகளை முடிமிசைச் சூடிக்கொள்வேன்; **புனைதல்** - அணியாகக் கொள்ளுதல்.

எழுவார் - எழுவாராகி; **எழுதல்** - மேற்செல்லுதல்.

பெருந் தொண்டர் - அன்பின் மிகுந்த திருத்தொண்டர்கள். 1072

2971. (இ-ள்) ஆய வேலையில் - அவ்வாறாகிய வேளையில்; அருமறை.. ... அகன்று - அரிய மறைகளின் தலைவராகிய பிள்ளையாரும் பொருந்தியிருந்த திருவொற்றியூரினைப்

2971. ஆய வேலையி லருமறைப் புகலியர் பிரானும்
மேய வொற்றியூர் பணிபவர் வியனக ரகன்று
காயல் சூழ்கரைக் கடன்மயி லாபுரி நோக்கித்
தூய தொண்டர்தங் குழாத்தொடு மெதிர்வந்து தோன்ற, 1073

பணிபவராய் அப் பெருநகரினை நீங்கி; காயல்...தோன்ற - உப்பளங்கள் சூழ்ந்த கரைக்கடலின் றுறையினையுடைய திருமயிலாபுரியை நோக்கித் தூய்மையுள்ள திருத்தொண்டர்களின் திருக் கூட்டத்தோடும் எதிரிலே வந்து தோன்ற,

(வி-ரை) ஆய வேலை - சிவநேசர் தொண்டர்களுடனே திருவொற்றியூர் சென்று பிள்ளையாரைப் பணிவதற்கு எழுந்து அணைந்த வேலை. வேலை - நேரம்.

அருமறைப் - பிரான் - மறைவல்ல பிரான்; "வண்டமிழால் எழுதுமறை மொழிந்த பிரான்" *(1445)*; **மறைப் புகலி** என்று கொண்டு மறை வளர்க்கும் இடமாகிய சீகாழி என்றலுமாம்.

ஒற்றியூர் பணிபவர் - ஊரினைப் புறத்தே போந்து விடைகொள்ளும் முகத்தாற் பணிபவராகி; புறத்துப் போந்து பதியினை வணங்கி விடைகொள்ளும் முறை பற்றித் திருவாரூர் - திருக்காளத்தி முதலிய பதிகளிற் பிள்ளையார் விடைபெற்ற வரலாறுகள் காண்க. *(2416 = 2926)*.

வியனகர் - அந்தப் பெரிய நகராகிய திருவொற்றியூரினை; சுட்டு விரிக்க,

காயல் - உப்பளம். கடற்கரையாதலின் உப்பு அளங்களின் நிறைவு காணப்படும். உப்பு, வாணிகத்துக்குரிய பண்டமாகிக் கலங்கள் நிறையும் துறையிற் காணப்படுவதும் இயல்பு. "மன்றல் கமழும் பூம்புன்னை மணஞ்சூழ் சோலை யுப்பளத்தின், முன்றி றேறுஞ் சிறுமடவார் முத்தங் கொழிக்கும் மறைக்காடு" என முன் கூறியதை இங்கு நினைவுகூர்க. கடற்கரையுள்ளோர் அக் கடல்படு பொருள்களுலொன்றாகிய உப்பினை விலைப்பண்டமாக்கிப் பண்டமாற்றாக வாணிபஞ் செய்தல்பற்றி முன் ஆசிரியர் "ஆய பேரளத் தளவர்க ளளப்பன வுப்பு" *(1111)* என இத் தொண்டை நாட்டு நெய்தல்வளங் கூறியதும் கருதுக; **காயல்** - கடற்கழி என்றலுமாம்.

தூய தொண்டர் - சிவத்தொடர்பினு லுள்ளும்புறம்பும் தூய்மையுடைய அடியவர்கள்; "மாசி லாத மணிதிகழ் மேனிமேற் பூசு நீறுபோ லுள்ளும் புனிதர்கள்" *(141)*; இத் திருவெண்ணீற்றின் விரிந்த சோதியினையே நெடுந்தூரத்தில் சிவநேசரும் உடன் வந்த தொண்டர்களும் கண்டனர் என மேற்பாட்டிற் கூறுவது காண்க.

எதிர் வந்து தோன்ற - இவ்வாறு எதிர்ப்பட்ட இடம் திருமயிலை நகரின் வடக்குப் புறத்திலே அணிமையில் உள்ளதாமென்பது கருதப்படும்.

ஏய தொண்டர்—என்பதும் பாடம். *1073*

2972. (இ-ள்) மாறில்...தொண்டரும் - ஒப்பற்ற வண்மையுடைய பெரு வணிகராகிய சிவநேசரும் அவருடன் வந்த பெருந் தொண்டர்களும்; மலர்ந்த... ...கண்டே - ஒளி விளங்கிய

2972. **மாறில் வண்பெரு வணிகருந் தொண்டரு** மலர்ந்த
நீறு சேர்தவக் குழாத்தினை நீளிடைக் கண்டே
"ஆறு சூடினார் திருமக னாரணைந் தா"ரென்
றீறி லாததோர் மகிழ்ச்சியி னால்விழுந் திறைஞ்ச, 1074

திருநீறு புனைந்த தவத்தையுடைய அடியார்களின் திருக் கூட்டத்தினை நெடுந்தூரத்திற் கண்டே; ஆறு...என்று - கங்கையைச் சூடிய சிவபெருமான் திருமகனாராகிய பிள்ளையார் வந்தணைந்தனர் என்றே கொண்ட; ஈறிலாத் தோர்... இறைஞ்ச - எல்லையில்லாத ஒப்பற்ற மகிழ்ச்சியினாலே - நிலத்தில் விழுந்து வணங்க,

(வி-ரை) பெருவணிகர் - குடிப்பெயர். முன் உரைத்தவை பார்க்க.

மலர்ந்த - ஒளி வீசிய; ''வெண்ணீற்றின் விரிந்த சோதி மாதிரந் தூய்மை செய்ய'' (2756); "இரண்டு நிலவின் கடல்கள்'' (1498).

மாறு - ஒப்பு - **மாறிலாத வண்மை**யாவது ஒப்பற்ற வள்ளன்மை; கைம்மாறு செய்ய இயலாத வண்மை என்றலுமாம்; ''செய்யாமற் செய்த உதவி'' (குறள்).

தவக் குழாத்தினை நீளிடைக் கண்டே - இவ்வாறே குலச்சிறையார் ஓசைகேட்டுப் பணிந்த காட்சியினை இங்கு நினைவுகூர்க. (2553); **நீளிடை** - நீண்ட தூரத்தே; வழிமேல் விழிவைத்துச் சென்றணைகின்றார்க ளாதலின் நீளிடைக் காணவல்லவ ராயினர்.

ஆறு சூடினார் திருமகனார் அணைந்தார் என்று - இறைவரது திருமகனார்தாமே என்று தேற்றேகாரம் விரிக்க. **திருமகனார்** - பாலூட்டி மகன்மைகொண் டளித்தருளிய வகையால் மகனாராயினவர். ''யாவர்க்குந் தந்தைதா யெனுமவரிப் படியளித்தா, ராவதனா லாளுடைய பிள்ளையாராய்'' (1967). இவ்வாறன்றி **மகனார்** – முருகப்பெருமான் என்றுரைகொள்வா ருரைகள் பொருந்தாமை முன் பலவிடத்தும் காட்டப்பட்டது.

இறைஞ்ச - திருமகனா ரணைந்தார் என்று கொண்டு உரியவாறு வழிபாடு செய்யும் பொருட்டுக் கண்ட இடத்தே நிலமுற வீழ்ந்து வணங்கினார் என்பது. இறைவர் - குரு - பெரியோர் இவர்களைக் காட்சிப்படக் கண்ட தூரத்தேயும் வீழ்ந்து வணங்குதல் வேண்டுமென்பது விதி. இவர்கள் இங்குப் பிள்ளையாரைக் காணாவிடினும் அவருடன் வரும் திருத்தொண்டர் கூட்டத்தினைக் கண்டாராதலின் அவருள்ளே அவருமிருப்பதைக் கருதலளவையாற் கண்டு வணங்கினர் என்க.

அணைந்தார் - இறந்தகாலம் விரைவுப்பொருள் குறித்து நின்றது. 1074

2973. (இ-ள்) காழி நாடரும்...இழிந்து-சீகாழித் தலைவராகிய பிள்ளையாரும் ஒளி பொருந்திய முத்துச் சிவிகையினின்றும் இறங்கி; சூழ்...எழுந்தருளி- சூழ்ந்த எண்ணிறைந்த பெருந் தொண்டர்களின் முன்னே தொழுது எழுந்தருளி; வாழி... கேட்டே - வாழ்வுடைய மாதவர்களாகிய அடியார்கள் சிவநேசரது அடிமைத் திறத்தினைச் சொல்லக் கேட்டே; ஆழிசூழ்...அணைந்தார் - கடற்கரை சூழ்ந்த திருமயிலைத் திருநகரினை அணைந்தருளினர்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

2973. **காழி** நாடருங் கதிர்மணிச் சிவிகை நின் றிழிந்து
சூழி ரும்பெருந் தொண்டர்முன் றொழுதெழுந் தருளி
வாழி மாதவர் **வணிகர்செய் திறஞ்சொலக் கேட்டே**
ஆழி சூழ்மயி லாபுரித் திருநக ரணைந்தார். 1075

(வி-ரை) காழிநாடர் - பிள்ளையார். **மணிச் சிவிகை - மணி** - மணிகளுட் சிறந்த முத்தினைக் குறித்தது; இதுபற்றி முன் உரைத்தவற்றை நினைவு கூர்க. **கதிர்மணி** - இயல்பாக நீற்றினொளியினை வீசுகின்ற. ''வெண்ணீற் றொளிபோற்றி'' *(2114)*.

சூழ் இரும் பெருந்தொண்டர்-சூழ் - இறைஞ்சி எழுந்து வந்து சூழ்ந்த; **இரும்** அளவில்லாத. **பெருந் தொண்டர் - பெருமை** - தொண்டினீர்மையின் பெருமை குறித்தது.

தொழுது எழுந்தருளி – தொழுதுகொண்டு அதன்பின் எழுந்தருளி - நடந்தருளி. இதனால் நகரணிமை கருதப்படும்.

வணிகர் செய்திறம் வாழி மாதவர் சொலக் கேட்டே - என்க; **வாழி** - அசை; **திறம்** -முன்னின்ற சிவநேசரது அடிமைத் திறத்தினையும் முன் நிகழ்ந்த பூம்பாவையாரின் வரலாறுகளையும்; இவற்றை அடியவர்கள் சொல்லியது அவர்களது கருணைத் திறத்தினை விளக்குவதாம். என்னை? சிவநேசரைப் பிள்ளையார் திருமுன்பு அறிமுகப்படுத்தும் வகையால் அவரது உள்ளக்கிடையினை நிறைவேற்றியருளுதல் வேண்டும் என்று குறிப்பால் விண்ணப்பித்தபடியாம் என்க. அவ்வாறே அதனைப் பிள்ளையார் திருவுள்ளத் தமைத்து, அவர் செயல் வாய்ப்பப் பெருங்கருணை நோக்கால் மகிழ்ந்தருளியமை *(2974)* மேலுரைக்கப்படுதல் காண்க. இவ்வாறு அடியார்கள் பிள்ளையார் திருமுன்பு அடைந்தாரை வழிப்படுத்தி நலஞ் செய்தல் முன் திருமறைக்காட்டின் நிகழ்ச்சியாலும் *(2512)*, பிறவாற்றாலுமறிக; ஆண்டுரைத் தவையும் பார்க்க.

செய்திறம் - பாவையார்பாற் செய்தனவும் செய்வனவுமாகியவை.

வணிகர் தந்திறம்—என்பதும் பாடம். *1075*

2974. (இ-ள்)அத்திறத்து... அமைத்து - வணிகரது அத்திறத்தினில் முன்னே நிகழ்ந்த நிகழ்ச்சியினைத் தமது திருவுள்ளத்தே (பிள்ளையார்) அமைத்துக் கொண்டருளி; சித்தம்...வாய்ப்ப - மனத்தில் இன்புறும் திருத்தொண்டராகிய சிவநேசரது செயல் வாய்த்திட; பொய்த்த வச்சமண்...அழிய – பொய்யாகிய தவத்தை மேல் கொண்டுழலும் சமணர் சாக்கியர்களுடைய புறத்துறைகள் அழிய; வைத்த... மகிழ்ந்தருளி - திருவுளங்கொண்ட அந்தப் பெரிய திருஅருள் நோக்கத்தினால் மகிழ்ந்தருளி,

(வி-ரை) அத்திறத்து முன் நிகழ்ந்தது - முன் பாட்டிற் கூறியபடி அடியவர்கள் சொல்லிய ''வணிகர் செய்திறம்'' *(2973)*.

திருவுள்ளத்து அமைத்து - தமது திருவுள்ளத்துட் கிடையாகக் கொண்டு; மனங்கொண்டு.

2974. **அத்தி றத்துமுன் நிகழ்ந்தது திருவுள்ளத் தமைத்துச்**
சித்த மின்புறு சிவநேசர் தஞ்செயல் வாய்ப்பப்
பொய்த்த வச்சமண சாக்கியர் **புறத்துறை யழிய**
வைத்த வப்பெருங் கருணைநோக் கான்மகிழ்ந் தருளி, 1076

சித்தம் இன்புறு சிவநேசர் தம் செயல் வாய்ப்ப-இன்புறும்-''அடைவு துன்புறுவதற் கில்லையா நமக்கென்றே, யிட ரொழிந்த பின்'' (2964) என்றபடி மகளார் போயினமை பற்றி இடரொழிந்தமையே யன்றிப் பிள்ளையாருக்கு ஆம்பரிசு எண்ணி மனத்தினுள் இன்பமும் கொண்டு விளங்கிய; செயல் வாய்த்தலாவது அவர் பாவையாரது உயிர் அங்கு இருப்பதாகவே பாவித்துச் செய்த செயல் உண்மையாகியே நிகழ. **செயல் வாய்த்தல்** - செயல் நிகழ்தல், பாவையார் உயிர் பெற்றெழுந்து வருதல் என்பது.

பொய்...அழிய-நடுநாடு-சோழநாடு-பாண்டி நாடுகளில் அந்நாளில் எங்கும் பரவி இன்னல் விளைத்தமைபோலவே தொண்டை நாட்டிலும் அந்நாளில் இவ்வகையார்கள் பரவி நின்றனர் என்பதாம். **புறத்துறை அழிய** - சமண சாக்கியர்களழிய என்னாது அவர்களது கட்டுப்பாடாகிய புறச்சமயத் தீமை ஒழிய என்றமை காண்க. அவற்றால் சைவத் திறத்துக்கு நேரும் தீமைமட்டில் ஒழிப்பது கருத்து என்று முன் அங்கங்கும் உரைத்தமை காண்க. ''அமண் - இருஞ் சாக்கியர்க ளெடுத்துரைப்ப'' என்றது பதிகம். இதற்கு ஆசிரியர் ''தேற்ற மில்சமண் சாக்கியத் திண்ணரிச் செய்கையேற்ற தன்றென வெடுத்துரைப்பா ரென்றபோது'' (2988) என்று பொருள் விரித்தமையும் காண்க. அவர்களது பொய்ம்மை அழிந்துபோதலும் (2992) பின் உரைக்கப்படும். சமண் சாக்கியர்கள் அந்நாளில் (6-7-8 நூற்றுண்டுகளில்) தமிழ்நாடு முழுமையும் பரவிச் சைவத்துக்குக் கேடு சூழ்ந்தமை நாட்டு நடப்புச் சரிதத்தாலும், அரசுகள் புராணம், தண்டியடிகள் புராணம், நமிநந்தியார் புராணம் முதலிய வரலாறுகளாலும், தேவாரத் திருவாக்குக்களாலும், பழைய கல்வெட்டுக்கள் முதலியவற்றாலும் அறியக் கிடக்கின்றது. **பொய்த்த அச்சமண்** - என்று பிரித்து உரைத்தலுமாம்.

வைத்த அப்பெருங்கருணை நோக்கால் - மேற்கொண்ட அந்தப் பேரருள் திரு நோக்கத்தால்.

முன் நிகழ்ந்தது... வைத்த அப் பெருங்கருணை நோக்கால் - வணிகர் செய்திறஞ் சொலக் கேட்டே திருநகரினை அணைந்து திருக்கபாலீச்சரத்தினை அணைகின்ற பிள்ளையார் வணிகரது அன்பின் திறத்தினுக்கு மகிழ்ந்து கருணைநோக்கம் கொண்டு அத்தகைய அன்பரது பேரன்பின் கருத்தை முற்றுவித்து அன்ப ரன்பின்றிறம் வெளிப்படுக்க நினைந்தருளினர்; **செயல் வாய்ப்ப** என்றது இக்குறிப்பு. இனி, அவ்வாறு மகிழ்விக்கும் ஒரு செயல்கொண்டே அன்பின் செய்கைக்கு மாறுவிளைத்து நிற்கும் புறத்துறைகள் அழியவும் திருவுளங்கொண்டருளினர். அச்செயலாவது விடத்தினால் வீந்த பின்னும் அவராகவே கொண்டு சிவநேசர் வழி பட்டுவரும் பூம்பாவையாரது எலும்பும் சாம்பரும் முன்போலப் பெண்ணுக உயிருடன் வரச் செய்தலாம் என்பதும் பிள்ளையார் திருவுளங்கொண்டருளினர். இது பிள்ளையார் இறைவரைக் கருதி வழிபட்ட (2976) தன்மையினாலும் அதனைத் தொடர்ந்து நிகழும் பின் நிகழ்ச்சியினாலும் அறியப்படும்; இவ்வாறு நினைந்தருளியமை தமது புகழும் பெருமையும் கருதியோ? அன்றிப், பாவையாரை அவர்தரத்

தாம்பெறும் தன்மை கருதியோ? அன்றிப், பெருவணிகரின் மகிழ்ச்சி காணக்கருதியோ? அன்றி, வேறுய உலக நலங்கள் கருதியோ? அன்று என்பது வெளிப்படை; **அன்பின்றிறமும் சிவனருளும் வெளிப்பாடுற்று உலகத்தை உய்விக்க வந்த பெருங்கருணைத்திற மொன்றே காரணமென்க.** ஆளுடைய அரசுகள் அப்பூதியார் திருமகனுரை விடத்தினின்றும் நீக்கி யுய்வித்த நிலையின் காரணம் ''அன்றவர்கள் மறைத்ததனுக் களவிறந்த கருணையரா'' யினமை (1473) என்றும், நம்பிகள் முதலை வாயினின்றும் பிள்ளையை அழைப்பிக்கும் காரணம் ''மைந்தன் றன்னை யிழந்ததுயர் மறந்து நான்வந் தணைந்ததற்கே சிந்தை மகிழ்ந்தார்'' (வெள்-சருக்.9) என்ற நிலையாமென்றும் ஆசிரியர் காட்டியருளும் திறம் ஈண்டு நினைவுகூர்தற்பாலன. முன் (1473) உரைத்தவை பார்க்க (III- பக் 459).

புறத்துறை அழிய - பரசமய நிராகரிக்கவும் நீறு ஆக்கவுமே பிள்ளையாரை இறைவர் அளித்தருளினு ராதலின் தொண்டை நாட்டிற் செய்யநின்று எஞ்சிய அப்பணியை நிறைவாக்க என்பது கருத்து. நடுநாட்டில் அரசுகளது வருகையாலும், பாண்டிநாட்டிலும் சோழ நாட்டிலும் பிள்ளையார் செய்கையாலும், புத்தர்வாத நிகழ்ந்த வகையாலும், மேலும் சோழ நாட்டில் நமிநந்தியார் தண்டியடிகள் நிகழ்ச்சிகளாலும் புறத்துறைகள் உண்மைச் சைவத்துக்கு இடையூறு விளைத்த நிலைகள் அழிந்தனவாதலின், எஞ்சி நின்றது தொண்டை நாட்டின் பணியேயாதலின் அதனைத் திருவுளங் கொண்டருளினர்.

ஈண்டுச் சமணர்கள் சைவத் திறங்களையும் திருத்தொண்டி னீர்மைகளையும் பலவாறு இழித்துரைத்து அடியவர்களுக்குத் துன்பம் விளைத்தனர் என்பது முன்னர்த் திருவோத்தூர் வரலாற்றில் ''அமணர், 'இங்கு நீரிட்டாக்குவன காய்த்தற் கடைவுண்டோ? வென்று, பொங்கு நகைசெய் திழித்துரைத்தார்; அருளவேண்டு'' மெனப் புகன்று (2876) அழுது வணங்கி விண்ணப்பித்த திருத்தொண்டர் செயலா லறிவிக்கப்பட்டமையின் ஆசிரியர் இங்குக் கூறிற்றிலர்; இங்குச் சிவநேசரது திருத்தொண்டின் றிறங்களையும் அவரது உலகியலிறந்த அன்பின் செயல்களையும் சமணர் முதலிய புறத்துறையாளர்கள் பலவாறும் இழித்துரைத்துத் துன்புறுத்தினர் என்பது கருதக் கிடக்கின்றது.

பின்னர்ப் பிள்ளையார் பாவையாரின் எலும்பு நிறைந்த குடத்தைக் கோயிலின் முன் கொணரச் செய்தபோது ''நன்றியில் சமயத்தி லுள்ளோர், மாடு சூழ்ந்து காண்பதற்குவந் தெய்தியே மலிந்து'' (2982) இழித்துரைக்க நிற்பதும், பாவையார் உயிர்பெற்றெழுந்தது கண்டபோது, ''பங்கமுற் றுரே போன்றுர் பரசம யத்தினுள்ளோர், எங்குள செய்கை தான்மற் றென்செய்த வாறி தென்று, சங்கையா முணர்வு கொள்ளும் சமணர்தள் ளாடி வீழ்ந்தார்'' (2992) என்பதும் காண்க.''உரிஞ்சாய வாழ்க்கை யமணுடையைப் போர்க்கு, மிருஞ்சாக் கியர்க ளெடுத்துரைப்ப'' (தேவா) என்ற பிள்ளையாரது திருவாக்கு இதற்கு வலிய அகச்சான்றுகும். புறத்துறையாளர்களின் இழிப்புரையினை இது குறிப்பா லுணர்த்தி நிற்றல் காண்க. ''தேற்ற மில்சமண் சாக்கியத் திண்ணரிச் செய்கை, யேற்ற தன்றென வெடுத்துரைப்பா'' ரென்றபோது (2988) என்று ஆசிரியர் இதனைப் பொருள் காட்டுதலும் காண்க. எனவே இங்குப் பிள்ளையார் **புறத்துறை யழியக் கருணைநோக்கம்** கொண்டது, வலுக்கொண்டபோது ஏனையோர் செய்தல்போல மீச்சென்று புறமதங்களை அழித்தல் கருதியதன்று என்பதும், சைவர்கள் தற்காப்பின் பொருட்டு மேற்கொள்ள வேண்டிய இன்றியமையாத கடமைபற்றியே என்பதும் தெற்றென விளங்கும்.

2975. **கங்கை வார்சடை யார்கபா லீச்சரத் தணைந்து**
துங்க நீள்சுடர்க் கோபுரந் தொழுதுபுக் கருளி
மங்கை பங்கர்தங் கோயிலை வலங்கொண்டு வணங்கிச்
செங்கை சென்னிமேற் குவிந்திடத் திருமுன்பு சேர்ந்தார்; 1077

பொய்த் தவம் - பொய்யினையே தவமென மேற்கொள்ளுதல். "கொல்லாமை மறைந்துறையும்" (1302) முதலியவை காண்க.

இத்திருவுள்ளக் குறிப்புடன் திருக்கோயிலை அணைந்தனர் பிள்ளையார் என்பதாம். வினைமுடிபுகளும் காண்க.

திருவுள்ளத்தடைத்து-தம்பணி-வெஞ்சமண்-என்பனவும்-பாடங்கள். *1076*

2975. (இ-ள்) கங்கை...அணைந்து - கங்கையைத் தரித்த நீண்ட சடையினையுடைய சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக்கபாலீச்சரமென்னும் திருக்கோயிலினை அணைந்து; துங்க... புக்கருளி - பெரிய நீண்ட ஒளிபொருந்திய திருக்கோபுரத்தைத் தொழுது உள்ளே புகுந்தருளி; மங்கை... வணங்கி - அம்மையைப் பங்கில் வைத்த இறைவரது திருக்கோயிலினை வலம் வந்து வணங்கி; செங்கை... சேர்ந்தார்-சிவந்த திருக்கைகள் தலையின் மேலேறிக் குவிய இறைவரது திருமுன்பு சேர்ந்தனராகி;

(வி-ரை) கபாலீச்சரத்து அணைந்து - திருநகரினை யணைந்தமை முன் (2973) கூறினர். நகரினுட் சென்று திருக்கோயிலை அணைந்தமை இதனாற் கூறப்பட்டது. **கபாலீச்சரம்** - திருக்கோயிலின் பெயர்; கபாலீசர் எழுந்தருளிய கோயில் என்பது பொருள்; பட்டீச்சரம் என்பதுபோல.

கங்கைவார் சடையார் - பகீரதனின் இறந்துபோன மூதாதைகளின் பொருட்டுக் கங்கையைத் தாங்கி உலகில் விடுத்ததற்கேற்ப இங்குப் பூம்பாவையாரது எலும்பினை நன்னெறிப்படுத்த நின்ற குறிப்புப்பட இவ்வாற்றாற் கூறினர்.

மங்கை பங்கர்தம் - இஃதும் முன்கூறிய குறிப்புப்பட நின்றது. மேல்வரும் பாட்டுப் பார்க்க.

வணங்கி - வீழ்ந்து வணங்கி. இவ்வாறு வணங்குதற்குரிய இடம் திருக்கோயிற் புறமுன்றிலில் கொடித்தம்பத்தின் முன் என்பது விதி.

கோயில்-இத்திருக்கோயில் அந்நாளில் கடற்கரையின் பாங்கு அமைந்திருந்தது என்றும், பின்னாளில் அழிவுபட்டோ அழிவுபடுத்தப்பட்டோ சிதைந்தமையில் நகரினுள் இப்போதுள்ள இடத்தில் அமைக்கப்பட்டதென்றும் சரிதவரலாறு கேட்கப்படுகின்றது. இஃது ஆராயத்தக்கது. சரித ஆராய்ச்சிக் குறிப்புக்கள் பார்க்க.

செங்கை சென்னிமேற் குவிந்திட - கைகள் முயற்சியின்றித் தாமே தலைமேல் ஏறிக் குவிய. **திருமுன்பு** - இறைவரது சந்நிதியின் முன் உள்ளே.

2976. **தேவ தேவனைத், திருக்கபா லீச்சரத் தமுதைப்,**
பாவை பாகனைப், பரிவுறு பண்பினுற் பரவி,
மேவு காதலின் விரும்பிய விரைவினுல் விழுந்து
நாவின் **வாய்மையாற் போற்றினுர்** ஞானசம் பந்தர். 1078

இப்பாட்டினுல் பிள்ளையார் திருக்கோயிலை யணைந்து வழிபட்ட முறை கூறப்பட்டது.

மங்கை பாகர்—*என்பதும் பாடம்.* *1077*

2976. (இ-ள்) தேவ தேவனை - தேவதேவராயுள்ளவரை; திருக்கபாலீச்சரத்து அமுதை - திருக்கபாலீச்சரத்தில் எழுந்தருளிய அமுதம் போல்பவரை; பாவை பாகனை- அம்மையொருபாகரை; பரிவுறு... பரவி - அன்புபொருந்திய பண்பினுலே துதித்து; மேவு... விழுந்து - பொருந்திய காதலினுலே விரும்பிய விரைவினுலே நிலமுற விழுந்து பணிந்து; நாவின்... ஞானசம்பந்தர் - திருநாவிற் பொருந்திய உண்மைத் திருவாக்கினுலே திருஞானசம்பந்தர் போற்றியருளினுர்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண் டுரைக்கநின்றன; முன்னிரண்டு பாட்டுக்களை மட்டும் ஒரு முடிபுபடுத்தி உரைப்பினு மிழுக்காகாது; பொருட்டொடர்பும் செயற்றொடர்ச்சியும் நோக்கி இவ்வாறுரைக்கப்பட்டது.

(வி-ரை) இப்பாட்டினுற் பிள்ளையார் கபாலீசரை வழிபட்டுப் போற்றிய முறையும் உட்குறிப்பும் கூறப்பட்டது.

தேவதேவனை – கடலிற் பொங்கித் தேவர்களை அழிக்கவந்த ஆலாலமாகிய பெருவிடத்தை உண்டு கூட்டமாகிய தேவர்களை இறவாமற் காத்து, விடத்தை உண்டமையால் தாம் இறவாமல் தமது முழுமுதற்றன்மை அறிய நின்றவர். இவர் இச்சிறு விடத்தினின்றும் சிறு பாவை ஒருத்தியைக் காத்தல் அரிதன்று என்பது குறிப்பு.

திருக்கபாலீச்சரத் தமுதை - அமுதசொரூபியாதலின் இறந்த உடலில் அமுதருளி வைத்து உயிர்ப்பிக்க வல்லவர் என்பது குறிப்பு. ''அமுதம் துன்ன'' *(2986);*

பாவைபாகனை - அருட்பாவையாகிய அம்மையை ஒருபாகமுடைமையின் பாவையாகிய இப்பெண்ணுக்கு அருளுமியல்புடையவர் என்பது குறிப்பு. ''வந்தெழுந்து பிடித்ததணி வளைத்தழும்பர் மலர்ச்செங்கை'' *(1202)* என்றதும், ''மங்கை தழுவக் குழைந்தார் மறைந்த விடக்கண் கொடுத்தார்'' *(3441 = ஏயர் - புரா-287)* என்பதும், அவைபோன்ற பிறவும் பார்க்க.

தேவதேவனை - அமுதை - பாவைபாகனை - இவ்வாறு வரும் உட்குறிப்புக்களுடைய திருவுள்ளத்துடன் பிள்ளையார் கபாலீச்சுரரைப் பாவித்து இறைஞ்சி யருளினர்.

பரிவுறு பண்பினுற் பரவி - என்றது மிக்கருத்து. **பரிவுறு பண்**பாவது பாவையார் மேலும், சிவநேசரது அன்பின்றிறத்திலும் கொண்ட அருட்பண்பு.

2977. **போற்றி மெய்யருட் டிறம்பெறு புரிவுடன் வணங்கி**
நீற்றின் மேனியி னிறைமயிர்ப் புளகங்க ணெருங்கக்
கூற்ற டர்த்தவர் கோயிலின் புறம்புபோந் தருளி
யாற்று மின்னருள் வணிகர்மேற் செலவருள் செய்வார், 1079

பரவி நாவின் வாய்மையாற் போற்றினர் - நாவின் வாய்மை-''மெய்த் திருவாக்கு'' (2986); ''என்னும் வாய்மை'' (2878) என்பன முதலியவை. சத்தியவாக்கு என்பர். ''நிறைமொழி மாந்தர்'' (குறள்) என்றவிடத்து ''நிறைமொழி'' என்பது அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப் பயன்களைப் பயந்தேவிடும் மொழி என்று பரிமேலழகர் உரைத்த கருத்தும் இங்குவைத்துக் காணத்தக்கது.

பரவிப் போற்றினர்-இப்பதிகம் கிடைத்திலது! இவ்வாறு உட்குறிப்புடன் இறைவரைப் போற்றுந் தன்மைபற்றித் திருமருகல் வரலாற்றில் வணிகப்பெண் திருவருளைச் சிந்தித்தேங்கிய நிலையில் முன் உரைக்கப்பட்டவை காண்க. 2374 - 2375 பார்க்க.

விரைவினல் விழுந்து போற்றினர் - விரைவு - தாழாது செய்யும் அருளின் பெருக்கினல் நிகழ்வது; **விழுந்து** - திருமேனி நிலத்தில் ஐந்தங்கமும் எட்டங்கமும் பொருந்த விழுந்து வணங்கி.

ஞானசம்பந்தர்-சிவஞானம்-சிவசத்தி - எல்லாம் வல்லது. அத்தகைய சிவஞானசம்பந்த ராதலின் அத்துணைகொண்டு உரியவாறு செயலாற்ற அருட்டிறம் பெறு பரிவுடன் (2976) போற்றினர் என்பது குறிக்க இப்பெயராற் கூறினர்; பின்னர் அருளும் திருப்பதிகத்துக் திருக்கடைக்காப்பில் ''ஞானசம் பந்த னலம் புகழ்ந்த'' என்ற குறிப்பும் காண்க. ''நீடிய ஞானம் பெற்றார் நிறுத்தவும் வல்லர்'' (2705)

நாவின் வாய்மையில்—என்பதும் பாடம். *1078*

2977. (இ-ள்) போற்றி... வணங்கி -முன் கூறிவாறு துதித்து மெய்யருளின் றிறத்தினைப் பெறுகின்ற இடைவிடாத நினைப்புடனே வணங்கி; நீற்று...நெருங்க - திருநீறு நிறைந்த திருமேனி முழுதும் நிறைவாக மயிர்ப்புளகம் செறிய; கூற்றடர்த்தவர்... போந்தருளி - இயமனை உதைத்துருட்டிய இறைவரது திருக்கோயிலின் புறத்திலே சென்றருளி; ஆற்றும்...அருள் செய்வார் - செய்கின்ற இனிய அருளானது வணிகரின்மேல் செல்வதாக அருளிச்செய்வாராய்;

(வி-ரை) மெய்யருட்டிறம் பெறு புரிவுடன்-மெய்யருள்-பொய்யாத அருள்; **அருட்டிறம் பெறுதல்** - சிவநேசர் செயல்வாய்ப்பச் செய்தருளும் பொருட்டாம். அது சிவனது மெய்யருட்டிறத்தின லன்றி இயலாது என்பது. **புரிவு** - இடைவிடாத நினைவு.

கூற்றடர்த்தவர் - பாவையாரை மீள உற்பவிப்பித்தலின் பொருட்டு மரணத்தைத் தவிர்த்தல்வேண்டிக் **கூற்றடர்த்த** குறிப்புப்பெறக் கூறினர்.

ஆற்றும் இன்னருள் வணிகர் மேற்செல-ஆற்றும்-இறைவர் தம்பாலினாற்றிய - தாம் இனி ஆற்றும்-என இருவழியும் உரைக்கநின்றது.

2978. **"ஒருமை யுய்த்தநல் லுணர்வினீ ருலகவ ரறிய**
அருமை யாற்பெறு மகளென்பு நிறைத்தவக் குடத்தைப்
பெரும யானத்து நடம்புரி வார்பெருங் கோயில்
திரும திற்புற வாய்தலிற் கொணர்"கென்று செப்ப, 1080

அருள் செய்வார்-அருள் செய்தல்-சொல்லுதல்; முற்றெச்சம், அருள் செய்வாராகி. **அருள் செய்வார்-செப்ப** என மேல்வரும் பாட்டுடன் கூட்டுக.

அருள் செய்வார் (2977) - செப்பப் (2978) - பணிந்து - மேவிப் - புக்கு - எடுத்து (2979) - அணைந்து - நீக்கி (2980) - வணங்கக் - காவலர் - சாதிப்பார் (2981) - மலிய-நெருங்கச் (2982) - சூழ்தர - அணைந்து - கண்டு-கருதி (2983)- என அருளேக்கால்-செப்பி (2984) - என உரைப்பார் (2985)-என்னும் பதிகத்தினில் - எனும் அமுதம் - அக்குடத்துள் தொக்கது - (2986) என்று இப்பத்துப் பாட்டுக்களேயும் தொடர்ந்து வினைமுடிபு கொள்க.

பரிவுடன்—என்பதும் பாடம். *1079*

2978. (இ-ள்)ஒருமையுய்த்த நல் உணர்வினீர்! - சிவனடிமைத் திறத்திலே ஒன்றித்து வைத்துச் செலுத்திய உணர்வினையுடைவரே!; உலகவரறிய - உலகத்தவர் எல்லாம் அறியும்படி; ''அருமையாற் பெறும்...கொணர்க'' என்று செப்ப - ''அரிய தவத்தின் பயனாகப் பெறும் மகளுடைய எலும்பு நிறைத்த அந்தக் குடத்தினைப் பெரிய மயானத்திலே ஆடல் புரிவாராகிய இறைவரது இப் பெருங்கோயிலின் திருமதிற் புறத்துத் திருவாயிலின் முன் கொண்டு வருக'' என்று சொல்லியருள,

(வி-ரை) ஒருமை உய்த்தலாவது - சிவனுக்காளா மதுவொன்றே நினைந்து ஒழுகுதல்; ''இரண்டுற மனம் வையேல்'', ''பொது நீக்கி'', ''ஒன்றி யிருந்து நினைமின்கள்'', ''ஒன்றே நினைந்திருந்தேன் ஒன்றே துணிந்தொழிந்தேன், ஒன்றேயென் னுள்ளத்தி னுள்ளடைத்தேன்...ஆளா மது'' என்பன முதலிய திருவாக்குக்கள் காண்க. ஈண்டுச் சிவநேசர் உணர்வினை ஒருமையில் உய்த்த நிலைமையாவது எது வரினும் தமது குறியினின்றும் பிறழாது ஒழுகிய நிலை; ''மலையே வந்து விழினு மனிதர்காள், நிலையி னின்றுநீர் கலங்கப் பெறுதிரேற், றலைவணங்கிய வீசன் றமர்களைக், கொலைகை யானைதான் கொன்றிட கிற்குமே'' (குறுந்) என்ற மெய்யருட் டிருவாக்கின்படி வல்விடம் இவர்பால் ஒன்றும் இடர்செய்யா தகலவுள்ள திறம் குறித்தார்.

உலகவர் அறிய-உலகத்தார் அன்பின் பெருமையை அறிந்து உண்மையுணர்ந் துய்யும் பொருட்டு; நீவிர் பற்றகன்றீ ராதலின் இப்பாவை இறந்தபோதும் இடர் ஒழிந்தீர், இனி அவள் வரும்போதும் இன்பப்படீர்; ஆதலின் இனிச் செய்யநின்ற செயல் உம்பொருட்டன்று; யாம், வரும் பாவையாரை ஏற்றுக்கொள்ளும் நிலையில்லையாதலின் அஃது எம்பொருட்டுமன்று. பின் என்னையோ? எனின், உலகவ ரறிந்துய்ய என்பது குறிப்பா லருளியவாறும்.

உலகவ ரறிய - என்பு நிறைந்த என்றும், **உலகவரறியக் கொணர்க** என்றும் கூட்டி உரைக்க நின்றது.

2979. அந்த மில்பெரு மகிழ்ச்சியா லவனிமேற் பணிந்து,
வந்து தந்திரு மனையினின் மேவியம் மருங்கு
கந்த வார்பொழிற் கன்னிமா டத்தினிற் புக்கு
வெந்த சாம்பலோ டென்புசேர் குடத்தையே றெடுத்து. 1081

பெரு மயானத்திடை நடம் புரிவார்-மயானம் - சங்காரத்தையும், **நடம்** - (புனருற்பவத்தையும்) மீள உளதாக்குதலையும் குறிக்கும். ''வருங்கடன் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே; (திருவிருத்.); இங்கு இறந்த பாவையாரை மீளவுற்ப விப்பிக்கும் அருளுடையார் என்பது குறிப்பு.

பெருங் கோயில்-அந்நாளில் இக்கோயில் மிகப்பெருங் கோயிலாகக் கடற்கரை யோரம் அமைந்திருந்தது என்பது வரலாறு.

திருமதிற்புற வாய்தலிற் கொணர்க - திருமதிலுக் குட்புறம் வெந்த எலும்பும் சாம்பருங் கொணர்தல் விதிவிலக்காகிய அநுசிதம் என்பது கருதி, மதிற்புற வாய்தலிற் கொணரச் செய்தனர். திருக்காளத்தியில் இறைவரது ''திருமுன்பு, வெந்தவிறைச்சியு மெலும்புங் கண்டகல மிதித்தோடி; யிந்தவநு சிதங்கெட்டே னியார்செய்தா ரென்றழிவா''ராய் (785)ச் சிவகோசரியார் ''பழுதுபுகுந் ததுதீரப் பவித்திரமாஞ் செயல்புரிந்த'' (788) நிலை இங்கு நினைவு கூர்தற்பாலது.
1080

2979. (இ-ள்) அந்தமில்... பணிந்து - எல்லையில்லாத பெரிய மகிழ்ச்சியினாலே நிலமேல் விழுந்து வணங்கி; வந்து... மேவி- கோயிலினின்றும் வந்து தமது திருமனையினுள் சேர்ந்து; அம்மருங்கு... புக்கு - அப்பக்கத்தில் மணம்பொருந்திய நீண்ட சோலையினகத்துக் கன்னிமாடத்தினிற் புகுந்து; வெந்த...எடுத்து - மகளுடல் வெந்த சாம்பலோடு எலும்பு பெய்துவைத்த குடத்தினைப் பஞ்சணை முதலியவற்றினின்றும் வேறாக எடுத்து;

(வி-ரை) பணிந்து - பிள்ளையாரைப் பணிந்து என்க. சிவநேசர் என்ற எழுவாய் தொக்குநின்றது.

வந்து-திருநகர்ப் புறத்தினின்று திருமனையின்கண் வாராது பிள்ளையாருடன் திருத்தொண்டர் கூட்டத்துடனே நேரே திருக்கோயிலுக்குச் சென்றுவிட்டமையின் இங்குத் திருமனைக்கு வந்து என்றார். இத்திருமனை அவ்வழியில் இருந்ததென்பது கருதவரும்.

அம்மருங்கு-பொழிற்கன்னிமாடம்-பூம்பாவையார் வாழ்ந்திருந்த கன்னி மாடம், மனையிலன்றித் தனியாய் அதனை அடுத்த பொழிலிடை யமைந்தது. ''கன்னி மாடத்தின், பாற்றடம்பொழில் மருங்கினில்'' (2953) என்றது பார்க்க. பாவையாரிருந்த அக் கன்னிமாடத்திற்றானே அவரது எலும்புஞ் சாம்பலு நிறைத்த குடத்தினை அமைத்து உபசரித்து வந்தனர் என்பது முன் (2965) ''கன்னிமா டத்தின் முன்புபோற் காப்புற வமைத்து'' என்றதனா லறியப்பட்டது.

வேறு எடுத்து-அதனைப் பெய்து அமைத்திருந்த பஞ்சணை மேற்கட்டி முதலியனவாய்ச் சூழ்ந்த அமைப்புகளினின்றும் வேறாக எடுத்து. *1081*

2980. **மூடு** பன்மணிச் சிவிகையுட் பெய்துமுன் போத,
மாடு சேடிய ரினம்புடை சூழ்ந்துவந் தணைய,
ஆடன் மேவினுர் திருக்கபா லீச்சர மணைந்து
நீடு **கோபுரத் தெதிர்மணிச் சிவிகையை நீக்கி,** 1082

2980. (இ-ள்) மூடு...போத - பல மணிகளிழைத்த மூடு சிவிகையினுள்ளே அக்குடத்தை இனிதாக அமைத்து வைத்து அதனை முன் போகவிட்டு; மாடு...அணைய -பக்கத்தில் சேடியர்களின் கூட்டம் புடைசூழ்ந்து வர; ஆடல்...அணைந்து-திருநடம் புரியும் இறைவரது திருக்கபாலீச்சரத்தினை அணைந்து; நீடு... நீக்கி – நீண்ட திருக்கோபுரத்தின் புறத்தெதிரிலே மணிச்சிவிகையின் திரையினை நீக்கி,

(வி - ரை) மூடு–சிவிகை என்று கூட்டுக; அந்நாளில் அரச மரபினருள்ளும், வணிகர் முதலிய உயர்குலத்தாருள்ளும் பெண்கள் மூடுபல்லக்கில் வெளிவருதல் வழக்கென்பது ''மாமணிச் சிவிகை தன்னின் மடநடை மயிலன் னுரைத், தாமரைத் தவிசின் வைகுந் தனித்திரு வென்ன வேற்றிக், காமரு கழனி வீழ்த்துக் காதல்செய் சுற்றத் தாருந், தேமொழி யவருங் கூட'' *(1758)* எனவரும் அம்மையார் வரலாற்றினுலறிக; ஆண்டுரைத்தவை பார்க்க; அவரும் வணிகர் குலத்தவராதலும் கருதுக.

இங்குச் சிவநேசர் பாவையாரது எலும்புஞ் சாம்பரு நிறைந்த அக்குடத்தினை அவராகவே கொண்டு உபசரித்து வந்தமையால் அவர் உயிருடனிருப்பிற்கொண்டு செல்லுமாறு போலவே மூடுசிவிகையுட் கொண்டு சேடியர்சூழக் கொண்டணைந்தனர்.

சேடியர் இனம் மாடு புடை சூழ்ந்து-என்க. **மாடு**-பக்கம். **புடை**-சுற்றிலும்; சேடியர் சூழ்தல் குடமாக நின்ற பாவையாரின் உபசரிப்பின் பொருட்டு என்க. உயிர்பெற் றெழுந்தபின் உடன்கொண்டணைதற் பொருட்டாகிய குறிப்புமாம்.

ஆடல் மேவினுர்-முன் **நடம் புரிவார்** *(2978)* என்ற கருத்தைத் தொடர்ந்து கூறியபடி; முன் கூறியது பிள்ளையார் கொண்டுகாட்டிய குறிப்பு. இங்குக் கூறியது அதனை அவ்வாறே உள்ளத்திற் கொண்டு உய்த்த சிவநேசரது உட்குறிப்பு. முன்னர் நடம் **புரிவார்** என்றதும், இங்கு ஆடல் **மேவினுர்** என்றதுமாகிய வினைமுடிபுகளும் காண்க. ஆடலினருள் விரைவிற் கூடும் குறிப்புமாம்; **ஆடல்**-திருவிளையாடலுமாம்.

நீடு கோபுரம்-''பெருங்கோயில்'' *(2978)* என்றதற்கேற்ப உயர்ந்த கோபுரம்.

எதிர்-புறவாய்தலில் முன்பு; **நீக்கி**-சிவிகையினின்றும் எடுத்து. *1082*

2981. (இ-ள்) அங்கணுளர்தம்... வணங்க - அங்கணுளரது சந்நிதியின் எதிரிலே அவரது திருவடியிற் பதிந்த அன்பின் உறைப்பினுலே பெண்ணினது எலும்பு கொண்ட அக்குடத்தினை எடுத்துவைத்துத் திருமுன்பு சிவநேசர் வணங்க; பொங்கு...சாதிப்பார் - பொங்கிவரும் பெரு நீர்ச்சிறப்புடைய சீகாழித் தலைவராகிய பிள்ளையார் இவ்வுலகத்தில் தங்கி வாழும் மக்களுக்கு உறுதிப் பொருளாம் நிலைமை யிஃதே என்று நேரே காட்டியருளுவாராய்,

2981. **அங்க ணுளர்த மபிமுகத் தினிலடி யுறைப்பான்**
மங்கை யென்புசேர் குடத்தினை வைத்துமுன் வணங்கப்,
பொங்கு நீள்புனற் புகலிகா வலர்புவ னத்துத்
தங்கி வாழ்பவர்க் குறுதியா நிலைமைசா திப்பார், 1083

(வி-ரை) அபிமுகம்-திருமுன்புக்கு நேராக.

அடியுறைப்பால்-திருவடிச் சார்பிலே கொண்ட உறைப்பினாலே. உறைப்பாவது அழுந்திய-ஒருவாற்றாலும் அசைவில்லாத - அன்பு. ''திருத்தொண்டி னுறைப்பாலே வென்றவர்தந் திருப்பெயரோ வேறொருபேர்'' *(1795)*; **அடி**-திருவடி; இங்கு இவ்வாறன்றிப் பாதகாணிக்கைபோல என்றும், அடிப்பாகம் நன்றாகப் பொருந்த என்றும் உரைப்பாருமுண்டு.

பொங்கு நீள்புனற் புகலி-காவிரி நாட்டின் கண்ணுள்ள சீகாழிப்பதி; புகலி- சீகாழிப் பதியின் பெயர்கள் பன்னிரண்டனுள் மூன்றாவது திருப்பெயர்; சிவநேசரது ஒருமையுய்த்த நல்லுணர்விற்கொண்ட செயல்வாய்ப்பப் புகல் தந்து அருளிய குறிப்புப்பெற இங்குப் **புகலி காவலர்** என்றார்.

புவனத்துத் தங்கி வாழ்பவர்க்கு - உலகவர்க்கு; தங்கி - என்றமையால் வினைத் தீர்வின் பொருட்டும், சிவதருமங்கள் செய்து வீடுபெறுதற் பொருட்டும், இப்புவனியில் வந்து தங்கி வாழும் விண்ணவர் நாகர் முதலியோர்களையும் அடக்கிக் கூறிய படி; ''நீடு தேவர்க ளேனையோர்'' *(2982)* என்பதும் இக்குறிப்பு. ''புவனியிற் போய்ப்பிற வாமையினாளும் போக்குகின் றேமவ மேயிந்தப் பூமி, சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்...திருமாலா, மவன்விருப் பெய்தவு மலரவ னாசைப் படவும்'' என்ற திருவாசகம் (திருப்பள்ளி-10) காண்க. ''பூவார் திசை முக னிந்திரன் பூமிசை, மாவா ழகலத்து மான்முதன் வானவர், ஓவா தெவரு நிறைந்துறைந் துள்ளது'' *(137)* என்று தேவாசிரியனின் முன்னே வானவர் தங்கி வாழும் தன்மை கூறப்பட்டதும் காண்க. **புவனத்து** என்றமையால் இறைவரால் உயிர்கள் உய்யத்தந்த உடல் முதலியவற்றின் பயன்பெறஉள்ள என்பது குறிப்பு.

உறுதியாம் நிலைமையாவது பிறவிப் பயன் பெறச்செய்யும் உறுதிப் பொருளின் தன்மை. ''பிறந்தார் பெறும் பயன்'' *(2985)*.

சாதிப்பார்-சாதித்தலாவது எவரும் மாறுகூற இயலாதவாறு உறுதியாகச் சூளுறவுகொண்டு எடுத்துக்கூறி முடித்தல்; சாதிப்பாராகி-முற்றெச்சம். சாதிப்பார்-கண்டு-கருதிச் *(2983)*-செப்பி *(2984)*-வருகென உரைப்பார் *(2985)*-என்னும் பதிகத்தினில்-என்னும் *(2986)* என்று கூட்டிமுடித்துச் சாதித்தநிலை கண்டு கொள்க. சாதித்தல் ஈண்டுச் சொல்லால் மட்டுமன்றிச் செயலாலும் முடித்துக் காட்டுதல் குறித்து நின்றது. *1083*

2982. (இ-ள்) மாடம்...நகருளார்-மாடங்கள் ஓங்கி விளங்கிய மயிலைமாநகரத்தில் வாழ்வார்களும்; மற்றும் நாடு வாழ்பவர் - மற்றும் அந்நாட்டிலுள்ள மக்களும்; நன்றியில் சமயத்தின் உள்ளோர் - நன்றியில்லாத பரசமயத்தில் உள்ளவர்களும்; மாடு...மலிய -

2982. மாட மோங்கிய **மயிலைமா நகருளார்,** மற்றும்
நாடு வாழ்பவர், நன்றியில் சமயத்தி னுள்ளோர்
மாடு சூழ்ந்து**காண் பதற்குவந் தெய்தியே மலிய,**
நீடு தேவர்க ளேனையோர் விசும்பிடை நெருங்க, 1084

எப்பக்கங்களினின்றும் சூழ்ந்து இதன் விளைவைக் காண்பதற்கு வந்து கூடியே பெருகவும்; நீடு...நெருங்க - நீடிய தேவர்களும் ஏனையோர்களும் ஆகாயத்தில் நெருங்கவும்;

(வி-ரை) நகருளார்-நாடு வாழ்பவர்-நகரத்திலும், மற்றும் நாட்டின் பல பகுதிகளிலும் வாழ்பவர்; இவர்கள் தொண்டர்களின் வேறாய் உலக நிலையினர்கள். இவர்கள் **சிவனடிமைத்திறத்திற் பற்றுக்கொண்டவர்களாய் அருள்வெளிப் பாட்டினைக் கண்டுவழிபட வந்தவர்கள். இவர்களின் வேறாகத் தொண்டர்கள் பின்னர்க் கூறப்படுவோர்.**

நன்றியில் சமயத்தினுள்ளோர்-அகப்புறம், புறம், புறப்புறம் என்று மூவகைச் சமயத்தவர்கள். இவர்கள் ஒருசார்புமின்றிக் காட்சி காணுமளவில் வந்தோரும், ஐயப்பட்டு வந்தோரும், இஃதியலாது என்று துணிவுகொண்டு இயலாதாகமுடிந்த பின் அலர்தூற்றி இழித்துரைக்க நினைந்து வந்தோரும் என்று பலதிறத்தோரு மாவர்; சிவன் உயிர்தோறும் நின்று இடைவிடாது செய்துவரும் உபகாரத்தையும் அவரது முழுமுதற் றன்மையினையும், உயிர்கள் அவனுக்கு மீளா ஆளாந் தன்மையினையும் மறந்து பலபடியாக உண்மையின் மாறுகொண்டு பிதற்றித் திரிதலால் அவ்வவர் வேறு வேறு தம்முள் மாறுபடினும் சிவனை மறத்தலில் ஒன்றுபட்டா ராதலின் அவ்வொற்றுமை கருதி இவரனைவரையும் ஒன்று கூட்டிச் சேர்த்து **''நன்றியில் சமயத்திலுள்ளோர்''** என்றருளிய நயம் காண்க. **நன்றி** - நன்மை என்று கொண்டு **நன்றியில்** - நன்மை நெறியினில்லாத என்றுரைப்பினுமமையும். சமண புத்தராதியோர் முன்னின்றமை மேற்காண்க. பதிகம் 10-வது பாட்டும், 2992 பாட்டையும் பார்க்க.

காண்பதற்கு-பற்றுடையோர் அருள்வெளிப்பாட்டையும், அஃதில்லவர் நிகழ்ச்சியினையும் காண்பதற்கு.

நீடு தேவர்கள்-திருமால் முதலிய பெருந்தேவர்கள்; ஆயுள், அறிவு, தவம் முதலியவற்றால் நீடிய தேவர்கள் என்றலுமாம். **ஏனையோர்**-மண்ணவரும் தேவரு மல்லாத பிறர்; நாகர், அசுரர் முதலியோர். அற்புதம் காணத் தேவர் வருவர்.

விசும்பிடை நெருங்க - விசும்பு இடமகன்றதாயினும், தேவர்கள் நம்முடல் போலப் பூதபரிணாம தூலவுடலின்றி நுண்ணிய ஒளியுடல் பெற்றவராயினும் அவரும் அங்கு இடையின்றி நெருங்கும்படி அநேகராய்க் குழும என்றதாம். விசும்பில் இடையின்றி நெருங்க என்க. **இடை** - ஏழனுருபு என்றலுமாம். *1084*

2983. (இ-ள்) தொண்டர்...சூழ்தர-திருத்தொண்டர் கூட்டம் தம் பக்கத்திற் சூழ்ந்து வரவும்; தொல்லை...அணைந்து - பழைமையாகிய தேவதேவரது கோபுரவாயிலின் நேரில் வந்தணைந்து; வண்டு...கண்டு-வண்டுகள் வாழும் நீண்ட கூந்தலையுடையாளாகிய பாவையாரின்

2983. **தொண்டர் தம்பெருங் குழாம்புடை சூழ்தரத் தொல்லை
அண்டர் நாயகர் கோபுர வாயினே ரணைந்து
வண்டு வார்குழ லாளென்பு நிறைந்தமட் குடத்தைக்
கண்டு தம்பிரான் கருணையின் பெருமையே கருதி,** 1085

எலும்பு நிறைந்த அந்த மட் குடத்தினை அருட்பார்வை செய்து; தம் பிரான்...கருதி - தம் பெருமானாகிய இறைவரது கருணையின் பெருமையினையே திருவுள்ளத்துட் பாவனை செய்து கருதி;

(வி-ரை) தொண்டர்தம் பெருங்குழாம் - பிள்ளையாருடன் வந்தோரும், திருவொற்றியூரினின்றும் உடன் வந்த தொண்டை நாட்டினரும், சிவ நேசருடன் நின்ற திருமயிலைப் பெருந்தொண்டரும் (2970) கூடிப் பெருகியமையால் **பெருங் குழாம்** என்றார்; இப் பெருங்குழாம் வழிவழியாக இந்நாளிலும் பூம்பாவையார் திருவிழாத் தினத்தன்று திருமயிலையிற் கூடும் காட்சி அருமையாய்க் கண்டு உய்யத்தக்கது. "**மயிலாப்பூர் அறுபத்துமூவர்**" என்று தேற்றமாய்த் தொண்டை நன்னாட்டில் வழங்கும் வழக்கும் காண்க.

தொல்லை அண்டர் நாயகர் - தொல்லை-மிக்க பழமை; **அண்டர் நாயகர்** - முன் "**தேவதேவனை**" (2976) என்ற கருத்து.

அணைந்து - புகலி காவலர் எழுவாய்; முன் (2981) பாட்டிலிருந்து வருவிக்க.

வண்டுவார் குழலாள்...கண்டு - கண்டு - மனத்துட் சிருட்டித்துக் கண்டு; காண்பதாகிய தீக்கை செய்து, குடம் வனையப்புகுமுன் குயவன் மண்ணினுள்ளே குடத்தைக் காண்பதுபோல் இங்குப் பிள்ளையார் வெளியிற்கண்ட குடத்தினுள்ளே எலும்புஞ் சாம்பலும், அவற்றினுள்ளே பாவையாரது முழு வளர்ச்சியுடைய உடம்பும், அதனுள் வண்டுவார் குழலாளாகிய பாவையாரையும் கண்டனர் என்பதாம். இவ்வெலும்பு இஃதாகுக என்பது நிர்மாணமாகிய சிருட்டி. நியூடன் என்ற மேனாட்டுக் கலைஞன் காட்டிற் கண்டதொரு காற்பெருவிரலெலும்பினில் அதன் உடம்புமுழுதும் கண்டான் என்பது கலைஞானப் புலமையின் நுட்பமாகக் கேட்கப் படுமாயின், எண்ணரிய மேலாகிய சிவஞான நிறைவினிலே இந்த எலும்புக் குவியலின் வைத்து உடல்முழுதும் - அவ்வுடலின் உயிரும்கூடிக் காண்ப தரிதாகுமோ? எளியதேயாமென்க.

வண்டுவார் குழலாள் என்றதனால் அவர் கண்டது உடல் உயிருடன் பூம்பாவையாராகவே அணிந்துநிற்கக் கண்டதென்க.

தம்பிரான் கருணையின் பெருமையே கருதி - முன் கூறியவாறு கண்டது நான் கண்டேன் என்று தம்மைக் காணாது தம் பெருமானாகிய சிவனது கருணையின் பெருமையினையே கண்டு அதனுள் தாம் ஒடுங்கி நின்று; சிவஞான நிறைவினையே கண்டுகொண்டு. 1085

2984. (இ-ள்) "இந்த...தொடர்ச்சியாம்" என-இந்தப் பெரிய உலகத்தில் இறந்துள்ளவர்களுடைய எலும்பை மேலும் பெரிது நன்னெறியில் பொருந்தியிட நன்மை ஆகின்ற

2984. ''இந்த மாநிலத் **திறந்துளோ ரென்பினைப்** பின்னும்
நந்து நன்னெறிப் படுத்திட நன்மையாந் தன்மை
அந்த வென்பொடு தொடர்ச்சியா'' மெனவரு **ளேக்காற்**
சிந்து மங்கமங் குடையபூம் பாவைபேர் செப்பி, 1086

தன்மையானது அந்த எலும்பினொடு கூடிய தொடர்ச்சியினு லாவதாம் என்று உட்கொண்ட; அருள் நோக்கால்-அருள் நோக்கத்தினாலே; சிந்தும்...செப்பி-சிந்திய அங்கங்களாகிய அவ்வெலும்பினை முன்னுடைய உடம்பில் வாழ்ந்த பூம்பாவை என்ற பெயரினால் விளித்துக் கூறியருளி,

(வி-ரை) பிள்ளையார் குடத்தினைக் கண்டருளினர்; அதனை நோக்கிப் **பூம்பாவாய்!''** என்ற பெயர் செப்பி அழைத்தருளிப் ''போதியோ?'' என்று ஆணையிட்டருளுகின்றார். அதன் காரணத்தை விளக்குகின்றது இத்திருப்பாட்டு. அவ்வாறு அழைத்தருளி ஆணையிட்டருளிய பதிகக் கருத்தாகிய திருவுள்ளக்கிடையினை மேல்வரும் பாட்டாலும், அதன் செயனிகழ்ச்சியால் சிவநேசர்தஞ் செயல் வாய்ப்பச் செய்தருளிய நிலையை அதன்மேல் மூன்று பாட்டுக்களாலும் கூறுகின்றார்.

அங்கம் அங்குடைய பூம்பாவை பேர் செப்பி - குடத்தினுள் எலும்பினையும் அதனால் அதனையுடைய முழு உடலினையும் அதனால் அவ்வுடல் பெற்றிருந்த பூம்பாவையாரையும் தொடர்புபடுத்திக் கண்டு பூம்பாவாய் என்ற பெயர் செப்பி விளித்தனர்.

''இந்த மாநிலத்திறந்துளோர்...தொடர்ச்சியாம்'' என - பிள்ளையார் பாவையாரின் எலும்பினை நோக்கிப் பூம்பாவை பேர் செப்பியதன் கருத்தினையும் அவரது திருவுள்ளக்கிடையினையும் குறித்தது; இறந்துளோரது எலும்பினை நன்னெறிப் படுத்திட அந்த எலும்பொடு தொடர்ச்சியாம் நன்மை ஆம் என்பது. எலும்பினை வைத்துச் செய்யும் நன்னெறி அவ்வெலும்பின் றொடர்ச்சியினாலே உடலுக்குஆகி, அவ்வுடலுள் நின்ற உயிருக்கு ஆதல் இந்த நிலத்திற் காண்போமாதலின், எலும்பினை நோக்கிப் பாவையே என்று விளித்தருளினர் என்பதாம்.

இறந்துளோர்-இறந்த பின்னும் உள்ளவர்; சூக்கும உடலுள் (நுண்ணுடல்) உள்ளவர். **நந்தும்** - தழைக்கும். **நன்னெறிப்படுத்தல்** - இறந்தாரது எலும்பினை வைத்துச் சுட்டிச் செய்யும் சடங்குகளின் பொருளும் காண்க. எலும்புகளைத் தூய நீரினுள் இடுதல் முதலிய செயல்களும் ஆம். இவற்றால் ஆகும் நன்மை அவ்வெலும்பின் தொடர்ச்சியினாலே அவ்விறந்தோருக்காவது போல ஈண்டுப் பிள்ளையார் எலும்பினை விளித்து அருள்நோக்கஞ் செய்யும் செயல் பாவையாருக்காயினவாறும் காண்க. அன்றியும் ''தூலமா முருவினுக்குச் சூக்கும முதல்'' என்பவாகலின், தூலவுடலினின்றும் உயிர் நீங்குங்கால் அவ்வுடற்குக் காரணமாய் முத்தி பெறுங் காறுமுளதாய சூக்கும வுடலோடுங் கூடியே துறக்க நிரயங்களில் செல்லும். அச் சூக்குமவுடற்கும் அதன் காரியமாய் தூலவுடற்கும் காரியத் தொடர்ச்சியுளது; அத்தொடர்ச்சியானே தூலவுடலின் அவயவமாகிய என்பிற் செய்யும் நற்செயல் சூக்குமவுடலினிற்கும் உயிர்க்குச் சென்று பயனளித்தல் சாலும்.

சிந்தும் அங்கம் - உடலிழந்த எலும்பும் சாம்பலும்.

2985. "மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லாரடி யார்தமை யமுதுசெய் வித்தல்
கண்ணி னாலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனி லுலகர்முன் வரு" கென வுரைப்பார், 1087

அங்கு உடைய - *முன்னர் உடலின் பகுதிகளாகக் கொண்டிருந்த.*

அருள் நோக்கால் - *பூம்பாவையாரை விளித்து அருளும் நிலை அவள்பாலும் சிவநேசர்பாலும் உலகர்பாலும் வைத்த அருள்நோக்கத்தாலாகியது என்பதாம். 1086*

2985. (இ-ள்) *மண்ணினில்...பயன்* - இந்த மண்ணுலகத்திலே வினைக்கீடாக வந்து பிறந்த உயிர்கள்பெறும் பிறவிப்பயனாகிய உறுதிப்பொருளாவன; *மதிசூடும்... அமுது செய்வித்தல்* - பிறைசூடும் பெருமானடியார்தமைத் திருவமுது செய்வித்தலும்; *கண்ணினால்... ஆர்தல்* - கண்களினாலே அவ்விறைவரின் திருவிழாக்களின் பெரும் பொலிவினைக் கண்டு மகிழ்தலும்; *உண்மை யாமெனில்* - ஆகிய இவை யிரண்டுமே உறுதிப் பொருளாவன என்பது உண்மையானால்; *உலகர்முன் வருக* - ஏ! பூம்பாவையே, நீ உலகத்தவர் முன்னே உடலும் உயிரும் பொருந்த வரக் கடவாயாக!; *என உரைப்பார்* - என்று சூளுறவு செய்து எடுத்து உரைப்பாராகி,

(வி - ரை) இப்பதிகக் கருத்தினை வடித்தெடுத்துக் கூறுவது இத்திருப்பாட்டு. மேலும் இப்புராண முழுமைக்கும் உள்ளுறையாகிய உண்மையை வடித்துக்கூறும் பெருமையும் உடையது; அதுமட்டுமன்றி, உலகுயிர்கள் அனைத்தும் பிறவிப் பயன் தெரிந்துய்யும் உறுதியாகிய வழிகாட்டும் பெருமையும் உடையது; மேலும் "வேத வுள்ளுறை யாவன" *(1832)* என்று எல்லா வேதங்களின் சாரமாகிய உண்மையினைத் திருநீலநக்க நாயனார் புராணத்துள்ளே வடித்தெடுத்துக் காட்டியருளியவாறு, இறைவர் திருவாக்குக்களாம் வேத சிவாகமங்களாகிய இரண்டனுள் எஞ்சிநின்ற சிவாகமங்களின் சாரமாகிய உள்ளுறையை அவ்வாறே வடித்தெடுத்துக் காட்டும் பெருமையுமுடையது. இனி, "எனதுரை தனதுரையாக" (தேவா) என்றதனால் இது பிள்ளையாரது திருவாக்கின் நின்று இறைவர் வெளிப்படுத்திய திருவாக்கேயாம் என்ற மேன்மையும் உடையது. இதிற் கூறும் உண்மைகளிரண்டனையும் மக்கள் சிந்தித்துத் தத்தம் வாழ்க்கையின் உறுதியாகக் கடைபிடித்து ஒழுகுதல் உய்தி தருவதாம்.

மண்ணினிற் பிறந்தார் - வினைக்கீடாகிய பிறவிகொண்டு நிலவுலகில் பிறக்கும் உயிர்கள்; ஏனை மேல் - கீழ் உலகங்கள், நல்வினை தீவினைப் பயன்களைத் துய்த்து மீள இங்கு வந்து பிறத்தற்கே ஏதுவாவனவன்றி இம்மண்ணுலகுபோலக் கன்மக் கழிவுக் கேதுவாயும் சிவபுண்ணியங்களைச் செய்தலால் முடிவில் பிறவி ஒழித்து வீடுபெறுதற்கேதுவாயும் உள்ளனவல்ல; ஆதலின் **மண்ணினிற் பிறந்தார்** என்றார். **பிறந்தார்** - என்றதனால் வினைக்கீடாக வரும் உடல்கொண்டு அவ்வினையை அனுபவித்துக் கழித்து வீடுபெறும் நிலையினால் வந்தோர் என்பது குறிக்கப்பட்டது. "மண்ணிலே வந்த பிறவியே" *(253)*; "மானிடப் பிறவிதானும் வகுத்தது" *(சித்தியார்)* முதலிய திருவாக்குக்களின் கருத்துக்கள் இங்கு நினைவுகூர்தற்பாலன.

பிறந்தார் பெறும் பயன் - பிறவியில் வந்தோர் அப்பிறவியிற் செய்வனவற்றால்

''மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே'' (திருவா) செல்லும் வழி தேடிக் கொள்ளுதல் பிறந்தார் பெறும் பயனுவது. அது வீடுபெறும் சாதனமாகிய செயல். **பயன்** - பயனைப் பெறுவதற்குரிய செயல் - கடைப்பிடிக்கும் உறுதி - என்ற பொருளில் வந்தது.

அண்ணலார் அடியார் அமுது செய்வித்தல் - இதனை மாகேச்சுவர பூசை என்பர். பத்தரது திருவேடத்தைப் பரமேசுரனெனவே கண்டு வழிபடுக என்பது ஞானநூல் முடிபாகிய விதியாம். அவ்வாறு காண்டலாவது ஐயுறவின்றித் தெளிதல்; இவ்வழிபாடுகளுட் சிறந்த அங்கமாவது திருவமுதூட்ட லாதலின் அதனை எடுத்துக் கூறினுர். கூறினுரேனும் இனம்பற்றி ஏனை உடை கொடுத்தல், பொன் மணி முதலாக வேண்டுவன கொடுத்தல் முதலிய வகைகள் எல்லாம் கொள்க; இளையான்குடி மாறநாயனுர், சிறுத்தொண்ட நாயனுர் முதலாகப் பத்தொன்பது பேர் இப்புராணத்துள் அடியார் வழிபாட்டினுல் பிறவிப்பயன் பெற்று முத்தியடைந்தவர்களாய் வகுக்கப்பட்ட சரிதங்களின் நுட்பங்களெல்லாம் இங்கு வைத்துக் காண்க.

அண்ணலா ரடியார்தமை –அமுது செய்வித்தல் - அடியவர்களுக்குக் குண்ணின்று அமுது செய்து பயன் தருபவர் அண்ணலாராகிய சிவனேயாம் என்பது உண்மை. திருமூல நாயனுர் ''நடமாடுங் கோயில்'' என்று அடியார்களைக் கூறுதலும்;''நடமாடுங் கோயி னம்பர்க்கொன் றீயில்'' என்று அடியார்க்கு ஈதல் அவருள் விளங்கும் நம்பராகிய சிவனுக்கீந்தமையேயாம் என்று கூறுதலும், ''படமாடுங் கோயிற் பரமர்க்க தாமே'' என்று அடியார்க்கீந்தது பரமர்க்கு ஆகும் என்று கூறுதலும் காண்க.

அமுது செய்வித்தல் - அமுது அளித்தல். **அண்ணலார்தமை - அடியார் தமை** - என்று பிரித்துக் கூட்டி இரண்டு பயனும் அடியார்க்கமுதளித்தலால் வரும் என்று உரைக்கநின்ற குறிப்பும் காண்க. **செய்வித்தல்** - என்றதனுல் தம்மாலியலாத போது பிறரைக்கொண்டேனும் செய்வித்தலும் அடக்கிக்கொள்க.

அமுது செய்வித்தல் - பிறவிப்பயனுகிய உறுதிகளிரண்டனுள் சிறந்ததும் முந்தியதுமாம் என்பது குறிக்கப் பதிகத்துட்போலவே முதற்கண்வைத்துக் காட்டியருளினுர். இவ்வுண்மை பதிகத்தின் முதற் றிருப்பாட்டினுற் போந்தமை காண்க.

கண்ணினுலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல் - இது பிறவிப் பயனுகிய உறுதிப்பொருள்க ளிரண்டனுள் எஞ்சிய மற்றென்றும். இது பதிகத்துள் இரண்டாவது முதல் பத்தாவது வரை உள்ள ஒன்பது திருப்பாட்டுக்களினுற் பெறப்படும் உண்மையாதல் கண்டுகொள்க; உறுதிபயக்கும் உண்மைகள் இரண்டனுள் ஒன்பது பாட்டுக்களுட் கூறப்பட்டது ஒரு பாட்டிற் கூறப்பட்டதற்கு ஒத்ததாகலின் அவ்வாற்றுலும் பின்னையதன் சிறப்புக் காட்டப்பட்டது. ஆசிரியரும் பதிகத்துக் கூறிய குறிப்புப் பெற இதனை ''அடியார்தமை அமுது செய்வித்தல்'' என்று மூன்று சீர்கொண்ட அடிப் பகுதியினும், முன்னையதனைக் ''கண்ணினுலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்'' என ஐந்துசீர்கொண்ட ஒரடியினும் கூறியருளிய திறமும் கவிநயமும் காண்க.

கண்ணினுல் - கண்டு - கண்டு என்றலேயமையும்; கண்ணினுல் என்பது மிகையோ எனின், மிகையன்று; உடம்பு பெற்ற பயன் முழுவதையும் கண்ணிந்திரியம் ஒன்றே தருதல்பற்றி ஏனையவற்றினும் சிறப்புத் தோன்றக் **கண்ணினுல்** என்றுர். தம்பால் வந்த புலன்களையறியும் ஏனை

2986. **மன்னு வார்சடை யாரைமுன் றெழுது "மட் டிட்ட"**
என்னு நற்பதி கத்தினிற் "போதியோ" வென்னும்
அன்ன மெய்த்திரு வாக்கெனு மமுதமவ் வங்கந்
துன்ன வந்துவந் துருவமாய்த் தொக்கதக் குடத்துள். 1088

யிந்திரியங்கள் போலன்றிக், கண்ணிந்திரியம் வாயிற் காட்சியிற் பொருளிற் சென்றியைந் தறியுமாதலின் அவற்றை வேறுபிரித்துக் கண்ணின் காட்சிக்குரிய தனிச் சிறப்பு உணர்த்தக் கூறியதுமாம். **அவர்** - அண்ணலார்; இறைவர். முன் கூறிய அண்ணலார் என முன்னறிசுட்டு. அவர் என்றதற்கு அடியார் என்று கூறுவாருமுண்டு. ஈண்டுப் பதிகத்துக் கூறப்படுவனவெல்லாம் இறைவரின் விழாக்களேயாதலின் அது பொருந்தாதென்க. **ஆர்தல்** - காட்சியின் நிறைவு பெற்று மகிழ்தல்; "கண்ணாரக் கண்டுமென் கையாரக் கூப்பியும், எண்ணா வெண்ணத்தா லெண்ணியும்" (அற். அந் - 85); "கண்ணாரக் காண்பார்க்கோர் காட்சியான்" (தேவா). **நல்விழா** - விழா எனப்படும் ஏனையவெல்லாம் ஆரவாரா நீர்மையவா யொழிவனவும் பல்லாற்றானும் தீமைபயப்பனவுமாம்; சிவபெருமானது விழா ஒன்றே எஞ்ஞான்றும் பெருநலமாகிய வீடு பேற்றுக்கு உதவுவது என்பார் **நல்**விழா என்றார்.

விழாப் பொலிவுகண் டார்தல் - இதுபற்றிப் பிள்ளையார் கேட்ப ஆளுடைய அரசுகள் அருளிச்செய்த திருவாரூர்த் திருவாதிரை விழாப்பற்றிய "முத்து விதானம்" என்னும் திருப்பதிகமும், அதன் வரலாறும் இங்கு நினைவு கூர்தற்பாலன.

உலகர் முன் - எம்முன் என்னாது உலகர்முன் என்றது இச்செயலின் பயன் உலகவரை யறிவுறுத்தி யுய்வித்தலாதலின் என்க. "உலகவரறிய" (2979).

"வருக" என உரைப்பார் - பதிகத்தினுள் "போதியோ?" என்றருளிய வினவுக்கு "வருக" என ஆணையிடுதலே பொருளாம் என்று ஆசிரியர் விளக்கிக் காட்டிய வாறும்; 'பாவாய்!நீ, இவையிவை யெல்லாம் காணாது போதியோ? என்றதனால் மற்றிவற்றைக் காண்பதற்கு வருக என்பதே பொருள் என்றவாறு; எனவே உலகில் வருதற்குப் பயன் இவையிவையேயாம் என்ற முடிபும் உடன் போந்தவாறு காண்க. **உரைப்பார்** - உரைப்பாராகி; முற்றெச்சம், உரைப்பார் - என்னும் மெய்த்திருவாக்கு என வரும்பாட்டுடன் கூட்டி முடிக்க.
1087

2986. (இ-ள்) மன்னு...பதிகத்தினில் - நிலைபெற்ற நீண்ட சடையினை யுடைய சிவபெருமானை முன்னே தொழுது "மட்டிட்ட" என்று தொடங்கும் அத்திருப்பதிகத்தினிலே; போதியோ...அமுதம் - போதியோ என்று கூறும் அந்த மெய்த்திருவாக்கு என்னும் அமுதமானது; அக்குடத்துள்-அந்தக் குடத்தினுள்ளே; அவ்வங்கம் துன்ன...தொக்கது - அந்த எலும்பினுடம்பினுள்ளே பொருந்த வந்து வந்து உருவமாய்க் கூடியது.

இப்பத்துப் பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபுகொண் டுரைக்கநின்றன.

(வி-ரை) "வருக!" என உரைப்பாராகிய பிள்ளையாரது கருத்தினை ஆணையின் வைத்துச் செயற்படுத்தியது அப்பதிகத்தினுள் போதியோ? என்ற மூவெழுத்தோர் சொல்லாகிய

சிவஞான விளைவாம் சிவ சிற்சத்தியேயாம் என்று காட்டி, அதன் செயலை விளக்கியது இத்திருப்பாட்டு. ''சடையாரை முன்றொழுது'' என்றதும் இக்குறிப்புத் தருவதாம்.

மன்னுவார் சடையாரை முன் தொழுது - மன்னு - கங்கையும் பிறையும் நிலை பொருந்திய. **முன் தொழுது** - பதிகம் தொடங்கும் முன் சடையாரைத் தொழுது அவரருளின் வழிப்பட்டு அவ் வருணிறைவினுள் தாம் அடங்கிநின்று பாடியருளினர் என்க. ''கருணையின் பெருமையே கருதி'' *(2983)*.

''மட்டிட்ட'' என்னும் - மட்டிட்ட என்று தொடங்கும்.

போதியோ...அமுதம் - அமுதம் - ம்ருத் - மரணம். **அமிர்தம்** - மரணத்தைப் போக்குவது என்பது சொற்பொருள். ஈண்டுப் பாவையார் மரணமாயின நிலைமையினைப் போக்கி உயிரினைப் புகுத்தி உடலை உருவாக்கியது ''போதியோ'' என்ற அம்மந்திரம் என்பது. **மெய்த் திருவாக்கு எனும் - மெய்** - என்றும் அழிவில்லாத நித்தப் பொருள் - **சிவம்; வாக்கு** - சிவ சிற்சத்தி; இருதலை மாணிக்கம் என்னும் நிலையில் இருதலையும் ஓங்காரத்தைப் பெற்றுப் பிரணவ சொரூபமாய் நின்ற மூன்றெழுத்து மகா மந்திரமாய் நின்றது பதிகத்துட் **''போதியோ''** என்ற சொல் என்க. என்னை? அஃதே வருக என்ற ஆணையாகிய சிவ சிற்சத்தியை உள்ளிட்டு அருளப்பட்டமையால் என்க. **அன்ன** - அத்தகைய என்ற குறிப்பும் காண்க. **மெய்த் திருவாக்கு** - பிள்ளையாரது திருவுருவம் முழுதும் சிவஞான மயமேயாய்ச் சிவநிறைவுள்ளதாதலின் அவரது வாக்கு இறைவர் திருவாக்கேயாயிற்று; ''திருக் கடைக் காப்பதனில் விமல ரருளாலே, குரும்பையாண் பனையீனு மென்னும் **வாய்மை** குலவுதலால்'' *(2878)*; ''எங்கள் சண்பை யாண்டகையார் கும்பிடவந் தணைகின் றூர்தாம், **மெய்த்தன்மை** விளங்குதிருச் செவியிற் சார மேவுதலும்'' *(2376)* என்பன முதலியவை காண்க.

துன்ன வந்து வந்து - துன்னுதல் - பிள்ளையார் திருவாக்கினின்றும் அவரது சத்பாவனையினால் அருளிய பதிகத்துள் ஒவ்வொரு பாட்டிலும் ''போதியோ'' என்று சொல்லுந்தோறும் முறையாக வந்து வந்து; ''வள்ளல் **வரவர வந்தொழிந் தா**னென் மனத்தே, யுள்ளத் துறுதுய ரொன்றொழியா வண்ணமெல்லாந், தெள்ளுங் கழல்'' *(திருவா-கோத்-19)*; இவ்வாறு படிப்படியாய் அமுதம் நிறைந்த விளைவின் முறையை வரும் மூன்று பாட்டுக்களில் வைத்து''அடைவே'' என்ற குறிப்புங்காட்டிக் கூறுவார்.

உருவமாய்த் தொக்கது - தொக்கது - படிப்படியாக வளர்ச்சி முறையிற் கூடிற்று; கருப்பத்தூறிக் குழவிகள் வளரும் முறையை உடற்கூற்று நூலார் கூறுதல் காண்க; **உருவமாய்** - அந்த வளர்ச்சி முறையில் அங்கங்கள் உருவ மெடுத்து; கருவாகிக் குழம்பிருந்து கலித்து மூளை கருநரம்பும் வெள்ளெலும்புஞ் சேர்ந்தொன் றாகி, **உருவாகி**'' (தேவா - தாண் - ஆரூர் - 6); ''என்போ டியைந்த வழக்கு'' (குறள்) என்புழிப்போல், ஈண்டுப் பாவையாருக்கு இம் மறுபிறப்பின் வரும் உடம்பு முன் உடலின் எஞ்சிநின்ற எலும்பினைப்பற்றி உளதாயிற்று என்க. எலும்பே மக்களுடலுக்குத் தாரகமாய்த் தாங்கி நிற்றற் சிறப்பு நோக்கி அதனையே உடம்பென்பதும் வழக்காயிற்று.''என்பு முரியர் பிறர்க்கு'' (குறள்) என்றதும் காண்க.

அக்குடத்துள் - எலும்பும் சாம்பலும் நிறைத்ததும், பிள்ளையார் தம்பிரான் கருணையின் பெருமையே கருதி *(2983)* அருளோக்காற் *(2984)* கண்டதுமாகிய அந்த என அகரம்

2987. **ஆன தன்மையி னத்திருப் பாட்டினி லடைவே**
போன வாயுவும் வடிவமும் பொலிவோடு நிரம்பி
ஏனை யக்குடத் தடங்கிமுன் னிருந்தெழு வதன்முன்
ஞான போனகர் பின்சமண் பாட்டினை நவில்வார்; 1089

முன்னறிசுட்டு. **அக்குடமே மறுபிறப்புக்குரிய கருப்பைக் குடமாக ஆயது** என்பது மேல் "அக்குடத் தடங்கி'' (2987) என்றும், ''குடமுடைந்து'' (2988) என்றும் தொடர்ந்து கூறும் குறிப்பினாலும் காண்க. உருவப் பகுதிகள் முறையே நிரம்பிக் கூடுதற்குப் புறக்காவலாக அமையுங் கருப்பை, முட்டை யோடு, முதலியவை போல நின்றது அக்குடம் என்பது.

''இதனாற் பதிக முதலுமீறுங் கபாலீசர் திருநாமமும் போந்தவாறு காண்க'' என்பர் ஆறுமுகத் தம்பிரானார். *1088*

2987. (இ-ள்) ஆன தன்மையில் - முன் நான்கு பாட்டுக்களிற் கூறிய அவ்வாறாயின தன்மையினாலே; அத்திருப்பாட்டினில் அடைவே-மட்டிட்ட என்று தொடங்கிய அத்திருப்பாட்டினைத் தொடர்ந்து முறையே பாட்டுத்தோறும்; போன... ...நிரம்பி - போயின பிராணவாயுவும் உருவம் பெறும் அங்கப் பகுதிகளும் அழகும் முறையாக நிரம்பி; ஏனை...எழுவதன் முன் - வேறாகிய அந்தக் குடத்தின் கண்ணே முன்னர்த் தொக்குக் கூடியிருந்து உரியவாறு வெளிப்பட்டு எழுவதன் முன்பு; ஞானபோனகர்...நவில்வார் - ஞானவமுதுண்டவராகிய பிள்ளையார் பின் முறையாக அருளும் சமண் பாட்டாகிய பத்தாவது திருப்பாட்டினை அருளிச் செய்வாராய்;

(வி-ரை) ஆன தன்மையின் - முன் (2983) நான்கு திருப்பாட்டுக்களிற் கூறியபடி நிகழ்ச்சிகள் ஆயின தன்மையினால்; தன்மை காரணமாக.

அத்திருப் பாட்டினில் - அந்த - முன் பாட்டிற் கூறிய - மட்டிட்ட என்று தொடங்கும் திருப்பாட்டினில். **அடைவே** - முறையாக; ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து.

போன வாயு - முன்னர் விடத்தினால் வீந்து, ''ஆவி தங்குபல் குறிகளு மடைவிலவாக'' (2960) நிலையிற் பிரிந்துபோன பிராணவாயு; உயிரிருத்தற்குச் சிறந்த குறியாதலின் அஃதே யான்மா என்பாருமுண்டு; போதம் 3-ம் சூத்திரம் பார்க்க. ''என்னு ளேயுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்கு'' (தேவா).

வடிவம் - உருவப் பகுதிகள்; **பொலிவு** - முன்னைய உருவ நலனிலும் சிறந்த அமைப்பின் அழகு.

ஏனை அக்குடத்து அடங்கி - எலும்பும் சாம்பலும் நிறைத்துக் காணப்பட்ட மட்குடமே பற்றுக்கோடாகப், பிள்ளையார் பாவையாரின் மறுபிறப்புக்குரிய உடம்பு தங்கி உருவாகிப் புறப்படும் கருக்குடமாக அருளாற் கண்ட அக்குடத்தினுள் நிறைவுற்று அடங்கி.

முன் இருந்து எழுவதன் முன் - முன்னர் அடங்கி நிரம்பியிருந்து பின் உரியவாறு வெளிப்படுவதன் முன்; குழவிகள் பத்துமாத வளர்ச்சியினைத் தாயின் கருக்குடத்தில் நிறைவாகப்

2988. ''தேற்ற மில்சமண சாக்கியத் திண்ணரிச் செய்கை
ஏற்ற தன்றென வெடுத்துரைப் பா'' ரென்ற போது
கோற்றொ டிச்செங்கை தோற்றிடக் குடமுடைந் தெழுவாள்
போற்று **தாமரைப் போதவிழ்ந் தெழுந்தனள்** போன்றாள்; 1090

பெற்று அதனுள் அடங்கிப் பின் வெளிப்படுமாறுபோல. உரிய வளர்ச்சி முழுதும் நிரம்பிய பின்னரே குழவி கருக்குடத்தினின்றும் வெளி வரவேண்டுமென்ற உடல்நூல் விதிக் குறிப்புப் பெற ***நிரம்பி - முன் - இருந்து*** *என்றார்.*

எழுவதன் முன் - நவில்வார் *என்க - பத்துப் பாட்டும் நிரம்ப உருவமும் பொலிவும் நிரம்பி வெளிப்படும் நிலையாதலின் எழுவதன்முன் அவ்வாறு நிரம்பும் பத்தாவது பாட்டினை நவில்வாராகி;* ***சமண் பாட்டு*** *- பிள்ளையார் பதிகங்க ளொவ்வொன்றினும் பரசமய நிராகரணம்பற்றிச் சமண புத்தர்களைக் கூறும் பத்தாவது பாட்டு; இதற்கு இக்காரணம்பற்றிச்* ***சமண் பாட்டு*** *என்று பெயரிட்டருளினர் ஆசிரியர். இதன் குறியீடாகிய கருத்தை ''நாதர்நெறி யறிந்துய்யார் தம்மிலே நலங்கொள்ளும், போதமிலாச் சமண்கையர் புத்தர்வழி பழியாக்கு, மேதமே யெனமொழிந்தார்'' (1977) என்று தொடக்கத்திற் காட்டியருளியமை காண்க.* ***நவில்வார்*** *- நவில்வாராகி; முற்றெச்சம்.* ***நவில்வார் - என்றபோது*** *என வரும் பாட்டுடன் முடிக்க. நவிலும் திறம் வரும் பாட்டில் காண்க.*

போன வாயுளும் *என்ற பாடம் பிழை; அதனை மேல் (2989) கூறுதல் காண்க.* *1089*

2988. (இ-ள்) தேற்றமில்...என்றபோது - தெளிவாகிய அறிவில்லாத சமண சாக்கியர்களாகிய தீயவர்கள் இந்தச் செய்கை ஏற்றதன்று என்று எடுத்துச் சொல்வார்கள் என்று அத்திருப்பாட்டினைப் பாடியருளியபோது; கோற்றொடிச் செங்கை தோற்றிட - முன்னர் வளையலணிந்த செங்கை வெளிப்பட்டுத் தோன்றியிட; குடம் உடைந்தெழுவாள் - அந்தக் குடம் உடைந்துமேல் எழுவாராகிய பூம்பாவையார்; போற்று...போன்றாள் - போற்றும் தாமரை முகை இதழ் அவிழ்ந்து அதனின்றும் எழுகின்ற திருமகளைப் போன்றிருந்தார்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) ***தேற்றமில்...எடுத்துரைப்பார் என்றபோது*** *- இஃது - உரிஞ்சாய வாழ்க்கை'' என்ற (10) பதிகப் பாட்டின் கருத்துரைத்தது.*

தேற்றமில் *- உண்மை தெளியாத - உண்மையின்னதென்று தெளிதலில்லாத.*

திண்ணர் *- குண்டர்; கீழ் மக்கள்; பொய்யினில் விடாப்பிடியுடையோர்.*

இச்செய்கை ஏற்றதன்றென *- நிகழ்ச்சியின் முன், இது செய்யவியலாத தொன்று எனவும், அது கண்டபின், எமது சமய மேன்மைகள், புரட்டுக்களுக்குப் பொருந்தாது எனவும் உரைக்க நின்றது.* ***எடுத்துரைப்ப*** *என்ற பதிகப் பகுதிக்கு ஏற்றதன்றென எடுத்துரைப்பார் எனப் பொருளுரைத்துக் காட்டியவாறு.*

2989. **எடுத்த பாட்டினில் வடிவுபெற், றிருநான்கு திருப்பாட்
டடுத்த வம்முறை பன்னிரண் டாண்டள வணைந்து
தொடுத்த வெஞ்சமண் பாட்டினிற் றோன்றிடக் கண்டு**
விடுத்த வேட்கையார் **திருக்கடைக் காப்புமேல்** விரித்தார். 1091

என்றபோது - என்ற பாட்டினை முடித்தருள்கின்றபோது.

செங்கை தோற்றிடக் குடம் உடைந்து எழுவாள் - குழவிகள் பிறக்கும்போது தலை - கை - கால் என்ற ஏதேனும் ஓர் அவயவம் முதலில் வெளிப்படப் பின்னர் உடல் முழுதும் தோன்றுதல் உடல்நூல் உண்மை. அன்றியும், குழவியின் தோற்றத்துக்கு முன் அதன் உடலை முழுதும் தன்னுள் ஊறிய நீரினுள்ளே கொண்ட பனிக் குடமுடைந்து, பின் குழவி பிறக்கும்நிலை வரும் என்பதும் உடல்நூல் உண்மை. இவையிரண்டன் குறிப்புப்பட இங்குக் **கை தோற்றிட** என்றும், **குடமுடைந்து எழுவாள்** என்றும் கூறியருளிய கவிநயம் காண்க. இங்குச் சமண்பாட்டுடன் பதிகப் பாட்டான பத்தும் பாடனிரம்பிய பின் குடத்தினின்றும் பாவையாரின் அணியுடைய செங்கை முன் வெளிப்பட்டுத் தோன்றியது. அதன் பின் அக்குடமுழுது முடைந்து அவரது உருவமுற்றும் முறையே எழுந்து தோன்றிற்று என்க.

போற்று - யாவரும் போற்றும்; துதிக்கும். அதுவரை தன்னகத்துள் வைத்துக் காத்துவந்த என்ற குறிப்புமாம்; இப்பொருளில் **போற்றுதல்** - காத்தல் என உரைக்க.

தாமரைப் போதவிழ்ந்து எழுந்தனள் போன்றாள் - தாமரை குடத்துக்கும், திரு பாவையாருக்கும் மெய்பற்றியும், திரு தாமரையிதழ் அவிழ்ந்தெழுதல் பாவையார் குடமுடைந் தெழுதலுக்கு வினைபற்றியும் வந்த உவமங்கள்; இங்குப் பாவையார் முன் உதித்த நிலையினை ''மனைவியார் வயிறெனுங் **கமலத்**, துரிய **பூமக** ளெனவொரு பெண் கொடி யுதித்தாள்'' *(2938)* என்ற கருத்தினையே தொடர்ந்து இம் மறுபிறப்பினும் கூறியதுடன் அதனினும் இதன் உயர்வு புலப்படக் கூறிய நிலையும் கண்டுகொள்க; குடமுடைந்த செயல் சிதைவு காட்டாது போதவிழ்தலைப் போன்றது என்ற மென்மை தோன்று நயமும் காண்க. **தாமரைப் போதவிழ்ந் தெழுந்தனள்** - திருமகள்; இங்குச் சிவத்திருவினைப் பெற நின்ற மகள் என்பது குறிப்பு. ''தேனமர் கோதையுஞ் சிவத்தை மேவினுள்'' *(3015)* என்பது காண்க. **தாமரைப் போதவிழ்ந்து எழுந்தனள்** - ''இதழ்க் கதவந் திறந்தோ?'' (திருக்கோவை). **எழுந்தனள்** - தாமரையில் முன் எழுந்தனளாகிய திருமகள்; **போற்று தாமரை** - என்றதனுல் அன்பானினைந்து போற்றுமவர்களது உள்ளத்தாமரை தோறும் எழுந்து அருளும் சிவசக்தி என்ற குறிப்பும் காண்க. **அவிழ்ந்து** - அவிழ; அவிழ்ந்த பின்.

எழுந்தனளை என இரண்டனுருபு விரிக்க. **எழுந்தனள்** - பெயர். *1090*

2989. (இ-ள்) எடுத்த...பெற்று - மட்டிட்ட என்று தொடங்கிய முதற் பாட்டினில் பாவையார் உருவத்தைப் பெற்று; இருநான்கு...அணைந்து - அதன்மேல் அருளிய எட்டுத் திருப்பாட்டுகளின் உருவெடுத்த நிலையினையடுத்த அம்முறையே பன்னிரண்டு ஆண்டுகளுக்குள்ள வளர்ச்சியினைப் பொருந்தி; தொடுத்த... தோன்றிட - தொடுத்த கொடிய சமணர் பாட்டினை அருளிய அளவினில் குடமுடைந்து வெளிப்பட்டுத் தோன்றியிட; கண்டு -

பார்த்து; விடுத்த...விரிப்பார் - எவ்வித விருப்பும் இல்லாதவராகிய பிள்ளையார் அதன்பின் திருக்கடைக்காப்பினை விரித்துக் கூறியருளினார்.

(வி-ரை) இப்பாட்டினால் குடத்தினை நோக்கிப் பாவையாரை விளித்துப் பதிக முழுமையும் அருளிய முறையில் குடத்தினுள் நிகழ்ந்த விளைவுகளை அம்முறை தொகுத்துக் காட்டியருளியவாறு.

எடுத்த பாட்டு - தொடங்கிய ''மட்டிட்ட'' என்ற முதற்பாட்டு.

வடிவு பெற்று - உடல் தீயிடையிட் டெரிக்கப்பட்டதனால் வடிவமழிந்து எலும்புஞ் சாம்பலுமாகிய உருவுடன் நின்றது. அதனை மீள உற்பவிக்கும் அருணோக்கினாற் பிள்ளையார் காணவே உயிரற்ற அவ்வெலும்புருவமும் தன்மாத்திரைகள் முதலியவற்றாலாகிய நுண்ணுடலுள் ஒடுங்கிப், பின்னர் உயிர் தரிக்கத்தக்க கருவுருவாகிய வடிவம் பெற்று என்க. ''உள்ளதே தோற்ற உளமணுவாய்ச் சென்றுமனந், தள்ள விழுங்கருவிற் றான்'' (போதம்-2- சூ) என்றபடி, எலும்புஞ் சாம்பலுங் கருவடிவாகியதும், அதனுள் உயிரினைப் புகுத்தியதும் **''போதியோ''** என்னும் மெய்த்திருவாக்கெனு மமுதமென்பது முன்னுரைக்கப்பட்டமை (2986)யால், இங்கு **''வடிவு பெற்று''** என்றமட்டிற் கூறியமைந்தார். இங்கு **வடிவு** என்றது புனருற்பவத்தில் வரும் உடலின் முளையாகி உயிருடன் கூடிய வடிவத்தை.

இருநான்கு...அணைந்து - இருநான்கு திருப்பாட்டு - பதிகத்துள் இரண்டாவது பாட்டு முதல் ஒன்பதாவது பாட்டு வரை உள்ள எட்டுப் பாட்டுக்கள்; **அடுத்த அம்முறை** - பாட்டுக்களின் உட்குறிப்பாகிய பொருள்களால் வந்து பொருந்திய அம்முறைப்பட்ட வளர்ச்சி பெற்று.

பன்னிரண்டு ஆண்டு அளவு அணைந்து - அம்முறை வளர்ச்சியானது கருவடிவாகியது தொடங்கி அன்று முதலாகப் பன்னிரண்டு ஆண்டுகள் முறையாக வளர்ச்சி பெற்று; எனவே, பாவையாருக்கு விடந்தீண்டிய இறப்பு ஏழியாண்டளவில் நிகழ்ந்ததென்று (2944) முன் அறியப்பட்டமையின், அது நிகழ்ந்து அப்போது ஐந்து ஆண்டுகள் கழிந்தன என்பதும், இந்த ஐந்து ஆண்டுகளளவும் சிவநேசர் பாவையாரின் எலும்பு நிறைத்த குடத்தினையே அவராகக் கொண்டு உபசரித்து நிகழ்ந்தாரென்பதும் கருதப்படும். அன்றியும் பாவையாருக்கு ஏழியாண்டெய்தச் சிவநேசர் மகிழ்ந்த செய்தியாய நாள்களிற் பிள்ளையார் ஆலவாயிற் சமணரை வெற்றிகொண்ட செயல் நிகழ்ந்தகாலை அவர் பத்து வயதுப் பிராயத்தினர்போலும் என்பதும் கருதப்படும். புண்ணியப் பதினா றாண்டு பேர் பெறும் புகலி வேந்தர்'' (3007) என்று இங்குக் கூறுதலினால் இவ்வாறு கருதப்பட்டது. ''பானல் வாயொரு பால னீங்கிவன்'' (தேவா) என்று பிள்ளையார் தம்மைப்பற்றி அங்கு அறிவித்தருளுதலும் குறிக்க.

பன்னிரண்டாண் டளவு அணைந்து - பாவையார் விடத்தினின் வீந்தபின் இதுவரை உள்ள ஐந்தாண்டுகளின் வளர்ச்சியினையும்பெற்றுப் பன்னிரண்டு ஆண்டு மங்கைப் பருவத்திற் றோன்றினர் என்க. என்னை? இக்கால முழுதும் சிவநேசர் பாவையார் உள்ளாரெனவே கருதி உபசரித்து வந்தமையால் அவர் கருதியதற்கேற்ப அவ்வளர்ச்சி பெறுதல் தகுதியாமென்க. அன்றியும், பிள்ளையாரை மணத்தல் கருதிச் சிவநேசர் ''காழிநா டுடையவர்க் கடியேன், பெற்றெ

டுத்தபூம் பாவையும்... கொடுக்கலன்பான்'' (2951) என்று உறுதிகூறி மொழிந்தமையாலும், அவள் விடத்தால் விந்தபின்னர் ''கழுமலத் தலைவர் சாரும்அவ் வளவும் உடல்தழ லிடையடக்கிச் சேர வென்பொடு சாம்பல் சேமிப் பதுதெளிந்து'' (2963) அக்குடத்தை அவராகவே கொண்டு கன்னிமாடத்து வைத்து உபசரித்து வந்து, அவர் வந்து சாரும்போது அக்குடத்தைப் பாவையாராகவே அவர் வசம் கொடுத்தல் கருதியமையாலும், பெண்களின் மணப் பருவமாகத் தமிழ் இலக்கணம் வகுக்கும் நிலையிற் பன்னிரண்டாண்டு அளவு சார்கின்றமையாலும் பிள்ளையாரின் கருணையின் பெருமையினாலே அவ்வுடலிலே மீளப் புனருற்பவம் நிகழ்கின்றமையாலும், பிறவாற்றாலும் இடைப்பட்ட ஆண்டுகளின் வளர்ச்சியினளவும் பெற்றுப் பன்னிரண்டாண்டளவு அணைந்தனர் என்பதாம்.

தொடுத்த வெஞ்சமண் பாட்டினில் தோன்றிட - **தொடுத்த** - பதிகங்களிற் பத்தாவது பாட்டிற் பரசமய நிராகரிப்புக் கூறும் நிலை தொடுத்த என்க. **தொடுத்தல்**- மேற்கொள்ளுதல். **தொடுத்த - பாட்டு** - என்று கூட்டுக. **தொடுத்த வெஞ்சமண்** என்று கூட்டி சைவத் திறத்தை இழித்தல் செய்வதனைத் தொழிலாகக் கொண்ட பகைமை தொட்ட கொடிய சமண் என்றுரைத்தலுமாம். **சமண் பாட்டு** - முன்பாட்டி லுரைத்தவை காண்க.

சமண் பாட்டினிற் றோன்றிட - சமண் பாட்டாகிய பத்தாவது பாட்டு அருளியவுடன் குடத்தினின்றும் வெளிப்பட. பாட்டுக்கள் தோறும் வரிசைப்பட ஐப்பசி முதலாக அவ்வம்மாதங்களையும் அவற்றில் நிகழும் நல்விழாப் பொலிவுகளையும் கூறியருளினாராதலின் அம்முறையிற் பத்துப்பாட்டுக்களுக்குப் பத்து மாதங்கள் சென்று முறைபட்டன, பத்துமாதங்க ணிறைவுற்றகாலைக் குழவிகள் குடமுடைந்து தோன்றுமியல்பு போலவே ஈண்டுப் பத்து மாதங்களைக் குறித்த பத்துப் பாட்டுக்களும் நிறைவாயினபோது குடமுடைந்து பாவையாரும் எழுந்து தோன்றினார் என்ற உள்ளுறையாகிய, தகுதியும் கண்டுகொள்க.

கண்டு - முன்னர் (2983) என்பு நிறைந்த மட்குடத்தைக் கண்டு தம்பிரான் கருணையின் பெருமையே கருதிப் பதிகமருளிய பிள்ளையார், அதனிறுதியில் இப்போது தோன்றிடக் கண்டு என்க. பின்னர்க் கண்ணுதல் கருணை வெள்ள மாயிர முகத்தாற் கண்டார்(3007) என்பதும் காண்க.

விடுத்த வேட்கையர் - வேட்கை - விருப்பு; வேட்கை விட்டவர் என்க. ''வென்றவைம் புலனுன் மிக்கீர்'' (401) என்புழிப் போலக் காண்க. பிள்ளையார் இவ்வருட்செயலை எவ்வாறுயின வேட்கையும்பற்றிச் செய்தாரல்லர் என்பது குறிப்பு. பின் நிகழ்ச்சியும் காண்க. வேட்கை விட்டார் என்னவே வெறுப்புமிலர் என்பதும் பெறப்படும். ''வேண்டுதல் வேண்டாமை யில்லா னடிசேர்ந்தார்'' (குறள்) என்ற கருத்தும் குறிக்க. ''வேட்கைவிட் டார்நெஞ்சின், மூடத்து ளேநின்று முத்தி தந்தானே''-(திருமந். 8 - 493); ''ஆராவியற்கை யவாநீப்பி னந்நிலையே, பேராவியற்கை தரும்'' (குறள்).

திருக்கடைக்காப்பு மேல் விரித்தார் - பதிகப் பயன் கூறிப் ''பூம்பாவைப் பாட்டாகச் செந்தமிழால் - நலம் புகழ்ந்த பத்து'' என்று பதிகம் நிறைவாக்கியருளினார். **விரித்தல்** - நிறைவாக அருளுதல்.

விதித்தார்—என்பதும் பாடம்.

திருமயிலை "தேனமர் பூம்பாவைப் பாட்டு"

திருச்சிற்றம்பலம் பண் - சீகாமரம்

மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்! (1)

மைப்பயந்த வொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பயந்த நீற்றான் கபாலீச் சரமமர்ந்தான்
ஐப்பசி யோண விழாவு மருந்தவர்கள்
துய்ப்பனவுங் காணாதே போதியோ பூம்பாவாய்! (2)

வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகிற்
றுளக்கில்கபா லீச்சரத்தான் **றொல்கார்த் திகைநாட்**
டளத்தேந் திளமுலையார் தையலார் **கொண்டாடும்**
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்! (3)

ஊர்திரை வேலை யுலாவு முயர்மயிலைக்
கூர்தருவேல் வல்லார் கொற்றங்கொள் சேரிதனிற்
கார்தரு சோலைக் கபாலீச் சரமமர்ந்தான்
ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்! (4)

மைப்பூசு மொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச் சரமமர்ந்தான்
நெய்ப்பூசு மொண்புழுக்க னேரிழையார் கொண்டாடுந்
தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய்! (5)

மடலார்ந்த தெங்கின் மயிலையார் **மாசிக்**
கடலாட்டுக் கண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
அடலானே றூறு மடிக **ளடிபரவி**
நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாய்! (6)

மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்
கலிவிழாக் கண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
பலிவிழாப் பாடல்செய் பங்குனி யுத்திரநாள்
ஒலிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய்! (7)

தண்ணா வரக்கன்றோள் சாய்த்துகந்த தாளினான்
கண்ணார் மயிலைக் கபாலீச் சரமமர்ந்தான்
பண்ணார் **பதினெண் கணங்கடம் மட்டமிநாள்**
கண்ணாரக் காணாதே போதியோ பூம்பாவாய்! (8)

நற்று மரைமலர்மே ஞன்முகனு நாரணனும்
முற்றுங் குணர்கிலா மூர்த்தி திருவடியைக்
கற்றுர்க ளேத்துங் கபாலீச் சரமமர்ந்தான்
பொற்றுப்புக் காணுதே போதியோ பூம்பாவாய்! (9)

உரிஞ்சாய வாழ்க்கை **யமணுடையைப் போர்க்கும்**
இருஞ்சாக் கியர்க ளெடுத்துரைப்ப நாட்டிற்
கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச் சரமமர்ந்தான்
பெருஞ்சாந்தி காணுதே போதியோ பூம்பாவாய்! (10)

கானமர் சோலைக் கபாலீச் சரமமர்ந்தான்
தேனமர் **பூம்பாவைப் பாட்டாகச் செந்தமிழால்**
ஞானசம் பந்த னலம்புகழ்ந்த பத்தும்வல்லார்
வானசம் பந்தத் தவரோடும் வாழ்வாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– இத்திருப்பதிகக் கருத்தும் உட்கிடையும் பொருளும் ஆசிரியர் தேற்றமாக எடுத்துக்காட்டி முன் (2985) உரைத்தருளியவாற்றுற் கண்டுகொள்க.

குறிப்பு:– இப்பதிகம் சைவத்திறத்தின் அடிப்படையும் உயிர்நாடியுமாகிய பெரும் பொருளை உலகரறிய எடுத்து உபதேசிக்கும் பெருமை வாய்ந்தது; இதனை யாவரும் நன்கு பயின்று அது காட்டுங் குறிக்கோளின்வழி ஒழுகி வருதல் மனிதப் பிறவியின் உறுதியாகிய பயனையடைந் துய்வதற்கு வழியாகும். மக்கள் உணர்ந்து ஒழுகி உய்வார்களாக.

பதிகப் பாட்டுக் குறிப்பு:– (1) மட்டு - மணம். **மட்டிட்ட புன்னை** - மண மிகுந்த புன்னைமலர். "மன்றல் விரவுமலர்ப் புன்னை மணம்" (1529); புன்னை நெய்தற் கருப்பொருள். **கானல்** - மணற்கழிக் கானல்; காடுபோன்ற சோலை. **மடமயிலை - மடம்** - அழகு. **கட்டு இட்டம் கொண்டான் - கட்டு** - கோயில்; **மயிலைக்கட்டு** - மயிலாகிய அம்மையின் பிணைப்புக்கு என்பர் வ.சு.செ. **இட்டம் கொள்ளுதல்** - விரும்பி வீற்றிருத்தல். **அமர்ந்தான்** - என்றது மக்கருத்து. **ஒட்டிட்ட பண்பு** - சித்துப் பொருளிரண்டு பிரிக்கலாகா வகையிற் கூடிய அத்துவிதக் கலப்பு. "மெய்ஞ்ஞானத் தாணுவினோ டத்துவிதம்", "ஒட்டி" (போதம் - 2-1); தாவரங்களுள் ஒட்டு என வழங்கும் வழக்கும் காண்க. "உணரப் படுவாரோ டொட்டி வாழ்தி" (தேவா); **உருத்திர பல்கணத்தார்** - மாகேசுரர்களாகிய அடியவர்கள். "மதிசூடு மண்ண லாரடியார்" (2985) என ஆசிரியர் இதற்குப் பொருள் காட்டியருளினர். **அட்டு இட்டல்**-திரு அமுது அமைத்தூட்டுதல்; இடல் என்பது எதுகையோசை கருதிஇட்டல் என நின்றது;—**(2) மடநல்லார்** - ஈண்டு **மடமை** - பெண்மைக்குண நான்கனுள் ஒன்று. கொளுத்தக்கொண்டு கொண்டது விடாமை என்றும், அறிந்தும் அறியாள்போன்றிருத்தல் என்றும் உரைப்பர்; **கைப்பயந்த(நீறு)** - கைவந்த; தவறாது பயன் தந்த. திருநீற்றுப் பதிகக் கருத்தும் வரலாறும் கருதுக. பின்னர்க் **கைப்பூசு நீற்றான்** என்றதும் காண்க. **ஐப்பசி ஓணவிழா** - இது முன்னை நாளில் இங்கு ஐப்பசி மாதம் திருவோணநாளிற் கொடியேற்றிக் கிருத்திகையில் தீர்த்தம் கொண்ட விழா என்பது தலவரலாறு;

இராமர் பூசித்து ஐப்பசி ஓண நாளில் விழா இயற்றினர் என்பது தலபுராணம். ஓணம் திருமாலுக்குரிய நாளாதலும் காண்க; (ஓணப்பிரான் - விட்டுணு). **அருந்தவர்கள் துய்ப்பனவும்** - அடியவர்கள் அமுது செய்தல். இஃது இவ்விழாவிற்கின்றியமையாத சிறந்த பகுதிபோலும் என்பது **ஓண விழாவும் - துய்ப்பனவும்** என்று இணைத்துக் கூறியவாற்றாற் கருதப்படும். இவ்விழாவினைப்பற்றிக் கல்வெட்டு, நாட்டு நடப்புச் சரித வரலாறு முதலிய சான்றுகளாலும், ஆகம விதிகளாலும் இன்னவாறென்று கண்டு மீளக் கொண்டாடுதல் சிறந்த சிவபுண்ணியமாம்;– **–(3) வண்மறுகு** - வளமிக்க வீதிகள். முன் ஆவண வீதிகளைப்பற்றி(94)க் கூறியதும், அதிபத்த நாயனார் புராணத்துட் கூறும் (3-4) நகர வளங்களும் இங்கு நினைவுகூர்தற் பாலன; மயிலாபுரி அந்நாளிற் கடற்றுறைமுகப் பட்டினமாகிக் கலங்களின் வாணிபம் பெருக்கிய நிலையும் (2932) கருதுக. **தொல்கார்த்திகை நாள் - விளக்கீடு** என்க. **தொன்மை**யாவது சிவாகமங்களாலும் மாபுராணங்களாலும் விதிக்கப்படுதல்; ''வருதேண் மதியிற் கார்த்திகைநாண் மல்கும் விழைவிற் பூசித்துக், கருதார் புரங்க ணகைத்தெரித்த கடவுண் மகிழ விளக்கிடுவோர்'' (பேரூர்ப் புராணம் - விசேடபூசைப் படலம்-11). **விளக்கீடு** - விளக்குக்களை இட்டுக் கொண்டாடும் விழா விளக்கீடு என்றது முதனீண்டு வந்த தொழிற்பெயர். ஆகுபெயராய் அத் தொழினிகழும் விழாவைக் குறித்தது; ''கார்த்திகை விளக்கிட் டன்ன'' - (சிந்தாமணி 253);—**(4) ஊர் திரைவேலை உலாவும்** - வேலைத்திரை ஊர் உலாவும் என்க (கடல் அலைகள் ஊரினுக்குள் ஏறி உலாவநின்ற); நகர் கடல் அலை விளிம்பினுக்கருகு அமைக்கப் பட்ட நிலை. **கூர்தரு...சேரி** - வேல் முதலிய படை பயின்று வல்ல இளைஞர்கள் வெற்றிகொள் சேரி; திருவிழாக்களிற் சேரிப்போர் நடப்பது வழக்கம். ''ஓண நன்னாள், மறங்கொள்சேரி மாறுபொருசெரு'' (மதுரைக்கா - 591). **ஆதிரை நாள்** - இது மார்கழி மாதத்தில் நிகழ்வது. ''அத்தன் ஆரூ ராதிரை நாளாலதுவண்ணம்'' (அரசுகள்);—**(5) மைப்பூசும் ஒண்கண்** - மைதீட்டிய கண்; **நெய்ப்பூசும் ஒண்புழுக்கல்** - நெய் விரவிய சோறு. இதனைப் படைத்து அடியார்க் கீந்து கொண்டாடும் சிறப்பு; இது தைப்பூச விழாவின் சிறந்த பகுதி; ''உருக்குறு நறுசெய்யுள்ளுறைப் பெய்த, புழுக்கல்'' (பெருங் - 1 & 40 - 280);—**(6) மடல்** - தென்னையின் நீண்ட மடல். **மாசிக்கடலாட்டு** - மாசி மாதத்தில் மகநாளில் கடற்கரையில் இறைவர் தீர்த்தமளிக்கும் விழா. **கடலாட்டு** - கடலிற் குளித்தல். **நடமாடல்** - பற்பலரும் வந்து குழுமி ஆடுதல்; பாட்டும் ஆட்டும் விரவி வரும் கூத்துவகை. ''வலம்வந்த மடவார்க ணடமாட''; ''காந்தார மிசையமைத்துக் காரிகையார் பண்பாடக் கவினார் வீதித், தேந்தாமென் றரங்கேறிச் சேயிழையார் நடம்பயிலும்'' (தேவா - ஐயாறு) என்பனவற்றால் நடமாடல் விழாவின் பகுதியாமென்பது குறிக்கப்படுதல் காண்க. **அடிபரவி** - என்றதனாற் பாடல் குறிக்கப் பட்டது;—**(7) மலிவிழா வீதி** - விழாக்கள் நிகழ்தல் நகர வீதிகளுக்குரிய மங்கலமாம்; ''வீதிகள் விழாவி னார்ப்பும்'' (84), இவை உலகம்பற்றிய விழாக்களின் சிறப்பு. **கலிவிழா** - கலி கடியச் செய்யும் இறைவரது ஆடல்; ''பெரு மயானத்து நடம் புரிவார்''(2978); ''ஆடல் மேவினார்'' (2980); **பலி விழா** - உருத்திர பலி என்னும் திக்குப் பலியுடன் நிகழும் பெருவிழா; **ஒலி விழா** - பல்லியங்களும் பிறவும் முழங்கும் திருவிழா; —**(8) பதினெண் கணங்கள்** - சிவ கணங்கள். **அட்டமி நாள்** - வைகாசியில் கணங்களின் வழிபாடாக முன்பக்க அட்டமிநாளிற் செய்யும் விழா; இஃதும், மேற்பாட்டில் வரும் பொற்றாப்பும், பெருஞ் சாந்தியும் இந்நாட் பலபதிகளில் வழங்காதொழிந்தன. அவற்றைக் கண்டு மீள நிகழ்வித்தல் சிவபுண்ணியமும் மக்களுய்யும் வழியுமாம்; **கண்ணாரக் காணாதே** இதனைக் ''கண்ணி னலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்''

(2985) என்று ஆசிரியர் எடுத்துப் பொது இலக்கணமாகக் காட்டியருளியமை காண்க :—**(9) முற்றுங்கு உணர்கிலா** - அளவு காணாத; **பொற்றூப்பு-தாப்பு** - தாம்பு என்பது தாப்பு என நின்றது. **தாம்பு** - கயிறு. **பொற்றூப்பு** - பொன்னூசல் என்பர். இது ஆனி, ஆடி மாதங்களிலும் மேல்வரும் பெருஞ்சாந்தி விழா ஆவணி மாதத்திலும் நிகழ்வன போலும்;—(10) இதனைச் சமண் பாட்டென்று பெயரிட்டுக் கூறினர் ஆசிரியர்; **உரிஞ்சாய வாழ்க்கை அமணும், உடையைப் போர்க்கும் இருஞ்சாக்கி யரும்** என்க. **உரிஞ்சாய வாழ்க்கை**யாவது உடையொழிந்த நிலையைத் தவமென்னும் சமணர் கொள்கை; **உடையைப் போர்க்கும்** - என்பது குறித்த உடை கொள்வதே தவமென்னும் புத்தர் கொள்கை. **உரிஞ்சல்** - அகற்றுதல் - நீக்குதல். **எடுத்துரைப்ப** - "இச்செய்கை ஏற்றதன்றென எடுத்துரைப்பார்" (2988) என இதன் பொருளை ஆசிரியர் விரித்தருளினர். இவ்வமணர் முதலியோர் இச்செயல் காண்பதற்கு வந்து கூடிய நன்றியில் சமயத்துள்ளவர்களும், அவர்களையுள்ளிட்ட அவரனையோரும். **பெருஞ் சாந்தி** - இதனைப் பவித்திரோற்சவம் என்பர்; கும்பாபிடேகம் என்றுரைப்பாருமுண்டு;—**(11) பூம்பாவைப் பாட்டு** - இப்பதிகத்துக்குப் பிள்ளையாரிட்ட பெயர். "பல்பெயர்ப் பத்தும் வல்லார்" - "வழிமொழிகள்" என்பன முதலிய இடங்களிற் பதிகப் பெயர் கூறுதல் காண்க. **ஞானசம்பந்தன்** - இங்குச் சிவஞான சத்தியின் செயலாக நிகழ்தலின் இப்பெயராற் கூறினார். இதனைப், "போற்றினார் ஞானசம்பந்தர்" (2976) - "ஞானபோனகர் - நவில்வார்" (2987) என்று எடுத்துக்காட்டியருளியது காண்க.

தலவிசேடம்:– திருமயிலாப்பூர் - தொண்டை நன்னாட்டில் 24-வது பதி; திருமயிலாப்பு என்றும், திருமயிலை என்றும் வழங்கப்படும்; "மயிலாப்புள்ளே"; மடமயிலை" (தேவா), **கபாலீச்சரம்** – இங்குத் திருக்கோயிலின் பெயர்; உமையம்மையார் மயிலுருவெடுத்து இறைவரைப் பூசித்த பதியாதலின் திருமயிலை எனப்பெயர் பெற்றது; இத்திருக்கோலம் கோயிலினுள் வெளிச்சுற்றில் புன்னைமரத்தடியில் (தலமரம்) தனிக்கோயிலாக அமைக்கப்பெற்று வழிபடப்பெறுகிறது. இராமர் பூசித்துப் பேறு பெற்ற ஐப்பசி ஓணத்தில் விழாச் சிறப்பு செய்தனர் என்பது தலபுராணம். அஃதே பதிகம் 2-ம் பாட்டிற் குறிக்கபட்டதென்பர். பிரமன் முதலிய தேவர்களும் பூசித்த வரலாறுகளும் கேட்கப்படும். அறுபத்து மூன்று நாயன்மார்களுள் இத்தலத்தில் அவதரித்த வாயிலார் நாயனார் "மறவாமையானமைத்த மனக்கோயிலினுள்" இறைவரை அமைத்து வழிபட்டுத் திருவடியடைந்த பெருமை மாபுராணத்துக் காண்க. "துறைக்கொண்ட செம்பவள மிருளகற்றுஞ் சோதித் தொன்மயிலை வாயிலா னடியார்க்கு மடியேன்" (திருத்தொண்டத் தொகை) என்பது தேவாரம். இவரது சந்நிதி கற்பகாம்பாள் சந்நிதிக்கு எதிரில் வடக்குப் பார்த்த தனியாலயமாக உள்ளது. ஆளுடைய பிள்ளையார் சிவநேசர் பொருட்டு எலும்பைப் பெண்ணாக்கிய வரலாறு முன்னர் இப்புராணத்துள் விரிக்கப்பட்டதும் காண்க. பூம்பாவையார் குடத்தினின்றும் தோன்றும் திருவுருவமும் பிள்ளையார் பதிகம் பாடும் திருவுருவமும் உடனாகத் தனிக் கோயிலாக வெளிச்சுற்றினுள் மேற்குக் கோபுரவாயிலை அடுத்து வடபுறம் அமைத்து வழிபடப்பட்டு வருவது தரிசிக்கத் தக்கது; ஆளுடைய அரசுகளும் வந்து இங்கு வழிபட்டமை அறியப்படும். திருவள்ளுவர் இங்கு அவதரித்துத் திருக்குறள் பாடிய பெருமையும் உடைய பதி. திருவள்ளுவர் தனிக்கோயில் நகரின் வடகீழ்ப் பக்கம் கடற்கரையருகு உள்ளது.

*சுவாமி - **கபாலீசுவரர்.** சுவாமி மேற்குமுகமாகவும் அம்மை தெற்கு முகமாகவும் எழுந்தருளியுள்ளார்கள். அம்மை - **கற்பகவல்லியம்மை**; தலமரம்-**புன்னை** (பதிகத்துள் ''மட்டிட்ட புன்னை'' என்று போற்றப்பட்ட பெருமை காண்க); தீர்த்தம் - **கபாலி தீர்த்தம்**; பதிகம் 1.*

இது சென்னை மாநகரின் (டவுன்) தெற்கில் 3 நாழிகையில் உள்ளது. சென்னைப் பட்டினத்தின் ஒரு பாகமாகிய தென்பகுதியாம்.

திருமயிலையினைப் பற்றிய சரிதக் குறிப்புக்கள்

I (திரு. C.M.இராமச்சந்திர செட்டியார் B.A., B.L. அவர்கள் எழுதியவை)

பழமை:– *தற்போது இருக்கும் கோயில் 300 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. பழைய கோயில் கடற்கரையில் இருந்ததாம். பரங்கியர்கள் அதனை இடித்துத் தம் பள்ளிகளைக் கட்டிச் சுற்றிலும் கோட்டையையும் எழுப்பிக் கொண்டார்கள். ஒரு பள்ளியைப் பழுது பார்ப்பதற்காக 40 ஆண்டுகளின் முன் நிலத்தைத் தோண்டிப் பார்த்ததில் பல உருவச் சிலைகளும் கற்களும் கிடைத்தன. அவைகளைக் கொண்டு அந்த இடத்தில் பழைய கோயில் இருந்ததாக ஊகிக்கலாம். இடித்த பழைய கோயிலின் கற்களைக்கொண்டு புதுக்கோயில் தற்போது இருக்கும் இடத்தில் கட்டப்பட்டது. அப்போது கல்வெட்டுக்களின் அருமையை அறியாது அவைகளைத் தாறுமாருக இணைத்து விட்டார்கள். அப்படிப்பட்ட கல்வெட்டுக்கள் அம்மன்கோயிலில் ஐம்பதுவரை இருக்கின்றன. சுவாமி கோயிலில் எதுவும் இல்லை.அலங்கார மண்டபத்து முன்வாசல் தளத்தில் டச்சு எழுத்துக்கள் கொண்ட சில கற்கள் பாவப்பட்டிருக்கின்றன. பழுது பார்த்தபோது எடுத்த கற்களில் சில கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவைகள் 1923-ம் ஆண்டு 215 முதல் 223 வரை எண்களாக அரசியலார் பிரதி எடுத்திருக்கிருர்கள். அவைகளில் தமிழ்க் கல்வெட்டுக்களில் ஒன்றில் கூத்தாடு தேவர் (நடராஜர்) சன்னிதியில் தீபம் வைப்பதற்குச் செய்த தானமும், மற்ருென்றில் முதல் இராஜராஜன் மெய்க்கீர்த்தியாகிய ''திருமகள்போல'' என்ற தொடக்கமும், மூன்ருவதில் **பூம்பாவை** என்ற திருப்பெயரும்குறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுக்கள் ஒன்பது நூற்ருண்டுகளுக்கு முந்தியவை என அறியலாம். மேலும், சிவநேசச் செல்வர் திருமனை கடற்கரையில் இருந்ததுமன்றி, கடலில் தோணியிலிருந்தே சரக்கு எடுக்கும் வண்ணமாக சரக்கறை கட்டியிருக்க வேண்டும் என்றும், அதற்குப் பின்புறம் அவர் குடியிருக்க வசதி இருந்திருக்க வேண்டும் என்றும் அறியக் கிடக்கின்றது. ஈழ நாட்டுத் திருக்கோணமலை, துளுவநாட்டுக் கோவை (Gova) முதலிய இடங்களில் பரங்கியர்கள் 400 ஆண்டுகளுக்கு முன் செய்த வண்ணமே இம்மயிலையிலும் பரங்கியர்கள் கோயிலையும் மனைகளையும் இடித்துப் பள்ளியும் கோட்டையும் கட்டியிருக்கக் கூடும். அதற்குச் சான்றுகள் மேல் கூறிய புதைந்த கல்வெட்டுக்களே யன்றிக் கோட்டைத் தெரு என்ற வழக்கப் பெயரும் கொடிமரம் முதலிய சின்னங்களுமேயாம்.*

பிந்திய சரிதம்:– *H.D. Love என்பவர் எழுதிய சென்னைச் சரிதத்தில் 1516 முதல் போர்த்துக்கீசியர், துருக்க மூர்கள், பிரெஞ்சுக்காரர், டச்சுக்காரர் முதலியவர்கள் அடிக்கடி மாறிமாறி இவ்வூரைப் பிடித்துத் தம் வசப்படுத்திக் கொண்டு இருந்தார்கள் என அறியலாம். அந்நூலின்படிபக்கம்*

(Volume I பக்கம் 321 - 322) பிரெஞ்சுக்காரருக்கும் டச்சுக்காரருக்கும் 1672-ல் ஒரு போர் நடந்தது. அப்போது பிரெஞ்சுச் சேனையின் ஒரு பகுதி கபாலீசுவரர் சன்னிதியில் ஒளிந்து கொண்டதாம். ஆகவே, தற்கால கபாலீசுவரம் 1672-லேயே இருந்தது எனலாம். 1798-ல் எழுதப்பட்ட சென்னை நகரப் படத்தில் மயிலைத் திருக்குளம் காட்டப்பட்டிருக்கிறது. இத் திருக்குளத்தைப் பற்றி ஒரு கர்ணபரம்பரைக் கதையுமுண்டு. முகம்மதியர் வேண்டுகோளுக்கிணங்கி நவாப்பு கபாலீசுவரர் ஆலயத்திற்கு மேற்கே ஒரு பள்ளிவாசலைக் கட்டிவிட்டானாம். இந்துக்கள் அதனை எடுத்துவிடவேண்டும் என்று மன்றாடிக் கேட்க, நவாப்பின் இந்து மந்திரி நவாப்புக்குத் தெரிவிக்காமல் அவன் இல்லாதபோது ஒரே இரவில் பள்ளிவாசலை இடித்து அந்த இடத்தில் திருக்குளம் தோண்டிவிட்டதாகவும், நவாப்பு வந்தபிறகு வேறு எதுவும் செய்ய முடியாமல் முகரம் பண்டிகையின்போது முகம்மதியர்கள் தங்கள் தாஜிகளை அக்குளத்தில் கழுவிக்கொள்ளலாம் என்ற உரிமை தந்ததாகவும், அதுமுதல் அவ்வாறே நடப்பதாகவும் மக்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

புராணம்:—இத்தலத்தின் புராணம் திருமயிலைத் தலபுராணம் என்ற பெயரால் மயிலை நாதமுனி முதலியாரால் சமீபத்தில் எழுதப்பட்டுள்ளது. இதில் கபாலீசுவரம் மாத்திரமன்றிச் சுற்றிலும் உள்ள வெள்ளீசர், வாலீசர், முண்டகக் கண்ணியம்மை, மல்லீசர், காரணீசர், விருபாட்சீசர், தீர்த்தபாலீசர் முதலிய சன்னிதிகளும் கூறப்பட்டுள்ளன. மொத்தம் 806 செய்யுட்கள் கொண்டுள்ளது.

II (திரு.ம.பாலசுப்பிரமணிய முதலியார், B.A., B.L. அவர்கள் எழுதியவை)

திருமயிலையின் பழைமை:– "துறைக்கொண்ட செம்பவளம் இருள் அகற்றும் சோதித் **தொல்மயிலை**" என்றார் நம்பியாரூரர். இரண்டாயிரம் ஆண்டுகட்டு முன் டாலமி (Ptolemy) என்ற கிரேக்க ஆசிரியர் இயற்றிய பூகோள நூலில் MALLIARPHA எனப்படுவதே மயிலாப்பூர் என்று Vestiges of Old Madras Vol. I Chapter 23-ல் ஆசிரியர் H.D. LOVE கூறுகிறார். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் திருவள்ளுவர் வாழ்ந்தது மயிலையிலே. அவர் நண்பர் ஏலேலசிங்கர் கப்பல் வர்த்தகம் செய்ததும் இவ்விடத்தே. 11-வது நூற்றாண்டின் கல்வெட்டு ஒன்றில் (256/1912) மயிலார்ப்பில் பல **நானாதேசிகள்** கூடிச் சில தீர்மானங்கள் செய்தனர் என்று காணப்படுகின்றது. துறைமுகப் பட்டினமாகிய ஒரு வியாபாரத் தலத்தில்தான், பல தேசத்து மக்கள் ஒன்று கூடுவர். எனவே, டாலமி காலம்முதல் கல்வெட்டுக் காலம் வரையில் மயிலாப்பூர் ஒரு துறைமுகமாக இருந்தது. போர்த்துக்கேசியர் காலத்திலும் இத்துறைமுகம் சிறந்து விளங்கியது. இத்துறைமுகத்திற்கும், ஆங்கிலேயர் துறைமுகமாகிய சென்னையின் வடபாதிக்கும் ஓயாமல் வியாபாரப் போட்டியும் கடும்போரும் இருந்துவந்த செய்தி Vestiges of Old Madras Vol. I என்ற நூலில் நன்கு விளங்கும். பல்லவ மன்னர்கள் காலத்தில் மயிலை சிறந்து விளங்கியபடியால் திருமங்கையாழ்வார் திருவல்லிக்கேணியைக் கூறுமிடத்துத் "தேனமர் சோலை மாட மாமயிலைத் திருவல்லிக்கேணி" என்கிறார். கங்க பல்லவன் கம்பவர்மன் காலத்திய கல்வெட்டொன்று (189 /1912) மயிலாப்பூரில் அரச குடும்பத்தினர் வசித்ததைக் குறிக்கின்றது. மயிலை வாசிகளாயிருந்த பல வியாபாரிகள் வேறு பல தலங்களைத் தரிசித்தபோது சந்தி விளக்கு நந்தா விளக்குகட்குத் தானம் செய்த வரலாறுகள், பல கல்வெட்டுக்களால் அறியப்படுவதிலிருந்து

அவர்கள் சென்ற இடங்களிலெல்லாம் தானம் செய்யக்கூடிய செல்வமும் புண்ணியமும் பெற்றிருந்தனர் என்று ஊகிக்கலாம். அத்தகைய வியாபாரிகளுள் தலையாயவரே பூம்பாவையின் தந்தையாராகிய **சிவநேசர்**.

மயிலாப்பு என்ற பெயர்:– திருநாவுக்கரசர் தேவாரத்தில் மூன்றிடங்களில் **மயிலாப்பு** கூறப்பெறுகின்றது. திருஒற்றியூர்த் திருத்தாண்டகத்து ஆறுவது திருப்பாடலில் ''வடிவுடைய மங்கையும் தாமும் எல்லாம் வருவாரை **எதிர்கண்டோம் மயிலாப்** புள்ளே'' என்ற தொடர், சுவாமிகள் மயிலையிலிருந்தே ஒற்றியூர் சென்றார் என்று சேக்கிழார் கூறுவதற்கு அகச்சான்றாகின்றது. ''மங்குன் மதிதவழும் மாடவீதி **மயிலாப்பி** லுள்ளார்'' (6-2-1) என்று நாவரசர் மயிலையின் மாடவீதி யழகைப் புகழ்கின்றார். ''மயிலாப்பில் மன்னினார் மன்னி ஏத்து''ம் என்ற இடத்தில் (6-7-12) மயிலையைக் காப்புத் தலங்களுள் வைத்தார். இம்மூவிடத்திலும் நாவரசர் **மயிலாப்பு** என்றே கூறுகிறார். சில கல்வெட்டுக்களிலும் (261/1910, 189/1912) மயிலாப்பில் என்றே காணப்படுகிறது. வேறு சிலவற்றுள் **மயிலார்ப்பில்** என்று ரகர ஒற்றுடன் காணப்படுகிறது(256/1912). டாலமியும் **மல்லி ஆர்பா** என்பதில் ரகர ஒற்றுடன் கூறுகிறார். பூம்பாவைப் பதிகத்தில் ''மடமயிலைக் **கட்டு** இட்டம் கொண்டான்'' என்பதில் மயிலைக் கட்டு (= மயில்ஆர்ப்பு) என்பது இதற்கு ஆதரவாகத் திகழ்தல் கூடும். பெரியபுராணத்தில் மயிலை, மயிலாப்பூர் என்றே காணப்படுகின்றன. மயிலார்ப்பு மருவி மயிலாப்பு என்றாகியிருக்கலாம்; பின் மயிலாப்பூர் என்றும், சுருக்கமாக மயிலை யென்றும் ஆகியதும் கொள்ளற்பாலதே.

பழைய கோயிலும் புதிய கோயிலும்:– பழைய ஆலயம் இப்போது Santhome Cathedral உள்ள இடத்திலிருந்தது. அருணகிரிநாதர் காலம் வரையில் (கி.பி.1450) கடற்கரையிலிருந்தது, ''கடலக் கரைதிரை யருகேசூழ் மயிலைப் பதிதனில் உறைவோனே'' என்ற திருப்புகழ்ப் பகுதியால் துலங்கும். கி.பி.1516-ல் மயிலாப்பூர் போர்த்துக்கேசியர் கையில் சிக்கியது. சில ஆண்டுகளுக்குள் அவர்கள் ஆலயத்தைத் தகர்த்துக்,கோட்டையும் தங்கள் தொழுகைக்கு இடமும் கட்டினார்கள். கி.பி.1672-க்கு முன்பு இப்போதுள்ள இடத்தில் இப்போதுள்ள ஆலயம் கட்டப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாண்டில் பிரெஞ்சுக்காரருக்கும் மூர் துருக்கருக்கும் நடந்த போரில் பிரெஞ்சு சேனையின் ஒரு பகுதி இப்போதுள்ள ஆலயத்தில் பதுங்கியிருந்த செய்தி, மேற்கூறிய Vestiges of Old Madras என்ற நூலில் Vol.I, Chap. 24, பக்கம் 321, 322-ல் காணப்படுகின்றது. Santhome Cathedral சுமார் 40 ஆண்டுகட்கு முன் பழுது பார்க்கப்பட்டது. நிலத்தை அகழ்ந்தபோது பழைய சிவாலயத்தின் கற்களும் கல்வெட்டுக்களும் கிடைத்தன. அவை அரசாங்கத்தினரால் 215-223/1923 என்று குறிக்கப்பட்டுள்ளன. இவற்றுள், ''Found on stone excavated below the Cathedral at Santhome'' என்பன போன்ற குறிப்புக்கள் காணப்படுகின்றன. ஒரு கல்வெட்டில் (215) கூத்தாடு தேவர்க்கு விளக்கும்,மற்றொன்றில் (216) முதல் ராஜராஜன் மெய்க்கீர்த்தியும், மற்றொன்றில் (217) பூம்பாவை பற்றிய குறிப்பும் உள்ளன. பழைய கோயிலின் கற்களையும் புதுக் கற்களையும் கொண்டு புது ஆலயம் கட்டப்பட்டது. பழைய கல்வெட்டுப் பகுதி சுமார் 50 கற்களில் அம்மன்கோயில் சுவர்களில், மேல்கீழ் முன்பின் முறைமாறியும் தொடர்ச்சியின்றியும் அடுக்கப்பட்டுள்ளன. புதிய ஆலயத்தில் சுவாமி அம்மன் கோயில்களிலும் பிறவற்றிலும் கருப்பக்கிருகச் சுவர்களில் ஒரு கல்வெட்டுகூடக் கிடையாது. பழைய கோயில் கற்கள் வரும்போது, சில கிறித்தவர்கள் கல்லறைக் கற்களும் தவறி வந்துவிட்டன. அவற்றுள் ஒன்று

ஆறுமுகசுவாமி முகமண்டபத் தூணவரிசையிலும், மற்றொன்று சனிபகவான் கோயிலுக்கெதிரில் தளவரிசையிலும் உள்ளன. ஒன்றில் கி.பி.1646 என்ற குறிப்பும் உள்ளது. கி.பி.1798-ல் தயாரிக்கப்பட்ட சென்னையின் படத்தில் (Map of Madras) திருக்குளம் இப்போதுள்ள இடத்தில் காணப்படுகிறது. ஆர்க்காட்டு நவாப்பிடமிருந்து நிலம் பெற்றுக் குளம் எடுக்கப்பட்டதென்றும், முஹரம் பண்டிகையில் தாழிகளை இக்குளத்தில் விடும் உரிமை பெற்றார்கள் என்றும் சொல்லப்படுகிறது. ஒவ்வோராண்டும் முகம்மதியர் தாழிகளை இக்குளத்திலிடுகின்றனர்.

தலபுராணம்:– வடமொழியில் சைவமஹாபுராணத்து, கோடிருத்ர ஸம்ஹிதையில், உத்க்ருஷ்ட சிவக்ஷேத்ர ப்ரகரணத்தில் 11 அத்யாயம் கொண்ட கபாலீச ஸ்தல மாஹாத்ம்யம் கலி 5022-ல் அச்சிடப்பட்டது. தமிழில் குன்றக்குடி மடம் என வழங்கும் திருவண்ணாமலை ஆதீனத்தின் மயிலைக் கிளைமடத்திலிருந்த ஸ்ரீமத் அமிர்தலிங்கத் தம்பிரான் சுவாமிகள் இயற்றிய தலபுராணம் கலி 4995-ல், மகாவித்வான், காஞ்சிபுரம் சபாபதி முதலியார் உரையோடு அச்சிடப்பட்டது. சில காலத்துக்கு முன்பு (20 ஆண்டுகட்கு முன்) மயிலைவாசி- புராணிகர் - நாதமுனி முதலியார் இயற்றிய புராணம் ஒன்றும் உண்டு.

பூம்பாவைப் பதிகத்தில் காணப்படும் விழாக்களும் விரதங்களும்:– இப்பதிகத்தில் ஒன்பது பாசுரங்களில் இவை கூறப்பட்டுள்ளன. இவற்றுள் கார்த்திகை விளக்கீடு, ஆதிரைநாள், தைப்பூசம், மாசிக் கடலாட்டு, பங்குனி உத்திரம் ஆகிய ஐந்தும், தமிழ்நாடெங்கும் கொண்டாடப் பெறுவதால், மயிலையிலும் விசேடமா யிருந்தன; இன்றும் விசேடமாகவே உள்ளன. ஐப்பசி ஓண விழா ஸ்ரீராமபிரானால் கொண்டாடப்பட்ட செய்தி வடமொழி புராணம் 9-வது அத்தியாயத்தில் 32,33,34-வது சுலோகங்களில் கூறப்படுகிறது. ஐப்பசி ஓணத்தில் கொடியேற்றிக் கிருத்திகையில் தீர்த்தம் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. தமிழ்ப் புராணத்தில் ஐப்பசி ஓணத்தைப் பத்தாவது நாள் தீர்த்தமாகக் கொண்டு விழா ஸ்ரீராமரால் நடத்தப்பட்ட செய்தி கூறப்படுகிறது. இது தவசிரேஷ்டர்கள் அனுபவிக்கக்கூடிய தூய்மையான முறையில் கொண்டாடப்பட்ட சிறப்பைப் புகலியர்கோன் ''ஐப்பசி ஓணவிழாவும் **அருந்தவர்கள்** துய்ப்பனவுங் காணாதே'' என்று புகழ்கின்றார். அட்டமிநாள் என்பது சிவ விரதங்கள் எட்டனுள் ஒன்று; வைகாசி மாதம் சுக்கிலபக்ஷம் அஷ்டமியில் அநுஷ்டிக்கப்படுவது (முழுவிவரம் உபதேச காண்டம், சிவவிரத மான்மியச் சருக்கம் 307-315 பாடல்களிற் காண்க). இஃதன்றி ஒவ்வொரு மாதம் இரண்டு பக்ஷத்தில் இரண்டு அட்டமி, அமாவாசை, பூரணை, ஆதிரை ஆகிய ஐந்துமே, சிவாலயங்களில் பஞ்சபருவ உத்ஸவங்களாயிருந்தன என்பதற்கு (S. I. I. Vol. 7 - No. 541 = A-R 315/1901) என்ற எண்ணுள்ள கல்வெட்டு, பேராதரவு அளிக்கின்றது. இஃது இவ்வாறாயினும், வைகாசிமாதம் சுக்கிலபக்ஷம் அஷ்டமி நாளையே, ''பதினெண் கணங்கள்தம் அட்டமி நாள்'' என்று பிள்ளையார் குறிப்பதாகக் கொள்வதே சிறப்பாகும்.

பொற்றூப்பு:– (பொன் தாம்பு = பொன் ஊசல்) வலித்தல் விகாரத்தால் பாம்பு, பாப்பு என்றாயினாற்போல, தாம்பு தாப்பாகி, பொன்தாப்பு பொற்றூப்பாயிற்று. மார்கழி மாதத்தில் பல சிவாலயங்களில் மூன்று, ஏழு அல்லது பத்து நாட்கள் ஊஞ்சல் உத்ஸவம் (வடமொழியில் டோலோத்ஸவம் என்பர்.) நடப்பதுண்டு. பெருமானையும் பிராட்டியையும் ஊசலில் வைத்துப் பொன்னூசல் திருவெம்பாவை முதலியன ஓதுவதுண்டு. சீயத்திற்குச் (Siam) சைவம் சென்றபோது, டோலோத்ஸவமும் திருவெம்பாவைப் பாராயணமும் உடன்சென்று; இன்றும்

வேறு

2990. ஆங்கன மெழுந்து நின்ற **வணங்கிணை நோக்கு வார்கள்**
"ஈங்கிது காணீ" ரென்ன வற்புத மெய்தும் வேலைப்
பாங்குசூழ் தொண்ட ரான "ரரகர!" வென்னப் பார்மேல்
ஓங்கிய வோசை யும்பர் நாட்டினை யுற்ற தன்றே. 1092

சிறப்பாகக் கொண்டாடப்பெறுகின்றன. (விவரம் Quaritch Wales *இயற்றிய* Siamese State Ceremonies*) என்ற நூலிற் காண்க.*

பெருஞ்சாந்தி *என்பது* ***ஆவணி*** *அவிட்டம் ஈறாக மூன்று, ஐந்து அல்லது ஏழு நாட்களில், சிவயாகம் முதலிய சிறப்புடன் நடக்கும் பவித்ரோத்ஸவமாகிய சம்வத்ஸர பிராயச்சித்தம். போதிய வருவாயுள்ள சிவாலயங்களிலெல்லாம் இது நடைபெறும்; மயிலையில் மூன்றுநாள் மிகச் சிறப்பாக நடக்கிறது. வருஷம் முழுமையும் நடைபெறும் நித்திய நைமித்திக பூஜைகளில் புத்திபூர்வகமாயும், அபுத்திபூர்வகமாயும் ஏற்படும் குற்றங்குறைகளைப் போக்கிப் பரிசுத்தம் காண்பதற்கு ஆகம விதிப்படி அவசியம் செய்ய வேண்டுவது இப் பெருஞ்சாந்தி. கும்பாபிஷேகம் அல்லது குடமுழுக்கு என்றும் சிலர் இதைக் கருதுவதுண்டு.*

2990. (இ-ள்) *ஆங்கனம்...வார்கள் - அவ்வாறு தோன்றி எழுந்து நின்ற தெய்வ நலமுடைய பூம்பாவையாரை நோக்குவார்கள் எல்லாம்; "ஈங்கு இது காணீர்" என்ன-"இங்கு இதனை யாவரும் நன்கு காண்பீர்களாக!" என்று எடுத்துக் கூறி; அற்புதமெய்தும் வேலை- அற்புதமடைந்தபோது; பாங்குசூழ்...அன்றே - பக்கத்திற் சுற்றும் சூழ்ந்திருந்த திருத்தொண்ட ரானர்கள் அரகர! என்று இவ்வுலகில் முழக்கிய பேரோசை தேவ லோகத்தினையும் சென்று பொருந்தியது அப்போதே.*

(வி-ரை) *பாவையார் மீள உற்பவித்தெழுந்த அளவுள்ள வரலாறு முழுமையும் ஐஞ்சீர்க் கலிநிலைத்துறை யாப்பினுற் கூறிவந்த ஆசிரியரது திருவுள்ளக்கிடையினையும், பாவையார், திருவருளால் மீள வெளிப்பட்ட பின்னுள்ள தெய்வ அருள்நலக் கட்சி முதலியனவாய்க் கண்ட கடவுட்டன்மை பற்றிய வரலாறுகளை அதனின் ஒருசீர் மிகுத்து அறுசீர்விருத்த யாப்பினுலருளும் அமைதியினையும் கண்டுகொள்க. பாவையாரின் முன்னுற்பவத்தினும் புனருற்பவமானது சீர்மிகுத்த பண்புடையதென்று யாப்பின் குறிப்பிற் காட்டிய கவிநலமும் கண்டுகொள்க.*

அணங்கு-*அருளின் தெய்வத்தன்மை வாய்ந்த பெண் என்பது குறிப்பு.*

நோக்குவார்கள்-*இவர்கள் அங்கு மலிந்து கூடியிருந்த நகரார் நாட்டார் - நன்றியில் சமயத்துள்ளோர் முதலிய உலகியலார்கள்.*

ஈங்கிது...அற்புதமெய்தும் *- கண்ணினுற் காட்சியிற் காண்பதும் அதனை இன்ன தென்றறியாது மயங்கி நிற்பதுமன்றி இவர்கள் வேறறியுமாற்றலிலர் என்பார்* ***அற்புத மெய்தும்*** *என்றூர். "அற்புதம் அறியேனே" (திருவாசகம்).*

2991. **தேவ**ரு முனிவர் தாமுந் **திருவருட் சிறப்பு** நோக்கிப்
பூவரு விரைகொண் மாரி பொழிந்தன: ரொழிந்த மண்ணோர்;
யாவரு **"மிருந்த வண்ண மெம்பிரான் கருணை"**யென்றே
மேவிய கைக ளுச்சி மேற்குவித் **திறைஞ்சி வீழ்ந்தார்.** 1093

தொண்டரானோர்...ஓசை - அங்ஙனம் உலகினர் அவ்வாறு நிற்பத், திருத்தொண்டரானோர் இது சிவபெருமானது பெருங்கருணைத் திறமாகிய திருஅருளின் வெளிப்பாடு என்று கண்டு சிவநாம முழக்கிப் போற்றினர் என்பது.

உம்பர் நாட்டினை உற்றது - இந்நிகழ்ச்சியைக் காண விசும்பிடைத் தேவர்கள் நெருங்கினாராதலின் (2982) அரகர முழக்கம் அவர்பாலும் சென்று பொருந்திற்றென்க.

காணீர் என்ன—என்பதும் பாடம். *1092*

2991. (இ-ள்) தேவரும்...பொழிந்தனர் - (விசும்பிடை நெருங்கிய) தேவர்களும் முனிவர்களும் முதலியோர்கள் சிவபெருமானது திருவருளின் சிறப்பினை நோக்கி மந்தாரம் முதலிய தெய்வ மரங்களின் பூக்களினுலாகிய மணமுடைய பூமழையினைப் பெய்தனர்; ஒழிந்த...வீழ்ந்தார்- முன் கூறியவர்களொழிந்த நிலவுலக மக்கள் எல்லாரும் இவ்வாறு விளைவு பொருந்தியிருந்த வண்ணமானது "எம் நாயகராகிய சிவபெருமானது கருணையின் விளைவேயாம்" என்று கூறிப் பொருந்திய கைகளை உச்சிமேற் கூப்பி வணங்கி நிலமுற வீழ்ந்து பணிந்தனர்.

(வி-ரை) இதனுல் இது கண்ட விண்ணோர் மண்ணோர் செய்திகள் கூறப்பட்டது.

தேவரு முனிவர்தாமும் -இவர்கள் இந்நிகழ்ச்சி காண்பதற்கு விசும்பிடை வந்து நெருங்கியவர்கள் (2982).

திருவருட் சிறப்பு நோக்கி-குடத்தினின்று எழுந்த பாவையாரைத் திருவருட் சிறப்பாகவே நோக்கினுர்கள் என்பது.

பூவரு விரைகொள் மாரி–பூவரும்-பூவினுலாக்கப்படும்; பூவினின்று வரும்; **பூ**-மந்தாரம், கற்பகம் முதலிய தேவருலகப் பூக்கள்.

ஒழிந்த மண்ணோர்-தேவரும் முனிவரும் முன்பாட்டிற் கூறிய திறத்தவர்களும் ஒழிந்த ஏனைப் பண்புடைய உலகினர்கள்.

வீழ்ந்தார்-நிலமுற விழுந்து பணிந்தனர்.

1093

2992. (இ-ள்) அங்கு அவளுருவம்... பரசமயத்தினுள்ளோர் - அவ்விடத்தில் அவளுடைய முன் கூறியவாறுள்ள உருவத்தைக் காண்போராகிய ஏனைப் பரசமயத்திலுள்ளோர்கள் மிக்க அதிசயமடைந்து இச்செய்தியினுல் தத்தம் சமயங்களை நிராகரிக்கப்பெற்று அவ்வவரும் தோல்வியடைந்தவர்களேபோ லாயினர்; எங்குள...

2992. அங்கவ ளுருவங் காண்பா ரதிசய மிகவு மெய்திப்
பங்கமுற் றாரே போன்றார் பரசம யத்தி லுள்ளோர்;
"எங்குள செய்கை தான்மற் றென்செய்த வாறி" தென்று
சங்கையா முணர்வு கொள்ளுஞ் **சமணர்தள் ளாடி வீழ்ந்தார்.** 1094

செய்கைதான்... தள்ளாடி வீழ்ந்தார் - மற்று இச்செய்கைதான் எங்குள்ளது? எவ்வாறு செய்யப்பட்டது? என்று அறிந்து துணியமாட்டாது ஐயங்கொண்ட அமணர்கள் தள்ளாட்ட மடைந்து நிலத்திற் றடுமாறி வீழ்ந்தனர்.

(வி-ரை) பங்கம் - பழுது; கேடு. **பங்கமுற்றாரே போன்றார்** - பங்கம் சேறு என்று கொண்டு தமது பரசமயச் சேற்றில் விழுந்தவர்கள் போலாகிய நிலையினை அறிந்தனர் என்றுரைத்தனர் முன் உரைகாரர்கள். சேற்றில் விழுந்தோம் என்ற அறிவு பெற்றபோது அவர்கள் அதினின்றும் மேலேற முயற்சிப்பார்களாதலின் அது போல இவர்களும் உண்மைதெரிந்து ஈடேற முயற்சிப்பார்கள் என்று விசேட உரையும் கண்டார்கள்.

பரசமயத்திலுள்ளோர் - பங்கமுற்றாரே போன்றார்; சமணர் தள்ளாடி வீழ்ந்தார் - என்க.

பரசமயத்தார் - என்றது சமணருள்ளிட்ட பரசமயத்தார்களை எல்லாம் பொதுவில் உணர்த்திற்று. முன் **நன்றியில் சமயத்தினுள்ளோர்** (2982) என்ற கருத்து; அவருள் சமணர் தமது சமயக் கொள்கையின் பிடிவாத முடையவர்களானமையாலும், அந்நாளில் அவர்களே மிகுந்து வலிமையும் பெற்றிருந்தமையாலும் தம் சமயத்துக்குப் பங்கம் வந்ததென்ற நிலை கண்டபோது மேலும் உணர்வழிந்து தள்ளாடி வீழ்ந்தனர் என்பார் அவர்களை வேறு பிரித்தும் கூறினார்.

மண்ணோர் (அறிவுடையார்) **இறைஞ்சி வீழ்ந்தார்; சமணர்** (உண்மை அறிவு பெறுமையின்) **தள்ளாடி வீழ்ந்தார்**-என்ற நயமும் காண்க.

எங்குள... ...இதென்று - இஃது அதிசயத்தால் சமணர் நெஞ்சிடங் கொள்ளாது உரைத்த அதிசயக் குறிப்பு மொழி. இச்செயல் வேறெங்கு நிகழும்; எவ்வாறு யார் தாம் இதனைச் செய்ய இயலும் என்றதிசயித்தபடி. இப்பாட்டின் கருத்து,

> "இன்றிச் சமயத்தி னல்லதுமற் றேழையுடன்
> ஒன்றுசொலி மன்றத்து நின்றவரா?—ரின்றிங்கே
> அங்க முயிர்பெறவே பாடு மடியவரார்?
> எங்குமிலை கண்டா யிது"

எனத் திருக்களிற்றுப்படியாரில் (65) எடுத்துப் போற்றப்பட்டது.

சங்கை - ஐயம்; அச்சம் என்றலுமாம்.

தள்ளாடி வீழ்தல் - தம்மைத்தாம் தாங்கி நிற்கமுடியாமல் மயங்கி நிலத்தில் வீழ்தல்; சமணரது சமயநிலை வீழ்ந்த குறிப்புமாம்; பிள்ளையாரால் பரசமய நிராகரிப்பு நிகழ்ந்தவாறு காட்டப்பட்டதுமாம்.

முன் பாட்டினுற் சைவத் திறத்து உள்ளோர்பால் நிகழ்ச்சியும் இப்பாட்டினுற் பரசமயத்துள்ளோர்பால் நிகழ்ச்சியும் கூறப்பட்டன. 1094

பூம்பாவையாரின் தெய்வக் காட்சி நலம்:—

இனி, 2993 முதல் 3006 வரை பதினான்கு பாட்டுக்களால் பூம்பாவையாரின் தெய்விக மறுபிறப்பின் காட்சி நலங்களை ஒவ்வோர் அவயவங்களின் உயரிய இலக்கண அமைதிபற்றி ஆசிரியர் கண்டு காட்டியருளுகின்றார். "கண்ணுதல் கருணை வெள்ள" மாகவே (3007) பூம்பாவையாரின் தோற்றத்தைப் பிள்ளையார் "ஆயிர முகத்தாற் கண்டார்"(3007) என்று கூறும் ஆசிரியர், அவர் இவ்வாற்றாற் கண்டாரெனத் தாமும் கண்டு காட்டியருளுதல் வேண்டுவது அமைதியாயிற்று; வெறும் மாயாபிண்டங்களாகிய உடலைப்பற்றிப் பெண்களை வருணித்துக் காமச்சுவை பொலியக் கவி பாடுதல் எனைப் பசுநூல் கற்கும் புலவர்களிடை மிகுதியும் காணலாம்; பதி புண்ணியப் பெருவாழ்வுடையராய்ப் பதிநூல் ஒன்றுமே பாடிய ஆசிரியர் சேக்கிழார் பெருமானது இயல்பும் மரபும் அஃதன்று; சிறுமியரையும் பருவநிறைந்த மகளிரையும் கூறவரும் இடங்களிலெல்லாம் அவ்வச் சரிதநிலை யறிதற்கு வேண்டிய அளவுமட்டும் அணியியலைப் பொதுவகையால் உணர்த்திச் செல்வது மரபாதல் கண்டுகொள்க. மணம் பெறுத மங்கையர்களின் உடல்நல இயல்புகளை மட்டில்லாது வருணித்தல் காமச் சுவையை ஊட்டி மனத்தூய்மையினைக் கேடு செய்தலாகும்; மணம்பெற்ற மாதர்களை அவ்வாறு கூறுதல் "வேற்றோர் மனைவியர் தோற்றம் புகழ்ந்த" தாகித் தகாத செயலாகி முடியும்; "வரமலர் மங்கையிங்கு வந்தன ளென்ன" (279); "மானிளம் பிணையோ" (280); "நாடுமின் பொற்பு வாய்ப்பு நாளுநாள் வளர்ந்து பொங்க" (281); "அள்ளுதற் கமைந்த பொற்பு"(282); "உறுகவின்மெய்ப் புறம்பொலிய...நறுமுகைமென் கொடிமருங்கு னளிர்ச்சுருளுந் தளிர்ச்செங்கை, மறுவில்குலக் கொழுந்தினுக்கு மணப்பருவம் வந்தணைய"(880); "மடக்கொடிதன் மஞ்சுதழைத் தெனவலர்ந்த மலர்க்கூந்தற் புறநோக்கி" (894); "அணங்கனைய திலகவதியார்" (1289); "நல்லவென உறுப்புநூ லவருரைக்கு நலநிரம்பி, மல்குபெரு வனப்புமீக் கூரவருமாட்சியினுல், இல்லிகவாப் பருவத்தில்" (1722); "செம்பொன்செய் வாசிச் சூட்டுத் திருமணிப் புனைபூண் செல்வப், பைம்பொனின் மாலை வேய்ந்த பவளமென் கொடியொப் பாரை... ...யம்பொன்செய் தீப மென்ன வழகலங் கரித்து வைத்தார்" (3121 = புரா-1223); "தேனுர் கோதைச் சிங்கடியார்... ...மானுர் நோக்கின் வனப் பகையார்" (3192); "கோவா முத்துஞ் சுரும்பேறுக் கொழுமென் முகையு மனையாரை" (3381 = ஏயர் -புரா -227) முதலியனவாய் வருமிடங்களிற் கூறும் மரபும், நிலையும் பார்க்க. இனித், "தேனலர் கமலப் போதிற் றிருவினு முருவ மிக்கார்" (364); "திருவினும் பெரியாள்" (412); "மன்றலங் குழன்மென் சாயன் மாதேவி" (476); "திருமக ளென்ன நின்ற தேவியார்" (480); "பூங்குழலார்" (1730); "மணமலியு மலர்க்கூந்தல் மாதரார்" (1733); "மடநடை மயிலன் னுரைத் தாமரைத் தவிசின் வைகுந் தனித்திரு வென்ன" (1758) முதலியனவாய் வருமிடங்களின் மரபும், நிலையும் கருதுக.

இனி, ஈண்டுப் பாவையாரது முன்னுற்பவத்தில் "பாவை நல்லுறுப் பணிகிளர் பண்பெலா நோக்கிப், பூவி னுளென வருதலிற் பூம்பாவை யென்றே" (2942); "தளரு மின்னினங் குரமென" (2944); "அழகின் முன்னிளம் பதமென வணி விளக்கென்ன" (2945) "அக்கொம்பனு டகைமை யிந்த வையகத் தின்மையால்" (2947) என்றவாற்றுல் எடுத்துக்கூறிய இயலும் மரபும்

குழல்

2993. **கன்னிதன் வனப்புத் தன்னைக் கண்களான் முடியக் காணார்**
முன்னுறக் கண்டார்க் கெல்லா மொய்கருங் **குழலின்** பாரம்
மன்னிய வதன செந்தா மரையினிற் கரிய வண்டு
துன்னிய வொழுங்கு துற்ற **சூழல்போ லிருண்டு தோன்ற,** 1095

முன்காட்டிய நிலைகள் போன்றே வந்தனவாம்; இவை வேறு; மேலால், இனி, இப்பதினன்கு பாட்டுக்களினும் எடுத்துக் கூறும் மரபும் நிலையும் வேறு; முன்னர்க் கூறிய உடம்பின் நிலை சிவ சங்கற்பத்தின் வழிப் பிரமன் படைப்பினில் வந்தவை; அவை பாச சம்பந்தமாகிய மாயை காரிய உருவத்தைப் பற்றியவை. இனிக் கூறுவன அவ்வாறன்றிச் சிவ சிருட்டியாகிச் சிவஞானத்தின் ஆணையாற் பாசம் பற்ருது புனருற்பவத்தில் வந்த புனித உருவத்தைப் பற்றுவன. இவை சிவபெருமானது கருணைச்செயலின் விளைவுகளையே காண்வரக் காட்டி நிற்றலால் இவற்றை எத்துணை எடுத்துக் கூறினும் சிவனது கருணையினை அத்துணையும் போற்றுதலேயாம். ஆதலின் பிரமன் தனது படைப்பின் எழிலைக் கண்டவாறன்றிக் கண்ணுதல் கருணை வெள்ளத்தினையே பிள்ளையார் ஆயிரமுகத்தாற் கண்டார் என்று கூறுதல் காண்க. இவ்வாறு முன்னெல்லாம் கூறும் நிலைகளுக்கும் இனி ஈண்டுக் கூறும் நிலைக்கும் உள்ள வேற்றுமையும் உட்கிடையும் உய்த்துணர்ந்துகொள்க. இதுபோல வேறெவ்விடத்தும் கூருமையும் கருதிக்கொள்க. இப்பாட்டுக்களின் இலக்கியச் சுவையாகிய உவமைநல முதலிய நயங்கள் அவ்வந்நூல்களில் வல்ல பெரும் புலவோர்பாற் கேட்டுணரத் தக்கனவாதலின் ஈண்டுப் பொழிப்பாகக் கருத்துரையும்,சிற்சில குறிப்புக்களும் மட்டுமே தரப்படுகின்றன. இத்துணையும் ஒரு பொருள் மேலனவாய்த் தொடர்புபற்றி வருதலின் ஒருசேரக் கண்டு உரைக்கப்பட்டன.

குழல்

2993. (இ-ள்) கன்னிதன்... காணர் - (குடமுடைந் தெழுவாள் போற்று தாமரைப் போதவிழ்ந் தெழுந்தனள்போன்ருளாய் நின்ற) கன்னியாகிய பூம்பாவையாரது அழகு முழுமையினையும் கண்களால் முற்றக் காணுதார்களாகி;முன்னுறக் கண்டார்க்கெல்லாம் - தம் முன்பு கண்கொண்ட அளவே கண்டு அம்மட்டிலடங்கிக் கண்டு கொண்டவர்க்கெல்லாம் தோன்றிய நிலையாவது; மொய் கருங்குழலின் பாரம் - மொய்த்து வளர்ந்த கரிய கூந்தலாகிய சுமை; மன்னிய...தோன்ற - பொருந்திய முகமாகிய செந்தாமரையில் கரிய வண்டுக்கூட்டம் நெருங்கி மொய்த்து வரிசையாய்ச் சூழ்ந்திருந்தாற்போலக் கருநிறமடைந்து காணப்படவும்;

(வி-ரை) கன்னிதன் - அப்போது மணம்பெருத நிலை குறிக்கக் **கன்னி** என்றதுமன்றி, இனிப் பின்னரும் ''பாவை தன்மண மேனையோர்க் கிசைகிலேன்'' (3015) என்று சிவநேசர் அவரைக் கன்னிமாடத்து வைத்தபின் அவ்வாறே அவர் சிவத்தை மேவின குறிப்பும் காட்டியபடியாம். ஆயுள் முழுதும் கன்னியாக நிற்பவர் என்பார் இங்குத் தொடக்கத்திற் கன்னி என்ருர்.

வனப்புத்தன்னைக் கண்களால் முடியக் காணர்-அழகு முழுமையும் கண்களால் முற்றவும் காண இயலாமையின் முற்படக் கண்ட அளவில்மட்டும் காட்சியின் அமைந்து

நுதல்

2994. பாங்கணி சுரும்பு மொய்த்த பனிமல ரளகப் பந்தி
தேங்கம ழாரஞ் சேருந் **திருநுதல் விளக்க** நோக்கிற்
பூங்கொடிக் **கழகின் மாரி பொழிந்திட**ப் புயற்கீ ழிட்ட
வாங்கிய **வான வில்லின் வளரொளி வனப்பு** வாய்ப்ப. 1096

நின்றனர். அவ்வாறு கண்ட அளவில் மேற்கூறப்படுவதாம் என்க. "முன்னுறக் கண்டார்க் கெல்லாம்" என்ற கருத்துமிது. இக்கருத்தையே விரித்து தாள் கண்டார் தாளே கண்டார் - தோள் கண்டார் தோளே கண்டார்... ..." என்ற கம்பன் பாட்டுங் காண்க.

குழலின் பாரம் - விரிந்து செறிந்து நிறைந்து குவிதலின் **பாரம்** என்றார். **குழலின் பாரம் - தோன்ற** என்க.

துன்னிய ஒழுங்குதுற்ற சூழல் - ஒழுங்காக நிறைந்து சூழ்ந்த நிலை, பின்னி முடித்த தோற்றம் வண்டுக் கூட்டம் ஒழுங்குபடச் சுற்றிச் சூழ்ந்தமை.

தாமரையினில் - சூழல் - தாமரையில் தேன் உண்ண வண்டுகள் மொய்க்கு மியல்பு. **தாமரையின் மேல்** - என்பதும் பாடம்.

தாமரை - வதன செந்தாமரை உருவகம்; **வண்டு ஒழுங்குச் சூழல்** - தற்குறிப்பேற்ற அணியும் உள்ளுறுத்து விரவியது காண்க; மேல்வரும் பாட்டுக்களிலு மிவ்வாறே அணிநயம் கண்டுகொள்க.

கூந்தலானது கரிய வண்டுக்கூட்டம் தாமரையினை மொய்த்த ஒழுங்குபோலத் தோன்றிற்று என்பதாம். *1095*

நுதல்

2994. (இ-ள்) பாங்கணி... அளகப் பந்தி - பக்கத்தில் அழகிய வண்டுகள் மொய்த்த குளிர்ந்த பூக்களைச் சூடிய கூந்தற் பந்தியோடு; தேங்கமழ்...நோக்கில் - மணங்கமழும் திலகமணிந்த அழகிய நெற்றியினது பொலிவைப் பார்க்கில்; பூங்கொடிக்கு... பொழிந்திட - பூம்பாவையாராகிய பூங்கொடிக்கு அழகின் மழை பொழியும் பொருட்டு; புயற்கீழ்...வனப்பு வாய்ப்ப - மேகத்தின் கீழே இட்ட வளைந்த வானவில்லினது மிக்க ஒளி பொருந்திய அழகு பொருந்த;

(வி-ரை) முன்பாட்டில் குழலின் பாரத்தின் அழகினை வதனத்துடன் சேர்த்து அணிந்து கூறினார். இப்பாட்டில் அவ்வதனத்தின் நுதலின் விளக்கத்தைக் கூந்தலுடன் கூட்டி அணிந்து கூறுகின்றார்.

பந்தியோடு கீழேசேர்ந்த **நுதல் விளக்கம்** - புயலின்கீழ் வானவில்லின் வனப்புப் போன்றது என உருவுவமம். **ஆரம்** - சந்தனம் - அதனாலாகிய திலகத்துக்கு வந்தது.

பூங்கொடிக்கு அழகின் மாரி பொழிந்திட - தற்குறிப்பேற்றம். **அழகின் மாரி**- அழகுப் பயன் விளைக்கும் மழை.

புருவங்கள்

2995. **புருவமென் கொடிகள்** பண்டு புரமெரித் தவர்தம் நெற்றி
ஒருவிழி யெரியி னீரு யருள்பெற வுளனுங் காமன்
செருவெழுந் தனுவ தொன்றுஞ் சேமவில் லொன்று மாக
இருபெருஞ் சிலைகண் முன்கொண் டெழுந்தன போல வேர்ப்ப, 1097

பூங்கொடிக்கு - பூக்கும் கொடி என்றும், பூங்கொடி போன்ற பாவை என்றும் இருபாலும் பொருந்தவு முரைக்கநின்ற கவிநலம் காண்க. **பூங்கொடி** - உவமையாகு பெயர். **கொடிக்கு** - கொடி தழையும் பொருட்டு என்ற குறிப்புமாம்.

அளகப் பந்தி* - *அளகம் - கூந்தல்; **பந்தி** - ஒழுங்கு; **ஆரம்** - திலகம்.

புயற்கீழிட்ட வாங்கிய வானவில் - மேலே சூழ்ந்த மேகத்தின் கீழ் வானவில் இடுதல் மழைக்குறி என்பர். **வாங்குதல்** - வளைதல்.

வானவில்லின் வளரொளி வனப்பு - வானவில் நீல முதலாகச் சிவப்பீறாக ஏழு வன்னங்களை ஒழுங்குபட்ட கீற்றுக்களாக உடையது. உவமேயத்தில் **தேங்கமழ் ஆரம் சேரும் திருநுதல்** என்றது பன்னிறமுடைய திலகம் அணிதல் குறித்ததும், ஈரிடத்தும் வளைந்த தன்மையும் உவமையின் பொதுத் தன்மைகளாம்; தற்குறிப்பேற்ற முள்ளுறுத்த உருவும் வினையும்பற்றி வந்த உவமம். *1096*

புருவம்

2995. (இ-ள்) புருவ மென்கொடிகள்-புருவம் என்னும் மெல்லிய இரண்டு கொடிகள்; பண்டு... காமன்-முன்னாளில் திரிபுரமெரித்த சிவபெருமானது நெற்றித் தனிக் கண்ணின் வந்த தீயினாலே சாம்பராகிப் பின் அருளும் பெற உள்ளவனாகிய மன்மதனுடைய; செருவெழும்... ஒன்றுமாக - போரில் ஏந்திய வில்ஒன்றும், சேமமாக வைக்கப்படும் வில் ஒன்றுமாக; இருபெரும்...... ஏர்ப்ப - இரண்டு பெரிய விற்களின் தன்மைகளை முன்னே கொண்டு தோன்றி எழுந்தாற்போல அழகு செய்ய;

(வி - ரை) புருவங்களிரண்டும் காமனது செருவெழும் வில் - சேமவில் - என இரண்டன் தன்மைகள் கொண்டன போன்று விளங்கின என்க.

பண்டு... ...உளனுங் காமன் - உளனும் காமன் - சிலை யிரண்டு-என்றதனால் இங்கு உவமிக்கப்பட்ட காமனது சிலைகள் அவன் சிவபெருமானால் எரிக்கப்படவும் பின் அருள்பெறவும் நின்ற நிலைக்கு முன்னிருந்த நிலையிற் கொண்டவை. அதற்குப் பின் அவன் ஏந்தியவை அவனது ஆணை அவ்வாறு தோல்வியுற்றுப் பங்கப்பட்ட பின் வருதலால் ஈண்டு உவமைக்கு ஏற்ற உயர்வுள்ளனவல்ல என்பது குறிப்பு. அவன் பின் அருள்பெற நிற்பதனால் ஒருவாறு ஈண்டுவமைக்குத் தகுதி பெற்றனன் என்பதும் குறிப்பு. இக்கருத்தையே பற்றி "உருவளர் காமன்றன் வென்றிக் கொடிபோன்று" (1)என்ற திருக்கோவையாருக்கு "நுதல் விழிக்குத் தோற்று உரு விழப்பதன்முன் மடியா வாணையனாய் நின்றுயர்த்த கொடியை" என்று

கண்கள்

2996. மண்ணிய மணியின் செய்ய வளரொளி மேனி யாடன்
கண்ணிணை வனப்புக் காணிற் காமரு வதனத் திங்கள்
தண்ணளி விரிந்த சோதி வெள்ளத்திற் றகைவி னீள
ஒண்ணிறக் கரிய செய்ய **கயலிரண் டொத்து லாவ;** 1098

ஆசிரியர் பேராசிரியர் உரைக்கவாறும் காண்க. மேற்பாட்டில் **"வென்றிக் கொடியிரண்டு"** என்பதும் காண்க.

செரு எழும் தனு - சேமவில் - போரிற் பிடிப்பதும் அதற்குத் துணைவேண்டும் போது சேமமாக வைப்பதும் ஆகிய இரண்டு.

சிலைகள் முன்கொண்டு - சிலைகளின் தன்மையை மேற்கொண்டு என்க. **சிலைகள்** அவற்றின் தன்மைகட்காகி வந்தது. சிலையாகப் புருவங்கள் பயன்படாமையின் தன்மையளவிற் கூறினர்.

செரு எழும் - என்றது போரில் இறப்புவரையும் துன்பம் செய்தலையும், **சேமம்** - அவ்வாறன்றி இன்பஞ் செய்தலையும் ஆகிய இருவேறு தன்மைகளையும் குறிப்பாலுணர்த்தின. பிரிந்தார்க்குத் துன்பமும் இணைந்தார்க்கு இன்பமும் செய்தல் காமனது வில்லின் இருவேறு செயல்களாதலும் காண்க. "இருநோக் கிவளுண்க ணுள்ளதொரு நோக்கு, நோய்நோக்கொன் றந்நோய் மருந்து" (குறள்) என்று நோக்கிற்குச் சொல்லிய தன்மை அவற்றுடனிணைந்த புருவத்தின்மேலும் வைத்துக் காணநின்றதும் கருதுக.

இங்கு இவ்வாறன்றிக் கரும்புவில் ஒன்றும் அஃதிற்றபோது உதவப் புட்பவில் ஒன்றும் காமனுக்கு உண்டென் றுரைப்பாருமுளர்.

உளதாங் காமன்—ஒப்ப-ஏய்ப்ப-ஏற்க - ஏற்ப—என்பனவும் பாடங்கள். 1097

கண்கள்

2996. (இ-ள்) மண்ணிய...காணில் - கடைந்தெடுத்த மாணிக்கத்தினும் மிக்க செம்மையாகிய வளர்கின்ற ஒளிபொருந்திய மேனியினையுடைய பாவையாரின் இரண்டு கண்களின் அழகைக் காணுமிடத்து; காமரு...வெள்ளத்தில் – அழகு மிகுந்த முகமாகிய சந்திரனுடைய குளிர்ந்த கதிர்கள்விரிந்த நிலவொளியாகிய வெள்ளத்திலே; தகைவில்... ஒத்துலாவ - தடுத்தலில்லாத நீளமுடைய ஒள்ளிய நிறமும் கருமையும் செம்மையும் விரவிய இரண்டு கயல்மீன்கள் போல உலாவ;

(வி-ரை) மண்ணிய மணி - மண்ணுதல்-கடைதல்; கழுவுதல் என்றலுமாம்; **மணி** - மாணிக்கம்; செம்மணி.

மண்ணிய மணியின் செய்ய வளரொளி மேனி-பாவையாரின் முன்னுற்பவத்தில் "மணிகிளர் ஒளியின் அளவி லஞ்சுடர்க் கொழுந்தென" (2944) என்றார். ஈண்டு அம் மேனியானது

நாசியும் வாயும்

2997. பணிவள ரல்குற் பாவை **நாசியும் பவள வாயும்**
நணியபே ரொளியிற் றோன்று நலத்தினை நாடு வார்க்கு
மணிநிறக் கோபங் கண்டு, மற்றது **வவ்வத் தாழும்**
அணிநிறக் காம ரூபி யணைவதா மழகு காட்ட; 1099

சிவ சிருட்டியிலே கடைந்தெடுக்கப்பட்டுச் சிவ ஞானவொளியில் திகழ்வதனுல் ''மண்ணிய மணியின் சோதி'' என்றும், இவ்வொளி மேன்மேல் மங்குதலின்றி என்றும் வளரும் சிவஒளி என்பார் **வளரொளி** என்றும் கூறினுர்.

திங்களின் - சோதி - திங்கள் காமன் படைகளுள் ஒன்ருயும், **கயல்** அவனது கொடியாகவும் உள்ள குறிப்புடன் முன்பாட்டில் காமன் **இருபெருஞ் சிலை**களின் தன்மைபற்றிக் கூறியதற் கேற்பத் தொடர்ந்து கூறிய நயமும் காண்க.

கரிய செய்ய கயலிரண்டு - முன் செருவெழுந் தனுவும் சேமவில்லும்போல என்று இருவேறு தன்மைகள் குறித்தற்கேற்ப ஈண்டுக் கண்களுக்கும் இருவேறு தன்மை கூறுவார் **கரிய - செய்ய** - கயலிரண்டு என்ருர். இவ் விருதன்மைகளைப் பற்றி ''தழல்வேன் மிளிர்ந்து, முத்தம் பயக்குங் கழுநீர் விருந்தொடென் ஞுதமுன்னங், கித்தக் கருங்குவ ளைச்செவ்வி யோடிக் கெழுமினவே'' (388) என்ற திருக்கோவையாரும் காண்க.

சோதி வெள்ளத்தில் - இரண்டு கயலொத்து உலாவ - ஒத்து - கயல் உலாவுதலை ஒத்து; **கயல்** - நீரினுள் உலாவுத லியல்பாதலின் திங்கட்சோதியை வெள்ளம் என்ருர். ''இரண்டு நிலவின் கடல்கள்'' என முன்னர்க் கூறியதும் காண்க. **இணைக் கண்கள்** பிறழ்தல் - முகமாகிய நிலாவின் ஒரு வெள்ளத்துள் இரண்டு கயல்கள் உலாவுதலை ஒத்தன என்பதாம். *1098*

நாசி-வாய்

2997. (இ-ள்) பணிவளர்... நாடுவார்க்கு - பாம்பின் படம்போல வளரும் அல்குலையுடைய பாவையாரின் நாசியும் பவளம்போன்ற வாயும் அணுகநின்று பெரியஒளியுடன் தோன்றும் அழகினை நாடி அறியலுறுவார்க்கு; மணிநிறக் கோபம்... அழகு காட்ட - மாணிக்கம்போன்ற சிவந்த நிறமுடைய இந்திர கோபம் என்னும் தம்பலப்பூச்சியினைக் கண்டு அதனைக் கவரும்பொருட்டுத் தாழ்ந்து வரும் அழகிய நிறங்களைக்கொள்ளும் காமரூபி (பச்சோந்தி) சேர்வதாகிய அழகினைக் காட்ட; *1099*

(வி-ரை) நாசி - மூக்கு; **கோபம்** - இந்திரகோபம் என்னும் தம்பலப்பூச்சி; **காமரூபி** - பச்சோந்தி (மாறிமாறி விரும்பிய நிறம் கொள்வது.)

பவளவாய் - கோபம் (பூச்சி) போலவும், **மூக்கு** - காமரூபி போலவும், மூக்குப் பவளவாயை நணுகியநிலை கோபத்தை வவ்வ இறங்கிவரும் காமரூபி அணைவது போலவும் விளங்கின என்பதாம்; **பவளவாய்** - கோபம் எனவும், நாசி - காமரூபி எனவும் உருவுபற்றி வந்த உவமங்கள்; நணிய நலம் வவ்வத் தாழ்வதுபோல என்றது தற்குறிப்பேற்றத்தை

காது

2998. இளமயி லனைய சாய லேந்திழை **குழைகொள் காது**
வளமிகு வனப்பி னாலும் வடிந்ததா ளுடைமை யாலும்
கிளரொளி மகர வேறு கெழுமிய தன்மை யாலும்
அளவில்சீ **ரனங்கன் வென்றிக் கொடியிரண் டனைய** வாக; 1100

---

*உள்ளுறுத்து வினைபற்றி எழுந்த உவமை. **நாசி**யைக் காமரூபி என்ற உவமம் உருவினாலன்றி மெய்யும்பற்றி வந்தது.*

அனையதாம்—*என்பதும் பாடம்.* *1099*

காது

2998. (இ-ள்) இளமயில்...காது - இளமையாகிய மயிலைப்போன்ற சாயலை யுடைய ஏந்திய இழையணிந்த பாவையாரது குழையணிந்த காதுகள்; வளமிகு......தன்மையாலும் - வளப்பமுடைய அழகினாலும் வடிந்த(காதுத்) தண்டையுடைமையினாலும் மிகுந்த ஒளியுடைய சுறவேறானது பொருந்திய தன்மையினாலும்; அளவில் சீர்...அனையவாக - அளவில்லாத சிறப்பினையுடைய மன்மதனுடைய வெற்றிக்கொடி யிரண்டுபோல விளங்க;

(வி-ரை) பாவையாரது குழைகளணிந்த காதுகள் மன்மதனுடைய வெற்றிக்கொடிகள் இரண்டுபோலத் தோன்றின.

வளமிகு வனப்பு - வளமுடைய தன்மை ஈரிடத்துக்கும் ஒக்கும்; காதுகள் மேலகன்று கீழே வடிந்து இயல்பாகிய அழகுடன் அணிகளையும் கொண்ட வடிவும், எரிபோன் மேனிப் பிரான்றிறம் எப்போதும் கேட்கும் தன்மையும் கொண்ட நிலை அவற்றின் வளமிகு வனப்பு. **காமன் கொடி** - மீனக்கொடிகள். இவை, மேலகன்று மீனங்களின் ஒளியுருவம் வானில் துவள நிற்பதனால் விண்மீன்கள்போல விளங்குதல் இவற்றின் வளமிகு வனப்பு.

வடிந்த தாள் - காதுகள்பற்றிக் கூறும்போது வடிந்து தொங்கும் காதுத் தண்டு; இந்நிலை கொள்ளக் காதுகளை வளர்த்திக் குழை முதலிய அணிகளிடுதல் முன்னாளில் அழகென வழக்கில் நின்றது; இந்நாளில் அவ்வாறு காதுகளை வளர்த்தாது காதணிகளை மட்டில் வளர்த்தித் தொங்கவிடுதல் அணியெனக் கருதப்படுகின்றது; எவ்வாறாயினும் காதுகளோ, அணிகளோ காதுகளை ஒட்டி வடிந்த தாளுடைமை காணப்படுதல் இவ்வுவமையினை இன்றும் உண்மையில் விளக்குவதாம். கொடிகள்பற்றிக் கூறும்போது **வடிந்த தாள்** - கீழ்த் தாழ்ந்த கொடிக் காம்புகள்.

கிளரொளி மகரவேறு கெழுமிய தன்மை - காதுகளில் மகரம் போன்ற வடிவுடைய குண்டலங்கள் அணியப்படுதல். காமன் கொடியில் மகரம் - மீன் உருவம் தீட்டப்படுதல்; **கெழுமுதல்** - மேல் விளங்குதல்.

வென்றிக் கொடி - முன்பாட்டில் **''அருள்பெற உளனாங் காமன்''** என்றதன் கீழ் உரைத்தவை பார்க்க. ''வென்றிக் கொடி'' (திருக்கோவை -1); அளவில் சீர்-என்றதும் அக்கருத்து. நீறுபட்டுப் பின் அருளும் பெற்றபின் காமனது சீர் அளவுபட்ட சீராயிற்றென்க. என்னை?

நாசியும் வாயும்

2997. பணிவள ரல்குற் பாவை **நாசியும் பவள வாயும்**
நணியபே ரொளியிற் றோன்று நலத்தினை நாடு வார்க்கு
மணிநிறக் கோபங் கண்டு, மற்றது **வவ்வத் தாழும்**
அணிநிறக் காம ரூபி யணைவதா மழகு காட்ட; 1099

---

*சிவ சிருட்டியிலே கடைந்தெடுக்கப்பட்டுச் சிவ ஞானவொளியில் திகழ்வதனுல் ''மண்ணிய மணியின் சோதி'' என்றும், இவ்வொளி மேன்மேல் மங்குதலின்றி என்றும் வளரும் சிவஒளி என்பார் **வளரொளி** என்றும் கூறினர்.*

***திங்களின் - சோதி** - திங்கள் காமன் படைகளுள் ஒன்றாயும், **கயல்** அவனது கொடியாகவும் உள்ள குறிப்புடன் முன்பாட்டில் காமன் **இருபெருஞ் சிலை**களின் தன்மைபற்றிக் கூறியதற் கேற்பத் தொடர்ந்து கூறிய நயமும் காண்க.*

***கரிய செய்ய கயலிரண்டு** - முன் செருவெழுந் தனுவும் சேமவில்லும்போல என்று இருவேறு தன்மைகள் குறித்தற்கேற்ப ஈண்டுக் கண்களுக்கும் இருவேறு தன்மை கூறுவார் **கரிய - செய்ய** - கயலிரண்டு என்றார். இவ் விருதன்மைகளைப் பற்றி ''தழல்வேன் மிளிர்ந்து, முத்தம் பயக்குங் கழுநீர் விருந்தொடென் னுதமுன்னங், கித்தக் கருங்குவ ளைச்செவ்வி யோடிக் கெழுமினவே'' (388) என்ற திருக்கோவையாரும் காண்க.*

***சோதி வெள்ளத்தில் - இரண்டு கயலொத்து உலாவ - ஒத்து** - கயல் உலாவுதலை ஒத்து; **கயல்** - நீரினுள் உலாவுத லியல்பாதலின் திங்கட்சோதியை வெள்ளம் என்றார். ''இரண்டு நிலவின் கடல்கள்'' என முன்னர்க் கூறியதும் காண்க. **இணைக் கண்கள்** பிறழ்தல் - முகமாகிய நிலாவின் ஒரு வெள்ளத்துள் இரண்டு கயல்கள் உலாவுதலை ஒத்தன என்பதாம். 1098*

நாசி-வாய்

2997. (இ-ள்) பணிவளர்... நாடுவார்க்கு - பாம்பின் படம்போல வளரும் அல்குலையுடைய பாவையாரின் நாசியும் பவளம்போன்ற வாயும் அணுகநின்று பெரியஒளியுடன் தோன்றும் அழகினை நாடி அறியலுறுவார்க்கு; மணிநிறக் கோபம்... அழகு காட்ட - மாணிக்கம்போன்ற சிவந்த நிறமுடைய இந்திர கோபம் என்னும் தம்பலப்பூச்சியினைக் கண்டு அதனைக் கவரும்பொருட்டுத் தாழ்ந்து வரும் அழகிய நிறங்களைக்கொள்ளும் காமரூபி (பச்சோந்தி) சேர்வதாகிய அழகினைக் காட்ட; 1099

(வி-ரை) நாசி - மூக்கு; **கோபம்** - இந்திரகோபம் என்னும் தம்பலப்பூச்சி; **காமரூபி** - பச்சோந்தி (மாறிமாறி விரும்பிய நிறம் கொள்வது.)

பவளவாய் - கோபம் (பூச்சி) போலவும், **மூக்கு** - காமரூபி போலவும், மூக்குப் பவளவாயை நணுகியநிலை கோபத்தை வவ்வ இறங்கிவரும் காமரூபி அணைவது போலவும் விளங்கின என்பதாம்; **பவளவாய்** - கோபம் எனவும், நாசி - காமரூபி எனவும் உருவுபற்றி வந்த உவமங்கள்; நணிய நலம் வவ்வத் தாழ்வதுபோல என்றது தற்குறிப்பேற்றத்தை

காது

2998. இளமயி லனைய சாய லேந்திழை **குழைகொள் காது**
வளமிகு வனப்பி னாலும் வடிந்ததா ளுடைமை யாலும்
கிளரொளி மகர வேறு கெழுமிய தன்மை யாலும்
அளவில்சீ **ரனங்கன் வென்றிக் கொடியிரண் டனைய** வாக; 1100

உள்ளுறுத்து *வினைபற்றி எழுந்த உவமை.* **நாசியைக்** *காமனம்பு என்ற உவமம் உருவினாலன்றி* **மெய்யும்பற்றி** *வந்தது.*

அனையதாம்—*என்பதும் பாடம்.* *1099*

காது

2998. (இ-ள்) இளமயில்...காது - இளமையாகிய மயிலைப்போன்ற சாயலை யுடைய ஏந்திய இழையணிந்த பாவையாரது குழையணிந்த காதுகள்; வளமிகு......தன்மையாலும் - வளப்பமுடைய அழகினாலும் வடிந்த(காதுத்) தண்டை யுடைமையினாலும் மிகுந்த ஒளியுடைய சுறவேறனது பொருந்திய தன்மையினாலும்; அளவில் சீர்...அனையவாக - அளவில்லாத சிறப்பினையுடைய மன்மதனுடைய வெற்றிக்கொடி யிரண்டுபோல விளங்க;

(வி-ரை) பாவையாரது குழைகளணிந்த காதுகள் மன்மதனுடைய வெற்றிக்கொடிகள் இரண்டுபோலத் தோன்றின.

வளமிகு வனப்பு - வளமுடைய தன்மை ஈரிடத்துக்கும் ஒக்கும்; காதுகள் மேலகன்று கீழே வடிந்து இயல்பாகிய அழகுடன் அணிகளையும் கொண்ட வடிவும், எரிபோன் மேனிப் பிரான்றிறம் எப்போதும் கேட்கும் தன்மையும் கொண்ட நிலை அவற்றின் வளமிகு வனப்பு. **காமன் கொடி** - மீனக்கொடிகள். இவை, மேலகன்று மீனங்களின் ஒளியுருவம் வானில் துவள நிற்பதனால் விண்மீன்கள்போல விளங்குதல் இவற்றின் வளமிகு வனப்பு.

வடிந்த தாள் - காதுகள்பற்றிக் கூறும்போது வடிந்து தொங்கும் காதுத் தண்டு; இந்நிலை கொள்ளக் காதுகளை வளர்த்திக் குழை முதலிய அணிகளிடுதல் முன்னாளில் அழகென வழக்கில் நின்றது; இந்நாளில் அவ்வாறு காதுகளை வளர்த்தாது காதணிகளை மட்டில் வளர்த்தித் தொங்கவிடுதல் அணியெனக் கருதப்படுகின்றது; எவ்வாறாயினும் காதுகளோ, அணிகளோ காதுகளை ஒட்டி வடிந்த தாளுடைமை காணப்படுதல் இவ்வுவமையினை இன்றும் உண்மையில் விளக்குவதாம். கொடிகள்பற்றிக் கூறும்போது **வடிந்த தாள்** - கீழ்த் தாழ்ந்த கொடிக் காம்புகள்.

கிளரொளி மகரவேறு கெழுமிய தன்மை - காதுகளில் மகரம் போன்ற வடிவுடைய குண்டலங்கள் அணியப்படுதல். காமன் கொடியில் மகரம் - மீன் உருவம் தீட்டப்படுதல்; **கெழுமுதல்** - மேல் விளங்குதல்.

வென்றிக் கொடி - முன்பாட்டில் **''அருள்பெற உளனாங் காமன்''** என்றதன் கீழ் உரைத்தவை பார்க்க. ''வென்றிக் கொடி'' (திருக்கோவை -1); அளவில் சீர்-என்றதும் அக்கருத்து. நீறுபட்டுப் பின் அருளும் பெற்றபின் காமனது சீர் அளவுபட்ட சீராயிற்றென்க. என்னை?

கழுத்து- முகம்

2999. விற்பொலி தரளக் கோவை விளங்கிய **கழுத்து** மீது
பொற்பமை **வதன மாகும்** பதுமநன் னிதியம் பூத்த
நற்பெரும் **பணில மென்னு நன்னிதி** போன்று தோன்றி
அற்பொலி கண்டர் தந்த வருட்கடை யாளங் காட்ட; 1101

முன்னர்க் காமனது சீர் அளவுபடாது யாரிடத்தும் செல்லும் ஆணை என்று பிரமன் - மால் முதலிய தேவரும் நினைக்க இடந்தந்தது; நீறுபட்ட பின்னர்ச் சிவபிரானிடத்தன்றி ஏனைப் பசுவருக்கத்தாரளவு மட்டும் செல்லவுள்ளதென்று யாவரும் அறியும்படி அமைந்தது. 1100

கழுத்து -முகம்

2999. (இ-ள்) விற்பொலி...கழுத்து-ஒளி விளங்கிய முத்துக் கோவைகள் விளங்கிய கழுத்து; மீது...பூத்த - அதன்மீது அழகமைந்த முகமாகும் பதும நன்னிதியத்தைத் தோற்றுவித்த; நற்பெரும்...போன்று - நல்ல பெரிய சங்கம் என்னும் நன்னிதியத்தினைப் போன்று தோன்றி; அற்பொலி...காட்ட - இருள்போலும் கரியவிடம் விளங்கிய கண்டத்தையுடைய திருநீலகண்டராகிய சிவபெருமான் தந்தருளிய பெருங்கருணைக்கு அடையாளத்தைக் காட்ட;

(வி-ரை) கழுத்து - பணிலமென்னு நன்னிதி போன்று தோன்றி - அருட்கடையாளம் காட்ட என்று கூட்டுக.

கழுத்து - முத்துக் கோவைகளை அணிதலாலும் வடிவத்தாலும் வெள்ளிய குழைவுடைய சங்குபோல்வதனுல் சங்க நன்னிதி போன்றதென்பது.

பதும நன்னிதியம் பூத்த - சங்க நிதியாயின் வளம் எதனையேனும் தருமோ? எனின், ஆம். இங்குத் தன் மேலே முகம் என்னும் பதுமநன்னிதி ஒன்று பூத்து விளங்க நின்றது. **கழுத்து** - சங்கநிதி என்றும், **வதனம்** - பதுமநிதி என்றும் உருவகப்படுத்தப்பட்டன.

பதும நன்னிதி - பணிலமென்னும் நன்னிதி - என்று ஈரிடத்தும் **நன்னிதி** என்றுர்; சிவனருளால் தரப்பட்டவை யாதலின், காமியங்களை உதவி உயிர்களைப் பிறவியிற் செலுத்திவிடும் அசுத்தத் தன்மையுடைய அப்பெயர்கொண்ட ஏனைத் தேவ நிதிகள்போலன்று என்று குறித்தற்கு. **நன்னிதி** - பிறிதினியைபு நீக்கிய விசேடணம். ஏனைய அத்தேவருலக நிதிகள் திருவருளால் தூயமேனி கொண்டு உற்பவித்த பாவையாரின் முகம் கழுத்து இவைகட்கு உவமிக்கப்படும் தகுதி யுள்ளவையல்ல என்பது குறிப்பு. முன்னர்க் **காமன்வென்றிக்கொடி - அருள்பெற உளனுங் காமன்** - என்ற குறிப்புக்களும் கருதுக.

தரளக் கோவை விளங்கிய - முத்துக் கோவைகளைக் கழுத்தில் வரிசை பெற அணிதல் முன்னுளில் பெருவழக்கு.

பூத்த - தந்த; ஈன்ற; பதுமம் பூவாதலின் பூத்த என்பது மேலும் பொருந்துமாறு காண்க. **பணிலம்** - சங்கம்.

கைகள்

3000. **எரியவிழ் காந்தண் மென்பூத் தலைதொடுத் திசைய வைத்துத்**
திரள்பெறச் சுருக்குஞ் செச்சை மாலையோ, தெரியின் வேறு
கருநெடுங் கயற்கண் மங்கை கைகளாற் காந்தி வெள்ளம்
அருகிழிந் தனவோ வென்று மதிசயம் வடிவிற் றோன்ற; 1102

அல்பொலி கண்டர் - அல் - *இருள்; அந்நிறமுடைய விடத்துக்காகி வந்தது.*

அருட்கு அடையாளம் - *அருளினைக் காட்டும் அறிகுறி; இறைவரது திருவருள் கண்ணுற் காண முடியாமையின் இவ்வடையாளம் பற்றிக் கருதலளவையான் அறிய நின்றது என்க; இந் நன்னிதியங்கள் கண்டருடைய அருளானன்றி வேறு யாவராலும் தரவியலாமையின் என்பது.*

பூப்ப—அற்பெருங்—*என்பனவும் பாடங்கள்.* *1101*

கைகள்

3000. (இ-ள்) கருநெடும்...கைகளால் - கரிய நீண்ட கயல்போலும் கண்களையுடைய மங்கையாகிய பாவையாரின் கைகள் காரணமாக(க் காணும்போது); எரி அவிழ்... மாலையோ - எரிபோல அலர்ந்த மெல்லிய செங்காந்தட் பூக்களைத் தலைத்தலை பொருந்தத் தொடுத்துப் பொருந்தும்படி வைத்து அதன் திரட்சி மேலால் சுருங்கி வரும்படி அமைத்த வெட்சிப்பூ மாலையோ?; வேறு தெரியின் - (அஃதன்றாயின்) வேறுமோர் வகையால் ஆராயுங்கால்; காந்திவெள்ளம்......வடிவிற்றோன்ற - உடம்பின்கண் உள்ள மேனியின் ஒளியினது மிகுதி இரு பக்கங்களிலும் மிக்கு வழிந்தனவோ? என்னும் அதிசயம் தோன்ற;

(வி-ரை) மங்கை - பருவங் குறித்தது.

கைகளால் - அதிசயம் தோன்ற - என்று கூட்டுக.

மாலையோ?- காந்தி வெள்ளம் அருகிழிந்தனவோ? - முன்னர்ச் செருவின் வில்லும் சேம வில்லுமாக - கரிய செய்ய கயலிரண்டுமாக - கொடியிரண்டாக - உவமித்தார் புருவங்களும் கண்களும் காதுகளும் இரண்டிரண்டிருத்தலால்; ஈண்டுக் கைகளும் இரண்டாதலின் இரண்டு பொருள்களை உவமித்தார்.

கைகளால் - தோன்ற - என்றது கைகளை நோக்குவதால் இத்தோற்றம் உண்டாயிற்று. **கைகள்** தோளினின்றும் கிளைத்துத் திரட்சியிற் சுருங்கிவந்து இருபுறமும் தொங்கும் காட்சி, மேற்புறத்தில் பரிய செங்காந்தட் பூக்களை இசையக் கட்டிக் கீழ்தாழ வரவரச் சுருக்கிய வெட்சியின் மாலைபோன்றன; தோளினிறமும் கைகளினிறமும் கீழே வரவர வேறுதலும் திரட்சியும் அவ்வாறுதலும்பற்றிப் பெரிய காந்தட் பூக்களை மேல் இசையவும், சிறிய வெட்சிப் பூக்களைக் கீழே இசையவும் அமைத்துக் கட்டிய மாலை என்றார். **கைகளாய்** - என்ற பாடமு முண்டு.

வேறு தெரியின் என்க; வேறு தெரிதலாவது மற்றொரு வகையால் நோக்குதல்.

கொங்கை

3001. ஏர்கெழு மார்பிற் பொங்கு **மேந்திளங் கொங்கை** நாகக்
கார்கெழு விடத்தை நீக்குங் கவுணியர் கருணை நோக்கால்
ஆர்திரு வருளிற் பூரித் தடங்கிய வமுத கும்பச்
சீர்கெழு முகிழைக் காட்டுஞ் செவ்வியிற் றிகழ்ந்து தோன்ற; 1103

கைகள் - *மேனியின் காந்தி வெள்ளம் பொங்கி இருபுறமும் வழிந்தது போன்றது என்பதாம்;* ***காந்தி*** - *மேனியினின்றும் வீசப்படும் ஒளி;* ***வெள்ளம்*** - *மிகுதி.*

வடிவில் - *வடிவினாலே; மெய்பற்றி வந்த உவமம் என்பது.* *1102*

கொங்கை

3001. (இ-ள்) *ஏர்...கொங்கை - அழகு எழுகின்ற மார்பில் பணைத்து முகிழ்த்து எழுகின்ற தனங்கள்; நாகக் கார்கெழு...நோக்கால் - பாம்பினது கரிய விடத்தினைப் போக்கும் கவுணியர் தலைவராகிய பிள்ளையாரது கருணைகொண்ட திருநோக்கினால்; ஆர்...தோன்ற - பொருந்திய திருவருள் என்னும் அமுதத்தினால் நிறையப்பெற்று அமைந்த கும்பத்தினை மேன்மூடிய முகிழ் போன்ற தன்மையில் விளங்கித் தோன்ற;*

(வி-ரை) *இளங் கொங்கைகள் ஏந்தி முகிழ்த்து விளங்குதல் பிள்ளையாரது கருணை நோக்கமாகிய அமுதம் பொதிந்த கும்பம் மூடியுடன் முகிழ்த்து விளங்குதல் போன்றது என்பது.*

பொங்கும் - *பணைத்து எழும்.* ***இளங் கொங்கை*** - *பருவநிலை குறித்தது.*

நாகக் கார்கெழு விடத்தை... ... பூரித்தடங்கிய அமுத கும்பம் - *பாம்பின் விடம் போக்க அமுதம் வேண்டும்; அமுதம் பெறுதற்குரிய அமுத நிலையம் வேண்டும்; அமுதம் பொறுதற்குரிய இடமும் வேண்டும் என இவை மூன்றும் கூறியபடியாம்.*

பூரித்து - *நிறைத்து; பணைத்து என்றலுமாம்.*

அடங்கிய அமுதகும்பச் சீர்கெழு முகிழ் - *அமுதத்தைப் பொதிந்து அடக்கி முகிழ்பெற மூடிய நிலை.*

செவ்வி - *தன்மை; இயல்.*

கொங்கை - தோன்ற - *என்க.* *1103*

உந்தி-உரோமவல்லி

3002. (இ-ள்) *வாமமேகலை...உரோமவல்லி - அழகிய மேகலையணிந்த கொடிபோன்ற பூம்பாவையாரின் இடையினையடுத்த உந்தியினின்றும் தொடங்கி மேலே செல்லும் ரோம ஒழுங்கானது; காமவேள்... கரந்து - மன்மதன் என்னும் வேடன் உந்தியினுள்ளே மறைந்து இருந்து; கொங்கை... அகப்பட - மேலே உள்ள கொங்கைகள் என்னும் அழகிய சக்கரவாகப்*

உந்தி உரோம வல்லி

3002. காமவே ளென்னும் வேட னுந்தியிற் கரந்து கொங்கை
நேமியம் புட்க டம்மை யகப்பட நேரி தாய
தாமநீள் கண்ணி சேர்த்த **சலாகைதூக் கியதே போலும்**
வாமமே கலைசூழ் வல்லி **மருங்கின்மே லுரோம வல்லி;** 1104

பறவைகளை அகப்படுத்தற்கு; நேரிதாய...போலும் - நேரான கயிற்றில் நீண்ட கண்ணிகளைக் கோத்ததோர் சலாகையை உயர்த்தியதே போன்றிருக்க;

(வி-ரை) உந்தியினின்றும் மேலே செல்லும் ரோம ரேகையானது காமன் உந்தியில் மறைந்து மேலே கொங்கை என்னும் நேமிப்புட்களை அகப்படுத்தத் தூக்கிய சலாகைபோலும் என்க.

காமன்... ...தூக்கியது - தற்குறிப்பேற்ற அணியினை உள்ளுறுத்து உருப்பற்றி எழுந்த உவமம்.

உந்தியிற் கரந்து - குழிப்பட இருத்தலின் மறைவிடமாகக் கூறப்பட்டது. **கொங்கை - நேமியம் புட்கள்** - உருவகம். **நேமிப் புட்கள்** - சக்கிரவாகப் பறவைகள்.

நேரிதாய தாமநீள் கண்ணி சேர்த்த சலாகை - நேரே மேலேசெல்லும் கயிறும் கண்ணியும் கூடிய அம்பு. **கண்ணி** - பறவைகளைப் பிடிக்கும் வலைபோலமைந்த அமைப்புடைய கயிற்றின் சுருக்கு. **சலாகை** - அம்பு.

உந்தியினின்றும் உரோம இரேகை மேனோக்கிக் கொங்கைகள் வரையும் செல்வதாம் என்பது. **நேரிதாய - சலாகை** என்க; சலாகை தூக்கியதே போலும் உரோமவல்லி என்று முடிக்க.

மருங்கு - இடை; இங்கு இடையின் இடையில் இருத்தலாலும் உரோமரேகை அதனின்று மேலெழுதலானும் உந்தி என்று பொருள் கொள்ளப்பட்டது. **உந்தியிற் கரந்து** என்றதும் காண்க.
1104

அல்குல்

3003. (இ-ள்) பிணி அவிழ்...அல்குல் - முறுக்கவிழ்ந்த மலர்களைச் சூடிய மெல்லிய கூந்தலையுடைய பெண்களுள் அமுதம் போன்ற பாவையாரது செம்பொன் அணிகளைப் பூண்ட அல்குலானது; பணி உலகு ஆளும் சேடன் - நாகலோகத்தை அரசாளும் ஆதிசேடன்; தங்கள்...அல்குலாகி - தங்கள் சுற்றமாகியதொரு பாம்பு பூம்பாவையைத் தீண்டிய பிழையின் பொருட்டுத் தான் அச்சமுற்றுச் செம்மணிகள் விளங்கும் காஞ்சி என்னும் எண்கோவை வடத்தினாற் சூழப்பெற்று அழகுடைய அல்குலாகி; பணம் விரித்து அடைதல் காட்ட - படத்தை விரித்துச் சேரும் தோற்றத்தைக் காட்ட;

(வி-ரை) அல்குல் - (சேடன் பணம் விரித்தடைதல்) காட்ட என்று முடிக்க. அல்குல் - பெண் குறி; இடைக்குக் கீழ்பாகம்.

அல்குல்

3003. **பிணியவிழ்** மலர்மென் கூந்தற் பெண்ணமு தனையாள் **செம்பொன்**
அணிவள ரல்கு றங்க ளரவுசெய் பிழையா லஞ்சி
மணிகிளர் காஞ்சி சூழ்ந்து வனப்புடை யல்கு லாகிப்
பணியுல காளுஞ் **சேடன் பணம்விரித் தடைதல்** காட்ட; 1105

தங்கள்...அடைதல் - அல்குல் சேடன் படம் விரிந்த நிலை போன்றது என்பார் சேடன் படம் விரித்து இங்கு அடைதலுக்குத் தற்குறிப்பேற்றமாகத் **தங்கள் அரவுசெய் பிழையாலஞ்சி** என ஓர் காரணமுங் கற்பித்துக் கூறினர்.

சேடன் தங்களரவு செய் பிழையாலஞ்சி - அடைதல் - தன் சுற்றத்தாருள் ஒருவன் ஒரு பிழை செய்தால் அப்பிழையினுக்குத் தீர்வு பெறும்பொருட்டு அவ்வினத்தின் தலைவன் புகலடைந்து இரந்து கேட்பதுபோல என்றதொரு நல்லொழுக்க நிலையினையும், பிழைக்கஞ்சுவது பெரியோர் இயல்பென்ற ஒழுக்க நிலையினையும் எடுத்துக்காட்டிய குறிப்பும் காண்க.

பிழையால் - அஞ்சி - அடைதல் - பிழைக்கஞ்சிப் புகலடைதல் என்ற குறிப்பும் பட நின்றது. ***தங்கள் அரவு*** - தங்கள் இனத்தாருள் ஓர் அரவு.

காஞ்சி - எண்கோவை மணிவடக் கோவை.

செம்பொன் அணிவள ரல்குல் - மறைவுத் தானமாகிய அவயவத்தைப் **பொன் அணி வளர்** என்று பொன் அணிந்து மறைத்துக் கூறிய நயம் காண்க.

மணிகிளர் காஞ்சி - ஆதிசேடன் ஆயிரம் பணமுடியுடைய னுதலினாலும், ஒவ்வோர் படமும் மணிகளை யுடைமையினாலும் அவன் படம் அல்குலாகிப் பணம் விரித்தடைந்தால் அத்துணையும் ஆயிரம் மணிகள் கிளர்ந்து காஞ்சியாகச் சூழ்ந்து விளங்கும் என உவமேயத்திற் பொன்னணிந்து மறைத்ததுபோலவே உவமையிலும் மணிக்காஞ்சியணிந்து மறைவுபடுத்திய கவிநயம் கண்டுகொள்க.

அல்குல் - பாம்பின் படம் போன்றதென்பது உவமை.

பணியுலகு - நாகங்களுக் கிருப்பிடமாகிக் கீழ் உலகுகளுள் ஒன்றாகக் கூறப்படும் நாகலோகம். *1105*

துடை - முழந்தாள்

3004. (இ-ள்) வரிமயில்...மாமை - வரிகளையுடைய மயில்போன்ற சாயலை யுடைய மங்கையாகிய பாவையாரின் பொன்போன்ற துடைகளின் அழகானது; கரி இளம்பிடிக் கை...காட்ட - இளம் பெண்யானையினது துதிக்கையின் அழகினை வெற்றிகொண்டு வாழையின் மெல்லிய தண்டின் அழகினையும் எடுத்துக் காட்ட; தெரிவுறும்...செவ்வி - நோக்கு வோர்க்கு மென்மையினை உடைய செழிய முழந்தாள்களின் அழகானது; புரிவுறு... ...பொங்க - கைத்திறமமைந்த பொன்னாலாகிய பந்துபோல விளங்கி ஒளி பொருந்திப்பொங்க;

துடை-முழந்தாள்

3004. **வரி**மயி லனைய சாயன் மங்கைபொற் **குறங்கின் மாமை**
கரியிளம் **பிடிக்கை வென்று கதலிமென் றண்டு** காட்டத்
தெரிவுறு மவர்க்கு மென்மைச் செழுமுழந் **தாளின்** செவ்வி
புரிவுறு **பொற்பந் தென்னப்** பொலிந்தொளி விளங்கிப் பொங்க; 1106

(வி-ரை) இப்பாட்டினால் துடைகள் - முழந்தாள்கள் என்ற இரண்டன் பொலிவும் கூறப்பட்டன.

துடையின் அழகு இளம் பெண்யானையின் துதிக்கையினையும், வாழைத் தண்டினையும் போன்று விளங்கியது.

முழந்தாளின் அழகு பொற்பந்து போன்று விளங்கியது.

குறங்கு - துடை; **மாமை** - அழகு; நிறம் என்பாருமுண்டு. இங்கு யானைத் துதிக்கையும் வாழைத் தண்டும் நிறத்தாலன்றி வண்ணத்தாலும் மென்மையாலும் உவமிக்கப்படுதலால் **மாமை** - நிறம் என்றுரைத்தல் சாலாதென்க. "மணிமிடை பொன்னின் மாமை சாய" *(நற் -304)* என்றதில் மாமை - அழகு என வருதல் காண்க.

பிடிக்கை - கதலித் தண்டு - துடையின் வடிவம் மேலே பெருத்து வரவரக் கீழே சிறுத்துவரும் நிலை குறிக்க இவ்வாறு கூறினர்.

காட்டுதல் - போன்றிருத்தல்; உவமஉருபு. **பிடிக்கை - தண்டு** - இவைகள் இவற்றின் தன்மை குறித்து நின்றன.

தெரிவுறுமவர் - பார்ப்பவர்; நோக்குவோர். **புரிவு** - கைப்பாடாகிய வேலை - திறம்; விருப்பம் என்றலுமாம்.

வருமயில்—என்பதும் பாடம். *1106*

கணைக்கால்—பரடு

3005. (இ-ள்) பூவலர்...கணைக்கால் - பூக்கள் அலர்தற்கிடமாகிய மணமுடைய மெல்லிய கூந்தலையுடைய பொற்கொடி போன்ற பாவையாரின் கணைக்கால்; காமன்... ...எய்த - மன்மதனது அம்பறுத் தூணியே போலும் அழகினாலே மேன்மை பொருந்த; மேவிய...மீ திட்டு - பொருந்திய செம்பொன்னாலாகிய தராசுத் தட்டின் அழகை வென்று; என்றும்...ஓங்கி - எக்காலத்தும் சித்திரம் தீட்டுவோர்களுக்கும் எழுத இயலாத பரடுகளின் ஒளி விளங்கி ஓங்க;

(வி-ரை) பொற்கொடி - பொன்னின் கொடிபோன்ற பாவையார்.

கணைக்கால் - காமனது ஆவநாழிகை போலவும், **பரடு** - செம்பொற்றகடு போலவும் விளங்கின என்பதாம்.

கணைக்கால்-பரடு

3005. **பூ**வலர் நறுமென் கூந்தற் பொற்கொடி **கணைக்கால்** காமன்
ஆவநா ழிகையே போலு மழகினின் மேன்மை யெய்த;
மேவிய **செம்பொற் றட்டின்** வனப்பினை மீதிட் டென்றும்
ஓவியர்க் கெழுத வொண்ணுப் பரட்டொளி யொளிர்வுற் றோங்க; 1107

காமன் ஆவ நாழிகை - அருள்பெற உளனுங் காமன்(2995); ''அனங்கன் வென்றிக் கொடி'' *(2998)* என்ற கருத்துக்களை ஈண்டுங் கூட்டுக. **ஆவநாழிகை** - அம்பறாத் தூணி; அம்புப் புட்டில்.

பொற்றட்டு - பொன் தராசுத் தட்டு. **பரடு** - குதிக்கால். ஆவநாழிகையும் தகடும் உருவுபற்றிய உவமை.

மீதிடுதல் - ஓங்குதல்; வென்றி கொள்ளுதல்.

ஓவியர்க் கெழுதவொண்ணு - ஓவியர் - சித்திரம் எழுதுவோர்; **ஓவியர்க்கும்** எனச் சிறப்பும்மை விரிக்க; அவயவ மிவைவெழுத வரிதென்ற அகத்துறை (திருக்கோவை - 79) வழக்கும் காண்க; மக்களின் ஒப்புமை பெற ஓவியம் எழுதும் கலையும் சிற்பம் செதுக்குதலும் பண்டைக் காலந்தொட்டுத் தமிழ் மக்கள் சிறந்து கைதேர்ந்து ஆண்டுவந்த கலைஞானங்களாம். ''ஓவியர்க் கெழுத வொண்ணு உருவத்தாய்'' என இத்தொடரின் சுவை கருதி இவ்வாறே எடுத்துப் பெய்து கொண்ட கம்பன் பாட்டு இச்சொற்றொடரின் சொன்னயமும் பொருணயமும் காட்டி நிற்கின்றது. **ஒளிர்வுறுதல்** - விளங்குதல்; ஒளிர்தல்.

கருமென்—ஒளிவிட்டோங்க—என்பனவும் பாடங்கள். *1107*

பாதம்

3006. (இ-ள்) கற்பகம்...போலும் - கற்பகமரம் தந்த சிவந்த அழகிய பவளத்தின் ஒளி வீசுகின்ற பொன்திரளுடன் வயிர வரிசைகளையுடைய பூங்கொத்துக்கள் மலர்ந்தன போலும்; பொலிவு - அழகினை; நற்பதம் காட்ட - நல்ல பாதம் காட்ட; ஞாலமெல்லாம்...தோன்றி - இந் நிலஉலகமும் விண்ணுலகமும் ஏனைய எல்லா உலகங்களும் அற்புதம் பொருந்தத் தோன்றி; அழகினுக்கு அணியாய் நின்றாள் - அழகுக் கழகுசெய்யும் பொருளாய் நின்றாள்;

(வி-ரை) பதம், (கற்பகமீன்ற -பூந்துணர் - போலும் பொலிவு) **காட்ட** என்று கூட்டுக.

கற்பகம்... ...மலர்ந்த போலும் - கற்பக மரத்தின் பூங்கொத்துக்கள். அவை பவளவொளியும் வயிரப் பத்தி ஒளியும் பொருந்தியன; பாவையாரின் பாதங்கள் அத்தகைய பூந்துணர் போன்றன என்பதாம்; மெய்பற்றி வந்த உவமம்.

பவளம் (சோதி) - **பொன்** (திரள்) - **வயிரம்** (பத்தி) - கால்கள் சிவப்பும் பொன்மையும் நகங்களின் வெள்ளிய ஒழுங்கும் உடைமையின் இவ்வாறு கூறினர்.

ஞாலமும் விசும்பும் எல்லாம் - நடு - மேல்-கீழ் உலகிலுள்ளோர் எல்லாரும்; **ஞாலம்** - உலகிலுள்ளோர். **எல்லாம்** - ஞாலமும் விசும்புமொழிந்த கீழுலகம்; பாதல உலகு.

பாதம்

3006. **கற்பக மீன்ற** செவ்விக் காமரு பவளச் சோதிப்
பொற்றிரள் வயிரப் பத்திப் **பூந்துணர் மலர்ந்த போலும்**
நற்பதம் பொலிவு காட்ட; ஞாலமும் விசும்பு மெல்லாம்
அற்புத மெய்தத் தோன்றி **யழகினுக் கணியாய்** நின்றாள். 1108

அவற்றைப் பெயராற் றுனுள் கூறலாகத் தாமரையுற்றி எனை யிரண்டினைமட்டுங் கூறி இதனை ஒழிபினாற் கூறினர். ''மிசையுலகும் பிறவுலகு மேதினியே தனி வெல்ல'' (1922) என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க. ''ஞாலமே விண்ணே பிறவே'', ''வானே நிலனே பிறவே'' (திருவா); பாவையார்பாற் பிழைக்க நாகலோகத்தின் பெயரைச் சொல்லாத குறிப்பும் காண்க.

தோன்றி- முன் (2993) ''கன்னிதன்'' என்ற பாட்டுமுதல் இதுவரை பதின் மூன்று பாட்டுக்களினும் தோன்ற - வாய்ப்ப - ஏற்ப - முதலாக முடிபு கூறிவந்த வினையெச்சங்களையெல்லாம் **தோன்றி** என்னும் இவ் வினையெச்சத்துடன் கூட்டி **நின்றாள்** என்ற வினைமுற்றுடன் முடித்துக்கொள்க.

அழகினுக் கணியாய் - ஏனை எப்பொருள்களையும் அழகுபடுத்தும் அழகு என்றதொரு குணமானது தான் அழகு பெறும்படியாக.

நின்றாள் - குடமுடைந்து எழுவாள் - எழுந்தனள் போன்றாள் (2988) - அணியாய் நின்றாள் என்று இத்துணையும் ஒன்றுபடுத்தி யுரைத்துக்கொள்க. *1108*

இவற்றின் பிண்டப் பொழிப்பு:-- பிள்ளையார் பதிக நிறைவாக்கினபோது எலும்புஞ் சாம்பலு நிறைந்த குடத்தினின்றும் குடமுடைந்து தாமரைமலரினின்றும் எழுவாளைப் போன்று பூம்பாவையார் பன்னிரண்டாண்டளவு வளர்ச்சியுடன் எழுந்தனர். அவ்வாறு எழுந்தபோது, அவரது அழகுமுழுமையும் கண்களால் முற்ற ஒருங்கே காண இயலாமை முன்னுறக் கண்ட கண்ட அளவே அமைவதாயிற்று. **குழலின்** பாரம் முகத்தாமரையிற் சூழும் வண்டின் ஒழுங்கு போலத் தோன்றவும், குழலின்கீழ் **நுதல்** அழகின்மாரி பொழிந்திட முகிலின்கீழ் இட்ட வானவில்போலத் தோன்றவும்; **புருவக் கொடி**கள் சிவபெருமானது நெற்றிக்கண்ணால் எரிந்து பின் அருள்பெற நிற்கும் காமனது செருஎழும் வில்லும் சேமவில்லும்போலத் தோன்றவும்; **கண்கள்** முகமதியின் வெண்ணிலா வெள்ளத்தில் நீண்ட கரிய செய்ய கயலிரண்டு உலாவுதல் போலத் தோன்றவும்; **நாசியும் பவளவாயும்** காமரூபி இந்திர கோபப்பூச்சியை வவ்வத் தாழும் நிலை போன்று தோன்றவும்; மகரக்குழை வடிந்த **காதுகள்** காமனது வென்றிக்கொடிகள் போலத் தோன்றவும்; முத்துவடம் சூழ்ந்த **கழுத்தின்**மீது **முகத்தாமரை** சிவனருளின் அடையாளமாகிப் பதுமநன்னிதி பூத்த சங்க நன்னிதிபோலத் தோன்றவும்; **கைகள்** மீது செங்காந்தள் தொடுத்த வெட்சிமாலையோ? அன்றி மேனியின் காந்தி வெள்ளம் இருபுறமும் வழிந்ததோ? என்று வடிவில் தோன்றவும்; **கொங்கைகள்** விடத்தை நீக்கப் பிள்ளையாரது திருநோக்கினால் அமுதம் நிறைத்து மூடிய அமுதகும்பங்கள் முகிழ்த்தனபோலத் தோன்றவும்; **உந்தி**யினின்று மேற்செல்லும் **உரோமரேகை** காமனாகிய வேடன், உந்தியில் மறைந்து நின்று,

*3007. எண்ணிலாண் டெய்தும் **வேதாப் படைத்தவ ளெழிலின் வண்ணம்**
நண்ணுநான் முகத்தாற் கண்டா; னவளினு நல்லா டன்பாற்
புண்ணியப் பதிஞ ரூண்டு பேர்பெறும் புகலி வேந்தர்
கண்ணுதல் கருணை வெள்ள மாயிர முகத்தாற் கண்டார். 1109

கொங்கைகளாகிய நேமிப்புட்களை அகப்படுத்த நேரிதாய் நீண்ட கண்ணிகொண்ட சலாகை தூக்கியதுபோலத் தோன்றவும்; செம்பொன் அணிவளர் **அல்குல்** சேடன் படம் அல்குலாகி உருக்கொண்டு மணிகிளர் காஞ்சிசூழப் பணம் விரித்தடைதல்போலத் தோன்றவும், **துடைகள்** இளம்பிடியின் கையும் வாழையின் தண்டும்போலவும், **முழந்தாள்** பொற்பந்துபோலவும் தோன்றவும்; **கணைக்கால்** காமனது அம்புப் புட்டில்போலவும், **பரடு** பொற்றராசுத் தட்டுப்போலவும் தோன்றவும்; **பாதங்கள்** கற்பகத் தருவின் செவ்விய பொன்றிரண்ட வயிரநிரை பூத்த பூந்துணர் போல அழகுகாட்டவும் மூவுலகமும் அதிசயம் பொருந்த அழகுக்கழகாக எழுந்து நின்றாள் என்பதாம்.

3007. (இ-ள்) எண்ணில் ஆண்டு...கண்டான் - அளவில்லாத ஆண்டுகளைத் தன் ஆயுளாகவுடைய பிரமதேவன் தான் படைத்த திலோத்தமை என்னும் பெண்ணினது அழகின் வண்ணங்களைத் தனக்குள்ள நான்கு முகங்களாற் கண்டு மகிழ்ந்தான்; அவளினும் நல்லாள் தன்பால் - அவளின் மேலாகிய நன்மைத்தன்மைகள் நன்கு நிரம்பிய பூம்பாவையாரிடமாக; புண்ணியப் பதினாறாண்டு...வேந்தர் - சிவ புண்ணிய விளைவாகிய பதினாறாண்டு அளவுபட்ட பெயரினைப் பெறும் சீகாழித் தலைவராகிய பிள்ளையார்; கண்ணுதல்...கண்டார் - நெற்றிக்கண்ணை யுடையவராகிய சிவபெருமானது கருணைப் பெருக்கினையே ஆயிரமுகங்களாற் காண்பாராயினர்.

(வி-ரை) எண்ணில் ஆண்டு எய்தும் வேதா - பிரமதேவனுடைய ஆயுள் எல்லை மனிதவருட அளவால் கணக்கிட்டால் அளவுகடந்த வருடங்களாகும் என்பது; பின்னர்ப் பிள்ளையாரது உலக நிலையின் ஆண்டெல்லையினை மனித வருடத்தால் கணக்கிட்டுக் கூறுதலின், கால அளவுகோல் தூக்கி ஒப்பிடும் பொருளிரண்டனிலும் ஒன்றாக இருத்தல்வேண்டிப் பிரமன் ஆயுள் எல்லையினை மனிதவருடத்தால் அளந்தார். பிரமன் ஆயுளாவது:-மானிடவருடம் ஒன்று தேவர்களுக்கு இரவும் பகலும் கொண்டதொரு நாளாகும்; அந்நாள் முந்நூற்றறுபது கொண்டது தேவ வருடம். எனவே மனிதவருடம் முந்நூற்றறுபது கொண்டது தேவர்க் கொருவருடமாம். அவ்வாறு தேவ வருடம் 12000 கொண்டது தேவயுகம்; தேவயுகம் இரண்டாயிரம் பிரமனுக்கொருநாளாகும்; இவ்வகை நாட்கணக்கிட்டுச் செல்லும் 100 ஆண்டுகளைத் தன் ஆயுள் எல்லையாகவுடையது பிரமனது ஆயுட்காலம்; இதுபற்றி இவ்வாண்டுகளை மனிதவருடத்தா லளத்தல் எண்ணிறந்த நிலையாதலின் **எண்ணிலாண் டெய்தும் வேதா** என்றார்; இவ்வாறாகிய ஆயுட்காலம் நிறைவின்போது பிரமன் இறந்துபடும்;''பெருங்கடன் மூடிப் பிரளயங்கொண்டு பிரமனும்போ, யிருங்கடன் மூடி யிறக்கும்'' (தேவா - அரசு).

புண்ணியப் பதினாறாண்டு பேர்பெறும் - பிரமனைக் கூறியதுபோல **ஆண்டு எய்தும்** என்னாது **ஆண்டு பேர்பெறும்** - என்றார். இறத்தலும் பிறத்தலும் இயல்பாயொழியும் வினைவயத்துள்ளாராகிய பசுவர்க்கத் துட்பட்ட பிரமன் முதலியோர்போலன்றிப், பிள்ளையார் வினைவயத்த ரல்லராகித் திருவடிமறவாப் பான்மையோராய், உலகத்தில் தொண்டினிலை தர

வந்தவராய், தம்பொருட்டன்றிப் பாசமய நிராகரித்தும் திருநீற்றினை ஆக்கியும் உலகத்தவரை உய்யக்கொள்ள அவதரித்தவராய் நின்ற சீவன் முத்த நிலையினராதலின் இறத்தல் பிறத்தல்களி னுட்படுவாரல்லர். அவர் இருந்துப் **பதினாறாண்டு** என்பது உலகவர் காணக் காட்டும் ஓர் கால அளவாதலன்றி ஆயுளை நாளெனும் ஈர்ப்புச் செய்து "நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும், வாள துணரப் பெறின்" (குறள்) என்ற தன்மைகொண்ட காலக் கூறுபாடன்று. காலம் நியதி முதலிய தத்துவங்களை யெல்லாங் கடந்த சிவானந்தப் பெருவாழ்வுடைய பெம்மான் எம் பிள்ளையாராதலின், **பதினாறாண்டு** என்பது பிரமன்பால் **எண்ணிலாண்டு எய்தும்** என்றாற்போல் அவரது ஆயுளை அளக்குநிலை பெற்ற அளவன்று; சுடர், உதயமுமீறு மடையும் அளவே நாள் எனப்படும். ஆயின் பிள்ளையார் கண்டுகொண்டிருக்கும் சிவ பரஞ்சுடருக்கு உதயமு மீறுமில்லை; ஆதலின் அந்த எல்லை அளவுபடும் ஆயுளும்; அது வளர்வதும் தேய்வதும் இல்லையாம். "மூப்பது மில்லை பிறப்பது மில்லை யிறப்பதில்லை" (நம்பிகள்) என்ற தன்மையே இவர் தன்மை. பதினாறாண்டு என்பது பெயர் மாத்திரையி னமைவதாம்; உண்மையினன்று என்பது ஆண்டு **பேர்** பெறும் என்ற குறிப்பு; திருமூலர் வரலாறு முதலியவையும் கருதுக.

புண்ணியப் பதினாண்டு பேர்பெறும் - புண்ணியம் - ஈண்டுச் சிவபுண்ணிய விளைவாகிய சிவஞானனந்த வாழ்வு குறித்தது; **பேர் பெறும்** என்றது இனித் திருமண நிறைவுவரை உள்ள எல்லையும் அடங்க நிற்பதால் எதிர்காலத்தாற் கூறினர்.

புண்ணியம் - இப்பொருளில் வந்ததென்பது, இதுபோலவே பதினாறாண்டு பேர்பெறும் தலைவராகிய திருக்கண்ணப்பதேவர் திறத்தில் "கலைவளர் திங்களே போல்,எண்ணிரண் டாண்டின் செவ்வி யெய்திஞ **ரெல்லை யில்லாப், புண்ணியந் தோன்றி** மேன்மேல் வளர்வதன் பொலிவு போல்வார்" (691) என்ற கருத்தினுலும் அறியப்படும். "பண்டுதிரு வடிமறவாப் பான்மையோர்" (1953) என்று பிள்ளையார் திறத்துக் கூறியதுபோலவே ஆண்டும் **"முன்புசெய் தவத்தி னீட்ட முடிவிலா இன்பமான, அன்பினை யெடுத்துக் காட்ட"** (751) என்றருளியதும், இப் பெருமக்கள் இருவருக்குமன்றி நாயன்மாருக்குப் புண்ணிய ஆண்டெல்லை கூறுமையும் கருதத்தக்கன.

புகலி வேந்தர் - புகலி - சீகாழியின் மூன்றாவது திருப்பெயர்; "புகலி காவலர்" (2981) என்று இவ்வரலாற்றில் தொடங்கிய நிலையினையே தொடர்ந்து முடித்துக் காட்டியவாறு கண்டுகொள்க; ஆண்டுரைத்தவை பார்க்க.

கண்ணுதல் கருணைவெள்ளம் ஆயிரமுகத்தாற் கண்டார் - பிள்ளையார் பன்னிரண்டாண்டளவு வளர்ச்சி பெற்றெழுந்த பூம்பாவையாரையேனும் அவருடைய அணி நலங்களையேனும் கண்டாரிலர்; கண்ணுதலின் உருவு காணவியலாத கருணை வெள்ளத்தையே உருவாகக்கண்டனர். தமது ஒருமுகத்தானன்றி, அதன் இரு கண்களானன்றி, ஆயிரமுகத்தாற் கண்டார்; "பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார்" என்ற தன்மையினராதலின். "நாலா யிரங்கண் படைத்தில னேயந்த நான்முகனே" என்ற கந்தரலங்காரமும் காண்க. **முகம்** - ஈண்டு "நான்**முகத்தால்**" என்றதனுடன் சொல்லொற்றுமை பெறினும் வாயில் என்ற பொருளில் வந்தது. **ஆயிரம்** - நான்முகன் என்புழிப் போல, எண்ணும் பொருளிலன்றி அளவிறந்த என்ற பொருளில் வந்தது. "ஆயிர ஞாயிறு போலு மாயிர நீண்முடி யானும், ஆயிரம் பொன்வரை

போலு மாயிரந்தோளுடையானும், ஆயிரந் தாமரை போலு மாயிரஞ் சேவடி யானும், ஆயிரம் பேருடையானு மாரு ரமர்ந்தவம் மானே'' (அரசுகள்); ''அடியா யிரந்தொழி லாயின வாயிர மாயிரம்பேர், முடியா யிரங்கண் கண்மூவா யிரமுற்று நீறணிந்த, தொடியா யிரங்கொண்ட தோளிரண் டாயிர மென்றுநெஞ்சே, படியா யிராப்பகற் றென்மரு தாளியைப் பற்றிக் கொண்டே'' (திருவிடை - மும் கோவை - 27) என்பனவாதி திருவாக்குக்களிற் போலக் காண்க. **வெள்ளம்** என்றதும் இக்குறிப்புத் தருவது.

ஆண்டு - நான்கு -(ஆயிரம்) - முகம் என்பன மூன்றும் வேதாவின்பால் வேறு பொருளிலும் , பிள்ளையார்பால் வேறுபொருளிலும் நின்றமை உய்த்துணர்ந்து கொள்க; பிரமன்பால் **ஆண்டு** - மனித வருடம்; **நான்கு** - எண்; **முகம்** - முகம். பிள்ளையார்பால் **ஆண்டு** - என்ற பெயர்மட்டில் அமைவது; **ஆயிரம்**- எண்ணிறந்தது; **முகம்** - வாயில்.

எழிலின் வெள்ளம் - கண்ணுதல் கருணைவெள்ளம் - ஈரிடத்திலும் வெள்ளம் -பெருக்கு- என்று வரினும் முன்னர்ப் பிரமன் கண்ட பெண்ணினது அழிவுறும் மாயாவிலாச அழகினையும், பின்னர்ப் பிள்ளையார் கண்ட பெண் ஒருத்தியின் அணிநலத்தின் மேல் வைத்து அதனையன்றி இறைவனது அழிவில்லாத, மாயைக்கு அதீதமாகிய, கருணைப் பெருக்கினையும் குறித்தது.

கண்ணுதல்... ...கண்டார் - நியதி தத்துவத்துள் நின்று பாவையாரை முன்னர் மறக்கருணை செய்து அழித்தெரித்த அந்நிலையே, ஈண்டு அறக்கருணை செய்து முன்னர் நின்ற வளர்ச்சியுடன் மீள உற்பவிப்பித்தலால் ஈண்டுக் **கண்ணுதல்** என்ற பெயராற் கூறினார். நுதற்கண் காமனை எரித்த ஆறே மீள உயிர்ப்பித்தருளியமை குறிப்பு. நெற்றிக் கண்ணின் கருணைத்திறம் பற்றி''நெற்றியிற் கண்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே'' (அரசுகள்); ''வல்லிருளா யெல்லா, வுலகுடன்றுன் மூடவிரு ளோடும்வகை நெற்றி யொற்றைக்கண் படைத்துகந்த உத்தமனூர்'' (நம்பி - கலய நல்லூர் -4); ''நெற்றியிற் றிகழ்ந்த வொற்றை நாட்டமும்...ஒள்ளிதின் விளங்க நாடக மாடுதி நம்ப'' (கோயினான் - 12) முதலிய திருவாக்குக்கள் காண்க.

கருணைவெள்ளங் கொண்ட நுதற்கண்ணினால் இறைவர் கண்டமையால் பிள்ளையார் கண்டார் என்பதும் குறிப்பு. ''காண வுள்ளத்தைக் கண்டு காட்டலின்'' (போதம் - 11).

வேதாப் படைத்தவள் எழிலின்வண்ணம் நான்முகத்தாற் கண்டான் - பிரமன் ஒருகால் மிக்க அழகுடன் பெண் ஒருத்தியைப் படைக்க எண்ணி அவ்வாறே திலோத்தமையைப் படைத்தான்; படைத்த பின் அவளழகினில் ஈடுபட்டுக் காமத்தின் மூழ்கி அவளைக் கண்டு தொடர, அவள் ஓடி மறைய, நான்கு முகத்தாலும் நான்கு திக்கினும் பார்த்தனன் என்பது பண்டைப் புராண வரலாறு; பெண் என்பது மாயை உருவம் என்றும் பாராது, தன்னாற் படைக்கப்பெற்றவள் தன் மகளாதலின் காம மூழ்கிப் பார்வை செய்தல் கூடாவொழுக்கமாம் என்றும் பாராது கண்டனன் எண்ணிலாண்டுற்ற தேவனாகிய பிரமன்; ஈண்டுப் பிள்ளையார் அவ்வாறன்றிப் பதினாறுண்டு பேர்பெறுபவர் கண்ணுதல் கருணைவெள்ளத்தையே கண்டார்; பிரமன் நான்முகத்தாற் கண்டான்; பிள்ளையார் ஆயிரமுகத்தாற் கண்டார் என்றிவ்வாறெல்லாம் பிள்ளையாரது பெருமையினைப் பலவாறும் உய்த்துணரவைத்த கவிநயம் காண்க; இறைவரது கருணைத் திறம் எத்தனை வகையானும் கண்டனுபவிக்கத்தக்க தென்பதுமாம்; இக்கருத்தையே

வேறு

3008. **இன்னணம் விளங்கிய வேர்கொள் சாயலாள்**
தன்னைமுன் கண்ணுறக் கண்ட தாதையார்
பொன்னணி மாளிகைப் புகலி வேந்தர்தாள்
சென்னியிற் பொருந்தமுன் சென்று வீழ்ந்தனர். 1110

பற்றிப் பின்னர் ''மேவிய தோளைத் தலைவர் விரிஞ்சன்முதல் எவ்வுயிர்க்குங், காவலனார் பெருங்கருணை கைதந்த படி போற்றி'' (3016) பன்முறையும் பணிந்தனர் என்றார்.

அவளினும் நல்லாள் - *பூம்பாவையாரின் அணிநலங்கள் பிரமன் படைத்த திலோத்தமையின் நலங்களினும் மேன்மையும் நன்மையும் கொண்டன என்பதாம். என்னை? இது சிவஞானச் சிருட்டியாதலான்.* **நன்மை** - *சிவனருள் விளைவு.* *1109*

3008. (இ-ள்) *இன்னணம்...தாதையார் - முன் கூறிய இவ்வாற்றால் விளங்கிய அழகினைக் கொண்ட சாயலையுடைய பூம்பாவையாரைத் தன்முன்னே வெளிப்படக் கண்ணுறக் கண்ட தாதையாராகிய சிவநேசர்; பொன்னணி... வீழ்ந்தனர் - பொன்னாலணியப்பட்ட மாளிகைகளையுடைய சீகாழித் தலைவருடைய திருவடிகள் தமது சிரத்திற் பொருந்தும்படி முன்சென்று வீழ்ந்து வணங்கினர்.*

(வி-ரை) இன்னணம் - *முன் 14 பாட்டுக்களில் விரித்தோதியவாறு.*

ஏர்கொள் சாயலாள் - *பூம்பாவையார்.* **ஏர்** - *அருளின் அழகமைப்பு;* **சாயல்** - *மென்மை. ஐம்பொறிகட்கும் விடயமாம் புலன்களைந்தன் மென்மையும் கொள்ளப்படும் (சிந் - உரை).*

தாதையார் - *சிவநேசர்; முன் ஈன்றெடுத்த அம்மரபுபற்றிக் கூறியது.* **முன் - தாதையார்** *என்று கூட்டியுரைக்க நின்றதும் குறிப்புமாம். இப் புனருற்பருவத்தில் உற்பவிப்பித்த தாதையார் பிள்ளையாராவர் என்பது பின்னர் (3012) வரும் வரலாறு.*

புகலி வேந்தர் - *முன்பாட்டிற் கூறிய குறிப்புக்கள் காண்க.*

தாள் சென்னியிற் பொருந்த - *தாடலைபோலத் திருஅடியில் முடி ஒன்றுபட்டுப் பொருந்தும்படி.*

வீழ்ந்தனர் - *அடியற்ற மரம்போலத் தன்முயற்சியின்றி வீழ்ந்தனர்.* *1110*

3009. (இ-ள்) *அணங்கினும்...அன்னவள் - திருமகளினும் மேம்பாடுடையவராய் அன்னம் போன்றவருமாகிய பூம்பாவையார்; பணம்...பணிந்து - படத்தைப் பொருந்திய ஐந்தலைப் பாம்பினை அரையிற் சாத்திய கபாலீசரது முன்னிலையிற் பணிந்து; மண்ணுளோர் தொழ - அதனைக் கண்ட உலகத்தவர் தொழும்படியாக, இணங்கிய...நின்றனள் - முகில் பொருந்திய மதிலையுடைய சீகாழித் தலைவராகிய பிள்ளையாரை வணங்கியே நின்றனள்.*

(வி-ரை) அணங்கு - *திருமகள்; இலக்குமி.* **மேம்பாடாவது** *சிவஞானச் சிருட்டியினுட்பட்டுச் சிவத்தை சாருந்தன்மை பெறுவதனால் அழியாநிலை பெற நிற்றல்.*

3009. **அ**ணங்கினு மேம்படு மன்ன மன்னவள்
பணம்புரி யரவரைப் **பரமர் முன்பணிந்**
திணங்கிய முகின்மதிற் **சண்பை யேந்தலை**
வணங்கியே நின்றனள் மண்ணு ளோர்தொழ 1111

அன்னம் அன்னவள் - அன்னம் - ஈண்டு அதன் நடையினைக் குறித்துநின்றது. அன்னநடைபோன்ற நடையினை உடையவர்.

பணம்...பணிந்து - பரமரது கருணை வெள்ளத்தான் மீண்டு வருதலின் அவரை முன்னர்ப் பணிந்தனர்; அன்றியும் இறைவரை முன் வணங்கிப் பின் குருவை வணங்கும் ஓர் முறைபற்றி முன் வணங்கியதுமாம். முன் - திருக்கோயில் வாயிலின் முன்.

பணம்புரி அரவு அரைப் பரமர் - அரவின் விடம் நீங்க அருளிய குறிப்புத் தோன்ற அரவினை இடையிற் கட்டிவைக்கும் இத்திறம்பற்றிக் கூறினார். முன் உற்பவத்தில் எப்போதும் வணங்கப்பெற்ற கபாலீசரை எலும்புருவாய்க் கிடந்த ஐந்தாண்டுகளும் பணிதலின்றிக் கழிந்தமையால் அவ்வாறு வழிபாடின்றிக் கழிந்தகாலத்திற் கிரங்கிய ஆராமையால் முன்னர்ப் கபாலீசரைப் பணிந்தனர். ***முன் பணிந்து*** - திருமதிற்புற வாய்தலில் (2978) இறைவரது அபிமுகத்தினில் வைக்கப்பட்ட குடத்தினின்றும் எழுந்து நின்றமையால் அங்குப் பரமர் முன்பு நின்றவாறே (கோயிலினுட் புகாமல்) பணிந்தனர் என்க.

சண்பை - சீகாழிப் பதியின் ஒன்பதாவது திருநாமம்; ***ஏந்தல்*** - பெருமை - மேம்பாடுடையவர்.

சண்பை ஏந்தலை வணங்கியே நின்றனள் - பிள்ளையாரது கருணை மெய்த் திருவாக்கினாலே விடநீங்கி யுய்ந்தமை தெரிந்தவர் பாவையார் ஆதலின் அவரை வணங்கினர். அன்றியும் பிள்ளையாரிடத்துத் தம் தந்தையார் கொண்ட ஆர்வமும் வழிபாடும் அறிந்தவராவர். இனித், தம்மைப் பிள்ளையாருக்கு உரியவராகத் தம் தந்தையார் கொடுத்த (2951) செய்தியறிந்தவராதலின் அவருக்குத் தாம் உரியவர் என்ற நிலையினையும் புந்தியுட் கொண்டவர்; ஆதலின் அவரை வணங்கி நின்றனர். ஆளுடைய அரசுகளால் ''தீவிட நீங்க வுய்ந்த திருமறை யவர்தம் சேயும்'' (அப்பூதியாரது மூத்த திருமகனார்) விடநீங்கி எழுந்தவுடன் இவ்வாறே அவரது''செய்ய பூவடி வணங்கி''ய நிலை (1818) ஈண்டு நினைவு கூர்தற்பாலது. இங்குப் பாவையார்போல் முன் கூறியவாறு பற்றிய முன்தொடர்புகள் இல்லாமையால், பிள்ளையாரருளால் முயலகனோய் நீங்கப்பெற்ற கொல்லிமழவன் மகள் நோய் நீங்கி எழுந்தவுடன் தன் தாதை புடையடைந்து நின்று பின்னரே தாதையும் தானும் கூட வணங்கினர். ''கன்னி யுறுபிணி விட்டு நீங்கக் கதுமெனப் பார்மிசை நின்றெழுந்து...பொருவலித் தாதை புடையணைந்தாள்'' (2217)

மண்ணுளோர் தொழ - இவ் வருள் நிகழ்ச்சியினைக் கண்ட உலகர் யாவரும் தொழும்படி. **தொழ-நின்றனள்** - என்க. பின்னே வரும் உலகோர்களும் விழாக் கொண்டாடித் தொழுது உய்யும்படி என்ற குறிப்பும், இன்றும் ஈண்டு இவ்விழா மிகப் பெருஞ்சிறப்பாய்க் கொண்டாடி வழிபடப் பெறுதலும் காண்க.

1111

3010. **சீர்கெழு** சிவநேசர் தம்மை முன்னமே
காா்கெழு சோலைசூழ் காழி மன்னவர்
"ஏர்கெழு சிறப்பினும் மகளைக் கொண்டினிப்
பார்கெழு மனையினிற் படர்மி" னென்றலும். 1112

3010. (இ-ள்) *(பொழிப்பு)* சிறப்பு மிகுந்த சிவநேசரை நோக்கி முன்னமே, மேகங்கள் தவழும் சோலைகள் சூழ்ந்த சீகாழித் தலைவராகி பிள்ளையார், "இனி, அழகினால் மிகுந்த சிறப்புடைய உம் மகளை உலகில் ஓங்கி விளங்கும் மனையிற் கொண்டு சென்று சேர்வீர்" என்றருளிச் செய்யவும்,

(வி-ரை) சீர்கெழு சிவநேசர் - சிறப்பு மிகுதலாவது -முன் கூறிய அவர் வாழ்க்கை வரலாறுகளும், இனிப் பிள்ளையாரை வேண்டி நிற்க உள்ள நிலையும், ஒன்றன்மேலொன்ருகச் சிறந்து சிவவாழ்க்கைச் சிறப்பில் மேன்மேல் மிகும் நிலையும், இறைவரது திருவருளும் குருவருளும் உலகில் விளங்குதலால் உலகமுய்தற்கு நிலைக்களமாக நின்ற நிலையுமாம்.

முன்னமே - பாவையார் பரமரையும் தம்மையும் வணங்கி நிற்பதற்கு முன்னர்ச் சிவநேசர் தம்மை அடிவணங்கிய *(3009)* போதே.

ஏர்கெழு சிறப்பில்-ஏர் - உடற்கூற்றின் அழகும், **சிறப்பு** - சிவனருள் பெருக வந்து நின்ற உயிரின் சிறப்புமாம்.

நும் மகள்-உடல்பற்றிய அளவில் முன் உடலின் வளர்ச்சியும் தொடர்பும் கொள்ளுதலால் இவ்வாறு சிவநேசர்பால் உரிமைப்படுத்திக் கூறியருளினுர். சிவநேசரது மன நிலைபற்றிக் கூறியருளியதுமாம்; இனிப், பின்னர் "யான் - உற்பவித்தலால்" *(3012)* என்று தம்மைப் பிதாவாக வைத்துக் கூறியது, "போதியோ என்னும், அன்ன மெய்த்திரு வாக்கெனு மமுதம், துன்ன வந்துவந் துருவமாய்த் தொக்கதக் குடத்துள்"*(2986)* என்றபடி தமது திரு அருள்நோக்கும் திருவாக்குமாகிய அமுதத்தைப் பெய்து உயிரினைப் புகுத்தியருளிய செயலால் உயிரினைப்பற்றிக் கூறியருளியதாம்; மேற்காண்க.

பார்கெழு மனையினிற் கொண்டு படர்மின் - எலும்புநிறை குடமாகக் கொண்டு வந்த நீர், மகளாக அழைத்துக்கொண்டு செல்லுமின். **பார்கெழு** - உலகில் விளங்கிய; முன் விளங்கிய விளக்கமன்றி, இனிப் பாவையார் உலவிநிலவும் சிவனருள் விளக்கமும் உலகிற் பெருகிநின்று மேல்விளங்க. "உலகவ ரறிய" *(2978)* என்று முன் அருளிய குறிப்பும் காண்க. **இல்** - ஏழனுருபு.

மன்னவர் - என்றலும் *(3010)* -வணிகர் - என்றலுமாம் *(3011)* - வாணர் - உரை தகாதென *(3012)* - அவர் - வாய்மையார் - அருள் செய்தார்*(3013)* என்று இந் நான்கு பாட்டுக்களையும் சொல்லும் விடையுமாகத் தொடர்ந்து முடித்துக்கொள்க.

குறிப்பு:- இச்செய்யுள் சில பிரதிகளில் காணப்படவில்லை. *1112*

3011. (இ-ள்) *(பொழிப்பு)* பெருக்கமுற்ற திருவருளைப் பெறும் வணிகராகிய சிவநேசர் பிள்ளையாருடைய பொருந்திய தாமரைபோன்ற திருவடிகளில் வணங்கி எழுந்து துதித்து நின்று

3011. **பெருகிய** வருள்பெறும் **வணிகர் பிள்ளையார்**
மருவுதா மரையடி வணங்கிப் போற்றிநின்
''றருமையா **லடியனேன் பெற்ற பாவையைத்**
திருமணம் புணர்ந்தருள் செய்யு'' மென்றலும், 1113

''அடியேன் அருமையினால் பெற்றெடுத்த இந்தப் பூம்பாவையைத் தேவரீர் திருமணம் புணர்ந்தருளிச் செய்ய வேண்டும்'' என்று வேண்டலும்,

(வி-ரை) பெருகிய அருள் பெறும் - முன்னர் வடிவுதான் காணாராயும் சீகாழி வள்ளலார்பாற் கொண்ட அழுந்திய அன்பின் உறைப்பினாலே காணாத காலத்தேயும் அவரருளைப் பெற்று அவர் நேரே எழுந்தருளிவரக் கண்டு வணங்கும் அருள் பெற்றார்; கண்ட பின்னர்ப் பாவையாரை மீள உற்பவிக்கப்பெறும் பேருகிய அவரருள் பெற்றனர்; தாம் முன்னர்த் தம் அளவிலே துணிந்தவாறு பாவையாரை ஏற்றபெற்றி அவர்பாற் சேர்க்கப்பெறும் அருளும், அவரை அவர் மகளாராகக் கொண்டு ஏற்கும் அருளும்பெற்றார்; கபாலீசப் பெருமானது பெருங் கருணை தம்பாலின் விளங்கும் அருளினையும் பெற்றார். இனி வேதநூற் றுணிபுகளைப் பிள்ளையார் எடுத்து உபதேசிக்க உள்ள அருளும், பாவையார் சிவத்தை மேவப்பெற நிற்கும் அருளும் பெற நின்றார்; இக்குறிப்புக்கள் எல்லாம் உட்கொண்டு **பெருகிய அருள் பெறும்** என்ற கவிநலம் காண்க.

அருமையால் - ''அரிய நீர்மையி லருந்தவம் புரிந்தர னடியார்க், குரிய வர்ச்சனை யுலப்பில செய்தவந் நலத்தால்'' (2938) என்ற அருமைப் பணிகளின் பயனாக.

அடியனேன் - முன் (2936 - 2951) கூறியவாறு தம்மைப் பிள்ளையாருக்கு அடிமையாகக் கொடுத்து நின்றொழுகிய நிலைபற்றிக் கூறியவாறு. இவ்வாறு அடிமைத் திறம்பற்றியே வைத்துத் தம்மைச் சிறியராகக் கொண்டு நினைத்தும் பேசியும் ஒழுகியும் வருதல் பெரியோர் செயல்; தம்மைத்தாமே பெரியராக் கொண்டு எழுதல் சிறியோர் செயலாம். ''நாதனடி யார்தம்மை நயப்பாட்டு வழி பாட்டான், மேதகையா ரவர் முன்பு மிகச்சிறிய ராயடைந்தார், ஆதலினாற் சிறுத்தொண்ட ரெனநிகழ்ந்தா ரவனியின் மேல்'' (3674=15) என்று பெரியார் தன்மையின் உண்மையினைக் காட்டுதலும்; ''கற்றவர்க டன்னிற் கடந்துளா ரில்லையெனும், பெற்றிமையான் மாநிலத்து மிக்க பெருமிதம்வந், துற்றுலகிற் **றன்னையே சால மதித்துள்ளான்**'' (613) (ஏனாதியார் புராணம் - 6) என்றும், ''கேளிகழ்ந், திகழும் பரமு மில்லை யென்று, பயமின் றொழுகிப் பட்டிமை பயிற்றி மின்னி னனையதன் செல்வத்தை விரும்பித், **தன்னையு மொருவனாக** வுன்னும், ஏனையோர் வாழும் வாழ்க்கை'' (திருவிடை - மும் - 7) என்றும் வரும் திருவாக்குக்கள் சிறியோர் தன்மையினைக் காட்டுதலும் காண்க; ''பணியுமா மென்றும் பெருமை; சிறுமை, அணியுமாந் தன்னை வியந்து'' (குறள்) என்பது பொய்யாமொழி. இந்நாளில் மக்கட் கூட்டம் அரசியல், சமூக இயல், சமய இயல், செல்வ இயல் என்ற பல துறைகளிலும் பட்டு அறிவு மயங்கிப் பலபல பெயர்களைத் தாமே புனைந்துகொண்டு மேற்கூறிய இரு தன்மைகளுள் முன்னையதை விட்டு, அகங்கரித்தெழுந்து பின்னையதில் வீழ்ந்து சாமாறே விரைகின்ற நிலை வருந்தத்தக்கது; உலகம் உண்மை கண்டு ஒழுகி உய்யத் திருவருள் துணைசெய்வதாக.

3012. மற்றவர் தமக்குவண் புகலி வாணர் ''நீர்
பெற்றபெண் விடத்தினால் வீந்த பின்னையான்
கற்றைவார் சடையார் கருணை காண்வர
உற்பவிப் பித்தலா லுரைதகா'' தென. 1114

பாவை - பூம்பாவை என்பது பாவை எனப்பட்டது; பாவை போன்றாள் என்றுரைத்தலுமாம்.

மணம் புணர்தல் - என்பது மரபு வழக்கு; மணம் செய்தல். **மணம் புணர்ந்து**- மணஞ்செய்து ஏற்று; **அருள் செய்தல்** - கன்னியை ஏற்றுக்கொள்வதனால் தமது குடி ஈடேற அருளுதல்; ''எம்முடைய குலக்கொழுந்தை யாமுய்யத் தருகின்றோம்'' *(3065)* என்பதும் பிறவும் காண்க. மணம்புணர்ந் தருள்செய்யும் எனச் சேர்த்து ஒரு சொன்னீர்மைத்தா யுரைத்தலுமாம்.
1113

3012. (இ-ள்) *(பொழிப்பு)* மற்று அவ்வாறுரைத்த வணிகரை நோக்கி வண்மை பொருந்திய சீகாழி வாழ்வுடை யாராகிய பிள்ளையார் ''நீர் பெற்ற பெண் விடத்தினால் இறந்துவிட்ட பின்னே யான், கற்றையாகிய நீண்ட சடையினையுடைய கபாலீசரது கருணை விளங்க மீள உற்பவிக்கச் செய்தமையினாலே நீர் சொல்லும் இவ்வுரை பொருந்தாது'' என்று சொல்லியருள,

(வி - ரை) புகலி வாணர் - முன் புகலி வேந்தர் *(3008)*. புகலி வேந்தர் *(3007)*. புகலிகாவலர் *(2981)* என்ற கருத்தைத் தொடர்ந்து கூறினார்.

நீர் பெற்ற...விடத்தினால் வீந்த பின்னை - ''அடியனேன் பெற்ற பாவை'' *(3011)* என்று சிவநேசர் கூறியதனை மறுத்துப் பிள்ளையார், நீர் பெற்று வளர்த்த பூம்பாவை அரவின் விடத்தினால் வீந்து இறந்துபட்டனள்; இங்குத் தோன்றி நிற்பவள் வேறு என்று எடுத்துவிளக்கி உண்மை கூறியபடி.

யான்...உரை தகாது - உற்பவிப்பித்தல் - மீளத் தோன்றும்படி செய்வித்தல்; பிறவினையாற் கூறியது, இது தமது செயலன்றி இறைவரது செயலேயாம்; தாம் அவரது சிவஞான நிறைவுக்குள் ஒடுங்கிநின்று வேண்டிய அளவிலமைந்து துணையாவதன்றித் தமது செயல் பிறிதின்று என்றறிவித்தபடியாம். ''பரிவுறு பண்பினால் பரவி'' (2976) என்றது காண்க. **கற்றைவார் சடையவர் கருணை காண்வர** என்றது இக்கருத்தைப் புலப்படுத்துவதாம். ''தம்மை மறந்து நின்னை நினைப்பவர்'' என்றபடி சிவஞான நிறைவே தமதறிவாகப் பெற்று நிற்பவர் பிள்ளையாராதலின் பாவையார் குடமுடைந்து எழுந்து அழகினுக்கணியாய் நின்றது கண்டு கண்ணுதல் கருணைவெள்ளத்தினையே கண்டாரன்றித் தமது செயலையாவது பாவையாரது நிறைவினையாவது கண்டாரிலர்; ஆயின் ஈண்டு, **''யான்...உற்பவிப்பித்தலால்''** என்றது ''திருமணம்புணர்ந் தருள்செய்யு'' மெனச் சிவநேசர் உலகியல்நிலை பற்றி வேண்டிய விருப்பத்திற்கு அவ்வாறே உலகியல்நிலைபற்றி உரைத்தவாறும். இவ்வாறே ஆளுடைய நம்பிகள் ''கரைக்கால் முதலையைப் பிள்ளை **தரச்சொல்லு காலனையே**'' - (தேவா - குறிஞ்சி -

3013. **வணிகருஞ்** சுற்றமு மயங்கிப் பிள்ளையார்
அணிமல ரடியில்வீழ்ந் தரற்ற வாங்கவர்
தணிவினீள் **பெருந்துயர் தணிய வேதநூற்**
றுணிவினை யருள்செய்தார் தூய வாய்மையார். 1115

புக்கொளியூர் அவிநாசி -4) என்று விண்ணப்பித்து முதலையுண்ட மகனை முதலைவாயினின்றும் அழைத்துப் பிதாவின்கையிற் கொடுத்த நிலையும், அதுபற்றி ''ஆவதென் முன்னு ணுவலர் பெருமான், பண்டொரு முதலை யுண்டமைந் தனைவர, வழைத்தன னென்றாய்; பிழைப்பில ததூஉம், தந்திட வேண்டு மென்றன ரன்றே'' (சங். நிரா - சிவசமவாதி நிராகரணம்) என்று உமாபதி சிவாசாரியார் அருளிய விளக்கமும் ஈண்டுச் சிந்திக்கற்பாலன; ''கதவந் திறப்பிம்மினே'' என்ற அரசுகள் திருவாக்கும் ஈண்டுக் கருதத்தக்கது.

உற்பவிப்பித்தலால் உரை தகாதென - உரை - மணம் புணர்ந்தருளும் என்ற உரை; **தகாது** - சொல்லத் தகாதது; **உற்பவிப்பித்தலால்** என்றது உரை தகாதது என்பதற்குரிய காரணம்; உற்பவிப்பித்தலால் - பிறக்கச் செய்தலால் - பிதாவின் முறை ஆகவேண்டும். தான் பெற்ற மகளை மணம்புரிதல் தருமநூல் விரோதமாகிய கூடாவொழுக்கம்; தூர்த்தர் செயலாம்; ஆதலின் இவ்வுரை தகாதது என்பது.

சபிண்டர் - சகோத்திரர் இவர்களுக்குள் மணம் விலக்கும் வேத ஒழுக்க நூல்களின் கருத்துமிஃதே; ''வேதநூற் றுணிவினை'' (3013) என்ற மேல்வரும் பாட்டிற் கூறுவதும் காண்க. வேத நூல்களின் இக்கருத்தறியாத தூர்ந்த மாக்கள் இந்நாளில் இவ்வொழுக்கத்திற்கு மாறாக ஒழுகுவதன்றி விதி செய்தலும் துணிந்துள்ளார். என்னே ! காலக் கொடுமை!

உரை தகாதென்றலால் எண்ணுதலும் தகாதென்பது பெறப்படும்; உற்பவிப்பித்தலால் உரை தகாதென்றமையால் மற்றக் காரணத்தால் இக்காரியம் எண்ணுதலும் தகாதென்றது குறிப்பாம். அக்காரணமாவன பிள்ளையார் திறத்தில் அவரை உலகநிலை பற்றி உழலும் ஏனை ஆன்மாக்களுள் ஒருவராக வைத்தெண்ணுதலும், மணஞ் செய்து வாழ்வு பெற உள்ள நிலையில் வீழ்தற்குரியார் என்று நினைத்தலும் முதலியன. பின்னர்ப் பிள்ளையாரது திருமணத்தின் வரலாற்றில் திருமணத்தைப் பிள்ளையார் இசையாது நிற்பதும், தாதையாரும் மறையோரும் வேண்டியவா றிசைந்து மணம் நிகழ்ந்தகாலையில் ''இந்தவில் லொழுக்கம் வந்து சூழ்ந்ததே யிவடன்னோடும், அந்தமில் சிவன்றாள் சேர்வனென்னுமா தரவு பொங்க'' என்று மணப் பந்தலிலேயே எண்ணியாங்குச் சிவன்றாள் சேரும் நிலையும் உன்னுக.

காண்வருதல் - விளக்கமாக விளங்குதல்; கைவருதல் என்றலுமாம்.

உற்பவித்தீதலால் – உற்பவித்திடுதலால் – என்பவனவும் பாடங்கள். *1114*

3013. (இ-ள்) (பொழிப்பு) வணிகராகிய சிவநேசரும் சுற்றத்தாரும் அது கேட்டு மயங்கிப் பிள்ளையாருடைய அழகிய மலரடிகளில் வீழ்ந்து பலவும் சொல்லிக் குறையிரந்து அழுதரற்றக் கண்டு,அப்போது அவர்களுடைய ஆற்றொணாத நீண்ட பெருந்துன்பம் தணியும்படி

வேதநூல்களின் விதியாகிய துணிபுகளை எடுத்து உரைத்துப் (பிள்ளையார்) அவர்களைத் தேற்றி யருளிச்செய்தனர், தூய்மையுடைய வாய்மையே உருவமாகி விளங்குபவராதலின்.

இந்நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண் டுரைக்கநின்றன.

(வி-ரை) வணிகரும்...அரற்ற - நெடுநாளாகப் பிள்ளையாருக்கென்று அளித்து வைத்திருந்த பாவையாரை அவர் ஏற்காது நின்றமையின் அவரருளப் பெறாமைக்கு ஏங்கி அரற்றினர்.

துயர் தணிய வேதநூற் றுணிவினை அருள் செய்தார் - நூல்விதி யுணர்ந்து உண்மை தெளிந்தோர் உலகிற் துயர்ப்படமாட்டார் என்பது. இங்கு வேதநூற் றுணிபாவன முன் பாட்டில் உரைத்தனவும் பிறவுமாம். பிறவாவன மரபுக்கேலா மையும்; தமது சிவஞான வாழ்வாகிய பெருநிலையினுக் கேலாமையும்; பாசமய நிராகரித்து நீறு ஆக்கும்பொருட்டுத் தரப்பட்டுத் தாம் வந்தமையேயன்றி உலக வாழ்விற்பட்டுழலும் பொருட்டன்றென்ற நிலைக்கேலாமையும் முதலாயினவாம்; வேதியர் ஏனை வருணங்களிலும் மணங்கொள்ளலா மென்பது ஒரு சிறப்பு விதி; அதன் நிலை வேறு. அதனை அவ்வவர் நினைத்த நினைத்தபடியெல்லாம் அலைவதற்குப் பற்றுக்கோடாகக் கொள்ளுதல் சாலாது. பிள்ளையார்போலன்றி, இரண்டு மணங்கள் செய்யநின்ற ஆளுடைய நம்பிகளும் திருநாட்டியத்தான்குடியில் கோட்புலியார், சிவநேசரைப்போலவே, தம் பெண் மக்களிருவரையும் ஈந்து ஏற்றுக் கொள்ள வேண்டியபோது அவ்வாறு ஏற்காமல் "இவர் எனக்குத் தூய மக்களா வார்" என்று சொல்லி ஏற்று அவ்வாறே ஒழுகும் வரலாறும் ஈண்டு நினைவு கூர்தற்பாலது.

தூய வாய்மையா(ராதலின்) - அருள் செய்தார் - என்று காரணப் பொருள் கொண்டு கூட்டுக.

வாய்மையார் - வாய்மையே தமது செவி - வாய்மையே தமது வாக்கு - அஃதே தமது நோக்கு என்றபடி வாய்மையே தமது முழுவடிமுமா யமைந்தவர் பிள்ளையார் என்பதாம். "மெய்த்தன்மை விளங்கு திருச் செவி"; "குரும்பையாண் பனையீனு மென்னும் வாய்மை"; "போதியோ வென்னும் அன்ன மெய்த்திரு வாக்கு". **தூய** - தூய்மைப்படுத்தும் என்றலுமாம்.

வேத நூல் - வேதங்களும், அவற்றின்வழி வரும் மிருதி முதலிய நீதி ஒழுக்க நூல்களும். அவற்றின் துணிபாவன சிவாகம சித்தாந்த உண்மை. *1115*

3014. (இ-ள்) தெள்ளு நீதியின்முறை... நீத்திட - தெளிந்த நீதிநூ லொழுக்க முறைகளைக் கேட்ட சிறப்புடைய சுற்றத்தாராகிய பெருங் கூட்டமும் சிவநேசரும் தாம் விருப்பங்கொண்ட நிலையினை நீங்கிட; பள்ளநீர்ச் செலவென -(மேட்டு இடத்தினின்றும்) பள்ளத்திற் பாயும் நீரின் வேகம்போன்ற விரைவுடன்; பரமர்... பிள்ளையார் - கோபுரப் புறவாய்தலினின்றும் இறைவரது திருக்கோயிலினுள்ளே ஆளுடைய பிள்ளையார் எழுந்தருளினர்.

(வி-ரை) தெள்ளும் நீதியின் முறை - தெள்ளுதல் - தெளிதல்; பிள்ளையார் தெளிவித்த என்றும், மயங்கின அறிவைத் தெளியச் செய்த என்றும் உரைக்க நின்றது.

3014. **தெள்ளுநீ தியின்முறை** கேட்ட சீர்க்கிளை
வெள்ளமும் வணிகரும் வேட்கை நீத்திடப்,
பள்ளநீர்ச் செலவெனப் பரமர் கோயிலின்
உள்ளெழுந் தருளினு ருடைய பிள்ளையார். 1116

சீர்க்கிளை வெள்ளம் - ***கிளை*** - *சுற்றம்; ஒரு மரத்தின் கிளைபோலப் பொருந்துபவர்.* ***வெள்ளம்*** - *மிகுதியுணர்த்திற்று. ''சுற்ற நீடிய கிளையெலாம்'' (2951); கரையில் சுற்றமும்'' (2957); ''உறுபெருஞ் சுற்றமும்'' (2960) என்றவை காண்க.* ***சீர்க்கிளை*** - *கிளையின் சிறப்பாவது வாழ்வினும் தாழ்வினும் மனம் ஒன்று பட்டு அமைந்தொழுகுதல்; சிவநேசரது திறத்தில் அவர் மனக்கருத்தினையும் ஒழுக்கத்தினையும் தாம் கலந்து பிணக்கமின்றி ஒத்து ஒழுகினராதலின் ஈண்டுக்* ***கிளை*** *என்ற பெயராற் கூறினர்; ஒரு மரத்தின் கிளைகள் அம்மரத்தின் மூலம் தாம் வாழ்வுபெற்று அது தழைக்கத் தழைந்து, வாடத் தாமும் வாடிநிற்கும் தன்மைபோல என்பது; என்னை? இங்குக் குறித்த பொருள் பெண்ணை மணம் புரிவிக்கும் நிலைபற்றியதாதலின் அது கிளைஞர்க்குரிய செயலாய் நிற்றலால் அதனில் தாம் வேறுஒன்றும் எண்ணாது சிவநேசரது திறமே ஒன்றி நிகழ்ந்தனர் என்பதாம்;* ***வெள்ளம்*** *- என்றார் அனேகராகிய அவருள் ஒருவரும் பிணக்கமின்றி நின்ற நிலை குறித்தற்கு.*

வேட்கை - *பிள்ளையார்பால் பூம்பாவையாரை மணத்தினுற் சேர்வித்தலாகிய விருப்பம்.*

நீத்திட - *விட்டு நீங்கினராக அதன்பின்; அவர்களைத் தேற்றியருளிய பின்.*

பள்ள நீர்ச் செலவென - *மேட்டினின்றும் பள்ளத்திற் செல்லும், நீர் மிக்க வேகத்திற் செல்வதுபோல; வினைபற்றி எழுந்த உவமம். ''பள்ளந்தா ழுறுபுனலிற் கீழ்மே லாகப் பதைத்துருகு மவர்'' (திருவா - சதகம் -21). இதுவரை கோபுரப் புறவாய்தலின் நின்ற பிள்ளையார் செய்தவை கற்றைவார் சடையவர் கருணை காண்வரச் செய்தவையே யாயினும் அவை உலகம்பற்றிய நிலையினவாதலின் மேட்டு நிலத்தின் நீர்போல நின்றன. இனிப் பரமர் கோயிலுள் சென்றருளுதல் இறைவரும் தாமுமேயாக உள்ள நிலைபற்றியனவாதலின் அவை பள்ளத்திற் செல்லும் நீர்போல ஆயின என்க. இதனால் பிள்ளையார் இவ்வுலகில் வாழ்ந்த காலமெல்லாம் அவரது அருளிச் செயல்கள் உலகின்பாலும் இறைவர்பாலும் எவ்வெத் தன்மையில் நிகழ்ந்தன என்பது தெளியப்படும்.*

உள்ளெழுந் தருளினார் - *முன் வணங்கிப் போந்து இந்நிகழ்ச்சியின் பொருட்டு எலும்புக்குடமிருந்த புறவாய்தலின் வந்த பிள்ளையார் மீள உள்ளே சென்றருளினர்; இஃது அருள்பெற்று அதன்வழியே இந்நிகழ்ச்சியுட் புகுந்த பிள்ளையார் அதன் நிறைவின் பின் இறைவரை வணங்கி அவர் அருளைப் போற்றி விடைகொள்ளும் நிலையாம் என்க. திருவாலவாய் வரலாற்றிலும் இவ்வாறே சமணர் வாத நிகழ்ச்சியினுள் திருமடத்தினின்றும் திருவாலவா யிறைவரை வணங்கி அருட் குறிப்பாகிய திருவுள்ள மறிந்து அருள் பெற்றுப் போந்து, இறுதியில் சமண வாத நிறைவாகிய பின், வைகைக் கரையினின்றும் நேரே திருவாலவாயினுட் சென்றருளிப் போற்றி விடைகொண்டு போந்தருளிய செய்தியும் ஈண்டு நினைவு கூர்தற்பாலது (2635 - 2639-ம் 2759 -2764-ம் பார்க்க). அங்கு அம்மையார் அமைச்சனார் செயல்கள் வாய்ப்பவும்*

3015. பான்மையால் வணிகரும் ''பாவை தன்மணம்
ஏனையோர்க் கிசைகிலே'' னென்று கொண்டுபோய்
வானமர் கன்னிமா டத்து வைத்தனர்
தேனமர் கோதையுஞ் சிவத்தை மேவினாள். 1117

அமண் பிணி நீங்கவும் மேற்கொண்ட நிலை போலவே. இங்குச், ''சித்த மின்புறு சிவநேசர் தஞ்செயல் வாய்ப்பவும், பொய்க்க வச்சமண் சாக்கியர் புறத்துறை யழியவும்,வைத்த வப்பெருங் கருணை'' நோக்காகிய நிலையினை மேற்கொண்டமையும் காண்க. *1116*

3015. (இ-ள்) *பான்மையால்...என்று* - நியதியின் முறைமையினாலே சிவநேசரும் "பூம்பாவையாரை ஏனையோர் எவர்க்கும் மணம் புணர்வித்தற்கு நான் உடன் படமாட்டேன்" என்று துணிந்து; *கொண்டுபோய்...வைத்தனர்* - வானளவுயர்ந்த அவரது கன்னிமாடத்தில் வைத்து ஆங்கு வாழச்செய்தனர்; *தேனமர்...மேவினாள்* - வண்டு வாழும் மலர்மாலை யணிந்த பாவையாரும் சிவத்தினை அடைந்தனர்.

(வி-ரை) பான்மை - முன்னை ஊழ்வினையாகிய நியதியின் தன்மை; ''அன்ப ரின்புறு மார்வத்தி னளித்தபாங் கல்லாற் பொன்பி றங்குநீர்ப் புகலிகா வலர்க்கிது புணரா, தென்ப துட்கொண்ட **பான்மை**'' *(2954)* என்று முன் விளக்கிய பான்மை.

பாவை...இசைகிலேன் என்று - பாவையாரையும் தம்மையும் பிள்ளையாருக்குக் கொடுத்துவிட்டமையால் *(2951)* பாவையார் பிள்ளையாரது உடைமை யாயினர்; அந்நிலையினில் ஒருவர்க்கு ஒப்புவித்த பொருளையே பின்னும் வேறு ஒருவர்க்கு ஆக்குதல் முறையன்று என்பது ஒன்று; சிவநேசர் கருத்துப் பிள்ளையாரையன்றிப் புறத்துச் செல்லாமை மற்றொன்றும். கொடுப்போர் - கொள்வோர் என்றிருபாலின் ஈண்டுக் கொள்வோராகிய பிள்ளையார்பால் இசைவு நிகழாமையின் சிவநேசர் சொல்லிய மகட்கொடை ஒருபா லிசைவாகவே நின்றது; உலகவியலின் இவ்விசைவு முற்றுப்பேறடையாதென்று அரசநீதி வகுக்கும்; ஆதலின் சிவநேசர் முன்னைநிலையை மாற்றி வேறு செய்யும் உரிமையுடையார் என்று உலகியனீதி கூறும்; அந்நிலையினின்று இங்குச் சிவநேசர் எண்ணி, ''உலகவியல் இவ்வாறு வரினும் நான் எனது முன்னே கண்ட நிலையினின்றும் மாறுபடேன்'' என்றனர்; ''**மானமிகு தருமத்தின் வழிநின்று வாய்மையினில், ஊனமில் சீர்ப் பெருவணிகர் குடி**'' *(1717)* என்ற இயல்பும் ஈண்டு நினைவு கூர்தற்பாலது.

இவ்வாறுயர்ந்த நிலை ஒழுக்கங்களின் மேம்பாடும்; இந்நாள் மணநிலைகள் பற்றி மாக்கள் கொண்டொழுகும் கீழ்மைநெறி ஒழுக்கங்களின் மிகத் தாழ்ந்த குறைபாடும் கண்டு, இவற்றின் உயர்வுதாழ்வுகள் உணர்ந்துகொள்ளத் தக்கன.

கொண்டுபோய்......வைத்தனர் - கொண்டு போதல் - அழைத்துக்கொண்டு செல்லுதல்; **வைத்தல்** - அமர்த்தியிருக்கச் செய்தல்; ''மகளைக் கொண்டு... ...மனையினிற் படர்மின்' **(3010)** என்றருளினர் பிள்ளையார்; ஆனால், உயிரைப் பிள்ளையார்பால் ஒப்புவித்த நிலையினையே பின்னரும் மேற்கொண்டு ஏனையோர்க்குப் பாவை மணம் இசைகிலா ராயினமையின், உயிரில்லாத பண்டம்போலக் **கொண்டு போய் வைத்தனர்** என்ற குறிப்பும் காண்க. ஆயின் அவ்வுயிர் என்ன

வேறு

3016. **தேவர்பிரா** னமர்ந்தருளுந் திருக்கபா லீச்சரத்து
மேவியஞா னத்தலைவர் **விரிஞ்சன்முத லெவ்வுயிர்க்குங்**
காவலனார் பெருங்கருணை கைதந்த படிபோற்றிப்
பாவலர்செந் தமிழ்பாடிப் பன்முறையும் பணிந்தெழுவார்; 1118

நிலைமை பெற்றதென்னின்? அதுபற்றியே மேல் இப்பாட்டிற் **சிவத்தை மேவினாள்** என்றருளுதல் காண்க; மாதர்கள் கன்னிமாடத்திருந்து சிவத்தை எண்ணியே வாழும் நிலை முன்னாளிற் சைவத்தில் வழக்கிலிருந்தது. இதுபற்றி நம்பிகள் சரிதத்தில் சங்கிலியார் வரலாறு கருதுக; இந்நிலை இந்நாளில் கிறிஸ்தவர் முதலிய புறச் சமயிகளிடம் வழங்குதலும் காண்க. **உடல் பற்றிய குறித்த நாயகனிடம் சேராத போது அவ்வுயிர் ஆன்ம நாயகனிடம் சேர்தல் முறை என்ற குறிப்பும் காண்க. காரைக்காலம்மையார் உடலின் ஊனை உதறி இறைவரிடம் போந்த வரலாறும் கருதத் தக்கது.**

சிவத்தை மேவினாள் - சிவம் - நித்திய மங்கலமாம் பெருவாழ்வாகிய சிவத் தன்மை. இங்குப் பெற்றெடுத்த தந்தையா ரிசைந்தும் மற்றொருபா லிசையாமையின் மன விசைவினாலும் மணம்பெற்ற நிலை நிகழாதொழிந்தது; ஆதலின், மண நிகழா நிலைமையினும், "எந்தையுமெம் மனையுமவர்க் கெனைக்கொடுக்க **விசைந் தார்கள், அந்தமுறை யாலவர்க்கே யுரியதுநா** னாதலினால், இந்தவுயி ரவருயிரோ டிசைவிப்பன்" (1297) என்று திலகவதியார் துணிந்து பின் ஒழுகிய நிலையின் தன்மை இங்குக் கூடாதாயிற்று; இனி, அக்காரணம் பற்றியே, மண நிகழாமற் றடையுண்ட நிலையினும், "அயலோர்தவ முயல்வார்பிற ரன்றேமண மழியுஞ், செயலானிகழ் புத்தூர்வரு சிவவேதியன் மகளும், உயர்நாவலர் **தனிநாதனை யொழியாதுணர் வழியிற்,** பெயராது" (223) என்றபடி மணப்பந்தலில் ஆளுடைய நம்பிகளை மணமகனாகக் கொள்ளப்பெற்றும் மணம் நிகழாமற் றடுக்கப்பட்டும் நின்ற சடங்கவி சிவாசாரியாரின் மகளாரின் நிலையும் இங்கு ஒருபாலிசையாமையாகிய அக்காரணம் பற்றியே பூம்பாவையார்பாற் கூடாதாயிற்று. ஆதலின் பாவையார் பிள்ளையாரை நாயகராக உணரும் நிலையின்றி, எல்லாவுயிர்க்கும் எப்பிறவியினும் உயிர்க்குயிராய் நின்றருளும் ஆன்ம நாயகராகிய சிவத்தையே நினைந்திருந்து அவரையே மேவினார் என்க; மேல் "எவ்வுயிர்க்கும் காவலனார்" (3016) என்னும் குறிப்பும் காண்க. சிவத்தை மேவுதலைப் புரிவிக்கும் குருநாதராகவே பிள்ளையாரைக் கொண்டு வழிபட்டு நின்றமை கருதிக்கொள்ளப்படும். *1117*

3016. (இ-ள்) தேவர்பிரான்...ஞானத் தலைவர் - தேவதேவராகிய சிவபெருமான் விரும்பி வீற்றிருந்தருளும் திருக்கபாலீச்சரத்தினுள் எழுந்தருளிய ஞானத்தலைவராகிய பிள்ளையார்; விரிஞ்சன்...போற்றி - பிரமதேவன் முதலிய எல்லாவுயிர்களுக்கும் காவலாளராகிய இறைவருடைய பெருங்கருணை கைகொடுத்தருளிய படியினைத் துதித்து; பாவலர்... பணிந்தெழுவார் - பாக்களாகிய மலர்ந்த செந்தமிழினைப் பாடிப் பலமுறையும் பணிந்தெழுவாராய்,

(வி-ரை) தேவர்பிரான் - "தேவதேவனை" (2976) என்ற திருப் பாட்டின் உட்கிடையினைத்

3017. **தொழுதுபுறம் போந்தருளித் தொண்டர்குழாம் புடைசூழப்**
பழுதில்புகழ்த் திருமயிலைப் பதியிலமர்ந் தருளுநாள்
முழுதுலகுந் தருமிறைவர் **முதற்றானம் பலவிறைஞ்ச**
அழுதுலகை வாழ்வித்தா ரப்பதியின் மருங்ககல்வார்; 1119

தொடர்ந்து வழிபாடு நிறைவேறுமா கண்டுக் கூறிய படியாம். **மேவிய** - உள்ளெழுந்தருளி மேவிய *(3014)*.

ஞானத் தலைவர் - "ஞானசம்பந்தர்" (2976) என்றும், "ஞானபோனகர்" (2987) என்றும் முன்கூறிய குறிப்புக்களைத் தொடர்ந்து கண்டு இப்பெயராற் றலைமை பற்றிக் கூறிய நிலையும் கண்டுகொள்க.

விரிஞ்சன் முதல்...காவலனார் - தோற்றம் - நிலை - இறுதி செய்யும் கடவுளர்க்கும் அந்த முத்தொழிலுட்படும் உயிர்களுக்கும் தாமே முதல்வராய்க் காவல் புரிபவர் என்றது, ஈண்டை வரலாற்றில் பூம்பாவையார் முன்னர்த் தோன்றி நின்றழிக்கப் பட்டுப், பின்னரும் திருவருளாலே தோன்றிநின்ற தன்மைகட்கெல்லாம் தலைவராக நிற்கும் நிலையில் வைத்து இறைவரது முழுமுதற்றன்மை கண்டு கொள்வதன் பொருட்டாம்.

கைதந்தபடி - கைகொடுத்துத் தமது திருவுள்ளத்தை முற்றுவித்தபடியினை.

போற்றித் - தமிழ் பாடி - இப்பதிகம் கிடைத்திலது! முதலில் பாடிய பதிகமும் (2976) இறுதியிற் பாடிய இப்பதிகமும் ஒன்றுபோலவே மறைந்தமை இற்றை நாட் சைவவுலகின் தவக்குறைவாம்.

பன்முறையும் பணிந்தெழுவார் - வரலாற்றிற் புரிந்த பெருங்கருணையின் பொருட்டும், தலயாத்திரையிற் கலந்த தம் வழிபாட்டின் பொருட்டுமாகப் பன்முறையும் பணிந் தருளி.

பணிந்தெழுவார் (3016) - அமர்ந்தருளு நாள் - இறைஞ்ச - அகல்வார் (3017) - விடைகொடுத்து - வணங்கிப் போய் - அணைவுற்றார் (3018) என்று இம்மூன்று பாட்டுக்களையும் முடித்துக்கொள்க.

படியென்றும்—என்பதும் பாடம். *1118*

3017. (இ-ள்) தொழுது...அமர்ந்தருளு நாள் - வணங்கிப் புறத்தே போந்து எழுந்தருளித் திருத்தொண்டர் கூட்டம் பக்கத்திற் சூழ்ந்து வரக் குற்றமில்லாத புகழினை யுடைய அந்தத் திருமயிலாபுரியில் விரும்பி எழுந்தருளியிருக்கும் நாளிலே; முழுதுலகும்...இறைஞ்ச - எல்லாவுலகங்களையும் தந்து புரந்தருளும் இறைவர் எழுந்தருளும் முதன்மையுடைய பதிகள் பலவற்றையும் சென்று வணங்கும் பொருட்டு; அழுதுலகை...அகல்வார் - அழுதமையினால் உலகை வாழ்வித்தாராகிய பிள்ளையார் அத்திருப்பதியின் பக்கத்தினின்றும் நீங்கிச் செல்வாராகி,

(வி-ரை) அமர்ந்தருளும் - விரும்பி வீற்றிருந்தருளும்.

3018. **திருத்தொண்ட** ரங்குள்ளார் விடைகொள்ளச் **சிவநேசர்**
வருத்தமகன் றிடமதுர மொழியருளி விடைகொடுத்து,
நிருத்தருறை **பிறபதிகள் வணங்கிப்போய்** நிறைகாதல்
அருத்தியொடுந் **திருவான்மி யூர்பணிய** வணைவுற்ருர். 1120

உலகு முழுதும் தரும் - என்க. எல்லா வுலகும் படைத்தல் முதலிய எல்லா வகையாலும் புரக்கும்; **தருதல்** - புரத்தல் என்ற பொருளில் வந்தது; புரத்தலாவது படைத்தல் காத்தல் அழித்தல் என்ற மூவகையாலும் காத்து அருள்புரிதல்.

முதற்ருனம் - முதன்மையுள்ள பதிகள். முதன்மையாவது முதல்வன் விளங்க வீற்றிருத்தல்.

உலகை அமுது வாழ்வித்தார் - தாம் அமுதமையால் உலகின் பொருட்டு ஞானம் பெற்று அதனுல் உலகத்தை வாழ்வித்த பிள்ளையார் ''வேதநெறி தழைத்தோங்க... அமுத'' (1899) என்று தொடக்கத்துக் கூறிய கருத்து. ''அமுதுலகை வாழ்வித்த கவுணிய குலாவுதித்த''(திருப்புகழ்).

மருங்கு - மருங்குனின்றும். ஐந்தன் உருபு விரிக்க. *1119*

3018. (இ-ள்) திருத்தொண்டர்... விடைகொள்ள - அங்குள்ளார்களாகிய திருத்தொண்டர்கள் விடைபெற்றுக்கொள்ள; சிவநேசர்... கொடுத்து - சிவநேசரது வருத்தம் நீங்கும்படி அவருக்கு இனிய மொழிகளைச் சொல்லி விடைகொடுத்தருளி; நிருத்தர்...போய் - சிவபெருமான் எழுந்தருளிய பிற பதிகளையும் வணங்கிச் சென்று; நிறைகாதல்...அணைவுற்ருர் - நிறைந்த காதலாகி விளைந்த அன்பினேடும் திருவான்மியூரினைப் பணிதற்கு அணைவுற்றருளினர்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) அங்குள்ளார் - திருமயிலையிற் சிவநேசருடன் வந்து கூடிய பெருந் தொண்டர்களும் (2970), திருவொற்றியூரினின்றும் பிள்ளையாருடன் தொடர்ந்து வந்தார்களும் ஆகிய அங்கே உள்ள திருக்கூட்டத்தினர்; அங்கு நீங்கிப் பிள்ளையார் எழுந்தருளும்போது இவர்கள் அங்குநின்ற வண்ணமே பிள்ளையார்பால் விடைகொண்டு தங்கிவிட்டவர்.

சிவநேசர்...விடைகொடுத்து - சிவநேசர் பிள்ளையாரைப் பிரிதலாற்ருது பின்றெடர அவரது வருத்தம் நீங்க இன்னுரை கூறி அவருக்குப் பிள்ளையார் தாமே விடை கொடுத்தருளி நிற்கப் பணித்தருளினர் என்பது விடை **கொடுத்து** என்றதன் குறிப்பு; திருத்தொண்டர் விடை **கொள்ள** என்றதும் கருதுக. **வருத்தம்** - வடிவுதான் காணுரையும் பலகாலம் நினைந்து வழிபட்டு வந்த தியானப் பொருளாகிய பிள்ளையார் நேரே கைவரக் கிடைக்கப் பெற்றபின் அவரைப் பிரியலாற்ருத வருத்தம். மங்கையர்க்கரசியார் - குலச்சிறையார் - நெடுமாறனுர் இவர்கள் பிள்ளையாரது பிரிவாற்ருது தொடர்ந்தழுது அடி வீழ்ந்தரற்றிய நிலையும் அவர்க்கு இனியவை கூறி நிற்கப்பணித்துப் பிள்ளையார் ஆணைதந்து விடைகொடுத்த நிலையும் ஈண்டு நினைவு கூர்தற்பாலன. (2792 - 2793).

நிருத்தர் - ஐந்தொழி லருட்கூத்தியற்றும் இறைவர்.

திருவான்மியூர்

3019. **திருவான்மி யூர்மன்னுந் திருத்தொண்டர் சிறப்பெதிர**
வருவார் மங்கலவணிகண் மறுகுநிரைத் தெதிர்கொள்ள,
அருகாக விழிந்தருளி யவர்வணங்கத் தொழுதன்பு
தருவார்தங் கோயின்மணித் தடநெடுங்கோ புரஞ்சார்ந்தார். 1121

பிற பதிகள் - திருமயிலையினின்றும் திருவான்மியூர் செல்லும் வழியில் அருகில் உள்ள பதிகள். மயிலையிலிருந்து வான்மியூர் வழியில் அருகிலுள்ளவை (1) புலியூர், (புலியூர்கோட்டத் தலைநகர்), கோடம்பாக்கம் வடபழநியாண்டவர் கோயிலுக்கருகில், பழைய சிவாலயம்; கல்வெட்டுக்க ளுண்டு; (2) வெளிச்சேரி; பழைய ஆலயம்; மூலவர் தூபி கருங்கல்லாலாயது; கல்வெட்டுக்கள் உள, (கிண்டி கவர்னர் வீட்டு வேலிக்கெதிரிலுள்ளது).

நிறைகாதல் அருத்தி - அருத்தி - அன்பு; அன்பு காதலாய் விளைந்து நிறைந்த நிலை. *1120.*

3019. (இ-ள்) திருவான்மியூர்...அருகாக - திருவான்மியூரின் நிலைபெற்று வாழும் திருத்தொண்டர்கள் சிறப்பாக எதிர்கொள்ள வருவார்களாகி மங்கலம் பொருந்திய அணிவகைகளைத் தெருவில் வரிசையாக அமைத்து எதிர்கொண்டு தமது அருகே வந்தபோது; இழிந்தருளி - சிவிகையினின்றும் இறங்கியருளி; அவர் வணங்கத் தொழுது - அவர்கள் தம்மை வணங்கத் தாமும் அவர்களைத் தொழுது; அன்பு... சார்ந்தார் - அன்புதந்து ஆட்கொள்ளும் இறைவரது திருக்கோயிலின் அழகிய பெரிய நீண்ட திருக்கோபுரத்தைச் சார்ந்தருளினர்.


(வி-ரை) சிறப்பு எதிர வருவார் - சிறப்புடன் எதிர்கொள்ள வருவாராகி; பிள்ளையார் வரும் சிறப்பினை என்றலுமாம். **எதிர**-எதிர்சென்று ஏற்க; **வருவார்** - வருவாராகி; முற்றெச்சம். **வருவார் - எதிர்கொள்ள**-என்று கூட்டுக. மறுகு - தெரு; நிரை - வரிசை.

இழிந்தருளி - சிவிகையினின்றும் இழிந்து என்க. சிவிகையினின்றும் என்பது இசையெச்சம்.

அன்பு தருவார் - அன்பினைக் கொடுத்துத் தம்மை வணங்கச் செய்து ஆட்கொள்ளுவது இறைவரது தன்மை.

மணித் தடநெடுங் கோபுரம் - அடைமொழிகள் கோபுரத்தின் மேன்மை குறித்தன. ''மிக்குயர்ந்த'' என மேற்கூறுதல் காண்க. **கோபுரம்** - கோபுரத்தை. *1121*


3020. (இ-ள்) மிக்குயர்ந்த...உள்ளணைந்து - மிகவும் உயர்ந்த கோபுரத்தைப் பணிந்து பெரிய திருமுன்றிலுனுள்ளே புகுந்தருளிக் கோயிலின் பக்கத்தினைச் சூழ்ந்து வலமாக வந்து உள்ளே அணைந்து; கொக்கிறகும்...தாழ்ந்தார் - கொக்கிறகும் பிறைச் சந்திரனும் குளிர்ந்த கங்கையும் விளங்குகின்ற அந்திமாலையின் செக்கர் போன்ற சடையினையுடைய இறைவருடைய திருவடிகளின் கீழே விழுந்து வணங்கினார்.



திருவான்மியூர்த் திருக்கோயில் பாட்டு :- 3021



திருவிடைச்சுரம் திருக்கோயில் பாட்டு :- 3024



திருக்கழுக்குன்றம் பாட்டு :- 3027

3020. **மிக்குயர்ந்த** கோபுரத்தை வணங்கிவியன் றிருமுன்றில்
புக்கருளிக் கோயிலினைப் புடைவலங்கொண் டுள்ளணைந்து
கொக்கிறகு மதிக்கொழுந்துங் குளிர்புனலு மொளிர்கின்ற
செக்கர்நிகர் சடைமுடியார் சேவடியின் கீழ்த்தாழ்ந்தார். 1122

3021. **தாழ்ந்து**பல முறைபணிந்து தம்பிரான் முன்னின்று
வாழ்ந்துகளி வரப்பிறவி **மருந்தான பெருந்தகையைச்**
சூழ்ந்தவிசைத் **திருப்பதிகச் சொன்மாலை வினவுரையால்**
வீழ்ந்தபெருங் காதலுடன் **சாத்திமிக வின்புற்றார்.** 1123

(வி-ரை) உயர்ந்த - *முன் பாட்டிற் கூறிய* அடைமொழிகளின் தொகுதியாகிய உயர்வு. **உயர்வு - உருவினாலும் திருவினாலும் உள்ள மேம்பாடு.**

வியன் திருமுன்றில் - கோயிலினுள்ளே இருக்கும் இடமகன்ற திருமுற்றம்.

கொக்கிறகு...சடை முடியார் - கொக்கிறகு - இறைவர் உகந்து சூடும் இனமலர்; **மதிக்கொழுந்து** - பிறையின் வளர்ச்சி தொடங்குவதால் **கொழுந்**தென்றார்; **குளிர் புனல்** - கங்கைநீர்; **செக்கர்** - அந்திமாலையிற் காணும் செவ்வானம்; மாலையின் றாங் குருவே போலுஞ் சடைக்கற்றை'' *(அற். அந் -65).* *1122*

3021. (இ-ள்) தாழ்ந்து...முன்னின்று - நிலமுற வீழ்ந்து பலமுறையும் பணிந் தெழுந்து இறைவர் திருமுன்பு நின்று; வாழ்ந்து களிவர - வாழ்வு பெற்று மகிழ்ச்சி பொருந்த; பிறவி...சொன்மாலை - பிறவி நோய்க்கு மருந்தாகிய பெருந்தகைமை யுடைய இறைவரை உட்கொண்ட பண்ணமைந்த திருப்பதிகமாகிய சொன்மாலையை; வினவுரையால்...இன்புற்றார் - வினவும் உரையுமாக வரும் அமைப்புடனே அழுந்திய பெருவிருப்பினுடன் அணிந்து மிக இன்பமுற்றருளினர்.

(வி-ரை) பிறவி மருந்தான பெருந்தகை - இப்பதியில் இறைவர் மருந்தீசர் என்ற திருப்பெயரோடு எழுந்தருளியிருப்பதனால் அக்குறிப்புப் பெற **மருந்**தென்பது பிறவிநோய் தீர்க்கும் மருந்தென்று காட்டியருளியவாறு; ''மூலநோய் தீர்க்கு முதல்வன் கண்டாய்'', ''மந்திரமுந் தந்திரமு மருந்து மாகித் தீராநோய் தீர்த்தருள வல்லான்'' (தேவா). தலவிசேடமும், பதிகப் பாட்டுக் குறிப்புகளும் பார்க்க.

வாழ்ந்து களிவர - திருப்பதிகம் பயின்றோரெழுகுவோ ரெல்லாம் வாழ்ந்து மகிழ்ச்சியடைய என்ற குறிப்புமாம்.

சூழ்ந்த - பெருந்தகையைச் சூழ்ந்த என்றும், இசை சூழ்ந்த என்றும் இருவழியும் கூட்டியுரைக்க நின்றது; **பெருந்தகை** - சிவபெருமான்; ஆணவத் தழுந்திப் பிழை செய்வது உயிர்களின் செயல்; அதனைப்பொறுத்துக் கணந்தோறும் அருள் செய்வதே இறைவரியல்பு என்ற குறிப்பு; **மருந்தாகி** நிற்கும் நிலையினை விரித்தவாறு. பித்தனேன் பேதையேன் பேயே னாயேன் பிழைத்தனக ளெத்தனையும் பொறுத்தா யன்றே, யித்தனையு மெம்பரமோ?'' (தேவா). **பெருந்தகையைச் சூழ்த**லாவது அவரது அத்தன்மையினையே உட்கிடையாகக் கொண்டு

3022. பரவிவரு மானந்த நிறைந்ததுளி கண்பனிப்ப
விரவுமயிர்ப் புளகங்கண் மிசைவிளங்கப் புறத்தணைவுற்
றரவநெடுந் திரைவேலை யணிவான்மி யூரதனுட்
சிரபுரத்துப் புரவலனூர் **சிலநாளங் கினிதமர்ந்தார்.** 1124

போற்றுதல்; பதிகக் குறிப்புப் பார்க்க. **இசை சூழ்**தலாவது பண்ணமைதி பாட்டினியல்பிலே பற்றியமைந்து கிடத்தல்.

வினவுரையால் - வினவும் உரையுமாக அமைந்த பதிக யாப்பமைதி; பதிகப் பாட்டுக் குறிப்புப் பார்க்க.

வீழ்ந்த - வீழ்தல் - அழுந்திய விருப்பம்; விழைவு. ''தாம்வீழ்வார்'' (குறள்); உலகியற் பொருள்களில் வீழ்ந்து உழலும் விருப்பினை இறைவன்பாலே வீழ்த்தினால் உயிர் உய்தி பெறுமென்பது இச்சொல்லாற்றற் குறிப்பு; ''தத்தையங் கனையார் தங்கண்மேல் வைத்த தயாவைநூ றுயிரங் கூறிட், டத்திலங் கொருகூறுன் கண்வைத்தவருக் கமருல களிக்குநின் பெருமை'' (திருவிசைப்பா - 6. கங்கைகொண்ட சோளேச்சரம்).

சாத்தி - சொன்மாலை என்றதற்கேற்பச் ***சாத்தி*** என்றார். *1123*

3022. (இ-ள்) பரவிவரும்...மிசை விளங்க - பரந்து வருகின்ற ஆனந்தக் கண்ணீர் கண்களினின்றும் துளித்துப் பெருகவும், பொருந்தும் மயிர்ப்புளகங்கள் திருமேனி யெங்கும் விளங்கவும் பெற்று நின்று; புறத்து அணைவுற்று - திருக்கோயிலின் புறத்திலே அணைந்தருளி; சிரபுரத்துப் புரவலனார் - சீகாழித் தலைவராகிய பிள்ளையார்; அரவநெடும்...அணிவான்மியூரதனுள் - ஓசையினையுடைய நீண்ட அலைகளைக் கொண்ட கடற்கரையில் அமைந்த அழகிய திருவான்மியூரின்கண்; சிலநாளங்கினிதமர்ந்தார் - சில நாள்கள் அங்கு இனிதாக விரும்பி எழுந்தருளி யிருந்தனர்.

(வி-ரை) பரவி வரும் - முன் பாட்டில் **இன்புற்றார்** என்ற அந்நிலை உள்ளத்திற் பரவுதலினால் வருகின்ற; **பரவி** - பரவுதலினால் - துதித்தமையால் - என்றுரைக்கவும் நின்றது.

ஆனந்த நிறைந்த துளி - ஆனந்தம் நிறைந்ததனால் வரும் கண்ணீர்த் துளிகள். ***நிறைந்த*** - நிறைந்ததனால். ***கண் பனிப்ப-பனித்தல்***-துளித்தல்.

மிசை விளங்க-மிசை-திருமேனிமேல். ***ஆனந்தம்*** - உள்ளேயும், **புளகங்கள்** மிசையிலும் விளங்கின என்பது.

அரவம் - கடலின் எழும் மாருதவோசை; **நெடுந்திரை** - அலைகள் நீண்டும் ஒன்றன்மேல் லொன்றுமாக இடையறாது பரம்பரையாக வரும் நிலை குறித்தது. ''திரையுலாம் கழி'' என்ற பதிகமும் காண்க.

அணி - கடற்கரையின் அருகு அழகின் அமைந்த கடற்கரைப் பட்டினங்களுக்குச் சிறப்பாயுரிய அணிநலம் பற்றி அதிபத்தநாயனார் புராணமும், பிறவும் பார்க்க.

திருவிடைச்சுரம்

3023. அங்கமணர் வாருலகா ளுடையாரை யருந்தமிழின்
பொங்குமிசைப் **பதிகங்கள் பலபோற்றிப்** போந்தருளிக்
கங்கையணி மணிமுடியார் பதிபலவுங் கலந்திறைஞ்சிக்,
செங்கண்விடைக் கொடியார்த **மிடைச்சுரத்தைச் சேர்வுற்றார்.** 1125

சிலநாளங் கினிதமர்ந்தார் - "நலிர்மேவிலைக் கரையினையந் திருந்தா ரன்றே" (2787) என்று திருஇராமேசுரத்திற் பிள்ளையார் தங்கியிருந்த நிலைபற்றிய குறிப்புக்கள் ஈண்டும் காணத்தக்கன. தரங்கம்பாடி - குமரிமுனை முதலிய இடங்களுக்கு இந்நாளிலும் மக்கள் உடற்சுகம்பற்றிச் செல்லும் நிலையும் கருதத்தக்கன. ஆயின் ஈண்டுப் பிள்ளையார் இனிதமர்ந்தது அவ்வாறு உலகிய லின்பங்கருதி யன்றென்பது "திருவான்மியூர்தனுள்" என்பதனாற் குறிக்கப்பட்டது. "நாதர்தமை நாடோறும் வணங்கி யேத்தி" (2787) என முன்னரும் இக்குறிப்புப்பெற வோதுதல் காண்க. இக்கருத்தினை வற்புறுத்த "மெய்த ரும்புகழ்த் திருமயி லாபுரி விரைசூழ், மொய்த யங்குதண் பொழிற்றிரு வான்மியூர் முதலாப், பைத ரும்**பணி யணிந்தவர் பதியெனைப் பலவால், நெய்த லெய்தமுன் செய்தவந் நிறைதவஞ் சிறிதோ**" (1117) என முன்னர் இறைவரது விளக்கம்பற்றியே ஈண்டு நிலச்சிறப்புக் கூறியவாறும் கருதுக. "பழுதில் புகழ்த் திருமயிலைப் பதியிலமர்ந் தருளுநாள்" (3017) என முன் கூறியதுமிக்கருத்து. திருப்பதிகத்துக் "கரையுலாங் கடலிற்பொலி சங்கம் வெள்ளிப்பிவன், றிரையுலாங் கழிமீ னுகளும் திருவான்மியூர்" (1) என்றும், பின்னரும், வரும் திருவுள்ளக் குறிப்பும் கண்டுகொள்க. பதிகத்துள் "கடலின் புறந், தேனயங்கிய பைம்பொழில்சூழ்" (3). "தடம்பொழி லின்னிழற் கானல்வாய்த், தெண்டி ரைக்கட லோதமல்கும்" (7), "பொருது வார்கட லெண்டிசை யுந்தரு வாரியால், திரித ரும்புகழ் செல்வமல்கும்" (9) என்ற பதிகக் கருத்துக்கள் காண்க.

சிரபுரத்துப் புரவலனார்-சிரபுரம்-சீகாழியின் ஏழாவது திருப்பெயர். *1124*

3023. (இ-ள்) அங்கணமர்வார்...போந்தருளி - அப்பதியில் எழுந்தருளியிருப்பவராகிய பிள்ளையார் உலகங்களுக்கெல்லாம் தலைவராகிய இறைவரை அரிய தமிழிலே மேன்மேல் வளரும் பண் இசை நிரம்பிய திருப்பதிகங்கள் பலவற்றாற் றுதிசெய்து அங்கு நின்றும் போந்தருளி; கங்கை...இறைஞ்சி - கங்கைநதியினை அணிந்த அழகிய சடைமுடியினையுடைய இறைவருடைய பதிகள் பலவற்றையும் அங்கங்கும் சென்று கலந்து வணங்கி; செங்கண்விடை....சேர்வுற்றார் - சிவந்த கண்களையுடைய ஆனேற்றுக் கொடியினரான இறைவரது திருவிடைச்சுரத்தைச் சேர்ந்தருளினார் (பிள்ளையார்).

(வி-ரை) உலகாளுடையார் - சிவபெருமான்; முழுமுதன்மை யுடையார்; அந்தமாதி என்று ஞானநூல் பேசும் தன்மையினை உடையவர். "உலகாளுடை யீர்" (1); "ஆதியெம் பெருமான்" (11) என்ற பதிகக் குறிப்புக்களும் காண்க.

பதிகங்கள் பல - இவற்றுள் "விரையார் கொன்றையினாய்" என்னும் கௌசிகப் பண்ணமைந்த ஒரு பதிகம் மட்டும் கிடைத்துள்ளது; ஏனையவை கிடைத்தில!

பதி பல - இவை குன்றத்தூர், திருநெடுங்குன்றம், திருக்கச்சூ ராலக்கோயில் முதலாயின என்பது கருதப்படும். திருநாவுக்கரசர் புராணத்து 331-ம் பாட்டில் குறித்துள்ளவற்றுள் திருவேற்காடும் திருவலிதாயமும் நீக்கிக் கீழ்வருவனவற்றைச் சேர்த்துக்கொள்க. மாடன்பாக்கம், பல்லவபுரம், திருச்சுரம் (திருசூலம் என வழங்குவது), திருச்சிவப்பேறூர் (குன்றத்தூர் போகும் வழியில் பேரூர் tollgate), கோவூர், மாங்காடு, சோமங்கலம், மணிமங்கலம், படூர், பூஞ்சேரி, திருக்கச்சூர், வயலூர், வீராபுரம். (ஒவ்வொரு ஊரிலும் பழைய கோயிலும் கல்வெட்டுக்களும் உண்டு).

கலந்திறைஞ்சி - திருவொற்றியூரினின்றும் திருமயிலைக்கும், அங்குநின்றும் திருவான்மியூருக்கும் கடற்கரை வழியே அலைவீதியினை அடுத்து எழுந்தருளிய பிள்ளையார், திருவான்மியூரினின்றும் போந்தருளுபவர் கடற்கரையினை விட்டு நாட்டினுள்ளே சென்று பலபுறமும் கலந்துபோய் வழிபட்டனர் என்பதாம்.

செங்கண்விடைக் கொடியார் - ''விடையுயர் கொடியர்'' (5) என்ற பதிகக் குறிப்பு; ''கொடியர்'' எனச் சிலேடைவகையால் கொடியுடையவர் எனவும், கொடியவர் எனவும் இருபொருள்பட நின்ற பதிகத்துப்போலவே **கொடியார்** என்ற நயம் காண்க; தலைவனை நயந்த தலைவியின் கூற்றாகிய உட்குறிப்பினையுடைய பதிகக் கருத்துப் பார்க்க. ''இரங்கல் நறு நெய்தல்'' என்ற திணைப் பொருளும் காண்க.

பிள்ளையார் என்ற எழுவாய் முன்பாட்டினின்றும் வருவிக்க. *1125*

I திருவான்மியூர்

திருச்சிற்றம்பலம் விஞவுரை பண் - இந்தளம்

கரையு லாங்கட லிற்பொலி சங்கம்வெள் ளிப்பிவன்
றிரையு லாங்கழி மீனுக ளுந்திரு வான்மியூர்
உரையு லாம்பொரு ளாயுல காளுடை யீர்சொலீர்
வரையு லாமட மாதுட னாகிய மாண்பதே. (1)

மாதொர் கூறுடை நற்றவ னைத்திரு வான்மியூர்
ஆதி யெம்பெரு மானருள் செய்ய வினாவுரை
ஓதி யன்றெழு காழியுண் ஞானசம் பந்தன்சொல்
நீதி யானினை வார்நெடு வானுல காள்வரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– அடியார் சிந்தை செய்து பரவும் திருவான்மியூர் ஆதியெம் பெருமான்! மாதுடனாகிய மாண்பு முதலாகிய உம்முடைய முதன்மைத் தன்மைகளின் நிலைகளை எங்களுக்கு உரைத்தருளிச் செய்வீர் என்று இறைவர்பால் வினவியது.

பதிகப் பாட்டுக் குறிப்பு:– கடல் திரையுலாம் - ''அரவ நெடுந்திரை வேலையணி'' (3022); உரையுலாம் **பொருளாய் உலகாளுடையீர்** - சொல்லுவார் சொற்களுக்கெல்லாம் பொருளாய் நிற்பவர். இறைவன் எல்லாப் பொருளுள்ளும் கலந்து நிற்றலின் சொல்லாற் சொல்லும் பொருள்

எவையாயினும் அவை அவனைப் பேசாநர் என்ற கருத்து. **உலகாளுடையீர் - உலகினை ஆளுதல்** என்றது - பிறவிப்பிணி நீக்கிய நலனாம் ஐந்தொழில் இயற்றும் முதல்வனாதல் குறித்தது. "உலகாளுடையாரை" (3023) என்றும், "பிறவி மருந்தான பெருந்தகையை" (3021) என்றும் இக்கருத்தை ஊன்றிக் கருதுமாறு ஆசிரியர் காட்டியருளுதல் காண்க. இப்பதியில் இறைவர் மருந்தீசர் என்ற திருநாமத்தால் வழங்கப்படுதலும் குறிக்க. மாதுடனாகிய மாண்பு (1), ஆனை யுரிபோர்த் தனலாடலுகந்தது (3), நஞ்சுண்டு வானவர்க் கின்னருள் வைத்த வியல்பு (4), பிறை செஞ்சடை வைத்தது (5), ஆரெயில் எரியூட்டிய மொய்ம்பு(6), இருக்கு நால்வருக்கு உரை செய்தது (7), இல்பலி யேற்றது (9) என்று இப்பதிக முழுமையும் உரைபெறக் கேட்ட விஞவாகக் கூறியவை இறைவர் உயிர்களை ஆளுடைய முதல்வராகிய நிலையினைப்பற்றி நிற்றல் காண்க. **வரை** - மலை. **மாண்பு சொலீர்** - மாண்பின் நிலையினை உரையீர் என்று விஞவியபடி. இவ்வாறு உரை (விடை) வேண்டிச், சொல்லீர் என்று கேட்கும் நிலையில் அமைந்த யாப்பினுல் இது **விஞவுரை** (11) எனப்பட்டது. "விஞவுரையால்" (3021);—**(2) சந்தும் அகிலும் புனலும்** கொண்டு என்று உம்மைகள் தொக்கன. இவை புறப் பூசையும், **தம் சிந்தை செய்து** என்பது அகப்பூசையும் குறித்தன. **அடியார் பரவுதல்** - மருந்தாதலிற் பிறவிநோய் தீர்தற் பொருட்டு அடியார் பரவும் குறிப்பு. **அந்தியின் ஒளியின் நிறம் - அந்தி** - மாலைச் செவ்வானம்; **அந்தி** - அம் - தீ - அந்தியென நின்றதெனக் கொண்டு அழகிய தீயின் ஒளி நிறம் என்றலுமாம்; **வண்ணம்** - "பொன்வண்ண மெய்வண்ண மவ்வண்ணமேனி";—**(3) கால்** - காற்று; **நயங்குதல்** - நலங்காட்டுதல்; **நயம்** - நலம்;—**(4) செஞ்சொலாளர்கள்**- கற்ற பெரும்புலவாணர்; சிவச்சொற் பயிலும் பெரியோர்; நாட்டு வளம் பற்றித் தீஞ்சொற் பயிலும் மடவார் என்றலுமாம். **துஞ்சு அஞ்சு இருள்** - உலக மெலாம் துஞ்சிய - இறந்த - அஞ்சத்தக்க - வலிய ஊழி; உடன்படுமெய்பெறுதல் புறனடையாற் கொள்க; வஞ்சும் என்று கொண்டு வஞ்சிக்கும் - மயக்கும் - என்றுரைத்தலுமாம்;—**(5) துண்ணெனத் திரியும் சரிதைத் தொழில்** - "உமக் காட்செய வஞ்சுதுமே" (கோத்திட்டை) என்ற நம்பிகள் பதிகக்கருத்துக் காண்க; (6) **ஓத்து** - வேதம் ஓதுதல். **சூது** - மாங்கனி; சூதாடும் வட்டில் என்றலுமாம்; **உலாவிய** - போன்ற; உவமஉருபு. **மொய்ம்பு** - வலிமை; **மூதெயில்** - பழமையுடைய மும்மதில்கள்;—**(7) கானல்** - கடற்கழிக் கானல்; **தொண்டு** - தொண்டர்கள்; **இரைத்து** - துதி செய்து; **இருக்கு** - அறமுதல் நான்கு உறுதிப் பொருள் கொண்ட வேதப் பொதுமை குறித்து நின்றது;—**(8) தக்கு** - தருக்கு;—**(9) வாரியால் திரிதரும் புகழ் செல்வமல்கும்** - கடல்படு பொருள்களின் வாணிபத் துறையினுல் வரும் புகழ் - நிதி - முதலியவை. **சுருதியார் இருவர்** - பிரமன் - மால்;—**(10) மை** - இருள் - நிழல்; வண்டினம் தவத்தொழிலார்போல இசை மிழற்றும் என்க. **தவத்தொழிலார்** - வேதம் பயிலும் முனிவர். வண்டினமும் - தொழிலாரும் இசைக்கும் இசைசேர் என்றலுமாம். மெய்யினில் தவமியற்றும் அடையாளமாகிய நீறு பூசிய என்க. **தவப் பொடி** - தவத்தின் கோலமாகிய நீறு; **பொடி** - நீறு; "பூதியாகிய புனிதநீ ருடி.... மாதவஞ் செய்" (1143) பார்க்க; மேல் "நற்றவனை" (11) என்பதும் காண்க. **கைதவம்** - கீழ்மை; பொய்யுமாம்;—**(11) மாதொர் கூறுடை நற்றவனை - அருள் செய்ய** - முன்பாட்டுக்களில் **"சொலீர்"** என்றதன் பொருள் கூறியபடி; **விஞவுரை** - பதிகப்பெயர்.

3024. **சென்னி**யிள மதியணிந்தார் மருவுதிரு விடைச்சுரத்து
மன்னுதிருத் தொண்டர்குழா மெதிர்கொள்ள வந்தருளி
நன்னெடுங்கோ புரமிறைஞ்சி யுள்புகுந்து நற்கோயில்
தன்னைவலங் கொண்ட**ணைந்தார் தம்பிரான் றிருமுன்**பு. 1126

II. **திருவான்மியூர்**

திருச்சிற்றம்பலம் பண் - கௌசிகம்

விரையார் கொன்றையினுய் விட முண்ட மிடற்றினனே
உரையார் பல்புகழா யுமை நங்கையொர் பங்குடையாய்
திரையார் தெண்கடல்சூழ் திரு வான்மி யூருறையும்
அரையா வுன்னையல்லா லடை யாதென தாதரவே. (1)

கன்று ருங்கமுகின் வயல் சூழ்தரு காழிதனில்
நன்று னபுகழால் மிகு ஞானசம் பந்தனுரை
சென்றூர் தம்மிடர்தீர் திரு வான்மி யூரதன்மேற்
குன்று தேத்தவல்லார் கொடு வல்வினை போயறுமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– *திருவான்மியூருறையும் அரைசே! உன்னையல்லா லடையாது* எனது *ஆதரவே.*

பதிகப் பாட்டுக் குறிப்பு:– திரையார் தெண்கடல் சூழ் - ''அரவ நெடுந்திரை வேலை'' *(3022);* ***அரையா*** - அரசே; ''*உன்னையல்லா லடை யாதென தாதரவே*'' என்பது பாட்டுத்தோறும் வரும் மகுடம்; **ஆதரவு** - அன்பு; **அல்லாலடையாது** - எதிர்மறைகள் உறுதி குறித்தன;—**(2) இடியார்** - இடிபோன்ற முழக்கமுடைய; மணிமுடியாய் - முடியிற்சூடும் மணிபோன்றவரே;–*–**(3) செய்*** - வயல்கள்;—***(4)* புரி நூல்** - புரித்த முந்நூல்; நூலுடையவனே. **தென்பால்** - தென்றிசையில்;—***(6)* நீதீ-ஓதீ-சேதீ-ஆதீ**-நான்கும் பெயர்கள்; விளியுருபேற்று நீண்டன. **சேதீ** - சேதித் தவரே; (7 - 8) **ஆனுய்** - எல்லாமானுய்; உரிமையானவரே; இடபம் - பசுபதியே - என்றலுமாம்.—***(11)* இடர் தீர்** - மருந்தாய்ப் பிறவிப்பிணி தீர்க்கும்.

தலவிசேடம்:– திருவான்மியூர் - தொகுதி III - பக்கம் - 730 பார்க்க.

3024. (இ-ள்) சென்னி...வந்தருளி - சிரத்திலே இளம்பிறையினைச் சூடிய இறைவர் எழுந்தருளிய திருவிடைச்சுரத்தில் நிலையாக வாழும் திருத்தொண்டர் கூட்டம் எதிர்கொள்ள வந்தருளி; நன்னெடுங் கோபுரம்...திருமுன்பு - நன்மை தருகின்ற நீண்ட கோபுரத்தினை வணங்கித் திருக்கோயிலினுள்ளே புகுந்து நன்மை செய்யும் அத்திருக்கோயிலினை வலமாகச் சூழ்ந்து வந்து தம் பெருமான் றிருமுன்பு வந்தணைந்தருளினர் (பிள்ளையார்).

(வி-ரை) நன்னெடும் கோபுரம் -நற்கோயில் - கோபுரம் தூலலிங்கம் எனப்பட்டுத் தூரத்தே காட்சியளித்து அழைத்து வழிபடச்செய்து உய்திதருதலால் **நன்னெடும்** என்றூர்.

3025. **கண்டபொழு தேகலந்த காதலாற் கைதலைமேற்**
கொண்டுதல முறவிழுந்து குலவுபெரு மகிழ்ச்சியுடன்
மண்டியபே ரன்புருகி மயிர்முகிழ்ப்ப வணங்கியெழுந்
தண்டர்பிரான் றிருமேனி வண்ணங்கண் டதிசயித்தார். 1127

நற்கோயில் - வந்தனை செய்தார்க்கெல்லாம் நன்மை தருவார் எழுந்தருளிய இடமாகிய திருக்கோயில்.

திருமுன்பு அணைந்தார் - என்க. முன்பு: சந்நிதி. சந்நிதியை அடைந்தார் என இரண்டாவதனுருபு விரிக்க. *1126*

3025. (இ-ள்) கண்ட பொழுதே கலந்த காதலால் - தம்பிரான் திருமுன்பு சேர்ந்து அவரைக் கண்ட அப்பொழுதே மனம் புகுந்து கலந்தெழுந்த பெருவிருப்பத்தினாலே; கைதலைமேல்...எழுந்து - கைகளைத் தலைமேலே கொண்டு நிலம் பொருந்த விழுந்து நிறைந்த பெரிய மகிழ்ச்சியுடனே பொங்கிய பேரன்பினாலே உள்ளுருகி உரோமம் புளகம் கொள்ள வணங்கி எழுந்து; அண்டர் பிரான்...அதிசயித்தார் - தேவதேவராகிய இறைவரது திருமேனியின் அழகிய வண்ணத்தைக் கண்டு அதிசயமடைந்தருளினர்.

(வி-ரை) கண்டபொழுதே கலந்த காதல் - கண்ணுற் காணாது நினைந்து எழுந்தபோது காதல் உள்ளத்தினுள் நின்றது; கண்டபோது அது மிக்கு அவரிடத்துச் சென்று கலந்தது என்க; **பொழுதே** - ஏகாரம் தேற்றம்.

கை...எழுந்து - கைகூப்பியவாறே நிலமுற விழுந்த அந்நிலையில் மகிழ்ச்சியும் அன்பும் பெருக மயிர் முகிழ்த்தல், மனமுருகிக் கண்ணீர் பாய்தல் முதலிய மெய்ப்பாடுகள் நிகழ்ந்தன; நிகழப் பன்முறையும் பணிந்து பின் எழுந்து என்க.

திருமேனி வண்ணம் கண்டு அதிசயித்தார் - திருமேனியின் வண்ணமாவது ஒளியும் நிறமும் வடிவும் அழகும் ஏனைய உள்ளங்கவரும் மாண்புகளுமாகிய தொகுதி. **அதிசயம்** - உள்ளங் கவர்ந் தெழுகின்ற, இன்னதென்று பிரித்துணர லாகாத, இன்பமயமாகிய மெய்ப்பாடு. **கண்டு அதிசயித்தார்** - "அதிசயம் கண்டாமே" (திருவா); இதன் நிலை பதிகத்துட் காண்க; மேற்பாட்டில் விரிக்கப்படுதலும் காண்க.

அதிசயிப்பார் —என்பதும் பாடம். *1127*

3026. (இ-ள்) "இருந்த ...என்னே?" என்று -"சாரல் விளங்கவிருந்த திருவிடைச் சுரத்தில் மேவிய இப்பெருமானது வண்ணந்தான் என்ன அதிசயம்!" என்று; அருந்தமிழின்...சாத்தி - அருந் தமிழாலாகிய இனிய திருப்பதிகத் தமிழ்மாலையினாற் றுதித்துத் திருந்தும் மனம் கரைந்து உருகத் திருக்கடைக்காப்புச் சாத்தியருளி; பெருந்தனி...பேறுனார் - பெரிய ஒப்பற்ற சிவானந்தப் பெருவாழ்வினிற் றிளைத்து நின்றார் பெரிய உலகவரின் பேறாக வந்தவதரித்த பிள்ளையார்.

3026. **"இருந்தவிடைச் சுரமேவு மிவர்வண்ண மென்னே!"** யென்
றருந்தமிழின் றிருப்பதிகத் தமிழ்மாலை கொடுபரவித்
திருந்துமனங் கரைந்துருகத் திருக்கடைக்காப் புச்சாத்திப்
பெருந்தனிவாழ் வினைப்பெற்றார் **பேருலகின் பேறுனார்.** 1128

(வி-ரை) இருந்த - விளங்க இருந்த; திருவிடைச்சுரம் எழில்திகழ் சாரலில் அணிபெற இருந்த அமைப்பு; பதிகம் பார்க்க.

இடைச்சுர மேவிய விவர்வண மென்னே! - பதிகத்தின் மகுடம். பதிகக் கருத்தும் குறிப்பும் எடுத்துக் காட்டியபடி.

அருந் தமிழ் - தமிழ் மாலை - தமிழ் - முன்னையது மொழியின் ஏற்றத்துக்கும் பின்னையது பொருளின் உயர்வுக்கும் வந்தன. **(தமிழ்) இன்** - இனிய.

திருந்து மனம் - முன்னைத் தவத்தாற் றிருந்திய மனம்; சரிதைகள் பரவி நிற்றலால் திருந்தும் என்றலுமாம்.

திருந்துமனங் கரைந்துருகத் திருக்கடைக்காப்புச் சாத்தி - ''அண்ணல் சரிதைகள் பரவிநின் றுருகுசம் பந்தன்'' என்ற பதிகப் (11) பகுதியின் குறிப்புரைத்தவாறு. வண்ணங்கண் டதிசயித்து, ''இவர் காடரங்காகக் கனலெரி யாடுவர்'', ''ஆற்றையு மேற்றதோர் அவிர்சடை யுடையர்'' என்பனவாதியாக அவரது அடி நிழல் பரவி நின்றேத்து மன்புடை யடியவர்க் கெளியருமாகும் தன்மைகளை எல்லாம் அவ்வண்ணத்தினுள்ளே கண்டு கண்டு மனங் கரைந்துருகிப் பதிக நிறைவாக்கியருளினர் என்பதாம்.

பெருந் தனிவாழ்வினைப் பெறுதலாவது அவ்வாறு வண்ணங் கண்டு சரிதைகள் பரவிநின்று மனங்கரைந் துருகப்பெற்ற நிலையில் சிவானந்தப் பெருவாழ்விலே திளைத்து அஃதே மயமாக நிற்றல்.

பேருலகின் பேறுனார் - பிள்ளையார் தாம் எஞ்ஞான்றும் அவ்வாழ்விலே நிற்பவராயினும் இவ்வுலகின் வந்து இவ்வாறு பதிகள்தோறும் சென்று சென்று திளைத்துருகி நிற்றல் **உலகத்தார் கண்டுய்யும் பேறாகும் என்பது; பேருலகு** - இப்பேறு பெறும் நிலையில் வந்த உலகு.

கரைந்துருகி—திருப்பதிகத்தலர்மாலை—என்பனவும் பாடங்கள். *1128*

3027. (இ-ள்) நிறைந்த ஆரா...பணிகின்றார் - சிவானந்தப் பெருவாழ்வினால் நிறைந்து அடங்காத பெருவிருப்பத்தினாலே நெடுநேரம் நின்று வணங்கிப் புறத்துப் போந்தருளி அப்பதியில் தங்கியருளிப் பணிகின்ற பிள்ளையார்; உமைபாக ரருள்பெற்று...எழுந்தருளி - உமையம்மையாரை ஒருபாகத்துடைய இறைவரது திருவருள்விடை பெற்றுக்கொண்டு சிறப்புடைய திருத்தொண்டர்களுடனே எழுந்தருளிச் சென்று; செந்துருத்தி...அணைந்தார் - செந்துருத்தி என்னும் பண்ணைப் பாடி வண்டுகள் பயில்கின்ற சாரலையுடைய திருக்கழுக்குன்றத்தினை அணைந்தருளினார்.

3027. **நி**றைந்தாரா வேட்கையினு னின்றிறைஞ்சிப் புறம்போந்தங்
குறைந்தருளிப் பணிகின்ரு ருமைபாக ரருள்பெற்றுச்
சிறந்ததிருத் தொண்டருட னெழுந்தருளிச், **செந்துருத்தி**
அறைந்தளிகள் பயில்சாரற் றிருக்கழுக்குன் றினையணைந்தார். 1129

(வி-ரை) நிறைந்து - *முன் கூறியபடி தாம் பெற்ற சிவானந்தப் பெருவாழ்வினால் நிறைவு பெற்றமையினால்.*

ஆரா வேட்கையினால் நின்று இறைஞ்சி - ஆர்தல் - நிறைவுறுதலினால் அடங்குதல். இங்கு **ஆரா** என்பது அளவில்லாது பெருகுதலினால் அடங்காத என்ற பொருள் தந்தது. திருக்கடைக்காப்புச் சாத்திப் பதிக நிறைவாக்கிய பின்னும் நெடுநேரம் நின்று இறைஞ்சுதலின் காரணம் கூறியபடி.

நின்றிறைஞ்சி - இறைவரது திருமேனி வண்ணத்தைக் கண்டுகொண்டு அதனில் ஈடுபட்டு நின்று என்க. ''சரிதைகள் பரவி**நின்று உருகு**சம்பந்தன்'' (11) என்ற பதிகம் இதற்கு அகச்சான்றாகும்.

அங்கு உறைந்தருளிப் பணிகின்றார் - பலநாள் அங்குத் தங்கிப் பணிவதனை மேற்கொண்ட பிள்ளையார். **அருள்பெற்று** - விடைபெற்று.

அளிகள் செந்துருத்தி அறைந்து பயில் - செந்துருத்தி என்பது குறிஞ்சியாழ்த் திறத்தின் பண் வகைகளுள் ஒன்று; செந்நிறம் எனவும் படும்; செந்துருதி என்றும் சில பதிப்புக்களிற் காணப்படுகிறது. இப்பண்ணில் ஆளுடைய நம்பியருளிய ''மீளாவடிமை'' என்னும் திருவாரூர்ப் பதிகம் ஒன்றுதான் நமக்குக் கிடைத்துள்ளது! பிள்ளையார் திருப்பதிகங்களுள் இப்பண்ணில் பதிகம் கிடைத்திலது! இத்தலத்துப் பிள்ளையாரது ''தோடுடையான்'' என்ற திருப்பதிகம் குறிஞ்சிப் பண்ணில் அமைந்துள்ள நிலையும் காண்க; **அளிகள் அறைந்து பயில்** என்றது வண்டுகளது இரீங்காரத்தில் இயல்பாகவே அவ்வந் நிலத்திற்கேற்றவாறு சில பண்கள் அமைவன. அவ்வாற்றால் இங்குச் செந்துருத்திப் பண் அமைவதாம் என்க. ''சேறுடு செங்கழுநீர்த் தாதாடி மதுவுண்டு சிவந்த வண்டு, வேறாய வுருவாகிச் **செவ்வழிநற் பண்**பாடு மிழலை யாமே'' (தேவா) முதலியவை காண்க. ''கூடல் குறிஞ்சி'' என்பனவாதலின் இங்கு இன்னிசையாற் றமிழ்பரப்பும் பிள்ளையார் எழுந்தருளுவது கண்டு வண்டுகள் ஏற்றவாறு எதிர்கொள்ளும் குறிப்புடன் அதற்கேற்ற செந்துருத்தி அமைந்தன என்ற குறிப்பும் காண்க. குன்றமாதலின் குறிஞ்சிக்குரிமையுமாம். *1129*

திருவிடைச்சுரம்

திருச்சிற்றம்பலம் **பண் : குறிஞ்சி**

வரிவள ரவிரொளி யரவரை தாழ வார்சடை முடிமிசை வளர்மதி சூடிக்
கரிவளர் தருகழல் கால்வல னேந்திக் கனலெரி யாடுவர் காடரங் காக
விரிவளர் தருபொழி லிளமயி லால வெண்ணிறத் தருவிக டிண்ணென வீழும்
எரிவள ரினமணி புனமணி **சார லிடைச்சுர மேவிய விவர்வண மென்னே.** *(1)*

மடைச்சுர மறிவன வாளையுங் கயலு மருவிய வயறனில் வருபுனற் காழிச்
சடைச்சுரத் துறைவதோர் பிறையுடை **யண்ணல் சரிதைகள் பரவிநின் றுருகுசம் பந்தன்**
புடைச்சுரத் தருவரைப் பூக்கமழ் சாரற் புணர்மட நடையவர் புடையிடை யார்ந்த
இடைச்சுர மேத்திய விசையொடு பாட லிவைசொல வல்லவர் பிணியிலர் தாமே.

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– *''அணிசார லிருந்த விடைச்சுர மேவிய விவர்வண்ண மென்னே!'' என்று இறைவரது வண்ணங் கண்டு அதிசயித்து அவர் சரிதைகள் பரவி நின்றுருகி ஏத்தியது (3025 - 3026).*

பதிகப் பாட்டுக் குறிப்பு:– ***(1)*** *அரையில் அரவு தாழவும் முடியில் மதி சூடியும் கால்வலன் கழல் ஏந்தியும் காடு அரங்காக எரியாடுவர்; இவ்வாறு இடைச்சுரமேவிய இவர் வண்ணம் இருந்தவாறு என்னே! அதிசயம்! என்றவாறு. இவ்வாறே ஏனைய எல்லாப் பாட்டுக்களிலும் கண்டுகொள்க.* **வரி** *- வரிகளையுடைய;* **அவிர் ஒளி** *- அரவின் ஒளி, உடல் ஒளியும் மணிகளின் ஒளியுமாம்;* **கரி - கழல் வலனேந்தி - கரி** *- கரியாக - சான்றாக. ''கள்ளவினை, வென்று பிறப்பறுக்கச் சாத்தியவீ ரக்கழலும்'' (போற்றிப் பஃறொடை - 68);* **ஆலுதல்** *- அசைதல்; மயில் ஆடுதலுக்கு வழங்கும் மரபுச்சொல்;* **என்னே!** *- அதிசயக் குறிப்பு வினா;—****(2) ஆற்றை*** *- கங்கையை;* **உம்மை***-உயர்வு சிறப்பு; ஆயிரமா முகத்தினொடு ஆர்த்துப் பரந்திழிந்த ஆற்றையும்;* **ஏற்றது** *- உட்கொண்டு அடக்கியது;* **கொடுமை** *- வலிமை என்ற பொருளில் வந்தது.* **ஓர்த்தல்** *- எண்ணுதல்;* **செருச் செய** *- போரிடுதல்போலத் துள்ள; ''போர்த் தொழில் புரியும்'' (திருவிடை - மும், கோ -7);* **மந்தி** *- பெண்குரங்கு;* **ஏற்றையொடு** *- தன் ஏறாகிய (கடுவன்) ஆண்குரங்குடன்;* **உழிதரும்** *- (வாளையின் செருச் செய்கை கண்டு அஞ்சி மந்தி ஏற்றினொடு) அலையும்; நீர்ச்சிறப்பும் மலைவளமும் கூறிய நிலை; ஏனையவும் இவ்வாறே கண்டுகொள்க;—****(3) காதலர்*** *- விரும்பி ஆடுவர்;* **நிலமை** *- நிலத்தின் தன்மை;* **நானம்** *- கத்தூரி - மான்மதம்;* **மஞ்ஞை** *- ஏனம் -* **பிணை** *- குறிஞ்சிக் கருப்பொருள்கள்;—****(4) கடம்*** *- யானைத்தோல்;* **தேன் அட்டும்** *- தேன் உண்ணும்;–****–(5) கொடியர்*** *- கொடியினை யுடையவர்;* **நிழல்** *- ஒளி;* **செழும்புன லனையன** *- செம்புனலின் ஒழுக்குப் போன்று செறிந்து திரண்ட செவ்வாழையின் குலை ;—****(6) பெரியவர்*** *- சிவ ஞானிகள்;* **குரவம்** *- குரா மரம்;—****(7) வேல்*** *- இங்குச் சூலம் குறித்தது;* **நூலர்***- வேதாகம ஞானநூல் ஓதுவர்; நூல்களால் ஓதப்படுபவர் புரிநூலினை அணிந்தவர் என்றலுமாம்.* **கவர்தலை அரவு** *- ஐந்தாகப் பிரிந்த தலையுடைய அரவு;* **ஆரணங்கு***-உமையம்மை;—****(8) கொன்றையந் திருமலர்*** *- சிறப்பாகிய திருவடையாள மாலையாதல் குறிப்பு;—****(9) ஒன்று*** *- கபால ஓடு;* **பழியிலர்** *- பல இல்லம் பலி ஏற்பினும் அதனாற் பழிப்பிலர்;* **முழவதிர** *- முழவு போல முழங்க;* **இலவங்கம் - ஏலம்** *- ஏலம்; குறிஞ்சிக் கருப்பொருள்;—****(10) ஒரா அருமைய****(ராயினும்)* **அடியவர்க் கணியரு மாவர்** *என்க.* **அணியரும்** *- அயனரிக்கும் அரியராவதுடன், அடியவர்க்கு அணியரும் என உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை;—****(11) மடை*** *- மதகுகள்.* **சடைச்சுரம்** *- சடைக் காடு;* **சுரம்** *- காடு;* **அண்ணல் சரிதைகள் பரவிநின் றுருகு சம்பந்தன்** *- ''திருந்துமனங் கரைந்துருக'' (3026) என ஆசிரியர் இந்நிலையினை விளக்குதல் காண்க.*

தலவிசேடம்:—**திருவிடைச்சுரம்** - தொண்டை நாட்டின் 27-வது பதி; மலைகள் விரவிய இடையிலே கற்சுரமாகிய நாட்டின் பகுதியில் உள்ளதனால் இப்பெயர் பெற்றது; இன்றும்

திருக்கழுக்குன்றம்

3028. **சென்றணையும் பொழுதின்கட் டிருத்தொண்டரெதிர்கொள்ளப்**
பொன்றிகழு மணிச்சிவிகை யிழிந்தருளி யுடன்போந்து
மன்றல்விரி நறுஞ்சோலைத் திருமலையை வலங்கொண்டு
மின்றயங்குஞ் சடையாரை விருப்பினுடன் பணிகின்றார், 1130

இவ்வாறு விளங்குதல் காணப்பெறும். இதன் கற்சுரத்தில் மலைகளினின்றும் யானை - காட்டுப்பன்றி முதலிய கொடுவிலங்குகள் திரிவனவும் காணப்பெறும்; பதிகம் பார்க்க. சனற்குமார முனிவர் வழிபட்டுப் பேறுபெற்ற பதி. மூலலிங்க மூர்த்தியின் வடிவு ஒளிவண்ணமுடைய மாகதத் திருமேனி; முன் உள்ள பொருள்களின் சாயை இலிங்கத் திருமேனியில் எதிரொளி காட்டக் காணலாம். இவரது வண்ணங் கண்டதிசயித்துருகி ஆளுடைய பிள்ளையார் "இவர் வணமென்னே" என்று பதிகமருளிய வரலாறு புராணத்தும் பதிகத்தும் காண்க. சுவாமி - **இடைச்சுர நாதர்**; அம்மை - **இமய மடக்கொடி**; பதிகம் 1.

இது, செங்கற்பட்டு நிலையத்தினின்றும் திருக்கழுக்குன்றம் செல்லும் கற்சாலையில் 3 நாழிகையளவில் வடக்கில் திருப்போரூர் மட்சாலை வழி 2 நாழிகையில் வடக்கில் திருப்பிச் சென்று 1/2 நாழிகையளவில் அடையத் தக்கது. சிரமமான பாதை; பகல் வேளையிற் சென்றடைவது நலம்.

3028. (இ-ள்) சென்றணையும்...எதிர்கொள்ள - (திருக்கழுக்குன்றினிற்) சென்று அணைகின்றபோது அப்பதியின் திருத்தொண்டர்கள் வந்து எதிர் கொள்ளவே; பொன் திகழும்...உடன் போந்து - பொன் விளங்கும் முத்துச் சிவிகையினின்றும் கீழே இறங்கியருளி அவர்களுடனே சேர்ந்து; மன்றல் விரி... வலம் கொண்டு - மணம் விரிந்து கமழும் நறிய மலர்களையுடைய சோலைகள் சூழ்ந்த அத்திருமலையை வலமாகச் சுற்றிவந்து; மின் தயங்கும்...பணிகின்றார் - மின் போன்று விளங்கும் சடையினையுடைய இறைவரை விருப்பத்தினோடு பணிகின்றாராகி.

(வி-ரை) திருத்தொண்டர் - திருக்கழுக்குன்றினில் வாழும் திருத்தொண்டர்கள்.

பொன் திகழும் - பொன் வேலைப்பாட்டினால் விளங்கும்; **மணி** - முத்து.

உடன் போந்து - உடன் என்றது "உடனுனிடம்" என்புழிப்போல ஒன்றாகாமல் வேறுமாகாமல் உடனாகிய மனக்கலப்பாற் கலந்து என்ற பொருளில் வந்தது. தொண்டர்கள் வணங்கியதும் பிள்ளையார் வணங்கியதும் இருதிறத்தவரும் ஒன்றாகி மேலே அணைவதுவும் ஆகிய எல்லாம் **உடன்** என்றதொரு சொல்லாற் பெறவைத்த கவிநயம் கண்டுகொள்க. இது சைவத் திறத்தின் சிறப்பு.

மன்றல்விரி...திருமலையை வலங்கொண்டு - இங்கு மலையைச் சுற்றி வழிபட்டுப் பின் மலைமிசையேறி இறைவரை வணங்கும் முறை இன்றும் நிகழ்வதாம். மலைச் சுற்றுத் திருவீதியில் இயல்பாயமைந்த மரங்களடர்ந்த சோலைகள் மணங்கமழவுள்ள நிலையும் இன்றும் கண்டு மகிழத்தக்கது.

3029. **திருக்கழுக்குன் றத்தமர்ந்த செங்கனகத் தனிக்குன்றைப்**
பெருக்கவளர் காதலினுற் பணிந்தெழுந்து பேராத
கருத்தினுடன் **"காதல்செயுங் கோயில்கழுக் குன்"** றென்று
திருப்பதிகம் புனைந்தருளிச் சிந்தைநிறை மகிழ்வுற்ருர். 1131

மின் தயங்கும் சடையார் - மின் தயங்கும் *- உவமத் தொகை;* ***தயங்குதல்*** *- விளங்குதல்; பொதுத் தன்மை. சடை மின்போல விளங்குதல் ''பொலிந்திலங்கு மின்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணம் வீழ்சடை'' (பொன்வண். அந் - 1) என்பதாதி திருவாக்குக்களாலறிக. இத்தலத்துள் இறைவரை மின்விளங்கும் இடி வழிபடுகின்ற (தலச்சிறப்பு) குறிப்பும் காண்க.*

பணிகின்ருர் *- முற்றெச்சம். பணிகின்ருராகிப் - பணிந்து எழுந்து என மேல் வரும் பாட்டுடன் முடிக்க-பணிகின்ருராகிய பிள்ளையார் என்று வினைப் பெயராக்கியுரைப்பினு மமையும்.* *1130*

3029. (இ-ள்) திருக்கழுக்குன்றத்து...எழுந்து - (அந்தத்) திருக்கழுக்குன்றத்தின் மேல் விரும்பி விளங்க வீற்றிருந் தருளும் ஒப்பற்ற செம்பொற் குன்றம் போன்ற வேத நாயகராகிய இறைவரைப் பெருகி வளர்கின்ற மிக்க விருப்பத்திஞலே வணங்கி எழுந்து; பேராத...புனைந்தருளி - பெயராது ஊன்றிவைத்த கருத்திஞேடு ''காதல் செயுங் கோயில் கழுக்குன்று'' என்ற கருத்தும் மகுடமுடைய திருப்பதிகத்தினைச் சாத்தியருளி; சிந்தை நிறை மகிழ்வுற்ருர் - மன நிறைந்த மகிழ்ச்சியை அடைந்தருளினர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) திருக்கழுக்குன்றத்து...தனிக் குன்றை *- குன்றத்தின் மேல் குன்று என்றது கவிநயம்; இறைவரைச் செங்கனகத் தனிக்குன்று என்றது இது வேறு தன்மையுடையதொன்று எனப் பிரித்துக்காட்டுவது; ஒளியும் வண்ணமும் பற்றிக் குன்றென்று உருவகித்தார்.*

பெருக்க வளர் காதலினுல் - பேராத கருத்தினுடன் *- மிக வளரும் காதலாற் பணிந்தருளினர்; அங்குநின்றும் அகலாத கருத்து மூண்டது; அவ்வாறு காதலை மிகச் செய்பவராகி அங்கு வீற்றிருப்பவர் அவ்விறைவர் என்பது குறிப்பு.* ***காதல் செய்*** *- வந்தடைந்தார்க்குத் தம்பாற் காதலைச் செய்கின்ற என்று பதிகப்பொருள் விரித்தவாறு. ''முன்புசெய் தவத்தி னீட்ட முடிவிலா வின்ப மான, அன்பினை யெடுத்துக் காட்ட வளவிலா வார்வம் பொங்கி... ...உள்ளத் தெழுபெருவேட்கை யோடும்.'' (751); ''அண்ணலைப் பிரிய மாட்டா வளவிலா தரவு நீட'' (759); ''மேவினர் பிரிய மாட்டா விமலனர்'' (818) என்று உள்ள கருத்துக்கள் இங்கு வைத்துக் காணத்தக்கன.* ***காதல் செய்*** *- காதலை விளைத்து நிற்கும்; இதற்கு இவ்வாறன்றி இறைவர் விரும்பும் கழுக்குன்று என்றுரைப்பாருமுண்டு.*

காதல் செயும் கோயில் கழுக்குன்று *- பதிகத்துள் எல்லாப் பாட்டுக்களிலும் வரும் மகுடமும் பதிகக் கருத்துமாம். இக்காதல் பிள்ளையார் கருத்தினில் மிகுந்து அகலாது நின்றதென்றும், அஃது அவ்விறைவரது திருவருளால் விளைந்ததென்றும் கொள்க; பதிகம் பார்க்க.* ***செய்*** *என்ற பதிகச் சொற்குச்* ***செய்யும்*** *என்று ஆசிரியர் பொருள் விரித்தலும் குறிக்க.*

சிந்தை நிறை மகிழ்வுற்றார் - *பெருக்க வளர் காதலினாற் பணிந்து போராத கருத்தினுடன் பதிகம் புனைந்தருளிய தன்மையினால் மனமகிழ்ச்சி நிறையப் பெற்றனர்.* *1131*

திருக்கழுக்குன்றம்

திருச்சிற்றம்பலம்

பண் : குறிஞ்சி, 1-ம் திருமுறை

தோடுடையா னொருகாதிற் றூயகுழை தாழ
ஏடுடை யான்றலை கலனாக விரந்துண்ணும்
நாடுடையா னள்ளிருளேம நடமாடுங்
காடுடையான் **காதல்செய் கோயில் கழுக்குன்றே** (1)

கண்ணுதலான் **காதல்செய் கோயில் கழுக்குன்றை**
நண்ணியசீர் ஞானசம் பந்தன் தமிழ்மாலை
பண்ணியல்பாற் பாடிய பத்தும் மிவைவல்லார்
புண்ணியராய் விண்ணவ ரோடும் பொலிவாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- *கண்ணுதலான் காதல் செயுங் கோயில் கழுக்குன்றே(11).*

பதிகப் பாட்டுக் குறிப்பு:- ***(1) தோடுடையான்... ...குழை தாழ* - ஒரு காதில்** - *என்பது இருபாலும் சேர்க்க நின்றது; ''ஒருபாற் றோடு மொருபாற் குழையு, மிருபாற் பட்ட மேனி யெந்தை'' (கோயினான் -37);* **ஏடு - எடு** - *பகுதி முதனீண்டு வந்த தொழிற்பெயர்; எடுத்தல்; தாங்குதல்;* **ஏடுடையான்** - *ஏடுடைய மலரான் - பிரமன் என்றலுமாம்:-* ***(2)* கேண** - *கேண்மை கொள்ள; விரும்பிப் பூண;—* ***(4)* துணையல்** - *பூமாலை;* **யாழ் செய்** - *யாழிசைபோல முரலும்.* **பிணையல்** - *''இளங்கொம்ப னாளோ டிணைந்தும் பிணைந்தும்'' (தேவா); பிரிக்க வியலாது சேர்தல்.* **கணையல்** - *கணையினால் அழித்தல்;—* ***(5)* மை** - *விடம்;-* ***(6-7)* சிறுத்தொண்டர்** - *அடியார் முன் தம்மைச் சிறியராய் வைத்து அடைந்து ஒழுகும் தொண்டர்.* **உள்ளமெல்லாம் உள்கி நின்றாங்கே உடனாடும், கள்ளம் வல்லான்** - *''நினைவோரை நினைவானை - நினையாரை நினையா தானை'' (தாண்); ''சார்ந்தாரைக் காத்தும் சலமிலனாய்'' (போதம்);* **கள்ளம் வல்லான்** - *தலச்சுவாமி பெயர்களுள் ஒன்று;—* ***(8)* அரக்கர்தங் கோனை** *ஆதல் செய்தான்;* **அரக்கர்தங் கோனை** *அருவரையின் நோதல் செய்தான் - என இருவழியும் கூட்டி உரைக்க நின்றது;* **ஆதல்**-*தவத்திற்கிரங்கி வரங் கொடுத்து ஆக்கம் தந்தது;-* ***(10)* உலகெலாம் சாய நின்றான்** - *உலகமெல்லா மழிந்த ஊழியிலும் அவற்றைச் சங்கரித்த தான் அழியாது நிற்பவன்; ''ஒடுங்கி''; ''சங்கார காரணனா யுள்ள முதல்வனையே முதலாகவுடைத்து இவ்வுலகம்'' (சிவஞான போதம் - சூத். 1);-* ***(11)* கண்ணுதலான் காதல்செய் கோயில் கழுக்குன்றை** - *பதிகக் குறிப்பை முடித்துக் காட்டியவாறு.*

தலவிசேடம்:- திருக்கழுக்குன்றம்-தொகுதி III-728 பக்கம் பார்க்க. மலையின் மேலிருந்து வலமாக இறங்குதற்குப் படிவழி தனியாக உள்ளது. மலையின்மேல் சொக்கநாயகி கோயில் தனியாகக்குகை போன்ற இடத்தில் அமைந்து உள்ளது. அடிவாரம் கோயிலினுள் உள்ளது நந்தி தீர்த்தம். மலை வலம் வருவது 2 ¼ நாழிகையளவுள்ளது; அந்தகக்கவி வீரராகவ முதலியார் பாடிய தலபுராணம் உண்டு.

திருஅச்சிறு பாக்கம்

3030. **இன்புற்றங் கமர்ந்தருளி யீறில்பெருந் தொண்டருடன்
மின்பெற்ற வேணியினு ரருள்பெற்றுப் போந்தருளி,
என்புற்ற மணிமார்ப ரெல்லையில்லா வாட்சிபுரிந்
தன்புற்று மகிழ்ந்ததிரு வச்சிறுபாக் கத்தணைந்தார்.** 1132

3030. (இ-ள்) இன்புற்று அங்கு அமர்ந்தருளி - இன்பமுற்று அப்பதியில் விரும்பி எழுந்தருளி யிருந்து; ஈறில்...போந்தருளி - எல்லையில்லாத பெருந் தொண்டர்களுடனே, மின்போன்ற சடையினையுடையவராகிய இறைவரது திருவருள் விடைபெற்று அங்குநின்றும் போந்தருளி; என்புற்ற...அணைந்தார் - எலும்புமாலைகளை யணிந்த அழகிய மார்பினையுடைய சிவபெருமான் எல்லையில்லாதபடி ஆட்சி புரிந்து அன்பு பொருந்தி மகிழ்ந்து எழுந்தருளிய திருஅச்சிறுபாக்கத்தினை அணைந்தருளினர்.

(வி-ரை) மின் பெற்ற வேணியினார் - முன்னரும் "மின்றயங்குஞ் சடையார்" *(3028)* என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க. **அருள்** - அருள் பொருந்திய விடை.

என்புற்ற மணி மார்பர் - எலும்பு மாலை பூண்ட மார்பினையுடைய இறைவர்.

எல்லையில்லா ஆட்சி புரிந்து - ஆட்சிநாதர் என்பது இப்பதியிற் சுவாமி பெயர்; **எல்லையில்லா ஆட்சி** - உயிர்களின் மேல் இறைவரது ஆட்சி இன்னநாளிற் றொடங்கிற் றென்பதும் இன்னநாளின் முடியுமென்பது மின்றி எல்லாக் காலத்தும் பெத்தமுத்தியிரண்டிலும் எல்லையளவு இன்றியிருத்தல் குறித்து **எல்லையிலா ஆட்சி புரிந்து** என்றார். "மீளா அடிமை" (தேவா); "என்றுநீ யன்றுநா னுன்னடிமை யல்லவோ?" (தாயுமானர்).


அன்புற்றங்கு அமர்ந்த - அன்பு - அருள். அச்சிறுபாக்கத்தில் இறைவர் திரிபுர சங்காரகால முதல் எழுந்தருளியிருத்தல் வரலாறுதலானும், திரிபுர சங்காரமானது உயிர்களின் மும்மலஞ் சிதைந்து ஆளும் கருத்தினை உட்கொண்டமையானும், தேர்மிசை நின்றவாறு ஆட்சிக்குறிப் பாதலானும் **எல்லையிலா ஆட்சி புரிந்து அன்புற்றங் கமர்ந்த** என்றார். *1132*

3031. (இ-ள்) ஆதி முதல்வரை வணங்கி - ஆதி முதல்வராகிய இறைவரை வணங்கி; "ஆட்சி கொண்டார்" என...போற்றி - "ஆட்சி கொண்டார்" என்று கூறும் மகுடத்தையுடைய குற்றமில் திருப்பதிகத்தினைப் பண் பொருந்தி விளங்கும் திருப்பாடல்களினாற் றுதித்து; மாதவத்து...இன்புற்று - மாதவமுடைய முனிவர்களுடனே பணிந்து மகிழ்ச்சியடைந்து இன்பமுற்று; தீதகற்றும்... அமர்ந்தருளி - தீமையை நீக்குதலே தமது செய்கையாக வந்தருளிய பிள்ளையார் சில நாட்கள் அங்கே விருப்பமுடன் எழுந்தருளி யிருந்து;


(வி-ரை) ஆதி முதல்வர் - ஆதி - "அந்தமாதி" என்றபடி எல்லா வுலகும் தம்மிடத்தின் ஒடுங்கி மீளத் தோற்றுதற்கு நிலைக்களமாக நின்றவர்; **முதல்வர்** - முதன்மை - இறைமை - யுடையவர்.



திருவச்சிறுபாக்கம் திருக்கோயில் பாட்டு :- 3031



திருவரசிலித் திருக்கோயில் பாட்டு :- 3033



திருப்புறவார் பனங் காட்டூர்த் திருக்கோயில் பாட்டு :- 3033

3031. **ஆதி**முதல் வரைவணங்கி **"யாட்சிகொண்டா"** ரெனமொழியுங்
கோதிறிருப் பதிகவிசை குலாவியபா டலிற்போற்றி,
மாதவத்து முனிவருடன் வணங்கிமகிழ்ந் தின்புற்றுத்
தீதகற்றுஞ் செய்கையினர் சின்னாளங் கமர்ந்தருளி, 1133

"ஆட்சிகொண்டார்" என மொழியும் - "ஆட்சி கொண்டாரே" எனப் பாட்டுத் தோறும் கடைமுடியும் பதிகத்தின் மகுடத்தைக் குறித்தது. **கோதில் - கோது** - குற்றம்; உயிர்களுக்குள்ள மலமாசினை இல்லையாகச் செய்யும். **இசை** - பதிகப்பண்ணாகிய குறிஞ்சிப் பண்ணின் இசை. **குலாவிய பாடல்** - குறிஞ்சிப் பண்ணின் கட்டளை பேதங்கள் பலவற்றினும் அதன் இசைத்தன்மை பெரிதும் விளங்கும் முதற்பெருங் கட்டளையின் பாடல்; பதிகம் பார்க்க. குறிஞ்சிப் பண்ணில் இப்போது ஐந்து கட்டளைகளையுடைய பதிகங்கள் கிடைத்துள்ளன.

மாதவத்து முனிவர் - சிவனடியார்கள்; திருத்தொண்டர்கள். சிவபூசையே மாதவமெனப்படும். "தவமுயல்வோர் மலர்பறிப்ப" (தேவா).

தீதகற்றும் செய்கையினர் - மக்களை மயக்கிநின்ற பரசமயங்களை நிராகரிக்கவும், திருநீற்றினை ஆக்கங் காணவுமே அவதரித்து அச்செயல்களையே செய்தருளும் பிள்ளையார்; "தீதகற்ற வந்தருளும் திருஞான சம்பந்தர்" (3151) என்று இப்புராண நிறைவிற் கூறியருளுதல் காண்க.

அமர்ந்தருளி - இறைஞ்சி - கடந்தருளி - அடைந்தார் - என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. *1133*

3032. (இ-ள்) ஏறணிந்த...இறைஞ்சி - இடபத்தைப் பொறித்த வெற்றி பொருந்திய கொடியினையுடைய இறைவனார் இனிதாக எழுந்தருளிய பதிகள் பிறவற்றையும் திருநீறணிந்த திருத்தொண்டர்கள் அங்கங்கும் வந்து எதிர்கொள்ளச் சென்று வணங்கி; வேறு...கடந்தருளி - மற்றும் பல நதிகளையும் கானங்களையும் கடந்து சென்றருளி; விரிசடையில்...அடைந்தார் - விரித்த சடையில் கங்கை யாற்றினை அணிந்த இறைவர் மகிழ்ந்து எழுந்தருளியுள்ள திருவரசிலிப் பதியினை வந்தடைந்தருளினார்.

இவ்விரண்டு பாட்டுக்களும் ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) ஏறு - இடபக்குறி - இலச்சினை - உருவம்.

பதி பிற - இவை பெரும்பேறு, திருநற்குன்றம், உலகூர், உலகாபுரம், கந்தாடு, கிடங்கில், கிளியனூர், தேவனூர், திண்டீச்சுரம், பேராவூர், மரக்காணம், முன்னூர் முதலாயின என்பது கருதப்படும்; ஒவ்வொன்றிலும் பழைய கோயில்களும் கல்வெட்டுக்களும் உண்டு. அச்சிறுபாக்கத்தினின்றும் தென்மேற்கில் **திண்டிவனம்** (திண்டீச்சுரம்) கற்சாலை வழியாய் 17 நாழிகையளவில் அடையத்தக்கது. அங்கு நின்றும் தென்கிழக்கில் புதுச்சேரி செல்லும் கற்சாலையில் 15 நாழிகையளவில் உள்ளது **அரசிலி**. இவ்வழியன்றித் திண்டிவனத்தினின்றும் கிழக்கில் பிரமதேசம் மரக்காணம் சென்று தெற்கில் திரும்பிப் புதுச்சேரி செல்லும் ஒரு கற்சாலை

3032. ஏறணிந்த வெல்கொடியா ரினிதமர்ந்த **பதிபிறவும்**
நீறணிந்த திருத்தொண்ட ரெதிர்கொள்ள **நேர்ந்திறைஞ்சி**
வேறுபல நதிகானங் கடந்தருளி, விரிசடையில்
ஆறணிந்தார் மகிழ்ந்த**திரு வரசிலியை வந்தடைந்தார்.** 1134

வழியுமுண்டு. இதன் வழியே திருநற்குன்றம், பெருமுக்கல் மலை, பேராவூர் என்றிவற்றை அடையலாம். பிள்ளையார் சென்ற வழி பின்கூறியது போலும் என்பது கருதப்படும். ஆயின் முன்கூறிய வழியாலும் இவற்றை அடைந்து செல்லலாம். **தொண்டருடன்** - என்றதும் பாடம்.

வேறு பலநதி கானம் கடந்தருளி - நதிகளும் கானங்களும் என்க. **வேறு** - என்பது இறைவர் விளங்கும் பதிகள் அமையாத என்ற குறிப்புப்பெற நின்றது. இவை வராக நதியின் கால்களும் பெருமுக்கல்மலைப் பிரதேசத்தினின்றும் வரும் காட்டாறுகளும், காவேரி ஏரி - மரக்காணம் ஏரி இவற்றில் சேரும் சம்பந்தமுடையனவுமாகிய நதிகளும், அந்த மலைநிலப் பரப்பில் அமைந்த சிறு கானங்களுமாம். *1134*

திருஅச்சிறுபாக்கம்

திருச்சிற்றம்பலம்

பண் - குறிஞ்சி 1ம் திருமுறை

பொன்றிரண் டன்ன புரிசடை புரளப்
பொருகடற் பவளமோ டழனிறம் புரையக்
குன்றிரண் டன்ன தோளுடை யகலங்
குலாயவெண் ணூலொடு கொழும்பொடி யணிவர்
மின்றிரண் டன்ன நுண்ணிடை யரிவை
மெல்லிய லாளையோர் பாகமாப் பேணி
யன்றிரண் டுருவ மாயவெம் மடிக ளச்சிறு
பாக்கம **தாட்சிகொண் டாரே.** (1)

மைச்செறி குவளை தவளைவாய் நிறைய
மதுமலர்ப் பொய்கையிற் புதுமலர் கிழியப்
பச்சிற வெறிவயல் வெறிகமழ் காழிப்
பதியவ ரதிபதி கவுணியர் பெருமான்
**கைச்சிறு மறியவன் கழலலாற் பேணுக்
கருத்துடை ஞானசம் பந்தன** தமிழ்கொண்
டச்சிறு பாக்கத் தடிகளை யேத்து
மன்புடை யடியவ ரருவினை யிலரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- இறைவர் திருஅச்சிறுபாக்கத்து எல்லையிலா **ஆட்சி புரிந்**தன்புற்று மகிழ்ந்து எழுந்தருளியுள்ளார் *(3030 பார்க்க).*

பதிகப் பாட்டுக் குறிப்பு:- *(1)* பவளமோடு அழல்நிறம் புரைய - பவளமும் அழலும் தமது நிறத்தினை நிகர்க்க; **கொழும் பொடி** - திருநீறு; **ஓர் பாகமாப் பேணி அன்றிரண் டுருவமாய** - சங்காரத்தில் உலகங்களை யெல்லாம் தம்முள் அடக்கி ஒன்றாய் நின்ற சிவம், புனருற்பவத்தின் பொருட்டுச் சத்தியைச் சங்கற்பித்துப் பின் சிவம் சத்தி என இரண்டுருவாகிய என்ற சிருட்டித் தொடக்கநிலை கூறியவாறு; இங்குத் திரிபுரமெரிக்கத் தேர்மிசை நின்ற வரலாற்றினாற் சங்காரமும், எல்லையிலா ஆட்சி புரிந்து அன்புற்று மகிழ்ந்திருந்தமையால் மறுசிருட்டியும் குறிப்பிற் பெறவைத்துக் கூறியருளியமை கண்டுகொள்க; **ஆட்சி கொண்டார்** - தலத்தின் இறைவர் பெயராகும்;—***(2)* ஊன் நயந்துருக** - உருகியபோது என்றும், உருகும்படி என்றும் உரைக்க நின்றது; **உச்சிமேல் உறைபவர்** - பிரமரந்திர மென்னும் 1000 இதழ்த் தாமரையில் வீற்றிருப்பவர். ''என்னிடைக் கமல மூன்றினுட் டோன்றி யெழுஞ்செழுஞ் சுடரினை'' (சேந்தனார் திருவிசைப்பா - திருவீழி -4) என்றலையி னுச்சி யென்றுந் தாபித் திருந்தானை'' (தேவா - அரசு - தாண் - திருவால -10); **ஒன்று** - விடை;—***(3)* பிறவியிற் சேரார்** - ''ஒன்றென்ற தொன்றேகாண்'' (போதம்) என்ற பதிப்பொருள், பசுக்களாகிய ஏனை யுயிர்கள் போலப் பிறவியிற் சேராதவர்; இயல்பாகவே பாசங்களி னீங்கியவராதலின் என்பது. **பிணியிலர் கேடிலர் - கேடு** - சாக்காடு; இறப்பு. **பிணி** - பாசம் - பிணிப்பு. பிணியிலராதலின் பிறவியிற் சேரார் - கேடும் இலர் என்று பிணியிலர் என்பதனை முன்னும் பின்னும் கூட்டுக. தம்மை அடைந்தார்க்குப் பிணியும் கேடும் இல்லையாகச் செய்பவர் என்று கொள்ளலுமாம்; **ஆரிருள் மாலை ஆடுவர் - இருள்** - உலகம் சங்கரிக்கப்பட்ட ஊழி; **ஆடுதல்** - புனருற்பவங் குறித்து ஆடல்; அன்றிரண்டுருவமாய (1) என்ற கருத்து;—***(4)* மைம்மலர்க் கோதை - கோதை** - மாலை; **மை** - கரிய வண்டுகளைக் குறித்தது; **மலர்** - ஈண்டுத் திருவடையாளமாகிய கொன்றை; **மைம்மலர்** - காருக்குரிய முல்லை நிலத்து மலர் என்றலுமாம். ''கொன்றையந் தார்'' (7 பாட்டும்) பார்க்க. ''கண்ணி கார்நறுங் கொன்றை''; **தமிழ்ச்சொலும் வடசொலுந் தாணிழற் சேர** - இவ்விரு மொழிகள்பற்றிப் பிணங்கிப் பூசலிடுவோர் இத்திருவாக்கினைக் கருதிப் பிணக் கொழிவாராக!

> ''மாரியுங் கோடையுங் வார்பனி தூங்கநின், றேரியு நின்றங் கிளைக்கின்ற காலத்து,
> ஆரிய முந்தமி ழும்முடனே சொல்லிக், காரிகை யார்க்குக் கருணை செய்தானே''

என்ற திருமூலர் திருமந்திரமும் காண்க; புனருற்பருவத்தின்போது இருமொழிப் பொருளும் ஞானசத்தி கிரியாசத்திகளாகிய இரண்டு தாமரைகளினின்றும் தோற்றுவிப்பார் என்பார் **தாணிழற் சேர** என்றார்; தாணிழலினின்றும் சேர - வெளிவர என்க; காரிகையார்க்கு என்ற திருமந்திரமு மிக்கருத்து; இதனால் ஒடுங்கும் காலத்து இவையிரண்டும் அத்திருவடிகளுள் ஒடுங்கும் என்பதும் பொருளாம். **அம்மலர்க் கொன்றை** - மொழிகள் தோற்றுதற்குக் காரணமாய் நின்ற குடிலை என்னும் பிரணவத்தின் உருவாய்ப் பொருந்தும் **அந்த** என்று **அகரம்** முன்னறி சுட்டு; இக்கருத்துக் காட்ட இப்பாட்டினை மைம்மலர்க் கோதை மார்பினர் என்று தொடங்கியதுமென்க; தலவிருட்சம் கொன்றையாதற் சிறப்புரிமையும் காண்க;—***(5)* விண்ணுலகம்** - முன் உலாவிக் குறைவுபட்டடைந்த என்றும், பின்னர் உலாவுதல் பெறும் என்றும் உரைக்கநின்றது; **ஏத்து அரவங்கள்** - துதி செய்யும் ஒலி;—***(6)* நிழல்** - ஒளி; **ஆடரவாட ஆடும்** - ''புடைசூழ்ந்த புலியதண்மே லரவாட வாடி'' (திருத்தொண்டத் தொகை - 9);—***(7)***

கொன்றை... ...வன்னி - இறைவர் பூசனைக் காகும் இலை - மலர்களைக் கூறுதல் காண்க. கொன்றை - கூவிளம் (வில்வம்), மலர் (தாமரை), மல்லிகை - எருக்கு - முருக்கு - மகிழ் - வன்னி - இவற்றைத் திருநந்தவனங்களில் வைத்து வளர்த்துப் பயன்படுத்தல் சிறந்த சிவபுண்ணியமாம்; **கூவிள மலர்** என்றலும் பொருந்தும். **இளவன்னி** - வன்னித் தளிர்; ''நீரோடு கூவிளமும்'' (பின்) என்ற தேவாரமும், ''வன்னி கொன்றை'' (240) என்ற திருப்பாட்டும், பிறவும் இங்கு நினைவுகூர்தற்பாலன. **நலம் பகர்தல்** - இவற்றைப் புனைந்த வழிபாட்டின் பயனை விளக்கிநிற்றல்; அழகாதல் என்றலுமாம்;—**(8) பச்சமும் வலியும் - பச்சம்** - அன்புவைத்துச் செய்த தவம்; **வலி** - அதனாற் பெற்ற வரத்தின் வலிமை. **அச்சமும் அருளும்** - முன்னே அச்சமும் பின்னே அருளும். **அச்சம்** - தலை தோள் நெரிய வைத்தமையாலும்; **அருள்** - நாளும் வாளும் கொடுத்தமையாலுமாம்;—**(9) தங்கள் ஆற்றலால்** - தாம் காண்போம் என்ற தமது பசு போதத்தால்; **காணுராய** - காணப்படமாட்டாதவராகிய; ஆறுற் காணும்வகை முன் கூறியருளினர். அவை நோற்றல் - வேட்டல் - நுகர்புகர் சாந்தமோ டேந்திய மாலைக் கூற்றுடைமை என்றிவை; இன்னவாறு செய்யாராயின் எய்தலாகாததோர் இயல்பினை உடையார் என்க. **ஓர்** - தனித்த; **ஒரும்** என்றலுமாம்; இவ்வியல்பினராதலின் மாலும் நான்முகனும் தம்மாற்றலாற் காணுராயினர் என்பது;—**(10) ஓதியும் கேட்டும் உணர்வினை யிலாதார்** - கல்வி கேள்வி என்ற இரண்டுணர்வு மில்லாதவர்கள்; **உள்கலாகாததோ ரியல்பு** - நினைக்கவும் எட்டாத இயல்பு. **கமல மாமதிபோல் - ஆய** - கமலம்போன்ற அழகும் மதிபோன்ற தண்மையும் உடையர்; **ஆதியும் ஈறும் ஆய** -''அந்தமாதி'';—**(11) மை** - நீலநிறம்; **பொய்கையிற் றவளைவாய் நிறையக் குவளைமலர் கிழிய** - என்க. **பச்சு இறு** - புதிய தேன்; இறால்போல ஏறி. **இறால்** - தேன்கூடு. **கைச்சிறு மறியவன் கழலலாற் பேணுக் கருத்துடை ஞானசம்பந்தன்** -''கொன்றையா னடியலாற் பேணு, வெம்பிரான் சம்பந்தன்'' (திருத்தொண்டத் தொகைக்குரிய அகச்சான்று).

தலவிசேடம்:—**திருஅச்சிறுபாக்கம்** - தொண்டை நாட்டின் 29-வது பதி; பாண்டிய நாட்டு அரசன் ஒருவன் தனது நாட்டில் தலத்தைத் தாபித்தலின் பொருட்டுக் கங்கையினின்றும் மணல் முதலியவற்றைக் கொணர்ந்த வண்டிகள் இத்தலத்தின் அருகில் மேற்செல்லாது தடைபட்டு நின்றன என்றும், அவற்றை மேலே ஊக்கிச் செலுத்த அச்சுக்கள் முறிந்துவிட்டன என்றும், அதன்மேல் அசரீரியினால் அவன் உண்மை உணர்த்தப்பெற்று இப்பதியிற் றிருப்பணி செய்து போந்தனன் என்றும் வரலாறுகள் கேட்கப்படும். அச்சு முறிந்த இடம் வண்டிக்குப்பம் என்று இன்றும் வழங்குகின்றது. வண்டிகளின் அச்சுமுறிந்த காரணத்தால் இத்தலம் இப்பெயர் பெற்றதென்பர். கோபுரவாயிலுக்கு நேராக பாண்டியன் தாபித்த இலிங்கமும் (உமையாட்சிநாதர்) அம்மை - மெல்லியலாளும் இருக்கின்றனர். திரிபுர சம்மாரத்தின்போது இறைவர் ஏறிய பூமித்தேர் அச்சு முறிந்த சரிதம் காரணமாகக் கூறுவாருமுண்டு. ''தச்சு விடுத்தலுந் தாமடி யிட்டலு, மச்சு முறிந்தவா றுந்தீபற'' (திருவாசகம்). திருமூலட்டான மூர்த்திகள் இரண்டு சந்நிதிகள் உண்டு. கௌதமர், கண்ணுவர் பூசித்ததென்பர். பதிகம். முதற்பாட்டில் ''அன்றிரண் டுருவ மாயவெம் மடிகள்'' என்பது இக்குறிப்பென்பாருமுண்டு. சுவாமி - **ஆட்சிநாதர்**(பதிகம் பார்க்க) - **பாக்கபுரேசர்**; அம்மை **சுந்தர நாயகி**; தீர்த்தம் - **தேவதீர்த்தம்**; வடக்குச் சுற்றில் தலமரம் - **கொன்றை**; பதிகம் 1. **சிங்க தீர்த்தம்** (கிணறு) கோயிலுக்கு வடக்கே சிறுதூரத்தில் **சங்கு தீர்த்தம்** என்னும் நன்னீர்த் தாமரைக் குளம்.

3033. **அ**ரசிலிய லமர்ந்தருளு மங்கணரை சைப்பணிந்து
பரசி, யெழு **திருப்புறவார் பனங்காட்டூர்** முதலாய
விரைசெய்மலர்க் கொன்றையினுர் மேவு**பதி பலவணங்கித்**
திரைசெய்நெடுங் கடலுடுத்த **திருத்தில்லை நகரணைந்தார்.** 1135

இஃது அச்சிறுபாக்கம் (S.I.R.) நிலையத்தினின்றும் தென்மேற்கில் 1/2 நாழிகை யளவில் உள்ளது.

3033. (இ-ள்) *அரசிலியில்...பரசி - திருவரசிலியின்கண் விரும்பி எழுந்தருளும் அங்கண்மையுடைய அரசராகிய இறைவரைப் பணிந்து துதித்து; திருப்புறவார் பனங்காட்டூர்...வணங்கி - திருப்புறவார் பனங்காட்டூர் முதலாக மணமுடைய கொன்றை மலரை அணிந்த இறைவர் எழுந்தருளிய பதிகள் பலவற்றையும் வணங்கிச் சென்று; திரைசெய்...அணைந்தார் - அலைகளையுடைய நீண்ட கடல் சூழ்ந்த திருத்தில்லை நகரினை அணைந்தருளினுர்.*

***(வி-ரை) அங்கண் அரசு - அங்கண்மை** - அளியுடைய அருட்டன்மை. **பரசுதல்** - பரவுதல்; போற்றுதல். **எழு** - மேன்மையுட னோங்கும் சிறப்புடைய.*

***பதி பல** - இவை திருத்தில்லைநகர் சாருமளவும் இடையிலுள்ள பற்பல பதிகள். இவை திருவக்கரை - திருவடுகூர் - திருவிரும்பை மாகாளம் - திருவாமாத்தூர் - திருவதிகை - திருச்சோபுரம் முதலாயின என்பது கருதப்படும். இவற்றுட் பல முன்னர் இவ்யாத்திரை தொடங்கிவரும் வழியிற் றெழுப்பட்டன. (2861 பார்க்க). பதிகங்கள் ஆண்டுத் தரப்பட்டன.*

***திருத்தில்லை நகர் அணைந்தார் - நகர் அணைந்தார்** - நகரை நோக்கிச் சென்றருளினர் என்க. திருஎல்லை சேய்த்தாகிய இடம் நகர் எனப்பட்டது.*

***கடலுடுத்த** - கடல் அணிமையாக அமைந்த.*

***அரசிலியை**—என்பதும் பாடம்.* *1135*

திருப்புறவார் பனங்காட்டூர்

திருச்சிற்றம்பலம் பண் - சீகாமரம் 2-ம் திருமுறை

விண்ண மர்ந்தன மும்ம தில்களை வீழ வெங்கணை யாலெய் தாய்விரி
பண்ணமர்ந் தொலிசேர் புறவார் பனங்காட்டூர்ப்
பெண்ண மர்ந்தொரு பாக மாகிய பிஞ்ஞ காபிறை சேர்நுதலிடைக்
கண்ணமர்ந் தவனே கலந்தார்க் கருளாயே. (1)

மையி ஞர்மணி போன்மி டற்றனை மாசில் வெண்பொடிப் பூசு மார்பனைப்
பையதேன் பொழில்சூழ் புறவார் பனங்காட்டூர்
ஐய னைப்புக ழான காழியு ளாய்ந்த நான்மறை ஞான சம்பந்தன்
செய்யுள் பாடவல்லார் சிவலோகஞ் சேர்வாரே. (11)

திருச்சிற்றம்பலம்



முருகநாயனார்



திருநீலகண்டயாழ்ப்பாணர்



திருநீலநக்கநாயனார்

3034. **எல்லையில்ஞா னத்தலைவ ரெழுந்தருள வெதிர்கொள்வார்**
தில்லையில்வா ழந்தணர்மெய்த் திருத்தொண்டர் சிறப்பினொடு
மல்கியெதிர் பணிந்திறைஞ்ச மணிமுத்தின் சிவிகையிழிந்
தல்குபெருங் காதலுட னஞ்சலிகொண் டணைகின்றார்; 1136

பதிகக் குறிப்பு:– *திருப்புறவார்ப் பனங்காட்டூர்ப் பிஞ்ஞகனே - சங்கரனே - அடைந்தார்க்கருளாயே என்று அடியார்களின் பொருட்டு இறைவரை வேண்டியது; "ஏம்பலிப் பார்கட் கிரங்கு கண்டாய்"(அரசுகள்).*

பதிகப் பாட்டுக் குறிப்பு:– *(1)* விண் அமர்ந்தன - வானிற் பறக்கும் தன்மை யுடையனவாகிய; **கலந்தார்** - சித்தத்தை உன்பால் வைத்து அன்பாற் கூடியவர்கள்;—**(2) காதயல் - குழை துள்ள** என்க; துள்ளுதல் அசைதல்;—**(4) சாய்ந்து** - முடி சாய்ந்து தூவி;—**(5) செருச் செய** - செருச் செய்தல் போலத் துள்ள;—**(7) விரல் - காட்டி - விரியும்** - காந்தள் பெண்களின் மெல்விரல்போல அலர என்க;—**(8) "எம் பெருமான்" என்பவர்க்கு** - எங்கள் பெருமானே என்று துதிக்கும் அன்பர்களுக்கு;—**(9) எந்து இளம்** - ஏந்தும் என்பது எதுகை நோக்கி **எந்து** என நின்றது. **இளமை** - மிகக் கரிதாகுமுன் இருக்கும் நிறம் குறித்தது; **சந்தம்** - புகழ்;—**(10) நீணம்ஆர் முருகு** - சேய்மையிலும் வீசும் மணமுடைய தேன்; நீளம் என்பது **நீணம்** என நின்றது; "நீணுலகெலாம்" (தேவா) என்றாற்போல?; "தேன்பூ மணங் கண்டு" (திருமந்) **நக** - இகழ. **தலையூண்** - தலையோட்டில் பிச்சை புக; **உரியவன்** - தன்மையுடையவன்.

தலவிசேடம்:– திருப்புறவார் பனங்காட்டூர் - நடுநாட்டுள் 20-வது பதி. இப்போது **பனையபுரம்** என்று வழங்குவது. புறாவின் பொருட்டு அதன் எடை அளவு தனது தசையினை அரிந்திட்ட சிபிச் சக்கரவர்த்திக்கு அருள்செய்த பதி; சிபிச் சக்கரவர்த்தி தம் கண்ணைப் பறித்திட்டதும் புறாவின் எடை சமமாகி இறைவர் வெளிப்பட்டதனால் சுவாமிக்கு நேத்திரோத் தாரகேசுவரர் என்று பெயர். சூரியனை முன்னிட்ட கணக்குப்படி வரும் ஆண்டுதோறும் ஆண்டு தொடங்கி முதல் ஏழுநாட்களும் உதயத்தில் சூரியபூசை நிகழ்வது இன்றும் காணலாம்; அந்நாட்களில் முதலில் சூரியனது கதிர்கள் முன்னர்ச் சுவாமிமேலும், பின்னர் அம்மையாரின் மேலும் தீண்டி வழிபடுதல் நேரே காணத்தக்கது; அந்நாட்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. சுவாமி - **பனங்காட்டீசுவரர்**; அம்மை - **புறவம்மை**; மரம் - **பனை**; பதிகம் 1. புறவின் பொருட்டுத் தசையரிந்த சிபிக்கு அருளியமையாலும் பனை தலமர மாதலாலும் இப்பதிக்கு இப்பெயர் போந்தது.

இது விழுப்புரத்தையடுத்த முண்டியம்பாக்கம் நிலையத்தினின்றும். வடகிழக்கில் மட்சாலைவழி 2 நாழிகையளவில் திண்டிவனம் பாதையில் 1 நாழிகை சென்று பின்பு கிழக்கே 1 நாழிகையில் அடையத்தக்கது. விழுப்புரத்தினின்றும் வடக்கில் 5 1/2 நாழிகையில் உள்ளது.

3034. (இ-ள்) எல்லையில்...எழுந்தருள - அளவுபடாத சிவஞானத் தலைவராகிய பிள்ளையார் எழுந்தருள (அது தெரிந்து); எதிர்கொள்வார்...பணிந்திறைஞ்ச - அவரை எதிர்கொள்வார்களாகித் தில்லைவாழந்தணர்களும் திருத்தொண்டர்களும் சிறப்புக்களுடனே நெருங்கிக் கூடிப் போந்து பணிந்து வணங்க; மணிமுத்தின்... அணைகின்றார் - அழகிய முத்துச்

தில்லை 3-ம்முறை

3035. **தி**ருவெல்லை யினைப்பணிந்து சென்றணைவார் சேண்விசும்பை
மருவிவிளங் கொளிதழைக்கும் **வடதிசைவா யிலைவணங்கி**
உருகுபெருங் காதலுட னுட்புகுந்து மறையினொலி
பெருகிவளர் மணிமாடப் பெருந்திருவீ தியையணைந்தார். 1137

சிவிகையினின்றும் இறங்கிப் பெருங்காதலுடனே அஞ்சலி செய்துகொண்டு பிள்ளையார் அணைகின்றவராய்;

(வி-ரை) எல்லையில் - திருஎல்லையில் என்ற குறிப்புமாம். **எதிர் கொள்வார்** - எதிர்கொள்வார்களாகி - முற்றெச்சம்; எதிர்கொள்வார் - மல்கி - இறைஞ்ச என்று கூட்டுக.

தில்லைவாழந்தணர் - மெய்த்திருத் தொண்டர் - எண்ணும்மைகள் விரிக்க. இறைவருடனே மூவாயிரவர்களாதலின் தில்லைவாழந்தணர் முன் வைக்கப்பட்டனர்; முன்னரும் "தில்லைவா ழந்தண ரன்பர்க ளுடனீண்டி" (2052) என்றது காண்க.

சிறப்பினொடு - சிறப்பு - எதிர்கொள்ளுதற்குரிய நிறைகுட முதலிய மங்கலப் பொருள்கள் (2053).

பணிந்திறைஞ்ச - அஞ்சலிகொண்டு - முன்னர் (2053) விரித்துக் கூறினாராதலின் இங்குச் சுருக்கிக் காட்டியருளினர்.

அஞ்சலி கொண்டு - கரங்களைக் கூப்பி வணங்கிய நிலையினை மேற்கொண்டு.

அணைகின்றார் - பிள்ளையார் என்ற எழுவாய் தொக்கு நின்றது. அணைவாராகி - முற்றெச்சம்; அணைகின்றார் - பணிந்து - அணைவார் - வணங்கி - புகுந்து - அணைந்தார் என மேல்வரும் பாட்டினுடன் முடிக்க.

மணிமுத்தின் சிவிகை - மணி - அழகு; மணிகளுட் சிறந்த என்றலுமாம். *1136*

3035. (இ-ள்) திருவெல்லையினை...அணைவார் - திருஎல்லையினைப் பணிந்து மேற்சென்றணைவாராகி; சேண்...வணங்கி - நீண்ட ஆகாயத்தைப் பொருந்தி விளங்கும் ஒளி பெருகுகின்ற வடதிசைத் திருவாயிலினை வணங்கி; உருகு... அணைந்தார் - மனமுருகும் பெருங் காதலுடனே திருநகரத்தின் உள்ளே புகுந்து வேதங்களின் ஒலி பெருகி வளர்தற்கிடமாகிய அழகிய மாடங்கள் நிறைந்த பெருந் திருவீதியினை அணைந்தருளினார்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி - ரை) திருஎல்லை-வடக்குத் திருஎல்லை. இது தில்லையின் வடக்கில் 4 நாழிகையளவில் உள்ள நிவா நதிக்கரையில் உள்ள திருவடையாளம். தெற்குத் திருவெல்லை கொள்ளிடக்கரையும், மேற்குத் திருவெல்லை வாய்க்காலும், கிழக்குத் திருவெல்லை கடற்கரையும் போல.

சேண் விசும்பை...வடதிசை வாயிலை வணங்கி - தில்லைத் திருநகருக்கு நான்கு திசையிலும் திருவாயில்கள் உள்ளமையாலும் பிள்ளையார் இப்போது வடக்கினின்றும் போந்தருளுகின்றமையாலும் வடக்கு வாயிலை வணங்கி உட்சென்றருளினர். இது நகர்த்

3036. **நலமலியுந் திருவீதி** பணிந்தெழுந்து நற்றவர்தங்
குலநிறைந்த திருவாயில் குவித்தமலர்ச் செங்கையொடு
தலமுறமுன் ருழ்ந்தெய்தித் **தமனியமா ளிகைமருங்கு**
வலமுறவந் தோங்கியபே **ரம்பலத்தை வணங்கினர்.** 1138

திருமதில் வடக்கு வாயில். சீகாழியினின்றும் முதன்முறை போந்தருளியபோது தென்றிசையிலிருந்து வந்தருளினராதலின் தில்லைசூழ் நெடுமதிற்றென் றிருவாயினேரணித்தாக'' (2051) என்றது காண்க.

இது பிள்ளையார் திருத்தில்லையை வழிபட்ட மூன்ருவது முறை; தொண்டை நாடு வணங்கச் சென்ற இந்த யாத்திரைத் தொடக்கத்தில் திருத்தில்லையினை வழிபட்டுப் போந்தருளியது இரண்டாவது முறையாகும். (2860).

சேண் *- நீண்ட தூரத்துள்ள;* ***ஒளி தழைத்தல்*** *- சிவவொளி பெருக வீசுதல். இத்திருவாயில் ஆளுடைய நம்பிகள் முதன்முறை திருத்தில்லைக்குள் எழுந்தருளும் திருவாயில் என்பது ''வாயில்கணுன்கி னுத்த ரத்திசை வாயின்மு னெய்தி'' (243) என்பதனுலறியப்படும்.* ***உட்புகுந்து*** *- தில்லைத் திருநகரத்தினுள்ளே புகுந்து.*

மாடப் பெருந் திருவீதி *- தேர்வீதி மாடவீதி. இங்குக் குறித்தது வடக்கு மாடவீதி.*

மறையினெலி பெருகி வளர் *- தில்லைவா ழந்தணர்களின் திருமாளிகைகள் பெருகி வளர்தல் அவர்களுடைய மனைகள்தோறும் வேதம் பயிலும் ஒலி பெருகி வளர்கின்றதென்பது.* ***வளர்*** *- என்றது மேன்மேலும் மறைச்சிறுவர் பயில வளர்தலும் குறித்தது.*

நெடுமாடம்*—என்பதும் பாடம்.* *1137*

3036. (இ-ள்) *நலமலியும்...எழுந்து - நன்மை மிகவும் செய்கின்ற திருவீதியினை நில முறப் பணிந்து எழுந்து; நற்றவர்தம்...தாழ்ந்தெய்தி - நற்றவர்களது கூட்டம் நிறைந்த திருவாயிலினைச் செங்கைகளைச் சிரமேற் கூப்பிக்கொண்டு நிலம் பொருந்த முன்னே தாழ்ந்து வணங்கிச் சென்று சேர்ந்து; தமனிய...வணங்கினர் - பொன் மாளிகையாகிய திருவம்பலத்தின் பக்கத்தே வலமாக வந்து உயர்ந்த பேரம்பலத்தை வணங்கினர்.*

(வி-ரை) நலமலியும் திருவீதி *-* ***நல****மாவது மாதவப்பயன்;* ***மலிதல்*** *- செய்து தருதல்; மிகுதியும் உளவாக்குதல். ''மாதவங்கள், நல்குந் திருவீதி நான்கும் தொழுது'' (2063).*

நற்றவர்தம் குலம் நிறைந்த திருவாயில் *-* ***நற்றவர்*** *- அடியார்கள்;* ***குலம்*** *- கூட்டம்;* ***நிறைதல்*** *- நெருங்குதல்.*

குவித்த செங்கையொடு தாழ்த்து *- கைகளைச் சிரமேற் கூப்பியவாறே தாழ்ந்து.*

தமனிய மாளிகை *- பொன்னம்பலம்; பொன்மன்றம்.*

3037. வணங்கிமிக மனமகிழ்ந்து. மாலயனுந் தொழும்பூத
கணங்கண்மிடை திருவாயில் பணிந்தெழுந்து. கண்களிப்ப
அணங்குதனி கண்டருள வம்பலத்தே யாடுகின்ற
குணங்கடந்த தனிக்கூத்தர் **பெருங்கூத்துக் கும்பிடுவார்,** 1139

ஓங்கிய பேரம்பலம் - மிகவுயர்ந்த பேரம்பலம் என்னும் மன்று; பொன்னம் பலத்தினை அடுத்துத் தனியே உள்ள பெருமன்றம்.

திருஎல்லை -(மதில்) **வாயில் - திருவீதி - திருவாயில் - பேரம்பலம்** என்ற இவற்றையெல்லாம் முறையே தனித்தனி வணங்கிய பின்னரே பொன்னம்பலத்தைச் சார்தலும் வழிபடலுமாம் என்ற குறிப்பும் காண்க. *1138*

3037. (இ-ள்)வணங்கி...எழுந்து -(திருப்பேரம்பலத்தை) வணங்கி மனம் மிக மகிழ்ந்து மாலும் அயனும் தொழுகின்ற சிவ பூதகணங்கள் நெருங்கிய திருவணுக்கன்திருவாயிலைப் பணிந்து எழுந்து; கண்களிப்ப - கண்கள் களிகூர; அணங்கு...ஆடுகின்ற - சிவகாமியம்மையார் தனியே கண்டருளும்படி திருவம்பலத்தில் ஆடல் புரிகின்ற; குணங்கடந்த...கும்பிடுவார் - குணங்களைக் கடந்த மெய்ஞ்ஞான வெளியில் தனிக் கூத்தரது பெரிய திருக்கூத்தினைக் கும்பிடுவாராய்;

(வி-ரை) மால் அயனும் தொழும் பூதகணங்கள் - பூதகணங்கள் பிரம விட்டுணுக்களாலும் தொழப்படும் தன்மை வாய்ந்தவைகள். தேவர்கள் பசு வர்க்கத்துட்பட்டுப் பிறவியில் வருவோர். சிவபூதகணங்கள் அவ்வாறன்றிச் சிவத்துவம் விளங்கப்பெற்ற முத்தான்மாக்கள்; அன்றியும் தம்மை வழிபடுவோர்களைச் சிவன்பால் வழிப்படுத்தி உய்யச் செய்யும் கருணையும் ஆற்றலும் உடையவர்கள்; இவர்களால் விடுக்கப்பட்டபோதன்றித் தேவர்கள் திருவாயிலிற் புகும் உரிமையிலர்; ஆதலின் இவர்களைத் தொழுது திருவாயிற்புறம் காத்திருக்கின்றனர் என்பதுமாம். திருமலைச் சிறப்பிலுரைத்தவை பார்க்க.

அணங்கு கண்களிப்பக் கண்டருள என்க. **அணங்கு**-சிவகாமியம்மையார்; **தனி** - ஐயனது பெருங்கூத்தை அம்மையாரையன்றி ஏனை உயிர்வருக்கங்கள் எவையும் காணும் வலியிலர். ஆதலின் தாம் தனியே கண்டு அதன் பயனை உயிர்களுக்கு அருள்கின்றார். "பாலுண் குழவி பசுங்குடர் பொறாதென, நோயுண் மருந்து தாயுண்டாங்கு" (குமரகுருபரர்); **ஊழியில் உலகங்கள் யாவையும் இறைவனுள் ஒடுங்கும்; அவை புனருற்பவமாதற் பொருட்டு இறைவர் ஆடுவர்; அக்கூத்தில் சத்தியைச் சங்கற்பித்து ஆடுதலால் சத்தி தோன்றும். அதன் பின்னே சத்தியினின்றும் ஏனைய எல்லாம் தோன்றுவதன்முன் சத்தி தனியே அக்கூத்தினைக் கண்டருளுவர்; அதன் பயனாகவே உலகம் தோன்றும் என்க.**

கண்களிப்பக் கும்பிடுவார் - என்று கூட்டியுரைத்தலுமொன்று.

அம்பலம் - சிற்றம்பலம்; சிதாகாயம்; ஞானாகாயம். இது பேரம்பலத்தின் வேறாய்ப் பொன்னம்பலம் எனப்படும்.

3038. **தொண்டர்மனம் பிரியாத திருப்படி**யைத் தொழுதிறைஞ்சி
மண்டுபெருங் காதலினு னேக்கிமுக மலர்ந்தெழுவார்
அண்டமெலா நிறைந்தெழுந்த வானந்தத் துள்ளலைந்து
கண்டபே ரின்பத்தின் கரையில்லா நிலையணைந்தார். 1140

குணங்கடந்த தனிக்கூத்தர் - *குணங்கள் தோற்ற அவற்றினின்றும் உலக தத்துவங்கள் தோன்றும்; குணங்கள் உருப்பட்டுத் தோன்றும்நிலைக் கப்பாற்பட்டு இறைவரது கூத்து விளங்கும் என்க. ''பூதமுங் கரணம் பொறிகளைம் புலனும் பொருந்திய குணங்களோர் மூன்றும், நாதமுங் கடந்த வெளியிலே'' (பட்டினத்தார் - திருவிசைப்பா).*

பெருங்கூத்து - *பயனுற் பெரியது; ''யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு''ம் தன்மையதாதலின் பெருங்கூத்து; ''தானுடத் தசையாடும்'' என்பவாதலின் ஐயன் ஆட உலகெலாம் ஆடி யியங்குகின்றன.*

தனி கண்டருள - தனிக்கூத்தர் - பெருங்கூத்தர் - *அடைமொழிகளின் சிறப்பினை உன்னுக.*

தனிக் கூத்தர் - தனி - *தனக்குவமை யில்லாத; வேறெவரும் சிருட்டிப்படாது தாமே தனியாய் நின்ற நிலையின் கூத்து; ''தானே தனிமன்றிற் றன்னந் தனிநித்தம்'' (திருமூலர்).*

கும்பிடுவார் - *கும்பிடுவாராகி; முற்றெச்சம். கும்பிடுவார் - மலர்ந்தெழுவார் - உள் அலைந்து - நிலையணைந்தார் என வரும் பாட்டுடன் முடிக்க.* *1139*

3038. (இ-ள்) *தொண்டர் மனம்...தொழுது இறைஞ்சி - திருத்தொண்டர்களுடைய மனத்தினின்றும் பிரிதலில்லாது விளங்கும் திருக்களிற்றுப்படியினைத் தொழுது வணங்கி; மண்டு...மலர்ந்தெழுவார் - செறிவுடைய பெருங் காதலினாலே நோக்கி முகம் மலர்ச்சி பெற்று எழுவாராகிய பிள்ளையார்; அண்டமெலாம்... ...அலைந்து - அண்டங்களெங்கும் நிறைந்து எழுகின்ற சிவானந்தப் பெருக்கினுள்ளே அலைந்து; கண்ட....அணைந்தார் - அனுபவத்துட் கண்ட பேரின்பத்தினிற் கரையற்ற நிலையினை அணைந்தருளினர்.*

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) தொண்டர் மனம் பிரியாத திருப்படி - *திருக்களிற்றுப்படி. இஃது திருவைந்தெழுத்தின் உருவமாகியது; இதன் தலையில் இறைவர் விளங்குகின்றார். திருவைந்தெழுத்துத் தொண்டர்களால் எப்பொழுதும் இடையறாது தியானிக்கற்பாலது என்ற நிலையில் இத் திருப்படிகள் விளங்குவன. ''செய்தவம் பெரியோன் சென்றுதாழ்ந் தெழுந்தான் றிருக்களிற் றுப்படி மருங்கு'' (251); ''தாழ்ந்தார் திருக்களிற்றுப் படிக்கீழ்'' (2071).*

நோக்கி - *ஊன்றிய - அழுந்திய - பார்வை செய்து; ''ஒன்றி யிருந்து நினைமின் கள்'' (தேவா - அரசு).*

அண்டமெலாம் நிறைந்தெழுந்த ஆனந்தம் - *புவனகோடிகள் எல்லாவற்றினும் நிறைவாகிய சிவனது ஆனந்தமாகிய அருள் நிறைவு. ''அண்டப் பரப்பெங்கு மண்டிப் பரந்தபே*

3039. **அந்நிலைமை யடைந்துதிளைத் தாங்கெய்தாக் காலத்தின்**
மன்னுதிரு வம்பலத்தை வலங்கொண்டு போந்தருளிப்
பொன்னணிமா ளிகைவீதிப் புறத்தணைந்து போதுதொறும்
இன்னிசைவண் டமிழ்பாடிக் கும்பிட்டங் கினிதிருந்தார். 1141

ரானந்த வெள்ளம் வாழ'' (அமுதாம் - பின்) என்று மாதவச்சிவஞான முனிவர் இதனை உரை செய்தமை காண்க. இது சிதாகாய நிறைவு. ''அண்டங்க ளோரேழு மம்பொற் பதியாக'' (திருமந்-9-101) என்பது முதலியவை பார்க்க.

ஆனந்தத்துள் அலைந்து – ஆனந்தமாகிய பெருவெள்ளத்தினுள் அகப்பட்டு அலைந்து; ஏகதேச உருவகம். **அலைந்து** - அலைதலால். சிவானந்த நிறைவிலே தாம் ஒன்றுபட்டுத் தம்மை வேறு காணாராய் அதுவேயாகி நின்றமையால் என்க.

கண்ட பேரின்பத்தின் கரையில்லா நிலை - கண்ட - அனுபவத்திற் கண்ட; ''அதிசயம் கண்டாமே''; ''அந்தமிலா வானந்தம் அணிகொடில்லை கண்டேனே'' முதலிய திருவாசகத் திருவாக்குக்கள் காண்க. **கரையில்லா நிலை** - எல்லை காணமுடியாத; இன்னபடி என்று அளக்கலாகாத. ''அகத்துக் கண்கொண்டு பார்ப்பதே ஆனந்தம்,...சுகத்தைச் சொல்லெனிற் சொல்லுமா றெங்ஙனே'' (திருமந்திரம்); இந்நிலைகள் முன் (2057-2062) உரைக்கப்பட்டமை காண்க. ஆளுடைய பிள்ளையார் தில்லையில் திருநடங் கும்பிட்ட மூன்றாவது முறை இது. முதன் முறையில் திருவம்பலத்தின் இயல்பும், அவர் தரிசித்த ஆநந்த ஒருபெருந் தனிக்கூத்தினியல்பும், அதனை அவர் கண்டு கும்பிட்டவாறும் விளக்கியருளிய ஆசிரியர், அவ்வானந்த நடனதரிசனத்தை முடிந்த பயனாய் முடித்துக் காட்டிய திறம் கண்டு களிக்கற்பாலது. *1140*

3039. (இ-ள்) அந்நிலைமை அடைந்து திளைத்து - முன்பாட்டிற்கூறிய அந்நிலைமையினை அடைந்து அவ்வனுபவத்தில் மூழ்கியிருந்து;ஆங்கு...போந்தருளி - அங்குத் தங்காத காலத்திலே, நிலைபெற்ற திருச்சிற்றம்பலத்தினை வலமாக வந்து புறத்திற் சென்றருளி; பொன்னணி... புறத்தணைந்து - பொன்னாலணியப்பட்ட மாளிகைகளையுடைய திருவீதியின் புறத்தில் சேர்ந்து; போதுதொறும்...இனிதிருந்தார்- காலந்தோறும் இனிய இசையுடன்கூடிய வண்மையுடைய தமிழ்ப் பதிகங்களைப் பாடியருளிக் கும்பிட்டுக்கொண்டு அங்கு இனிதாக எழுந்தருளி யிருந்தனர்.

(வி-ரை) அந்நிலைமை அடைந்து திளைத்து - அகரம், முன்பாட்டிற் கூறிய அந்த என முன்னறிசுட்டு, அக்கரங்களுள் அகரம்போல நிறைந்த சிவானந்த நிலைமையினில் நிறைந்தாராகும் நிலை என்ற குறிப்புப்பெற **அந்நிலைமை** - அகரத்தின் நிலை- என்றுரைத்தலுமாம்.

எய்தாக் காலம்- வழிபாட்டுக்குரிய தல்லாக் காலம். திருக்கதவம் திருக்காப்பிடுகின்ற உச்சி- திருவத்தயாமம் முதலிய காலங்களின் பின் உள்ள காலம். ''காலமெல்லாந் துதித்திறைஞ்சி'' (2062); மேல் போதுதொறும் என்பதும் காண்க.

மாளிகை வீதி- தில்லைவாழந்தணர்களின் மாளிகைகள் நிறைந்த திருவீதி; மாடவீதி. ''குன்றனைய மாளிகைக டொறுங்குலவும் வேதிகைகள்'' (1064).

இன்னிசை வண்தமிழ் - இப்பதிகங்கள் கிடைத்தில!

3040. **திருந்தியசீர்த்** தாதையார் **சிவபாத விருதயரும்**
பொருந்துதிரு வளர்**புகலிப் பூசுரரு மாதவரும்**
"பெருந்திருமா லயன்போற்றும் பெரும்பற்றப் புலியூரில்
இருந்தமிழா கரரணைந்தா" ரெனக்கேட்டு வந்தணைந்தார். 1142

***கும்பிட்டு அங்கு இனிதிருந்தார்* - கும்பிடுதலே பிறவிப் பயனும் என்பதை உலகுக்கு அறிவுறுத்தி உபதேசித்தருளிய ஞான ஆசாரியராதலின் அவ்வாழ்வு பெற்றமையின் இனிது இருந்தார் என்க.** "என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே... வழிபடுமதனாலே" (திருவலஞ்சுழி) என்றருளிய பிள்ளையாரது திருவாக்கு ஈண்டுச் சிந்திக்கற்பாலது.

அங்கு - அத்திருப்பதியின் புறத்து அமரக்கூடிய இடத்திலே என்க. "அங்கண் அல்குந் திறமஞ்சு வார்சண்பை யாண்டகையார்" (2063); "திருவேட் களஞ்சென்று... வைகி யருளுமிட மங்காக" (2064) என்று முன் கூறியவைகளை நினைவு கூர்க.

மன்னு திருவம்பலம் - "மெய்ஞ்ஞானமே யான வம்பலம்" (2058) என்றபடி ஞான நிறைவாதலின் யாண்டும் பரவி நித்தியமாயுள்ளது.

புறத்தமர்ந்து—என்பதும் பாடம். *1141*

3040. (இ-ள்) திருந்தியசீர்...மாதவரும் - உலகம் திருந்துதற்குக் காரணராகிய சிறப்பினையுடைய தாதையாராகிய சிவபாதவிருதயரும், பொருந்தும் சைவத்திரு வளர்தற்கிடமாகிய சீகாழியின்கண் வாழும் மறையவர்களும், சிவனடியார்களும்; "பெருந்திரு...அணைந்தார்" எனக் கேட்டு - "பெரிய திருவினையுடைய திருமாலும் பிரமதேவனும் போற்றுகின்ற பெரும்பற்றப்புலியூரின்கண்ணே பெரிய தமிழாகரராகிய பிள்ளையார் வந்தணைந்தனர்" என்று கேட்டு; வந்தணைந்தார் - தாம் அங்கு வந்து சார்ந்தனர்.

(வி-ரை) திருந்திய சீர்- திருந்திய - உலகம் திருந்திய என்க. உலகம் திருந்துதலாவது பரசமயங்கள் ஆக்கிரமித்து மேலெழுந்து கேடு செய்யாது நிராகரிக்கப்பட்டு அவ்வவற்றின் நிலையில் அமைந்து நிற்றலும், சைவம் ஓங்கித் திருநீற்றினொளி விளங்கி உண்மை நிலையில் நிற்றலுமாம்; சிவபாதவிருதயர் மனையறத்தி லின்பமுறுதல் ஒன்றும், பரசமய நிராகரித்து நீறு ஆக்குதலால் உலகம் திருந்துதல் ஒன்றுமாக இரண்டு பயன்களைக் குறித்து மகவு வேண்டித் தவம் செய்தனர்; அவ்வாறே பிள்ளையாரை மகவாகப் பெற்றனர். மகப் பெற்றமையினாலே "தாதையார்" எனப் பெற்றனர். "ஈறில் பெருந்தவ முன்செய்து **'தாதை'** யெனப்பெற்றார்" (1983); இவ்விரண்டனுள் உலகந் திருந்துதலாகிய பெரும் பயனையே முற்பட நினைந்தனர் என்பது "மனையறத்தி லின்பமுறு மகப்பெறுவான் விரும்புவார், அனையநிலை தலைநின்றே...**முன்** பரசமய நிராகரித்து நீறாக்கும், காதலனை" (1917) என்றதனா லறியலாம்; ஈண்டுப் பிள்ளையாரது, பாண்டிநாடு தொண்டைநாட்டு யாத்திரைகளின் நிறைவினோடு அப்பெரும்பயனும் நிறைவெய்தி உலகமும் தமிழ்நாடு முழுமையும் திருத்தமுற்று விளங்கின; இனிப் பிள்ளையாரது திருமணமும் இறைவன் திருவடியிற் புக்கொன்றி யுடனாதலுமே எஞ்சி நிற்பன. இவையே இனித் தாதையாருக்குப் பிள்ளையார் மனையறத்திலின்பமுறு மகவு எனப்பெற்ற நிலையில் செய்ய நிற்பன; ஆதலின் இக்கருத்துக்களையெல்லாம் உள்ளடக்கியே, வாளா கூறாது, **திருந்தியசீர்**

என்றும், **தாதையார்** என்றும் அவை மொழிகள் தந்து கூறியருளிய நயம் காண்க. **புகலிப் பூசுரரும்** என ஏனை யோரை வேறுபிரித்துப் பின்வைத்ததும் இக்குறிப்பு.

பொருந்து திருவளர் புகலி - **பொருந்து திரு**-சைவ மெய்த்திரு; **வளர்** - வளர்தற்கேதுவாய் நிற்கும். **திருவளர் - பூசுரர்** - என்றும், **வளர் மாதவரும்** - என்றும் கூட்டியுரைக்கவும் நின்றது. **பொருந்து திரு** - என்றார் ஏனைத் திருவெல்லாம் பொருந்தா தொழிவன என்றுணர்த்துதற்கு. **பொருந்து திருவளர்** என்றது, இனி, இவர்கள் எல்லாரும் பிள்ளையாரது திருமணத்தில் இறைவனடி பொருந்தும் திருவினை யெய்தும் நிலைக்குரிய தன்மைகளை வளர்க்கும் என்ற குறிப்பும் தந்துநிற்றல் காண்க.

மாதவர்-சிவனடியார்கள். சிவபூசையே தவம் எனப்படும். **மாதவ**மாவது சைவத்தின் நால்வகை நெறிகளிலும் சிறந்து உறைப்புடன் ஒழுகுதல். "ஆறு வகைச் சமயத்தி **லருந்தவரும்**" (3150) "அறுவகை விளங்குஞ் சைவத் தளவிலா விரதஞ்சாரு, நெறிவழி நின்ற வேட நீடிய **தவத்தி** னுள்ளோர்" (3101) என்பவை முதலியன காண்க. சிறப்புப்பற்றி "மாதவர்" பின்வைத் தோதப்பெற்றனர்.

பெருந்திருமா லயன் போற்றும்-"வரங்கிடந் தான்றில்லை யம்பல முன்றிலம் மாயவனே" (திருக்கோவையார்).

பெரும்பற்றப் புலியூர்-முனிவர்-தேவர் முதலிய எல்லாருக்கும் பெரும்பற்றுக உள்ள ஊர் என்பது; "பற்று நின்றுரைப் பற்று பாவமே" (பிள்ளையார்).

தமிழாகரர் - ஆகரம் - இடம்.

கேட்டு வந்தணைந்தார்-தொண்டை நாடு சென்று வணங்கித் திரும்பியருளித் தில்லையில் எய்திய பிள்ளையார், சீகாழியில் அணிமையில் எழுந்தருள்வார் என்பது தெரிந்தாரேனும், அதுவரையும் பிள்ளையாரைக் காணுது தரிக்கலாற்ருது எதிர்கொண்டு போந்தனர் என்க. இவர்களது, பிள்ளையாரைப் பிரியலாற்ருத நிலைமுன்னர்த் திருவீழிமிழலையிற் சென்று கண்டு அவரைச் சீகாழிக்கு வரும்படி வேண்டியமையாலும், தாதையார் பிள்ளையாரைக் காணத் திருவாலவாயினிற் சென்றமையாலும் அறியப்படும். தாமும் திருத்தில்லை சென்று வணங்கிப் பிள்ளையாருடன் அம்பலக்கூத்தரை வணங்கும் (3041 பார்க்க.) ஆசையும் துணைசெய்ததென்க. "கோவே யுன்றன் கூத்துக் காணக் கூடுவ தென்றுகொலோ" (1); "அத்தா வுன்ற னுடல் காண வணைவது மென்றுகொலோ" (3) (கண்டராதித்தர்- கோயில்); "எம்மிறையை யென்றுகொல் காண்பதுவே" (திருவாலியமுதனுர்); "அப்பா காண வாசைப் பட்டேன் கண்டா யம்மானே" (திருவா) என்பன முதலிய திருவாக்குக்கள் உண்மையடியார்களின் உண்மை நிலையை விளக்குதல் காண்க. 1142

3041. (இ-ள்) ஆங்கு... அளித்தருளி - அவ்வாறு வந்தணைந்த அவர்களைக் கண்டு அவர்களுக்கு மலர்ந்த முகத்துடன் இனிய மொழிகள் கூறி; அவரோடும்... வணங்க - அவர்களுடனேகூடத் தரிக்கலாற்ருத பெருவிருப்பதினுலே தங்கள் பெருமானின் கழல்களை வணங்குதற்கு; ஓங்கு...உடனுக - திருமிக்க தில்லைவாழந் தணர்களும் உடனுக வரச்சென்று;

3041. ஆங்கவரைக் கண்டுசிறப் பளித்தருளி **யவரோடுந்**
தாங்கரிய காதலினுற் றம்பெருமான் கழல்வணங்க
ஓங்குதிருத் தில்லைவா ழந்தணரு **முடனுகத்**
தேங்கமழ்கொன் றைச்சடையார் **திருச்சிற்றம் பலம்பணிந்தார்.** 1143

3042. **தென்**புகலி யந்தணருந் தில்லைவா ழந்தணரும்
அன்புநெறி பெருகுவித்த வாண்டகையா ரடிபோற்றிப்
பொன்புரிசெஞ் சடைக்கூத்த ரருள்பெற்றுப் போந்தருளி
யின்புறு**தோ ணியிலமர்ந்தார் தமைவணங்க வெழுந்தருள,** 1144

தேங்கமழ்...பணிந்தார் - தேன் மணம் கமழும் கொன்றை மலர்மாலை சூடிய சடையினையுடைய இறைவரது திருச்சிற்றம்பலத்தினைப் பணிந்தனர்.

(வி-ரை) ஆங்கு அவரை –ஆங்கு–அவ்வாறு வந்த அவர்களை; அவ்விடத்து என்றலுமாம்.

சிறப்பு அருளி- சிறப்பாவது அவர்களை முகமன்கூறி வரவேற்று நலம் அருளுதல் என்ற பொருளில் வந்தது.

அவரோடும் - வணங்க - தில்லைவா ழந்தணரும் - உடனுக - அவர்களுடன் கூடிச் சென்று வணங்குதற்குத் தில்லைவாழந்தணரும் உடன் ஆகி வர–ஒன்றுகூடி வரக் - **கூடிப் பணிந்தார்** என்க. **கூடி** என ஒருசொல் வருவித்துரைக்க.

தாங்கரிய காதலினுல் -புகலியந்தணர்களும் அடியவரும் உடனுகத் திருமன்று பணியப்பெற்றதனுல் பெருவிருப்பு மிக்கதென்பது.

திருஓங்கு என்க; ***திரு*** - வைதிக சைவத் திரு.

திருச்சிற்றம்பலம் - ஞானுகாயமாகிய பொன்னம்பலம். *1143*

3042. (இ-ள்) தென்புகலி... போற்றி - அழகிய சீகாழிமறையோரும் தில்லைவாழந்தணர்களும் அன்புநெறியைப் பெருகச்செய்த இறைவருடைய திருவடிகளைப் போற்றி; பொன்புரி... போந்தருளி - புரித்த சடையினையுடைய கூத்தப் பெருமானது திருவருள் விடைபெற்றுப் போந்தருளி; இன்புறு...எழுந்தருள - இன்பஞ் செய்யும் திருத்தோணியில் விரும்பி வீற்றிருந்த இறைவரை வணங்குதற்கு எழுந்தருளுவதன் பொருட்டு;

(வி–ரை) அன்புநெறி பெருகுவித்த ஆண்டகையார் - கூத்தப் பெருமான்; இறைவர் *"திரிதனைக் கீண்ட வாண்டகை" (திருவி).*

தென்புகலி - தென் - அழகு. தில்லைக்குத் தென்றிசையிலுள்ள என்பாரு முண்டு.

அந்தணரும் - அந்தணரும் - தாமுமாய்க் கூடி என்க. தாமுமாய்க் கூடி என்பது இசையெச்சம். ***அன்பு நெறி*** - சிவநெறி; *"அன்பே சிவம்" (திருமந்).*

பெருகுவித்தல் -விளக்கம் குன்றியதனை நீக்கி யாவரும் போற்றும்படி செய்தல்.

இன்புறு தோணி - இன்பத்தை உறச் செய்யும். ***உறும்*** - உறுவிக்கும்;

3043. நற்றவர்தங் குழாத்தோடு நம்பர்திரு நடஞ்செய்யும்
பொற்பதியின் றிருவெல்லை பணிந்தருளிப் புறம்போந்து
பெற்றமுயர்த் தவரமர்ந்த **பிறபதியும் புக்கிறைஞ்சிக்**
கற்றவர்கள் பரவுதிருக் கழுமலமே சென்றடைவார், 1145

தில்லைவாழந்தணர் முன் - என்று பாடங்கொண்டு, முன் கூறியவாறன்றி, **அன்புநெறி பெருகுவித்த ஆண்டகையார்** என்றதற்கு அன்பின் வழியை விருத்தி செய்த பிள்ளையாரது என்றுரைப்பாரு முண்டு.

பெருக்குவித்த—என்பதும் பாடம். *1144*

3043. (இ-ள்) நற்றவர்தம்... புறம்போந்து - நல்ல தவமுடைய அடியார் கூட்டத்துடனே கூடி, இறைவர் திருநடனம் செய்தருளுகின்ற அந்த அழகிய பதியின் திருவெல்லையினைப் பணிந்தருளிப் புறத்திற் போய்; பெற்றம்... இறைஞ்சி- விடைக்கொடியினை உயர்த்திப் பிடித்த இறைவர் விரும்பி எழுந்தருளிய பிற பதிகளையும் சென்று வணங்கி; கற்றவர்கள்...அடைவார் - கற்ற பெரியோர்கள் துதிக்கின்ற சீகாழிப் பதியினையே சென்று சேர்வாராகி;

(வி-ரை) நற்றவர் - திருத்தொண்டர்கள்.

திருவெல்லை - தென்புறத்துத் திருவெல்லை. இது கொள்ளிடத் திருநதிவட கரையின் வடக்கிலுள்ளது (*256-2044-2045* பார்க்க).

பிற பதி - இவை திருத்தில்லைக்கும் சீகாழிக்கும் இடையில் உள்ளவை; *2043* பார்க்க. திருநாவுக்கரசர்பிரான் தில்லையினின்றும் சீகாழியை நோக்கிச் சென்றருள்பவர் திருநாரையூர் பணிந்து சென்று வழிக்கொண்டு சென்றமை முன் (*1444*) கூறப்பட்டது காண்க. திருநாரையூர் சென்று வராது நேரே தில்லையினின்றும் சீகாழிக் கெழுந்தருளுவதாயின் இடையில் திருமயேந்திரப்பள்ளி, திருக்குருகாவூர் முதலாயின என்பது கருதப்படும்.

கற்றவர்கள் பரவும் திருக்கழுமலமே - ''கற்றவர்கள் பணிந்தேத்துங் கழு மலத்துளீசன்'' (பிள் - மேகரா -*11*); ஏகாரம் தேற்றம்.

புறம்போந்து - திருவெல்லையினைக் கடந்து அப்புறம் மேற்சென்றருளி; தில்லைப்பதியின் புறம். *1145*

3044. (இ-ள்)பல்பதிகள் கடந்தருளி- பல பதிகளையும் கடந்து சென்றருளி; பன்னிரண்டு... எதிர் வணங்கி - பன்னிரண்டு பெயர்களையுடைய பழைமையாகிய வளம் பொருந்திய சீகாழிப் பதியானது தூரத்திலே காட்சிப்படுதலும் பொருந்திய திருமுத்துச் சிவிகையினின்றும் இறங்கி வணங்கி; செல்வமிகு...செய்வார் - சிவச் செல்வம் நிறைந்த அந்தச் சீகாழிப் பதியின் மேலே திருப்பதிகத்தினை அருளிச் செய்வாராகி;

(வி-ரை) பல் பதிகள் - இடையில் உள்ள ஊர்கள். முன் பாட்டில் கூறியவை இறைவர் எழுந்தருளிய தலங்கள்.

3044. பல்பதிகள் கடந்தருளிப் பன்னிரண்டு பேர்படைத்த
தொல்லைவளப் **பூந்தராய் தூரத்தே தோன்றுதலும்**
மல்குதிரு மணிமுத்தின் சிவிகையிழிந் **தெதிர்வணங்கிச்**
செல்வமிகு **பதியதன்மேற் றிருப்பதிக மருள்செய்வார்,** 1146

பன்னிரண்டுபேர் படைத்த தொல்லைவளப் பூந்தராய்-இங்குச் சீகாழிப் பதியின் தொன்மையும் வளமும்பற்றி எடுத்துக் கூறினர்; பிள்ளையார் இங்கு அருளும் இரண்டு பதிகங்களினும் "விண்டாங்குவ போலும்மிகு **வேணுபுரம்** மதுவே" என்றும், "நலங்கொள் **காழி** சேர்மினே" என்றும், பதியினைப் பற்றியவையாகவே துதிக்கப்படுதலானும் என்க; இனிப் பிள்ளையார் அருளியனவாய்க் கிடைத்துள்ள சீகாழிப் பதி பற்றிய பதிகங்களுள் இவை இறுதியானவை என்பது கருதி இவ்வாறு துதித்து மகிழ்ந்தனர் ஆசிரியர் என்பது. "**பதியதன்மேற்** றிருப்பதிகம் அருள் செய்தார்" என்று இக்குறிப்புக் காட்ட அருளியதும் காண்க.

தூரத்தே தோன்றுதலும்...சிவிகை இழிந்து எதிர் வணங்கி-இறைவரது திருநகரம் கட்புலப்பட்டவுடனே சிவிகையினின்றும் இறங்கி நிலமுறத் தாழ்ந்து வணங்குதல் முறையாம். **செல்வம்** - சிவநெறிச் செல்வம்.

பதி அதன்மேல் - திருப்பதியினைத் துதித்தல் பதிகக் கருத்தும் குறிப்புமாம்; "**வேணுபுர மதுவே**" என்ற பதிக மகுடம் காண்க.

முன்னர்ப் பல முறைகளிலும் (ஐந்து யாத்திரைகளிலும்) பிள்ளையார் பிற பதிகளினின்றும் சீகாழியின்கண் மீண்டு எழுந்தருளியுள்ளாராயினும் இம்முறையில் அத்திருப்பதி தூரத்தே தோன்றியபோதே சிவிகையினின்று மிழிந்து எதிர் வணங்கி ***அதன்மேற் றிருப்பதிகச் சொன்மாலை எடுத்தியம்பி*** மேற்சென்றருளுகின்றார் (3045); அஃதன்றியும்,அதன் புறம்பணையின் மருங்கு அணைந்து பதியினுட் புகும்போது மலர் தூபதீபங்களுடன் தொழுது ஒரு பதிகம் "**காழி சேர்மின்**" எனப்பாடி அதனுள்ளே புகுந்தருள்கின்றார் (3046); இனித் திருமணஞ் செய்தருள அப் பதியினின்றும் புறப்படும்போது "வளம்பதி வணங்கி"ச் சென்றருள்கின்றார் (3095); இவற்றின் குறிப்புப் பிள்ளையார் இனி இவ்வுலக நிலையில் இப்பதியினுள் மீண்டும் எழுந்தருளுகின்றதில்லை என்பதனைக் காட்டும் திருவருட் குறிப்பாகும். இஃதே பிள்ளையார் சீகாழியில் எழுந்தருளும் இறுதி முறையாதலும் காண்க. "நம்பொ ருணம் மக்க ளென்று நச்சி யிச்சை செய்துநீர், அம்பர மடைந்து சால **வல்லலுய்ப் பதன்முனம்...** ...நம்பன்மேவு நன்னகர் நலங்கொள் காழி சேர்மினே" என்றது பதிகக் கருத்தும் அருட்குறிப்புமாம். "பன்னிரண்டு பேர் படைத்த" என்ற பதியின் சிறப்புப்பற்றிக் கூறிய குறிப்பினுடன், இம்முறை எழுந்தருளும் நிலை கூறும் இந்நான்கு பாட்டுக்களினுள் திருக்கழுமலம் (3043), பூந்தராய் (3044) வேணுபுரம்—புறவம் (3045) எனவும் மேல்வரும் பாட்டில் **காழி** எனவும் ஐந்து திருப்பெயர்களாற் கூறியருளும் குறிப்பும் காண்க.

1146

3045. (இ-ள்) மன்னும்... எடுத்து - நிலைபெற்ற இசையினையுடைய "வண்டார் குழல்" என்னும் முதலையுடைய திருப்பதிகத்தினைத் தொடங்கி; மின்னுசுடர்... ...இயம்பி-ஒளிவீசும் சுடர்களைக் கொண்ட மாளிகைகள் "விண் தாங்குவன போலவுள்ளன" என்ற கருத்துடைய

3045. மன்னுமிசை மொழி **"வண்டார் குழலரிவை" யென்றெடுத்து**
மின்னுசுடர் மாளிகை **"விண்டாங்குவபோல் வேணுபுரம்"**
என்னுமிசைச் சொன்மாலை யெடுத்தியம்பி எழுந்தருளிப்
புன்னைமணங் கமழ்புறவப் **புறம்பணையில் வந்தணைந்தார்.** 1147

3046. **வாழி**வளர் புறம்பணையின் மருங்கணைந்து, வரிவண்டு
சூழுமலர் நறுந்தீப தூபங்க ளுடன்றொழுது
"காழிநகர் சேர்மி"னெனக் **கடைமுடிந்த திருப்பதிகம்**
ஏழிசையி னுடன்பாடி யெயின்மூதூ ருட்புகுந்தார். 1148

இசையுடன் கூடிய திருப்பதிகத்தினை எடுத்துத் துதித்தருளி;எழுந்தருளி - மேற்சென்றருளி; புன்னை...அணைந்தார் - புன்னை மரங்களின் மணமானது கமழ்தற்கிடமாகிய சீகாழியின் புறம்பணையின் வந்து அடைந்தனர்.

இந்நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) வண்டார் குழலி - பதிகத் தொடக்கம். சீகாழிப் பதிகங்களுள் அம்மையை முன்வைத்துப் போற்றும் நிலைபற்றி எடுத்தவாறு, "தோடுடைய செவியன்" முதலியவை காண்க.

மாளிகை விண் தாங்குவபோலும் - பதிக முதற்பாட்டின் கருத்தும் குறிப்பும் குறித்தவாறு.

மாடம் விண் தாங்குவபோலும்-விண்ணிலோங்கிய மாடங்கள் தூரத்தே கண்ணுக்குப் புலப்படத் தோன்றியபோது நிகழ்ந்த திருவுள்ளக் குறிப்பு; **தாங்குதல்**- காப்பாற்றுதல் எனக்கொண்டு,விண்ணுயர்ந்த திருத்தோணியேயன்றி வேணுபுரத்தின் மாடங்களுமே விண்ணைத் தாங்குவபோல உயர்ந்தன என்பதுமாம்; **வேணுபுரம்** என்ற பெயர்க்குறிப்பும் அது; வேணுவின் வழி வந்தும், வேணுவின் மறைந்து கரந்துறைந்தும் இந்திரன் புகலடைந்து நிற்க, அவனைக் காத்துப் பின் விண்ணுலக ஆட்சியினை மீளப்பெற அருளிய வரலாறு காண்க. மண்ணவர்க்குரிய ஆக்கமொழி மேல்வரும் பதிகத்தில் உரைப்பதனால் இப்பதிகத்தினுள் விண்ணவர்க்குரிய ஆக்கக்குறிப்புப் பெறக் கூறியவாறு; இக்காரணம் பற்றியே ஆசிரியர் இவ்வருணனையை விதந்தெடுத்துக் காட்டியருளினர் என்க.

புறம்பணை - நகரின் புறத்து வயல்கள்; **புன்னைமணங் கமழ் புறவம்**- நெய்தனிலச் சார்புபற்றிக் கூறியவாறு. இதுபற்றியே திருக்கழுமல மும்மணிக் கோவையினுள் பட்டினத்துப் பெருமானார் நெய்தற்றிணைக்குரிய இரங்கற்றுறையில் வைத்துப் பற்பல பாட்டுக்களும் அருளியவாறு கண்டுகொள்க.

எழுந்தருளி - தூரத்தே தோன்றிய இடத்தினின்றும் மேற்சென்று நகரணிமைக்குச் செல்ல. *1147*

3046. (இ-ள்) வாழிவளர்..மருங்கணைந்து - வாழ்வாக வளரும் அத்திருப்பதியின் புறம்பணையில் நகரின் அணிமையில்சேர்ந்து; வரிவண்டு...தொழுது - வரிவண்டுகள் மொய்க்கும் மலர்களாலும், நறுமணமுடைய தூப தீபங்களாலும் வழிபட்டுத் தொழுது;

3047. **சேணுயர்ந்த திருத்தோணி வீற்றிருந்த சிவபெருமான்**
தாணிணைந்த வாதரவின் றலைப்பாடு தனையுன்னி
நீணிலைக்கோ புரமணைந்து நேரிறைஞ்சிப் புக்கருளி
வாணிலவு பெருங்கோயில் வலங்கொண்டு முன்பணிந்தார். 1149

''காழிநகர் சேர்மின்''... பாடி- ''காழி நகரின்கட் சேர்மின்கள், மக்களே!'' என்று இறுதிச் சீர்களாலமைந்த மகுடமுள்ள திருப்பதிகத்தினை எழிசைகளுடனே பாடியருளியவாறே; எயின்... புகுந்தார் - மதிலையுடை அந்தப் பழைய திருநகரத்தினுள்ளே புகுந்தருளினர்.

(வி-ரை) வாழிவளர் - *உலகம் வாழ்வாக ஊழியிலுமழியாது வளர்கின்ற.*

புறம்பணையின் மருங்கு - *நகர்ப்புறத்தின் பக்கம்.*

வரிவண்டு சூழுமலர் - *வரிகளையுடைய வண்டு; வரிப்பாட்டு இசைக்கும் வண்டுகள் என்றலுமாம்.* **வண்டு சூழு மலர்** *என்றது புதிதின் அலர்கின்ற நாண்மலர் என்றதாம், அஃதே வழிபாட்டுக்குரித்தா மாதலின்.*

நறும் தீபம் - *தீபத்திற்கு நறுமையாவது நறுமணங் கமழும் நெய்யினால் இடப்பட்டு விளங்குதல்; மண்ணெண்ணெய் முதலிய கந்தகக் கலப்புள்ள தீநாற்றமுள்ள பண்டங்களால் இடுவிக்கும் இந்நாட் பைசாச விளக்குகள் இறைவழிபாட்டுக்காகா என்பது தெளிக.* **நறுமையை** *மலர்க்கும் கூட்டுக.*

மலர் -தீப- தூபங்களுடன் தொழுதலாவது - *திருநகரையே நோக்கி மலர்களாலருச்சித்துத் தூப தீபங்களேந்தி வழிபடுதல். இறைவரைப்போலவே அவர் எழுந்தருளிய திருப்பதியும் வழிபடற்பாலது என்பது விதி; 2086, 2398 பார்க்க.*

''காழிநகர் சேர்மின்'' எனக் கடை முடிந்த - *''காழி சேர்மினே'' என்பது பதிகப் பாட்டுக்களின் இறுதிச் சீர்களாகிய மகுடம்; இஃதே பதிகக் குறிப்பும் கருத்துமாம்.* **கடை முடிந்த** *- கருத்துட்கொண்ட - ஈற்றினைக்கொண்டு முடிந்த என்றலுமாம்;* **கடை** *- குறிப்பு - குறிக்கோள் என்றலுமாம்;* **கடை முடிந்த** *என்றதனால் இனிச் சீகாழியின்பேரில் பிள்ளையார் அருளும் பதிகம் எதுவும் நாம் பெறுவதில்லை என்றும், இஃதே நாம் பெற்ற அளவில் சீகாழியைப்பற்றிப் பிள்ளையாரது கடைசியாக முடிந்த திருப்பதிகமாம் என்றும் குறிப்புப்பெறக் கூறிய தெய்வக் கவிநயமும் காண்க.*

ஏழிசை - *திருவிராகமாகிய நட்டராகப் பண் கட்டளை.*

எயின் மூதூர் - *1092 பார்க்க.* *1148*

3047. (இ-ள்) *சேணுயர்ந்த...உன்னி- ஆகாயத்திலுயர்ந்த திருத்தோணியிலே வீற்றிருந்தருளும் சிவபெருமானுடைய திருவடிகளை நினைந்த அன்பின் மேம்பாட்டினை எண்ணிக்கொண்டவராய்; நீள்...புக்கருளி - நீண்ட நிலைகளையுடைய கோபுரத்தினை அணைந்து எதிரில் நிலமுற வணங்கி எழுந்து உள்ளே புகுந்தருளி; வாணிலவு... ...பணிந்தார் - ஒளி விளங்குகின்ற பெருந் திருக்கோயிலினை வலமாக வந்து வணங்கி அங்கு அதன் முன்பு பணிந்தருளினர்.*

(வி-ரை) சேணுயர்ந்த...தனை உன்னி - சேண் - விசும்பு; ஆகாயம். வானுலகம் உயர்வுபெறக் காரணமாயிருந்த என்ற குறிப்புப்பட உரைத்தலுமாம்.

தாள் நினைந்த ஆதரவின் தலைப்பாடு – ஆதரவு - அன்பு; **தலைப்பாடு** - பெருஞ்சிறப்பு; கிடைத்தற்கரிய பெரும் பேறு. **உன்னி** - நினைந்து நினைந்து மனமுருகி; **உன்னி** - உன்னியவாறே; படியே. ''பாதத்தினின் மனம் வைத்தெழு பந்தன்'' *(11)* என்ற பதிகக் குறிப்புக் காண்க.

நேர் இறைஞ்சி – திருக்கோபுரத்தின் முன் எதிரே நிலமுறப் பணிந்து.

வாள் நிலவு பெருங்கோயில் - இது புறத் திருமதிலின் உட்சுற்றில் அமைந்த சீகாழிக் கோயிலின் முழுமை. **வாள்** - ஒளி; ஞானஒளி.

முன் பணிந்தார் - **முன்** - பிரமபுரீசர் திருமுன்பு. ***1149***

வேணுபுரம் *(சீகாழி)*

திருச்சிற்றம்பலம்

பண் - நட்டபாடை

வண்டார்குழ லரிவையொடு பிரியாவகை பாகம்
பெண்டான்மிக வானன்பிறைச் சென்னிப்பெரு மானூர்
தண்டாமரை மலராளுறை தவளந்நெடு **மாடம்**
விண்டாங்குவ போலும்மிகு வேணுபுர மதுவே. (1)

வேதத்தொலி யானும்மிகு வேணுபுரந் தன்னைப்
பாதத்தினின் மனம்வைத்தெழு பந்தன்றன பாடல்
ஏதத்தினை யில்லாவிவை பத்தும்மிசை வல்லார்
கேதத்தினை யில்லார்சிவ கெதியைப்பெறு வாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– பெருமானூர் ''மாடம் விண்டாங்குவபோல'' விளங்கும் வேணுபுரமதுவேயாம் *(3045)*.

பதிகப் பாட்டுக் குறிப்பு:– *(1)* அரிவை - பெரியநாயகியம்மை; **பெண்தான் மிக ஆனன்** - சிருட்டிக் கிரமத்தில் சத்தியுடன் கூடி அருள்மிக எழுந்தருளினன்; **ஆனன்** - ஆக்கச்சொல் பொருளின் தன்மை குறித்தது. **மலராள்** - ''தவளந்நெடு'' என்ற குறிப்பினால் கலைமகளைக் குறித்தது; ''கலையாறொடு சுருதித்தொகை கற்றோர்மிகு கூட்டம், விலையாயின சொற்றேர்தரு''*(8)*; ''நாவியலு மங்கையொடு'' (தேவா); **மாடம் விண்டாங்குவ போலும்** - இதன் அரும் பொருட்குறிப்பை ஆசிரியர் எடுத்துக் காட்டியருளினர் *(3045)*; முன் உரைத்தவை பார்க்க. **அதுவே பெருமான் ஊர்** என்க;—***(2)* படைப்புந் நிலை யிறுதிப் பயன்** - முன்னர்ப் ''பெண்டான்மிக வானன்''*(1)* என்றதனைத் தொடர்ந்து கூறியது; **நிலை** - நிறுத்துதல் - திதி; **இறுதி** - சங்காரம்; **கிறி** - பலவகை விளையாடல்; **புடைப் பாளையின் கமுகின்னொடு - மலர் நாற்றம்** - கமுகம்பாளைகள் விரிந்து அலரும் பருவத்தில் மிக்க மணம் வீசுவன. **புடைப்பாளை** - பாளை பக்கத்திற் புடைத்தல் கமுகுகளினியல்பு; தன்மை நவிற்சி; **விடைத்தே** - மிகுந்தே ;—***(3)***

கடம்-யானையின் மதம்; **அவர்**-அவ்யானையை அபிசார யாகத்தில் பெற்று ஏவிய இருடிகள்; **படம்**-பாம்பின் படம்; **விடம் தாங்கிய கண்** - விடம்போன்று கூரிய பார்வையுடைய கண்; **அரவக்குழை** - அரவம் போன் றமைந்த காதணி;—**(4) மயிலாடிட மேகம் முழவதிர-ஆடிட** - ஆடும்படி; முழவுபோல அதிர என்க;—**(5) மந்தி மேனோக்கி நின்றிறங்கும்**-குரங்குகள் கீழிறங்கும்போது கீழே நோக்காது மேலே பார்த்தவாறே இறங்கும் இயல்புபற்றிய தன்மை நவிற்சியணி;– **(8) விலையாயின சொல் – விலை** என்பது இங்கு உயர்ந்த பொருள் அமைதி என்ற பொருளில் வந்தது;– **(10) வணங்காமைத் தெரியான்** - கன்மமேலீட்டினால் அவர்கள் வணங்கலாகாதவாறு தம்மை மறைத்து நின்றவர்; **தூசு** - புடவை ;—**(11) பாதத்தினின் மனம் வைத்தெழு** - ''தாணினைந்த வாதரவின் றலைப்பாடு தனையுன்னி'' (3047) என்று ஆசிரியர் இதனை விளக்கி எடுத்துக் காட்டியது காண்க; **ஏதம்** - குற்றம்; மலவாதனை. **இல்லா**-இல்லையாகச் செய்கின்ற; **கேதம்** - தீமை.

காழி

திருச்சிற்றம்பலம் திருவிராகம் பண் –நட்டராகம்

நம்பொருண மக்க ளென்று நச்சி யிச்சை செய்துநீர்
அம்பரம்ம டைந்து சால **வல்ல லுய்ப்ப தன்முனம்**
உம்பர்நாத னுத்தம ளெளிம் மிகுத்த செஞ்சடை
நம்பன்மேவு நன்னகர் நலங்கொள் **காழி சேர்மினே** (1)

தக்கனார் தலைய ரிந்த சங்க ரன்ற னதரை
அக்கினோ டரவ சைத்த வந்தி வண்ணர் காழியை
ஒக்கஞான சம்பந்த னுரைத்த பாடல் வல்லவர்
மிக்கவின்ப மெய்திவீற் றிருந்து வாழ்தல் மெய்ம்மையே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:– மலர் தூபதீபங்களுடன் நகரினைத் தொழுது, ''காழிசேர்மினே'' எனக் கடைமுடித்து உபதேசித்தருளிய பதிகம்; உலக வாழ்வு கடை முடிந்து ''சாவதன்முன் இசைந்து'' காழி சேர்மின் என்ற கருத்தும் காண்க. பிள்ளையார் இவ்வுலகில்வந் தவதரித்தருளிய காரணநிலை முடிவெய்தும் நிலைகூடக், காழிசேர்ந்து, இனிப் போதநிலை முடிந்தவழி இறைவரை அடைந்து ஒன்றி உடனாகும் தருணம் அணிமையாதற் குறிப்பும் காணத்தக்கது.

பதிகப் பாட்டுக் குறிப்பு:– (1) நம் பொருள்... ...நீர் – சீகாழி நகரின் தொடர்பே கொண்டு தம்பால் வந்த தாதையாரையும் பூசுரரையும் மாதவர்களையும், அவர்கள் மூலம் ஏனை உலகவரையும் நோக்கி உபதேசித்தருளியது; **நச்சி**-விரும்பி; **நம் பொருள் - நம் மக்கள் -** பொருட் சார்பு - உடற் சார்பு; **இச்சை செய்தல்;** பற்று வைத்தல்; **அம்பரம்** - கடல்; **அம்பரமடைந்து** - ஆசைக்கடலுள் அழுந்தி; **அம்பரம்** -துயிலிடம் என்று கொண்டு,இச்சைப் பெருக்கினுள் மயங்கி என்றலுமாம். **சால** - மிகவும்; **அல்லல் உய்ப்பதன் முனம்**-மிக்க துன்பம் அடைந்து கேடுறுவதன்முன்; **முனம் - சேர்மின்** - என்று கூட்டி முடிக்க. அல்லலுய்த்தபின் சேர்தல் நும்வசமில்லை; ஆதலின் அதன்முன் சேர்மின் என்றது; இக்கருத்தைப் பலவாற்றானும்

ஐயடிகள் காடவர்கோன் நாயனார் க்ஷேத்திரத் திருவெண்பாவினும், பட்டினத்துச் சுவாமிகள் தம்முடைய அருள் நூல்களினும் இப்பகுதிக் கூறுதல் காண்க. "நல்லச்சிற்றம்பலமே நண்ணுமுன்"; "பொடியடுத்த பாழ்க்கோட்டஞ் சேராமுன்"; ஊயாறு வாயாறு பாயாமுன்" (க்ஷேத்திர வெண்பா); **உத்தமன்** - எல்லார்க்கும் நன்மையே செய்பவன்; **நம்பன்**-நம்பி அடைதற்குரியவன்; **நன்னகர்- நலங்கொள்**-நகரின் நன்மையும், அடைந்தால் அது தரும் நற்பயனும் குறித்தன; **சேர்மினே**-ஏகாரம் தேற்றம்;—**(2) ஏவம்-எவ்வம்** - குற்றம்; எதுகை நோக்கி முதனீண்டது **இசைந்து** - மனமொருமைப்பட்டு; **தீபமாலை தூபமும் செறிந்த கையராகிச் சேர்மின்**-பதியினையே அருச்சித்து வழிபட்டுப் பின் உள்ளே அடைமின்; பிள்ளையார் இவ்வாறே செய்துகாட்டியருளினமை "முன்" சூழுமலர் நறுந்தீப தூபங்க ளுடன்றொழுது" (3046) என்று ஆசிரியர் காட்டியருளினமை காண்க; **மன்னும்** - ஊழியிலுமழியாது நிலைபெறும்;—**(3) சோறு...துவண்டு** - செல்வம் நீங்கிய நல்குரவு நிலை; **துவளுதல் - ஏறுசுற்றம்** - நெருங்கிய சுற்றமும்; சிறப்பின்மை தொக்கது. **எள்குதல்** - இகழ்தல்; **தூரமாய் - எள்க** - என்று கூட்டுக. **தூரமாதல்** - அணுகாது விலகிப்போதல்;—**(4) நச்சி... ...கேட்பதன் முனம்** - ஒரு பொருளை விரும்பி ஒருவர் வாசலின் நடந்து செல்ல, அவர் உம்மை விரும்பாது "நாளை உச்சிப்போதில் வா" என்று சொல்லக் கேட்கவரு முன்னே; **நடந்து செல்ல** - என்றதனால் வறுமையும், **நாளை உச்சி வம் எனும் உரை** - என்றதனால் அவர் ஈயாது நாள் கழித்தலும் குறிக்கப்பட்டன; "நச்சிவந்த நல்கூர் மாந்தர் தம், விச்சையிற் படைத்த வெவ்வேறு காட்சியி, னகமலர்ந் தீவார் போல முகமலர்ந், தினிது மொழிந்தாங்குதவுத லின்றி, **தாளுநாளு நாள்பல குறித்தவர், தாளினூற்றலுந் தவிர்த்து**" (திருவிடை - மும்-7); **பேணுவார் இச்சை செய்யும்** - பேணுவாரை இச்சித்தருளும்;—**(5) கண்கள்...உய்த்தழிப்பதன் முன் - காண்பு**-காணும் தன்மை; **மேனி கன்றி** - உடல் தளர்ந்து; **உண்கிலாமை** - உணவு உட்கொள்ள முடியாத நிலைமை; இதனுல் நரை, திரை, மூப்பு, பிணி என்ற நிலைகள் வருமுன்னமே என்றதாம்;—**(6)அவத்தம்**—வீணே. **பிணக்கு**-பிறவியில் வரும் துன்பச் சூழல்கள்;—**(7) பொய்ம் மிகுத்த வாயர்** - வாக்கினுல் வரும் குற்றம்; **பொறாமை** - மனத்தின் குற்றம்; **ஐ மிகுத்த கண்டர்** - உடலின் நிலை; **ஐ**—கோழை;—**(8) காலினேடு...இகழ்ந்துரைப்பதன் முனம்** - உடல் தளர்ந்தும் காமம் விடா நிலைமையில் பெண்கள் இகழ்வதாகும் நிலை குறித்தது. **மதித்தவர்கள்** - தற்போதத்தால் அறியப் புகுந்தவர்கள்;—**(10) நிலை வெறுத்த...புதல்வர்கள்** – "இந்தக் கிழம் இன்னும் இறவாமல் இருக்குதே" என்று வெறுப்புடன் முன்னமே நேசமில்லாத மக்கள்; **முலை வெறுத்த பேர்**-பால் குடித்தலை விட்ட புதல்வர்கள் முதலாக;—**(11) தக்கனூர் தலையரிந்த சங்கரன்** - முதன்மைபற்றி வீரபத்திரர் செயல் இறைவர்மே லேற்றப்பட்டது. **அந்தி** - மாலையின் செவ்வானம்; **அம்**-தீ - அழகிய தீ என்பது **அந்தி** என நின்ற தென்றலுமாம்.

3048. (இ-ள்) முன்னிறைஞ்சி...ஏறி- திருக்கோயிலினுள் பிரமபுரீசர் திருமுன்பு வணங்கி அவரது திருவருளின் முழுநோக்கமும் பெற்றுத் திருத்தோணியாகிய மலையின்மேல் ஏறிச் சென்று; பொன்னிமையப் பாவையுடன்...புராதனரை—பொன் மலையென்னும் இமயமலை யரசனுடைய மகளாராம் பெரியநாயகியாருடன்கூடி எழுந்தருளியிருந்த பழமையாராகிய தோணியப்பரை; சென்னிமிசை...எழுந்து—தலையின்மேலே கூப்பிய கைகளோடு நிலமுற விழுந்து திளைத்து எழுந்து; மன்னு பெரு...வணங்குவார் –நிலைபெற்ற பெருவாழ்வினை யடைந்து மனமகிழ வணங்கு வாராகிய பிள்ளையார்;

3048. **முன்னிறைஞ்சித் திருவருளின் முழுநோக்கம் பெற்றேறிப்**
பொன்னிமயப் பாவையுடன் புணர்ந்திருந்த **புராதனரைச்**
சென்னிமிசைக் குவித்தகரங் கொடுவிழுந்து திளைத்தெழுந்து
மன்னுபெரு வாழ்வெய்தி மனங்களிப்ப வணங்குவார்; 1150

3049. பரவுதிருப் பதிகங்கள் பலவுமிசை யினிற்பாடி
விரவியகண் ணருவிநீர் வெள்ளத்திற் குளித்தருளி
அரவணிந்தா ரருள்பெருகப் புறம்பெய்தி யன்பருடன்
சிரபுரத்துப் பெருந்தகையார் தந்திருமா ளிகைசார்ந்தார். 1151

(வி-ரை) முன் இறைஞ்சி - பெருங்கோயிலின் முன்னர்ப் பிரமபுரீசர் திருமுன்பு வீழ்ந்து வணங்கி.

திருவருளின் முழுநோக்கம்–பிரமபுரீசரின் முழுமையாகிய அருணோக்கமும்.

ஏறி–மேற்சென்று திருமலை என்னும் திருத்தோணியின் மேல் ஏறிச் சென்று; இதற்கு இவ்வாறன்றி அதனாலாய ஆனந்த வாழ்வின் மேம்பட்டு என்றுரைத்தனர் முன்னுரைகாரர்.

பொன் இமயப் பாவை–பார்வதி; இங்குப் பெரியநாயகியம்மையாரைக் குறித்தது; இமயத்தின் ஓர் பகுதியைப் பொன்மலை என்று வழங்குதல் மரபு.

புராதனர் - மிகப் பழமையானவர்; ''எறிமழு வோடிள மான்கை யின்றியிருந்தபிரான்'' (தேவா) என்ற குறிப்பின்படி மானும் மழுவும் சேர்வதன் முன் காலத்திலேயே இங்கு வெளிப்பட்டருளியவர், பன்னீருழியின் முன்னர் விளங்குபவர், என்ற தன்மைகள் எல்லாம் நினைவு கூர்க.

திளைத்து - ஆனந்தத்தில் அழுந்தி. **வணங்குவார்**-வினையாலணையும் பெயர்.

பெருவாழ்வு - சிவபெருமானை வணங்கிச் சிவமயமேயாகிய ஆனந்தத்தில் அழுந்தி நிற்றலே பெருவாழ்வு என்பது உண்மைநூற் றுணிபு.

வணங்குவார் - பாடி என மேற்பாட்டுடன் கூட்டி முடிக்க. *1150*

3049. (இ-ள்) பரவு...பாடி – துதிக்கின்ற திருப்பதிகங்கள் பலவற்றையும் பண்ணுடன் பொருந்தப் பாடியருளி; விரவிய...குளித்தருளி - பொருந்திய கண்ணீர் வெள்ளத்திலே முழுதும் தோய்ந்தருளி; அரவணிந்தார்...புறம்பெய்தி – பாம்புகளை அணிந்த இறைவரது திருவருள் பெருகப்பெற்றுப் புறத்தே போந்து; அன்பருடன்... ...சேர்ந்தார் –அன்பர்களுடனே சீகாழிப் பெருந்தகையாராகிய பிள்ளையார் தமது திருமாளிகையின்கண் சேர்ந்தருளினார்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) பதிகங்கள் பலவும் - இப்பதிகங்கள் கிடைத்தில!

கண் அருவிநீர் வெள்ளத்திற் குளித்தலாவது - கண்ணீர் அருவிபோலப் பாய அதனால் திருமேனி முழுதும் நனைதல்.

3050. மாளிகையி னுள்ளணைந்து மறையவர்கட் கருள்புரிந்து
தாள்பணியும் பெருங்கிளைக்குத் தகுதியினாற் றலையளிசெய்
தாளுடைய தம்பெருமா னடியவர்க ளுடனமர்ந்து
நீளவரும் பேரின்ப மிகப்பெருக நிகழுநாள்; 1152

அருள் பெருக - அருள் பெருகப் பெற்றமையினாலே.

அன்பருடன் - தாம் புடைசூழ் வந்த திருக்கூட்டத்துடனே. *1151*

3050. (இ-ள்) *மாளிகையின்...அருள்புரிந்து* - தமது திருமாளிகையினுள்ளே எழுந்தருளித், தம்மைக் காணவந்த மறையவர்களுக்கெல்லாம் அருள் விடை கொடுத்து; தாள் பணியும்...*தலையளி செய்து* - தமது திருவடிகளை வணங்கி நின்ற பெரிய தமர்களாகிய சுற்றத்தார்களுக்குத் தகுதிக்கேற்றவாறு தலையாகிய கருணையினைச் செய்து விடைகொடுத்தருளி; ஆளுடைய....*அமர்ந்து* - தம்மை ஆளுடைய பெருமானின் அடியவர்களுடனே விரும்பி எழுந்தருளியிருந்து; *நீளவரும்...நிகழுநாள்* - நீண்டு பெருக வரும் பேரின்பமானது மேன்மேலும் மிகப் பெருகும்படி நிகழ்ந்துவரும் நாள்களிலே;

(வி - ரை) மறையவர்கள் - இவர்கள் பிள்ளையார் தில்லையில் எழுந்தருளியமை கேட்டு அங்குச் சென்று வணங்கித் தொடர்ந்து உடன் வந்த "புகலிப் பூசுரரு மாதவரும்" *(3040)*, மற்றும் சீகாழியில் பிள்ளையாருடன் கூடிக் கும்பிட்ட மறையவர்களுமாம். இவர்களே முதலில் விடை கொடுத்தருளத் தக்கார்கள்.

தாள் பணியும் பெருங்கிளை - இவர்கள் சீகாழி, திருநனிபள்ளி முதலிய பதிகளினின்றும் போந்து பிள்ளையாரைச் சூழ்ந்து வணங்கி யருள்பெற்ற சுற்றத்தார்கள்; பிள்ளையாரது தாள் பணியப்பெற்றதனால் **பெருங்கிளை** என்றார்; **தலையளி செய்து**- பெருங்கருணை நோக்கம் வைத்து.

ஆளுடைய...அமர்ந்து - அருள் புரிந்து - விடை கொடுக்கப்பெற்ற மறையவர்களும், **தலையளி செய்து** - விடை கொடுக்கப்பெற்ற பெருங்கிளையும் போலன்றி அடியவர்களே எஞ்ஞான்றும் **உடனிருக்கும்** பெற்றி வாய்ந்த பெரியவர்கள் என்ற உண்மையினைக் கைக்கொண்டு ஒழுகி உலகுக் கறிவுறுத்தியருளினர் பிள்ளையார். ஆதலின் **உடன் அமர்ந்து** என்றார். "அன்பரொடு மரீஇ" (போதம் - 12-சூத்) என்பது ஞானசாத்திரம். அதனாலாகிய இன்பம் உலகிறந்த சிவானந்தமேயாம் என்பார் **நீள வரும் பேரின்ப மிகப் பெருக** என்று மேற்கூறினார்; **அமர்தல்** - விரும்புதல்.

நீளவரும் பேரின்பம் மிகப் பெருக - நீள வருதல் - எல்லையில்லாது வளர்ந்து வருதல்; **மிகப் பெருகுதல்** - வகையினால் மேன்மேலும் பெருகுதல். அடியவர்களுடனிருக்கும் சிவானந்தப் பெருவாழ்வின் இயல்புபற்றி முன் *(2421)* உரைத்தவை பார்க்க.

நிகழும் நாள் - அணைந்தார் - என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. *1152*

3051. (இ-ள்) காழிநாடு...மகிழ்வெய்த – காழி நாட்டின் தலைவராகிய பிள்ளையார் திருவடிகளை வணங்கி மகிழ்வடையக் கருதி;ஆழியினும்...ஆசையுடன் - கடலினும் மிகவும்

3051. **காழிநா டுடையபிரான் கழல்வணங்கி மகிழ்வெய்த**
ஆழியினு மிகப்பெருகு மாசையுடன் றிருமுருகர்
வாழிதிரு நீலநக்கர் முதற்றொண்டர் மற்றெனையோர்
சூழுநெடுஞ் சுற்றமுடன் றோணிபுரந் தொழுதணைந்தார். 1153

பெருகுகின்ற ஆசையுடனே; திருமுருகர்...தொழுதணைந்தார் - திருமுருக நாயனார் வாழ்வு தரும் திருநீலநக்க நாயனார் முதலாகிய தொண்டர்களும் மற்றும் ஏனையோர்களும்தம்மைச் சூழ்ந்த நீண்ட சுற்றத்தாருடனே போந்து திருத்தோணிபுரத்தினைத் தொழுது பிள்ளையார்பால் வந்தணைந்தார்கள்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) கழல் வணங்கி மகிழ்வெய்த - கழல் வணங்கப்பெறுதலே மகிழ்ச்சிக்கு ஏதுவாம் என்பது.

ஆழியினும் மிகப் பெருகும் ஆசை – கடலினும் பெரியதாய் வளரும் ஆசை என்றது இனைத்தென்று அளக்கலாகாத தன்மை குறித்துப் பண்புபற்றி வந்த உவமம். ''பயன் றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கின்,நன்மை கடலிற் பெரிது'' (குறள்) என்றபடி பிள்ளையார் உலகுக்குச் செய்யும் பரசமய நிராகரிப்பும் திருநீற்றிஞக்கமு மாகிய உதவிகள் பயன்றூக்காது செய்தமையின் அவற்றின் நன்மை கடலினும் பெரிதாம்; அதுபற்றி அவர் கழல் வணங்கி மகிழ அடியார் அவர்பாற் கொண்ட ஆசையும் கடலினும் பெரிதாயிற்று என்க.

திருமுருகர், வாழி திருநீலநக்கர், முதற்றொண்டர் - அறுபான்மும்மை மெய்யடியார்களுள் வருதலால் இவர்கள் முதன்மையாக எடுத்துரைக்கப் பெற்றார்கள். **வாழி** - பிள்ளையாரது திருமணச் சடங்குகள் செய்து வாழ்த்தப் பெறும் வாழ்வு குறிக்கப்பட்டது; 3137 பார்க்க.

சூழு நெடுஞ் சுற்றமுடன் - இவர்களும் பிள்ளையார் திருமணத்துடன் சேவித்து முன் செல்லும் சிறப்புப் பெறுபவர்கள்; ''பார்நிலவு கிளைசூழ''(3148).

தோணிபுரம் தொழுது - தோணிபுரத்தினையும் தோணிபுரேசரையும் முதலில் தொழுது பின்னர்ப் பிள்ளையார்பால் அணைந்தனர். இஃது அடியார் மரபு. முன் 2774,2775-லும், பிறண்டும் உரைத்தவை பார்க்க.

ஆழியினும் மிகப் பெருகும் ஆசையுடன் - எல்லையில்லாது பொங்கித் ததும்பும் சிவானந்த விளைவாகிய சிவபோகத்துட் புகும் நிலை அணித்தாகும் முற்குறிப்புப்பெற மிக்க ஆசையும் பெருகிற்று என்றலுமாம். முன் ''பேரின்பம்'' (3050) என்றதும் காண்க. *1153*

3052. (இ-ள்) வந்தவரை...இனிதமர்ந்து - முன் கூறியபடி வந்தவர்களாகிய திருமுருகர் முதலாகிய தொண்டர்களையும், ஏனையோர்களையும் எதிர் வரவேற்றுத் திருவுள்ள மிக மகிழ்ந்து சீகாழித் தலைவராகிய பிள்ளையார் அளவில்லாத சிறப்புடைய அவ்வடியவர்களுடனே இனிதாக விரும்பியிருந்தருளி; சுந்தர...வீற்றிருந்தாரை-அழகின் நிலைக்களமாகிய பெரியநாயகியாருடனே

3052. **வந்தவரை எதிர்கொண்டு மனமகிழ்ந்து சண்பையர்கோன்**
அந்தமில்சீ ரடியார்க ளவரோடு மினிதமர்ந்து
சுந்தரவா ரணங்கினுடன் றோணியில்வீற் றிருந்தாரைச்
செந்தமிழின் பந்தத்தாற் றிருப்பதிகம் பலபாடி; 1154

3053. **பெருமகிழ்ச்சி யுடன்செல்லப்; பெருந்தவத்தாற் பெற்றவரும்**
மருவுபெருங் கிளையான மறையவரு முடன்கூடித்
"திருவளர்ஞா னத்தலைவர் திருமணஞ்செய் தருளுதற்குப்
பருவமிது" வென்றெண்ணி யறிவிக்கப் பாங்கணைந்தார். 1155

திருத்தோணியில் *வீற்றிருந்த தோணியப்பரை;* *செந்தமிழின்...பலபாடி* - செந்தமிழ் யாப்பினாலே **பல** திருப்பதிகங்களையும் *பாடியருளி;*

(வி-ரை) வந்தவரை - *திருமுருகர் முதற்றொண்டர்களை.*

அடியார்கள் என்றது அவர்களையும் முன்னர்க் கூறிய "தம்பெருமா னடியவர்க"ளையும் *(3050)*. **அவரோடும் இனிதமர்ந்து**-முன் உரைத்தவை பார்க்க.

சுந்தரஆர் அணங்கு - சுந்தரம் - என்றது அழகுக்கெல்லா மிருப்பிடமானவர் என்றது; **ஆர் அணங்கு** - பெரியநாயகி யம்மையார்; **ஆர்தல்** - பெருமையெல்லாம் நிறைதல்.

அணங்கினுடன் தோணியில் வீற்றிருந்தவர்-"தோடுடைய செவியன்" (தேவா) என்று குறிக்கப்பட்டு அம்மையப்பராகி வெளிவந்து தமக்கு ஞான அமுதூட்டியருளிய தோணியப்பர் என்பதாம். **பந்தம்** - யாப்பு - தொடை.

திருப்பதிகம் பலபாடி- இப்பதிகங்கள் கிடைத்தில! **பந்தத்தால்** என்றதனால் அத் தொடக்கமுடைய பதிகங் குறிப்பதாகக் கூறுவாருமுண்டு; அது முன்னர்க் (2006) குறிக்கப்பட்டமையாலும், **"பதிகம் பல"** என்பதனாலும், அவ்வுரை பொருந்தாது.

பாடிச் - செல்ல என்று வரும் பாட்டுடன் முடிக்க. *1154*

3053. (இ-ள்) பெருமகிழ்ச்சியுடன் செல்ல - பெரிய மகிழ்வுடனே இவ்வாறு நிகழா நிற்க; பெருந்தவத்தால்...உடன் கூடி - பெரிய தவஞ் செய்ததன் பயனைப் பிள்ளையாரைப் பெற்றெடுத்த தாதையாராகிய சிவபாதவிருதயரும் பொருந்திய பெருங் கிளைஞர்களாகிய மறையவர்களும் உடன் கூடி; திருவளர்... என்றெண்ணி - முத்தித்திரு வளர்தற்கேதுவாகிய ஞானத்தின் தலைவராம் பிள்ளையார் திருமணஞ் செய்தருளுவதற்கேற்ற பருவமிஃதாகும் என்று எண்ணி; அறிவிக்கப் பாங்கு அணைந்தார் - தமது அவ்வெண்ணத்தைப் பிள்ளையாருக்கு அறிவிக்கும் பொருட்டு அவர்பால் அணைந்தார்கள்.

இவ்விரண்டு பா[illegible]தொ[illegible]ர்ந்து ஒருமுடிபு கொண்டன.

[illegible]

(வி-ரை) செல்ல - நாட்கள் இவ்வண்ணமாக நிகழ்ந்து செல்ல.

3054. **நாட்டுமறை முறையொழுக்க ஞானபோ னகருக்குங்**
கூட்டுவது மனங்கொள்வார் "கோதில்மறை நெறிச்சடங்கு
காட்டவரும் வேள்விபல புரிவதற்கோர் கன்னிதனை
வேட்டருள வேண்டு" மென விண்ணப்பஞ் செய்தார்கள். 1156

பெற்றவர் - மகவாகப் பெற்ற சிவபாதவிருதயர். **பெருந்தவம்** - முன் "தவம் புரிந்தார்" *(1917)* என்றவிடத் துரைத்தவை பார்க்க.

கிளையான மறையவர் - அவர் தம்மையும் பகவதியாரையும் ஆக இரு மரபும் பற்றிய கிளைஞர். இருமரபும் குறிக்கப் **பெரும்** என்றார்.

திருவளர் ஞானம் - முத்தி தரும் சிவஞானம். **வளர்** என்றது அன்றே டமையாது இன்றும் என்றும் வளரச் செய்யும் தன்மை குறித்தது.

திருமணம்...பருவமிது - திருமணப் பருவம்; இஃது ஆண்பாலார்க்குப் பதினாறாட்டைப் பருவத்தில் நிகழுமென்பது தமிழ்மரபு. இறையனாரகப் பொருளுரை-தொல்காப்பியம் முதலியவை பார்க்க.

அறிவிக்க-தமது அவ்வெண்ணத்தைப் பிள்ளையார்பால் அறிவிக்கும் பொருட்டு.

பாங்கு - அவர்பாலில்.

அறிவிக்கும் பாங்கு—என்பதும் பாடம். *1155*

3054. (இ-ள்) நாட்டு மறை...மனங்கொள்வார் - உலகியல் நிலையில் வைதிக ஒழுக்கத்தினை ஞானசம்பந்தப் பிள்ளையாருக்கும் இசைவித்தலை மனங் கொள்வார்களாகி; கோதில்...விண்ணப்பஞ் செய்தார்கள் - "குற்றமற்ற வேதநெறியின்கண் கூறப்படும் சடங்குகளுடன் கூடிய வேள்விகளைச் செய்வதற்கு உரிமை பெறும்பொருட்டு கன்னிகை ஒருத்தியைத் தேவரீர் திருமணஞ் செய்தருள வேண்டு" மென்று விண்ணப்பம் செய்தார்கள்.

(வி-ரை) நாட்டு மறை முறை ஒழுக்கம் - அந்தணர் முதலிய மூவருணத் தாரும் பிரமசரியத்தின் பின் கிருகத்த நிலையில் ஒழுகுக என்று வேதநெறி விதித்த ஒழுக்கம்.

ஞானபோனகருக்கும் கூட்டுவது - அவ்வொழுக்கம் ஏனையோராகிய சாமானிய உலகினருக்கேயன்றி முற்றிய சிவஞான முடைய பிள்ளையார் திறத்துப் பொருந்தாது என்பதுணர்த்துதற்குச் சிறப்பும்மை கொடுத்தோதினார்.

மறைநெறிச் சடங்கு காட்ட வரும் வேள்வி பல புரிவதற்கு ஒரு கன்னிதனை வேட்டு - பிரமசாரிக்குச் சமிதா தானமேயன்றி ஔபாசனத்தில் அதிகாரமின்மையால், இல்லொழுக்கத்தில் ஔபாசன முதலிய நித்தியங்களும், கிருது முதலிய நைமித்திகங்களும் செய்யவேண்டுதலின் அதற்காக கன்னி ஒருத்தியை மணந்து என்றார்; **சடங்கு காட்ட வரும்**

3055. மற்றவர்த மொழிகேட்டு மாதவத்தின் கொழுந்தனையார்
சுற்றமுறு பெரும்பாசத் தொடர்ச்சிவிடு நிலைமையராய்ப்
பெற்றமுயர்த் தவரருண்முன் பெற்றதனு லிசையாது,
"முற்றியதா யினுங்கூடா" தென்றவர்முன் மொழிந்தருள; 1157

வேள்வி - மறை விதிக்கப்பட்ட சடங்குகளுடனே செய்யப்படுவன வேள்வி என்றதாம். **காட்ட** - செய்ய; **காட்ட** - என்றது, நீர் வேள்வி செய்வது உமக்காகவன்றி உலகினர்க்கு நிகழ்த்திக் காட்டும் ஆசாரியத் தன்மைக்காக என்றதும் குறிப்பு.

மறையொழுக்கம் - கூட்டுவது மனங்கொள்வார் - என்றது மறைகளில் விதித்த ஆச்சிரமங்களுள் இல்லொழுக்கமாகிய ஆச்சிரமத்தில் பிள்ளையாரைப் பொருத்துவதே அவர்கள் கருதினார்கள் என்க. அதனில் இன்றியமையாத சிறந்த பகுதி "மனையறத்தினின்பமுறு மகப்பெறுவான் விரும்புவார்" (1917) என்று சிவபாதவிருதயர் தாம் கருதிய நன்மக்கட் பேறேயாம்; ஆனால் அதனை அவ்வாறு கூறாது பிள்ளையாரது திருவுள்ளத்துக் கிசையுமாறு "வேள்வி புரிவதற்குக் கன்னியை வேட்க" என வேண்டினர் மறையோர்; பிள்ளையார் இசையாது கூறியருளிய பின்னும் அவர் மாறாத வண்ணம் அவர்கள் இதனையே மற்றுமொரு வகையால் மேலுங் கூறுதல் (3056) காண்க.

மணங் கொள்வார்—என்பதும் பாடம். *1156*

3055. (இ-ள்) மற்றவர்தம்...கொழுந்தனையார் - மற்று அவர்களுடைய மொழிகளைக் கேட்டுப் பெருந்தவத்தின் கொழுந்து போல்வாராகிய பிள்ளையார்; சுற்றமுறு...நிலைமையராய் - சுற்றங்கள் பொருந்திய பெரிய பாசத் தொடக்கினைவிட்டு நீங்கும் நிலையினை உடையராகி; பெற்றமுயர்த்தவர்...இசையாது -இடபக் கொடியினை உயர்த்திய சிவபெருமானது திருவடி ஞானமாகிய உயர்ந்த சிவ ஞானத்தை முன்னரே பெற்றுராதலின் அவர்களுடைய மொழிகளுக்கு இசையாமல்; முற்றியதாயினும்... மொழிந்தருள; நீவிர் சொல்வது பொருந்திய மொழிதானுயினும் அந்நிலை என்பாற் கூடாதாகும் என்று மொழிந்தருள,

(வி-ரை) மாதவத்தின் கொழுந்து - மாதவம் - சிவனை நோக்கிச் செய்யும் பெருந்தவம். **கொழுந்து** - உச்சியின் விளைந்த பயன்; மென்மையும் தண்மையும் அழகும் பயனுமாகி வரும் தாவரப் பகுதி; மாதவமாகிய பயிரின் உச்சியின் வரும் நிலைக்குப் பண்புபற்றி உவமமாக வந்தது; **சிவனை நோக்கிச் செய்யும் பூசையே தவம் எனப்படும்**; இங்கு **மாதவம்**-சிவபாதவிருதயர் செய்த பெருந்தவத்தின் பயனுக விளங்குபவர் என்றும், **கொழுந்து** - மழ இளங்கோலம் குறித்ததென்றும் கொள்வாருமுண்டு.

சுற்றமுறு...நிலைமையராய் - சுற்றங்கள் வந்து சூழும் பெரிய பாசத்தின் தொடர்பு தம்மை அணுகாமல் விட்டு நீங்கும் தன்மையை மேற்கொண்டவராகி; "சுற்றமென்னும் தொல்பசுக் குழாங்கள், பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்" (திருவா - போற்றித் திருவகவல் - 48 -49);

3056. **அ**ருமறையோ ரவர்பின்னுங் கைதொழுதங் கறிவிப்பார்
"இருநிலத்து மறைவழக்க மெடுத்தீர்நீ ராதலினால்
வருமுறையா **லறுதொழிலின்** வைதிகமா **நெறியொழுகுந்**
திருமணஞ்செய் தருளுதற்குத் திருவுள்ளஞ் செய்யு"மென; 1158

தொடர்ச்சி விடு நிலை - இதுவரையும் சுற்றம் என்னும் பாசம் உடன் சூழ இருப்பினும் அதனிற் பற்றாது வாழ்ந்த நிலையினர்தாம் பிள்ளையார்; ஆயின் இப்போது மேற்கொண்ட நிலையாவது அவர்களாற் சுற்றப்படும் நிலையினை அறவே விட்டு நீங்குதல் என்க. **விடும்** என்ற குறிப்புமிது.

பெற்றம் - உயர்த்தவர் அருள்...முன் பெற்றதனால் இசையாது- இசையாது - உடன்படாமல்; ***அருள் முன் பெற்றதனால் - அருள்*** - சிவஞானம்; ***முன் பெற்றதனால் இசையாது*** என்றது "புகன்மிருதி வழியுழன்றும் புகலுமாச் சிரம, வறத்துறைகளவையடைந்தும் ஆரணங்கள் படித்தும்...வேத சிரப்பொருளை மிகத் தெளிந்தும் சென்றாற்சைவத், திறத்தடைவர்; இதிற்சரியா யோகஞ் செலுத்திய பின் **ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்**" (சித்தி-8) என்றவாறு பதினாரும்படியில் உள்ள முடிந்த சிவஞானமாகிய திருவருண்ஞான முழுமையும் முன்னமே பெற்றமையால், சாமானியருக்கு விதித்த மறைவழிநிற்கும் ஆசிரம முதலிய நிலைகளில்வந்து பொருந்துவதற் கியைபில்லையாதலானும், சிவஞானானந்த நிறைவானது இவையெல்லாங் கடந்த நாலாஞ் சத்திநிபாத நிலையாதலானும் முன் அருள் பெற்றமையால் இசைவுபடாமல் என்றதாம். இதற்குப் பிறரெல்லாம் தத்தமக்கு வேண்டியவாறே வெவ்வேறு பொருள்பட உரைத்தனர்; மேல்வரும் "**முற்றிய தாயினும் கூடாது**" என்பதற்கும் அவ்வாறே பொருந்தாதுரைத்தனர். உண்மை ஆராய்ந்து தெளிந்துகொள்ளத் தக்கது.

"முற்றியதாயினும் கூடாது" என்று - இசையாது - என்றது பிள்ளையாரது திருவுள்ள நிகழ்ச்சி; **கூடாது** - என்றது அவர் அந்தணர்களுக்குத் தமது திருவாக்கால் கூறிய விடை. **முற்றியதாயினும்**-நீங்கள் கூறிய மொழிகள் வேதத்தை ஒட்டியவையாயும், மறைகள் முற்றுணர்வுடைய முதல்வனால் மொழிந்தனவாயும் உள்ளன; அவ்வாறாயினும் என்றபடி; இஃது உடன்பட்டு மறுத்தல் என்ற நிலை; நீவிர் கூறியது மறுக்கலாகாதபடி முடிந்த மொழிகளே; ஆயினும் அவை எனதுபாலிற் கூடாது; என்னை? **சாமானியர்களாகிய ஏனையோர்க்கு விதித்த ஒழுக்கம் சத்திநிபாத நிலையினராகிய சிவஞானிகள்பாற் கூடாது என்றபடி;** இவ்வாறு மறுத்த பிள்ளையார் பின்னர் *(3057)* உடன்பட்டது" என்னை? எனின், அஃது ஆண்டு விளக்கப்படும்.

முற்றியதாயினும் கூடாது-நீவிர் குறித்த திருமணம் பின்னர் நிறைவேறுமாயினும் அது நீர் மனங்கொள்ளுமாறு உலகியல் நிலையில் வேள்வி வேட்டற்கும் இல்லற வொழுக்கம் நிகழ்தற்கும் துணையாகப் பொருந்தாது என்ற உட்குறிப்புத் தொனிப்பதும் காண்க. *1157*

3056. (இ-ள்) அருமறையோரவர்...அறிவிப்பார் - அவ்வரிய மறையவர்கள் பின்னும் கைகூப்பித் தொழுது அங்குப் பிள்ளையார்பால் அறிவிப்பாராய்; இரு நிலத்தின்...

3057. **மறைவாழ வந்தணர்தம் வாய்மையொழுக் கம்பெருகும்**
துறைவாழச் சுற்றத்தார் தமக்கருளி யுடன்படலும்
பிறைவாழுந் திருமுடியிற் பெரும்புனலோ டரவணிந்த
கறைவாழுங் கண்டத்தார் தமைத்தொழுது மனங்களித்தார். 1159

ஆதலினால்-பெரிய நிலவுலகிலே வைதிக வழக்கினை நீர் உயர்த்தியருளினீராதலினால்; வருமுறையால்...செய்யுமென - அவ்வழிவரும் முறையினாலே மறையவர்க்குரிய அறுதொழில்களுடன் கூடிய வைதிகமாகிய பெருநெறியில் ஒழுகுகின்ற திருமணத்தினைச் செய்தருளுதற்குத் திருவுள்ளம் இசைந்தருளல் வேண்டும் என்று கூற;

(வி-ரை) கைதொழுது அங்கு அறிவிப்பார் - கைதொழுதல்-பிள்ளையார் மொழிந்தருளிய வகையில் இசைந்து அமைந்துபடாது மேலும் தம்முரையே உரைக்கப் புகுகின்றார்களாதலின் பணிவுடன் தொழுகின்ற நிலை; **அங்கு**-பிள்ளையார் **"கூடாது"** என மொழிந்தருளிய அந்நிலையில்.

எடுத்தீர்-குன்றியிருந்த வேதநெறியினை மேலெடுத்தீர்; "வேதநெறி தழைத் தோங்க"; "வேத வேள்வியை நிந்தனை செய்துழல், ஆத மில்லி யமண்"; "மறை வழக்க மிலாத மாபாவிகள்" என்பன முதலியவை காண்க.

எடுத்தீர் - ஆதலினால் - வைதிகநெறி ஒழுகும் திருமணம் செய்தருளும் என்றது, வேதநெறிக்குப் புறச் சமயத்தாரால் நேர்ந்த குற்றங்களைக் களைந்தீர்; ஆதலினால் அதன் நெறி மேலே ஒழுகுதல் இவ்வாறு என விதித்த அறுதொழிலும் நிகழும்படியினையும் காட்டியருளுதல் வேண்டும்; அவற்றுள் வேட்டல்-வேட்பித்தல் என்பன இல்வாழ்க்கையின் மனைவியோடன்றி நிகழத் தகாமையின் அதன்பொருட்டுத் திருமணம் செய்தருளுதல் வேண்டும் என்றபடி.

வருமுறையால் - களை களைந்த நீர், அதனோடு வைதிகப்பயிர் விளைதற்குரிய ஆக்கப்பாடான செயலையும் செய்தல்வேண்டும் என்று வரும் முறையினாலே.

அறுதொழில் - ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்.

அறுதொழிலின் வைதிக மாநெறி யொழுகும் திருமணம் - இக்கருத்தினையே தொடர்ந்து மேல் "மறைவாழ...துறைவாழ" (3057) என வரும்பாட்டிற் பிள்ளையார் அருளுதல் காண்க.1158

3057. (இ-ள்) மறைவாழ - வேதங்கள் வாழ்வடையவும்; அந்தணர்தம்... துறைவாழ - அந்தணர்களுடைய வைதிக வாய்மையின் வரும் ஒழுக்கம் பெருகும் துறை வாழ்வடையவும்; சுற்றத்தார்...உடன்படலும் - அச்சுற்றத்தார்களுக்கு அருளிச் செய்து அவர்களது விண்ணப்பத்திற்குப் பிள்ளையார் உடன்பாடு செய்தருளுதலும்;பிறை வாழும்...மனங்களித்தார் -பிறைச்சந்திரன் வாழ்கின்ற திருமுடியிலே பெருநீர்க் கங்கையினோடு பாம்பினையும் அணிந்த

திருநீலகண்டராகிய சிவபெருமானை வணங்கி அச் சுற்றத்தார்கள் மனமகிழ்ந்தார்கள்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) மறை வாழ - அந்தணர்தம் வாய்மை ஒழுக்கம் பெருகும் துறை வாழ - உடன்படலும் - முன்னர்க் **"கூடாது"** என்று மறுத்த பிள்ளையார் இங்கு உடன்படுதலுக்குக் காரணமென்னை? என்னின், இஃது என்றவாறு; அஃதாவது முன்னர் மறையவர்கள் பிள்ளையார்தாம் வேள்வி பல செய்வதனுக்கு "ஓர் கன்னிதனை வேட்க" என்று பிள்ளையாரது தனித் தன்மையில் வைத்து எடுத்துக் கேட்டனர்; அதற்குத் தாம் ஞானப் பெருநிலையில் நின்றமையால் தம்பொருட்டு வேள்வி வேட்கும் உரிமையும் கடமையு மிலராதலின் மறுத்தனர்; இங்கு அதனை விட்டு, நாங்கள் கேட்பது உம்பொருட்டன்று; மறைவழக்க மெடுத்தீராதலின் அந்த ஆசாரியத் தன்மையினின்று நீர் எடுத்த மறை வழக்கத்தினை வைதிக மாநெறி ஒழுகும் அறுதொழிலின் நிலையீது என நடந்துகாட்டி வேதநெறியினை வேரூன்றி வளர வைக்கவேண்டும் என்று கேட்டனர்; ஆதலின் எமக்காகவன்றி, மறை வாழவும், மறையவரது அறுதொழிலின் ஒழுக்கமாகிய துறை வாழவும் யாம் இதனை மேற்கொள்வோம் என்று பிள்ளையார் உடன்பட்டவாறு என்க.

மறை வாழ......துறை வாழ-வாழ்தலாவது-அந்நெறி மக்களிடை தழைத் தோங்குதல்; "வேதநெறி தழைத்தோங்க" *(1899)*.

வாய்மை ஒழுக்கம் - சத்திய சீலம் என்பர்; வேத வாய்மையில் விதித்தநெறி.

உடன்படலும் - வேள்வி பல புரிவதற்குத் தமக்கெனவன்றி அறுதொழிலின் வைதிக நெறி ஒழுக்கம் வாழ மணம் செய்ய உடன்பட்டருளிய பிள்ளையார், பின்னர்த் திருமணத்தில் "இந்தவில் லொழுக்கம் வந்து சூழ்ந்ததே! யிவடன்னோடு, மந்தமில் சிவன்றாள் சேர்வன்" என்னுமா தரவு பொங்க இறைவருடன் அணைய வேண்டிச் செயல் புரிந்த *(3140)* நிலை யென்னையோ? எனின் அஃது ஆண்டு விளக்கப்படும்; கண்டுகொள்க.

கண்டத்தார் தமைத்தொழுது மனங் களித்தார் - பிள்ளையார் உடன்பட்டருளியதற்கு அவரைத் தொழாது இறைவரைத் தொழுதனர்; இவ்வாறு உடன் பட்டருளியது இறைவர் திருவருட் செயலேயாம் என்ற கருத்துப்பற்றி. மேல்வரும் பாட்டு பார்க்க. பிள்ளையாரும் பின்னர்க் "குலமணம் புரிவித்தார் தம்கோயில்" *(3141)* என்று கருதியது காண்க.

பிறை - புனல் - அரவு - கறை-இவை ஒன்றற்கொன்று மாறுபட்ட தன்மையுடையன; எனவே இங்குச் சுற்றத்தார் வேண்டியதும், பிள்ளையார் முன்னர் மறுத்துப் பின்னர் இசைதலும், பின்னர் வரலாற்று நிகழ்ச்சியும் இவ்வாறே அமைவன என்பது குறிப்பு.

வாழும் - வாழும் - அவ்வாறு மாறுபடினும் அவை உயிர்களின் வாழ்விற்குக் காரணமாவன என்பது குறிப்பு.

3058. **திருஞான சம்பந்தர்** திருவுள்ளஞ் செய்ததற்குத்
தருவாய்மை மறையவருந் தாதையருந் தாங்கரிய
பெருவாழ்வு பெற்றாராய்ப் "**பிஞ்ஞகனா ரரு**"ளென்றே
உருகாநின் றின்பமுறு முளமகிழ்ச்சி யெய்துவார்; *1160*

3058. (இ-ள்) திருஞானசம்பந்தர்...செய்ததற்கு - திருஞானசம்பந்தர் இவ்வாறு திருமணம் உடன்பட்டுத் திருவுள்ளஞ் செய்ததற்காக; பெருவாய்மை...பெற்றாராய் - பெரிய வாய்மை மறையவர்களும் தாதையாராகிய சிவபாதவிருதயரும் அளவிட்டுத் தரித்தற்கரிய பெரிய வாழ்வினைப் பெற்றவர்களாகி; பிஞ்ஞகனார்...எய்துவார் - இஃது இறைவரது திருவருளேயாம் என்றே துணிந்து மனமுருகி இன்பம் பொருந்திய மனமகிழ்ச்சி யடைவாராகி;

(வி-ரை) திருஞான சம்பந்தர் திருவுள்ளஞ் செய்ததற்கு - உலகிறந்த சிவஞான முணரப்பெற்றவராயிருந்தும் உலகியல்வழி யொழுக இவ்வாறு இசைவு தந்தமைக்கு என்பார் **திருஞான சம்பந்தர்** என்ற பெயராற் கூறினார். மேலும் (3060) இவ்வாறே காண்க. திருஞான சம்பந்தர் - ஆயினார் என்க.

வாய்மை - மறைக்கு அடை மொழி; இறைவர் வாக்கு ஆதலின். மறையவர்க்காக்கி யுரைப்பினுமாம்.

தாங்கரிய பெருவாழ்வு - தரித்தற்கரிய - அடங்காத - மட்டற்ற பெரிய வாழ்வு.

பிஞ்ஞகனார் அருள் என்றே உருகா நின்று - இஃது இறைவர் தம்பாற் செய்த பேரருளேயாம் என்றே துணிந்து கொண்டதனால் மனமுருகினார்; முன் "கண்டத்தார் தமைத்தொழுது" (3057) என்றதனை விரித்தபடி; தொழுத பின்னர் மேலும் எண்ணி எண்ணி மனமுருகினார் என்றலுமாம்.

எய்துவார் - எண்ணினார் என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. 1160

3059. (இ-ள்) ஏதமில் சீர்...இசைவால் - குற்றமற்ற மறையவர் மரபிலே பொருந்திய குலம் முதலியவற்றினோடு இசைவாகியதனால்; நாதர் ... எண்ணினார் - இறைவரது திருப்பெருமணநல்லூரில் வாழும் நம்பாண்டார் நம்பி பெற்ற திருமகளாரைச் சீகாழித் தலைவராகிய பிள்ளையார் திருமணம் செய்தருள்வதற்கு அவரது பெருந்தன்மை தகுதியுடையதேயாம் என்று பொருத்தமுற எண்ணினார்கள்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) ஏதமில்சீர் மறையவர் - இங்கு **மறையவர்** என்றது வேதியர் மரபினை; **ஏதமில்சீர்** என்றது மறையவர்களுள் ஒருசில சாரார் சிலசில சாபங்களால் ஈடுண்டு ஒதுக்கவும்படக் காண்டலின், அதுபற்றியும் "இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி,... மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத், திருபிறப்பாளர்" (திருமுருகு) என்றவை முதலிய இயல்புகளெல்லா முடைமைபற்றியும் இவ்வாறு அடை மொழிகளால் விதந்தோதினார்.

3059. **''ஏதமில்சீர் மறையவரி லேற்றகுலத் தோடிசைவால்**
நாதர்திருப் பெருமணத்து நம்பாண்டார் நம்பிபெறுங்
காதலியைக் காழிநா டுடையபிரான் கைப்பிடிக்கப்
போதுமவர் பெருந்தன்மை'' யெனப்பொருந்த வெண்ணினர். *1161*

3060. **திருஞான சம்பந்தர் சீர்**பெருக மணம்புணரும்
பெருவாழ்வு திருத்தொண்டர் மறையவர்கண் மிகப்பேண
வருவாரும் பெருஞ்சுற்ற மகிழ்சிறப்ப, **மகட்பேசத்**
தருவார்தண் பணைநல்லூர் **சார்கின்றார் தாதையார்.** *1162*

ஏதமில் என்றது எதிர்மறையானும், ***சீர்*** என்றது உடன்பாட்டானும் கூறியபடி. மேல் **பெருந்தன்மை**-பெரிய தகுதி என்பதும் கருதுக.

ஏற்றகுலம் - மணத்திற்குரிய கோத்திரம் பிரவரம் முதலிய உட்பிரிவுகள்; ''தருமறைக் கோத்திரத்திற் றங்குலம்''. (*3133*)

பெருமணம் - திருநல்லூர்ப் பெருமணம் என்ற பதி; **பெருமணத்துள்** வாழ்கின்ற.

நம்பாண்டார் நம்பி - பிள்ளையாரது தேவியாரின் பிதா; இவர் திருநாரையூர் நம்பியாண்டார் நம்பியினும் வேறு. **நம்பி** - சிவபூசைக் குரிமை காட்டும் பெயர்.

பெறும் காதலி - பெற்ற மகளார்; **காதலி** - காதற் குரித்தாகிய மகள்.

கைப்பிடிக்க - திருமணஞ் செய்தருள பாணிக்கிரகணம் என்பது வடமொழி வழக்கு. அதற்கு நேர் தமிழ்வழக்காற் கூறினர்.

அவர் பெருந்தன்மை போதும் - என்க; **போதும்** - தகுதியாகும்; அமையும்.

எண்ணினர் - எண்ணித் துணிந்தார்கள்; ''எண்ணித் துணிக கருமம்'' (குறள்).

1161

3060. (இ-ள்) திருஞான சம்பந்தர்... பெருவாழ்வு - திருஞான சம்பந்தப் பிள்ளையார் சிறப்புப் பெருகும் திருமணம் புணரும் பெருவாழ்வினைப்பற்றி; திருத்தொண்டர்... மகிழ் சிறப்ப - திருத்தொண்டர்களும் மறையவர்களும் மிகப் பேணவும், வருவார்களாகிய பெருஞ் சுற்றமும் மகிழ்ச்சி மிகப் பெறவும்; மகட்பேச - மகட்கொடையினைப் பற்றிப் பேசும்பொருட்டு ; தருவார் தண்பணை நல்லூர் சார்கின்றார் தாதையார் - தருக்கள் நிறைந்த குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த திருப் பெருமண நல்லூரினைச் சார்கின்றாராகிய தாதையார்;

(வி-ரை) திருஞான சம்பந்தர் - இப்பெயராற் கூறிய குறிப்பு முன் (*3058*) உரைக்கப்பட்டது.

சீர் பெருக - உலகம் சிறப்பினல் மேன்மேலும் ஓங்கி வளர; இது பின்னர்த் திருமண நிகழ்ச்சியின் விளைவுகளிற் காண்க.

பெருவாழ்வு-அதனை எவரும் தாந்தாம் பெற்ற பெருவாழ்வாகக் கொண்டனர் என்பது.

3061. மிக்கதிருத் தொண்டர்களும் வேதியரு முடனேகத்
திக்குநிகழ் திருநல்லூர்ப் பெருமணத்தைச் சென்றெய்தத்
தக்கபுகழ் நம்பாண்டார் நம்பிதா மதுகேட்டுச்
செக்கர்முடிச் சடையார்தந் திருப்பாதந் தொழுதெழுவார். 1163

திருத்தொண்டர்-பன்மையிற் கூறப்பட்டது சிறப்பு நோக்கி.

மிகப் பேண வருவார் (ஆகிய) பெருஞ் சுற்றமும் - என்று கூட்டி உரைத்தலுமாம்.

மகிழ் சிறப்பச் சார்கின்ருர் - என்று கூட்டி முடிக்க.

தருஆர் தண்பணை நல்லூர் - தரு - பயன் மரங்கள்; விளைவும் தண்மையும் குறித்தது, இனி நிகழும் திருமணத்தின் பயனும் விளைவும் ஆகியவற்றுக் கிருப்பிடமாதற் குறிப்புப்பற்றி; இவை பெண்மையின் தன்மை குறிப்பது என்பாரு முண்டு.

தருவார் - மகட்பேச இசைந்து மகளைத் தருவாராகிய நம்பாண்டாரது **ஊர்** என்ற முற்குறிப்பும் காண்க. **தருவார்** - மேலாகிய வீடு தருவாராகிய சிவலோகத் தியாகருடைய என்ற குறிப்பும் காண்க.

சார்கின்ருர் - சார்கின்ருராகிய; வினைப்பெயர். பண்பு குறித்து நின்றது.

மகிழ் சிறப்பத் தருவார் - தாதையார் என்று கூட்டி சுற்றத்தாருக்கு மகிழ் சிறப்பத் தரும் பொருட்டு (தருவாராகிய) தாதையார் சார்கின்ருர் என்று கூட்டி உரைத்தனர் முன்னுரைகாரர்.

மிகப் பேணி—மகிழ்வெய்த—என்பனவும் பாடங்கள். 1162

3061. **(இ-ள்)** மிக்க ... உடன் ஏக - மிகுந்த திருத்தொண்டர்களும் மறையவர்களும் உடன் செல்ல; திக்கு நிகழ்...எய்த - எல்லாத் திக்குக்களினும் நிகழ்கின்ற திருநல்லூர்ப்பெருமணத்தினைச் சென்று சேர; தக்கபுகழ்... தொழுதொழுவார் - தகுந்த புகழினையுடைய நம்பாண்டார் நம்பிகளும் அவரது வரவினைக்கேட்டுச் செவ்வானத்தை ஒத்த சடைமுடியினையுடைய சிவபெருமானின் திருவடிகளைத் தொழுது எழுவாராகி;

(வி-ரை) மிக்க... ஏக - மிக்க திருத்தொண்டர்கள் - முன் பாட்டிற் கூறியது காண்க; **மிக்க** - சிறப்பினுன் மிக்க; தொகையானும் மிகுந்த என்றலுமாம்.

திக்கு நிகழ் - திக்குக்களிலும் பெருமை நிலவும் என்றது முத்தித் திருவினை வரையாது வழங்கும் "சிவலோகத் தியாகப் பெருமான்" விளங்க எழுந்தருளும் இடமாதற் குறிப்பு. **திருநல்லூர்ப் பெருமணம்** - பதியின் பெயர்.

தக்க புகழ் - "போதுமவர் பெருந்தன்மை" (3059) என்றபடி இவர்கள் சென்று மகட்பேசத் தகுந்த பண்புடைய புகழ். **கேட்டு** - முன்னறிவிப்பாக வருவார் சொலக்கேட்டு. நம்பாண்டாரும் மிகப் பெரிய சீலமுடையார் என்பது; (3064)

செக்கர்... தொழுதெழுவார் - இஃது சிவபெருமா னருளேயாம் என்று துணிந்து

3062. ஒப்பரிய பேருவகை யோங்கியெழு முள்ளத்தால்
அப்புநிறை குடம்விளக்கு மறுகெல்லா மணிபெருக்கிச்
செப்பரிய வார்வமிகு பெருஞ்சுற்றத் தொடுஞ்சென்றே
"யெப்பொருளு மெய்தினே" னெனத்தொழுதங் கெதிர்கொண்டார். *1164*

அவரைத் தொழுது பின்னரே மேற்காரியம் செய்யும் பண்பினின்றார். பிள்ளையார் திருமண மிசைந்தபோது மறையவரும் தாதையாரும் இது சிவனருள் என்று தொழுதமை காண்க. இவ்வாழ்வு பெறத் தாம் தகுதியற்றவராயினும் சிவபெருமான் கருணையினால் அருளியவாறும் என்பது குறிப்பு: மேல், "எப்பொருளும் எய்தினேன்" *(3062)* என்றும், "ஆனபே றந்தணர்பா லருளுடைமையாம்" *(3064)* என்றும் கூறுதல் காண்க; இவ்வாறு தம்மை எண்ணுதல் பெரியோரியல்பு. "பூதி யணிசாதனத்தவர்முன் போற்றப் போதே னுயிடினும், நாத னடியார் கருணையினு லருளிச் செய்வர் நானென்று" *(சிறுத்.புரா - 45)* என்ற கருத்துக் காண்க. *3065 -ம் பார்க்க.*

எழுவார் - பெருக்கிச் - சென்றே - எதிர்கொண்டார் என வரும் பாட்டுடன் முடிக்க. ***1163***

3062. (இ-ள்) ஒப்பரிய... உள்ளத்தால் - ஒப்பில்லாத பெருமகிழ்ச்சி ஓங்கி மேலெழும் மனத்தினோடு; அப்பு நிறை... அணிபெருக்கி - நன்னீர் நிறைந்த குடமும் விளக்கும் வைத்து வீதியை யெங்கும் மிக அலங்கரித்து;செப்பரிய... சென்றே - சொல்லுதற்கரிய ஆசை மிகுகின்ற பெருஞ் சுற்றத்தாருடன் சென்றே; எப்பொருளும்... எதிர்கொண்டார் - "உறுதிப்பொருள்க ளெல்லாவற்றையும் நான் அடைந்தவனுயினேன்" என்று கூறித் தொழுது அங்கு அவர்களை எதிர் கொண்டனர்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) அப்புநிறை குடம்...அணி பெருக்கி - நிறை குடமும் விளக்கும் வைத்து வீதியலங்கரித்து எதிர்கொள்ளுதல் திருத்தொண்டர்களையும் ஆளுடைய பிள்ளையாரது தொடர்பு மேற்கொண்டு வரும் மறையவர்களையும் எதிரேற்கும் முறையாகும். "போதுமவர் பெருந்தன்மை" *(3059)* என்ற குறிப்பின் உண்மை ஈண்டும் மேலும் வைத்துக் காண்க.

மறுகெல்லாம் - வீதியெங்கும்; **அப்பு** - வாச நன்னீர். **நிறை குடமும் விளக்கும் வைத்து** என்க. **அணி** - வாழை - தோரணம் முதலிய பிற அலங்காரங்கள்.

பெருஞ் சுற்றம் - பெருமையாவது அணிமையிற் சிவனடி சாரப் பெறும் பேறு வாய்ப்புள்ளமை குறிப்பு. பின்னரும் "பார்நிலவு கிளை" *(3148)* என்பார்.

எப்பொருளும் எய்தினேன் - உம்மை - முற்றும்மை. **எப்பொருளும்** என்றது பதமுத்தியும் பரமுத்தியும் படிமுறையால் நெறியறிந்து எய்துதற்குரிய மாந்தர்க்கு உறுதி என நூன் முடிபு கூறும் உறுதிப்பொருள்கள் எல்லாமும், உண்மையாகவே ஈண்டு எல்லாவற்றுள்ளும் சிறந்த வீடுபேறு எய்தி முடிந்தது காண்க.

எய்தினேன் - தெளிவுப்பொருட்டு. "வாராக் காலத்து வினைச்சொற் கிளவி, சிறப்பினு

3063. எதிர்கொண்டு மணிமாடத் தினிலெய்தி யின்பமுறு
மதுரமொழி பலமொழிந்து வரன்முறையாற் சிறப்பளிப்பச்
சதுர்முகனின் மேலாய சண்பைவரு மறையவரும்
முதிருணர்வின் மாதவரு மணைந்ததிற மொழிகின்றார்; 1165

நிகழ்வினுஞ் சிறப்பத் தோன்றும். இயற்கையுந் தெளிவுங் கிளக்குங்காலை" (தொல்.சொல்.கிளவி -48) என்பது இலக்கணம்; எய்தினவ னாயினேன்; எனது பிறவி பயன்பெற்றது என்பது.

தொழுது - பிள்ளையார் சாரியோனார் திருத்தொண்டரும் ஆதலின் தொழுதல் முறை என்க. **அங்கு** - நல்லூர் சார்கின்ற அவ்விடத்து.

விளக்கால்—என்பதும் பாடம். 1164

3063. (இ-ள்) எதிர்கொண்டு... சிறப்பளிப்ப - எதிரேற்று அழைத்துக் கொண்டு சென்று மணிமாடத்தின்கண் சேர்ந்து இன்பம் பொருந்து மதுரமொழிகள் பலவற்றையும் சொல்லி முறைமைப்படி உபசரித்து விருந்து முதலாகிய சிறப்புக்களையும் நம்பாண்டார் நம்பியார் செய்ய; சதுர்முகனின்...மறையவரும் - பிரமதேவனின் மேம்பட்ட சீகாழி மறையவராகிய சிவபாதவிருதயரும்; முதிருணர்வின் மாதவரும் - கல்வி கேள்விகளால் முதிர்ந்த வுணர்வினையுடைய திருத்தொண்டர்களும் ஏனை வேதியர்களும்; அணைந்த திறம் மொழிகின்றார் - தாங்கள் வந்து அணைந்த திறத்தினை மொழிகின்றார்களாகி;

(வி-ரை) மணிமாடம் - பிள்ளையாரின் தேவியாராகும் அம்மை அவதரித்து வளரும் இடமென்று குறிக்க இவ்வாறு கூறினார்; மணி உதித்து வளரும் மாடம் என்ற குறிப்புமாம்.

இன்பமுறு மதுரமொழி - இன்மொழி கூறல் என்ற நிலைபற்றித் திருவள்ளுவர் உரைத்தவை எல்லாம் ஈண்டுக் கருதத் தக்கன.

வரன்முறையாற் சிறப்பளிப்ப - வரன்முறையாவது திருத்தொண்டரை ஏற்றுபசரிக்கும் நிலையும், விருந்தோம்பல் நிலையும், பிறரை ஏற்கும் நிலையும் பற்றிய முறைகளின் நிரல். **சிறப்பு** - உபசாரம் - விருந்து முதலாயின.

சதுர்முகனின் மேலாய - மறையவர் - என்க; இங்குச் சிவபாதவிருதயரைக் குறித்தது. வேதமோதுதல், வேத நியமத் தலைநிற்றல் முதலிய மேம்பாடுபற்றிக் கூறியது; **மேலாய** - சதுர்முகன் வேதமோதிப் பலவுயிர்களையும் படைத்தும் செத்துச் செத்து மீளமீளப் பிறவிக்குள்ளாகின்றான்; சிவபாதவிருதயர் தவஞ்செய்து பிள்ளையார் ஒருவரையே பெற்றுப் பிறவியில் வாராத வீட்டுநிலை பெறுகின்றனர் என்ற மேம்பாட்டுக் குறிப்பு; "உம்முடைய பெருந்தவத்தால்" (3065) என்று நம்பாண்டார் பின்னர்க் கூறும் குறிப்பும் காண்க. வந்த காழி மறையவர் என்றலுமாம்.

முதிருணர்வின் மாதவர் - இவர்கள் ஏனை மறையவரும் திருத்தொண்டர் என்றலுமாம்.
முதிருணர்வின் - என்றது முதிர்ந்த அறிவுணர்வுடைய பெரியோரையே மகட்பேசும்

3064. "**ஞானபோ னகருக்கு** நற்றவத்தி னொழுக்கத்தால்
ஊனமில்சீ லத்தும்பான் மகட்பேச வந்த" தென
"**ஆனபே றந்தணர்பா லருளுடைமை யா**"மென்று
வானளவு நிறைந்தபெரு மனமகிழ்ச்சி யொடுமொழிவார், *1166*

இக்காரியத்தில் செலுத்துதல் மரபாம். "குலமுத லறிவின் மிக்கார்" (154); "மேலோரைச் செலவிட்டார்" (1288); "முதறிவோர்" (882).

முதிருணர்வாவது கல்வி - கேள்விகளாலும், உலகியலனுபவத்தாலும், இயற்கையறிவாலும் வருவது.

அணைந்த திறம் - கருதிவந்த செய்தியினை; இரண்டனுருபு தொக்கது.

மொழிகின்றார் - என - என்று மேல்வரும் பாட்டுடன் கூட்டுக. 1165

3064. (இ-ள்) "ஞானபோனகருக்கு... வந்தது" என- "ஞானவமு துண்டருளிய பிள்ளையாருக்கு நல்ல தவம் பொருந்திய இனிய ஒழுக்கத்தினாலே குற்றமற்ற சீலத்தினையுடைய உம் மகளை மணம் பேச நாங்கள் வந்துள்ளோம்" என்று எடுத்துச் சொல்ல; "ஆனபேறு... அருளுடைமையாம்" என்று - "இவ்வாறு வரப்பெறுதலான பேறு அந்தணராகிய நீங்கள் என்மேல் வைத்த அருளுடைமையின்பாலதே யாகுமன்றி எனது தகுதிபற்றிய தன்று" என்று; வானளவு... மொழிவார் - ஆகாயம் போல நிறைந்த பெரிய மனமகிழ்ச்சியுடனே சிவபாதவிருதயரை நோக்கி நம்பாண்டார் நம்பியார் சொல்வாராகி;

(வி-ரை) ஞானபோனகருக்கு-மணத்திறத்தில் மகட்பேசத் தொடங்கு கின்றாராதலின் முதலில் மணமகனது தன்மைபற்றி இவ்வாறு எடுத்துக் கூறியபடி. நாடு முழுமையும் விளக்கமா யறியப்படுகின்ற இப்பெயர்பற்றிக் கூறியமாத்திரையே மணமகனது ஊர் - பெயர் - மரபு - குலம் - குடி - தன்மை - குணம் முதலியவாய் இப்பேச்சினில் விளங்க வேண்டுவனவாய் உள்ள எல்லாம் விளங்கவைத்தனர் என்க; யாதும் அடைமொழியின்றிக் கூறிய திறமும் இக்கருத்தது.

நற்றவத்து - உம்பால் - மகட்பேச - இனி, மகட்பேச்சின் றிறத்து அடுத்து வருவது மணமகளின் றிறமாதலின் அதனைச் சிவபாதவிருதயரும் பிறரும் தாங்கள் அறிந்து துணிந்துகொண்டவாறு இவ்வாற்றாற் கூறியபடி; உமது தகுதியும் உமது மகளாரின் தகுதியும் அறிந்தபடியே மகட்பேச வந்தோம் என்பது குறிப்பு. (3059) பார்க்க. "குணம் பேசிக் குலம்பேசி" (1289) என்றவாறெல்லாம் மகட்கொடை துணிதற்கு முன்னர்ப் பேசி யறியவேண்டியவை எவையுமில்லை என்று இருதிறமும் நிலை கூறியபடி காண்க.

ஆனபேறு...ஆளுடைமையாம் - என்றே - என்பால் மகட்பேச வரலான பேறு நான் பெற்றதற்கு அந்தணர்களாகிய நும்பால் நின்ற அருளுடைமையேயன்றி எனது தகுதி காரணமன்று என்றபடி. **ஆனபேறு** - பிள்ளையார் திருமணஞ்செய்தற்குத் திருவுள்ளம்

3065. ''**உம்முடைய பெருந்தவத்தா லுலகனைத்து மீன்றளித்த**
அம்மைதிரு முலைப்பாலிற் குழைத்தவா ரமுதுண்டார்க்
கெம்முடைய குலக்கொழுந்தை யாமுய்யத் தருகின்றேம்;
வம்மி'' னென வுரைசெய்து மனமகிழ்ந்து செலவிடுத்தார். *1167*

பற்றிய பேறுமாது; **அந்தணர்... என்று** - மறையவர்கள் பால் திருவருளுடைமையினலாம் என்பது திரு.ராம. சொ.தருமபுர அவர்கள் குறிப்பு.

வானளவு நிறைந்த - விளைய எல்லாப் பூதங்களினும் நிறைந்து அவற்றுக்கு இடங்கொடுத்து ஓங்கிநிற்கும் வான்போலத் தம்முள் எங்கும் நிறைந்து நிமிர்ந்த மனமகிழ்ச்சி. **அளவு** - உவமஉருபு. ஆகாயம் வரை உயர்ந்த என்றலுமாம்.

மொழிவார் - உரை செய்து - என மேல்வரும் பாட்டுடன் முடிக்க.

மகட்பேசி—என்பதும் பாடம். **1166**

3065. (இ-ள்) ''உம்முடைய... வம்மின்'' என - ''உம்முடைய பெரிய தவத்தினலே, உலகங்களெல்லாம் பெற்றெடுத்த அம்மையாகிய உமையம்மையாரது திருமுலைப்பாலிற் குழைத்த சிவஞான நிறைவாகிய அமுதத்தினை உண்டருளிய பிள்ளையாருக்கு எம்முடைய குலக்கொழுந்தாகிய காதலியாரை யாங்கள் உய்யும் பொருட்டு மணத்தால் தருகின்றேம் வாருங்கள்'' என்று; உரை செய்து மனமகிழ்ந்து - வாக்கினல் எடுத்துக் கூறி மனத்தின்கண் மகிழ்ச்சி பொருந்தி; செலவிட்டார் - அவர்களைச் சீகாழியிற் செல்லும்படி விடுத்தனர்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) உம்முடைய பெருந்தவத்தால்... வம்மின் - என்றது நம்பாண்டார் தம்பால் மகட்பேசிய சிவபாதவிருதயரை நோக்கிக் கூறியது; **பெருந்தவத்தால் அமுதுண்டார்க்கு** என்று கூட்டுக.

உம்முடைய...அமுதுண்டார்க்கு-உலகறிந்த பெருமையுடையாராதலின் பெயர் மாத்திரையால் **''ஞானபோனகருக்கு''** (3064) என அவர் கூறியவாறே நம்பாண்டாரும் அப்பெருமைகளைத் தாம் உணர்ந்து கொண்டபடியை விரித்துரைத்தவாறு.

ஆரமுது - சிவஞானம்; **ஆர்தல்** - எல்லா வுயிர்களினும் நிறைந்து பயன்தருதல்.

எம்முடைய... தருகின்றேம் - மகட்கொடை செய்வோர் மகனைப்பெறும் வீட்டாருக்கு உய்திபெறும் ஒரு குடும்ப உத்தாரணம் - நிலைநாட்டுதல் - ஆகிய உதவி செய்கிறர்கள் என்பது அறநூல் விதி; இங்கு அவ்வாறன்றி நம்பாண்டார் தமது மகட்கொடையினல் தாமும் தமரும் உய்வதாகக்கொண்டு கூறுதல் நோக்கத்தக்கது; உண்மையில் இந்த மகட்கொடையின் பயனுக அவரும் தமரும் உலகமெல்லாமும் திருமணத்தில் உய்யப் பெற்று வீடுபெறும் நிலை ஈண்டுக் கருதத்தக்கதாம். **தருகின்றேம்**-தம்மையும் தம் மனைவியாரையும் தமர்களையும் உளப்படுத்திக் கூறிய உளப்பாட்டுப் பன்மை.

3066. **பேருவகை யாலிசைவு பெற்றவர்தா மீண்டணைந்து**
காருலவு மலர்ச்சோலைக் கழுமலத்தை வந்தெய்திச்
சீருடைய பிள்ளையார்க் கவர்நேர்ந்த படிசெப்பிப்
பார்குலவுந் திருமணத்தின் பான்மையினைத் தொடங்குவார்; *1168*

வம்மின் - மணநிகழ்வதற் குரியவற்றைச் செய்து வாருங்கள்.

செலவிடுத்தார் - இசைவு தந்து சீகாழிக்குச் சென்று உரியவாறு வரும்படி விடைகொடுத் தனுப்பினர். ***1167***

3066. (இ-ள்) பேருவகையால்...மீண்டணைந்து - மிக்க மகிழ்ச்சியினுல் நம் பாண்டாரின் இசைவினைப் பெற்ற சிவபாதவிருதயர் முதலியோர்கள் மீண்டு சென்று; கார் உலவு...எய்தி - மேகங்கள் தவழ்கின்ற மலர்ச்சோலைகள் சூழ்ந்த சீகாழிப் பதியினில் வந்து சேர்ந்து; சீருடைய...செப்பி - சிறப்புப் பொருந்திய பிள்ளையாரிடம் நம்பாண்டார் இசைவு தந்தபடியினை விரித்துக் கூறி; பார்குலவு... தொடங்குவார் - உலகம் விளங்கும் திருமணத்தின் பகுதிகளைச் செய்யத் தொடங்குவார்களாகி;

(வி-ரை) பேருவகையால் இசைவு என்றும், **இசைவு பேருவகையாற் பெற்றவர்கள்** என்றும் கூட்டியுரைக்க நின்றது; **பேருவகையால் இசைவாவது-** "ஒப்பரிய பேருவகை யோங்கி" (3062); "வானளவு நிறைந்த பெருமன மகிழ்ச்சி" (3064); "யாமுய்யத் தருகின்ரும்" (3065) என்பனவற்ருல் முன் உரைக்கப்பட்டது.

கழுமலம் - சீகாழியின் 12-வது திருப்பெயர்.

கார் உலவு மலர்ச்சோலை - மேகங்கள் தவழும் மலர்ச்சோலை என்றும், மேக மண்டலங்கள் வரை உயர்ந்து அங்கு உலவும் சோலை என்றும் உரைக்க நின்றது.

பார்குலவு திருமணம் - பார்குலவு - உலகம் விளங்குதற்கேதுவாம் நிலைமை பின் நிகழ்ச்சியிற் காண்க. **பார்குலவு** - உலகில் என்றும் விளங்கக் கொண்டாடும் என்றலுமாம்.

திருமணத்தின் பான்மை - பான்மை - உரிய செயல்களின் பகுதிகள்.

தொடங்குவார் - போக்கி - விதைத்தார் - என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. நாளோலையினை நம்பாண்டார் எதிர் ஏற்கும் சிறப்பு மேல் (3069) உரைப்பார்.

இசைவு பெற்றவர் - சிவபாதவிருதயரும் மறையவரும் திருத்தொண்டர்களும்,

பான்மைவினை தொடங்குவார்—என்பதும் பாடம். ***1168***

3067. (இ-ள்)திருமணம் செய்... வகுப்ப - திருமணஞ் செய்ய நின்ற கலியாணத் திருநாளினையும் விளங்கும் சிறப்பினுடன் கூடிய ஓரையினையும் கணித மங்கல நூலுணர்ந்த பெரியோர்கள் வகுத்துக் கூற; பெருகு...போக்கி - பெருகும் மணத் திருநாளோலையினைப்

3067. திருமணஞ்செய் கலியாணத் திருநாளுந் திகழ்சிறப்பின்
மருவியவோ ரையுங்கணித மங்கலநூ லவர்வகுப்பப்
பெருகுமண நாளோலை பெருஞ்சிறப்பி னுடன்போக்கி
அருள்புரிந்த நன்ஞளி லணிமுளைப்பா லிகைவிதைத்தார். 1169

பெரிய சிறப்பினோடு மணமகள் வீட்டாருக்கும் ஏனைச் சுற்றத்தார் முதலியோர்க்கும் போக்கி; **அருள் புரிந்த...விதைத்தார்** - திருவருள் புரிந்து கொடுத்த நல்ல நாளிலே அழகிய **பாலிகை**களில் அழகிய முளையை விதைத்தார்கள்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) திருமணஞ் செய் கலியாணத் திருநாள் - கலியாணம் - நன்மை - சுபம் - மேன்மை என்ற பொதுமை குறித்து நின்றது; இது வடமொழி வழக்கு. தமிழிற்போலக் **கல்யாணம்** என்ற சொல் வடமொழியில் மணம் என்ற பொருள் தருவதில்லை என்ப; **திருநாள்** - நல்லநாள்.

திகழ் சிறப்பின் மருவிய ஓரை - அந்நன்னாளின் நல்ல பகுதி; **ஓரை** - இலக்கினம் என்பர். 2 1/2 நாழிகைகொண்ட நாட்கூறு; ஆங்கிலரது Hour = மணி என்பது இப்பகுதியினின்றும் போந்தது போலும்; ஓர்ந்து பெறுவதனல் ஓரை என வந்த தென்பாருமுளர்; அது பொருந்தாது.

கணித மங்கல நூலவர் - சோதிடர்; **கணிதம்** - கணக்குச்செய்து கோள்களின் நிலையும் பயனும் முதலியவற்றைக் காண்போர்; **நூல்** - சோதிட நூல். **மங்கல நூலவர்** - மறையின் ஆறு அங்கங்களுள் ஒன்றுதலின் இப்பெயராற் கூறினர். **கணித நூலவர்** - என்றலே அமையுமாயினும் இங்கு மங்கல நல்வினைபற்றித் தொழிற்பட வருதலான் **மங்கல நூல்** என்றூர். இனி இச்சோதிடர் **ஏனை** உலகினர் பக்கல் வரும் நன்மைகளுக்கு வகுக்கும் நாளும் ஓரையும் மங்கலமென்ற பெயராற் சொல்லினும் அஃது உபசாரமாத்திரையானன்றி உண்மையிற் பொருந்தா; என்னை? அந்த மங்கலமெனப்படுவன வெல்லாம் ஒருகாலத்து அழிவுபட்டு அமங்கலங்களாக முடிவதொருதலையாதலின் என்க; ஆயின் இங்குக் கணித மங்கல நூலவர் வகுத்த நாளும் ஓரையும் அத் திருமணத்தைச் சார்ந்த எல்லாருக்கும் நித்திய மங்கலமாகிய அழிவில்லாத சிவத்திருமண மங்கல நிலையைப் பயப்பித்தன. அக் குறிப்புப்பட மங்கலச்சொற் புணர்த்திக் கூறினர் என்றலுமாம். இராமனது முடிசூட்டுக்காக வகுத்த நாளே அவன் முடிதுறந்து காட்டுக்குப் போகும் நாளாக ஆயினமையால் அதனைவகுத்த கணிதர்களைக் "கணித **மாக்கள்**" என்றும், அந் நாளினை "முடிபுனை **கடிகை** "நாள்" என்றும் கூறிய கம்பனது குறிப்பு இங்கு வைத்துக் காணத்தக்கது.

பெருகு மணநாளோலை - மணத்தின் நன்னாளும் ஓரையும் குறித்தெழுதிய வோலை; "நாளோலை விட்டார்" (155); ஓலை ஏந்திக்... ...குறுகினர்; எதிரே வந்து... ...கொண்டார் (156) என்றதும் பிறவும் காண்க.*

போக்கி - மணமகள் வீட்டாருக்கு உரியவாறு நாள்ஓலை ஏந்திக்கொண்டு சேர்த்தலும், ஏனைய சுற்றத்தார்பால் போக்கிச் சேர்க்கலும் ஆம்.

*இது [illegible] ...ற்றியும் மணச் செயல்கள் பற்றியும் சேக்கிழார் 73-78 [illegible] ...த்தங்கள் பார்க்க.

3068. **செல்**வமலி திருப்புகலிச் செழுந்திருவீ திகளெல்லாம்
மல்குநிறை குடம்விளக்கு மகரதோ ரணநிரைத்தே
எல்லையிலா வொளி**முத்து மாலை**களெங் கணுநாற்றி
அல்குபெருந் திருவோங்க வணிசிறக்க வலங்கரித்தார். 1170

அருள் புரிந்த நன்னாள் - அருள் புரிந்த - கணித மங்கல நூலவர் வகுத்துத் தந்த. திருமணச் சார்புகொண்ட யாவரும் சிவனடி சார்ந்து வீடுபெற்றுய்யும் நன்னாளாக இஃது ஆகிவிடும்படி முன்னரே இறைவர் கருணை செய்தளித்த என்ற குறிப்பும் காண்க. "திருமணஞ்செய் திருநாளுக் கெழுநாளா நன்னாள்" என்றபடி முன் ஏழாநாளில் பாலிகைகளில் முளை தெளித்தல் மரபு. இஃது நூல்விதியாதலின் அருள்புரிந்த என்றார் என்றலுமாம். பாலிகைக்குரிய விதையை விதைத்தார் என்க. இவை முளைத்த பின்னர்ப் பாலிகைகளில் முளைபூரித்தல் திருமணநாளுக் கெழுநாளா நன்னாளில் நிகழுமென்பது பின்னர்க் கூறப்படும் (3070). இவ்வாறு நாட்குறித்துத் திருமணத்துக்குரிய பகுதிகளைத் தொடங்குதல் முன்னாளில் நம் பெரியோர் வழக்கும், நூல் விதியுமாம். 1169

3068. (இ-ள்) செல்வமலி... நிரைத்தே - செல்வம் மலிகின்ற சீகாழிப் பதியின் செழிப்புடைய திருவீதிகள் எல்லாவற்றையும் பொருந்திய நிறைகுடங்களையும் விளக்குக் களையும் மகர தோரணங்களையும் வரிசையாக அமைத்தே; எல்லையிலா...நாற்றி - அளவு படாத ஒளியினையுடைய முத்துமாலைகளை எங்கும் தொங்கவைத்து; அல்கு பெரும்... அலங்கரித்தார் - மிக்க பெரிய திரு ஓங்கும்படி அழகு விளங்க அலங்காரம் செய்தார்கள்.

(வி-ரை) செல்வம் - அருட்செல்வமும் பொருட்செல்வமும்.

செழுந் திருவீதிகளெல்லாம் - நிரைத்தே - நாற்றி - அலங்கரித்தார் - என்று கூட்டுக. **செழும் திரு - செழுமை** - மாடங்களின் செல்வச் சிறப்பும் மகவுகள் நிறைந்த மங்கலமும். **திரு** - மறைவளர் திரு; முன்னமே அணி நிறைந்த திருவீதிகளைத் திருமணத்தின் பொருட்டு மேலும் நிறைகுடம் விளக்கு முதலியவற்றால் அலங்கரித்தனர் என்க. **நிரைத்தே** - வரிசை பெற அமைத்தே; **நிரை** - வரிசை.

எல்லையிலா ஒளி முத்துமாலைகள் - நாற்றி - முத்துக்களின் ஒளியின் சிறப்புப் பற்றி முன்னர் விறன்மிண்ட நாயனார் புராணத்தில் உரைத்தவையும், "சோதி முத்து - நீற்றொளி" (2114) என்றவிடத் துரைத்தவையும், பிறவும் பார்க்க. ஈண்டு முத்துமாலைகள் நாற்றியது - (முத்து விடுபட்டது) வீடுபேற்றின் குறிப்பு. பிள்ளையாரைத் திருமணக்கோலம் செய்தல் முற்றும் முத்துக்களாலே அமையும் நிலை பின்னர்க் காண்க. **அல்கு பெருந்திரு ஓங்க -** என்றதும் அக்குறிப்பு. **பெருந்திரு** - திரு எல்லாவற்றுக்கும் மேலாகிய சிவபோகமாகிய முத்தித் திருவின் தன்மை.

திருவோங்க அணி சிறக்க - உள்ளுறை முத்தித் திருவின் தன்மையும், புறத் தோற்றம் உலகநிலை அணியுமாம்.

நிறைத்த—என்பதும் பாடம். 1170

3069. அருந்தவத்தோ ரந்தணர்க ளயலுள்ளோர் தாமுய்யப்
பொருந்துதிரு **நாளோலை பொருவிறந்தார் கொண்டணையத்**
திருந்துபுகழ் நம்பாண்டார் நம்பிசிறப் **பெதிர்கொண்டு**
வருந்தவத்தான் மகட்கொடுப்பார் **வதுவைவினை தொடங்குவார்.** 1171

குறிப்பு - இப்பாட்டின் கீழ் 3074 "எங்கணும்" என்னும் பாடல் சில பதிப்புக்களில் உள்ளது.

3069. (இ-ள்) அருந்தவத்தோர்... அயலுள்ளோர் - அரிய தவத்தாராகிய தொண்டர்களும் அந்தணர்களும் மற்றும் அயலில் உள்ளவர்களுமாகிக் கூடிய; பொருவிறந்தார் - ஒப்பற்ற பெரியோர்கள்; தாமுய்ய - தாம் உய்யும்படி; பொருந்து திருநாளோலை கொண்டணைய - பொருந்தும் திருமண நாளோலையினை எடுத்துக் கொண்டு வந்து அணைந்தார்களாக; திருந்து புகழ்... எதிர்கொண்டு - திருந்தும் புகழினையுடைய நம்பாண்டார் நம்பி அச்சிறப்பினை முறைமையின் எதிர் ஏற்றுக்கொண்டு; வருந் தவத்தான்... தொடங்குவார் - முன்னைத் தொடர்பினால் வரும் தவத்தின் பயனாலே தம் மகளாரைப் பிள்ளையாருக்கு மணமகளாகக் கொடுப்பாராகித், திருமணத்திற்குரிய செயல்களைச் செய்யத் தொடங்குவாராக;

(வி-ரை) அருந் தவத்தோர்களும் அந்தணர்களும் அயலுள்ளோர்களும் ஆகிய பொருவிறந்தோர் - என்க; **தவத்தோர்** - சிவத்தொண்டு செய்வோர்; **அயல்** - தொண்டரும் அந்தணருமல்லாத பிறர். பொருவிறந்தார் - ஒப்பற்றவர்; சிறந்தவர்.

தாமுய்ய - நாளோலை கொண்டுவரும் தாங்களும் அதனைப் பெறும் நம்பாண்டாரும் சுற்றமும் உய்ய என்க. **யாமுய்யத் தருகின்றோம்** - (3065) என்றதற்கேற்ப நம்பாண்டார் இவர்கள் நாளோலை கொணர்தலைத் தாம் உய்திபெறக் கொண்டு வருதலாக மதித்து ஏற்றனர் என்றலுமாம்.

திருந்து புகழ் - முன்னைப் புகழ் இம் மகட்கொடையினால் மேல் திருந்தும் என்க.

சிறப்பு - நாளோலை கொணரும் மங்கல நிகழ்ச்சி; **எதிர்கொண்டு** - எதிர் ஏற்றுக்கொண்டு; 156 பார்க்க. **வரும் தவ**மாவது முன்னைத் தொடர்பால் வரும் தவம்.

தொடங்குவார் - இது நல்லூரில் மணமகள் திருமனையினிகழ்ச்சி; மேல்வரும் பாட்டிற் கூறுதல் சீகாழியில் மணமகனாராகிய பிள்ளையாரது திருமாளிகையின் நிகழ்ச்சி. நம்பாண்டார் அங்கு வதுவைவினை தொடங்குவாராக, ஈண்டுச் சுற்றத்தார் ஈண்டிப் பூரித்தார் என இருபாலும் தொடர்புபடுத்தி முடிக்க. மணத்தொடர்பு பற்றிச் செய்யுள் வினைமுடிபும் தொடர்ந்து வருதல் கவிநயம். 1171

3070. (இ-ள்) மன்னுபெரும்... வந்தீண்டி - நிலைபெற்ற பெரிய சுற்றத்தார்கள் எல்லாரும் (சீகாழியின்கண்) வந்து கூடி; நன்னிலைமை... நன்னாளில் - திருமணமாகிய நன்னிலை பெறும் திருநாளுக்கு ஏழு நாட்களின் முன்னாகிய நல்ல நாளிலே; பன்மணி...

3070. மன்னுபெருஞ் சுற்றத்தா ரெல்லாரும் வந்தீண்டி
நன்னிலைமைத் திருநாளுக் கெழுநாளா நன்னுளிற்
பன்மணிமங் கலமுரசம் பல்லியங்க ணிறைந்தார்ப்பப்
பொன்மணிப்பா லிகைமீது புனிதமுளை பூரித்தார். 1172

ஆர்ப்ப- பல அழகிய மங்கல முரசும் பலவகை இயங்களும் நிறைந்து முழங்க; பொன்...பூரித்தார்-பொன்னிட்ட அழகிய பாலிகைகளின்மீது தூய முளையை நிறைத்துத் தெளித்தார்கள்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) வந்து ஈண்டி - சீகாழியில் வந்து நிறைந்து.

நன்னிலைமைத் திருநாள்-மணஞ்செய் நாள்; மணத்தைச் சார்ந்தார்கள் எல்லாரும் நன்னிலையாகிய சிவானந்த பரிபூரண நிலையினை அடையும் திருநாள் என்றதும் குறிப்பு.

எழுநாள் - முன் ஏழாவது நாள்; **பூரித்தல்** - முன் (3067) கூறியபடி விதைத்து முளைத்த முளைகளை எடுத்துப் பாலிகைப் பாண்டில்களில் மண்ணிட்டுத் தெளித்து நீர் வார்த்தல். இது திருமணத் திருநாளின் ஏழநாளிற் செய்வது மரபும் விதியுமாம்.

பன்மணி...ஆர்ப்ப - இச்சடங்கு மங்கல முழக்குக்களுடன் நிகழ்த்தப்படுவ தொன்றும். இந்நாளில் நிகழும் ஒருநாள் அரைநாட் கல்யாண முறைகளுடன் இதனையும் ஒத்துக் காண்க; பாலிகை விதைத்தல், முளை பூரித்தல் இவை மணச்சடங்கின் சிறந்த அங்கமாவன. கோயிற் சிறப்புக்களிலும் திருமுளை (அங்குரார்ப்பணம்) என்பது சிறந்த அங்கமாகும் என்பது ஆகமவிதி; இது சிருட்டிநிலையை குறிக்கும். திருமணங்களில் இம் முளைகளின் செழுமை, வளர்ச்சி, செறிவு முதலியவற்றின் அளவே அவ்வம் மணங்களின் சிறப்பும் பயனுமாவன என்றறிகுறியாகக் காணும் வழக்கு முண்டு. **புனித முளை** என்றது சிவமணமாய் நிகழ்தற் குறிப்பு. **பூரித்தல்** - நிறைத்தல் 1172

3071. (இ-ள்) சேணுயரும்... மாளிகைகள் - வானத்திலுயரும் மாடங்களையும், செல்வம் பெருகும் மண்டபங்களையும், நீண்ட நிலைகளையுடைய மாளிகைகளையும்; நிகரில்... விளக்கி - ஒப்பற்ற அழகு பெறும்படி விளக்கஞ்செய்து; காணவரும் ... எழுதி - காட்சி பொருந்தவரும் ஓவியத் திறம் அழகு மிகும்படிச் சித்திரித்து உருவங்களை அங்கங்கும் எழுதி; வாணிலவு... புனைந்து - ஒளி பொருந்திய அழகிய மணிகளழுத்திய முதற்கடை வாயிலில் மங்கலக் கோலங்களைச் செய்து;

(வி-ரை) சேணுயரும் - திருப் பெருகும் - நீணிலைய - இவை முறையே மாடங்கள் - மண்டபங்கள் - மாளிகைகள் என்ற இவற்றின் இயல்புகளை விளக்கி நின்றன; **சேண்** - விசும்பு; "மாடம், விண்டாங்குவபோலும்" (தேவா) என்றபடி விண்ணவர்களை உயர்த்தும் என்றதும் குறிப்பு. **திரு**-அருட்செல்வமும் பொருட் செல்வமும்; **நீள் நிலைய** - நீண்ட நிலைகளையுடைய; **நிலைகள்** - நிலவுகளும் மேன் மாடிகளும்.

3071. **சேணுயரு மாடங்க டிருப்பெருகு மண்டபங்கள்**
நீணிலைய மாளிகைக ணிகரிலணி பெறவிளக்கிக்
காணவருங் கைவண்ணங் கவின்றோங்கும் படியெழுதி
வாணிலவு மணிக்கடைக்கண் மங்கலக்கோ லம்புனைந்து. *1173*

விளக்கி - விளக்கம் செய்தலாவது புதிதாக விளங்கச் செய்தல்.

காணவரும்... எழுதி - ஓவியங்களைக் கைத்தொழில் விளங்க எழுதுவித்தல் முன்னாளில் மங்கல அணிவகைகளுள் ஒன்று. ஓவியக் கைத்தொழில் தமிழ் மக்களிடைப் பல்லாயிர ஆண்டுகளின் முன்னரே சிறப்புற அமைந்து சிறந்து விளங்கியது; "யாழு மெழுதி யெழின்முத் தெழுதி யிருளின்மென்பூச் சூழு மெழுதியோர் தொண்டையுந் தீட்டியென் றொல்பிறவி, ஏழு மெழுதா வகைசிதைத் தோன்புலியூரிளமாம், போழுமெழுதிற்றோர் கொம்பருண் டேற்கொண்டு போதுகவே"(திருக்கோவை-79); "கன்னி யனநடைக்குப், படிச்சந்த மாக்கும் படமுள வோநும் பரிசகத்தே" (மேற்படி-78); "கழிகின்ற வென்னையு நின்றநின் கார்மயிற் பொற்பையும் யான், கிழியொன்ற நாடி யெழுதி" (மேற்படி-76) "அவையவ மெழுதலரிதென விலக்கல்" (சூத்திரம்); "படிச் சந்த மாகப்பண்ணப்படும் படங்கள் உளவே நுமது சித்திரச்சாலையின்கண்? = **படிச் சந்த**மென்பது ஒன்றன் வடிவையுடைத்தாய் அஃதென்றே கருதப்படுமியல்பை யுடையது"; "முன்ன, மொருக ணெழுதிவிட் டொன்றெழுதா தோடித், தெருவம் புகுவார் திகைப்பார்... ... "மணியார்த்த, தூவெண் மணற்கொண்டு தோழியருந் தானுமாய்க், காம னுருவம் வரவெழுதிக் - காமன்,கருப்புச் சிலையு மலரம்புந் தேரு, மொருப்பட்டுட னெழுதும் போழ்தில்..."(ஞானவுலா) முதலியவை காண்க. தமிழரிடை முன்னாளில் இவ்வா றுயர்நிலையிலிருந்த ஓவியக் கலைஞானம் அருகி இந்நாளிற் பிறர்பாற் புதிதிற் கற்கத் தொடங்கும் கலையாய் நிற்கின்றது காலக்கொடுமை!

காண வரும் - ஓவியங்களின் அழகினையும் கைத்திறத்தினையும் உண்மை நோக்கினையும் அதிசயித்துப் பிறர் காணவரும். **காண்வரும்** என்பதும் பாடம்; **கைவண்ணம்** - சித்திரத் தொழிற் கைத்திற மேம்பாடு; **எழுதி**-ஓவியங்களையும் பற்பல சித்திரங்களையும் என்று செயப்படுபொருள் வருவித்துரைக்க. **எழுதுதல்** - தீட்டுதல்; மரபுவழக்கு.

மணிக்கடை - மணிகளிழைத்த முன்கடை வாயில் முகப்பு. **கண்** - ஏழனுருபு.

நிகரிலொளி—கைவினைஞர்—என்பனவும் பாடங்கள். **1173**

3072. **(இ-ள்)** நீடுநிலை... நிரைத்து - நீண்ட நிலையுள்ள தோரணங்களை நீண்ட வீதிகள்தோறும் வரிசைபெற அமைத்து; மாடுயரும்...போக்கி - பக்கங்களில் உயரமாகிய பசிய கொடிமாலைகளையும், மணிமாலைகளையும் இடையிடையே புகஅமைத்து; சேடுயரும்...நீவி - ஒளி விளங்கும் திண்ணைகளைச் செழுமையுடைய சுண்ணச் சாந்தினாலே மெழுகி; பீடுகெழு... புனைந்தார் - பெருமை விளங்கிய மணி முத்துக்கள் நிறைந்த பெரும் பந்தர்கள் பலவற்றையும் அமைத்தனர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

3072. நீடுநிலைத் தோரணங்க ணீண்மறுகு தொறுநிரைத்து
மாடுயருங் கொடிமாலை மணிமாலை யிடைப்போக்கிச்
சேடுயரும் வேதிகைகள் செழுஞ்சாந்து கொடுநீவிப்
பீடுகெழு மணிமுத்தின் பெரும்பந்தர் பலபுனைந்தார். 1174

(வி-ரை) நீடுநிலை - மேல் உயர நீண்ட நிலையினையுடைய; **நீண்மறுகு** - மறுகுகள் வளைவின்றி ஒழுங்குபெற நீண்டு செல்லுதல் நகரச் சிறப்பு அமைதிகளுள் ஒன்று.

கொடிமாலை மணிமாலை - கொடிமாலை - கொடிகளையும் மலர் மாலைகளையும்; கொடிகள் போன்ற மாலைகளை என்றலுமாம்; **மணிமாலை** - பலவண்ண மணிகளைக் கோத்த மாலைகள். **இடைபோக்கி** - இடையிடையே புகுத்தி.

சேடு - ஒளி; **சாந்து** - வெண்சுண்ணம்; செஞ்சாந்து முதலியவை. **நீவுதல்** -ஒழுங்குபெறப் பூசுதல்.

பீடு... பந்தர்கள் - பீடு - பெருமை; மணிகளுள் முத்துக்கள் சிறந்தன என்பது. முத்து மாலைகள்'' (3068); முன்கூறியது முன் ஏழாநாள் அணிச்சிறப்பு; இங்குக் கூறுவன அற்றைநாண் முதலாகத் திருமணநாளின் முன்னுள்வரை செய்யும் மணவணிச் சிறப்பு; மேல்வரும் பாட்டுப் பார்க்க.

முத்தின் பெரும்பந்தர் பல - மறுகுகளில் அங்கங்கும் அமைக்கும் பற்பல முத்துப் பந்தர்கள்; இறைவர்பால் முத்துப்பந்தர் பெற்ற பெருமானுதலின் அக்குறிப்புப் பெறவும்; ''அப்பந்தர் மீதணையத் திருமன்றி, லண்டர்பிரா னெடுத்ததிரு வடிநீழ லெனவமர்ந்தார்'' (2293) என்றபடி, இனி இறைவரது திருவடிநீழலில் மீளா நிலைமையினை இத்திருமணத்தில் சார்ந்தா ரெல்லாருடனே அடையப் புகுகின்றுர் பிள்ளையார் என்ற குறிப்புப் பெறவும்; வீடுபேறு குறிக்கும் முத்துப்பந்தர் பலவற்றையும் அமைத்தனர்; **பல** - உடன் வீடு பெறுவார் பலராதலின் பலவும் அமைத்தனர் என்பதும் குறிப்பு.

பீடுகெழு - பெரும் - என்ற அடைகளின் குறிப்பும் காண்க. 1174

3073. **(இ-ள்)** மன்றல்வினை...நாளெல்லாம் - கல்யாணச் செயல்களுள்ளே திருமுளை பூரித்த நாள் தொடங்கிவருகின்ற நாட்களிலெல்லாம்; முன்றில்தொறும்... வாயில்கடொறும் - வீதிகள்தோறும், மாடங்களின் முன்றில்கள்தோறும், நீண்ட முன்வாயில்கள்தோறும்; நின்றெளிரும்...துதைவித்தார் - நிலைநின்று விளக்கம் செய்யும் மணி விளக்குக்களும், மணமுடைய தூய நீர்நிறைந்த பொற் குடங்களும் நெருங்கிய **ஒளியு**டைய மாலைகளும் தூபங்களுமாகிய இவையிற்றை நெருங்க வைத்தார்கள்.

(வி-ரை) மன்றல் வினைத் திருமுளை நாள் - கலியாணச் செயல்கள் திருமுளை பூரித்த ஏழாநாளாகிய நன்னுளிலிருந்து தொடங்குகின்றன என்பதாம்.(3070).

வருநாள் எல்லாம் - பின்னர்த் தொடர்ந்து வருகின்ற ஆறுநாட்களிலும்.

3073. மன்றல்வினைத் திருமுனைநா டொடங்கிவரு நாளெல்லாம்
முன்றிறெறும் வீதிதொறு முகநெடுவா யில்கடொறும்
நின்றொளிரு மணிவிளக்கு நிறைவாசப் பொற்குடங்கள்
துன்றுசுடர்த் தாமங்க டூபங்க டுதைவித்தார். 1175

3074. எங்கணுமெய்த் திருத்தொண்டர் மறையவர்க ளேனையோர்
மங்கலநீண் மணவினைநாள் கேட்டுமிக மகிழ்வெய்திப்
பொங்குதிருப் புகலிதனி னாடோறும் புகுந்தீண்ட
அங்கணணைந் தவர்க்கெல்லாம் பெருஞ்சிறப்பு மிகவளித்தார். 1176

வீதிதொறும் முன்றில்தொறும் என்க; **முன்றில்** - இல்முன் என்பது முன்றில் என வந்தது. **முகநெடு வாயில்** - முதல் வாசல்; முகப்பு வாயில்.

நின்றொளிரும் - கொ து நின்று விளங்கும். **மணிவிளக்கு** - சூரியவொளியினாலும் ஏனைப் பெருவிளக்குக்களின் சார்பினாலும் எதிர்ஒளி வீசும்படி பெருமணிகளையே விளக்குக்களாக அமைத்தலுமுண்டு.

துதைவித்தல் - நிறைவித்தல் ; நெருங்க அமைத்தல். 1175

3074. **(இ-ள்)** எங்கணும்... கேட்டு - எங்கெங்கும் உண்மைத் திருத்தொண்டர்களும், வேதியர்களும், மற்றவர்களும் மங்கலம் பெருகும் கல்யாணச் செயல்கள் நிகழும் நாளைக் கேட்டு; *மிக மகிழ்வெய்தி...புகுந்தீண்ட* - மிகுந்த மகிழ்ச்சி பொருந்தித் *திருப்பொங்குகின்ற சீகாழிப்* பெரும்பதியிலே நாள்தோறும் வந்து நெருங்க; அங்கண்...மிக அளித்தார் - அவ்வாறு அங்கு வந்து அணைந்தவர்களுக்கெல்லாம் பெரிய சிறப்புக்களை மிகவும் செய்து அளித்தார்கள்.

(வி-ரை) எங்கணும் - சீகாழியின் புறத்திலே எங்கெங்கு நின்றும்.

மெய்த் திருத்தொண்டர்கள் - சிறப்புப்பற்றித் தொண்டர்களை முன்வைத்தார்; **மெய் - திரு** - என்ற குறிப்புமது.

மங்கல நீள் - இத்திருமணத்தின் மங்கலம் மணம் என்ற அந்நிலையோடமையாது நீளும் தன்மை குறித்தது பிற்சரிதக் குறிப்பு.

திருப்பொங்கு புகலி என்க; **திரு** - முத்தித் திரு.

நாடோறும் புகுந்தீண்ட - ஒவ்வொரு நாளும் புதிதாக வந்து கூட; பிள்ளையாரது திருமணத்தை வெளி ஊரவர் பலரும் தமது சிறப்பாக உட்கொண்டு கலந்து களித்தனர்.

பெருஞ் சிறப்பு மிக அளித்தலாவது விருந்து உறையுள் முதலிய உபசரிப்புக்களை மிகவும் செய்தல்.

புகுந்தீண்டி—அங்கணைந்தவர்க்கெல்லாம்—என்பனவும் பாடங்கள். 1176

3075. **மங்கலதூ ரியநாத மறுகுதொறு நின்றியம்பப்**
பொங்கியநான் மறையோசை கடலோசை மிசைப்பொலியத்
தங்குநறுங் குறையகிலின் றழைத்தசெழும் **புகையினுடன்**
செங்கனலா **குதிப்புகையுந் தெய்வவிரை மணம்பெருக;** 1177

3075. **(இ-ள்)** மங்கல தூரியம்... இயம்ப - மங்கலம் பொருந்திய பெரு வாத்தியங்களின் நாதம் வீதிகள்தோறும் நின்று ஒலிக்க; பொங்கிய...பொலிய - மேன் மேல் ஓங்கி எழுந்த நான்மறைகளின் முழக்கானது கடலோசையினும் பெருகி விளங்க; தங்கு...மணம் பெருக - தங்கும் நறுமணமுள்ள அகில் துண்டங்களின் மிக்க செழும் புகையினோடு செந்தீயுடன் கூடிய வேள்விப் புகையும் கூடித் தெய்விக மணமாக வாசனை பெருகவும்;

(வி-ரை) தூரியம் - இயம்ப - என்பது மரபு வழக்கு.

இயம்ப - முழங்க; **தூரியம்** - பெரு வாத்தியங்கள் ; **தூரியம் மங்கலத்தை இயம்ப** என்ற குறிப்பும் காண்க. **இயம்புதல்** - வெளிப்படுத்தல்.

மறையோசை - ஓசை என்றூர் பலரும் கூடிச் சொல்ல மிக்க பேரொலியாக எழுதலால் சொற்பொருட் பிரிந்திசையாமையின்; **கடலோணை மிக** - என்ற குறிப்புக் காண்க; கடலோசையின் மிகும்படி.

பொங்கிய நான்மறை பொங்குதல் - உரத்த சுரத்தின் எழுதல். பிள்ளையாரது திருவவதாரத்தின் பயனுகத் தழைத்தோங்கிய என்றலும் குறிப்பு.

குறை அகில் - குறைத்த - துண்டமாக்கிய - அகிற் கட்டைகள்; **தழைத்த செழும் - தழைத்தல்** - அளவாற் பெருமையும், **செழுமை** - மணத்தால் மிகுதியும் குறித்தன. **செங்கனல் ஆகுதிப் புகை** - வேள்விகளில் எழுகின்ற புகை.

தெய்வ விரைமணம் பெருக - அகிற்புகையினுடன் ஆகுதிப்புகையும் கூடி மணம் மிக. இரண்டு புகைகளும் ஒன்று சேர மந்திரங்களுடன் கூடிய ஆகுதிப் புகையின் தெய்வத் தன்மை அகிற்புகைக்கும் வந்தது என்பது. பௌதிகம் பற்றிய அகிற்புகையும் அத்தன்மை மாறி ஆகுதிப்புகையின் சேர்க்கையால் தெய்வத் தன்மை வாய்ந்தது என்க. இக்கருத்தைத் "தெருண்ட மேலவர்ச் சிறியவர்ச் சேரினு மவர்தம், மருண்ட சிந்தையை மாற்றுவ ரெனுமிது வழக்கே" என்று குறித்த கம்பன் பாட்டும் காண்க.

விரை மணம் - புகை யிரண்டாதலின் ஒருபொருள் பற்றிய இரண் டடைமொழிகள் தந்தோதினர். இவற்றை நிரல் நிறையாகக் கொள்க; **மணம்** - கூடுதல் என்ற குறிப்புடன் வருதலில் தெய்வத் தன்மையினை அகிற்புகைக்குக் கூட்டிய ஆகுதிப் புகைக்கு ஏற்குமாறு காண்க. **1177**

3076. (இ-ள்) எண்டிசையின்... நெருங்க - எட்டுத் திசைகளில் உள்ள மக்களும் அங்கங்கு உள்ள வளப்பொருள்களோடு நெருங்க; பண்ட நிறை...பொலிய - பண்டங்கள் நிறையச் சேமிக்கும் சாலைகளும் பல்வேறு விதமாக விளங்க; மண்டு பெரு...மலிய -

3076. எண்டிசையி னுள்ளோரு மீண்டுவளத் தொடுநெருங்கப்
பண்டநிறை சாலைகளும் **பலவேறு விதம்பொலிய**
மண்டுபெரு நிதிக்குவைகண் மலைப்பிறங்க லெனமலிய
வுண்டிவினைப் பெருந்துழனி யோவாத வொலியோங்க; 1178

நெருங்கும் பொருநிதியின் குவியல்கள் மலை விளங்குதல்போல மலிய; உண்டிவினை... ஓங்க - உணவுத் தொழிலின்கண் வாயின் றெழூஉம் ஓசைகள் இடையறுத சத்தமாகப் பெருக;

(வி-ரை) எண்டிசையின்...நெருங்க - அவ்வத் திசையினுள்ளார்கள் தத்தமது திசையில் உள்ள தனி வளங்களாகிய பொருள்களைக் கொண்டு வந்தனர். இது முன்னாளின் வழங்கிய நல்வழக்கு; இக்காலத்தில் அருகிவருகின்றது; திண்ணனார் விற்பிடிக்கும் விழாவிற்குச் சிலையுடை வேடர் மலைபடு மணியும் பொன்னும் முதலிய வளங்களைக் கொண்டு திசைதொறு நெருங்கவந்தார் என்ற செய்தியும், அதுபோல்பவை பிறவும் இங்கு நினைவு கூர்தற்பாலன.

ஈண்டு வளம் - அங்கங்கும் சிறப்பாயுள்ள வளங்கள்.

பண்ட நிறை சாலைகள் - பலவேறு விதம் - பலவேறு வகைப் பண்டங்களுக்கும் பலவேறு தனித்தனிச் சாலைகள் வேண்டப்படுவனவாதலின் **பலவேறு விதம்** என்றார்.

நிதிக்குவைகள் மலைப்பிறங்கல் என - வெவ்வேறு நிதிக் குவியல்கள் பெருந் திரட்சியாகக் குவிதல் மலைபோன்றன என்க; "செய்யபொற் குன்றும் வேறு நவமணிச் சிலம்பு மென்ன" (75); இக்காலத்திற்போல நாணயம் என்ற பெயரால் நாணயமில்லாத காகிதங்கள் நாணயமாக வழங்காத முன்னாளில் பொன்னும் வெள்ளியும் மணிகளுமே நிதிகளாக வழங்கின. அவற்றை அளந்து குவியல் செய்து சேமிப்பதும் வழக்கு.*

மலைப் பிறங்கல் - மலையின் உயர்ச்சி; **மலிதல்** - பலவாறு காணப்படுதல்.

உண்டிவினைப் பெருந்துழனி ஓவாத ஒலி-உண்டிவினைப் பெருந்துழனியாவது மணவினைகளில் பல வகையினரும் பலநேரமும் உண்டிகொள்ளுதலே பெரும்பகுதி யாதலின் அவ்வாற்றான் எழும் சத்தம் **பெருந்துழனி** எனப்பட்டது; **ஒலி** என்றார் - கொணர்க என்றும், படை என்றும், உண்க என்றும், போதும் என்றும், வேண்டும் என்றும் இவ்வாறு பல சத்தங்களும் பொருள்பற்றியனவாதல் குறிப்பு; **ஓவாத ஒலி** - நீக்கமில்லாது எந்நேரமும் பெருகும்; முன்பின் பல பந்திகளாக உணவு கொள்ளுதல் குறிப்பு. உண்டிவினை செய்வார் உரையாடாதும் ஒலியெழாதும் புசிப்பாராதலின் அவர்க்கு அட்டிற் றொழிலாளரைப் படைபடை யென ஏவுமொலியேயாமென்க என்றும், போசனஞ் செய்யும்போது பேசாது உண்ணவேண்டும் மென்பது நூன் முறையாதலின் ஈண்டு உண்டாகிய ஒலி அமுது படைப்போரின் வேண்டுகோள் முதலியவற்றா னுண்டாகிய ஒலி எனக்கொள்க என்றும் உரைத்தனர் முன் உரைகாரர்கள். ஒருபேச் சிடையின்றி நின்று

*50 ஆண்டுகளின் முன் வெள்ளி நாணயங்களை நிறுத்து அளந்து ஓர் அறையில் தானியங்களின் இராசிக் குவியல்போலக் குவித்து வழங்கிய ஒரு செல்வன் ஒருவனையும், அவன் அவ்வாறு குவித்த பண அறையினையும் நான் நேரில் அறிவேன் (சி.கே.எஸ்).

3077. **மாமறைநூல் விதிச்சடங்கின்** வகுத்தமுறை நெறிமரபின்
தூமணநல் லுபகரணஞ் சமைப்பவர்தந் தொழிறுவன்றத்
தாமரையோ னனையபெருந் தவமறையோர் தாமெடுத்த
பூமருவு **பொற்கலசப் புண்ணியநீர்** பொலிவெய்த; 1179

3078. **குங்குமத்தின் கொழுஞ்சேற்றின் கூட்டமைப்போ** ரினங்குழுமப்
பொங்குவிரைப் புதுக்கலவைப் புகையெடுப்போர் தொகைவிரவத்
துங்கநறுங் கற்பூரச் சுண்ணமிடிப் போர்நெருங்க
வெங்குமலர்ப் **பிணைபுனைவோ ரீட்டங்கண்** மிகப்பெருக, 1180

உண்பது சமணருள் வழக்கென்பது பிள்ளையார் திருவாக்கா னறியப்படும். **1178**

3077. **(இ-ள்)** மாமறை நூல்... துவன்ற - பெருமறை நூல்களின் விதித்த சடங்குகளின் பொருட்டு வகுத்த முறைவழி மரபினாலே தூய மணத்திற்குரிய நல்ல வேள்விப் பொருள்களை அமைத்து ஒழுங்குபடுத்துவோர்களது தொழில் நெருங்க; தாமரையோன்...பொலிவெய்த - பிரமதேவனைப் போன்ற பெருந்தவ மறையவர்கள் தாங்கள் எடுத்த பூக்கள் பொருந்திய பொற்குடங்களில் நிறைத்த புண்ணிய நீர் விளங்க,

(வி-ரை) மாமறைநூல்... உபகரணம் - இவை மண வேள்விக்காகும் தருப்பை - சமித்து - சிருக்கு - சிருவம் - முதலிய பொருள்களும் ஓமப் பண்டங்களுமாம். **சமைத்தல்**-ஏற்றவாறு அமைவுபடுத்துதல்; **துவன்ற**-நிறைய.

தாமரையோன் - பிரமதேவன்; **அனைய** - மறைகளில் வல்லமை பொதுத் தன்மையாம்; வினைபற்றிய உவமை.

எடுத்த - ஏந்திய. **பூமருவு - பூ** - நிறைகுட நீரினுள் இடும் புதிய மலர்கள்; **புண்ணிய நீர்** - கங்கை - காவிரி முதலிய புண்ணிய தீர்த்தங்கள். **1179**

3078. **(இ-ள்)**குங்குமத்தின்...குழும- குங்குமப்பூவின் கொழுவிய சேருகிய சந்தனக் குழம்பினை அமைப்பவர்களுடைய இனங்கள் கூட; பொங்குவிரை...தொகை விரவ-மிக்க மணமுடைய புதிய வாசனைப்பண்டங்கள் கூட்டிய கலவையின் தூபப் புகை எடுப்பவர்களின் கூட்டம் பொருந்த; துங்க நறும்...நெருங்க - உயர்வுடைய நறுமணமுள்ள கற்பூரச் சுண்ணத்தை யிடிப்போர்கள் நெருங்க; எங்கும்...பெருக- எவ்விடத்தும் மலர்களாலாகிய பிணையல் முதலிய பலவேறு மாலைகளைத் தொடுப்பவர்களின் கூட்டங்கள் மிகப் பெருக;

(வி-ரை) குங்குமத்தின்...கூட்டு - குங்குமப்பூவினைப் பனிநீர்பெய்து பச்சைக்கருப்பூரம், கோரோசனை, புழுகு, கத்தூரி இவை கூட்டிக் குழம்பாக அரைத்த சந்தனம்.

பொங்கு விரைப் புதுக் கலவைப் புகை எடுப்போர் - மணமுடைய அகில் தேவதாரு சந்தனம் குங்கிலியம் முதலிய பண்டங்களைப் புதிதின் அமைத்து விதிப்படி கூட்டிய

3079. இனையபல வேறுதொழி லெம்மருங்கு நிரைத்தியற்று
மனைவளரு மறுகெல்லா மணவணிசெய் மறைமூதூர்
நினைவரிய **பெருவளங்க ணெருங்குதலா னிதிக்கோமான்**
றனையிறைவர் தாமேவச் சமைத்ததுபோ லமைந்துளதால். 1181

தசாங்கம் என்றார் நூலர். இங்குக் கலவை எனப்பட்டது. **எடுப்போர்** - புகைக் கலயங்களில் ஏந்துவோர்.

கற்பூரச் சுண்ணம் - இது திருமஞ்சனத்துக்காகும் பொற்சுண்ணம் எனப்படும். **இடிப்போர்** - இதனுள் உரிய பண்டங்களை இடித்துக் கூட்டுதல் வழக்கு. "ஆடப் பொற்சுண்ண மிடித்தும் நாமே" (திருவா); **நெருங்க** - இத்தொழில் செய்வோர் பலர் கூடிநெருங்கி விரைவு செய்தல் குறிப்பு; **கற்பூரம்**-பச்சைக் கற்பூரம்.

மலர்ப்பிணை புனைவோர் - பிணை - பிணையல், தாமம், கண்ணி, இண்டை முதலிய பல வேறுவகை மாலைகளையும் குறித்தது. **ஈட்டங்கள் பெருக** - பலவேறு இடத்துப் பலர்பலராக இத்தொழில் செய்யவேண்டுதல் குறிப்பு. **எங்கும்** - என்றதுமிது.

செழுஞ்சேற்றின்—என்பதும் பாடம். 1180

3079. **(இ-ள்)** இனைய பல...மறைமூதூர் - இவ்வாறுகிய பலவகைப்பட்ட வெவ்வேறு தொழில்களை எல்லாப் பக்கத்தும் ஒழுங்குபடச் செய்கின்ற மனைகள் வளரும் வீதிகளிலெல்லாம் மணவணியை விளங்கக் காட்டும் மறையவர்கள் வாழும் அவ்வூர்; நினைவரிய...நெருங்குதலால் - நினைத்தற்குமரிய பெரிய வளங்கள் நெருங்கிய அதனுலே; நிதிக் கோமான்...அமைந்துளதால் - குபேரனை இறைவர் ஏவியதனுல் அவனே வகுத்ததுபோல அமைந்துள்ளதாம்.

இவ்வைந்து பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) மறுகெல்லாம் மண அணிசெய் மறைமூதூர்-பிள்ளையாரது திருமண முயற்சிகளும் தொழில்களும் அவரது திருமாளிகையின் மட்டுமன்றிச், சுற்றத்தார் மட்டுமன்றி, நகரெங்கும் இயன்றன; பிள்ளையாரது திருவவதாரச் சிறப்புப்பற்றிக் கூறியவை ஈண்டு நினைவு கூர்தற்பாலன.

நினைவரிய...அமைந்துளதால் - நினைவரிய - நினைத்தற்குமரிய எனச் சிறப்பும்மை விரிக்க. நெருங்குதலால்- மூதூர் - அமைந்துளது என்று கூட்டுக. பெருவளங்கள் நெருங்குதலாலே இஃது உலக மக்களாற் செய்தற்கரிது; நிதிக்கோமான் சமைக்கவே அமையும்; அவனும் சிவபெருமானுடைய ஏவலின்றிச் செய்யானுதலின் இறைவர் ஏவ அவன் சமைத்ததுபோலும் என அமைந்தது என்பதாம். தம் ஞானப் பிள்ளையாரது திருமணமாதலானும், தமதுலகு பெறுவிக்கும் சிவமணமாதலானும் இவ்வமைப்புக்களை இறைவரே ஏவி அமைப்பித்தனர் என்பது குறிப்பு. "இரு நிதிக் கிழவன் முனே-மொழிவழி யேவல்கேட்ப" (465); "நம்ப ரருளினு லளகை வேந்தன், றன்பெரு நிதியந் தூர்த்துத் தரணிமேல் நெருங்க...மன்பெருஞ் செல்வமாக்கி வைத்தனன்" (844) என்றவற்றை இங்கு

வேறு

3080. **மாறி** லாநிறை வளந்தரு புகலியின் **மணமீக்**
கூறு நாளின்முன் னாளினில் வேதியர் குழாமும்
நீறு சேர்திருத் தொண்டரு நிகரிலா தவருக்
காறு சூடினு **ரருட்டிருக் காப்புநா ணணிவார்,** 1182

நினைவுகூர்க.

மனை வளரும் மறுகு எல்லாம் - எவ்வெவ்வகை மக்கள் வாழும் எவ்வெவ் வீதிகள் யாவையும்.

நிறைந்துளதால்—என்பதும் பாடம். 1181

3080. (இ-ள்) மாறிலா... புகலியின் - ஒப்பற்ற நிறைந்த வளம் தருகின்ற சீகாழிப் பதியில்; மணமீக்கூறு நாளின் முன்னுளினில் - திருமணத்தினை மேற்கொள்ளும் திருநாளின் முன்னுளிலே; வேதியர் குழாமும் நீறுசேர் திருத்தொண்டரும்- மறையோர் கூட்டமும் திருநீறு அணிந்த திருத்தொண்டர்களும் கூடி; நிகரிலாதவருக்கு...அணிவார் - ஒப்பற்றவராகிய பிள்ளையாருக்குக் கங்கையைத் தலையிற் சூடிய இறைவரது அருள் பொருந்திய திருக்காப்பு நாணினை அணிவார்களாகி,

(வி-ரை) மாறிலா வளம் தரு-நிறைவளம் தரு - என்க. **மாறிலா வள**மாவது சராசரங்களெல்லாம் சிவம்பெருகத் தரும் தன்மை; **நிறைவ**ளமாவது திருமணத்தின் பொருட்டு வந்த எண்டிசையினுள்ளோரும் கொணர்ந்த ஈண்டு வளமும், சீகாழியின் இயல்பாயுள்ள உலகியல் வளமும் ஆம்; **தருதல்** - பெறுதற்கிடமாதல்,

மணமீக்கூறு நாள் - மணஞ்செய் திருநாள்; **மீக்கூறும்** - மேற்கொள்ளும்.

முன்னுளினில் - காப்பு நாண் அணிவார் - திருமண நாளின் முன்னுளில் காப்பு நாண் அணிதல் மரபு; மணவினைச் சடங்குகள் காப்புநா ணணிதலுடன் தொடங்கு கின்றன; காப்புநாண் கட்டுதல் மணமகன், மணமகள் இருவர்பாலினும் நிகழ்வது. "கற்பகப் பூங்கொம் பன்னுர் தம்மையும் காப்புச் சேர்த்துப், பொற்புறு சடங்கு முன்னர்ப் புரிவுடன்செய்த வேலை" (3120); இவ்வாறு உரியபடி காப்புச் சேர்த்த பின்னர் அதனைப்பின்னர்ச் சடங்குடன் அவிழ்க்கின்ற அளவும் சிவனது காவல் சிறக்கப்பெற்றுள்ளார் என்றும், சிவமுஞ் சத்தியுமாகவே அவ்விருவரும் பாவிக்கப்பெறுவர் என்றும் உலகியலின் தொடக்குக்கள் ஒன்றும் அவரைச் சாரா என்றும் கொள்வது மரபு. **காப்பு** - காவல்பெறு நிலை; "கண்ணுதலான் றன்னுடைய காப்புக்களே" (தேவா); மேல் **அருட்டிருக் காப்புநாண்** - என்பதும் காண்க.

வேதியர் குழாமும் - திருத்தொண்டரும் - வேதியர் - பிள்ளையாரது உலகியல் நிலைச்

3081. **வேத** வாய்மையின் **விதியுளி வினையினால் விளங்க**
ஓத நீருல கியன்முறை யொழுக்கமும் பெருகக்
காத னீடிருத் தொண்டர்கண் மறையவர் கவினார்
மாதர் மைந்தர்பொற் **காப்புநா ணகர்வலஞ் செய்தார்.** 1183

சுற்றம்; **திருத்தொண்டர்** - சிவச்சார்பு பற்றிய அவரது சுற்றம்; ''சுற்றம் மாசிலா வீச னன்பர்'' (திருவிளை புரா); என்பவர் உலகத்துடன் விடும் சுற்றமும், பின்னவர் என்றும் விடாத சுற்றமுமாம் என்பது ''பெருங்கிளைக்குத் தகுதியினாற் றலையளிசெய்து... அடியவர்க ளுடனமர்ந்து'' (3050) என முன் குறித்ததும், பிறவும் காண்க. **நீறுசேர்** - வேதியர்களும் நீறு சேர்வோராயினும் தொண்டர்க்கு நீறு சிறப்புரிமை என்பார் நீறுசேர் திருத்தொண்டர் என்றார். **திரு**-என்றது சிவச் சார்பு.

நிகரிலாதவர்-பிள்ளையார் ''தாவில்தனிச் சிவஞான'' நிறைவு பெற்றாராதலின், சிவத்தன்மை பெற்றனர்; ஆதலின் ஓர் உவமனில்லியாகிய சிவம் போன்றார்.

அணிவார் நகர்வலஞ் செய்தார் என வரும்பாட்டுடன் முடிக்க. **அணிவார்**- அணிவாராய்; முற்றெச்சம். **காப்புநாண்**-கௌதுகபந்தனம் என்பர். 1182

3081. (இ-ள்) வேத வாய்மையின்... விளங்க - வேத வாய்மையிற் கூறும் விதிகள் இச்செயலால் விளங்கவும்; ஓத...பெருக -கடல் சூழ்ந்த உலகநடையின் முறையான வொழுக்கங்களும் பெருகவும்; காதல்...வலஞ் செய்தார் -அன்புமிக்க திருத்தொண்டர்களும் மறையோர்களும் அழகிய மகளிர்களும் ஆடவரும் கூடிப்பொன்னாலாகிய காப்பு நாணினை நகர்வலஞ் செய்வித்தார்கள்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) விதியுளி - விதித்த நெறிகளின் வழக்கு.

வேத வாய்மையின் - வேதங்களின் சத்தியவாக்காக விதித்த.

வினையினால் விளங்க-இவர்கள் இயற்றும் சடங்குகளால் விளக்கம் பெற.

உலகியன்முறை யொழுக்கமும் பெருக - வேதங்களின் விதிமுறை என்பது மட்டுமேயன்றி உலகியலிலும் அவை முறைப்பட்டு வரும் சீல ஒழுக்கமுமாம் என்பது. ''உலகியல் வேதநூ லொழுக்கம்'' (2718); சிவஞானப் பிள்ளையாரது திருமணத்துக்கு இச்சடங்குகளினாலாய பயன் ஒன்றுமில்லை எனவும், இவை ஈண்டு வேண்டப் படுவனவல்ல வெனவும் குறிப்பார், வேதவிதியுளி வினையினால் விளங்கவும் உலகியல் முறை ஒழுக்கம் பெருகவும் இதனைச் செய்தார் என்றார். ''சாக்கிரத்தே அதீதத்தைப் புரியுந் தமக்கு இடையூறு சிறிது மணுகாமை அறிந்தாராயினும் ஆன்றோராசாரம் பாதுகாத்தற் பொருட்டும், மாணுக்கர்க் கறிவுறுத்தற் பொருட்டும் முதற்கண் இடையூறு நீக்குதற்குரிய விநாயகக் கடவுளை வாழ்த்துவதாகிய மங்கல வாழ்த்துக் கூறுகின்றார்'' என்று மெய்கண்டதேவர் தாம் அருளிய சிவஞானபோத நூலின் மங்கல வாழ்த்துக் கூறியதனைப்பற்றி மாதவச் சிவஞான முனிவர் (சிற்றுரை) விளக்கஞ் செய்தமை ஈண்டு

3082. நகர்வ லஞ்செய்து புகுந்தபின் னவமணி யணிந்த
புகரில் சித்திர விதானமண் டபத்தினிற் பொலியப்
பகரும் **வைதிக விதிச்சமா வர்த்தனப் பான்மை**
திகழ முற்றிய செம்மலார் திருமுன்பு சேர்ந்தார். *1184*

நினைவுகூர்தற்பாலது.

மறை வழக்கம் விளங்கி ஓங்க அவதரித்த பிள்ளையார் அந்த வேத ஒழுக்கம் நிலைபெறற் பொருட்டே திருமணஞ் செய்தருள உடன்பட்டருளினு ராதலின் (3056-3057) தமது மணத்தில் மறை விதியுளி வினையினுல் விளங்கவும் உலகியல் முறை ஒழுக்கம் பெறவும் மறைச் சடங்குகளுக் குடன்படவேண்டியதாயிற்று; இன்றேல் உலகம் மயங்கி மறைவிதிச் சடங்குகளை விட்டு உலகியல் ஒழுக்கங் குன்றக் காரணமாகும் என்க.

கவினுர் மாதர் மைந்தர்கள் - மங்கல முறையில் சதிபதிகளாக வருவோர்.

காப்புநாண் நகர்வலஞ் செய்தார் - இஃது இச்சடங்கின் மரபு. **செய்தார்** - செய்வித்தார்; விவ்விகுதி தொக்குநின்ற பிறவினை. *1183*

3082. (இ-ள்) நகர்...பின்-முன் கூறியவாறு நகர்வலம் செய்வித்துத் திருமாளிகையிற் புகுந்த பின்பு; நவமணி... பொலிய - நவமணிகளால் அணியப்பட்ட குற்றமற்ற சித்திரங்களால் விதானமமைக்கப்பட்ட மண்டபத்திலே விளங்கும்படி; பகரும்... சேர்ந்தார் - நூல்களால் எடுத்துச் சொல்லப்படும் வைதிக விதிகளின்படி சமாவர்த் தனமாகிய தன்மையினை விளங்கும்படி முற்றிய பிள்ளையாரது திருமுன்பு வந்து சேர்ந்தார்கள்.

(வி-ரை) புகுந்தபின்-திருமுன்பு சேர்ந்தார் என்க. **புகுந்த** - திருமாளிகையினுள்ளே புகுந்த.

நவமணி அணிந்த - சித்திர விதானம் - நவமணி அணிந்த - நவமணிகளாலும் அணி செய்யப்பட்ட; அலங்கரிக்கப்பட்ட. விதானத்தின் அமைந்த சித்திரங்கள் நவமணிகளால் அணி செய்யப்பட்டன என்க. **விதானம்**-மேற்கட்டி முதலியவை; இவற்றிற் சித்திரங்கள்-ஓவியங்கள்-தீட்டுதலும், அவற்றை மணிகளால் அணிதலும் அந்நாள் வழக்கு. **பொலிய (வீற்றிருந்த) செம்மலார் திருமுன்பு** என்க.

வைதிக விதிச் சமாவர்த்தனப் பான்மை திகழ முற்றிய-சமாவர்த்தனமாவது வேதாத்தியயனம் நிறைவு செய்து முடித்துப் பிரமசரிய விரதநிலை முடிந்தபின் கிருகத்த நிலை புகுமுன் செய்யும் அதி வைதிகச் சடங்கு; ஒவ்வோர் ஆச்சிரமத்திலும் தங்குதல் ஒருநிலை எனப்படும்; ஆயுள் முழுவதும் நிலைமாருது ஒரே நிலையில் தங்குதல் நைட்டிகம் எனப்பெறும்; நிலைத்து நிட்டா பரராய் இருக்கும் தன்மை; நிட்டையுடன் பொருந்தியது நைட்டிகம். ஏனையோர் ஓர் ஆச்சிரமத்தினின்றும் அடுத்ததிற் புகும்போது முன்னதற்கு (பூர்த்தி செய்யும்) நிறைவாக்கும் கிரியைகளைச் செய்து பின்னதனைத் தொடங்குதல் வேண்டும் என்பது **வைதிக விதி. சமாவர்த்தனம்**-மணமாவதற்குக் காரணமாகின்ற உரிமை.

சமாவர்த்தனப் பான்மை - முற்றிய - இங்குப் பிள்ளையார்பால் மூன்றுண்டளவில்

3083. **செம்பொ னின்பரி கலத்தினிற் செந்நெல்வெண் பரப்பின்**
வம்ப ணிந்தநீண் மாலைசூழ் மருங்குற வமைத்த
அம்பொன் வாசநீர்ப் பொற்குட மரசிலை தருப்பை
பம்பு நீள்சுடர் மணிவிளக் கொளிர்தரும் பரப்பில். *1185*

முற்றிய சிவஞான விளக்கநிலை பெறுதலின் ஆச்சிரமம் பற்றிய விதிகளும் சடங்குகளும் வெறும் உபசாரவளவில் மட்டும் அமைவன என்பார் **பான்மை - முற்றிய** என்றார். பிள்ளையாரது உபநயன நிகழ்ச்சியின் வரலாறுகளை ஈண்டு நினைவுகூர்க; **முற்றிய**-தாமாகவே இயல்பால் முற்றியிருந்த.

சேர்ந்தார் - தொண்டர்கள் முதலியோர் (3081). **1184**

3083. (இ-ள்) செம்பொனின்...பரப்பின் - செம்பொற் றட்டிலே செந் நெல்லாலாகிய வெண்பரப்பின் மேல்; வம்பணிந்த...தருப்பை - வாசனை பொருந்திய நீண்ட மாலைகள் இருமருங்கும் சூழ அமைக்கப்பட்ட அழகிய வாசனையுடைய நீர் நிறைந்த பொற்குடமும் அரசிலையும் தருப்பையும்; பம்பு...பரப்பில் - பரவிய நீண்ட ஒளியுடைய அழகிய விளக்கும் விளங்கிய பரப்பினிலே;

(வி-ரை) இப்பாட்டாற் காப்புநாண் சாத்துதலும், சாத்துதற்குரிய சடங்கினுக்கு வேண்டிய பொருள்களும், அவற்றின் அமைதியும் கூறுகின்றார்.

பொற் பரிகலத்தில் நெல் பரப்புதலும், அதன்மேல் மாலை சூழ்ந்த அழகிய நிறைகுடத்தினை அரசிலை தருப்பையுடன் உரியபடி அமைத்து வைத்தலும் மணி விளக்குக்கள் பரவ விளங்கவைத்தலும், வேதமோதுதலும் முதலிய இவை இதற்குரிய செயல்களாம்.

பரிகலம்-பாசனம்; தட்டு. **செந்நெல் வெண் பரப்பு** - செந்நெல்லே இங்கு ஏற்கும் மரபும் தகுதியும் பற்றி முன் அரிவாட்டாய நாயனர் புராணத்தும், பிறண்டும் உரைத்தவை நினைவு கூர்தற்பாலன. செந்நெல் வெண்பரப்புச் செய்து அதன் மேல் நிறைகுடம் தாபித்தல் மரபு; கலசத்துக்கு நெற்பரப்பு ஆதனம் என்ப.

பொற் பரிகலம் - நெற்பரப்புச் செய்யும் இடம்.

வம்பு - வாசனை; **வம்பணிந்த......தருப்பை**-நெற்பரப்பின் மேல் தாபிக்கும் நிறைகுடம் வைக்கும் முறை.

விளக்கு ஒளிர்தரும் பரப்பு - விளக்குக்கள் ஒளிசெய்து விளங்கும் பரவிய இடம் - திருமுற்றம். **பம்பு** - பரவிய. **1185**

3084. (இ-ள்) நாத...விம்மிட-இயங்களின் நாதத்தாலாகிய மங்கல முழக்குடனே நல்ல தவமுனிவர்களது வேதகீத ஒலியும் நிறைய; விரைகமழ்...மேவி - மணங் கமழும் வாசமுடைய மலர்களும், சாந்தும், அணிகளும், அழகிய துகிலும் புனைந்த புண்ணியத்தினைப்போல அழகிய மலரமளியின்மேல் எழுந்தருளியிருந்த பிள்ளையாரது

3084. **நாத** மங்கல முழக்கொடு நற்றவ முனிவர்
வேத கீதமும் விம்மிட விரைகமழ் வாசப்
போது சாந்தணி பூந்துகில் புனைந்தபுண் ணியம்போல்
மீது பூஞ்சய னத்திருந் தவர்முன்பு மேவி, 1186

3085. **ஆர்வ** மிக்கெழு மன்பினுன் **மலரய னனைய**
சீர்ம றைத்தொழிற் சடங்குசெய் திருந்து**நூன் முனிவர்**
பார்வ ழிப்பட வரு**மிரு வினைகளின் பந்தச்**
சார்பொ ழிப்பவர் திருக்கையிற் காப்புநாண் சாத்த, 1187

திருமுன்பு சேர்ந்து;

(வி-ரை) நாத மங்கல முழக்கொடு -வேத கீதமும் விம்மிட - மங்கல இயங்களின் முழக்கமும் வேத ஒலியும் மிக்குக்கூடி எழுதல் மறையவர்களுள் மங்கலங்களின் நிகழும் மரபு.

விரைகமழ்...புண்ணியம்போல் - சிவபுண்ணியமே ஒருருவெடுத்து மாலையும் சாந்தும் அணிகலன்களும் துகிலும் புனைந்து எழுந்தருளியிருத்தல்போல; புண்ணியம்போல இருந்தவராகிய பிள்ளையாரின் முன்பு என்க. **விரை** - நன்மணம் என்ற பொருளில் வந்தது. **விரைகமழ் வாசம்** - நன்மணம் மிகும் வாசனை. விரையும் போதும் என்றுகொண்டு விரித்து, **விரை** புழுகு - நானம் முதலியவை என்றுரைத்தலுமாம்.

பூஞ்சயனம் - பூம்பள்ளி; மலராசனம்;பூஞ்சயனத்து மீது என்க; **இருந்தவர்** - பிள்ளையார். **பூஞ்சயனத்திருந்தவர்** - என்றதனுல் அதிகாலை குறிக்கப்பட்டது; மேல் சூரியனுதயம் கூறுதல் காண்க.

மேவி - முனிவர் - சாத்த - என மேல்வரும் பாட்டுடன் முடிக்க.

புண்ணியம் - ஈண்டுச் சிவபுண்ணியம் குறித்தது; "புண்ணிய முதலே" (1991). **விம்முதல்** - மிக்கெழுதல். 1186

3085. (இ-ள்) ஆர்வம்...அன்பினுல்-ஆசை மிக்கு எழுகின்ற அன்பினுலே; மலரயன்...முனிவர்-தாமரையில் இருக்கும் பிரமதேவனைப் போன்ற சிறந்த மறை விதித் தொழில் புரியும் சடங்குகளைச் செய்கின்ற திருந்தும் நூல்வல்ல முனிவர்களாகிய வேதியர்; பார்வழிப்பட....சாத்த - உலகில் பிறவி எடுக்க வரும் இருவினைகளின் பந்தச் சார்பினை நீக்குபவராகிய பிள்ளையாரது திருக்கையிலே காப்பு நாணினை அணிய;

(வி-ரை) ஆர்வம் - ஆசை; **அன்பு** - ஆசைக்குக் காரணம்; ஆர்வமாய் முதிர்ந்த அன்பு.

மலரயன் - பிரமதேவன்; **அனைய** - மறைச்சடங்கு செய்யும் தொழிற்றிறம் பற்றி வந்த உவமம்; வினைபற்றி எழுந்தது தெய்வயானை யம்மையார் திருமணத்திலும், மீனுட்சியம்மையார் திருமணத்திலும் பிரமதேவன் மணவேள்விச் சடங்கு செய்த வரலாறுகள்

3086. **கண்ட மாந்தர்கள் கடிமணங் காணவந் தணைவார்**
கொண்ட வல்வினை யாப்பவிழ் கொள்கைய வான
தொண்டர் சிந்தையும் வதனமு மலர்ந்தன; சுருதி
மண்டு மாமறைக் குலமெழுந் தார்த்தன மகிழ்ந்தே. *1188*

நினைவு கூர்தற்பாலன. **சீர் மறைத்தொழிற் சடங்கு செய்** - வேதவிதிகள்.

திருந்து நூல் - வேதங்களும் அவற்றின்வழி வரும் கற்பசூத்திரங்களும். **திருந்து** - உலகம் திருந்துதற்கேதுவாகிய. **முனிவர்** - மறைவல்லவர்; மறையோர்.

பார்வழிப்பட - உலகின் வழியிற்பட; பிறவியிற் சேர. **வரும் இருவினை** - பிறவிக்குக் காரணம் இருவினை. **பந்தச் சார்பு** - கட்டுகின்ற தன்மையுடைய தொடக்கு.

ஒழிப்பவர் - உலகு உயிர்களின்மேல் அடராது நீக்குபவர் பிள்ளையார். பின்னர்த் திருமண நிகழ்ச்சியில் "ஊனமாம் பிறவி தீர யாவரும் புகுக" (3146) என்றருள்வதும், "வருமுறைப் பிறவி வெள்ளம் வரம்புகா ணாத ழுந்தி, யுருவெனுந்துயரக் கூட்டிலுணர் வின்றி மயங்கு வார்கள்...பிறவி நீங்க"ச் (3147) சிவச்சோதியினுட் புக்கு வீடு பெறுவதும் குறிப்பு. **பார்வழிப்பட** - இவ்வாறன்றிப், பார் - உலகம்; **வழிப்பட** - நல்வழிப்படும் பொருட்டு; சார்பு ஒழிப்பவர் என்று கூட்டி உரைத்தலுமாம். காப்பு நாண்சாத்தக் கண்டவரின் யாப்பு (நாண்) அவிழ்ந்தது என்பது முரண் அணிநயம் (வ.சு.செ.)

சார்பு ஒழிப்பவர் திருக்கையிற் காப்புநாண் சாத்த - ஏனை மணச் சடங்குகளில் காப்புநாண் சாத்துதலாகிய சடங்கு மணத்துக் கேதுவாகிய வினைப்பிறவிக்கு வித்தாக விளையும்; ஆயின் இங்குப் பிள்ளையார் திருக்கையிற் காப்புநாண் சாத்த நிகழும் மணம் அவர்க்கு வினைத் தொடர்பை விளையாமைமட்டுமன்றி, அந்த மணத்தில் அணைந்த உலகுயிர் அனைத்திற்கும் வினைச் சார்பினை ஒழித்தற் கேதுவாயிற்று என்ற குறிப்புப்பெற இங்கு இத்தன்மையாற் கூறினர். பிள்ளையாரது திருவவதார உள்ளுறையும், மேல்வரும் பாட்டின் குறிப்பும் கருதுக. **காப்புநாண் சாத்துதல்**- நாணினுற் கட்டும் தொழிலாதலின் அஃது ஈண்டு அவ்வாறன்றி உண்மையிற் கட்டு அவிழ்க்கும் தன்மையதாயிற்று என்ற குறிப்பும் காண்க.
1187

3086. (இ-ள்) கண்ட மாந்தர்கள்-(காப்புநாணைச் சாத்தியதனைக்) கண்ட மக்களும்; கடிமணம்...அணைவார் - கடிமணத்தினைக் காணும்பொருட்டு வந்து அணைபவர்களும்; கொண்ட...தொண்டர்-பற்றிய வலிய வினைக்கட்டினை அவிழ்த்து நீக்கும் கொள்கையினை உடையவர்களாகிய தொண்டர்களும் ஆகிய இவர்களது; சிந்தையும்...மலர்ந்தன -சிந்தையும் முகங்களும் மலர்ச்சியடைந்தன; சுருதி...ஆர்த்தன சுருதிகள் நிறைந்த பெருமறைக்குலங்கள் மேலோங்கி முழங்கின; மகிழ்ந்தே - மகிழ்ச்சி பெற்றே.

இந்நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

3087. **நிரந்த** கங்குலி னிதிமழை விதிமுறை யெவர்க்கும்
புரந்த **ஞானசம் பந்தர்தாம்** புன்னெறிச் சமய
அரந்தை வல்லிரு ளகலவந் **தவதரித் தாற்**போற்
பரந்த பேரிருள் துரந்துவந் **தெழுந்தனன் பகலோன்.** *1189*

(வி-ரை) மாந்தர்களும், அணைவாரும், தொண்டர்களும் ஆகிய இவர்களுடைய என்று உம்மைகளும் ஆக்கச்சொல்லும் ஆறனுருபும் விரிக்க.

கண்ட மாந்தர்கள் - காப்புநாண் சாத்தும் சடங்கினைக் கண்ட மக்கள்.

மணங் காண வந்தணைவார் - காப்புநாண் சாத்துதலைக் கண்டவர்களின் வேறுகித் திருமணத்தினைக் காண எண்ணி வருவோர்கள். **கடிமணம் - கடி** - செல்வம்; திரு. காண்போரது பிறவிப் பந்தச் சார்பினைக் கடியும் மணம் என்றதும் குறிப்பு.

கொண்ட - பற்றிக்கொண்டு பிறவிக்கேதுவாகிய.

யாப்பு - பாசப் பிணிப்பு. **அவிழ் கொள்கைய** - பாசம் வலிகெட்டுப் போதலன்றிக் கெடுதலில்லை யாதலின் **யாப்பு** அறும் என்னுது, **அவிழ் கொள்கை** என்றுர்; **அவிழ்தல்**-இறுகப் பிணிக்கும் தன்மை நீங்குதல்; **கொள்கைய** - அகரவீற்றுப் பல வறிசொல்; **ஆன** - ஆக்கச் சொல் மணங் காணப்பெற்ற காரணத்தாலாகிய விளைவு குறித்தது; **கொள்கை** - நிலைமை; **கொள்ளுதல்** - மேற்கொள்ளுதல் - பெறுதல்.

சிந்தையும் வதனமும் மலர்ந்தன - சிந்தை மலர்தல் முகமலர்ச்சிக்குக் காரணமாம் என்பது. **வதனம்** - முகம்.

சுருதி - மறைக் குலம் - ஆர்த்தன - சுருதிகள் நிறைந்த மறைக்குலம் என்றும், சுருதியும் அவற்றின் வழி வருவனவாகிய சூத்திரம் முதலியனவும் என்றும் உரைக்க நின்றது. **ஆர்த்தல்** - முழங்க எடுத்து ஓதப்படுதல் குறித்தது. **குலம்**-வழி வரும் தொகுதி என்றதாம்.

மகிழ்ந்தே - மலர்ந்தன என்றும், **மகிழ்ந்தே ஆர்த்தன** என்றும் ஈரிடத்தும் கூட்டியுரைக்க இறுதியில்வைத்தோதினர்.

வல்வினைப் பரப்பவிழ்—என்பதும் பாடம். *1188*

3087. (இ-ள்) நிரந்த...புரந்த - பரவிய இரவிலே மறைவிதி முறைப்படி நிதிமழையாக எல்லாருக்கும் பொழிந்து அருளிய; ஞானசம்பந்தர் தாம்...போல் - திருஞான சம்பந்த நாயனுர் முன்னர்ப் புன்னெறிகளாகிய புறச்சமயங்களின் துன்பந் தரும் வலிய இருள் நீங்க வந்து அவதரித்ததுபோல; பரந்த...பகலோன் - பரவிய பெரிய இருளை நீக்கி வந்து சூரியன் எழுந்தனன்.

(வி-ரை) இப்பாட்டு முதல் ஏழு திருப்பாட்டுக்கள் சூரியனும், திசைகளும், ஐம்பூதங்களும், பிள்ளையாரது திருமணச் சிறப்பினுட் கலந்து மேற்கொண்ட நிலைகளை

3088. **அஞ்சி றைச்சுரும் பறைபொழிற் சண்பையாண் டகையார்**
தஞ்சி வத்திரு மணஞ்செயத் தவஞ்செய் நாளென்று
மஞ்ச னத்தொழில் புரிந்தென மாசிருள் கழுவிச்
செஞ்சு டர்க்கதிர்ப் பேரணி யணிந்தன **திசைகள்.**

முறையே எடுத்துரைக்கின்றன; இவற்றை அவ்வகையே ஒரு தொடர்புபடுத்தி உரைக்கலாமாயினும், தனித்தனி அவ்வவற்றின் செயல்கள்பற்றி வெவ்வேறு வினைகள் தந்து ஆசிரியர் முடித்துக் கூறியருளியமையால் அவ்வாறே தனித்தனி முடிபாக உரைக்கப்பட்டன; ஆயினும் தொடர்ந்த கருத்துப்பற்றி உய்த்துணர்ந்துகொள்க; **திசைகள்** (3088) என்றதனாலும் செஞ்சுடரினால் விளக்கம் பெறுதலாலும் உயிர்களும் மதியமும் அடக்கிப், பகலோன்,மதியம், உயிர்,வையம் (நிலம்), புணரி (நீர்),வன்னி(நெருப்பு), மருத்து(காற்று),விசும்பு (ஆகாயம்) என எண்வகையாய்ப் புணர்ந்து இறைவன் நின்ற திருமேனி நிலைகளும் கொண்ட சிறப்புக்காட்சி உணர்த்தப்பட்டதென்ற குறிப்பும் காண்க. "நிலனீர் நெருப்புயிர் நீள்**விசும்பு** நிலாப்**பகலோன்**, புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்" (திருவா) என்ற மணிவாசகம் ஈண்டு நினைவு கூர்தற்பாலது; ஈண்டு ஒடுக்க முறையில்வைத் தோதியது பிள்ளையார் உடன் நின்றவர்களுடனே இறைவரது திருவருள் நிறைவினுள்ளே புக்கொன்றியுடனாகும் குறிப்புணர்த்தியதும் காண்க.

நிரந்த கங்குலின் - நிரந்த - தொடர்ந்து வந்த இரவில்; காப்புநா ணணிந்த பகலைத் தொடர்ந்த இரவு; அன்றிரவு.

விதிமுறை நிதிமழை - எவர்க்கும் புரந்த - சுருதிகளின் விதிப்படி தானங்கள் மழைபோலச் சொரிந்து இயற்றிய; இவை திருமணத்தின் பொருட்டுப் புறப்படுமுன் இயற்றவேண்டிய விதிமுறைகளாம் என்ப. இதற்கு இவ்வாறன்றிப் பரந்த சமண இருளினிடத்து வேத விதிகளை மழைபோலப் பெய்தீந்தருளிய என்ற பொருள்பட உரைத்தனர் முன் உரைகாரர்கள். **புன்னெறிச் சமய அரந்தை வல்லிருள் அகல** என மேலும் வருதலால் அதன் பொருத்தம் ஆராயத்தக்கது.

அவதரித்தாற்போல் - பகலோன் எழுந்தனன் - என்று கூட்டுக; வினைபற்றிய உவமம். முன்னாளில் (பதினாறுண்டுகளின் முன்) பிள்ளையார் அவதரித்ததுபோல் அன்று பகலோன் எழுந்தனன். பிள்ளையார் புன்னெறிச் சமய வல்லிருள் அகல வந்து அவதரித்தருளினர்; அன்று பகலோன் பரந்த பேரிருள் துரந்துவந்தெழுந்தனன். "சேம வுதயப் பரிதியிற் றிகழ்பிரானை" (1939) என இக்கருத்தினை முன்னர் ஒரு வகையால் உவமானமாகக் குறிப்பிடப்பட்ட பரிதி, ஈண்டு உவமேயமாக வைக்கப்பட்ட நிலைக் குறிப்பும் கருதுக. **பரந்த பேரிருள்** - உலகிற் பரவிய பெரிய புறவிருள். *1189*

3088. (இ-ள்) அஞ்சிறைச் சுரும்பு... என்று - அழகிய சிறகுகளை உடைய வண்டுகள் இசைபாடும் பொழில்கள் சூழ்ந்த சீகாழியின் ஆண்டகையாராகிய பிள்ளையார் தம் சிவத் திருமணம் செய்தற்கிடமாகத் தவஞ் செய்யப்பெறும் நாள் இஃது என்று உட்கொண்டு; **மஞ்சனத் தொழில் புரிந்தென** - திருமஞ்சனத் தொழிலினைச் செய்தல்போல்; மாசு

3089. பரம்பு தம்வயி னெங்கணு முள்ளபல் **வளங்கள்**
நிரம்ப முன்**கொணர்ந் தெண்டிசை யவர்நெருங் குதலால்**
தரங்க டந்தவர் தந்திருக் கல்லியா ணத்தின்
வரம்பி றன்பயன் காட்டுவ தொத்தது **வையம்**.

இருள்...திசைகள் - மாசு இருளைக் கழுவிப் போக்கிப் பகலோனது செஞ்சுடராகிய கதிர்களின் பேரணியினைத் திசைகள் அணிந்துகொண்டன.

(வி-ரை) இச்செய்யுள் தற்குறிப்பேற்ற அணி கொண்டது.

சிவத் திருமணம் செயத் தவஞ்செய் நாள் என்று - சிவத் திருமணம் - சிவ பெருமானாகிய நாயகனைக் கூடும் மணம். **தவஞ்செய் நாள் -** அந்நாளானது தனதெல்லையிற் பிள்ளையாரது சிவத்திருமணம் நிகழத் தவம் செய்து அப்பேறு பெற்றது.

மஞ்சனத் தொழில் - புறத்தூய்மை செய்யும்படி குளித்தல்;(இருள்) **கழுவி** என்றது காண்க; "கழுவா வுடலங் கழுவின வாக்கிய கற்பகமே" (ஆளு . பிள் - திருவந்தாதி).

மாசு இருள் - இருளாகிய மாசு = (அழுக்கு); திசைகளுக்கு மாசாவது கங்குலின் இருளே என்பது.

திசைகள் - இதனுள் உயிர்களையும் மதி (சந்திரன்) யினையும் அடக்கிக் கூற நிற்பதால்,உயிர்களுக்கு உண்**மாசு** (மலம்) என்றும், மதிக்குப் புற**இருள்** என்றும் பெறவைத்து **மாசு - இருள்** என்று கூறிய குறிப்பும் காண்க.

செஞ்சுடர்க் கதிர்ப் பேரணி - செஞ்சுடர் - சூரியன்; கதிராகிய அணி. **செஞ்சுடர் -** உதய சூரியனது கதிர்கள் செம்பொன்னிறங் காட்டி ஒளி தருதலின் **பேர் அணி** என்றார். **அணிந்தன -** அணியாகப் பூண்டுகொண்டன. *1190*

3089. (இ-ள்) பரம்பு...கொணர்ந்து - பெருகிய தம்மிடத்திலே எவ்வெவ்விடங்களிலும் உள்ள பல வளங்களையும் மிகுதிப்பட முன்னே கொண்டுவந்து; எண்டிசையவர் நெருங்குதலால் - எட்டுத் திக்குக்களில் உள்ள மாந்தர்களும் நெருங்கி வந்து கூடியவதனாலே; தரம்...திருக்கல்லியாணத்தின் - ஒப்பில்லாதவராகிய பிள்ளையாரது திருக்கல்லியாணத்திலே; வரம்பில்...வையம் - அளவில்லாத தனது பயனை நிலம் எடுத்துக் காட்டுவது போன்றது.

(வி-ரை) இப்பாட்டினால் ஐம்பூதங்களினும், **வையம்** (நிலம்) மேற்கொண்ட சிறப்புக் கூறப்பட்டது. **வையம் -** நிலம்.

எண்திசையவர் தம்வயின் எங்கணும் உள்ள பல்வளங்கள் - எட்டுத் திசையில் உள்ளாரும் யாண்டு யாண்டு தத்தம் சிறப்பாகிய வளம் பொருள்களுள்ளனவோ அவ்வவற்றைத் தேர்ந்து கொணர்ந்தனர் என்பதாம்.

திசையவர் - கொணர்ந்து - நெருங்குதலால் - வையம் காட்டுவதொத்தது - என்றது

3090. **நங்கள் வாழ்வென வருந்திரு ஞானசம் பந்தர்**
மங்க லத்திரு மணவெழுச் சியின்முழக் கென்னத்
துங்க வெண்டிரைச் சுரிவளை யார்ப்பொடு சூழ்ந்து
பொங்கு பேரொலி முழக்குட னெழுந்தது **புணரி**. *1192*

எல்லாத் திசைகளின் வளங்களும் இங்கு வந்து சேர்ந்தவதனுல் நிலம் பெற்ற பயனை எடுத்துக்காட்டுவது போலும் என்றதாம்; *(Exhibition)*. **பயன்** - பயன்படு பொருள்கள் - வளங்கள்; நிலம் தான் இப்பொருள்களைப் பெற்ற பயனுவது (புவனபோகங்கள்) பிள்ளையாரது திருக்கல்யாணத்தினிற் சிறப்பிக்கும் இஃதேயாம் என்ற குறிப்பும்படத் **தன் பயன் காட்டுவது** என்றார்.

வரம்பில் தன் பயன் - புவனபோகங்கள் எனப்படும் நிலமும் பயனுமாவன எண்ணிறந்த வகையாம் என்பது.

முன் கொணர்ந்து - முன் - பிள்ளையாரது மணவெழுச்சியின் முன்பு காணக் கொணர்ந்து என்று இடமும், முன்னுளிலே எனக் காலமும் குறித்தது.

தரம் கடந்தவர் - அளவிடலாகாத் தன்மையுடையவர்; சிவஞான நிறைவு அளவுட்படாதது என்பது. ***1191***

3090. (இ-ள்) நங்கள்...முழக்கென்ன - அடியோங்களாய் வந்தணையும் நமது வாழ்வே உருவெடுத்து வந்தாற்போல வரும் திருஞான சம்பந்தரது மங்கலமாகிய திருமண எழுச்சியில் எழுகின்ற மங்கல இயங்களின் முழக்கம்போல; துங்க...சூழ்ந்து-பெரிய வெள்ளிய அலைகளோடு சுரிவளைகளின் சத்தத்துடனே சூழ்ந்து; பொங்கு...புணரி- மேன்மேல் எழும் பெரிய ஒலியாகிய முழக்கத்துடனே கடல் எழுந்தது.

(வி-ரை) இப்பாட்டினுல் ஐம்பூதங்களுள் **நீர்** என்ற பூதம் பெருங் கடலாகிய உருவுடன் மணத்தின் மேற்கொண்ட சிறப்புக் கூறப்பட்டது.

நங்கள் வாழ்வென - இறப்பு நிகழ்வெதிர்வாகிய முக்காலத்திலும் அணைவுற வந்தெழுமறிவு தொடங்கிய அடியார்களாகிய நம் எல்லாருடைய வாழ்வெல்லாம் திரண்டு ஓர் உருப்பெற்ருற் போல; "எங்களை வாழ" *(3128)* என்பதும் காண்க.

மங்கலத் திருமண எழுச்சி - மங்கலம் - இங்குச் சிவத்தன்மை குறித்தது. **"சிவத் திருமணம்"** *(3088)* என்றதும், அதுமுதல் ஆறு பாட்டுக்களினும் மணத்தின் பெருமையினை ஓரோர் அடைமொழிகளால் விளக்குதலும், இவை சுத்தமாகிய **பகம்** எனப்படும் அறுகுணங்களையும் குறிப்பா லுணர்த்திநிற்றலும் காண்க. **திருக் கல்லியாணம்** *(3089)*; **மாமண விழா** *(3091)*; **திருமணம்** *(3092)*; **மெய்த் திருமணம்** *(3093)*.

மண எழுச்சி - மணம் எழுந்து செல்லும் நிகழ்ச்சி; மணமகனும் சுற்றமும் பிறரும் விதிமுறையிற் குழாமாக மங்கல முழக்கொடு சென்று மணமகளிருக்கும் மணமனைக்குச் செல்லும் சடங்கு **எழுச்சி** எனப்படும். "அருங்கடி மணம்வந் தெய்த" *(169)*; "வள்ளலார்

3091. **அ**ளக்க ரேழுமொன் ருமெனும் பெருமையெவ் வுலகும்
விளக்கு மாமண விழாவுடன் விரைந்துசெல் வனபோற்
றுளக்கில் வேதிய ராகுதி தொடங்கிடா முன்னம்
வளர்க்கும் வேதியில் **வலஞ்சுழித் தெழுந்தது வன்னி**. *1193*

மணமவ்வூர் மருங்கணையா முன்'' (*886*).

எழுச்சியின் முழக்கு - எழுச்சியின் பொருட்டு இசைக்கும் மங்கல இயங்களின் முழக்கம்.

திரை ஆர்ப்பு - வளை ஆர்ப்பு - என்று தனித்தனிக் கூட்டுக. **வளை**-சங்கு; இங்குச் சங்குகளில் வாழும் உயிர்களின் ஓசை வளைஆர்ப்பு எனப்பட்டது. **சங்கு** - மங்கல முழக்குக்களுள் ஒன்று. ''விருப்போடு வெண்சங்க மூதாவூரும்'' (தேவா); ''சங்க மிரைப்ப' (திருவா); ''தூரியஞ் சங்க மேங்க'' (திருவிளை - திருமண -*185*).

வெண்டிரை - ஆர்ப்பு - மண முரசம்போலும் என்பது ''மாடெ லாமண முரசெனக் கடலின தொலிகவர்'' (தேவா-திருக்கேதீச்சரம்-*11*) என்ற திருவாக்கானு மறிக. **சுரிசங்கு**-சுழித்தலையுடைய சங்கு.

சூழ்ந்து - வளைந்து; சீகாழிக் கணிமையில் நெய்தனிலமும் கடற்கரையும் உள்ளமை குறிப்பு.

பொங்கு பேரொலி - பெரிய ஒலி மேன்மேலும் ஓங்கியது என்பதாம்; **ஒலி** - என்றூர் **மண எழுச்சியின் முழக்கு** என ஓர் மங்கலப் பொருள் குறித்தெழுதலால்.

முழக்குடன் எழுந்தது புணரி - பிள்ளையாரது திருமணச் சிறப்பினை மேற்கொண்டு ஒலித்துப் பயன்பெறக் கருதியது போலும் என்றது குறிப்பு.

புணரி - எல்லா நீரும் வந்து கூடுதற்கு - சேர்தற்கு - இடமாவது; கடல் **புணரி**- இங்கு **நீர்** என்ற பூதக்கூட்டங் குறித்து நின்று சீகாழியின் திருமண எழுச்சியில் ஒலித்த கடலின் மேலதாய் நின்றது. முன்னர்க் கூறியதும் மேலும் வருவனவும் காண்க. *1192*

3091. (இ-ள்) அளக்கர்...பெருமை-ஏழு கடல்களும் ஒன்றாய்க் கூடி எழுந்தன என்னும் பெருமைகொண்டு; எவ்வுலகும்...விழாவுடன் - எல்லாவுலகங்களையும் விளங்கச் செய்யும் திருமண எழுச்சியாகிய விழாவுடனே; விரைந்து செல்வன போல் - தாமும் கூடிப் பயன்பெறும் பொருட்டு விரைவாகச் செல்ல ஒருப்பட் டெழுவனபோன்று; துளக்கில்...முன்னம் - அசைதலில்லாத ஒழுக்கத்தையுடைய வேதியர்கள் ஆகுதிகளைத் தொடங்குதற்கு முன்னமே; வளர்க்கும்...வன்னி-முத்தீவளர்தற்கிடமாகிய வேதிகைகளில் தீயானது வலம்சுழித்து எழுந்தது.

(வி-ரை) இப்பாட்டினுல் ஐம்பூதங்களுள் தீயானது திருமண எழுச்சியில் மேற்கொண்ட சிறப்புக் கூறப்பட்டது.

அளக்கர் - கடல். **அளக்கர் ஏழு** - உப்புக்கடல், கருப்பஞ்சாற்றுக்கடல், கட்கடல், நெய்க்கடல், தயிர்க்கடல், பாற்கடல், நன்னீர்க்கடல் என்பவை; சப்தசாகரம் என்பது வடமொழி.

அளக்கர்...பெருமை - ஏழு கடல்களும் ஒன்றுகூடி அலைபுரண்டு பெருகிச் சென்றாற் போன்ற பெருமை; விளையும் உருவும்பற்றி வந்த உவமம்; இல்பொருளுவமை. **ஏழும்** - உம்மை முற்றும்மை.

எவ்வுலகும் விளக்கும் மாமண விழா - **விளக்கும்** - மெய்ப்பொருளிது வென்று காட்டி விளங்கச் செய்யும்; பிற்சரித விளைவுக் குறிப்பு. **விழா** - மண எழுச்சி.

விழாவுடன் விரைந்து செல்வனபோல் - எழுச்சியுடன் கூடித் தொடர்ந்து தாமும் செல்ல எண்ணி எழுவனபோல. **செல்வன**-செல்ல ஒருப்பட்டு எழுவன; வேதியர் பலரும் அவ்வவர் வேதியில் தனித்தனி இயற்றும் வேள்வித்தீ பலவாதலின் **செல்வன** என்று பன்மையாற் கூறினர். **எழுந்தது வன்னி** - வேட்போரின் தொகையாலும் வேட்கும் இடங்களாலும் தீப் பலவாயினும் தீ என்ற பொருட்டன்மையால் ஒன்றேயாதலின் **வன்னி எழுந்தது** என்று ஒருமையாற் கூறினர். அங்கங்கும் வன்னி எழுந்தது என்க.

ஆகுதி - நெய் - சமிதை முதலியவற்றால் உரிய மந்திரம் பாவனைகளுடன் செய்யப்படும் ஓமம்.

வளர்க்கும் வேதி - தீ வளர்க்கும் வேதிகை-(திண்ணை); **தீ வளர்க்கும்** என்பது மரபு. என்றும் அவியாது காத்து வளர்க்கப்படுதலும், மேலோங்கி வளரச் செய்தலும், அறங்கள் வளர்த்தற் பயனுதலும் குறிப்பு.

ஆகுதி தொடங்கிடா முன்னம் வலஞ்சுழித் தெழுந்தது - என்றும் அவியாது வளர்க்கப்படுதலின் ஆகுதி தொடங்கும் முன்பே தீத் தன்னியல்பான் எழுந்தது; "ஆங்கு வேதியி லுறுதசெந் தீவலஞ் சுழிவுற், றோங்கி முன்னையி னொருபடித் தன்றியே யொளிர" (1858) என்ற வரலாறும், ஆண்டுரைத்தவையும் பார்க்க. தீ வலஞ்சுழித்தெழுதல், நன்மணத்துடன் எழுதல், முதலியவை நன்மையின் அறிகுறி என்பர். ஆகுதியானன்றி மந்திரத்தினுல் வரும் தீ என்பதும் கருதுக.

துளக்கில் வேதியர் - **துளக்கம்** - நிலையழிதல் - அசைதல் - பிறழ்தல்; இங்கு ஒழுக்கத்திற் பிறழாமையும் சிந்தை நிலையழியாமையும் முதலியவை குறித்தது. "விலங்கலமர் புயன்மறந்து மீன்சனிபுக் கூன்சலிக்குங் காலந் தானுங், **கலங்கலிலா மனப்**பெருவண் கையுடைய மெய்யர்வாழ் கழுமலமே" (தேவா) என்று இவர் தன்மைகளைப் பிள்ளையார் அருளியமை காண்க.

செல்வன போல்-"புகைவிடும் வேள்விச் செந்தீ யில்லுடன் கொண்டு போவார்" (3100) என்று பின்னர்க் கூறும் நிலைக்கு முயல்வனபோல் என்ற குறிப்பும் காண்க.

மாமணி—என்பதும் பாடம். *1193*

3092. சந்த மென்மலர்த் தாதணி **நீறுமெய் தரித்துக்**
கந்த மேவுவண் டொழுங்கெனுங் **கண்டிகை பூண்டு**
சிந்தை தூயவன் **பர்களுடன் திருமணம் போத**
மந்த சாரியின் மணங்கொணர்ந் தெழுந்தது **மருத்து**. *1194*

3092. (இ-ள்) சந்தம்...தரித்து - அழகிய மெல்லிய பூந்தாதுக்களாகிய திருநீற்றை மெய்யிற் றுங்கிக்கொண்டு; கந்தம்...பூண்டு - கூட்டமாகப் பொருந்தும் வண்டுகளின் வரிசையாகிய உருத்திராக்க மணிக் கண்டிகைகளைப் பூண்டு; சிந்தை தூய அன்பர்களுடன் - மனந் தூயராகிய அன்பர்களுடனேகூடி; திருமணம்...மருத்து- திருமண எழுச்சியிற் கலந்து செல்ல மெல்லிய வேகத்திலே பூமணங்களை ஏந்திக்கொண்டு மருத்து எழுந்தது.

(வி-ரை) இப்பாட்டினுல் ஐம்பூதங்களுள் நான்காவது **வாயு** என்ற பூதம் மணமேற்கொண்ட சிறப்புக் கூறப்பட்டது.

சந்த மென்மலர்...தரித்து - சந்தம் - இங்குக் கூட்டம் என்ற பொருளில் வந்தது. **சந்தம்** - அழகு என்றலும் மணம் என்றலுமாம். **மலர்த் தாது** - பூந்துகள்; **தாது அணி நீறு** - பூந் துகளாகிய திருநீறு; உருவகம். மேல் வண்டொழுங்கெனும் கண்டிகை என்றதும் இவ்வாறே உருவகம். **தரித்து** - நீறு தரித்தல் என்பது மரபு; சிலேடை வகையால் **தரித்தல்-**தாங்குதல் என்ற பொருளிற் கொண்டு வாயு இங்குப் பூந் துகளைத் தாங்கி வந்தது என்க. **மெய்** - உண்மை - உடல் என்ற இரு பொருளும் கொள்க. அடியார் நீறு தரித்தலுக்கு உண்மை என்றும், வாயு துகள் தாங்குதலுக்குத் தன் உடலில் என்றும் கொள்ளத் தக்கது.

நீறு தரித்தும் - கண்டிகை பூண்டும் மணம் கொணர்ந்தும் மருத்து எழுந்தது- என்று கூட்டுக; தற்குறிப்பேற்றம். மண எழுச்சியில் அன்பர் கூட்டத்துடன் செல்வதற்கு அதற்குரிய திருவேடத்துடனன்றிச் செல்லலாகாதென்ற முறை கருதியது போலப் பூந் துகளாகிய திருநீறும் வண்டொழுங்காகிய கண்டிகையும் தரித்தும் பூண்டும் எழுந்தது என்பதாம். அன்பர் கூட்டத்துட் செல்வோர் திருநீறும் கண்டிகையும் கொண்ட திருவேடம் பூண்டே செல்லுதல் வேண்டும் என்ற நியதியை எடுத்து வற்புறுத்திக் காட்டிய நயமும் கண்டுகொள்க. இறைவரது திருவிழாக்களிலும் திருக்கோயில் வழிபாடுகளிலும் திருநீறும் கண்டிகையும் கொண்ட வேடந்தானும் கொள்ளாது புகுந்து துன்புறுத்தும் இந்நாண் மாக்கள் இதனை உணர்ந்து நன்னெறி ஒழுகுவார்களாயின் நலமாகும்; "ஆதியின்மே, லுற்ற திருநீறுஞ் சிவாலயமு முள்ளத்துச், செற்ற புலையர்பாற் செல்லாதே - நற்றவஞ்சேர், வேடமுடன் பூசையருண் மெய்ஞ்ஞான மில்லாத, மூடருடன் கூடி முயங்காதே-நீட, வழித்துப் பிறப்ப தறியா தரனைப், பழித்துத் திரி(ப)வரைப்பா ராதே" (நெஞ்சுவிடு தூது) என்றதும் பிறவும் காண்க.

ஈண்டு ஐம்பூதங்களும் மேற்கொண்ட சிறப்பினையும் இவ்வாறு மண எழுச்சியிற் சாரும் தகுதியும் பயனும்பற்றித் தற்குறிப்பேற்ற அணிநயம்பெறக் கூறியது மிக்கருத்து.

3093. எண்டி சைத்திறத் தியாவரும் புகலிவந் தெய்தி
மண்டு மெய்த்**திரு மணவெழுச் சியினணி வாய்ப்பக்**
கொண்ட வெண்ணிறக் குரூஉச்சுடர்க் கொண்டல்க ளென்னும்
வெண்டு கிற்கொடி நிரைத்தது போன்றது **விசும்பு.** *1195*

கந்தம்...பூண்டு - கந்தம் - கூட்டம்; **கந்தம் மேவும் வண்டு** - மணம் கண்டு வருகின்ற வண்டுகள் என்றலுமாம். "கட்டிய தேன்பூ மணங் கண்டு" (திருமந்); பூக்கள் அலர்கின்ற பருவத்தில் வெளிவரும் அவற்றின் மணத்தினால் அப்பருவமறிந்து வந்து ஊதி அலர்த்தித் தேன் உண்பது வண்டுகளினியல்பாம்.

வண்டு ஒழுங்கு எனும் கண்டிகை - வண்டுகள் கோவைபோல ஒழுங்காகச்சாரும் நிலையும், செவ்விய கரிய வண்டுகள் பலவும் ஒழுங்குபட நிற்றல் கண்டிகைபோலத் தோற்றும் நிலையும் குறித்தது.

சிந்தை தூய அன்பர்களுடன் - மனத்தூய்மை யுடையார் அன்பர்களாதலின் கூட்டத்துடன் சார்வதற்குப் புறத்தூய்மையேனும் கொண்டு போதுவோம் என்பது போல என்ற கருத்து. சிந்தை தூயவர்களாதலின் எனக் காரணக் குறிப்புப்படக் கூறினர். அன்பர் இயல்பு கூறியவாறுமாம். **திருமணம் போத** - திருமணம் காண எழுச்சியிற் கூடிச்செல்ல.

மந்த சாரி - மெல்லிய வேகம் - கதி ; கடுங் காற்றுய் வீசுதல் அவசகுனமாம்.

மணம் கொணர்ந்து - பூமணங்களைக் கையுறைபோல ஏந்திக் கொண்டு என்ற குறிப்பும் காண்க; தமிழ் மணம் என்றலுமாம். "பொங்குதமிழ்ப் பொதியமலைப் பிறந்துபூஞ் சந்தனத்தின், கொங்கணைந்து குளிர்சார லிடைவளர்ந்த கொழுந்தென்றல்" (ஏயர் -புரா-270). **1194**

3093. (இ-ள்) எண்திசை...வாய்ப்ப - எட்டுத் திக்குக்களின் பகுதிகளில் வாழும் எல்லாத் திறத்தினரும் சீகாழியில் வந்து சேர்ந்து நெருங்கி எழுந்த அத்திருமண எழுச்சியின்கண் அழகு பொருந்தும்படி; கொண்ட...விசும்பு - மேற்கொண்டு தூக்கியெடுத்த வெள்ளிய நிறத்தையுடைய ஒளிபொருந்திய பெரு வெண்மேகங்களாகிய வெண்டுகிலினாலாகிய கொடிகளை வரிசைபெற அமைத்ததுபோன்று இருந்தது வானம்.

(வி-ரை) எண்திசைத் திறத்து யாவரும் - எண் திசையிலும் எத்திறத்திலும் யாவரும் என்க. **மண்டுதல்** - நெருங்குதல்.

மண எழுச்சியின் அணி வாய்ப்ப - எழுச்சியிலே அதற்கேற்றவாறு அழகு பொருந்தும்படி; **வாய்த்த**லாவது முன் கூறிய சிறப்புக்களை எல்லாம் தொகுத்து முடித்துக் காட்டுதல்போலப் பொருந்துதல்.

கொண்ட வெண்ணிறக்குரூஉச் சுடர்க் -கொண்டல்கள் - "ஒளிகொள் வெண் முகி லாய்ப்பரந் தெங்கும் பெய்யு மா மழை" (தேவா-நம்பி-புன்கூர்). **கொண்ட**-நீரை மேற்கொண்ட; **சுடர்க் குரூஉக் கொண்டல்** - என்க. குரு என்பது **குரூஉ** எனச் செய்யு

3094. **ஏல** விந்நல மியாவையு மெழுச்சிமுன் காட்டுங்
காலை செய்வினை முற்றிய கவுணியர் பெருமான்
மூலமாகிய தோணிமேன் முதல்வரை வணங்கிச்
சீல மார்திரு வருளினுன் **மணத்தின்மேற் செல்வார்,** 1196

ளோசையின்ப நோக்கி அளபெடுத்து நின்றது. **குரு**-பருமை; நிறமுமாம். **சுடர்** - ஒளி; வெள்ளைமேகத்தி னியல்பாலும், அவற்றில் உண்டாகும் மின்னல்களினுலும் வரும் ஒளி.

வெண்ணிறக் கொண்டல்கள் என்னும் வெண்துகிற் கொடி என்க; வெண் மேகங்கள் என்னும் வெண்கொடி; உருவகம். நிறத்தானும் செறிவானும் புடை பெயர்ச்சியானும் மேகங்கள் துகிற் கொடிபோலாயின என்பது; வெண்கொடி மங்கலப் பொருள்; வெற்றிக் கொடியுமாம். "விதானமும் வெண்கொடியும்" (தேவா); வெண்கொடிகள் தூக்கி மண எழுச்சியில் கலந்து விசும்பு பயன்பெற்றது போன்றது என்பதாம். **நிரைத்தது** - வரிசையாக உயர்த்தியது; கார்மேகமாயின் நன்மைக்குறியாகா; ஆதலின் வெண்மேகமும் அதுபற்றியே வெண்கொடியும் கூறினர்

எண்டிசைத் தலத்து—மண்டுமத்திரு—என்பனவும் பாடங்கள். 1195

3094. (இ-ள்) ஏல...காலை-பொருந்தும்படி இந்நலங்கள் யாவையும் மண வெழுச்சியின் முன்னே காட்டுகின்ற காலையில்; செய்வினை...பெருமான்-செய்யும் கடப்பாட்டினை முடித்தருளிய கவுணியர்பெருமானுராகிய பிள்ளையார்; மூலமாகிய... வணங்கி - மூலமாகிய திருத்தோணியின் மேல் இறைவரைச் சென்று வணங்கி; சீலமார்...செல்வார் - செம்மை பொருந்திய திருவருள் பெற்றவராய்த் திருமணத்தினை மேற்கொண்டு செல்வாராகி;

(வி-ரை) ஏலுதல் - பொருந்துதல்; **இந்நலம் யாவையும் - பகலோன்** *(3087)* முதலாக **விசும்பு** *(3093)* ஈருக முன்கூறிய இவற்றின் சிறப்பும் நன்மைக் குறிகளும் ஆகிய அனைத்தும்.

எழுச்சிமுன் காட்டும் காலை - மண எழுச்சியின் முன்னே அமைந்து காட்டிய காலையில்; **காலை** - காலைப்பொழுது.

செய்வினை முற்றிய - காலைக் கடப்பாடுகளையும், மண எழுச்சியின் முன்னர்ச் செய்யப்படுவனவற்றையும் முடித்த; **செய்வினை** - இவ்வுலகில் வந்தவதரித்துச் செய்ய வேண்டுவனவாய் இறைவர் திருவருள் கொண்ட பரசமய நிராகரிப்பும் திருநீற்றின் ஆக்கமுமாகிய இரண்டும் என்ற குறிப்பும் காண்க.

மூலமாகிய தோணி என்றும் **மூலமாகிய முதல்வர்** என்றும் தனித்தனி கூட்டி உரைக்க நின்றது; **மூலம் ஆகிய தோணி** என்புழி **மூலம்** - மறைமுதலாகிய பிரணவம் என்க; வேதங்களே தோணி உருவுடன் இறைவரை உட்கொண்டு தாங்கி நிற்கின்றன என்பதாம்; "சுருதி தொடர்ந்த பெருந்தோணி" *(1971)*; "தொல்லை நாதமா மறைக டிரண்ட பெருந்திருத் தோணி" *(1997)*. **மூலமாகிய முதல்வர்** - என்புழி எப்பொருட்கும் மூல

3095. **காழி** மாநகர் வேதியர் குழாத்தொடுங் கலந்து
சூழு மன்பர்க ளேனையோர் துதைந்துமுன் செல்ல
வாழி மாமறை முழங்கிட, **வளம்பதி வணங்கி,**
நீழல் வெண்சுடர் **நித்திலச் சிவிகைமேற் கொண்டார்.** *1197*

முதல்வராகிய சிவபெருமான் என்க; ''எப்பொருளு மாக்குவா னீசனே''; மூலமென்பது நிமித்தகாரணராகி நின்று உலகுயிர்களைத் தம்முள் ஒடுக்கியும் மீளத் தோற்றுவித்தும் ஐந்தொழில் புரியும் முழுமுதற்றன்மை. ''நின்னுவார் பிறரின்றி நீயே யானாய்'' என்பது முதலியவை காண்க.

முதல்வரை வணங்கி - பதியினின்றும் புறப்படும்போதெல்லாம் வணங்கி யருள்விடை பெற்றுச் செல்லும் பொதுவகையானன்றி, அன்று, அஃதே இறுதி முறையாக இனி மீண்டு வாரா நெறிச்செல்லும் நிலையாதலின் சிறப்பு வகையாலும் வணங்கி என்க. **மூலமாகிய** என்ற குறிப்புமது; யாது யாண்டுத் தோன்றியது அஃது ஆண்டு ஒடுங்கும் என்ற முறையின் குறிப்பு. பின்னர் **வளம்பதி வணங்கி** (3095) என்பதுமிது.

சீலம் - செம்மை. **திருவருளினால்** - திருஅருட் குறிப்பினால் அருள்விடை பெற்று.

மணத்தின்மேற் செல்வார் - மேற்செல்லுதல் - கருதிச் செல்லுதல்; மேற்கொண்டு போதல். **செல்வார்** - முற்றெச்சம்; மேற்செல்வார் - வணங்கி - மேற்கொண்டார் என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. மேல் (மேலாகிய) மணத்திற் செல்வார் என மாற்றியுரைப்பதுமாம் (வ.சு.செ.)

இன்னணம் - என்பதும் பாடம். ***1196***

3095. (இ-ள்) காழிமாநகர்...செல்ல - சீகாழிப் பெரும்பதியின் மறையவர் கூட்டத்துடன் கலந்து சுற்றிச் சூழ்ந்த அன்பர்களும் ஏனையோர்களும் நெருங்கி முன்னே செல்லச் சென்று; வாழி மாமறை முழங்கிட - வாழ்வு தரும் பெருமறைகள் முழங்க; வளம் பதி வணங்கி -வளமுடைய சீகாழித் திருப்பதியினை வணங்கி; நீழல்... மேற்கொண்டார் - ஒளி பெருகிய வெண்கூடரினையுடைய முத்துச்சிவிகையின் மேலே எழுந்தருளி யமர்ந்தருளினர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) வேதியர் குழாத்தொடும் - சுற்றத்தார்களாதலின் வேதியர்கள் அணுக்கமாய் நெருங்கிச் செல்லும் உரிமையுடைய சிறப்புப்பற்றி முன் கூறப்பட்டனர். **ஒடு** - உருபு வேதியர்களுடன் சார்த்தி ஓதியதும் இதுபற்றி.

குழாத்தொடும் கலந்து அன்பர்கள் ஏனையோர் - அவ்வாறுயினும் பிள்ளையார் திறத்து அன்பர்களும் ஏனையோரும்அன்பினுரிமையாற் கலந்து சென்றனர் என்க. **ஏனையோர்** - உடற் சுற்றம்பற்றிய வேதியர்களுமாகாது, உயிர்ச்சுற்றம் பற்றிய அன்பர்களுமாகாது நின்ற மற்றையோர்; இவர்கள் பணியாளர்களும் பிறரும் ஆவர். பின்னர் ''வேறுதிரு வருளினால் வீடுபெற வந்தாரும்'' (3150) என்பது காண்க.

3096. ஆன வாகன மேறுவார் யாருமேற் கொள்ளக்
கான மாகிய தொங்கல்பிச் சங்குடை கவரி
மேனெ ருங்கிட விசும்பினு நிலத்தினு மெழுந்த
வான துந்துபி முழக்குடன் மங்கல வியங்கள். 1198

வளம்பதி வணங்கி - அப்பதியினை நீங்கிச் செல்வது இஃதே இறுதிமுறை யாதலின் அக்குறிப்புப் பெறப் **பதியினை** வணங்கிச் சென்றருளினர். முன்னர், இம்முறையில் தில்லையினின்றும் போந்தருளியபோது, சீகாழிப்பதி தூரத்தே தோன்றுதலும் சிவிகையினின்றும் இழிந்து, பதியினை எதிர்வணங்கிப் பதியின்மேற் றிருப்பதிகம் ''வண்டார் குழலரிவை'' என்று (3045) பாடியருளியதும்; அதன்மேல் புறம்பணையில் வந்தபோது பதியினைத் தூபதீபங்களுடன் றொழுது ''காழிநகர் சேர்மின்'' எனக் கடைமுடிந்த திருப்பதிகம் அருளிப் பதியினுட் புகுந்தருளியதும் (3046) ஆண்டுரைத்தவையும் இங்கு நினைவு கூர்தற்பாலன.

முதல்வரை வணங்கி-பதி வணங்கி - முதல்வரைப் போலவே அவர் எழுந்தருளிய பதியும் வணங்கத்தக்க தென்பார் இவ்விரண்டு பாட்டானும் தனித்தனி எடுத்துக் கூறியதுடன் அவை இரண்டும் ஒரே வழிபாட்டின் இரு பகுதிகளாவன என்பார் இரண்டு பாட்டும் ஒரு முடிபுபடுத்தி ஓதினர்.

நீழல் வெண்சுடர் நித்திலச் சிவிகைமேற் கொண்டார் - ''சோதி முத்தின்'' என்றும் ''வெண்ணீற் றொளி'' என்றும் சிவிகையினை முதலில் ஏறியபோது உரைத்தவை ஈண்டு **நீழல் - வெண்சுடர்** எனக் கூறி முடித்துக் காட்டப்பட்டன; அங்குத் தொடங்கிய சிவிகை ஏறும் நிலை இங்கு இதனுடன் நிறைவெய்தும் குறிப்பினைக் காட்டுதல் கண்டுகொள்க. பிள்ளையார் முத்துச் சிவிகையினை மேற்கொள்ளுதல் இஃதே இறுதிமுறை என்பதும் காண்க. **சிவிகை** - சிவிகையினை என இரண்டனுருபு விரிக்க. **மேற்கொள்ளுதல்** - மேல் எழுந்தருளி வீற்றிருத்தல். **நீழல்** - திருவடி நீழலும், **சுடர்**-பின் வரலாற்றில் வரும் சோதியும் குறிப்பிற்பெற நின்றமையும் காண்க. 1197

3096. (இ-ள்) ஆன... மேற்கொள்ள - அவரவர்க்காயின வாகனங்களை ஏறிச்செல்வார் அவ்வவற்றினை ஏறி மேற்கொள்ள; கானமாகிய...மேனெருங்கிட - காடுபோன்ற தொங்கல்களும், நீலிக் குஞ்சங்களும், குடைகளும்,கவரிகளும் மேலே நெருங்கவும்; விசும்பினும் நிலத்தினும் - ஆகாயத்தினும் நிலத்தினுமாக முறையே; வானதுந்துபி... இயங்கள் - தேவதுந்துபி முழக்கத்துடனே மங்கல வாத்தியங்களின் ஒலியும்; எழுந்த - ஒருங்கே எழுந்தன.

(வி-ரை) ஆன வாகனம் - அவரவர்க்காயின ஊர்திகள். **ஆன** - பக்கத்தி லிருக்கவேண்டியவர்கள், விருத்தர், பாலீசர், பணிமொழியார் முதலியோர்களும், மற்றும் நடந்து செல்ல இயலாதோரும், பண்டங்களைப் பெய்துகொண்டு செல்வோரும், திருவினல் சிவிகை பரி முதலாயின ஊர்தி வகைமேற்கொண்டு செல்வோரும் முதலாக அவ்வவர்க்காயின என்க. **யான வாகனம்** என்பது பாடமாயின் **யானம்**-சிவிகை என்று

கொள்க. "உயர்ந்த வாகன யானங்கண் மிசைக்கொண்டா ருழைய ரானுர்" (166); முன்னை நாளில் உயர்நிலைப் பெண்கள் சிவிகையிற் செல்லும் வழக்குப்பற்றி "மாமணிச் சிவிகை தன்னில் மாதரார் மயிலன் னாரை...ஏற்றி" (1758) என்றும், "அன்னமென் னடையி னாரு மணிமணிச் சிவிகையேறி" (2023) என்றும் வரும் காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசி யம்மையார் வரலாறுகளும் பிறவும் பார்க்க.

ஏறுவார் யாரும் - முன் கூறியவாறு ஏறும் மரபும் வழக்கும் அவசியமும் நிலையுமுடையோர் யாவரும்.

கானமாகிய-காடுபோல; "கவரிக்கானம்" (3099); நிலத்தில் தண்டு வேரூன்றி மேலே தழைத்து விரிந்து செறிந்துள்ள தாவரங்கள் கானம் எனப்படும்; இங்குத் தொங்கல் -கவரி முதலியவை மாந்தரால் தாங்கி உயர்த்தப்பட்டு மேலே விரிந்து நெருங்குதலின் கானம் போன்றன என்பதாம். கானம் போன்றதனைக் கானமென்றதுபசாரம்.

தொங்கல்...கவரி - மேலுயர்த்திப் பிடிக்கும் உபசாரக் கருவிகள்; இந்நாளில் இவற்றின் எடுத்துக்காட்டுக்களைப் பெரிய ஆலயங்களிலும் பெருந் திருமடங்களிலும் மட்டும் ஏகதேசத்திற் காணலாம்; **மேல் நெருங்கிட** - மேலே உயர்த்திப் பிடித்தலால் மேனிலத்தில் நெருக்கமாகக் காணப்பட.

விசும்பில் துந்துபி முழக்கும் நிலத்தில் இயங்களும் என்று நிரனிறையாக்குக.

துந்துபி - தேவதுந்துபி; தேவர்கள் இத்தெய்வச் சிவமணங் காண மேலே நெருங்கிப் போந்து தொடர்ந்த துந்துபி முழக்கி ஆரவாரித்தனர்; மேல் 3102-3103-3156-3163 பார்க்க.

இயங்கள் - இயங்களின் முழக்கு ஒலிக்காகி வந்தது.

முழக்குடன் இயங்கள் - எழுந்த என்று கூட்டுக. **எழுந்த** - எழுந்தன; வினைமுற்று; சிறப்புப்பற்றித் துந்துபியை முன்னர் வைத்து உடன் உருபையுங் கூட்டியுரைத்தார். 1198

3097. (இ-ள்) சங்கொடு...ஓங்கி-சங்கினேடும், தாரையும், சின்னமும், ஒப்பற்ற பெரிய எக்காளமும், தாளமும், குழலும் அதுபோன்ற ஏனைய நாதம் மலர்கின்ற துளைக்கருவிகள் எல்லாமும், மேலெழுந்த ஒலியினுல் ஓங்கி; பூசுரர்...மல்க - மறையவர்களது வேதகீதங்களின் ஒலியினேடும் பொருந்தி எங்கும் எழுந்து பெருக; **திருமணம் அன்றே எழுந்தது** - திருமணமானது அன்றே எழுச்சி பெற்றுச் சென்றது.

(வி-ரை) தாரை - சின்னம் - தனிப்பெருங் காளம் - தாளம் - இவை பிள்ளையாருக்கு இறைவர் அளித்தருளியவை; **பெருங்காளம்** - உருவினுலும் ஓசையினுலும் பெரியதென்பது; **தனி** - இறைவர் தந்தருளியமையால் ஒப்பற்ற தன்மை; **தனி**-என்பதனைத் **தாரை - சின்னம்** என்பவற்றுடனும் கூட்டுக.

சங்கொடு - சங்கு,மங்கல இயங்களுள்ளே சிறந்தமைபற்றியும், ஏனயவை போல மனிதர் செயற்கையானன்றி இயல்பாகவே உளதாகும் சிறப்புப்பற்றியும், பிரணவநாதம்

வேறு

திருமண எழுச்சி

*3097. **சங்கொடு தாரை சின்னந் தனிப்பெருங் காளந் தாளம்**
வங்கிய மேனை மற்று மலர்துளைக் கருவி யெல்லாம்
பொங்கிய வொலியி னோங்கிப் பூசுரர் வேத கீதம்
எங்கணு மெழுந்து மல்கத் **திருமண மெழுந்த தன்றே.** *1199*

நீங்காதொலித்தற் சிறப்புடைமையும் பிரணவ வடிவுடைமையும் பற்றியும் முன்வைக்கப் பட்டது; ஆனால் தாரை சின்னம்போல இறைவராற் றரப்படாமையின் **ஒடு**வுருபு தந்து பிரித்துமோதினார். "சங்கொலிப் பித்திடு மின்சிறுகாலை" (தேவா); "இயம்பின சங்கம்" (திருவா) என்றபடி இங்கு மண எழுச்சியின் காலத்துக்குரியதாதலின் முன் வைத்ததுமாம்.

வங்கியம்...துளைக்கருவி யெல்லாம் - வங்கியம் - குழல்; ஆனாயர் புராணத்துள் இன்னிசை வங்கியம்" (948) என்றதும், ஆண்டுரைத்தவையும் பார்க்க. **துளைக் கருவிகளுள்** முதன்மைபற்றி இதனை முன் வைத்தோதினார். **ஏனை** என்றதுமிக் குறிப்பு. குழலினிது" (குறள்) என்ற சிறப்பும் காண்க. முன்பாட்டில் **இயங்கள்** என்றது தோற்கருவிகள்.

ஒலியின் ஓங்கி - மல்க - எழுந்தது - என்க; ஒலியின்- ஒலியினால்; **ஒலி** - என்றார் மங்கலமாகிய பொருள் குறித்தலின்; **வேத கீத**த்துடன் சேர்த்துக் கூறியதும் இக்கருத்து. **இன்** - போல என்று கொண்டு இயங்களின் ஒலிபோல மறை முழங்கின என்றலுமாம். "வாச்சியமத்தள பேரிகைபோல் மறைவாழ்த்த... திருத்தணி மாமலை மேவிய பெருமாளே" திருப்புகழ். (வ.சு.செ.)

திருமணம் எழுந்தது - மரபு வழக்கு; **மணம்** - மணத்தின் பொருட்டு மணமகன் தன் சுற்றத்தாருடன் மணமகளின் மனைக்குச் செல்லும் எழுச்சி; "அருங்கடி மணம்வந் தெய்த" (169); **அன்றே** - அப்பொழுதே; திருமண நாளன்றே என்றலுமாம்.

வேதநாதம்—என்பதும் பாடம். *1199*

3098. (இ-ள்) கோதையர்... ஒருபால் - பெண்களுடைய கூந்தலைச் சூழ்ந்த வண்டுக் கூட்டங்களின் ஒலி ஒருபக்கத்திலும்; கோல...ஒருபால் - கோலத்துடன் கூடிய மறையவர்கள் ஓதும் வேத வாய்மை மிகும் ஒலி ஒருபக்கத்திலும்; மிக்க... ஒருபால் குற்றமில்லாத மிக்க வீணையும் யாழுமாகிய இவற்றின் ஒலி ஒருபக்கத்திலும்; ஏத்தும்...ஒருபாலாக - துதிக்கின்ற நாதத்துடன் கூடிய மங்கலங்களைக் கீதமாகப் பாடும் இனிய ஒலி ஒருபக்கத்திலுமாகச் சந்திக்க;

(வி-ரை) குழல் சூழ் - குழலின் அணிந்த மலர்களிற் சூழும்; குழலின் இயற்கை மணத்தினால் வந்து சூழும் என்ற குறிப்புமாம்.

3098. **கோதையர் குழல்சூழ் வண்டின் குழாத்தொலி யொருபாற், கோல**
வேதியர் வேத வாய்மை மிகுமொலி யொருபான் மிக்க
ஏதமில் விபஞ்சி வீணை யாழொலி யொருபா, லேத்தும்
நாதமங் கலங்கள் கீத நயப்பொலி யொருபா லாக; *1200*

கோலவேதியர் - மறையவர்க் குரியதாய் விதித்த கோலத்தின் விளங்கும் வேதியர்கள்; **கோலம்** - அழகு என்றலுமாம்.

வேத வாய்மை - வேதத்தைச் சொல்லுதலால்; **வாய்மை** - வாய்மொழியும் நிலை என்ற பொருளில் வந்தது. **வாய்மை** - உண்மைத் தன்மை என்று கொண்டு வேத வாய்மைகளைச் சொல்லுர் என்றலுமாம். வாய்மை வேதஒலி என்றலுமாம்.

விபஞ்சி வீணை யாழ் - விபஞ்சி - இசைக்கு உயிர் கொடுக்கக்கூடியதான; குறிஞ்சியாழ்த் திறத்துள் ஒன்று என்றலுமாம் — **விபஞ்சி** - விபஞ்சி வேறு, வீணை வேறு; வீணைகள் மூவகைய: (1) **சுரவித்தை** - ஒரு தந்தி உடையது; கலைமகளுக்கு உரியது. (2) **வீணை** - ஐந்து தந்தி உடையது; திருமகளுக்கு உரியது (3) **விபஞ்சி** - ஏழு தந்தி உடையது - மலைமகளுக்கு உரியது. (இவை வ.சு.செ.குறிப்பு.) வீணையும் யாழும் என்று எண்ணும்மை விரிக்க.

ஏத்தும் நாதமங்கலங்கள் கீத நயப்பு - ஏத்துதல் - பலவாறு இறைவர் புகழ்களையும் பிள்ளையார் புகழ்களையும் எடுத்துத் துதித்தல். நாதம் - உரிய இசைப் பகுதி; **மங்கலங்கள் கீதம்** - மங்கலங்களை இசைக்கும் கீதம்; **நயப்பு** - விருப்பந் தரும் இனிமை.

வண்டின் குழாத்தொலி - வண்டுகள் தம்மியற்கையாலே பண் பாடும் தன்மை பற்றி அவற்றின் ஒலி முதற்கண் வைக்கப்பட்டது; "செந்துருத்தி, யறைந்தளிகள் பயில்சாரற் றிருக்கழுக்குன்று" (3027); "சிவந்தவண்டு, வேறுய உருவாகிச் செவ்வழிநற் பண்பாடு மிழலை" (தேவா).

வேத வாய்மை - இயல்பாகவே சுர அமைப்புடன் இறைவனால் அருளப்பட்டு அவ்வாறே பயின்றுவருதலின் இஃது அடுத்து வைக்கப்பட்டது.

விபஞ்சி வீணை யாழ் - வீணையும் யாழும் இசைக்கு உயிர்கொடுக்கும் தன்மையாவது ஏனைய இசைக்கருவிகள் (சுரம்) இசைமட்டுமே இசைக்க, இவை இசைப்பாட்டினைப் பாடும் தன்மை; **ஒலி** என்ற கருத்துமிது. "குழலினிது யாழினிது" (குறள்); இத்தன்மையில் மேம்பட்டது குழல். இக்கருத்தையும் மேன்மையினையும் விளக்குவன இறைவர் தம் கையில் வீணையினையும், அவர் தேவியாகிய விட்டுணு குழலினையும் கொண்ட வரலாறுகள். "எம்மிறை நல்வீணை வாசிக்குமே"; "அரியலாற் றேவியில்லை யையனை யாற னார்க்கே"; "ஆயன்வாய்த் தீங்குழலும்" (11- திருமுறை-கபிலர் - சிவபெருமான் திருவந்தாதி-28).

இப்பாட்டினால் எழுச்சியில் எழுந்த ஒலி வகைகளும் மேல் அணிவகைகளும் கூறப்படுவன. அதன்மேல் வரும் பாட்டினால் (3100) வைதிகநிலை ஒழுக்கத்தினர்களாயும், அதன்மேல் வரும் பாட்டினால் (3101) ஆகமநிலை ஒழுக்கத்தினர்களாயும் உடன்

3099. விண்ணினை விழுங்க மிக்க **வெண்டுகிற் பதாகை** வெள்ளங்
கண்வெறி படைப்ப மிக்க கதிர்விரி கவரிக் கானம்
மண்ணிய மணிப்பூ ணீடு மரிசன மலிந்த பொற்பின்
எண்ணிலா வண்ணத் தூசின் பொதிப்பரப் பெங்கு நண்ணை, *1201*

சென்றவர்களும், அதன்மேல் தேவச்சாதியார்களும் கூறப்படும் முறையில் இவை தொடர்ந்து வருதல் கண்டுகொள்க. இவற்றுள்(*3098—3101*) முதனான்கு பாட்டுக்கள் மண்ணுலகில் நிலத்தின்கண் நிகழ்ச்சிகளும், ஐந்தாவதில் விண்ணவரது வானில் நிகழ்ச்சிகளும் கூறப்படுவதும் காண்க.

(நிலத்தில்) ஆக (3098) விழுங்க, படைப்ப, நண்ண (3099) - மல்க (3100) ஏக (3101) - (வானில்) சென்றார் (3102) என்று இவ்வைந்து பாட்டுக்களையும் தொடர்புபடுத்திக் கொள்க. *1200*

3099. (இ-ள்) மிக்க...வெள்ளம் - மிகுந்த வெண்துகிற்கொடிகளின் கூட்டம்; விண்ணினை விழுங்க - ஆகாயவெளியை மறைக்கவும்; மிக்க கதிர்... கானம் - மிகுந்த ஒளி விரியும் சாமரைகளின் கூட்டம்; கண்வெறி படைப்ப - கண்வெறி செய்யவும்; மண்ணிய மணிப்பூண் - விளக்கம் செய்த மணிகளையுடைய அணிகளும்; நீடும்... பொதிப்பரப்பு - நீடுகின்ற மஞ்சனிற மிகுந்த அழகிய அளவில்லாத வண்ணங்களையுடைய துணிப்பொதிகளின்கூட்டமும்; எங்கும் நண்ண - எங்கும் பொருந்த;

(வி-ரை) விழுங்குதல் - மறைத்தல்; **பதாகை** - கொடி; **வெள்ளம்** - மிகுதி; **விண்ணினை விழுங்குதல்** - ஆகாயவெளியை மறைக்கும்படி மிகுந்து செறிதல்; **வெண்துகிற் கொடி** - வெள்ளைத் துணிகளாலான கொடிகள். வெள்ளைக் கொடிகள் இந்நாளிலும் போர் முகத்துச் சமாதானக் குறிகளாக வழங்குதல் காண்க.

வெண்மை - சாந்தம், உண்மை முதலிய சத்துவ குணங்களின் அறிகுறி. **வெள்ளம்-விழுங்க** என்று கூட்டுக.

கவரிக்கானம் - கவரி - சாமரைகள்; **கானம்** - காடுபோல்வதனைக் காடு என்ற துபசாரம். **கதிர்விரி**தலாவது கவரிகள் வீசுந்தோறும் ஒளி விரிந்து காட்டுதல்.

கண்வெறி படைத்தல் - அசைவினாலும் விரியும் சுழல்வினாலும் பார்ப்போர் கண்கள் சுழன்று மயக்கமடைதல். **கானம் - வெறிபடைப்ப** என்று கூட்டுக.

மண்ணிய மணிப்பூண் - மணிகளை மண்ணுதல் - கடைதல் விளக்குதல் முதலிய செயல்களால் மணிகளை ஒளிமிகச் செய்தல்; "மாமணிச் சோதியான் - உறவுகோனட் டுணர்வு கயிற்றினன்; முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே" (தேவா).

பூணும் - தூசின் பொதிப்பரப்பு நண்ண என்க. எண் உம்மைகள் விரிக்க. மணத்தின் எழுச்சியில் ஆடையாபரணங்கள் மிகவும் கொண்டு செல்லும் வழக்குக் குறித்தது.

3100. **சிகையொடு மான்றோ ருங்குங் கிடையுமா சானுஞ் செல்வார்,**
புகைவிடும் **வேள்விச் செந்தீ யில்லுடன் கொண்டு போவார்.**
தகைவிலா விருப்பின் மிக்க **பதிகங்கள் விளம்பிச் சார்வார்,**
வகையறு **பகையுஞ் செற்ற மாதவ ரியல்பின் மல்க,**

அரிசனம்...தூசின்பொதி - அரிசனம் - மஞ்சள்; **அரிசனம் மலிந்த பொற்பின் - தூசு** - மஞ்சள் தோய்த்த துணிகளும் மஞ்சட்பட்டு வகைகளும். **மஞ்சள் நிறம்** - சுபக்குறி காட்டுதற் கெடுத்தது.

எண்ணிலா வண்ணம் - மஞ்சள் முதன்மையாகப் பல வண்ணங்களும் கலந்த அழகு. **தூசின் பொதிப்பரப்பு** - துணி மூட்டைகளின் மிகுதி. *1201*

3100. (இ-ள்) சிகையொடு...செல்வார் - பஞ்ச சிகைகொண்ட கோலத்துடன் கரு மான்தோலைப் பூணூலில் தரித்த வேதம் ஓதும் சிறுவர்களும் உபாத்தியாயருமாகக் கூடிச் செல்லவும்; புகைவிடும்...கொண்டுபோவார் - ஓமப்புகை விடுகின்ற வேள்விச் செந்தீயினைத் தத்தம் மனைவியர்களுடனே கொண்டு மறையவர் போகவும்; தகைவிலா...சார்வார் - தடுக்கலாகாத விருப்பத்துடனே பெருமையாற் சிறந்த திருப்பதிகங்களை ஓதிக்கொண்டு ஓதுபவர் செல்லவும்; வகையறு...மல்க - ஆறு வகையான பகைகளையும் அறுத்த மாதவர்கள் தத்தம் இயல்புடனே நெருங்கவும்:

(வி-ரை) சிகையொடு...ஆசானும் - வேதமோதும் சிறுவரும் அவர்களை ஓதுவிக்கும் ஆசானும் கூடி ஒரு தொகுதியாக; **கிடை** - ஓது கிடை; மறை பயிலிடத்திற்றங்கிக் கிடத்தலின் **கிடை** எனப்படும். இங்குக் **கிடை** அவ்வாறு தங்கிக் கிடந்து பயிலும் மாணவர் கூட்டத்துக்கு வந்தது; "ஓது கிடைசூழ் சிறுவர்களுமுதவும் பெருமை யாசானும்" (*1208*).

புகைவிடும்...கொண்டுபோவார் - வேள்விச் செந்தீ - இஃது அம்மறையவர் வளர்க்கும் நித்தியாக்கினி; மறையவருள் இல்வாழ்வார் நித்தியமும் தீவளர்த்து வேட்கக் கடவர் என்பது வேதவிதி ஆதலின் அத்தீயினைத் தாம் மனைவியருடன் செல்லு மிடங்களிலும் தவிராது வளர்த்தற்பொருட்டுக் கொண்டுசெல்லக் கடவர்; **இல்லுடன்** - இவ்வேள்வி மனையாளோடன்றிச் செய்யப்படாமை குறிப்பு. **புகைவிடும்** - மணவேள்வியிற் றொடங்கிய நித்தியாக்கினி சாங்காறும் **அவியாது** காக்கப்படுவது என்பது குறிப்பு; தீயின் அவியாதநிலை என்பது பொருள்.

தகைவிலா விருப்பின் - தடுக்கலாகாத பெருவிருப்பினாலே; **பதிகங்கள்** - பிள்ளையாரது திருப்பதிகங்கள்; அவற்றின் பெருமையும், இறைவரருளிய மறையேபோன்று "மெய்த்திருவாக்" காகும் வாய்மையும் நேரிற் கண்டுணர்ந்தோர்க ளாதலின் வேதம் பயிலும் இம்மறையவர்கள் தடுக்கமுடியாத பெருவிருப்புக் கொண்டு ஓதினர்; **தகைதல்** - தடுத்தல்; விலக்குதல். **மிக்க**-மிகுந்த அருட்பெருமையுடைய.

வகை அறு பகை - பகை ஆறுவன - காமம், குரோதம், உலோபம், மோகம்,மதம்,மாச்சரியம் என்பன; இவை வெளித்தோற்றாது உண்ணின்றே மக்களை

3101. **அறுவகை விளங்குஞ் சைவத்** தளவிலா விரதஞ் சாரும்
நெறிவழி நின்ற வேட நீடிய **தவத்தி னுள்ளோர்,**
மறுவறு மனத்தி லன்பின் வழியினுல் வந்த **யோகக்**
குறிநிலை பெற்ற தொண்டர் குழாங்குழா மாகி யேக,

வீழ்த்தலின் **பகை** என்றூர்; வகை என்றது உட்பகை, புறப்பகை என்ற இரண்டனுள் வலிமையுடையது உட்பகை என்றதும் குறிப்பு; உம்மை முற்றும்மை. **செற்றமையால் மாதவர்** என்று காரணக் குறிப்புப்பட வந்த அடைமொழி; **மாதவர்** - மேம்பட்ட அந்தணர்களைக் குறித்தது; **இயல்பின்** - தத்தமக் கியல்பாகிய சிறப்பினுலே. 1202

3101. (இ-ள்) அறுவகை... தவத்தினுள்ளோர் - சைவத் திறத்தில் ஆறு வகையாக விளங்கும் உட்சமயங்களில் எண்ணிறந்த விரதங்களைச் சார்ந்த ஒழுக்க வழிகளிலே நின்ற உரிய வேடங்களால் நீடிய தவத்தில் நின்றோர்களும்; மறுவறு...தொண்டர் - குற்றமற்ற மனத்தினுடன் அன்பின் வழியினுலே வந்த சிவயோகக் குறியின்கண் நிலைபெற்ற தொண்டர்களும்; குழாம்...ஏக - கூட்டங் கூட்டமாகச் செல்லவும் (நிலத்தின் கண் இவ்வாறுக நிகழ);

(வி-ரை) அறுவகை விளங்கும் சைவம் - இவை நால்வகைச் சமயப் பாகுபாட்டில் சைவத்துள் அகச்சமயம் என வகுக்கப்பட்ட பாடாணவாதம், பேதவாதம், சிவ சமயவாதம், சிவசங்கிராந்த வாதம், ஈசுவரவவிகாரவாதம், சிவாத்துவிதம் என்பன.

நால்வகைச் சமயத்தவருள், ஏனை மூவருள் உலகாயதமும் நால்வகைப் பௌத்தமும் ஆருகதமும் என்ற அறுவகை புறப்புறச் சமயத்தவரும்; தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம் என்ற அறுவகைப் புறச் சமயத்தவரும் ஈண்டுப் பிள்ளையார் திருமணங் காண வருதற்கியைபில்லை; இனிப், பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வயிரவம், ஐக்கியவாதம் என்ற சமயத்தினர் சிற்சில வகைகளாற் சைவரோடொப்பினும், தத்தம் நெறிகளானும் முடிபுகளானும் மாறுபாடுடையார்.*

*அவரெல்லாம் சித்தாந்த சைவரோடொப்ப "ஏக னனேக னிருள் கரும மாயை யிரண்டு" (திருவருட்பயன்-6-2) என்ற ஆறு பதார்த்தங்களுங் கொள்ளாமையானும், அவ்வறுவகைப் பதார்த்தங்களின் இயல்பைக் கொளுத்தினுங் கொள்ள மாட்டா ராகலானும் "புறச்சமயத் தவர்க்கிருளாய்" (சிவப் - பாயிர-7) என்றபடி அவரையும் நீக்கி அறுவகை அகச்சமயத்தவரே ஈண்டுக் கருதப்பட்டனர்.

*இனி இவ் வகச்சமயத்தோராகிய பாடாணவாத சைவர் முதலியோர் சித்தாந்த சைவத்தோடொப்ப ஏகன் முதலிய ஆறுபதார்த்தங் கொண்டமையின் அவ்வாறுக்கும் பொதுவியல்பு சிறப்பியல்பு கூறும் ஆகமங்களின் தாத்பரியம் இஃதே யென்று எடுத்துக்காட்டிச் சித்தாந்த சைவப்பொருளுண்மையைக் கொளுத்தினுற் கொள்ள

---

*சிவஞான மாபாடியம் - சூ - 2-1 பார்க்க.

வல்லவராதலின் அவர் [illegible] யுடையார்: "அகச்சமயத் தவர்க்கொளியாய்" (சிவப்-பாயிர-7) என்பது காண்க. அதனால் இனி, இவர்கள் பிள்ளையாரால், "ஞானமெய்ந் நெறிதான் யார்க்கு நமச்சிவாயச் சொலாம்" என்று சீபஞ்சாக்கர உபதேசம் செய்யப்பெற்று, "ஈனமாம் பிறவி [illegible] யினைக் காட்டப்பெற்றபோது "[illegible] பரிசா அவை பல[illegible]நாயினாரையும் கருதுக; இங்ஙனங் காட்டாக்காற் றமே யறியமாட்டாமையின் இவர் வேறு கூறப்பட்டார்.

அளவிலா விரதஞ் சாரும் நெறிவழிநின்ற வேடம் நீடிய தவம் - என்ற குறிப்பு மேற்கூறிய கருத்துக்களுடன் வைத்துக் கருதத்தக்கது. மானக்கஞ்சாறனர் புராணத்துள் (887-891) வரும் மாவிரதியரும், சிறுத்தொண்டனர் புராணத்துள் வரும் வயிரவரும் (மேற்படி புரா - 26-35), சிவத்திருவேடத்தாராகக் கொள்ளப்பட்டமையும், "பம்புசடைத் திருமுனிவர் கபாலக் கையர் பலவேடச் சைவர்" (2917) என்றமையும், பிறவும் காண்க; இக்கருத்துப்பற்றியே பின்னரும் "ஆறு வகைச் சமயத்திலருந்தவரும்" (3150) என்பதும் கருதுக; *"**சுத்த சைவர்** இந்நூல் கேட்ட துணையானே தாற்பரியம் இனிதுணர்ந்து **சித்தாந்தப்** பொருள் கைக்கொள்வரென்பது பெறப்பட்டது; அத்துணை யணிமைய ராகலா னன்றே சித்தாந்த சைவத்தைச் சார வைத்தார் என்பது." ஈண்டு இனி இவர்களை அடுத்து "**மறுவறு...தொண்டர்**" என்பதும் காண்க.

மறுவறும்...தொண்டர் - இவர்கள் சித்தாந்த சைவர். **மறுவறு மனத்தின் அன்பின் வழி** என்றது ஞானம்; **யோகம்**-சிவயோகம்; **குறிநிலை**-கிரியை; **தொண்டு** - சரியை வகை; என இவ்வாறு சைவ நன்னெறிகளாகிய "நலஞ் சிறந்த ஞான யோகக் கிரியாசரியை யிவை" (திருமூலர்-புரா-28) குறிக்கப்பட்டன. இந்நான்கும் சித்தாந்த சைவத்துள் "சங்கரனை யடையும், நன்மார்க்க நாலவைதாம் ஞானயோக நற்கிரியா சரியையென நவிற்றுவதும் செய்வர்" (சித்தி -8.18) இவற்றினியல்புகளை யெல்லாம் ஞானநூல்களுட் கண்டுகொள்க; (சித்தி - 8-18-25) **யோகம்** - புறச்சமயங்களுள் வரும் யோகம் வேறு; **குறிநிலை**-ஒரு குறியின்கண் சிவனை நிறுத்துப் பூசித்தலாற் குறிநிலை எனப்படும். "குறிப்பினுலே கூப்பினுன் ருப ரத்தை" (தேவா); 'கோள மதனி னுண்ணிறைந்து குறித்த பூசை கொள்கின்ருர்' (1241); **தொண்டு**-சரியைநெறி பலவும் கொள்க.

குழாம் குழாமாகி - கூறிய இரண்டு நிலையினர் (அகம், புறம்- சித்தாந்தம்) களைக் குறிக்க அடுக்கிக் கூறினர். இங்கு இவ்வாறன்றி வேறுவகையாய்ப் பொருளுரைப்பர் முன் உரைகாரர்கள்; நான்கும் ஒரு பொருள்மேல் வருதலிற் சேர்த்துக் கூறினர்.

முன்பாட்டால் வைதிகநெறி ஒழுக்கத்தினரையும்,இப்பாட்டால் ஆகமநெறி யொழுக்கத்தினரையும் கூறிய நிலையும் சிறப்புப்பற்றிய வைப்பு முறையும் கண்டுகொள்க. இதனுடன் மண்ணுலகினுள்ளாரை முடித்துக் காட்டி, இனி, மேல்வரும் பாட்டில் விண்ணுலகவரைக் கூறுதலும் கண்டுகொள்க. 1203

---

*பாடியம் - சூ. - 2-1 பார்க்க.

3101. **அறுவகை விளங்குஞ் சைவத்** தளவிலா விரதஞ் சாரும்
நெறிவழி நின்ற வேட நீடிய **தவத்தி னுள்ளோர்,**
மறுவறு மனத்தி லன்பின் வழியினால் வந்த **யோகக்**
குறிநிலை பெற்ற தொண்டர் குழாங்குழா மாகி யேக,

---

*வீழ்த்தலின் **பகை** என்றார்; வகை என்றது உட்பகை, புறப்பகை என்ற இரண்டனுள் வலிமையுடையது உட்பகை என்றதும் குறிப்பு; உம்மை முற்றும்மை. **செற்றமையால் மாதவர்** என்று காரணக் குறிப்புப்பட வந்த அடைமொழி; **மாதவர்** - மேம்பட்ட அந்தணர்களைக் குறித்தது; **இயல்பின்** - தத்தமக் கியல்பாகிய சிறப்பினாலே.* *1202*

3101. (இ-ள்) *அறுவகை... தவத்தினுள்ளோர் - சைவத் திறத்தில் ஆறு வகையாக விளங்கும் உட்சமயங்களில் எண்ணிறந்த விரதங்களைச் சார்ந்த ஒழுக்க வழிகளிலே நின்ற உரிய வேடங்களால் நீடிய தவத்தில் நின்றோர்களும்; மறுவறு...தொண்டர் - குற்றமற்ற மனத்தினுடன் அன்பின் வழியினாலே வந்த சிவயோகக் குறியின்கண் நிலைபெற்ற தொண்டர்களும்; குழாம்...ஏக - கூட்டங் கூட்டமாகச் செல்லவும் (நிலத்தின் கண் இவ்வாறாக நிகழ);*

(வி-ரை) அறுவகை விளங்கும் சைவம் - இவை நால்வகைச் சமயப் பாகுபாட்டில் சைவத்துள் அகச்சமயம் என வகுக்கப்பட்ட பாடாணவாதம், பேதவாதம், சிவ சமயவாதம், சிவசங்கிராந்த வாதம், ஈசுவரவவிகாரவாதம், சிவாத்துவிதம் என்பன.

நால்வகைச் சமயத்தவருள், ஏனை மூவருள் உலகாயதமும் நால்வகைப் பௌத்தமும் ஆருகதமும் என்ற அறுவகை புறப்புறச் சமயத்தவரும்; தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம் என்ற அறுவகைப் புறச் சமயத்தவரும் ஈண்டுப் பிள்ளையார் திருமணங் காண வருதற்கியைபில்லை; இனிப், பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வயிரவம், ஐக்கியவாதம் என்ற சமயத்தினர் சிற்சில வகைகளாற் சைவரோடொப்பினும், தத்தம் நெறிகளானும் முடிபுகளானும் மாறுபாடுடையார்.*

*அவரெல்லாம் சித்தாந்த சைவரோடொப்ப "ஏக னனேக னிருள் கரும மாயை யிரண்டு" (திருவருட்பயன்-6-2) என்ற ஆறு பதார்த்தங்களுங் கொள்ளாமையானும், அவ்வறுவகைப் பதார்த்தங்களின் இயல்பைக் கொளுத்தினுங் கொள்ள மாட்டா ராகலானும் "புறச்சமயத் தவர்க்கிருளாய்" (சிவப் - பாயிர-7) என்றபடி அவரையும் நீக்கி அறுவகை அகச்சமயத்தவரே ஈண்டுக் கருதப்பட்டனர்.

*இனி இவ் வகச்சமயத்தோராகிய பாடாணவாத சைவர் முதலியோர் சித்தாந்த சைவத்தோடொப்ப ஏகன் முதலிய ஆறுபதார்த்தங் கொண்டமையின் அவ்வாறுக்கும் பொதுவியல்பு சிறப்பியல்பு கூறும் ஆகமங்களின் தாத்பரியம் இஃதே யென்று எடுத்துக்காட்டிச் சித்தாந்த சைவப்பொருளுண்மையைக் கொளுத்தினும் கொள்ள

---

*சிவஞான மாபாடியம் - சூ - 2-1 பார்க்க.

வல்லவராதலின் அவர் ஈண்டு வருதற்கியையுடையார்; "அகச்சமயத் தவர்க்கொளியாய்" (சிவப்-பாயிர-7) என்பது காண்க. அதனால் இனி, இவர்கள் பிள்ளையாரால், "ஞானமெய்ந் நெறிதான் யார்க்கு நமச்சிவாயச் சொலாம்" என்று சீபஞ்சாக்கர உபதேசம் செய்யப்பெற்று, "ஈனமாம் பிறவி தீர யாவரும் புகுக" என்று சோதிவாயிலினைக் காட்டப்பெற்றபோது "பேரொளி"யினை அடைய வல்லுநராயினமையும் கருதுக; இங்ஙனங் காட்டாக்காற் றாமே யறியமாட்டாமையின் இவர் வேறு கூறப்பட்டார்.

அளவிலா விரதஞ் சாரும் நெறிவழிநின்ற வேடம் நீடிய தவம் - என்ற குறிப்பு மேற்கூறிய கருத்துக்களுடன் வைத்துக் கருதத்தக்கது. மானக்கஞ்சாறனார் புராணத்துள் (887-891) வரும் மாவிரதியரும், சிறுத்தொண்டனார் புராணத்துள் வரும் வயிரவரும் (மேற்படி புரா - 26-35), சிவத்திருவேடத்தாராகக் கொள்ளப்பட்டமையும், "பம்புசடைத் திருமுனிவர் கபாலக் கையர் பலவேடச் சைவர்" (2917) என்றமையும், பிறவும் காண்க; இக்கருத்துப்பற்றியே பின்னரும் "ஆறு வகைச் சமயத்திலருந்தவரும்" (3150) என்பதும் கருதுக; *"**சுத்த சைவர்** இந்நூல் கேட்ட துணையானே தாற்பரியம் இனிதுணர்ந்து **சித்தாந்தப்** பொருள் கைக்கொள்வரென்பது பெறப்பட்டது; அத்துணை யணிமைய ராகலா னன்றே சித்தாந்த சைவத்தைச் சார வைத்தார் என்பது." ஈண்டு இனி இவர்களை அடுத்து "**மறுவறு...தொண்டர்**" என்பதும் காண்க.

மறுவறும்...தொண்டர் - இவர்கள் சித்தாந்த சைவர். **மறுவறு மனத்தின் அன்பின் வழி** என்றது ஞானம்; **யோகம்**-சிவயோகம்; **குறிநிலை**-கிரியை; **தொண்டு** - சரியை வகை; என இவ்வாறு சைவ நன்னெறிகளாகிய "நலஞ் சிறந்த ஞான யோகக் கிரியாசரியை யிவை" (திருமூலர்-புரா-28) குறிக்கப்பட்டன. இந்நான்கும் சித்தாந்த சைவத்துள் "சங்கரனை யடையும், நன்மார்க்க நாலவைதாம் ஞானயோக நற்கிரியா சரியையென நவிற்றுவதும் செய்வர்" (சித்தி -8.18) இவற்றினியல்புகளை யெல்லாம் ஞானநூல்களுட் கண்டுகொள்க; (சித்தி - 8-18-25) **யோகம்** - புறச்சமயங்களுள் வரும் யோகம் வேறு; **குறிநிலை**-ஒரு குறியின்கண் சிவனை நிறுத்துப் பூசித்தலாற் குறிநிலை எனப்படும். "குறிப்பினாலே கூப்பினான் றாப ரத்தை" (தேவா); 'கோள மதனி னுண்ணிறைந்து குறித்த பூசை கொள்கின்றார்' (1241); **தொண்டு**-சரியைநெறி பலவும் கொள்க.

குழாம் குழாமாகி - கூறிய இரண்டு நிலையினர் (அகம், புறம்- சித்தாந்தம்) களைக் குறிக்க அடுக்கிக் கூறினார். இங்கு இவ்வாறன்றி வேறுவகையாய்ப் பொருளுரைப்பர் முன் உரைகாரர்கள்; நான்கும் ஒரு பொருள்மேல் வருதலிற் சேர்த்துக் கூறினார்.

முன்பாட்டால் வைதிகநெறி ஒழுக்கத்தினரையும்,இப்பாட்டால் ஆகமநெறி யொழுக்கத்தினரையும் கூறிய நிலையும் சிறப்புப்பற்றிய வைப்பு முறையும் கண்டுகொள்க. இதனுடன் மண்ணுலகினுள்ளாரை முடித்துக் காட்டி, இனி, மேல்வரும் பாட்டில் விண்ணுலகவரைக் கூறுதலும் கண்டுகொள்க. 1203

---

*பாடியம் - சூ. - 2-1 பார்க்க.

3102. **விஞ்சைய** ரியக்கர் சித்தர் கின்னரர் மிடைந்த தேவர்
அஞ்சன நாட்ட வீட்டத் தரம்பைய ருடனு யுள்ளோர்
தஞ்சுடர் விமான மேறித் தழைத்தவா தரவி னேடு
மஞ்சுறை **விசும்பின் மீது மணவணி காணச் சென்ருர்.** *1204*

3102. (இ-ள்) விஞ்சையர்...தேவர் - வித்தியாதரர்களும், இயக்கர்களும், சித்தர்களும், கின்னரர்களும், நெருங்கிய தேவர்களும்; அஞ்சன... உடனுயுள்ளோர் - மைதீட்டிய கண்களையுடைய கூட்டமாகிய அரம்பையர் என்னும் தேவ மாதர்களுடனுக வுள்ளவர்களும்; தம்சுடர்... சென்ருர் - தங்கள் தங்களுடைய ஒளி பொருந்திய ஆகாய விமானங்களில் ஏறிக்கொண்டு மேன்மேல் மிகுந்த ஆசையுடனே மேகங்கள் தவழும் ஆகாயத்தின் வழியாகத் திருமண அழகினைக் காணும் பொருட்டுச் சென்றனர்.

இவ்வைந்து பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) விஞ்சையர், இயக்கர், கின்னரர் - இவர்கள் இசைவல்ல தேவச் சாதியர்.

சித்தர் - வேண்டியவாறு சரிக்கும் வல்லமை பெற்றவர்கள். "வித்தகச் சித்தர் கணமே" (தாயுமா).

அரம்பையர் உடனுயுள்ளோர் - தேவப் பெண்களுடன் கூடிய தேவர்கள்; **அரம்பையர்**-தேவப்பெண்கள் என்ற பொருளில் வந்தது.

சுடர் விமானம் - ஒளியுடைய ஆகாய விமானங்கள்.

மஞ்சுறை விசும்பு - மேகமண்டலம் அளவும் உயர்ந்த ஆகாயம். தேவர்களின் விமானங்கள் செல்லும் உயரம் குறித்தது.

ஆதரவு - ஆசை; **தழைத்தல்** - பெருகுதல்; **மண அணிகாண** - மண அணிகள் தேவருலகத்தும் காணவொண்ணுதபடி அற்புதமாயிருத்தல் குறிப்பு; நிலவுலகத்தில் மண எழுச்சியிற் கலந்துசென்ற பேறுபெற்ற மக்கட் கூட்டம் முழுதும் பின்னர்ப் பிள்ளையார் அருளால் முத்திபெற்று மீளாநெறி யடையவுள்ளாராக; இத்தேவக் கூட்டம் அப்பேறு பெறும் தகுதியில்லாதவராகி மணவணி காண்பதில் மட்டும் அமைவுபடுவர் என்பது **காண** என்றதன் குறிப்பு. பின்னர்த், "தூரத்தே **கண்டு** நணுகப் பெரு, விண்ணவரு முனிவர்களும் விரிஞ்சனே முதலோரும், எண்ணிலவ ரேசறவு தீரவெடுத் தேத்தினுர்" (3153) என்பது காண்க; தேவர்கள் தமது அனுபவநாள் எல்லையில் புவனியில் வந்து பிறந்து சிவதருமங்கள் புரிந்த பின்னரே நாளடைவில் முத்தியடையத்தக்கார் என்பது நூற்றுணிபு; "புவனியிற் போய்ப்பிற வாமையினுைம் போக்குகின் ருேமவ மேயிந்தப் பூமி, சிவனுய்யக் கொள்கின்ற வாறு" (திருவா). **1204**

3103. (இ-ள்) மற்றிவர்... காட்சி - மற்று இத்தேவச்சாதியர் முதலினுேர் நெருங்கி மேற்செல்லும் மங்கலமாகிய அழகின் காட்சியானது; முற்ற... அணைதலான் - இந்நிலவுகத்துள்ளோர் யாவரும் நெருங்கிக்கூடித் திருமண எழுச்சியிற் செல்லும் காலத்தில்

3103. மற்றிவர் மிடைந்து செல்லும் மங்கல வனப்பின் காட்சி
முற்றவித் தலத்தி னுள்ளோர் மொய்த்துடன் படரும் போதில்
அற்புத நிகழ்ச்சி யெய்த வணைதலான் **மணமேற் செல்லும்**
பொற்பமை மணத்தின் சாயை போன்றுமுன் பொலியச்செல்ல; *1205*

அற்புதமாகிய தன்மை பொருந்த மேலே உடன் அணைதலினாலே; மணமேல்...சாயைபோன்று- மண எழுச்சியின்மேலே செல்கின்ற அழகு பொருந்தியதொரு மண எழுச்சியினது சாயையினைப் போல; முன்பொலியச் செல்ல- முன்னே விளங்கும்படி போக;

(வி-ரை) மற்று... காட்சி-இவர் முன்பாட்டிற் கூறிய தேவச்சாதியர்; **மிடைந்து -** தம்முள் நெருங்கியுள்ளார், கீழே நிலத்தில் செல்லும் திருமண எழுச்சியினை அணுகியும்.

இத்தலத்தினுள்ளோர் - இந்நிலவுலகத்தி லுள்ளவர்கள்; மக்கள்,

படரும்போதில் - அணைதலால் - என்று கூட்டுக. மக்கட் கூட்டம் நிலத்தில்- அணையும்போதே அதனைக் காண மேலே தொடர்ந்து அணுகிச் சேர்வதனாலே.

அற்புத நிகழ்ச்சியை - அணைதலால் - சாயைபோன்றது என்றது, கீழே நிலத்தினும் மணங்காணச் செல்லும் அழகிய கூட்டம்; மேலே ஆகாயத்திலும் இவர்களைத் தொடர்ந்து அணுகிச் செல்லும் அழகிய கூட்டம்; ஒன்று போலவே கூடி உடன் அசைந்து செல்லுதலாலும், கீழும் மேலுமாக அணிமையில் செல்லுதலாலும், ஒன்று போன் றிருத்தலாலும் அஃது இதன் சாயைபோன் றிருந்தது என்றலுமாம்.

சாயை - பிரதிபிம்பம்; இங்குப் பின்னர் வரலாற்றினும்,மண்ணிற் சென்ற மக்கட்கூட்டம் மணத்தில் மெய்ப்பொருளைப் பற்றுவாராதலும், ஏனை விண்ணவர் கூட்டம் கண்டமட்டி லமைந்து வேறு ஒன்றும் பெறாது பின்னின்றாராவதாலும் சாயையே போல்வதும் காண்க.

மண்ணவர் சாயை போன்றது விண்ணவர் மேற்செல்லும் கூட்டம் என்றதனால் விண்ணவரினும் மண்ணவரது சிறப்புக் குறித்தவாறும், அவர் நுண்ணுடலினராதல் குறித்தவாறும் கண்டுகொள்க. **மற்றிவர் - மற்று** - என்ற குறிப்புமிது.

மற்றவர்—என்பதும் பாடம். **1205**

3104. (இ-ள்) தவஅரசு...நிழற்ற - தவ அரசாங்கத்தை ஆட்சிபுரிதற்குப் பிடித்தல் போல ஒப்பற்ற முத்துக்குடைமேல் நிழற்ற; சாரும்...கொண்டு-சார்கின்ற பிறவியை அறுத்து ஆட்கொள்ள வல்ல இறைவர் திருவடிகளைத் தமது திருவுள்ளத்துக் கொண்ட வராய்; புவனங்கள்... போந்து- புவனங்களெல்லாம் வாழ்வடையும் பொருட்டு வந்த வதரித்த சீகாழி வேந்தராகிய பிள்ளையார் சென்றருளி; சிவன்... சேர்ந்தார் - சிவபெருமான் விரும்பி எழுந்தருளிய திருநல்லூர்ப் பெருமணத்தினைச் சேர்ந்தருளினர்.

*3104. **தவவர சாள வுய்க்குந் தனிக்குடை நிழற்றச்** சாரும்
பவமறுத் தாள வல்லார் பாதமுள் ளத்துக் கொண்டு
புவனங்கள் வாழ வந்த பூந்தராய் வேந்தர் போந்து
சிவனமர்ந் துறையு **நல்லூர்த் திருப்பெரு மணத்தைச் சேர்ந்தார்.** 1206

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) தவஅரசு ஆளஉய்க்குந் தனிக்குடை - தனிக்குடை - "வெண் கொற்றக் குடையும் நவமணி முடியும் சிங்காதனமும் மன்னவர்க்கே யுரிய சிறப்படையாளங்கள்." அவற்றுள் சிறப்புப்பற்றிக் குடையினைச் சொல்லவே இனம் பற்றி ஏனையிரண்டும் கொள்ளப்படும். "பிரபஞ்ச மெல்லாவற்றுக்கும் மூல காரணமாகிய ஒரு பெரு வெண்கொற்றக்குடையும், எவற்றையும் ஒருங்கே ஓரியல்பான் அறியும் பேரறிவாகிய ஒரு பெருஞ்சுடர் முடியும், எவற்றினையும் அங்கங்கே உயிர்க்குயிராய்நின்று செலுத்துமியல்பாகிய ஒரு பெருஞ் சிங்காதனமும் பிறர்க்கின்றி தனக்கே உரிமையாகச் சிறந்தமைபற்றிப் பசுக்களுக்குப் பாசங்களை அரித்தலான் **அர**னென்னும் திருப்பெயருடைய முதல்வனாகிய இறைவனை மன்னவனாகவும், அம்முதல்வனது பேரானந்தப் பெருஞ்செல்வ முழுதுந் தனதேயாகக் கொண்டு அநுபவிக்கும் சுதந்தரமுடைமையும் சித்தெனப்படும் சாதியொப்புமையும்பற்றி ஆன்மாவை மன்னவ குமாரனாகவும்..." உருவகஞ்செய்து எடுத்துக் காட்டும் "தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்த" (8-சூ.) என்ற சிவஞான போதம் ஈண்டு நினைவுகூர்தற்பாலது; **தனிக்குடை** - என்ற குறிப்புமது. "தானே தனிமன்றுட் டன்னந் தனிநித்தம்" (திருமந்), "தாந்த முணர்வின்றமி" (போதம்-5-சூத்) என்றபடி தனியாகிய இறைவரால் அருளப்பட்ட குடை என்றும், தனியினது குடை என்றும் உரைக்க நின்றது.

இனி எண்ணரிய சிவஞானம் தந்து இறைவர் பிள்ளையாருக்குத் தாம் செய்யும் தன்மைகளை இவருக்கு ஆக்கிவிட்டபடியினாலே இங்குச் சார்ந்தார் எல்லார்க்கும் பிள்ளையார் முத்திதரும் தன்மையும் குறிக்கொள்க.

தவ அரசாளவுய்க்கும் - தவம் - முற்செய் தவங்காரணத்தினாலே; **அரசாள உய்க்கும் -** தவத்தினால் உணர்த்தி அவ்வான்மாக்களை எல்லாம் தத்தமதுரிமையின்படி பேரானந்தப் பெருக்காகிய சிவலோக வாழ்வுபெற்று மீளாநெறி யடையும்படி செலுத்தும்; **"தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த"** - என்றபடி பிள்ளையார் குருவாக எழுந்தருளி இங்குத் திருமணங்காண முன்னைத் தவத்தினால் அணைந்தோர்க் கெல்லாம் "ஞானமெய்ந் நெறிதான் யார்க்கும் நமச்சிவாயச் சொலாம்" என்று பதிகம் பாடி உணர்த்தியருளும் நிலையும் கருதுக. **புவனங்கள் வாழவந்த** என்ற கருத்துமிது.

சாரும் பவமறுத் தாள வல்லார் பாத முள்ளத்துக்கொண்டு - சேர்ந்தார் - என்க. ஆசாரியன் பக்குவப்பட்டடைந்த மாணவனுக்குத் தீக்கை செய்து நெறி அருளும் முன்பு இறைவரை நினைந்து "இறைவரே! இம்மாணவன் பக்குவ நோக்கித் தீக்கை செய்து நன்னெறி செலுத்த அருள்புரிவீராக!" என்று விண்ணப்பித்து மேற்செல்லும் சிவாகமவிதி காண்க.

3105. பெருமணக் கோயி லுள்ளார் மங்கலம் பெருகு மாற்றால்
வருமணத் திறத்தின் முன்னர் வழியெதிர் கொள்ளச் சென்று
திருமணம் புணர வெய்துஞ் சிரபுரச் செம்ம லார்தாம்
இருண்மறைத் திலங்கு கண்டத் திறைவர்தங் கோயில் புக்கார். *1207*

சிவன் **-** இறைவர் திருநாமங்களுள் **பவன் -** ***சிவன்*** என்பன *சிறந்தவை* என்பது.
1206

3105. (இ-ள்) பெருமணக் கோயில்...எதிர்கொள்ள - திருநல்லூர்ப் பெருமணத்தின் கோயிலில் உள்ள அடியார்கள் மங்கலம் சிறந்து பெருகும்படி இனி நிகழ உள்ள திருமணத்தின் முன்னர் வழியில்வந்து எதிர்கொள்ள; திருமணம்...செம்மலார்தாம் - திருமணம் செய்தருளும்பொருட்டு வரும் சீகாழிப் பெருந்தகையாராகிய பிள்ளையார்; சென்று - சென்றருளி; இருள்மறைத்து...புக்கார் - கரியவிடத்தினைத் தன்னுட் கரந்து விளங்கும் கண்டத்தினையுடைய இறைவரது திருக்கோயிலினுட் புகுந்தருளினர்.

(வி-ரை) இப்பாட்டினால் திருமணத்தின் பொருட்டு வருகின்ற பிள்ளையாரை அத்தொடர்புபற்றிச் சுற்றத்தார் முதலியோர் எதிர்கொண்டு மணமனைக்கு அழைத்துச் செல்லுதல் உலகியல்; ஆனால் இங்கு அவ்வாறு அவர்கள் அத்தொடர்புபற்றி எதிர்கொண்டு அழைக்கும்முன்பே திருக்கோயிலின் அடியவர்கள் உரிய சிறப்புக்களுடன் சென்று எதிர்கொண்டு பிள்ளையாரை வரவேற்று அழைத்துச்செல்ல அவர்களுடன் பிள்ளையார் நேரே திருக்கோயிலுக்கு எழுந்தருளினர் என்பது கூறப்பட்டது. இது பின்வரும் நிகழ்ச்சியின் முற்குறிப்பாக உள்ளமையும் காண்க; **பிள்ளையார் புற உலகத் தோற்றத்தில் திருமணஞ் செய்தருள எழுந்தருளினாரேனும் உண்மையில் திருப்பெருமணத்தில் இறைவருடன் புக்கு ஒன்றி உடனாகும் சிவபோகத் திருமணத்தின் பொருட்டே வந்தாராகும் என்பது குறிப்பு;** உலகியலில் மணத்தின்பொருட்டுச் செல்வோர் மணவினைசெயிடத்துக்கு நேரே செல்லாது இறைவர் திருக்கோயிலுக்குச் செல்வோரைக் காணல் அரிதாதல் கருதுக. "மணத்தின் முன்னர் அடியார் எதிர்கொள்ள மணம்புணர எய்தும் செம்மலார் கோயில்புக்கார்" என்ற குறிப்புமிது.

வரும் மணத்திறத்தின் முன்னர் - மணம்பற்றி அத்தொடர்பால் அழைத்துச் சென்று மணமனை புகுமுன்பு; **வரும் -** குறித்து எழுந்தருளிவந்த.

இருள் மறைத்து இலங்குகண்டத்து இறைவர் - இருள் - இருள்போன்ற கரிய விடத்துக்கு ஆயிற்று; ஆகுபெயர்; இருள் - இருள்மலம் என்னும் ஆணவம் என்ற குறிப்புடனும் நின்றது; இனி, இத்திருமணத்திற் பிள்ளையாரின்மூலம் வந்து சார்வார்களது ஆவணமாகிய மூலமலத்தையெல்லாம் சத்திகெட்டு ஒடுங்கும்படி செய்து முத்திதரும்நிலை விளங்கிநிற்கும் இறைவர் என்ற குறிப்பும் காண்க.

மங்கலம் பெருகுமாற்றால் - எதிர்கொள்ள - என்க. இறைவரின் குடை முதலிய மங்கலப்பொருள்களைப் பெருக ஏந்திப்போய் வழியில் எதிர்கொள்ள என்க; இனி,

3106. நாதரைப் பணிந்து போற்றி நற்பொருட் பதிகம் பாடிக்
காதன்மெய் யருண்முன் பெற்றுக் கவுணியர் தலைவர் போந்து
வேதியர் "வதுவைக் கோலம் புனைந்திட வேண்டு" மென்னப்
பூதநா யகர்தங் **கோயிற் புறத்தொரு மடத்திற் புக்கார்.** *1208*

மங்கலமாவது சிவம்; பிள்ளையார் வந்த மங்கலமாகிய மணமே பெருகிய சிவ மங்கலமாக இனி நிகழும் வழியாலே என்ற குறிப்பும் காண்க; உலகின் மங்கலமாக எண்ணப்படும் மணம் முதலியவை யெல்லாம் ஒருகாலத்து அழிந்துபட்டு அமங்கலமாய் முடிவாதல் உறுதியாதலின், அவற்றை மங்கலம் என்பது பொய் உபசாரமேயன்றி உண்மையன்று; அவை உடலோடொழிவன; சிவபெருமானாகிய உயிர் நாயகனை ஆன்மாக்கள் அடைவதாகிய மணமே அழியாத மங்கலம்; உலக மணம்போலன்றி அனுபவிக்குந்தோறும் பெருகும் பேரானந்தம் விளைக்கும் மங்கலம் என்ற முற்குறிப்பெல்லாங் ஈண்டுக் கண்டுகொள்க.

இருள் மணந்து - என்பது பாடமாயின், **மணந்து** - கூடி என்க. *1207*

3106. (இ-ள்) நாதரை...போந்து - இறைவரை வணங்கித் துதித்து நல்ல பொருளினையுடைய திருப்பதிகத்தைப் பாடிப், பெருவிருப்பத்தினை விளைக்கின்ற (இறைவரது) மெய்யருளினை முன்னே பெற்றவராய்க் கவுணியர் தலைவராகிய பிள்ளையார் வெளிப்போந்து; வேதியர்...என்ன - "திருமணக் கோலத்தினைப் புனைந்தருள வேண்டும்" என்று மறையவர்கள் வேண்டிக்கொள்ள அதனைக் கேட்டு; பூதநாயகர்...புக்கார் -பூதநாயகராகிய இறைவரது திருக்கோயிலின் புறத்திலே ஒரு திருமடத்தினுள்ளே புகுந்தருளினர்.

(வி-ரை) நற்பொருட் பதிகம் பாடி - இப்பதிகம் கிடைத்திலது!

காதல் மெய்யருள் - காதல் காதலை விளைக்கும் காதல்கொண்ட என்றலுமாம். **மெய்யருள்** - இறைவரது, என்றும் மாறாத அருள். **மெய்**-(இறைவர்) மெய்யினது அருள் என்றலுமாம்; **காதல் - "காதலாகி**க் கசிந்து" என மேல்வரும் திருப்பதிகத்தின் முற்குறிப்பு.

வேதியர் என்ன என்க. **வதுவைக் கோலம்** - மணமகனாராக எழுந்தருளும் மணக் கோலம்; இது மேல்வரும் பத்துப் பாட்டுக்களால் விரிக்கப்படுதல் காண்க.

பூதநாயகர் - உயிர்களின் நாயகர்; **பூதம்** - உயிர்கள். "**பூத**பரம் பரைபொலிய" (*1899*); உயிர்க்குயிராய் உள்ளிருந்து இயக்கும் நாயகர்; இங்கு இனி,வரும் அடியார்களை ஆட்கொண்டு தமது சிவானந்தப் பெரும்பேறு அளித்தருளும் குறிப்புடன் கூறியபடி; **பூதம்** - சிவ பூதகணங்கள் என்றலுமாம்.

ஒருமடம் - பிள்ளையார் எழுந்தருளி வதுவைக் கோலம் புனைந்தருளுதற் கிடமாதலாகிய பேறு பெறுதலின் மடம் எனப்பெற்றது; இஃது இன்ன இடம் என்று இப்போது அறியக்கூடவில்லை! இது கோயிலின் அருகில் அமைந்திருத்தல்

திருமணக் கோலம் - (பாதாதிகேசம்) அடிமுதல் முடிவரை:

3107. **பொற்குட** நிறைந்த வாசப் புனிதம**ஞ் சனநீ ராட்டி**
விற்பொலி **வெண்பட் டாடை** மேதக விளங்கச் சாத்தி,
நற்றிரு **வுத்த ரீய** நறுந்துகில் சாத்தி, நானப்
பற்பல **கலவைச் சாந்தம்** பான்மையி னணிந்த பின்னர், *1209*

வேண்டுமென்பது கருதப்படும். நம்பியாண்டார் நம்பிகளது திருமனையும் அவ்வாறே பிள்ளையாரது பெருந் திருமணம் நிகழ்ந்த இடமாம்பேறு பெற்றது. அஃது இருந்த இடந்தானும் இந்நாள் அறியக்கூடவில்லை! இவற்றைக் கன்னபரம்பரை வழக்குப் பற்றியேனும் அறிந்து நினைவுக் குறியாகக் காத்துவைத்தல் சிவ புண்ணியமாகும். *1208*

3107. (இ-ள்) பொற்குடம்...ஆட்டி - பொன்னின் குடத்தில் நிறைந்த மணமுடைய தூய திருமஞ்சனநீரினாலே பிள்ளையாரை நீராட்டுவித்து; விற்பொலி...சாத்தி - ஒளி விளங்கும் வெண்பட்டாடையினை மேன்மை பெற விளங்கும்படி சாத்தி; நற்றிரு...சாத்தி - நல்ல திருவுத்தரீயமாகிய நறுந் துகிலினைச் சாத்தி - நானப்...பின்னர் - மணங் கமழும் கத்தூரியுடன் பல பொருள்களைக் கூட்டியமைத்த சாந்தத்தினைப் பண்புபெற அணிவித்த பின்பு,

(வி-ரை) பொற்குடம்...நீராட்டி - பொற்குடம் - பொன்னாலாகிய குடம்; **வாசப் புனித மஞ்சனம்** - நீராட்டுதற்கென்று அமைத்த தூயதாய்ப் புதிய மலர்களும் வாசனைப் பண்டங்களுமிட்ட நன்னீர்; **நீராட்டி** - இது திருமணக் கோலங்கொள்வதன் முன் செய்யப்படுவது. முன்னர்க் "காலை செய்வினை முற்றிய" (3094) என்றவிடத் துரைத்தது நித்திய நெறியில் செய்வது; "மஞ்சன சாலை புக்கான்" (160); "தூநீர்ப் பாசனம்" (161).

வெண் பட்டாடை - வெண்மை - புகழ் - தூய்மை - முதலியவற்றின் குறி.

உத்தரீய நறுந்துகில் - மேலாடை; இஃது இல்வாழ்க்கை நிலையினர்க்குரியது; பிரமசரியர் ஒற்றையாடை பூண்பர்.

நானம்-கத்தூரி; **பற்பல**-புழுகு -குங்குமப்பூ முதலியவை; **கலவைச் சாந்தம் -** இவை கலந்து கூட்டி அமைத்த சந்தனக் குழம்பு; **பான்மை -** அணியும் முறை. *1209*

3108. (இ-ள்) திருஅடி...சாத்தி - திருவடி மலர்கள் மேலே பூத்த செவ்விய விளக்கத்தின் ஒளிபோலப் பொருந்திய முத்துக் கோவைகளையுடைய இரத்தினவளையை அங்கு அணையும்படி சாத்தி; விரிசுடர்...சாத்தி - விரியும் ஒளியுடைய பரடுகளின்மேல் விளங்கிய பொற்கம்பியில் கோத்த பெருகும் ஒளியுடைய முத்துமாலை வடத்தில் விளங்கிய குஞ்சம் சாத்தி,

(வி-ரை) இதுமுதல் ஆறு பாட்டுக்களாலும் அடிமுதல் முடிவரை செய்த கோலங் கூறப்பட்டது. இதனைப் பாதாதிகேச மென்பது வடமொழி வழக்கு; பிள்ளையாரது திருமணக் கோலத்தினை முழுதும் அவர்தம் திருவடிதொழுது அத்துணை கொண்டு கண்டு தரிசித்து

3108. **திருவடி** மலர்மேற் பூத்த செழுநகைச் சோதி யென்ன
மருவிய **தரளக் கோவை மணிச்சரி** யணையச் சாத்தி,
விரிசுடர்ப் **பரட்டின்** மீது விளங்குபொற் சரட்டிற் கோத்த
பெருகொளி **முத்தின்** ரூமம் பிறங்கிய **தொங்கல்** சாத்தி, *1210*

உய்யும் காரணம் நமக்கருள்வதும் ஆசிரியரது திருவுள்ளக் குறிப்பு. **பிள்ளையாரது திருவடிச் சார்பே முத்திசாதனமாவதும் குறிப்பு.** இதுபோலவே முடிமுதல் அடிவரை சிறப்பித்து எழுதிக் காட்டும் மரபும் உண்டு; அதுகேசாதிபாதம் என்பர். அம்மரபு கண்ணப்பநாயனார் புராணத்திலும் (705—711), ஆனாயநாயனார் புராணத்திலும் (940—943) ஆசிரியர் காட்டியருளியமை ஈண்டு நினைவுகூர்தற்பாலது; இதுபற்றி 712-ம் பாட்டின்கீழ் முன் உரைத்தவை பார்க்க (*II*-பக். 906) பாதாதிகேசம் என்ற கோயில் - திருவாலியமுதனார் - திருவிசைப்பாவிலும் இம்மரபு காட்டப்படுதல் காண்க. ''யானெனதென் றற்ற விடமே **திருவடி**யா, மோனபரா னந்த **முடி**யாக - ஞானந், திருவுருவா விச்சை செயலறிவு கண்ணு, வருளதுவே செங்கை யலரா - விருநிலமே, சந்நிதியா நிற்குந் தனிச்சுடரே'' (34-36 கண்ணிகள்) என்று, அடிமுதல் முடிவரையும், ''மின்னுருவந், தோய்ந்த நவரத்னச் சுடர்மணியாற் செய்தபைம்பொன் வாய்ந்த கிரண மணிமுடியும்...'''(37) என்பதுமுதல் ''பாதத் தணிந்த பரிபுரமுஞ்-சோதி, யிளம்பரிதி நூறு யிரங்கோடி யென்ன, வளந்தருதெய்வீக வடிவும்'' (57) என்பது வரையும் முடிமுதல் அடிவரையுமாக இவ்விரு மரபும் வைத்துக் கண்டு காட்டி முருகப்பெருமானை அடியவர்கள் கண்டு வழிபட அருளிய குமரகுருபர அடிகளாரின்அருள்வாக்கும் கருதுக. ஈண்டு அடிமுதல் முடிவரை கூறியது ஒடுக்கமுறைக் குறிப்பாவதும் காண்க.

கண்ணப்ப நாயனார் - ஆனாய நாயனார் - ஆளுடைய பிள்ளையார் என்ற இம்மூவரையும் இவ்வாறு எழுதிக்காட்டியது இம்மூவரும் அவ்வக்கோலங்களுடனே நேரே இறைவனடி சேர்கின்றா ரென்பதும் குறிப்பு.

இனித், திருவடிமுதல் திருமுடிவரை அணியும் அணிகள் யாவையும் முத்துக்களாலாகிய அணிகளேயாதலும் குறிக்கற்பாலது. **முத்து** - விடுபடுவது என்பது காரணமாகப் போந்த பெயர்; **முத்தி** என்பதும் அக்காரணம் பற்றியே வந்தது. இங்கு யாவர்க்கும் முத்தி தரும் குருமூர்த்திகளாக மணமகனாகிய பிள்ளையார் நிற்பராதலின் அக்குறிப்புப் பெற அணிவகையும் நிற்றல் காண்க. இதுபற்றியே பின்னர் ''நம்மை யாளும் ஏர் வளர்தெய்வக் கோலம்'' (3114) என்பதும் காண்க. இதுபற்றி விறன்மிண்ட நாயனார் புராணத்துள் (492-ம் பாட்டின் கீழ்) உரைத்தவையும் பார்க்க.

திருவடிமலர்...சோதி என்ன - திருவடியாகிய மலர் பூத்தலின் மேலேஅலர்ந்து விரியும் வெண்சோதிபோலச் -சரி அணைய என்பது மலர் அலர்தலால் அவ்வகைச் சோதி(ஒளி) அதற்கேற்றவாறு மேலே அலர்ந்து வீசுதல் போல; இங்குத் திருவடிமலரின் அலர்ந்த சோதியே அவர் அணிந்த சரி என்க. **செழுநகை** - நகைபோன்ற ஒளிப்பிரபை.

சரி - வளை; **மணிச்சரி** - முத்துக் கோவையிளையுடைய இரத்தின வளை.

3109. **தண்சுடர்ப் பரிய முத்துத் தமனிய நாணிற் கோத்த**
கண்கவர் கோவைப் பத்திக் கதிர்க்கடி **சூத்தி** ரத்தை
வெண்சுடர்த் **தரள மாலை** விரிசுடர்க் கொடுக்கின் மீது
வண்டிரு **வரையி** னீடு வனப்பொளி வளரச் சாத்தி. 1211

3110. **ஒளிகதிர்த் தரளக் கோவை யுதரபந் தனத்தின் மீது**
தளிரொளி துளும்பு **முத்தின் சன்னவீ ரத்தைச்** சாத்தி,
குளிர்நில வெறிக்கு **முத்தின் பூணூற்** கோவை சாத்தி,
நளிர்கதிர் **முத்து மாலை** நகுசுட **ராரஞ்** சாத்தி. 1212

பரடு - கணைக்காலின் பகுதி; "பரடியர் நீள்கணைக் காலோர் பெண்பேய்."
(திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் 1.)

தொங்கல் - குஞ்சம்; **முத்தின்...தொங்கல்** - முத்து மாலைகளைக் குஞ்சமாகத் திரட்டிய கோவை.

செழுந்தகை—மணிச்சிலம்பணைய—என்பனவும் பாடங்கள். 1210

3109. (இ-ள்) தண்சுடர்...கடி சூத்திரத்தை - குளிர்ந்த ஒளி வீசுகின்ற பரு முத்துக்களைப் பொற்கயிற்றிலே கோத்த, கண்டாரது கண்ணைக் கவரத்தக்க, கோவை வரிசைகளையுடைய, ஒளியுடைய அரைஞாணை; வெண்சுடர்...மீது - வெள்ளிய ஒளி வீசும் முத்துமாலை விரிந்த சுடர்விடும் கச்சத்தின் மேலே; வண்...வளரச் சாத்தி - வளம் பொருந்திய திருவரையினிடத்து மிகுந்த அழகுடனே ஒளி விளங்க அணிந்து,

(வி-ரை) பரிய முத்து - பருமுத்துக்கள். **பரிய முத்து...கடி சூத்திரம் - கடி சூத்திரம்** - அரைஞாண்; இங்குக் கூறியது உடையின்மேல் அணியும் அணியாகிய அரைஞாண்; இது பொற்கயிற்றில் பருமுத்துக்களைக் கோத்தது.

வெண்சுடர்...கொடுக்கின் மீது - கொடுக்கு - பின் கச்சம்; **தரளமாலை விரி சுடர்க் கொடுக்கு** - உடையின் கரையில் முத்துப் பந்திகள் இழைக்கப்பட்டு விளங்கும் பின் கச்சம்; அந்தக் கரை கச்சமாக அமையும்படி உடை சாத்துதல் வழக்கு; கடி சூத்திரத்தைக் கொடுக்கின்மீது சாத்தி என்றுகூட்டுக. 1211

3110. (இ-ள்) ஒளி...மீது - ஒளியுடைய கதிர்களை வீசும் முத்துக்கோவைகளாலாகிய அரைப்பட்டிகையின் மேல்; தளிரொளி...சன்னவீரத்தைச் சாத்தி - தளிர்க்கும் ஒளி ததும்பும் சன்னவீரத்தை அணிந்து; குளிர் நிலவு...கோவை சாத்தி - குளிர்ந்த ஒளிவீசும் முத்துக் கோவையாலாகிய பூணூலினை அணிந்து; நளிர் கதிர்...ஆரம் சாத்தி - குளிர்ந்த கதிர்களையுடைய முத்து மாலையாகிய ஒளி விளக்கமுடைய ஆரத்தை அணிந்து;

(வி-ரை) உதர பந்தனம் - அரையிற் கட்டும் பட்டிகை; Belt என்பர் நவீனர். ஆயின் இஃது அரையின்மேல் வயிற்றினும் பொருந்த நாபிப்பிரதேசத்திற் கட்டப்படுவது; "அகட சக்கர வின்மணி" (கந்தபுராணம்).

3111. **வாள்**விடு வயிரக் கட்டு மணி**விர லாழி** சாத்தித்,
தாளுறு **தடக்கை முத்தின் றண்டையுஞ் சரி**யுஞ் சாத்தி,
நீளொளி **முழங்கைப்** பொட்டு நிரைசுடர் **வடமுஞ்** சாத்தித்,
தோள்வளைத் தரளப் பைம்பூண் சுந்தரத் **தோண்மேற்** சாத்தி, 1213

சன்ன வீரம் - வெற்றிமாலை; வீரசங்கிலி என்றும் வழங்குவர். கழுத்தினின்று உந்திவரை தொங்கும்படி மேல் அகன்று திரண்ட வடிவாய் அமைக்கப்படும்; (708 பார்க்க) முத்துமாலை முதலியவற்றானமைந்த சன்னவீரத்தை அரசர் முதலாயினோர் அணிவது வழக்கு. உதர பந்தனத்தின் மேலே விளங்கச் சன்னவீரத்தை அணிந்து என்க. சன்ன வீரம் திருமார்பில் வில்லிலக''-(ஞானவுலா).

ஒளி கதிர் - தளிர் ஒளி - குளிர் நிலவு - நளிர் கதிர் - இவை நன்முத்துக்களின் ஒளியில் சிறப்பாயமையும் தன்மைகள். **தளிர்** - தண்மை; **நளிர்** - தளிர்க்கும்; **துளும்பும்** - ததும்புகின்றதுபோல விளங்கும்.

முத்தின் பூணநூற் கோவை-பூணூல்போல அணியும் முத்துக் கோவை வடம்.

நகுசுடர் ஆரம் - கதிர் விரிதல் நகுதல்போல உள்ளதென்பது குறிப்பு; நகுதல் - மகிழ்ச்சிக்குறி; ''நகைக்கும் பதத்தில்'' (1023).

ஒளி கதிர்—என்பதும் பாடம்.

1212

3111. (இ-ள்) வாள்விடு...ஆழி சாத்தி- ஒளி விடுகின்ற வயிரக் கட்டுடைய அழகிய விரல்மோதிரத்தை அணிந்து; தாளுறு...சரியும் சாத்தி - முழந்தாள் வரையும் நீண்ட வலிய கையில் முத்தினாலாகிய தண்டையையும் கைச்சரியினையும் அணிந்து; நீள் ஒளி... வடமும் சாத்தி- நீண்ட ஒளியுடைய முழங்கைப் பொட்டுடனே வரிசையின் ஒளிவீசும் மணி வடங்களையும் அணிந்து; தோள் வளை...தோண்மேற் சாத்தி - தோள் வளையாகிய முத்தாலாகிய அழகிய அணியினை அழகிய தோளின்மேல் அணிந்து;

(வி-ரை) வாள்...ஆழி - ஆழி - விரலாழி; மோதிரம். முத்தினை வயிரத்துடன் வைத்துக் கட்டிய மோதிரம் என்க. **மணி** - என்றதனால் அரதன முதலிய ஏனை மணிகளும் கொள்ளலாம்.

தாள் உறு தடக்கை - முழங்கால் வரையும் கைகள் நீண்டிருத்தல் உடற்கூற்றமைப்பின் உயர்ந்த தன்மை என்றும், இது கொடையிற் சிறந்தநிலை காட்டும் என்றும் கூறுவர்.

தடக்கை - பெரிய வலிய கைகள்; இங்கு வலிமையும் வண்மையுமாவன உலகை வாழ்விக்க அருளும் கைவண்மை; திருமருகலில் வணிகப் பெண்ணை வாழ்வித்தமை, மங்கையர்க்கரசியம்மையாரையும் குலச்சிறையாரையும் எடுத்து மன்னவர்க்கு நீறு நல்கியமை முதலியவையும், இனி இங்கு மணத்தில் வந்தோர் யாவருக்கும் முத்திநெறி காட்டுகின்றமையும் என்ற குறிப்பெல்லாமும் வைத்துக் கண்டுகொள்க. **சரி**-முன்கையில்

3112. **திருக்கழுத்** தாரந் **தெய்வக் கண்டிகை மாலை சேரப்**
பருத்தமுத் தொழுங்கு கோத்த படரொளி **வடமுஞ்** சாத்திப்,
பெருக்கிய வனப்பின் செவ்வி பிறங்கிய திருவார் **காதில்**
வருக்கவெண் **டரளக்** கொத்தின் வடிக்**குழை** விளங்கச் சாத்தி, *1214*

அணியப்பாடுர் எனா. "துயர்தீர்த்த கருணை வெள்ளப், புயலார் தரு**கையி** னுனென்னத் தோன்றிடும் புண்ணியனே" (ஆளு. பிள்- திருவந் - 49).

முழங்கைப் பொட்டு - முழங்கையில் அணியும் ஒருவகை அணி;கரமாலை என்னும் உருத்திராக்க மாலை அணியும் வழக்குக் காண்க. **பொட்டு** - பொட்டாக விளங்க; **வடம்** - முத்து வடம்.

தோள்வளைத் தரளப் பைம்பூண் - தோள் வளையாக அமைத்த முத்தணி.

சுந்தரத் தோள் - ஆண்மக்களுக்குத் தோள் அழகு மிகுதல் நல்லியல்புகளுள் ஒன்று; மணமகனது தோள் கண்டு அன்பு மிகுதல் அகப்பொருள் நூல்களுள் விதந்து பேசப்படும். "தமிழாகரன் றன்பொற் சுடர்வரைத்தோள், கூடுதற் கேசற்ற கொம்பினை" (ஆளு.பிள் -அந்-45); "தோள்வலி கூறுவோர்க்கே" "தோள் கண்டார் தோளே கண்டார்" என்று இக்கருத்தை வலியுறுத்திய கம்பன் பாட்டுக்களும் தோள்வலி என்பது பற்றிய சங்கோத்தர விருத்தியும் காண்க.

தண்டையு நாணும்—என்பதும் பாடம். *1213*

3112. (இ-ள்) தெய்வக் கண்டிகை மாலை சேர - தெய்வத்தன்மையுடைய உருத்திராக்கக் கண்டிகை மாலையுடன் சேரும்படி; திருக்கழுத்தாரம் - திருக்கழுத்தில் அணியும் ஆரமாக; பருத்த...வடமும் சாத்தி; பருமுத்துக்களை ஒழுங்குபடக் கோத்த படரும் ஒளியினையுடைய வடத்தினையும் சாத்தி; பெருக்கிய...காதில் - மிக்க அழகோடும் உரிய இலக்கணமமைந்த திருப் பொருந்திய காதுகளில்; வருக்கவெண்... விளங்கச் சாத்தி - நல்ல தன்மைச் சாதியான வெள்ளிய முத்துக் கொத்துக்களாலாய வடித்தமைத்த மகரகுண்டலத்தை விளக்கமாகச் சாத்தி;

(வி-ரை) திருக்கழுத்தாரம்... வடமும் சாத்தி - தெய்வக் கண்டிகை சேரத் திருக்கழுத்தாரமாக முத்து வடமும் சாத்தி என்று கூட்டுக; **தெய்வக் கண்டிகை மாலை** - உருத்திராக்க மாலை; முத்து மாலையின் மேம்பட்ட சிறப்புத் தோன்றத் **தெய்வக் கண்டிகை** என்று அடைமொழி புணர்த்தியோதினார். **கண்டிகை மாலைசேர வடமும் சாத்தி** - என்றதனாலும் அதன் உயர்வு காட்டப்பட்டது. இதற்கு இவ்வாறன்றித் தெய்வத் தன்மை பொருந்திய இரத்தின கண்டிகை மாலை என்றுரைத்தனர் முன்னுரைகாரர். "திருவடி மலர்மேற்பூத்த - சோதி" (3108) என்றும், "நீற்றொளி தழைத்துப் பொங்கி நிறைதிரு நெற்றி மீது,மேற்பட விரிந்த சோதி வெண்சுடர்" (3113) என்றும், "அழகினுக் கணியாம் வெண்ணீறு" (3115) என்றும் கூறுமாற்றால் சிவசாதனங்கள் முத்தினும் உயர்ந்தவை என்ற உண்மை காட்டப்படுதற் கேற்ப ஈண்டு இவ்வாறுரைத்தல் பொருத்தமுடைத்து காண்க.

3113. **நீற்றொளி** தழைத்துப் பொங்கி நிறை**திரு நெற்றி** மீது
மேற்பட விரிந்த சோதி வெண்சுட ரெழுந்த தென்னப்
பாற்படு **முத்தின்** பாரப் பனிச்சுடர்த் **திரளை** சாத்தி,
ஏற்பவைத் தணிந்த முத்தி னெழில்வளர் மகுடஞ் சேர்த்தார்; *1215*

இனித், ''திருவடை யாள மாலை''(3114) என்று மேலும் வருமாலோ? எனின், இங்குக் கூறிய ''கண்டிகை'' எப்பொழுதும் நித்தியமாகப் பிள்ளையார் தரித்ததென்றும், பின் வருவது திருமணக் கோலச் சிறப்பணியாகத் தரித்ததென்றும் கொள்க; ''நீற்றொளி தழைத்துப் பொங்கி நிறைதிரு நெற்றி'; (3113) என்று கூறிய பின்னர், மேலும், ''அழகினுக் கணியாம் வெண்ணீ றஞ்செழுத்தோதிச் சாத்தி'' என்று இக்கருத்தேபற்றி மற்றொரு சிவசாதனமாகிய திருநீற்றினைக் கூறுதலும் காண்க.

பருத்த முத்தொழுங்கு கோத்த - கண்டிகை மாலையுடன் சேர வைத்ததலால் பருமுத்து வடம் என்றார்; கழுத்தில் அணியும் உருத்திராக்க வடம் பருமணிகளால் அமையும் விதிக்குறிப்புங் கண்டுகொள்க.

பெருக்கிய வனப்பின் செவ்வி பிறங்கிய திருவார் காது-''அணைவுறவந் தெழுமறிவு தொடங்கிய அடியார்''களின் விண்ணப்பங்களெல்லாம் கேட்டு அருள்தரும் இடம் திருச்செவியே யாதலின் இவ்வாறு சிறப்பித்தார்; ''மெய்த்தன்மை விளங்கு திருச் செவியிற் சார மேவுதலும் திருவுள்ளக் கருணை மேன்மேல், வைத்து'' (2376) என்றதும், அவ்வாறு வந்த பிறவும் காண்க. காதுகள் பிரணவ வடிவாக அமைந்தமை ''**பெருக்கிய வனப்பின் செவ்வி பிறங்கிய திருவார்**'' என்றதன் குறிப்பு; ''தம் பாடல் பரமர்பாற், செல்லுமுறை பெறுவதற்குச் திருச்செவியைச் சிறப்பித்து'' (1973) என்று, பிள்ளையார் தமது திருமுறையைத் ''தோடுடைய செவியன்'' என்று தொடங்கியமை பற்றி ஆசிரியர் கருத்துக் கூறி எடுத்துக் காட்டியருளியதும் காண்க. சிவஞான நிறைவினாலார்ந்த திருமேனி யாதலின் பிள்ளையாரது காதுகளும் சிவன்றிருச்செவியின் தன்மை பெற்றன என்க.

வருக்கவெண் தரளக் கொத்தின் வடிக்குழை - நல்ல வருக்கமாகத் தெரிந்த சிறு நன்முத்துக்கள் ஆறுசேரக் கட்டிய குழை; இது ஞானதேசிகர்க்குரிய அணி. **வடிதல்** - கீழ்த் தாழ்ந்து தொங்குதல்.

சென்னி பிறங்கிய—என்ற பாடம் சிறப்பிலது. *1214*

3113. (இ-ள்) நீற்றொளி...மீது - திருநீற்றின் தெய்வவொளி தழைத்துப் பொங்கி நிறைந்த திருநெற்றியின்மேல்; மேற்பட...என்ன - அதன்மேலே விரிந்த சோதியினது வெள்ளிய சுடர் மேலெழுந்ததுபோல; பாற்படு...சாத்தி - நற்பான்மைபடுகின்ற முத்தினாலாய குளிர்ந்த ஒளிவிடுகின்ற திரளையினை அணிந்து; ஏற்ப வைத்து...சேர்த்தார் - பொருந்தும்படி வைத்து அழகுபடுத்திய முத்தினாலாகிய அழகு மிகுந்த மகுடத்தைச் சேர்த்தார்கள்;

(வி-ரை) நீற்றொளி...எழுந்தது என்ன-திருநீற்றின் ஒளி முன்னரே தழைத்துப் பொங்கித்

3114. **இ**வ்வகை நம்மை யாளு மேர்வளர் **தெய்வக் கோலங்**
கைவினை **மறையோர் செய்யக்** கடிகொள்செங் **கமலத் தாதின்**
செவ்விநீ டாம மார்பர் **திருவடை யாள மாலை**
எவ்வுல கோரு மேத்தத் தொழுது**தா மெடுத்துப் பூண்டார்;** *1216*

திருநெற்றியினின்றும் விளங்கிற்று; அதன்மேல் வெள்ளிதாகிய முத்துத் திரணை சாத்திய நிலை அத் திருநீற்றின் ஒளி மேலே விரிந்து எழுந்தது போன்றிருந்தது. ***என்ன***-*உவமவுருபு; முன்னர்த் ''திருவடி மலர் மேற் பூக்க செழுநகைச் சோதி என்ன''(3108)என்ற கருத்தும் காண்க. அடிமுதல் முடிவரை அணிநலங் கூறுகின்றா ராதலின் திருவடியில் பூத்த சோதி திருமுடியின் மேற்பட விரிந்த சோதியாக விளங்கிற்றென்ற நயமும் கண்டுகொள்க.*

நீற்றொளி - மேற்பட விரிந்ததென்ன, முத்துத் திரணை *விளங்கிற்று என ஈண்டு நீற்றொளியை முத்தின் சோதிக்கு உவமித்தார்; முன், முத்துச் சிவிகையின் ஒளி நீற்றொளி போன்றதென்ற கருத்துடன் ''நீற்றொளி போற்றி நின்று'' (2114) என்றார்.*

நீற்றொளி தழைத்துப் பொங்கி நிறை திருநெற்றி *- பிள்ளையார் அவதரித்த போது ''வேறுபல காப்புமிகை யென்றவை விரும்பார், நீறுதிரு நெற்றியி னிறுத்தி நிறைவித்தார்'' (1941) என்ற அந்நாண்முத லின்றளவும் இடையறாது நீறு தழைத்துப் பொங்கி நிறைந்த திருநெற்றி என்ற குறிப்பும் காண்க;* ***தழைத்தல்*** *- முன்னை நிலையின் அமைந்ததுவே வேர்கொண்டது போலத் தொடர்ந்து மிகுதல்; முன் நிறுத்தி நிறை வித்த நீறு பின்னர் முறையே தழைத்துப் பொங்கி நிறைந்ததாம்.*

திரணை-*மகுடத்தின் கீழே சுருண்ட பெரிய விளிம்புபோலும் அமைப்பு.*

மகுடம் *- ஈண்டு, முத்து வடங்கள் பலவற்றைப் பாகைபோல முறுக்கிப் பின் குஞ்சத்துடன்சேர்க்கும் அமைப்புக் குறித்தது; முத்துக்கிரீடம் என்றுமாம்.*

ஏற்ப வைத்து *- திரணையுடன் பொருந்தும்படி சார்த்தி.* ***1215***

3114. (இ-ள்) இவ்வகை...செய்ய - இவ்வகையாக நம்மை ஆட்கொண்டருளும் அழகு மிகுந்த தெய்வத்தன்மை வாய்ந்த மணக்கோலத்தை அத்தொழில் கைவல்ல வேதியர்கள் செய்ய; கடிகொள்...மார்பர் - மணமுடைய செந்தாமரைத் தாதுக்களையுடைய புதிதின் அலர்ந்த நீண்ட மாலை மார்பராகிய பிள்ளையார்; திரு அடையாள மாலை... பூண்டார் - திருஅடையாள மாலையாகிய உருத்திராக்க மாலையினை எல்லா வுலகத்தவர்களும் துதிக்கும்படி தொழுது தாமே எடுத்து அணிந்து கொண்டார்;

(வி-ரை) இவ்வகை - திருவடிமுதல் திருமுடிவரை முன் சொன்னபடி.

நம்மை ஆளும் ஏர் வளர் தெய்வக்கோலம் - பரமாசாரிய மூர்த்திகளாய் முத்திநெறி காட்டி உபதேசித்து ''ஈனமாம் பிறவி தீர யாவரும் புகுக'' (3146) என்று ஆட்கொள்ளும் குருமூர்த்தமாகிய திருக்கோலம் என்பதாம்.

3115. **அழகினுக் கணியாம் வெண்ணீ றஞ்செழுத் தோதிச் சாத்திப்,**
பழகிய வன்பர் சூழப் படரொளி **மறுகி லெய்தி**
மழவிடை மேலோர் தம்மை மனங்கொள வணங்கி வந்து
முழவொலி யெடுப்ப **முத்தின் சிவிகைமேற் கொண்டபோது,** *1217*

கைவினை மறையோர் - இவ்வகைக் - கோலம் செய்ய - என்று கூட்டுக. **கைவினையாவது** மணக்கோலம் செய்தலில் பழகிக் கைதேர்ந்த நிலை; இதுவரை மறையவர் செய்த கோலம். இனிக் கூறுவது பிள்ளையார் தாமே புனைந்து கொண்டது.

கடிகொள்...நீள் தாம மார்பர் - செந்தாமரை மாலை அந்தணக்குரியது; இது மரபுபற்றிக் கூறியது.

திருவடையாள மாலை-உருத்திராக்கக் கண்டிகை. இது சிவனுடைய அடையாளம் என்பதும், **ஒரு பெண் அணியும் தாலி அவள் நாயகனுக்குரிய நிலைகாட்டுதல்போல இதனைப் பூண்போர் இவ்வடையாளத்தினால் ஆன்ம நாயகனாகிய சிவனதுடைமையாதலை அறிவிப்பதாகிய அடையாளம் என்பதும் குறிப்பு**. இங்கு இவ்வாறன்றித், **தாம மார்பர்** என்றது மரபியல் குறித்ததென்றும், **திருஅடையாள மாலை** என்பது அந்தணர்க்குரிய அடையாள மாலையாகிய தாமரை மாலை குறித்ததென்றும் உரைப்பாருமுண்டு.

தொழுது - வேதியர் கைவினையாற் செய்த மணக் கோலத்தின்மேற் றாமே புனைந்ததனால் இறைவரை வணங்கி என்க. தொழுதது, இங்கு இஃது உலக உபசார மங்கலமா யொழியாது தெய்வ மங்கலக் கோலமாய் நிகழ்தற்பொருட்டு என்பது குறிப்பு. தெய்வக் கண்டிகையாதலின் றொழுதார் என்பதுமாம்.

தாம் எடுத்துப் பூண்டார் - தாமே; பிறர் செய்யாது தகுதிபற்றித் தாமே பூண்டனர்.*1216*

3115. (இ-ள்) அழகினுக்கு...சாத்தி -அழகுக்கு அணிசெய்வதாய் விளங்கும் திருவெண்ணீற்றினைத் திருவைந்தெழுத்தை ஓதி அணிந்து; பழகிய...எய்தி - பழகிய அன்பர்கள் சூழ்ந்து வர வீசும் ஒளியினையுடைய தெருவிலே வந்து; மழவிடை.... வந்து - இளமையுடைய இடபத்தினை யுடையவராகிய சிவபெருமானை மனமார வணங்கி வந்து; முழவொலி...போது - முழவுகள் முழங்க முத்துச் சிவிகையின்மேல் எழுந்தருளியபோது;

(வி-ரை) அழகினுக்கு அணியாம் வெண்ணீறு - அழகு தரும் அணிகளுக்கெல்லாம் அழகு தருவது திருநீறு என்பது. திருநீறு உடன் அமையாத போது வேறெவ்வணிகளும் வறிய அசுத்த மாயா பண்டங்களா யொழிந்து துன்பத்துக்கே ஏதுவாவன என்பது உண்மை. ''நீற்றழகர்'' என்பது இறைவர் திருப்பெயர்; ''திருமுண்டந் தீட்ட மாட்டா, தஞ்சுவா ரவரைக் கண்டா லம்மநா மஞ்சு மாறே'' (திருவா); ''திருநீ றிடாவுருத் தீண்டே னென்னும்'' (திருவிசைப்பா).

நீறு அஞ்செழுத்தோதிச் சாத்தி - சிவநாமஞ் சொல்லியே திருநீறணிதல் வேண்டுமென்பது விதியும் மரபுமாம். **பழகிய அன்பர்** - பழந் தொண்டர்கள்.

மனங்கொள - மனத்தால்; மனமார; பொருந்த.

3116. எழுந்தன சங்க நாத; மியம்பின வியங்க ளெங்கும்;
பொழிந்தன விசும்பில் விண்ணோர் கற்பகப் புதுப்பூ மாரி;
தொழுந்தகை முனிவர் தொண்டர் சுருதியின் வாழ்த்துப் பொங்கி
வழிந்தன திசைகண் மீது; மலர்ந்தன **வுலக மெல்லாம்.** *1218*

முழவொலி எடுப்ப - இயங்களெல்லாம் கூடிப் பேரோசையாயோங்க; முழவு பேரோசை செய்ய என்றலுமாம்.

சிவிகை ஏற்றுக்கொண்ட போது எழுந்தன - இயம்பின என்பனவாதியாக மேற் பாட்டின் வரும் வினைமுற்றுக்களுடன் முடித்துக்கொள்க. *1217*

3116. (இ-ள்) வெளிப்படை ; சங்கநாதங்கள் எழுந்தன; இயங்கள் எங்கும் எழுந்தன; விண்ணவர்கள் சொரியும் புதிய கற்பக மலர்மழை ஆகாயத்தில் பொழிந்தன; தொழுந்தகைமையுடைய முனிவர்களும் தொண்டர்களும் எடுத்தோதும் வேத வாழ்த்தொலிகள் மேன்மேல் எழுந்து எல்லாத் திசைகளின் மேலும் வழிந்தன; உலகம் எல்லாம் மலர்ச்சியடைந்தன.

இப்பத்துப் பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுபடுத்தி உரைக்கநின்றன.

(வி-ரை) எழுந்தன - இயம்பின - முதலாகப் பயனிலைகளாகிய வினை முற்றுக்களை முன்வைத்தது தீவிரமாய் எழுந்த ஆர்வமேலீடு குறித்தது.

சங்கநாதம் எழுந்தன - பற்பல சங்கங்கள் கூடி ஒலித்தன. ''இயம்பின சங்கம்'' (திருவாசகம்); இதனை முதலில் வைத்தது சிறப்புணர்த்தற்கு. ''சங்கொடு தாரை'' *(3095)* என்றவிடத் துரைத்தவை பார்க்க.

இயம்பின - என்றது இயங்கள் கீத முதலியவற்றைப் பொருள்பட இசைத்தல் குறித்தது. மரபு வழக்குமாம்.

மாரி - பொழிந்தன என்க. விண்ணோரது பூமாரி என்று உருபு விரிக்க; பலவிடத்தும், தேவர்கள் பலரும் பொழிதலாற் பன்மையிற் கூறினார். **மாரி** - மாரிகள்.

தொழுந்தகை முனிவர் தொண்டர் - பிறராற் றொழப்படும் தன்மை வாய்ந்த பெருமுனிவர்களும் திருத்தொண்டர்களும்.

சுருதியின் வாழ்த்து - மறை மொழிகளால் வாழ்த்திய வாழ்த்தொலி; **வாழ்த்து** அவ்வொலிக்கு வந்தது; **வாழ்த்து** - பல்வேறு வாழ்த்துக்களின் பல்வேறு ஒலி.

உலகமெல்லாம் மலர்ந்தன-என்க. திசைகளின் விளக்கம் முதலாக *(3088)* முன் கூறியவற்றையெல்லாம் இங்கு நினைவுகூர்க. ''உலகெலாம்'' என்று இப்புராணத்துக்கு இறைவர் தந்த **முதலினை** இங்கு வைத்தது இதன் சிறப்புக் குறித்தது; திருஅரத்துறை இறைவர் தந்த முத்துச் சிவிகையில் ஏறியபோது தொடக்கத்தில் ''ஓதி யேறினருய்ய உலகெலாம்'' *(2114)* என்றருளினார்;

3117. படர்பெருந் தொங்கல் பிச்சம் பைங்கதிர்ப் பீலிப் பந்தர்
அடர்புனை செம்பொற் பாண்டி லணிதுகிற் சதுக்க மல்கக்
கடலின்மீ தெழுந்து நிற்குங் கதிர்நிறை மதியம் போல
வடநிரை யணிந்த **முத்தின் மணிக்குடை நிழற்ற** வந்தார். 1219

அன்று நீற்றொளி போற்றி அஞ்செழுத்தோதி ஏறினர்; அதற்கேற்பவே அச்சிவிகை ஏறும் நிலையின் இறுதி முறையாகிய இன்றும் நீற்றினை அஞ்செழுத்தோதி ஏறியபோது (3115) ''உலகமெல்லாம் மலர்ந்தன'' என்று முடித்துக்காட்டிய தெய்வக் கவிநலம் காண்க.

__எழுந்தன__ முதலிய வினைமுற்றுக்களாற் கூறி முடித்தது ஐவகைக் கலாசோதனை முடிபு நிலையாகிய சிவபர முத்திப்பேறு வரும் நிலைக்குறிப்பு; எழுதல் முதலிய ஐந்தும் ஐந்தொழிற் குறிப்புப்பட நிற்றலும் காண்க. *1218*

3117. (இ-ள்) *படர் பெரும்...பந்தர் - பரவிய பெரிய குஞ்சங்களும், பிச்சங்களும், பசிய நிறமுடைய மயிற்பீலியால் அமைந்த கூட்டங்களும்; அடர்புனை... சதுக்கம் – நெருங்க அலங்கரித்த சிவந்த பொன்தகட்டா லியன்ற வட்ட அமைப்புக்களையுடைய அழகிய துணிகளாலமைந்த மேற்கட்டிகளும்; மல்க - நெருங்க; கடலின் மீது...குடை நிழற்ற - கடலின்மேல் வந்து எழுந்து நிற்கும் கலைகள் நிறைந்த சந்திரன் போல முத்து வடங்களின் வரிசைகளா லலங்கரிக்கப்பட்ட முத்துக் குடை மேலே நிழல் செய்ய; வந்தார் - (பிள்ளையார்) எழுந்தருளி வந்தனர்.*

(வி-ரை) தொங்கல் *- குஞ்சம்;* **பிச்சம்** *- வெண்குடை.* **பைங்கதிர்ப் பீலி** *- பசிய நிறம் விளங்கும் மயிற்பீலி;* **பந்தர்** *- பந்தர்போன்று பரந்த தொகுதி.*

அடர்புனை...சதுக்கம் *- சதுர வடிவில் அமைந்த துணிகளாலமைந்த மேற்கட்டிகள்; அத்துணிகள் வட்டமாகிய பொற்றகடுகளால் உள்ளால் அடரப் புனைந்து அணி செய்யப்பெற்றன; இம்மேற்கட்டிகள் எழுச்சியின் கூடவே ஏந்தி வரப்பெற்றன. இவை நிலையாகவே தெருக்களில் சிறப்பின் பொருட்டு அமைக்கப்படுவனவும் உண்டு.*

கடலின் மீது...குடை நிழற்ற *- பெரிய முத்து வெண்குடை பரந்து நெருங்கியனவாகிய முன் சொன்னவற்றுக்கெல்லாம் மேல் எழுந்து பிள்ளையாரது சிவிகையின் மேல் பரந்து நின்று நிழல் செய்தல் பரந்த கடலினிடையே மேல் எழுந்து விளங்கும் வெள்ளிய ஒளியுடைய முழு மதிபோல இருந்தது என்க. தொங்கல் - பீலி - சதுக்கம் முதலியவற்றின் நெருங்கிய பரப்புக் கடல்போலவும், முத்து வெண்குடை அவற்றிற்கெல்லாம் மேல் எழுந்து விளங்கும் முழுமதிபோலவும் கொள்வது உவமம்; வினையும் உருபும்பற்றி வந்தது.* ***மீது எழுந்து*** *- ஏனையவை நிலத்தில் செல்லும் மக்கள் ஏந்த அவ்வுயர்ச்சி யளவில் பரவிச் சென்றன; முத்துக்குடை மக்களால் பொறுக்கப்பட்ட சிவிகையின் மேல் அவ்வுயரத்தில் வருதல் கருத்து;* ***வடநிரை*** *- முத்து வடங்களின் வரிசை.*

*3118. **சீரணி** தெருவி னூடு திருமணஞ் செல்ல, **முத்தின்**
ஏரணி காளஞ் சின்ன மிலங்கொளித் தாரை யெல்லாம்
பேரொலி பெருக முன்னே பிடித்தன "மறைக ளோடு
தாரணி யுய்ய ஞான சம்பந்தன் வந்தா" னென்று. 1220

மணிக்குடை - முத்துக்குடை : இஃது திருவாத்துறை இறைவரா லருளப்பட்டது.

வந்தார் - எழுச்சியில் எழுந்தருளி வந்தார்; பிள்ளையார் என்ற எழுவாய் தொக்கு நின்றது. *1219*

3118. (இ-ள்) *சீரணி...செல்ல* - சிறப்புப் பொருந்திய அணியுடைய தெருவினிடையே திருமணம் இவ்வாறு எழுந்து செல்ல; *முத்தின்...எல்லாம்* - முத்தினாலாய அழகு சிறந்த எக்காளமும், திருச்சின்னமும், விளங்கும் ஒளியுடைய தாரையும் ஆகிய இவைகளெல்லாம்; *"மறைகளோடு...வந்தான்" என்று* – வேதங்களுடனே உலகம் உய்யும் பொருட்டுத் "திருஞான சம்பந்தன் வந்தான்" என்று எடுத்துக் கூறி; *பேரொலி...பிடித்தன* - பெருஞ் சத்தம் முன்னே பெருகும்படி பிடித்தூதின.

(வி-ரை) சீரணி தெரு - திருமணத்தின் பொருட்டுச் சிறப்பும் அலங்காரமும் செய்யப்பெற்ற தெரு.

திருமணம் - திருமணத்தின் பொருட்டு மணமகனாரது எழுச்சி.

முத்தின்...தாரை - இவையும் திருநெல்வாயில் இறைவரா லருளப்பட்டவை. இச்சிறப்புப்பற்றிக் குடையினையும் இவற்றினையும் இறுதியில் வைத்தார். இவை எழுச்சியின் ஏனையவற்றுக்கு முன்னே செல்வனவாயினும் இக்கருத்துப் பற்றிப் பின் கூறப்பட்டன என்பது குறிக்க **முன்னே பிடித்தன** என்றார்; **பிடித்தன** - பிடித்து ஊதப்பட்டன; மரபு வழக்கு.

பேரொலி பெருக - இவற்றின் எழும் ஒலி பெருஞ் சத்தமாம்; ஆர்வமேலீட்டி னானும், **எல்லாம்** ஒருங்கே பிடித்தூதப்பட்டமையானும் இயல்பாகிய அப்பேரொலி மேலும் பெருகிற்று; **ஒலி** என்றார் திருநாமங்களையும் மெய்க்கீர்த்திகளையும் பொருள் பொருந்தச் சொல்லி ஒலித்தலால்.

மறைகளோடு...வந்தான் - மறைகள் உய்ய என்றும், தாரணி உய்ய என்றும் கூட்டுக. "வேதநெறி தழைத்தோங்க" என்றவிடத்தும், பிறண்டும் உரைத்தவை இங்கு நினைவுகூர்தற்பாலன. **வந்தான்** - எழுந்தருளி வருகின்றார் என்ற அறிவிப்புக் குறிப்பு; காலவழுவமைதி. இவை பிள்ளையார் திருநாமங்களை இவ்வாறு எடுத்துப் பிடித்தல் துதித்து எழுந்த வகையுமாம் என்பது மேற்பாட்டிற் காண்க. *1220*

3119. (இ-ள்) மண்ணினுக்கு...ஏத்தி - நிலவுலகின் வாழ்வாரது துன்பந் தீர வந்துஅவதரித்த பிள்ளையாரின் திருநாமங்கள் அளவில்லாத பலவற்றையும் எடுத்து ஏத்தித் துதித்து; சின்னங்கள் எழுந்தபோது - திருச்சின்னங்கள் கூறி எழுந்த அந்நேரத்திலே; அவ்

3119. **மண்ணினுக் கிடுக்கண் டீர வந்தவர் திருநா மங்கள்**
எண்ணில பலவு மேத்திச் சின்னங்க ளெழுந்த போதவ்,
வண்ணலார் வதுவை செய்ய வலங்கரித் தணையப் பெற்ற
புண்ணிய மறையோர் மாட மங்கலம் பொழிந்து பொங்க, 1221

அண்ணலார்...பொங்க - அந்தப் பெருமையுடையோராகிய பிள்ளையார் திருமணஞ் செய்தற்காக அலங்கரித்து அணையும் பேறுபெற்ற புண்ணிய மறையவர் நம்பாண்டாரது திருமாளிகையிலே மங்கலங்கள் மிகுந்து மேல் ஓங்க,

(வி-ரை) மண்ணினுக்கு இடுக்கண் தீர வந்தவர் - தம்பொருட்டன்றி உலகம் துன்பம் நீங்கும் பொருட்டே வந்து அவதரித்த பிள்ளையார்.

திருநாமங்கள் எண்ணில பல - மண்ணினுக்கு இடுக்கண் தீர வந்த தன்மை பற்றி அப் பொருள்பட வரும் திருப்பெயர்கள்; இவை பரசமய கோளரி முதலாயின.

சின்னங்கள் - முன்பாட்டில் கூறிய முத்துச் சின்னம் முதலியவை இறைவ ரருளியவை; இங்குக் கூறியவை எழுச்சியில் உலகினர் பிடித்தவை. இறைவ னருளியவை பிடித்து ஏந்திய பொருளாகிய தாரை. உய்ய வந்தான் என்ற கருத்தையே தொடர்ந்து மண்ணுலகவர் இடர் நீங்கிய தன்மைபற்றிக் கீர்த்திகளைக் குறித்த நாமங்களால் சின்னங்கள் ஏத்தின.

எழுந்தபோதில் - எடுத்துக் கூறி மேற்சென்றபோது; திருச்சின்னங்கள் ஒலித்து எழுதல் பெரியாரின் வருகைக் குறிப்பாக இந்நாளினும் பெருமடங்கள் முதலிய தாபனங்களில் வழங்குதல் காண்க.

எழுந்தபோது மாடம் - மங்கலம் - பொங்க - என்று கூட்டுக. மணமகனார் வருதலின் அதற்கேற்ப மங்கலம் பொலிய அலங்கரித்தனர்.

அவ்வண்ணலார் - பிள்ளையார். **அகரம்** - முன்னறிசுட்டு; **வதுவை செய்ய** - திருமணம் நிகழ்த்துமிடமாக.

புண்ணிய மறையோர் மாடம் - நம்பாண்டாரின் திருமனை; **புண்ணிய மறையோர்** - பிள்ளையாருக்கு மகட் கொடுக்கப்பெற்றமை முன் செய்த தவமாகிய புண்ணியப் பயன் என்பது. **அணையப் பெற்ற** - அணையும் பேறு பெற்ற என்ற கருத்தும் அது. **புண்ணியம்** - பதி புண்ணியமாகி முத்தி சாதனமாகிய சிவ புண்ணியம்; இப்புண்ணியப் பயனாகத் திருமணத்தில் நம்பாண்டார் நம்பி அன்றே முத்தியடைதலும் காண்க.

மங்கலம் - மங்கலக் கோலங்களாகிய அமைப்பு; சிவத் திருமங்கல நிறைவுமாம்.

பொழிந்து பொங்க - பொழிதல் - நிறைந்து சிந்துதல்; **பொங்குதல்** - மேன் வளர்ந்து மிகுதல்.

3120. முற்றுமெய்ஞ் ஞானம் பெற்ற **மூர்த்தியார் செங்கை பற்ற**
நற்பெருந் தவத்தி னீர்மை நலம்படைத் தெழுந்த தெய்வக்
கற்பகப் பூங்கொம் பன்னார் தம்மையுங் காப்புச் சேர்த்துப்
பொற்புறு சடங்கு முன்னர்ப் புரிவுடன் செய்த வேலை. 1222

3120. (இ-ள்) *முற்றுமெய்ஞ்ஞானம்...பற்ற* - முற்றிய மெய்ஞ்ஞானத்தைப் பெற்ற *பிள்ளையாரது சிவந்த திருக்கையினைப் பிடிக்க; நற்பெரும்...எழுந்த* - நல்ல பெரிய தவத்தின் *தன்மையாலாகிய நலங்களையெல்லாம் கொண்டு எழுந்த;* தெய்வ...காப்புச் சேர்த்து - தெய்வக் *கற்பகப் பூங்கொம்பு போன்ற அம்மையாரையும்* காப்புப் பூட்டி; பொற்புறு...வேலை – அழகிய *சங்கற்ப முதலிய சடங்குகளை முன்னர் விருப்பத்துடனே* செய்தபொழுது.

(வி-ரை) முற்றும்...மூர்த்தியார் - *பிள்ளையார்.*

முற்றும் மெய்ஞ்ஞானம் - *நிறைவாகிய* சிவஞானம். **முற்றுதல்** - எல்லாக் கலை *ஞானங்களும் முற்ற முழுது நிறைவாகுதல். ''உணர்வரிய மெய்ஞ்ஞானம்'' (1968); ''எண்ணரிய சிவஞானம்'' (1966);* **பெற்ற**-*சிவஞானங் குழைத்த பாலமுதூட்டப் பெற்றதனால் அடைந்த.* **மூர்த்தியார்** - *பெருமையுடையார்.*

செங்கை பற்ற - கைபற்றுதல் - மணம் செய்தல். பாணிக் கிரகணம் என்பது வடமொழி.

நற்பெரும்...பூங்கொம்பன்னார்-நற்பெரும் தவம்-''நற்றவக் கொழுந்தன்னார்'' *(3135);* **நலம்** - முன்னை நிலையில் செய்த நல்ல பெரிய தவத்தின் பயனாக இவ்வம்மையார் பிள்ளையாரின் தேவியாராகப் பேறு பெற்றனர் என்பது குறிப்பு; இஃது அன்று சிவப்பேறு பெறும் நிலைபெற நின்றமையால் இவ்வாறு சிறப்பித்தார். **தவத்தின் நீர்மை நலம்** - என்றமையும் காண்க. ''நற்றவக் கன்னியார் கை'' *(3134).*

தெய்வக் கற்பகப் பூங்கொம்பன்னார் - கற்பகம் - வேண்டியதெல்லாம் தருவதாய்த் தேவலோகத்தில் உள்ளதென்பர்; ஆனால் அது முத்தி தரவல்லதன்று; முத்தியும் தரவல்லதொரு கற்பகமுண்டாயின் அதன் பூங்கொம்பு போல்வார் என்பது **தெய்வக் கற்பகம்** என்றதன் குறிப்பு. இங்கு **தெய்வம்** என்றது தெய்வத்தன்மை குறித்தது; ஈண்டுப் பிள்ளையார் இனிச் செய்யும் முத்தி தானத்தில் தேவியாருக்கும் பங்குண்டாமாதல் குறிப்பாலுணர்த்தியபடி.

நற்பெருந் தவத்தின்...கொம்பன்னார்-மேல்''பவளமென் கொடியொப்பார்'' *(3121);* ''அம்பொன்செய் தீபம்'' (மேற்படி); ''நற்றவக் கன்னியார்'' *(3134);* ''நற்றவக் கொழுந்தன்னார்'' *(3135);* ''வெள்ளை மேகமோ டிசையு மின்னுக்கொடியென'' (மேற்படி); குனிசிலைப் புருவ மென்பூங் கொம்பனார்'' *(3136);* ''பூவையன்னாள்'' *(3144);* ''காதலி'' *(3151)*முதலியவை காண்க. இவை தாயாரைப் போற்றும் நிலையில் அமைந்தமை கருதுக; கந்தபுராணத்துள் நாரத முனிவர் வள்ளிநாயகியாரைப் பற்றி முருகப்பெருமானிடம் அறிவிக்குங்காலையில் ''தாயதாகும்'' என்று கூறிச்செல்லும் நிலை இங்குக் கருதற்பாலது.

காப்புச் சேர்த்துப் பொற்புறு சடங்கு -முன்னர்ச் செய்த - காப்பணிதல் மண மகளுக்கும் உரிய சடங்குடன் செய்தல் மரபு; **முன்னர்** - மணமகன் மணமனைக்கு வருமுன்னரே; **புரிவுடன்** - இடைவிடாது முயன்ற எண்ணத்துடனே.

3121. **செம்பொன்செய் வாசிச் சூட்டுத் திருமணிப் புனைபூண் செல்வப்**
பைம்பொனின் மாலை வேய்ந்த பவளமென் கொடியொப் பாரை
நம்பன்ற னருளே வாழ்த்தி நல்லெழில் விளங்கச் சூட்டி
அம்பொன்செய் தீப மென்ன வழகலங் கரித்து வைத்தார். 1223

செய்த வேலை-செய்தபோதின் அதன் தொடர்ச்சியாக - **அலங்கரித்து வைத்தார்** - என வரும்பாட்டுடன் முடிக்க.

பொலிவுடன்—பரிவுடன்—போதுடன்—என்பனவும் பாடங்கள். *1222*

3121. (இ-ள்) செம்பொன் செய்...கொடி ஒப்பாரை - செம்பொன்னாலாகிய நுதலணி மாலையினையும், அழகிய இரத்தினங்கள் இழைத்த வேலைப்பாடுடைய அணிகளையும், செல்வம் பொருந்திய பசும்பொன் னரிமாலைகளையும் வரிசைபெறச்சூட்டிய பவளத்தின் மெல்லிய கொடிபோன்ற அம்மையாரை; நம்பன்றன்...சூட்டி - இறைவரது அருளினையே வாழ்த்தி நல்ல அழகு விளங்க அலங்கரித்து; அம்பொன் செய்...வைத்தார் - அழகிய பொன்னாலாகிய விளக்குப்போல அழகினையே அலங்கரித்தது போல அலங்கரித்து வைத்தார்கள்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபுகொண்டுரைக்க நின்றன.

(வி-ரை) செம்பொன் செய்...வேய்ந்த - இவ்வளவும் வரும் அடைகள் **பவள மென்கொடி யொப்பார்** என்ற பெயரை விசேடித்து நின்றன.

வாசிச் சூட்டு-நுதலணி மாலை; இது சுட்டி என்றும், நெற்றிப் பிறை என்றும் வழங்கப்படும்;மணமகளை இது சூட்டி அணி செய்தல் சிறப்பும் வழக்குமாம்.

திருமணிப்பூண் புனை - என்க; இவை இரத்தினமிழைத்த அணிகலங்கள்.

பைம்பொனின் மாலை - பொன்னரி மாலை; பொன்னாரங்கள். **வேய்தல்** - மிகுதியும் வரிசைபெறச் சூட்டுதல்.

பவள மென்கொடி - மேனி நிறம் - மென்மை - அவயவப் பிரிவு - கைபுனையாத இயற்கை வளம் - நீர்மை - முதலியவற்றால் உருப்பற்றி வந்த உவமம்.

நம்பன்ற னருளே வாழ்த்தி - மணவணி முதலிய உலகியல் நலங்கள் நிகழும் போது இறைவரது நினைவு வருதல் முற்செய் தவப்பயன்.

நல்லெழில் விளங்கச் சூட்டி-இயல்பாகிய நல்ல அழகினை மறைக்காதபடி அது மேலும் விளக்கமுறும்படி அணிகளைப் புனைந்து; **சூட்டுதல்** - அணிகலன் - பூமாலை முதலியவற்றைப் புனைதல்.

அம்பொன் செய்...வைத்தார் - அழகுக் கழகுசெய்தல் போல் இயல்பால் அழகுடையாரை மேலும் அலங்கரித்தனர் என்பதாம்.

அம்பொன்செய் தீபம் என்ன–தீபம் – தானே ஒளிதரும் பொருள்; அதனைப் பொன்னா

3122. மாமறை மைந்த ரெல்லா **மணத்தெதிர் சென்று** மன்னும்
தூமலர்ச் செம்பொற் சுண்ணந் தொகுநவ மணியும் வீசத்
தாமரை மலரோன் போல்வா ரரசிலை தருப்பை தோய்ந்த
காமற்பொற் கலச நன்னீ ரிருக்குடன் கலந்து வீச, 1224

லமைத்தது போல; பொன்று லமையினும் விளக்கே ஒளிதருவதுபோல இங்கு அம்மையாரின் அழகே பொற்பணிகளை விளக்கியதென்பதாம். ***1223***

3122. (இ-ள்) *மாமறை...சென்று* - பெருமையுடைய வேதிய மைந்தர்கள் எல்லாரும் திருமண எழுச்சியின் எதிரே சென்று; *மன்னும்...மணியும் வீச* - பொருந்திய தூய மலர்களுடனே செம்பொற் சுண்ணத்தினையும் தொக்க நவமணிகளையும் வீச; *தாமரை...கலந்து வீச* – தாமரைமலரில் இருக்கும் பிரமதேவன் போன்ற வேதியர்கள் அரசிலையும் தருப்பையும் தோய்ந்த அழகிய பொற்கலச நன்னீரினை வேதமந்திரங்களைச் சொல்லி வீசித் தெளிக்க;

(வி-ரை) *மாமறை மைந்தர்-மா*-பெருமை பொருந்திய என்பது மறைக்கு அடைமொழி. **மைந்தர்**-சிறுவர்கள்; குமாரப் பருவத்தினர்.

***மணத்து எதிர் சென்று* - மணம்** - திருமண எழுச்சியாய் மணமகன் வரும் கூட்டம் மணம் எனப்பட்டது.

தூமலர்ச் செம்பொற் சுண்ணம்-புதிய நன்மலர்கள் கலந்த பொற்சுண்ணத் தூள்; ***தொகு நவமணியும்*** - கலந்த வகைகளைக் கொண்ட நவமணிகள்; உம்மை உயர்வு சிறப்பு.

தாமரை மலரோன் போல்வார் – பிரமனைப் போன்ற மறையவர்கள் - வைதிகர்கள். முன்னர் **மைந்தர்கள்** என்றது சிறுவர்; இவர்கள் வயது முதிர்ந்து வைதிக ஒழுக்கில் நிற்போர்.

அரசிலை தருப்பை தோய்ந்த-கலச நன்னீர் – கலசத்தில் தூய நீரினுடன் அரசிலையும் தருப்பையும் இட்டுவைத்தல் மரபு. **நீர் இருக்குடன்கலந்து வீசுதலாவது** - வேத மந்திரங்களைச் சொல்லி அரசிலையினுல் இறைத்தல்; **இருக்கு** - இங்கு வேதப் பொதுமை குறித்து நின்றது.

இப்பாட்டினுல் நிலத்தினிற் காணும் வகையால் மறையோர் மண மனையில் எதிர்கொண்ட சிறப்புக் கூறினுர்;மேல்வரும் பாட்டினுல் கண் காணு வகையில் விசும்பில் விண்ணவர் எதிர்கொண்டமையும் தென்றல் எதிர்கொண்ட வகையும் கூறுவார். ***1224***

3123. (இ-ள்) *விண்ணவர்...தழைப்ப வீச* - விண்ணுலகத்தவர்கள் தேவப் பூமாரியினை வானத்தில் ஒளி மிகும்படி வீச; *மண்ணகம்...மாருதமும் வீச* - நில உலகம் நிறைந்த மணத்தையுடைய தென்றற் காற்றினையும் வீச; *கண்ணொளி... முன்பு சார்ந்தார்* - நெருங்கிய ஒளி மிகுந்த அழகிய தோரணங்களினிடையே சென்று புண்ணியத்தின் பயன்போல்வாராகிய பிள்ளையார் பூம்பந்தரின் முன்பு சார்ந்தருளினர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

3123. **விண்ணவர் மலரின் மாரி விசும்பொளி தழைப்ப வீச,**
மண்ணக நிறைந்த கந்த மந்தமா ருதமும் வீசக்,
கண்ணெளி விளக்கம் மிக்க காமர்தோ ரணங்க ளூடு,
புண்ணிய விளைவு போல்வார் பூம்பந்தர் முன்பு சார்ந்தார். 1225

(வி-ரை) விசும்பு ஒளி தழைப்ப - வானில் ஒளி மிகும்படி; **மாரி** - **வீச** என்க; **மலர்** மந்தாரம் முதலிய தேவ தருக்களின் மலர்கள்.

விசும்பொளி தழைப்ப - என்பதனை மந்தமாருதத்துடனும் கூட்டுக. மந்த மாருதமும் விசும்பு ஒளி தழைப்ப வீச என்க. **மந்தமாருதம்** – தென்றற் காற்று. **உம்மை** - விண்ணவர் வீசியதன்றி என இறந்தது தழுவிய எச்சவும்மை; **மந்த மாருதம்** - **வீசுதல்** - தென்றற் காற்று மெல்லியதாய் அசைதல்; **கந்தம்** - மலர்களின் மணத்தைத் தாங்கிக் கொண்ட நிலை.

கண் - கண்ணுதலால் நெருங்குதலால். **கண்ணுதல்** - நெருங்குதல்.

கண்ணுத(லால்) காமர் தோரணங்கள் ஒளி விளக்கம் மிக்க என்க. பலப்பல வகைகளால் அழகிய தோரணங்கள் நெருங்குதலால் நிறம் பலகொண்ட ஒளி மிகுந்தது என்பது. **தோரணங்களூடு** - தோரணங்களினிடையே சென்று.

புண்ணிய விளைவு போல்வார் - பிள்ளையார்; புண்ணியம் - சிவ புண்ணியம். **விளைவு** - பயன்; இனி முத்தி பெறும் பக்குவமுடைய கூட்டத்தினர்களிடையே எழுந்தருளுகின்றா ராதலின் அவர்கள் செய்த சிவ புண்ணியங்களின் **விளைவு** என்றார்.

பூம்பந்தர் - மணமனையின் முன்பு மணமகன் வருதற்கமைக்கும் பூக்களாலலங்கரிக்கப்பட்ட பந்தர்.

மிக்கார் - என்பது பாடமாயின், மிக்கு - **ஆர்** - நிறைந்த, **காமர்** - அழகுடைய என்று உரைத்துக்கொள்க.
1225

3124. (இ-ள்) பொன்னணி...ஆர்ப்ப -பொன் அணிந்த சங்கங்களின் கூட்டம் அழகுடனே முழக்கம் செய்து பேரொலி எடுக்க; மன்னிய...நின்றும் - நிலைபெறப் பொருந்திய முத்து வரிசைகள் பெருக ஒளிசெய்து விளங்கிய சிவிகையினின்றும்; பன்மலர்...மீது - பல மலர்களும் மணம் கமழும் பொற்சுண்ணமும் பரவியிருந்த பாவாடையின்மேல்; முன்...வந்தார் - முன்னே இறங்கி எழுந்தருளி வந்தார் மூவுலகமும் உய்யும்பொருட்டு வந்தார்.

(வி-ரை) சங்கின் வெள்ளம் பொலிவுடன் முழங்கி - அனேக சங்கங்கள் அழகுடன் ஒன்றுபோலச் சேர்ந்து மங்கல முழக்கம் செய்ய; மணமகனுர் வந்து மணமனை புகுதல் பெரு மங்கல நிகழ்ச்சியாதலின் அதுகுறிக்கச் சங்கங்கள் பலவும் கூடி மங்கல முழக்கம் செய்தன. இவ்வாறு பெரும் நிகழ்ச்சிகளிற் பல இயங்களும் ஒன்றுகூடிப் பேரொலி செய்தல் இந்நாளிலும் வழங்குகின்றது; சகல வாத்தியம் செய்தல் என்பர்.

மன்னிய...சிவிகை நின்றும் - மன்னிய - இதுவரையும் பிள்ளையார் அச் சிவிகையில் ஊர்ந்து செல்ல நிலைபெற்றிருந்து இப்போது அதினின்றும் நீங்கிப் பாவாடைமீது

3124. பொன்னணி சங்கின் வெள்ளம் **பொலிவுடன் முழங்கி யார்ப்ப**
மன்னிய தரளப் பத்தி வளர்மணிச் சிவிகை நின்றும்
பன்மலர் நறும்பொற் சுண்ணம் பரந்தபா வாடை மீது
முன்னிழிந் தருளி வந்தார் **மூவுல குய்ய வந்தார்.** 1226

எழுந்தருளிப் போந்து. இனி இறைவரைச் சார்ந்தருளுவதனால் மேல் அதனை ஊர்வதில்லையாகும் என்ற குறிப்புப்பட **மன்னிய** என்று இறந்தகாலத்தாற் கூறினர். முன் **இழிந்தருளி** என்ற சொல்லாற்றற் குறிப்பும் அது.

பன்மலர்...பாவாடை மீது - வந்தார்- பாவாடை - பரவுதல் - ஒழுங்கு பெறப் பரப்புதல்; பாவிய - பரப்பிய - ஆடை; சிறப்புக்களிற் பெரியோர்கள் நிலத்தில் நடக்காது பாவாடை மீது நடந்து வருமாறு ஆடை பரப்பி அமைத்தல் மரபு; இஃது இந்நாளிலும் காணலாம். இங்குப் பாவாடை மீது மலரும் நறுந் துகளும் இட்டுவைத்தது மேலும் சிறப்புச் செய்ததன்றிப் பிள்ளையாரின் திருவடிகளில் நிலத்தின் வன்மை உறுத்தாதபடி செய்யுமுறையும், வழிபாட்டு முறையுமாம்.

முன் இழிந்தருளி வந்தார்-பாவாடைமீது முன் இறங்கி எழுந்தருளி வந்தனர்.

மூவுலகுய்ய வந்தார்-வந்தார்-வந்தவராகிய பிள்ளையார்; வினைப்பெயர். பிற்சரித விளைவு நோக்கி இக்குறிப்புற வைத்தது தெய்வக் கவிநலம். இரண்டும் வினைமுற்றாகக் கொண்டு எழுவாய் வருவித்துரைத்தலுமாம். *1226*

3125. (இ-ள்) மறைக்குல...எல்லாம் - மறையவர் குலத்தினராய் இல்வாழ்க்கை நிலையின் வாழும் மங்கலம் பொருந்திய பெண்கள் எல்லாரும்; நிறைத்த நீர்... ஏந்தி - நிறைத்த நீரினையுடைய பொற்குடங்களையும், வரிசையாகிய அழகிய விளக்குக்களையும், தூபங்களையும், தேன் பொருந்திய நல்ல மலர்களாலான மாலைகளையும், நல்ல ஒளி பொருந்திய முளைப் பாலிகைகளை வைத்த பொற்றட்டுக்களையும், உறைத்தலினால் அழகு பொருந்திய கலவைச் சாந்தினையும் ஏந்திக்கொண்டு; உடன்... நின்றார் - ஒருங்குடனாக மணமகனாராகிய பிள்ளையாரை நல்வர வெதிர்கொண்டு நின்றார்கள்.

(வி-ரை) மங்கல மகளிர் எல்லாம் - ஏந்தி - உடன் எதிர் ஏற்று நின்றார் - என்க. இது சுமங்கலிகளான மறையோர் மகளிர் மணமகனாரை மணமனையில் எதிர் வர வேற்ற நிலை கூறியது; மறைக்குல மைந்தர்களும் மறையவரும் மனையின் முன்பு பந்தரின்முன் சென்று வரவேற்ற நிலை முன் 3122-ல் கூறப்பட்டது. அதன்பின் பூம்பந்தரிற் சார்ந்து பாவாடைமீது மணமனையில் வந்தபோது மங்கல மகளிர் நிறைகுடம் முதலிய மங்கலப் பொருள்களை ஏந்தி வரவேற்பது மரபும் வழக்குமாம்.

நிறை குடம் - விளக்கு - தூபம் - மலர்மாலை - முளைப் பாண்டில் - கலவை- இவற்றைப் பெண்கள் ஏந்தி வருதல் வழக்கு; இவை மங்கலப் பொருள்கள்.

நறைக்குல மலர்சூழ் மாலை - நறை - தேன்; **குலமலர்** - நல்லவகை மலர்கள்; சாதி -

3125. மறைக்குல **மனையின் வாழ்க்கை மங்கல மகளி** ரெல்லாம்
நிறைத்தநீர்ப் பொற்கு டங்க ணிரைமணி விளக்குத் தூபம்
நறைக்குல மலர்சூழ் மாலை நறுஞ்சுடர் முளைப்பொற் பாண்டில்
உறைப்பொலி கலவை **யேந்தி உடனெதி ரேற்று நின்றார்.** 1227

மல்லிகை - முல்லை முதலியன. **சூழ்மாலை** - மலர்களைச் சுற்றிவைத்துக் கட்டிய இண்டை பிணையல் முதலிய மாலைகள்.

நறுஞ்சுடர் முளைப் பொற்பாண்டில் - சுடர் முளை - முளைப் பாலிகைகள்; மணத் திருநாளுக்கு முன் ஏழாநாளில் முளை பூரித்தாராதலின்(3070) முளைகள் வளம் பெறவோங்கி வளர்ந்து விளங்கின; இவற்றின் வளமும் விளக்கமும் நற்குறிகளாக எண்ணப்படுதலின் **நறும் - சுடர்** முளை என்ற அடைகொடுத்துச் சிறப்பித்து ஓதினார்; **பொற்பாண்டில்** - பொற்றட்டு. **நகுசுடர்** - என்பதும் பாடம். **நகு** - மகிழும்.

உறைப்பொலி கலவை - புனுகு, கத்தூரி முதலிய வாசனைப் பண்டங்களை நன்கு உறைத்துக் கூட்டிய கலவைச் சாந்து. **பொலி** - நயமு மணமு நிறமுமுடைய.

உடன்-ஒழுங்குபட; மணமகனார் வந்தவுடனே என்றலுமாம்; மைந்தர்கள் வரவேற்ற நிலையினுடனே மகளிரும் ஏற்றவாறு என்ற குறிப்புமாம். *1227*

3126. (இ-ள்) ஆங்கு...தன்னில் - அவ்விடத்தில் முன்னரே இட்டுவைத்த செம்பொன்னாலியன்ற அழகிய மணிகளை அழுத்திய பீடத்தில்; ஓங்கிய...ஏறி -எல்லாவற்றுக்கும் மேலோங்கிய சிவஞானப் பெருக்கானது உள்ளே நிறைந்து மேல் எழுந்து பொழிவதுபோல அணியாகப் பூண்டருளிய முத்து நல்அணிகள் குளிர்ந்த ஒளியினை வீச ஏறி; பாங்கொளி பரப்பி நின்றார்-பக்கங்களில் ஒளிபரப்பி நின்றருளினார்; பரசமயங்கள் வீழ்த்தார் -பரசமயங்களை வென்றழித்தவராகிய பிள்ளையார்.

(வி-ரை) ஆங்கு பீடம் - இப்பீடம் மணமனை வாய்தலின் முன்னர்ப் பந்தரின் கீழ், மணமகனாரை நிறுத்தி நீர்சுற்றிச் செய்யும் நீராஞ்சனம் முதலிய மங்கல வினைகள் செய்வதற்காக இடப்படுவது; திருமணவறையினுள் இடும் தவிசு வேறு; 3129 பார்க்க.

ஏறி நின்றார் - இப்பீடத்தில் மணமகனாரை நிறுத்தி மங்கலம் செய்தல் மரபு.

ஓங்கிய எழுவதென்ன - உள்ளே நிறைந்ததாகிய சிவஞானப் பெருக்குப் பொங்கி மேல் எழுவதுபோல என்பது. திருவடி முதல் திருமுடி வரை முத்தணிகளாலணியப்பெற்ற பிள்ளையாரது திருக்கோலம் இருந்தது என்க.

தாங்கிய முத்தின் பைம்பூண் தண்ணிலா எறிப்ப - திருமேனி முழுதும் முத்துக்களாலான அணி புனைந்த நிலைமையினை ஈண்டு முடித்துக் காட்டியவாறு; 3108 முதல் 3113 வரை பார்க்க.

ஞான வெள்ளம் உண்ணிறைந் தெழுதல் - உவமானம்; முத்தின் பூண்கள் தண்ணிலா வெறித்தல் உவமேயம். வினையும் மெய்யும்பற்றி வந்த உவமத் தற்குறிப்பேற்ற வணி. **ஞானம்** - அறிவொளியாதலின் சத்துவத் தன்மைபற்றி வெண்ணிறமுடையதாகக் கூறுதல் மரபு.

3126. **ஆங்குமுன் னிட்ட செம்பொ னணிமணிப் பீடந் தன்னில்
ஓங்கிய ஞான வெள்ள முண்ணிறைந் தெழுவ தென்னத்
தாங்கிய முத்தின் பைம்பூண் டண்ணில வெறிப்ப வேறிப்
பாங்கொளி பரப்பி நின்றார் பரசம யங்கள் வீழ்த்தார்.** 1228

3127. எதிர்வர வேற்ற சாய லிளமயி லனைய மாதர்
மதுரமங் கலமுன் னான வாழ்த்தொலி யெடுப்ப வந்து
கதிர்மணிக் கரக வாசக் கமழ்புன லொழுக்கிக் காதல்
விதிமுறை வலங்கொண் டெய்தி மேவுநல் வினைகள் செய்தார். 1229

ஓங்கிய ஞான வெள்ளம் - ஓங்குதல் - ஏனைய எல்லாவற்றினும் சிறத்தல்; **வெள்ளம்** - நீர்ப் பெருக்கின் குறிப்பினால் மிகுதியுணர்த்திற்று. "உண்ணிறைந்து பொழிந்தெழுந்த உயர்ஞானத் திருமொழியால்" (1972) என்று முதற் பதிகம் எடுத்த நிலை கூறியது இங்கு நினைவு கூர்தற்பாலது. அன்றி, இனி, அந்தச் சிவஞான வெள்ளமே பஞ்சாக்கரப் பதிகத்துடன் இறுதியாகப் பதிக நிறைவாக்கும் குறிப்புப் பெற அக்கருத்தையே பற்றிக் கூறிய தெய்வக் கவிநயமும் கண்டு கொள்க.

பாங்கு ஒளி பரப்பி நின்றார் - உள்ளொளியாகும் சிவஞான நிறைவாகிய ஒளியேயன்றிப் புறவொளியாகிய முத்தணி நிலவும்கூடி எம்மருங்கும் உள்ளும் புறம்புமாக ஒளிபரப்பி என்க; **நின்றார்** - அங்குப் பீடத்தின் நின்ற தன்மையன்றி என்றும் உள்ள நிலைபேறும் குறித்தது.

பரசமயங்கள் வீழ்த்தார் - பரசமயமாகிய வல்லிருள் போக்கிய பின்னரே ஞானவொளி எழுந்து விளங்குமாதலின் பரசமயங்கள் வீழ்த்தார் - ஒளி பரப்பி நின்றார் என்றார். இவை யிரண்டுமே பிள்ளையாரது திருவவதார உள்ளுறையாம் என்பது குறிப்பு; திருவவதார உள்ளுறை நிறைவெய்திய வாதலின் பிள்ளையார் இனித் திருமணத்திற் சிவனடி யெய்துவார் என்பதும் குறிப்பு. *1228*

3127. (இ-ள்) எதிர் வரவேற்ற...மாதர் - வர வெதிரேற்ற சாயலினாலே இளமயில் போன்ற பெண்கள்; மதுர...வந்து - இனிமையான மங்கல மொழிகளை முன்னாகக்கொண்டு பாடிய வாழ்த்தொலி எங்கும் நிறைய வந்து; கதிர்மணி... ஒழுக்கி – ஒளி பொருந்திய அழகிய கமண்டலத்தில் உள்ள மணம் பொருந்திய நீரினைத்திருமுன்னே வார்த்து; காதல்...செய்தார் - மிக்க விருப்பத்துடன் விதி முறையின்படி வலமாகச் சுற்றிப் பொருந்திய நல்ல சடங்குகளைச் செய்தனர்.

(வி-ரை) மாதர் - "மங்கல மகளிர்" (3125) ; **மங்கல முன்னான வாழ்த்து** - மங்கல மொழியை முன் வைத்துப் பாடும் வாழ்த்துரைக் கீதம்; மங்கல மொழிகள் முதலிய வாழ்த்துக்களும் என்றலுமாம்; **மதுரம்** - இன்னிசை.

கரகம் - மூக்குடைய சிறிய தண்ணீர்ப் பாத்திரம்; **ஒழுக்குதல்** - மெல்லியதாய் இடையறாது விழும்படி வார்த்தல்.

வலங்கொண்டு-வலமாகச் சுற்றுதல். நீராஞ்சனம் என்ற நல்வினை என்றும், இது

3128. மங்கலம் பொலிய வேந்தி மாதரார் முன்பு செல்லக்
கங்கையின் கொழுந்து செம்பொ னிமவரை கலந்த தென்ன
அங்கவர் **செம்பொன் மாடத் தாதிபூ மியினுட்** புக்கார்
எங்களை வாழ முன்னு ளேடுவை கையினி லிட்டார். 1230

திருட்டிதோட நீங்கும்படி செய்யும் ஆலத்தி என்றும் உரைப்பர் ஆறுமுகத் தம்பிரானுர். (திருட்டி = கண்ணேறு) *1229*

3128. (இ-ள்) மங்கலம்...செல்ல - மங்கலப் பொருள்களை ஏந்திக் கொண்டு (பார்ப்பனப்) பெண்கள் முன்னே செல்ல; கங்கையின்...என்ன - கங்கையின் கொழுந்து போன்ற வெள்ள ஒழுக்கு சிவந்த பொன்மலை என்னும் இமயமலையினைக் கலந்ததுபோல; அங்கவர்...புக்கார் - அங்கு நம்பாண்டார் நம்பிகளது அழகிய பொன்மாடத்தின்கண் ஆதிபூமி என்னும் மணவறையினுள்ளே புகுந்தருளினர்; எங்களை...இட்டார் -எங்களை வாழ்வித்தற்பொருட்டு முன்னுள் ஏட்டினை வைகையினில் இட்டருளிய பிள்ளையார்.

(வி-ரை) மங்கலம் - நிறைகுடம், விளக்கு, முளைப்பாண்டில் முதலிய மங்கலப் பொருள்கள்; அட்டமங்கலம் எனப்படும்.

கங்கையின் கொழுந்து - பெரிதாய் விரைவாய்ப் பேரோசையுடன் வருதலின்றி மென்மையாய்ச் சிறிய அளவில் மெல்ல முன்னேறிச் செல்லுதலின் கொழுந்தென்றூர்; உருவகம். கங்கை வெண்மை நிறமுடையதாதலும் குறிப்பு. ''புனல் வெண்மை'' (உண்மை விளக்கம்) என்ற பொதுவியல்போ டன்றிக் கங்கை நீருக்குச் சிறப்பாகிய வெண்மைநிறமு முண்டு; ''கங்கையுந் தெண்ணர் யமுனையுமே கூடிய, கோப்பொத்த தாலுமை பாகமெங் கொற்றவற்கே'' (பொன்வண்ணத்தந்தாதி-90) என்ற திருவாக்கில் வெண்ணீறிட்டு வெள்ளியதாய் விளங்கும் திருமேனியைக் கங்கைக்கு உவமித்தது காண்க. இங்குப் பிள்ளையார் திருமேனியும் முழுதும் முத்தணி புனைந்து நீறிட்டு வெண்ணிறமாய் விளங்குதலும் குறிப்பு; ''வெள்ளை மேகம்'' (3135) எனப் பின்னர்க் கூறுதலும் காண்க.

செம்பொன் இமவரை - பொன்மலை என்னும் இமயமலை; பொன்மலை இமயத்தின் ஒரு பகுதி. **பொன்மாடத் தாதிபூமி** - ''பொன்னின் வெண்டிருநீறு புனைந்தென'' (11).

கங்கையின் கொழுந்து பிள்ளையாருக்கும், **பொன் இமவரை** - ஆதி பூமிக்கும், பிள்ளையார் **சென்று சேர்தல்** கங்கைக் கொழுந்து மெல்ல இமயத்திற் படர்தலுக்கும், மெய்யும் வினையும்பற்றி எழுந்த உவமம். **கலந்தது** - மெல்லச் சேரும் நிலை குறித்தது.

அங்கவர் - அங்கு அந் நம்பாண்டார் நம்பிகளுடைய; ஆறனுருபு விரிக்க.

எங்களை வாழ...இட்டார்-''வாழ்க வந்தணர்'' என்ற திருப்பாசுரத் திருப்பதிகத்தினை எழுதிய ஏட்டினை வைகையாற்றில் இட்டுப் புனல் வாதம் வென்ற வரலாறு குறித்தது. **எங்களை வாழ** என்றது அதனில் ''ஆழ்க தீயது; எல்லா மரனுமமே சூழ்க; வையகமும் துயர் தீர்கவே'' என்ற பகுதியினூற் பூதபரம்பரையில் பின்வரும் எங்களை வாழ்வித்த நிலை குறித்தது. ஆழ்க - சூழ்க - தீர்க என்ற வியங்கோள் வினை முற்றுக்கள் ''இயலு மிடம்பா லெங்கு மென்ப'' ஆதலின் எதிர்

3129. அகினறுந் தூபம் விம்ம வணிகிளர் மணியால் வேய்ந்த
துகில்புனை விதான நீழற் **றூமலர்த் தவிசின் மீது**
நகிலணி முத்த மாலை நகைமுக மடவார் வாழ்த்த
இகலில்சீர் மறையோர் சூழ வினிதினங் கிருந்த வேலை. 1231

காலத்து வருபவர் எங்களையும் சேர்ந்தும் தன்மையுடையன; ஆதலின் அன்று ஏடிட்ட தனியாமையால் இன்று யாங்களும் வாழ்கின்றோம்; இனிவரும் பரம்பரையும் வாழும் என்பதாம். **வாழ** - வாழ்விக்கும் பொருட்டு; ஏடிட்டமையால் புனல்வாத வெற்றியும், அதனால் அமணர் சார்பு அழிவும், அதனால் சைவத் திருநீற்றி னாக்கமும் பெறப்பட்டமையும் எங்களுக்கு வாழ்வருளியதாம் என்ற குறிப்பும் காண்க. **வாழ** - வாழ்விக்க.

எங்களை வாழ முன்னாள்-இட்டார் ஈண்டு "ஆதி பூமியினுட் புக்க" பிள்ளையார், அவ்வாறே திருமணச் சடங்கின்றே ஆதிபூமியாகிய சிவன்றிருக்கோயிலுக்குச் சென்று அங்கு வந்தார்க்கெல்லாம் பேரானந்தப் பெருவாழ்வாகிய முத்தியருள்வாராகப் பின்வரும் எங்களுக்கு அவர் அருள் செய்தவாறென்னை என்பார்க்கு எங்களை வாழ முன்னாள் ஆற்றில் ஏடிட்டமையால் அருள் புரிந்து வாழ்வருளினர் என்பதாம்; இது பற்றியே ஈண்டு இவ்வாற்றாற் கூறியருளினர் ஆசிரியர். **முன்னாள்-முன்**- முன்னிய-நினைந்த என்ற குறிப்புமாம். "எங்களையு நினைந்தருளிற்று" (3280 ஏயர் - புரா - 126) என்புழிப்போலக் கொள்க. **ஆதிபூமி** - சிவனகர் என்ற குறிப்புமாம்.
1230

3129. (இ-ள்) அகில்...விம்ம - அகிலின் மணமிக்க புகை மிகக் கமழ; அணிகிளர்...நீழல் - அழகு விளங்கும் மணிகளாற் புனையப்பட்ட நறும் பட்டினாலாகிய மேற்கட்டியின் கீழே; தூ...மீது - தூய மலர்க ளிடப்பெற்ற ஆசனத்தின் மீது; நகிலணி...வாழ்த்த - கொங்கைகளின் மேல் முத்துமாலைகளை யணிந்த மலர்ச்சி பொருந்திய முகத்தினையுடைய பெண்கள் வாழ்த்த; இகலில்...சூழ - கோப முதலாகிய பகைகள் இல்லாத, சிறப்பினையுடைய வேதியர்கள் சூழ; இனிதின்...வேலை-இனிதாக அங்கு எழுந்தருளியிருந்தபோது;

(வி-ரை) விம்முதல் - மிகுந்து மேல் எழுதல்; **"தூபம்"** (3125).

மணியால் வேய்ந்த துகில்புனை விதானம்-விதானம்-மேற்கட்டி; **துகில்புனை**-பட்டினால் இயன்ற; **துகில்** - இங்குப் பட்டுத் துணியைக் குறித்தது. **மணியால் வேய்ந்த**-என்றது மணிகளைச் சித்திரம்படத் தைத்து வைத்தும் தொங்க வைத்தும் அணிசெய்த.

தூமலர்த் தவிசு-மண அறையினில் பிள்ளையார் மணமகனாராக எழுந்தருள இட்ட பூஞ் சிங்காதனம்.

நகில்...மடவார்-நகில் - கொங்கை; **முத்தமாலை** - ஈண்டு இடத்துக்கும் காலத்துக்கும் ஏற்பப் பெண்களும் தம் இயல்பாகவே முத்துமாலைகள் அணிந்தது குறிப்பு. முத்து மாலைகளணிதல் அந்நாள் வழக்குமாம்.

இகலில் சீர்-மனக் கோட்டம். பொறாமை, வெறுப்பு முதலிய அறுவகைப் பகைகளை

3130. **திரு**மகட் கொடுக்கப் பெற்ற செழு**மறை முனிவர் தாமும்**
அருமையான் முன்செய் மெய்ம்மை யருந்தவ **மனைவி யாரும்**
பெருமகிழ்ச் சியினாற் **பாதம் விளக்குவார்** பிள்ளை யார்முன்
உரிமையால் **வெண்பாற் றூநீ ருடனெடுத் தேந்தி வந்தார்.** 1232

அறுத்த சிறப்புடைய; ''அகனமர்ந்த வன்பினரா யறுபகைசெற் றைம் புலனு மடக்கி'' (தேவா); ''களவுபொய் காமங் கோப முதலிய குற்றங் காய்ந்தார்'' (1784); ''செம்மையாற் றணிந்த சிந்தைத் தெய்வவே தியர்க ளானார்'' (357).

அங்கு-ஆதிபூமியில் தூமல ராதனத்தின் மீது. மணமகனாராகிய பிள்ளையார் தூமலர்த் தவிசின் எழுந்தருளிய வேலை, சுற்றிலும் அகிற்றூபம் கமழ நிறைந்தது; மணியணி விதானம் மேல் விளங்கிற்று; முன்பு மடவார் வாழ்த்தினர்; சூழ இருந்து மறையோர் மறைமொழிகளால் ஏத்தினர் என்க.

நகைமுக மடவார் - உள்ள மகிழ்ச்சியின் நிறைவினாலே முகமலர்ச்சி காட்டிற்று.

இருந்த வேலை-ஏந்தி வந்தார்-என மேல்வரும் பாட்டுடன் முடிக்க; மணமகனார் வந்து ஆதனத்தமர்ந்த உடனே முதலிற் செய்யும் சடங்காதலின் இருத்தலும் வருதலும் கூறும் இவ்விரண்டு பாட்டுக்களும் ஒருமுடிபு கொள்ளவைத்த கவிநயம் கண்டு கொள்க. *1231*

3130. (இ-ள்) திருமகள்...தாமும்-தம் திருமகளாரை மணமகளாராகக் கொடுக்கும் பேறு பெற்ற செழிய மறைமுனிவராகிய நம்பாண்டார் நம்பிகளும்; அருமையால்...மனைவியாரும் - அரிய நீர்மையாலே முன்னே செய்த மெய்ம்மையாகிய அரிய தவப்பேறுடைய மனைவியாரும்; பெருமகிழ்ச்சியினால் பாதம் விளக்குவார் - பெரிய மகிழ்ச்சியுடனே பிள்ளையாரின் பாதங்களை விளக்குவாராகி; பிள்ளையார் முன்... வந்தார்-பிள்ளையாரது திருமுன்பு அவ்வுரிமையுடைமையினாலே வெள்ளிய ஆன்பாலினையும் தூய நீரினையும் உடனாக எடுத்து ஏந்திக்கொண்டு வந்தார்கள்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) திருமகள்...முனிவர்தாமும்-மறைமுனிவர் - நம்பாண்டார்; **முனிவர்கள்** - மனனசீலர்கள். முனிவர்கள் பெறும் முத்திப் பயனை இவர் தம் மகளைப் பிள்ளையாருக்குக் கொடுத்ததனால் அணிமையில் அடைய நின்றமையால் **மகட் கொடுக்கப் பெற்ற மறைமுனிவர்** என்றார். **மறை முனிவர்**-''மறை முனிவர்'' (1959) என்று மணமகனாரின் தந்தையாராகிய சிவபாதவிருதயரை முன் கூறினார்; அதற்கேற்ப இங்கு மணமகளாரின் தந்தையாராகிய நம்பாண்டாரைக் கூறினார். ஈண்டுச் **செழு**மறை என்று அடைமொழி கொடுத்துச் சிறப்பித்தது இவரது மகட் கொடையினாலே சிவபாதவிருதயரும் ஏனை எல்லாரும் முத்தியாகிய உறுதிப் பொருளை அடைய நின்ற குறிப்புத் தருதற்கு.

அருமையால்...மனைவியாரும்-முன்செய் அருந்தவம் என்றது முன்னைய அரிய பெரிய தவத்தாலன்றிப் பிள்ளையாருக்குத் தேவியாராகும் மகளாரைப் பெறுதல் இயலாதென்பது; இவர் தவம் செய்து இம்மகப் பேறவிடின் நம்பாண்டாருக்கு மகட் கொடைப் பேறு

வாய்த்திராதென்பார் இவ்வாறு சிறப்பித்தார். இவர் மகப் பெற்றாராயினும் மகட்கொடையின் உரிமை தந்தையார்பாலே சிறப்பின் உரியதாதலின் அது குறிக்க அவரை முன்வைத்துக் கூறினார்.

பெரு மகிழ்ச்சியினாற் பாதம் விளக்குவார்-**பெருமகிழ்ச்சி**-பிள்ளையாரின் திருப் பாதங்களைத் தீண்டவும் விளக்கவும் போற்றவும் பேறு பெற்றமைபற்றிப் பெரிதும் மகிழ்ந்தனர் என்பது; **பாதம்**-தம் உள்ளத்தே பதிய வைத்துக் கொண்டமை குறிப்பு. **விளக்குவார்**-நின்மலத் திருமேனியாதலின் அப்பாதங்களை விளக்குதல் வேண்டப்படுவதின்று; ஆனால் இவர்கள் தாம் பாசநீங்கி விளக்கமுறும் பொருட்டுப் பிள்ளையாரின் பாதங்களை விளக்கினார் என்பது "புந்தியா னினைதி யானம் புரிசனை யாமென் றுன்னி" (3131) என மேற்கூறுவதனால் விளங்கும்.

மணமகனைச் சிவபெருமானாகவே பாவித்து அவர் பாதங்களை மகளைப் பெற்றோர் ஆன்பால் கொண்டு விளக்குதல் மணச் சடங்குகளுள் ஒன்று; "விடை யிழிந்துழி மேனைவிண் ணாட்டவர், பாமின் றொடு வந்து பாரபான், அடிகண் மீதினி லான்பொழி பாலொடு, கடிதி னாட்டினள் கைதொழு தேகினாள்" (கந்தபுராணம்-திருக்கல்யாணப் படலம்-39) என்றும், "எதிர் புகுந்திடு மிந்திராணிதன், புதிய தேர்பசுப் பொழிந்த தீயபால் நிதியின் கொள்கல நிரப்பி வந்து வேள் பதயுகங்களிற் பரிவொ டாட்டினாள்" (கந்தபு-தெய்வயானை திருமணம்-206) என்றும், "ஆட்டித் தீம்பய லலருங் கண்ணியுஞ், சூட்டி மெல்லடி தொழுது பல்சுடர், கூட்டி வைத்ததோர் கொள்க லந்தனைக், காட்டி மும்முறை கடவுட் சுற்றினாள்" (மேற்படி-207) என்றும் இறைவர் அமர்ந்து இச்சடங்கினை அங்கங்கும் உலகுக்கு வகுத்துக் காட்டியருளிய நிலைகள் காண்க. மணச் சடங்குகளில் காப்புநாண் சேர்ப்பது முதலாக மணமக்களைச் சத்தியுஞ் சிவமுமாகவே கருதுதல் வேண்டுமென்பதும், மணமக்களும் தம்மை அவ்வாறே பாவித்தொழுகல் வேண்டுமென்பதும், சைவர்கள் செய்யும் மணச்சடங்குகளும் முடிவிற் சிவத்தன்மை பெறுதலையே குறிக்கோளாக உடையன என்பதும் உண்மை நூற் கருத்துக்களாமென்ப. பிள்ளையார் திறத்தில் இவை சிறப்பாய்ப் பொருந்துவனவாம். அவருடைய திருவடிகள் சிவத்தன்மை பெற்று உண்மையில் அன்று வந்தடைந்தோர்க்கெல்லாம் முத்திக்கு வழிகாட்டியமை காணப்பெறும்,

இனி, **விளக்குவார்** - இத்திருப்பாதங்களே முத்திக்கு வழி காட்டுவனவாய்ப் பற்றத்தக்கன என்று உலகுக்கு விளங்கச் செய்வாராகி என்றதும் தொனித்தல் காண்க.

"என்று மடியவ ருள்ளத் திருப்பன; விவ்வுலகோர்
நன்று மலர்கொடு தூவித் துதிப்பன; நல்லசங்கத்
தொன்றும் புலவர்கள் யாப்புக் குரியன; வொண்கலியைப்
பொன்றுங் கவுணியன் சைவ சிகாமணி பொன்னடியே"

என்பது முதலாக நம்பியாண்டார் நம்பிகள் பின்னர்க் காட்டியருளுமாறு நம்பாண்டார் நம்பிகள் முன்னரே காட்டுவாராகி என்பது.

உரிமையால் - மகட்கொடுக்கும் உரிமை பெற்றோம் என்ற சிறப்புரிமையின் பெருமிதத்தோடு. உரிமை வேறு - கடமை வேறு. இங்குக் கடமை என்றதனோடு அமையாது உரிமை பாராட்டி என்பது குறிப்பு.

வெண்பால் - ஆன்பொழி புதிய பால்; **தூநீர்**-தூயதாய், மலர்களும் வாசனைப் பண்டங்களும் பெய்து உள்ள நீர்.

3131. **வந்துமுன் னெய்தித் தாமுன் செய்தமா தவத்தி னன்மை**
நந்துநம் பாண்டார் நம்பி ஞானபோ னகர்பொற் பாதங்
கந்தவார் குழலி ஞர்பொற் கரகநீ ரெடுத்து வார்ப்பப்
புந்தியா னினைதி யானம் "புரிசடை யா"னென் றுன்னி, 1233

உடன்-ஒருங்கு; வழிபாட்டுக்குரிய மலர் - சந்தனம்-முதலியவற்றுட ன் என்ற குறிப்புமாம்.

1232

3131. (இ-ள்) வந்து முன் எய்தி - வந்து பிள்ளையார் முன்பு சேர்ந்து; தாம்...நம்பி- தாம் முன்னே செய்த பெருந்தவத்தினால் பெற்ற நன்மை பெருகுகின்ற நம்பாண்டார் நம்பிகள்; கந்தவார்...வார்ப்ப-மணங்கமழும் நீண்ட கூந்தலையுடைய மனைவியார் பொற் கமண்டலத்தின் நீரினை எடுத்து வார்ப்ப; புந்தியால்...உன்னி - மனத்தினால் நினைக்கும் தியானத்தில் "புரிந்த சடையினையுடைய சிவபெருமானே இவர்" என்று அழுந்திய நினைவு கொண்டு; ஞானபோனகர் பொற்பாதம்-ஞான அமுதுண்ட பிள்ளையாருடைய திருப்பாதங்களை;

(வி-ரை) தாம் முன்...நந்தும் - தாம் முன்னைநாள் செய்த பெருந்தவம் இப்பொழுது மகட் கொடுக்கும் பேறு பெறுதலானும், இனி அணிமையில் தாமும் ஏனை எல்லாருமாகச் சிவானந்தப் பெருமுத்தியைத் தலைக்கூட நிற்றலானும் **தவத்தின் தன்மை நந்தும்** என்றார். **நந்தும்**-பெருகும். பிள்ளையாரின் பாதம் விளக்கப் பெற்றதனால் மணச் சடங்கும் நிகழ்ந்தது; குரு பாதபூசை வழிபாடுமாயிற்று. இனி, அதன் பலனாக முத்திப்பேறும் ஆவதாம். ஆதலான் முன்னைத் தவத்தின் நன்மை நந்தும் என்றார். முன்னைப் பெருந்தவத்தா னன்றி இவை நிகழா ஆதலின் "முன் செய் மாதவம்" என்றார்; **நன்மை** - நற்பயன்.

பொற்பாதம் - நம்பி - விளக்கி என மேல்வரும் பாட்டுடன் முடிக்க.

கந்தவார் குழலினர் - நம்பாண்டார் நம்பிகளின் மனைவியார். **கந்தம்** - உத்தம சாதிப் பெண்களின் கூந்தல் இயல்பாகவே நன்மணமுடைய தென்பவாதலின் இன்ன மணம் என்னாது வாளா கந்தவார் குழல் என்றார்; இவ்வாறு பொதுப்படக் கூறினும் இங்கு நீர் வார்த்து மணமகனார் பாதத்தை விளக்கும் உரிமையுடையவர் மனைவியாரேயாதலின் அதுபற்றி அவ்வா றுரைக்கப்பட்டது.

புந்தியால்...உன்னி - இச் சடங்குக்குரிய பாவனை கூறப்பட்டது. மணமகனைச் சிவனாகப் பாவித்து மணச் சடங்குகள் செய்தல் வேண்டுமென்பது விதி. **தியானம்** - அழுந்தியறிதல்; தியானத்தின்கண்- உன்னி என்று கூட்டுக.

பொற்கரக நீர் - பொன்னாலாகிய கமண்டல நீர்; **கரகம்** - மூக்குடைய சிறுபாத்திரம்; சிறு தாரையாக இடையறாது விழும்படி அமைக்கப்படுவது.

குழலினர் நீர் வார்ப்ப - மணமகன் பாதத்தைப் பால்கொண்டு நீர் வார்த்து விளக்குதல் மணமகளைப் பெற்ற தாயார் செய்வது மரபு. ஈண்டு மணமகனார் என்றதனோடு அமையாது வழிபடு குருவாகவும் கொண்டமையால் நம்பாண்டார் மனைவியார் கரகநீர் வார்க்க

3132. விருப்பினால் விளக்கி மிக்க புனிதநீர் தலைமேற் கொண்டு
பொருப்புறு மாடத் துள்ளும் புறத்துளுந் தெளித்த பின்னர்
உருப்பொலி யுதரத் துள்ளும் பூரித்தா; ருவகை பொங்கி
அருப்புறு கிளைஞர் மேலுந் தெளித்தன ரார்வத் தோடும். 1234

இச்சங்கற்பத்தைத் தாமே செய்தனர். "யாமுடைய குலக்கொழுந்தை யாமுய்யத் தருகின்றோம்; வம்மின்" (3065) என முன்கூறியது காண்க.

உன்னி - விளக்கி - பூரித்தார்; தெளித்தனர் - என்று மேல்வரும் பாட்டுடன் முடிக்க.

1233

3132. (இ-ள்) விருப்பினால் விளக்கி-விருப்பத்துடனே விளக்கி; மிக்க... மேற்கொண்டு - மிகுந்த தூய நீரினைத் தலையின்மேலே தெளித்துக்கொண்டு; பொருப்பு உறு...பின்னர் - மலைபோன்ற திருமாளிகையினுள்ளும் புறத்திலும் தெளித்த பின்பு; உருப்பொலி...பொங்கி - அழகு மிகுந்த வயிற்றினிடமாகக் கொள்ளும்படி மிகுந்த ஆசை பொங்கி உட்கொண்டனர்; அருப்புறு....ஆர்வத்தோடும் - மயிர்ப் புளகாங்கிதம் கொள்ளும் சுற்றத்தார் மேலும் பெருகும் ஆசையுடனே தெளித்தனர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) மிக்க புனித நீர் - ஞானபோனக ராதலின் பிள்ளையாரது பாதம் விளக்கிய நீர் மிகுந்த தூய்மையுடையது என்பதாம். அந்த நீர் என்க.

தலைமேற் கொண்டு - தலையின்மேற் றெளித்துக்கொண்டு; உயிர்வாழும் மாட மாகிய உடலின் உத்தமாங்கமாகிய தலையின்மேல் முதலில் தெளித்துப் பின்னர் அவ்வுடல் வாழ்தற்கிடமாகிய மாடத்தின் உள்ளும் புறம்பும் தெளித்தனர்.

உருப்பொலி...பூரித்தார் - உடலின்மேற் றெளித்தல் முன் கூறினார்; மாடத்தின் உள்ளே தெளித்தல்போல் உடலின் உள்ளே நிறைத்தல் ஈண்டுக் கூறுகின்றார். **பூரித்தல்**- நிறைத்தல்; **உருப் பொலிதல்** - அழகுடைத்தாதல். உதரத்துக்கு அழகாவது தூய பண்டங்களால் நிறைவாதல்.

உவகை பொங்கி - பிள்ளையாரது திருப்பாதம் விளக்கிய தூயநீரினைப் பெற்ற பேற்றினைக் கருதி மிக மகிழ்ந்தனர்; **உவகை பொங்கித்-தெளித்தனர்** என மேலும் உரைக்க நின்றது.

கிளைஞர் - சுற்றத்தார்; உபலக்கணையால் உயிர்ச் சுற்றமாகிய தொண்டர்களையும் குறித்து நின்றது.

அருப்பு - அரும்பு என்பது அருப்பு என வலிந்து நின்றது. **அரும்புதல்** - மயிர் முகிழ்த்தல்; பெருமகிழ்ச்சியும் அன்புங் காரணமாக மயிர்முகிழ்த்தல் உளதாம். *1234*

3133. **பெருகொளி ஞான முண்ட பிள்ளையார் மலர்க்கை தன்னில்**
மருவுமங் கலநீர் வாசக் கரகமுன் னேந்தி வார்ப்பார்
தருமுறைக் கோத்தி ரத்தின் றங்குலஞ் செப்பி "யென்றன்
அருநிதிப் பாவை யாரைப் பிள்ளையார்க் களித்தே" னென்றார். 1235

3133. (இ-ள்) பெருகொளி...தன்னில் - பெருகும் ஒளியினையுடைய ஞானத்தை அமுது செய்த பிள்ளையாரது தாமரை மலர்போன்ற கையில்; மருவும்...வார்ப்பார் - பொருந்திய மணமுடைய நீர் நிறைந்த கமண்டலத்தினை முன் ஏந்தி அதன் மங்கல நீரினை வார்ப்பராகி; தருமுறை...செப்பி - தரும் முறையிலே தமது கோத்திரத்திலே தமது உரிய பிரவர முதலிய குலப் பெயரினையும் எடுத்துச் சொல்லி; "என்றன்...அளித்தேன்" என்றார் - "எனது அரிய நிதியாகிய பாவைபோன்ற மகளாரைப் பிள்ளையாருக்கு அளித்தேன்" என்று (விதிப்படி மும்முறை) சொன்னார்.

(வி-ரை) பெருகு ஒளி ஞானம் -சிவஞானம்; "ஐந்துமா றடக்கி யுள்ளாரரும் பெருஞ் சோதி யாலும்" (780); வலிய அகவிருளாகிய மூலமலத்தையும் போக்கும் வலிமையுடைமையால் பெருகு ஒளி என்றார்; தனக்கு மேற்பட்ட ஒளியில்லாமையும் குறிப்பு.

கையில் - நீர் வார்ப்பார் - அளித்தேன் - என்றார் - என்க; கன்னியைக் கொடுத்தேன் என்று சொல்லி, நீர் வார்த்து மணமகன்கையிற் கொடுத்தல் மரபு; கன்யா தத்தம் என்பது வடமொழி வழக்கு. "நீ ரெடுத்தவ னங்கையிற் பெய்தான்" (திருவிளை - விருத் - குமா-8); "நேசமோ டளித்தே னென்னு...வாசநல் லுதக முய்த்தான்" (கந்த - திருக்கல்-70).

தருமுறைக் கோத்திரத்தில் தங்குலம் செப்பி - தருமுறை - வழிவழி; அந்தணர் மரபின் பரம்பரை. **கோத்திரம்** - மரபின் உட்பிரிவு; **குலம்**-கோத்திரத்தின் உட்பிரிவு; **பிரவரம்** என்பர். இதனுடன் சூத்திரம், வேதசாகை முதலியனவும் சொல்வர், மற்ற வன்குடி கோத்திரஞ் சூத்திர மற்றும், முற்றறிந்து" (விருத்தகு- பட-11) **செப்பி**- எல்லாருமறிய எடுத்துச் சொல்லி.

என்றன் அருநிதிப் பாவையார் - மகளார்; **அருநிதிப் பாவையார்** - தாம் அருநிதியாகக் கொண்டு போற்றிய பாவைபோல்வார்; பாவை போல்வாரைப் பாவை என்றதுபசாரம். "பந் தணைவிரற் பாவை" (தேவா).

அருநிதிப் பாவையார் - அருநிதியாகிய அணிகளை அணிந்த என்ற குறிப்புமாம்; சாலங்கிருத கன்னிகாதானம் என்பது வடமொழி வழக்கு. "தேயு நுண்ணிடைக் கன்னியைச் செம்பொனாற் புதைத்துக், காயு மாரழல் முன்னரக் காளைகைக் கொடுத்தான்" (திருவிளை. புரா-விருத்த-பட-12).

பாவையார் - இவர் பெயர் **ஸ்தோத்திர பூர்ணாம்பிகை** என்று திருநல்லூர்ப் பெருமணத்தில் வழங்கப்படுகின்றது.

பிள்ளையார் என்றதனால் அவரது கோத்திரம் முதலிய முறையும் உணர்த்தியவாறாயிற்று.

1235

3134. நற்றவக் கன்னி யார்கை ஞானசம் பந்தர் செங்கை
பற்றுதற் குரிய பண்பிற் பழுதினற் பொழுது நண்ணப்
பெற்றவ ருடன்பி றந்தார், பெருமணப் பிணைய னாரைச்
சுற்றமுன் சூழ்ந்து போற்றக் கொண்டுமுன் றுன்னி னார்கள். 1236

3134. (இ-ள்) நற்றவக் கன்னியார் கை...நண்ண- நல்ல தவத்தையுடைய கன்னியாரது கையினைத் திருஞான சம்பந்தர் தமது செங்கையால் பிடித்தற்கு உரிய பண்புடைய பற்றுற்ற நல்ல வேளை வந்து பொருந்த; பெற்றவருடன் பிறந்தார் - கன்னிகையாரைப் பெற்ற தாய் தந்தையரும், உடன்பிறந்த சகோதரர்களும்; பெருமணப் பிணை அன்னவரை...துன்னினார்கள் - பெருமை தங்கும் மணப்பெண்ணாகிய மான்போன்ற கன்னிகையாரைச் சுற்றத்தார்கள் முன் சூழ்ந்து போற்ற அழைத்துக் கொண்டு மணமகனாராகிய பிள்ளையார் முன்னே கொண்டுவந்து சேர்ந்தனர்.

(வி-ரை) நற்றவக் கன்னியார் - முன் "நற்பெருந் தவத்தி னீர்மை நலம் படைத் தெழுந்த" (3120) என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

கன்னியார் கை ஞானசம்பந்தர் செங்கை பற்றுதற்குரிய பண்பிற் பழுதினற் பொழுது - "பாணிக்கிரகண முகூர்த்தம்" என்பது வடமொழி வழக்கு; "நிறைவளைச் செங்கைபற்ற" (3138); "அணிமலர்க் கைப்பிடித்து" (3139); "காதலியைக் கைப்பற்றிக் கொண்டு" (3150) என்று இதனையே மேலுங் கூறுதல் காண்க; திருமங்கல்யதாரணம் என்னும் தாலியணிதலாகிய சடங்கு பின்னாளில் தொடங்கியதென்றும், **"கரணம்"** எனப்படும் வேள்விச் சடங்குடனே கூடக் கொடைக்குரிய மரபினோர் கொடுப்பக் கொள்ளும் **நிலை,** மாலைசூட்டலும் (பாணிக்கிரகணம்) கைப்பிடித்தலும் பொரியட்டி எரிவலம் வருதலுமாகிய இவற்றுடன் நிறைவாகுமென்றும் கூறுவர். மச்ச புராணத்தில் முதலில் மங்கலநா ணணிதல் காணப்பட்டதென்றும் கூறுவர். "கற்றநான் முகத்தோன் வேள்விச் சடங்குநூல் கரைந்தவாற்றான், முற்றமங் கலநாண் சாத்தி முழுதுல கீன்றாள் செங்கை, பற்றினன் பற்றி லார்க்கே வீடருள் பரம யோகி" (திருவிளை.புரா-திருமண-185) என்றும், "செங்கம லத்திறை சிந்தையி னாற்றி, யங்கையி னீந்திட வாண்டகை கொண்ட, மங்கல நாணை மணிக்கள மார்த்து, நங்கை முடிக்கொர் நறுந்தொடை சூழ்ந்தான்" (கந்தபு -தெய்வ. திருமணம்-247) என்றும், இவ்வாறு வருவன பிற்காலத்தில் "ஐயர் யாத்தனர் கரணம் என்ப" என்ற நிலையில் கற்பியல்வழி நிற்கும் பொருட்டு உலகை வழிப்படுத்தியவை. வள்ளியம்மை திருமணத்தில் "குறவர் கோமான், கந்தவேள் பாணி தன்னிற் கன்னிகை கரத்தை நல்கி, நந்தவமாகி வந்த நங்கையை நயப்பா லின்று, தந்தனன் கொள்கவென்று தண்புனற் றாரை யுய்த்தான்" (வள்ளி.திருமண-199); "நாரதன்...அங்கியோடு, மற்றுள கலனுந் தந்து வதுவையின் சடங்கு நாடி, அற்றம தடையா வண்ண மருமறை விதியாற் செய்தான்" (200) என்றும் வருவனவற்றுள் தாரையுய்த்தலும் அங்கி வேள்வியுடன் வேதச் சடங்குமே பேசப்பட்டவை. வள்ளியம்மையார் திருமணம் களவியலின் பின் நிகழ்ந்த கற்பியல் நெறி ஒழுக்கங் காட்டுவது போலும். இக் கரணங்களும், கற்பியல் மண ஒழுக்க முறைகளும் காலந்தோறும் தேயந்தோறும் வருணந்தோறும் மாறுபட்டும் நிகழ்வன என்பது

3135. **ஏகமாஞ் சிவமெய்ஞ் ஞான மிசைந்தவர் வலப்பா** லெய்தி
நாகமார் பணப்பே ரல்கு **னற்றவக் கொழுந்த னாரை**
மாகமார் சோதி மல்க மன்னிவீற் றிருந்த **வெள்ளை**
மேகமோ டிசையு மின்னுக் கொடியென விளங்க வைத்தார். 1237

தொல்காப்பியத்துள் நச்சினார்க்கினிய ருரைத்தவாற்றானும் பிறவாற்றானும் விளங்கும்; இதுபற்றிய ஆராய்ச்சிகள் பெரிதும் மாறுபாட்டிற்கும் பூசலுக்கும் இடமாய் விளைதலின் முன்கூறிய குறிப்புக்களை மனங்கொண்டு துணிபும் அமைதியும் கொள்ளத்தக்கன என்பது.

கை பற்றுதற்குரிய பண்பிற் பழுதி னற்பொழுது நண்ண - இந்நாளில் மங்கல நாணணிதலுக்கு நல்லவேளை பார்ப்பதுபோல, முன் கூறியவாற்றால் காணும் அந்நெறி முறையில் கைப்பிடித்தலுக்கு(பாணிக்கிரகணத்துக்கு) நல்லவேளை பார்த்தல் வழக்கு; **பழுதில் நற்பொழுது**-சோதிட நூல்வழி வேளையில் வரும் குற்றங்கள் இலவாகிய நல்லநேரம்; நன்முகூர்த்தம் என்ப. ''அருக்கன்முதற் கோளனைத்து மழகியவுச்சங்களிலே, **பெருக்கவலி யுடனிற்கப் பேணியநல் லோரையெழ**'' (1920) என்றதும், ஆண்டுரைத்தவையும் பார்க்க. **பழுதில்** - உயிர்களின் பழுதாகிய மலக்குற்றத்தை இல்லையாகச் செய்தற்குக் காரணமாகிய என்று பிற்சரித விளைவு பற்றிய குறிப்பும் காண உரைத்தலுமாம்; **கை பற்றுதற்குரிய பண்பில்** என்றது திருமணத்தின் நிலை பற்றியும், **பழுதில்** என்றது உயிர்களின் நன்மைபற்றியும் உரைத்தலுமாம்.

பெற்றவர்...துன்னினார்கள் - குறித்த நல்லவேளையில் மணமகளைப் பெற்றவரும் உடன் பிறந்தாரும் அழைத்து மணவறையினுள் மணமகனாரது வலப்பக்கத்தில் அமர வைத்தல் மரபு; உரிமைபற்றி இச்செயல் பெற்றவர் - உடன் பிறந்தார்களின்மேல் நின்றது; **உடன் பிறந்தார்** என்றதனால் ஈண்டுப் பிள்ளையாரின் தேவியாருக்கு உடன் பிறந்தார் உளராயினர் என்பது கருதப்படும்.

பெருமணம் - வந்தணைந்தார்க்கெலாம் முத்திப்பேறு தரும் **பெருமை** குறித்தது; தலப்பெயர்க் குறிப்புமாம்.

சுற்ற முன் சூழ்ந்து - பெற்றவர் உடன்பிறந்தார்களே யன்றி மணமகளாரின் சுற்றத்தார் முன்சூழ்ந்து போற்ற அணைந்தனர்.

முன் துன்னினார்கள் - முன் - மணவறையாகிய ஆதிபூமியின் முன்பு.

பிணை - பெண்மான். *1236*

3135. (இ-ள்) ஏகமாம்... எய்தி - ஒன்றாகும் மெய்யாகிய சிவஞானத்தைப் பெற்ற பிள்ளையாரது வலப்பக்கத்தில் பொருந்த வந்து; நாகமார்...கொழுந்தனாரை - நாகத்தின் படம்போன்ற அல்குலையுடைய நல்ல தவத்தின் கொழுந்து போல்வாராகிய அம்மையாரை; மாகமார்...கொடியென - ஆகாயத்தின் நிறைந்த ஒளிபொருந்த நிலைபெற்று வீற்றிருந்த வெள்ளை மேகத்தினுடன் பொருந்தும் மின்னற்கொடிபோல; விளங்க வைத்தார் - விளங்கும்படி அமரச் செய்தார்கள்.

(வி-ரை) ஏகமாம் மெய்ச் சிவஞானம் - என்க. **மெய்ச் சிவஞானம்** - என்றும் மெய்யாகிய - சத்தாகிய - அழியாத - நிலைபிறழாத - சிவஞானம்; "தம் பெருமைக் கழல் பேறுளார் ஒருநெறியில் வருவார்" (1963); "எண்ணரிய சிவஞானம்" (1966); "தாவில் தனிச் சிவஞானர்" (1967) என்று தொடக்கத்திற் கூறியவற்றை இங்கு நினைவு கூர்க. அந்த ஞானத்தின் பயன் கண்டு நிறைவுபெறும் நிலையாதலின் அத்தன்மையினை முடித்துக் காட்டியவாறு; இனிப், பிள்ளையார் பெற்ற ஞானத்தின் நிலைபற்றிப் பேசுகின்ற முடிந்த இடம் இதுவேயாதலுங் காண்க.

ஏகமாம் மெய்ச் சிவஞானம் - ஏகம்ஆம் - என்புழி **ஆம்** என்னும் ஆக்கச்சொல் உண்மை குறித்து நின்றது. "நிர்க்குணனாய் நின்மலனாய்" (போதம்-9-2-உதா) என்புழிப்போல; "பாடு நெய்யெனா வுயிருக் குயிராயெங்கும் ஏகமாம் பசுபதி தானேந்துஞ் செய்யுள்" என்றவிடத்திற்போல **ஏகமாஞ் சிவ**மெனவே, மாற்றுமற்சொற்கிடக்கை முறையே கொண்டு சிவனது மெய்ஞ்ஞானம் - சிவனையறிந் தனுபவித்தற்குரிய மெய்ஞ்ஞானம் - பெற்றவர் என்றுரைத்தலும் பொருந்தும்.

ஞானமிசைந்தவர்-ஞானமே திருவுருவமாகப் பெற்றவர்; **ஞானம் மிசைந்தவர்** என்று பிரித்துச் சிவஞானத் தின்னமுதத்தை உண்டவர் என்றலுமாம்; **மிசைதல் - உண்ணுதல்**.

வலப்பால் எய்தி - விளங்க வைத்தார் - என்று கூட்டுக; மணவேள்விச் சடங்கு நிறைவேறி எரிவலம் வரும்வரை மணமகள் மணமகனுக்கு வலப்பக்கத் திருக்கவைத்தலும், அதன்பின் இடப்பக்கத்து இருத்தலும் மரபு. பெண் நோன்பிருந்து தவஞ்செய்து உரிய மணமகனைப் பெறுகின்றுள் என்பது நூல்களின் உட்கிடையாதலின் வேள்வி வேட்ட பின்பே இடப்பாகம் சார்வது விதி; இடப்பாகம் பெண்மைக்குரிய பாகம்; உமையம்மையாரது தவம் முதலிய வரலாறுகளெல்லாம் இக்கருத்தை விளக்குவன; அம்மை இடப்பாகத்தில் இடங்கொண்டனர் என்பதுமிக் கருத்து; **நற்றவக் கொழுந்தனூர்** என்ற குறிப்புமிது. "பெண்களி லுயர நோற்றுள் சடங்கவி பேதை யென்பார்" (171); "நங்கையென் ஞேற்றுள் கொல்லோ நம்பியைத் திளைத்தற் கென்பார்" (திருவிளை. புரா - திருமணம் - 120) முதலியவை காண்க.

நற்றவக் கொழுந்தனூர் - "நற்பெரும்...பூங்கொம் பன்னூர்" (3120). "பெருந்தவக் கொழுந்து" (1128) என்று அம்மையாரது தவக்குறிப்பும், அவர் போல்வார் என்ற குறிப்பும் காண்க.

வெள்ளை மேகமோ டியைந்த மின்னுக் கொடி என - வினையும் உருவும்பற்றி எழுந்த உவமை. மேகத்தில் மின்னற்கொடி இசைதல் இயற்கையாதலும் காண்க; **இயைந்த மின்** - "மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை" என்ற பழமொழிப்படி மின் இசைதல் மழைகாட்டுமாதலின் மேலால் ஞானோபதேச மழை பெய்தலும், முத்திப் பரபோகமாக விளைதலும் சேரும் என்ற குறிப்பினுற் பயன்பற்றிய உவமமாதலும் கருதத் தக்கது; கார்மேகத்தினும் சூல்கொண்ட வெண்மேகம் பெரும் பயன்றரும் என்பது "ஒளிகொண் வெண்முகில் வாய்ப்பரந் தெங்கும் பெய்யு மாமழைப் பெருவெள்ளம்" (தேவா) என்றதனாலுமறிக. மழைபொழிந்த பின் மேகமும் மின்னும் மறைதலும் குறிப்பு.

3136. புனிதமெய்க் கோல நீடு புகலியார் வேந்தர் தம்மைக்
குனிசிலைப் புருவ மென்பூங் கொம்பனா ருடனே கூட
நனிமிகக் **கண்ட போதி** னல்லமங் கலங்கள் கூறி
மனிதருந் தேவ ராஞர் கண்ணிமை யாது வாழ்த்தி. 1238

வெள்ளை மேகம் - பிள்ளையாருக்குத் திருநீற்றுப் பொலிவு, முத்தணிகளின் வெண்மைக்கோலம், ஞானப் பிழம்பாகிய வொளி என்றவற்றால் உவமையாயிற்று.

மாகமார் சோதி - மாகம் - விண்.

விளங்க வைத்தார் - முன்னரே அமைந்திருந்த தன்மை வெளிப்பட விளங்கும்படி அமர்த்தினர். ***1237***

3136. (இ-ள்) புனித மெய்க்கோலம்...தம்மை - தூய்மை செய்யும் மெய்க்கோலம் நீடிய சீகாழித் தலைவராகிய பிள்ளையாரை; குனிசிலை...கண்டபோதில் - வளைந்த வில்லைப்போன்ற புருவங்களையுடைய மெல்லிய பூங்கொம்பு போன்ற தேவியாருடனே கூடமிக்க ஆர்வத்துடன் கண்டபோதில்; நல்ல...கூறி - நல்ல மங்கல வாழ்த்துக்களைச் சொல்லி; மனிதரும்...வாழ்த்தி - கண்ணிமைக்காமல் பார்த்து வாழ்த்திய வகையினாலே மனிதர்களும் தேவர்களாயினார்கள்.

(வி-ரை) புனித மெய்க்கோலம் - புனிதம் - தூய்மையாகிய தன்மையுமாம். **மெய்**-அழிவில்லாத-நித்தியமான; **புனிதம் -** முத்தணி. தாமரை மாலை என்றிவற்றை யும், **மெய் -** திருநீறு கண்டிகைகளையும் குறித்து நின்றதும் காண்க.

குனிசிலைப் புருவம் - வில், வளைந்த அளவும் பயன்றருவதுபோல ஈண்டு அம்மையாரின் கண்ணும் புருவமும் வளைந்து காட்டிய நிலையின் அருட்பார்வை செய்து யாவர்க்கும் முத்திப் பயனளிக்கும் தன்மை வாய்ந்தது என்பதனைக் குறிப்பாலுணர்த்துவார் குனிசிலை போன்றதென்ற உவமைமுகத்தாற் கூறினார்.

வேந்தர் தம்மைக் - கொம்பனா ருடனேகூடக் கண்டபோதின் - வாழ்த்தித் தேவராஞர் என்க. மணமக்கள் ஒருசேர வீற்றிருக்க முதலிற் காணும் மங்கலக் காட்சியாதலின் அதனைக் கண்டோர் வாழ்த்துவது மரபு. இங்குக் கண்டவர்கள் அக் காட்சியிலே ஈடுபட்டு இலயித்துக் கண்ணிமையாது வாழ்த்தினார்கள் என்றது அதன் மேன்மை குறித்தது.

கண்ணிமையாது வாழ்த்தி மனிதருந் தேவராஞர் - கண்ணிமையாத தன்மை தேவர்களுக்குத்தான் உண்டு; அத்தன்மை இங்கு மனிதரும் பெற்றமையால் அவ்வளவில் தேவராஞர் என்றார். **மனிதர் - தேவர்** என்றவை பிறப்பு வகை குறித்து நின்றன. கண் இமையாது வாழ்த்தியதனல் தாம்தாம் உயர்வு பெற்றனர் என்பது குறிப்பு. இறைவரை வாழ்த்துகின்றோர் தாம்தாம் உயர்ச்சியாகிய வாழ்வு பெறுதற் பொருட்டே வாழ்த்துவர் என்பதன்றி அதனல் இறைவருக்கு ஒரு வாழ்வு தருவாரல்லர். "வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனநின்பாற், றாழ்த்துவதும் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டி"

3137. **பத்தியிற் குயிற்றும்** பைம்பொற் **பவளக்காற் பந்தர்** நாப்பண்
சித்திர விதானத் தின்கீழ்ச் **செழுந்திரு நீல நக்கர்**
முத்தமிழ் விரகர் முன்பு முதன்**மறை முறையி னேடு**
மெய்த்தநம் பெருமான் பாத மேவுமுள் ளத்தாற் செய்ய. 1239

(திருவா) என்றபடி இங்குக் கண்டோர் தாம்தாம் வாழ்வடைந்தார்கள் என்பதைக் காட்சிப்படக் **கண்ணிமையாது வாழ்த்தி** என்று காரணங் காட்டிச் சுவைபடக் கூறியவாறு காண்க. இவ்வாறு காணப்பெற்று வாழ்த்தியதனால் அவர்கள் எல்லாம் அழியாத சிவனுலக வாழ்வுபெற்றார் சரித விளைவுக் குறிப்பும் காண்க.

நனிமிகக்கண்ட - நனிமிக - ஒருபொருட் பன்மொழி; ஊன்றிக் கண்ட காட்சி மிகுதி குறித்தது. வேந்தரும் கொம்பருமாக இருவரையும் ஆர்வமிகக் கண்டாராதலின் இருசொல் புணர்த்தி ஓதினர் என்றலுமாம்.

நல்ல மங்கலங்கள் - உலகில் அழியும் தன்மையுடைய ஏனையோர்க்குக் கூறும் மங்கல வாழ்த்துக்கள் உபசாரமாத்திரையாய் நின்று ஒருகாலத்து ஒழிவன. ஆனல் இங்குப் பிள்ளையாரையும் தேவியாரையும் வாழ்த்திக் கூறிய மங்கலங்கள் அவ்வாறன்றி என்றும் அழிவுருத நித்திய சிவமங்கலமாய் நிறைவுறுதலின் **நல்ல** என்று பிறிதினியைபு நீக்கிய அடை தந்து அருளினர். *1238*

3137. (இ-ள்) பத்தியில்...நாப்பண் - வரிசை பெற அணி செய்யப்பட்ட பசும்பொன் இழைத்த பவளக் கால்களையுடைய பந்தரின் நடுவிலே; சித்திர விதானத்தின் கீழ் - சித்திரித்த மேற்கட்டியின் கீழே; செழுந்திரு நீலநக்கர் - செழுமை பொருந்திய திருநீலநக்க நாயனர் (ஆசிரியராக இருந்து); முத்தமிழ் விரகர் முன்பு - முத்தமிழ் விரகராகிய பிள்ளையாரது திருமுன்பிலே; முதன்மறை...செய்ய - முதன்மையாகிய மறைநூல் விதிச் சடங்குகளை அம்முறையின்படியே மெய்ப்பொருளாகிய நம் பெருமானுருடைய திருவடிகளைப் பொருந்தும் உள்ளத்துடனே செய்ய,

(வி-ரை) பத்தியின்-பத்தி-வரிசை; **பத்தியில்** - அன்பு மிகுதியினலே என்ற குறிப்புமாம், "மொய்த்துநீள் பத்தி யின்பால்" (72) என்றவிடத்திற்போல.

குயிற்றுதல் - கைவினைத் திறத்தினுற் கோலஞ் செய்தல்.

பைம்பொற் பவளக் கால்-பசும்பொன்னு லிழைத்தலுடன் பவளக்காலினையு முடைய; "சீரார் பவளங்கால்" (திருவா).

செழுந் திருநீலநக்கர்-செய்ய-என்று கூட்டுக. **செழுமை** - நான்மறையினும் வல்ல தன்மை குறித்தது; "ஞாலமிக்கநான் மறைப்பொருள் விளக்கிய நலத்தார்" (*1831*) என்றது காண்க. **நீலநக்கர்** - வேள்வியாசிரியராக அமர்ந்து செய்ய என்க; புரோகிதர் என்பர்;புர:-ஹித:-புரோஹித:-புர:- முன்னிலையில், ஹித :- இதஞ்செய்பவர். வடமொழி. **செழுந்திரு** - முத்தித்திருவையடையும் என்றலுமாம்.

முத்தமிழ் விரகர் முன்பு - மண வேள்வியில் செய்யப்படும் சடங்கு மணமகனை முன்வைத்துச் செய்வது மரபு; அதுபோலப் பின்னர்ப் பொரிகை அட்டி எரியிடும் சடங்கு மணமகள் முன்னர்ச் செய்யப்படுவது மரபாகும் என்று காட்டப்படுதலும் காண்க.(3138).

முதன் மறை - முதன்மையுடைய வேதநூல் விதிச் சடங்குகள்; **முதல்** - முதல்வன் என்று கொண்டு முதல்வனருளிய என்றலுமாம். **மறை** - மறை விதிவழி செய்யும் சடங்குக்கு ஆகி வந்தது. **முறையினோடு** - விதித்த முறைமைப்படி; முறையாக.

மெய்த்த நம் பெருமான் பாதம் மேவு முள்ளத்தால் மெய்த்த - மெய்ப்பொருளாகிய; சிவன் ஒருவரே **சத்** ஆவார் என்பது வேதம். **மெய்த்த - உள்ளம்** என்று கூட்டி உள்ளபடியே அழுந்திய நினைவு என்றுரைத்தலுமாம்.

பாதம் மேவும் உள்ளத்தால் - இறைவருடைய திருவடிகளையே தியானித்த மனத்தினோடு; **செழுந்** திருநீலநக்கர் என்றபடி அவர் மிகத்தூயராயும் மறைவல்லராயும் சீலமுடையவராயும் இருப்பினும் சீவபோதத்தாலே காரியம் செய்யப்புகின் முக்குணங்களின் வசப்படுதலின் முறை பிறழ நேரிடுமாதலின், இறைவன் றிருவடியைப் பொருந்திய மனத்தோடு செய்யின் "பரனுணர்வி னலுணரும் மெய்த்தவரை மேவாவினை" என்றபடி அவர் இடையூறின்றி இனிது முடித்துவைப்பர் என்று சிவனை எண்ணிச் செய்தனர் என்பதாம்.

இனி, **பாதம் மேவும் உள்ளத்தராய்** என்றது, இவ்வுயர்ந்த பணி செய்தால் இறைவன் றிருவடிப் பேற்றினை அடையலாம் என்ற எண்ணத்தாலே செய்ய என்றலுமாம்; அவ்வாறே அடையப்பெற்றமையும் காண்க.

இனிப், பிள்ளையார் இறைவருடைய கழல்களல்லாது வேறொன்றனையும் பேணாத தன்மையுடையவராதலின் அவரது வேள்விச் சடங்குகளை அத்தன்மையிலே நின்று தாமும் சிவனடி பேணிச் செய்தல்வேண்டும் நியதிபற்றிப் பாதமேவு முள்ளத்தாற் செய்ய என்ற குறிப்புமாம்; சிவனியமங்களும் பூசை முதலியனவும் செய்யும்போது தமது கருவி கரணங்களை உரிய மந்திர நியாச பாவனை கிரியைகளாற் சிவாகாரமாக ஆக்கிக்கொண்டு செய்க என்னும் சிவாகம விதிகள் இங்கு நினைவு கூர்தற்பாலன. பிள்ளையாரது திருமணச் சடங்கு செய்தற்குத் தம்மைத் தகுதியுடையவராக ஆக்கிக்கொள்வது கருத்து.

இனி, இச்சடங்குகள் இங்குப் பிள்ளையாரை முன்னிலைப்படுத்திச் செய்யினும் அவை இறைவரின் பாதங்களையே மேவும் என்ற உள்ளத்தோடு செய்ய என்ற குறிப்புமாம்.

இனி, இச்சடங்குகள் இறைவரது திருப்பாதத்தை அடையும் சிவப்பேற்றை இத் திருமணத்தில் விரவியவர்க்கெல்லாம் பொருந்துவிப்பனவாகுக; சிவ நிறைவாகிய நித்திய மங்கலம் பொருந்துக என்ற கருத்துடன் செய்ய என்ற பிற்சரித விளைவுபற்றிய குறிப்பும் பாவனையும் பொருந்த உரைத்தலுமாம். திருநீலநக்கர் இத்தகைய உறைப்புடைய சத்பாவனை செய்யும் நிலை வாய்ந்த பெரியோர் என்றது அவர்தம் புராணத்தால் அறிக. இவை பெரும்பான்மை திரு.க.சதாசிவ செட்டியார் அவர்கள் குறிப்புக்களைத் தழுவி எழுதப்பட்டன.

1239

3138. மறையொலி பொங்கி யோங்க, மங்கல வாழ்த்து மல்க,
நிறைவளைச் செங்கை பற்ற நேரிழை யவர்மு னந்தப்
பொறையணி முந்நூன் மார்பர் புகரில்வண் **பொரிகை யட்டி**
இறைவரை யேத்தும் வேலை யெரிவலங் கொள்ள வேண்டி. 1240

3138. (இ-ள்) மறையொலி...மல்க - வேத ஒலிகள் மேன்மேலும் பெருகி ஓங்கவும் மங்கல வாழ்த்தொலிகள் மிகுந்து பெருகவும்; நிறைவளை...நேரிழையவர் முன் - நிறைந்த வளையல்களை அணிந்த அம்மையாரது செங்கையினைப் பிள்ளையார் பற்றும்பொருட்டு நேரிய அணிகளை அணிந்த அந்த அம்மையாரின் முன்னே; பொறை...வேலை - பொறையினை அணிகலமாகப் பூண்ட முந்நூலணிந்த மார்பினராகிய திருநீலநக்க நாயனார் குற்றமில்லாத வெள்ளிய நெற்பொரியைக் கையில் எடுத்து வேள்வித் தீயில் ஆகுதியாகப் பெய்து சிவபெருமானைத் துதிக்கும் பொழுது; எரிவலங்கொள்ள வேண்டி - எரியை வலமாக வருவதற்காக எண்ணி;

(வி-ரை) மறையொலி பொங்கி ஓங்க - இவ்வொலி மறையவர்களும் கிளைஞரும் செய்தது; **மங்கல வாழ்த்து** - மறையவர் மகளிரும் ஏனையோரும் செய்தது.

நிறைவளைச் செங்கை பற்ற - செங்கை - அம்மையாரது கையினை; **பற்ற** - பற்றும் பொருட்டு; பற்றும் நிலை கூடும்பொருட்டு; காரணப்பொருளில் வந்தது. **பற்ற-பொரி-அட்டி-ஏத்தும்-வேலை**-என்று கூட்டிக் கொள்க.

நேரிழை யவர்முன் - பொரிகை அட்டி ஏத்தும் வேலை - வெண்பொரியை வேள்வித் தீயினிலிட்டு ஆகுதி செய்து உரிய மந்திரம் பாவனைகளுடன் இறைவரை ஏத்தும் இச்சடங்கு மணமகள் முன்பு கைப்பற்றுதல் (=பாணிக்கிரகணம்) என்னும் அந்நிலை கூடுதல் குறித்துச் செய்யப்படுவது.

அந்தப் பொறை அணி முந்நூல் மார்பர் - திருநீலநக்கர்.

புகரில் வெண்பொரி - புதிய செந்நெல்லைப் புதிய தூய மட்பாண்டத்தில் புனிதவதிகளாகிய பெண்களால் தூய்மையாக இல்லத்தில் பொரிக்கப்படல் வேண்டும் என்பது முதலிய விதிகளின்படி அமைத்த பொரியாதலின் **புகரில்** என்றார். **புகர் -** குற்றம்; **பொரி** - அமுதுக்கு மேலாக ஆகுதிக்குச் சிறந்த சாதனம் என்பர்.

கை அட்டி - பொரியினைக் கருவிகளினாலன்றிக் கையினால் மேல்எடுத்து எரியிலிடுவது விதி; **அட்டுதல் -** அளவு பட வீழ்த்தி யிடுதல்.

இறைவரை ஏத்தும் - இச்சடங்கினை ஏற்று அதற்குரிய பயனாகிய கைப்பற்றற்குத் தகுதியுடையவராந் தன்மையினை அருளும்படி துதிக்கும்; இஃது அந்த உரிய மந்திரங்களின் கருத்து.

எரிவலங் கொள்ள வேண்டிக் கைப்பிடித்து - ஒருப்படும் என்று மேல்வரும் பாட்டுடன் கூட்டுக.

3139. அருப்புமென் முலையி னார்த மணிமலர்க் கைப்பி டித்தங்
கொருப்படு முடைய பிள்ளை யார்திரு வுள்ளந் தன்னில்
"விருப்புறு மங்கி யாவார் விடையுயர்த் தவரே" யென்று
திருப்பெரு மணத்தை மேவுஞ் சிந்தையிற் றெளிந்து செல்வார், 1241

எரிவலங் கொள்ளுதல் - எரியிற் பொரிகை அட்டி, மணமகன் மணமகளைக் கைப்பிடித்து வேள்வித் தீயினை ஏழுமுறை வலம் வருதல் மணச் சடங்குகளுட் சிறந்த பகுதி; இதனுடன் மணம் நிறைவாகுதல் மரபு.

செங்கை பற்றி நேரிழை யவர்முன் வந்த என்று பாடங் கண்டு **பொறையணி முந்நூன் மார்பர்** என்றது பிள்ளையாரைச் சுட்டியதாக உரைத்து, அதற்கேற்றவாறு உரை முடிபுகொண்டது இராமநாத செட்டியார் குறிப்பு.

பொறையணி - பொறை - சாந்தம்; பொறையினையே அணிகலமாக மேற்கொண்டொழுகுதல் முனிவர்களின் தன்மை. *1240*

3139. (இ-ள்) அருப்பு...பிள்ளையார் - அரும்புபோன்ற மெல்லிய தனங்களையுடைய அம்மையாரது அழகிய மலர்போன்ற கையினைப் பிடித்துக் கொண்டு அங்கு ஒருப்பட்ட பிள்ளையார்; திருவுள்ளந்தன்னில்...தெளிந்து - தமது திருவுள்ளத்தின் கண் "விருப்பம் பொருந்தும் அக்கினியாவார் இடபக் கொடியை உயர்த்திய சிவபெருமானேயாவர்" என்று திருநல்லூர்ப் பெருமணத்தினைப் பொருந்திய மனத்திலே தெளிந்தமையினாலே; செல்வார் - செல்வாராய்.

(வி-ரை) அருப்பு - அரும்பு போன்ற; அரும்பு என்பது அருப்பு என நின்றது. அரும்புபோன்ற முலை என்றது மணமகளின் பன்னிரண்டு வயதாகிய இளம்பருவங் குறித்தது; "பொடிக்கின் றிலமுலை" (திருக்கோவை) என்ற கருத்துக் காண்க. **அருப்பு மென்முலையினார்**-மணமகளாராகிய அம்மையார்.

ஒருப்படும் - எண்ணத்துட் கொண்டு அதற்கேற்ப முயலும்.

ஒருப்படும் - உள்ளந்தன்னில் - தெளிந்து - என்று கூட்டுக; இதுவரையில் தாம் இசைந்திருந்து செய்த மணவேள்விச் சடங்கினையே பற்றி எரிவலங்கொள்ளுதலையும் மேற்கொண்டு எண்ணி ஒருப்பட்டு அதற்காக தேவியாரது கையினைப்பற்றிய பிள்ளையாரது திருவுள்ளத்தில் அந்நிலையில் - அக்கணத்தில் - திருவருளால் ஒரு கருத்துத் தோன்றித் தெளிதல் நிகழ்ந்தது என்பதாம். அக்கருத்தாவது "இங்கு எரிவலம் வர ஒருப்பட்டு எழுந்து கைப்பற்றியது மந்திர வேள்வித் தீயாகி யிங்கு முன் காணப்பட்ட எரி; ஆனால் அதற்கேற்ப விருப்புறும் எரியாவார் சிவபெருமானே யாவர்" என்றதாம்; மேல்வரும் பாட்டுப் பார்க்க.

விருப்புறும் அங்கி ஆவார் விடையுயர்த்தவரே - "எரியலா லுருவ மில்லை யேறலா லேற லில்லை" (தேவா) என்றபடி அங்கி - எரி - இறைவரது திருமேனி (மண்-நீர்-தீ-கால்-வான்-ஞாயிறு-மதி-உயிர்); "நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப் பகலோன், புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்" (திருவா)

என்றவாறு மண் முதலியனவாய் நின்ற அட்டமூர்த்தம் எனப்பட்டு இறைவரின் திருமேனிகளாம். ஆனால் அவற்றுள் எரி சிறந்தது; என்னை? மண்ணும் நீரும் தாழ்ந்தவை; காற்றும் விசும்பும் கண்ணாற் காணப்படாதவை; ஞாயிறு - மதி இவற்றுள் இறைவரது உருவம் உள்ளுறையாய் நிலவுதலன்றி வெளிப்படக் காணப்படுதலில்லை; எரியிலே சிறப்புறக் காணப்படும். அக்கினி சொரூபன் உருத்திரன்; அவரே சங்காரகர்த்தாவும் மீளச் சிருட்டிகர்த்தாவுமாவர்.

விருப்புறு - இனி, இங்கு எரி இறைவரது திருமேனியேயாவது. இறைவர் இத்திருக்கோயிலினுள்ளே பாலில் நெய்போல விளங்காது மறைந்து நிற்பர்; விரும்பி வெளிப்பட நிற்பிடங்கள் குருவடிவும் சிவாலயமும் திருவேடமும் ஆகிய இவைகளேயாம் என்ற உண்மைநூற் கருத்தின் குறிப்பும் காண்க; தாம் விரும்பும் என்றும், உலக முய்வதனையே விரும்பும் என்று உரைக்கவும் நின்றது.

திருப்பெருமணத்தை மேவும் சிந்தையிற் றெளிந்து-திருப்பெருமணத் திருக்கோயிலினை மேவுஞ் செயலைத் தெளிந்து என்பது; **மேவும்** - மேவும் செயல்; செயல் என்பது சொல்லெச்சம். **தெளிந்து** - தமது திருவுள்ளத்தில் தெளிவு கொள்ளப்பெற்று; இது திருவருட் குறிப்பினு லாகியது.

திருப்பெருமணத்தை மேவும் - இறைவர் எங்குமுள்ளவர்; எரியினிற் காணவேண்டில் இங்குத் தியானம் மந்திரம் கிரியை மூலமாக வரச்செய்து வளர்க்கப்பட்ட மணவேள்வித் தீயினிடத்திலும் உள்ளார்; எனின் பிள்ளையார் "அங்கியாவார் விடையுயர்த்தவரே" என்று திருப்பெருமணக் கோயிலுக்குச் சென்றதென்னையோ? எனின், பகுப்பின்றிச் சட சித்துக்கள் எங்கணும் பரமேசுரனெனக் காண்டல் மெய்யுணர் வுடையார்க்குப் பொருத்தமுடைத்தாயினும் அவ்விறைவன் குரு இலிங்கம் சங்கமம் என்ற மூன்றிடங்களில் பிரகாசமாய் விளங்கி நின்றே மற்று அல்லாத இடத்து அப்பிரகாசமாய் நிற்றலால் திருக்கோயிலுனுள் திருமேனியைப் பற்றி வழிபடல் சிறப்புடைத்தாம். "அகண்டமுந் தைவமே, (யாயினும்) அத்துவிதி! அன்பிற்றொழு" (போதம்-12-4) (சடசித்துக்கண் முழுவதும் அத்தேவனது வடிவேயாயினும் அவற்றுள் அன்பு விளையுமிடத்தில் வழிபடுவாயாக; அவ் வத்துவித சித்தாந்தத்தைப் பெற்றுடையோய்! - மாபாடியம்) என்று ஆணையிட்டமை கருதுக; பசுவின் உடல் முழுதினும் பால் நிறைவுற்றிருப்பினும் முலையினிடத்து விம்மி ஒழுகுவதுபோலத் திருக்கோயிலுள்ளிருக்குந் திருமேனியினன்றி வெளிப்பட அருளுமாறில்லை யாதலின் அடிப்பட்டுவரும் அன்பு மற்றிடத்து விளையாது என்ற உண்மை காண்க.

இனி, ஈண்டு மந்திரமுறையா லுய்த்த வேள்வித் தீயில் இறைவன் அந்நிலையில் வெளிப்பட்டது உண்மையே யாயினும், விறகில் உள்ள தீயானது கடைந்தபோது விளங்குவதாய் அல்லுழி விளங்குவதன்று; அதுபோல, அஃதேதானுய்க் காணும் ஆற்றலில்லாதவர்க்குத் தம்மால் அறியப்பட்டதொரு மந்திர சாந்நித்திய மில்லாதவழி ஆண்டு விளங்காதுநின்று அம் மந்திர சாந்நியத்தால் விளங்கித் தோன்றும் பொருளாம். அவ்வாறன்றி அஃதேதானுய்க் காணப்பெறும் உண்மைத் தவமுடையார்க்கு **எப்போதும் அப்படியே** விளங்கித் தோன்றுவான் இறைவன்.

3140. மந்திர முறையா லுய்த்த **வெரிவல மாக** மாதர்
தந்திருக் கையைப் பற்றுந் தாமரைச் செங்கை யாளர்
''இந்தவில் லொழுக்கம் வந்து சூழ்ந்ததே! **யிவடன் னோடும்**
அந்தமில் சிவன்றாள் சேர்வ'' னென்னுமா தரவு பொங்க, 1242

இங்குப் பிள்ளையார் அவ்வாறு உண்மை முன்னைத்தவ முடை யாரன்றோ? எனின், அஃதுண்மையே! பிள்ளையார் உலகில் வந்து செய்தருளியவையெல்லாம் அத் தவ வலிமை பெறாத உலகினர்பொருட்டே யன்றித் தம்பொருட் டன்று என்பது நினைவு கூர்தற்பாலது. அன்றியும், இங்கு வளர்த்த வேள்வித் தீயானது இத்திருமணத்தின் பொருட்டுச் சங்கற்பித்து ஆவாகன முறையால் ''வெளிப்பட வருக'' என்றுஅழைத்துக் கொணரப்பட்டும், பின்னர் உத்தியாபன முறையால் ''மறைந்து நிற்க'' என ஒடுக்கம் செய்து எழுந்தருளச் செய்யப்பட்டும் நிகழ்வது; திருக்கோயிலில் அவ்வாறன்றி நித்திய சாந்நித்ய விளக்கமாய் இறை வெளிப்பட வீற்றிருத்தலும் கருதுக. பிள்ளையார் இப்போது மேற்கொண்ட செயல் ஈண்டுச் சங்கற்பித்த மணநிறைவாதலன்று; நித்திய மங்கலமாகச் சிவ நிறைவினுள் அனைவரையும் புகச் செய்து தாமும் எழுந்தருளும் செயலாதலின் அதற்கேற்ற இடம் மணத்தின் பொருட்டு வளர்த்த தீயினன்றித் திருப்பெருமணக் கோயிலேயாம் என்பதுமாம்.

அன்றியும், ''எண்ணிறந்த கடவுளருக் கிடுமுணவு கொண்டூட்டும், வண்ணவெரி வாயின்கண் வைத்ததென'' (796) என்றபடி இங்கு மந்திர முறையால் உய்த்த வேள்வித் தீயானது தன்பால் உய்த்த ஆகுதிகளை உரிய தெய்வங்களிடம் கொண்டு செலுத்தும் வழியாவதன்றி மற்றில்லை என்பதும், இது பிள்ளையார் பணியில் நிற்கும் தகுதியுடைய தென்பதும் கருதுக. ''சுடர், பைய வேசென்று பாண்டியற் காகவே'' என்ற பதிகக் குறிப்பினையும் இங்குவைத்து நினைவு கூர்க.

இக்குறிப்புக்க ளெல்லாம் பெற, மேல்வரும் பாட்டுக்களில் ''மந்திர முறையாலுய்த்த வெரிவல மாக...கை, பற்றும் செங்கை யாளர்...'' (*3140*); ''ஞானத்தெல்லை யடைவுறுங் குறிப்பால்... கிளையும்... கூட்டமும் சூழ...உடன் அணைந் தருள வேண்டிக்...கோயிலை நோக்கி வந்தார்'' (*3141*) என்று வருவனவும், பிறவும் காண்க.

தெளிந்து - இத்தெளிவு முன் ஆரும் பெறாத அறிவினால் ஆகியது என்க. தெளிந்த வழிச் செயல் நிகழ்ந்தமையும் காண்க.

செல்வார் - செல்வாராகிக் - கோயிலை நோக்கி வந்தார் என மேல்வரும் (*3141*) பாட்டுடன் முடிக்க. ***1241***

3140. (இ-ள்) மந்திர முறையால்...செங்கையாளர் - மந்திர முறையினாலே உண்டாக்கி வளர்க்கப்பட்ட எரியினை வலம் வரும்பொருட்டு அம்மையாரது திருக்கையினைப் பிடிக்கும் தாமரைமலர் போன்ற செவ்விய கையினையுடைய பிள்ளையார்; இந்த...பொங்க - ''அந்தோ! இந்த இல்வாழ்வாகிய ஒழுக்கநிலை வந்து சூழ்ந்துகொண்டதே! இவளுடனே அழிவில்லாத சிவபெருமானுடைய திருவடிகளைச் சேர்வேன்'' என்னும் பேராசை மேன்மேலும் அதிகரிக்க;

(வி-ரை) மந்திர முறையால் உய்த்த எரி - என்பதனால் திருக்கோயிலினுள் விளங்கும் திருமேனி அவ்வாறன்றி நித்தியமாகிய எரி என்றது குறிப்பு.

வலமாக-கையைப் பற்றும் - மணநிறைவுச் சடங்கின் பொருட்டுவலம் வருதற்காகக் கைப்பற்றிய. **மாதர்** - மணமகளாராகிய அம்மையார்.

திருக்கை - பிள்ளையாரால் பற்றப்பட்டு அவர் உரிமைத் தேவியாராக ஆகும் நிலையினைத் தந்த பெருமை குறிக்கத் **திருக்கை** என்றார்.

"இந்த...சேர்வன்" என்னும் ஆதரவு - இந்த - சிவஞான நெறியினுக்கு மாறுபட்டுத் தாழ்ந்த இந்த என்றது குறிப்பு. பிள்ளையாரது வாழ்வு எல்லாவற்றுக்கும் மேலாகிய சிவஞான ஒழுக்கமாம்; இங்கு நிகழ்வுறும் மணம் என்பது இல்லறத்தின் பாற்பட்டு ஆச்சிரம நிலைகளுள் ஒன்றாய் வருவது. "புகலு மாச்சிரம வறத்துறை களவையடைந்தும் அருந்தவங்கள் புரிந்தும் அருங்கலைகள் பல தெரிந்தும்...வேத சிரப்பொருளை மிகத் தெளிந்தும் **சென்றாற்** சைவத் **திறத்தடைவர்: இதிற் சரியை கிரியாயோகம் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடி**யைச் சேர்வர்" (சித்தியார் - 8-11)என்பது ஞானநூல் முடிபு. பிள்ளையார் மேற்கூறியவற்றுள் இறுதியிற் கூறிய சிவஞானத்தின் நிறைவு பெற்றுச் சிவனடி மறவாப் பான்மையினர்; உலகுக்காக வந்தவதரித்தவர்; ஆதலின் ஏனையோர் போலப் பின்னேக்கிச் சென்று பிறவிக்கேதுவாகிய இல்லற ஆச்சிரமம் புக ஒருப்படுவரோ? மணம் முற்றினல் இல்லறம் வரும்; அதுவரின் மக்கட்பேறு வேண்டப்படும்; அது கூடின் உலகின் எல்லாப் பாசங்களும் கூடும்; ஏடணைகள் என்ற மூன்றும் சூழும்; இவ்வாறு மாயாகாரியக் கூட்டமாகிய ஒழுக்கங்கள் தம்மைச் சூழத் தகாதனவாதலின் **தகாத இந்த** என்பதாம்.

வந்து சூழ்ந்ததே - இல்லொழுக்கச் சூழலின் தொடக்கமாகிய மணம் இன்னும் நிறைவு பெறவில்லை யாயினும் **சூழ்ந்தது** என்று இறந்தகாலத்தாற் கூறியது விரைவும் உறுதியும் பற்றி.

சூழ்ந்ததே! - சுற்றமுறு பெரும்பாசத் தொடர்ச்சிவிடு நிலைமையராய்ப் பிள்ளையார் திருமணத்திற் கிசையாது மறுப்பப், பின்னும் கேட்ட சுற்றத்தார்க்கு மறைவாழவும், அந்தணர் ஒழுக்கம் பெருகவும், உலக நிலையில் மறையவரது குல ஒழுக்கத்தினை நடத்திக் காட்டவும் திருவுள்ளங் கொண்டு இசைந்தாராதலின், அவ்வாறு வைதிக ஒழுக்க நெறியினை நடத்திக்காட்ட இந்த மணமிசைந்தாலும் அஃது அதனேடமைந்துவிடாது முன் கூறியவாறு உலகமாயச் சூழலாகச் சூழ்ந்து விடுமன்றே! என்பது.

இவள்தன்னேடும் சிவன்றாள் சேர்வன். இவள்-கைப்பிடிக்கும் முதன்மையான சடங்கு நிறைவேறிவிட்டபடியால் ஒருவகையால் மனைவியாகிய நிலை பெற்ற இவள்; மற்றொரு முக்கியமான முடிவாக நிறைவுறும் சடங்காகிய(சத்தபதி) எரிவலம் வருதல் நிகழாமையின் ஒருவகையால் மணநிறைவு பெருவிடினும் உரிமைப்பாட்டினலே இவளுடனே என்றபடி.

சிவன் தாள் சேர்வன்-"ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்" (சித்தி) என்றபடி சிவஞானம் பெற்ற பயனை அடைவேன்; இவ்வுலகில் வந்த காரியங்களாகிய பரசமய நிராகரிப்பும் திருநீற்றி னாக்கமும் நிகழ்ந்து நிறைவாகிவிட்டமையால் இவ்வாறு

3141. **மலர்பெருங் கிளையுந் தொண்டர் கூட்டமு மல்கிச் சூழ**
அலகின்மெய்ஞ் ஞானத் தெல்லை மடைவுறுங் குறிப்பா லங்கண்
உலகினெம் மருங்கு நீங்க வுடனணைந் தருள வேண்டிக்
குலமணம் புரிவித் தார்தங் கோயிலை நோக்கி வந்தார். 1243

எண்ணியருளினர் என்பது. "பவமற என்னை முன்ன ளாண்ட வப் பண்பு கூட" (3142) என்றும் "உன் பாதமெய்ந் நிழல் சேரும் பருவமீது"(3143) என்றும் மேல் வருவன காண்க. **ஆதரவு** - அன்பின் முதிர்ந்த உள்ளக் கிளர்ச்சியாகிய ஆசை.

இவடன்னேடும்-பெண் பிறவிக்கு வீடில்லை என்று கூறும் சமணர் கொள்கையினல் உலகுக்கு நேர்ந்த துன்பத்தை ஒழிக்கவே பிள்ளையார் உலகிற் போந்தனர் என்றும், **அவ்வாற்றல் அவர் பெண்ணை வெறுத்துத் தாம்மட்டும் சிவன்ருள் சேர ஒருப்பட மாட்டார் என்றும்,** பிறவாறும் ஈண்டு விசேட ஆராய்ச்சி செய்வாரு முண்டு; அவையெல்லாம் பிள்ளையாரது சரிதத்துட் பொருந்தாமை யறிக; "இம்மணத்தில் வந்தோர் ஈனமாம் பிறவி தீர **யாவரும்** புகுக" (3146) **என்பதனல் பெண் ஆண் என்ற பாகுபாடு எதுவுமின்றிப் பக்குவ நிலை ஒன்றே கருத்தாகக் கூறுதல் சிந்திக்க.** இந்த "இல்லொழுக்கம் வந்து சூழ்ந்ததே" என்றதனையும் மறந்துவிடலாகாது. 1242

3141. (இ-ள்) மலர்பெரும்... சூழ-மலர்ச்சி பொருந்திய பெருங் கிளைஞரும் திருத்தொண்டர் கூட்டமும் ஆகிய இவர்களுடனே கூட; அலகில்...குறிப்பால் - அளவில்லாத மெய்ஞ்ஞானத்தின் எல்லையினை யடையவேண்டும் என்ற உட் குறிப்பினுலே; அங்கண்...நீங்க - அவ்விடத்து உலகின் எப்பக்கங்களும் தம்மைச் சாராது நீங்க; உடன் அணைந்தருள வேண்டி - இறைவருடனே அணைந்தருள விரும்பி; குலமணம்...வந்தார் - மறையவர் குலத்துக்குரிய மணத்தினைச் செய்வித்தருளிய இறைவரது திருப்பெருமணம் என்னும் திருக்கோயிலினை நோக்கி எழுந்தருளி வந்தனர்.

இவ்வைந்து பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) மலர்...சூழ - அடைவுறும் குறிப்பால் - என்று கூட்டுக; சுற்றத்தாரும் தொண்டர்களும் ஆகிய இவர்களெல்லாருடனே கூட எல்லையினைச் சேர்தல் வேண்டு மென்ற திருவுள்ளக் குறிப்பினுலே என்க; **மலர்தல்** - மன மகிழ்தல்.

அலகில் மெய்ஞ்ஞானத் தெல்லை அடைவுறும் - அளவுபடாத மெய்ஞ்ஞானமாவது சிவஞானம்; அதன் எல்லையாவது அதன்மேல் விளங்கும் சிவானந்த நிறைவு. சிவனுலகம். "உலகுய்ய நடமாடும் எல்லையினைத் தலைப்பட்டார்" (1075); "அலகில் கலையின் பொருட் கெல்லையாடுங் கழலே" (1220) என்றவை காண்க. **குறிப்பால் -** திருவருட் குறிப்பினுலே தோன்றிய தமதுள்ளக் குறிப்புக் காரணமாக.

உலகின் எம்மருங்கும் நீங்க உடனணைந் தருள-தாம் ஒரு பற்றுமின்றிச் சீவன் முத்த நிலையிலிருந்தாரேனும் உலகைத் தீமை நீக்கி நன்னெறி காட்டி உய்வித்தற் பொருட்டுத் திருவருளால் வந்தாராதலின் அந்த அளவில் கொண்ட உலகத் தொடர்புகள் எல்லாமும்

3142. **சிவனமர்ந் தருளுஞ் செல்வத் திருப்பெரு மணத்தை யெய்தித்
தவநெறி வளர்க்க வந்தார் தலைப்படுஞ் சார்பு நோக்கிப்
"பவமற வென்னை முன்னா ளாண்டவப் பண்பு கூட
நவமலர்ப் பாதங் கூட்டு"** மென்னுநல் லுணர்வு நண்ண. 1244

நீங்கிச் சிவனடிப் பேறு பெறாத நிலையில் சிவனுடன் அணைய விரும்பி. கிளையும் - கூட்டமுஞ் - சூழ - நீங்க - உடனணைந்தருள வேண்டி என்று கூட்டியுரைத்தலுமாம்.

குலமணம் புரிவித்தார் - அந்தணரது மறையொழுக்கத்தை உலகிற் காட்டும் பொருட்டு அக்குலத்துக்கேற்ற மண ஒழுக்கத்தை மேற்கொள்ளும் இசைவு வரக் கூட்டுவித்தருளிய இறைவர் என்பது; தம் செயல் என்ப தொன்றுமின்றி எல்லாம் இறைவர் செயலேயாகக் காண்பது பிள்ளையாரது நிலையாதலின் தாம் மண இசைவு கொண்டதனை இறைவர் தந்த செயலேயாகக் கொண்டனர் என்க; "அவனே தானே யாகிய வந்நெறி, ஏகனாகி யிறைபணி நிற்க" (போதம்) என்ற ஞானநூற்றுணிபின்வழிக் கண்டுகொள்க.

1243

3142. (இ-ள்) சிவனமர்ந் தருளும்...எய்தி - சிவபெருமான் விரும்பி வீற்றிருந்து உயிர்கட் கருள்புரியும் செல்வ நிறைந்த திருப்பெருமணக் கோயிலினுள் சென்று சேர்ந்து; தவநெறி...நோக்கி - தவநெறியினை வளர்ப்பதற்கென்றே திருவவதரித்தவராகிய பிள்ளையார் உலகக் காட்சி நீங்கிய முத்தி நிலையிலே சார்வதற்குக் காரணமாகிய திருவருட் குறிப்பினைக் கண்டு; பவமற... கூட - பிறவியில் வாராது என்னை முன்னைநாளில் தமது திருவடியில் ஆளாகக் கொண்ட அத்தன்மைக்குப் பொருந்த; நவமலர்...நண்ண - புதிதின் அலர்ந்த தாமரைமலர் போன்ற திருவடியை அடைவிக்கும் என்னும் மெய்யுணர்வானது திருவுள்ளத்தில் பொருந்த;

(வி-ரை) வந்தார் - எய்தி - நோக்கி - நண்ண (1244) - எடுத்துக் -கொண்டு -பாட (1245) - தேவர் - அருள் புரிந்து - என்னு - ஆகி (1246) - காட்ட - மன்னர் -போற்றி - அருளிச் செய்வார் (1247) - அருள் செய்து. என்ன (1248) - மயங்குவார்கள் - புக்கார் (1249) என்று இந்த ஆறு திருப்பாட்டுக்களையும் கூட்டி முடித்துக்கொள்க.

திருப்பெருமணம் - கோயிலின் திருப்பெயர். **நல்லூர்ப் பெருமணம்** - நல்லூரில் உள்ள பெருமணம் என்ற கோயில்; சாந்தை அயவந்தி - கருவூர் ஆனிலை என்பன போலாம்; **நல்லூர்** - ஊர்ப் பெயர்.

தவநெறி வளர்க்க வந்தார் - பிள்ளையார்; அவரது திருவவதார உள்ளுறையாவதிது என்றவாறு; **தவநெறி** - சிவநெறி; இதனால் மணஞ் செய்துகொண்டு உலகில் வாழ்தல் அவர் வந்த காரியமன்று என்பது குறிப்பு.

தலைப்படும் சார்வு நோக்கி - அவ்வுள்ளுறை முற்றுப்பெற்று முத்தி நிலையினைக் கூடும் பருவம் சார்ந்ததனை உள்ளுற உணர்வினில் சிவனுணர்த்தக் கண்டு; **நோக்குதல்** - உள்ளுறக் கருத்தில் ஊன்றிக் காணுதல்; **தலைப்படுதல்** - சேர்தல்; "தலைப்பட்டார் தீரத்

3143. **காதன்மெய்ப்** பதிகங் ''கல்லூர்ப்பெருமண''மெடுத்துக் **கண்டோர்**
தீதுற பிறவிப் பாசந் தீர்த்தல்செம் பொருளாக் கொண்டு
''நாதனே! நல்லூர் மேவும் பெருமண நம்ப னே! யுன்
பாதமெய்ந் நீழல் சேரும் பருவமீ'' தென்று பாட, 1245

துறந்தார்'' (குறள்); ''தலைப்பட்டா ணங்கை தலைவன்றூளே'' (தேவா). **சார்வு** - சாரும் இடமும் காலமும்; ''சார்புணர்ந்து'' (குறள்).

பவமற...கூட-பவம்-பிறவி. **முன்னுள் ஆண்ட** - முன்னை நிலையில் ஆட்கொண் டருளிய; பிரமதீர்த்தக் கரையில் மூன்றும் வயதில் ஆண்டருளிய என்று உரைப்பாருமுளர். **அப்பண்பு** - அந்த நிலை; **கூட** - பொருந்த; இதனுல் பிள்ளையாரது முன்னை நிலையின் தன்மை விளங்குவதும், முருகப் பெருமானே பிள்ளையாராய் வந்தார் என்பார் கூற்றுச் சிறிதும் பொருந்தா தொழிவதும் கண்டுகொள்க. **முன்னுளாண்ட அப் பண்பின் நிலை**-''பண்டுதிரு வடிமறவாப் பான்மையோர்'' (1953); என்றவிடத்தும், பிறுண்டும் உரைக்கப்பட்டது கடைப்பிடிக்க. ''மறக்குமா றிலாத வென்னை'' (தேவா) என்ற பிள்ளையார் திருவாக்கும் நினைவுகூர்க; **அப்பண்பு கூட** - இடையில் இவ்வுலகில் வந்து அவதரித்தது முதல் இதுகாறும் நின்ற இப்பண்பு நீங்க; வேறென்றும் காணுது சிவனையே நினைந்து ஒன்றியிருக்கும் பண்பே வந்து பொருந்த என்க. **கூட** - கூடும்படி; **பவமற** - ''மையல் செய்திம் மண்ணின் மேற் பிறக்கு மாறு காட்டினுய் பிணிப்படு முடம்புவிட், டிறக்குமாறு காட்டினுய்க் கிழுக்கு கின்ற தென்னையே!'' (தேவா).

நவமலர்ப் பாதம் - நவம் - புதிது; அனுபவிக்குந்தோறும் புதிது புதிதாயிருக்கும் தன்மை; இது சிவானந்தத்தின் பண்பு.

கூடக் - கூட்டும் - கூடும்படி கூட்டும் என்பது கூட்டினுலன்றிக் கூடலரிது என்பதாம்.

நல்லுணர்வு நண்ண - சார்வு நோக்கியதனுல் இவ்வுணர்வு நண்ணிற்றென்பது; **நல்லுணர்வு - நன்மைகட் கெல்லாம் பெரு நன்மையாகிய வீடுபேறு பற்றிய உணர்வு.** முன்னை நாளில் ஆட்கொண்டு பிறவியில் வாராது அருளிய பண்புபோல, அதனின் மேலாய் இனிப் பிறவியில் என்றும் வாராத நிலை பொருந்த என்பது **கூட** என்றும், **நவமலர்ப் பாதம்** என்றும் வரும் சொல்லாற்றற் குறிப்பு. இதன் முன்னும் அப்பாதத்தையே சீவன் முத்தி நிலையிற் கூடியிருந்தா ராயினும் அது திருமேனி தாங்கிப் பிறர்க்கருள உலகில் நின்ற நிலை. இனி **அப்பண்பு கூடப் - பாதங் கூட்டும்** என்றதனுல் அந்நிலையினின்றும் மாறுத சிவானுபமே மருவிக்கொண் டிருக்கும் பண்பு குறிக்கப்பட்டது.

நல்க - என்பதும் பாடம். ***1244***

3143. (இ-ள்) காதல்...எடுத்து - பெருவிருப்பு மேற்கொண்ட மெய்த் திருவாக்காகிய திருப்பதிகத்தினைக் ''கல்லூர்ப் பெருமணம்'' என்று தொடங்கி; கண்டோர்...கொண்டு - அங்கு அத் திருமணத்தைக் கண்டவர்களது தீங்குடைய பிறவிக் கேதுவாகிய மலமாயை

கன்பங்களைத் தீர்ப்பதனைச் செம்மைப் பொருளாகத் திருவுளம் பற்றி; "நாதனே...ஈது" என்று பாட - "இறைவரே! திருநல்லூரில் பொருந்திய திருப்பெருமணக் கோயிலின்கண் எழுந்தருளிய நம்பரே! உன்பாதமாய திருவடிகளாகிய மெய்ம்மை பொருந்திய நீழலினை அடையும் பருவம் இதுவேயாம்" என்று பாடியருள.

(வி-ரை) காதல் மெய்ப் பதிகம் - காதல் மிக மேற்கொண்டு எடுத்து என்க; விருப்பம் இறைவர் நமையப் பாதங் கூட்டுவர் என்ற நல்லுணர்வு பெற்றமையால் மிகுந்து வந்தது; **மெய்ப் பதிகம் - மெய்**-சத்து : இறைவரது திருவாக்காகிக் குறித்த பயனைத் தரும் தன்மை. **கல்லூர்ப் பெருமணம்** - இது பதிகத் தொடக்கம்.

கண்டோர் - திருமணத்தைக் கண்டு தரிசித்தோர் ; இறைவரது அருட்கண்ணின் குறிப்பினாற் காணப்பட்டோர் என்ற குறிப்புமாம்.

தீதுறு பிறவிப் பாசம் -தீதுறு பாசம் என்றும் கூட்ட நின்றது; **தீதுறு பிறவி** - பிறவியாவது தீமையிற் செலுத்தி மேலும் மேலும் பிறவிகளிற் செலுத்துதல் குறிப்பு. "மையல் மாறும் மாயை மயங்கும்" (38) என்றது காண்க.

கண்டோர் பாசந் தீர்த்தல் செம்பொருளாக் கொண்டு - செம்பொருள் - செம்மையாகிய - செப்பமாகிய - பொருள்; உட்கருத்து. தாம் சிவன்றாள் சேர்தலாகிய கருத்து முற்பட் டெழுந்த தாயினும், தாம் தம் தேவியுடனும் கிளைஞர் தொண்டர் இவர்கள் சூழ **உடன் அணைதல்** அதனுடன் உள்ளூற எழுந்த கருத்து; தம்மைப் பவமற முன்னு ளாண்டமையினாலும், சிவஞானம் பெற்றமையினாலும், பாசமற்றிலராதலின் தம் பொருட்டுத் தீதுறு பிறவிப் பாசம் தீர்த்தல் பொருளாகக் கொண்டு திருப்பதிகம் விண்ணப்பித்தல் அத்துணை வேண்டப்படாது, மணங் கண்ட ஏனையோர் பொருட்டுத் தீதுறு பிறவிப் பாசம் தீர்த்தலே மிகவும் வேண்டப்படுவதாயிற்று; "சொல்லூர்ப் பெருமணம் சூடலரே **தொண்டர்**"; "**எமைப் போக்கருளீரே**"; "நல்லூர்ப் பெருமணத் தானை, **யுறும்பொருளாற் சொன்ன வொண்டமிழ்**" என்ற பதிக் கருத்துக்கள் காண்க.

நாதனே...நம்பனே!-நாதன் - இறைவன். இறைமைத் தன்மையினால் ஆட்கொள்ளுதல் கடன் என்பது; "தம்மை யடைந்தார் வினை தீர்ப்ப தன்றோ தலையாயவர்தங் கடனா வதுதான்" (தேவா); நல்லூர் மேவும் பெருமண **நம்பனே!** "நல்லூர்ப் பெருமண மேயநம் பானே" என்ற பதிகப் பொருளும் சொல்லும் போற்றப்பட்டது காண்க. **நம்பன்**-நம்பி அடையத் தக்கவர்.

உன்பாத மெய்ந்நீழல் சேரும் பருவம் ஈது - பாதம் அடைந்தாரது பிறவி வெப்பத்தை மாற்றுதலின் நீழல் என்றுபசரிக்கப்படும். **மெய்** - நித்தியமாவது; சத்தாகி என்றும் அழிவில்லாதது; **பருவம் ஈது** - பக்குவ முதிர்ச்சி பெற்ற உரிய காலம் இது; பதிகக் கருத்தும் குறிப்பும் காண்க. திருமணங்காண வந்த அத்துணை மக்களுக்கும் ஒருசேரத் திருவடி நீழல் சேரும் பருவம் கூடுமோ? எனில், கூடும் என்க; "பயில்வித் தெல்லாம், காரிட மதனிற் காட்டு மங்குரங் கழியும் வேனில்" (சித்தி-1-9); இங்குச் சிவஞான குருமூர்த்திகளின் பாவனை - பார்வை - அருண்மொழி - முதலிய தீக்கைகளாற் பாச நீங்கப்பெற்று முத்தி பெறும் பக்குவமுடைய உயிர்களே திருமணங் காண வந்து கூடினர்

3144. **தேவர்க டேவர் தாமுந்திருவருள் புரிந்து** "**நீயும்**
பூவையன் னுளு மிங்குன் புண்ணிய மணத்தில் வந்தார்
யாவரு மெம்பாற் சோதி யிதனுள்வந் தெய்து" மென்னு
மூவுல கொளியால் விம்ம முழுச்சுடர்த் தாணு வாகி, 1246

என்க. இக்குறிப்புப் பின்னர்த் "தெள்ளுநீ ருலகத்துப் பெற்றிலார் தெருமந்தார்" (*3152*) என்று மேலும் வற்புறுத்தப்பெறுதல் காண்க. "கிளையும் தொண்டர் கூட்டமும் மல்கிச் சூழ - அடைவுறுங் குறிப்பால்" (*3141*) என்றபடி பிள்ளையார் இவ்வாறுள்ள பக்குவம் அவர் அனைவர்க்கும் கூடிய நிலையினைத் திருவருட் குறிப்பினாலறிந் தருளினர் என்க.

பருவம் - "காலமுங் கடவு ளேவலாற் றுணைக்காரணங் காண்" (சித்தி-*1*) என்றபடி இறைவனுணையின் வழியே உயிர்கள் வீடு பெறுதற்கு உரிய காலதத்துவமும் துணையாதல்பற்றிய குறிப்பு. அதற்குரிய கடவுளேவல் மேற்பாட்டிற் கூறுவார்.

பாட - அருள் புரிந்து என்று மேற்பாட்டுடன் கூட்டுக. அருள் புரிந்த வகையாலும் பிள்ளையார் ஏனையோரது பிறவிப் பாச நீக்கங் கருதி விண்ணப்பித்துப் பாடினர் என்பது தெளியப்படும்.

பதமிதுவென்று பாட—என்பதும் பாடம்.

1245

3144. (இ-ள்) தேவர்கள்... புரிந்து - தேவர்களுக்கெல்லாம் தலைவராகிய இறைவரும் திருவருள் செய்து; "நீயும்...எய்தும்" என்று - "நீயும் பூவைபோன்றவளாகிய உன் மனைவியும், இங்கு உனது புண்ணியத் திருமணத்தில் வந்தவர்கள் எல்லாரும் எம்மிடத்தில் இந்தச் சோதியினுள்ளாக வந்து அடையுங்கள்" என்று கட்டளை யிட்டருளி; மூவுலகு...தாணுவாகி - மூன்றுலகங்களும் தம் ஒளியினாலே மேலிட்டு விளங்கும்படி முழுமையாகிய சுடர்விட்டெழும் சோதிலிங்கமாக நிமிர்ந்து எழுந்து;

(வி-ரை) திருவருள் புரிந்து - முன்பாட்டிற் கூறியபடி பிள்ளையார் செய்த முத்தி விண்ணப்பத்திற்குத் திருவருள் செய்து.

"நீயும்...எய்தும்" என்று - இஃது இறைவர் அவ்விண்ணப்பத்தின்படி கை கூடுமாறு அருளிய திருவாக்கு; "எமைப்போக் கருளீரே" என்று வேண்டிய பிள்ளையாரது வேண்டுதலை இறைவர் ஏற்றுக்கொண்டு "எமது பாதநீழல் சேரும்படி தரும்பரிசு இது" என்றபடியாம்.

பூவையன்னுள் - பிள்ளையாரது தேவியார்; **பூவை** - நாகணவாய்ப் புள்; இதுபேச்சு, அழகு, இயல் முதலியவற்றுல் பெண்களுக்கு உவமிக்கப்படும்.

இங்கு உன்...யாவரும் - வந்தார் - வரும் பேறு பெற்றுர்; **புண்ணிய மணம்** - உலகில் ஏனையோர்களது மணம்போலப் பாசத் தொடக்குக் கேதுவாகாது சிவ புண்ணியப் பயன் பயக்கும் மணம்; **யாவரும்**-மேல் திருநீலநக்கர் முதலாக (*3148*) வீடுபெற வந்தாரும் (*3150*) என்றவரை விரித்து **எல்லாரும்** என்று முடித்த நிலை காண்க; உம்மை முற்றும்மை.

3145. **கோயிலுட் படமே லோங்குங் கொங்கையாற் பெருகுஞ் சோதி**
வாயிலை வகுத்துக் காட்ட, மன்னுசீர்ப் புகலி மன்னர்
பாயின வொளியா னீடு பரஞ்சுடர்த் தொழுது போற்றி
மாயிரு ஞால முய்ய வழியினை யருளிச் செய்வார், 1247

சோதி யிதனுள் வந்து - எம்பால் - எய்தும் என்று கூட்டுக. **சோதியிதனுள்** - யாம் இனி இங்குக் காண்கின்ற இந்தச் சோதியின் உள்ளே; சோதியின் வாயிலின் மூலமாக. **எம்பால் எய்தும்** என்றது விண்ணப்பித்தபடி பாதமெய்ந் நீழலில் வந்தடைக என்றதாம். **எய்தும்** - எய்துவீராக; ஏவலில் பன்மைபோலவும்.

என்று - என்று அசரீரிவாக்கினால் அருளிச் செய்து.

மூவுலகு-மேல்-நடு-கீழ் என்ற மூன்றுலகங்களும்; முற்றும்மை தொக்கது.

ஒளியால் விம்முதல்-சிவஞான வொளியின் பெரிய பிழம்பினாலே ஒளிபெற்று மேலோங்கி விளங்குதல்.

முழுச்சுடர்த் தாணு - முற்றிய சுடர் விளங்கும் தூண்; "சோதியே சுடரே சூழொளி விளக்கே" (திருவா); **தாணு** - நிலைபெறத் தாங்கும் தூண்போல்பவர்; "மாசொன் றில்லாப் பொற்றூண்காண்" (தேவா). ***1246***

3145. (இ-ள்) கோயிலுட்பட... காட்ட - திருக்கோயில் தன்னகத்துட்பட மேலே விரிந்து பெருகி எழும் அந்தச் சோதியினுள்ளே ஒரு திருவாயிலினையும் வகுத்துக் காட்டியருள; மன்னுசீர்...போற்றி - நிலைபெற்ற சிறப்பினையுடைய சீகாழித் தலைவராகிய பிள்ளையார், பரவிய பேரொளியினாலே நீண்டு விளங்கும் பரஞ்சுடராகிய இறைவரைத் தொழுது துதித்து; மாயிரு...செய்வார் - மிகப் பெரிய உலகத்தின்கண் உள்ள ஆன்மாக்கள் உய்யும் வழியினை அருளிச்செய்வாராகி;

(வி-ரை) கோயிலுட்பட...சோதி - முன்கூறிய முழுச்சுடர்த் தாணுவானது கோயில் தன்னுட்பட ஓங்கியபடியாக விளங்கும் சோதியாய் நின்றதென்க.

வாயிலை வகுத்துக் காட்ட - ஒளி பெருகும் சோதியளவில் அமைந்துபட்டால் யாவரும் அதனுட் புக அஞ்சி ஒதுங்குவராதலின் **சோதியின் உள்ளே புகும் வாயிலினையும் இறைவரே வகுத்துக்காட்டி யருளினர்.** எங்கும் எல்லாம் சிவஞான நிறைவேயாயினும் இறைவர் வேத முதலியவற்றால் நெறிவகுத்துக் காட்டி யருளினலல்லது உயிர்கள் உணர்ந்து நன்னெறிச் செல்லுதல் இயலாதவாறுபோல, ஈண்டு இறைவரே சோதியாகிய தம்பால் பக்குவான்மாக்கள் வந்தடையும் வாயிலினையும் வகுத்துக் காட்டியருளினர்.

புகலி மன்னர்-உய்ய வழியினை அருளிச் செய்வார்-வாயில் வகுத்துக் காட்டப் படினும் அஃதே வாயில் என அறிதலும், அதில் செல்லும் வழியும் தகுதியும் அறிதலும் காரணகுரு கைகாட்டி னல்லது கூடாதாதலின் புகலி மன்னர் அதனுட் புகும் வழியினைக்

காட்டி உபதேசித் தருளுவாராகி என்க. இது மேல்வரும் "காதலாகிக் கசிந்து" என்ற திருப்பதிகத்தின் கருத்தும் உட்குறிப்பும் பொருளுமாம்.

கோயிலுட்பட மேலோங்கும் கொள்கையால் - சோதி வாயில் - கோயில் வாயில் வேறு - சோதிவாயில் வேறு. **கோயில் முழுதும் சோதியினுட்பட்டு வெளிக் காணப்படாதாயிற்று; இப்போது காணப்பட்டது சோதிவாயில் ஒன்றுதான்.** கோயில் வாயிலானது சாதனவகை யளவில் நிற்பது. "ஆலயந் தானும் அரனெனத் தொழுமே" (போதம் -12); இச் சோதிவாயில் அவ்வாறன்றிச் சாத்தியப் பொருளாகிய அரனேயாக நிற்பது. கோயில் வாயிலினுட் புகும் வழிகள் வேதாகம புராணங்களுட் பேசப்படும். ஆனல் அரனேயாகிய பேரொளிச் சோதி வாயிலினுட் புகும் வழியினை முன்னர் உயிர்கள் அறியாவாதலின் எடுத்து அருளிச் செய்வாராயினர் பிள்ளையார் என்க. இவ்விரண்டும் வெவ்வேறென்பது "பெருங்கூத்தர் கொள்ளநீ டியசோதிக் குறிநிலை யவ் வழிகரப்ப, வள்ளலார் தம்பழய மணக்கோயில் தோன்றுதலும், தெள்ளுநீ ருலகத்துப் பெற்றிலார் தெருமந்தார்" (3152) என்று பின்னர் எடுத்துக் கூறுமாற்றால் இனிது விளங்கும்.

பாயின ஒளி; மூவுலகும் தனது ஒளியால் விம்ம முழுச்சுடர்த் தாணுவாகிப் பரந்த பெருஞ் சிவவொளி; **பாயின** - பரவின.

பரம் சுடர் - எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்ட சுடர்.

பரஞ்சுடர்த் தொழுது போற்றி - ஞாலம் உய்ய வழியினை யருளிச்செய்வார் - பக்குவ ஆன்மாக்களுக்குத் தீக்கை செய்து முத்திக்கு வழிகாட்டும் ஆசாரியர் முதலில் சிவனைத் தியானித்துத் துதித்து, இறைவரே! **பக்குவமுடைய இம்மாணவனுக்குத் தீக்கை செய்து வழிப்படுத்த எனக்கு அருள் செய்வீராக என்று போற்றிப் பின்னரே அதனிற் றுணிக என்ற சிவாகம விதி இங்கு நினைவு கூர்தற்பாலது.**

மாயிரு ஞாலம் - மா - இரு - ஒரு பொருட் பன்மொழி; மிகப் பெரிய என்க. யகர வுடம்படுமெய் புறனடையாற் கொள்க. "மாயிரு ஞாலமெல் லாம்" (தேவா) என்புழிப்போல. **மாயிருண் ஞாலம்** என்பது பாடமாயின் பெரிய வலிமையுடைய இருண்மலம் என்னும் மூலமலமாகிய ஆணவமலத்தாற் கட்டுண்ட உலகத்துயிர்கள் என்க. முத்தியினும் அருது வலியிழந்து நிற்கும் மூலமலத்தின் வலிமை குறித்தபடி; **மாய் இருள்** - முத்தியில் வலிகெட்டு மாயும் இருள் என்றலுமாம்.

வழி - வாயிலை இறைவர் காட்ட அதனுட் புகும் வழியினைப் பிள்ளையார் அருளினர் என்பது. **வழி**யாவது புகும் தகுதி நிலைகள். பின்னர் "நெறி" (3146) என்பது காண்க. **வழி** பதிகத்துட் காண்க.

அருளிச் செய்வார் - பாவனை - பார்வை - உபதேசச் சொல் என்ற தீக்கை வகைகளை எல்லாம் அருள்வாராகி என்க; முற்றெச்சம். அருளிச் செய்வார் - அருள் செய்து - என்ன - என்று மேல்வரும் பாட்டுடன் கூட்டி முடிக்க. 1247

3146. (இ-ள்) "ஞான...சொலாம்" என்று - மெய்யினையுடைய ஞானநெறி தான் எல்லாருக்கும் "நமச்சிவாய" என்னும் திருவைந்தெழுத்தாகிய மொழியேயாகும் என்று;

3146. "ஞானமெய்ந் நெறிதான் யார்க்கு நமச்சிவா யச்சொ லா"மென்
றானசீர் நமச்சி வாயத் திருப்பதி கத்தை யங்கண்
வானமு நிலனுங் கேட்க வருள்செய் "திம் மணத்தில் வந்தோர்
ஈனமாம் பிறவி தீர யாவரும் புகுக!" வென்ன, 1248

ஆனசீர்... அருள் செய்து - ஆக்கம் பொருந்திய சிறப்பினையுடைய நமச்சிவாயத் திருப்பதிகத்தினை அவ்விடத்திலே விண்ணவரும் மண்ணவரும் கேட்கும்படி அருளிச்செய்து; "இம்மணத்தில்... புகுக" என்ன - "இந்த மணத்தில் வந்தவர்கள் எல்லாரும் இழிவுபடுத்தும் பிறவி நீங்க இதனுள் புகுவீர்களாக" என்று ஆணையிட்டருள,

(வி-ரை) "ஞான மெய்...சொலாம்" என்று - இது பதிகக் கருத்தும் குறிப்புமாம். **ஞான மெய்ந்நெறி** - சிவஞானத்தினாலன்றி அடையவொண்ணாத வீட்டுநெறி; "ஞாலமுய்ய வழியினை அருளிச் செய்வார்" (3145) என்றமையால் இங்குக் கூறிய மெய்ந்நெறி உயிர்கள் உய்யும் வழி என்பதாயிற்று.

மெய்-மெய்ப்பொருள்; சத்து;அழிவில்லாதது; இறைவர். **மெய்ந்நெறி** - மெய்யினை அடைதற்குரிய வழி. **தான்** - என்றது இஃதேயன்றிப் பிறிதில்லை என்ற பொருள் தந்தது.

யார்க்கும் - எல்லாச் சமயத்தாருக்கும்; எல்லாப் பக்குவபேத முடையவர்க்கும்; எக்காலத்தும் எவ்விடத்து உள்ளவர்க்கும்; எல்லா ஞானநூல்களினும் முடிந்த நிச்சயம் என்பது.

நமச்சிவாயச் சொல்லே மெய்ஞ்ஞான நெறியாம் என்க. உயிர் பாசத்தின் நீங்கிச் சிவத்தையடைவது என்பது திருவைந்தெழுத்தின் உள்ளீடாகும்; ஆதலின் சோதி வாயிலினுட் புகுந்து இறைவரை அடையும் இந்நிலையில் சீபஞ்சாக்கரத்தின் உள்ளீடு சிந்தித் துணரற்பாலதென்பது பதிகக் கருத்து. திருவருட் சிறப்பினாலும், ஞானாசாரியரது அருணோக்கம் பாவனைகளின் அருட்சிறப்பினாலும் இஃதே சிகாராதியாகிய பஞ்சாக்கரப்பயன் தந்தது என்பது.

ஆசுறு திரோத மேவா தகலுமா சிவமுன் னாக
ஓசைகொ ளதனி னம்மே லொழித்தரு ளோங்கு மீள
வாசியை யருளு மாய மற்றது பற்று வுற்றங்
கீசனி லேக மாகு மிதுதிரு வெழுத்தி னீடே. —(சிவப்-92)

அந்தமா திகளி லாத வஞ்செழுத் தருளி னாலே
வந்தவா றுரைசெய் வாரை வாதியா பேதி யாவே. —(மேற்படி - 90)

என்பன முதலியவை காண்க. இதுபற்றி முன்னர் (1391-ன் கீழும், பிறுண்டும் உரைத்தவை யெல்லாம் ஈண்டுக் கருதுக (தொகுதி III-பக். 263).

மெஞ்ஞான நெறி-சொல் ஆம் - ஞானத்தாலன்றி வீட்டுநெறி யடைதல் இயலாதென்பதும், அந்த ஞானமாவது திருவைந்தெழுத்தாகிய ஒருசொல்லின் உள்ளீட்டினை உணர்ந்து நிற்றலேயாம் என்பதும் கருத்து.

என்று - நமச்சிவாயத் திருப்பதிகத்தை - அருள்செய்து - பஞ்சாக்கர உபதேசத்தால் ஞான நெறியினை உணரச்செய்து என்க. ''தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்தவிட்டு, அன்னிய மின்மையில் அரன்கழல் செலுமே'' என்ற சிவஞானபோதம் எட்டாஞ் சூத்திரக் கருத்து முழுதும் ஈண்டுவைத்துக் கண்டு கொள்க. அங்குத் **தவத்தினில்** என்றதற்கேற்ப, ஈண்டு, முன்னைத் தவம் செய்து பக்குவமுற்ற உயிர்களே இங்குத் திருமணத்திற் சார்ந்த மக்கள் என்பதும், அவர்கள் அவ்வாறு பக்குவமுதிர்ந்து வீடுபெறத் தகுதியான பருவமடைந்தவர் என்பதை இறைவனுணர்த்த உணர்ந்தமையாலே பிள்ளையார் ''பாதமெய்ந் நீழல்சேரும் பருவமீது'' என்று பாட அதன்படி இறைவராணை தந்தனர் என்பதும் அறியத் தக்கன. ''மேற்சரியை கிரியாயோகங்களைச் செய்துழி **நன்னெறி**யாகிய ஞானத்தைக் காட்டியல்லது மோட்சத்தைக் கொடாவாகலான்'' என்று மெய்கண்ட தேவர் ''ஞானமெய்ந்நெறி... சொலாம்'' என்றதனையே அச்சூத்திரத்தின் கீழ் விரிவு செய்தருளினர் என்பதும் கண்டுகொள்க; **ஞான நெறி** - ''நன்மை யெனப்படுவன வெல்லாவற்றினுஞ் சிறந்த நன்மையாவது வீடுபேறென்பது; அதனைத் தலைப்படுதற் கேதுவாய்ச் சிறந்த நெறியாகலின் **ஞானம் நன்னெறி** யெனப்பட்டது. வீட்டிற்கு நெறியென அவ்வச் சமயத்தாராற் கூறப்படுவன வனைத்துந் தன் கண்ணே வந்து கூடநின்ற பெருநெறி யாகலானும் அது **நன்னெறி** எனப்பட்டது. நன்னெறி சன்மார்க்கம் என்பன ஒருபொருட் கிளவி...'' (சிற்றுரை - போதம் -8-முதலதிகரணம்).

வானமும் நிலனும் கேட்க அருள் செய்து-விண்ணவரும் மண்ணவரும் கேட்க என்றது உச்சமாகிய நிடாதசுரத்தில் அருளினார் என்ற குறிப்பு. அங்கு நின்ற எல்லாரும் பக்குவமுற்று வீட்டையும் பக்குவமணைந்தா ராதலின் எல்லாரும் கேட்க அருளினார். மாணவகன் மட்டும் கேட்கவும் ஏனையோர் கேட்க இயலாமலும் உள்ள வகையில் மந்திரம் அந்தரங்கத்தில் உபதேசிக்கக் கடவது என்னும் விதி ஈண்டுச் செல்லாமையறிக. வானிலுள்ளோர் ஒலியலைகளின் பரம்பரைமூலம் கேட்கலுற்றனர் என்பது இந்நாளின் ''வானொலிக் கேள்வி'' (Radio) என்று காணப்படும் கலைஞானப் பகுதியினால் விளங்கும். அவ்வாறு கேட்பினும் இங்குக் கேட்ட நிலத்தவர்போல விண்ணவர் பயன் பெறாததென்னை? எனின், பசுபுண்ணிய மிகுதியினால் மேலுலகத்திருக்கப்பெறினும், வானவர் அவ் வினைக்கழிவில் புவனியில் வந்து பிறந்து சிவபுண்ணியஞ் செய்து ஞானம் பெற்ற பின்னரே காலாந்தரத்தில் வீடுபெறுந் தகுதி வாய்க்கப்பெறுவர் என்பது ஞான நூன் முடிபு. அப்பருவம் இன்னும் வாய்க்கப்பெறாமையின் அவர்களும் இங்குத் திருமணங் கண்ட நிலத்தவர்போல வீடுபேறு பெற்றாரிலர் என்பது ''தூரத்தே கண்டு, நணுகப்பெறா விண்ணவரு முனிவர்களும் விரிஞ்சனே முதலோரும், எண்ணிலவ ரேசறவு தீரவெடுத் தேத்தினார்'' (3153) என்று பின்னர் ஆசிரியர் காட்டியருளுமாற்றால் அறிக. **''இம்மணத்தில் வந்தோர்''** என்ற குறிப்புமது. இங்கு வானுலகரும் மணங் காண வரினும் அவரெல்லாம் ''மஞ்சுறை விசும்பின் மீது மணவணி காணச் சென்றார்'' (3102); ''மணமேற் செல்லும் பொற்பமை மணத்தின் சாயை போன்றுமுன் பொலியச் செல்ல'' (3103); ''தூரத்தே கண்டு நணுகப் பெறா'' (3153) என்று வருவனவற்றால் நிலத்தவர்போல **''மணத்தில் வந்தோ''** ராகார் என்பதாம்.

ஈனமாம் பிறவி தீர - ''தீதுறு பிறவிப் பாசம் தீர்த்தல்செம் பொருளாக் கொண்டு'' (3143) பாடியதற்கேற்ப இங்கு இறைவராணையின் வழிப் பதிகம் பாடியருளி அங்குற்ற

3147. வருமுறைப் பிறவி வெள்ளம் வரம்புகா ணுத ழுந்தி
யுருவெனுந் துயரக் கூட்டி லுணர்வின்றி மயங்கு வார்கள்
திருமணத் துடன்சே வித்து முன்செலுஞ் சிறப்பி ஞலே
மருவிய பிறவி நீங்க மன்னுசோ தியினுட் புக்கார். 1249

ரனைவரையும் வீடு பேற்றுக்குத் தகுதி பெற்றாராக ஆக்கியமை குறிப்பு. **"ஈனமாம் பிறவி"** மேற்பாட்டில் விரிக்கப்படுவது.

இம்மணத்தில் வந்தோர் யாவரும் புகுக - "இங்கு உன் புண்ணிய மணத்தில் வந்தோர் யாவரும்" (3144) என்று இறைவர் அருளியமையாலே ஒருவரும் ஒழியாது எல்லாரும் என்றருளினர். **வந்தோர் யாவரும்** - "மாதொடும் புக்குறும் **போதுவந்தார்,** ஆரங் கொழிந்தவர் பெற்றதல் லாலவ் வரும்பதமே" (ஆளுடைய பிள்-திருவந்-60) என்ற நம்பியாண்டார் நம்பிகள் திருவாக்கு இதற்காதரவாதல் காண்க.

"புகுக" என்ன - இஃது "யாவரும் வந்தெய்தும்" (3144) என்று இறைவர் தந்த ஆணையின்படியே பிள்ளையார் தம்மால் தகுதியாக்கப்பட்ட மக்களுக்கு ஆணை தந்தமையாம்.

என்ன - (அது கேட்டுப்) புக்கார் - என்று மேல்வரும் பாட்டுடன் முடிக்க. *1248*

3147. (இ-ள்) வருமுறை... மயங்குவார்கள் - முறையாக இடையருது வரும் பிறவியாகிய பெரு வெள்ளத்திலே எல்லை காணுது அழுந்தி உடம்பு என்னும் துன்பம் நிறைந்த கூட்டினுள் இருந்து உணர்வில்லாமல் மயங்குவார்களாகிய அம்மக்கள்; திருமணத்துடன்... சிறப்பினுலே - பிள்ளையாரது திருமணத்துடனே சேவித்துக்கொண்டு முன்னுற் செல்லப்பெற்ற சிறப்பினுல்; மருவிய...புக்கார் - பொருந்திய பிறவி நீங்கும்படி நிலைபெற்ற அந்தப் பேரொளியினுள்ளே புகுந்தனர்.

இவ்வாறு ஆறு திருப்பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிவு கொண்டன.

(வி-ரை) வருமுறை...அழுந்தி - வருமுறை - ஒரு பிறவியிற் செய்யும் வினை மேலும் பல பிறவிகளை விளைக்க, அவற்றுட் செய்தவை மேன்மேலும் பற்பல ஆயிரம் பிறவிகளுக் கேதுவாக இவ்வாறு பரம்பரையில் முறையாக வரும். **வெள்ளம்-** எல்லையில்லாது வருதல் கருத்து. திருமணத்துடன் சேவித்து முன் செல்லுதலைப் புணை என்னுமையால் **பிறவி வெள்ளம்** என்றது ஏகதேசவுருவகம். "பெரும்பிறவிப் பவ்வத் தெவ்வத் தடந்திரையா லெற்றுண்டு பற்றென் றின்றி" (திருவா); "இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்தும் ஏழை யேற்கு" (திருவிசை) முதலிய திருவாக்குக்கள் காண்க. **அழுந்தி** - வரம்பு காணுமையின் அவ்வெள்ளத்துள்ளே ஆழ்ந்து கிடந்து. **வரம்பாவது** கரையேறும் நிலை; **அழுந்துதலாவது** அதனைப் பெரிதென [illegible]ங்குதல்.

உருவெனும் துயரக் கூட்டில் - உரு - உடம்பு; **துயரக் கூடு** - துன்பத்துக்கே ஏதுவாயுள்ள கூடு. கூட்டில் அடைபட்ட பறவை எவ்வாறு வெளியேறமாட்டாது தடைபட்டு அதனுள்ளே வியாபரித்து அடங்கிக் கிடக்குமோ அதுபோல் வியாபக

நிலைக்குரிய உயிர் உடம்பாகிய கூட்டினுள்ளே தடையுண்டு அடங்கிக் கிடக்கும் என்பது.

உணர்வின்றி மயங்குவார்கள்-உணர்வு-நல்லுணர்வு; துன்பக் கூட்டினின்றும் விடுதி பெறவேண்டுமென்ற அறிவுணர்ச்சி. **மயங்குவார்கள்** - பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும் மருளுடையோர். **மயக்க**மாவது ஒன்றை அஃதல்லாத பிறிதொன்றாக எண்ணுதல். இம்மயக்கமானது ஈண்டுப் பஞ்சாக்கர உபதேசத்தாலும் மெய்ஞ்ஞான தேசிகரது அருட்பார்வை முதலிய தீக்கையாலும் நீங்கப் பெற்றது என்க. ''ஊனமாம் பிறவி''யின் தன்மையினை விரித்தவாறு.

திருமணத்துடன்...சிறப்பினாலே - அம்மயக்கம் நீங்கிய காரணம் கூறியபடி; **சேவித்து முன்செலும் சிறப்பு**-''ஏக னாகி இறைபணி நிற்க...மலமாயை தன்னொடு வல்வினை யின்றே'' (போதம்-10) என்ற ஞானநூற் கருத்து இங்கு நினைவு கூர்தற்பாலது; **சேவித்து முன் செல்லும் சிறப்பு** - இறை பணியேயாகும் என்க. பிள்ளையார் சிவஞான நிறைவுடைய ராகலான்.

மருவிய பிறவி நீங்க - இது பாசநீக்க முணர்த்திற்று. ''பாச மொருவத், தண்ணிழ லாம்பதி விதி யெண்ணு மஞ்செழுத்தே'' (போதம்-9) என்றபடி விதிப்படி தீக்கைசெய்து உபதேசஞ் செய்யப்பெற்ற சாதனத்தாலும், முன்னைப் பக்குவ முதிர்ச்சியாலும் மூலமல வலி நீங்கப் பெற்றமையால் பிறவி நீங்கும் பயன்பெற்றனர். **மருவிய பிறவி**-இப்பிறவி. இவ்வுடம்பான் முகந்துகொண்ட வினைப்பயனை அனுபவிக்கநின்ற, இனி வருவதாய் எஞ்சிநின்ற, பிறவிகள் எல்லாம் தீக்கையால் ஒழிந்தன.

மன்னுசோதியினுட் புக்கார்-மன்னு சோதி - நிலைபெற்ற - அழியாத - சிவச்சோதி; இறைவரது ''முழுச்சுடர்த் தாணு'' (3144).

திருமணத்துடன்...புக்கார்-முற்செய் தவத்தினாலே குருவின் அருளுபதேசம் பெறுதல் வரும்; அதனாலே அவ்வுபதேசப் பொருளாகிய மந்திரப் பொருளை எண்ணி வழிபடுதல் வரும்; அதனாலே மும்மை மலங்களும் வலி நீங்கும்; அதனாலே அயரா அன்பின் அரன் கழலின் நீங்காது நிற்கும் பேறு வரும். ஆனால், இந்நிலை யெல்லாம் இடையீடின்றி ஒருங்கே நிகழ்தற்கு முன்னைத் தவத்தினால் விளைந்த பக்குவமுதிர்ச்சியும் ஆசாரியரது அருண்ஞான ஆற்றலுமே காரணமாயின என்க.

நீங்கி—என்பதும் பாடம். *1249*

திருநல்லூர்ப்பெருமணம்

திருச்சிற்றம்பலம் பண்-அந்தாளிக் குறிஞ்சி

கல்லூர்ப் பெருமணம் வேண்டா; கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில?;
சொல்லூர்ப் பெருமணம் சூடல ரேதொண்டர்!;
நல்லூர்ப் பெருமண **மேயநம் பானே**. (1)

தக்கிருந் தீரன்று தாளா லரக்கனை
உக்கிருந் தொல்க வுயர்வரைக் கீழிட்டு
நக்கிருந் **தீரின்று நல்லூர்ப் பெருமணம்**
புக்கிருந் தீரெமைப் போக்கரு ளீரே. (8)

நறும்பொழிற் காழியுண் ஞான சம்பந்தன்
பெறும்பத நல்லூர்ப் **பெருமணத் தானை**
யுறும்பொரு ளாற்சொன்ன வொண்டமிழ் வல்லார்க்
கறும்பழி பாவ மவலமி லாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—கண்டோர் தீதுறு பிறவிப் பாசந் தீர்த்தல் இதன் செம்பொருளாம். "நல்லூர் மேவும் நம்பானே! உனது பாத மெய்ந்நிழல் சேரும் பருவம் இது" என்ற உட்குறிப்புடன் பெருமணத்தானை உறும்பொருளால் "எமைப் போக்கு அருள்வீராக" என்று விண்ணப்பித்தது (3143).

பதிகப் பாட்டுக் குறிப்பு :—(1) கல்லூர்ப் பெருமணம் வேண்டா - கல் - அம்மி; **கல்லூர் -** அம்மி மிதிக்கும் சடங்கினையுடைய; **பெருமணம் -** உலக நிலையிற் கொண்டாடப்படும் கல்யாணம் செய்யும் இல்லற நிலை; **வேண்டா -** எமக்கு வேண்டுவதன்று. **கழுமலம்...மெய்யாய்த்தில? -** கழுமலம் (சீகாழி) முதலாகப் பெருமணம் என்னும் இப்பதி வரை வழிபட்டுப் பாடிய பதிகப்பாட்டுக்க ளுண்மையே யன்றோ? (அவற்றுள் எதனிலும் என் பொருட்டு உலகத் தொடர்பாகிய விண்ணப்பங்கள் செய்யவில்லை யன்றோ?); **சொல்லூர்...தொண்டர் -** தொண்டர்கள் மணம் என்று வழங்கும் உலகச் சூழலாகிய தொடர்ச்சியினுள் அகப்பட மாட்டார்களே; **நம்பான் -** நம்பனே" (3143);**—(2) தருமண லோதம்...மணஞ் செயும் -** மணலில் கடல்நீரால் அலைக்கப்பட்ட முத்துக்களையே பருமணலாகக் கொண்டு சிறுமியர்கள் சிறு விளையாட்டாகிய மணச் சடங்குகளைக் காட்டி விளையாடுதற் கிடமாகிய; உலகினர் நிகழ்த்தி உண்மை எனக் கொண்டு அகப்படுகின்ற மணவினைகளும் இவ்வாறு விளையாட்டுக்களே யன்றி பிறிதன்று; மணலில், மணம் விளையாடும் சிறுமியர்க்கு வரும் இன்பத்தளவே உலகினர் மணவினை யின்பமாம்; நித்திலம் பருமணலாக வரும் பொய்த் தோற்றத்தின் அளவுமாம்; மணலே முத்தாகக் கொள்வது ஏனையிடங்கள்; முத்து மணலாகக் கொள்வது பெருமணத்தின் சிறப்பு; மயக்கநிலையில் இரண்டுமொன்றே;**—(3) நன்பு -** நலம்; **இன்புறும்-**விரும்பி வீற்றிருக்கும்; இன்புறுதற்குக் காரணம் அடியவர் நலமெய்துதல்; **தொண்டு செய்வாரே யாதலின் துன்புறுவாரல்லர்** என்க; "இன்பமே எந்நாளும் துன்பமில்லை" (தேவா). **துன்பு -** பிறவித் துன்பம்; பிற்சரித விளைவுக் குறிப்பு;**—(4)வல்லியம் -** புலி; **வேழத்துரி - போர்ப்பது** என்க; **கோவணம் -** அணிவது என்க; **நல்லியலார் -** வீடு பெறும் நல்லியல்பின் பக்குவமுடைய மாந்தர்; சரிதக் குறிப்பு. **வாழ்க்கை-**உறைவிடம்;**—(5)நாறு** மணம்; **வேறு -** தனியாக; சிறப்பாக;**—(6) சிட்டப்பட்டார்க்கு-சிட்டம்-** நல்லொழுக்கம்; வீட்டுநெறி நிற்கும் தவவொழுக்கம். **வேட்டுவப் பட்டம் கட்டும் சென்னியான்-**"வேடுவனுகி

வேண்டுருக் கொண்டு'' (திருவாசகம்) என்றபடி வேடனாகிய கோலத்திற்குரிய தலைக்கோல முடையான். **செங்கண்** - வேடர்க்குரிய பண்பு; ''செங்கண் வேடனை யென்னென்றீர் வந்து'' (தேவா - நம்பி); ''வேடர்தங் கரிய செங்கண் வில்லியார்'' (741); **நட்டக் கொட்டு ஆட்டு அரு - நட்டம்** - கூத்து; **நடம்** என்பது எதுகை நோக்கி நட்டம் என வந்தது; நட்டமாகிய கொட்டுடன் கூடிய ஆட்டு என்க. **இட்டப்பட்டா லொத்திரால்** - வேண்டுதல் வேண்டாமை யிலாராதலின் ஒத்திர் - போன்றீர் - என்றார்;—**(7) மேகத்த** மேகம் போன்ற தன்மையுடைய; கரிய நிறமும் கொடைப் பண்பும். **வெண்ணீற்றுமை** - இத்தலத்தின் அம்மை பெயர்; வந்து கூடி வீடு பெற்றார்க்கெல்லாம் அம்மையார் திருவெண்ணீறு அருளினர் என்பதும் அத்திருக்கோல முடையவர் என்பதும் தல வரலாறு; ''பராவண மாவது நீறு'' (தேவா). **வெண்ணீறுகந்தீர்** (5) என்று இறைவரை முன் கூறியருளிய கருத்தும் காண்க. **பந்தித்த**-அரையிற் கயிறாகக் கட்டிய; ''நாக வரையினர்'' (தேவா - அரசுகள் - புகலூர்). **போகத்தன் யோகத்தையே புரிந்தான்** - அடியார்களுக்குப் போகத்தையும் மோட்சத்தினையும் அருள்பவன்; ''பந்தமும் வீடும் பரப்புகின்றீர்'' (தேவா). **யோகம்** - கூடுதல்; ஈண்டுச் சிவனொடு கூடுதலாகிய வீடுபேறு குறித்தது. இதுவரை போகங் கொடுத்துவந்த இறைவர் இங்குச் சிவனடி சார்தலாகிய வீடுபேற்றினையே அருள்பவரானார் என்பது சரிதக் குறிப்பு. **புரிந்தான்** - உயிர்கள் யோகம் சாரும்படி நினைந்தருளினார்; இறந்தகாலம் விரைவுக் குறிப்பு;—**(8) தக்கிருந்தீர்** - தகுதியின் வீற்றிருந் தருளினீர்; **உக்கு** - உள்ளடக்கி; **ஒல்க** - வலி குறைய; **நக்கு** - இகழ்ச்சிக் குறிப்புடன் சிரித்து; **அன்று...உயர் வரை - இருந்தீர் - (நீரே) இன்று பெருமணம் புக்கிருந்தீர்** - நொடித்தான் மலை என்னும் திருக்கயிலையில் இருக்கும் நீரே இங்கு **நொடித்தல்** என்னும் பாச நீக்கம் செய்து கதியருளும்படி இன்று பெருமணத்தில் வீற்றிருக்கின்றீர் என்பது. **இன்று** எமக்கு உய்தி தரும்பொருட்டு எமது விண்ணப்பத்திற் கிரங்கி; இஃதும் மேல் (இரட்டுற மொழிதலால்) இன்று எமைப் போக்கருளீர் என்பதும் முத்தி விண்ணப்பக் குறிப்பு; இன்று இருந்தீர் என்றதனால் நவமலர்ப் பாதங் கூட்டு மென்னுநல் லுணர்வு'' (3142) நண்ணி நின்றமை குறித்தபடி. ''அவனரு ளாலே அவன்றாள் வணங்கி'' (திருவா); **எமை** - திருமணம் செய்யப்பெற்றமையால் தம் தேவியாரையும் மணங் காணவந்த பக்குவான்மாக்கள் அனைவரையும் உள்ளடக்கிய உளப்பாட்டுத் தன்மைப் பன்மை. **எமை** - எமக்கு; வேற்றுமை மயக்கம். **போக்கு-போ-புகு**-பகுதி; திருவடி நீழலுட் புகுதல்; வீடுபேறு; ''சோதியினுட் புக்கார்'' (3147). ''உடன் புக்கார்'' (3148); ''புக்கொடுங்கினார்'' (3149); ''புக்கொன்றி யுடனானார்'' (3151) என்று ஆசிரியர் இக்கருத்தை ஏற்றவாறு விரித்தருளியமை காண்க;—**(9) ஏலும்** - பொய் பொருந்தும்; **இயல்பு**-அடி கண்டிலேனென்று பொய்ம்மொழி கூறிய உண்மை இயல்பு; வரலாற்றுக் குறிப்பு. **மறைநாலும் தம்பாட்டு** - நான் மறையும் தம் வாய்மொழி; வேதநெறி வீட்டுநெறியின் வழியாதல் குறிப்பு; உலகுக்கு மறை வழக்கங் காட்ட எடுத்த மணமே வீட்டுநெறியாய் வீடுபயத்தல் குறிப்பு ; ''வேதத்தை விட்ட வறமில்லை...வேதத்தை யோதியே வீடுபெற்றாரே'' (திருமந்); **பெருமணந் தங் கோயில்போலும்** என்க; அவ்வாறு வீடு

தருதற்கிடம் இருந்து என்பது குறிப்பு;—**(10) ஆதர்** - கீழ்கள்; **பிணக்குறுவீர் வம்மின்** - “பரசமய நிராகரி”ப்பின் முடிந்த நிலை; **தாள் தொழ வீடெளிதாமே**-திருநீற்றின் ஆக்கமாகிய சைவத் தாபனத்தின் முடிந்த முடிவு. இவை யிரண்டுமே பிள்ளையாரின் அவதார உள்ளுறைகளாதலின் சந்தி நிறைவாயின தன்மையினை முடித்துக் காட்டியருளியவாறு; பிள்ளையாருடனிவை உலகர் வந்து வீடுபெற நின்ற சரிதக் குறிப்பு. **வேதன-வேதன்** - வேத காரணர்; வேதனுடைய - அகரம் ஆறனுருபு. **எளிதாம்** - எளிதின் அடையப்படு பொருள்;—**(11) பெறும் பதம் - உறும் பொருளால் சொன்ன**- பெறத்தக்க பதமாகிய சிவலோகச் சார்பு உட்கருத்தாக அருளிய. **உறும் பொருள்** - இதனை ஆசிரியர் “பிறவிப் பாசம் தீர்த்தல் செய் பொருளாக் கொண்டு” (3143) என்று உரை விரித்துக்காட்டி யருளினர்; வல்லார்க்குப் பழிபாவம் அறும்; அவர் அவலமிலார் என்க. பழியும் அதன் காரணமான பாவமும்; இவை வினைப்பயன். வினைகள் நீங்கப் பிறவித் துன்ப நீக்கம் குறித்தது. முன் **“வீடெளிதாம்”** (10) என்றார். அதன் காரணம், ஈண்டும் மூலமலங்களும் அற்றுச் சிவானந்தம் பெறுதல் என மேல் அருளும் பதிகப் பயன் “பந்தபாச மறுக்க வல்லார்” என்று கூறும் வகையாலும் கூறியமை கண்டு பயன்கொள்க.

தலவிசேடம்:—திருநல்லூர்ப்பெருமணம் - சோழ நாட்டில் காவிரியின் வடகரையில் 5-வது பதி; ஒரு கற்பத்தில் பிரமதேவர் ஏனைத் தேவர்களுடன் சீகாழிக்கு வருகையில் இதன் பெருமையினை அறிந்து **“நல்லூர்”**என்றமையால் இப்பெயர் பெற்றதென்பது தல வரலாறு. **நல்லூர்**-பதியின் பெயரும், **பெருமணம்** -கோயிலின் பெயருமாம்; “போகத்தன் யோகத்தையே புரிந்தான்” என்றதனல் இத்திருக்கோயிலின் பெயர்க் கருத்துக் குறிப்புப் பெறவும், பிள்ளையார் திருமணச் சரித விளைவு இக்கருத்ததை மேலும் விளக்கவுமுள்ள பெருமையுடைய பதி; இங்கு ஆளுடைய பிள்ளையார் தமது திருமணத்தில் மணங் காண வந்தோரும் தேவியாரும் தாமும் சிவச் சோதியிற் புக்குத் திருவடியடைந்த சரிதப்பெருமை புராணத்துட் காண்க; ஆளுடைய பிள்ளையார் நமச்சிவாயத் திருப்பதிகத்தினைக் கட்டளையிட்டருளி அது கேட்ட அனைவரையும் ஒருங்கே வீடுபெறும் தகுதியுடையவர்களாக ஆக்கிய பெருமையுடைய பதி; பிள்ளையாரின் தேவியாரது பதியாதலின் **ஆச்சாள்புரம்** (ஆச்சாபுரம்) என வழங்கப்பெறுகின்றது. இது கொள்ளிடம் நிலயத்தினின்றும் கிழக்கே மட்சாலைவழி 3 நாழிகையளவில் அடையத்தக்கது. “ஆச்சா” மரம் உள்ள தலம் என்றும் கூறுவர்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தாருக்குச் சொந்தமாக நன்கு பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. வைகாசி மூலத்தில் திருஞான சம்பந்தர் திருமண விழாச் சிறப்பும், திருஞான சம்பந்தர் தேவியாருடனுள்ள திருக்கோல மூர்த்திகள் காண்பதும் இத்தலத்துக்குரிய தனிச் சிறப்புக்களாகும்.

சுவாமி - ***சிவலோகத் தியாகர்;*** *அம்மை* - **திருவெண்ணீற் றுமையம்மை** - *(பதிகம் 7 பார்க்க); தீர்த்தம் (திருக்கோயிலின் முன்பு)* - ***பஞ்சாக்கர தீர்த்தம்;*** *எட்டுத் திக்குக்களினும் இருடிகள் கண்ட எட்டுத் தீர்த்தங்கள் உண்டு; தலப் பதிகம் 1-ம், பொதுப் பதிகம் 1-ம் ஆம்.*

நமச்சிவாயத் திருப்பதிகம்(பொது)

திருச்சிற்றம்பலம்

பண் - கௌசிகம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத னாம நமச்சி வாயவே. (1)

இயமன் றூதரு மஞ்சுவ ரின்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தானினை வார்க்கினி யா**னெற்றி**
நயன னாம நமச்சி வாயவே. (4)

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனு மியம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையு நீங்குவ ரென்பரால்
நல்லார் நாம நமச்சி வாயவே. (5)

மந்த ரம்மன பாவங்கள் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேற்
சிந்தும் வல்வினை செல்வமு மல்குமால்
நந்தி நாம நமச்சி வாயவே. (6)

நரக மேழ்புக நாடின ராயினும்
உரைசெய் வாயின ராயி னுருத்திரர்
விரவி யேபுகு வித்திடு மென்பரால்
வரத னாம நமச்சி வாயவே. (7)

நந்தி நாம நமச்சிவா யவெனுஞ்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யான்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாச மறுக்கவல் லார்களே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—மாயிரு ஞாலமுய்ய வழியினை அருளிச் செய்வார், ஞான மெய்ந்நெறிதான் யார்க்கும் சிவனுமமாகிய நமச்சிவாயச் சொல்லேயாகும் என்றது ஆசிரியர் காட்டியருளியபடி *(3145 - 3146).*

பதிகப் பாட்டுக் குறிப்பு:—(1) காதலாகி...ஓதுவார் - திருவைந்தெழுத்தை ஓதிப் பயன் பெற விரும்புவோர் மன மொழி மெய்கள் என்ற மூன்றுனும் நிற்கும்நிலை கூறப்பட்டது. **காதலாகி** - மனநிலை; **கசிந்து கண்ணீர் மல்குதல்** - மெய்யின் நிலை; **ஓதுவார்** - வாக்கின் நிலை. **நன்னெறி** - சிவநெறி; "நன்னெறி யாவது" (தேவா); சிவ நெறியாவன

சரியையிற் றொடங்கித் திருநெறியி லுய்க்கு மென்க. **உய்த்தல்** - துணையாய் நின்று செலுத்துதல்; "நற்றுணையாவது" (தேவா) **வேத நான்கினு மெய்ப்பொருள்** - வேதங்களின் இருதயமாக உள்ளது திருநாமம். **மெய்ப்பொருள் - மெய்** - தன்னியல்புணர்த்திய அடைமொழி; செம்பொருள் - மெய்யடியார் என்றாற்போல. **நாதன்**-இறைவன். இறைமைக் குணங்கள் எட்டினையும் உடைய முதல்வன்; நாதனாதலின் ஆட்கொள்ளும் கடப்பாடுடையவன் என்பது. **நாமம்**-திருவைந்தெழுத்தாவது நாதனுடைய நாமமேயாம்; "ஆலைப் படுகரும்பின் சாறு போல அண்ணிக்கு மஞ்செழுத்தின் நாமத்தான்காண்"; "சிவனெனு நாமந் தனக்கேயுடைய"; **நமச்சிவாயவே** - இதனால் ஓதுமுறையும் பயனும் பெயரும் வந்த வழியுங் கூறப்பட்டன. **காதலாகி** என்றதனால் **நாமங்** கேட்ட அளவால் அன்பு பெருகிக் காதலாய் விளைதல் குறிக்கப்பட்டது; "முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்' (தேவா) என்ற திருவாக்கின் கருத்து முழுமையும் ஈண்டு வைத்துக் கண்டு கொள்க. **கசிந்து** - மனமுருகுதல்; தொடக்கம். **கண்ணீர் மல்குதல்**-கசிதலின் விளைவாகிய மெய்ப்பாடு; நாமங் கேட்டலால் கசிதலும் கண்ணீர் மல்குதலும் என்னை? எனின், தலைவனது பெருமையும் தனது சிறுமையும், அவனது பேரருளும், அவன் எளியனாய் வந்து "ஈர்த்தீர்த்தென் னென்புருக்கி" என்றபடி வலிய ஆட்கொள்ளும் தண்ணளியும், தன்னைக் கட்டி நின்ற பாசவிருளின் வலிமையும், அதனை நீக்கி அவன் அளித்த பேரின்பமும் ஆகிய இவையெல்லாம் திருவைந்தெழுத்தின் உள்ளீடாய் நிற்கும் தன்மைகளை அறிந்து நினைந்து நினைந்து எண்ணுதலால் வருவதென்க. **ஓதுவார்** - மானதம், மந்தம், உரை என்ற மூன்றனில் ஒன்றில் வைத்து என்பதாம். "விதியெண்ணு மஞ்செழுத்தே" (போதம் - 9);—**(2) நம்புவாரவர்** - மருந்தினிடத்தும் மருத்துவனிடத்தும் நம்பிக்கை யில்லையேல் நோய் நீக்கம் எளிதன்று என்னும் உண்மைக் குறிப்பு; மேல் "நம்பன்" என்பதும் காண்க. **வம்பு நாண்மலர் வார்மது** - புதிதின் அலரும் பருவமே மலர்களில் மணமும் தேனும் காண வருவன;—**(3) உள் நெக்கு** என்க; **ஆர்வம்** - பேரன்பு; **அக்கு மாலை** - உருத்திராக்க மாலை; செபமாலை; செபமாலை கொண்டே மந்திரம் எண்ணற்பால தென்பது விதி. **எண்ணுவார்**- மந்திரத்தின் உள்ளீடாகிய உருவத்தை வெளிப்பட மனத்திற் றோன்றக் காணுதல்; உரு வெளிப்பாடு என்பர்; இஃது அழுந்த எண்ணுதலால் வருவது. **தக்க** - வீடு பெறுதற்குத் தக்க; **நக்கன்** - சிவன் ; திகம்பரன்; எல்லாப் பொருள்களிலு மிருந்தும் ஒன்றிலும் பற்றுத ஞானச்சோதி; —**(4) இயமன் தூதரு மஞ்சுவர்** - பிறப்பு இறப்பில்லை என்ற பயன் குறித்தது; **இயமன் தூதுவர்** - மரண வேதனை. **அஞ்சுதல்** - தாக்காது ஒதுங்குதல்; **இன்சொலால்** - அன்பினாலே; **நியமம்** - தவறுமை;—**(5) கொல்வா ரேனும்...நீங்குவர்** - எல்லாப் பாவங்களையும் எரிக்கும் தன்மை. மேல் மூன்று பாட்டுக்களும் இக்கருத்தை வலியுறுத்துவன;இப்பாட்டினால் தீவினைகள் ஈட்டப்படும் நிலைகளும், மேல்வரும் பாட்டில் அவை பாவமாக மாறி வலிக்கும் நிலையும், அதன் மேற்பாட்டில் அவை பாவப் பயனாக மாறிப் பெரு நரக வேதனைக்குள்ளாக்கும் நிலையும் குறிக்கப்பட்டன; "விண்ணுற வடுக்கிய விறகின்" (தேவா) என்ற திருப்பாட்டின் கருத்தும் காண்க. **கொல்வாரேனும்** - எல்லாத் தீமைகளிலும் பெரிது உயிர்க்கொலை செய்தலாதலின் அதனை எடுத்துக்கூற ஏனைய எல்லாம் அடங்கும்; தீமை செய்தல் போலவே நன்மை செய்யாமையும் பாவமாதலின் **குணம் பல நன்மைக ளில்லாரேனும்** என்றார்; "மனவாக் காயத், திதமுயிர்க் குறுதிசெய்தல் **அகிதமற் றதுசெய்யாமை**" (சித்தி

-2-13). **எல்லாத் தீங்கையும் -** தீமை செய்தல் - நன்மை செய்யாமை என மனம் வாக்குக் காயம்பற்றி வருவனவாம். எல்லாத் தீங்குகளின் பயனாகி வரும் துன்பங்களையும்; **தீங்கு -** தீமைகளின் பயன்; ஐகாரம் நீக்கப்பொருளின் வந்தது; உம்மை - முற்றும்மை. **நல்லார் -** சிவஞானிகள்; நல்லார் -என்பர் என்க;—**(6) மந்தரம் -** மேரு; மிக்க உயர்ச்சி குறித்து நின்றது; "விண்ணுற வடுக்கிய" (தேவா) என்ற கருத்து. **பந்தனையவர் -** பாசபந்தப் பட்டவர்; **வினை சிந்தும்...செல்வமும் மல்கும் -** பாசநீக்கமும் சிவப்பேறும்; துன்ப நீக்கம் - இன்ப ஆக்கம். **செல்வம் -** சிவச்செல்வம்; முத்தித் திரு. **நந்தி -** இறைவர் பெயர்; வினைகளை நந்தச் செய்பவன். **நந்துதல் -** அழிதல்; குறைதல்;—**(7) நாடினர் -** நரகம் புகும் தீமைநெறியிற்சென்று அப்பயன் நுகர்தலே நிச்சயமாகி நின்றவர்; **உரைசெய் வாயினர் -** வாக்களவிலாயினும் என்பது;வாக்கின் செயல் ஏனை மனம் காயங்களின் செயலை முன்னும் பின்னும் முறைப்படி அவாவி நிற்கும் என்பது. **உருத்திரர் -** உருத்திர ருலகத்தின்கண்; ஏழனுருபு தொக்கது. **வரதன் -** வரங் கொடுப்பவன்;—**(8) அடுக்கல் -** மலை; **மலங்கி -** துன்பமடைந்து; **வாய்மொழி செய்தல் -** சொல்லுதல்; **நலங்கொள் -** நலம் கொள்வதற்குக் காரணமாகிய;—**(9) போதன் -** தாமரைப் போதில் இருப்பவன் - பிரமன்; **போது -**மலர்; **போதன கண்ணன் -** தாமரைக் கண்ணன்; **பாதம் - முடி**-எதிர் நிரனிறையாக முடியையும் பாதங்களையும் என்க; இரண்டனுருபுகள் தொக்கன. **அலந்து -** வருந்தி;—**(10) கஞ்சி மண்டையர் -** மண்டையோட்டில் கஞ்சி உண்பவர் - புத்தர்கள்; **கையில் உண் கையர் -** கையில் பிச்சையேற்றுண்ணும் கீழ்கள்; சமணர். **கையர் -** கீழ்மக்கள்; சொற்சிலேடை. **விஞ்சை -** வித்தை; ஏனை வித்தைகள் யாவும் பயனிலவாய் முடிந்து வேண்ட என்பது குறிப்பு;—**(11) சந்தை -** சந்தசு என்பர். **சந்தம் -** வேதங்களுக்குரிய இசைப் பாகுபாடு; இத்திருப் பதிகங்களும் இறைவர் சொன்ன வேதங்களேயாம் என்று முடித்துக்காட்டியவாறு. **"அருநெறிய மறைவல்லமுனி... திருநெறிய தமிழ்"** என்று முதற்பதிகத்திற் றொடங்கிக் காட்டியருளியதற்கேற்ப ஈண்டுக் கடைசித் திருப்பதிகத்துள் முடித்துக்காட்டி யருளினர். முன் கூறியவாறே **சந்தையாற் றமிழ்** என்றுகூட்டியுரைத்ததும் கருதுக. திருவைந்தெழுத்தே மறைகளின் தாற்பரியமும் திருப்பதிகங்களின் தாற்பரியமுமாம்; **பந்தபாசம் -** பந்தமும் அதன் மூலமாகிய மலங்களும்; **அறுத்தல் -** வலியில்லாமற், செய்தல். இது பதிகப் பயனும் சைவத் திறத்தின் உறுதிப் பயனுமாம்.

3148. (இ-ள்) சீர்பெருகு...தொண்டர் - சிறப்புப் பெருகும் திருநீலநக்க நாயனர், திருமுருகநாயனர் முதலாகிய திருத்தொண்டர்களும்; ஏர்கெழுவு...நம்பாண்டார் - தவவொழுக்கத்தின் பொலிவுமிகுந்த சிவபாதவிருதயரும் நம்பாண்டார் நம்பியும்; சீர் ஆர்தரு மெய்ப் பெரும்பாணர் - சிறப்பு நிறைந்த உண்மையொழுக்க முடைய திருநீலகண்டப் பெரும்பாணரும்; மற்று ஏனையோர் அணைந்துளோர் - மற்றும் ஏனையவர்களும் வந்து அணைந்தவர்களும்; பார் நிலவு... உடன்புக்கார் - உலகில் நிலவிய சுற்றத்தார்கள் சூழ்ந்து வரத் தத்தம் மனைவியர்களோடு உடனுகைப் புகுந்தனர்.

(வி-ரை) முதற்றொண்டர் - திருத்தொண்டத்தொகையிற் போற்றப்பட்ட திருத்தொண்டர்கள். இவர்களை முதலிற் கூறியது அச் சிறப்புப்பற்றி. பதினோராந் திருமுறை நூல்களைக் கோவைப்படுத்திய நம்பியாண்டார் நம்பிகள், நாயன்மார்களுள் இயலிசை வல்ல காரைக்காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன் நாயனர், சேரமான் பெருமாணயனர்

வேறு

3148. சீர்பெருகு நீலநக்கர் திருமுருகர் முதற்றொண்டர்
ஏர்கெழுவு சிவபாத விருதயர்நம் பாண்டார்சீர்
ஆர்திருமெய்ப் பெரும்பாணர் மற்றெனையோ ரணைந்துளோர்
பார்நிலவு கிளைசூழப் பன்னிகளோ டுடன்புக்கார். 1250

என்றிவர் பாடியருளிய நூல்களை அதனுள் முதற்கண் வைத்துக் கோவை செய்தமை இங்குக் கருதற்பாலது.

திருநாவுக்கரசு நாயனார், சிறுத்தொண்ட நாயனாரும், குங்குலியக்கலய நாயனாரும், இதன் முன்பே இறைவர் திருவடி சேர்ந்தருளினார் என்பது கருதப்படும்.

சிவபாதவிருதயர் - நம்பாண்டார் - மணமகனாரையும் மணமகளாரையும் விடாது பற்றார் சிறப்புரிமையும் அணுக்கராந் தன்மையும் பற்றித் தொண்டர்களை அடுத்து இவர்கள் வைக்கப்பட்டார்கள்.

மற்று எனையோர் அணைந்துளோர் - இவர்கள் வேற்றிடங்களினின்றும் திருமணங் காணவந் தணைந்தவர்கள்.

பார் நிலவு கிளை சூழ - கிளைஞர் என்ற தொடர்பு இவ்வுலகில் இப்பிறவி நிற்குமட்டில் நிலவுவதா யொழிவது; இதனை நீத்துச் சிவனுலகம் புகுமளவில் அத்தொடர்பு நிலவுவதன்று; பன்னியர் என்ற தொடர்பும் அவ்வாறேயாம்; ஆயினும், இங்குத் திருமணச் "சிறப்பினாலே" (3147) அத்தொடர்புபற்றியேயும் மணங்காணவந்த மக்கள் சோதியினுள் புகுந்தனர் என்பது; பார் நிலவியொழியும் தன்மையாயினும் என்க. இந்நிலை அச் சுற்றம் - பன்னி என்ற சார்புபற்றி அவ்வவரும் முன்செய்த வினைப்பயனாலாயது என்க. இயற்பகையார், இளையான்குடிமாறர், அமர்நீதியார், சிறுத்தொண்டர் முதலியோர்கள் மனைவி மக்களுடன் கூட இறைவருலகம் புகுந்த வரலாறுகள் இங்கு நினைவு கூர்தற்பாலன. **பார் நிலவு** - பார்மட்டிலளவுபடும். அன்றியும், கிளைஞர் - மனைவியர் - முதலாகிய தொடர்புடையோர் எவ்வளவு துணைப்பிரியாத அன்புடையவராயினும் (இறந்து பிறக்கும் இயல்புடைய) உலக இயல் மரணத்திலும் ஒரு சேரப் பிரியாது உடன் சாதல் என்பது இல்லை. ஈண்டு மீளாத நெறியாகி நித்தியானந்த உலகிற் சேரும் பெரு நிலையில் இவர்கள் பிரியாது சேர்ந்த தன்மை இத் திருமணச் சிறப்பினாலும் பிள்ளையாரது திருவடிச் சார்பினாலும் ஆகியது என்று எடுத்துக்காட்டுவார் **பார் நிலவு கிளைசூழப்பன்னியரோடு** என்றார் என்றலுமாம்.

பன்னியரோடு - என்றவிடத்தும், முன் "இவள்தன்னோடும்" (3140) என்றவிடத்திற்போலச் சமணரை மறுத்துப் பெண்பிறவியின் ஏற்றங் காட்டவந்த நிலை என்று இங்கு விசேடங் காண்பாருமுண்டு; அது சாலாமை முன் உரைக்கப்பட்டது. சமணர் கொள்கைக்கும் ஈண்டுக் கூறும் கருத்துக்கும் ஒரு பொருத்தமுமின்று. "**இந்த** வில்லொழுக்கம் வந்து **சூழ்ந்ததே**" என்றதில் சூழத்தகாத - சூழலாகாத என்ற குறிப்பும், ஈண்டுப் "**பார்நிலவு கிளை - பன்னியரோடு**" என்றதில் சிவனுலகம் புகும் நிலையிற் பற்றத்

3149. **அ**ணிமுத்தின் சிவிகைமுத லணிதாங்கிச் சென்ருேர்கள்
மணிமுத்த மாலைபுனை மடவார்மங் கலம்பெருகும்
பணிமுற்று மெடுத்தார்கள் பரிசனங்கள் **விணைப்பாசந்**
துணிவித்த வுணர்வினராய்த் தொழுதுடன்புக் கொடுங்கினூர். 1251

தகாத என்ற குறிப்பும் போதருதலானும், சைவ நெறியில் ஆண் பெண் என்ற பகுபாடு தவிர்த்து அந்தந்த வுயிர் செய்யும் கன்ம விசேடமே கருத வருதலானும் இவ்வுரைகள் எல்லாம் பொருந்தாமை யறிக.

பார் நிலவு என்றதனுல் **கிளை** என்றும் **பன்னியர்** என்றும் வரும் தொடர்பு பற்றிய உணர்வு இவ்வுலகிேேனாடு ஒழிவன என்பதாம். **வினைப் பாசந் துணிவித்த உணர்வினராய்** (3149) என்று மேற்கூறுதல் இவர் எல்லாருக்கும் பொருந்துவதாம் என்க. அதனை இறுதியில் வைத்துக் கூறிய கருத்துமது. அதன்மேற் (3150) பாட்டில் வருபவர்கள் உலகப் பற்றற்ற நிலையிற் கூடியவர்கள் என்பது.

மற்றனைவோர்—என்பதும் பாடம்.

1250

3149. (இ-ள்) அணிமுத்தின்...சென்ருேர்கள் - அழகிய முத்துச் சிவிகை முதலாக முத்துச் சின்னங்கள் முதலியவற்றைத் தாங்கிச் சென்றவர்களும்; மணி...மடவார் - மணிமுத்து மாலைகளை உரியவாறு அலங்கரிக்கும் பணி செய்த பெண்களும்; மங்கலம்...எடுத்தார்கள்- மங்கலம் பெருகவரும் பணிகளை யெல்லாம் எடுத்தேந்தி வந்தவர்களும்; பரிசனங்கள்- மற்றும் பணி செய்பவர்களும்; வினைப் பாசம்... ஒடுங்கினூர் - வினையால் வரும் பிறவிக்கேதுவாகிய பாசங்களையெல்லம் அறுத்த உணர்வுடையவர்களாய்த் தொழுதவாறே உடன்புகுந்து சோதிப் பொருளுள்ளே ஒடுக்கம் பெற்றனர்.

(வி-ரை) முன் பாட்டில் மணங் காணவந்த தொண்டர்களையும், மணத்தின் இன்றியமையாத மண மக்களின் பெற்ருேர்களையும், கிளைஞர் - பன்னிகளையும் கூறினூர்.

இப்பாட்டினுல் மணத்தில் வெவ்வேறு வகைப் பணி செய்யப்பெற்றமையால் அந்நிலையில் உடனிருக்கப்பெற்ற மாதர்களைக் கூறுகின்ருர்.

மேல்வரும் பாட்டில் தவநிலையினுலும், வழிபாட்டு நிலையினுலும், மற்றும் தெரியலாகாவகையில் சிவனது அருள்நிலையினுலும் மணத்தில்வந் தணைந்தார்களைக் கூறுவார்.

அணி தாங்கிச் சென்ருேர் - மாலைபுனை **மடவார் பணி முற்றும் எடுத்தார் - பரிசனம்** - என்று அவ்வவர் செய்த பணிகள் பற்றி உடம்பொடு புணர்த்திக் கூறியவாற்ருல் அவ்வவரும் அவ்வப் பணிகள்காரணமாக வரும் தொடர்பினுல் மணத்திற் சார்ந்து அப்புண்ணிய மேலீட்டினுல் சோதியிற் புகப்பெற்றனர் என்பது குறிப்பு.

அணிதாங்கி என்றதனுல் **அணி** என்பது ஈண்டு முத்துச் சின்னங்களும்

முத்துக்குடை - முத்துப்பந்தர் முதலியனவும் ஏனை விருதுகளும் என்ற பொருளில் வந்தது. **அணிதல்**- முத்தினை வரிசைப்படுதல்.

முத்தமாலை புனை மடவார் - புனை - அலங்கரிக்கும் பணி செய்த என்றதாம்; முத்துமாலைகளணிந்த பெண்கள் என்றுரைத்தனர் முன்னுரைகாரர்கள். ஈண்டுப் பெண்கள், அலங்கரிக்கும் பணி செய்தனர்; மணமகளாரை அணி புனைதலும் ஏனை மணவணி செய்தலும் அவர்களுக்குரியது என்பதாம். 3121 - 3127 ; 3128 - 3129 முதலியவை பார்க்க.

மங்கலம் பெருகும் பணி முற்றும் எடுத்தார்கள் - இவை அட்டமங்கலம் எனப்படும் விளக்கு, நிறைகுடம், கண்ணாடி, கவரி, தோட்டி, முரசு, பதாகை, இணைக்கயல் என்பனவையும், சிவபெருமானுக்குச் சிறப்பாக ஆகமங்களுள் எடுத்தோதும் பிறவுமாகிய எல்லாம்; **முற்றும்** என்றதன் குறிப்புமது.


பரிசனங்கள் - அட்டிற்றொழில் முதலாக ஏனை எல்லாவகைப் பணிகளையும் செய்யும் ஏவலாளர்கள், "அமுது சமைத்தளிக்கும் **பரிசனம்**" (3329 = ஏயர் - புரா - 175) "திருமடத்தி லமுதாக்குவார்" (2465).

வினைப்பாசம் துணிவித்த உணர்வினராய் - வினையின் காரணமாய் வரும் பிறவியும், அதனால் வரும் பற்றுக்களும், அவற்றுக்கெல்லாம் மூலகாரணமாகிய பாசம் என்னும் மூலமலம்(ஆவணம்) ஆகிய எல்லாவற்றையும் அறவே ஒழித்துவிட்ட உணர்வு ஒன்றே கொண்டவர்களாகி; இது முன்கூறிய அனைவர்பாலும் கூட்டநின்றது.

தொழுது-பிள்ளையாரையும் இறைவரையும் தொழுதுகொண்டவாறே; பாசந் துணிவித்தபோது இறைவர் சார்பொன்றே நிகழ; "மெய்ஞ்ஞானத் தாணுவினோடத்து விதம்" சார்ந்து என்க. **தொழுது** - தொழுதமையால் என்று காரணப்பொருள்பட வுரைத்து இதுவரையும் பிள்ளையாருக்கும் தேவியாருக்கும் ஏவற்பணி செய்து வழிபட்ட காரணத்தினால் உடன்புக்கனர் என்றலுமாம்.


உடன் புக்கு - சிவாத்துவிதானந்த நிலையில் **உடனாகச்** சோதியினுள்ளே புகுந்து. **ஒடுங்கினார்** - மாசங்காரத்தில் உயிர்கள் சங்கார காரணனாகிய சிவனுள்ளே மாயை பற்றுக்கோடாக ஒடுங்குவன என்பது ஞானநூல் முடிபு. "ஒடுங்கி" என்பது இறைவருக்குப் பெயராய் வருவதும் காண்க (போதம்-1). *1251*

3150. (இ-ள்) ஆறுவகை...அருந் தவரும் - சைவ நெறியின் அகச் சமயங்களாகிய அறுவகைச் சமயநெறியினும் நின்ற அருந்தவத்தார்களும்; அடியவரும்- திருத்தொண்டர்களும்; கூறுமறை முனிவர்களும் - வேதவிதி யொழுகும் முனி புங்கவர்களும்; கும்பிடவந் தணைந்தாரும் - கும்பிடும் கருத்துடன் வந்து கூடியவர்களும்; வேறு... வந்தாரும் - முன் சொன்னவாறுள்ள எக்காரணமும் அறிய முடியாதவாறு திருவருள் வசத்தாலே வீடு பெறுதற்கு வந்தணைந்தவர்களும்; ஈறில்...புக்கதற்பின் - ஈறு இல்லாத பெரிய சிவச் சோதியினுள்ளே அனைவரும் புகுந்த பின்னர்,



திருப்பெருமணநல்லூர் - திருஞானசம்பந்தரும், தேவியாரும்.

பாட்டு :- 3151



திருப்பெருமணநல்லூர் - உற்சவர்

பாட்டு :- 3151




திருப்பெருமணநல்லூர் திருக்கோயில்

பாட்டு :- 3151




திருப்பெருமணநல்லூர் - திருஞானசம்பந்தரும், தேவியாரும்.

பாட்டு :- 3151



திருப்பெருமணநல்லூர் - உற்சவர்

பாட்டு :- 3151



திருப்பெருமணநல்லூர் திருக்கோயில்

பாட்டு : 3151

3150. **ஆறுவகைச்** சமயத்தி **லருந்தவரு** மடியவருங்
கூறுமறை முனிவர்களுங் கும்பிடவந் தணைந்தாரும்
வேறுதிரு வருளினால் வீடுபெற வந்தாரும்
ஈறில்பெருஞ் சோதியினு **ளெல்லாரும் புக்கதற்பின்,** 1252

(வி-ரை) ஆறுவகைச் சமயத்தி லருந்தவர் - இவர்கள் அகச்சமயத்தினர் என்று சைவ சோபான முறையில் வகுக்கப்படுவர். இவர்களியல்பு முன் "அறுவகை...தவத்தி னுள்ளோர்" (3101) என்ற இடத்தில் விரிக்கப்பட்டது. "எத்தவத்தோர்க்கு மிலக்காய் நின்ற வெம்பெருமான்" (பிள் - தேவா - புகலி - வீழி- நட்டபாடை (10).

அடியவரும் - இவர்களியல்பும் முன் (3101) "மறுவெறு...தொண்டர்" என்று உரைக்கப்பட்டமை காண்க.

கூறுமறை முனிவர்கள் - மறை முனிவர்கள் - மறையவர்களுள்ளே சிறந்த வைதிக நெறி ஒழுகும் நால்வகை ஆச்சிரமங்களில் நின்ற பெரியோர்கள்.

கும்பிட வந்து அணைந்தார் - இங்கு முன்கூறிய மூவகைப் பாகுபாட்டினுள் அமையாது கும்பிடுதற் கென்றெண்ணி மணச் சிறப்பில் வந்து கூடி அணைந்தவர்கள்; இவர்கள் பிள்ளையாரது மண எழுச்சியில் சீகாழியினின்றும் உடன்கூடிப் போந்தவர்களும், வழி இடையிலும் திருநல்லூரிலுமாக வந்து கூடியவர்களுமாம். முன்சொன்ன மூவகையினரும் கும்பிட வந்தவர்களேயாவர்; அவர்களோடு அவ்வகையுட் பாகுபாடு பெறுதவர் என்பார் இவ்வகையை இறுதியில்வைத் தருளினார்.

வேறு திருவருளினால் வீடுபெற வந்தோர் - வேறு - முன் இரண்டு பாட்டுக்களினும், இப்பாட்டினில் முன்னரும் கூறிய வகைகளில் அல்லாது வேறாகியவர்கள். இவர்கள் அங்கு வந்து சேர்தற்குரிய காரணம் வேறு ஒன்றும் வெளிப்படையாகக் காண்பதற்கில்லை; ஆயினும் அவர்களும் வந்தணைந்து முன்கூறிய ஏனையோர்களுடன் சோதியினுட் புகுந்து வீடுபெற்றனர். ஆதலின் இறைவர் திருவருளே அவர்களை வரச்செய்து வீடு பெறுவித்தது என்பார் **திருவருளினால் வீடுபெற வந்தோர்** என்றார்.

ஈறில் பெருஞ்சோதி - "ஆதியு மந்தமு மில்லா வரும்பெருஞ் சோதி" என்பது திருவாசகம்(திருவெம்பாவை); இதனையே "அந்தமில் சிவன்றாள்" (3140) என்று முன் கூறியருளியது காண்க; அனந்தேசர் முதலாகிய பதமுத்திகளின் அதிபர்களன்றி முழுமுதலாகிய பரசிவம், தொடக்கமும் நிலையும் இறுதியுமில்லாமலும், தனக்கு மேற்பட்ட சோதியுள்ள பொருள் வேறொன்றில்லாமலும் உள்ளது; இஃது அறிவொளிப் பிழம்பு; ஏகதேசத்தில் தாமும் சோதிகளேயாயினும் பதமுத்திக் கடவுளர்கள் காலாந்தரத்தில் முழுமுதலாகிய சிவத்துள் ஒடுங்குதலின் ஈறுடையவர்களேயாவர். இதுபற்றிக் "காரணபங் கயமைந்தின் கடவுளர்தம் பதம்கடந்து, பூரணமெய்ப் பரஞ்சோதி பொலிந்திலங்கு நாதாந்தம்" (சித்தத்தைச் - சிவன்பாலே வைத்தார் - புராணம்-1) என்பது காண்க.

எல்லாரும் - முற்றும்மை. அங்கு நின்றவர் அனைவரும் மேலும் தூரத்தே நின்றும் தேடிக்கொணர வந்தர்களுமாகிய எல்லாரும். உடன் சாரலாகாத காரணத்தால் ஒதுங்கிநின்ற

3151. **காதலியைக் கைப்பற்றிக் கொண்டுவலங் கொண்டருளித்**
தீதகற்ற வந்தருளுந் திருஞான சம்பந்தர்
நாதனெழில் வளர்**சோதி நண்ணியத னுட்புகுவார்**
போதநிலை முடிந்தவழிப் புக்கொன்றி யுடனானார். 1253

பெண் ஒருத்தியார் அழைக்கப்பெற்றுச் சோதியினுட் புகுந்தனள் என்று தலவரலாறு பேசும். *1252*

3151. (இ-ள்) காதலியை...வலங்கொண்டருளி - தேவியாரைக் கைப்பிடித்துக் கொண்டவாறே அப்பெருஞ் சோதியினை வலமாக வந்தருளி; தீதகற்ற வந்தருளும் திருஞான சம்பந்தர் - உலகில் தீமையைப் போக்கிச் சைவம் விளங்க வென்றே வந்தருளிய திருஞான சம்பந்தப் பிள்ளையார்; நாதன்...புகுவார் - இறைவரது அழகியதாகிய வளர்ந்தோங்குகின்ற சிவச் சோதியினை அணைந்து அதனுள்ளே புகுவாராய்; போத நிலை...உடனானார் - போதம் தழுவும்நிலை முடிந்தமையினாலே உள்புகுந்து ஒன்றாகச் சேர்ந்து சிவானந்தாத்துவிதமாகிய உடனாந் தன்மையிற் பரமுத்தியைத் தலைக்கூடியருளினார்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) காதலி - தேவியார் - மனைவியார், பாச சம்பந்தமான காதலின் சார்பு பற்றிய காரணத்தாலே **காதலி** என உலகியலில் வழங்கும் காரணப்பெயர் ஈண்டு இடுகுறியளவாய் நின்றது, இங்குக் **காதல்** என்னும் பாசப் பற்றுப் பிள்ளையார்பால் விளைநிலம் இல்லாமையால் என்க; மறைவழக்கம் உலகியலில் நின்று நிலவுதல் காட்டுமளவில் நாடகம்போல் இங்கு இத்திருமணம் நிகழ்ந்தது என்பது முன் உரைத்தவாற்றால் அறியவுள்ளது (*3140*);

திருவருள் ஆணைவழிப் பிள்ளையார் **காதலியைக் கைப்பற்றிக் கொண்டு** - இவ்வுலகை விட்டு நீங்கினாரேயன்றிப் பெண்ணுடன் வாழ்தலை வெறுத்து நீங்கினாரில்லை என்று இங்கு விசேட ஆராய்ச்சி செய்வாருமுண்டு. அத்தகைய உலகியல் ஆராய்ச்சிகள் எழுவதற்கு இங்கு இடமே யில்லை என்க. பெண்ணுடன் உலகர் வாழ்ந்து இல்லற நிலை நின்று தாம் எடுத்த பிறவியில் எஞ்சிய கருமப் பகுதிகளை அனுபவித்துக் கழிவு செய்து சிவபுண்ணிய மேலீட்டினால் இறைவனை யடைவது உலகியல் நியதி; இவையெல்லாம் பாசமுடைய ஏனையோர்பால் செல்லுமேயன்றிப் பாசம் மற்று இலாராகிய பிள்ளையாரிடத்தும், இப்புராணத்துள் வரும் பெரியோர்பாலும் செல்லத்தக்கனவல்ல. பிள்ளையார் பெண்ணை வெறுத்தாரிலர் என்பதுண்மை; ஆயின் விரும்பினாருமல்லர் என்பது கண்கூடு. உலகர்க்கு மனைவியுடன் வாழும் இல்லறவாழ்வு இறைவனூல்களுள் விதிக்கப்பட்டது. அது மக்கட்குப் பாசநீக்கத்தின்பொருட்டு வேண்டப்படுவன என்பதனைப் பிள்ளையார் முன்னர் திருமருகலில் வணிகப் பெண்ணுக்கு, "நானிலத்தி லின்புற்று வாழும்வண்ணம்...மணம் புணரும் பெருவாழ்வு வகுத்துவிட்ட" அருளிப்பாட்டினாலும் அறியலாம்(*2381*); பார்வதியம்மையார் திருமணம், தெய்வயானை யம்மையார் திருமணம் என்பனவற்றின் உள்ளுறைபோல இங்கும் உலகினர்க்கருளும் அளவுமட்டும் கருத்துட் கொள்ளத்தக்கது;

அன்றி மேற்செல்வதெல்லாம் பொருந்தாவென்க. இந்த இல்லொழுக்கம் வந்து சூழ்ந்ததே என்றதனல் உலகியலில் வரும் இல்லறத்தைப் பிள்ளையார் சார்தலை வெறுத்தொதுக்கினர் என்றது அறியப்படும்.

வலங்கொண்டருளி - திருமணத்தில் எரிவலங்கொள்ளும் சடங்கு காட்ட வேண்டி எழுந்த பிள்ளையார் "விருப்புறு மங்கி யாவார் விடையுயர்த் தவரே யென்று" (3139) கோயிலை நோக்கி வந்தாராதலின் இங்குப் பெரிய சோதியாய் நின்ற இறைவரது எரியுருவத்தினை வலங்கொண் டருளினர்; அச் சடங்கினை நிறைவேற்றிக் காட்டியருளியபடியும், இறைவரை வலங்கொண்டு ஏத்திச் சோதியினுள்ளே புகும் விதியின்படியும் காண்க. இதனாலும் இத்திருமணம் உலகியல் நிலையினின்று ஆயப்படுவதொன்றன்று என்பது.

தீதகற்ற வந்தருளும் திருஞான சம்பந்தர்-தீதகற்றல்-"பரசமய நிராகரித்தல்"; பரசமய நிராகரிப்பும் திருநீற்றின் ஆக்கமும் ஆகிய இரண்டுமே பிள்ளையாரின் திருவவதார உள்ளுறையாவன (*1917-1921-1924* முதலியவை பார்க்க); இங்குத் தீதகற்றுதல் ஒன்றுமே கூறப்பட்டதென்னை? எனின், நோய் நீங்கினவழிச் சுகம் இயல்பிலே பின்பற்றி வரும் என்னுமுறைப்படி சைவத் திருநீற்று நெறிக்குப் பரசமயங்களால் நேர்ந்த இடையூறுகள் அகற்றப்பட்டபோது நீற்றின் விளக்கம் இயல்பின் விளைவதாம் என்க. சைவநெறி என்பது இறைவரது மெய்ஞ்ஞான நெறியாதலின் அஃது அழிக்கலாகாப் பொருளாம். விளக்கினைக் குடத்தை யிட்டு மறைத்தல்போலச் சைவநெறி விளங்காமை மாத்திரையே பரசமயங்க ளியற்றிய தீங்கு; மறைவுபடுத்திய குடத்தை அகற்றியபோது விளக்குத் தானே விளங்குதல் போலவும், மேகம் நீங்கியபோது சூரியன் ஒளி விரிதல் போலவும் காண்க; ஆயின் முன்னர் இரண்டனையும் கூறியது உலகினருக்கு விளக்கமும், மனவெழுச்சியும், ஊக்கமும் விளைத்தற்பொருட்டுத் தூண்டியறிவுறுத்தல் குறிக்க என்க.

தீதகற்ற வந்தருளும்-வருதல்-திருவவதரித்தல்; ஏனை மக்கள் வருதல்போலக் கரும வயத்தாலன்று என்பது வற்புறுத்தப்பட்டது.

திருஞான சம்பந்தர் - என்ற பெயராற் கூறியவாற்றானும் அந்நிலை விளக்கப்பட்டது. முழுதும் சிவஞானமே நிறைவாயின மூர்த்திக்கு உலகியலில் ஒருபற்றும் பற்றாமையும் உணர்த்தப்பட்டமை காண்க. ஈண்டுச் சரித நிறைவாதலின் அத்திருப்பெயராகிய "நாம மந்திர"த்தைக் கூறித் துதித்துஅருச்சித்து நிறைவாக்கிய குறிப்புமாம். "ஞானசம் பந்தரெனு நாமமந் திரமும் சொல்ல" (*2619*).

நாதனெழில் வளர்சோதி -நாதன் - இறைவர் - முழுமுதல்வர்; தனக்கேயுரிய இறைமைக் குணத்தால் இவ்வாறு இவர்களை ஆட்கொண்டு திருவடிக்கீழ்க்கொள்ள இவ்வொளியுருவெடுத்தார் என்பது; "நாதனே" (*3143*); "நாதனுமம்" (தேவா). **எழில் வளர் சோதி-எழில்** - காட்சியானும் பயனாலும் வரும் அழகு; "செந்தீயின் உருவாளன்" என்பதன்றிச் சுடுதல் முதலிய செயலானன்று என்க; "தண்ணிழலாம் பதி" "திருவடி நீழல்" என்பன காண்க. **வளர்** - வளர்கின்ற - என்றும் அழிதலில்லாத; "ஈறில் பெருஞ்சோதி" (*3150*),

நண்ணி-சோதியினை அணுகி; அணைந்து; **அதனுள்**-சோதி வாயிலினுள்ளே.

புகுவார்-புகுவாராகி; புகும் செயலை மேற்கொண்டு; முற்றெச்சம். **புகுவார்** - புக்கொன்றி உடனானார் என்று கூட்டுக.

போதநிலை முடிந்தவழிப் புக்கொன்றி உடன் ஆனார் - போதநிலை முடிந்தவழி என்றது காண்பான் - காட்சி - காட்சிப்பொருள் என்ற மூன்றுணர்வுகள் முன்னைய விரண்டும் தோன்றாமல் ஞேயமொன்றே தோன்றநிற்கும் நிலையில் நிற்கும் என்பதாம்; திருவடி மறவாது அதனுள்ளே அடங்கித் தானற்று நிற்கும் நிலை; சிவானந்த நிறைவு. ஒன்றி - இரண்டற்று; **உடன் ஆதல்** - ஒன்றாகாமல் இரண்டாகாமல் ஒன்றுமிரண்டு மின்றாகாமல் பிரிவறியாது நிற்கும் நிலை. முன் கூறியவர் எல்லாரும் **புக்கார் - புக்கொடுங்கினார்**-என்ற ஆசிரியர், இங்குப் பிள்ளையார் **போதநிலை முடிந்தவழிப் புக்கொன்றி உடனானார்** என்றதென்னை? எனின், பிள்ளையார் முன்னை நிலையில் (பண்டு) திருவடி மறவாப் பான்மையோராய் முத்த நிலையில் இருந்தவர்; அப்போது அவருக்குப் போதநிலை - அஃதாவது சிவனையன்றி வேறு நிலைகளும், யானறிந்தேன் அறிகின்றேன் என்பது முதலாகிய நிலைகளும், ஏனை உலக பதார்த்தங்களும், உலகமும் **போதப்படா** - உணர்ச்சிக்கு வாரா; அதன்பின் வினையாலன்றித்திருவருளால் வந்தபோது மூவாண்டு வரை ஒரோர்கால் முன்னைநிலை நினைவுக்கு வந்தபோது வெருக்கொண்டாற் போலக் குறிப்பு அயலாய் அழுதருளினர். மூவாண்டில் ஞானமுண்டருளிய பின் தாம், பரமே பார்த்திருந்தபடி முன்னையிற்போலவே சீவன்முத்த நிலையிற் சரித்தனர். ஆனால் உலகரின் பொருட்டுத்திருவருளால் வந்தமையின் உலகமும் உலகர் நிலைகளும் புலப்பட்டன; ஆயினும் வாசனைமலமும் அற்ற பெருமானாதலில் அவ்வுலகத் தோற்றங்கள் பிள்ளையார்பாற் சாராது வினைக்கு முளையாகாதபடி யொழிந்தன. "ஐயனேயஞ்ச லென்றருள் செய்யெனை"; "ஈவ தொன்றெமக் கில்லையேல்" முதலிய விண்ணப்பங்க ளெல்லாம் பிள்ளையாருக்கு உலக பந்தம் விளையாது பிறர் பொருட்டே நிகழ்ந்தொழிந்தன. "உடையாய் தகுமோ விவளுண் மெலிவே", "மங்கையை வாட மயல்செய்வ தோவிவர் மாண்பே", "அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்", எமைத்தீண் டப்பெறு திருநீல கண்டம்", "காசு நல்குவீர்", "கதவந் திருக்காப்புக்கொளும்" என்பன முதலாக வந்தனவெல்லாம் பிறர் துன்பங் கண்டிரங்கிய நிலையில் உலகின் பொருட்டு எழுந்தனவேயன்றித் தம்பொருட்டன் றாதலின் பற்றுக்களாக விளையாதொழிந்தன. இப்போது இவ்வாறு தாம் வந்தருளிய உள்ளுறை நிறைவாகியதனால், அவ்வாறு உலகமும், அதன்பொருட்டுத் தாமும் இறைவரும் பிரித்து அறியவரும் நிலையும் இன்றாதல் குறிக்கப் **போதநிலை முடிந்தவழி** என்றார். **போதம்** - சீவபோதம் என்பாருமுண்டு.

புக்கு ஒன்றுதல் - முன்னைய திருவடி மறவாத ஒன்றுபட்ட நிலையடைதல்; இடையில் உலகர் பொருட்டுப் பூதமுதல் நாதம் வரையில் தோன்றிய உலகத் தோற்றமாகிய பிரித்தறியு முணர்வு தோன்றாதொழிய முன்போலவே உள்ள நிலையடைந்தனர் என்க. இது பிள்ளையார் சோதியிற் புகுந்து பெற்ற நிலைக்கும், ஏனையோர் பெற்ற நிலைக்கும் உள்ள வேறுபாடு. எல்லாரும் புக்கதற்பின் தாமும் தேவியாரும் புக்கது பிள்ளையாரது திருவருளின் பெருமையினை மேலும் விளக்குவதாகும்.

3152. **பிள்ளையா ரெழுந்தருளிப் புக்கதற்பின்** பெருங்கூத்தர்
கொள்ளுநீ டியசோதிக் **குறிநிலையவ் வழிகரப்ப**
வள்ளலார் தம்பழைய மணக்கோயி ரேன்றுதலுந்
தெள்ளுநீ ருலகத்துப் **பெற்றிலார் தெருமந்தார்.** 1254

காதலி - இவ்வம்மையார் பெயர் **சொக்கியார்** என்பது கல்வெட்டுக்களிற் காண்பதென்றும் கூறுவர்.

வலஞ் செய்தருளி—என்பதும் பாடம். *1253*

3152. **(இ-ள்)** பிள்ளையார்...பின் - பிள்ளையார் சென்றருளி உட்புகுந் துடனாகிய பின்னர்; பெருங்கூத்தர்...கரப்ப - பேரானந்தக் கூத்தராகிய இறைவர் இவ்வாறு மணத்தில் வந்தோரையும் பிள்ளையாரையும் முத்தியில் உடனாகக் கொள்ளும் அளவும் நீடியிருந்த சோதிக் குறிநிலையும், அதன் உட்புகக் காட்டிய அந்த வழியாகிய வாயிலினையும் மறையும்படி செய்ய; வள்ளலார்...தோன்றுதலும் - சிவலோகத் தியாகேசரது பழைய பெருமணக் கோயில் தோற்றப்படுதலும்; தெள்ளுநீர் ...தெருமந்தார் - தெளிந்த நீருடைய உலகத்தில் இந்தப் பேற்றினைப் பெறுதவர்கள் மயங்கி வருத்தினார்கள்.

(வி-ரை) எழுந்தருளி - சோதி கண்டு, தாம் நின்று, நமச்சிவாயத் திருப்பதிகம் பாடிய நிலையினின்றும் சோதியை நண்ணி. **கொள்ள** - தமக்குள் சேர்த்து ஒடுக்கிக்கொள்ள.

சோதிக் குறிநிலை அவ்வழி - சோதியாகிய இறைவரது குறிநிலையும், அதனுள் பக்குவான்மாக்கள் யாவரும் வந்தடையும்படி காட்டிய அவ்வழியும். **வழி**-வாயில்; சோதியின்கண் தோன்றும் குறிநிலையாகிய வழி என்றலுமாம்.

கூத்தர்...கரப்ப. கூத்தர் - இறைவர்; "முத்தி, நான்ற மலர்ப்பதத்தே நாடு" என்றபடி இங்கு முத்தி தந்தருளியது இறைவரது தூக்கிய திருவடியே எனப்படும். திருவடி தூக்கலே கூத்தாகும், ஆதலின் ஈண்டுப் **பெருங்கூத்தர்** என்றார்.

வள்ளலார் - இங்கு, இச்சரித நிகழ்ச்சியினாலே - சிவலோகப் பதவியினைத் திறந்து யாவரும் கொள்ளும்படி அள்ளியிட்டதனால் இவருக்கு சிவலோகத் தியாகர் எனப் பெயர் வழங்கும். சிவலோகத்தினை வரையாது கொடுப்பவர்.

பழைய மணக்கோயில் - பழய - சோதியும் வாயிலும் காட்டுதற்கு முன் இருந்த; **மணக்கோயில்** - பெருமணம் என்னும் கோயில்.

தெள்ளும் நீர் உலகத்து - தெள்ளும் நீர் - தெளியும் நீர்க்கடல் சூழ்ந்த என்க. **தெள்ளு நீர்** - இதன் உண்மை தெளிந்துகொள்ளும் நீர்மை - பண்பு - உடைய என்றலுமாம். **பெற்றிலார்** - முன் கூறியபடி பெறும் பேறில்லாத உலகவர்.

தெருமந்தார்-தெருமருதல் - ஒன்றும் தோன்றாமல் மயங்கி வருந்துதல்.

கொள்ளநீடிய—பேறில்லார்—என்பனவும் பாடங்கள். *1254*

3153. கண்ணுதலார் திருமேனி யுடன்கூடக் கவுணியனார்
நண்ணியது தூரத்தே கண்டுநணு கப்பெறா
விண்ணவரு முனிவர்களும் விரிஞ்சனே முதலோரும்
எண்ணிலவ ரேசறவு தீரவெடுத் தேத்தினார். 1255

3153. **(இ-ள்)** கண்ணுதலார்...நண்ணியது - இறைவரது திருமேனியுடன் கூடக் கவுணியர் பெருமானார் சென்று சேர்ந்ததனை; தூரத்தே கண்டு - தாம் தாம் நின்ற தூரமாகிய இடத்தினின்றபடியே கண்டனர்; நணுகப் பெறா - வந்து அடையும் பேறு பெறமாட்டாத; விண்ணவரும்...ஏத்தினார் - தேவர்களும் முனிவர்களும் பிரமதேவனே முதலாகிய பெருந்தேவர்களும் ஆகிய எண்ணிலாதவர்கள் தங்கள் துக்கம் தீரும்படி எடுத்துத் துதித்தார்கள்.

(வி-ரை) கண்ணுதலார் - நுதற்கண்ணை யுடையவர். நுதற்கண் அக்கினிக் கண்ணுதலானும், கண்டு "விருப்புறு மங்கி யாவார்" (3139) என்று பிள்ளையார் திருவுள்ளங்கொண் டருளியதற்கேற்ப அங்கி யுருவாகிய பேரொளிச் சோதியாக இறைவர் நின்றருளியமையாலும், அவ்வாறு நின்று அருள் நோக்கம் செய்து வந்தோர் அனைவரையும் வீடுபேறு அருளி ஒடுக்கிக் கொண்டமையாலும் இக்குறிப்பெல்லாம் பெற இவ்வாற்றால் கூறினார். **திருமேனி** - சிவஞானச் சோதியாகிய திருமேனி.

உடன்கூட - "அத்துவி தானந்த வகண்டபரி பூரணத்தில் நித்தியமாய் வாழ்ந்து" இரண்டற நிற்க; "போதநிலை...உடனானார்" (3151) என்ற நிலையில் நிற்க.

தூரத்தே கண்டு நணுகப் பெறா - தூரத்தேயிருந்து கண்டமையால் பக்கத்தில் வந்து அடையும் பேறு பெறாத; வந்து அடையும் பக்குவமின்மையால் தூரத்தில் நின்றனர். **கண்டு** - கண்டாராயினும் என்க; காணப்பெற்றா ராயினும் நணுகப் பெற்றாரிலர் என்பது. **தூரத்தே** என்றதனால் கன்மபரிபாகம் இல்லாமையால் அகல நின்றார் என்பது குறிப்பு. **தூரம்** - விசும்பு; "விசும்பின்மீது" (3102) - (3103);

மண எழுச்சியுடன் கூடி மணங்காண வந்தோர் கூட்டத்தினராக முன் (3097 - 3102) கூறப்பட்டவர்களுள் சோதியினுட் புகுந்தோர்களை யெல்லாம் வகைப்படுத்தி முன்னர்க் (3148-3150) கூறினார். அவ்வாறு அவர்கள் உடனாகிய பின் சோதி வாயில் கரந்ததனைக் கூறினார். அதன்பின் அப்பேறு பெறாத உலகினரை (3152) முன்பாட்டாற் கூறி இப்பாட்டினால் தூரத்தே கண்டு நின்றும் பேறு பெறாத விண்ணவர் முதலியோரைக் கூறும் கவிநயமும் அமைதியும் கண்டுகொள்க.

ஏசறவு - துக்கம்; விருப்பம் என்றலுமாம். "திருவேசறவு" என்ற திருவாசகப் பகுதியின் கருத்துக் காண்க. "தாமுற்ற வேசறவைத் தோழியர்முன் பேசுவார்" (11-ம் திருமுறை - ஆளு - திருவுலா - 138). **ஏசறவு தீர** - விருப்பம் நிறைய; ஆசை தீர என்றலுமாம்.

முதலானார் எண்ணியவ ரேசறவு—என்பனவும் பாடங்கள்.1255

3154. **அருந்தமிழா கரர்சரிதை யடியேனுக் கவர்பாதந்**
தரும்பரிசா லறிந்தபடி துதிசெய்தேன்; ருரணிமேற்
பெருங்கொடையுந் திண்ணனவும் பேருணர்வுந் திருத்தொண்டால்
வருந்தகைமைக் கலிக்காம ஞர்செய்கை வழுத்துவேன். 1256

3154. **(இ-ள்)** அருந்தமிழாகரர்...துதிசெய்தேன் - அரிய தமிழாகரராகிய ஆளுடைய பிள்ளையாரது திருச்சரிதத்தினை அடியேனுக்கு அவருடைய திருவடிகள் அறிவித்துத் தந்தருளிய பண்பினளவு அறிந்தவாறே துதிசெய்து கூறினேன்; தரணிமேல்... வழுத்துவேன் - இனிப் பூமியின்மேல் பெரிய கொடையும், உறுதிப்பாடாகிய வலிமையும், பேருணர்வும் திருத்தொண்டு செய்த காரணத்தால் பெற்ற பண்புடைய ஏயர்கோன் கலிக்காம நாயனார் செய்த திருத்தொண்டின் திறங்களைத் துதிக்கத் தொடங்குவேன்.

(வி-ரை) இதனால் ஆசிரியர் தமது நியமப்படி இதுவரை கூறிவந்த சரிதத்தை முடித்துக்காட்டி, இனி மேல்வரும் சரிதத்துக்குத் தோற்றுவாய் செய்தருளுகின்றார்.

அருந் தமிழாகரர்-ஆகரம்-உறைவிடம்; பிறப்பிடம் என்றலுமாம். **தமிழாகரர்** - தமிழுக்குறைவிட மானவர்; **அருந்தமிழ்** - பிறவிப்பிணி நீக்கி வீடுபேறளிக்கும் சிறப்பு அருமைப்பாட்டினைத் தனதுரிமையாகக் கொண்ட தமிழ். "இருதாளின் புணை" (1981) என்றவிடத்தும், பிறண்டும் உரைத்தவை எல்லாம் இங்கு நினைவு கூர்தற்பாலன. **அருந் தமிழாகரர்** என்றதொரு தன்மையினாலே முன் கூறியபடி பிள்ளையாரது சரித முழுமையும் குறிப்பிற் பெறவைத்த தெய்வக் கவிநலம் காண்க. என்னை? பிள்ளையாரது தமிழ் அவர் சிவஞானம் பெற்றமையால்போந்து **"ஞானத் தமிழ்"** என்றும் அடைந்தோரது பிறவி நீக்கும் தன்மை வாய்ந்ததென்றும் பேசப்படுவது; "எனதுரை தனதுரையாக" (தேவா) என்றபடி அஃது இறைவர் திருவாக்காகிய வேத சிவாகமங்களோ டொப்பாகிச், சைவத்தின் முடிந்த பயன்களாகப் பேசப்படும் பாச நீக்கமும் சிவப் பேறுமாகிய இருபெரும் பயன்களையும் தர ஏதுவாய் விளங்குவதற்கேற்பப் பரசமய நிராகரிப்பும் திருநீற்றி னுக்கமும் அருளியது; பிள்ளையாரது சரிதத்தினுள் வரும் வரலாறுகள் எல்லாம் இவ்வகையினுள் அடங்குதல் காண்க.

அடியேனுக்கு - அறிவித்தாலன்றி அறியும் ஆற்றலில்லாத அடியேனுக்கு என்பது; தொடக்கத்திற் **"பாதமலர் தலைக்கொண்டு"** (1899) என்றபடியே, ஈண்டு முடிவிலும், அவருடைய திருவடிகளைத் தலைமேற் சூடிய புண்ணியத் துணை காரணமாக என்று காரணக் குறிப்புப் பெற அடியேனுக்கு என்று ஓதினார்.

அவர் பாதம் தரும் பரிசால் - "பாதமலர் தலைக்கொண்டு" என்று மேற்கொண்ட அத் திருப்பாதம் என அகரச்சுட்டு வருவிக்க. பாதமே அறியாமையை நீக்கி அடியார்க்கு ஞானத்தை அருளுவது என்றலுமாம்; "உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்" (முருகு.)

தரும் பரிசால் அறிந்தபடி - தருதல் - அறியத் தருதல்; அறியும்படி செய்தல். **தரும் பரிசால்** - முற்றும் அறிதல் எனது ஆற்றலுக்கு மேற்பட்டதாதலின் எனது குறைவுடைய சிறு பண்புக்கேற்ப அறிவிக்க அறிந்தவாறே; அறிந்த பொருளை அறிந்த அளவில்.

துதி செய்தேன் - வழுத்துவேன் - துதி செய்தேன் என்ற இறந்தகாலத்தினால் இதுவரையும் கூறிய சரிதம் என்றும், **வழுத்துவேன்** என்ற எதிர்காலத்தினால் இனிக் கூறும் சரிதம் என்றும் உணர்த்தியவாறு. **இப்புராணத்துள் சரிதங் கூறுதல் என்பது துதி செய்தலே** யன்றி பிறிதில்லை என்றவாறு.

தாரணிமேல்...வருந்தகைமை - என்று தோற்றுவாய் செய்த தன்மையினால் ஏயர்கோன் கலிக்காம நாயனாரது சரிதக் குறிப்பு உணர்த்தியவாறு; சரித நிகழ்ச்சிகள் காண்க. இவ்வாறே பிள்ளையாரது சரிதத் தோற்றுவாயினுள் "வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப், பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத" (1899) என்று அவர்தம் பெருஞ்சரித உள்ளுறை யெல்லாங் காணவைத்த திறமும் கண்டுகொள்க.

திண்ணனவும் - உறுதிப்பாடு பெற்ற மனவலிமையும் தோள்வலிமையும் குறித்தது.

திருத்தொண்டால் வரும்-திருத்தொண்டின் காரணமாகப் பெறவரும் இவர், திருப்புன்கூர்க் கதிகமாயின திருப்பணி யனேகமுஞ் செய் தமையும், இருபத்து நான்கு வேலி நிலம் தந்தமையும், "எம்பிரா னெந்தை தந்தை தந்தையெங் கூட்ட மெல்லாந், தம்பிரா னீரே யென்று வழிவழிச் சார்ந்து வாழு, மிம்பரின் மிக்க வாழ்க்கை" (ஏயர் - புரா - 392 =3546) என்று கூறும் திருத்தொண்டின் வைத்த பெருமிதமும், பிறவும் காண்க.

செய்கை-வரலாறு; உடைவாளினால் வயிற்றினைக் கீறிக்கொண்ட செயலும் குறிப்பு.

தண்ணளியும்—என்பதும் பாடம். 1256

திருஞான சம்பந்த நாயனார் புராணம் முற்றும்

திருஞான சம்பந்த நாயனார் திருவடி வாழ்க !

திருச்சிற்றம்பலம்.

சரிதச் சுருக்கம்

(1 முதல் 100 பாட்டுவரையில் உள்ள சரிதச் சுருக்கம் முன் தரப்பட்டது (தொகுதி IV- பக்-164) ஆண்டுக் காண்க.

முதலாவது தலயாத்திரை

திருக்கோலக்காவில் இறைவரை வணங்கி "மடையில் வாளை" என்னும் திருப்பதிகத்தைத் தொடங்கிக் கையினால் தாளமொத் தறுத்துப் பிள்ளையார் பாடும்போது இறைவரருளால் "திருவைந் தெழுத்து" எழுதப்பட்ட செம்பொற்றாளங்கள் அவரது கையில் வந்தன. அது கண்டு அவற்றை முடிமேல் வைத்துத் தொழுது மகிழ்ந்து பதிகத்தை நிறைவித் தருளினார். அத் திருத்தாளம் ஓங்கிய நாதத்தளவிலும் சிறந்திருந்தமை கண்டு தும்புரு நாரதர் முதலாயினோரும் துதித்தனர். பிள்ளையார் கையில் திருத்தாளத்தினுடன் நடந்து வரும்போது தாதையார் அவரை எடுத்துத் தோளின் மேல் தரித்துக்கொள்ளச் சீகாழிக்கு எழுந்தருளித் தோணியப்பரை வணங்கி முன் பாடிய தக்கராகப் பண்ணில், அந்தக் கட்டளையில் "பூவார் கொன்றை" என்று தொடங்கும் பதிகத்தைப் பாடித் திருத்தாளத்தினால் ஒத்தறுத்துத் துதித்துத் திருமாளிகை சென்று பதியவர்க்குத் தமது காட்சி கொடுத்து வீற்றிருந்தருளினர்.

இரண்டாவது தலயாத்திரை

அந்நாளில் பிள்ளையாரது திருத்தாயார் பகவதியம்மையார் பிறந்த பதியாகிய திருநனிபள்ளியினின்றும் மறையவர்கள் சீகாழிக்கு வந்து பிள்ளையாரை வணங்கினர்; பிள்ளையார் திருஞானம் பெற்ற பெருவார்த்தை கேட்டு ஏனைப் பதிகளினின்றும் மறையவரும் பிறரும் வந்து பிள்ளையாரை வணங்கி மகிழ்ந்தனர். அப்போது திருநனிபள்ளி மறையவர் தங்கள் பதியில் வந்து இறைவரை வணங்கவேண்டுமென்று பிள்ளையாரிடம் விண்ணப்பிக்க, அதற்கிணங்கித் தோணியப்பரை வணங்கிக்கொண்டு தாதையார் தோளின் மேலமர்ந்து திருநனிபள்ளி நோக்கிச் சென்றருளினர்; அஃது எதிரே தோன்ற, "அப்பதி யாது?" என்று தாதையாரைக் கேட்க, அஃதே திருநனிபள்ளி என்று அவர் கூறக் கேட்டருளி, அவரது பியலின்மே லிருந்தவாறே "காரைகள் கூகை முல்லை" என்ற பதிகத்தால் "எந்தை மேவும் நனிபள்ளி இஃதே; இதனை நினைப்பவர் வினைகள் கெடுவதற்கு ஆணை நமதேயாம்" என்று பாடித்துதித்தனர். அப்பதிகத்தின் வரும் முத்து - பனை - சோலை முதலிய சொல்லாற்ற லருளினால் அந்நகரின் நிலம், பாலையு நெய்தலும் முல்லையுமாக ஆயிற்று; அப்பதியில் மறையவர்கள் அடிபோற்றப் பிள்ளையார் எழுந்தருளியிருந்தனர். அந்நாளில் திருத்தலைச்சங்காட்டினின்றும் அந்தணர்களும் தொண்டர்களும் வந்து அடிபணிந்து பிள்ளையாரைத் தங்கள் பதியில் நண்ண வேண்டுமென்று வேண்டிக்கொள்ள அங்குச் சென்றருளி இறைவரை வணங்கிப் பதிகம் பாடியருளினர்; அங்கு நின்றும் திருவலம்புரம் புக்கு வணங்கித் திருச்சாய்க்காடு சென்று போற்றுவார் "மண்புகார்" என்ற பதிகம் பாடி வணங்கியருளினர். அங்கிருந்து திருவெண்காட்டினை அடைந்து "முக்குளத்" தினையும் போற்றிப் பதிகம் பாடிப் போந்து, தென் திருமுல்லைவாயிலை வணங்கிக்கொண்டு சீகாழியினைச் சேர்ந்தருளிப் பெருமானைப் போற்றி யிருந்தனர்.

மூன்றாவது தலயாத்திரை

திருநீலகண்ட யாழ்ப்பாணர்

அந்நாள்களில் திருமயேந்திரப்பள்ளி, திருக்குருகாவூர், திருமுல்லைவாயில் உள்ளிட்டு அப்பாங்கருகு உள்ள பதிகளிற் சென்று இறைவரைப் போற்றித் திருப்பதிகம் பாடி மீண்டு சீகாழியில் எழுந்தருளியிருந்தனர்.

அப்போது திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனாரும், இசைவடிவான அவர் தேவியார் மதங்க சூளாமணியாரும் சீகாழியில் வந்தணைந்தனர். பிள்ளையார் அவர்களை எதிர்கொள்ள, அவர்கள் பிள்ளையாரைத் தொழுதெழுந்து துதித்தனர். பிள்ளையார் அவர்களை நோக்கி "**ஐயர் நீர்** இங்கு வந்த உறுதியுடையோ மாயினோம்" என்று மதுரமொழியருளி, அவர்களைத் திருக்**கோயிற்புற முன்றிலிற்** கொண்டு புக்கு "உங்கள் இறைவருக்கு இங்கு யாழிசை இயற்றுக!" என்று அருள, அவர்களும் யாழ் வீக்கி விண்ணையர் கந்தருவரும் போற்ற இசை விரித்தனர். பிள்ளையார் அவர்கள் தங்குதற்கு இடம் அமைத்து நல்விருந்தும் சிறக்க அளித்தருளினர். யாழ்ப்பாணர் பிள்ளையாரைத் தொழுது "தேவரீர் அருளும் திருப்பதிகங்களை யாழில் இட்டு அடியேன் தேவரீருடன் பிரிவின்றிச் சேவித்திருக்க அருள் புரியவேண்டு"மென்று விண்ணப்பித்தனர். அதற்குப் பிள்ளையார் இசைந்தருளவே அவ்வாறே அகலா நண்புடன் அன்றுபோலவே என்றும் உடனுகை இருக்கலாயினர்.

நான்காவது தலயாத்திரை

திருத்தில்லை

அக்காலத்திலே திருத்தில்லைக்குச் சென்று கூத்தப் பெருமானை வணங்கவேண்டும் என்னும் அருட்குறிப்புப் பிள்ளையாரது திருவுள்ளத்தில் எழுந்தது. அதனைத் தாதையாருக்கு அறிவிப்ப, அவரும் உடன் செல்ல விரும்பத், திருத்தோணியப்பரைத் தொழுது அருள்விடை பெற்றுப் புறப்பட்டு வழிக்கொண்டருளினர். இடையில் கண்ட பதிகளைப் போற்றிப் பழனமும் படுகரும் கடந்து கொள்ளிடக் கரையினையடைந்தனர்; கொள்ளிடம், புனலும் கடல் மணியும் பவளமும் தூவி அடிபணிந்து எதிர்கொள்ள, அதனைக் கடந்தேறிச் சென்று தில்லை சூழ் திருவெல்லை பணிந்தனர்; இருபுறமும் பொய்கைகள் மலர்முகங் காட்டின; மலர்ச்சோலைகளும் புறம்பணை நறும்பூகமும் களித்துச் செழித்தன. வேள்விப் புகையினுல் வானம் நீல நுண்டுகில் விதானித்தது போன்றது; இவ்வாறு சென்று கழனியம்பணை நீங்கி, நந்தனவனங்களைப் பணிந்து தென்றிசை வாயில்நேர் அணைந்தருளினர்;தில்லைவாழந்தணர்களும் திருத்தொண்டர்களும் எதிர்கொண்டு திருநகரினுட்கொண்டு புக்கனர்; தென்றிசை வாயில்புகுந்து, திருவீதி பணிந்து, கோபுரத்தைப் பணிந்து எழுந்து போற்றித், திருமாளிகையை வலங்கொண்டு, பேரம்பலம் தொழுது, திருவணுக்கன் றிருவாயிலை யடைந்து, கைகளைச் சிரமேற்கொண்டு கண்களிப்ப உருகுமன்புடன் புகுந்தனர்; தமக்கருளப் பெற்ற மெய்ஞ்ஞானமேயான அம்பலமும் உண்ணிறைந்த ஞானத் தெழும் ஆனந்தத்தனிக் கூத்தும் கண்டு கும்பிட்டு, "உணர்வினுள் நேர்பெற வரும் சிவபோகத்தை உருவின்கண்ணே ஐம்பொறியளவினும் எளிவர

அருளினை!'' எனப் போற்றினர். சிவனுரிமைத் தொழிற் சிறப்பினால் தில்லைவாழந்தணர்களை முன்வைத்துக் ''கற்றாங்கெரியோம்பி'' என்ற பதிகம் பாடித் தொழுது, காலமெல்லாங் கும்பிட்ட பின்பு புறம் போந்தருளி, மாதவங்கள் நல்கும் திருவீதி நான்குந் தொழுது, அங்குத் தங்குதற்கு அஞ்சித், திருவேட்களத்திற் சென்று அங்கே தங்கியருளிக், காலந்தோறும் திருவம்பலத்தை வந்து பணிந்தனர்; திருக்கழிப்பாலை சென்று வணங்கிப் பதிகம் பாடினர்; தில்லைவா ழந்தணர்கள் அம்பலக் கூத்தனுக்கு ஆளாகும் பேற்றினை எண்ணி அதிசயித்தவாறே ஒருநாள் திருவேட்களத்தினின்று தில்லையினை அணையும்போது தில்லை மூவாயிரவரும் சிவகணங்களாகத் தோன்றியிடக் கண்டு அதனைத் திருநீலகண்டப் பாணருக்குங் காட்டியருளினர். பிள்ளையார் தில்லைவா ழந்தணர்களை இறைஞ்சா முன்பு அவர்கள் தம்மை யிறைஞ்சத் தாமும் எதிர் இறைஞ்சி உடனணையச் சென்று திருவம்பலத்தினை வணங்கி, ''ஆடி னாய்நறு நெய்யொடு பால் தயிர்'' என்னும் பதிகம் பாடி அதனுள் தாம் கண்ட அந்நிலையினை வைத்துத் துதித்து விடை பெற்று எழுந்தருளினர்.

திருநீலக்கண்டப்பாணனர் நிவாநதிக் கரையில் உள்ள தமது பதியாகிய திருவெருக்கத்தம்புலியூர் முதலாகிய பதிகளிற் சென்று வணங்கவேண்டுமென்று விண்ணப்பிக்க, அதற்கிசைந்து, தாதையாரும் பரிசனங்களும் பாணனாரும் மதங்க சூளாமணியாரும் உடன் சூழச் சென்றருளினர். நிவாநதிக்கரை வழியே சென்று **திருவெருக்கத்தம் புலியூரினைச்** சாரச் செல்லும்பொழுது, பாணனர் வணங்கி, ''இப்பதி அடியனேன் பதி'' என்று கூறப், பிள்ளையார் ''ஐயரே! நீர் அவதரித்திட இப்பதி அளவில்லாத மாதவ முன்பு செய்தவாறு'' என்று.

திருமுதுகுன்றம்

சிறப்புரைத்து அதிற் சார்ந்து திருப்பதிகம்பாடி வணங்கிய பின் **திருமுதுகுன்றத்தினை** நோக்கிச் சென்றணைவாராயினர். ''முதுகுன்றை அடைவோம்'' என்ற பதிகம் பாடிப்போய் அக்குன்றினை வலங்கொள்வார், திருவிருக்குக் குறட் பதிகம் பாடிச் சென்று, இறைவர் திருமுன்பு ''முரசதிர்ந்து'' என்னும் பதிகம் பாடி வணங்கி, அப்பதியில் எழுந்தருளியிருந்தனர், பின்பு அங்கு நின்றும் **திருப்பெண்ணாகடத்**தை அணைந்து இறைஞ்சித் ''தீங்கு நீங்குவீர் **தூங்கானைமாடந்** தொழுமின்களே'' என்ற பதிகம் பாடித், **திருவரத்துறை** சேர்வாராயினர். செல்லும்போது ஒரோர்கால் தாதையார்தோளின்மேல் இருப்பார்; பின்னர்ச் சில போது அவர்தமதருகே செல்ல நடந்து சென்றருளுவார்; இவ்வாறு விருப்புடன் சென்றருளும்போது பிள்ளையாருடைய பாததாமரைகள் பையப்பைய நொந்தன; பாசமில்லாதவ ராதலின் ஆலய வழிபாட்டினை ஏனையோர் போலப் பாசநீக்கத்தின் பொருட்டன்றிச், சங்கரன்பால் ஆசை மிக்கதனல் மேற்கொண்டெழுந்தனர் பிள்ளையார்.

திருவரத்துறை

மாறன்பாடி என்னும் பதியில் வரும்போது வழி வரும் இளைப்பினல் உடன் வருவோர் வருந்துதல் கண்டு பிள்ளையார் திருவைந்தெழுத் தோதி அங்குத் தங்கியருளினர்; ஞாயிறு மேல்கடல் வீழ, அன்றிரவு பிள்ளையார் பரிசனங்களுடன் அப்பதியில் தங்கியருளினர்.

திருவரத்துறை யிறைவர், பிள்ளையாரது வழி வருத்தத்தினை மாற்றத் திருவுளங்கொண்டு அன்றிரவிலே, அப்பதியின் மறையவர், பதி வாழ்வார், தொண்டர்கள், கோயில் பரிசனங்கள் முதலிய அனைவருக்கும் கனவில் தோன்றித், "திருஞானசம்பந்தன் நடந்து வருந்துகின்றான்; நாம் வைத்தளித்துள்ள முத்துச் சிவிகை, முத்துச் சின்னங்கள், முத்துக் குடை யாகிய இவற்றை அவனிடம் சென்று கொடுங்கள்" என் றருளிச்செய்தனர். அவர்கள் எல்லாரும் ஒருங்கு கூடிக் கோயில் வாயி லடைந்து காலையில் கோயில் திருக்காப்பு நீக்க, அப்பொருள்கள் அங்கு இருக்கக் கண்டு மகிழ்ந்து, திருவருளை வழுத்தி, ஆரவாரத்துடன் அவற்றை ஏந்திப் பிள்ளையார்பால் எதிர்கொண்டு வருவாராயினர். இங்குப் பிள்ளையாருக்கும் "அவற்றை ஏற்றுக்கொண்டு உய்க்க" என்று கனவில் இறைவர் அருள, உணர்ந்தெழுந்து, அதனைத் தந்தையார்க்கும் தொண்டர்க்கும் அருள்செய்தனர். இருள்நீங்கி வைகறைப் போதாகவே திருநீறணிந்து திருவைந்தெழுத்தோதி எழுந்தனர். சூரியனும் எழுந்து போந்தனன். அப்போது அரகர முழக்குடன் அவ் வருட்பொருள்களை ஏந்திக்கொண்டு திருவரத்துறை அடியவர்கள் வந்து பிள்ளையார்பால் வைத்து வணங்கித் துதித்து, இறைவரருளிய பரிசு முற்றும் உரைத்து நின்றனர்; அதுகண்டு பிள்ளையார் இறைவரது பேரருளை உன்னி மனமுருகி, "எந்தை யீசன்" என்றெடுத்துத் திருப்பதிகம் பாடித் துதித்தருளிச் சோதி முத்துச் சிவிகையினை வலம் வந்து, பார்மீது வீழ்ந்து வணங்கித், திருநீற்றொளி தோன்ற அதன் ஒளியினைப் போற்றி நின்று, இறைவர் திருவருளாதலினால் திருவைந்தெழுத்தினை ஓதிக்கொண்டு அதன்மேல் ஏறியருளினர்; தொண்டர்கள் அரகர முழக்கம் செய்து ஆரவாரித்தனர்; வேதங்கள் முழங்கின; வானம் மலர்மழை பெய்தது. பாற்கடலில் எழுந்த மதிபோலப் பிள்ளையார் முத்துச் சிவிகையின்மீது விளங்கக் கண்ட தொண்டர்கள் முதலிய அனைவரும் ஆனந்தக் கண்ணீர் பெருக்கினர். இறைவன் அருளிய காளம், தாரை, சின்னம் முதலியவை "திருஞான சம்பந்தன் வந்தான்", "முத்தமிழ் விரகன் வந்தான்", "பாலறுவாயன் வந்தான்" என்று பிள்ளையாருடைய பல பெருமைகளையும் எடுத்து இயம்பின. இவ்வாறு பிள்ளையார் திருவரத்துறையினை அணைந்து, திருவாயிலுக்கு நெடுந் தூரத்திலே சிவிகையினின்றும் இழிந்து, திருக்கோயிலுட்சென்று, திருமுன்பு வந்து கைகுவித்து வீழ்ந்தெழுந்து, அன்பினிற் றிளைத்து இறைவரது பேரருளினைப் போற்றியருளி, அப்பதியில் சிலநாளமர்ந்தனர். அங்கு அமர்ந்த நாளில் **திருநெல்வெண்ணெய்** முதலிய பதிகளிற் சென்று வணங்கி மீண்டு அணைந்திருந்தனர்.

அந்நாளில் திருத்தோணியப்பர் பெரியநாயகியாருடனே பிள்ளையாரது உணர்வினில் வெளிப்பட மனம் உருகிச் சீகாழிக்கு எழுந்தருளத் திருவுள்ளங்கொண்டு, திருவரத்துறை இறைவரை வணங்கி அருள்விடை பெற்றுச் சிவிகையினை மேற்கொண்டு புறப்பட்டருளினர். மறையவரும் தொண்டரும் ஆரவாரித்தனர்; திருச்சின்னங்கள் ஒலித்தன. இவ்வாறு செல்லும் வழியில் அங்கங்கும் தோரண முதலிய அலங்காரத்துடன் அவ்வப் பதியோர் எதிர்கொள்ளப் பதிகளை வணங்கித், **திருப்பழுவூரில்** எழுந்தருளி வணங்கி, அங்கு அந்தணர்களான மலையாளர் ஏத்தும் பரிசு போற்றிப் பாடிப் போந்து, திருவிசயமங்கை, திருப்புறம்பயம் முதலிய பதிகளை வணங்கித் **திருச்சேய்ஞலூரினை** யணைந்தருளினர். அப்பதியில் வாழ்வார்கள் நகரினை அலங்கரித்து வந்து எதிர்கொள்ளச் சண்டீசப்பிள்ளையார் அவதரித்தருளும் பதி என்று உட்கொண்டு ஆளுடைய பிள்ளையார்

சிவிகையினின்றும் இறங்கி வணங்கி, அப்பதியவர்களுடன் திருநகரினுட் சென்று திருக்கோயிலினில் இறைவரை முறைப்படி வணங்கிப் பாடிய திருப்பதிகத்தில் சண்டேசப்பிள்ளையார் பாதகப் பயன்பெறும் பரிசினை வைத்துப் பாடித்துதித்து அப்பதியில், சில நாளமர்ந்தருளினர். அங்குநின்றும், திருப்பனந்தாள், திருப்பந்தணை நல்லூர், திருஓமாம்புலியூர், திருவாழ்கொளி புத்தூர், திருக்கடம்பூர், திருநாரையூர், திருக்கருப்பறியலூர் முதலிய பதிகளை வணங்கிக்கொண்டு, சீகாழியினைச் சார வந்தணைந்தருளினர். அச்செய்தியினைக்கேட்ட சீகாழி மறையவர்களும் தொண்டர்களும் நகரலங்காரம் செய்து, நிறைகுடங்களை ஏந்தி எதிர்கொண்டு வந்து பிள்ளையாரைச் செழுமுத்தின் சிவிகையின்மேற் கண்டு சென்று சூழ்ந்து ஆர்த்தனர்; மிக்க ஓசைபடத் துதித்தனர்; ஆடைகளை விசும்பில் வீசினர். பிள்ளையாரும் சிவிகைநின்று மிழிந்து எதிர் சென்று வணங்கி அவர்களுடன் கூடி மகிழ்ந்து புக்குத் திருக்கோயிலுக்குச் சென்று தோணியப்பரை வணங்கிப் பாடித் தொழுது புறம் போந்தருளினர். அப்போது திரு நீலகண்ட யாழ்ப்பாணர் பின்னே வர, அவரை அவரது மாளிகையிற் போக அருளி விடை கொடுத்துத், தம் திருமாளிகையினைச் சார்ந்தார். மறையவர்மகளிர் விளக்கு நிறைகுடம் முதலிய மங்கலங்களை ஏந்தி எதிர்வர, முன்னே வந்து ஈன்ற தாயார் பகவதியம்மையார் திருநீறு சாத்தி இறைஞ்ச முறைமையானே அவர்க் கருள்புரிந்து திருமடத்தினுள் புகுந்து எழுந்தருளி யிருந்து நாடோறும் தோணியப்பரைத் தொழுது பதிகம் பாடியருளினர்.

சீகாழி-உபநயனச் சடங்கு

அந்நாள்களிலே, உபநயனப் பருவம் எய்த, உலகங்கடந்த சிவஞான முணரப் பெற்ற பிள்ளையார், பழமையாகிய வேதநூற்சடங்குகளை மறையவர்கள் செய்ய மான்றோலுடன் பூணூலையும் தாங்கியருளினர்; ஒரு பிறப்பும் சாராத பிள்ளையாரை இவ்வாறு உலகியல்பிற்கொண்டு உபநயன முறைமையில் இரு பிறப்பாளர் என்ற நிலைமையில் வைத்து, மறைச் சடங்குகளைக் காட்டி நான்கு மறைகளையும் தந்தோமென்று மறையவர்கள் மந்திரங்களை எடுத்து ஓதுவித்தனர். பிள்ளையார் அவர்கண் முன்னே எண்ணிறந்த புனித வேதங்களைத் தாமே எடுத்து ஓதினர். அதுகண்டு மறையவர்கள் வியந்து, பிள்ளையாரை, ஆயிரங்கோடி சூரியர்கள் ஒன்றுய் உதய மானுற் போலக் கருதித், தமது கண்முன் நிற்கும் தியானப் பொருளாகக் கொண்டு, தாம் முன் வல்ல மறைகளில் உள்ள ஐயங்களை அவர்பாற் கேட்டுத் தெளிந்து வாழ்வடைந்தனர். பிள்ளையார் மந்திரங்கள் எல்லாவற்றையும் அம் மறையவர்களுக்கு அருளிச்செய்து, மற்றும் அவற்றின் வைதிகநூற் சடங்கின் வந்த மன மயக்கந் தெளியும்படி தேற்றி அருளிச்செய்து, "மந்திரங்களெல்லாம் தோன்று முதலாவன இறைவரது **திருவைந்தெழுத்தே**யாம்" என்று சீபஞ்சாக்கரத் திருப்பதிகத்தினை அருளிச் செய்தனர்; அவர்கள் கேட்டுப் பெருவாழ்வடைந்து மகிழ்ந்தனர். பிள்ளையார் தோணியப்பரை வணங்கி யிருந்தருளினர்.

திருநாவுக்கரசர் கூட்டம்-I

அந்நாள்களிலே பிள்ளையாரைக் கண்டு வணங்குதற்காகத் திருநாவுக்கரசு நாயனர் சீகாழிக்கு எழுந்தருளப், பிள்ளையாரும் "ஆக்கிய நல்வினைப் பேறு" என்று மகிழ்ந்து

தொண்டர் கூட்டத்துடன் எதிர்கொள்ளச் சென்றருளினர். அந்தம் இல்லாத திருவேடத்து அரசர் எதிர் வந்தணையக் கண்ட பிள்ளையார், தொண்டர் திருவேடம் நேரே தோன்றியதென்று தொழுதனர். அரசுகளும் எதிர்வந்திறைஞ்சப், பிள்ளையார் அவருக்கு மதுரமொழி யருள்செய்து, திருக்கோயிலுக்கு அவரை உடன்கொடு போந்து திருத்தோணியிற் சேர்ந்து உடன் கும்பிட்டுத், திருமாளிகையிற் சேர்ந்து, திருத்தொண்டருடன் அவருக்குத் திருஅமுது செய்வித்தனர். இருவரும் அன்பும் நண்பும் பெருகிய காதலுடன் இறைவரைக் கும்பிட்டு உடன் மகிழ்வெய்தி உறைந்தனர். அவ்வாறு சிலநாள் செல்ல ஏனைய பதிகளிலும் சென்று வணங்கவேண்டிப் பிள்ளையாரது இசைவு பெற்று அரசுகள், பிரிவுகை எய்த இறைஞ்சிப், பிரியாத நண்பொடும் போந்தருளினர். அவர்பால் விடை கொண்டு பிள்ளையார் மீண்டருளித் தோணியப்பரை இறைஞ்சி யிருந்தருளிய நாட்களில் செந்தமிழ்மாலை விகற்பங்களான திருமொழி மாற்று, மாலை மாற்று, வழிமொழி, திருவியமகம், ஏகபாதம், திரு இருக்குக்குறள், திருஎழுகூற்றிருக்கை, ஈரடி, ஈரடி மேல்வைப்பு, நாலடி மேல்வைப்பு, திருவிராகம், திருச்சக்கரமாற்று முதலிய சந்தவிகற்பப் பதிகங்களை, மூல இலக்கியமாக, எல்லாப் பொருள்கோளும் முற்றச், சீகாழி நாதரைப் பாடியருளினர். அவற்றைத் திருநீலகண்டப் பாணரும், இசை வடிவான மதங்க சூளாமணியாரும் ஏழிசைபற்றி யாழ்க்கருவியிலும் கண்டத்திலுமாகப் பாடினர். இவ்வாறு தோணியப்பரைப் பதிகங்கள் பாடிச் சீகாழியிற் பிள்ளையார் தங்கி யிருந்தருளினர்.

அந்நாள்களிலே, தமிழ்நாட்டி லெங்கும் உள்ள திருப்பதிகள் யாவையும் சென்று கும்பிட்டு இங்கு எய்தவேண்டுமென்னும் திருவுள்ளத் தெழுந்த கருத்தினைப் பிள்ளையார் தந்தையாருக்கு அருள்செய்தனர்; தாதையாரும் "பிரிவாற்ருமையானும், யாகம் செய்யப் பொருள் வேண்டியமையானும் சிலநாள் உடன் எய்துவன்" என்று கூறத், திருத்தொண்டர்கள் மறையவர்கள் உடன் வருவார்கள் கூடவரத் திருத்தோணியப்பரிடம் விடைபெற்றுத் தாதையாரும் யாழ்ப்பாணரும் உடன் வரப் புறப்பட்டருளினர். சின்னங்க ளார்க்கவும், இயங்கள் முழங்கவும், மங்கல வாழ்த்தொலி எடுப்பவும் அங்கங்கும் அடியார்கள் நகரலங்கரித் தெதிர்கொள்ளப் பதிகள்தோறும் சென்றருள்வாராயினர்.

ஐந்தாவது தல யாத்திரை

திருக்கண்ணார் கோயிலை வணங்கிக்கொண்டு, காவிரியின் வடகரையில் வட மேற்குத் திசைநோக்கி வருவாராய்த், திருப்புள்ளிருக்கு வேளூரை இறைஞ்சிச் சம்பாதி - சடாயு - என்ற புள்வேந்த ரிருவர் வழிபட்ட பெருமை பதிகத்துட் சாரப் பாடியருளினர்; அங்கு நின்றும் திருநின்றியூரையும், திருப்புன்கூரையும், ஏனைய தலங்களையும் வணங்கிப், பின்பு பழமண்ணிப்படிக்கரை, திருக்குறுக்கை, திரு அன்னியூர், திருப்பந்தணைநல்லூர், திருமணஞ்சேரி, திருஎதிர்கொள்பாடி யிவற்றைப் பணிந்தனர்; காவிரிக் கரையில் திருவேள்விக்குடியில் பகலில் திருமணவாளக் கோலத்தினையும், இரவிற் றுருத்தியி லிருக்கையும் சேர்த்துப் பதிகம் பாடியருளினர்; பின்னர்த் திருக்கோடிகா, திருக்கஞ்சனூர், திருமாந்துறை, திருமங்கலக்குடி, திருவியலூர் முதலிய பதிகளை வணங்கித் திருந்துதேவன்குடி சேர்ந்து, "இவர் வேடம் மருந்தும்மந்திரமும் மற்றும் ஆவன" என்று பாடி வணங்கினர்; அதன்பின் அம்மருங்குள்ள தலங்களை வணங்கித் திருவின்னம்பரை

யணைந்து ''இடைமடக்கான திருமுக்கால்'' என்னும் பதிகம் பாடிச் சென்று, வடகுரங்காடு துறை சேர்ந்து அங்கு வாலியார் வழிபட்டதைப் பற்றிப் பாடினர். அதன்பின் மற்றும் பதிகளை வணங்கித் திருப்பழனம் பணிந்து, திருவையாற்றினை அணைவாராயினர்; திருவையாற்றிற் றொண்டர்கள் நகரத்தினை முற்றும் அலங்கரித்துச் சிறப்பித்தொடும் எதிர்கொள்ளச் சிவிகையினின்றும் இறங்கி, நகரத்தினை வணங்கி ''ஐம்புல னிலை கலங்கும்போது அஞ்ச லென்பார்தம் ஐயாறு'' என்ற கருத்துடைய திருப்பதிகத்தினைப் பாடிச் சென்று திருக்கோயிலினுட் புகுந்து வணங்கிக், ''கோடல் கோங்கம்'' என்ற பதிகம் பாடித்துதித்து, அப்பதியில் அமர்ந்தருளினர். அங்கிருந்தவாறே திருப்பெரும்புலியூர் முதலான பதிகளிற் சென்று வணங்கி மீண்டருளியிருந்த நாளில், மேற்குத் திசையாகச் செல்ல மனங்கொண்டு அருள் விடை பெற்றுப்போந்து, திருநெய்த்தானம் பணிந்து, திருமழபாடியினை வணங்கிச் சிலநாள் அங்கு எழுந்தருளியிருந்தனர். அதன்பின், திருக்கானூர், திருஅன்பிலாலந்துறை, வடகரைத் திருமாந்துறை முதலிய பதிகளை வணங்கித் திருப்பதிகங்கள் பாடிப் பணிந்து, திருப்பாச்சிலாச்சிராமம் பணிவதற்குப் பிள்ளையார் நண்ணுவாராயினர்.

முயலகனோய் தீர்த்தது

அந்நகரில் கொல்லி மழவன் மகளுக்கு நேர்ந்த முயலகனோய் எவ்வாற்றானும் தீராமையால், அவன், வழிவழியாகச் சிவனடிச் சார்புபற்றியே வரும் குலத்துப்பான்மையினுைதலினல், அக்கன்னியைக் கொண்டுவந்து திருக்கோயிலில் இறைவர் திருமுன்பே இட்டு வைத்தான். அக்காலை பிள்ளையார் எழுந்தருளுகின்ற திருச்சின்னங்களின் ஓசை கேட்டு, உடனே அக்கன்னியை விட்டு விரைந்து சென்று நகரினை அலங்கரிக்கப்பண்ணிச் சென்று, பிள்ளையாரை எதிர்கொண்டுபோய்ச் சிவிகையின் முன் வீழ்ந்து வணங்கினன். பிள்ளையார் ''எழுக'' என்று அருள்செய்ய எழுந்து அவரை அழைத்துக்கொண்டு திருக்கோயிலுக்கு வந்தனன். பிள்ளையார் விதிப்படி கோயிலை வலங் கொண்டு திருமுன்பு சார, அங்கு உணர்வின்றிக் கிடந்த கன்னியைப் பார்த்து ''இஃது என்னை?'' என்றருளவே, மழவன் அவள் வரலாற்றை உள்ளபடி கூறினன். அதனைக்கேட்ட பிள்ளையார் அருள் கூர்ந்து அந்நிலையினின்றே பரமரைப் பணிந்து''துணிவளர் திங்கள்'' என்று பதிகம் தொடங்கி ''மணிவளர் கண்டரோ மங்கையை வாட மயல்செய்வ தோவிவர் மாண்பு? என்று அந்நோய் நீங்கும்படி பாடியருளினர்; பதிகம் நிறைவித்துப் பிள்ளையார் போற்றி நிற்கவே நோய் நீங்கியது; கன்னியும் கதுமெனவெழுந்து தாதை பக்கம் அடைந்தாள். மழவன் கன்னியுடன் பிள்ளையார் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினன்; பிள்ளையார் இறைவரைப் பணிந்தனர். அங்குச் சிலநாள் அமர்ந்தருளிப் பிள்ளையார் பிற பதிகளையும் போற்றித் திப்பைஞ்ஞீலியையும், திருவீங்கோய் மலையையும், மற்றும் பதிகளையும் வணங்கிக் கொங்கு நாட்டின் குடபுலஞ் சென்றணைந்து பல பதிகளையும் பணிந்தனர்.

கொங்குநாடு-பனிநோய் தீர்த்தது

கொங்கு நாட்டில் காவிரித் தென்கரையில் திருக்கொடிமாடச் செங்குன்றூரினில் அடியவர்கள் எதிர்கொள்ள அணைந்து, இறைவரை வணங்கிப் பதிகம்பாடித் துதித்து

அந்நகரில் இனிது அமர்ந்தருளினார்; அதற்கப்பாலின் மேற்றிசையினுள்ள சிவதலங்களையும் சென்று வணங்கித் **திருநணா** (பவானி) வினையும் இறைஞ்சி மீண்டுவந்து முன்னர்த் தங்கிய இடமாகிய கொடிமாடச் செங்குன்றூரில் பிள்ளையார் எழுந்தருளியிருந்தார்; அந்நாளில் பனிப் பருவம் வந்தது. செய்பனிகூர் குளிர் வாடை முழுதுலவும் பொழுதாகவே ஆயிற்று; மலைகளும் பனியால் மூடப்பட்டுக் குளிர்க் குடைந்து வெண்படாம் போர்த்தன போல விளங்கின; அப்போது பிள்ளையாரின் பரிசனங்கள் பல நாளும் அந்நாட்டிற் பயின்றதனாலே பனித்த குளிர் முன்னுள பிணியாகிய நளிர்ச்சுரம் வந்து அவர்களை வருத்துவதுபோல் நண்ணியது. அதனை அவர்கள் பிள்ளையாருக்கு அறிவித்து வணங்கினர். பிள்ளையார் இறைவரது திருவருளைத் தொழுது "இஃது இந்நிலத்தி னியல்பெனினும் நமக்கெய்தப் பெறாது" என்ற குறிப்புடன் இறைவரைத் திருப்பதிகம்பாடுவாராகி "அவ்வினைக் கிவ்வினை" என்று தொடங்கிச் "செய்வினை வந்து எமைத் தீண்டப்பெறு **திருநீலகண்டம்**" என்று துதித்து ஆணையிட்டருளினர்; அவ்வாணையினால் அந்தப் பதியில் வாழ்பவர்க்கே யன்றி அந்நாடு முழுமையும் அன்று முதலாக என்றும் அந்நோய் அடராது நீங்கிற்று. சிலநாள்களின் பின் அங்குநின்றும் நீங்கிப் பல பதிகளையும் தொழுது **திருப்பாண்டிக் கொடுமுடி**யினைச் சென்று வணங்கிப் "பாண்டிக் கொடு முடி யாரே" என்ற பதிகம் பாடிக் கிழக்கு நோக்கிச் சென்று, செல்வக் **கருவூர்த் திருவானிலை**க் கோயிலிற் சென்று வணங்கித், **திருவெஞ்சமாக்கூட**லினையும் பணிந்து, பல பதிகளையும் தொழுது, கொங்கு நாட்டினின்றும் போய்க் காவிரியின் தென்கரைத் **திருவாட்போக்கி**யை வணங்கிக், குன்றும் கானும் பல பதியும் எல்லாம் விரும்பிப் பணிந்து, திருப்பராய்த்துறை, திருச்செந்துறை, திருக்கற்குடி, திருச்சிராப்பள்ளி முதலிய பதிகளை வணங்கிக் கொண்டு திருவானைக்காவில் அணைந்தனர்; அங்கு வெண்ணாவலின்கீழ் முளைத்த இறைவரை வணங்கி அயிராவதமும் கோச்செங்கட்சோழரும் செய்த பணிகளைப் பதிகத்துள் வைத்துப் போற்றி, ஆனைக்கா - மயேந்திரம்- கயிலை - திருவாரூர் நான்கும் போற்றிய கூடற் சதுக்கம் என்னும் பதிகத்தினையும் பாடி அங்குச் சிலநாள் எழுந்தருளி யிருந்தனர்; அதன் பின் திருத்தவத்துறை, திருப்பாற்றுறை, திருவெறும்பியூர்மலை முதலியவற்றைத் தொழுது, **திருநெடுங்களம்** சேர்ந்து வணங்கி, "அடியார்க்கு நேசஞ் செலாவகை விலக்கும் இடும்பைகளைத் தீர்த் தருள்செய்வாய்" என்ற கருத்துடைய பதிகத்தினைப் பாடியருளித், திருக்காட்டுப்பள்ளியினை வணங்கியபின், தொண்டர்கள் சிறப்புடன் எதிர்கொள்ளச் சென்று **திருப்பூந்துருத்தியிற்** சென்று, பொய்யிலியாரை வணங்கி, திருக்கண்டியூர் வீரட்டம் வணங்கி, அங்குத் தொண்டர்களை நோக்கி இறைவரது திருவருளை வினவிய கருத்துடைய திருப்பதிகம் பாடியருளினர். அதன்பின் திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருவெண்ணி, திருச்சக்கரப்பள்ளி, திருஆலந்துறை, திருப்பாலைத்துறை வணங்கிப் பின் **திருநல்லூர்** சார்ந்து வணங்கி அங்கமர்ந்தருளினர். அங்கு நின்றவாறே திருக்கருகாவூர், திருஅவளிவ ணல்லூர், திருப்பருதி நியமம், திருஆவூர்ப் பசுபதீச்சரம் வணங்கித் திருநல்லூரில் மீண்டும் வந்தணைந்தருளினர். அங்குநின்றும் அடியவர்கள் எதிர்கொள்ளச் சென்று **திருவலஞ்சுழியை அணைந்து** பெருகுமாதரவுடன் வணங்கி அத்திருப்பதியின்கண் அமர்ந்தருளி மிக்க காதலோடும் நாடோறும் பரவித் தங்கியிருந்தனர்.

முத்துப் பந்தர்

அந்நாள்களில் வேனிற் பருவம் வந்தது. சூரியன் மிதுன ஓரையுட் சேர்ந்த தன்மையினாலே கடலும் சுருங்க வெப்பமாகிய கதிர் பரப்பியதனாலே வெயில் முதிர்ந்தது; பிள்ளையார் அக்காலத்தில் திருவலஞ்சுழியினின்றும் **பழையாறை**யைச் சேர்தற்காக நடந்தருளித் திருவாறை மேற்றளியிற் சேர்ந்து வணங்கிக்கொண்டு **திருப்பட்டீச்சரத்**தைப் பணியச் சென்றனர். அப்போது வெயில் வெப்பந் தணிப்பதற்காக அவரது முடியின்மீது சிவபூதங்கள் குளிர்முத்துப் பந்தரை எடுத்துப் "பட்டீசர் எம்மை விடுத் தருள்செய்தார்" என்றியம்பின. அப்போதே பந்தரின் மணிக்காம்பினைப் பரிசனங்கள் கைக்கொண்டார்கள். தேவர்கள் பூமழை பொழிய அஃதே பூம் பந்தரும் போன்று விளங்கிற்று. பிள்ளையார் இறைவரது திருவடி நீழலிற்போல அப்பந்தரின் கீழ் எழுந்தருளித் திருப்பட்டீச்சரத்தை அணைந்து பேரன்பு பெருக இறைவரை வணங்கித் துதித்தனர். அங்குநின்றும் திருஇரும்பூளையினைச் சென்று வணங்கி அருமறைப் பொருள் விரியும்படி திருப்பதிகம் பாடியருளினர். அங்கு நின்றும் திருவரதைப் பெரும்பாழி, திருச்சேறை, திருநாலூர், திருக்குடவாயில், திருநறையூர், தென்றிருப்புத்தூர், திருச்சிவபுரம் முதலிய பதிகளை வணங்கிக் கொண்டு **திருக்குடமூக்**கினை நண்ணினர். அடியார்கள் அவரை எதிர்கொள்ள உட்சென்று திருக்குடமூக்கிலும், திருக்கீழ்க் கோட்டத்திலும், திருக்குடந்தைக் காரோணத்திலும் இறைவரை வணங்கி மாமகத் தீர்த்தத்தினையும் போற்றிப் பரவினர். பின்பு நாணுளும் பரவுவார் பிணிதீர்க்கு நலஞ்சிறந்த திருநாகேச்சரத்தை வணங்கி யின்புற்றங்கமர்ந்தருளினர். அதன்பின்பு மேலே செல்வார்க்குத் திருவிடைமருதூர் எதிர் தோன்றக் கண்டு "இடைமருதீதோ" என்று பாடிச் சென்று வணங்கிப் பாடித் திளைத்து அங்குறையு நாளில், காவிரிக்கரை வழியே போய் திருக்குரங்காடுதுறை பணிந்து **திருவாவடுதுறையைச்** சார்ந்து, புகுந்து, இறைவரைப் பணிந்து பாடி, யின்புற்று அங்கு அமர்ந்தருளினர்.

பொன் உலவாக்கிழி

அந்நாளில் வேள்வி செய்வதற்காகிய காலம் வரவே, அதனைத் தாதையார் பிள்ளையாருக்கு அறிவித்தனர்; பிள்ளையார் முந்தைநாளில் சொல்லியமை நினைந்து, "அந்தமில் பொருளாவன எந்தையா ரடித்தலங்களே யன்றோ?" என்று துணிந்து, திருக்கோயிலுக்குச் சென்று இறைவர் திருமுன்பு நின்று "இருநிதி வேண்டினார்க் கீவதொன்று மற்றிலேன்; உன்னடி யல்லதொன் றறியேன்" என்று பேரருள் வினவிய கருத்துடைய திருப்பதிகம், "இதுவோ வெமை யாளுமா றீவதொன் றெமக் கில்லையேல், அதுவோவுன தின்னருள்" என்ற மகுடமுடையதாகப் பாடியருளினர். இறைவரருளினாலே சிவபூதம் பசும்பொன் ஆயிரங்கொண்ட பொற்கிழியினைப் பீடத்தின்மேல் வைத்து முன் அணைந்து நின்று, "இக்கிழி பொன் உலவாக் கிழி; உமக்கு இறைவர் அருளியது" என்றுரைத்தது. பிள்ளையார் அதுகேட்டுத் தொழுது, அக்கிழியினை எடுத்துத் தாதையார்கைக் கொடுத்து இதனாலே இறைவரை வழிபடும் நல்வேள்வியை நீரும் சீகாழி மறையவர் அனைவரும் செய்யவும், இது குறைவில்லாது மிகுந்து வளரும்" என்றருளிச்செய்து அவரைச் சீகாழிக்குச் செல்ல விடுத்தபின் இறைவரைத் தொழுது அங்கு எழுந்தருளி

யிருந்தனர். அதன்பின், திருக்கோழம்பம், வைகன்மாடக்கோயில், திருநல்லம், திருஅழுந்தூர் மாடக்கோயில், திருத்துருத்தி, மூவலூர் பணிந்து சென்று **திருமயிலாடுதுறை**யில் அடியார்கள் எதிர்கொள்ளப் புகுந்தருளி வணங்கி மகிழ்ந்தெழுந்தருளி யிருந்தனர். அதன்பின் திருச்செம்பொன்பள்ளி, திருவிளநகர், திருப்பறியல் வீரட்டம் பணிந்து, கடற்கரையினை நணுகிச் சென்று திருவேட்டக்குடி வணங்கித் **திருத்தருமபுரத்**தினைப் பிள்ளையார் அணைந்தருளினர். அப்பதி திருநீலகண்டப் பாணனாரின் திருத்தாயார் பிறப்பிடமாம்; ஆதலினால் அவர் சுற்றத்தார்கள் எதிர்கொண்டு வந்து பிள்ளையாரையும் பாணனாரையும் வணங்கி வரவேற்றனர்.

யாழ்மூரி

பிள்ளையாருமப திருப்பதிகங்களை யாழிலிட்டும் பாடியும் பணி செய்யப்பெற்ற பேற்றினைப் பாணனார் கிளைஞர்க்கு அருளிச்செய்ய, அவர்கள் அதுகேட்டு அப்பதிகங்களின் ஓசை நீர் யாழில் அமைத்தியற்று மதனாலே உலகமெல்லாம் வளர இசை நிகழ்வதாயிற்று என்று அவரைப் பாராட்டும் வகையாலுரைத்தனர். அதுகேட்டுப் பாணனார் உளநடுங்கிச் சென்று பிள்ளையாரை வணங்கி ''எல்லையற்ற பெருமையுடைய திருப்பதிகத் திசை அளவிலுட்படாத பெருமையினை இவர்களேயன்றி உலகிலெல்லாரும் அறியும்படி பாடி யருளவேண்டும்'' என்று விண்ணப்பிக்கப் பிள்ளையாரும் திருப்பதிகத் துண்மையினை உலகினர் கண்டத்திலும் கருவியினிலும் இசைநூல் கூறும் முயற்சிகளா லடங்காத வகைகாட்ட நாட்டுவாராகி, ''மாதர் மடப்பிடி'' என்ற திருப்பதிகத்தினைப் பாடி இறைவரை வணங்கியருளினர். அப்பதிகத்தினைப் பாணனார் முன்புபோல யாழிலிட்டு நடத்தப் புகுந்தனர். அஃது அவரது யாழினளவில் அடங்காமை கண்டு, பாணனார், பிள்ளையா ரடிகளில் வீழ்ந்து வணங்கி, ''இப்பெரியோரது பதிகத்திசையினை யாழிலேற்பேன் என்று தொடங்கியது இக்கருவியினை யான் தொடுதலினாலன்றோ?'' என்று, அதனை உடைப்பதற்கு ஓங்கினார். அதுகண்டு பிள்ளையார் அவரைத் தடுத்து யாழினை வாங்கிக்கொண்டு, ''ஐயரே! நீர் இந்த யாழினை முரிப்பது என்னை? அம்மையப்பரது அருள் நம்பால் இந்தக் கருவியினிலடங்குமோ? நமது இயல்புக்குத் தக்கபடி, வந்தவாறே உலகினரறியக் கருவியினளவுட் பட்டமட்டில் வாசித்தலே வழக்காகும்; சிந்தையினாலும் அளவுபடாத அவ் விசைப் பெருமை செயலளவிற் பொருந்துமோ? நீர் இந்த யாழினைக் கொண்டே வந்தவாறே பாடி வாசிப்பீராக!'' என்று அருளிச் செய்து யாழினைக் கொடுத்தருள, அவரும் வணங்கி அதனைக் கைக்கொண்டு அவர் கிளைஞர்களுடனே பிள்ளையாருடைய திருவடிகளைத் தொழுதனர். சின்னாள் அங்குத் தங்கிப், பின், பிறபதிகளையும் வணங்கிக்கொண்டு பிள்ளையார் **திருநள்ளாற்**றில் எழுந்தருள, அடியார்கள் எதிர்கொண்டு வணங்கிச் சூழச்சென்று திருக்கோயிலை அணைந்து முறையாலே வணங்கிப் **''போகமார்த்த பூண்முலையாள்''** என்ற திருப்பதிகம் பாடித் துதித்தருளிப், பாணனாரை அதனை யாழிலிடப் பணித்தருள, அவரும் அவ்வாறே யாழிலிட்டு வாசிக்க, யாவரும் மகிழ்ந்தனர்.

திருநீலநக்கரும் பாணனாரும்

அங்கு நின்றும் பல பதிகளையும் வணங்கிக்கொண்டு, **திருச்சாத்தமங்கை**யினைச் சாரத்,

திருநீலநக்க நாயனார் அதுகேட்டு நகரை அலங்கரித்து மங்கலங்களுடன் எதிர்கொண்டனர். பிள்ளையார் அங்கு **அயவந்தித் திருக்கோயிலினுட்** சென்று வணங்கித் திருநீலநக்கரது திருமனையில் எழுந்தருளி அவர் விருந்தமுது அளிக்க அங்குத் தொண்டர்களுடன் அமர்ந்தருளினர். அன்றிரவு பிள்ளையார் அருளின்படி பாணனாருக்கும் விறலியாருக்கும் நீலநக்கனார் தமது மனையில் நடுமனை வேதியின் பாங்கர் இடங்கொடுக்க, அவர்களும் அங்குப் பள்ளி கொண்டருளினர். ஆங்கு வேதியில் செந்தீ வலஞ்சுழித் தெழுந்தது. பின்பு இறைவரது திருப்பதிகத்தில் திருநீலநக்கரது சீர்களை வைத்துப் பாடியருளி, அவருக்கு விடையருளி அவரது நண்பினை மகிழ்ந்து கொண்டு பிற பதிகளையும் வணங்கச் சென்றருளினர். பின்பு திருநாகைக்காரோணம், திருக்கீழ்வேளூர் பணிந்து பிள்ளையார் எழுந்தருளும் செய்திகேட்டுச் **சிறுத்தொண்டநாயனார்** ஓடிச்சென்று வணங்கி வேண்டி அவரைத் தமது பதியாகிய **திருச்செங்காட்டங்குடியினுட்** கொண்டு புக்கனர். பிள்ளையார் மகிழ்ந்து அங்கு எய்திக் கணபதீச்சரத்தில் இறைவரைப் பணிந்து சிறுத்தொண்டரது திருத்தொண்டின் சிறப்பினைப் பதிகத்துள் வைத்துப்பாடி அவரது திருமனையில் எழுந்தருளி வீற்றிருந்தருளிப் பின்பு **திருமருகலிற்** சென்று வணங்கியமர்ந்தருளினர்.

திருமருகல் விடந் தீர்த்தது

அந்நாளில் வழிப்போக்கனாகி கன்னி ஒருத்தியையும் உடனே அழைத்துக் கொண்டு செல்வானாகிய வணிகன் ஒருவன் அங்கு ஒரு மடத்தில் இரவு துயில் கொண்டான். அப்போது அவனை ஓர் அரவம் தீண்டிற்று; விடம் தலைக்கேற ஆவிநீங்கும் தன்மை கூடிற்று; அந்தக் கன்னி தளர்ந்து சோர்ந்து புலம்பி அவனைத் தீண்ட மாட்டாளாய் அணுக வீழ்ந்து அரற்றினாள். காருட வித்தை, இடிபாவனை முதலியவற்றின் வல்ல மந்திரவாதிகள் வந்து செய்த எல்லாக் கொள்கையினாலுந் தீர்க்கவும் குறை யாதாயிற்று. அந்நீண்ட இரவு புலரும் காலையில் அக்கன்னி மிக அயர்ந்து புலம்புவாள், "தாய் தந்தையர்களையும் நீத்து உன்னையே அடைவாக உடன்போந்தேன்; என்னைவிட்டு நீங்கினாய்; நான் என்ன செய்வேன்; இவ்விடுக்கண் தீர்க்கும் துணை யாவார் யாரும் இல்லை" என்று அயர்ந்து அரற்றி, மதியினாலே இறைவரது கோயில் வாயிற்றிசை நோக்கிக் கைதொழுதாள். "அடியவராகிய தேவர் கூட்ட முழுதும் உய்யும்படி விடத்தை உண்டவரே!; வெந்து பொடியான மன்மதனது உயிரை அவன் தேவி வேண்ட மீட்டும் அளித்த இறைவரே! உம்மை வந்தடைந்த மார்க்கண்டருக்காக இயமனை உதைத்தருளிய பாதத்தையுடையவரே! இத்திரு மருகலில் எழுந்தருளி யுள்ளவரே! இந்த விடவேகம் நீங்கும்படியும் நான் துன்பக் கடலினின்று கரையேறும்படியும் அருள்புரிய வேண்டும்" என்றென்றே எடுத்துக் கூறி அரற்றி அழுதனள். இந்த ஓசை, அதுகாலை கும்பிடுதற்கு எழுந்தருளி வந்த பிள்ளையாரது மெய்த்தன்மை விளங்கும் திருச்செவியிற் சார மேவுதலும் திருவுள்ளக்கருணை மென்மேலும் வைத்து அவள் இருக்குமிடத்தில் அடியார்களுடன் எழுந்தருளினர். சிவபெருமானருள் போற்றி அழுகின்ற அவளைப் பார்த்துப் "பயப்படேல்! நீ! உன் துன்பத்தினையும் நும்பரிசும் சொல்!" என்றருளினர். அவள் பிள்ளையாரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி எழுந்து சொல்கின்றாள்; வைப்பூரில் இருப்போன் தாமன் என்னும் வணிகன் என் தந்தை; இவன் அவன் மருகன்; அவனுக்கு நாங்கள் எழுபேர்

பெண்மக்கள். எங்களில் ஒருத்தியை இவனுக்கு மணம் செய்வேன் என்று சொல்லிய என் தந்தை அச்சொல் தவறிப் பெருகப் பணம்பெற்று வேறொருவனுக்கு ஈந்துவிட்டான். அப்படியே ஒவ்வொருவராக என்னை ஒழிய எல்லாரையும் ஈந்துவிட்டான்; அதனால் தளர்ந்து மனமழியும் இவன் பொருட்டுத் தகவுசெய்து தாய் தந்தையரை மறைத்து இவனையே சார்ந்து போந்தேன்; மற்று இவனும் அரவுதீண்ட மாண்டான்; நடுக் கடலிற் கலங்கவிழ்ப்பெற்றார்போல நிற்கின்றேன். சுற்றத்தார் என வந்துதோன்றி என்பால் துயரமெல்லாம் நீங்க அருள்செய்தீர்'' என்று சொன்னாள். பிள்ளையார் அவளுக்கு அருளுதற்பொருட்டுத் திருமருகற் பெருமானை விடம் நீங்கும்படி "உடையானே! இவள் இவ்வாறு உண்மெலிதல் உமக்குத் தகுமோ?'' என்று "சடையாயெனுமால்'' என்னும் திருப்பதிகம் பாடியருளினார். உடனே வணிகன் விடம் நீங்கி எழுந்து நின்றான். தொண்டர் கூட்டம் அரவம் முழக்கி ஆர்த்தது; அக் கன்னியும் வணிகனும் உச்சியின்மேற் கைகூப்பிப் பிள்ளையார் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். பிள்ளையார் அவர்களுக்கு மணம் புணரும் பெருவாழ்வு வகுத்துவைத்து விடைகொடுத்தருளி அங்கு எழுந்தருளி யிருந்தனர்.

திருநாவுக்கரசர் கூட்டம் *II*

அந்நாளில் சிறுத்தொண்டநாயனார் வந்து வேண்டிக்கொள்ள அதற்கிசைந்து விடைகொள்ளும்போது, இறைவர் திருச்செங்காட்டங்குடியில் மேவுங் கோலத்தை ஆங்குக் காட்டியருள, இரண்டு பதிகளையும் சேர்த்து, "அங்கமும் வேதமும்'' என்ற பதிகம் பாடியருளிச் சிறுத்தொண்டருடன் திருச்செங்காட்டங்குடியிற் சென்று சிலநாளமர்ந்து, மீண்டும் திருமருகலில் எழுந்தருளிச், சிலநாள்களின்பின் **திருப்புகலூர்** சென்று வணங்கித் **திருமுருக நாயனாரது** திருமடத்தில் எழுந்தருளி யிருந்தனர்.

அந்நாட்களில் **திருவாரூரி**னிற் சேவித்து வழிபடுவாராய்த் திருநாவுக்கரசர் பெருமான் திருப்புகலூர் தொழ எண்ணி அதன்மருங்கு வந்தருளினர். அந்த நல்ல திருவார்த்தை கேட்டபோதே பிள்ளையார் அன்புமிக்க காதலுடனே அடியார்களுடன்கூட அவரை எதிர்கொள்ளப் புகலூர்ப் புறம்பணை கடந்து போந்தருளினர். அரசுகளும் எதிர் வந்தணைய, இருவரும் தங்களின் அன்பின் முறைமையாலே தாழ்ந்து வணங்கித் தனித்தனியே நல்வரவின் வாய்மை கேட்டும் சொல்லியும் மகிழ்ந்தனர். அரசுகள் திருவாரூர் தொழுது வந்தருளியமையால், பிள்ளையார் அவரை நோக்கித் "திருவாரூரினை எத்தன்மையாலே தொழு துய்ந்தது?'' என்று வினவ, அவர் "முத்து விதானம்'' என்ற திருப்பதிகத்தினாலே அங்குத் திருவாதிரைத் திருவிழாவின் செல்வ நிகழ்ச்சிகளைச் சொல்லியருளினர். அந்த வாய்மை கேட்ட அப்பொழுதே காதலினால் "**திருவாரூர் சென்று** போற்றி மீண்டும் வந்து உம்முடன் மேவுவன்'' என்று அரசுகளிடம் உரைத்து, அவரும் இசைந்தருள, உடனே எழுந்தருளினார். அரசுகள், தமது காதல் பிள்ளையாரின் பின்னே தொடரத், தாம் புகலூர் தொழச் சென்றணைந்து போற்றியிருந்தருளினர். பிள்ளையார், விற்குடி வீரட்டானம் சேர்ந்து போற்றினர். பின் "ஆரூர் அடை வோமே'' என்று பாடித் திருவாரூர்ப் புறத்தணைந்தனர். ஆங்குத் திருவாரூர் நகர் ஒரு பொன்னுலகம்போலத் தோன்ற "கருக்கொள் சோலைசூழ நீடுமாட மாளிகைக் கொடி, யருக்கன் மண்டலத்தணவு மந்த ணாரூ ரென்பதே'' என்று

பதிகம் அருளித் திருநகரின் எல்லை சேர்ந்தனர். காதல் வெள்ளம் கரையின்றிப் பெருகச் சிவிகை யினின்றும் இறங்கிக் கைகளி னிறைந்த மலர்தூவித் தொழுது திருவிருத்தங்கள் பாடிப் பணிந்தனர். அப்பொழுது அணியாரூர் மிகப்பொலிந்து விளங்கியது. தியாகேசப் பெருமான் திருவருளினால் அடியவர்களும் பரிசனங்களும் பிள்ளையாரை எதிர்கொள்ள நகரின் புறத்தணைந்து தொழுதனர். அவர்கள் முன்னே பிள்ளையார் ''அந்த மாயுல காதி'' யாம் பதிகம் எடுத்துத் திருவாரூர் ''எந்தைதான் எனை என்றுகொலாங் கொலோ?'' என்று பாடி யருளிச்சென்று திருக்கோயிலினை அணைந்து திருத்தேவாசிரியனைத் தொழுது திருமாளிகை வலங்கொண்டு உட் புகுந்து இறைவர் திருமுன்பு பெருங்காதலினால் நிலமுறப் பலமுறையும் பணிந்து வீழ்ந்தெழுந்து திருப்பதிகம் பாடித் திளைத்துப் புறம்போந்து திருமடத்தணைந்தனர். **திருவாரூர் அரநெறி**யினைப் பணிந்து புற்றிடங்கொண்ட பெருமானையும் காலந்தொறும் தொழுது எழுந்தருளியிருந்தனர். அக்காலத்தில் திருநாவுக்கரசரை நயந்து திருப்புகலூரில் எழுந்தருளும் திருவுளக்கருத்துவரத், திருவாரூரின் புறம்போந்து அந்நகரினை நோக்கிநின்று ''நெஞ்சமே அஞ்சாதே நீ! சிவனதாரூர்தொழுவாய் நீ மறவாது தொழு; உய்யு மாறறிதி'' என்ற கருத்துடன் ''பவனமாய்ச் சோடையாய்'' என்ற திருப்பதிகம் அருளித் திருவாரூரினைப் பணிந்து அரிதுபோந்தருளினார். இடையில் திருப்பனையூர் முதலாகிய பதிகளை வணங்கித் திருப்புகலூரினைச்சாரத் திருநாவுக்கரசுகளும் திருமுருகரும் மற்றும் திருத்தொண்டர்களும் வந்து பணிந்து எதிர்கொண்டனர். பிள்ளையார் அவர்களுடன் திருக்கோயிலினிற் சென்று வணங்கி முருக நாயனாரது திருமடத்திற்புக்கு அங்கு அவரே யாவையும் குறைவறுத்திட அமர்ந்தருளினர்.

தொண்டர்கள் உடனுறைவு

அக்காலத்தில் திருநீலநக்க நாயனாரும் சிறுத்தொண்ட நாயனாரும் அங்கு வந்து அணைந்தனர். சீலமெய்த்தொண்டர்களுடனே பிள்ளையார் இறைவரைக் கும்பிடும் செய்கைநேர்நின்று, சிறப்புடைய உயர் **திருத்தொண்டின் உண்மைத் திறத்தினையே தெளியநாடி** நாள்கள் செல்ல அவர்களுடனே கலந்தருளி வீற்றிருந்தனர். அந் நாளிற் ''குறிகலந்த விசை'' என்னும் பதிகம்பாடி அப்பதியின் பெருமையினை எடுத்துப் பாராட்டியருளினர். அங்கு நின்றும் பிறபதிகளையும் சென்று வணங்கத் திருவுளங்கொள்ளச், சிறுத்தொண்ட நாயனாரும் திருநீலநக்க நாயனாரும் அவ்வவர் பதிகளுக்குச் செல்லவும் முருகநாயனார் அங்குத் தங்கவும் உடன்படப், பிள்ளையார் புகலூரினைத் தொழுது மேற்செல்லலாயினர். தமது சிவிகை பின்வரத் திருநாவுக்கரசரது பக்கத்தில் அவரை நீங்காது உடனாகப் பிள்ளையார் வழிக்கொள்ள லாயினர். அப்பொழுது ''இறைவர் உமக்கு அளித்த இந்த முத்துச் சிவிகையில் எழுந்தருளுவீர்'' என்று அரசுகள் பிள்ளையாருக்கு உரைத்தருளப், பிள்ளையார் ''இறைவர் திருவருளுமிவ்வாறாயின், நீர் தொண்டர்களோடும் முன்னே சென்ற தெங்கு அங்கு யான்பின் பற்றித் தொடர்ந்து வரப்போவது'' என்றருளினர். அரசுகளும் ''நீர் அருள் செய்தது நன்று; அவ்வாறே செய்குவன்'' என்று அருளி, அது முதலாக உடன் செல்லு நாள்களிலெல்லாம் அவ்வியல்பினிற் சென்றருளு வாராகி, முன்னுறச் சென்று திருவம்பர் அணைந்தனர். பிள்ளையாரும் புகலூரினை வணங்கிச் சென்று அரசுகள் அணைந்த நிலையினை வினவக் கேட்டுத் தாமும் அங்கு இறைவரை

வணங்கி யமர்ந்தருளினர். பிள்ளையார் ''புல்கு பொன்னிறம்'' என்ற பதிகம் பாடி அதனுள் அங்குக் கோச்செங்கட் சோழர் செய்த திருப்பணியைச் சிறப்பித்துப் பாடி யருளினர். அங்கு நின்றும் **திருக்கடவூர்** தொழச் செல்லக் குங்குலியக்கலய நாயனருடன் அடியவர்கள் எதிர்கொண்டனர்.

திருவீழிமிழலை

அப்பதியினுட் புகுந்து காலனை யுதைத்து வீரஞ் செய்த இறைவரைச் ''சடையுடையான்'' என்ற பதிகம் பாடித் துதித்து, அரசுகளுடனே குங்குலியக்கலய நாயனரது திருமடத்தில் எழுந்தருளி அவர் அமைத்த விருந்தினை மிக விரும்பி யிருந்தருளினர். அதன்பின் திருவாக்கூர், திருப்பாம்புரம் முதலிய பதிகளை வணங்கிக்கொண்டு **திருவீழிமிழலை**யின் பக்கத்திற் செல்வாராயினர். முன்னுகை எதிர்கொண்ட அரசுகளாற் பிள்ளையாரது வருகையினை அறிந்துகொண்ட அப்பதியின் அடியவர்கள் கூடி நகரை அலங்கரித்துப் பிள்ளையாரை எதிர்கொள்ள உட்செல்வார் ''அரையார் விரிகோண வாடை'' என்ற பதிகம் பாடிச் சென்று பெருமக்கள் இருவருங் கூடி இறைவரை வணங்கிய பின் திருமதிலின் புறத்து ஒரு திருமடத்தில் திருநாவுக்கரசரும் அடியவர்களும் தங்கியருளப் பிள்ளையார் கோபுரத்தைச் சார்ந்த வடபுறத்தில் ஒரு மடத்தி லமர்ந்தருளினர். அந்நாளில் பிள்ளையாரைக் காணும் பெருவிருப்பத்தினுலே சீகாழியினின்றும் மறையவர்கள் திருவீழிமிழலையில் வந்து வீழி மறையவர்கள் விருப்பத்தினேடும் எதிர்கொள்ளப் புகுந்து இறைவரை வணங்கிப் பிள்ளையாரது திருமடத்தில் சேர்ந்து பிள்ளையாரது பாதம் பணிந்து தங்களுடனே தோணிபுரத்துக்கு எழுந்தருள வேண்டுமென்று விண்ணப்பித்தார்கள்.

திருப்புகலியும் திருவீழிமிழலையும்

அதற்குப் பிள்ளையார் ''இன்று கழித்துத் திருவீழிமிழலை யிறைவரது அருள் பெற்றுப் போவது ''என்றருளி, அவர்களுக்கு அருள் முகமளித்தனர். அன்றிரவு திருத் தோணியப்பர் தாமே பிள்ளையாரது கனவில் தோன்றித் ''தோணியில் நாம் அங்கிருந்த வண்ணம் திருவீழிமிழலையில் விண்ணிழி விமானத்துக் காட்டுகின்ருேம்; பேணும்படியால் அறிவாயாக'' என்றருளி எழுந்தருளப், பிள்ளையார் உணர்ந்து எழுந்து அதிசயித்துத், திருக்கோயிலிற் சென்று திருத்தோணியப்பரையே அங்கு விண்ணிழி விமானத்துட் கண்டு, ''மைம்மரு பூங்குழல்'' என்று தொடங்கிப் ''புகலியும் திருவீழிமிழலையும்'' என்ற பதிகம் ''தோணி மேவுங் கோலம் வீழி விண்ணிழி கோயிலில் திகழ்ந்தபடி இது என் கொல்?'' என்ற கருத்துடன் பாடித் துதித்து மகிழ்ந்தனர். இத்தன்மையினைச் சீகாழி மறையவர்களிடம் அருள் செய்வாராகித் ''தோணியப்பர் பொருந்த எழுந்தருளிய தானங்களெங்கும் சென்று போற்றிவரும் காதலைக் கண்டு அங்கமர்ந்த வண்ணம் இங்கு அமர்ந்தருளியதாகும்'' என்று அருளி, அவர்களைச் சீகாழிக்குச் செல்ல விடுத்தருளி, அரசுகளோடும் இறைவரைப் பணிந்து அங்கு இனிதுறைந்தருளினர்.

படிக்காசு

அந்நாளில் உலகில் பன்னெடுங் காலம் மழை பெய்யாது, நதிகள் தப்பி உணவின்மையால் உயிர்கள் கண் சாம்பி வருந்தின; விண்ணவர்க்கும் பூசை தப்பின; மிக்க பெரும்பசி உலகில் விரவிற்று. பெருமக்கள் இருவரும் அது கண்டு, "சிவனடியார்களுக்கும் கவலை வருமோ?" என்று கருத்திற் கொண்டு, இறைவரைப் பரவித் துயில் கொண்டருளினர். அன்றிரவு வீழிமிழலை யிறைவர் "உலகியல் நிகழ்ச்சியினால் வந்த பசிநோய் உம்மை அடையாது; ஆயினும் உம்மை யடைந்து சிவநெறி நின்றோரின் வாட்டம் நீக்குதற்கு உமக்கு நித்தம் ஓரோர் காசு இந்தக் காலம் தீரும் வரை கிழக்கும் மேற்கும் பீடங்களில் அளிப்போம் என்றருளினர். இருவரும் உணர்ந்து இறைவரது திருவருளைப் பரவிச் சென்று கோயிலை வலஞ் செய்யும்போது பிள்ளையார் அப்பீடகத்துப் பீடிகைமேற் காசு கண்டு தொழுது எடுத்துப் போற்றினர். அடியார்கள் நாளும் உண்க என்று பறைநிகழ்வித்துச், சொல்லாலுஞ் சாற்றி, அடியார்களை இருபொழுதும் இனிதின் அமுதுண்ணும்படி யருளினர். அவ்வாறே மேற்குப் பீடத்தில் காசு பெற்ற அரசுகளது திருமடத்திலும் நிகழ்ந்து வந்தது. ஆனால் அங்கு அடியவர்கள் நாட் கூற்றிலே திருவமுது செய்யக் கண்டு, பிள்ளையார், தமது திருமடத்தில் அமுதாக்குவாரை நோக்கி, அடியார்களுக்கு அமுதூட்டக் காலம் தாழ்க்கின்ற தென்னை? என வினவியருள, அவர்களால், தமது காசு வாசிபடுவதனால் காலம் தாழ்க்கின்றமையும் அரசுகள் காசு வாசிபடாமையும் அறிந்தனர். அரசுகள் கைத் தொண்டாற் பெறுங்காசாதலின் வாசியின்மையாம் என்று கண்டு, இறைவரை "வாசி தீரவே" என்ற பதிகம் பாடி யருள, அற்றை நாட்டொடங்கி வாசியில்லாக் காசு பெற்று உணவளித்தனர். பின்னர் உலகில் மழை பெய்து துன்பம் நீங்கிச் செழிப்படையும் காலம் எய்திற்று. இறைவரைப் போற்றிப் பலநாள் இருந்தபின் பெருமக்கள் இருவரும் இறைவர்பால் விடைபெற்றுப் பிற பதிகளை வணங்க அங்கு நின்றும் எழுந்தருளினர். திருவாஞ்சியம், திருத்தலை யாலங்காடு, திருப்பெருவேளூர், திருச்சாத்தங்குடி, திருக்கரவீரம், திருவிளமர், திருவாரூர்; திருக்காறுயில், திருத்தேவூர், திருநெல்லிக்கா, திருக்கைச்சினம், திருத்தேங்கூர், திருக்கொள்ளிக்காடு, திருக்கோட்டூர், திருவெண்டுறை, திருத்தண்டலை நீணெறி, திருக்களர் முதலிய பதிகளை வணங்கிக் கொண்டு **திருமறைக்காட்டின்** மருங்கு சேர்ந்தருளினர்.

திருமறைக்காடு

இப்பெருமக்கள் இருவரும் சேர எழுந்தருளும் பெரும் பேற்றினைக் கேட்ட திருமறைக்காட்டின் அடியவர்கள் நகரினை அணிசெய்து எதிர் கொண்டு வணங்கி மகிழ்ந்தனர். அவர்களுடன் பெருமக்கள் இருவரும் மகிழ்ந்து போந்து திருக்கோயிலினை முறையால் வணங்கி உட்புகுந்து, முன்னுளில் வேதங்கள் பூசித்துத் திருக்காப்பிட்ட அது முதல் இதுவரை அம்மறைகளோதும் பண்புடை யடியார் அணைந்து காப்பு நீக்காமையால், அடைத்தவாறே நிற்கின்ற திருவாயிலின் முன் போந்தருளினர்.

திருக்கதவம் திறத்தலும் அடைத்தலும்

பிள்ளையார் அரசுகளை நோக்கி "அப்பரே! எவ்வாற்றானும் நேர் வாயிலாகிய இதனைத்

திறந்து புகுந்து இறைவரை வணங்குதற்கு நீர் பாடியருளும் என்று கூற, "ஈது உமதருளாகில் அவ்வாறே பாடுவேன்" என்று அவரும் "பண்ணினேர் மொழி" என்ற பதிகம் பாடிப் பத்துப்பாட்டும் நிரம்பியும் கதவம் திறவாதாகத், திருக்கடைக்காப்பில் அதின் வேண்டவே கதவம் திறந்தது. அடியவர்கள் அர ஓசை எழுக்கி ஆர்த்தனர். அவ் வழியே சென்று பெருமக்கள் இருவரும் உட்புகுந்து இறைவரை இறைஞ்சித் திருவடிகளைப் போற்றி இன்ப வெள்ளத்துள் மூழ்கித் திருப்பதிகங்கள் பாடிப் புறம் போந்தபின், அரசுகள் பிள்ளையாரை நோக்கிக் "கதவம் அடைக்கப் பாடுக" என்ன, அவ்வாறே பிள்ளையார் "சதுரம் மறை" என்ற பதிகம் பாட, எடுத்த திருப்பாட்டிலே கதவம் திருக்காப்பு நிரம்பிற்று. அது கண்ட அடியவர்கள் ஆர்த்துத் திருவருளையும் பெருமக்கள் இருவரையும் போற்றி வாழ்ந்தனர். அன்று முதல் அத்திருவாயிலின் வழியே அடியவர்கள் சென்று வணங்கும் வழக்கம் நிகழ்ந்தது. வேதங்கள் செய்த பணியைத் தாம் செய்து இறைவரை நேரே காணும் பெருமையை வகுத்து வைத்த இருவரையும் போற்றி உலகம் வாழ்ந்தது.

இவ்வாறு இறைவர் செய்த பேரருளினையும், தாம் அரிதிற் பாடித் திறப்பித் தமையும் பிள்ளையார் எளிதில் அடைத்தமையும் உன்னி உன்னித் திருமடத்தில் ஒருமருங்கு அரசுகள் துயிலும்போது, இறைவர் சைவ வேடத்தால் கனவில் வந்து, "வாய்மூரில் இருப்போம்; தொடர வா" என்றருளிப் போனார்; அஃது உணர்ந்து அப்போதே கைகூப்பித் தொழுது எழுந்து கடிது பின் தொடர்ந்தனர். அவர் எய்துவார்போன்று எய்தாது முன் செல்லச் செல்ல, அரசுகளும் ஆர்வத்தோடும் அவர்பின் போயினர். அப்பர் எங்குற்றார்?" என்று கேட்டு, அறிந்து, பிள்ளையாரும் அப்பொழுதே தொடர்ந்து திருவாய்மூரினை அணைய வந்தனர். முன் சென்ற இறையவர் அற்புதப் பொற்கோயில் ஒன்று காட்டி அதனுள் மறைந்தருள அவ்வெல்லையிற் பிள்ளையாரும் வந்தணைந்தனர். இறைவர் அவருக்கு விண்ணின் மேல் விடை மேலே காட்சி தரக்கண்டு "தளிரிளவளர்" என்ற பதிகம் பாடி, அரசுகளுக்கும் காட்டிய பின், இருவரும் திருவாய்மூர் சென்று தொழுது, அங்கு வைகினர். பின், திருமறைக்காட்டிற் சேர்ந்து தொழுதினிதிருந்தனர்.

பாண்டிநாட்டு நிலை-விண்ணப்பம்

அந்நாளிலே பாண்டி நாட்டிலே சமண சமயம் மிக்குச் சைவ விளக்கம் குன்றியது; அரசனும் முன் செய் தீவினைப் பயத்தினாலே சமணத்திற் சார்ந்து ஒழுகினான். சைவ நன்னெறி திரிந்து மாறி, நவை நெறி நடந்தது. தமிழ்நாட்டுப் பதிகள் எல்லாம் சமணர் பாழிகளும் பள்ளிகளுமாயின; எங்கும் சமணரேயாகி மொய்த்தனர். பாண்டிமாதேவியாராகிய மங்கையர்க்கரசியாரும், மந்திரியாராகிய குலச்சிறையாரும் என்றிவ்விருவர் பாங்குமின்றிச் சைவம் அங்கு எய்தாதாயிற்று. இவர்களும் தம் நாட்டிற்கு வந்த கேட்டினை எண்ணி மனமழிந்து தாம் சைவ ஒழுக்கத்தினின்ற நிலையினைப் பாண்டியன் முன்பு புலப்படாவகை கொண்டு செலுத்தினார்கள். அப்போது பிள்ளையார் திருமறைக்காட்டில் எழுந்தருளிய செய்தியினை இவர்கள் பாண்டிநாட்டின் நல்வினைப் பயத்தினாற் கேட்டுத் தாங்கள் கைதொழும் கருத்தினாலே பரிசனங்களைப் பிள்ளையார்பால் அனுப்பி, அவரிடம் தமது நாட்டின் நிலையினை விண்ணப்பிக்கும்படி ஏவினார்கள்.

அவர்களும் திருமறைக்காடு சேர்ந்து பிள்ளையாரது திருமடத்தில் வந்து, வாயிற் காவலர்க்குச் சொல்லி, விடுக்கப்பெற்றுப், பிள்ளையார் திருமுன்னர் பணிந்து அவ்வாறு விண்ணப்பித்தார்கள். உடனிருந்த தொண்டர்களும் அவ்வாறு விண்ணப்பிக்கப் பிள்ளையார் அவர்களுக்கு அருள்முகமளித்த பின், அரசுகளுடன் கூடிச் சென்று இறைவரைப் பணிந்து பெரிய திருக்கோபுரத்துளிருந்து அவ்வரலாறுகளை அரசுகளிடம் கூறிப், பாண்டிநாட்டுக்கு எழுந்தருளத் துணிந்தனர். அப்போது வாகீசர் ''பிள்ளாய்! அந்த அமண்கையர் பெருவஞ்சனையுடைய தீயோர்; கோள்களும் தீயன; செல்ல உடன்படுவ தொண்ணாது'' என்று மறுக்கப், பிள்ளையார் **''இறைவரை நாம் தொழக் கோள்கள் தீயவையாகா; நன்மையே பயக்கும்;** இறைவரது திருநீறு பத்தரொடும் அமணர்களை வாதில் அழிவிக்கும்; இது திடமே'' என்று ''வேயுறு தோளி'' என்னும் **கோளறு திருப்பதிகத்தினை** அருளிச்செய்ய, அது கேட்டு அரசுகளும் இசைந்து உடன்வருதற் கெழுந்தனர். பிள்ளையார் அவரைத் தடுத்து, அங்கிருக்கும்படி வேண்டி, இறைவரைத் தொழுது விடை பெற்று எழுந்தருளினர். அரசுகளும் விடைகொண்டு மீண்டு அங்கெழுந்தருளியிருந்தனர். பிள்ளையார் அரசுகளிடம் விடைபெற்றுத் திருவைந்தெழுத் தோதி இறைவர் திருவடி நினைந்து திருநீறு அணிந்து சிவிகையி லெழுந்தருளினர். அதுகண்ட அடியவர்களெல்லாம் சிவநாம முழக்கி ஆர்த்தனர்.

நாற்றிசையிலுள்ளோரும் போற்ற மங்கலங்களுடன் அங்கங்கும் அடியார் எதிர்கொள்ள வழியிடையே உள்ள பதிகளை வணங்கிக்கொண்டு செல்வாராகித், திருவகத்தியான் பள்ளி, திருக்கோடிக்குழகர், திருக்கடிக்குளம், திருஇடும்பாவனம், திருவுசாத்தானம் முதலிய பதிகளை இறைஞ்சித் தமிழ்பாடித் துதித்துப், பிள்ளையார் போந்தருளினர். கழிநெய்தல் கடந்து, சோழநாட்டின் தென்மேல்பாற் றிசைநோக்கிச் செழிப்பாகிய மருதநிலத்தின் வழியே சென்று, எங்கெங்கும் கமலத் தடங்களும் மலர்ப்படுகரும் முதலிய இவை கடந்து, அந்தணர்கள் ஓதுகிடைகளையும் யாகநிலைகளையும் தொண்டர் குழாங்களையுமுடைய நல்ல பதிகளையும் கடந்து, இவ்வாறு நீர்நாட்டினை நீங்கி, அடுத்த முல்லைநிலம் கடந்து, மறவர் வைப்பாகிய நிலமுங் கடந்துபோய்ச், சீர்நாடு தென்பாண்டி நாட்டினை அணைவாராகித், **திருக் கொடுங்குன்றத்**தினை அணைந்து பணிந்துபோய்க், குன்றும் கானும் நாடுங் கடந்து, **மதுரையினை** அணைகின்றார்.

இவ்வாறு பிள்ளையார் எழுந்தருளாநிற்பப், பாண்டிநாட்டின் சமணர்களுக்கு அழிவுகாட்டும் தீக்கனுக்களும் துன்னிமித்தங்களும் நிகழ்ந்தன. அவர்களது பாழி, பள்ளி, அசோகு, உணவு மண்டபம் முதலியவற்றின்மேல் கூகை ஆந்தை முதலான தீயபுட்கள் பூசலிட்டுக் கேடுகாட்டின. பீலியும் தடுக்கும் பாயும் வழுவி வீழ்ந்தன; கால்கள் தடுமாறின; கண்கள் இடந்துடித்தன. கந்தியர் தம்மிற்றாமே கலாம் விளைத்தனர்; அமணர் தம்முள் மாறுகொண்டு பொறை முதலிய அறவிதிகளை விடுத்துத் தீக்குணம் தலைநின்றார்கள். இவையேயன்றி இவர்களுக்குப் பலன் விளக்கும் தீக்கனுக்களும் நிகழ்ந்தன. இவற்றை ஒருவர்க்கொருவர் சொல்லி, மதுரைப் புறத்துள்ளோர்களும் மதுரையில் வந்துசேர்ந்து அங்குள்ளாருடன் கூடி மயங்கித் தாந்தாங் கனுத்திறங்களைப் பேசிக்கொண்டனர். அசோகமரம் வேரோடு பறிந்து கீழே உள்ள அருகத்தேவன்மேல் வீழவும், பின் அத்தெய்வம் முக்குடையும் தானும் எழுந்து கையுதறி ஓடிப்போகவும், குண்டிகையை

உவர்த்து கருத்தி லொருத்தி யூடினர், பண்டிதர் கழுதைமேற் படரவும், அவர்பின் இயக்கியார் வளையாயிர் நிர்ப்புலரிபோயினர், சிவனடியார்கள் மதுரையில் வரவும், அரசன் தழல் மூழ்கி எழுவர், மன்னவ இளங்கன்று ஒன்று வந்து அமணரது கூட்டத்தை உழறிடவும், ஒருபு கழுமரின்றி பாவனர் சிதறி ஓடி நிழலில்லாத மரங்களேறி நின்றிடவும் என்றின்னனவர் அவ்வவர் கண்ட கனவுக்களைக் கூறினர். 'இவை சமண அடிகளுக்குத் தீங்கு விளைவிப்பதுதிண்ணமே' என்று மனம் வருந்தி உணவும் கொள்ளாது அழுங்கினர்கள். அமணர் அந்நிலையிலை அவ்வாறிருப்ப பாண்டிமா தேவியார் மங்கை யர்க்கரசியாருக்கும், பெய்வளை அமைச்சர் குலச்சிறையாருக்கும் மேன்மேல் நன்னிமித்தங்கள் விளங்கின; அதுகண்டு மகிழ்ந்திருந்தபோது, பிள்ளையார் எழுந்தருளும் நல்ல வார்த்தையினை வந்தவர்கள் கூறக்கேட்டனர். மிகவும் மகிழ்ச்சி கூர, வந்து அடிவணங்கி நின்ற அமைச்சரை நோக்கி மங்கையர்க்கரசியார், ''பிள்ளையார் திருமுன் சென்று நல்வரவேற்று எதிர்கொள்ளுநம்'' என்றார். அவரும் இச்செயல் அரசனுக்கு முறுதியேயாம் என்று உட்கொண்டு மதுரையின் புறத்து நெடுந்தூரம் சென்று வரவேற்று நின்றனர். ஆலவாயமர்ந்த பெருமானைக் கும்பிடவேண்டுமென்று அரசனுக்கும் கூறி அம்மையாரும் பரிசனங்களுடன் ஆலவாயுடையார் திருக்கோயிலுக்குச் சென்று தாமும் வரவேற்று நின்றனர்.

முத்துச் சிவிகையின் மேலே சேவித்து வரும் முழுமதிபோல முத்துக்குடை நிழல் செய்யவும், திருநீற்றுத்தொண்டர் குழாம் பெருகிவரவும், அந்தணர்கள் மறை வாழ்த்தொலி பொங்கவும், செந்தமிழ் மாருதம் எப்பக்கமும் சேவிப்பவும், அமண் என்னும் பாவப் பெருஞ்சேனை உடைந்தோட வரும் புண்ணியத்தின் படை யெழுச்சி போல, அமண் மாசு கழுவ வரும் கங்கைபோல, அமணிருள் போய் மாய்வதற்கு ஞானமணிவிளக்கு எழுந்து வருவதுபோலச் சைவநெறி தழைத்தோங்கு நலம்பலவும் காட்டித் திருச்சின்னங்களெல்லாம், பரசமயகோளரி வந்தானென்று பணிமாறப் பிள்ளையார் எழுந்தருளி வருகின்றார். அவ்வோசை செவியமுதெனக் கேட்டவுடன் மந்திரியார் மிகமகிழ்ந்து கைகூப்பி விரைவிற்சென்று, அத்திரு எழுச்சியின் முன்வரும் தொண்டர் பெருங்கூட்டத்தின் முன்னே நீணிலத்திடைத் தாழ்ந்து பணிந்து கிடந்தனர். அத்தொண்டர்கள் அணைந்து வணங்கவும், குலச் சிறையார் நிலத்தினின் றெழாது கிடந்த நிலைகண்டு, சிவிகையின் மேல்வரும் பிள்ளையார்பால் அறிவித்தனர். அது கேட்ட பிள்ளையார் சிவிகையினின்றும் விரைந் திழிந்து சென்றருளி அவரை யணைந்து கைம் மலர்கள் பற்றியே மேல் எடுப்ப, அவரும் கைதொழுது நின்றனர். பிள்ளையார் மதுர வாக்களிப்பாராய்ச் ''சோழர் மகளாராகிய மங்கையர்க்கரசியாருக்கும் திருந்திய சிந்தையீராகிய உமக்கும் இறைவரது திருவருள் பெருக நன்கு நிகழ்கின்றதா?'' என்று வினவி யருளினர். அதற்கு மந்திரியார், ''சென்ற காலத்திலும் பழுதிலோம், இனி யெதிர்காலத்திலும் சிறப்புப்பெறுவோம் என்பது இன்று தேவரீர் எழுந்தருளப் பெற்ற பெரும் பேற்றினாலாகியபடி என்றும் திருவருள் உடையோம். நன்மை யற்ற நெறியில் அழுந்திக்கிடக்கும் இந்நாடும் நற்றமிழ் வேந்தனும் உய்திபெற்றுத் திருநீற்றினொளியில் விளங்கும் மேன்மையும் படைத்தனம்'' என்பாராகி, மேலும், ''தேவரீர் எழுந்தருளும் பேறு கேட்டு எமது வாழ்வு எழுந்தருளிற்று என்றே அங்கு எதிர்சென்று அடிபணிவீர்''

என்று மங்கையர்க்கரசியார் அடியேனை ஏவி யருளினர் என்று கூறி பின்னும் அடிவணங்கினார். அவருக்கு அருளிப், பிள்ளையார் மேற்செல்லும்பொழுது மதில்புடை சூழும் மதுரை எதிர்தோன்றவே, ''இங்கு இறைவரது திருவாலவாய் மற்றெம் மருங்கில் உள்ளது?'' என்று பிள்ளையார் தொண்டரை வினவ, அவர் கைகளாற்காட்டி 'வானளக்கவோங்கிய கோபுரந் தோன்றுவது திருவாலவாய்' என்று காட்டிடக்கண்டு, அப்பொழுது அவ்விடத்தே நிலமிசைப் பணிந்து ''மங்கையர்க்கரசி'' என்று தொடங்கி இருவர் பணியும் சிறப்பித்துத் திருப்பதிகம்பாடி வணங்கி, மேற்சென்று, மந்திரியாருடனே திருவாலவாய் மருங்கு அணைந்து, கோபுரமிறைஞ்சி, முறையே மாளிகையை வலங்கொண்டு, திருக் கோயிலினுட் புகுந்தருளினர்; ஆலவாயுடைய பெருமானைக் கண்களின் பயன்பெறக் கண்டு பலமுறை நிலமுறப் பணிந்து திளைத்தனர். ''நீலமாமிடற்று'' என்ற திருப்பதிகம் பாடித் துதித்துத் திருமுன்றிலணைந்தனர். பிள்ளையார் உள்ளே புகும்பொழுது எதிர் செல்லாது ஒரு பக்கத்தில் ஒதுங்கி நின்ற மங்கையர்க்கரசியார், அப்பொழுது முன்புவந்து கண்ணீர் மல்க அடிவணங்கிக் கைகூப்பி நிற்க, அவரைச் சோழனார் திருமகளார் என்று மந்திரியார் அறிவிக்கப், பிள்ளையார் பெருமகிழ்ச்சியுடன் அவரெதிர் அணைந்தருளினர். அம்மையார் பிள்ளையாரின் திருவடிகளில் பொருந்த வீழ்ந்து வணங்கினர். பிள்ளையார் அவரை அருட்பெருஞ் சிறப்பொடும் எடுத்தருள, அம்மையார் தமது கருத்து முற்றியதென மகிழ்ந்தே, கண்ணீர் மல்க வாய்குழறி, **''யானு மென்பதியும் செய்த தவம்தா னென்னே!''** என்று கூறி வணங்கி நின்றனர். பிள்ளையாரும், **''பரசமயச் சூழலினிடையே திருத்தொண்டி னெறியில் வாழும் பெருமையுடைய உம்மைக் காணவந்தனம்''** என்றருள, மந்திரியார் வரும் திறங்களெல்லாம் மொழிந்தனர். பிள்ளையார் அம்மையாருக்கு அருள்செய்து விடைகொடுத்து மெய்த்தொண்டர்களுடனே எழுந்தருளும்போது, திருவாலவாயிற் பணிசெய்யும் தொண்டர்கள் முன்பு வந்து ''அமணிருள்கெடத் தேவரீர் எழுந்தருளுதற்கு எல்லையில்லாத் தவம் செய்தோம்'' என்று கூறி இறைஞ்சினர். அவர்களுக்கு அருண்முகமளித்தபின் புறத்தில் அணைந்து குலச்சிறையார் திருமடங் காட்ட அதில் தொண்டர்களுடனே இனிதமர்ந்தருளினர். அம்மையார் அருளினாலே குலச்சிறையார் விருந்தளிப்பப், பிள்ளையார் அங்கிருந்தனர்.

இவ்வாறு பிள்ளையாரும் அடியார்களும் பகல் வரக்கண்ட அமணர்கள் அவ் விரவிலே, இருளுக் கிருள்போலக் கூடினர். தொண்டர்கள் எடுத்திசைக்கும் பதிகத் திசையினையும் கேட்டுக் கலங்கிப் பொறுமைகொண்டு, அரசனிடம் சென்று அறிவிக்கும் சூழ்ச்சி துணிந்து, அரண்மனைக்குச் சென்று, வாயில்காவலர்க் கறிவித்து, விடுவிக்கப்பெற்று, அரசன் முன்பு பதைப்புடன் சென்றனர். அவர்களது மனம் புலர்ந்தமையறிந்து அரசன் ''நீவிர் கூடிவந்த தென்னை?'' என்ன, அவர்கள் ''அது சொல்லுதற்கடுத்ததன்று'' என்றனர். ''ஆயின் நுமக் கடுத்தது கூறுவீர்?'' என்று அரசன் மேல் வினவ, ''வென்றி அரசனே! உனது மதுரையிற் சைவ வேதியர் வருதலால் நாங்கள் கண்டு முட்டு'' என்றனர். அதுகேட்ட அரசன், ''யானும் கேட்டு முட்டு'' என்று கூறிப் பின்னும், ''என் அரசு நன்று!'' என்று சினந்து ''அச்சிவனடியார் யாவர்? இங்கு அவர்கள் அணைந்ததென்?'' என்றான். அதற்கு அவர்கள் ''சோழநாட்டில் சீகாழியில் சூலபாணியின் அருள்பெற்றவனென்று மறைச்சிறுவன் தொண்டர் கூட்டத்துடனே முத்துச் சிவிகையின்மேல் ஏறி வந்தணைந்தனன் எங்களை வாதினில் வெல்ல'' என்று கூறித் தாமறிந்தன

றென்று பெயரும் கூறினர்; பிள்ளையாரது திருநாமம் தன் செவிப்புக்கபோது அரசன் கோபித்து “அம்மறைந்தவன் இம்மருங் கணைந்தானாயின் நாம் செய்யக்கடவது என்னை?” என்ன, அவர்கள் “அந்த மறையவனை வலிசெய்து போக்கும் கருத்தன்றி, அவன் உறையும் மடத்தில் தீப்படும்படி வஞ்சனை மந்திரத் தொழில் விளைத்தால் இந்நகரில் இராது சென்றுவிடும்” என்றார்கள். “செய்யலாவது ஒன்று இஃதேயானால் அதனையே விரைந்து செய்யச் செல்லுங்கள்” என்றுகூறி அவர்களைப் போக்கி, யாவரிடமும் பேசாது, கவலையுடனே அரசன் பள்ளிக்கட்டிலிற் சேர்ந்தான். அப்போது பாண்டிமாதேவியார் அங்குச்சேர்ந்து, உரையாடாதிருந்த மன்னனை நோக்கி “என் உயிர் நாதரே! மனமகிழ்ச்சியின்றி முகம் புலர்ந்திருந்தீர்; உமக்கு நேர்ந்ததென்ன?” என்று கேட்க, அரசன் “சோழநாட்டிற் சீகாழிப் பதியான் ஒருவன் சங்கரனருள்பெற்று இங்கு அடிகள்மாரை வாதினில் வெல்ல என்று வந்தனன்; அடிகள்மார்கள் கண்டுமுட்டு; யானும் கேட்டுமுட்டு; இஃதே நிகழ்ச்சி” என்றான். அம்மையார் உமது நிலை இஃதாகில், “நீடிய தெய்வத்தன்மைபற்றி அவர்கள் வாது செய்தால் வென்றவர் பக்கஞ் சார்ந்து பொருந்துவதே உறுதியாகும்; வருந்த வேண்டா” என்று கூறிப் பிள்ளையார் தம்மை ஆட்கொள்ள வந்தருளியமைபற்றி மகிழ்ந்து இதனை மந்திரியாருக்குமுரைத் திருந்தனர். மந்திரியார் வணங்கிப் “பிள்ளையார் எழுந்தருளும் பேறு பெற்றோம்; ஆயின் இனி இவ்வமணர்களாகிய வஞ்சகர் செய்யும் வஞ்சனை என்னையோ? அறியோம்” என்றுகூற, அம்மையார் அஞ்சி “இவ்வஞ்சகப் புலையர் ஈனமே புரிய வல்லார்; ஞானசம்பந்தர்பாலின் நன்மையல்லாதவை செய்து ஏதேனும் ஊனம் வந்தடைந்தால் நாமு முயிர்துறந் தொழிவதே கடனாகும்” என்றுரைத்தனர்.

இவர்கள் நிலை இஃது; இனி, அவ்வமணர் நிலை யாதோ? என்னில், அரசனிடம் விடைபெற்றுச் சென்ற அவர்கள், பிள்ளையாரது திருமடத்திலே தங்கள் மந்திரத்தாற் செந்தீயினைச் சேரும்படி செலுத்தினர். **ஆதிமந்திரமாகிய திருவைந்தெழுத்தினை ஓதுவார்கள் நோக்கும் திசையிலும் மற்றை மந்திரங்களின் விதிவந்து கூடவல்லதாமோ?** ஆதலின் தாம் புனைந்த மந்திர சாதனைகள் சாதியாதொழிந்த நிலைகண்டு, அமணர்கள் தளர்ந்து வந்துகூடி, இதனை அரசன் அறிந்தால் நம் மேன்மை கருதாது விடுத்து நமர் சீவனத்தையும் ஒழிக்கும் என்று எண்ணி, மந்திரம் வாய்க்காதபோது இஃதே செய்யலாவது எனத் துணிந்து திருமடப் புறஞ் சேர்ந்து தாம் எண்ணியபடியே புரிந்தனர்; அத்தீத்தொழில் வெளிப்படுதலும் பதைப்புடனே பரிசனங்கள் அதனைச் சிதைத்துப் பிள்ளையார்பால் அறிவித்தனர்; பிள்ளையார் “மாதவர்கள் துயிலும் இத்திருமடப்புறம்பு இப்பாவிகள் பழுது செய்வதோ?” என்று இரக்கங்கொண் டருளினர்; பின்னர் “என் பொருட்டு அவர்கள் செய்த தீங்காயினும் சிவனடியார்பாற் பொருந்துமோ?” என்று அச்சமும் முனிவும் பொருந்த அரசனது நீதிமுறை வழுவியமையே இதன் காரணம் என்று திருவுளங் கொண்டருளினர்; “செய்யனே” என்ற பதிகங் கட்டளையிட்டுச் “சைவர் வாழும் மடத்தில் அமணர் இட்ட தீ பையவேசென்று பாண்டியற் காகவே” என்று பணித்தருளினர். மங்கையர்க்கரசியாரது மங்கலநாண் பாதுகாக்கவும் அரசனைத் தீண்டித் திருநீறுபூசி உய்விக்கவும் திருவுளங்கொண்டு தீயினைப் **பையவேசென்று ஆக என்றருளினர்.** அத்தழல் சென்று பாண்டியனைப் பொருந்துமாறு மேவித் தழல் பொதி வெப்பு நோய் எனப் பெயர்பெற்றது.

இரவு நீங்கிப் பொழுது விடிந்தது; இரவில் அமணர் செய்த தீமையினை அரசியாரும் அமைச்சனாரும் கேட்டு இத்தீயவர் நாட்டில் பிள்ளையாரை வரவழைத்த நாம் மாய்வதே கடன் என மயங்கிப்பின், திருமடப்புற மருங்கு தீதின்மை, தெரிந்து, தெளிந்து, "இத்தீங்கு கடைக்கால் வருவதெப்படியோ?" என எண்ணி யிருந்தனர்; அப்பொழுது, அரசனின் மெய்க்காவலர் வந்து "அரனுக்கு வெப்பு நோய் அடுத்தது" என்றறிவிக்கப் பதைப்புடனே அரசனிடம் வந்தணைந்தனர். அரசனது வெப்புநோய் உடல்முழுதும் தீப்போலக் கனன்றெழுந்தது; மாளிகையிற் புறத்து நின்றார்களும் புலர்ந்து தீந்துபோம்படி நோய் வெப்பமிக்கு உடல் திரங்கிற்று; உணர்வும் உயிரும் ஒழியும்படி ஒருபுறம் ஒதுங்கின; அணைய வந்தவர்களும் தூரத்தி லகன்றனர்; வாழைக் குருத்தும் தளிர்களும் இலை போ கொணரினும் அவை கருக்கொண்டு பொடியாயின; மருத்துவர் நூல்களின் வகுத்த தொழிலெல்லாம் செய்யவும் நோய் மேன்மேல் எழுந்து உயிரையும் உருக்குவதாகவே கருத்தொழிந்து அரசன் பேச்சும் மறந்தனன். இச்செய்தி தெரிந்த அமணர்கள் மனமழிந்து இது முன் இரவின் செய்தியின் விளைவுதானோ? என்று கூறி மானமின்றி அரசனிடம் வந்து அணைந்து தங்கள் மந்திர முறைகளினால் தீர்வு முயன்றனர். மாதேவியாரும் அமைச்சனாரும் "இஃது அமணர் செய்த தீத்தொழிலின் விளைவேயாகும்; இவர்கள் தீர்க்கப்புகின் தீராது முதிர்வதேயாகும்" என்று கொண்டு மன்னனெதிர் பணிந்து இச்செய்திகளைக் கூறி, "இதற்குத் தீர்வு பிள்ளையாரது அருளேயாம்; சிவஞானம் பெற்ற திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் விரும்பி நோக்கினால் இந்தத் தீப்பிணியேயன்றிப் பிறவியும் தீரும்" என்றார்கள். அரசனது செவியில் அவர்கள் இவ்வாறு கூறித், **"திருஞானசம்பந்தர்"** என்ற நாம மந்திரத்தினையும் சொன்னபோது, அரசன் சிறிது அயர்வு நீங்கி, அவர்களைப் பார்த்துச் "சைவ நீதிமறைச் சிறுவர் வந்தால் இந்நோய் நீங்குமாகில் அறிவேன்; இப்பிணியைத் தீர்த்து வென்றவர் பக்கம் சேர்குவன்; அதற்கு உபாயம் உண்டாகில் அழையுங்கள்" என்றான். அது கேட்டவுடன் அம்மையாரும் அமைச்சனாரும் "சிறையை நீக்கிய வெள்ளம்போன்ற காதல் வெள்ளத்தோடும் அம்மையார் சிவிகைமீதும், அமைச்சனார் குதிரையிலுமாக ஏறிப் பிள்ளையாரது திருமடத்தினைச் சார்ந்து, வாயில் காவலர்க்கு அறிவித்துப், பிள்ளையார் ஆணையால் விடுக்கப் பெற்று உட்சென்றனர்; ஞானத்தின் றிருவுருவை, மறைகளின் துணையை, வானினன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைச், சிவன் சீர்பாடும் கானத்தின் எழுபிறப்பினைக் கண்களிப்பக் கண்டார்கள்.

"ஞானத்தின் றிருவுருவை நான்மறையின் றனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்குங்
கானத்தி னெழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்."

கண்டபோதே அமண் தீயோர் செய்த கொடுந்தொழிலை நினைந்து, கண்ணீரருவி பாயக் கைகள் கூப்பிப் பெருமூச்செறிந்து வாய்குழறி உடல் நடுங்கி ஒன்று மறிந்திலராகி நிலத்தின் வீழ்ந்து பிள்ளையாருடைய சரணகமலங்களைப் பற்றிக்கொண்டு, கவலைக் கடலின் ஓர் கரை பற்றினார்போன்று, மெய்யன்பினால் விடா தொழிந்து கிடந்தனர். அவ்விருவரையும் பிள்ளையார் திருக்கையினா லெடுத்தருளித் தேற்றியிடவும் தெளியாதாராக அவர்களை நோக்கி

"திருவுடையீர்! உங்கள்பால் தீங்குளதோ" என்று கேட்டருளினர். அவர்கள் நிகழ்ந்தவற்றை யெல்லாம் சொல்லி, "அமணர்களாற் றீராமைத் தீப்பிணியினால் மயங்கும் மன்னவன் முன்னே அவர்களை வென்றருளினால் அவனுயிரும் எமதுயிரும் உய்யும்" என்றனர். அவர்களுக்கு உறுதிகூறி "ஆக்கமும் அழிவும் எல்லாம் அவர் செயலேயாகும்; அமணர்களாகிய பாவகாரிகளை நோக்க நேரும் தீமை நீங்கவும் வெல்லவும் இறைவரது திருவுள்ளமறிவேன்" என்று புறப்பட்டுத் திருவாலவாயினுட் புகுந்தனர். எரியுருவாகிய இறைவரே! நோக்கவும் விதியிலாத அமணர்களை நோக்கி நான் "வாது செய்யத் திருவுள்ளமோ" என்று "காட்டுமா" என்ற திருப்பதிகம் பாடித் திருவுள்ளம் நோக்கிப், பின்னும் "வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே" என்று "வேத வேள்வியை" என்ற திருப்பதிகம் பாடி, "திருஆலவாயினில் ஆதியே! அடியேற் கின்று ஞாலம் நின்புகழே மிகவேண்டும்" என்று இறைஞ்சி இறைவரது அருள்பெற்று மகிழ்ச்சியுடனே போந்து சிவிகையினை மேற்கொண்டு போந்தருளினர். தொண்டர்கள் எடுத்த அரவோசை முழக்கம் எங்கும் நிறைந்தது; திருநீற்றின் சோதிபோல முத்துக்குடை நிழற்றச் சின்னங்கள் ஒலிக்க எழுச்சிபெற்றுச் செல்லக், காட்சிபெற்ற மதுரைநகர மாந்தர் வேற்றுச் சமயத்தவராயினும் "பாண்டியன் பொருட்டு இந்தப் புண்ணியமூர்த்தி வந்து மதுரையிற் புகுவதற்குப் பண்ணிய முன்னைத் தவம்தா னென்னே!" என்றனர். பாண்டிமாதேவியார் சிவிகையின் பின்னே வரவும், அமைச்சனூர் முன்பு திருத்தொண்டர் கூட்டத்தினுட் செல்லவுமாக, இவ்வாறு சென்று பிள்ளையார் அரசனது அரண்மனை வாயிலினைச் சேர்ந்தனர்; மந்திரியார் முன்சென்று அரசனுக்குப் பிள்ளையாரது வரவினைக் கூற, முன்னைத் துன்பம் மேலுஞ் சிறிது நீங்கி, அரசன், "முடியின் பக்கத்து அவருக்கு மணிப்பீடம் இடுக" என்று கூறும் **வல்லமைபெற்று**, மேலும், அவரை அழைத்து வரும்படி அமைச்சரை ஏவினன். அதுசமயம் அமணர்கள் அரசனை நோக்கி, நமது தனிச் சமயத்தினைக் காக்கும் பண்பு இஃதோ?" அரசே அவரை அழைத்தீர்; நோயினை இருதிறத்தவரும் ஒக்கத்தீர்க்கும்படி கூறி, "அவராற் றீர்ந்ததாயினும் யாமும் தீர்த்தோமாகவும் கூற இசைவீராக" என்றனர்; செய்தவப்பயன் வந்துகூடும் காலம் பொருந்தியதனாலே அரசன் "தெய்வச்சார்பிலே இருவரும் தனித்தனித் தீருங்கள்; கைதவம் பேசமாட்டேன்" என்று கூறவே அமணர்கள் எண்ணங் கெட்டிருந்தனர்.

பிள்ளையார் அரண்மனை முற்றத்திற் சிவிகையினின்று மிழிந்து உட்புகுந் தருள, வானினின்று நிலத்திடை நீளிருணீங்க வந்த திங்கள்போன்ற அப்பெருமானை அரசன் கண்டனன். கண்டபொழுதே அரசன் கையெடுத்து எய்த நோக்கி முடியின் பக்கத்திற் பீடத்தினைக் காட்டப், பிள்ளையார் அதன் மிசை எழுந்தருளி யிருந்தனர். அரசன் பிள்ளையாரது திருமேனி காணப்பெற்று நோக்கப் பெற்றதனாலே வெப்பு நோய் **மேலும் சிறிது நீங்கிப்** பிள்ளையாரை நோக்கித் "தமது பதியாது" என்று விருப்புடன் கேட்டனன். பிள்ளையார் "திருக்கழுமலம் நாம் கருதும் ஊர்" என்று அதன் பன்னிரண்டு பெயர்களையும் பற்றி எழுந்த திருச்சக்கர மாற்றுப் பதிகத்தினைக் கட்டளையிட்டருளினர். அப்பொழுது பக்கத்திலிருந்த அமணர், பொறாமையினாலே அச்சத்தை மறைத்துக் காலை எழும் ஞாயிற்றைச் சூழும் கருமுகில் போலப் பிள்ளையாரைச் சூழ்ந்துகொண்டு ஏலவே வாதில் வெல்வதற் கெண்ணித், தமது புனை நூலினை எடுத்து ஓதிக்குரைத்தார்கள். அதற்குப்

பிள்ளையார் உமது பொருளெல்லையினை உள்ளவாறு எடுத்து வகுத்துப் பேசுங்கள் என்றருள, அவர்கள் அனேகராய் சூழ்ந்து பதறிக் கதறினர். அம்மையார் அது கண்டு பொறுக்கலாற்றாது உண்ணடுங்கி, அரசனை நோக்கிப் ''பிள்ளையார் திருமேனி எளியர். அமணர் எண்ணிலர்கள்; உமது நோயினைப் பிள்ளையார் தீர்த்தருளுவர்; அதன்பின் வெல்லார்களாயின் இவ்வமணர் பேசலாமே'' என்று கூற, அரசன் ''நீ வருந்தல்'' என்று கூறி, அமணரை நோக்கி ''அருகராகிய நீங்களும் சிவனுக்கன்பராகிய இவரும் அவ்வவர் தெளிந்த தெய்வத் தன்மையினை என்னிடைத் தெரிப்பீராக'' என்றனன். பிள்ளையார் அம்மையாரை நோக்கி, ''மானினேர் விழி'' என்ற பதிகத்தினாலே ''என்னைப் பாலனென்று நீ அஞ்ச வேண்டா; திருவாலவாய் அரனிற்கவே யான் இவ்வமணர்க்கு எளியேனல்லேன்'' என்றருளினார்.

சுர வாதம்

விடாது கதறிக் கொண்டிருந்த அமணரையும் அமைதியாயிருந்த பிள்ளையாரையும் நோக்கி, அரசன், ''எனது பிணியினை நீவிர் தனித்தனி இகலித் தீருங்கள்; தெற்றெனத் தீர்த்தவரே வாதில் வென்றவராவர்'' என்றவுடனே, அமணர். ''ஒரு பக்கம் இடப்பாகத்து நோயினை முன்னர் மந்திரித்துத் தெய்வ முயற்சியாலே தீர்ப்போம்'' என்று தாமே முந்திக்கொண்டு அணுக அணைந்து கைப்பீலி கொண்டு மந்திரித்துத் தடவினர்; வெப்பு மேன்மேல் மூடுகிற்று; அதுகண்டு அரசன் பிள்ளையாரைப் பார்த்தனன். அரசனது கருத்தினைக் கண்டு பிள்ளையார் ஆலவாயான் திருநீறே இவனது வலப்பால் வெப்பினை ''மந்திரமும் மருந்து மாகித் தீர்ப்பதாகும்'' என்று ''மந்திரமாவது நீறு'' என்ற திருநீற்றுப் பதிகத்தினை அருளித் திருக் கையினால் திருநீறு கொண்டு தடவி யருளினர்; வெப்பு உடனே நீங்கிப் பொய்கை போல அப்பக்கம் குளிர்ந்தது. இரு பக்கத்தின் வெப்பும் கூடி இடப்பக்கத்தில் அழல்போல நோய் மிக்கது; அமணர் நடுங்கி அவ்வெப்புத் தம்மைச் சுடவே அரசனது அருகு விட்டு அகன்று ஏற நிற்பார் அறிவுடையாரைப் போன்றனர். அரசன் ''இந்த ஒரு காலத்திலே ஒரு புறம் வெவ்விய நரகமும் ஒரு புறம் வீட்டின்பமும் ஆயிற்று; என் வடிவம் ஒன்றிலே இருதிறத்தியல்பும் உற்றேன்'' என்று அதிசயித்துக் கூறி, அவரைப் பார்த்து ''நீர் தோற்றீர்; என்னை விட்டு அகலப் போமின்'' என்று போக்கிப், பிள்ளையாரை நோக்கி ''இந் நோய் முற்று நீங்க எனக் கருள்புரிவீர்'' என்று சொன்னான் செல்கதிக் கணியனானன்; பிள்ளையார் பதிகம் நிறைவாக்கித், திருநீறு கொண்டு பின்னும் ஒரு முறை தடவ, இடப்பாகத்து வெப்பு நோயும் முழுதும் நீங்கிற்று; வழுதியும் முழுதும் உய்ந்தனன். மாதேவியாரும் குலச்சிறையாரும் ''அரசன் பிறவா மேன்மை பெற்றனன்'' என்று பிள்ளையாரது பாதங்களை வணங்கினர். அரசன் உச்சிமேற் கைகூப்பி ''மானமில்லா அமணர்முன்பு பிணி நீங்க ஞானசம்பந்தர் பாதம் நண்ணி நான் உய்ந்தேன்'' என்றான்.

அமணர்கள் அஞ்சித் தமது மந்திரவிஞ்சை முழுதும் பிள்ளையாரது சொல்லினால் ஒழியக்கண்டு, இனித் தர்க்கவாதம் வெல்லலாவதன்று; வேறு தீயினும் நீரினும் வெல்வோம் என்று தம்மில் எண்ணிக்கொண்டனர். பிள்ளையாரும் அவர்களைப் பார்த்து ''உங்கள் நூல் உண்மை பேசுங்கள்'' என்ன, அமணர் ''அது தர்க்கவாத மன்றிக் கண் காணச் செலுத்தத்தக்கது'' என்றனர்.

அனல் வாதம்

அரசன் ''எனது நோய் நீக்க அறிந்திலீர்; இப்போது உமக்கு என்னவாது உளது!'' என்ன, **''என்ன வாது''** என்ற இகழ்ச்சிக் குறிப்பு மொழியினையே வினையாகக் கொண்டு, ''அவ்வவர் நூலின் வாய்மையினை ஏட்டில் எழுதித் தீயில் இட்டால் வேவாதிருப்பதே வெற்றி காட்டுவதாம்'' என்றனர். அதற்கு அரசன் எதிர் உத்தரம் சொல்லுமுன்பே, பிள்ளையார் ''அப்படியாயின் அதனை அரசன் முன்பு செய்ய வாருங்கள்'' என்றருளினார்; அவ்வாறே அரசன் தீ அமைப்பித்தான். பிள்ளையார் ''சிவனே மெய்ப்பொருள்'' என்று தாம் போதித்த திருமுறை யேட்டினைத் திருநீற்றுடன் கூடிய தம் கையினிலே விரித்து, எடுத்தபோது ''போகமார்த்த பூண் முலையாள்'' என்ற திருநள்ளாற்றுத் திருப்பதிகம் வந்து உதயமாயிற்று. அவ்வேட்டினைக் கழற்றி வேறெடுத்துக் கொண்டு, ''இறைவரது திருநாமமே இஃது; இஃது எரியினிலிடப் பழுதில்லையாகும்'' என்று ''தளிரிள வளரொளி'' என்னும் பதிகம் பாடியருளித் துதித்து, அரசனவை காணத் தீயினில் மகிழ்ந்து முன் இட்டனர். அவ்வேடு உமையம்மையைப் பாகத்துடைய அட்டமூர்த்தியைப் பொருளாகக் கொண்டுடைமையாலே தீயினிடையே அப்பொழுதே பச்சையாய் விளங்கியது. அமணர்கள் தமது பொருள் எழுதிய ஏட்டினை இஃது உய்யுமோ என ஐயுறவினோடும் தீயினில் இட்டனர்; அது தீயில் இட்ட பஞ்சுபோலப் பட்டது. இசைந்த நாழிகை யளவில் யாவரும் அதிசயிக்கப் பிள்ளையார் தாம் இட்ட ஏட்டினை முன்னையினும் புதுமையும் பசுமையும் பயப்ப எடுத்து அரசனவை காணக் காட்டித் திருமுறையில் முன்போலவே கோத்தனர். அரசன் வியந்து அமணர்களை நோக்கி, ''நீவிர் இட்ட ஏட்டினை காட்டுமின்'' என்ன, அவர்கள் அதனைத் தேட அணுகிய போது தீக் கதுவ வெந்து பெயர்ந்தமை கண்டு, நீரினை வார்த்து அரசன் தீத் தணிப்பித்தான். அமணர் சாம்பரைப் பிசைந்து பார்க்கச் சாம்பரும் கரியுமே கண்டனர். அரசன், நகையுட் கொண்டு ''நீங்கள் அப்பொழுது எனது நோய் நீக்கமாட்டாது தோற்றீர்; இப்பொழுது அதனைத் தொடர்ந்து செய்த இதனிலும் தோற்றிலீர் போலும்?'' என்ருன்; **''போலும்''** என்ற இகழ்ச்சிக் குறிப்புச் சொல்லையே பயனுகக் கொண்டு, ''தொடர்ந்த வாதம் முன் இருகாற் செய்தோம்; முக்காலில் ஒரு காலேனும் வெற்றி பெறுவோம்; அதனை இனியும் ஒன்று காண்பது'' என்ருர். அதனை மன்னவன் மறுத்த பின்னும், பிள்ளையார் ''இனி வேற்று வாது என்னை?'' என்ன, அவர்கள் ''மெய்ப்பொருளை நாமிருவேமும் ஏட்டில் வரைந்து ஓடும் நீரினில் இட்டால் ''நீரொழுக்கினோடு செல்லாது முன் நிலைபெறத் தங்கும் ஏடு வெற்றி பெறுவதாம்'' என்றனர்.

புனல் வாதம்

பிள்ளையார் அதனை ஏற்று அவ்வண்ணமே செய்வோம்'' என்றருள, அமைச்சனுர் முன்பு வந்து ''இதில் தோல்வியுற்ருர் செய்வதனை **ஒட்டியே** இவ்வாதம் செய்யத்தக்கது'' என்ருர். அமணர் அவர் மேற் சினந்து பொருமையினுலே தங்கள் வாய் சோர்ந்து, ''தனிவாதில் அழிந்தோமாகில் எங்களை இவ்வேந்தனே கழுவேற்றுவான்'' என்று ஒட்டினர். அது கேட்ட அரசன் ''உங்கள் செய்கையை மறந்து சினத்தினுல் இவ்வகை உரைத்தீர்; நீரினில் ஏடு இட வாருங்கள்'' என்றனன்.

பிள்ளையார் மணிப்பீடத்தினின்றும் இறங்கிப் போந்து, சிவிகையின் மேல் ஏறிச் சென்றனர். அரசன் குதிரையின் மேல் ஏறிப்போந்தனன். அமணர் உணர்வு மயங்கி மாலேறிப் பின் சென்றனர். இவ்வாறு வரக்காணப்பெற்ற நகர மாந்தர்கள் பலவாறும் பிள்ளையாரை வாழ்த்தினர்; முன் நிகழ்ச்சிகளையும் பின் விளையக்கூடியவற்றையும் பற்றிப் பலபடியாகத் தம்முட் பேசிக்கொண்டு பிள்ளையாரையும் சைவ நெறியின் மேன்மையினையும் போற்றினர். திருச்சின்னங்கள் பிள்ளையாரின் புகழ்களைப் பலவாறும் எடுத்தியம்பின. முரசங்கள் முழங்கின. அரசனும் தேவியாரும் பின்போ வர, அமணர்கள் வேருக ஓர் புடையில் வரப் பிள்ளையார் வைகையாற்றின் கரைமிசை வந்தணைந்தனர். ஆற்றினீர் வேகமாய் ஓடும் தன்மை கண்டு அரசன் இருதிறத்தினரையும் நோக்கி நீங்கள் அவ்வவர் குறித்த ஏடு இடுக என்ருன். நெல்லிற் பதர்போல் உட்பொருள் இல்லாத அமணர் தமது பொருளை **"அத்திநாத்தி"** என்றெழுதி நீர் செல்லும் வேகத்தினைக் கண்டும் ஆசையினுலே முன்சென்று இட்டனர்; அதனை ஆற்றுநீர் விரைந்துகொண்டு அப்போதே வேலையின்மேற் படர்ந்தது. அதனை எதிர் அணைப்பார்போல உணர்விலா அமணர் கரையின் மிசை ஓடிச் சென்ருர். அவ்வேடு எட்டாது நூறு விற்கிடைக்கை முன்னே போவது நோக்கிக் காணுராயினுர்; அவ்வாறு அவ்வேடு அமணரை நட்டாற்றில் விட்டுப்போக அகலச்சென்று சிதறித் திகைத்து அஞ்சி அரசனிடம் மீண்டார்கள். தமக்கு முடிவு வந்ததென்று நடுங்கி அவ்வச்சத்தினை ஒளிப்பார் போன்று, "மாறுகொண்ட நீவிரும் இட்டால் வந்தது காண்போம்" என்ருர். அமணர்கள் மயங்கிக்கூற அரசனும் அவரை **விட்டுப்**, பிள்ளையாரது திருக்குறிப்பினை நோக்க, அவர், பரசமயங்கள் பாறத் திருப்பாசுரம் பாட லுற்றனர். அமணர் உண்மைப் பொருளைக் காண்கிலார்களாயினும் பிள்ளையாரது அருட்கையினுல் தீண்டித் திருநீறு பூசப்பெற்று அரசன், முன்னை வல்வினையு நீங்கி இருவினை ஒப்புப்பெற்று இறைவனையறியும் தன்மை யெய்தியமையாலே, அவனறியும் பான்மையால் உலகியல் வேதநூல் ஒழுக்கமும், மெய்ந்நெறி சிவநெறியேயாமென்பதும் அறிவிக்கும் குறிப்புடன் "வாழ்க வந்தணர்" என்றெடுத்துத் திருப் பாசுரப் பதிகத்தை அருளிச்செய்தனர். அதனுள் வேத சிவாகம புரா ணேதி காசங்களின் சாரமாகிய உண்மைப் பொருள்களை எல்லாம் வடித்து எடுத்துக்காட்டி உலகுக் குபதேசித்து **"ஏடு எதிர்ந்து செல்லின் ஞான மீசன்பா லன்பே யாகும்"** என்று ஆணை தந்து ஏட்டில் எழுதி முடித்தருளி அவ்வேட்டினைத் தமது திருக் கையினுல் ஆற்றில் இட்டருளினர். அது பிறவியாற்றினை எதிர்ந்து மாதவர்களின் மனஞ் சென்ருற்போல, வையையாற்றி னீரினைக் கீழித்து எதிர்த்து "இஃதே உண்மைப் பொரு"ளென்று காட்டிச் சென்றது. இறைவரைப் பாடும் அப்பதிகத்தில் வேந்தனை ஓங்கப் பாடியதனுல் **அநபாயரது செங்கோலென்னத் தென்னவனது கூன் அப்பொழுதே நிமிர்ந்தது**. ஏடு எதிர்ந்து செல்லும்பொழுது தேவர்கள் பூமழை பெய்தனர்; பாடுசேர் அமணர் எல்லாரும் அஞ்சி நின்றனர். ஏட்டினை எடுத்தற்குக் குதிரையின்மேல் ஏறிக் குலச்சிறையார் சென்றனர். திரு ஏடகத்துள் ஏடு தங்கப் பிள்ளையார் பாடிட, ஏடும் தங்கிற்று; அமைச்சர் எடுத்துத் தலைமேல் வைத்துக்கொண்டு, அரசன்பால் வந்து பிள்ளையாரைப் பணிந்து அதனை எல்லாருக்கும் காட்டினர். அரவொலி முழங்கிற்று. "ஒட்டித் தோற்ற இவ்வமணர் இத்தோல்வியேயன்றி முன்னமே பிள்ளையார்பால் முற்றவும் அனுசிதம் செய்தனர்; "இவர்களைக் கழுவேற்றி முறைசெய்க" என்று அரசன் அமைச்சரைப்

பணிந்தனன். பிள்ளையார் அதனைக் கேட்டும், சமணர்பால் இகல்கொண்டாரிலர் எனினும், சைவர்வாழ் மடத்தில் தீத்தொழில் செய்ததனால் அரசனதாணை சால்புடைத்தேயாம் என்ற கருத்தினாலே பிழையில்லாத அரசனது செய்கையினை விலக்கிடாதிருந்தருளினர். அவ்வாறே அமணர்கள் பற்றியிடத் திருமடத்தில் தீயினை நாடியிட்ட எண்பெருங் குன்றத்து அமண குருமார் எண்ணாயிரவரும் கழுமுனையில் ஏறினார்கள். அக்கழுவிடைத் தம்பங்கள் சைவ நேர்மையினையும் பிள்ளையாரது புகழினையும் விளக்கிய செயத்தம்பங்களேயாகும். அதன்பின் பிள்ளையார் அரசனுக்குத் திருநீறு ஈந்தருளினர்; அவனும் பணிந்துகொண்டு ஏற்று அணிந்தனன். அதுகண்டு அவனது மதுரை வாழ்வாரும் தூய நீறு அணிந்து கொண்டனர். எங்கும் வேத நீதியே யாயிற்று. வெண்ணீற்றின் விரிந்தசோதி திசையெல்லாம் தூய்மை செய்ய அப்போதே அமணிருள் மாய்ந்தது. இவ்வாறு அரசனுக் குயிர்கொடுத்து மெய்ந்நெறி காட்டிச் சமணத்தை நீக்கி உலகினை உய்யக்கொண்ட பிள்ளையாரது வாய்மை உலகிற்பெருகி ஓங்கியிட அன்றே சைவத் திருநெறி நடந்தது. வேதவேள்வியும் மழையும் குறைவின்றி நிகழச் சிவநாமம் ஓதி உலகம் பிறவித்துன்பம் நீங்கப்பெற்றது. அரசரும் அம்மையாரும் மந்திரியாரும் உடன்வரப் பிள்ளையார் திருவாலவா யிறைவரைப் போற்ற எழுந்தருளினர்; கன்னி நாட்டவர் கண்டு கண்பெற்ற பயன் அடைந்தார்கள். திருக்கோயிலினுட் சென்று கண்ணீரருவிபாயக் கைகுவித்து ''அடியேனை அஞ்சல் என்றருளவல்ல மெய்யனே'' என்று ''வீடலாலவாய்'' என்ற திருப்பதிகம் பாடிப் பிள்ளையார் இறைஞ்சினர். அரசனும் ''இறைவரே! சமணரது மாயையினுள் மயங்கிக் கிடந்த என்னை எடுத்து ஆட்கொள்ளும் பொருட்டு இன்னருட் பிள்ளையாரைத் தந்தருளினை'' என்று துதித்து வணங்கினன். பின்னர் அரசனையும் தேவியாரையும் மாளிகையினுள் போக்கிப் பிள்ளையார் இறைவரைத் துதித்துத் திருமடத்தில் எழுந்தருளியிருந்தனர். மன்னனும் அரசியாரும் மந்திரியாரும் நாடொறும் பிள்ளையாருடைய திருவடிகளிற் பணிந்து போற்றினர். பிள்ளையார் ஆலவாயமர்ந்த அண்ணல் பாதம் ஊனமர்ந்துருக ஏத்தி உறைந்தருளினர்.

இவ்வாறுள்ள காலத்தில் இடைப்பட்ட நாள்களில், சீகாழியில் சிவபாத விருதயர், தாம் செய்த தவத்தாற் பெற்றெடுத்த பிள்ளையாரை மிக நினைந்தனர்; திருநாவுக்கரசரிடத்துத் தீமை செய்த அமணர்களிடம் வாது செய்து வெல்வதற்கும், பாண்டி நாட்டில் திருநீறு பெருக்குதற்கும் போன அவர்பால் நிகழ்ச்சிகளைச் சென்று அறிவேன் என்று எண்ணித், தோணியப்பரை வணங்கிப் பாண்டிநாடு நோக்கி புறப்பட்டு, இடையில் உள்ள பதிகளில் இறைவரை வணங்கிக்கொண்டு, மதுரையினைச் சார்ந்தனர்; திருவாலவாயிற் சென்று இறைவரை அடிவணங்கி அங்கு அருகணைந்தார்களைப் பிள்ளையார் அமர்ந்த திருமடத்தினை வினவினர்; அவர்களும் இங்கு எம்மைக் கண்விடுத்த காழிப் பெருமான் தங்குமிடம் திருநீற்றுத் தொண்டர் குழாம் சாருமிடம் இஃதேயாகும் என்று காட்டச் சென்று அங்குச் சேர்ந்தனர். அது கண்ட அடியார்கள் பிள்ளையாரிடம் அறிவித்தனர். அதுபோழ்தில் தாதையார் முன்தொழுது சென்றணையத் தவநெறியணையும் தாதையாரெதிர் தொழுவாராகிப், பிள்ளையார், அவர் சார்பினாலே தோணியில் எழுந்தருளிப் பவ பாசமறுத்தருளிய அம்மையப்பருடைய திருவடிகளை நினைந்தருளிக் கைகள் கூப்பிக் கொண்டு கண்ணருவிபாய நின்று ''அருந்தவத்தீர்! எனையறியாப் பருவத்தே எடுத்தாண்ட பெருந்தகை

எம்பெருமாட்டியுடன் இருந்ததே?'' என்று வினவும் கருத்துடன் "மண்ணில் நல்ல" என்ற திருப்பதிகம் அருளிப், போற்றினர். பின் தாதையாருக்கு விருந்தளித்து சில நாளில் அடியவர்களோடும் சென்று ஆலவா யிறைவரை வணங்கிப், பிற பதிகளைத் தொழ எண்ணி மதுரையின் புறம் போந்தருளினர். அப்போது அரசனும் அம்மையாரும் உளமெலியார் நெகிழ மனநெகிழ்ந்து கண்ணீர் பாய்ந்து வழிய உணர்வழிந்து திருவடிகளில் விழக் கண்டு, "நாம் உங்களைப் பிரியா வண்ணம் இந்நாட்டிலே பிறபதிகளையும் உடன் பணிவீர்களாக'' என்றருளிச், சென்று **திருப்பரங்குன்றம், திருவாப்பனூர்** வணங்கித், **திருப்புத்தூரினைச்** சேர்ந்து வணங்கிச், சிலநாட்கள் அங்கு அமர்ந்தருளினர். அதன்பின், **திருப்பூவணம், திருக்கானப்பேர், திருச்சுழியல், திருக்குற்றாலம், திருக்குறும்பலா, திருநெல்வேலி** முதலாகிய பதிகளைச் சென்று வணங்கினர். பின்னர்த் திருவி **ராமேச்சுர**த்தை யடைந்து, திருமால் தாபித்து வழிபட்ட அத்திருக்கோயிலில் இறைவரை அரசனும் தேவியாரும் மந்திரியாரும் உடன்போதச் சென்று துதித்து வணங்கினர். அங்குத் திருத்தொண்டர்களுக் கெல்லாம் பாண்டிமாதேவியாரும் குலச்சிறையாரும் குறைவறுத்துப் போற்றிப் அக்கடற்கரை நகரில் நயந்து பிள்ளையார் எழுந்தருளியிருந்தனர். அங்கிருந்தவாறே ஈழநாட்டின் இறைவர் பதிகளாகிய **திருக்கோணமலை**யினையும் **திருக்கேதீச்சர**த்தினையும் பாடித் துதித்தனர். பின்னர், அங்குநின்றும் தொழுது வடதிசை மேற்சென்று பல பதிகளையும் வணங்கிக் கடற்கரை நிலநீங்கித், **திருவாடானை - திருப்புனவாயில்** என்ற இவற்றை வணங்கித் துதித்து, அவ்வாறே பாண்டி நாட்டில் உள்ள பல பதிகளிலும் சென்று வணங்கி, எங்கும் வேதநெறி விளக்கமும் திருநீற்றின் சார்வும் பெற்று மாந்தர் உய்யும் வண்ணம் அருளிச் செய்து, சென்று, மந்திரியார் பதியாகிய **மணமேற்குடி**யில் வந்து, அங்கு மன்னவனும் அரசியாரும் குலச்சிறையாரும் போற்றியிடத் தங்கிப் பிற பதிகளிலும் சென்று வணங்கி இனிதமர்ந்தருளினர்.

ஓடம்

அதன்பின் சோழ நாட்டில் எழுந்தருளத் திருவுள்ளங் கொண்டபோது அரசரும் அம்மையாரும் மந்திரியாரும் பிரிதலாற்ருது அவருடன் போக ஒருப்படவே, அவர்களை நோக்கிப் பிள்ளையார் "நான் சொல்வதனுக் கிசைந்தீராகில் சிவநெறியினைப் போற்றி இங்கு இருப்பீராக'' என்று கூறி, அவர்களது தளர்வு நீங்கத் தகுந்த அருள்மொழிகளை உரைத்தருள, அவர்களும் மறுக்கலாற்ருது பிரியாத நண்புடன் தொழுது நின்ருர்கள். பிள்ளையார் அந்நாட்டினை அகன்று சோழநாட்டிற் சென்று அங்கங்கும் அடியார்கள் எதிர்கொள்ளச் சென்று, திருக்களர், திருப்பாதாளீச்சரம் முதலியனவாய் முன் அணைந்த பதிகளையும் வணங்கிச் சென்று, **முள்ளிவாய்க்கரையினை** அணைந்தனர். ஆள் இயங்காதபடி ஆறு பெருகி ஓடிற்று. அதனல் அத்துறையில் ஓடக்கோல் நிலைநிலாமையாலே ஓடக்காரர்கள் ஓடங்களைக் கரையில் நிறுத்திப் போயினர். பிள்ளையார் அந்தக் கரையில் எழுந்தருள எதிர்க்கரையில் **திருக்கொள்ளம்பூதூர்** முன்னே தோன்ற, அங்குச் சென்று வணங்குதற்கு ஓடங்களைக் கட்டவிழ்த்துத் தொண்டர்களுடன் தாமும் ஏறிக், "கொட்டமே கமழும்'' என்ற திருப்பதிகத்தைப் பாடியருளி, நாவலமே கோலாக ஓடங்களைச் செலுத்தி ஆறு கடந்து அங்குச் சென்று இறைவரை வணங்கிப் போற்றியருளினர். அங்கு நின்றும் அனல் வாதத்தில்

போதிருந் தருள்செய்த திருநள்ளாற்று இறைவரை வணங்க வேண்டி இடையில் உள்ள பதிகளையும் தொழுது சென்று, அங்குச் சேர்ந்து முறைப்படி பணிந்து திருக்கோயிலினுள் அணைந்து வலங்கொண்டு இறைவரை இறைஞ்சிக் கண்ணருவிபாய நின்று "பாடக மெல்லடி" என்ற பதிகத்தினால் துதித்தருளினர். "பாண்டியனது சபையின் முன் அமணர்முன் செய்த வாதத்திலே எரியில் இட்ட ஏடு பச்சையாக்கி என் உள்ளத் துணையாகத் திருவாலவாயில் அமர்ந்திருந் தருளியவாறுதா னென்னே!" என்றது திருநள்ளாற்றுத் திருப்பதிகத்தின் கருத்து. அங்குத் தங்கி விடைபெற்றுத் திருத்தெளிச்சேரியினை வணங்கிச் செல்லும்போது வழியிலே புத்தர்களது நகராகிய போதிமங்கை சார, அன்பர்கள் ஆர்த்தனர். "பரசமய கோளரி வந்தான்" என்று தாரைகள் ஊதின. அதுகேட்ட புத்தர்கள் பொறாராகிப் புத்தநந்தி என்பவனைத் தலைவனாகக் கொண்டு திரண்டு கூடி, அன்பர் கூட்டத்தின் எதிரே போந்து "இவ்வெற்றிச் சின்னங்களை எம்மை வென்றபின் பன்றோ பிடிப்பது?" என்று வெகுண்டு கூறிச் சின்னங்களை விலக்கினர்.

புத்தநந்தி தலையில் இடி வீழ்ந்தது

அடியவர்கள் சிவிகையின்மேல் வரும் பிள்ளையாருக்கு அறிவிக்கப், பிள்ளையார், "வழியிடையினன்றி, வாது செய்யுமிடத்தில் அவர்களது பொய்ம் மேற்கோள்களை அறிவோம்" என்றருளினர். இதற்கிடையில் திருக்கூட்டத்தினுள் இருந்த திருமுறை எழுதும் அன்பர், *புத்தர்களது அடாத செயலைப் பொறாராகி "நீறணிவார் வினைப் பகைக்கு, அத்திர மாவன அஞ்செழுத்துமே" என்ற பிள்ளையாரது திருவாக்கினை "இப்புத்தனது தலை வீழ்க" என்று கூறி விடுத்தனர். உடனே புத்தநந்தி தலையில் இடி வீழ்ந்தது; அவனது உடலும் தலையும் வேறாய் வீழ்ந்தன; புத்தர்கள் வெருவி ஓடினர். இச்செய்தியினை அடியார்கள் பிள்ளையாருக்கு விண்ணப்பிக்க, அவர், "இது சிவனருள் விதியேயாம்; எல்லாரும் அரனமம் முழக்குங்கள்" என்றருள, அம்முழக்கம் வானளவோங்கிற்று.

புத்த வாதம்

அஞ்சியோடிய அப்புத்தர்கள் அதிசயித்து, மீண்டுங்கூடி, இது வஞ்சனையோ?; அன்றி அவர்களது சைவ வாய்மைதானே? என்று மருண்டு, தங்களின் மிக்குள்ள சாரிபுத்தனைத் தலைவனாகக் கொண்டு, மீளவும் அணைந்து, மந்திரவாதமின்றிச் சாத்திரவாதம் பேச வேண்டுமென்று கேட்டனர். பிள்ளையார் அதற்கிசைந்தருளிச் சிவிகையினின்றும் இறங்கி வேறோர் சத்திரமண்டபத்தில் ஏறி எழுந்தருளி, அவர்களை அவ்வாறே வாதம் பேசுவதற்கு அழைத்தருளினர். அவர்களும் சாரிபுத்தனோடும் அணைந்தனர். புத்த நந்தியினைச் சபித்த அன்பர், பிள்ளையார் திருமுன்பு வணங்கி அவர்களோடு சாத்திரவாதம் புரிந்தனர். அவ் வாதம் அவர்கள் கொண்ட தலைவனையும், அவன் மேற்கொண்டுரைத்த பொருளையும், அவர்களது முத்தி யிலக்கணத்தையும் பற்றி நிகழ்ந்தது. *அவ்வாதத்தில் அவர்களுரைத்த கொள்கைகள்

---

*இவர் பிள்ளையாரது நல்லம்மான் சம்பந்தசரணாலயர் என்று கூறுவர்.

எல்லாம் பொருளன்றும் படியினை அவர்களறியும்படி அன்பர் எடுத்துக்காட்டிச் சைவமல்லால் உண்மைப் பொருள் வேறில்லை என்றே கூறும் வேத சிவாகமங்களின் துணிபை எடுத்துக்கூறி, அவர்களை வென்றனர். தோல்வியுற்ற புத்தர்களும் பிள்ளையாரது கருணை நோக்கம் அணைதலினாலே அவர் முன் தொழுது விழுந்து வணங்கி சைவரானார்கள். அதன்பின் சராசரங்களனைத்தும் சைவமேயாகும் நிலைமையினை அவர்களுக்கு உரைத்தருளி அங்குநின்றும் நீங்கிப், பிள்ளையார் **திருக்கடவூர்** சென்று சேர்ந்து வணங்கினர். திருநாவுக்கரசுகள் எந்நகரில் எழுந்தருளியது என்று அடியார்களை வினவியருளி, அவர் திருப்பூந்துருத்தியில் திருத்தொண்டு செய்து எழுந்தருளியிருப்பது கேட்டு அங்கு அவரைக் காணப் பெருவிருப்போடும் செல்வாராகி, இடையில் உள்ள பதிகளை வணங்கித், திருப்பூந்துருத்தியின் மருங்கணையலாயினர். வாகீசர் அது கேட்டருளி, ஆளுடையபிள்ளையாரை எதிர்சென் றிறைஞ்சுவது முன்னை நல்வினைப் பயனேயாகும் என்று மனமகிழ்ந்து, இறைவரை வணங்கிச் சென்று, பிள்ளையாரது எழுச்சியில் நிறைந்த தொண்டர் கூட்டத்தினிடையே அவர் காணாவகை தொழுது புகுந்து, அவரது திருமுத்தின் சிவிகையினைத் தாங்குவாருடன் கலந்து தாமும் தாங்கிச் சிந்தை களிப்புறவந்தனர். எவரும் அவரைத் தெளியவில்லை. அப்பொழுது பிள்ளையாரது திருவுள்ளத்தில் வேறொன்று நிகழ்ந்திட, ''இப்பொழுது அப்பர் எங்குற்றார்?'' என்று வினவியருளினர். அது கேட்டு ''ஒப்பற்ற தவத்தினை முன்னர்ச் செய்தேனாதலினால் உம்முடைய திருவடிகளை இப்பொழுது தாங்கி வரப் பெற்றுய்ந்தேன் யான்'' என்று அரசுகள் கூற, அது கேட்டு அஞ்சி, உடனே சிவிகையினின்றும் இறங்கி, ''இவ்வாறு செய்தருளிற்று! என்னை!'' என்று அவரை இறைஞ்சுதலும், வாகீசர் ''திரு ஞானசம்பந்தருக்கு வேறு எவ்வாறு செயத்தகுவது?'' என்று எதிரிறைஞ்சினர். பிள்ளையார் அரசுகளை மிக ஆர்வத்தோடும் தழுவிக் கொள்ளத் தொண்டர்களெல்லாம் ஆர்த்தனர். பெருமக்களிருவரும் உடனாகச் சென்று திருக்கோயிலினை அணைந்து முடியால் வணங்கி உட்புகுந்து பொய்யிலியாரை வணங்கித் துதித்துத் திருவாயிலின்முன் அணைந்திருந்தனர். அப்பொழுது வாகீசர், பிள்ளையாரைப் போக்கும் வரவும் வினவ, அந்நிகழ்ச்சிகளை யெல்லாம் அவர் சொல்லியருளினார். அரசுகள் அவரை வணங்கித் ''திருத்தொண்டென்னும் வான் பயிர் ஓங்குதற்குச் சூழும் பெருவேலி யானீர்'' என்று தொழுதனர். பாண்டியனுக்கு உயிருடனே திருநீறும் அளித்து, மாதேவியாருக்கும் அமைச்சருக்கும் அன்பளித்து வைதிக நெறியினை ஆக்கிய தன்மையை வாகீசர் கேட்டு மகிழ்ந்தனர். வாகீசர் தாம் பெருந் தொண்டைநன்னாட்டிற் சென்று திரு ஏகாம்பரம் பணிந்து போந்த வரலாறுகளை எல்லாம் சொல்லக் கேட்டுப் பிள்ளையார் தாமும் சென்று போற்ற மனங் கொண்டருளினர். திருவாலவாயிற் சென்று வணங்க வாகீசரும், சீகாழிக்குச் செல்லப் பிள்ளையாரும் உளங்கொண்டருளினர். இறைவரை வணங்கி வாகீசரிடம் விடைகொண்டு பிள்ளையார் புறப்பட்டுச் சென்று காவிரியின் வடகரையில் **திருநெய்த் தானமும், திருப்பழனமும்** பணிந்து சீகாழியி னருகு சார்ந்தனர். பாண்டி நாட்டிற் சென்று சமணைப் போக்கியும், திருநீற்றினை ஆக்கியும் பிள்ளையார் எழுந்தருளும் வார்த்தை

---

*இவ்வாதத்தின் இயல்பும் பொருளும் முன்னர்ப் புராண உரையினுள் 2812-2823 வரை பாட்டுக்களின் கீழ் உரைக்கப்பட்டமை காண்க.

கோடுத் தொழு மறையோர்கள், வேதங்கள் முழங்க வந்து எதிர்கொள்ளச், சிவிகையின்றும் இறங்கிக், கோயில் தோன்றிக் கைகூப்பி வணங்கி, முறையாலே திருக்கோயிலினுட்புக்கு வணங்கி, ஏறித், திருத்தோணியில் அம்மையப்பரை வணங்கித் திருமேனி எங்கும் புளகங் கொள்ளக் கண்ணீர் பெருக உள்நிறைந்த ஆனந்தம் பொழிதரப் பணிந்து "வெற்றியாக மதுரை மன்னவனை யெதிரே நதிமிசை வருகரனே" என்ற குறிப்புடைய திருவியமகத் திருப்பதிகம் பாடிப் போற்றினர். பின்னர்ப் புறம்போந்து கோயிலினை வணங்கிச் சென்று, வழியில் பெண்கள் வாழ்த்துரை மல்கப் போய்த், திருநீலகண்டப் பாணனுர்க்கு அருள் விடை கொடுத்து அவரது திருமனையினிற் போக்கித், தமது திருமாளிகை சார்ந்தார்; அப்போது மறைக்குலத் தாயராகிய பகவதி யம்மையார் வந்து அடிவணங்கிடத், தாமும் திருத்தோணியில் உள்ள தாயர் திருவடிகளை மனங்கொண்டனர். பின்னர்,நாளும் திருத்தோணியப்பரை வணங்கிப் பதிகம்பாடிப் போற்றி எழுந்தருளியிருப்பவர் தொண்டை நன்னாட்டினிற் சென்று அம்மை தழுவக் குழைந்த கம்பரை வணங்கி வரத் திருவுளங் கொண்டருளினர்.

ஆருவது யாத்திரை - (தொண்டை நாடு)

அதனை அன்பர்களுக்குச் சொல்லியருளித், தோணியப்பரை வணங்கி விடைபெற்று எழுந்தருளும்போது, உடன் வர எழுந்த தாதையாரை "நீர் இங்குத் தங்கித் தீ வேட்டுத் தோணியப்பரைத் தொழுதிரும்" என்று அவருக்கும், மற்றும் மீளும் ஏனையன்பர்களுக்கும் விடை கொடுத்தருளிப் போய், வழியிடைப் பதிகளை வணங்கிக்கொண்டு திருத்தில்லை சார்ந்தருளினர். திருப்புலியூரினை வணங்கி, இறைவரது ஆனந்தத் திருக்கூத்துக்குட் பட்டருளி மேற்சென்று, **திருத்தினைநகர், திருமாணிகுழி,** முன்னம் முடக்கால் முனிக்கருளிய **திருப்பாதிரிப்புலியூர், திருவடுகூர், திருவக்கரை, திரு இரும்பைமாகாளம்** முதலிய பதிகளை வணங்கிக்கொண்டு **திருவதிகை வீரட்டானஞ்** சேர்ந்தனர்; இறைவர் எதிரே பூதகணம் சூழ ஆடும் திருக்கூத்துக் காட்சி யருளக் கண்டு "குண்டைக் குறட்பூதம்" என்ற திருப்பதிகம் பாடி, அங்கமர்ந்திருந்து, பின்னர்த் **திருவாமாத்தூர்** பணிந்து **திருக்கோவலூரையும் திருஅறையணி நல்லூரையும்** வணங்கினர். வலங்கொள்ளும்போது அங்குத் **திருவண்ணமலை** எதிர் தோன்ற அன்பர்கள் காட்டக்கண்டு, சென்று, வணங்கி, மிக்க ஆர்வத்தோடும் "பூவார் மல"ராற் போற்றிச் சிலநாள் எழுந்தருளியிருந்து, வடதிசையிற் சென்று இறைவர் பதிகள் பலவும் பணிந்து பெரு மலைகளும் காடுகளும் கடந்து, திருத்தொண்டை நன்னடு சேர்ந்து, **திருவோத்தூரினை** அணைந்து இறைவரை வணங்கித்துதித்து அமர்ந்திருந்தருளினர்.

ஆண்பனைகள் பெண் பனைகளாகியது

அங்குப் பிள்ளையார் முன்பு, தொண்டர் ஒருவர் வந்து அழுது வணங்கி நின்று, அறிவிப்பாராகி, "அடியேன் இறைவருக்குப் பயன்படப் பனைகள் வைத்து ஆக்கியிட, அவை யாவும் ஆண்பனைகளாகிக் காயாதனவாகக் கண்டு, அமணர், 'உமது தெய்வத்துக்காக நீர் ஆக்கும் பனைகள் காய்த்தற் கடைவுண்டோ?' என்று இழித்துரைத்தார்கள். தேவரீர் அருள வேண்டு"மென்று விண்ணப்பித்தனர். அதுகேட்டுப்

பிள்ளையார் பரிவுகொண்டு திருக் கோயிலுக்குச் சென்று இறைவரைப் பாடிய பதிகத்தினுள் திருக்கடைக் காப்பிலே "குரும்பை யாண்பனை யீன்குலை ஓத்தூர்" என்ற மெய்ம்மையினை வைத்துப் பாடியருளினார்; அவ்வாய்மை பொருந்துதலினாலே ஆண்பனைகள் எல்லாம் நிறைந்த குலைகளாய்க் குரும்பையீனும் பெண்பனைகளாயின. கண்டவர்கள் எல்லாரும் அதிசயித்தார்கள். இவ்வாறு அன்பர் கருத்தை நேரே முடித்துக் கொடுத்தருளி அப்பதியிற் பிள்ளையார் இனிதமர்ந்தருளினர். அது கண்ட அமணர்கள் திகைத்து அந்நாட்டினை விட்டகல்வாரும், தம் கையிற் கொண்ட குண்டிகைகள் இவை என்னெனை என்று தகர்ப்பாருமாகி, ஆதி முழுமுதல்வர் சிவ பெருமானேயாவர் என்று போற்றினார்கள். பிள்ளையாரது திருவாக்கிற் பிறத்தலாலே அப்பனைகளும் முன்புள்ள பாசம் விட்டு நீங்கப், பிறவி நீங்கிக், காலாந்தரத்தில் சிவமே கூடின; பிள்ளையாரது அருளின் மெய்ம்மை கூறுதல் வரம்புட்படாதாம்.

பின்னர் அங்கு வணங்கிச் சென்று இறைவர் பதி பலவற்றையும் பணிந்து **திருமாகறலும், திருக் குரங்கணின்முட்ட**மும் பணிந்து, **திருக்காஞ்சி**யின் மருங்குப் பிள்ளையார் எழுந்தருளினர்; அது தெரிந்த காஞ்சிவாணர்கள் மிக மகிழ்ந்து நகரை அலங்கரித்து மங்கலங்களுடன் பிள்ளையாரை எதிர்கொண்டனர். இவ்வண்ணம் யாவரும் இன்பமடைய அவர்களிடையே எழுந்தருளிச் சென்று பிள்ளையார் திருவேகாம்பரத்தை யணைந்து இறைவரை வணங்கித் திளைத்து "மறையானை" என்ற திருப்பதிகம் பாடிப் போற்றி வணங்கிப் புறம் போந்து திருமடத்திலமர்ந் தருளினர். அறப்பெருஞ் செல்வக் காமக் கோட்ட மணைந்திறைஞ்சினர். திருவேகம்ப வாணரை ஒருபோதுந் தப்பாமே சென்று வணங்கினர்; திருவியமகம், திருவிருக்குக்குறள் முதலாகிய திருப்பதிகங்களைப் படியருளித் திருக்கச்சி நெறிக் காரைக் காடு, திருக்கச்சியனேக தங்காவதம், திருமேற்றளி முதலாகிய தானங்களைப் பணிந்து ஏத்தி எழுந்தருளியிருந்தனர். பின்னர்ப் பாலியாற்றின் தென்கரைபோய்த் **திருமாற்பேறும், திருவல்லமும்** சென்று வணங்கி, வடகரையில் **இலம்பையங் கோட்டூ**ரினை இறைஞ்சித் **திருவிற்கோலம், திருவூறல்** முதலிய பதிகளை வணங்கித், **திருவாலங்**காட்டி னருகே சார்ந்தருளினர்; அத்திருப்பதியானது உலகெலாங் காண "எம் அம்மை"யாகிய காரைக்காலம்மையார் திருத்தலையாலே நடந்து போற்றும் பதியாதலின் அதனை மிதிக்க அஞ்சிப் பிள்ளையார் அதன் பக்கத்தில் ஓரூரில் அன்றிரவு பள்ளி சேர்ந்தருளினர்; இடையாமத்திலே அவர் கனவில் திருவாலங் காட்டப்பர் எழுந்தருளி "நம்மைப் பாட அயர்த்தனையோ?" என்று அருளிச்செய்ய, அப்போதே தொழுது உணர்ந்து எழுந்து இறைவரது கருணையினைப் போற்றி மெய்யுருகித் "துஞ்சவருவாரும் தொழுவிப்பாரும்" என்று தொடங்கும் (பழம்பஞ்சுரப்பண்) திருப்பதிகம் பாடித் துதிசெய்தருளினர். அத்திருப்பதிகத்தில் பழையனூரார் தமது சொல்லையே உயிரினும் பெரிதாகக் காத்த கதையினைச் சிறப்பித்து வைத்துப்பாடினர். காலையில் வந்தணைந்த அடியவர்களுக்கு இச்செய்தியை அருள் செய்து மனமாரப் பாடித் துதித்து அங்கு நின்றும் **திருப்பாசூர், திருவெண்பாக்கம்** முதலிய பதிகளை வணங்கிப் பாடித் **திருக்கண்ணப்ப நாயனரை நினைவு கொண்டு திருக்காளத்திமலை**யினைச் சாரச் செல்வாராயினர். நீர் வளமுடைய நாட்டின் பகுதிகளை நீங்கி, வன்புலக்கானடைந்து போய் முகில் நெருங்கு **திருக் காரிகரை**யினை யிறைஞ்சி, மலைகள் நெருங்கிய நிலத்தின் வழிச்

சென்றருளினார். திருநீற்றுத் தொண்டர் கூட்டம் கடல் போலச் சூழச்செல்லும் பொழுது ''திருஞானசம்பந்தன் வந்தா''வென்று எழுந்த திருச்சின்னங்களின் நாத நிறையக் கேட்ட விலங்குகளும் நிலையொன்றுபாட்டு மருங்கு நண்ணின. இவ்வாறு சென்று திருக்கண்ணப்ப நாயனார் திருப்பாதச் செருப்புத் தோய வேட்டை யாடிய கானங்களையும், மற்றும் தேவர்களும் வணங்கும் பெருமையுடைய தானங்களையும் கடந்து திருக்காளத்தியினருகு, சென்றபோது தொண்டர் குழாங்களும், சடைத் திருமுனிவர், காபாலியர், பல வேடச்சைவர் முதலாக அப்பதியிலுள்ளோர் கூடி வந்து எதிர் கொண்டனர். பிள்ளையார் சிவிகையினின்றும் இறங்கி வணங்கி அவர்களை நோக்கி ''திருக்காளத்திமலை இம்மலைகளில் யாது?'' என்று கேட்டருளினார். அவர்கள் அதனைக்காட்ட மனமகிழ்ந்து தொழுது ''வானவர்க டானவர்கள்'' என்று கண்ணப்பர் திருத்தொண்டு சிறப்பித்துத் திருவிராகப் பண் பதிகத்தினைப் பாடியருளி, மலையடிவாரம் சார்ந்து மலையினைத் தொழுது படி வழியேறித் திருக்கோயில் சூழ்வந்து திருமுன்பு சேர்ந்து கைகூப்பி நிலமுற வீழ்ந்து வணங்கி எழுவார், இறைவரைக் கும்பிட்ட பயன் காண்பார்போல் அங்குக் கண்ணப்ப நாயனாரைக் கண்டு வீழ்ந்தார்; அன்பின் மெய்ம்மை உருவினையும் அவ்வன்பினுள்ளே நிலைபெற்று உள்ள இறைவரையும் ஒருசேர உடன்கண்டு கொண்ட விருப்பத்தினாலே மகிழ்ந்தெழுந்து பலமுறையும் வணங்கித் திளைத்து அங்கு நின்றும் புறம்போந்து வைகியருளினர்; பல நாட்கள் தங்கிக் காலந்தோறும் இறைவரை வணங்கி யினிதமர்ந்தனர். அங்கு வடதிசையிலும் மேற்றிசையிலும் **அருந் தமிழின் வழக்கம் நிகழாமையாலே** அங்கங்கும் சென்று வணங்கும் முறைமை போல அங்கிருந்தவாறே **திருக்கயிலை, திருக்கேதாரம், திருக்கோகரணம், திருப்பருப்பதம், திருஇந்திரநீலபர்ப்பதம்** முதலிய பதிகளை வணங்கித் திருப்பதி கங்கள் பாடியருளி யிருந்தனர். அதன்பின் **திருவொற்றியூர்** சென்று வணங்கத் திருவுள்ளங் கொண்டு இறைவரருள் பெற்று, அத்திருநகரின் புறம்போந்து அதனை நோக்கி நின்று ''எந்தையா ரிணையடி என்மனத் துள்ளவே'' என்ற திருப்பதிகம் பாடி இறைஞ்சி மேற்சென்றனர். பாலியாற்றின் வடகரையின் வழியே சென்று, முன் அணைந்த பதிகளையும் **திருவேற்காடு, திருவலிதாயம்** முதலியவற்றையும் வணங்கித், திருவொற்றியூர் சார்ந்தருளினர்; அந்நகரின் அடியார்கள் தொழுது எதிர்கொள்ளத் தாமும் சிவிகையிழிந்து தொழுது ''விடையவன்'' என்ற பதிகம் பாடித் திருக்கோயிலை யணைந்து முறையாலே வணங்கித் துதித்துக் காதலித்து அப்பதியில் தொண்டர்களோடும் இனிது எழுந்தருளி யிருந்தார்.

திருமயிலை எலும்பு பெண்ணாக்கியது

இவ்வாறு பிள்ளையார் இருந்தருளத், திருமயிலாபுரியில் முன் நிகழ்ந்த செயலாவது; திருமயிலாபுரியில் சிவநேசர் என்ற வணிகர் மிக்க செல்வமும், சிவனடியார்களிடத்தில் மிகுந்த அன்பும், பரசமயங்களைப் பாற்றும் செற்ற மேவிய சீலமு முடையராய் வாழ்ந்தனர். அக்காலத்தில் சீகாழியில் பிள்ளையார் திருவவதாரம் செய்து திருஞான முண்டருளிப் பரசமயங்களை இழித்தழிக்கும் செய்கைகளைக் கேட்டு, அவருடைய திருவடிகளில் இடையறாத அன்புடையவராகி, அவர் அருட் செயல்களைக் கேட்பதில் மகிழ்வுற்றிருந்தனர்; பெருஞ் செல்வராயினும் அவருக்கு மகப்பேறின்மையினாலே மருண்டு, அரனடியார் உவப்புறும்படி அருச்சனை செய்த நலத்தினால் அரியதொரு பெண் மகவு பெற்றார். அது

பூவினுள் போன்றிருந்தமையால் **பூம்பாவை** என்று பெயரிட்டு அருமையாக வளர்த்து வந்தனர். அவர் ஏழியாண்டெய்த உரியபருவ மடைந்து அதற்கேற்ப விளங்கினார். அது கண்டு சிவநேசர் "இவளை மணக்கும் நாயகனே எனது நிதி யாவுக்கும் உரியவன்" என்று அறைந்தனர். அந்நாளில் பிள்ளையார் பாண்டி நாட்டினை அணைந்து பாண்டியன் சுரந்தீர்த்து, மேலும், தீயிலும் நீரிலுமாக அமணரை வாதிட்டு வென்றிகண்டு அழித்ததுவும், பாண்டியனுக்கு நீறு நல்கிப் பாண்டி நாட்டில் சைவம் பெருக்கியதுவும் ஆகிய அருஞ்செயல்களை யெல்லாம் கேட்டு மகிழ்ந்து பிள்ளையாரைத் திசை நோக்கித் தொழுது நின்று, சுற்றத்தாரெல்லாம் கேட்பப், "பூம்பாவையையும், எனது நிதியனைத்தையும், என்னையும் காழிநாடுடையவர்க்கு கொடுத்தனன்" என்று மொழிந்து மகிழ்ந்திருந்தனர். பூம்பாவை ஒரு நாள் முல்லைமலர் கொய்தபொழுது விரலில் நான்குபற்களும் அழுந்தும்படி அரவந்தீண்டிற்று; விடந் தலைக்கேறக் கன்னிகை உணர்விழந்து வீழ்ந்தனள்; மருந்து நூலவரும், மந்திரசாதகரும், காருடவித்தை முதலிய விச்சை வல்லவர்களும் எல்லாத் தீர்வுகளும் நாடிச் செய்தும் தீராது கன்னிகையின் உயிர் நீங்கியது; சிவநேசரும் சுற்றமும் துன்புற்றனர். ஆயின், அவரைப் பிள்ளையாருக்கென்று உரைத்து விட்டதனால் தாம் துன்புறுதற்கில்லை என்று தேறி அவளுடம்பை எரியிலிட்டுச் சாம்பரையும் எலும்பையும் ஒரு குடத்திற் சேமித்தனர். அக்குடத்தைக் கன்னிமாடத்தில் வேறு வைத்து விளக்கு, மாலை, சாந்தம், போனகம் முதலிய உபசாரங்களைத் தோழிமாரால் நாடோறும் செய்வித்துப் போற்றி வந்தனர்.

இவ்வாறு நிகழுநாள்களில், பிள்ளையார் திருவொற்றி மாநகரில் எழுந்தருளிய நற்செய்தியைச் சிவநேசர் கேட்டு மிக மகிழ்ந்து அச் செய்தியினை வந்து சொன்னவர்க்கெல்லாம் பொன்னும் ஆடையும் கொடுத்தனர்; திருமயிலாபுரியினின்றும் திரு வொற்றியூரளவும் நடைக்காவண மிட்டும், துகில் விதானித்தும், வாழை கமுகு நாற்றியும், தோரணம் மாலைகள் தூக்கியும், தேவலோகம் போல அலங்கரித்தனர். தொண்டர்களுடனே தாமும் சென்று பிள்ளையாரை வணங்குதற்குப் புறப்பட்டனர். அவ்வளவில் பிள்ளையாரும் திருவொற்றியூர் பணிந்து திருமயிலாபுரி நோக்கித் தொண்டர் கூட்டத்துடனே எதிர்வந்து தோன்றக் கண்ட சிவநேசர் மகிழ்ச்சியினால் நிலமுற விழுந்து இறைஞ்சினார். பிள்ளையார், சிவிகையினின்றும் இறங்கித் தொண்டர் கூட்டத்தின் முன்தொழுதெழுந்தருளி, அடியார்கள் வணிகரின் திறங்களைச் சொல்லக் கேட்டுத் திருமயிலாபுரியினை அணைந்தனர்; வணிகர் திறத்தின் முன் நிகழ்ச்சிகளைத் திருவுள்ளத்துக் கொண்டு அவர் செயல் வாய்ப்பவும், புறத்துறைகள் அழியவும் கருணை நோக்கங்கொண்டு, இறைவரது திருக்கபாலீச் சரத்தினை வணங்கி, வலஞ்செய்து, திருமுன்பு சென்று, தேவதேவனைத் திருக்கபாலீச்சரத்தமுதைப் பாவை பாகனைப் பரிவுறும் பண்பினால் இறைஞ்சித், துதித்துத் திளைத்துப் புறம் போந்தருளி வணிகரை நோக்கி, "உலகவரறிய உம் மகளின் என்பு நிறைத்த மட்குடத்தைத் திருக்கோயிற் றிருமதிற் புறவாய்தலிற் கொணர்க" என்றருளினார்; அவ்வாறே அவரும் சென்று கன்னிமாடத் திருந்த அக்குடத்தினை வேறு எடுத்து, மூடுசிவிகையுள் வைத்துச், சேடியர்சூழத் திருக்கோயிற் புறவாய்தலினை அணைந்து சிவிகையினின்று குடத்தினை எடுத்து அபி முகத்தினில் அடியுறைப்பினாலே முன்வைத்து வணங்கினார். அப்போது இதன் விளைவினைக்

காண்பதற்கு மயிலை மாநகருள்ளார், நாடு வாழ்பவர், நன்றியில் சமயத்திலுள்ளோர் முதலிய பலரும் வந்து கூடினர். பிள்ளையார் இறைவரது கருணையின் பெருமையினையே கருதி இவ்வுலகத்தில் இறந்தவர்களது எலும்பினை வைத்தே அவ்வுயிரினை நன்னெறிப்படுத்தும் தன்மை அவ்வெலும்பின் தொடர்ச்சியால் வருவது என்று அருணோக்கம் செய்து, "பூம்பாவாய்!" என்று அப்பெண்ணின் பெயர் சொல்லி அழைத்து "உலகிற் பிறந்தார் பெறும் உறுதிப் பயனாவது சிவபெருமானடியார்களை அமுது செய்வித்தலும், இறைவரின் திருவிழாக்களைக் கண்ணாரக் காணுதலுமேயாம் என்பது உண்மையாயின் உலகர் முன்னே வா" என்று உரைப்பாராகி, இறைவரைத் தொழுது, "மட்டிட்ட" என்று தொடங்கித் திருப்பதிகம் அருளிச் செய்தனர். அப்பதிகத்தினுள் **"போதியோ"** என்ற மெய்த் திருவாக்கெழு மமுதம் அக்குடத்தினுள் எலும்பிற் பொருந்தவே வந்து வந்து உருவமாய்த் திரண்டது; அத்திருப் பாட்டினிடையே போன வாயுவும் வடிவமும் வளர்ச்சியும் பொலிவொடு நிரம்பி குடத்தினுள் அடங்கிற்று; அது குடத்தினின்றும் எழுவதன்முன் பிள்ளையார் சமண் பாட்டினை (பத்தாவது பாட்டு) விரிப்பாராய்த் தெளிதவில்லாத சமண் சாக்கியர்கள் இச்செய்கை ஏற்ற தன்றென எடுத்துரைப்பார் என்றபோது வெளியே கை தோன்றிடக், குட முடைந்தெழும் பூம்பாவையார், தாமரைப்போது அவிழ்ந்தெழுந்தனள் போன்றாள். முதற்பாட்டினில் வடிவு பெற்று, மேல் எட்டுத்திருப்பாட்டின் அம்முறையே பன்னிரண்டாண்டளவு அணைந்து, சமண்பாட்டினிற் றோன்றிடக்கண்டு, பிள்ளையார் திருக்கடைக்காப்புச் சாத்திப் பதிக நிறைவாக்கி யருளினர். அது கண்டவர்கள் அற்புத மெய்தத் தொண்டர்கள் அரவொலி முழக்கினர்; விண்ணோர் மலர்மாரி பெய்தனர்; மண்ணோர் கைகுவித்து வீழ்ந்து வணங்கினர்; பரசமயத்தினுள்ளோர் "இஃது எங்குள செய்கை? மற்று என் செய்தவாறு?" என்று மனமும் மெய்யும் கலங்கித் தள்ளாடி வீழ்ந்தார். அவ்வாறெழுந்து நின்ற அணங்கின் முடிமுதல் அடிவரையும் ஒவ்வோர் அவயவமும் அதனதன் விதிப்படி உள்ள உத்தம விலக்கணமும் அழகும் பொருந்த விளங்கின; அப்பூம்பாவையார் விண்ணும் மண்ணும் அற்புத மெய்தத் தோன்றி அழகினுக்கணியாய் நின்றாள். எண்ணில்லாத ஆண்டுகள் கொண்ட வயதளவுள்ள பிரமன், அழகு பொருந்தத் தான் படைத்த திலோத்தமையின் மாயை உருவாகிய பெண்ணலமாகிய அழகினைத் தனது நான்கு முகத்தாலும் கண்டு நல்உணர்விழந்து காமத்துள் மாழ்கினன்; அவ்வாறன்றி, ஈண்டுப் புண்ணியப் பதினாறாண்டு பேர்பெறும் பிள்ளையார் அவளினும் **மிக நல்லாளாகிய பாவையாரிடத்து இறைவரது கருணை வெள்ளத்தினையே ஆயிரமுகங்களாற் கண்டருளினர்.** அது கண்ட சிவநேசர் பிள்ளையார் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர்; பூம்பாவையர் இறைவரைப் பணிந்து பிள்ளையாரை வணங்கி நின்றனர். பிள்ளையார் சிவநேசரை நோக்கி "நும் மகளை அழைத்துக்கொண்டு உமது மனையிற் செல்லுக" என்று கூற, அவர் பிள்ளையாரை வணங்கி அடியனேது பாவையைத் திருமணம் புணர்ந்தருள்செய்ய வேண்டுமென்று வேண்டினர். அதனை மறுத்துப், பிள்ளையார், நீர் பெற்ற பெண் விடத்தினால் வீழ்ந்த பின்னர் யான் இறைவரது கருணை காண்வர மீள உற்பவிப்பித்தலால் நீர் சொல்வது தகாது என்றருளவே, வருந்தியரற்றிய வணிகரும் கிளைஞரும் தெளிய வேதநூற் றுணிபினை அருளி அவர்களைத் தேற்றியருளினர். அவர்களும் அவ்விருப்பத்தினை யொழிந்தனர். பிள்ளையார் திருக்கோயிலினுட் சென்று கருணை செய்து

கைதந்த இறைவரை வணங்கிப் போந்தருளினர். சிவநேசர் பாவையாரது மணத்தினை ஏனையோருக்கு இசைகிலேன் என்று அவரைக் கொண்டு, கன்னிமாடத்துச் சேர்த்தனர். பாவையாரும் சிவத்தை யடைந்தனர். பிள்ளையார் சில நாள் அப்பதியில் எழுந்தருளியிருந்து பதியவர்கள் விடைகொள்ளச், சிவநேசரது வருத்தந் தீர மதுர மொழியளித்து விடை கொடுத்துச் சென்று, திருவான்மியூர் சேர்ந்து **பிறவிமருந்தாகிய** இறைவரை வணங்கி, விஞவுரையாகிய பதிகத்திஞற் றுதித்து, அங்குச் சிலநாள் இனிது அமர்ந்தருளினர். அங்குநின்றும் **திருவிடைச்சுரத்**துக்கு எழுந்தருளி இறைவரை வணங்கி அவரது திருமேனி வண்ணங் கண்டதிசயித்து "இவர்வண மென்னே!" என்று துதித்துப் பதிகம் பாடியருளித், **திருக்கழுக்குன்றத்**தினைச் சார்ந்து மலையை வலங்கொண்டு இறைவரை வணங்கித் "காதல் செய்கோயில் கழுக்குன்றே" என்று பாடித்துதித்தருளினர். அதன்பின் **திரு அச்சிறு**பாக்கத்தினை அணைந்து வணங்கி "ஆட்சி கொண்டார்" என்ற திருப்பதிகம்பாடி யின்புற்று அமர்ந்தருளிப் பின் பிறபதிகளிலும் தொண்டர்கள் எதிர்கொள்ளச் சென்று வணங்கித் **திருவரசிலி, திருப்புறவார் பனங்காட்டூர்** முதலாகிய பதிகளை வணங்கித், **திருத்தில்லை** நகர் அணைந்தனர். தில்லைவா ழந்தணர்களும் திருத்தொண்டர்களும் எதிர்கொள்ளச் சிவிகையினின்றும் இறங்கிப் பெருங்காதலுடன் அஞ்சலிகொண்டுசென்று, திருவெல்லை பணிந்து, வடதிசை வாயிலை வணங்கித் திருவீதியினை இறைஞ்சிச் சென்று, பேரம்பலத்தினைத் தொழுது திருவணுக்கன் றிருவாயில் பணிந்து பொன்னம் பலத்தினை சேர்ந்து, குணங்கடந்த பெருங்கூத்தர் திருக்கூத்துக் கும்பிடுவாராய்த் திருக்களிற்றுப் படியினைத் தொழுது வணங்கித் திளைத்து எழுந்து ஆராத ஆனந்தத்தின் உள்ளலைந்து பேரின்பத்தின் கரைகடந்த நிலையணைந்தனர்; ஆங்கு எய்தாக் காலத்தில் புறம்போந்து காலந்தோறும் வணங்கி அங்கு அமர்ந்தருளினர். பிள்ளையார் அணைந்த செய்தி கேட்டுச் சீகாழியினின்றும் சிவபாத விருதயரும் மறையவரும் தொண்டர்களும் திருத்தில்லை வந்து சார அவர்களுக்குத் தில்லைவா ழந்தணர்கள் சிறப்புச் செய்யப், பிள்ளையாருடன் கூடி அம்பலக் கூத்தனைப் பணிந் தின்புற்றனர். கூத்தப் பெருமானிடம் விடைபெற்றுச் சீகாழியை நோக்கிப் பிள்ளையார் எழுந்தருள்வாராகிப் பல பதிகளையும் வணங்கிச் செல்லும்போது, சீகாழிப்பதி தூரத்தே தோன்றக் கண்டு, சிவிகையினின்று மிறங்கி வணங்கி "வண்டார் குழலரிவை" என்றெடுத்து "மாளிகை விண்டாங்குவ போல் வேணுபுரம்" என்று பதிகம் பாடித் துதித்தெழுந்தருளினர். அப்பதியினை மேல் அணுகிப் புறம்பணையில் சார்ந்தபோது அதனை மலர் தூவித் தூப தீபங்களுடன் றெழுது "காழிநகர் சேர்மின்" எனக் கடைமுடிந்த திருப்பதிகம் பாடியருளினர்; திருநகருட் புகுந்தருளி மிக்க காதல் பெருகக் கோயிலினை முறை யாலே வலங்கொண்டு ஏறித் திருத்தோணியில் அம்மையப்பரைக் கைகுவித்து விழுந்து திளைத்தெழுந்து பெருவாழ் வெய்தி வணங்கிப் பதிகங்கள் பலவும் பாடித்துதித்து அருள் விடைபெற்றுத் திருமாளிகை சேர்ந்து எழுந்தருளியிருந்தனர்.

திருமணம்

அந்நாளில் பிள்ளையாரை வணங்கும் பொருட்டுத் திருமுருகநாயனர், திருநீலநக்க நாயனர் முதலிய திருத்தொண்டர்களும் ஏனையோரும் சுற்றத்தார்களுடன் சீகாழியில் வந்தார்கள். அவர்களோடு உடன் மகிழ்ந்து காலந்தோறும் சென்று தோணியப்பரை

வணங்கிச் செந்தமிழின் பந்தத்தாற் றிருப்பதிகம் பல பாடி யிருந்தருளினர் பிள்ளையார். அக்காலத்திற் சிவபாத விருதயரும் சுற்றத்தார்களும் கூடித் திருஞானசம்பந்தர் திருமணஞ் செய்தருளுதற்குரிய பருவமிது என்று எண்ணி அவர்பால் அறிவிப்பார்களாய், "மறைநூல் வழியே வேள்விகளைப் புரிவதற்கு கன்னி ஒருத்தியைத் திருமணஞ் செய்தருள வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தார்கள். அஃது கேட்டுப் பிள்ளையார் சுற்றம் பொருந்தும் பாசத் தொடர்பினை விட்டு நீங்கும் நிலையினராய் இறைவரது திருவருளை முன்னமே பெற்றவராதலின் அதற்கிசையாது, "நீவிர் சொல்வது உண்மையே யாயினும் அஃது என்பாற் கூடாது" என்று மொழிந்தருளினர். மறையவர்கள் பின்னுங் கைதொழுது "தேவரீர் இவ்வுலகில் மறை வழக்கத்தினை மேம்பட எடுத்தீராதலின் அம்முறையாலே வைதிகமா நெறியில் ஒழுக்கம் பெருகி நிகழ்வதற்குத் திருமணஞ் செய்தருளத் திருவுள்ளம் கொண்டருள வேண்டும்" என்று விண்ணப்பித்தனர். மறை வாழவும், வேதிய ரொழுக்கத்துறை வாழவும் அவ் விண்ணப்பத்துக்குப் பிள்ளையார் உடன்பட்டருளினர். அவர்கள் எல்லாரும் பெரு மகிழ்ச்சி யெய்தி இறைவரை வாழ்த்தினர். மறையவரில் பொருந்திய குலத்தின் இசைவினாலே திருநல்லூர்த் திருப்பெருமணத்தில் நம்பாண்டார் நம்பியின் மகளாரை மகட்பேசுதல் பொருந்துமென எண்ணி, அவ்வாறே தாதையாரும் சுற்றத்தாரும் அவர்பாற் சென்று மகட்பேச, அவரும் பெருமகிழ்ச்சியோடும் இசைந்து, செல்ல விடுத்தனர். அவர்கள் சீகாழிக்குத் திரும்பிச் சேர்ந்து, அவரது இசைவினை அறிவித்துத், திருமண நாளும் ஓரையும் கணித மங்கல நூலோர் வகுப்பத் திருமண நாளோலை பெருஞ் சிறப்பினுடன் போக்கி, நன்னாளில் முளைப்பாலிகை விதைத்தார். நகர மலங்கரித்தனர். சுற்றத்தார் பலரும் வந்தீண்டினர். திருமண நாளின் முன் ஏழா நாளிலே இயங்கள் முழங்கப் பாலிகைகளில் புனித முளை பூரித்தனர். மாடங்கள் விளக்கினர். பந்தர்கள் தோரணங்கள் நிரைத்தனர். ஆகுதிப் புகையும் அகிற்புகையும் விம்மி எழுந்தன. பண்ட சாலைகள் பலவேறு விதம் பயின்றன. மறை விதிச் சடங்கின் உபகரணங்களும் குங்குமக் கூட்டும் சாந்தும் பொற்சுண்ணமும் அமைத்தனர். புண்ணிய நீர்க் கலசங்கள் தாபித்தனர். இவ்வகையால் இறைவர் ஏவ நிதிக்கோமான்றானே அமைத்ததுபோல மணத்திற்குரிய பெருவளங்கள் யாவும் நிறைந்தன.

மணத் திருநாளில் முன்னாளிலே திருக்காப்பு நாணணியும் சடங்கினை மறையவர்கள் கூடி மறைநூல் விதிப்படி செய்து, திருக்காப்பு நாணை நகர்வலஞ் செய்வித்து வேத முழங்க மங்கல இயங்கள் முழங்கப் பிள்ளையாரது திருக்கையிற் சாத்தினார்கள். மணங்காண வந்தார்களும் தொண்டர்களும் மகிழ்ந்து ஆர்த்தனர். திருஞானசம்பந்தர் புன்னெறிச்சமய இருள் அகல வந்து அவதரித்தாற்போல் இருளை நீக்கிப் **பகலோன்** எழுந்தனன். திருமணஞ் செயத் தவம்செய்யுநாளிது என்று இருள் கழுவிக் கதிர் அணியைத் **திசைகள்** அணிந்தன. எண்டிசையவர்களும் நெருங்குதலால் திருமணத்தில் **வையம்** தனது வரம்பில்லாத பயன் காட்டுவது போன்று விளங்கிற்று; திருமண எழுச்சியின் முழக்குப்போன்று, திரைச் சுரிவளை ஆர்ப்போடு பெருமுழக்குடன் **புணரி** எழுந்தது; மறையவர் ஆகுதி தொடங்கிடா முன்னம் வேதியில் **வன்னி** வலஞ்சுழித் தெழுந்தது; பூந்தாது எனும் நீறுதரித்து வண்டொழுங்கு எனும் கண்டிகையும் பூண்டு **மருத்து** மணங் கொணர்ந்து அன்பர்களுடன் எழுந்தது; மணவணிகாட்டும் வெண்ணிறக் கொடிகளின் வரிசைபோன்று வெண்மேகங்களுடன் **விசும்பு** விளங்கிற்று; இவ்வாறு விளங்கிய நன்னாளிலே பிள்ளையார் காலைசெய்வினை

முற்றித், திருத்தோணிமே லமர்ந்த முதல்வரை வணங்கி, அன்பர் கூட்டம் முன்செல்லச் சென்று, வளம்பதியினை வணங்கிச் சிவிகையின்மேற் கொண்டனர்; வாகனங்களில் ஏறுவார் ஏறினர். மங்கல இயங்கள் எழுந்தார்ப்ப மறை முழங்கத், திருமணம் எழுந்தது. வேதவொலி முழக்கமும் வீணையாழொலியும் கீதவொலியும் ஒவ்வொருபாலின் எழுந்தன. ஓதுகிடையும் ஆசானும், வேள்வித்தீயினை இல்லுடன் கொண்டு போவாரும், திருப்பதிகங்கள் விளம்பிச் சார்வாரும், அறுபகை செற்ற மாதவர்களும், அறுவகைச் சைவ விரதிகளும், யோகக்குறிநிலை பெற்ற தொண்டர்களும் வெவ்வேறு கூட்டங் கூட்டமாக உடன் சென்றனர். விஞ்சையர் இயக்கர் கின்னரர் அரம்பையர் முதலிய தேவச்சாதியர் தத்தம் விமானங்களில் ஏறி மணஅணிகாண விசும்பிற் சென்றனர். இவ்வாறு சாரும் பிள்ளையார் பவமறுத்தாளவல்ல சிவபெருமானது பாதம் உள்ளத்துக்கொண்டு மண எழுச்சியுடன் திருநல்லூர்த் திருப்பெருமணத்தைச் சேர்ந்து, நகரில் உள்ளார் வந்து எதிர் கொள்ளச் சென்று திருக்கோயிலினுட்புக்கு இறைவரை வணங்கிப் பாடித் துதித்துப், பின் மணக் கோலம் புனையவேண்டிப் புறத்தில் ஒரு மடத்திலே புகுந்தனர். அவரை வாசப் புனித நீராட்டினர். வெண்பட்டாடையும் உத்தரீயமும் சாத்தினர்; கலவைச் சாந்தம் அணிந்தனர். திருவடி முதல் திருமுடிவரை தூயமுத்துக்களாலாகிய உரிய அணிகளை அணிந்தனர். திருவடையாளமாலையினைத் தாம் எடுத்துப்பூண்டு திருவெண்ணீற்றினை அஞ்செழுத்தோதிச் சாத்திச் சிவபெருமானை மனத்துள் வைத்து வணங்கிப் பிள்ளையார் இயங்களும் சங்கமும் முழங்க வந்து சிவிகையினை மேற்கொண்டருளினர். கதிர்நிறை மதியம்போல மணிக்குடை நிழற்றத் தெருவினூடு திருமணம் செல்லச், சின்னங்கள் பிள்ளையாரது திருநாமங்களை எடுத்தியம்பின; மறையவர்கள் மாடங்களை விளக்க அம்மையாரையும் காப்புச் சேர்த்துச் சடங்கு செய்த பொன்றீபம்போல அழகலங்கரித்து வைத்தார்கள்; திருமணத்தெதிர் சென்று மறைக்குல மைந்தர்கள் பொற்சுண்ணமும் நவமணியும் வீசினர். பிரமன் போன்ற பெருமறையோர் அரசிலை தருப்பை தோய்ந்த கலச நீரினை வேத மந்திரங்கள் சொல்லி வீசினர். மந்தமாருதமும் வீசிற்று. புண்ணிய விளைவுபோன்ற பிள்ளையார் பூம்பந்தர் முன்பு சார்ந்து சங்கங்கள் முழங்கச் சிவிகை யினின்றும் இறங்கிப், பொற்சுண்ணம் பரந்த பாவாடைமீது எழுந்தருளிவந்தனர். மறையவர் மங்கல மகளிர் நிறைகுடம் விளக்குத் தூபம் மலர்மாலை முளைப்பாண்டில் முதலிய மங்கலங்களை ஏந்தி எதிர்கொள்ளச் செம்பொற் பீடத்தில் ஏறிப் பிள்ளையார் நிற்க, மாதர்கள் வாழ்த்தி வலங்கொண்டெய்தி நீர்வார்த்து உரிய மங்கலச் செயல்கள் செய்தனர். பின்னர் மாதர்கள் மங்கலமேந்தி முன்செல்லச் சென்று பிள்ளையார் செம்பொன்மாடத்துள் ஆதிபூமியினுட் புக்கருளி விதானத்தின்கீழ் மலர்த்தவிசின் வீற்றிருந்தருளினர். பெண்பெற அருந்தவம் முன்பு செய்த அம்மையார் ஆன்பாலும் தூநீரும் எடுத்துவந்து வார்ப்பத், திருமகட் கொடுக்கப் பெற்ற நம்பாண்டார் பிள்ளையாரின் பாதங்களைச் சிவபெருமானே இவர் என்று தியானித்து விருப்பினுல் விளக்கி அந்த நீரினைத் தலையிலும் மாடத்தினுள்ளும் தெளித்து, உள்ளும் பூரித்துக் கிளைஞர்மேலும் தெளித்த பின்னர் பிள்ளையாரது மலர்க்கையில் நீர்வார்த்துத் தமது குலமும் கோத்திரமும் பெயரும் எடுத்துச் சொல்லி, ''என் செல்வமகளைப் பிள்ளையாருக்கு அளித்தேன்'' என்று கூறினர். கன்னியார் கையினைப் பிள்ளையார் பற்றும் நல்லவேளை வந்து சாரவே, உடன் பிறந்தாரும் பெற்றவர்களும் அவ்வம்மையாரைக்

கொண்டெழுந்து, எகாரஞ் சிவமெய்ஞ்ஞான மிசைந்த அப்பிள்ளையாரது வலப்பாகத்தில் வெள்ளை மேகத்தினுள் மிசைந்த மின்னுக்கொடி போல வைத்தனர். அத்திருக்காட்சியினைக் கண்ணாரமையாது கண்டு மனிதர்களும் தேவராயினர். பந்தரினிடையே திருநீலநக்கர், நம் பெருமான் பாதம் பொருந்தும் உள்ளத்தோடு மறைவழி விதித்த வேள்விச் சடங்குகளைச் செய்தனர். மறை ஒலியுடன் மங்கலவாழ்த்தும் பெருக மணமகளின் கைப்பிடித்துப் பொரியட்டி மந்திர வெள்ளித் தீயினை வலம்வரும் சடங்கு செய்வதற்காக அம்மையார் திருக்கையினைப் பிள்ளையார் பற்றி எழுந்தபோது, ''நாம் விரும்பும் எரி யாவார் சிவபெருமானே'' என்று திருவுள்ளத்திற் கொண்டு, ''இந்த இல்வாழ்க்கை வந்து சூழ்ந்துவிட்டதே; இவளோடும் சிவன்றிருவடி சேர்வன்'' என்ற ஆசை மேற் பொங்கத், திருக்கோயிலை யடைந்தனர். கிளைஞரும் தொண்டரும் உடன் சூழ்ந்தனர். அளவுபடாத மெய்ஞ்ஞானத்தின் எல்லையினை அடையும் குறிப்புடன் உலகமெங்குநின்றும் நீங்கச் சிவனுடனாக எழுந்தருளுங் குறிப்பினாலே ''பவமற என்னை முன்னாள் ஆண்ட அத்தன்மைக் கேற்பச் சிவபெருமான் என்னைத் திருவடி சேர்த்தி யருளும்'' என்ற கருத்துடன் ''கல்லூரப் பெருமணம்!'' என்று தொடங்கி ''நல்லூரில் மேவும் நம்பனே உன் பாதம்சேரும் பருவமிது'' என்று திருப்பதிகம் பாடியருளினர். சிவபெருமான் றிருவருள் செய்து ''நீயும் பூவைபோன்ற உன் மனைவியும் உனது புண்ணியத் திருமணத்தில் வந்தார் யாவரும் எனது சோதியினுள் வந்து எய்துங்கள்'' என்றருளி, அத்திருக்கோயி லுட்பட மேலோங்கும்படி மூவுலகமும் ஒளியால் விளங்க முழுச் சுடர்த் தாணுவாகி, அதனுள் ஒருவாயிலும் வகுத்தருளினர்; பிள்ளையார் உலகமுய்யும் வழியினை அருள்வாராகி ''எவர்க்கும் ஞானமெய் நெறியாவது நமச்சிவாயச் சொல்லே யாகும்'' என்று, ''காதலாகி'' என்ற நமச்சிவாயத் திருப்பதிகத்தை வானமும் நிலமும் கேட்க அருளிச்செய்து, இத்திருமணத்தில் வந்தோர் ''யாவரும் பிறவி தீரப் புகுக'' என்றருளினர். எல்லையில்லாத பிறவிகளாகிய வெள்ளத்தில் வரம்புகாணாது அழுந்தி உடம்பென்னும் துன்பக் கூட்டினுள் உய்யும் உணர்வின்றி மயங்குவார்கள் அச்சோதியினுள் புக்கனர்; திருநீலநக்கர், திருமுருகர், முதல் தொண்டர்களும், சிவபாதவிருதயரும், திருநீலகண்டப் பாணனரும், மற்றேனையோரும் கிளைஞர் சூழத் தத்தம் மனைவிகளுடனே உட் புகுந்தனர். சிவிகை முதலிய அணிதாங்கிச் சென்றோரும், பணிகள் பலவும் செய்தோரும், பரிசனங்களும் வினைப்பாச மறுத்த துணிவினுடன் தொழுது உடன்புக் கொடுங்கினர்; அறுவகைச் சமயத் தருந்தவரும், அடியார்களும், மறை முனிவர்களும், கும்பிட வந்தணைந்தவர்களும், ஒரு தொடர்புமின்றி வேறு திருவருளினாலே வீடுபெற வந்தார்களுமாகிய எல்லாரும் சோதியினுட் புகுந்தனர். அதன்பின், திருஞானசம்பந்தர் காதலியைக் கைப்பற்றிக் கொண்டு அச் சிவசோதியை வலம் வந்து அதனுட் புகுவாராய்ப், போதநிலை முடிந்தவழிப் புக்கு ஒன்றி உடனானர். அதன் பின் அச்சோதி வழி கரந்தது; பெருஞ் சோதியும் அடங்கிச் சிவனது பழைய மணக்கோயில் தோன்றியது. உலகில் இப் பேறு பெறாதவர்கள் தெருமந்து வருந்தினார்கள். தூரத்தே கண்ட பிரமன் முதலாகிய தேவர்கள் முதலியோர் துன்ப நீங்கத் துதித்தனர்.

கற்பனை - (1—100) பாட்டுக்களின் கற்பனைகள் நான்காம் தொகுதி - பக்கம் 170-ல் தரப்பட்டன. அதனைத் தொடர்ந்து கொள்ளப்பட்டது.

(18) மக்கள் தம் வாழ்நாளில் என்றும் சிவாலயங்களைச் சென்று தொழுதலே பேரின்பக் கடனாகக் கொண்டொழுகுதல் வேண்டும்; "ஆலயந் தானும் அரனெனத் தொழுமே" (போதம்-12 சூத்) என்றபடி சிவாலயத்தைச் சிவனெனவே கண்டு வழிபடுவது சீவன் முத்தர்களுக்கும் இவ்வுடலுள்ள வரை வாசனா மலம் நீக்கப் பொருட்டுச் சிவாகமங்களுள் விதிக்கப்பட்டுள்ளது என்பதனால், ஏனையோர்க்கு அது மிக இன்றியமையாத ஞானசாதனம் என்பது விளங்கும். (1998)

(19) **பசுபோத மற்ற சிவஞானிக்கு வேண்டுவனவற்றை அரன்றானே மேற்கொண்டு இயற்றுவன்.** (2001), (2092), (2290)

(20) சிவஞானிகளைக் காணும் காட்சியே பெரும் பயன் தருவதாம். (2008)

(21) சிவஞானிகளைச் சிவஞானத் தொடர்புபற்றியே வணங்கி வழிபடுதல் சிறப்பு. அஃதன்றி அவரது குல நலம்பற்றி வழிபடுவோரு முண்டு. அவருள் தாயர் மரபுத் தொடர்பு பற்றி வருவோர் மிகப் பற்றுடையோர்; (2008)

(22) ஆளுடைய பிள்ளையார் தலயாத்திரையில் தரையிற் காலினால் நடந்து செல்லும் அவரைப் பிறரொருவர் தாங்கிச் செல்வதும் பொறாது, தந்தையார் தமது பியலின் மேல்வைத்துச் சுமந்து சென்றார்; இது தலையாய தந்தை யன்பின் றிறமே யன்றி அருந்தவஞ் செய்து பெற்றெடுத்த தலைமைப் பாடும் பற்றியது. (2011)

(23) சிவஞானிகளது திருவாக்கின் வழியே உருக்கொள்வது உலகம்; அவர்களே தமது ஆணையிட்டு அருள வல்லவர். (2013)

(24) இறைவரைப் போற்றுவார் மண்புகார்; (2020)

(25) அன்பின்றிறத்தான் வரும் நிகழ்ச்சிகளிற் குலநல உயர்வு தாழ்வு குறுக்கிடாது; (2031) ஆயின், சிவாலய வழிபாட்டு முறைகள் சிவாகம விதிகளுக்குட்பட்டு நிகழத் தக்கன (2032)

(26) பிள்ளையார், பாணனாரைத் திருக்கோயிற்புறத் திருமுற்றத்திற்கொண்டு புக்கு அங்கு நின்று யாழியற்றச் செய்தருளினர். உலக நிலையில் மக்கள் தங்கும் உறைவிடங்கள் முந்தையோர் கண்ட சமூகநிலை ஒழுக்கநூல் விதிப்படி அமைவு படுத்தற்பாலன; சமூக ஒழுங்கு நடைமுறைக்கு இஃது இன்றியமையாதது. இவ்வாறன்றி இற்றைநாட் பேசப்படும் தகாத சமரசங்கள் போலியாம். அவ்வாறு வரும் சமூகநிலை அமைப்புக்களால் அன்பினியலுக்கு இழுக்கில்லை. (2032)

(27) திருநீலகண்ட யாழ்ப்பாணர் விண்ணப்பித்தவாறே, ஆளுடைய பிள்ளையார் அவரையும் அவர் மனைவியார் மதங்கசூளாமணியாரையும் தம்முடன் பிறிவின்றிச் சேவித்தும் பதிகங்களை யாழிலிட்டும் உடனிருக்க இசைந்தருளி, அவ்வாறே கடைமுறைகாறும் செய்வித்து, முத்தியும் புகுவித்தருளியது அன்பும் அருளும் கொண்ட பண்பாகும். (2038)

(28) ஒரு தலத்தினைக் குறித்து யாத்திரை செல்பவர்கள் இடையில் வரும் பதிகளையும் வணங்கிச் செல்லுதல் மரபு. (2043)

(29) பெரியோர்களது வரவு கண்ட சரம் அசரமாகிய எல்லாம் மகிழ்ச்சிக் குறிகாட்டி மலர்தல் இயல்பு. (2040—2050)

(30) சிவனுக்குரிய திருநந்தனவனங்கள் பணிதற்குரியன. (2051)

(31) அண்ணலார் வெளியே அருட்கூத் தியற்றும் திருவம்பலம் சிவஞானமே யாம். (2058)

(32) சிவனுக்குரிமைத் தொழில் செய்வோர் முன்னர் வைத்து வாழ்த்தத் தக்கார். (2060)

(33) திருத்தில்லைத் திருவீதிகள் நான்குமே உயிர்களுக்கு மாதவப்பயன் தர வல்லன. அவை தொழத்தக்கன. (2063)

(34) திருத்தில்லைப் பதியினுள்ளே மக்கள் தம் உறைவிடம் கொள்ளுதல் தகாதென்று அஞ்சி ஆளுடைய பிள்ளையார் திருவேட்களம் தமக்கு வைகுமிடமாக அமைத்துக் காலந்தோறும் வந்து வழிபட்டுச் சென்றருளினர். இந்நாளுலகம் இது கண்டு தக்கவாறு ஒழுகற்பாலது (2063-2064).

(35) தில்லைவாழந்தணர்கள் இறைவனது ஆடுங் கழலுக்கு அணுக்கராம் பரிசினல் சிவகணநாதராம் தன்மை பெறுவர் (2068). இதனைச் சிவஞானிகளே இறைவரருள் காட்டக் காணவல்லவர்கள்.

(36) பெரியவர்கள் அவதரிக்கும் பேறுபெறும் பதிகள்தாமும் அப்பேற்றினைத் தவஞ் செய்து பெற்றன. (2077)

(37) சிவ வழிபாடு பாச முற்ற உயிர்களே யன்றிப், பாசம் மற்றில்லாத சிவ ஞானிகளும் செய்யத்தக்கது. (2087)

(38) சிவிகை முதலாகிய உலக அனுபோகப் பண்டங்களைச் சிவஞானிகள் சிவனருளிய ஆணை வழியல்லது கைக் கொள்ளார். (2105)

(39) சிவனருளிய அருட் பண்டங்கள்தாமும் அவனருளாகவே கண்டு வணங் கியே கைக்கொள்ளற்பாலன. (2114)

(40) பெருங்காதல் மிக்க ஞானிகள் நீண்ட நாட்பிரிவினலே தம்மை யாட் கொண்டருளிய இறைவரது உருவெளிப்பாடு நிகழக் காண்பர். (2128)

(41) இளைய பிள்ளையார் தாபித்த திருச்சேய்ஞலூர்ப்பதி தன்னுட் சண்டீசப் பிள்ளையார் பான்மையில் வந்தவதரிக்கும் பேறு பெற்றது. அதனை ஆளுடைய பிள்ளையார் வழிபட்டபோது அத்தன்மை மிக்கு விளங்கலாயிற்று. (2142—2143)

(42) ஆளுடைய பிள்ளையார் ஒரு பிறப்பு மெய்தாமை யுடையாராயினும், உலகியல்பில் வேதநெறி விளங்கும்படி இருபிறப்பி னிலைமையினைச் சடங்கு காட்டி உபநயனம் கொண்டமைந்து, தோலும் நூலுந் தாங்கினர். சிவஞான நிறைவினலே

முற்றுமுணர்ந்த நிலையினராயினும், உலகிற் சரிக்குங்காறும் உலகநெறி உறுதி காட்டுவர் ஒழுக்கத்தின் நிற்கத்தக்கார். ஞானாசாரியர்கள் செயல்களும் இவ்வாறே காணப்படும். *(2162)*

(43) மந்திரங்களெல்லாம் முதல்வனு ரெழுத்தஞ்சினை முதலாக் கொண்டு தோன்றுவன. **திருவைந் தெழுத்தே ஆதிமந்திரமாம்.** *(2164)*

(44) சிவநேய மலிந்த திருவேடம் அரனெனவே கொண்டு தொழுது வழிபடற்பாலது *(2168, 2169)*

(45) சிவ வேள்விகள் மக்களுக்கு இருமைக்கு மின்ப மளிப்பன. *(2178)*

(46) தம்மை யடைந்தார்க்கு ஐந்து புலனும் நிலைகலங்குமிடத்து அஞ்சல் என்பவர் சிவபெருமானேயாவர். *(2199)*

(47) சிவபெருமானது பதிகளை வணங்குவோர் மாதவமுடையோர். *(2204)*

(48) சிவபெருமான் பாதம் பற்றியே வருங்குலத்துப் பான்மையுடையோர் வேறொரு பரிசினாலும் தீரா நோய்களை உடையவர்பாலே ஒப்புவித்து அவர் திருமுன்பு வரங் கிடக்கும் வகை தேடுவர். *(2210)*; அவ்வாறு ஒப்புவிக்கும்போது சிவபெருமான்றானே உரியவாறு வெளி வந்து அருள் செய்வர். *(2211 - 2216)*

(49) சிவன் எல்லாவுயிரினும் நிறைந்தவன்; ஆயினும் சிவனையன்றி வேறு நினையாத சிவஞானிகள் உள்ளத்தில் சிவன் வெளிப்பட நிறைந்து விளங்குவன்; ஆதலில் அவர்கள் வாக்குச் சிவனது வாக்காகி, வெளிவரும்போதே குறித்த பயன் தந்து வெளிப்படும். பசுபோதமே நிறைந்து நிற்கும் ஏனையோர் வாக்கு அவ்வாறு பயன் றராமைக்கும் இஃதே காரணம். *(2217)*

(50) குறவரைத் தேவர்கள் போற்றும் இயல்பினையுடையது திருவீங்கோய் மலை. மக்கள் தேவரைப் போற்றுதலன்றித் தேவர் மக்களைப் போற்ற நிகழ்வது தலச்சிறப்பு.*(2221)*

(51) ''திருநீலகண்டம்'' என்பது இறைவரது திருவாணை நிகழ்வதொரு மந்திரச்சொல்.*(2233)*

(52) திருநீலகண்டத்தின் ஆணை வழியே அருளப்பட்ட சிவஞானச் சொல்லின்படி கட்டுண்டு நின்று, நாட்டின் இயல்பாகிய பிணி முதலியனவும் நீங்கும்.*(2233)*

(53) அடியார்க்குக் காவலாக நிகழ்ந்த சிவஞான ஆணைச்சொல், அவர் மட்டுமே யன்றி அந்நாடு முழுதும் காவல் செய்யும். நிகழ்ந்த அந்நாளில் மட்டுமேயன்றி எந்நாளினும் அவ்வாறே நிகழும். அஃது அச் சொல்லின் பெருமையும் வன்மையும் ஆணை நிகழ்விக்கும் ஞானிகளின் ஆற்றலுமாம்.*(2234)*

54) கோச் செங்கட் சோழரது அன்பின் பெருமை மிகப்பெரிது; இறைவரது தேவாரத்தில் வைத்துப் போற்றப்படும் பெருமையுடையது.*(2243)*

(55) திருவானைக்காவில் யானையும் சிலந்தியும் மாறுகொண்டு இகலிப் பூசலிட்டிறந்தன. அப்பூசல் சிவனன்பின் தொண்டு காரணமாக வந்தமையின் இரண்டும் அருட்பேறு

பெற்றன. இகல் பற்றி உலகில்வரும் எனைப் பூசல்களின் விளைவினின்றும் இவற்றின் இவ் வேறுபாடு உணரத்தக்கது.(2243)

(56) இறைவர்பால் நேசர் செல்லா வகை தடுக்கும் இடும்பைகளை இறைவரே தீர்த்தருள் செய்வார்.(2247); "அவனருளாலே அவன்றாள் வணங்கி" (திருவா)

(57) சிவனது திரு அருட் பெருமைகளை அடியார்பாற்கேட்டு வினாவுரையாடுதல் அவனருளைப் பருகித் திளைக்கும் சிவஞானிகளின் பண்புகளுள் ஒன்று;(2250-2251)

(58) ஞாயிறு மிதுன வோரையுட் சேரும் காலம் கடனீர்மை குன்ற வேனில் மிகும்.(2282)

(59) சிவபெருமான் மிகப்பெரிய பொருட்கும் மிகப் பெரியவர்; மிகச் சிறியதற்கும் மிகச் சிறியவர் என்பது வேதப் பொருள்.(2300)

(60) கங்கை முதற் புனிதமாம் பெருந்தீர்த்தங்களும் தாம் தாம் தூய்மை பெறக் கருதி மாமகத் தீர்த்தத்துள் வந்து ஆடுதல் குடந்தைக் காரோணத் தலச் சிறப்பு; (2307)

(61) நாளுநாளும் பரவுவாரது பிணி தீர்த்தல் திரு நாகேச்சர முடைய பெருமானது அருட்சிறப்பு.(2310)

(62) **சிவஞானிகள் பிறர்க்குப் பொருள் தரவேண்டில், சிவனையன்றி வேறொன்று மறியாமையால், அப்பொருளையும் சிவனிடத்திலே வேண்டிப் பெறுவர்.** (2322 -2324)

(63) **சிவபெருமான் றிருவருளால் வரும் நிதி, எடுக்க எடுக்கக் குறையாத தன்மையுடையது** (2325-2327)

(64) **உயர் வேள்விகள் சிவனை முன்னாகவே செய்யத்தக்கன.** (2327)

(65) இசையாற் றமிழ் பரவும்; ஆனால் பயன் கொடுப்பது தமிழின் பொருளே யன்றி இசையன்று; புலனின்பந் தருதலொன்றே கொண்டு இந்நாள் மாக்கள் இசைக்கு அடிமைப் பட்டுப் பல்லாற்றாலும் வீழ்ந்து படுகின்றார்கள். பொருளைக் காணாது வெறும் செவிப்புலமாகும் இசையினையே மேம்பட எண்ணி இசையினுக்குத் தகாத ஒரு மேன்மைத் தானமும் தந்தொழிகின்றார்கள். "ஓசையின் விளிந்த புள்ளுப் போலவும்"(கோயினான்-28) ஐம்புல வின்பங்களும் அகப்படுத்தி வீழ்த்துவன; இசையின்பம் செவியின்வழிச் சென்று மனத்துட் சென்று மக்களை வீழ்த்தும் தன்மையுடைது.(2344)

(66) ஆளுடைய பிள்ளையாரின் திருப்பதிகங்களைத் திருநீலகண்டப் பாணனார் யாழிலிட்டுப் பயிற்றினர். பதிகங்களால் யாழிசை பெருமை பட்டதன்றி யாழினாற் பதிகங்கள் பெருமை பெற்றன அல்ல.(2346)

(67) திருப்பதிகத் துண்மை பூதலத்தோர் கண்டத்தும் கலத்தினினும் நாதவிசை முயற்சிகளா லடங்காது;(2345); செய்ய சடையாரது திருவருளின் பெருமை யெல்லாம் யாழ் முதலாங் கருவிகளி னடங்கா; ஆதலின் அருட் பதிகங்களைக்

கருவியளவையின் மக்கள் தத்தம் இயல்புக்கேற்ப இயற்றுதல் வழக்கு. (2349) சிந்தையாலளவுபடா விசைப்பெருமை செயலளவி லெய்துமோ? எய்தாது (2350).

(68) கன்னிகை ஒருத்தி தான் குறித்த நாயகனை மணத்தின் முன்னர்த் தீண்டுதல் நமது நாட்டில் முந்தையோர் மரபன்று. திருமருகலில் வணிகனை அரவந் தீண்டவும் தான் தீண்டாது வருந்தி அணுக வீழ்ந்து புலம்பினள் அவனை மணங் குறித்து உடன்போந்த கன்னிகை. இதனை இந்நாள் நாகரிக மென்ற பேரால் வழங்கும் அநாகரிக உலகம் கண்டு திருந்த ஒழுகுதல் நலம் (2372).

(69) அரவின் விடம் தீர்க்கக் கருடபாவனை, இடிபாவனை முதலிய வித்தைகள் உதவுவன. அத்தகைய விஞ்சை வல்லோர் நம் நாட்டில் உண்டு. அரவினால் தீமை நேர்ந்தபோது அவர்கள் தாமாகவே எளிதில் வந்து சேர்ந்து உதவிபுரிய மேற்கொள்ளுதல் நம் நாட்டு மரபு (2372).

(70) மந்திரத்தாலும் மருந்தாலும் தீராத விடத்துச் சிவனிடத்து அடைக்கலம் புகுதலும் சிவனையே நோக்கி அபயமாகக் கூவுதலும் புலம்புதலும் மதியுடையோர் செய்கை (2373).

(71) சிவனைக் கண்டு, நோக்கி, வழிபடச் செல்லும்போது சிவஞானிகளுக்கு உலக நிகழ்ச்சிகள் புலப்படா; ஆயின், சிவனையே தஞ்சமாகப் புக்கவர்களது இரங்கலோசை அவர்களது மெய்த்தன்மை விளங்கு திருச் செவிகளிற் புலனுதலும் கூடும். வழிபாட்டினிடையிலேயும் கருணையினுல் ஞானிகள், அருள் வழியே நின்று, சிவனைத் தஞ்சமென்ற அடியார்களின் துன்ப நீங்க அருள் புரிவர்.(2379).

(72) பிள்ளையார் திருமருகலில் வணிகக் கன்னியினது வருத்தந்தீர வணிகனை விடந்தீர்த்தருளினதும் அவர்களை மணம் புணர்த்தியதுமாகிய செயல்கள் சிவன் பற்றே பற்ருக நின்று அபயம் புக்க ஒருத்தியின் துன்ப நீக்கும் அருட் கருணையின் பாலன; அவை செத்தாரை யுயிர்ப்பிப்பே னென்னும் தற்போதத்தா லல்ல; மற்றும் உலக நிலைபற்றி எழுந்தனவுமல்ல (2381).

(73) திருமருகலின் வந்து சிறுத்தொண்ட நாயனுர் பிள்ளையாரைத் திருச்செங்காட்டங் குடியில் எழுந்தருளும்படி வேண்டினுர்; பிள்ளையார் திருமருகலில் இறைவரைச் சென்றிறைஞ்ச, ஒரு பாகம் பசுமையாக இறைவர் திருச்செங்காட்டங் குடியில் கணபதீச்சரத்தமர்ந்த கோலம் காட்டியருள, அங்கு வருவது திருவுள்ள மென்றங்குச் சென்றருளினர். ஆயின் பின்னர்ப் புகலி அந்தணர்கள் திருவீழிமிழலையில் வந்து, பிள்ளையாரைத், தோணியப்பரை வணங்கத் தம்மோ டெழுந்தருள வேண்டியபோதும் இவ்வாறே பிள்ளையாருக்குத் தோணியில் இருந்த வண்ணம் அங்கு வீழியில் விமானத்தில் இறைவர் காட்டியருள, இப்போது அங்குத் திரும்பச் செல்லாது ஏனைப் பதிகளிற் சென்று வணங்குவது திருவுள்ளமென்று குறிப்புணர்ந்தனர்; இக்குறிப்புக்கள் திருவருள் வயத்தால் ஏகனுகி யிறைபணி நிற்கும் சிவஞானிகள் தமது உள்ளத்தே உணரத்தக்கனவன்றிப் பசுபோத நிறைந்த உள்ளங்களா லறியத்தக்கனவல்ல. (2383-2454)

(74) திருப்புகலூர்ப் புறம்பணையில் வந்து ஆளுடைய பிள்ளையாரை அரசுகள் எதிர்கொண்டனர். அவர்பால் திருவாரூர்த் திருவாதிரை நிகழ் செல்வம் கேட்டனர் பிள்ளையார்; கேட்ட அப்பொழுதே அவ்விடத்தினின்றவாறே பிள்ளையார் ஆர்வமிக்குத் திருவாரூர் சென்றருளினர். இஃது அன்பின் மிக்காரது செயல் (2394).

(75) அடியார்கள் கூடியபோது திருத்தொண்டின் உண்மைத் திறந்தன்னையே தெளிய நாடி அளவளாவிக் களித்து உடனுறைவின் பயன் பெறுவர் (2421).

(76) பிள்ளையாரும் அரசுகளும் திருப்புகலூரினின்றும் யாத்திரையாகப் புறப்படும்போது சிவிகை பின்வரப், பிள்ளையார் அரசுகளது மருங்குவிட் டகலாதே வழிக்கொண்டனர்; அரசுகள் பிள்ளையாரை "நாயனுர் உமக்களித்த சிவிகையில் எழுந்தருளும்" என்றருளப், பிள்ளையார்,'உமது அருளும் இவ்வாருயின் தேவரீர் தொண்டர்களோடும் முன்செல்ல அவ்விடம் உம்மைப் பின்பற்றி யான் வரப்போவ தாகுக!" என்றருளி அவ்வாறே பின்னர் யாத்திரை நிகழ்ச்சிபெற்றது. இதன் உயர்ந்த மரபும் உள்ளுறையும் காணத் தக்கன (2425).

(77) மக்கள் தமது நாண்முறை நிகழ்ச்சிகளிலும் மனமார இறைவரை எண்ணித் தம்மை அவர்பால் ஒப்புவித்து விண்ணப்பித்தால், இறைவரே, செல்லும் நல்வழி காட்டிச் செலுத்தவர் (2457).

(78) உலகில் தோன்றும் பெரும்பஞ்சம், பெரும்பிணி முதலிய எவ்வகைக் கேடுகளாலும் சிவஞானிகள் துன்பப்படார்; எஞ்ஞான்றும் திருநீற்றுச் சார்பினேர்க்குக் கவலே வராது (2462); "வானந் துளங்கிலென்... ...ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே" (அரசு).

(79) வினைவயத்தால் உலகிற் கேடுகள் தோன்றும்போது, சிவஞானிகள், தம்மைச் சார்ந்து வழிபடுவோர்க்கு அளித்தற்பொருட்டுப் பொருள் முதலிய சாதனங்களை இறைவர் தாமே அறிந்து உதவி அருள் புரியப்பெறுவர் (2462 - 2463).

(80) கைத்தொண்டு செய்து பெறுங் காசு வாசிபடாது (**வாசி** - வட்டம்); இந்நாளிலும் அரசாங்கத்தில் சில வருவாய்களுக்கு வருமான வரி யில்லை (Income tax free) என்ற அமைவு செய்தல் காண்க. (2467)

(81) அடியார்க் கமுதளித்தல் உரிய நேரத்தில் காலத் தாழ்வின்றிச் செய்யத் தக்கது; உரிய காலந் தாழச் செய்தல் தீவினையாம். (2465)

(82) அடியார்க் கமுது ஒருநாளில் இரண்டு பொழுதும் அளித்தல் மரபு.

(83) திருமறைக்காட்டில் மறைகள் பூசித்துத் திருக்காப்பிட்ட திருக்கதவினைத் தமிழ் மறையே திறக்கவல்ல தாயிற்று; ஒரு பூட்டினைத் திறக்கவேண்டுமாளுல் பூட்டிய அத்திறவுகோலால் அல்லது அஃதே போன்ற தொன்றினுலாவதன்றி யியலாது என்பதுண்மை.(2478 - 2479).

(84) இறைவர் தமிழ் மறைத் திருவாக்கின் பயன்றுய்த்து நிற்பர் (2480).

(85) இறைவர் மொழிந்த மறைகள் வழிபட்டுக் காப்பிட்ட திருக்கதவினைத் தொண்டர் பெருமக்களின் றிருவாக்குக்கள் திறக்கவும் அடைக்கவும் நிகழச் செய்ய வல்லவாயின; மறையுடன் மெய்த் தொண்டர்க் கிடையீடு பெரிதாம் (2490).

(86) இறைவரது அருளிப்பாடுகளின் வரும் ஐயங்களை, அவரை எண்ணியபோது, அவர் தாமே வெளிப்பட்டுத் தீர்ப்பர் (2492).

(87) அறிவு தரப்பெற்றும் சமயச் சார்பு கொண்டு மக்கள் இழுக்குப்பட ஒழுகுதல் அவ்வவர் முன்செய்தீவினைப் பயத்தால் ஆவது (2497); அவ்வாறு நல் லொழுக்கம் தவறிய கேடு, தனித்த மக்களுக்கேயன்றி, ஒரு நாட்டிற்கே வரும் (2498).

(88) **நாடு முழுதும் வழுக்கி வீழ்ந்து மயங்கினும் நல்லோர் நெறி திறம்பார் (2502 - 2503); அவ்வாறு நெறி திறம்பாத ஒருசிலரால் நாடு முழுதும் உரிய காலத்தில் நன்னெறிப்பட் டுய்யும் காரண முளதாகும்.**

(89) **தம் நாடு தீநெறி ஒழுகி வீழ்ந்தநிலை காணிற் கலங்குதலும், அதனைத் தீர்த்து நாட்டினை நல்வழிப் படுத்த இடைவிடாது முயல்வதும் அருளுடைய நல்லாரியல்பு (2503).**

(90) **சிவஞானிகளை அடுத்து விண்ணப்பித்து நாட்டின் நலனைத் தேடிக் கொள்ளுதலும் நல்லார் இயல்பு (2506).**

(91) அருள் நிறைந்த சிவஞானிகளை அடுத்து நிற்கும் வாழ்வுடைய மக்களும் கருணை யுடையோராவர் (2512).

(92) பிள்ளையார் பாண்டிநாடு சென்று சமணரை வென்று சைவத் தாபனம் செய்யத் துணிந்து எழுந்தபோது, அரசுகள் அதனை மறுத்து, அமணர் தீயோர் எனவும், நாளும் கோளும் தீயன எனவும் கூறித் தடுத்தனர். இஃது அருட் கருணை யின்மையினாலன்று; பிள்ளையார்பாற் கொண்ட அளவற்ற காதலினாலாகியது (2514).

(93) இறைவன் நம் உள்ளிடங்கொண் டுள்ளானுதலினாற் பழுதணையாதென் றெண்ணிப் பரவினால் நாளுங் கோளும் தீயனவேனும் நன்காகும் (2514); இங்குப் பிள்ளையார் அருளிய கோளறுபதிகம், இந்நாளிலும் அத்தன்மையில் விளங்கி அன்பர்களை இடையூறு வாராமற் காத்து நிற்றல் கண்டு மக்கள் பயன்பெறுதல் நலம்.

(94) ''வேயுறு தோளி'' என்ற பதிகத்தினுள் ''புத்தரொ டமணைவாதி லழிவிக்கு மண்ணல் திருநீறு செம்மை திடமே'' என்ற பின்னிகழ்ச்சியின் முற்குறிப்பாய் விளங்கும் உண்மை, சிவஞானம் எல்லாம் செய்யவல்ல தன்மையினைக் காட்டுவது. (2514)

(95) அரசுகள் மறுத்துத் தடுத்த காரணமும், அதற்குப் பிள்ளையார் அருளிய விடையும் ஆகிய இரண்டும், உண்மைகளே யாகும் நிலை பின்னிகழ்ச்சிகள் காட்டும்.

(96) தீக் கனாக்களும் துன்னிமித்தங்களும் பின்னர் வரும் கேட்டினை முன் காட்டும் குறிப்புக்கள். இவை திருவருளாணைவழி நிகழ்வன (2531 = 2539 ; 2531 = 2539); நன்னிமித்தங்களும் அவ்வாறே பின் வரும் நன்மை காட்டுவன (2541).

(97) மக்கள் வாழூர் இடங்களின்மேல் கூகை, ஆந்தை முதலிய தீயபுட்கள் பூசலிடுதலும், கைக்கொண்ட பொருள்கள் வழுவி வீழ்தல், கால்கள் தடுமாறுதல், கண்கள் இடம் ஆடித் துடித்தல், தம்மிற்றும் கனன்று கலாம் கொள்ளுதல், பொறை முதலியவற்றை யிழந்து குணம் பிறிதாதல் முதலியவை, கெடுவது காட்டும் துன்னிமித்தங்களாம் (2531 — 2533).

(98) தாம் வழிபடு தெய்வத்தின் மேலே மரம் வேரற்று வீழ்தல், அத்தெய்வம் எழுந்து கைந்நாற்றிப் போதல், அதனை ஊரவர் ஓடிக் காணுதல், கழுதை மேற் படர்தல், பெண்டிர் ஊளையிட்டுப் புலம்பி ஓடல், தமது மாற்றுச் சமயத்தவர் மிக்கு வந்து தம்மை உழக்குதல் முதலியனவாகக் காணுதல் தீமை பயக்கும் கனுக்கள் (2536 — 2539).

(99) பெரியோர்கள் வருவது தெரிந்தபோது நகரின் புறத்துச் சென்று அத்துணையும் தூரத்திலின்றும் கண்டு வணங்கி அவர்களை நல்வரவேற்றல் மரபு; வரவேற்கு முறைகளுள் நிலமுற வீழ்ந்து வணங்குதல் சிறந்ததொன்று. (2553)

(100) பெரியோர்கள்பால் "எழுக" என ஆசிபெற எவரேனும் விரும்புவாராயின் அவர்களின் திருவடிக்கீழ் வீழ்ந்து கிடந்து வணங்குபவரே அதை எளிதிற் கைவரப் பெறுவார். (2554 - 2556).

(101) இறைவரது பதியினையும் கோயிலின் கோபுரத்தையும் கண்டவிடத்தே நின்று வணங்குதல் முறை. (2559)

(102) இறைவரைக் காணப்பெற்றபோது கண் பெற்ற பயன் இஃதே என்று கொள்ளுதல் வேண்டும். (2563)

(103) **அன்பு நிறைவுடையோர் கணக்கு வரம்பின்றிப் பல முறையும் வணங்குவர். எத்தனைமுறை வணங்கினாலும் நிறைவுபெறார்** (2564).

(104) ஆலவா யிறைவரைத் தமிழின் புலவராகக் கண்டு இறைஞ்சினர் ஆளுடைய பிள்ளையார் (2565); அரசுகளும் நம்பிகளும் அவ்வாறே கண்டு வணங்கினர்.

(105) பெரியார்கள் இறைவரைக் கும்பிடத் திருக்கோயிலுட் செல்லும்போது அவர்களது வழிபாட்டுக் கிடையூறாகக் குறுக்கிட்டு அவர்களை வணங்கலாகாது; ஒருபுறம் ஒதுங்கிக்கொள்ளுதல் மரபு (2567).

(106) வீழ்ந்த நிலையினின்றும் மேல் எடுபடவேண்டிப் பெரியோர்பால் அடைபவர் அவரடிக்கீழ் வீழ்ந்து கிடந்தால் விரைவில் மேல் எடுக்கப்படுவார். (2569)

(107) உள்ளக் கறுப்பும் பொறாமையும் பொய்யும் உடையவரது கூட்டத்துக்கு இருட்கூட்டமே தக்க உவமைப் பொருளாம் (2576).

(108) உண்மைப் பெரியோ ரியல்பும் செயலும் கண்டு பொறாது உள்ளம் புழுங்கிக் கேடு சூழ்தல் கீழ்மக்க ளியல்பு (2578 - 2579).

(109) பெரியோர்களைக் காணலும் கேட்டலும் நன்றென்று நீதிநூல் போதிக்க, அதற்கு மாறாகக் ''கண்டு முட்டு'' ''கேட்டு முட்டு'' என்று வருந்துதல் கீழ்மக்களின் இழிந்த செயல்கள் (2581 - 2582).

(110) பிள்ளையாரும் தொண்டர்களும் அமர்ந்த திருமடத்தில் தீயிட்டு அழிக்கச் சூழ்ச்சி செய்த அமணர், அதற்கு அரசனது உடம்பாடு பெறச் சூழ்ந்து, ''மறையோ னுறை மடத்தில் விஞ்சைமந் திரத்**தொழில்** விளைத்தால், நன்னக ரித்திரா தேனாகும்'' என்ற வஞ்சச் சொற்கூறி அனுமதி பெற்றது அவர்களது பொய்ம்மையினையும் வஞ்சனை மனத்தையும் இழிதகைமையும் காட்டுவது (2586).

(111) கணவனரது முகம் புலர்தல் காணில் அதன் காரணம் வினவித் தீர்வு தேடுதல் மனைவியரின் கடமை (2588 — 2591).

(112) வஞ்சகப் புலையர், தம்மால் அன்பு செய்யப்பட்டார்க்கு என்ன கேடு சூழ்வரோ என்று எண்ணி அஞ்சுதலும் கேடு வரின் உயிர் துறக்கத் துணிதலும் அன்பின்றிறம் (2593 - 2594).

(113) ஆதிமந்திரம் அஞ்செழுத்தே எல்லா மந்திரங்களுக்கும் முதன்மை பெற்றது (2596).

(114) திருவைந்தெழுத்தை ஓதுவார்கள் நோக்கும் திசையிலும் மற்றை மந்திரங்களின் வலி வராது (2596).

(115) பிள்ளையாரது திருமடத்தில் அமணர்கள் செய்த தீத்தொழிலினைச் சொல்லுதலும் தகாது என்று ஆசிரியர் ''திருமடப் புறத்தய லிருள்போல் வந்து **தந்தொழில்** புரிந்தனர்'' என்றனர்; இஃது உயர்ந்தோர் மரபு (2598).

(116) அமணர் செய்த தீத்தொழில் தம்பொருட்டே யாயினும், அதுபற்றி யன்றித், திருமடத்தில் துயின்ற மாதவர்களாகிய திருத்தொண்டர்களைப் பற்றியே பரிவும் அச்சமும் முனிவும் கொண்டருளினர் பிள்ளையார்; இஃது அன்பின் அருட் டிறம் (2601).

(117) குடிகளை நீதிவழுவா தொழுகுவித்தல் அரசன் கடமை; குடிகளின் தீமை அரசாங்கத்தினையும் அரசனையுமே சாரும். இந் நியதிபற்றியும், முன்செய் தீவினைப் பயத்தால் அமண் சமயம் சார்ந்தும் அவர் தீத்தொழிலுக்கு உடன்பட்டும் இருந்தமை பற்றியும் இங்கு அமணர் இட்ட தழல் போய்ப் ''பையவே சென்று பாண்டியற்**காகவே**'' என்று பணித்தருளினர் பிள்ளையார் (2602).

(118) **தீ முதலிய பூதங்களும் அவற்றின் அதிதெய்வங்களும் சிவஞானிகளின் ஆணைவழி நிகழும். அது சிவனருள் நியதி (2604).**

(119) சிவனரு ளாணையின்வழி வரும் நோய் முதலியவை அவ் வருளாணை வழியானன்றி, ஏனை மருந்து மந்திர முயற்சிகள் எவ்வாற்றானும் (மிகுவதன்றித்) தீரா (2613).

(120) தீவினையாளரையே தீநோய் வரும் தீவினை செய்தோர் அதன் விளைவாகிய தீப்பயன் வந்து சார்ந்தபோது தமது தீத்தொழிலை எண்ணி யஞ்சுதலியல்பு (2613).

(121) **திருஞான சம்பந்தரென்னு நாமமே நோய் தீர்க்கும் மந்திரமாகும்** (2619); அத் திருநாம மந்திரம் செவியினுட் புக அயர்வு நீங்கும்.

(122) ஆவது மழிவும் எல்லாம் இறைவர் செயல் (2634).

(123) பாவகாரிகளை நோக்குதலும், அவருடன் வாது செய்தலும் அவர்களை வெல்லுதலும் அழித்தலும் ஆகிய செயல்களைச் சிவ னருள்விடை பெற்றாலன்றிச் செய்யத் துணியார் பெரியோர். "அவனே தானே யாகிய வந்நெறி, யேக னாகி யிறைபணி நிற்பது" சிவஞானிகளின் செய்கை (2634).

(124) பரசமயப் பிணக்கினுட்பட்ட பாவிகள், பொய் வஞ்சனை முதலியவற்றாலும் தம் சமயத்தை நாட்ட முயல்வர்; பிறரையும் அவ்வாறு தூண்டுவர் (2646).

(125) செய்தவப் பயன் வரும் செவ்வி வந்துற்றபோது பொய்ந்நெறி நீங்க நன் னெறி நிற்கும் நிலை வரும் (2648).

(126) பிள்ளையாரது தெய்வத் தன்மையினையும் வலிமையினையும் உணர்ந் திருந்தும், அமணர் பலர், அரசன் முன் அவரை அனேகராய்ச் சூழ்ந்து பதறிக் கதறக் கண்டு மங்கையர்க்கரசியார் உண்ணடுங்கினர். இது தாயின் அன்பினியல்பு (2656).

(127) "ஆலவா யரன் என்னுள் இருக்க யான் இவ்வமணர்க் கெளியேனலேன்" என்றனர் பிள்ளையார். இது சிவஞானிகளினியல்பு (2658).

(128) ஆண்பாலா ருடம்பில் இடது பாகம் பெண்பாகம் எனப்படும்; அதிற்பற்றிய நோய் எளிதில் அடங்கித் தீர்க்க வரும். இது மருத்துவ நூல், உடற்கூற்று நூல்களிற் கண்ட உண்மை (2660).

(129) திருநீற்றுப் பதிகம் நோய் தீர்க்க வல்லது (2662 - 2663).

(130) உடற்கூற்றில் வலப்பாகமும் இடப்பாகமுமாக நேர் பகிர்ந்து பற்றும் சுரநோய்களுமுண்டு (2665).

(131) தாங்களிட்ட நெருப்பே பிள்ளையாரது ஆணையாற் சென்று சுரமாகப் பற்றவும், பின்னர் அவர் ஆணை வழியே நீங்கவும் கண்ட அமணர், நெருப்பு முதலிய பூதங்கள் அவரது ஆணைவழி நிற்றற்பாலன என்பதனைத் தெளிந்து உண்மை கண்டு உய்தி பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாறன்றி மேலும் அந்நெருப்பினிலும் நீரினிலும் ஒட்டி வாது செய்ததுமன்றி, அதனாலே மாய்ந்து அழிவும் பெற்றனர். இவ்வாறு அழிவு தேடுவது உண்மைச் சமயநெறி வாராது, உணர்வுமற்றுப், பொய்யினன் மெய்ம்மையாக்கப் புகும் பேதை மூர்க்கரின் செயல். (2672)

(132) நெருப்பு, சிவபெருமானது அட்ட மூர்த்தங்களுள் ஒன்று; பிள்ளையாரது "போகமார்த்த பூண்முலையாள்" என்ற திருப்பதிகமும் மலைமகள் பாகத் தா மூர்த்தியைப் பொருளென உடைமையால் நெருப்பில் பழுதின்றி யிருந்தது. (2684)

(133) சுரவாதம் கனல்வாதம் இரண்டினும் தோற்றும், புனல் வாதத்திலும், அமணர்த் தமது ஏட்டினை இட்டு அது நீர்வழியே செல்லக் கண்டு தோல்வியுற்றும் நின்ற அமணர், மூன்றனும் அறிவு பெறாராகி, "மாறுகொண் டெழுமிடல் வந்தது காண்டு" மென்றார். அந்நிலையிலேனும் பிழையுணர் பட்டு வந்தணைந்து உய்யும்வகை தேடவிடாது, அவர்களது திணிந்த அறியாமையும் பொய்யும் வஞ்சனையும் கூடி அவர்கட்கு அழிவு தேடியது அவரது வல்வினைப் பயன் (2715).

(134) சிவஞானத் தலைவராகிய குருமூர்த்திகளால் பாவனை, பார்வை, பரிசம் என்ற தீக்கைமுறைகள் பக்குவ நோக்கிச் செய்யப்பெற்றுத், திருநீறும் பூசப்பெற்றதனால், பாண்டியன், முன்னை வல்வினையி னீங்கித் துலைபோல இருவினை யொப்பும் பெற்று முதல்வனை அறியும் தன்மை யடைந்தான். அதனாலே திருப்பாசுரத் திருப்பதிகத்தை உபதேசித்தருளினர் பிள்ளையார். ஞானகுருவின் உபகாரத்தினால் ஞானத்தினை உணரு முறைமையினை இவ்வாறு உணர்ந்துகொள்ளற் பாலது (2717).

(135) திருப்பாசுரம், பாண்டியனாகிய பக்குவமுடைய சீடனுக்கு, வைகைக் கரையாகிய தீக்கை மண்டபத்திலே, ஞானாசிரியரால் செய்யப்பட்ட ஞானோபதேசமாகிய தீக்கைப் பகுதியாம். அது சிவாகமங்களின் முடிந்த சித்தாந்த சாரமாய் விளங்குவது. (2718)

(136) பிள்ளையார் ஆற்றிலிட்ட ஏடு நீரினை எதிர்த்துச் சென்றது பிறவியாற்றில் மாதவர் மனம் எதிர்த்துச் சென்றாற் போன்றது (2744).

(137) திருப்பாசுரத் திருப்பதிகத்தில் "வேந்தனு மோங்குக" என்ற திருவாக்கின் பயனாகப் பாண்டியனது உடலின் கூனும் நிமிர்ந்தது. ஞான மெய்த் திருவாக்கின் அருள் வன்மை இதனாலு மறியப்படும் (2745).

(138) அரச தண்டனை சால்புற நீதிமுறை வழியே அமைந்தபோது அதனை விலக்க முற்படார்கள் பெரியோர்கள். விலக்காமையால் அவர்களது கருணைக் கிழுக்கில்லை (2752).

(139) அமணர் தமது திருமடத்திற் றீக்கொளுவியது கண்ட பிள்ளையார், "ஐயனே அஞ்சலென்றருள் செய்யெனை" என்று சிவபெருமானை வேண்டினர்; வாத முடிவில் வைகைக் கரையில் அமணழிவு கண்டு வந்தபோது இறைவரை "அடியனேனை அஞ்சலென் றருளவல்ல மெய்யனே!" என்று வணங்கினர். சிவ ஞானிகள் என்றும் மறவாது சிவனிறைவாகிய ஓங்குணர்வி னுள்ளடங்கி எல்லாச் செயலும் சிவச் செயலாகவே காண்பர் (2763).

(140) மக்களின் அறிவைப் பற்றிய மயக்கமென்கின்ற நோய் நீங்குதல் இறைவரது உபகாரத்தாலன்றி யியலாது. அவ்வாறு அறிவு மயக்க நீங்கித் தெளியப்பெற்ருல் அதனை யறிந்து இறைவன்பால் நன்றியறிதல் வேண்டும் (2765).

(141) பலநாட் பிள்ளையைப் பிரிந்த தாதையர் அவ ரிருக்குமிடம் சென்று காண விரும்புதல் உலகியற்கை. அதிலும் புறச்சமய வன்னெஞ்சர்பால் வாது வெல்லச் சென்ற பிள்ளையைப் பற்றிக் கவலை கொள்ளுதல் தாதையர்க்கு மிகவுமியைவதாம் (2771 - 2772).

(142) அவ்வாறு பிள்ளையைக் காணக் கவலைப்பட்டு விரைந்து செல்லினும் இடையில் நேர்ந்த பதிகளை வணங்கிச் செல்லுதல் திண்ணிய சிவனன்பினலும் தலைத்தாழ்வேயாம் (2773).

(143) அதிலும், பிள்ளை யிருக்கும் பதியிற் சேர்ந்த பின்னும் நேரே திருக்கோயில் சென்று இறைவரை வணங்கிப் பின்னரே பிள்ளை யிருக்குமிடம் வினவிச் சென்று அணைதல் சிவனிடம் வைத்த மிகத் திண்ணிய அன்பின் றிறம் (2774).

(144) மதுரை வாழ்வார் ''இங்கெம்மைக் கண்விடுத்த காழியா ரிளவேறு'' என்று பிள்ளையாரை அருமை பெறப் பாராட்டியது அவர்கள் நன்றியினையும் அன்பின் பெருக்கத்தையும் காட்டுவது; நன்மக்க ளிடையேதான் இவ்வொழுக்கம் காணலாம் (2775).

(145) ஆலவாயில் தம் தாதையாரைத் திருமடத்திற் கண்டபோது பிள்ளையார், அவர் சார்வு கண்டருளித் திருத்தோணியில் வீற்றிருந்த திருத்தோணியப்பரைக் கண்டு மனமுருகி ''எனையறியாப் பருவத்தே யெடுத்தாண்ட, பெருந்தகையெம் பெருமாட்டி யுடனிருந்ததே'' என்று நலம் வினவியருளினர்; இஃது எஞ்ஞான்றும் எங்கும் சிவமே கண்டிருக்கும் சிவஞானிகளின் நிலை (2778 - 2779).

(146) மதுரையினின்றும் புறப்பட்டுத் தலயாத்திரையாகச் செல்வதற்குப் பிள்ளையார் ஒருப்பட்டபோது பாண்டியரும், தேவியாரும், அமைச்சனும் பிரிவாற்ருது அடிவீழ்ந்து, கண்ணீர் வார, உணர்வின்றி வீழக்கண்ட பிள்ளையார், ''கருணைப் பெருக்கினலே யானும்மைப் பிரியாத வண்ண மிந்நாட் டிறைவர்பதி யெனைப் பலவும் பணிவீர்'' என்றருளிய அமைதி சிவஞானச் செல்வமுடைய பெரியாரின் அருளியல்பினைக் காட்டுவது (2782).

(147) கடல் தாண்டிச் செல்லாது ஆளுடைய பிள்ளையார் திருவிராமேச்சுரத் தினின்றபடியே ஈழநாட்டுத் தலங்களை மனத்துட் கண்டு வணங்கிப் பாடியருளினர். இது முன்னைநாள் பெரியோர் மரபு (2788).

(148) திருமணமேற்குடியினின்றும் சோழநாடு செல்லப் பிள்ளையார் ஒருப்பட்டபோது மன்னவரும் மங்கையர்க்கரசியாரும் மந்திரியாரும் பிரிவாற்ருது உடன் போக ஒருப்பட்டனர். பிள்ளையார் அவர்க்குத் தகுவன அருளி, ஈசர்நெறி போற்றி

யிருப்பீர் என்று பணித்து, அங்கே யிருக்கச் செய்து போந்தருளினார். இது பெரியோர் வழக்கு (2792).

(149) ஞானிகளின் நாவலமே, ஓடக்கோலாக நின்று ஆற்றுவெள்ளத்தினிடையில் ஓடத்தினைச் செலுத்த வல்லதாகும் (2797).

(150) பொது நடுவழியே செல்லும் சைவ மக்களை அடாது சொல்லித் தடுத்துப் போதிமங்கையிற் புத்தர் தம் அழிவைத் தாமே தேடிக்கொண்டனர். இது புன்னெறிச் சமயச் சார்புற்ற கீழ்மக்கள் இயல்பு (2805 — 2808).

(151) உண்மைநெறி காணாத புத்த சமயக் கொள்கை, உண்மை கண்ட சைவ நூல் வாதில் தோல்வியுற்றொழிய அழிக்கப்பட்டது இகலினாலன்றி, பொருமையாலன்றித், தாம்மோடெதிர்ந்து வலிய வாதுக் கழைத்தாரைத் தெருட்டி உய்வித்தது கருணையினாலாகிய செயல் (2823 — 2824).

(152) போகூழால் வாதிட்டு அழிந்த சமணர்போலாது, ஆகூழாகிய நல்வினைப் பயனாற் போதிமங்கையிற் புத்தர்கள் வாதிட்டு உண்மை கண்டு வணங்கி நீறு பெற்றுச் சைவராகி உய்ந்தனர் (2824).

(153) உலகிற் பலவேறு சமயங்கள் நிலவுகின்றன; அவை உயிர்களின் பக்குவ நிலையும் அறிவு வேறுபாடும் பற்றி நின்று, பலவேறு திறத்தனவாய் உயர்ந்தனவும் தாழ்ந்தனவுமாய் நிற்கும். அவற்றின் உண்மை நிலைகளை உண்மைநூற் றுணிபு கொண்டு திருவருள்வழி நின்று ஆய்ந்து கொள்ளுதல் வேண்டும்; அவ்வவை கூறும் தலைவ னிலக்கணம், உயிர் இலக்கணம், அளவை நூல்கள், முத்தி யிலக்கணம் முதலிய முடிபுகளைப் பற்றியே ஆராயத் தக்கன (2823 - 2824).

(154) எல்லாச் சமய முடிபுகளும் சைவ சமய முடிபுகளுள் அடங்குவன; சைவ மல்லாது மற்றொன்றுமில்லை. நிற்பனவும் சரிப்பனவும் சைவமேயாம் நிலைமை அருட்குருவின் கருணைநோக்க மணையும்போது உயிர்களுக்கு விளங்கும் (2824).

(155) திருநாவுக்கரசுகளைத் தம்முடன் வருதலைத் தவிர்த்துத் திருமறைக் காட்டில் விட்டுப் பிரிந்த பிள்ளையார், தாம் சென்ற கருத்து முற்றிப் பாண்டி நாட்டினின்று மீளச் சோணாட்டில் எழுந்தருளியபோது, "அரசுகள் எந்நகரி லெழுந்தருளிற்" றென்று வினவித், திருப்பூந்துருத்தியில் இருந்தமை கேட்டு அவரைச் சென்று கண்டு தலைக்கூடுதற்கு அங்குச் சென்றருளினர்; இஃது அவர்பாற் கொண்ட பேரன்பின் றிறம். "உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல், அனைத்தே புலவர் தொழில்" (2825).

(156) பிள்ளையாரது வரவு கேட்டு "நந்தமையா ளுடையவரை நாமெதிர் சென்றிறைஞ்சுவது, முந்தைவினைப் பயன்" என்று கொண்டு இறைவரை வணங்கி நகரின் புறத்துப் போய் அடியார் கூட்டத்தின் நெருக்கினிடைக் காணாமே நிலத்துப் பணிந்து சென்று அவரது சிவிகையினைத் தாங்குவாருடன் தாங்கிச் சிந்தை களிப்புற வந்தனர் அரசுகள். இது பிள்ளையாரிடம் அப்பர் பெருமான் கொண்ட பேரன்புப் பெருக்கின் றிறம் (2831).

(157) அப்பர் சிவிகை தாங்கினார். சிவிகைமே லிருந்த பிள்ளையாரது புந்தியினின்று வேறொன்று நிகழ்ந்திட, "அப்பர் இப்பொழுது எங்குற்றார்" என வினவியருளினர். இவ்வாறே அப்பர்பெருமான், திங்களூரில் அப்பூதியாரது திருமனையில் அமுது செய்யவெழுந்தருளியபோது, திருவுள்ளத்திற் றடுமாற்றமுற்று, "மூத்த திருநாவுக்கரசு எங்கே?" என்று வினவிக் கேட்டறிந்தனர். இவை திருவருள் நிறைவிலே எஞ்ஞான்றும் ஒருபடியாக வீற்றிருக்கும் நல்லறிவாளர்களாகிய சிவஞானிகளுக்குத் திருவருளால் நிகழ்வன; ஏனைய எம்போன்ற புல்லறிவினர்க்கு இவற்றின் தன்மைகள் விளங்கா (2833).

(158) அரசுகள் "ஒப்பரிய தவஞ்செய்தே னுதலின னும்மடிகள், இப்பொழுது தாங்கிவரப் பெற்றுய்ந்தேன் யான்" என்னக் கேட்டு அஞ்சிச் சிவிகையினின்றும் அவனியின்மேல் இழிந்து இறைஞ்சினர். இந்நிலைகள் பெரியோர்பாலே காணப்படுவன; உலகம் கண்டு பின்பற்றி ஒழுகத் தக்கன (2833 - 2834).

(159) பாண்டி நாட்டு நிகழ்ச்சிகளைப் பிள்ளையார் அரசுகளுக்குச் சொல்லக் கேட்டு அரசுகள் உவந்தனர்; தொண்டை நாட்டு நிகழ்ச்சிகளை அரசுகள் பிள்ளையாருக்குக் கூறப் பிள்ளையார் கேட்டுவந்தனர். அடியார்கள் தலைக்கூடும்போது இறைவர் அருளும் அடியார் பெருமையுமே யன்றிப் பிற பேச்சுக்கள் நிகழா (2839—2843).

(160) மங்கையர்க்கரசியார் - குலச்சிறையார் பெருமைகளைப் பிள்ளையார் பாற் கேட்டு அரசுகள் பாண்டி நாடு சென்றனர்; திருஏகாம்பரம் பணியும் சிறப்பினை அரசுகள்பாற் கேட்டுப் பிள்ளையார் தொண்டைநாடு சென்றனர். இவ்வாறு அடியார்களை வழிப்படுத்தும் நிலை ஆசாரியர் பெருமக்கள் விளக்கிய உண்மையாம் (2841 — 2843).

(161) பாண்டி நாட்டினின்றும் தோணிபுரத்தின் மீண்டருளியவுடன் நேரே திருத்தோணி சென்று, அம்மையப்பரை வணங்கி, "வெற்றியாக மீனவ னவையெதிர் நதிமிசை வருகரனே" என்று, எல்லாம் சிவன் செயலேயாக நிகழ்ந்தமை பாராட்டித் துதித்தருளினர் பிள்ளையார்; இவ்வாறு காணுதல் தற்போதமில்லாத சிவஞானிகளின் தன்மை (2852).

(162) திருவண்ணாமலையினை அமரர் பெருமானது வடிவுபோலவே தோன்றக் கண்டு வணங்குதல் பெரியோர்க் கியல்பு (2868).

(163) திருவோத்தூரில் பிள்ளையா ரருளிய திருவாக்கிலே "குரும்பையாண் பனை யீன்குலை" என்னும் வாய்மை குலவுதலால் ஆண்பனைகள் பெண்பனைகள் ஆயின. இது சிவஞானிகளின் வாய்மைத் திறன் (2878).

(164) பிள்ளையாரது திருவாக்கிற் பிறத்தலாலே அந்தப் பனைக ளனைத்தும் இப்பிறவியின் காலங்கள் கழித்துச் சிவமே கூடின. இதனாற் பிள்ளையாரது அருள் திருவாக்கின் பெருமை வரம்பிலது என்ப தறியப்படும் (2881).

(165) தழுவக் குழைந்த திருமேனிக் கம்பரை வணங்கிய பிள்ளையார் தம் பெரிய மனக்காதல் தள்ள நிலமிசைத் தாழ்ந்தார்; அறப் பெருஞ் செல்வக் காமக்கோட்டமு மணைந் திறைஞ்சினர்; திருவியமகம் திருவிருக்குக் குறள் மற்றும் பெருக மிசைத் திருப்பதிகங்கள் புனைந்தருளினர். இவை கச்சித் திருப்பதிக்குரிய சிறப்பு (2898).

(166) அம்மையார் தலையினு னடந்த திருவாலங்காட்டினுள் மிதிக்க அஞ்சிப் பிள்ளையார் அதன் அருகு ஓர் பதியிற் பள்ளி யமர்ந்தருளினர். இஃது அம்மையாரது பெருமையினை உளங்கொண்டு உலகறியவைத்த அன்பின் றிறம்; இவ்வாறன்றித், தாமரைமலர் வாவியினுள் புக்கு உழக்கும் கருமேதிகள்போல எங்கும் சென்று மிதித்து உழக்குதல் இந்நாள் மாக்களின் நிலை யாயினமை வருந்தத் தக்கது (2906).

(167) ஊரை மிதிக்க அஞ்சிப் புறத்தில் தங்கித் துயில்பவரைக் கனவில் உணர்த்திப் பாடச் செய்தது இறைவர், பிள்ளையார் பெருமையினையும் அம்மையார் பெருமையினையும் ஒருங்கே உலகுய்யவைத்த அருட் கருணைத் திறம் (2907).

(168) இயம்பு மொழியின் உண்மை காத்து உயிர் துறந்த சிறப்புப் பழையனூர் வேளாளர்க் குரியது. அச்சிறப்புப் பிள்ளையாரால் இறைவரது திருப்பதிகத்தினும் வைத்துப் போற்றத்தக்க பெருமையுடையது (2908).

(169) திருக்கண்ணப்பர் பெருமையினை எண்ணியே பிள்ளையார் திருக்காளத்தி வணங்கப் பெருவேட்கை கொண்டனர். திருக்கண்ணப்பரை இறைவரது திருப்பதிகத்துள் வைத்துப் போற்றியருளினர்; இறைவரது வழிபாடு முடியுமுன் இறைவருடன் ஒருசேர, அவரையும் வைத்து அடிவீழ்ந்து வணங்கினர். இவை மெய்வேடர் பெருமானரது பேரன்பின் றிறங் காட்டுவன (2920).

(170) காளத்திமலை கயிலைமலையே (2926).

(171) திருக்கயிலையிற்போலப் பல வேடச் சைவர்களும் குழுமித் தவஞ் செய்யுமிடம் திருக்காளத்தியே (2916).

(172) காளத்தியின் வடதிசையிலும் குடதிசை மேலும் தமிழ் வழக்கம் நிகழ் தலில்லாமையால், அத்திசைப் பதிகளைப் பிள்ளையார், காளத்தியி னின்ற படியே வணங்கிப் பாடியருளினர். இஃது ஒருமரபு பற்றியது (2924).

(173) செல்வப் பெருக்கமுடையார் தம்மை உள்ளபடி அறிந்தாராயின், அச் செல்வ முதலிய பாசப் பெருக்கங்களின் மயங்கி அவற்றுக்கே யடிமையா யொழியாது சங்கரற் கடிமையே செய்து மெய்ப்பொரு ளுணர்ந் தொழுகுவர் (2933).

(174) சிவனடியார்களது கூட்டத்தில் மனமுருகுதலும், சைவ நெறியைப் புறம்பேசி இடையூறு விளைக்கும் பரசமயங்களில் வெறுப்பும் உடைமையும், சிவனடிமைத் திறத்தி னிற்போர் செயல்களாம் (2934).

(175) **தம்முடைய செல்வங்களையும் உடைமைகளையும் சிவனடியார்க்கும் சிவஞானிகள் பாலும் ஆக்குதல் அன்பின் மேலீட்டினு லாவது (2936).**

(176) நன்மகட்பேறில்லாத மனைவாழ்க்கை வருத்தந் தருவது (2937).

(177) சிவஞானிகளின் அருட்டிறங்களைத் தாம் பரவுதலும், பிறர் சொல்லக் கேட்பதில் விருப்புறுதலும் சிவனது அடிமைப் பண்புகளிற் சிறப்புடையவை (2950).

(178) சிவனை நோக்கிச் செய்யும் தவத்தாலும் அடியார் பூசையினுலும் நன்மகப் பேறுண்டாகும் (2938).

(179) உருவும் திருவும் முதலிய காரணங்களால் மகவுக்குப் பொருந்தும் பெயரிடுதல் மரபு (2942).

(180) ஆளுடைய பிள்ளையாரது அருட்பெருந் திறத்தினைக் கேட்டுத் திளைத்த வணிகராகிய சிவநேசர் தம் மகளையும் செல்வ முழுவதினையும் அவரே உடையவர் என்று உறுதி மொழிந்தார். இஃது அன்பின் பெருக்காலாகியது (2951 - 2952). இவ்வாறே திருநாட்டியத்தான்குடியில் வேளாளர் கோட்புலியார் தம் மக்களிருவரையும் ஆளுடைய நம்பிகளுக்கு அடிமையாக் கொள்ள அளித்ததுவும் அன்பின் செயல். இவ்வாறு வருவன உலகியலிறந்த அன்பு வயப்பட்ட சிறப்பியலாகிய செயல்களாவன வன்றிப் படியெடுத் தொழுகும், மறைவிதி வரும், உலகிய லொழுக்கமாகா. ஆளுடைய நம்பிகள் வேளாளர் மகளாராகிய சங்கிலியாரை மணந்தது பண்டைவிதி கடைகூட்ட நிகழ்ந்த செயலாம். இவை போல்வன கொண்டு மறைவிதி வரும் நம் முன்னையோர் சமூக நிலைகளைக் குலைக்கும் வழிதேடும் இந்நாட் சீர்திருத்தக்கார மாக்கள் செயல் பொருந்தா என்பது. இக்கருத்துக்களையும் பின்னர்ப் பிள்ளையார் வேதநூற் றுணிவினை யருள்செய்து சிவ நேசரையும் கிளைஞர்களையும் தேற்றுவித்தருளினர்.

(181) விதிவயத்தாலும், பின்னர் அருள்வயத்தாற் றீரவுள்ள நிலையாலும் வரும் நோய்கள் மந்திர முயற்சிகளாற் றீர்வுபெறு (2960).

(182) தம் மகளாரைப் பிள்ளையாருக்கு அளிக்க உறுதிகொண்ட சிவநேசர் அஃதியலாதவாறு அவளிறந்துபட, அவளது உடலைத் தீயிலிட்டுச், சாம்பலையும் எலும்பையும் குடத்திலிட்டு, அதனை அவளாகவே ஐந்தாண்டுகள் போற்றிவந்து, பின்னர்ப் பிள்ளையார் வர நேர்ந்தபோது அக்குடத்தையே அவர்பால் ஒப்படைத்தனர்; இஃது உலகிறந்த நிலையின் நிகழும் திண்ணிய அன்பின் றிறம் (2981).

(183) உருவங் காணுமலே உறைத்த அன்பினுல் பெரியோரை வழிபட்டுவரின் அப் பெரியோர் ஒருநாள் தாமாகவே வந்து அருள்கொடுப்பர் என்பது திண்ணம். இஃது உறைத்த தியானத்தின் பயன். அப்பூதியார் அரசுகளை வழிபட்ட நிலையிலும் இவ்வுண்மை காண்க. ஞான நூல்களுட் கூறும் சிவத் தியானப் பயன் வருதலும் இவ்வாறேயாம் (2967).

(184) இவ்வுலகத்துள் நின்று இறந்து சென்ற உயிரை நன்னெறிப்படுத்தற்கு அது வாழ்ந்த உடலின் எலும்பினை வைத்துச் சடங்குசெய்ய, அப்பயன், உயிரைச்

சாரும் என்ற உண்மையினை நிறுவிக்காட்டிப், பிள்ளையார், குடத்துள் நின்ற எலும்பினை நோக்கி அவ் வெலும்புக்கூட்டினைக் கொண்டு உடலினுள் முன்வாழ்ந்த உயிராகிய பூம்பாவையாரின் பெயர் சொல்லி அழைத்துப் பாடியருளினர். இவ்வுண்மை உலகம் தெளிந் தறிதற்பாலது (2984).

(185) **மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன், சிவனடியார்களை அமுது செய் வித்தலும் சிவனது நல்விழாப் பொலிவுகண் டார்தலுமேயாம் என்பது வேத சிவாகமங்களிற் றுணிந்த உண்மை** (2985).

(186) முன் கூறிய அவ்வுண்மையினையே சூளுறவாகக் கூறி, ''இஃது உண்மையாயின் உலகர்முன் வருக'' எனப் பிள்ளையார் விளிக்கப், பூம்பாவை கழிந்த ஆண்டு வளர்ச்சியுடன் வந்தனள். இஃது அவ்வுண்மைகளின் உறுதியைக் காட்டுவதாகும் (2988).

(187) சிவஞானிகளது அருட்டிருவாக்கே அமுதமாகிப் புகுந்து உயிரற்ற எலும்பினுள்ளும் உயிரை வருவிக்கும் (2986).

(188) இறைவர் அருளினலே பிள்ளையார்திருவாக்கின்படி எழுந்த பூம்பாவை எல்லையில்லாப் பேரழகுடன் விளங்கினள். இது பிரமன் படைப்பில் வாராத சிவனருட் படைப்பின் இயல்பு; அப் பேரழகினுள்ளே சிவனது கருணை வெள்ளத்தினையே ஆயிர முகத்தானும் பிள்ளையார் காணலாயினர் (3007).

(189) பிரமன் படைப்பினுள் வரும் அழகுகள் எல்லாம் அழியும் தன்மையுடையன; சிவன் அருட்படைப்பின் அழகு என்றும் மாறுத பெருவளத்தன (3007).

(190) திருவான்மியூரில் இறைவரது திருநாமம் **மருந்தீசர்** என்பது, அவர் உயிர்களின் பிறவி மருந்தாகிய பெருந்தகைமை குறித்தது (3021).

(191) திருவிடைச்சுர நாதரது திருமேனி ''இவர்வண மென்னே'' என்று மிகவும் அதிசயிக்கத் தக்க அழகிய திருமேனி (3026).

(192) திருத்தில்லை வழிபாடு விதிமுறையால் எத்தனைதரமும் செய்ய, மேன்மேலும் பேரின்பம் விளைக்கத் தக்கது (3038).

(193) இறுதியாகச் சீகாழியினை நோக்கி வரும் பிள்ளையார் அவ்வளப்பதியினைத் தூரத்தே தொழுது பதிகம் பாடியும், நகரினுட் புகும்போது பதிகம் பாடியும் வந்தணைந்தனர்; அஃது இறுதி முறை என்பது திருவருட் குறிப்புணர்த்திய நிலைபோலும் (3045 - 3046).

(194) சீகாழியில் திருமுருக நாயனர், திருநீலநக்க நாயனர் முதற் றெண்டர்கள் வந்து கூடியபோது, அவ்வடியவர்களுடன் கூடி இனிதமர்ந்தருளினர் பிள்ளையார். இஃது அடிமைத் திறம் பூண்டோரது வாழ்க்கைத் திறம் (3052).

(195) சிவஞான நிறைவுடையோ ராயினும் உலகில் மறையொழுக்கம் காட்டும் பொருட்டு கன்னி ஒருத்தியைத் திருமணம் செய்யும்படி உலக நிலையிற் பெரியோர்கள் வேண்டுதல் மரபு (3054).

(196) சிவமாகும் தன்மை பெற்ற நிலையில் மணத்திற் குட்படுதல் கூடாதாயினும், உலகம் வாழப் பொருந்திய மறை வழக்கம் காட்ட அச்சடங்குக்கு அவர்கள் உட்படுதலும் கூடும் (3057).

(197) ஏற்ற குலமும் மரபும் இசையும்படி பொருந்தக் கண்டு மணம் பேசுதல் முன்னோர் மரபு (3059).

(198) மண நாளோலை போக்குதல், முளைப் பாலிகை விதைத்தல், மண நாளுக்கெழுநாளா நன்னாளில் முளை பூரித்தல், மாளிகைகளை மங்கலக் கோலம் புனைந்து பந்தர்கள் புனைதல், பண்ட நிறை சாலைகள் அமைத்தல், வேள்வி உபகரணங்கள் சமைத்தல், கல்யாணக் கூடு அமைத்தல், மலர்ப் பிணையல்கள் அமைத்தல் முதலியன மணச்சடங்குகளும் மண முயற்சிகளும் ஆம் (3067 — 3079).

(199) மண நாளுக்கு முன்னாளில் மணமகன் கையிற் காப்புநாணை உரிய சடங்குகளுடன் அணிதல் வழக்கு (3085).

(200) திருஞான சம்பந்த நாயனாரது திருமணம் சிவனருளின் வழியே உலகுய்ய நிகழ்வதொன்றாகலின், மக்களேயன்றி வையம் முதலாகிய ஐம்பூத பரிணாமங்களும், பகலோனும், திசைகளும் மகிழ்ந்ததும் பயன்காட்டி மணவணி யணிந்தனபோல விளக்கம் காட்டின (3087 — 3093).

(201) மணத்தின்மேற் செல்லும் பிள்ளையார், தோணியின் முதல்வரையும் வளம்பதியினையும் வணங்கிச் சென்றருளியது அப்பதியினுள் மீண்டும் வாரா நிலை காட்டும் அருட்குறிப்பு (3094).

(202) பிள்ளையாரது மணக் கோலத்தினைத் திருவடிமுதல் திருமுடியின் காறும் முத்தணிகளால் அணிந்தமை அன்று அடைந்தார்க்கெல்லாம் முத்தி தரும் ஆசாரியராதற் குறிப்பு (3108 — 3113).

(203) மகட் பெற்றோர் மணமகனைச் சிவனாக எண்ணிப் பாலினாற் பாதம் விளக்கி வழிபடலும், கன்னியைத் தம் கோத்திரம் குலம் முதலியவற்றைச் செப்பி நீர்வார்த்து மணமகன் கையிற் கொடுத்தலும் மணச் சடங்குகளுள் முதன்மையானவை (3130 — 3133).

(204) திருமணச் சடங்கில் முன்னர் மணமகளை மணமகனுடைய வலப்பக்கத்திலும் அதன் பின்னர் இடப்பக்கத்திலும் அமர்த்தல் மரபு (3135).

(205) மணச் சடங்குகள், ஆசாரியனால் சிவபெருமானுடைய பாதங்களிற் பொருந்தும் உள்ளத்தாற் செய்தல் வேண்டும் (3737).

(206) மந்திர முறையினால் உய்த்த எரி வளர்த்தல் மணவேள்வியின் இன்றியமையாத சடங்கு (3138).

(207) மணமகளை மணமகன் கைப்பற்றிப் பொரி கையட்டி ஏழுமுறை வேள்வித் தீயினை வலம் வருதல் மணச் சடங்கு நிறைவெய்தும் சிறப்புடைய பகுதி (3138 - 3139).

(208) உலகுக்கு மறையொழுக்கமும் வேள்வி செய்தற்கு மனையொழுக்கை வேண்டும் நிலையினையும் வகுத்துக் காட்டுதற்குத் தாம் திருமணம் செய்தற்கு உடன்பட்டனர் பிள்ளையார்; அவ்வளவேயன்றித் தாம் இல்லொழுக்கையினை மேற்கொண்டு நடத்தும் விருப்பத்தாலன்று. ஆதலின் எரிவலங்கொள்ள வரும்போது "இந்த இல்லொழுக்கம் வந்து சூழ்ந்ததே" என்று எண்ணி, அம் மனைவியாரொடு மேவ சிவன்றாள் சேர்தலை விரும்பிக் "கல்லூர்ப் பெருமணம் வேண்டா" என்று பாடினர் (3140 - 3143).

(209) விருப்புறும் அங்கியாவார் சிவபெருமானே யாவர் (3139).

(210) இறைவரது உருவம் அருட் பேரொளியேயாம் (3144).

(211) அருட் பேரொளியினுட் சேரும் வாயிலினை இறைவரே வகுத்துக் காட்டியருளுதல் வேண்டும் (3145).

(212) அவ் வருட்பேரொளியின் வாயிலினுள் அணைந்துய்தற்கு உலகுக்குக் காட்டப்பட்ட ஞான மெய்ந்நெறியாவது திருவைந்தெழுத்தேயாம் (3146).

(213) பிள்ளையார், "ஈனமாம் பிறவிதீர யாவரும் புகுக" என்று சிவனருள் வழியே பாவித்துத் திருக்கண்ணோக்கமும் அருளாணையும் நிகழ்த்தித், திருவைந் தெழுத்தும் உபதேசித்தமையால் அத் திருமணத்தில் வந்தோர் யாவரும் முத்திக்குத் தகுதியுடையாராகி முத்தியும் பெற்றனர் (3146).

(214) பிள்ளையார் சிவச் சோதியிற் கலந்த நிலையாவது போதநிலை முடிந்தவழிப் புக்கொன்றியுடனமையேயாம் (3151).

பிற்சேர்க்கை - 1

உ

சிவமயம்

பாட்டு முதற் குறிப்பு

மாமறையோர்	2774	மூடுபன்மணி	2980	வாழிவளர்	3046
மால்பெருக்க	2613	மையல்நெஞ்சு	2685	வாள்விடுவயிர	3111
மால்யாலைய்	2741	மொழிந்தருள	2633	விஞ்சையர்	3102
மாலைசாந்	2966	மௌவல்மாத	2955	விடந்தொலை	2958
மாலைபிணை	2907	யாதுமொன்	2661	விண்ணினை	3099
மாலைவெண்	2583	யாவர்களும்	2923	விண்ணவர்	3123
மாளிகையின்	3050	யாவரும்பெரு	2942	வியனெடுந்	2889
மாறுஞூம் அவை	2657	யாழின்மெ	2571	விருப்பினல்	3132
மாறில்வெண்	2972	வக்கரைப்	2962	விரும்புமேன்	2878
மாறிலாநிறை	3080	வணங்கிமிக	3037	விற்பொலிதர	2999
மானமன்னவ	2687	வணிகருஞ்	3013	வெஞ்சமணர்	2630
மானியார்தந்	2594	வந்தஅந்தண	2586	வெண்பொடி	2590
மிக்கதிருத்...தொழு	2929	வந்தணைந்த	2918	வெந்தசாம்பல்	2727
மிக்கதிருத்...வேதி	3061	வந்தணைந்தவா	2832	வெந்தொழில்	2667
மிக்கபெருங்	2912	வந்தவரைஎ	3052	வெப்பெனுந்தீ	2691
மிக்குயர்ந்த	3020	வந்துமுன்	3131	வெய்யதீங்கிது	2602
மீனவற்குயி	2757	வரிமயில்அ	3004	வெய்யதொழில்	2631
மீனவன்	2700	வருமிடத்தில்	2806	வெறியார்	2743
மீனவன்செவி	2619	வருமுறைப்	3147	வேதமுதல்வ	2739
மீனவன்தன்	2670	வழுதிமாநகர்	2576	வேதவாய்	3081
மீனவன்தேவி	2770	வாக்கின்தனி	2839	வேந்தனுக்கு	2609
முரசியம்பிய	2962	வாகீசர்மா	2845	வேள்விநற்	2721
முற்றுமெய்ஞ்ஞானம்	3120	வாயில்காவலர்	2579	வேறொருசெய	2715
முற்றுமெய்யெலாம்	2852	வாரணத்தி	2874	வையகம்உய்	2635
முன்னிறை	3048				

குறிப்பு :— தொகுத்தவர்: K. **ஆறுமுக நயினர்,** திருநாவுக்கரசு நாயனர் சைவ சித்தாந்தக் கழகம், திருத்துறையூர் (நடுநாடு).





பன்னிரு திருமுறை ஆய்வு மையம்,

கற்பகம் உயர்கல்விகலைக்கழகம், கோயம்புத்தூர்.